சிவனோடு வாழ்தல்

இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரம்

சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி



பழங்கால வைதீக விதிகளை அடிப்படையாகக் கொண்ட இதன் 365 தினசரி பாடங்கள், ஒரு உறுதியான ஆன்மீக வாழ்வை வாழ்வதற்கு குடும்பம், பணம், உறவுகள், தொழில்நுட்பம், உணவு, வழிபாடு, யோகம் மற்றும் கர்மவினையை எப்படி அணுகவேண்டும் என்பதை தெரிவிக்கின்றன.



சிவனோடு வாழ்தல்

शिवेन सह जीवनम्

Living with Śiva



இரண்டாவது பதிப்பு

பதிப்புரிமை © 2004

இமாலயன் அகாடெமி

இமாலயன் அகாடெமி 1991 ஆம் ஆண்டு *சிவனோடு வாழ்தல்* என்ற இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரம் (ஆங்கில வடிவம்) பற்றிய புத்தகத்தை முதல் முறையாக வெளியிட்டது. அனைத்து உரிமைகளும் காப்புடைமையானவை. ஆன்மீக பாதையில் இருக்கும் மற்ற அன்பர்களுடன் இந்த புத்தகத்தை பகிரலாம் என்றாலும், பதிப்பாளரிடம் இருந்து எழுத்து வடிவத்தில் முன் அனுமதி பெற்ற பிறகே பிரதி செய்யவேண்டும். சைவ சித்தாந்த யோக சமூகத்தின் *சந்நியாசி சுவாமிகள்* மூலம் வடிவமைப்பு, டைப்செட் மற்றும் வரைபடங்கள் துணையுடன் விளக்கப்பட்டது மற்றும் இமாலயன் அகாடெமி, 107 ககோலலேலே சாலை, காபா, ஹவாய் 96746-9304 USA மூலம் வெளியிடப்பட்டது. www.Gurudeva.org

Published by
Himalayan Academy
India • USA

உமா பதிப்பகத்துடன் நடந்த ஏற்பாட்டினால்

சம்பூர்ணா பிரின்டர்ஸ் SDN BHD மூலம் மலேசியாவில் அச்சிடப்பட்டது

லைப்ரரி ஆப் காங்கிரஸ் கண்ட்ரோல் நம்பர் (Library of Congress Control Number) 2001-131929

ISBN-13: 978-0-945497-98-1 (தடித்த அட்டை) 978-0-945497-93-6 (மென் அட்டை)

ISBN-10: 0-945497-98-9 0-945497-93-8

ISBN-13: 978-0-945497-19-6 (3 புத்தக தொகுப்புடன் மென் அட்டை)

ISBN-10: 0-945497-19-9

வரைப்பட விளக்கங்கள்

அட்டைப்படம்: தென்னிந்திய நதியோரம் இருக்கும் ஒரு கிராம வாழ்க்கையை ஓவியர் எஸ். ராஜம் சித்தரித்துள்ளார். சிவபெருமானின் ஆசி கலந்த பார்வையுடன் குழந்தைகள் ஒரு துளசி மாடத்தின் அருகில் விளையாடிக்கொண்டு இருக்க, காட்டில் இருந்து ஒரு மாட்டு இடையன் கால்நடைகளை மேய்த்து வர, பெண்கள்

கிணற்று நீரை இறைக்கிறார்கள், மற்றும் குடும்பங்கள் வீட்டில் தத்தம் கடமைகளை செய்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நர்த்தன விநாயகர்: இந்தியா முழுவதிலும் உள்ள கோயில் கற்சிற்பங்களில் தென்படும் மண்ணின் சாயலை நகல் செய்யும் விதமாக, புத்தகத்தை திறக்கும் போது சற்று பருமனான விநாயகர் ஆசிகளை வழங்கிக்கொண்டு ஆனந்த நடனம் ஆடுவதாக பிரபல இந்திய ஓவியர் இந்திரா சர்மா வரைந்துள்ளார்.

சிறிய தலைப்புப் பக்கம்: எஸ். ராஜம் நம்மை அழைத்து செல்லும் பூஜை அறையில், கணவனும் மனைவியும் ஒரு படிக லிங்கத்தை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கற்பூர ஆரத்தி எடுக்கும் கணவன், அடுத்ததாக லிங்கத்தை ஒரு உலோக தட்டில் வைக்க இருக்கிறார். சிவபெருமானை சுத்த நீரினால் நீராட்ட , மனைவி பூர்வாங்க வேலைகளை செய்துக்கொண்டு இருக்கிறாள். இருவர் இதயங்களிலும் சிவபெருமான் குடிகொண்டு இருக்கிறார்.

Living with Śiva

Hinduism's

Contemporary Culture

शिवेन सह जीवनम्

हिन्दुधर्म समकालीन संस्कृति

சிவனோடு வாழ்தல்

இந்து சமயத்தின் தற்கால கலாச்சரம்

சத்குரு சிவாய

சுப்பிரமுனியசுவாமி



இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்த சத்குரு சிவ யோகசுவாமியின் (1872-1964) ஆற்றல்மிக்க அருளை ஓவியர் இந்திரா சர்மா சித்தரித்துள்ளார். சைவ சமயத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் பெருமதிப்பு அளிக்கும் மூன்று விபூதி கோடுகள் மற்றும் தான் எப்போதும் அணியும் எளிமையான கையால் நெய்த ஆடையுடன் கம்பீரமாக காட்சி அளிக்கிறார்.

சமர்ப்பணம்

Samarpaṇam

समर्पणम्

*சிவனோடு வாழ்தல்* என்ற இந்த புத்தகம், தெய்வீக ஊக்குவிப்பு சக்தியில் இருந்து தோன்றி, சிவ பக்தர்கள் அனைவரும் மிகவும் உயர்வான சித்தியான பரசிவத்தால் பயன் பெறுவதற்காக எழுதப்பட்டது. நாங்கள் இந்த கலாச்சார அறிக்கையை சத்குரு சிவ யோகசுவாமி (1872-1964) அவர்களுக்கும் புனிதமான கைலாச பரம்பரையில் அவருக்கு முந்தைய குருமார்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறோம். இந்த பணியை ஒரு மிகவும் மங்களகரமான நேரத்தில் ஒரு பிரத்யேகமான முறையில் தொடர்வதற்கு, நாங்கள் விநாயகப்பெருமானிடம் இருந்து ஆசிகளையும் அனுமதியையும் பெற்றுள்ளோம். நாங்கள் முருகப்பெருமானிடம் இருந்து மின்னலைப் போன்ற சக்தியையும், பணியை தொடர்வதற்கு அனுமதியையும் பெற்றுள்ளோம். நேற்றும் இன்றும் என்றும் எங்கும் தனது தயாள குணம் மற்றும் புகழை பரப்பி நல்லது, தீயது, குழப்பமானது மற்றும் வேறுபாடற்று இருக்கும் அனைத்தையும் படைத்து, காத்து மற்றும் அழிப்பதோடு அருள் சக்தியின் மூலமாகவும், *தர்மத்தின்* படைப்பாளியாகவும், அனைத்து நன்மைகளை தருபவராகவும், உலகின் ஒளியாகவும் அன்பாகவும் இருக்கும் நமது பரமேஸ்வரனான சிவபெருமானின் அருளில் ஆன்மாக்கள் அனைத்தும் உயிர் வாழட்டும். 2,200 ஆண்டுகளுக்கு முன்பாக திருவள்ளுவர் தனது நன்னெறி நூலான *திருக்குறளில்* பின்வரும் குறட்பாக்கள் மூலம் *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தின் சாரத்தை தெளிவாக விளக்கியுள்ளார்:

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு (350).

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து

சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981).

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு

ஐந்துசால் ஊன்றிய தூண் (983).

பொருளடக்கம்

Vishayasūchī

विषयसूची

சமர்ப்பணம்
ஆசிரியர் வழங்கும் முகவுரை—*கிரந்தக்கார பூமிகா*
பிரதான பயிற்சி வகுப்பு—*பிரதான பத்யாகிரமா*
இந்து குடும்ப தர்மம்—*இந்து கிரகஸ்த தர்மா*
உலக அமைதிக்கு, வீட்டில் போரை நிறுத்துங்கள்

முதல் பாகம்: ஆனந்தமாக நடனமாடுதல்

அத்தியாயம்

1 எங்கும் இறைவனை காண்க

2 அகிம்சை மற்றும் வாய்மை

3 கள்ளாமை மற்றும் மற்ற நற்பண்புகள்

4 கருணை, நேர்மை மற்றும் அளவுணவு

5 சுத்தம் மற்றும் தவறுக்கு வருந்துதல்

6 சந்தோசம் மற்றும் தானம்

7 இறை நம்பிக்கை மற்றும் வழிபாடு

8 சாத்திரம் கேட்டல் மற்றும் அறிவு எழுச்சி

9 விரதங்கள், ஜபம் மற்றும் தவம்

10 பிரம்மச்சரியம் மற்றும் விசுவாசம்

11 உடல், மனம் மற்றும் மனவெழுச்சியின்

உணவுமுறைகள்

12 இரசாயன குழப்பம்

13 சாதனா

14 தியானம் செய்பவர்

15 தியானத்தில் ஏற்படும் தடைகள்

16 மன உறுதியை ஆக்கப்பூர்வமாக
பயன்படுத்துதல்

17 வாழ்க்கை ஆனந்தமாக
வாழ்வதற்கே

18 பிராயச்சித்தத்தின் வலிமை

பாகம் இரண்டு: அற வாழ்க்கை

அத்தியாயம்

19 தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகையும்
ஆளும்

20 பெண்ணின் சக்தி, பெண்ணின் இராச்சியம்

21 திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை

22 குடும்ப ஒற்றுமை

23 இளவயது திருமணத்தில் இருக்கும்
விவேகம்

24 நவீன யுகத்தில் திருமணப்பொருத்தம்
பார்க்கும் ஜோதிடர்கள்

25 விவாகரத்து மற்றும் சித்திரவதை

26 குழந்தைகள் வளர்ப்பு

27 நேர்மறை கட்டுப்பாடு

28 இளவயது சோதனைகள்

29 மனதை புண்படுத்தும் வார்த்தைகள்

30 இலஞ்சம் மற்றும் தீய வழியில் ஈட்டிய பணம்

31 கணினி இயந்திரம் பற்றி தங்கள் கருத்து என்ன?

32 விபச்சாரம் மற்றும் பாலியல் விஷயங்கள்

33 பிறப்பு, கருக்கலைப்பு மற்றும் தற்கொலை

34 வயோதிகம்

35 மரணத்திற்கு பிந்தைய சூட்சும லோக வாழ்க்கை

பாகம் மூன்று: துணிச்சலுடன் ஐக்கியமாதல்

அத்தியாயம்

36 இந்து சமயம் அளிக்கும் இன்பங்கள்

37 தர்மம் மற்றும் விதி

38 கர்மவினை சக்கரம்

39 இம்சை செய்யவேண்டாம்

40 போர் மற்றும் அமைதி

41 மன்னிக்கும் மனநிலையின் ஆற்றல்

42 நன்றியுணர்வை வளர்த்து பரிவுடன் இருங்கள்

43 வேற்றுமைக்கு அனுமதி அளிக்காமல் இருத்தல்

44 மதத்தின் அவசியம் என்ன?

45 மகாதேவர்களின் ஆலயங்கள்

46 மகாதேவர்களுக்கு பிரார்த்தனைகளை அனுப்புதல்

47 குருவின் சக்தி

48 சைவ மடவாசிகள்

49 நமது சம்பிரதாயத்தை கற்றுத்

தருதல்

50 சைவ கலாச்சாரம்

51 இந்து மத ஒருமைப்பாடு

52 இந்து மதத்தில் வலுவாக
நிலைத்து இருங்கள்

மேற்கோள்கள்

ஹட யோகம்
தசமாம்சம்

முடிவுரை—*சமாபனம்*
சொற்களஞ்சியம்—*சப்த கோசஹ*
சமஸ்கிருத உச்சரிப்பு—*சமஸ்கிருத உச்சாரணம்*
பொருளடக்க அட்டவணை—*அனுக்ரமணிகா*
சாத்திர நூல் பட்டியல்—*சாஸ்திரீய சந்தர்பகிரந்தசூசி*
ஊக்கமூட்டும் உரைகளின் அட்டவணை —பிரேரக வார்த்தானுகிரமணி
முடிவுரை —*அந்த்யவசனம்*

ஆசிரியர் வழங்கும் முகவுரை

Granthakāra Bhūmikā

ग्रन्थ्कार भूमिका

தாங்கள் இறைவனிடம் இருந்து விலகி தொலைவில் இருப்பதாக பெரும்பாலான மக்கள் நினைத்துக் கொண்டிருக்க, மிகவும் உயரிய ஆன்மாக்கள் தாங்கள் எதை செய்தாலும், தினமும் இறைவனுடன் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். நாம் சிவபெருமான் என்று அழைக்கும் இறைவனுடன், அவர்கள் வேலை செய்யும் போதும், வாகனம் ஓட்டும் போதும் அல்லது சாதாரண தினசரி வேலைகளை செய்யும் போதும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். சிவபெருமான் இந்த விசேஷமான பக்தர்களுக்கு, அவர்களின் மூச்சுக்காற்றை விட நெருக்கமாகவும், கைகள் மற்றும் கால்களை விட அருகிலும் இருக்கிறார். மெய்யான இந்த ஆன்மீக வாழ்க்கை, சிவபெருமான் இல்லாமல் எதுவும் இல்லை என்பதை அங்கீகரிக்கிறது. சிவனோடு வாழ்தல் என்பது சிவபெருமானின் உணர்வு ஆகும். சமரசம் அடைந்த இறந்தகாலம், உணர்வை நித்திய நொடி நேரத்தில் வெளியிடுகிறது. அங்கே எல்லோரது கண்களிலும் சிவபெருமான் வாழ்க்கை மற்றும் ஒளியாக இருப்பதை நாம் காண்கிறோம். சிவனோடு வாழ்தல் என்பது இந்த முழுமையான பிரபஞ்சத்தை நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல் ஊரும் பிராணிகள், மீன், கோழி, விலங்கு மற்றும் மற்ற உயிரினங்கள் முதல் மிகவும் சிறிய பிராணிகள் வரை ஒவ்வொன்றிலும் இருக்கும் ஒற்றை உயிர்சக்தியின் உணர்வுடன் எல்லோருடனும் வாழ்வது ஆகும். சிவபெருமான் உண்மையில் எங்கும் இருக்கிறார். அவர் எண்ணத்தை வெளிப்படுத்தும் நமது மனோசக்தியாக இருக்கிறார். அவர் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட எண்ணமாக இருக்கிறார். அவர் நமது கண்களில் இருக்கும் ஒளியாகவும் நமது விரல்களில் இருக்கும் உணர்வாகவும் இருக்கிறார். ஒன்றை இரண்டாக காட்சியளிக்க செய்யும், அறியாமையாக சிவபெருமான் இருக்கிறார். அவர் காரண காரியத்தின் விதியான கர்மவினையாக இருக்கிறார். அவர் நாம் மிகவும் ஆழமாக மூழ்கி, இறைவனை காட்டிலும் வெளியுலகம் அதிக உண்மையானது என்று எண்ணும் பரிணாமத்தின் சாரமாக இருக்கும் *மாயையாக* இருக்கிறார். சிவபெருமான்

இவை அனைத்துமாகவும் மேலும் பலவாகவும் இருக்கிறார். அவர் சூரியன், பூமி மற்றும் இடையே இருக்கும் பரவெளியாகவும் இருக்கிறார். அவர் சுருதியாகவும், சாத்திரங்களை உருவாக்கியவர்களாகவும் இருக்கிறார். அவர் சாத்திரங்களின் விவேகத்தை நாடும் அனைவராகவும் இருக்கிறார்.

இந்த பிரபஞ்சமெங்கும் இருக்கும் ஒவ்வொரு அணுவிலும் சிவபெருமான் திருநடனம் ஆடுகிறார். சிவபெருமான் உற்சாகத்துடன், ஓயாது, நித்தியம் திருநடனம் ஆடுகிறார். சிவபெருமான் நிரந்தர இயக்கமாக இருக்கிறார். அவருடைய மனம் எங்கும் எதிலும் வியாபித்து இருப்பதால், அவரால் ஒரே சமயத்தில், மிகவும் எளிதாக எல்லா லோகங்களில் இருக்கும் அனைத்தையும் பார்க்கவும் அறியவும் முடிகிறது. பரமாத்துமாவாக சிவபெருமான் இருக்கிறார், மற்றும் அந்த பரமாத்துமாவை அறிய நாம் பயன்படுத்தும் சக்தியாக இருக்கிறார். அவரை நம்மிடம் இருந்து தனித்து காண்பிக்கும் மர்மமாக அவர் இருக்கிறார். அவர் உயிரின் சக்தியாக, காற்றின் ஆற்றலாக இருக்கிறார். அவர் மரணம் என்று அழைக்கப்படும் முடிவாகவும், சலனமற்ற காற்றின் அமைதியாகவும் இருக்கிறார். அவர் கடலில் இருக்கும் மாபெரும் சக்தியாகவும் ஒரு நிசப்தமான ஏரியில் இருக்கும் அமைதியாகவும் இருக்கிறார். சிவபெருமான் சகலமுமாக இருக்கிறார்.

நமது சிவபெருமான் காலம், பரவெளி, உருவம் மற்றும் உருவத்தின் படைப்பை கடந்து இருந்தாலும், அவர் காலத்தை பயன்படுத்தி உருவத்தை உருவாக்குகிறார். அவர் ஆகாயத்தில், மேகங்களில், சுழலும் நட்சத்திர மண்டலங்களில் இருக்கிறார். பிரஞ்சத்தில் இருக்கும் ஒவ்வொரு அணுவிலும் இந்த கணத்தில் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்கிற சிவபெருமானின் திருநடனம் நடைபெறுகிறது. ஒரு அழகான மனித வடிவில் கண்களால் பார்க்கும் படியாக, பல சூட்சும ஞானிகளுக்கு காட்சி அளித்து, உள்ளார்ந்து இருக்கும் பரமனான சிவபெருமான் காலம், காரணம் மற்றும் பரவெளியை கடந்து அதீதமாகவும் இருக்கிறார். சிவபெருமானது சக்தி இத்தகைய மர்மங்களுடன் இருக்கின்றன.

புனித சாத்திரங்களை படித்து, நமது சிவபெருமானை பற்றி அவை வழங்கும் விளக்கத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அவை சிவபெருமான் யார் என்பதை விளக்குகின்றன. பரசிவ, சச்சிதானந்த மற்றும் மகேசுவரன் என்று சிவபெருமான் மூன்று முழுமைகளுடன் இருக்கிறார் என்று அவை நமக்கு எடுத்துரைக்கின்றன. அவர் பரசிவமாக காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கிறார். அவர் சச்சிதானந்தமாக எங்கும் வியாபித்து இருக்கும் அன்பு, ஒளியாகவும் இருப்பின் ஒவ்வொரு அணு வழியாக பாய்ந்து செல்லும் உணர்வாகவும் இருக்கிறார். அவர் மகேசுவரனாக ஆதி ஆன்மாவாகவும், இருப்பு என்று அழைக்கப்படுவதை படைத்து, காத்து மற்றும் அழிக்கும் பரமேசுவரனாகவும் இருக்கிறார். நமது பரமேசுவரன் பிரகாசமான ஒளியின் உடலுடனும், தனது படைப்புக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் மனம் மற்றும் சித்தத்துடனும் இருப்பதாக அந்த சாத்திரங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. ஒரு ஒளி உடலாக இருக்கும் நமது தனிப்பட்ட ஆன்மாவை பரமேசுவரனாக இருக்கும் சிவபெருமான் படைத்ததாகவும், அதில் அவரது படைக்கப்படாத சித்தம் வாசம் செய்வதாக அந்த சாத்திரங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. சிவபெருமானின்

மனம் சச்சிதானந்தம் என்று அழைக்கப்படுகிறது. அது இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொரு மனிதனுக்குள் இயல்பாக மனதின் அகநிலையாக, எங்கும் எதிலும் வியாபித்து இருக்கிறது, ஆனால் அது உணரப்படாமல் அறியப்படாமல் உள்ளது.

நான் அத்தியாயம் 45 யில், சிவபெருமானை அன்பின் இறைவனாக வழிபட்டு அன்பின் இருப்பாக மாறவேண்டும் என்று அவரது பக்தர்களான சைவ சமயத்தை சேர்ந்த அனைவரிடமும் கேட்டுக்கொண்டுள்ளேன். நமது சமயத்தை சேர்ந்த தலைசிறந்த மகான்கள் சிவ *பக்தர்களாக* இருந்துள்ளனர். அவர்கள் தங்கள் இறையன்பின் மூலம் உலகை மாற்றி உள்ளனர். தங்கள் கருத்துக்களை பரப்ப அவர்களுக்கு மிகப்பெரிய அமைப்புக்களின் தேவை இருந்தது இல்லை. தங்கள் கருத்துக்களை பரப்ப அவர்களுக்கு செல்வவளம் அல்லது வண்டிகள் நிறைய புத்தகங்களின் தேவை இருந்தது இல்லை. அவர்களுக்கு வானொலி, தொலைக்காட்சி அல்லது இணையதளத்தின் தேவை இருந்தது இல்லை. சிவபெருமானிடம் இருந்து பெற்ற நேரடி அறிவு மற்றும் நேரடி அனுபவம், அவர்களின் மனங்களிலும் இதயங்களிலும் நிரம்பி இருந்ததால், அவை அவர்களின் கருத்துக்கள் பரவுவதற்கு உதவியாக இருந்தன. அவர்களில் சிலர் தங்கள் சொந்த ஊரை விட்டு வெளியே செல்லவில்லை என்றாலும், அவர்களின் கருத்துக்கள் வெகுதூரம் பரவின. அவர்கள் தங்கள் ஊரில் இருந்துகொண்டே பெருவளர்ச்சி அடைந்தனர். நீங்களும் சிவபெருமானின் தூதுவர்கள், மற்றும் உங்களுக்கு அவர் மீதுள்ள அன்பே நீங்கள் வழங்கும் முக்கிய கருத்து ஆகும். சிவபெருமான் மீது அன்பை மட்டும் செலுத்துங்கள். மேலும் அந்த அன்பு உலகை பிரகாசிக்கட்டும்.

பழங்காலத்தில், சிவபெருமான் பற்றி நன்கு அறிந்து இருந்த சைவர்கள், தங்கள் மனதின் மீது வேற்று சமயங்கள் தாக்கம் ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தில் இருந்தது இல்லை. சிவபெருமானிடம் இருந்து அவர்களை எந்தவித எதிர்மறை பிரச்சாரமும் பிரிக்க முடியாத அளவிற்கு, அவர்கள் வலுவான விவேகத்துடன் இருந்தார்கள். ஆனால் உண்மையில், சமணர்கள் மற்றும் பௌத்த சமயத்தை சேர்ந்தவர்களை மீண்டும் சைவ சமயத்திற்கு மாற்றும் அளவிற்கு பழங்கால பக்தர்களின் அன்பு மிகவும் வலுவாக இருந்தது. இந்த நூற்றாண்டிலும், சிவபெருமான் மீது வலுவாக அன்பு செலுத்தும் சைவர்கள், மதம் மாறிய சைவர்களை மீண்டும் சிவபெருமானின் திருவடிகளுக்கு அழைத்து வருகிறார்கள். மேற்கத்திய கருத்துக்களினால் கவரப்பட்டவர்கள் அல்லது நாத்திக, இருத்தலியல் சந்தேகத்தில் சிக்கியவர்களை மீண்டும் சைவ சமயத்தில் அழைத்து வரும் அளவிற்கு, இறைவன் மீது அவர்களின் பக்தியும், தங்கள் சக சைவ சமயத்தவர்கள் மீது கருணையும் வலுவாக உள்ளது.

உளவியல் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது ஆன்மாவின் பண்புகளுக்கும், நாம் செய்யவேண்டியதை இயலுணர்வுடன் அறிய உதவும் அடிப்படை விதிகளுக்கும் புறம்பாக அடிமனம் இருக்கும் போதும், ஆன்மாவிற்கு எதிரான கடந்தகால செயல்கள் நிகழ்காலத்தில் தொடரும் போதும், நம்மால் சிவனோடு வாழ முடிவதில்லை. அதற்கு பதிலாக நாம் மனிதர்களுடனும், பிரச்சனைகளுடனும் உலகின் எதிரும் புதிருமான சக்திகளுடனும் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்.

கலியுகத்தின் இந்த காலகட்டத்தில், உலகெங்கும் அறியாமை சமமாக பரவி இருக்கையில் விவேகத்தின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. தங்களது

கடமைகளின் செய்முறை பற்றி மக்கள் குழப்பத்தில் இருக்கிறார்கள், மற்றும் பெரும்பாலும் கடமையைப் பற்றி கற்றுத் தரப்படுவதும் இல்லை. இந்த புத்தகம் மெய்ப்பொருள் நாடுவோரை இந்த குழப்பத்தில் இருந்து விடுவிக்கவே எழுதப்பட்டுள்ளது. முன்னொரு காலத்தில் இருந்ததைப் போல இன்று சகிப்புத்தன்மை, பொறுமை மற்றும் பரிவு மதிக்கப்படுவது இல்லை. எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் அனைத்து மக்களின் இதயங்களில் இருந்து அறியாமை என்கிற இருள் நீங்கினால் அவை மீண்டும் மதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. அதனால் பல்வேறு நாடுகளில் வாழும் சாதகர்களுக்காக பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட *சிவனோடு வாழ்தல்* மற்றும் அதன் 365 நந்திநாத சூத்திரங்கள், இந்த நவீன காலத்தில் பாரம்பரிய இந்து சமயத்தின் சிறப்பு அம்சங்களை மக்களிடம் கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று நம்புகிறோம்.

சிவனோடு வாழ்தல் புத்தகத்தின் முதல் பதிவு எனது சீடர்கள் மீது கவனம் செலுத்தி இருந்தது. அதில் 800 பக்க ஊக்கமளிக்கும் உரைகளை தவிர வேறு எதுவும் இல்லை. அதுவே இந்த இரண்டாம் பதிவில் முக்கிய அங்கம் வகிக்கிறது. சூத்திரங்களை மட்டுமே கொண்டிருந்த அந்த புத்தகம், 365 சூத்திரங்களுடன் எங்கள் மடத்திலேயே தயார் செய்யப்பட்டது. அது ஈழப்போர் காரணமாக உலகெங்கும் சிதறிய, இலங்கை தமிழ் சைவர்களின் பெருந்திரளான மக்களுக்காக எழுதப்பட்டு இருந்தது. அவர்களது பாரம்பரிய குருவாக நான் இருப்பதால், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் தாத்தா-பாட்டிகள் மத்தியில், எனது சத்குருவான யோகசுவாமி பராமரித்த கோட்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பது என்பது கடமை ஆகிகிறது.

ஆனால் எல்லா சமயங்கள் மற்றும் சமயப்பிரிவுகள் மத்தியில் *சிவனோடு வாழ்தல்* புத்தகம் புழங்கத் தொடங்கியதை நாங்கள் கவனித்தோம். அதை தமிழர்கள் "நவீன *திருக்குறள்*," என்று பெயரிட்டார்கள். ஒரு சிறந்த மற்றும் அதிக ஆக்கப்பூர்வமான வாழ்க்கையில் நிலைத்து இருக்க, கடந்தகாலத்தில் இருந்து நிகழ்காலத்திற்கு வந்த ஒரு கைகொடுக்கும் கையாக, இதை இந்து சமயம் அல்லாதவர்கள் கருதினார்கள். *சிவனோடு வாழ்தல்* புத்தகம் தனக்கென்று ஒரு அடையாளத்தையும், ரசிகர்களையும், வாசகர்களையும் உருவாக்கிக்கொண்டதை உணர்ந்த நாங்கள், இந்த இரண்டாவது பதிப்பில் இந்து கலாச்சாரம் சம்பந்தப்பட்ட பல அத்தியாயங்களை சேர்த்துள்ளோம்.

இந்த இரண்டாம் பதிப்பின் நான்காம் பாகமாக, இந்த 365 *சூத்திரங்கள்* அங்கம் வகிக்கின்றன. இந்த தொழில்நுட்ப யுகத்தில் அறிவு மற்றும் வலிமையின் அமைப்பாக, இந்து சமயத்தில் குறிப்பாக சைவ சமயத்தை கொண்டு வருவதற்கு உலகெங்கும் எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்கள் மற்றும் சிக்கல்களை விவாதிக்க, *தர்மத்தை* விளக்கி தெளிவுபடுத்த மற்றும் தினசரி வாழ்க்கையில் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு அமைதியை கொண்டு வருவதற்காக, 1957 ஆம் ஆண்டில் நான் சர்வதேச சமயப்பணியை தொடங்கியதில் இருந்து வழங்கிய ஊக்கமளிக்கும் உரைகள், குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகளில் இருந்து இப்பதிப்பின் பாகம் ஒன்று, இரண்டு மற்றும் மூன்று உருவாக்கப்பட்டுள்ளன. 1979 முதல் 1983 வரை, ரினைசான்ஸ் டூர்ஸ் பயணத்தின் அங்கமாக, நான் அமெரிக்கா, கனடா, மொரிஷியஸ், இந்தியா மற்றும் இலங்கையில் வழங்கிய உரைகள், குறிப்பாக நவீன காலத்தில் இந்து

சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள ஆற்றல்மிக்கதாக இருந்தன. கடந்த இருபது ஆண்டுகளில், கலாச்சாரம் பற்றிய இந்த உரைகளின் தொகுப்பில் இருந்து சில பகுதிகள், எங்கள் சர்வதேச பத்திரிகையான இந்துயிசம் டுடே பத்திரிகையில் எனது பதிப்பாளர் குறிப்பு கட்டுரை மூலமாக ஆயிரக்கணக்கான இதயங்களுக்கு விழிப்புணர்வை வழங்கியுள்ளது. அவை அனைத்தும் இந்த புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இன்றும் என்றும், இளைஞர்களும் பெரியவர்களும் குடும்ப விவகாரங்களை பேச விரும்புகிறார்கள். ஆனால் பெரும்பாலும் கேள்விகள் எழும் போது பதில்கள் தட்டிக்கழிக்கப்படுகின்றன. பதில்கள் வந்தாலும், அது சரியானதாக இருப்பதில்லை. குடும்பம் தொடர்பான விவகாரங்களில் ஒரு யதார்த்தமான விழிப்புணர்வின் அவசர தேவையே, இந்த புத்தகத்திற்கு ஊக்குவிப்பாக இருந்தது. இந்த புத்தகத்தில் நாங்கள் நிரந்தரமான கேள்விகளுக்கு பதில் அளித்து பிரச்சனைகளை வெளிப்படையாக விவாதிக்கிறோம் மற்றும் இன்றைய காலகட்டத்தில் வாழக்கூடிய மற்றும் வாழவேண்டிய வாழ்க்கையின் பாரம்பரிய வழிகள் பற்றி விழிப்புணர்வை நாடுவோருக்கு தைரியமாக *தர்மத்தின்* உன்னத பாதையை காண்பிக்கிறோம்.

உலகில் பல விவகாரங்கள் தவறாக இருக்கின்றன என்று உறுதியாக கூறினாலும், அவை தவறாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் இந்துக்கள் பின்பற்ற ஒரு பாரம்பரிய நிரூபிக்கப்பட்ட பாதை இருக்கிறது மற்றும் நாம் அதை பின்பற்றவும் செய்கிறோம். அது *ரிஷிகளின்* பழங்கால இந்து பாதை ஆகும், அது தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு இருந்தாலும், அது சிலசமயங்களில் நமது புனிதமான சாத்திரங்களில் மறைஞானமாக அமைந்து இருக்கிறது. இந்த பாதை எங்கே தொடங்குகிறது, எந்த திசையில் செல்கிறது மற்றும் எங்கே நம்மை அழைத்து செல்கிறது என்பதை கண்டுபிடிப்பது எப்போதும் எளிதாக இருப்பது இல்லை. ஆனால் அந்த பாதையை தேடிப்பிடித்தவுடன், நமக்கு பிரச்சினைகளாக இருந்த குடும்பம் தொடர்பான பல கேள்விகளுக்கு விடைகளும் கிடைத்து விடும். அந்த பிரச்சனைகள் தொடர்பாக பழைய கலாச்சாரங்கள் பல தலைமுறைகளின் அனுபவ அறிவோடு, யதார்த்தமான மற்றும் விவேகமான தீர்வுகளையும் கொண்டிருந்தன. அதனால் நீங்கள் பழங்கால இந்து சமய பாதையை இந்த நவீன கண்ணோட்டத்தில் ரசிப்பதோடு, உங்களது சொந்த வாழ்க்கையில் பின்பற்றுவதற்கு பல தகவல்களை தேடிக்கொள்வீர்கள் என்றும் நம்புகிறோம்.

இன்றும் பழங்காலத்தில் இருந்ததைப் போல, இணங்காமல் வாழவேண்டும் என்று உறுதியாய் இருப்பவர்கள், கடமையுணர்ச்சி இல்லாமல் இருக்கவேண்டும் என்பதை தனது கடமையாகக் கொண்டவர்கள், ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை வேண்டாம் என்பதில் கட்டுப்பாட்டுடன் இருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆன்மீக பாதையில் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை அறிவதில்லை என்பதால், இந்த புத்தகம் அவர்களை குழப்பக்கூடும். மெய்ப்பொருளில் நம்பிக்கையுள்ள தீவிரமான சாதகர்கள், ஒழுக்கம் குறைவான ஆன்மாக்களின் சோகங்கள் மற்றும் விருப்பங்களை பொறுமையுடன் புரிந்து நடந்துகொள்ள வேண்டும். இறுதியில் தனது ஆன்மாவில் முன்பே உறைந்து இருக்கும் பண்புகளை பண்படுத்துவது அந்த தனிமனிதனின் கடமை ஆகும். ஒரு தோட்டத்து செடியின் மொட்டு, நன்றாக

மலர்ந்து பூத்துக் குலுங்கும் வரை எவ்வாறு அதன் மீது கவனம் செலுத்துகிறோமோ, அதைப் போல இதன் மீதும் கவனம் செலுத்த வேண்டும். களைகள் மற்றும் கொடிய பூச்சிகள் நெருங்காமல் தடுக்க வேண்டும். அதற்கு நல்ல ஒளி மற்றும் நிழல், நீர் மற்றும் சூரிய வெளிச்சம் கிடைக்க வேண்டும். சூழ்நிலைகள் சரியாக இருக்கும் போது, விரும்பிய பலன்கள் இயல்பாக தானே வெளிப்படும். சூழ்நிலைகள் சரியாக இருந்தால் மட்டுமே, ஒரு மொட்டை போல இருக்கும் ஆன்மா நன்றாக பூத்து குலுங்கி தனது அழகில் பிரகாசமாக மிளிரும் என்பதால், *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தின் பக்கங்கள் மற்றும் நந்திநாத சூத்திரங்களில் தெளிவாக தொகுக்கப்பட்டுள்ள போதனைகள், ஒரு தோட்டக்காரன் தனது தோட்டத்து செடிகள் நன்றாக வளர்வதற்கு தெரிந்துக்கொள்ள வேண்டிய தகவல்களை போன்றது ஆகும்.

நம்பிக்கையுடன் திரும்பிப் பார்க்காமல் முன்னேறுங்கள். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் அல்லது செய்வார்கள் என்பதைப் பற்றிய கவலை வேண்டாம். நாளைய புதிய உலகில் உங்களுக்கு என்று ஒரு முக்கிய பங்கு உள்ளது. எதிர்காலத்தில் நமது நாளைய தினங்களின் அறிவு மற்றும் விவேகத்தில் இருந்து தோன்றிய ஒரு புதிய அணுகுமுறையில் நாம் நேற்றைய தினங்களை எதிர்கொள்ளவில்லை என்றால் நம்மால் அவற்றை மாற்றவோ திருத்தவோ முடியாது. நமது பரமனான சிவபெருமானை வழிபடும் எல்லோரைப் போல, நாம் இரும்புக் கட்டுக்களால் பிணைக்கப்படுள்ளோம். *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் உள்ள கலாச்சாரம், நெறிமுறைகள் மற்றும் எச்சரிக்கைகள் பின்பற்றுவதால், இந்த பிணைப்பு ஆனந்தமாகவும் பயனுள்ளதாகவும் விளங்கி, ஒழுங்கின்மை வழங்கும் இழுபறியை தவிர்ப்பதால், பெரும்பாலும் வலி மற்றும் கழிவிரக்கத்தை கொண்டு வரும் மனிதத்தன்மையின் ஆபத்துக்களை தடுக்கலாம்.

எந்த கலாச்சாரம், பொதுவான சமூக நம்பிக்கை அல்லது இறை நம்பிக்கையை சேர்ந்தவரும் *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தை படித்து பயன்பெறலாம் என்றும், இதைப்படிக்கும் வாசகர் பல்லாயிரம் ஆண்டுகளாக பக்குவம் அடைந்த வலுவான விவேகம் இந்த புத்தகத்தில் இருப்பதை தனது இதயத்தின் ஆழத்தில் உணர்வார் என்றும் நாங்கள் நம்புகிறோம். ஒரு சில குடும்பங்கள் செயல்படும் மையமாக விளங்கி, குடும்பத்தலைவன் அறிவுரைக்கு தனது குலகுருவையும் சடங்குகளுக்கு குடும்ப புரோகிதரை நாடி, இறுதியில் குடும்ப சொத்தை பராமரிக்க கடமையுணர்வுடன் கற்றுத்தரப்பட்டதை போல பாரம்பரியங்கள், கலாச்சாரம் மற்றும் மரியாதையை பராமரிக்க குழந்தைகள் நன்றாக படித்து, முழுமையாக பக்குவமடையும் வரை வளர்ப்பதில் அக்கறை செலுத்தும் சமூகங்களை சேர்ந்த குறிப்பாக பெரியோர்கள் மத்தியில், இந்த புத்தகம் பாராட்டை பெறும் என்று நம்புகிறோம்.

இந்த மற்றும் அந்தர்லோகங்களில் இருந்து அன்பு கலந்த ஆசிகளுடன்,



சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி
நந்திநாத சம்பிரதாயத்தின் கைலாச பரம்பரையின்

162 ஆவது ஜகத்குரு
குரு மகாசந்நிதானம்
கவாய் ஆதீனம், ஹவாய்
சத்குரு பூர்ணிமா, ஜூலை 4, 2001
இந்து வருடம் - விருஷ, 5103

தி மாஸ்டர் கோர்ஸ் (பிரதான பாடத்திட்டம்)

Pradhāna Pāṭhyakramaḥ

प्रधान पाठ्यक्रमः

வாழ்நாளில் பெற்ற விவேகத்தில் இருந்து சேகரிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான சாதகர்களின் தாகத்தை தணிப்பதற்காக வெளியிடப்பட்ட *சிவனோடு வாழ்தல்* என்ற இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரத்தை கற்பிக்கும் புத்தகம், விசேஷமான முத்தொகுப்பில் இரண்டாவது புத்தகம் ஆகும். முதல் புத்தகமான *சிவபெருமானுடன் திருநடனம்,* இந்து சமயத்தின் தற்கால வினாவிடை ஏடு. மூன்றாவது புத்தகமான *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்,* இந்து சமயத்தின் தற்கால மீமெய்யியல் ஆகும். இந்த மூன்றும் சேர்ந்து ஒரு *மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டமாக உருவெடுக்கிறது. இதை தினமும், வருடத்திற்கு 365 நாட்களுக்கு படிக்க வேண்டும். அமெரிக்காவில் முதல் இந்து கோயிலாக விளங்கும் எங்கள் கோயிலில், வழிபாடு நடத்தும் பக்தர்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, 1957 ஆம் ஆண்டில் *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டத்தின் முதல் பதிப்பு உருவாக்கப்பட்டது. சொந்த படிப்பிற்கு பாடங்கள், ஒரு அஞ்சல்வழி பாடத்திட்டம் மற்றும் 1970 ஆம் ஆண்டில் கவாய் ஆதீனத்தின் குரு பீடத்தில் பதிவு செய்யப்பட்ட பன்னிரண்டு ஒலிநாடா பதிவுகள் என்று இந்த பாடத்திட்டம் பல வடிவங்களை பெற்றுள்ளது. 1993 ஆம் ஆண்டில் சைவ சமயம் பற்றிய ஒரு அழகான குழந்தைகள் பயிற்சி வகுப்பு வெளிவந்தது; மற்றும் தற்போது 2001 ஆம் ஆண்டில், இருபது வருட முயற்சிக்கு பிறகு *சிவபெருமானின் திருநடனம், சிவனோடு வாழ்தல்* மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* என்று மூன்று பாடநூல்களாக தனது இறுதி வடிவில் தி மாஸ்டர் கோர்ஸ் பாடத்திட்டம் வெளிவந்தது. அதில் ஒவ்வொரு புத்தகமும் தகவல்கள், விழிப்புணர்வு மற்றும் *சாதனாக்களுடன்* ஆயிரத்திற்கும் மேற்ப்பட்ட பக்கங்களை கொண்டிருந்தன. நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த நமது கைலாச பரம்பரையின் மரபிற்கு ஏற்ப, *தி மாஸ்டர் கோர்ஸ்* முத்தொகுப்பு *அட்டாங்க யோகம்* பற்றிய ஒரு விரிவான சுருக்கமும் விளக்கத்தையும்

கொண்டுள்ளது. *இராச யோகம்* என்று அழைக்கப்படும் *அட்டாங்க யோகம்*, எட்டு அங்கங்களை கொண்டுள்ளது மற்றும் அதில் ஒவ்வொரு அங்கமும் தனக்கு முந்தைய அங்கத்தை சார்ந்து இருக்கிறது. தொடர்ச்சியான எட்டு அங்கங்கள் பின்வருமாறு: *இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணா, தியானம்* மற்றும் *சமாதி*.

பெரும்பாலும் போதிய தகவல் அறியாதவர்கள் முதல் ஆறு அங்கங்களை தவிர்த்து, தங்களது ஆன்மீக பாதையை ஏழாவது மற்றும் எட்டாவது அங்கங்களில் தொடங்க விரும்பி, உடனடியாக நீடித்த பலன்கள் ஏன் கிடைக்கவில்லை என்ற வியப்பில் பொதுவாக மூழ்கி இருப்பார்கள். ஐம்பதுக்கும் அதிகமான வருடங்களாக வழங்கப்பட்ட உபதேசங்கள் மற்றும் விளக்கங்களில் இருந்து தகவல்களை பெற்ற இந்த முத்தொகுப்பு, எதற்காக தத்துவத் தெளிவு மற்றும் நல்லொழுக்கத்தின் ஒரு வலுவான அடிப்படையுடன் தொடக்கத்தில் இருந்து தொடங்கி, அங்கிருந்து முன்னேற வேண்டும் என்பதை தெளிவாக விளக்குகிறது.

இந்த முத்தொகுப்பின் முதல் புத்தகமான *சிவனோடு வாழ்தல்*, மற்ற இரண்டு புத்தகங்களில் விளக்கப்பட்டுள்ள பகுதிகளை புரிந்து, பின்பற்றி நிலைநிறுத்தி உறுதியான முன்னேற்றத்தை பெறுவதற்கு மிகவும் தேவையான, சைவ இந்து சமயத்தின் தத்துவ, வேத-ஆகம நம்பிக்கைகள், அணுகுமுறைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை எடுத்துரைக்கிறது. முத்தொகுப்பில் இரண்டாவதான *சிவனோடு வாழ்தல்* புத்தகம் சைவ வாழ்முறை, கலாச்சாரம், குடும்ப வாழ்க்கை, ஆளுமை முன்னேற்றம் மற்றும் ஒரு தனிநபருக்கும் மற்றவர்களுக்கும் தொந்தரவாக இருக்கும் எதிர்மறை பழக்கங்களை வெற்றிக்கொள்வதில் கவனம் செலுத்தியுள்ளது. இது *இயமம், நியமம்* மீது அதிகமாகவும், *ஆசனம்* மற்றும் *பிராணாயாமம்* (*ஹட யோகம்*) மீது சற்று குறைவாகவும் கவனம் செலுத்தியுள்ளது. *சிவபெருமானுடன் திருநடனம்* மற்றும் *சிவனோடு வாழ்தல்* புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல *அட்டாங்க யோகம்* ஒரு முழு அமைப்பாக செயல்புறிவதற்கு, ஒரு உறுதியான தத்துவ-கலாச்சார அடித்தளத்தை, அந்த சீடன் தனது சொந்த வாழ்க்கையை நோக்கும் மற்றும் வாழும் முறையாக அடிமனதில் ஏற்றுக்கொண்டு, அதனை அனுபவத்துடன் தொடர்புபடுத்தி, பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, வழிபாடு மற்றும் மற்ற விவகாரங்களை தொடர வேண்டும். முத்தொகுப்பில் மூன்றாவதான *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகம் ஐந்து, ஆறு மற்றும் ஏழாவது அங்கங்களை உள்ளடக்கி, எட்டாவது அங்கத்திற்கு வழிநடத்தி செல்கிறது. நாம் சிவபெருமானின் திருநடனத்தில் பங்கேற்கவும், வாழவும் கற்றுக்கொண்டால் இவை அனைத்தும் தனிப்பட்ட அனுபவமாக ஒரு நல்ல தத்துவ புரிதல், ஒரு வலுவான அர்ப்பணிப்பு மற்றும் நல்லொழுக்கத்துடன் சமயத்தை பின்பற்றி வாழ்வது ஆகும். அத்தகைய ஒரு அடித்தளத்தின் மீது, *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள யோகம் மற்றும் மீமெய்யியல் அனுபவங்கள் இயல்பாக தோன்றி நிலையானதாக இருக்கும்.

உலகெங்கும் இருக்கும் எனது சீடர்களுக்கு *தி மாஸ்டர் கோர்ஸ்* முத்தொகுப்பு வாழ்நாள் முழுவதும் தினமும் படிக்கவெண்டியது ஆகும். இதனை அவர்கள் ஒவ்வொரு வருடமும், பல தலைமுறைகளுக்கு ஆய்வு செய்யவேண்டிய ஒன்றாகும். 3000 த்திற்கும் அதிகமான பக்கங்களை கொண்ட, இந்த ஆய்வு

முழுவதையும் பெரு முயற்சி செய்து, *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் நான்காவது பாகமாக இருக்கும் 365 நந்திநாத சூத்திரங்களின் நான்கு வரிகளில் சுருக்கமாக வழங்கியுள்ளோம். 365 தினசரி பாடங்களாக அமைந்துள்ள *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டம் வாழ்க்கையை-மாற்றி அமைக்கும் ஆய்வு ஆகும். முதல் பாடத்தை தொடங்கும் நேரம் நல்ல நேரம் என்பதால், சீடர்கள் எப்போது வேண்டுமானாலும் தொடங்கி, 365 பாடங்கள் முடிவடையும் வரை வருடம் முழுவதும் தொடர வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்வை மாற்றி அமைக்க தயாராக இருந்தால், *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டத்தை இன்றே தொடங்குங்கள். இன்று முடியவில்லை என்றால் நாளை தொடங்குங்கள். *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டத்தை படிப்பதற்கு மூன்று வழிகள் உள்ளன: 1) இணையத்தில் படித்தல்; 2) வீட்டில் இருந்து படித்தல்; 3) முறையாக அஞ்சல் வழியில் படித்தல்.

1. இணையதளத்தில் படித்தல்: இணையதள படிப்பை எந்த சமயத்திலும் தொடங்கலாம். இன்று படிக்கவேண்டிய பாடத்தை www.gurudeva.org இணையதளத்தில் *தி மாஸ்டர் கோர்ஸ்* தினசரி பாடப்பிரிவில் பார்க்கலாம். அல்லது நீங்கள் gurudeva-mastercourse-subscribe@jnanadana.org மின்னஞ்சலுக்கு ஒரு அஞ்சல் அனுப்பி அதனை மின்னஞ்சல் வழியாக பெறலாம். பாடங்கள் தமிழ் புத்தாண்டின் முதல் நாள், ஏப்ரல் மாத மத்தியில் தொடங்கினாலும், அதனை வருடத்தின் எந்த நாளிலும் தொடங்கலாம். நீங்கள் வருடத்தின் முதல் நாளுக்காக காத்து இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அன்றைய பாடத்தில் இருந்து தொடங்குங்கள், அது 132 ஆவது பாடமாக இருக்கலாம். நீங்கள் 131 ஆவது பாடம் வந்தவுடன் உங்களுடைய முழு வருட படிப்பு முடிந்ததாக கருதுங்கள். ஒரு நாத்திகனும் இந்த பூமியில் வாழும் வாழ்க்கை மற்றும் மனித பிறப்பின் இறுதியான குறிக்கோள் பற்றிய தனது சிந்தனை முறையை மாற்றிக்கொள்ள ஊக்குவிக்கும் அளவிற்கு பாடங்கள் தத்துவம், யதார்த்தம் மற்றும் மனதிற்கு திருப்தி அளிக்கும் தகவல்கள் நிரம்பி இருப்பதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். இப்போதே தொடங்குங்கள். இன்றே மங்களகரமான நாள்.

2. வீட்டில் இருந்தே படித்தல்: வீட்டில் இருந்தே தி மாஸ்டர் கோர்ஸ் படிப்பதற்கு முத்தொகுப்பின் மூன்று புத்தகங்களும் உங்களிடம் இருக்க வேண்டும். உங்களது தினசரி படிப்பை ஏதாவது ஒரு திங்களன்று *சிவபெருமானுடன் திருநடனத்தில்* முதல் சுலோகம் மற்றும் அதன் *பாஷ்யத்துடன்* தொடங்குங்கள். அதன் பிறகு *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் முதல் பாடத்துடன் தொடங்குங்கள். அதன் பிறகு *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் நான்காம் பாகத்தில் இருக்கும் நந்திநாத சூத்திரத்தின் முதல் *சூத்திரத்தை* படியுங்கள். இறுதியாக, *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகத்தின் முதல் பாடத்தை படியுங்கள். மூன்று புத்தகங்களில் இருந்து அன்றைய பாடத்தை படிக்க இருபது நிமிடங்கள் தேவைப்படும். *சிவபெருமானுடன் திருநடனத்தில்* 155 பாடங்கள் (*சுலோகங்கள்* மற்றும் *பாஷ்யங்கள்*) மட்டுமே இருப்பதால், நீங்கள் இந்த புத்தகத்தின் 155 ஆவது பாடத்தை முடித்தவுடன், மீண்டும் தொடக்கத்தில் இருந்து தொடங்குங்கள். மொத்தம் 310 நாட்களுக்கு பிறகு, நீங்கள் இரண்டு முறை வாசித்ததும், மீண்டும் வாசிக்கத் தொடங்கி பாடம் 55 வரை படியுங்கள். அப்போது *சிவனோடு வாழ்தல்*

மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகத்தின் 365 பாடத்தை ஒரே நாளில் படித்துக்கொண்டு இருப்பீர்கள். நீங்கள் ஒரு வருடத்திற்கு இந்த பாடங்களை தினமும் படித்தால், உங்களது அகத்திலும் இந்து சமயத்தின் ஆழத்திலும் ஒரு தனித்த நீண்ட பயணமாகவும், நீங்கள் வாழ்க்கையை அணுகும் முறையை மாற்றுவதன் மூலம் உங்களது வாழ்க்கையை உருமாற்றுவதற்கு ஒரு போதுமான பயிற்சியாகவும் விளங்கும் ஒரு வலுவான *சாதனாவை* நிறைவு செய்து இருப்பீர்கள். *சிவபெருமானுடன் திருநடனம், சிவனோடு வாழ்தல்* மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* தொகுப்பாக விளங்கும் *தி மாஸ்டர் கோர்ஸ்* முத்தொகுப்பை பல வருடங்களுக்கு குடும்பம் முழுவதும் படித்து மகிழலாம் மற்றும் காலை சிற்றுண்டி, இரவு விருந்து அல்லது காலை *பூசைக்கு* பிறகு சத்தமாக அல்லது மனதிற்குள் படிக்கலாம். தாமதிக்காமல் நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்.

3. முறையாக அஞ்சல் முறையில் படித்தல்: ஒரு தனிப்பட்ட, மேற்பார்வையுள்ள அணுகுமுறையை நாடுவோருக்கு *தி மாஸ்டர் கோர்ஸ்* அஞ்சல்வழி கல்வி பொருத்தமானது. இந்த சேவையை இமாலயன் அகாடெமி 1957 ஆம் ஆண்டில் இருந்து வழங்கி வருகிறது. இதற்கு முறையான சேர்க்கை மற்றும் தேவையான தகுதி, ஒருவர் தான் அடைய விரும்பும் குறிக்கோள்கள் பற்றிய தெளிவான விளக்கம் மற்றும் தனது பின்னணி, கல்வி மற்றும் அனுபவம் பற்றிய தகவல் தரவேண்டி இருக்கும். அஞ்சல்வழி மாணவர்கள் மூன்று புத்தகங்களின் பல வண்ண பதிப்பை வாங்கவேண்டும். அவர்கள் செய்தி அறிக்கைகள், இன்னர்சர்ச் டிராவல்-ஸ்டடி புரோகிராம் தொடர்பான தள்ளுபடி மற்றும் ஹவாய் மடத்திற்கு வரும் போது கவனம் செலுத்தவேண்டிய முக்கிய விவரங்கள் பற்றி தொடர்ந்து மின்னஞ்சல்களை பெறுவார்கள். மேலும் தகவல் அனுப்புவதற்கு மின்னஞ்சல் அனுப்பவெண்டிய முகவரி mastercourse@hindu.org.

ஒரு சிறிய அறிவுரை: தியானம் செய்ய விரும்பும் மாணவன் வெளிப்புற வாழ்க்கை மற்றும் வேலையை துறந்து, முழுமையாக தியானம் செய்வதற்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்ற ஒரு வலுவான எண்ணம் இருக்கும். ஆனால் அது *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டத்தின் சாரம் இல்லை. அவர் தியானத்தை பற்றி தெரிந்துக்கொள்வதற்கு முன்பாகவே வெளியுலகில் வேலையில் இருக்கும் போது தீய சக்திகளை சந்தித்து இருக்க வாய்ப்புள்ளது என்பதால், அவர் உலகில் இருந்து விலகும்போது இன்னும் அதிகமான தீய சக்திகள் விளையும். ஒருவரது வாழ்க்கையில் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்துவதற்கு *தி மாஸ்டர் கோர்ஸ்* அஞ்சல் வழிக்கல்வியில் முக்கியத்துவம் தரப்படுகிறது. இதன் முதல் கட்டமாக ஒரு மாணவன் தன்னால் இந்த உலகில் நேர்மறையாக பணிபுரிய முடியும் என்பதை, தனது கடமைகளை முழுமையான ஆற்றலுடன் செய்து, வாழ்க்கையின் முழு இயக்கமுறையான வெளியுலகம், தனது மனம் மற்றும் தான் ஆகியவை எப்படி வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை இயலுணர்வுடன் புரிந்துக்கொண்டு நிரூப்பிக்கவேண்டும். அதன் பிறகு தினமும் பத்து, பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் நல்ல முறையில் உறுதியான தியானம் செய்து படிப்படியாக மனதை வழிநடத்த *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடங்கள் போதுமானதாக இருக்கும். இதன் பிறகு நமது சிந்தனை மாற்றி அமைத்துக்கொண்டு வெளியுலக விவகாரங்கள், உருவங்கள் மற்றும் ஆடம்பரங்களின் யதார்த்தம் மற்றும் நிரந்தரம் இல்லாமல்,

நமது வழிகாட்டியாக நமக்குள் இருக்கும் யதார்தத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். ஒரு முறை நமது தத்துவ ஞான அமைப்பு முழுவதும் சைவ சித்தாந்தத்தின் சிந்தனையுடன் இணைந்து விட்டால், மனதை தியானத்தினுள் புகுத்துவது எளிதாக இருக்கும். அதன் பிறகு நாம் வெளிப்புற விவகாரங்கள் மற்றும் லௌகீக வாழ்வில் ஈடுபட்டு நமது தினசரி வாழ்வில் வேலை செய்துக்கொண்டு இருக்கும் போது, அந்த உள்ளிருக்கும் ஆற்றல் வழிகாட்டியாக இருக்கும் மற்றும் ஆற்றலின் மையமும் பரமாத்துமாவும் மெய்யாக இருக்கும்.

நீங்கள் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அதிக சக்தியை புகுத்துவது முக்கியமானது ஆகும். அதை துறக்காமல், அதில் ஈடுபாட்டுடன் செயல்படுங்கள். அதில் முழு ஆர்வத்துடன் இருங்கள். அப்படி செய்வதன் மூலம் உயிரின் மையத்தில் இருந்தே உடல் வழியாக அதிக உயிர் சக்தியை புகுத்துகிறீர்கள். லௌகீக விவகாரங்கள் இல்லாமல் யதார்த்தத்தின் வழிகாட்டியாக பரமாத்துமாவை கொண்டிருந்து, இந்த நரம்பு ஓட்டங்கள் வழியாக தொடர்ந்து உயிர் சக்தி சென்றுக்கொண்டு இருக்கையில், சிவனின் சக்தி உங்களுக்குள்ளும் உங்கள் வழியாகவும் சென்றுக்கொண்டு இருப்பதால், சிவனின் பிரபஞ்ச திருநடனத்தின் அங்கமாக நீங்கள் செய்வதை நீங்களே உண்மையில் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். சிவபெருமானின் பூரணமான பிரபஞ்சத்தில், தர்மம் செய்யும் ஒரு தெய்வீக சக்தியாக உங்களை நினைத்துக்கொள்ளும் ஒரு புதிய பழக்கத்தை மட்டும் உருவாக்கிக்கொள்வதன் மூலம், உங்கள் முற்பிறவியில் தூண்டப்பட்டு ஆழமாக உள்மனதில் பதிந்து இருக்கும் பல தடைகள் வெளிவருவதற்கு முன்னதாகவே தடுத்து விடலாம். அதிக முன்யோசனை மற்றும் முடிந்த வரை அதிக சக்தியுடன், அனைத்தையும் முடிந்த வரை சிறப்பாக செய்வதன் மூலம் நீங்கள் புதிய பழக்கங்களை உருவாக்கிக் கொள்கிறீர்கள். இந்த அணுகுமுறை தனிப்பட்ட ஆன்மீக உணர்தல் மற்றும் மாற்றத்தின் பாதையில் ஒரு சீரான முன்னேற்றத்தை கொண்டு வரும். *தி மாஸ்டர் கோர்ஸ்* அஞ்சல் வழி கல்வியை மேற்பார்வையுடன் பயில்வதை தொடங்குவதற்கு விண்ணப்பிக்க எங்களுக்கு கடிதம் எழுதுங்கள் அல்லது மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களை இருகரம் கொண்டு வரவேற்கிறோம். இது சுலபமாக இருக்காது, ஆனால் பயனுள்ள எதுவும் சுலபமாக கிடைப்பதில்லை.





ஆகஸ்ட் 25, 2000 நியூ யார்க் நகரில் நடைப்பெற்ற யுனைடெட் நேஷன்ஸ் மில்லினியம் பீஸ் சம்மிட் (ஐ.நா. அமைதி உச்சிமாநாடு) மாநாட்டில் சத்குரு சிவாய சப்பிரமுனியசுவாமி 1,200 ஆன்மீக

தலைவர்களுடன் விவாதித்தார். "வீட்டில் போரை நிறுத்துங்கள்" என்று எல்லோரிடமும் கேட்டுக்கொண்டார். குருதேவா கையில் ஐ.நா. யு தன்ட் விருதுடன் நின்றுக்கொண்டு இருக்கிறார்.

இந்து குடும்ப தர்மம்

இந்து கிரகஸ்த தர்மஹ

हिन्दुगृहस्थधर्मः



ஐக்கிய நாடுகளின் தலைவர்கள் 1994 ஆம் ஆண்டை சர்வதேச குடும்ப வருடமாக அறிவித்து இருந்தார்கள். உலகெங்கும் குடும்ப அமைப்பின் தோல்வி மற்றும் அத்தகைய ஒரு சீர்குலைவின் கிளை விளைவுகளான குற்றம், நெறிதவறிய இளைஞர்கள், கீழ்படியாத குழந்தைகள், விவாகரத்து மற்றும் மற்ற குடும்ப வேதனைகள் அல்லது உறுதியற்ற சமூகத்தின் அடிப்படை பிரச்சனைகளை எதிர்க்க அவர்கள் முயற்சி செய்துக்கொண்டு இருந்தார்கள். குடும்ப வாழ்க்கை பற்றி அன்றும் இன்றும் உலகின் பிரதான சமயத்தலைவர்களின் கருத்துக்களை விசாரிக்க முடிவு செய்து, குடும்பம் பற்றி யூதர்கள், கிறுத்துவர்கள், இசுலாமியர்கள், பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் பஹாய் மக்களின் ஒரு பிரத்யேக கண்ணோட்டமாக *ஃபேமிலி இஸ்ஸுஸ் அஸ் சீன் பை டிஃபரெண்ட் ரிலிஜன்ஸ்* (பல்வேறு சமயங்களின் கண்ணோட்டத்தில் குடும்ப வாழ்க்கை) என்ற ஒரு பன்மொழி ஐ.நா. பதிப்பை வெளியிட திட்டமிட்டனர். இந்துவின் பாரம்பரிய குடும்ப பண்புகளை வரையறுத்து விளக்கவேண்டும் என்று ஐ.நா சபையில் இருந்து எங்கள் இந்துயிசம் டுடே பத்திரிகையை அணுகினர். இந்துக்கள் சந்திக்கும் துன்பங்கள் மற்றும் இந்த துன்பமான காலகட்டத்தில் சனாதன தர்மம் குடும்பங்களுக்கு எவ்வாறு உதவியாக இருக்கிறது என்பதைப் பற்றி நியாயமான முறையில் விளக்குமாறு அவர்கள் எங்களிடம் கேட்டுக்கொண்டார்கள். ஐ.நா. புத்தகத்தில் இந்து அத்தியாயத்தை உருவாக்க நாங்கள் எங்களது இந்துயிசம் டுடே நிருபர்களான, லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் அர்ச்சனா டொங்க்ரே மற்றும் நியூ யார்க் நகரின் லாவினா மேல்வாணியுடன் நாங்கள் இணைந்து செயல்பட்டோம். இந்த கட்டுரை முழுவதும் நிரம்பியுள்ள அவர்களின் கருத்துக்கள், தனிப்பட்ட அனுபவ "அபிப்ராயத்தை" வழங்குகின்றன. அதன் பயனாக வெளிவந்த கட்டுரையை, *சிவனோடு வாழ்தல்*

புத்தகத்திற்கு ஒரு பொருத்தமான முன்னுரையாக பெருமையுடன் உங்களுக்கு வழங்குகிறோம்.

குடும்பம் பற்றி இந்துவின் கண்ணோட்டம்

தங்களது முன்னோர்கள் முன்னூறு தலைமுறைகளுக்கு வாழ்ந்ததைப் போல அல்லாமல், குடும்பம் பற்றி இந்துக்கள் வழங்கிய தங்களுடைய கண்ணோட்டங்களை இங்கே காணலாம் (இந்து குடும்ப வரலாறு மற்ற வரலாறுகளை காட்டிலும் அதிகமாக, ஆறாயிரம் ஆண்டுகாலத்திற்க்கும் மேலாக நீடித்து வருகிறது). இன்று பல நாடுகளில் அனுகூலமான மற்றும் பிரதிகூலமான சூழ்நிலையிலும், வாழ்ந்துக்கொண்டு இருக்கும் இந்து குடும்ப அனுபவத்தை நாம் இதன் மூலம் தெரிந்துக்கொள்கிறோம். இந்து சமூக குடும்ப ஒற்றுமை எதிர்கொள்ளும் ஆபத்துக்களை, நாம் இங்கே விரிவாக ஆராய்கிறோம். அதன் பிறகு நாம் பாரம்பரிய குடும்ப வாழ்க்கையை தொடர்ந்து நிலைக்க செய்யும் ஆன்மீக பண்புகளுக்கு அழைப்பு விடுத்து, குடும்ப உறுப்பினர்களின் நலனுக்கு ஒரு உறுதிமொழியும் கலாச்சார வழிமுறைகள் மற்றும் ஞானங்கள் நிலைக்கச் செய்ய ஒரு வாக்குறுதியும் எடுத்துக்கொள்கிறோம்.

உலகம் முழுவதும் பரவி வாழ்க்கை போராட்டத்தில் இருக்கும் இந்து குடும்பங்களில் சிலர் தோல்வியுற்றும், பலர் வெற்றிப்பெற்றும் வருகின்றனர். தங்கள் இந்துத்வத்தில் நன்றாக வேரூன்றி இருப்பவர்கள் நிலைமை நன்றாக சமாளித்து வாழ்வதாக எங்களுக்கு தோன்றுகிறது. மனித இனத்தில் ஆறில் ஒரு பங்கு வகிக்கும் இந்து குடும்பங்கள், இன்று ஆபத்தில் சிக்கியுள்ளது. குடும்ப வாழ்க்கையின் கோட்பாடு உடைந்தால் விளைவு என்னவாக இருக்கும்? நமது கலாச்சார ஆன்மீக உணர்வு இணையும் அமைப்பே, ஒரு கொடிய நோயினால் தாக்கப்பட்டு அழிந்து விட்டால் என்னாவது? அத்தகைய ஒரு பேரழிவை யாரால் அளவிட முடியும்? யாரால் அழுது புலம்ப முடியும்? இருந்தாலும் நமது சக்தியின் மூலமாகவும், நமது ஆன்மீகத்தின் ஆதரவாகவும், நமது எதிர்காலத்தின் ஒரே உத்தவராதமாகவும் இருக்கும் பாரம்பரிய இந்து குடும்பத்தின் அழிவிற்கு அழைத்து செல்லும் ஒரு பாதையைத் தான் நாம் பாதி மயக்கத்தில் பின்பற்றி வருகிறோம்.

குடும்பம் பிரிவதற்கு நாம் தான் காரணமா? இருக்கலாம். அது நிச்சயமின்மையை பற்றி எச்சரிக்கிறதா? அது எச்சரிக்கிறது என்பதை மறக்க வேண்டாம். இதை தவிர்க்க முடியுமா? சந்தேகம் தான். இந்து குடும்பத்திற்கு ஒரு இறுதி புகழஞ்சலி செலுத்துவது அவசர நடவடிக்கையாக இருக்கும். இருந்தாலும் எதிர்காலத்தில் யாரும் எதிர்கொள்ளாமல் இருக்க எல்லோரும் தற்போது கண்டிப்பாக கவனம் செலுத்துவதற்கு, இந்த பிரச்சனைகளின் மதிப்பீட்டை ஒரு எதிர்கால எச்சரிக்கை அல்லது கண்ணோட்டமாக பயன்படுத்திக் கொள்ளலாம். அதை மனதில் வைத்துக்கொண்டு இந்து குடும்பத்தின் சில உறுதியான மற்றும் குறிப்பிடத்தக்க வலிமைகள், அதற்கு எதிராக ஒன்று சேர்ந்துள்ள ஆற்றல்மிக்க சில தீய சக்திகள் மற்றும் அது நிலைத்து நிற்கும் என்று எங்களுக்கு நம்பிக்கை அளித்த சில அறிகுறிகள் பற்றிய ஆய்வை நாம் தொடங்கலாம்.

ஒரு பொருத்தமான உதாரணம்: பெங்களூருவை சேர்ந்த திரு. ரமேஷ், அமெரிக்காவில் பொறியியல் படிப்பு படித்துக்கொண்டு இருந்தான். அவன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஒரு அமெரிக்க மாணவியை காதலித்தான் மற்றும் விரைவில் அவளை திருமணம் செய்துக்கொள்ள இருக்கிறான். தங்களது ஒரே மகன், “வேற்று மதத்தை" சேர்ந்த பெண்ணை மணக்க முடிவு செய்ததை நினைத்து பெற்றோர்கள் மனம் ஒடிந்து விட்டார்கள். அவர்களை பொறுத்தவரையில் அது பல நூற்றாண்டுகளாக நடந்த தொடர்ச்சியை அழிப்பதாகவும், பாரம்பரிய ஓட்டத்தில் ஏற்பட்ட ஒரு விரிசல், ஒரு சமூக பேராபத்தாகவும் தோன்றியது. அவர்களுடைய நண்பர்களுக்கு இது புரியாது, மற்றும் அவர்களின் வாழ்க்கையில் உறுதியாக மாற்றம் ஏற்படும். அவர்களின் பேரக்குழந்தைகள் "வேறுபட்ட" நிறம், சாதி மற்றும் கலாச்சாரத்துடன் இருப்பார்கள். மேலும் அவனுடைய புதிய மனைவி இன்னொரு சமயத்தை சேர்ந்தவளாக இருந்தாள், மற்றும் "நாங்கள் எங்கள் குழந்தைகளை இரண்டு சமயங்களிலும் வளர்ப்போம் மற்றும் இளைஞர்களாக அவர்கள் தங்கள் சொந்த முடிவை எடுக்க அனுமதி வழங்குவோம்," என்று அந்த தம்பதியர் அறிவித்து இருந்தார்கள். மிகவும் ஆச்சாரமான பெற்றோர்களுக்கு, இந்த செயல் தங்கள் சமயத்திற்குள் ஒற்றுமையை குலைப்பதாக தோன்றியது. இந்த நடவடிக்கை தங்களது பரம்பரையில் ஏற்பட்ட விரிசலை அறிவிக்கும் அபாய சங்காகவும், தங்களது பேரக்குழந்தைகளை இன்னொரு சமயம், இன்னொரு நாடு, இன்னொரு கலாச்சாரத்திற்கு இழக்கப்போவதாகவும் தோன்றியது.

உலகெங்கும் எண்ணற்ற ரமேஷ்கள் மற்றும் இந்திய மாணவிகள் பரவி இருக்கிறார்கள். பல குடும்பங்கள் நிலைத்து இருக்காமல், ரமேஷின் பாட்டனார் அறிந்து இருந்து கற்றுத்தர விரும்பிய பாரம்பரியம் ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் அழிந்து, அதன் இடத்தில் இடம்பிடிக்கவிருக்கும் மற்ற பண்புகள் அல்லது பண்புகள் இல்லாமல், மற்ற நம்பிக்கைகள் அல்லது நம்பிக்கையின்மை, மற்ற கொள்கைகள், கொள்கை அமைப்புக்கள் மற்றும் வரலாறுகளின் மிகப்பெரிய அபாயத்தை, தங்களுடன் கொண்டு வந்த பெருகிவரும் இந்திய வம்சாவளியினரின் அங்கமாக அவர்கள் இருக்கிறார்கள். இது குறிப்பாக மேற்கத்திய நாடுகள் அல்லது இந்திய நகரங்களில் வசிக்கும் பல லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு ஒரு முக்கிய கவலையாக உள்ளது. இந்திய பாரம்பரியம் மற்றும் இந்து சமயத்திற்கு வெளியே எண்பது சதவீத இளம் பெண்கள் திருமணம் செய்துகொள்வதாக, டெக்சாசில் உள்ள இந்து குடும்பம் என்னிடம் தெரிவித்தார்கள்.

இதை கவனியுங்கள்: சாந்தி என்ற பெண் அமெரிக்க கலாச்சாரத்தில் அமெரிக்காவில் வளர்க்கப்பட்டாள், ஆனால் அவளுடைய பெற்றோர்கள் இந்தியர்கள். அவள் சிறுமியாக இருந்த போது இந்தியா சென்றுகொண்டு இருந்தார்கள், ஆனால் இப்போது செல்வதில்லை. தனக்கு தற்போது பொருத்தமில்லாத ஒரு இடத்திற்கு, தனது நண்பர்களை விட்டு பிரிவதை சாந்தி விரும்புவதில்லை. அவள் அதே சமயத்தில் தனது பெற்றோரை நினைத்து வருந்துவதோடு, அவர்கள் மனதை புண்படுத்தவும் விரும்பவில்லை. அவளது டெக்சாஸ் சமூகத்தில், அவள் ஒரு ஹிஸ்பானிக் என்று பல முறை தவறாக அடையாளம் காணப்பட்டு இருக்கிறாள் மற்றும் அவள் ஜூயன் என்றோரு

மெக்சிகன் அமெரிக்கனுடன் பழகி வருகிறாள். ஒரு நாள் சாந்தி திடீரென்று, "அப்பா, நான் ஒருவனை சந்தித்தேன். அவன் நல்லவனாக இருக்கிறான். நாங்கள் திருமணம் செய்துக்கொள்ள இருக்கிறோம்," என்று அறிவித்தாள். தந்தை அதிர்ச்சி அடைந்தார். "நீ என்ன சொல்கிறாய்? திருமணம் செய்து கொள்கிறேன் என்று சாதரணமாக சொல்கிறாய்? உனக்கு அவனை எத்தனை நாட்களாக தெரியும்?" என்று கத்தினார். "அதைப்பற்றி சொல்லலாம் என்று தான் இருந்தேன். அதற்குள்... நாங்கள் இருவரும் ஒரு வருடத்திற்கும் மேலாக பழகி வருகிறோம்," என்றாள்." "நல்ல முறையில் நல்ல குடும்பத்தில் வளர்ந்த ஒரு நல்ல சாதியை சேர்ந்த ஒரு இந்திய பையனுக்கு உன்னை திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற ஒருமித்த கருத்துடன் நாம் எப்போதும் இருந்துள்ளோம்." "ஆனால் அப்பா, நானும் ஜுயனும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறோம்," என்று சாந்தி அழுதுக்கொண்டே தனது அறைக்கு சென்று விட்டாள். அவள் மெதுவாக அழும் சத்தம் நன்றாக வெளியில் கேட்டது. அவளது தந்தை மனமுடைந்து அமர்ந்து இருந்தார். அவரது வாழ்க்கை நிலைக்குலைந்து இருந்தது. அவர் தனக்கு நடக்கப்போவதைப் பற்றி நன்றாக அறிந்து இருந்தார்!

மேற்கத்திய உலகின் லௌகீக குறிக்கோள் தனிமனிதனின் மனநிறைவை சார்ந்து இருக்கிறது, ஆனால் கிழக்கத்திய சமய குறிக்கோள் ஒருவன் தனது பெற்றோர்கள், சமூகம், தனது நாடு மற்றும் பாரம்பரியத்திற்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை சார்ந்து இருக்கிறது. ஆனால் கிழக்கு நாடுகளின் குழந்தைகள் மேற்கத்திய பண்புகளுடன் வளர்க்கப்படும் போது, கடமையை தனிப்பட்ட மனநிறைவும், சமூகத்தை தீவிர உணர்ச்சியும், பாரம்பரியம் மற்றும் சில சமயம் நாட்டை தனிமனித சுதந்திரமும் மிஞ்சுகிறது.

***கருத்துக்கள்**: இந்து சமயம் என்றும் தியாகத்தை வாழ்த்தி வந்துள்ளதாக எனது பாட்டி எங்களுக்கு சலிக்காமல் நினைவூட்டிக்கொண்டு இருப்பார். குடும்ப உறுப்பினர்களுக்கு தியாகம் செய்வது சிறப்பானதாக கருதப்பட்டு வந்தது. பகவான் ஸ்ரீ ராமரும் பாண்டவர்கள் போன்ற தர்மம் தவறாத அரசர்களும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு தியாகங்களை செய்யவேண்டி இருந்ததாக இந்து இதிகாசங்கள் இராமாயணமும் மகாபாரதமும் தெரிவிக்கின்றன. "அப்படி இருக்கையில் சாதாரண மக்கள் சில தியாகங்கள் செய்வதில் என்ன தவறு இருக்கிறது?" என்று அவர் கேட்பார். தங்கள் குழந்தைகள் நன்றாக படிக்கவேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் மிகப்பெரிய தியாகங்களை பெரும்பாலும் செய்துக்கொண்டு இருக்கிறார்கள். தங்கள் வயிற்றுப்பசியையும் பொருட்படுத்தாமல், தங்கள் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்கவேண்டும் என்பதில் பல இந்து பெற்றோர்கள் குறியாக இருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக தங்கள் பெற்றோர்கள் முதுமையால் பலவீனமடைந்து இளைய தலைமுறையின் உதவியை நாடும் போது, குழந்தைகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் ஆடம்பரத்தை குறைத்துவிடுகின்றனர். ஒரு இந்து தியாக செயலுக்கு இரக்கப்படாமல், அதை பாராட்டுடன் புகழ்ந்து பாடுகிறார். விருந்தோம்பலை பற்றி பாட்டி எங்களுக்கு ஒரு முக்கிய கருத்தை தெரிவித்தார். அவர் விருந்தாளிகளை தெய்வமாக கருதி,*

விருந்தோம்பலை ஒரு ஆன்மீக சேவையை போல செய்து வந்தார். இது சமூகத்தை ஒன்று சேர்த்து வைப்பதிலும், குடும்பத்தினர் பாசத்துடன் வெளியுலக மக்களை உபசரிக்கவும் உதவியாக இருந்தது. ஒரு அழையா விருந்தினர் ஒரு குடும்பத்தை நாடி வந்தாலும், அவர் வரவழைக்கப்பட்டு அவரிடம் நலன் விசாரிக்கப்படுகிறது. அவருக்கு வீட்டில் நல்ல சுவையான உணவு வழங்கப்படுவது மட்டுமல்லாமல், குடும்ப உறுப்பினர்கள் பட்டினியாக இருந்து விருந்தாளியை நன்றாக உபசரிக்கும் அளவிற்கு விருந்தோம்பல் வலுவாக இருந்தது. இந்து சமயம் நமக்கு அனைத்து உயிரினங்களின் அன்பை கற்றுத்தந்தது. மதிய உணவு நேரத்தில், என் தாயார் அமைதியாக ஒரு பிரார்த்தனை செய்து உணவில் ஒரு பகுதியை தனியாக எடுத்து வைத்து, காகங்களுக்கு வைத்து விடுவார். உணவு அருந்தும் வேளையில் பசியுடன் ஒருவர் வந்தார் என்றால், அவருக்கு உணவும் சில காசுகளும் வழங்கப்படும்.

தங்கள் சமயம் பற்றி குறைவாக அறிந்து, இளவயதின் உணர்ச்சியால் தூண்டப்பட்டு, உடலுறவு என்பது வீரியம், சுதந்திரம் மற்றும் மரியாதையின் சின்னமாக விளங்கும் நாட்டில் வாழ்வதற்கு தூண்டப்பட்ட சாந்திகள் மற்றும் ரமேஷ்களுக்கு, இனி முடியாது என்று பெற்றோர்களால் சொல்வது முடியாத காரியம். சாந்தி மற்றும் ரமேஷ் தங்கள் பெற்றோர்களின் மனதை புண்படுத்த நினைக்கவில்லை என்றாலும் இறுதியில் அது தான் நடந்தது. அவர்களுடைய பெற்றோர்கள், சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் வேதனையில் இருக்கிறார்கள். தங்கள் குழந்தைகளை வளர்க்கும் முறையில், தங்களுக்கே தெரியாமல் பெற்றோர்களாக கடமையில் இருந்து தாங்கள் தவறியதை உணரும் வரை, இந்த பெற்றோர்கள் வருந்துக்கொண்டு தான் இருப்பார்கள். சாந்தி ஜுயனை மணந்தாள், ஆனால் அதற்கு முன் அவள் பல இன்னல்களை சந்திக்கவேண்டி இருந்தன. முதலில் அவளது தாய் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அறிவித்தார். அவளது அண்ணன் உண்ணாவிரதம் இருக்க தொடங்கினான், ஆனால் அது சில நாட்கள் கழித்து காலை சிற்றுண்டியுடன் முடிவடைந்தது. வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு தந்தை உத்தரவிட்டார், ஆனால் அவர் தன் மகள் மீது உண்மையில் அன்பு செலுத்தியதால் சிறிது பின்வாங்கினார். மெதுவாக பெற்றோர்கள் மனம் மாறினார்கள், ஒரு அமைதியான திருமணம் நடைப்பெற்றது, மற்றும் முதல் குழந்தை பிறந்தவுடன் உணர்ச்சிகள் மென்மை அடைந்தன.

ரமேஷின் மனைவியைப் போல அல்லாமல், சாந்தியின் கணவனுக்கு எந்த சமயத்திலும் ஈடுபாடு இல்லை. இதன் காரணமாக, அவர் தன் முதல் குழந்தையின் *நாமகரண* விழாவில் கலந்துக்கொள்ள சம்மதம் தெரிவித்தான். அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது! அவளுடைய தாத்தா-பாட்டி இந்தியாவில் இருந்தும், அவனுடைய தாத்தா-பாட்டி அயோவாவில் இருந்தும் வந்து, அழகான குழந்தையை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் உருவான குடும்பம் எல்லோர் எதிர்பார்ப்பில் இருந்து மாறுபட்டு இருந்தாலும், ஒரு இளைஞர் விவேகத்துடன், "நான் ஒரு அமெரிக்கனாக இருப்பதில்

விருப்பமில்லை என்றால், என்னை எதற்கு அமெரிக்கா அழைத்து வந்தீர்கள்?" என்று தனது பெற்றோர்களை எதிர்த்து கேட்டார்.

இன்று அமெரிக்க பல்கலைகழகங்களில் 32,000 இந்திய நாட்டார்வர்கள் கல்வி கற்று வருகிறார்கள். அதில் பலர் நல்ல வசதியான குடும்பங்களை சேர்ந்தவர்கள். அவர்களின் பெற்றோர்களுக்கு தங்கள் சமயத்தைப் பற்றி நல்ல பரிச்சயம் இருந்தாலும், அந்த மாணவர்களுக்கு தங்கள் சமயங்களைப் பற்றி அவ்வளவாக தெரியாது. இது தான் சாந்தி மற்றும் ரமேஷின் வாழ்க்கையில் நடந்துள்ளது. மேற்கத்திய கலாச்சாரத்தில் தங்களை பொருத்திக்கொள்வது அவர்களுக்கு கடினமாக இருப்பதால், அவர்களுக்கு மேற்கத்திய நாட்டவர்களை காட்டிலும் ராக்-அண்டு-ரோல், நவீன கலை மற்றும் பாப் பாடகர்களைப் பற்றி அதிகமாக தெரிந்து இருக்கிறது. அரசியல், பொருளாதாரம் மற்றும் கல்வி காரணங்களுக்காக இந்து குடும்பங்கள் தொடர்ந்து இந்தியா, இலங்கை, நேபால் மற்றும் மற்ற தாய்நாடுகளில் இருந்து வெளியேறி வருகிறார்கள். அதன் பிறகு பாரம்பரிய ஆதரவு கிடைக்காததால் பதின்மவயது சிக்கல்கள், பயங்கரமான விளையாட்டுக்கள், விவாகரத்து, கருக்கலைவு, தற்கொலை, பல திருமணங்கள், வரதட்சணை, போதை மருந்துக்கு அடிமை, முறையற்ற உடலுறவுகள், விபச்சாரம், ஆபாசப் படங்கள் மற்றும் ரமேஷ் மற்றும் சாந்தியைப் வேற்று நாட்டவர்கள் இடையே திருமணம் என்று வலுவாக அமைதியை குலைக்கும் பிரச்சனைகளை அவர்கள் எதிர்கொள்கிறார்கள்.

> ***கருத்துக்கள்***: *இந்தியாவில் ஒரு இந்துவாக வளரும் போது மகிழ்ச்சியும் தீர்த்த யாத்திரையும், சமயச் சடங்குகளும் தினசரி வாழ்க்கையும் நுணுக்கமாக பின்னிப்பிணைந்துள்ளதை நான் உணர்ந்துகொண்டேன். சிறு வயதில் வயதான குடும்ப சமையல்காரருக்கு அருகில் அமர்ந்து, இராமாயணம் மற்றும் மகாபாரத கதைகளை கேட்டது இன்றும் நினைவில் இருக்கின்றன. வாய்ப்பேசாமல் அரக்கர்கள் மற்றும் தேவர்களின் கதைகளை கேட்கும் போது நாங்கள் சரி மற்றும் தவறு, நல்ல மற்றும் தீய பண்புகளில் மூழ்கி இருப்போம். சமயம் என்றுமே மகிழ்ச்சி மற்றும் இன்பத்துடன் தொடர்புடையதாக இருந்தது, ஆனால் என்றுமே ஒழுக்கத்தை கற்பிக்கும் பாடமாக இருந்தது இல்லை. வெற்றுக் கால்களுக்கு அடியில் குளுமையான பளிங்கு, கைகளில் மென்மையான சாமந்திப்பூ மற்றும் ரோசா இதழ்கள், முகத்தில் புன்னகையுடன் கண்ணன், சிவன் மற்றும் திருமாலின் முகங்கள், ஹார்மோனியம் மற்றும் கைத்தாளங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பக்தர்களின் சுத்தமான நம்பிக்கை எல்லாம் ஒன்று சேர்ந்து, மணர்பாறையில் உருவாக்கப்பட்ட அழகான பிர்லா மந்திருக்கு ஒவ்வொரு வார இறுதியிலும் நாங்கள் அழைத்து செல்லப்பட்டோம். அதன் பிறகு கோயில் வளாகத்தில் ஆனந்தமாக சவாரிகள், சிறு நகைகள் மற்றும் தெய்வப்படங்கள் மற்றும் குளிர்ச்சியான சோடாவும் கிடைக்கும். அது எங்களுக்கு ஒரு ஆன்மீக டிஸ்னி வேர்ல்டு போல இருந்தது.*

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சித்திரவதை குற்றங்களுக்கு இந்துக்கள் விதிவிலக்கு இல்லை. ஒவ்வொரு வருடமும் மனைவியை

துன்புறுத்தியதற்கு மட்டும் அல்லாமல், வரதட்சணை கொலைகள் தொடர்பாகவும் ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவாகின்றன. இந்த வழக்குகளில் மனைவியால் அதிக வரதட்சணை கொண்டு வரமுடியாத போது, பெரும்பாலும் அவள் சமயலறையில் ஏற்பட்ட விபத்தால் தீப்புண் காயங்களுடன் இறந்ததைப் போன்ற சூழலில் கொல்லப்படுகிறாள். பல இந்து சமூகங்களில் கைகளால் அடித்தல், பாலியல் சித்ரவதை, குழந்தைகளை வற்புறுத்தி பணியில் ஈடுபடுத்துவது, பெற்றோர்கள் மற்றும் சகமாணவர்களின் நச்சரிப்புக்கள், வீடு மற்றும் பள்ளியில் வழங்கப்படும் உடல் உறுப்பு தண்டனைகளில் இருந்து குழந்தைகளுக்கும் நல்ல பாதுகாப்பு தேவைப்படுகிறது. பொருளாதார மற்றும் கலாச்சார காரணங்களுக்காக தங்களுக்கு ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டும் என்று விரும்பும் கலாச்சாரங்களில் பெண் சிசுக்கொலைகள் இன்றும் வழக்கத்தில் உள்ளன. இந்த பிரச்சனைகள் பல நாடுகளில் இருக்கும் இந்து குடும்பத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது மற்றும் இதனை வரும் காலத்தில் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

> ***கருத்துக்கள்****: நான் வளர்ந்த காலத்தில், பெண்கள் சம்பாதிக்க வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை என்றாலும், வீட்டில் தாய்மார்களின் ஆட்சி ஓங்கி இருந்தது. சமயம் சார்ந்த இரண்டு நிகழ்ச்சிகளின் போது சகோதரிகளுக்கு மரியாதை செலுத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. ரக்ஷா பந்தன் மற்றும் பாவ் பீஜ் போன்ற சடங்குகள் சகோதர-சகோதரிக்கு இடையேயான புனிதமான அன்பையும் அந்த உறவின் பிணைப்பையும் அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளன. முதல் சடங்கில், சகோதரி தனக்கு தேவைப்படும் போது பாதுகாப்பு அளிக்கவேண்டி, தன் சகோதரன் கையில் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட ஒரு காப்பை கட்டுகிறாள் மற்றும் இரண்டாம் சடங்கில், தனது சகோதரன் நீண்டகாலம் செழிப்பாக வாழவேண்டும் என்று அவனுக்கு சகோதரி (அன்பு மற்றும் பக்தியின் வெளிப்பாடாக ஒரு சிறிய நெய் விளக்கின் வாயிலாக) ஆரத்தி எடுக்கிறாள். இரண்டு சடங்குகளின் போதும் சகோதரன் அவளுக்கு பரிசுகள் மற்றும் இனிப்புக்களை வழங்குகிறான். பெண்களுக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்று இந்து சமய கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. "யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே, ரமந்தே தத்ர தேவதா," என்று மனு ஸ்ம்ருதியில் ஒரு சுலோகம் குறிப்பிடுகிறது. அதாவது எங்கெல்லாம் பெண்களுக்கு மரியாதை இருக்கிறதோ, அங்கெல்லாம் தெய்வங்கள் ஆனந்தமாக வாசம் செய்கிறார்கள்.*

மற்ற சமயங்களை ஒப்பிடுகையில் குடும்பம் பற்றிய இந்து கோட்பாடு எவ்வாறு மாறுபட்ட முறையில் எதிர்கொள்ளப்படுகிறது? இறைவனை சென்றடையும் பாதையில் நாம் எல்லோரும் எண்ணற்ற குடும்பங்களை சந்திக்கும் கோட்பாட்டை இந்திய சமயங்களில் மட்டுமே பார்க்க முடிகிறது. ஒவ்வொரு பிறவியிலும் நாம் பக்குவமடைவதாக, நமது பாரம்பரியம் உறுதி அளிக்கிறது. நாம் ஒவ்வொரு குடும்பத்தில் பிறக்கும் போதும் வளர்ச்சி மற்றும் பக்குவமடைந்து கற்கவும் செய்கிறோம். இவ்வாறு இந்து குடும்பத்தில் கடந்தகாலமும் எதிர்காலமும் நுணுக்கமாக பிணைந்து இருக்கிறது. எவ்வளவு

நுணுக்கமாக இருக்கிறது பார்த்தீர்களா? ஒன்பது வயதான தங்கள் மகள், அவளது தந்தையின் இறந்த தாய் என்பதில் உறுதியாக இருக்கும் ஒரு இலங்கை குடும்பத்தை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். ஒரு மரணமடைந்த சொந்தம் மீண்டும் தங்கள் மத்தியில் பிறப்பது, அதிலும் குறிப்பாக ஒருவர் ஒரு நல்ல உன்னதமான குடும்ப உறுப்பினராக இருந்தால், அது மிகப்பெரிய வரமாக இந்த சமூகத்தில் கருதப்படுகிறது. சொந்தங்கள் மரணமடைந்தால், அதே வீட்டில் விரைவாக மறுபிறவி எடுப்பார்கள் என்ற ஒரு வலுவான இயலுணர்வு உள்ளது. அதனால் எல்லோரும் சகுனங்களை கவனித்துக்கொண்டு இருப்பார்கள். ஒரு காலத்தில் தங்கள் மீது கவனம் செலுத்திய பாட்டிக்கு, தற்போது தாங்கள் கவனம் செலுத்துவது, அந்த குடும்பத்திற்கு ஒரு அருமையான அனுபவமாக இருக்கும் அல்லவா?

இவ்வாறு மறுபிறவி பற்றிய ஆன்மீக விழிப்புணர்வு, குடும்ப கோட்பாட்டை நிகழ்காலத்தில் இருந்து விரிவடைய செய்து, நிகழ்காலத்தை கடந்த காலத்துடன் பிணைத்து, எதிர்காலத்தில் மேலும் தொடர்வதற்கு உறுதி அளிக்கிறது. பல இந்து குடும்பங்களுக்கு அத்தகைய உறவுகளை பற்றி தெரியும். வேறு சிலர் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் பிறந்தால் வாழ்க்கை திருப்திகரமாக, நேர்மை மற்றும் பாதுகாப்புடன் இருக்கும் என்பதை அறிந்திருந்தது, அந்த குடும்பத்தில் பிறக்க மனப்பூர்வமாக விரும்புவார்கள்.

> ***கருத்துக்கள்***: *திருமணமான மகள் தனது பெற்றோர் வீட்டிற்கு வரும் போது, அவள் ஒரு விருந்தாளி போல உபசரிக்கப்பட்டாலும், அந்த குடும்பத்தின் வசதிக்கு ஏற்ப மகளுக்கு பாசத்துடன் ஆசிகள் மற்றும் உணவுடன் புத்தாடைகளும் வழங்கப்படுகின்றன. மேற்கு நாடுகளில் பல வருடங்கள் தங்கிய பிறகு, தாய்நாடான இந்தியா திரும்புவது ஒரு அற்புத அனுபவமாக இருக்கும். தனது வாழ்நாள் முழுவதும் மலரும் நினைவுகளை சுமக்கும் ஒரு பெண்ணுக்கு, சொந்த மண்ணில் வழங்கப்படும் அமோக வரவேற்பு, ஒரு உணர்ச்சிப்பூர்வமான ஆத்மதிருப்தி அளிக்கும் நிகழ்வாக விளங்குகிறது.*

குடும்பங்கள் நன்றாக செயல்பட்டு ஒற்றுமையுடன் இருக்க உதவும் ஆன்மீக ஈடுபாட்டின் வலிமைக்கு சான்றாக, ஒப்பீட்டளவில் சிறியதாக ஆனால் உலகெங்கும் பரவியுள்ள இந்து சமூகமான சைவ சித்தாந்த தேவாலயத்தின் அனுபவத்தைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள். இந்த சமூகத்தில் கடந்த நாற்பது ஆண்டு காலமாக, பக்தியுடன் நெறிமுறைகளை பின்பற்றி வரும் உறுப்பினர் குடும்பங்களில், சராசரியாக 500 குடும்பங்களில் 2 விவாகரத்து மட்டுமே நடந்துள்ளன! அமெரிக்காவில் நிலவும் நாற்பது சதவீத சராசரியால், 200 குடும்பங்கள் முழுமையாக முறிந்து இருக்கும். புள்ளியல் ரீதியாக 198 குடும்பங்கள் துண்டிக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில், அவற்றை எந்த சக்தி நிலைத்திருக்க செய்தது? எனது ஐம்பது ஆண்டுகால சமயப்பணி மற்றும் இந்து குடும்பங்களுக்கு வழங்கிய ஆலோசனை மூலம் அவர்களின் மதநம்பிக்கை, அவர்களுக்கு பொதுவான ஆன்மீக அனுபவம் மற்றும் இலக்குகள், அவர்களின் குறிக்கோள்கள் தான் அந்த சக்தி என்பதை நான் உணர்ந்துகொண்டேன். தாங்கள் பிரிந்து இருப்பதை காட்டிலும், சேர்ந்து இருக்கும் போது கிடைக்கும்

பலன்கள் மற்றும் மனித வலிமைகள் அதிகம் என்பதை உணரும் போது, கணவன்மார்களும் மனைவிமார்களும் சேர்ந்து இருப்பார்கள். அவர்களது கூட்டு அல்லது பெரிய குடும்பம் ஒரு பாரம்பரிய ஆலோசனை மற்றும் அறிவுரை மீது நாட்டத்துடன் இருந்து, ஒரு குரு மற்றும் ஒரு கோயில் மற்றும் ஒரு சாத்திரத்தின் மீது உறுதியான ஈடுபாட்டுடன் இருக்கும் போது, அவர்கள் அதிக நெருக்கமான குடும்பமாக நிலைத்து இருப்பார்கள்.

இந்து சமயம் கற்பிக்கும் கோட்பாட்டுத் தொடர்ச்சியை கணவனும் மனைவியும் பின்பற்றும் போது, திருமண வாழ்வை பாதுகாத்து குடும்ப ஒற்றுமையை பேணுவதால் கிடைக்கும் பலன்கள், பிரிந்து இருப்பதால் கிடைக்கும் பலன்களை காட்டிலும் அதிகம் என்று அவர்கள் தைரியமாக வலியுறுத்துகிறார்கள். நாங்கள் தினமும் குடும்பங்களுடன் இணைந்து செயல்பட்டு, அவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, அவர்கள் தங்கள் பாதையை தனிப்பட்ட முறையில் பின்பற்றி ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கு உதவி செய்கிறோம். அவர்களுக்கு இந்து சமயம் கற்றுத்தரும் தர்மத்தின் கொள்கைகளில் கடமை, சுயநலமின்மை, நற்பண்பு மற்றும் கடவுள் நம்பிக்கை அடங்கும். தனிமனித திருப்தி அல்லது சமூக-பொருளாதார குறிக்கோள்கள் இல்லாமல், ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் *தர்மம்* பொதுவான குறிக்கோளாக இருக்கும் போது, பிரச்சனைகளை கடந்து செல்வது எளிதாகிறது, இழப்பு அல்லது பற்றாக்குறை இருக்கும் காலங்களில், உணர்ச்சி அல்லது மனநலம் தொடர்பான சிக்கல்கள் இருக்கும் காலங்களில் நிலைத்து இருப்பது எளிதாகிறது.

> ***கருத்துக்கள்***: *எனது கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கும் போது, எங்கள் குடும்ப ஒற்றுமைக்கு சாத்திரங்கள் முக்கிய காரணமாக விளங்கியுள்ளது தெரிகிறது. தினமும் விடியற்காலையில், எனது தந்தையும் பாட்டனாரும் வேத மந்திரங்கள் ஒன்றாக உச்சரிப்பதை கேட்பேன். இறைவன் முனிவர்களுக்கு அருளியதாக சான்றோர்கள் குறிப்பிடும் வேதங்களுக்கு, எனக்கு தெரிந்த எல்லோரும் உயர்ந்த மரியாதை செலுத்தினார்கள். அவை மிகவும் பழமையானது என்பது எனக்குத் தெரியும். அவை மிகவும் ஆழமான கருத்துக்களை கொண்டவை என்று எல்லோரும் கூறுவார்கள். ஆனால் எனது பதின்ம வயதில் முதல்முறையாக, உபநிடதங்கள் பற்றிய பரிச்சயம் கிடைத்தது. நான் அத்தகைய அழகு, அத்தகைய ஆழம், அத்தகைய நகைச்சுவை மற்றும் நுண்ணறிவை அதற்கு முன்னரும் பின்னரும் அறிந்ததில்லை. நான் பல மணிநேரங்களுக்கு சாத்திரங்களை வாசித்து, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அந்த சான்றோர்கள் எவ்வாறு அந்த ஞானம் அனைத்தையும் பெற்றார்கள் என்று வியந்து, என் பெற்றோர்கள் மற்றும் நண்பர்களிடம் பேசிக்கொண்டு இருப்பேன். அன்றைய சான்றோர்களுக்கு இன்றைய மக்களை காட்டிலும் விவேகம் அதிகமாக இருந்ததாக எனக்கு அன்று தோன்றியது. எல்லோரும் வேதங்களுக்கு மரியாதை செலுத்தினாலும், சிலருக்கு பகவத் கீதை, புராணங்கள், திருமுறை அல்லது சில ஆண்டுகளுக்கு முன்னர் தங்கள் குடும்ப குரு இயற்றிய படைப்புக்கள் மீது ஈர்ப்பு இருக்கும். சாத்திரங்கள் எதுவாக இருந்தாலும், குடும்பத்தை*

சிந்தனையில் ஒன்று சேர்த்து வைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது என்று நான் அனுபவரீதியாக உறுதியாக இருக்கிறேன்.

அதன் பிறகு *கர்மவினை* மீதும் நம்பிக்கை உள்ளது. வாழ்க்கையின் துன்பங்களும் இறை நோக்கத்தின் அங்கமாகவும் ஒவ்வொரு உறுப்பினரின் முற்பிறவி கர்மவினை பலன்களாகவும் இருப்பதாக, இந்து குடும்பம் மனப்பூர்வமாக நம்புகிறது. ஒன்றாக இணைந்து அனுபவிப்பது இயல்பானதாக, எதிர்பார்க்கப்பட்டதாக, ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கிறது. இந்த வாழ்க்கையில் அனுபவிப்பதற்காக கொண்டு வந்த *கர்மவினைகள்* உறவு முறிவு, விவாகரத்து, பிரிந்து வாழ்தல் போன்ற மன அழுத்த எதிர்வினைகள் மூலம் கரைவது இல்லை. ஆனால் அவை உண்மையில் நிலைமையை மோசமாக்கி, புதிய தீய கர்மவினைகளை உருவாக்குவதால் மேலும் வேதனைகள் நிறைந்த பிறவிகளுக்கு வழிவகுக்கலாம். புயலில் சிக்கிய கப்பல் குழுவினர் நிலைமை மோசமாக இருக்கும் போது கப்பலில் இருந்து வெளியே குதிப்பதைப் பற்றி சிந்திக்காமல், அப்போதைய துன்பத்தை பற்றி வருந்தாமல் தங்கள் குழுவின் பொதுவான குறிக்கோளுடன், நெருக்கடியை ஒன்றாக இணைந்து எதிர்கொள்வது போல, நமது சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்கள் தங்களது இயல்பான எதிர்வினைகளை அனுபவிக்கும் விதியாக விளங்கும் *கர்மவினை* மீதான நம்பிக்கை, குடும்பத்தை ஒன்றாக வைத்திருக்க உதவுகிறது.

இவ்வாறு இந்து சமயத்தை பின்பற்றுபவர் கடினமான அனுபவங்களை அமைதியாக தாங்கிக்கொள்ள முடிகிறது. கோலாலம்பூரில் இதை நன்றாக அறிந்து இருக்கும் இந்து மனைவி, தனது குழந்தை இறந்த நிலையிலும் அமைதியை தேடிக்கொள்கிறாள். பெங்களூருவில் இதை நன்றாக அறிந்து இருக்கும் ஒரு இந்து தந்தை, தனது வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் வறுமையை தாங்கிக்கொள்ள முடிகிறது. ஒவ்வொருவரும் தங்கள் வலிமையை அறிந்து முன்னேறுகிறார்கள்.

***கருத்துக்கள்**: இந்தி மொழியில் 'சுக்குர்' என்ற ஒரு அழகான சொல்லுக்கு ஏற்றுக்கொள்ளுதல் என்று பொருள். சிலசமயங்களில் நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருக்கும், இருந்தாலும் சிவனின் சித்தத்தை ஏற்றுக்கொள்ளும் இந்து நம்பிக்கை, மிகவும் கடினமான இன்னல்களை தாங்குவதற்கு பக்குவத்தை தருகிறது. தடுப்பு சிகிச்சைக்காக மருத்துவமனை சென்ற எனது கணவரின் இளவயது நண்பர் கோமா நிலைக்கு தள்ளப்பட்டார். அங்கே அவருக்கு அதிக குளோரோபார்ம் தரப்பட்டதால், அவர் கோமா நிலையில் இருந்து மீளவில்லை. அந்த இளைஞருக்கு இளம் குழந்தைகளும் இருந்தன. தொடக்கத்தில் அவரது மனைவி எப்போதும் அழுதுக்கொண்டு வெறிபிடித்தவள் போல் இருந்தாள். இருந்தாலும் அவளுக்குள் வலுவாக இருந்த நம்பிக்கைகள், அவளை மெதுவாக அமைதிப்படுத்தின. தற்போது ஐந்து வருடங்கள் கழிந்து, அவளுடைய வாழ்க்கைத்தரம் முன்னேறிய நிலையில், அவள் தனது பூசைகளை என்றுமே மறந்தது இல்லை. எல்லா சடங்குகளிலும் அவள் கணவனின் புகைப்படம் வைக்கப்பட்டு இருக்கும். அவரது இருப்பு*

குடும்பத்தில் இருந்துக்கொண்டு இருக்கிறது. ஆன்மா அழியாது என்றும் அவருடைய ஆன்மா வாழ்ந்துகொண்டு இருக்கிறது என்றும் அவள் அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் அவருடைய நினைவு நாளன்று நாங்கள் எல்லோரும் சடங்குகளில் ஒன்று கூடுவோம். எல்லோரும் வேதனையை உணர்கிறார்கள், மற்றும் ஒவ்வொரு சமயமும் அதை சமாளிக்க ஒரு மாறுபட்ட பாதையை கற்பிக்கிறது. ஆன்மா அழியாது என்ற அவளது நம்பிக்கை அவளுக்கு சிறிது ஆறுதலை அளிக்கிறது. அவள் தனது வீட்டில் தொடர்ந்து பிரார்த்தனைகள் மற்றும் சத்சங்கங்களை நடத்துக்கிறாள், மற்றும் அவை அவளது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

இந்து சமயத்தில் ஒரு குடும்பம் நிலைத்து இருப்பதற்கு வேறு பல கொள்கைகளும் காரணமாக உள்ளன. அதில் முக்கியமாக தந்தையும் தாயும் குழந்தையின் முதல் குருவாக கருதப்படுகின்றனர். இது பெற்றோர்-குழந்தைக்கு இடையேயான உறவில் ஒரு வலுவான மரியாதையை உருவாக்குகிறது. அத்தகைய ஒரு உறவு சில குடும்ப பந்தங்களின் சாரமாக விளங்கும் உடல், உணர்ச்சி, அறிவு சார்ந்த உறவை கடந்து இருக்கிறது. இது மனித தொடர்புகளில் ஒரு புனிதத்தன்மையையும், தனது பெற்றோரிடம் ஒரு மகன் அல்லது மகளுக்கு ஒரு ஆழமான மரியாதையையும் கொண்டு வருகிறது. இதன் அழகான வெளிப்பாட்டை, பாரம்பரிய குடும்பத்தில் இளைஞர்கள் கனிவாகவும் பாசத்துடனும் தங்கள் பெற்றோர்களின் கால்களை தொட்டு வணங்கும் போது காணமுடிகிறது. அவர்கள் தங்கள் பெற்றோர்களிடம் வாசம் செய்யும் தெய்வீகத்தன்மையை வழிபட்டு, எல்லோருக்குள்ளும் இருக்கும் இறைவனை காண தங்களை தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆச்சாரமான இந்து குடும்பத்தில் இருக்கும் தெளிவான மற்றும் நன்றாக புரிந்துகொள்ளப்பட்ட படிநிலை, வயதை அடிப்படையாக கொண்டு அமைந்தது. தங்களை காட்டிலும் வயதில் பெரியவர்களின் பாதைகளை மதித்து பின்பற்றவும், தங்களை காட்டிலும் வயதில் சிரியவர்களை பேணிப் பாதுகாக்கவும் இளைஞர்களுக்கு கற்றுத்தரப்படுகிறது. வயது வித்தியாசம் சில மாதங்களே இருந்தாலும் மதிக்கப்படுகிறது. நவீன தனிக்குடித்தனங்களில் வருவதாக நிரூபிக்கப்பட்டுள்ள மற்றும் ஒழுங்கு முறைகளில் இருந்து சற்று விலகிய குடும்பங்களில் வருவதற்கு வாய்ப்புள்ள பல பிரச்சனைகள் ஆச்சார குடும்பங்களில் என்றுமே வருவது இல்லை. அங்கே மற்றவர் கவனத்திற்கு போட்டியிடுதல், ஆணவ முரண்பாடுகள், தனிநபரின் பங்கு மற்றும் பதவி பற்றி சிறிதளவே குழப்பம் நிலவுகிறது. மூத்தவர்களின் அதிகாரங்களை எல்லோரும் அறிந்து இருப்பதால் குடும்பத்தினர் மத்தியில் ஒழுங்குமுறைகள், மாற்றங்கள் மற்றும் பொதுவான கருத்துப் பரிமாற்றங்கள் சுதந்திரமாக நடைபெறுகிறது.

***கருத்துக்கள்**: இன்றைய குடும்ப வாழ்க்கையிலும், ஆயிரம் ஆண்டுகாலத்திற்கு முன்பாக மகாபாரதம் மற்றும் இராமாயணம் போன்ற இந்திய காவியங்கள் எழுதப்பட்ட காலத்திலும், "மாத்ரு தேவோ பவ," "பித்ரு தேவோ பவ" மற்றும் "ஆச்சார்ய தேவோ பவ," என்று கற்பிக்கப்பட்டன. "தாயை தெய்வமாக மதிப்பாயாக, தந்தையை*

தெய்வமாக மதிப்பாயாக, குரு அல்லது ஆசானை தெய்வமாக மதிப்பாயாக," என்று அந்த சமஸ்கிருத சுலோகத்தின் பொருள் ஆகும். வயதில் மூத்தவர்களுக்கு அத்தகைய ஒரு உயரிய மரியாதை வழங்குவதால், அது ஒரு ஆழமான அமைதியான உணர்வை உருவாக்கி, அவர்களிடம் இருந்து இயல்பான மனநிலையில் நல்ல மற்றும் அன்பான அறிவுரையை பெறுவதற்கு மனதை நிச்சயமாக தயார் செய்கிறது. வயதில் மூத்தவர்களின் காலில் விழுந்து மரியாதையுடன் வணக்கம் செலுத்துவது இந்து சமயத்தின் பிரத்யேக பழக்கம் ஆகும். குடும்பத்தினருக்கு ஆழமான மரியாதை வழங்கும் போது, குடும்ப உறவுகள் வலுவாக இருந்து அவர்கள் ஒற்றுமையுடன் இருப்பதில் எந்த அதிசயமும் இல்லை.

குடும்பம் பங்கீட்டுக் கொள்ளும் நடவடிக்கைக்கு இந்து சமயத்தின் ஒரு பிரத்யேக பங்களிப்பாக, வீட்டில் நடைபெறும் தினசரி வழிபாடு விளங்குகிறது. இறை நம்பிக்கை எல்லா சமய வீடுகளிலும் ஒரு பொதுவான அனுபவமாக இருக்கிறது. ஆனால் இந்துக்கள் ஒரு படி மேலே சென்று, வீட்டில் இருக்கும் ஒரு சிறிய கோயிலை போல, ஒரு அழகான பூசை அறை மூலம் வீட்டையே புனிதப்படுத்துகிறார்கள். தந்தை அல்லது மூத்த மகன் குடும்பத்தின் பூசாரியாக இருந்து தினசரி சடங்குகளை நடத்தி வைக்கிறார். மற்றவர்கள் பூசை பொருட்களை அடுக்குவது, காலை பூசைக்கு புதிய பூக்களை பறித்து வருவது மற்றும் பண்டிகை நாட்கள் அல்லது திருவிழாக்களின் போது அலங்கரிப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். இந்து கலாச்சாரத்தில், குடும்பமும் ஆன்மீகமும் நன்றாக பின்னிப் பிணைந்துள்ளது.

***கருத்துக்கள்**: எங்கள் கிராமத்தில் ஒவ்வொரு இந்து குடும்பத்திற்கும் ஒரு பூசை அறை வீட்டில் இருந்தது. அங்கே குடும்பத்தினர் அனைவரும் தங்கள் தெய்வங்களை வழிபடுவார்கள். ஏழைகளும் தங்கள் வீடுகளில் இதற்கு என்று ஒரு இடத்தை ஒதுக்கி வைத்திருப்பார்கள். ஆன்மீக மற்றும் சமய அம்சங்களுடன் அவ்வப்போது கொண்டாடும் சடங்குகள், வெளிப்புற உணர்வுகள் மீது அல்லாமல், உள்ளத்து உணர்வுகள் மீது அதிக கவனம் செலுத்துகின்றன. லௌகீகம் மற்றும் வாழ்க்கையின் அன்றாட போராட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தாமல், தனிநபர்கள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தி, உட்புறமாக நோக்கி அதிக அர்த்தமுள்ள மற்றும் அதிக ஆழமான ஒன்றின் மீது கவனம் செலுத்துவதற்கு, அத்தகைய பூசைகள் மற்றும் சடங்குகள் வாய்ப்பு அளிக்கின்றன. இறை வழிபாடுகள் மற்றும் கொண்டாட்டங்கள், விசேஷ நாட்களில் உபவாசம் மற்றும் நியமங்கள் ஆகியவை அன்றாட வாழ்க்கையை கடந்து உலகின் ஒழுங்குமுறையை பார்ப்பதற்கு உதவியாக இருக்கின்றன. எனக்குத் தெரிந்து சிறப்பாக இயங்கும் வீடுகளில், தந்தை தினசரி சடங்குகளை செய்கிறார் மற்றும் அவருக்கு குடும்பம் தேவையான உதவிகளை செய்கிறது. "ஒன்றாக பிரார்த்தனை செய்யும் குடும்பம் ஒன்றாக இருக்கிறது," என்ற பழமொழிக்கு உவமையாக இருப்பதாக தோன்றுகிறது. மும்பை அல்லது லாஸ் ஏஞ்சல்ஸ் போன்ற பெருநகரங்களில் இருக்கும் வாழ்க்கைப்*

போராட்டங்களுக்கு மத்தியில், தினமும் பல இந்துக்கள் ஒரு சிறிய பூசையை செய்து வருகிறார்கள். தாங்கள் தினமும் ஒருசில நிமிடங்களுக்கு சிறிய பூசையை செய்தாலும், தங்களால் மனதை ஒருமுகப்படுத்த முடிந்து, ஆன்மீகரீதியாக உயர்ந்த உணர்வை பெற்று, மனம் ஒரு சமநிலையை அடைந்து, தங்களது வேலையில் சிறப்பாக செயல்படுவதற்கு உதவியாக இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

இந்து குடும்பத்தில் *குலகுரு* சம்பிரதாயமும் உள்ளது. ஒரு குடும்பத்தில் எல்லோருக்கும் ஒரே *குரு* இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், பெரும்பாலும் அவ்வாறே இருக்கும். இது ஒரு பொதுவான ஆன்மீக வழிகாட்டி, முடிவு எடுக்கவேண்டிய சமயத்தில் அல்லது கருத்து வேறுபாடு அல்லது தெளிவின்மையின் போது நாடப்படும் ஒரு விவேகமான கருத்து, மதித்து கேட்கப்பட்டு பின்பற்றப்படும் ஒரு கருத்தை உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்குகிறது. அதாவது எப்போதும் ஒரு ஆலோசகர், இக்கட்டான நிலையை சீர் செய்ய ஒரு மத்தியஸ்தர், வாக்குவாதங்களுக்கு மத்தியஸ்தம் செய்து தீர்வு காண ஒரு நடுவர் போன்று ஒரு பொதுநிலையாளர் இருப்பார். இவ்வாறு குடும்பம் தீர்வு காணமுடியாத இக்கட்டான நிலையில் இருப்பதற்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. *குலகுருவின்* ஆலோசனை சம்பத்தப்பட்ட நபர்களை சாராமல், பாரபட்சமின்றி நேர்மையாக இருக்கும் என்று நம்பலாம். மேலும் இந்த எளிய பயிற்சி ஒரு குடும்பத்தை பல குழப்பமான நிலைகளில் இருந்து வெளியேற்ற பயனுள்ளதாக இருக்கும்.

கருத்துக்கள்: *ஒரு இணக்கமுள்ள மதமாக இருப்பது இந்து சமயத்தின் மிகப்பெரிய சிறப்பு என்று எனக்கு தோன்றுகிறது. பல்லாயிரக்கணக்கான வருட பழமையுடன், விரிவான சடங்குகள் மற்றும் மந்திரங்கள் மற்றும் உரைகள், நூற்றுக்கணக்கான பண்டிகைகள் மற்றும் உபவாசங்கள், எண்ணற்ற தேவர்கள் மற்றும் தேவிகளுடன் இருந்தாலும், இந்து சமயம் ஒவ்வொரு தனிநபரின் விருப்பத்திற்கு ஏற்ப இளமையுடன் சிக்கல் இல்லாமல் இருக்கும் திறன் கொண்டது. அதை உண்மையில் ஒரு மனநிலை என்றே குறிப்பிடலாம். நீங்கள் ஒரு அதிக ஆச்சாரமான இந்துவாக இருக்க வேண்டாம். இறைவனை அடைவதற்கு ஒரு குரு அல்லது வழிகாட்டியின் துணையில் இருப்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதை என்றாலும், ஒருவர் தனது சொந்த பாதையை பின்பற்றுவதையும் இந்து சமயம் அனுமதிக்கிறது. நேரடியாக இறைவனுடன் தொடர்பு கொள்ளலாம் என்ற ஒரு உணர்வு உங்களிடம் இருக்கும். காலையில் என் குழந்தைகளை பள்ளியில் விடுவதற்கு செல்லும் போதும், வாகனத்தில் நான் பேசுவதை கேட்கும் தூரத்தில் யாரும் இல்லாத போதும், நான் உரத்த குரலில் தெய்வீக பாடல்களை பாடுவேன். அப்போது நேராக இறைவனுடன் பேசுவது போல எனக்கு தோன்றும். சொர்க்கத்திற்கு செல்லும் பாதையை காண்பிக்க ஒரு குருவின் தேவை அவசியம் என்று பலர் நினைத்தாலும், தன்னால் தனித்து இறைவனை அடையமுடியும் என்றும் தனக்கு இன்னொருவரின் அவசியம் இல்லை என்று நினைப்பவரும் இருக்கிறார்கள். இந்து மதம் மிகவும்*

இணக்கமுள்ளதாக விளங்குகிறது. உங்கள் படைப்பாற்றலை பருகுவதற்கும் நிரப்பிக்கொள்வதற்கும், இது ஒரு கிணறாக விளங்குகிறது. இது ஒரு அன்புள்ளம் கொண்ட உறவாக விளங்குகிறது. ஒரு நாள் நான் ஊதுபத்தி ஏற்றவில்லை என்றால், இறைவன் என்னை கடிந்துக்கொள்ள மாட்டார் என்று எனக்கு தோன்றுகிறது. நாம் இறைவனுக்கு சேவை செய்கிறோம் என்று நம்மை திருப்திப்படுத்திக் கொள்ள, இந்த சடங்குகளை செய்கிறோம். இறைவன் மன்னிப்பதோடு உங்கள் இதயத்தில் இருப்பதை அறிந்து புரிந்துகொள்பவர் என்பதால் இந்து சமயம் குற்றமற்ற சமயம் ஆகும். இங்கே எரியும் நெருப்பு மற்றும் கந்தகம் மற்றும் தண்டனை இல்லை. இங்கே கட்டின்றி ஓடும் அன்பும் மன்னிப்பும் இருக்கிறது.

இந்து பாரம்பரியம் பல்வேறு *ஆசிரம* பயிற்சியின் மூலம், குடும்பத்தினர் வளர்ச்சி மற்றும் பக்குவம் அடைவதற்கு ஒரு வலுவான விளக்கத்தை வழங்குகிறது. குடும்பத்தில் ஒவ்வொருவரும் தனது முதல் இருபத்தி நான்கு வருடங்களை *பிரம்மச்சரியம்* அல்லது மாணவனாக கழிக்க வேண்டும். இந்த காலத்தில் மாணவன் கல்வியை கற்று, அறிவை பெற்று, சேவைசெய்து முதிர்ச்சி அடையவேண்டும். அடுத்ததாக வரும் *கிருஹஸ்தாசிரமத்தில்* திருமணத்துடன், குழந்தைகள் மற்றும் சமூக பொறுப்புக்கள் சேர்கின்றன. இந்த கட்டங்கள் பெரும்பாலும் எல்லா கலாச்சாரத்திலும் எளிமையாக விளக்கப்பட்டு இருந்தாலும், இந்து சமயம் குடும்ப கவனிப்புடன் மேலும் பல விவரங்களை விரிவாக விளக்குகிறது. குடும்பத்தினர் ஒவ்வொருவரும் ஐம்பது வயதுக்கு அருகில் ஆலோசகர் அல்லது வயதில் மூத்தவர் நிலையை குறிக்கும் *வானப்பிரஸ்த ஆசிரமத்திற்குள்* நுழைகின்றனர். இந்த கட்டத்தை சம்பிரதாயத்தில் முறைப்படுத்துவதன் மூலம், இந்து குடும்பம் தனது மூத்த குடிமக்களுக்கு ஒரு முக்கியமான பயனுள்ள இடத்தை வழங்குகிறது. அவர்கள் பணி ஓய்வு பெற்றாலும், கண்டிப்பாக முதியோர் இல்லத்தில் சேர்க்கப்படுவது இல்லை. ஆனால் அவர்களிடம் அறிவுரை நாடப்பட்டு, அவர்களுடைய பல வருட அனுபவம் பயன்படுத்தப்படுகிறது. வயது முதிர்ந்ததும் தாங்கள் இளவயதில் சேவை செய்த குடும்பத்திற்கு அதே பாணியில் சேவை செய்ய முடியாது என்பதால், இந்து சமயம் அவர்களுக்கு ஒரு தனியிடத்தை ஒதுக்குகிறது. அவர்களுக்கு ஒரு புதிய இடம் கிடைக்கிறது. அந்த இடம் நடவடிக்கைகள் குறைந்த இடமாக இல்லாமல், சிறந்த மரியாதை கிடைக்கும் இடமாக விளங்குகிறது. இது பாரம்பரிய இந்து குடும்பங்கள் வழங்கும் மிகச்சிறந்த பரிசுகளில் ஒன்றாகும். இதன் மூலம் வயதில் மூத்தவர்களுக்கு கிடைக்கவேண்டிய அங்கீகாரத்தை பறிக்கும் மிகப்பெரிய அவலம் தவிர்க்கப்படுகிறது.

கருத்துக்கள்: *என் மாமியார் தனது எழுபதாவது வயதில் இறக்கும் வரை, எங்கள் வீட்டு குடும்பத்தலைவியாக இருந்தார். அவர் என் குழந்தைகளை தனது விருப்பத்திற்கு ஏற்ப அலங்கரிப்பார். அதை வேண்டாம் என்று சொல்வதற்கு என்னிடம் தைரியம் இருந்தது இல்லை. அவர் குழந்தைகளின் கண்களில் அஞ்சனம், மை தீட்டி தலைமுடிக்கு எண்ணெய் தடவி அழகுபடுத்துவார், ஆனால் நான் அவரை எதிர்த்து*

ஒரு வார்த்தை பேசியது இல்லை. அவர் குழந்தைகளுக்கு மிட்டாய்கள் வாங்கித் தந்ததால், அவர்கள் தங்கள் பாட்டி மீது பாசத்துடன் இருந்தார்கள். நீங்கள் ஒருவருக்கு ஒரு உதவியை செய்யும் போது, அவர்கள் உங்களுக்கு பிரதி உபகாரம் செய்வதால், அது ஒரு பாசம் கலந்த உறவாக இருந்தது. அவர் தனக்கு கிடைக்கும் வரவேற்பு மற்றும் பாராட்டை உணர்ந்து மகிழ்ச்சியாக இருந்ததால், அவரது ஆசிகள் குழந்தைகளை நாடி வந்தன. குடும்பம் மற்றும் முதியவர்களுக்கு செலுத்தும் மரியாதையில் இருக்கும் புனிதத்தன்மையை பற்றி அவர் எனக்கு கற்றுத்தந்தார்.

இந்து குடும்பத்திற்கு வரதட்சணை கொடுமை இன்னொரு ஆபத்தாக இருந்தது. அதற்கு தேவைப்படும் பொருளாதார செலவுகள், மாத வருமானத்தில் இருப்பவரை பெரும் சுமையில் ஆழ்த்துகிறது. பல இந்துக்கள் தார்மீக பண்புகள் காரணமாக வரதட்சணை வாங்குவதை நிறுத்திவிட்டனர் என்றாலும், பெரும்பாலானோர் அதன் பழங்கால முறைகளை பின்பற்றி வருகின்றனர். இனி ஒரு இந்தியா கிராமத்தைச் சேர்ந்த வசந்தி என்ற பெண்ணை பற்றி பார்ப்போம். அவளுடைய தந்தை ரவி என்னிடம் பேசும் போது, தனது ஐந்து மகள்கள் திருமணம் செய்துக்கொண்டு ஆனந்தமாக இருக்க, ஐவருக்கும் வரதட்சணையாக பெரிய செலவை செய்யவேண்டிய இருக்கும் என்று கூறினார். அதாவது வரதட்சணை என்பது ஒரு நல்ல கணவனை விலைகொடுத்து வாங்குவது போன்றது ஆகும். இந்த வழக்கத்தில் இருக்கும் தவறை உணர்ந்த குடும்பங்களும், தங்கள் மகனுக்கு குறைவாக வரதட்சணை கேட்டால், அவனிடம் ஏதோ குறை இருக்கிறது என்று சமூகம் நினைக்கும் என்பதற்காக, அந்த குடும்பங்கள் எப்போதுமே தங்கள் கோரிக்கைகளை குறைக்கமாட்டார்கள். தங்கள் மகள்கள் ஒரு நல்ல வாழ்க்கையை வாழவேண்டும் என்பதற்காக, தானும் தன் மனைவியும் தங்களுக்கு என்று எதுவும் செலவு செய்யாமல், சுமார் இருபத்தி ஐந்து வருடங்களாக சிக்கனமாக செலவு செய்து சேமித்து வந்ததைப் பற்றி ரவி நமக்கு தெரிவித்தார். அவர்கள் பயணங்கள் சென்றதில்லை. வாகனம் வாங்கியதில்லை. புதிய ஆடைகள் தேவைப்பட்டது இல்லை. தனது ஐந்து மகள்களில் ஒவ்வொருவருக்கும் ரூ. 50,000 க்கும் அதிகமான வரதட்சணை தேவைப்படும் என்பதால், ரவி இரண்டு இடத்தில் பணி புரிந்து, தனது சகாக்கள் ஒரு மாதத்தில் சம்பாதிப்பதைக் காட்டிலும் அதிகமாக சேமிக்கிறார். அன்றைய காலக்கட்டத்தில், ரூ. 50,000 என்பது ஒரு வருட சம்பளத்தை விட அதிகமாக இருந்தது. இந்த வரதட்சணை சுமை மூலம் பலர் கூனி குறுகி மனமொடிந்து இருக்கிறார்கள். குடும்ப பாரம்பரியத்தின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் இந்துக்கள், இந்த கொடுமையான பழக்கத்தை நிறுத்துவதற்கான விவேகத்துடன் இருப்பார்கள்.

***கருத்துக்கள்**: ஒரு பாரம்பரிய இந்து குடும்பம் தனது மகளை செல்லம் கொடுத்து பாதுகாப்புடன் வளர்த்தாலும், அதற்கும் ஒரு எல்லையை வகுத்து இருப்பார்கள். அந்த குடும்பம் தங்கள் மகளை, தங்கள் வசதிக்கு ஏற்ப தங்கம் மற்றும் மற்ற பொருட்களுடன் ஒரு பொருத்தமான குடும்பத்தில் மணம் முடித்து வைப்பார்கள். பழங்காலத்தில் வரதட்சணை என்பது கட்டாயமாக இல்லாமல், அதை வழங்குவது ஒரு*

கௌரவமாக கருதப்பட்டது. ஆண்களிடம் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு பெண்கள் தகுதியானவர்கள் என்றும் இந்து நடத்தை விதிகள் தெரிவித்தன. சமயம் மற்றும் குடும்பத்தலைவரின் கடமைகள் பற்றிய பழங்கால சாத்திரமான மனு ஸ்ம்ரிதி, "பிதா ரக்ஷதி கௌமாரே, பர்தா ரக்ஷதி யோவ்வனே, புத்ரா ரக்ஷதி வார்தக்யே, ந ஸ்த்ரீ ஸ்வதந்த்ரயம் அர்ஹதி," என்கிறது. “ஒரு பெண் சிறு வயதில் இருந்து தனது தந்தையின் மூலமும், தனது இளவயதில் தன் கணவரிடம் இருந்தும், முதுமையில் தன் மகனிடம் இருந்தும் பாதுகாப்பை பெறுகிறாள். ஒரு பெண்ணை வாழ்க்கையின் எந்த நிலையிலும் தனித்து அனாதையாக விடக்கூடாது.” அவள் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் ஆணின் பாதுகாப்பை பெறுவதற்கு தகுதியானவள். பெண்கள் கவனிப்பை பெறும் போது, அவர்கள் படைப்பாளர்கள், சத்தான உணவு அளிப்பவர்கள், குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தருபவர்கள் மற்றும் ஊக்குவிப்பவர்களாக தங்கள் பங்குகளை திறம்பட செய்ய முடியும், அதனால் சமூகம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று சுமார் ஒரு பில்லியன் மக்கள்தொகையுடன் இருக்கும் இந்துக்கள், மனித இனத்தில் பதினாறு சதவீதம் அங்கம் வகிக்கின்றனர் என்பது கவனிக்க வேண்டிய ஒன்று. இந்த பூமியில் இருக்கும் மக்களில் ஆறில் ஒருவர் இந்துவாக இருக்கிறார். அதனால் அந்த பெரிய சமூகம் தனது வலிமைகளை பாதுகாப்பதும், தனது பண்புகள் மற்றும் கலாச்சார புதையல்களை அடுத்த தலைமுறைக்கு கற்றுத்தருவதும், தனது உறுப்பினர்களை பாதுகாத்து அவர்களை ஆரோக்கியமாகவும் திருப்திகரமாகவும் வைத்திருப்பது முக்கியமாக மட்டுமில்லாமல் அவசியமானதாகவும் இருக்கிறது. நேர்மறையாக பார்க்கும் போது, இந்துக்களில் எண்பது சதவீதம் பேர், வெளிப்புற தாக்கங்களால் பாதிக்கப்படாமல் மொழி, சமயம் மற்றும் வழக்கம் உட்பட பாரம்பரிய முறைகளின் தொடர்ச்சியை உறுதியாக தக்கவைத்துள்ள 700,000 சிறிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். முன்னர் கூறப்பட்டவை அனைத்தும் தெளிவாக குறிப்பிடுவதைப் போல, இந்து குடும்பக் கோட்பாடு பல வழிகளில் அபூர்வமாக இருக்கிறது. குடும்பத்தினர் தொடர்புகளை நன்றாக புரிந்துகொள்ள விரும்புவோருக்கு, அதன் செழிப்பான விளக்கம் மட்டுமே நிறைய தகவல்கள் தருவதாக இருக்கும். *சிவபெருமானுடன் திருநடனம், இந்து சமயத்தின் தற்கால வினாவிடை ஏடு* புத்தகத்தில் இருந்து பெறப்பட்ட ஒரு விரிவான விளக்கத்தை இங்கே காணலாம்:

கூட்டு குடும்பம்: *குடும்ப(ம்)* அல்லது *குல(ம்).* பல்வேறு தலைமுறைகளுடன் ஒரே வீட்டில் அல்லது அக்கம்பக்கத்து வளாகத்தில் வாழும் இந்து சமூக அமைப்பை குறிப்பிடுகிறது. கூட்டுக் குடும்பங்கள் வழக்கமாக ஒரு மிகப்பெரிய வீட்டில் வாழ்ந்துகொண்டு இருந்தன, ஆனால் அந்த குடும்பங்கள் இன்று பெரும்பாலும் ஒரு பொதுவான வளாகத்தில் தனி வீடுகளில் வாழ்கின்றன. கூட்டுக் குடும்பத்தில் தந்தை மற்றும் தாய், தங்கள் வாழ்க்கைத்துணையுடன் மகன்கள், மகள்கள், பேரன்கள் மற்றும் கொள்ளுப் பேரன்கள் மட்டுமில்லாமல் திருமணமாகும் வரை மகள்கள், பேத்திகள் மற்றும் கொள்ளுப் பேத்திகள்

இருப்பார்கள். இவ்வாறு அந்த குடும்பத்தில் திருமணமான பல தம்பதிகள் மற்றும் அவர்களின் குழந்தைகளும் இருப்பார்கள். தாயின் துணையுடன் தந்தை கூட்டுக் குடும்பத்தின் தலைவராக இருப்பார். அவர் *குடும்ப முகியா* (*முகியா* அல்லது *கர்த்ரி*) என்று அழைக்கப்படுவார். அவர் இல்லாத பட்சத்தில் தனது தாயின் வழிகாட்டல் மற்றும் தனது மனைவியின் ஆதரவுடன் மூத்த மகன் அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வார். இந்த பொறுப்பை எதிர்காலத்தில் குடும்பத் தலைவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, தந்தை தனது மூத்த மகனுக்கு சிறு வயதில் இருந்தே பிரத்யேக பயிற்சியை வழங்குவார். தந்தையின் மரணத்திற்கு பிறகு, குடும்ப சொத்தை மகன்களுக்கு இடையே பிரித்துக்கொள்ள புனிதமான சட்டம் அனுமதிக்கிறது. மகன்கள் வெவ்வேறு தொழில்களில் செய்து மற்றும் வெவ்வேறு நகரங்களில் வாழும் போதும், எல்லோரும் ஒரே வீட்டில் வாழ முடியாத போதும் அல்லது குடும்பத்தினர் எண்ணிக்கை மிகவும் அதிகமானாலும் குடும்ப சொத்துக்களை பிரிக்கும் அவசியம் ஏற்படலாம். குடும்பத்தினர் எல்லோரும் 1) ஒரு பொதுவான குடியிருப்பில் இருந்து, 2) ஒரே சமையலறையில் தயாரித்த உணவை சாப்பிட்டு, 3) தங்கள் சொத்தை பொதுவாக பராமரித்து, 4) வழக்கமாக ஒரே சமயம், சமயப்பிரிவு மற்றும் *சம்பிரதாயத்தை* பின்பற்றுவது கூட்டுக் குடும்பத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். கணவன், மனைவி மற்றும் குழந்தைகளின் ஒவ்வொரு தனி குடும்பமும் கூட்டுக் குடும்பத்தலைவரின் வழிகாட்டலுடன் செயல்படும். பொதுநலத்தை மேம்படுத்த எல்லோரும் இணைந்து சுயநலமின்றி செயல்படுவார்கள். ஒவ்வொரு கூட்டுக் குடும்பமும் தனது வீட்டில் இருந்து விரிவாக்கம் பெற்று ஒரு "பெரிய குடும்பமாக" இரண்டாம் கட்ட உறவுகளை சேர்த்துக் கொள்கிறது.

பெரிய குடும்பம்: *ப்ரிஹத்குடும்ப* அல்லது *மஹாகுடும்ப*. ஒன்று அல்லது இரண்டு கூட்டுக் குடும்பங்களுடன் அவர்களின் தோழமைகள் மற்றும் தொடர்புகளின் விரிவாக்கம். கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினர்கள் அருகில் வசிப்பதைப் போல அல்லாமல், பெரிய குடும்பத்தில் உறுப்பினர்கள் உலகெங்கும் வசிக்கின்றனர். பெரிய குடும்பத்தின் தலைவர் *ப்ரிஹத்குடும்ப பிரமுக (அல்லது முகியா) என்று அழைக்கப்படுவார்*. அவர் ஒவ்வொரு கூட்டுக் குடும்பத்தாலும் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுவார். அவர் *குலகுருவின்* வழிகாட்டலின் கீழ் செயல்படுவார். அதன் அங்கம் வகிப்பவர்களின் வரிசைக்கிரமம் பின்வருமாறு: ஒருவர் பின்பற்றும் சமயத்தின் புரோகிதர்கள்; அந்த சமூகத்தில் உள்ள மூத்த ஆண்கள் மற்றும் பெண்கள்; திருமணமான பெண்களின் மாமனார்-மாமியார்; திருமணமான மகள்கள், பேத்திகள், கொள்ளுப் பேத்திகள், மற்றும் திருமணமான இந்த மகள்களின் கணவர்கள் மற்றும் குழந்தைகள்; கூட்டுக் குடும்பத்தின் வணிகம் அல்லது வீட்டுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கும் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள்; தாய்வழி கொள்ளுத் தாத்தா-பாட்டிகள் மற்றும் தாத்தா-பாட்டிகள், பெற்றோர்கள், மாமன்மார்கள் மற்றும் அவர்களின் மனைவிகள், அத்தைகள் மற்றும் அவர்களின் கணவன்மார்கள், இந்த குடும்பங்களின் குழந்தைகள் மற்றும் பேரன்கள்; மிகவும் நெருக்கமான நண்பர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள்; பெரிய குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள்.

இந்த பூமியில் இருக்கும் நாம் எல்லோரும் ஒரே இறைவனின் படைப்புக்கள் என்ற பிரபஞ்ச விளக்கத்தை ஒவ்வொரு பாட்டியும் கிராமத்து முதியவரும் கற்றுத்தந்துள்ளனர்; இவ்வாறு பரந்த நோக்கத்துடன் பார்க்கும் போது நாம் எல்லோரும் ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள். *வசுதைவ குடும்பகம்*—"உலகம் முழுவதும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்." இது நியூ ஏஜ் இன்சைட்ஸ் அல்லது கையா எகோலஜியில் இருந்து உருவாக்கப்பட்ட ஒரு புதுமையான கருத்து இல்லை. இது ஆயிரம் ஆண்டு காலமாக இந்திய புராண கலாச்சாரத்தில் இருந்துள்ளது.

> ***கருத்துக்கள்***: *நமது இந்து சமயம் பூமி முழுவதையும் ஒரே குடும்பமாக கருதுவதால், இந்துக்கள் பரந்த மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் இருந்துள்ளது. ஆனால் மனிதர்கள் எல்லோரையும் ஒரு குடும்பமாக பார்க்கும் போது சிறிய குடும்பப் பிரிவு, அதன் உறுப்பினர்களுக்குள் இருக்கும் உறவுகளின் இயக்கம், மற்றும் சமூகத்தை உருவாக்குவதில் குடும்ப அமைப்பின் முக்கிய பங்கு ஆகியவற்றை வயதில் மூத்தவர்கள் ஆழமாக கருத்தில் கொண்டதையும் நான் கவனித்தேன்.*

நாம் கருவில் இருந்து வெளியேறியதும், ஆதரவுடன் பாதுகாத்து பேணி வளர்க்கும் இன்னொரு நுணுக்கமான அமைப்பினுள் நுழைகிறோம். உறவுகளின் ஒரு நுணுக்கமான வலையாக இருக்கும் குடும்பத்தில் நாம் பிறப்பில் இருந்து பக்குவம் அடைந்து முதுமை வரையிலும், அறியாமையில் இருந்து விவேகம் வரையிலும் மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து இறவாமை வரையிலும் வளர்ந்து வருகிறோம்.

உலக அமைதிக்கு, வீட்டில் போரை நிறுத்துங்கள்

நியூ நகரில் ஆகஸ்ட் 30, 2000 அன்று சமய மற்றும் ஆன்மீக தலைவர்கள் கலந்துக்கொண்ட ஐ.நா. மில்லினியம் அமைதி மாநாட்டில் 1,200 பிரதிநிதிகளுக்கு சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி வழங்கிய உரையின் தொகுப்பு. சில நாட்களுக்கு முன்பாக, ஆகஸ்ட் 25 ஆம் தேதி அன்று, டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் ஆடிட்டோரியத்தில் குருதேவா வு தன்டு அமைதிப் பரிசை பெற்றார்.

ஒவ்வொரு நாட்டையும் உலுக்கி வைக்கும் சண்டைகள், விரோதங்கள் மற்றும் வன்முறை சம்பவங்களை, மனிதநேயம் எவ்வாறு சிறந்த முறையில் தீர்வு காண்பது என்று ஐ.நா. தலைவர்கள் என்னிடம் கேட்டார்கள். நாம் அறிகுறிகளை கவனிக்காமல், மூலம் மற்றும் காரணத்தின் மீது கவனம் செலுத்தி செயல்படவேண்டும் என்று நான் பதில் அளித்தேன். காரணங்கள் மற்றும் உடலின் இயல்பான சமநிலை மற்றும் ஆரோக்கியத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதைத் தான் நாம் *ஆயுர்வேத* மருத்துவத்தில் செய்கிறோம். இவ்வாறு நாம் எப்போதும் நோய் மற்றும் வியாதியுடன் செயல்படாமல், நோயை எதிர்க்கும் ஒரு ஆரோக்கியமான அமைப்பை உருவாக்க நேரம் மற்றும் வளங்களை பயன்படுத்துகிறோம்.

உலகில் போரை நிறுத்த, வீட்டில் போரை நிறுத்துவதே நமது சிறப்பான மற்றும் தொலைநோக்கு தீர்வு ஆகும். இங்கு தான் வெறுப்பு தொடங்கி, நமக்கு மாறுபட்டு இருப்பவர்களிடம் பகை வளர்க்கப்பட்டு, அடித்து வளர்க்கப்பட்ட குழந்தைகள் தங்கள் பிரச்சனைகளை வன்முறை மூலம் தீர்வு காண கற்றுக் கொடுக்கப்படுகிறது. விதிவிலக்கு இல்லாமல், இது ஒவ்வொரு மதத்தின் சமூகத்திலும் நடைபெறுகிறது.

ஆசியாவில், அமெரிக்காவில் மற்றும் உலகெங்கும் உள்ள இந்துக்களுக்கு மத்தியில், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு போர் நடந்துகொண்டு இருக்கிறது. குழந்தைகளை அடிப்பதில் இருந்து ஒரு சில வீடுகள் விதி விலக்காக இருக்கின்றன. இது உலகளாவிய பிரச்சனையாக எல்லா சமூகங்களிலும் உள்ளது, ஆனால் இந்து தத்துவம் ஒரு சிறந்த வழியை ஆதரிப்பதால், இதை மாற்றி அமைக்கும் சக்தி இந்துக்களிடம் இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. நமது வீடுகளில் நம்மால் போரை நிறுத்த முடிந்தால், நாம் மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக இருந்து உலகில் போரை நிறுத்த துணை புரியலாம். மக்கள் ஒரு மாறுபட்ட பாதையை தேர்ந்து எடுப்பார்கள்.

நம் வீடுகளில் நாம் நமது குழந்தைகளை அடிக்கும் போது, எல்லோரும் எல்லோரையும் அடிக்கக் கற்றுத் தருகிறோம், மற்றும் அவர்கள் ஒரு இராணுவ வீரன் அல்லது ஒரு குற்றவாளிகள் குழுவின் உறுப்பினர் அல்லது

கலகக்காரர்களாக மாறி கொலை செய்ய சண்டையிடும் வரை இந்த அடி உதை தொடர்கிறது. மத சார்புள்ள எல்லா போர்களும் இந்த முறையை பயன்படுத்தி, போர்களை தொடங்கவும் பூமியின் இயக்கத்தை சீர்குலைக்கவும், மத சார்புள்ள மக்களுக்கு பயிற்சி அளித்துள்ளன. அடிப்பதும் துன்புறுத்துவதும் வீட்டில் தொடங்குகிறது. வீடுகளில் அமைதியை கொண்டு வந்து வீட்டினுள் போர்களை நிறுத்த நம் எல்லோரிடமும் வாக்குறுதிகளை பெறவேண்டும். எதற்காக? வீட்டில் இணக்கம் பிறக்கும் வரை, இரவு உறங்குவதற்கு முன்பாக பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வரை, குழந்தைகளை அச்சுறுத்தி அவர்கள் தங்களது சுய மரியாதை அனைத்தையும் இழக்கச் செய்யும் சித்ரவதை நிறுத்தப்படும் வரை அக்கம் பக்கத்து வீடுகள் மற்றும் சமூகங்கள், நாடு மற்றும் உலகம் அமைதியை காக்க முன் வராது.

இருபது அல்லது முப்பது வருடங்களுக்கு முன்பாக இருந்ததைப் போல அல்லாமல், குழந்தைகள் இன்று மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். இந்த புத்திசாலி குழந்தைகள் தொலைக்காட்சியை பார்க்கிறார்கள். மக்கள் விரும்பும் நபர்கள் கட்டித் தழுவப்படுவதையும், பாராட்டப்படுவதையும், தோள்களில் தூக்கப்படுவதையும், புகழ்ந்து பேசப்படுவதையும் குழந்தைகள் தொலைக்காட்சியில் காண்கிறார்கள். மக்கள் தாங்கள் விரும்பாதவர்களை வெறுப்பதும், அவர்கள் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதும், முட்டாள் என்று ஏசுவதும், அவர்களால் எந்த பயனும் இல்லை என்று அவர்களை வருந்த வைப்பதும், அவர்களை அடிப்பதும் துன்புறுத்துவதும் அல்லது கொல்லப்படுவதையும் குழந்தைகள் தொலைக்காட்சியில் பார்க்கிறார்கள். அதனால் குழந்தைகள் முதல் முறையாக அடிக்கப்படும் போது, தாங்கள் வெறுக்கப்படுவதும், தங்களை யாரும் விரும்பவில்லை என்பதையும் புரிந்துக் கொள்கிறார்கள். அவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்கள் சிறிய வயதில் வெளியே சென்று வாழமுடியாது. அவர்களால் வீட்டை விட்டு வெளியேற முடியாது. சிலர் வெளியேறி கும்பலில் சேர்கிறார்கள். அந்த கும்பல் பெற்றோர்கள் சித்ரவதை, வாய்ச்சண்டை மற்றும் உடல் ரீதியான சித்ரவதை காரணமாக அவதிப்படுபவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்காக தங்களிடம் இருக்கும் ஒரே சொந்தம், ஒரே அன்பு மற்றும் ஒரே நட்பை அவர்களுக்கு வழங்குகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில், பல குடும்பங்கள் குழந்தைகளை அடித்து வளர்ப்பதை ஒரு வழக்கமாக கொண்டிருப்பது வருத்தத்தை அளிக்கிறது. பெரும்பாலும் ஒவ்வொருவரும் தனது குழந்தைப் பருவத்தில் அடி வாங்கி இருக்கிறார்கள், அதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள், அவர்களுடைய குழந்தைகள் தங்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள், மற்றும் அந்த குழந்தைகள் தங்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள். அண்ணன்மார்கள் தம்பிகளை அடிக்கிறார்கள். சகோதரர்கள் சகோதரிகளை அடிக்கிறார்கள். இந்த முடிவற்ற சுழற்சியின் மூலம், குடும்பங்கள் இளம் போர் வீரர்களை உருவாக்குகின்றன என்பதை நீங்கள் உணரலாம். ஒரு நாள் போர் தொடங்கும் போது, கருணை இல்லாமல் அடிக்கப்பட்ட ஒரு இளைஞர் கையில் ஒரு துப்பாக்கியை எடுத்து ஒருவரை மனசாட்சியின்றி சுட்டு கொலை செய்வதும், அந்த செயலை நினைத்து பூரிப்பு அடைவதும் எளிதாகிறது.

"குழந்தை அடிபணிந்து நடப்பதற்கு அறைதல் அல்லது தடியால் அடித்தல் நமது கலாச்சாரத்தின் அங்கமாக இருந்துள்ளது," என்று இந்துக்கள் சொல்வதை கேட்டிருக்கிறேன். எனக்கு அது சரியாக தோன்றவில்லை. இந்து கலாச்சாரம் இரக்க குணம் நிரம்பியது. இந்து கலாச்சாரம் உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருக்கும் *அகிம்சையை* கற்றுத்தருகிறது. அது மற்றவர்களை துன்புறுத்தும் இம்சைக்கு எதிராக போதிக்கிறது. "தவறு செய்யும் போது தடியை எடுக்கவில்லை என்றால், குழந்தைக்கு சரி எதுவென்று தெரியாது," என்ற விவிலிய பழமொழியை, 150 ஆண்டுகாலமாக இந்துக்களுக்கு கற்றுத்தந்த ஆங்கிலேய கிறித்துவ கலாச்சாரமாக அது இருக்கலாம், ஆனால் குழந்தைகளின் கண்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சியை அடித்து, அவர்களிடம் இருந்து நம்பிக்கையை அடித்து வெளியேற்றி, புத்தியை அடித்து வெளியேற்றி மனம் போன போக்கிலே செல்ல கட்டாயப்படுத்தி, தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒரு மந்தமான மற்றும் படைப்பாற்றல் தேவைப்படாத பணியில் சிக்க வைத்து, அவர்களிடம் சேகரிக்கப்பட்டு இருந்த கோபத்தை குழந்தைகள் மீது வெளிப்படுத்தி, அந்த தலைமுறையை அடித்து வெறுமையாக்குவது இந்து கலாச்சாரம் இல்லை. இது உறுதியாக ஒரு விவேகமான எதிர்காலத்தின் கலாச்சாரம் இல்லை. இந்த கலாச்சாரம் அனைத்து விதமான விரோதத்தையும் நீடித்து இருக்கச் செய்யும்.

சில ஆசிய நாடுகளில், குழந்தைகள் கேள்வி கேட்டால், அவர்களுக்கு பதிலாக கண்ணத்தில் அடி மட்டுமே கிடைக்கும். என்ன ஒரு கொடிய நடவடிக்கை? இவர்கள் கீழ்த்தரமான மனிதாபமானம் இல்லாத மக்கள். அலுவலகத்தில் வேலை செய்வதால் முன்பே பாதிக்கப்பட்ட நரம்பியல் அமைப்புடன் இருக்கும் தாய்க்கு, குழந்தைகள் மன அழுத்தத்தை தரும் போது, அவள் அவர்களை அறைகிறாள். தந்தை பணிச்சுமையால் தனக்கு ஏற்பட்ட அழுத்தத்தை கச்சை, தடி அல்லது கையினால் தனது மகனின் முதுகு அல்லது முகத்தில் வெளிப்படுத்துவார். தனது குழந்தை வலியால் துடிப்பதைக் கேட்பதால், அவருக்கு மனிதரிமானமற்ற இன்பம் கிடைக்குமா? "நான் தான் இங்கே எல்லாம்! நீயில்லை!" என்ற உணர்வை வலுப்படுத்துமா? இந்து வீட்டில் நடைபெறும் எல்லாம் எனக்கு எப்படி தெரியும்? ஹாட்மைல். அந்த குழந்தைகளுக்கு சொந்த மின்னஞ்சல் இருக்கிறது. அவர்களுக்கு தனியாக கணினி இருக்கிறது. "குருதேவா! குருதேவா! என் தந்தை என்னை அடிக்கிறார். பள்ளியில் என்னை அடிக்கிறார்கள். இதை வெளியே சொன்னால் என் தாய் என்னை அடிக்கிறார். தலையில் அடிப்பது, கிள்ளுவது, முதுகு அல்லது கால்களில் தடியால் அடிப்பது என்று என்னை வாரத்திற்கு குறைந்தது மூன்று முதல் ஐந்து முறை அடிக்கிறார்கள்," என்று அவர்கள் எனக்கு எழுதுகிறார்கள்.

இப்படித்தான் நாளைய உலகம் இருக்கப்போகிறதா? இருக்கக்கூடாது என்று தான் நாம் நினைக்கிறோம். ஆனால் இன்று இப்படித்தான் இருக்கிறது. நீங்கள் எந்த சமயத்தை சேர்ந்தவராக இருந்தாலும், இன்றிலிருந்து உங்களால் ஒவ்வொரு குடும்பம் மற்றும் ஒவ்வொரு வீட்டில் அமைதியை கொண்டு வந்து, இந்த நிலையை மாற்றி அமைக்க முடியும். ஒரு குழந்தை அல்லது ஒரு பெண் துன்புறுத்தப்படுவதை நீங்கள் அறியும் போது, அவர்களை பாதுகாக்க நீங்கள் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால், அந்த குற்றத்தில் நீங்களும் பங்கு வகிக்கிறீர்கள். அதைப்போல, நீங்கள் உங்கள் நண்பருடன் வாகனத்தை ஓட்டிச்

செல்லும் போது, "இந்த சேவை மையத்தில் வண்டியை நிறுத்து. நான் அந்த மளிகை கடைக்கு சென்று வருகிறேன்," என்று கூறுகிறார். நீங்கள் வண்டியை நிறுத்தியவுடன் அவர் அந்த கடைக்குள் சென்று, ஒரு துப்பாக்கியை கையில் எடுத்து, கடையில் இருக்கும் பொருட்களை திருடி மீண்டும் வாகனத்திற்கு திரும்புகிறார். தெரிந்தோ தெரியாமலோ, நீங்கள் இந்த குற்றத்தில் பங்கு வகிக்கிறீர்கள். நீங்கள் அந்த குற்றத்தில் ஒரு கூட்டாளியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஆன்மீக பொறுப்பு ஏற்கவில்லை என்றால், நீங்கள் எதிர்பாராத விதமாக ஒரு குற்றவாளி ஆகிறீர்கள்.

இரகசியமாக குழந்தைகள் சித்ரவதைக்கு ஆளாகிறார்கள் என்று தெரிந்தால் என்ன செய்ய வேண்டும்? ஒரு வழக்கறிஞரை அழைக்கலாம் அல்லது சமயப்பணியில் இருக்கும் ஒரு குடும்பத்தை அழைத்து, "காவல்துறைக்கு தகவல் தெரிவித்து, இந்த குழந்தைக்கு பாதுகாப்பு வழங்கி, குடும்பத்தின் மீது தீவிர கவனம் செலுத்தச் சொல்லுங்கள்." நாங்கள் ஒரு குழந்தையை அனாதை இல்லத்தில் சேர்த்து, தந்தையை சிறையில் அடைத்தோம். அவர் தன் குழந்தையிடம் அதிக கண்டிப்புடன் நடந்துகொண்டிருந்தார். குழந்தையின் உடலெங்கும் தீக்காயங்கள், அத்துடன் பழைய தழும்புகளும் இருந்தன. எங்களுக்கு எப்படி தெரிய வந்தது? ஒருவர் நடக்கும் சம்பவங்களை அலட்சியம் செய்யாமல், புகைப்படங்களை எடுத்து நமக்கு அனுப்பி வைத்தார். "பெற்றோர்கள் உங்களை அடித்தால், நீங்கள் இந்த தொலைப்பேசி எண்ணுக்கு தகவல் சொல்லுங்கள்," என்று கனடாவில் ஆசிரியர்கள் ஆசிய குழந்தைகளிடம் கூறுகிறார்கள். கனடா நாட்டு மக்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் போரைநிறுத்த விரும்புகிறார்கள்.

நாம் கடந்த 85 ஆண்டுகளில் இரண்டு உலகப்போர்களையும் நூற்றுக்கணக்கான சிறிய போர்களையும் சந்தித்துள்ளோம். அடிக்கப்பட்டவர்களில் இருந்து கொலையாளிகள் உருவாகின்றனர். அறைதல் மற்றும் கிள்ளுதல், துடுப்பால் தாக்குதல், சவுக்கு அடி, தடி அடி ஆகியவை மற்றவர்களுக்கு வழங்கபவர்கள் மூலம் வெளிப்படவேண்டும். ஆனால் இந்த செயல்களுக்கு வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும். சித்ரவதை செய்பவரும் ஒரு நாள் சித்ரவதை அனுபவிப்பார். இது *கர்மவினை* என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு செயலும், அதற்கு தூண்டுதலாக இருக்கும் நோக்கம் மற்றும் உணர்ச்சிக்கு ஏற்ப, சமமான மற்றும் அதிக தீவிரமான எதிர்வினையை வழங்குகிறது. தெருவில் இருக்கும் குற்றவாளி கும்பல்கள், அழைப்பு விடுத்ததும் கலவரத்தை உருவாக்குபவர்கள், நிந்தனை மற்றும் தண்டனைக்கு பயந்து, எதுவும் பேசாமல் அல்லது கருத்து ஏதும் கூறாமல், அமைதியாக வருந்துபவர்கள் மற்றும் மறைவாக அல்லது ஒரு மந்தமான பணியில் ஒளிந்துக் கொள்பவர்களுக்கு உடல்ரீதியான தண்டனை ஒரு அறிமுகமாக இருக்கலாம்.

தங்கள் குழந்தைகளை அடிக்காத அல்லது உடல் ரீதியாக எந்த வகையிலும் கண்டிக்காத சில குடும்பங்களைப் பற்றி எங்களுக்கு தெரியும். நாங்கள் அவர்களிடம் இதற்கான காரணத்தை கேட்டோம். "நாங்கள் அவர்களை நேசிப்பது தான் காரணம்," என்றார்கள். "நீங்கள் அவர்களுக்கு எப்படி ஒழுக்கத்துடன் இருக்க பயிற்சி அளித்தீர்கள்?" "பூசை அறைக்கு சென்று பத்து நிமிடங்கள் அமர்ந்து என்ன தவறு நடந்தது என்று அவர்களை சிந்திக்க

சொல்வோம். அவர்கள் திரும்பியதும் நாங்கள் அவர்களிடம் பேசுவோம். அவர்களை வருத்தும் செயல்களை தவிர்த்து சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்போம்.” "உங்கள் குழந்தைகள் எப்போதும் தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டு இருக்கிறார்களா?" என்று கேட்டோம். "இல்லை. எங்களால் குழந்தைகளுடன் அமர்ந்து தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களுடன் தனிப்பட்ட முறையில் நேரத்தை ஒதுக்குவது எங்களது வழக்கமாக கொண்டிருக்கிறோம்.”

குடும்பத்தை ஒற்றுமையுடன் வைத்திருப்பதை *அன்பு* என்ற ஒரு வார்த்தையுடன் சுருக்கமாக குறிப்பிடலாம். அன்பு என்பது புரிதலை குறிக்கிறது. அன்பு என்பது ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. ஒரு அனுபவம் நேர்மறையானதோ எதிர்மறையானதோ, அன்பு என்பது ஒரு அனுபவத்தைப் பற்றி நேர்மறையான உணர்வை வழங்கக்கூடியது ஆகும். சம்பவம் எத்தனை வேதனை தருவதாக இருந்தாலும், அன்பு என்பது இரகசியங்கள் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற உத்திரவாதம் தருவதாகும். அன்பு என்பது குடும்பத்தினருடன் இருக்கவேண்டும் என்ற விருப்பம் ஆகும். வீட்டில் ஒற்றுமை நீடிக்கும் போது, சமூகத்தில் ஒற்றுமை நீடிக்கிறது, மற்றும் நாட்டில் ஒற்றுமை நீடிக்கிறது. குடும்பத்தில் அன்பும் நம்பிக்கையும் இருக்கும் போது, உள்ளூர் சமூகத்திற்கு அன்பு மற்றும் நம்பிக்கையும் பரவுகிறது, மற்றும் அதிகமான வீடுகளின் உறுப்பினர்கள் இடையே இந்த ஒற்றுமை நிலவினால், நாடு முழுவதும் வலுவடைந்து அதிக பாதுகாப்புடன் இருக்கும்.

சானந்த நர்த்தனம்

सानन्द नर्तनम्



பாகம் ஒன்று

ஆனந்தமாக நடனமாடுதல்

சர்வத்ர சிவம் பஷ்ய

सर्वत्र शिवम् पश्य



எங்கும் இறைவனை காண்க

இறைவனை உயிரின் உயிராக, கண்ணின் கண்ணாக, காதின் காதாக,
மனதின் மனதாக அறிகிறவன் உண்மையில் அனைத்து
காரணங்களின் காரணத்தை அறிகிறான்.

சுக்ல யஜுர் வேத, ப்ருஹதாரண்யக உபநிடதம், 4.4.18. உபப, ப. 179



பின்புறமாக சான் பிரான்சிஸ்கோ விரிகுடாவின் கோல்டன் கேட் பாலம் அமைந்திருக்க, எல்லோருக்குள்ளும் இறைவனை காணும் பயிற்சியில் ஒரு பக்தர் ஈடுப்பட்டு இருக்கிறார். சிவபெருமான் எல்லா இனங்கள், எல்லா நிறங்கள், எல்லா கலாச்சாரங்களில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார் என்பதை அவர் அறிந்து இருக்கிறார். இந்த அத்தியாயத்தில் பின்வரும் வரைபடங்கள் அனைத்தையும் இந்திய ஓவியர் திரு. ஏ. மணிவேலு வரைந்துள்ளார்.

திங்கட்கிழமை

பாடம் 1

விழிப்புணர்வு

மெதுவாக வருகிறது

எனது *சத்குருவான* சிவ யோகசுவாமி, ஒரு சிறந்த சித்தராக, ஒரு ஆசானாக மற்றும் இறைவனை அறிந்தவராக இருந்தார். "முக்தி உனக்குள் இருக்கிறது," என்று அவர் கூறுவார். "ஒவ்வொன்றிலும் இறைவனை காணுங்கள். நீங்கள் இறைவனுக்குள் இருக்கிறீர்கள். இறைவன் உங்களுக்குள் இருக்கிறான். உங்களுக்குள் இருக்கும் பரமேசுவரனை உணர்வதற்கு, உங்களுக்கு ஒரு வலுவான உடலும் ஒரு சுத்தமான மனமும் வேண்டும்," என்று அவர் தனது சாதகர்களுக்கு ஆணையிடுவார். அந்த ஆற்றல்மிக்க சூட்சுமஞானி இந்தியாவிற்கு அருகில் இருக்கும் இலங்கையில் வாழ்ந்து வந்தார். அவர் இந்த இருபதாவது நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த மகான்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய உபதேசங்கள், அதைக் கேட்ட எல்லோரது இதயங்களிலும் ஆழமாக பதிந்துக்கொண்டன. “இறைவன் எல்லோருக்குள்ளும் இருக்கிறார். இறைவனை அந்த எல்லோருக்குள்ளும் காணுங்கள். இறைவன் எங்கும் வலுவாக நீக்கமற நிறைந்துள்ளார். ஒவ்வொன்றையும் இறைவனின் வெளிப்பாடாக கருதுங்கள், இதன் மூலம் நீங்கள் உண்மைப் பொருளை உணர்வீர்கள்," என்று அவர் கூறினார். ஒரு எளிமையான உண்மையை விளக்க எளிமையான சொற்கள் என்றாலும், இதை அனுட்டானம் செய்வது மிகவும் கடினம். ¶நாம் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கும் போது, நாம் வாழ்க்கையின் பாகங்களை மட்டுமே பார்க்கிறோம். நாம் அதை முழுமையாக பார்ப்பது இல்லை. நம்மால் முழுமையை பார்க்க முடியாது. "ஒரு பாகத்தால் எப்படி முழுமையை காண முடியும்?" என்று யோகசுவாமி கூறுவார். அதனால் நாம் நமது சிறிய பாகத்தில் வாழ்கிறோம். நாம் வேதனையைத் தரும் பகுதிகளை தவிர்த்து, மகிழ்ச்சியை தரும் பகுதிகளை ஈர்க்க விரும்புகிறோம். பெரும்பாலான மக்கள் ஆசைகள் மற்றும் அதை நிறைவேற்றும் பிடிகளில் சிக்கி, ஒவ்வொரு பிறவியையும் இருமையில் வாழ்கின்றனர். ஆசை-நிறைவேற்றம்-மகிழ்ச்சி-இழப்பு-வலி-வேதனை-மற்றும்-ஆனந்தத்தின் சுழற்சியில் இருந்து, எப்போதாவது அதிக பக்குவமடைந்த

ஆன்மா விலகி "இறைவன் என்பவர் யார்? இறைவன் இங்கே இருக்கிறார்? நான் எப்படி இறைவனை அறிந்து கொள்வது?" போன்ற கேள்விகளை கேட்கிறார். ¶இறைவனுக்கு என்று நாமங்கள் இல்லை, ஆனால் எல்லா நாமங்களும் இறைவன் நாமங்களே. நீங்கள் அவரை எந்தப் பெயரைக் கொண்டு அழைத்தாலும், அவர் தனது இயல்பில் நிலைத்து இருக்கிறார். ஆனால் நாம் நமது சம்பிராயத்தில் இறைவனை சிவன் என்று அழைக்கிறோம். அது அவருடைய 1,008 திருநாமங்களில் ஒன்றாக இருக்கிறது. பரமேசுவரனான சிவன் நமக்குள்ளும் நமக்கு வெளியேயும் இருக்கிறார். ஆசை, ஆசையின் நிறைவேற்றம், மகிழ்ச்சி, வலி, வேதனை, பிறவி மற்றும் மரணம் என்று எல்லாம் சிவனே அன்றி வேறில்லை. நற்பண்பு, இரக்கம் மற்றும் பாசத்துடன் இருக்கும் இறைவன் எதற்காக வலி மற்றும் வேதனையை உருவாக்குகிறார் என்ற சந்தேகத்தில் இருக்கும் ஞானோதயம் பெறாத நபர்களுக்கு, இது புரிவது கடினம். ஆனால் வழக்கமாக மக்களின் மனதில் இருப்பதைப் போன்று, சிவபெருமான் அவ்வாறு உருவாக்கவில்லை என்பது தான் உண்மை. இறைவன் *கர்மாவின்* விதியை வழங்கி, இயக்கப்படும் ஒவ்வொரு சக்தியும் அதே விசையுடன் திரும்புவதற்கு ஆணையிட்டார். ¶இந்த இயற்கையின் விதியை கூர்ந்து கவனிக்கும் போது நாம் நமது மகிழ்ச்சி, வலி, வேதனை மற்றும் அந்த வேதனையில் இருந்து நமது வெளிப்பாட்டை உருவாக்குகிறோம் என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். ஆனாலும் நமது அன்புள்ளம் கொண்ட இறைவனின் சக்தி மற்றும் இருப்பு இல்லாமல், நம்மால் இதையும் செய்யமுடியாது. எல்லா பொருட்களிலும், எல்லா செயல்கள் வழியாகவும் இயங்கும் சிவபெருமானை பார்ப்பதற்கு வலுவான தியானம் தேவைப்படும். ஒரு கலை அல்லது அறிவியிலை முழுநிறைவாக்குவதைப் போல, இந்த முயற்சியில் தினசரி பயிற்சிகளை சிரத்தையுடன் பின்பற்ற வேண்டும். ¶சிவபெருமான் உள்ளார்ந்து இருக்கும் தனிப்பட்ட கடவுள் மற்றும் எல்லாம் கடந்த பரம்பொருளாக இருக்கிறார். சிவபெருமான் எல்லையற்ற அன்புள்ளம் கொண்ட இறைவனாக இருக்கிறார். அவர் எல்லோர் மீதும் அன்பு செலுத்துகிறார். ஒவ்வொரு ஆன்மாவையும் அவர் உருவாக்கி, அதற்கு வாழ்நாள் முழுவதும் வழிகாட்டுகிறார். சிவபெருமான் எங்கும் இருக்கிறார். சிவபெருமான் இல்லாத இடமே இல்லை. அவர் உங்களுக்குள் இருக்கிறார். அவர் கோயிலில் இருக்கிறார். அவர் மரங்களில் இருக்கிறார். அவர் ஆகாயத்தில், மேகங்களில், கிரகங்களில் இருக்கிறார். அவர் பரவெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் நட்சத்திர மண்டலங்களாக, அந்த மண்டலங்களுக்கு இடையில் இருக்கும் பரவெளியாகவும் இருக்கிறார். அவர் பிரபஞ்சமாக இருக்கிறார். படைத்தல், காத்தல் மற்றும் அழித்தலைக் கொண்ட அவருடைய பிரபஞ்ச நடனம், இந்த நொடிப்பொழுதில் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. சிவபெருமான் எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார். அவர் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்து இருக்கிறார். அவர்

உள்ளார்ந்து, பார்க்கக்கூடிய மற்றும் பலரால் தரிசிக்கப்பட்ட ஒரு அழகான மனித உருவுடன் இருக்கிறார். அவர் காலம், காரணம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கிறார். ¶இதை புரிந்துகொள்வதற்கு கடினமாக இருக்கிறது அல்லவா? அதனால் இதைப்பற்றி தெரிந்துக்கொள்ள நாம் தியானம் செய்யவேண்டும். சிவபெருமான் நமக்கு மிகவும் அருகாமையில் இருக்கிறார். அவர் எங்கே வாசம் செய்கிறார்? மூன்றாவது உலகில் வாசம் செய்கிறார். மேலும் அவரால் இந்த உருவில் பேசி சிந்தித்து, நமது பிரார்த்தனைகளை பெற்று நமது *கர்மவினைகளுக்கு* வழிகாட்டவும் முடியும். அவர் உலகம் முழுவதும், விண்மீன் மண்டலம் முழுவதும், பிரபஞ்சம் முழுவதும், தனது சித்தத்தை செயல்படுத்தும் எண்ணற்ற *தேவர்களுக்கு* உத்தரவு வழங்குகிறார். இவற்றை நாம் *ரிஷிகள்* சொல்ல கேட்டிருக்கிறோம் மற்றும் நமது சொந்த தியானங்கள் மூலமாக அவற்றை தெரிந்துகொண்டுள்ளோம். அதனால் எப்போதும் இந்த மகாதேவரை வழிபடுங்கள். அவரைக் கண்டு பயம் வேண்டாம். அவர் உங்கள் ஆன்மாவின் பரமாத்துமாவாக இருக்கிறார். அவர் உங்கள் மூச்சுக்காற்றை விட நெருக்கமாக இருக்கிறார். அன்பு செலுத்துவதே அவர் இயல்பு, மற்றும் நீங்கள் அவரை பக்தியுடன் வழிபட்டால், உங்களுக்கு அன்பு புரிய வருவதோடு மற்றவர்களிடமும் அன்பாக இருப்பீர்கள். சிவபெருமானின் பக்தர்கள் எல்லோரிடமும் அன்பாக இருப்பார்கள். ¶இந்த முறையில் சிவபெருமானை எங்கும் எதிலும் காண முடியும். அவர் அங்கே ஒவ்வொரு ஆன்மாவின் ஆதி ஆன்மாவாக இருக்கிறார். நீங்கள் உங்கள் அகக்கண்ணை திறந்து, அவரை மற்றவர்களின் உள்ளும் உலகில் உலகமாகவும் காணலாம். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தியானம் செய்ய மெதுவாக உங்களை ஒழுங்குப்படுத்திக் கொள்ளுங்கள். தியானம் செய்து, உங்களது அமைதியான மையத்தை தேடிப்பிடித்து, உங்களுடைய உண்மையான தெய்வீக சக்தியின் மையம் வரை ஆழமாக செல்லுங்கள். மெதுவாக அக மற்றும் புறத்தூய்மை தோன்றுகிறது. மெதுவாக விழிப்புணர்வு தோன்றுகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 2

ஆன்மீகத்

தனிமை

இது மிகவும் கடினமாக தோன்றுகிறதா? எங்கும் வியாபித்து இருக்கும் சிவபெருமானை நாள் முழுவதும் ஒவ்வொரு மணி நேரமும் நாடுவதைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்து பார்க்கிறீர்களா? இந்த இயல்பான உட்புற செய்முறையை முழுமையாக வெளிப்புற மனதில் கொண்டு வருவதற்கு, ஒருவர்

அனைத்து லௌகீக பொறுப்புக்களில் இருந்தும் விடுபட்டு இருக்கவேண்டும். மற்றவர்களின் அறிவு மற்றும் கருத்துக்களினால் தோன்றிய ஒரு புத்தியின் மூலம் வெளிப்புற மனம் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த கடன் வாங்கிய அறிவு ஆன்மாவை மூடுகிறது, மற்றும் குழந்தைப் போன்ற இயல்பான புத்தி இதன் வழியாக வெளிப்படுவது இல்லை. அதனால், பற்றில்லாமல் ஆன்மீக தனிமையில் வெளியுலகில் இருந்து பிரிந்து, சில காலம் அவ்வப்போது வாழவேண்டும். ¶ஒரு தீர்த்தயாத்திரையின் போது நம்மை சுற்றி இறைவன் இருப்பதை நாம் காணவும், நம்மை சுற்றி நடக்கும் நிகழ்வுகளில் அவரை நேரடியாக உணரவும் முயற்சிக்கிறோம். கோயில் வழிபாட்டின் போது, நாம் அவரை உணரவும், நமது அன்றாட நடவடிக்கைகள் போல அல்லாமல் அவரை அதிக ஆழமாக எதிர்கொள்ளவும் முயற்சிக்கிறோம். இறுதியில் நமது ஆன்மீக முயற்சிகள் முன்னேறும் போது, அதே கவனம் மற்றும் ஒருமுகத்தன்மையை, வாழ்க்கை நமக்கு வழங்கும் தினசரி அனுபவங்களில் முழுமையாக கொண்டு வருகிறோம். அந்த அனுபவங்கள் வெளித்தோற்றத்தில் நேர்மறை அல்லது எதிர்மறையாக இருக்கலாம், இன்பம் அல்லது துன்பம் தருவதாக இருக்கலாம். இது வெளிப்புற உலகை முழுமையான உண்மை என்று பார்ப்பதில் பற்றின்றி இருக்கும் புத்தியை உருவாக்க, சில வலுவான சங்கல்பங்களை எடுத்துக்கொண்டு தொடர்ந்து *சாதனா* செய்துவரும் ஒரு பக்குவமடைந்த ஆன்மாவின் அனுபவம் ஆகும். எல்லா சாதகர்களும், வருடம் ஒருமுறை தீர்த்த யாத்திரை செல்லும் ஒரு புனிதமான கோயிலில் மிகவும் அரிதாக ஒரு கணத்திற்கு சிவபெருமானின் தரிசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செல்கிறார்கள். அவர்கள் அந்த கணநேர தரிசனத்தை நினைவில் செழிக்க வைத்தால், அது மேலும் மேன்மை பெறும். ¶சிவபெருமானை எல்லோரும் அகத்திலும் புறத்திலும் வழிபட வேண்டுமா என்று பலர் என்னிடம் கேட்டுள்ளனர். நமது சைவ சித்தாந்த தத்துவத்தை பொறுத்தவரை இதுவே சரியான அணுகுமுறை, ஆனால் இந்த இரண்டில் எது அதிக இயல்பாக இருக்கும் என்பது அந்த பக்தனை பொருத்து அமையும். அதிக அகநோக்கியாக இருப்பவர்கள் தாங்கள் கற்ற யோகப்பயிற்சிகள் மூலம் அகத்தில் இருக்கும் சிவபெருமானை தியானம் செய்வார்கள், மற்றும் அதிக புறநோக்கியாக இருப்பவர்கள் ஒரு கோயில் அல்லது இசை அல்லது சமயம் சார்ந்த சேவை மூலம் வழிபாட்டில் ஈடுபடுவார்கள். அதிக விழிப்புணர்வை பெற்ற சாதகர்கள் இரண்டையும் எளிதாகவும் மகிழ்ச்சியுடனும் செய்வார்கள். ¶சிவபெருமான் ஒவ்வொரு ஆன்மாவின் உள்ளும் இருக்கிறார். அவர் வெளிப்படாத பரம்பொருளாக இருக்கிறார், நாம் அதை பரசிவ என்கிறோம். அவர் தூய ஒளி மற்றும் உணர்வாக பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்து இருக்கிறார், நாம் அதை சச்சிதானந்தம் என்கிறோம். அவர் இருப்புக்கள் அனைத்திற்கும் படைப்பாளியாகவும், அவர் தனது படைப்பாக இருக்கிறார் என்பதையும் நாம் அறிந்து இருக்கிறோம். இவை அனைத்தையும் நாம் அறிந்து

இருக்கிறோம். ஆம் இவை அனைத்தையும் நாம் அறிந்து இருக்கிறோம். இவ்வாறு சிவபெருமான் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் இருப்பதை நாம் அறிவால் அறிகிறோம். இந்த அனுபவத்தை பெரும்பாலான மக்கள் இதுவரை பெறவில்லை. ¶ வழிபடுபவரின் இயல்பு இந்த பிறவி அல்லது முற்பிறவிகளில் செய்த *சாதனா* மற்றும் *தவம்* மூலம் வளர்ச்சி பெறுகிறது. பழங்காலத்தில் *ரிஷிகள்* இருந்ததைப் போல ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து சிந்திப்பது மற்றும் பேசுவதை நிறுத்துவதன் மூலம் நமது *பக்தியின்* மாபெரும் சக்தியை உட்புறமாக செலுத்த தூண்டப்படும் வரை, நாம் சிவபெருமானை வெளிப்புறமாக வழிபடவேண்டும். இவ்வாறு நாம் உட்புறமாக ஆழமாக சென்று மெதுவாக வளர்ச்சியை பெற்று, சிவனை அடையும் பாதையில் முன்னேறி செல்கிறோம். அக வழிபாட்டை முழுமையாக கடைப்பிடிக்கும் முன்பாக, ஒவ்வொருவரும் சிவபெருமானை புறத்தே வழிபடவேண்டும். முதலில் புறவழிபாட்டில் தேர்ச்சி பெறாமல், நம்மால் அகவழிபாட்டில் தேர்ச்சி பெறமுடியாது. ¶குடும்பம் அல்லது பணியிடத்தில் உணர்ச்சிகள் எழுச்சியை பெறும் போது, நாம் சிவபெருமானை இயல்பாக மறந்துவிடுவோம். ஒருமையை காட்டிலும் இருமையில் அதிக ஈடுபாட்டுடன் இருப்பது மிகவும் எளிது. சிவபெருமானை எப்போதும் நினைவில் வைத்து இருப்பதற்கும், சிவபெருமானின் அன்பு ஓயாது பாய்ந்து செல்வதற்கும் அதிக அகவலிமை தேவைப்படும். நாம் சிவபெருமானை மறந்து, நம் மீதும் மற்றவர்கள் மீதும் கவனம் செலுத்துகிறோம். நமது தன்முனைப்பு அல்லது நமது உணர்ச்சிகள் புண்படும் போது அது கடினமாகிவிடும். அதனால் சிவபெருமானை மறந்து அவரை நினைத்து அஞ்சுவதும் மிகவும் எளிதாகிறது. ஆனால் நாம் நமது சொந்த உள்ளுணர்வு மனம் மற்றும் முன்பே நிரலாக்கம் செய்யப்பட்ட, மதசார்பில்லாத புத்தியை நினைத்துத் தான் அஞ்சவேண்டும். அது நமது வீட்டில் இருக்கும் அரக்கனாக, பிரச்சனைகள் அனைத்திற்கும் காரணமான குறும்புக்காரனாக இருக்கிறது. நீங்கள் இறைவனை நினைவில் வைத்திருக்க விரும்பினால், முதலில் உங்களை சிறிது மறக்க கற்றுக்கொள்ளுங்கள்.

புதன்கிழமை

பாடம் 3

அனுபவத்தின் மூலம்

நாம் வளர்ச்சி பெறுகிறோம்

ஒரு குடும்பம் தங்கள் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் இருக்க பொம்மைகளை வாங்கித் தருகிறார்கள். நம்மை மகிழ்வித்து, எல்லோரையும் தமக்கு அருகில் கொண்டு வருவதற்காக சிவபெருமான் *கர்மவினை* மற்றும் *தர்மத்தை*

வழங்குகிறார். அவர் சுருங்கும் மற்றும் விரியும் பிரபஞ்சத்தை உருவாக்கி, இறுதியில் பிரபஞ்சத்தின் மாபெரும் ஒடுக்கத்தில் அனைத்தையும் உள்வாங்கிக்கொள்கிறார். அவர் எல்லா ஆன்மாக்களையும் படைத்தார் என்று *ரிஷிகள்*-மகான்கள் நமக்கு கூறுகின்றனர்; மற்றும் அவருடைய உருவத்தை பெறும் *சாரூப* நிலைக்கு வளர்ச்சி பெறுவதாக, அவர்கள் மேலும் விளக்குகிறார்கள். அனுபவத்தின் பொம்மைகள் நமது வளர்ச்சியில் பங்கு வகிப்பது மட்டுமல்லாமல், நாம் நமது *கர்மவினை, தர்மம்* மற்றும் மற்ற அடிப்படை பிரபஞ்ச விதிகளை கற்று வளர்ச்சி பெற்று அனுபவத்தை பெறவேண்டும் என்பதற்காக நம்மை உபசரிக்கவும் செய்கிறது. குழந்தைகள் தங்கள் பொம்மைகளுடன் விளையாடும் போது மகிழ்ச்சியுடன் சிரிப்பது அல்லது அவற்றை உடைத்துவிட்டு அழுவது அல்லது தங்களுக்குள் வீசிக்கொண்டு ஒருவரையொருவர் தாக்கி காயப்படுத்துவதைப் போல, நாமும் கடமை மற்றும் தர்மத்தை தவிர்த்து, கர்மவினையை செய்து, ஒருவரையொருவர் அடித்து துன்புறுத்தலாம் அல்லது நமக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்து நமது சொந்த வளர்ச்சியுடன் விளையாடி, கற்றுக்கொண்டும் விவேகத்தை வளர்த்தும் நம்மை வலுப்படுத்திக் கொள்ளலாம்.¶இறைவனை மறப்பது மனித இயல்பு என்றாலும், கவனச்சிதறலை தவிர்ப்பதற்கும், எங்கும் சிவபெருமானை பார்ப்பதை நினைவில் வைத்து இருப்பதற்கும் பல பயனுள்ள வழிகள் உள்ளன. இவை அனைத்திற்கும் மத்தியில் சிவபெருமானை அழைத்து வருவதற்கு, அவரது நாமத்தை தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருப்பது பயனுள்ள வழிகளில் ஒன்றாகும். நீங்கள் உங்களை மறக்கும் போதும், எங்கும் இறைவனை பார்ப்பது ஒருபுறம் இருக்கட்டும், இறைவனே கண்களுக்கு புலப்படாத போதும், *ஜபம்* செய்யுங்கள். "ஓம் நமச்சிவாய" என்று தொடர்ந்து சொல்லுங்கள். வாழ்க்கை துன்பங்கள் நிறைந்து அல்லது சோர்வூட்டுவதாக இருக்கும் போது, "சிவ சிவ" அல்லது "ஓம் சிவாய" அல்லது "நமச்சிவாய," என்று மனதுக்குள் சொல்லி, மனப்பூர்வமாக அவரிடம் அனைத்தையும் சமர்பித்து விடுங்கள். சூழ்நிலைகளை பொருட்படுத்தாமல், நீங்கள் சந்திக்கும் அல்லது எதிர்கொள்ளும் ஒவ்வொருக்குள்ளும் அவரை காணுங்கள். அவர் அவர்களின் உயிர் சக்தியாக இருக்கிறார், ஆனால் நீங்கள் அதை காண்பதற்கு உங்கள் மனதை அமைதிப்படுத்த வேண்டும். நீங்கள் ஒருவரால் மனம் வருந்தும் போது, முகத்தில் புன்னகையுடன், "சிவபெருமானை இந்த உருவில் பார்ப்பதற்கு எவ்வளவு அருமையாக இருக்கிறது," என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள். இறைவன் மீது அன்பு செலுத்தும் ஆன்மாவிற்கு விலங்குகள், யாசகர்கள், இளவரசர்கள், அரசியல்வாதிகள், நண்பர்கள் மற்றும் எதிரிகள், தெய்வீக புருஷர்கள், மகான்கள் மற்றும் முனிவர்களாக இருக்கும் அனைவரும் சிவபெருமானாக காட்சி அளிப்பார்கள். அவர் சிரித்துக்கொண்டே, "சிவபெருமானே, உங்களை உங்களுடைய வேறு பல ரூபங்களில் பார்ப்பதற்கு

எவ்வளவு அருமையாக இருக்கிறது," என்று மனதுக்குள் நினைத்துக்கொள்கிறார். ¶சிவபெருமானை அவருடைய உருவமற்ற நிலையில் யாராலும் நினைத்துப் பார்க்க முடியாது. மிகவும் உயர்வாக இருக்கும் இதை உணர வேண்டும், மற்றும் அதன் பிறகு உணர்ந்தவர் தான் உருவமற்ற நிலையை உணர்ந்துவிட்டோம் என்பதை உணர வேண்டும். மிகச்சிலரால் மட்டுமே பரசிவத்தை உணர முடியும் என்பது உண்மை. ஆனால் வயதில் முதிர்ச்சி அடைந்ததும் அல்லது இறக்கும் தருவாயில், பலரால் சச்சிதானந்தத்தை உணர முடியும் மற்றும் உணர்ந்தும் இருக்கிறார்கள். அனுபவித்த அனுபவத்தை வழங்கிய வாழ்க்கைகளின் முழுமை, முந்தைய குறிக்கோள்களின் செயலாக்கம் ஆகியவை ஒரு ஆன்மா முடிவான குறிக்கோளை அடைவதற்கு, தீவிர ஆர்வத்தை உருவாக்க துணையாக இருக்கும். இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் உடனடியாக வரவிருக்கும் பாதை தெளிவாக இருக்கிறது. அது நிறைவேறியதும் அடுத்த கட்டம் இயல்பாக காட்சி அளிக்கிறது. அதே தீவிர ஆர்வத்தின் சக்தி இவை அனைத்தையும் சாதிக்கிறது. ஒரு தாயாக இருந்து தனது குழந்தைகளை கவனித்துக்கொண்டு ஒரு நல்ல மனைவியாக இருக்கவேண்டும் என்ற ஒரு பெண்ணின் ஆசை, தனது குடும்பத்திற்கு தேவையான ஆதரவை வழங்கவேண்டும் என்ற ஒரு தந்தையின் ஆசை, புதிதாக கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஒரு விஞ்ஞானியின் ஆசை, சிறப்பாக போட்டியிட்டு வெற்றிப்பெற வேண்டும் என்ற ஒரு தடகள வீரரின் ஆசை, சிவபெருமானுடன் ஐக்கியமாக வேண்டும் என்ற ஒரு *யோகியின்* ஆசை என்று ஆசைகளில் இருக்கும் அதே சக்தி, *சக்கரங்கள்* விழிப்படையும் போதும், ஆன்மா வளர்ச்சி பெறும் போதும், அவை மூலமாக உருமாற்றம் பெறுகிறது. அதே ஆசை இறுதியாக, காலம் மற்றும் உருவத்தை கடந்து இருக்கும் உண்மைப் பொருளை, பரவெளி மற்றும் காரணத்தை கடந்து இருக்கும் உண்மைப் பொருளை சாதகன் அறிந்துக்கொள்ள தூண்டுகிறது. பொறுமையாக இருங்கள். அது எல்லோருக்கும் காலப்போக்கில் வந்தடையும். அது வந்தடையும் வரை பொறுமையாக இருங்கள்.

வியாழக்கிழமை

பாடம் 4

பரமாத்துமாவை

பரமாத்துமா மூலம் அறிதல்

சாதனாவை தொடங்கும் முன் ஆரம்பகாலத்தில், நடப்பில் இருக்கும் *கர்மவினைகள்* மூலம் மனம் பதட்டத்தில் இருக்கும் மற்றும் *தர்மத்தை*

புரிந்துகொள்ள அல்லது அதை நிறைவேற்ற முடியாமல் தன்னம்பிக்கை இழந்து இருக்கக்கூடும். உலகம் இருண்டு பயங்கரமாக காட்சி அளிக்கும், இந்த பதட்டமான நிலையில், இறைவன் கோயிலைத் தவிர மற்ற இடங்களில் இருக்கிறார் என்று அவருக்கு புரியவைப்பது கடினமாக இருக்கும். “இறைவன் எனக்குள் வாசம் செய்ய கண்டிப்பாக வாய்ப்பில்லை,” என்று ஞானோதயம் பெறாதவர் தானே முடிவு செய்து கொள்கிறார். ¶இரண்டாம் கட்டத்தில், *தர்மத்தை* பூர்த்தி செய்த நிலையில் மனம் அமைதியாக இருக்கும் போதும், தியானம் அன்றும் பிரார்த்தனை மற்றும் தவம் மூலம் கடந்தகால மற்றும் நிகழ்கால *கர்மவினைகளை* கரைக்க மற்றும் கட்டுப்படுத்த போதுமான பக்குவம் மனதிடம் இருக்கும் போதும், இறைவன் அகத்தில் இருக்கும் உதவிக்கரமாக தென்படுகிறார், மற்றும் அவரது கோயிலில் மிகவும் வலுவாக உணரப்படுகிறார். ¶மூன்றாம் கட்டத்தில், அகத்தில் இருக்கும் அந்த உதவிக்கரம் ஒரு படி மேலே சென்று, தூய உணர்வாகவே மாறிவிடுகிறது. இறைவன் வெளியே நாடப்படாமல், ஒரு மனிதரின் முக்கிய, ஒருங்கிணைந்த அம்சமாக, உயிரின் உயிராக, பிரபஞ்சத்தின் ஆற்றல் மற்றும் பிரகாசமான சக்தியாக அனுபவிக்கப்படுகிறார். உள்ளிருக்கும் அமைதி வெளியிருக்கும் குழப்பத்தைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது. ஆனந்த-உணர்வின் இந்த நிலையில், நமக்குள் இறைவன் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது மற்றும் அது உற்சாகத்துடன் அனுபவிக்கப்படுகிறது. அனுபவிப்பவரின் உணர்வுகள் தீவிரமடைந்து, அவர் தனது தினசரி வாழ்க்கையில் ஒரு சாட்சியாக மாறி, மற்றவர்கள் தங்களுக்குள் இருக்கும் இறைவனை பார்ப்பதில்லை என்பதை தெரிந்துக் கொள்கிறார். அவர் கண்டுகொண்டது அவருக்குள் இரகசியமாக இருக்கிறது. அகத்தில் இருக்கும் இறைவன் உண்மை, அறிவு, ஆனந்தம் அல்லது சச்சிதானந்தம் என்கின்ற யாவையும் பிணைத்து வைத்து, எங்கும் வியாபிக்கும் சக்தியாக ஆன்மாவால் உணரப்படுகிறது. மனஅமைதியால் எங்கும் அமைதி தென்பட்டு, ஆனந்தம் மிகவும் வலுவாக இருக்கிறது. இந்த நிலையில் ஒரு ஆழமான அகக்கண் திறக்கிறது, மற்றும் சிவபெருமானின் அதே இருப்பு ஒவ்வொரு உயிர் சக்தியில் இருந்து, மாபெரும் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணு வழியாக வியாபித்து, எல்லா இருப்புக்களின் அடிப்படை சக்தியாக நிலைத்து இருக்கிறது என்பதை உண்மையில் உணர முடிகிறது. இதை அனுபவித்த பிறகே, மனிதனுக்குள் இறைவன் இருப்பதையும் இறைவனுக்குள் மனிதன் இருப்பதையும் ஒருவரால் உண்மையில் எடுத்துரைக்க முடியும். ¶அனுபவம் இல்லாமல் தத்துவத்தை அறிவது என்பது, தூரத்தில் இருக்கும் ஒரு அழகான இடத்தைப் பற்றி ஒரு புத்தகத்தில் படித்து அல்லது அங்கே சென்று வந்தவர்கள் சொன்னதை கேட்டு பயணம் செய்வது போன்றது ஆகும். இது உண்மையான அனுபவம் இல்லை. சொந்த அனுபவம் மட்டுமே ஆன்மீக அனுபவம் ஆகும். "நீங்கள் ஆயிரம் சாத்திரங்களை படித்தாலும், உங்களுக்கு ஞானம் கிடைக்காது. நீங்களே உங்கள்

பரமாத்துமாவை அறிந்துகொள்ள வேண்டும்," என்று எனது சத்குரு, சிவ யோகசுவாமி தெளிவுப்படுத்தினார். ¶வரையறுக்குட்பட்ட நமது மனதின் மூலம் நாம் எவ்வாறு எல்லையற்ற தன்மையை, இறைவனை புரிந்துகொள்வது? இறைவனைப் போன்ற ஒரு மாபெரும் சக்தியை நாம் எவ்வாறு அறிவுப்பூர்வமாக உள்ளடக்குவது? இறைவனாக இருக்கும் சங்கரன் எல்லா அறிவையும் எழுதி, புத்தியின் படைப்பாளராக இருப்பதாக நமது சாத்திரங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. அவர் இந்த பிரபஞ்சத்தின் சிறந்த சிற்பியாக இருக்கிறார். இறைவன் புத்தியை படைத்தார் என்றால், புத்தியால் அவரை எப்படி புரிந்துகொள்ள முடியும்? அவ்வாறு நடைபெற்றுள்ளதால், அது சாத்தியமே. புத்தி விரிவாக்கம் பெற்று, விவேகமான மனதை கடந்து சாட்சி நேரடியாக மெய்ஞ்ஞான புரிதலை பார்க்க வேண்டும். அதனால் தான் நாம் சிவபெருமானை சாதரண நீள்பட்ட கல்லில் உயரிய சிவலிங்க வடிவில் வழிபடுகிறோம். ¶நீங்கள் எல்லோரும் சிவபெருமானை பார்க்க முயற்சிப்பது நல்லது. முயற்சி செய்துகொண்டே இருங்கள். முயற்சியில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். உங்களுடைய பரமாத்துமாவை உங்களுக்கு வேறு யாரால் தரமுடியும்? உங்களுக்குள் இருக்கும் பரமாத்துமாவின் விரிவாக்கம், சிவபெருமானைத் தவிர வேறில்லை. அவரால் உங்களுக்கு செல்வத்தை வழங்க முடியும். அவரால் உங்களுக்கு ஆரோக்கியத்தை தரமுடியும். உங்களுக்குத் தேவைப்படுவது அல்லது விருப்பப்படுவது அனைத்தையும் அவரால் உங்களுக்கு வழங்க முடியும். ஆனால் இன்று வழிபடுவதைப் போல அவரை உருவமற்ற நிலையில் வழிபடுவதால், மனம் எல்லையற்ற தன்மைக்கு அழைத்துச் செல்லப்படுகிறது. மனம் தன்னை எதனுடன் அடையாளம் காண்கிறதோ, அதை மட்டுமே அதனால் உள்ளடக்க முடியும். உருவமற்று, காலமற்று மற்றும் பரவெளியற்று மனதை கடந்து சிவபெருமானை பிரதிபலித்து சூட்சும உருவமாக இருக்கும், இந்த உண்மைப் பொருளை மனதால் அடையாளம் காண முடியாது. இருந்தாலும் உங்களுக்குள் இந்த கணத்தில், வெறும் உங்களுடைய அறியாமையாலும் தனிப்பட்ட அடையாளம் மற்றும் பிரிவின் புலனாக இருக்கும் வெறும் தன்முனைப்பாலும் மறைக்கப்பட்டு இருப்பது சிவபெருமானே. அவர் கற்பனையான ஒரு எதிர்காலத்தில் இல்லாமல், இப்பொழுதில் இருக்கிறார். மாயை, ஆணவத்தின் பிடியில் இருந்து விலகி, கர்மவினையை கரைத்து விட்டால், அவர் கண்ணுக்கு தென்படுவார். இறுதியாக விலகுவது ஆணவமாக இருக்கும். அதுவே உடையும் இறுதி பற்றாக இருக்கும். ¶தன்முனைப்பு என்ற பற்று உடைந்தவுடன், இந்த மர்மமான இறைவன் எங்கும் பரவுவதை உணர முடியும். அவர் எதை படைத்தாரோ அதுவாக இருக்கிறார். அதைப்பற்றி நன்றாக ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். எப்போதும் எல்லோரது மனதில் இருக்கும் அன்பு மற்றும் ஒளியாக, பேரறிவு மற்றும் தெய்வீகப் பண்பாக தொடர்ந்து சிவபெருமான் தனது படைப்பில் வியாபித்து இருக்கிறார்; இருந்தாலும் இறைவனுக்கும் ஒரு உருவம் உள்ளது.

¶சூட்சும லோகங்களில், சிவபெருமான் மிகவும் அழகான உருவத்துடன், ஒரு முழுமையான நிறைவான மனித உருவத்துடன் இருக்கிறார். அவர் சிந்திக்கிறார், பேசுகிறார், நடக்கிறார், முடிவு எடுக்கிறார். அனைத்திலும் வியாபித்து இருந்தாலும் அவற்றை கடந்து, உருவத்துடனும் உருவத்தை கடந்தும், இந்த கணத்தில் உங்களுடைய ஆன்மாவின் பரமாத்துமாவாக இருக்கும் அத்தகைய பரமேசுவரனை வழிபடுவது நமது பாக்கியம் ஆகும். அதனால் அத்வைதத்தின் உண்மைப் பொருளை நாடுபவர்களே, உருவத்துடனும் உருவத்தை கடந்தும் இறை அனுபவத்தை தரும் இந்த பாதை உண்மையில் சிறந்ததாகும். நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள்!

வெள்ளிக்கிழமை

பாடம் 5

உங்கள் கர்மவினையை

அனுபவித்தல்

"நாங்கள் அனுபவிப்பதற்கு சிவபெருமான் எதற்காக கர்மவினையை வழங்கி இருக்கிறார்? எங்களை தொடக்கத்தில் இருந்து பூரணமாக படைத்து இந்த வேதனையை தவிர்த்து இருக்கலாம் அல்லவா?" என்பது பெரும்பாலான சாதகர்களின் கேள்வியாக இருக்கிறது. அதற்கு எனது பதில் இதோ: ஒரு நஞ்சாக இல்லாமல் உங்கள் *கர்மவினையை* உங்களுடையதாக, ஒரு குணப்படுத்தும் மருந்தாக ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் தினசரி வாழ்க்கையில் சுயமாக உருவாக்கப்பட்ட அனுபவங்களை அனுபவித்ததும் விதை *கர்மவினைகள்* விழிப்படையும் போது, உங்கள் செயல்கள் உங்கள் உணர்ச்சிகள் மூலம் வெளிவரும் போது, நீங்கள் எதிர்காலத்தில் வாழ்ந்து கரைப்பதற்கு எதிற்செயலாற்றாமல் மற்றும் புதிய சுழற்சியை உருவாக்காமல் இருக்க, ஒவ்வொரு கர்மவினையையும் எதிர்கால பிறவியில் அல்லாமல் இந்த பிறவியலேயே கரைத்து விடுங்கள். அது மகிழ்ச்சி தரும் *கர்மவினை*, சோகம் தரும் *கர்மவினை*, வேதனையான *கர்மவினை* அல்லது உற்சாகம் தரும் *கர்மவினை* என்று எதுவாக இருந்தாலும், அது உங்கள் *கர்மவினை* ஆகும். ஆனால் அது உங்களுடைய உண்மையான பண்பு இல்லை. இது நீங்கள் மெதுவாக பக்குவம் அடைவதற்கு, வளர்ச்சி பெறுவதற்கு, மற்றும் கற்பதற்கு மற்றும் இறுதியில் விவேகத்தை பெறுவதற்காக, நீங்கள் அனுபவிக்கும் அனுபவம் ஆகும். இது சிவபெருமான் பக்தர்களுக்கு வழிகாட்டுவது மற்றும் உங்களை தனக்கு சமீபத்தில் அழைத்துக் கொள்ளும் மர்மமான பணிகள் அனைத்தையும் குறிப்பிடுகின்றன. ¶சிவபெருமான் ஆனந்தமய கோசத்தை உருவாக்கி, அதில் தனது சக்தி, தனது சாரத்தை வியாபகம் செய்ததாக

வேதத்தில் தேர்ச்சி பெற்ற மாபெரும் *ரிஷிகள்* விளக்கியுள்ளனர். எல்லா ஆன்மாக்களும் பக்குவம் அடைந்து, அவருடைய திருவடிகளை நோக்கி திரும்பும் பாதையில் கற்கவேண்டிய பாடங்கள் பல உள்ளன. *கர்மவினை* வகுப்பில் கற்கும் பாடங்கள் பக்குவம் அடைவதற்கான செய்முறை, இயக்கமுறை மற்றும் கருவியின் அங்கம் ஆகும். அவர் இவை அனைத்தையும் ஏன் செய்தார்? இதற்கு *ரிஷிகள்* காரணம் எதுவும் சொல்லாமல், இதை அவருடைய திருநடனம் என்று அழைக்கின்றனர். இதன் காரணமாகவே, நாம் சிவபெருமானை நடனத்தின் அரசனாக நடராசனாக வழிபடுகிறோம். ஒருவர் எப்போது நடனம் ஆடுகிறார்? அதிக மகிழ்ச்சியுடன் இருக்கிறார். அதிக உற்சாகத்துடன் இருக்கிறார். சிவபெருமான் அனைத்து உயிராகவும், உயிரின் இறைவனாகவும், புதிய வாழ்க்கையை தொடங்கி வைக்கும் மரணத்தின் இறைவனாகவும், வாழ்க்கையை வழிநடத்தி செல்லும் பிறவியின் இறைவனாகவும் இருக்கிறார். அவர் எல்லா உயிராகவும் எல்லா வஸ்துவாகவும் இருக்கிறார். அவர் *ரிஷிகளுடன்* நடனமாடினார். அவர் உங்களுடன் நடனமாடுகிறார். நீங்கள் சிவபெருமானுடன் நடனமாடுகிறீர்கள். இந்த அறையில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் அவருடைய நடனத்தை ஆடிக்கொண்டு இருக்கின்றன. இந்த கணத்தில், அவர் உங்களுடைய ஒவ்வொரு அங்கமாகவும் இருக்கிறார். நீங்கள் அவரை பார்ப்பதன் மூலம், உங்களையே பார்த்துக் கொள்கிறீர்கள். அவர் தனக்கு அருகில் அழைத்துக் கொள்ளும் போது, நீங்கள் உங்களுக்கு அருகே செல்கிறீர்கள். நமது பரம்பரையின் சிறந்த சத்குருவான சிவ யோகசுவாமி, மிகவும் நுணுக்கமான குறிப்பு ஒன்றை வழங்கினார். "ஒரு செயலை மட்டும் சிவபெருமானால் செய்ய முடியாது. அவரால் என்னை விட்டு பிரிந்து இருக்க முடியாது," என்று குறிப்பிட்டார். அவர் உங்களுக்குள் வியாபித்து, நீங்களாகவே இருப்பதால், அவரால் உங்களை விட்டு பிரிய முடியாது. அவர் ஆன்மாவை உருவாக்கினார் என்று *வேதங்கள்* மற்றும் *ஆகமங்கள்* நமக்கு எடுத்துரைக்கின்றன. அவர் உங்கள் ஆன்மாவை உருவாக்கினார், மற்றும் அந்த ஆன்மா மீண்டும் அவரிடம் திரும்பும் பாதையில் *கர்மவினை* மற்றும் வாழ்க்கை மூலம் பக்குவம் அடைகிறது. சிவபெருமானை அறிவது, சிவபெருமான் மீது அன்பு செலுத்துவது, அவரிடம் சங்கமத்தை நாடுவது, சிவபெருமானுடன் நடனமாடுவது, சிவனோடு வாழ்வது மற்றும் சிவபெருமானுடன் ஐக்கியமாவதே வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். இதையே பூமியில் மிகவும் பழமையான சமயம் கற்பிப்பதோடு அதன் மீது நம்பிக்கையும் வைத்துள்ளது. ¶சிவபெருமான் அன்பின் இறைவனாக இருக்கிறார் மற்றும் அவர் அன்பைத் தவிர வேறு எந்த வடிவிலும் இல்லை. அவர் இந்த பிரபஞ்சத்தில் அன்பாக வியாபித்து இருக்கிறார். அவர் உங்களுக்குள் அன்பாக வியாபித்து இருக்கிறார். சிவபெருமான் நெருப்பாக, பூமியாக, காற்றாக, நீராக மற்றும் ஆகாயமாக இருக்கிறார். சிவபெருமானின் பிரபஞ்ச சக்தி ஒவ்வொரு பொருளிலும் வியாபித்து உங்கள் மனதிற்கு ஒளி மாற்றும் உயிரை கொடுக்கிறது.

சிவபெருமான் எங்கும் எதிலும் இருக்கிறார். சிவபெருமான் உங்கள் மனதில் இருக்கும் சிறிய கவலையாக, பல ஆண்டுகளாக உங்கள் மனதில் இருக்கும் கவலையாக இருக்கிறார். சிவபெருமானை எங்கும் காணுங்கள். அவருடைய உயிர் சக்தியை எல்லா வஸ்துக்களிலும் காணுங்கள். முதலில் நாம் சிவபெருமானுடன் நடனமாடுகிறோம். பிறகு நாம் சிவனோடு வாழ்கிறோம். உள்ளிருக்கும் பரமாத்துமாவான சிவபெருமானுடன் ஐக்கியமாதல், இந்த பாதையின் முடிவாக விளங்குகிறது.

சனிக்கிழமை

பாடம் 6

அகத்தில் இருக்கும்

பரமாத்துமா

பரமாத்துமாவை உங்களால் விவரிக்க முடியாது. அதன் இருப்பை உங்களது புலன்களின் புனிதமான நிலை மூலம் உணர முடியும், ஆனால் அதை உங்களால் விளக்க முடியாது. அதை அறிவதற்கு, நீங்கள் அதை அனுபவிக்க வேண்டும். அது உங்களது தெய்வீக பண்பின் ஆழமாக, உங்களுடைய மையமாக இருக்கிறது என்பதை மட்டுமே உங்களால் சொல்ல முடியும். அது நீங்கள் தான். ¶உங்களுக்கு மேலே, கீழே, இடதுபுறம், வலதுபுறம், முன்புறம் மற்றும் பின்புறம் வெறுமையை பார்த்து, அந்த வெறுமையில் நீங்கள் உங்களை கரைத்தால், அதுவே ஆத்ம ஞானத்தை விளக்கும் சிறப்பான முறையாக இருக்கும். இருந்தாலும் அந்த வெறுமை, ஒரு காலி பெட்டியில் இருக்கும் வெற்றிடம் போல, ஒன்றும் இல்லாத நிலையாக இருக்காது. அந்த வெறுமை எல்லா பொருள்களின் முழுமையாக இருந்து, எல்லாப் பொருள்களாக தோன்றும் இருப்புக்கு ஆதரவு அளிக்கும் சக்தியாக இருக்கிறது. ¶நீங்கள் ஆத்ம ஞானத்தை பெற்ற பிறகு, மனம் ஒரு சுயமாக உருவாக்கப்பட்ட கோட்பாடு என்பதை உணர்வீர்கள். அந்த மனம் தான் தன்னை தொடர்ந்து உருவாக்கிக்கொண்டு இருக்கிறது. மனம் என்பது தொடர்ந்து உருவத்தை உருவாக்கி, உருவத்தை பாதுகாத்து, புதிய உருவங்களை உருவாக்கி பழைய உருவங்களை அழிக்கும் உருவமாக இருக்கிறது. அந்த மனமே, மாயையாக மிகப்பெரிய பொய்யாக, உங்கள் சிந்திக்கும் மனதில் உண்மை என்று துணிந்து சிந்திக்கும் உங்களுடைய அங்கமாக இருக்கிறது. மனதிற்கு அந்த சக்தியை எது கொடுக்கிறது? மனம் பொய்யாக இருந்தால் அதற்கு சக்தி உண்டா? அதற்கு சக்தி இருக்கிறது அல்லது சக்தி இல்லை, பரமாத்துமா சுயமாக இருக்கிறது என்று நான் சொல்லும் வார்த்தைகளில் என்ன பேதம் இருக்கிறது? நீங்கள் கனவு லோகத்தில் வாழ்ந்து, அதன் மூலம் குழப்பத்தில் இருக்கலாம். நீங்கள்

யதார்தத்தத்தை அறியவேண்டும் என்ற நாட்டம் மற்றும் தீவிர ஆசையுடன் இருந்து, அதன் மூலம் ஆனந்தமாக இருக்கலாம். மனிதனின் விதி அவனை மீண்டும் அவனை நோக்கி அழைத்து செல்கிறது. மனிதனின் விதி அவனது சொந்த தெய்வீகத் தன்மை பற்றி அறியும் பாதையில் அழைத்து சென்று, அது மேலும் அவனது மெய்யான தெய்வீகத் தன்மை பற்றிய உணர்தலை நோக்கியும் அழைத்து செல்கிறது. ஆத்ம ஞானம் பெறுவதற்கு ஆன்மீக பாதையில் அடியெடுத்து வைக்கவேண்டும் என்ற அறிவுரையை கேட்டு இருக்கிறோம். நீங்கள் மட்டுமே தயாராக இருக்கும் போது மற்றும் யதார்த்தமாக காட்சி அளிப்பது தனது யதார்த்த தோற்றத்தை இழக்கும் போது மட்டுமே நீங்கள் ஆன்மீக பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டும். அப்போது மட்டுமே, ஒரு புதிய மற்றும் அதிக நிரந்தர யதார்த்தத்தை நாடுவதற்கு உங்களால் போதுமான பற்றின்றி இருக்க முடியும். ¶நீங்கள் ஒன்றை நிரந்தரம் என்று நினைத்து, உங்கள் பாதுகாப்பின் மூலம் நீங்கள் மட்டுமே அதற்கு நிரந்தரம் வழங்குகிறீர்கள் என்பதை எப்போதாவது கவனித்ததுண்டா? ¶உங்களுக்குள் இருக்கும் பரமாத்துமா மட்டுமே நிரந்தரமானது என்ற ஒரு தெளிவான அறிவுப்பூர்வமான கோட்பாட்டை அமைதியாக சிந்தித்தது உண்டா? மற்ற அனைத்தும் மாறிக்கொண்டு இருக்கின்றன என்று சிந்தித்தது உண்டா? மற்ற அனைத்தும் இன்பம் மற்றும் துன்பத்தின் லோகங்களுடன் நேரடி தொடர்பில் இருக்கின்றன என்று சிந்தித்தது உண்டா? அது தான் மனம்.¶ சுயமாக பிரகாசிக்கும் சக்தியாக இருக்கும் பரமாத்துமா உங்களுக்குள் உயிர் பெறும் போது, இன்பம் மற்றும் துன்பம் உங்களுக்கு ஒரு ஆய்வாக மாறுகிறது. ஒவ்வொன்றும் தான் இருக்கும் இடத்தில் உண்மையாக இல்லை, என்று சொல்வதற்கு நீங்கள் சிந்திக்க தேவையில்லை. உருவம் என்பதே உண்மை இல்லை என்பதை உங்கள் உயிர்சக்தியின் அதிக உட்புறமான ஆழத்தில் அறிந்து இருக்கிறீர்கள். ¶சுயமாக பிரகாசிக்கும் உங்கள் தெய்வீக சக்திக்குள் நீங்கள் நுழையும் போது, நீங்கள் அனுபவிக்கும் இன்பங்களின் நுணுக்கங்களை விவரிக்க முடியாது. நீங்கள் போதுமான சுத்தத்துடன் இருந்தால் மட்டுமே, அந்த அதிர்வின் நுணுக்கம் உங்களை வந்து அடையும். நீங்கள் போதுமான இணக்கத்தில் இருந்தால், நீங்கள் உங்களுடைய மெய்யான பரமாத்துமாவை நெருங்க நெருங்க, உங்களால் மாபெரும் மகிழ்ச்சி மற்றும் ஆனந்தத்தின் நுணுக்கத்தையும் உணர முடியும். ¶உங்கள் மனதை பயன்படுத்தி நீங்கள் பரமாத்துமாவை தேட முயற்சி செய்தால், உங்கள் முயற்சி பயனற்று போகும். ஒரு பொய் உங்களுக்கு உண்மையை வழங்க முடியாது என்பதால், மனதால் உண்மைப் பொருளை வழங்க முடியாது. ஒரு பொய்யால், உங்களை ஒரு வஞ்சக வலையில் மட்டுமே சிக்க வைக்க முடியும். ஆனால் நீங்கள் உங்களுக்கு விழிப்புணர்வை வழங்கி, உங்களிடம் உள்ள உண்மையான, அருமையான, அழகான பண்புகளை விழிக்க வைக்கும் போது, நீங்கள் ஒரு பாதை, ஒரு கிண்ணமாக மாறுகிறீர்கள். அதில் சுயமாக பிரகாசிக்கும் உங்கள் தெய்வீக சக்தி பிரகாசிக்க தொடங்குகிறது.

உங்களுக்குள் ஒரு ஒளி பிரகாசிப்பது போன்று உங்களுக்கு முதலில் தோன்றும். நீங்கள் அந்த ஒளியை நாடுவீர்கள். ஒரு அழகான இரத்தினத்தை கையில் பிடித்து ஆசையுடன் பாதுகாப்பதைப் போல, நீங்கள் அதை கையால் பிடிக்க முற்படுவீர்கள். நீங்கள் உங்களுக்குள் கண்டுபிடித்த அந்த ஒளியின் ஒவ்வொரு சிறு துவாரமும், ஒவ்வொரு அணுவும் உங்கள் உயிர்சக்தியே என்பதை நீங்கள் பின்னர் தெரிந்துக் கொள்வீர்கள். அந்த ஒளி பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்து இருப்பதை நீங்கள் பின்னர் உணர்ந்து கொள்வீர்கள். நீங்கள் தான் ஒளி என்பதையும், அது வியாபிக்கும் பொருள் மனம் உருவாக்கிய பொய்யான மாயை என்பதை நீங்கள் பின்னர் புரிந்துக் கொள்வீர்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 7

ஒவ்வொரு கோயிலும்

செங்கல் மூலம் உருவாக்கப்பட்டன

இந்த உண்மைப் பொருளை தேடுவதற்கு நீங்கள் எவ்வளவு வலுவாக இருக்க வேண்டும். நீங்கள் மிகவும் வலுவாக இருக்க வேண்டும். நீங்கள் அதற்கு பயிற்சி மூலம் வலிமையை பெறவேண்டும். ஆன்மீக விதிகளின் உத்தரவுகளை மதித்து நீங்கள் உங்களுடைய ஒவ்வொரு தசை மற்றும் உங்கள் இயல்பின் ஒவ்வொரு நரம்பிற்கும் பயிற்சி அளிக்க வேண்டும். அது மிகவும் கடினமாக இருக்கும். ஒரு பலவீனமான தசையை வலுப்படுத்துவது மிகவும் கடினம், ஆனால் குறிப்பிட்ட காலத்திற்கு உடற்பயிற்சி செய்து, முறையாக செய்யவேண்டியதை செய்தால், அந்த தசையில் முன்னேற்றம் தென்படும். உங்கள் இயல்பிலும் முன்னேற்றம் தென்படும். ஆனால் நீங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். மிகவும் கடுமையாக சிரத்தையுடன் தொடர்ந்து முயற்சி செய்து வரவேண்டும். எத்தனை நேரம்? தினமும் பத்து நிமிடங்கள்? இல்லை. தினமும் இரண்டு மணி நேரங்கள்? இல்லை. தினமும் இருபத்தி நான்கு மணிநேரங்கள்! நீங்கள் மிகவும் கடுமையாக முயற்சிக்க வேண்டும். ¶ஆத்ம ஞானம் பெறுவதற்கு உங்களை தயார்ப்படுத்திக் கொள்வது என்பது, வயலின் இசைக்கருவியில் சுருதி சேர்ப்பதற்கு, ஒவ்வொரு தந்தியும் மற்ற தந்திகளுடன் இணக்கத்தில் இருக்க இறுக்குவதை போன்றது ஆகும். இசைக்கருவியின் தொனி மீது உங்களால் அதிக நுணுக்கமான கவனம் செலுத்த முடிந்தால், உங்களால் ஒரு வயலினை நன்றாக சுருதி சேர்க்க முடியும், மற்றும் வயலின் நன்றாக சுருதி சேர்க்கப்படும், மற்றும் இசை சிறப்பாக அமையும். நீங்கள் உங்கள் இயல்பில் வலுவாக இருந்தால், உங்களது மெய்யான இயல்பு மூலம் அதிக திறமைகளை

வெளிக்கொண்டு வரமுடியும் மற்றும் உங்களது மெய்யான உயிர்சக்தியின் ஆனந்தத்தை நன்றாக அனுபவிக்க முடியும். அதற்காக முயற்சி செய்வதும், தீவிரமாக ஆசைப்படுவதும் நல்ல பலனைத் தரும். உங்கள் இயல்பை தடுப்பதற்கு, எண்ணற்ற சிந்தனை மற்றும் செயல்களை மறுப்பது நல்ல பலனைத் தரும். உங்கள் மனதை உங்கள் விருப்பத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு, உங்கள் மனதுடன் போராடுவது நல்ல பலனை தரும். ¶ஆழ்ந்த சிந்தனையை அனுபவித்தவர்கள், எனது பேச்சில் இருக்கும் ஆழத்தை உணர்வார்கள். நீங்கள் உங்களது மெய்யான பரமாத்துமாவை உணர்ந்து இருக்கிறீர்கள். அந்த உணர்வு முன்பு எப்போதும் போல இல்லாமல், விசேஷமாக இருந்துள்ளது. நீங்கள் இந்த நிலையில் வெறும் அறுபது நொடிகளுக்கு மட்டுமே நிலைத்து இருந்தாலும், அது உங்கள் உயிர்சக்தி முழுவதும் நிரம்பி உற்சாகப்படுத்தி வியாபிக்கிறது. அதன் மூலம் நீங்கள் பெற்ற ஒரு மிகப்பெரிய புரிதலை, உங்களால் மீண்டும் நினைவுக்கூர முடியாது, அந்த புரிதலை எதிர்கால வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புப்படுத்தினால் அது விவேகத்தை பலனாக வழங்கும், அந்த ஒரு புரிதல் எந்த ஒரு பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் கிடைக்கும் அறிவை காட்டிலும் சிறந்ததாக இருக்கும். உங்களது ஆழ்ந்த சிந்தனை நிலையில் எல்லா உருவங்கள் மற்றும் உங்கள் வழியாக வியாபித்ததாக நீங்கள் உணர்ந்த, இந்த ஆத்ம ஞானம் பற்றிய ஒரு தெளிவான மற்றும் அறிவுப்பூர்வமான கோட்பாட்டை பெறுவதற்கு முயற்சி செய்ய முடியுமா? அது தான் உங்கள் அடுத்தக்கட்ட நடவடிக்கை. ¶மனதை ஒருமுகப்படுத்தும் முயற்சி, தியானம் செய்யும் முயற்சி, அமைதியாக இருக்க முயற்சி, நிம்மதியாக இருக்க முயற்சி என்று தாங்கள் மேற்கொள்ளும் பல முயற்சிகளில் மனதுடன் போராடுபவர்கள் அனைவரும், உங்கள் முயற்சியை தொடருங்கள். நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நேர்மறை முயற்சியும் வீண் போகாது. செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலில் வைக்கப்படும் ஒவ்வொரு செங்கலும், கோயிலை நிறைவை நோக்கி அழைத்து செல்கிறது. அதனால் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருங்கள், ஒரு நாள் திடீரென்று, நீங்கள் உங்கள் மனதின் கீழ்நிலை லோகங்களை துளைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் நுழைவீர்கள். "ஆமாம், எனக்குத் தெரியும். நான் பார்த்து இருக்கிறேன். நான் செல்லும் பாதையைப் பற்றி எனக்கு இப்போது நன்றாக தெரியும்," என்று அப்போது உங்களால் சொல்ல முடியும். முயற்சி செய்துகொண்டே இருங்கள். நீங்கள் ஏதாவது ஒரு இடத்தில் இருந்து தொடங்க வேண்டும். ¶பரமாத்துமாவைப் பற்றி உங்களால் பேச முடியாது. பின்வரும் வழியை, நீங்கள் கவனமாக பின்பற்றினால், உங்களால் அதைப் பற்றி நினைக்க மட்டும் முயற்சி செய்ய முடியும். உங்கள் மனம், உடல் மற்றும் உணர்ச்சிகளை உணர்ந்து, உருவ மயமாக இருக்கும் மனம், நீங்கள் வாழும் உடல், நீங்கள் கட்டுப்படுத்தும் அல்லது உங்களை கட்டுப்படுத்தும் உணர்ச்சிகளில் வியாபித்து இருக்கும் ஆன்மா நான் தான் என்பதை அறிவதே

அந்த வழி ஆகும். நீங்கள் அதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள், உங்கள் கண்களுக்குள் இருக்கும் ஒளி நீங்கள் தான் என்பது உங்களுக்கு புலப்படும். உங்கள் விரல்களில் இருக்கும் உணர்வு நீங்கள் தான். “நீங்கள் சூரியனை காட்டிலும் பிரகாசமாக, பனியை காட்டிலும் அதிக சுத்தமாக, ஆகாயத்தை காட்டலும் அதிக சூட்சுமமாக இருக்கிறீர்கள்.” முயற்சி செய்துக்கொண்டு இருங்கள். நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் உங்களை சுயமாக பிரகாசிக்கும் உங்கள் மெய்யான தெய்வீகத்தன்மைக்கு அருகில் அழைத்து செல்கிறது.

அஹிம்சா-சத்ய

अहिंसा-सत्य



அகிம்சை மற்றும் வாய்மை

அகிம்சை என்பது *மனஸ்*, வாக்கு அல்லது காயம் (மனது, வாக்கு அல்லது உடல்) மூலம் எந்த சமயத்திலும் எந்த ஒரு உயிரினத்திற்கும் தீங்கு விளைவிக்காமல் இருப்பது ஆகும்.

அதர்வ வேதம், சாண்டில்ய உபநிடதம், 1.3. உபஅ, ப. 173



ஒரு களிமண் பூச்செட்டியை உடைத்து விட்ட சிறுவன், தான் செய்த தவறை தன் சகோதரியிடம் இருந்து மறைக்கிறான். இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களின் தாய், தன் மகன் உண்மையின் முக்கியத்துவத்தை அறிந்து திருந்துவான் என்ற நம்பிக்கையில் இருக்கிறாள். உள்ளிருக்கும் படம்: ஒரு சிறுவனை ஒருவர் அடித்துக் கொண்டிருக்கிறார். ஒரு வழிப்போக்கர் அதை தடுத்து அகிம்சையை நிலைநிறுத்துகிறார்.

திங்கட்கிழமை

பாடம் 8

சிவனோடு வாழ்வது

எப்படி

இந்த பூமியில் நல்ல மக்களாக மாறி, ஆன்மீக சக்திகளாக வாழ்வது எப்படி என்று நமக்கு மதம் கற்றுத் தருகிறது. இது நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து, *தர்மத்தின்* இயல்பான மற்றும் முக்கிய வழிகாட்டல்களை பின்பற்றுவதன் மூலம் நிகழ்கிறது. இந்த வழிகாட்டல்கள் இந்துக்களை பொறுத்தவரை மனித சிந்தனை, அணுகுமுறை மற்றும் நடத்தை பற்றிய அனைத்து அம்சங்களுக்கும் பழங்கால சாத்திர ஆணைகளாக விளங்கும் *இயமம் நியமங்களில்* பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய ஆன்மீக வாழ்க்கையில், இந்த வைதீக கட்டுப்பாடுகள் மற்றும் கடைப்பிடித்தல்கள், குழந்தைகளின் ஒழுக்கத்தில் மிகவும் சிறிய வயதிலேயே புகுத்தப்படுகின்றன. இதற்கு நேர்மாறான பழக்கங்களைக் கொண்ட முதியோர்களுக்கு, இந்த வழிகாட்டல்கள் கட்டளைகள் போல தோன்றலாம். ஆனால் அவர்களும் நல்ல அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியின் துணையுடன் தங்கள் குணங்களை மாற்றிக்கொண்டு, ஒரு நீடித்த ஆன்மீக வாழ்க்கைக்கு தேவையான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்ளலாம். *இயமம்* மற்றும் *நியமங்களை* பின்பற்றுவதன் மூலம், நாம் நமது உள்ளுணர்வு இயல்பை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு நமது புனிதமான ஆன்மீக உயிர் சக்தியை பண்படுத்துறோம். நாம் நம்மை அன்பு, இரக்கம், அறிவு மற்றும் ஆனந்தத்தின் உயர் சக்கரங்களின் உணர்விற்கு உயர்த்தி, தேவர்கள் மற்றும் மகாதேவர்களின் ஆசிகளை இயல்பாக பெறுகிறோம். ¶*இயமம்* என்றால் "கட்டுப்பாடு". இதில் அடிப்படை உள்ளுணர்வை கட்டுப்படுத்தும் அகிம்சை, கள்ளாமை மற்றும் அளவுணவு அடங்கும். *நியமம்* என்பது தானம், திருப்தி மற்றும் ஜபம் போன்ற வழக்கங்கள் மூலம் ஆன்மாவின் புனிதமான பண்புகளின் வெளிப்பாட்டை குறிப்பிடுகிறது. ¶தியானத்தில் இருந்து ஆனந்தம் கிடைக்கிறது என்பது உண்மை தான், மற்றும் எல்லா மனித நேயத்தின் பாரம்பரியமாக உயர்ந்த உணர்வு இருப்பதும் உண்மை தான். ஆனால் ஆனந்த உணர்வு மற்றும் தன் மீதும் மற்றவர்கள் மீதும் எந்த பிறவியிலும் அடையக்கூடிய நல்ல எண்ணங்களை பராமரிக்க, பத்து கட்டுப்பாடுகள் மற்றும் அதோடு தொடர்புடைய பயிற்சிகளின் தேவை வேண்டியிருக்கும். இந்த கட்டுப்பாடுகள்

மற்றும் பயிற்சிகள் ஒழுக்கங்களை உருவாக்குகின்றன. ஆன்மீக விரிவாக்கத்திற்கு ஒழுக்கம் அடிப்படையாக இருக்கிறது. ¶நாம் மேலே செல்ல செல்ல, நமது வீழ்ச்சியும் குறைகிறது. உயர்நிலை *சக்கரங்கள்* விரைவாக சுற்றுகின்றன; நம்மிடம் மிகவும் கீழே இருக்கும் *சக்கரம்* மேலும் வேகமாக சுற்றுகிறது. நமது பாதையில் பாதுகாப்பை வழங்க தேவைப்படும், முழுமையான திருப்தியை பராமரிக்க, நமது வாழ்முறையின் வட்டத்துக்குள், ஒழுக்கத்திற்கு கோட்பாட்டை உருவாக்கவேண்டும். மனித இயல்பின் பலவீனத்தை உணர்ந்த மாபெரும் *ரிஷிகள்*, அதை வலுப்படுத்த பின்வரும் வழிகாட்டல்கள், அல்லது கட்டுப்பாடுகளை வழங்கினார்கள். "முயற்சி செய்யுங்கள்!" என்று அவர்கள் கூறினார்கள். மற்றவர்களை துன்புறுத்தாமல், உண்மையாக இருக்கவும் மற்றும் அவர்கள் வரையறுத்த மற்ற பண்புக்களுக்கு மதிப்பு அளிக்க முயற்சி செய்வோம். ¶ பத்து *இயமங்கள்*: 1) *அகிம்சை*, மற்றவர்களை சிந்தனை, சொல் அல்லது செயலால் துன்புறுத்தாமல் இருத்தல்; 2) *சத்யம்*, "வாய்மை", பொய் பேசாமலும் வாக்குத் தவறாமலும் இருத்தல்; 3) *அஸ்தேயம்*, "கள்ளாமை", திருடாமலும் அல்லது பேராசை இல்லாமலும் அல்லது கடன்படாமலும் இருத்தல்; 4) *பிரம்மச்சரியம்*, "தெய்வீக பாதை", திருமணத்தில் விசுவாசம் பிறக்க, திருமணத்திற்கு முன்பு மனத்துறவின் மூலம் சிற்றின்ப ஆசையை கட்டுப்படுத்துதல்; 5) *க்ஷமை*, "பொறுமை", மக்களிடம் சகிப்புத்தன்மை இல்லாமல் இருத்தல் மற்றும் கடினமான சூழ்நிலைகளில் பொறுமையில்லாமல் இருத்தல் ஆகியவற்றை தவிர்த்தல்; 6) *த்ருதி*, "உறுதிப்பாடு," தயக்கம், அச்சம், உறுதியின்மை, நிச்சயமின்மை மற்றும் மாறும்தன்மையை வெற்றிக்கொள்ளுதல்; 7) *தயா*, "இரக்கம்," எல்லா உயிரினங்கள் இடத்திலும் கொடுமையான, துன்புறுத்துகிற மற்றும் உணர்ச்சியற்ற உணர்வுகளை வெற்றிக் கொள்ளுதல்; 8) ஆர்ஜவம், "நேர்மை," வஞ்சனை மற்றும் தவறான செயல்களை கைவிடுதல்; 9) *மிதாகாரம்*, "அளவுணவு," அதிகம் சாப்பிடாமல் இருத்தல் மற்றும் இறைச்சி, மீன், கோழி அல்லது முட்டைகளை தவிர்த்தல்; 10) *ஷௌசச்சம்*, "சுத்தம்," உடல், மனம் மற்றும் வாக்கில் அசுத்தத்தை தவிர்த்தல்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 9

இருபது

கட்டுப்பாடுகள்

பத்து நியமங்களின் பட்டியல்: 1) *ஹ்ரீ*, "பச்சாதாபம்," அடக்கத்துடன் இருந்து செய்த தவறுக்கு வெட்கப்படுதல்; 2) *சந்தோசம்*, "திருப்தி," வாழ்க்கையில்

மகிழ்ச்சி மற்றும் அமைதியை நாடுதல்; 3) *தானம்*, "வழங்குதல்," *தசமாம்சம்* மற்றும் பலனைப் பற்றி சிந்திக்காமல் தாராளமாக வழங்குதல்; 4) *ஆஸ்திகம்*, "நம்பிக்கை," இறைவன், தெய்வங்கள் குரு மற்றும் ஞானோதய பாதையில் உறுதியான நம்பிக்கை வைத்தல்; 5) *ஈஸ்வரபூஜன*, "இறை வழிபாடு," தினசரி வழிபாடு மற்றும் தியானம் மூலம் பக்தியை பண்படுத்துதல்; 6) *சித்தாந்த ஷ்ரவன*, "சாத்திரங்களை கேட்டல்," ஒருவர் தனது பரம்பரை ஞானிகள் வழங்கிய உபதேசங்களை படித்தல் மற்றும் கேட்டல்; 7) *மதி*, "அறிவு எழுச்சி," குருவின் வழிகாட்டலின் துணைக்கொண்டு ஒரு ஆன்மாவின் சக்தி மற்றும் புத்தியை வளர்த்தல்; 8) *வ்ரதம்*, "விரதம்," சமயம் சார்ந்த விரதங்கள், விதிகள் மற்றும் கடைப்பிடித்ததல்களை நம்பிக்கையுடன் நிறைவேற்றுதல்; 9) *ஜபம்*, "ஜபம்," தினமும் *மந்திரங்களை* உச்சரித்தல்; 10) *தபஸ்*, "தவம்," *சாதனா*, தவம் மற்றும் வேள்விகளை செய்தல். ¶*இயமம்* மற்றும் *நியமங்களை* ஒப்பிடும் போது, அகிம்சை என்ற கட்டுப்பாடு *ஹ்ரீ* என்கிற கழிவிரக்கத்தை பயிற்சி செய்ய உதவுகிறது. வாய்மை திருப்திகரமான நிலையை வழங்குகிறது. பலனை எதிர்பாராமல் செய்யும் *தானம்* கைக்கூடுவதற்கு, மூன்றாவது இயமமாக இருக்கும், *ஆஸ்தேயம்* என்கிற கள்ளாமையில் பூரணத்துவம் அடைய வேண்டும். இறைவன், தெய்வங்கள் மற்றும் *குருவின்* மீது நம்பிக்கையை மனத்துறவு வளர்க்கிறது. ஈஸ்வரபூஜனவிற்கு அடிப்படையாக *க்ஷமை* என்கிற பொறுமை விளங்குகிறது. *சித்தாந்த ஷ்ரவனத்தின்* அடிப்படையாக *த்ருதி* என்கிற உறுதிப்பாடு விளங்குகிறது. இரக்கத்தை குறிப்பிடும் *தயை* என்கிற இயமம், *மதி* என்கிற அறிவெழுச்சியை கொண்டு வருகிறது. வஞ்சனை மற்றும் தவறான செயல்கள் அனைத்தையும் கைவிடும் *ஆர்ஜவம்* என்கிற நேர்மை, புனிதமான உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டு, அவற்றை நம்பிக்கையுடன் நிறைவேற்றுவதை குறிக்கும் *விரதத்திற்கு* அடிப்படையாக விளங்குகிறது. *மிதாகாரம்* என்கிற அளவுணவுடன் *யோகம்* தொடங்குகிறது, மற்றும் ஒருவரது வாழ்க்கையில் *ஜபத்தின்* முழுமையான பயனை பெறுவதற்கு சைவ உணவு மிகவும் முக்கியம். உடல், மனம் மற்றும் வாக்கின் சுத்தத்தை குறிக்கும் *ஷௌசச்சம்*, எல்லா வகை தவங்களுக்கும் அடிப்படை மற்றும் பாதுகாப்பாக விளங்குகிறது. ¶இந்துசமயத்தின் அடிப்படை ஒழுக்க நெறியாக அமைந்திருக்கும் அட்டாங்க யோகத்தின் எட்டு அங்கங்களில் முதல் இரண்டு அங்கங்களாக, இருபது *இயமம்* மற்றும் *நியமங்கள்* விளங்குகின்றன. இவை சுருக்கமாக இருப்பதால், இந்த ஒழுங்கு நெறியை முழுவதையும் மனப்பாடம் செய்து விடலாம் மற்றும் இதை ஒவ்வொரு வீட்டிலும் குடும்பம் ஒன்றாக கூடும் போது தினமும் கலந்து ஆலோசிக்கலாம். ஆன்மீகத்தில் முன்னேற்றம் பெறுவதற்கு முக்கிய அடிப்படையாக *இயமம்* மற்றும் *நியமங்கள்* விளங்குகின்றன. இவை *சாண்டில்ய* உபநிடதம் மற்றும் *வராஹ* உபநிடதங்கள், கோரக்ஷநாதர் இயற்றிய *ஹட யோக பிரதீபிகா*, திருமூலரின் *திருமந்திரம்* மற்றும் பதஞ்சலி முனிவர் எழுதிய *யோக சூத்திரங்கள்* உட்பட எண்ணற்ற

சாத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பதஞ்சலியின் படைப்பு, வெறும் ஐந்து *இயமம்* மற்றும் *நியமங்களை* மட்டுமே குறிப்பிடுகிறது. ஆனால் மற்ற பழங்கால நூல்கள் அனைத்தும் பத்து *இயமம்* மற்றும் பத்து *நியமங்களை* குறிப்பிடுகின்றன. பதஞ்சலி குறிப்பிட்ட *இயமம்*: *அகிம்சை, வாய்மை, அஸ்தேயம், பிரம்மச்சரியம்* மற்றும் அபரிகிரகம் (பேராசையின்மை); மற்றும் *நியமங்களின்* பட்டியல்: *ஷௌச்சம், சந்தோஷம், தபஸ், ஸ்வாத்யாய* (தன் உளஆய்வு, சாத்திர ஆய்வு) மற்றும் *ஈஸ்வரபிரணிதான* (வழிபாடு). ¶Iஇந்து சம்பிராயத்தில், குழந்தைகளிடம் ஒழுக்கத்தை உருவாக்கி, சமூகத்தை தொடர்ந்து முன்னேற வைப்பது, அடிப்படையில் ஒரு தாயின் கடமை ஆகும். தங்கள் குழந்தைகளையும் தங்களையும் வாழ்க்கையில் முன்னேற்ற, இந்த வழிகாட்டல்களை படித்து கற்றுத் தரவும் தாய்மார்களால் முடியும். ஒவ்வொரு ஒழுக்கமும் மனித இயல்பின் வெவ்வேறு அம்சம், அதன் பலம் மற்றும் பலவீனம் மீது கவனம் செலுத்துகிறது. அதன் ஒட்டுமொத்த சாரம் மனிதனின் அனுபவம் மற்றும் ஆன்மீகத்தை முழுமையாக உள்ளடக்கியுள்ளது. நீங்கள் இதில் சில ஒழுக்கங்களை நன்றாக கடைப்பிடிக்கலாம், மற்றும் மற்றவைகளை குறைவாக கடைப்பிடிக்கலாம். இது இயல்பானது என்பதால், இதை முழுமைப்படுத்துவதில் சாதனாவின் தேவையை விளக்குகிறது.

புதன்கிழமை

பாடம் 10

உங்கள் தெய்வீக

ரதம்

இயமம் மற்றும் *நியமங்கள்* மற்றும் நமது வாழ்க்கையில் அதன் இயக்கத்தை, பத்து குதிரைகள் கொண்டு இழுக்கப்படும் ஒரு ரதத்துடன் ஒப்பிடலாம். அந்த ரதத்தில் பயணம் செய்பவராக உங்கள் ஆன்மா இருக்கிறது. அந்த ரதம் உங்கள் தூல, சூட்சும மற்றும் விஞ்ஞானமய உடல்களை பிரதிபலிக்கின்றன. உங்களது வெளிப்புற ஆணவம், உங்களது தனிப்பட்ட சித்தம் அந்த இரதத்தின் ஓட்டுனராக இருக்கிறது. உங்கள் தெய்வீக சக்திகள் அதன் சக்திகளாக இருக்கின்றன. *ஹ்ரீ, சந்தோஷம், தானம், ஆஸ்திக்யம், ஈஸ்வரபூஜன, சித்தாந்த ஷ்ரவன, மதி, வ்ரதம், ஜபம்* மற்றும் *தபஸ்* என்கிற ஆன்மீக பயிற்சிகளாக இருக்கும் *நியமங்கள்* உறுதியான குதிரைகளை குறிப்பிடுகின்றன. கடிவாளங்களாக இருக்கும் *இயமங்கள்* என்கிற கட்டுப்பாடுகளின் அங்கமாக *அகிம்சை, வாய்மை, அஸ்தேயம், பிரம்மச்சரியம், க்ஷமை, த்ருதி, தயை, ஆர்ஜவ, மிதாகாரம்* மற்றும் *ஷௌச்சம்* விளங்குகின்றன. ரதத்தை இயக்கும் உங்கள் சித்தம், கடிவாளங்களை உறுதியாக பிடிப்பதன் மூலம், வலுவான குதிரைகள்

விரைவாக மற்றும் தைரியமாக ஒரு வலுவான அமைப்பாக முன்னேறி செல்ல வழிகாட்டியாக இருக்கிறது. அதனால் நாம் கீழ்நிலை, உள்ளுணர்வு பண்புகளை கட்டுபடுத்தி *இயமங்களை* கடைப்பிடிக்கும் போது, ஆன்மா *சந்தோஷமான* நிலையில் இருக்கும் தனது இலக்கை நோக்கி நகர்கிறது. *சந்தோஷம்* என்கிற அமைதி, ஆன்மாவின் நிரந்தர திருப்தியாக இருக்கிறது. மிகவும் ஆழத்தில், ஆன்மா எப்போதும் *சந்தோஷமான* நிலையில் இருக்கிறது. ஆனால் வெளியே, ஆன்மாவின் இயல்பு உள்ளுணர்வு இயல்பின் மீது கட்டுப்பாடு இல்லாமை, அறிவுணர்வு இயல்பின் மீது கட்டுப்பாடு இல்லாமை, உணர்ச்சியின் மீது கட்டுப்பாடு இல்லாமை மற்றும் தூல உடலின் மீது கட்டுப்பாடு இல்லாமையால் மறைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் கடிவாளங்களை உறுதியாக பிடித்து இருங்கள். ¶நம்மில் அதிக கீழ்நிலையில் இருப்பவர்களால் இயமங்களை பின்பற்று முடியும் என்பதை முக்கியமாக உணரவேண்டும். நாம் வாழ்க்கைத் தரத்தில் எங்கு இருந்தாலும், நாம் எல்லோரும் அடிமட்டத்தில் இருந்து தான் தொடங்கினோம் அல்லவா? அது தான் நம் கோட்பாடு. அது தான் நம் சமயம். அது தான் ஆன்மாவின் வளர்ச்சி. நாம் ஒவ்வொரு பிறவியிலும் முன்னேறுகிறோம் மற்றும் இந்த ஒழுக்க நெறிமுறைகளை ஒப்பிடும் போது, நாம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் அல்லது விலகி இருக்கிறோம் என்பதை தீர்மானிக்க நமக்கு சிவபெருமான் தானே *ரிஷிகள்* மூலம் நமக்கு வழங்கிய பரிசுகளாக இந்த வழிகாட்டல்கள், *இயமம்* மற்றும் *நியமங்கள்*, கட்டுப்பாடுகள் மற்றும் பயிற்சிகள் விளங்குகின்றன. நாம் தொடக்கத்தில் குழந்தைகளாக இருந்த போது, நாம் வழிதவறி செல்வது இல்லை. நாம் அங்கும் இங்குமாக ஓடுவோம், ஒவ்வொரு விதியையும் அவமதிப்போம், நமக்கு ஒரு விதி விளக்கப்படும் போது நாம் அதை மறந்து விடுவோம். நாம் எந்த ஒரு அறிவுரையையும் அவமதிப்போம். நாம் இளம் வாலிபர்களாக இருந்த போது, நாம் சமூகத்தை நமது விருப்பத்திற்கு நிர்பந்திக்கிறோம், மற்றும் அது நம் மீது வைத்திருக்கும் பிடியை நாம் வெறுப்பதால் நாம் அதை மாற்ற விரும்புகிறோம். தங்கள் ஆக்கப்பூர்வமான வழிகளை வெளிப்படுத்த விரும்பும் கீழ்படியும் குணம் இல்லாத இளைஞர்கள், தங்களை மற்ற மக்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடம் இருந்து பிரித்துக் கொள்கிறார்கள். அவர்கள் மாற்றத்தை செய்கிறார்கள், ஆனால் அது எப்போதும் சிறந்த பலனை தருவது இல்லை. நமக்கு வயது முதிர்ந்ததும் கடந்தகாலம் மற்றும் வருங்கால வயோதிகம் மீது கவனம் செலுத்துகிறோம் மற்றும் நிச்சயமற்ற முடிவைக் கொண்ட வாழ்க்கைக்கு தேவையானதை சேகரிப்பதில் முழு கவனத்தையும் செலுத்துகிறோம். போதுமான அளவு சேகரித்ததும், ஒழுக்கமில்லாத குழந்தைகள், பிடிவாத குணமுள்ள இளம் வாலிபர்கள் மற்றும் அமைதியாக முழு கவனத்துடன் இருக்கும் வயது முதிர்ந்தவர்கள் மீது கவனம் செலுத்தி, இந்த மூன்று குழுக்களையும் ஊக்கமளிக்க முயற்சி செய்கிறோம். இன்று இந்து சமயம் என்று அழைக்கப்படும், நமது தலைசிறந்த சனாதன தர்மத்தில், இந்த

மூன்று குழுவினரையும் ஊக்கப்படுத்த, *இயமம்* மற்றும் *நியமங்கள்,* கட்டுப்பாடுகள் மற்றும் கடைப்பிடித்தல்களை வழிகாட்டல்களாக பயன்படுத்துகிறோம். ஒவ்வொரு குழுவும் சூட்சுமமாக மற்ற குழுவில் இருந்து தனித்து இருப்பதாக தோன்றுவதால், அவர்கள் இந்த வழிகாட்டல்களை பயன்படுத்தி தங்களை ஊக்கமளித்துக் கொள்கிறார்கள்.

வியாழக்கிழமை

பாடம் 11

அகிம்சை:

துன்புறுத்தாமை

முதல் *இயமம் அகிம்சை* ஆகும். *அகிம்சையை* பின்பற்ற ஒருவர் *சந்தோஷம்* என்கிற மனநிறைவை பின்பற்ற வேண்டும். வாழ்க்கையில் ஆனந்தம் மற்றும் அமைதியை நாடி, தன்னிடம் இருப்பதை நினைத்து மனநிறைவுடன் இருந்து, தான் செய்யும் செயல் மற்றும் தான் பழகும் சகாக்களைப் பற்றி அறிந்து இருப்பது *சாதனாவாகும்*. உங்கள் *கர்மவினையை* உற்சாகமாக பொறுத்துக் கொள்ளுங்கள். உங்கள் சூழ்நிலையில் நிறைவுடன் வாழுங்கள். *இம்சை,* அல்லது துன்புறுத்தும் ஆசை, அதிருப்தியில் இருந்து வருகிறது. ¶இந்து சமயம் விதித்த தர்ம சாத்திரத்தை மக்களிடம் வெளியிட்ட *ரிஷிகளுக்கு,* மனிதன் வேதனை அடைவதற்கான வாய்ப்புக்கள், மற்றும் அதை தவிர்க்க உதவும் பாதையைப் பற்றி தெரிந்து இருந்தது. இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் உயிருள்ள மற்றும் உயிரற்ற வஸ்துக்கள் வழியாக ஒரு ஆன்மீக சக்தி பாய்ந்து சென்று, அது தனது இருப்பின் மூலம் உள்பொருளை வழங்குகிறது என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களைப் பொறுத்தவரை வாழ்க்கை என்பது, எந்த விதிவிலக்கும் இல்லாமல் எல்லா ஆன்மாக்களையும் ஞானோதயம் நோக்கி அழைத்து செல்லும் ஒரு ஒத்திசைவான செயல்முறையாக இருந்துள்ளது, மற்றும் அந்த ஏற்றத்தின் மிகவும் உயர்வான நிலைகளில் இம்சைக்கு இடமளிக்கக் கூடாது. சூட்சும ஞானிகளாக இருந்த இந்த *ரிஷிகள்* வழங்கிய தெய்வீக வெளிப்பாடுகள், பிரபஞ்சத்தில் அனைத்து உயிர் சக்திகளும் ஒன்று பிணைந்த சுதந்திரத்தில் இருப்பதைப் பற்றிய தகவலை வெளிப்படுத்தின. முழுமை ஒரு பாகத்தில் அடங்கியுள்ளது, மற்றும் அந்த பாகம் முழுமையில் அடங்கியுள்ளது. இந்த அறிவெழுச்சியின் அடிப்படையில், ஆன்மா மற்றும் மற்றவை இடையே வித்தயாசமின்மை பற்றிய ஒரு கோட்பாட்டை கற்றுத்தந்து, இறுதியில் நாம் உலகம் மற்றும் அதன் மாயை வடிவங்களில் இருந்தும், எல்லா வஸ்துக்கள் மற்றும் எல்லா உயிரினங்கள் மற்றும் எல்லா மக்களிடமும் பிரகாசிக்கும் தெய்வீக சக்தியில் இருந்தும் தனித்து இல்லை என்பதையும்

வலியுறுத்தினர். ஒருமை பற்றிய இந்த புரிதலில் இருந்து, அகிம்சையின் பயிற்சி மற்றும் அதன் மீது இந்து சமயத்தின் பழங்கால அர்ப்பணிப்புக்கான தத்துவ அடிப்படை தோன்றியது. ¶இன்று மனித இனத்தில் ஆறில் ஒரு பங்கு இடம் வகிக்கும் இந்துக்கள், இறைவன் எங்கும் எதிலும் வியாபித்து சுயமாக பிரகாசிக்கும் சக்தி மற்றும் உணர்வாக இருக்கிறார் என்பதில் நம்பிக்கை வைத்திருப்பது நமக்கு தெரியும். இந்த அடிப்படை நம்பிக்கை உயர்வான சகிப்புத்தன்மை மற்றும் மற்றவர்களிடம் உடன்பாட்டையும் உருவாக்குகிறது. அனைத்து வஸ்துக்களிலும் இயல்பாக இருக்கும் புனிதத்தன்மை மீது இந்து வைத்திருக்கும் இரக்கம் மற்றும் மரியாதையை விளக்குவதற்கு, சகிப்புத்தன்மை மட்டுமே போதுமானதாக இருக்காது. அதனால் எல்லா இந்துக்களின் செயல்களும் தீங்கற்றதாக அல்லது *அகிம்சையாக* இருக்கிறது. மரியாதை செலுத்தும் ஒன்றை யாரும் துன்புறுத்த விரும்புவது இல்லை. ¶இன்னொரு புறம், மற்ற சமய அடிப்படைவாதிகள் நன்மை மற்றும் தீமை, மனிதன் மற்றும் இயற்கை அல்லது கடவுள் மற்றும் சாத்தான் அடிப்படையில் தொடர்ந்து இருமையை கற்றுத் தருவதால், நண்பர்கள் மற்றும் எதிரிகளை உருவாக்குகிறது. கிளை விளைவாக இருக்கும் அணுகுமுறைகள் முற்றிலும் இருமை பண்புடன் இருப்பவை என்பதையும், தீய சக்தி மீது நல்ல சக்தி வெற்றிக்கொள்வதற்கு அது அந்த தீய சக்தியை கொல்ல வேண்டும் என்பதையும் அறிந்த இந்துக்களுக்கு, இந்த நம்பிக்கை தெய்வ நிந்தனையாக தோன்றுகிறது. ¶எதுவும் இயல்பாக தீய பண்புடன் இருப்பதாக இந்து கருதுவதில்லை. அவருக்கு பூமி புனிதமாக இருக்கிறது. ஆகாயம் புனிதமாக இருக்கிறது. சூரியன் புனிதமாக இருக்கிறது. அவருக்கு அவருடைய மனைவி ஒரு பெண் தெய்வமாக காட்சி அளிப்பாள். அவளுக்கு அவளுடைய கணவன் ஒரு இறைவனாக தோன்றுவார். அவர்களின் குழந்தைகள் தெய்வங்களாக காட்சி அளிப்பார்கள். அவர்கள் வீடு ஒரு பூஜை மாடமாக இருக்கும். வாழ்க்கை என்பது ஒரு தூல உடலில் மறுபிறவி எடுப்பதை முடிவுக்கு கொண்டு வரும் *முக்தியை* நோக்கி செல்லும் யாத்திரை அல்லது மறுபிறவியில் இருந்து பெறும் விடுதலையை குறிப்பிடுகிறது. ஒரு புனித யாத்திரையில் செல்லும் போது, இந்த பாதையில் ஏற்படும் அனுபவங்கள் மற்றவர்கள் மூலமாக வெளிப்பாட்டாலும், அவை தாங்கள் உருவாக்கியதே என்பதை நன்றாக அறிந்து இருப்பதால், யாத்திரை செல்லும் ஒருவர் வழியில் யாரையும் துன்புறுத்துவதில்லை.

வெள்ளிக்கிழமை

பாடம் 12

துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய

அகிம்சை

வாய்மை, கள்ளாமை, மனத்துறவு, பொறுமை, மனஉறுதி, இரக்கம், நேர்மை மற்றும் அளவுணவு ஆகிய பண்புகள் மீது ஆதிக்கம் செலுத்தும் *அகிம்சை* முதன்மையான மற்றும் முக்கியமான பண்பாக விளங்குகிறது. *பிரம்மச்சாரி* மற்றும் *சந்நியாசிகள்*, *அகிம்சையை* சற்று தீவிரமாக கடைப்பிடிக்க வேண்டும். சிந்தனை, வாக்கு அல்லது செயல் மற்றும் உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக இன்னொருவரை துன்புறுத்தும் எண்ணத்தை தடுப்பதன் மூலம், அவர் தனது இயல்பை மாற்றிக்கொண்டு, தன்னை மேம்படுத்திக் கொள்கிறார். தனது உடல், உணர்ச்சிகள் மற்றும் மனதிற்கு எதிராக தனது சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் செயல்களை பயன்படுத்தி தனது ஆன்மாவை துன்புறுத்தாத அளவிற்கு அகிம்சை தீவிரமாக இருக்க வேண்டும். இதை முக்கியமாக கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இந்த தருணத்தில், அகிம்சை வாய்மையுடன் தொடர்பில் இருக்கிறது. சந்நியாசி தன்னிடத்திலும், தனது குருவின் இடத்திலும், தனக்குள் தினமும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மணி நேரமும் வாசம் செய்யும் மகாதேவர்கள் மற்றும் சிவபெருமானிடமும் முற்றிலும் உண்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். ஆனால் அவர் இதை முழுமையாக புரிந்துக்கொண்டு, அதை தனது வாழ்க்கை மூலம் வெளிப்படுத்தவும், சனாதன தர்மத்தை மற்றவர்கள் பின்பற்ற வாழும் எடுத்துக்காட்டாகவும் இருப்பதற்கு, மற்றவர்களுக்கு இம்சை செய்யும் எண்ணங்கள் அனைத்தையும் இரும்புச் சங்கிலி மூலம் கண்டிப்பாக கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு சூட்சும காரணம் என்னவென்றால், *பிரம்மச்சாரி* அல்லது *சந்நியாசியின்* ஆன்மீக சக்தி காரணமாக உண்மையில் அதிக துன்புறுத்தும் சக்தி இருப்பதால், அகிம்சையை கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம் ஆகும். *அகிம்சையை* தீவிரமாக கடைப்பிடிக்காத, *பிரம்மச்சாரி* அல்லது *சந்நியாசி* அந்த பிரிவை சேர்ந்தவரே இல்லை என்பது உண்மை. ¶வாக்கு சிந்தனைகளின் வெளிப்பாடு ஆகும், சிந்தனைகள் *பிராண* சக்தியில் இருந்து உருவாக்கப்படுகிறது. சிந்தனையுடன் கலந்து உருமாறிய *பிராண* சக்தியின் துணையுடன் இருக்கும் சொற்கள், அல்லது *பிரம்மச்சாரி* அல்லது *சந்நியாசி* சேர்த்து வைக்கப்பட்டுள்ள சக்திகள், வலுவான சிந்தனைகளாக மாறுகிறது, மற்றும் அவை சொற்களால் வெளிப்படும் போது மனதிற்குள் ஆழமாக சென்று, நீண்ட நீடிக்கக்கூடிய *சம்ஸ்காரங்களை* உருவாக்குகின்றன. ஒரு *பிரம்மச்சாரி* அல்லது *சந்நியாசி* தனது கட்டுப்பாட்டை இழந்து, *அகிம்சையை* மதிக்காமல் மற்றவர்களுக்கு *இம்சையாக* மாறினால், அது பாதிக்கப்பட்டவர்களின் துர்பாக்கியம் என்றாலும், அந்த நபருக்கு அதிக துர்பாக்கியமான சம்பவம் ஆகும். நாம் மற்றவரை துன்புறுத்தும் போது, நாம் அவர்களின் அகத்தை நகல் செய்து, நமது அகத்தில் காயத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம். பாதிக்கப்பட்ட நபருக்கு குணமடையும் வரை, அந்த காயம் சந்நியாசியை விட்டு விலகுவது இல்லை. உருமாற்றம்

பெற்ற *பிராண* சக்திகள், சிந்தனைக்கு அதிக வலிமையை தருவதே இதற்கு காரணம். இவ்வாறு வாக்கு உயிர்சக்தியின் மையம் வரை ஊடுருவி செல்கிறது. அதனால் இயல்பாக கோபமடையும் மக்கள் *பிரம்மச்சரியம்* பயிற்சி செய்யாமல் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

சனிக்கிழமை

பாடம் 13

சத்யம்:

வாய்மை

இரண்டாவது இயமம்: வாய்மை என்கிற *சத்யம்*. சிறுவர்கள் இயல்பாகவே உண்மையை பேசி, வெளிப்படையாக மற்றும் நேர்மையாக இருப்பது போன்று தோன்றுகிறது. அவர்கள் வாழ்வில் சிக்கல் மற்றும் இரகசியங்கள் இல்லை. சிறுவர்கள் தங்கள் சிறு வயதில் பொய் சொல்வதற்கு தங்கள் பெற்றோர்களிடம் இருந்து கற்றுக் கொள்வதாக தேசிய ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது. குடும்ப இரகசியங்கள், மற்றும் வீட்டில் யாரை விரும்புவது, யாரை வெறுப்பது, யார் மீது அன்பு செலுத்தக்கூடாது மற்றும் யார் மீது அன்பு செலுத்த வேண்டும் என்று அவர்களுக்கு கற்றுத் தரப்படுகிறது. அவர்கள் மனம் குழப்பத்தில் சிக்கிக்கொள்கிறது, மற்றும் அவர்களின் தீர்மானம் தண்டனை அல்லது அடி வாங்கும் வாய்ப்பை பொறுத்து நிச்சயிக்கப்படுகிறது. அதனால் *சத்தியத்தை* முழுமையாக உள்ளடக்குவதற்கு, மற்றும் அதனை ஒரு இளம் வாலிபர் மற்றும் வயது முதிர்ந்தவர் தனது வாழ்கையில் பின்பற்றுவதற்கு, சிறு வயதில் தாய் அல்லது தந்தை, சொந்தங்கள் மற்றும் முதியோர்கள் அடிமனதில் பதிய வைத்த தகவல்களை சுத்தம் செய்தல் அல்லது அவற்றை பெரும்பாலும் நிராகரிப்பது மிகவும் முக்கியம் ஆகும். விருப்பு வெறுப்பு, பகை மற்றும் அன்பு போன்ற வெளிப்படையான எதிர்பதங்களை நிராகரிப்பதால் மட்டுமே, ஆன்மாவின் இயல்பாக இருக்கும் வாய்மை மீண்டும் வெளிப்படும் மற்றும் அப்பாவியாக சிறு வயதில் இருந்ததைப் போன்று முழு வீரியத்துடன் இருக்கும். ஒரு குழந்தை விவேகம் இல்லாமல் வாய்மையை பின்பற்றுகிறது. சரியான நேரத்தில் அறிவை பயன்படுத்துவதை குறிப்பிடும் விவேகம், வயது முதிர்ந்தவர்களுக்கு வாய்மை வழியில் செல்ல வழிகாட்டுகிறது. வயது முதிர்ந்தவர்கள் விவேகத்தை பெறுவதற்கு ஆன்மாவின் இயல்பைப் பற்றி அறிந்து இருக்க வேண்டும். ¶நாம் வாய்மையை பின்பற்றுவதற்கு எது காரணமாக இருக்கிறது? முக்கியமாக அச்சம். கண்டுபிடித்துவிடுவார்கள் என்ற அச்சம், தண்டித்து விடுவார்கள் என்ற அச்சம், பழிக்கப்படுவோம் என்ற அச்சம். இவை மிகவும் நேர்மையான வாய்மையின்மையை குறிப்பிடுகின்றன. அவதியில் சிக்காமல் இருக்க

உண்மையும் உதவும் என்பதை மறந்த தீயவர்கள், ஆபத்தை விலைகொடுத்து வாங்கத் துணிந்து திட்டமிட்டு புறங்கூறுவதிலும் திட்டமிட்டு பொய் சொல்வதிலும் ஈடுபடுவார்கள். திட்டமிட்டு வஞ்சனை செய்தல் மற்றும் வாக்கு தவறுதல் மூன்றாவது மற்றும் மிகவும் மோசமான நிலை ஆகும். ¶*சத்தியம்* ஒரு கட்டுப்பாடு ஆகும், மற்றும் அது பத்து கட்டுப்பாடுகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நாம் வஞ்சனை செய்யும், பொய் சொல்லும் மற்றும் வாக்கு தவறுதல் போன்ற எண்ணங்களை தடுக்கும் போது, நமது அடிமனதைப் போன்று நமது வெளிப்புற வாழ்வும் சிக்கல் இல்லாமல் இருக்கிறது. வாய்மையின் அடிப்படையாக நேர்மை விளங்குகிறது. அது சுற்றுப்புறம் மற்றும் மனநிலையை சுத்தம் செய்கிறது. ஆனால் பலர் தம்மிடமே உண்மையாக நடந்துக் கொள்வது இல்லை. மேலும் இரட்டை பண்புகளுடன் இருக்கும் இந்த புத்திசாலி வஞ்சகர்களின் அடிமனதில் உள்ளார்ந்து இருக்கும் திட்டமிட்ட நிரலாக்கம், அவர்களை அறியாமையின் உட்புற லோகங்களில் வசிக்கச் செய்கிறது. அந்த லோகங்களில் இருந்து வெளி வருவதற்கு, வாய்மையின் பயிற்சி மட்டுமே, ஒரு குணப்படுத்தும் மற்றும் சுத்தம் செய்யும் *சாதனாவாக* விளங்குகிறது. ¶வாக்குத் தவறுதல் என்றால் என்ன? ஒருவர் உங்கள் மீது நம்பிக்கை வைத்து ஒரு இரகசியத்தை கூறி, அதை யாரிடமும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். ஆனால் நீங்கள் மற்றவர்களிடம் சொல்லி விடுகிறீர்கள். அதுவே வாக்குத் தவறுவது ஆகும். *சத்தியத்தை* கடைப்பிடிக்கும் போது நம்பிக்கைகளை காப்பாற்ற வேண்டும். ¶சில சமயங்களில், உண்மை சொல்வதை தவிர்ப்பதும் அனுமதிக்கப்படுகிறது.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்." என்கிறது *திருக்குறள்*. ஒரு ஜோதிடர், ஒருவரின் ராசி பலனை பார்க்கும் போது, அந்த நபரின் வாழ்வில் மனமுறிவு இருந்தால், அதை சொல்லாமல் இருப்பது விவேகம் ஆகும். தீங்கு விளைவிக்கும் அல்லது நம்பிக்கை இழக்கச் செய்யும் தகவல்களை சொல்லாமல் இருக்க வேண்டும் என்று ஜோதிடர்களுக்கு அவர்களுடைய குருமார்கள் உபதேசிக்கிறார்கள். தனது நோயாளி பலவீனமடைவதை கவனிக்கும் ஒரு மருத்துவர் அவரிடம் மூன்று நாட்களில் இறந்து விடுவார் என்று சொல்லுவதில்லை. ஆனால் அதற்கு பதிலாக, நோயாளி மனதில் அச்சத்தை ஏற்படுத்தினால் அவர் மன உளைச்சலுடன் நம்பிக்கை இழக்க வாய்ப்புள்ளது என்பதை அந்த மருத்துவர் அறிந்து நேர்மறை எண்ணத்தை தோன்றும் நம்பிக்கை தரும் வார்த்தைகளை பேசுவார். ¶சுத்தமான உண்மை தீங்கு விளைவித்தால் அல்லது மனதை புண்படுத்தினால், அப்போது முதல் இயமமாக இருக்கும் *அகிம்சை* பயன்படுத்தப்படுகிறது. இந்த *திருக்குறள்* வஞ்சனைக்கு துணை போவதாக நாம் நினைக்கக்கூடாது. விவேகமாக நல்ல முடிவு எடுப்பதே அந்த குறளின் சாரம் ஆகும். ஆனால் அந்த குறள், நீங்கள் உண்மையில் கோழிக்கோடு செல்லும் போது, அதை தந்திரமாக மறைக்க மும்பை செல்வதாக சொல்வதை

குறிப்பிடவில்லை. அது வாய்மை இல்லை. ஒருவர் தான் செல்லும் இடத்தை மறைக்க விரும்பினால், அதைப்பற்றிய கேள்விக்கு பதில் அளிக்காமல் இருப்பதே விவேகம் ஆகும். நீங்கள் ஒரு பொய்யை சொல்லும் போது உங்கள் அடிமனதை சிக்கலில் சிக்க வைக்கமாட்டீர்கள், மற்றும் இறுதியில் அந்த உண்மையை ஒரு விவேகமானவர் அறியும் போது, நீங்கள் அவர் மனதில் வஞ்சகனாக இருக்கமாட்டீர்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 14

உங்கள் குருவிடம்

நேர்மையாக இருத்தல்

சிலர் வாய்மையை காரணமாக சொல்லி, தங்கள் வாழ்க்கைத்துணையிடம் தங்களுக்கு பிடிக்காததை சொல்லி அவர்களை நச்சரிப்பார்கள் அல்லது மற்றவர்களின் குறைகளை பேசி வாயாடுவார்கள். அது *சத்தியத்தின்* சாரம் இல்லை. மற்றவர்களின் குறைகளை வெளிப்படுத்துவது அதன் நோக்கம் இல்லை. அதைப்போன்ற மோதல்கள் வாக்குவாதம் மற்றும் சண்டையாக மாறலாம். தனது குறைகளை தன்னை விட சிறப்பாக அறிந்தவர் யாருமில்லை. பெரும்பாலும் அச்சமும் பலவீனமும் வலுவாக இருக்கும் போது, இந்த நிலைமையை திருத்தி அமைக்க ஊக்கமும் ஒரு தெளிவான திட்டமும் இருப்பதில்லை. அதனால் ஒரு தெளிவான திட்டத்தை வழங்க, ஒரு நேர்மறையான கண்ணோட்டம், ஒரு புதிய சிந்தனை, அந்த நபரின் கவனத்தை திசைதிருப்பி உட்புறமாக சீர் செய்கிறது. இதுவே விவேகம் ஆகும். இதுவே *அகிம்சை* ஆகும். இதுவே *சத்தியம்* ஆகும். உண்மையை காரணம் காட்டி விவேகமான சீடர், எப்போதும் யாரையும் அவமதிக்கவோ துன்புறுத்துவதோ இல்லை. சிலர் மற்றவர்களிடம் தங்களுக்கு பிடிக்காததை அந்த மற்றவர்களிடமே கூறுவதற்கு இதை பயன்படுத்திக் கொள்வார்கள். எல்லோரிடமும் நன்மையும் தீமையும் இருப்பதை விவேகமான சீடர்கள் அறிவார்கள். உணர்ச்சியில் ஏற்ற இறக்கங்கள், மனநிலையில் ஏற்ற இறக்கங்கள், நம்பிக்கை வழங்குதல் மற்றும் நம்பிக்கை இழக்கச் செய்தல் இருக்கும். நாம் நேர்மறையான அம்சங்கள் மீது கவனம் செலுத்துவோம். இங்கே *அகிம்சை* மற்றும் *சத்தியம்* இணைந்து செயல்புரிகிறது. ¶தனது சத்குருவிடம் *பிரம்மச்சாரி* மற்றும் *சந்நியாசி* மிகவும் விசுவாசமாக நடந்துக் கொள்ளவேண்டும். அவர்கள் அடக்கத்துடன், விவேகமாக இருந்து எப்போதும் *சந்நியாசி* மற்றும் *பிரம்மச்சாரி* சமூகங்களில் இருக்கும் நற்பண்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும். பிரம்மச்சாரி மற்றும் சந்நியாசியை

உயர்நிலைக்கு அழைத்து செல்லும் போது, முறையற்ற பண்புகளைப் பற்றி விவாதிக்க, கண்டிக்க மற்றும் தண்டிக்க *குருவிற்கு* உரிமை உள்ளது. *பிரம்மச்சாரிகள்* மற்றும் *சந்நியாசிகள்* தன்னை சத்குருவாக ஏற்றுக்கொண்ட போது, தனக்கு உரிமை வழங்கி இருப்பதால், அவருக்கு மட்டுமே இந்த உரிமை இருக்கிறது. அதாவது முதலாவது *இயமம்* அகிம்சையை மீறாமல், *பிரம்மச்சாரிகள்* மற்றும் *சந்நியாசிகள்* ஒருவரையொருவர் தண்டிக்கவோ உளஆய்வு செய்வதோ முடியாது, மற்றும் வாய்மையை காரணம் காட்டி திருத்தவும் முடியாது. ¶*குருமார்களுக்கு* தங்கள் சீடர்களிடம் உரிமை இருப்பதைப் போல, பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளிடம் உரிமைகள் உள்ளன. இந்த உரிமைகள் விவேகத்திற்கு ஏற்ப மாறுபடும். இவை அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியது இல்லை மற்றும் இவை சுதந்திரம் மற்றும் ஒரு நபரின் முழு ஆளுமை வளர்ச்சிக்கு தடங்களாக இருக்கக்கூடாது. இதன் காரணமாகவே ஒரு *குரு* தாய் தந்தையராக அந்த தாய் தந்தையராலும், கல்வி கற்று அறிவை வளர்த்துக்கொள்ள *குருவின் ஆசிரமத்திற்கு* அனுப்பப்படும் சீடனாலும் மதிக்கப்படுகிறார். ஒரு இளைஞனை குடும்பத்தின் பொறுப்பான மற்றும் பாராட்டத்தக்க ஒரு உறுப்பினராக வளர்ப்பது பெற்றோரின் கடமையாக இருப்பதைப் போல, ஒரு சாதகரை *சந்நியாச* சமூகத்தின் உறுதியான உறுப்பினராக மாற்றுவது அந்த *குருவின்* பொறுப்பு ஆகும். இவ்வாறே சமூகம் முன்னேறுகிறது. ¶ஒருவர் தனது *சத்தியம்* என்கிற வாய்மை பண்புகளை வலுப்படுத்த *சாதனா, தபஸ்*, தவம் மற்றும் வேள்வி போன்ற *நியமங்களை* பயிற்சி செய்யவேண்டும். நீங்கள் வாய்மையை கடைப்பிடிக்கவில்லை, வாக்கு தவறுகிறீர்கள் என்று உங்களுக்கு தோன்றினால், நீங்கள் *தபஸ் சாதனாவை* செய்யுங்கள். நீண்டநேரம் தவம் செய்யுங்கள். பரிகாரம், பச்சாதாபம் மற்றும் விரதங்களை மேற்கொள்ளுங்கள். நீங்கள் உங்களை கட்டுப்படுத்தவில்லை என்றால், *தபஸ்* மற்றும் விரதங்கள் மூலம் பெறும் அனுபவங்களை காட்டிலும் வாய்மையை கடைப்பிடிப்பது மிகவும் எளியது என்பதை நீங்கள் விரைவில் தெரிந்துகொள்வீர்கள். ¶வாய்மை என்பது உண்மையின முழுமை ஆகும். உண்மையே முழுமையை குறிக்கிறது. எங்கும் முழுமை மற்றும் உண்மை மேலோங்கி இருந்து, *சத்தியம்* மற்றும் *அகிம்சையின்* சாரம் மனித நேயத்தில் வியாபிக்கட்டும்.

ஆஸ்தேயம்-பிரம்மச்சரியம்-க்ஷமை-த்ருதி

अस्तेय–ब्रह्मचर्य–क्षमा–धृति



கள்ளாமை மற்றும் மற்ற பண்புகள்

பிரபஞ்சம் மற்றும் பூமியில் இருக்கும் உயிரினங்கள் மற்றும் இயக்கங்களிலும் இறைவன் வியாபித்து இருக்கிறார். நிலையற்ற வாழ்வை துறந்து அனாதியில் இன்பம் காணவேண்டும். மற்றவர்கள் பொருளில் ஆசைக் கூடாது.

சுக்ல யஜுர் வேதம், ஈசாவாஸ்ய உபநிடதம், 1. உபம, ப. 49


TEXT BOOK
MANIVEL

இரண்டு சிறுவர்கள் ஒரு வியாபாரியின் கவனத்தை திசைத் திருப்பி, ஆஸ்தேய கோட்பாட்டை மீறுகிறார்கள். உள்படங்கள்: ஒரு தாய் தனது பல கடமைகளை செய்யும் போது க்ஷமை என்கிற மன்னிப்பை வெளிப்படுத்துகிறாள்: ஒரு அயோக்கியனிடம் இருந்து ஒரு சகோதரன் தனது சகோதரியின் கற்பு என்கிற பிரம்மச்சரியத்தை காப்பாற்றுகிறான்; பணியாளர்கள் தங்கள் பணியில் உறுதியான பண்பு, த்ருதியை வெளிப்படுத்துகிறார்கள்.

திங்கட்கிழமை

பாடம் 15

ஆஸ்தேயம்:

கள்ளாமை

மூன்றாவது இயமம்: ஆஸ்தேயம். இது கள்ளாமை, பேராசை இல்லாமை மற்றும் கடன் வாங்காமல் இருத்தல் ஆகியவற்றை குறிப்பிடுகிறது. கள்ளாமை என்பது திருடாமல் இருத்தல் ஆகும். இனி பேராசை என்றால் என்ன என்று பார்ப்போம். பேராசை என்பது உண்மையாக நமது உடைமையாக இல்லாத பொருள் மீது மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக சொந்தம் கொண்டாடுவதை குறிப்பிடுகிறது. அது ஒரு நல்ல பண்பு இல்லை. அது சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் ஒரு மறைமுக உளவியல் அழுத்தத்தை ஏற்படுத்தி, *தள சக்கரங்களில்* இருந்து கீழ்நிலை உணர்ச்சிகளை மேலே கொண்டு வருகிறது. இதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். உங்களுக்கு சொந்தமாக இல்லாத பொருட்களை விரும்புவது பேராசை ஆகும். பேராசை பொறாமைக்கு வழி வகுக்கும், மற்றும் அது திருடுவதற்கு வழி வகுக்கும். பேராசை மற்றும் விருப்பம், திருடுவதற்கு முதல் தூண்டுதலாக விளங்குகின்றன. உங்களால் பேராசையின் தூண்டுதலை கட்டுப்படுத்த முடிந்தால், நீங்கள் திருடமாட்டீர்கள். பேராசை என்பது மனோரீதியாக திருடுவது ஆகும். ¶திருட்டு எப்போதும் நடைபெறக் கூடாது. ஒரு காசு, ஒரு பெசோ, ஒரு ரூபாய், ஒரு லிரா அல்லது ஒரு ஜப்பான் என்னையும் தவறாக பயன்படுத்தக்கூடாது அல்லது திருடக்கூடாது. கடன் செலுத்தாமல் இருப்பதும் ஒரு வகை திருட்டு தான். ஆனால் கடனை தவிர்க்க வேண்டும் என்பதற்கு, கடனாக அல்லது மற்ற ஒப்பந்தங்கள் மூலம் பொருளை வாங்கக்கூடாது என்று அர்த்தம் இல்லை. அது உரிய நேரத்தில் பணத்தை செலுத்த வேண்டும், கடன் நம்பிக்கையில் வழங்கப்பட வேண்டும் மற்றும் காலம் முடிந்ததும் கடனை முழுமையாக அடைத்து விடவேண்டும் மற்றும் ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அனைவருக்கும் அது திருப்தியை தரவேண்டும். ஒருவர் தனது செலவுகளை மற்றவர்கள் பணத்தில் செலவிடுவதை தவிர்க்க வேண்டும். இதை கட்டுப்படுத்துவதே *ஆஸ்தேய சாதனா* ஆகும். கடன், திருட்டு மற்றும் பேராசை தொடர்பான கட்டுப்பாடுகளை *பிரம்மச்சாரிகள்* மற்றும் *சந்நியாசிகள்* கண்டிப்பாக மற்றும் கவனமாக

கடைப்பிடிக்க வேண்டும். இவை அவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளில் நிச்சயமாக இல்லை. ¶*ஆஸ்தேயத்தை* முழுமையாக கடைப்பிடிக்க, நாம் மூன்றாவது நியமமாக இருக்கும் *தானத்தை* செய்ய வேண்டும்; நாம் நமக்கு பிடித்தமான சமய அமைப்புக்கு *தசமாம்சமாக*, நன்கொடை வழங்க சங்கல்பம் எடுக்கும் *தசம பாக விரதத்தை* தொடங்க வேண்டும். அதை ஆக்கப்பூர்வமாக பலன் ஏதும் எதிர்பாராமல் செய்யவேண்டும். திருட்டு என்பது சுயநலம் கலந்த செயல் ஆகும். நன்கொடை என்பது சுயநலமற்ற செயல் ஆகும். *ஆஸ்தேயத்தில்* ஏற்படும் எந்த ஒரு தவறையும் *தானத்தின்* மூலம் சரி செய்யலாம். ¶*நியமங்களில்* தீவிரமாக பயிற்சி மேற்கொள்ளாமல், *இயமங்களை* மட்டும் பின்பற்ற முடியாது என்பதை முக்கியமாக உணர வேண்டும். ஒருவர் தன்னுடைய தற்போதைய மனப்போக்குகளை வெற்றிகொள்ள, ஒவ்வொன்றையும் ஒரு நேர்மறையான கடைப்பிடித்தல் மூலம் மாற்றி அமைக்கவேண்டும். *இயமம்* ஒவ்வொன்றையும், நேர்மறையாக வேறொன்றைக் கொண்டு மாற்றி அமைக்கலாம். ஒரு முழுமையான நபர் வெளிவருவதற்கு *இயமங்களின்* கட்டுப்பாடுகளில் இருக்கும் பண்புகளை *நியமங்கள்* முழுமையாக மறைக்க வேண்டும். தவிர்க்க வேண்டியதை செய்து செய்யவேண்டியதை செய்யாமல் இருந்தால், அவை தத்தம் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை முக்கியமாக நினைவில் வைத்திருக்க வேண்டும். இவை ஒருவரின் ஆன்மா அடைந்திருக்கும் வளர்ச்சியை பொறுத்து பலவாக இருக்கலாம், ஆனால் அத்தகைய செயல்கள் அனைத்தும் உணர்வை கீழ்நிலையில் கொண்டு வந்து தவிர்க்கமுடியாத வேதனைகளை விளைவிக்கும். இந்த கோட்பாடுகளின் உயரிய குறிக்கோள்களை பின்பற்றி வாழாததன் விளைவாக உருவான, எதிர்மறை *கர்மவினைகளை* தணிக்க ஒவ்வொரு இந்து *குருவும்* தனக்கென்று ஒரு பிரத்யேக செய்முறையை வைத்திருப்பார். ஆனால் உலகையும் ஒரு *குருவென்றே* சொல்ல வேண்டும். பெரும்பாலும் அதன் சீடர்கள் தான் படித்த பாடங்கள் பல முறை படித்து, தங்கள் சொந்த தவறுகளில் இருந்து கற்றுக் கொள்கிறார்கள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 16

கடன், சூதாட்டம்

மற்றும் கவலை

“ஒருவரின் வியாபாரத் தேவைக்காக கடன் வாங்குவது, மூன்றாவது நியமமாக இருக்கும் *கள்ளாமையுடன்* பொருந்தி இருக்கிறதா? நாம் எப்போது மற்றவரின் பணத்தை பயன்படுத்தலாம் மற்றும் எப்போது அதை நாம் பயன்படுத்தக்

கூடாது?" என்று என்னிடம் கேட்கப்பட்டது. கடன்தாரர்கள் உங்களுக்கு முப்பது நாட்கள் அல்லது அறுபது நாட்கள் அல்லது தொண்ணூறு நாட்கள் மட்டுமே கால அவகாசம் வழங்கியதாக கேட்புத் தொகை அறிவிப்பை அனுப்பி, தங்களது பணம் திருப்பித் தரவேண்டும் என்று அவர்கள் அழைப்புக்களை விடுக்கத் தொடங்கும் போது, நீங்கள் பணம் செலுத்தவில்லை என்றால், அல்லது உங்கள் நடவடிக்கையை தொடர அவர்கள் பணத்தின் தேவை தொடருந்து இருப்பதால், அவர்கள் உங்களை நெருங்காமல் வைத்திருக்க கடனில் கால் பகுதி அல்லது அரை பகுதி பணத்தை செலுத்துவதும், இந்த *இயமத்தை* மீறுவது ஆகும். ¶இந்த *இயமம்* பலவகை கடன்களை நிராகரிக்கிறது. வரவுக்கு மீறி செலவு செய்வதும், தன்னால் பணம் செலுத்த முடியாத பொருட்களை வாங்கி சேர்ப்பதும் அதில் அடங்கும். இதன் மூலம் நமக்கு திருக்குறள் 478 நினைவுக்கு வருகிறது,
"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை." உங்கள் வருமானத்திற்குள் செலவு செய்தால் ஏழ்மையை தவிர்க்கலாம் என்பதே அதன் பொருள். மற்றவர்கள் விருப்பத்திற்கு எதிராக அவர்களின் செல்வத்தை பயன்படுத்துவது அல்லது அதிக வட்டியில் மற்றவர்கள் செல்வத்தை பயன்படுத்தும் போலி செல்வத்தை நாம் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்று பலர் கடனை தவறாக பயன்படுத்துவதற்கு அடிமையாகிவிட்டார்கள். அது அபின் என்ற போதை மருந்து அடிமையாவதைப் போன்றது ஆகும். மக்கள் மற்றவர் பணத்திற்கு (O.P.M.—other people's money) அடிமையாகி தங்கள் வரவிற்கு மீறி செலவு செய்கிறார்கள். மற்ற கடன் அட்டைகள் வரம்புகளை எட்டிய நிலையில், தங்களிடம் இருக்கும் கடைசி கடன் அட்டையை பயன்படுத்தி $500 புடவை வாங்குவதற்கு மக்கள் சற்றும் தயங்குவது இல்லை. அதன் ரசீது வரும் போது, மற்ற ரசீதுகளுடன் சேர்ந்து செலுத்த முடியாத பெரிய தொகையாக திகைக்க வைக்கிறது. ¶பலவீனமான மற்றும் நிச்சயமற்ற எதிர்காலத்தை சார்ந்து இருக்கும் ஒப்பந்த ஊழியர்கள் தங்கள் வரம்பை மீறி பெறும் இரவல் தொகை, இன்னொரு வகை கடன் ஆகும். அவர்களுக்கு சில சமயங்களில் கடனை திருப்பிச் செலுத்த பணம் வரலாம், சில சமயம் பணம் வராமலும் இருக்கலாம். ஒரு பொருளை வாங்க வேண்டும் என்கிற தீவிர ஆசையால் துணிந்து செயல்பட்டு கடனில் சிக்கும் சூழ்நிலை ஏற்படும். முக்கியமாக, இது இன்னொருவரின் பணத்தைக் கொண்டு சூதாடுவது போலாகும். மற்றும் இது வாழ்க்கையை நடத்தும் வழியில்லை. ¶சூதாட்டமும் ஊக வணிகமும் கடனுக்குள் சிக்கும் மற்ற வழிகள் ஆகும். அந்த முதலீட்டில் இழப்பு ஏற்பட்டாலும், ஒருவர் தனது இயல்பு வாழ்க்கையை தொடர்ந்தால், அந்த முதலீடு முறையாக செல்வம் சேர்க்கும் முறையாக கருதலாம். வணிகம் என்பது பெரும்பாலும் ஊகத்தை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது, மற்றும் அதில் அவ்வப்போது அதிக ஆபத்தான முதலீடுகளுக்கு வாய்ப்பு இருப்பதால், ஒருவர் தனது சக்திக்கு அப்பாற்பட்ட ஆபத்தான முதலீடுகளில் ஈடுபடக்கூடாது. ¶விளையாட்டு என்பது

வேடிக்கை, பொழுதுபோக்கு மற்றும் மன அழுத்தத்தை குறைக்கும் நோக்கத்துடன் இருப்பதால் சூதாட்டம் வேறு வகையை சார்ந்தது. ஆனால் ஒருவர் தனது சக்திக்கு மீறிய பணத்தை சூதாட்டத்தில் பயன்படுத்தக் கூடாது. ஆனால் ஊக வாணிபம் போல அல்லாமல், ஒருவர் உற்சாகமாக சூதாட்டத்தில் ஈடுபட்டு பணத்தை இழக்கத் தொடங்கும் போது, பேராசை மற்றும் இழந்த பணத்தை மீட்டு எடுக்கும் ஆசை எழுச்சி பெறுகிறது, மற்றும் பதட்டத்தில் இருக்கும் சூதாட்டக்காரன் தனது மற்றும் தனது குடும்பத்தின் பணம் மற்றும் குடும்ப நலத்தை ஆபத்தில் சிக்க வைக்கக்கூடும். இதனால் மன அழுத்தம் அதிகரிக்கிறது. சூதாட்டத்தின் மோசமான விளைவுகள் மிகவும் பழமையான *ரிக் வேதத்தில்* உபதேசிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றிய பதினான்கு செய்யுட்களை "காம்பிளர்ஸ் லாமெண்ட்" (10.34. வேத, ப. 501) என்கிற ஆங்கில மொழிப்பெயர்ப்பில் காணலாம். "தனித்து விடப்பட்ட, சூதாட்டக்காரனின் மனைவி சோகத்தில் இருக்கிறாள். சோகத்தில் இருக்கும் அவனுடைய தாயும், திக்குதெரியாமல் திரிகிறாள். அச்சத்தில் கடன்பட்டு இருக்கும் அவன், பணத்தின் மீது நீங்காத பேராசையால் இரவில் வீடு வீடாக திருடுகிறான்," என்று பத்தாவது செய்யுள் குறிப்பிடுகிறது. இது வேடிக்கையும் இல்லை, பொழுதுபோக்கும் இல்லை. ¶இந்த மாபெரும் கவலைகளை கருத்தில் கொண்டு, எங்கள் சீடர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுவதை தவிர்க்க பின்வரும் நந்திநாத *சூத்திரம்* (சூத்திரம் 76) இயற்றப்பட்டுள்ளது. “சிவபெருமானின் பக்தர்கள் தாங்களும் மற்றவர்கள் மூலமாகவும் அல்லது தொழிலாகவும் சூதாட்டம் அல்லது அதைப் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடாது. சூதாட்டம் பலருக்கு இழப்பை ஏற்படுத்தி சிலருக்கு லாபத்தை வழங்கி, சமூகத்தை சுரண்டுகிறது. தொடர்ந்து சூதாட்டம் மூலம் லாபம் சம்பாதிக்க, ஒரு கேசினோ உரிமையாளரால் மட்டுமே முடியும் என்பது எல்லோருக்கும் தெரியும். ¶சுய கட்டுப்பாடு இல்லாமல் சூதாடுவது மற்றும் பொறுப்பு இல்லாமலும் ஆதாரம் இல்லாமலும் ஊக வாணிபத்தில் ஈடுபடுவது, உங்கள் குடும்பத்தில் இருந்து திருடுவது மற்றும் குடும்பத்தின் சொத்தை சீரழிப்பதற்கு சமம் ஆகும். ஒரு தவிர்க்க முடியாத இழப்பு ஏற்படும் போது, உங்கள் திறமை மற்றும் முடிவுகளின் மீது நம்பிக்கை இழந்து வருத்தம் அடைவதால், இது உங்களிடம் இருந்தே திருடுவதற்கு சமம் ஆகும். மேலும் அந்த இழப்பு மற்ற குடும்பத்தினரை பாதித்தால், உங்கள் முடிவுகள் மீது இருந்த நம்பிக்கை மற்றும் மரியாதை மற்றும் மதிப்பீடு குறைகிறது. ¶மக்களின் மத்தியில் வாழ்க்கைத்தரம் சமமாக இல்லாததால், பணக்காரர்களிடம் திருடுவதில் எந்த தவறும் இல்லை என்று பலர் திருட்டை நியாயப்படுத்துகின்றனர். “பெரிய வர்த்தக நிறுவனங்களுக்கு இந்த இழப்பு பெரிதாக இருக்காது, ஆனால் நமக்கு இதன் தேவை எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது," என்று ஒரு வசதியான நிறுவனத்தில் திருடுவது அவர்களுக்கு சரியென்று தோன்றுகிறது. சிலசமயம் ஊகம் சார்ந்த பரிவர்த்தனைகள், எளிதில் ஒரு பெரிய அல்லது சிறிய நிறுவனத்தில் இருந்து

பணத்தை சுருட்டி அந்த நிறுவனத்தை திவாலாக்கும் நியாயமற்ற பரிவர்த்தனைகளாக மாறக்கூடும். அந்த நபரின் நம்பகத்தன்மை குறைந்து விடும், மற்றும் தான் சொத்து சேர்ப்பதற்கு ஒரு நிறுவனத்தை திவாலாக்கும் அந்த நபர் மீது நிறுவனங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள். கடன் வாங்குவது என்பது ஒரு நவீன வசதி மற்றும் நவீன தூண்டுதலாக உள்ளது. ஆனால் இந்த வசதிக்கு மதிப்பு அளித்து குறித்த நேரத்தில் பணத்தை செலுத்த வேண்டும். நீங்கள் காலம் கடந்து அல்லது பகுதி கட்டணம் செலுத்த அதிக வட்டி கட்டினால், கடன் மற்றும் கடன்தாரர்களை நீங்கள் அவமதித்துவிட்டீர்கள்.¶1990 ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடந்த மனித வாழ்வுவளம் பற்றிய சர்வதேச மாநாட்டில் (Global Forum for Human Survival) பங்கேற்றவர்கள், குழந்தைகள் மற்றும் அடுத்த தலைமுறை பற்றி தங்கள் கவலையை தெரிவித்து இருந்தனர். “அவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்?” என்று அவர்கள் கேட்டார்கள். தற்போதைய தேவையை பூர்த்தி செய்ய நாசமாக்கிய சுற்றுப்புறத்தை அடுத்த தலைமுறைக்கு வழங்குவது நியாயம் ஆகுமா? அது நியாயம் ஆகாது. இது இன்னொரு வகை திருட்டு. "நமக்கு இப்போது கிளாராபுளோரோகார்பன்ஸ் தேவை. இதன் விளைவுகளை அடுத்த தலைமுறை எதிர்கொள்ளட்டும்," என்று நம்மால் சொல்ல முடியாது. *இயமம்* மற்றும் *நியமங்கள்* ஒரு தனிமனிதனை மட்டும் சார்ந்தது இல்லை, ஆனால் இது ஒரு தேசிய, சமூக மற்றும் உலகம் தொடர்பான விஷயம் ஆகும். இது *ஆஸ்தேயம்* மற்றும் மற்ற கட்டுப்பாடுகள் மற்றும் கடைப்பிடித்தல்களை இன்னொரு நிலைக்கு கொண்டு செல்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

புதன்கிழமை

பாடம் 17

பிரம்மச்சரியம்:

மனத்துறவு

ஒருவரின் வாழ்நாள் முழுவதும் ஒரு முறையை *பிரம்மச்சரியம்* என்கிற மனத்துறவு அமைப்பதால், அது பழங்கால சைவ நெறிமுறைகளாக இருக்கும் *இயமம்* மற்றும் *நியமங்களில்*, மிகமுக்கிய கட்டுப்பாடாக விளங்குகிறது. இந்த கோட்பாட்டை பயன்படுத்தி, திருமணத்திற்கு முன்பு அத்தியாவசிய சக்திகளை பாலியல் கற்பனைகள், இணைய ஆபாசப் படங்கள், சுய இன்பம், முத்தம், உடலுறவு மற்றும் மற்ற இன்பங்களில் அல்லாமல் படிப்பில் பயன்படுத்தப்படுகிறது. திருமணத்திற்கு பிறகு தொழில், வாழ்வாதாரம், கடமைகளை நிறைவேற்றுதல், சமூகசேவை, தன்னையும் தனது குடும்பத்தையும் மேம்படுத்துதல் மற்றும் *சாதனா* செய்வதில் அந்த

அத்தியாவசிய சக்திகள் பயன்படுத்தப்படுகிறது. இறைவன், தேவர்கள், *குரு* அல்லது ஞானோதய பாதையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, இந்த கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பது கடினமாக இருக்கும், மற்றும் அவர்கள் திருமணத்திற்கு முன்பு முறை தவறி வாழ்வதால் திருமணத்திற்கு பிறகு விசுவாசமின்றி இருப்பார்கள். ¶இந்த கட்டுப்பாட்டை கடைப்பிடித்தால் கிடைக்கும் பலன்கள் கிடைக்கும். திருமணத்திற்கு முன்பாக *பிரம்மச்சரியத்தை* கடைப்பிடித்து, அதன் கோட்பாடுகளை திருமண வாழ்வு முழுவதிலும் பின்பற்றுபவர்கள் மனம், உணர்வு மற்றும் உடல் ரீதியான தொல்லை இல்லாமல் இருப்பார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல தொடக்கம் கிடைப்பதோடு, நீடித்த மற்றும் பண்பட்ட குடும்ப உறவுகளை பெறுகிறார்கள், மற்றும் அவர்களின் குழந்தைகள் நல்ல உணர்ச்சி வெளிப்பாடு, மனஉறுதி மற்றும் உறுதியான உடலுடன் இருக்கிறார்கள். ¶முறைத்தவறி வாழ்பவர்கள் மற்றும் மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களின் கோபம் தூண்டப்படுகிறது, மற்றும் அவர்கள் இனம்புரியாத அச்சங்கள், பொறாமை அனுபவம் மற்றும் மற்ற உள்ளுணர்வு உணர்வுகளுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலுலக கதவுகள் திறந்து இருந்தாலும், கீழுலக கதவுகளும் திறந்து இருக்கின்றன. இறைவன், தெய்வங்கள், *குரு* மற்றும் ஞானோதய பாதையில் நம்பிக்கை இருக்கும் ஒரு சுத்த *பிரம்மச்சாரி* ஒரு ஆச்சாரமான குடும்பத்தில் இருந்தாலும், அவர் தனது *பிரம்மச்சரியத்தை* தொடர்ந்து கடைப்பிடிக்க, அவரை கண்காணித்து கவனமாக வழிகாட்டவும் வேண்டும். இந்த கவனம் இல்லையென்றால், அவர் தனது தூய்மையை எளிதில் இழக்கக்கூடும். ¶துறவற நோக்கத்துடன் *பிரம்மச்சரியம்* இருந்தால் உடலுறவில் இருந்து முழுமையாக விலகி இருக்கவேண்டும். அவர் இந்த நிலையை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் நன்றாக தெரிந்ததே. இது *பிரம்மச்சரிய விரதத்தில்* இருப்பவருக்கும் பொருந்தும். ஒரு *பிரம்மச்சாரி* தனது *பிரம்மச்சரியத்தை* கடைப்பிடிக்க தவறிவிட்டால், அவர் அதற்கான விளைவுகளை சந்தித்து தனது பிரதான நோக்கத்தை மீண்டும் உறுதி செய்யவேண்டும். *விரதத்தை* கடைப்பிடிக்க தவறியதால், அவர் இழந்த தன்னம்பிக்கையை மீண்டும் புதுப்பிக்க வேண்டும். ¶மனத்துறவுடன் *ஆசிரம* வாழ்க்கையை வாழப்போவதாக உறுதிமொழி எடுத்த ஆண்களும் பெண்களும் முரணான இரட்டை வாழ்க்கையை வாழ்ந்து, எதிர்பாலினத்தை சேர்ந்த சக *ஆசிரமவாசிகள்*, உதவியாளர்கள், காரியதரிசிகள் அல்லது நெருக்கமான சீடர்கள் அல்லது தங்கள் முன்னாள் குடும்பத்தினருடன் சூழ்ந்து இருப்பதை என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய காலத்தில் தங்களை *சுவாமி* என்று கூறிக்கொள்ளும் திருமணமான *சந்நியாசிகள்* இருக்கிறார்கள். அவர்களை சற்று கட்டாயப்படுத்தினால், தாங்கள் வியாபார நோக்கத்துடன் விவரமறியாத மக்களின் கவனத்தை கவர "*சுவாமி*" என்ற பெயருடன் காவி உடையில்,

யோகாசனம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் என்பதை ஒப்புக்கொள்வார்கள். ¶பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதில் மிகப்பெரிய சக்தி இருக்கிறது. "பிரம்மத்தை உணரும் பாதை" என்பது அதன் பொருள். திருமணமாகாத ஒருவர் பல வருடங்களாக புனிதமான திரவங்களை உடலில் கட்டிக்காப்பதன் மூலம் உருவாகும் வங்கிக்கணக்கு, ஞானோதயப் பாதையில் ஆத்ம ஞானத்தை மெய்ப்பட செய்கிறது. உடலுறவின் மூலம் பிரம்மச்சரிய விரதம் முறியும் போது, இந்த சக்தி மறைந்து விடுகிறது.

வியாழக்கிழமை

பாடம் 18

குடும்ப வாழ்க்கையில்

பிரம்மச்சரியம்

ஒரு வலுவான ஆன்மீக கலாச்சாரத்தின் மிகமுக்கிய அம்சமாக *பிரம்மச்சரியம்* என்கிற கடைப்பிடித்தல் விளங்குகிறது. இதன் காரணமாகவே, திருமணமாகும் வரை மனத்துறவுடன் இருக்கவேண்டிய முக்கியத்துவத்தை சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கு சைவ சமயம் கற்றுத் தருகிறது. இதன் மூலம் தொடர்ந்து பல தலைமுறைகளுக்கு உடல், மனம் மற்றும் ஆன்மீகரீதியாக ஆரோக்கியமான நபர்கள் பிறக்கிறார்கள். இதில் ஒரு சூட்சுமமான காரணம் அடங்கியுள்ளது. தூய்மையான ஆண்கள் மற்றும் பெண்களின் ஒளி உடலுக்குள் சூட்சும நரம்பு ஓட்டங்களாக இருக்கும் *நாடிகள்* நீட்டிக்கொண்டு இருக்கும், மற்றும் அதன் முடிவில் சிறிய கொக்கிகள் இருக்கும். ஒரு ஆண் அல்லது பெண் திருமணம் செய்துகொள்ளும் போது, அந்த கொக்கிகள் நேராகி ஒன்றோடு ஒன்று பிணைந்து, உண்மையில் வளர்ச்சி பெறுகின்றன. திருமணத்திற்கு முன்பே உடலுறவு ஏற்பட்டால் தூய்மை பாதிக்கப்பட்டு, *நாடிகளின்* முடிவில் இருக்கும் கொக்கிகள் நேராகின்றன, ஆனால் அந்த தம்பதிகள் திருமணம் செய்துகொண்டாலும் வளர்வதற்கு ஒன்றும் இருப்பது இல்லை. அந்த சோடியில் ஒருவர் வேறொருவரை திருமணம் செய்துகொள்ளும் போது, அவர்களின் *நாடிகள்* ஒரே முறையில் வளர்வதில்லை என்பதால், அவர்களின் உறவு ஒரு தூய்மையான ஆண் மற்றும் பெண்ணின் உறவைப் போன்று இருப்பதில்லை. இதைப் போன்ற சூழ்நிலைகளில், திருமணம் முறிவு பெறாமல் இருக்க அவர்கள் அறிவு மற்றும் உணர்ச்சி தொடர்பான தூண்டுதலை நாடுகிறார்கள். ¶"நாம் எதிர்பாலினத்தாரை எப்படி பார்க்க வேண்டும்?" என்று இளைஞர்கள் கேட்கிறார்கள். எதிர்பாலினத்தாரை பார்க்கும் பொது மனதில் உடலுறவு அல்லது காமம் பற்றிய சிந்தனை இல்லாமல் பாருங்கள். எதிர்பாலினத்தாரை ரசிக்காதீர்கள், மற்றும் ஒருவரை காட்டிலும் இன்னொருவர் அதிக

அழகானவராக பார்க்காதீர்கள். எல்லா இளம் பெண்களும் தனது சகோதரிகளாகவும், வயதில் மூத்த பெண்கள் எல்லோரும் தனது தாயாக கருதும் எண்ணத்தை எல்லா ஆண்களும் மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும். எல்லா இளம் ஆண்களும் தனது சகோதரர்களாகவும், வயதில் மூத்த ஆண்கள் எல்லோரும் தனது தந்தையாகவும் கருதும் எண்ணத்தை எல்லா பெண்களும் மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும். மனிதர்களுக்குள் இருக்கும் விலங்குணர்வை சித்தரிக்கும் திரைப்படங்கள், புத்தகங்கள் அல்லது பத்திரிகைகளை தவிர்க்க வேண்டும். மிகவும் முக்கியமாக, இணையதளம் மற்றும் தொலைக்காட்சி அல்லது மற்ற ஊடங்கங்களில் இருக்கும் பாலியல் படங்களை தவிர்க்க வேண்டும். ¶பிரம்மச்சரியத்தில் வெற்றி பெறுவதற்கு, ஒருவர் தனது பாலுணர்வுகளை இயல்பாக தவிர்க்க விரும்புகிறார். இது பின்வரும் அடுத்தடுத்த எட்டு கட்டங்களை புரிந்துகொள்வதன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. கற்பனை, புகழ்ச்சி, உல்லாசமாக பேசுதல், காமப் பார்வைகள், இரகசியமான காதல் பேச்சுக்கள், காதல் ஏக்கம், சந்திப்பு மற்றும் இறுதியாக உடலுறவு ஆகியவை அந்த எட்டு கட்டங்கள் ஆகும். மனமும் உணர்ச்சியும் அலைப்பாயாமல் இருக்கவும், படிப்பதற்கு தேவையான முக்கிய சக்திகள் பயன்படுத்தப்படாமல் இருக்கவும், பண்பட்ட முறையில் சிந்தித்து பேசும் நல்ல நட்புடன் மட்டுமே சேர்வதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதிகமாக உடற்பயிற்சி செய்யவும். உங்கள் உள்ளுணர்வு இயக்கங்களை உடற்பயிற்சி சுத்தம் செய்து, உடலின் மற்ற பாகங்களுக்கு கூடுதல் சக்தி மற்றும் இரத்த ஓட்டத்தை இயக்குகிறது. ¶தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் மகாத்மா காந்தி மற்றும் பிற தலைசிறந்த ஆத்மாக்கள் அனுட்டானம் செய்ததைப் போல, *பிரம்மச்சரியம்* என்றால் உடலுறவு இச்சைகளை கட்டுப்படுத்துவது ஆகும். இத்துடன் இன்னொரு வகை மனத்துறவும் இருக்கிறது. இதை *பிரம்மச்சரியத்துடன்* சேர்க்க முடியாவிட்டாலும், இதை ஒரு சாதாரண உடலுறவுடன் வாழும் விசுவாசமான குடும்பத்தினர் தங்கள் குடும்பத்தை பேணி வளர்த்துக்கொண்டே பின்பற்றுகின்றனர். அவர்கள் இதை தொடர்ந்து செய்து, தங்களது அறுபதாவது வயதிற்கு பிறகு *பிரம்மச்சரிய* விரதத்தை கடைப்பிடிப்பார்கள். அதன் பிறகு அவர்கள் சகோதரன் சகோதரி போல வாழ்ந்து, தனித்தனி படுக்கையறையில் உறங்குவார்கள். அவர்கள் தங்கள் திருமண வாழ்வின் போது, தங்கள் காம சக்திகளை கட்டுப்படுத்தி உள்ளுணர்வு சக்திகளை ஒழுங்குபடுத்தி, அந்த *விரதத்தை* எடுக்க தயாராகிறார்கள். ஆனால் அவர்கள் விசுவாசமின்றி, வாழ்க்கை முழுவதும் உல்லாசமாக பேசிக்கொண்டு தங்கள் சிந்தனையை சிதற விட்டால், அவர்களுக்கு பிற்காலத்தில் *விரதத்தில்* ஈடுபாடு இருக்காது. ¶திருமண வாழ்வில் விசுவாசத்துடன் இருப்பது என்பது கணவன் மனைவி இடையே பற்று மாறாமல் இருப்பதை மட்டுமே குறிப்பிடவில்லை. அதில் மனோ விசுவாசம், எதிர்பாலினத்தாரிடம் உல்லாசமாக பேசாமல் இருத்தல் மற்றும் அடக்கமும் அடங்கும். உதாரணத்திற்கு

ஒரு திருமணமான ஆண், தன் மனைவியை காட்டிலும் அதிக அழகான பெண்ணை காரியதரிசியாக நியமிக்கக் கூடாது. மீமெய்யியல் ரீதியாக பார்க்கும் போது, நிறைவான குடும்ப உறவில் ஆணும் அவன் மனைவியும் தங்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரே நரம்பியல் அமைப்பை உருவாக்கிக்கொண்டு, காலப்போக்கில் அவர்களின் *நாடிகள்* அனைத்தும் ஒன்று சேர்ந்து வளர்கின்றன என்றே சொல்ல வேண்டும். அவர்கள் அந்த விசுவாசத்தை முறித்துக் கொண்டால், அவர்களின் சொந்த உட்புற சாதனைகளை மேம்படுத்தும் ஆன்மாவின் உறவுகளை அவர்கள் முறித்துக் கொள்கிறார்கள். தம்பதிகளில் யாராவது ஒருவர் கள்ளத்தொடர்பில் இருந்தால், இது அந்த தம்பதியரின் நரம்பியல் அமைப்பு மீது சூட்சுமமான ஆன்மீக இழுவையை ஏற்படுத்துகிறது, மற்றும் அது அந்த கள்ளத்தொடர்பு முடிந்த பிறகும் நீண்டநாள் தொடர்கிறது. அதனால் திருமணமாகாதவர் மற்றும் திருமணமானவருக்கு, பாலியல் சக்தி மற்றும் உணர்ச்சி தூண்டுதல்களை கட்டுப்படுத்துவதே *பிரம்மச்சரியத்தின்* சாரம் ஆகும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 19

ஆன்மீகத்தில் அதிக நாட்டமுள்ளவர்களுக்கான விதிகள்

திருமணம் செய்துகொள்ளும் நல்லொழுக்கமுள்ள நபர்களுக்கு, அவர்கள் வாழ்க்கைத்துணையுடன் ஏற்படும் அனுபவங்கள் முன்பு போல, காமக் கற்பனைகள் இல்லாமல் இருக்கின்றன மற்றும் அவர் துணையிடம் மட்டுமே உணர்வுப்பூர்வமாக ஈடுபடுகிறார். கணவன் மனைவி மத்தியில் ஒரு சாதாரண உடலுறவு வாழ்க்கை இருக்கவேண்டும், மற்றும் வேறு ஒருவரை மனம் அல்லது உணர்ச்சிப்பூர்வமாக சேர்க்கக்கூடாது. இன்னொருவரின் துணையை கட்டிப்பிடித்தல், தொடுதல் அல்லது உணர்ச்சிகளை தூண்டுதல் கூடாது; பாலியல் உணர்வுகளை தோண்டும் உடைகளை அணியாமல், எளிமையாக அணிய வேண்டும்; பாலியல் சார்ந்த காணொளிகளை பார்க்காமல் இருக்க வேண்டும்; பாலியல் சார்ந்த வேடிக்கைப் பேச்சு கூடாது. இவை அனைத்தும் கற்பை தக்கவைத்து கொள்வதற்கான பாரம்பரிய முறைகள் ஆகும். *ஆஸ்தேயம்* என்கிற கள்ளாமையுடன் *பிரம்மச்சரியத்தில்* இருக்கும் *இயமம்* இணைந்து செயல்படுகிறது. மனதளவில் இன்னொருவரின் துணையை திருடுதல் அல்லது துராசைப்படுவதால் உருவாகும் சக்தி, ஒருமுறை தோன்றிவிட்டால் அதை நிறுத்துவது கடினம். ¶ஒழுங்குமுறை இல்லாத வாழ்க்கையை வாழ்வது இன்றைய கலாச்சாரமாக இருக்கையில், கற்பின் கோட்பாட்டை புரிந்து

செயல்படுத்துவதால் தம்பதிகளுக்கு மிகப்பெரிய வலிமை கிடைக்கிறது. அவர்கள் இந்த கோட்பாடுகளை பின்பற்றி ஞானோதய பாதையில் முன்னேறினால், அவர்கள் சிறு வயதில் இருந்ததைப் போல மீண்டும் பிற்காலத்தில் மனத்துறவை மேற்கொள்வார்கள். இந்த கோட்பாடுகள் வாழ்க்கை முழுவதும் நிலைக்கின்றன, மற்றும் அவர்களின் குழந்தைகள் பெரியவர்களாகி, அவர்களின் சக்திகள் இயல்பாக அமைதி அடைந்ததும், அறுபதாவது வயதிற்கு அருகில் கணவனும் மனைவியும் *பிரம்மச்சரிய* விரதத்தை கடைப்பிடித்து, தனித்தனி அறையில் வாழ்ந்து சிறந்த ஆன்மீக அனுபவங்களை பெறுவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்கிறார்கள். ¶தம்பதிகள் தங்கள் துணையை தவிர்த்து, மற்றவர்களிடம் எட்டு அம்ச மனத்துறவை கடைப்பிடித்து கற்பை காக்கிறார்கள். இவை ஆன்மீகத்தில் தீவிர நாட்டத்துடன் இருப்பவர்களுக்கு குறிக்கோள்களாக விளங்குகின்றன. ஆன்மீகத்தில் நாட்டம் இல்லாதவர்களுக்கு, இவை தேவையற்றவை. ஒரு தம்பதியர் செய்யும் செயல்கள் அனைத்தும், நிகழ்வுகள் அனைத்தும் ஆன்மீக வாழ்வு மற்றும் ஆன்மீக குறிக்கோள்களை சார்ந்து இருந்தால், இந்த கோட்பாடுகள் உறுதியாக பயன்படும். கற்பை காப்பாற்ற, சாதகர்கள் ஞானோதயப் பாதையில் உறுதியான நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். அவர்கள் தங்களை விட உயர்வான சக்திகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இவை இல்லாமல் கற்பை காப்பாற்றுவது சாத்தியமில்லை. ¶மனம் மற்றும் உடல் அளவில் ஒழுங்குமுறையற்ற வாழ்க்கையை வாழ்வதன் மூலம், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் விரைவாக சமநிலை குலைகிறது. மற்றும் சுயக்கட்டுப்பாடு சமநிலையை பராமரிக்க சிறந்த வழியாகும். மக்கள் தங்களுக்கு மனம், உடல் மற்றும் உணர்ச்சி மீது வழங்கிக்கொண்ட உரிமம் காரணமாக, இன்றைய உலகம் அதிக சமநிலை இல்லாமல் இருக்கிறது. ஒழுங்குமுறை இல்லாத சகாப்தத்தை தொடர்ந்து வந்த தலைமுறைக்கு பின்பற்ற போதிய உதாரணங்கள் இல்லை மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் ஒழுங்குமுறையின்றி வாழத்தொடங்கிய போது இருந்ததை காட்டிலும், அவர்கள் அதிக சமநிலை இல்லாமல் இருக்கின்றனர். மனித சமூகத்தின் சமநிலை ஒழுக்கத்தை அடிப்படையாக கொண்டுள்ளது, மற்றும் ஒழுக்கம் பாலியல்பின் பயன்பாடு மற்றும் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இளம் வாலிபர் அனுபவிக்கத் தொடங்கும் பாலியல் உணர்வுகளில் மனக்கற்பனை மற்றும் உணர்வுப்பூர்வமான ஈடுபாடு இல்லாமல் இருக்க, *பிரம்மச்சரிய* கோட்பாடுகள் பருவமடைவதற்கு முன்பாக நன்றாக கற்றுக்கொள்ள வேண்டும். இது ஒரு முறை இளம் வாலிபருக்கு கற்றுத்தந்தவுடன், இந்த கட்டுப்பாட்டை வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு தூய்மையான ஆண் மற்றும் பெண் மணக்கும் போது, அவர்கள் தங்கள் பெற்றோர் மீது இருக்கும் அன்பை ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்கின்றார். அந்த ஆண் தன் தாய் மீது வைத்திருந்த பற்றும், அந்த பெண்

தனது தந்தை மீது வைத்திருந்த பற்றும் பரிமாறிக்கொள்ளப்படுகிறது. அவள் தாயாகிறாள் மற்றும் அவன் தந்தையாகிறான். ஆனால் அவர்களுக்கு தங்கள் பெற்றோர் மீது இருந்த அன்பில் எந்த மாற்றமும் ஏற்படுவது இல்லை. இதன் காரணமாகவே நிலையான குடும்பங்களின் அடுத்த தலைமுறையை உருவாக்க, பெற்றோர்கள் நல்ல ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும். இது அவர்களுடைய *தார்மீக* கடமை ஆகும். அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றவில்லை என்றால், தாங்கள் எதிர்காலத்தில் எதிர்கொள்ள பல வகையான ஒழுங்கற்ற *கர்மவினைகளை* உருவாக்குகின்றனர்.

சனிக்கிழமை

பாடம் 20

***கூஷமை*:**

பொறுமை

ஐந்தாவது *இயமமாக* இருக்கும் *கூஷமை* என்கிற பொறுமை, ஆன்மீக பாதையில் முக்கிய அங்கம் வகிக்கிறது. தனது குறிக்கோளுக்கு தொடர்பில்லாத பகுதிகளில் இருந்து வரும் தடைகள் மற்றும் தாமதங்களை கவனிக்க நேரமில்லாமல், நிறைவேறாத ஆசைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற விருப்பமே பொறுமையின்மையின் அறிகுறி ஆகும். ¶தினசரி வழிபாடு மற்றும் தியானத்தின் மூலம் நமது வாழ்வை ஒழுங்குபடுத்தி நமது ஆசைகளை கட்டுப்படுத்த வேண்டும். எந்த தடையும் இல்லாமல் தொடர்ந்து தினமும் வழிபாடு மற்றும் தியானம் செய்வது கடினம். ஆனால் பொறுமையின்மை மற்றும் பதட்டம் தினமும் தானாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கும், பெரும்பாலும் ஒரே சமயத்தில் வரும். சரியான நேரத்தில் காலை சிற்றுண்டி வராததால் பதட்டம், குழந்தைகளின் நடத்தை சரியாக இல்லாததால் பொறுமை இழந்து அவர்களை திட்டுதல் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். வாழ்க்கையில் எல்லா நிகழ்வுகளுக்கும் ஒரு நேரம் மற்றும் ஒரு ஒழுங்குமுறை இருக்கிறது. நித்தியமாக இருக்கும் நொடிப்பொழுதில் கவனம் செலுத்துவதன் மூலம் நம்மால் பொறுமையின்மையை வெற்றிகொள்ள முடிகிறது. இலக்கை அடைவதற்கு எதிர்காலம் இல்லாமல், சார்ந்து இருக்க கடந்த காலம் இல்லாமல், அது செய்வதற்கு ஒன்றும் இல்லாத உணர்வை தருகிறது. இந்த சிறப்பான ஆன்மீக பயிற்சியை பாரபட்சமின்றி எல்லோரும் தினமும் அவ்வப்போது செய்யலாம். ¶நிகழ்வு நடந்துகொண்டிருக்கும் போது மக்களை மற்றும் நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ளும் சக்தி பொறுமையிடம் இருக்கிறது. உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொள்வது மக்களிடம் இருக்கும் மிகப்பெரிய ஆன்மீக சக்திகளில் ஒன்றாகும். இது பொறுமையின்மை மற்றும்

சகிப்புத்தன்மையின்மையை முன்கூட்டியே தடுக்கிறது. *கர்மவினையின்* விதி மற்றும் சிவபெருமான் மற்றும் அவரது செயல் எங்கும் இருக்கிறது என்பதை புரிந்துக்கொண்டு, பிரபஞ்சம் முழுவதில் இருக்கும் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தலில் இருக்கும் நேர பொருத்தத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் ஒருவரிடத்தில் அந்த பண்பு வலுப்படுகிறது. ஏற்றுக்கொள்வது என்பது சவால்களை தவிர்க்கவேண்டும் மற்றும் கடினமான சூழ்நிலைகளுக்கு தலை வணங்க வேண்டும் என்பது பொருளில்லை. நாம் முன்னொரு காலத்தில் வெளிப்படுத்திய நமது சக்திகள், சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்கள் மூலமாக, நாம் நமது சூழ்நிலையை உருவாக்கியுள்ளோம் என்பது நமக்குத் தெரியும். இந்த சக்திகள் தனது சுழற்சியில் மக்கள், நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் மூலமாக வெளிப்படும் போது, நாம் அதனுடன் போராடாமல் அல்லது அதை தவிர்க்காமல் அல்லது அதனால் நம்பிக்கை இழக்காமல், நாம் அதனை பொறுமையாக எதிர்கொள்ள வேண்டும். இது சுத்தமான அல்லது தூய்மையான *க்ஷமை*. வேறு எந்த வழியிலும் பொறுமையின் ஆழத்தை அடைய முடியாது. இதன் காரணமாகவே, சனாதன தர்மத்தின் உண்மைகள் மூலம் தியானம் செய்வது மிகவும் முக்கியமாகிறது. ¶தன்னிடம் பொறுமையாக இருப்பதும் மிகவும் முக்கியம். பலர் மற்றவர்களிடம் பொறுமையாக நடந்துக்கொள்வதில் தேர்ச்சி பெற்று இருப்பார்கள், ஆனால் அவர்கள் தன்னைத்தானே கடிந்து கொள்வார்கள். இதை திருத்தி அமைக்க முடியும் மற்றும் ஆன்மீக விரிவாக்கம் தொடர்வதற்கு தினமும் வழிபாடு மற்றும் தியானம் செய்வது மற்றும் வருடத்திற்கு ஒரு முறை திருவிழாக்கள் மற்றும் *தீர்த்த யாத்திரை* செல்வதன் மூலம் அதை திருத்தி அமைக்க வேண்டும். ¶இன்று பெரும்பாலான மக்கள் மற்றவர்கள் மீது சகிப்புத்தன்மை இல்லாமலும் தாங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் மீது பொறுமை இல்லாமலும் இருக்கிறார்கள். இது ஒரு அவமதிக்கும் குணத்தை வளர்க்கிறது. அவர்களுக்கு எதுவும் தெய்வமாக மற்றும் புனிதமாக இருப்பதில்லை. ஆனால் அவர்கள் தினமும் கோபம், பகை உணர்வு மற்றும் மற்ற கீழ்நிலை உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம், அவர்கள் தங்களுக்கு தெரியாமலேயே நரகலோகத்தின் அரக்க குணங்களை வரவழைக்கிறார்கள். அதன் பிறகு அவர்கள் துர்சொப்பனங்கள், குழப்பங்கள், பிரிவுகள் மற்றும் கொடூரமான செயல்களால் உருவாக்கும் பின்னடைவால் அவதிப்பட வேண்டியிருக்கிறது. உலகில் இருக்கும் மக்கள் அனைவரும், தினசரி வழிபாடு மற்றும் தியானத்தை அனுட்டானம் செய்வதன் மூலம் தங்களை கட்டுப்படுத்தி பொறுமையாக இருந்தால், தேவலோகத்தில் இருந்து தெய்வீக சக்திகள் வரவழைக்கப்படுகிறார்கள். இந்த அனுட்டானங்களின் மூலம் கடின உழைப்புக்கு கிடைத்த பலனாக பூமி எங்கும் ஒரு மிகப்பெரிய அமைதி பரவட்டும். ¶அடுத்தமுறை பொறுமையின்றி இருக்கும் போது, ஏறுமுகமாக இருக்கும் பாதையில் சென்று கொண்டு இருக்கும் நீங்கள், இந்த

உணர்ச்சிகளை வெற்றிகொண்டு நீங்கள் முன்பு கற்றது அனைத்தையும் செயல்படுத்துவதன் மூலம், ஒரு அடி முன்னேறி செல்ல உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளதாக ஒரு நொடி நினைத்துப் பாருங்கள். வாக்கு, சிந்தனை அல்லது பயன்படுத்தப்படாத அறிவின் மூலம் ஆன்மீக பாதையில் முன்னேற முடியாது. மனப்பாடம் செய்த விதிகள், *சுலோகங்கள்*, செய்யவேண்டியவைகள் மற்றும் செய்யக்கூடாதவைகள் இருந்தாலும், அவை உங்களது தற்போதைய நிலையில் இருந்து ஒரு அங்குலம் முன்னேறி செல்ல தூண்டவில்லை என்றால் அதனால் எந்த பயனும் இல்லை. பொறுமையை இழக்கும் இந்த சந்தர்ப்பங்களில் கற்றதை கடைப்பிடிப்பது மற்றும் உங்களது ஆன்மீக விருப்பத்தின் கட்டளை மூலம் அதை கட்டுப்படுத்துவதால் முன்னேற்றம் கிடைக்கிறது. இந்த முன்வைத்த அடிகளில் இருந்து என்றும் பின்வாங்க முடியாது. சோதனை வரும் போது, நிலைத்து இருக்கும். ¶*சாதகர்கள்* மற்றும் *சந்நியாசிகள்* இந்த பிறவியிலும் முற்பிறவியிலும் தங்கள் *கர்மவினைகளை* கட்டுப்படுத்தி, இந்த ஒரு பிறவியில் அனுபவிக்க அவற்றை ஒடுக்கி வைத்து, அவர்கள் மக்களிடம் பொறுமை காத்து எல்லா சூழ்நிலைகளிலும் நிதானமாக செயல்பட்டு *கூடமையில்* முழுமையாக இருக்க வேண்டும்.
பொறுமையின்மையை மறைப்பது அல்லது மக்கள் அல்லது சூழ்நிலைகளுடன் நிதானமின்றி இருப்பதில் வெற்றிபெற, அவர்களுக்கு அவசியம் இருப்பதில்லை. தினசரி பக்தி, எதிர்பார்ப்பு இல்லாத வழிபாடு, தியானம் மற்றும் வலுவான தன் உளஆய்வில் அவர்களின் உள்ளுணர்வு, அறிவுணர்வு இயல்பு ஈடுபட்டு இருக்கவேண்டும். அதனால் பக்தி என்ற *நியமத்தை* பயிற்சி செய்வதன் மூலம் பொறுமையின்மை தணிகிறது. *ஈஸ்வரபுஞ்சன* என்கிற பக்தி தினமும் வழிபாடு மற்றும் தியானத்தின் மூலம் வளர்க்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 21

த்ருதி:

உறுதியாக இருத்தல்

ஆறாவது இயமமாக இருக்கும் *த்ருதி*, உறுதியாக இருப்பதை குறிக்கிறது. உறுதியாக இருப்பதற்கு, நீங்கள் மனஉறுதியை பயன்படுத்த வேண்டும். போதுமான ஞாபகசக்தி மற்றும் நல்ல பகுத்தறியும் புலன்கள் இருப்பவர் எளிதில் மனஉறுதியை உருவாக்கிக்கொள்ளலாம். வாழ்க்கையை வாழும் போது மனஉறுதியுடன் இருப்பதற்கு நம்மிடம் ஒரு குறிக்கோள், ஒரு திட்டம், விடாமுயற்சி மற்றும் தூண்டுதல் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் நமது *பிராரப்த கர்மவினைகளின்* வரம்பிற்குள் முடியாதது என்பது எதுவும் இருக்காது. ¶இமயமலையில் வாழ்ந்த *ரிஷிகள்* தாங்கள் பெற்ற ஞானத்தின்

பலன்களாக நமக்கு வழங்கிய மற்ற கட்டுப்பாடுகளை பின்பற்றாமல் இருந்தால், உறுதியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. இந்த கடைப்பிடித்தல்கள் அனைத்தும் ஒழுக்கத்தை உருவாக்குகின்றன, மற்றும் த்ருதி என்கிற உறுதிப்பாடு, நல்லொழுக்கத்தை அடிப்படையாக கொண்டிருக்கிறது. "கவனமாக செயல்படும்" திறமையை குறிக்கும் ஒழுக்கம் சொந்தங்கள், குருமார்கள் மற்றும் நல்ல நண்பர்கள் துணையுடன் மெதுவாக காலப்போக்கில் உருவாக்கப்படுகிறது. மனஉறுதியுடன் இருப்பவர்களை கவனியுங்கள். நீங்கள் அவர்களிடம் இருந்து நிறைய கற்றுக்கொள்வீர்கள். மனஉறுதியுடன் இல்லாதவர்களையும் கவனியுங்கள், அவர்களும் உங்களுக்கு கற்றுத் தருவார்கள். அவர்கள் எதை செய்யக்கூடாது என்பதை கற்றுத் தருவார்கள். ஞானோதயப்பாதையில் அல்லது மற்ற எந்த நாட்டத்திலும் வெற்றி பெறுவதற்கு முடிவு எடுக்காமல் மாறும் மனநிலையுடன் இருந்தால் விரும்பிய பலன் கிடைக்காது. சோம்பல் மற்றும் அச்சத்தை வெற்றிகொள்ள வேண்டும் மற்றும் இதை சாதிக்க அதிக முயற்சி தேவைப்படும். ஒரு ஆன்மாவின் சக்தி மற்றும் புத்தியை வளர்க்க, தினமும் ஒரு குருவின் வழிகாட்டலுடன் *சாதனா* செய்யவேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. ¶சொந்தங்கள் சேரும் போதும் அல்லது இழக்கும் போதும், மனஉறுதியை பாதுகாத்துக் கொள்வதே *த்ருதி* என்று *சாண்டில்ய உபநிடதம்* (உபம ப. 173-174) விவரிக்கிறது. வேதனையான காலகட்டம், கடினமான *கர்மவினைகள்*, இழப்பு மற்றும் தவறான செயலை செய்ய தூண்டுதல்கள் இருக்கும் போது மனதில் வலி மற்றும் பதட்டம், தனிமை மற்றும் புறக்கணிக்கப்பட்டதாக தோன்றும் போது, நாம் விடாமுயற்சியுடன் செயல்பட்டு, தீர்க்கமான முடிவு எடுத்து, நம்முள் இருக்கும் *த்ருதியின்* வலிமையை வெளிப்படுத்தி வெற்றிபெறலாம். *வருஹ உபநிடதத்தின்* மொழிபெயர்ப்பாளர் ஒருவர் *த்ருதி* என்ற சொல்லை தைரியம் என்று மொழிபெயர்த்துள்ளார். நியாயமாகவும் நேர்மையாகவும் இருக்கும் தைரியமான நபர்கள் தீங்கற்ற, கொடுமையான மற்றும் குழப்பமான *கர்மவினைகளை* வெற்றிக்கொள்கிறார்கள். இந்த பண்பு பெரும்பாலும், சந்நியாசிகள் பணிவாக இருக்க எடுத்துக்கொள்ளும் விரதத்தின் அங்கமாக இருக்கும் கடுமையான சோதனைகளை அமைதியாக பதட்டம் இல்லாமல் தாங்கிக்கொள்வது போன்று இருக்கிறது.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு," என்று திருக்குறள் 261 நமக்கு நினைவூட்டுகிறது. மேலும் *த்ருதி* என்பது கடலில் கொந்தளிப்பு அதிகமாக இருந்தாலும், தனது பாதையில் திடமாக இருக்கும் ஒரு "உறுதியான கப்பல்" (hard ship) என்றும் குறிப்பிடலாம். ¶வேதனையை சாந்தமாக ஏற்பதில் என்ன நன்மை இருக்கிறது என்று சிலர் வியக்கலாம். எல்லா இந்துக்களும் புரிந்துகொண்டதைப் போல, வேதனையை தாங்கிக்கொள்ள கடந்தகாலத்தில் நாம் இயக்கிய ஒரு செயலின் வடிவமே நமக்கு வேதனையாக வருகிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

வேதனையை சமாளித்து வெற்றிக்கொள்வதன் மூலம் அந்த *கர்மவினையை* நிரந்தரமாக கரைப்பதற்கு சமமாகும். வேதனையை நினைத்து ஆத்திரமடைந்து, அதனுடன் சண்டையிடுவதால் அது தனக்கு வசதியான நேரத்தில் திரும்பி வருவதற்கு வழிவகுப்பதாகும். ¶மாறும் தன்மையை வெற்றிக்கொள்வது, உறுதிப்பாட்டின் ஒரு முக்கிய அங்கம் ஆகும். மாறும் தன்மை என்பது ஒரு திட்டமிட்ட நேர்மறையான முடிவை எடுத்த பிறகு மனதை மாற்றிக்கொண்டு உறுதியில்லாமல் இருப்பதை குறிக்கிறது. மனதை மாற்றிக்கொள்வது ஒரு நல்ல பண்பாக இருக்கலாம், ஆனால் நன்றாக யோசித்து ஒரு உறுதியான முடிவை எடுத்த பிறகு, அதை முழுமையாக பின்பற்றவில்லை என்றால் சமூகத்தில் அந்த நபருக்கு மதிப்பும் நம்பகத்தன்மையும் குறைந்து அவர் பலவீனமாகவும் கருதப்படுவார். யாரும் தனக்கு மதிப்பு குறைவதை விரும்புவதில்லை. ¶இதற்கும் சூழ்நிலைகள் காரணமாக தனது மனதை மாற்றிக்கொள்ளும் ஒருவரின் வலிமைக்கும் நாம் எப்படி வித்தியாசம் காண்பது? திடபுத்தி இல்லாமல் தன்மீது நம்பிக்கை இல்லாமல் மாறும் மனநிலையுடன் இருப்பவர், எந்த காரணமும் இல்லாமல் மனதை மாற்றிக் கொள்கிறார். *த்ருதி* என்கிற உறுதிப்பாடு, புதிய தகவல்களை அடிப்படையாகக் கொண்ட சில பண்பட்ட காரணங்களுக்கு மாறும் விருப்பம் இருந்தாலும், அத்தகைய நல்ல காரணங்கள் இல்லாத போது, தான் எடுத்த தீர்மானங்களில் உறுதியாக இருக்கும் மனதை விவரிக்கிறது. அதன் முடிவுகள் விவேகமான பாகுபாட்டை அடிப்படையாக கொண்டன. பொறுமையாகவும் உண்மையாகவும் சிந்தனை, சொல் அல்லது செயல் மூலம் மற்றவர்களை துன்புறுத்தாத்தாமல், இரக்க குணத்துடன் நேர்மையாக இருக்கும் ஒருவர் *த்ருதி* என்கிற உறுதிப்பாட்டில் நிலையாக இருப்பவரின் வலுவான பண்புகளுடன் இருக்கிறார். அவர் தடைகளை கடந்து செல்கிறார். *த்ருதியில்* உறுதியாக இருக்கும் ஒருவரை மற்றவர்கள் நம்பி சார்ந்து இருக்கலாம். அவர் தானம் செய்கிறார், மற்றும் இறைவன், தெய்வங்கள் மற்றும் குருவின் நம்பிக்கை வைத்து, தினமும் வழிபாடு செய்து, தனது வாழ்க்கையில் ஆன்மாவின் சக்தி மற்றும் புத்தியை வெளிப்படுத்துகிறார். அவர் ஓய்வாக இருக்கும் தருணங்களில் பொறுப்பு, கடமை அல்லது செய்யவேண்டிய வேலைகளை பற்றிய கவலை இல்லாமல் திருப்தியாக *சந்தோஷத்தில்* இருக்கிறார். ¶ஆன்மீக பாதை என்பது ஒரு நீளமான மற்றும் நிரந்தர பாதை ஆகும். அது ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் பலனை தராது. ஆன்மீக பாதை பல ஏற்ற இறக்கங்களை கொண்டிருக்கும் மற்றும் தலைசிறந்த ஆன்மாக்களைத் தேடி மிகப்பெரிய சவால்கள் வரும். ஆன்மீக பாதையில், உறுதியாக இருத்தலும் விடாமுயற்சியும் மிகவும் முக்கியம் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

தயை-ஆர்ஜவம்-மிதாஹாரம்

दया–आर्जव–मिताहार



இரக்கம், நேர்மை மற்றும் அளவுணவு

அதனால் இதை அறிந்தவன், அமைதி அடைந்து, தன்னை கட்டுப்படுத்தி, பற்றின்றி, பொறுமையாக மற்றும் கவனச் செறிவுடன் தனக்குள் *ஆத்மனையும்* மற்றும் அந்த *ஆத்மனில்* எல்லோரையும் காண்கிறான். தீய சக்தி அவனை வெற்றிக்கொள்வது இல்லை, ஆனால் அவன் எல்லா தீய சக்திகளையும் வெற்றி கொள்கிறான்; தீய சக்தி அவனை கொல்வது இல்லை, ஆனால் அவன் தீய சக்தியை கொல்கிறான். தீய சக்தி, தீவிர உணர்ச்சி மற்றும் சந்தேகம் இல்லாமல், அவன் பிரம்மத்தை அறிந்தவன் ஆகிறான்.

சுக்ல யஜூர் வேதம், பிருஹதாரண்யக உபநிடதம் 4.4.23. வேஎ, ப. 718


EXAMINATION
HALL

ஒரு கிராமத்து உணவகத்தில், இருவர் பாரம்பரிய முறையில் வாழையிலையில் சாப்பிடுகின்றனர். ஒருவர் அளவாக சாப்பிடுகிறார் மற்றும் இன்னொருவர் அதிகமாக சாப்பிடுகிறார். உள்ளிருக்கும் படங்கள்: ஒரு நாயை அடிக்கும் மனிதனுக்கு சிறிதும் கருணை இல்லை; ஒரு வகுப்பில் நடக்கும் தேர்வில் மோசடி செய்வதை கவனிக்கும் சக மாணவன், தவறு செய்பவனை பார்த்து ஆர்ஜவம் என்கிற நேர்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று கண்டிக்கிறான்.

திங்கட்கிழமை

பாடம் 22

தயை:

இரக்கம்

ஏழாவது *இயமமாக* இருப்பது தயை என்கிற இரக்கம். சிலசமயம் கருணையில்லாமல் நடந்துகொள்வது சரியாக இருக்கும், மற்றும் மற்ற நேரங்களில் கருணையுடன் நடந்துகொள்வது சரியாக இருக்கும். இந்த அறிக்கை, இது பல மதங்கள் மற்றும் பல தலைமுறைகள் வாயிலாக தோன்றியுள்ளது. இரக்கம் என்பது எல்லா முடிவுகளையும் உறுதிப்படுத்தி, மிகவும் கொடூரமான செயல்களுக்கு ஒரு வரமாக கருணை வடிவில் குற்றத்தில் இருந்து விடுதலை, மற்றும் மன்னிப்பையும் வழங்குகிறது. இது உறுதியாக இருக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. *தயை* என்பது நீண்டநாள் *சாதனா*, நீடித்த *சந்தோஷம்*, திருப்தி, சாத்திர பாராயணம் மற்றும் ஞானிகளின் உபதேசங்களை கேட்பதில் இருந்து தோன்றுகிறது. இது விரிவாக்கம் பெற்ற ஆன்மாவின் புற வளர்ச்சியாகவும், உயர்ந்த உணர்வு பக்குவமடைவதையும் குறிக்கிறது. இரக்க குணமுள்ள ஒருவர், தன்னால் மன்னிக்கப்பட்டவரின் துயர் துடைக்க உதவும் போது மன்னிப்பதையும் கடந்து செல்கிறார். இரக்க குணமுள்ள ஒருவர் இறைவனுக்கு சமமாவார். அவர் வரங்களை கொடுக்கிறார். தெய்வங்களிடம் இருந்து வரும் பரிசுகளாக இருக்கும் வரங்கள், எதிர்பாராத விதமாக கேட்காமலேயே வந்து சேரும். இரக்க குணமுள்ள ஒருவர் வழங்கும் அருளும் அப்படியே. ¶“ஈக்களை சர்வசாதாரணமாக கொலை செய்து, கரப்பான் பூச்சிகளை மிதித்து உயிரினங்களை துன்புறுத்துபவர்களைப் பற்றி என்ன சொல்வது?" என்று ஒரு சீடர் கேட்டார். எல்லா உயிரினங்களிடத்தும் இரக்கமற்ற, கொடூரமான மற்றும் கருணையற்ற முறையில் செயல்படாமல், அந்த உணர்வுகளை வெற்றிக்கொள்வதே இரக்கம் ஆகும். ஒரு சிறிய செடிக்கும் உணர்வு உண்டு என்பதை இரக்க குணமுள்ளவர் அறிந்து இருப்பதால், அவர் செடியில் இருந்து பூவை பறிக்கப் போவதாக அந்த செடியிடமே கூறுவார். இரக்க குணமுடையவர் பூச்சிகளை கொல்லாமல் அவற்றை விரட்டிவிடுவார். நெஞ்சில் கருணையில்லாத ஒருவர், அந்த செடியை வேரோடு பிடுங்கி விடுவார்கள்.

நெஞ்சில் இரக்கமில்லாதவர் ஒரு குழந்தை போல, ஒரு பூச்சியின் இறக்கையை பிடுங்கிவிடுவார், மற்றும் இந்த குணத்தை முளையிலேயே கிள்ளவில்லை என்றால், இந்த குணம் வளர்ச்சிப்பெற்று ஒரு சக மனிதரின் உடல் உறுப்புக்களை வெட்டும் வரை பெரிதாகி விடும். இரக்கம் இதற்கு எதிர்மாறாக இருக்கிறது. ¶நாம் நமது சுற்புறத்தில் நாகரிகமற்ற, இரக்கமற்ற மற்றும் கருனையற்ற மக்களை பார்க்கும் போது, நாம் அவர்களை நெருங்கிய நண்பர்கள் வட்டங்களில் சேர்க்கக்கூடாது, ஆனால் ஆன்மீக பாதையில் சேர்த்துக்கொள்வதற்கு அவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இரக்கம் என்பது மன்னித்துக் கொண்டிருப்பதன் பக்க விளைவு ஆகும். இது வாய்மை மற்றும் அகிம்சையின் பக்க விளைவு ஆகும். அது *ஆஸ்தேயம், பிரம்மச்சரியம்* மற்றும் *க்ஷமையின்* விளைவு ஆகும். இது உண்மையில், உயர்ந்த உணர்வாக, தெய்வீக அன்பை குறிக்கும் *விசுத்த சக்கரத்தில்* அமைந்து இருக்கிறது. ¶இரக்கத்தை ஆணையிட முடியாது. இரக்கத்திற்கு முன்பாக அன்பு வருகிறது. இரக்கம் என்பது அன்பின் பக்க விளைவாக இருக்கிறது. அன்பு என்பது புரிதலின் பக்க விளைவாக இருக்கிறது. புரிதல் என்பது பகுத்தறிவின் பக்க விளைவு ஆகும். அனைத்து உயிரற்ற வஸ்துக்கள் அல்லது உயிரினங்கள், அனைத்து உயிர்கள் மீதும் மதிப்பு ஏற்படுவதற்கு இருப்பின் மையத்திற்கு சென்று சூட்சுமமான ஆன்மீகப் பண்புடன் பார்க்கும் திறமையை பெறுவதற்கு, பகுத்தறிவு வழங்கும் பல்வேறு கருத்துக்களை நினைவில் வைத்திருக்க போதுமான ஞாபக சக்தி மற்றும் அதை முழுமையாக பின்பற்ற போதுமான மனஉறுதி தேவைப்படும். இரக்கம் என்பது மிகவும் மேம்பட்ட ஆன்மீக பண்பு ஆகும். இந்த பண்பை ஒருவர் வெளிப்படுத்தும் போது, அவர் ஆன்மீகத்தில் அதிக முன்னேற்றத்தைக் கண்ட ஒரு பழமையான ஆன்மா என்பதை நீங்கள் அறியலாம். இதை யாரும் கற்றுத் தரமுடியாது. *தயை ஆனந்தத்துடன்* இணைந்து செல்கிறது. இரக்கம் மற்றும் ஆனந்தம் ஒரு பெரிய தொகுப்பாக இருக்கிறது. ¶*அகிம்சை, தயை,* இரக்கத்திற்கு மத்தியில் என்ன வித்தியாசம் என்று கேள்வி கேட்கலாம்? ஒரு குறிப்பிடத்தக்க வேற்றுமை உள்ளது. சிந்தனை, சொல் அல்லது செயலால் மற்றவர்களை துன்புறுத்தாமல் இருப்பது இந்து சமயத்தின் ஒரு முக்கிய விதி ஆகும் மற்றும் இதை தவிர்க்கவோ, ஒதுக்கவோ, புறக்கணிக்கவோ அல்லது இரக்கம் பற்றிய மிகவும் நுணுக்கமான கோட்பாடு கொண்டு மாற்றி அமைக்கவோ முடியாது. *இயமம்* மற்றும் *நியமங்களில்*, இந்து சமயம் வழங்கும் வெளிப்படையான கட்டளையாக *அகிம்சை* விளங்குகிறது. இரக்கம் என்பது இதயத்தில் இருந்து தானாக வருவது. ஆன்மீக, லௌகீக மற்றும் புத்தி சார்ந்த இந்த முழுமையான அன்புப் பிரவாகம், பெறுபவரை நோக்கி தடையின்றி வருகிறது. ¶இரக்கம் என்பது நிச்சயமாக மூடத்தனம் அல்லது பாசாங்கு இல்லை. இது ஆழமான உணர்ச்சி வெளிப்பாடு பொங்கி வழிவதை குறிக்கிறது. இது ஒரு நபரின் சிந்தனைகள் அல்லது அவரின் சொந்த உணர்ச்சிகள் அல்லது அவருடைய பகுத்தறிவு

அல்லது நல்ல தீர்மானத்தின் தாக்கம் இல்லாத ஆன்மீக சக்தியின் வெளிப்பாட்டை குறிக்கிறது. இந்த இரக்கத்தை அனுபவிப்பவர் தனது சொந்த உள்ளுணர்வு அல்லது அறிவுணர்வு தாக்கங்கள் இல்லாமல், இந்த கருணை மற்றும் குற்றத்தை மன்னிக்கும் இந்த வரத்தை தரும் போது, அவர் பெரும்பாலும் உணர்வுப்பூர்வமாகவும் மனப்பூர்வமாகவும் மாற்றத்தை பெறுகிறார். இந்த *இயமத்திற்கு* திருமூலர் *அருள்* என்ற சொல்லை பயன்படுத்தினார். ¶"சமீபத்தில் நான் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த போது, எனக்கு வேதனை வழங்கியவர்கள் பற்றி என் மனதில் தீய எண்ணங்கள் மற்றும் தீய உணர்வுகள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது அவை தணிந்த நிலையில், என்னால் அந்த தீய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை அழிக்க முடியுமா?" என்று ஒரு சீடர் மின்னஞ்சல் மூலம் என்னிடம் கேள்வி கேட்டார். நீங்கள் எதிர்காலத்திற்குள் அனுப்பிய சிந்தனைகள் மற்றும் தீய எண்ணங்கள், உங்களை நோக்கி உறுதியாக திரும்பி வரும். ஆனால் உங்களை ஏசியவருக்கு, மனதை புண்படுத்தியவருக்கு அல்லது தங்களைப் பற்றி தீய எண்ணங்கள் மற்றும் தீய உணர்வுகளை உருவாக்கியவர்களிடம் கூடுதல் அன்புடன் நடந்துக் கொள்வதன் மூலம், உங்கள் *கர்மவினையை* தணித்து அதனை மாற்றி அமைக்க முடியும். அவர்களிடம் கூடுதல் அன்புடன் நடந்துக் கொள்வது என்றால் அவர்களை இயல்பாக ஏற்றுக்கொள்வது ஆகும். கண்டிக்கும் சிந்தனைகள் வேண்டாம் அல்லது அவற்றை மாற்றி அமைக்க முயற்சிக்க வேண்டாம். இரக்கத்துடன் இருங்கள். அவர்கள் தங்களுடைய இயல்புடன் இருக்கிறார்கள், மற்றும் அதை அவர்களால மட்டுமே மாற்றி அமைக்க முடியும். அவர்களிடம் கூடுதல் அன்புடன் நடந்துகொள்ளுங்கள். அவர்களிடம் உங்கள் பாணியில் நல்ல வார்த்தைகளை சொல்லி, ஒரு பரிசை கொடுங்கள் மற்றும் அவர்களிடம் நல்ல உணர்ச்சிகளை வெளிப்படுத்துங்கள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 23

ஆர்ஜவம்:

நேர்மை

எட்டாவது *இயமமாக ஆர்ஜவம்* என்ற நேர்மை இருக்கிறது. ஒருவர் தன்னிடம் நேர்மையாக இருப்பது, சவால்களை திறமையுடன் எதிர்கொள்வதோடு அவற்றை உருவாக்கியது நாமே என்பதை ஏற்றுக்கொள்வது ஆகியவை நேர்மையின் மிகமுக்கிய விதி ஆகும். அதன் பிறகு அந்த சவால்களை முழுமையாக ஆராய்ந்து, அவற்றிற்கு தீர்வு காண மனப்பூர்வமான மற்றும் நேர்மையான முடிவுகளை எடுப்பது, தெய்வங்கள் வழங்கிய பரிசு அல்லது வரம்

ஆகும். ஒருவர் தன்னிடம் நேர்மையுடன் நடந்துக் கொள்வதன் மூலம் மனதில் அமைதி பிறக்கிறது. தற்போது பதட்டத்துடன் திருப்தி இல்லாமல் இருப்பவர்கள், தங்களிடம் நேர்மையின்றி இருந்துள்ளார்கள். அவர்கள் தாங்கள் செய்த தவறு மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மற்றவர்களை காரணம் காட்டுவார்கள். அவர்கள் எப்போதும் ஒரு பலி ஆடு அல்லது குற்றம் சுமத்த ஒருவரை தேடிக்கொண்டு இருப்பார்கள். ஒருவர் தன்னையே ஏமாற்றிக்கொள்வது, மிகவும் மோசமான குற்றம் ஆகும். ஒருவர் தன்னையே ஏமாற்றிக் கொள்வது என்பது அறியாமை தனது முழுமையான வடிவில் இருப்பதை குறிக்கிறது. நேர்மை என்பது ஒருவரின் இதயம் மற்றும் ஆன்மாவில் தொடங்குகிறது, மற்றும் அது அங்கிருந்து கிளம்பி மற்ற மக்களை எதிர்கொள்கிறது. “நீ உனது ஆன்மாவிடம் உண்மையாக இருந்து, அதை இரவு பகலாக பின்பற்றினால், நீ யாருக்கும் தவறு இழைக்க முடியாது," என்று ஷேக்ஸ்பியர் எழுதிய *ஹாம்லட்டில்* பொலோனியஸ் விவேகத்துடன் கூறுகிறார். ¶“செய்வதை சொல், சொல்வதை செய்" என்ற பழமொழியை இளைஞர்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் முதியவர்கள் தொடர்ந்து கேட்கவேண்டும். "நாம் முதல் முறையாக பொய் சொல்ல முயற்சிக்கும் போது, நாம் ஒரு சிக்கலான வலையை பின்னிக்கொள்கிறோம்" என்று சர் வால்டர் ஸ்காட் கூறினார். "உண்மை பேசுவதில் இருக்கும் ஆதாயம் என்னவென்றால், அதை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை," என்று மார்க் ட்வைன் தெரிவித்தார். "உங்களால் ஒரு திருடனை காண முடியும், ஆனால் பொய் சொல்பவனை காண முடியாது," என்று மனித இயல்பில் தேர்ச்சி பெற்ற இன்னொரு தத்துவ ஞானி தெரிவித்தார். ஒருவரிடம் வஞ்சனை மற்றும் நேர்மையில்லாமல் நடந்துகொள்வது, அவரிடம் இருந்து நேரத்தை திருடுவதற்கு சமம் ஆகும். அவர்கள் உங்களை முழுமையாக நம்பி இருக்க, நீங்கள் உங்கள் சுயநலத்திற்காக அவர்களின் எண்ணங்களை திசைதிருப்பி, உங்களது சொந்த நலனுக்கு, அவர்களிடம் இருக்கும் பணம் அல்லது பொருட்களை சூறையாட முயற்சி செய்வதற்கு சமம் ஆகும். ¶வஞ்சனை மிகவும் கொடிய செயல் ஆகும். வஞ்சனை எண்ணமுள்ள ஒருவன் சமூகத்திற்கு, மெதுவாக பரவுகிற ஒரு நோயை போன்றவன் ஆவான். உலகில் அடியெடுத்து வைப்பதற்கு வஞ்சனை மற்றும் சூழ்ச்சியுடன் செயல்படவேண்டும் என்று பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தருவதாக எங்களுக்கு தெரியவந்துள்ளது. அவர்கள் நல்ல குடிமக்களை உருவாக்கவில்லை. அவர்கள் எதிர்கால குற்றவாளிகளை உருவாக்குகிறார்கள், மற்றும் அவர்கள் தங்கள் தொழிலில் வலுவடைந்தால், மனித இனத்தை அழித்துவிடுவார்கள். கடினமாக இருந்தாலும் நேர்மையாக இருப்பதே சரியான தீர்வு. செய்த தவறுகளுக்கு பச்சாதாபம், அடக்கம் மற்றும் அவமானத்தை வெளிப்படுத்துவதன் மூலம், உங்களை கண்டுபிடித்து உங்களின் வஞ்சனையை உலகிற்கு அடையாளம் காட்டியவர்கள் மனதில், முழு நம்பிக்கை இல்லாவிட்டாலும் ஒரு சிறிய மரியாதையை மட்டுமாவது திரும்பப்

பெறலாம். *ஆர்ஜவம்* என்பது சுற்றுப்புறத்தில் இருப்பவர்கள், குடும்பம் மற்றும் அரசாங்கத்திடம் நேர்மையாக நடந்துகொள்வது ஆகும். நீங்கள் உங்கள் வரிகளை சரியாக செலுத்தி, விதிகளை கடைப்பிடிக்கிறீர்கள். நீங்கள் சூது, இலஞ்சம், ஏமாற்று வேலை, திருட்டு அல்லது மோசடி மற்ற தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. ¶இலஞ்சம் வழங்குபவர், பெறுபவர் மற்றும் நாட்டை கெடுக்கிறது. இலஞ்சம் மட்டுமே ஒரு வழியாக இருந்தால், அதை பெறாமல், அதை வழங்காமல் ஒரு எளிய வாழ்க்கையை வாழ்வதே சிறந்தது. இலஞ்சத்தில் ஈடுபடுவதன் மூலம் ஒருவர் இலஞ்சம் தருபவர் மற்றும் அதை பெறுபவரின் ஒரு சட்டவிரோதமான மற்றும் வஞ்சமான கூட்டணியில் நுழைகிறார். இந்த குற்றம் வெட்டவெளிக்கு வரும் போது, அதில் ஈடுபட்ட இருவருக்கும் முடிவில்லா அவமானம் ஏற்படுகிறது. இதைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை என்றாலும், உங்களது சொந்த மனசாட்சி இதை பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. எந்த அரசாங்கத்தின் எந்த விதி தொகுப்பிலும் இலஞ்சத்தை ஆமோதிக்கும் சட்டம் இல்லை. ¶தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் நேர்மையாக இருந்தால் போதும், ஆனால் தங்கள் தொழில்முறை சகாக்கள், நிறுவனங்கள், அரசாங்கங்கள் மற்றும் பரிச்சயம் இல்லாதவர்களிடம் நேர்மையுடன் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் இழிவான பிரிவை சேர்ந்தவர்கள். அவர்களுக்கு *கர்மவினையின்* விதிகளை பற்றி தெரிவதில்லை, மற்றும் அடுத்த முறை இதை விட சிறப்பான அல்லது இதற்கு சமமான பிறவி வேண்டும் என்ற ஆசையும் இல்லை. அவர்களுக்கு ஒரு தூல உடல் கிடைக்கும் முன் பல கருக்கலைப்பை சந்திக்க வேண்டியிருக்கும் மற்றும் அதன் பிறகு அவர்கள் ஒரு ஆதரவற்ற குழந்தையாக இருப்பார்கள். அவர்கள் குழந்தை பருவத்தில் சித்ரவதை, புறக்கணிப்பு மற்றும் அடிக்கப்படலாம் மற்றும் சிறு வயதில் கொல்லப்படலாம். தங்கள் நெருங்கிய நண்பர்கள் மற்றும் சொந்தங்களிடம் மட்டும் நேர்மையாக இருந்து, தொழில்முறை சகாக்கள் மற்றும் பொது வாழ்க்கையில் நேர்மையில்லாமல் வஞ்சனை செய்து தவறான செயல்களில் ஈடுபட்டு இரு வெவ்வேறு முகங்களுடன் இருப்பவர்களுக்கு தகுந்த தண்டனையை *கர்மவினை* தெய்வங்களால் மட்டுமே வழங்க முடியும். இந்த நபர்கள் தங்கள் மகன்கள் மற்றும் மகள்களையும் தங்களைப் போல இருக்க பயிற்சி அளித்து, மனித இனத்தின் மேம்பாட்டிற்கு அல்லாமல் அதன் அழிவிற்கு துணை புரிகின்றனர்.

புதன்கிழமை

பாடம் 24

துறவு வாழ்க்கையில்

நேர்மை

தங்கள் சங்கல்பங்களை கடைப்பிடிக்கும் *சாதகர்கள், யோகிகள்* மற்றும் *சுவாமிகள்* நேர்மைக்கு சான்றாக இருக்கிறார்கள். அவர்களின் ஒளி உடலின் கிரணங்கள் வாழ்க்கை முழுவதும் பிரகாசிக்கிறது. அவர்கள் பாதுகாப்பவர்கள், நிலைப்படுத்துபவர்கள், மேம்படுத்துபவர்கள், சமாதானப்படுத்துபவர்கள் மற்றும் அனுதாபம் தெரிவிப்பவர்களாக இருக்கிறார்கள். மனிதன் எதிர்கொள்ளும் எல்லா சிக்கல்களுக்கும் எல்லா நோய்களுக்கும் அவர்களிடம் தீர்வு இருக்கிறது, அல்லது இதற்கு இங்கே தீர்வு காண வேண்டும், யாரை சந்திக்க வேண்டும், எந்த சாத்திரத்தை படிக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள். *சாதகர், யோகி* அல்லது *சுவாமியாக* இருப்பதற்கு *ஆர்ஜவம்* என்கிற நேர்மை முக்கிய தகுதியாக இருக்கிறது. வஞ்சனை, தவறான செயல்கள் மற்றும் வெளிப்படையாக பொய் சொல்லும் செய்முறையில் நிலைத்து இருந்து, தான் செய்த தவறுகளுக்கு அவமானம் இல்லாமல் இருக்கும் ஒரு துறவற மாணவனை எந்த சத்குருவும் ஏற்றுக்கொள்ளமாட்டார். ¶மனித உறவுகளில் குறிப்பாக *குரு-சீடனின்* உறவு, தனது வலிமையை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு வெளிப்படுத்தும் நம்பிக்கையில் இருந்து பெறுகிறது. *ஆர்ஜவ இயமம்* முறிக்கப்படும் போது அந்த நம்பிக்கை துண்டிக்கப்பட்டு, அது அந்த உறவின் அழிவு அல்லது முடிவை தூண்டுகிறது. உறவில் நம்பிக்கையின்மை, சந்தேகம், வெறுப்பு, குழப்பம் மற்றும் எதிர்தாக்குதல் தோன்றும் போது, அது விவாதத்தை தோற்றுவிக்கிறது. ¶சட்டவிரோதமான நடவடிக்கையை வாழ்முறையாகவும், வஞ்சனையை சிந்தனை முறையாகவும் அனுமதிக்கும் வலுவில்லாத தலைமை மற்றும் நிலையற்ற அரசுகளைக் கொண்ட நாடுகள், இந்த முறையை பயன்படுத்தி மக்களை பிரிக்க முற்படுகின்றனர். மக்கள் ஒருவரையொருவர் சந்தேகம் கொள்ள ஆரம்பிக்கின்றனர். அவர்கள் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பதால், மற்றவர்களும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பதாக சந்தேகிக்கின்றனர். அவர்கள் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பதால் மக்கள் கோபம் அடைகின்றனர். இறுதியில் நாடு வீழ்ச்சி அடைந்து, போர் அல்லது எண்ணற்ற உள்நாட்டு பிரச்சனைகளில் சிக்கிக்கொள்கிறது. இவ்வாறு உலகம் முழுவதும் நடைபெறுவதை நாம் காண்கிறோம். பொறுப்புள்ள அதிகாரிகள் பொதுமக்கள் முன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு தவறான முன் உதாரணமாக விளங்கிய இலஞ்சம் வாங்கிய அரசியல்வாதிகள் மற்றும் வஞ்சனை மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட அதிபர்கள் பற்றிய தகவல்களை ஒரு வலுவான குடியரசு வெளியிட்டு கொண்டே இருக்கிறது. உயர்ந்த விழிப்புணர்வுடன் இருக்கும் அரசுகள் தங்கள் பொருளாதாரத்தை பராமரிப்பதோடு மக்களுக்கு உணவு அளிப்பதிலும் கவனமாக இருக்கிறது. ஆனால் குறைந்த விழிப்புணர்வுடன் இருக்கும் அரசுகள் அவ்வாறு செயல்படுவது இல்லை. ¶தனியுரிமையுள்ள மிகப்பெரிய

வெற்றிகரமான நிறுவனங்களும், தங்களிடம் சேரும் ஊழியரிடம் மிகவும் முக்கிய தகுதியாக நேர்மையை எதிர்பார்க்கிறார்கள். அந்த ஊழியரிடம் வஞ்சனை மற்றும் தவறான நடவடிக்கை கண்டுபிடிக்கப்பட்டால், அவர் மறுபரிசீலனை இல்லாமல் பணியில் இருந்து நீக்கப்படுகிறார். இன்று பல மதசார்புள்ள நிறுவனங்களில் இருக்கும் வஞ்சனை மற்றும் நேர்மையற்ற மக்கள், இரகசியமாக சட்டவிரோத நடவடிக்கைகளை திட்டமிடுகின்றனர். இந்த மதசார்புள்ள நிறுவனங்கள் வலுவிழந்து, இழப்பு மற்றும் குழப்பத்தை தங்கள் வீழ்ச்சியின் பலன்களாக அனுபவிக்கின்றன. அந்த நிறுவனங்களின் தலைவர்கள் ஆன்மீகத்தை பராமரித்து நிறுவனர்களின் முதன்மையான நோக்கத்தை பூர்த்தி செய்ய, தங்கள் நிறுவனங்களில் வஞ்சனை செய்து, இலஞ்சம் வாங்கி கிருமிகள் போல நாசவேலை செய்யும் ஊழியர்களை தேடிப்பிடித்து பணியில் இருந்து நீக்க வேண்டும். ¶பல விரிவுரையாளர்கள் நன்றாக தெளிவுபடுத்தியதைப் போல, *ஆர்ஜவம்* சொல்லுக்கு அர்த்தமாக "எளிமையை" குறிப்பிடலாம். மற்றவர்களை புண்படுத்தாமல் இருக்க சொல்லும் பொய்கள், குழப்பமான நிலையில் சொல்லும் பொய்கள் மற்றும் உண்மையான பொய்கள் என்று பல பொய்களை காட்டிலும் உண்மையை நினைவில் வைத்திருப்பது எளிது. இரகசியமாக திட்டமிடுதல் மற்றும் வஞ்சனை செய்தல், ஏமாற்றுதலை காட்டிலும் நியாயமாக இருப்பது எளிது. ஒரு எளிமையான வாழ்க்கையே நேர்மையான வாழ்க்கை ஆகும். ஒரு நேர்மையான வாழ்க்கையே எளிமையான வாழ்க்கை ஆகும். நமது தேவைகளை உருவாக்கும் விருப்பங்கள் எளிமையாக இருக்கும் போது, வஞ்சனை செய்தல் அல்லது தவறான நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை. இது மிகவும் எளிது. *ஆர்ஜவம்* என்பது நடவடிக்கைகளை குழப்பாமலும், கவலைகள் மற்றும் பதட்டங்களை பெரிதுபடுத்தாமல் இருப்பதும் ஆகும். அதாவது ஒரு சூழ்நிலை தோன்றும் போது, அதை அந்த சூழ்நிலையின் வரையறைக்குள் சமாளிப்பதை குறிக்கிறது. ஒரு சூழ்நிலையில் இருக்கும் உணர்ச்சியை, இன்னொரு சூழ்நிலையில் ஊக்குவிக்க அல்லது சமாளிக்க பயன்படுத்த வேண்டாம். நீங்கள் யாருக்கும் கடன்பட்டு இருக்கவும் வேண்டாம், யாரையும் உங்களுக்கு கடன்பட்டு இருக்க செய்யவும் வேண்டாம். உங்களால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதியை தர வேண்டாம், மற்றும் நீங்கள் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். இதுவே சனாதன தர்மத்தின் வழி ஆகும். புதிய இந்திய சமயம் வேறு வழியை கற்றுத்தந்தால், அதில் கவனம் செலுத்த வேண்டாம். அவை அனைத்தும் அரசியல் சார்ந்தவை, இதற்கும் *தர்மத்திற்கும்* எந்த தொடர்பும் இல்லை.

வியாழக்கிழமை

பாடம் 25

மிதாகாரம்:

அளவு உணவு

பத்தாவது இயமமாக இருப்பது *மிதாகாரம்* அல்லது அளவுஉணவு. அதைப் போலவே, *மிதாவியயின்* என்றால் அளவாக செலவிடுதல், சிக்கனமாக இருத்தலை குறிக்கிறது மற்றும் *மிதாஷயன்* என்றால் குறைவாக உறங்குதல் என்று பொருள். அதிகமாக சாப்பிடுதல் கலாச்சார சீர்கேடு என்றும் அதற்கு மன்னிப்பு இல்லை என்றும் எல்லா கலாச்சாரமும் குறிப்பிடுகிறது. இது மற்றவர்களின் வேதனைகளில் இருந்து செல்வம் மற்றும் ஆடம்பரத்தை பெறுபவர்களின் நடவடிக்கை ஆகும். பல அரசுகள், பேரரசுகள், இராச்சியங்கள், மற்றும் சிற்றரசுகளின் வீழ்ச்சிக்கு சமுதாய சீர்கேடு என்கிற அழிவு நடனம் காரணமாக இருந்துள்ளது. "மக்களுக்கு சாப்பிட ரொட்டி இல்லை என்றால், இனிப்பு ரொட்டி சப்பிடட்டும்," என்று பிரெஞ்சு நாட்டு அரசியாக இருந்த மேரி ஆன்துவானெட், சமுதாய சீர்கேடு விளைவிக்கும் மிகப்பிரபலமான அறிக்கையை பிரஞ்சுப் புரட்சிக்கு முன்பாக விடுத்ததாக கூறப்படுகிறது. அந்த அறிக்கையை எழுதிய பெண் எழுத்தாளர் உட்பட, அரசியின் இந்த அவமதிப்பை கேட்ட எல்லோரும் தங்கள் கட்டுப்பாட்டை இழந்து சினம் கொண்டனர். அழிவின் உருவமாக இருக்கும் சமுதாய சீர்கேடு, பல நூற்றாண்டுகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களால் கண்டிக்கப்பட்டு வந்துள்ளது. ¶இந்த தகவல் மூலம் *மிதாகாரம்* என்ற கட்டுப்பாட்டை நாம் எல்லோருமே கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அது மிகவும் கடினமானது என்றும் நமக்கு இதன் மூலம் புரியவருகிறது. உடலுக்கு செய்யவேண்டியது மற்றும் செய்யக்கூடாதது பற்றித் தெரிவது இல்லை. அது தனது சொந்த உள்ளுணர்வு அறிவை பயன்படுத்தி தனது போக்கில் இயங்கினால், அதன் வாழ்க்கை உண்பதும் பருகுவதுமாக முடிந்துவிடும். உடல் மற்றும் உணர்வுகளை மனம் கட்டுப்படுத்துகிறது மற்றும் அது தன்னை பாதுகாத்து, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியான மனநிலையுடன் இருந்து, "நோயுற்ற மனிதரின்" வெறுமையை தவிர்க்க, இந்த கட்டுப்பாட்டை செயல்படுத்த வேண்டும். ¶நீண்ட நாள் வாழ்ந்து எளிதில் தியானம் செய்து ஒரு நிலையான மற்றும் மகிழ்ச்சியான மனதை பெறுவதற்கு, அதிகம் சாப்பிடாமல் இருப்பது ஒரு சிறந்த வழி என்று *ஆயுர்வேதம்* கூறுகிறது. இதன் காரணமாகவே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக *யோகிகள், சாதுக்கள்* மற்றும் மற்றவர்கள் அளவுணவு சாப்பிட்டு வந்தனர். புகைத்தல் மற்றும் போதை மருந்தைத் தவிர, அதிக உணவு உண்பதைக் காட்டிலும் உடலுக்கு அதிக தீங்கு விளைவிப்பது வேறு ஒன்றும் இல்லையென்றே சொல்லவேண்டும், மற்றும் அதிகமான உணவு என்பதை உணவின் அளவு மற்றும் உணவின் தரத்துடன் குறிப்பிடவேண்டும். நீங்கள் தாராளமாக பதப்படுத்தப்பட்டு உயிரற்ற உணவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நீங்கள் *மிதாகாரத்தை* பின்பற்ற முடிவதில்லை, மற்றும் நீங்கள்

தாராளமாக நன்றாக பதப்படுப்பட்ட உயிரற்ற கடந்தகால *கமர்வினைகளில்* இருந்து வெளிவந்த அனுபவங்களை பெறுகிறீர்கள். அவை உங்கள் திருமண வாழ்வில் சிக்கல்களை ஏற்படுத்தி, உங்கள் குழந்தைகள் மனதில் பெறும் குழப்பத்தை ஏற்படுத்தி, உங்கள் ஆயுளை குறைக்கிறது. ¶இன்றைய இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில், *மிதாகாரத்திற்கு* இன்னொரு பொருளும் இருக்கிறது. அளவோடு சாப்பிட்டு, அதிகமாக உண்டு உங்கள் செல்வதை விரயம் செய்யாமல், ஒரு நாட்டின் செல்வந்தர்களுக்கு அதிக சலுகைகளை வழங்க அந்த நாட்டின் செல்வத்தை பயன்படுத்தாமல் இருந்து, நமக்கு ஏற்படும் அதிகப்படியான பசியை தணிக்க பூமியின் வளங்களை பயன்படுத்தாமல் இருத்தல் போன்ற ஒரு உலகளாவிய ஒழுக்கத்தை *மிதாகாரம்* ஏற்படுத்தும் என்று நமது *ரிஷிகள்* எதிர்பார்த்து இருப்பார்கள். எல்லோரும் *மிதாகாரத்தை* பின்பற்றினால், நம்மால் பூமியில் இருக்கும் எல்லோருக்கும் உணவளிக்க முடியும் மற்றும் வெகுசிலரே பசியோடு இருப்பார்கள். அதிகமாக உணவு உண்பது மற்றும் போதுமான உணவு கிடைக்காமல் பசியோடு இருப்பது என்று மிகப்பெரிய வேற்றுமை இருக்காது, மற்றும் பெருந்தீனி மற்றும் ஊட்டச்சத்துக் குறைவு போன்ற வேறுபாடும் இருக்காது. உலகில் ஒரு கட்டுப்பாடு நிலவும். நாம் சுற்றுப்புறச் சூழலின் அங்கமாகவும், பூமியின் நுணுக்கமான அங்கமாகவும் இருப்பதாக இந்துக்கள் கருதுகிறார்கள். இந்த பூமியில் வாழும் உயிரினங்களுள் ஒன்றாக இருக்கும் நமது தூல உடல் ஒரு உண்ணி, கரப்பான்பூச்சி, பறவை, பாம்பு, ஒரு மீன், ஒரு சிறிய விலங்கு அல்லது ஒரு யானைக்கு நிகரான உரிமையுடன் இருக்கிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 26

உணவுமுறை மற்றும்

நல்ல உடல் ஆரோக்கியம்

நீங்கள் *மிதாகாரத்தை* பின்பற்றும் போது, ஆரோக்கியத்துடன் செல்வத்தையும் சேர்க்கலாம். ஒரு சராசரி குடும்பம் உணவிற்காக அதிக பணத்தை செலவழிக்கிறது. அந்த பணத்தை குடும்பத்தின் மற்ற தேவைகள் அல்லது விருப்பங்களுக்கு பயன்படுத்தலாம். நீங்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதால் நீங்கள் *சாதனா* மற்றும் தியானம் செய்வது எளிதாகிறது, உங்கள் மருத்துவ செலவுகள் குறையும், மற்றும் நீங்கள் ஆரோக்கியமாக, ஆனந்தமாக மற்றும் புனிதமாக இருப்பீர்கள். அதிகமாக உண்பவரின் உடல் அதிகமான உணவை செரிமானம் செய்து அதை உடல் முழுவதிலும் இயக்கி சோம்பலுடன் மந்தமாக இருப்பதால், அது ஒருவரை ஆன்மீக *சாதனாவில்* இருந்து

விரட்டுகிறது. உடல் தொடர்ந்து இயக்கத்தில் இருக்க, அதை ஊட்டச்சத்து மற்றும் கனிமப் பொருட்களை வழங்கி பேணுவதே உணவின் நோக்கமே தவிர, தனிப்பட்ட புலனுணர்வு மகிழ்ச்சிக்காக மட்டும் இல்லை. சோம்பலுடன் இருக்கும் ஒருவருக்கு கல்வி மற்றும் தியானம் மூலம் முன்னேற ஈடுபாடு இருப்பதில்லை, மற்றும் அவரால் எளிமையான வழக்கமான பணிகளை தவிர எதுவும் செய்ய முடிவதில்லை. ¶வெஸ்டர்ன் சைன்ஸ் ஆய்வகம், இரு எலிக் குழுக்களுக்கு வெவ்வேறு அளவு உணவை வழங்கி நடத்திய ஆய்வின் முடிவைப் பற்றி நமக்கு சமீபத்தில் தெரிய வந்தது. உணவுக் கட்டுப்பாடின்றி வாழ்ந்த எலிகள் வழக்கமான எலியின் ஆயுட்காலத்திற்கு வாழ்ந்தன. ஆனால் முதல் குழுவிற்கு வழங்கிய உணவில் பாதி மட்டுமே வழங்கப்பட்ட குழுவின் எலிகள் இரட்டை மடங்கு ஆயுட்காலத்துடன் வாழ்ந்தன. இந்த முடிவுகளால் ஈர்க்கப்பட்ட விஞ்ஞானிகள், அளவு உணவால் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழலாம் என்பதை உணர்ந்து, தங்கள் உணவின் அளவை குறைத்து எடையையும் குறைத்துக் கொண்டனர். ¶இந்த பூமியில் இருக்கும் மக்கள், உணர்வு நிலைகளின் அடிப்படையில், இரு குழுக்களாக பிரிக்கப்படுகின்றனர். இதில் பெரும்பாலான மக்களிடம் கீழ்நிலை உணர்வு ஆதிக்கம் செலுத்துகிறது, மற்றும் அது வஞ்சனை மற்றும் நேர்மையின்மையை அதிகரிக்க செய்கிறது. இதன் மூலம் வாழ்க்கையில் வரும் குழப்பத்துடன் அச்சம், கோபம், பொறாமை மற்றும் அடுத்து வருகிற கழிவிரக்க உணர்ச்சிகளும் அதைத் தொடர்கின்றன. தூய்மையாக இருக்கும் மக்கள் உயர்நிலை உணர்வுடன் இருக்கின்றனர், மற்றும் இவர்களிடம் பகுத்தறிவு மற்றும் நினைவாற்றல், மனஉறுதி, நல்ல தீர்மானிக்கும் சக்தி, எல்லோர் மீதும் பொதுவான அன்பு, இரக்கம் மற்றும் மேலும் பல நேர்மறை சக்திகள் ஆதிக்கம் செலுத்துகிறது. அகத்தே இருக்கும் மனிதனை புறத்தில் இருக்கும் மனிதனுக்கு சைவ உணவு வெளிப்படுத்தி, உயர்நிலை உணர்வை வெளிக்கொண்டு வருகிறது. இறைச்சி, மீன், கோழி மற்றும் முட்டைகளை உண்பதன் மூலம் கீழ்நிலை உணர்வுகளின் கதவுகள் திறக்கப்படுகின்றன. இதை புரிந்துகொள்வது மிகவும் எளிது. ஆன்மீக வாழ்க்கைக்கு தேவையான வேதியல் மாற்றத்தை சைவ உணவு வழங்குகிறது. மற்ற உணவுகள் ஒரு மாறுபட்ட வேதியல் மாற்றத்தை ஏற்படுத்தி, உட்சுரப்பிகள் மீதும் உங்கள் உடல் அமைப்பு மீதும் நாள் முழுவதும் தாக்கம் ஏற்படுத்துகிறது. உங்கள் உடல் அமைப்பிற்கு சைவ உணவு, நாள் முழுவதும் துணை புரிகிறது. உணவு என்பது வேதியலை குறிக்கிறது, மற்றும் வேதியல் மாற்றங்கள் நமது உணர்வின் மீது தாக்கம் ஏற்படுத்துகிறது; மற்றும் நமது இலக்காக உயர்நிலை உணர்வு இருந்தது என்றால், நாம் அதை தூண்டிவிடும் வேதியல் மாற்றத்தை வழங்கவேண்டும்.

சனிக்கிழமை

பாடம் 27

உங்கள் உடலை

கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள்

அகத்தில் நெருப்பை தூண்டிவிட்டு, உணவை செரிமானம் செய்து வெளியேற்றுவதற்கு உதவியாக ஒரு அருமையான மூச்சுப் பயிற்சி உள்ளது. வழக்கம் போல் மூச்சை உள்வாங்கி, வயிற்றை நன்றாக உள்ளிழுத்து மூச்சுக் காற்றை வேகமாக வெளியேற்றவும். அதன் பிறகு உங்கள் வயிற்றை தளர்த்தி கொண்டு இயல்பாக மூச்சை உள்வாங்கவும். பிறகு விரைவாக உங்கள் வயிற்றை உள்வாங்கி, நுரையீரலில் இருக்கும் காற்றை வெளியேற்றவும். இதை ஒரு நிமிடம் செய்து, ஒரு நிமிடம் ஓய்வெடுக்கவும், பிறகு அதை மீண்டும் தொடரவும். பிறகு ஒரு நிமிடம் ஓய்வெடுத்து, அதை மீண்டும் தொடரவும். பொதுவாக இதை மூன்று முறை செய்தால், அசீரணம் அல்லது மலச்சிக்கலை வெற்றிகொள்ள போதுமானதாக இருக்கும். இந்த *பிராணாயாமம்* உடலின் வெப்பத்தை அதிகரித்து, உணவை செரிக்க வைத்து கழிவை நீக்குகிறது. இது குறிப்பாக ஒரே இடத்தில் அமர்ந்து மூளைக்கு அதிக வேலை தந்து, தங்கள் சக்திகளை போதுமான அளவு செரிமானத்திற்கு பயன்படுத்தாமல் அதிகமாக மூளையில் பயன்படுத்துபவர்களுக்கு நல்ல பலனை தரும். ¶உங்கள் உடலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அது சரியாக செயல்பட்டு, ஆரோக்கியமாக இருந்து சரியாக உணவு அருந்துவதை கவனித்துக் கொள்ளவும். நீங்கள் அதிகமாக சாப்பிட்டால், அதை அவ்வப்போது உபவாசம் இருந்து உடற்பயிற்சிகள் செய்து சமன் செய்யவும். அது இனிப்பாக அல்லது அதிகமான வெளிநாட்டு உணவுகள் அல்லது அதிக காரம் நிறைந்த உணவுகளாக இருக்கட்டும், பெரும்பாலான மக்களுக்கு சில குறிப்பிட்ட ஏக்கங்கள் மற்றும் ஆசைகள் இருக்கும் மற்றும் அவற்றை சாப்பிடுவதற்கு அவர்கள் தங்களுக்கு அனுமதி வழங்கிக் கொள்வார்கள். அத்தகைய சொந்த விருப்பங்கள் மற்றும் ஆசைகளை கண்டுகொண்டு அவற்றை குறைப்பது ஆன்மீக பாதையில் ஒரு அங்கம் ஆகும். உங்களுக்கு ஜெல்லி பீன்ஸ், முந்திரி, அதிமதுரம், சாக்லேட், பலவகை குளிர்பானங்கள் மற்றும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காபி மீது அதிக விருப்பம் இருந்தால், அந்த பசி ஆர்வங்களை குறைக்கவும். நீங்கள் அவ்வாறு செய்வதன் மூலம், உங்கள் உள்ளுணர்வு மனதின் இயல்பான ஆசை முழுவதையும் குறைக்கிறீர்கள். அத்தகைய ஆசைகளை கட்டுப்படுத்தி குறைப்பது ஆன்மீக விரிவாக்கத்தின் மிகமுக்கிய செய்முறை ஆகும். ¶ஆசையை கட்டுப்படுத்த வேண்டும் என்று பழங்காலத்து *ரிஷிகள்* நமக்கு கற்றுத் தந்துள்ளனர். அவர்கள் *அடக்குங்கள்* அல்லது *விலக்குங்கள்* என்று சொல்லாமல் *கட்டுப்படுத்துங்கள்* மற்றும் *குறையுங்கள்* என்ற சொற்களை பயன்படுத்தினர். ஆசைகளை கட்டுப்படுத்தி குறைப்பதன்

மூலம், கட்டுப்படுத்தி குறைக்கப்பட்ட அந்த சக்தி உயர்நிலை *சக்கரத்தை* உயிரூட்ட அனுமதிக்கிறது மற்றும் அது மனிதநேயம், சொந்த குடும்பம் மற்றும் சுற்றத்தாரை சிறப்படைய செய்யும் ஆக்கத்திறன் மற்றும் இயலுணர்வை உருவாக்குகிறது என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். ¶நாம் என்ன செய்யவேண்டும் என்பதற்கு உதவியாக *ரிஷிகள்* நமக்கு தலைசிறந்த ஞானத்தை வழங்கியுள்ளார்கள். உங்கள் உடல் மற்றும் உணவை ஆய்வு செய்து, உங்களுக்கு எது பொருத்தமாக இருக்கும் என்பதை தெரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு அசீரணத்தை எந்த உணவுகள் கொடுக்கின்றன என்பதை தெரிந்துகொண்டு அவற்றை சாப்பிடாமல் இருங்கள். ஆனால் சரியாக உணவு உண்பது மட்டுமே ஆன்மீக வாழ்க்கை ஆகாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். சாதகர்கள் தொடக்க காலத்தில், தங்களுக்கு பொருத்தமான உணவை தேர்வு செய்வதில் அதிக ஆர்வத்துடன் இருப்பார்கள். இந்த நிலையில் அவர்கள் கற்பதில் கவனம் செலுத்தி, தங்களுக்கு எந்த முறை சரியாக இருக்கும் என்பதை தெரிந்துக்கொள்ள வேண்டும். ஆனால் அது சாப்பிடுவதற்காக வாழாமல், வாழ்வதற்கு சாப்பிட வழிவகுக்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 28

சைவ உணவு உண்பதற்கான

காரணங்கள்

சைவ உணவு உண்ணும் பழக்கம் இந்தியா முழுவதும், உடல் ஆரோக்கிய மற்றும் சுற்றுப்புற ஒழுக்கநெறியாக ஆயிர வருடகாலமாக இருந்துள்ளது. இந்த குறிக்கோளை இசுலாம் மற்றும் கிறித்துவ குடியேற்றம் வலுவிழக்கச் செய்து படிப்படியாக அழித்து இருந்தாலும், அது இன்றளவும் இந்து சிந்தனை மற்றும் பழக்கத்தின் முக்கிய ஒழுங்குநெறியாக இருந்து கொண்டிருக்கிறது. மாமிசம் சாப்பிடும் இந்துக்கள் மத்தியில் ஒரு நுண்ணிய குற்ற உணர்வு நிலவுகிறது, மற்றும் இந்தப் பிரச்சனை பற்றிய வாக்குவாதம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. சமஸ்கிருத மொழியில் சைவ உணவு உண்ணும் பழக்கம் *ஷாகாஹார* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் சைவ உணவு உண்பவர் *ஷாகாஹாரி* என்று அழைக்கப்படுகிறார். மாமிசம் உணவு உண்ணும் பழக்கம் *மான்ஸாஹார* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் மாமிசம் உண்பவர் *மான்ஸாஹாரி* என்று அழைக்கப்படுகிறார். *ஆஹார* என்றால் "உணவு" அல்லது "உணவு முறை" என்பதையும், *ஷாகா* என்பது "காய்கறி," என்பதையும், *மான்ஸா* என்பது "இறைச்சி" அல்லது "மாமிசம்" என்பதையும் குறிக்கிறது.¶ஒரு புறம் மாமிச உணவை சாப்பிடாமல் இருந்தாலும், மீன் மற்றும் முட்டைகளை சாப்பிடும்

பழக்கத்தை சைவ உணவு என்று சிலர் குறிப்பிடுவதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் சைவ உணவு பழக்கம் என்றால் என்ன? அது தாவரங்கள் தயாரிக்கும் உணவு மற்றும் பால் பொருட்கள் உண்ணும் பழக்கத்தை குறிப்பிடுகிறது. தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பயறுவகை, பால், தயிர், வெண்ணெய் மற்றும் நெய் ஆகியவை சைவ உணவுகள் ஆகும். அதிக தீவிரமான சைவர்கள் பால் பொருட்கள் அனைத்தையும் தவிர்த்து தாவரங்களை மட்டுமே சார்ந்து இருப்பார்கள். பூச்சி மருந்து அல்லது இரசாயன உரங்களை பயன்படுத்தாமல் உள்ளூரில் இயல்பாக வளர்க்கப்பட்ட உணவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இறைச்சி, மீன், ஓடுடை மீன், கோழி மற்றும் முட்டைகள் ஆகியவை சைவ உணவு இல்லை. நல்ல உடல் ஆரோக்கியத்திற்கு உறைந்த மற்றும் தகரப் பெட்டியில் அடைத்த உணவுகள், வெள்ளை அரிசி, வெள்ளை சர்க்கரை மற்றும் வெள்ளை மாவு போன்று அதிகமாக பதப்படுத்தப்பட்ட உணவுகள்; வெற்று உணவு மற்றும் செயற்கை இனிப்பூட்டிகள், நிறமூட்டிகள், சுவையூட்டிகள் மற்றும் பதப்பொருட்களைப் போன்ற அதிகமான வேதியல் பொருட்கள் சேர்க்கப்பட்ட பானங்கள் போன்ற சில குறிப்பிட்ட சைவ உணவுகளும் முடிந்தவரை தவிர்க்கப்படுகின்றன. ¶கடந்த ஐம்பது ஆண்டுகளில், மாமிசம் உண்பவர்களில் பல லட்சகணக்கானோர் இறைச்சி மற்றும் மற்ற உயிரினங்கள் உண்பதை நிறுத்தியுள்ளனர். அத்தகைய முடிவிற்கு ஐந்து முக்கிய நோக்கங்கள் உள்ளன. 1) வேத சாத்திரங்களில் விளக்கப்பட்டுள்ளதைப் போலவும், இறைவனுக்கும் இறைவனின் படைப்பிற்கும் நமது முதன்மையான கடமையாகவும், *தர்மத்தை* கடைப்பிடிக்கும் ஒரே நோக்கத்துடன் பலர் சைவ உணவுப் பழக்கத்திற்கு மாறியுள்ளனர். 2) நேரடியாகவும் அல்லது மறைமுகமாகவும், மற்ற உயிரினங்களை உண்பதன் மூலம் காயம், வலி மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் சுழற்சியில் சிக்குவதால், எதிர்காலத்தில் ஒருவர் அதற்கு சமமான வேதனைகளை *கர்மவினை* விளைவுகளாக அனுபவிக்க வேண்டும் என்பதை அறிந்து, சிலர் இறைச்சி உண்பதை கைவிடுகின்றனர். 3) ஆன்மீக உணர்வு இன்னொரு காரணமாக விளங்குகிறது. உடலில் ஏற்படும் வேதியல் மாற்றங்களின் மூலமாக உணவு விளங்குகிறது, மற்றும் நாம் உண்பது நமது உணர்வு, உணர்ச்சிகள் மற்றும் அனுபவ மாதிரிகள் மீது தாக்கம் ஏற்படுத்துகிறது. ஒருவர் உயர்நிலை உணர்வில், அமைதியாக மற்றும் ஆனந்தமாக வாழ்ந்து எல்லா உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்த விரும்பினால், அவரால் மாமிசம், மீன், ஓடுடை மீன், கோழி அல்லது முட்டைகளை சாப்பிட முடியாது. ஒருவர் விலங்கு உணவின் பருமனான வேதியல் மாற்றங்களை உடம்பில் உட்புகுத்தும் போது, வதைக்கப்பட்ட உயிரினங்களின் சதையில் புதைந்து இருக்கும் கோபம், பொறாமை, பதட்டம், சந்தேகம் மற்றும் மரண பயத்தை அவர் தனது உடல் மற்றும் மனதிற்கு அறிமுகப்படுத்துகிறார். 4) செரிப்பதற்கு எளிதாக இருந்து, பலவகையான ஊட்டச்சத்துக்களை வழங்கி உடலுக்கு குறைவான சுமைகள் மற்றும் கழிவுப்

பொருட்களை சைவ உணவு வழங்குவதாக மருத்துவ ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இந்த காலத்து மனிதநேயத்தை துன்புறுத்தும் எல்லா முக்கிய நோய்களும் சைவ உணவு உண்பவர்களை குறைவாக பாதிப்பதால், அவர்கள் நீண்ட காலம் ஆரோக்கியமான மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்வை வாழ்கிறார்கள். அவர்களுக்கு உடல் உபாதைகள், மருத்துவரை சந்திக்கும் தேவை, பல் தொடர்பான பிரச்சினை மற்றும் மருத்துவ செலவுகள் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகவும், அவர்களின் உடல்கள் தூய்மையாக மற்றும் அதிக புனிதமாகவும், அவர்களின் சருமம் அதிக தெளிவாகவும், நன்றாக வளைந்து கொடுத்து மென்மையாகவும் இருக்கிறது. 5) இறுதியாக, சுற்றுப்புற காரணமும் இருக்கிறது. பூமி வேதனையில் இருக்கிறது. அதிகரித்து வரும் உயிரினங்களின் அழிவு, கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலத்தை உருவாக்க பழைய மழைக்காடுகளின் அழிவு, மேல்மண் இழப்பால் நீர் மற்றும் காற்றில் மாசுகளின் அதிகரிப்பு ஆகிய அனைத்தும் மனித உணவில் இறைச்சியின் சேர்க்கையை ஒரு முக்கிய காரணமாக தெரிவிக்கின்றன. நமது கிரகத்தின் சுற்றுப்புறத்தை மேம்படுத்துவதில், இறைச்சியை துறக்கும் முடிவு ஏற்படுத்தும் மிகப்பெரிய மாற்றத்தை, வேறு எந்த முடிவாலும் ஏற்படுத்த முடியாது. எதிர்கால சந்ததியர்களுக்கு இந்த பூமியை காப்பாற்ற வேண்டும் என்ற தேவையை மனப்பூர்வமாக உணர்ந்த பலர், இந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே, இந்த முடிவை எடுத்துள்ளனர்.

ஷௌச்ச-ஹ்ரீ

शौच–ह्री



சுத்தம் மற்றும் தவறுக்கு வருந்துதல்

ஒருபோதும் வருத்தம் அல்லது கோபம் இல்லாமல், அகிம்சையை கடைப்பிடித்து, கருணை நிறைந்து, எப்போதும் கவனமாக, ஆணவம் இல்லாமல், விவேகமாக, பொறாமை இல்லாமல், இனிமையாக பேசி, எளிமையாக, மென்மையாக பேசி, தெய்வ பக்தியுடன், அடக்கமாக, தீர்மானிக்கும் ஆற்றலுடன், சுத்தமாக மற்றும் பணிவாக, நேர்மையாக மற்றும் சிவபெருமான் மீது பக்தியுடன் இருக்கும் பக்தன் புனிதமானவனாகவும் திறமை படைத்தவனாகவும் சிவ தீட்சை பெற தகுதியுடையவனாகவும் கருதப்படுகிறான்.

சந்திர ஞான ஆகம, கிரியாபாத, 2.78-81. மொஅடி சஞ ப. 22


THEATRE
A
WINE SHOP

கால்பந்தை பக்கத்து வீட்டில் அடித்ததால், கண்களில் கண்ணீருடன் தனது வருத்தத்தை தெரிவிக்கும் சிறுவன். உள்படம்: X-ரேடிங் கொண்ட திரை அரங்கில், தனது நண்பனை சந்திக்கும் ஒருவன், பாலியல் படங்கள் மற்றும் கீழ்நிலை புலன் இன்ப வாழ்க்கையில் சிக்காமல், ஷௌச்ச *பாதையை கடைப்பிடிக்க வேண்டும் என்று எச்சரிக்கிறான்.*

திங்கட்கிழமை

பாடம் 29

ஷௌச்ச:

சுத்தம்

இயமங்களில் பத்தாவது இடத்தில் இருக்கும் சுத்தம் என்கிற *ஷௌச்ச*, நாம் மற்ற ஒன்பது *இயமங்களில்* கட்டுப்பாட்டுடன் இருப்பதன் விளைவாக அமைகிறது. தாங்கள் பேசுவதற்கு முன்பாக நன்றாக யோசித்து, உண்மையாக, அன்பாக, பயனுள்ளதாக மற்றும் தேவையானதை மட்டுமே பேசி மனம் மற்றும் உடலில் ஒழுக்கத்துடன் இருக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் இயல்பான பாரம்பரியமாக சுத்தம் என்கிற *ஷௌச்சம்* விளங்குகிறது. *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* கடைப்பிடித்து சுத்தமான எண்ணங்களுடன், தங்கள் உடலுக்கு பொருத்தமில்லாத வெளியுலக தடைகள் இல்லாமல் இருப்பவர்கள், இயல்பான ஆனந்தத்துடன் திருப்தியாக இருந்து, *ஜபம்* செய்ய தயாராக இருக்கிறார்கள். *ஜப யோகம்* ஆன்மீக சக்திகளை உயர்த்தி, இன்று பள்ளிகள் மற்றும் பல்கலைகழகங்களில் ஒருவர் பெறும் சாதாரண அறிவை மிஞ்சும் ஒரு புறவெளி புத்தியை மனதின் மெய்ஞ்ஞான பகுதிகளில் விழிப்படைய செய்து, தற்பெருமை மற்றும் அகந்தையை அழிக்கிறது. மனச்சுத்தம் என்பது முதல்நிலை மற்றும் துணைநிலை நிறங்களின் மென்மையான சாயல் நிரம்பிய ஒரு பிரகாசமான ஒளி உடலுடன் வாழ்க்கை வழங்கும் ஒவ்வொரு சூழலிலும் இருப்பதை குறிப்பிடுகிறது. சிந்தனைகள் உண்மையான சூழ்நிலைகளாக உருவெடுப்பதை இந்த கட்டுபாட்டை பயிற்சி செய்பவர்கள் அறிந்துள்ளார்கள். அதனால் தான் எதை சிந்திக்க வேண்டும் மற்றும் யார் மீது தனது சிந்தனைகளை இயக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்கள். ¶ஒரு சுத்தமான தனித்த சூழலில், சுத்தமான துணிகளை அணிந்து, அடிக்கடி குளித்து, தியானம் செய்யும் அறையை சுத்தமாக வைத்திருந்து, சுத்தமான காற்றை சுவாசித்து, வீட்டில் சுத்தமான காற்றை பரவ செய்வது ஆகிய அனைத்தும் சுத்தம் என்ற *ஷௌச்சத்தை* பூர்த்தி செய்ய, மிகவும் முக்கியம் ஆகும். *ஷௌச்சம்* என்பது செடியில் இருந்து எடுத்த சில நிமிடங்களில் சமைத்த சுத்தமான உணவையும் குறிப்பிடுகிறது. இதில் ஆக்கப்பூர்வமான சக்திகள், பாதுகாக்கும் சக்திகள் மற்றும் அழிக்கும் சக்திகள் அடங்கியுள்ளன. பாதுகாக்கும் சக்திகள் என்பது ஒரு பழம் அல்லது இலைக் காய்கறிகளின்

தொடர் வளர்ச்சியில் அடங்கியுள்ளது. அது தன் இயல்பான அளவை அடைந்ததும் பறிக்கப்படவில்லை என்றால், அது அந்த தாவரத்தில் நிலைத்து இருக்கிறது மற்றும் அதை அந்த தாவரத்தின் உயிர் பாதுகாக்கிறது. அது பறிக்கப்பட்டதும், அழிக்கும் சக்தியான *முமியா* செயல்பட தொடங்குகிறது. அதனால் *முமியா* சக்தி வலுவடையும் முன்பாக, பறிக்கப்பட்டதும் சமைத்து சாப்பிட்டு விடவேண்டும். *முமியா* என்பது உயிரணுக்களின் அழிவை ஏற்படுத்துவதால், அது ஒரு தூய்மையற்ற சக்தியாக இருக்கிறது. நாம் தொடர்ந்து அழிந்துக்கொண்டு இருக்கும் உணவை சாப்பிட்டு வந்தால், உடல் மற்றும் மனம் மந்தமடைகிறது, மற்றும் பேச்சு தடுமாறி நாம் சொல்ல வந்ததை தவிர்த்து தேவையற்றதைப் பேசத் தொடங்குகிறோம். *முமியா* என்கிற செய்முறையில் இருக்கும் உறைந்த உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், பெட்டியில் அடைக்கப்பட்ட உணவுகள், எளிதில் தயார் செய்யும் உணவுகளை அதிகமாக சாப்பிடும் மக்களின் மூலம் பல வருந்தத்தக்க, மனச்சோர்வைத் தரும் சூழ்நிலைகள் விளைகின்றன. ¶சுத்தமான உடைகள் மிகவும் முக்கியம். சுத்தமான ஆடையை அணிவதன் மூலம் ஒருவர் உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியையும் பெறுகிறார். தினமும் ஆடையை ஐந்து நிமிடங்களுக்கு வெயிலில் உலர்த்துவதன் மூலம், அது தூய்மை அடைந்து பொலிவை பெறுகிறது. சருமத்தின் மூலம் வெளியிடப்படும் உடல் கழிவுகளை, நாம் அணியும் துணி உறிந்து கொள்கிறது. ஆடைகளில் சேறு அல்லது கறைகள் படிந்து அசுத்தமடைந்தால் மட்டுமே, அவற்றை சுத்தம் செய்யவேண்டும் என்பதே நமது வழக்கமான சிந்தனையாக இருக்கிறது. உடல் நாற்றம் மற்றும் துவாரங்கள் வழியாக கசிந்து, ஆடைகளில் சிக்கிக் கொள்ளும் கழிவுகளுக்கு குறைவான முக்கியத்துவம் தரப்படுகிறது. சுத்தமான ஆடையை அணிவதால் புத்துணர்வு கிடைப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை. சூரிய ஒளி மற்றும் சுத்தமான காற்று கணிசமான உடல் கழிவுகளை நீக்குவதோடு அனைத்து வகை ஆடைகளுக்கும் புத்துயிர் அளிக்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 30

சுற்றுப்புறத்தை சுத்தமாக

வைத்திருத்தல்

வீட்டை சுத்தம் செய்வது என்பது ஒருவர் தனக்கு மிகவும் அருகாமையில் இருக்கும் சுற்றுபுறத்தை சுத்தம் செய்வதை குறிக்கிறது. வீட்டில் இருப்பவர்கள் மற்றும் விருந்தாளிகளின் மனித ஒளிஉடல்களின் வெளியேற்றத்தை, அங்கிருக்கும் ஒவ்வொரு அறைகலன், வாசல் மற்றும் சுவர்கள் பிடித்து

வைத்துக் கொள்கின்றன. தூசியை அகற்றி சுத்தம் செய்யும் போது, இந்த மிச்சங்களை துடைக்க வேண்டும். இதைப்போன்று தொடர்ந்து சுத்தம் செய்வதால், ஒவ்வொரு அறையும் பளிச்சென்று பிரகாசமாக இருக்கும். இவ்வாறு செய்யவில்லை என்றால், அங்கே சேகரிக்கப்பட்ட கடந்தகால உணர்வுகளை, அந்த அறையில் வசிப்பவர்களின் ஒளி உடல்கள் கிரகித்துக்கொள்வதால், அந்த வீட்டு அறைகள் வசிப்பவர்களின் உணர்வுகள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. அதனால் தூசிப்படிந்த அறைகள் மனச்சோர்வு ஏற்படுத்துவதிலும், சுத்தமான அறைகள் உற்சாகப்படுத்துவதிலும் எந்த அதிசயமும் இல்லை. ¶தாயும் தந்தையும் வெளியுலகில் வேலை செய்யும் இந்த காலத்தில், வீடு என்பது பெரும்பாலும் சாப்பிட்டு உறங்குவதற்காக மட்டுமே பயன்படுகிறது. ஆனால் அந்த வீட்டை பளிச்சென்று வைத்திருக்க சூட்சுமமாகவும் தூலமாகவும் தினசரி கவனிப்பைப் பெற்றால், அது ஒரு காலி கட்டமைப்பாக இல்லாமல் ஒரு சுமூகமான இடமாக இருக்கும். நன்றாக ஒழுங்குப்படுத்தப்பட்டு சுத்தமாக இருந்து, மூன்று வேளை உணவுமுறை கடைப்பிடிக்கப்பட்டு, விடியற்காலை பூசைகள் நடத்தப்பட்டு மற்றும் அவற்றிற்கு தகுந்த மதிப்பளிக்கப்பட்டு, குடும்பம் ஒன்றாக வசித்து, சாப்பிட்டு, உரையாடி வழிபாடு நடத்தும் ஒரு வீட்டில் *தேவர்கள்* வசிப்பார்கள். அத்தகைய வீடு *தேவர்கள்* வாசம் செய்யும் இடமாக விளங்குகிறது. மற்ற வீடுகள் *அசுர* சக்திகள் மற்றும் கீழ்நிலை இச்சைகள் மூலம் பூமியுடன் பிணைந்து இருக்கும் ஆவி உடல்கள் வாசம் செய்யும் இடமாக விளங்குகின்றன. ¶ஒரு *ஷௌச்ச* வீட்டில் முறையாக *சம்ஸ்காரங்களை* கடைப்பிடிக்கப்படுவது மிகவும் முக்கியம், அதிலும் குறிப்பாக மரணத்திற்கு பிறகு மீண்டும் வீட்டை புனிதப்படுத்த *அந்த்யேஷ்டி* என்கிற ஈமச்சடங்குகளை முறையாக செய்ய வேண்டும். பிறப்பு மற்றும் இறப்பின் போது, குறைந்தது முப்பத்து ஒன்று நாட்களுக்கு கோயில் அல்லது பூஜை அறைக்குள் நுழையாமல் தீட்டை அனுட்டானம் செய்யவேண்டும். நல்ல நட்புடன் இருந்து, மனதை சுத்தமாக வைத்து அசுத்தமான சிந்தனைகளை தவிர்த்து, தங்கள் ஆசைகளை கட்டுப்படுத்தி உடல், மனம் மற்றும் வாக்கில் *ஷௌச்சத்தை* முழுமையாக்க விரும்புவோர், அத்தகைய கட்டாய சடங்குகளை பின்பற்றுவது முக்கியம் ஆகும். ¶சுத்தம் மற்றும் அசுத்தத்தை மனித ஒளிஉடல் மூலம் உணர முடியும். *இயமம்* மற்றும் *நியமங்களில்* குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, தனது கீழ்நிலை உள்ளுணர்வு இயல்பை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துபவரின் ஒளி உடல் வெளிச்சத்தில் நாம் சுத்தத்தை காண்கிறோம். அவருடைய ஒளி உடல் பிரகாசமாக இருக்கிறது மற்றும் அவரது ஆன்மாவில் இருந்து வெளிவரும் வெள்ளை கிரணங்கள், அவருடைய மனநிலை மற்றும் உணர்ச்சிகளை குறிப்பிடும் பல்வேறு சாயல்கள் மற்றும் நிறங்களை பிரகாசிக்க செய்கிறது. சுத்தமில்லாத மனதுடன் இருப்பவர்கள், தங்கள் மனநிலை மற்றும் உணர்ச்சிகளை அனுபவிக்கும் போது, அவர்களின் ஒளிஉடல் நிறங்கள் கருப்பு நிறபேதத்தை கொண்டிருக்கின்றன. ஒளி உடலில்

இருக்கும் கருப்பு நிறம், கீழ்நிலை லோகங்களான அறியாமையின் லோகங்கள், *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் *தள சக்கரங்களில்* இருந்து வருகின்றன.

புதன்கிழமை

பாடம் 31

ஆரோக்கியமான

நட்பு

கலியுகத்தின் இன்றைய காலகட்டத்தில், பிரகாச உலகமான தேவலோகத்தில் இருந்து தூல பிறவியை எடுத்தவர்களை காட்டிலும் அறியாமையின் இருண்ட உலகமான நரகலோகத்தில் இருந்து பிறந்தவர்கள் அதிகமாக இருப்பது பரிதாபத்திற்குறியது. அதனால் அவர்கள் கோபம், ஊழல், வஞ்சகத்துடன் *மூலாதாரத்திற்கு* மேலிருக்கும் சக்கரத்தில் வாழும் தெய்வீக பண்புடைய மக்களை அவமதிக்க ஒன்று சேரும் போது, அவர்கள் வலுவாக இருக்கிறார்கள். தெய்வீக பண்புடைய மக்கள் யாருடன் சேரவேண்டும் மற்றும் யாருடன் சேரக்கூடாது என்பதை ஆராய்ந்து தெரிந்துக்கொள்ள வேண்டும். தங்களால் நரகலோக மக்களிடம் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அவர்கள் நினைக்கக் கூடாது. கோபம், பேராசை, பொறாமை, அவமதிப்பு, பொருளாசை மற்றும் காமத்தில் பிணைந்து இருக்கும் *அசுர* பண்புடைய மக்கள், தெய்வீக பண்புடைய மக்களை தங்கள் லோகத்திற்கு அழைத்து வந்து, தங்களின் கொடூரமான, இரக்கமில்லாத மற்றும் கருணையற்ற உணர்வுகளை பயன்படுத்தி அவர்களை சித்ரவரதை செய்து மற்றும் துன்புறுத்தி, அவர்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தி, அந்த மாற்றத்தை தக்க வைக்கவும் முடியும் என்பதை அவர்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். *ஷௌசச்சத்தை* தக்க வைக்க, ஒருவர் தன்னை சுற்றி நல்ல தெய்வீக பண்புடைய மக்களுடன் இருந்து, மக்களிடம் இருக்கும் வேறுபாட்டை புரிந்து செயல்படும் திறமையுடன் இருக்கவேண்டியதும் மிகவும் அவசியம். தங்களின் ஆன்மீக இயல்பு இன்னொரு ஆன்மாவை, அறியாமையின் இருண்ட உலகில் இருந்து உயர்த்தும் என்ற எண்ணத்துடன் உணர்ச்சிவசப்படும் எண்ணற்ற முட்டாள்தனமான ஆன்மாக்கள், மகாதேவர்கள் செல்லாத மற்றும் தேவர்கள் செல்ல அஞ்சுகிற பாதையில் சென்று, வஞ்சனை மற்றும் புத்திசாலத்தனமான சூழ்ச்சியின் காரணமாக அதே உலகில் சிக்கிக் கொள்கிறார்கள். நாம் அதைப் போன்று முட்டாள்தனமாக இல்லாமல், உயர்நிலை உணர்வு மற்றும் கீழ்நிலை உணர்விற்கு இடையில் இருக்கும் வித்தியாசத்தை உணர்ந்து செயல்படலாம். உயர்நிலை உணர்வில் இருக்கும் மக்கள் தங்கள் *ஷௌசச்சத்தை* பூர்த்தி செய்ய உயர்நிலை உணர்வுடைய மக்களுக்கு மத்தியில் இருக்க வேண்டும். ¶ஒரு சுத்தமான வாழ்க்கையை வாழத் தொடங்குவது மிகவும் எளிது. நீங்கள் அதற்காக எதையும் துறக்கத்

தேவையில்லை. சிறப்பாக இருக்கும் விஷயங்களை விரும்பத் தொடங்குவதே சுத்தத்தின் சாரம் ஆகும். நீங்கள் துறக்க வேண்டும் என்று நினைப்பதை துறக்கும் போது, அது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. அதற்கு பதிலாக, ஒரு சிறப்பான வாழ்க்கையை மற்றும் *ஷௌசத்தை* நாடுங்கள். *தாமச* உணவில் இருந்து *ராஜச* உணவிற்கு செல்கிறோம், மற்றும் *சாத்வீக* உணவு சுவையாக இருந்து நமக்கு திருப்தியை தருவதால், நாம் *ராஜச* உணவை கைவிடுகிறோம். இந்த பூமியில் இருக்கும் எல்லோரும், ஆசையால் தூண்டப்படுகிறார்கள் அல்லவா? ஆகையால் நாம் ஆசையை திசை திருப்பலாம். அந்த ஆசைகள் நம்மை திருத்தி அமைக்க உதவியாக இருக்கட்டும். புதிதாக சிறப்பாக ஒன்று கிடைத்ததும் பழைய பொருள் மீது ஆசைகளை மங்க வைக்கும் புனிதமற்ற, உற்சாகம் தரும் கண்டிக்கத்தக்க விஷயங்களைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும் அதிக சுவையான *சாத்வீக* உணவுகள், அதிக கம்பீரமான ஓசைகள், நம் கண்களுக்கு தென்படும் அதிக முழுமையான பொருட்கள் மீது ஆசை வைக்க கற்றுக்கொள்வோம். நமது ஆசைகள் நம்மை முழுமையாக்கட்டும். நாம் ஒரு புதிய யுகத்தின் குறிக்கோளாக அதிக சுதந்திரமான வாழ்க்கைக் கனவு, விடுதலை மற்றும் மகிழ்ச்சி மீதான நாட்டத்தை அமைத்துக் கொண்டு, நமக்கு தற்போது தீமையை விளைவிக்கும் செயலை விட சிறப்பான ஒன்று வழங்கும் மகிழ்ச்சியை நாடி செல்லலாம். நாம் முன்னேறி செல்லும் நோக்கத்துடன் நமது பாதையில் நடையை தொடங்கலாம். ¶"காபி ஊக்கியாகவும் உடல் அமைப்புத் திறனை குறைக்கும் மருந்தாகவும் இருப்பதால், நான் அதை நிறுத்திவிட்டேன். இறைச்சி கொழுப்புச் சத்தை உருவாக்கும் கொலைகாரனாகவும் காடு அழிவதற்கும் காரணமாக இருப்பதால், நான் அதை நிறுத்திவிட்டேன்," என்று ஒரு சீடன் என்னிடம் கூறினார். இன்னொரு அணுகுமுறையாக, வேறு ஒரு சிறந்த பானத்தை குடிக்க காபியை விட்டு விடலாம். எல்லா பானங்களையும் சோதித்து பாருங்கள். காபி அசீரணத்தை ஏற்படுத்துவதாகவும், எண்ணெய் உணவுகள் மற்றும் குறிப்பாக இரவில் சீரணிக்கப்படமால் வயிற்றில் தங்கும் உணவை சீரணிக்க பச்சை தேயிலைத் தேநீர் உதவுவதாகவும் சிலர் கண்டறிந்துள்ளனர். அதன் சுவையும் நன்றாக இருக்கும். குளிரூட்டப்பட்டு பதப்படுத்தப்பட்ட இறந்த இறைச்சியை காட்டிலும், குறிப்பாக ஊட்டச்சத்து நிறைந்த சுத்தமான காய்கறிகளை, தாவரத்தில் இருந்து பறித்த சில நிமிடங்களில் சமைத்தால், அது அதிக உயிர்சக்தி மற்றும் ஆற்றலையும் தருவதாக வேறு சிலர் கண்டறிந்துள்ளனர். ஒரு விலங்கை கொன்று, அதை குளிரூட்டி, பதப்படுத்தி, மீண்டும் இறக்கும் வரை அதை சமைத்தால் கிடைப்பதை காட்டிலும், ஒரு விலங்கை கொன்று அதை உடனே சாப்பிட்டால், அது அதிக ஊட்டச்சத்துடன் இருப்பதாக வேறு சிலர் கண்டறிந்துள்ளனர். ¶நீங்கள் ஒரு பொருள் மீதிருக்கும் பற்றை துறக்கும் விஷயத்தில் பக்குவமாக நடந்துக் கொள்ளுங்கள். பக்குவமில்லாத ஆன்மீகவாதிகள் தாங்கள் துறந்ததைப் போன்று மற்றவர்களும் இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள்.

பக்குவமடைந்த ஆன்மீகவாதிகளுக்கு அது சுய விருப்பமாக இருப்பதால், அவர்கள் அதை அமைதியாக துறந்து தங்கள் இயல்பு வாழ்க்கையை தொடர்கின்றனர். பக்குவமில்லாத ஆன்மீகவாதிகள் தாங்கள் துறந்ததைப் பற்றி எல்லோரும் தெரிந்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புவார்.

வியாழக்கிழமை

பாடம் 32

ஹ்ரீ: கழிவிரக்கம்

மற்றும் அடக்கம்

பத்து *நியமங்கள்* அல்லது சுய கட்டுப்பாட்டு பயிற்சிகளில் முதலாவதாக இருக்கும் *ஹ்ரீ* என்பது அடக்கமாக இருந்து செய்த தவறுகளுக்காக அவமானப்பட்டு, *சம்பிரதாய* முறைப்படி ஒரு *குரு* போதிக்கும், வழங்கும் புரிதலின் மூலம் வேதனைகளில் இருந்து விடுபடுவதற்கு அந்த *குருவின்* அருளை நாடுவதை குறிப்பிடுகிறது. இன்று அடக்கம் மற்றும் கழிவிரக்கத்தைப் பின்பற்ற அதிக முன்மாதிரிகள் இல்லை என்பதால், *நியமங்களில்* பயிற்சி செய்வதற்கு கடினமாகவும் புரிந்துக் கொள்வதில் அதிக சிக்கல் நிறைந்ததாகவும் கழிவிரக்கம் விளங்குகிறது. ஆனால் இன்றைய உலகில் முன்மாதிரியை பின்பற்றும் பங்கு அதற்கு நேர் எதிரான பண்புகளில் இருக்கிறது. இது தொலைக்காட்சி, திரைப்படங்கள், நாவல்கள், பத்திரிகைகள், நாளிதழ்கள் மற்றும் மற்ற ஊடகங்களில் பிரதிபலிக்கிறது. இன்றைய உலகில் ஒருவர் துணிச்சலுடன், அகந்தை மற்றும் கர்வத்துடன் இருக்கவேண்டும். அத்தகைய முன்மாதிரிகளை மட்டுமே நாம் எங்கும் காண்கிறோம். இன்றைய உலகில் ஒருவர் ஆணவத்துடன் இருக்க வேண்டியுள்ளது. அத்தகைய முன்மாதிரிகளை மட்டுமே நாம் எங்கும் காண்கிறோம். அதனால் ஒருவர் தான் செய்த தவறுக்கு வருத்தத்துடன் அல்லது அடக்கமாக இருந்தால், அவருடைய சகாக்கள், குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு அவர் பலவீனமாக தென்படுகிறார். ¶அதனால் அடக்கம் என்பது திறமை இல்லாமல், பதட்டத்தில் இருந்து, உணர்ச்சிப்பூர்வமாக வளர்ச்சி பெறாத அல்லது படிப்பறிவு இல்லாதவரின் பண்பாக ஊடகங்களில் சித்தரிக்கப்படுகிறது. மேலும் கழிவிரக்கம் அல்லது தவறுக்காக வருந்துவதை "தங்கள் வாழ்க்கையை ஒழுங்குமுறைப்படுத்த தெரியாதவர்கள்," செய்த தவறை நியாயப்படுத்த முடியாதவர்கள், அல்லது தான் செய்த தவறை இன்னொருவர் மீது பழியாக சுமத்த தெரியாதவர்களின் பண்பாக உலகில் ஊடகம் சித்தரிக்கிறது. ஆன்மாவின் இயல்பான பண்புகளைக் அடக்கம் மற்றும் கழிவிரக்கம் இருந்தாலும், ஆன்மா இந்த பண்புகளை வெளிப்படுத்தும் போது, அவற்றை தடுப்பதற்கே இயல்பாக முயற்சி

நடைபெறுகிறது. ¶இதை நாம் நேர்மறையான கண்ணோட்டத்துடன் அணுகலாம். "சிலர் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று கற்றுத் தருவார்கள், மற்றும் சிலர் நாம் எதை செய்யக்கூடாது என்பதை கற்றுத் தருவார்கள்," என்பதை நாம் கேட்டிருக்கிறோம். நவீன ஊடகங்களில் பெரும்பாலானவை, நாம் எதை செய்யக்கூடாது என்பதை போதிக்கின்றன. அது அன்றைய நிகழ்வுகளை பதிவு செய்து அறிவிக்கும் முயற்சியில், அதன் போக்கு மதச்சார்பற்ற மனிதநேயம், பொருள்முதல்வாதம், இருத்தலியல்வாதம், குற்றம் மற்றும் தண்டனை, பயங்கரவாதம் போன்ற வேறுவகை தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சிலசமயங்களில் நாம் கற்க விரும்புவதற்கு நேர்மாறான விஷயங்களை பார்த்து நிறைய கற்றுக்கொள்ள முடிகிறது. தொலைகாட்சியில் கர்வம் மற்றும் ஆணவத்துடன் சித்தரிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் தங்கள் வீழ்ச்சியை சந்திக்கிறார்கள். இது எப்போதும் மிகவும் நன்றாக சித்தரிக்கப்பட்டு நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கிறது. மக்கள் தங்கள் இதயத்தின் ஆழத்தில், கர்வமுள்ள மனிதர் அல்லது அவரது ஆணவ வெளிப்பாட்டை விரும்புவதில்லை, அதனால் அவருக்கு தேவையான தண்டனை கிடைப்பதை பார்க்கும் போது மகிழ்ச்சி அடைகிறார்கள். அதே மக்கள் தங்கள் இதயத்தின் ஆழத்தில், தனது முகம் மற்றும் தனது நடத்தையில் திருப்தி மற்றும் சுகத்தை முழுமையாக வெளிப்படுத்தும் அடக்கமான மனிதர், உண்மையான மனிதர், பொறுமையான மனிதர், உறுதியான மனிதர், இரக்க குணமுள்ள மனிதரை மதிக்கிறார்கள். ¶இவற்றை அறிந்த இந்துக்களாகிய நாம், *ஹ்ரீ* என்கிற கழிவிரக்கத்தை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பயன்படுத்த வேண்டும். மனப்பூர்வமாக "என்னை மன்னித்து விடுங்கள்," என்று சொல்வது, இன்றைய சமூகத்திலும், *ஹ்ரீ* அல்லது கழிவிரக்கத்தை பயன்படுத்த அதிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகளில் ஒன்றாகும். இதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். "என்னை மன்னித்து விடுங்கள்," என்கிற இரண்டு அற்புதமான வார்த்தைகளை கேட்டதும் அதிக இழிவான, கர்வம் மற்றும் ஆணவம் நிறைந்த, தன்னலம் கருதுபவரின் இதயமும் உருகும். ¶மன்னிப்பை கேட்கும் போது, ஒரு சிறந்த வழி உள்ளதை நீங்கள் உணர்ந்து இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புண்படுத்திய அல்லது தவறு இழைத்த நபரிடம் தெரிவித்து அவரது மன்னிப்பை கேளுங்கள். அந்த நபர் அதிக ஆணவத்துடன் மன்னிக்காமல் இருந்தால், நீங்கள் உங்கள் பங்கை செய்துவிட்டீர்கள் என்ற திருப்தியுடன் அங்கிருந்து விலகுங்கள். இதனால் அவர் மட்டுமே குழம்பிய மனச்சுமையுடன் இருப்பார். அந்த குற்றம் அவருடைய மனதில் உருகி அவருடைய இதயம் கனியும் வரை, அவர் அதைப்பற்றி சிந்தித்து, எப்படி மற்றும் ஏன் மற்றும் எதை மன்னிக்கக்கூடாது என்பதை நியாயப்படுத்திக் கொண்டிருப்பார். ஒரு பனிக்கட்டி குளிர்சாதனப்பெட்டியில் உருகுவதற்கு வாய்ப்பில்லை, அதைப் போல ஒரு கல்நெஞ்சம் கனிவதற்கும் வாய்ப்பில்லை. அது அவ்வாறு கனிந்தாலும், அவர் உங்களை மன்னித்து விட்டார் என்பதை

நீங்கள் அறிந்து திருப்தி அடைவதை, அவருடைய கர்வம் தடுக்கக்கூடும். ஆனால் அதை உங்களால் உணரமுடியும். நீங்கள் அடுத்த முறை சந்திக்கும் போது அவரிடம் குரோதம் குறைந்த கண்கள், தளர்வுற்ற பேச்சு மற்றும் ஒரு முழுமையான புன்னகையை தடுக்கும் போக்கையும் காண முடியும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 33

உடல்மொழி மற்றும்

மனசாட்சி

செய்த தவறுகளுக்கு வருத்தத்தை வெளிப்படுத்த இன்னொரு வழி இருக்கிறது. நீங்கள் தவறு இழைத்தவர்களுக்கு மதம்சார்ந்த சேவையை செய்யுங்கள். அவர்களுக்கு பரிசுகளை வழங்குங்கள், அவர்களுக்கு உணவு அளியுங்கள். சிலரை வார்த்தைகளால் அணுக முடியாது, மன்னிப்புக் கேட்டால் அது வாக்குவாதமாக மாறி, அந்த தவறு தன்னையே வலுப்படுத்திக் கொள்ளும். அத்தகைய நபர்களிடம் கூடுதல் கவனத்துடன் இருங்கள். அவர்கள் நடந்து செல்லும் போது கதவை திறந்து வைத்திருங்கள். அன்பாக சேவை செய்ய எந்த வாய்ப்பையும் நழுவ விடாதீர்கள். அவர்கள் இல்லாத போது அவர்களை புகழ்ந்து பேசுங்கள். அந்த புகழ்ச்சி உண்மையாகவும் நேரப் பொருத்தத்துடனும் இருக்கவேண்டும். போலிப் புகழ்ச்சி முறையாக இருக்காது. இத்தகைய அமைதியான நடத்தை வருத்தம், கழிவிரக்கம் மற்றும் உங்கள் செயல்களை நீங்கள் மறுபரிசீலனை செய்து, அதில் முன்னேற்றம் தேவை என்பதை நீங்கள் அறிந்துள்ளதை காண்பிக்கிறது மற்றும் அந்த முன்னேற்றம் உங்கள் நிகழ்கால மற்றும் எதிர்கால செயல்களில் தெரியவரும். ¶பெரும்பாலான மக்கள் அவமானப்படுவது மற்றும் அடக்கத்துடன் இருப்பது மற்றும் செய்த தவறுகளுக்கு வருந்துவது ஆகியவற்றை வேதனையில் தலை குனிவதாக நினைக்கிறார்கள். இதை எல்லோராலும் செய்ய முடியும் என்றாலும், இதயக் கடிவாளங்களை நன்றாக கட்டுப்படுத்தி தலை குனியவில்லை என்றால், இன்னொருவரை நேராக பார்க்க முடியாத அளவிற்கு மிகவும் ஆழமாக அவமானப்படவில்லை என்றால் அது உண்மையாக இருக்காது. வேதனையில் தலை குனிவது உண்மையாக இருந்தால், எல்லோரும் அதை அறிந்துக்கொண்டு உங்களை இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்வார்கள். ஆனால் இன்றைய உலகில் சிறிது நேரத்திற்கு வேதனையில் தலை குனிந்தால் தப்பிக்கலாம் என்று நினைப்பது தவறு. இன்றைய உலகில் மக்கள் கூர்ந்து கவனிப்பதால், நீங்கள் பாசாங்கு செய்வதாக அவர்களுக்கு சந்தேகம் வந்தால், அவர்கள் உங்களை

மதிக்கமாட்டார்கள். ¶சைவ பாரம்பரியத்தில் ஆன்மாவின் முதிர்ச்சியை கோதுமைப் பயிருடன் ஒப்பிடுவது உண்டு. சிறியதாக வளரும் போது, கோதுமை பயிரின் தண்டுகள் உயரமாக நிமிர்ந்து இருக்கும், ஆனால் அவற்றின் தலைகள் முதிர்ச்சி பெற்றதும், தான் வழங்கும் தானியங்களின் பாரத்தால் அவை தலை குனிந்துநிற்கும். அதைப் போல, ஒரு மனிதனும் தனது ஆன்மீக வளர்ச்சியின் தொடக்க காலத்தில் மட்டும் சொந்த கருத்தை வலியுறுத்தி, கர்வம் மற்றும் தற்பெருமையுடன் இருப்பான். அவன் பக்குவமடைந்து தெய்வீக அறிவின் சேகரிப்பை வழங்கும் போது, அவனும் தலை குனிகிறான். உடல்மொழி உடல் பற்றிய உண்மையான தகவலை வழங்க வேண்டும். அது உண்மையான தகவலை முழுமையாக வெளிப்படுத்துகிறது. உடல்மொழி என்பது உடல் வழியாக வெளிப்படும் மனதின் மொழி என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம். கழிவிரக்கத்தை வெளிப்படுத்த அழும் போது, அந்த அழுகையை நிர்பந்திக்கக்கூடாது. பலர் செயற்கையாக அழுவதற்கு தகுந்த கருவிகளுடன் இருப்பார்கள். உண்மையான கண்ணீருக்கும் கண்களில் நீரை வரவழைக்க ஒரு சுரப்பியில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட கோளாறுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை, கண்களால் காண்பவரின் ஆன்மாவால் உணரமுடியாது என்று நாம் முடிவு செய்யக்கூடாது. ¶*ஹ்ரீ* என்பது *தர்மம்* அல்லது மனசாட்சிக்கு எதிரான செயலால் ஏற்பட்ட வருத்தத்தை குறிக்கிறது. மூன்று வகை மனசாட்சிகள் உள்ளன, அதில் முதலாவது முறையான அறிவாலும், இரண்டாவது அரைகுறை அறிவாலும்; மூன்றாவது தவறான அறிவாலும் உருவாக்கப்பட்டவை. அடிமனதில் இருக்கும் இந்த மூன்று வலைப்பின்னல்கள் வழியாக ஆன்மா செயல்பட்டு தனது தகவலை வழங்கவேண்டும். தனக்கு இழைக்கப்பட்ட ஒரு அநீதியை, இன்னொருவருக்கு அநீதி இழைப்பதன் மூலம் ஈடுகட்ட வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் வளர்க்கப்பட்டவர்கள், அதை செயல்படுத்த முடியாத போது, சிறிது குற்ற உணர்வுடன் இருக்கக்கூடும். எதை செய்வது, எது சரி மற்றும் எது தவறு என்ற குழப்பத்தில் இருப்பவர்கள், தங்கள் அடிமனதில் அரைகுறை அறிவுடன் இருப்பதால், அவர்கள் எப்போதும் குழப்பத்தில் நிலைத்து இருப்பார்கள். ¶நாம் ஆன்மா வழங்கும் தகவல்களை குற்ற உணர்வு வழங்கும் தகவல்களுடன் குழப்பிக் கொள்ளக்கூடாது. குற்ற உணர்வு என்பது *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் *சக்கரங்களை* குறிக்கும் உள்ளுணர்வு மனதின் தகவல் ஆகும். இருண்ட கீழ்நிலை உலகில் வாழும் பலர் குற்ற உணர்வை அறிகிறார்கள் மற்றும் அந்த உணர்வை எதிர்தாக்குதல் மூலம் நிறைவு செய்து கொள்கிறார்கள். இந்த பதிலடி வழங்கும் அணுகுமுறை, சரியான மனசாட்சி இல்லை. அது ஆன்மாவின் மொழி இல்லை. இது உயர்நிலை உணர்வு இல்லை. இது குறிப்பாக *மூலாதாரத்திற்கு* மேலிருக்கும் *சக்கர* சன்னல்கள் வழியாக வெளியே பார்க்கும் பிரகாசமான உட்புற சக்தியும் இல்லை. வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளும் குற்ற உணர்வை கொண்டிருக்கின்றன. ¶ஆன்மாவிற்கு சொந்தமான உண்மையான மனசாட்சி

என்பது, *வேத* மற்றும் *ஆகம* அறிவு அல்லது *இயமம்* மற்றும் *நியமங்களின்* அறிவு நிரம்பி மனம் வழியாக செல்லும் ஒரு தூண்டுதல் ஆகும். *கர்மவினை*, மறுபிறவி, *சம்சாரம்*, *வைதீக தர்மத்தின்* உண்மையான அறிவு புரிந்துகொள்ளப்பட்டதும், ஆன்மா மேற்கொள்ளும் திருத்தும் செய்முறையான, உண்மையான கழிவிரக்கம் உணரப்படுகிறது. இந்த கழிவிரக்கம் உடனடியாக கீழ்நிலை மனதின் மீது அந்த நபர் எப்படி, எங்கே மற்றும் ஏன் வழி தவறினார் என்பதையும், மீண்டும் விரைவாக மகிழ்ச்சியுடன் பாதைக்கு திரும்பி முன்னேறுவதற்கான வழிமுறையையும் பதிவு செய்கிறது. இங்கே குற்ற உணர்வு இருப்பதில்லை, அதற்கு பதிலாக ஆன்மீக பொறுப்பின் உணர்வு இருக்கிறது, மற்றும் ஒருவர் தனது வாழ்க்கைக்குள், ஆன்மீக கடமையின் உணர்வாக இருக்கும் *தர்மத்தை* முழுமையாக கொண்டு வந்து, நிறைவான அறிவின் அடித்தளத்தில் முன்பே அறிந்துள்ள, அந்த நபரின் உட்புற மனதில் நன்றாக பதிந்துள்ள, இருபது *இயமம்* மற்றும் *நியமங்கள்* மற்றும் *தர்மத்தின் வைதீக* பாதையை கடைப்பிடிப்பதால் வெளிப்பட்ட தவறான செயல்கள் ஏற்படுத்திய இடைவெளியை நிரப்பும் ஒரு வலுவான இயக்கும் தூண்டுதல் இருக்கிறது.

சனிக்கிழமை

பாடம் 34

தவறான செயல்களுக்கு

ஈடுசெய்தல்

புகழை எதிர்பார்த்து செய்யும் போதும், சுயநலமற்ற சேவையை செய்யும் போதும், ஆன்மாவின் தன்னிச்சையான செயல்களை தற்காலிகமாக மறைத்து தடுத்து நிறுத்தும் எண்ணற்ற லௌகீக கடமைகளில் சிக்காமல், ஒரு சுதந்திர ஆன்மாவாக ஒரு நபர் இருக்கும் போது, தவறான செய்கைக்கு அந்த ஆன்மாவின் எதிர்வினை, அதன் சொந்த சக்தியுடன் தடையில்லாமல் வெளிவருகிறது. அதனால் தனிப்பட்ட *சாதனா*, தியானம் அல்லது கோயில் வழிபாட்டின் போது, தடுத்து நிறுத்தப்பட்ட ஆன்மாவின் தனிச்சையான செயல்கள் வெளிவருகின்றன. அதன் வெளிப்பாடு முற்றிலும் எதிர்பாராமல் நிகழும், மற்றும் அதன் விளைவாக முடிவுகள் பின்தொடர்ந்து வரும். மிகவும் வலுவான *பிராரப்த கர்மவினைகளில்* மூழ்கி, கடினமான *கர்மவினை* மாதிரிகள் வெளிப்படும் வாழ்க்கை சுழற்சியை அனுபவிப்பவர்களின் அடிமனம் முறையான அறிவால் நிரம்பி இருந்தாலும், ஆன்மாவின் தனிச்சையான நிலை மூன்று திரைகளால் மூடப்பட்டிருப்பது, அவர்களுக்கு தெரிய வரும். ஒருவர் செய்த குற்றத்திற்கு மன்னிக்கப்பட்டு, அமைதியான மனநிலையை

பெறுவதற்கு தீர்த்த யாத்திரை, ஆன்மீகத் தனிமை, *மௌனப்* பயிற்சி, *மந்திரங்களை ஜபித்தல்*, ஆழ்ந்த தியானம், மற்றும் மிகவும் சிறப்பான *வாசன தாக தந்திரத்தில்* தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்த பயிற்சிகள் தற்காலிகமாக மாயையின் திரைகளை துளைத்துக் கொண்டு ஒளியை பிரகாசிக்க செய்து, எதிர்கால நடத்தைக்கு தேவையான புரிதல், தீர்வுகள் மற்றும் வழிகாட்டலை வழங்கும். ¶ஒருவர் தனது தவறான செயலால் இன்னொருவரை துன்புறுத்தியதால், அவர் தான் செய்த தீங்கினால் ஏற்பட்ட காயத்திற்கு சமமாக, ஒரு ரூபாய் குறையாமலும் ஒரு ரூபாய் கூடாமலும், திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். அந்த காயம் முழுமையாக குணமடைந்ததும், மர்மமான முறையில் அந்த தழும்பும் மறைந்து விடும். இது தான் விதி. இது ஒரு மறைஞான விதி. உணர்ச்சிகள் நிரம்பிய நினைவுகளால் உருவான தழும்புகள் மீதம் இருந்தால், அதிக வேலை செய்ய வேண்டியிருக்கும். முன்பு இனிமையாக நடந்துக்கொள்ளவில்லை என்றால் இனிமையாக நடந்துக் கொள்வதற்கு, முன்பு கடுமையாக பேசி இருந்தால் அன்பாக சில வார்த்தைகளை பேசுவதற்கு, முன்பு வெளிப்படுத்திய உணர்ச்சிகள் மோசமாக, இணக்கம் இல்லாமலும் திருப்தி அளிக்காமலும் இருந்தால் நல்ல உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு, ஒவ்வொருவரும் ஒரு வழியை தேடிக்கொள்ள வேண்டும். ஒரு பொறுப்புள்ள மருத்துவர் அல்லது செவிலி காயத்தை முழுமையாக குணப்படுத்த வேண்டியிருப்பதைப் போல, தவறு செய்தவர் தான் செய்த தவறின் விளைவுகளை, *தர்மத்திற்கு* எதிரான குற்றத்தை, முறையான அறிவாக இருக்கும் *வேத-ஆகம* கோட்பாடுகளுக்கு எதிரான குற்றத்தை, *வேதங்களின்* தொகுப்பாக தோன்றும் *இயமம்* மற்றும் *நியமங்களுக்கு* எதிரான குற்றத்தை எதிர்கொள்ள வேண்டும். நேர்மை, *சந்தோஷம்* திரும்பும் வரை அந்த நபர் தான் செய்த தவறான செயல்கள், பிழைகளால் ஏற்பட்ட விளைவுகளை சந்திக்க வேண்டும். ¶இதை செய்வதற்கு அபூர்வ வித்தைகள் எதுவும் இல்லை. தனது நினைவில் இருந்து சிக்கலான சூழ்நிலை மறையும் வரை, ஒவ்வொருவரும் தனக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்ட காயத்தை குணப்படுத்த தன்னால் இயன்ற வழிகளை தேடிக்கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே, அடிமனதின் ஆழத்தில் பதிந்து இருக்கும் உணர்ச்சியை விடுவிக்க நினைவுகளை எழுதி அதை நெருப்பில் சாம்பலாக்கும் *வாசன தாக தந்திரம்*, மற்றவைகளை ஒப்பிடும் போது ஒரு சிறப்பான தீர்வாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் எந்த முறையை பயன்படுத்தி இருந்தாலும், இந்த முறையால் மட்டுமே தான் செய்த தவறால் ஏற்பட்ட காயம் குணமடைந்துள்ளது என்பது அவருக்கு தெரிய வரும். உண்மையான மன்னிப்பு என்பது நினைவில் இருந்து நீக்குவதிலும் இணக்கம் ஏற்படுத்துவதிலும் சிறந்து விளங்குகிறது. *தர்மத்திற்கு* எதிரான தவறுகள், மற்றும் அதன் பிறகு மக்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தும் அவமானம் மற்றும் கழிவிரக்கத்தின் இந்த செயல்முறையே, அவர்களை அவர்களின் வளர்ச்சியில் முடிவான குறிக்கோளாக விளங்கும்

முக்தியை நோக்கி அழைத்து செல்கிறது. ¶உலகின் மற்ற நாட்டவர்களைப் போல அல்லாமல் ஜப்பான் நாட்டவர்கள் தனக்கு கிடைக்கும் மதிப்பின் மீது மிகவும் கவனமாக இருப்பார்கள், மற்றும் ஒரு ஜப்பான் நாட்டு தொழிலதிபர் தனது குடும்பம் அல்லது தனது நாட்டிற்கு தன்னால் அவமானம் ஏற்பட்டால், அவர் தனது பதவியை ராஜினாமா செய்து விடுவார். இது *ஹ்ரீ* என்கிற கழிவிரக்கத்தை குறிப்பிடுகிறது மற்றும் அது பௌத்த மதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஜப்பான் சமூகத்தில் புதைந்து இருக்கிறது. பௌத்த மதமானது ஒரு மாபெரும் துறவற சமூகத்தில் இருந்து தோன்றியது; ஆனால் இந்து சமயமானது பல சிறிய சமயங்களின் கூட்டமைப்பாகும், மற்றும் அதில் சில துறவற சமூகத்தில் இருந்து தோன்றவில்லை. அதனால் *ஹ்ரீ* என்கிற கழிவிரக்கம் ஜப்பான் கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக இருக்கிறது. ஆசியா முழுவதும் பௌத்த சமய சமூகங்கள் இன்றும் வலுவாக இருப்பதால், அவர்கள் இந்த மற்றும் மற்ற கலாச்சார கட்டளைகளை கடைப்பிடித்து வருகிறார்கள். ¶மரியாதை இழந்த லௌகீகவாதி, எதுவும் நடக்காததைப் போல, முகத்தில் புன்னகையுடன் தனது முகமுடியை மாற்றிக்கொண்டு தனது வேலையைத் தொடர்கிறார். "உங்கள் பண்புகளை மாற்றிக்கொண்டு, வாழ்க்கையைத் தொடருங்கள்," என்கிறது ஒரு பழமொழி. அத்தகைய மக்கள் அமெரிக்க தொலைக்காட்சியில் சித்தரிக்கப்படுவதைப் போல, மற்றும் பொது வாழ்க்கையில் எப்போதும் நடப்பதைப் போல அவமானம், வருத்தம் அல்லது நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவது இல்லை.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 35

அடக்கம், அவமானம்

மற்றும் கூச்ச சுபாவம்

கழிவிரக்கத்தை பொறுத்தவரை, இந்து துறவி விசேஷ கட்டுப்பாடுகளை கொண்டிருக்கிறார். அவரிடம் கட்டுப்பாடுகள் இல்லை என்றால், அவர் ஒரு வஞ்சகராக கருதப்படுகிறார். அவர் அதை கடைப்பிடிக்க போராடிக்கொண்டும், அவர் அதை தொடர்ந்து நிறைவேற்ற முடியாமல் இருந்தாலும், அவர் ஒரு நல்ல துறவியாகவே கருதப்படுவார். அவர் தொடர்ந்து எந்த தவறையும் வெளிப்படையாக செய்யாமல் இருந்தாலும், அவர் தான் செய்த தவறுகளுக்கு நீண்டநாள் கழிவிரக்கம், அடக்கம் அல்லது அவமானத்தை வெளிப்படுத்தாமல் இருந்து, வாக்குவாதத்தை தவிர்த்து முகத்தில் புன்னகையுடன், "ஆமாம், எல்லாம் சரியாக இருக்கிறது. தியானம் சரியாக இருக்கிறது. நான் எனது சக துறவிகளுடன் நல்ல உறவை பராமரிக்கிறேன்," என்று தனக்கு தெளிவாக

இருப்பதை தெளிவாக சொல்லாமல், ஒரு தனிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து, அவர் பல தகவல்களை மறைக்கிறார் என்பதை மடாதிபதி தெரிந்துக் கொள்வார். இது "சாதிக்கமுடியாத பணி" என்பது தெரிந்து இருப்பதால், மகிழ்ச்சிகரமான பழக்கத்தை உடைக்க மற்றும் துறவற சமூகம் நடவடிக்கை முழுவதிலும் ஆக்கப்பூர்வமாக பங்குபெறாமல் தனது வேலையை மட்டும் செய்து ஒதுங்கி வாழ்வதில் மற்றவர்கள் ஈடுபடாமல் இருக்க, சில சோதனைகளை வழங்குவதற்கு, இது பொருத்தமான நேரமாக இருக்கும். அவருடைய புத்திசாலத்தனமாக தற்பெருமை அவரை ஒரு இயக்கமற்ற ஆன்மீக நிலைக்கு அழைத்து சென்றுள்ளதை அவர் அறிந்துக்கொள்ள, அவரை மறைவு வாழ்க்கையில் இருந்து வெளியே கொண்டு வந்து, ஆலோசனை அமர்வுகளில் பங்குபெற செய்வதற்கு, இந்த சோதனை உதவிகரமாக இருக்கும். ஒரு மடாலயம் என்பது குடியேறி வாழத்தொடங்கும் இடமில்லை. அது விழிப்புடன் இருந்து முன்னேறும் இடம் ஆகும். ஒவ்வொரு நாளையும் தனது வாழ்க்கையின் கடைசி நாளாக நினைத்து வாழவேண்டும். ¶நாணம், கூச்சம் மற்றும் ஆடம்பரம் இல்லாமல் இருப்பது *ஹ்ரீ நியமத்தின்* மற்ற பண்புகள் ஆகும். நாணம், கூச்சம், எளிமையாக மற்றும் கவனமாக இருப்பது வளர்ச்சி பெறாத நபர் மற்றும் முழுமையாக வளர்ச்சி பெற்ற விவேகமான நபரும் வளர்த்துக் கொள்ளக்கூடும். இந்த குணங்கள் குறைவான வெளிப்புற வாழ்க்கை மூலம் தோன்றிய அறியாமையின் விளைவுகளாக வளர்ச்சி பெறாத நபரிடமும், அதிக வெளிப்புற வாழ்க்கை மூலம் உருவான விவேகம் அல்லது புத்திசாலித்தனத்தின் விளைவுகளாக முழுமையாக வளர்ச்சிப் பெற்ற நபரிடமும் இருக்கின்றன. உண்மையான அடக்கம் மற்றும் ஆடம்பரம் இல்லாமல் இயல்பாக இருப்பதை மேடையில் நாடக நடிகர்கள் சித்தரிப்பது இல்லை, இந்த ஆன்மாவின் பண்புகளை யாராலும் நடித்து காண்பிக்க முடியாது. ¶ஆண்கள் மற்றும் பெண்களின் சமத்துவம் அவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை அறிவிப்பதால், கூச்சம் பெண்மையின் பண்பாக இனி கருதப்படுவது இல்லை. இருபாலினத்தாரும் சூழ்நிலைகளை சமமாக எதிர்கொண்டு சமாளிக்க தீவிரமாக ஆற்றல்மிக்கவராக இருக்க வேண்டும். இது இன்று உலகின் எல்லா பகுதிகளும் தென்படுகிறது. இந்த முகப்பு ஆன்மாவை மூடி, ஆண்கள் மற்றும் பெண்களிடம் அழுத்தத்தை உருவாக்குகிறது. இயல்பாக கூச்ச சுபாவத்துடன் இருக்கும் ஆண் அல்லது பெண், தன்னை பகை உணர்வுடன் தீவிரமாக வெளிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில், அழுத்தம் தரும் சூழலில் சிக்கிக்கொள்கிறார். ஒருவர் தான் செய்யும் செயலில் பாதுகாப்பாக இல்லாமல் இருக்கும் நிலையின் பக்கவிளைவே மனஅழுத்தம் என்பதை நான் பல நாட்களுக்கு முன்பாக தெரிந்து கொண்டேன். ஆனால் இதுவே இன்றைய கலியுகத்தின் நிலை ஆகும். இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் நியாயமாக எளிதில் புரிந்துகொள்ளும் விதமாக இருந்தால், இது கலியுகமாக இருக்க வாய்ப்பில்லை. ¶ஆன்மீக குறிக்கோள்களே மிகவும் முக்கியம் என்று மக்களுக்கு கற்றுத்தரப்பட்டு, அவர்கள் அதன் மீது நம்பிக்கையும் வைத்தால், அவர்கள் தீவிர

உறுதியுடன் இருப்பதோடு, தங்கள் ஆன்மீக நாட்டங்கள் காரணமாக தீவிரமாக செயலற்று அடக்கத்துடனும் இருக்க வேண்டும். அவர்கள் *சாதனாக்கள்* செய்துக் கொண்டிருந்தால், ஒவ்வொரு செயலுக்கும் சரியான நேரத்தை அவர்கள் இயலுணர்வுடன் அறிந்துகொள்வார்கள். கழிவிரக்கம் அல்லது அடக்கம் என்பது, வெளியுலக சக்திகளை இயக்கும் திறமையை பயன்படுத்தாமல் இருக்கவேண்டும், அல்லது கோழையாக பலவீனமாக இருப்பதை குறிப்பிடவில்லை. நீங்கள் உணர்ச்சிகள் நிறைந்த கடந்தகால நினைவுகளில் சிக்காமல், உண்மையில் "உங்கள் வாழ்க்கையை தொடர்வதற்கு", சூழ்நிலைகள் சரியாக இல்லாத போது அவற்றிற்கு தீர்வு காண கழிவிரக்கத்துடன், அவமானத்தை வெளிப்படுத்தி, அடக்கத்துடன் இருக்கும் ஒரு வழி உள்ளது என்பதை அது குறிப்பிடுகிறது. கடந்தகாலத்தில் சிக்கி இருப்பவர்கள், தொடர்ந்து கடந்தகாலத்தை நினைவில் வைத்து அதோடு தொடர்புடைய உணர்ச்சிகளில் தொடர்ந்து வாழ்கிறார்கள். கடந்தகாலத்தில் இருந்து விடுதலை பெற்றவர்கள், எதிர்காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, தங்களுக்கும் மனித நேயத்திற்கும் ஒரு நல்ல வாழ்க்கையை வழங்கும் பொருட்டு மூன்று லோகங்களின் சக்திகளையும் இயக்குகின்றனர். இது ஒரு வலுவான வைதீக *ஹ்ரீ* ஆகும். இது உண்மையான கழிவிரக்கம், பணிவு மற்றும் அடக்கம் ஆகும். இதுவே *ஹ்ரீ* எனப்படுகிறது, மற்றும் இது ஒரு பலவீனமாக இல்லாமல் ஒரு ஆன்மீக பலமாக இருக்கிறது. இவை அனைத்தும் அடிமனதின் பதிவுகளை சுத்தம் செய்து, ஆக்கப்பூர்வ சக்திகளை தடுக்காமல் அவற்றை வெளியிடும் *வாசன தாக தந்திரத்தின்* மூலம் யதார்த்தம் மற்றும் நிரந்தரத்தை பெறுகிறது.

சந்தோஷ-தான

सन्तोष-दान



சந்தோசம் மற்றும் தானம்

தர்மசீலனாக இருப்பவர் மெலிந்து, நிர்கதியாக உணவை நாடி செல்லும் யாசகனுக்கு தானம் செய்கிறார்; வழிப்போக்கன் கேட்டதும் உதவி செய்து, அவனை தனது எதிர்கால நண்பனை தேடிக்கொள்கிறார்.

ரிக் வேதம் 10.117.3. வேஎ, ப. 850



ஒரு வீட்டில் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டு நிறைவான மற்றும் எளிமையான வாழ்க்கையை வாழும் மூன்று தலைமுறையினர், *சந்தோஷம்*, திருப்தியை வெளிப்படுத்துகிறார்கள். *உள்படம்: ஒரு பணக்காரப் பெண் அருகில் இருக்கும் ஏழை குடும்பத்தினருக்கு ஆடைகளை* தானமாக *வழங்கி மகிழ்ச்சி அடைகிறாள்.*

திங்கட்கிழமை

பாடம் 36

சந்தோஷம்:

திருப்தி

திருப்தி என்கிற *சந்தோஷம்*, இரண்டாவது நியமமாக இருக்கிறது. நாம் எவ்வாறு திருப்தி அடைய பயிற்சி செய்வது? மற்றவர்களை சிந்தனை, சொல் அல்லது செயலால் துன்புறுத்தாமல் இருக்க வேண்டும். *அகிம்சையை* கடைப்பிடிப்பதன் மூலம், நீங்கள் இரவு நிம்மதியாக உறங்குவதோடு நாள் முழுவதும் *சந்தோஷத்தை* அனுபவிக்க முடியும். திருப்தியை எல்லோரும் விரும்புகிறார்கள், மற்றும் "நான் எனது வீட்டை புதுப்பித்தால் திருப்தியாக இருப்பேன்," "ஒரு புதிய ஆடையை வாங்கினால் நான் திருப்தியாக, ஆனந்தமாக மற்றும் நிம்மதியாக இருப்பேன்," "நான் திருப்தியாக இருக்க விடுமுறையில் சென்று, சில நாட்கள் இவற்றில் இருந்து ஒதுங்கி இருக்கவேண்டும். அங்கே அமைதியான வாழ்வை வாழ்ந்து மகிழ்ச்சியான அனுபவங்களை என்னால் பெறமுடியும்," என்று கூறி பொருட்களை விலைகொடுத்து வாங்கவும் செய்கிறது. ¶ஆன்மா இருக்கும் *சந்தோஷமான* நிலை, தூல உடலின் ஒவ்வொரு அணு வழியாக ஊடுருவி செல்ல, அகத்தில் கவனம் செலுத்தி அங்கே இருக்கும் வெளிப்படையான திருப்தியை தடையில்லாமல் இயல்பாக வெளிக்கொண்டு வருவதே தார்மீக வழி ஆகும். திருப்தி அடைவது மிகவும் கடினமான பண்புகளில் ஒன்றாகும், மற்றும் இது *அன்னசுத்தி* (உணவை புனிதப்படுத்தும்) செய்ய பயன்படுத்தும் பின்வரும் *சுக்ல யஜூர் வேதம், ஈசாவாஸ்ய உபநிடதத்தின்* சாந்தி பாடத்தில் நன்றாக தொகுக்கப்பட்டுள்ளது. "அது முழுமையாக இருக்கிறது. படைப்பு முழுமையாக இருக்கிறது. அந்த முழுமையில் இருந்து இந்த உலகின் முழுமை தோன்றுகிறது. இந்த முழுமை அந்த முழுமையில் இருந்து தோன்றினாலும், அந்த முழுமை நிறைவாகவே இருக்கிறது.” நாம் நாடும் இந்த சந்தோசம் வெறுமை இல்லாமல் முழுமையாக இருக்கிறது. ¶வாழ்க்கை என்பது சந்தோசமாக வாழ்வதற்கே. வாழ்க்கை என்பது ஒரு சுமையாக, ஆன்மாவுக்கு உகந்ததாக, வேதனைக்கு தயாராக இருக்கும் ஒரு வருத்த உணர்வு என்ற நம்பிக்கை உலகில் பரவலாக நிலவுகிறது. ஆனால் ஆன்மீக வாழ்க்கை அதைப் போன்று இல்லை. மனிதனின் மனநிலை மற்றும் உணர்ச்சி வெளிப்பாட்டின் முக்கிய பண்புகளாக

மனச்சோர்வு, கோபம், அச்சம் மற்றும் வேதனை விளங்குகிறது என்று இருத்தலியல்வாதி உங்களுக்கு நம்பிக்கை அளிப்பார். மதத்தின் கிளைவிளைவாக இருக்கும் சந்தோசம் மற்றும் அமைதி, மக்கள் பயன்படுத்தும் அபின், யதார்த்தமின்மையின் போதை பொருள் மட்டுமே என்று கம்யூனிஸ்ட்கள் நமக்கு நம்பிக்கை அளித்து வந்தார்கள். வேதனை ஆன்மாவிற்கு நல்லது என்றும், இதில் நமக்கு செய்வதற்கு ஒன்றும் இல்லை என்றும் அருகில் இருக்கும் கிழக்கு நாடுகளின் செமிடிக் சமயங்கள் நமக்கு தெரிவித்தன. உட்புறமாக மையத்தில் கவனத்தை வைத்திருப்பது திருப்தியின் பிரதிபலிப்பு என்றும், வெளிப்புறமான உணர்வு மற்றும் கிளைகளைக் கொண்ட சிக்கலான ஆசைகள் அதிருப்தியின் பிரதிபலிப்பு என்றும் சைவ இந்து கண்ணோட்டம் தெரிவிக்கிறது. ¶உங்கள் சுற்றுப்புறங்கள் எளிமையாக இருந்தாலும் அல்லது ஆடம்பரமாக இருந்தாலும், அவற்றுடன் திருப்தியாக இருப்பதே வாழ்க்கையில் சந்தோசம் மற்றும் அமைதி பராமரிக்கப்படுவதை குறிக்கிறது. உங்களிடம் இருக்கும் பணம் அளவில் பெரியதாக இருந்தாலும் அல்லது சிறியதாக இருந்தாலும், அதில் திருப்தியுடன் இருங்கள். உங்கள் உடல்நிலை மீது திருப்தியுடன் இருங்கள். வியாதிகளை இருந்தால் பொறுத்துக் கொண்டு, அவை மோசமாகவில்லை என்று நிம்மதியாக இருங்கள். உங்கள் உடல்நிலை நன்றாக இருந்தால் அதை காப்பாற்றுங்கள். அது ஒரு விலைமதிப்பற்ற புதையல். உங்கள் நண்பர்களிடம் திருப்தியாக இருங்கள். உங்களுக்கு நம்பகமான நீண்டநாள் தோழர்களிடம் விசுவாசமாக இருங்கள். அடிப்படையில் திருப்தி என்கிற *சந்தோஷம்*, ஆசையின் சக்தியை திசை திருப்பி தன்னிடம் இருப்பதை வைத்து ஒரு அழகான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதை குறிக்கிறது. ¶மேலும் அதிகமான பணத்தை எதிர்பார்க்கும் பணக்காரர்கள் திருப்தியாக இருப்பதில்லை. மேலும் அதிகமான புகழை எதிர்பார்க்கும் பிரபலங்கள் திருப்தியாக இருப்பதில்லை. மேலும் அதிகமான அறிவை எதிர்பார்க்கும் அறிவாளிகள் திருப்தியாக இருப்பதில்லை. உங்களிடம் இருப்பதை வைத்து திருப்தி அடைவது என்பது உங்களால் பிரித்து பார்க்க முடியவில்லை மற்றும் வாழ்க்கையில் முன்னேற முயற்சி செய்ய முடியவில்லை என்று பொருளில்லை. உங்கள் மனஉறுதியை பயன்படுத்தி உங்கள் திட்டங்களை நிறைவேற்றக் கூடாது என்பதை அது குறிப்பிடவில்லை. ¶உங்கள் இலக்குகளை நோக்கி முயற்சி செய்யும் போது பதட்டம் அடையாமல் இருப்பதையும், நீங்கள் விரும்பியதை அடையவில்லை என்றால் ஏமாற்றம் அல்லது வருந்தாமல் இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. உங்கள் வாழ்க்கை, உங்கள் குடும்ப வாழ்க்கை மற்றும் உங்கள் தொழிலில் நடைபெறும் நேர்மறை போக்குகள் மற்றும் நிகழ்வுகளின் இயல்பான விரிவாக்கத்தோடு தொடர்ந்து முன்னேறுவது சிறந்த முயற்சி ஆகும். திருப்தி என்பது உங்களிடம் இருக்கும் வளங்களை பயன்படுத்தி செயல்படுவது, உங்கள் வருமானத்திற்குள் வாழ்வது, உங்களிடம் இருப்பதை நினைத்து திருப்தியுடன் இருப்பது மற்றும்

உங்களிடம் இல்லாததை நினைத்து வருந்தாமல் இருப்பதையும் குறிப்பிடுகிறது. ¶தாங்கள் ஆன்மீகத்தில் அதிக விரைவாக விரிவாக்கம் பெறவில்லை என்று நினைத்துக்கொண்டு, தங்கள் வாழ்க்கைப் பாதையில் ஏமாற்றத்துடன் இருக்கும் பல ஆன்மாக்கள், தங்களுக்கு அதிக அளவு வேதனை அளித்துக்கொண்டு சோகமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் திறமைகளுக்கு எட்டாத ஆத்ம ஞானம் உடனடியாக கிடைக்கவேண்டும் என்ற இலக்கை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். "எனக்கு அமைதியை தராத அல்லது என் மனஅமைதியை குலைக்கிற ஒரு செயலையும் செய்யமாட்டேன்," என்று அன்பர்கள் பேசினால், அவர்களால் எவ்வாறு முன்னேற முடியும்? இது *சந்தோஷத்தின்* சாரம் இல்லை. உண்மையான *சந்தோஷம்* என்பது ஒரேஒரு தெய்வீக சக்தி எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் பண்பை தரிசனம் செய்வதை குறிக்கிறது. ஓவ்வொரு அன்பரின் கண்களுக்குள் இருக்கும் ஒளியே அந்த தெய்வீக சக்தி ஆகும். இதை மனதில் வைத்துக்கொண்டு, நீங்கள் நினைக்கும் இடத்திற்கு சென்று நினைத்ததை செய்யலாம். சந்தோசம் உங்களுக்குள் இருக்கிறது, மற்றும் அதை வெளியே கொண்டு வரவேண்டும். இது ஒரு ஆன்மீக சக்தி. அதனால் உங்களுக்கு திருப்தி அளிப்பதை செய்யுங்கள். ஆனால் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய கவலையை கடந்து சந்தோசம் செல்கிறது என்பதை அறிந்துக்கொள்ளுங்கள். *சந்தோஷம்* என்பது எந்த சூழலிலும் அமைதியாக இருப்பதை குறிக்கிறது. நீங்கள் *சந்தோஷத்தில்* வலுவாக இருக்கும் போது, உங்களால் பெரிய சவால்களை சந்திக்க முடியும், மற்றும் ஒரு மலரின் மேல் ரீங்காரப் பறவை நிலையாக இருப்பதைப் போல, பெரிய சவால்களை சந்தித்தாலும் நீங்கள் உங்களுக்குள் அமைதியாக திருப்தியாக இருக்க முடியும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 37

வீட்டில் அமைதியை

நிலைநாட்டுதல்

சந்தோஷம் குறிக்கோளாக விளங்குகிறது; நீங்கள் உங்கள் *கர்மவினையை* அனுபவிப்பதற்கு, எவ்வாறு செயல்பட்டு எதிர்செயலாற்ற வேண்டும் என்பதை *தர்மம்* என்கிற நன்னடத்தை தொடர்ந்து இயக்குகிறது. இந்த பத்து வைதீக கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து அடைய முடியும்: மற்றவர்களை சிந்தனை, சொல் அல்லது செயலால் இம்சை செய்யாமல் இருத்தல், பொய் சொல்லாமல் இருத்தல், கடனில் சிக்காமல் இருத்தல், மக்கள் மற்றும் சூழ்நிலையை சகித்துக் கொள்ளுதல், மாறும் பண்பு மற்றும் தயக்கத்தை வெற்றிக்கொள்ளுதல்,

மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு இரக்கம் இல்லாமல், கொடூரமாக மற்றும் கருணை இல்லாமல் நடந்துக் கொள்ளுதல். மிகவும் முக்கியமாக, எப்போதும் வஞ்சனை செய்யாமல் இருத்தல். அதிகம் உண்ணாமல் இருக்க வேண்டும். மனம் சுத்தமாகவும் தெளிவாகவும் இருக்க சைவ உணவை தொடருங்கள். நீங்கள் எதை சிந்திக்கிறீர்கள் மற்றும் அதை எந்த வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள். இயல்பான திருப்தியாக இருக்கும் *சந்தோஷம்* என்கிற ஆன்மாவின் சுத்தமான அமைதியான சொரூபம் பிரகாசிப்பதற்கு முன்பாக, இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் வாழ்முறைக்குள் கட்டுப்படுத்தி அனுட்டானம் செய்ய வேண்டும். அதனால் *இயமங்களை* பூர்த்தி செய்ய *சந்தோஷத்தை* அடையும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்; தோல்வி என்பது சாத்தியமற்றது. ¶"நாங்கள் எங்கே மனம் திறந்து பேசுவது? தாய் வேலைக்கு செல்கிறாள், தந்தை வேலைக்கு செல்கிறார், குழந்தைகள் பள்ளிக்கு செல்கிறார்கள், மற்றும் எல்லோரும் வீட்டில் சேரும் போது, எல்லோரும் சிறிதளவு மனம் திறந்து பேசுகிறார்கள் மற்றும் எல்லோரும் புரிந்துகொள்கிறார்கள்," என்று எங்கள் இணையதள குழுவில் ஒரு மின்வெளி மாணவர் என்னிடம் கேட்டார். அதற்கு என்னுடைய பதில்: வீட்டில் மனம் திறந்து பேசவேண்டாம். வீடு என்பது குடும்பம் முழுவதற்குமான ஒரு சரணாலயம் ஆகும். அது அலுவலகம், தொழிற்சாலை அல்லது கூட்டு நிறுவன பணியிடத்தைக் காட்டிலும் உயர்ந்த தரநிலையுடன் இருக்க வேண்டும். நாம் வீட்டில் மிகவும் இயல்பாக இருக்கத் தொடங்கி மனம் திறந்து பேசினால், நாம் பேசக்கூடாததை பேசக்கூடும். குடும்பத்தினர் நாம் சொல்வதை புரிந்துக் கொள்வதாக நினைக்கிறோம், ஆனால் அவர்கள் புரிந்துகொள்வது இல்லை. உணர்ச்சிகள் புண்படுத்தப்படுகின்றன. நாம் வீட்டில் இருக்கும் அதிர்வை உடைத்து விடுகிறோம். சிறுவர்கள் பள்ளியில் மனம் திறந்து பேசி, தங்கள் கல்வியில் தடை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் ஒரு கூட்டு நிறுவன அலுவலகத்தில் செய்ய தயங்கும் நடவடிக்கையை பள்ளி வகுப்பில் செய்கிறார்கள், மற்றும் இறுதியில் வருந்துவதும் அவர்களே. அவர்கள் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதும், ஒரு கூட்டு நிறுவன அலுவலகத்தில் வேலை கிடைத்ததும் தங்கள் நடத்தையை விரைவாக மாற்றிக்கொள்வது வியப்பூட்டுவதாக இருக்கிறது. அவர்கள் ஒரு கையேட்டை படித்து, அதை பின்பற்றி எல்லோரிடமும் அன்பாக நடந்துக் கொள்கிறார்கள். வீட்டிலும் இந்த முறையை செயல்படுத்த வேண்டும். கூட்டு நிறுவன அலுவலகத்தை காட்டிலும் வீடு உயர்ந்த தரநிலையை பராமரிக்க வேண்டும். ¶இந்து சமயத்தில் இருக்கும் ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், நாம் வீட்டில் மனம் திறந்து பேசுவது இல்லை; நாம் நமது உணர்ச்சிகளை இந்து கோயிலில் வெளிப்படுத்துகிறோம். இந்து கோயிலில் நாம் தேவர்கள் மற்றும் தேவிகளுடன் தொடர்புகொண்டு, நமக்குள் நம்மை வெளிப்படுத்திக் கொள்கிறோம். இந்த தொடர்பு நமக்கும்

தெய்வத்துக்கும் மத்தியில் நடைபெறுகிறது. ஒரு இந்து கோயிலில், ஒரு ஓரத்தில் ஒரு பெண் பக்தை அழுதுக்கொண்டு இருப்பாள், மற்றும் அவளுக்கு அருகில் ஒரு இளம் தம்பதி தங்கள் குழந்தைகளுடன் சிரித்துக்கொண்டு இருப்பார்கள், மற்றும் அவர்களுக்கு அருகில் இன்னொருவர் தேவர்களுடன் வாதாடிக் கொண்டிருப்பார். இவை அனைத்தும் ஒரு இந்து கோயிலில் ஒரே சமயத்தில் நடந்துக்கொண்டு இருக்கும். ஒரு நபர் தனது மனதை வெளிப்படுத்திக்கொள்ள இந்து கோயில் அனுமதி அளிக்கிறது, ஆனால் அது பூசாரிகள் செய்யும் *பூசைகள்* மூலம் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட சூழலாக இருக்கிறது. ¶நாம் சொல்ல நினைக்காததை சொல்லி, மற்றவர்களை புண்படுத்தும் ஏற்ற இறக்கங்களை நமது குரலில் கொண்டிருந்து, இந்த வாழ்வில் அதிக *கர்மவினைகளை* செய்யாமல், வீட்டை கட்டுப்படுத்தி, பணியிடத்தில் நம்மை கட்டுப்படுத்தி, பணியிடத்தை காட்டிலும் வீட்டை கலாச்சாரம் மற்றும் நெறிமுறையின் உயர்ந்த அதிர்வில் வைத்திருந்து, நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இடமாக நம் வாழ்வில் கோயிலை சேர்த்துக்கொண்டு, நாம் நமது மன அமைதியை மீண்டும் பெறவேண்டும். ¶பள்ளி அல்லது பணியிடத்தில் ஏற்படும் மன அழுத்தம் காரணமாக வீட்டில் இருக்கும் அதிர்வை குலைக்க, கணவன் அல்லது மனைவி அல்லது பதின்மவயது சிறுவன் அல்லது சிறுமியில் ஒருவரின் வாழ்க்கையின் பிற்காலத்தில் வலுவான எதிர்வினையாக, அவர்கள் செய்த எண்ணற்ற தீய *கர்மவினைகள்* திரும்பி வருகின்றன. நாள் முழுவதும் ஒரு வசதியான அலுவலகத்தில், உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி ஆக்கப்பூர்வமாக இருந்து, பின்னர் வீடு திரும்பி அங்கிருக்கும் அதிர்வை குலைப்பது எதிர்விளைவை ஏற்படுத்தும். எதற்காக ஒருவர் அலுவலகத்தில் வேலை செய்கிறார்? வீட்டைக் கட்டி குடும்பத்துடன் இருக்கவே வேலை செய்கிறார். எதற்காக ஒருவர் பள்ளி செல்கிறார்? இறுதியில் வீட்டைக் கட்டி குடும்பத்துடன் இருக்கவே அந்த பள்ளிக்கும் செல்கிறார். அதனால் ஒன்றை உருவாக்க நாள் முழுவதும் பாடுபட்டு, அதை குலைப்பது எதிர்விளைவையே ஏற்படுத்தும். அதனால் வீடு கவனத்தை ஈர்க்குமாறு இருக்க வேண்டும் என்பதற்காக, தங்கள் பணியிடத்தில் கற்றுக்கொண்ட நல்ல பழக்கங்களை வீட்டிலும் பயன்படுத்தி, பணியிடத்தை காட்டிலும் வலுவான அதிர்வை வீட்டில் ஏற்படுத்த வேண்டும் என்று வேலை செய்யும் தாய், தந்தை, மகன் மற்றும் மகளுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ¶பணியிடத்தில் நேர்த்தியாக வேலை செய்யும் ஆண்களும் பெண்களும், வீட்டில் அந்த நேர்த்தியுடன் இருக்காமல், வீட்டின் அதிர்வை குலைத்து, இறுதியில் வீட்டை சீர்குலைத்து பிரிவையும் ஏற்படுத்துவதை நாம் பலமுறை பார்த்து இருக்கிறோம். மேலும் பணி ஓய்வுக்கு பிறகு மகிழ்ச்சியில்லாமல் அதிக கோபத்துடன் இருப்பவர்களையும் நாம் பார்த்து இருக்கிறோம். அவர் தங்கள் அருகில் இருப்பதை யாரும் விரும்புவது இல்லை, அவரை யாரும் தங்கள் வீட்டில் வைத்திருக்க விரும்புவது இல்லை. அதனால் அவர் இறுதியில் ஒரு

மருத்துவமனையில் சேர்ந்து இறந்து விடுகிறார், மற்றும் அவரை எல்லோரும் மறந்தும் விடுகிறார்கள். ¶நாம் எல்லோரும் ஒரு முழுமையான வாழ்வை வாழ, வீட்டில் மற்றும் அலுவலகத்தில் சனாதன தர்மம் மற்றும் சைவ சமயம் உயிருடன் இருக்க வேண்டும். நமது வீட்டில் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தவில்லை, மனம் திறந்து பேசவில்லை என்றால், அவற்றை எங்கே வெளிப்படுத்துவது? அவற்றை கோயிலில் வெளிப்படுத்த வேண்டும்.

புதன்கிழமை

பாடம் 38

தானம்:

தானம் வழங்குதல்

மூன்றாவது *நியமம்* அல்லது சமயம் சார்ந்த சிறந்த பழக்கமாக *தானம்* என்கிற நன்கொடை விளங்குகிறது. ஒருவர் தன்னிடம் இருக்கும் பொருட்களை இன்னொருவரின் தேவைகளை பூர்த்தி செய்ய தாராளமாக வழங்கி, அந்த நபரை திருப்திப்படுத்தி அல்லது அவரது முகத்தில் புன்னகையை கொண்டு வருவதால், சுயநலம் மற்றும் பேராசை மற்றும் பொருளாசை மற்றும் பொருட்களை பதுக்கும் செயல்களை தணிக்கிறது. ஆனால் "பலனைப் பற்றி சிந்திக்காமல் இருப்பது" மிகவும் முக்கிய அங்கமாக விளங்குகிறது. உங்களுடைய இரு கைகளில் இருந்து பெறுபவரின் விரிந்த கைகளுக்கு அந்த பரிசு செல்லும் போது, பலனால் ஏற்படும் மகிழ்ச்சி மற்றும் முழுமையை உங்களால் முழுமையாக உணர முடிகிறது. *தானம்* என்பது பெரும்பாலும் "நன்கொடை" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. ஆனால் இக்காலத்தில் நன்கொடை என்பது பொருள் இருக்கும் ஒருவர் பொருள் இல்லாதவருக்கு வழங்கும் ஒரு விசேஷ வழங்கலாக இருக்கிறது. இது *தானத்தின்* உண்மையான சாரம் இல்லை. நிறைவு என்கிற சொல் *தானத்தை* நன்றாக விளக்கக்கூடும். பரிசு தயார் செய்யும் போதும், பரிசு வழங்கப்படும் போதும், வழங்குபவருக்குள் பொங்கி வரும் நிறைவு, பெறுபவருடைய எதிர்பார்ப்பின் நிறைவு அல்லது பெறுபவரின் வியப்பு, அதன் பிறகு நிலவும் முழுமை ஆகிய இவை அனைத்தும் *தானத்தின்* அங்கம் ஆகும். ¶ஒரு மதம்சார்ந்த நிறுவனம் இறைவனின் பணியை செய்வதற்கு, அதனிடம் இறைவனின் பணத்தை வழங்கும் *தசமாம்சம், தானத்தில்* சிறந்தது ஆகும். *தானத்தை* முழுமையாக செய்பவர் *தசமாம்சம்* வழங்குகிறார், ஒரு நண்பன் அல்லது சொந்தத்தை எப்போதும் வெறும் கைகளுடன் சென்று பார்க்கமாட்டார் மற்றும் சொந்தங்கள், குழந்தைகள், நண்பர்கள், அக்கம் பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் மற்றும் தொழில்முறை சகாக்களுக்கு தாராளமாக வழங்குவார். இவை அனைத்தையும் அவர் எந்த

பலனையும் எதிர்பார்க்காமல் செய்வார். "(தனக்கு எதுவும் சொந்தமானது இல்லை என்பதால்) தன்னால் எதையும் வழங்க முடியாது" என்பதை *தானத்தை* வழங்கும் பக்தர் முழுமையாக அறிந்து இருப்பார். *கர்மவினையின்* விதி முழுமையாக உங்களுக்கே, நீங்கள் செய்த தானத்தை ஒரு சரியான நேரத்தில் உங்களுக்கே திருப்பி வழங்கி விடும். எவ்வளவு சுதந்திரமாக பரிசு வழங்கப்படுகிறதோ, அவ்வளவு விரைவாக அது திரும்பி வந்துவிடும். ¶*தசமாம்சம்* வழங்கப்பட்ட பிறகு, எந்த விகிதத்தில் *தானம்* வழங்க வேண்டும்? ஒருவர் தனது *தானத்தை* ஒழுங்குபடுத்த விரும்பினால், தனது மொத்த வருமானத்தில் கூடுதல் இரண்டு அல்லது ஐந்து சதவீதத்தை பணம் மற்றும் பொருட்களாக சமமாக பிரித்து வழங்கலாம். அது பதினைந்து சதவீதமாக, ஆறில் ஒரு பங்கு இருக்கும், மற்றும் இதை பழனி கோயிலை சுற்றி இருக்கும் செட்டியார் சமூகம் மூலம் தென்னிந்தியாவில் *மகிமை* என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இதை இன்று மலேசியாவில் மலாக்கா செட்டியார்கள் பின்பற்றி வருகிறார்கள். ¶இன்றைய சமூகத்தில் மக்கள் செய்யும் *தானத்தின்* உண்மையான நோக்கத்தை கவனமாக பார்த்தால், செல்வந்தர்கள் வரிவிலக்கு பெறுவதற்காக மதசார்புள்ள நிறுவனங்களுக்கு வழங்கும் பரிசுகளில் பலனின் எதிர்பார்ப்பு இருப்பது தெளிவாக தெரியும். அதனால் *தானம்* வழங்குவதால் கிடைக்கும் நிறைவைத் தவிர, வேறு எந்த லௌகீக பலன்கள் அல்லது வெகுமதிகள் இல்லாமல், வரி பிடித்தங்களுக்கு பிறகு *வழங்குவது* தானத்தின் உண்மையான வெளிப்பாடு என்று விவேகமானவர்கள் கருதுகிறார்கள். ஒருவர் எனது கைகளால் ஒன்றை உருவாக்கி, அதை அன்பாக வழங்குவதும் *தானத்தின்* உண்மையான வெளிப்பாடு ஆகும். தனக்கு ஒரு பரிசு கிடைத்தது என்பதற்காக இன்னொரு பரிசை விருப்பமின்றி வழங்குவது பண்டமாற்று வியாபாரமாகத் தான் இருக்கும். பல குடும்பங்கள் தாங்கள் தானம் வழங்குகிறோம் என்று இந்த முறையில் வாழ்க்கை முழுவதும் பண்டமாற்றம் செய்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அத்தகைய பரிசுகள் உணர்ச்சியின்றி, நிறைவு இல்லாமல் இருக்கின்றன, மற்றும் *கர்மவினையின்* விதி குறைந்த பலன்களை தருகிறது.

வியாழக்கிழமை

பாடம் 39

விருந்தோம்பல்

மற்றும் முழுமை

தானத்தை நிறைவேற்றுவதில் விருந்தோம்பல் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. விருந்தாளிகள் வரும் போது, அவர்களை உபசரித்து

குறைந்தபட்சம் உட்காருவதற்கு ஒரு பாய் மற்றும் குடிப்பதற்கு தண்ணீரும் கொடுக்க வேண்டும். இவை கண்டிப்பாக வழங்கவேண்டிய பரிசுகள் ஆகும். நீங்கள் விருந்தாளியை எப்போதும் நிறுத்தி வைக்கக்கூடாது, மற்றும் ஒரு விந்தாளியை தாகத்துடன் தவிக்க விடக்கூடாது. சமையலறையில் தயாராகும் காய்கறிகளின் வாசனையை ஒரு விருந்தாளி ஒரே ஒரு முறை முகர்ந்தாலும், உணவு சாப்பிட்டு செல்லுமாறு நான்கு முறைகள் கேட்கவேண்டும். அவர் மூன்று முறை பணிவோடு மறுப்பார், மற்றும் நான்காம் முறை கேட்கும் போது ஏற்றுக்கொள்வார். விருந்தாளியை தெய்வம் போல கருதவேண்டுமா என்பதால், இதுவும் கண்டிப்பாக செய்யவேண்டிய ஒரு தானம் ஆகும். சிவபெருமான் பல வேடங்களில் இருப்பதால், அவருடைய *திரோதான* என்கிற மறைக்கும் சக்தி அவரை மறைக்கிறது. அவர் திருநடனம் ஆடுவது உங்களுக்கு தெரியும், மற்றும் நடனம் ஆடுபவர்கள் பல ஆடைகளை அணிவார்கள். அவர் உங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக மாற்று வேடத்தில் வருவார். உங்களை வெகு தொலைவில் இருந்து வந்த காணவந்த ஒரு பிரியமான நண்பர் என்றே நினைப்பீர்கள். சிவபெருமான் இன்னொரு வேடத்தில் இருப்பதால், நீங்கள் விருந்தாளியை சிவபெருமானாக உபசரிக்க வேண்டும். உங்கள் மனதில் சிவபெருமானின் படைப்பை நினைத்துக்கொண்டு சிவபெருமானுக்கு *தானம்* வழங்கினால், அது *கர்மவினையின்* விதி மூலம் உயர்ந்த பலன்களை கொண்டு வரும். ¶நீங்கள் பலனை எதிர்பார்க்காமல், ஆனால் ஒரு நோக்கத்துடன் தாராளமாக மற்றும் ஆக்கப்பூர்வமாக *தானம்* வழங்கவேண்டும் என்று சிந்தித்தாலும், அந்த *கர்மவினை* வட்டியும் முதலுமாக உங்களுக்கு திருப்பித் தரும். இது *கர்மவினை* விதியின் ஒரு நேர்மறை பயன் ஆகும். அது மற்ற வங்கிகளை காட்டிலும் அதிக வட்டியை தருகிறது. இந்த *தானத்தில்* சுயநலம் இல்லை. இது *கர்மவினையின்* விதி, தெய்வீகமான மற்றும் மாறாத விதிமுறைகளை குறிப்பிடும் சனாதன தர்மம் தெரிந்த விவேகமானவர்கள் வழங்கும் *தானம்* ஆகும். உங்களால் நிறைவேற்றக்கூடிய ஒரு தேவையை பார்க்கிறீர்கள் மற்றும் உங்களிடம் *தானம்* செய்ய தூண்டுதலும் இருக்கிறது ஆனால் தானம் செய்வதில் இருந்து பின்வாங்குகிறீர்கள் என்றால் பிற்காலத்தில் உங்களுக்கு தேவை வரும் போது, இன்னொருவருக்கு வழங்க வேண்டும் என்ற தூண்டுதல் இருக்கும், ஆனால் அவர் *தானம்* வழங்காமல் பின்வாங்குவார். *கர்மவினை* சக்கரங்கள் மெதுவாக நகர்கின்றன என்றாலும் சிந்தனை, உணர்ச்சி அல்லது தூல பண்புடன் இருக்கும் செயல்களின் சிறிய அளவுகள் மிகவும் வேகமாக செயல்படுகின்றன. அதனால் தானத்தை வழங்குதல் மற்றும் இந்த வாழ்க்கை, இரு பிறவிகளுக்கு மத்தியில் சூட்சும லோகத்தில் இருக்கும் வாழ்க்கை, மற்றும் அடுத்த பிறப்பு நல்ல பிறவியாக இருக்கவேண்டும் என்று *புண்ணியத்தை* சேர்க்க விரும்புவதில், ஒருவர் அதிக சுயநலம் மற்றும் பேராசையுடன் நடந்துக்கொள்ளக்கூடும். *தானத்தை* வழங்குவது என்பது ஒரு நல்ல வாழ்க்கையில் சிறந்த பலன்களை தரும் முதலீட்டை குறிக்கிறது. ¶*தானத்தை*

வழங்குவதற்கு நமது ஏழ்மை மற்றும் செல்வம் ஒரு தடையாக இருப்பது இல்லை. நீங்கள் மிகவும் ஏழையாக இருந்தாலும், உங்களால் *தானம்* வழங்க முடியும். நீங்கள் உங்கள் வரம்புகள், உங்கள் தூண்டுதல், உங்கள் திறமைக்கு ஏற்ப தானம் வழங்கலாம். புதிதாக பறிக்கப்பட்ட மலர்களின் கொத்தை அல்லது தட்டு நிறைய பழங்களை அடக்குதல், நாணயங்களை எண்ணுதல், ரசீதுகளின் குவியலை பிரித்தல் அல்லது நீங்கள் எழுதும் காசோலையில் பூச்சியத்தை சேர்த்தல் என்று ஒரு பரிசை தயார் செய்யும் போது, உங்களுக்குள் நிறைவு தன் உச்சத்தை அடைந்தால், அந்த பரிசு உங்கள் வரம்பிற்குள் இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துக்கொள்ளலாம். உங்கள் வருமான எல்லைக்குள் இருந்து, உங்கள் இயதத்தில் இருந்து வரும் பரிசுகள் பொருத்தமான பரிசுகளாக இருக்கும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 40

சுயநலம் மற்றும்

கஞ்சத்தனம்

தானம் வழங்கும் நற்குணம், பணம் அல்லது பொருளின் யதார்த்தமான தூல பரிமாற்றத்தை குறிக்கிறது. ஒருவர் தன் நேரத்தை ஒதுக்குவதைப் போல, இது மற்ற மதசார்புள்ள சேவையின் அடித்தளம் மற்றும் உயிர்சக்தியாக விளங்குகிறது. "நான் கோயிலில் சேவை செய்ய நேரத்தை ஒதுக்குவேன். நான் பாத்திரங்களை சுத்தம் செய்து, தரையை மொழுகி சுத்தம் செய்வேன். ஆனால் என்னிடம் இருக்கும் சிறிதளவு பணத்தை வைத்து, தானத்தால் கிடைக்கும் முழு நிறைவிற்கு ஈடான செல்வத்தை என்னால் வழங்க முடியாது," என்று சிலர் காரணம் கூறுவார்கள். அடிப்படையில், அவர்கள் தங்கள் நேரத்தை பயன்படுத்த, தங்கள் கவலையை குறைக்க, வேறு எந்த வழியும் இல்லாததால், அவர்கள் இந்த சிறிய பணியில் தொண்டு செய்ய ஒப்புக்கொள்கிறார்கள். மேலும் இதில் *புண்ணியம்* எதுவும் இல்லை, *பாவம்* மட்டுமே இருப்பதாக தோன்றலாம். ஆனால் நிலைமை அதற்கு நேர்மாறாக இருக்கிறது. பணம் மற்றும் பொருளாக *தானம்* வழங்குவதில் நிறைவை அடைந்து, இந்த *நியமத்தில்* திருப்தியை அடைந்தவர், தனது நேரத்தில் பத்தில் ஒரு பங்கை ஒதுக்க முடிவதோடு அதை விருப்பத்துடன் செய்வார் மற்றும் மீதமுள்ள நேரத்தை சமயம் மற்றும் மற்ற நல்ல காரணங்களுக்கு ஒதுக்குவார். *தானத்தின்* நிறைவு *சேவைக்கு* முன்பாக தோன்றும் என்று சொல்லலாமா? ¶தனது தனிப்பட்ட ஆணவத்தை ஒரு அருமையான புன்னகை, கனிவான செயல்கள், இனிமையான வார்த்தைகளில் மறைத்து வைத்து, ஆனால் எப்போதும் “தனக்கு முன்னுரிமை

வழங்கவேண்டும்" என்பதில் மட்டுமே கவனம் செலுத்தி, தனது தனிப்பட்ட சுயத்தில் மூழ்கி இருப்பவரை பற்றி என்ன சொல்வது? உதாரணத்திற்கு, அவர் பத்து நபர்களுடன் தங்கி இருந்தால், அவர் தனக்கு மட்டுமே சமைத்துக் கொள்வார். அவர் சூழ்நிலைகளை குழப்பிக் கொண்டு, தனக்குள் வாக்குவாதங்களுக்கு இடம் அளித்து எப்போதும் தனது சமய வாழ்க்கை முன்னேற்றத்தைப் பற்றிய கவலையில் இருப்பார். அவர் இரக்கம், பொறுமை, பிரம்மச்சரியம், அளவுணவு ஆகிய கட்டுப்பாடுகளில் முயற்சி செய்துக்கொண்டு இருக்கிறார் என்றும், அவர் மூன்றாவது *நியமத்தை* அடையவில்லை என்றும் எங்களுக்கு தோன்றுகிறது. அவரை தன்னலம் கருதுபவர், சுயநலவாதி மற்றும் தற்பெருமையுள்ள நபர் என்று நவீன உளவியல் குறிப்பிடும். அவர் கட்டுப்பாடுகளை வரிசைப்படி கடைப்பிடிக்கிறார் என்றால், இந்த சுயநலத்தை வெற்றிகொள்ள, தான் உண்பதற்கு முன்னால் மற்றவர்கள் முதலில் உண்பதை உறுதி செய்வது, தன்னால் முடிந்த உதவிகளை செய்வது, வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பரிச்சயம் இல்லாத நபர்களுக்கு உதவுதல் என்று மற்றவர்களுக்கு உதவி செய்வதே சரியான பயிற்சியாக இருக்கும். ¶ஒரு ஆச்சாரமான இந்து வீட்டில், பாரம்பரியத்தை கடைப்பிடிக்கும் மனைவி தனது கணவனுக்கு முன்பாக எழுந்து, அவனுக்கு சூடான உணவை சமைத்து, அவனுக்கு பரிமாறுவாள் மற்றும் அவன் சாப்பிட்ட பிறகே சாப்பிடுவாள்; பிறகு அவனுக்கு மதிய உணவு சமைத்து, அவனுக்கு பரிமாறுவாள் மற்றும் அவன் சாப்பிட்ட பிறகே சாப்பிடுவாள்; மேலும் இரவு விருந்து சமைத்து, அவன் தாமதமாக வீடு திரும்பினாலும் அவனுக்கு பரிமாறுவாள் மற்றும் அவன் சாப்பிட்ட பிறகே சாப்பிடுவாள். தன் கணவனுக்கு தினமும் மூன்று வேளை உணவு வழங்குவது அவளுக்கு நிறைவைத் தருகிறது. இது இந்து சமூகத்தில், சைவ சமய கலாச்சாரத்தில் ஆழமாக பதிந்துள்ளது. ¶கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்கள் வீட்டிற்கு வெளியிலும் உணவு வழங்குவதை ஆதரிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பலரது இயல்பு வாழ்க்கையில் நடப்பது இல்லை. பெரும்பாலும் அவர்களுக்கு பணம் ஏதும் தராமல், வழங்குவதற்கு எந்த பொருளும் வழங்காமல், தானம் செய்வதற்கு மற்றும் *தசமாம்சம்* செய்வதற்கு மற்றும் பலனை எதிர்பார்க்காமல் ஆக்கப்பூர்வமாக வழங்குவதற்கு அனுமதி வழங்காமல் அவர்களை வீட்டில் அடைத்து, அவமானப்படுத்தி, வீட்டு அடிமைகள் போல நடத்துகிறார்கள். அவ்வாறு ஆதிக்கம் செலுத்தி, கஞ்சனத்தனமாக அறியாமையுடன் இருக்கும் ஆண்கள் மரணத்தருவாயிலும் அதன் பின்னரும் *கர்மவினையின்* நீதிமன்றத்தில் தகுந்த நீதியை பெறுவார்கள். மனைவியின் *சக்தி* வெளிப்பட்டதும், அவளுடைய கணவன் காந்தத்தன்மையை பெற்று லௌகீக விவகாரங்களில் வெற்றி பெறுகிறான், மற்றும் அவர்களிடம் செல்வம் சேர்கிறது என்று தெய்வீக விதிமுறை குறிப்பிடுகிறது. இந்த *சக்தியை* வெளியிடுவதற்கு, அவன் தனது மனைவியின் தேவைகள் அனைத்தையும்

எப்போதும் பூர்த்தி செய்து அவள் விரும்புவதை தாராளமாக வாங்கித் தரவேண்டும் என்பதை அவன் தன் பாரம்பரியம் மூலம் அறிகிறான்.

சனிக்கிழமை

பாடம் 41

தானம் வழங்குவதில் பல

வழிகள்

வழங்குவதற்கு பல வழிகள் உள்ளன. சூரிய உதயத்திற்கு முன்பாக எழுந்து, சூரியனுக்கு வணக்கம் தெரிவித்து நமசுகாரம் செய்வதன் சைவ கலாச்சாரத்தின் அங்கம் ஆகும். தெய்வீக புருஷர்களுக்கு வழங்குவது, ஜோதிடர்களுக்கு வழங்குவது, ஆசிரியர்களுக்கு வழங்குவது, ஒரு *சுவாமி* அல்லது ஒரு *சத்குருவின்* ஆதரவை நாடி அவருக்கு தட்சிணை வழங்குவது, மேலும் *தசமாம்சத்திற்கும்* மேலாக, கோயிலுக்கு வழங்கும் *தானத்திலும்* மேலாக, அனைத்திற்கும் மேலானதாக ஒருவர் தனது நிறுவனத்திற்கு வழங்கும் *தானம்* என்று இந்து வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் *தானம்* நிரம்பி உள்ளது. சத்குரு தனது இருப்பின் முழுமையால் உங்களுக்கு திருப்தி அளித்து இருந்தால், அதற்கு சமமான முழுமையுடன் திருப்பித் தருவதற்கு நீங்கள் உங்களை திருப்திப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த இரண்டு முழுமைகளும் உங்களுக்குள் ஐக்கியமாகும் போது, விரும்பிய ஆசை நிறைவேறிய திருப்தியுடன் இருப்பீர்கள். *தானத்தை* பயிற்சி செய்வதைத் தவிர *சத்குருவிற்கு* வேறு எந்த தேவையும் இருப்பதில்லை என்பதால், நீங்கள் அவருக்கு வழங்கி அளித்த திருப்தியின் மூலம், அவர் இன்னொருவருக்கு வழங்க உதவி செய்து இருக்கிறீர்கள். ¶வழங்கும் செயல்களில், ஆன்மீக உபதேசங்களை வழங்குவது மிகவும் உயரியது என்று மகான்கள் தொடர்ந்து உபதேசித்து வந்துள்ளனர். நீங்கள் பணம் அல்லது உணவு மற்றும் உயிர்சக்தியின் தூல அம்சங்களின் தேவைகளை வழங்கலாம், ஆனால் தர்மம் செய்யும் வழியை நீங்கள் தெரிந்து கொண்டால், சனாதன தர்மத்தைச் சேர்ந்த பாரம்பரியங்களின் ஞானோதயம் பெற்ற விவேகத்தை வழங்கும் வழியை தெரிந்து கொண்டால், நீங்கள் அந்த நபரின் ஆன்மாவிற்கு வழங்குகிறீர்கள். *ஞான தானம் தானத்தில்* மிகவும் உயர்ந்தது என்பதால், பல இந்துக்கள் மற்றவர்களுக்கு இந்து மதம் தொடர்பான இலக்கிய புத்தகங்களை வாங்கி வழங்குவார்கள். மலேசியா மற்றும் மொரிஷியஸ் நாடுகளை சேர்ந்த பல குழுக்கள் இருபது மாதக் காலத்தில் 70,000 க்கும் அதிகமான இலக்கியப் பகுதிகளை வழங்கினார்கள். அதே காலத்தில் அமெரிக்காவை சேர்ந்த இன்னொரு குழு 300,000 க்கும் அதிகமான இலக்கியப் பகுதிகளை வழங்கினார்கள். அதில் பல இலக்கியப் பகுதிகள் மக்களின்

வாழ்க்கையை மாற்றி அவர்களை ஆன்மாவின் சிறப்பான மற்றும் முழுமையான சந்தோசத்திற்க்குள் அழைத்து சென்றது. அவர்கள் முழுமை அடையும் உச்சக்கட்டத்தில் அவர்களிடம் இருந்து மின் அதிர்ச்சியை போன்ற ஒரு நன்றியுணர்வு கிளம்பி வழங்குபவர்கள் அனைவரின் இதயங்களை நிரப்புகிறது. கல்வியை வழங்குவது தருபவருக்கும் பெறுபவருக்கும் ஒரு மகத்தான நிறைவைத் தரும். ¶தாங்கள் அன்னதானம் வழங்கும் வேளையில், ஒரு ஞானோதயம் பெற்ற ஆன்மா உண்மையாக பசியோடு இருந்து, அவர் முழுமையான திருப்தி அடையும் உச்சகட்டத்தில், அவரிடம் இருந்து வெளிப்படும் *சக்தி,* உணவை வழங்கியவருக்கு அடுத்த பிறவியில் நல்ல பிறப்பை உறுதி செய்யும் என்ற நம்பிக்கையில் இந்திய செல்வந்தர்கள் இருபதாயிரம் மக்களுக்கு *தானம்* வழங்குவார்கள். இதுவே மக்களுக்கு உணவளிக்கும் *அன்ன யக்ஞத்தின்* மிகப்பெரிய ஊக்குவிக்கும் சக்தியாக விளங்குகிறது. ¶அந்த பரிசுடன் வழங்குபவரின் ஒரு *கரம்வினை* பகுதியும் சேர்ந்து வருகிறது. தான் வழங்கிய *ஜோதிட* ஆலோசனைக்கு அதிகமாக வருமானம் வந்தால், அதை அருகில் இருந்த கோயிலுக்கு வழங்குவதை ஒரு ஜோதிடர் பழக்கமாக கொண்டிருந்தார். அவர் தான் செய்த ஜோதிட கணிப்புக்கு கூடுதலான தொகையை வாங்குவதன் மூலம், கூடுதலாக வரும் கர்மவினையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. "நான் சோகத்தை மூலமாக கொண்ட *தானத்தை* பெற விரும்புவதில்லை என்பதால், நான் *அந்த்யேஷ்டி சம்ஸ்காரம்* என்கிற ஈமச்சடங்கை நடத்தி வைப்பது இல்லை. அது என் குடும்பத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்," என்று இன்னொரு பண்டிதர் தெரிவித்தார். வழங்குவது என்பது *கர்மவினையை* சமன்செய்யும் மற்றும் ஒருவர் தான் பெற்ற வாழ்த்துக்களுக்கு நன்றியை வெளிப்படுத்தும் வழியாகவும் இருக்கிறது. "கோயிலில் இருந்து மனநிறைவாக நான் பெற்ற முழுமைக்கு ஏற்ப, அந்த கோயில் உண்டியலில் காணிக்கை செலுத்தாமல் வருவதில்லை," என்று இன்னொரு பக்தர் தெரிவித்தார். "ஒரு உணவகத்தில் பரிமாறுபவர் வழங்கிய சேவையால் நான் பெற்ற சந்தோசத்திற்கு ஈடாக அவருக்கு இனாம் வழங்காமல் நான் வருவதில்லை," என்று உணவுச் சுவையறிவதில் வல்லுநர் தெரிவித்தார். இது *தானம்* வழங்குவதில் இன்னொரு வகை ஆகும். ¶குழந்தைகளுக்கு *தானம்* வழங்குவதைப் பற்றி சிறு வயதிலேயே கற்றுத் தரவேண்டும். அவர்கள் பத்து *இயமங்களைப்* பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் தங்கள் சொந்த *பிராரப்த கர்மவினையின்* தாக்கத்தால் நேர்மை தவறி நடக்கவில்லை. கோயிலுக்கு, தெய்வீக புருஷர்களுக்கு, தங்களுக்குள் மற்றும் தங்கள் பெற்றோர்களுக்கு *தானம்* வழங்குவதைப் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுக்கலாம். அவர்களுக்கு வழிபாடு, சுலோகம் மற்றும் சந்தோசத்தை கற்றுத் தந்து, அவர்கள் அமைதியாக இருந்து அமைதியின் ஆனந்தத்தை அனுபவிக்கும் எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்

என்பதை அவர்களுக்கு தெரிவிக்கலாம். தங்கள் வருமானங்களுக்கு ஏற்ப, நிறுவனங்களும் மற்ற நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 42

துறவிகள் எவ்வாறு

தானத்தை நிறைவேற்றுகிறார்கள்

சாதுக்கள், சந்நியாசிகள், சுவாமிகள், சாதகர்கள், விரதத்தில் இருக்கும் ஒரு ஆண்டி ஆகியோர் *தானம்* செய்வது மிகவும் முக்கியம். அவர்கள் தொடர்ந்து தங்கள் நேரத்தை வழங்கினாலும், அது அவர்கள் *விரதத்தின்* நிறைவேற்றத்திற்கு பயன்படுகிறது. அவர்கள் பணியில் இல்லை மற்றும் எந்த வருமானமும் இல்லை என்பதால் அவர்கள் *தசமாம்சம்* வழங்குவது இல்லை. அவர்களுக்கு *தானம்* என்பது எதிர்பாராத வழிகளில் எதிர்பாராதவருக்கு வழங்குவது ஆகும். அவர்களுக்குள் இருந்த *ஆணவத்தின்* மீது தாக்குதல் நடத்தி, அவர்களின் *பிராரப்த கர்மவினைகளுக்கு* பாதையாக விளங்கி, அவர்களின் ஆன்மீக விரிவாக்கத்தின் அடுத்த நிலையை அடைவதற்கு உதவியாக இருந்து, அவர்களுக்கு உதவியாக இருந்த முரட்டுத்தனமான *சாதுவுக்கு* நன்றி தெரிவிக்கும் பொருட்டு, ஏழு நாட்கள் தேநீர் வழங்குவது ஒரு வகை *தானமாக* இருக்கும். *தானம்* என்பது ஒருவர் தனது *குருவிற்கு,* புனிதமான இலைகள் மற்றும் மலர்களைக் கொண்டு திட்டமிடாமல் உருவாக்கப்பட்ட ஒரு மாலையை எதிர்பாராத நேரத்தில் கொடுப்பது ஆகும். ஒரு சிலருக்கு அல்லது தனக்கு மட்டுமே சமைக்காமல், குழுவினர் அனைவருக்கும் சமைப்பதும் *தானம்* ஆகும். ¶ஆன்மீக பாதையில் ஒரு உயர்ந்த நிலையை அடைந்தவர், மேலும் உயர செல்வதற்கு, தான் வழங்கப்பட்டதற்கு திருப்பித் தரவேண்டும் என்று விதிமுறை கூறுகிறது. ஒரு வளர்ந்து வரும் நிபுணர், தான் வழங்கும் தெய்வீக உபதேசங்களை தானே காதால் கேட்டு, மற்றவர்களை முழுமையாக்கி மற்றும் உயர்த்துவதன் மூலம் தானும் உயர்ந்து மற்றும் முழுமையாகி அடுத்த நிலைக்கு செல்ல அனுமதி பெறுகிறார். தாங்கள் கற்றதை மற்றவர்களுக்கு ஆலோசனையாக வழங்க, கற்றுத் தருவதற்கு அல்லது தெரிவிப்பதற்கு விருப்பம் இல்லாதவர்கள், தாங்களே ஒன்று அல்லது இரண்டு இயமம் மற்றும் நியம பயிற்சிகளை பதட்டத்துடன் எதிர்கொண்டு, தொடர்ந்து கற்கும் நிலையில் இருந்து வருகிறார்கள். *ஞானத்தை* ஆலோசனை, ஆறுதல் மூலமாக வழங்குவது, சனாதன தர்மம் மற்றும் ஒற்றை சித்தாந்தமாக இருக்கும் அத்வைத ஈசுவரவாதத்தை கற்றுத்தருவது ஆகியவை ஒவ்வொரு துறவியின் ஒரு நிறைவேற்றம் மற்றும் கற்கும் சுழற்சியின் முடிவாகவும்

விளங்குகிறது. ஒருவர் தனக்கு கற்றுத் தரப்பட்டதையும் தான் மனப்பாடம் செய்ததையும் தொடர்பின்றி சொல்லாமல், விவேகம் என்பது சரியான நேரத்தில் பயன்படுத்தும் அறிவு என்பதால், அது கேட்பவரின் உடனடி தேவைக்கு ஏற்ப தனது தத்துவ அறிவை பயன்படுத்துவதை குறிப்பிடுகிறது. ¶*சாதகர்கள், சாதுக்கள், யோகிகள்* மற்றும் *சுவாமிகளுக்களிடம்* பணம் இல்லாததால், அவர்களுக்கு *தான சாதனா* என்பது, அவர்களிடம் அதிகமாக நிரம்பி இருப்பதால், எதிர்பாராமல் வெளிப்படும் ஆன்மீக சக்தியின் இயல்பான விளைவாக, அவர்கள் சனாதன தர்மத்தைப் பற்றி இறுதியில் வாய்மொழியும் வரை, பொருட்கள் மற்றும் சேவைகள் மூலம் *தானத்தை* அனுட்டானம் செய்ய வேண்டும். தெய்வீக உண்மைகள் நிரம்பி இருந்து, அந்த முழுமை நன்றாக அடியில் அழுத்தப்பட்டு நெருக்கமாக சிறைபடுத்தப்பட்டு இருந்தாலும், கசிந்து வெளிவரும் பண்பை உடையவர்களே சனாதன தர்மத்தை மற்றவர்களுக்கு கற்றுத்தருகிறார்கள். வயதில் முதிர்ந்த இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல், தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் அதற்கு முந்தைய தலைமுறை, மற்றும் குழந்தைகள் மற்றும் வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் அவர்கள் வினையூக்கியாக இருக்கிறார்கள்.

ஆஸ்திக்ய-ஈஸ்வரபூஜன

आस्तिक्य-ईश्वरपूजन



இறை நம்பிக்கை மற்றும் வழிபாடு

பரமாத்துமாவின் வழிகாட்டலுடன், அவர்கள் வழிபாட்டில் இருக்கும் இறை நம்பிக்கையை தேவர்கள் மதிக்கிறார்கள். இறை நம்பிக்கையில் இதயத்தின் நோக்கம் அடங்கியுள்ளது. இறை நம்பிக்கையில் இருந்து ஒளி தோன்றுகிறது. காலையில் இறை நம்பிக்கை, மதிய நேரத்தில் இறை நம்பிக்கை, சூரியன் மறையும் நேரத்தில் இறை நம்பிக்கை, இறை நம்பிக்கையின் மூலம் மக்கள் பிரார்த்தனை செய்ய வருகிறார்கள். இறை நம்பிக்கையே, எங்களுக்கு இறை நம்பிக்கையை கொடு!

ரிக் வேதம் 10.151.4-5. வேஎ, ப. 180



ஈஸ்வர பூஜன என்கிற வழிபாட்டின் ஒரு அங்கமாக, ஒரு பக்தை தலைக்கு மேல் கைகளை உயர்த்திக் கொண்டு, விநாயகப் பெருமானை வழிபடுகிறாள். உள்படம்: ஒரு இரயில் நெருங்கிக் கொண்டிருக்க, இரயில் தண்டவாளத்தில் தனது வாகனத்துடன் சிக்கி இருக்கும் ஒருவர், சிவபெருமானை வழிபடுகிறார். இந்த சோதனையிலும் அவர் தனது இறைநம்பிக்கை என்கிற ஆஸ்திகத்தை தக்க வைத்திருக்கிறார், மற்றும் சிவபெருமான் அருகில் இருந்து அவரை பாதுகாப்பாக வழிநடத்துகிறார்.

திங்கட்கிழமை

பாடம் 43

ஆஸ்திகம்:

இறை நம்பிக்கை

இறை நம்பிக்கை என்கிற *ஆஸ்திகம்*, நான்காவது *நியமமாக* இருக்கிறது. இறை நம்பிக்கை என்கிற வஸ்து மனம், உணர்ச்சி மற்றும் சில நேரங்களில் தூல மூலக்கூறுகளும் ஒன்றாக சேர்ந்து, தெய்வீக சக்திகள் மற்றும் தெய்வீகத் தன்மையில்லாத பதட்டங்களால் நிரம்பி வடிவம், நிறம் மற்றும் ஒளியின் ஒரு சூட்சும வடிவமாக இருக்கிறது. காலப்போக்கில் ஒரு படைப்பாக வலுவடையும் இறை நம்பிக்கை, பின்வரும் சொற்றொடர்கள் குறிப்பிடுவதைப் போல எளிதில் அழிக்கவும் செய்யலாம்: இறை நம்பிக்கையின் நெருக்கடியான நிலை, இறை நம்பிக்கை இழப்பு, ஆன்மா அனுபவிக்கும் வேதனை நிறைந்த காலம், மற்றும் மன அழுத்தத்திற்கு வழி வகுக்கும் சாதாரண குழப்பம் நிறைந்த ஏமாற்றம். இறை நம்பிக்கை காரணமாக, தங்கள் கூட்டுக் குழு கடைப்பிடிக்க அடிமனதில் அர்ப்பணித்துக் கொண்டுள்ள இறை நம்பிக்கையின் சாரத்தில், மக்களின் குழுக்கள் ஒன்றாக ஈர்க்கப்படுகிறார்கள், ஒன்றாக ஒட்டிக் கொள்கிறார்கள், ஒன்றாக நிலைத்து இருக்கிறார்கள், தங்களுக்குள் திருமணம் செய்து குழந்தைகளை பெற்றெடுத்து ஒன்றாக வளர்க்கிறார்கள். ¶ஊக்குவித்தல், தனிப்பட்ட உதாரணம், நேர்மையான நகைச்சுவை, புகழ்ச்சி, மிகைப் பாராட்டு, மரியாதை மூலம் ஒருவர் இன்னொருவரின் இறை நம்பிக்கையை வலுப்படுத்தலாம் அல்லது இதற்கு நேரெதிரான முறைகள் மூலம் அழித்தும் விடலாம். புத்தியை காட்டிலும் அதிக இறை நம்பிக்கையை வைத்திருக்கும் பலர், சிறப்பான இறை நம்பிக்கையை வைத்து இருப்பவர்கள் அல்லது சிறிதளவு இறை நம்பிக்கை வைத்து இருப்பவர்கள் அல்லது இறை நம்பிக்கையே இல்லாதவர்களிடம் பகடைக்காய்களாக இருக்கிறார்கள். அதனால் தத்துவம் பற்றிய ஒரு தெளிவான அறிவுணர்வு புரிதல், இறை நம்பிக்கையை நிலைநிறுத்தும் அடித்தளமாக விளங்குவதை நாம் காணலாம். நம்பிக்கை பல நிலைகளில் பல முகப்புகளுடன் இருக்கிறது. நமக்கு ஒரு நபர், ஒரு குடும்பம், ஒரு அரசாங்க அமைப்பு, அறிவியல், வானியல், ஜோதிடத்தில் நம்பிக்கை இருக்கிறது. தத்துவம், சமயத்தில் இருக்கும் நம்பிக்கை மிகவும் கடினமான

மற்றும் மென்மையான பிரிவை சேர்ந்தது மற்றும் அதை உடைக்காமல் தொடர்ந்து நிலை நிறுத்தும் போது, அந்த நபரின் சுத்தமான ஆன்மா பிரகாசிக்க தொடங்குவதால், அது மற்ற அனைத்து நம்பிக்கைகளைக் காட்டிலும் அதிக பலன் தருவதாக இருக்கிறது என்பதை சொல்லியாக வேண்டும்.
¶நம்பிக்கைக்கு மூன்று கண்கள் உள்ளன. ஒருமைவாத சைவ சித்தாந்த கண்ணோட்டத்துடன் உலகை நோக்கி மனித நேயத்தின் சித்தாந்தங்களை தெளிவாக பார்க்கும் தீர்க்கதரிசி, அவர் தற்போது காண்பது மற்றும் முன்பு கண்டது அவர் மனதில் காலப்போக்கில் வலுவடைவதால், தனது புலனுணர்வின் மீது நம்பிக்கை வைத்து இருக்கிறார். அந்த தீர்க்கதரிசியை தட்சிணாமூர்த்தியாக, அந்த இறைவனாக கண்களை உயர்த்தி பார்த்து, அவர் உதிரும் ஒவ்வொரு சொல்லின் மூலமாக வலிமை பெறுபவர்களின் நம்பிக்கை ஒரு புறம் இருக்கிறது. தங்கள் கண்களை தாழ்த்தி, சாத்திரங்கள் மற்றும் மகான்கள் கூரிய உபதேசங்களை படித்து, தங்களுக்குள் இருக்கும் ஆன்மாவில் நம்பிக்கை ஒளிவட்டத்தை உருவாக்குப்பவர்களின் நம்பிக்கையும் இருக்கிறது. பிறகு தங்கள் கண்களை மூடிக்கொண்டு கண்மூடித்தனமான நம்பிக்கையுடன் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எதையும் அறிவது இல்லை, படிப்பது இல்லை மற்றும் சிந்திப்பது இல்லை, ஆனால் ஆளுமையாக அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் ஆன்மீகத் தலைவர் மூலம் மெய்மறந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கேட்கும் ஒவ்வொரு சொல்லுக்கும், தங்கள் தலையை மேலும் கீழுமாக அசைக்கிறார்கள் மற்றும் கேள்வி கேட்கப்படும் போது, அவர்களால் தங்களது ஒன்று அல்லது இரண்டு ஆழமான சிந்தனைகளையும் நன்றாக விளக்க முடிவதில்லை. ¶இவர்கள் இல்லாமல், இன்று உலக மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையில் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் தங்கள் கண்களை மூடிக்கொண்டு இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் தங்கள் தலைகளை குனிந்து கொண்டு இடது-வலது, இடது-வலது என்று அசைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் அறியாமையின் இருண்ட உலகில் மூழ்கி இருக்கிறார்கள். அவர்கள் மக்கள், அரசுகள், அமைப்புகள், தத்துவங்கள் மற்றும் சமயங்கள் மீது தங்கள் நம்பிக்கையை இழந்து எந்த நம்பிக்கையும் இல்லாமல் அல்லது நிரந்தரமாக பாதி நம்பிக்கையை இழந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தலைவர்களை நிந்திக்கிறார்கள். இவர்கள் துயரம் நிறைந்த குழுவாக இருக்கிறார்கள். அவர்கள் வீடு மன அழுத்தம், ஏமாற்றம் மற்றும் குழப்பத்தின இருப்பிடமாக இருக்கிறது. அவர்களுக்கு பொறாமை மற்றும் கோபம் உற்சாகம் தருகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 44

நம்பிக்கை பல நிலைகளில்

இருக்கிறது

மகிழ்ச்சியை அடைய வேண்டும் என்பதற்காக மகிழ்ச்சியின் அடுத்த நிலைக்கும், நம்பிக்கை முன்னேறி செல்கிறது. இந்த நிலையில் ஜெட்-செட் குழுவினர், இன்ப விரும்பிகள், பாலியல் படங்களை எடுப்பவர்கள் மற்றும் அவர்களின் வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள். நம்பிக்கை என்று நாம் அழைக்கும் சிந்தனை, உணர்ச்சி மற்றும் விசுவாசம் அடங்கிய இந்த உருவமற்ற பொருளின் சூட்சும மூலக்கூறுகள் உலகம், மற்ற மனிதர்கள் மற்றும் அவர்கள் உடைமைகள் மீது இந்த குழுவினரின் அணுகுமுறையை உருவாக்க, இந்த குழுவினர் அனைவரும் தங்களுக்கு என்று ஒரு தனிப்பட்ட மனநிலையை உருவாக்கி, தங்களுக்குள் கலந்து உறவை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.
¶நம்பிக்கை என்பது ஒரு வலுவான சக்தியாக இருப்பதால், ஒரு இந்து *தர்மத்தின்* பாதையில் இருந்து விலகாமல் இருக்க, அவர் மகாதேவர், தேவர்கள், குரு மற்றும் ஞானோதய பாதையின் மீது தீவிர நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்று *சப்த ரிஷிகளே* இந்துக்களை எச்சரிக்கிறார்கள். அதை கொடுக்கவும் முடியும், எடுத்துக் கொள்ளவும் முடியும். அது ஒரு தேசிய சக்தி, ஒரு சமூக சக்தி, ஒரு குழுவின் சக்தி, ஒரு குடும்பத்தின் சக்தியாக இருக்கிறது. இந்த பூமியில் வாழ்ந்து நிரந்தரமான ஞானத்தை தங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வழங்கிய ஞானிகளின் சித்தாந்தங்களை குறிப்பிடும், இருபது *இயமம்* மற்றும் *நியமங்களை* கடைப்பிடிக்க இது தைரியத்தை தருவதால், இது நம்பிக்கைகளில் மிகவும் வலுவானதாக மற்றும் தெளிவுபடுத்துவதாக விளங்கி, "நித்தியமான நம்பிக்கை" என்று பொருள்படும் சனாதன தர்மத்தை பொறுத்தவரை, இது மேலும் பல சக்தி ரூபங்களை கொண்டிருக்கிறது.
¶சிலருக்கு நிலைமை சீராக இருக்கும் போது மட்டுமே நம்பிக்கை இருக்கிறது, மற்றும் நிலைமை சீர்குலைந்ததும் அவர்கள் நம்பிக்கை இழக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு முற்றிலும் புரியாத சாத்திரங்களில் மூழ்கி இருக்கும், முன்பின் அறிமுகம் இல்லாத தங்கள் தலைவர்களுக்கு மரியாதை செலுத்துகிறார்கள். அவர்கள் தங்கள் கண்களை மூடி இருப்பதால், தங்களை நிலைநிறுத்தி தொடர்ந்து மேம்படுத்த மற்றவர்கள் உதவியை நாடுகிறார்கள். “என் சார்பாக என் *சாதனாவை* செய்யுங்கள்” என்பது அவர்கள் வேண்டுகோளாக இருக்கிறது. மற்றும் தங்கள் தலைவருக்கு தெரியாமல் ஒரு முரண்பாடு அல்லது எதிர்பார்ப்பு தோன்றி, அது சாத்திரங்களில் பதிவு செய்யப்படாமல், வெளிப்படாமல் இருந்தால், நம்பிக்கையில் ஒரு நெருக்கடி தோன்றுகிறது. அதன் பிறகு பெரும்பாலும், அவர்கள் இன்னொரு தலைவர், இன்னொரு தத்துவத்திற்கு சென்று இதே அனுபவத்தை தொடர்கிறார்கள். இத்தகைய அன்பர்கள், ராக் அண்டு ரோல் குழுவுடன் இருக்கும் "குரூப்பிஸ்" போல, ஒரு குழுவில் இருந்து இன்னொரு குழு, ஒரு ஆசிரியரில் இருந்து

இன்னொரு ஆசிரியர், ஒரு தத்துவத்தில் இருந்து இன்னொரு தத்துவத்திற்கு மாறிக்கொண்டு இருக்கின்றனர். அதிர்ஷ்டவசமாக, அவர்களுக்கு வாடகை அதிகமாக இருப்பதில்லை, *பஜனைகள்* நீண்டநேரம் நடைபெறுகிறது மற்றும் நல்ல உணவும் கிடைக்கிறது. ஒரு குழுவில் இருந்து வெளியேறும் போது அதன் கதவை முழுவதுமாக மூடாமல், இன்னொரு குழுவின் கதவை ஒழுங்கின்றி திறக்கும் உத்தி மட்டும் சங்கடமான சமாளிக்க வேண்டிய சூழ்நிலையாக இருக்கிறது. ¶கண்களை மூடி மேல்நோக்கி பார்க்கும் அவருக்கு கண்கள் திறந்து இருக்கும் மற்றும் மூன்றாவது கண் ஒளிரும் அனுபவம் ஏற்படும் போது, வாய்மொழி உபதேசத்தின் மரபுவழி பரம்பரையை அடிப்படையாகக் கொண்ட *சம்பிரதாயத்தை*, அவர் இறுதியாக கண்டுகொண்டு அசைக்கமுடியாத பாதையில் இனி நிலைத்து இருப்பார். நம்பிக்கையின் மூலகூறுகள் மாற்றம் பெற்று பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் மூன்றாவது கண் மூலமாக, பாதையின் தொடக்கம் மற்றும் முடிவு மற்றும் எதிர்காலத்தில் பல தலைமுறைகளுக்கு பரப்ப வேண்டிய மரபுவழி பரம்பையை பார்த்து இருப்பதால், அவர்கள் என்றும் பின்வாங்குவது இல்லை. இந்த ஆன்மாக்கள் கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்தி, தத்துவத்தில் தேர்ச்சி பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் மூலக்கூறுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு, நாம் எல்லோரும் இந்த பூமியில் வாழ்வதற்கு தேவைப்படும் ஏன் எதற்கு என்ற கேள்விகள், நாம் எவ்வாறு நம்பிக்கையுடன் சிந்திக்க வேண்டும், நாம் இறந்ததும் எங்கே செல்கிறோம், மற்றும் மனித நேயத்தின் முடிவான சித்திகளின் நிரந்தர உண்மைகள் பற்றிய பாரம்பரிய தரநிலைகளுக்குள் மற்றவர்களின் நம்பிக்கை மூலக்கூறுகளை மாற்றி அமைக்கும் அளவிற்கு, அவர்கள் நம்பிக்கை அதிக வலிமை பெறுகிறது.

புதன்கிழமை

பாடம் 45

பரிணாம

நிலைகள்

நம்பிக்கை என்பது ஆன்மாவின் பல்வேறு விரிவாக்க நிலைகளில், அதன் புத்தியாக இருக்கிறது. ஆன்மா சிவபெருமானிடம் இருந்து ஒரு கருவாக தோன்றி, மூன்று இருப்பு நிலைகள் (அவத்தை) மூலமாக முன்னேறுகிறது: *கேவல அவத்தை, சகல அவத்தை* மற்றும் *சுத்த அவத்தை. கேவல அவத்தையில்* இருக்கும் ஆன்மாவை நிலத்தில் மறைந்து இருக்கும் ஒரு விதை அல்லது சிவபெருமானின் மறைக்கும் சக்தியான *திரோதான சக்தியின்* முதல் அம்சமாக, தனித்துவத்தின் முக்கிய தடையாக இருக்கும் *ஆணவம்* என்கிற

அறியாமையின் மேகத்தில் மறைந்திருக்கும் ஒரு தெய்வீக சுடருடன் ஒப்பிடலாம். ஆன்மாவின் பயணத்தில் அடுத்த நிலையாக இருக்கும் *சகல அவத்தை* என்பது, ஒரு உடலை பெற்று, இறைவனின் மறைக்கும் சக்தியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அம்சங்களாக இருக்கும், *மாயை* மற்றும் கர்மவினையின் கூடுதல் சக்திகளுடன் ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு இடம் மாறும் சுழல்முறை பரிணாமத்தை குறிப்பிடுகிறது. ¶*சகல அவத்தை* பயணமும் மூன்று நிலைகளை கொண்டது. அதில் முதலாவதாக இருக்கும் *இருள் பாதம்* என்கிற "அறியாமை நிலையில்" உலக அறிவு மற்றும் அனுபவத்தை பெறும் *பாசஞானத்தின்* மீது ஆன்மாவின் தூண்டுதல் இருக்கிறது. அடுத்ததாக இருக்கும் *மருள் பாதம்* என்கிற "குழப்ப நிலையில்" ஆன்மா தனது சூழலை கவனத்தில் கொள்ளத் தொடங்கி, உலகிற்கு செல்வதா அல்லது இறைவனிடம் செல்வதா என்று தெரியாமல் சிக்கித் தவிப்பதைக் காண்கிறது. இது *பசுஞானம்* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இந்த நிலையில் ஆன்மா தனது உண்மை சொரூபத்தை அறிய விரும்புகிறது. இறுதியாக இருப்பது *அருள் பாதம்* என்கிற "அருள் பாதையில்" ஆன்மா இறைவனின் அருளை பெற ஏங்குகிறது. அது இந்த நிலையில் இறைவனின் தொடர் உதவியுடன் தனது உண்மையான சமய பரிணாமத்தை தொடங்குகிறது. ¶அறியாமை *இருளில்* இருக்கும் ஆன்மாவிற்கு, நம்பிக்கை என்பது யதார்த்தம் இல்லாத அடிப்படையாக தோன்றும். அது குழந்தைத்தனமான தனது நடவடிக்கைகளில், இந்த நம்பிக்கையை வலுவாக பிடித்துக் கொள்கிறது. இந்த இளம் ஆன்மாவில் புத்தி இல்லாமல், அடிப்படை நம்பிக்கை அற்றும் உள்ளுணர்வு மனம் மற்றும் உடல் மட்டுமே இருக்கிறது. ஆனால் அதிருஷ்ட சக்தி, அறியப்படாத விஷயங்கள், சான்றோர்கள் வழங்கும் அறிவுரை மீது இருக்கும் நம்பிக்கை மற்றும் மற்றவர்களை இம்சை செய்யாமல் சமூகத்துடன் பொருந்திக்கொள்ளும் திறமை, ஆன்மாவை *மருள்* என்ற அடுத்த நிலைக்கு பக்குவப்படுத்துகிறது. இந்த நிலையில் நம்பிக்கை என்பது ஒருவர் தன் மீது, நெருங்கிய நண்பர்கள் மற்றும் சகாக்கள் மீது, தவறாக இருந்தாலும் தனது சொந்த நினைவாற்றல் மற்றும் மற்றவர்கள் கருத்துக்களின் மீது வைக்கும் நம்பிக்கையாக உருவெடுக்கிறது. ¶இந்த நிலையில் ஆன்மாவை பிணைத்து, சூழ்ந்துக்கொள்ளும் *கர்மவினைகள்* மற்றும் விவேகம் வெளிவருவதற்கு அனுபவிக்க வேண்டிய அறியாமை *கர்மவினைகள்* உருவாக்கப்படுவதால், இந்த பற்றில் இருந்து ஆன்மா விரைவாக வெளியேறுவது இல்லை. விவேகமாக இருப்பவர் அறியாமை இணைப்புக்கள் அனைத்தையும் எதிர்கொண்டு விரைவாக வெளியேறுவார். *மருள் பாதம்* என்பது அதிக பிணைப்பு மற்றும் உறுதியுடன், உறுதியான பிணைப்பாக இருக்கிறது. ஆனால் *ஆணவத்தின்* வெளிப்புற ஓடு உருவாக்கப்படும் போது, அதை உடைத்து வெளியேற ஆன்மா தனது சொந்த முயற்சியை மேற்கொள்கிறது. அது மனசாட்சியின் குரலாக இருப்பதால் புறக்கணிக்கப்படுகிறது. ¶ஆன்மாவை

அடுத்த அனுபவ வழக்கத்திற்குள் *யோகம்* கொண்டு வருகிறது. ஒருவர் நல்ல மற்றும் நேர்மையான செயல்களை செய்யும் போது, வாழ்க்கையில் எப்போதும் ஒரு நேர்மறை திருப்பம் இருப்பதாக தோன்றுவதையும், அவர் எதிர்மறையான, நேர்மையற்ற செயல்களில் ஈடுபடும் போது, மெதுவாக பதட்டம் நிறைந்த ஒரு குழப்பக் குழியில் அவர் தன்னை இழந்து விடுவதையும் ஆன்மா கண்காணிக்கிறது. அதனால் அவர் இறை நம்பிக்கையுடன் இருக்கும் போது, நல்லவராக மற்றும் புனிதமானவராக மாற்றம் பெறுகிறார். இதனால் அவர் வாழ்வில் ஏற்படும் சமநிலை, *இருவினையொப்பு* என்று அழைக்கப்படுகிறது. ¶அவர் தனக்கு தெரிந்தோ தெரியாமலோ *ஆணவம்*, *கர்மவினை* மற்றும் *மாயை* என்ற *மும்மலங்களை* கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறார். *மாயையின்* மோகசக்தி படிப்படியாக குறைகிறது. அவர் மனதை *கர்மவினை* கட்டுப்படுத்தி, கொடுமையான அனுபவங்கள் மூலம் அவரை சித்ரவரதை செய்வது இல்லை. மற்றும் தனது தன்னல இயல்பாக இருக்கும் *ஆணவம்*, தனது பிடியை தளர்த்தி, வாழ்வில் அதிக பொதுவான இரக்கத்தை உணர அனுமதி அளிக்கிறது. இது வளர்ச்சி பெற்று, *மலங்கள்* தங்கள் மறைக்கும் சக்தியை இழக்கும் *மலபரிபாகம்* என்கிற நிலையை அடையும். ¶இது சரியான நேரத்தில் *அருள்* கைகூடுவதற்கு வழிவகுக்கிறது. இந்த நிலையில் இறைவனின் அருள் உயிர் மீது பாய்ந்து செல்கிறது மற்றும் இது *சக்திநிபாத* என்று அழைக்கப்படுகிறது. அருள் உட்புறமாக பாய்ந்து செல்லும் போது, சிவபெருமான் மீது ஒரு அதீத ஏக்கம் ஏற்படுவதன் மூலம் தெரிய வருகிறது. அவர் ஆன்மீகம் மற்றும் புனிதமான விவகாரங்களில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறார். அருள் வெளிப்புறமாக பாய்ந்து செல்வதன் மூலம் ஒரு *சத்குரு* தோற்றம் அளிக்கிறார். அவரது உள்ளுயிரின் ஆழத்தில் இருந்து இனம்புரியாத ஒன்று வெளிவருவதாக ஆன்மா உணரும் தெளிவான, ஆன்மீக அதிர்வலையை அவர் வழங்குவதால், அவர் யார் என்பது முக்கியமில்லை. ஆன்மா *மலபரிபாகம்* என்ற நிலையை அடைந்ததும் இறைவனின் *திரோதான சக்தி* தனது பணியை செய்து முடித்து, *அனுகிரகம்* என்கிற வெளிப்படுத்தும் சக்திக்கு வழிவிடுகிறது மற்றும் *சக்திநிபாத* என்கிற அருள் உட்புறமாக பாய்ந்து செல்லும் நிலை ஏற்படுகிறது. ¶இந்த நிலையில், அறிவு தடையின்றி வருகிறது. மனித விவகாரங்கள் பற்றிய நுணுக்கங்கள் கடந்தகால அனுபவங்களின் விளக்கமாக மட்டுமே விளங்குகிறது, ஏனென்றால் மற்றவர்களுக்கு விளக்கப்படும் அனுபவங்களை அந்த நபர் தானே உண்மையில் அனுபவித்து வாழ்ந்துள்ளார். அது ஒரு மர்மமாக இருப்பதில்லை. அது *சுத்த அவத்தையின்* தொடக்கமாக விளங்குகிறது. சிவபெருமான் உச்சில் இருக்கிறார், விநாயகப் பெருமான் கீழே இருக்கிறார், மற்றும் முருகப்பெருமான் மத்தியில் இதயத்தில் வீற்று இருக்கிறார்.

வியாழக்கிழமை

பாடம் 46

பாரம்பரியத்தில்

நம்பிக்கை

உண்மையை உள்ளடக்குவதில் அறிவு ஒரு மிகவும் சிறிய கருவியாக இருக்கிறது, ஆனால் நம்பிக்கை என்பது ஒரு மிகவும் விரிவான, இணக்கமுள்ள உள்ளடக்கும் புலனாக இருக்கிறது. வாழ்க்கை மற்றும் வாழ்க்கைக்கு அதீதமான மற்றும் சிவபெருமானைப் பற்றிய மர்மங்களை புரிந்துகொள்ள பகுத்தறிவை காட்டிலும் நம்பிக்கை மூலம் நன்றாக புரிந்துகொள்ள முடிகிறது. புத்தி என்பது கீழ்நிலை *நாடி/சக்கர* அமைப்பில் ஒரு *நினைவு/பகுத்தறிவு* கூட்டமைப்பாக இருக்கிறது. பல்வேறு தகவல்களை கையாள்வதில் துரிதமாக இருக்கும் அதன் திறமை, சில சமயங்களில் விசித்திரமாக இருக்கிறது. இது ஒரு புறம் இருக்க, புத்தி என்பது நாம் காதால் கேட்டு நினைவில் வைத்திருப்பது, நாம் அனுபவித்து நினைவில் வைத்திருப்பது, பகுத்தறியும் புலன்களில் சுத்தமாக அல்லது சுத்தமில்லாமல் இருப்பவர்களுக்கு நாம் அளிக்கும் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. நாம் அவற்றில் நினைவில் வைத்திருப்பது மற்றும் மறந்து இருப்பது கேட்பவர்களுக்கு நன்றாக பயன் தருவதாக இருக்கலாம், அல்லது குழப்பம் தருவதாக இருக்கலாம், ஆனால் அது உறுதியாக உண்மைப் பொருளாக இருக்காது. ¶இரு வகை நம்பிக்கைகள் உள்ளன. ஒரே மாதிரியான அனுபவங்களைப் பெற்று, அறியாமையால் திருத்தப்படாமல் ஒரே மாதிரியாக அதைப் பற்றி பேசிய *குருமார்கள்,* பண்டிதர்கள், *யோகிகள்* மற்றும் *ரிஷிகளிடம்* இருக்கும் நம்பிக்கை முதல் வகையை சேர்ந்தது. அதனால் அவர்களின் அகத்தின் ஆழத்தில் இருக்கும் உயர்ந்த மூலத்தில் இருந்து ஒரு முடிவான உண்மைப் பொருளாக வெளிப்பட்டுள்ளது என்பதில் நாம் நம்பிக்கை வைக்கலாம். ஒருவரது சொந்த ஆன்மீக வாழ்வில், நாடப்படாமல், அழைக்கப்படாமல் தோன்றும் இயலுணர்வு, வெளிப்பாடுகள் மற்றும் தரிசன தூண்டுதல்களில் நம்பிக்கையின் இரண்டாவது அம்சம் அமைந்துள்ளது. அவை ஒரு புத்தகத்தில் படித்தது, தொலைக்காட்சியில் பார்த்தது அல்லது ஒரு நண்பர் அல்லது ஒரு தத்துவ ஞானி சொல்வதை கேட்டதைக் காட்டிலும் பல மாதங்கள் கழிந்தும் மனதில் மிகவும் தெளிவாக இருக்கின்றன. இந்த தனிப்பட்ட வெளிப்பாடுகளை *யோகிகள்* மற்றும் *ரிஷிகள்* மற்றும் *சாதுக்கள்* பார்த்தவை மற்றும் கேட்டவை மற்றும் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வரும் அவர்களின் விளக்கங்களுடன் ஒப்பிடும் போது, அவை ஒரு புதிய மெய்ஞ்ஞான புத்தியை உருவாக்குகிறது. முழுமையான புலமையுடன், மெய்ஞ்ஞான நுணுக்கங்களில் இருந்து ஒரு புதிய புத்தியை உருவாக்கும் இந்த முதிர்ந்த ஆன்மாக்கள் *சுத்த அவத்தையில்* இருக்கிறார்கள். அவர்களின் நம்பிக்கை அவர்களையே

குறிப்பிடுவதால் அது வலுவாக மற்றும் அச்சமின்றி இருக்கிறது. அது *சுத்த அவத்தையில்* அவர்களின் ஆன்மாவின் பக்குவம், பரிணாமம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை குறிப்பிடுகிறது. ¶பாரம்பரியங்களை கேள்வி கேட்பது அல்லது சந்தேகிப்பது இல்லாமல், பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்வது நம்பிக்கையின் அம்சங்களில் ஒன்றாகும். அடுத்து வரும் நம்பிக்கை ஆன்மீக விரிவாக்க செய்முறையில் இருக்கிறது, அதனால் ஒருவர் ஒரு அனுபவத்தை பெறும் போது, செய்முறைக்கு வெளியே இன்றைய எதிர்மறை அனுபவங்கள் இருப்பதாக வருந்தாமல், செய்முறை நடந்துகொண்டு இருக்கிறது என்பதில் ஒருவர் எப்போதும் நம்பிக்கை வைத்து இருக்கிறார். ஆனால் இது உணவின் தேவை, ஒரு சில தேக சுகங்கள் மற்றும் தவறுகள் செய்தால் தீவிரமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதால் அதிக குற்றங்கள் செய்யாமல் ஒரு சமூகத்தில் வெளிப்படையாக பொருந்தும் திறமையை பெறுவதைத் தவிர வேறு எந்த செய்முறையிலும் கவனம் செலுத்தாத, *இருள் பாதம்* என்கிற அறியாமை நிலையில் இருக்கும் ஆன்மாக்களுக்கு சாத்தியமில்லை. அவர்கள் தங்கள் பாடங்களை வினை-மற்றும்-வேதனை நிறைந்த எதிர்வினை வழிகள் மூலம் கற்றுக் கொள்கிறார்கள். ¶*மருள் பாதம்* என்கிற குழப்ப நிலையில் இருப்பவர்கள், தங்கள் தூல இருப்பை நூறு பிறவிகளுக்கு தக்க வைத்துக்கொள்ள, தங்களது சொந்த தன்முனைப்பை வளர்த்து, நல்ல மற்றும் தீய மற்றும் இரண்டும் கலந்த *கர்மவினைகளை* உருவாக்குவதால், அவர்களால் ஆன்மீக விரிவக்கத்தில நம்பிக்கை மற்றும் பாரம்பரியத்தில் விசுவாசம் வைப்பது கடினம் மற்றும் பெரும்பாலும் சாத்தியமில்லை என்றே சொல்லலாம். அவர்கள் உபதேசங்களை காது கொடுத்து கேட்பது இல்லை, மற்றும் பிரசங்கம் முடிந்ததும் உணவிலும் வீண் பேச்சிலும் அதிக ஆர்வத்துடன் இருப்பார்கள். அவர்கள் தத்துவ புத்தகங்களை படித்து விட்டு, அந்த போதனைகள் கடந்த காலத்திற்கு மட்டுமே பொருத்தமானவை என்று காரணம் கூறுவார்கள். பழைய பாரம்பரியத்தின் சிறந்த அறிவு, மற்றும் அவர்கள் பாட்டனார்களின் விவேகமும், அவர்களின் அகங்கார ஆதிக்கத்தில் ஒரு ஆக்கிரமிப்பாக இருக்கிறது. ¶ஆன்மா *அருள் பாதம்* என்கிற அருள் நிலைக்குள் நுழைய பக்குவடையும் போது தான், கடந்த கால பாரம்பரியத்தை சார்ந்து இருந்து, தற்போதைய *சாதனாக்களை* செய்து, தர்ம நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்து, எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உருவான கடந்தகால பாரம்பரியத்தில் இருந்து சிறந்ததை கொண்டு தங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் திறமை உள்ளிருந்து தோன்றுகிறது. இந்த மாற்றம் மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. இப்போது உண்மை என்பது உண்மைப் பொருளாக இருக்கிறது மற்றும் அதைப்பற்றி எப்போதும் பேசப்படுகிறது. *இயமங்கள்* என்கிற கட்டுப்பாடுகளில் முழுமையான நிறைவை பெற்று, அவை தனிப்பட்ட உயிர் சக்திகளின் மரபணு அமைப்பில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றன. அவர் தற்போது *அருள் பாதத்தில்* நுழையும் போது, *நியமங்கள்* என்கிற ஆன்மீக

பழக்கங்கள் வலுவாக மனதில் நிலைத்து நிற்கின்றன. ¶*ஆஸ்திக்ய* என்கிற சமஸ்கிருத சொல்லுக்கு "அது இருக்கிறது" என்பது பொருள். அதனால் இந்துக்களுக்கு *நம்பிக்கை* என்பது இருப்பதில் சிரத்தையுடன் இருப்பதை குறிக்கிறது. *ஆஸ்திக்ய* என்பது இருப்பின் மீது சிரத்தையுடன் இருப்பவர், பக்தி மற்றும் நம்பிக்கையுடன் இருப்பவரை குறிக்கிறது. இதன் மூலம் இறை நம்பிக்கை மற்றும் ஆஸ்திக்ய சொற்கள் ஒரே பொருளுடையவை என்பதை நாம் புரிந்துக் கொள்ளலாம். இறை நம்பிக்கை என்கிற ஆன்மீக-அறிவுணர்வு மனம், பகுத்தறிவால் அல்லாமல் அறிவு எழுச்சி மூலம் பிணைந்த எண்ணற்ற மெய்ஞ்ஞான கருத்துக்கள் மூலம் உருவாக்கப்படுகிறது. இந்த கருத்துக்கள் உட்புற மனதில் *சம்ஸ்காரங்களாக* பதிந்து இருப்பதால், அவற்றை நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ¶"பார்வையே நம்பிக்கையை வழங்கும்" என்ற பழமொழி யதார்த்தமாக, அனுபவம் பெற்ற அறிஞர்களின் ஆதரவை பெற்றுள்ளது. "நம்பிக்கையே பார்வையை வழங்கும்," என்பது ஒரு அதிக வலுவான பழமொழியாகும். இன்றைய விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்கள் *மருள் பாதத்தில்* வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் இரு கண்களால் பார்த்து, தங்களது தற்போதைய நம்பிக்கையின் அடிப்படையில் தீர்மானத்தை வழங்குகிறார்கள். கடந்தகால *ரிஷிகள்* மற்றும் இன்றைய *ரிஷிகள்* மற்றும் எதிர்காலத்தில் வர இருப்பவர்களும் தீர்க்கதரிசிகளாக இருக்கிறார்கள். சீனா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா முழுவதும், ஆப்பிரிக்கா, அமெரிக்க நாடுகள், பொலினீசியா மற்றும் அனைத்து உலக நாடுகளின் வரலாறுகளை இணைக்கும் ஒரு மெல்லிய தொடர்பு, தீர்க்கதரிசிகளையும் அவர்கள் தரிசித்ததையும் தொடர்புப்படுத்துகிறது. இது இரு கண்களினால் பார்ப்பதை குறிக்காமல், மூன்றாவது கண்ணாக இருக்கும் ஆன்மீக கண் வழியாக பார்ப்பதை குறிப்பிடுகிறது. முன்பே தரிசித்த காட்சியை வாக்குவாதம் அல்லது வற்புறுத்தல் மூலம் திருத்தி அமைக்க முடியாது. தீர்க்கதரிசி தான் கண்ட காட்சியை, கேட்பவரின் ஆன்மாவுடன் தொடர்புப்படுத்துகிறார். இதுவே *சம்பிரதாயம்*. இதுவே *குரு-சிஷ்ய* கருத்து பரிமாற்றம். இதுவே உண்மைப் பொருள். இது *சுத்தம்*. இதுவே இந்த *உபதேசதத்தின்* முடிவு ஆகும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 47

ஈஸ்வரபூஜன:

வழிபாடு

வழிபாடு என்கிற ஈஸ்வரபூஜன ஐந்தாவது *நியமமாக* இருக்கிறது. அனைத்து விஷயங்களையும் கவனத்தில் கொண்ட பிறகு, மனித வாழ்க்கை என்பது வழிபாடு அல்லது போர்க்களம், உயர்நிலை இயல்பு அல்லது கீழ்நிலை இயல்புடன் இருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம். இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றாலும், தினசரி வழிபாடு மற்றும் தியானத்தின் மூலம் வழிபாட்டை பண்படுத்த ஒரு சுருக்கமான விளக்கத்தை இங்கே காணலாம். கருத்தரிப்பில் இருந்து ஆன்மாவின் பரிணாமம், மூலத்திற்கு திரும்புவதை குறிப்பிடும் ஈஸ்வரபூஜனவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. *இருள் பாதம்* என்கிற அறியாமை நிலையில், ஆன்மா தன் மூலத்திற்கு திரும்பும் செய்முறை மிகவும் விரைவில் நடந்து விடுகிறது. இந்நிலையில் *மூலத்தாரத்திற்கு* கீழிருக்கும் ஏழு *சக்கரங்களில்* வாழ்வதால் தோன்றும் உள்ளுணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளால் தூண்டப்பட்ட தீவிர ஆர்வம் இருக்கிறது. மேல் நோக்கி செல்லும் பாதையில் ஒரு இயல்பான நாட்டம் பிறக்கிறது. இந்த வேதனையில் இருந்து விடுபடுவதற்கு, இந்நிலையில் இருக்கும் மக்கள் பெரும்பாலும் தென்படுவதை எல்லாம் வழிபடுகிறார்கள். குருட்டு நம்பிக்கையில் பிணைக்கப்பட்டு, பகுத்தறிவின் வழிகாட்டலுடன் கூடிய ஒரு தெளிவான புத்தி இல்லாமல், மெய்ஞ்ஞான அனுபவம் மூலம் வளர்ச்சி பெற்ற ஒரு பண்பட்ட புத்தி இல்லாமல், அவர்கள் ஒரு நல்ல வாழ்வை வாழ்வதற்கு, தங்கள் அறியாமை கூட்டில் இருந்து விடுபட வழிபாட்டின் மூலம் கடினமாக முயற்சிக்கிறார்கள். அவர்கள் முயற்சி செய்தால், அவர்களுக்கு எட்டும் தூரத்தில் தான் இருக்கிறது என்று இயலுணர்வின் சிறிய இழை உறுதி அளித்துக்கொண்டு இருக்கிறது. அவர்கள் இறைவனை அழைக்கிறார்கள், இறைவனைக் கண்டு அஞ்சுகிறார்கள், அவருக்கு அருகில் செல்ல முயற்சிக்கிறார்கள் மற்றும் அவர் வெகு தூரத்தில் இருப்பதை காண்கிறார்கள். ¶அவர்கள் பக்குவமடைந்து வாலிப பருவத்தை அடைந்து, குழப்பம் ஆதிக்கம் செலுத்தும் *மருள் பாதத்தில்* அடியெடுத்து வைக்கும் போது, அதனோடு இருக்கும் வழிபாடு மற்றும் அதன் அம்சங்கள் மற்றும் பாரம்பரியங்கள் பழமையானதாக, உபயோகம் இல்லாததாக தோன்றி, அவற்றை விட்டொழிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இந்த நிலையில் இருக்கும் ஒரு பெண் கண்ணாடியைப் பார்த்து, "என்ன ஒரு அழகு! என்னைப் போன்ற அழகி வேறு யாரும் இல்லை," என்று நினைக்கிறாள். அதைப் போன்று ஒரு இளைஞன் தனது தோற்றம் மற்றும் உடலமைப்பின் மீது அதிக கர்வத்துடன் இருக்கலாம். இந்நிலையில் வழிபாடு இருந்தாலும், அது தன்னலத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. அருள் நிலையில் மற்றும் அந்த நிலையில் நுழையும் போது மட்டுமே மகான்கள், இறைவன், மகாதேவர்கள், *தேவர்களுடன்* தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள, அவர்களை வரவழைத்து உரையாடும் உண்மையான வழிபாடு தோன்றுகிறது. ¶இறை நம்பிக்கை என்கிற *ஆஸ்திக்யம்* வழிபடுவதற்க்கான மனநிலையை உருவாக்குகிறது. ஆன்மாவின்

கருத்தரிப்பில் இருந்து சிவபெருமானுடன் நடைபெறும் இறுதி ஐக்கியம் வரை வழிபட்டு, தொடர்புகொண்டு, நாடி, ஒன்றாக கலந்து விடுவது மனித நேயத்தின் முடிவான தீர்மானங்களாக, ஒருமைவாத சைவ சித்தாந்தம் இருப்பதை நம்மால் உணர முடிகிறது. சனாதன தர்மத்தில் என்னவாக இருக்கிறதோ அதில் இறை நம்பிக்கை இருப்பதையும், ஆபிரகாமிய சமயங்களில் இது வரை எதுவாக இல்லையோ அதில் இறை நம்பிக்கை இருப்பதையும் நம்மால் தீர்மானிக்க முடிகிறது. ¶உண்மையில் ஒரு நுட்பமான "பாதை" என்று புதிய யுகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்வதைப் போல; கண்ணுக்கு புலப்படாத அல்லது காதால் கேட்கமுடியாத அனுபவம் என்று சூட்சும ஞானிகள் விளக்குவதைப் போல; தெய்வமும் பக்தனும் இதயம் கனிந்து அன்பைப் பரிமாறிக் கொள்வது என்று சாதாரண மக்கள் விளக்குவதைப் போல வழிபாடு என்பது மிகவும் உயரிய நிலையில் நடைபெறும் தொடர்பு என்று குறிப்பிடலாம். இந்துக்களுக்கு வழிபாடு என்பது பல நிலைகளில் பல வகைகளாக இருக்கிறது. பெற்றோர்கள் குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதால், வீட்டில் இருக்கும் குழந்தைகள் தாய் தந்தையரை ஆண் தெய்வம் பெண் தெய்வமாக நினைத்து வழிபடுகிறார்கள். ஒரு கணவன் தன் மனைவியை பெண் தெய்வமாக நினைத்து வழிபடுகிறான். ஒரு மனைவி தன் கணவரை ஆண் தெய்வமாக நினைத்து வழிபடுகிறாள். பூஜை அறையில் ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் மற்றும் மகான்களை தங்களுக்கு பிரியமான நண்பர்களைப் போல வரவழைத்து, குடும்பம் முழுவதும் அவர்களின் பிம்பங்களை வழிபடுகிறார்கள். குடும்பம் தினமும் அல்லது வாரத்திற்கு ஒரு முறை கோயிலுக்கு சென்று, அவ்வப்போது நடைபெறும் திருவிழாக்களில் பங்குபெற்று, வருடம் ஒரு முறை தொலைவில் இருக்கும் புண்ணிய தலத்திற்கு யாத்திரை செல்கிறது. இந்து குடும்பத்தை ஒன்றாக இணைக்கும் சக்தியாக வழிபாடு விளங்குகிறது. வெளிப்புற வழிபாடு மிகவும் ஆழமான நிலையில், உட்புறமாக மாற்றம் பெற்று தியானம் மற்றும் ஆழ்ந்த சிந்தனை மூலம் உள்ளிருக்கும் இறை வழிபாடு நடைபெறுகிறது. இந்த வகை வழிபாடு *யோகம்* மற்றும் வலுவான ஆன்மீக அனுபவங்களுக்கு வழிநடத்தி செல்கிறது.

சனிக்கிழமை

பாடம் 48

வழிபாட்டு

சடங்குகள்

விசேஷமான பாரம்பரிய வழிபாட்டு சடங்காக இருக்கும் *பூசையை* செய்ய பலர் அஞ்சுகின்றனர், ஏனென்றால் தங்களுக்கு போதுமான பயிற்சி

கிடைக்கவில்லை என்றும் அதில் இருக்கும் ஆன்மீக கோட்பாடுகள் தங்களுக்கு புரியவில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இதைப் பொருத்தவரையில், இந்து சமய *பூசாரிகள்* நேர்மை, அக்கறை மற்றும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. தங்களுக்கு பூஜை மற்றும் சடங்குகள் செய்வதற்கு, அல்லது வீட்டில் *பூஜை* செய்ய தங்களுக்கு பயிற்சி அளிக்க மற்றும் அதற்கு *தீட்சை* மூலம் அனுமதி பெறுவதற்கு, பெரும்பாலான இந்துக்கள் பூசாரிகளை சார்ந்து இருக்கிறார்கள். ஆனால் எளிமையான *பூஜைகள்* மூலம் இறைவன், மகாதேவர்கள் மற்றும் *தேவர்களை* வரவழைக்கலாம். ¶எந்த ஒரு திறமையான பூசாரியும் தனக்குள் வரவழைப்பதை காட்டிலும், சாதாரண பக்தனின் அன்பு மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் ஆன்மீக சக்திகளின் உயர்ந்த *சக்கரங்களில்* இருந்து வரும் வெளிப்பாடுகள் பெரும்பாலும் சிறந்ததாக இருக்கின்றன. மகாதேவர்களை வரவழைத்து, கோயில் பக்தர்களின் வாழ்வில் பல அற்புதங்களை வெளிப்படுத்தும் இயற்கை சக்தியுடன், அன்பர்கள் காலம் காலமாக இந்து சமூகத்தில் இருந்து வந்துள்ளனர். ¶இதைத் தவிர *பண்டாரம்* என்ற முறைசாரா பூசாரிகள் சமூகமும் இருக்கிறது. சுயமாக நியமனம் பெற்ற இந்த பூசாரி ஒரு புனிதமான மரம், ஒரு எளிய கோயில் அல்லது கேட்பாரற்று இருக்கும் கோயிலில் *பூஜைகளை* செய்வதற்கு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருப்பார். அவர் ஒரு *ஓம்* என்ற *மந்திரத்துடன்* தொடங்கி, காலப்போக்கில் மேலும் சில *மந்திரங்களை* கற்று அவற்றை பயன்படுத்தக்கூடும். அவருடைய திறமை மிகப்பெரிய கோயில்களின் தலைசிறந்த சமஸ்கிருத பயின்ற *சாஸ்திரிகளுக்கு* சமமாக இருக்கக்கூடும். ஒரு இந்து வீடு அருகில் இருக்கும் ஒரு கோயிலின் விரிவாக கருதப்படுவதால் தாய்மார்கள், மகள்கள், சித்திகள், தந்தைமார்கள், மகன்கள், மாமன்மார்கள் தங்கள் சொந்த வீடுகளில் செய்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். மேற்கத்திய சமயங்களைப் போல அல்லாமல், இந்து சமயத்தில் அன்பருக்கும் இறைவனுக்கும் மத்தியில் யாரும் இருப்பதில்லை. ¶பல வருடங்களுக்கு முன்பாக, 1950 களின் இறுதியில் சுத்தமான நீர், பூக்கள், ஒரு சிறிய மெழுகுவர்த்தி, ஊதுபத்தி, ஒரு மணி மற்றும் ஒரு கல்லை வைத்து மிகச்சிறிய மற்றும் எளிமையான *பூஜையை* எப்படி செய்வது என்று தொடக்கநிலையில் இருந்த அன்பர்களுக்கு நான் கற்றுத்தந்தேன். இது நிலம், காற்று, நெருப்பு மற்றும் நீர் என்று நான்கு பூதங்களை ஒன்று சேர்க்கிறது மற்றும் உங்கள் மனம் *ஆகாசமாக* ஐந்தாவது பூதமாக விளங்குகிறது. பூசாரி "ஓம்" என்ற மந்திரத்தை மட்டும் உச்சரிக்கிறார். சரியான வட்டாரங்களில் இருந்து முறையான தீட்சை கிடைக்கும் முன்பாக, இந்த சாதாரண *பூஜையை* எல்லோரும் செய்யலாம். இந்த முறையை பயன்படுத்தி எந்த சமயத்தை சேர்ந்தவரும், இந்து *பூஜையை* செய்யலாம். ¶காவல் *தெய்வங்கள்* சூட்சும லோகத்தில் வாசம் செய்து, அனைத்து இந்துக்களுக்கும் வழிகாட்டியாக இருந்து, அவர்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

அன்பர்கள் அடிக்கடி செல்லும் கோயிலில் இருக்கும் மகாதேவர்கள், அந்த அன்பர்களின் வீடுகளுக்கு சென்று வாசம் செய்ய *தேவதூதர்களை* அனுப்புகிறார்கள். கண்ணுக்குத் தெரியாத இந்த நிரந்தர விருந்தாளிகளுக்கு ஒதுக்கப்படும் ஒரு நிரந்தர அறையில், பல தலைமுறைகளாக தங்களுக்கு பாதுகாப்பு அளிக்க தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்த புனிதமான சக்திகளுடன், அகப்பூர்வமாக தொடர்புகொள்ள குடும்பம் முழுவதும் வந்து அமர்கின்றனர். அதில் சிலர் தங்களது சொந்த மூதாதையர்களாக இருப்பார்கள். இந்த தெய்வீக சக்திகளின் கவனத்தை பெறுவதற்கு, படுக்கையறை அல்லது ஒரு சிறிய தனியறை அல்லது சமையலறை அலமாரியில் வைக்கும் ஒரு சிறிய மாடம் போதுமானதாக இருக்காது. ஒரு மரியாதைக்குரிய விருந்தாளியை யாரும் ஒரு சிறிய தனியறையில் உபசரிப்பதும் இல்லை அல்லது அவரை சமையலறையில் உறங்க வைத்து நல்ல அங்கீகாரம், அன்பு மற்றும் வரவேற்பு கிடைத்ததாக அவர் நினைத்துக்கொள்வார் என்று எதிர்பார்ப்பதும் இல்லை. விருந்தாளி இறைவனுக்கு சமம் என்று இந்துக்கள் அனைவருக்கும் சிறு வயதில் இருந்தே கற்றுத்தரப்படுகிறது, மற்றும் அவர்கள் தனது வீட்டிற்கு வரும் எந்த ஒரு விருந்தாளிக்கும் இராச உபசாரம் வழங்குகிறார்கள். தங்கள் வீடுகளில் நிரந்தரமாக வாசம் செய்ய இறைவன் மற்றும் தேவர்கள் வரும் போது, இந்துக்கள் இறைவனை இறைவனாகவும், *தேவர்களை* மகாதேவர்களாகவும் உபசரிக்கிறார்கள். ¶ஆனால் இறைவன் மற்றும் தேவர்கள் ஒருவரது கற்பனை வடிவமே, என்று மரபு சாரா இந்துக்கள் கற்பிக்கிறார்கள். இந்த பிரிவினர் அதிக லௌகீக மற்றும் மேலோட்டமான சீடர்கள் குழுவை உருவாக்குகிறார்கள். ஆனால் ஆன்மீகத்தில் ஆழமாக இருந்து, தனது வீட்டை இறைவனுக்கு அர்ப்பணித்து, ஒரு அறையை இறைவனுக்கு என்று ஒதுக்கும் இந்து அவ்வாறு நடந்துகொள்வது இல்லை. லௌகீகமாக, மேலோட்டமாக இருக்கும் இந்துக்கள் தங்கள் வீடுகளில் எப்போதாவது இறைவன் வந்து வாழக்கூடும் என்று நினைக்கிறார்கள். அவர்களின் வீடுகள் குழப்பம், வஞ்சக செயல்கள், புறம் கூறல், கோபம் மற்றும் கடுங்கோபமும் நிறைந்து இருக்கிறது மற்றும் இன்றைய காலகட்டத்தில் அவர்களின் திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன. ¶அவர்களும் கீழ்நிலை குணங்களில் வாழும் மற்றவர்களும் *பூஜை* செய்வதற்கு தடை விதிக்கப்படுகிறது, ஏனென்றால் அவர்கள் *பூஜையில்* ஆவாகனம் செய்யும் போது, அது *தேவர்களை* அழைக்காமல் *அசுரர்களை* அழைக்கிறது. வீட்டில் கோபத்துடன் இருப்பவர்கள் மூலம், கோயிலில் கோபத்துடன் இருக்கும் பூசாரிகள் மூலம், அல்லது சச்சரவு, வாக்குவாதத்தில் ஈடுபட்டு சிலசமயம் கடுங்கோபத்துடன் இருக்கும் இயக்குனர் குழுமங்கள் மூலம் வரவழைக்கப்படும் *அசுர* சக்திகள், மேலும் அதிக குழப்பத்தை ஏற்படுத்துவது மற்றும் கடுஞ்சொற்கள், மனதை புண்படுத்துதல் மற்றும் மேலும் பல தீய செயல்களுக்கு வழிவகுக்கும் வாக்குவாதமாக சாதாரண கருத்து வேறுபாடுகளை தீவிரமடைய செய்வதில் அதிக மகிழ்ச்சி அடைகின்றன. இதனை கவனத்தில் கொண்டு, மனதில் கோபம் தோன்றிய நபர் மீண்டும்

பூஜையை தொடங்கும் முன்பாக, *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் *சக்கரங்களின்* கதவுகள் மூடிக்கொள்ள முப்பத்தி ஒரு நாட்கள் கழியவெண்டும். மூர்த்திகளுக்கு தூபத்தை காண்பிப்பது அனுமதிக்கப்பட்டாலும் தீபம் காண்பிப்பது, மணி அடிப்பது மற்றும் *ஓம்* என்கிற பிரணவ மந்திரத்தை உச்சரிப்பதைத் தவிர மற்ற *மந்திரங்கள்* உச்சரிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 49

இறைவனின் வீட்டில்

வாழ்தல்

உங்கள் வீடாகவும் இருக்கும் இறைவனின் வீட்டில் சிவபெருமான் என்கிற இறைவனுடன் எப்போதும் வாழ்ந்து, இறைவனின் கோயிலுக்கு தொடர்ந்து செல்வது ஈஸ்வரபூஜனத்தின் குறிக்கோள் ஆகும். இது அவர்களுக்குள் இருக்கும் இறைவனை தேடிக்கொள்ள ஒரு அடித்தளத்தை அமைக்கிறது. ஒருவர் இறைவனின் தோழனாக அவரது தினசரி வாழ்வில் இறைவனின் வீட்டில் வாழவில்லை என்றால், அவர் எவ்வாறு தனக்குள் இருக்கும் இறைவனை அறிந்துக்கொள்வார்? இதற்கு பதில் முடியாது என்பதாகத் தான் இருக்கும். அது முக்கியமாக தன்முனைப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்ட, ஒரு யதார்த்தமில்லாத பாசாங்காக மட்டுமே இருக்கும். ஒருவர் தனது வீட்டில் இறைவன் இருக்கிறார் என்று உண்மையில் நம்பினால், அந்த நம்பிக்கை அவரிடம் எந்த வகை மனநிலைகளை உருவாக்கும்? குடும்ப வாழ்க்கை உணவை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதால், ஒரு குடும்பம் தினமும் மூன்று வேளை இறைவனுக்கு அவரது அறையில் உணவளிக்கும், மற்றும் அப்போது அந்த குடும்பம் இறைவனின் படத்திற்கு முன்பாக அன்புடன் உணவை வைத்து கதவை மூடி விடுவார்கள், மற்றும் அதை இறைவன் மற்றும் அவருடைய *தேவர்களும்* அமைதியாக உண்பார்கள். இறைவன் மற்றும் தேவர்கள் உணவை ருசிப்பார்கள், ஆனால் அவர்கள் உணவில் இருக்கும் *பிராண* சக்திகளை உரிந்துக்கொண்டு ருசிக்கிறார்கள். உணவு வேளை முடிந்து, குடும்பத்தினர் உண்ட பிறகு, இறைவனுக்கு வைக்கப்பட்ட தட்டுகளும் எடுக்கப்படுகின்றன. இறைவனின் தட்டில் இருப்பது *பிரசாதமாக* எடுத்துக்கொள்ளப்படுகிறது. இறைவனுக்கு சிறிதளவு உணவு வைக்காமல், அதிக பசியுடன் இருப்பவருக்கு வழங்குவதைப் போல தாராளமாக வழங்கவேண்டும். இறைவன், மகாதேவர்கள் மற்றும் தேவர்கள் எப்போதும் பூஜை அறையில் இருப்பது இல்லை. அவர்கள் வீட்டில் இருக்கும் குடும்பத்தினர், விருந்தாளிகள் மற்றும் நண்பர்கள் பேசுவதை கேட்டு அவர்களை

கண்காணித்துக்கொண்டு வீடு முழுவதும் வலம் வருகிறார்கள். இறைவன் ஒரு குடும்பத்தின் வீட்டில் வாழாமல், அவர்கள் இறைவனின் வீட்டில் வாழ்வதால், இறைவனின் குரலை அவர்களின் மனசாட்சியாக எளிதில் கேட்க முடிகிறது. ¶நாம் இறைவனின் வீட்டில் வாழும் போது, ஒவ்வொரு உயிருள்ள வடிவம், மரங்கள், பூக்கள், செடிகள், நெருப்பு, நிலம், மனிதர்கள், விலங்குகள் மற்றும் அனைத்து உயிரினங்களுக்குள் தூய சக்தி மற்றும் உயிராக இருக்கும் இறைவனை எளிதில் காண முடிகிறது. பெரும்பாலான உயிரினங்களில் வெளிப்படும் இந்த உயிரை நாம் பார்க்கும் போது, நாம் சிவபெருமானை காண்கிறோம். இறைவனுக்கு ஒரு தனி அறை தருவதில் பல குடும்பங்கள் சுயநலத்துடன் நடந்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு என்று தனிப்பட்ட நூலகங்கள், குழப்பம் நிறைந்த அறைகள், இரண்டு வரவேற்பறைகள், எண்ணற்ற படுக்கையறைகள் இருந்தாலும், அவர்கள் பின்பற்றும் மேலோட்டமான மதம் ஒரு புதிய இந்திய மதத்தைப் போன்று இருக்கிறது. ஒரு சிறிய தனியறை அல்லது அவர்களின் ஒப்பனை மேசையின் பகட்டான கண்ணாடிகளில் இருக்கும் இறைவன் மற்றும் அம்மன்களின் படங்களாக அவர்கள் பூஜை அறைகள் இருக்கின்றன. அத்தகைய வழிபாட்டின் மூலம் எந்த பயனும் இல்லை, மற்றும் அவர்கள் வாழ்க்கை இன்றைய உலகில் நாம் காணும் குழப்பத்தை பிரதிபலிக்கிறது. ¶"நாம் இறைவனோடு வசிக்கிறோமா, அல்லது இறைவன் நம்மை அடிக்கடி வந்து சந்திக்கிறாரா?" என்பது உளவியல் மற்றும் தீர்மானம் மற்றும் மதம் தொடர்பான
கேள்வியாக இருக்கிறது. வீட்டில் யாருக்கு அதிகாரம் அதிகம்? மதத்தில் ஈடுபாடு இல்லாமல், அறியாமையில் ஆதிக்கம் செலுத்தும் முதியவருக்கா அல்லது மகாதேவர்களின் *ஆசிரமத்தில்* தாங்கள் வாழ்கிறோம் என்ற உண்மைக்கு முதியவர்கள் உட்பட குடும்பம் முழுவதும் தலை வணங்கும் சிவபெருமான், அல்லது முருகன் அல்லது விநாயகருக்கா? இது தான் மதம். இது தான் ஈஸ்வரபூஜன. ¶வழிபாடு என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் செய்யும் செயலாக இல்லாமல், வாழ்க்கை என்பது இறைவனுக்கு வழங்கும் படையலாக மாறி, காலை முதல் இரவு வரை ஒவ்வொரு செயலும் சிவ உணர்வுடன் செய்யும் நிலை என்று பெரும்பாலான மக்கள் கூறுகிறார்கள். அதன் பிறகு நாம் சந்திக்கும் எல்லோரிடமும் சிவபெருமானை காணத் தொடங்குவோம். நாம் முயற்சி செய்யும் போது, அந்த நபரின் ஆளுமையில் இருந்து உயிரை பிரித்து பார்க்க முயற்சி செய்யுங்கள். இந்த முயற்சியில் நமக்கு தொடர்ந்து பயன் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் அவ்வாறு முயற்சி செய்யும் போது, நாம் உடனே உயர்ந்த உணர்வுக்கு சென்று, வெளித்தோற்றத்தை மட்டும் பார்த்தால் சிலசமயம் தென்படாத திருப்தி மற்றும் நம்பிக்கை, இரக்கம், மனஉறுதி மற்றும் அனைத்து உயர்ந்த பண்புகளைப் பற்றியும் நம்மால் சிந்திக்க முடிகிறது. ஈஸ்வரபூஜன சாதனாவின் இந்த பயிற்சியை, நாள் முழுவதும் மற்றும் இரவு நேரத்தில் கனவுகளிலும்

மேற்கொள்ளலாம். ¶இந்து முறையில் தியானமும் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது. இந்துக்கள் மேற்கத்திய கலாச்சாரத்தில் இருப்பவர்களுக்கு, மனதை கையாளும் உத்தியாக தியானத்தை கற்றுத்தருவது உண்மை தான். ஆனால் *சரியை, கிரியை* மற்றும் *யோக* பாதைகளின் இயல்பான வெளிப்பாடே தியானம் என்பதை ஒரு இந்து பண்டிதர், *ரிஷி* அல்லது *ஞானி* மற்றும் அனுபவமுள்ள முதியவரும் அறிந்து இருக்கிறார். வடிவவியல், இயற்கணிதம் மற்றும் எண்கணிதத்தை அடிப்படையாகக் கொண்டு முக்கோணவியல் இருப்பதைப் போல, அது ஒரு சமயம் சார்ந்த அடித்தளத்தை அடிப்படையாகக் கொண்டது. ¶நீங்கள் முறையாக வழிபட்டு, வழிபாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றால், நீங்கள் ஒரு முழுமையான தியானத்தில் இருக்கிறீர்கள். பல அன்பர்கள் தான் வழிபடும் இறைவனுடன் தொடர்பு கொள்ளாமல் அல்லது இறைவன் தனது தற்காலிக உடலாக பயன்படுத்தும் கல்லும் இல்லாமல் வழிபடும் முறையை நாம் பார்த்து இருக்கிறோம். அவர்கள் முகத்தில் புன்னகையும் மலர்வது இல்லை. தியானம் மட்டுமே சிறந்தது, மற்றும் வழிபாட்டை சிறிது காலம் கழித்து நிறுத்திவிடலாம் என்று அவர்களுக்கு கற்றுத்தரப்பட்டுள்ளதால், அவர்கள் மேலோட்டமாக செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் தியானம் செய்யும் போது அவர்களின் மனம் குழப்பத்துடன் இருந்து அடியுணர்வு சுமைகள் அவர்களை சித்ரவதை செய்வதில் அதிசயம் ஒன்றும் இல்லை. சுவாசம் சீரில்லாமல் இருக்கிறது, மற்றும் அதை வலுக்கட்டாயமாக சீர் செய்ய வேண்டியிருக்கிறது. இறைவன் எங்கும் இருந்தாலும், சில இடங்களில் இருக்க வாய்ப்பில்லை என்று காரணம் காட்டும் அவர்களின் வாழ்க்கையை பற்றிய லௌகீக கண்ணோட்டம், இந்து வாழ்முறை மீது அவர்களின் வெளிப்படையான அர்ப்பணிப்பிற்கு புறம்பாக இருக்கிறது.¶ஆமாம் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் முழுமையாக வழிபடுங்கள். பின்னர் தீட்சை பெற்ற பிறகு, ஒரு *சத்குரு* வழங்கிய *யோக* பயிற்சிகள் மூலம் அந்த வழிபாட்டை உட்புறமாக்கிக் கொள்ளலாம். அந்த உட்புற வழிபாட்டின் மூலம், நீங்கள் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் முழுமையாக உயர்ந்த குறிக்கோளை அடைவீர்கள். இவை அனைத்து ஆன்மாக்களின் *சஹஸ்ரஹார சக்கரத்தில்* வாழும் ஏழு *ரிஷிகளின்* சைவ சித்தாந்த விளக்கங்களாக இருக்கின்றன.

சித்தாந்த ஷ்ரவன-மதி

सिद्धान्तश्रवण–मति



சாத்திரம் கேட்டல் மற்றும் அறிவு எழுச்சி

ஒளிமயமான பரம்பொருளே! நீ என்னுள் ஒளிர்வதற்கு என் முன்பாக இருக்கும் அறியாமை இருளை நீக்குவாயாக. சாத்திரங்களின் உண்மையை எனக்கு அருள்வாயாக. சாத்திரங்களின் உண்மை என்னை விட்டு விலகாது இருக்கட்டும். நான் முனிவர்களிடம் இருந்து கற்றவற்றை பகலும் இரவும் சிந்திப்பேனாக.

ரிக் வேதம், ஐத்ரெய உபநிடதம் பிரார்த்தனை. உபப, ப. 95



ஒரு துறவி ஒரு சிறுவனுக்கு ஆசிகளை வழங்கி, அவனுக்கு மதி மற்றும் ஆன்மீக புரிதலை வழங்குகிறார். உள்படம்: ஒரு ஆசிரியர் புனிதமான நூல்களை வாசித்து, சாத்திரம் கேட்பதை குறிக்கும் சித்தாந்த ஷ்ரவனத்தை பரிசாக நான்கு சிறுவர்களுக்கு வழங்குகிறார். எல்லோரும் மூன்று கோடுகளாக திருநீறு பூசியுள்ளனர்.

திங்கட்கிழமை

பாடம் 50

சாத்திரம்

கேட்டல்

ஆறாவது *நியமமாக* இருக்கும் சாத்திரம் கேட்டல் என்கிற *சித்தாந்த ஷ்ரவனம்* தேடுதல் வேட்கையின் முடிவாக விளங்குகிறது. இந்த முடிவுக்கு முன்பாக, *சத்குருவை* தேடிக்கொள்வதற்கு முன்பாக, நாம் உலகில் இருக்கும் எல்லா சமயங்களின் எல்லா சாத்திரங்களையும் சுதந்திரமாக படித்து, அவற்றை மனதில் புரிந்துக்கொண்டு மற்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தி, அவற்றின் அர்த்தங்களை திறமையாக கையாண்டு அவற்றின் சித்தாந்தங்களை நியாயப்படுத்தலாம். சைவர்கள், வைணவர்கள், ஸ்மார்த்தர்கள், விநாயக பக்தர்கள், ஐயப்ப பக்தர்கள், சாக்தர்கள் மற்றும் முருகபக்தர்கள் மற்றும் அந்த குழுக்களின் கிளைகள் என்று இந்து சமயத்தின் கீழ் இருக்கும் எல்லா பிரிவுகள் மற்றும் *சம்பிரதாயங்கள்*, பரம்பரைகள் மற்றும் போதனைகளை சுதந்திரமாக படிக்கலாம். ¶இந்து சமயத்தில் எண்ணற்ற சாத்திரங்கள் உள்ளன. பலவகைப்பட்ட கற்பிக்கும் முறைகள் காண்போரை வியக்க வைக்கின்றன. ஆசிரியர்கள் இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலும் இருக்கின்றனர். ஒரு முதியவரிடம் ஒரு எளிமையான கேள்வி கேட்டால், அவர் முப்பத்தி முக்கோடி தெய்வங்களை கொண்ட இந்த இந்து சமயத்தில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தனது குடும்பம் ஆதரித்த ஒரு பிரிவின் *சம்பிரதாயத்தின்* வாயிலாக தான் பெற்ற கண்ணோட்டத்துடன், நீளமான பதிலை வழங்க கடமைப்பட்டுள்ளார். ¶*சித்தாந்த ஷ்ரவனம்* முழுமை பெறுவதற்கு முன்பாக உளவியல் வகைகள், மனநோய்கள், போலி-அறிவியல் வகைகள், மனித இனங்களின் நடத்தை முறைகள், இருத்தலியல்வாதம், மனித நலக்கோட்பாடு, சமய சார்பற்ற மனித நலக்கோட்பாடு, பொருள்முதல்வாதம், மற்றும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு இருக்கும் பல்வேறு வாதங்களையும் சுதந்திரமாக ஆய்வு செய்யலாம். இதைப்பற்றி பேசுவதற்கு பலர் உள்ளனர். தற்போது இருக்கும் "வாதங்கள்" மற்றும் "இயல்கள்" அனைத்தும், நாடி வருபவரை இருகரம் கொண்டு வரவழைத்து, நெறி தவறச் செய்து, சில சமயங்களில் கட்டுப்படுத்தவும் செய்கிறது. பத்து *இயமங்களில்* சிறிதளவு வெற்றியை கண்டு, *சித்தாந்த ஷ்ரவன* பாதையில் இருக்கும் சாதகர், ஒரு

முடிவை எடுக்க வேண்டும். தான் முடிவு எடுக்கவேண்டும் என்பது அவருக்கு தெரியும். அவர் தற்போது *மூலாதார சக்கரத்தின்* உணர்வில் நுழைந்து இருக்கிறார் மற்றும் அவர் முன்னேற்றத்தில் உறுதி அடைந்து வருகிறார். ¶பத்து *இயமங்கள்* மற்றும் ஐந்து *நியமங்களில்* நீங்கள் உங்களை தயார்படுத்திக் கொண்டதும், உங்கள் *குரு* கண் முன்னால் தோன்றும் போது, உங்களது அடுத்த ஐந்து *நியமங்களுக்கு* இவர் தான் உங்கள் வழிகாட்டி என்று உங்கள் சக்தியின் ஒவ்வொரு நரம்பு ஓட்டம் மூலமாக தெரிந்துக் கொள்வீர்கள் என்பதில் உறுதியாக இருங்கள். அடுத்த ஐந்து *நியமங்களின்* பட்டியல்: 1) *சித்தாந்த ஷ்ரவனம்,* சாத்திரம் கேட்டல் —ஒரு வாய்மொழி பரம்பரையை மட்டும் பின்பற்றுதல்; 2) *மதி,* அறிவு எழுச்சி—ஒரு குருவின் வழிகாட்டலுடன் ஒரு ஆன்மீக சித்தம் மற்றும் புத்தியை வளர்த்துக்கொள்வது; 3) *விரதம்*— சமயம்சார்ந்த உறுதிமொழிகள், விதிகள் மற்றும் கடைப்பிடித்தல்களை விசுவாசத்துடன் நிறைவேற்றுதல்; 4) *ஜபம்,* புனிதமான *மந்திரங்களை* உச்சரித்தல்—இந்த பயிற்சியை மேற்கொள்ள நாம் *குரு* வழங்கும் *தீட்சையை* நாடுகிறோம்; மற்றும் 5) குருவின் வழிகாட்டலுடன் *தபஸ்,* சாதனை மற்றும் தியாகங்கள் செய்தல். ¶ஒரு ஒழுக்கம், மற்றும் *சத்குரு* பரம்பரையில் ஒரு பழங்கால பாரம்பரிய பயிற்சியாக இருக்கும் *சித்தாந்த ஷ்ரவனம்* என்பது அன்பரை உணர்வுடன் ஒரு *சக்கரத்தில்* இருந்து இன்னொரு *சக்கரத்திற்கு* அழைத்து செல்லும் ஒழுக்கம் ஆகும். ஒவ்வொரு *சம்பிரதாயமும்* மற்ற சம்பிரதாய தாக்கங்களில் இருந்து, தனது பழங்கால சுத்தத்தை பராமரிக்க தனது உபதேசங்கள் மற்றும் கொள்கைகளுக்கு தற்காப்பு அளித்து, தனது சீடர்கள் மற்ற *சம்பிரதாயங்களில்* ஆய்வு மேற்கொள்வதை கண்டிக்கிறது. மற்ற உரைகளில் அத்தகைய ஆய்வை, *சித்தாந்த ஷ்ரவனத்தை* நிறைவு செய்ய நாட்டம் கொள்வதற்கு முன்பாக செய்ய வேண்டும். ஒருவரை *குருவாக* ஏற்றுக்கொண்டு அந்த *குருவாலும்* ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, தொடர்பில்லாத கோட்பாடுகளில் ஆய்வு செய்வது கண்டிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்படுகிறது. ¶*சித்தாந்த ஷ்ரவனம்* என்பது ஒரு கோட்பாட்டின் மீது கவனம் செலுத்துவது அல்ல. அனைத்து *பிராரப்த கர்மவினைகள்* மற்றும் அந்த அன்பரின் இந்த வாழ்நாளில் அனுபவிக்க உருவாக்கப்பட்ட *கர்மவினைகளுக்கு* ஒரு விளக்கத்தை ஆலோசிக்கும், மனதின் ஒரு முழுமையான புதிய வடிவத்தை, சாத்திரம் கேட்டல் மூலம் அடியுணர்வு மற்றும் உணர்வு ரீதியாக வளர்ப்பது ஆகும். *சித்தாந்த ஷ்ரவனத்தின்* மூலம் மேலும் பல பயன்கள் உள்ளன. அது அன்பரின் நரம்பு அமைப்பின் வடிவத்தில், தீட்சை பெறுவதற்கு அடித்தளத்தை அமைக்கிறது. அது மட்டும் அல்லாமல், அது அவரது சிந்தனை, குருவின் சிந்தனை, *சம்பிரதாய* கோட்பாடுகள், தத்துவம் மற்றும் அடிப்படை பழக்கங்களில் இருக்கும் வேறுபாட்டை சித்தரிக்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம்

பாரம்பரியத்தை

பரப்புதல்

சித்தாந்த ஷ்ரவனம் என்றால் "சாத்திரம் கேட்டல்" என்று பொருள். காதால் கேட்பதன் மூலம், அறிந்தவரிடம் இருந்து நாடுபவருக்கு, சூட்சுமமான அறிவு வழங்கப்படுவதால் *வேதங்கள், உபநிடதங்கள்* மற்றும் *யோக சூத்திரங்களை* வாசிப்பதில் இருந்து அவற்றை அறிந்தவர்கள் சொல்ல கேட்பது முற்றிலும் மாறுபட்டது. இதன் காரணமாகவே அறிவுணர்வு ஆய்வை காட்டிலும் காதால் கேட்பது விரும்பப்படுகிறது. ¶ஏனென்றால் ஒலி முதல் படைப்பாக விளங்குகிறது, மற்றும் அனைத்து ஒலி வடிவங்கள் வழியாக அறிவு பரப்பப்படுகிறது. ஒரு *சம்பிராயத்தின்* மிகவும் உயரிய உண்மைகளை அதை உணர்ந்தவர் மூலம் கேட்பது மிகவும் முக்கியம் ஆகும். சொற்கள் பரிச்சயமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவற்றை ஒரு அன்பர் நூறு முறை படித்து இருக்கலாம், ஆனால் அவற்றை ஒரு ஞானோதயம் பெற்ற *குரு,* தான் பெற்ற உணர்ந்தலை மீண்டும் உணர்ந்து வாசித்து தன் வாயால் சொல்வதை காதால் கேட்பது, அவர் வெளிப்படையாக சொல்லாத உணர்தலை கிரகிப்பதற்கு சமம் ஆகும். இதுவே சைவ சித்தாந்தம் ஆகும். இதுவே உண்மைப் பொருளை உணர்ந்த ஒருவர் உபதேசிக்கும் சொற்களின் மூலம் சிந்தனை, பொருள் மற்றும் அறிவை தெரிவிக்கும் உண்மையான *சம்பிரதாயம்* ஆகும். சொற்கள் காதால் கேட்கப்படும் போது, *சத்குரு* புரிந்துகொண்ட பொருளை அன்பரின் அடிமனம் பற்றிக் கொள்கிறது, மற்றும் அன்பரின் துணை மெய்ஞ்ஞான மனதைக் கவரும் மெய்ஞ்ஞான இயலுணர்வு அறிவை அவர்கள் பற்றிக் கொண்டு, அதை *சத்குருவிடம்* இருந்தே கிரகித்துக் கொள்கிறார்கள். இது மட்டுமே அன்பரின் வாழ்க்கை முறையை மாற்றுகிறது. இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. இதன் காரணமாகவே ஒருவர் *குருவிடம்* ஒரு குழந்தைப் போல திறந்த மனதுடன் வந்து, கிரகித்துக் கொண்டு பல சோதனைகளை சந்திக்க தயாராக விருப்பத்துடன் இருக்கவேண்டும். இதன் காரணமாகவே ஒருவர் தனது *குருவை* விவேகத்துடன் தேர்வு செய்து, தனது வாழ்க்கையில் அத்தகைய ஒரு நிகழ்வுக்கு தயாராக இருக்க வேண்டும். ¶*சம்பிரதாயம்* என்பது எந்த வகையிலும் எழுதப்படாமலும் பதிவு செய்யப்படாமலும் வாய்மொழியாக தெரிவிக்கும் பாரம்பரியம் ஆகும். *சம்பிரதாய சத்குருமார்கள்,* இன்றைய காலத்தில் புத்தகங்களை எழுதுகிறார்கள், ஒலிநாடா மற்றும் காணொளி பதிவுகள் செய்து தொடர்பு கொள்கிறார்கள். ஒரு மலர் மலர்வதற்கு முன்னால் காட்சியளிக்கும் மொட்டு போல, முட்டையில் இருந்து வெளிவரும் பறவை பறப்பதற்கு முன்பாக தோற்றமளிக்கும் முட்டையின் ஓடு போல, பட்டாம்பூச்சி வெளிவரும் முன்பாக காட்சியளிக்கும் பட்டுப்பூச்சி கூடு போல, இது சிறிய-சம்பிரதாயமாக

இருக்கிறது. இது சிறிய *சம்பிரதாயமாக*, வெறும் ஒரு சுவையாக மட்டும் இருந்தாலும், அந்த சீடனின் மனதில் *குரு* என்பவர் யார், அவர் எதை நினைக்கிறார், அவர் எதற்கு பிரதிநிதியாக இருக்கிறார், அவருடைய பாதையின் தொடக்கமும் முடிவும், அவர் பிரதிநிதித்துவம் செய்து தற்போது வழிநடத்தும் மற்றும் அடுத்த மற்றும் அதற்கடுத்த தலைமுறைகளுக்கு வழிநடத்திச் செல்ல கடமைப்பட்டுள்ள *சம்பிரதாயத்தைப்* பற்றி ஒரு அடித்தளத்தை அமைக்கிறது. ஆனால் உண்மையில் வலுவான *சம்பிரதாயம்*, குருவின் உபதேசங்கள், அவரது விளக்கங்களை கேட்டுக்கொண்டு இருக்கிறது. அது சிந்தனையை தூண்டுகிறது. சொற்களை நினைவுப்படுத்திக் கொள்ளும், அவை புதிய அர்த்தங்களை தருகின்றன. பழைய அறிவு அழிந்து அந்த இடத்தில் புதிய அறிவு குடியேறுகிறது. இது தான் *சம்பிரதாயம்*. ¶நீங்கள் ஒரு *சத்குருவிடம்* இருந்து உபதேசம் பெற தயாராக இருக்கிறீர்களா? வாய்ப்பு குறைவு தான். நீங்கள் தயாராக இருக்கும் போது, உங்கள் வாழ்வில் அவர் ஒரு கனவு, ஒரு காட்சி அல்லது ஒரு தனிப்பட்ட சந்திப்பின் மூலம் நுழைகிறார் மற்றும் செயல்முறை தொடங்குகிறது. சீடன் ஒரு சாதாரண சந்திப்பு, ஒரு எளிமையான கனவின் மூலம் *குருவை* நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கிறார். *குரு* தன் பங்கிற்கு சீடனை நோக்கி சரியாக ஒன்பது அடிகள் எடுத்து வைக்க கடமைப்பட்டுள்ளார், மற்றும் பிறகு அந்த சீடன் மேலும் ஒரு அடி எடுத்து வைக்கும் வரை காத்திருக்க வேண்டும். பிறகு இன்னொரு ஒன்பது அடிகள் என்று ஒரு நடனம் போல தொடர்கிறது. இது தான் *சம்பிரதாயம்*. ¶ஒளியின் உண்மையான விழிப்புணர்வு, ஒரு கணநேர உணர்தல், புத்தகத்தில் காணப்படாத அல்லது மக்கள் நீண்டகாலமாக மறந்துவிட்ட ஒரு அறிதலாக, ஒரு ஆன்மீக அனுபவம் வரும் போது, தான் தேர்ந்தெடுத்த *சம்பிரதாயத்தில்* முன்பே இந்த அனுபவத்தை பெற்று அதைப் பற்றி மற்றவர்கள் எழுதியுள்ளார்கள் என்று தெரியும் போது, அது அந்த சீடனுக்கு மிகப்பெரிய ஊக்கத்தை வழங்குகிறது. ¶கோயில்கள் அனைத்தும் அழிந்து விட்டால், *குருமார்கள்* முன் வந்து அவற்றை புனர்நிர்மாணம் செய்வார்கள். சாத்திரங்கள் அனைத்தும் அழிந்து விட்டால், *ரிஷிகள்* மீண்டும் பிறவி எடுத்து அவற்றை மீண்டும் எழுதுவார்கள். *குருமார்கள், சுவாமிகள், ரிஷிகள், சாதுக்கள்*, மகான்கள் மற்றும் முனிவர்களை திட்டமிட்டு அழித்து விட்டால், அவர்கள் உலகெங்கும் ஆங்காங்கே பிறவி எடுத்து, ஏதும் நடக்காததைப் போன்று தனது பணியை தொடர்வார்கள். இந்த பூமியில் சிறிதும் அசைக்கமுடியாமல் அதிக பாதுகாப்புடன் நிலையான உண்மை இருப்பதால், அது பலரது வாய்மொழிகள் வழியாக அச்சமில்லாமல் விரைவாக முன்னேறி செல்கிறது. அது கோயில்களின் திறந்த கதவுகள் வழியாக அச்சமில்லாமல் விரைவாக முன்னேறி செல்கிறது. அது இன்று உலகின் பெரும்பாலான நூலகங்களில் இடம்பிடிக்கும் சாத்திரங்களில் விரைவாக முன்னேறி செல்கிறது. அது தகுதி இல்லாதவர்களிடம் இருந்து மறை ஆற்றலுடன் மறைக்கப்பட்டு, சில அல்லது எல்லா *இயமங்களையும்* கடைப்பிடிப்பதோடு சில

நியமங்களில் மட்டும் பயிற்சி செய்யும் சிலருக்கு மட்டுமே வெளிப்பட்டு, விரைவாக முன்னேறி செல்கிறது. ¶ஒரு பரம்பரையை சேர்ந்த ஒரு சத்குருவின் வழிகாட்டலின் கீழ் வந்ததும், புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சீடனின் அனுபவ மையத்தில் இருந்து எல்லா சாத்திரங்கள், கோயில் மற்றும் வீட்டு பாரம்பரியம் விலக்கப்படுகிறது. இன்னொரு பாரம்பரியத்தில், குருவின் உபதேசம் கேட்கவேண்டும் என்பதற்காக சாத்திரம் விலக்கப்படுகிறது ஆனால் கோயில் வழிபாட்டிற்கு தொடர்ந்து அனுமதி அளிக்கப்படுகிறது. இன்னொரு பாரம்பரியத்தில், சாத்திரம் மற்றும் *குருவின்* உபதேசம் தொடர்ந்தாலும், வழக்கமாக *சத்குருவின்* சம்மதத்தை பெற்று அவரது கொள்கைகள், வழக்கங்கள் மற்றும் *சம்பிரதாயத்தின்* அடிப்படை தத்துவத்திற்கு முழுமையாக பொருந்தி இருக்கும் சாத்திரத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது.

புதன்கிழமை

பாடம் 52

ஒரு வாழ்நாளில்

ஒரு கவனம்

வாழ்க்கை நீளமாக பல வருடங்கள் இருப்பதாக தோன்றுகிறது. ஆனால் காலம் சிறியதாக இருக்கிறது. ஒருவருக்கு தான் எப்போது இறப்போம் என்று தெரியாது. ஒரு அடையக்கூடிய குறிக்கோளை சென்றடைய, கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்துவதே *சம்பிரதாயத்தின்* நோக்கம் ஆகும். நமது வாழ்க்கை மற்றும் நாம் எதிர்பார்க்கும் நீண்ட ஆயுள், ஒரு *சம்பிரதாயத்தை* இன்னொன்றுடன் ஆய்வு செய்வதற்கு நேரம் மற்றும் நமக்கு அனுமதி வழங்கியதாக கருதக்கூடாது. *குரு* உபதேசத்துடன் ஒரு பாரம்பரிய பரம்பரையை பின்பற்ற சங்கல்பம் எடுப்பதற்கு முன்பாக, இந்த பயிற்சியில் ஈடுபடலாம். அதன் பிறகு, தற்செயலாகவும் மற்ற பாதைகளை பின்பற்ற அனுமதி வழங்கப்படுவது இல்லை. ¶ஆனால் மற்ற பாதைகளை நிந்திக்கும் அல்லது "எங்கள் வழியே ஒரே வழி" என்கிற அணுகுமுறையும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நமது முதுகுத்தண்டில் பதினான்கு *நாடி* ஓட்டங்கள் உள்ளன. அதில் ஒவ்வொன்றும் மண்டை ஓட்டிற்கு மேற்புறம் மற்றும் அதையும் கடந்து இருக்கும் *சக்கரத்தில்* உணர்வை பரப்புவதற்கு ஒரு முறையான வழியை கொண்டுள்ளன. முதுகுத்தண்டில் இருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட *நாடிகளை* கட்டுப்படுத்த, ஒரு தூல உடலுடன் எப்போதும் ஒரு *குரு* வாழ்ந்துகொண்டு இருக்கிறார். அனைத்தும் முறையான பாதைகளே. இதில் ஒன்று மற்றொன்றை விட சிறந்ததாக தன்னை காண்பித்துக் கொள்ளக்கூடாது. இந்த தவறு நடக்காமல் இருக்க வேண்டும். ¶தனிநபர்கள், குழுக்கள், சமூகங்கள் மற்றும்

நாடுகளுக்கு இந்து ஒழுக்கங்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் மையமாக *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* விளங்குகின்றன. *சித்தாந்த ஷ்ரவனம், மதி, விரதம், ஜபம் மற்றும் தபஸ்* என்று ஐந்து இறுதி நியமங்கள் குறிப்பிடுவதைப் போல, அவை *மருள் பாதையில்* இருந்து *அருள் பாதைக்கு* வழிநடத்தி செல்லும், குழப்பத்தில் இருந்து அருளை நோக்கி *சத்குருவின்* திருவடிகளுக்கு அழைத்து செல்லும், ஆன்மாவின் வளர்ச்சி பாதையில் பல்வேறு நிலைகளை விளக்குகின்றன. ¶எல்லா *சம்பிரதாயங்களும் வேதங்களை* அடிப்படையாகக் கொண்ட இந்து சமயத்தை அடிப்படையாகக் கொண்டு இருப்பதால், வேதங்களை நிராகரிக்கும் எந்த ஒரு இந்திய ஆன்மீக ஆசிரியரும் ஒரு இந்து இல்லை மற்றும் அவர் அந்த வகையை சேர்ந்தவராக கருதவும் கூடாது. சரியான மனநிலையில் இருக்கும் ஒருவரால், *வேதங்களின்* இறுதிப் பகுதியாக இருக்கும் *உபநிடதங்களை* ஏற்றுக்கொண்டு, அதில் இருக்கும் உண்மையை காணமுடியும். அதை அவர் குறைந்தபட்சம் *சித்தாந்த ஷ்ரவனத்தின்* அடிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையும் நிராகரித்து விட்டால், நாம் அந்த ஆசிரியரை ஒரு புதிய இந்திய சமயம், புதிய அமெரிக்க சமயம், புதிய ஐரோப்பிய சமயம், புதிய புதுயுக சமயம், சமயசார்பற்ற சமயம், புதிய சந்நியாசி சமயம், அல்லது வேறு சில "புதிய வாதம்" அல்லது "புதிய இயல்" சமயத்தை பிரகடனம் செய்பவராக கருத வேண்டும். இது *சம்பிரதாயம்* இல்லை. இது *சித்தாந்த ஷ்ரவனம்* இல்லை. இவற்றிற்கு எதிராகத் தான் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். இவை நிலையான பாதைகள் இல்லை. ஏன்? ஏனென்றால் இவை நிரூபிக்கப்படவில்லை. இவை பாரம்பரிய பரம்பரையை சார்ந்தும் இல்லை, அவை காலத்தின் அழிவுகள், மாறும் சமூங்கள், போர்கள், பஞ்சம் மற்றும் அறியாமையின் ஊடுருவலை தாக்குப்பிடிக்கவும் இல்லை. ¶நிரந்தரமாக அல்லது தங்கள் விரதங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுடன் உலகில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்ட *சாதகர்கள், யோகிகள், சுவாமிகள்* மற்றும் யாசகர்கள், இந்த *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* தடைகள் மற்றும் பழக்கங்களாக இல்லாமல் கட்டாயக் கட்டுப்பாடுகளாக இருக்கின்றன. இவை பழக்கங்களாக மட்டும் இல்லாமல், கட்டாய ஒழுக்கங்களாகவும் இருக்கின்றன, மற்றும் இந்த நம்பிக்கை மற்றும் எண்ணத்துடன் அவற்றை கடைப்பிடிக்கும் போது, அவை கண்டிப்பாக யாசகனை அவர் விரும்பிய குறிக்கோளுக்கு அழைத்து செல்லும். அவர் ஒரு *சத்குருவின்* வழிகாட்டலுடன் தீவிரமாக *தபஸ்* செய்து தனது *பிராரப்த கர்மவினைகளை* அழிக்கவில்லை என்றால், அவரது அந்த *கர்மவினைகள்* இந்த வாழ்வில் வழங்கும் அனுமதி மட்டுமே, அந்த குறிக்கோளின் வரம்பாக இருக்கும். ¶ஒரு குறிப்பிட்ட பரம்பரையை சேர்ந்த சாத்திரத்தை மனப்பாடம் செய்த பிறகு, எதற்காக ஒன்றோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சிலர் எண்ணுவார்கள். கற்றதை தனிப்பட்ட முறையில் அனுபவிக்க வேண்டும், மற்றும் அனுபவம் என்பது பல்வேறு ஆழங்களுடன் தோன்றும். ஒரு *சம்பிரதாயத்தை* சேர்ந்த சாத்திரத்தை மட்டும் கேட்பதால், அதில்

அதிகரித்த தெய்வீக உண்மைகளில் இருக்கும் ஒவ்வொரு நுணுக்கமான அதிகரிப்பையும் சொந்த அனுபவத்தின் மூலம் உணர்வதே, மற்ற *சம்பிரதாயங்கள்,* மற்ற வாதங்கள், மற்ற இயல்கள், பிரிவுகள் அல்லது உட்பிரிவுகளை புறக்கணித்து அல்லது நிராகரித்து ஒரு *சம்பிரதாயத்தின்* சாத்திரத்தை கேட்பதன் நோக்கம் ஆகும். இந்த அனுபவம், உணர்தல் மற்றும் ஞானோதயத்தை மட்டுமே அடுத்த பிறவிக்கு எடுத்து செல்ல முடியும். ஒருவர் மனப்பாடம் மட்டும் செய்து இருந்தால், அது அவர் மரணத்திற்கு பிறகு சிறிது காலம் கழித்து மறந்துவிடும். *சித்தாந்த ஷ்ரவனம்* என்கிற சாத்திரம் கேட்டல் மட்டுமே ஒரு வழி என்பதையும், சாதகன் தயாராக இருக்கும் போது, குரு அவனது வாழ்வில் நுழைவார் என்பதையும் மறக்க வேண்டாம்.

வியாழக்கிழமை

பாடம் 53

மதி:

அறிவு எழுச்சி

அறிவு எழுச்சி என்கிற *மதி* ஏழாவது *நியமம்* ஆகும். அறிவு எழுச்சி என்பது புரிதலை குறிக்கிறது; ஆனால் அது புரிதலை காட்டிலும் ஆழமாக சென்று சிந்தனை, வாக்கு அல்லது செயல் முடிவடையும் முன்பே, எதிர்காலத்தில் அந்த சிந்தனை, வாக்கு அல்லது செயல் உருவாக்குவதை, விளைவுகள் வழியாக மறுபக்கத்தில் இருந்து பார்ப்பதை குறிக்கிறது. *மதி* என்பது ஒரு *சத்குருவின்* அருளுடன் ஆன்மாவின் சக்தி மற்றும் புத்தியை வளர்ப்பது ஆகும். *மதியால்* இந்த வழியில் மட்டுமே வரமுடியும். இது *சத்குருவிடம்* இருந்து *சீடனுக்கு* தெய்வீக சக்திகளின் இடமாற்றம், சீடனுக்காக *குரு* மூலம் கூர்மைப்படுத்தப்பட்ட ஒரு சுத்தமான புத்தியை உருவாக்குதல், *குருவை* திருப்திப்படுத்தும் பலன்கள் கிடைக்கும் வரை *குரு* வழங்கிய சமயம் சார்ந்த சாதனைகளை பின்பற்றுவதன் மூலம் சீடன் வளர்க்கும் ஆன்மாவின் சக்தி ஆகும். *சாதனா* என்பது எப்போதும் ஒரு *குருவின்* வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படுகிறது. இந்த போற்றத்தக்க *சாதனா* மட்டுமே பலனை வழங்குகிறது. ¶*மதி* என்கிற அறிவு எழுச்சி, ஒரு உயர்ந்த நிலையில் மூன்றாவது கண்ணின் விழிப்பாக, *அனாஹத சக்கரம்* வழியாக பார்த்தல், பருப்பொருள் மூலக்கூறுகளில் ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்ளும் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தலாக இருக்கும் *மாயை* வழியாக பார்ப்பதை குறிக்கிறது. *மதி* என்றால் இது மட்டும் அல்லாமல், *குருவின்* சன்னிதானத்தின் வழிகாட்டலைப் பெறும் ஒவ்வொருவரிடத்திலும் இரு கண்களோடு மட்டும் அல்லாமல் ஒரே நேரத்தில் மூன்று கண்களோடு பார்க்கும் திறமை இருக்கிறது. இங்கே விளக்கப்பட்டுள்ள ஆன்மீக புத்தி

விவேகத்தை குறிப்பிடுகிறது. விவேகம் என்பது மற்றவர்களின் கருத்துக்கள் மூலம் பெற்ற அறிவை சரியான நேரத்தில் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், அது கூர்ந்து நோக்குவதன் மூலம் பெறும் அறிவை குறிப்பிடுகிறது. ¶பயிற்சி பெறுவதற்கு தயாராக இருக்கும் ஒரு சிரத்தையுள்ள சீடனின் வாழ்வில் *குருவின்* வழிகாட்டல் மிகவும் முக்கியமாக இருக்கிறது. குரு வாய்மொழியாக உபதேசிக்கும் பரம்பரைகளைக் கொண்ட பல *சம்பிரதாயங்கள்* வெளியில் இருந்து வந்த தாக்குதல் காரணமாக காலம், குழப்பம், அழிவு மற்றும் சூறையாடலை தாங்கி நின்றுள்ளது. மனிதனை நிலைநிறுத்தி, அவனை அறியாமை அடித்தளத்தில் இருந்து மேல் எழுப்பிய *சம்பிரதாயங்கள்,* விழிப்புணர்வு பெற்ற *சத்குருவின்* முதுகுத்தண்டில் சிறந்த நாடி ஒட்டங்களாக இருக்கின்றன. ஒருவர் *யோகத்தின்* பாதையில் மேலும் முன்னேறும் போது, தனது முதுகுத்தண்டில் இருக்கும் பதினான்கு நாடிகளில் ஏதாவது ஒரு *நாடியில்,* உண்மைப் பொருளை உபதேசிக்கும் ஒரு *சத்குருவை* சந்திப்பார். அவர் தனது *குருவை* ஒரு கனவில் அல்லது அவருடைய தூல உடலில் சந்திப்பார், மற்றும் குருவின் அருள் மற்றும் வழிகாட்டலுடன் தொடர்ந்து மேலே செல்லும் அனுமதியை பெறுவார். இந்த பதினான்கு *நாடிகள்* பூமியின் நிலப்பரப்பில் எப்போதும், தங்களுடன் ஒரு *சத்குருவை* பொருத்திக் கொண்டு, *விசுத்த* மற்றும் *ஆக்ஞா* மற்றும் *சஹஸ்ரஹார* என்கிற உயர்ந்த *சக்கரங்களின்* கதவுகளை திறக்க தயாராக இருக்கின்றன. ¶முழுமையான அறிதலுடன் தனக்கு தனிப்பட்ட முறையில் வழிகாட்டும் *சத்குருவின்* சீடனாக தான் இருக்கிறேன் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் "நான் எனது *விசுத்த சக்கரத்தை* விழிப்படைய செய்துவிட்டேன்," மற்றும் "நான் தற்போது *ஆக்ஞா சக்கரத்தில்* வாழ்கிறேன்," அல்லது "நான் எனது *சஹஸ்ரஹார சக்கரத்தில்* பயிற்சி பெற்று வருகிறேன்," என்று சொல்வது முட்டாள்தனமாகவும், அவர் நினைப்பது கற்பனையாகவும் தோன்றுகிறது. *அனாஹத* என்கிற அறிவு எழுச்சி *சக்கரத்தில்* இருக்கும் சாதகர்கள் அறியாமை மற்றும் *மாயாவில்* ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்ளும் காத்தல், படைத்தல் மற்றும் அழித்தலின் திரைகள் வழியாக பார்த்து, பிரபஞ்சத்தில் இருக்கும் உயிரினங்கள், மக்கள் மற்றும் மற்ற பல்வேறு வடிவங்களுடன் ஒற்றுமையை பெற்று அதன் மீது அன்பு செலுத்தி, தாம் அதன் அங்கம் என்பதை உணர்கிறார்கள். ¶இந்த *அனாஹத சக்கர* நுழைவாயிலில் இரு வழிகள் உள்ளன. அதில் முதல் வழியாக, ஒரு *சத்குரு* அருளும் *சம்பிரதாயத்தை* பின்பற்றி *விசுத்த, ஆக்ஞா* மற்றும் *சஹஸ்ரஹார சக்கரங்களுக்குள்* அடுத்த முன்னேற்றத்தை மேற்கொள்வது. *குருவாக* யாரும் இல்லாமல், தனக்கு தானே *குருவாக* இருந்து சூட்சுமமான ஆன்மீக சக்திகள், ஜோதிடம், நவீன அறிவியலின் சில வகைகள், சூட்சுமமான ஆன்மீக முறையில் குற்றம் துப்பறிதல், டரோட் கார்டுகள், பெண்டுலம், படிக பந்தைப் பாத்து குறி சொல்லுதல், சூட்சுமமான ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட ஹீலிங் சிகிச்சை, கடந்தகால அல்லது எதிர்கால குறிசொல்லுதல்

ஆகியவை இரண்டாவது வழி ஆகும். இந்த சூட்சுமமான ஆன்மீக சக்திகளை வளர்த்தால், அது எதிர்காலத்தில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரு தடையாக ஒரு பெர்லின் சுவர் போல இருக்கக்கூடும். அவை ஒரு *சத்குரு* ஒருவரை சீடனாக ஏற்றுக்கொள்ளும் முன்பாக, முதலாவதாக துறக்கச் சொல்லும் *ஆணவத்தை* வளர்க்கின்றன. ¶ஒரு *சத்குருவிற்கு* சீடனாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அந்த சீடன் முழு நம்பிக்கை மற்றும் சிரத்தையுடன் *குரு* வழங்கும் வழிகாட்டலை பின்பற்றுகிறான். இதன் காரணமாகவே சாத்திரங்கள் ஒரு குருவை கவனமாக தேடவேண்டும் என்று கூறுகிறது. ஒரு *குருவை* கண்டுகொண்டதும், அவரை முழுமனதுடன் பின்பற்றி, அவருக்கு கீழ்படிந்து, அவரது எதிர்பார்ப்பை சிறப்பாக பூர்த்தி செய்வதோடு மிகவும் முக்கியமாக உங்கள் எதிர்பார்ப்பை நீங்களே மிஞ்சும் அளவிற்கு அவருடைய ஒவ்வொரு அறிவுறுத்தலையும் பின்பற்ற வேண்டும். ¶ஆன்மீக பாதையில் சூட்சுமமான ஆன்மீகத் திறமைகள் தடையாக இருப்பது இல்லை. *நிர்விகல்ப சமாதி* என்கிற பரசிவ சித்தியாகி, ஒருவருக்குள் முழுமையாக அமையப்பெற்ற பிறகு, அந்த சக்திகளை வளர்த்துக்கொள்ளலாம். ஆனால் இவைகளையும் ஒரு *குருவின்* அருள் மற்றும் வழிகாட்டலுடன் செயல்படுத்த வேண்டும், ஏனென்றால் தூல உடலில் வாழ்க்கை முடியும் வரை சீடன் செய்வதற்காக *குரு* வழங்கும் பணிகளை பூர்த்தி செய்ய, இந்த திறமைகள் கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றன. ¶கைரேகை ஜோசியம், ஜோதிடம், டரோட் கார்ட்ஸ், எதிர்கால மற்றும் கடந்தகால குறி சொல்லுதல், படிகத்தை பார்த்து குறி சொல்லுதல், படிகத்தை பயன்படுத்தும் ஹீலிங் சிகிச்சை, *பிராண* சக்தியின் இடமாற்றம் போன்றவற்றால் தன்முனைப்பு என்கிற *ஆணவம்* வளர்ச்சி பெறுகிறது. ஹீலிங் சிகிச்சை பெற்றவர்கள், உதவி பெற்றவர்கள், ஊக்கமளிக்கப்பட்டவர்கள் மற்றும் அச்சம், கோபம் அல்லது மற்ற கீழ்நிலை குணங்களை வெளிப்படுத்தாமல் உயர்ந்த உணர்வுடன் மிகவும் பூரணமான இந்த மனிதனின் *விசுத்த சக்கரத்தில்* விழிப்படைந்த சூட்சுமமான ஆன்மீக சக்தியை கண்டு வியந்தவர்களுக்கு, இந்த முறையில் தன்முனைப்பு மேம்படுவது ஒரு பரிசாக இருக்கும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 54

பற்றுகளை

அவிழ்த்தல்

நம்மை பிணைத்து இருக்கும் மும்மலங்கள்: படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்று நிரந்தர நிலையான நடனமாக இருக்கும் *மாயை; கர்மவினை* (இந்த வாழ்வில் நம்மோடு கொண்டு வந்த நமது *பிராரப்த கர்மவினைகளுடன்*,

தற்போது உருவாக்கும் மற்றும் எதிர்காலத்தில் உருவாக்க உள்ள கர்மவினைகள்); மற்றும் *ஆணவம்*, தன்முனைப்பு அல்லது பிரித்து காண்பிக்கும் உணர்வு. *அனாஹத சக்கரத்தின்* அறிவு எழுச்சி, திருப்தி மற்றும் இரக்க சக்திகள் மூலமாக *மாயாவை* புரிந்துக்கொண்டு, அதைப் பற்றி தெளிவடைந்து, அதற்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளலாம். உடல், மனம் மற்றும் உணர்ச்சிகள் தொடர்பான ஒழுங்குமுறை பயிற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வதன் மூலமாக மற்றும் சிந்தனை, உணர்வு மற்றும் செயல் மூலம் வெளிப்படும் ஒரு விசையாக மற்றும் அது பெரும்பாலும் மற்றவர்களின் சிந்தனை, உணர்வு மற்றும் செயல் மூலமாக நமக்கு திரும்பி வரும் என்ற புரிதல் மூலமாக *கர்மவினைகளை* கட்டுப்படுத்த முடியும். ஆனால் *ஆணவ மலம்* அல்லது தன்முனைப்பு என்கிற பிணைக்கும் சங்கிலியை எளிதில் உடைக்க முடியாது. விலகுவதில் அதுவே இறுதியாக இருக்கும். மரணத்தருவாயில், மிகப்பெரிய *ரிஷியின்* தலைசிறந்த *மகாசமாதி* அடைவதற்கு முன்னரே, *ஆணவ மலத்தின்* சங்கிலி இறுதியாக உடைக்கப்படுகிறது. ¶*ஆணவ மலமாக* இருக்கும் தன்முனைப்பை, ஒரு உண்மையான *மலத்துடன்*, உதாரணத்திற்கு ஒரு *ருத்ராட்ச* மாலையுடன் ஒப்பிட்டால், *ருத்ராட்சத்தில்* இருக்கும் மணிகளின் எண்ணிக்கையை குறைத்து மாலையை சிரியதாக்குவதே, நமது பாதையின் இந்த நிலையில் *மதியின்* குறிக்கோள் ஆகும். நாம் மணிகளை சேர்த்து மாலையை பெரியதாக்காமல், நாம் *மலத்தை* குறைந்துகொண்டே வரவேண்டும். ஒரு எச்சரிக்கை: உதாரணத்திற்கு *ஆணவ மல* குறியீட்டாக நாம் பயன்படுத்தும் ஒரு *ருத்ராட்ச* மாலையில் முப்பத்தி ஆறு மணிகள் இருக்கின்றன, மற்றும் பெண்டிங் ஸ்பூன், டெலிபதி, சேனலிங் மற்றும் எக்டோபிளாசம் தொடர்பான வெளிப்பாடுகளைப் போன்று உளவியலால் விளக்கப்படாத போலி அறிவியலின் சூட்சுமமான ஆன்மீக லோகங்களுக்குள், அந்த மணிகளோடு தொடர்புடைய பயிற்சிகள் மற்றும் புகழ்ச்சி காரணமாக மணிகளின் எண்ணிக்கை 1,008 ஆக உயர்ந்தால், 1,008 மணிகளைக் கொண்ட அந்த மாலையை அணிந்தவருக்கு பாரமாகி ஆபத்தாகவும் மாறி, இறுதியில் அவர் கால் தடுக்கி தலைகீழாக கீழே விழ வாய்ப்புள்ளது. “தற்பெருமை இருந்தால் வீழ்ச்சிக்கு வாய்ப்புள்ளது," என்று விவேகிகள் கூறுவார்கள். "ஆன்மீக தற்பெருமையை எதிர்கொண்டு, அதை விலக்கி, மேன்மை அடைவது மிகவும் கடினம்," என்று விவேகமானவர்கள் கூறுவார்கள். ஆன்மீக தற்பெருமை உள்ளவர்கள் தங்களை ஒரு *சத்குருவிடம்* வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஆனால் ஆன்மீகத்தில் அடக்கத்துடன் இருப்பவர்கள் தங்களை ஒரு *சத்குருவிடம்* வெளிப்படுத்திக் கொள்வார்கள். ¶*மதி* என்பதை "நல்ல புத்தி, கூர்மையான அறிவு, முறையான அறிவு அல்லது சாத்திர அறிவை நோக்கி இயக்கப்படும் ஒரு மனம்," என்றும் குறிப்பிடலாம். ஒரு இந்து தீர்க்கதரிசிக்கு நல்ல புத்தி என்பது, *சித்தாந்த ஷ்ரவனம்* என்கிற சாத்திரம் கேட்டலை அடிப்படையாகக் கொண்ட முறையான அறிவாக இருக்கும். கூர்மையான அறிவு

என்றால், ஒரு சில பகுதிகளை மட்டும் தெரிந்துகொள்ளாமல், பரந்த கண்ணோட்டத்தை வழங்கும் தெளிவான அல்லது அகலப் பார்வையுள்ள அறிவை குறிக்கிறது. “முறையான அல்லது சாத்திர அறிவை நோக்கி செலுத்தப்படும் மனம்" என்பது *சித்தாந்த ஷ்ரவனத்தினால்* உருவாகும் புத்தியை குறிக்கிறது. நம்பிக்கை மனப்பான்மையை உருவாக்கி, மனப்பான்மை செயலை உருவாக்குவதால், *வேதங்கள்* மற்றும் மற்ற சாத்திரங்களை படிப்பதால் புத்தி சுத்தமாகிறது. சனாதன தர்மத்தின் உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புத்தி, பிரபஞ்சத்தின் தெய்வீக விதிகளை நன்றாக புரிந்துகொள்கிறது மற்றும் அதன் அங்கமாக அவற்றை நிறைவேற்ற பயன்படுத்தப்படுகிறது. இந்த முடிவை நோக்கி, இந்த வாழ்க்கையின் அனைத்து *பிராரப்த கர்மவினைகளும்*, இந்த வாழ்க்கையில் உருவான வினை-எதிர்வினை கலவைகளும் இயக்கப்படுகின்றன. உணர்ச்சிகள் என்பது ஒழுங்குள்ள அல்லது ஒழுங்கு இல்லாத ஒரு விசையாக இருப்பதைப் போல, புத்தி என்பது முறையான அறிவு அல்லது தவறான அறிவின் மூலம் தூண்டப்படுகிறது. அது தானாகவே, இரண்டு வகையான அறிவு அல்லது இரண்டின் கலவையை, பொருத்தமாக அல்லது அபத்தமாக செயல்படுத்துகிறது. காலம், அழிவு மற்றும் மதமாற்ற முயற்சிகளை தாக்குப்பிடித்து, நன்றாக நிலைபெற்ற ஒரு ஆச்சாரமான பரம்பரையை சேர்ந்த விவேகிகளுக்கு வழங்கப்படும் போதனைகளின் ஆய்வு மற்றும் கேட்டலை குறிக்கும் *சித்தாந்த ஷ்ரவன,* புத்தியை கட்டுப்படுத்தி இயக்குகிறது. ¶ஒரு நடுநிலையான கருவியாக இருக்கும் புத்தியை தீய அல்லது நல்ல காரியங்களுக்கு பயன்படுத்தலாம். ஆனால் புத்தி என்பது உற்சாகம் அல்லது அன்பை வெளிப்படுத்தும் உணர்ச்சிகளை போல அல்லாமல், கல்லை போன்று உணர்ச்சி இல்லாமல் இருக்கிறது. இது சுத்தமான புத்தி மற்றும் அறிவு எழுச்சியின் ஆன்மீக சித்தத்தை உருவமைக்கும், *குண்டலினி சக்தியின்* நெருப்பாக விளங்கி, *மதி* என்று அழைக்கப்படுகிறது. அந்த *குண்டலினி சக்தி* புத்தியை நிரப்பி, அதை சுத்தம் செய்து, தவறான கோட்பாடுகள் மற்றும் சிந்தனை வடிவகள், நம்பிக்கைகள், தொடர்புடைய மனப்பாங்குகள் இருக்கும் அறியாமையை எரித்து, சில செயல்களின் மீது ஒரு வெறுப்பை ஏற்படுத்துகிறது. சுருக்கமாக சொன்னால், *மதி* என்பது, ஒரு ஆன்மீக வாழ்வை வாழ்வதற்கு ஆன்மா புத்தியை கட்டுப்படுத்தி இயக்குவதை குறிக்கிறது.

சனிக்கிழமை

பாடம் 55

புத்தியை

சுத்தம் செய்தல்

மக்களின் மனதில் பல விஷயங்கள் ஆட்க்கொண்டு இருக்கின்றன. பலருக்கு அது தூல உடலாக இருக்கலாம். மனவாட்ட நோயுடன் இருப்பவர் எப்போதும் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருப்பார். ஒரு தொழிலதிபர் தான் விலைகொடுத்து வாங்கிய பணியாளரின் புத்தியை பற்றி நினைத்துக்கொண்டு இருப்பார். புண்படுத்தும் உணர்ச்சிகள் மற்றும் அதைத் தொடரும் பேச்சுத் திறம் வாய்ந்த கேள்விகள், உற்சாக உணர்வுகள் மற்றும் வழக்கமாக தென்படும் தொடர் புகழ்ச்சிகளுடன், புத்தி மீது உணர்ச்சிகள் ஆதிக்கம் செலுத்துகிறது. அதன் பிறகு, நவீன *விஷ்வகுருவாக* புத்தியை குழப்பத்திற்குள் அழைத்து செல்லும் தொலைக்காட்சி இருக்கிறது. ஒரு கனவு விழிப்பூட்டுவதைப் போல, தொலைக்காட்சியைக் காண்பதால் வெறுப்பு ஏற்பட்டு அதை அணைப்பதற்கே வழிவகுக்கிறது. ஆமாம், இங்கே இது வரை நாம் கண்ட விஷயங்களைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள், புத்தி மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. ¶புத்தி என்பது தூல பண்பினால் வழிநடத்தப்படுகிறது; புத்தி என்பது உணர்ச்சிகள், மற்ற மனிதர்கள் மற்றும் இயந்திர கருவிகள் மூலம் வழிநடத்தப்படுகிறது. ஒரு கணினி தனது செய்முறையை சிறிதும் புரிந்துகொள்ளாமல் மீண்டும் மீண்டும் செய்வதைப் போல, புத்தி அந்த புத்தியின் மூலமாகவே வழிநடத்தப்படுகிறது. கோபம் தணிந்து, பொறாமைக்கு இடம் அளிக்காமல், அச்சம் என்பது ஒரு அடையமுடியாத உணர்வாக இருந்து, நினைவாற்றல் சிறப்பாக இருந்து, பகுத்தறிவு செயல்முறைகள் நன்றாக செயல்பட்டு, மனஉறுதி வலுவாக இருந்து நேர்மை நிலையாக இருக்கும் போது, ஒருவர் தன் உணர்வின் *அனாஹத சக்கரத்தின்* சன்னல் வழியாக வெளியே பார்க்கும் போது, உள்ளுணர்வு-அறிவுணர்வு சிந்தனை *புருஷா* என்கிற ஆன்மாவின் மெய்ஞ்ஞானத்தை சந்திக்கும் போது, உள்ளிருக்கும் நபர் வெளியிருக்கும் நபர் மீது தனது உரிமையை கோருகிறார். ¶இந்நிலையில் உள்ளிருக்கும் பரமாத்துமா *ஆணவத்தின்* மீது வெற்றி கொள்ள போராடுகிறது. இதற்கான முடிவு மிகவும் எளிது. இறுதி *மலமாக* இருக்கும், ஆணவ "*மலம்*" தனது மணிகளை இழக்க தொடங்கவேண்டும். சச்சிதானந்தம் பராமரிக்கப்பட்டு, பிரபஞ்ச அண்டத்தின் அடையாளத்திற்கு தன்முனைப்பு வழிவிட வேண்டும். அதன் பிறகு, இது *விசுத்த சக்கரத்தின்* மெய்யாக எங்கும் வியாபித்து, என்றும் தளராத ஆன்மீக அடையாளத்தின் பீடமாக மாறுகிறது. இங்கே *குரு* மற்றும் சீடன், தெய்வீக பண்புகளுடன் தொடர்பு கொண்டு ஒருமையில் வாழ்ந்து வருகின்றனர். ஒன்றும் பேசாவிட்டாலும், சீடனின் புரிதல் தொடர்ந்து வளர்ந்து கொண்டு செல்கிறது. ¶மெய்ஞ்ஞான அல்லது ஆன்மாவின் இயல்பிற்கு தகவல் வழங்குவது, அறிவுறுத்துவது அல்லது அதற்கு கற்பிப்பதை புத்தி என்று சிலர் சிந்திக்கின்றனர். தங்களால் மகாதேவர்களுக்கு உத்தரவிட்டு தங்கள் ஆணைகளை நிறைவேற்ற முடியும் என்றும் சிலர் சிந்திக்கிறார்கள். இவர்கள் தங்கள் மனைவியை ஒரு அடிமை என்றும், குழந்தைகளை தனது சேவகர்கள் என்றும் நினைக்கிறார்கள், மற்றும் தான் கற்ற வஞ்சக கலைகள் மூலம்

இவர்கள் சாமர்த்தியமாக தங்கள் முதலாளிகள் மற்றும் அரசாங்கங்களை ஏமாற்றுகிறார்கள். ¶தன்னிடம் அடக்கம் இருப்பதாக நடித்து, தான் சமயம் சார்ந்தவன் என்று அறிவித்தாலும், இவை அறியாமையில் நல்ல வளர்ச்சியை பெற்ற ஒருவரின் முன்மாதிரிகள் ஆகும். இவன் இதை தொடர்ந்தால், அவன் பகிரங்கமாக சொல்லிக் கொள்ளும் அந்த சமயத்தால் மட்டுமே, அவனை இந்த இருளில் இருந்து வெளியேற்ற முடியும். *மூலாதார சக்கரம்* வழியாக முதல் ஒளிக்கதிர் வெளியே வரும் போது, அவன் தனது ஆன்மாவிடம் அது தனக்கு என்ன செய்யவேண்டும் என்று அறிவுறுத்துவான், இருந்தாலும் அவன் தொடர்ந்து தன் மனைவி மீது ஆதிக்கம் செலுத்தி, அவளுடைய பெண்மை உணர்ச்சிகளை தடை செய்து, மற்றும் தன்னுடைய குழந்தைகள் தங்கள் இளமையை அனுபவிப்பதில் தடைகளை ஏற்படுத்துகிறான். ¶அவன் மனைவி மற்றும் குழந்தை, அல்லது அவனது தவறான நடவடிக்கையால் ஏமாற்றம் அடைந்த முதலாளி மற்றும் அரசாங்கம் போல அல்லாமல், ஆன்மா ஒரு விசித்திரமான முறையில் பதில் அளிக்கிறது. ஆன்மா அவன் மனசாட்சியை குத்தும் ஊசியை உருவாக்குகிறது, மற்றும் அவனுக்குள் தொடர்ந்து வலியை ஏற்படுத்தும் இந்த எதிர்ப்பு சக்தியில் இருந்து அவன் விடுபட முயற்சி செய்கிறான். அவன் *சூதள சக்கரத்தில்* தனக்கு வரவேற்பு கிடைக்கும் வரை, அங்கே பொறாமையில் மறைந்து இருக்கிறான். *தளாதள சக்கரத்தில்* இருக்கும் குழப்பத்தில் அவனுக்கு மகிழ்ச்சி கிடைப்பதில்லை. அவனால் அங்கே மறைந்து இருக்க முடிவதில்லை. அதனால் தனக்கு ஆடம்பரமான *விதள சக்கரத்தில்* வரவேற்பு கிடைக்கும் வரை, அவன் தன்னை கோபம் மற்றும் ஆத்திரத்தில் மறைத்துக் கொள்கிறான். அதன் பிறகு அவன் *அதள சக்கரத்தில்*, தனது சொந்த *புருஷா* என்கிற ஆன்மா மற்றும் தான் பார்ப்பதை கண்டு பயந்து, தன்னால் பொறுக்க முடியும் வரை, அச்சத்தில் மறைந்து இருக்கிறான். அதன் பிறகு அவன் தன்னை நினைவாற்றல் மற்றும் பகுத்தறிவில் மறைத்துக் கொண்டு, புதிய சகவாசத்தை உருவாக்கிக் கொள்கின்றான். இந்த நபருக்குள் ஏற்படும் மாற்றம், அவன் கண்களில் தெரியும் கனிவு, மற்றும் அவனுக்கு முன்பே பரிச்சயமானவர்களுடன், அவன் மேற்கொள்ளும் உரையாடல்களில் மெதுவாக வளர்ச்சி பெறும் புதிய விவேகத்தில் இருந்து மட்டுமே வெளிப்படும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 56

மன உறுதியை

உருமாற்றுதல்

மன உறுதி என்கிற *பிராணசக்தி, மணிப்பூரக சக்கரத்தில்* இருந்து வெளிப்படுகிறது. இந்த சக்தியை கீழ்நோக்கி இயக்கும் போது, அது அதிகமாக பகுத்தறிதல், அதிகமாக நினைவு கூர்தல், அச்சம் மற்றும் அச்சங்களின் அதிகரிப்பு, கோபம், உள்ளுணர்வு பொறாமை மூலம் அதிகரிக்கப்பட்டு தீர்வு காணாமல் கடுங்கோபமாக நிலை கொள்ளும் செயல்கள் மூலம் பயன்படுத்தப்படுகிறது. இவை அனைத்தும் இறுதியில் மன உறுதியில் இருக்கும் அரைகுறை தெய்வீக அம்சத்தை அழித்து, இறுதியில் *மணிப்பூரக சக்கரத்தை* மூடிவிடுகிறது. ஆனால் மன உறுதியில் இருக்கும் இந்த சக்தியை மேல்நோக்கி இயக்கும் போது, அது நினைவாற்றலை ஒரு சுத்தமான நினைவாற்றலுக்குள் கொண்டு வந்து, தவறான அறிவு போன்றவற்றை மறக்கச் செய்து, சிறந்த *தபஸ்* மூலம் தொடர்புகொள்ளப்படும் *சித்தர்கள்* மற்றும் *சஹஸ்ரஹார சக்கரத்தில்* வாழும் *ரிஷிகளின் சித்தாந்தங்கள்* என்று நினைவுகூர வேண்டியதை நினைவுக்கூர பயன்படுத்தப்படுகிறது. ¶*மணிப்பூரக சக்கரத்தின்* பத்து இதழ்களை எளிதில் வளர்த்து விரிவாக்கம் செய்யலாம் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. *அனாஹத, விசுத்த, ஆக்ஞா* மற்றும் *சஹஸ்ரஹார சக்கரங்களில்* மேல்நோக்கி செல்ல ஒரு நிபந்தனையாக தேவைப்படும் சித்திகளை அடைய உதவும் ஒரு வலுவான மன உறுதியை வளர்த்து, அடக்கத்தின் நல்ல அணுகுமுறைகளை நிலைநிறுத்துவது கண்டிப்பாக சாதாரண வேலை இல்லை. ஆனால் அதை தனது முந்தைய பிறவிகளில் அடைந்த பழைய ஆன்மாவிற்கு இயல்பாக வரும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். தான் தொடங்கிய பணியை பூர்த்தி செய்வது, மற்றும் தேவையான பற்பசையை பல் தூரிகையில் அழுத்திய பிறகு மீண்டும் தொப்பியைக் கொண்டு மூடுவது போன்ற சிறிய விஷயங்கள், மற்றும் *இயமங்கள்* மற்றும் *நியமங்களில்* குறிப்பாக சந்தோசம், தவம், தானம் வழங்குதல், இறை நம்பிக்கை மற்றும் தொடர் வழிபாடு ஆகியவற்றில் பெறும் முழுமை, இந்த வலுவான மன உறுதியை உருவாக்குகிறது. இந்த சிறிய *சாதனாக்களை* ஒருவர் ஒரு *குருவின்* வழிகாட்டல் இல்லாமல் சுயமாக செய்ய முடியும். வெளியுலக புத்தி, அதன் நினைவாற்றல் மற்றும் பகுத்தறியும் திறமைகள் மற்றும் அச்சம், கோபம் மற்றும் பொறாமையின் உள்ளுணர்வு தூண்டுதல்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் வலுவான மன உறுதியை, இந்த சிறிய விஷயங்கள் உருவாக்குகின்றன. இதை செய்வது ஒரு நல்ல மனிதராக மாறுவதற்கு போதுமானது. ¶மனதின் தசையாக மன உறுதி விளங்குகிறது. நாம் தூல உடலை தசைகளுடன் வலுவாக வைத்திருக்க எடைகளை தூக்கி, உடற்பயிற்சி செய்து, ஒரு மைல் தூரம் ஓடுகிறோம். நாம் இந்த பயிற்சிகளை அதிகமாக மேற்கொண்டால், நல்ல உடல்கட்டை பெறுகிறோம். முழுபலம் உபயோகிப்பதால் உயிரணுக்களின் பண்புகள் மற்றும் தசைகளின் அமைப்பிற்கு மறுவடிவத்தை வழங்குகிறது. இடையிடையே எடுக்கும் ஓய்வு, அவை இரட்டிப்பாக வளர்ச்சி பெற அனுமதிக்கிறது. தூல உடல் மற்றும் சூட்சும

உடலின் சூரிய மையமாக இருக்கும் *மணிப்பூரக சக்கரத்தில்*, இந்த இரண்டு உடல்களின் அனைத்து *நாடி ஒட்டங்களும்* சந்தித்து இணைகின்றன. அது உயிரின் சக்தியை வெளிப்படுத்துகிறது. அது *அக்னி ஹோமத்தின்* இருப்பிடமாக விளங்குகிறது. அது முடிவான ஞானோதயம் மற்றும் மனஉறுதியுடன் இருக்கும் உள்ளுணர்வு அம்சம் மற்றும் நீண்டகாலமாக தொடர்கிற கருத்துக்களின் அறிவுணர்வு செய்முறைக்கு இடையே ஒரு பாலமாக விளங்குகிறது. மனஉறுதி என்கிற இந்த கருவியை, அதன் சக்திகள் பயனுள்ளதாக மற்றும் தீங்கற்றதாக இருக்கும் *மதி* என்கிற அறிவு எழுச்சியாக உருமாற்றுவதன் மூலம், இதை கடந்து செல்வதில் எந்த குறையும் வைக்கக்கூடாது. உங்களின் சமயம் சார்ந்த சேவை, உங்கள் தொழில் வாழ்க்கை, உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை, உங்கள் வீட்டு வாழ்க்கை, உங்கள் கோயில் வாழ்க்கை மற்றும் *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* பூர்த்தி செய்ய நீங்கள் உங்களுக்கு சொந்தமான மன உறுதியை அதிகமாக பயன்புத்தும் போது, உங்களுக்கு அதிக மன உறுதி கிடைக்கிறது. இது தொடர்ந்து வளர்ச்சி பெறும் ஒரு சேகரிப்பு வங்கிக் கணக்காக இருக்கிறது. ¶பொருளாதாரம் மந்தமாக இருக்கும் போது ஒருவர் பணத்தை இழப்பதைப் போல, ஒருவர் தனக்கு ஏற்படும் தோல்விகள் காரணமாக அச்சம், கோபம் மற்றும் பொறாமை வடிவில் அந்த மன உறுதியை சிறிது இழக்கலாம். ஆனால் *அனாஹத சக்கரத்தின்* நேரடி அறிவு எழுச்சி மூலமாக, உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் சீராக நடுநிலையுடன் இருக்கும் பிரபஞ்சத்தின் ஒருமையை புரிந்துகொள்வதன் மூலமாக, தெய்வீக அன்பின் *விசுத்த சக்கரத்தில்* இருக்கும் உயர்ந்த உணர்வை நாடுவதன் மூலமாக, நீங்கள் பணவீக்கத்தின் உதவியையும் பெறலாம்.

வர்தம்-ஜபம்-தபஸ்

व्रत–जप–तपस्



விரதங்கள், ஜபம் மற்றும் தவம்

தவத்தின் மூலம் நற்குணம் கிடைக்கிறது. நற்குணத்தின் மூலம் புரிதல் அடையப்படுகிறது. புரிதலின் மூலம், பரமாத்துமாவை அடைய முடிகிறது, பரமாத்துமாவை அடைபவர் பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுபடுகிறார்.

கிருஷ்ண யஜூர் வேதம், மைத்ரேய உபநிடதம் 4.3. உபரா, ப. 810



இந்து சமயத்தை சேர்ந்த ஒரு பெண் கையில் மணி மாலையுடன் மனதிற்குள் மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருக்கிறாள். உள்படங்கள்: புனிதமான கிரகஸ்தாஸ்ரமத்தில் நுழையும் தம்பதிகள் தங்கள் திருமண விரதங்களை மொழிகின்றனர்; சமயம் சார்ந்த தவத்தில் உடலை வருத்தும் பல்வேறு யோக சோதனைகள் உள்ளன.

திங்கட்கிழமை

பாடம் 57

விரதம்:

புனிதமான உறுதிமொழிகள்

புனிதமான உறுதிமொழிகளை எடுக்கும் *விரதம்,* எட்டாவது *நியமமாக* இருக்கிறது மற்றும் இதை ஒருவர் தனது வாழ்நாளில் பல வடிவங்களில் எடுக்க வேண்டியிருக்கும். இதில் முதலாவதாக இருக்கும் *பிரம்மச்சரிய விரதம்,* திருமணமாகும் வரை தனது புனிதத்தன்மையை பராமரிக்க உறுதி எடுப்பதை குறிக்கிறது. ஒருவரது வாழ்வில் அடுத்ததாக பெரும்பாலும் *விவாக விரதம்* இடம்பெறும். உறுதிமொழி எடுத்தல் என்பது உங்களுக்கும், உங்கள் வெளிப்புற சுயம், உங்கள் உட்புற சுயம், உங்களுக்கு பிடித்தமானவர்கள் மற்றும் நெருக்கமான நண்பர்களுடன் இருக்கும் ஒரு புனிதமான நம்பிக்கையை குறிக்கிறது. நீங்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழி அவர்களுக்கு தெரியாவிட்டாலும், நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொண்டீர்கள் என்றால், உங்களால் அவர்கள் கண்களை பார்த்து நேராக பேசமுடியாது. ஒரு உறுதிமொழி என்பது உங்களுக்கும், நீங்கள் அடிக்கடி செல்லும் கோயிலை சுற்றி வரும் காவல் *தெய்வங்களுக்கும்,* பிரகாசமாக தன்னில் தான் ஒளிர்ந்த உங்கள் ஆன்மாவின் உடலுடன் உங்கள் ஆழமான மற்றும் அதிக உட்புறமான மனதில் நீங்களும் வாசம் செய்யும் மூன்றாவது உலகில் வசிக்கும் *மகாதேவர்களுக்கும்* மத்தியில் இருக்கும் ஒரு புனிதமான நம்பிக்கையை குறிக்கிறது. ¶பலர் சிறிய வாக்குறுதிகளை எடுத்துக்கொண்டு அதை கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள். இது *விரதம்* இல்லை. ஒரு *விரதம்* என்பது ஒருவர் தனது வாழ்வில் ஒரு மங்களகரமான நேரத்தில் இறைவன், மகாதேவர்கள் மற்றும் *குருவுடன்* ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு புனிதமான நம்பிக்கை ஆகும். *விரதம்* என்பது வெளிப்புற மனதை ஆன்மாவுடனும் ஆன்மாவை தெய்வீக பண்புடனும் பிணைக்கும் சக்தி என்றாலும், சிலசமயங்களில் *விரதம்* என்பது இந்து தர்மத்தின் *வேத* கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கங்கள் அல்லது கடைப்பிடித்தல்கள் பின்பற்றப்படுவதையும் குறிப்பிடுகிறது. நமக்கு நாமே வழங்கும் எளிமையான வாக்குறுதிகள் முதல் நமது சமயத்தின் சமூகம் மற்றும் *குருவிற்கு* வழங்கும் வாக்குறுதிகள், ஆன்மீக நன்றிக்கடன்களை செலுத்துவதற்கு மற்றும் இந்து சமயத்தின் மிகவும் விசேஷமான வாக்குறுதிகள் என்று *விரதங்கள்* பல

வகைகளாக, பல நிலைகளில் இருக்கின்றன. ¶*விரதங்கள்* அன்றாட வாழ்க்கையில் இயல்பாக தோன்றும் உள்ளுணர்வு சக்திகளின் சபலங்களை தடுக்காமல், அவற்றின் பாதையை மாற்றி *இயமங்கள்* மற்றும் *நியமங்களுக்கு* முழுமையாக பொருந்தியுள்ள வாழ்முறைக்குள் அனுப்பி, அவற்றை எதிர்த்து நிற்கும் வலிமையை கொடுக்கிறது. *விரதங்களை* அனுட்டானம் செய்யும் முன்பாக, *இயமங்களில்* குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு நிறைவையும், *நியமங்கள்* மூன்றில் இரண்டு பங்கு பயன்பாட்டிலும் இருக்க வேண்டும். ¶கட்டுப்பாடுகளாக இருக்கும் *இயமங்கள்*, எந்த விசைகளை கட்டுப்படுத்த வேண்டும் மற்றும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிய பத்து குறிப்புக்கள், என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். சிலர் தங்களது *பிராரப்த கர்மவினைகளைப்* பொறுத்து, இதை சாதிப்பதில் மற்றவர்களை காட்டிலும் சிறந்து விளங்கினாலும், இதற்காக மேற்கொள்ளும் முயற்சி மிகவும் முக்கியம் ஆகும். இன்னொரு புறம், பழக்கங்களாக இருக்கும் *நியமங்கள்*, *இயமங்களின்* நிறைவை பொறுத்து, முன்னேற்றம் பொருந்தியாக இருக்கின்றன. முதல் *இயமமாக* இருக்கும் *அகிம்சைக்கு* அர்ப்பணிப்புடன் இருப்பதால், முதல் *நியமமாக* இருக்கும் கழிவிரக்கம் என்கிற *ஹ்ரீ*, ஒருவரின் வாழ்வில் கைகூடுகிறது. மற்றும் சத்தியம் என்கிற வாய்மை வாழ்க்கையில் *சந்தோஷம்* என்கிற திருப்தி, மகிழ்ச்சி மற்றும் அமைதியை கொண்டு வருகிறது. முதல் ஐந்து பழக்கங்களாக இருக்கும் *நியமங்கள்*, உங்களை மேம்படுத்திக் கொள்ள மற்றும் அவை வரையறுக்கும் ஐந்து முக்கிய பகுதிகளில் தொடர்ந்து முயற்சி செய்ய உதவும் கருவிகள் ஆகும். ¶ஒருவர் மேலும் வளர்ச்சி பெற விரும்பினால், சாத்திரங்கள் படித்தல் அல்லது ஆன்மாவின் சக்தி அல்லது புத்தியை வளர்த்தல் போன்று அவருக்கு இயல்பாக தோன்றவுள்ள திறமைகளுக்கு அவர் ஒரு *குருவை* நாடவேண்டிய அவசியம் இல்லை, அல்லது எளிய விரதங்கள் மேற்கொள்ளவும் தேவையில்லை, ஓம் என்று ஜபிக்கவோ அல்லது சில சாதனாக்கள் மற்றும் தவம் செய்யவோ வேண்டியதில்லை. இவை அனைத்தும் அவரிடம் இருக்கின்றன. ஆனால் மனஉறுதி, இரக்கம், நேர்மை, அளவுணவு மற்றும் சுத்தம் என்று இருக்கும் கடைசி ஐந்து *இயமங்கள்*, *சித்தாந்த ஷ்ரவன* (பரம்பரை தேர்வு), *மதி* (அறிவு எழுச்சி மற்றும் குருவின் வழிகாட்டலுடன் ஆன்மாவின் சக்தியை வளர்த்தல்), *விரதம்* (ஒரு குருவின் முன்பாக எடுக்கப்படும் புனிதமான உறுதிமொழிகள்), *ஜபம்* (குருவிடம் தீட்சை பெற்று ஜபிக்க தொடங்குதல்) மற்றும் *தபஸ்* (ஒரு குருவின் கவனமான வழிகாட்டலுடன் தவம் செய்தல்) என்கிற கடைசி ஐந்து *நியமங்களுக்கு* வழி வகுக்கிறது. *குருவின்* ஈடுபாடு, மற்றும் சமூக மற்றும் தனிப்பட்ட ஈடுபாடு என்று இரண்டு நிலைகளில் கடைசி ஐந்து பழக்கங்கள் இருப்பது நமக்கு தெரிய வருகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 58

உறுதிமொழிகளின்

வகைகள்

இன்றைய நவீன யுகத்தின் *குருமார்களிடம்* சேரும் பலர் விரைந்து முன்னேற நினைக்கிறார்கள். போலித்தனமான அடக்கத்துடன் தங்களது தனிப்பட்ட பண்புகளுடன் ஆன்மீகத்தில் முன்னேற விரும்புகிறார்கள், மற்றும் அவற்றை செய்ய அவர்களுக்கு தீட்சை பெறவேண்டும் என்று தோன்றுகிறது. இந்தியாவை தங்கள் பூர்வீகமாக கொண்டு, ஒரு பாரம்பரிய முறையை பின்பற்றும் *குருமார்கள்* மற்றும் *சுவாமிகள் தீட்சையை* பரிந்துரைக்கிறார்கள். இந்த ஆன்மாக்களிடம் தென்படும் பக்தி பெரும்பாலான *குருமார்கள்* மற்றும் *சுவாமிகளின்* கண்களை மறைக்கிறது, மற்றும் அவர்களுக்கு இந்த ஆன்மாக்கள் போதை மருந்தின் தூண்டுதலில் இருப்பவர்கள் மற்றும் எதையும் முயற்சி செய்யாமல் அடைய விரும்புபவர்கள் என்பது தெரியாமல் இருக்கலாம். இந்த ஆன்மாக்கள் *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* அனுட்டானம் செய்துகொண்டு, உயர்நிலை அந்தர்லோகத்தில் பூமிக்கு வந்தவர்கள் என்று *குருமார்கள்* நினைக்கிறார்கள். அதனால் தீட்சைகள் வழங்கப்பட்டு உறுதிமொழிகள் எடுக்கப்படுகின்றன, ஆனால் அந்த சீடனின் மனதில் வினைக்கான எதிர்வினை தோன்றும் போதும், மற்றும் தீட்சைக்கு பிறகு உபதேசமும், உட்புறமாக அறிவு பரவுவதும் புதிய முறையில் இருப்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த குழுவினருக்கு சுவாமி வேறு நிலையில் உபதேசிக்க தொடங்குகிறார், மற்றும் அந்த சீடன் தீட்சையை மட்டுமே நாடி வந்ததால் (அவருக்கு இறைவன் மற்றும் மகாதேவர்கள் மீது நம்பிக்கை இல்லை, மற்றும் அவர் இந்து சமயத்தை சேர்ந்தவராகவும் இல்லை), அந்த சீடனுக்கு தனது பொறுப்பின் பாரம் தெரியவரும் போதும், அவர் அந்த சமூகத்தில் இருந்து வெளியேறுவதோடு, அந்த சிலசமயம் *குருவை* நிந்திக்கவும் செய்கிறார். ¶பலர் தீட்சை பெறுவதை ஒரு பட்டபடிப்பின் நிறைவேற்றம் போல நினைக்கிறார்கள். ஆனால் இது உண்மை இல்லை. தீட்சை என்பது கல்வி கற்பதன் தொடக்கம், *சாதனாவின்* தொடக்கம், கற்று அறிவை பெறுவதன் தொடக்கம் ஆகும். உங்களிடம் விசுவாசம் எதிர்பார்க்கப்பட்டு, நீங்கள் தீட்சை பெறும் *சம்பிரதாயத்தின்* போதனைகளை பின்பற்றி வாழவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதால், தீட்சை பெறுவதற்கு முன்பாக நன்றாக யோசியுங்கள். இதன் மூலம் நீங்கள் கோயில்களுக்கு செல்லக்கூடாது அல்லது மற்ற பாரம்பரிய திருவிழாக்கள் அல்லது இசை அல்லது பாடல்களைப் போன்ற மற்ற *சம்பிரதாயத்தின்* நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பது பொருள் இல்லை, ஆனால் நீங்கள் ஒரு குறிப்பிட்ட சம்பிரதாய பாதையில் முன்னேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதால், நீங்கள் தீட்சை பெற்ற குறிக்கோள் மீது முழு

கவனத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக, அவற்றை குறைக்க வேண்டும். ¶இந்து சமயத்தில் எடுப்பதற்கு எளிமையாகவும் பலரால் எடுக்கப்படுகிற சில எளிமையான விரதங்கள் உள்ளன. உதாரணத்திற்கு, "எனக்கு இந்த தொழிலில் வெற்றி கிடைத்தால், நான் என் கோயிலுக்கு லாபத்தில் இருபது சதவீதத்தை வழங்குவேன்." அல்லது, "என் வாழ்க்கைத்துணை என்னிடம் திரும்பி வந்தால், நான் எப்போதும் *ஸ்த்ரீ தர்ம* கோட்பாடுகள் (அல்லது *புருஷ தர்ம*) பின்பற்றி, எப்போதும் விசுவாசமாக நடந்துக்கொள்வேன்." “என் குழந்தைகள் மீது பாசத்துடன் இருக்கும் என் தாய், இந்த புற்றுநோய் சிகிச்சையில் உயிர் பிழைத்தால் (அவள் உயிர் பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் கூறி இருக்கிறார்கள், விநாயகரே), நீங்கள் என்னை ஒவ்வொரு வாரமும் வெள்ளியன்று உங்கள் சந்நிதியில் பார்க்கலாம். இது தான் நான் கடைப்பிடிக்க இருக்கும் *விரதம்.*” நாம் தினமும் தியானம் செய்ய விரதம் இருக்கிறோம், பொய் சொல்லாமல் இருக்க விரதம் இருக்கிறோம், இறைச்சி சாப்பிடாமல் இருக்க விரதம் இருக்கிறோம், புலனடக்கத்துடன் இருக்க விரதம் இருக்கிறோம், குரு மற்றும் அவர் பாரம்பரியத்தை பின்பற்ற விரதம் இருக்கிறோம், *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* பின்பற்ற விரதம் இருக்கிறோம். இவ்வாறு நாம் நமது வழிகளை மாற்றிக்கொள்ள விரதம் இருக்கிறோம். ¶சிவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி அல்லது தீபாவளி என்று மிகவும் புனிதமானதாக நீங்கள் கருதும் நாளில், மிகவும் முதன்மையான மற்றும் முக்கியமான விரதமாக இருக்கும் *இயமம்* மற்றும் *நியம விரதத்தை* உடனடியாக எடுத்து அதை ஒவ்வொரு வருடமும் மீண்டும் புத்துணர்வுடன் தொடங்க வேண்டும். இந்த இருபது கட்டுப்பாடுகள் மற்றும் பழக்கங்களை நினைவில் வைத்திருப்பது மிகவும் சுலபம். அவற்றை ஞாபகசக்தியிடம் ஒப்படைத்து விடுங்கள். அந்த விரதம் பின்வருமாறு இருக்கவேண்டும்: "விநாயகா, நான் இந்த விரதத்தை திறந்த இதயம் மற்றும் தெளிவான மனதுடன் எடுக்ககொள்ள என் விவேகத்தின் கதுவுகளை திறந்து விடு. முருகப்பெருமானே, நான் எடுத்துள்ள இந்த விரதம் நல்ல விதமாக பூர்த்தி செய்ய, பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் உறுதி, துணிவு மற்றும் புத்துணர்வு பெற்ற வலிமையை எனக்கு வழங்கிக்கொண்டு இரு. இந்த இருபது கட்டுப்பாடுகள் மற்றும் பழக்கங்களை முழுமையாக கடைப்பிடிப்பது எனது திறமைக்கு அப்பாற்பட்டது என்பதால், சிவபெருமானே, நான் இந்த முயற்சியில் தோல்வி அடைந்தால் என்னை மன்னித்து விடு. அதனால் இந்த முதல் வருடத்தில், இந்த உயரிய கொள்கைகளில் குறைந்தபட்சம் இருபது சதவீதத்தை, என்னால் முடிந்த வரை சிறப்பாக பூர்த்தி செய்ய உறுதி எடுக்கிறேன். நான் பலவீனமானவன் என்பது எனக்குத் தெரியும். நான் பலவீனமானவன் என்பது உங்களுக்கு தெரியும். நீங்கள் எனக்கு வலிமை வழங்குவீர்கள் என்பது எனக்கு தெரியும். என்னை உங்கள் திருவடிகளை நோக்கி என்றும் நிதானமாக இழுப்பது எனக்கு தெரிகிறது. ஆனால் சிவபெருமானே, அடுத்த வருடம் நான் இந்த புனிதமான

விரதம், இந்த விதிகள் மற்றும் இந்த கடைப்பிடித்தல்களை சிரத்தையுடன் புதுப்பித்து மீண்டும் தொடங்குவேன். நான் எனது மனசாட்சியின் கணக்கிற்கு ஏற்ப, சொற்ப ஐம்பது சதவீதத்தை பூர்த்தி செய்வதில் வெற்றி கண்டால், அதனால் சிவபெருமானே உங்கள் மீது எனது பக்தி மற்றும் அர்ப்பணிப்பு அதிகரிக்கும், மற்றும் *இயமங்கள்* மற்றும் *நியமங்களில்* எழுபத்தி ஐந்து சதவீதம் அல்லது அதிகமாக பூர்த்தி செய்ய, முழு மூச்சுடன் செயல்படுவதில் நான் உறுதியாக இருப்பேன்."

புதன்கிழமை

பாடம் 59

வெற்றி

மற்றும் தோல்வி

தங்கள் *விரதத்தை* பூர்த்தி செய்யவில்லை என்றால் தான் தோற்றுவிட்டதாக சிலர் கருதுகின்றனர். இதற்கு நேர்மாறான நடைமுறை உதாரணமாக மகாத்மா காந்தியின் வாழ்வை கருதலாம். அவர் புலனடக்கத்துடன் இருக்க வேண்டும் என்று *விரதம்* இருந்தார், ஆனால் அவர் அதை கடைப்பிடிக்க தவறினாலும், அவர் தனது முயற்சியை கைவிடாமல் இறுதியில் தனது உள்ளுணர்வின் மீது வெற்றி கொண்டார். ஒருவர் *விரதத்தை* மொழியும் போது, அதை பூசாரிகள், முதியவர்கள் மற்றும் சமூகத்தினர் அனைவரும் கேட்கிறார்கள், மற்றும் ஒருவர் தான் எடுக்கும் விரதத்தை தானே கேட்கும் போது, ஒரு சமநிலை உருவாகிவிட்டது என்று மூன்று உலகங்களும் மகிழ்ச்சி அடைகின்றன. வெற்றி என்பது ஒரு புறம் இருக்க, தோல்வி மறு புறத்தில் இருக்கிறது. இரண்டில் ஒன்று வெற்றியை பெறும். இந்த நிலையில் முருகப்பெருமான் மீது செலுத்தப்படும் முழுமையான வழிபாடு, தராசை வெற்றியின் பக்கம் சாய்ப்பதற்கு உதவியாக இருக்கிறது. ஆனால் தராசு தள்ளாட்டத்துடன் நிலையன்றி இருந்தால், தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள், வயது முதிர்ந்த அத்தைகள் மற்றும் மாமன்மார்கள், பூசாரிகள், பண்டிதர்கள் மற்றும் துறவிகள், *ரிஷிகள்* மற்றும் *குருமார்கள்* என்று சமூகத்தில் மூத்தவர்கள் ஆசிகள் மற்றும் அறிவுறுத்தல்களை பெற வேண்டும். இது மட்டுமே தராசில் சமநிலையை ஏற்படுத்தும். ஆனால் உண்மையில் தோல்வி ஏற்பட்டால், விநாயகர் தனது நான்கு கரங்கள் மற்றும் துதிக்கை மூலம் வீழ்ச்சியை பிடித்து விடுவார். அவர் கீழ்நிலை உலகங்களின் இருளில் இருக்கும் கழிவிரக்க பாதாள குழிக்குள் அன்பர் செல்வதில் இருந்து தடுக்கிறார். காலம் கடந்துவிட்டால் மனம், உடல் மற்றும் உணர்ச்சியின் மீது *அசுர* குணத்தின் மனஅழுத்தம் தாக்கம் ஏற்படுத்தும் என்பதால், அவர் மென்மையாக வலது காதில் பேசி, உடனடியாக விரதத்தை

புதுப்பிக்க வேண்டும் என்று ஊக்குவிப்பார். முயற்சியை கைவிட்டு, தனது பாதையில் இருந்து வேறு திசை திரும்பி, மகாதேவர்களின் கட்டுப்பாட்டையும் கடந்த அறியாமையின் லோகங்களுள் செல்பவரால் மட்டுமே தோல்வி அனுபவிக்கப்படுகிறது. வாழ்க்கையில் சிறிய குறிக்கோள்களை அடையாமல், தோல்வியுற்றாலும் மிகச்சிறந்த ஆசைகளை பூர்த்தி செய்ய முயற்சி மேற்கொள்வது சிறந்தது என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். ¶அன்றாட வாழ்வில், நமக்கு முன்பின் தெரியாத நபர்களுடன் நாம் *விரதங்கள்* அல்லது ஒப்பந்தங்களை மேற்கொள்கிறோம். ஒரு சிறிய நிலத்தை வாங்கி, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதும், அதை நிறைவேற்ற நாம் கடன்பட்டிருக்கிறோம். ஆனால் மதசார்புள்ள *விரதம்* என்பது உங்களுக்கும், உங்கள் சமயத்தின் சமூகம், *தேவர்கள்* மற்றும் மகாதேவர்கள் மற்றும் உங்களுக்கு *குரு* இருந்தால் அவருடன் மேற்கொள்ளும் ஒப்பந்தம் ஆகும். எல்லோருக்கும் மனித வாழ்வில் தோல்வி ஏற்படுவது இயல்பு என்பது தெரியும். ஆனால் முயற்சி செய்தல் வாழ்வின் நிறைவேற்றம் ஆகும், மற்றும் பயிற்சி என்பது கீழ்நிலை தத்துவங்கள் மீது மனிதனின் மனஉறுதி மற்றும் ஆன்மாவின் சக்தி பயன்படுத்தப்படும் செய்முறை வலுவடைவதை குறிக்கிறது. ¶ சமூகத்தின் ஆதரவு தேவைப்பட்டு, சமூகத்தை சாட்சியாக வைத்து நடத்தப்படும் திருமணம் மற்றும் *பிரம்மச்சரியம்* போன்ற விரதங்கள் மிகவும் முக்கியமானவை. இதைத்தவிர மற்ற தனிப்பட்ட விரதங்களை பூர்த்தி செய்யும் திறமையை அந்த நபரிடத்தில் வலுப்படுத்த உதவி தேவைப்பட்டால், அந்த விரதங்கள் சமூகம், ஒரு கோயில் பூசாரி, பண்டிதர், சான்றோர், சுவாமி, *குரு* அல்லது *சத்குரு* முன்பாக எடுக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வகை நபர் தனது விரதத்திற்கு தேவையான வலிமையை பெற்று அதை பூர்த்தி செய்வதற்கு, அந்த விரதத்தை விநாயகர், முருகப்பெருமான், சிவபெருமான் அல்லது மூவருக்கும் முன்பாக எடுப்பது போதுமானதாக இருக்கும். ஒரு விரதம் அந்த தனிநபரை மட்டும் சார்ந்ததாக இருப்பதில்லை. இதை முக்கியமாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு *விரதம்* என்பது எப்போதும் இறைவன், மகாதேவர்கள் மற்றும் *குரு*, சமூகம் மற்றும் மரியாதைக்குரிய பெரியோர்களுக்காக எடுக்கப்படுகிறது. ¶ஒருவர் விரதம் எடுக்கும் போது, தான் எடுக்கும் விரதத்தை யாரும் கேட்கப்போதவதில்லை என்று தனக்குத்தானே, தனது சொந்த *ஆணவத்திடம்* எடுத்துக்கொள்ளக் கூடாது. இது புதிய வருடத்திற்கு தனக்குத்தானே எடுத்துக்கொள்ளும் ஒரு உறுதிமொழி, புதிய நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படும் ஒரு மனநிலை மாற்றம் போன்றதாக இருக்கும். இதற்கும் *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* மற்றும் சமயத்திற்கும் எந்த தொடர்பும் இருக்காது. ¶*இயமம்* மற்றும் *நியம விரதத்தை* பொறுத்தவரையில், அதை ஒரு சம்சாரி கடைப்பிடிப்பதில் அல்லது புலன் அடக்கத்துடன் ஒரு துறவி கடைப்பிடிப்பதில், எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. சம்சாரிகள் தங்கள் வீட்டில் இருப்பார்கள், மற்றும் துறவிகள் தங்கள் மடத்தில் இருப்பார்கள். பாலியல் சுத்தத்துடன்

இருக்கும் விரதத்தை பொறுத்தவரை, ஒரு சம்சாரி தன் மனைவிக்கு விசுவாசமாக இருந்து, மற்ற பெண்களை தனது தாய் மற்றும் சகோதரிகளாக கருதி, அவர்களை பற்றி எந்த விதமான பாலியல் சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் கற்பனைகள் இல்லாமல் இருக்கிறார். *சாதகர்கள், யோகிகள்* மற்றும் *சுவாமிகள்* எல்லா பெண்களையும் தங்கள் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளாகவும், சிவபெருமான் மற்றும் தனது *குருவை* தனது தாய் தந்தையராக பார்க்கும் விரதம் இருக்கிறார். இதனால் இரு பிரிவுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருப்பது இல்லை.

வியாழக்கிழமை

பாடம் 60

ஜபம்:

பாராயணம்

இனி நாம் ஒன்பதாவது *நியமமாக* இருக்கும் *ஜபம்* என்கிற பாரயணத்தின் மீது கவனம் செலுத்தலாம். மந்திரங்கள் எளிமையாக இல்லாத பட்சத்தில், இதற்கும் ஒரு *குருவின்* தேவை மிகவும் முக்கியம். *மந்திரங்களில்* மிகவும் எளிமையாக இருக்கும், ஓம் என்கிற பிரணவ மந்திரம், "ஆஓம்" என்று உச்சரிக்கப்படுகிறது. "ஆஎன்பதை "ஓ மற்றும் "ம்" அசைகளில் இருந்து தனித்து உச்சரிக்கும் போது, அது தூல சக்திகளை சமநிலைப்படுத்துகிறது, மற்றும் "ஓ எனும் அசை *சூட்சும சரீரம்* மற்றும் *விஞ்ஞானமய கோசத்தை* சமநிலைப்படுத்துகிறது. "ம்" எனும் அசை உள்ளிருக்கும் *காரண சரீரத்தை* வெளிக்கொண்டு வருகிறது. ஆஓம் என்று மூன்றையும் ஒன்றாக சேர்த்து உச்சரிக்கும் போது, மூன்று *சரீரங்கள்* அல்லது உடல்கள் தங்களுக்குள் இணக்கத்தை பெறுகின்றன. *ஓம்* என்பது பிரபஞ்சத்தின் முதன்மையான ஒலியாக இருப்பதால், இந்த பாதுகாப்பான *மந்திரத்தை*, ஒரு *குருவின்* வழிகாட்டல் இல்லாமல், இந்த பூமியில் எந்த மதத்தைச் சேர்ந்தவராலும் உச்சரிக்கப்படலாம். எல்லா ஒலிகளும் ஒன்றாக கலந்து "ஓம்" என்ற ஒலி உருவாகிறது. ஒரு நகரம் முழுவதிலும் இருக்கும் ஒலிகளின் மேல்தொனி "ஓம்" ஆக இருக்கும். சுருக்கமாக சொன்னால், அது ஒரு அன்பரிடத்தில் சமநிலை ஏற்படுத்தி, அவரை சுத்தம் செய்து உயர்த்தவும் செய்கிறது. ¶*ஜபம்* போன்ற ஒரு எளிமையான செயலை செய்ய, ஒரு *குருவின்* அவசியம் எதற்கு என்ற கேள்வி எழலாம். *குரு*, மகாதேவர்கள் மற்றும் *தேவர்களின்* சக்தியே, இந்த *மந்திரத்திற்கு* வலிமையை தருகிறது. ஒரு சாதாரண குடிமகன் மற்றும் ஒரு காவல்காரர், மூன்றாவது நபரை பார்த்து, "சட்டத்தை மதித்து நில்" என்று கூறுகின்றனர். அந்த மூன்றாவது நபர் இருவரில் ஒருவருக்கு மட்டுமே கீழ்படிவார். அதிகாரம் இல்லாத நபரின் பேச்சிற்கு மதிப்பு

இருக்காது. இந்த உதாரணத்தில், காவல்காரர் முறையாக நியமிக்கப்பட்டு முழு அதிகாரத்தை பெற்று இருக்கிறார். அதனால் "சட்டத்தை மதித்து நில்" என்று அவர் கூரிய மந்திரத்திற்கு உரிய பலன் கிடைத்தது. முறையான நியமனம் பெறாதவர், இதே சொற்களை பேசிய போது, யாரும் அவரை மதிக்க வில்லை. ஆனால் ஒருவர் தனது *குருவை* தேர்ந்தெடுத்து, அந்த *குருவிடம்* பயின்று, அவருடைய நம்பிக்கையை பெற்று, போலியான அடக்கத்துடன் முறையான செயல்களை செய்து முறையான சொற்களை பேசி, தீட்சையை பெற்று, *மந்திர* உபதேசத்தை பெற்ற பிறகு மற்ற நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அதிக சுதந்திரம் உள்ள மரபு சாராத பாதையை தேர்ந்து எடுக்கலாம் என்று பொருளில்லை. *குருவை* அலட்சியம் செய்து, வஞ்சனை செய்து பெறப்பட்ட தீட்சையின் பலன்கள் குறையும் அல்லது முழுமையாக நின்றுவிடும். இதன் காரணமாகவே, முதல் பதினைந்து கட்டுப்பாடுகள் மற்றும் பழக்கங்கள் உருவாக்கவல்ல குணத்தின் அடிப்படையாக *சித்தாந்த ஷ்ரவன* (உங்கள் பாதையை கவனமாக தேர்ந்தெடுத்தல்) மற்றும் *மதி* (உங்கள் *குருவை* கவனமாக தேர்ந்தெடுத்து, *சம்பிரதாயம்*, உங்கள் *குரு* மற்றும் அவருக்கு அடுத்து வரும் *குரு* அல்லது *குருமார்கள்* மீது நீங்கள் விசுவாசத்துடன் இருந்து, அந்த *சம்பிரதாயத்தின்* மீது விசுவாசத்துடன் இருக்க உங்கள் குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தல்) விளங்குகின்றன. ¶*மந்திர* உபதேசம் என்பது *குரு தீட்சை* ஆகும். வழக்கமாக *குலகுரு மந்திர தீட்சையை* தாய் மற்றும் தந்தைக்கு தந்த பிறகு இளைஞர்களுக்கு வழங்கி, அந்த குடும்பத்தில் அந்த *குரு* ஒரு அங்கத்தினர் ஆகிறார். விற்கப்படும் *மந்திரங்கள்* பயனுள்ளதாக இருக்க வாய்ப்பில்லை. முதல் பதினேழு *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* பூர்த்தி செய்ய முயற்சி செய்யாத ஒருவருக்கு, *ஜபத்திற்கு* வழிவகுக்கும் *மந்திர தீட்சை* பலன் தருவதற்கு வாய்ப்பில்லை. எந்த ஒரு விவேகமான குருவும் தீட்சை வழங்கும் முன் சோதனை செய்வதை தன் வழக்கமாக வைத்திருப்பார். புத்தகத்தில் கற்ற ஒரு மந்திரத்தால் பயன் கிடைக்க வாய்ப்பில்லை. அதனால் ஒரு குருவை கவனமாக முழு மனதுடன் அணுகுங்கள். நீங்கள் பத்து *இயமங்களுக்கு* ஏற்ற கட்டுப்பாட்டுடன் இருக்கிறீர்களா என்ற கேள்வி வரும் போது, அந்த கேள்வி பூரணத்துவத்தை இல்லாமல் முயற்சியை எதிர்பார்க்கிறது என்பதை அறிந்து கொள்ளவும். நீங்கள் முதல் ஏழு *நியமங்களை* பயிற்சி செய்தால், இங்கும் பூரணத்துவம் இல்லாமல் அவற்றின் மீது தொடர்ச்சியான கவனம் எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் *மந்திர தீட்சையின்* நுழைவாயிலில் எப்போது இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு, *குருவிற்கு*, உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு தெரியும், மற்றும் இதை ஒரு ஆச்சாரமான *குரு* மூலம் வழங்கப்படும் போது, அது *குரு தீட்சை* எனப்படும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 61

தபஸ்:

தவம்

தவம், *சாதனா* செய்தல், பிராயச்சித்தம், *தபஸ்* மற்றும் வேள்வி ஆகியவை பத்தாவது மற்றும் இறுதி *நியமம்* ஆகும். உலகில் இருக்கும் எல்லா சமயங்களும் கொண்டிருக்கும் பல்வேறு தவங்களின் நிலைகளை, அந்தந்த சமயத்தவர்கள் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அதிக சோலம்பலுடன் அல்லது புரிந்துகொள்ள முடியாமல் மந்தமாக இருப்பவர்களால் இவற்றை நிறைவேற்ற முடிவதில்லை, மற்றும் இதற்கு இந்து சமயமும் விதிவிலக்கு இல்லை. நமது சமயத்தில் தவங்கள் என்பது வீட்டில் தினசரி *சாதனாவுடன்* தொடங்குகிறது. கட்டாயமாக செய்யவேண்டியவற்றில் *பூஜைகள்*, சாத்திரம் படித்தல் மற்றும் புனிதமான மந்திரங்களை சொல்லுதல் அடங்கும். இந்த தனிப்பட்ட கடமைக்கு குறைந்தபட்சம் அரை மணிநேரம் தேவைப்படும். வருடம் ஒரு முறை தூரத்தில் இருக்கும் புண்ணிய தலத்திற்கு யாத்திரை செல்லுதல், வாரம் ஒரு முறை குறிப்பாக வெள்ளி அல்லது திங்களன்று ஒரு கோயிலுக்கு செல்லுதல், திருவிழாக்களில் பங்கு பெறுதல் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் குறிப்பாக சிறுவர்களின் *சம்ஸ்காரங்களை* பூர்த்தி செய்தல் ஆகியவை மற்ற *சாதனாக்களில்* அடங்கும். செய்த தவறுக்கு பரிகாரம் செய்ய, பிராயச்சித்தம் செய்வது மிகவும் அவசியம். நமது *பிராரப்த கர்மவினைகள்* எதிர்காலத்தில் விளைவிக்க இருக்கும் தாக்கங்களை விரைவில் தணிக்க வேண்டும். ஒரு கோயிலில் இறைவனின் முன்பாக 108 முறை நமஸ்காரங்கள் செய்வதை போன்ற பிராயச்சித்தங்கள் மூலம் இதை செய்ய வேண்டும். ¶*தபஸ்* என்பது மேலும் கடினமானது. இது வாழ்க்கையின் தொடக்கத்தில் அல்லது பிற்பகுதியில், தனிச்சையாக தோன்றலாம் அல்லது இராச யோக பயிற்சிகள் மூலம் தூண்டப்படலாம். ஒருவரிடம் இருக்கும் தூண்டுதல் அவரது சிக்கலான வாழ்க்கை மற்றும் மனதை சீராக்கி, அவரை சுத்தமான இருப்பிற்குள் கொண்டு வந்து, வாழ்க்கையில் ஒரு புதிய தொடக்கத்தை வழங்கி, உயர்ந்த உணர்வு மற்றும் இறைவன் மற்றும் மகாதேவர்கள், நண்பர்கள், சொந்தங்கள் மற்றும் நெருக்கமில்லாத நண்பர்களுடன் ஒரு பரந்த உறவை விழிப்படைய செய்கிறது. இந்து சமயத்தில் *தபஸ்* நாடப்பட்டு, அஞ்சப்பட்டு, அதன் வேதனை அனுபவிக்கப்பட்டு, அதன் மீது அன்பு செலுத்தப்படுகிறது. அதன் வலி பிரசவவலியை காட்டிலும் வலுவாக இருந்தாலும், புதிய வாழ்க்கையை தொடரும் மறுபிறவியின் ஆனந்தத்தில், ஒரு குழந்தையின் சுத்தமான பண்புடன் ஆன்மா பிரகாசிக்கும் போது, அந்த வேதனை விரைவில் மறக்கப்படுகிறது. ¶*தபஸ்* என்பது கரியின் மீது சாம்பல் படிந்து, பொசுக்கும் நெருப்பின் மேல் நடந்து, மறுபுறத்தில் தீக்காயங்கள் அல்லது தழும்புகள்

அல்லது வலி இல்லாமல் தவழ்ந்து கொண்டு வெளி வருவது ஆகும். *தபஸ்* என்பது மழையில் நடந்து சென்று முழுமையாக நனைந்தாலும், புயல் ஓய்ந்ததும் உடலில் ஒரு துளி ஈரமில்லாமல் இருப்பது ஆகும். *தபஸ்* என்பது சூறாவளிக்கு மத்தியில் வாழ்ந்து, ஒரு கொந்தளிக்கும் கடலில் ஒரு சிறிய படகில் இருந்து வீசி எரியப்பட்டாலும், புயல் ஓய்ந்த பிறகு, ஒரு அமைதியான கடலோரத்தில் காயம் ஏதும் இல்லாமல் சுத்தமாக நிலைகொள்வது ஆகும். *தபஸ்* என்பது ஒரு கொந்தளிக்கும் மனம், தனது சொந்த சுயத்தை நினைத்து பித்தாக இருப்பது ஆகும். ஒரு சூட்சுமமான ஆன்மீக சிகிச்சையை மகாதேவர்கள் தாங்களே செய்து முடிக்கிறார்கள். அந்த சிகிச்சை முடிந்ததும், அந்த நோயாளி தனது முற்பிறவிகளின் கசடுகளில் இருந்து முழுமையான விடுதலையை பெறுகிறார். *தபஸ்* என்பது ஒரு மணல்சரிவைப் போன்ற சூட்சுமமான ஆன்மீக பூகம்பம், வேதனையில் இருப்பவரின் தலைக்கு மேலே வந்து அவரது உடலை முழுவதுமாக மூடி, அவரை அவரது தீய செயல்களின் கசடுகள் மூலம் திணற வைப்பதால், அவர் அதற்கு அடியில் சுவாசிக்க, பேச, பார்க்க அல்லது கேட்க முடியாமல் அவதியில் இருக்கிறார். அவர் இந்த பயங்கரமான கனவில் இருந்து எழும் போது, அவர் ஒரு பூந்தோட்ட குடிசையில், மல்லிகையை நுகர்ந்துக்கொண்டு, அங்கிருக்கும் மணல் சுவர்களில் மகாதேவர்கள் மற்றும் தேவர்களின் படம் நிரம்பி இருப்பதை பார்த்துக்கொண்டு, எங்கோ தூரத்தில் இருந்து வரும் புல்லாங்குழல் இசையை கேட்டுக்கொண்டு ஒரு பாயில் படுத்து இருப்பதை உணர்கிறார். ¶உண்மையில் *தபஸ்* என்கிற தவத்தின் முழுமையான வடிவத்தை ஒரு சத்குருவின் வழிகாட்டலுடன் இருக்கும் துறவி மட்டுமே நாடுகிறார், ஆனால் இந்த பூமியில் தீயசெயல்களின் கசடுகள் நிரம்பி வழியும் நபருக்கு இந்த பித்துநிலை பெரும்பாலும் தடையின்றி வருகிறது. இதில் வித்தியாசம் என்னவென்றால் என்ன நடக்கிறது அல்லது அதை எவ்வாறு கையாள வேண்டும் என்று இந்துவிற்கு தெரியும்; அல்லது குறைந்தபட்சம் *குருமார்கள், சுவாமிகள்*, சான்றோர்கள், ஜோதிடர்கள் அறிந்து இருப்பார்கள். ஒரு செங்கல் சுவரில் இருக்கும் இடைவெளிகளை காரை கொண்டு நிரப்புவது போல, இந்த அறிவு இந்து மனதின் ஓட்டத்தில் உருவாக்கப்படுகிறது.

சனிக்கிழமை

பாடம் 62

வேள்வி பற்றி

ஓரு பாடம்

தவ வகைகளில் வேள்விகள் செய்வது குறைவாக இருக்கலாம், ஆனால் அது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு மிகப்பெரிய நன்மை நடக்கவேண்டும்

என்பதற்காக ஒரு பிடித்தமான உடைமையை (பணம், நேரம், அறிவு அல்லது ஒரு தூல வஸ்து) ஒரு மாபெரும் சக்திக்கு தியாகம் செய்யும் செயலை குறிப்பிடுகிறது. வேள்விகள் மூலம் தியாகம் செய்ய கற்றுத்தருவதற்கு பல வழிகள் உள்ளன. ஒரு நாள் முழுவதும் பலநூறு மக்களுக்கு சமைத்த ஒரு மாபெரும் விருந்தின் மூலம் எனது சத்குரு தியாகம் செய்ய கற்றுத்தந்தார். கூடியிருந்த மக்கள் விருந்து உண்பதற்கு ஆவலுடன் இருந்தார்கள். *சத்குருவிடம்* இருந்து *பிரசாதத்தை* பெறுவதற்கு தங்களை தயார் செய்துக்கொள்ள, அவர்கள் நாள் முழுவதும் உண்ணாமல் இருந்தார்கள். விருந்து மதிய நேரத்தில் வழங்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் சத்குரு யோகசுவாமி, "மங்களகரமான நேரம் வரவில்லை. நாம் மேலும் சில *பஜனைகள்* மற்றும் *நற்சிந்தனை* பாடல்களை பாடிக்கொண்டு இருக்கலாம். பொறுமையாக இருங்கள்," என்று சொல்லி தாமதித்து வந்தார். மதியம் சுமார் 3 மணி அளவில் அவர், "நாம் இந்த பிரசாதத்தை எடுத்துக்கொள்ளும் முன்பாக ஒரு வேலை செய்யவேண்டி இருக்கிறது. இங்கிருக்கும் பதினொரு கட்டுமஸ்தான ஆண்கள் முன்வந்து, இங்கே நிலத்தில் சதுர வடிவில் ஒரு குழி வெட்டவெண்டும்," என்று கேட்டுக்கொண்டார். அவர்கள் முன் வந்ததும், அவர் குழி வெட்டவேண்டிய இடத்தை காண்பித்தார். அருகில் இருந்த வீட்டில் இருந்து மண்வெட்டிகள் வந்ததும், குழி தோண்டும் பணி துவங்கியது. சூடான காய்கறிகள், *ரசம்* மற்றும் சற்றுமுன் சூடாக வடித்த சாதம், ஐந்து இனிப்பான கறிகள், மாங்காய் சட்னி, பருப்பு, தயிர் மற்றும் ருசியான *பாயசத்தின்* வாசனைகள் வயிற்றில் "கடமுட" சத்தத்தை ஏற்படுத்த, வாயில் எச்சில் ஊற, எல்லோரும் *சத்குருவின்* விருப்பம் நிறைவடைய காத்து இருந்தனர். அது உண்மையில் ஒரு மாபெரும் விருந்தாக இருந்தது. ¶இறுதியில் அந்தி சாயும் முன்பு, குழி தோண்டும் பணி நிறைவுபெற்றது, மற்றும் உணவு பரிமாறும் நேரம் வந்துவிட்டது என்று *சத்குரு* குறிப்பிட்டார். "குழந்தைகளே, எல்லோரும் இந்த குழியை சுற்றி நில்லுங்கள்," என்றார். சுமார் இருநூறு அல்லது முன்னூறு அன்பர்கள் முன்வந்து, பத்துக்கு பத்தாக தோண்டப்பட்ட அந்த குழியை சுற்றி நின்றனர். பெண்களும் குழந்தைகளும் முன்னால் வந்து உட்கார, பின்னால் ஆண்கள் நின்றுக்கொண்டார்கள். எல்லோரும் அவர் என்ன சொல்வார் மற்றும் எந்த தாமதமும் இல்லாமல் விரைவில் விருந்து தொடங்குமா என்ற சந்தேகங்களுடன் நின்றுக்கொண்டு இருந்தனர். "நாம் இப்போது பிரசாதம் பரிமாற ஆரம்பிக்கலாம்," என்றார். குழி தோண்டிய அந்த பதினொரு ஆண்களில், அவர் இரண்டு உயரமான மற்றும் வலுவான ஆண்களை அழைத்து அவர்களிடம், "சாதத்தை பரிமாறுங்கள். சாதம் வடித்த பானையை கொண்டு வாருங்கள்," என்றார். மிகப்பெரிய பித்தளை பானையில், சுமார் 400 பவுண்ட் சாதம் இருந்தது. இது நடந்துகொண்டு இருக்கும் போது, காலை முழுவதும் சமைத்து மதியம் பாடல்களை பாடிய பலர் அங்கிருந்து கிளம்பி இருந்தனர். அதிக சிரத்தை மற்றும் பக்தி இருந்தவர்கள் மட்டுமே, என்ன நடக்கிறது என்பதை பார்க்க காத்து

இருந்தனர். காலையில் 1000 அன்பர்கள் வந்து இருந்தனர். ஒரு மிகப்பெரிய அன்பர்கள் கூட்டத்திற்கு விருந்து தயார் செய்யப்பட்டு இருந்தது. ¶"அந்த குழியின் மத்தியில் சாதத்தை பரிமாறுங்கள்," என்று அவர் கூறினார். குழியின் கீழ்பகுதியில் ஒரு மாபெரும் உணவு அருந்தும் தட்டின் வடிவில், வாழை இலைகள் சீராக வைக்கப்பட்டு இருந்தன. "குழியில் பரிமாற வேண்டுமா?" அன்பர்கள் கூட்டம் வியந்தது. “தயக்கம் வேண்டாம்,” என்று அவர் ஆணையிட்டார். அவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும், கேள்வி எதுவும் கேட்காமல் யோகசுவாமி கூரிய வார்த்தைக்கு கட்டுப்பட்டு, அந்த வாழை இலைகள் மீது ஆவி பறக்கும் சாதத்தின் பெரிய குவியலை பரிமாற ஆரம்பித்தார்கள். அவர் ஒரு சிப்பந்தியை பார்த்து, "போய், கத்திரிக்காய் கறியை கொண்டு வாருங்கள்!" என்றார். இன்னொருவரை பார்த்து, "சென்று, உருளைக்கிழங்கு கறியை கொண்டு வாருங்கள்! நாம் இந்த மங்களகரமான படையலில் எந்த குறையும் வைக்கக்கூடாது.” ¶சாதத்தை சுற்றி எல்லா கறிகளும் நன்றாக பரிமாறி இருக்க, "நாம் எல்லோரும் குழியை சுற்றி நின்று சாப்பிடப் போகிறோமா? இதைத்தான் *குரு* நினைக்கிறாரா?" என்று எல்லோரும் வியப்பில் இருந்தனர். அதன் பிறகு சாதத்தின் மத்தியில் குழம்பு ஊற்றப்பட்டது. ஒரு புறமாக ஐந்து பவுண்ட் உப்பு சேர்க்கப்பட்டது. அதன் பிறகு இலையின் மேற்புறத்தில் மாம்பழம் மற்றும் இஞ்சி சட்னிகள் பரிமாறப்பட்டன. கூடியிருந்த எல்லோரும் வியப்பில் இருப்பாக, ருசியான சமையலில் ஒவ்வொன்றாக அந்த குழியில் பரிமாறப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 63

பூமித்தாய்க்கு

நன்றி செலுத்துதல்

எல்லா உணவும் பரிமாறப்பட்ட பிறகு, *சத்குரு* எழுந்து நின்று, "அன்பர்களே, எல்லோரும் முன் வந்து பங்குக்கொண்டு...," என்று அறிவித்த போது எல்லோர் மனதிலும்,"... ஒன்றாக அமர்ந்து, நீங்கள் நாள் முழுவதும் ஒரு *சிஷ்ய* குடும்பமாக பொறுமையுடன் காத்திருந்த இந்த ருசியான உணவை சாப்பிட வாருங்கள்," என்று தோன்றியது. ஆனால் அவரது சிந்தனை வேறு விதமாக இருந்தது, "...பதினொரு மன்வெட்டிகளை கையில் எடுத்து, அதில் சிறிது மண்ணை எடுத்து இந்த ருசியான விருந்தின் மீது வீசுங்கள், பிறகு அந்த மண்வெட்டியை இன்னொருவரிடம் கொடுங்கள். இந்த மாபெரும் சைவ சமூகத்திற்கு பல வருடங்களாக தனது வளத்தை தாராளமாக அளித்து வந்த பூமித்தாய்க்கு நாம் உணவு அளித்து விட்டோம். நாம் தற்போது மனப்பூர்வமாக வழங்கும் பரிசாக,

நமது *பிரசாதத்தை*, பூமித்தாய்க்கு தியாகம் செய்துக்கொண்டு இருக்கிறோம். பூமித்தாய் பசியுடன் இருக்கிறாள். அவள் சிறிதளவு திரும்பப் பெறுகிறாள்; நாம் அவளிடம் அனைத்தும் எடுத்துக்கொள்கிறோம். நமக்கு எது அதிகமாக தேவைப்படுகிறதோ நாம் அதை தியாகம் செய்யவேண்டும் என்பதை நம்மில் ஓவ்வொருவருக்கும் உலகிற்கும், இது ஒரு முன்மாதிரியாக அமையட்டும்," என்று உத்தரவிட்டார். ¶இவ்வாறு நமது சத்குருவான சிவ யோகசுவாமி, வட இலங்கையில் முதல் பூமி வழிபாட்டு திருவிழாவை தொடங்கி வைத்தார். அவர் *தபஸ்* மற்றும் தியாகம் செய்தல், விரதம் இருந்து தானம் வழங்குதல், மற்றும் தானம் வழங்கி விரதம் இருத்தலைப் பற்றி ஒரு பாடம் நடத்தினார். அப்போது இரவு வெகுநேரமாகி இருந்தது. அன்பர்கள் அவரது பாதங்களை தொட்டு வணங்கி, நெற்றியில் சிவபெருமானின் சின்னமான விபூதியை பெற்றுக்கொண்டு, தங்கள் வீடுகளுக்கு திரும்பினார்கள். அப்போது சூடாக சமைப்பதற்கு நேரமில்லை, அப்படி சமைத்தாலும் அந்த வாசனை அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுக்கு தெரிந்தால், தவறு நடந்துகொண்டு இருப்பது அவர்களுக்கு தெரிந்துவிடும். பலர் *சத்குரு* கற்றுத்தந்த ஒரு முக்கியமான பாடத்தை நினைவில் வைத்துக்கொண்டு, சில வாழைப்பழங்களை சாப்பிட்டு தங்கள் வயிற்றை நிரப்பி இருப்பார்கள் என்று நம்புகிறோம். ¶நாம் பூமியை வழிபடுவோம். இந்த ஒரு சக்தி அறிவுத்திறத்துடன் எப்போதும் வழங்கிக்கொண்டு இருக்கிறது. அவளது பெருவளம் காரணமாக நமது தூல உடல்கள் உயிர் வாழ்ந்து வருகின்றன. அவளது பெருவளமை நீக்கப்பட்டால், நமது தூல உடல்கள் உயிருடன் இருக்காது. இந்த பூமியின் சூழலியல் ஒரு நுணுக்கமான அறிவுத்திறத்தை கொண்டுள்ளது. தபஸ் மற்றும் சாதனாவிற்கு வழிவகுக்கும் தியாகத்தின் மூலம், நாம் பூமித்தாயின் நல்லெண்ணம், நட்பு மற்றும் உணவுப்பொருட்களை பேணி வளர்க்கிறோம். உங்களுக்குள் பாராட்டு, அங்கீகரிக்கும் பண்பை மெதுவாக வளர்த்துக் கொள்ளுங்கள். மற்றவர்களை சூறையாடும் நபர், தான் சூறையாடவிருக்கும் நபரின் தாராள குணத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்துவதைப் போல, நாம் பூமித்தாயின் இந்த பரந்த மனப்பான்மையை நமக்கு சாதகமாக பயன்படுத்தக் கூடாது. ¶இந்து சமயத்தின் எல்லா பிரிவுகளிலும் ஒரு முக்கிய அங்கமாக தவங்கள் விளங்குகின்றன. அந்த தவங்கள் இப்போதும், எப்போதும் மற்றும் வருங்காலத்திலும் முழுமையாக இருக்கும் ஆன்மாவிற்குள் வெளிப்புறமாக இருக்கும் மனிதனை கொண்டு வருவதற்கு, ஆன்மா வழங்கும் ஒரு அழைப்பாக இருக்கின்றன. ஒரு *குரு*, ஒரு *சுவாமி* அல்லது சமூகத்தில் நல்ல தகுதி வாய்ந்த ஒரு சான்றோரால் தவங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த *சாதனாக்கள்*, பிராயச்சித்தங்கள், *தபஸ்* ஆகியவை நமது உணர்வை உயர்த்தி, உட்புறமாக தன்னில் தான் ஒளிர்ந்து, நித்திய சக்தியாக இருக்கும் ஆன்மாவின் முழுமையை நாம் எதிர்கொண்டு, அதனுடன் நாம் வாழக் கற்றுக்கொடுப்பதால் நாம் விவேகிகளின் வழிகாட்டலுக்கு அடிபணிய வேண்டும். அறியாமை

விதிக்கும் கட்டுப்பாடு, சந்தேகம், மன்னிக்காமல் இருத்தல் மற்றும் சனாதன தர்மத்தின் உண்மைகள் பற்றி காலவரையற்று நீடிக்கும் அறியாமை பிடித்து வைத்திருக்கும் பல முற்பிறவிகள் மற்றும் இந்த பிறவியின் கசடில் இருந்து, ஆன்மாவை சுத்தம் செய்யும் வலுவான நீராவிக் குளியல் மற்றும் மேலிருந்து பொழியும் ஒலியின் பிரகாசமான கதிர்களாக தவம் விளங்குகிறது.

“சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.” (திருக்குறள், 267).

பிரம்மச்சரியம் பாதிவ்ரத்யம் ச

ब्रह्मचर्यम् पातिव्रत्यम् च



பிரம்மச்சரியம் மற்றும் விசுவாசம்

இரு உலகங்களையும் வலுப்படுத்திக் கொண்டு பிரம்மச்சாரி முன்னேறுகிறான். அவனுக்குள் *தேவர்கள்* இணக்கத்துடன் சந்திக்கிறார்கள்; அவன் பூமி மற்றும் சொர்க்கத்தை நிலை நிறுத்துகிறான்.

அதர்வண வேதம் 11.5.1. அவேக்ரீ, ப. 55



இந்தியவில் ஒரு அடர்ந்த காட்டின் மத்தியில் ஒரு தம்பதி தங்களுக்குள் தனிமையான நேரத்தை ஆனந்தமாக அனுபவிக்க, அவர்களின் அன்பு மற்றும் அவர்களுக்கு மத்தியில் விசுவாசத்தை தனிமையான, பாதுகாப்பான மற்றும் மாசுபடாத காடு சூழ்ந்துள்ளது. ஒன்றாக சேர்ந்து இருத்தல், அர்ப்பணிப்பு, பரஸ்பர மரியாதை, நேர்மை மற்றும் பொதுவான ஆன்மீக குறிக்கோள்கள் ஆகியவை ஒரு திருமணம் நீடிப்பதற்கு வலிமையை வழங்குகின்றன.

திங்கட்கிழமை

பாடம் 64

சுத்த

சக்தி

ஒவ்வொரு கலாச்சாரமும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மத்தியில் இருக்கும் உறவுகளின் சக்தியை அங்கீகரித்து, அதை தனிநபர்கள் மற்றும் சமூகத்தின் உயர்ந்த நன்மையை நோக்கி இயக்குவதற்கு முயற்சி செய்கிறது. சிறிதளவு பாலுணர்வு சார்ந்ததாகவும் பெரிதளவு *தாந்த்ரீகம்* சார்ந்ததாகவும் இருக்கும் ஆண்மை மற்றும் பெண்மையின் சக்திகளை மனப்பூர்வமாக புரிந்துக்கொண்டு பயன்படுத்துவதைப் பொருத்து, அதனால் படைக்க அல்லது அழிக்க, அமைதி அல்லது வாக்குவாதத்தை உருவாக்க, இன்பம் அல்லது துன்பத்தை வளர்க்க முடியும். ¶ஆண்மை மற்றும் பெண்மை மற்றும் அதற்கிடையில் இருக்கும் தொடர்பு பற்றிய இந்து குறிக்கோள்கள், உலகில் மிகவும் சூட்சுமமாக, நுண்ணறிவு மற்றும் அருள் நிறைந்து இருக்கின்றன. இந்த குறிக்கோள்களை பின்பற்றும் போது, அவை ஆணையும் பெண்ணையும் வலுப்படுத்தி, ஒரு மகிழ்ச்சிகரமான மற்றும் சமநிலையான திருமணத்தை நிலைக்க செய்து, குடும்பத்தை நிலைப்படுத்துவதோடு கணவன் மனைவியின் பரஸ்பர ஆன்மீக மற்றும் லௌகீக குறிக்கோள்களில் உதவியும் வழங்குகிறது. இத்தகைய உயரிய குறிக்கோள்களை முழுமையாக கடைப்பிடிப்பது கடினமாக இருந்தாலும், இந்த முயற்சியில் ஆன்மாவின் உட்புற முழுமை இயல்பாக வெளிப்படுகிறது. ¶சமயம் சார்ந்த வாழ்க்கை என்றால் என்ன? இது காந்த சக்தி மற்றும் ஆன்மீக சக்தி என்ற இரு சக்திகளின் சமநிலை ஆகும். இது திருமண வாழ்வில் ஆண் மற்றும் பெண்ணுக்கு மத்தியில் நிலவும் இணக்கத்தை குறிப்பிடுகிறது. இது இருபத்தி ஐந்து வயது வரை சிறுவர்களின் உட்புற ஓட்டங்களை வழிகாட்டி நிர்வகிக்கிறது. இது *பிரம்மச்சரிய* வாழ்வை வாழந்து *சாதனா* செய்து வரும் ஒருவருக்கு, தனக்குள் இருக்கும் உக்கிரமான ஆண்மையின் சக்தி மற்றும் மந்தமான பெண்மையின் சக்தியையும் சமன் செய்வதை குறிப்பிடுகிறது. ¶*பிரம்மச்சரியம்* என்கிற யோகம் சார்ந்த மனத்துறவு, சைவ இந்து சமயத்தில் ஒரு பாரம்பரிய வழக்கமாக இருக்கிறது. இது ஒரு வாலிபர் அல்லது இளைஞர் திருப்திகரமான பலன்களை தரும் வாழ்க்கைக்கு தன்னை தயார் செய்துக்கொள்ள, தான் தேர்ந்தெடுத்த

உத்தியோகத்திற்கு தேவையான மனம் மற்றும் திறமைகளை வளர்ப்பதற்கு, அவர்களின் *பிராண* சக்திகளை பயன்படுத்த அனுமதி அளிக்கிறது. வாழ்க்கையில் இருக்கும் நான்கு நிலைகள் அல்லது *ஆசிரமங்களில்*, முதலில் இருப்பது *பிரம்மச்சரிய ஆசிரமம்.* நமது சமயத்தை பொறுத்தவரை, பாலுறவை உள்ளடக்கிய அன்பு, வாழ்க்கையின் *புருஷார்த்தம்* அல்லது நான்கு முறையான குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கிறது. பாலுறவு தவறாக கருதப்படுவது இல்லை. ஆனால் ஒரு புனிதமான திருமணத்தின் வரையறைக்குள், அதற்கு என்று ஒரு முறையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாலுறவு இயக்கங்கள் இயற்கைக்கு புறம்பானவையும் அல்ல. பாலுறவை கண்டு அஞ்சாமல், பாலுறவு மற்றும் பாலுறவு தூண்டுதல்களை ஒரு சமநிலையுடன் புரிந்துகொள்வது *பிரம்மச்சாரி* மற்றும் *பிரம்மச்சாரினியின்* குறிக்கோள் ஆகும். *பிரம்மச்சரியத்தின்* போது, மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த உயரிய வலிமையை பெறுவதற்கு, பாலியல் தூண்டுதல்கள் மற்றும் உயிருக்கு ஆதாரமான அந்த சக்திகளின் இயல்பை மாற்றி, அவற்றை மூளைக்குள் செலுத்துவதே குறிக்கோள் ஆகும். உயிருக்கு ஆதாரமான இந்த சக்தியை கல்வி மற்றும் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. திருமணம் வரை *பிரம்மச்சரியத்தை* கடைப்பிடித்து, அதன் பிறகு விசுவாசத்துடன் இருப்பதால், சீடனுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத்துணை அமைந்து, ஒரு மகிழ்ச்சிகரமான நிலையான திருமணம் மற்றும் நல்ல அனுசரிப்புடன் பாதுகாப்பான குழந்தைகள் கிடைப்பதற்கு உதவியாக இருக்கிறது. ¶இந்து பாரம்பரியத்தில் நீண்டகாலத்திற்கு முன்பே, பிரம்மச்சரியத்தில் இருக்கும் ஆன்மீக பண்பு உணரப்பட்டுள்ளது. இளைஞர்கள் வாழ்நாள் முழுவதும் மனத்துறவுடன் இருக்கும் துறவற பாரம்பரியத்தை பல சமயங்கள் வழங்குகின்றன. சிவ யோகசுவாமி, ஆதி சங்கரர் மற்றும் விவேகானந்தர் உட்பட, நமது ஆன்மீக தலைவர்களில் பலர் வாழ்நாள் முழுதும் மனத்துறவுடன் வாழ்ந்துள்ளனர். புத்தர், காந்தி மற்றும் அரவிந்தர் போன்ற மற்றவர்கள், சில காலம் திருமண வாழ்க்கையில் இருந்து பிறகு மனத்துறவை மேற்கொண்டனர். துறவற வாழ்க்கைக்கு தயாராகிக் கொண்டு இருப்பவர்களுக்கு, ஆன்மீக மற்றும் சமய விவகாரங்களில் வலுவான பாலியல் உயிர் சக்திகளின் பண்பை மாற்றி அவற்றை கட்டுப்படுத்த *பிரம்மச்சரியம்* மிகவும் முக்கியம் ஆகும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 65

சூட்சுமமான மனநல

குழாய்கள்

மனிதன் முதல்முறையாக தனது உறவினரை கொன்ற போது, இந்த பூமியில் இருக்கும் எல்லா விலங்குகளின் நரம்பு அமைப்பும் ஒரு மாபெரும் வலிமையை பெற்றதாக கூறப்படுகிறது. வழக்கமான பருவமுறை இனச்சேர்க்கை சுழற்சியில் முறையின்மை புகுந்தது. மக்கள் தொகை அதிகரித்தது மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களின் பாலியல் பண்பின் மூலம் *குண்டலினி* சக்தி வலுவடைந்து இன்றும் அதிகரித்து வருகிறது. ¶கலியுகத்தில் மனித நேயத்திற்கு வழிகாட்ட உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காக *பிரம்மச்சரியத்தின்* ஆன்மீக விதிகள், பல நூற்றாண்டுகளாக சைவ துறவற அமைப்பின் பழங்கால பாரம்பரியங்களின் மூலம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. கலியுகத்தின் அறியாமை இருளிலும் சைவ சமயம், சிவபெருமான் மற்றும் தெள்ளத் தெளிவான அவரது *சக்தியின்* நினைவு, தடையில்லாமல் பரவ வேண்டும் என்பதற்காக, ஆண்கள் மற்றும் பெண்களின் உடலில் *பிராண* சக்தியை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை இந்த அறிவு பதிவு செய்துள்ளது. ஒரு தனிநபரின் சக்தி இறுதியில் போதுமான வலிமையை பெற்று *பிரம்மச்சாரி* சிவபெருமானாக மாறும் வரை, *பிரம்மச்சரிய தபஸ்* ஆற்றலினால் மட்டுமே, சிவபெருமானின் சக்தி ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு வழங்க முடிகிறது. ¶நாடு அல்லது பூமியில் அச்சம் வியாபிக்கும் போது, உயிரினங்கள் நீடித்து வாழ்வதை வலுப்படுத்தும் பொருட்டு, விலங்குகளின் நரம்பு அமைப்பில் இருக்கும் தூண்டுதல்கள் இனச்சேர்க்கைக்கான ஆசையை உருவாக்குகிறது. உடலுறவின் போது, ஆண் மற்றும் பெண்ணின் சூட்சும உடல்கள் ஒன்று சேர்கின்றன, மற்றும் இந்த உலகில் பிறக்க தேவலோகத்தில் இருக்கும் ஒருவருக்கு அந்த பெண்ணின் மூலம் உடலை பெறுவதால், கருத்தரிப்பு நடக்க வாய்ப்புள்ளது. உடலுறவின் போது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஒரு தொடர்பு, கீழ்நிலை அந்தர்லோகத்தில் உருவாக்கும் சூட்சுமமான ஆன்மீகத் தொப்புள் கொடியைப் போன்ற ஒரு குழாய் பன்னிரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேலாகவும் நீடித்து இருக்கிறது. இதற்கிடையில் அதே நபர் அல்லது இன்னொரு நபருடன் தொடர்பு ஏற்படவில்லை என்றால், தொடர்ந்து வரும் வருடங்களில் அந்த குழாய் மெதுவாக வலுவிழக்கிறது. இத்துடன் *சாதனா* அல்லது *தபஸ்* செய்து, தொடர்ந்து யாத்திரை சென்று, சிவன் கோயில்களுக்கு சென்று வரவேண்டும். ¶சிவபெருமான் தூல உடலுக்குள் இருக்கும் சூட்சும உடலின் ஐந்து வாயுக்கள் வழியாக தனது சக்தியை அனுப்பும் போது, வாயுக்கள் தங்களுக்குள் இணக்கத்தை பெற்று, சுற்றி இருக்கும் அனைவருக்குள்ளும் இருக்கும் ஐந்து சிறந்த சூட்சுமமான ஆன்மீகத் திரவங்களை மாற்றி அமைக்கும் அளவிற்கு ஒரு வலுவான *சக்தியை* வெளிப்படுத்துவதற்காக, *பிரம்மச்சாரி* தனது சொந்த முதுகுத்தண்டின் மையத்தில், ஒரு தெய்வீக ஆற்றலை தக்க வைத்து இருக்கிறார். பாலியல் சக்தியை சுத்தப்படுத்தி, பிறகு உருமாற்றுவதன்

மூலம், இந்த *பிரம்மச்சரிய* சக்தி ஒன்றாக சேர்க்கப்பட்டு பரப்பப்படுகிறது. தினமும் தொடர்ந்து *சாதனா* செய்தல், நேர்மறை வாழ்க்கையின் முழுமை மற்றும் நமது சமயத்தில் இருக்கும் சடங்குகளின் வழக்கங்களை கடைப்பிடித்தல் போன்றவற்றால் உருமாற்றம் தானாக நடைபெறுகிறது. வழக்கமாக *பிரம்மச்சரியம்* என்பது குமரன் மற்றும் குமரிகளுக்கு பருமடைவதுடன் தொடங்கி, திருமணம் வரை தொடர்கிறது. இன்னொரு புறம், *பிரம்மச்சரிய விரதம்* என்பது எதிர்பாலினத்தாருடன் கடைசி பாலியல் தொடர்பு ஏற்பட்டு, *பிரம்மச்சரிய* பயிற்சியை தொடங்க வேண்டும் என்று மனப்பூர்வமாக முடிவு செய்ததும் தொடங்குகிறது. ¶*பிரம்மச்சரியத்தில்* இருக்கும் போது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எதிர்பாலினத்தாருடன் பாலியல் தொடர்புகளை வைத்துக்கொண்டவர்கள் சோதனை காலங்களை அனுபவிக்கின்றனர். எதிர்பாலினத்தாரை ஈர்க்கும் விலங்குகளின் நரம்பியல் அமைப்புகள் மற்றும் திரவங்கள் மற்றும் மணங்களின் சூட்சும பொருள்கள் அதிக அளவில் சேமிக்கப்படும் போது, தூல உலகில் மிகப்பெரிய சபலங்கள் ஏற்படுகின்றன. இது உருவாக்கும் காந்தத்தன்மையால் எதிர்பாலினம் ஈர்க்கப்படுகிறது. குறிப்பாக பழைய தொடர்புகளைப் போன்ற இயல்பு மற்றும் நடத்தையுடன் இருப்பவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். ¶ஒவ்வொருவரும் முழுமையான *பிரம்மச்சரிய* நிலையில் பிறக்கிறார்கள். பருமடைந்ததும் தங்கள் கற்பை இழக்காத சிறுவர்கள் மற்றும் சிறுமிகள், *பிரம்மச்சரியத்தின்* இயல்பான நிலையை பராமரிக்கிறார்கள். இந்த சிறுவர்களும் சிறுமிகளும், கற்பை இழந்தவர்களுக்கு தொல்லையாக இருக்கும் உணர்ச்சிப்பூர்வமான மற்றும் பாலியல் ரீதியான பல சபலங்களை, தவிர்க்கிறார்கள் அல்லது அவை இவர்கள் கண்களுக்கு தெரிவதும் இல்லை. கற்பை இழக்காத ஒருவரின் ஒளிஉடலை சுற்றி இருக்கும் சூட்சுமமான ஆன்மீகக் கேடயம் அதுவரை உடைக்கப்படாததே, இதன் காரணமாக விளங்குகிறது. இவர்களால் "மழையில் நனையாமல் நடக்க முடிகிறது, சுட்டெரிக்கப்படாமல் நீண்ட நேரம் வெய்யிலில் உட்கார முடிகிறது." இவர்கள் லௌகீக அனுபவங்களைப் பற்றி வாசிக்கும் போது அவர்களின் ஆர்வத்தை மட்டுமே தூண்டுகிறது, ஆனால் அவர் சூட்சுமமான மனநல குழாய் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தால், இந்த வாசிப்பு வலுவான பாலியல் ஆசையை தூண்டிவிடும். பருவமடைந்ததில் இருந்து *பிரம்மச்சரிய சாதனாவை* தொடர்ந்து செய்யும் குமரர்களும் குமரிகளும், தீவிர *சாதனாக்களை* செய்யாமல், "பிரம்ம" என்கிற இறைவனின் உணர்வுடன், பெரும்பாலான சமயங்களில் வாழ முடியும். ஏனென்றால் அவர்கள் லௌகீக உணர்விற்குள் மனப்பூர்வமாக என்றுமே நுழைந்தது இல்லை. அதற்கு பதிலாக அவர்கள் அதை ஒரு திரை வழியாக பார்ப்பதைப் போல பார்க்கின்றனர்.

புதன்கிழமை

பாடம் 66

சூட்சும

காந்தத்தன்மை

ஆண்கள் மற்றும் பெண்கள் வழியாக *குண்டலினி* சக்தி ஒரு நதியைப் போல பாய்ந்து செல்கிறது. அந்த நதிக்கு பாலுறவு ஒரு வடிகாலாக அமைந்து, அவர்களின் *மூலாதார சக்கரங்களுக்கு* மத்தியில் ஒரு சூட்சுமமான மனநல குழாயை உருவாக்குகிறது. முதல் உடலுறவுக்குப் பிறகு, விழிப்புணர்வு வெளியுலகின் மீது பாய்கிறது மற்றும் ஆணும் பெண்ணும் இச்சை சக்தியின் தாக்கத்திற்கு அதிகமாக ஆளாகின்றனர். முன்பை விட இப்போது புத்தியின் சிக்கலான விளைவுகளை நன்றாக உணரமுடிகிறது. அந்த சக்தி திருமண உடன்படிக்கையை மீறாமல் இருந்தால், தேவலோக மற்றும் சிவலோகத்தின் ஆசிகளுடன், தம்பதிகளுக்கு மத்தியில் உருவான சூட்சும குழாயைப் போன்ற கதிர்கள், மகாதேவர்கள் மற்றும் அவர்களின் தேவர்களின் துணையுடன், உயர்நிலை *சக்கரங்கள்* வழியாக இருவருக்கும் இடையே உருவாக்கப்படுகிறது. திருமணத்தில் ஒரு புனிதமான நிலை அடையப்படுகிறது. "ஒரு இளம் குமரன் மற்றும் குமரி திருமணம் செய்துக்கொண்டு தங்களுக்குள் தூல நெருக்கத்தை பகிரும் போது, அவர்களின் ஐக்கியம் அதிக வலுவடைந்து அவர்களின் திருமணம் உறுதியான நிலையை அடைகிறது. இதற்கு மனித நரம்பியல் அமைப்பில் இருக்கும் நுணுக்கமான நாடிகளே காரணம் ஆகும். அவர்களின் *நாடிகள்* ஒன்றாக வளைந்து, ஒரு உடல் மற்றும் ஒரு மனதை உருவாக்குகின்றன. அதிக மெய்யான மற்றும் வலுவான இந்த திருமணத்தில், எப்போதும் பிரிவு அல்லது விவாகரத்து ஏற்படுவது இல்லை. இதற்கு மாறாக, திருமணத்திற்கு முன்பு ஆண் அல்லது பெண் பாலுறவில் ஈடுபட்டு இருந்தால், திருமணத்தில் இருக்கும் உணர்ச்சி/சூட்சுமமான ஆன்மீக நெருக்கம் பாதிக்கப்பட்டு, அது முறையற்ற உடலுறவு வரை மோசமடையலாம்," என்று *சிவபெருமானுடன் திருநடனம், இந்து சமய பற்றிய தற்கால வினாடி வினா புத்தகம்* குறிப்பிடுகிறது. ¶கணவன் மற்றும் மனைவிக்கு இடையே உருவாக்கப்பட்ட, உயர்நிலை பண்புடைய கதிர்கள் மற்றும் கீழ்நிலை பண்புடைய சூட்சும-மனநல குழாய்கள், தங்களுக்குள் இச்சை சக்திகளை கொண்டு இருக்கலாம். அவை புத்தியின் உள்ளுணர்வு ஆர்வங்களையும் கட்டுப்படுத்தி, அதன் முழுமையான சக்தி வெளிப்பட அனுமதித்து, தொடர்ச்சி மற்றும் ஒழுங்குமுறையை கொண்டிருக்கும் குடும்பத்தில் ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் செழிப்பான வாழ்க்கையை உருவாக்குகிறது. இதனால் *தர்ம* நெறிகளை பின்பற்றி வாழமுடிகிறது. ¶முதல் *சக்கரம்* மூலம், பாலுறவின் போது பெண்ணிற்குள் வெளியிடப்படும் புனிதமான விதை, உருவாக்கும் சூட்சுமமான மனநல குழாயை சூட்சும உலகில் இருந்து தெளிவாக காணலாம். இந்த சூட்சுமமான மனநல குழாயின் மூலம் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு ஆசைகள், உணர்வுகள் மற்றும் தொலை நுண்ணுணர்வு மூலம் தகவல்களை

அனுப்பலாம். இந்த தொடர்புப் பாதை பொதுவாக ஆறு அங்குல விட்டத்துடன் இருக்கும். ¶இன்றைய காலத்தில், முறையற்ற உடலுறவு காரணமாக, இந்த முறையில் பெருமளவு மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பில் உள்ளனர். ஒரு துணையிடம் இருந்து இன்னொன்றுக்கு செல்லும் போது, அதிகஅளவு சூட்சும பொருள் அவர்களை மூடியுள்ளது. இதனால் தீவிர அச்சம் நிலைக்கிறது. ஆன்மீக கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, அவர்களின் *காரண சரீரங்களை* இந்த சூட்சும பொருள் மறைத்துள்ளது, மற்றும் பூமியில் இவ்வாறு ஈடுபட்டு இருக்கும் ஒருவரை, தேவலோகத்தில் வாழ்பவர் தொடர்பு கொள்வது மிகவும் கடினமாக இருக்கும். விலங்குகளின் செயல்களில் வழிகாட்ட, அதனிடம் புத்தி இல்லாததை போல, தேவலோகம் அல்லது சிவலோகத்தில் இருந்து எந்த பாதுக்காப்பும் இல்லாத, அத்தகைய நபர்கள் தங்களுக்கு தாங்களே ஆதரவாக இருக்கிறார்கள். ¶முத்தமிடுதல், கட்டிப்பிடித்தலைப் போன்ற மற்ற மற்ற வழிகளில், இருவர் தொட்டுக்கொள்வதால் உருவாகும் சூட்சும பொருளின் ஒரு தற்காலிக தொடர்பும், அவர்களின் ஒளி உடலுக்குள் ஊடுருவி அவர்களின் உருவங்களை முழுவதுமாக மூடுகிறது. இதை சூட்சும லோகத்தில் இருந்து பார்க்கும் பொது, இருவரையும் தொடர்புப்படுத்தும் சூட்சுமமான ஆன்மீகப் பொருள் அவர்களின் உடல்களின் நீளத்திற்கு இருப்பதால், இது சிலசமயங்களில் மாபெரும் காந்தத்தன்மையாக கருதப்படுகிறது. இந்த சூட்சும பொருள் உணர்வு சக்திகளின் பல்வேறு வெளிப்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்டு, அவர்களின் ஒளி உடல்களை ஒன்றாக கலக்கிறது. அவர்கள் பிரிந்து இருந்தால் தொடர்ந்து அவர்களை ஒன்று சேர்ப்பதற்கு அல்லது மனவேதனையை ஏற்படுத்தும் அளவிற்கு, இந்த சூட்சுமமான ஆன்மீகத் தொடர்பு அதிக காந்தத்தன்மை உடையதாக இருக்கிறது. ஆனால் சந்திப்பு மீண்டும் நடக்கவில்லை என்றால், மூன்று அல்லது நான்கு நாட்கள், அல்லது அதிகபட்சமாக ஒரு மாதத்தில் இந்த சூட்சும பொருள் மெல்ல அழிந்து விடும். இந்த முறையில், ஒருவரை தொடுவது அல்லது அரவணைப்பதன் மூலம் அதிக அளவு காந்த சக்தி வெளிப்படுகிறது.

வியாழக்கிழமை

பாடம் 67

முழுமையை நோக்கி

செல்லும் பாதை

மூன்று லோகங்களுக்கும் ஒரு பாதையாக விளங்குவது *பிரம்மச்சாரியின்* கடமை ஆகும். அவர் இந்த முறையை பயன்படுத்தி நமது கலாச்சாரம், ஆக்கத்திறன் மற்றும் சிவலோகத்துடன் இருக்கும் அனைத்து தொடர்புகள் மீது

முறையற்ற உடலுறவு களங்கம் விளைவிக்காமல், கலியுகத்தில் மனித நேயத்தை நிலை நிறுத்தலாம். இதன் காரணமாகவே, திருமணமாகாத சைவர் ஒவ்வொருவரும், *பிரம்மச்சரிய சாதனாவை* புரிந்துக்கொண்டு கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம் ஆகும். ¶*பிரம்மச்சாரி* அல்லது *பிரம்மச்சாரினியாக* இருக்கும் நீங்கள், சிவலோகம் மற்றும் தேவலோக சக்தியை பூலோகத்தின் உயர்நிலை சக்திகளுடன் இணக்கத்தில் வைக்க முயற்சி செய்யவேண்டும். உருமாற்ற செய்முறை மற்றும் தாரணை நிறைந்த வாழ்வை வாழ்வதன் மூலம் இயல்பாக, இது நடைபெறுகிறது. தொடர்ந்து தனிப்பட்ட *சாதனாவை* செய்து, மற்றவர்களின் உணர்ச்சிகளில் ஈடுபடாமல் இருக்கும் பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். ¶இதை சாதிக்க தினமும் சிவபெருமானை ஆவாகனம் செய்வது நல்லது. அப்போது உங்கள் சூட்சுமமான ஆன்மீகப் பண்பு உடலுக்குள் உயர்நிலை சக்கரங்கள் திறந்துக்கொள்ளும். தடையில்லாமல் மன அமைதி தோன்றி, எல்லோரும் உணரும் படியாக உங்கள் ஒளி உடலில் இருந்து ஆனந்தம் பொங்கி வழியும். வெளிப்புற உலகத்துடன் இருக்கும் தொடர்புகளை முன்கூட்டியே அகற்றி, அதில் குடியிருப்பவர்களுடன் இருக்கும் சூட்சும பாதை தொடர்புகளை துண்டிப்பதற்கு, தொடர்ந்து *பூஜையை* செய்து முருகப்பெருமானுக்கு ஆவாகனம் செய்வதும் நல்ல பலனை வழங்கும். உங்கள் பூஜையின் மூலம் நீங்கள் முருகப்பெருமானை அடையும் போது, அவர் உருமாறும் செய்முறை பற்றிய ஞானம் மற்றும் தெய்வீக புரிதலையும் வழங்குவார். ¶எப்போதாவது ஒரு முறை இனப்பெருக்க திரவங்களின் இழப்பு ஏற்பட்டால் *பிரம்மச்சரிய சாதனாவில்* தடை அல்லது இடைவெளி ஏற்படாது என்றாலும், அதை தவிர்க்க வேண்டும் மற்றும் *பிரம்மச்சரிய சாதனா* பலனை கொடுக்க தொடங்கியதும் இந்த நிகழ்வை குறைக்க வேண்டும். ஒருவருக்கு இரவில் விந்து வெளியேறும் சிக்கல் இருந்தால், அதைப்பற்றி கவலை வேண்டியதில்லை. ஆனால் அதை கூடுதல் சக்தியின் இயல்பான வெளிப்பாடாக கருத வேண்டும். தூல திரவம் வெளியே செல்லும் போது, அந்த கூடுதல் சக்தியில் இருக்கும் *பிராணன்* உயர்நிலை சக்கரங்களுக்குள் செல்கிறது. இவ்வாறு பாலியல் சுய இன்பத்தின் போது நடைபெறுவது இல்லை. ¶பிரம்மச்சரிய பாதையை கடைப்பிடிக்க வேண்டும் என்று முடிவு செய்தவர்கள், பாலியல் கற்பனைகள் மற்றும் இரவில் விந்து வெளியேறுவது போன்ற தொல்லைகளை சந்தித்தால், அவர்கள் நம்பிக்கை இழக்கக் கூடாது. அவர்களின் ஆக்கப்பூர்வ திறமைகள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்பதையே அவை குறிப்பிடுகின்றன. அத்துடன் *பிரம்மச்சாரி* மற்றும் *பிரம்மச்சாரினி*, நாள் முழுவதும் தனது சிந்தனையின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் தீவிரமாக செயல்படுவதற்கு தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் தீவிரமாக செயல்பட்டு, தினமும் முடிந்தவரை விரைவாக உறங்க சென்று, கனவு நிலையில் உணர்வின் அதிக புனிதமான பகுதிகளை நாடுங்கள். உறக்கத்தின் போது அதிக

புனிதமான பகுதிகளை எப்படி நாடுவது? உறங்கும் முன்பாக சுலோகம் மற்றும் தியானம், மற்றும் விநாயகரை வேண்டி பிரார்த்தனை செய்வதன் மூலம் அடையலாம். ¶ஒரு பாலியல் கற்பனையில் சிறிது நேரம் ஈடுபடுபவருக்கு, சுயமாக விதித்துக் கொள்ளும் ஒரு எளிமையான பிராயச்சித்தம் உள்ளது. அவர் மதிய நேரத்தில் அரிசி மற்றும் பருப்பை மட்டும் சாப்பிடவேண்டும். அவர் அத்தகைய கற்பனைகளில் அதிக நேரம் ஈடுபட்டால், அவர் தனது உட்புற சக்திகளை கட்டுப்படுத்த வேண்டும் என்பதை தனக்கு நினைவுபடுத்தி கொள்ள, அவர் தனக்கு முன்பாக காலி தட்டுடன் மதிய நேரத்தில் விரதம் இருக்கவேண்டும். கவனமில்லாமல் இத்தகைய கற்பனைகளில் நேரத்தை கழித்தால், உணவு கிடைக்காது என்பதை உள்ளுணர்வு மனம் இறுதியில் புரிந்துக் கொள்ளும். இதைத்தவிர வேறு என்ன வேண்டும்?

வெள்ளிக்கிழமை

பாடம் 68

பெற்றோர்களுடன்

சூட்சுமமான ஆன்மீக பந்தங்கள்

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணுக்கு இடையேயான உடலுறவு மட்டுமே *பிரம்மச்சரிய சாதனாவை* உடைத்து, அவர்களுக்கு இடையே உட்புற ஆகாசத்தில் ஆறு முதல் பதினாறு அங்குல அகலத்துடன், தொப்புள் கொடி போன்ற ஒரு சூட்சுமமான மனநல குழாயை உருவாக்குகிறது. இந்த சூட்சுமமான மனநல குழாய் வழியாக ஆற்றல் மற்றும் ஆசையின் சக்திகள் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பாய்ந்து செல்கிறது. தாய் மற்றும் தந்தைக்கு மத்தியில் இருக்கும் இதே சக்திகள், ஒரு குழந்தையின் பிறப்பாக நிறைவு பெற்று, அந்த குழந்தை இருபத்தி ஐந்து வயது அடையும் வரை லௌகீக உணர்வின் மூலம் அதை சூழ்ந்து இருந்து அதற்கு பாதுகாப்பு அளிக்கிறது. தாய் மற்றும் தந்தையிடம் இருக்கும் சூட்சுமமான ஆன்மீகத் தொடர்பு, அந்த குடும்பத்தில் இருக்கும் குழந்தைகளை உணர்ச்சிப்பூர்வமான சமநிலைப்படுத்துகிறது. ஆனால் திருமணத்திற்கு முன்பாக முறையற்ற உடலுறவு மூலம் மற்ற பாதைகள் உருவாகி இருந்தால், அல்லது வாழ்க்கைத்துணை இல்லாத மற்ற எதிர்பாலின உறுப்பினர்களுடன் தற்போது உருவாக்கப்படும் புதிய பாதைகளால், குழந்தைகள் வளரும் வயதில் உணர்ச்சிப்பூர்வமான வேதனைகளை அனுபவிக்கிறார்கள். கட்டவிழ்க்கப்பட்ட உள்ளுணர்வு சக்திகள், அவர்களிடம் பெரும்பாலும் குழப்பம் அல்லது பதட்டத்தை ஏற்படுத்தக்கூடும். ¶குழந்தை பக்குவமடைந்ததும், அவன் ஒவ்வொரு வருடமும் மெதுவாக, தனது தந்தை மற்றும் தாயின் தொடர்பில்

இருந்து விடுபடுகிறான். இருபத்தி ஐந்தாவது வயதில் விடுபடும் செய்முறை நிறைவடைகிறது. ஆனால் இந்த வயதிற்கு முன்பாக அந்த மகன் அல்லது மகளுக்கு, ஒரு எதிர்பாலின உறுப்பினருடன் சூட்சும பாதை உருவாகும் போது, அவர் தனது தாய் மற்றும் தந்தையுடன் இருக்கும் தொடர்பை முழுவதுமாக துண்டித்துக்கொள்கிறார். அந்த தருணத்தில் இருந்து, அவரது நடத்தை முன்னைப் போல இருப்பதில்லை. இந்த பாலுறவால், அவர் இப்போது "வீட்டை விட்டு வெளியேறி" உலகில் புகுந்துவிட்டார். இந்த மாற்றத்தை பெற்றோர்கள் மற்றும் அந்த மகனும் உணர்ந்துக்கொள்கிறார். ¶கற்புடன் இருப்பவர்களுக்கு அவ்வப்போது எதிர்பாலினத்தார் மீது, குறிப்பாக அவர்கள் தங்களது முற்பிறவியின் முன்னாள் வாழ்க்கைத்துணையை சந்திக்கும் மோகம் மிகவும் வலுவாக இருக்கும். பிரம்மச்சரியம் நன்றாக புரிந்துகொள்ளப்பட்டு கடைப்பிடிக்கப்படவில்லை என்றால், இந்த முற்பிறவி காதலர்களின் சந்திப்பு, திரவங்கள் மற்றும் உணர்ச்சிகளை இயக்கி அவர்களை உடலுறவு வரை அழைத்துச் செல்லக்கூடும். திருமணமாகும் வரை கற்புடன் இருப்பதைப் பற்றி, பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே விளக்க வேண்டும். ஒருவர் தன்னை ஒழுக்கப்படுத்திக் கொள்வதன் மூலம் ஏற்படும் ஏற்றங்களும் இறக்கங்களும், இந்த லௌகீக வாழ்க்கையின் ஒரு அங்கம் என்பதை அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். இந்த சபலத்தில் இருந்து மனம் மற்றும் உடல் ரீதியாக "விலகி செல்லும்" பழக்கத்தை, அந்த பெற்றோர்கள் மென்மையாக மற்றும் திடமாக கற்றுத் தரலாம். ¶தங்களது புனிதமான சக்தி எதிர்பாலினத்தாருக்கு செல்வதை அனுமதிக்கும் சபலத்தை வெற்றிக்கொள்ள *பிரம்மச்சாரி* மற்றும் *பிரம்மச்சாரினிக்கு* பாதுகாப்பு அளிப்பதில், ஒரு சூழ்நிலையில் இருந்து கௌரவத்துடன் விலகி வருவது மற்ற முறைகளில் இருந்து அதிக பயனுள்ளதாக இருக்கிறது. சபலத்தில் இருந்து மனம், உணர்ச்சி, உடல் ரீதியாக விலகிச் செல்வதில் பயிற்சி மேற்கொள்வது மிகவும் எளிது. அதை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள். நீங்களும் அதில் பயிற்சி மேற்கொள்ளுங்கள். சிவபெருமானின் அருளின் மூலம், அவரது திருவடிகளை நோக்கி செல்லும் பாதையில் விவரமறிந்த மக்களின் புதிய தலைமுறை நடந்து செல்லும்.

சனிக்கிழமை

பாடம் 69

பாலியல் ஆசையை

திசைதிருப்புதல்

பிரம்மச்சரியம் என்றால் பிரம்மத்தை உணரும் பாதை என்பது பொருள், மற்றும் அது மனத்துறவுடன் இருந்து, பாலியல் தொடர்பில் இருந்து முழுமையாக விலகி இருக்கும் பழக்கம் மற்றும் வழக்கத்தை குறிப்பிடுகிறது. *பிரம்மச்சரியத்தை* பாரம்பரிய முறையில் 1) துறவிகள்; 2) திருமண வாழ்க்கை அல்லது ஒரு மடத்திற்குள் நுழையும் முன்பாக தங்கள் பெற்றோருடன் வீட்டில் வசிக்கும் இளைஞர்கள்; 3) உலகில் தனியாக வாழ்பவர்கள்; 4) பிற்காலத்தில் குறிப்பாக அறுபது வயதிற்கு மேல் மனத்துறவுவை கடைப்பிடிக்கும் தம்பதிகள் ஆகியோர் கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் பாரம்பரியமிக்க ஆச்சாரமான நமது அமைப்பில், *பிரம்மச்சாரி* (அல்லது *பிரம்மச்சாரினி)* என்கிற முறையான பட்டம், நமது சைவ இந்து தேவாலயத்தின் ஆதரவுடன் வாழ்நாள் முழுவதும் மனத்துறவுடன் வாழ்வதற்கு சங்கல்பம் எடுத்துக்கொண்டு தனியாக வாழும் ஆண்களுக்கு (அல்லது பெண்கள்) மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இந்த புனிதமான உறுதிமொழியை நிறைவேற்றும் போது, அந்த நபர் சிந்தனை, சொல் மற்றும் செயலில் புனிதத்தை பாதுகாக்க மற்றும் புலனடக்கத்தை காப்பாற்ற உறுதி எடுக்கும் போது, பாலியல் சக்திகள் மற்றும் கோபம்,பொறாமை, பேராசை, அச்சம், வெறுப்பு மற்றும் சுயநலத்தின் உள்ளுணர்வை தூண்டுதல்களை சுத்தப்படுத்தி உருமாற்றவும் உறுதி எடுக்கிறார். எங்கள் இந்து தேவாலயத்தில் இருக்கும் இளம் அன்பர்கள் அனைவரும், சத்குருவின் ஆசிகள் மற்றும் இரு பெற்றோர்களின் சம்மதத்துடன் இன்னொரு சைவ இந்துவை திருமணம் செய்துகொள்ளும் வரை, மனத்துறவுடன் இருக்க உறுதி எடுக்கிறார்கள். இந்த புனிதமான உறுதிமொழியின் சின்னமாக இடுப்பை சுற்றி புனிதமான கொடியை கட்டிக்கொள்கிறார். சைவ சமய போதனைகள் பற்றிய முறையான கல்வி, ஒரு அங்கீகரிக்கப்பட்ட பண்டிதர் மற்றும் பெற்றோர்களின் மேற்பார்வையுடன் தொடங்குகிறது. அவரது உறுதிமொழியை பெற்றோர்கள் பகிர்ந்து கொள்வதோடு, அதை பூர்த்தி செய்வதில் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றனர். நான்காவது *இயமமாக* இருக்கும் *பிரம்மச்சரியம்,* ஒருவர் தனது திருமண வாழ்வில், அனைத்து பாலியல் சிந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை தனது வாழ்க்கைத்துணையுடன் கட்டுப்படுத்திக் கொள்ளும், விசுவாச உணர்வை வெளிப்படுத்துகிறது. ¶*பிரம்மச்சரியம்* என்பது புனிதமில்லாத வடிவம் அல்லது சக்தியை புனிதமானதாக மாற்றுவது ஆகும். இதற்கு ஒப்பீடாக, அதிக ஆற்றலை பெறுவதற்கு நீரை ஆவியாக மாற்றும் செய்முறையை குறிப்பிடலாம். திரவங்கள் மீண்டும் இரத்த ஓட்டத்தின் மூலம் உள்ளீர்க்கப்பட்டதும், அவற்றின் காந்த சக்தி *ஏழு சக்கரங்களும்* மாறி மாறி உணவை வழங்குகின்றன. இதைப்பற்றி திருமந்திரம் (1948) குறிப்பிடுகிறது.

"ஒழியாத விந்து வுடன்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலஞ் சத்தி
ஒழியாத புத்தி தபஞ்செப மோனம்
அழியாத சித்தியுண் டாம்விந்து வற்றிலே."

புனித திரவங்களின் உருமாற்றம் என்பது அடக்குவது, ஒடுக்குவது அல்லது தடை செய்வதை குறிப்பிடவில்லை. ¶உங்கள் கைகளை உயர்த்திப் பாருங்கள். அவற்றை உயர்த்த சக்தி தேவைப்படுகிறது. நீங்கள் சோர்வாக இருந்தால், உங்களுக்கு வழக்கத்தை காட்டிலும் அதிக சக்தி தேவைப்படும். இந்த சக்தி உங்களுக்கு வெளிப்புறமாக இருக்கும் ஒரு மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வரவில்லை. அது உங்களின் உட்புறத்தில் இருந்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை. உங்களுடைய திண்மை, உங்கள் கண்களில் தென்படும் ஆன்மீக பிரகாசம், உங்கள் ஆளுமையின் ஒளி ஆகிய அனைத்தும் உங்களின் ஆக்கப்பூர்வமான உயிர்சக்தியின் வெளிப்பாடுகள் ஆகும். இதைப் போன்ற பண்புகளை ஆண் மற்றும் பெண்ணின் இனப்பெருக்க திரவங்கள் கொண்டிருக்கின்றன. அவை *காரண சரீரத்திற்குள்* இருக்கும் *பிங்கலா* மற்றும் *இடா* ஓட்டங்களில் இருந்து பெறப்பட்ட, உக்கிரமான மற்றும் மந்தமான சக்திகளை உள்ளடக்கியுள்ளது. அவை *சஹஸ்ரஹார சக்கரத்தின்* மையத்தில் இருக்கும் *பிரம்மரந்திரத்தில்* இருந்து வெளிப்படும் சுத்தமான ஆன்மீக சக்தி மூலம் தூண்டப்படுகிறது. முறையாக வழிநடத்தும் போது, இந்த ஆக்கப்பூர்வமான சக்தியின் சூட்சும வடிவங்கள் கலையுணர்வு, அறிவுணர்வு மற்றும் ஆன்மீக வெளிப்பாட்டின் சாரமாக விளங்குகின்றன. உருமாற்றத்தில் பயிற்சி மேற்கொள்பவர்கள், தங்களுக்குள் மறைந்து இருக்கும் பல திறமைகளை விழிப்படைய செய்கிறார்கள். ஆக்கப்பூர்வமான சக்தியின் சாரத்தை உருவாக்கி வெளிப்படுத்தி, அதனுடன் இணக்கத்துடன் இருப்பது, அவர்களின் ஆழமாக பதிந்துள்ள பழக்கமாக மாறுகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 70

அந்தர்லோக

கல்வி

பாலியல் ஆசையை தொடர்ந்து பாதை மாற்றி விடுவதே, முழுமையான *பிரம்மச்சரியத்தின்* குறிக்கோள் ஆகும். ஆசை விலகிச் செல்லும் நிலை உடனே ஏற்படாது என்பதால், இதை ஒரு பழக்கமாக மாற்றிக் கொள்ளவேண்டும். ஆசை வாழ்க்கையின் அங்கமாக இருப்பதால், அதை தனிப்பட்ட சித்தத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கலாம். அடிப்படை ஆன்மீக கொள்கைகளுக்கு ஏற்ப வாழ்க்கையை வாழ்வது உங்கள் *சாதனா* ஆகும். *சாதனாவின்* மூலம் உங்களால் உங்கள் மனம் மற்றும் உடலின் அனைத்து சக்திகளின் மீது தேர்ச்சி அடைய முடிகிறது. மனிதன் தனது உள்ளுணர்வு-அறிவுணர்வு இயல்பை விட்டு வெளியேறி ஆன்மீகரீதியாக விரிவாக்கம் பெறும் போது, அவனது

முழுமையான கட்டுப்பாட்டிற்குள் அந்த இயல்பின் சக்திகளை கொண்டு வரவேண்டும். ¶இந்த பாடங்களை படிப்பதற்கு, உங்களால் தினமும் குறைந்தபட்சம் பதினைந்து நிமிடங்கள் அல்லது அரை மணி நேரம் ஒதுக்க முடியும் என்று நம்புகிறேன். முடியவில்லை என்றால் நம்பிக்கை இழக்க வேண்டாம். அதனால் முயற்சி செய்துகொண்டே இருங்கள். அப்படி முடியவில்லை என்றால், தினமும் உறங்குவதற்கு முன்பாக ஒரு பாடத்தை படிக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் உறங்கும் போது, இந்த புனிதமான போதனைகள், உங்களை தேவலோகத்தின் அதிக ஆன்மீக பண்புகள் நிறைந்த பகுதிகளில் இயல்பாக அழைத்து செல்லும். அங்கே உங்களுக்கு உதவுவதற்கு பல அந்தர்லோக சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஆன்மீக விரிவாக்கம் பற்றிய உங்கள் ஆய்வு மற்றும் விருப்பத்தில் நீங்கள் தனியாக இல்லை. "நாம் நமது எண்ணமாக மாறுகிறோம்," என்பதை ஆன்மீக எண்ணம் கொண்ட எல்லோரும் அறிவார்கள். உயர்ந்த பரிணாமத்தில் இருக்கும் மகாதேவர்கள் மற்றும் தெய்வங்களை நினைக்கும் போது, நமது பரிணாமமும் தூண்டப்படுகிறது. நமது ஆன்மீக விரிவாக்கம் விரைவுபடுத்தப்படுகிறது. ¶தினமும் இரவின் உறக்கத்தில் நீங்கள் பல அற்புதமான தகவல்களை கற்றுக்கொள்கிறீர்கள். நீங்கள் விழித்ததும், கற்றுக்கொண்டதை உணராமல் இருக்கக்கூடும் அல்லது அதை மறந்து இருக்கக்கூடும். தூல அறிவை காட்டிலும் சூட்சும அறிவு, உயர்ந்த அதிர்வு விகிதத்தில் செயல்படுவதே இதற்கு காரணம் ஆகும். பெரும்பாலான இரவுகளில், சூட்சும லோகமாக இருக்கும் தேவலோகத்தின் ஆன்மீக பகுதிகளின் சைவ பள்ளிகளில் இருக்கும் *குருமார்கள்* மற்றும் வழிகாட்டிகளிடம் இருந்து பலமணி நேரத்திற்கு கல்வியை கற்கிறீர்கள். சிலசமயங்களில் ஒரே ஆர்வத்தை கொண்ட அன்பர்கள், டஜன் கணக்கில் அல்லது நூற்றுக்கணக்கில் ஒன்று கூடுகிறார்கள். அவர்களின் தூல உடல்கள் உறங்கிக்கொண்டு இருக்க, எல்லோரும் தங்கள் சூட்சும உடல்களுடன் சூட்சும லோகத்தில் சந்திக்கிறார்கள். ஒருவர் *பிரம்மச்சரிய* பயிற்சியில் உறுதியாக இருக்கும் போது, அந்தர்லோக பள்ளிகளில் நீண்ட நேரம் இருந்து, அங்கே கற்பிக்கப்படும் கல்வியை காட்டிலும் அதிகமான தகவல்களை கிரகிக்கவும் முடிகிறது. பிரம்மச்சரியத்தில் வலுவாக இல்லாதவர்கள் உணர்ச்சிகள் மற்றும் ஆசைகளின் மூலம் தங்கள் தூல உடல்களுக்கு இழுக்கப்படுவதால், அவர்கள் இந்த குழுவில் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கிறார்கள். ¶நீங்கள் இந்த பிறவி எடுத்ததற்கான காரணத்தை உங்களின் ஆன்மா அறியும் என்பதை நினைவில் வைத்திருங்கள். இந்த பிறவியில் நீங்கள் எதை சாதிக்க வேண்டும் என்பதை, அந்த ஆன்மா அறிந்து இருக்கிறது. நீங்கள் தேர்ந்தெடுத்த *தர்ம* நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் வலிமையை பெற்று, கடந்தகால *கர்மவினை* பழக்கங்களை வெற்றிகொள்வதற்கு, நீங்கள் எந்த தடைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்பது ஆன்மாவிற்கு தெரிந்து இருக்கிறது. இவை மட்டுமல்லாமல் மேலும் பல விஷயங்களை, உங்கள் தூல உடல் உறங்கும் போது, தேவலோக

பள்ளிகளில் நீங்களும் உங்கள் ஆசிரியர்களும் ஆய்வு செய்கிறீர்கள். நீங்கள் உங்களை பிரம்மச்சரியத்தில் அதிக முழுமையாக நிலைநிறுத்திக் கொண்டால், உங்களுக்கு சமயத்தில் அதிக நாட்டம் ஏற்பட்டு, உலகை அதிக நேர்மறையான மனநிலையுடன் எதிர்கொள்ள முடிகிறது.

சாரீரிக மானசிக ராகாத்மக ஆஹார

शारीरिक मानसिक रागात्मक आहार



உடல், மனம் மற்றும் மனவெழுச்சியின் உணவுமுறைகள்

ஒருவர் சுத்தமான உணவை உண்டால், அவரது குணம் சுத்தமாக இருக்கும். குணம் சுத்தமாக இருக்கும் போது, அவரது நினைவாற்றல் உறுதி பெறுகிறது. நினைவாற்றல் உறுதியாக இருக்கும் போது, அவர் அனைத்து பந்தங்களில் இருந்து விடுதலை பெறுகிறார்.

சாம வேதம், சாந்தோக்ய உபநிடதம், 7.26.2. உபரா, ப. 489.


MOBILE SHOP
2 Kg
RATE

இந்திய சாலையோரம் இருக்கும் ஒரு கடையில், ஒரு எளிமையான வண்டியில் எப்பொழுதும் போல ஒரு வியாபாரி சுத்தமான பழங்கள், காய்கள் மற்றும் தானியங்களை விற்றுக் கொண்டிருக்கிறார். அவரிடம் பதப்படுத்தப்பட்ட அல்லது பெட்டியில் அடைக்கப்பட்ட பொருட்கள் இல்லை, ஆனால் சுத்தமான, ஆரோக்கியமான உணவு வகைகள் மட்டுமே உள்ளன. அவர் இவற்றை அருகில் இருக்கும் வயல்களை பராமரிக்கும் விவசாயிகளிடம் இருந்து ஒரே நாளில் பெறுகிறார்.

திங்கட்கிழமை

பாடம் 71

உங்கள் உணவுமுறையை முழுமையாக

ஆய்வு செய்தல்

நாம் வாழும் ஒவ்வொரு நாளும் சுகம் மற்றும் துக்கம், மகிழ்ச்சி மற்றும் வேதனை, பிரகாசம் மற்றும் இருளால் பாதிக்கப்படாது, தனது வலிமையை தேடிக்கொள்ளும் சமநிலையான வாழ்க்கையை வாழ முயற்சி செய்கிறோம். ஆனால் இந்த ஆழ்நிலை விழிப்புணர்வைப் பெறுவதற்கு, நாம் தொடக்கத்தில் இருந்து தொடங்க வேண்டும், மற்றும் இந்த வாரம் நாம் உடல், மனம் மற்றும் மனவெழுச்சியின் உணவுமுறையைப் பற்றி தெரிந்துகொள்ளலாம். இயற்கை என்பது *குணங்கள்* என்று அழைக்கப்படும் மூன்று வகைகள், பண்புகள் அல்லது வெளிப்பாட்டு கோட்பாடுகளை உள்ளடக்கிய வாழ்க்கையின் முதன்மையான சக்தி என்று *ஆயுர்வேதத்தின்* பழங்கால அறிவியல் தெரிவிக்கிறது. மூன்று குணங்களில் *சத்வ (சாத்விகம்)* "இருப்பையும்," *ரஜோ (இராஜசம்)* "சுறுசுறுப்பையும்," *தமோ (தாமசம்)* "இருளையும்" குறிப்பிடுகிறது. *சத்வம்* என்பது சாந்தமான சக்தி, *ரஜோ* என்பது விறுவிறுப்பான சக்தி மற்றும் *தமோ* என்பது மந்தமான சக்தி ஆகும். அமைதியாக, புனிதமாக, ஒளிபுகும் தன்மையுடன், வியாபிக்கும் தன்மையுடன் இருப்பது *சத்வத்தின்* இயல்பு ஆகும். இயக்கம், செயல், உணர்ச்சி ஆகியவை *ரஜோ* குணத்தின் இயல்பு ஆகும். சடத்துவம், மந்தம், இறுக்கம், தடை மற்றும் கலைப்பு ஆகியவை *தமோ* குணத்தின் இயல்பு ஆகும். இறங்குமுகமாக, காந்தத்தன்மை மற்றும் உள்ளுணர்வு பண்புடன் இருப்பது *தமோ* குணத்தின் சுபாவம் ஆகும். விரிவடைந்துக் கொண்டு, ஆன்மீகக்காந்தத் தன்மை மற்றும் அறிவுணர்வு பண்புடன் இருப்பது *ரஜோ* சுபாவம் ஆகும். ஏறுமுகமாக, ஆன்மீக மற்றும் மெய்ஞ்ஞானப் பண்புடன் இருப்பது *சத்வம்* அல்லது *சாத்விக* சுபாவம் ஆகும். இந்த மூன்று குணங்களும் தனித்து இல்லாமல், ஒற்றையாக முக்கியமானதாக இருக்கும் உயிர்சக்தியின் பல்வேறு பரிணாமங்கள் அல்லது அடுக்கு நிகழ்வுகளாக இருக்கின்றன. ¶இந்த சக்தியின் குணங்கள் நாம் உண்ணும் உணவில் ஒன்றாக அல்லது அதிகமாக இருந்து, அதன் அமைப்புக்கு ஏற்ப நமது மனம், உடல் மற்றும் மனவெழுச்சியை பாதிக்கிறது. அதனால் நாம்

உண்ணும் உணவு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக தாரணை நிறைந்த வாழ்விற்கு *சாத்விக* உணவு உகந்ததாக தரும். ¶அதிக கொழுப்புச்சத்துள்ள இறைச்சிகள் மற்றும் இயற்கை பண்புகள் சிறிது இல்லாமல் கெட்டுப்போன, பதப்படுத்தப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட உணவுகள் *தமோ* உணவுகளில் அடங்கும். *தமோ* உணவுகள் மனதை மந்தமாக்கி, வழக்கமாக உடலின் அடிப்படை காந்த சக்திகள் மற்றும் உள்ளுணர்வு அடிமனதை உருவாக்குகின்றன. *தமோ* உணவுகள் வலுவான காந்த சக்தியுடன் சூட்சும உடலையும் வியாபிக்கிறது. ¶*ரஜோ* வகை உணவுகளில் சூடான அல்லது காரமான உணவுகள், சுவையூட்டும் பொருட்கள் மற்றும் ஊக்கிகள் அடங்கும். அவை தூல மற்றும் சூட்சும உடல்களின் காந்த வெப்பத்தை அதிகரித்து, உடல் மற்றும் மனதின் செயல்பாட்டை அதிகரிக்கின்றன. சாத்விக உணவில் நிலத்திற்கு மேல் வளரும் ஆரோக்கியமான தானியங்கள், பயறுகள், சுத்தமான பழங்கள் மற்றும் காய்கறிகள் அடங்கும். இந்த உணவுகள் சூட்சும மற்றும் தூல உடல்களை சுத்திகரித்து, இருப்பு முழுவதும் ஆன்மீக, மெய்ஞ்ஞான ஓட்டம் நிரம்பி புத்துணர்வை அளிக்க அனுமதி வழங்குகிறது. ¶*யோக* பாதையில் விரிவாக்கம் பெறுபவர்கள், *சாத்விக* குணத்தை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களின் பாதை அமைதி மற்றும் சமாதானம் கலந்து இருக்கிறது. *ரஜோ* குணம் நிலை கொள்ளாமல் இருக்கும் மற்றும் இது உடல் மற்றும் அறிவு சார்ந்த நடவடிக்கைகளில் வெளிப்படுகிறது. இந்த குணம் தேசியவாதம், விளையாட்டுக்கள் மற்றும் தொழில்முறை போட்டி, சட்ட ஒழுங்கு மற்றும் ஆயுத படைகள் மற்றும் உக்கிரமான நடவடிக்கைகளின் மற்ற வகை பண்புகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. *தமோ* குணம் மந்தமாக, அச்சத்துடன் பருமனாக இருக்கிறது. உள்ளுணர்வு மனம் தனது எதிர்மறை நிலையில் இருக்கும் போது சோம்பல், வழக்கமான வாழ்க்கை, உடல் மற்றும் மனதில் செயலற்ற தன்மைக்கு வழி வகுக்கிறது. நடப்பு சூழலில், *ரஜோ* குணத்தை வளர்ப்பதன் மூலம் *தமோ* குணம் மீது வெற்றி கிடைக்கிறது, மற்றும் சுத்தமான *சாத்விக* குணத்தை வளர்ப்பதன் மூலம் *ரஜோ* குணத்தின் தொடர் விளைவுகளை கடக்க முடிகிறது. நம்மிடம் இருக்கும் பல பண்புகளில் ஒரு சமநிலையை பராமரிப்பது, குறிப்பாக முடிந்தவரை அதிக அளவு *ரஜோ* மற்றும் *சாத்விக* குணங்களின் வெளிப்பாட்டை அடைவது முக்கியம் ஆகும். ¶நீங்கள் உணவு பட்டியலை கவனமாக ஆய்வு செய்யும் போது, நீங்கள் உண்பதற்கு எது சரியாக இருக்கும் என்று உங்களுக்கு அறிவுறுத்த உங்களின் உட்புற வழிகாட்டலுக்கு அனுமதி வழங்குவதை நீங்கள் கவனித்து இருக்கக்கூடும். உணர்வுள்ள மனதின் ஆசை ஒரு வகை உணவை விரும்பும், மற்றும் துணை மெய்ஞ்ஞானம் உங்களுக்கு வேறொரு வகை சரியாக இருக்கும் உணர்த்தக்கூடும். உங்கள் உணவில் ஒரு ஆக்கப்பூர்வமான சமநிலையை அனுமதிக்கும் முடிவை நீங்கள் எடுத்தாக வேண்டும். இது உட்புற

மனஉறுதியை விழிப்படைய செய்கிறது, மற்றும் இந்த உட்புற வலிமை வேறுபடுத்திப் பார்க்கும் திறமையை வழங்குகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 72

மிதமாக இருப்பதே

முக்கியம்

நான் நமது உணவை "தியானம் செய்வதற்கான ஊட்டச்சத்து" என்று அழைக்கிறேன். நாம் உண்ணும் உணவை கவனிக்கிறோம். நாம் உண்ணும் ஒவ்வொரு உணவு வகையும், நரம்பு அமைப்பின் ஏதாவது ஒரு பகுதியின் மீது நமக்கு கவனத்தை வழங்குகிறது. பருமனாக உணவை சாப்பிடும் போது, நாம் நரம்பியல் அமைப்பின் பருமனான பகுதி மீது கவனத்தை பெறுகிறோம், மற்றும் நரம்பியல் அமைப்பின் சுத்தமான பகுதிகள் மீது குறைவான கவனத்தை பெறுகிறோம். சூரிய ஒளியை கிரகித்து நிலத்திற்கு மேலே வளரும் பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற சுத்தமான உணவுகளை நாம் சாப்பிடும் போது, நாம் நரம்பியல் அமைப்பின் சுத்தமான பகுதிகள் மீது கவனத்தை பெறுகிறோம். நாம் நரம்பியல் அமைப்பின் பருமனான பகுதிகள் மீது கவனத்தை பெறும் போது, காலப்போக்கில் தூல உடலின் உயிரணுக்கள் இந்த பண்பை பிரதிபலித்து, உடலுக்கு பருமனான தோற்றத்தை தருகிறது. முக்கியமாக சூட்சுமமான ஆன்மீக நரம்பியல் அமைப்பு மற்றும் மெய்ஞ்ஞான நரம்பியல் அமைப்பை குறிப்பிடும் உட்புற நரம்பியல் அமைப்பின் சுத்தமான பகுதிகள் மீது கவனத்தை பெறும் போது, இதற்கு உடலின் உயிரணுக்களும் மதிப்பு அளிப்பதால், நாம் அதிக சுத்தமான தோற்றத்தை பெறுகிறோம். உட்புறமாக, சுத்தமாக மற்றும் பேரானந்தத்தில் இருக்கும் நரம்பியல் அமைப்பின் உணர்நரம்பு பகுதிகள் வழியாக சாட்சி பயணம் செய்ய அனுமதிப்பதால், தியானம் மற்றும் *ஹட* யோகபயிற்சிகளுக்கு உகந்ததாக இருக்கும் *ஆயுர்வேத* உணவு, தூல உடல் சுத்தமடைவதற்கும் உதவியாக இருக்கிறது. ¶ஆனால் நமது இயல்பு முழுவதும் நமது வயிற்றில் மடிந்து இருந்து, நமது அடியுணர்வு மற்றும் அதன் சூட்சும உடல் தொடர்ந்து உண்பதில் ஈடுபடாமல் இருக்க, நாம் உணவு பற்றிய சிந்தனை மீது அதிக முக்கியத்துவம் தர விரும்புவதில்லை. இதற்கு அனுமதி வழங்கும் போது நாம் ஒரு விசித்திரமான உணர்வில் கட்டுண்டு இருப்பதால், நமது உணவுமுறை மட்டும் பாதிக்கப்படாமல், நம்மை சுற்றி இருப்பவர்களுக்கும் இது ஒரு தேவையில்லாத தொல்லையாக இருக்கும். ¶எந்த உணவை வாங்கி சாப்பிடவேண்டும் என்பதை முடிவு செய்யும் போது, உங்களது தற்போதைய தூல உடலுக்கு எது சிறந்தது என்பதை அறிந்த, உங்கள்

இயலுணர்வின் கருத்தை கேளுங்கள். நீங்கள் ஈடுபட்டிருக்கும் நடவடிக்கை மற்றும் பொறுப்புக்களுக்கு பொருத்தமில்லாமல், உங்கள் சக்திகள் அதிக *சாத்விகமாக*, அதிக நுணுக்கமான தூய்மையுடன் இருக்க வாய்ப்புள்ளது. இத்தகைய நிலையில், சமநிலையை பெறுவதற்கு நீங்கள் சிறிது *ரஜோ* குணமுள்ள உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். இதைப்போலவே, அதிக காரமான உணவுகள் அல்லது சர்க்கரை அதிகமாக உள்ள உணவுகளை உண்பதன் மூலம், உங்களுக்கு அவ்வப்போது தெவிட்டுவதற்கு வாய்ப்புள்ளது. அப்போது உங்கள் தூல மற்றும் சூட்சும உடல்களின் அதிர்வு விகிதங்களை உயர்த்துவதற்கு, உங்கள் உணவில் அதிக பழங்களை சேர்க்க வேண்டியிருக்கும். நீங்கள் அதிக *இராஜச* அம்சத்துடன் இருப்பதாக உங்கள் உட்புற உணர்வு தெரிவித்தால், குறைவான அதிர்வு விகிதங்களுடன் இருக்கும் *தாமச* பண்புள்ள உணவுகள் சாப்பிடுவதை தவிர்த்திடுங்கள். நிலத்திற்கு மேலே இயல்பாக வளரும் உணவுகளை அதிகமாக சாப்பிடுங்கள். ¶இதைத்தவிர மனவெழுச்சி உணவுமுறையும் உள்ளது. மனவெழுச்சி என்பது மனதின் நிலை அல்லது அதன் பண்பை குறிப்பிடலாம். நமக்கு தூல உடல் இருக்கும் வரையில் நம்முடன் மனவெழுச்சிகள் இருந்துக்கொண்டு இருக்கும், ஆனால் மனவெழுச்சி மற்றும் உணர்ச்சிவசப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாம் நமது உணர்வுப்பூர்வமான செயல்களை சமன் செய்யவேண்டும். நமது பொழுதுபோக்கு, நமது கலாச்சார நாட்டங்கள், நமது சமூக நடவடிக்கைகள் ஆகியவை நமது மற்ற நடவடிக்கைகளுடன் சமநிலை பெற்று கலந்து இருக்க வேண்டும். உங்களது உடல் சார்ந்த உணவுமுறையுடன், மனவெழுச்சி உணவுமுறையையும் மாதம் ஒரு முறை திட்டமிடுவது ஒரு நல்ல யோசனையாக இருக்கும். நீங்கள் எந்த இசையை கேட்க விரும்புகிறீர்கள், எந்த நாடகங்கள், திரைப்படங்கள் அல்லது கச்சேரிகளில் பங்குபெற விரும்புகிறீர்கள் என்பதை முன்பே முடிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் எந்த புத்தகத்தை வாசிக்க விரும்புகிறீர்கள், நீங்கள் யாருடன் இருக்க விரும்புகிறீர்கள், நீங்கள் செய்ய விரும்பும் பயணங்கள் பற்றி சிந்தியுங்கள். உங்கள் மனவெழுச்சிக்கு எந்த உணவுமுறை பயனுள்ளதாக இருக்கும் என்பதை உணர்ந்து ஒரு பட்டியலை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஆனால் எந்த தரப்பிலும் சாராமல் சமநிலையுடன் முன்னேறுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஒரு சமமான மனவெழுச்சி பண்பை பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

புதன்கிழமை

பாடம் 73

உங்கள் மனதிற்கு

உகந்த உணவுமுறையை தேர்ந்தெடுத்தல்

உங்கள் மனதிற்கு உகந்த உணவுமுறையைப் பற்றி எப்போதாவது சிந்தித்தது உண்டா? நமது சிந்தனை மீது, நமது உடல் சார்ந்த உணவுமுறை மற்றும் நமது மனவெழுச்சி உணவுமுறை தாக்கத்தை ஏற்படுத்துவதால், அவை மனதிற்கான திட்டங்களாக விளங்குகின்றன. இப்போது நாம் அறிவுணர்வு செய்முறைகளை கவனத்தில் கொள்வோம். ஒரு நாளில் எத்தனை தகவல்கள், எத்தனை யதார்த்தங்களை உள்ளீடு செய்வது தேவையானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்கும்? ஒரு அன்பர் தனது மனதின் கிரகித்துக் கொள்ளும் செய்முறை மூலம், எதை தனது அங்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை பிரித்து பார்த்து தேர்ந்தெடுத்து, தனது புத்தக வாசிப்பை திட்டமிடுவது ஒரு நல்ல சிந்தனையாக இருக்கும். நமது மனதில் பதியவேண்டும் என்று நாம் விரும்பும் அனைத்தையும் கிரகித்துக் கொள்வதற்கு நம்மிடம் திறமை மற்றும் நேரம் இருக்கிறதா என்பதை நாம் மிகவும் நுணுக்கமாக தெரிந்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, பத்திரிக்கையில் விரைவாக ஒரு கட்டுரையை படிப்பதால், உங்கள் மனம் மற்றும் மனவெழுச்சிகள் தூண்டப்படலாம். அதை முறையாக கிரகிக்க வில்லை என்றால், அது நாள் முழுவதும் உங்கள் அமைதியை கெடுக்கக்கூடும். புத்தியின் லோகத்தில், "வயிறு நிரம்பி இருக்கும் போது, சாப்பிடவேண்டாம்," என்ற பகுத்தறிவின் விதியும் பயன்படுத்தப்படுகிறது. ¶நீங்கள் ஒரு தத்துவ புத்தகத்தை படிக்கலாம். உங்களால் அதில் இருக்கும் விஷயங்களை கிரகிக்க முடிந்தால், அதன் மூலம் நல்ல பலன்களை பெறலாம். ஆனால் பலர் கிரகிக்க முடியாமல் தவிக்கிறார்கள். அவர்கள் பல விஷயங்களை படிக்கிறார்கள் மற்றும் மனதின் சன்னல் வழியாக வந்த விஷயங்களில், அவர்களால் ஒரு சிறிய பகுதியை மட்டுமே கிரகிக்க முடிகிறது. ஒரு விஷயம் உங்களின் அங்கமாக முழுமையாக மாறும் போது, மேலும் சில விஷயங்களை பெறுவதற்கு உங்களிடம் ஏக்கம் மற்றும் இடம் இருக்கும் என்பதால், விஷயத்தை கிரகிப்பது என்பது வேறு, அது உங்கள் மயமாக மாறுவது என்பது வேறு ஆகும். ¶பலர் சொற்பொழிவை கேட்கவந்ததும், தங்களை முழுமையாக ஈடுப்படுத்திக் கொள்ளாமல், ஆசிரியர் மற்றும் அறையில் இருக்கும் மற்றவர்கள் உருவாக்கும் சலசலப்பின் மூலமாக பயனடைகிறார்கள். அவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாததால், சொற்பொழிவு மனப்பூர்வமாக கிரகிக்கப்படாமல், அடியுணர்வு வாயிலாக கிரகிக்கப்படுகிறது. முந்தைய சொற்பொழிவுகள் மூலம் தான் பெற்ற தகவல்களை தொடர்ந்து கிரகித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு, இது ஒரு நல்ல செயல்முறையாக இருக்கும். ஒரு ஆன்மீக புத்தகத்தை திறந்து, ஏதாவது ஒரு பக்கத்தில் இருக்கும் ஒரு வாக்கியத்தின் மீது கவனம் செலுத்துவது, மனதின் கிரகிக்கும் சக்தியை சீர் செய்ய இன்னொரு நல்ல பயிற்சியாக இருக்கும். பெரும்பாலும் உங்களுக்கு தற்போது தொடர்புடைய கருத்துக்களை, அந்த வாக்கியம் வலியுறுத்துகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். ¶நீங்கள் ஒரு கருத்தரங்கில் பங்குபெறும் போது, மக்கள் தொடர்புகள் மூலம்

பயன்பெறுவதைப் போல, உணரக்கூடிய மனதின் பகுதி மற்றும் உணர்வுள்ள மற்றும் அடிமனதின் பகுதிகளுக்கு இடையே மனிதனுக்குள் அமைந்துள்ள தொடர்பு மூலமாகவும் நீங்கள் கற்றுக் கொள்ளலாம். உங்கள் ஆளுமைக்கு உங்கள் உட்புற மனது கற்பிக்கும் அளவிற்கு நீங்கள் விழிப்படையும் போது, நீங்கள் உங்கள் உயிர்சக்தியின் "உட்புற பல்கலைக் கழகத்துடன்" உங்களை ஈடுபடுத்திக் கொள்கிறீர்கள். ஆனால் இந்நிலை, உங்கள் தூல மற்றும் மனவெழுச்சி உடல்கள் சற்று உயர்ந்த அதிர்வலையில் செயல்படத் தொடங்கி, அவை இரண்டையும் சமன் செய்யும் வரை அடையப்படுவது இல்லை. ¶உங்கள் ஆழ்நிலை சிந்தனை நிறைந்த வாழ்முறையுடன் ஒரு பொழுதுபோக்கு அல்லது கைத்தொழிலை சேர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அடிமனதை மாற்றி அமைப்பதற்கு உங்கள் கைகளுடன் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு, ஒரு தூல பொருளை எடுத்து அதை ஒரு மாறுபட்ட, புதிய மற்றும் அழகான பொருளாக மாற்றுவது மிகவும் முக்கியம் ஆகும். அது ஒரு குறியீட்டாகவும் இருக்கிறது. நீங்கள் தூல உலகில் ஒன்றை மாற்றி அமைக்கிறீர்கள், மற்றும் அதன் மூலம் ஒரு தூல அமைப்பின் தோற்றத்தை மாற்றி அமைக்க உங்களுக்கு நீங்கள் கற்பிப்பதால், உங்களது அடிமனதில் இருக்கும் அதிக சூட்சுமமான மனம் மற்றும் மனவெழுச்சி அமைப்புக்களை மாற்றுவது எளிதாகிறது. தூல பொருள் அல்லது மனம் சார்ந்த பொருளில் ஒரு பயனுள்ள மாற்றத்தை உருவாக்க கடும் உழைப்பு, மன ஒருமுகப்பாடு, திட்டமிட்ட முயற்சி தேவைப்படுகிறது. இந்த இருவகை சாதனைகளுக்கும் சக்தி, மனஉறுதி மற்றும் ஒருமுகப்பட்ட விழிப்புணர்வு தேவைப்படுகிறது.

வியாழக்கிழமை

பாடம் 74

சமநிலை மற்றும்

பாகுபாடு

உங்கள் வாழ்க்கையை ஒரு நிமிடத்திற்கு பாரபட்சமின்றி கவனித்து, உங்களது தூல, மனவெழுச்சி, மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த பண்புகளுக்கு இடையே இருக்கும் செயல்பாட்டு சமநிலையின் அளவை முடிவு செய்யுங்கள். அதிக "உணவை" உட்கொள்வதாக உங்களுக்குத் தோன்றினால், இந்த சமநிலையை மாற்றி அமைக்கத் தொடங்கும் சக்தி உங்களிடம் இருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் உணவின் கோட்பாட்டை பயன்படுத்துங்கள். நமக்குள் உட்புகுத்தும் ஒவ்வொரு அனுபவமும், தனக்கென்று ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நமது மனம் மற்றும் உடலுக்குள் புகுத்தும் அனைத்தும் எளிதாகவும் இணக்கத்துடனும்

கிரகித்துக்கொள்ளப்பட்டு நமக்குள் ஒன்றுவிடுவதற்கு, *தமோ* மற்றும் *ரஜோ* மற்றும் *சாத்விக* பழக்கங்கள் பற்றிய நமது உட்புற சமநிலையை ஆய்வு செய்யும் போது, நாம் வேறுபடுத்தி பார்க்கும் சக்தியை பயன்படுத்த வேண்டும். இம்முறையில் வாழ்க்கை அதிக இனிமையாக மாறுகிறது, மற்றும் ஆன்மீக சித்தத்திடம் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் சக்தியை ஒப்படைத்து இருப்பதால், நமது சக்திகளின் மீது கட்டுப்பாட்டை பெறுகிறோம். ஆனால் தீர்மானிக்கும் சக்தி கொண்டு தொடர்ந்து பயன்படுத்தப்படவில்லை என்றால், எந்த உணவிற்கு மதிப்பு இருப்பதில்லை. ¶நாம் அதிகமான *தமோ* மற்றும் *ரஜோ* பண்புடன் வாழும் போது, தானாக உருவாக்கப்பட்ட தேவையற்ற ஈடுபாடுகளின் தொடர்ச்சியால், நமது வாழ்க்கை அதிக சிக்கலாகி விடுகிறது. ஒரு பயிற்சியாக *சாத்விக* விழிப்புணர்வுக்குள் நுழைந்து, தினசரி நடவடிக்கைகளின் வேகத்தை குறைப்பது முக்கியம் ஆகும். நாம் *சாத்விக* குணத்தை பயன்படுத்தி சமநிலை பெற்று பக்குவப்படுத்தப்படவில்லை என்றால் உணர்வுடன் இருக்கும் தூல லோகத்தில் வாழ்க்கை சோர்வூட்டி அழுத்தத்துடன் இருக்கும். *சாத்விக* நடவடிக்கை அதிகமாக இருந்தால், மனித ரூபத்தில் இருக்கும் ஆன்மீக சக்தியின் நடவடிக்கையும் அதிகமாக இருக்கிறது. ¶இப்போது உட்புறமாக கவனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சியை பார்க்கலாம். மூளைக்கு ஓய்வு அளியுங்கள். உங்கள் உடல் தசைகளுக்கு ஓய்வு அளியுங்கள். கண்களுக்கு ஓய்வு அளித்து மூடிக்கொள்ளுங்கள். உங்கள் மனக்கண்ணுக்குள் ஒரு உணவுப்பபட்டியல் மூன்று பகுதிகளாக இருப்பதை கற்பனை செய்துக் கொள்ளுங்கள். பட்டியலில் இடது புறமாக, முன்பே தயார் செய்யப்பட்ட மற்றும் சமைக்கப்பட்ட *தமோ* குணமுள்ள உணவுகள் இருக்கின்றன. இவை உள்ளுணர்வு சார்ந்து, பருமனாக மற்றும் பெரும்பாலும் செரிக்க முடியாமல் இருக்கின்றன. இந்த உணவுகள் உள்ளுணர்வை மட்டும் சார்ந்து இருப்பவருக்கு திருப்தி அளிக்கும். மத்தியில் காரமான பொருட்கள், பூண்டு மற்றும் வெங்காயம் போன்ற *ரஜோ* குணமுள்ள உணவுகள் இருக்கின்றன. இவை உடலுக்கு ஆற்றல் மற்றும் தூண்டுதலை வழங்குகின்றன. பட்டியலின் வலது புறத்தில் பழங்கள், காய்கறிகள், தானியங்கள் மற்றும் பருப்புகளைப் போன்ற *சாத்விக* குணமுள்ள உணவுகள் இருக்கின்றன. இவை உடலுக்கு அமைதி மற்றும் சமநிலையை வழங்கி, ஒரு உயர்ந்த உணர்வுடன் ஆன்மீக அதிர்வை தக்க வைக்க உடலை தயார் செய்கிறது. இந்த பட்டியலில் இருக்கும் மூன்று பகுதிகளை ஆய்வு செய்து, நமது சிந்தனை உட்புறத்தில் இருந்து எங்கே வழிநடத்தப்படுகிறது என்று பார்க்கலாம். ¶இனி நாம் நமது மனவெழுச்சி உணவை குறிப்பிடும் இன்னொரு பட்டியலை கற்பனை செய்துக் கொள்ளலாம். இடது புறத்தில் உள்ளுணர்வு, சிற்றின்பங்கள் மற்றும் பொழுதுபோக்கின் அதிக முரட்டுத்தனமான அம்சங்கள் இருக்கின்றன. குடும்பம், நண்பர்கள் மற்றும் சகாக்களுக்கு இடையே அன்றாடம் நடைபெறும் மனவெழுச்சி அனுபவங்கள் மத்தியில் இருக்கின்றன. உயர்வான கலாச்சார மற்றும் கலைநயம் பொருந்திய

வெளிப்பாடுகள் வலது புறத்தில் இருக்கின்றன. உங்களுக்கு பிடித்தமான பட்டியலை நிரப்பி, உங்கள் சிந்தனை உங்களை இங்கே வழிநடத்தி செல்கிறது என்பதை கவனியுங்கள். ¶மூன்று பிரிவுகளுடன் இன்னொரு பட்டியலை கற்பனை செய்யுங்கள். நாவல்கள், கதைகள், கட்டுரைகள் அல்லது ஹாலிவுட் தொடர்பான அறிக்கைகள் என்று நம்மை *தமோ* குணம் மற்றும் உள்ளுணர்வு இயல்பை நோக்கி அழைத்து செல்லும் புத்தகங்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள் அல்லது இணையத்தளங்கள் இடது புறத்தில் இருக்கின்றன. அறிவுசார் ஆய்வுகள், தற்போது பிரபலமான பொருட்கள் மற்றும் செய்திகள் மத்தியில் இருக்கின்றன. இவை நமது *ரஜோ* மனதை தூண்டுவதால், பகுத்தறிவை கவனமாக பயன்படுத்த வேண்டும். சிலசமயங்களில் இந்த புத்தக வாசிப்புக்கள், உங்களது உணர்வுள்ள மனதின் இருப்பில் இருக்கும் முக்கிய பகுதிகள் பற்றி தேவையான புரிந்துணர்வு மற்றும் அறிவுசார் தெளிவையும் வழங்கக்கூடும். ¶*சாத்விக* கட்டுரைகள் மற்றும் ஆய்வுகள், கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளை சேர்ந்த புனிதமான நூல்கள், சாக்ரடீஸ் அல்லது எமர்சனின் தலைசிறந்த தத்துவ சிந்தனைகள், பிளாட்டோநஸ் அல்லது கண்ட் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள், லாவோ-சூ மற்றும் கன்பூசியஸ், திருவள்ளுவர் அல்லது உபநிடதங்கள், ஆதி சங்கரர், ராமகிருஷ்ண பரமஹம்சர் அல்லது கிப்ரான் வழங்கிய முதுமொழிகள் ஆகியவை வலது புறத்தில் இருக்கின்றன. உங்களுக்கு பிடித்தமான பட்டியலை உருவாக்கிக்கொண்டு, இந்த பட்டியலை உங்களது உட்புற உணர்வில் இருந்து படிப்பதன் மூலம், உங்கள் மனதின் உணவுமுறையை சமன் செய்து கொள்ளுங்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 75

உணவு மற்றும்

உணர்வு

உணவு உண்பதற்கு முன்பாக சுதந்திரமான மனம் மற்றும் வாழ்க்கை மீது ஒரு தெளிவான, அமைதியான மற்றும் தளர்வான மனநிலையுடன் இருப்பது விவேகம் ஆகும். இதன் காரணமாகவே, ஆன்மீக பாதையில் இருப்பவர்கள் வழக்கமாக, உண்பதற்கு முன்பாக ஒரு *மந்திரம்* சொல்லுவார்கள் அல்லது பிரார்த்தனை செய்வார்கள். "ஓம்" என்ற மந்திரத்தை சொல்வது ஒரு எளிமையான பழக்கமாக இருக்கும். இது உட்புற உடல்கள் மற்றும் வெளிப்புற உடல்களுக்கு இடையே இணக்கத்தை ஏற்படுத்தி, சாட்சியை சிக்கலான பகுதிகளில் இருந்து விடுவிக்கப்பட்டது. நீங்கள் இருக்கும் இடத்தில், "ஓம்" என்று உரக்க உச்சரிக்க முடியாவிட்டால், மனதிற்குள் சொல்லிக்கொள்ளுங்கள்.

உணவை உண்ண தொடங்குவதற்கு முன்பாக, இவ்வாறு நீங்கள் உங்களை மீண்டும் மையப்படுத்திக் கொள்வதற்கு, சில வினாடிகளை ஒதுக்கிக்கொள்ளுங்கள். உங்கள் உணவு உங்களுக்கு மிகவும் நல்ல பலன்கள் தருவதை உங்களால் உணரமுடியும். பாரம்பரிய இந்து *ஆயுர்வேதத்தில்* உணவு உண்பது தொடர்பான பல வழிகாட்டல்கள் உள்ளன. உண்பதற்கு முன்பாக ஒரு பிரத்யேக பிரார்த்தனை மூலம் நன்றி செலுத்துவது; ஒரு நிம்மதியான சூழலில், எப்போதும் பதட்டம் இல்லாமல், கீழே அமர்ந்து மற்றும் பசி எடுத்தால் மட்டுமே உண்பது; மிகவும் குளிர்ச்சியான உணவு அல்லது பானங்களை தவிர்ப்பது; உணவை மெல்லும் போது பேசாமல் இருப்பது; மிதமான வேகத்தில் உண்பது; உணவுடன் வெதுவெதுப்பான நீரை சிறிது சிறிதாக குடிப்பது; வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சுத்தமாக சமைத்த உணவை உண்பது; பச்சை காய்கறிகளை குறைப்பது; அரிசி மாவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரையை தவிர்ப்பது; சமையலில் தேன் பயன்படுத்தாமல் இருப்பது; உணவுடன் சேர்க்காமல் பாலை தனியாக குடிப்பது; எல்லா உணவுகளிலும் புரதம் மற்றும் கார்போஹைட்ரேட் சமநிலையை சேர்ப்பது; நெய் அல்லது ஆலிவ் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தி சமைப்பது; தினமும் குறைந்தபட்சம் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து உண்ணும் போது அறுசுவை (துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, மற்றும் உவர்ப்பு) உணவை சேர்த்துக் கொள்வது; செரிமானத்திற்கு உதவியாக மூன்றில் ஒரு பங்கு முதல் நான்கில் ஒரு பங்கு வயிற்றை காலியாக வைப்பது, அதிகம் சாப்பிடாமல் இருப்பது; மற்றும் உணவு அருந்திய பிறகு சில நிமிடங்கள் அமைதியாக உட்காருவது ஆகிய விதிகள் மிகவும் முக்கியமானதாக எங்களுக்கு தோன்றியது. நான் இதனோடு இஞ்சியை ஒரு மருந்தாக சேர்த்துக்கொள்வேன். பச்சை இஞ்சி உங்கள் வயிற்றுக்கோளாறை சரி செய்து, தலைவலியில் இருந்து விடுதலை வழங்கி, பதட்டத்தில் இருந்தால் தூங்குவதற்கு உதவி செய்து, குறிப்பாக பயணம் செய்யும் போது செரிமானத்திற்கு உதவியாக இருக்கும் *அக்னியை* வலுவாக வைத்திருக்கிறது என்று நமது ஆயுர்வேத மருத்துவர் நமக்கு கற்றுத்தந்துள்ளார் மற்றும் இதை அனுபவமும் நிரூபிக்கிறது. பச்சை இஞ்சியை இரண்டு அங்குலங்கள் நீளத்திற்கு சீவி, அந்த மசியலை உங்கள் கையில் வைத்து, வெதுவெதுப்பான தண்ணீரை சிறிது ஊற்றி, அதன் சாரை ஒரு கிண்ணத்தில் பிழியுங்கள். இதை மூன்று முறை தொடரவும். இந்த சாரை உணவிற்கு பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் முன்பாக குடிக்கவும். தினமும் குறைந்தபட்சம் எட்டு தம்பளர் தண்ணீர் குடிப்பது மிகவும் முக்கியம் ஆகும். போதுமான தண்ணீரை குடிக்கவில்லை என்றால், நீரிழப்பு ஏற்பட்டு பல வழக்கமான நோய்களுக்கு வழிவகுக்கிறது. ¶பின்வரும் விதியை நமது கவனத்தில் வைத்திருப்போம். நம்மால் கிரகித்து, தன்மயமாக்கிக் கொள்ள முடியாமல், நமது உயர்ந்த உணர்வை உருவாக்க பயன்படுத்த முடியாத எதையும் நமது உடல், மனவெழுச்சி அல்லது மனம் சார்ந்த இருப்பில் வைக்க வேண்டாம். ஒவ்வொரு நொடியும்

பகுத்து பார்க்கலாம். ஒவ்வொரு நிமிடமும் விழிப்புணர்வுடன் இருக்கட்டும். ஒவ்வொரு மணி நேரமும் நிறைவேற்றத்துடன் இருக்கட்டும். ஒவ்வொரு நாளும் நல்லாசிகளுடனும் ஒவ்வொரு வாரமும் மகிழ்ச்சிகரமாக இருக்கட்டும். பிறகு ஒரு மாதம் கழித்து, மற்றவர்கள் பின்பற்ற நீங்கள் உருவாக்கிய அடித்தளத்தை கவனியுங்கள். கடந்த காலம் கனவாக மறையட்டும். "தற்பொழுதில்" அனுபவத்தை மட்டுமே புரிந்துக் கொள்ள வேண்டும். நமது பகுத்தறியும் சக்தியால் வாழ்வை எளிமையாக வாழ்ந்து, மனதின் மெய்ஞ்ஞான லோகங்களில் தொடர்ந்து இயங்கத் தொடங்குவதால், நமது சமூகம், நெருக்கமானவர்கள், நாடு மற்றும் உலகிற்கு நமது தலைசிறந்த பரிசை வழங்குகிறோம். நீங்கள் நித்தியத்தில் வாழ்ந்து, பகுத்தறியும் செய்முறையால் உங்கள் வாழ்க்கை உணவின் மீது முழுமையாக கட்டுப்பாட்டை பெறும் போது, உங்கள் இருப்பு மட்டுமே ஒரு வரமாக அமையும்.

சனிக்கிழமை

பாடம் 76

தொலைக்காட்சி காணும் நேரத்தை

குறைத்தல்

இன்று எண்ணற்ற மக்களின் மனதிற்கு அதிக அளவு உணவை வழங்கும் தொலைக்காட்சி மீது கவனம் செலுத்தவில்லை என்றால், அது ஒரு நிலையான, தியான வாழ்க்கைக்கு ஒரு தடையாக மாறக்கூடும். தொலைக்காட்சியை கதை சொல்லுவதன் விரிவாக்கமாக கருதலாம். நாம் முன்பு ஓரிடத்தில் சுற்றி அமர்ந்து கதைகளை சொல்லிக்கொண்டு இருப்போம். மக்களின் மனங்களில் தனது கருத்துக்களை பதிய வைப்பதில் தேர்ச்சி பெற்று, கதை சொல்வதில் சிறந்து விளங்கும் ஒருவர், அந்த ஊரில் மிகவும் பிரபலமாக இருப்பார். தொலைக்காட்சியும் ஒரு சிறிய நாடக அரங்கத்தின் விரிவாக்கம் ஆகும், மற்றும் அது பிரபலம் அடைந்ததும், நாடு முழுவதும் இருந்த சிறிய நாடகக் குழுக்களுக்கு வேலை குறைந்து விட்டது. அது ஸ்டான்ட்-அப் காமெடியன், வோடவீல், நாடகம், ஓபரா, பாலே ஆகிய அனைத்தும் அதன் விரிவாக்கம் ஆகும், மற்றும் அவை தொலைக்காட்சி ஒரு பிரபல பொழுதுபோக்கு சாதனமாக மாறியதும் வேதனையில் மூழ்கின. உலகின் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும், மனிதர்களை உட்கார வைத்து பொழுதுபோக்கு அம்சங்களுடன் மகிழ்விக்கப்பட்டுள்ளது, மற்றும் மகிழ்விப்பவர்கள் நின்று கொண்டு அவர்களை மகிழ்விப்பார்கள். ¶தகவலை வழங்கி உலகை ஒன்று சேர்ப்பதற்கு மற்றும் வாழ்முறை, மொழி, ஆடை மற்றும் சிகை அலங்கார பாணிகள், நடக்கும் முறைகள், நிற்கும் முறைகள், மக்கள், நெறிமுறை, ஒழுக்கம்,

அரசியல் அமைப்புக்கள், சமயங்கள் மற்றும் சூழலியல் மற்றும் பாலுணர்வுப் படங்கள் பற்றிய மனநிலைகளுக்கு புதிய தரநிலைகளை அமைக்கும் கருவியாக இன்று தொலைக்காட்சி விளங்குகிறது. இந்த மாபெரும் வசதி உலகில் இருக்கும் மக்களின் சிந்தனை மற்றும் அதன் மூலம் செயல்களை ஒருங்கிணைக்கிறது. இன்று ஒரு மந்திரக்கோலின் மூலம் தூண்டப்பட்டதும், மாலை நிகழ்ச்சியை காணும் எல்லோரது மனதின் ஓட்டம் மற்றும் மனவெழுச்சி அனுபவத்தை மாற்றி அமைக்க முடிகிறது. ¶ஆக்கப்பூர்வமான சக்திகள், பாதுகாக்கும் சக்திகள், அழிக்கும் சக்திகளாக நாம் வெளியிடும் நமது *கர்மவினைகள்*, வழக்கமாக மற்றவர்கள் அல்லது மற்ற குழுக்கள் மூலமாக நம்மை வந்து சேரும் என்பது சைவர்களுக்கு தெரியும். நாம் விவசாயத்தை சார்ந்து இருந்த பழங்காலத்தைக் காட்டிலும், நமது *கர்மவினைகளை* அதிக விரைவாக அனுபவிக்கும் வசதியை தொலைகாட்சி நமக்கு வழங்கியுள்ளது. தொலைகாட்சி ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளில் செய்தி வாசிப்பாளர்கள், நடிகர்கள், நடிகைகளாக இருக்கும் "மற்றவர்கள்" நமது கடந்தகால அனுபவங்களை நமக்கு நடித்துக் காட்டுகிறார்கள் என்ற பின்யுக்தியை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உடல், மனம் அல்லது மனவெழுச்சி ரீதியாக எதுவும் நடக்காது, ஆனால் அது *பிராரப்த கர்மவினைகளில்* பதிந்து இருக்கின்றன என்பதை சைவர்கள் அறிந்து இருக்கிறார்கள். அதனால், நாம் ஒரு நேர்மறையான கண்ணோட்டத்துடன், *கர்மவினையை* சுத்தம் செய்யும் கருவியாக தொலைக்காட்சியை பார்க்கிறோம். ¶நமது அனுபவங்களை மகிழ்ச்சி மற்றும் அன்புடன், எப்போதும் மன்னிப்பை வழங்கி இரக்கமுள்ள புரிதலுடன் அனுபவிப்பதே, வாழ்க்கையின் நோக்கம் என்பதை சைவர்கள் அறிவார்கள். இதன் மூலம் இந்த பிறவியில் முறையற்ற *கிரியாமன கர்மவினைகள்* உருவாவது தடுக்கப்படுகின்றன. இதனை அதிகமாக சேகரித்து, நாம் இந்த பிறவியில் கொண்டு வராத *கர்மவினைகளுடன்* சேர்த்தால், நாம் இன்னொரு பிறவி எடுக்கிறோம், மற்றும் இந்த செய்முறை மீண்டும் தொடங்கும். தொலைக்காட்சியில் நமது அனுபவம் நமக்கு முன்பாக சித்தரிக்கப்படும் போது, அந்த அனுபவங்களை பார்த்து சிரித்து, அழுது, ஆத்திரம் அடைந்து, எதிர்செயலாற்றி அல்லது தவிர்க்கும் நமது நரம்பியல் அமைப்புடன் இணைந்து செயல்படும் போது ஆராய்ந்து, மன்னித்து மற்றும் இரக்கமுள்ள புரிதல் மூலம் நமது *பிராரப்த கர்மவினைகளை* மிகவும் விரைவாக தணிக்க முடிவதால், தொலைக்காட்சி மனிதநேயத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வரமாக இருப்பதோடு, குறிப்பாக சைவர்களின் பாராட்டையும் பெறுகிறது. ¶தொலைக்காட்சியை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்து, அது நல்ல பொழுதுபோக்காக பயனுள்ளதாக இருக்கும், அல்லது மெதுவாக வளர்ச்சி அடைந்து தீய விளைவுகளை விளைவிக்கக்கூடும். அதனால் நீங்கள் எதை பார்க்கிறீர்கள் என்பதை முழுமையாக புரிந்துக் கொண்டு, உங்கள் மனதை பாதுகாத்துக் கொள்ளுங்கள். தொலைக்காட்சி அடிமனதுடன் செயல்படுகிறது. மனதின் இந்த பகுதி தினமும் இருப்பத்தி

நான்கு மணி நேரமும் வேலை செய்தாலும், நாம் வழக்கமாக அதன் செயல்பாட்டில் கவனம் செலுத்துவது இல்லை. தொலைக்காட்சி சிறுவர்களின் அடிமனங்களின் மீது வலுவாக செயல்படுகிறது. அவர்கள் நீண்டநேரம் தொலைக்காட்சியை பார்த்து வந்தால், அவர்கள் எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்று நிகழ்ச்சி ஒளிப்பரப்பாளர்கள் நினைக்கிறார்களோ, அதைப் போலவே நினைக்க தொடங்கி விடுவார்கள். தங்கள் மனதில், மற்றும் தங்கள் குழந்தைகளின் மனதில் எது பதிய வேண்டும் என்பதை பொறுப்புள்ள பெற்றோர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் பார்க்க விரும்பும் நிகழ்ச்சியில் பாலுறவு காட்சிகளை தவிர்த்து, நயமற்ற பேச்சு மற்றும் அதிகப்படியான சண்டை காட்சிகளை தவிர்த்து முன்பதிவு செய்வது சிறப்பாக இருக்கும். அதே சமயம் பெற்றோர் வழிகாட்டலுடன் பார்க்கப்படும் நிகழ்ச்சிகளில், இன்று சிலசமயங்களில் தோன்றும் பொருத்தமில்லாத காட்சிகளை வேகமாக முன் நகர்த்தவும் தயாராக இருங்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 77

ஜோதிடம் வழங்கும்

நுண்ணறிவு

ஆகாயங்களில் நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களின் இயக்கம் மற்றும் நமது உடல், மனம் மற்றும் மனவெழுச்சியின் மீது அவற்றின் நுணுக்கமான தாக்கங்களை ஜோதிடம் ஆய்வு செய்து, நமது *கர்மவினையின்* ஏற்ற இறக்கங்களை சித்தரிக்கிறது. ஒவ்வொரு இந்துவின் வாழ்விலும் ஜோதிடம் ஒரு மிகவும் முக்கியமான அங்கம் வகிக்கிறது. பிறப்பில் இருந்து இறப்பு வரை நட்சத்திரங்கள் மூலம் வழிநடத்தப்படும் சிரத்தையுள்ள இந்துக்கள், தங்களின் வாழ்வின் ஒவ்வொரு முக்கியமான அனுபவத்திற்கும் ஒரு *சுப முகூர்த்தத்தை* தேர்ந்தெடுக்கிறார்கள். கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளைச் சேர்ந்த சிறந்த *ஜோதிட சாஸ்திரிகளின்* முயற்சிகளினால், ஜோதிடம் கணினிமயமாக்கப்பட்டு உள்ளது. எங்களது *ஆசிரமத்தில்* பயணம், தியானம், புதிய திட்டம் தொடங்குதல் அல்லது ஓய்வெடுத்து பொழுது போக்குவதற்கும் ஜோதிடத்தை பயன்படுத்துகிறோம். ஒரு நிலையான வாழ்க்கையை பராமரித்து, இயற்கை சக்திகளுடன் இணைந்து இயங்குவதற்கு, ஜோதிடம் ஒரு நம்பத்தகுந்த கருவி என்ற அனுபவம் எங்களுக்கு உறுதி அளிக்கிறது. ¶ஜோதிடம் அவ்வப்போது தெரிவிக்கும் "நல்ல" அல்லது "தீய" செய்திகள் அல்லது கணிப்புக்களுக்கு, நாங்கள் ஒரு மீமெய்யியல் அணுகுமுறையை கையாள்கிறோம். வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய அனுகூலமற்ற சூழ்நிலைகள், அவ்வப்போது தோன்றும்

போது, நாங்கள் புகார் கூறி அல்லது அஞ்சி நடுங்காமல், லௌகீக நடவடிக்கைகளை தவிர்த்து தியானம் மற்றும் *சாதனா* செய்வதற்கு சிறந்த தருணமாக கருதுகிறோம். அனுகூலமான தருணங்களை இதற்கு நேர்மாறாக எதிர்கொள்கிறோம். ஆனால் இரண்டு தருணங்களிலும் ஆன்மீக முன்னேற்றத்தை மேற்கொள்ளலாம். எதிர்மறை மற்றும் நேர்மறை தருணங்களை, விவேகமாக பயன்படுத்தும் போது நேர்மறையாக இருக்கின்றன. எதிர்காலத்தில் வளர்ச்சிகளை மேற்கொள்ள எப்போது அனுகூலமான நேரம் வரும் என்று கணிப்பதற்கு, ஒரு தகுதியுள்ள ஜோதிட *சாஸ்திரி* உதவிகரமாக இருப்பார். கணிக்கப்பட்ட நிகழ்வுகளின் ஏற்ற இறக்கங்கள் தோன்றும் போது, ஒரு நேர்மறை மனநிலையை தக்க வைத்திருக்க வேண்டும். பூலோகத்தின் தெருக்களில் ஒரு குறிக்கோள் இல்லாமல் சுற்றும் பாதசாரியைக் காட்டிலும், நகரங்களுக்கு மேலே ஒரு 747 விமானத்தில் பயணம் செய்பவராக இருங்கள். ¶உங்கள் குழந்தையை வளர்ப்பதற்கு, ஒரு ஜோதிட கணிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எளிதில் கோபம் கொள்ளும் இயல்புடையதாக கணிக்கப்படும் குழந்தையின் வளர்ப்பில், மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு எப்போதும் மதிப்பளித்து அன்போடு இருக்கவும், மற்றவர்களுடன் எப்போதும் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருக்கவும் கற்றுத்தர வேண்டும். இதற்கு பெற்றோர்கள் முன் உதாரணமாக இருக்கவேண்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இது சிறுவர்களுக்கு கோபத்தின் வெளிப்பாடுகளில் இருக்கும் ஈடுபாட்டை தணிக்கிறது. குழந்தையின் இயல்பான தூண்டுதல்களை எதிர்ப்பது, அவற்றை அதிகரிப்பதற்கு மட்டுமே உதவியாக இருக்கும். பிறரை சாராமல் தனித்து இருக்கும் இயல்புடைய குழந்தை, எதிர்காலத்தில் சமூகத்திற்கு உதவியாக இருந்து, தனது குடும்பத்திற்கு பெருமையை சேர்ப்பதற்கு, சிறு வயதில் இருந்தே அது தன் மீது முழுமையான கவனத்தை செலுத்த கற்றுத் தரவேண்டும். ஒரு ஜாதகம் வழங்கும் தகவல்கள் எதிர்மறையாக இருந்தாலும், அதனை சரியான மனநிலையுடன் நெருங்கும் போது, நம்மால் அதிக நன்மைகளை பெறமுடியும். எதிர்மறை தகவல்கள் வழங்கும் சவால்களை எதிர்கொண்டு, அவற்றை வளர்ச்சிக்கான வாய்ப்புக்களாக பார்க்கும் போது, அவை துன்பங்களாக இருப்பது இல்லை. ¶எங்கள் மடங்களில் பல வருடங்களாக இந்து ஆண்டு விவரக்குறிப்பு மற்றும் *லஹிரி அயனாம்ச பஞ்சாங்கத்தை* பின்பற்றி வருகிறோம். எல்லா *பௌர்ணமி*, *அமாவாசை* மற்றும் *அஷ்டமி* தினங்களில் ஆன்மீக தனிமையுடன் விரதம் இருக்கிறோம். அவை எங்களுக்கு வாரக்ககடைசிகளாக விளங்குகின்றன. நமது பிரபஞ்சத்தில் குறைந்தபட்சம் நமது சிறிய விண்மீன் மண்டலத்துடன் இணக்கத்தில் இருக்க, இந்த நாட்களை மகிழ்ச்சிகரமான, ஆரோக்கியமான, ஆக்கப்பூர்வமான வாழ்வை வாழ்வதற்கு கடைப்பிடிப்பது முக்கியம் ஆகும்.

ராசாயனிக அவஸ்தா

रासायनिक अव्यवस्था



இரசாயன குழப்பம்

வருண பகவானே, ஒரு வேளை நான் உப்பிய தோலைப் போல்
தள்ளாடினால், என்னை மன்னித்து, என் மீது கருணை காட்டுவாயாக!
எனது பலவீனம் காரணமாக, நான் வழி தவறினால், புனிதமான
பகவானே, என்னை மன்னித்து, என் மீது கருணை காட்டுவாயாக!

ரிக் வேதம் 7.89.2-3. வேஎ, ப. 517


MANIVEL

இரு தொழிலதிபர்கள் மாலை நேரத்தில், ஒரு கோப்பையில் வைன் வகை மதுபானத்தை ருசித்துக்கொண்டு, இருவருக்கும் சம்பந்தப்பட்ட பரஸ்பர விஷயங்களை விவாதிக்கிறார்கள். அளவோடு பியர் மற்றும் வைன் வகை மதுபானங்களை குடித்து, வடித்த பானங்கள் மற்றும் முறைத்தவறி பயன்படுத்தப்படும் போதை மருந்துகள் அனைத்தும் தவிர்க்கின்றனர்.

திங்கட்கிழமை

பாடம் 78

இரசாயன

உணர்வு

1960 களின் தொடக்கத்தில் என்னிடம் ஆலோசனை பெற வந்தவர்களில் பலர், உளமாற்றி (குறிப்பாக LSD) மருந்துகள் வழங்கும் விழிப்புணர்வு மூலம் திறந்துக்கொண்ட மனதின் உயர்நிலை அனுபவ அம்சங்களைப் பற்றி பேச விரும்பியதை நான் தெரிந்துகொண்டேன். அவர்கள் தாங்கள் பெற்ற இந்த அனுபவங்களுடன், *யோகம்* மற்றும் தியானம் மூலம் அடையும் உணர்வை தொடர்புப்படுத்த விரும்பினார்கள். முன்பே தயார் நிலையில் இருக்கும் ஒரு தியானம் போல, தங்களது புதிய உலகைப் பற்றி பேசுவதற்கு, இவர்கள் அதிக ஆர்வத்துடன் இருந்தார்கள். அவர்கள் இந்த நிலையை மிகவும் விரைவாக அடைய முடிந்தது. ஒருவர் தமது அகத்தை அடைவதற்கு, சிலசமயங்களில் பல வருட யோகப் பயிற்சி தேவைப்படும் கடினமான பாதையில் அவர்கள் செல்லவில்லை. நாடு முழுவதும் இருக்கும் மக்கள், தற்போது அகத்தில் இருக்கும் லோகத்தின் மீது விழிப்புணர்வை பெற்று வருகிறார்கள். ¶அதே சமயத்தில், சாண்டியாகோவில் பல சாதகர்கள் மற்றும் LSD பயனர்கள் கலந்துக்கொள்ள ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. முன்பே பிறவி எடுத்த உடல்களில் மீண்டும் பிறவி எடுத்த ஒரு புதிய மனித இனம் போன்று LSD மக்கள் தென்பட்டார்கள். உளமாற்றி மருந்துகளை பயன்படுத்துபவர்கள், அந்த அனுபவத்தை பெறாதவர்களில் இருந்து பல வகைகளில் மாறுபட்டு இருக்கின்றனர். அவர்களின் உணர்வுகள் மாறுபட்டு இருக்கின்றன. அவர்களின் உறவுகள் மாறுபட்டு இருக்கின்றன. அவர்கள் சிலருடன் நெருங்கி பழகுகிறார்கள், ஆனால் அதே சமயம் சமூகத்துடன் ஒரு இடைவெளியை உருவாக்கிக் கொள்கிறார்கள். அது தனிமையின் இடைவெளியாக இருக்கிறது, ஏனென்றால் அவர்களின் உட்புற உணர்வு மற்றும் வெளிப்புற உலகிற்கும் இடையே முறிவு பெரிய அளவில் இருப்பதால், அவர்களால் தங்களை மட்டுமே சார்ந்து இருக்க முடிகிறது. இந்த சார்பு நிலையில் கிடைக்கும் வெற்றியின் அளவை ஆய்வு செய்தால், அது நம்மை யோகப் பயிற்சியை நோக்கி அழைத்து செல்லும். உளமாற்றி அனுபவம் தனிப்பட்ட முறையில் நன்மை விளைவிக்குமா அல்லது தீமை விளைவிக்குமா

என்பதை நம்மால் வரையறுத்து கூற முடிவதில்லை. இந்த அனுபவம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு கிடைத்துள்ளது என்பதை மட்டுமே சொல்ல முடியும். ¶நான் இங்கே பகிரும் கருத்துக்கள் பெரும்பாலும் இந்த உளமாற்றி அனுபவத்தை பெறாதவர்களுக்குத் தான். நீங்கள் இந்த அனுபவத்தை பெறவேண்டும் என்று நான் குறிப்பிடவில்லை. நீங்கள் யோகப்பயிற்சியின் மெதுவான பாதையை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றே குறிப்பிடுவேன். ஆனால் நமக்கு மத்தியில் ஒரு புதிய மக்கள் குழு வாழ்ந்துகொண்டு இருக்கிறது என்பதைப் பற்றி உங்களுக்கு விழிப்புணர்வை வழங்க விரும்புகிறேன். அவர்களின் அணுகுமுறை உங்களது அணுகுமுறையில் முற்றிலும் மாறுபட்டு இருக்கலாம். பொதுவாக அவர்களின் புலனுணர்வு முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. அதில் சிலரால் உங்கள் மனதின் மீது கவனத்தை செலுத்தி, உங்கள் எண்ணங்களை தெரிந்துக் கொள்ளவும் முடியும். உளமாற்றி அனுபவத்தை பெறாதவர்கள், இந்த உளமாற்றி உணர்விற்கு தங்களை மாற்றி அமைத்துக்கொள்ள தெரிந்துக்கொள்ள வேண்டும். அதைப்போன்று இந்த போதை மருந்து அடிமைகள், அந்த பழக்கத்தை நிறுத்தினால், வழக்கமான உணர்வுள்ள லோகத்தில் செயல்படுவதற்கு தங்களது சிந்தனை முறையை மாற்றி அமைக்க தெரிந்துக்கொள்ள வேண்டும். ¶“தூண்டுதலை பெற்ற" மற்றும் “தூண்டுதலை பெறாத" மக்களுக்கு இடையே உருவாகி இருக்கும் இடைவெளியை, ஒருவர் தியானம் செய்து மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, உங்களுக்கு தலைவனாக இருப்பதன் மூலம் சிறப்பாக நிரப்பலாம் என்று எனக்கு தோன்றுகிறது. நீங்கள் உங்களுக்கு தலைவனாக இருக்கும் போது, நீங்கள் தனிமையில் இல்லாமல், முழுமையில் தனியாக நிற்கிறீர்கள். அவ்வாறு செய்யும் போது, தியானத்தின் செயல்முறை மூலமாகவும், ஒரு பிரச்சனையை பற்றி உட்கார்ந்து சிந்தித்து, இறுதியில் அதை முழுமையான மெய்ஞ்ஞான கண்ணோட்டத்துடன் பார்த்து, புத்துணர்வு நிரம்பி பலன் தரக்கூடிய பதிலை வெளிக்கொண்டு வருவதன் மூலமாகவும், உங்களால் அறிவு மற்றும் ஞானத்தை வெளிக்கொண்டு வர முடிகிறது. தியானம் ஒரு வலுவான செய்முறை ஆகும். இது உட்கார்ந்து காத்திருப்பதை காட்டிலும் அதிக வலுவாக இருக்கிறது. அது உயர்வான ஒரு தனிப்பண்புடைய மனதை உருவாக்குகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 79

இளமையான மற்றும்

பழமையான ஆன்மாக்கள்

இந்த உலகில் இளமையான மற்றும் பழமையான ஆன்மாக்கள் இருக்கிறார்கள். நீங்கள் ஒரு வேலையை எவ்வாறு செய்யக்கூடாது என்பதை ஒரு இளம் ஆன்மா தெரிவிக்கிறது. அதே வேலையை நீங்கள் எவ்வாறு செய்யலாம் என்பதை ஒரு பழமையான ஆன்மா தெரிவிக்கிறது. ஆனால் ஒரு பலவீனமான மெலிந்த நபர் உடற்பயிற்சி கூடத்திற்கு தொடர்ந்து சென்று தசைப்பொருந்திய வலுவான நபராக மாறுவதைப் போல, ஒரு இளம் ஆன்மா இந்த பிறவியிலேயே வளர்ச்சி அடைய முடியும். ¶ஆன்மீக விரிவாக்கம் மற்றும் நுணுக்கமான நரம்பியல் அமைப்பின் வளர்ச்சி மற்றும் அபிருத்தி ஒன்றையே குறிப்பிடுகின்றன. நம் எல்லோருக்கும் உடலின் தசை அமைப்பைப் பற்றி தெரிந்து இருக்கும், ஆனால் உங்களின் நரம்பியல் இழைகளைப் பற்றி உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்? உங்களின் மனதின் நிலையை பொறுத்து, இந்த நரம்புப் பாதைகள் வழியாக உயிர் சக்தி பாய்ந்து செல்கிறது. தசை மற்றும் சரும அமைப்பிற்குள் செல்லும் இந்த ஆன்மீக சக்தி, *பிராணன்* எனப்படும் காந்த சக்தியை உருவாக்குகிறது. இதன் காரணமாக நாம் இதை காந்த சக்தி என்று அழைக்கிறோம். நீங்கள் சோர்வாக உடலில் சக்தியின்றி இருக்கும் போது, ஒருவர் உங்களிடம் வந்து, "என்னோடு வா, ஒரு பார்ட்டிக்கு போகலாம்," என்று அழைக்கும் போது, உங்கள் நரம்பியல் அமைப்பு ஒரு புதிய சக்தியை உங்களுக்குள் அனுப்பி, காந்தத்தன்மை வாய்ந்த உங்களின் எதிர்வினையை உற்சாகப்படுத்துகிறது அல்லவா? இது ஆன்மீக சக்தியின் ஒரு துணை மெய்ஞ்ஞான வெளிப்பாடாக, ஒரு தனிச்சையான எதிர்வினையாக இருக்கிறது. ¶ஒரு இளம் ஆன்மாவில் இருக்கும் நரம்பியல் அமைப்பு பக்குவமடையாமல் இருக்கிறது என்று சொல்லலாம். பழமையான ஆன்மா பெற்ற எண்ணற்ற பிறவி அனுபவங்கள், அதன் நுணுக்கமான நரம்பியல் அமைப்பில் ஒரு இழையின் வலிமை வடிவில், ஒரு ஆன்மீக பக்குவத்தை விதைத்துள்ளது. இதன் காரணமாக, ஒரு தியான நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு எடுத்து செல்லும் ஆற்றல் மற்றும் விரிவாக்கத்தை, தியானத்தில் நுழையும் ஒரு பழமையான ஆன்மாவால் நிலைநிறுத்த முடிகிறது. மனதின் அனுபவத்தை கடந்து, பிரபஞ்ச உணர்வின் ஒரு ஆழ்நிலை தருணத்தில், ஒருவர் ஆத்ம ஞானத்திற்கு தயாராகி, மிகவும் வலிமையான நரம்பியல் அமைப்பு காரணமாக, அதை தக்க வைத்துக் கொள்ளும் வரை, இந்த செய்முறை ஒரு உறுதியான படைப்பு மற்றும் ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. ¶இந்த உளமாற்றி அனுபவத்தில், துர்பாக்கியமான அம்சம் என்னவென்றால், அது குறிப்பாக இளம் ஆன்மாவிற்கு இன்னல்கள் ஏற்படுத்தி, பழமையான ஆன்மாவின் பாதையை மாற்றிவிடுகிறது. LSD அல்லது மற்ற உளநிலை மாற்றி மருந்துக்களை பயன்படுத்துவது ஒரு பழமையான ஆன்மாவாக இருந்து, அவர் அதன் மூலம் விழிப்புணர்வை பெற்றால், அவர் தனது உணர்வின் புதிய சூழலை தனது அறிவாற்றலை பயன்படுத்தி எதிர்கொள்ள முடிகிறது. ஆனால் மேலும் ஆன்மீக விரிவாக்கங்கள் நடைபெறுவது தடைபடுகிறது, ஏனென்றால்

கீழ்நிலை *சக்கரங்கள்* வலுவாக இழுத்து திறக்கப்பட்டதன் காரணமாக, தீவிரமான மனநிலை அலைவுகள் ஏற்படுகின்றன. இளம் ஆன்மாவை பொறுத்தவரை, உளமாற்றி அனுபவத்தின் தீவிர விழிப்புணர்வுடன் தன்னை பொருத்திக்கொள்ள, அவரது நரம்பு இழை போதிய வளர்ச்சி பெறாததால், அவருடைய மனதால் பெரும்பாலும் "தூண்டுதலை பெறமுடியவில்லை." ¶ஒரு சில உளமாற்றி அனுபவங்களை பெற்ற சாதகர்களுடன் நான் விவாதித்து இருக்கிறேன். அவர்கள் அதிக துடிப்புணர்வு, அதிக உற்சாகத்துடன் புதிய உலகின் சவால்களை எதிர்கொள்ள தயாராக இருப்பதை நான் தெரிந்துகொண்டேன். தங்கள் சுய-மரியாதையை இழந்து, தங்கள் ஆசையை இழந்து, செய்வதறியாது முழித்துக்கொண்டு இருப்பவர்களையும் நான் சந்தித்து இருக்கிறேன். முன்னர் அவர்கள் மனதின் சக்தி பாய்ந்து சென்ற பாதையை அவர்கள் இழந்து இருந்தார்கள், மற்றும் அது மீண்டும் சீர் செய்யப்படவில்லை என்றே சொல்லவேண்டும். ¶மனம் தெளிவடைந்த நிலையில் ஒளி மீது கவனத்தை பெற்று, பேரானந்தத்தின் ஒரு மெய்ஞ்ஞான நிலையில் நுழையும் ஒரு இந்து *யோகி*, தனது இடைநீக்கம் செய்யப்பட்ட உணர்வு நிலையில் உலகம் சுற்றுவதை காணும் போது என்ன நடக்கிறது? அவர் இந்த நிலையை பல வருடங்களாக பயிற்சி செய்த ஒருமுகச்சிந்தனை, தியானம் மற்றும் தாரணை மற்றும் பல வருடங்களாக வலுப்படுத்திய நரம்பு இழை காரணமாக அடைந்துள்ளார். ஆனால் LSD அல்லது மஸ்ரூம்ஸ், பெயோட், எக்ஸ்டஸி அல்லது DMT போன்ற வலுவான உளமாற்றி மூலம் கிடைக்கும் குறுகிய கால உச்சம், நரம்பு அமைப்பு அழுத்தத்தை சந்திக்கிறது. ஒரு தனி நபர் இந்த உயர்ந்த நிலையை அடைய அனுமதி பெறுவதற்கு எதிர்கொள்ளும், இந்த அழுத்தத்தை இயற்கைக்கு மாறானது என்று குறிப்பிடலாம். அந்த நிலையை விட்டு வெளியேறும் போது, அந்த நபர் தன்னை ஒரு வழக்கத்திற்கு பொருத்திக்கொள்ள அதிக இன்னல்களை சந்திப்பதன் விளைவாக, அவர் அதிர்ச்சிக்கு ஆளாகிறார். இந்த போதை மருந்துகள் சட்டவிரோதமாக இருப்பதால், சாதகனுக்குள் அச்ச உணர்வும் விழிப்படைந்து இருக்கும். இருண்ட கீழ்நிலை உலகங்களில் முதல் நிலையாக அச்சமும், அதற்கு அடுத்து கோபமும் இருக்கின்றன.

புதன்கிழமை

பாடம் 80

கட்டுப்பாட்டை

பராமரிப்பது

நான் ஒரு சிறிய "அமிலத்தை" மையமாகக் கொண்டு நாடு அல்லது உலகெங்கும் ஒரு இயக்கம் நடப்பதை பார்க்க விரும்பவில்லை. இந்த அமிலம் இளம் ஆன்மாக்களின் வாழ்வை சீரழிப்பதே எனது வெறுப்பிற்கு காரணம். சில இளம் ஆன்மாக்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ளாமல், தற்செயலாக சூட்சுமமான ஆன்மீகத் திறமையை பெற்று இருக்கக்கூடும். அவர்கள் சிந்தனை வடிவங்களை பார்த்து புரிந்துகொள்ள, ஒளி உடல்களை பார்க்க அல்லது சூட்சுமமாக பயணம் செய்யும் திறமை பெற்று இருப்பார்கள். ஆத்ம ஞானம் பெறும் வரை, இந்த சூட்சுமமான ஆன்மீகப் பாதையை தவிர்க்க வேண்டும் என்று நாங்கள் *யோகத்தில்* பரிந்துரைக்கிறோம். மனதை உயர்நிலை சக்திகள் மற்றும் அற்புதமான அனுபவங்களுக்கு அனுமதி அளிக்கும் போது, நாம் முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் *மூலாதார* மையத்திற்கு கீழிருக்கும் *சக்கரங்களின்* நிழல் உலகம் வழங்கும் விரசமான அனுபவங்களுக்கு அனுமதி அளிக்கிறோம். இந்த பகுதியில் இருக்கும் உணர்வை முன்னேற்பாடு மற்றும் பயிற்சி இல்லாமல் நம்மால் கட்டுப்படுத்த முடியாது. உயர்நிலை லோகங்கள் திறக்கும் போது, கீழ்நிலை லோகங்களை மூடிவிடுவதன் மூலம், திறந்துக்கொள்ளும் செய்முறையில் தனது மாணவர்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை *யோகம்* கற்றுக்கொடுக்கும் *குரு* அறிந்து இருக்கிறார். இதை எவ்வாறு செய்யவேண்டும் என்பது அவருக்கு தெரியும், ஆனால் இந்த நிதானமான பயிற்சிக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. உளமாற்றி அனுபவத்தை பெற்று, தெருவில் சில வீடுகளை கடந்து செல்ல முடியாத நபர்களை நான் சந்தித்து இருக்கிறேன். இவர்கள் ஒரு குறிப்பிட்ட வீட்டில் நடைபெறும் வாக்குவாதத்தில் இருந்து, வெளிவரும் எதிர்மறை விசைப் பகுதிகளுக்கு எளிதில் பதட்டம் அடைவதால், அவர்களால் அந்த வீட்டை கடந்து செல்ல முடிவதில்லை. இந்த பிரிவு மக்களில் சிலர், கீழ்நிலை மனதின் அதிக நுணுக்கமான சக்திகளுக்கு தங்களது மனதை திறந்துக்கொண்டுள்ளனர்.

¶விவேகத்தடன் இருக்கும் பழமையான ஆன்மா, தியான அனுபவத்திற்குள் நுழைகிறார். இந்த தியான நிலையில், அவர் மேல்நிலை சக்திகளை விழிப்படைய செய்யும் போது, கீழ்நிலை சக்திகளை கட்டுப்படுத்த கற்றுக்கொள்கிறார். இதன் மூலம் அவரால் தன்னை உயர்நிலை உணர்வில் தக்க வைத்துக்கொள்ள முடிகிறது. இதை செய்வதற்கு அவரிடம் வலுவான நரம்பு இழை இருக்கிறது. ¶பாதையில் முன்னேறி செல்லும் ஆன்மாக்களை, சிறிதும் எதிர்பாராத விழிப்புணர்வுக்கு எதிராகவும், தனக்கு சொந்தமாக்கி ஆளுமை செய்யும் புற ஆற்றலுக்கு எதிராகவும், அவர்களை பாதுகாக்கும் பொருட்டு, நான் LSD இயக்கத் தலைவர்களிடம், உளமாற்றி இயக்கத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். போதை மருந்தை பயன்படுத்தும் பலர் பின்தொடரும் தொண்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தலைவர்கள் இல்லை, அவர்கள் தொண்டர்கள். ஒரு தலைவர் முடிவு எடுக்கிறார். ஒரு தலைவர் தனக்கு நம்பிக்கை இருப்பதில் நிலைத்து நின்று, தான் நிலைத்து

இருப்பதில் நம்பிக்கை வைக்கிறார். நாம் குழந்தைகளுக்கு தலைவர்களாக இருக்கவும், தங்களுக்கு தவறாக மற்றும் பயங்கரமாக தோன்றுவதற்கு எதிராக எதிர்த்து நிற்கவும் பயிற்சி அளிக்க வேண்டும். ¶ஒரு LSD அனுபவத்தில் இருப்பதைப் போல, ஒரு பாதுகாப்பு இல்லாத நிலையில், ஒருவர் தன்னை திறந்து கொள்ளும் போது, சிந்தனை சக்தியின் சேகரிப்பின் மூலம் அவரை சொந்தமாக்கிக் கொண்டு அல்லது ஆதிக்கம் செலுத்தி, அவருக்கு விருப்பம் இல்லாத ஒன்றை செய்யத் தூண்டிவிடவும் முடியும். இதற்கு அவர்களின் நரம்பியல் அமைப்பு அதிக கூர் உணர்வை பெற்று, கட்டுப்பாடு இல்லாத சிலரிடம் இருந்து மெதுவாக வெளியேறும் வெறுப்பு, பேராசை, அவநம்பிக்கை, அச்சம் மற்றும் தீய எண்ணம் சார்ந்த கீழ்நிலை மனதின் சக்திகளுக்கு திறந்து கொண்டுள்ளதே காரணம் ஆகும். ¶நீங்கள் இந்த முறையில் திறந்து கொள்ளாமல், நீங்கள் சாதாரண உணர்வு நிலையில் மட்டும் நீடித்து இருந்தால், "எனக்கு அந்த நபரை பிடிக்கவில்லை மற்றும் அவரை இனிமேல் சந்திக்க விரும்பவில்லை," என்று உங்களுக்கு தோன்றலாம், மற்றும் நீங்கள் உங்களுக்கும் அந்த நபருக்கும் இடையே மனதில் ஒரு தடையை அமைத்துக் கொள்கிறீர்கள். உங்களால் உங்கள் உணர்வுடன் பொருந்தாத நபர்களுக்கு உங்கள் மனதின் கதவை மூடிக்கொள்ள முடிகிறது. ஆனால் இதை பக்குவமடைவதற்கு முன்பாக திறந்துக்கொண்ட ஆன்மாவால் செய்ய முடிவதில்லை. அவர் எல்லா தாக்கங்களுக்கும் ஆளாகிறார். அதனால் இந்த கொடிய போதை மருந்துங்களின் பயன்பாட்டை நிறுத்தி, இந்த இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று தற்போதைய நிகழ்வுகளின் எதிர்மறை விளைவுகளை அறிந்துள்ள பழமையான ஆன்மாக்கள் மற்றும் இயல்பான அறிவாற்றலுடன் இருக்கும் புத்திசாலிகளிடம் நான் மன்றாடிக் கொள்கிறேன்.

வியாழக்கிழமை

பாடம் 81

மெய்ஞ்ஞானத்தை

பயன்படுத்துதல்

தங்கள் பதின்ம வயதின் இறுதியில் அல்லது இருபது வயதின் தொடக்கத்தில் இருக்கும் இளைஞர்கள், LSD அல்லது மற்ற போதை மருந்துகளை பயன்படுத்தத் தொடங்கினால், அவர்கள் ஒரு செயற்கை முறையில் தங்கள் *கர்மவினையை* எதிர்கொள்ளக் கூடும். அவர்களின் நரம்பியல் அமைப்பு எதிர்கொள்ளும் வேதனை நீடித்தால், விளைவுகள் கடுமையாக இருப்பதோடு, மற்றவர்கள் LSD பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டாலும், இதன் தாக்கம் அவர்கள் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நான் இந்தியா மற்றும் கிழக்கு

ஆசிய நாடுகளுக்கு சென்றுள்ளேன். அங்கே போதை மருந்துகளுக்கு எதிரான சட்டங்கள் இல்லை, மற்றும் போதை மருந்து பழக்கத்துடன் இருப்பவர்களின் வாழ்க்கை முற்றிலும் பரிதாபத்துக்கு உரியதாக இருக்கிறது. அவர்களுக்கு ஆன்மீகத் தூண்டுதல்கள் எதுவும் இருப்பதில்லை. அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்துக் கொண்டு, "எனக்கு உணவு கிடைத்தால் நல்லது. எனக்கு உணவு கிடைக்கவில்லை என்றால் என் உயிர் பிரித்து விடும். அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால், நான் இங்கே பிறக்கிறேன் என்று பார்ப்போம்," என்று கூறுவார். ஆனால் ஆன்மீக சக்தி உங்கள் நரம்பு அமைப்பு வழியாக பாய்ந்து சென்று, உங்கள் உடல் முழுவதும் காந்தத்தன்மையை பரவச் செய்கிறது, மற்றும் உங்களால் மனதின் ஒளியை காண முடிகிறது, மற்றும் உங்களிடம் இதைப் போன்ற காரண விளக்கங்களுக்கு நேரம் இருப்பது இல்லை. ¶நாம் நரம்பியல் அமைப்பைப் பற்றி விளக்கும் போது, ஒரே சமயத்தில் மூன்று மனநிலைகளைப் பற்றி குறிப்பிடுகிறோம். உங்களுக்குள் தற்போது உணர்வுள்ள மனம், அடிமனம் மற்றும் மெய்ஞ்ஞான மனம் ஆகிய மூன்று மனங்களும் ஒரே சமயத்தில் ஆற்றல் நிறைந்து துடிப்புடன் இருக்கின்றன. நீங்கள் போதை மருந்துகளின் உதவியின்றி, எந்த நேரமும் "தூண்டுதலை பெற" முடியும். அடிப்படையில் உங்கள் மூளை ஒரு அமில அமைப்பை கொண்டது. நீங்கள் மனதை ஒருமுகப்படுத்த, சிந்திக்கும் சக்தி மீது கவனத்தை ஒருமுகப்படுத்த கற்கும் போது, நீங்கள் உங்கள் மூளையின் "அமிலத்திற்கு" தூண்டுதல் வழங்குகிறீர்கள். LSD ஒரு அமிலம் தான் என்றாலும், உங்களால் உங்களுக்கு செய்து கொள்வதைப் போன்று சிறப்பாக அதனால் உங்களுக்கு எதையும் செய்ய முடியாது. நீங்கள் தியானத்தின் நுணுக்கமான கலைகளை கற்றுக்கொள்ளும் போது, உடல் மற்றும் மனம் வழியாக காந்த ஓட்டங்களுக்குள், எப்போதும் இருந்துக்கொண்டு தனது சக்தியை செலுத்தும் உங்களின் ஆன்மீக சக்தியை எப்படி பயன்படுத்துவது என்பதை நீங்கள் கற்றுக்கொள்வீர்கள். இந்த காந்த சக்தியை உணவு, சுவாசம் அல்லது சிந்தனையின் பண்பு மூலமாகவும் தூண்டிவிடலாம். ¶மக்கள் தங்களிடம் மறைந்திருக்கும் இந்த பண்பை பயன்படுத்த மற்றும் உணர்வின் இந்த உயர்நிலைகளை விரிவாக்கம் செய்ய தற்போது உகந்த தருணமாக இருக்கிறது. நீங்கள் உங்களை ஒரு ராக்கெட் அல்லது ஒரு விண்கலத்துடன் மனப்பூர்வமாக தொடர்புப்படுத்திக் கொள்ளும் ஓவ்வொரு முறையும், உங்கள் உணர்வு ஒரு உறுதியான மாற்றத்தைப் பெற்று, மீண்டும் பூமியை வந்து அடைகிறதால், பரவெளி தொடர்பான அனைத்து நடவடிக்கை மற்றும் விவாதங்களும், இந்த விரிவாக்கத்தில் பங்கு கொள்கின்றன. ¶காலப்போக்கில் உளமாற்றி இயக்கம் எந்த விளைவை சந்திக்க வேண்டியிருக்கும்? தியானத்தின் ஒருங்கிணைந்த செயல்முறையிலும், ஒருவரின் கர்மவினை வலுவடைந்து, அனுபவிப்பதற்கு அனுபவங்கள் அடர்த்தியாக மற்றும் விரைவாக வருவதாக தியானம் செய்யும் *யோகிகள்* கண்டறிந்துள்ளனர். LSD மற்றும் அதைப் போன்ற மற்ற போதை மருந்துகளை

பயன்படுத்தும் போது, சில போதை அடிமைகள் ஒரு நிலையான வாழ்வில் இருந்து முற்றிலும் விலகிய உணர்வில் சுழலும் வரை, ஆற்றல் தொடர்ந்து விரைவாக விரயமாகிக் கொண்டிருக்கிறது. LSD மருந்தை தொடர்ந்து பயன்படுத்தினால், சக்திகள் இயல்பு நிலைக்கு மாற வாய்ப்பில்லாத பகுதிக்கு நழுவக்கூடும் என்று எனக்கு தோன்றுகிறது. வெப்பம் அதிகமாக இருக்கும் வீட்டில் ஒரு செடியை வளர்ப்பதில் பலன் கிடைக்கலாம், ஆனால் இந்த மருந்தின் பயன்பாட்டினால் மனித ஆன்மாவின் ஆன்மீக விரிவாக்கத்திற்கு மேற்கொள்ளும் எந்த வற்புறுத்தலும் பலன் அளிக்காது. *யோகம்* என்பது கட்டுப்பாட்டின் பாதையாக இருக்கிறது. நீங்கள் இதற்கு யோக பாதையை பயன்படுத்தினால், உங்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும், மற்றும் உங்களிடம் ஒளி வீசும் புதிய ஆற்றலின் மூலம் உங்களால் பலருக்கு உதவியாக இருக்க முடியும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 82

முடிவு எடுக்கும்

சக்தி

மஷ்ரூம்ஸ், LSD போன்ற உளமாற்றிகள் மற்றும் பார்பிடுரெட்ஸ், மெதாம்பிடாமின்ஸ், ஹெரோயின், கோகெயின், மரிஜுவானா போன்ற சட்டவிரோதமான மருந்துகளை பயன்படுத்துதல், விற்றல் மற்றும் மற்றவர்களை பயன்படுத்த ஊக்குவித்தலுக்கு பல *கர்மவினை* விளைவுகள் உள்ளன. இனி நாம் *கர்மவினை* சங்கிலியின் செயல்பாட்டை தெரிந்துகொள்ளலாம். உதாரணத்திற்கு ஒருவர் இன்னொருவருக்கு போதை மருந்தை விற்கிறார் மற்றும் அதை இரண்டாவது நபர் அதிகமாக பயன்படுத்துவதால் அவர் உயிர் பிரிகிறது. இதனால் விளையும் *கர்மவினை* ஒரு கொலையாக இருக்கும். இது சட்டத்தின் கண்களில் கொலையாக இல்லாவிட்டாலும், இதனால் விளையும் *கர்மவினை* கொலையாகவே இருக்கும். அதாவது அந்த மருந்தை விற்றவர் அடுத்த பிறவியில் கொல்லப்படுவார். ஒரு செயல் இன்னொரு செயலை உருவாக்குகிறது மற்றும் அது அந்த செயலை உருவாக்க உதவியருக்கே திரும்புகிறது. அதைப் போலவே, தங்களை துன்புறுத்திக் கொள்ள அல்லது மற்றவர்களை கொலை செய்ய மற்றும் கொள்ளை போன்ற செயல்களில் ஒருவர் ஈடுபடுவதற்கு திரைப்பட நடிகர்கள் காரணமாக இருந்தால், அவர்கள் ஏற்ற கதாபாத்திரத்தின் காரணமாக, அந்த *கர்மவினை* அவர்களுக்கும், இயக்குனருக்கும், கதாசிரியருக்கும் திரும்பி வருகிறது. *கர்மவினையின்* விதியில் இருந்து யாராலும் தப்ப முடியாது. ¶முடிவு எடுக்கும் சக்தி மிகவும்

வலுவானது என்று நான் போதை மருந்து பழக்கத்திற்கு இழுக்கப்பட்ட இளைஞர்களுக்கு அறிவுறுத்துவேன். சிலர் மட்டுமே இந்த சக்தியை எப்படி பயன்படுத்துவது என்பதை அறிந்து இருக்கிறார்கள், ஆனால் எல்லோரிடமும் முடிவு எடுக்கும் சக்தி இருக்கிறது. நீங்கள் போதை மருந்து பழக்கத்தை விட்டொழிக்கும் முடிவை எடுப்பதற்கு உதவியாக, நாங்கள் உங்களுக்கு சில ஆயுதங்களை தர இருக்கிறோம். இதற்கு சிறிது மன உறுதியுடன் சிறிது ஆய்வு செய்தால் போதும். ¶சட்டவிரோதமான மருந்துகளை பயன்படுத்துவதால், அதை பயன்படுத்துபவர் ஒரு குற்றவாளி ஆகிறார். போதை மருந்து சொத்து ஜப்தி செய்யும் விதிகளின் படி அவருடைய வீடு அல்லது வாகனம் பறிமுதல் செய்யப்படலாம். அவருடைய பெற்றோர்களின் வீடு அல்லது வாகனம் பறிமுதல் செய்யப்படலாம். அவர் அரசு கட்டுப்பாடு விதித்த பொருட்களின் தூண்டுதலுடன் வாகனம் ஓட்டியதற்காக கைது செய்யப்படலாம். மக்கள் அவரிடம் இருந்து போதை மருந்துகளை திருடி, அவரையும் அவரது குடும்பத்தை ஆபத்தில் சிக்க வைக்கலாம். இறுதியில் தனக்கு தேவையான போதை மருந்துகளை வாங்கும் அளவிற்கு அவரிடம் வருமானம் இருப்பதில்லை. அவரால் தேவையான அளவு திருடவும் முடிவதில்லை. அவர் தனது பழக்கத்தை தொடர, போதை மருந்துகளின் விநியோகத்தை தொடங்கி விற்க வேண்டியிருக்கும். அவர் விநியோகம் செய்ய புதிய பயனாளிகளை தேட வேண்டியிருக்கும். போதை மருந்துகள் காரணமாக அவர் அந்த மருந்துகளை விற்பவர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் போதை மருந்துகளுக்கு அடிமையானவர்கள் என்று தீய சகவாசம் கைக்கூடுகிறது. இது அவரை வாழ்க்கையின் கீழ்நிலை லோகத்திற்குள் அழைத்து செல்கிறது. அவர் வன்முறையை கையாளலாம். அவர் தன்னை பாதுகாத்துக் கொள்ள ஒரு துப்பாக்கியை பயன்படுத்தலாம். இத்துடன் மேலும் சில ஆபத்துக்கள் தொடர உள்ளன. அவர் ஒரு குற்றவாளியாக இருப்பதால், அரசு அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் சமூகத்திற்கு அதிக செலவு ஏற்படுகிறது. அவரால் இயல்பாக இருக்க முடிவதில்லை. அவர் தனது உடலை துன்புறுத்திக்கொள்கிறார். அவர் தனது மனதை துன்புறுத்திக்கொள்கிறார். அவர் தனக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தில், எப்போதும் கவலையில் இருந்து கொண்டு மனநோயால் பாதிக்கப்படுகிறார். போதை மருந்துக்கு அடிமையான மாணவனால் முன்பைப் போல நன்றாக படிக்க முடிவதில்லை, அவர் தன் பட்டப்படிப்பை பாதியில் கைவிடலாம். அவருக்கு படிப்பறிவு இல்லாததால், அவர் ஒரு நல்ல தொழில் வாழ்க்கை மற்றும் ஒரு நிலையான வேலை அமைவதில்லை. அவர் முன்னெப்போதும் செய்திராத கொள்ளை, திருட்டு, பொய் சொல்லுதல், மோசடி ஆகியவற்றில் ஈடுபட்டு, தனது பெற்றோர்களை உதறி விட்டு அவர்களை அவமானப்படுத்தி, தனது ஆசிரியர்களிடம் இருந்து விலகி, தனது நண்பர்கள், பெண் மற்றும் ஆண் நண்பர்களுடன் முறையற்ற உறவில் ஈடுபட்டு, சுய மரியாதையை கெடுத்து, விபசாரத்திலும் ஈடுபடுகிறார். ¶இளைஞர்களே,

இவ்வாறு எனக்கு நடக்காது என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டாம். போதை மருந்துக்கு அடிமையானவர் எல்லோரும், "இவ்வாறு எனக்கு நடக்காது. என்னால் சமாளிக்க முடியும்," என்று சொல்வதுண்டு. இதை போதை மருந்துக்கு அடிமையான ஒவ்வொருவரும் என்றாவது ஒரு முறை சொல்லி இருப்பார். மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அதிக அளவில் செலவு செய்யும் போதை மருந்துக்கு அடிமையானோர் மறுவாழ்வு மையம் மற்றும் போதை மருந்தை கையாள்வதைப் பற்றி பல அமைப்புக்கள் எதற்காக பேசிக்கொண்டு இருக்கின்றன? ஏனென்றால் இதை உங்களால் அல்லது யாராலும் கையாள முடியாது. இவை அனைத்தும் முதல் போதை மருந்து புகை, முதல் முறையாக சட்டத்தின் எல்லையை கடப்பதுடன் தொடங்குகிறது. ஒரு போதை மருந்து இன்னொரு மருந்துக்கு வழிவகுக்கிறது, மற்றும் அது இன்னொரு மருந்துக்கு என்று தொடர்கிறது. சட்டவிரோதமான பொருட்களை பயன்படுத்துபவர்களின் வாழ்க்கை, இந்த பூமியில் தினமும் நரகலோகமாக இருக்கிறது. அதனால் இந்த பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டாம். ¶வாழ்க்கை அளிக்கும் பிரச்சனைகளுக்கு போதை மருந்து ஒரு தீர்வாக தோன்றலாம், ஆனால் அதற்கான தீர்வு இதில்லை. இந்து, சமணம் மற்றும் பௌத்த சமய சிந்தனையில், இவை அனைத்தும் தீய *கர்மவினையுடன்* சேர்ந்து, பின்னர் கீழ்த்தரமான பிறவியாக உருவெடுக்கிறது. *கர்மவினையில்* இருந்து உங்களால் தப்ப முடியாது. அது இந்த பிறவியில் இல்லை என்றால் அடுத்த பிறவியில் உங்கள் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்தும். வேண்டாம் என்று சொல்லவேண்டும் என்று ஒருவர் நம்மிடம் கூறியுள்ளதால், நம்மால் வேண்டாம் முடியாது என்று சொல்ல முடியாது. மிகவும் பயங்கரமான இந்த போதை மருந்துகளை பயன்படுத்துவதால், நமக்கு நடக்கயிருக்கும் விளைவுகளை பற்றி நாம் தியானமும் சிந்தனையும் செய்ய வேண்டும். ¶இந்த சமூகத்தில் இருக்கும் இளைஞர்களிடம் பேசுங்கள். "அதைப்பற்றி சிந்தியுங்கள். நீங்கள் மட்டுமே அதற்கு முடிவு செய்ய முடியும். வேறு யாரும் உங்களுக்காக முடிவு எடுக்க முடியாது," என்று அவர்களிடம் சொல்லுங்கள். இங்கே கவாய் தீவில் இருக்கும் ஒரு இளைஞனிடம், ஐம்பது அடி நீளமுள்ள அலையில் ஒரு அலை மிதவை பலகையில் சவாரி செய்வதற்கு சம்மதம் பெற முடியாது. இளைஞர்கள் கோக்கியில் இருந்து மலைகள் வழியாக வலைந்து நெளிந்து செல்லும் பாதையில் மணிக்கு நூறு மைல் வேகத்திலும் வாகனம் ஓட்டமாட்டார்கள். இதற்கு என்ன காரணம்? ஏனென்றால் அவர்களுக்கு இதன் விளைவுகளைப் பற்றி நன்றாக தெரியும். அவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களின் வயது 12 அல்லது 16 அல்லது 20 அல்லது 24 என்று எதுவாக இருந்தாலும், அவர்களுக்கு விளைவுகளைப் பற்றி தெரிந்துள்ளது மற்றும் அவர்கள் இதைப் போன்ற விஷயங்களைப் பற்றி முறையான முடிவுகளை எடுப்பார்கள். ¶அவர்கள் தங்கள் தூல உடலின் இயக்கத்தை இழக்க விரும்பாமல், சமூகத்தில் தங்கள் கௌரவத்தை இழக்க விரும்பாமல், தங்கள்

மனதை மாற்றிக் கொள்ளாமல், போதை மருந்துகளுக்கு அடிமையாகாமல் சட்டத்துக்கு கட்டுப்பட்ட குடிமகன்களாக இருக்க முடிவு செய்துள்ளதால், முறையான முடிவுகளை எடுக்க மக்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை சட்டத்துக்கு கட்டுப்பட்ட குடிமகன்களாக நிலைக்க செய்வதே முக்கியமான விஷயம் ஆகும். அடுத்த தலைமுறைக்கு வழங்க ஒரு மாபெரும் சக்தியாக முடிவெடுக்கும் சக்தி விளங்குகிறது.

சனிக்கிழமை

பாடம் 83

மிதமாக மதுபானம்

அருந்துதல்

மதுபானம் அதிக தவறாக புரிந்துகொள்ளப்பட்ட பொருளாக இருக்கிறது. தினசரி சிந்தனை மற்றும் கவலைகளால் தடையில்லாமல், ஒரு நபருக்குள் மெய்ஞ்ஞானம் சுதந்திரமாக பாய்ந்து செல்லும் பொருட்டு, உணர்வுள்ள மனதின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி உணர்வை உற்சாகப்படுத்துவதற்கு, பல கலாச்சாரங்களில் தொடக்கத்தில் இதை மதகுருமார்கள் மட்டுமே பயன்படுத்தி வந்தனர். ஜப்பானில் சேக் என்ற புளித்த அரிசியில் இருந்து தயாரிக்கப்படும் மதுபானம், கவிஞர்கள் பயன்படுத்தும் மருந்து நீராக கருதப்படுகிறது மற்றும் இது ஆன்மீக இயல்பை அதிகப்படுத்தி லௌகீக பற்றுக்களை குறைக்க பௌத்த சமய மற்றும் ஷின்டோ மடங்களில் வழங்கப்படுகிறது. நன்றாக புரிந்துகொள்ளப்பட்ட ஒரு தத்துவத்தின் அடிப்படையில், சேக் பானத்துடன் மனதை கட்டுப்படுத்தும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆஸ்டெக், மாயன், இந்துசமயத்தில் சில பிரிவுகள், கிறுத்துவம் மற்றும் யூதர்களின் கலாச்சாரங்களில், வைன் ஒரு புனிதமானதாக கருதப்படுகிறது. ¶ குறைவான மருத்துவ குணங்களுடன், பொது மக்கள் குடிக்கும் பியர், இந்த பிரிவை சேர்ந்தது இல்லை. பியர் மற்றும் வைன் இயற்கை பொருட்கள் மற்றும் இயல்பான நொதித்தல் செய்முறை மூலம் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் அதிக ஆல்கஹால் அளவைக் கொண்ட மதுபானங்கள் வடிக்கப்படுகின்றன. ஆல்கஹால் செறிவு இன்னொரு முக்கிய வித்தியாசம் ஆகும். பியரில் ஆல்கஹால் அளவு 3 முதல் 8 சதவீதம், வைன் பானத்தில் 9 முதல் 18 சதவீதம், ஆனால் வடிபானங்களில் அதன் அளவு 25 முதல் சுமார் 100 சதவீதம் வரை இருக்கிறது. மூன்றாவதாக குறிப்பிடப்பட்ட வடிபானத்தை பருகக்கூடாது என்று எங்கள் சாத்திரங்கள் தெரிவிக்கின்றன. ¶மதுபானம் பருகுவதைப் பற்றி மனிதன் பின்பற்றும் சமயங்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவிக்கின்றன. இதை தீவினைகளின் மூலமாக, மனிதன்

செய்யும் பாவங்களின் அடிப்படையாக இசுலாமிய சமயம் கருதுகிறது. இதை யூதர்கள், கிறித்துவர்கள் மற்றும் ஏனைய பிரிவினர் அளவோடு பருகுவதை ஏற்றுக்கொள்கிறார்கள், மற்றும் வழிபாட்டு தளங்களில் வைன் புனிதமான பொருளாக வழங்கப்படுகிறது. ஆசிய சமூகங்களில், மதுபானத்திற்கு எதிரான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. அதிலும் குறிப்பாக, அதிக ஆல்கஹால் அளவுடன் இருக்கும் வடித்த பானங்கள் விரைவாக மனதின் மீது தாக்கம் ஏற்படுத்தி, உடலை துன்புறுத்தி, கீழ்நிலை மனவெழுச்சிகளை அவிழ்த்து விடுகிறது. இதில் பட்டைச் சாராயம், பாத்டப் ஜின், வீட்டில் தயாரிக்கப்படும் ரம் மற்றும் வோட்கா ஆகியவை வீட்டில் தயாரிக்கப்படும் வடிபானங்களில் அடங்கும். ¶இந்து சமயத்தில் சில பாரம்பரியங்கள் மதுபான பயன்பாட்டை கடுமையாக நிந்திக்கின்றன, மற்றும் வேறு சில பாரம்பரியங்கள் மதுபான பயன்பாட்டிற்கு அனுமதி அளிக்கின்றன. குறிப்பாக சைவர்கள் மற்றும் சாக்தர்கள் இந்த பயன்பாட்டில் கனிவாக இருக்கிறார்கள் மற்றும் அவர்கள் மிதமான மற்றும் விவேகமான மதுபான பயன்பாட்டிற்கு தடை எதுவும் விதிப்பது இல்லை. உதாரணத்திற்கு, வட இந்தியாவில் சில *சைவ சந்நியாச* சமூகங்களில் மதுபானம் அருந்துவது ஒரு வழக்கமாக இருக்கிறது. இந்த வழக்கத்தை நமது பாரம்பரியம் ஏற்றுக்கொண்டு, இன்று கடைப்பிடித்து வருகிறது. உங்கள் பாரம்பரியம் முழுமையான மதுவிலக்கை மரபாக கொண்டிருந்தால், நீங்கள் அதை பின்பற்ற வேண்டும். உங்கள் பாரம்பரியம் வைன் அல்லது பியர் போன்ற மதுபானங்களை அருந்த தடை விதிக்கவில்லை என்றால், நீங்கள் அந்த பழக்கத்தை பின்பற்ற வேண்டும். ¶*கள்* போன்று ஆல்கஹால் அளவு அதிகமாக இருக்கும் மதுபானங்களை முழுமையாக தவிர்க்க வேண்டும் என்று *திருக்குறள்* மற்றும் *திருமந்திரம்* குறிப்பிடுவதாகவும், மிதாகார கட்டுப்பாட்டின் கீழ் ஆன்மீக மற்றும் சமய வாழ்க்கைக்கு ஹனி வைன் உட்பட பியர் மற்றும் வைன் போன்ற மதுபானங்கள் பயன்தருகிறது என்று *வேதங்கள்* மற்றும் *ஆயுர்வேத* நூல்கள் குறிப்பிடுவதாக யாழ்ப்பாண இந்து சமூகம் விளக்குகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 84

சைவ பாரம்பரியத்தில்

மதுபானம்

மதிய உணவு அல்லது ஒரு இரவு உணவின் போது, அல்லது அன்றைய *தார்மீக* கடமைகளை நிறைவேற்றி ஓய்வெடுக்கும் போது வைன் மற்றும் பியர் போன்ற பானங்களை அருந்துவதற்கான நேரமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு அலுவலகத்தில் பணியில் இருக்கும் போது, பூஜையின் போது அல்லது

அதிகாலை நேரங்களில் கண்டிப்பாக அருந்தக்கூடாது. ¶மேலும் மதுபானம் அருந்தி வாகனம் ஓட்டக்கூடாது என்பதில் சந்தேகமில்லை. இந்த விதி மற்ற பயங்கரமான நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். தூல உடல் மற்றும் உணர்வுள்ள மனதின் எதிர்வினை வேகத்தை மதுபானம் குறைப்பதால், பணியில் இருக்கும் போது, குறிப்பாக இரம்பம் மற்றும் துளைக்கும் கருவிகளைப் போன்ற தொழில்முறை உபகரணங்களை பயன்படுத்தும் போது மது அருந்தக்கூடாது. ஒன்று அல்லது இரண்டு கோப்பை வைன் அருந்தும் போது, நல்ல நட்பின் துணையுடன் இருக்க வேண்டும். மது அருந்துவதன் மூலம் ஆக்கத்திறன், நல்ல சிந்தனைகள், விவாதம், தத்துவம், உலகியல் பிரச்சனைகளுக்கு இயலுணர்வு தீர்வுகள், அனைத்து வகையான ஆரோக்கியமான சந்திப்புக்களின் உயர்ந்த பண்புகள் வெளிவர வேண்டும். மனச்சோர்வு, வேதனையில் இருக்கும் ஒருவர் மது அருந்தக்கூடாது. மோதல், வாக்குவாதம், சச்சரவு மற்றும் விமர்சனம், உடல் மற்றும் மனம் மற்றும் மனவெழுச்சி ரீதியான சித்திரவதை செய்யும் குழுவுடன் மது அருந்தக்கூடாது. அதனால் நாங்கள் மனிதநேயம் மற்றும் ஆன்மீகத்தின் வளர்ச்சிக்கு நல்ல நட்பு, நல்ல உரையாடல், ஆக்கத்திறன், ஓய்வு ஆகியவற்றை வலியுறுத்துகிறோம். இதன் காரணமாகவே, வைன் மற்றும் பியர் மதுபானங்களை இறைவன் படைத்து இருப்பதாக எங்களுக்கு தோன்றுகிறது. இவை இரண்டையும் அளவோடு பருகுவது நல்லது என்றாலும், அதிகமாக பருகுவது ஏற்றுக்கொள்ளப்படுவது இல்லை. ¶ஒரு மதுபான கோப்பையாக இருந்தாலும், அதை ஒருவர் தனியாக அருந்தக்கூடாது. நீங்கள் தனியாக அருந்தும் போது, எந்த சமூக கட்டுப்பாடுகளும் இருப்பதில்லை. அப்போது அது துணை மெய்ஞ்ஞானமாக இல்லாமல் அடிமனதின் அனுபவமாக மாறுகிறது. மேலும் சிலரால் தங்கள் இயல்புநிலை காரணமாக உடல், உளவியல் மற்றும் சமூகவியல் ரீதியான இன்னல்களைப் போன்ற பெரிய சேதங்களை ஏற்படுத்தாமல் மது அருந்த முடியாது. அவர்களுக்கு ஒரு கோப்பை பியரும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த விளைவுகள் தோன்றும் போது அவர்கள், அவர்கள் குடும்பத்தினர், அவர்களின் தொழில், அவர்களின் ஆன்மீக விரிவாக்கம் பாதிக்கப்படுகின்றன. அதனால் இத்தகைய நபர்கள் ஒரு ஆரோக்கியமான மற்றும் ஆனந்தமான வாழ்விற்கு எந்த சூழ்நிலையிலும் மதுபானத்தை தவிர்க்க வேண்டும். ஏழு சதவீத மக்கள் இந்த பிரிவை சேர்ந்தவர்கள் என்று புள்ளிவிபரம் குறிப்பிடுகிறது. ஒரு நபரால் எல்லோருக்கும் வேதனை என்று, அந்த நபருடன் மது அருந்துவதை அவர் நண்பர்கள் மறுப்பதன் மூலம், அவர் இந்த பிரிவை சேர்ந்தவர் என்பதை தெளிவாக தெரிந்துக் கொள்ளலாம். அவரை தொடர்ந்து கண்காணித்து ஒழுங்குபடுத்த நண்பர்கள் மற்றும் சகாக்கள் கடமைப்பட்டு இருக்கிறார்கள். அத்தகைய சூழலில் மிதமாக மது அருந்த வற்புறுத்துவது பயன் அளிக்காது. முழுமையாக விலகி இருக்க வேண்டும். ¶இதைப்போல, பெரும்பாலும் புகைப்பழக்கத்தைப் பற்றியும் எனக்கு

கேள்விகள் வருகின்றன. நீங்கள் ஒரு ஆனந்தமாக, ஆரோக்கியமான, ஆக்கப்பூர்வமான நீடித்த வாழ்க்கையை வாழ விரும்புகிறீர்களா அல்லது உலகில் மிகவும் மோசமான உடல் நலக்கேடாக இருக்கும் புகைப்பழக்கத்தால் ஏற்படும் அனைத்து நோய்களாலும் உங்கள் உடலை துன்புறுத்தி விரைவில் இறக்க விரும்புகிறீர்களா? "விரைவில் இறப்பதில் எனக்கு எந்த கவலையும் இல்லை மற்றும் இந்த பழக்கத்தால் ஏற்பட வாய்ப்புள்ள அனைத்து நோய்களையும் எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்," என்று நீங்கள் கூறினால், உங்கள் புகைப்பழக்கத்தை தாராளமாக தொடரலாம். எனக்கு விசுவாசமாக இருக்கும் எந்த சீடரும் புகைப்பதில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சாதனா

साधना



சாதனா

சமநிலமாக சுத்தமாக, கற்கள் நெருப்பு மற்றும் மாசு இல்லாமல், சப்தங்கள் மற்றும் ஈரப்பதம் இல்லாமல், மனதை ஒருமுகப்படுத்த உகந்ததாகவும் கண்களுக்கு சலிப்பூட்டாமலும், காற்றோட்டம் இல்லாத குகைகள் மற்றும் மற்ற இடங்களுக்கு சென்று மனதை கட்டுப்படுத்தும் பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

கிருஷ்ண யஜுர் வேதம், சுவேதாசுவதர உபநிடதம், 2.10. உபமா, ப. 88


Siva
ANIVE

பெட்ரோனாஸ் டவர்களுக்கு அருகில் வாழும் ஒரு மலேசிய நாட்டவர், காலையில் விநாயகர் பூஜையை முடித்துவிட்டு "மேர்ஜிங் வித் சிவா" (சிவபெருமானிடம் ஐக்கியமாதல்) *புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கிறார். அவரது இந்த முயற்சியை ஆசிர்வதிக்கும் விதமாக, அந்தர்லோகத்தில் இருந்து தேவ தூதர்கள் அவர் மீது பூக்கூடை நிறைய பூக்களை தூவிக்கொண்டு இருக்கிறார்கள்.*

திங்கட்கிழமை

பாடம் 85

சாதனா மற்றும்

ஐந்து கடமைகள்

நாம் நமது சமயத்தை படித்து அதில் பயிற்சி மேற்கொள்ளும் போது, நாம் ஆழமான *சாதனா* செய்ய வாய்ப்பில்லை. நாம் நமது சமய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த கடமைகள் *பஞ்ச நித்திய கர்மாக்களில்* தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதில் முதல் கடமையாக *தர்மம்* என்கிற முறையான நடத்தை இருக்கிறது. இது *திருக்குறள்* போன்ற நூல்களை பின்பற்றி வாழ்வதையும், செய்த தவறுக்கு பரிகாரம் செய்வதையும் குறிப்பிடுகிறது. I
இரண்டாவது கடமையாக, *உபாசனா* என்கிற வழிபாடு இருக்கிறது. இது விடியற்காலையில் எழுந்து *பூஜை, ஜபம்*, சாத்திர பாராயணம் மற்றும் தியானம் செய்வதை குறிப்பிடுகிறது. மூன்றாவது கடமையாக இருப்பது *உத்ஸவ* என்கிற புனிதமான நாட்களை குறிப்பிடுகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும் (அல்லது திங்கட்கிழமை) ஒரு புனிதமான நாளாக கடைப்பிடிப்பதோடு, வருடம் முழுவதும் முக்கிய பண்டிகை நாட்களை கடைப்பிடிப்பதையும் குறிப்பிடுகிறது. வார விடுமுறை நாட்களில், ஒருவர் வீட்டு பூஜை மாடத்தை சுத்தம் செய்து, அருகில் இருக்கும் கோயிலுக்கு செல்கிறார் மற்றும் விரதம் இருக்கிறார். எல்லா இந்துக்களுக்கும் நான்காவது கடமையாக *தீர்த்த யாத்திரை* விளங்குகிறது. இது வருடத்திற்கு குறைந்தபட்சம் ஒரு முறை வெளியூரில் இருக்கும் இந்து கோயிலுக்கு செல்வதை குறிப்பிடுகிறது. ஐந்தாவது *சம்ஸ்காரங்கள்* கடைப்பிடித்தலை குறிப்பிடுகிறது. இதில் *நாமகரணம்* என்கிற பெயர் சூட்டு விழா; *விவாஹம்* என்கிற திருமணம்; *அந்த்யேஷ்டி* என்கிற இறுதி சடங்குகள் அடங்கும். ¶இந்துவின் கடமையில் இன்னொரு முக்கிய அம்சமாக சேவை விளங்குகிறது. "மனிதன் பிறக்கும் போது, அவன் எந்த நிலையில் இருந்தாலும், அவனுடன் மகாதேவர்கள், முனிவர்கள், மூதாதையர்கள் மற்றும் மனிதர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களுக்கு தோன்றுகின்றன," என்று *வேதங்கள்* (*சுக்ல யஜூர் வேதம், SB* 1.7.2.1. வேஎ, ப. 393) நமக்கு நினைவூட்டுகின்றன. ஏழைகளுக்கு உதவுதல், வயதானவர்கள் மீது அக்கறை செலுத்துதல், பள்ளிகளை

நிர்மாணித்து, சொந்த குழந்தைகள் வளர்ப்பில் அகிம்சையின் உயரிய கோட்பாட்டை கடைப்பிடித்தல் ஆகியவை சமூக சேவையில் அடங்கும். இந்து சமயம் எல்லோருக்கும் பொதுவாக, சுதந்திரமாக மற்றும் அமைதியாக இருக்கிறது. இதை கோயில்களில், *ஆசிரமங்களில்*, *ஆதீனங்களில்*, திருவிழாக்களில், யாத்திரைகளில் மற்றும் வீடுகளில் உணரப்படுகிறது. ¶தனிப்பட்ட *சாதனா* என்பது ஒருவர் தனது வாழ்க்கையில் மதத்தை யதார்த்தமாக மாற்றிக்கொள்வதற்கு எடுத்து வைக்கும் முதல் நடவடிக்கை ஆகும். நாம் சாதனா மூலம் உடல் மற்றும் நரம்பு அமைப்பை கட்டுப்படுத்த கற்றுக்கொள்கிறோம், மற்றும் சுவாசத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் மனம் அமைதி அடைவதில் இருந்து நாம் அதை உணர்ந்துக் கொள்கிறோம். வீட்டில், வனத்தில், ஒரு நதிக்கு அருகில், பிடித்தமான மரத்திற்கு அடியில், கோயிலில், குருகுலங்களில் அல்லது சுத்தமான மற்றும் அமைதியான சுழல் நிலவும் ஒரு இடத்தில் *சாதனா* பயிற்சி செய்யப்படுகிறது. உறுதியாக *சாதனா* செய்ய தொடங்குபவர்கள், அதற்கு முன்பாக *விரதமும்* இருக்கிறார்கள். *விரதம்* என்பது ஒருவர் தான் தொடங்கிய ஒழுக்கங்களை ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடர்ந்து, முழுமையாக செய்வதற்கு, அவர் தனது குரு மற்றும் அந்தர்லோகத்தில் இருக்கும் தேவதூதர்களுடன் எடுத்துக்கொள்ளும் ஒரு தனிப்பட்ட உறுதிமொழி ஆகும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 86

உங்கள் சாதனாவில்

ஒன்றிவிடுதல்

இங்கிருக்கும் பலர், என்னுடன் கடந்த சில நாட்களாக படித்து வருகிறீர்கள் மற்றும் இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் எவ்வாறு ஒரு நல்ல மதசார்ப்புள்ள வாழ்வை வாழவேண்டும் என்பதை அறிந்து இருக்கிறீர்கள். அடுத்தடுத்து வரக்கூடிய தலைமுறைகளுக்கு சைவ தர்மத்தின் அறிவை எவ்வாறு பரப்ப வேண்டும் என்பதை நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். இருந்தாலும் உங்களது சொந்த குடும்பம் மற்றும் உங்கள் வீட்டிற்கு வெளியே சைவ தர்மத்தை கற்றுக்கொடுப்பதற்கு, உங்களிடம் போதிய நம்பிக்கை இல்லாமல் இருக்கக்கூடும். தனது சமயத்தைப் பற்றி பல தகவல்களை அறிந்த சைவர்கள் மேலும் பல தகவல்களை அறிந்து பயனடைவதற்கு, தான் சைவ சமயம், வைணவ சமயம், சாக்த அல்லது சுமார்த்த சமயத்தை சேர்ந்தவரா என்பதை அறியாத இந்து, அதன் வித்தியாசத்தை புரிந்துக்கொண்டு, நமது பாரம்பரியத்தில் இருக்கும் நான்கு மாபெரும் சமயங்களில் ஏதாவது ஒன்றை

முழுமையாக பின்பற்றும் நோக்கத்துடன், நீங்கள் எல்லோரும் சைவ தர்மத்தின் ஆசிரியர்களாக இருப்பதற்கு உங்களை தயார் செய்துக்கொண்டு இருக்கிறீர்கள். நம்பிக்கையுடன் பாடம் நடத்துவதற்கு, நீங்கள் உங்களுக்கு பயிற்சி அளித்துக் கொள்ளவேண்டும். இது ஒரு ஆன்மீக பயிற்சியாக இருப்பதால், நீங்கள் தினமும் *சாதனா* செய்து உங்களுக்கு பயிற்சி அளித்துக் கொள்ளவேண்டும். ¶யார் *சாதனாவின்* பாதையை தொடங்கி வைக்கிறார்? இந்து சமூகத்தில் இருக்கும் சான்றோர் அல்லது ஒருவரின் *சத்குருவின்* மூலம் *சாதனா* தொடங்கி வைக்கப்படலாம். உங்களின் முதல் குருமார்களாக இருக்கும், உங்கள் பெற்றோர்களும், தங்கள் குழந்தைகளுக்கு *சாதனாவின்* பாதையை தொடங்கி வைக்கலாம். அல்லது ஒரு புத்தகத்தை படித்து, உங்களுக்கு நீங்கள் அமைத்துக் கொள்ளலாம். *யோகா, சாதனா* மற்றும் தியானத்தின் அடிப்படைகளை எடுத்துத்துரைக்கும் பல நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. ¶*சாதனா* எங்கே தொடங்கவேண்டும்? அது வீட்டிற்குள், உங்களுக்குள் தொடங்குகிறது. இந்த பழங்கால ஞானத்திற்கு இந்தியாவில் மட்டும் இன்றி, வரலாற்றில் இருக்கும் பல தலைசிறந்த நாகரிங்கள் மூலமாகவும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதற்கு சான்றாக, பிரபலமான ஒரு கிரேக்க கோயிலின் சுவர் மற்றும் கிரேக்கர்களின் புனித தளமான டெல்ஃபியில் ("உங்களை புரிந்துகொள்ளுங்கள்" என்று பொருள்படும்) "நோ தைசெல்ப்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. பல அம்சங்களில் இந்து சமயத்தைப் போன்றிருந்த கிரேக்கர்களின் மதம், நீண்டகாலம் முன்பே அழிந்து விட்டாலும், தற்போது இருக்கும் கோயிலின் அழிபாடுகள் அதன் சிறப்பை உறுதிப்படுத்துகின்றன. உங்கள் மனம், உடல் மற்றும் மனவெழுச்சிகளை *சாதனா* மூலம் ஒழுங்குப்படுத்தும் போது, நீங்கள் உங்களைப் பற்றிய ஆன்மீக புரிதலுக்குள் தொடர்ந்து நுழைந்து கொண்டிருக்கிறீர்கள். ¶சுவாசத்தை ஒழுங்குப்படுத்தும் போது, மனம் கட்டுப்பாட்டை இழக்க வாய்ப்பில்லை, மற்றும் சுவாசத்தை சிறிது நேரம் பிடித்து நிறுத்தும் போது, ஒரு சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட சிந்தனைகள் மனதில் இயங்கிக் கொண்டிருக்க வாய்ப்பில்லை என்பதையும் நீங்கள் முதலில் தெரிந்துக் கொள்வீர்கள். திரைத்தசை வழியாக சுவாசிப்பதால் நரம்பின் ஓட்டங்கள் அமைதி அடையும் போது, பதட்டத்துடன் இருக்க வாய்ப்பில்லை என்பதையும், உங்கள் பிரச்சனைகள், தொல்லைகள் மற்றும் அச்சங்களை உளவியல் ரீதியான ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இல்லாமல், உங்களுக்குள் இருக்கும் மாபெரும் வெறுமைக்குள், ஆன்மீக கல்வியின் பெரிய கூடங்களில், அவற்றை உள்வாங்கிக் கொள்ளவும் முடியும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். ¶உங்களது தினசரி *சாதனா* நேரத்தில் முக்கிய அங்கமாக விளங்கும், சாத்திரம் கேட்பதை தொடர்வதன் மூலம், உங்கள் துணை மெய்ஞ்ஞான மனதை தொடர்பு கொண்டு அந்த கேள்வி ஞானத்தை உங்களது சொந்த ஆன்மீக புரிதலுடன் பூர்த்தி செய்ய முடியும் என்பதை நீங்கள் விரைவில் புரிந்துக் கொள்வீர்கள். நீங்கள் உங்கள் *சாதனாவில்* நன்றாக ஒன்றிய பிறகு,

உங்கள் உடல், உங்கள் சுவாசம், உங்கள் நரம்பியல் அமைப்பு மற்றும் உங்கள் மனதை ஒழுங்குப்படுத்தும் வலுவான திறமையை நீங்கள் ரசிக்கத் தொடங்குவீர்கள். ¶சுவாசத்தை கட்டுப்படுத்துவதற்கு, நாம் முதலில் சுவாசம் மற்றும் நுரையீரல், உடல் அமைப்பு மற்றும் அதன் வழியாக எவ்வாறு *பிராணன்* இயங்குகிறது என்பதை ஆய்வு செய்து புரிந்துக்கொள்வது முக்கியம் என்பதை நாம் முதலில் தெரிந்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நமது உடலுக்குள் சிந்திக்கும் மனதை கட்டுப்படுத்தும் நுணுக்கமான அமைப்பைப் பற்றி நம்மால் புரிந்துகொள்ள முடியும். இதன் பிறகு நாம் மனதை முழுமையாக ஆய்வு செய்ய தயாராகி விடுவோம்.

புதன்கிழமை

பாடம் 87

மனதின்

ஐந்து நிலைகள்

மேர்ஜிங் வித் சிவா (சிவபெருமானுடன் ஐக்கியமாதல்) புத்தகத்தில், நாம் மனதின் முழுமைப் பற்றி ஒரு உயர்ந்த விசாரத்தை மேற்கொண்டோம். இங்கே நாம் மனதின் ஐந்து நிலைகளைப் பற்றி மறு ஆய்வு செய்வோம். நமது வெளிப்புற மனமாக உணர்வுள்ள மனம் இருக்கிறது. அடிமனம் நமது நினைவில் இருக்கும் பழக்கங்கள் மற்றும் கடந்தகால அபிப்பிராயங்கள் அனைத்தையும் கொண்டுள்ளது. அடிமனதிற்கு துணையாக இருக்கும் மறைந்திருக்கும் பண்புகளின் மனம், இதுவரை வெளிப்படாத *கர்மவினைகளின் பீஜங்களை* தக்க வைத்திருக்கிறது. அடிமனதின் துணையுடன் துணை மெய்ஞ்ஞான மனம் செயல்படுகிறது, மற்றும் அதன் விளைவாக தினமும் இயலுணர்வு செயல்படுகிறது. ஆக்கத்திறன் உங்கள் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. உங்கள் மெய்ஞ்ஞான மனதில் இயலுணர்வு குறிப்பீடுகள் தோன்றுகின்றன. மற்ற நிலைகளின் தலையீடு இல்லாமல், விழிப்புடன் சச்சிதானந்தம், மெய்ஞ்ஞான மனதில் நிலைத்து இருக்கும் முழுமையான ஆன்மீக புரிதலை சிவபெருமானின் அருளால் தேர்ச்சி பெற்ற ஒரு சூட்சும ஞானி அடைந்ததும், அவரால் தனது விருப்பத்திற்கு ஏற்ப, விழிப்புடன் ஒரு நாட்டில் அல்லது அதே சமயத்தில் இன்னொரு நாட்டில் இருக்க முடிகிறது. ¶ஆமாம், *சாதனா* வீட்டில் தொடங்குகிறது, மற்றும் அது உங்களுடன் தொடங்குகிறது. அதை ஒரு நாள் இரண்டு மணிநேரம், அடுத்த நாள் ஒரு மணி நேரம் செய்து, ஆனால் அதற்கு அடுத்து நீங்கள் வெளிப்புற விவகாரங்களில் தீவிரமாக ஈடுபட்டு அதைப்பற்றி மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு மறந்து விடாமல், தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடர்ந்து செய்ய வேண்டும்.

உங்களுடனான இந்த முன்னேற்பாட்டை பூர்த்தி செய்வதே ஒரு *சாதனா* தான். இந்த தொழில்நுட்ப யுகத்தில், *சாதனா* செய்ய தினமும் ஒரு மணி நேரத்தை ஒதுக்குவது பெரும்பாலும் எல்லோருக்கும் கடினமாக இருக்கிறது. இதன் காரணமாகவே, உங்கள் *சாதனா விரதத்தில்* தினமும் அரை மணிநேரத்தை அர்ப்பணிக்க உறுதி எடுக்கிறீர்கள். விவசாயத்தை சார்ந்து இருந்த காலத்தில், தினமும் *சாதனா* செய்ய இரண்டு அல்லது மூன்று மணிநேரத்தை ஒதுக்குவது எளிதாக இருந்தது. ஏன்? இந்த தொழில்நுட்ப யுகத்தில் இருப்பதைப் போல, அன்று வெளிப்புற வாழ்க்கையையின் தேவைகள் அதிகமாக இருந்தது இல்லை. அதனால் நமது *சாதனாவை* செய்ய தினமும் அரை மணிநேரம் ஒதுக்குகிறோம். ¶*பிரம்மச்சாரிகள்* மற்றும் *பிரம்மச்சாரினிகள்* தத்தம் *குருகுலங்களில், சாதனா* செய்ய தங்களது நேரத்தை ஒதுக்குகிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றாக காலையில் சீக்கிரம் எழுந்து, தங்கள் *சாதனாவை* ஒன்றாக செய்து, பிறகு தங்களது தினசரி வேலைகளுக்கு செல்கின்றனர். அவர்கள் பெற்ற புதிய திறமைகள் மூலம் அவர்களால் சிக்கல்கள் வெற்றிகரமாக எதிர்கொள்ளப்பட்டு, வாக்குவாதம் மற்றும் மோதல் தவிர்க்கப்படுவதால், தொடர்ந்து *சாதனாவை* பயிற்சி செய்வதன் மூலம், தங்களுக்குள் நல்ல ஒற்றுமை நிலவுவதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர். உலகெங்கும் பரவியிருக்கும் இந்த *குருகுலங்களில்* சாத்திரம் கேட்டல், ஜபமாலையின் துணையுடன் இறைவன் நாமங்களை ஜபித்தல், குழுவாக செய்யும் பஜனை, தேவாரப் பாடல்கள் மற்றும் மனதை ஒன்றின் மீது ஒருமுகப்படுத்தி கவனம் சிதறும் ஒவ்வொரு முறையும் அதை மீண்டும் ஒருமுகப்படுத்தும் *யோகப்* பயிற்சிகள் என்று பல்வேறு வகையான *சாதனாக்கள்* நடைபெறுகின்றன. ஒழுங்குமுறை அதிகமாக இருக்கும் *குருகுலங்களில்*, தினமும் தவறாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குழு *சாதனாவிற்கு* ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு ஆச்சாரமான சைவ வீட்டின் வாழ்க்கை பூஜை அறை மற்றும் ஒருவரின் தனிப்பட்ட தினசரி பிரார்த்தனையை மையமாக கொண்டிருப்பதைப் போல, இவர்களின் வாழ்க்கை இந்த *சாதனாவை* சுற்றி அமைந்து இருக்கிறது.¶தினசரி வாழ்க்கையில் நீங்கள் எதற்கு முக்கியத்துவம் அளிக்கிறீர்கள் என்று உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். உங்கள் மனவெழுச்சிகள் முதலில் வருகிறதா? உங்கள் புத்தி முதலில் வருகிறதா? உங்களுடைய உள்ளுணர்வு தூண்டுதல்கள் முதலில் வருகிறதா? கவலைகள் மற்றும் அச்சங்கள் மற்றும் சந்தேகத்தை வெற்றிகொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள் முதலில் வருகிறதா? உங்களது ஆக்கத்திறன், மனித நேயத்தின் மீதான உங்கள் அன்பு, இறைவன் மற்றும் உங்களுக்குள் இருக்கும் அமைதிக்கான வேட்கை முதலில் வருகிறதா? நீங்கள் எதற்கு முன்னுரிமை அளிக்கிறீர்கள்? *பஞ்ச நித்திய கர்மவினைகள்* நமது சமயம் சார்ந்த முன்னுரிமைகளைப் பற்றி சுருக்கமாக விவரிக்கிறது. இந்த ஐந்து கடமைகளை நிறைவு செய்வதில் உங்கள் ஆன்மீக முன்னுரிமைகளும் நன்றாக

விளக்கப்பட்டு இருக்கவேண்டும், மற்றும் அவற்றில் நீங்களே உங்களுக்கு விளக்குவதன் மூலம் "உங்களை நீங்கள் நன்றாக புரிந்துகொள்ள முடியும்."

வியாழக்கிழமை

பாடம் 88

கேள்விகள் மற்றும்

சவால்கள்

நீங்கள் உங்கள் தினசரி *சாதனாவை* தொடங்கும் போது, ஒரு விசித்திரமான முறையில் தொடங்க வாய்ப்புள்ளது, மற்றும் உங்களைப் பற்றி தெரிந்துக் கொள்ள விரும்பாத முறையில் தெரிந்துக்கொள்ள வாய்ப்புள்ளது. நீங்கள் அமைதியாக உட்காரும் போது, மனம் கட்டுப்படுத்த முடியாமல் அலைந்து திரிந்தால், நீங்கள் நம்பிக்கை இழக்க வேண்டாம். உங்களால் தினமும் அரை மணி நேரம் அமைதியாக உட்கார முடியவில்லை என்றால் நம்பிக்கை இழக்க வேண்டாம். *சாதனாவை* தொடர்ந்து பயிற்சி செய்யும் போது மனம் உறுதி அடைந்து புத்தி சுத்தமடைவதால், நீங்கள் நிலைத்து இருக்கும் போது, இந்த தடைகள் அனைத்தும் விரைவில் வெற்றிக்கொள்ளப்பட்டு மனஉறுதி வெளிப்படும். கவனத்தை தொடர்ந்து ஒருமுகப்படுத்தும் போது, சாட்சி வெளிப்புற மனதில் இருந்து தன்னை துண்டித்துக் கொண்டு உட்புறமாக சுற்றி, தூல உடல், சுவாசம் மற்றும் உணர்ச்சிகளின் அறிவை உட்புறமாக்கிக் கொள்கிறது. உடல், மனம் மற்றும் மனவெழுச்சி சக்திகளின் ஒருமுகப்பாடு, நம்மை தானாகவே தியானம் மற்றும் அதிக ஆழமாக உட்புறமாக இருக்கும் சாட்சிக்குள் அழைத்து செல்கிறது. ¶ஆன்மீக பயிற்சிக்கு அதிக நேரம் தேவைப்படாமல் யதார்த்தமாக இருக்க வேண்டும், மற்றும் அதை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இந்து *சாதனாவை* செய்யத் துவங்கும் பல சாதகர்கள், விரைவாக பலன்களை பெறவேண்டும் என்பதற்காக, அதிக தீவிரமாக செயல்படுகிறார்கள். தினமும் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் சாதனா செய்து சோர்வடைவதால், அதை முழுவதுமாக நிறுத்தி விடுகிறார்கள். ஆரம்பநிலையில் இருப்பவர்கள் பின்வரும் யுத்தியை பயன்படுத்தலாம். திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருபது முதல் அரை மணி நேரம் வரை *சாதனா* செய்து, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் *சாதனா* செய்யாமல் இருக்கலாம். ¶அளவோடு தொடர்ந்து செய்வதே முக்கியம் ஆகும். *கர்மவினையின்* மீது வெற்றிக்கொள்வதற்கு தொடர்ச்சி முக்கியம் ஆகும். நீங்கள் சாதனாவில் அதிகமாக அல்லது அவ்வப்போது ஈடுபட்டாலும், நீங்கள் எளிதில் பின்வாங்க வாய்ப்புள்ளது. நீங்கள் பின்வாங்குவதால் விளைவு

என்னவாக இருக்கும்? உங்களை பயம், கோபம், பொறாமை மற்றும் குழப்பம் தொற்றிக்கொள்கிறது. நீங்கள் முன்னேறும் போது விளைவு என்னவாக இருக்கும்? உங்களிடம் தைரியம், அமைதி மற்றும் சுய நம்பிக்கை குடிகொண்டு மனதில் அமைதி பிறக்கிறது. ¶தியானம் மற்றும் சமயம் சார்ந்த பக்தி, உலக வாழ்க்கையை துறப்பதற்கு காரணமாக இருக்கும் என்று பலர் அஞ்சுகிறார்கள். நான் விளக்கிய *சாதனா* பயிற்சி, உலக வாழ்க்கையில் பற்றற்று இருத்தல் அல்லது அதை அலட்சியப்படுத்தும் குணத்தை வழங்குவதில்லை. அதற்கு பதிலாக அது உங்களுக்குள் ஒரு சக்தியை வரவழைத்து, ஒரு நேர்மறையான முறையில் லௌகீக ஆற்றல்களை இயக்கும் திறமையை உங்களுக்கு வழங்குகிறது. "லௌகீக ஆற்றல்களை இயக்குதல்" என்றால் என்ன? நீங்கள் உங்களுக்கு அமைத்த யதார்த்தமான குறிக்கோள்களை நிறைவு செய்வதை குறிக்கிறது. நீங்கள் உங்கள் பணியை ஒரு தொழிலதிபர் அல்லது ஒரு பணியாளராக, மிகவும் சிறந்த முறையில் செய்து முடிப்பதை குறிக்கிறது. அதாவது உங்கள் மனம் மற்றும் மனவெழுச்சி மற்றும் சகிப்புத்தன்மையை முழுமையாக பயன்படுத்தி, அதன் மூலம் நாளுக்கு நாள் வலுவடைவதை குறிப்பிடுகிறது. நீங்கள் தொழில்நுட்ப யுகத்தில் இருக்கும் உலகில் வாழ்ந்து வருகிறீர்கள். ¶நீங்கள் செய்யும் *சாதனா* மூலம், உங்கள் மனம் நிலைகொண்டு உங்கள் முயற்சி வலுவடைகிறது. இதனால் கோபம், வெறுப்பு, விரோதம், சூழ்ச்சி, பொறாமை மற்றும் பேராசையை பயன்படுத்தாமல் அன்பு மற்றும் புரிந்துணர்வின் மூலம் உங்களால் தூல உலக சக்திகளை இயக்க முடியும். தினமும் முறையாக *சாதனா* செய்வதால், இந்த உள்ளுணர்வு தடைகள் மீது வெற்றி கிடைத்து, மனதின் அமைதி மற்றும் இருப்பின் முழுமைக்கு வழிவகுக்கும். உங்களுக்கு குழந்தைகள் இருந்தால், அவர்கள் நல்ல பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு நீங்கள் செய்யும் *சாதனாவின்* பலன்கள் உதவியாக இருந்து, நீங்கள் ஆன்மீக வாழ்க்கையில் பெறும் முன்னேற்றம் காரணமாக தானாக வந்து சேரும் செல்வ செழிப்பு, அவர்களின் அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்கிறது. ¶தினமும் செய்யும் *சாதனா* மூலம், நாம் நமது உடல், மனவெழுச்சிகள், நரம்பியல் அமைப்பு, சுவாசம் மற்றும் மனதின் முழுமையைப் பற்றி தெரிந்துகொள்கிறோம். உங்களில் ஒவ்வொருவரும் விரைவாக உங்கள் அடியுணர்வில் இருக்கும் கசடுகள் அனைத்தையும் மனப்பூர்வமாக களைந்து எடுத்து, உங்களுக்குள் இருக்கும் ஆன்மீக புரிதலின் மிகப்பெரிய குழியில், உள்வாங்கப்பட்டு கரைக்கப்பட்டு மறைக்கப்படுவதற்கு மகாதேவர்களின் திருவடிகளில் சமர்ப்பித்து விடுங்கள். தினமும் *சாதனா* பயிற்சி மேற்கொள்வதன் மூலம், இவையும் இதற்கு மேலும் பல பலன்களும், உங்களில் ஒவ்வொருவருக்குள்ளும் விரிவாக்கம் பெறும். நமது சமயம் நமக்கு வழங்கிய மிகப்பெரிய வரமாக *சாதனா* விளங்குகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 89

காவல்

தேவதைகள்

நீங்கள் தினமும் உங்கள் *சாதனாவை* செய்து வருவதை உங்கள் வீட்டில் இருக்கும் தேவர்கள் தெரிந்து கொண்டால், அவர்கள் உங்களுக்கு ஒரு சூட்சுமமான ஆன்மீகப் பாதுகாப்பை வழங்குவார்கள். அவர்கள் உங்களை சுற்றிக்கொண்டு, உங்கள் அக்கம்பக்கத்து வீடுகள் அல்லது நெருக்கமான நண்பர்கள் மற்றும் சொந்தங்களிடம் இருக்கும் வரும் தேவையற்ற சிந்தனை வடிவங்களை தடுக்கிறார்கள். உங்கள் வீட்டில் இருக்கும் சூழல் உற்சாகமாக இருந்து, உங்களுக்குள் நீங்கள் ஆய்வு செய்ய ஒரு முறையான சூழ்நிலையை வழங்கும் பொருட்டு, அவர்கள் எல்லோரும் "ஓம் நமச்சிவாய" என்று சொல்லிக்கொண்டு, உயர்ந்த எண்ணங்கள் மற்றும் *மந்திரங்கள்* மூலம் உங்கள் வீட்டின் சூழலை துடிப்புணர்வுடன் வைத்து இருக்கிறார்கள். ஒரு முன்னேற்பாட்டை உங்களுடன் மட்டுமல்லாமல் தேவர்களுடனும் செய்துக்கொள்ள வேண்டும். *சாதனா* செய்ய ஒரு குறிப்பிட்ட நேரத்தை தேர்ந்தெடுத்து, தினமும் அதை சிரத்தையுடன் கடைப்பிடிப்பதற்கு, தேவலோகத்தின் ஈடுபாடும் இன்னொரு முக்கிய காரணமாகிறது. ¶*பஞ்ச நித்திய கர்மாக்களை* செய்து, உங்கள் சக்திக்கு ஏற்ப *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* கடைப்பிடித்து, தினமும் *சாதனா* செய்யும் போது, உங்கள் இதயத்தில் உங்கள் சமயம் உங்களை அதிகமாக நெருங்கிக்கொண்டு இருக்கிறது. உங்களுக்குள் இறைவன் இருக்கிறார் என்பதை நீங்கள் அறியும் அளவிற்கு நீங்கள் அமைதி அடைந்து, சச்சிதானந்தத்தில் எந்த வித்தியாசமும் இல்லை மற்றும் சிவபெருமானின் மெய்ஞ்ஞான மனமும் உங்கள் மனமும் ஒன்று என்ற அனுபவத்தை பெறுவதால், அவர் உங்களுக்குள் மற்றும் கோயிலில் இருக்கிறார் என்பதை நீங்கள் விரைவில் தெரிந்துக்கொள்ள தொடங்குவீர்கள். இந்த நிலையில் இருக்கும் போது, உங்களுக்கு உணர்வுள்ள மனம் "கண்காணிப்பாளராக" தோன்றும் மற்றும் நினைவில் இருக்கும் அறிவுணர்வு மற்றும் மனவெழுச்சி பழக்கங்களின் சேமிப்பு கிடங்காக அடியுணர்வு தோன்றும். அன்பின் மூலம் பூலோக சக்திகள் ஊக்குவிக்கப்பட்டு, சிவபெருமானுடன் வாழ்ந்துகொண்டு நீங்கள் தேர்ந்தெடுத்த *தர்மத்தை* நிறைவேற்றும் போது, உங்களின் தினசரி வாழ்வில் துணை மெய்ஞ்ஞான மனதின் ஆக்கத்திறனை நீங்கள் அனுபவிக்க தொடங்குவீர்கள். ¶இவ்வாறு நமது சமயம் தொடக்க நிலைகளில் இருந்து மிகவும் உயர்வான நிலை வரை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட சமயமாக இருக்கிறது. நீங்கள் முன்பே

கோயிலில் இருக்கும் அற்புதத்தை அறிந்துகொண்டு, உங்கள் வீட்டில் இருக்கும் பூஜை அறையில் உற்சாகம் அளிக்கும் அனுபவங்களை பெற்று இருக்கிறீர்கள். தற்போது உங்கள் சாதனாவை செய்யும் போது, நீங்கள் சுய மாற்றத்தின் பாதையில் உங்களுக்குள் ஆன்மீக அனுபவங்களை ரசிக்கிறீர்கள். ¶உங்கள் சமயத்தை அனுட்டானம் செய்வது உங்கள் பொறுப்பு ஆகும். *பூஜையில்* மகாதேவர்களின் சக்தியை உணருங்கள். உங்களால் அவர்களை உணரமுடியவில்லை என்றால், நீங்கள் சடங்கை மேலோட்டமாக செய்து எந்த உணர்வையும் பெறவில்லை என்றால், நீங்கள் விழிப்புடன் இல்லை என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். கோயில் வழங்கும், *குரு* வழங்கும், *தேவர்கள்* வழங்கும், நீங்கள் வாழ்வதற்காக பிறவி எடுத்த உங்கள் வாழ்க்கை வழங்கும் ஒவ்வொரு அனுபவத்தில் இருந்தும் அதிக பயன்களை பெறுங்கள். இவ்வாறு செய்யும் போது, *குண்டலினி* மெதுவாக தன்னை விடுவித்து, கண்ணுக்கு தெரியாமல் தனது *யோகத்திற்குள்* உயர்கிறது. ஒரு மரம் எப்போதும் சூரியனை நோக்கி வளர்வதைப் போல, *குண்டலினியும்* தனது மூலத்தை நாடுவதைத் தான் *யோகம்* செய்கிறது. ¶உங்களின் தினசரி சமய அனுட்டானங்களில் நிலைத்து இருந்து, ஒவ்வொரு புதிய கோட்பாட்டையும் புரிந்துகொள்ள முயற்சி செய்வதன் மூலம், உபதேசங்களை உங்கள் அங்கமாக்கிக் கொள்வது உங்கள் பொறுப்பு ஆகும். இதன் காரணமாக, வெளியுலக சக்திகளால் கவனம் சிதறாமல் அவற்றை தைரியமாக எதிர்த்து நின்று, நீங்கள் தேர்ந்தெடுத்த *தர்மத்தை* பூர்த்தி செய்யவும் முடியும். தினசரி *சாதனா* உங்கள் நரம்பியல் அமைப்பை ஒழுங்குப்படுத்துவதால், உங்கள் லௌகீக பணியின் தரம் உயர்வதோடு, நீங்கள் அதில் நம்பிக்கை மற்றும் அமைதியான மனநிலையுடன் செயல்படுகிறீர்கள். ¶*சாதனா* வலுவடைந்ததும், நீங்கள் உங்களுக்குள் ஒரு வலுவான அமைதியை அனுபவிக்கக்கூடும். மனதின் சகஜ நிலையாக, தியானத்தின் மூலம் நீங்கள் பெறும் அமைதி சச்சிதானந்தம் என்று அழைக்கப்படுகிறது. அந்த நிலையை அடைவதற்கு, உள்ளுணர்வு சக்திகள் *அனாஹத சக்கரம்* மற்றும் அதற்கு மேலே உயர்த்தப்பட்டு, மனம் முற்றிலும் அமைதியான நிலையை அடைகிறது. நீங்கள் உங்கள் நினைவாற்றல், உங்கள் பகுத்தறிவை பயன்படுத்தாமல், உங்கள் மனஉறுதியை பயன்படுத்தி உலக சக்திகளை இயக்க முயற்சி செய்வதே இதற்கு காரணம். நீங்கள் உங்களுக்குள் மட்டுமே வாசம் செய்கிறீர்கள். அதனால் நீங்கள் எப்போதாவது உங்கள் புறப்பகுதியினால் கவலையில் இருந்தால், அமைதியான அகநிலைக்கு அவ்வப்போது திரும்புங்கள். நீங்கள் இதை உங்கள் "வீடாக" அழைக்கலாம். இந்த நிலையில் இருந்து, நீங்கள் வெளியுலகில் எவ்வாறு செயல்படவேண்டும், உங்கள் எதிர்காலம் மற்றும் உங்கள் முன் இருக்கும் பாதை பற்றி ஒரு தெளிவான கண்ணோட்டத்தை பெற முடியும். இந்த மெய்ஞ்ஞான நிலை, "வழக்கமான உணர்வை கடந்த நிலையை" குறிப்பிடுகிறது. அதனால் நீங்கள்

கவனமாக இருக்கிறீர்கள் என்பதில் கவனம் செலுத்தி இந்த ஆன்மீக நிலையை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.

சனிக்கிழமை

பாடம் 90

பிராண சக்திகளை

கட்டுப்படுத்துதல்

நமது சங்கத்தை சேர்ந்த ஒவ்வொரு குடும்பமும், தங்கள் குழந்தைகளுடன் தங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு, *சாதனா* செய்ய முடிவு செய்யும் போது, மிகப்பெரிய *பிராண* சக்தியின் ஓட்டம் தொடங்குகிறது. இதன் மூலம் *பிராண* சக்தி கட்டுப்பாட்டை பெறுகிறது. *பிராண* சக்தி அந்த நபரின் கட்டுபாட்டில் இல்லை என்றால், அது மற்றவர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. *பிராண* சக்தியை நேர்மையாக அல்லது எதிர்மறையாக கட்டுப்படுத்துவதற்கு, கட்டுப்படுத்தும் சக்தி தான் தேவைப்படுகிறது. உங்களால் உங்கள் *பிராண* சக்தியை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், தங்கள் *பிராண* சக்தியை கட்டுப்படுத்தும் மற்றவர்களால் உங்களுக்கு உதவ முடியும் என்பதால், "நல்லவர் நட்புறவை நாடுகள்" என்று நாம் குறிப்பிடுகிறோம். அந்த குழு ஒரு தனி நபருக்கு உதவி செய்கிறது மற்றும் அந்த தனி நபர் குழுவிற்கு உதவியாக இருக்கிறார். நீங்கள் தீயவர்கள் நட்புறவில் சேரும் போது, *பிராண* சக்திகள் தடுமாற்றம் அடைகிறது. அவ்வாறு நடக்கும் போது, உங்கள் சக்திகள் தனது கட்டுப்பாட்டை இழந்த குதிரைகள் குழு போல காட்சி அளிக்கின்றன. அந்த *பிராண* சக்திகளை மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, அந்த நபர் தனது திறமை மற்றும் வலிமையை அதிகமாக பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ¶அந்தர்லோகத்திலும் *பிராண* சக்திகளை கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம் ஆகும். நீங்கள் தூல உடலை விட்டு வெளியேறும் போது, நீங்கள் உங்கள் சூட்சும உடலில் இருக்கிறீர்கள். "சருமத்தில் மூடப்பட்டு இருக்கும் முப்பத்தி இரண்டு வகை மாசுகள்" என்று பௌத்தர்கள் தூல உடலை குறிப்பிடுவது போல, அந்த சூட்சும உடல் சதை மற்றும் எலும்புகளால் உருவாக்கப்படவில்லை. சூட்சும உடல் *பிராண* சக்தியால் உருவாக்கப்பட்டது. அது மிதக்கிறது. அது பறக்கிறது. அது உங்கள் மனதால் வழிநடத்தப்படுகிறது, மற்றும் அது மறைஞான *பிராண* சக்தியாக இருக்கும் ஆன்மீக சக்தியால் உருவாக்கப்பட்டது. நீங்கள் செல்ல விரும்பும் இடத்தில் உடனடியாக இருப்பீர்கள். இதை நீங்கள் உங்கள் உறக்கத்தில், கனவுகளில் மற்றும் மரணத்திற்கு பிறகும் செய்கிறீர்கள். உங்களில் பலர் சூட்சும அனுபவங்களை பெற்று இருக்கிறீர்கள் மற்றும் உங்கள் சூட்சும உடல் தூல

உடலில் இருந்து பிரிந்ததும், உங்களால் விரைவாக எங்கும் செல்ல முடியும் என்பதை உங்களால் உறுதிப்படுத்த முடியும். ஆனால் உங்களுக்கு *பிராண* சக்தியின் மீது கட்டுப்பாடு இல்லையென்றால், உங்களுக்கு உங்கள் சூட்சும உடல் மீது கட்டுப்பாடு இருக்காது. அப்படி என்றால், இறந்ததும் தூல உடலை விட்டு பிரியும் போது, நீங்கள் இங்கே செல்வீர்கள்? நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு, நீங்கள் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் அந்த ஆசைகளால் ஈர்க்கப்படுகிறீர்கள். அதைப்போன்ற நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றும் மக்கள் குழுக்களால் நீங்கள் ஈர்க்கப்படுகிறீர்கள், மற்றும் உங்கள் உணர்வு கீழ்நிலை சக்கரங்களுக்குள் செல்கிறது. உங்கள் சூட்சும உடலை கட்டுப்படுத்துவதன் மூலமாக, நீங்கள் உங்கள் *ஆனந்தமய கோசத்தின்* மீது கட்டுப்பாட்டை பெறுகிறீர்கள், மற்றும் அது உங்கள் சூட்சும உடலில் வாசம் செய்து உயர்ந்த சக்கரங்களின் சக்திகளுடன் இணைந்து அதிர்ந்து கொண்டிருக்கிறது. ¶எனது *சத்குருவான* சிவ யோகசுவாமி, சைவ சமயத்தை சாதனா மார்க்கமாக குறிப்பிட்டு, இந்த சமயத்தை படித்தால் மட்டும் போதாது, அதை பின்பற்றி வாழ்வும் வேண்டும் என்று விளக்கினார். “இறைவனை எங்கும் காணுங்கள். இது தான் அனுட்டானம். இதை முதலில் அறிவுப்பூர்வமாக செய்யுங்கள். அதன் பிறகு நீங்கள் அதை புரிந்துக் கொள்வீர்கள." வாழ்க்கை தரும் அனுபவங்களின் உட்பொருளை புரிந்துகொள்வதன் மூலம் அதிக அறிவை பெறலாம் என்று அவர் கற்றுத் தந்தார். *சாதனா மார்கத்தை* தவிர்ப்பது என்பது வாழ்க்கை வழங்கும் சவால்களை தவிர்ப்பதற்கு சமம் ஆகும். நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சவாலும், நமது கடந்தகால வினைகளில் இருந்து வந்தவை என்பதை நாம் உணர தவறக்கூடாது. நமது கடந்தகால வினைகள், நமது இன்றைய வாழ்க்கை அனுபவங்களை உருவாக்குகின்றன என்பதில் சந்தேகம் வேண்டாம். எல்லா இந்துக்களும் *கர்மவினை* மற்றும் மறுபிறவியை ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் அவர்கள் தாங்கள் மேற்கொள்ளும் செயல்கள் மற்றும் அவற்றை தொடரும் அனுபவங்களுக்கு பொறுப்பு ஏற்கும் வரை, இந்த கோட்பாடுகள் அவர்கள் வாழ்வில் உயிரூட்டத்தை பெறுவது இல்லை. இவ்வாறு செய்யும் போது, மற்றவர் மீது பழி சுமத்துவது இல்லை. எல்லாம் நம் செயலாக இருக்கின்றன. இதுவே முழுமையை நோக்கி செல்லும் *சாதனா மார்கம்* ஆகும். ¶*சாதனா மார்கம்* நம்மை இயல்பாக *யோக பாதத்திற்குள்* அழைத்து செல்கிறது. ஆனால் மக்கள் *யோகத்தை* கற்பது இல்லை. அவர்களுக்கு *யோகம்* கற்பிக்கபடுவது இல்லை. அவர்களுக்கு கற்றுத்தரப்படும் *சாதனாவை* அவர்களுக்காக வேறு யாரும் செய்யமுடியாது, மற்றும் அதை அவர்கள் தங்களுக்காக செய்யவில்லை என்றால், அவர்கள் *யோகத்தைப்* பற்றி அதிகமாக கற்று இருந்தாலும், *யோக மார்கத்தில்* நுழைவதற்கு அவர்கள் தங்கள் உள்ளுணர்வு மனம் மற்றும் அறிவுணர்வு மனதின் மீது வலுவான பிடிமானத்தை பெற்று இருக்க மாட்டார்கள். அதனால் நாம் யோகத்தை கற்பதில்லை, ஆனால் நாம் அதனுள் பக்குவம் அடைகிறோம். நாம் தியானத்தை

கற்பது இல்லை, நாம் அதனுள் விழிப்புணர்வை பெறுகிறோம். நாம் தியானம் மற்றும் யோகத்தை கற்றுத்தரலாம், ஆனால் அந்த நபர் உட்புறமாக பக்குவம் அடைந்து விழிப்புடன் இல்லை என்றால், அவை பயனற்றதாகி விடும். ¶உட்புறமாக விழிப்புடன் இருப்பது என்பது அதிகாலையில் விழித்து எழுவதை குறிப்பிடுகிறது. நீங்கள் இன்று அதிகாலையில் விழித்து எழுவது கடினமாக இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் உடலை, உங்கள் மனவெழுச்சிகளை விழிக்க செய்தீர்கள் மற்றும் உங்கள் உள்ளுணர்வு மனம் அதை செய்ய விரும்பவில்லை. ஆன்மீக வாழ்க்கை என்பது, 365 *நந்திநாத சூத்திரங்களின் விரதத்தை* எடுத்த எனக்கு நெருக்கமான சீடர்கள் தற்போது உணர்வதைப் போல, தினமும் இருபத்தி நான்கு மணி நேரமும் விழிப்புடன் இருப்பதைக் குறிப்பிடுகிறது. நீங்கள் அதிகாலையில் விழித்து எழுவதற்கு, தினமும் இரவில் விரைவாக உறங்கச் செல்வதை குறிப்பிடுகிறது. நீங்கள் அந்தர்லோகங்களில் முழு கட்டுப்பாட்டுடன் செல்வதற்கு, உறங்கச் செல்லும் முன் உபதேசங்கள் படிப்பதை அது குறிப்பிடுகிறது. அன்றாட பணிகளை சந்திக்க ஒருவர் தன்னை தயார்படுத்திக் கொண்டு, மனஉறுதியுடன் இருந்து உலக சக்திகளை இயக்குவதற்கு, தினமும் காலையில் எனது முத்தொகுப்பான *சிவபெருமானுடன் திருநடனம்*, *சிவபெருமானுடன் வாழ்தல்* மற்றும் *சிவபெருமானிடம் ஐக்கியமாதல்* ஆகிய புத்தகங்கள் வாசிப்பதை குறிப்பிடுகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 91

சாதனா மற்றும்

வாழ்க்கையின் நிலைகள்

சாதனா செய்துக்கொண்டு, *கிரகஸ்தாசிரமத்தில்* இருப்பத்தி நான்கு வயதில் இருந்து நாற்பத்தி எட்டு வயது வரை இருக்கும் அன்பர்கள், லௌகீக சக்திகளை முறையாக, வலுவாக, விவேகமாக, விரைவாக இயக்கி தங்கள் வாழ்க்கைகளை வெற்றிகரமாக மற்றும் ஆக்கப்பூர்வமானதாக மாற்றிக் கொள்ளவேண்டும். அத்தகைய அன்பர்களை போட்டியின் மூலம் தூண்டிவிடக்கூடாது. இன்றைய உலகில் ஒரு பயனுள்ள விளைவிற்கு, அது மற்றவர்களை துன்புறுத்துவதாக இருந்தாலும், பெரும்பாலான மக்களை தூண்டிவிட வேண்டியுள்ளது. உலகில் ஆக்கப்பூர்வமான ஒன்றை உருவாக்க அவர்களை முரண்பாட்டின் மூலம் தூண்டிவிட வேண்டியுள்ளது. ஆனால் அந்த செயல் மற்றவர்களுக்கு வேதனையை அளிக்கிறது. அவர்களின் குடும்பத்தினரை பிரித்து அவர்களை தூண்டிவிட வேண்டியுள்ளது. ஆனால் இதன் மூலம் மற்றவர்கள் வேதனை

அடைகிறார்கள். மேலும் நன்மையோ தீமையோ, லௌகீக சக்திகளை இயக்கி ஒரு செயலை செய்ய போதுமான ஆற்றலை பெறுவதற்கு, அவர்களை மற்ற கீழ்நிலை மனவெழுச்சிகளின் மூலம் தூண்டி விடவேண்டும். *சாதனா* செய்பவர்கள், லௌகீக சக்திகளை இயக்கி உலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த ஆன்மாவின் சக்திகளை பயன்படுத்துகிறார்கள். ¶குடும்பத்துடன் இருக்கும் அன்பர்கள், தங்களது *சாதனாவை* வலுப்படுத்தி, தங்களது முதல் இரண்டு *ஆசிரமங்களின்* மூலம் தாங்கள் பெற்ற அனுபவம், அறிவு மற்றும் விவேகத்தை சமூகத்திற்கு சேவையாக வழங்க, அவர்கள் வாழ்வின் பிற்பகுதிகளில் தான் வாய்ப்பு கிடைக்கிறது. நாற்பத்தி இரண்டு முதல் எழுபத்தி இரண்டு வயது வரையிலான காலத்தை குறிக்கும் *வானப்பிரஸ்த ஆசிரமம்*, வாழ்க்கையின் மிக முக்கிய பகுதியாக விளங்குகிறது, ஏனென்றால் தங்களுக்குள் இலட்சிய வாழ்க்கையின் மாதிரிகளை முழுமையாக உள்ளடக்கியுள்ள *நந்திநாத சுத்திரங்களுக்கு* ஏற்ப வாழ்க்கை இயங்குவதை கண்காணித்து, *பிரம்மச்சரிய* மாணவர்கள் மற்றும் குடும்பங்களில் மேன்மையை ஊக்குவிப்பதற்கு இதுவே சிறந்த தருணமாக விளங்குகிறது. பின்னர் எழுபத்தி இரண்டு வயதில் இருந்து தொடங்கும் *சந்நியாச ஆசிரமம்*, வாழ்க்கையில் நீங்கள் அதுவரை பெற்ற உணர்தல்களை ரசிக்க மற்றும் வலுப்படுத்த சரியான தருணமாக விளங்குகிறது. மனிதர்களாக இருக்கும் நாம் எல்லோரும், அந்தர்லோகங்களில் இருந்து மனித இனத்தின் பாதையை வழிநடத்த உதவியாக இருக்கும் *சப்த ரிஷிகள்* உட்பட, நம் மனித இனத்தை சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உதவி செய்ய கடமைப்பட்டுள்ளோம். இந்த கடமையை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். நீங்கள் ஒருவருக்கு உதவி செய்ய விரும்பினால், தொடர்ந்து *சாதனா* செய்யுங்கள். ¶குடும்பத்தில் இருக்கும் அனைவரும் கடினமான தத்தம் கடமைகள் மற்றும் *சாதனாக்களை* சிறப்பாக பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் தாய், தந்தை, மகன்கள் மற்றும் மகள்களுக்கு ஒரு ஒழுங்குமுறையுடன் இருக்கும் ஒரு இந்து வீடு, வழக்கமாக அது அங்கம் வகிக்கும் மடத்தின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். மலேசியாவில் *சாதனா* செய்து வரும் குடும்பங்களில் இருந்து, ஒரு பதினேழு வயது நிரம்பிய இளைஞன் நமது மடத்திற்கு விருந்தாளியாக வந்தார். பெற்றோர்கள் செய்த *சாதனாவின்* விளைவாக, அவர் இங்கே *சாதனா* செய்ய வந்தார். அவருடைய பெற்றோர்கள் தங்கள் வீடுகளில் தொடர்ந்து *சாதனா* செய்யவில்லை என்றால், அவர் இங்கே நம்முடன் அதிக கடுமையான *சாதனாவை* செய்ய விருப்பம் தெரிவித்து இருக்கமாட்டார். ¶*சாதனாவிற்கு* ஒரு தடையாக விளங்கும் அக்கிரமங்கள், குற்றம், கொலைகள், வறுமை, அநியாயம் பற்றி தொலைக்காட்சியில் கேட்பது மற்றும் பார்ப்பது மற்றும் செய்தித்தாள்களில் படிப்பதை எப்படி தவிர்ப்பது என்று ஒருவர் என்னிடம் சமீபத்தில் கேட்டார். நல்லமுறையில் சாதனா செய்ய, நாம் முதலில் ஒரு நல்ல தத்துவ அடித்தளத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். இதனை *தி மாஸ்டர் கோர்ஸ்* முத்தொகுப்பில் அங்கம் வகிக்கும்

சிவபெருமானுடன் திருநடனம், *சிவபெருமானுடன் வாழ்தல்* மற்றும் *சிவபெருமானிடம் ஐக்கியமாதல்* புத்தகங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்த பூமியில் நாம் மிகவும் உயரிய மற்றும் மிகவும் தாழ்ந்த மனித வெளிப்பாடுகளை கொண்டுள்ளோம் என்பதை புரிந்துகொள்ள ஒரு நல்ல தத்துவ அடித்தளம் அனுமதி அளிக்கிறது. "பூமியில் ஒரு தூல பிறவியில் மட்டுமே உங்களால் ஆத்ம ஞானத்தை பெற முடியும், ஏனென்றால், இந்த உலகில் மட்டுமே இருபத்தி ஓரு *சக்கரங்களும்* செயல்படுகின்றன," என்று தத்துவ மற்றும் சூட்சும ஞானிகள் பல நூற்றாண்டுகளாக கூறி வருகின்றனர். மிகவும் உயரிய நிலையில் இருப்பதை உணர்வதற்கு, உங்களுக்கு அதிகம் தாழ்ந்த நிலையில் இருப்பது தேவைப்படும். முற்பிறவியில் செய்த புண்ணியங்கள் காரணமாக சிலர் பிறக்கும் போதே அமைதியுடன் பிறப்பார்கள். அவர்கள் பிறக்கும்போதே உதவி செய்யும் குணத்துடன் பிறந்து, மனித குலத்தை மேம்படுத்துவார்கள். மற்றவர்கள் பிறக்கும் போதே கோபம், சதி திட்டம், சூழ்ச்சி, ஆத்திர குணத்துடன் பிறக்கிறார்கள் மற்றும் அவர்கள் சந்தேகப் பேர்வழிகளாக மனித குலத்தை இழிவுப்படுத்துபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் இந்த பூமியில் சமமாக இருக்கிறார்கள். *பிராணசக்தியை* முதுகுத்தண்டு வழியாக உச்சந்தலை வரை உயர்த்தி, இறுதியில் *பிரம்மரந்தரம்* வழியாக வெளியேற்றும் பரிணாமத்தை எல்லோரும் ஒன்று போலவே அனுபவிக்கிறார்கள். ¶மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த மதவாதிகள் கண்ணோட்டத்தில், இறைவன் எல்லாம் செய்பவராக இருக்கிறார். அவர் மனித குலத்திற்கு தண்டனை வழங்குகிறார். அவர் மனித குலத்திற்கு உதவியாக இருக்கிறார். கிறித்துவ பள்ளிகளில் படித்த பல இந்துக்கள், இந்த கண்ணோட்டத்துடன் இருக்கிறார்கள். ஆனால் உலகின் பழமையான மதமாக இருக்கும், சனாதன தர்மத்தின் கண்ணோட்டத்தில், நாம் அனைத்தும் செய்கிறோம். இந்த தருணத்தில் நமது *கர்மவினைகள்* மூலம் நாம் நமது எதிர்காலத்தை உருவாக்குகிறோம். அதனால் நீங்கள் உங்கள் சாதனாவில் முன்னேறும் போது, தாழ்ந்த நிலையில் இருந்து தொடர்பை துண்டித்து உயர்நிலையில் முன்னேறுங்கள். சமூகத்திற்கு சேவை செய்து, மனித நேயத்தை உயர்த்தி, உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மனிதர்களின் வேதனையை போக்க உதவுவது ஒரு குடும்பஸ்தராக இருக்கும் உங்கள் *தர்மம்* ஆகும். ஆனால் நீங்கள் தினமும் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் இணையத்தளத்தில் படிக்கும் அனுபவங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்க்கையின் ஆதிக தாழ்வான கட்டங்களில் வாழ்பவர்களின் வினை மற்றும் எதிர்வினையை குறிக்கும், *கர்மவினையை* சரி செய்ய முயற்சிப்பதோ அல்லது ஆசைப்படுவதோ வேண்டாம். அதை உங்களால் சரி செய்யவும் முடியாது.

தியானி

ध्यानी



தியானம் செய்பவர்

புனித நீராடிவிட்டு ஒரு சுத்தமான இடத்தில் ஒரு வசதியான ஆசனத்தில் அமர்ந்த பிறகு, ஒருவர் தனது *குரு*, தனது பாரம்பரியம் மற்றும் சங்கரனை தியானம் செய்ய வேண்டும். அவர் ஆழமாக தியானம் செய்து தனது உடலில் இருக்கும் பஞ்ச பூதங்களை சுத்தம் செய்ய வேண்டும்.

சந்திரஞான ஆகமம், க்ரியாபாத, 8.52-53. சஞ ப. 80



சிவபெருமானின் சடாமுடியில் இருந்து அவருடைய அருள் இருவர் மீது பொழிகிறது. அதில் அத்வைதி மலை மீது தியானம் செய்கிறார் மற்றும் சித்தாந்தி ஒரு புதிய கோயிலில் இறைவனிடம் சரணாகதி அடைந்து இறை அருளை தேடிக்கொள்கிறார். பக்தனும் யோகியும் *சிவபெருமானின் அன்பை முழுமையாக பெறுகிறார்கள்.*

திங்கட்கிழமை

பாடம் 92

உட்புறமாக

கவனம் செலுத்துதல்

தியானம் என்கிற ஒரு நீளமான பயணம், மனதிற்குள் செல்லும் ஒரு யாத்திரையாக இருக்கிறது. நமக்கு லௌகீக உலகின் மோகம் குறைகிறது மற்றும் நம்மை அச்சம், பேராசை, பற்று மற்றும் சிக்கலான விளைவுகளின் மாதிரிகளில் நமது பழைய ஆசைகள் நம்மை கட்டுப்படுத்தாத போது, நமக்கு தியானம் என்ற ஒன்று இருப்பது தெரிய வரும். "நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் எங்கே செல்கிறேன், " என்ற கேள்விகளுக்கு தத்துவம் மூலமாக பதிலை தேடுகிறோம். நாம் மற்றவர்களிடம் கேட்கிறோம். நாம் புத்தகங்களை படிக்கிறோம். நாம் ஆழமாக சிந்தித்து ஆச்சரியம் அடைகிறோம். நாம் பிரார்த்தனை செய்கிறோம். நாம் உணர்வதற்கு உண்மைப் பொருள் இருப்பதையும் அல்லது அது மெய்யாக இருந்தால், நமக்கு இருப்பதாக தோன்றும் குறைகளுடன் அதை உணர முடியுமா என்றும் சிறிது காலம் சந்தேகிக்கிறோம். சுத்தமான மெய்ஞ்ஞான சக்திகள் நம் வழியாக சுதந்திரமாக பாய்ந்து செல்லும் முன்பாக, நாம் நம்மை முழுமையாக வெறுமையாக்கிக் கொள்ளவேண்டும் என்பதால், விசித்திரமாக இதுவே தியானம் செய்பவரின் பாதையில் தொடக்கமாக விளங்குகிறது. இந்த வெறுமை மற்றும் உண்மையாக தேடும் நிலையை அடைந்ததும், வெளியில் உண்மைப் பொருளை தேடும் முயற்சி பயனற்றது என்பதை நாம் விரைவில் உணர்ந்து கொள்கிறோம். நமது அகத்தின் ஆழத்தில் இருந்து, நம்மால் விளக்க அல்லது நியாயப்படுத்த முடியாத ஒரு புரிதலை தெளிவாக அறியத் தொடங்குகிறோம். பரம்பொருள் அல்லது பரமாத்துமா நமக்குள் வாசம் செய்கிறார், மற்றும் நாம் நமது அகத்தில் சென்று அதை உணர வேண்டும் என்பதை தெளிவாக புரிந்துக் கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் அந்த புரிதல் மட்டும் போதாது. இதற்கு தியானத்தில் செய்யும் பெரு முயற்சிகள் மற்றும் ஆன்மீக அறிவு பற்றிய புத்தக களஞ்சியங்களும் போதாது. இந்த முறையை பயன்படுத்தி உண்மைப் பொருளை அடைய பலர் முயற்சி செய்துள்ளனர். அகத்தின் அதிக ஆழமான பகுதியில் உண்மைப் பொருள் இருக்கிறது மற்றும் தேடுதலுக்கு தனது வாழ்க்கையை அர்ப்பணித்து, வைதீக ஆன்மீக விதிகள், *இயமங்கள்* மற்றும்

நியமங்களை பின்பற்றி ஒரு நிலையான வாழ்க்கையை வாழ்ந்து, மனப்பூர்வமாக மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, ஒரு ஆன்மீக ஆசிரியர் அல்லது ஒரு *சத்குருவை* தேடி அவருக்கு கீழ்படிந்து, ஒழுக்கம் நிறைந்த தியானத்தின் கலையை நுணுக்கமாக கற்றுக்கொள்ளும் ஒரு சிரத்தையுள்ள அன்பர் மூலம் அந்த உண்மைப் பொருள் அறியப்படுகிறது. இது அதன் பிறகு, தியானம் செய்பவரின் பயண இலக்கு மற்றும் அவர் பயண வழிமுறையை வரையறுக்கிறது. ¶தியானம் செய்வது நமக்கு நன்மையை தரும் என்று அடிமனதின் சம்மதத்தை பெறுவது முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். நாம் சிரத்தையுடன் தியானம் செய்ய விரும்பினாலும், தியானம் பற்றிய அச்சங்கள் அல்லது சந்தேகங்களுடன் இருக்கக்கூடும். தியானம் செய்யும் போது மிகப்பெரிய நிகழ்வுகள் நடைப்பெற்று, அவற்றிற்கு எதிர்செயலாற்றும் போது, சாட்சியின் கவனம் வெளிப்புறமாகிறது. நாம் வெளியுலகின் லௌகீக கோட்பாடுகளுக்கு பொருந்திக்கொள்கிறோம். நாம் மீண்டும் அகத்தில் நுழைய வேண்டிய தேவையை உணரும் போது, பழைய சிந்தனை மற்றும் மனவெழுச்சி மாதிரிகள் மற்றும் காரண காரியம் ஆகியவை இயல்பாக மீண்டும் தோன்றுகின்றன. முழுமையாக ஆன்மீகத்தில் வாழ்வதற்கு உதவும் கோட்பாடுகள் சிறிது காலம் அடியுணர்வு பாகங்களுடன் போராட்டத்தில் இருக்கலாம். நமது பழக்கங்கள் ஒழுங்கின்றியும், நமது மனஉறுதி பயனற்றதாகவும் இருக்கக்கூடும். அடியுணர்வு எப்போதும் எதிர்பாராத ஒன்றை செய்துக்கொண்டு இருப்பதால், பெரும்பாலும் அது இன்னொரு நபர் போன்றே தோன்றுகிறது. ¶இந்த தொடக்க நிலையில் உணர்வுள்ள அல்லது மெய்ஞ்ஞான மனதில் இருக்கும் ஒன்றை அடிமனம் எதிர்க்காமல் இருக்க, மாறுபட்டு இருக்கும் பகுதிகளை ஒரு புதிய வாழ்முறையாக மாற்ற வேண்டும். இந்த உணர்வின் மூன்று பகுதிகளும் இணக்கத்தை பெற்றால் மட்டுமே, தியானம் முழுமையாக சித்தியாகி அதை நிலைநிறுத்த செய்யும். அடியுணர்வை நினைத்து பயந்தால், அது நமது வாழ்க்கையின் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும். அதனால் அதை நினைத்து அஞ்சுவது விவேகம் ஆகாது. அடியுணர்வு என்பது சாட்சி வெளிப்புறமாக இருந்த போது சந்தித்த அனுபவங்களின் சேகரிப்பு மற்றும் கடந்தகாலத்தின் சேமிப்புக் கிடங்காக மட்டுமே இருக்கிறது என்பதை புரிந்துக் கொள்ளவேண்டும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 93

அடியுணர்வை

மாற்றி அமைத்தல்

சாட்சி வெளிப்புறமாக இருக்கும் போது, ஒரு உட்புற வழிகாட்டி இல்லாமல் தவறான எண்ணங்கள் ஒன்றின் மீது ஒன்று அடுக்கப்படுகின்றன. இதை மாற்றி அமைக்க, நாம் *வாசனாக்கள்* எனப்படும் பழைய பதிவுகளைப் பற்றி கவலையில்லாமல், அடியுணர்வை மறுநிரலாக்கம் செய்ய வேண்டும். நாம் தொடர்ந்து நேர்மறை மனநிலையுடன் இருந்து, இந்த மாற்றத்தை மிகவும் வலுவான முறையில் செய்துமுடிக்க வேண்டும். "இதை செய்ய முடியாது," என்று பலர் சொல்வதை கேட்டு இருப்பீர்கள். அத்தகைய சூழலில், அந்த நடவடிக்கையில் ஈடுபட்டு ஏற்படும் தோல்வியின் மூலம் அந்த கூற்றை நிரூபியுங்கள். ¶முடியாது என்ற சொல் அடியுணர்விற்கு மிகவும் தடையாக இருப்பதால், அதை பயன்படுத்த வேண்டாம். அதை அடிக்கடி சொல்லி வந்தால், அது ஒரு ஜபமாக மாறி விடும். இதனால் எந்த நன்மையும் இல்லை. "என்னால் முடியாது," என்று நீங்கள் சொன்னதும், நமக்கு தெரியாமல் நேர்மறை கதவுகள் அனைத்தும் மூடிக்கொள்கின்றன. சுத்தமான உயிர் சக்தியின் ஓட்டம் குறைந்து, அடியுணர்வு குழப்பத்தில் சிக்குகிறது மற்றும் நாம் தோற்றுவிடுவோம் என்று நமக்கு தெரிவதால், நாம் முயற்சி செய்வதே இல்லை. வெளியுலகில் நமக்கு ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொண்டு, அந்த இலக்கின் வரையறைக்குள் தினமும் தியானம் செய்வதை ஒரு வாழ்முறையாகக் கொண்ட ஒரு நேர்மறை திட்டம் அமைப்பது, இந்த அடியுணர்வு குழப்பத்திற்கு நல்ல தீர்வாக இருக்கும். இந்த நேர்மறை அணுகுமுறை மற்றும் தினசரி தியான முயற்சியின் மூலம், சாட்சி அகத்தில் மையம் கொண்டிருக்கிறது. நாம் சாட்சியை சிக்கலில் சிக்காமல் வெளிப்புறம் செல்லாமல் வைத்திருக்க கற்றுக் கொள்கிறோம். ¶நமது இயல்பை சுத்தப்படுத்த ஒரு வலுவான முயற்சி எடுத்ததும், அகத்தில் ஒரு புதிய செய்முறை தொடங்குகிறது. நமது முற்பிறவி ஓவ்வொன்றிலும் நாம் செய்த நேர்மறை சாதனைகளின் சக்திகள், இந்த பிறவியில் வெளிப்பட தொடங்குகின்றன. ஒரு முற்பிறவியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் ஒன்று சேர்கின்றன. தற்போது நாம் எல்லோரும் நமது எல்லா முந்தைய அனுபவங்களின் சாரமாக இருப்பதால், இந்த புண்ணியங்கள் அல்லது நற்செயல்கள் நமது நினைவுப் பழக்க ஆகாசத்தில் அதிர்வுகளாக இருக்கின்றன. மனதின் வெளிப்புறத்தில் இருக்கும் கவனச் சிதறல்கள் அனைத்தும் மங்கி, நேர்மறை தியானம் அமைவதை எளிதாக்குகிறது. கவனச் சிதறல்கள் ஏற்படும் போது, விரைவாக சாட்சியை உள்ளிழுப்பது கடினமாக இருப்பதில்லை. ¶இலக்குகளை நிர்ணயித்து அவற்றில் வெற்றி கொள்ள உதவும் இந்த புதிய முறை, முயற்சியை வலுப்படுத்துகிறது. தினமும் காலையில் வழிபாடு, *ஜபம்,* சாத்திரம் கேட்டல் மற்றும் தியானம் செய்யும் தருணத்தில் தவறாமல் சாதனா செய்வது, அத்தகைய ஒரு குறிக்கோளாக விளங்குகிறது. தினசரி தியானம் செய்வது ஒரு புதிய செயல் அல்லது ஒரு புதிய புத்தக வாசிப்பை போல இருக்காமல், நமது வாழ்க்கையின் அங்கமாக மாறவேண்டும். அது நமது உறுதியான அங்கமாக மாற வேண்டும். நாம் தியானம்

செய்வதற்காகவே உயிர் வாழ வேண்டும். இதுவே எங்கும் வியாபித்து இருக்கும் சிவத்தின் உணர்தலை பெறும் பாதையில் இருக்கும் இறுதி குறிக்கோளை அடைவதற்கான ஒரே வழி ஆகும். ஆழ்ந்த தியானம் நமது ஆன்மீக சித்த சக்தியை பயன்படுத்துகிறது. இந்த சக்தி நாம் செய்வது அனைத்தையும் நிறைவாக செய்வதன் மூலம், நமது இலக்குகளின் சவால்களை எதிர்கொள்வதன் மூலம் மற்றும் தினமும் நமது எதிர்பார்ப்பை காட்டிலும் சிறப்பாக செய்ய முயற்சிக்கும் போது அதன் தொடர் வெளிப்பாட்டின் மூலமாக உருவாக்கப்படுகிறது. ஆதனால் நீங்கள் பாதையில் இருக்கும் நிலையை பொருத்து உங்கள் ஆன்மீக இலக்குகளை அமைத்துக் கொள்ளுங்கள். அதிக வலுவான மற்றும் அதிக மெய்ஞ்ஞான பண்புடைய தியானத்திற்கு, உங்கள் ஆளுமை அல்லது வெளிப்புற குணத்தின் மாற்றத்திற்கு, உங்கள் சகாக்களுக்கு சிறந்த சேவையை செய்வதற்கு, மற்றும் முழுமையான மத ஈடுபாடுள்ள வாழ்முறைக்கு இலக்குகளை அமைத்துக் கொள்ளவும். ¶இலக்கு வகுத்தலின் அடிப்படை தெளிவாக தெரியாததால், ஆன்மீக வாழ்க்கையில் பொதுவாக இலக்குகள் பயன்படுத்தப்படுவது இல்லை. தொழில் துறையில் இருக்கும் வலுவான மற்றும் வெற்றிகரமான மக்கள் ஒரு நேர்மறையான, தீவிரமான திட்டத்தை வைத்துக்கொண்டு, வெற்றி அடைவதற்கு தங்கள் வாழ்க்கையை ஒரு ஒழுங்குமுறையுடன் வைத்து இருப்பார்கள். அதில் மிகவும் முக்கியமானவர்கள், தொழில் உலகின் அழுத்தத்தை தாங்கிக்கொள்ள, ஒரு நாளை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கவும் செய்வார்கள். நாம் தியானத்தின் பயிற்சிக்கு இதே அணுகுமுறையை பயன்படுத்தலாம் மற்றும் பயன்படுத்தியாக வேண்டும். தொழில் துறையில் இருப்பவர்களை போல, நாமும் நமது வேட்கையில் வெற்றி பெற விரும்புகிறோம். இரண்டிற்கும் வித்தியாசம் என்னவென்றால், ஆன்மீகத்தில் உட்புறமாக குறிக்கோளை தேர்ந்தெடுக்கிறோம். ஆனால் தொழில் துறையில் எடுக்கப்படும் வெளிப்புறமான குறிக்கோளை நிறைவேற்றும் போது, அது நம்மை சிக்க வைத்து சாட்சியின் கவனத்தை மேலும் வெளிப்புறமாக திருப்புகிறது.

புதன்கிழமை

பாடம் 94

உட்புற இலக்குகளை

அமைத்தல்

நாம் நமது தியான இலக்குகளை யதார்த்தம் இல்லாமல் அமைத்துக் கொண்டால், நாம் தேவையில்லாத பிரச்சனைகளை உருவாக்கிக்

கொள்கிறோம். உதாரணத்திற்கு, "நான் இரண்டு மாதங்களில் எங்கும் வியாபித்து இருக்கும் சிவத்தை உணரப் போகிறேன்," என்று சொல்வது யதார்த்தம் இல்லாமல் இருக்கலாம். தனக்காக இந்த இலக்கை அமைத்துக்கொள்ளும் சாதகர், இரண்டு மாத குறுகிய காலத்தில் தோன்றும் விளைவுகளை எதிர்கொள்ள தயாராக இல்லாமல், வெளியுலகில் தீவிர ஈடுபாட்டுடன் இருக்கக்கூடும். ஆனால் பத்து வருடங்கள் என்பது அவருக்கு ஒரு அதிக யதார்த்தமான இலக்காக இருக்கக்கூடும். உட்புற உடலில் இருக்கும் நரம்பு ஓட்டங்களின் சக்திகள் அனைத்தும் அங்கீகாரம் வழங்கும் வரை, அவர் நாள்தோறும் சாட்சியின் கவனத்தை உட்புறமாக தொடர்ந்து இயக்குவதற்கு, அந்த பத்து வருடங்கள் போதுமான கால அவகாசத்தை வழங்குகிறது. ¶அவை அங்கீகாரம் அளிக்கும் போது, புதியதாக ஒன்று நடைபெறுகிறது. அவர் தனது மனஉறுதியை பயன்படுத்தி நேர்மறை இலக்குகளை பூர்த்தி செய்ய, தனது திறமைகள் மீது வலுவான நம்பிக்கையை பெறுகிறார். உட்புறமாக ஒவ்வொரு இலக்கும் அமைக்கப்பட்டு நிறைவு பெறும் போது, அவரது வாழ்க்கை முறை மாற்றம் பெற்று சுத்தமடைகிறது. உணர்வுள்ள மனம், அடிமனம் மற்றும் மெய்ஞ்ஞான மனதின் பகுதிகள் ஒன்று சேர்ந்து, ஒரு ஆன்மீக மாற்றம் ஏற்படுகிறது. அவருடைய குணத்தின் அனைத்து அம்சங்களும் ஒன்றாக செயல்பட்டு அவருடைய தியானத்தை வலுப்படுத்தி தீவிரப்படுத்துகின்றன. அவர் மீது சந்தேகங்கள் மற்றும் அச்சங்கள் தங்கள் பிடியை தளர்த்தி, மனத்தின் சாரத்து மையத்திற்குள் சாட்சி ஊடுருவுவதற்கு அனுமதி வழங்குகிறது. மனம் தன் மீதே கவனம் செலுத்தும் அளவிற்கு அமைதி அடைகிறது. ¶ஓரிடத்தில் நகராமல் அமர்வது நமது வாழ்க்கையின் அங்கமாக இல்லை என்பதால், தியானத்தின் ஆரம்ப காலத்தில் அவ்வாறு உட்காருவது மிகவும் கடினமாக இருக்கிறது. அமைதியாக திருப்தியுடன் உட்காருவதற்கு, அடிமனம் அதுவரை எப்போதும் நிரலாக்கம் செய்யப்படவில்லை. நமது குடும்பம் அவ்வாறு செய்வதை நாம் பார்த்திருக்கவில்லை. அவ்வாறு ஒருவர் செய்வதை நாம் எப்போதும் பார்க்காமல் இருந்திருக்கலாம். நாம் முன் உதாரணமாக யாரையும் பார்த்திருக்கவில்லை. அதனால் நாம் பொறுமையாக இருந்து, தொடக்கத்தில் அதிக நேரம் உட்காரக்கூடாது. தொடக்கத்தில் பத்து நிமிடங்களுக்கு அசையாமல் உட்கார்ந்து இருங்கள். சில வாரங்களில் அதை இருபது நிமிடங்கள் மற்றும் அதன் பிறகு அரை மணி நேரம் வரை அசையாமல் உட்கார பழகுங்கள். இவ்வாறு நாம் பிடிவாதமாக இருப்பதை தவிர்த்து, அடியுணர்வு தேவையான மாற்றங்களை செய்ய அனுமதிக்கிறோம். ¶இந்த மாற்றங்கள் உடல் சார்ந்ததாக மட்டும் இல்லாமல், மனவெழுச்சி மற்றும் அறிவு சார்ந்ததாகவும் இருக்கின்றன. நீடித்த அமைதி மற்றும் வெளியுலக செயல்பாடு இல்லாமை வசதியாக இருப்பதற்கு, நரம்பியல் ஓட்டங்கள் தங்களை மாற்றி அமைத்துக் கொள்கின்றன. இதைப் போல, ஞானோதய பாதையின் தத்துவம் அடியுணர்வின் ஒவ்வொரு அடுக்கிலும் ஊடுருவி, நம்மிடம் முன்பிருந்த பல

தவறான கோட்பாடுகளை மாற்றி அமைத்து, பல்வேறு தத்துவ பகுதிகளை மனப்பூர்வமாக புரிந்துகொள்ள மற்றும் மெய்ஞ்ஞான நிலை பற்றிய நமது சொந்த அனுபவத்தின் மூலம் அவை சரியாக மற்றும் உண்மையாக இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள உதவியாக இருக்கிறது. இந்த நிலை அடைவதற்கு சில வருடங்கள் தேவைப்படலாம். ¶நாம் ஒரு செடியை நட்டால், அது நன்றாக வளர்ந்து நிழல் தருவதற்கு நாம் காத்திருக்க வேண்டும். அதைப் போலத் தான் தியானமும். தியானப் பயிற்சிகளை தொடங்குவதற்கு நாம் நமது திட்டங்களை உருவாக்கி, அடிமனதை முழுமையாக மாற்றி அமைக்க போதுமான நேரத்தை, சில சமயங்களில் பல வருடங்களை ஒதுக்குகிறோம். நாம் வாழும் மேற்கத்திய கலாச்சாரம், வெளியுலகை மையமாக கொண்டது. இந்த கலாச்சாரத்தில் நாம் எல்லாம் விரைவாக செய்ய பழகி விட்டோம். சாட்சியின் கவனத்தை உட்புறமாக வைத்திருக்க நாம் பல்வேறு தீவிரமான மற்றும் சில சமயங்களில் வெறித்தனமான முறைகளை முயற்சி செய்யும் போது, அதற்கான பலனையும் அனுபவிக்கிறோம். தியானம் சிறிது காலத்திற்கு நன்றாக இயங்குகிறது, ஆனால் அது சிறிது காலம் கழித்து, நமது குடும்பம் மற்றும் கலாச்சாரத்தின் நிரலாக்கத்திற்கு ஏற்ப மீண்டும் புறநோக்கி ஆகிறது. ¶இந்த முறைகளை நிரந்தரமாக மாற்றி அமைக்க உடல், மனவெழுச்சி, புத்தி மற்றும் ஆன்மீக அடிப்படையில் நமது உயிர்சக்தி முழுமையை பெறுவதற்கு, நாம் ஒரு புதிய வாழ்முறையை அமைக்க மெதுவாக முயற்சி செய்ய வேண்டும். இதற்கும் கால அவகாசம் தேவைப்படும். எல்லாம் ஒரே சமயத்தில் செய்து விடமுடியாது என்று நமக்கு விவேகம் அறிவுறுத்துகிறது. நாம் நம்மீது பொறுமையுடன் இருக்க வேண்டும். நாம் பாதையில் பொறுமையின்றி இருந்தால், தோல்வி அடைய வாய்ப்புள்ளது. உடனடி ஆன்மீக விரிவாக்கம் என்பது ஒரு கற்பனை கதை கோட்பாடு என்பதால், நமக்கு தோல்வி ஏற்படுவது உறுதி. பெரிதான மற்றும் வலுவான, மோதல்கள் மற்றும் குழப்பங்களுடன் அடியுணர்வு அச்சுறுத்தும் வகையில் காட்சி அளிக்கும் போது, கடினமான சவால்கள் வரவிருக்கிறது என்பதை உணர்ந்துக்கொள்வது மிகவும் சிறந்தது. அது தோன்றும் போது, நாம் அதை *வாசன தாக தந்திரத்தின்* மூலம் அமைதியாக எதிர்கொள்ள வேண்டும். நமக்கு நமது இறுதியான குறிக்கோள் மனதில் தெளிவாக இருந்து, அந்த குறிக்கோளை அடைவதற்கு நேர்மறையான செயல்திட்டம் தெளிவாக இருந்தது என்றால், தவறு ஏதேனும் நடந்தால் நாம் பதட்டம் அடைய மாட்டோம், ஏனென்றால் நாம் நமது மனம் மற்றும் மனவெழுச்சி தொடர்பான புயல்களை அதன் முறையான மற்றும் தற்காலிக கண்ணோட்டத்துடன் பார்க்கிறோம்.

வியாழக்கிழமை

பாடம் 95

சந்தேகத்தை

சமாளித்தல்

அடியுணர்வு நமது மனதில் தடைகளை மட்டும் உருவாக்காமல், எதிர்கொண்டு தீர்வு காண்பதற்கு மற்றவர்களின் சந்தேகங்கள் மற்றும் கவலைகளையும் கொண்டு வருகிறது. தியானத்தைப் பற்றி தவறான கருத்துக்களின் ஒரு பெரிய கிடங்கு இருப்பதால், நமக்கு அவற்றில் சிறிது நம்பிக்கை இருந்தாலும் தியானம் செய்ய தொடங்குவதில் பயனில்லை. "நீ அந்த பாதையில் செல்கிறாய் என்றால் உனக்கு சிறிய வயதில் ஏதாவது அசம்பாவிதம் நடந்து இருக்க வேண்டும்." "உனக்கு என் மீது அன்பு இல்லை. அதனால் தான் நீ தியானம் செய்து விலகி செல்கிறாய்." "நீ சமூகம் மற்றும் பொறுப்பை கண்டு பயப்படுகிறாய். உன்னால் சமாளிக்க முடியாத உண்மை உலகில் இருந்து தப்பிக்க அதை ஒரு வழியாக பயன்படுத்துகிறாய்." "நீ தியானம் செய்தால் ஏழையாகிவிடுவாய். தியானம் செய்பவர்கள் எல்லோரும் ஆண்டிகள் தான் என்று உனக்கு தெரியும் என்று நினைக்கிறேன்." இதைப்போன்று நாம் கேட்ட அச்சுறுத்தும் அறிவுரைகளுக்குப் பஞ்சமில்லை. ¶நாம் இந்த அடியுணர்வு தடைகளுக்கு பொறுப்பேற்று, எல்லா சந்தேகங்களுக்கும் நமக்குள் தீர்வு காண வேண்டும். புலனுணர்வு கருத்துக்கள், புதுப்பிக்கப்பட்ட சக்தி, ஒரு மகிழ்ச்சிகரமான மற்றும் சமநிலையான வாழ்க்கை மற்றும் ஆன்மீக விரிவாக்கத்தை நாம் வெளிக்கொண்டு வரும் போது, உட்புற சாதனாவின் பயன்களே தியானத்தின் பலன்களை பற்றி அடியுணர்விற்கு விளக்கம் அளித்து அதன் சம்மதத்தை பெற்று விடும் என்பதில் சந்தேகமில்லை. எதிர்மறை பயிற்சி தவறானது என்பதை நாம் நமது அனுபவத்தின் மூலம் புரிந்துக் கொள்ளும் போது, அந்த பயிற்சி பயனற்றதாகி விடுகிறது. அத்தகைய பயிற்சி சிலருக்கு தடையாக இருக்கிறது மற்றும் அதை சரி செய்ய வேண்டும். அதை சரி செய்ய, "ஏன்? இவை எல்லாம் என்ன? எனக்கு இந்த பிரச்சனைகள் எல்லாம் எப்படி உருவாகின? எனது கவனத்திற்கு வராமல், அடியுணர்வில் இத்தகைய சந்தேகங்கள் தொடர்ந்து இருக்கிறதா?" என்று நாம் நம்மிடம் கேட்டுக்கொள்ளலாம். "இந்த தவறான பயிற்சியை எனக்கு யார் வழங்கியது? அவர்கள் வாழ்க்கை எப்படி இருந்தது? அவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தார்களா?" என்று மேலும் சில கேள்விகளை கேட்டுக்கொள்ளலாம். அறிந்துக்கொள்வதற்கு நாம் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் நேர்மறை முயற்சிகள் காரணமாக, இறுதியில் நாம் உண்மையில் அடியுணர்வை மாற்றி அமைத்து, தவறான கருத்துக்களை அழித்து அதிலிருந்து விடுதலை பெறுகிறோம். ¶முடிவில்லாத குழப்பம் மற்றும் ஆசைகளாக காட்சி அளிக்கும் மனம், புதுமையை காரணம் காட்டி நம்மை ஒரு விஷயத்தில் இருந்து இன்னொரு விஷயத்திற்க்கு அழைத்து செல்கிறது. இதன் காரணமாக மக்கள் தங்களுக்குள் மிகப்பெரிய துன்பத்தை எதிர்கொள்கிறார்கள். ஆனால் அவ்வப்போது இந்த செய்முறை முழுவதையும் நிறுத்தி நமக்குள் கவனம் செலுத்த வேண்டும். இது தான் தியானம் செய்யும்

செய்முறை ஆகும். இது ஒரு கலையாக விளங்குகிறது. நமக்குள் இருக்கும் இந்த மனோசக்தியை வளர்க்கும் போது, அது வாழ்க்கைக்கு ஒரு சமநிலை மற்றும் காரணத்தை வழங்குகிறது. தெரிந்தோ தெரியாமலோ எல்லோரும், வாழ்க்கையின் காரணத்தை தேடிக்கொண்டு தான் இருக்கிறார்கள். ¶"நான் யோகா கற்க விரும்புகிறேன், ஆனால் என்னால் அதற்கு நேரம் ஒதுக்க முடிவதில்லை." "என்னால் அமைதியாக இருக்க முடிவதில்லை," அல்லது "வீட்டில் குழந்தைகளின் கூச்சல் அதிகமாக இருக்கிறது," என்று நான் பல காரணங்களை கேட்கிறேன். யாரும் தானாக அமைதி அடைவதில்லை என்பதை அவர்கள் உணர்வதில்லை. அமைதி அடைவது ஒரு திட்டவட்டமான செய்முறை ஆகும். நீங்கள் திட்டவட்ட முறையில் அமைதி அடைகிறீர்கள். நீங்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து முன்னேற்றத்தை உணர்வதற்கு அல்லது உட்கார்ந்ததைப் போல உணர்ந்து அமைதி அடைய முயற்சி செய்வதற்கு இரண்டு வார பயிற்சி தேவைப்படும். ஆனால் இது இறுதியில் செய்யவேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக விளங்குகிறது. நீங்கள் காலையில் விழித்து எழுந்ததும் உங்களின் காலை சிற்றுண்டிக்கு சமைக்கிறீர்கள். பிறகு உங்களுக்கு பசிக்கிறது. நீங்கள் உட்புறமாக அமைதி அடையும் அளவிற்கு பசி தீவிரம் அடைந்ததும், நீங்கள் அதை தானாக செய்வீர்கள். நீங்கள் அமைதிப்படுத்த விரும்புவீர்கள். அதன் பிறகு? நீங்கள் ஓரிடத்தில் அமர்வீர்கள், மற்றும் மனம் அலை பறித்துக்கொண்டு இருக்கும். "மனமே, நில்!" என்று அப்போது சொல்லிப் பாருங்கள். இதன் மூலம், உங்கள் மனதை எவ்வளவு விரைவாக அமைதிப்படுத்த முடியும் என்பதை தெரிந்துக் கொள்வீர்கள். "மனவெழுச்சிகளே, நீங்கள் மனதின் கட்டுப்பாட்டில் இருக்கிறீர்கள்," என்று சொன்னதும், நீங்கள் அமைதி அடைவதை பாருங்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 96

சரியான

சூழ்நிலைகள்

அடுத்து நாம் தியானம் செய்யும் சூழ்நிலைகள் மீது கவனம் செலுத்தலாம். தொடக்கத்தில் தியானம் செய்வதற்கு என்று பிரத்யேகமான மற்றும் ஒரு பொருத்தமான அறையை தேர்ந்தெடுப்பது சிறந்தது. நீங்கள் ஒரு தச்சராக இருந்தால், தியானம் செய்ய ஒரு கடையை நீங்கள் வாங்க வேண்டியிருக்கும். உங்களுக்கு சாப்பிடுவதற்கு என்று அறை, உறங்குவதற்கு என்று ஒரு அறை இருக்கிறது. இனி உங்களுக்கு தியானம் செய்வதற்கு என்று ஒரு அறை வேண்டியிருக்கும். நீங்கள் அதை தேடிப்பிடித்ததும், அங்கிருக்கும் சுவர்கள், மேல்

கூரைகள் மற்றும் சன்னல்களை கழுவிவிடுங்கள். உங்களுக்கு விருப்பம் இருந்தால், அங்கே ஒரு சிறிய பூஜை மாடத்தை அமைத்து நிலம், காற்று, நெருப்பு மற்றும் நீர் ஆகிய பூதங்களை ஒன்றாய் இணைத்திடுங்கள். நீங்கள் தியானம் செய்ய ஒரு நேரத்தை முடிவு செய்து, அந்த நேரத்தை உறுதியாக கடைப்பிடியுங்கள். தியானம் செய்வதற்கு சில நாட்கள் கடினமாக இருக்கக்கூடும். நீங்கள் உங்கள் அகத்தில் வலுவாக முன்னேற, அவை பெரும்பாலும் சிறந்த நாட்களாக இருக்கும். காலை ஆறு மணி, மதியம் பன்னிரண்டு மணி, மாலை ஆறு மணி மற்றும் நள்ளிரவு பன்னிரண்டு மணி ஆகியவை தியானம் செய்வதற்கு சிறந்த நேரங்கள் ஆகும். தினமும் அந்த நான்கு தருணங்களையும் பயன்படுத்தலாம் அல்லது ஏதாவது ஒன்றை மட்டும் தேர்ந்து எடுக்கலாம். தொடக்கத்தில் தியானம் செய்யும் நேரம் பத்து நிமிடங்கள் முதல் அரை மணிநேரம் வரை நீடிக்க வேண்டும். ¶நேராக முதுகுத்தண்டு நிமிர்ந்து உட்காரும் போது, நாம் தூல உடலின் சக்திகளை உருமாற்றம் செய்கிறோம். தியானம் வலுவடைந்து நீடிக்கும் போது ஆசனம் முக்கிய பங்கு வகிக்கிறது. முதுகுத்தண்டு நேராக இருந்து அதன் மீது தலை நிலையாக இருக்கும் போது, நரம்பியல் அமைப்பு வழியாக சக்திகள் சுதந்திரமாக பாய்ந்து ஓடுவதால், உயிர் சக்தி வேகமும் தீவிரமும் அடைகிறது. இந்த நிலையில் நாம் தியானம் செய்யும் போது நமக்கு கவலை, அச்சம், பதட்டம் அல்லது உறக்கம் வருவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் நமது தோள்கள் முன்பக்கமாக வளைந்து இருந்தால், நாம் உயிர் சக்திகளின் இயக்கத்தை தடை செய்கிறோம். இத்தகைய சூழலில் எளிதில் மனச்சோர்வு அடைவதற்கு, தன்னுடன் அல்லது இன்னொருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதற்கு, அல்லது வேதனையை அனுபவிப்பதற்கு வாய்ப்புள்ளது. அதனால் வலுவாக, அமைதியாக மற்றும் நிலையாக உட்கார கற்றுக்கொள்ளுங்கள். மிகவும் உறுதியான ஆசனமாக இருக்கும் பத்மாசனத்தில், வலது காலை இடது தொடை மீது வைத்து, பிறகு வலது தொடை மீது இடது காலை வைக்கவேண்டும். உள்ளங்கால்கள் மேல்நோக்கி இருக்க வேண்டும். கைகள் மடியின் மீது இருக்கவேண்டும். இரண்டு குதிகால்களும் இருபுறத்தில் அடிவயிற்றை தொடும் படி இருக்க வேண்டும். ¶இவ்வாறு நீங்கள் தியானத்திற்கு அமரும் போது, மனதின் சாரம் வழியாக சிந்தனைகள் விரைந்து ஓடுவதை உங்களால் முதலில் உணரமுடியும். உங்களுக்கு பலப்பல சிந்தனைகள் மீது விழிப்புணர்வு வரலாம். மேலும் சுவாசம் முறையின்றி இருக்கலாம். முறையான மனநிலை, முன்னேற்பாடு மற்றும் ஆசனம் தூல-உள்ளுணர்வு சக்திகளை உருமாற்றம் செய்ததைப் போல, முறையாக சுவாசிப்பதன் மூலம் மனதின் அறிவுணர்வு பகுதியில் இருந்து சக்திகளை உருமாற்றம் செய்வது அடுத்த கட்ட நடவடிக்கை ஆகும். சுவாசத்தை கட்டுப்படுத்துவதன் மூலம், சிந்தனைகள் அமைதி அடைகிறது மற்றும் சாட்சி சிந்திக்காமல் உருவாக்கம் செய்து இயல்பாக உணரும் மனதின் பகுதிக்குள் செல்கிறது. ¶மனதை சில சமயங்களில் அதிகமாக தூண்டுவதற்கு, விரிவான

மற்றும் வலுவான முறைகள் உள்ளன. ஆழ்ந்த தியானத்திற்கு ஒழுங்குமுறையுடன் மெதுவாக அல்லது நீளமாக சுவாசித்தால் போதும். இது நாம் அகநோக்கியாக இருக்கும் போது இயல்பாக நடக்கிறது, ஆனால் நான் உருவாக்கிய தியான மொழியான *ஷும்* மொழியில், *களிபாசா* என்று அழைக்கப்படும் ஒரு சுவாசிக்கும் முறை மூலம் இதை ஊக்குவிக்க முடியும். *களிபாசா* முறையில் ஒன்பது மாத்திரை கால அளவிற்கு மூச்சு உள்ளிழுக்கப்பட்டு, ஒரு மாத்திரை கால அளவிற்கு உள்ளே பிடித்து வைத்து, ஒன்பது மாத்திரைகால அளவிற்கு வெளியேற்றி, ஒரு மாத்திரை கால அளவிற்கு நிறுத்தப்படுகிறது. தியானம் வலுவடைந்ததும், *ஹிருதய ஸ்பந்த பிராணாயாமத்தில்* நாம் இதய துடிப்பிற்கு சமமாக எண்ணத் தொடங்கும் வரை, துடிப்புக்களின் நீளம் அல்லது சுவாச லயத்தின் வேகம் குறைகிறது. இந்த பயிற்சி தீவிர துடிப்புணர்வுடன், அமைதியாக, பேரானந்தத்தில் இருந்து பல்வேறு பகுதிகளை சிந்திக்காமல் ஒரு கோட்பாட்டின் முழுமையை கற்பனை செய்யும் ஒரு மனதின் பகுதிக்குள் சாட்சி பாய்ந்து செல்ல அனுமதிக்கிறது.

சனிக்கிழமை

பாடம் 97

சுவாசத்தை

கட்டுப்படுத்துதல்

சுவாசக் கட்டுப்பாட்டை முறையாக கற்றுக்கொள்ள பல மாதங்கள் அல்லது பல வருடங்கள் தேவைப்படலாம். இதில் கவலை வேண்டாம். நீங்கள் ஒரு இசைக்கருவியை கற்கிறீர்கள் என்றால், இசை குறியீடுகளின் அடிப்படைகளில் நிறைவு பெற்று அந்த இசை குறியீடுகளை ஒன்றாக சேர்த்து ஒரு இசையை உருவாக்குவதற்கு பல மாதங்கள் அல்லது வருடங்கள் தேவைப்படலாம். இதில் அவசரம் தேவையில்லை. நாம் தியானம் செய்யும் போது அவசர யுகத்தை கடந்து செல்ல விரும்புகிறோம். சுவாசக் கட்டுப்பாடும் சாட்சியை கட்டுப்படுத்துவதும் ஒன்று தான், அதனால் தொடக்க நிலையில் பொறுமையாக இருந்து பயிற்சியின் ஒவ்வொரு அம்சத்திலும் நிறைவை பெறுவது நல்லது. ¶நாம் லயத்துடன் திரைத்தசையில் இருந்து சுவாசிக்க கற்கும் போது, நாம் நமது சூரிய பின்னலில் இருந்து பதட்டத்தையும் வெளியேற்றுகிறோம். நாம் உட்புறத்தில் அகத்தூண்டுதலுடன் சுதந்திரமாக இருக்க கற்கிறோம், மற்றும் நமக்குள் உயிர் சக்தி தடையில்லாமல் பாய்ந்து செல்கிறது. *சந்தோஷம்* என்கிற திருப்தியை அடைந்து அதை தக்க வைக்க கற்கிறோம். இவை அனைத்தும் நாம் தியானப் பயிற்சியில் மேற்கொள்ளும் எளிய யுத்திகள் மூலம் கைக்கூடுகின்றன. ஆனால் தியானப் பயிற்சி என்பது முடிவு இல்லை.

முழுமையான அனுபவ முதிர்ச்சி, திருப்தி மற்றும் முற்றிலும் சுதந்திரமாக இருக்கும் தனிச்சையாக இருக்கும் மனிதனின் நிறைவான சக்தியைத் தான் குறிக்கோளாக நாடவேண்டும். ¶உங்கள் உடல் அமைதி அடைந்து, சுவாசம் ஒழுங்குமுறையுடன் செல்லும் போது, கண்களை மூடிக் கொள்ளுங்கள். உங்கள் காதுகளை மூடிக்கொண்டு வெளிப்புற புலனுணர்வுகளை அடைத்து விடுங்கள். உங்களுக்கு வெளியுலக காட்சிகள் மற்றும் ஒலிகள் மீது கவனம் இருக்கும் வரை, நீங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்த வில்லை என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். நீங்கள் அகத்தில் கவனத்தை செலுத்தும் முன்பாக, துளியும் சத்தம் இல்லாத இடத்தை தேடவேண்டும் என்று நினைப்பது ஒரு தவறான எண்ணம் ஆகும். புலனுணர்வுகள் அடங்கியதும், உங்களுக்கு எந்த சத்தமும் கேட்காது. நீங்கள் ஒரு அமைதியான நிலையில் இருப்பீர்கள். உங்கள் சாட்சி மாறுபட்ட புலனுணர்வுகள் மீது கவனம் செலுத்துவதால், அருகில் இருக்கும் பறவையின் பாட்டு மற்றும் உங்களை கடந்து செல்லும் வாகனத்தின் சத்தம் உங்களுக்கு கேட்பதில்லை. முற்றிலும் அமைதியான இடம் பயன் தருவதாக இருந்தாலும், அது அத்தியாவசியம் இல்லை. அதைப் போன்ற இடம் கிடைப்பது சாத்தியமில்லை என்பதால், வெளியுலக அமைதியை சார்ந்து இருப்பது உகந்தது இல்லை. நாம் நமக்குள் அமைதியை தேடிக்கொள்ள வேண்டும். நீங்கள் உங்களுக்கு மிகவும் பிடித்தமான புத்தகத்தை படிக்கும் போது, உங்கள் சுற்றுப்புறத்தில் இருந்து வரும் சத்தங்கள் கேட்பதில்லை. நீங்கள் தியானம் செய்யும் போது அதைப்போன்ற ஆர்வத்துடன் இருக்க வேண்டும். ¶இவ்வாறு வெளியுலக சக்திகளை அமைதிப்படுத்திய பிறகு, நாம் தியானம் செய்ய தயாராக இருக்கிறோம். ஓரிடத்தில் அமர்ந்து இருந்தால் போதாது. பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் தியானம் செய்வதற்கும், முக்கிய நகரப் பகுதியை மூன்று முறை சுற்றி வருவதற்கு சமமான ஆற்றல் தேவைப்படும். ஒரு வலுவான தியானம் நமது தினசரி வெளியுலக வாழ்வில், ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கு ஏராளமான ஆற்றலை நமக்குள் நிரப்பி உற்சாகப்படுத்துகிறது. அகத்தில் முன்னேற்றம் பெறுவதற்கு அதிக முயற்சி தேவைப்படும். நாம் மிகவும் கடுமையாக முயற்சி செய்து ஒவ்வொரு உட்புற சவாலையும் எதிர்கொள்ள வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 98

தியானம் செய்வதற்கு

நான்கு நிலைகள்

நாம் தியானம் செய்ய தொடங்கும் போது, எதைப் பற்றி தியானம் செய்வது? நாம் தியானத்தின் போது எதைப் பற்றி சிந்திப்பது? வழக்கமாக சிரத்தையுள்ள அன்பர் தனக்கு ஒரு *குரு,* ஒரு ஆன்மீக வழிகாட்டியை கொண்டிருந்து, அவர் வழங்கும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவார். அவர் ஜபம் செய்வதற்கு ஒரு *மந்திரம்* வைத்திருப்பார், கவனம் செலுத்த ஒரு சூட்சும ஒலியை வைப்பத்திருப்பார், அல்லது ஒரு குறிப்பிட்ட உத்தி அல்லது மனநிலையை மேம்படுத்திக் கொண்டிருப்பார். அவருக்கு *குரு* என்று யாரும் இல்லை அல்லது பிரத்யேக அறிவுறுத்தல்கள் இல்லை என்றால், உட்புற வாழ்க்கையை மேம்படுத்தி, அதை உணரக்கூடிய உண்மையாக மாற்றி மனதின் உட்புற கதவுகளை திறக்க ஒரு *இராச யோகப்* பயிற்சியும் இருக்கிறது. அதை வருங்காலத்தில் உங்கள் தியானத்தை தொடங்கும் போது பயன்படுத்திக் கொள்ளுங்கள். அமைதியாக அமர்ந்து, மனதை அமைதிப்படுத்தி, உடல் வெப்பத்தை உணருங்கள். கால்கள், பாதங்கள், தலை, கழுத்து, கைகள் மற்றும் முகம் ஆகிய உடல் பகுதிகளில் இருக்கும் இயல்பான வெப்பத்தை உணருங்கள். அமைதியாக அமர்ந்து அந்த வெப்பத்தின் மீது கவனம் செலுத்துங்கள். உடலின் பிரகாசத்தை உணருங்கள். நம்மில் பெரும்பாலானோருக்கு தூல உடல் மீது நல்ல விழிப்புணர்வு இருப்பதால், இதை செயல்படுத்துவது மிகவும் எளிது. இதை ஐந்து அல்லது பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு செய்யுங்கள். இதில் அவசரம் வேண்டாம். உயிர்சக்தி உங்கள் உடலின் அணுக்கள் வழியாக பாய்ந்து செல்லும் போது அதன் வெப்பத்தை உணருங்கள். இதை உங்களால் உடல் முழுவதிலும் உணர முடிந்ததும், அடுத்த நிலைக்கு செல்லுங்கள். ¶உடலின் நரம்பியல் ஓட்டங்களை உணர்வது இரண்டாவது நிலை ஆகும். நம் ஒவ்வொருவரின் உள்ளும் பல்லாயிரக்கணக்கான மைல்கள் நீளத்திற்கு நரம்பியல் ஓட்டங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஒரே சமயத்தில் உணர முயல வேண்டாம். கட்டைவிரல்கள் தொடுவதை மற்றும் உங்கள் மடியில் கைகள் இருப்பதை என்று கைகளின் உணர்வுடன் சிறிய உணர்வுடன் தொடங்குங்கள். இதற்கு அடுத்து இந்த நரம்புகள் வழியாக பாய்ந்து சென்று, உடலுக்கு ஆற்றல் அளிக்கும் உயிர் சக்தியை உணருங்கள். உடலை சுற்றி வெளிப்புறமாக மூன்று அல்லது நான்கு அடிகளுக்கு நீட்டிக்கொண்டு இருக்கும், மேலும் நுணுக்கமான நரம்புகளை உணர முயற்சி செய்யுங்கள். அதற்கு கால அவகாசம் அதிகமாக தேவைப்படலாம். இதில் சில நரம்புகளை நீங்கள் கண்டுகொண்டதும், அவற்றுள் இருக்கும் சக்திகளை உணருங்கள். இந்த நரம்புகள் வழியாக உயிர்சக்தி ஓட்டங்கள் பாய்ந்து செல்லும் போது, அவற்றின் மீது கவனம் செலுத்துங்கள். இது ஒரு நுணுக்கமான உணர்வு என்பதால் சாட்சி மனதின் மற்ற பகுதிகளில் சுற்ற வாய்ப்புள்ளது. இவ்வாறு நடைபெறும் போது, மீண்டும் அதன் கவனத்தை உடலுக்குள் இருக்கும் நரம்புகள் மற்றும் அந்த நரம்புகளுக்குள் பாய்ந்து செல்லும் சக்தியை உணர்வதில் திசை திருப்புங்கள். ¶மூன்றாவது நிலையில்,

நாம் முதுகுத்தண்டின் மீது வலுவான கவனத்தை பெறும் போது, நாம் உட்புறத்தில் மேலும் ஆழமாக செல்கிறோம். வெளிப்புற நரம்புகள் மற்றும் தசைகளுக்கு ஊட்டமளிக்கும் ஆற்றல் நிலையமாக இருக்கும் முதுகுத்தண்டின் சக்தியை உணருங்கள். உங்கள் மனக்கண்ணில் முதுகுத்தண்டை கற்பனை செய்து கொள்ளுங்கள். அதை உயிர்சக்திகள் பாய்ந்து செல்லும் ஒரு குழாய் அல்லது பாதை போல பாருங்கள். அதை உங்கள் உட்புற உணர்வுகள் மூலம் உணருங்கள். அது அங்கே நுணுக்கமாக, அமைதியாக ஆனால் முற்றிலும் தீவிரமாக இருக்கிறது. இது ஒரு எளிமையான உணர்வாக இருக்கிறது. நாம் எல்லோரும் இதை எளிதில் உணரலாம். இந்த வெறுமையான முதுகுத்தண்டில் ஆற்றல் நிரம்பி இருப்பதை நீங்கள் உணரும் போது, நீங்கள் தூல உடலாக இல்லாமல் அதன் வழியாக பாய்ந்து செல்லும் ஆற்றலாக அதிகம் இருக்கிறீர்கள் என்பதை, மனவெழுச்சிகள் மற்றும் சிந்தனை சக்தியை காட்டிலும் அதிக புனிதமான சக்தியாக இருக்கிறீர்கள் என்பதை உணருங்கள். இந்த ஆற்றலுடன் உங்களுக்கு ஒரு விசேஷ தொடர்பு இருப்பதாக கருதி, இந்த பூமியில் உங்களது உண்மையான ஆன்மீக பாரம்பரியத்தை வாழத் தொடங்குங்கள். அந்த ஆற்றலுக்குள் நீங்கள் மேலும் ஆழமாக செல்லும் போது, இந்த மாபெரும் சக்தி, சாட்சியை பற்றிய உங்கள் உணர்வு மற்றும் உங்கள் மனஉறுதி அனைத்தும் ஒன்று தான் என்பதை தெரிந்துக்கொள்வீர்கள். ¶தலை மற்றும் முதுகுத்தண்டின் மையத்தில் இருக்கும் இந்த சக்தியின் சாரத்திற்குள் சாட்சியை மூழ்க வைப்பது நான்காவது நிலை ஆகும். சாட்சி தன் மீதே கவனத்தை கொண்டு இருக்கும் நிலையை அடைவதற்கு மிகச்சிறந்த ஒழுக்கம் மற்றும் நுணுக்கமான கட்டுப்பாடு வேண்டும். நாம் கவனமாக இருக்கிறோம் என்பதில் முழு கவனத்துடன் இருக்கும் இந்த நிலை *கைஃப்* என்று அழைக்கப்படுகிறது. இது எந்த பொருள், உணர்வு அல்லது சிந்தனை மீது கவனம் செலுத்தாத சுத்த சாட்சியை குறிக்கிறது. இரவும் பகலும் முதுகுத்தண்டு மற்றும் உடல் வழியாக பாய்ந்து செல்லும் தூல ஆற்றல்களுக்குள் சென்று, பிறகு அதன் சக்தியினுள், அதன் பரந்த உட்புற ஆகாசம் வழியாக அதிக ஆழமாக, அதன் சாரத்திற்குள், பிறகு அதனுடைய சாரத்திற்குள் என்று தொடர்ந்து சென்றுகொண்டு இருங்கள். நீங்கள் இந்த நிலையில் அமர்ந்து இருக்கும் போது, புதிய சக்திகள் உங்கள் உடலில் நிரம்பி, நரம்பு அமைப்பு வழியாக வெளியுலகிற்கு செல்கிறது. இவ்வாறு தியானம் செய்வதன் மூலம் இயற்கை அதிக சுத்தமடைகிறது. நீங்கள் இவ்வாறு உங்களுக்குள் மையம் கொண்ட பிறகு, ஒரு தியானம் அல்லது *மந்திரம்* அல்லது ஒரு ஆழமான தத்துவக் கேள்வி பற்றிய வேட்கைக்கு தயாராக இருக்கிறீர்கள்.

தியான விக்நாஹா

ध्यानविघ्नाः



தியானத்தில் ஏற்படும் தடைகள்

முக்குணங்களுடன் பிறவி எடுத்து நிலை கொள்ளாமல், சஞ்சலத்துடன், பயந்து, ஆசைகள் நிறைந்து, கவனம் சிதறும் ஒருவர் அகந்தையை பெறுகிறார். அவர் பொறியில் சிக்கிய பறவையை போல, "இது நான்" மற்றும் "அது என்னுடையது" என்ற அகங்காரம் மற்றும் மமகாரத்துடன் தன்னை பிணைத்துக் கொள்கிறார்.

கிருஷ்ண யஜுர் வேதம், மைத்ரி உபநிடதம், 3.2. உபஹி, ப. 418



நதிக்கரையில் யோகாசனத்தில் அமர்ந்து இருக்கும் ஒரு அன்பர், தியானம் செய்ய முயற்சி செய்கிறார். அவர் தனது மனதை அமைதிப்படுத்தியதும், அகத்தில் இருந்து தடைகள் தோன்றுகின்றன. அவர் அன்று காலை பரிசோதித்த நோயாளியைப் பற்றி சிந்திக்கிறார். அவருக்கு பசி ஏற்படுகிறது. அவர் தனக்கு ஏற்பட்ட கோபத்தை நினைவுக்கூர்கிறார் மற்றும் பணத்தை பற்றி கவலை அடைகிறார் மற்றும் தனக்கு இருந்த குடிப்பழக்கத்தைப் பற்றி நினைக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 99

கவனச் சிதறலை

வசப்படுத்துதல்

தியானத்தின் போது நீங்கள் மேற்கொள்ளும் ஆன்மீக விசாரங்கள் முழுவதிலும், மனம் அசையாமல் இருக்க வேண்டும் என்கிற தத்துவ கோட்பாட்டில் உறுதியாக இருங்கள். மனதில் சிந்தனைகள் அசையாமல் இருக்கின்றன, மற்றும் சாட்சி மட்டுமே இயங்குகிறது. ஒரு சுதந்திர குடிமகன் தன்னை எதனுடனும் பொருத்திக் கொள்ளாமல், வெவ்வேறு நாடு, வெவ்வேறு நகரத்திற்கு செல்வதைப் போல சாட்சி ஒரு சிந்தனையில் இருந்து இன்னொரு சிந்தனைக்கு செல்கிறது. நீங்கள் இருபது நிமிடங்களுக்கு உங்கள் விரலையும் அசைக்காமல் அமர்ந்து பயிற்சி செய்ய பழகிவிட்டால், உங்கள் மெய்ஞ்ஞான மனம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தொடங்கும். அதனால் உங்கள் அடியுணர்வை மற்றும் பழைய *வாசனாக்களை* மறுநிரலாக்கம் செய்யவும் முடியும். இது உட்புறமான வாழ்க்கையின் அற்புதங்களில் ஒன்றாகும். இது உட்புறத்தில் நடைபெறுவதால் உட்புற அல்லது ஆன்மீக வாழ்க்கை என்று அழைக்கப்படுகிறது. ¶நீங்கள் உட்கார்ந்து சுவாசிக்கும் போது, உங்கள் ஆன்மாவின் உட்புற நரம்பு அமைப்பு அடியுணர்வின் மீது செயல்பட்டு, களிமண்ணை போல மாற்றி அமைக்கிறது. வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளில் இருந்து சாட்சி விடுவிக்கப்பட்டு, அமைதி மற்றும் பேரானந்தம் பல நூற்றாண்டுகளுக்கு தடையில்லாமல் நிலைத்து நிற்கும் உட்புற ஆழங்களில் துடிப்புணர்வு மற்றும் உற்சாகத்துடன் இயங்க விடுவிக்கப்படுகிறது. ஆனால் நீங்கள் ஒரு விரலை அசைத்தாலும், உங்கள் நரம்பியல் அமைப்பு முழுவதும் புறநோக்கியாக மாறுகிறது. வாகனத்தில் கியரை மேலிருந்து கீழே மாற்றுவதைப் போல, நீங்கள் சாட்சியின் தீவிரத்தை மாற்றுகிறீர்கள் மற்றும் அதன் பிறகு வெளிப்புற நரம்பு அமைப்பு செயல்படத் தொடங்குகிறது. மெய்ஞ்ஞான நிரலாக்கம் தடைபட்டு, சாட்சி உடல் மற்றும் புலன்களுக்கு திரும்புகிறது, மற்றும் வெளிப்புற மனம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகிறது. அந்த நேரத்தில் மீண்டும் அசையாமல் உட்கார்ந்தால், ஒரு சில நிமிடங்களில் சக்திகள் அமைதி அடைந்து, சாட்சி மீண்டும் உட்புறமாக தொடர்ந்து உயர்ந்து

செல்லத் தொடங்கிவிடும். நீங்கள் இந்த நிலையில் அமைதியாக உட்கார்ந்து இருக்கும் போது, தூல உடலில் மெய்ஞ்ஞான நரம்பியல் அமைப்பு வேலை செய்யத் தொடங்குவதை உங்களால் உணர முடியும். உங்கள் தசைகள், உங்கள் எலும்புகள் மற்றும் உங்கள் அணுக்கள் வழியாக முற்றிலும் புதிய ஓட்டம் இயங்குவதை உங்களால் உணர முடியும். அது தொடரட்டும். ¶நீங்கள் தியானம் செய்யும் போது, சாட்சி கடந்தகால நினைவுகள் அல்லது வருங்கால நிகழ்வுகளில் சுற்றித் திரியக் கூடும். அது புலன்கள் அல்லது ஒரு ஒலி அல்லது உடலில் ஏற்படும் ஒரு அசௌகரியம் மூலம் கவனம் சிதறக்கூடும். இது தொடக்க நிலைகளின் இயல்பு ஆகும். சாட்சியை மெதுவாக நீங்கள் தியானம் செய்யும் பொருள் மீது மீண்டும் கொண்டு வாருங்கள். அது இன்னொரு வகை கவனச் சிதறல் என்பதால் சாட்சி மீது குற்றம் சுமத்த வேண்டாம். உங்கள் தியானத்தில் தீவிரமான ஆர்வத்துடன் ஈடுபட்டு இருந்தால், கவனச் சிதறல்கள் மறைந்துவிடும். அத்தகைய சமயங்களில் நீங்கள் உங்கள் தூல உடலையும் மறந்து விடுவீர்கள். நீங்கள் ஒரு திரைப்படத்திற்கு செல்கிறீர்கள், ஒரு புத்தகம் படிக்கிறீர்கள் அல்லது உங்கள் கணினியில் உங்கள் பணியை செய்ய தொடங்கி அதில் தீவிரமாக மூழ்கி விடுகிறீர்கள். ஆனால் அப்போது உங்கள் கால்கள் அழுத்தத்தில் இருந்ததால், அவை அரை மணிநேரமாக மரத்துப் போன விஷயம் உங்களுக்கு சிறிது நேரம் கழித்துத் தான் தெரிகிறது. அதைப்போல நாம் அகத்தில் முழு கவனத்துடன் இருந்தால், நாம் தூல உடல் அல்லது வெளியுலகத்தால் கவனம் சிதறமாட்டோம். ¶தியானம் செய்யும் போது நீண்டநேரத்திற்கு கவனம் சிதறல்கள் தொடர்ந்து வந்துகொண்டு இருந்தால், நீங்கள் தியானம் செய்ய தயார் நிலையில் இல்லாமல் இருக்கக்கூடும். ஓரிடத்தில் கவனம் சிதறல்கள் ஓய்ந்து நிற்கும். அதுவரை நீங்கள் மனதின் உள்ளுணர்வு அல்லது அறிவுணர்வு பகுதியில் மிகவும் வலுவாக உங்களை பொருத்திக் கொண்டிருப்பீர்கள் மற்றும் தியானம் செய்யும் சிந்தனை உங்களுக்கு அதிக உற்சாகம் தருவதாக இருக்காது. அதனால் உங்களை உட்புறமாக தூண்டிவிடுவதற்கு ஒரு கருவி தேவைப்படும். இது நடைபெறும் போது இந்து சமயத்தில், *சத்குருவின்* அருள் நாடப்படுகிறது. திறந்த மனதுடன் உங்கள் *குருவிடம்* செல்லும் போது, நீங்கள் *தரிசனத்தை* பெறுகிறீர்கள், மற்றும் அதன் மூலம் கிடைக்கும் சிறிதளவு கூடுதல் சக்தியின் காரணமாக கவனச் சிதறல்கள் இருக்கும் பகுதிகளில் இருந்து சாட்சி நிரந்தரமாக விலகுகிறது. அதன் பிறகு உங்களால் நீண்டநேரம் தியானத்தில் அமர முடிகிறது. அவர் உங்களை உள்ளுணர்வு மற்றும் அறிவுணர்வு பகுதிகளில் இருந்து வெளியேற்றி உங்கள் உடலின் சக்தி ஓட்டத்தை மாற்றி அமைத்துள்ளதால் கவனச் சிதறல்கள் தொடர்ந்து குறைகின்றன. ¶தியானம் நிறைவடைந்த பிறகு, உங்கள் இயல்பில் இருக்கும் அம்சத்தையும் தூய்மை செய்ய முயற்சி செய்யுங்கள். எல்லா செயலும் நன்மைக்கே என்பதால், செயல்பட கற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் செயல்படுங்கள். மற்றவர்களிடம் இருந்து

மகிழ்ச்சியை நாடாமல், ஆன்மாவின் ஆழத்தில் நாடுவதன் மூலம் மகிழ்ச்சியுடன் இருக்க கற்றுக் கொள்ளுங்கள். தினசரி வாழ்க்கையில் மக்களுக்கு இடையே மற்றும் மக்களுக்கும் பொருட்களுக்கும் இடையே வெளிப்படும் சக்தியின் விளையாட்டை கவனியுங்கள். தியானம் செய்பவர் அச்சமின்றி எதில் இருந்தும் விலகி இருப்பதில்லை என்பதால், உலக சக்திகளை தவிர்க்க வேண்டாம். வெளியுலகமும் உள்ளுலகமும் அவருடைய விளையாட்டுத் திடலாக, அவரது இராச்சியமாக இருக்கின்றன. அவர் தனக்குள் துடிப்புணர்வு மற்றும் நம்பிக்கையுடன் இருக்கிறார். அவர் இன்னொரு நபர், ஆசிரியர், புத்தகம், நிறுவனம் அல்லது அமைப்பை சார்ந்து இருக்காமல் தனது சொந்த முதுகுத்தண்டை சார்ந்து இருக்க கற்றுக்கொள்கிறார். அவர் வழங்கும் பதில்கள் உண்மையாக உயிரூட்டத்துடன் இருக்கத் தொடங்கி, ஒவ்வொரு கேள்வியையும் முழுமையான விளக்கம் அளிக்கிறது. அவருடைய உடல் புதிய அருள் மற்றும் வலிமையை வெளிப்படுத்துகிறது. அவருடைய மனம் ஒழுக்கத்துடன் சிக்கல் இல்லாமல், ஒருமுக சிந்தனையுடன் சுறுசுறுப்பாக இருக்கிறது. அவருடைய உறவுகள் புதிய மற்றும் வலுவான பரிணாமங்களை பெறுகின்றன. அவருடைய மனவெழுச்சிகள் உறுதி அடைந்து, அவர் புதிதாக கண்டுகொண்ட அமைதியை பிரதிபலிக்கிறது. தியானம் செய்து உட்புறமாக தேடும் சிரத்தையுள்ள சாதகனுக்கு இத்துடன் மேலும் பல வலுவான வெகுமதிகள் கிடைக்கின்றன.

செவ்வாய்க்கிழமை

பாடம் 100

உறக்கம் மற்றும்

கற்பனை

தினமும் இரவு உறங்குவதற்கு முன்பாக தியானம் செய்வதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். தியானம் செய்யும் போது உங்களுக்கு உறக்கம் வருவது போல தோன்றினால், உங்கள் தியானம் முடிவடைந்தது என்பதை தெரிந்துகொள்ளுங்கள். ஆன்மீக சக்தி மறைந்து விட்டது மற்றும் அதை மீண்டும் வரவழைக்க அல்லது திறக்க வேண்டும் என்பதால், விருப்பத்துடன் உறங்க செல்வது சிறந்தது. உறங்க செல்வதற்கு தயாரானதும், பத்மாசனத்தில் அமர்ந்து உங்களால் முடிந்த அளவிற்கு வலுவாக தியானம் செய்யுங்கள். உங்களுக்கு உறக்கம் வரத்தொடங்கியதும், பின்வரும் யுத்தியை பயன்படுத்தி உங்கள் உடலை உறங்க வைக்கலாம். "இடது காலில் இருக்கும் *பிராண* சக்தியே, உறங்க செல். வலது காலில் இருக்கும் *பிராண* சக்தியை, உறங்க செல். இடது கையில் இருக்கும் *பிராண* சக்தியே, உறங்க செல். வலது கையில் இருக்கும் *பிராண* சக்தியே உறங்க செல். உடற்பகுதியில் இருக்கும் *பிராண* சக்தியே,

உறங்க செல். உட்புறத்தில் ஒளி நிரம்பி இருக்கும் தலையே, உறங்க செல்," என்று உங்கள் மனதில் சொல்லிக்கொள்ளுங்கள். இதன் பிறகு நீங்கள் காலையில் தான் விழிப்பீர்கள். ¶கனவும் உறக்க உலகமும் மிகவும் சுவாரசியமாக இருக்கின்றன. பெரும்பாலும் நாம் இரவு நேரங்களில் உணர்வின் அந்தர்லோகங்களுக்குள் செல்கிறோம். நீங்கள் இரவு நேரம் முழுவதும் தியானத்தில் இருந்து, மனதின் உயர் நிலைகளில் இருக்கும் அந்தர்லோக பள்ளிகளில் படித்தீர்கள் என்பதை எப்படி தெரிந்துக் கொள்வது? நீங்கள் இடைக்கால தூக்கக் கலக்கம் இல்லாமல், திடீரென்று விழித்துக் கொள்வீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் எழுந்து, திடீரென்று வெளியுலக உணர்வுக்குள் நுழைந்ததைப் போல தென்படுவீர்கள். இல்லையென்றால், நீங்கள் அடியுணர்வு கனவுலகத்தில் இருந்து எழுந்திருப்பீர்கள். நீங்கள் சிறிது சோர்வாக இருக்கக்கூடும், மற்றும் இரவில் பெரும்பாலும் கனவு அல்லது சூட்சும லோகம் அல்லது அறிவுசார் பகையுணர்வு நிரம்பிய லோகங்களில் இருந்ததை நீங்கள் தெரிந்துக் கொள்வீர்கள். *யோகாவில்* முயற்சி மேற்கொள்ளும் மாணவர்கள், தாங்கள் உறங்கும் போது சிறிது நேரத்திற்கு அந்தர்லோக தியானப் பள்ளிகளுக்கு செல்கிறார்கள். இது நன்றாக பயிற்சி பெற்ற மனம், ஆர்வமுள்ள மனம் மற்றும் தெள்ளத் தெளிவான மனதில் நடைபெறுகிறது. ¶இதற்கிடையில் நீங்கள் தூய வெள்ளை ஒளி, அல்லது தீவிரம் குறைவான உட்புற ஒளியை பார்த்திருந்து, அது தெள்ளத் தெளிவாக மற்றும் துல்லியமாக இருக்கிறது என்பதை கவனித்து இருப்பீர்கள். உங்கள் வெளியுலக உணர்வை தொடர்ந்து பராமரித்து சமநிலையை கொண்டு வருவதற்கு ஒவ்வொரு சிந்தனை, ஒவ்வொரு உணர்வு, ஒவ்வொரு செயலும் தெள்ளத் தெளிவாக மற்றும் துல்லியமாக இருக்க வேண்டும். இது நடைபெறும் போது, நீங்கள் இந்த உணர்வு நிலைகள் மீது அதிக கட்டுப்பாட்டை பெற்று இருப்பதால், நீங்களே உங்களுக்கு ஒரு தூண்டுகோலாக விளங்கி, உட்புற மற்றும் வெளிப்புற நிலைகளின் தடை ஏதும் இல்லாமல், உங்களால் உயர் நிலைகளுக்குள் நுழைந்து உணர்வின் வெளிப்புற நிலைகளுக்கு வெளிவரவும் முடியும். ¶நாம் அன்றாட வாழ்வில் சிந்தித்து செயலாற்றும் போதும் சிந்திக்காமல் எதிர் செயலாற்றும் போதும், நாம் இரவில் கனவு காண்கிறோம். நாம் வெளிப்புறமான அல்லது உக்கிரமான காந்த சக்தியாக இருக்கும் *பிங்கலாவில்* வாழ்கிறோம். இதனால் நாம் காட்சிகளாக கனவு காண்கிறோம். ஒரு செயலற்ற சக்தியாக, தயக்கமுள்ள காந்த சக்தியாக இருக்கும் *இடா* சக்தியில் ஒரு *யோகி* வாழ்கிறார் என்றால், அவர் சூட்சும உலகில் உணர்ச்சி மற்றும் மனவெழுச்சியை வெளிப்படுத்துகிறார். அவர் அச்சம் நிறைந்த, பல நிகழ்வுகள் கொண்ட, ஒரு மனவெழுச்சி இரவை அனுபவித்து இருப்பார். அவர் உணர்ச்சியில் காட்சிகளை காண்பதைப் போல கனவில் காண்பது இல்லை. ஒருவர் சுத்தமான ஆன்மீக சக்தியாக, முக்கிய உயிர் சக்தியாக இருக்கும் *சுஷும்னாவில்* வாழ்ந்தால், அவர் உறக்கத்தில் இருந்து தியான நிலைக்கு செல்கிறார். தியானம் செய்பவர்

வெளிப்புற மற்றும் உட்புற காந்த சக்திகளை சமன் செய்த பிறகு, அவர் தனது உடலை மனப்பூர்வமாக விருப்பத்துடன் உறங்க வைக்க வேண்டும். அதனால் அவர் படுத்து இருந்தாலும், அவர் பத்மாசனத்தில் அமர்ந்து இருந்தாலும், அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்து, தனது மனதிற்குள் கல்வி கற்கும் மற்றும் ஆன்மீக விரிவாக்க பள்ளிகளுக்கு செல்கிறார். காலையில் எனது மாணவர்களில் பலர், தங்களுக்கு இரவில் நடந்த அந்தர்லோக வகுப்பின் நடவடிக்கைகள், ஒரு கனவாக அல்லாமல் தனது சொந்த அனுபவமாக நினைவில் வைத்து இருக்கிறார்கள். அதனால் நீங்கள் உறங்கும் போது தியானம் செய்யலாம், ஆனால் தியானம் செய்யும் போது உறங்காதீர்கள்!

புதன்கிழமை

பாடம் 101

அடியுணர்வை

சுத்தம் செய்தல்

சில காலத்திற்கு நீங்கள் தியானம் செய்த பிறகு, உங்கள் ஆன்மீக பார்வை கூர்மை மற்றும் தெளிவை பெறுகிறது. வாழ்க்கையின் பிறப்பு இறப்பு சக்கரத்தில் விடுதலை பெற்று, தற்போது தூய்மை அடைந்து இறுதியில் சுதந்திரம் அடைந்து இலக்கிற்கு வந்து சேர்ந்தோம் என்ற உணர்வு உங்களுக்கு சிறிது நேரம் இருக்கலாம். ஆனால் விரைவில், இந்த பிறப்பில் நீங்கள் அடியுணர்வில் பதிய வைத்த அதிர்வு விகிதங்கள் அனைத்தையும் அது தெளிவான, சித்திர வடிவில் உங்களுக்கு காண்பிக்கும் போது, உங்கள் கடந்தகாலம் வரிசை வரிசையாக தன்னை உங்களிடம் வெளிப்படுத்தத் தொடங்கும். ஒரு ஒலிப்பதிவு பெட்டியைப் போல, அது முந்தைய காரண காரியங்களின் மாதிரிகள் மற்றும் அதிர்வுகளை மீண்டும் இயக்குகிறது. ¶இந்த நினைவுகள் மற்றும் செயல்களில் சில பாராட்டும் படியாக இல்லாமல் இருக்கலாம், அதனால் நீங்கள் அவற்றை தவிர்க்க முற்படுவீர்கள். அவற்றை தவிர்க்க நீங்கள் அதிக முயற்சி செய்யும் போது, அவை அதிக தெளிவை பெறுகின்றன. மற்ற எல்லோரும் அவற்றை பார்ப்பதாக உங்களுக்கு தோன்றலாம், ஆனால் அவர்கள் அவற்றை பார்ப்பது இல்லை. உங்கள் கண்களின் முன்பாக கடந்து செல்லும், இந்த கடந்தகால தொடர்புகள் மற்றும் பற்றுகள் ஒரு தற்காலிக ஈர்ப்புப் போல தோன்றுவதால், ஆன்மீக விரிவாக்கத்தின் இந்த இயல்பான கட்டம் ஒரு இடைஞ்சலாக இருக்கக்கூடும். மறைந்து விட்டதாக நீங்கள் கருதிய பழைய ஆசைகள், பழைய நண்பர்கள், சந்தோஷம் தரும் பழைய பழக்கங்கள் தற்போது சாட்சியை தூண்டிவிட்டு, பயனுள்ளதாக தோன்றும் கடந்தகாலத்தில் இழுப்பதற்கு காட்சி அளிக்கின்றன.

இந்த நிகழ்வின் மீது தீவிர கவனம் செலுத்த வேண்டாம். இது இயல்பாக மற்றும் முக்கியமாக இருக்கிறது. பெரும்பாலும் மக்கள் வெறுப்பை உண்டாக்கும் பின்னூட்டத்தை நிறுத்தும் பொருட்டு, தங்கள் தியான முயற்சிகளை நிறுத்திவிடுவதால், செய்முறை பற்றிய அச்சத்தை நீங்கள் தவிர்க்க வேண்டும். இது தியானத்தை நிறுத்துவதற்கான தருணம் இல்லை. இது கடந்தகாலத்தை தவிர்ப்பதற்கான நேரமும் இல்லை. நீங்கள் தற்போது இருக்கும் நிலைக்கு அழைத்து வந்த, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு வருடத்தையும் முழுமையாக ஆய்வு செய்வதற்கான தருணம் ஆகும். ¶நீங்கள் உட்புறமாக சமநிலையில் நிலைத்து இருந்து, வாழ்க்கைக் காட்சிகளை பற்றின்றி கவனிக்கும் போது, அவை மெதுவாக மங்கி, மெய்ஞ்ஞான லோகங்களுக்குள் சாட்சி அதிக ஆழத்திற்குள் செல்ல சுதந்திரமாக விட்டுவிடுகிறது. சிலசமயம் தீவிரமாக இருக்கும் இந்த அனுபவம், திரிந்த காட்சிகள் இல்லாத புதிய வாழ்க்கையை வாழ்வதற்கு புத்துணர்வு பெற்ற ஆசைக்குள் உங்களை அழைத்து செல்கிறது. ஒவ்வொரு செயலின் எதிரொலி அடியுணர்வில் நேர்மறையாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், உங்களுக்கு சமயத்தில் பற்று ஏற்பட்டு உங்கள் வாழ்முறையை *இயமங்கள்* மற்றும் *நியமங்களுக்கு* ஏற்ப கவனமாக மாற்றிக் கொள்கிறீர்கள். நீங்கள் உள்ளுணர்வு மனம் மற்றும் புலனுணர்வுகளின் மனநிலைகள் மற்றும் மனவெழுச்சிகளுக்கு ஏற்ப வாழ்வதன் விளைவாக தரம் குறைவான விளைவுகளை கவனித்து இருக்கிறீர்கள், மற்றும் அந்த அனுபவம் ஒரு பெரிய பாடத்தை உங்களுக்கு புகட்டியுள்ளது. இந்த புதிய வழிகாட்டலுக்கு ஏற்ப நீங்கள் உங்கள் வாழ்வை மறு ஆய்வு செய்யும் போது, நீங்கள் உங்கள் தொழில், உங்கள் வீட்டு விலாசம், உங்கள் உணவு மற்றும் குணங்களை மாற்றிக்கொள்ளக் கூடும். நற்பண்புள்ள மக்களுடன் சேர்வது அவசியம் என்பதால், நீங்கள் புதிய நண்பர்களை தேடிக்கொள்வீர்கள். உங்கள் நண்பர்களை கவனமாக தேடிக்கொள்ளுங்கள், ஆனால் அவர்களுடன் நெருங்கி பழக வேண்டாம். மக்களுக்குள் ஏற்படும் நெருக்கம் தியான வாழ்க்கையில் மிகப்பெரிய இடையூறாக இருக்கிறது. ¶பொதுவாக ஒருவர் பாதையில் அடியெடுத்து வைத்து தியானம் செய்ய தொடங்கியவுடன், தான் முழுமையாக கற்கும் முன்பே, அதை எப்படி செய்வது என்று மற்ற எல்லோருக்கும் தெரிவிக்க விரும்புவார். இவ்வகை உரையாடல் ஆன்மீக விளைவுகளை எப்போதும் ஏற்படுத்துவது இல்லை. தியானம் தொடர்பான உங்கள் திறமைகள் மற்றும் நடவடிக்கைகளை உங்களுக்குள் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஆன்மீக விஷயங்களை உங்கள் *குருவைத்* தவிர வேறு யாரிடமும் பேசவேண்டாம். உட்புறமாக கவனம் செலுத்தும் முறை மற்றவர்களுக்கு வரும் போது, அவர்களும் நீங்கள் செய்ததைப் போலவே இயல்பாக செய்வார்கள். இது தான் விதி.

வியாழக்கிழமை

பாடம் 102

மற்றவர்களுடன் ஏற்படும்

முரண்பாடுகள்

நல்லுறவுகள் தியானம் செய்பவருக்கு பெரிதும் உதவியாக இருக்கின்றன, மற்றும் தியானம் அந்த உறவுகளை இணக்கத்துடன் வைத்திருக்க உதவுகிறது. உங்களுடைய உறவு மற்றவர்களுடன் சுமூகமாக இருக்கும் போது, தியானம் எளிதாகிறது. நமக்கு மற்றவர்களுடன் பிரச்சனைகள் இருந்து அவர்களுடன் வாதாடினால் அல்லது மனதளவில் கருத்து வேறுபாடு அல்லது வாய்த்தகராறு ஏற்பட்டால், தியானத்தின் நுணுக்கத்தை மீண்டும் பெறுவதற்கு நாம் மிகவும் கடுமையாக உழைக்க வேண்டும். மோசமான தொடர்புகள் சாட்சியை கோபமூட்டி, அதனை உள்ளுணர்வு மற்றும் அறிவுணர்வு சக்திகள் வழியாக பாய்ந்து செல்ல வைப்பதால், அவை மிகப்பெரிய தடைகளாக இருக்கின்றன. இது நரம்பியல் அமைப்பு மீது அழுத்தம் மற்றும் பதட்டத்தை ஏற்படுத்தி மெய்ஞ்ஞான நிலையின் உட்புற கதவுகளை மூடுகிறது. ¶நமது சக மக்களை கூர்ந்து கவனித்து, முகபாவங்கள் மற்றும் அவர் குரலின் ஏற்ற இறக்கங்களை கண்காணிக்க வில்லை என்றால், நம்மால் பார்க்க முடியாத அடியுணர்வு சக்திகள் அல்லது தியானம் செய்யும் போது எதிர்கொள்ளும் உட்புற மனதின் சுத்தமான மெய்ஞ்ஞான பகுதிகளுடன் எவ்வாறு தொடர்ந்து செயல்படமுடியும்? நாம் நமது உறவுகள் மீது வெற்றிகொண்டு இணக்கத்தை பெறவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இதற்காக நாம் மற்றவர்களின் குணங்களை மாற்ற முற்படாமல், நமக்குள் இருப்பதையே நாம் அவரிடம் காண்பதால், நமக்குள் இருக்கும் அந்த நபரை மாற்ற முற்பட வேண்டும். அவர் நமது கண்ணாடியாக மாறுகிறார். விவாதம் அல்லது ஆய்வு மூலம் மற்றவர்களை சாதுரியமாக கட்டுப்படுத்துவதன் மூலம் உறவை வெளிப்படுத்தி, அது நமது ஆழ்ந்த தியானத்திற்கு தடையாக இருக்க அனுமதிக்க முடியாது. அதற்கு பதிலாக, மாற்றம் தேவைப்படும் அனைத்தையும் நமக்கு உட்புறமாக்கி, நாம் அவற்றுடன் செயல்படவேண்டும் மற்றும் மற்றவர்களை அந்த நடவடிக்கையில் இருந்து விலக்கி வைக்க வேண்டும். இது மனித உறவுகளை மேம்படுத்த உதவுகிறது, மற்றும் இந்த உறவுகள் மேம்படும் போது, நமது தியானம் செய்யும் திறமையும் மேம்படுகிறது. ¶நமது நரம்பியல் அமைப்பு ஒரு ஹார்ப் இசைக்கருவி போன்று இருக்கிறது. இதனை மற்றவர்களால் வாசிக்க முடியும். அவர்கள் நமது நரம்பியல் அமைப்பில் பல தொனிகளை எழுப்ப முடியும். ஒரு ஹார்ப் மூலம் அனைத்து வகை இசைகளையும் வாசிக்க முடியும், ஆனால் அந்த ஹார்ப் இசைக்கருவியில் மாற்றம் ஏதும் ஏற்படுவதில்லை. மக்கள் நமது நரம்பியல் அமைப்பின் மீது தொனி மற்றும் நிறத்தின் மாதிரிகளை தோன்ற வைப்பது முதல் எண்ணற்ற மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இது நரம்பியல் அமைப்பை

துன்புறுத்துவது இல்லை. இது ஒரு ஹார்ப் இசைக்கருவியைப் போல மாற்றம் பெறாமல் இருக்கிறது. அதே நரம்பியல் அமைப்பை நமது மெய்ஞ்ஞானம் அல்லது நமது பேரார்வங்கள் மூலமாகவும் வாசிக்கலாம். தியானத்தின் அற்புத திறமைகளால் விளையும் அழகான அறிவை நம்மால் அனுபவிக்க முடியும் அல்லது இன்னொரு நபருடன் ஒரு வாக்குவாதத்தை அனுபவிக்க முடியும். இவற்றை சார்ந்த அனைத்து தொனிகளையும் ஒரே நரம்பியல் அமைப்பு பல்வேறு சமயங்களில் வாசிக்கிறது. நமது நரம்பியல் அமைப்பு மெய்ஞ்ஞான நிலையின் அழகான லயத்தின் மூலம் முழுமையாக இசைக்கப்படவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இது பேரின்பம் தருவதாக இருக்கும். நாம் நமது நரம்பியல் அமைப்பு மீது மற்றவர்கள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தாமல், நேர்மறை விளைவுகளை மட்டுமே ஏற்படுத்த விரும்புகிறோம். அதனால் தான் நமது வாழ்க்கைப் பாதையில் நல்லவர்கள் நட்பு மிகவும் முக்கியமாக விளங்குகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 103

அகத்தில் மேற்கொள்ளும்

பயணம்

தியானம் செய்யத் தொடங்குவதை ஒரு பயணம் தொடங்குவதுடன் ஒப்பிடலாம். தொடங்குவதற்கு முன்பாக இலக்கு மற்றும் பயணம் செய்யும் முறையை முடிவு செய்துக்கொள்ள வேண்டும். நன்றாக வரையறுக்கப்பட்ட ஒரு கலையாக இருக்கும் தியானம், சாதிக்க விரும்புவோருக்கு நல்ல பயனுள்ள முயற்சியாக இருக்கிறது. தியானம் செய்வது எளிதில்லை, அதே சமயம் அது கடினமாகவும் இருப்பதில்லை. தினமும் வெளிப்புற மற்றும் நுணுக்கமான உட்புற சக்திகளை கட்டுப்படுத்தி பயிற்சி செய்வதை கற்றுக்கொள்ள விடாமுயற்சி மட்டும் தான் வேண்டும். தியானம் என்பது மிகவும் ஆழமான மற்றும் மிகவும் நுணுக்கமான ஆன்மீக சக்திகளை நன்றாக புரிந்துகொள்வதற்கு ஒரு ஒழுங்குமுறையான கலையாக விளங்குகிறது என்பதை நாம் உணர வேண்டும். அது மட்டுமீரிய ஆர்வம் இல்லை. அது ஒரு நூதனப் பொருள் இல்லை. இது பக்கத்து வீட்டில் ஒருவர் செய்கிறார் என்று நாமும் செய்யும் செயல் இல்லை. இது இந்த பூமியில் செய்யும் மிகவும் புனிதமான செயலாக இருக்கிறது, மற்றும் அதை அதிக வலிமை மற்றும் நேர்மையுடன் அணுக வேண்டும். இந்த தருணங்களில், நாம் பிறப்பின் முக்கிய குறிக்கோளான ஆத்ம ஞானத்தை பூர்த்தி செய்யும் போது, நாம் இறைவன் மற்றும் உண்மைப் பொருளை நாடி, உயிர் சக்திகள் மற்றும் உணர்வை உண்மையில் கட்டுப்படுத்துகிறோம். நாம் தியானத்தை அடக்கம்

மற்றும் ஆர்வத்துடன் அணுகவில்லை என்றால், நாம் இந்த பிறவியில் நமது குறிக்கோளை அடைய வாய்ப்பில்லை. ¶நாம் ஒரு புதிய யுகத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். எல்லாம் மாறிக்கொண்டு இருக்கின்றன. எல்லாம் மாறுபட்டு இருக்கின்றன. நாம் இங்கே இந்த பூமியில் நமது இருப்பிற்கு மதிப்பு அளித்து அதன் குறிக்கோளை பூர்த்தி செய்யவே இருப்பதால், நமது தியான சக்திகளை கொண்டு நாம் மாற்றி அமைக்கலாம் என்பதில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். உங்களுக்கும் உங்கள் சக மனிதர்களுக்கும் மதிப்பு அளித்திடுங்கள். "நான் இந்த உலகத்தில் மிகவும் அற்புதமான மனிதன்!" என்று உங்களிடம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்ளுங்கள். "ஏன்? கட்டுக்கு அடங்காத எனது அடியுணர்வு காரணமாகவா? அப்படி இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. எனக்கு அறிவுப்பூர்வமாக தெரிந்து இருக்கும் விஷயங்கள் காரணமாகவா? அப்படி இல்லை. எனது முதுகுத்தண்டு, தலை மற்றும் உடல் மற்றும் அதற்குள் இருக்கும் சக்தி, மற்றும் அதற்குள் இருக்கும் அந்த உண்மைப் பொருள் வழியாக மாபெரும் ஆன்மீக ஆற்றல் பாய்ந்து செல்வதால், நான் உலகில் மிகவும் அற்புதமான மனிதனாக இருக்கிறேன்."¶இந்த பிறவியில் இந்த சக்தியின் சாரத்தை உங்களால் உணர முடியும் என்பதை முழுமையாக புரிந்துக் கொள்ளுங்கள். சுதந்திரம், உற்சாகம் மற்றும் கட்டுப்பாட்டை வழங்கும் முதுகுத்தண்டு மற்றும் அதனுள் இருக்கும் ஆற்றலை உணருங்கள். பிறகு "நான் ஒரு அற்புதமான மனிதன்" என்பதை முழுமையாக சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளும் வரை, அதை தொடர்ந்து உங்களிடம் சொல்லிக்கொண்டு இருங்கள். உங்கள் முதுகுத்தண்டின் மீது சாய்ந்து இருங்கள். உட்புறமாக இருக்கும் தலைசிறந்த பண்பை சார்ந்து இருப்பதே, இந்த புதிய யுகத்தின் மையக்கருத்து ஆகும். உங்கள் குணத்தில் ஒரு கட்டுக்கு அடங்காத பகுதியை கண்டுகொண்டால், *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* உங்கள் வழிகாட்டியாக பயன்படுத்தி, அதை மெதுவாக மறு நிரலாக்கம் செய்யுங்கள். தினமும் ஒரு வலுவாக, இறைவனைப் போன்ற ஒரு வாழ்க்கையை வாழுங்கள். சிவபெருமானுடன் திருநடனம், சிவனோடு வாழ்தல் மற்றும் சிவபெருமானிடம் ஐக்கியமாதல். தியானம் என்று அழைக்கப்படும் இந்த மனதின் பகுதியில் அடியெடுத்து வையுங்கள். இதை உங்கள் வாழ்க்கைக்கு ஒரு அடித்தளமாக மாற்றுங்கள் மற்றும் உங்கள் வாழ்வில் ஆக்கத்திறன், வெற்றி மற்றும் மேன்மையின் அனைத்து வடிவங்களும் ஏதாவது ஒரு ரூபத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும். இந்த பூமியில் இருக்கும் எல்லோரும் ஒரு குறிக்கோளுக்காக வாழ்ந்து வருகின்றனர். அந்த குறிக்கோள் தியான சக்திகள் மூலமாக, பிரபஞ்சத்தின் மத்தியில் உங்கள் பரமாத்துமா இருப்பதை பார்த்து மற்றும் இறுதியில் உணர்வதன் மூலம் உங்களுக்கு தெரியவரும்.

சனிக்கிழமை

பாடம் 104

கட்டுக்கு அடங்காத

அகத் தூண்டுதல்

எனது மாணவர்களில் ஒருவரைப் பற்றியும், அவர் மனதின் மெய்ஞ்ஞான நிலையை கண்டறிவதில் பெற்ற அனுபவத்தைப் பற்றியும், நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். நான் இந்த இளைஞரை முதல் முறையாக சந்தித்த போது, தனக்கு இசையமைப்பாளராக விருப்பம் இருப்பதாக என்னிடம் தெரிவித்தார். அவர் உலகின் தலை சிறந்த இசைப்படைப்பை உருவாக்க விரும்பினார். அவர் அந்த சமயத்தில் இசையில் பட்டப்படிப்புடன் ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து தேர்ச்சி பெற்று இருந்தார், மற்றும் இசையை அமைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட அறிவுசார் விதிகள் அனைத்தையும் கற்று இருந்தார். இசை அமைப்பதைப் பற்றி சில இயக்கமுறை விதிகள் வழங்கிய உபதேசங்கள், அவருக்கு முழுமையான திருப்தி அளிக்கவில்லை. அவர் தன்னிடத்தில் இருந்து இசை எந்த ஒரு சிந்தனையும் இல்லாமல் வெளிவரவேண்டும் என்று விரும்பினார். நான் அவரிடம் ஒரு நாள், "இங்கே பியானோவிற்கு அருகில் உட்கார்ந்து, திரைத்தசை வழியாக சுவாசித்து உங்கள் மெய்ஞ்ஞானத்துடன் தொடர்பு கொண்டு, உங்கள் வலது கை மூலம் ஒரு இசைக்குறிப்பை அறிந்துகொண்டு, அதை எழுதிக் கொள்ளுங்கள். நீங்கள் ஐம்பது வருடங்கள் கழித்து இசையமைப்பாளராக வேண்டிய இல்லை, இப்பொழுதே ஒரு இசையமைப்பாளராகத் தான் இருக்கிறீர்கள். நீங்கள் தொடர்பு கொள்ளும் மெய்ஞ்ஞான மனம் நாளை வேலை செய்யாமல் நித்தியத்தில் வேலை செய்கிறது," என்று கூறினேன். அதனால் அவர் தனது விரல்களுக்கு கிடைத்த இசைக்குறியீட்டை எழுதிக் கொண்டார். "இன்னொரு இசைக்குறியீட்டை எழுதுங்கள்," என்றேன், "அதன் பிறகு இன்னொன்று மற்றும் இன்னொன்று," என்று கூறினேன். ¶நாங்கள் வலது கை மூலம் ஒரு பக்க இசையை முடித்து இருந்தோம். பிறகு நான் அவரிடம் இவ்வாறு கேட்டேன், "இனி இடது கையை பயன்படுத்தலாமா? இசைக்குறியீட்டில் மேற்பகுதியை மட்டும் நிரப்பினால், முழுமையான இசையை கிடைத்து விடாது." அவர் சிறிது யோசித்துக்கொண்டு, “நான் வலது கை மூலம் எழுதிய குறியீட்டின் அடிப்படையில் இடது கையின் குறியீட்டை உருவாக்க வேண்டும்," என்றார். உடனே நான், “வேண்டாம். உங்களுக்காக மெய்ஞ்ஞானம் வேலை செய்யட்டும். இப்போது நீங்கள் வலது கை மூலம் உருவாக்கிய குறியீட்டை கவனிக்காமல், இடது கை மூலம் முதல் இசைக்குறியீட்டை உருவாக்குங்கள்.” இரண்டு கைகளின் ஒலிகளை ஒன்றாக கேட்கும் போது பொருத்தமின்றி இருக்கக்கூடும் என்று அவர் அஞ்சினார், ஆனால் அந்த பக்கம் இரண்டு கைகளின் குறியீடுகளால் நிரம்பும் வரை, இடது கை மூலம் குறியீடு எழுதுவதை தொடர

வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். அவர் எழுதிய குறியீட்டை வாசிக்கும்மாறு நான் அவரிடம் கேட்டுக்கொண்ட போது, அவர் தன் இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டார். ஆனால் இறுதியில், "சரி, நீங்கள் வற்புறுத்தினால்...," என்று இணங்கினார். "ஆமாம். நீங்கள் தைரியமாக வாசியுங்கள்," என்றேன். அவர் தான் எழுதியதை வாசிக்கத் தொடங்கினார். அந்த இசைப் படைப்பு கடினமாக இருந்தாலும், அதில் எந்த பேதமும் தென்படவில்லை. "நீங்கள் ஒரு இசையமைப்பாளராகி விட்டீர்கள். நீங்கள் அந்த நாதங்களை எவ்வாறு ஒன்று சேர்த்தீர்கள் என்பது மனப்பூர்வமாக தெரியாமல், அந்த படைப்பை மெய்ஞ்ஞானத்தின் துணையுடன் உருவாக்கி இருக்கிறீர்கள். ஆனால் அதை செய்து முடிப்பதற்கு உங்களிடம் போதுமான தன்னம்பிக்கை இருந்தது. இதைப் போலவே, நீங்கள் தொடங்கியதை சாதித்து முடிப்பதற்கு எப்போதும் நித்தியத்தின் துணையை நாடவேண்டும்," என்று நான் அவரை பாராட்டினேன். ¶அவர் அடுத்த நாள், அழைக்கப்பட்ட நேரத்திற்கு சரியாக வந்து இருந்தார், மற்றும் மெய்ஞ்ஞானத்தின் துணையுடன் இசையமைக்க தனக்கு மீண்டும் உதவ வேண்டும் என்று அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். "என்னால் முடியாது. என்னால் உங்களுக்கு இசையமைக்கும் கருவியாக மாற முடியாது. உங்களுடைய அகத் தூண்டுதலை நீங்களே தேடிக்கொள்ள வேண்டும். *யோக* விதிகளை பயிற்சி செய்து, ஒருமுகச் சிந்தனை மற்றும் தியானம் செய்வதற்கு இதுவே சரியான தருணம்," என்று நான் குறிப்பிட்டேன். அவர் தொடர்ந்து முயற்சி செய்துக்கொண்டு இருந்தார், ஆனால் அவருடைய அடியுணர்வு தடையாக இருந்துக்கொண்டு இருந்தது. அவர் தனது இசைமயைக்கும் திறமையை இழந்துவிட்டதாக நான் தெரிவித்தேன். அவருடைய தற்போதைய நிலை மிகவும் எளிதாக இருப்பதாக தவறாக காட்சி அளிப்பதையும், அவர் தனது உணர்வுள்ள மனதில் அதிக பாதுகாப்பை உணர்வதையும் நான் உணர்ந்துகொண்டேன். அவர் தன்னை ஒரு இசையமைப்பாளராக நிலைநிறுத்திக் கொண்டு, விருப்பத்துடன் அகத் தூண்டுதலை உருவாக்கும் திறமையை உருவாக்கிக் கொள்வது, அவரது அடுத்தக்கட்ட நடவடிக்கையாக இருந்ததால், அவருடைய மெய்ஞ்ஞானத்தை தடை செய்யும் அடியுணர்வு எதிர்மறை *கர்மவினைகளை* கரைக்கும் மிகவும் கடினமான பணியை நான் அவருக்கு வழங்கினேன். நான் அவருக்கு ஒரு முக்கிய கருவியாக *மஹா வாசன தாக தந்திரத்தை* வழங்கினேன். நான் வழங்கிய பணியை முழுமையாக நிறைவேற்றி, அவர் தனது விருப்பத்திற்கு ஏற்ப இசை அமைக்க தொடங்கும் வரை திரும்பி வரவேண்டாம் என்று அவரிடம் கூறினேன். அவர் தனது நண்பர்களிடம் இருந்து சிறிது காலம் விலகி இருக்கவேண்டி இருந்ததால், அவரிடம் தயக்கம் தெரிந்தது. ஆனால் அவர் சிரத்தை மற்றும் மன உறுதியுடைய மாணவராக இருந்ததால், அவர் தனியாக இருந்து தனது பணியை பூர்த்தி செய்தார். அந்த பணியை அவர் பூர்த்தி செய்யும் போது, சிறு வயதில் இருந்து தொல்லையாக அவருடைய அடிமனதில்

குடிகொண்டு இருந்த, விஷயங்கள் அனைத்தையும் அவர் பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறு செய்யும் போது, அவருடைய உயர்நிலை புலன்கள் அவருக்கு முழுமையாக வெளிப்பட்டு, அவருடைய எழுதும் வேகத்திற்கு அவரிடம் இருந்து இசை வெளிவரும் வரை, அவருடைய அடியுணர்வில் பல வருடங்களாக இருந்த பல தடைகளை அவர் நீக்கினார்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 105

ஒருமுகச் சிந்தனையை

பயன்படுத்துதல்

நீங்கள் பயன்படுத்துவதற்காக மெய்ஞ்ஞானத்தின் பல புலன்கள் காத்து இருக்கின்றன. மெய்ஞ்ஞானத்தை புரிந்துக்கொண்டு அதை விரிவாக்கம் செய்வதன் மூலமாக மட்டுமே, உங்களால் ஆக்கத்திறனை புரிந்துகொள்ளவும் ஆத்ம ஞானத்தை பெறவும் முடியும். அது கடினம் இல்லை என்றாலும், உணர்வின் உயர்ந்த அல்லது உட்புற நிலையை திறப்பதற்கு, உங்கள் சிந்திக்கும் புலன்கள் மீது நீங்கள் முழுமையான கட்டுப்பாட்டை பெற வேண்டும். ¶தியானம் தொடங்குவதற்கு முன்பாக ஒருமுகச் சிந்தனையில் பயிற்சி செய்து அதில் நிறைவு பெறவேண்டும். நீங்கள் தியானம் செய்யும் போது ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு அரை மணிநேரம் உறங்காமல் இருக்க முயற்சி செய்வதாக தோன்றினால், நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்து, அரை மணிநேரம் உறங்காமல் இருக்க முயற்சி செய்து, மூக்கு அரிக்கத் தொடங்கும் போது அதை சொறியாமல் இருப்பதை மட்டுமே சாதித்து இருக்கிறீர்கள். ஆனால் அது தியானம் இல்லை. தியானம் என்பது மனதின் நிலையை உண்மையில் மாற்றுவதை குறிக்கிறது. "நான் ஒரு புத்தகத்தை படிக்கும் போது, மனதை ஒருமுகப்படுத்துகிறேன். நான் அதை படிக்கும் போது, எனக்கு வேறு எந்த சத்தமும் கேட்பதில்லை," என்று ஒரு அன்பர் என்னிடம் குறிப்பிட்டார். ஆனால் இது ஒருமுகச்சிந்தனையை குறிப்பிடாமல், அதன் முதல் நிலையாக இருக்கும் கவனத்தை குறிக்கிறது. ஒருமுகச் சிந்தனை என்பது நீங்கள் சிந்திப்பதைப் பற்றி புரிந்துகொள்ளத் தொடங்கும் வரை, ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு சிந்திப்பதைப் பற்றி குறிப்பிடுகிறது. நாம் எதன் மீது கவனத்தை ஒருமுகப்படுத்துவது? ஏதாவது ஒரு திடப்பொருளுடன் தொடங்குங்கள். உதாரணத்திற்கு ஒரு கைக்கடிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த கைக்கடிகாரத்தைப் பற்றி சிந்தியுங்கள். அதில் இருக்கும் படிகத்தைப் பற்றி சிந்தியுங்கள். கைகளைப் பற்றி சிந்தியுங்கள். உங்கள் மனம் அந்த கைக்கடிகார இயக்கத்தின் மீது கவனம் செலுத்தட்டும், மற்றும் சிறிது நேரம் கழித்து, மனதின்

கவனம் சிதறி அது பல வித்தைகள் செய்வதை நீங்கள் கவனிக்கலாம். நீங்கள் அலார கடிகாரங்கள் அல்லது தெருவில் இருந்து வரும் ஏதாவது ஒரு ஒலியைப் பற்றி சிந்திக்கக் கூடும். ¶உங்கள் ஒருமுகச் சிந்தனையின் கவனம் சிதறும் ஒவ்வொரு முறையும், நீங்கள் தொடக்கத்தில் இருந்து மீண்டும் தொடங்க வேண்டும். நீங்கள் ஒரு அரிப்பு அல்லது ஒரு ஒலி மூலம் கவனம் சிதறாமல் இருக்க, ஆழமாக சுவாசித்து உங்கள் உடலின் அனைத்து சக்திகளையும் ஒருங்கிணைத்திடுங்கள். உங்கள் சாட்சியின் கவனத்தை மீண்டும் உங்கள் கடிகாரத்தின் மீது இயக்குங்கள். நீங்கள் அறிவதற்கு முன்பாக, நான்கு வாரங்கள் முன்பு பார்த்த ஒரு திரைப்படத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டு, பத்து நிமிடங்கள் விரயம் அடைந்ததை உணராமல் நீங்கள் மீண்டும் அந்த கற்பனைகளில் வாழ்ந்துகொண்டு இருப்பீர்கள். ஆனால் உங்கள் சாட்சியிடம் கவனமாக மற்றும் மென்மையாக இருங்கள். அதை உங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தும் விஷயத்தின் மீது அமைதியாக மற்றும் உறுதியாக திரும்பி, "நான் எனது சிந்தனையின் தலைவன்" என்று உங்களிடம் சொல்லிக் கொள்ளுங்கள். இறுதியில் உங்கள் சாட்சி நீங்கள் விரும்புவதை செய்யத் தொடங்கிவிடும். ¶உங்களால் ஒரு பொருளின் மீது எந்த தடுமாற்றமும் இல்லாமல் சாட்சியை இயக்க முடிந்ததும், நீங்கள் சிந்தனையை ஒருமுகப்படுத்தும் பொருள் உங்களுக்கு புரியத் தொடங்கும் மற்றும் இந்த புரிந்துணர்வு நிலை தியானத்தின் தொடக்கம் என்பதை நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள். நீங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு முன்பாக, உங்கள் மனதில் இருந்த இரைச்சலைக் காட்டிலும், இந்த நிலையில் அதிக துடிப்புணர்வுடன் இருக்கிறீர்கள் மற்றும் தியானம் செய்வதற்கு முன்பைக் காட்டிலும் சற்று கூடுதல் விவேகத்துடன் வெளி வருகிறீர்கள். ¶தியானத்தில் முழுமை அடைந்ததும், சித்தியாகும் உணர்வின் அடுத்த நிலை தாரணை என்று அழைக்கப்படுகிறது. சாட்சியின் தாரணை நிலையில், உங்கள் உடல் மற்றும் நீங்கள் தியானம் செய்யும் பொருள் வழியாக உயிரின் சாரம் அனைத்தும் வழிந்து ஒளி வீசுவதை உணர்வீர்கள். தாரணை நிலைத்து நிற்கும் போது, *சமாதி* இறுதி நிலையாக விளங்குகிறது. மேலும் அது உங்கள் மனதின் எல்லா நிலைகள், உணர்வின் அனைத்து கட்டங்களை கடந்து இருக்கும் உங்கள் பரமாத்துமாவை கண்டுகொண்டு, *சாரூப* என்கிற அவருடைய வடிவத்தை அடையும் நிலையை குறிப்பிடுகிறது. நீங்கள் *சமாதியை* அடைந்த பிறகே, "நான் யார்?" என்ற கேள்விக்கு அனுபவப்பூர்வமாக பதில் அளிக்க முடியும். அப்போது தான் நீங்கள் எங்கும் எதிலும் வியாபித்து இருப்பதையும், இறுதியில் அதிக ஆழமான *சமாதி* நிலையில் இருக்கும் போது நீங்கள் காரணம், காலம் மற்றும் பரவெளியை கடந்து இருப்பதையும், விழிப்புணர்வு பெற்ற உங்கள் உட்புற மற்றும் வெளிப்புற உணர்வில், உங்கள் மனதின் சக்திகளை *யோகப் பயிற்சியால்* பெறும் சமநிலையின் மூலம் இந்த அதீதமான நிலையை உணர முடிந்ததையும் அறிந்துக் கொள்கிறீர்கள்.

சங்கல்ப சக்தி வர்தனம்

संकल्पशक्तिवर्धनम्



மன உறுதியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல்

ஓ பரமேசுவரனே, உனக்கு ஆகுதியால் கிடைக்கும் வலிமையை, சூரியனின் வலிமையை, யானையின் வலிமையை கமலம் தரிக்கும் அசுவினிகள் எனக்கு அளிப்பார்களாக! பயணம் செல்வதற்கு பிராணிகளில் சிறந்து விளங்கும் யானையின் பண்பு என்னுள் சேரட்டும்! நான் அந்த யானையின் வலிமை, மகிமையின் மூலம் என்னை அபிஷேகம் செய்து கொள்கிறேன்!

அதர்வண வேதம் 3.22.4; 6. வேஎ, ப. 344



ஞானோதயம் பெறுவதற்கு மாபெரும் மனஉறுதி தேவைப்படும். ஒரு யோகி *காட்டிற்கு சென்று விலங்குகளின் மத்தியில் வாழ்ந்து வருகிறார். பரசிவ, முழுமுதற்பொருளை உணர்வதை குறிக்கோளாக கொண்டு எளிமையாக வாழ்ந்து வரும் அவர், சூரியன் மற்றும் சந்திரன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள* இடா *மற்றும்* பிங்கலா *சக்திகளை சமநிலைப் படுத்தி, தனது ஆன்மீக பயிற்சிகளை சிரத்தையுடன் செய்து வருகிறார்.*

திங்கட்கிழமை

பாடம் 106

சாட்சி, மன உறுதி

மற்றும் உயிர் சக்தி

உடல், மனவெழுச்சிகள் மற்றும் மனதில் எப்போதும் குடிக்கொண்டு இருக்கும் முதன்மையான உயிர் சக்தியை பயன்படுத்துவது அல்லது அது செயல்பட வழங்கப்படும் அனுமதியை நான் மனஉறுதி என்று குறிப்பிடுகிறேன். மிகுதியான மனஉறுதி மற்றும் அத்துடன் அதனை அதிக ஆழமாக உட்புறத்தில் இயக்கும் திறமையை, எப்போதும் உறுதியாக இருக்கும் உயிர்சக்தி வழங்குவதை நம்மால் இப்போது அறிய முடிகிறது. நாம் நாடும் *ஞானத்தை,* மனஉறுதியை இயக்கும் திறமை குறிப்பிடுகிறது. நாம் *ஞானத்தை இயமங்கள்* மற்றும் *நியமங்களை* கடைப்பிடிப்பதன் மூலம் பெறலாம் அல்லது அறியாமையின் அமைதியான அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு, மற்றவர்களுடைய விருப்பங்களின் "நல்ல" மற்றும் "தீய" மற்றும் இரண்டின் மனவெழுச்சி கலவைகள் மூலம் வழிநடத்தப்படலாம். அதனால் சாதகன் முதன்மையான சக்தியின் நேரடி அனுபவத்தின் மூலம் அதைப்பற்றிய அறிவை தூண்டிவிட்டு, அவர் தனது தனிப்பட்ட சாட்சி மீது மனப்பூர்வமான கட்டுப்பாட்டை கோரும் நோக்கத்துடன், அவர் தனது மனஉறுதி மீது மனப்பூர்வமான கட்டுப்பாட்டை பெறுவதற்கு முயற்சி செய்கிறார். ¶நமது தனிப்பட்ட சாட்சி, மன உறுதி மற்றும் உடல், மனவெழுச்சி மற்றும் மனதின் ஆழத்தில் இருக்கும் முதன்மையான உயிர் சக்தி எல்லாம் ஒன்று தான் என்பதையும் மன உறுதி, தனிப்பட்ட சாட்சி மற்றும் உயிர்சக்தியின் பழக்கங்கள் மற்றும் பயன்பாடுகள், பல்வேறு அம்சங்களை கொண்டவை என்பதையும் நம்மால் இதன் மூலம் உணர முடிகிறது. ¶நாம் எல்லோரும் ஒன்றாக இந்த திட்டத்தில் கற்ற கல்வியின் மூலம், இந்த மூன்று அம்சங்கள் தனித்தனியாக மற்றும் கூட்டாக அவ்வப்போது குறிப்பிடப்படுவதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள். ஆனால் உங்கள் மனம் வழியாக உங்களது சாட்சி பயணம் செய்யும் போது, உடல் மற்றும் மனவெழுச்சிகள் வழியாக பாய்ந்து செல்லும் முதன்மையான உயிர்சக்தி மீது தொடர்ந்து விழிப்புடன் இருந்து, உங்களை எல்லையற்ற மன உறுதியுடைய உயிர்சக்தியாக முழுமையான அடையாளம் கண்டு அதனை தொடர்ந்து அனுபவிக்க *யோக* கல்வியில் அந்த மூன்று பண்புகளின் ஒற்றுமையில்

இருக்கும் முழுமையை கவனத்தில் வைத்திருப்பது முக்கியம் ஆகும். இதுவே *ஞானி* தெய்வீக அறிவை பெற்று தான் கற்றதை தனிப்பட்ட முறையில் அனுபவிக்க, அவருடைய குறிக்கோளாக இருக்கிறது. ¶இந்த பூமியில் தனது குடும்பத்துடன் வாழ்வதற்கு பழகிக்கொள்ளும் ஒரு குழந்தை தனது ஆரம்ப காலத்தில் சாந்தமான, அமைதியான மனஉறுதி அல்லது எரிச்சலூட்டும் மனஉறுதி மனப்போக்கை வெளிப்படுத்தும். ஒரு குழந்தை தனது வினைகள் மற்றும் எதிர்வினைகளுக்கு மெதுவாக பொறுப்பேற்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அவசர தூண்டுதலை அடிப்படையாகக் கொண்ட மனஉறுதி போக்கில் இருந்து அந்த குழந்தையை கவனமாக திசைதிருப்பி, அதன் மனஉறுதியை விவேகமாக பயன்படுத்தி ஆன்மீக அறிவை வெளிக்கொண்டு வரும் தொடர் முயற்சியின் மூலம், குடும்பம் மற்றும் சமூகத்தின் கலாச்சாரம் மற்றும் ஒழுங்குமுறையை விவேகமான பெற்றோர் கற்றுத் தருகின்றனர். ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தை சாராமல், தனது சொந்த உள்ளுணர்வு தூண்டுதல்களின் பிடியில் முழுமையாக சிக்கி இருக்கும் விவேகமான பெற்றோர், இந்த குழந்தை பருவ பயிற்சியின் மீது கவனம் செலுத்துவது இல்லை. இதன் காரணமாக அவசர தூண்டுதலை அடிப்படையாகக் கொண்ட மன உறுதி குழந்தைகளிடம் இருந்து திடீரென்று வெளிப்பட்டு, அதை திருத்தும் வழி தெரியாமல், தங்களையும் மற்றவர்களையும் துன்புறுத்தி, வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் திறமைகளை வளர்கிறது. ¶இது நாம் மனதில் நமக்காக அடைய விரும்பிய விஷயங்களுக்கு எதிர்மாறாக இருக்கிறது. மனஉறுதி என்று அழைக்கப்படும் சாட்சி அம்சத்தின் மீது வலுவான ஆதிக்கம் செலுத்தி, நமது உயிர் சக்தியின் மனவெழுச்சி-உள்ளுணர்வு, அறிவுணர்வு மற்றும் ஆன்மீக அம்சங்களுக்கு மத்தியில் ஒரு சமநிலையை பராமரிக்கும் செயலை, நமது புலன்கள் மீது ஆன்மீக கண்ணோட்டத்தை தக்க வைத்து, அவற்றின் மீது நாம் தொடர்ந்து பெற்று வரும் தேர்ச்சியின் சித்தி செய்கிறது. நீங்கள் எதை கற்கிறீர்கள், மற்றும் அது உங்களுடைய குறிப்பிட்ட வாழ்முறைகளுக்கு எவ்வாறு தொடர்புடையதாக இருக்கிறது என்பதைப் பற்றி ஒரு அமைதியான கண்ணோட்டத்தை வைத்துக்கொண்டு, *இராச யோகத்தை* கற்கும் போது, உங்களுக்குள் ஒரு ஆன்மீக மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருப்பது உங்களுக்கு தெரிய வரும். இந்த குறிப்பிட்டுள்ள வழிகளை பின்பற்றி உங்கள் மனஉறுதி சக்திகளை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துங்கள். முயற்சி செய்ததும் பலனும் உடனடியாக வந்து சேர்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 107

உட்புற மற்றும் வெளிப்புற

மன உறுதி

மன உறுதி சக்திக்கு இரண்டு அடிப்படை அம்சங்கள் உள்ளன. அதில் ஒன்று உலகில் நமது வெளிப்புற வாழ்க்கை மற்றும் நமக்கும் இருக்கும் தொடர்பை கட்டுப்படுத்துகிறது. இன்னொன்று நமது ஆன்மீக வாழ்க்கை, முயற்சிகள் மற்றும் *சாதனாக்களை* கட்டுப்படுத்துகிறது. புறநோக்கியாக இருந்து மன உறுதியின் வெளிப்புற அம்சத்தின் மீது தனது முழு சக்தியையும் பயன்படுத்தும் ஒருவர் பதட்டம், குழப்பம் மற்றும் சுய புரிதல் இல்லாமல் உட்புறமாக வருந்துகிறார். மன உறுதியின் உட்புற அம்சத்தில் தனது சக்தி முழுவதையும் பயன்படுத்தும் ஒருவர், வெளியுலகை சந்திக்க முடியாமல் முழுமையாக ஒதுங்கி வருத்தத்தில் இருக்கிறார். ¶மனஉறுதியின் உட்புற மற்றும் வெளிப்புற அம்சங்களின் முழுமையின் மூலமாக, தனது இருப்பின் உட்புறமான ஆன்மீக செய்முறைகள் மீது அதிக கவனம் செலுத்தும் அன்பர், தன்னை உட்புறமாக மேம்படுத்த முயற்சி செய்கிறார், ஏனென்றால் இந்த உலகுடன் எந்த தொடர்பும் இல்லாமல் இந்த வழியில் மட்டுமே தன்னால் உலகில் நன்றாக சேவை செய்யமுடியும் என்பதை அந்த அன்பர் அறிந்து இருக்கிறார். ¶இவ்வாறு உருவாக்கப்படும் மனஉறுதி, மனிதனின் முழுமையான இருப்பை அவர் முன்பாக வெளிப்படுத்துகிறது. அவர் தனக்கு விருப்பம் இல்லாத மனதின் பகுதி மீது பற்றின்றி இருப்பதால், தனக்கு விருப்பமில்லாத மனதின் பகுதியில் இருந்து அதிக விருப்பமுள்ள பகுதிக்குள் செல்ல, இனி தனியாக அமர்ந்து தியானம் செய்வதை அவர் விரும்புவதில்லை. அவருடைய மன உறுதியின் முழுமையை, அவருடைய *சாதனாவின்* பூர்த்தி சமன் செய்ததும், உட்புறத்தில் வெளிப்புறத்திற்கு சுதந்திரமாக செல்லும் தூரம் குறைந்துவிடுகிறது என்றே சொல்ல வேண்டும். ¶மனஉறுதி சக்தி பற்றி தங்களுடைய முந்தைய கற்பனைகளுடன் இந்த ஒப்புமைகளை குழப்பிக் கொள்ளாமல், அவற்றை தங்களது கூர்மையான புலனுணர்வுகள் மூலமாக, அதிக முதிர்வைப் பெற்ற ஆன்மாக்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். நாம் ஏதாவது ஒரு கோட்பாட்டின் சிக்கலுடன் போராடும் முயற்சியில் ஈடுபடாமல், காதால் கேட்கும் கோட்பாட்டின் முழுமையை கிரகிக்க எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். ஒரு நீண்ட காலத்திற்கு தொடர்ந்து *சாதனா* செய்வதால் மட்டுமே, இந்த அறிவு ஒருவரின் வாழ்க்கையில் அனுபவப்பூர்வமான யதார்த்தமாக மாறுகிறது. அதனால் எப்போதும் ஒரு பொதுவான கருத்தை மட்டுமே வைத்திருந்து, அதன் விளைவாக தோன்றும் இயலுணர்வு குறிப்பீடுகளை நினைவில் வைத்து இருப்பது முதல் *சாதனா* ஆகும். அகத்தின் ஆழத்தில் இருந்து வரும் இந்த இயலுணர்வு குறிப்பீடுகள் உங்கள் *ஞானம்*, உங்கள் புத்திக் கூர்மை, உங்கள் விவேகத்தின் முன்னேற்றத்தை குறிப்பிடுவதால், அவற்றை மட்டும் நினைவில் வைத்து இருந்தால் போதும். ¶ஒரு தனிப்பட்ட கருவியாக ஒருவர் தனது மனஉறுதியை கண்டுகொண்டால் மட்டுமே, அவர் தனக்குள் இருக்கும் முதன்மையான உயிர்சக்தி மற்றும் அதன் வெளிப்பாட்டை உணர்ந்து கொண்டு

அடுத்த கட்டத்திற்கு முன்னேற முடியும். அதன் பிறகு அவர் இந்த பிரபஞ்சத்தில் எங்கும் எதிலும் வியாபித்து உயிர் சக்தியாக இருக்கும் இயலுணர்வு அறிவை பெறுவதால், அவரால் இந்த வெளிப்பாடுகளில் இருந்து தனது சாட்சியை பிரிக்க முடிகிறது. சாட்சி தனித்தன்மையை அடைந்து, அன்பர் தான் காணும் காட்சியுடன் தன்னை தொடர்புப்படுத்திக் கொள்ளாமல், அவர் ஒரு பார்வையாளராக மாறும் போது, அவர் உயிர்சக்தி முழுமையின் சாரத்தால் நிரம்புகிறார். அதை அவர் மனஉறுதியாக அனுபவிக்கிறார் மற்றும் அவர் தனது தினசரி வாழ்வில் பயன்படுத்தும் இந்த மனஉறுதியை, மனம் வழியாக சாட்சி பயணம் செய்வதாக அனுபவிக்கிறார். இது ஆன்மீக பாதையில் இந்த விழிப்புணர்வின் பரிணாமத்தை காண்பிக்கிறது.

புதன்கிழமை

பாடம் 108

மன உறுதியை

ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல்

உங்கள் பாதையில் தொடக்க நிலையில் இருக்கும் போது, மனம் சஞ்சரிப்பதை உங்களால் நிச்சயமாக உணர முடியும். சாட்சி தனக்கு கவனம் இருக்கும் எல்லா பொருட்களுடனும், தன்னை முழுமையாக தொடர்புபடுத்தி கொள்வதையே "மனம் சஞ்சரித்தல்" குறிக்கிறது. நாம் மனம் அல்லது நாம் மனவெழுச்சி அல்லது உடல் என்ற உணர்வை இது நமக்கு வழங்குகிறது. இதன் காரணமாக நீங்கள் தியானம் செய்ய அமரும் போது, உங்கள் மூளை மீது எண்ணற்ற சிந்தனைகள் தாக்குகின்றன, மற்றும் நீங்கள் தியானம் செய்ய நினைத்த பொருளின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்துவது அல்லது சில சமயங்களில், அந்த பொருளை நினைவில் வைத்து இருப்பதும் கடினமாகிறது. இதன் காரணமாக, தியானம் புறநோக்கியாக இல்லாமல் அகநோக்கியாக மாறி, மனஉறுதி மற்றும் நுணுக்கமான புலன் உறுப்புக்கள் மீது போதுமான கட்டுப்பாட்டை பெறுவதற்கு, *மேர்ஜிங் வித் சிவா* புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள *யோகப்பயிற்சிகளின் சாதனாவில்* சிறிதளவு தேர்ச்சி பெறுவது முக்கியம் ஆகும். ¶இதை *குருவின்* அருளால் உருவாக்க முடியும். ஒற்றுமையுடன் இருக்கும் தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளுக்காக வீட்டை நிலைப்படுத்துவதைப் போல, அவர் தனது சீடருக்குள் மனஉறுதி, சாட்சியை நிலைப்படுத்துகிறார். ஒருவருக்கு *குரு* இல்லை என்றால், அல்லது அவரது *குரு* சுவரில் சித்தரமாக இருந்து, அவரிடம் இவர் பகுதி நேர சீடராக இருந்தால், அவர் வெளியுலக வாழ்க்கையில் ஒரு அனாதைப் போல போராட வேண்டியிருக்கும். இந்த புத்தகத்தில் போராட்டங்களை சமாளிக்க சில அடிப்படை கருவிகள்

தெளிவாக விளக்கப்பட்டுள்ளதாக எனக்கு தோன்றுகிறது, மற்றும் ஒருவரிடத்தில் இருக்கும் தெய்வீகத் தன்மையை நோக்கி மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியும் இறையருளை வெளிக்கொண்டு வருவதற்கு மட்டுமே பயன்படுகிறது, மற்றும் அது உடனடியாக தென்படாவிட்டாலும், எதிர்காலத்தில் வரக்கூடிய வருடங்களில் தென்படும். ¶அடிமனதில் பழக்க வழக்கங்கள் புதிய வெளிப்பாட்டு பாதைகள் வழியாக வழிநடத்தப்படவேண்டும் என்பதால், தொடர்ந்து *சாதனா* செய்து வருவது மிகவும் முக்கியம் ஆகும். இது நடைபெறத் தொடங்கும் போது தான் சில பலன்கள் கண்களுக்கு தென்படும். ¶ஒரு அன்பர் தான் நீண்டகாலம் முன்பு கடந்து சென்று அனுபவித்த திசைகளில் உள்ளுணர்வு தூண்டுதல்கள் மூலம் தூண்டப்படுவதை உணரும் போது, சுயக்கட்டுப்பாட்டு செய்முறைகள் மூலம் மனஉறுதி முதலில் அடையாளம் காணப்படுகிறது. இவ்வாறு மணிமாலை மூலம் ஜபம் செய்தல், காலையில் ஆச்சாரமான சமயப் பழக்கங்கள் மற்றும் சடங்குகள் மற்றும் *சத்குரு* அவருக்கு வழங்கிய மேலும் பல தனிப்பட்ட பயிற்சிகள் செய்வதை குறிக்கும் அவருடைய *சாதனாவை* செய்வதன் மூலம் உணவு, கற்பனைகள் மீது சுயக்கட்டுப்பாடு சிரத்தையுடன் நாடப்படுகிறது. ஆன்மாவின் மீது இந்த சிறிய கட்டுப்பாடு ஏற்படுவதற்கு அதிக முயற்சிகள் தேவைப்படுகின்றன. ¶மனஉறுதியை பயன்படுத்தி புத்தியை கட்டுப்படுத்துவது அடுத்த சவாலாக விளங்குகிறது. நுணுக்கமாக கட்டுப்படுத்தப்பட்ட புத்தி வார்த்தை விளையாட்டை துளைத்துக்கொண்டு ஆன்மீக அனுபவத்தின் நுழைவாயிலுக்குள் அழைத்து செல்கிறது. நல்ல பண்புகளுடைய ஒரு அன்பர் தனது வேட்கையின் இயல்பை தத்துவரீதியாக பகுத்தறிவதற்கு, தனது மனஉறுதியை பயன்படுத்துகிறார். சொற்கள் மற்றும் சிந்தனைகள் வடிவமாக இருக்கும் புத்தியை நீக்குவதே, அவருடைய குறிக்கோளாக இருக்கிறது. அவர் தனது கடந்தகால மனவெழுச்சிகள் மற்றும் தீவிர தூண்டுதல்கள் மீது பெற்ற சிறிதளவு வெற்றியால், அவர் இந்நிலையில் அதிக சுயக்கட்டுப்பாட்டுடன் இருக்கிறார். இனி அதிக உயரிய பயிற்சியான *பிராணாயாமம்* என்கிற சுவாசக் கட்டுப்பாடு மற்றும் ஒரு அன்பர் என்றாவது ஒரு நாள் அடைய விரும்பும் ஆத்ம ஞானம் என்கிற மிகவும் உயரிய குறிக்கோளை நோக்கி *பிராணனை* உட்புறமாக செலுத்தி உருமாற்றம் செய்வதை பார்க்கலாம்.

வியாழக்கிழமை

பாடம் 109

பரமாத்துமாவுடன்

ஐக்கியமாதல்

ஒருவர் சூரியன் மற்றும் பூமியை பார்க்கும் போது, அதிக தூரத்தில் இருக்கும் சூரியனைக் காட்டிலும் பூமியைப் பற்றியே அதிகம் சிந்திக்கிறார். விண்வெளி வழியாக சூரியனை நோக்கி பயணம் செய்து, சூரியனை நெருங்கும் போது பூமி ஒரு புள்ளியாக மறைந்து விடுகிறது மற்றும் அந்த நபர் சூரியனைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறார். இங்கே அறிவாற்றலின் பயன்பாடு இல்லை என்பதை நீங்கள் அறியலாம், அறிவாற்றல் பூமி மற்றும் அதன் லௌகீகத்தின் வெளிப்புற கிளை விளைவுகளுடன் தொடர்பில் இருப்பதே அதற்கு காரணம். சூரியனுக்குள் ஐக்கியமாவது அன்பரின் பாதையாக இருக்கிறது. தனது சாட்சி, மனஉறுதி மற்றும் உயிர்சக்தியின் முழுமையுடன் பரமாத்துமா என்கிற இறைவன் என்கிற சிவனுக்குள் ஐக்கியமாவது அன்பரின் பாதை ஆகும். சிவன் என்பது பரமாத்துமா என்கிற இறைவனின் பழங்கால பெயர் ஆகும். சூட்சுமரீதியாக *சி* என்பது முழுமையான நிலையை குறிக்கிறது. *வ* என்பது எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் பரமாத்துமா மனம் வழியாக பாய்ந்து செல்வதைக் குறிக்கிறது. ஒரு அன்பர் தனது *சத்குருவின்* வழிகாட்டலுடன் *யோகப்பயிற்சிகள்* மூலமாக, மனதின் அடுக்குகள் வழியாக பயணம் செய்யும் போது, தான் தத்துவரீதியாக கற்றுக்கொண்டதை அனுபவிக்கத் தொடங்குகிறார். அப்போது சூரியன், அவருடைய சிவன், பரமாத்துமா அவர் கண்முன்பாக காட்சி அளிக்கிறார். அவருடைய நினைவுப் பழக்கங்கள் அல்லது *வாசனாக்களில்* இருந்து முரட்டுத்தனம், உலகியல் பண்பு, மனிதத்தன்மை, உள்ளுணர்வு ஆகியவை சுவடு இல்லாமல் மறைந்து விடுகிறது; மற்றும் விண்வெளி வீரர் சூரியனை நோக்கி விண்வெளி வழியாக விரைந்து செல்வதைப் போல, தனது அடையாள மிச்சங்கள் அழியவிருப்பதை எண்ணி திகைப்புடன், தனது உட்புற ஆழத்திற்குள் துளைத்துக் கொண்டு செல்லும் அன்பர் சிவபெருமானின் கம்பீரத்தை பார்த்து பிரமிப்பு அடைகிறார். ¶இது அதன் பிறகு மனஉறுதியை, அதன் தலைசிறந்த பயன்பாட்டிற்குள் அழைத்து வருகிறது. அன்பரிடம் இருக்கும் தெய்வீக சித்தத்தில் உருமாற்றம் பெற்ற சக்தி வலுக்கட்டாயமாக, புத்தி மற்றும் தீவிர உணர்ச்சிகளின் இறுதி எச்சங்களை வழிநடத்துகிறது, மற்றும் அவர் முழுமையாக சரணடைந்த நிலையில், பதில் அளிக்க நிர்பந்திக்கப்படும் போது, "நான் அறியேன். சிவனின் சித்தம் நிறைவேறும்," என்று கூறுவார். *சி* மற்றும் *வ* நிலைகளில் தென்படும் சுறுசுறுப்பான, அமைதியான ஆற்றல் மற்றும் ஆற்றலில்லாத பண்பின் முழுமையை குறிக்கும் சிவனின் சித்தம், *தர்மம்* மற்றும் *கர்மத்தின்* மீது அதிக்கம் செலுத்தத் தொடங்குகிறது மற்றும் பரம்பொருளின் நுழைவாயிலில் அன்பரின் இருப்புக்குள் நிரம்பிக் கொள்கிறது. அன்பர் தனக்குள் இருக்கும் ஆற்றல் மற்றும் ஆற்றலில்லாத பண்பின் எல்லையற்ற கலவையின் நேரப்பொருத்தத்திற்கு தனது லௌகீகத் தன்மையின் இறுதிச் சுவடுகளை, தனது புதிய மற்றும் அதிக தூய்மையான *சாதனாவின்* மூலம் துறக்கும் போது, அவரிடம் இருமை நிலையில் சிறிதளவு தன்னுணர்வு இருக்கும் போது,

"சிவனின் சித்தம் நிறைவேறும்," என்று கூறுகிறார். அவர் வெளியுலகை கண்களால் பார்த்து காதால் கேட்கும் வரை, இதை ஒரு *மந்திரமாக* தனக்குள் சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஆனால் கண்களும் காதுகளும் மூடிய பிறகு, உருமாற்றம் பெற்ற அவருடைய மனஉறுதி சக்தியின் மூலம், பரம்பொருளை தானாகவும் தன்னை பரம்பொருளாகவும் அனுபவித்து, *வ* மற்றும் *சி* மற்றும் *சி* மற்றும் *வ* நிலைகளின் சமாதிக்குள் அவர் ஐக்கியமாகிறார்.

வெள்ளிக்கிழமை

பாடம் 110

இரண்டு மாபெரும்

உருமாற்றங்கள்

நாம் எப்போதும் ஏதாவது ஒன்றை அனுபவித்து வருகிறோம் என்பதால், ஒரு நீடித்த காலத்திற்கு ஆழமான, உட்புறமாக சிவனின் சித்தத்தை அனுபவிப்பது என்றால் என்ன என்பதைப் பற்றி ஒரு அறிவுப்பூர்வமான கருத்தை பெறுவது முக்கியம் ஆகும். அதனால் நமக்கு ஊக்கமளிக்கும் தூண்டுதல்கள் பின்வரும் மூன்று பிரிவுகளில் எதை சார்ந்தது என்பதை எளிதில் வகைப்படுத்த முடியும்.
முதல் பிரிவு: நம்மிடம் இருந்தும் மற்றவர்களிடம் இருந்தும் உள்ளுணர்வு தூண்டுதல்கள் தோன்றுகின்றன, மற்றும் இவை முக்கியமாக நமது உடல் மற்றும் இழிவான மனவெழுச்சிகள் தொடர்புடையதாக இருக்கின்றன. இந்த தூண்டுதல்கள் நமது பெரும்பாலான அன்றாட நடவடிக்கைகளில் அங்கம் வகிப்பதால், இவற்றை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம்.
இரண்டாவது பிரிவு: ஒருவரது சொந்த அல்லது இன்னொருவரது முயற்சியில் இருந்து தோன்றிய, பேசும் மற்றும் சிந்திக்கும் தூண்டுதல். இது பொதுவாக கடந்தகாலத்தில் சேகரிக்கப்பட்ட தொடர் அறிவை அடிப்படையாகக் கொண்டு, நிகழ்கால கண்ணோட்டங்கள் மற்றும் எதிர்காலம் பற்றிய யூகத்தின் மூலம் பதட்டத்தை ஏற்படுத்துகின்றன. இந்த தூண்டுதல்கள், ஒரு வழக்கமான நாளில் உள்ளுணர்வு தூண்டுதல்கள் உருவாக்கும் இடைவெளிகளை நிரப்புவதால், இவற்றையும் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம். இந்த இரண்டு தூண்டுதல்கள் நிரப்பிய இடங்களில் விரிசல் ஏதும் ஏற்படவில்லை என்றால், மூன்றாவது பிரிவை சேர்ந்த சிவனின் சித்தம் தோன்றுவதற்கு இடம் இருப்பதில்லை என்பதை நம்மால் எளிதில் உணர்ந்துகொள்ள முடிகிறது.
¶அதனால் தெய்வீக சித்தம், ஆன்மீக சக்தி மற்றும் எல்லையற்ற சாட்சி உட்புறமாக ஊடுருவி ஒரு புதிய புத்தியின் உருவத்தை உருவாக்க, தொடர்ந்து ஒழுங்குமுறையுடன் *சாதனா* மற்றும் தியானத்தை செய்வதன் மூலம், உள்ளுணர்வு மற்றும் அறிவுணர்வு மாதிரிகளை உடைத்து, இரண்டில் இருந்தும்

தூண்டுதல்களை பிரிப்பதே செய்முறை ஆகும். *சாதனாவை* தொடங்கி, அதை தொடர்ந்து செய்து வருவது, சாதகனின் வாழ்வில் சிவனின் சித்தம் அருள்புரிகிறது என்பதற்கான முதல் அறிகுறி ஆகும். கீழ்நிலையில் இருந்து தெய்வீக பண்பிற்கு உருமாற்றம் பெற்றுள்ளதால், அந்த சாதகரிடம் புதிய சக்தி வாசம் செய்கிறது. அவர் தனது அகத்தை, சில நொடிகள் முன்னர் நடந்ததை போல, தான் சேகரித்த ஆன்மீக அனுபவங்களின் நினைவுகளால் நிரப்பும் போது, அங்கிருந்து புதிய அறிவு வெளிப்படுகிறது. ¶நீங்கள் முதல் இரண்டு பிரிவுகளை தவிர்த்து, சிவனின் சித்தத்தை குறிப்பிடும் மூன்றாவது பிரிவை மட்டும் அதிகமாக அனுபவிக்க விரும்பினால், சூழ்நிலை தோன்றும் போது, "சிவனின் சித்தம் நடந்தேறும்," என்று நாள் முழுவதும் சொல்லிக்கொண்டு இருங்கள். பூமியைக் காட்டிலும் சூரியன் மீது அதிக கவனத்துடன் இருக்கும் போது, நீங்கள் பூமியை மறந்து சூரியனை அறியத் தொடங்குவதைப் போல, நீங்கள் எந்த பிரிவில் கவனமாக இருக்கிறீர்கள் என்பதை உங்கள் புத்தி தெளிவாக அறிந்து கொள்ள, ஒவ்வொரு தூண்டுதலையும் வகைப்படுத்துவதில் கவனமாக இருங்கள். எப்போதும் சிவனின் சித்தமே நடைப்பெற்று வருகிறது. மற்ற மக்களின் வெளிப்புற உருவங்கள், அவர்களின் சிந்தனைகள் மற்றும் உணர்வுகளைக் காட்டிலும் ஆன்மீக செய்முறைகள் மற்றும் மனஉறுதியின் தூண்டுதல்கள் மீது அதிக கவனமாக இருப்பதன் மூலம், நீங்கள் விரைவில் இந்த உலகில் திருப்தியுடன் இருக்க தொடங்கி, எல்லா உருவம், காலம் மற்றும் காரணத்தை கடந்த முழுமுதற்பொருளாக இருக்கும் *"சி"* மற்றும் எல்லா உருவத்திலும் ஆன்மீக சக்தியாக வியாபித்து இருக்கும் சர்வ-வியாபி பரமாத்துமாவை குறிப்பிடும் *"வ"* ஆகியவற்றை அறிந்துக் கொள்வீர்கள், மற்றும் உங்கள் புதிய அறிவுணர்வு நுழைவாயிலில் இந்த புதிய அறிவுடன் பேரானந்தத்தில் அமர்ந்து இருப்பீர்கள். "சிவனின் சித்தம் நடந்தேறும்," என்பது இந்த பாதையில் முதல் *சாதனா* ஆகும். மற்ற *சாதனாக்களில்* நிறைவு பெற்ற பிறகு, “சிவனின் சித்தம் நடந்தேறும்," என்பது இறுதி *சாதனாவாக* இருக்கும்.

சனிக்கிழமை

பாடம் 111

மனப்பூர்வமாக

அறியும் சக்தி

நீங்கள் உங்கள் வாழ்நாளில் அவ்வப்போது ஏதாவது ஒன்றை அறிந்துகொண்டு தான் இருக்கிறீர்கள். மனதுடன் உள்ளடக்குவதற்கு உங்களுக்குள் அறியும் சக்தி, கிரகிக்கும் சக்தி உறுதியாக ஒளிந்து இருக்கிறது. இது எல்லாம் அறிந்த நிலையை குறிக்கிறது. ஆன்மீக விரிவாக்கத்தில், சிந்திப்பது போதுமானதாக

இருக்காது. நீங்கள் *யோகத்தின்* பாதை மற்றும் அந்த பாதையில் இருக்கும் நிலைகளை அறிய வேண்டும். நீங்கள் உங்களது சொந்த இயல்பை அறிய வேண்டும். இதன் காரணமாக, *யோகத்தை* கற்கும் போது அடிமனதை சுத்தம் செய்வது முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்கிறது. அதன் பிறகு நீங்கள் உங்கள் மனதின் அடியுணர்வு நிலையை அறிய வேண்டும். நீங்கள் உங்கள் அடியுணர்வை அறிந்த பிறகு, அது உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது இல்லை. அது தானாக உங்கள் வாழ்க்கை மீது தாக்கம் ஏற்படுத்தும் வலிமையை இழக்கிறது. பலர் தாங்கள் அறியாத விஷயங்களை அறிந்துள்ளதாக கருதுகிறார்கள். மற்றவர்கள் அறிந்து இருந்தாலும், அவர்கள் தங்கள் அறியும் சக்தி அல்லது தாங்கள் அறிந்த விஷயத்தின் மீது கவனத்தை பராமரிப்பது இல்லை. இவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் மனதின் உள்ளுணர்வு நிலைகளின் தாக்கத்திற்கு மீண்டும் ஆளாகிறார்கள். ஆனால் அதே சமயத்தில், அறியும் சக்தி மீது கவனத்தை தக்க வைப்பதால், அடியுணர்வின் சில எதிர்வினைகளை எதிர்கொண்டு, உலகில் அன்றாட வாழ்வை இயல்பாக தொடர்ந்து வாழ்ந்து வரும் போது மனதின் உயர்நிலைகள், இயலுணர்வு மற்றும் புலனுணர்வு லோகங்கள் தொடர்ந்து திறந்து இருக்கின்றன. ¶இந்தியாவில் பல வருடங்களுக்கு முன்பாக வாழ்ந்த ஒரு *சத்குரு* பற்றிய கதையை பார்ப்போம். அவரது சிறிய சீடர்கள் குழுவில், இருவர் தங்கள் *குருஜியின்* மனதுடன் முழுமையான இணக்கத்துடன் இருந்தார்கள். இவர்களால் அவர் வழங்கிய உபதேசங்களை முழுமையாக அறிய முடிந்தது. அந்த *யோக* ஆசிரியர் இந்தியா முழுவதும் பயணம் செய்து மக்களுக்கு பல சேவைகளை செய்ய, தனது சீடர்களை அனுப்பி வைப்பார். அவர்கள் ஆசிரமம் திரும்பியதும், தங்களுக்கு வலுவான ஆன்மீகக் கட்டுப்பாடுகள் மற்றும் விதிகள் மற்றும் சக்திகளை கிரகித்து அவற்றில் தேர்ச்சி பெறுவதற்கான வல்லமை கிடைப்பதையும், அவர்களால் உணர முடிந்தது. கவனத்தின் தொடர்ச்சி நிற்பதில்லை. *சத்குருவின்* சந்நிதியில் இல்லாத போது, சீடர்களுக்கு ஆன்மீக விரிவக்கத்தின் தொடர்ச்சி நிற்பதில்லை. ¶ஆனால் தங்கள் ஆசிரியரின் சந்நிதியில் இருந்த போதிலும் முழுமையான ஆன்மீக இணக்கத்தை பெறாத மற்ற சீடர்கள், தாங்கள் தங்கள் குருவிடம் இருந்து சிறிது நேரம் விலகி இருந்தால், ஆன்மீகப் பாதை மற்றும் அவருடைய பிரகாசமான சூழலில் இருந்த போது மிகவும் இயல்பாக தோன்றிய உபதேசங்கள் பற்றி தாங்கள் அறிந்ததை, விரைவில் மறந்து விடுவதை உணர்ந்தனர். ¶நீங்கள் ஒரு நபரை விட்டு விலகி இருப்பதைக் காட்டிலும், அந்த நபருக்கு அருகில் இருக்கும் போது, அதிக ஆழமான விஷயங்களை சிறப்பாக புரிந்துக்கொண்ட அனுபவம் உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டது உண்டா? அவருடைய ஆன்மீக சுழல் உங்களுடைய ஆன்மீக விசைப்பகுதியை திறந்து, உங்கள் காந்த சக்திகளில் இணக்கத்தை மற்றும் அமைதியை ஏற்படுத்துகிறது. அத்தகைய நபர்கள் உங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட அறியும் திறனுடன் விரிவாக்கம் பெறுகிறார்கள். ஆனால் அது

உங்கள் ஆன்மீக விசைப்பகுதியை நிரந்தரமாக திறக்கவில்லை என்றால், சக்தி தற்காலிகமாக நிலைத்து இருக்கிறது, மற்றும் நீங்கள் அந்த சூழலில் இருந்து விலகியதும், மீண்டும் மூடிக்கொள்கிறது. இவ்வாறு தங்களது இந்திய *சத்குருவுடன்* இணக்கத்தில் இருந்த மாணவர்கள், தாங்கள் அறியும் சக்தி மீது கவனம் செலுத்தி இந்தியா முழுவதும் பயணம் செய்தனர். ஒரு *ஞான யோக குரு* அல்லது *சத்குரு*, தனது *செலாக்களிடம்* ஒரு நிரந்தர ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்பதால், அவர்கள் அந்த சக்தி மீது முழு கட்டுப்பாட்டுடன் இருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 112

தொடர்ந்து கவனம்

செலுத்துதல்

தங்களிடம் ஆன்மீக சக்தியின் கட்டுப்பாடு இல்லை என்றும், *யோகப்* பாதை மற்றும் அதன் உபதேசங்களில் கவனத்தை தொடர்ந்து பராமரிப்பது கடினமாக இருக்கிறது என்றும், தங்கள் சத்குருவுடன் ஆன்மீக இணக்கத்தில் இல்லாமல் காந்த சக்தியை பயன்படுத்தி செயல்பட்ட மாணவர்கள் தெரிந்துக் கொண்டார்கள். இந்த மாணவர்கள் எங்கோ தவறு நடந்துகொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்து, தங்களுக்கு இந்த விழிப்புணர்வு மீண்டும் தோன்றி அதை எவ்வாறு பராமரிப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒழுக்கத்தின் விதிகள் மற்றும் பயிற்சிகளை அறிந்து இருந்தார்கள். அவர்களால் ஒருமுகச் சிந்தனை மற்றும் தியானத்தில் நுழைய முடிந்தது, ஆனால் தங்கள் சக்தியை பராமரிக்க முடியவில்லை. உண்மையில் தங்களுக்கும் தங்கள் குருவிற்கும் இடையே இருந்த ஆன்மீக இணக்கத்தின் விதி, அறியும் சக்தியின் ஆழ்ந்த நிலை மூலமாக தங்களை ஆன்மீக சக்திப் பாதைகளாக பராமரிக்கிறது என்பதை அவர்கள் தெரிந்துக் கொண்டனர். ஆன்மீக சக்திகளின் இணக்கமான ஓட்டம் பற்றிய விதியுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், சீடர்கள் *சத்குருவின்* சந்நிதியில் இருந்தாலும் இல்லை என்றாலும், தங்கள் *குரு* மற்றும் தங்களது சொந்த மனதின் நிலைகளுடன் முழுமையான இணக்கத்துடன் நுழைந்திருக்க முடியும். ¶இந்த *யோக* ஆசிரியர் தனது *யோக* விரிவாக்கம் மூலம் தனக்குள் பெற்றிருக்கும் ஆன்மீக ஆற்றலின் மூலம் விருத்தியாகும் சக்தியால், தனது மாணவர்களுக்காக அறியும் சக்தியின் சூழலை தக்க வைக்க முடிகிறது. ஆன்மீக சக்தி நிரம்பிய *யோகக்கல்வி* மாணவர்கள் அவருடன் இணக்கத்தில் இருந்ததால், அவர்கள் அவருடைய ஆன்மீக சக்தி களஞ்சியத்தின் மீது கவனத்தைப் பெற்றனர். காந்த சக்தி

நிரம்பிய *யோகக்கல்வி* மாணவர்கள் தங்களை ஆய்வு செய்து, தாங்கள் பெரும்பாலான சமயங்களில் *சத்குருவுடன்* இணக்கத்துடன் இல்லை என்பதையும், லௌகீக விவகாரங்களில் அவரை மனோரீதியாக நிந்திப்பதை அல்லது ஒரு குறிப்பிட்ட முறையில் அவருடன் வாதாடினால் பலன் கிடைக்காது என்பதை யோசிக்காமல் அவருடன் தொடர்ந்து வாதாடுவதையும் அறிந்து கொண்டனர். மேலும் அவர்கள் இந்த வேறுபாடுகளுக்கு தீர்வு காண தங்களின் ஆன்மீக சக்தியையும் பயன்படுத்தவில்லை. அவர்கள் இதை அறிந்து தங்கள் குருவிடம் சென்று, "உங்களிடம் இணக்கத்துடன் இருக்க வேண்டிய அவசியத்தை நாங்கள் உணர்ந்து கொண்டோம்," என்றனர். "ஆமாம், நீங்கள் உங்கள் ஆன்மீக சக்தியை உணர்ந்து இருக்கிறீர்கள். நான் இனி உங்களை சோதிக்கப் போகிறேன்," என்று *குரு* கூறினார். அவர் தான் செய்த சோதனையின் போது, அந்த சீடர்கள் தங்கள் ஆளுமை மீது பற்றுடன் இருப்பதையும், அந்த பற்றினால் அவர்களால் எந்த உணர்தலையும் பெற முடியவில்லை என்பதையும் அவர்களுக்கு உணர்த்தினார். ¶சிலர் வளர்ச்சி பெறுவதற்காக வேலைக்கு செல்கின்றனர். ஆனால் அவர்கள் சில காலம் கழித்து ஒரு வழக்கத்தில் பொருந்தியதும், அவர்கள் தங்களின் உத்வேகம் மற்றும் தன்னம்பிக்கையை இழந்து விடுகின்றனர்! "இந்த பணியில் அதிக பிரச்சனைகள் மற்றும் அதிக தடைகள் இருக்கிறதே," என்று நினைக்க ஆரம்பிக்கின்றனர். அவர்கள் தங்கள் மனதில் பதவி உயர்வுக்காக வேலை செய்துக்கொண்டு இருந்தனர், ஆனால் தங்களை மேம்படுத்திக் கொள்ள எதையும் செய்யவில்லை. இந்த *யோகக்கல்வி* மாணவர்களும் அதே இக்கட்டான நிலையில் இருந்தார்கள். அவர்கள் *யோகக்கல்வி* பயிற்சியை தொடங்கி, அதன் வழக்கத்தில் பொருந்திக்கொண்டு நிம்மதியாக இருக்க ஆரம்பித்து இருந்தனர். அவர்கள் தங்கள் அடியுணர்வில் விரிவாக்கம் பெறும் உத்வேகத்தை இழக்க தொடங்கி இருந்தனர். அவர்கள் காந்த சக்தியை மட்டும் பயன்படுத்தி, உள்ளுணர்வுடன் வாழ்த் தொடங்கி இருந்தனர் என்று சொல்லலாம். ¶காந்த மற்றும் ஆன்மீக சக்திகளின் வேறுபாட்டை விளக்கும் பொருட்டு, இந்த இந்திய *சத்குரு* தனது மாணவர்களை சோதிக்கும் நோக்கத்துடன், பல்வேறு பணிகளை செய்யுமாறு அவர்களிடம் கேட்டுக்கொண்டார். அவர் அவர்களிடம் தொடக்கத்தில் ஒரு பணியை செய்யுமாறு சொல்வார், மற்றும் பாதி வேலை முடிந்து அவர்கள் தங்களை அந்த பணியுடன் பொருத்திக் கொண்ட நிலையில், இன்னொரு வேலையை செய்யுமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்வார். ஒரு பணியை மகிழ்ச்சியுடன் செய்யாமல், அவர்கள் அந்த பணியுடன் தங்களை தன்முனைப்புடன் பொருத்திக் கொண்டு, காந்த சக்தியை பயன்படுத்தியதால், ஒரு பணியை விட்டு இன்னொரு பணியை தொடங்குவது அந்த மாணவர்களுக்கு கடினமாக இருந்தது. அவர்கள் தங்களுக்குள் இருக்கும் ஆன்மீக அறிவெழுச்சி மற்றும் உண்மைகள் பற்றிய அறியும் சக்தியை விழிப்படைய செய்யாமல், லௌகீக விவகாரங்களில் அதிக ஆர்வம் மற்றும்

பற்றுடன் இருக்கிறார்கள் என்பதை அந்த *குரு* விளக்கியதும், *குரு* சொல்வதை அவர்களால் அப்போது அறிய முடிந்தது. ஆனால் அவர்களுக்கு அந்த அறியும் சக்தி *குருவின்* மூலம் வழங்கப்பட்டு, அவர்கள் இணக்கத்தில் இருந்த சமயத்தில் அவருடைய சொந்த ஆன்மீக சூழல் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. அவர்கள் அப்போது இந்த சக்தியை தங்களிடம் விழிப்படைய முயற்சி செய்யவில்லை. ¶இந்த ஆய்வின் மூலம், அறியும் சக்தியின் ஆன்மீக தொடர்ச்சியை விழிப்படைய செய்து பராமரிப்பதே முக்கிய நோக்கம் ஆகும். உதாரணத்திற்கு நீங்கள் முதலில் உருவமற்ற நிலையை அறிந்து கொள்கிறீர்கள், மற்றும் பிறகு ஒரு குறிப்பிட்ட அனுபவத்தின் உருவத்தை நீங்கள் அறிந்துகொள்வதாக தோன்றும் போது, உங்கள் வெளிப்புற மனதில் உங்களுடைய அன்றாட லௌகீக அனுபவங்களை அனுபவிக்கும் போது நீங்கள் கிரகித்ததை நினைவில் வைத்திருக்க வேண்டும். அதாவது உங்கள் கீழ்நிலை உணர்வு லோகங்களை கடந்து ஆன்மீகரீதியாக அறிந்த ஒன்றின் மீது, நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். ¶நீங்கள் ஒரு குறிப்பிட்ட தூல பொருளின் மீது உங்கள் மனதை தக்க வைத்து, உங்களால் எவ்வளவு காலம் இந்த ஒருமுகச் சிந்தனையை பராமரிக்க முடியும் என்பதை கவனிக்கும் போது, நீங்கள் ஒருமுகச்சிந்தனை மற்றும் காந்த சக்திகளை கட்டுப்படுத்தும் கலையில் தேர்ச்சி பெறுகிறீர்கள். ஒரு முழு கோட்பாடு மற்றும் இறுதியில் வாழ்க்கையின் மிகப்பெரிய *யோக* விதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய அறிந்த நிலையின் உணர்வை, நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். அறியும் சக்தி என்பது மெய்ஞ்ஞான நிலை மற்றும் மனம் வழியாக பாய்ந்து செல்லும் ஆன்மீக சக்தியை குறிக்கிறது. அறிந்த நிலையின் உணர்வை பராமரித்தல் என்பது மெய்ஞ்ஞான மனதின் மீது மனப்பூர்வமான கட்டுப்பாட்டுடன் இருப்பதை குறிக்கிறது.

ஆனந்த ஜீவனம்

आनन्दजीवनम्



வாழ்க்கை ஆனந்தமாக வாழ்வதற்கே

பகவானே நல்லெண்ணம் மற்றும் உணரும் திறன் நிரம்பிய ஆரோக்கியமான மற்றும் ஆனந்தமான மனதை எங்களுக்கு அருள் செய். அதனால் நாங்கள் உங்கள் நட்புறவில், பசுமையான புல் தரையில் பசுக்கள் ஆனந்தமாக மேய்வதைப் போல, எப்போதும் இன்பத்தில் வாசம் செய்வோம். இதுவே எனது அபிப்ராயம்.

ரிக் வேதம் 10.25.1. வேஎ, ப. 302



கிராமத்தில் நடைபெறும் ஒரு திருவிழாவில் இரண்டு அன்பர்கள் மகிழ்ச்சியுடன் பங்கு பெறுகின்றனர். கழுத்தில் ருத்ராட்ச மாலை, தோள் மற்றும் இடுப்பில் அங்கவஸ்திரம் மட்டுமே அணிந்து, பழங்கால பாணியில் ஓடுகளால் அமைந்த கூரை மற்றும் விரிவாக அலங்கரிக்கப்பட்ட தூண்களுடன் இருக்கும் வீடுகள் வழியாக, ஒருவர் வெள்ளியால் அழகுபடுத்தப்பட்ட சங்கை முழங்கிக் கொண்டும், இன்னொருவர் தென்னிந்திய மிருதங்கத்தை *வாசித்துக் கொண்டும் நடந்து செல்கின்றனர்.*

திங்கட்கிழமை

பாடம் 113

ஆன்மாவை நாடி

வாழ்தல்

தொழில்நுட்ப யுகத்தின் பின் விளைவாக இருக்கும் மன அழுத்தத்தைப் பற்றி இன்று எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிக சவால்களுடன் விரைவாக இயங்கும் நவீனயுகத்தின் மன அழுத்தம் மற்றும் நலிசோர்வுகள், உடலின் ஒவ்வொரு உறுப்பின் மீதும் தங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கும் காலத்துடன் பொருந்திக் கொள்ள ஒரு அமைதியான மற்றும் நிம்மதியான மனம் தேவைப்படுகிறது. காலங்கள் விரைவாக மாறிக்கொண்டு இருக்கின்றன. இந்த மாற்றங்களை சமாளிக்கும் போது உடல், மனம், மனவெழுச்சி மற்றும் ஆன்மீக வாழ்க்கையை சமன் செய்ய நாம் நம்மை சார்ந்து இருக்க வேண்டும். மன அழுத்தம் மற்றும் அது உருவாக்கும் நோய்களை எதிர்கொள்வதற்கும், விரைவாக இயங்கும் இந்த உலகம் வழங்கும் மனவேதனையை தவிர்ப்பதற்கும் நமது சமயம் வழிமுறைகளை வகுத்துள்ளது. விவசாயத்தை மையமாக கொண்டிருந்த யுகத்தில், இந்த மன அழுத்தங்கள் இருந்ததில்லை. அப்போது அமைதியாக எல்லாம் இயங்கிக்கொண்டு இருந்தன. நாம் அந்த காலத்தில் செடிகளை நட்டு அறுவடைக்காக காத்து இருந்தோம். செடியை நட்டு காத்து இருப்போம். செடியை நட்டு காத்து இருப்போம். இதற்கு மத்தியில் சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு போதுமான நேரம் இருந்தது. ¶ஆனால் தொழில்நுட்ப யுகத்தில் நமது வாழ்க்கை தொடர் வேலை மற்றும் தொடர் நடவடிக்கை நிரம்பியதாக இருக்கிறது. அதனால் நமக்கு சமயத்தின் தேவை மிகவும் அதிகமாக இருக்கும் இந்த யுகத்தில், நாம் அதை ஒதுக்கி விடுகிறோம். சமயத்தில் ஈடுபாடில்லாத மக்களைக் காட்டிலும் சமய ஈடுபட்டுள்ள மக்களால் மன அழுத்தம் மற்றும் நலிசோர்வுகளை நன்றாக எதிர்கொள்ள முடிகிறது என்பது ஒரு நிரூபணமான உண்மை ஆகும். ஒரு மாத்திரையை எடுத்துக்கொண்டு ஓய்வு எடுப்பது மன அழுத்தத்திற்கான தீர்வு இல்லை. கோயில் செல்வதை நிறுத்தாமல், கலாச்சாரத்தை புறக்கணிக்காமல், தெளிவான மற்றும் துல்லியமான கருத்தை வழங்கும் சாத்திரங்களை அலட்சியப்படுத்தாமல், தியானம் செய்யும் கலை மற்றும் *யோகப்பயிற்சிகளை*

தவிர்க்காமல் இருப்பதே இதற்கான தீர்வு ஆகும்.¶ஆன்மீக விவகாரங்களை உங்கள் இதயம் மற்றும் உங்கள் உணர்ச்சியின் துணையுடன் புரிந்துக்கொள்ள வேண்டும். உணர்ச்சி மற்றும் சிந்தனை இணைந்து செயல்படும் போது, அது ஆன்மாவின் விவேகத்தை அறிவதற்கு தேவைப்படும் ஆழமான புரிதலை வழங்குகிறது. நீங்கள் அன்றாட வாழ்க்கையை வாழும் போது, நேற்றை காட்டிலும் இன்றை சிறிது சிறப்பாக செய்து முடிக்க முயற்சிக்க வேண்டும். அப்போது உங்களுக்கு தன்னம்பிக்கை பிறக்கும். அதனால் நாளையும் திருப்திகரமாக இருந்து, எதிர்காலம் பற்றிய அச்சமும் இல்லாமல் இருக்கும். ஏன்? ஏனென்றால் நீங்கள் இன்றைய தினத்தை உங்கள் வாழ்நாளின் சிறப்பான நாளாக மாற்ற முயற்சிக்கும் போது, நீங்கள் உங்கள் ஆன்மாவை இயக்கி இருப்பீர்கள். உங்கள் மனதின் அனைத்து அடுக்குகள் வழியாக ஆன்மா உருவில் இருக்கும் இறைவன் வியாபிக்க அனுமதி அளிக்கிறீர்கள். ¶இன்று நமது சூரியோதய யாத்திரையின் அங்கமாக மவுண்ட் தமல்பைஸ் குன்றிற்கு சென்ற போது நம்முடன் முப்பதுக்கும் மேற்பட்ட அன்பர்கள் வந்திருந்தார்கள். அது ஒரு அழகான உற்சாகம் தரும் யாத்திரையாக இருந்தது. நாங்கள் மலை உச்சியில் ஒன்றாக மேற்கொண்ட ஆராய்ச்சியைப் பற்றி, நான் உங்களுக்கு சிறிய விளக்கம் அளிக்க விரும்புகிறேன். சில நேரங்களில் உங்கள் உடல் முழுவதுமாக சிந்தனைகள் நிரம்பி இருக்கக்கூடும். சில நேரங்களில் உங்கள் சிந்தனைகள் மேலும் கீழுமாக குதிப்பதை உங்களால் உணர முடியும். அவை எங்கிருந்து வருகிறது என்பது உங்களுக்குத் தெரியாது, மற்றும் அவை உங்கள் உடல் அல்லது உங்கள் மூளை வழியாக சென்று உங்களை குழப்புகின்றன. சிந்தனை உடல் வழியாக செல்வதைப் போல, ஆன்மா ரூபத்தில் இருக்கும் இறைவனும் இயலுணர்வு, அறிவுணர்வு மற்றும் உள்ளுணர்வு மனம் வழியாக செல்கிறார். உடல் வழியாக உங்கள் சிந்தனைகள் செல்லும் போது, உங்கள் சிந்தனையை பொருத்து, உங்கள் உடல் மனமுடைந்து பருமனாகவும் அல்லது லேசாக இன்பமாகவும் இருக்கக்கூடும். உங்கள் சிந்தனை மற்றும் உணர்ச்சிப் பழக்கங்களை சங்கல்பங்களின் உதவியுடன் மேம்படுத்தலாம். சில சங்கல்பங்கள் ஒரு குறிப்பிட்ட பலனை வழங்குவதற்கு, அவற்றை குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ந்து சொல்ல வேண்டும். ஒவ்வொரு சொல் மற்றும் அதன் பொருளும் ஒரு குறிப்பிட்ட அதிர்வை கொண்டிருக்கிறது. ஒரு சிந்தனை இயங்கத் தொடங்கியதும், அது உங்கள் நரம்பியல் அமைப்பில் வியாபித்து உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட உணர்வை வழங்குகிறது. உங்கள் சிந்தனைகள் மற்றும் உங்கள் சொற்கள் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட உணர்வை வழங்குவதைப் போல, ஆன்மா ரூபமாக இருக்கும் இறைவனும், மனம் வழியாக சென்று, மனதை பிரகாசப்படுத்தி சுத்தம் செய்கிறது. ¶உங்கள் கடந்தகாலத்தை எதிர்கொள்ளும் போது, உங்கள் கடந்தகாலம் நீங்கள் எதிர்பார்ப்பதை போல இல்லை என்றாலும், நீங்கள் அதன் மீது கவனம் செலுத்தி எதிர்செயலாற்றினால், நீங்கள் உருவாக்கவிருக்கும் இன்றைய பொழுது,

நேற்றைக் காட்டிலும் மோசமாக இருக்கும். நீங்கள் ஒரு ஆன்மீக வாழ்க்கையை வாழமாட்டீர்கள். ஆனால் நீங்கள் தினமும் உங்களுக்குள் இருக்கும் ஆன்மாவை நாடி, அந்நாளை நேற்றைக் காட்டிலும் சிறப்பாக செய்வதன் மூலம், மனம் வழியாக உங்கள் உண்மையான சாரமாக இருக்கும் ஆன்மீக இருப்பை நிரப்புகிறீர்கள். ¶அடிமனதின் எதிர்மறை எதிர்வினைகளுக்கு காரணமாக இருப்பது எது? நீங்கள் மனதின் இயற்கை விதிகளுக்கு எதிராக செய்த தவறுகள் மட்டும் தான் காரணம். நீங்கள் தூல உடலின் விதிகளை மீறி, தவறான உணவுகளை உட்கொண்டு, தவறான முறையில் செயல்பட்டால், உங்கள் தூல உடல் வேதனைக்கு உள்ளாகும். நீங்கள் உங்கள் மனதின் இயற்கை விதிகளை மீறி, மற்றவர்களுக்கு உதவி செய்யாமல் அவர்களை துன்புறுத்தி, சக மனிதரை ஊக்குவிக்காமல் அவர்களை அதைரியப்படுத்தினால், உங்கள் மனம் வேதனைக்கு உள்ளாகும். மனதின் ஒரு பகுதி தனது கட்டுப்பாட்டை இழக்கிறது, மற்றும் இது மனவெழுச்சி நிலையை குறிக்கிறது. தனது கட்டுப்பாட்டை இழந்த மனதின் அங்கமாக மனவெழுச்சிகள் விளங்குகின்றன. அவை சுயமாக தூண்டுதலை பெற்று, இறுதியில் மனம் முழுவதையும் ஆட்கொள்கிறது. ஆனால் ஆன்மாவின் சித்தம் வெளிவந்து மனவெழுச்சி இயல்பை கட்டுப்படுத்தும் போது, மனவெழுச்சிகள் மீண்டும் தூண்டுதலை பெறும் வரை சில காலத்திற்கு தணிகின்றன. இது சிலசமயம் வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 114

நீங்கள் தயாராக

இருக்கிறீர்களா?

நீங்கள் உங்கள் மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தும் போது, உங்கள் ஆன்மீக இருப்பை இயக்குகிறீர்கள். உங்கள் ஆன்மீக இருப்பு செயல்பட்டு, ஆன்மா ரூபமாக இருக்கும் இறைவனை இயக்குவதன் மூலமாகத் தான் மனதைக் கட்டுப்படுத்த முடியும். நீங்கள் ஒரு மனவெழுச்சி நிலையில் வாழும் போது, நீங்கள் தற்காலிகமாக கட்டுப்பாட்டை இழந்த மனதைத் தான் அனுபவிக்கிறீர்கள். மற்ற விஷயங்கள் தானாக தூண்டுதலை பெறுவதைப் போல, அது மீண்டும் வலுவடையும் வரை, நீங்கள் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமல், அது தானாக தணிந்துவிடும். இவை அனைத்தும் இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில், மனதின் இயற்கை விதிகள் மீது நடைபெற்ற நுணுக்கமான அத்துமீறல்கள் மூலம் உருவாக்கப்படுகின்றன. ¶பல நுணுக்கமான விதிகள் உள்ளன. உதாரணத்திற்கு, நீங்களுக்கு ஒருவருக்கு

ஒன்றை செய்ய விரும்பி பின்பு ஏதோ ஒரு காரணத்தால் பின்வாங்கினீர்கள் என்றால், உங்கள் ஆன்மீக இருப்பில் இருந்து முன்பு நீங்கள் இயக்கிய ஆன்மீக சக்தி அனைத்தும், உங்கள் தயக்கத்தின் மூலம் உறைந்து தடை செய்யப்படுகிறது. அதன் பிறகு நாளைய தினம் இன்றைப் போல சிறப்பாக இல்லாமல் மோசமாக இருக்கும். ¶ஆன்மா தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருக்க, புரிதலுடன் இணக்கத்தை பெறுவதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கிக் கொள்ளுங்கள். அதாவது உங்கள் மனதில் கருத்து வேறுபாடு தோன்றுவதை அனுமதிக்காதீர்கள். அவ்வாறு கருத்து வேறுபாடு தோன்றினால், நீங்கள் அந்த பிரச்சனையை புரிந்துக் கொள்ளும் வரை, ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து இருங்கள். நீங்கள் இதற்காக ஒரு மணிநேரம் அமர்ந்திருக்க வேண்டியிருக்கும். இதை செய்வதற்கு உங்கள் விலங்குணர்வு குணம் தடையாக இருக்கக்கூடும், ஆனால் நீங்கள் உங்கள் மன உறுதியை பயன்படுத்தி நிலைத்து இருந்தால், நாளைய தினம் சிறப்பானதாக இருக்கும். இனி இதைப்பற்றி பேசுவதற்கும் புரிந்துகொள்வதற்கும் எளிதாக இருக்கும், ஆனால் இந்த மனதின் விதிகளில் தேர்ச்சி பெறுவதற்கு, பகுத்தறியும் சக்தியை பயன்படுத்தி நுணுக்கமாக வேறுபடுத்திப் பார்க்கும் மனம் தேவைப்படும். ¶இந்த ஆன்மீக இருப்பை விழிப்பூட்ட, உங்கள் மனதிற்கு பழக்கப்படுத்துங்கள். இது ஒருவருக்கு நடனமாட அல்லது நீந்துவதற்கு பயிற்சி அளிப்பது அல்லது தடகள போட்டிகளில் சாதனை செய்ய நன்றாக பயிற்சிபெற்ற உடல் தேவைப்படுவதைப் போன்று கடினமானது. நீங்கள் எப்போதும் தலைவனாக இருந்து உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள்கள் மீது கவனமாக இருக்க வேண்டும். ¶இந்த வாழ்க்கையில் உங்கள் இலட்சியம் என்ன? ஓரிடத்தில் அமர்ந்து மனவெழுச்சிகளில் மூழ்கி இருப்பது தான் உங்கள் இலட்சியமா? நீங்கள் மேற்கோள் காட்டுவதற்காக பல மக்கள் வழங்கிய எண்ணற்ற தகவல்களை மனப்பாடம் செய்வது உங்கள் இலட்சியமா? அல்லது இந்த பிறவியில் உங்களுக்குள் இருக்கும் எல்லையற்ற தெய்வீக பண்பை முதலில் தெரிந்துகொள்வது உங்கள் இலட்சியமா? நான் என்று நீங்கள் எப்போதும் நினைத்து இருந்த, உங்கள் மனம் வழியாக பாய்ந்து செல்லும் உங்களின் உண்மையான தெய்வீக பண்பு அல்லது ஆன்மீக சக்தியை ஒரு முறை சில வினாடிகளுக்கு காண முயற்சிக்காமல், நீங்கள் இதுவரை செய்யாத செயல்கள், நீங்கள் செய்யவிருக்கும் செயல்கள், எதிர்காலத்தில் நீங்கள் செய்யாத செயல்கள், செய்து முடிக்க வேண்டும் என்று நீங்கள் இதுவரை முடிவு செய்துள்ள செயல்கள் மற்றும் தொடக்கத்தில் செய்ய விருப்பம் இருப்பதாக நினைத்து ஆனால் இறுதியில் செய்யவேண்டாம் என்று முடிவு செய்த செயல்கள் என்று உங்களுக்குள் நடைபெறும் செய்முறை, உங்களை நன்றாக குழப்பி வைக்கிறது. ¶ஒரு குழப்பமான மனம் உருவாக்கும் உருவத்திற்கு நீங்கள் ஒரு பெயரை வழங்குகிறீர்கள், மற்றும் நீங்கள் ஒரு ஊரைச் சேர்ந்த திரு அல்லது திருமதியாக மாறுகிறீர்கள். நீங்கள் இறுதியில் உங்கள் தூலஉடலை துறந்து இறக்கும் வரை, இந்த செயல்களை தொடர்ந்து

கொண்டு இருக்கலாம். பிறகு நடப்பது என்ன? "எனது நண்பர்கள் என்ன நினைப்பார்கள்" என்று அதிக கவலையில் இருந்த இந்த மனதின் கதி என்ன? உங்கள் தூல உடலை துறந்து மரணமடையும் போது, உங்கள் ஆளுமையின் அங்கமாக இருக்கும் கோட்பாடுகளின் கதி என்ன? நீங்கள் மரணம் வழங்கும் அந்த அனுபவத்திற்கு தயாராக இருக்கிறீர்களா? குறிப்பாக வாய்ப்புக்கள் அதிகமாக உள்ள இந்த காலத்தில், நீங்கள் அதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும். எப்போதும் ஆன்மீக ரீதியாக தயாராக இருங்கள். ¶நீங்கள் ஆன்மீக ரீதியாக தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய கடமையை நிறைவேற்றி விட்டீர்களா? நீங்கள் உங்கள் குலதெய்வத்தின் கோயிலுக்கு ஆற்றவேண்டிய கடமையை நிறைவேற்றி விட்டீர்களா? நீங்கள் உங்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை நிறைவேற்றி விட்டீர்களா? அல்லது நீங்கள் உங்களுடைய சில கடமைகளை தட்டிக் கழிப்பவரா? உங்களைப் பற்றிய அனைத்து தகவல்களையும் நினைவில் வைத்து இருப்பது உங்கள் *சுவாமியின்* பொறுப்பு இல்லை. "குருதேவா என்னைப் பற்றிய தகவல்கள் அனைத்தையும் அறிந்து இருக்கிறார்," என்று ஒரு அன்பர் ஒருமுறை குறிப்பிட்டார். அதனால் என்ன பயன்? உங்கள் உணர்ச்சியின் மூலம் உங்களை தினமும் தொடர்ந்து மதிப்பிட்டுக் கொள்வது உங்கள் பொறுப்பாகும். நீங்கள் அதை கலவையாக இருக்கும் உங்கள் சிந்தனை மூலம் தெரிந்துக்கொள்ள முடியாது. உங்களுக்கு மரணம் சம்பவிக்கும் போது, நீங்கள் ஒரு ஆன்மா, ஒரு ஆன்மீக சக்தி, ஞானோதயம் பெற்ற மனமாக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது உங்களுக்கு மரணம் சம்பவிக்கும் போது குழம்பிய மனம் காட்சி அளிப்பதைப் போன்று, முழுமையாக குழம்பிய நிலையில் வாயுவாக இருக்கும் அடர்த்தியான திணிவாக மாறுவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? சமயம் தொடர்பான இந்த முக்கிய கேள்விகளை ஒரு தனிநபர் எதிர்கொண்டு அவற்றிற்கு பதிலையும் தேடிக்கொள்ள வேண்டும்.

புதன்கிழமை

பாடம் 115

நீங்கள் உங்களை

சுத்தம் செய்துக்கொள்ள வேண்டும்

"எனக்கு வழங்கப்பட்ட உபதேசங்கள் அனைத்தையும் நான் பின்பற்றுகிறேனா?" என்று உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் எனது *உபதேசத்தை* கேட்க வருகிறீர்கள். நீங்கள் அறிவுரை கேட்க வருகிறீர்கள். நீங்கள் அறிவுரை பெற்றதும், அதை புறக்கணித்து உங்கள் சொந்த கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறீர்கள். உங்களுக்கு சொந்த கருத்துக்கள் இருந்தால்,

நீங்கள் எதற்காக வரவேண்டும்? கருத்துக்கள் உள்ளுணர்வு மற்றும் அறிவுணர்வு மனதை சார்ந்து இருக்கின்றன. பெரும்பாலான கருத்துக்கள் வெறும் மேலோட்ட கோட்பாடுகளாக இருக்கின்றன! நீங்கள் உங்கள் கருத்துக்களை மாற்றிக்கொள்ள வருகிறீர்கள். நீங்கள் உங்களுடைய சொந்த ஆன்மீக நுணுக்கங்கள் மூலம் அந்த கருத்துக்களை உங்களுக்குள் மாற்ற வந்தீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் கருத்துக்களின் பாதுகாப்புடன் வந்தால், அதை முட்டாள்தனம் என்று சொல்லவேண்டும். இதற்கு பதிலாக நீங்கள் உங்கள் வீட்டில் கருத்துக்களுடன் வாழ்ந்துக்கொண்டு இருக்கலாம், ஏனென்றால் இதன் மூலம் பலப்பல வருடங்கள், பலப்பல பிறவிகளுக்கு ஆன்மீக முன்னேற்றம் அல்லது விரிவாக்கம் நடைபெறப் போவதில்லை. ¶உங்களிடம் பின்வரும் முக்கிய கேள்விகளை கேட்டுக்கொள்ளுங்கள். உங்களுக்கு தொடர்ந்து கவலைகளை வழங்கிக்கொண்டு, உங்கள் பூலோக வாழ்க்கையை சிலசமயங்களில் அன்றைய தினத்தை நரகமாக மாற்றிவிடும் கடந்தகாலத்தை நீங்கள் எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்? இந்த மனதின் நிலையை கடப்பது மிகவும் எளிது. பூமியில் நீர் பாய்ந்து செல்வதைப் போல, உங்களுக்குள் இருக்கும் ஆன்மா உங்கள் வழியாக, உங்கள் மனம் வழியாக பாய்ந்து செல்வதை நினைவில் வைத்து, அதனை புரிந்துகொள்ள முயலுங்கள். நீங்கள் தடைகளை ஏற்படுத்தினால், உங்களுக்குள் ஆன்மா ரூபத்தில் பாய்ந்து செல்லும் உங்களது சொந்த தெய்வீக பண்புடன் சண்டையிடுகிறீர்கள். நீங்கள் பொறாமை, வெறுப்பு, கோபம், ஆத்திரம் மற்றும் தீய எண்ணங்களின் பண்புகளை வளர்க்கிறீர்கள். மனம் தொடர்பான வெறும் அடர்த்தியான திணிவுகளாக தற்காலிகமாக இருக்கும் எதிர்மறை பண்புகள், ஆன்மா பாய்ந்து செல்வதற்கு அனுமதி வழங்குவது இல்லை. உங்கள் மனதில் எதிர்மறை பண்புகள் தடைகளாக இருந்தால், உங்களுக்குள் ஆன்மா பாய்ந்து செல்ல முடிவதில்லை. ஆனால் அது தனது இயக்கத்தை தொடர முற்படும் போது, அது தானாக மனதின் ஒரு பகுதியில் கட்டுப்பாட்டை இழக்கச் செய்கிறது, மற்றும் நீங்கள் உணர்ச்சி வசப்படுகிறீர்கள். அதை உங்களால் தடுக்கவும் முடியாது. ¶அதனால் நீங்கள் உங்களை சுத்தம் செய்துக் கொள்ளவேண்டும். அதனால் நீங்கள் மற்றவர்களிடம் அன்பாக இருந்து, முடிந்த வரை தாராளமாக இருந்து, இரக்க குணத்துடன் இருந்து, உங்களுக்கு சேவையில் சோர்வு ஏற்படும் வரை தொடர்ந்து சேவை செய்வதன் மூலம் நீங்கள் உங்களை சுத்தம் செய்துகொள்கிறீர்கள். மற்றவர்களை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள். மற்றவர்களை மகிழ்விப்பதன் மூலம் உங்கள் மனதில் நேர்மறையான ஆனந்த நிலையை பெறுங்கள். எதிர்மறை எண்ணம் கொண்ட மக்கள் எப்போதும் தங்களைப் பற்றிய கவலையில் இருப்பார்கள். நேர்மறை எண்ணம் கொண்ட மக்கள் எப்போதும் மற்றவர்கள் நலனில் அக்கறை செலுத்துவார்கள். புரிந்துகொள்ளும் அளவிற்கு உறுதியாக இருங்கள், மற்றும் அன்றைய தினத்து பிரச்சனைகளை புரிந்துகொள்ளாமல் இரவு உறங்க செல்லாதீர்கள். நீங்கள்

மனதில் பிரச்சனைகளுடன் உறங்க சென்றால், நீங்கள் குழப்பமான மனநிலைக்குள் தள்ளப்பட்டு, பல்வேறு சிந்தனைகளால் படுக்கையில் புரண்டு புரண்டு படுப்பீர்கள். அடுத்த நாள் காலையில், "நல்லவேளை அது கனவு தான்," அல்லது "நான் நேற்று இரவு ஒரு கெட்ட கனவை கண்டேன்," என்று சொல்லிக்கொண்டு படுக்கையில் இருந்து எழுந்திருப்பீர்கள். ஒரு சிக்கலான அடியுணர்வு நிலையில் நீங்கள் உங்கள் உணர்வை இழந்து விட்டீர்கள். ஆனால் நீங்கள் *யோகப்பயிற்சி* செய்து, உறங்கும் முன்பு தேவைப்பட்டால் பல மணி நேரங்கள் ஓரிடத்தில் அமர்ந்து ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு காணும் போது, நீங்கள் இன்றைய தினத்தை சிறப்பானதாக உருவாக்குவதால், நீங்கள் அடுத்த நாளைக்கு போதிய ஓய்வை பெற்று இருப்பீர்கள். ¶ஆனால் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போது, நீங்கள் செய்யவேண்டியதை செய்ய மறுத்தால், செய்வதறியாது விழிக்கும் ஒருவனுக்கு உங்களால் எப்படி நம்பிக்கை வழங்க முடியும்? எல்லாம் ஒன்றில் இருந்து தோன்றி எண்ணற்றதாக பெருகுவதால், நீங்கள் ஆன்மீக வாழ்க்கையை தடுத்தால், மற்றவர்களுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கும். இந்த அடிப்படை கொள்கைகளை மிகவும் நுணுக்கமாக வேறுபடுத்தி புரிந்துக்கொண்டு, அதை உடனே உங்கள் வாழ்வில் செயல்படுத்துவது உங்கள் பொறுப்பு ஆகும். உங்கள் ஆன்மாவை மேம்படுத்த கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள், ஏனென்றால் அவ்வாறு செய்யும் போது விளைவு உங்களுக்கு சிறப்பாக அமையும். ஆனால் நீங்கள் ஆத்திரம் அடைந்து உங்களுடன் சண்டையிடும் போது, நீங்கள் உங்களின் உட்புறமாக இருக்கும் பரமாத்துமாவுடன் சண்டையிடுவதால், நீங்கள் தோல்வி அடைகிறீர்கள். நீங்கள் உங்களை ஆன்மீக பண்புடன் வெளிப்படுத்திக் கொள்ளும் போதும், சிவனோடு வாழத் தொடங்கும் போதும், உங்களுக்கு வெற்றி கிடைக்கிறது.

வியாழக்கிழமை

பாடம் 116

தினமும் மனதை

பராமரித்தல்

நாம் சில வினாடிகளுக்கு கண்களை மூடிக்கொண்டு உண்மையில் சிவனோடு வாழ்தல் என்றால் என்ன என்பதை சிந்தித்து மற்றும் உணர்ந்து பார்க்கலாமா? நீங்கள் மனவெழுச்சிகளால் சோர்வு அடைந்தால், அது மனதின் கீழ்நிலை மீது உங்கள் ஆன்மா ஆதிக்கம் செலுத்தி கட்டுப்படுத்த தயாராக இருப்பதை குறிப்பிடுகிறது. சிவபெருமான் உங்களுக்குள் எப்போதும் இருந்துக்கொண்டு இருக்கிறார். நீங்கள் அமைதி அடைந்து, உங்கள் மனதை அமைதிப்படுத்துவதன்

மூலம், நீங்கள் மெய்யாக இருக்கும் அந்த உண்மைப்பொருளாக நீங்கள் மாறி, நீங்கள் எதுவாக உங்களை நினைத்தீர்களோ, அதன் வழியாக நீங்கள் பிரகாசிப்பீர்கள். உங்கள் அனுபவம் உங்கள் மனதை சீர் செய்து கடந்த காலத்தை அழித்து விடுகிறது. உங்களுக்குள் இருக்கும் ஆன்மாவை வலுப்படுத்தி, மனதில் ஏதேனும் காயங்கள் இருந்தால் அதற்கு நிவாரணம் வழங்குங்கள். இயற்கை அன்னை உடலுக்கு நிவாரணம் வழங்குவதைப் போல, பரமாத்துமாவாக இருக்கும் சிவபெருமானும் மனதிற்கு நிவாரணம் அளிக்கிறார். உங்களுடைய உண்மையான பண்பிடம் உங்களை சமர்ப்பியுங்கள். உங்கள் மனதை அகநோக்கியாக மாற்றுங்கள். உங்கள் சித்தத்தை அகநோக்கியாக மாற்றி ஒரு அருமையான ஆன்மீக வாழ்க்கையை வாழ்ந்து, மரணம் வழங்கும் அனுபவத்தை சந்திக்க ஒரு ஆன்மீக இருப்பாக தயார் நிலையில் இருங்கள். ¶நீங்கள் சுய ஒழுக்கத்தை அனுட்டானம் செய்ய, மாற்றம் செய்ய உங்களுக்கு வாய்ப்புக்களை வழங்கிக் கொள்ள, இந்த வருடத்தில் உங்கள் மனதில் உருவாகியுள்ள பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு காலைநேர *பூஜைகள்* சிறந்த வாய்ப்புக்களை வழங்குகின்றன. இந்த அதிகாலை நேர தியானங்களின் போது, நீங்கள் உங்களை நிந்திப்பதை நிறுத்த கற்றுக்கொண்டு, உங்களுடன் ஒரு நல்ல புரிதலுடன் இருக்க தொடங்குவீர்கள். நீங்கள் உங்களை நிந்திப்பதை நிறுத்த கற்கும் போது, நடப்பு ஆண்டில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை நினைத்து வருந்தாமல், அவற்றில் பல அனுபவங்களை உங்களால் முழுமையாக புரிந்துகொள்ள முடியும். நீங்கள் வெறுக்கும் அனுபவத்தைக் காட்டிலும் உங்கள் வெறுப்பு அதிக தீங்கை விளைவிக்க வல்லது. சிலர் நேர்மையான நெறிமுறைகளை பின்பற்றி வாழ்கிறார்கள், ஆனால் அந்த வாழ்முறையே அவர்கள் வருத்தம், குற்ற உணர்வு அல்லது அது தொடர்பான மனவெழுச்சிகள் மூலம் தங்களை தொடர்ந்து துன்புறுத்திக் கொள்ள ஒரு காரணமாக அமைகிறது. உங்களுடைய தியானத்தின் மூலம், நீங்கள் பெற்ற நல்ல அல்லது கடினமான அனுபவங்களை முழுமையாக புரிந்துகொள்வீர்கள். கடினமான அனுபவங்கள் மீண்டும் தோன்றாமல் இருக்க ஒரு உறுதிமொழி மட்டும் எடுத்துக்கொண்டு, நீங்கள் அனுபவித்த அனுபவங்கள் உலகில் ஏற்படுத்திய மாற்றங்களை சரி செய்ய தேவையான நம்பிக்கையுடன் இருங்கள். உங்கள் அனுபவங்களை நடுநிலையுடன் அணுக மேற்கொள்ளும் முயற்சி, உங்கள் மனதை உற்சாகப்படுத்த கற்றுக்கொள்வதில் முதல் நிலையாக விளங்குகிறது. இதை செய்வது சற்று கடினமாக இருக்கக்கூடும், ஏனென்றால் நீங்கள் மனதுடன் உங்களை அடையாளம் கண்டுகொண்டு அதனுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பீர்கள். மனம் உங்கள் மீது உரிமை கோருவதால், நீங்கும் பெறும் அனுபவங்களை உங்களுடைய உண்மையான பண்பாக கருதுகிறீர்கள், ஆனால் அவை உங்களுடைய பண்பு இல்லை. ¶உங்களுடைய காலைநேர *பூஜைக்கு* பிறகு, ஐந்து நிமிடங்களுக்கு அமைதியாக அமர்ந்து, உங்களுக்கு

தொல்லையாக இருக்கும் விஷயங்களை ஒரு காகிதத்தில் எழுதிக் கொள்ளுங்கள். உங்கள் அடியுணர்வுக்கு எது சுமையாக இருக்கிறது என்பதை, காரண விளக்கங்கள் ஏதும் இல்லாமல், துல்லியமாக மற்றும் நேர்மையாக எழுதிக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்யும் போது, அந்த அனுபவங்களுக்கு உங்கள் எதிர்வினைகளை வெளிப்படுத்தி விடுகிறீர்கள். அந்த காகிதத்தை ஒரு நெருப்பில் அல்லது பாதுகாப்பாக குப்பைத் தொட்டியில் (*பூஜை* அறையில் வேண்டாம்) எரித்து விட்டு, அந்த அனுபவத்தில் இருந்து நீங்கள் தற்போது பெற்ற விவேகத்தைத் தவிர, அந்த அனுபவம் முழுமையாக நிறைவு பெற்றதாக நினைத்துக் கொள்ளுங்கள். சமஸ்கிருதத்தில் *வாசன தாக தந்திரா* என்று அழைக்கப்படும் இந்த பயிற்சி, உங்கள் அடியுணர்வை தெளிவுபடுத்தி, மனம் மீது உங்களுக்கு அதிக சக்தி மற்றும் கட்டுப்பாட்டை வழங்குகிறது. மதத்தில் ஒரு அடிப்படை அனுட்டானமாக அடியுணர்வை தெளிவுபடுத்தும் நடவடிக்கை விளங்குகிறது. இதை முதலில் செய்தால் மட்டுமே, உங்களால் இறைவனை நாடும் வேட்கையில் முன்னேற முடியும். இனி உங்களுக்குள் மாற்றம் இல்லாமல் நிரந்தர பரம்பொருளாக இருக்கும் சிவபெருமானை தேடுவதற்கு முயற்சி செய்யுங்கள். ¶இந்தியாவில் ஒரு சிறந்த ஆன்மீகவாதியாக இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அகநோக்கியாக இருப்பதை ஒரு நீண்ட கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை பிடித்து இருக்கும் ஒரு சிறுவனின் படத்துடன் ஒப்பிட்டு பேசினார். அந்த சிறுவன் கயிற்றை சுழற்றும் போது, அது அவனையும் அந்த கம்பத்தையும் சுற்றிக் கொள்கிறது. அவன் அந்த கயிற்றை பிடித்துக்கொண்டு எதிர் திசையில் சுழற்றும் போது, அந்த கயிறு மீண்டும் அவனையும் அந்த கம்பத்தையும் சுற்றிக்கொள்கிறது. வாழ்க்கை வழங்கும் அனுபவங்களை ஆனந்தமாக அனுபவிக்கும் மனிதனை அந்த சிறுவன் பிரதிபலிக்கிறான். அந்த கம்பம் இறைவனை குறிப்பிடுவதாலும், அந்த உண்மைப் பொருள் நகர்வது இல்லை என்பதாலும், அந்த கயிறு கம்பத்திற்கு கட்டுப்பட்டு அவன் அந்த கயிற்றை பிடித்து இருக்கும் வரையில், அவன் முழுமையான பாதுகாப்புடன் இருக்கிறான். அந்த சிறுவனை மனதுடன் ஒப்பிடலாம். மனதை இறைவனுடன் தொடர்புபடுத்தும் கயிறு ஆன்மா என்கிற வெல்லமுடியாத மனஉறுதியை குறிப்பிடுகிறது. எனவே ஒரு மனிதன் தனது மனதை அகநோக்கியாக மாற்றி, அவன் மனதை தொடர்ந்து உட்புறமாக கவனம் செய்ய செய்தால், அவனால் பரமாத்துமாவின் யதார்த்தம் மற்றும் மனம் பங்குகொள்ளும் நடவடிக்கைகளின் நிலையற்ற தன்மையையும் உணர முடியும். அவன் அந்த கயிற்றை பிடித்துக்கொண்டு, தொடர்ந்து அகநோக்கியாக இருந்து, தனக்கு சொந்தமான தெய்வீகத் தன்மையின் நிரந்தரத்துடன் தன்னை தக்க வைத்துக் கொள்ளும் வரை, அவன் எப்போதும் வருந்தாமல் அல்லது துன்புறுத்தப்படாமல், மனம் பங்குபெறும் நடவடிக்கையில் ஆனந்தமாக வாழக்கூடும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 117

உள்ளிருக்கும் பரமாத்துமாவை

உணர்தல்

உங்கள் அடியுணர்வில் தொல்லை தரும் விஷயங்கள் எதுவும் இல்லை என்றால், அகநோக்கியாக இருப்பது எளிதாகிறது. ஆனால் நீங்கள் கவலை அல்லது குழப்பத்துடன் இருந்தால், அடியுணர்வு ஒரு தடையாக விளங்கி, அகநோக்கியாக இருப்பதில் தடை ஏற்படுத்துகிறது. நீங்கள் அகத்தில் கவனம் செலுத்த விரும்பும் போது, நீங்கள் துக்கத்துடன் தக்க வைத்திருந்த அனுபவ மிச்சங்கள் அடியுணர்வில் இருந்து மேலே வருகின்றன. இந்த நிலையில், உங்கள் மனம் அகத்தில் கவனம் செலுத்துவதற்கு, நீங்கள் கூடுதலாக இன்னொரு அனுபவத்தை பெறவேண்டி இருக்கும். உங்கள் அனுபவங்கள் அனைத்தையும் ஆய்வு அல்லது காரணத்தின் ("ஏன் என்ற கேள்விகள்" இயலுணர்வுடன் தோன்றினாலும்) மூலமாக அல்லாமல், சுத்தமான புரிதலின் உயரிய அனுபவம் மூலம் புரிந்துகொள்ளும் அனுபவத்தை பெற வேண்டும். உங்களைப் பற்றி புரிந்துகொள்வதற்கு ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்பதை நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள். ¶சிவத்தன்மை வியாபிக்காமல் குழப்பத்தில் இருக்கும் ஒரு மனம், ஆத்ம ஞானம் கிடைப்பதில் இருந்து உங்களை விலக்கி வைக்கும் அளவிற்கு வலுவாக இருக்கிறது. உங்கள் மனம் குழப்பத்தில் இருக்கும் போது, அது வெளிப்புறத்தில் வலுவாக இருக்கிறது. மனம் குழப்பத்தில் இல்லாத போது, அது உட்புறமாக வலுவாக இருக்கிறது. வெளிப்புறமாக தென்படும் வலிமையைக் காட்டிலும், உங்கள் உட்புற வலிமையை எப்போதும் சார்ந்து இருக்கலாம். நீங்கள் உங்கள் உட்புற வலிமையை பெற்றதும், தினமும் ஓரிடத்தில் அமர்ந்து குறைந்தபட்சம் அரை மணிநேரம் தியானம் செய்வதோடு, ஒவ்வொரு எண்ணத்தின் காவலனாகவும் உங்கள் உடலுக்குள் ஏற்படும் ஒவ்வொரு உணர்ச்சியின் அரசனாகவும் உங்களால் இருக்க முடியும். இதை நீங்கள் செய்தால், உங்களுடைய தெய்வீகத் தன்மையின் மையமாக இருக்கும் அந்த உண்மைப்பொருளை நீங்கள் உணர்வீர்கள். உங்கள் மனதிற்கு நீங்கள் வழங்கிய சுத்திகரிப்பின் மூலம் நீங்கள் மேன்மை மற்றும் வளர்ச்சியை பெறுவீர்கள். ¶உங்கள் ஆன்மா துடிப்புணர்வுடன் எச்சரிக்கையாக இருப்பதற்கு, உங்கள் உணர்வை உயர்வாகவும், உங்கள் மனதை துடிப்புணர்வுடன் எச்சரிக்கையாகவும் வைத்து இருங்கள். "கூர்ந்து நோக்கும் பண்பு ஆன்மாவின் முதல் விழிப்பு நிலையாக விளங்குகிறது," என்று நான் பலமுறை சொல்வதை கேட்டு இருப்பீர்கள். உங்களுடைய கூர்ந்து கவனிக்கும் சக்தி தீவிரமாக மற்றும் துல்லியமாக

இருந்தால், உங்கள் மனம் கவலையில் இல்லை மற்றும் நீங்கள் கடந்தகாலத்தில் நடந்த நிகழ்வுகளை நினைத்து வருந்துவதில்லை. ஆனால் கூர்ந்து கவனிக்கும் சக்தி வலுவாக இல்லாதவர்கள் தங்கள் வருத்தங்களை மனதில் தக்க வைத்திருந்து, தனக்கு நடந்த அனுபவங்களுக்கு மற்றவர்களை காரணம் காட்டி, தங்களுக்கு நடந்த பெரும்பாலான அனுபவங்களுக்கு காரணத்தை தேடிக்கொள்கிறார்கள். இந்த எதிர்வினைகளுக்கு தடை விதித்து, கடுங்குளிரின் நடுக்கம் போல அல்லாமல் என்றும் ஒரு வசந்த காலம் போல ஆனந்தமாக வாழ்வது மிகவும் எளிது. ஆனந்தமாக வாழ்வதே வாழ்வின் நோக்கம் ஆகும். விழிப்புணர்வு பெற்ற ஆன்மா ஒரு நேர்மறையான மனதுடன் ஒரு ஆனந்தமான ஆன்மாவாக இருக்கிறது. கூர்ந்து கவனிக்கும் திறனில் மேற்கொள்ளப்படும் பயிற்சி, இந்த உணர்வு நிலைக்கு நெருக்கமாக தொடர்ந்து அழைத்து வருகிறது. ¶உங்களுக்கு கூர்ந்து கவனிக்கும் திறன் இல்லை என்று தோன்றினால், பொருட்களை மிகவும் நுணுக்கமாக கவனிக்க தொடங்குங்கள். ஒரு கடையின் சன்னல் வழியாக தெரியும் பல வண்ண பொருட்களை கூர்ந்து கவனியுங்கள். ஒரு மரத்தின் நிழல்கள் மற்றும் நிறபேதங்களை ஆய்வு செய்யுங்கள். சுற்றியிருக்கும் நரகத்தில் ஏற்படும் ஒலிகளை கேளுங்கள். அவற்றில் உங்களால் எத்தனை நிழல்கள், நிறங்கள் அல்லது ஒலிகளை பிரித்துப் பார்க்க முடிந்தது? அவை உங்களுக்கு எந்த தகவலை வழங்கின? உங்களிடம் கூர்ந்து கவனிக்கும் திறன் தற்போது நன்றாக செயல்பட்டு வந்தால், நீங்கள் வாழ்க்கையில் அதிக முழுமையுடன் பங்குபெற்று, அன்றாடம் நடைபெறும் மந்தமான நிகழ்வுகளை கடந்து நீங்கள் வாழ்வதை உங்களால் உணரவும் முடியும். ¶எல்லா அனுபவங்களும் ஒரு மங்கிவிடும் கனவாக நீங்கள் உணரும் போது, உங்களுக்குள் என்றும் மாறாமல் இருக்கும் நிரந்தர பண்பை நோக்கி நெருங்கி செல்கிறீர்கள். உங்களால் அதை உணர முடியும். மாறாமல் இருக்கும் அந்த நிரந்தர பண்பு இறைவனை, சிவபெருமானை குறிக்கிறது. அது என்றும் மாற்றம் பெறுவது இல்லை. நீங்கள் எல்லோரும் இந்த நிரந்தரத்தை எப்போதாவது உணர்ந்து இருப்பீர்கள், ஆனால் சில நேரம் கழித்து நீங்கள் இந்த உணர்வை இழந்து, மனதிற்குள் கவனம் செலுத்தி, மனம் தான் உண்மை என்று மீண்டும் சிந்திக்க தொடங்குவதை பார்த்து இருப்பீர்கள். ஆனால் நாளை நீங்கள் அதை மீண்டும் எதிர்கொள்ளக்கூடும். இறைவனின் வலிமையை மனதால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதால், நீங்கள் அந்த உணர்வை பெற்றதும், நீங்கள் அதை விட்டு மீண்டும் விலகி, அதைப்பற்றி முழுமையாக மறந்து விடுகிறீர்கள். ஆனால் சிறிது நேரம் கழித்து, உங்களுக்குள் மீண்டும் நிரந்தர பண்பை எதிர்கொள்கிறீர்கள். பிறகு நீங்கள் அகநோக்கியாக மாறி, தினமும் அதிகமான உட்புற பாதைகளை தொடர்ந்து திறந்து, அகநோக்கியாக மாறுவதன் மூலம் இறைவனுடன் ஒரு தலைசிறந்த தொடர்பை உருவாக்கி, உங்கள் தெய்வீகத் தன்மையின் மையத்தில் இருக்கும் கம்பத்தை நோக்கி உங்களை தொடர்ந்து இழுத்துக் கொள்வதை, உங்களால் மெதுவாக உணர முடியும்.

நீங்கள் பெற்ற சொந்த உணர்தலை நீங்கள் உங்களுக்கு நிரூபித்துக் கொள்ள, நீங்கள் பல சோதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு சோதனையையும் பணிவுடன் எதிர்கொள்ளுங்கள். ஒவ்வொரு சோதனையும் வரவேற்று, குழப்பமான உணர்வுகள் மீது உங்கள் சித்தத்தின் வலிமையை வெளிப்படுத்தும் ஒவ்வொரு தூண்டுதலையும் வரவேற்றிடுங்கள். சிவபெருமான், ஆன்மா, உங்களுக்குள் இருக்கும் நிரந்தர பரமாத்துமாவின் நிரந்தரத்தன்மையுடன் உங்களை அடையாளம் காண்பதற்கு, நீங்கள் மனதில் இருக்கும் அனைத்து விஷயங்களையும் அமைதிப்படுத்தினால் போதும்.

சனிக்கிழமை

பாடம் 118

ஒன்றின் மேல் ஒன்றாக

குவியும் எதிர்வினைகள்

நீங்கள் இறக்கும் போது உங்கள் புலன்களில் இருந்து விடுதலை பெறுகிறீர்கள். நீங்கள் உயிருடன் வாழும் போது, நீங்கள் உங்கள் புலன்களில் சிக்கி, நீங்கள் விரும்பிப் பெற்றது அல்லது பெறாத பொருட்கள் பற்றிய நினைவுகளுக்கு எதிர்செயலாற்றிக் கொண்டு இருப்பீர்கள். பலர் மேற்குவியும் எதிர்வினைகளின் தொடர் நிலைகளில் வாழ்கிறார்கள். அவர்கள் மன அமைதியை வெளியே தேட முயற்சி செய்கிறார்கள். நாம் முழுமையாக புரிந்துகொள்ளாமல் அடிமனதில் பதிய வைத்த விஷயங்கள் எதிர்வினைகளை உருவாக்குகின்றன. அடிமனதில் பாதுகாப்பாக பதிந்து இருக்கும் எதிர்வினைகள், நமது தினசரி வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தி, நம்மை நோக்கி வெற்றி தோல்விகளை ஈர்க்கின்றன. நாம் கடந்தகாலத்தில் அடிமனதில் பதிய வைத்த நமது எதிர்வினைகள் காரணமாக, நாம் தொடர்ந்து தடைகளை சந்திக்கிறோம். இந்த எதிர்வினைகளை வெற்றிக்கொண்டால், வாய்ப்புக்கள் வரத்தொடங்கி நாம் வெற்றி பெற ஆரம்பிப்போம். எதிர்மறை அல்லது நேர்மறையாக இருக்கும் எதிர்வினை, இயல்பான ஒரு விஷயம் தான். நமக்கு புரிதல் குறைவாக இருப்பதை, அதை நமது எதிர்மறை எதிர்வினை காண்பிக்கிறது. ஆனால் அது நேர்மறையாக இருந்தால், அது நமக்கு அதிக புரிதலை வழங்கி, நமக்கு நாமே ஆசிரியராக அல்லது மனோதத்துவ நிபுணராக செயல்பட வைக்கிறது. ¶ஒரு விஷயத்தைப் பற்றிய உங்கள் எதிர்வினையை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், நீங்கள் வருத்தப்படாமல் இருக்க மனவெழுச்சி தணியும் வரை காத்திருந்த பிறகு, ஒரு அமைதியான தருணத்தில் அதைப்பற்றி எழுதி புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். அதன் பிறகு அதை குப்பைத்தொட்டி போன்ற அமங்கலகரமான இடங்களில்

பாதுகாப்பான முறையில் எரித்து விடுங்கள். இந்த *வாசன தாக தந்திர* செய்முறை, நினைவில் இருந்து மனவெழுச்சியை விடுவிக்கிறது. தன்னோடு பொருத்திக்கொண்டு இருப்பத்தி நான்கு மணிநேரமும் அதிர்ந்துக்கொண்டு இருந்த மனவெழுச்சிக்கு, இனி அனுபவம் பற்றிய நினைவு இரகசிய புகலிடம் தருவதில்லை என்பதை இது குறிப்பிடுகிறது. உங்களுக்கு அதைப்பற்றிய நினைவு இருந்தாலும், அதனோடு ஒரு எதிர்வினை அல்லது மனவெழுச்சி பொருந்தி இருக்காது. ¶பலர் தங்கள் எதிர்வினைகளில் இருந்து தங்களுக்கு பாதுகாப்பை தேடிக்கொண்டு, தங்களை தாங்களே ஏமாற்றிக் கொண்டு தங்களை தொடர்ந்து மனவெழுச்சியில் வைத்திருக்கின்றனர். மன அமைதி என்பது ஒரு வெறுமை நிலை இல்லை. அது அடியுணர்வில் இருக்கும் ஞாபக மாதிரிகளுடன் மனவெழுச்சியை பொருத்திக் கொள்ளாமல் இருப்பதை குறிக்கிறது. இந்த ஞாபக மாதிரிகள் மனவெழுச்சியில் இருந்து விடுதலை பெற்று அமைதி அடைந்ததும், மனம் முழுவதிலும் சுத்தமான சந்தோசம் வாசம் செய்கிறது. ஒரு எதிர்மறை எதிர்வினையை ஒரு நகரத்தில் மூடியிருக்கும் பனியுடன் ஒப்பிடலாம். பனி மூடியிருப்பதால் நமக்கு முன்னிருப்பது தெளிவாக தெரியாது. ¶நாம் ஒரு விஷயத்திற்கு எதிர்செயலாற்றும் போது, அது தணிவதற்கான கால அளவு என்ன? நேர்மறை எதிர்வினைகள் மட்டும் இருப்பதற்கு, நாம் நமது வாழ்வை எவ்வாறு வழிநடத்த வேண்டும்? நாம் நமது இயல்பின் மீது ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டை விழிக்க வைக்க வேண்டும். நமக்கு நடக்க இருப்பதை நாம் எதிர்நோக்கி இருக்கவேண்டும். நாம் ஏற்றாலும் ஏற்க மறுத்தாலும், நாம் நமக்கு நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும் ஈர்க்கிறோம். நாம் நிகழ்காலம் மற்றும் கடந்தகாலத்தில் எதற்கு எதிர்செயலாற்றுகிறோமோ, அவற்றை நாம் எதிர்காலத்தில் உருவாக்குகிறோம். நாம் அனுபவத்தை புரிதலுடன் எதிர்கொண்டால், நாம் மீண்டும் வெறுக்கத்தக்க அனுபவங்கள் உருவாக்குவதில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்கிறோம். மிகப்பெரிய சங்கிலியாக இருக்கும் அனுபவம் மனிதனை ஒரு குறிப்பிட்ட பழக்கத்தில் பிடித்து வைத்திருக்கிறது. அவன் புரிந்துணர்வு லோகங்கள் வழியாக ஆன்மீக வாழ்வில் நுழையும் வரை, அனுபவ சங்கிலிகள் தொடர்ந்து வலுவடைகின்றன. தான் அனுபவங்கள் மூலம் சிறையடைக்கப்பட்டு இருக்க வேண்டுமா அல்லது அனுபவத்தின் காரணத்தை புரிந்துக் கொள்வதன் மூலம் அதில் இருந்து விடுதலை பெற வேண்டுமா என்பதை ஒவ்வொரு மனிதனும் முடிவு செய்துக்கொள்ள வேண்டும். ¶ஒரு எதிர்மறை எதிர்வினை பல வருடங்கள் முன்பாக மனதில் குடிகொண்டு இருக்கக்கூடும். அது எப்போதும் தணியும்? சிறிதளவு புரிதலுடன் இருக்கும் ஒரு நபரிடத்தில் தோன்றும் முதல் எதிர்வினை தணிவதற்கு சில மணி நேரங்கள் தேவைப்படும், ஆனால் அது அவர் முழுமையான புரிதலை பெறும் அளவிற்கு தணிய ஐந்து அல்லது ஏழு நாட்கள் தேவைப்படும். சராசரி மனிதன் தினமும் ஏதாவது ஒரு விஷயத்திற்கு எதிர்செயலாற்றுகிறான். அதனால் அவன் சராசரியாக இருக்கிறான். இன்று

ஒரு எதிர்வினை, நாளை இன்னொன்று, அதன் பிறகு இன்னொன்று என்று தொடரும் போது, அந்த எதிர்வினைகள் ஒன்று மேல் ஒன்றாக குவிகின்றன. இந்த மேற்குவியும் எதிர்வினைகளை தடுக்க, எதிர்வினை தணியும் வரை, நாம் ஓரிடத்தில் அமர்ந்து, நாம் நமக்காக உருவாக்கிய கடந்தகால அனுபவங்களை எதிர்கொண்டு நமது சூழ்நிலைகளை கட்டுப்படுத்த வேண்டும். ¶நீங்கள் உங்களுக்கு காவலனாக இருந்து, உங்கள் சூழ்நிலை மற்றும் உங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்துங்கள். உங்கள் பலவீனங்களை புரிந்துக்கொண்டு அதற்கு காவலனாக இருந்து, நீங்கள் எதிர்செயலாற்றும் சூழ்நிலையில் சிக்குவதற்கு அனுமதி வழங்காதீர்கள். அப்போது உங்களுக்குள்ளும் உங்கள் சக மனிதருக்குள்ளும் இருக்கும் பொருளின் மீது நீங்கள் முழுமையான கவனத்தை பெறுவீர்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 119

நீங்கள் உங்களை

எவ்வாறு எதிர்கொள்வது

வாழ்க்கை நேர்மறையாக மாற்றம் பெறவேண்டும். எதிர்செயலாற்றும் போது, மனிதன் தனக்கு நெருங்கிய நண்பனாக இருப்பது இல்லை. அவன் தனது இயல்பை அமைதிப்படுத்த வெளியில் இருக்கும் ஒன்றை நாடுகிறான். அவன் தனது எதிர்வினைகளை சுமந்துகொண்டு, பழைய பழக்க வழக்கங்களை நிறுத்தாமல் தொடர்கிறான். தனது அடிமனதை புதுப்பிக்க நினைக்கும் ஒருவன், தனது வழக்கமான இடத்தில் இருந்து சிறிது நேரம் விருப்பத்துடன் வெளியேறி, புதிதாக வடிவமைத்து, புதிதாக உருவாக்கி, புதிதாக அலங்கரித்து மீண்டும் உட்புறமாக திரும்ப வேண்டும். இது ஆன்மீக பயிற்சியின் வடிவம் ஆகும். மேற்குவியும் எதிர்வினைகள் பயங்கரமானவை. எந்த பாகுபாடும் இல்லாததால், மேற்குவியும் எதிர்வினைகளுடன் வாழ்ந்து கொண்டு, அவை இல்லாமல் எப்படி வாழ்வது என்று புரியாமல் இருந்தால், மனிதன் தனது முயற்சியை கைவிட்டு விடுவான். ¶எதிர்வினையை எதிர்கொள்வது மிகவும் எளிது. நீங்கள் அதை உங்கள் வாழ்வில் இருந்து நீக்கிவிட்டு, அந்த செயலுக்கான பலனை அனுபவியுங்கள். ஓரிடத்தில் அமர்ந்து சிந்தியுங்கள். உங்கள் வாழ்க்கை மீது கவனம் செலுத்துங்கள். உங்கள் குணத்தில் பழக்க வழக்கங்களை உருவாக்கி, உங்கள் அடிமனதை வடிவமைத்து, அதைப்போன்ற சூழ்நிலைகளுக்கு அடித்தளம் அமைத்த மனப்போக்குகள் மீது கவனம் செலுத்துங்கள். நீங்கள் அதை புரிதலின் மூலம் நிறுத்தவில்லை என்றால், தொடர்ந்து வரும் ஒவ்வொரு சூழ்நிலை மூலம் இந்த மனப்போக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். நீங்கள்

அமைதியாக உட்கார்ந்து காரண காரிய விதி மற்றும் வாழ்க்கையின் அடிப்படை விதிகளை உணர்ந்தால், உங்களுக்குள் எதிர்வினைகளை வெற்றிக் கொள்வீர்கள். நீங்கள் பழைய எதிர்வினைகளை புரிந்துகொள்வதன் மூலம், அவற்றை வெற்றிக் கொள்வீர்கள். உங்கள் அகத்தில் இருந்து மேலும் பல உணர்தல்கள் வெளிவரும், மற்றும் நீங்கள் அதிக வலுவான ஆன்மீக வாழ்வை வாழ்வீர்கள். நீங்கள் பனி மூடிய நகரம் வழியாக நடந்து செல்லலாம் அல்லது அதன் மீது ஏறலாம். ¶மனிதன் தான் அறிந்து இருப்பதை அறியும் போது தெளிவாக சிந்தித்து நம்பிக்கை வைப்பது சாத்தியம் ஆகிறது. நீங்கள் ஒன்றை உணரும் போது, நீங்கள் அதை உணர்ந்ததைப் பற்றி உணர்ந்த பிறகே அறிய முடியும். அதற்கு முன்பாக அறிய வாய்ப்பில்லை. உணர்தல் உங்களுக்கு ஒரு ஆசிரியராக செயல்படுகிறது. தினமும் ஒன்றை உணருங்கள் அல்லது அடிமனதில் ஏதாவது ஒன்று தடை ஏற்படுத்தும். எதிர்செயலாற்றும் குணம் தணிய வேண்டும். அதன் அழிவு ஒரு சிறந்த புரிதல் தோன்றுவதற்கு வழிவகுக்கிறது. நீங்கள் மூன்று வாரங்களுக்கு எதிர்செயலாற்றாமல் வாழ்ந்தால், நீங்கள் ஒரு உணர்தலை பெறுவீர்கள். ¶நீங்கள் இதில் பயிற்சி மேற்கொள்ளாமல் நினைவில் மட்டும் வைத்து இருந்தால், இதன் மூலம் உங்களுக்கும் பயனில்லை மற்றவர்களுக்கும் பயனில்லை. ஆனால் நீங்கள் படித்து அதை அனுட்டானம் செய்யும் போது ஒரு பெரிய ஆன்மீக சக்தி, ஒரு பெரிய பணிவை நீங்கள் உணர்வதால், உங்களுக்கும் உங்கள் சக மனிதர்களுக்கும் ஒரு பயனுள்ள பணியை செய்து, நன்மதிப்பை பெறுவீர்கள். அதன் பிறகு மீண்டும் எதிர்செயலாற்றக் கூடாது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயல், நீங்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் பிரித்து பார்த்து, இதற்கு எதிர்வினை இருக்குமா என்று முடிவு செய்யுங்கள். நீங்கள் எதிர்செயலாற்றமாட்டீர்கள் என்று தோன்றினால், அந்த வேலையை தொடருங்கள். உங்களுக்கு கட்டளையிடுங்கள், உங்களை எதிர்கொள்ளுங்கள், உங்கள் தவறுகளை எதிர்கொண்டு அதை மீண்டும் செய்யாமல் இருங்கள். ஆன்மீக விதிகளை மீறுவதன் மூலம் அடியுணர்வில் எதிர்வினைகள் உருவாகின்றன, அதனால் மனிதன் ஆன்மீக சக்தியை இழக்கிறான். நாம் எதிர்வினைகளை வெற்றிக் கொள்ளும் போது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது இங்கே இப்போதே, நம்முக்குள் உண்மையான மன அமைதியை பெற முடியும். ¶நாம் ஏதாவது ஆத்திரம் அல்லது அச்சத்தை தக்க வைத்து, தற்போது எதிர்செயலாற்றுகிறோமா என்று நாம் நமக்குள் கூர்ந்து கவனிக்கலாம். அது உள்ளுணர்வு அனுபவத்தின் அளவுகோல் என்பதை நாம் புரித்துக்கொள்ள வேண்டும். அதன் பிடிப்பை தளர்த்தி அதை விடுதலை செய்யுங்கள். மனப்பூர்வமாக எதிர்காலம் மீது கவனம் செலுத்தி, நமது ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு சொல்லும் ஒரு எதிர்வினையை கொண்டிருக்கும் என்பதை அறிந்துக் கொள்ளுங்கள். நாம் நல்ல, நேர்மறையான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட எதிர்வினைகளை உருவாக்கி, அவை ஒன்றின் மீது ஒன்றாக

குவிந்தால் அவை தெள்ளத் தெளிவாக இருந்து, அதன் மூலம் அதிக பிரகாசமான ஒளி தோன்றுவதை உறுதி செய்யலாம். ஒன்றன் மீது ஒன்றாக குவியும் எதிர்மறை எதிர்வினைகள் அறியாமை, மன அழுத்தத்தை உருவாக்கி மனிதனிடத்தில் பதட்டத்தை ஏற்படுத்துகிறது. ¶உங்கள் உணர்வை ஆய்வு செய்யுங்கள். நீங்கள் உங்கள் எதிர்வினைகள் பற்றிய இந்த தகவல்கள் அனைத்தையும் புரிந்து கொண்டால், இது உங்கள் அடிமனதில் ஆழமாக பதிந்துள்ளது. கண்ணாடியில் உங்களை பாருங்கள். உங்கள் அடிமனதின் உருவமாக உங்கள் நிழலுருவம் விளங்குகிறது. உங்களுக்கு எது தடையாக இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். உங்களை எதிர்கொண்டு, உங்களுக்குள் தற்போது புதைந்து கிடைக்கும் சிறந்த விஷயங்கள் வெளிவருவதற்கு தடையாக எது இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளுங்கள். ஏனென்றால் வாழ்க்கை ஆனந்தமாக வாழ்வதற்கே என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிராயச்சித்த சக்தி

प्रायश्चित्तशक्ति



பிராயச்சித்தத்தின் வலிமை

வாசனா சுத்த மற்றும் அசுத்த என்று இரு வகைப்படும். நீ சுத்தமான *வாசனாக்கள்* மூலம் வழிநடத்தப்பட்டால், நீ எனது வாசஸ்தலத்தை வந்து அடைவாய். ஆனால் அசுத்தமான பழைய *வாசனாக்கள்* உன்னை ஆபத்தில் சிக்க வைத்தால், அவற்றை பல்வேறு பயிற்சிகள் மூலம் வெற்றிகொள்ள வேண்டும்.

சுக்ல யஜூர் வேதம், முக்திகா உபநிடதம், 2. உபஜ ப. 7


ANIVEL...

இந்து சமயத்தில் பரிகார செய்முறை பிராயச்சித்தம் *என்று அழைக்கப்படுகிறது. ஒரு அன்பர் தான் செய்த தவறுக்காக வேதனையை அனுபவிக்கிறார். அவர் அதை தனது* சத்குருவிடம் *தெரிவிக்கிறார். ஒரு முருகன் கோயிலில் காவடி சுமந்த பிறகு, அவருக்கு* கர்மவினையில் *இருந்து விடுதலை கிடைக்கிறது.*

திங்கட்கிழமை

பாடம் 120

பரிகார

முறைகள்

பக்தியின் அருளால் உயிரூட்டப்பட்ட அன்பரின் மனசாட்சி தூண்டுதலை பெற்று, செய்த தவறுகளை ஒப்புக்கொண்டு, வருத்தப்பட்டு பரிகாரம் செய்யும் ஆசையை வரவழைக்கிறது. தெய்வீக பார்வையின் மூலம், ஆன்மா தான் கீழ்நிலை குணத்தில் இருந்த போது செய்த தவறான செய்கைகள், ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதை உணர்கிறது. இந்த சோர்வூட்டும் பற்றுக்களில் இருந்து ஆன்மா விடுபடுவதற்கு பல யுத்திகள் உள்ளன. முறையாக முழுமையாக செய்த பரிகாரம், ஆன்மாவை ஆனந்தமான சகஜ நிலைக்கு அழைத்து செல்கிறது. ¶*சக்கரங்கள்* தாமரை மலர்கள் போல காட்சி அளிக்கின்றன. முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் அமைந்து இருக்கும் *மூலதார சக்கரம்* நான்கு இதழ்களை கொண்டிருக்கும். ஒரு அன்பரின் உணர்வு பொறாமை, கோபம் மற்றும் அச்ச உணர்வுகளில் இருந்து மேல் எழுந்து நினைவாற்றல், காரணம் மற்றும் மன உறுதிக்குள் நுழையும் போது, அந்த இதழ்கள் ஒவ்வொன்றாக திறக்கின்றன. அந்நிலையில் மட்டுமே, சமய உணர்வு மற்றும் இறைவன் மற்றும் தேவதூதர்களின் இருப்பிற்கு அனுமதி வழங்கும் திறமை விழிப்படைக்கிறது. இந்த புதிய பணிவு அன்பர் தம் ஆன்மீகப் பாதையில் முன்னேற்றம் பெற்று, கடந்தகால தீய *கர்மவினைகளை* கரைத்து, எதிர்காலத்தில் தீய *கர்மவினைகள்* செய்யாமல் இருக்க தேவையான ஞானத்திற்கு அனுமதி வழங்கத் துணை புரிகிறது. கட்டுப்படுத்தப்படாத கழிவிரக்கம், தவறை ஒப்புக்கொள்ளுதல், பச்சாதாபம் மற்றும் முரண்பாடு நீக்கம் ஆகியவை *மூலாதாரத்தின்* நான்கு இதழ்களை குறிப்பிடுவதாக பாவனை செய்துகொள்ளலாம். ¶தாங்கள் செய்த தவறுகளை ஏற்றுக்கொண்டு, நேர்மையாக பரிகாரம் செய்பவர்களுக்கு *தேவர்கள்* அனைத்து உதவிகளையும் செய்கிறார்கள். தங்களிடம் வந்த நோயாளிகள் மீண்டும் நல்ல ஆரோக்கியத்தை பெறுவதற்கு உதவி புரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் போன்று மனதில் செய்த தவறுக்காக வருந்துபவர்களுக்கு கண்காணிப்புப் பணியில் இருக்கும் இந்த தேவர்கள் துணையாக இருக்கிறார்கள். தங்கள் "நோயாளியை" சுற்றி இருக்கும் இந்த தேவ தூதர்கள், தர்மநெறிகளை மீறுவதால் தோன்றும்

மனம் மற்றும் மனவெழுச்சி நோய் மற்றும் அதனை தொடரும் குற்ற உணர்வில் இருந்து நிவாரணம் பெறுவதற்கு உதவியாக இருக்கிறார்கள். தவறுக்காக வருந்துபவர், *தபஸ்* வடிவமாக இருக்கும் பிராயச்சித்தம் செய்வதை, தேவர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஆன்மாவை, அறியாமை என்கிற இருளில் இருந்து வெளிச்சத்தை நோக்கி அழைத்து வரும் ஒரு சூட்சுமமான ஆன்மீகச் சிகிச்சையாக சிலர் குறிப்பிடுகின்றனர். அது உண்மையில் ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்வு என்றாலும், அது நிறைவுபெற்று நீண்டகாலம் கழித்தே அதை உணர முடிகிறது. ¶பிராயச்சித்தம் செய்ய குறிப்பாக பரிகாரத்தை கேட்டு வாங்கப்பட்ட பிறகு அதை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். இல்லை என்றால், வருந்துபவரின் வாழ்க்கை *அசுரர்களின்* சகவாசத்தில் சிக்கக்கூடும். ஒரு அன்பர் சிறிதளவு கழிவிரக்கத்தை வெளிப்படுத்தி, தனது மனதிற்கு தொடர்ந்து தொல்லை தரும் விஷயத்தை வெளியேற்ற வேண்டிய அவசரத்தை உணரும் போது பிராயச்சித்தம் தரப்படுகிறது. ஒரு அத்துமீறலுக்கு அனுமதி வழங்கும் போது , அதன் பிறகு எளிமையாக மறுத்தல், மென்மையாக மறுத்தல் மற்றும் கடுமையாக மறுத்தல் என்ற மூன்று வகை மறுப்புக்களில் ஏதேனும் ஒன்று தோன்றுவதை நான் கவனித்து இருக்கிறேன். உதாரணத்திற்கு ஒரு சிறுவன் ஒரு கடையில் இருந்து ஒரு மிட்டாய் திருடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். எளிமையாக மறுத்தல் என்பது பிரச்சனையை பெரிதாக்காமல், "இது என்ன பெரிய விஷயம்! ஏன் எல்லோரும் பதட்டத்தில் இருக்கிறீர்கள்?" அதே சமயம் மென்மையாக மறுத்தல் என்பது, "ஆமாம், நான் மிட்டாயை எடுத்தேன். அதனால் என்ன? அதன் விலை இரண்டு ரூபாய் தானே!" கடுமையாக மறுப்பது என்பது, "நான் அதை செய்யவில்லை. அவர்கள் என்னை இன்னொரு சிறுவன் என்று தவறாக நினைத்து விட்டார்கள்!” ¶நம் எல்லோருக்கும் *பக்தி* வழங்கும் சுத்தமான மேம்படுத்தும் உணர்வைப் பற்றி தெரியும். உலகில் மத ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும், இதை எப்போதாவது அனுபவித்து இருப்பார்கள். இது இறைவன் மற்றும் மகாதேவர்களிடத்தில், ஒருவர் தன்னை முழுமையாக சமர்பிப்பதை குறிப்பிடுகிறது. தினசரி வழிபாடு மற்றும் *சாதனா* மூலம் விழிப்புணர்வு பெற்ற பக்தியின் காரணமாக, ஆன்மா உள்ளுணர்வு மனதின் கீழ்நிலை அம்சங்களில் இருந்து வெளிவரும் போது, *மூலாதார சக்கரம்* விரிவாக்கம் பெற தொடங்குகிறது. அதன் பிறகு ஏற்றுக்கொள்ளும் பண்பு மற்றும் நேர்மையாக குற்றத்தை ஒப்புக்கொள்வதன் மூலம், எந்த தடையும் இல்லாமல் துணை மெய்ஞ்ஞான மனதில் இருந்து கழிவிரக்க உணர்வுகள் வெளிவருகின்றன. இது அன்பரிடத்தில் நடைபெறும் போது, அது உண்மையில் ஒரு வரமாக அமைந்து, ஆன்மீக பாதையில் முன்னேற்றத்தை குறிப்பிடுகிறது. தற்போது ஆன்மாவின் குரலாக இருக்கும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் பண்பை கேட்க முடிகிறது. ஒருவருக்கு புத்தி தெளிந்தவுடன், அனுபவம் பற்றி அவருக்குள் முன்பு மறைந்து இருந்த நேர்மையான உண்மைகள் வெளிப்படுகின்றன. முழுமையான நேர்மையுடன்

ஆன்மா, மனசாட்சி வெளிவந்து தான் சுமந்த சுமைகளை கழிவிரக்கத்துடன் ஒப்புக்கொள்கிறது. குற்றத்தை ஒப்புக்கொள்வது ஆன்மாவின் குரல் என்பதில் சந்தேகம் இல்லை. *தர்மம் அதர்மத்தை* வெற்றிக் கொள்ளும் போது, ஒருவருக்கு எதுவும் மறைந்து இருப்பதில்லை.

செவ்வாய்க்கிழமை

பாடம் 121

குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்

மற்றும் பிராயச்சித்தம்

மூலாதார சக்கரத்திற்கு மேலே உயர்ந்த பண்புடன், *சாதனா* மூலம் தொடர்ந்து உயர்ந்த நிலைகளை விரும்பி ஒரு முதிர்ச்சி பெற்ற சக்தியாக இருக்கும் சைவர், மனதில் குழப்பம் தோன்றும் போதெல்லாம் அமைதியை நாடுகிறார். அத்தகைய சைவர் எவ்வாறு தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்கிறார்? *மூலாதார சக்கரத்திற்கு* கீழே, கீழ்நிலை இயல்புடன் வாழ்ந்து, கீழ்நிலை உணர்வுடன் குழந்தை பருவத்தில் அப்பாவியாக செய்த தவறுகளின் எதிர்வினைகளை ஒருவரால் எவ்வாறு சொல்ல முடியும்? *தர்ம* நெறிமுகளை பின்பற்றி வாழ்ந்த போதிலும், மனசாட்சி இழந்து செயல்பட்ட சமயத்தில், தான் செய்த தவறுகளைப் பற்றி ஒருவரால் எவ்வாறு சொல்ல முடியும்? ஒரு சைவர் சிவபெருமான், மகாதேவர்கள் அல்லது தனது *குருவிடம்* தான் செய்த குற்றங்களை ஒப்புக் கொள்கிறார். நீங்கள் செய்த குற்றங்களை சிவபெருமானிடம் ஒப்புக்கொள்ள, அவர் கோயிலுக்கு சென்று, கர்ப்பகிரகத்தில் இருக்கும் அவர் *மூர்த்தியின்* திருவடிகளில் உங்கள் சுமைகளை, மனப்பூர்வமாக மற்றும் சூட்சுமமாக இறக்கிவிடுங்கள். நீங்கள் செய்த குற்றங்களை முருகப்பெருமான் அல்லது விநாயகரிடம் தெரிவிக்க, அவர்களின் கோயிலுக்கு சென்று அவர்களின் திருவடியில் அவற்றை தெரிவியுங்கள். அல்லது நீங்கள் உங்கள் *சத்குருவிடம்* சென்று, எதையும் மிச்சம் வைக்காமல் உங்கள் அகநிலையை அவரிடம் சொல்லுங்கள். இவ்வாறு ஒரு சைவர் கீழ்நிலை பண்புடைய உள்ளுணர்வு மனதில் இருந்து வெளிவந்து, சுத்தமான புத்தியின் உயர்நிலை பண்பிற்குள் நுழையும் போது தனது உட்புற சுமைகளை ஒப்புக்கொள்கிறார். ¶முரண்பாடு நீக்கம் ஆன்மாவிற்கு உணவாக அமைகிறது என்பதில் சந்தேகமில்லை. நேர்மையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு ஆன்மா கீழ்நிலை மனதின் கழிவுகளின் சுமையை இறக்கிய பிறகு, அது மீண்டும் கீழ்நிலை மனதிற்குள் நுழையாமல் இருக்க அல்லது *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் *சக்கரங்களை* மீண்டும் தூண்டாமல் இருக்க ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு செய்த துன்புறுத்தல்களுக்கு மன்னிப்பு கேட்பதன் மூலம்

முரண்பாடு நீக்கத்தை அடைவது அல்லது மன்னிப்பு கேட்பதற்கும் அதை பெறுவதற்கும் தாமதமாகியதால் பிராயச்சித்த நடவடிக்கைகளாக பரிகாரங்கள் செய்வது, ஆன்மாவிற்கு உண்மையில் நல்ல உணவாக விளங்குகிறது. ¶விநாயகர், முருகன் அல்லது சிவபெருமான் முன்பாக நின்றுக்கொண்டு, ஒருவர் தான் செய்த தவறுகளுக்கு கழிவிரக்கத்துடன் மன்னிப்பை கோரி 1,008 முறை நமஸ்காரம் செய்தல்; கையில் ருத்ராட்ச மணிமாலையுடன் மெதுவாக 1,008 முறை *ஜபம்* செய்தல்; கோயிலுக்கு அன்பர் தனது கைகளால் செய்த 108 பரிசுகளை வழங்குதல்; சுத்தம் செய்தல், பூமாலைகளை தொடுத்தல் அல்லது பூக்களை பறித்தல் என்று கோயிலுக்கு 108 மணிநேர சேவை செய்தல்; கோயில் நைவேத்தியத்திற்கு சமைத்த உணவை கொண்டு வருதல்; சிறிய வேல்களை சதைகளில் குத்திக்கொண்டு காவடி எடுத்தல்; உடல் முழுவதும் தரையில் படும்படியாக மீண்டும் மீண்டும் நமஸ்காரம் செய்துக்கொண்டு யாத்திரை செலுத்தல் அல்லது கோயிலை சுற்றி அங்கப்பிரதிட்சணம் செய்தல் என்று *பிராயச்சித்தத்தில்* பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு தவறையும் ஒப்புக்கொண்ட பிறகு, மக்கள் முன்பு குறிப்பிட்ட பரிகாரங்களைப் போன்று வேறு சில பரிகாரங்களையும் செய்கிறார்கள். ¶தீவிரமாக இருக்கும் சில அன்பர்கள், தங்கள் பிரச்சனையை கூறிய பிறகு தங்கள் *சத்குருவிடம்* பிராயச்சித்தம் கேட்பார்கள். *சத்குருவிடம் பிராயச்சித்தம்* கேட்டு பெற்ற பிறகு, *குருவின்* உபதேசத்திற்கு ஏற்ப அந்த பிராயச்சித்தத்தை செய்து முடிக்க வேண்டும். அதை முழு உற்சாகத்துடன் தாமதமின்றி செய்ய வேண்டும். வேண்டுமென்றே தாமதிப்பதால் அல்லது *பிராயச்சித்தம்* செய்ய மறுப்பதால், அவர் *சத்குருவின்* உதவியை நிராகரிக்கிறார் என்பதை நாம் தெரிந்துக் கொள்ளலாம். முன்னர் வழங்கிய அறிவுறுத்தலை பூர்த்தி செய்யாத வரை, மேலும் அறிவுறுத்தல் அல்லது வழிகாட்டல் வருவதற்கு வாய்ப்பில்லை. அதனால் அந்நிலையில் இருக்கும் அன்பர் *சத்குருவை* அணுகமாட்டார். ஆனால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ந்து *பிராயச்சித்தம்* செய்யவேண்டி இருந்தால், அவர் குருவின் உதவி மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டலை வேண்டிக்கொள்வார்.

புதன்கிழமை

பாடம் 122

பிராயசித்தம் பற்றிய

மறைஞானம்

தேவையற்ற கர்மவினை சுமைகளை விடுவிக்கும் உட்புற செய்முறை பின்வரும் கிரமவரிசையில் நடைபெறுகிறது. அது கழிவிரக்கம் மற்றும்

அவமானப்படுவதுடன் தொடங்கி, பின்பு தவறை ஒப்புக்கொள்ளுதல் (மன்னிப்பை கோரும் இன்னொரு முறை), பச்சாதாபம், மற்றும் இறுதியாக சுற்றுப்புறம் முழுவதும் நல்லிணக்கம் பரவுவதற்கு, முரண்பாடு நீக்கம் மூலம் சூழ்நிலை சீர் செய்யப்படுகிறது. அதனால் ஒவ்வொரு நபரும் தனது உட்புற ஒளி உடலின் எதிர்மறை *சம்ஸ்காரங்கள்* மற்றும் *வாசனாக்களை* சுத்தம் செய்து, புத்தி மற்றும் எளிதில் புரியாத ஆன்மீக பண்புகளை தடை செய்யும் கீழ்நிலை உள்ளுணர்வு மனதின் பிடிகளில் இருந்து விடுபடும் போராட்டத்தை தாங்கும் பொருட்டு தனது உட்புற உடல்களை நிரப்பிக் கொள்வதற்கு, ஒரு பாரமான அடியுணர்வு சுமை பற்றிய ஒவ்வொரு ஒப்புதலும் தனது தனிப்பட்ட முரண்பாடு நீக்க செய்முறையை கொண்டிருக்க வேண்டும். அறியாமை மூலம் பாதுகாப்பு கிடைக்காத போது, ஆன்மா விடுபடுவதற்கு ஏங்குவதோடு ஆறுதலுக்கு அழுகிறது. வேதனையை நீக்கி *சாந்தியை* நிலைநிறுத்த *பிராயச்சித்தம்* மட்டுமே தீர்வாக அமைகிறது. ¶*பிராயச்சித்தம்* வழங்குவதற்கு முன்பாக, *சத்குரு* நீண்டகாலத்திற்கு அந்த அன்பர் மற்றும் அவருடைய குடும்பத்தின் *கர்மவினை* பற்றி அறிந்து இருக்கவேண்டும். இல்லையென்றால் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போகலாம். *பிராயச்சித்தம்* என்பது தினமும் அனுட்டானம் செய்து, தத்துவம் அறிந்து இருந்து, தங்கள் குடும்பத்திற்கு ஒரு ஆன்மீக குருவை தேர்ந்தெடுத்து, தெய்வீக அருளுடன் சுத்தமான நிலையை அடைய உண்மையில் முயற்சி செய்யும் சமய ஈடுபட்டுள்ள நபர்களுக்கு பொருத்தமானது. அது சமய ஈடுபாடில்லாத அன்பர்களுக்கு பொருத்தமாக இருக்காது. கத்தோலிக்க தேவாலயம் போல, *பிராயச்சித்தம்* பயனுள்ளதாக இருக்க, ஒரு ஆன்மீக குருவின் மூலம் வழங்கப்படவேண்டும். அது "டூ-இட்-யுவர்செல்ப்" என்கிற புதுயுக சிந்தனை போன்றது இல்லை. அதை தனியாக செய்ய விரும்புகிறவர்கள், அதை அதிகமாக செய்யக்கூடும். அதைப்பற்றி அறிந்து கொள்வதற்கு, ஒரு குறிப்பிட்ட அளவு உபதேசம் மற்றும் ஆலோசனையை பெறவேண்டி இருக்கும். உடலை வருத்தும் *பிராயச்சித்தங்கள்* செய்யத் தொடங்கும் முன்பாக, தான் இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு வருடத்திற்கும், *சம்ஸ்காரங்கள்* என்று அழைக்கப்படும், நல்ல மற்றும் தீய நினைவுகளை சுமார் பத்து பக்கங்களில் எழுதி, அவற்றை நெருப்பில் எரிக்கும் *மகா வாசன தாஹ தந்திரத்தை* செய்யுமாறு அன்பர்களிடம் கேட்டுக்கொள்வேன். ¶நண்பர்கள், வீடு, குடும்பம், சொந்தங்கள், விளையாட்டு, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விடுமுறை நாட்கள், தொழில், பொழுதுபோக்கு, ஈடுபாடுகள் என்று உங்கள் மனதிற்கு கவலையாக இருக்கும் எந்த விஷயத்தைப் பற்றியும் எழுதலாம். இதன் மூலம் கடந்தகால நிகழ்வுகள் தானாக சுத்தம் அடைய வாய்ப்புள்ளன. அனுபவத்தில் இருந்து மனவெழுச்சியை நீக்கி, உங்களை நிரந்தரமான நித்தியத்திற்கு கொண்டு வருவதே இதன் நோக்கம் ஆகும். கடந்த காலத்தை மறந்து, உங்களை தற்பொழுதுடன் தொடர்புபடுத்திக் கொண்டு, தினசரி வாழ்க்கையுடன் இயங்கிக்கொண்டு, நமக்காகவும்

மற்றவர்களுக்காகவும் ஒரு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கலாம். மேலும் ஒருவர் *பிராயச்சித்தமாக, சத்குருவிடம்* தான் செய்த தவறை ஒப்புக்கொள்வது மட்டுமே போதுமானதாக எனக்கு சில சமயம் தோன்றியுள்ளது. நமக்கு தவறாக தோன்றி மனசாட்சியை உருத்திய சம்பவம் ஒரு வழக்கமான சம்பவமாக இருக்கக்கூடும், ஆனால் மனசாட்சி அந்த உண்மையை அறியும் வரை, அது அதை உருத்திக்கொண்டே இருக்கும். ¶ஒரு காகிதத்தில் பேனா மூலம் *வாசன தாஹ தந்திரத்தை* எழுதவேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதை கணினியின் துணைகொண்டு செய்த பல அன்பர்களுக்கு, எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. எழுதும் போது நினைவாற்றலில் இருக்கும் *பிராண சக்தி* அடிமனம் வழியாக, பேனா வழியாக காகிதத்தில் பதிந்து, புரிந்துகொள்ள வேண்டிய நினைவை திறந்த வெளியில் கொண்டு வந்து, காகிதத்தை எரிக்கும் போது அதனை செயலிழக்க செய்து அதை விடுவிப்பதால், எழுதும் செய்முறை பிரத்யேக பயனை அளிக்கிறது. சில அன்பர்கள் ஓரிடத்தில் அமர்ந்து கடந்த காலத்தைப் பற்றி சிந்தித்து, அதைப்பற்றி தியானம் செய்து, தங்களது நினைவுகளை காகிதத்தில் எழுதிக்கொண்டு அதை எரிப்பதாக கற்பனை செய்து இருக்கிறார்கள். ஆனால் இது கடந்தகாலத்தை தூண்டி விடுவதால், இதனால் நன்மையை காட்டிலும் அதிக தீமையே விளையும்.

வியாழக்கிழமை

பாடம் 123

பொருத்தமான

பரிந்துரைகள்

கோபம் என்பது உதட்டை பிதுக்குதல், நீண்டநேரம் மௌனமாக இருத்தல், கத்துதல், கூச்சலிடுதல், சபித்தல் என்று பல வடிவங்களில் இருப்பதால், அதை வெற்றிக்கொள்வது மிகவும் கடினம் என்பதை நான் தெரிந்துகொண்டேன். மனநல மருத்துவராக இருந்த ரான் பாட்டர்-எப்ரான் எழுதிய *ஆங்க்ரி ஆல் தி டைம்* என்ற புத்தகத்தில் கோபத்தைப் பற்றி குறிப்பிடும் போது, அதில் மறைமுக கோபத்துடன் இருத்தல், திட்டமிட்டு புறக்கணித்தல், பழித்தல் மற்றும் அவமானப்படுத்துதல், சபித்தல், அலறுதல் மற்றும் கூச்சலிடுதல், கோரிக்கைகள் மற்றும் அச்சுறுத்தல்கள், விரட்டுதல் மற்றும் பிடித்து வைத்தல், சிறிது கட்டுப்படுத்தப்பட்ட வன்முறை மற்றும் கண்மூடித்தனமான சீற்றம் என்று "வன்முறை ஏணியில்" என்று எட்டு ஏணிப்படிகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். கீழ்நிலை இயல்பில் வாழும் சிலர் எப்போதும் கோபமாக இருந்துக்கொண்டு, தொடர்ந்து உளம் சார்ந்த விமர்சனம் மற்றும் வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர். கோபம் வரும் போதெல்லாம் உதாரணத்திற்கு ஐந்து டாலர்

பணத்தை ஒரு உண்டியலில் சேமித்து வைத்து, பிறகு அந்த பணத்தை ஒரு அனாதை ஆசிரமத்திற்கு தருவதன் மூலம் கோபத்தை கட்டுப்படுத்த முடியும். இதன் மூலம் உங்களுக்கு எத்தனை முறை கோபம் வருகிறது மற்றும் அதற்கு செலவாகும் பணம் எவ்வளவு என்பதை உணர முடியும். ஆனால் இந்த யுத்தி செல்வந்தர்களுக்கு பலன் அளிக்காது. அவர்களுக்கு கோபம் வந்தவுடன் அடுத்த வேளை உணவிற்கு உபவாசம் இருந்து பிராயச்சித்தம் செய்வது, நல்ல பலனை தருவதாக நான் உணர்ந்துகொண்டேன். ¶குறிப்பாக தங்கள் பெற்றோர்களால் அடித்து துன்புறுத்தப்பட்டு இளைஞர்களுக்கு "மலரின் மூலம் பிராயச்சித்தம்" செய்வது நல்ல பலனை அளிப்பதாக நிரூபணமாகியுள்ளது. இந்த செய்முறையில், அவர்கள் தன்னை துன்புறுத்திய தாய், தந்தை அல்லது ஆசிரியரின் படத்திற்கு முப்பத்தி ஒரு நாட்களுக்கு தினமும் ஒரு மலரை வைக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யும் போது அந்த நபரை மனப்பூர்வமாக மன்னிக்கிறார்கள். சிலர் அந்த அனுபவத்தை தனது சொந்த *கர்மவினையாக* கருதுகிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களை மன்னித்து மிகப்பெரிய சுதந்திரத்தை உணர்கிறார்கள். இது தங்கள் பெற்றோர்கள் மீது அதிக ஆத்திரத்தை உடையவர்களுக்கு பலன் அளிக்காது. இது தனது முதலாளியுடன் உளப்போராட்டத்தில் இருப்பவர்களுக்கும் பயன் தந்துள்ளது. குழந்தைகளை துன்புறுத்துபவர்களுக்கும் ஒரு தீவிரமான பிராயச்சித்தம் உள்ளது. இந்த செய்முறையில், தனிமையில் தனக்குத்தானே தண்டனை வழங்கிக்கொள்ளுதல் மற்றும் உடல்ரீதியான தண்டனைகளுக்கு எதிராக பொதுமக்களுக்கு உரையாற்றுதல் மற்றும் வருடம் முழுவதும் பலமுறை நேர்மறை ஒழுக்கம் பற்றி பொதுமக்களுக்கு பாடம் நடத்துதல் அடங்கும். ¶மனைவியை துன்புறுத்துவது, கூடா ஒழுக்கம் மற்றும் பல்வேறு சிறிய அத்துமீறல்களுக்கு, குறைந்தது பதினைந்து பேர் கொண்ட குழுவாக, உடலில் சிறிய வேல்களை குத்திக்கொண்டு பழைய பாரம்பரியமான *காவடி* எடுத்து, நன்கு பயிற்சி பெற்ற பூசாரியின் மேற்பார்வையில் ஒரு கோயில் திருவிழாவின் போது கோயிலை பலமுறை பிரதட்சிணம் செய்வதை நான் பரிந்துரையாக வழங்குகிறேன். மனைவியை துன்புறுத்தல் மற்றும் கூடா ஒழுக்கம் மிகவும் முக்கியமான விஷயங்களாக இருக்கின்றன. அவை வீடுகளை சூட்சுமரீதியாக மற்றும் பெரும்பாலான சமயங்களில் தூலரீதியாகவும் அழித்து, குற்றவாளிகளுக்கு அடுத்த பிறவியில் இழிவான பிறப்பையும் உருவாக்குகிறது. இவை அனைத்திற்கும் பரிகாரம் தேடுவது மிகவும் கடினம். ¶ தீர்மானம் மற்றும் கழிவிரக்கம் இல்லாமல் எந்த பிராயச்சித்தமும் பலன் தராது. மக்களுக்கு உட்புற தன்முனைப்பு மற்றும் வெளிப்புற தன்முனைப்பு இருக்கிறது. இந்த இரண்டும் பலருக்கு முற்றிலும் மாறுபட்டு இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒருவர் எப்போதும் சிரித்துக்கொண்டு நகைச்சுவை உணர்வுடன் இருக்கக்கூடும், ஆனால் அவர் யாருக்கும் தென்படாமல் உட்புறமாக, தன்னை சுற்றி இருப்பவரை கோபமாக கண்டித்துக்கொண்டு இருக்கக்கூடும்.

இதைத்தவிர வெளியில் நன்றாக சிரித்து பழகிக்கொண்டு இருந்தாலும், கடந்தகாலத்தில் தனக்கு ஏற்பட்ட வருத்தங்களை நினைத்து உட்புறமாக அழுபவர்களும் இருக்கிறார்கள். பழைய நினைவுகள், பழைய வருத்தங்கள், பிறந்ததில் இருந்து நமக்கு ஏற்பட்ட நல்ல மற்றும் தீய விஷயங்களை ஒரு காகிதத்தில் எழுதிக்கொண்டு அவற்றில் இருக்கும் மனவெழுச்சிகளை நெருப்பில் எரித்து சாம்பலாக்கும் *மகா வாசன தாஹ தந்திரம்,* உட்புற மற்றும் வெளிப்புற தன்முனைப்புக்கு மத்தியில் ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதால், நாம் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் ஒரே நபராக இருப்போம். நமக்கு ஏற்பட்ட வருத்தங்கள் மற்றும் அச்சங்கள் மற்றும் தவறான புரிதல்களுடன் நமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிகரமான அனுபவங்கள், நமது விருப்பங்கள் மற்றும் இழப்புக்கள், நமது இன்பங்கள் மற்றும் துன்பங்களை நாம் காகிதத்தில் எழுதிக்கொண்டு, பின்பு அதை கசக்கி நெருப்பில் எரித்து சாம்பலாக்கும் போது, அவற்றை நேற்றைய குப்பைப் போல நினைத்துக் கொண்டு, அவற்றில் இருந்து நாம் நமது மனவெழுச்சி மற்றும் நினைவுகளை விடுவிக்கிறோம். பல வருடங்களாக அடிமனதில் நினைவை அதிரவைத்துக் கொண்டிருந்த மனவெழுச்சி, பெரும்பாலும் விசித்திரமான முறையில் நெருப்புடன் மறைந்து விடுகிறது. அமைதியான நினைவைத் தவிர வேறு எதுவும் மீதம் இருப்பது இல்லை. பல வருடங்களுக்கு முந்தைய நினைவு மாதிரிகள் அல்லது *வாசனாக்கள்* சாட்சியை கட்டுப்படுத்துவது இல்லை என்பதால், இறுதியில் அந்த நபரின் உட்புறத்தில் ஆன்மா நிறைவை பெறுகிறது. அதன் பிறகு உட்புறமும் வெளிப்புறமும் ஒன்றாக இருக்கிறது. ¶ஒரு நபர் எதை பேசுகிறார் என்பதை கேட்டு, அவர் எதை செய்கிறார் என்பதை பார்த்து, அவர் தொடர்பு முறைகளை கண்காணித்து அவருடைய வெளிப்புற ஆளுமையை மிகவும் எளிதாக தெரிந்துக் கொள்ளலாம். ஒருவரின் உடல்மொழி, முகபாவங்கள், கால்கள் மற்றும் கைகளின் அசைவுகள், நடை, ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது ஏற்படும் தயக்கத்தின் மூலம் அவருடைய உட்புற ஆளுமையை தெரிந்துக் கொள்ளலாம். இவை அனைத்தும் ஆன்மாவின் இயல்பான இன்பத்தை பெரும்பாலும் தடை செய்யும் உட்புற தன்முனைப்பின் செயல்பாடுகளை காண்பிக்கின்றன. அதனால் ஒருவர் தினமும் இருபத்தி நான்கு மணி நேரமும் ஒரு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த பண்புடன் இருப்பதற்கு, ஆன்மீக விரிவாக்கத்தின் முதல் கட்டமாக அவர் தனது உட்புற மற்றும் வெளிப்புற தன்முனைப்புடன் இணக்கத்தை பெற வேண்டும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 124

கடந்தகாலத்தை

விடுவித்தல்

நமக்கு வயது அதிகமாகும் போது, நினைவுகளும் அதிகமாகின்றன மற்றும் அந்த நினைவுகள் நேர்மறை மற்றும் எதிர்மறை மனவெழுச்சிகளை கொண்டிருக்கின்றன. மனவெழுச்சி பல வடிவங்களை எடுக்கிறது. நாம் இன்பகரமான மனவெழுச்சிகள், துன்பகரமான மனவெழுச்சிகள், மன அழுத்தம் நிறைந்த மனவெழுச்சிகள், உற்சாகமான மனவெழுச்சிகள், நம்பிக்கை இழக்க வைக்கும் மனவெழுச்சிகள், நம்பிக்கை அளிக்கும் மனவெழுச்சிகளை கொண்டிருக்கலாம். நீங்கள் வாழ்ந்த ஒவ்வொரு வருடமாக ஆய்வு செய்து, முதல் வருடத்தில் இருந்து இன்று வரை, வருடத்திற்கு பத்து பக்கங்கள் என்று எழுதும் போது, நீங்கள் உங்கள் வாழ்க்கையின் கதாசிரியராக இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கை என்கிற மேடையில் கதாநாயகனாக இருப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத விதமாக மகிழ்ச்சிகரமான மனவெழுச்சி, நம்பிக்கை இழக்க வைக்கும் மனவெழுச்சி, நம்பிக்கை அளிக்கும் மனவெழுச்சியை எதிர்கொள்ளக்கூடும். அவை அனைத்தையும் விட்டொழிப்பது நல்லது. உங்கள் வாழ்க்கைப் பற்றி நீங்கள் வெளிக்கொண்டு வரும் ஒரு காலகட்டம் உங்களுக்கு மனச்சோர்வு அளித்தால், நீங்கள் பல வருடங்களாக அந்த மனச்சோர்வை சுமந்து வந்து இருக்கிறீர்கள். அந்த மனசோர்வு மற்றும் துக்ககரமான அனுபவங்களை விரிவாக எழுதும் போது, அந்த தருணத்தில் மீண்டும் வாழ்ந்து அந்த காகிதத்தை எரிக்கும் பொது, ஒவ்வொரு நினைவில் இருக்கும் *பிராணன்* நிரம்பிய மனவெழுச்சியின் கட்டு அவிழ்க்கப்பட்டு விடுவிக்கப்படுகிறது. நீங்கள் பல வருடங்களாக சுமந்து வந்த ஊக்கமின்மை, வருத்தம், மன அழுத்தம், மனித நேயத்தின் மீது நம்பிக்கை இழப்பு, உங்களின் மீது ஏற்பட்ட நம்பிக்கை இழப்பு போன்ற எதிர்மறை மனவெழுச்சிகளில் இருந்து விடுபட்டு, உங்கள் உட்புற மனதில் இருக்கும் அதிர்ச்சிகரமான பகுதிகளை எதிர்கொள்ள ஆர்வமாக இருப்பீர்கள். அந்த நினைவுகள் நெருப்புடன் மறைந்து விடும். ¶உங்களிடம் ஆன்மீகம், புத்தி மற்றும் உள்ளுணர்வு சார்ந்த மூன்று வகை *பிராண* சக்திகள் உள்ளன. நீங்கள் நினைக்கும் போது, நீங்கள் அந்த *பிராண* சக்தியில் ஒரு இயக்கத்தை ஏற்படுத்தி, ஒரு *பிராண* வடிவத்தை உருவாக்குகிறீர்கள். நீங்கள் பேசும் போது, சிரிக்கும் போது, அழும் போது, சிந்திக்கும் போது மற்றும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது, இந்த *பிராண* சக்திகளில் ஏதேனும் ஒன்று, இரண்டு அல்லது மூன்றையும் பயன்படுத்தி இயக்குகிறீர்கள். அடியுணர்வு *பிராண* சக்தி வடிவங்கள் மனவெழுச்சியுடன் அதிரும் போது, அவை உட்புற மனதில் ஒரு நிறம் மற்றும் அதனோடு தொடர்புடைய ஒரு ஒலியுடன் இருக்கின்றன. இதனை பிரபல டெக்னிகலர் நிறுவன தயாரிப்புடன் ஒப்பிடலாம். அந்த நினைவை மீண்டும் சென்று பார்க்கும் போது, அது தெளிவாக அதிரும் மனவெழுச்சி இல்லாமல், ஒரு கருப்பு வெள்ளை பேசும் படம் போன்று காட்சி அளிக்க வேண்டும் என்பதற்காக, அந்த நினைவு மாதிரியில்

இருந்து நிறம்/ஒலியை நீக்குவதே இந்த பழமையான *தந்திரத்தின்* நோக்கம் ஆகும். உங்கள் வாழ்க்கை, உள்ளுக்குள் இருக்கும் *பிராண* சக்தியுடன் இயங்கும் போதும் உருவாக்கும் போதும், நீரில் எழுதும் எழுத்தை போன்று இருக்கலாம். ஒரு அனுபவம் ஏற்படுகிறது மற்றும் அது தடம் இல்லாமல், பற்று இல்லாமல், நீடித்த மனவெழுச்சி இல்லாமல் மறைந்து விடுகிறது. அல்லது உங்கள் வாழ்க்கை ஒரு கல்லில் செதுக்கியதைப் போல அமைந்து, அதில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவமும் மனவெழுச்சியின் தாக்கத்துடன் நினைவில் பதிந்து உங்களுடன் நிலைத்து இருக்கலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கையின் பக்கங்களை திருப்பிப் பார்க்கும் போது, நீங்கள் அந்த கல்லை உருக்க, உடைக்க மற்றும் விட்டு ஒழிக்க விரும்புவீர்கள். மனதில் எது இயங்கினாலும், இந்த இரண்டில் ஒன்று நடைபெறும். வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத சம்பவங்கள் உங்கள் கடந்தகாலத்தில் கற்களை போல இருக்கின்றன. நீங்கள் தினமும் வேலைக்கு சென்று வீடு திரும்பும் ஒரு வழக்கமான வாழ்க்கையை வாழும் போது, அதில் நினைவுகள் மற்றும் மனவெழுச்சிகள் அதிகமாக உருவாவது இல்லை. ஆனால் புதிய வீட்டிற்கு குடிபுகுவது, உங்கள் வாழ்வில் புதிய நபர் புகும் போது உங்களுக்கு ஒரு பெரிய மாற்றம் ஏற்படுகிறது. அது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது, மற்றும் நீங்கள் அதை சமாளிக்க வேண்டும். "நான் அதைப்பற்றி நினைக்க விரும்பவில்லை," என்று பலர் கூறுவதைப் போல, நீங்கள் அதைப்பற்றி நினைக்காமல் இருக்கலாம். "எனக்கு அந்த நபரை பிடிக்கவில்லை" அல்லது, "எனக்கு அந்த நபரை பிடித்துள்ளது," என்று கூறலாம். ஆனால் உங்களுக்கு திருமணமாகி விட்டதால், நீங்கள் அந்த நபரை அதிகமாக விரும்ப முடியாது. அதனால் அதைப்பற்றிய சிந்தனையை கைவிடுகிறீர்கள். நீங்கள் உள்ளுக்குள் ஆய்வு செய்து வெளியேற்ற மற்றும் அழிக்க விரும்பும் மாதிரிகளுக்கு, இவற்றை சில உதாரணங்களாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். ¶நம் ஒவ்வொருவரிடமும் ஒரு கதை அடங்கியுள்ளது. உங்கள் வாழ்க்கை என்கிற மேடையில், நீங்கள் எழுதிய கதையில் நீங்கள் முக்கிய நடிகராக இருக்கிறீர்கள். நீங்கள் இயக்குநர், கேமரா மற்றும் விளக்கு பொறியாளர், மேடை நிர்வாகி, ஆடை வடிவமைப்பாளர் மற்றும் ஒப்பனைக்காரராக இருக்கிறீர்கள். ஒரு குறிப்பிட்ட அனுபவம் அல்லது அனுபவ மாதிரி ஒரு நீண்டகாலத்திற்கு தொடரும் போது, அது அடிமனதின் துணைப்பகுதியில் ஒரு மறைவான மனப்போக்கு அல்லது அதே திசையில் நாட்டத்தை ஏற்படுத்துகிறது. இந்த *வாசனா* நேர்மறையாக அல்லது *சுபமாக* இருக்கலாம், அல்லது எதிர்மறையாக *அசுபமாக* இருக்கலாம். ஒரு அடியுணர்வு விசைக்கருவி போன்று இருக்கும் ஒரு எதிர்மறை *வாசனா* தூண்டும் செயல்களுக்கு, நீங்கள் பின்னர் வருந்த வேண்டியிருக்கும். ஒரு நேர்மறை வாசனா நற்பேறு மற்றும் வெற்றியை வழங்குகிறது. *வாசன தாக தந்திரத்தின்* மூலம், நாம் நினைவுகளில் இருந்து சக்தியை நீக்குகிறோம். இவ்வாறு செய்யும் போது, எதிர்மறை நினைவுகளை உருவாக்கிய அனுபவங்களுக்கு நம்மை

வழிநடத்தி சென்ற பாதைகள் அல்லது *வாசனாக்களை* பலவீனப்படுத்தி மற்றும் அழித்து, அந்த இடத்தில் ஒரு நேர்மறையான எதிர்காலத்தை தொடர்ந்து உருவாக்கும் சுத்தமான நேர்மறையான *வாசனாக்களை* விட்டுச்செல்கிறோம்.

சனிக்கிழமை

பாடம் 125

பழைய அனுபவங்கள் பற்றிய

ஆன்மீகக் குறிப்பு

வாழ்நாளில் ஒருமுறை நடைபெறும் நிகழ்வான *மகா வாசன தாஹ தந்திரம்* என்பது, உங்கள் வாழ்க்கையில் இன்று வரை நடந்த நினைவுகளை, கோட்டிட்ட தாளில் வருடத்திற்கு பத்து பக்கம் (ஒரு வரியில் பத்து வார்த்தைகள், இருபத்தி எட்டு வரிகள், பக்கத்திற்கு மொத்தம் 250-280 வார்த்தைகள்) என்று எழுதி, அதனை ஒரு சாதாரண, அமங்கலகரமான நெருப்பில் எரிப்பதை குறிக்கிறது. தொடங்கும் போது, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு வருடத்திற்கும் பத்து காலி பக்கங்களின் தொகுப்பை சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் பக்க எண், வருடம் மற்றும் அந்த சமயத்தில் உங்கள் வயதை தவறாமல் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். இந்த *தந்திரத்தின்* மற்ற நான்கு பாகங்களில் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது ஐம்பது பக்கங்களை ஒதுக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் இந்த குறிப்பை எழுதிக்கொண்டு இருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட காலகட்டம் தொடர்பாக எண்ணங்கள் தோன்றும் போது, அவ்வப்போது ஒரு வருடம் முன்பாக அல்லது பின்பாக செல்லவேண்டிய அவசியத்தை உங்களால் உணர முடியும். குறிப்பாக பழைய நினைவுகள் இயல்பாக தோன்றும் போது, அவற்றை முறையின்றி எழுதுவதில் தவறில்லை, ஆனால் அவற்றை அதற்குரிய பக்கங்களில் எழுத வேண்டும். இதன் காரணமாகவே, தொடக்கத்தில் ஒவ்வொரு பக்கமும் ஒரு பக்க எண்ணை கொண்டிருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தோம். ஒரு வருடம் பற்றிய குறிப்பு நிறைவு பெற்றதும், அதனை உடனே எரித்து விடவேண்டும். ¶ஒரு வருடத்திற்கு பத்து பக்கங்கள் என்று நீங்கள் எழுதும் குறிப்பு நிறைவு பெற்றதும், அதன் பிறகு ஐந்து நிலைகள் உள்ளன. இந்த குறிப்பு எடுப்பில் மொத்தம் ஆறு நிலைகள். இரண்டாவது நிலையாக இருக்கும் "உடனடி சோதனையில்," உங்கள் வாழ்க்கையை பின்பக்கமாக ஆய்வு செய்து, நினைவுகள் ஏதேனும் குறிப்பு எடுக்க மறந்து விட்டதா என்று பாருங்கள். இவை இன்பகரமான மற்றும் துக்ககரமான அனுபவங்கள் மற்றும் மனதில் தோன்றும் வேறு எதுவாகவும் இருக்கலாம். ஒரு நினைவை தடையின்றி ஞாபகப்படுத்திக் கொள்ள முடிவதன் மூலம், அது தன்னுடன் தொடர்ந்து நிறம்/ஒலியைக் கொண்டிருக்கிறது என்பதை

நிரூபிக்கிறது. *கர்மவினை* மற்றும் மறுபிறவியின் நிரந்தரமான விதிகளை பின்பற்றாமல் மற்றும் சிவபெருமான் எங்கும் எதிலும் இருக்கிறார் என்பதை மதிக்காமல் இருந்த நாட்கள் மீது மிகவும் கவனத்தை செலுத்துங்கள். உங்கள் வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் முற்காலத்தில் நீங்கள் உருவாக்கிய படைப்புக்கள் தான் என்பதை உணராமல், உங்களுக்கு நடக்கும் நிகழ்வுகளுக்கு மற்றவர்களை குறை கூரிய காலங்களை நேர்மையுடன் தெரிந்துகொள்ளுங்கள். நமது வாழ்க்கையில் சனாதன தர்மத்தை பின்பற்றிய மற்றும் பின்பற்றாத காலங்களை உணர்ந்துக்கொள்வது முக்கியம் ஆகும். நேர்மையுடன் செயல்படுங்கள், உங்களை கண்காணிக்க யாரும் இல்லை. நீங்கள் உங்கள் கதையை எழுதியுள்ளதால், நீங்கள் உங்கள் அனுபவ மேடையில் நடிகராக இருக்கிறீர்கள். அந்த அனுபவங்களை எழுதிக்கொண்டு, அவற்றை ஒரு குப்பையாக எரித்து விடுங்கள். ¶"மக்களைப் பற்றிய சோதனை" மூன்றாவது நிலையாக விளங்குகிறது. இந்நிலையில் குடும்பம், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், சக ஊழியர்கள் மற்றும் சகஜமாக பழகியவர்கள் உட்பட, உங்கள் வாழ்க்கையின் மீது தாக்கம் ஏற்படுத்திய ஒவ்வொருவரைப் பற்றியும் எழுதுங்கள். அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பு, அவருடன் ஏற்பட்ட மகிழ்ச்சிகரமான தருணங்கள், கருத்து வேறுபாடுகள், அவரால் அடைந்த ஏமாற்றங்கள் மற்றும் அவரிடம் கேட்ட மன்னிப்புக்களைப் பற்றி எழுதுங்கள். மன்னிப்பை கோரி, மன்னிப்பை வழங்கி, ஒரு நீண்ட ஆயுள் மற்றும் நேர்மறையான எதிர்காலத்திற்கு வாழ்த்துக்களை தெரிவியுங்கள். ஒவ்வொரு முகத்தையும் உங்கள் முன்பாக வரவழைத்துக் கொண்டு பாராட்டு, அதிர்ச்சி, வெறுப்பு, வேதனை மற்றும் மன வேற்றுமையை வெளிப்படுத்தும் ஒரு கடிதத்தை எழுதுங்கள். இதை யாரும் படிக்கப்போவது இல்லை என்பதால், மனதில் எதையும் மிச்சம் வைக்காமல், எல்லாம் எழுதிக் கொள்ளுங்கள். இதை நீங்கள் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் வழியாக அனுப்பப்போவதும் இல்லை. அதை ஓரிடத்தில் விட்டுவிடப்போதவதும் இல்லை. அதை ஒரு குப்பைப் போல எரித்து விடுங்கள். ஒருவரிடத்தில் இருந்து இன்னொருவருக்கு பாய்ந்து செல்லும் *பிராண சக்திகள்* மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்துவதே "மக்கள் பற்றிய ஆய்வின்" பயன் ஆகும். நாம் எல்லோரும் ஒரே மனித இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால், நாம் எல்லோரும் தொடர்பில் இருக்கிறோம். நண்பர்களாக இருந்தாலும் எதிரிகளாக இருந்தாலும், நமக்கு பரிச்சயமானவர்கள் மற்றும் நமது நினைவில் இருக்கும் முகங்கள் மற்றும் பெயர்களும் நமக்கு நெருக்கமானவர்கள் என்று கருதுங்கள். சிலசமயங்களில் நாம் நண்பர்களைக் காட்டிலும் எதிரிகளைப் பற்றி அதிகமாக நினைப்பதால், அந்த எதிரிகள் நமக்கு அதிக நெருக்கமாக இருக்கிறார்கள். "மக்களைப் பற்றிய சோதனையின்" போது, உங்கள் ஒவ்வோருவரின் பிறவி *கர்மவினை* மற்றும் *பிராரப்த கர்மவினைகளின்* அங்கமாக உறவில் ஏற்பட்ட அன்பு, மன்னிப்பு மற்றும் வரவேற்பை வெளிக்கொண்டு வாருங்கள். கடிதம்

அல்லது தொடர்ச்சியான கடிதங்களை எழுதிய பிறகு, நினைவுகள் அமைதியாக கருப்பு வெள்ளை நிறத்தில் இருக்கும் கடந்தகாலத்திற்குள் மறைந்து விடுகின்றன. அதன் பிறகு நீங்கள் அந்த முகங்களை மனதில் கொண்டு வந்து நிறுத்தி, "நான் உன்னை நேசிக்கிறேன். நீ என்னை நேசிக்கிறாய்," என்ற ஆறு அற்புதமான வார்த்தைகளை மனதில் சொல்லிக்கொள்ள வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 126

தெளிவு அடைவதற்கு

மேலும் மூன்று நிலைகள்

"பாலியல் உணர்வு பற்றிய சோதனை" நான்காவது நிலையாக விளங்குகிறது. இந்த நிலையில் வயது வந்தவர்கள் பார்க்கும் படங்களில் தோன்றும் பாலுணர்வு காட்சிகள் உட்பட இணையதளம், தொலைக்காட்சி அல்லது பத்திரிகைகள், கனவுகள் மற்றும் கற்பனைகளில் தோன்றிய மற்ற பழைய பாலுணர்வு அனுபவங்களும் அடங்கும். இது சிலருக்கு ஒரு மிகப்பெரிய மிகைவிருப்பாகவும், பெரும்பாலும் ஒரு போதையாகவும் விளங்குகிறது. மேலும் இளவயதில் நீங்கள் ஈடுபட்ட சுய இன்ப பரிசோதனைகள மற்றும் அதற்கு முன்னர், அப்போது மற்றும் அதன் பின்பு இருந்த எண்ணங்களைப் பற்றி கண்டிப்பாக எழுதுங்கள். உங்களுக்கு பல வருடங்களாக தொல்லையாக தஇருந்து, தற்போதும் நீடிக்கும் பாலியல் ஒடுக்கங்கள் மற்றும் துக்கங்களை அந்த காகிதத்தில் எழுதிக் கொண்டு, அந்த நினைவுகளில் இருக்கும் மனவெழுச்சிகளை மனதில் இருக்கும் குப்பை போல எரித்து விடுங்கள். குற்ற உணர்வு அல்லது இறுதியில் வேதனையை வழங்கிய தொடர் அனுபவங்கள் அல்லது உங்களுக்கும் உங்கள் காதலன் அல்லது காதலிக்கு மட்டுமே தெரிந்த ஆனந்தமான, திருப்திகரமான, ஏக்கத்தை அளிக்கும் அனுபவங்கள் வண்ணமயமான நினைவுகளை விட்டுச் செல்வதால், இந்த பகுதியை கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியம் ஆகும். அதில் சில நினைவு மாதிரிகள் பிரகாசமான நிறத்தில் மகிழ்ச்சியாக பாடல்களை பாடுகின்றன, ஆனால் மற்றவை இருளில் மூழ்கி மந்தமான சப்தங்களை எழுப்புகின்றன. இரண்டின் தீவிரத்தையும் கருப்பு வெள்ளை படங்களாக தணிக்க வேண்டும். உட்புற ஒளிஉடலில் நிறம்/ஒலிகள் ஒன்றின் மீது ஒன்றாக குவிந்து ஆக்கத்திறன், படைப்பாற்றல், உற்பத்தித் திறன், ஆற்றலின் ஓட்டம் மற்றும் ஆரோக்கியத்திலும் தடை ஏற்படுத்துவதால், "இதை மறந்துவிட்டு நமது இயல்பு வாழ்க்கையை தொடரலாம்," என்ற நவீன கருத்து இங்கே சோதனைக்கு உள்ளாகிறது. காதலன்/காதலி அல்லது காதலர்களுக்கு எழுதிய கடிதங்கள் உட்பட, "பாலியல்

உணர்வு தொடர்பான சோதனை" பல பக்கங்களுக்கு விரிவாக எழுதவேண்டும். இவற்றை பாதுகாக்காமல் அல்லது அஞ்சல் வழியாக அனுப்பாமல், உடனே எரித்து விடவேண்டும். உங்களிடம் நேர்மையாக இருங்கள். நீங்கள் புணர்மக்கலை பற்றிய சிறந்த புத்தகத்தை எழுதிக் கொண்டு இருக்கலாம். "பாலியல் உணர்வு தொடர்பான சோதனையின்" கடைசி பக்கத்தில், பாலியல் விவகாரங்கள் தொடர்பாக எதிர்காலத்திற்கு நீங்கள் எடுத்துக்கொண்ட சில புதிய தீர்மானங்களையும் சேர்த்துக் கொள்ளவும். ¶"ஆசிரியர் பற்றிய சோதனை" ஐந்தாவது நிலையாக விளங்குகிறது. இதில் உங்கள் *சத்குரு,* ஆசிரியர்கள், வழிகாட்டுபவர்கள் அல்லது ஆலோசகர்களுடன் நடந்த முதல் சந்திப்புக்கள், *தீட்சைகள்,* அறிவுறுத்தல்கள் மற்றும் சிறிய அல்லது பெரிய கருத்து வேறுபாடுகளை எழுதிக்கொள்ளுங்கள். இந்த சந்தர்ப்பத்திலும் சொல்ல விரும்புவதை பற்றி விரிவான விளக்கங்களுடன் கடிதங்களை எழுதலாம். எழுதும் போது அந்த நபருடன் நேருக்கு நேர் பேசுவதைப் போல, அவருடைய முகம் மற்றும் பெயர் எப்போதும் நினைவில் வைத்து இருக்கவேண்டும். இந்த கடிதங்களில் முன்பு வெளிப்படுத்தப்படாத பாராட்டை வழங்கலாம், மன வேறுபாடுகளுக்கு தீர்வு காணலாம் மற்றும் இருவரும் பெற்ற வேதனைகளை தணிக்கலாம். நீங்கள் ஒரு குறிப்பு எழுதும் அமர்வை முடித்ததும், அந்த அமர்வில் எழுதிய பக்கங்களை குப்பைப் போல எரித்துவிடுங்கள். ¶ஆறாவது நிலையாக இருப்பது “பிராயச்சித்த சோதனை.” மனம், மனவெழுச்சி மற்றும் தூல உடல் சார்ந்த *பிராயச்சித்தம்* என்கிற தவத்தை மூன்று வகைகளாக பிரிக்கலாம். இந்த *தந்திரத்தில்* முதல் ஐந்து பாகங்களை நிறைவு செய்ததும், நீங்கள் மனம் மற்றும் மனவெழுச்சி சார்ந்த *பிராயச்சித்தத்தை* நிறைவு செய்து விட்டீர்கள். இனி அதன் தூல பண்பை வேறுவகையில் எதிர்கொள்ள வேண்டும். பல வருடங்கள் முன்பாக வரி ஏய்ப்பு செய்தது, திருடியது, விளையாட்டில் பறவைகள் அல்லது விலங்குகளை கொன்றது, குழந்தைகள் அல்லது மனைவி அல்லது கணவனை துன்புறுத்தியதைப் போன்று சில மனவெழுச்சி நினைவுகளை, எழுதுவதால் அழித்து விடமுடியாது. இவற்றாலும் மற்ற அத்துமீறல்கள் மூலமாகவும், இந்த பிறவியில் உருவான *கர்மவினைகளை* தணிக்க தூல வடிவில் ஏதாவது செய்ய தீர்மானிக்க வேண்டும். அவற்றை எழுதி எரிப்பதால் அழித்து விடமுடியாது. உங்கள் வாழ்வில் இதைப்போன்ற அனுபவங்கள் ஏற்பட்டு உங்களுக்கு தூல பிராயச்சித்தத்தின் தேவை இருந்தால், உங்கள் ஆன்மீக குருவிடம் இதைப்பற்றி சொல்லுங்கள். அவர் இதற்கான தகுதிகளை பெற்று இருந்தால், அவர் உங்களுக்கு அந்த குறிப்பிட்ட *கர்மவினைகளை* கரைப்பதற்கு ஒரு *பிராயச்சித்தத்தை* வழங்குவார். நான் அல்லது எங்கள் பரம்பரையில் எனக்குப் பிறகு வரும் *சத்குரு,* உங்களுக்கு *சத்குருவாக* இருந்தால், *மகா வாசன தாஹ தந்திரத்தின்,* இந்த ஆறாவது மற்றும் இறுதி நிலையை தொடங்கும் முன்பாக அஞ்சல் அல்லது prayas@hindu.org என்ற மின்னஞ்சலுக்கு, உங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளும் கடிதத்தை அனுப்புங்கள். ¶*மகா வாசன தாஹ*

தந்திரத்தின் ஆறு நிலைகளையும் நிறைவு செய்ததும், மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள். இனி நீங்கள் சிவபெருமானின் திருநடனத்தில் பங்குப்பெற்று, சிவனோடு வாழ்ந்து சிவபெருமானுடன் ஐக்கியமாகும் போது, நீங்கள் பாரம்பரிய தியானத்தின் தீவிர பயிற்சிக்கு தயாராக இருக்கிறீர்கள். ¶*மகா வாசன தாஹ தந்திரம்*, வாழ்நாளில் ஒருமுறை நடைபெறும் அனுபவம் ஆகும். அதன் பிறகு நீங்கள் பெற்ற உட்புற சுதந்திரம் மற்றும் தெளிவை பராமரிக்க, *வாசன தாஹ தந்திரம்* என்கிற உங்கள் அடியுணர்வு பற்றிய ஆன்மீக குறிப்பு எழுதுவதை தொடர்வீர்கள். ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும், முன்பு குறிப்பிட்ட முறையில் நடந்து முடிந்த வருடத்தைப் பற்றிய குறைந்தது பத்து பக்கங்களை எழுதி, மற்ற ஐந்து நிலைகளையும் தொடர வேண்டும் என்று நான் எல்லோரிடமும் கேட்டுக்கொள்கிறேன். வருடம் ஒரு முறை குறிப்பு எழுதுவதை *வத்சரிக வாசன தாஹ தந்திரம்* என்று அழைக்கப்படுகிறது. ¶இதை வருடம் ஒரு முறை மற்றும் *சாதனா* தேவைப்படும் போதும் தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் செய்து வருபவர்கள், குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டதாக உறுதி அளித்துள்ளனர். அவர்கள் தங்களால் சுமைகள் இல்லாமல் சுதந்திரமாக, தெளிவான மனதுடன், நிரந்தரமான நித்தியத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து, சேவை செய்ய ஆவலுடன், பாதைமாற்றம் வழங்கும் வலுவான தியானங்களில் மகிழ்ச்சியுடன் பங்குபெற முடிவதாக அறிந்துள்ளனர். முன்பு போல இல்லாமல், இனி அவர்களின் கடந்தகாலம் சிறியதாக தோன்றுகிறது மற்றும் முன்பு வரையறுக்கப்பட்டு இருந்த எதிர்காலம் இப்போது மிகவும் பெரிதாக மனதை கவரும் வகையில் காட்சி அளிக்கிறது. அவர்கள் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் மத்தியில் புதிதாக கண்டுகொண்ட இணக்கத்தை ரசிக்கிறார்கள். அவர்களால் *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* எளிதாக மற்றும் இயல்பாக நிறைவேற்ற முடிகிறது. இதற்கு காரணம் என்ன? கடந்தகாலம் மூலம் உருவாக்கப்பட்டு எப்போதும் புரிந்துகொள்ள முடியாமல், தீர்வு காண முடியாமல் மற்றும் விடுவிக்க முடியாமல் இருந்த, *வாசனாக்களின்* சுமையில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். ¶உயிர் பிரியும் சமயத்தில் ஒருவரின் உட்புற பார்வையின் முன்பாக உணர்வுப்பூர்வமான நிகழ்வுகளின் நினைவுகள் அனைத்தும் தோன்றுகின்றன, மற்றும் வரவிருக்கும் பிறவி ஒன்றில் அவற்றை எதிர்கொள்ள மீண்டும் வரவழைக்கும் ஆற்றலையும் கொண்டு இருக்கின்றன. புரிதலுடன் தீர்வு காணப்பட்டு விடுவிக்கப்பட்ட நினைவுகள் மனதில் வலுவாக இருப்பதில்லை. இந்த *தந்திரத்தை* செயல்படுத்துவதன் மூலம், நீங்கள் மரணத்தை ஒத்த அனுபவத்தை பெறுகிறீர்கள் என்றே சொல்லலாம், ஏனென்றால் இந்த *தந்திரத்தின்* மூலம், நீங்கள் உண்மையில் இறக்கும் வரை எதிர்கொள்ளாத நினைவுகளுக்கு நிரந்தர தீர்வு காண்கிறீர்கள். இதன் மூலம் நீங்கள் கடந்தகாலத்தை மறந்து விடுவது இல்லை, ஆனால் அது இனி உங்களுக்கு ஒரு சுமையாக இருப்பதில்லை. அவை அனைத்தும் இன்னொருவருக்கு நடந்ததைப் போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும்.

வேதாகம மந்திரங்கள்

அறியாமை மற்றும் அமங்கலகரமான சக்திகளில் ஆன்மா தனது ஈடுபாட்டை மெதுவாக குறைத்து முழுமையாக நிறுத்தும் போது, உலகின் தோழனாக இருக்கும் இறைவன், அதன் அறிவு மற்றும் நடவடிக்கையின் எல்லையற்ற பண்பை ஆன்மாவிற்கு வெளிப்படுத்துகிறார்.

மிருகேந்திர ஆகமம், ஞான பாதம் 5.அ1. மஅ, ப. 138

இறைவனே, எங்களுக்கு சுகம் தரும் புத்தி, அதிகரிக்கும் செல்வம், ஆரோக்கியமான உடல், இனிமையான வாக்கு மற்றும் அமைதியுடன் மேன்மை பொருந்திய நாட்கள் என்று எங்களுக்கு சிறந்த வரங்களை அருள்வாயாக.

ரிக் வேதம் 2.21.6. வேஎ, P. 191

ஒளிமயமான பரம்பொருளே! நீ என்னுள் ஒளிர்வதற்கு என் முன்பாக இருக்கும் அறியாமை இருளை நீக்குவாயாக. சாத்திரங்களின் உண்மையை எனக்கு அருள்வாயாக. சாத்திரங்களின் உண்மை என்னை விட்டு விலகாது இருக்கட்டும். நான் முனிவர்களிடம் இருந்து கற்றவற்றை பகலும் இரவும் சிந்திப்பேனாக.

ரிக் வேதம், ஐத்ரெய உபடனிடதம் பிரார்த்தனை. உபப, ப. 95

பரம்பொருளே! எல்லா உயிரினங்களும் என்னை தோழமை நிரம்பிய கண்களுடன் பார்க்கட்டும்! நான் எல்லா உயிரினங்களையும் தோழமை நிரம்பிய கண்களுடன் பார்ப்பேனாக! நாங்கள் ஒரு தோழமை பார்வையுடன் ஒருவரை ஒருவர் பார்ப்போமாக!

சுக்ல யஜூர் வேதம் 36.18. வேஎ, ப. 342

ஐந்து மகா யக்ஞங்கள் உள்ளன. அவை பூத யக்ஞம், மானுஷ்ய யக்ஞம், பித்ரு யக்ஞம், தேவ யக்ஞம், பிரம்ம யக்ஞம் ஆகும்.

சுக்ல யஜூர் வேதம், சதபத பிரமாணம் 11.5.6.1. வேஎ, ப. 394

பிரம்மச்சரியத்தை கடைப்பிடித்து பிரம்மலோகத்தை அடைந்தவர்கள், பிரம்மலோக அதிபதி ஆகிறார்கள். அவர்கள் தங்கள் விருப்பப்படி எல்லா லோகங்களிலும் பயணம் செய்ய முடிகிறது.

சாம வேதம், சண்டோகிய உபநிடதம் 8.4.3. வேஎ, ப. 638

யக்ஞம் என்று அழைக்கப்படுவதும் உண்மையில் பிரம்மச்சரியம் தான், ஏனென்றால் பிரம்மச்சரியம் மூலம் மனிதன் அறியாமையில் இருந்து விடுபடுகிறான். மேலும் மௌன விரதம் என்று அழைக்கப்படுவதும், உண்மையில் பிரம்மச்சரியம் தான். ஏனென்றால் ஒரு மனிதன் பிரம்மம்மச்சரியம் மூலம் ஆத்ம ஞானத்தை பெற்று அமைதியான தாரணையில் வாழ்கிறான்.

சாம வேதம், சாண்டக்ய உபநிடதம் 8.5.1. உபப, ப. 123

மௌன விரதத்தை கடைப்பிடித்து, கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமர்ந்து, பூரகம் மற்றும் ரேசகம் மற்றும் பிராண வாயு மீது முழு கட்டுப்பாட்டை பெற்று, அவர் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி தியானம் செய்ய வேண்டும்.

சந்திரஞான ஆகமம், கிரியா பாதம் 8.54-55 சஞ, ப. 80

அக்னி பகவானே, எந்த தவத்தை நாங்கள் அனுட்டானம் செய்வதன் மூலம், இருமையை பொறுத்துக் கொண்டு பூரண பிரம்மச்சரியத்தை கடைப்பிகிறோமோ, அதனால் நாங்கள் வேத சாத்திரங்களை விருப்பத்துடன் பயின்று, நீண்ட ஆயுளுடன் தீர்க்கமான புத்தியுடன் இருப்போமாக.

அதர்வண வேதம் 7.61.1. மொஅடி ஹிவே, ப. 71

பாலில் வெண்ணெய் மறைந்து இருப்பதைப் போல, உண்மையான அறிவு எல்லா உயிர்களிடமும் வாசம் செய்கிறது; ஒருவர் தனது மனதை கடையும் கருவியாக கொண்டு, தொடர்ந்து அதனை கடைந்துக் கொண்டு இருக்கவேண்டும். உராய்வதால் நெருப்பு தோன்றுவதைப் போல, ஒருவர் தனது அறிவு எனும் கயிற்றை சுழற்றி, "நான் பிரம்மன்" என்கிற பேதமற்ற, மாசற்ற அமைதியை அடைய வேண்டும்.

அதர்வண வேதம், பிரம்ம பிந்து உபநிடதம் 20–21. உபபே, ப. 690

ஏழையின் பசிக்கு அவன் முற்பிறவியில் செய்த பாவமே காரணம் என்று நிந்திக்க வேண்டாம். ஆரோக்கியமாக உண்பவர்களுக்கும், மரணம் பல ரூபங்களில் வருகிறது. தாராளமாக தானம் செய்பவரின் செல்வம் குறைவதில்லை, ஆனால் தானம் செய்ய மறுப்பவனிடம் யாரும் பரிவுடன் இருப்பதில்லை.

ரிக் வேதம் 10.117. 1. வேஎ, ப. 850

ஒரு மூடன் உணவை சேகரிக்கிறான். அவனுக்கு வீழ்வது நிச்சயம் என்று நான் உறுதியாக கூறுகிறேன்! அவனுக்கு நண்பனோ துணையோ கிடைப்பது இல்லை. அவன் தனியாக உண்டு, பாவத்தில் தனியாக மூழ்கி இருக்கிறான். நிலத்தில் ஏர் உழுபவன் தனது பசிக்கு உணவை தேடிக்கொள்கிறான். நடந்து செல்பவன் தனது இலக்கை அடைகிறான். உபதேசம் வழங்குபவர் அமைதியாக இருப்பவரைக் காட்டிலும் சிறந்து விளங்குகிறார். கருமியாக இருப்பவனைக் காட்டிலும் தானம் செய்பவன் சிறந்தவன்.

ரிக் வேதம் 10.117. 6–7. வேஎ, ப. 851

அச்சம், கோபம், சோம்பல், நீண்ட நேரம் விழித்து இருப்பது, நீண்ட நேரம் உறங்குவது, அதிகம் உண்பது மற்றும் உண்ணாமல் இருப்பதில் இருந்து ஒரு *யோகி* தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அதர்வண வேதம், அம்ரிதபிந்து உபநிடதம் 27. உபபே, ப. 696

கனமின்மை, ஆரோக்கியம், இச்சையின்மை, முகத்தில் பொலிவு, நறுமணம், குறைவான கழிவுகள் ஆகிய அனைத்தும் யோக பயிற்சியில் காணும் முதல் அறிகுறிகள் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

கிருஷ்ண யஜூர் வேதம், சுவேதாசுவதர உபநிடதம் 2.13. உபரா, ப. 723

நமஹ எனும் சொல் முதலிலும் சிவாய எனும் சொல் அதன் பிறகும் வர வேண்டும். இதுவே சாஸ்திர மந்திரங்களில் சிறந்ததாக கருதப்படும் பஞ்சாட்சர மந்திரத்தின் ஞானம் ஆகும். இந்த பஞ்சாட்சர மந்திரத்தில் இருந்து அனைத்து சுருதிகளும் மங்களகரமாக சிவத்தன்மையுடன் வெளிவந்துள்ளன.

சந்திரஞான ஆகமம், கிரியா பாதம் 8. 5-6 சஞ, ப. 72-73

ஜீவனம்

धार्मिक जीवनम्



பாகம் இரண்டு

அற வாழ்க்கை

யஹ கரஹ தோலாம் சாலயதி சஹ ஏவ ஜகத் பாலயதி

यः करः दोलां चालयति सः एव जगत् पालयति



தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகையும் ஆளும்

பெண்கள் நற்குணங்களுடன் தங்கள் கணவன் மற்றும்
குழந்தைகளுடன் வாழட்டும். பக்தரின் வீட்டில் அரச பேரவைகளுக்கு

பொருத்துமாக, வெற்றி இலக்குடன் சிறந்த தேரோட்டிகள் மற்றும் போராளிகள் வீர இளைஞர்களாக பிறக்கட்டும்.

யஜுர் வேதம் 22.22. ஹிவே, ப. 161



ஒரு குழந்தை இந்தியாவில் பயன்படுத்தப்படும் மரத்தொட்டிலில் பாதுகாப்பாக படுத்துள்ளது. அந்த தொட்டில் மேற்கூரையில் இருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. அந்த குழந்தையின் தாய் அந்த தொட்டிலை ஆட்டிவிட்டு, அந்த குழந்தையை உறங்க வைக்கிறாள். உலகில் இருக்கும் ஒவ்வொரு கலாச்சாரத்திலும் அன்பு கலந்த அன்னையின் கைகள், மனித இனத்தின் எதிர்காலத்தை அமைதியாக வடிவமைக்கின்றன.

திங்கட்கிழமை

பாடம் 127

பெண்

விடுதலை

அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம்! இன்று நாம் ஒவ்வொரு இந்து குடும்பத்திற்கும் முக்கியமானதாக விளங்கும் *ஸ்த்ரீ தர்மத்தைப்* பற்றி பேசப்போகிறோம். இது இந்து மனைவி மற்றும் தாயின்*தர்மத்தை* குறிப்பிடுகிறது. சமஸ்கிருதத்தில் *ஸ்த்ரீ* என்ற சொல் "பெண்ணை" குறிப்பிடுகிறது. *தர்மம்* என்ற சொல் சிவனை அடையும் வழி, பக்தி, நற்குணம், கடமை, நன்றிக்கடன் மற்றும் மேலும் பல அர்த்தங்களை கொண்டுள்ளது. *ஸ்த்ரீ தர்மம்* எனது பெண்ணின் இயல்பான பாதை என்றும் *புருஷ தர்மம்* என்பது ஆணின் இயல்பான பாதை என்றும் குறிப்பிடலாம். ¶இன்று சமூகத்தில் பெண்ணின் பங்குப் பற்றி பல சர்ச்சைகள் உள்ளன. இன்று மேற்கத்திய நாடுகளில், பெண்கள் விடுதலை இயக்கம் பல வருடங்களாக செயல்பட்டு வருகிறது. ஆனால் தற்போது வலுவான எதிர்ப்பாக பாரம்பரிய பண்புகளை ஆதரிக்கும் இயக்கம் தொடங்கியுள்ளது. பெண்கள் விடுதலை போராட்டம் இந்தியா, ஈரான், ஐரோப்பா, ஜப்பான் மற்றும் வேறு சில நாடுகளில் இருக்கும் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. நான் வட அமெரிக்காவில், இந்து பெண்கள் விடுதலை இயக்க பிரசாரத்தை தொடங்கினேன். அதன் குறிக்கோள் நீங்கள் நினைப்பது போல் இல்லை. நமது இந்து பெண்களை விடுவிப்பவர்களிடம் இருந்து விடுவித்து, அவர்களை லௌகீகத்தில் இருந்து காப்பாற்றி, தாய் மற்றும் மனைவியாக அவர்களின் இயல்பான *தர்மத்தை* பூர்த்தி செய்ய அனுமதி வழங்குவதே, அதன் குறிக்கோள் ஆகும். ¶ஒரு சமய ஈடுபாடுள்ள பெண்ணுக்கு, விடுதலை என்பது தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு வீட்டிற்கு திரும்புவதுடன் தொடங்குகிறது. அவள் வீடு திரும்பியதும் முழுமையான விடுதலையை பெறுகிறாள். அவள் வெளியுலகில் செயல்படும் போது அவளது உணர்வு வெளிப்புற பரிணாமங்களில் லயித்து இருக்கிறது, ஆனால் அவள் வீட்டில் இருக்கும் போது அவள் தனது உயிர்சக்தியின் ஆழத்தில் வாழ அனுமதி பெறுகிறாள். நான் இதை பலமுறை நடைமுறையில் பார்த்து இருக்கிறேன். ஒரு பெண் மனைவி மற்றும் தாயாக

இருப்பதற்கு தடையாக, வெளியுலகில் பல கவனச் சிதறல்கள் மற்றும் தாக்கங்கள் உள்ளன. மேற்கத்திய நாடுகளில் ஒரு பெண் மனைவியின் பொறுப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறாள், ஆனால் கிழக்கு நாடுகளில் அவள் தனது தாய்மையின் பாரம்பரிய கடமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறாள். அவளுக்கு சிறு வயதில் இருந்தே இல்லற கலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவளுக்கு அவளுடைய தாய், தனக்கு தனது தாய் பயிற்சி அளித்ததைப் போல பயிற்சி அளிக்கிறாள். இந்த பழங்கால பழக்கம் பல தலைமுறைகளாக பின்பற்றப்பட்டு வருகிறது. ¶இந்து சமயத்தை சேர்ந்த பெண் ஒரு உயர்ந்த மதிப்பை பெறுகிறாள்.
"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?" (திருக்குறள் 53)
என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு நாடுகளில் பெண்களுக்கும் சமூகத்தில் அவர்களின் பொறுப்பிற்கும் அதிக மதிப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் இங்கே மேற்கு நாடுகளில், பெண்ணுக்கு முழு அங்கீகாரம் கிடைப்பது இல்லை. அவளுடைய பங்கு தரக்குறைவாக தவறாக புரிந்துக் கொள்ளப்படுகிறது. அவள் இந்த காரணத்திற்காக மற்ற சமூகப்பிரிவுகளில் ஆத்மதிருப்தி மற்றும் அங்கீகாரத்தை நாடுகிறாள், ஏனென்றால் அவளின் பிரத்யேகமான மற்றும் முக்கிய பங்கின் மீது மேற்கத்திய சமூகம் கவனம் செலுத்துவது இல்லை. அவள் புறக்கணிப்பு மற்றும் அலட்சியத்தால் மனமுடைந்து தனக்கு பாராட்டு, அங்கீகாரம் மற்றும் வெகுமதி கிடைக்கும் மற்ற வாய்ப்புக்களை நாடுகிறாள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 128

ஆண் மற்றும்

பெண்ணின் பண்பு

கிழக்கு நாடுகளில் பெரிய கூட்டுக்குடும்பத்தின் உறவுகள், வழக்கமாக மிகவும் நெருக்கமானவை என்பதை மறக்க வேண்டாம். பெண்கள் தங்களை காட்டிலும் இளைய மற்றும் முதிய பெண்களின் சமூகத்தில் பெரும்பாலும் ஒரே வீட்டில் வாழ்ந்து வருவார்கள். அவர்கள் இளையவர்களுக்கு உதவி செய்வது மற்றும் வயதில் பெரியவர்களிடம் இருந்து உதவி பெறுவது என்று ஒரு திருப்திகரமான வாழ்க்கையை வாழ்வார்கள். பல தலைமுறைகள் இல்லற கலாச்சாரத்தின் இன்பங்கள் மற்றும் சுமைகளை ஒன்றாக பகிர்ந்துக் கொள்வார்கள். மேற்கத்திய நாடுகளில் நிலைமை மாறுபட்டு இருக்கிறது. இங்கிருக்கும் பெண்களுக்கு மற்ற குடும்பத்தினருடன் நெருக்கமான தொடர்பு இருக்க

வாய்ப்பு கிடைப்பது இல்லை. இந்த சூழ்நிலையில், அவர்களுக்கு குறிப்பாக சமய ஈடுபாடுள்ள நண்பர்கள் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் சிறிது தனிமையில் வாடுகிறார்கள். அவர்கள் தங்கள் தனிமையின் காரணமாக வெளியில் வந்து உலகை ரசிக்க விரும்புகிறார்கள். இது பெண்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு இன்னொரு காரணமாக விளங்குகிறது. இது மிகவும் துரதிஷ்டவசமானது. ¶கிழக்கு நாடுகளில் ஆண் மற்றும் பெண் சக்திகளுக்கு இடையில் ஒரு நல்ல சமநிலை நிலவுகிறது. மேற்கு கலாச்சாரத்தில் ஆணின் கை ஓங்கி இருந்து, ஆதிக்கம் செலுத்துகிறது. பெண்மையின் சக்திகள் சிறந்த முறையில் வெளிப்படுவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும். ஆனால் அதற்கு ஆண்கள் செய்வதை பெண்கள் செய்யவேண்டும் என்று பொருளில்லை. அவ்வாறு நடைபெற்றால், அதன் மூலம் இரு சக்திகளுக்கு மத்தியில் குழப்பம் தான் அதிகரிக்கும். ஒரு சிறந்த சமநிலையை தேடிக்கொள்ள வேண்டும். ஆசியாவில் பெண்கள் பாதுகாப்பை பெறுகிறார்கள். அவள் ஒரு பெருமதிப்புப் பொருளாக கருதப்படுகிறாள். நாம் அத்தகைய பொருள் மீது கவனக் குறைவாக இருப்பதில்லை. நாம் அதை இழக்க விரும்பாததால், நாம் அதற்கு காவலனாக இருந்து பாதுகாப்பு அளிக்கிறோம். இந்து பெண்களுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கிறது. அவள் லௌகீக பண்புகளை பெறுவதற்கு அனுமதி வழங்கப்படுவது இல்லை. அவர்கள் இழிவான பண்புடைய மக்களின் சிந்தனைகள் மற்றும் பார்வைகளுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை மற்றும் தொழில் விவகாரங்களில் நிலவும் கடுமையான போட்டிக்காக அவர்கள் தங்கள் தன்மானத்தை அடகு வைப்பதும் இல்லை. அவள் தனது மென்மை, இயலுணர்வு பண்பு, பாசம் மற்றும் தன்னடக்கம் ஆகிய இயல்பான குணங்களை வெளிப்படுத்தி, முழுமையான பெண்மையாக இருக்கவும் முடியும். ஒரு இந்து பெண்ணின் வாழ்க்கை அவளது வீடு மற்றும் குடும்பம் மீது கவனம் செலுத்துகிறது. ¶இங்கே குழுமி இருக்கும் பலர் வயதில் சிறியவர்களாக இருப்பதால், 1939 ஆம் ஆண்டு தொடங்கிய இரண்டாம் உலகப்போரின் போது, அமெரிக்காவில் நிலவிய வாழ்முறையைப் பற்றி அறிந்து இருக்க வாய்ப்பில்லை. இரண்டாம் உலகப்போருக்கு முன்பாக, பொது இடங்களில் மேற்கத்திய பெண்கள் மிகவும் அடக்கத்துடன் இருந்தார்கள் மற்றும் அவர்கள் பெரும்பாலும் ஒரு வழித்துணையுடன் வருவார்கள். அந்த இரண்டாம் உலகப் போர், ஆண்கள் மற்றும் பெண்களின் பழங்கால பொறுப்புக்களை மாற்றி அமைத்தது. ஆண்கள் தொழிற்சாலைகளில் இருந்து இராணுவம் சென்றனர், மற்றும் பெண்கள் உற்பத்தி தொடரவேண்டும் என்பதற்காக வீட்டை விட்டு வெளியேறி தொழிற்சாலைகள் மற்றும் வாணிபங்களில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதற்கு முன்னர் பாதுகாப்பை பெற்றதோடு, அவர்கள் துணை இல்லாமல் என்றுமே பொது இடங்களில் தோன்றியது இல்லை. வரலாறு முழுவதும் பெண்கள், வீட்டின் காப்பாளர்களாகவும் நற்பண்புகளின் பாதுகாவலர்களாகவும் இருந்திருந்தனர். அவர்கள் தங்கள் சுத்தம், தங்கள்

கற்பிற்கு மதிப்பு அளித்து திருமணத்தின் போது கன்னித்தன்மையுடன் இருந்தனர். சுமார் 1940 ஆம் ஆண்டு வரை பழமையான பழக்கங்கள் தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்டன என்று பலருக்கு தெரிந்திருக்கவில்லை. இரண்டாம் உலகப்போர் குடும்பத்தை உடைத்து, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மத்தியில் இருந்த சமயநிலையை குலைத்து விட்டது. முதல் முறையாக பெண்கள் பொது இடங்களில் தனியாக காட்சி அளித்தார்கள். அவர்கள் முதல் முறையாக வீட்டை விட்டு வெளியேறி தங்கள் பணிகளுக்காக ஆண்களுடன் போட்டியிட்டனர்.

புதன்கிழமை

பாடம் 129

மாற்றத்தில் இருக்கும்

சமூகம்

உலகம் விவசாயம் சார்ந்த யுகத்தில் இருந்து தொழில்நுட்ப யுகத்திற்கு பெறும் மாற்றத்தினால், மனித நேயம் எதிர்கொள்ளும் மாற்றத்தைப் பற்றி நான் அவ்வப்போது குறிப்பிட்டு வருகிறேன். இந்த மாற்றம் பெண்ணின் *தர்மம்* மற்றும் ஆணின் *தர்மத்தின்* மீது ஒரு விசித்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பாக மனிதன் விவசாயத்தை சார்ந்து இருந்த யுகத்தில், பெரும்பாலும் குடும்பங்கள் பண்ணைகள் அல்லது பணியாளர் குழுக்களில் வேலை செய்து வாழ்ந்து வந்தனர். குடும்பம் முழுவதும் பண்ணையில் வேலை செய்தனர். ஆண்கள் எல்லோரும் வயல்களில் வேலை செய்தனர் மற்றும் பெண்களும் குழந்தைகளும் பெரும்பாலும் வீட்டில் வேலை செய்தனர். குழந்தைகள் ஒரு பெரிய சொத்தாக விளங்கினர். அதிக குழந்தைகள் மூலம் அதிக உதவி கிடைத்ததால், பெரிய பண்ணை அமைத்து பணவரவும் அதிகமாக இருந்தது. சிறுவன் அல்லது சிறுமி செய்வதற்கு பல வீட்டு வேலைகளும் இருந்தன. அறுவடை நேரத்தில் குடும்பமே ஒன்றாக கூடி வேலை செய்யும். அவர்கள் ஒரு குழுவாக செயல்பட்டனர், மற்றும் அதில் எல்லோரும் பங்குகொண்டனர். அறுவடை செய்த விளைச்சலை விற்று கிடைக்கும் வருமானத்தில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று குடும்பத்தில் இருந்த எல்லோரது பங்கும் இருந்தது. எல்லோரும் சம்பாதித்தார்கள் மற்றும் எல்லோரும் பொருளாதாரரீதியாக முக்கிய பங்கு வகித்தனர். ¶தொழில்நுட்ப யுகம் தொடங்கியதில் இருந்து, ஆண் மட்டுமே குடும்பத்திற்கு வருமானத்தை ஈட்டுகிறான். அதை மற்ற எல்லோரும் செலவு செய்கிறார்கள். கணவன் ஒரு தொழிற்சாலை அல்லது ஒரு நிறுவனத்தில் வேலைக்கு செல்கிறான் மற்றும் அவனுடைய மனைவி மற்றும் குழந்தைகள் வீட்டில் இருக்கிறார்கள்.

அவனுடைய வேலையில் அவனுடைய குடும்பத்தால் அதிக உதவி வழங்க முடிவதில்லை. பழங்காலத்தில் இருந்ததைப் போல, அவனுடைய வேலைக்கும் அவன் மனைவியும் வேலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதில்லை. இப்போது அவன் வழங்குபவனாகவும் உற்பத்தி செய்பவனாகவும் இருக்கிறான், மற்றும் அவளும் குழந்தைகளும் நுகர்வோர்களாக இருக்கிறார்கள். குழந்தைகளால் உதவி செய்யமுடியாததால், அவர்கள் ஒரு சொத்தாக இல்லாமல் ஒரு பொருளாதார சுமையாக மாறிவிடுகிறார்கள். இதனுடன் பூமியில் மக்கள் தொகை அதிகரிப்பு காரணமாக ஏற்படும் பிரச்சனைகளால், பெண்ணின் பாரம்பரிய பொறுப்பான மனைவி மற்றும் தாயின் பொருளாதார மதிப்பு குறைந்து விடுகிறது. அந்த காலத்தில் குடும்பத்தின் வாழ்வாதாரம் மற்றும் மனித இனம் நீடிப்பதற்கும் குழந்தைகள் வளர்ப்பு மற்றும் பண்ணை நிர்வாகத்தில் பெண்ணின் நேரடி மற்றும் முக்கிய பங்கு இருந்து வந்தது. ஆனால் இன்று அந்த நிலை இல்லை. அவர்கள் குடும்பப் பண்ணை வியாபாரத்தில் பங்காளிகளாக இருந்து வந்தார்கள், ஆனால் இன்று அவன் சம்பாதிப்பதற்கு முழு பொறுப்பாளி ஆகிறான் மற்றும் அவள் அவனை முழுமையாக சார்ந்து இருப்பதைப் போல நினைக்கிறாள். அதற்காக பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரிய வேண்டும் என்பது தீர்வு இல்லை. ஆண் மற்றும் பெண்ணின் *தர்மத்தை* பூர்த்தி செய்ய அனுமதிக்கும் *கர்மவினையின்* புதிய சமநிலையை கண்டறியும் நோக்கத்துடன், இந்த தொழில்நுட்ப யுகத்தில் சமயம் சார்ந்த பழைய பண்புகளை கொண்டு வருவதே, இதற்கான தீர்வு ஆகும். ¶இளைய தம்பதிகள் திருமணம் செய்து கொள்ளும் போது, நான் அவர்கள் தங்களுக்கு இடையே எடுத்துக்கொள்ளும் விரதங்களை எழுத உதவி செய்கிறேன். அவன் அவளுக்கு ஆதரவாக இருந்து, பாதுகாப்பு வழங்கி, அவளுக்கு ஒரு நிறைவான திருப்தி அளிக்கும் வாழ்க்கையை வழங்க உறுதிமொழி எடுக்க வேண்டும். அவள் அவன் மீது அக்கறை செலுத்தி, வீட்டை நிர்வாகம் செய்து, பூஜை அறையை பராமரித்து குழந்தைகளை நன்றாக வளர்க்க வேண்டும். ஒருவர் மற்றொருவரின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பு அளித்து, அவரை எப்போதும் உளரீதியாக விமர்சனம் செய்யாமல், அவர்கள் கூடிவாழும் வாழ்க்கையில் சமயத்தை மையமாக்கிக்கொள்ள வேண்டும் என்று நான் அவர்களிடம் கேட்டுக்கொள்வேன். வெளியுலக ஈடுபாட்டை சிறிது குறைத்துக்கொண்டு, வீட்டில் இருக்கும்படி அந்த மணமகளிடம் கேட்டுக்கொள்வேன். அவளுக்கு தேவையானதை மற்றும் அவள் விருப்பங்களை, அவளது வாழ்நாள் முழுவதும் வழங்கவேண்டும் என்று நான் அந்த இளம் கணவனுக்கு அறிவுரை வழங்குவேன்.

வியாழக்கிழமை

பாடம் 130

உலகில்

பணி புரிதல்

ஒரு தாய் வேலை செய்யவேண்டிய இடம் வெளியுலகில் இல்லாமல் அவளது வீட்டில் மிகவும் முக்கியமான இருக்கிறது. அவள் வீட்டில் நாள் முழுவதும் இருக்கும் போது, குழந்தைகளுக்கு அன்பு மற்றும் பாதுகாப்பையும், கணவனுக்கு நிலைத்தன்மை மற்றும் அக்கறையை வழங்குகிறாள். அவள் குழந்தைகளை வளர்க்கும் போது, வழக்கத்தை மாற்றி அமைக்கிறாள். அவளால் இதை எப்படி செய்ய முடிகிறது? அவள் வலுவான, நல்ல மற்றும் புத்திசாலியான குழந்தைகளை வளர்க்கிறாள். அவர்கள் எதிர்கால சமூகத்தில் சிறந்த ஆண்கள் மற்றும் பெண்கள், தேசத்தின் தலைவர்களாக உருவெடுப்பார்கள். அவர்கள் தகுதி வாய்ந்த விவசாயிகள், கலைஞர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், கட்டிடக்கலை வல்லுனர்கள், தலைவர்கள் மற்றும் மிகவும் முக்கியமாக ஆன்மீகத் தலைவர்களாக உருவெடுப்பார்கள். அவர்கள் நல்ல தாய்மார்கள், இல்லத்தரசிகள் மற்றும் குழந்தை-வளர்ப்பாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள், முன்னோடிகள் மற்றும் கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும் சிற்பிகள் மற்றும் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் படைப்பாளிகளாக உருவெடுப்பார்கள். இத்தகைய ஆண்களும் பெண்களும் மனித வரலாற்றின் பாதையை மாற்றி அமைப்பார்கள். தனது குழந்தைகளின் மனம் மற்றும் குணத்தை முறையாக வடிவமைக்கும் மாபெரும் சக்தி, தாயைத் தவிர வேறு யாரிடமும் இருப்பது இல்லை. மேலும் மென்மையான வழிகாட்டலுடன் அவள் முன் உதாரணமாக விளங்கி, தனது மகள்கள் தான் செய்ததை தொடர்வதற்கு பயிற்சி அளிக்கிறாள். ¶அதே சமயத்தில், குழந்தைகள் வளர்ப்பில் அலட்சியமாக இருந்து, அவர்கள் தெருக்களில் கீழ்த்தரமான வாழ்வை கற்றுக்கொண்டு தானாக வளர அனுமதிக்கும் போது, அவள் எதிர்மறை சக்தியும் கொண்டு இருக்கிறாள். அத்தகைய குழந்தைகள் சமூகம் மற்றும் மனித வரலாற்றில் எதிர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் சாதாரண ஆண்கள் பெண்களாக இருந்து, மனம் மற்றும் மனவெழுச்சி சிக்கல்களில் சிக்கி, உள்ளுணர்வு இயல்பை வெளிப்படுத்தி வன்முறை, காமம் மற்றும் தீய பழக்கத்திற்கு அடிமையாகி குற்றம் செய்வதில் முன்னோடிகளாக விளங்குவார்கள். அன்பு மற்றும் கவனிப்பு மூலம் மறைந்திருக்கும் ஒரு மிகப்பெரிய திறமையை நோக்கி திசைதிருப்புவதற்கு அல்லது அதை அலட்சியம் மூலம் அழிய அனுமதிக்கப்படுவதற்கு, ஒரு தாயின் முன்பாக மனித குலத்தின் பாதை ஆரம்பக்கட்டத்தில் இருக்கிறது. தாய் தன் குழந்தையின் முதல் குருவாக விளங்குகிறாள், மற்றும் மனதில் எளிதில் பதியவைக்கக்கூடிய அந்த

வருடங்களில், ஒரு தாயால் மட்டுமே மனதை வடிவமைக்க முடியும். "தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகையும் ஆளும்" என்கிற பழைய ஆங்கில கவிதையில் இருக்கும் உண்மையை, இதன்மூலம் எல்லோரும் புரித்துக்கொள்ளலாம். ¶தினமும் வீட்டில் இருந்துக்கொண்டு, காலையும் இரவும் குழந்தைகள் மீது கவனம் செலுத்தும் ஒரு தாயை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அவள் தொட்டிலை அசைக்கும் போது, அவளுடைய அன்பும் ஆற்றலும் அந்த குழந்தைக்கு பரவுவதால், அது ஒரு இயல்பான அமைதி மற்றும் பாதுகாப்பை உணர்கிறது. அவளிடம் இனிமையான தாலாட்டு பாடுவதற்கும் கண்ணீர் தோன்றும் போது தேற்றுவதற்கும் நேரம் இருக்கிறது, மக்களைப் பற்றி, உலகைப் பற்றி மற்றும் வளரும் வயதில் சின்னஞ்சிறிய விஷயங்களைப் பற்றி சொல்வதற்கு நேரம் இருக்கிறது மற்றும் அன்பை வெளிப்படுத்துவதற்காக மட்டுமே அணைத்துக் கொள்வதற்கும், அவளிடம் நேரம் இருக்கிறது. ஆனால் வேலை செய்யும் தாயிடம் கூடுதல் வேலை செய்வதற்கு நேரம் இருப்பது இல்லை. ஒருவேளை குழந்தை அழுதால், அவளுக்கு அன்று ஏற்ப்பட்ட விரக்தியின் காரணமாக, அவள் தனது பொறுமையை இழந்து, அந்த குழந்தையை அமைதியாக இருக்குமாறு கடிந்து பேசலாம். “பேசாமல் இரு என்று சொன்னேன் இல்லை!” என்று அவள் கத்துவாள். அந்த குழந்தை தனது தாய் பேசுவதை புரிந்துகொள்ளும் பக்குவத்தை அடைந்து இருக்காது. தனது மென்மையான உருவத்தை நோக்கி, கோபமும் விரக்தியும் நிரம்பிய ஒரு உணர்வுப்பூர்வமான வெளிப்பாட்டை, அந்த குழந்தை எதிர்கொள்ளும் போது, அந்த ஆதரவற்ற குழந்தையின் உணர்வுகளை கற்பனை செய்து பாருங்கள். அதற்கு ஆதரவாக யார் இருப்பார்கள்? அதற்கு தனது அன்னையின் தோளிலும் அடைக்கலம் கிடைக்கவில்லை. ¶இத்தகைய சூழலில் எல்லா குழந்தைகளும் வளர்ந்தால், அடுத்த தலைமறை எத்தகைய பண்புகளுடன் இருக்கும்? அது வலுவாக தன்னம்பிக்கையுடன் இருக்குமா? அதற்கு எப்போதும் அன்பு வழங்கப்படாத நிலையில், அதனால் மற்றவர்களிடம் அன்பை வெளிப்படுத்த முடியுமா? அது பொறுமையுடன் புரிந்துகொள்ளும் திறனுடன் இருக்குமா? நிச்சயமாக முடியாது. சிறையில் இருக்கும் பலர், தங்கள் குழந்தைப் பருவத்தில் முழுமையாக புறக்கணிக்கப்பட்டு சித்ரவதைக்கு ஆளானவர்கள் என்பது நிரூபணமாகி உள்ளது. தங்கள் குழந்தைகளிடம் தவறாக நடந்துகொள்ளும் பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பெற்றோர்களால் தவறாக நடத்தப்பட்டவர்கள் என்பதும் நிரூபணமாகி உள்ளது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் மீது அக்கறையும் அன்பையும் செலுத்தவில்லை என்றால், சிறுவயதில் விரக்தியுடன் இருந்த காரணத்தினால், வயதில் முதிர்ந்து விரக்தியுடன் இருக்கும் ஒரு தலைமுறை முழுவதையும் சமூகம் ஏற்க வேண்டியிருக்கும். இவர்கள் பிற்காலத்தில் உலகை ஆளலாம். அப்போது உலகின் கதி என்னவாக இருக்கும்? அவர்கள் பெற்றோராக இருக்கும் பொறுப்பைப் பற்றி ஒரு வகை முன் உதாரணத்தை மட்டுமே உணர்ந்து

இருப்பதால், அவர்களும் அதே பாணியில் தங்கள் குழந்தைகளை வளர்க்கிறார்கள். குழந்தை வளர்ப்பில் அலட்சியமாக இருப்பது இயல்பான விஷயம் தான் என்றும், குழந்தைகளால் சிறுவயதில் இருந்தே தனியாக செயல்பட முடியும் அல்லது அவர்களை ஒரு செவிலி அல்லது சிறார் பராமரிப்பு மையங்களின் பொறுப்பில் விட்டுவிடலாம் என்றும் அவர்கள் சிந்திப்பார்கள். இது ஒரு வட்டம் போல விளங்கி, சிறுவயதில் புறக்கணிக்கப்பட்ட குழந்தை வயது முதிர்ந்ததும் கடுமையான வாழ்க்கையை சந்திக்கிறது, ஆனால் அன்பும் விசுவாசமும் நிரம்பிய ஒரு குழந்தைப் பருவம் ஒரு அன்பும் ஆனந்தமும் கலந்த வயது முதிர்ந்த வாழ்க்கையை உருவாக்குகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 131

சூட்சும ஆன்மீக பண்புடன் இருக்கும்

விசைப்பகுதி

நாம் தாயிடம் இருந்து பல முக்கிய விஷயங்களை கற்றுக்கொள்கிறோம். அவள் நமக்கு வழங்கும் விளக்கங்களில் மட்டும் அல்லாமல், அவள் வாழும் வாழ்க்கை முறை மூலமாகவும் கற்றுக்கொள்கிறோம். அவள் பொறுமையாக இருந்தால், நாம் பொறுமையை கற்றுக்கொள்கிறோம். அவள் கோபமாகவும் சோகமாகவும் இருந்தால், நாம் கோபமாகவும் சோகமாகவும் இருக்கக் கற்றுக்கொள்கிறோம். ஒரு தாய் வீட்டில் இருந்துக்கொண்டு, தான் ஒரு முன் உதாரணமாக விளங்கி குழந்தைகளுக்கு வாழ்க்கையின் சிறந்த பரிசுகளை வழங்கினால் வாழ்க்கை எவ்வளவு அற்புதமாக இருக்கும். அவள் அவர்களுக்கும் பல விஷயங்களை கற்றுத் தந்து, சுற்றியிருக்கும் உலகைப் பற்றி அவர்களுக்கு வலுவாக புரிந்துகொள்ளும் சக்திகளை கொடுத்து, அவர்களின் வாழ்நாள் முழுவதற்கும் தேவையான முக்கிய பண்புகள் மற்றும் கண்ணோட்டங்களையும், அந்த தாயால் வழங்க முடியும். அவள் குழந்தைக்கு நேரடியாக அன்பைப் பரிசாக வழங்கினாலும், அது மறைமுகமாக மனித நேயத்திற்கு வழங்கும் பரிசாகவும் இருக்கிறது அல்லவா? ஒரு குழந்தைக்கு எட்டு முதல் பத்து வயது ஆகும் வரை, அது தனது தந்தையிடம் இருந்து கற்றுக்கொள்வது இல்லை. ¶இலங்கை மற்றும் இந்தியாவில் இந்து சமயத்தை அழிக்க கிறுத்துவர்கள் வடிவமைத்த திட்டத்தை விளக்கும் புத்தகம் ஒன்று, நமது நூலகத்தில் உள்ளது. இந்து பெண்களை வீட்டை விட்டு வெளியே அழைத்து வந்து, வெளியுலகில் பணியாற்ற செய்வது அவர்களின் பிரதான யுக்திகளில் ஒன்றாக விளங்கியது. லௌகீகத்தில் ஈடுபாடு இல்லாத பெண்ணின் மூலம் வீட்டில் ஆன்மீக சக்தி உருவாக்கப்படுகிறது என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். ஒரு

பாதுகாப்பான வீடு மற்றும் குடும்பம், ஒரு பாதுகாப்பான கணவர் மற்றும் ஒரு பாதுகாப்பான மதத்தை ஒரு பாதுகாப்பான பெண் உருவாக்குகிறாள் என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். இந்து பெண் வீட்டில் இருக்கும் வரையில், இந்து சமயம் தொடர்ந்து நிலைத்து இருப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறாள் என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். பெண் வீட்டில் இருந்தால், அவள் மகிழ்ச்சியுடன் திருப்தியாக இருந்து குழந்தைகளை முறையாக பேணி பாதுகாத்து வளர்க்கிறாள் மற்றும் வீட்டை சுற்றி நட்புணர்வுடன் பல பயனுள்ள பணிகளை செய்யும் *தெய்வீக* சூட்சும சக்திகள் வாசம் செய்கின்றன. ஆனால் அவளும் கணவனும் வீட்டிற்கு வெளியே வேலை செய்தால், வீட்டை சுற்றி இருக்கும் பாதுகாப்பான விசைப் பகுதி உடைந்து, சூட்சும *அசுர* சக்திகள் வீட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்குகிறது. அந்த முறையில் அலட்சியம் செய்யப்பட்ட வீடு, கீழ்நிலை சூட்சும உலகில் இருக்கும் இழிவான *அசுர* சக்திகளின் இருப்பிடம் ஆகிறது. உங்களால் இந்த உயிர்சக்திகளை பார்க்க முடியாது, ஆனால் அவர்கள் அங்கே இருக்கிறார்கள், மற்றும் அவர்களின் இருப்பை உங்களால் உணர முடியும். எதிர்மறை சக்திகள் வாசம் செய்யும் வீட்டில் எதுவும் முறையாக இருப்பதில்லை. அந்த வீட்டில் நுழைந்ததும் வெளியேறும் ஆசை வந்துவிடும். இந்த சூழலையும் உணர்வுகளையும் குழந்தைகள் கிரகித்துக் கொள்கிறார்கள். குறைவான தற்காப்பு கவசங்களுடன் இருக்கும் குழந்தைகள், அத்தகைய தாக்கங்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் சூட்சுமமான உணர்வுடன் இருக்கிறார்கள். அவர்கள் எரிச்சல் அடைந்து, யாருக்கும் காரணம் புரியாமலேயே அழத்தொடங்கி அலறவும் ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்கள் எப்போதும் கீழ்ப்படியாமல் இருப்பார்கள். அவர்கள் எதற்காக கீழ்ப்படியாமல் இருக்க வேண்டும்? தாய் தனது வீட்டில் மத சார்புள்ள நேர்மறையான, பாதுகாப்பு விசைப்பகுதியை உருவாக்கி நிலை நிறுத்தத் தவறியதே அதற்கு காரணம். இதனால் உட்புற விசைப்பகுதி, குறிப்பாக அழிக்கும் பண்புள்ள சூட்சும தாக்கங்கள் வலுவாக இருக்கும் மக்கள்தொகை அதிகமுள்ள நவீன நகரங்களில், எதிர்மறை மற்றும் பலவகை குழப்பமளிக்கும் சக்திகளுக்கு எதிராக பாதுகாப்பின்றி இருக்கிறது. வீட்டின் உட்புற சூழ்நிலைக்குள் ஊடுருவும் இந்த எதிர்மறை அதிர்வுகளை, சூட்சும உணர்வுடன் இருக்கும் குழந்தைகள் கிரகித்துக் கொண்டு அவதிப்படுகிறார்கள்.

சனிக்கிழமை

பாடம் 132

மக்கள் மீது மக்களே

கவனம் செலுத்துதல்

தாயின் கட்டுப்பாடு மற்றும் அறிவுறுத்தலின் கீழ், சமய ஈடுபாடு வீட்டில் தொடங்குகிறது. தாய் உறுதியை பெறுவதற்கு கோயில் செல்கிறாள். இதன் காரணமாகவே, இந்துக்கள் ஒரு கோயிலுக்கு அருகில் வசிக்கிறார்கள். அவர்கள் அடுத்த தலைமுறையை வியக்க வைக்கும் ஆக்கப்பூர்வ ஆற்றலுடன் விசுவாசமான குடிமகன்களாக வளர்த்து, பூமியில் அமைதியை கொண்டு வந்து, அதை நிலைநிறுத்தும் நோக்கத்துடன், தெய்வத்தின் *சக்தியில்* இருந்து வலிமையை பெறுவதற்காக கோயில் சென்று, வீடு திரும்பியதும் அதே சூழலை பராமரிக்கிறார்கள். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்," என்று நம் முன்னோர்கள் கூறி இருக்கிறார்கள். ¶ஒரு குழந்தை தொட்டிலில் அலறிக்கொண்டு இருக்க, அந்த குழந்தையின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்காத குழந்தை காப்பாளர் அதைப்பார்த்து கூச்சலிடும் போது, தாய் அருகில் இல்லாமல் வெளியே வேலைக்கு சென்று இருந்தால், அந்த குழந்தை பூமியில் அமைதியை நிலைநிறுத்த தகுதியான குழந்தையாக இருக்காது. அந்த குழந்தை இன்று இருப்பதைப் போல, வருங்காலத்தையும் குழப்பத்தில் ஆழ்த்தும். அதனால் பொருத்தமான சூழலை உருவாக்குவது தந்தையின் கட்டுப்பாட்டில் இல்லாமல், தாயின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மதம் மற்றும் சமூகத்தின் எதிர்காலம் தாயை மட்டுமே நம்பி இருக்கிறது. வெளியுலகில் தனது மனைவியை இன்னொரு ஆண் மனதின் கட்டுப்பாட்
டில் இருக்க அனுமதிப்பது அல்லது அனுமதிக்காமல் இருப்பது, தந்தையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ¶வீட்டில் இருந்து பெண்கள் வெளிவருவதற்கு இரண்டாம் உலகப்போர் காரணமாக இருந்ததைப் போல, இன்னொரு மாற்றமும் மனித இனத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அன்று மரபியலை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு குதிரையை மற்ற குதிரைகளுடன் இனப்பெருக்கம் செய்ய, மக்கள் அக்கறையுடன் கற்றுக்கொண்டார்கள். ஆனால் மோட்டார் வாகனம் அறிமுகமாகி, அது குதிரைக்கு பதிலாக பயன்படுத்த ஆரம்பித்ததும், மக்கள் இனப்பெருக்கத்தைப் பற்றி மறந்து விட்டார்கள். இனப்பெருக்கம் செய்வதையும், ஒருவர் மற்றொருவர் மீது அக்கறை செலுத்துவதையும் மக்கள் மறப்பதற்கு மோட்டார் வாகனம் முக்கிய காரணமாகியது. மக்கள் குதிரைகளை வளர்த்த போது, அவை குடும்பத்தில் அங்கம் வகித்தன. மக்கள் தங்கள் குதிரைகள் மீது அக்கறை செலுத்தும் போது, தங்களுக்குள் அக்கறை செலுத்தவும் கற்றுக்கொண்டனர். மக்கள் தங்கள் குதிரைகளின் இனப்பெருக்கத்தின் மீது கவனம் செலுத்தும் போது, விவேகமான இனப்பெருக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் கற்றுக்கொண்டனர். அந்த காலத்தில் "நன்றாக வளர்க்கப்பட்ட" நபர் என்ற சொல்லை அடிக்கடி கேட்க முடிந்தது. ஆனால் இன்று அந்த சொல்லை கேட்பதே கடினமாக இருக்கிறது. உயிரியல் வல்லுனர்கள் மத்தியில் மரபுத்தொடர்ச்சி பற்றி பல உரையாடல்கள் நடந்துகொண்டு இருந்தாலும், மனிதர்களும் இனப்பெருக்கத்தின் இயல்பான செய்முறையில் ஈடுபட்டுள்ளதாக சாதாரண

மக்கள் கருதுவதில்லை. அவர்கள் இந்த முக்கிய விதிகள் மீது கவனம் செலுத்துவதில்லை, மற்றும் இதனால் முன்யோசனை மற்றும் ஒழுக்கம் இல்லாமல், உடல்கள் ஒரு முறையின்றி மேலும் பல உடல்களை இனப்பெருக்கம் செய்ய வழிவகுக்கிறது. அந்த உடல்களில் யார் வாழ்கிறார் என்பது யாருக்கும் சரியாக தெரியாது, மற்றும் பலர் அதன் மீது கவனம் செலுத்துவதும் இல்லை. நாம் இதைத்தான், மோட்டார் வாகனம் குதிரையின் வேலையை செய்ய ஆரம்பித்ததும், ஒரு சமூகமாக மறந்து விட்டோம். உங்களிடம் குதிரை இருந்த போது, நீங்கள் அதற்கு உணவு மற்றும் நீரை வழங்கவேண்டி இருந்தது. நீங்கள் அதற்கு பயிற்சி அளித்து, அதற்கு குதிரை சேணத்தை பொருத்தி, தேவையான உணவை வழங்கி, நிலையாக இருக்கச் செய்து அதை இனப்பெருக்கம் செய்ய வைக்க வேண்டியிருந்தது. இனப்பெருக்கத்தின் போது, உங்களிடம் இருக்கும் பெண் குதிரைக்கு ஒரு குதிரைப்பண்ணை தேர்ந்தெடுக்க வேண்டும் அல்லது உங்கள் ஆண் குதிரைக்கு பொருத்தமான பெண் குதிரையை தேடிப்பிடிக்க வேண்டும். ஆண் குதிரை மற்றும் பெண் குதிரையின் பண்புகள் கவனமாக கண்காணிக்கப்பட்டு, விளையும் மரபியல் மறுசேர்க்கை கவனமாக திட்டமிடப்பட்டது. இதன் காரணமாக அந்த காலத்தில், தங்கள் குழந்தைகளுக்கு பொருத்தமான துணைகளை நாடுவது பெற்றோர்களின் சுபாவமாக இருந்தது, மற்றும் அதனால் அவர்கள் குழந்தைகளிடம் இருந்து சுறுசுறுப்பாக, ஆக்கப்பூர்வமாக கடுமையாக உழைக்கும் குழந்தைகள் பிறந்தன. நாம் அத்தகைய அடிப்படை விஷயங்களை, நமது நவீன நாகரிகத்தின் அங்கமாக மெதுவாக மறக்க ஆரம்பித்து, நமது குழந்தைகளின் எதிர்காலம், அவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் துணைகள் மீது சிறிதும் கவனம் இல்லாமல் இருக்கிறோம்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 133

தொலைக்காட்சி ஏற்படுத்தும்

தாக்கம்

சமூகம் தனது குழந்தைகளை வளர்ப்பதில், தொலைக்காட்சி ஒரு பயனுள்ள கருவியாக இருந்தது இல்லை. அதை தினமும் பல மணிநேரங்கள் பார்க்கும் சமூகங்களில், அது குழந்தைகளின் முறையான கல்வியை பெரும்பாலும் நிறுத்திவிட்டது என்றே சொல்லவேண்டும். காடு அல்லது ஒரு மரத்தில் ஏறுவதன் மூலமாக ஒரு விறுவிறுப்பான ஆர்வத்தை உருவாக்குவதற்கு பதிலாக, இயற்கை மற்றும் கலை, இசை, இலக்கியம் மற்றும் உரையாடலின் அற்புதங்களை தெரிந்துகொள்வதற்கு பதிலாக, விளையாட்டு மற்றும்

பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு பதிலாக, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலம் குழந்தைகள் மனதின் எதிர்மறை மற்றும் நேர்மறை பகுதிகள் வழியாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் ஆக்கத்திறனை இழந்து, மந்தமாக, செயலற்று, தங்கள் சொந்த மனதை பயன்படுத்த என்றுமே கற்றுக்கொள்வது இல்லை. உண்மையில் தொலைக்காட்சியின் அனைத்து நிகழ்ச்சிகளும் எதிர்மறையாக இருப்பதில்லை. அதில் முழுமையாக கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் இருந்தாலும், தினமும் பல மணி நேரங்கள் மந்தமாக கிரகிப்பது, ஒரு குழந்தையின் மனம் மற்றும் மனவெழுச்சியின் வளர்ச்சிக்கு எந்த பலனையும் தராது. குழந்தைகள் சுறுசுறுப்பாக இருந்து, தங்களை பலவித அனுபவங்களில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ¶தாய் அருகில் இருந்தால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பல மணிநேரங்கள் தொடர்ந்து பார்ப்பதை தவிர்ப்பது மட்டும் அல்லாமல், அப்பட்டமான பாலியல் காட்சிகள், தற்செயலான மற்றும் நாகரீகமற்ற வன்மை, இழிவான பேச்சு மற்றும் மற்ற தீய தாக்கங்கள் குழந்தைகளுக்கு ஒரு தினசரி அனுபவமாக இல்லாமல் இருக்க, அவள் புத்திசாலித்தனமாக குழந்தைகளுக்கு வழிநடத்தலாம். நிகழ்ச்சி முடிந்ததும், அவள் குழந்தைகளை வெளியே விளையாட அனுப்பி விடலாம். அல்லது அவர்கள் தொலைக்காட்சியில் சற்றுமுன் கண்ட நிகழ்ச்சிகள், எவ்வாறு உண்மை வாழ்க்கைக்கு தொடர்புடையதாக அல்லது பெரும்பாலும் தொடர்பில்லாமல் இருக்கின்றன என்று விளக்குவது மேலும் சிறப்பாக இருக்கும். சிறுவர்களுக்கு முற்றிலும் பயனற்ற பொழுதுபோக்குகளில் ஒன்றாக இருக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மனதை உண்மையான பரமாத்துமாவிடம் இருந்து தொடர்ந்து விலக்கிக்கொண்டு செல்கின்றன. ¶புனிதமான *வேதங்கள்*, *திருக்குறள்* மற்றும் மற்ற புனிதமான சாத்திரங்களில் தென்படும் நமது பண்புகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மிகவும் அரிதாக தோன்றுகின்றன என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் தொலைக்காட்சி இன்றைய காலக்கட்டத்தில், வன்முறை மற்றும் காதல் கலந்து வாழ்க்கைப் பற்றி சமநிலை அல்லாத கண்ணோட்டத்தை குழந்தைகளுக்கு வழங்கி, அவர்களின் மனதில் வாழ்க்கை பற்றிய உண்மையை உருகுலைக்கிறது. இவை மிகவும் முக்கியமான விஷயங்கள். குழந்தைகளை எதிர்மறை தாக்கங்களில் இருந்து காப்பாற்றி, அந்த இளம் மனதை நேர்மறை வெளிப்பாட்டு பாதைகள் வழியாக நடத்துவது தாயின் பொறுப்பு ஆகும். ¶கால்நடைகளை வளர்த்து, மாடுகள் மற்றும் ஆடுகளிடம் இருந்து பால் கறக்கும் ஒரு பண்ணைத் தொழிலாளியின் வாழ்க்கையை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவர் தினமும் அதிகாலையில் எழுந்து கால்நடைகள் கவனிப்பில் தீவிரமாக இருக்கிறார். அவர் நகரத்தில் ஒரு பலசரக்குக் கடையில் பகுதிநேர வேலை செய்தால், அவரால் தனது கால்நடை வேலையை முழுமையாக செய்ய முடியாது. அந்த விலங்குகளுக்கு முறையான கவனம் தேவைப்படும். மாடுகள் மற்றும் ஆடுகள்

மற்றும் கோழிக்குஞ்சுகள் இருக்கும் பண்ணையில், அந்த விலங்குகள் மீது அதிக கவனம் தேவைப்படுவதால், ஒரு விவரமரித்த பண்ணைத் தொழிலாளி எப்போதும் பண்ணையில் இருந்துக்கொண்டு அந்த விலங்குகளின் மீது தொடர்ந்து கவனம் செலுத்தி வருவார். அவர் ஒரு பண்ணை தொழிலாளியாக தனது கடமையை முழுமையாக அறிந்து இருக்கிறார். ¶குழந்தையை தவிர வேறு எது முக்கியமானதாக இருக்க முடியும்? ஒரு குழந்தைக்கு இருபத்தி நான்கு மணி நேர கவனம் தேவை. அது அந்த வயதில் நடக்க, பேச, கற்க மற்றும் சிந்திக்க பழகிக்கொள்கிறது. அது கீழே விழுந்தால் ஆறுதல் சொல்லவேண்டும். அதுக்கு காய்ச்சல் வந்தால், தேவையான கவனம் செலுத்தி அந்த குழந்தையை குணப்படுத்த வேண்டும். அந்த கவனத்தை செலுத்த வேண்டியது ஒரு தாயின் கடமை ஆகும். இந்த கடமையை அவளுக்காக வேறு யாராலும் செய்ய முடியாது. அவள் அந்த ஆன்மாவை ஒரு தூல உடலுக்குள் அழைத்து வந்தாள், மற்றும் அவள் அந்த குழந்தையை ஒரு நேர்மறையான மற்றும் திருப்திகரமான வாழ்க்கைக்கு தயார் செய்ய வேண்டும். ¶பண்ணை தொழிலாளி தனது விலங்குகள் மீது கவனம் செலுத்தவில்லை என்றால், அவர் ஒரு தீய *கர்மவினையை* உருவாக்குகிறார். விலங்குகள் அவதிப்படுகின்றன. பண்ணையின் செயல்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. பண்ணை பாதிக்கப்படும் போது சமூகம் பாதிக்கப்பட்டு, அந்த பண்ணை தொழிலாளியும் பாதிக்கப்படுகிறார். தனது *ஸ்த்ரீ தர்மத்தை* அலட்சியம் செய்து, வெளியுலகில் வேலைக்கு சென்று தனது குழந்தைகளின் உடல், மனவெழுச்சி, அறிவு மற்றும் ஆன்மீகத் தேவைகளை பேணி வளர்க்காத தாயும் ஒரு கொடிய *கர்மவினை* உருவாக்குகிறாள். இதை அவள் தனது உள்ளத்தில் அறிந்து இருந்தாலும், அவள் விவேகமில்லாத மக்களால் அல்லது அவள் வாழ்வதற்கு ஒரு வாழ்க்கை தான் இருக்கிறது மற்றும் வீட்டில் இருந்தால் திருப்தி அவளுக்கு கிடைக்காது என்பதால், அவள் வீட்டை விட்டு வெளியே வந்து தனது திறமையை வெளிப்படுத்தி தனது சொந்த பாதை மற்றும் அதிஷ்டத்தை தேடிக்கொள்ள வேண்டும் என்று அவளுக்கு அறிவுறுத்தும் ஒரு பெரிய இயக்கத்தால் வழிநடத்தப்பட்டு இருக்கலாம். நீங்கள் இந்த கருத்துக்களை எல்லாம் கேட்டு இருப்பீர்கள். இவை அனைத்தும் தவறு என்று நான் கூற விரும்புகிறேன். அவை அவற்றின் மீது கவனம் செலுத்தும் தாய்க்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி, பிறகு அவள் வீட்டில் இல்லாத காரணத்தால் தியாகம் செய்த குடும்பத்தின் அழிவையும் ஏற்படுத்துகிறது. இறுதியில் தனது குடும்பம் மற்றும் தான் அடைந்த இழப்பால் விரக்தி அடையும் போது, அவை அவளுடைய துக்கத்திற்கும் காரணமாகிறது.

ஸ்த்ரீ சக்தி, ஸ்த்ரீ தாம

स्त्रीशक्ति स्त्रीधाम



பெண்ணின் சக்தி, பெண்ணின் இராச்சியம்

நீ உனது நடத்தையால் உன் மாமனாரின் மனதில் ஒரு இராணியாக இரு, உன் மாமியாரின் மனதில் ஒரு இராணியாக இரு, உன் மைத்துனிகள் மனதில் ஒரு இராணியாக இரு, உன் மைத்துனர்கள் மனதில் ஒரு இராணியாக இரு.

ரிக் வேதம் 10.85.46. ஹிவே, ப. 139



ஒரு தாய் தாலாட்டு பாடிக்கொண்டு இருக்க, அவள் குழந்தை பூமி வடிவில் இருக்கும் சிறிய பொம்மையுடன் விளையாடிக்கொண்டு இருக்கிறது. இது உலகெங்கும் தாய்மார்கள் குழந்தைகளுக்கு தங்கள் சமய கலாச்சாரம் மற்றும் பண்புகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதை குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது. அவள் தனது குழந்தையை இலங்கை யாழ்ப்பாணத்தில் இருக்கும் நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில் வளர்க்கிறாள்.

திங்கட்கிழமை

பாடம் 134

வீட்டின்

புனிதத்தன்மை

இரண்டாம் லோகமான சூட்சும லோகத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, வீடு என்பது ஒரு குடும்ப கோயிலாக விளங்குகிறது, மற்றும் அந்த ஆன்மீக சூழலை உருவாக்குவதற்கு மனைவி மற்றும் தாய் பொறுப்பாக இருக்கிறாள். கணவன் அந்த புனிதமான இடத்தில் நுழையும் போது, வெளியுலக எண்ணங்களுடன் நுழையக்கூடாது. அவள் தனது கடமையை முறையாக செய்தால், அவன் வீட்டில் இயல்பாக அடைக்கலத்தை தேடிக்கொள்வான். அவனால் அங்கே மீண்டும் மனஅமைதியை பெறமுடியும், மற்றும் அதனால் வெளியுலகம் முழுவதும் நிரம்பியுள்ள மன அழுத்தம் தரும் சூழ்நிலைகளை அடுத்தநாள் எதிர்கொள்வதற்கு, தனக்கு தேவையான புத்துணர்வை வழங்கிக் கொள்ள முடியும். இந்த தொழில்நுட்ப யுகத்தில் ஒரு மனிதனுக்கு இந்த அடைக்கலம் தேவைப்படுகிறது. அவனுக்கு தனது வாழ்வில் அந்த உட்புற சமநிலை தேவைப்படுகிறது. அவன் வீடு திரும்பும் போது, அவள் அவனை நுழைவாயிலில் வரவேற்று, உள்ளே நுழையும் முன்பாக அவனது ஒளி உடலை சுத்தம் செய்வதற்கு *ஆரத்தி* எடுக்கிறாள். இது மற்றும் மற்ற வழக்கங்கள் மூலம் வீட்டின் புனிதத்தன்மை பாதுகாக்கப்படுகிறது. அவன் அந்த புனிதமான இடத்தில் நுழையும் போது அவள் தனது *ஆனந்தமய கோசத்திலும்*, குழந்தை தனது *ஆனந்தமய கோசத்திலும்* இருப்பார்கள், மற்றும் அதன் பிறகு அவன் தனது *ஆனந்தமய கோசத்தில்* மனப்பூர்வமான கவனத்தை பெறுகிறான். ஒரு சமநிலையாக இல்லாமல், வரையறுக்கப்பட்ட வெளிப்புற மனதைக் குறிக்கும் உணர்வுள்ள மனதை விட்டு அவன் வெளியேறி, இயலுணர்வு மனதிற்குள் நுழைகிறான். அவன் தனது லௌகீக பிரச்சனைகளுக்கு இயலுணர்வு தீர்வுகளை உடனடியாக பெறுகிறான். ¶ஒரு நல்ல மனைவியின் துணை இருக்கும் போது, அவனால் வெளியுலகில் தனது *புருஷ தர்மத்தில்* எப்படி வெற்றி பெறாமல் இருக்க முடியும்? அவள் இயல்பான புலனுணர்வு மற்றும் இயல்பான இயலுணர்வுடன் இருக்கிறாள். அவள் காலை மற்றும் மாலை வரை அவனது நரம்பியல் அமைப்பின் மீது தாக்குதல் நடத்தும் சக்திகளை மென்மைப்படுத்தி, அவனுடைய புத்தியை சமநிலைப்படுத்துகிறாள்.

அவள் தனது *ஸ்த்ரீ தர்மத்தை* நிறைவேற்றும் போது, ஊக்கமளிப்பு மற்றும் அன்பு இயல்பாக வெளிவருகிறது. ஒரு ஆண் தனது வாழ்க்கையில் இந்த சமன்செய்யும் முயற்சிகள் இல்லாமல், அதிக அகநோக்கியாக, அதிக உள்ளுணர்வுடன் இருக்கக்கூடும். ¶ஒரு பெண் வேலை செய்தால், அவளால் இந்த சமநிலையை வழங்க முடியாது. அவள் ஒரு ஆணை போன்று சிந்தித்து செயல்பட வேண்டியிருக்கும். அவள் சிறிது பிடிவாதத்துடன் இருந்து, தனது மனவெழுச்சிகளை சுற்றி ஒரு பாதுகாப்பு கவசத்தை உருவாக்கிக்கொள்கிறாள். அதன் பிறகு அவள் வீடு, ஆணின் சக்தி மற்றும் பெண்ணின் சக்திக்கு மத்தியில் இருந்த ஒரு சமநிலையை இழக்கிறது. கணவன் வீடு திரும்புவதற்கு பதினைந்து நிமிடங்கள் முன்பாக வீடு திரும்பும் மனைவியின் வாழ்க்கையை ஒரு உதாரணமாக பார்க்கலாம். அவள் நாள்முழுவதும் அலுவலகத்தில் கடுமையாக வேலை செய்ததால், வீட்டிற்கு வரும்போது எரிச்சலுடன் இருக்கிறாள். குழந்தைகள் பாட்டியின் வீட்டில் இருந்து வருகிறார்கள் அல்லது அவள் குழந்தை காப்பாளரை வீட்டிற்கு அனுப்பி வைக்கிறாள். அவன் வீட்டிற்கு வருவதற்கு முன்பாக இரவு விருந்துக்கு ஏதாவது தயார் செய்ய சமையலறைக்கு விரையும் வழியில், முகத்தில் தண்ணீர் தெளித்துக்கொண்டு சிறிது பொலிவுடன் செயல்படுகிறாள். எரிச்சலுடன் இருக்கும் அவள் தன்னை அமைதி மற்றும் ஆசுவாசப்படுத்திக்கொண்டு, தனது மன அமைதியை மீண்டும் பெற முயற்சி செய்கிறாள். அவளது சூட்சும உடல் எரிச்சலுடன் இருக்கிறது. குழந்தைகளின் சூட்சும உடல்கள் எரிச்சலுடன் உள்ளன. தனது பணிச்சுமையால் எரிச்சலுடன் இருக்கும் கணவன், இந்த பதட்டமான சூழ்நிலையில் நுழைந்து, மேலும் குழப்பத்தை அனுபவிக்கிறான். அவன் அமைதியான மாலைப்பொழுதை அனுபவிக்கும் நோக்கத்துடன் வீடு திரும்பி இருந்தான். அவனுக்கு அந்த அமைதி நிச்சயமாக கிடைக்கப்போவது இல்லை. அவனுக்கு தான் புறக்கணிக்கப்படுவதாக தோன்றுவதால் ஏமாற்றம் அடைகிறான், மற்றும் அதனால் தீவிர குழப்பத்தில் கடுமையாக சில வார்த்தைகளை பேசி நிலைமையை மேலும் மோசமாக்குகிறான். *பிராண* சக்திகள் தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டை இழக்கின்றன. அந்த சூழ்நிலையை சமாளிப்பது இருவருக்கும் முற்றிலும் கடினமாக இருக்கிறது. மேலும் நாட்கள் செல்ல செல்ல, நிலைமை நல்ல முன்னேற்றம் ஏற்படாமல் மோசமாகிக் கொண்டு செல்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 135

மனைவியிடம் இருக்கும்

விசேஷமான சக்தி

இன்று திருமணங்களின் நிலைத்தன்மை குறைந்து, எனக்கு தெரிந்த வரை அறுபது முதல் எழுபது வரையிலான திருமணமான தம்பதிகள் வேதனைகளை அனுபவித்து விவாகரத்து பெறுவதற்கு, நான் முன்பு குறிப்பிட்ட சூழ்நிலை முக்கிய காரணங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஆனால் என்றுமே விவாகரத்து பெறும் நோக்கத்துடன் தம்பதிகள் திருமணம் செய்து கொள்வது இல்லை. அதற்கு *பிராண சக்திகள்* தான் காரணம். நீங்கள் இரண்டு காந்தங்களை ஒரு முறையில் வைக்கும் போது ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்கின்றன. ஆனால் ஒன்றை திருப்பி வைக்கும் போது, அவை தங்களை விலக்கிக் கொள்கின்றன. மக்களை ஒன்றாக இணைத்த சக்தியை முறையாக பயன்படுத்தாத போது, அது அவர்களை விலக்கி, அவர்களுக்குள் வெறுப்பை ஏற்படுத்துகிறது. அவர்களால் நேருக்குநேர் பார்த்து பேச முடிவது இல்லை. அதன் பிறகு அவர்கள் தங்களுக்குள் பேசி சமரசம் செய்துகொள்ளும் நோக்கத்துடன் வெளியே விருந்து சாப்பிட செல்கிறார்கள். அது உலக வாழ்க்கையில் அதிக ஆழமாக மூழ்க வைக்கும், இன்னொரு ஏமாற்றம் தரும் *அசுர* சூழலாக விளங்கி பலன் அளிக்காத போது, அவர்கள் அதிக ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர். அவர்கள் அருகில் இருக்கும் கோயிலுக்கு சென்று குலதெய்வத்தை வழிபட்டு வாழ்ந்தால், அது நல்ல பலனை தரும். அவர்கள் ஒரு மாறுபட்ட மனநிலையுடன் வீடு திரும்புவார்கள் மற்றும் தங்களுடைய மனவெழுச்சி சூழலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவர்கள் உணர்ந்துக்கொள்வார்கள். எதனால் கோயிலுக்கு செல்வதன் மூலம் பலன் கிடைக்கிறது? ஏனென்றால் கோயிலில் இறைவன் அந்த கோயில் தெய்வமாக வாசம் செய்து, உட்புற நரம்பியல் அமைப்பின் சக்திகளை மாற்றி அமைத்து, மனம் மற்றும் மனவெழுச்சி சக்திகளில் உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறார். ¶வீட்டில் தாய் சக்தி தெய்வம் போல விளங்குகிறாள். அவள் சக்தியாக, அந்த வீட்டின் ஆன்மாவாக விளங்குகிறாள். அதனால் அவள் வீட்டில் இருக்க வேண்டும். அவளை அன்பு மற்றும் மரியாதையுடன் கவனமாக உபசரிக்க வேண்டும். அவள் தனது சக்தியை வெளிப்படுத்தி தனது கணவனுக்கு ஆதரவை வழங்கி, கணவன் துணிச்சலான முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெறுவதற்காக, அவளுக்கு தேவையானது மற்றும் விரும்புவதை அனைத்தையும் அவளுக்கு வழங்க வேண்டும். அவள் மனம் புண்பட்டு, மனச்சோர்வுடன், வெறுப்பு அல்லது ஏமாற்றத்தில் இருக்கும் போது, அவள் தானாக அந்த சக்தியை ஒடுக்கிக்கொண்டு, அதனுடன் அவனது தரக்குறைவான வெளியுலக வெற்றியை சமரசம் செய்து கொள்கிறாள். மக்கள் அவனை விட்டு விலகி செல்கின்றனர். அவனது வேலை, வியாபாரம் அல்லது ஆக்கப்பூர்வமான திறமைகள் வருந்துகின்றன. அவளுடைய இந்த மாபெரும் *சித்தியை*, இந்து சமயத்தை சேர்ந்த பெண்கள் நன்றாக அறிந்து இருக்கிறார்கள். ¶அவளுக்கும் குழந்தைகளுக்கும் வேண்டியதை வழங்குவது, அவனுடைய *புருஷ தர்மம்* அல்லது ஆணின் கடமை ஆகும். அவள் இல்லத்தை

உருவாக்க ஒரு நல்ல வீட்டை அவன் அவளுக்கு தரவேண்டும், மற்றும் அவள் தனது இல்லத்தில் பாதுகாப்பாக மற்றும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அவளுக்கு அழகு பொருட்கள், தங்கம் மற்றும் நகைகள் மற்றும் ஆடைகள், காதில் வலி ஏற்படும் அளவிற்கு நீளமான தங்க காதணிகள், அதிகமான வளையல்கள் என்று கணவன் அவளுக்கு தேவையான எல்லா சிறந்த பொருட்களையும் வாங்கித் தரவேண்டும். அதற்கு பதிலாக அவள் வழங்கும் உலகின் பாதுகாப்பான மற்றும் அமைதியான இடத்தில், அவன் அன்றாட வாழ்வு வழங்கும் மன அழுத்தங்களில் இருந்து தப்பித்து, தனது ஆன்மீக கண்ணோட்டத்தை மீண்டும் பெற்று, சமயம் சார்ந்த தனது *சாதனாக்கள்* மற்றும் தியானங்களை செய்து, தனது குடும்ப வாழ்வை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க முடிகிறது. அவள் இவ்வாறு தனது குடும்பம், சமூகம் மற்றும் உலகிற்கு மகிழ்ச்சி மற்றும் மன அமைதியை கொண்டு வருகிறாள்.

புதன்கிழமை

பாடம் 136

ஒரு கோயில்

போன்று இருக்கும் வீடு

வீடும் கோயிலும் இணைந்து செயல்படும் போது, அது குடும்பத்திற்குள் கலாச்சாரம் மற்றும் சமயத்தை வீட்டிற்குள் கொண்டு வருகிறது. குடும்பம் கோயிலுக்கு செல்கிறது, மற்றும் குடும்பத்தின் அடுத்த திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு கோயில் ஆசிகளை வழங்குகிறது. பெண் வீடு திரும்புகிறாள். இறைவன் மற்றும் *தேவர்களின் சக்தி* தங்கள் வீட்டிற்குள் வரவேண்டும் என்பதற்காக அவள் பூஜை அறையில் ஒரு எண்ணெய் விளக்கை தொடர்ந்து எரியவைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய தெய்வ நம்பிக்கையுள்ள *ஸ்த்ரீ தர்மத்தில்* ஆழகான பழக்கங்களில் ஒன்றாக விளங்கும் இது, குடும்பம் மற்றும் சமய ஈடுபாடு மேலும் தொடர்வதற்கு மிகவும் நுணுக்கமாக மற்றும் முக்கியமானதாக விளங்குகிறது. தான் வெளியுலக தாக்கங்களால் தூண்டப்படுவதை தவிர்க்க, அவள் அவற்றை தடை செய்யும் நோக்கத்துடன் மனவெழுச்சி உடலில் வாழ வைக்கும், லௌகீக வாழ்க்கையின் அழுத்தங்கள் மற்றும் நலிசோர்வுகளால் தடைபடாமல், தன் மீது மற்ற ஆண்கள் செலுத்தும் காமம் நிறைந்த சிந்தனைகளால் அவள் சூட்சும உடல் மாசு படாமல் இருப்பதே, இவை அனைத்திற்கும் காரணம் ஆகும். அவள் மனவெழுச்சி சூட்சும உடலில் வாசம் செய்யவில்லை. அவள் அமைதியாக அன்பு வடிவமாக இருக்கும் *ஆனந்தமய கோசத்தில்* வாழ்ந்து தனது *தர்மத்தை* பூர்த்தி செய்துக் கொண்டு, *சாந்நித்தியம்* என்கிற ஆத்மார்த்தமான இருப்பை வெளிப்படுத்திக் கொண்டு

இருக்கிறாள். அவள் பெண்ணாக இருக்க பிறவி எடுத்தவள், மற்றும் அதுவே பெண்களின் நடத்தையாக இருக்க வேண்டும். ¶அவள் தான் எடுத்த பிறவியின் கடமையை குறிக்கும், *தார்மீக* கடமையை செய்யவில்லை என்றால், அவள் தீய *கர்மவினையை* சேகரித்துக் கொள்கிறாள். அவள் வீட்டை விட்டு வெளியே வேலை செய்ய செல்லும் ஒவ்வொரு முறையும், *குக்கர்மவினையை* உண்மையில் உருவாக்குகிறாள். அந்த எதிர்மறை *கர்மவினை*, அவளது சூட்சும உடல் மற்றும் அவள் கணவனின் சூட்சும உடல் மற்றும் அவர்களின் குழந்தைகளின் சூட்சும உடல்கள் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை வழங்குகிறது. ¶இந்த ஒரு வாழ்க்கை முடிந்த பிறகு சொர்க்கம் அல்லது நரகத்திற்கு செல்ல வேண்டும் என்பது யூதர்கள்-கிறித்துவர்கள்-இசுலாமியர்கள் கருத்து ஆகும். அந்த கருத்து, சாதிப்பதற்கு அதிக நேரம் இல்லாததைப் போன்ற ஒரு உணர்வை வழங்குகிறது. "நீங்கள் இந்த பிறவியில் எல்லாம் பெறவேண்டும், உங்கள் உயிர் பிரிந்து விட்டால் உங்களால் மீண்டும் திரும்ப முடியாது, அதனால் உங்களால் முடிந்த வரை அனைத்து இன்பங்களையும் பெற்று விடவேண்டும்," என்றும் சிலர் சிந்திக்கிறார்கள். இதனால் தனக்கு கிடைக்கவேண்டிய அனைத்தும் கிடைக்கவில்லை என்ற எண்ணம் நவீன மேற்கத்திய பெண்ணுக்கு ஏற்படுவதால், அவளுக்கு ஆணின் உலகம் இரட்டிப்பு வசீகரத்துடன் காட்சி அளிக்கிறது, ஏனென்றால் தான் மீண்டும் திரும்பி வரப்போவது இல்லை என்ற எண்ணத்துடன் அவள் வாழ்க்கையை கடந்து செல்கிறாள். அதனால் அவள் கண்களுக்கு ஒரு ஆணின் வாழ்க்கை மிகவும் வசீகரமாக தென்படுகிறது. வீட்டில் எப்போதும் இருந்துக்கொண்டு எதையும் பார்க்காமல், யாரையும் சந்திக்காமல், ஒரு குடும்பத்தை மற்றும் குழந்தைகளை பேணி பாதுகாப்பதில் நேரத்தை விரயம் செய்ய அவள் விரும்புவதில்லை. அவள் வீட்டில் இருந்தால் தனது சுதந்திரத்தை இழப்பதாக அறிவுறுத்தப்பட்டுள்ளதால், அவள் வீட்டிற்கு வெளியே சென்று, ஆணின் உலகில் வேலை செய்ய விரும்புகிறாள். அதனால் வெளியே சென்று வேலை செய்வது, வாழ்க்கையை பார்த்துக்கொண்டே அனுபவிப்பது மற்றும் மக்களுடன் கலந்து ஆலோசிப்பது மற்றும் புதியவர்களை சந்திப்பதில் அவளுக்கு இருக்கும் ஆர்வத்தை உங்களால் புரிந்துக் கொள்ள முடிகிறது. ¶ஆனால் ஒரு பாரம்பரிய இந்து பெண், வாழ்க்கையை அவ்வாறு அணுகுவது இல்லை. இந்த ஆன்மா ஒரு பெண்ணின் உடலில் ஒரு முறை மட்டுமே பிறவி எடுக்கும் என்பதை அறிந்து இருக்கும் அவள், ஆன்மாவின் வளர்ச்சிக்காக, ஒரு *தர்மத்தை* செய்வதற்காகவே, ஒரு கடமையை நிறைவேற்றவே, இந்த முறை ஒரு பெண்ணின் உடலில் பிறவி எடுத்துள்ளோம் என்பதையும் அறிந்து இருக்கிறாள். ஒரு சமூகத்தின் காப்பாணியாக இருந்து வீடு மற்றும் குடும்பத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் தனது குழந்தைகளுக்கு தாயாக, தனது கணவனுக்கு மனைவியாக இருப்பதே அவள் கடமை ஆகும். தனது வீட்டில் தனக்கு வெகுமதிகள் அதிகம் என்பதை அவள்

அறிந்து இருக்கிறாள். தனக்கு ஒரு ஆணின் கடுமையான உழைப்பு மற்றும் பொறுப்பு மட்டுமே கிடைக்கவில்லை என்பதையும், பண்புகளில் முற்றிலும் மாறுபட்டு இருந்தாலும், ஆணின் *புருஷ தர்மத்திற்கு* சமமான சிறப்புடன் தனது *ஸ்த்ரீ தர்மம்* இருப்பதையும் அவள் அறிந்து இருக்கிறாள். இவள் இவற்றை அறிந்து இருப்பதால், அவள் தனது *தர்மத்தை* மகிழ்ச்சியுடன் பூர்த்தி செய்கிறாள்.

வியாழக்கிழமை

பாடம் 137

வீட்டில் இருக்கும்

தாய்

"நான் வேலை செய்யவில்லை என்றால், வீட்டு செலவுகளுக்கு பணம் எங்கிருந்து வரும்?" என்று ஒரு பெண் சிந்தித்துக் கொண்டிருக்கலாம். பொருளாதாரம் பல பெண்கள் வேலை செல்வதற்கு ஒரு காரணமாக விளங்குகிறது. உலக பொருளாதாரம் தினமும் சிக்கலாகிக் கொண்டு இருக்கிறது, மற்றும் குறிப்பாக இன்று குடும்ப அமைப்பு வலுவாக இல்லாத மேற்கத்திய நாடுகளில், பல சிக்கல்களுக்கு மனைவி வேலைக்கு செல்வது முதல் தீர்வாக விளங்குகிறது. இது ஒரு துக்ககரமான தீர்வு ஆகும். இதனால் பெரும்பாலான சமயங்களில் கிடைக்கும் வெகுமதிகளை காட்டிலும், செய்யும் தியாகங்கள் அகிதமாக இருக்கின்றன. தங்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ள வீட்டில் இருக்குமாறு நான் இளம் மனைவிமார்களிடம் பலமுறை கேட்டுக்கொண்டுள்ளேன். அப்போதெல்லாம் அவர்களும் அவர்களின் கணவன்மார்களும், இதனால் ஏற்படும் சிக்கல்களை நினைத்து பதட்டம் அடைந்தனர். ஆனால் மனைவி வீட்டில் இருந்து, தனது கணவனை திடப்படுத்த முயற்சி செய்யும் போது, அவன் விரைவில் நம்பிக்கை, ஆக்கத்திறன் மற்றும் உற்சாகத்தை பெற்று மேன்மை அடைகிறான். அவன் மீண்டும் ஊக்கத்தை பெற்று, பணத்தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ந்து ஏதாவது ஒரு வழியை தேடிக்கொள்கிறான். ¶தாய் வீட்டில் இருக்கும் வரை, எல்லாம் சிறப்பாக இருக்கிறது. வீட்டில் பாதுகாப்பு இருக்கிறது. இந்த பாதுகாப்பு இல்லாமல், ஒரு குடும்பம் சிதறத் தொடங்குகிறது. தன் தாயில்லாததால் பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் ஒரு குழந்தையின் நிலையை சற்று நினைத்துப் பாருங்கள். தாய் வீட்டில் இருக்கும் போது, வீட்டில் பாதுகாப்பு வலுவாக இருக்கிறது. பெண் வீட்டில் இருந்துக்கொண்டு, வீட்டு வேலைகளை எப்படி செய்யவேண்டும் என்று புத்தகத்தில் படிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், ஒரு தாயாக இயல்பாக தனது வேலைகளை செய்துக்கொண்டு இருக்கும் வரை, வீட்டிற்கு தேவையான

ஆதரவுகளை கணவன் வழங்க வேண்டும் மற்றும் வீட்டிற்கு ஆதரவு வழங்க தான் கடன்பட்டு இருப்பதாக அவன் உணர்கிறான். இவை அனைத்தும் பலன் தருவதற்கு அந்த வீட்டின் அடிப்படையாக சமயம் இருக்க வேண்டும். பெண்கள் வெளியுலகில் வேலை செய்ய செல்லும் போது, அவர்கள் தங்கள் மதத்தில் ஆழ்ந்து ஈடுபடுவதை தியாகம் செய்கிறார்கள். அவர்களுக்கு சமய வாழ்க்கை என்பது வெறும் ஒரு சமூக விவகாரமாக விளங்குகிறது. இந்நிலை கிழக்கு மற்றும் மேற்கு நாட்டில் இருக்கும் சமயங்களில் நிலவுகிறது. தாய் வீட்டில் இருக்கும் வரை, விண்ணுலக *தேவர்கள்* வீட்டிற்கு அருகில் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ¶உங்களது சிறு வயதில் எத்தனை பேரது தாய், வீட்டில் இருந்துக்கொண்டு உங்களது வளர்ப்பில் கவனம் செலுத்தி வந்தாள்? நான் சொல்வது உங்களுக்கு புரிகிறது என்று நினைக்கிறேன். நீங்கள் குழந்தையாக இருந்த போது, அவள் வீட்டில் இல்லையென்றால் நிலைமை என்னவாக இருந்திருக்கும்? ஆளில்லாத வீட்டில் நீங்களே உங்களுக்கு நொறுக்குத்தீனி தயார் செய்து இருப்பீர்கள். உங்களை கவனிக்க யாருமில்லாத ஏக்கத்தை நீங்கள் உணர்ந்து இருப்பீர்கள். நீங்கள் வீட்டில் தனியாக இருந்ததால், பயத்தில் சந்தேகம் ஏற்பட்டு, வீட்டின் ஒதுக்குப்புறமான இடத்தில் யாராவது மறைந்து இருக்கிறார்களா என்று சுற்றிப்பார்த்த சம்பவமும் நடந்து இருக்கலாம். நீங்கள் என்றுமே தாய் வழங்கும் பாதுகாப்பான உணர்வை உணர்ந்து இருக்கமாட்டீர்கள். ¶மாலையில் தாய் வீட்டிற்கு இறுதியாக திரும்பும் போது, அவள் மனதில் மற்ற எண்ணங்கள் நிரம்பி இருக்கின்றன. அவள் சோர்வாக இருக்கிறாள். அவள் நாள் முழுவதும் கடினமாக உழைத்த பிறகும், வீட்டிற்கு வந்து மேலும் உழைக்க வேண்டியிருக்கிறது. தன் வேலைகளை சுயமாக செய்துக்கொள்ள தெரியாமல் நிராதரவாக இருக்கும் தனது குழந்தையைப் பற்றி அவள் சிந்திப்பதே இல்லை. அவள் வீட்டிற்கு திரும்பி, "இன்று அலுவலகத்தில் சந்தித்த அழகான நபரின் முகத்தை என்னால் மறக்க முடியவில்லை. அவர் கனவிலும் வருகிறார். எனக்கு ஒரு கணவர் இருக்கிறார் அதனால் நான் அதைப்பற்றி நினைக்கக்கூடாது ஆனால்..." என்று அவளுக்கு எண்ணங்கள் தொடர்ந்து அலைமோதிக்கொண்டு இருக்கின்றன. வீட்டில் முதல் முறையாக வாக்குவாதங்கள் தோன்றுகின்றன. இதைப்பார்த்து நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சிறிது நேரம் வருத்தத்துடன் இருக்கிறீர்கள். சிறிது அழுகிறீர்கள். சிறிது நேரம் கழித்து, நீங்களே உங்களுக்கு ஆறுதல் வழங்கிக்கொண்டு, உங்களுக்கு தேவையானவற்றை செய்துகொள்கிறீர்கள் அல்லது இந்த சோகமான சூழ்நிலையில் இருந்து விரைவில் விடுதலை பெற முயற்சி செய்கிறீர்கள். உலக வாழ்க்கையை எதிர்கொள்வதற்கு தேவையான பக்குவத்தை பெறும் முன்பாக, நீங்கள் சிறிய வயதில் உலகில் சுயமாக செயல்படத் தொடங்குகிறீர்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 138

ஒரு பெண்ணாக

எடுக்கும் பிறவி

இந்து சமயத்தை சேர்ந்த பெண், தான் ஆண்களை நகல் செய்யாமல் தனது கடமையை செய்வதற்காகவும், ஒரு பெண்ணின் *தர்மத்தை* செய்வதற்காகவும் ஒரு பெண்ணின் உடலில் பிறவி எடுத்துள்ளதை அறிந்து இருக்கிறாள். தனது குழந்தைகளுக்கு தாயாகவும், தான் கடவுளாக வணங்கும் கணவனுக்கு மனைவியாக இருப்பதும் அவளுடைய கடமைகள் ஆகும். ஒரு ஆணின் உடலில் பிறவி எடுத்துள்ளதால் தோன்றும் கடமைகளை ஒரு ஆண் விருப்பத்துடன் செய்வதைப் போல, அவளும் தனது கடமைகளை விருப்பத்துடன் செய்கிறாள். இந்து சமயத்தை சேர்ந்த பெண், தான் சிறுமியாக இருக்கும் போதே *ஸ்த்ரீ தர்மத்தை* செய்வதற்கு பயிற்சி பெறுகிறாள். அவள் தனது வீட்டிலேயே தனது இயல்பான ஆக்கத்திறனை வெளிப்படுத்த வழிகளை தேடிக்கொள்கிறாள். அவள் கவிதை எழுதலாம் அல்லது ஒரு ஓவியராக சித்திரங்களை வரையலாம். அவளுக்கு தையல் கலை அல்லது பூத்தையல் வேலை அல்லது தோட்டக்கலை அல்லது இசை போன்ற விசேஷமான திறமைகள் அவளிடம் இருக்கலாம். அவள் துணி நெய்து தனது குடும்பத்திற்கு ஆடைகளை உருவாக்க கற்றுக்கொள்ளலாம். அவள் தேவை ஏற்பட்டால், தனது திறமைகளை பயன்படுத்தி வீட்டில் இருந்தபடியே தனது குடும்ப வருமானத்தை விருத்தி செய்யலாம். இந்து சமயத்தை சேர்ந்த மனைவி மற்றும் தாயின் வாழ்க்கையில் அலுப்பு ஏற்படாமல் இருக்கும் அளவிற்கு அவள் ஆக்கப்பூர்வமாக இருப்பது உட்பட, அவள் தனது ஆக்கப்பூர்வமான சக்திகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு பல வழிகள் உள்ளன. அவள் தனது சமயத்தை முழுவதுமாக அனுட்டானம் செய்து, சாத்திரங்களை படித்து, *பஜனைகளை* பாடுவதுடன் தனக்குள் தனது ஆன்மீக வாழ்க்கையை வலுவாக வைத்துக் கொள்ளும் சுதந்திரத்துடன் இருப்பது அவளுக்கு கிடைத்த வரம் ஆகும்.

¶இதைத்தவிர மனைவி வீட்டில் இருந்தபடியே கணவனுக்கு அவனது வேலையில் உதவியாக இருக்கலாம். இதற்கு நடைமுறையில் வாய்ப்பு குறைவாக இருந்தாலும், அவள் தனது கணவனிடம் இருந்து விலகி இருந்து, வேறொரு ஆண் மனம் சொல்வதை கேட்டு செயல்படுவதை காட்டிலும், இது சிறந்ததாக விளங்குகிறது. இந்நிலையில் குடும்பம் ஒன்றாக ஒற்றை இலக்கை நோக்கி செயல்படுவதாக சொல்லலாம், மற்றும் தாய் தனது குழந்தை மீது கவனம் செலுத்தி அது கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்க வீட்டிலேயே இருப்பாள். ஆனால் வீட்டில் வேலை செய்வதால், தாய் மற்றும் குழந்தைக்கு மத்தியில் நெருக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றால், உதாரணத்திற்கு அவளுக்கு பணிச்சுமை அதிகமாக இருந்து அவளால் குழந்தைகளுடன்

விளையாட முடியவில்லை என்றால் அல்லது அவள் கடமைகள் மன அழுத்தம் தருவதாக இருந்து அவள் பதட்டம் மற்றும் எரிச்சலுடன் தென்பட்டால், அதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில், இது ஒரு நல்ல சூழ்நிலையாக அமையும். குழந்தையை பொறுத்தவரை, தாய் வீட்டில் இருப்பாள். அவள் கேள்விகளுக்கு பதில் அளிக்க, தோசை செய்வதற்கு அல்லது "நீ தோசை செய்து பார். நான் உனக்கு உதவியாக இருக்கிறேன்," என்று சொல்வதற்கு வீட்டிலேயே இருப்பாள். அவள் முத்தம் தருவதற்கும், உடலில் கீறல் ஏற்பட்டால் பிளாஸ்திரி ஒட்டுவதற்கும் வீட்டிலேயே இருப்பாள். புல் ஏன் பச்சையாக இருக்கிறது என்று சொல்வதற்கு, ஒரு கதை சொல்வதற்கு, ஏன் சில விஷயங்கள் சில முறைகளில் இருக்கின்றன என்று விளக்குவதற்கும் அவள் வீட்டிலேயே இருப்பாள். தாய் வீட்டில் இருப்பது இளம் குழந்தைக்கு மிகவும் முக்கியம் ஆகும். அவள் *பிராண* சக்தியால் வீடு இல்லமாக மாறுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. ¶கொழும்பு, சென்னை, மும்பை, புது டெல்லி, கோலாலம்பூர், நியூ யார்க், டர்பன் மற்றும் லண்டனில் இருக்கும் இந்து சமய கரையோரங்களை நோக்கி, மாற்றம் ஏற்படுத்தும் ஒரு பெரிய அலை விரைந்து வருவதை தற்போது நம்மால் காணமுடிகிறது. அது வருவதை நான் பார்த்து இருக்கிறேன். பழைய பாரம்பரியங்களை பின்பற்ற வேண்டும் என்று தற்போது இந்து சமய பெண்கள் நினைப்பது இல்லை. அவர்கள் புதிய பாரம்பரியங்களை பின்பற்றுகிறார்கள். அவர்கள் இன்று புதிய வழிகளை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இன்று குறிப்பாக ஒரு இந்து சமயத்தை சேர்ந்த பெண் நகரத்தில் வாழ்ந்தால், அவளால் வெளியே வேலைக்கு செல்ல முடிகிறது மற்றும் குடும்பமும் நண்பர்களும் அவள் அவ்வாறு செய்வதற்கு ஊக்கம் அளிக்கிறார்கள். அவள் தனது குடும்பத்தை புறக்கணிக்கலாம், மற்றும் அதுவும் சரியென்று கருதப்படுகிறது. அவள் தனது *ஸ்த்ரீ தர்மத்தை* பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர்கள் வீட்டிலேயே இருப்பதை பழங்கால பாணியாக கருதுகிறார்கள். மேற்கத்திய நாடுகளில் வாழும் இந்து சமய பெண்களில் எண்பது சதவீதம் பேர் வெளியுலகில் பணிபுரிவதாக எனக்கு தெரிய வந்தது. எண்பது சதவீதம்! இந்து சமயம் அழிவதற்காக உழைத்தவர்கள் தங்கள் பணியை மிகவும் நன்றாகவே செய்துள்ளது அப்பட்டமாக தெரிந்தாலும், நான் கவலைப்படவில்லை. எனக்கு அலைகளின் இயல்பு தெரியும், மற்றும் இதுவும் தனது சக்தியின் உச்சத்தை அடைந்து விரைவில் வற்றி, அந்த இடத்தில் பாரம்பரியத்திற்கு திரும்பும் மாபெரும் சக்தி காட்சி அளிக்கும்.

சனிக்கிழமை

பாடம் 139

பாரம்பரியத்தை ஏன்

மதிக்க வேண்டும்?

நாம் பாரம்பரியம் என்ற சொல்லை குறிப்பிடும் *டிரேடிஷன்* என்ற ஆங்கில சொல்லின் விளக்கத்தை பார்ப்போம். "பல தலைமுறைகளாக வழக்கத்தில் இருக்கும் ஒரு கதை, நம்பிக்கை, பழக்கம் அல்லது பழமொழி, ஒரு எழுதப்படாத விதியாக மாறிய நீண்டகால வழக்கம் அல்லது பயிற்சி" என்று வெப்ஸ்டர் ஆங்கில அகராதி *டிரேடிஷன்* என்ற சொல்லை விளக்குகிறது. நாம் எல்லோரும் இந்த பூமியில் வாழ்கிறோம் என்பதால், நம் எல்லோருக்கும் மனித இயல்பைப் பற்றி தெரியும். நாம் திடபுத்தி இல்லாமல், மாறும் தன்மை கொண்டவர்கள். நாம் புதிய விஷயங்களை முயற்சி செய்வதில் எப்போதும் ஆர்வத்துடன் இருப்பவர்கள். மாற்றம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருக்கும் போது, அது வாழ்க்கையின் ஒரு அற்புதமான பாகமாக விளங்குகிறது. நாம் அதிக கட்டுப்பாடுகளை விதிக்க விரும்பவில்லை, அதே நேரத்தில் நாம் கண்டிப்பாக இருக்கவும் விரும்புகிறோம். கட்டுப்பாடுகள் விதிக்காமல் கண்டிப்பாக இருங்கள், மற்றும் இதன் மூலம் வாழ்க்கை ஒழுக்கம் மற்றும் சுதந்திரத்திற்கு மத்தியில் சமநிலையுடன் இருக்கும். இதுவே ஆசிய நாடுகளில் செய்முறையாக இருந்துள்ளது. வரலாற்று பக்கங்களை திருப்பி, சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முன்பாக திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தை நினைத்து பாருங்கள். அந்த காலத்து மனிதர்கள் முழு நிறைவு, திடபுத்தி மற்றும் சுய ஒழுக்கத்துடன் இருந்திருந்தால், அவர் *திருக்குறளை* இயற்றி இருக்கமாட்டார். ஆறு முதல் எட்டு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக *வேதங்களில்* தெளிவாக எடுத்துரைக்கப்படுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் அடிப்படை கோட்பாடுகளை மனிதர்கள் பின்பற்றி தங்கள் மனதை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன், அவர் விவேகத்தை விளக்கும் இந்த முத்துக்களை திடபுத்தி இல்லாமல் மாறும் இயல்பை கொண்ட மனிதர்களுக்காக இயற்றினார். ¶ஒரு பாரம்பரியம் தன்னை கலாச்சாரம் மற்றும் பருவநிலையுடன் பொருத்திக் கொள்கிறது. மேற்கத்திய நாடுகளில் வளர்ந்த இந்து பெண்களால், கிழக்கத்திய நாடுகளின் பாரம்பரியங்களை பின்பற்ற முடியாது. ஆனால் அவர்கள் தங்கள் *ஸ்த்ரீ தர்மத்தை* பூர்த்தி செய்ய, அந்த பாரம்பரியங்களில் தேவையான பகுதிகளை பூர்த்தி செய்யவேண்டும். அவர்கள் மெதுவாக அதனுடன் பொருந்திக்கொள்ள வேண்டும். ¶பல ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்னரும், சாத்திர அறிவுரை இன்றைக்கும் நமக்கு பொருத்தமாக இருக்கின்றன. இதற்கு காரணம் என்ன? ஏனென்றால் மனிதர்களாக இருக்கும் மக்களின் அன்றைய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் அதிகம் வித்தியாசம் இல்லை. சமூகங்கள் மாறுகின்றன, அறிவு மாறுகிறது, மொழி மாறுகிறது. ஆனால் மக்களிடம் அதிக மாற்றம் ஏற்படுவது இல்லை. அதன் காரணமாகவே, பாரம்பரியங்கள் அதிகம் மாற்றம் பெறுவது இல்லை அல்லது மெதுவாக மாற்றம் பெறுகின்றன. அவை இன்றும் பயன்படுத்தப்படுகின்றன. அவை இன்றும் ஆற்றல்மிக்கதாக

விளங்குகின்றன. அவை பல்லாயிரக்கணக்கான தலைமுறைகளின் ஞானத் திரளாக விளங்குகின்றன. விவேகமானவர்கள் எப்போதும் ஞானத்தின் வழியை, பாரம்பரியத்தின் வழியை பின்பற்றுவார்கள். அப்படியென்றால் அவர்களுக்கு புதுமையான சிந்தனைகள் தோன்றாதா? அப்படி இல்லை. அப்படியென்றால் தங்களையும் மனித நேயத்தையும் மேம்படுத்திக் கொள்வதற்கு, அவர்களால் தங்கள் மனம் மற்றும் சித்தத்தை பயன்படுத்த முடியாதா? அப்படி இல்லை. அப்படி என்றால் அவர்கள் ஆக்கப்பூர்வமாக, முதன்மையாக, தனித்தன்மையுடன் இருக்கக்கூடாதா? அப்படி இல்லை. அவர்கள் தங்களிடம் இருக்கும் இந்த அருமையான பண்புகளை புனிதமான பாரம்பரியத்திற்கு தொடர்புடையதாக வெளிப்படுத்தி, அந்த பாரம்பரியம் அழியாதவாறு அதை மேம்படுத்த முயற்சி செய்வதைக் குறிப்பிடுகிறது. பாரம்பரியம் உபதேசித்த மற்றும் வெளிப்படையாக உபதேசிக்காத முறைகளை விட்டொழிப்பது அல்லது புறக்கணிப்பது விவேகம் இல்லை. இந்த எழுதப்படாத விதிகள் மற்றும் பாரம்பரிய பழக்கங்கள், பல நூற்றாண்டுகளாக இந்த பூமியில் வாழும் மக்களுக்கு என்றே சிறப்பானதாக வடிவமைக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. நம்மால் பாரம்பரியத்தை சாதரணமாக மாற்றி விடமுடியாது. ஒரு பாரம்பரியத்தை உருவாக்க பல நூற்றாண்டுகள் தேவைப்படும். நாம் ஒரு கூட்டத்தில் அமர்ந்து கொண்டு, நினைத்த மாத்திரத்தில் மாற்றம் பெறவேண்டும் என்று தீர்ப்பு அளிக்க முடியாது. ¶தியானம் பற்றி உங்களுக்கு நடத்தப்பட்ட வகுப்புக்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த உலகம் மற்றும் உங்களுக்குள் இருக்கும் ஆணின் சக்தி மற்றும் பெண்ணின் சக்தியின் இயல்பான சமநிலை பற்றி ஆழமாக சிந்தியுங்கள். பெண்ணின் பங்கு மற்றும் அதை பூர்த்தி செய்ய அவளுக்கு அனுமதி அளிக்கும் பாரம்பரியங்கள் மீது உங்களுக்குள் ஒரு புதிய அங்கீகாரம் தோன்றும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 140

ஒரு தனிநபரின்

சான்றுரை

எனது விளக்கத்தின் அங்கமாக, *ஸ்த்ரீ தர்மத்தின்* கருத்தை நன்றாக பின்பற்றும் இலங்கையின் ஒரு சைவ சமய பெண்ணிடம் இருந்து, நாங்கள் பெற்ற ஒரு அருமையான தகவலை படிக்கவேண்டும் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். ¶“நான் ஒரு இந்து குடும்பத்தில் மனைவியாக இருக்கிறேன் மற்றும் அதை நினைத்து பெருமையும் அடைகிறேன். எனக்கு 1969

ஆம் ஆண்டு திருமணம் நடைபெறுவதற்கு முன்பாக, நான் லண்டன் பல்கலைகழகத்தில் பட்டப்படிப்பு பெற்று, பெண்கள் பள்ளியில் ஒரு ஆசிரியையாக இருந்தேன். நான் ஒரு ஆச்சாரமான சைவ குடும்பத்தை சேர்ந்தவள். என் பெற்றோர்கள் எனக்கு திருமணம் நிச்சயிக்கும் போது, எனக்கு இருபத்தி ஆறு வயது. எனது வருங்கால கணவரும் ஒரு ஆச்சாரமான சைவ குடும்பத்தை சேர்ந்தவர் மற்றும் அப்போது அவருக்கு வயது முப்பது. எங்கள் பெற்றோர்கள் கலந்து ஆலோசித்து நிச்சயம் செய்த பிறகு, நாங்கள் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. நாங்கள் சந்தித்த இடம் ஒரு விநாயகர் கோயில். அப்போது நேரம் காலை ஏழு மணி. நாங்கள் வெவ்வேறு திசைகளில் இருந்து ஒரே சமயத்தில் கோயிலில் அடியெடுத்து வைத்த போது, ஏழு மணி *பூஜைக்கான* கோயில் மணிகள் ஒலிக்க ஆரம்பித்தன. இருவர் எண்ணத்திலும் அது 'ஒரு நல்ல சகுனம்' என்று தோன்றியது. *பூஜை* முடிந்த பிறகு, என் தாயார் மூலம் நாங்கள் அறிமுகப்படுத்தப்பட்டோம். எனக்கு இயல்பாக இருந்த கூச்ச சுபாவம் மற்றும் சிறிய அச்சம் காரணமாக, என் வாழ்க்கையின் இறைவனாகவிருந்த ஒருவரை, என்னால் நேராக நிமிர்ந்து பார்த்து அவர் எந்த நிறம் என்பதைக் கூட கவனிக்க முடியவில்லை. நான் அவர் பேசுவதை கேட்டேன் மற்றும் அவர் என்னை தொடர்ந்து கவனமாக பார்த்துக் கொண்டிருப்பதையும் உணர்ந்து கொண்டேன். இந்த 'நேருக்கு நேர் சந்திப்பு' சுமார் பத்து நிமிடங்கள் நீடித்தது மற்றும் அதன் பிறகு நாங்கள் விடைபெற்றோம். எங்கள் பெற்றோர்களால் மிகவும் கவனமாக நிச்சயிக்கப்பட்ட வரனை நாங்கள் இருவரும் ஏற்றுக்கொண்டோம், மற்றும் நாளடைவில் எங்கள் திருமணம் சாத்திர சம்பிரதாய முறைப்படி நடந்தேறியது. ¶“எனது திருமணமான தினத்தில் இருந்து நான் எனது ஆசிரியை பணியை இராஜினாமா செய்தேன், ஏனென்றால் ஒரு குடும்பப் பெண்ணாக எனது கடமைகள் அதிக பொறுப்புக்களுடன் அதிக கவனத்தை வேண்டுவதாக தோன்றியது. என் கணவருக்கு ஒரு குடும்பத்தை பராமரிக்க தேவையான வருமானம் வந்துகொண்டு இருந்தது, மற்றும் நாங்கள் ஒரு சொந்த வீடு கட்ட ஆரம்பித்தோம். நான் வரதட்சணையாக சிறிதளவு பணத்தை கொண்டு வந்தேன். அதன் மூலம் வீட்டிற்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்கிக்கொண்டோம். எங்களுக்குள் அளவுக்கு அதிகமான பாசம் இருந்ததால், நாங்கள் சிவனையும் சக்தியையும் போன்று வாழ்ந்தோம். எங்கள் வீட்டின் மிகவும் முக்கியமான மூலையில் பூஜை அறை அமைந்து இருந்தது. அங்கே ஒவ்வொரு காலையும் எங்கள் தினசரி வாழ்க்கை தொடங்கியது. ¶“நான் தினமும் அதிகாலை 5 மணிக்கு எழுந்து, குளித்து விட்டு பூஜை அறையை சுத்தம் செய்வேன். முந்தைய நாள் பூஜையில் பயன்படுத்தப்பட்ட பூக்களை நீக்கி, பித்தளை விளக்குகள் மற்றும் பாத்திரங்களை சுத்தம் செய்து, தரையில் தண்ணீர் தெளித்து, அன்றைய தினம் என் கணவர் பூஜை செய்வதற்காக பூஜை அறையை தயார் செய்து விடுவேன். அதன் பிறகு சமயலறையை துடைத்து

பாத்திரங்கள் மற்றும் பானைகளை கழுவுவேன். காஸ் அடுப்பில் தண்ணீரை கொதிக்க வைத்து விட்டு, நான் குளிக்க சென்று விடுவேன். குளித்து வந்த பிறகு, சிறிது நேரம் பிரார்த்தனை செய்த பிறகு என் கணவரின் *பூஜைக்கு* பூக்களை பறிக்க சென்றுவிடுவேன். இவை எல்லாம் முடிவதற்கு காலை 6 மணி ஆகிவிடும். என் கணவர் விழிக்கும் நேரம். நான் அவருக்கு காலை வணக்கம் சொல்வதற்காக, படுக்கையறை சென்று காத்து இருப்பேன். அவர் என்னை வீட்டின் மகாலட்சமி போல கருதுகிறார், மற்றும் நெற்றியில் விபூதி, குங்கும பொட்டு மற்றும் முகத்தில் புன்னகையுடன் நான் நிற்பதை பார்த்துக்கொண்டு விழிப்பது அவருக்கு பரம திருப்தி அளிப்பதாக இருக்கும். அவர் விழித்ததும், அரை மணிநேரத்திற்கு நடைபயிற்சி சென்று 6:30 மணிக்கு வீடு திரும்புவார். அப்போது அவருக்கு காபி மேசையில் தயாராக இருக்கும். அவர் காபி குடித்து ஐந்து நிமிடங்கள் ஓய்வு எடுத்த பிறகு, அருமையான குளியலை முடித்து விட்டு வந்துவிடுவார். அவர் அதன் பிறகு பூஜைக்கு தேவையான *பூர்வாங்க* வேலைகளை செய்வார். அவை அனைத்தையும் என்னால் செய்யமுடியும், ஆனால் அந்த பூர்வாங்க வேலைகளும் *பூஜையின்* அங்கம் தான் என்று அவர் கூறுவார். சரியாக 7 மணிக்கு *பூஜை* தொடங்கிவிடும். அதில் நானும் எனது குழந்தைகளும் கலந்து கொள்வோம் (எங்களுக்கு இரு மகன்கள் மற்றும் ஒரு மகள்). அதிக பக்தி மற்றும் சிரத்தையுடன் என் கணவர் *பூஜை* செய்வதை பார்ப்பது மனதிற்கு திருப்தி அளிப்பதாக இருக்கும். அவர் பூஜையை முடித்து, காலை சிற்றுண்டியை சாப்பிடுவதற்கு 7.30 மணிக்கு வந்து விடுவார். நான் எனது இறைவனுக்கும் என் குழந்தைகளுக்கும் என் சொந்த கைகளால் தயார் செய்த உணவை பரிமாறுவேன். பிறகு இரண்டு பெரிய குழந்தைகளை பள்ளிக்கு செல்ல தயார் செய்வேன். சுமார் 8:30 மணி அளவில், மூவரும் தத்தம் பணி மற்றும் பள்ளிகளுக்கு சென்று விடுவார்கள். அதன் பிறகு நான் வீட்டை சுத்தம் செய்து, என் மூன்று வயது குழந்தையை உறங்க வைத்து, சுமார் 9:30 மணி அளவில் மதிய உணவை தயார் செய்ய மீண்டும் சமையலறையில் நுழைந்து விடுவேன். ¶"நான் மாலை நேரத்தில் என்னை அலங்கரித்துக் கொண்டு, என் கணவன் மற்றும் குழந்தைகளுடன் வெளியே செல்ல தயாராகிவிடுவேன். அவர் எங்களை பெரும்பாலும் வெளியே அழைத்து செல்வார், சில நாட்கள் அவர் சோர்வாக இருக்கும் போது வீட்டிலேயே இருக்க விரும்புவார். மாலை 6 மணி அளவில் நான் இரவு விருந்து தயார் செய்ய ஆரம்பித்து விடுவேன். நாங்கள் 7:00 அளவில் பூஜை அறையில் கூட்டுப் பிரார்த்தனை செய்வோம். 7:30 மணிக்கு இரவு விருந்தை முடித்து சிறிது நேரம் ஏதேனும் படிப்போம், வானொலி கேட்போம், சிறிது நேரம் பேசுவோம் மற்றும் 9:30 மணிக்கு உறங்க சென்றுவிடுவோம். நான் கடந்த பதினொரு வருடங்களாக செய்து வரும் இந்த பழக்கத்தின், ஒவ்வொரு நிமிடத்தையும் ரசித்து செய்கிறேன். ¶"வீட்டில் என் கணவருக்கு முதலிடம் வழங்குவேன். அவர் வேலைகளில் குற்றம் காணும் பழக்கம் எனக்கு என்றுமே இருந்ததில்லை. அவர்

என்னை நன்றாக புரிந்து இருப்பதால், அவர் என்னிடம் எப்போதும் பாசம், அன்பு, மென்மை மற்றும் இரக்க சுபாவத்துடன் நடந்துக்கொள்வார். நான் அவருக்கு அதே பண்புகளை நூறுமடங்கு அதிகரித்து வழங்குவதால், எங்களுக்குள் நல்ல உறவு நீடிக்கிறது. என் கணவர் ஒரு சமய சார்புள்ள அமைப்பில் செயலாளராக இருக்கிறார், மற்றும் அவரது வேலையில் தேவையான உதவி மற்றும் ஊக்கத்தை வழங்குகிறேன். நான் என் வீட்டு வேலைகளில் முழுமையாக மூழ்கி இருப்பதால், நான் என்னை மற்ற வேலைகளில் ஈடுபடுத்திக் கொள்வதில்லை. நான் வீட்டில் என் கணவரின் தலைமைக்கு மரியாதை செலுத்துகிறேன், அதனால் வாழ்க்கையில் சுமூகமாக இயங்குகிறது.”

விவாஹ, கிரிஹஸ்த தர்ம

विवाह गृहस्थधर्म



திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை

நீங்கள் பருகுவது சமமாக இருக்கட்டும். அன்னத்தை ஒன்றாக பகிர்ந்து சாப்பிடுங்கள். நான் உங்களை ஒன்றாக சேர்க்கிறேன். வண்டிச்சக்கர நாபியை சுற்றி இருக்கும் பற்களைப் போன்று ஒன்றாக அமர்ந்து உபாசனை செய்யுங்கள். ஒரு தலைவனை பின்பற்றி, நான் உங்களை ஒரே சித்தம் மற்றும் ஒரே சாரம் உள்ளவர்களாய் உருவாக்குகிறேன். தேவர்களைப் போல அமரத்துவம் பெற்று, காலையும் மாலையும் உங்களுக்கு சித்த சுத்தி உண்டாகி, எல்லோர் மீதும் தொடர்ந்து அன்பு செலுத்துங்கள்!

அதர்வண வேதம் 3.30.6-7. வேஎ



செயல்படும் எரிமலைகள் இருக்கும் ஹவாய் தீவில், ஒரு மணமகள் மற்றும் ஒரு மணமகன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஒருவர் இந்தியர் மற்றும் இன்னொருவர் கிழக்கு ஆசிய நாட்டை சேர்ந்தவர். அவர்கள் தங்கள் திருமண தினத்தன்று மாலைகளை மாற்றிக் கொள்கிறார்கள் மற்றும் மூன்றாவது லோகத்தில் இருக்கும் சிவபெருமான், அவர்களை தனது உள்ளங்கையில் பரிவுடன் பாதுகாப்பாக தாங்கிக் கொண்டிருக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 141

திருமண

இலட்சியங்கள்

திருமணம் என்பது ஒரு நிறுவனம், ஒரு தொழில், ஒரு ஆன்மீகக் கூட்டு மற்றும் மனித இனத்தின் முன்னேற்றமாக இருப்பதோடு உடல், மனம் மற்றும் மனவெழுச்சியை உள்ளடக்கிய மூன்று நிலை ஒப்பந்தத்தையும் குறிக்கிறது. திருமணம் என்கிற அர்ப்பணிப்பு, மனித இனம் தொடர்வதற்கு மட்டுமில்லாமல் ஒவ்வொரு ஆன்மாவின் தனிப்பட்ட விரிவாக்கத்திற்கும் தேவைப்படுகிறது. தம்பதிகள் மற்றும் சிலகாலம் கழிந்து குழந்தைகள் மத்தியில் ஏற்படும் உறவின் மூலம் புதிய பரிணாமங்களில் நல்ல, தீய மற்றும் குழப்பமான *கர்மவினைகள்* உருவாக்கப்படுகின்றன. சைவ சமய திருமணங்களில் மணமகன் மற்றும் மணமகளுடன் அவர்களின் பெற்றோர்கள், அவர்களின் புரோகிதர்கள், குரு, ஜோதிடர், இரு வீட்டு சொந்தங்கள் மற்றும் சமூகம் முழுவதும் பங்குபெறும். தனது சமூக மக்களின் முன்பாக திருமணம் நடக்கவேண்டும் என்ற பொறுப்புணர்வு குடும்பத்திற்கு இருக்கும். தனது சமூகத்தில் ஒவ்வொரு திருமணமும் வெற்றிகரமாக அமையவேண்டுமெ என்ற பொறுப்புணர்வு சமூகத்திற்கும் இருக்கும். ¶எதனால் சைவ சமய திருமணங்கள் மற்ற திருமணங்களில் இருந்து மாறுபட்டு இருக்கின்றன? அதற்கு சிவபெருமானின் ஐக்கிய நிலை மீது, எல்லோருக்குள்ளும் எப்போதும் இருக்கும் நம்பிக்கையே காரணம் ஆகும். சிவபெருமான் உங்களுக்குள் இருக்கிறார் மற்றும் நீங்கள் சிவபெருமானுக்குள் இருக்கிறீர்கள். சிவபெருமான் நமது உயிர்களின் உயிராக இருக்கிறார். இதைப்போன்று பல பாடல்களை சைவசமய மகான்கள் பாடியுள்ளனர். மனைவியின் அகத்தில் சிவபெருமான் இருப்பதை மறப்பதும், கணவனின் அகத்தில் சிவபெருமான் இருப்பதை மறப்பதும் சைவ சமயத்தையே மறப்பதற்கு சமம் ஆகும். இந்த அடிப்படை சைவ நம்பிக்கை, கணவன் மனைவியை ஒரு பெண் தெய்வ வடிவமாக காணவேண்டும் மற்றும் மனைவி கணவனை ஒரு ஆண் தெய்வீக வடிவமாக காணவேண்டும் என்பதற்கு மனோரீதியான அடித்தளத்தை அமைக்கிறது. இந்த நம்பிக்கையில் இருந்து மற்ற எல்லா நடத்தைகளும் தோன்றுகின்றன. நம்பிக்கை சிந்தனைகளை உருவாக்குகின்றன மற்றும் சிந்தனைகள் செயல்களை உருவாக்குகின்றன.

¶நம்முடன் கொண்டு வந்த சில குறிப்பிட்ட *கர்மவினைகளை* அனுபவிப்பதற்கே நாம் ஒவ்வொருவரும் இந்த பிறவியை எடுத்துள்ளோம், மற்றும் அந்த *கர்மவினைகள்* பெரும்பாலும் மற்றவர்கள் மூலம் அனுபவிக்கப்படுகிறது என்கிற புரிதல், இந்த *கர்மவினைகளுக்கு* தீர்வு காண சங்கல்பம் எடுத்து அனுபவித்து, அவற்றை கரைத்து முக்தி அடையவேண்டும் என்கிற ஒரு சவால் மற்றும் ஒரு குறிக்கோளை வழங்குகிறது. இந்த நம்பிக்கை, இந்த புரிதல் காரணமாக கணவனும் மனைவியும் தங்கள் ஆற்றல்களை ஆக்கப்பூர்வமாக ஒன்று சேர்க்கிறார்கள். இயல்பாகவே அவர்களின் சிந்தனை முறைகள் அதிக தாராளமாகவும், மன்னிக்கும் பண்பு மற்றும் புரிதலுடனும், அவர்களின் செயல்கள் மற்றும் உறவுகள் அதிக இணக்கத்துடனும் பரஸ்பர ஆதரவுடனும் இருக்கின்றன. ஒரு பெண் தனது கணவருக்கு தனது *பிராணன்* என்கிற ஆன்மீக சக்தியை வழங்கி, அவனை வலுப்படுத்துகிறாள். குழந்தைகளுக்கு பெற்றோர்கள் சிவன்-சக்தியாக, அவர்களின் முதல் *குருவாக* இருப்பதால் அவர்கள் தங்கள் *பிராண* சக்திகளை தங்கள் பெற்றோர்களுக்கு வழங்குகிறார்கள். மனைவி தொடர்ந்து தனது கணவனின் தேவைகளை பூர்த்தி செய்து, குழந்தைகளுக்கு முன் உதாரணமாக விளங்குகிறாள். அவள் தனது சக்திகளை தனது குடும்பத்திற்குள் பயன்படுத்துவதன் மூலம், வீட்டில் ஒரு பெரிய ஆன்மீக சூழலை உருவாக்குகிறாள். கணவன் தனது *புருஷ தர்மத்தை* பூர்த்தி செய்யும் போது, அவன் தனது *பிராண* சக்தி, அன்பு மற்றும் விசுவாசத்தை தனது குடும்பத்திற்கு வழங்கி, தனது சேவை மூலம் சமூகத்திற்கு நன்மை செய்கிறான். அவன் வீட்டில் எப்போதாவது தனது குரலை உயர்த்தி பேசுவதோ அல்லது கோபத்தை ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்துவதோ இல்லை. அவன் குடும்பம் முழுவதற்கும் ஒரு முன் உதாரணமாக விளங்குகிறான். அவனுடைய மகன்கள் பெரியவர்களானதும், அவனுடைய *பிராண* சக்தியுடன் தங்கள் *பிராண* சக்திகளை இணைப்பதால், குடும்பம் மற்றும் சமூகம் மற்றும் நாடு மேன்மை அடைகிறது. ¶பெற்றோர்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை இருப்பதால், தங்கள் சொந்தங்கள் மற்றும் தாங்களும், முடிவு பெறாத தங்கள் *கர்மவினைகளை* அனுபவிப்பதற்கு அதே குடும்பத்தில் மீண்டும் பிறவி எடுக்கப்போவதை அறிவார்கள். ஒரு சைவரின் வீடு, இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளின் *பீஜ கர்மவினைகளை* மிகவும் நேர்த்தியாக அரைக்கும் ஒரு மாவு இயந்திரம் போன்று, ஆன்மாக்களுக்கு மறுசுழற்சி வழங்கும் ஒரு *கர்மவினை* தொழிற்சாலையாக விளங்குகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 142

வீட்டில்

சூட்சும ஞானம்

பஞ்ச நித்திய கர்மாக்கள், வாரத்தில் ஒரு நாள் உதாரணத்திற்கு திங்கட்கிழமை மாலைப்பொழுதை குடும்பத்துடன் ஒன்றாக கழிப்பது மற்றும் தினமும் நடைபெறும் குடும்ப சந்திப்புக்கள், குடும்பத்தில் ஒவ்வொரு குழந்தையும் பல நூற்றாண்டுகளாக அந்த குடும்பத்தில் ஒரு முழுமையான அங்கமாக இருந்துள்ளது என்று அறிதல், குடும்பத்தில் வாழ்ந்துகொண்டு இன்பம், துன்பம் மற்றும் தவறான புரிதலின் உணர்வு வடிவில் *கர்மவினைகளை* தீர்வு காண சங்கல்பம் எடுத்து, அனுபவித்து முழுமையாக கரைக்க வேண்டும் என்ற அறிதல், தாங்கள் எல்லோரும் ஒன்றாக இருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது மற்றும் முக்தி பெறும் வரை அவர்கள் எல்லோரும் ஒன்றாக இருப்பார்கள் என்ற அறிதலின் மூலம் மிகவும் விசேஷமாக, அதிக பிணைப்பாற்றலுடன் இருக்கும் சைவ இந்து வாழ்முறை வலிமை பெறுகிறது. இத்துடன் மேலும் பல சிறப்பான பண்புகள் சைவ குடும்பத்தை பூமியில் இருக்கும் மற்ற குடும்பங்களில் இருந்து வேறுபடுத்தி காண்பிக்கின்றன. ¶இந்த உலகின் உட்புறமாக சூட்சுமமாக இருக்கும் அந்தர்லோகத்தில், இருபத்தி நான்கு மணி நேரமும் வாழ்க்கை இயங்குகிறது. அங்கு இருக்கும் உயிர்சக்திகள் உறங்குவது இல்லை. ஒரு வீட்டில் அல்லது குடியிருப்பில் நடைபெறும் நேர்மறை நடவடிக்கையின் மூலம் அந்த இடம் ஒரு இல்லமாக மாறுகிறது, அல்லது அது எதிர்மறையாக இருந்தால் ஒரு ஓட்டல் அறையாக மாற்றி விடுகிறது. இந்த சூட்சும நடவடிக்கையை நிலைப்படுத்தி அது நேர்மறையாக இருப்பதை உறுதி செய்ய, ஒவ்வொரு சைவ குடும்பமும் தினமும் தங்கள் *வீட்டில்* பூஜை செய்கின்றனர். சாத்திரங்கள் படிக்கப்பட்டு, *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* நிறைவேற்றப்பட்டு, உறங்கும் முன் சிறிய மற்றும் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணப்படுகின்றன. *பித்ரு தேவர்கள்* மற்றும் குடும்பம் அடிக்கடி செல்லும் கோயிலின் *தேவர்கள்,* வீட்டில் வாசம் செய்வதற்கு இணங்குகிறார்கள். இந்த அற்புதத்தால் அந்த வீடு ஒரு கோயிலைப் போன்று ஒரு ஆன்மீக இருப்பிடமாக மாறுகிறது. ¶குழந்தைகள் முந்தைய பிறவியில் என்னவாக இருந்தார்கள் என்று தெரியாது என்பதால், ஒரு உண்மையான சைவ வீட்டில் அவர்களுக்கு எப்போதும் நன்மதிப்பு மற்றும் மரியாதை வழங்கப்படுகிறது. அவர்கள் ஒரு பாட்டி, தாத்தா, அத்தை அல்லது மாமன், அன்புள்ளம் கொண்ட தாய், சகோதரி, சகோதரன், மதிப்புக்குரிய தந்தை, தூரத்து சொந்தமாக இருக்கும் *யோகி* அல்லது *ரிஷியின்* மறுபிறவிகளாக இருக்கலாம். அவர்கள் யாராக இருக்க முடியும்? அவர்கள் இந்த பிறவியில் எதை நிறைவேற்ற இருக்கிறார்கள்? ¶இதற்கான விடைகள் பிரபஞ்ச விருப்பமாக இருக்கும், பழங்கால *ரிஷிகள்* உருவாக்கிய சைவ சமயத்தின் சூட்சும ஞான ஜோதிட அமைப்பில் இருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையின் குணம் மற்றும் அது ஒவ்வொரு வருடமும் எவ்வாறு வளர்ச்சி, செழிப்பு மற்றும் விரிவாக்கம் பெறுகிறது என்பதை குடும்ப ஜோதிடர் கவனமாக விளக்குகிறார். இது பெற்றோர்களுக்கு அறிவு மற்றும் நம்பிக்கை, தைரியம் மற்றும் புரிதல்,

பொறுமை மற்றும் மன்னிக்கும் பண்புடன், எல்லா சைவர்களும் தங்களுக்குள் வளர்க்க விரும்பும் மற்ற அருமையான குணங்களையும் வழங்குகிறது. பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கும் போது, ஒவ்வொரு குழந்தையும் ஒழுங்குமுறையுடன் இயங்கும் சிவபெருமானின் பிரபஞ்சத்தில் அங்கம் வகிக்கிறது என்பதையும், அவர்கள் தங்கள் சொந்த *பிராரப்த கர்மவினைகளை* அனுபவித்து கரைப்பதற்கே தங்கள் குடும்பத்தில் பிறவி எடுத்துள்ளார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டு, ஜோதிடரால் கணிக்கப்பட்ட குணங்கள் குழந்தையிடம் வெளிப்படும் போது உற்சாகமோ கலக்கமோ அடைவது இல்லை. ஆம், ஒரு தொழிற்சாலையாக இருக்கும் சைவர்களின் வீடு, ஒரு நுணுக்கமான இயக்கமுறை மூலம் ஒவ்வொரு குடும்ப நபரின் ஆன்மீக விரிவாக்கத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

புதன்கிழமை

பாடம் 143

குழந்தைகளை

வளர்த்தல்

பல குடும்பங்கள் தங்கள் குழந்தைகளை அழையாது வந்தவர் அல்லது பரிச்சயம் இல்லாத நபர்களாக கருதுகிறார்கள். ஆனால் சைவர்கள் அவ்வாறு கருதுவது இல்லை. பெற்றோர்களுக்கு அவர்களின் புதிய வரவு பற்றி தேவையான தகவல்களை வழங்கும் ஜோதிட தகவலில் மிகப்பெரிய சக்தி மற்றும் விவேகம் அடங்கியுள்ளது. தங்களுக்கு பிறக்கவிருக்கும் குழந்தையின் குணம் மற்றும் எதிர்காலத்தை குறிப்பிடும் இத்தகைய நுண்ணறிவு, இந்துக்கள் அல்லாதவர்களிடம் பொதுவாக இருப்பதில்லை. அவர்கள் பழக்கங்கள் மற்றும் வளர்ச்சிகள் தோன்றும் போது, அவற்றை புரிந்துக்கொண்டு எதிர்கொள்ள முடியாமல் திணறுகிறார்கள். ¶இந்து சமயத்தை சேர்ந்த பெற்றோர்கள் தங்களின் ஒவ்வொரு குழந்தையும், மிகவும் இளமையான உடலில் வாழ்ந்து கொண்டு, தன்னிடம் மறைந்து இருக்கும் திறமையை பூர்த்தி செய்வதற்காக வளர்ந்து வரும் ஒரு வயது முதிர்ந்த நபராக கருதுகிறார்கள். அவர்கள் ஜோதிட தகவலை பயன்படுத்தி, வலுவான பண்புகளை வலுப்படுத்துவதோடு, எப்போதும் பலவீனமான அல்லது பகையுணர்வு மிக்க பண்புகளை தூண்டிவிடாமல் இருக்கிறார்கள். அதாவது அந்த குழந்தைக்கு கோபம், பொறாமை மற்றும் வாக்குவாதத்தின் மீது ஒரு நாட்டம் இருந்து, இன்னொரு நாட்டம் தாராள குணம், ஆக்கத்திறன் மற்றும் அறிவை கிரகிப்பதில் இருந்தால், விவேகமான பெற்றோர்கள் அந்த குழந்தையுடன வாக்குவாதம் செய்வது இல்லை, ஏனென்றால் அவர்கள் அந்த பண்பை விழிக்க வைத்து வலுப்படுத்த

விரும்புவதில்லை மற்றும் அவர்கள் குழந்தைக்கு கோபம் வருவதை கவனமாக தவிர்ப்பதோடு, திடீரென்று வலுவாக வெளிப்படும் போது கோபத்தை விரைவில் தணிக்கவும் செய்கிறார்கள். தங்கள் குழந்தையிடம் பொறாமை குணம் வலுவடைவதை தவிர்க்க விரும்பும் பெற்றோர்கள், குழந்தை எப்போதும் பாசத்திற்காக ஏங்காமல் அல்லது வசதியற்ற சூழலை நினைத்து வருந்தாமல் இருக்க, அவர்கள் குழந்தையின் தொடர்பை நண்பர்கள் மற்றும் விளையாட்டு பொருட்களுடன் பொருத்த முயற்சி செய்வார்கள். அவர்கள் தங்கள் குழந்தையின் ஆக்கத்திறன், தாராள குணம் மற்றும் தகவலை கிரகிக்கும் திறனை பாராட்டுவார்கள். இந்த திறமைகளுக்காக அந்த குழந்தை அன்பான வார்த்தைகள் மற்றும் பரிசுகளை வெகுமதியாக பெறுகிறது, ஏனென்றால் இந்த மனப்போக்குகள் வலுவடைந்ததும், எதிர்மறை போக்குகள் வலுவிழக்கின்றன. ¶இந்த உதாரணம், தங்கள் குழந்தையிடம் இருந்து சிறந்த குணங்களை வெளிக்கொண்டு வர விரும்பும் பெற்றோர்கள், புரிந்துகொண்டு அதே முறையில் செயல்படுத்த எளிதாக இருக்கும் நேர்மறை ஒழுக்கத்தின் மாதிரிகளை, இருவரும் ஒன்றுசேர்ந்து திட்டமிடவேண்டிய முறையை விளக்குகிறது. இந்த சிறந்த பண்புகள் பேணி வளர்க்கப்பட்டு குழந்தையின் அன்றாட வாழ்க்கையில் அங்கம் வகித்ததும், சிறந்த பண்புகள் இயல்பாக மோசமான பண்புகளை அடக்கிவிடும். ஒன்றையொன்று பாதிப்பை ஏற்படுத்திக் கொள்ளும் இந்த இயக்கமுறை, குழந்தையின் அகத்தில் நடைப்பெற்று அதை முழுமையை நோக்கி அழைத்து செல்கிறது. சைவர் அல்லாத மற்ற குடும்பங்கள் தங்கள் குழந்தையிடம் மோசமான பண்பை வளர்கின்றனர். அதனால் குழந்தை தனது சொந்த நலனுக்காக, தன்னிடம் இருக்கும் நல்ல பண்புகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன், ஒரு உயர்ந்த இயல்பு அல்லது அதிக விரிவாக்கம் பெற்ற உணர்வுடன் இருக்கும் நபர்களுடன் இருக்க வீட்டை விட்டு வெளியேறும் அல்லது தனது தீய பண்புகளை வலுப்படுத்த கீழ்நிலை குணங்களுடன் இருப்பவர்களை நோக்கி ஈர்க்கப்படும். எல்லோரும் நிறைவை வழங்கும் பாதையில் முன்னேறுகின்றனர், மற்றும் அவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவியாக இருப்பவர்களை உள்ளுணர்வு மற்றும் மெய்ஞ்ஞான ரீதியாக நாடுகிறார்கள். இது தங்கள் வீட்டிலேயே நடைபெற வேண்டும் என்று சைவர்கள் விரும்புவதால், அவர்கள் *குரு, சுவாமிகள்* மற்றும் சமூகம் முழுவதும் ஈடுபடுவதை வரவேற்கிறார்கள். ¶மக்கள் மனிதர்களாக இருப்பதால், வேறுபாடுகள் தோன்றும். எல்லோரும் ஒன்று போல இருந்தால், உள்ளுணர்வு பிரதான அறிவாக விளங்கி, மனித இனம் ஒரு கால்நடை மந்தை போன்று இருக்கும். ஆனால் மனிதர்கள் ஒரு கால்நடை மந்தையாக இல்லாமல், அவர்களில் ஒவ்வொருவரும் தனிநபர்களாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் ஒரு விதி நியமிக்கப்பட்டுள்ளது மற்றும் அந்த விதியை நிறைவேற்றும் பாதையில் பிரத்யேகமான அனுபவங்களின் நுணுக்கமான தொடர்ச்சியை அனுபவிக்க வேண்டியுள்ளது. இந்த வேறுபாடுகளை சைவர்கள்

வரவேற்கிறார்கள். ஒருமை ஏதேனும் இருந்தால், அதற்கு சைவ *தர்மத்தில்* இருக்கும் பொதுவான புரிதல் மற்றும் ஒருவர் தனது *பிராரப்த கர்மவினைகளின்* உதவி அல்லது கட்டுப்பாட்டுடன், அவர் தனது சொந்த வழிமுறையில் அந்த தர்மத்தை பின்பற்றி வாழும் திறமை காரணமாக விளங்குகின்றன. உலகெங்கும் பரவி இருக்கும் எங்கள் சைவ அமைப்பில் ஒரு யாத்திரி கனடா, கலிபோர்னியா, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் அல்லது இந்தியாவில் நடைபெறும் சமயப்பணியில் பங்குபெற்று தங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள், தந்தைமார்கள் மற்றும் தாய்மார்கள், அத்தைமார்கள் மற்றும் மாமன்மார்களை சந்திக்கலாம். உலகெங்கும் பரவியிருக்கும் இந்த விரிவான குடும்பம் தங்களின் பொதுவான அடிப்படை நம்பிக்கைகள் மற்றும் அணுகுமுறைகள் மூலமாகவும், தங்களின் *பிராரப்த கர்மவினைகளின்* உதவி அல்லது கட்டுப்பாட்டுடன், தங்களது சொந்த வழிமுறையில் கலாச்சாரம் மற்றும் *சாதனாக்களை* பின்பற்றி வாழும் முயற்சியின் மூலமாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

வியாழக்கிழமை

பாடம் 144

கணவன் மற்றும் மனைவியின்

பொறுப்புக்கள்

கணவனும் மனைவியும் பாரம்பரிய முறையில் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவியாக, சைவ திருமணத்தில் பிரத்யேகமாக இருக்கும் அம்சம் எது? பெண்கள் எப்போதும் பணிவாக சார்ந்து வாழ வேண்டுமா? கணவான்மார்கள் எப்போதும் பிடிவாதமாக பொறுப்பு வகிக்க வேண்டுமா? சிலசமயங்களில் பிடிவாத குணமுள்ள ஒரு பெண், ஒரு மந்தமான ஆணை திருமணம் செய்து கொள்ளலாம். இதை சைவ சமயம் எவ்வாறு கையாள்கிறது?" இது முற்றிலும் கணவன் மற்றும் மனைவியின் கல்வித் தகுதியை பொறுத்து அமைகிறது என்று அனுபவ அறிவு தெரிவிக்கிறது. வெளியுலகில் எப்படி வாழவேண்டும், எப்படி வியாபாரம் செய்ய வேண்டும் அல்லது இன்னொருவரின் கீழ் எவ்வாறு வேலை செய்யவேண்டும் என்று நவீன கல்வி கற்றுத் தந்த போது, குடும்ப வாழ்க்கை தனது கிராமப்புற உணர்வில் இருந்து வெளிவந்து தொழில்நுட்ப யுகத்தில் நுழைந்தது. இந்த மாற்றத்தின் போது, பாரம்பரிய பொறுப்புக்களும் மாறின. ¶இன்று திருமணத்தில் ஐந்து அடிப்படை வகைகள் உள்ளன. விவசாயம் சார்ந்த சமூகத்தில், பெண்கள் வீட்டு வேலைக்கு பொறுப்பு ஏற்கிறார்கள், மற்றும் ஆண்கள் பண்ணை, வியாபாரம் மற்றும் தொழிற்சாலையில் அல்லது அதிக வலிமையுள்ள பெண்கள் ஆண்களுடன் இணைந்து வேலை செய்யும் மற்ற சமூகங்களில் வேலை செய்கிறார்கள்.

இவ்வகை திருமணத்தில், கணவனுடன் சேர்ந்து அவன் மனைவி வயலில் வேலை செய்வது ஒரு அந்தஸ்து சின்னமாக விளங்குவதோடு, குடும்பத்திற்கு சிறந்த உணவு கிடைக்கிறது மற்றும் அவனால் தன் மீது அதிக கவனமும் செலுத்தவும் முடிகிறது. மேலும் இந்த திருமணங்களில் கணவனும் மனைவியும் சமமான கல்வித் தகுதியை பெற்று, உலக இயக்கம் பற்றி சமமான புரிதலை பெற்று இருப்பார்கள். இந்த முதல் வகை திருமணம், மிகவும் பழமையானதாக விளங்குகிறது. ¶ஆனால் தொழில்நுட்பம் மற்றும் தொழில்மயமாக்கம் காரணமாக சமூகத்தில் மாற்றம் ஏற்படும் போது, மக்கள் மற்றும் அவர்களின் உறவுகளும் மாற்றம் பெறுகின்றன. மேற்கு நாடுகளில் கல்வி கற்ற ஒரு ஆண், கிழக்கு நாடுகளின் கிராமத்தில் கல்வி கற்ற பெண்ணை மணக்கும் போது, அவன் எப்போதும் வீட்டில் தலைமை வகிப்பான். அதற்கு மனைவியும் அனுமதி வழங்குவாள். அவளுக்கு பொதுவாக நகர வாழ்முறைகள் பற்றி தெரிவது இல்லை. இது இரண்டாவது வகை திருமணம். கல்வி அறிவு அதிகம் இல்லாத பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் அதிக கல்வி அறிவுள்ள ஆண், தன் மனைவி தான் சிந்திப்பது அல்லது உணர்வதை புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. மேலும் அவற்றை அவன் விளக்கினாலும் அவளால் புரிந்துகொள்வதும் கடினமாக இருக்கும். அவள் இயல்பாக பணிவுடன் இருப்பாள், மற்றும் அவன் பிடிவாத குணத்துடன் இருப்பான். ¶ஆனால் இந்த முறை, ஆணை காட்டிலும் பெண் அதிகமாக படித்து இருக்கும் சூழலில், முற்றிலும் முரணாக இருப்பதை நான் கவனித்து இருக்கிறேன். அதிக கல்வி அறிவுள்ள ஒரு பெண் கல்வி அறிவில்லாத ஒரு ஆணை மணக்கும் போது, வீட்டில் அவள் மட்டுமே சம்பாதித்துக்கொண்டு இருப்பாள், மற்றும் அவன் பணிவுடன் இருப்பான். அவள் வழக்கமாக பணம் செலவு செய்வதைப் பற்றி முக்கிய முடிவுகளை எடுப்பாள். அவன் வழக்கமாக அதை ஏற்றுக்கொள்வான் அல்லது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்படும். ஒரு உறவுமுறையில் ஒரு தலைவர் மற்றும் ஒரு தொண்டர் இருக்க வேண்டும், ஆனால் இந்த மூன்றாவது வகை மிகவும் கடினமாக விளங்குகிறது. குறிப்பாக அவள் அவனை காட்டிலும் அதிகமாக சம்பாதித்து, அதிக வேலை பாதுகாப்பு, மருத்துவ காப்பீடு மற்றும் ஓய்வூதியம் போன்ற சிறந்த சலுகைகளை பெற்றால், நிலைமை மேலும் கடினமாகிறது. ¶இரண்டாவது மற்றும் மூன்றாவது வகை திருமணம் ஒரு பொதுவான காரணியை கொண்டுள்ளது. கிராமத்து பெண்ணின் கணவன் இறந்தால் அல்லது அவளை விட்டு விலகி சென்றால், அவளிடம் சுயமாக சம்பாதிக்கும் வழி இல்லாததால், அவன் மூலமாக அவளுக்கு சொத்து அல்லது ஜீவனாம்சமாக ஒரு கணிசமான தொகை கிடைக்காத பட்சத்தில், அவள் தனது பெற்றோரிடம் செல்வதைத் தவிர வேறு எந்த வழியும் இருப்பது இல்லை. கல்வித்தகுதி மற்றும் முறையான தொழில் இல்லாத ஒரு கிராமத்து ஆணின் நல்ல கல்வித்தகுதியுடைய மனைவி இறக்கும் போது அல்லது அவனை விட்டு விலகி செல்லும் போது ஒரு பெரிய சொத்து அல்லது ஒரு தாராளமான ஆதரவு

கிடைக்கவில்லை என்றால், அவன் தனது தகுதிக்கு ஏற்ற வேலையை தேடிக்கொள்ள வேண்டியிருக்கும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 145

விஷேச வகை

திருமணங்கள்

முதல் வகையைப் போன்று, நான்காவது வகை திருமணமும் சமமான கல்வி அறிவு உடையவர்களுக்கு மத்தியில் நடைபெறும் திருமணத்தை குறிக்கிறது. ஆனால் இந்த திருமண உறவில், இருவரும் நல்ல கல்வி அறிவு மற்றும் தொழில்முறை திறமைகளுடன் இருப்பார்கள். மேலும் இருவரும் தனித்த முறையில் நல்ல வருமானத்தையும் பெற்று வருவார்கள். இந்த திருமணங்களில் திறமைகள் பயன்படாவிட்டாலும், திருமணத்திற்கு பிறகு வருமானம் மற்றும் பாதுகாப்பிற்கு அவர்கள் மூல காரணங்களாக விளங்குகின்றனர். பல்வேறு தம்பதிகள் தாங்கள் வாழும் சமூகத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அனுபவங்கள் பற்றி சமீபத்தில் எழுதப்பட்ட, இந்த நான்காவது விதிமுறையை பற்றி விளக்குவது மிகவும் முக்கியம் ஆகும். சமமான கல்வித் தகுதி பெற்ற தம்பதியர், குழந்தைகள் வளர்ப்பு மற்றும் வீட்டு மேலாண்மை தொடர்பான எல்லா விஷயங்களிலும், ஒரு ஒருமித்த உடன்பாடு மற்றும் கூட்டுறவுடன் செயல்பட வேண்டும். ¶உறுதியாக அமைந்துள்ள முதல் மூன்று விதிமுறைகளையும் சமூகம் நன்றாக புரிந்துகொண்டுள்ளது. அவை பல்லாயிரம் ஆண்டுகளாக செயல்பாட்டில் இருக்கின்றன. மேற்கத்திய கல்வி, மேற்கத்திய அனுபவம் மூலம் பேணி வளர்க்கப்பட்ட புத்தி மற்றும் பணம் சம்பாதிப்பதற்கு சமமான திறமைகளுடன் நான்காவது வகை திருமணத்தில் ஆண்களும் பெண்களும் சமமாக இருக்கிறார்கள். புத்திக்கு ஆண் பெண் என்ற வேறுபாடு தெரிவது இல்லை. இந்த திருமணங்களில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமத்து பாரம்பரியங்களை பயன்படுத்தினால் அது சச்சரவு, கருத்து வேறுபாடு மற்றும் நிராகரிக்கும் உணர்வுகளை வளர்த்து, இறுதியில் பிரிந்து வாழ்வதற்கு வழிவகுக்கக்கூடும். குடும்பத்தில் இருவரும் சம்பாதித்தால், அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களுக்குள் உடன்பாட்டுடன் இருக்க வேண்டும். ¶ஐந்தாவது வகை திருமணம் அதிக சமய ஈடுபாடு, அதிக ஆன்மீகத்தை சார்ந்து இருக்கிறது. இந்த திருமணத்தில் தங்களுடைய சமய விருப்பங்களை பூர்த்தி செய்ய, மடத்தில் சேவை செய்ய அல்லது வருங்கால புரோகிதர்கள் அல்லது *பண்டிதர்களை* உருவாக்க குழந்தைகளை பெற்றெடுப்பதற்காக தம்பதிகள்

திருமணம் செய்து கொள்கிறார்கள். இத்தகைய உயரிய திருமணங்களில் கண்டிப்பாக *குரு* மற்றும் *சுவாமியின்* ஈடுபாடு இருக்கும். அந்த தம்பதியர் யோகப்பயிற்சியை செய்துக்கொண்டு சமயப்பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் முன்மாதிரிகளாக தங்கள் சமயத்திற்கு சுயநலமற்ற சேவை செய்வதில் முனைப்புடன் இருப்பார்கள். ஒவ்வொரு தம்பதியும் இரு பாகங்களை கொண்ட திருமண ஒப்பந்தத்தை எழுதுவதற்கு, என்னுடைய சைவ சித்தாந்த தேவாலயம் ஊக்குவிக்கிறது. திருமணத்தின் ஒட்டுமொத்த நோக்கம் மற்றும் இந்த சங்கமத்தின் மூலம் அடைய விரும்பும் விருப்பங்கள் மற்றும் இலட்சியங்களை வலியுறுத்தும் பரஸ்பர ஒப்பந்தம் முதல் பாகமாக விளங்குகிறது. கணவன் மனைவியின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கிய அறிக்கை இன்னொரு பாகமாக விளங்குகிறது. பெரிய நிறுவனத்தை போன்ற இந்த அணுகுமுறை காரணமாக, கணவனும் மனைவியும் தங்கள் பொறுப்புக்களை தெளிவாக புரிந்துக்கொள்வதால், இதன் மூலம் பல திருமணங்கள் ஸ்திரத்தன்மை பெறுவதாக நிரூபணமாகி உள்ளது. ¶மற்ற நான்கு வகை திருமண முறைகளை பின்பற்றும் தம்பதியர், விருப்பம் இருந்தால் சரியான நேரத்தில் ஐந்தாவது வகைக்கு மாறலாம். அவர்கள் பிற்காலத்தில் தங்களுக்கு இனி குழந்தைகள் வேண்டாம் என்று முடிவு செய்ததும், *பிரம்மச்சரிய விரதத்தை* மேற்கொண்டு, சகோதரன் சகோதரி போல வாழலாம். இது சைவ கலாச்சாரத்தின் வழக்கமாக இருப்பதோடு சமூக எதிர்பார்ப்புக்களுடன் இணங்கி இருக்கிறது.

சனிக்கிழமை

பாடம் 146

திருமணத்தில்

இணக்கம்

கணவனை தனது *குருவாக* ஏற்றுக்கொள்ளும் மனைவியின் பாரம்பரிய பொறுப்பு என்பது, ஆபத்துக்கள் தோன்றும் போது அவளுடைய கருத்துக்களுக்கும் அவன் சமமான முக்கியத்துவம் தரவேண்டுமா அல்லது அவள் அதிகமாக விட்டுக்கொடுப்பாள் என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டுமா என்று ஒருவர் யோசிக்கலாம். குடும்பத்தின் *குருவாக* கணவனின் இருப்பு இருக்கும் உன்னத நிலையில், *குரு* என்பது ஆசிரியரை குறிக்கிறது. அதனால் இல்லறத்தில் ஒரு *குருவாக* இருப்பதற்கு அவன் அதிக பக்தி, அறிவு, புரிதல், அடக்கமான கணவனாக மற்றும் அன்பாக, நேர்மையாக மற்றும் சமூகத்தில் மதிப்புடன் விளங்கி ஒரு முன் உதாரணமாக விளங்கவேண்டும். இல்லையென்றால் குடும்ப *குருவின்* உன்னத நிலை பொருந்தாது, மற்றும்

அதன் காரணமாகவே இன்று கணவன்-மனைவிக்கு மத்தியில் இருக்கும் உறவு, இயல்பாகவே ஒரு கூட்டு ஒப்பந்தமாகத் தான் இருக்கிறது. ¶உடல், மனவெழுச்சி, அறிவுணர்வு என்று மக்கள் பல கட்டுப்பாடுகளின் பிடியில் சிக்கி இருக்கிறார்கள். பூமியில் இருக்கும் மற்ற சமூகங்களை போல இந்தியாவில் இருக்கும் இந்துக்களில், பெரும்பாலான பெண்கள் படிப்பு அறிவு இல்லாமலும், பெரும்பாலான ஆண்கள் நல்ல படிப்பு அறிவுடனும் இருக்கிறார்கள். அதனால் அறிவுணர்வு பிடியில் சிக்கி இருக்கும் பெண்களுக்கு கணக்கு சரியாக தெரிவது இல்லை மற்றும் சந்தையில் வீணாக பேசுவதும் உணவுப்பொருட்களை பேரம் பேசி வாங்குவது மட்டுமே அவர்களின் திறமையாக இருக்கிறது மற்றும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படுவதும் அது தான். அவள் இயல்பாக கணவனின் மதத்தை பின்பற்றுவாள். மேலும் அவள் இயல்பாக பொருளாதாரம் மற்றும் மற்ற விஷயங்களில் அவனது வழிகாட்டலை முழுமையாக நம்பி இருப்பாள். ¶ஆனால் இன்று காலங்கள் மாறிவிட்டன, மற்றும் பல இந்து சமய பெண்கள் படிப்பறிவு பெற்று, தங்கள் மனதின் மூலம் சொந்த கருத்துக்களை உருவாக்கி, தங்களுக்குள் அறிவுப்பூர்வமாக பேசி, யதார்த்தமான முடிவுகளை எடுக்க முடிகிறது. இத்தகைய திருமணங்களில் *குரு*-சீடன் உறவு இருப்பதில்லை. அவளுக்கு தன் கணவரிடம் இருந்து கற்றுக்கொள்ளும் தேவை இருப்பதில்லை. பெரும்பாலான குடும்பங்களில், அவள் பொருளாதார சுதந்திரத்துடன் இருக்கிறாள். அதனால் அவர்களின் உறவு *குரு* மற்றும் மாணவனைப் போன்று இல்லாமல், வியாபார கூட்டணி போன்று, நான்காவது வகைத் திருமணம் போன்று இருக்கிறது. ¶குழந்தைகள் பிறப்பு மற்றும் அவை நல்ல குடிமகன்களாக வளர்க்கப்படுவது, உறங்குவதற்கு முன்பு கருத்து வேறுபாடுகளை சீர் செய்வது அல்லது வேறுபாடு தீவிரமாக இருந்து விடிந்த பிறகே வேறுபாடு சீர் செய்யப்பட்டால், அதன் பின்னர் உறங்க சென்று ஒரு இணக்கமான வீட்டை பராமரிப்பது, குடும்ப வரவு செலவு கணக்குகளை பராமரிப்பது, மாதாந்திர செலவுகளுக்கு குறித்த நேரத்தில் பணம் செலுத்துவது, குழந்தைகளின் உயர் கல்விக்கு பணத்தை சேமிப்பது, குழந்தைகள் தங்கள் வாழ்க்கையில் சுயமாக செயல்படத் தொடங்குவதை உறுதி செய்வது, வீட்டு கடனுக்கு தவணை செலுத்துவது, பணி ஓய்வுக்கு திட்டமிடுவது, அருகில் இருக்கும் கோயிலுக்கு நன்கொடை வழங்குவதன் மூலம் சமூகத்தின் ஆன்மீக முன்னேற்றத்தை உறுதி செய்வது, வீட்டில் ஒரு பூஜை அறையை பராமரிப்பது, வீட்டில் சில பண்டிகைகள் மற்றும் சில *சம்ஸ்காரங்களை* செய்ய உள்ளூரில் இருக்கும் புரோகிதரை அழைப்பது ஆகியவை அவர்களின் வியாபாரத்தில் அடங்கும். இவை அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு, அவர்கள் தங்களுக்குள் ஒரு நல்ல தொழில்முறை மனப்போக்கை வளர்த்துக் கொள்ளவேண்டும். ¶பெரிய நிறுவனங்களில் இருக்கும் தொழில் வல்லுநர்கள் கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்கு முன்பாக நீண்டநேரம் வாதாடுவதும் இல்லை, சகாக்களின் அழிவிற்கு மறைமுகமாக திட்டம் தீட்டுவதும் இல்லை.

இல்லையென்றால், அவர்கள் விரைவில் இன்னொரு இடத்தில் வேலை தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். இந்த நவீன காலத்தில் விவாகரத்து என்பது வேலை நீக்கம் போன்றதாகும். விவகாரத்திற்கு பிறகு, முன்பு தீர்வுக்காணப்படாத *கர்மவினைகள்* இறுதியில் பக்குவமடைவதற்காக, இன்னொரு நபரை தேடும் பணி தொடங்குகிறது. இதற்கு காரணம் என்னவென்றால், நாம் குறிப்பிட்ட சில *பிராரப்த கர்மவினைகளுடன்* பிறந்து இருக்கிறோம், மற்றும் நாம் அவற்றை முதல் வாழ்க்கைத்துணையுடன் வாழ்ந்து தீர்வு காணவில்லை என்றால் அடுத்து வருபவருடன் சேர்ந்து அவற்றை தீர்வு காண வேண்டும். புதிய *கிரியமான கர்மாக்கள்* உருவாவதை தடுப்பதற்கு, முதல் வாழ்க்கைத்துணையுடன் *கர்மவினைகளை* எதிர்கொள்ள வேண்டும். இதைத்தவிர்த்து இரண்டு, மூன்று மற்றும் நான்கு என்று தொடர்ந்தால், அவை ஒரு *குகர்மாவை* உருவாக்கும். அதனால் நமது பாதையில் ஏற்படும் குழப்பத்தை, இந்த பிறவி அல்லது அடுத்த பிறவியில் சுத்தம் செய்ய வேண்டியிருக்கும். ¶மனைவி தன் கணவனை சிவபெருமானாக பார்க்க வேண்டும் என்றும், அவன் அவளை சக்தியாக பார்க்க வேண்டும் என்றும் மக்களிடம் ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதன் மூலம் அவன் ஒரு உயர்ந்த இடத்தில் இருப்பதாக ஒரு தவறான கருத்து நிலவுகிறது. நல்ல கல்வி அறிவுடைய ஆண் ஒரு படிப்பறிவு இல்லாத பெண்ணை திருமணம் செய்துகொள்ளும் போது மட்டும் ஏற்றத்தாழ்வு இருக்கும். ஆனால் இந்த உறவும் அன்பு மற்றும் பரஸ்பர மரியாதை கலந்ததாக இருக்கவேண்டும். சைவ சித்தாந்த தத்துவத்தை பொறுத்தவரை சிவனும் சக்தியும் முழுமையாகவும் சமமாகவும் ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருந்து, ஒன்றில்லாமல் இன்னொன்று இருப்பது இல்லை. அப்படியென்றால் கணவன் சிவனையும், மனைவியும் சக்தியையும் குறிப்பிடுகிறார்களா? இதற்கு ஆமாம் மற்றும் இல்லை என்பது தான் பதில். சைவ சித்தாந்தத்தில், தெய்வீக பண்பின் இரண்டு அம்சங்களாக சிவனும் சக்தியும் விளங்குகிறார்கள். சிவன் வெளிப்படாத முழுமுதற்பொருளையும், சக்தி வெளிப்பட்ட தெய்வீக பண்பையும் குறிக்கின்றன. ¶மனைவி கணவனுக்கு நிகராக வெளியுலகம், அறிவுணர்வு உலகம், மனவெழுச்சி உலகம் மற்றும் தூல உலகில் இருந்தால், அவர்களுக்கு மத்தியில் இருக்கும் உறவில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதில்லை, அவர்கள் சிவனும் சக்தியுமாக சமமாக இருப்பார்கள். போர் புரிதல், வேட்டையாடுதல் மற்றும் வலுவான உடல் தசைகளுடன் முயற்சி செய்தல் போன்று உடலின் சக்தி ஒரு முக்கிய காரணியாக விளங்கிய ஆரம்பகால மனித சமூகங்களில் இருந்து ஆண் ஆதிக்கம் என்ற பழைய அமைப்பு தோன்றியது. ஒரு சட்டமாக பெண் கல்வி அறிவை பெறாமலும், ஆண் கல்வி அறிவை பெற்றும் வாழ்ந்த தொழில்மயமாக்கத்திற்கு முந்தைய இந்தியா, ஐரோப்பா மற்றும் ஆரம்பகால அமெரிக்காவின் கிராமங்களில் ஒரு வாழ்முறையாக, இந்த பழமையான அமைப்பு நிரந்தரமாக்கப்பட்டது. இந்த அமைப்பை இன்றைய அதிநவீன

தொழில் சமூகத்தில் பயன்படுத்தினால், அது திருமண அழிவிற்கு நாற்று நட்டத்தைப் போன்றதாகிவிடும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 147

இணக்கத்தை பெறுவதற்கு

அர்ப்பணித்துக் கொள்ளுதல்

வழக்கமாக ஒவ்வொரு இந்து குடும்பத்திற்கும், தங்கள் குடும்ப உறவுகளில் இயங்கும் *கர்மவினை* மற்றும் அந்த குடும்பத்தில் பிறவி எடுத்ததால் கடைப்பிடிக்க வேண்டிய *தர்மத்தையும்* அறிந்த ஒரு குடும்ப *குலகுரு* இருக்க வேண்டும். ஒரு *குலகுரு* இல்லாமல் இருப்பது, பெற்றோர்கள் கவனிப்பு இல்லாத ஒரு குழந்தைக்கு சமம் ஆகும்.¶பயில்முறை மனநோய் மருத்துவர் அல்லது மனோதத்துவ நிபுணர் தனது கணவன் அல்லது மனைவியை பயன்படுத்தி தொழிற்பயிற்சி பெறுவது, திருமணத்தில் அதிக சீர்குலைவு ஏற்படுத்தும் சக்திகளில் ஒன்றாகும். பிரச்சனைகளுக்கு தீர்வு காண பயன்படும் இந்த உத்தி, முற்றிலும் ஏற்புடையதாக இல்லை. இத்தகைய முயற்சிகள் நல்ல நோக்கத்துடன் இருந்தாலும், அறிவுணர்வு ஆய்வின் மூலம் தனது வாழ்க்கைத்துணையை சீர் செய்யும் முயற்சி எதிர்ப்பை தூண்டி, சீர்குலைவை ஏற்படுத்தி மனவெழுச்சி மற்றும் மனோரீதியான வேதனையை வழங்குகிறது. "உன்னிடம் ஏதோ ஒன்று தவறாக உள்ளது. நான் அதை சரிசெய்ய இருக்கிறேன். என்னிடம் வா. என்னிடம் எல்லா சிக்கல்களுக்கும் தீர்வுகள் உள்ளன," என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த மனநல சிகிச்சைகள் அமைந்துள்ளன. இந்த கொள்கையில் இருந்து சைவ சமயம் மாறுபட்டு, நீங்கள் முழு நிறைவாக இருக்கிறீர்கள் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. நமக்கு அதைப்பற்றி தெரியாமல் இருப்பது தான் பிரச்சனை. நமக்குள் எப்போதும் இருக்கும் முழுமையில் நமது உணர்வை உயர்த்தும் நோக்குடன் சாத்திரம் படித்து, பிரார்த்தனை செய்து, சிவதொண்டு ஒன்றாக செய்து, ஒன்றாக ஜபம் செய்து நமது முழுமையை அடைவதற்கு முடிவு செய்வோம். ¶உங்கள் வாழ்க்கைத்துணை உங்களை துன்புறுத்த முயற்சி செய்யும் போது, சனாதன தர்மத்தை பிரதான ஆயுதமாக பயன்படுத்தி, உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள். இது உங்களுடைய *கர்மவினை* என்பதை உணர்ந்துகொண்டு, உங்களுடைய *ஸ்த்ரீ தர்மம்* அல்லது *புருஷ தர்மத்தை* முழுமையாக நிறைவேற்றுங்கள். வேதங்கள் முண்டக உபநிடத்தில் (3.1.6) வாய்மையே வெல்லும் (சத்யமேவஜெயதே) என்று உறுதி அளிக்கின்றன. கணவனை மேம்படுத்துவது மனைவியின் கடமையாகவும், மனைவியை மேம்படுத்துவது

கணவனின் கடமையாகவும் இருக்கிறது. நாள் முழுவதும் மனைவி "ஓம், ஓம், ஓம்" என்று ஜபித்துக்கொண்டு தன் கணவனின் உணவில் ஆன்மீக அதிர்வுகளை சேர்ப்பதை, அவளை துன்புறுத்துவதில் உறுதியாக இருக்கும் கணவனால் வெற்றிகொள்ள முடிவதில்லை. இதைப்போல தீமை மீது நன்மையும், *இம்சை* மீது *அகிம்சையும்*, *அதர்மத்தின்* மீது *தர்மமும்* வெற்றி கொள்கின்றன. அத்தகைய சவால்களை எதிர்கொண்டு வளர்ச்சி பெறுவதற்காகவே நாம் இந்த பூமியில் பிறவி எடுத்துள்ளோம். நாம் இங்கே வேறு எந்த காரணத்திற்காகவும் பிறவி எடுக்கவில்லை. ஆனால் கணவன் உடல்ரீதியாக துன்புறுத்த தொடங்கினால், மனைவி தன் குழந்தைகளுடன் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு சென்று விடவேண்டும். அவன் தேவையான ஆலோசனை பெற்று, அவளிடமும் சமூகத்திடமும் மன்னிப்பு கேட்டு, தனது குலகுருவிடம் ஒரு பிராயச்சித்தம் கேட்டு அதை முழுமையாக நிறைவேற்றும் வரை, அவள் ஒரு பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டும். ¶தியானம் செய்து ஆன்மீக விரிவாக்கம் பெற முயற்சி செய்யும் குடும்பங்கள், அகத்திலும் புறத்திலும் வன்முறையை அனுபவித்தால், அவர்கள் இராச யோகம் மற்றும் தியானத்தின் மற்ற வகைகளை பயிற்சி செய்யக்கூடாது. அவ்வாறு பயிற்சி செய்தால் நிலைமை மேலும் மோசமாகி தீவிரமடைவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் *யோகப்பயிற்சிகளை* செய்யக்கூடாது. அவர்கள் சிவதொண்டு அல்லது *கர்ம யோகம், பக்தி யோகம்* மற்றும் எளிமையான *ஜப யோகம்* செய்தால் போதும். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஒரு இணக்கமில்லாத சூழ்நிலை நிலவினால், உறங்குவதற்கு முன்பு கருத்து வேறுபாடுகளை சீர் செய்யவேண்டும். ஆனால் வேறுபாடு தீவிரமாக இருந்து விடிந்த பிறகே வேறுபாடு சீர் செய்யப்பட்டால், அதன் பின்னர் உறங்க செல்லவேண்டும். ¶உறக்கம் ஒரு பிரச்சனையை இரண்டு அல்லது மூன்று இரவுகளில் தளர்த்தி விடுகிறது, மற்றும் அது காலப்போக்கில் நினைவுப் பழக்கங்களில் மங்கி விடுகிறது. இந்த பிரச்சனைக்கு உடலுறவு எந்த தீர்வையும் வழங்குவது இல்லை. அது பிரச்சனையை தற்போதைய நினைவு பழக்கங்களின் விதைக்குள் புதைத்து விடுகிறது, மற்றும் அது என்றாவது ஒரு நாள் மீண்டும் வெளிவரும் என்பதில் சந்தேகம் இல்லை. தம்பதியர் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை சரி செய்ய உடலுறவும் உறக்கமும் சரியான தீர்வுகள் இல்லை. அதில் ஒன்று உடனடியாக ஒத்தி வைக்கிறது மற்றும் இன்னொன்று மெதுவாக ஒத்தி வைக்கிறது. கணவன் மனைவிக்கு இடையே நிலவும் ஒரு கருத்து வேறுபாட்டை மறதியால் ஒத்தி வைப்பதன் மூலம் குழந்தைகள் வாழ்க்கையில் தாக்கம் ஏற்படுத்தாமல் இருக்க, அவற்றை உறங்குவதற்கு முன்பாக தீர்வு காண்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. கணவன்மார்கள் மற்றும் மனைவிமார்கள் தங்கள் பாதையில் ஆன்மீக விரிவாக்கத்தை விரைவுபடுத்தி தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு, இந்த முறையை பயன்படுத்துகிறார்கள். உட்பூசலை சரி செய்வதற்காக நடைப்பெற்ற

சங்கமத்தில் கருத்தரித்த குழந்தைகள், பெரும்பாலும் நரகலோகத்தில் இருந்து வரவழைக்கப்படுவதால், இணக்கம் இல்லாத சூழ்நிலைக்கு உடலுறவு தீர்வாக அமையாது என்று சொல்வதற்கு இன்னொரு காரணமாகும். அத்தகைய குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் குடும்பத்திற்கு ஒரு தொல்லையாக இருக்கக்கூடும்.

குடும்ப மைத்ரீ

कुटुम्बमैत्री



குடும்ப ஒற்றுமை

இனிமையான உறக்கத்தில் இருந்து அதிக ஆனந்தத்துடன் எழுந்து, இன்பமாகி உற்சாகத்துடன் நல்ல மகன்கள், நல்ல மனை மற்றும் நற்பசுக்களுடன் வாழ்ந்து, பிரகாசமான காலை பொழுதுகளை கடந்து செல்லுங்கள்.

அதர்வண வேதம் 14.2.43. ஹிவே, ப. 141



பிரபலமான நவீன ஓபரா ஹவுஸ் இருக்கும் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வசிக்கும் ஒரு தாய் தனது குடும்பத்தின் மீது கவனம் செலுத்தும் நோக்குடன் வீட்டில் இருக்க முடிவு செய்து

இருக்கிறாள். குழந்தைகள் வளர்ப்பில் தேவைப்படும் தொடர்ச்சியான கவனம், ஆதரவு மற்றும் நேர்மறை ஒழுக்கத்தை முழுநேரமும் வீட்டில் இருக்கும் ஒரு அன்புள்ளம் கொண்ட தாயால் மட்டுமே வழங்க முடியும்.

திங்கட்கிழமை

பாடம் 148

குடும்பம் என்றால்

என்ன?

குடும்ப உறவுகளை எப்படி வலுப்படுத்துவது என்ற மிகவும் முக்கியமான கேள்வி இன்று எல்லோர் மனதிலும் ஓடிக்கொண்டு இருக்கிறது. இந்தியாவை தொழில்மயமாக்கம் செய்வதற்காக ஜவஹர்லால் நேரு மேற்கொண்ட முயற்சி, பெரிய குடும்ப அமைப்பு உடைவதற்கு காரணமாக விளங்கியது என்று மக்களிடம் கருத்து நிலவுகிறது. அதன் பிறகு பழங்கால குடும்ப உறவுகள் வலுவிழந்ததால், ஒரு காலத்தில் மிகவும் நெருக்கமாக இருந்த குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகின. பெரிய குடும்பங்களின் சொத்து பல்வேறு திசைகளில் பிரிந்து தனிக்குடித்தனங்களை அமைத்தன மற்றும் எண்ணற்ற குடும்பங்களுக்கு தொடர்ந்து அதிகரித்த தேவைகளை பராமரிக்க தேவையில்லாமல் பணம் செலவழிக்கப்பட்டது. ¶குடும்பம் என்பது உண்மையில் எதை குறிக்கிறது என்பதைப் பற்றி தெரிந்துகொள்வோம். மக்கள் அதை மறந்து விட்டதாக தோன்றுகிறது. அமெரிக்காவில் முதல் உலகப்போருக்கு முன்பாக, வியக்க வைக்கும் வகையில் இருபது-முப்பது பேரை கொண்ட ஒரு குழு பெரும்பாலும் ஒரே வீட்டில், நல்ல அங்கீகாரத்துடன் பெரிய கூட்டுக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. எல்லோருக்கும் ஏதாவது ஒரு வீட்டு வேலை இருந்தது. அவர்கள் அனைவரும் குடும்ப அமைப்பில் தனது பொறுப்பை உணர்ந்து இருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் அன்பாக இருந்து ஒருவரையொருவர் கவனித்து கொண்டனர், மற்றும் வீட்டில் எந்நேரமும் தாய் இருப்பாள். பெரிய குடும்பங்கள் மீண்டும் மக்களிடம் பிரபலம் அடைவதற்கு, குடும்ப ஒற்றுமையை மீண்டும் உருவாக்கும் பெருமுயற்சி நீடித்த காலத்திற்கு தேவைப்படலாம், ஆனால் இன்றும் நம்மிடம் குடும்ப ஒற்றுமை பராமரிப்பில் சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. உலகெங்கும் இருக்கும் இந்துக்கள் தங்கள் சொந்தங்களை தேடிக்கொண்டு, குடும்ப நற்பண்புகளை வலுப்படுத்த கடுமையாக முயற்சி செய்து வருகின்றனர். எங்களது இந்துயிசம் டுடே பத்திரிகை நிருபர், அமெரிக்காவில் வசிக்கும் நல்ல கல்வி அறிவுள்ள இளம் இந்துக்களுடன் பல உற்சாகமளிக்கும் நேர்காணல்களை மேற்கொண்டார். அந்த இளைஞர்கள் மற்றவர் நலனில் அக்கறை செலுத்தும் பழைய கலாச்சாரத்தை புதுப்பித்து, தங்கள் சமூகங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு

இருந்தனர். அவர்கள் நாளைய தலைவர்களாக இருப்பதால், நாங்கள் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து அவர்களின் முயற்சிகளை வரவேற்கிறோம். ¶நீங்கள் அவர்களுடன் இருக்க விரும்புகிறீர்கள் என்பதையும், உங்கள் வாழ்வில் அவர்களின் தேவை இருக்கிறது என்பதையும் குடும்பத்தில் இருக்கும் அனைவருக்கும் தெரிவிப்பதன் மூலமாக, ஒரு குடும்பத்தை ஒன்றாக வைத்து இருக்கலாம் என்று நான் எனது அறிவுரையை நாடும் பெற்றோர்களிடம் தெரிவிப்பேன். "எனது வாழ்க்கையை விட்டு வெளியேறு. நீ எனக்கு தொல்லையாக இருக்கிறாய். நான் செய்வதற்கு மற்ற வேலைகள் உள்ளன. எனது வாழ்க்கை இலட்சியங்களில் உனக்கு இடமில்லை," என்று சொல்ல வேண்டாம். இந்த கண்ணோட்டம் மனதை புண்படுத்துவதோடு, குழந்தைகளுக்கு பதினெட்டு வயது நிரம்பியதும், அவர்கள் வீட்டை விட்டு வெளியேறி சொந்தக்காலில் நிற்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இரண்டாம் உலகப்போரின் போது, ஆயுதப்படைகளில் சேர்வதற்கு நல்ல வலுவான ஆண்கள் வீட்டை விட்டு வெளியேறிய போது, இந்த பழக்கம் மேற்கத்திய நாடுகளில் தொற்றிக்கொண்டது. தங்கள் பெற்றோர்களின் இந்த இரக்கமற்ற போக்கினால் பிரித்து விடப்படும் குழந்தைகள் தனித்து வாழத் தொடங்குகிறார்கள். வீட்டை விட்டு வெளியேறுவதால், முதல் கட்டமாக பெற்றோர்களிடம் இருந்து இரகசியத்தை மறைக்கும் பண்பு தோன்றுகிறது. ¶ஒவ்வொரு இரகசியம் மறைக்கப்படும் போதும், ஒரு சிறிய இடைவெளி உருவாக்கப்படுகிறது. ஐந்து அல்லது பத்து இரகசியங்கள் மறைக்கப்பட்டு, வஞ்சனை செய்வது ஒரு பழக்கமாக மாறிய பிறகு ஒரு பெரிய இடைவெளி உருவாக்கப்படுகிறது. இரகசியங்களின் எண்ணிக்கை கட்டுக்கு அடங்காமல் அதிகரித்ததும், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தை முழுவதுமாக நின்று விடுகிறது. இரகசியங்கள் ஏன் இடைவெளிகளை உருவாக்குகின்றன? ஏனென்றால் ஒவ்வொரு இரகசியத்தையும் மறைக்கவேண்டி இருக்கிறது. இதற்காக சாதுர்யம் மற்றும் விஷயத்தை மறைப்பதற்கு பதுங்கி இருந்து பொய்களையும் சொல்ல வேண்டியிருக்கிறது. "நான் அந்த தவறை செய்தேன் என்று நீ சந்தேகிப்பது எனக்கு வேதனையை தருகிறது," என்று சொல்லி மற்றவர்களை ஒதுக்கி வைக்கும் கோபத்தின் வெளிப்பாடுகளையும் அந்த இரகசியங்கள் வரவழைக்கின்றன. இதனால் தோன்றும் வாக்குவாதங்களுக்கு தீர்வு காணப்படுவது இல்லை, மற்றும் ஒரு ஊடுருவமுடியாத தடை உருவாக்கப்படுகிறது. ¶"நான் அவர்களிடம் அதிக மாற்றத்தை பார்க்கிறேன். என்னால் அவர்களிடம் பேச முடிவதில்லை," தாயும் தந்தையும் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். குழந்தைகளுக்கு கவனமாக இருக்க கற்றுத்தரும் போது, அவர்கள் மறைமுகமாக இரகசியங்களை காக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் குழந்தைகள் கீழ்ப்படிய மறுத்து, சிறிய அல்லது பெரிய தவறு செய்யும் போது, குழந்தைகள் மீது அன்பில்லாத

பெற்றோர்கள், அவர்களை கடிந்துகொள்கிறார்கள் அல்லது சிறிதும் கருணை இல்லாமல் உடல்ரீதியாக துன்புறுத்துகிறார்கள். குடும்பங்களில் பயத்தை ஏற்படுத்தி நிர்வாகம் செய்யும் பெற்றோர்களின் கோபத்தை கண்டு பல குழந்தைகள் அஞ்சுசின்றன. இன்றைய உலகில் வீட்டை விட்டு வெளியேறுவது, குடும்பத்தை பிரிப்பது மிகவும் எளிதாக இருக்கிறது. பலரது எதிர்பார்ப்பும் அதுவாகத் தான் இருக்கிறது. அதைப்போல இரகசியங்களை மறைக்கும் கணவன்மார்கள் மற்றும் மனைவிமார்கள், தங்களுக்கு மத்தியில் ஒரு இடைவெளியை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இறுதியாக வரும் விவாகரத்து ஆணைக்கு முதல் இரகசியம் தொடக்கமாக விளங்குகிறது. ¶ஒரு நல்ல குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள், தங்கள் தாய் தந்தையரிடம் நடப்பது அனைத்தையும் சொல்ல வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை புரிந்துகொள்ளாத போது, அவர்கள் தங்கள் சொந்த குடும்பத்தை பிரிப்பதில் பங்கு வகிக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். தங்கள் குழந்தைகள் அனுபவிக்கும் சில குறிப்பிட்ட அனுபவங்களை கையாள்வது அவர்களுக்கு கடினமாக இருக்கலாம். அப்போது அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கை, செயல்கள் மற்றும் அந்தரங்க சிந்தனைகளை நினைத்துப் பார்க்கும் போது, தங்கள் குழந்தைகள் அதே கற்பனைகளில் மூழ்கி இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வார்கள். குழந்தைகள் செயல்பாட்டில் இருக்கும் தங்கள் பெற்றோர்களின் *கர்மவினைகளை* மீண்டும் செய்கிறார்கள். குழந்தைகள் தங்கள் *கர்மவினை* மாதிரிகளுடன் பொருத்தமாக இருக்கும் குடும்பங்களில் பிறக்கின்றனர். பெற்றோர்களின் *கர்மவினை* மாதிரிகள் எனக்கு தெரிந்தால், எதிர்காலத்தில் அவர்களின் குழந்தைகள் என்ன செய்வார்கள் மற்றும் அவர்களுக்கு தோன்றவிருக்கும் சபலைங்களைப் பற்றி என்னால் கணிக்க முடியும். இந்த தகவலை கவனத்தில் கொண்டு, அவர்களின் பெற்றோர்கள் வாழ்ந்த சபலங்கள் மற்றும் ஆரோக்கியமற்ற அனுபவங்களை தவிர்க்க உதவி செய்து, அவர்கள் வாழ்க்கையில் வழிகாட்டுவது மிகவும் சுலபம். இந்த அனுபவங்கள் அனைத்தையும் அந்த நபர் கடந்த காலத்தில் செய்த செயல்களால், அவர் மூலமாகவே இயக்கப்பட்டவை.

செவ்வாய்க்கிழமை

பாடம் 149

அன்பின்

மாயம்

எவ்வளவு கடினமாக அல்லது சங்கடம் தருவதாக இருந்தாலும், ஒவ்வொரு அனுபவமும் நல்ல அனுபவமாக விளங்கி, அதில் இருந்து கற்றுக்கொள்ள ஒரு

பாடத்தை கொண்டுள்ளது. தீர்வு காணப்படாமல் ஒடுக்கப்பட்ட அனுபவங்கள், அந்த நபருக்கு பெரும் சுமையாக இருக்கக்கூடும். சைவ தர்மத்தை வாழ்வதன் மூலம் நாம் நமக்குநாமே மனோதத்துவ நிபுணர், மனநல மருத்துவர், ஆலோசகர் மற்றும் பிரச்சனைக்கு தீர்வு காண்பவராக இருக்கிறோம். ஒருவர் தனது மனம் சிந்திப்பதை கண்காணிப்பவராக, தனது மனவெழுச்சிகள், வினைகள் மற்றும் எதிர்வினைகளை கண்காணிப்பவராக மெல்ல மாற்றம் பெறுவதே இதற்கு காரணம் ஆகும். ¶குடும்பத்தை ஒன்றாக பிணைத்து வைக்கும் செயலை, அன்பு என்ற ஒரு சொல் கொண்டு சுருக்கமாக முடித்துவிடலாம். அன்பு என்பது புரிதலை குறிக்கிறது. அன்பு என்பது உடன்பாட்டை குறிக்கிறது. நல்ல அனுபவமோ தீய அனுபவமோ, அன்பு என்பது அந்த அனுபவத்தை பெற்றவருக்கு ஒரு நல்ல உணர்வை வழங்கக்கூடியதாக இருக்கிறது. அன்பு என்பது நடந்தது எதுவாக இருந்தாலும், இரகசியங்களை மறைத்து இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற உத்தரவாதம் அளிப்பது. அன்பு என்பது குடும்பத்தினருடன் இருக்கவேண்டும் என்ற விருப்பத்தை குறிக்கிறது. தனது குடும்பத்தை பிணைத்து வைக்க விரும்பும் ஒரு தந்தை, பணியில் இருந்து வீட்டிற்கு விரைகிறார். "எனது அலுவலகத்தில் மேலும் சிறிது நேரம் இருப்பதை தவிர்த்து, பிரச்சனைகள் அதிகமாக உள்ள வீட்டிற்கு நான் எதற்காக செல்லவேண்டும்?" என்று அவர் நினைப்பதில்லை. அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுடன் இருக்க விரும்புவார்கள், மற்றும் இதை அவர்கள் குழந்தைகளுக்கு பல வழிகளில் தெரியப்படுத்துவார்கள். அவர்கள் பிரச்சனைகளை அன்பு, நம்பிக்கை மற்றும் புரிதலின் துணைகொண்டு எதிர்கொள்வார்கள். சரியான புரிதல் இல்லாததே, பிரச்சனைகள் பிரச்சனைகளாக இருப்பதற்கு காரணம் என்பதை அவர்கள் அறிவார்கள். சைவ தர்மத்தை பின்பற்றி வாழ்வதன் மூலம், ஒருவரின் பிறவி *கர்மவினைகள்* மற்றும் குடும்பத்தின் கூட்டு *கர்மவினைகளின்* இயல்பான வெளிப்பாடுகளாக இருக்கும், அனுபவங்கள் வழங்கும் பாடங்கள் மீது புரிதல் மற்றும் உடன்பாட்டை அந்த அன்பு மற்றும் நம்பிக்கை கொண்டுவருகிறது என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த அணுகுமுறை குடும்பத்தை வலுப்படுத்தி ஒருங்கிணைத்து வைக்கிறது. *தர்மத்தை* பின்பற்றி வாழும் வாழ்க்கையில், யாருக்கும் தனிப்பட்ட வாழ்க்கை என்று இருப்பது இல்லை. ¶வீட்டில் இணக்கம் நிலவும் போது, சமூகத்தில் இணக்கம் பரவி, நாட்டிலும் இணக்கம் பரவுகிறது. குடும்பத்தில் அன்பு மற்றும் நம்பிக்கை நிலவும் போது, அன்பு மற்றும் இணக்கம் சமூகத்திற்கும் பரவி, நாடு அதிக வலிமை மற்றும் அதிக பாதுகாப்பை பெறுகிறது. நன்மை மற்றும் தீமைக்கு மத்தியில் வலுவாக வேறுபாடுகளை காணும் திறமை, ஆசைகள் மற்றும் சபலங்களை புரிந்துக்கொள்ள இளைஞர்களுக்கு உதவியாக இருப்பதில்லை. ஒன்றன் பின் ஒன்றாக அனுபவத்தை பெறுவதே அவர்கள் வாழ்க்கையில் இருக்கும் ஒரே பாதையாக விளங்குகிறது. அவர்கள் தங்கள் அனுபவங்களை புரிந்துகொள்வதன் மூலம்

நல்ல மனிதர்களாக வளர்ச்சி பெறுகிறார்கள். ¶மனதில் இரகசியங்களை மறைத்து இருந்து தற்போது தனது குடும்பத்துடன் மீண்டும் நெருக்கமாக இருக்கவேண்டும் என்று விரும்பும் குழந்தைகள் மற்றும் இளம் வாலிபர்கள், தாங்கள் மறைத்து வைத்திருந்ததை வெளிப்படையாக பேச விரும்புவதாக தங்கள் பெற்றோரிடம் கூறவேண்டும். அதன் பின்னர் பெற்றோர்கள் பேசுவதை கேட்பதற்கு, தங்களை மனப்பூர்வமாக தயார் செய்து கொள்ள கால அவகாசம் வழங்கவேண்டும். மனஸ்தாபம் அகன்ற பிறகு, ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிக் கொண்டு மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கும் போது, வீட்டில் குடும்பத்தின் அன்புணர்ச்சி மேலோங்கி இருக்கும். பிரியமானவர்களுக்கு மத்தியில் இரகசியங்களை வெளிப்படுத்தும் போது, ஒரு அற்புதம் நடக்கிறது. இரகசியங்களை வெளிப்படுத்திய போது, வியக்கும் வகையில் தங்கள் பெற்றோர்கள் நன்றாக புரிந்துகொண்டதாக பல இளைஞர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். ஒரு பலூன் தனது எதிர்எடையை இறக்கி விட்டதும் உயர ஆகாசத்தில் பரப்பதைப் போன்று, தாங்கள் சூட்சுமமான இரகசிய சுமைகளை விடுவித்ததும், தங்களுக்குள் ஒரு பெரிய உற்சாகம் பிறந்ததாக இளைஞர்கள் என்னிடம் கூறினார்கள். அவர்கள் உடனடியாக தங்கள் பெற்றோருடன் நெருக்கத்தை பெற்று, குற்ற உணர்வு இல்லாமல், அதிக மகிழ்ச்சியுடன், மன அழுத்தம் குறைவாக, தற்காப்பு தேவையில்லாத உணர்வை பெற்று மற்றவர்களுக்கு உதவுவதில் அதிக ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ¶இரகசியங்களில் மிகவும் முக்கியமானதாக உடலுறவு விளங்குகிறது. பெற்றோர்கள் சிறு வயதில் இருந்தே தங்கள் குழந்தைகளுக்கு பாலியல் நடத்தைப் பற்றி கற்றுத்தர வேண்டும். இதுவும் குடும்ப ஒற்றுமையை உருவாக்கி அதை தக்க வைப்பதற்கு உதவியாக இருக்கும். பல பெற்றோர்கள் பாலுறவு, பாலியல் படங்கள், போதை மருந்துகள் மற்றும் இன்று உலகம் வழங்கும் பல்வேறு சபலங்களைப் பற்றி பேசுவதற்கு தயங்குகிறார்கள். உங்கள் வீட்டில் இருந்த சூழ்நிலை நிலவினால், சமூகம் மற்றும் தொழில்முறை வல்லுனர்களின் உதவியை நாடுவது நல்லது. இதைப்பற்றி பேசாமல் இருந்தால், குழந்தைகள் உலகை எதிர்கொள்ள தயாராக இருக்கமாட்டார்கள். இந்த விஷயங்களை வெளிப்படையாக எதிர்கொள்ளக் கூடாது மற்றும் எதிர்கொள்ள முடியாது என்ற கருத்துடன் வாழ்வதன் மூலம், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் இரகசியமாக வாழ நிர்பந்திக்கிறார்கள். சூழ்நிலையில் முன்னேற்றம் ஏற்படும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள், ஆனால் அவ்வாறு நடப்பது இல்லை. ¶குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடம் இருந்து, மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களிடம் இருந்து, கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களிடம் இருந்து, மாணவர்கள் தங்கள் *குருவிடம்* இருந்து என்று நீளமாக இருக்கும் மறைக்கும் இரகசியங்களின் பட்டியலில், முதல் இரகசியம் முக்கிய சிக்கலாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது. ஏனென்றால் அந்த முதல் இரகசியம் மேலும் பல தோன்றுவதற்கு வழிவகுக்கிறது. இந்து தர்மத்தின் *இயமங்கள்*

மற்றும் *நியமங்களை* பின்பற்றுவதே இதற்கான தீர்வு ஆகும். இவை சனாதன தர்மத்தின் இயல்பான விதிகள் ஆகும். மனிதன் பின்பற்றவேண்டிய இந்த நெறிமுறைகள் குடும்பங்களை ஒருங்கிணைத்து, திருமணங்களை ஒருங்கிணைத்து, சமூகங்களை ஒருங்கிணைத்து, நாடுகளை ஒருங்கிணைக்கின்றன. சாசுவதமாக இருக்கும் இந்த வேத கோட்பாடுகள் எல்லோருக்கும் பொருந்தும்.

புதன்கிழமை

பாடம் 150

எது ஒரு வீட்டை

இல்லமாக மாற்றுகிறது?

எது ஒரு வீட்டை இல்லமாக மாற்றுகிறது? தோழமை உணர்வு நிரம்பிய இடமாக இருக்கும் ஒரு இல்லத்தில் மக்கள் தங்களுக்குள் பாசத்துடன் இருந்து, வெளியுலக பணியில் தங்கள் சகாக்களுடன் அல்லது பள்ளியில் தன் வகுப்பு மாணவர்களுடன் இருப்பதை காட்டிலும், வீட்டினுள் அதிக இணக்கத்துடன் இருக்கிறார்கள். அதிக காந்தத்தன்மையுடன் இருக்கும் ஒரு இல்லத்தை விட்டு வெளியேறுவது கடினமாக இருக்கும். ஒரு இல்லத்தில் அன்பு, பாசம், பகிர்வு மற்றும் பாராட்டு இருப்பதோடு அதில் வசிப்பவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள். சுயநலமில்லாமல் ஒற்றுமை தவழும் அந்த இடத்தில், எல்லோரிடமும் மற்ற எல்லோருக்கும் ஒதுக்குவதற்கு நேரம் இருக்கிறது. ஒரு இல்லத்தில், விருந்தாளிகள் தெய்வங்களைப் போன்று அல்லது *தேவர்கள்* கோயிலுக்கு வருவதைப் போன்று உபசரிக்கப்படுகிறார்கள். அதுவே இந்துசமய அமைப்பில் உபசரிப்பின் சாரம் ஆகும். விருந்தாளி வழியாக பாய்ந்து செல்லும் உன்னத சக்தியின் சாரமே, அந்த குடும்பம் வழியாகவும் பாய்ந்து செல்கிறது. தினமும் காலையில் ஒன்று சேர்ந்து வழிபடும் ஒரு நேர்மையான குடும்பம், ஒரு கோயிலைப் போல விளங்குகிறது. அது ஒரு இல்லமாக இருக்கிறது, மற்ற அனைத்தும் கல்லால் செய்த வீடு அல்லது ஒரு ஓட்டல் வரவேற்பறையாக இருக்கிறது. ¶நீங்கள் ஒரு இணக்கமான வீட்டை உங்கள் சூட்சும பார்வையில் பார்க்கும் போது, நீங்கள் காணும் வெளிர் இளஞ்சிவப்பு, வெளிர் நீளம், வெளிர் மஞ்சள் நிறம் மற்றும் வெள்ளை நிறம், ஒரு பெரிய *பிராண* விசைப்பகுதியில் ஒன்றாக கலக்கின்றன. நீங்கள் வேறொரு வீட்டிற்கு மாறும் போது, கருத்த மற்றும் இலேசான நிறபேதங்கள் மற்றும் விநோதமான சூட்சும வடிவங்களுடன் பல்வேறு நிறங்களின் திரளை காணும் போது, அந்த வீடு ஒரு ஓட்டல் வரவேற்பறை போன்று இருந்துள்ளதை உங்களால் உணர முடியும். ¶அமெரிக்காவில் பல குடும்பங்கள் ஆடம்பரமான பெரிய வீடுகளில்

வசித்துக்கொண்டு இருக்க, அந்நாட்டு தெருக்களில் தங்களுக்கு என்று வீடில்லாமல் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு நாம் என்ன செய்யவேண்டும் என்று என்னிடம் ஒரு முறை கேள்வி கேட்கப்பட்டது. நானும் தெருக்களில் குடும்பங்களை பார்த்து இருக்கிறேன். ஆனால் அவர்கள் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக உறங்கி, ஒன்றாக பேசி, ஒன்றாக சாப்பிட்டு வந்தால், அவர்கள் ஆதரவற்றவர்களாக இருந்தாலும், அவர்களை ஒரு குடும்பமாகவே கருதவேண்டும். ஒரு குடும்பமாக வாழ்வதற்கு ஒரு கூரை அல்லது வீடு தேவையில்லை. பல மில்லியன் டாலர் மதிப்புள்ள வீடுகளை கட்டி, அதில் உண்மையில் வசிக்க முடியாத செல்வந்தர்களே உண்மையில் வீடு இல்லாதவர்கள். தங்கள் வீட்டை ஒரு ஓட்டல் வரவேற்பறையாக மாற்றியவர்களே உண்மையில் வீடு இல்லாதவர்கள். கணவன் வேலை செய்கிறான். மனைவி வேலை செய்கிறாள். குழந்தைகள் கீழ்படியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குள் நட்புறவு இருப்பதில்லை. அவர்கள் தினமும் பேசிக்கொள்வது இல்லை. அவர்கள் தினமும் ஒன்றாக சாப்பிடுவது இல்லை. அவர்கள் தங்களை பார்த்துக் கொள்வதும் அரிதாக இருக்கிறது. தங்கள் வீடுகளில் இருக்கும் குடும்பத்தின் மீது முழு கவனம் செலுத்த முடியாமல் குழந்தை காப்பாளர்கள், பொறுப்பாளர்கள், தோட்டக்காரர்கள் மற்றும் பணிப்பெண்களை நியமித்து இருப்பவர்களே, உண்மையில் வீடு இல்லாத ஆதரவற்றவர்கள். பெரும்பாலும் குழந்தை காப்பாளர்கள் குழந்தைகளை துன்புறுத்துகிறார்கள். இதைப்பற்றி பெற்றோர்கள் தெரிந்துக் கொள்ளாமலும், தங்கள் வீடுகளில் வாழாமலும் வெளியுலகில் வேலை செய்து வருகின்றனர். இது செல்வந்தர்கள் மற்றும் வீடுகள் இல்லாமல் ஆதரவற்று இருப்பவர்களுக்கு மத்தியில் வித்தியாசம் காணும் இன்னொரு முறை ஆகும். யாரை நினைத்து பரிதாபப்படுவது? ¶ஒரு வீட்டை இல்லமாக மாற்றுவதற்கு, கணினி மற்றும் இணையதளத்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்த வேண்டும். கணினி தொடர்ந்து செயல்பட்டு வந்தால், எல்லோரும் வீட்டில் இருந்தாலும், அந்த வீடு ஒரு அலுவலகமாக மாறி விடுகிறது. இன்று பல வீடுகள் அலுவலகங்களாக மாறி விட்டன. மனிதர்கள் தங்களுக்குள் தொடர்புகொள்வது முற்றிலும் நின்றுவிட்டது. வீட்டில் மற்றவர்களுக்கு ஒதுக்கவேண்டிய நேரத்தை கணினி பயன்படுத்திக் கொள்கிறது. கணினி திரை முன்பாக அமர்ந்து அதன் மென்பொருளை பயன்படுத்தி விளையாடுவதையும் மக்களுடன் தொடர்பு கொள்வதையும் தவிர்த்து, கணினியை மிதமாக பயன்படுத்தும் போது, ஒரு மனிதனுடன் மென்மையாக நகைச்சுவை உணர்வுடன் தொடர்புகொள்வதற்கு நமக்கு நேரம் கிடைக்கிறது. இந்த சூழல் தான் ஒரு வீட்டில் முக்கியமாக தேவைப்படுகிறது.

வியாழக்கிழமை

பாடம் 151

தன்னம்பிக்கை இழந்த

குடும்பங்கள்

இன்று உலகில் பல செயலிழந்த குடும்பங்கள் இருக்கின்றன. செயலிழந்த குடும்பம் என்றால் என்ன? செயலிழந்த குடும்பம் என்பது தன்னம்பிக்கை இழந்த குடும்பம், ஒரு வீடு இல்லாத குடும்பத்தை குறிக்கிறது. அவர்களிடம் மில்லியன் டாலர் மதிப்புள்ள வீடு இருக்கலாம், ஆனால் அதை ஒரு இல்லமாக மாற்றுவதற்கு தொடர்ந்து காந்தத்தன்மை கொண்ட அன்பு மற்றும் உறவுமுறை அதிக அளவில் தேவைப்படுகிறது. பல மில்லியன் டாலர் மதிப்புள்ள இல்லங்கள், மனித உணர்வுகள் ஏதும் இல்லாமல் வெறும் வீடுகளாக இருக்கின்றன. ¶அந்த வீடுகளில் விருந்தாளிகள் இறைவனாக இருப்பதில்லை, ஆனால் அவர்கள் எதிர்கால வியாபார கூட்டாளிகளாக மற்றும் சமூக கடமைகளாக கருதப்படுகிறார்கள். ஒரு தந்தை தனது மனைவி மற்றும் குடும்பத்துடன் இருக்கும் நேரத்தை தவிர்க்க, பணியிடத்தில் நீண்டநேரம் வேலை செய்கிறான். அவன் வீட்டிற்கு வந்ததும், தனது இரவு விருந்து சாப்பிடும் போது தொலைகாட்சி முன்பாக உட்கார்ந்து கொள்கிறான். கணவனுக்கு நிகராக பணிச்சுமை இருக்கும் வேலையில் இருந்து சோர்வாக ஒரு தாய் வீடு திரும்பும் போது, அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டு இருக்கும் குழந்தைகளிடம் அவள் கடிந்து கொள்கிறாள். வாய்த்தகராறு வாழ்க்கையின் அங்கமாக மாறிவிடுகிறது. இளைஞர்கள் மேற்பார்வை இல்லாமல் இயங்குகிறார்கள். ஒருவருக்கு இன்னொருவர் என்ன செய்கிறார் என்பது தெரிவதில்லை. இளம்பெண்கள் திருமணத்திற்கு முன்பாக கருவுறுகிறார்கள். சிறுவர்கள் அவதூறாக பேசி, குற்றவாளி கும்பல்களில் ஈடுபட்டு, போதை மருந்து பழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள். அது கண்டிப்பாக ஒரு செயலிழந்த குடும்பம், ஒரு ஊக்கமிழந்த குடும்பத்தின் ஓட்டல் வரவேற்பறை என்பதில் சந்தேகமில்லை. ¶ஊக்கமிழந்த குடும்பத்தின் பதின்மவயது இளைஞர்களுக்கு ஒரு வேலை கிடைத்து, அவர்கள் ஒரு குடியிருப்பில் வசிக்கத் தொடங்கியதும் அவர்கள் வீட்டை விட்டு வெளியேறுகிறார்கள். அது ஒரு தரமான வாழ்முறையாக இருக்குமா? இதை சொல்வதற்கு வருத்தமாக இருந்தாலும், வீட்டில் கணவனும் மனைவியும் நல்ல உயர்ந்த பதவியில் இருக்கும் வீடுகள், வீட்டின் இதயமாக விளங்கும் அடுப்பங்கரை இருக்கும் வீடாக இல்லாமல், நொறுக்குத்தீனிகள் நிறைய இருக்கும் ஒரு ஓட்டல் வரவேற்பறையாக தான் இருக்கும். உங்கள் வீட்டைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். விருந்தாளியை இறைவனைப் போல உபசரிக்கிறீர்களா? உங்கள் வீடு இல்லம் போல இருக்கிறதா? அதில் எந்த வகை சூட்சும அதிர்வு இருக்கிறது? உங்களிடம் நேர்மையாக இருந்துக்கொண்டு ஆய்வு செய்யுங்கள்! ¶ஓட்டல் வரவேற்பறை

போல உள்ள ஒரு வீட்டில் இருந்து வெளிவரும் சூட்சும *பிராண* சக்திகள் அல்லது ஆற்றல்கள், அங்கு வசிப்பவர்களுக்கு ஏமாற்றத்தை வழங்குகிறது. அவர்கள் அசௌகரியமான இடத்தில் வசிப்பதால், அவர்கள் தங்களை சுற்றி இருப்பவர்களுக்கும் அசௌகரியத்தை வழங்குகிறார்கள். ஒரு காலி வீட்டில் இருந்து வெளிவரும் *பிராண* சக்திகள், ஒரு நபரை தகுதியற்றவனாக மாற்றிவிடுகிறது. உலகில் இருக்கும் இந்துக்கள் அனைவரும் இந்த சூழ்நிலையை, மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளில் எதிர்காலத்தில் வரவிருக்கும் புதிய இந்து தலைமுறைகளுக்கு ஒரு நிலையான மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை வழங்கும் நோக்குடன் மாற்றி அமைக்கவேண்டும். இந்த அடுத்தகட்ட நடவடிக்கையை, உலகில் இருக்கும் இந்து மதத்தை சேர்ந்த அனைவரும் மனப்பூர்வமாக மேற்கொள்ள வேண்டும். ஒரு எதிர்மறையான சூழ்நிலையை நேர்மறையாக, ஊக்கமளிக்கும் சூழ்நிலையாக மாற்றும் திறமை புத்தியிடம் மட்டுமே இருக்கிறது. ¶பெற்றோர்கள் தங்கள் வீட்டில் சூட்சும சூழலை பராமரித்து, அதை ஆன்மீக சக்திகளுடன் அதிர வைத்து ஒரு உண்மையான இல்லத்தை உருவாக்குவதற்கு, தாய் தன் பொறுப்புக்களை செய்வதும், அந்த பொறுப்புக்களை தாய் நிறைவேற்ற தந்தை அனுமதிப்பதும் முக்கியம் ஆகும். வீட்டை இல்லமாக மாற்றவது அடுத்த கட்ட நடவடிக்கை ஆகும். உங்களுக்கு விரைவாக திரும்ப வேண்டும் என்ற எண்ணம் தோன்றினால், அது இல்லம் என்பதை புரிந்துக் கொள்ளுங்கள். நீண்ட நாட்கள் வெளியே இருப்பதில் உங்களுக்கு விருப்பம் இருக்காது, மற்றும் அதை விட்டு விலகி செல்வதும் உங்களுக்கு கடினமாக இருக்கும். நீங்கள் உங்கள் ஆனந்தமய கோசத்தில் இருந்து உருவாக்கிய அதிர்வை விரும்புவதே இதற்கு முக்கிய காரணம். நீங்கள் எதன் மீது கவனம் செலுத்தினாலும், அது நேர்த்தியாக இருக்கும். அதில் பிளவு ஏதும் இருக்காது. ¶ஒரு வீட்டை ஒரு இல்லமாக மாற்றும் செய்முறை மெதுவாக இயங்கும். அவர்கள் தங்கள் இல்லத்தில் ஆன்மீக நம்பிக்கையுடன் வாசம் செய்யவேண்டும். தாய், தந்தை மற்றும் ஒவ்வொரு குழந்தையின் ஒளி உடல்கள், வீட்டின் சுவர் வழியாக ஊடுருவ வேண்டும். இல்லத்தில் மகாதேவர்கள் மற்றும் காவல் *தேவதைகள்* மற்றும் பித்ருக்களை வழிபட்டு, ஆவாகனம் செய்ய வேண்டும். அது உண்மையில் ஒரு வீட்டை *பிராண சக்தி* வாழும் இல்லமாக மாற்றி, உருவாக்கும் அதிர்வு காரணமாக நீங்கள் அந்த வீட்டை விட்டு எப்போதும் வெளியேற விரும்புவதில்லை.

வெள்ளிக்கிழமை

பாடம் 152

உண்மையில் செல்வம்

என்றால் என்ன?

ஒரு புரோகிதரை அழைத்து சுத்தி புண்ணியாகம் செய்வதன் மூலம், இல்லத்தில் ஆன்மீக சூழலை தொடங்கலாம் அல்லது அதை புதுபிக்கலாம். அதன் மூலம் இல்லத்தில் *பிராண* சக்திகள் சீராக இயங்குகின்றன, மற்றும் அவற்றை சமூகத்திற்கு எடுத்து செல்லும் போது நீங்கள் முழுமை அடைகிறீர்கள். திங்கட்கிழமைகளில் இல்லத்தில் மாலை பொழுதை ஒன்றாக கழிப்பதும் முக்கியம் ஆகும். இது இந்துக்கள் உட்பட பல மதங்களில் பின்பற்றப்படுகிறது. சிவபெருமானுக்கு உகந்த தினமான திங்கட்கிழமை அன்று, மாலைப்பொழுதில் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக கூடி, ஒரு அருமையான விருந்தை தயார் செய்து, ஒன்றாக விளையாடி, ஒருவரையொருவர் பாராட்டி கொள்ளவேண்டும். அன்று மாலையில் தொலைகாட்சி நிகழ்ச்சிகளை பார்க்கக்கூடாது. அன்று எந்த பிரச்சனைக்கும் தீர்வு காணப்படுவது இல்லை. அவர்கள் தங்களுக்குள் அன்பை பரிமாறிக் கொள்கிறார்கள், மற்றும் சிறியவர் முதல் பெரியவர் வரை தங்கள் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். வாரம் ஒரு முறை குடும்பம் ஒன்றாக கூடும் அந்நாளில், இல்லத்தில் தாய் தந்தை இருப்பதை எல்லோரும் எதிர்பார்த்து இருப்பார்கள். திங்கட்கிழமை தவறினால் செவ்வாய்க்கிழமை அல்லது வேறொரு நாளில் குடும்பத்தினர் ஒன்றாக கூடலாம் என்று பொருளில்லை. குடும்பம் தங்கள் இல்லத்தில் எப்போதும் திங்கட்கிழமைகளில் சந்திக்க வேண்டும், மற்றும் எல்லோரது வாழ்க்கையும் அதனோடு பொருந்திக் கொள்ள வேண்டும். ¶தங்கள் வேலை காரணமாக பல குடும்பங்களால் ஒன்று கூடுவது கடினமாக இருக்கிறது. இன்று வாழ்க்கையில் வசதியாக இருப்பதற்கு இரண்டு அல்லது மூன்று வருமானங்கள் தேவை என்று மக்கள் நினைக்கிறார்கள். பணத்தை சம்பாதிக்கிறோம் மற்றும் சில சமயம் அதை விரைவில் இழக்கிறோம். சில சமயம் பணத்தை சம்பாதித்த வேகத்தில் இழக்கிறோம். ஆனால் செல்வம் என்றால் என்ன? செல்வம் என்பது பல முகங்களை கொண்ட ஒரு வைரம் போன்றது. அதில் பணம் என்பது ஒரு முகம் தான். தங்களுக்குள் நல்ல உறவை பேணி ஆனந்தமாக இருக்கும் குடும்பமே ஒரு மிகப்பெரிய செல்வம் ஆகும். ஒன்றாக ஒரு செயலை செய்து, அந்த செயலை ஆனந்தமாக செய்வது இன்னொரு மாபெரும் செல்வம் ஆகும். எல்லோருடனும் சேர்ந்து இருப்பதற்கு தூண்டுதலாக இருக்கும் இல்லத்தை உருவாக்க முடிந்தால், நீங்கள் ஒரு செல்வந்தர். உங்கள் உணவை நீங்கள் வளர்ப்பது, உங்கள் அறைகலனை நீங்களே உருவாக்குவது, உங்கள் துணிகளை நீங்களே தைப்பது, பல வருடங்கள் முன்பாக குடும்பம் செடியாக நட்ட மரத்தில் இருந்து ஆரஞ்சு பழங்களை பறிப்பது ஆகியவை செல்வதை குறிக்கின்றன. உங்கள் வருமான வரம்பை மீறாமல் செலவு செய்வது இன்னொரு மாபெரும் செல்வம் ஆகும். மாபெரும் செல்வந்தர்களும் தங்கள் வருமானத்திற்கு ஏற்ற செலவு செய்யாமல் எப்போதும் கடன்சுமைகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும்

பொறுப்புக்களை பற்றிய கவலையில் இருந்தால், அவர்கள் ஏழைகள் தான். அவர்கள் பல மில்லியன் சொத்துக்களை சம்பாதிக்கும் பொருட்டு தங்கள் குடும்பம், தங்கள் குழந்தைகள் மற்றும் தங்களது சொந்த மகிழ்ச்சியை தியாகம் செய்ததால், அவர்கள் பெரும்பாலும் தனிமையில் வாடுகிறார்கள். பலர் பல மில்லியன் டாலர் மதிப்புள்ள மாளிகைகளை கட்டி திருப்தி அடைகிறார்கள். அதனால் யாருக்கும் பயன்? தோட்டக்காரருக்காக கட்டப்பட்டதா? வீட்டு உரிமையாளர்கள் உலகெங்கும் பயணம் செய்து, சொந்த வீட்டிற்கு நள்ளிரவில் வந்து, மீண்டும் அதிகாலையில் வெளியே சென்று விடும் போது, நாள் முழுவதும் வீட்டிலேயே வசிக்கும் ஒரு சமையல்காரர், ஒரு பணிப்பெண் அல்லது இருவருக்கும் கட்டப்பட்ட மாளிகையாக இருக்கக்கூடும். அது செல்வமும் இல்லை. அது விவேகமும் இல்லை. அது இளம் வயதில் மரணத்தை தேடிக்கொள்ள ஒரு நல்ல வழியாக இருக்கிறது. ¶பெற்றோர்கள் இருவரும் வேலைக்கு சென்று வீட்டிற்கு இரவு நேரத்தில் திரும்பும் வரையில், குழந்தைகளை கவனிக்க ஒரு பணிப்பெண்ணை நியமிப்பது எந்த வகையிலும் ஒரு தாய்க்கு ஈடாகாது. ஒரு பணிப்பெண்ணை ஒப்பிடும் போது தாத்தா பாட்டியின் கவனம் சிறப்பாக இருக்கும் என்றாலும், அதுவும் தாயின் கவனத்திற்கு ஈடாகாது. பெரியவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பார்த்து, பெரியவர்கள் தங்களுக்குள் எதை பேசுகிறார்கள் என்பதை கேட்டு, பெரியவர்கள் எந்த உணர்ச்சிகளுடன் இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு தெரியாமல் குழந்தைகள் உணர்ந்துக் கொண்டு, அவர்கள் பெரியவர்களை நகல் செய்து கொள்கிறார்கள் என்பதால் ஒரு உண்மையான தாய் மற்றும் தந்தையின் இடத்தை ஒரு பதிலித் தாயால் நிரப்ப முடியாது. அவை அவர்கள் எதிர்காலத்தில் என்னவாக போகிறார்கள் என்பதற்கு அடிப்படையாக அமையும். அன்பு கலந்த சூழல் மற்றும் பகிர்வு கலந்த சூழல் அடங்கிய ஒரு குடும்ப சூழலுடன் இருக்கும் ஒரு உண்மையான வீட்டின் உண்மையான தாய் தந்தையருக்கு ஈடாக யாரும் இருப்பதில்லை. ஒரு தாயின் பணியிடம் அவள் இல்லத்தில் இருக்கிறது. ¶தாய் என்பவள் யார்? தனது குழந்தைகள் மீது அன்பு செலுத்தி, அமைதியாக, பொறுமையாக, கோபிக்காமல், குழந்தைகளிடம் தனது வெறுப்பை வெளிப்படுத்தாமல், ஒரு குழந்தை பல்வேறு வளர்ச்சி நிலைகளை கடந்து செல்கிறது என்பதை உணர்ந்து இருப்பவள் தாயாக இருக்கிறாள். ஒரு குழந்தை வயதில் பெரியவர்கள் போல் நடந்துகொள்ள வேண்டும் என்றோ அல்லது தொடக்கத்திலேயே அதிக குறும்புடன் இருக்க வேண்டும் என்றோ எதிர்பார்க்கக் கூடாது. ஒரு தாய் இவை அனைத்தையும் இயலுணர்வுடன் அறிந்து இருக்கிறாள், ஆனால் அவளுடைய இயலுணர்வு மனம் வேலை செய்து, மனித நேயம் முழுவதற்கும் அமைதி மற்றும் செல்வத்தை தரவிருக்கும் எதிர்கால புதிய யுகம் வழங்கும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்குடன், அடுத்த தலைமுறையை போதிய வலிமையுடன் வளர்ப்பதற்கு அவள் வெளியுலகம், செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் பணம் வசூலிப்பவர்கள்,

பயணம், தொலைகாட்சி மற்றும் வேறு பல கவலைகளில் இருந்து விடுபட்டு இருக்க வேண்டும். ¶தாய்மார்கள் குழந்தைகளை அடித்தால், அந்த குழந்தைகள் மற்ற குழந்தைகளை அடிக்கும். வன்முறையை பயன்படுத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகின்றன என்று அவர்கள் வீட்டில் கற்றுத்தந்து இருப்பதால், அந்த குழந்தைகள் பிற்காலத்தில் போராளிகளாக மாறி தங்கள் வாழ்க்கை முழுவதும் உணர்ச்சிப்பூர்வமாக, மனப்பூர்வமாக சண்டையிடுகிறார்கள். அது நாம் எதிர்பார்க்கும் புதிய யுகத்தை அழைத்து வராது. அது பழைய யுகத்தை மீண்டும் அழைத்து வரும். அந்த குழந்தைகள் வளர்ப்பு முறை ஒழிய வேண்டும். ஒரு தாய் உண்மையான தாயைப் போல இருக்க வேண்டும். ஒரு தாய் வீட்டில் இருப்பதில் பலருக்கு உடன்பாடு இருப்பதில்லை. அமெரிக்காவில் இரண்டாம் உலகப்போரின் போது வீட்டை விட்டு வெளியேறிய தாய்மார்கள் மீண்டும் வீடு திரும்பவில்லை, ஏனென்றால் அப்போது ஆண்கள் போருக்கு சென்று இருந்ததால், அவர்கள் விமானத் தொழிற்சாலைகள் மற்றும் கப்பல் கட்டும் தளங்களில் வேலை செய்யவேண்டிய இருந்தது. ஆனால் இரண்டாம் உலகப்போர் மற்றும் முதல் உலகப்போருக்கு முன்பாக தாய்மார்கள் வீட்டில் இருந்தார்கள். அன்று இளமைப் பருவ குற்றங்களை பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. அன்று பதின்ம வயதை சேர்ந்த ஒருவன் தவறு செய்தால், அவன் குடும்பம் சமூகத்திற்கு பதில் சொல்ல வேண்டியிருந்தது. அன்று அத்தகைய விஷயங்கள் ஒழுங்குமுறையுடன் இருந்தன, ஆனால் தாய் வீட்டை விட்டு வெளியேறியதும் இழந்த சமநிலையை மீண்டும் பெறவில்லை.

சனிக்கிழமை

பாடம் 153

மாமியார்கள்

அன்பர்கள் என்னிடம் குடும்ப ஒற்றுமை பற்றி தங்களது அனுபவங்களை என்னிடம் பகிர்ந்த போது, எல்லோருக்கும் மாமியார் ஒரு பொதுவான கவலையாக இருப்பதை தெரிந்து கொண்டேன். தம்பதிகள் பிரிவதற்கு அல்லது விவாகரத்திற்கு பெரும்பாலும் இரு வீட்டு மாமியார்கள் காரணமாக இருக்கிறார்கள். "இந்த பெண் என் மகனுக்கு பொருத்தமானவனாக இல்லை," அல்லது "இந்த மாப்பிள்ளை என் பெண்ணிற்கு பொருத்தமானவனாக இல்லை," என்று மனநிலையுடன் அவர்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள். தங்கள் மனம் அமைதி அடையவேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து வழங்கும் இந்த உணர்ச்சிப்பூர்வமான, மனப்பூர்வமான மற்றும் உடல் ரீதியான சித்ரவதைகள், தம்பதிகள் பிரிவதற்கு காரணமாக இருக்கக்கூடும். திருமணத்திற்கு ஜோதிட பொருத்தம் பார்க்கவேண்டும் என்று அன்பர்கள் எங்களை அணுகும்போது, நாங்கள் மணமகன் மற்றும் மணமகள்

பொருத்தத்தை மட்டும் பார்க்காமல், மணப்பெண் மற்றும் மணமகனின் தாயார் பொருத்தத்தையும் பார்க்கிறோம். ¶இன்றைய மாமியார்களுக்கும் எதிர்காலத்தில் மாமியாராகவிருக்கும் ஒவ்வொரு மகளுக்கும், நல்ல அறிமுகம் இல்லாத ஒரு வரனுக்கு தங்கள் மகன்கள் மற்றும் மகள்களை தருவதில், அவர்களுடைய சொந்த பாதுகாப்பின்மை அடங்கியுள்ளது என்பதை அறிவது முக்கியம் ஆகும். மிகவும் புதிதாக இருக்கும் சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள், இன்று உலகின் சில பகுதிகளில் மட்டுமே உள்ளன. அவை இல்லாத பட்சத்தில், இயல்பாக எதிர்கால கவலைகள் தோன்றும். ஒவ்வொரு சமூகமும் மாமியார்கள் மற்றும் மாமனார்கள் பிரச்சனைகளுக்கு பக்குவமான தீர்வுகளை கொண்டிருந்தாலும், இன்றைய உலகில் அந்த சிக்கல்கள் மேலும் கடினமாக இருக்கின்றன. அதிகமாக ஆதிக்கம் செலுத்தி, கர்வத்துடன், தீவிரமாக விமர்சனம் செய்து மனமிரங்காமல் இருக்கும் பண்பு போன்று பாதுகாப்பின்மையின் கிளை விளைவுகளாக இருக்கும் நடத்தை முறைகள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் போது, இளைஞர்கள் தங்கள் மாமனார் மாமியாரின் தேவைகள், அவர்களின் உணர்வுகள், அவர்களின் பாதுகாப்பின்மையை உணர்ந்து இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். "வயதானவர்கள் மற்றும் பழமைவாதிகள் தடையாக இருக்கிறார்கள்," என்று அமெரிக்காவில் வருத்தத்திற்குரிய ஒரு வழக்கு மொழி உள்ளது. தங்களுக்கு தொல்லையாக இருக்கும் முதியவர்களை முதியோர் இல்லம் அல்லது "பாரடைஸ் ரெட்ரீட்ஸ்" போன்ற இடங்களுக்கு அனுப்பி வைப்பது வழக்கமான தீர்வாக இருக்கும். ¶மாமியார் செலுத்தும் ஆதிக்கமும் அவள் அவ்வப்போது வழங்கும் சித்ரவதைகளும் முக்கியமாக கவனிக்கவேண்டிய பிரச்சனை ஆகும். ஆனால் நவீன கலாச்சாரத்தில், ஆதிக்கம் செலுத்தி தங்கள் பெற்றோர்கள் தொடர்பாக மிகமுக்கிய முடிவுகளை எடுக்கும் மகன் மற்றும் மருமகள்கள் மூலம் முதியோர்களின் ஆதிக்கம் அவ்வப்போது அபகரிக்கப்படுகிறது. சூழ்நிலைகளின் மாற்றம் மேலும் அதிகமான மன உலவை வழங்குகிறது. முதியவர்கள் தங்கள் வாழ்க்கைகளை தாங்களே நிர்வகித்து, குடும்பத்தில் அவர்களுக்கும் அவர்கள் கருத்துக்கும் மரியாதை வழங்கும் கலாச்சாரம் அல்லது மேற்கத்திய நாடுகளில் பரவலாக நடைபெறுவதை போல, அவர்களின் பங்கை மறுத்து, நிராதரவாக சார்ந்து இருக்கும் ஒரு வாழ்க்கையை அவர்களுக்கு தண்டனையாக வழங்கும் கலாச்சாரம் என்ற இரண்டில் எது பிடித்தமானது என்பதை ஒருவர் தேர்வு செய்துக்கொள்ள வேண்டும். ஒரு இணக்கமான சமநிலை வேண்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ¶தங்களை புதிய சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்வதற்கும், புதிய விஷயங்களை கற்கக்கொள்வதற்கும் மாமியார்களால் முடிவதில்லை என்பதால் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்பது ஒரு கட்டுக்கதை என்று நான் முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். இரண்டாவதாக மனைவியை ஆனந்தமாக வைத்து இருந்து, அவள் தனது தாயுக்கு முரணாக

செயல்படாமல் இருந்து, அவனுடைய தாய் அவள் மனைவியை வருத்தாமல் இருந்து வீட்டில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு, அந்த கணவன் அல்லது மாமியாரின் மகன் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகளுக்கு காரணமாக இருக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் உறங்குவதற்கு முன்பாக தீர்வு காண வேண்டும். நமது நேர்மறை ஒழுங்குமுறையில் விளக்கப்பட்டுள்ளதை போல, சிக்கல்கள் அல்லது பிரச்சனைகளை ஒரு செயல்திட்டமாக வடிவமைத்து, இன்று பல பள்ளி வகுப்புக்களில் குழந்தைகள் செய்வதைப் போல, தினமும் நடைபெறும் குடும்ப சந்திப்பில் அவற்றை அமைதியான முறையில் விவாதிக்க வேண்டும். ¶மாமியார்கள் உட்பட விருப்பம் இருப்பவர்கள் அணுகுமுறையை மாற்றிக்கொள்ளலாம். தன்னம்பிக்கை இழந்த குழந்தை பிரச்சனைகள் தருவதைப் போல, தன்னம்பிக்கை இழந்த தாய் பிரச்சனைகளை தருகிறாள். மாமியாரின் நிலையில் இருந்து அவரது சிக்கல்களை உணர்ந்து, அவருடைய அன்பு மற்றும் நம்பிக்கையை பெறுவதற்கு சரியான வழிகளை தேடவேண்டும் என்று தான் நினைக்க தொடங்கிய போது, மாமியார் முழுமையாக மாற்றம் பெற்று தன் மீது இருந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டதாக ஒரு இளம் மருமகள் என்னிடம் கூறினாள். ஒரு வாக்குவாதம் இல்லாமல், ஒரு கடுஞ்சொல் இல்லாமல், தங்கள் உறவு மேம்பட்டு, தாங்கள் ஒன்றாக இருக்கும் தருணத்தை மகிழ்ச்சியுடன் அனுபவித்து, உற்சாகத்துடன் இணைந்து செயல்பட்டதாகவும் அந்த மருமகள் என்னிடம் கூறினாள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 154

குழுவாக செயல்படுவதற்கு

முயற்சி செய்தல்

ஒரு மாமியார் தனது அனுபவத்தை பயன்படுத்தி, பல தகவல்களை வழங்க முடியும். மன உறுதி மற்றும் அன்புள்ளத்துடன் இருக்கும் மாமியார், தனது குடும்ப ஒற்றுமையை பாதுகாப்பதன் மூலம், தனது மகனின் திருமணம் விவகாரத்தில் முடியாமல் இருக்க முயற்சி செய்வாள். மன உறுதி மற்றும் அன்புள்ளத்துடன் இருக்கும் மாமியார், திருமணத்திற்கு முன்பு பயிற்சி பெறாத மனைவி, பல்வேறு வீட்டு வேலைகளுடன் கல்வி மற்றும் பேணி வளர்க்கும் மனித கலைகளில் பயிற்சி பெறுவதையும் கவனித்துக் கொள்கிறாள். மன உறுதி மற்றும் நல்ல புரிந்துணர்வுடன் இருக்கும் மாமியார், குழந்தைகளை கவனித்துக் கொள்வதோடு, மும்முரமாக இருக்கும் இளம் இல்லத்தரிசிக்கு அவ்வப்போது ஓய்வு மற்றும் சுதந்திரத்தையும் வழங்குவாள். மாமியார்

என்பவள் ஒரு அரிய கலைப்பொருள் போன்று இருக்கிறாள். அவளுடைய பண்புகள் பிடித்து இருக்கிறதோ இல்லையோ, அவள் தன் மகனை வளர்த்து இருப்பதால், அவை அவனுடைய பண்புகளாகவும் விளங்குகின்றன. அவள் இளம் மணப்பெண்ணுக்கு பயனுள்ள அறிவைத் தரும் ஒரு நூலகமாக இருக்கிறாள். ஒரு இளம் இல்லத்தரசி தான் ஒரு பள்ளி மாணவி மற்றும் மாமியார் தனது ஆசிரியர் என்ற மனப்பக்குவத்துடன் அந்த உறவை ஏற்றுக்கொண்டால், அது மருமகளுக்கு ஒரு நேர்மறையான கற்கும் அனுபவமாக அமைகிறது, மற்றும் அவளுக்குள் நேர்மறை பண்புகள் விழிப்படையும் போது, அவள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று மனதில் அதிக தெளிவுடன் தென்படுவாள். மாமியார் குடும்பத்தை பற்றிய முழு விவரத்தையும் கற்றுத் தருகிறாள், மற்றும் அது பத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினருடன் பெரிய குடும்பமாக இருந்தால், பகிர்வதற்கும் அறிந்துக் கொள்வதற்கும் எண்ணற்ற விஷயங்கள் இருக்கும். அவள் கவனமாக அறிவுறுத்தலை கேட்க வேண்டும். ¶வீட்டில் இணக்கத்தை கொண்டு வருவதற்கு தேவையான பொறுமை மற்றும் உறுதியாக இருக்கும் பண்பு பல குடும்பங்களில் இருப்பதில்லை. பெரும்பாலும் அவர்கள் பிரிவதற்கு முயற்சி செய்கிறார்கள். மாமியார் தன் மகனுடன் வாழ்ந்துகொண்டு இருக்கிறாள் மற்றும் மருகளுக்கு அன்பு, பாசம் அல்லது புரிதல் போன்ற நற்குணங்கள் இல்லாமல் மணப்பெண்ணுக்கு வாழ்வது கடினமாக இருந்தால், இத்தகைய சூழலில், மகன் தனக்கும் மனைவிக்கும் ஒரு தனி குடியிருப்பையும், தன் தாய் தந்தையருக்கு பக்கத்து குடியிருப்பு அல்லது அதிக தூரமாக இல்லாத இடத்தில் குடியிருப்பை அமைத்து தருவது ஒரு நல்ல தீர்வாக இருக்கும். முதல் குழந்தை பிறந்ததும், மாமியாரின் உள்ளம் மென்மை அடைய வாய்ப்புள்ளது. ¶ஒரு பெரிய கூட்டு குடும்பத்தின் உறுப்பினர்கள், ஒரே கட்டிடத்தில் தனித்தனி குடியிருப்பில் வாழ்வது இன்னொரு தீர்வாக இருக்கும். இந்த முறை நெருக்கத்தையும் தனித்து இருக்கும் உணர்வையும் வழங்கும், பெரிய மூதாதையர் வளாகங்கள் உள்ள நாடுகளில் வழக்கத்தில் இருக்கிறது. இந்த அமைப்பில் ஒவ்வொரு தனிக்குடித்தனமும் அனுபவிக்கும் சுதந்திரத்துடன் திருமணம், பிரச்சனைகள், பிறப்பு மற்றும் இறப்பின் போது உதவிக்காக ஒரு பெரிய குடும்பத்தை சார்ந்தும் இருக்க முடிகிறது. இந்த அமைப்பில், தீவிர கட்டுப்பாடுகள் ஏதும் இல்லாமல், குடும்பத்தின் மூத்த தாய்க்கு செல்வாக்கு அதிகமாக இருக்கும். நாமும் எதிர்காலத்தில் மாமியார் அல்லது மாமனாராக இருக்கப்போகிறோம் என்ற எண்ணத்துடன் அவளுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்குங்கள். இவ்வாறு நாம் உலகெங்கும் பரவியிருக்கும் இந்துக்கள் மத்தியில் முதியவர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவத்தை வழங்கும் நோக்குடன், கிழக்கின் பண்புகள் மேற்குடன் சந்திக்கும் இடத்தில், குடும்பங்களில் ஒரு புதிய *கர்மவினை* மாதிரியை உருவாக்குகிறோம். இதனை கருத்தில் கொண்டு "வயதானவர்கள் மற்றும் பழமைவாதிகள் நமது வாழ்க்கையின் அங்கங்கள்" எனது நமது புதிய குறிக்கோளாக இருக்குமா?

¶மாமியாரின் தொடர்பை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நகரத்தை விட்டு செல்வதால், மறுபிறவியில் புதிய *கர்மவினைகளை* அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அன்பு மற்றும் நம்பிக்கையின் துணையுடன் வீட்டு சூழலை வெற்றிக்கொள்ளும் போது, அது *சாதனா* மூலம் நமது மத ஈடுபாடுகளை வலுப்படுத்தவும், நமக்குள் நிலவும் சண்டையை தணிக்கவும் வழிவகுக்கிறது. இது நடந்து முடியும் போது, ஒரு மேம்பட்ட நபர் வெளிவருகிறார். இன்று இந்து சமயத்தில் மிகவும் முக்கிய அங்கமாக குடும்ப *தர்மம்* விளங்குகிறது. குடும்பத்தில் நமது *பிராரப்த கர்மவினைகளை* மற்றவகளுடன் இணைத்து, குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக சேர்ந்து அவற்றை கரைக்க முயற்சி செய்யவே அந்த குடும்பத்தில் பிறவி எடுத்தோம் என்பதை நாம் மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
¶ஒரு நேர்மறையான அணுகுமுறையுடன் இருப்பது சிறந்தது. மாமியார்கள் எப்போதும் நம்முடன் இருந்துள்ளார்கள் மற்றும் எதிர்காலத்தில் தொடர்ந்து நம்முடன் இருக்கவிருக்கிறார்கள். பலர் அல்லது பெரும்பாலானோர் மீண்டும் பயிற்சி பெறுவதன் மூலம், அவர்கள் தங்களை மாற்றி அமைத்துக் கொள்ளப்போவது இல்லை. சில செயல்களை சிறந்த முறையில் செய்வதற்கான வழிமுறைகளை கேட்பது அல்லது பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வது பலருக்கு கடினமாக இருக்கும். அவர்கள் அவர்களின் இயல்பான பண்புடன் இருக்கிறார்கள். ஒரு மனைவி தன் கணவன் மூலமாக சுகத்தை அனுபவிக்கிறாள் என்றால், அவனுக்கு இந்த உடலை வழங்கிய அவன் தாய்க்கு அந்த மனைவி நன்றி சொல்லலாம். நாம் அன்பாக, பொறுமையாக, உடன்பாட்டுடன் இருந்து, முதியவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வோம். தினமும் நடக்கும் குடும்ப சந்திப்பின் போது தோன்றும் சிக்கல்களுக்கு தீர்வு காணலாம். முயற்சிகள் பலன் அளிக்காமல் சூழ்நிலையை மோசமாக்கினால், நாம் சில நிமிட தூரத்தில் ஒரு குடியிருப்பை வாடகைக்கு எடுத்துக்கொள்வோம். அவள் அந்த குடியிருப்பிற்கு வாரம் இருமுறை வரும் போது, அவளை நல்ல மரியாதை வழங்கி உபசரிப்போம்.

யுவ விவாஹ பிரக்ஞா

युवविवाहप्रज्ञा



இளம்வயது திருமணத்தில் இருக்கும் விவேகம்

இந்திர தேவனே! இந்த தம்பதிகளை சக்கரவாக பறவைகளைப் போல ஒன்று சேர். அவர்கள் நல்ல குழந்தை, நல்ல வீடு உடையவர்களாய் ஆயுட்காலம் முழுவதும் வாழ்வார்களாக.

அதர்வண வேதம் 14.2.64. மொஅடி வேஎ, ப. 259



ஒரு சைவ சமய வீட்டில் ஒரு தம்பதி ஆனந்தமாக தங்கள் குழந்தைகளுடன் நடனமாடிக் கொண்டிருக்க, முருகப்பெருமான் அந்த குடும்பத்திற்கு அருள் செய்கிறார். வாழ்க்கை முழுவதும் புலனடக்கத்துடன் இருந்த குமரனும் குமரியும் திருமணம் செய்து கொள்ளும் போது, அவர்களுக்குள் நெருக்கம் பிறக்கிறது மற்றும் குழந்தைகள் பிறக்கும் போது இளமையுடன் இருந்து, ஒரு நெருக்கமான குடும்பத்தை உருவாக்குகிறார்கள்.

திங்கட்கிழமை

பாடம் 155

இளம் வயதில் திருமணம் செய்யும்

பாரம்பரியங்கள்

நாம் தற்போது நுழைந்து கொண்டிருக்கும் புதிய யுக தொடக்கத்தில், உட்புற மனிதன் பற்றி எல்லோரும் ஆய்வை மேற்கொண்டு, அதன் மூலம் அவர்கள் வாழ்க்கை மற்றும் வாழ்க்கையின் உட்புற ஆன்மீக விதிகள் மீது அதிக விழிப்புணர்வை பெற்று வருகிறார்கள். ஆன்மீக விதியில் மிகவும் முக்கியமான அடிப்படையை கொண்ட குழந்தை திருமணம், பழங்கால இந்தியா தொடர்பான அதிக சுவாரஸ்யமான மற்றும் குறைவாக புரிந்துகொள்ளப்பட்ட பயிற்சிகளில் ஒன்றாக விளங்குகிறது. இன்றைய காலை வகுப்பில், இந்த பழங்கால பழக்கம் பற்றிய நுணுக்கத்தை தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ¶பல்லாயிரம் வருடங்களாக இந்தியா குழந்தைகள் திருமணத்தை பல வடிவங்களில் செய்து வைத்து, பல நூற்றாண்டுகளாக இந்திய வீட்டை வலுவாகவும் நிலையாகவும் வைத்து இருந்தது, ஆனால் சமீபகாலத்தில் குழந்தை திருமணம் போன்ற பழங்கால பழக்கங்கள் பொதுமக்களின் வழக்கத்தில் இருந்து மறையத் தொடங்கியதும், அந்த பழங்கால பயிற்சி தன் வலிமை மற்றும் நிலைத்தன்மையை அதிக அளவு இழந்துள்ளது. ஆனால் இன்றும் ஆசியா முழுவதிலும் இருக்கும் ஆயிரக்கணக்கான வீடுகளில், தங்கள் குழந்தைகள் பருவ வயது அடைவதற்கு முன்பாக அவர்களுக்கு நிச்சயதார்த்தம் செய்து வைக்கிறார்கள். வட இலங்கையில் நமது *ஆசிரமத்தை* சுற்றியுள்ள பகுதிகளில், பல குடும்பங்கள் அந்த பயிற்சியை தொடர்கிறார்கள். பொதுவாக தங்கள் வீட்டில் இருக்கும் குழந்தை ஆறு அல்லது ஏழு வயதை அடைந்ததும், அந்த குழந்தைக்கு அதன் பெற்றோர்கள் பொருத்தமான வரனை பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ விரும்பி, அந்த கண்ணோட்டத்துடன் குழந்தைகளின் இளமை காலம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புவதால், மிகவும் ஆச்சாரமான சமூகங்களில், ஒரு சிறுவன் ஐந்து அல்லது ஆறு வயதை அடையும் போது அவனுக்கு வரனாக சற்று முன் பிறந்த பல சிறுமிகள் பரிந்துரைக்கப்படுகின்றன. அத்தகைய பொருத்தங்கள் பதினாறு வயது

அல்லது அதன் பின்னர் திருமணத்தில் முடிகிறது. அத்தகைய ஒரு பொருத்தம், ஒரு ஆப்பிள் மரத்துடன் இன்னொரு வகை ஆப்பிள் மரத்தின் சிறிய பகுதியை ஒட்டுமுறை மூலம் பொருத்தி இணைப்பதன் மூலம், நமக்கு ஒரு மரத்தில் இருந்து பல்வேறு வகை ஆப்பிள்கள் கிடைப்பதைப் போன்றது ஆகும். தத்தம் குழந்தைகளின் அடிப்படை மனப்போக்குகளை பெற்றோர்கள் அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் குணத்தை வரையறுக்கும் ஒரு நுணுக்கமான அமைப்பை பயன்படுத்தி, பெற்றோர்கள் மூலம் குழந்தைகளுக்கு பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன. ¶சில சமயம் ஒரு நிச்சயதார்த்தம் திருமணத்திற்கு பல வருடங்கள் முன்பாகவே நடந்து விடுகிறது. அத்தகைய சூழலில், ஆறு அல்லது ஏழு வயது நிரம்பிய சிறுவன் அல்லது சிறுமிக்கு, அவளுடைய எதிர்கால மனைவி அல்லது கணவன் யார் என்பது கூறப்படுகிறது. அன்றைய தினத்தில் இருந்து, அந்த குழந்தையின் மனம் எதிர்காலத்தில் அது திருமணம் செய்துகொள்ளவிருக்கும் நபரை நோக்கி தொடர்ந்து இயக்கப்படுகிறது. தந்தை அதைப்பற்றி பேசுகிறார், தாய் அதைப்பற்றி பேசுகிறாள், வயதில் மூத்த சகோதர சகோதரிகள் அதைப்பற்றி தொடர்ந்து பேசி அந்த குழந்தையின் மனதில் அதன் எதிர்கால துணையைப் பற்றிய எண்ணங்களை நிரப்புகிறார்கள் மற்றும் நிச்சயதார்த்தம் நடைப்பெற்ற குழந்தை, நடக்கவிருக்கும் திருமணம் தனது வாழ்நாளில் நடைபெறும் ஒரு புனிதமான மற்றும் நிரந்தரமான ஒப்பந்தமாக எதிர்பார்க்க தொடங்குகிறது. பெற்றோர்கள் மற்றும் சொந்தங்கள் முடிவு செய்த பிறகு, இரண்டு குடும்பத்தாரும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்து, கோயில் புரோகிதரின் துணையுடன் அதற்கு தேவையான சடங்குகளை செய்கிறார்கள். பொதுவாக குழந்தைகள் பதினாறு-பதினேழு வயதை அடையும் போது, அவர்களுக்கு திருமணம் நடைபெறுகிறது. அதன் பிறகு அந்த சிறுமி தனது உடைமைகளை மணமகனின் வீட்டிற்கு சென்று, அவனுடன் வசிக்கிறாள். அவளுக்கு அந்த குடும்பத்தில் மற்றவர்களுக்கு நிகரான அங்கீகாரம் கிடைக்கிறது. ¶இந்தியாவில் சில சமயம் திருமணத்திற்கு முன்பாக, மணமகன் மற்றும் மணமகள் சந்தித்து இருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் ஒன்றாக வாழத் தொடங்கியதும், அவர்கள் அவனது குடும்பம் வழங்கும் பாதுகாப்புடன் மெதுவாக ஒருவரையொருவர் புரிந்துகொள்ள தொடங்குகின்றனர். பலகாலமாக ஒன்றோடு ஒன்றாக இணைத்து இயக்கப்பட்ட இரு மனங்களும், இயல்பாக மற்றும் இணக்கமான முறையில் மெதுவாக ஒன்று சேர்கின்றன. அவர்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் போது, அவர்களின் மனவெழுச்சிகள் ஒன்றோடு ஒன்று கலந்து, அது உண்மையில் மனவெழுச்சிகளின் திருமணமாக அமைகிறது. முதலில் ஆன்மாவின் திருமணம் நடைபெறுகிறது. அதன் பிறகு இரண்டு மனங்களும் திருமணம் செய்துகொள்கின்றன. அதன் பிறகு மனவெழுச்சிகளுக்கு திருமணம் நடக்கிறது அல்லது அவை ஒன்றாக கலக்கின்றன. இறுதியில் சங்கமத்திற்கு தேவையான பக்குவத்தை இரண்டு

உடல்களும் பெறும் போது, உடல்கள் சங்கமிக்கும் திருமணம் நடைபெறுகிறது. தூல உடல்கள் தொடர்ந்து வளர்ச்சி பெறுகின்றன, மற்றும் எப்படி இரு வெவ்வேறு களிமண்களை ஒன்றாக சேர்த்து ஒரு வடிவத்தை வழங்கிய பிறகு இரண்டிற்கும் வேறுபாடு தெரிவது இல்லையோ அப்படி, திருமணம் என்பது தூல உடல்கள், மனவெழுச்சி உடல்கள் மற்றும் மனம் தொடர்ந்து ஒன்றாக வளர்ச்சி பெறுவதை குறிக்கிறது. ஒரு கிளையை இன்னொன்றுடன் சேர்த்து ஒரு இணக்கமான செடியை உருவாக்குவதைப் போல, வழக்கமாக அத்தகைய திருமணங்கள் முழுமையாக மற்றும் நிறைவாக இருக்கின்றன.

செவ்வாய்க்கிழமை

பாடம் 156

ஆன்மாவின்

திருமணங்கள்

தாங்கள் ஒருவரையொருவர் விரும்பவில்லை, தங்களுக்குள் ஜோடிப்பொருத்தம் இல்லை என்று ஒரு இளம் தம்பதிக்கு தோன்றினால் என்று உங்கள் மனதில் ஒரு கேள்வி தோன்றலாம். அவர்களின் திருமணம் ஒரு கட்டாய திருமணமாக இல்லாமல், அவர்களுக்கு பொருத்தம் பார்த்த போது, ஒவ்வொரு குழந்தையின் இயல்பில் இருக்கும் அடிப்படை மனப்போக்குகள், இணக்கமான மற்றும் பொருத்தமான குணங்களின் வரையறைகளை கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும் போது, இரண்டு குழந்தைகளும் ஒரே மரத்தை சார்ந்து இருப்பதால், வளரும் போது இருவரும் ஒன்றாக சேர்ந்து வளர்கிறார்கள். இது இந்துக்கள் மற்றும் மற்ற மக்களிடம் ஒரு பழங்கால ஐதீகமாக இருந்து வருகிறது. இது இன்றைய உலகில் வெகுவாக பழக்கத்தில் இல்லை என்றாலும், எதிர்காலத்தில் இந்த விஷயத்தை சூழ்ந்து இருக்கும் தவறான கருத்துக்களை விலக்கும் ஆன்மீக புரிதலை சமூகம் மீண்டும் பெறும் போது, அது மீண்டும் பெரும்பாலான மக்களின் ஆதரவை பெறக்கூடும். ¶திருமண பொருத்தத்தை கவனமாக ஆய்வு செய்து நடைபெறும் குழந்தை திருமணத்தில், கணவன்மார்கள் மற்றும் மனைவிமார்களின் உணர்வில் விவாகரத்து என்பது என்றுமே தோன்றுவதில்லை என்பது மிகவும் சுவாரஸ்யமான அம்சங்களில் ஒன்றாக விளங்குவது. அத்தகைய உறவில், விவாகரத்தை பற்றி சிந்திப்பது சொந்த கையை அறுத்துக் கொள்வதற்கு சமமாக இருக்கும். நீங்கள் ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண சொந்த கையை அறுத்துக் கொள்ளவேண்டும் என்று என்றுமே நினைப்பது இல்லை. திருமணத்துடன் ஒன்றாக வளர்ந்த குழந்தைகளும் விவாகரத்து செய்து கொள்ளவும் விரும்புவதில்லை. அவர்களுக்கு சிறிய வயதில் குழந்தைகள் பிறக்கின்றன, மற்றும் அவர்கள்

தங்கள் குழந்தைகளுடன் வளர்கிறார்கள், அதனால் அந்த குடும்பத்தில் நெருக்கம் அதிகமாக இருக்கிறது. ¶ஆன்மாவின் திருமணமாக இருப்பதால், சிறிய வயதில் நடைபெறும் திருமணம் வெற்றிகரமாக அமைகின்றன. அது ஒரு உணர்வுப்பூர்வமாக, முன்யோசனை இல்லாமல் ஜோடி சேர்த்தல் அல்லது பாலியல் புணர்ச்சி மட்டுமில்லை. குடும்பத்தில் இருக்கும் பெரியோர்கள், தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள் ஜோதிட *சாஸ்திரியுடன்* ஆலோசித்து, குழந்தையின் ஏழாவது வயதில் நிச்சயதார்த்தம் செய்யும் போது, குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவர் மனதிலும் குழந்தைகளின் விதிகள் முழுமையாக இயக்கப்படுகின்றன. அதில் சந்தேகம், நிச்சயமின்மை அல்லது புதிர் இருப்பது இல்லை. ¶குழந்தைகளின் வாழ்க்கைகளை இந்த முறையில் மற்றவர்கள் முடிவெடுப்பது சரியில்லை என்றும், அவர்கள் சுயமாக தவறுகளை செய்து, மகிழ்ச்சியை சுயமாக தேடிக்கொள்ள உரிமை வழங்கவேண்டும் என்று நாம் சிந்திக்கக்கூடும். ஆனால் நமது மேற்கத்திய கலாச்சாரத்தில் சுயமாக முடிவெடுக்கும் உரிமை இருக்கிறதா என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நமக்கு எது தேவை என்று தெரியாமலேயே, நாம் எதை வாங்கவேண்டும் என்று தயாரிப்பாளர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் முடிவெடுப்பதை வாங்குகிறோம், நமக்கு ஊடகம் வழங்கும் தகவல்கள் மனதில் நிறைந்து இருக்கின்றன, மற்றும் தற்செயலாக சந்திக்கும் நபர்களை திருமணம் செய்து கொள்கிறோம். நாம் அனுமதிக்க விரும்புவதை காட்டிலும், நமது இருப்பு நம்மை சுற்றி இருப்பவர்களை முழுமையாக சார்ந்து உள்ளது. ¶நான் இளம்வயது திருமணத்தைப் பற்றி ஒரு கண்ணோட்டத்தை மட்டுமே வழங்கி உள்ளேன். இந்த விஷயத்தில் நீங்கள் உங்களது சொந்த முடிவை எடுக்க வேண்டும். பொதுவாக பெற்றோர்கள் நிச்சயித்த திருமணத்தில் சில முறைகேடுகள் நடக்கத்தான் செய்கின்றன. இத்தகைய முறைகேடுகள் காரணமாக, இளம் பெண்களை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைப்பதை தடுக்கும் சட்டம், 1999 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்டது. ¶குழந்தைகளின் கருத்தரிப்பிற்கு பெற்றோர்கள் பொறுப்பாக இருந்ததைப் போல, இளைஞர்களின் திருமணத்திற்கும் அவர்களின் பெற்றோர்கள் பொறுப்பாக இருக்கிறார்கள். இரு குடும்பங்களும் நிச்சயதார்த்தம் செய்ய முடிவு செய்த பிறகு, குழந்தைகளின் மனங்களை ஒன்றன் மீது ஒன்று இயக்குவது இரு குடும்ப பெற்றோர்களின் கடமையாக விளங்குகிறது. குழந்தைகள் மற்ற காதல் தொடர்புகளை உருவாக்காமல் இருப்பதில் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தில் இருக்கும் பெரியவர்கள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மற்ற நெருக்கமான நண்பர்கள் இருக்கலாம், ஆனால் ஒவ்வொருவரின் மனதிலும் தனது வருங்கால கணவர் அல்லது மனைவி மட்டுமே பிரதான இடத்தில் இருக்க வேண்டும். இந்த முறையில் இரண்டு குழந்தை ஆன்மாக்களின் ஐக்கியம் உருவாக்கப்படுகிறது, மற்றும் அதை ஆழமாக பார்க்கும் போது, உணர்வின் உயர்ந்த லோகங்களில் பின்னிப்பிணையும் செய்முறையை காண முடிகிறது.

புதன்கிழமை

பாடம் 157

இளம் வயது திருமணத்தில் இருக்கும்

ஆதாயங்கள்

அத்தகைய இளம் வயது திருமணங்களில் பிறக்கும் குழந்தைகள் ஆன்மீக ஈடுபாட்டுடன் இருப்பதை நான் கவனித்து இருக்கிறேன். அவர்கள் இயல்பாக பக்தி மற்றும் இயலுணர்வுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவை வழங்கும் கல்வியில் அதிக ஈடுபாடு இருப்பதில்லை. அல்லது அவர்கள் ஏமாற்றம் தரும் பாலியல் மனவெழுச்சியால் வேதனையில் இருக்கும் மேற்கத்திய மக்களின் லௌகீக நாட்டங்கள் மீது கவனம் செலுத்துவது இல்லை. அல்லது சிக்கலான அறிவுசார் விளைவுகளால் பதட்டத்தில் வாழ்ந்து, நல்ல நினைவாற்றல் இல்லையென்றால், தான் கற்ற கல்வியை மறந்து, வாழ்க்கையின் முடிவில், "நான் யார், நான் எங்கிருந்து வந்தேன் மற்றும் நான் எங்கே செல்கிறேன்," என்று திடீரென்று தங்களிடம் கேட்டுக்கொள்ளும் மேற்கத்திய நாட்டின் மகிழ்ச்சியற்ற மற்றும் முழுமையற்ற மனிதர்களின் லௌகீக நாட்டங்கள் மீதும் கவனம் செலுத்துவது இல்லை. உங்களுக்கு நேற்று நடந்த ஒவ்வொரு தகவல் பற்றிய நினைவும் உங்கள் வழியாக பாய்ந்து சென்றதைப் போல, அறிவுசார் புரிதலை உடைய நபர் வழியாக அந்த புரிதலும், தற்காலிக மதிப்புடைய ஒரு பொருளைப் போல பாய்ந்து செல்கிறது. ¶ஆசியாவில் நடைபெறும் இளம்வயது திருமண பழக்கம், அந்த திருமணத்துடன் முடிந்து விடுவது இல்லை. எதிர்காலத்தில் தங்கள் மகளும் மகனும் ஒரு சொந்த வீடு அமைத்துக் கொள்வதற்காக, ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை ஒதுக்கி, அவர்களுக்கு ஆதரவாக இருப்பதற்கு, இருதரப்பு தாய்மார்களும் தந்தைமார்களும் ஒரு எழுதப்படாத ஒப்பந்தத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அந்த மகன் வழக்கமாக தனது தந்தையின் தொழிலை தொடர்கிறான், மற்றும் அவன் குடும்பப் பொறுப்பை முழுமையாக ஏற்கும் அளவிற்கு முதிர்ச்சி பெறும் வரை, அந்த இளம் தம்பதிகளுக்கு ஆன்மீகம், சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார ரீதியான கவனம் வழங்கப்படுகிறது. அந்த இளைஞனுக்கு திறமை மற்றும் தகுதி இருந்து, பெற்றோர்களுக்கு வசதியும் இருந்தால், அவர்கள் அவனை ஒரு பல்கலைகழகத்திற்கு அனுப்ப வாய்ப்புள்ளது. அப்படியில்லை என்றால், அவன் தன் தந்தையின் தொழிலை மகிழ்ச்சியுடன் தொடர்வான். நாட்டில் ஒற்றுமையை நிலைநிறுத்தி, வலுவான ஆன்மீக குழந்தைகளை உலகிற்கு வழங்குவதே, இளம் வயது திருமணத்தின் பலன் ஆகும். ¶அத்தகைய திருமணங்கள் நடந்த வீட்டில் நீங்கள் நுழையும் போது, ஒரு சிறிய பகுதியில் பத்து நபர்கள்

தங்களுக்குள் அதிக இணக்கத்துடன் நன்றாக அனுசரித்து நடந்துக்கொள்வதை பார்த்ததும், அந்த வீட்டில் ஒன்று அல்லது இரண்டு நபர்கள் வாழ்வதைப் போன்ற உணர்வு ஏற்படும். அதிக நெருக்கத்துடன் வாழும் மிகப்பெரிய குடும்பங்கள் தங்களுக்குள் நன்றாக அனுசரித்து செயல்பட்டு உள்ளத்தில் பரஸ்பர மரியாதையுடன் இருப்பதால், அவர்களுக்குள் வாக்குவாதங்கள் வருவதில்லை, மற்றும் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் உணர்வும் ஏற்படுவதில்லை. குழந்தைகளுக்கு சிறிய வயதிலேயே ஆன்மாவின் பண்புகள் விழிப்புணர்வைப் பெறுவதால், அவர்களால் மற்றவர்களின் மனநிலைகள் மற்றும் உணர்வுகளுக்கு தங்கள் உள்ளத்தில் மதிப்பு அளிக்க முடிகிறது. இவை அனைத்தும் இல்லாமல், நாம் இளம் வயது திருமணத்தை விவேகத்துடன் பரிந்துரைத்திருக்க மாட்டோம்.

வியாழக்கிழமை

பாடம் 158

தாமதமாக திருமணம் செய்துகொள்வதில்

இருக்கும் குறைகள்

ஒரு கலாச்சாரம் இளம்வயது திருமணத்தின் அடிப்படை விதிகளில் இருந்து அதிகமாக விலகிச் செல்லும் போது, அதை பின்பற்றும் மக்களுக்கு மனம் மற்றும் மனவெழுச்சி தொடர்பாக அதிக சிக்கல்கள் தோன்றுகின்றன, மற்றும் ஆன்மீக விழிப்புணர்வை பெறுவதும் அவர்களுக்கு அதிக கடினமாக இருக்கிறது. அவர்கள் மன உறுதி, தாரணை மற்றும் தியானத்தின் விதிகளை உள்வாங்கி பயன்படுத்த போராட வேண்டியிருக்கிறது. ஆனால் ஆன்மீக ஒழுங்குடன் இருக்கும் ஒரு ஆசிய வீட்டில், உட்புற அறிவு மற்றும் உட்புற அமைதி பெரும்பாலும் இரண்டாவது இயல்பாக இருக்கிறது. ¶இனி மேற்கத்திய நாடுகளில் இன்று பிரபலமாக இருக்கும் திருமணத்தின் மீது கவனம் செலுத்தலாம். சிறுவர்களும் சிறுமிகளும் முதிர்ச்சி அடைந்து பதினெட்டு, இருபது, இருபத்தி-ஐந்து, முப்பது அல்லது அதற்கும் அதிகமான வயதை அடையும் வரை, அவர்கள் திருமணம் செய்துகொள்வது இல்லை. இதற்கிடையில் அவர்கள் பல்வேறு உறவுகளில் ஈடுபடுகிறார்கள் மற்றும் அதில் ஒவ்வொரு முறையும், "இது சரியாக இருக்குமா?" என்ற சந்தேகத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு அனுபவத்தையும் ஒப்பிடுகிறார்கள், மற்றும் அவர்கள் இந்த வழியில் பெறும் ஒவ்வொரு அனுபவமும், அவர்களுக்குள் முன்பை விட அதிக தன்னம்பிக்கை இழப்பை ஏற்படுத்துகிறது.. இறுதியில் திருமணம் நடந்ததும், மனைவி கணவன் வீட்டிற்கு சென்று தனது பாதுகாப்பிற்கு அவனை முழுமையாக சார்ந்து இருப்பதை தவிர்த்து, அவள்

அவனிடம் சந்தேகத்துடன் செல்கிறாள். ¶முக்கியமான ஆரம்ப காலத்தில் இளம் ஆண்களும் பெண்களும், தங்களது சொந்த ஆன்மாவின் இயல்பான ஈடுபாடுகளுக்கு எதிராக செயல்படுவதால் விளையும் அமைதியற்ற மனசாட்சி நிலைகள், அவர்களுக்கு அதிக பாதுகாப்பின்மை மட்டுமே வழங்குவதால், பெரும்பாலான மேற்கத்திய திருமணங்களுக்கு முன்பாக, பல வருடங்களாக நடைபெறும் தேடுதல், சந்தேகித்தல், ஆய்வு செய்தல், சோதனை செய்தல் மற்றும் சந்தித்தல் ஆகியவை இயற்கைக்கு மாறான மனசாட்சியை மட்டுமே உருவாக்குகிறது. அத்தகைய பாதுகாப்பின்மையை அடிப்படையாக கொண்டு திருமணம் செய்துகொள்ளும் ஒரு ஆண், தன்னை முழுமையாக சார்ந்து இருக்க முடிவதில்லை மற்றும் தான் தன் மனைவியை சார்ந்து இருப்பதை அவன் உணர்கிறான். இதன் காரணமாக அவள் அவனை முழுமையாக சார்ந்து இருப்பதில்லை. அவர்கள் இருவரும் ஒன்றுமீது இன்னொன்று சாய்ந்து இருக்கும் இரு பலவீனமான தூண்களைப் போல இருக்கிறார்கள். அவர்களை சிறிது அசைத்தாலும், இருவரும் நிலைகுலைந்து விடுவார்கள். அதற்கு மாறாக நல்ல முறையில் வளர்க்கப்பட்டு இளம் வயதில் திருமணம் செய்து கொள்ளும் ஒரு ஆண் தனது சொந்த உட்புற சக்தியை இயல்பாக சார்ந்து இருக்கிறான், மற்றும் அவன் மனைவி அவனை சார்ந்து இருக்கிறாள். ¶இளம் வயதில் ஒரு கணவனையும் மனைவியும் இணைக்கும் இந்த சக்தியின் விசேஷம் என்ன என்று நீங்கள் வியக்கலாம். இது நரம்பியல் அமைப்பின் உட்புற சக்தி ஆகும். உங்களுக்கு மத்திய நரம்பியல் அமைப்பு மற்றும் பரிவு நரம்பியல் அமைப்பு பற்றி தெரிந்து இருக்கலாம். நமது நரம்பியல் அமைப்பின் பருமனான வளர்ச்சியாக, கண்களுக்கு தெரியும் கைகள் மற்றும் கால்களை கருதலாம். ஆனால் மனிதனின் நரம்பியல் அமைப்பில் இருக்கும் ஒரு நுணுக்கமான புற வளர்ச்சியை உள்ளடக்கியுள்ள மிகவும் சிறிய எண்ணற்ற நரம்பியல் ஓட்டங்கள், மனிதனின் உடலில் இருந்து ஒளி வீசி, அவனை சுற்றி ஒரு ஒளி உடலை அமைக்கிறது. நீங்கள் ஒருவரை நெருங்கும் போது, அந்த நபரின் உணர்வை இந்த ஒளி உடலின் நுணுக்கமான நரம்பியல் சக்தி வழியாகத் தான் உணர்கிறீர்கள். ¶உடல்ரீதியான துன்புறுத்தல் மற்றும் சித்ரவதை ஏதும் இல்லாமல் ஒரு இணக்கமான வீட்டில் வாழும் ஒரு சிறுவன் அல்லது சிறுமி பருவ வயதை அடையும் முன்பாக, அவர்களின் நரம்பியல் அமைப்பு சுத்தமாக மற்றும் வலுவாக இருந்து அது அவர்கள் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. தூல உடலில் வியாபித்து அதில் இருந்து வெளியே நீண்டு இருக்கும் நுணுக்கமான நரம்பியல் அமைப்பை உங்களால் சூட்சுமமாக காண முடிந்தால், அதன் நரம்பியல் சக்தியின் முடிவில் சிறிய கொக்கிகள் இருப்பது தென்படும். இந்த சிறிய கொக்கிகள் இளம் வயது திருமணத்தில் ஒன்று சேர்ந்து, பின்னிப்பிணைந்த விரல்கள் போன்று சிறுவனையும் சிறுமியையும் சேர்ப்பதன் மூலம் இருவரின் நுணுக்கமான நரம்பியல் அமைப்பு வளர்கிறது. ¶ஆன்மா சிறுவனையும் சிறுமியையும் ஒன்று சேர்க்கிறது, மனம் இருவரையும் ஒன்று சேர்க்கிறது, மற்றும் இதே முறையில் இறுதியாக நடைபெறும் ஒரு

உண்மையான சங்கமத்தில் நரம்பியல் அமைப்பு அவர்களை மேலும் நெருக்கமாக ஒன்று சேர்க்கிறது. நுணுக்கமான சக்திகள் முழுமையாக பின்னிப்பிணைந்த பிறகு, அவற்றை பிரிக்க முடியாது. உண்மையில் திருமணம் நடைபெறும் முன்பாக, இந்த நரம்பியல் அமைப்பின் நுணுக்கமான சக்திகள் மற்றும் புற வளர்ச்சியை முறையாக ஒருங்கிணைக்கும் ஆற்றலை இழக்க வாய்ப்புள்ளது என்பதால், இளம் வயதில் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மிகவும் கவனமாக கண்காணிக்கப்படுகிறார்கள். ஒரு நொடியில் இழக்கக்கூடிய குமரன் மற்றும் குமரியின் புலனடக்கத்தை மீண்டும் அடுத்த பிறவியில் தான் பெற முடியும். நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கு முன்பாக குழந்தைகளுக்கு, இன்னொரு எதிர்ப்பாலினத்தாருடன் பாலியல் அனுபவம் ஏதும் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. அவ்வாறு அவர்களுக்கு பாலியல் அனுபவம் ஏற்பட்டால், நுணுக்கமான நரம்பியல் அமைப்பில் மாசற்று இருக்கும் ஒருங்கிணைக்கும் ஆற்றல் மறைந்து விடுகிறது மற்றும் அதன் பிறகு அவர்கள் திருமணத்தில் ஒன்று சேர்ந்தாலும், அவர்களின் வாழ்க்கைகளை ஒன்று சேர்ப்பதற்கு அதே பிணைக்கும் ஆற்றல் இருக்காது. அதனால் முன்னர் குறிப்பிட்டதைப் போல, இளம் வயது திருமணம் என்பது வாழ்நாள் முழுவதும் புலனடக்கத்துடன் இருக்கும் குமரி மற்றும் குமரனுக்கு தான் பொருத்தமாக இருக்கும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 159

திருமணங்கள் மற்றும்

சமூக பிரச்சனைகள்

தங்கள் பாலியல் சக்தியை சிறுவன் அல்லது சிறுமி இழந்த பிறகு திருமணம் நடந்தால், தனது சொந்த பாதுகாப்பை நிலைப்படுத்துவதற்காக பெண் வெளியிடும் சக்தி மட்டுமே அவர்களை ஒன்று சேர்ப்பதில் முக்கிய சக்தியாக விளங்குகிறது. இந்த சூட்சுமமான சக்தி அவளுக்கு தெரியாமல், அவளுடைய சூரிய பின்னலில் இருந்து வெளிவருகிறது. சூட்சுமமான பார்வையில் பார்க்கும் போது, இந்த ஆற்றல் நீளமாக, சுமார் ஆறு அங்குல விட்டம் மற்றும் ஐம்பது கஜ நீளத்துடன் ஒளிபுகவள்ள வெள்ளை கயிறு போல தென்படுகிறது. அது பாதுகாப்பு பெறும் ஆசையுடன் பெண்ணிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்டு, அவளிடம் இருந்து "கொக்கி" வடிவில் ஒரு ஆண் உடலை நோக்கி அனுப்பப்பட்டு அவனது முதுகுத்தண்டை சுற்றிக்கொள்கிறது, மற்றும் சிலசமயம் அவனுடைய விருப்பம் இல்லாமலும், அவனை அவளுடன் பிணைக்கிறது. இதன் காரணமாகவே பல பலவீனமான ஆண்கள் மீது பெண்கள் ஒரு உட்புறமான,

சூட்சுமமான கட்டுப்பாட்டை பெற்று, அவர்களை கீழ்நிலை உணர்வில் வைத்து இருக்க முடிகிறது. தங்களுக்கு கணவன்மார்கள் இல்லாத சில தாய்மார்கள், அவ்வப்போது தங்கள் மகன்கள் மீது இத்தகைய கட்டுப்பாட்டை பயன்படுத்துகிறார்கள். ஒரு ஆண் காரணம் தெரியாமல் "பதட்டம்" மற்றும் "விசித்திரமாக" தென்பட்டால், அவன் ஒரு பெண்ணின் சூட்சுமமான ஆதிக்கத்தின் கீழ் இருக்க வாய்ப்புள்ளது. ¶இது மட்டுமே ஒரு திருமணத்தில் பிணைக்கும் சக்தியாக இருக்கும் போது, இது ஒரு திருமணமாக இருக்காது. இந்த சக்தியை பயன்படுத்துவதன் மூலம் பெண்களும் கீழ்நிலை உள்ளுணர்வு லோகத்திற்கு அழைத்து செல்லப்படுவதால், அவர்களும் உட்புறமாக அதிக சோகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அதன் பயன்பாட்டை துறக்கும் வரை, அவர்களால் தங்கள் ஆன்மாவின் புலன்களை தொடர்புகொள்ள அல்லது தனது உண்மையான தெய்வீகத் தன்மையை தேடிக்கொள்ள முடிவதில்லை. ஒரு மனிதன் இந்த சூட்சுமமான சக்திகளின் பிடிகளில் இருந்து விடுபடவில்லை என்றால், அவனால் தனக்குள் இருக்கும் சுதந்திரத்தை அல்லது தனது உண்மையான தெய்வீகத் தன்மையை உணர முடிவதில்லை. ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு, மேற்கில் நமது புதிய கலாச்சாரம் அல்லது கலாச்சாரமற்ற நிலை உருவாக்கப்பட்டு உள்ளது. ¶இன்று தாமதமாக திருமணம் செய்துகொள்ளும் போக்கை நோக்கி செல்லும் ஆசியாவிலும், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் திருமணத்தை பற்றி தாங்களே முடிவு செய்துகொள்கிறார்கள். ஆனால் அடிப்படையில் அவர்கள் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்றே சொல்லவேண்டும். அது ஆன்மா செய்துகொள்ளும் திருமணமாக இல்லாமல், முதலில் உடல் செய்துகொள்ளும் திருமணமாக விளங்குகிறது. பிறகு மனவெழுச்சிகள் திருமணம் செய்துகொள்கின்றன. அதன் பிறகு தம்பதிகள் அந்த திருமணத்தில் அறிவாளி கூட்டாளிகளாக மாறி, தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத பல பொருட்களை ஏற்றுக்கொள்ள தங்கள் காலம் மற்றும் சக்தி முழுவதையும் விரயம் செய்கிறார்கள். இளம் வயதில் கற்பு காப்பாற்றப்படாததால், ஆன்மாவின் சக்தி மறைந்த நிலையில், அறிவு திருமணத்தை செய்துகொள்ளும் போது, அது ஆன்மீக திருமணமாக இருப்பதில்லை. மனிதன் ஒரு ஆன்மீக திருமணத்தின் சக்தியை இழக்கும் போது, அவனது வாழ்க்கை அவனுடைய உள்ளுணர்வு இயல்பு, அவனுடைய உள்ளுணர்வு துண்டுதல்களை அதிகமாக சார்ந்து இருக்கிறது, மற்றும் அவனுடைய உள்ளுணர்வு துண்டுதல்களை பூர்த்தி செய்வது பிரபலமாகி, வாழ்க்கையின் கலாச்சாரமாகி, சமூக வழக்கமாகிவிடுகிறது. ¶தாமதமாக திருமணம் செய்துகொள்ளும் பழக்கத்தின் மூலம், இன்று அமெரிக்காவில் உருவாகும் கொடிய சமூக பிரச்சனைகளைப் பற்றி செய்தி ஊடகம் நமக்கு விழிப்புணர்வை வழங்கிக்கொண்டு இருக்கிறது. குழந்தைத் திருமணம் நவீன யுகத்தின் அங்கமாக கருதப்படுவது இல்லை என்றாலும், நாளுக்கு நாள் பாலியல் உறவில் ஈடுபடும் குழந்தைகள், திருமணத்திற்கு முன்பாக பதின்ம

வயதில் கருத்தரிக்கும் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. இதற்கு இணையதளத்தில் இருக்கும் பாலுறவு துண்டுதல்கள் பேருதவியாக விளங்குகின்றன. ஹாட்மெயில் வெறும் மின்னஞ்சலாக மட்டும் இருப்பதில்லை! பதின்ம வயது சிறுவன் மற்றும் சிறுமிக்கு, மேற்கத்திய நாடுகள் மற்றும் தற்போது கிழக்கு நாடுகளில், *தார்மீக* கடமைகளை பற்றி முறையான வழிகாட்டல் வழங்கப்படுகிறதா? மிகவும் சிறிதளவே வழங்கப்படுகிறது. ¶சட்டப்பூர்வமான ஒப்பந்தம், உடன்படிக்கை மற்றும் இருதரப்பு குடும்பங்களின் ஒப்புதல் மற்றும் ஆதரவுடன் தங்கள் குழந்தைகளுக்கு சிறு வயதில் திருமணம் செய்துவைக்க முடிவு செய்துள்ள பல அமெரிக்க குடும்பங்களைப் பற்றி, 1962 ஆம் ஆண்டு ஒரு கட்டுரையை ஒருவர் என்னிடம் வழங்கினார். நமது ஹவாய் மாநிலமும், இளமையான பதினான்கு வயதில் பிறகு பாலியல் உறவு மற்றும் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அடிப்படை சமூக சிக்கலைப் பற்றி நாம் சிந்தித்து அதை கவனத்தில் கொள்ளவேண்டும். திருமணத்திற்கு முன்பு பாலியல் அனுபவம் இல்லாமல், இளம்வயதில் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளின் வாழ்க்கையை, பல உறவுகள் மற்றும் அனுபவங்கள் பெற்று தாமதமாக திருமணம் செய்துகொண்ட தம்பதிகளின் வாழ்க்கையுடன் ஒப்பிட்டு பாருங்கள். யூதர்கள், கிறுத்துவர்கள் மற்றும் இசுலாமியர்கள் உட்பட உலகின் பல கலாச்சாரங்கள் மற்றும் நாகரீகங்களில் இளம்வயது திருமணம் நீண்டகாலமாக பழக்கத்தில் இருந்துள்ளன. அத்தகைய பழக்கங்கள் அறிவுப்பூர்வமாக சிந்திக்கப்படாமல், கண்காணிப்பு மற்றும் மனிதனின் உள்ளுணர்வு இயல்பில் இருக்கும் இயலுணர்வு புரிதலின் மாபெரும் சக்திகள் மூலம் தோன்றுகின்றன.

சனிக்கிழமை

பாடம் 160

ஒன்றாக சேர்ந்து

வளர்தல்

ஜோதிடம், அறிவு மற்றும் ஆன்மீக ரீதியாக பொருத்தமில்லாத ஒரு சிறுவன் மற்றும் சிறுமியை வலுக்கட்டாயமாக திருமணம் செய்து வைத்தால், அது ஒட்டுமுறை மூலம் அன்னாசி மரக்கிளையை ஒரு ஆப்பிள் மரத்துடன் இணைப்பதற்கு சமமாக ஆகும். இந்த செய்முறையால் எந்த பலனும் கிடைக்காது. இந்த சிறுவன் மற்றும் சிறுமியின் உட்புற சக்திகள் ஒன்றாக கலப்பது இல்லை என்பதால், இயல்பாக அந்த திருமணம் மகிழ்ச்சிகரமாக இருப்பதில்லை. இது வழக்கமாக இரு வேறுபட்ட பண்புகளுடன் சற்றும் பொருத்தமில்லாத இருவர் வாழ்க்கையில் தாமதமாக திருமணம் செய்து கொள்ளும் போது நடைபெறுகிறது. தாமதமாக திருமணம் செய்து

கொள்வதால், ஒன்றாக சேர்ந்து வளர்வதற்கும் பக்குவம் அடைவதற்கும் வாய்ப்பு இருப்பதில்லை. இந்நிலையில், மேலோட்டமாக "ஒட்டி" இருக்கும் அவர்கள், வலுவான ஒற்றுமை தேவைப்படும் சூழ்நிலைகள் தோன்றும் போது, அந்த ஒட்டு உருகி இருவரும் விலகி விடுகிறார்கள். ¶இன்று இளைஞர்களுக்கு இளம் வயதிலேயே திருமண பொருத்தம் பார்ப்பது மிகவும் குறைவாக இருப்பதை பின்வரும் கருத்துக்கள் குறிப்பிடுகின்றன. நமது சமூகத்தில் குழந்தைகளுக்குள் முறையான திருமண பொருத்தங்களை உருவாக்குவது பற்றி பெரும்பாலான மக்களுக்கு விழிப்புணர்வு இருப்பதில்லை. இந்த நுணுக்கமான அறிவு பற்றிய விழிப்புணர்வு, இரு குடும்பங்களிலும் இருக்க வேண்டும். இதைத்தவிர, இரு குடும்பங்களும் பக்குவமடைந்து தெய்வ பக்தியுள்ள குடும்பங்களாக இருக்கவேண்டும். அதைப்போல, ஒட்டுமுறை செய்வதில் அனுபவம் இல்லாத போது, அதனால் மரங்களும் பயன் பெறுவது இல்லை. ¶என்னிடம் தீட்சை பெற்றவர்களுக்கு மத்தியில், சற்று காலம் தாழ்த்தி, மணமகனுக்கு இருபத்தி ஓரு வயது மணமகளுக்கு பதினேழு வயது நிரம்பியதும் திருமணம் ஏற்பாடு செய்கிறோம். நாங்கள் இரு குடும்பங்களும் ஒன்றாக இணைந்து இருப்பதையும், இளைஞன் மற்றும் இளம்பெண்ணிடம் இருந்து தெளிவான ஒப்புதலுடன் எழுத்து வடிவில் ஒப்பந்தத்தையும் கோருகிறோம். ஒருவருக்கு இருபத்தி ஐந்து வயது நிரம்பியதும் அவருடைய பழக்கங்கள் நன்றாக பொருந்தி விட்ட நிலையில், அதனை அந்த நபர் வாழ்க்கைத்துணைக்காக மாற்றி அமைப்பதும், சமூகத்தில் இருக்கும் பெரியவர்கள் மூலம் அவர் வழிநடத்தப்படுவதற்கும் கடினமாகிவிடுகிறது என்பதால், இந்த ஆரம்ப காலத்தில் ஏற்பாடு செய்யப்படும் திருமணங்களைப் பற்றி பல விஷயங்களை சொல்ல வேண்டி உள்ளது. ¶இரண்டாம் உலகப்போருக்கு முன்பாக, மேற்கத்திய நாடுகளில் மணமகன் மற்றும் மணமகளுக்கு வயது வித்தியாசம் மூன்று முதல் ஐந்து வயது வரை இருந்து வந்தது. மேலும் மரபியலை வலுவாக வைத்திருக்கும் பொருட்டு, நெருங்கிய உறவில் திருமணம் நடந்ததில்லை. அந்த திருமணங்களில் மணமகன் வயதில் பெரியவனாக இருந்தான். இருவருக்கும் ஒரே வயது அல்லது பெண் வயதில் மூத்தவளாக இருக்கும் திருமணங்களில், அதிக திரிபு மற்றும் கருத்து வேறுபாடு இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. அவன் இளையவனாக இருக்கும் போது, அவனுக்கு ஒரு சிறுவனை போன்ற உணர்வு இருக்கும், மற்றும் அவள் ஒரு தாயைப் போல இருப்பாள். கணவன் வயதில் மூத்தவனாக இருக்கும் போது, மனைவி அவனை விட இளையவளாக இருப்பதாலும், அவனை அவள் மற்றும் குழந்தைகள் சார்ந்து இருப்பதாலும், அவனுடைய ஆண்மை மற்றும் பாதுகாப்புடன் அக்கறை செலுத்தும் உணர்வு தூண்டப்படுகிறது. ¶இருவரும் தங்கள் வேலைகளில் நல்ல நிலையை அடைந்து, ஒரு தனிக்குடித்தனம் நடத்துவதற்கு தேவையான வருமானம் வரத் தொடங்கியதும் திருமணம் செய்து கொள்வது, இன்றைய புதிய நாட்டமாக விளங்குகிறது. ஆனால் குழந்தைகள்?

அவர்கள் குடும்பத்தில் தலைமுறை இடைவெளி மிகவும் பெரியதாக இருக்கிறது. பதினாறு வயது அல்லது அதற்கு முன்பாக, தான் ஒரு சிறுமியாக இருக்கும் போதே திருமணம் செய்துகொள்ளும் தாய், பத்து மாதத்தில் ஒரு குழந்தைக்கு தாயாகிவிடுவதால், அவள் தனது முதல் குழந்தையை காட்டிலும் வெறும் பதினாறு அல்லது பதினேழு வயது மூத்தவளாக இருக்கிறாள். அவனும் அவளும் நாற்பது வயதை அடைந்து, ஆண் மற்றும் பெண்ணின் மாதவிடாய் நிறுத்தம் (ஆமாம், ஆண்களும் இதை அனுபவிக்கிறார்கள்) வழங்கும் கடுமையான வேதனைகளை அனுபவிக்கும் போது, குழந்தைகள் இருபது வயது அடைந்து தங்கள் பெற்றோர்களின் மனவேதனைகளை கையாள்வதற்கு தயாராக இருப்பார்கள். ¶இதனை இருபத்தி ஐந்து மணமகள் மற்றும் முப்பது வயது அல்லது அதன் பின்னர் மணமகன் செய்துகொள்ளும் திருமணத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். தாயும் தந்தையும் நாற்பது வயதில் இருக்கும் போது, குழந்தைகள் பருவ வயதை அடைகிறார்கள். தாயாருக்கு மாதவிடாய் நிறுத்த அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும், தந்தை தான் இழந்த இளமையை நினைத்து வருந்திக்கொண்டு ஒரு புதிய தொடர்பை தவிர்த்துக்கொண்டு இருப்பார். இதற்கு மத்தியில், சிறுவர்களுக்கு இனப்பெருக்க சக்திகள் துளிர் விட ஆரம்பிப்பதால், அவர்கள் தங்களுக்கு சுதந்திரத்தை கோருகிறார்கள். இத்தகைய சூழலில், வீட்டில் நடைபெறும் உணர்ச்சிப்பூர்வமான ஏற்ற இறக்கங்களை அக்கம் பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் உள்பட எல்லோராலும் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. அருகில் வசிப்பவர்கள் சிலசமயம் உரத்த குரல்கள் மற்றும் கதவை பலமாக அடிக்கும் சத்தத்தையும் கேட்கின்றனர். ¶உடலில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக, இரு தலைமுறைகளும், ஒரே சமயத்தில் உயிரியல் சக்திகளை வெளியிடுவதால், பல தனிக்குடித்தனங்கள் பெரும் வேதனையை அனுபவிக்கின்றன. தாமதமாக திருமணம் செய்துகொண்ட குடும்பங்களில், தந்தை நடுத்தர வயது பிரச்சனைகளை சமாளித்துக் கொண்டிருக்க, அவனது பதின்ம வயது மகன் "டெஸ்டோஸ்டிரோன் பாய்சனிங்" விளைவுகளை எதிர்க்கொண்டிருக்க, தாய் மாதவிடாய் நிறுத்த வேதனையை அனுபவிக்க, அவளுடைய இளவயது மகள் தன்னை எஸ்ட்ரோஜன் துணையுடன் வலுப்படுத்திக் கொண்டிருக்கிறாள். மேலும் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு மத்தியில் இருபத்தி ஐந்து அல்லது முப்பது அல்லது அதற்கு மேற்பட்ட தலைமுறை இடைவெளி, மேலும் ஆழமான கருத்து வேறுபாடுகளுக்கு வழிவகுக்கின்றன. ¶ஒரு தனிக்குடித்தனத்தை, போதுமான வருமானம் மற்றும் நல்ல பொருளாதார திட்டத்துடன் இயக்குவதற்கு யாருடைய சேவைகள் தேவை? விவாகரத்து வழக்கறிஞர்களுக்கு அவர்கள் பங்கு கிடைக்கிறது, திருமண ஆலோசகர்கள், மன நல மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்கள், மருந்து கடைக்காரர்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கும் அவரவர்கள் பங்கு கிடைக்கின்றன. அதனால் இளம்பெண்களுக்கு பதினாறு வயது மற்றும் இளைஞர்களுக்கு இருபது வயதில் இருந்து திருமணம் செய்து

வைக்கும் சம்பிரதாயமுள்ள இன்றைய இந்து குடும்பங்களை பற்றி சொல்வதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன. அந்த வயதில் குழந்தைகள் இளம் வாலிபர்களாகி விடுகிறார்கள், மற்றும் அதனை இன்றைய சட்டங்களும் ஆமோதிக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 161

ஒன்றாக சேர்ந்து

பெறாத வளர்ச்சி

பட்டப்படிப்பின் நிறைவு மற்றும் திருமண நாளை தாமதிப்பதற்கு பதிலாக, தங்கள் கோடைக்கால விடுமுறைகளை தியாகம் செய்து வருடம் முழுவதும் பள்ளிக்கு சென்று, விரைவில் வேலைக்கு சென்று, இளவயதிலேயே திருமணம் செய்து குடும்பம் அமைத்துக் கொள்ளலாம் என்று திருமணம் செய்துக்கொள்ள தகுதியுடன் இருப்பவர்களுக்கு நான் ஒரு பரிந்துரையாக வழங்க விரும்புகிறேன். ¶இதை உங்களால் இன்றைய இளைஞர்களிடம் சொல்ல முடியுமா? நிச்சயமாக முடியாது. "அது வரும் போது பார்த்துக் கொள்ளலாம்," என்று அவர்கள் சொல்வார்கள். முப்பது வயது அல்லது அதன் பின்னர் பார்க்கலாம் என்று திருமணத்தை தாமதித்து, பிரச்சனைகள் தோன்றும் போது அவற்றை எப்படி எதிர்கொள்வது என்று திட்டம் இல்லாமல் இருப்பது, கண்களை கட்டி காட்டில் விட்ட கதையாக இருக்கும் அல்லவா? நாம் நமது வாகனங்களை திட்டமிடாமல் வாங்குவது இல்லை. முதியவர்களிடம் இருந்து அத்தகைய அறிவுரையை பெறுவதற்கு இளைஞர்களிடம் பொறுமை இருக்குமா? "அது சரியாக இருக்காது," என்று அவர்கள் கூறுவார்கள். குடும்பம் ஏழு வருட பருவ வயது மற்றும் நாற்பது வயதுகளில் ஐந்து அல்லது அதற்கும் அதிகமான காலத்திற்கு மாதவிடாய் நிறுத்தம் தரும் வேதனைகளை ஒரே சமயத்தில் அனுபவித்து, வீட்டில் மனவெழுச்சிகள் பொங்கி எழுவதும் சரியாக இருக்காது. அதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். ¶இப்போது நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லவிருக்கிறேன். சிறுமி ஜோதியின் தந்தை ஒரு படகை வாங்கிய போது, அவளுக்கு அதில் பயணம் செய்ய ஆசை ஏற்பட்டது. தந்தை தனது இளமைப்பருவ உற்சாகத்துடன் இருந்தாலும், ஜோதியை படகில் அழைத்து செல்ல அவரிடம் நேரம் இருந்ததில்லை. ஆனால் அவர்கள் ஒரு முறை சென்ற போது, படகு ஒரு பெரும் விபத்தில் இருந்து தப்பியது. தந்தைக்கு நாற்பத்தி ஏழு வயது மற்றும் ஜோதிக்கு பதினேழு வயது. இருவருக்கும் முப்பது வருட வித்தியாசம். சற்று கற்பனை செய்து பாருங்கள்! பழங்காலத்தில் இப்படி இருந்தது இல்லை, ஆனால் இப்போது இது இயல்பாக இருக்கிறது. தங்கள்

வாழ்க்கை முழுவதும், தந்தையும் குழந்தையும் வெவ்வேறு லோகங்களில் வாழ்ந்து, தங்களுக்குள் எப்போதாவது பேசிக்கொள்வார்கள். அவர்கள் பேசலாம் என்று நினைத்தாலும், அவர்கள் பேசியது இல்லை. ஜோதி மற்றும் அவன் பெற்றோர்களின் வயது வித்தியாசம் காரணமாக குடும்பம் பிரிந்தது. ¶விவாகரத்துக்கு பிறகு ஜோதி தன் தாயுடன் வசிக்க தொடங்கினாள். படகுக்கு செய்த செலவு பற்றிய விவாதம் இல்லாமல், அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். படகுக்கு செய்த செலவுக்கு பதிலாக, வயதான தனது தாயாருக்கு ஒரு புதிய அறை காட்டிக்கொடுத்து இருக்கலாம் என்று தாய் நினைத்தாள். தற்போது தாயும் ஜோதியும் அவளது தாயார் வீட்டில் வசித்து வருகின்றனர். அந்த வீடு மூவர் தங்குவதற்கு வசதியாக இருந்தது. இறுதியில் ஜோதியும் தந்தையும் சமரசம் செய்துகொண்டனர். தந்தை அந்த வீட்டுக்கு வரும் போதெல்லாம் ஜோதியை பார்க்காமல் செல்ல மாட்டார். ஜோதி தனது தந்தையின் வீட்டிற்கு அடிக்கடி செல்வது இல்லை. அப்படி சென்றாலும் தந்தையின் "இரண்டாம் தாரம்" வேலை சென்று இருக்கவேண்டும் மற்றும் அன்று தந்தைக்கு விடுப்பாக இருக்க வேண்டும். இந்த கதை இன்றைய உலகில் பல வீடுகளில் நடக்கும் யதார்த்தமாக இருக்கிறது. ¶இன்னொரு கதையை பார்ப்போம்: ராணியின் தாயாருக்கு பதினேழு வயது நிரம்பியிருந்த போது இருபது வயதான ஒரு மணமகனுடன் திருமணம் செய்து வைக்கப்பட்டது. அவர்கள் இருவரும் திருமணத்திற்கு முன்பு புலனடக்கத்துடன் வாழ்ந்து வந்தார்கள் மற்றும் திருமணத்திற்கு பிறகு உடல், மனவெழுச்சி, அறிவு மற்றும் ஆன்மீக ரீதியாக ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டனர். அதன் பிறகு ராணி பிறந்தாள். அதன் பிறகு குமார் மற்றும் கிருஷ்ணா பிறந்தனர். தந்தை, தாய் மற்றும் குழந்தைகள் என்று எல்லோரும் ஒன்றாக குழந்தைகளாக இருந்தனர், மற்றும் இப்போதும் அவர்கள் ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள். தாய் வீட்டில் இருந்துக்கொண்டு வீட்டு வேலைகளை செய்கிறாள். அவள் வெளியில் வேலைக்கு சென்றது இல்லை. குடும்பத்திற்கு தேவையான பணத்தை தந்தை சம்பாதிக்கிறார் மற்றும் அவர்கள் எளிமையாக வாழ்ந்து வருகிறார்கள். தாய் எப்போதும் முகத்தில் புன்னகையுடன் குடும்பத்திற்கு சேவை செய்து வருகிறாள். அவள் எப்போதும் சோர்வாக அல்லது மன அழுத்தத்துடன் இருந்தது இல்லை. வீட்டின் மேல்மாடி, அடித்தளம் மற்றும் வாகனக்கூடத்தில், தந்தை தனது இரண்டு மகன்களுடன் சேர்ந்து குடும்பத்திற்கு தேவையான சீரமைப்பு பணிகளை செய்து வருகிறார். தாய் தன் மகளுக்கு துணி தைப்பது, சமைப்பது, பாடுவது மற்றும் சேவை செய்வதைப் பற்றி கற்றுத் தருகிறாள். தாய், தந்தை, ராணி மற்றும் சிறுவர்களுக்குள் வயது வித்தியாசம் அதிகம் இல்லாததால் எல்லோரும் ஒன்றாக மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அந்த நாட்கள் மீண்டும் வருமா? வயது மற்றும் விருப்பங்களில் அதிக வித்தியாசம் இல்லாமல், குடும்பம் முழுவதும் ஒன்றாக மகிழ்ச்சியுடன் இருக்கும் நாட்கள் மீண்டும் திரும்புமா? தன் குடும்ப நலனில் முழு கவனம் செலுத்த வேண்டும் என்று தந்தை

கவலைப்படுவது இல்லை. அவரும் தாயும் அவர்களோடு அவர்களுக்காக இருக்கிறார்கள். பிரச்சனைகள் ஏதும் இல்லாததால், திருமண ஆலோசனைகளுக்கு செலவு செய்யவேண்டிய அவசியம் இருப்பதில்லை. ¶இந்த இரண்டு கதைகள் மூலம் மிகவும் எளிமையான கருத்தை சொல்ல விரும்புகிறேன். இளம்வயது திருமணம் செய்துகொள்ளும் பழைய பழக்கங்களில் விவேகம் இருக்கிறது. முதல் மற்றும் இரண்டாம் உலகப்போருக்கு முன்பாக, இந்நிலை குடும்பங்கள் மற்றும் கலாச்சாரங்களில் நிலவி வந்தது. இந்த இயல்பான பாதையின் மூலம், பதட்டம் மற்றும் முறையற்ற பாலுறவு, திருமண முறிவு மற்றும் மகிழ்ச்சியற்ற குடும்பங்களை தவிர்க்கலாம்.

ஆதுநிக விவாஹ கடக

आधुनिकविवाहघटक



நவீன யுகத்தில் திருமணப்பொருத்தம் பார்க்கும் ஜோதிடர்கள்

அக்னி பகவானே! எங்களது புத்திசாலி பெண்ணுக்கு சகல ஐஸ்வர்யங்களும் நற்குணங்களும் நிறைந்த வரன் கிடைக்கட்டும். அவள் சான்றோர்கள் மற்றும் நல்ல சமூகங்களின் இதயங்களில் இடம் பிடிப்பாள். அவளுக்கு நல்ல கணவன் மற்றும் நல்ல செல்வங்களுடன் வாழும் சௌபாக்கியம் கிடைக்கட்டும்.

அதர்வண வேதம் 2.36.1. ஹிவே, ப. 123


GOOD

பின்புறத்தில் கோயில் கோபுரங்கள் தென்படுகின்றன, மற்றும் திருமணம் செய்துக்கொள்ள நிச்சயித்துள்ள ஒரு இளம் ஜோடிக்கு ஜோதிட பொருத்தம் பார்ப்பதற்காக, பாலி தீவில் இருக்கும் திருமண பொருத்தம் பார்க்கும் ஜோதிடர் ஒரு கணினியின் துணையுடன் பொருத்தம் பாத்ததுக்கொண்டு இருக்கிறார். ஒரு திருமணம் வெற்றிகரமாக அமைவதற்கு இரண்டு இயல்புகளின் இணக்கம் முக்கியம் என்பதை இந்துக்கள் அறிந்து இருக்கிறார்கள்.

திங்கட்கிழமை

பாடம் 162

பெற்றோர்கள் நிச்சயித்த

திருமணங்கள்

திருமணம் என்பது ஒரு மணமகன் மற்றும் மணமகள் ஒன்று சேர்வதை மட்டும் குறிப்பிடாமல், அவர்களின் குடும்பம் ஒன்று சேர்வதையும் குறிப்பிடுகிறது. இத்தகைய முக்கியமான விஷயங்களை சாதரணமாக நினைக்காமல், குடும்பம் முழுவதும் தங்கள் மகன் அல்லது மகளுக்கு ஒரு பொருத்தமான வரனை தேடுவதில் பங்குபெறுகிறார்கள் மற்றும் அதன் பிறகு தேவைப்படும் போது உதவி செய்வதற்கு தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். திருமணம் என்கிற ஒரு புனிதமான உடன்படிக்கை மீது கவனம் செலுத்தி அதற்கு பாதுகாப்பை வழங்க, சொந்தங்கள் அனைவரும் பொறுப்பு ஏற்கின்றனர். அது வாழ்க்கையில் மிகவும் புனிதமான நிகழ்வுகளில் ஒன்றாக விளங்குகிறது. திருமணத்தில் செய்யும் *ஹோமத்தின்* மூலம், புரோகிதர் மகாதேவர்களை ஆவாகனம் செய்கிறார். புதுமண தம்பதிகள் அக்னி சாட்சியாக வாழ்நாள் முழுவதும் இணக்கத்துடன் இருப்போம் என்று எடுக்கும் உறுதிமொழிக்கு சான்றோர்கள், புரோகிதர்கள், மகாதேவர்கள், *தேவர்களுடன்* கிரகங்கள் மற்றும் பசுக்களும் சாட்சியாக விளங்குகின்றன. இதனால் விவாகரத்து என்ற பேச்சுக்கே இடமில்லை. "உங்கள் நோக்கம் ஒன்றாக இருக்கட்டும், உங்கள் இதயங்கள் ஒன்றாக இருக்கட்டும், உங்கள் எண்ணங்கள் ஒன்றாக இருக்கட்டும். இதன் மூலம் உங்களுக்குள் முழுமையான ஒற்றுமை நிலவட்டும்," என்று *ரிக் வேத* சுலோகம் (10.191.4. வேஎ, ப. 863) குறிப்பிடுகிறது. . ¶திருமணங்கள் அனைத்தும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படவேண்டும் என்று அவசியமில்லை என்றாலும், இந்து கலாச்சாரத்தில் ஒரு முக்கிய அங்கம் வகித்து வரும் பெற்றோர்கள் நிச்சயித்த திருமணங்களில் விவேகம் இருக்கிறது. அந்த திருமணங்களின் வெற்றி, மிகவும் இனிமையான மோகங்கங்களை கடந்து பல வருடங்களுக்கு நிலைத்து இருக்கும் யதார்த்தமான விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு, அந்த சங்கமத்தைப் பற்றி குடும்பங்கள் எடுக்கும் தீர்மானத்தை பொறுத்து அமைகிறது. கலாச்சாரம் மற்றும் கல்வித்தகுதி பொருத்தமும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. ஒரு குடும்பம் வழக்கமாக ஒரு வரனை தனது சமய சமூகத்திற்குள்

தேடிக்கொள்கிறது. ஆணும் பெண்ணும் நீண்ட காலம் ஒரு மகிழ்ச்சிகரமான திருமண வாழ்க்கையை வாழ்வதற்கு, இருவரும் குறைந்தபட்சம் ஒரே சமய உட்பிரிவை சேர்ந்தவராக இருக்க வேண்டும். ஆனால் இருவருக்கும் சமயத்தில் ஈடுபாடு இல்லாத போது இதற்கு முக்கியத்துவம் கிடைக்காது, ஆனால் சூழ்நிலைகள் எதிர்காலத்தில் மாற்றம் பெற்று, குழந்தைகள் பிறந்து கருத்து வேறுபாடுகள் தோன்றி விவாகரத்துக்கு வழிவகுக்கும் போது, அதன் முக்கியத்துவம் தோன்ற வாய்ப்புள்ளது. பெரும்பாலான குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு பொருத்தமான வரன்களை, தங்களுக்கு பரிச்சயமான குடும்பங்களில் தேட ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் திருமணத்தால் தோன்றும் புதிய உறவுகளுக்கு மதிப்பு அளிப்பார்கள். திருமண வரன் தேடுவதில் ஈடுபடுவார்கள், அந்த திருமணத்தால் இரு குடும்பங்களும் ஒன்றாக இணைந்து இருவருக்கும் பயன் தருவதாக இருக்கிறதா என்பதையும் ஆய்வு செய்வார்கள். மணமகன் தனது கல்வியை முடித்து, நல்ல வருமானத்துடன் ஒரு வேலையில் இருந்து, மணமகளை காட்டிலும் குறைந்தபட்சம் மூன்று வயது பெரியவனாக இருக்கும் திருமணத்தின் நிலைத்தன்மை கூடுதலாக இருக்கும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 163

சிறந்த பொருத்தத்தை

தேடுதல்

குடும்பங்கள் ஒரு திருமணத்தை நிச்சயிக்கும் போது, ஒரு வரன் நன்றாக பொருந்திவரும் வரை தொடர்ந்து ஜோதிடர்களுடன் ஆலோசித்து வருகிறார்கள். தங்களுக்கு திருமண ஏற்பாடுகள் நடந்துகொண்டு இருப்பதை மணமகன் மற்றும் மணமகள் தெரிந்து கொள்வதற்கு முன்பாக, இருவரும் தங்களை புரிந்துகொள்வதற்கு சிலசமயம் அனுமதி அளிக்கப்படுகிறது. ஜோடிப் பொருத்தம் சரியாக இல்லையென்றால், அந்த வரன் கைவிடப்பட்டு, அடுத்த வரனை தேடும் செய்முறை தொடங்குகிறது. சிறந்த பொருத்தங்கள் அமைவதற்கு, அந்தர்லோக *தேவர்களும்* துணை புரிவார்கள். *கர்மவினைகளுக்கு* தூண்டுதலாக இருக்கும் கோச்சார இயக்கங்கள் மற்றும் யோகங்களில் இருக்கும் நுணுக்கங்களை, பெரும்பாலான பாரம்பரிய ஜோதிடர்களுக்கு வழங்கும் பொருட்டு ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட *தேவர்கள்* துணையாக இருப்பார்கள். ¶மணமகள் மற்றும் அவளுடைய எதிர்கால மாமியாருக்கும் ஜோதிட பொருத்தம் பார்க்கப்படுகிறது. மாமியாரும் மருமகளும் ஒரே வீட்டில் இருக்கும் போது, மாமியார் சொல்வதை கேட்டு மருமகள் நடக்கவேண்டி இருப்பதால், அவள் தன் கணவனுடன் இருக்கும் நேரம்

குறைவாக இருக்கும், அதனால் மாமியார் மருமகள் ஜோதிட பொருத்த பலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மகனை திருமணம் செய்து கொள்வதால், அவள் அவனது தாயின் மகளாகி விடுகிறாள். ¶ஒரு வருங்கால வாழ்க்கைத்துணையை தேர்வு செய்ததும், ஒரு சொந்தம் அல்லது நண்பர் துணையுடன் கவனமாகவும், இயல்பாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன. விசாரணை முடிவுகள் நேர்மறையாக இருக்கும் போது, மணமகளின் தந்தை மணமகனின் தந்தைதையை சந்தித்து தனது மகளுக்கு திருமணம் செய்து வைக்க உத்தேசித்து இருப்பதாக தெரிவிக்கிறார். சில சமூகங்களில், தனது மகனுக்கு திருமணம் செய்து வைக்க உத்தேசித்து இருப்பதாக அவனது தந்தை தெரிவிப்பார். இந்தியா மற்றும் மற்ற நாடுகளை சேர்ந்த இந்துக்கள் இன்று உலகெங்கும் பரவி இருக்கும் நிலையில், தங்கள் மகன்கள் மற்றும் மகள்கள் திருமணம் செய்து வாழ்க்கையில் நிம்மதியாக வாழ்வதற்கு தந்தைகள் தீவிரமாக செயல்பட்டு உதவியாக இருக்கவேண்டும். இந்த கடமையை தந்தைகள் நிறைவேற்றவில்லை என்றால், அது தாய்மார்களின் கடமையாக மாறுகிறது. இந்த செய்முறை மணமகளின் தந்தை மட்டுமே திருமணம் செய்து வைக்கும் உத்தேசத்தை முதலில் தெரிவிக்கும், பழமையான கிராமப்புற சமூக பழக்கங்களில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. இன்று உலகெங்கும் இந்துக்கள் பரவியிருக்கும் நிலையில், அடுத்த தலைமுறைக்கு திருமண பொருத்தம் பார்ப்பதில் உதவியாக இருப்பது எல்லோரது கடமையாக விளங்குகிறது. ¶இரு குடும்பங்களும் ஒன்று சேர்வதற்கு மேலோட்டமாக சம்மதித்த பிறகு, அந்த குடும்பங்கள் தங்களுக்குள் மேலும் பரிச்சயம் பெற்று தங்களது எதிர்கால வாழ்க்கைப் பற்றி பேசுவதற்கும் பெண்ணின் வீட்டில் கூடுகின்றனர். இது ஒரு புறம் இருக்க, மணமகன் மற்றும் மணமகளின் முழுமையான ஒப்புதல் மிகவும் முக்கியம் ஆகும். சமூகம் தன் கருத்தை தெரிவித்த பிறகு, அந்த இளம் ஜோடிகள் தங்களது சொந்த விருப்பு, வெறுப்பு மற்றும் புரிதலின் அடிப்படையில், தங்களால் வாழ்நாள் முழுவதும் ஒன்றாக சேர்ந்து வாழ முடியுமா என்பதைப் பற்றி இறுதியாக முடிவு செய்யவேண்டும். தங்களுக்கு விருப்பமில்லை என்று சொல்வதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது. ஒரு இளம் ஜோடி திருமணம் செய்துக்கொள்ள ஒப்புதல் தெரிவிப்பதற்கு முன்பாக, பல மாதங்களுக்கு மின்னஞ்சல் மூலம் தங்களைப் பற்றி மெதுவாக புரிந்துகொள்ளும் முயற்சி மிகவும் சிறந்த முறையாக இருக்கும் என்று எங்களுக்கு தோன்றுகிறது. தங்களுக்குள் மணமகனும் மணமகளும் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியாக இருப்பது முதல் மற்றும் இறுதி காரணியாக விளங்குகிறது.

புதன்கிழமை

பாடம் 164

உறுதிமொழிகளும்

ஆசிகளும்

பெற்றோர்களால் நிச்சயம் செய்யப்படவில்லை என்றாலும், அந்த ஜோடிக்கு ஜோதிடப்பொருத்தம் இருந்து, அவர்கள் தங்கள் குடும்பங்களிடம் சம்மதத்தை பெற்று, அவர்கள் ஒரே சமய உட்பிரிவை சார்ந்தவர்களாக இருக்கும் காதல் திருமணங்களும் முழு அங்கீகாரத்தை பெறுகின்றன. எல்லா திருமணங்களிலும் இந்த குறிக்கோள்கள் நிறைவேறுவது கடினம் என்பதால், அத்தகைய சூழலில் அந்த திருமணம் வெற்றி பெறுவதற்கு குடும்பம் மற்றும் நண்பர்களிடம் இருந்து அதிக உதவி தேவைப்படும். ¶திருமணத்திற்கு முன்பாக மணமகனும் மணமகளும் கைப்பட ஒரு உடன்படிக்கையை எழுதுகின்றனர். அதில் அவர்கள் தங்களுக்குள் விசுவாசமாக இருப்பதற்கு உறுதி எடுத்து, தங்களின் வாக்குறுதிகள், இலட்சியங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் அன்பை முறைப்படுத்திக் கொள்கின்றனர். இந்த ஆவணங்களை அந்த ஜோடி தங்களுக்குள் பகிர்ந்து, கவனமாக வாசித்து மற்றும் விவாதித்து, முழுமையான ஒப்புதல் வரும் வரை தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும். உறவுகள் பாதை மாறி செல்லும் போது, கப்பல்களில் இருக்கும் வரைபடங்களை போல இருக்கும் இந்த விரிவான உறுதிமொழிகளை ஆலோசிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர இரு குடும்பமும் உறுதிமொழிகளை எழுதி, அதில் இருதரப்பு பெற்றோர்களும் கையொப்பமிடுகின்றனர். அதில் அவர்கள் தாங்கள் வழங்கும் உறுதிமொழிகள் மற்றும் இந்த திருமணத்தில் *அர்த்த, காம, தர்ம* மற்றும் *மோக்ஷம்* தொடர்பாக வழங்க இருக்கும் ஆதரவை குறிப்பிடுகின்றனர். இந்த திருமணத்திற்கு ஆதரவாக தாத்தாக்கள், பாட்டிகள், மாமன்மார்கள் மற்றும் அத்தைகள், சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் மற்றும் மற்ற சமய சமூகத்தை சேர்ந்தவர்களிடம் இருந்து எழுத்து வடிவில் நற்சான்றுரைகளும் வரவேற்கப்படுகின்றன. இந்த திருமணத்தில் தடையாக கருதக்கூடிய ஒன்றை அறிந்து புரிந்துகொள்ளும் நோக்கத்துடன் குடும்பம் அல்லது நண்பர்களில் ஒருவர், வெளிப்படையாக அல்லது மறைமுகமாக, மனதில் முழு நம்பிக்கையுடன் குலகுருவிடம் தெரிவிப்பதற்கும் இது சரியான சந்தர்ப்பமாக விளங்குகிறது. பாலியல் அனுபவங்கள் உட்பட, மணமகனின் மற்றும் மணமகளின் வாழ்க்கையைப் பற்றி முழுமையான மற்றும் நேர்மையான முறையில் இரண்டு குடும்பங்கள் மற்றும் *குலகுருவிடம்* தெரிவிக்க வேண்டும். ¶ஒரு வரன் பார்க்க தொடங்கியதில் இருந்து, *ஜோதிட ஆச்சார்யர்கள்* மற்றும் *சாஸ்திரிகள்* பொருத்தத்தை முறையாக ஆய்வு செய்வதற்கு, பல மாதங்கள் ஒதுக்க வேண்டியிருக்கும். பெரும்பாலும் மகன் அல்லது மகளுக்கு ஒரு நல்ல பொருத்தம் அமைய குறைந்தது இரண்டு வருடங்கள் தேவைப்படலாம். இந்த அல்லது வாழ்க்கையில் முக்கியமாக விளங்கும் மற்ற பொறுப்புக்களில் அவசரம் கூடாது. இதையே ஞானகுரு சிவ யோகசுவாமி, “அவசரம் வேண்டாம். கவலை வேண்டாம். வருத்தம் வேண்டாம்.” இந்த விஷயத்தில் மணமகன் அல்லது மணகளை நிர்பந்திக்கவும் கூடாது. ஒரு பொருத்தத்தில் சம்மதம்

இல்லையென்றால், எந்த நேரத்திலும் இந்த செய்முறையை நிறுத்துவதற்கு அவர்களிடம் உரிமை உள்ளது. ¶எல்லா உடன்பாடுகளையும் பெற்ற பிறகு, மணமகனின் தாய் மணமகளுக்கு ஒரு தங்க நகை அணிவிக்கிறாள். இரண்டு குடும்பங்களையும் அன்பு மற்றும் விசுவாசத்தில் இணைப்பதற்கு, குடும்பங்கள் தங்களுக்குள் பரிசுகளை தாராளமாக பரிமாறிக் கொள்கிறார்கள். மணமகன் மற்றும் மணமகள் தங்களுக்குள் பரிசுகள் மற்றும் மோதிரங்களை மாற்றிக்கொண்டதும், நிச்சயதார்த்தத்தில் மகிழ்ச்சியும் ஆரவாரமும் தொடங்குகிறது. அதன் பின்னர் அவர்கள், பெரியவர்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். முடிவான இலக்காக விளங்கும் ஞானோதயத்திற்கு வழிவகுக்கும் ஒரு நேர்மையான, செழிப்பான மற்றும் மகிழ்ச்சியான வாழ்வை அந்த தம்பதிகள் வாழவேண்டும் என்று திருமண நாளன்று இரு குடும்பங்களும் வாழ்த்துவதுடன் எல்லா ஏற்பாடுகளும் சடங்குகளும் நிறைவு பெறுகின்றன. திருமணம் அல்லது அது தொடர்பான சடங்குகளின் போது, சைவ உணவு மட்டுமே வழங்கப்படவேண்டும். வேற்று மதம் அல்லது சமூகங்களை சார்ந்த விருந்தாளிகளுக்கும் இறைச்சி மற்றும் அசைவ உணவுகளை பரிமாறக்கூடாது. திருமணத்திற்கு வரும் இந்துக்கள் எல்லோரும் முறையான இந்து உடையில் வரவேண்டும்.

வியாழக்கிழமை

பாடம் 165

திருமணத்திற்கு

ஆதரவு அளித்தல்

நடந்து முடிந்த திருமணத்தை நீண்டகாலத்திற்கு கட்டிக்காப்பது இரு குடும்பங்களின் பொறுப்பாகிறது. திருமணம் மகிழ்ச்சிகரமாக அமைந்து தங்கள் புதிய மகளுக்கு ஒரு இல்லத்தை வழங்குவது, குறிப்பாக கணவனின் பெற்றோர்களின் கடமை ஆகும். மணமகனின் குடும்ப பாரம் முழுவதையும் அந்த புது மணப்பெண் மீது சுமத்தி, அவளை அவளுடைய பிறந்த வீட்டிற்கு அவ்வப்போது அனுப்பாமல் இருக்கும் ஒடுக்குமுறை, இன்றைய இந்து சமூகம் மற்றும் குறிப்பாக நமது சமூகத்திற்கு பொருத்தமாக இருக்காது. இளம் ஜோடிகள் தங்கள் புதிய வீட்டை அமைத்துக் கொள்ள சுதந்திரம் வழங்குவதோடு, அவளுடைய பாதுகாப்பு மற்றும் அவர்கள் ஒன்றாக இணைந்து வாழ்வதற்கு தேவையான திறமைகளை கண்காணிப்பது மணப்பெண்ணின் பெற்றோர்களின் கடமை ஆகும். ¶அவள் உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டால், அவளை தங்கள் வீட்டிற்கு வரவழைத்து, அடைக்கலம் தந்து, ஆறுதல் அளிப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கவேண்டும். அதன் பிறகு

பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்துவதுடன், இதைப்போன்ற சித்ரவதைகள் மீண்டும் நடக்காமல் இருக்க கணவனிடம் இருந்து நம்பத்தகுந்த வாக்குறுதிகளை பெறுவது அந்த பெற்றோர்கள் மற்றும் சமூகத்தில் இருக்கும் அனைத்து சீடர்களின் கடமையாகிறது. தன் மனைவிக்கு மதிப்பு அளித்து, அவளை தீங்கில் இருந்து பாதுகாக்க உறுதி எடுத்துக்கொண்டுள்ள மணமகனே அதை மீரியதால், அவன் செய்த குற்றத்திற்கு மணமகள் பொறுப்பேற்கக்கூடாது. ¶இரண்டு குடும்பங்களும் ஒன்றாக இணைவதன் மூலம், மகிழ்ச்சிகரமான மற்றும் துக்ககரமான நேரங்களில் அவர்களுக்கு அவர்களின் மகன் மற்றும் மகளின் ஆதரவு கிடைக்கிறது. திருமணம் நீண்டகாலம் அன்பினால் பிணைந்து இருப்பதை உறுதி செய்து, சந்ததிகள் எதிர்காலத்தில் நற்பண்புகளுடன் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு *தர்மம்* தவறாது சமூகத்திற்கு சேவைகளை செய்யும் குடிமகன்களாக வளர்ப்பதில் வழிகாட்டியாக இருப்பதும் இரு குடும்பங்களின் பொறுப்பு ஆகும். இரு குடும்பங்கள் தங்களது பரஸ்பர முயற்சிகளில் தவறினால், சமூகம் தனது பொறுப்பில் இருந்து தவறுகிறது. ¶வலுவான திருமணங்களை உருவாக்கும் நோக்குடன் சில இந்து சங்கங்கள் தங்கள் சமூகத்தை சேர்ந்த குடும்பங்களை ஒரு நாள் மாலைப்பொழுதில் ஒன்று கூட்டி, அப்போது ஒரு தேர்ந்த ஆலோசகருடன் விவாதத்தையும் ஏற்பாடு செய்கிறது. வருடத்திற்கு ஒரு முறை பஞ்ச கணபதி பண்டிகையின் போது, தம்பதி தங்கள் திருமண ஒப்பந்தத்தை எடுத்து படித்து, அதில் தாங்கள் எந்த பகுதியில் தளர்வாக அல்லது அலட்சியமாக இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்கிறார்கள். தங்கள் மனங்களில் எதிர்மறை *சம்ஸ்காரங்களாக* தொடர்ந்து அதிர்ந்துக்கொண்டு இருக்கும் நிகழ்வுகளை தேடிப்பிடித்து, பணிவுடன் வருத்தம் தெரிவித்து மன்னிப்பை வேண்டி முழுமையாக முடிவு காண விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குள் அர்ப்பணிப்பை புதுப்பித்துக் கொள்கிறார்கள். வரவிருக்கும் புத்தாண்டு இணக்கம் மற்றும் அமைதி நிறைந்து, செழிப்பு மற்றும் மகிழ்ச்சியை வழங்குவதற்கு, இது ஒரு அற்புதமான தீர்வாக விளங்குகிறது. ஒருவர் மீது ஒருவர் உண்மையான அன்பை வெளிப்படுத்தி, இதய *சக்கரத்தை* சுத்தம் செய்யும் செய்முறையை, நாம் *அனாஹத யோகம்* என்று அழைக்கிறோம். இது இரவு உறங்கும் முன்பு தீர்வு காணப்படாத விஷயங்களை வெளிக்கொண்டு வந்து, வரவிருக்கும் வருடங்களில் வேதனை தரும் இன்னொரு செடி வளர்வதற்கு காரணமாக உள்ளே புதைந்து இருக்கும் விதைகளை மீட்கும் செய்முறை ஆகும். அது ஒருவர் இன்னொருவரின் மனதை புண்படுத்தி தீர்வு காணப்படாமல் இருக்கும் சொல் அல்லது செயல்கள் போன்று சிறிய விஷயங்களை வெளிக்கொண்டு வருவதை குறிக்கிறது. இது தவிர்க்க வேண்டியது என்றாலும் நடந்திருக்க வாய்ப்புள்ள வன்முறைகள் மற்றும் கோபத்தை வெளிக்கொண்டு வருவதை குறிக்கிறது. இது *அகிம்சையை* அடிப்படையாகக் கொண்ட *தர்ம* நெறியை பின்பற்றி எதிர்காலத்தை அமைக்க மன்னிப்புக்களைக் கோரி, உங்கள் *குலகுருவுடன்* பேசி, உறுதிமொழிகள்

மற்றும் புதிய வருடத்தின் தீர்மானங்களை உருவாக்குவதற்கு சரியான நேரம் ஆகும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 166

வெவ்வேறு நாட்டவர் மத்தியில்

நடைபெறும் கலப்பு திருமணங்கள்

இன்று வெவ்வேறு நாடுகள், மதங்கள், கலாச்சாரங்கள் அல்லது இனங்களை சேர்ந்த மக்களுக்கு இடையே திருமணங்கள் நடைபெறுகின்றன. காலங்கள் மாறிவிட்டன. இந்த மாற்றத்தில் தகவல் தொடர்பு முக்கிய காரணமாக விளங்குகிறது. தகவல் தொடர்பு இல்லாத போது, மாற்றம் ஏதும் நிகழவில்லை. தகவல் சுதந்திரமாக பரவும் போது, சுதந்திரமான சிந்தனை தோன்றி, மாற்றம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஆமாம், மாற்றத்தை தவிர்க்க முடியாது என்பதை நாம் கண்கூடாக பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இளைய தலைமுறை பெரியவர்களிடம் அறிவுரைகளை சார்ந்து இருக்காமல், தங்களுக்காக சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். இனி அவர்கள் தாங்கள் செய்யும் தவறில் இருந்து கற்றுக்கொள்ளும் அவலநிலைக்கு ஆளாகி உள்ளனர். இது கற்றுக்கொள்வதற்கு சரியான முறையா? ஆனால் இது தான் நடந்துகொண்டிருக்கிறது, மற்றும் அது நாம் பார்க்க விரும்புவதை காட்டிலும் அதிவிரைவாக நடந்துகொண்டு இருக்கிறது. ¶திருமணம் எந்த வகையை சார்ந்ததாக இருந்தாலும், அது உண்மையான அன்பின் துணையுடன் இணைந்து இருந்தால், அதனால் நீண்டகாலம் நிலைத்து இருக்க முடியும். உண்மையான அன்பு என்பது தீவிர முரண்பாடு இல்லாமல் பரஸ்பர சமரசங்கள் செய்து கொண்டு, விசுவாசத்துடன் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களை கடந்து சென்று, ஒருவருக்கு ஒருவர் தவறாமல் ஆதரவாக இருந்து, குடும்பத்தினர் அனைவரையும் அன்புள்ளம் கொண்ட அரசன் அரசியாக ஒன்று சேர்ப்பதற்கு தேவையான வலிமையுடன குடும்பத்தை நிர்வகிக்கும் திறமையை அந்த தம்பதிக்கு வழங்குகிறது. உண்மையான அன்பு இருக்கும் போது, அதற்கு ஜோதிட பொருத்தம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை மற்றும் அந்த திருமணம் நீண்டகாலம் நிலைத்து இருக்கும் என்று *ரிஷிகளும்* கூறியுள்ளார்கள். அனைத்து தீய தாக்கங்கள் மீது வெற்றிகொண்டு, இணக்கமின்மையை தணிய வைக்கும் செயலை அன்பு செய்கிறது. அன்பு என்பது விதியின் சாரமாக விளங்குகிறது. ஆனால் தங்களுக்குள் இருக்கும் அன்பு உண்மையான அன்பா அல்லது காந்தத்தன்மை கொண்ட அன்பா என்பதை ஒரு இளம் தம்பதி எப்படி தெரிந்துகொள்வது? அதை ஒரு சோதனை

செய்து பார்க்கலாம். அதை காலத்துடன் சோதித்து பாருங்கள். காந்தத்தன்மை கொண்ட அன்பு வலுவிழந்து காலப்போக்கில் மறைந்து விடுகிறது. உண்மையான அன்பு காலப்போக்கில் வலுவடைகிறது. உண்மையான அன்பு காலப்போக்கில் கனிகிறது. ¶வெவ்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் செய்துகொள்ளும் கலப்பு திருமணங்கள் இந்து சிந்தனையில் முக்கிய அங்கம் வகிக்கிறது. இதை *வசுதைவ குடும்பம்* மற்றும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" போன்ற முற்போக்கு சிந்தனைகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். வாழ்க்கைகளை ஒன்றாக வாழும் தனிநபர்கள் உடல், மனம் மற்றும் ஆன்மா வாயிலாக தங்களுக்குள் தொடர்ந்து வலுவான நெருக்கத்தை பெறும் போது, இயல்பாக தோன்றும் கொந்தளிப்புக்களை அன்பில் பிணைந்து இருக்கும் உலக குடிமக்களால் எதிர்கொள்ள முடிகிறது. ¶ஒவ்வொரு திருமணமும் வலுவடைய ஏதாவது ஒரு ஆதரவு தேவைப்படுகிறது. உண்மையான அன்பு மிகவும் சிறந்த ஆதரவாக இருந்தாலும், குறிப்பாக காந்த சக்தியால் ஈர்க்கப்பட்ட ஜோடிகளுக்கு, இரு குடும்பம் தரும் ஆதரவு மிகவும் முக்கிய உதவியாக விளங்குகிறது. காந்தத்தன்மை கொண்ட அன்பு மங்கியதும், ஒருகாலத்தில் தீவிர மனவெழுச்சியாக நிலைத்து இருந்த மன அழுத்த வெளிப்பாடுகளின் தீவிர எழுச்சிகள் இல்லாமல், திருமணம் நீடித்து இருப்பதற்கு குழந்தைகளும் பெற்றோர்களின் ஆதரவு மட்டுமே நிலைத்து இருக்கின்றன. ¶நாம் சற்று எதிர்காலத்தை பற்றி சிந்தித்து பார்ப்போமா? வெவ்வேறு நாட்டு மக்களுக்கு இடையே கலப்பு திருமணங்கள் நடைபெற்றுள்ளன, நடந்துகொண்டு இருக்கின்றன மற்றும் எதிர்காலத்தில் நடக்க உள்ளன என்பதால், ஜோடிகளின் குடும்பங்கள் தேவையில்லாத மன உளைச்சலுக்கு ஆளாகாமல் இருக்க ஒரு விவேகமான வழியை தேடவேண்டும். தவறான சூழ்நிலைகளை கண்டுகொண்டு, அதை சீர் செய்து ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு, விவேகம் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் அதற்கு நாம் பிரச்சனை இருக்கிறது என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெவ்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் மத்தியில் நடைபெறும் கலப்பு திருமணத்தால், பழமைவாதிகளாக இருக்கும் பெற்றோர்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த சிந்தனை பத்து வருடங்கள் முன்பாக பழமைவாதமாக மாறியது. ஆனால் அது அதற்கு முன்னர், தொடர்ந்து வளர்ச்சி பெறும் ஒரு நிலையான சமூகத்தை பராமரிக்க, சூழ்நிலை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை பற்றி பழக்கங்களை பகிரும் சிந்தனையாக இருந்தது.

சனிக்கிழமை

பாடம் 167

வேண்டாம் என்று

சொல்ல முடியாத போது

ஒரு கருப்பர் இனத்து மணமகனை ஒரு ஆசிய நாட்டு இளம்பெண் திருமணம் செய்துகொண்டால், அவளை அந்த இராச்சியத்தில் இருந்து நாடுகடத்த வேண்டுமா? ஆமாம், அதைத்தான் பழமையான சிந்தனை மற்றும் பழமையான பழக்கங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் அவ்வாறு புதிய சிந்தனை மற்றும் புதிய சிந்தனைகள் குறிப்பிடவில்லை. வீட்டை விட்டு தங்கள் குழந்தைகளை துரத்தும் பழைய பெற்றோர்கள் வழக்கம், இன்றைய காலகட்டத்தில் பொருத்தமாக இருக்காது. இன்றைய பெண்கள் சிந்திக்கிறார்கள். அவர்கள் புரிந்துக் கொள்கிறார்கள். அவர்கள் மாமியார் கொடுமைகளை சகித்துக் கொள்ளும் வேலைக்காரிகளாக இருக்க விரும்புவதில்லை. மாற்றாந்தாய் தனது கடுஞ்சொற்களால் அவமானப்படுத்திய சிண்ட்ரெல்லா காலமெல்லாம் மலையேறிவிட்டது. இளைஞர்களும் தங்களைப் பற்றி சிந்திக்கிறார்கள். அவர்கள் தாங்கள் படித்த மற்றும் கேட்ட தகவல்களின் துணையுடன் மதிப்பீடு செய்கிறார்கள். அவர்களது எதிர்கால உலகம் தொடர்ந்து மாற்றத்துடன் இருக்கிறது. அவர்கள் அதற்காக தங்களை தயார் செய்துக்கொண்டு இருக்கிறார்கள். அதன் பிறகு அவர்களின் வாழ்க்கையில் சிக்கல்களை ஏற்படுத்த, ஏதாவது ஒரு வகையில் காதல் நுழைகிறது. ¶ஷான் என்ற இளைஞனை காதலிக்கும் கரேன், இரகசியமாக அவன் நாட்டிற்கு கிளம்பும் போது, பெற்றோராகிய நீங்கள் அவர்களை சென்று சந்தித்து, உங்கள் இதயத்தில் அவளுக்கு இடம் கொடுங்கள். “நான் உன்னை நேசிக்கிறேன், நீ நேசிப்பவரை நான் நேசிக்கிறேன்.” இதுவே சரியான அணுகுமுறையாக இருக்கும். மெக்சிகோவில் இருக்கும் கார்மெனை தான் காதலிப்பதாக குமார் அறிவித்து, அவளது தந்தை தன்னுடைய தொழிலில் அவனுக்கு மூத்த பங்குதாரர் பதவியை தருவதாக உங்களிடம் சொல்லும் போது, நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். மெக்சிகோ சிட்டிக்கு சென்று அதன் அழகை ரசியுங்கள். அங்கே குமார் மற்றும் கார்மென் வசித்தால், அந்த நகரை சுற்றிப்பார்க்க மேலும் வசதியாக இருக்கும். ¶ஆம், கடலை கடந்து வரும் கரங்கள் அன்புக்கரங்கள் என்பதில் சந்தேகம் இல்லை. கண்டங்கள் மற்றும் தொழில்களை, கடலை கடந்து வரும் கரங்கள் இணைக்கின்றன. இத்துடன் தங்களை சுற்றி நடக்கும் மேலும் பல நிகழ்வுகளை இந்து சமய பெரியவர்கள் அனைவரும் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். இன்றைய உலகில் தொடர்ந்து ஏதாவது ஒரு நிகழ்வு நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. புதிய தொழில்நுட்பத்தின் துணையால் உலகமே சுருங்கிய நிலையில், வெவ்வேறு நாட்டவர் மத்தியில் நடைபெறும் கலப்பு திருமணத்தை தவிர்க்க முடியாது. ஒரு இறைவன் ஒரு உலகம் என்று குறிப்பிடும் நமது நம்பிக்கைக்கு, இது உண்மையான மற்றும் இயல்பான

வெளிப்பாடாக இருக்கிறது. தேசியவாதம், சமூக கட்டுப்பாடுகள், இன வழக்கத்தில் இருக்கும் தடைகள் அல்லது கட்டுப்பாடு, பாரபட்சம் நிரம்பிய வளர்ப்புமுறை ஆகியவற்றிற்கும் ஆன்மாவிற்கும் தொடர்பு இல்லை. *தார்மீக* முறையில் திருமணம் செய்து கொள்ளும் இரண்டு ஆன்மாக்கள், அத்தகைய எல்லைகளை கடந்து செல்கின்றன. ¶குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு திருமணங்களை நிச்சயிக்க வேண்டும் என்பது எப்போதும் என்னுடைய அறிவுரையாக இருந்துள்ளது. அது அவர்களின் *புருஷ* மற்றும் *ஸ்த்ரீ தர்மத்தின்* அங்கம் ஆகும். அவர்கள் இந்த செய்முறையை விரைவில் தொடங்க வேண்டும். ஆனால் அவர்கள் இதை செய்யவில்லை என்றால், அவர்களின் குழந்தைகள் தங்கள் திருமணங்களை தாங்களே ஏற்பாடு செய்துகொள்வார்கள். அவர்கள் தங்களுக்காக திருமணங்களை நிச்சயம் செய்துகொள்ளும் போது, வழக்கமாக குடும்பத்தில் இருந்து எதிர்ப்பு தோன்றும். அவர்கள் தங்களது கடமையை முதலில் செய்யவில்லை என்பதால், அதை நிராகரிக்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. ¶பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு திருமண பொருத்தங்களை பார்க்க தவறுகிறார்கள், ஆனால் தங்கள் குழந்தை மீது கட்டுப்பாடுகளை விதிக்க முற்படுகிறார்கள். அந்த குழந்தைகள் ஏதாவது ஒரு வழியில் தங்கள் வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ளும் போது, குடும்பம் ஒரு குழப்பமான சூழ்நிலையை சந்திக்கிறது. குறிப்பாக இளம்பெண்கள் கண்காணிக்கப் படவேண்டும். இன்றைய உலகில் தவறான மக்களை சந்திப்பது மிகவும் எளிது. இத்தகைய சூழலில் இரண்டு பக்குவப்பட்ட இளம்பெண்கள் தத்தம் காதலர்களை சந்திக்கும் போது, ஒருவரை ஒருவர் கண்காணித்துக் கொள்வது ஒரு தீர்வாக இருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது. அவர்கள் தாங்கள் சந்திக்கும் இளைஞர்களைப் பற்றி பேசிக்கொள்ளலாம் மற்றும் தங்களது கடமைகளை செய்ய தவறிய குடும்பங்களை புறக்கணித்து, நீடித்து இருக்கும் ஒரு திருமண வாழ்வை தங்களுக்கு ஏற்பாடு செய்து, எதிர்காலத்தில் தங்கள் குழந்தைகளை தொடக்கத்தில் இருந்து பாரம்பரியத்துடன் வளர்த்து, அவர்களுக்கு திருமண ஏற்பாடுகளை செய்து தங்கள் கடமைகளை நிறைவேற்றவும் முடியும். ¶நாம் முன்னேற்றத்திற்கு முன்பாக தடை போல அமர்ந்து கொண்டால், அது நம்மை உதறித் தள்ளி முன்னேறி சென்றுவிடும். ஆனால் முன்னேற்றம் தவறான திசையில் செல்லாமல் இருக்க, நாம் அதற்கு ஓரமாக அமர்ந்து வழிகாட்டலாம். நமது பழங்கால பழக்கத்தை மதிக்காத குழந்தைகளுடன் நாம் பேசுவதை நிறுத்திவிட்டால், நம்மால் இந்த வழிகாட்டலை வழங்க முடியாது. மாற்றங்களை துரிதப்படுத்துவதற்கு மக்களுக்குள் தொடர்பு முதலில் இருக்க வேண்டும், அதனால் நாம் குழந்தைகளுடன் பேசுவதை நிறுத்தாமல் வழிகாட்டுவதை தொடர வேண்டும். அவர்களை விட்டு விடாதீர்கள். அவர்களுடன் சென்று, அவர்கள் மீது அன்பு செலுத்தி, மென்மையாக வழிகாட்டுங்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 168

வெவ்வேறு மதத்தவர்கள் மத்தியில்

நடைபெறும் கலப்பு திருமணங்கள்

"உன் கணவரை தொடக்கத்தில் இருந்தே கட்டுப்பாட்டில் வைத்திரு. இல்லையென்றால் நீ பல சிக்கல்களை சந்திக்க வேண்டியிருக்கும் மற்றும் பின்னர் கணவனை கட்டுப்படுத்துவது கடினமாகிவிடும், " என்று ஒரு சராசரி தாயார் சொல்லும் அறிவுரையை கேட்கவேண்டாம் என்று திருமணம் செய்துக்கொள்ள திட்டமிட்டுள்ள இளம் பெண்களிடம் நான் கூறுவேன். திருமணத்தின் விளைவு எதுவாக இருந்தாலும், அதை கவனமாக எதிர்கொண்டு உங்கள் உறுதிமொழிக்கு கட்டுப்பட்டு இருங்கள். நீங்கள் உங்களுக்கு கணவனுக்கு, சுடப்பட்ட ரொட்டி துண்டு மீதிருக்கும் உருகிய வெண்ணெய் போல இருங்கள். அதை அந்த ரொட்டி உள்ளே உரிந்துக்கொள்ளும். அதைப்போன்று இருங்கள். உங்களது முதுமை மிகவும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். ¶திருமண வாழ்க்கை தொடக்கத்தில் கடினமாக இருக்கலாம். தோழிகள் வழக்கம் போல உங்கள் மனதில் புகுத்திய, அல்லது தொலைக்காட்சி அல்லது திரைப்படங்கள் மூலம் பெற்றதை அடிப்படையாகக் கொண்டு ஊகம் செய்யப்பட்ட பல்வேறு கருத்துக்களுடன், தொடர்ந்து விவகாரத்தை அவனுக்கு நினைவூட்டிக் கொண்டு இருக்காதீர்கள். ஹாலிவுட் நடிக நடிகையர் செய்துகொள்ளும் ஹாலிவுட் திருமணங்களால், தங்களது வயோதிக காலத்தில் அவர்கள் சந்திக்கும் விளைவுகளை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். அவர்கள் திரைப்படங்கள் மூலம் சம்பாதிக்கும் போது பகட்டான வாழ்க்கை வாழ்வது போல விளம்பரம் செய்யப்பட்டாலும், அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. அது சரியான வழியில்லை. நீங்கள் ஒரு உறுதிமொழி எடுக்கும் போது, அதைப்பற்றி முதலில் சிந்தியுங்கள். பிறகு அதன் விளைவு எதுவாக இருந்தாலும், அதை கடைப்பிடிப்பதே சிறந்த வழி ஆகும். ¶நீங்கள் திருமணம் செய்துக்கொள்ள விரும்பினால், உங்கள் மதத்தில் உங்களுக்கு துணையாக இல்லாத பெண்ணை, வீட்டில் இருந்து உங்கள் குடும்பத்தின் மீது கவனம் செலுத்த விரும்பாத பெண்ணை, உங்களை ஒரு மனிதனாக மதிக்காமல், நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை தொடக்கத்தில் இருந்தே சொல்லும் பண்புடைய பெண்ணை திருமணம் செய்துக்கொள்ள வேண்டாம் என்று நான் இளைஞர்களிடம் கூறுவேன். நீங்கள் அந்த பெண்ணை திருமணம் செய்துகொண்டால் வாழ்க்கை மகிழ்ச்சியற்றதாகி, நீங்கள் உங்கள் ஆண்மையை இழந்து, மனைவியின் பிடியில் பொம்மை போல இருப்பீர்கள் என்பதால், நீங்கள் அத்தகைய

பெண்களை தவிர்க்க வேண்டும். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியற்று இருப்பீர்கள். மேலும் வயதானதும் அந்த பெண் சோகமான வாழ்க்கையை அனுபவிப்பாள். ஆனால் விளைவு எதுவாக இருந்தாலும் உங்களுடன் நன்றாக ஒன்றிவிடும் ஒரு பெண்ணை தேர்ந்தெடுங்கள். உங்களுக்கு வாழ்க்கையில் வெற்றி கிடைக்கிறதோ இல்லையோ, அவள் நீங்கள் சாப்பிடுவதை சாப்பிட்டு, நீங்கள் செல்லும் இடத்திற்கு உங்களுடன் வருவாள். "நீ எங்கே இருக்கிறாயா, நான் அங்கே இருப்பேன்," என்று ஆங்கிலத்தில் பொருட்படும் ஒரு ரோம வாசகத்தை, திருமணங்களின் போது மணமகள் உச்சரிக்கிறாள். இது தொடக்கத்தில் கடினமாக இருக்கலாம், ஆனால் காலப்போக்கில் நல்ல முன்னேற்றம் இருக்கும். ¶"நான் ஒரு கிறித்துவ பெண்ணை காதலிக்கிறேன். நான் எனது மதத்தை துறந்து, இயேசு கிறுத்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவள் கூறுகிறாள். இந்து மதம் தான் எனது பாதை என்பதையும், நான் அதை தொடர்ந்து பின்பற்ற விரும்புகிறேன் என்பதையும், அதே சமயத்தில் நான் அவள் மீது அதிகமாக அன்பு செலுத்துகிறேன் என்பதையும் நான் அவளுக்கு எப்படி புரிய வைப்பது? நான் என்ன செய்வது, குருதேவா?" என்று எனக்கு ஒரு அன்பர் கடிதம் எழுதினார். நீங்கள் குழந்தைகளை எப்படி வளர்க்கவேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். நீங்கள் அவர்களை நற்பண்புள்ள இந்து குழந்தைகளாக வளர்க்க விரும்புகிறீர்கள் என்பது தெளிவாக தெரிகிறது. கிறித்துவ மதம் *கர்மவினை* அல்லது மறுபிறவி, எங்கும் வியாபித்து இருக்கும் இறைவனின் தூய இருப்பு அல்லது நமது கோயில்கள் மற்றும் பண்டிகைகளை கிறித்துவ மதம் ஏற்றுக்கொள்வது இல்லை என்பதால், இந்து மதம் மற்றும் கிறித்துவ மதத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதால், நீங்கள் தீவிரமான சிக்கல்களை சந்திக்க வேண்டியிருக்கும். அவள் கிறித்துவ மதத்தை பின்பற்றி, நீங்கள் இந்து மதத்தை பின்பற்றினால், குழந்தைகளுக்கு குழப்பம் ஏற்படும். உங்கள் காதலி உங்களுடன் அறிவுப்பூர்வமாகவும் ஆன்மீக ரீதியாகவும் இணைந்து வாழ்க்கை நடத்த விரும்பவில்லை என்றால் உங்கள் காதல் வெறும் உடல்ரீதியான அன்பாக மட்டுமே இருக்கக்கூடும். அதிக வரையறைகளை கொண்ட அந்த காதல் நீடித்து இருக்காது. உங்களுடைய உடல் ரீதியான, உள்ளுணர்வு மனவெழுச்சிகளுக்கு துணை போகவேண்டாம். உங்களுடைய ஆன்மீக புத்தி அல்லது நான் வழங்கும் நல்ல அறிவுரைகளை பின்பற்றுங்கள். பெண் வரன்களை தேட ஆரம்பியுங்கள். நீங்கள் உயர்ந்த ஆன்மாக்களின் அடுத்த தலைமுறையை வளர்ப்பதற்கு ஒரு நல்ல இந்து பெண்ணை நீங்களே தேடுங்கள் அல்லது அந்த பொறுப்பை உங்கள் பெற்றோரிடம் கொடுங்கள் என்று நான் பதில் அனுப்பினேன். ¶பல இந்துக்கள் வேற்று மதத்தவர்களை திருமணம் செய்வது கொள்வதையும், அந்த இளம் தம்பதிகள் சில காலம் மகிழ்ச்சியாக இருப்பதையும் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் குழந்தைகள் பிறந்த பிறகு திருமணத்தில் இருக்கும் மோகம் தணிந்த பிறகு, கணவன் மற்றும் மனைவிக்கு மத்தியில் பதட்டம் நிலவுகிறது. பொதுவாக ஒருவருக்கு தன்

மதத்தின மீது பற்று அதிகமாகிவிடுகிறது. இதனால் அந்த ஜோடியில் இந்து மதத்தை சாராதவர், "நீ எனது மதத்தின் மீது நம்பிக்கை வைக்கவேண்டும்," என்று வாதாடுவார். இந்து சமயத்தை சார்ந்தவர், "நீ எனது மதத்தின் நம்பிக்கை வைக்க வேண்டும்," என்று வலியுறுத்துவார். வாழ்நாள் முழுவதும் நடைபெறும் இந்த சச்சரவால் பொதுவாக குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு சமய பாரம்பரியத்தில் ஒரு ஜோடிக்கு இருக்கும் பொதுவான பற்றுறுதி மிகவும் முக்கியமான ஒற்றுமையாக விளங்குகிறது.

விவாஹ விச்செதஹ பீடனம் ச

विवाहविच्छेदः पीडनम् च



விவாகரத்து மற்றும் சித்ரவதை

இதே வீட்டில் இருங்கள். என்றும் பிரியாமல் இருங்கள். முழுமையான ஆயுளை பெறுங்கள். உங்கள் வீட்டில் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் ஆனந்தமாக இருங்கள்.

ரிக் வேதம் 10.85.42. வேஎ, ப. 256



இன்று விவாகரத்து ஒரு தீவிரமான பிரச்சனையாக உள்ளது. இந்த வரைபடத்தில் விவகாரத்தால் பிரியவிருக்கும் குடும்பத்தின் விசாரணையை வழிநடத்தும் நீதிபதி, கணவன் மற்றும் மனைவியின் வாதங்களை கேட்டுக்கொண்டு இருக்கிறார். இதனால் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள சிறுவன், தன்னால் இனி தனது தந்தை மற்றும் தாயுடன் சேர்ந்து வாழ முடியாததை நினைத்து அழுதுக்கொண்டு இருக்கிறான்.

திங்கட்கிழமை

பாடம் 169

திருமணம் என்பது

நிரந்தரமானது

சில காலமாக உலகெங்கும் உள்ள இந்துக்கள் மத்தியில் ஒரு சீர்குலைவு நடந்துகொண்டு இருக்கிறது. எனது பதிப்பாளர் அலுவலுக்கு வரும் புகார்கள் மற்றும் பரிந்துரைகளில், சில வழக்கமான பிரச்சனைகளை பார்ப்போம். குழந்தைகளுக்கு வைதீக தர்மம், வழிபாடு மற்றும் *பூஜைகளை* கற்றுத்தந்தால், தாங்கள் வாழும் வெளிநாட்டு கலாச்சாரத்திற்குள் பொருந்துவது அவர்களுக்கு கடினமாகி விடும் என்று தாய்மார்கள் அவற்றை அவர்களுக்கு கற்றுத் தருவது இல்லை. இது முதல் பிரச்சனை. தாங்கள் வாழும் சமூகத்துடன் பொருந்துவதற்கு தடையாக இருக்கும் "கண்டிப்பான" தந்தை என்ற அவப்பெயரை வாங்க விரும்பாத தந்தைமார்கள், தங்கள் மகன்களை குடும்பத் தொழிலுக்கு அழைக்காமல், அவர்களை சுதந்திரமாக விட்டு விடுகிறார்கள். இது இரண்டாவது பிரச்சனை. இதைப்போல மேலும் பல புகார்களும் வந்தன. ¶தாய் மற்றும் தந்தைக்கு எப்போதும் வேலை பற்றிய சிந்தனைகள் ஓடும் மனங்களில் குழந்தைகளுக்கு இடமிருப்பது இல்லை என்பதால், அவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் அனாதையாக இருக்கிறார்கள். வீடியோ ஆர்கேட் மற்றும் தொலைக்காட்சியின் *அசுர* லோகங்கள் மூலம் குழந்தைகள் திருப்தி அடைகின்றனர். குடும்பங்கள் *தர்ம* நெறியை கைவிட்டு, முக்தி பெறுவது மீது நம்பிக்கையையும் இழந்து விட்டனர். அதற்கு பதிலாக, அவர்கள் தாங்களும் இன்றைய நவீன உலகுடன் ஒன்று சேரும் பொருட்டு, மனநிறைவை ஏற்படுத்தாத *அர்த்தம்* மற்றும் *காமத்தின்* தேடலில் மூழ்கி உள்ளனர். ¶சுறுசுறுப்பாக தலைமை பண்புடன் இருக்கும் வெகுசில இந்துக்களுக்கு மத்தியில், பெரும்பாலானோர் மந்தமான தொண்டர்களாக மாறிவிட்டதாக எங்களுக்கு வந்த பல மின்னஞ்சல்கள் தெரிவிக்கின்றன. யாரும் ஒரு கூட்டத்தில் தனித்து விளங்கி, கடும் விமனர்சனத்துக்கு ஆளாகி அவமனப்படுவதை விரும்புவதில்லை. இன்றைய நவீன யுகத்தை சேர்ந்த பலர், சமூகத்திற்கு முரணாக இருக்கும் *தர்மத்தை* வெளிப்படையாக வலியுறுத்த அஞ்சுகிறார்கள். நமது இன்றைய சமூகம் பொருள்முதல்வாதத்தை கோட்பாடாக கொண்டு, ஒழுங்கின்மை மூலம் நிர்வாகம் செய்யப்படுகிறது. ஒரு சட்டம்

இயற்றப்பட்டால், அது எந்த வகையாக இருந்தாலும், அதை மீறுவதற்காகவே ஒருசிலர் இருக்கிறார்கள். நாம் தற்போது கலியுகத்தில் தான் இருக்கிறோமா? ¶இன்றைய கலியுகத்திலும் எதிர்காலத்திற்காக பாதுகாக்க, ஒரு அமைப்பு நம்பிக்கை அளித்து வருகிறது. சாத்திரங்கள், இயங்கி வரும் கலாச்சாரங்கள் மற்றும் முக்கியமான அனைத்து மதங்களிலும் பல்லாயிரம் ஆண்டுகளாக போற்றி பாதிக்கப்பட்டு வந்துள்ள அந்த அரிய அமைப்பின் பெயர் திருமணம். அது ஒரு புதிய தலைமுறையை பெற்றெடுத்து வளர்க்கும் பொறுப்புடன் ஒன்று சேர்ந்துள்ள, ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணுக்கு இடையில் பிணைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தமாக விளங்குகிறது. குடும்பத்தில் குழப்பம் மையமாக இருக்கும் போது, நாம் எவ்வாறு ஒரு துணிச்சலான புதிய உலகம், ஒரு புதிய உலக ஒழுங்கு, ஒரு புதிய யுகத்தை எதிர்கொள்ள போகிறோம்? இந்துக்கள் இந்த சூழலிலும், *தர்மத்தை* புரிந்துகொள்ளாத அல்லது கடைப்பிடிக்காதவர்கள் பாதைகளை பின்பற்றுகிறார்கள். அவர்கள் விவாகரத்தை ஒரு பிரச்சனையாக பார்க்காமல் ஒரு தீர்வாக பார்க்கிறார்கள். ¶ஒரு அமைப்பாக இருக்கும் திருமணம் உடையும் போது, எல்லோரும் அவதிக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு நம்மை சுற்றி நடந்துகொண்டு இருப்பதை நாம் தினமும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். புனிதமான சம்ஸ்காரங்கள் மூலம் இணைந்துள்ள ஒரு கணவனும் மனைவியும், ஒருவருக்கு ஒருவர் சூட்சுமமான முறையில் பொருந்தி உள்ளனர். அவர்களை ஒரு மாதம், ஒரு வாரம் அல்லது ஒரு நாள் பிரித்தாலும், இருவருக்கும் வேதனை தருவதாக இருக்கும். இருவரும் அருகில் இல்லாத போது கனவுகள் மற்றும் ஏக்கங்கள் மூலம் சந்தித்துக் கொள்கின்றனர். அப்படியென்றால் நிரந்தரமான பிரிவு எவ்வளவு வேதனை தருவதாக இருக்கும்? அவர்களுக்கு பிடித்தமான குழந்தைகள், இந்த விவாகரத்தால் என்றுமே குணப்படுத்த முடியாத வருத்தத்துடன் அவர்கள் அனுபவிக்கும் வேதனையைத் தான் அளவிடமுடியுமா? இறைவன் மற்றும் மகாதேவர்களை ஆவாகனம் செய்யும் புரோகிதர் மூலம் புனிதமாக நடத்தி வைக்கப்படும் ஒரு திருமணத்தின் தெய்வீக ஒப்பந்தத்தை, லௌகீகத்தில் வாழும் ஒரு நீதிமன்ற நீதிபதி மூலம் எவ்வாறு ரத்து செய்யமுடியும்? இதைப்போன்ற விசித்திரங்கள் கலியுகத்தில் மட்டுமே சாத்தியமாகும். ¶ஐம்புலன்களையும் அடக்கி குற்றமற்ற பாதையில் நிலைத்து இருப்பவர்களுக்கு நீண்ட ஆயுளும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையும் கிடைப்பதும் உறுதி. தாங்கள் சொல்வதை மற்றவர்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும், தனது மனதில் இருப்பதை சொல்லும் பெரியவர்கள் இன்றும் இருந்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு தோன்றும் நேர்மையான கோபம், *தர்மத்தின்* மீது அவர்களுக்கு இருக்கும் அன்பு, இளைய தலைமுறை மற்றும் அவர்களின் பெற்றோர்கள் மீது ஒரே மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தங்கள் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் கேட்டாலும் கேட்காவிட்டாலும், தைரியமாக பழங்கால நற்பண்புகளை எடுத்துரைக்குமாறு நாங்கள் அந்த பெரியவர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

அவர்களுக்குள் ஏதாவது ஒரு பகுதி அதை கேட்டுக்கொண்டு இருக்கும். *தர்மத்தை* கற்றுக்கொடுங்கள். இதன் மூலம் இழப்பதற்கு பெரிதாக ஒன்றுமில்லை, ஆனால் பெறுவதற்கு அதிக ஆதாயங்கள் உள்ளன. விவகாரத்திற்கு எதிராக பிரசாரம் செய்வதற்கும், திருமண பதட்டங்களை பொறுமையாக தணித்து, கடினமான குடும்ப சூழ்நிலைகளின் தீவிரத்தை குறைக்குமாறும், நாங்கள் அந்த பெரியவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 170

விவகாரத்தால் ஏற்படும்

பின்னடைவுகள்

விவாகரத்து புதிய பிரச்சனைகளையே தொடங்கி வைக்கிறது. ஒரு விவாகரத்து என்பது வியாபாரத்தில் ஏற்படும் திவால் நிலையை போன்றதா? ஆமாம், இரண்டு விஷயத்திலும், அவற்றை சார்ந்து இருக்கும் எல்லோரும் வேதனையை அனுபவிக்கிறார்கள். தொழிலாளர்கள், குழந்தைகள் மற்றும் விநியோகிப்பாளர்களும் வேதனையை அனுபவிக்கிறார்கள். எல்லோரும் வேதனையை அனுபவித்து ஒரு தரப்பிற்கு ஆதரவு அளிக்கின்றனர். தொழிலில் சரிவு ஏற்படும் போது, தொழிலாளிகள் ஒரு தரப்பிற்கு ஆதரவு அளிக்கின்றனர், கூட்டணி உடையும் போது, கூட்டாளிகளும் அவர்களின் நண்பர்களும் ஒரு தரப்பிற்கு ஆதரவு அளிக்கின்றனர். திருமண விஷயத்தில், கணவனின் நண்பர்கள் அவனுக்கு ஆதரவு அளிக்கின்றனர், மனைவியின் நண்பர்கள் அவளுக்கு ஆதரவு அளிக்கின்றனர். இதன் மூலம் ஒரு நிரந்தர பிளவு ஏற்படுகிறது. சில சமயம் நீதிமன்றங்கள் குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்கின்றன, மற்றும் இதனால் குழந்தைகள் பிரிக்கப்படுகின்றன. இதனால் ஊர் சமுதாயம் மற்றும் சமூகம் சீர்குலைகிறது. இதனால் உருவாக்கப்படும் பல *குக்கர்மாக்களை,* இந்த பிறவி அல்லது அடுத்து ஒரு பிறவியில் அனுபவிக்க வேண்டி இருக்கும். ஒரு விவாகரத்து அல்லது ஒரு வியாபாரம் பிரியும் போது, அதை சார்ந்து இருந்த நபர்களின் நம்பிக்கை இழப்பும் இன்னொரு முக்கிய இழப்பாக விளங்குகிறது. அவர்கள் தங்கள் குழுவுக்குள் நம்பிக்கை வைக்கும் திறமையை, தங்கள் மீது நம்பிக்கை வைக்கும் திறமையை மறக்கிறார்கள் மற்றும் அதனால் அவர்களை யாரும் நம்புவது இல்லை. ¶திருமண ஜோடிகள் திருமணம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு மனநல மருத்துவர்கள், மனோதத்துவ நிபுணர்கள், குடும்ப ஆலோசகர்கள் மற்றும் வழக்கறிஞர்களை அணுக வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. *கர்மவினைகளை* பற்றியும் விவாகரத்து செய்வதில் இருக்கும் *அதர்மத்தை*

பற்றியும் அறிந்து நல்ல அனுபவத்துடன் இருக்கும் நமது சமூக பெரியவர்களை காட்டிலும் சிறந்த தீர்வுகளை யாரால் வழங்க முடியும்? அவர்களின் அனுபவ அறிவுக்கு மிகப்பெரிய மதிப்பை கொண்டுள்ளது. குடும்பத்தில் பாசம் மற்றும் நம்பிக்கையின் உறவுகளை வலுப்படுவத்துவதற்கு ஒரு *சுவாமி, சாது, குரு, ஒரு ஜோதிட சாஸ்திரியின்* துணையை நாடி, அவரை உங்கள் குடும்பத்தில் ஒரு அங்கத்தினர் ஆக்கிக்கொள்ளுங்கள். தங்களுக்கு ஆதரவு அளிக்கும் குழுவினரை வலுப்படுத்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆன்மீக குலகுரு அவசியம் தேவை, மற்றும் அவர் இக்கட்டான சூழ்நிலைகளில் குடும்பத்தை ஒன்று சேர்த்து வைக்கிறார். திருமணம் என்பது நிரந்தரமானது மற்றும் குடும்ப வாழ்க்கையில் பற்றுடன் இருங்கள் என்பதையே நாங்கள் கூற விரும்புகிறோம். ¶ஆணின் பண்புகளுடன் இருக்கும் ஒரு ஆண் மற்றும் பெண்ணின் பண்புகளை கொண்ட ஒரு பெண்ணின் உறவுகளை, முறையாக பராமரிக்க தேவையான தீர்வுகள் அனைத்தையும் இந்திய கலாச்சாரம் கொண்டுள்ளது. தங்களது தேவைக்காக தங்களுக்குள் ஆணின் பண்புகளை வளர்த்துக்கொண்டுள்ள பெண்களை இன்று ஆண்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த தம்பதிகள் தங்களுக்குள் இயல்பாக சண்டையிட்டு, போட்டியிட்டு வேதனையை சந்திக்கிறார்கள். வாழ்நாள் முழுவதும் நான் மேற்கொண்டு இருக்கும் சமயப்பணியில், திருமணத்தில் இணக்கத்தை பெறாதவர்கள் அவ்வப்போது என்னிடம் அறிவுரை கேட்டு வருவார்கள். நாம் உடனடி பிரச்சனைகளை கடந்து இருக்கும் பழங்கால *சாஸ்திரிய* கோட்பாடுகளின் அடிப்படையில் அதற்கு தீர்வு காண்கிறோம். திருமணம் என்பது ஒரு கடல் பயணம் போன்றது ஆகும். சிலசமயங்களில் பயணம் நல்ல சூரிய ஒளியுடன் எளிதாக இருக்கும், மற்றும் சிலசமயங்களில் பயணத்தின் போது மோசமான வானிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் எல்லா சூழலிலும் கப்பலில் இருந்து குதிக்காமல், கப்பலில் இருப்பதே விவேகம் ஆகும். ஒருவர் தன்மைபிக்கை மற்றும் முயற்சியை இழக்காத வரை, தீய *கர்மவினைகள்* அல்லது *குக்கர்மாக்கள்* மற்றும் கடினமான ஜோதிட கணிப்புக்கள் மற்றும் கடினமான மனநிலைகளை இறுதியில் வெற்றிகொள்ள முடியும் என்று எனது அனுபவ அறிவு தெரிவிக்கிறது. திருமண வாழ்க்கை என்பது எல்லா தடைகளையும் கடந்து தொடர்கிறது. என்னை குலகுருவாக ஏற்றுக்கொண்டுள்ள நூற்றுக்கணக்கான பெரிய குடும்பங்கள், விவாகரத்து என்ற சொல்லை என்றுமே பயன்படுத்தப்படுவது இல்லை அல்லது அவர்கள் அதை ஒரு தீர்வாக கருதுவது இல்லை. ¶அத்தகைய நல்ல அறிவுரைகளை மதிக்காதவர்கள், அவர்களுக்கு மத்தியில் இருக்கும் *பிராண* சக்திகளின் இழுவையால் வெற்றிக்கொள்ளப் படுகிறார்கள். அவை பதினைந்து இருபது வருடங்களாக கவனிக்கப்படாமல் இருந்த வெறுப்பு மற்றும் குழப்பம், கண்ணீர், கழிவிரக்கம், தீர்வு காணமுடியாத கருத்து வேறுபாடுகளால் தூண்டப்பட்டவை. பத்து வருடங்களுக்கு முன்பாக விவாகரத்து வேண்டாம் என்று நான் கூரிய அறிவுரையை ஏற்காத தம்பதிகள்,

அந்த விவாகரத்து சென்ற வாரம் நடந்ததைப் போல என்னிடம் இன்றும் அந்த பிரிவைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள். விவாகரத்து ஒரு நல்ல தீர்வு இல்லை என்று ஏற்றுக்கொள்ளும் அவர்கள், கடந்தகாலத்தில் தீர்வு கண்டிருக்க வேண்டிய மற்றும் தற்போதும் இருந்துக்கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு ஒரு தற்காலிக தீர்வை மட்டுமே அது வழங்கியது என்றும் கூறுகின்றனர். விவகாரத்து மற்றும் மறுமணத்தை பற்றி அறிந்தவர்களுக்கும் அதை அனுபவித்தவர்களுக்கும், அது ஒரு வகை பிரச்சனைகளுக்கு பதிலாக இன்னொரு வகை பிரச்சனைகளை ஏற்றுக்கொள்வதற்கு சமம் என்பது தெரியும். விவகாரத்து செய்தவர்கள் தங்களது முந்தைய வாழ்க்கைத்துணையை போன்ற பண்புகள், மனநிலை, தவறுகள், தோல்விகள் மற்றும் தோற்றங்களுடன் இருப்பவர்களை மறுமணம் செய்துக்கொள்வதை நாங்கள் கவனித்து இருக்கிறோம். ஒருவர் எத்தனை புத்திசாலியாக இருந்தாலும், அவர் தனது பிறவி *கர்மவினைகளில்* இருந்து தப்பி ஓட முடியாது. விவாகரத்து ஒரு தீர்வாக இருப்பதில்லை. பிரிந்து வாழ்வது விவகாரத்தை காட்டிலும் சிறந்தது என்றாலும், அதுவும் ஒரு தீர்வாக இருப்பதில்லை. இரண்டும் புதிய பிரச்சனைகளுக்கு தொடக்கமாக விளங்குகிறது.

புதன்கிழமை

பாடம் 171

மறைமுகமான

விவாகரத்து

இன்றும் இந்து சமயத்தில் திருமணத்திற்கு உயர்ந்த மதிப்பு அளிக்கப்படுகிறது. அதனால் வாழ்க்கை என்பது ஒரு ஆன்மீக பயணமாக இருந்து, அந்த பயணத்தை பூர்த்தி செய்ய தவறுவது ஒரு பலவீனமாக கருதப்படுவதால், விவாகரத்து என்பது தோல்வியின் அறிகுறியாக விளங்குகிறது. இது ஒரு வகையில் இந்த பிறவியில் ஒருவரது சொந்த *கர்மவினை* மற்றும் *தர்மத்திற்கு* எதிராக இழைக்கும் குற்றம் என்றே குறிப்பிடலாம். அவ்வாறு செய்வது "நான் எதற்காக இங்கே வந்தேனோ அதை என்னால் செய்ய முடியாது," என்று சொல்வதற்கு சமம் ஆகும். விவாகரத்து மூலம் சமூக அந்தஸ்து மற்றும் சமுதாய மரியாதையை இழக்க நேரிடுகிறது. விவாகரத்து செய்வதன் மூலம், ஒருவர் ஒரு புனிதமான ஒப்பந்தத்தை அவமதிக்கிறார். அந்த அவமதிப்பு சமூகம் முழுவதையும் வலுவிழக்கச் செய்கிறது. ¶இன்று பரவலாக விவாகரத்து தென்பட ஆரம்பித்து விட்டது. புதுமையான விவாகரத்து இந்து சமயத்தின் அங்கமாக மாறி வருவதை, நான் பல வருடங்களாக கவனித்து வருகிறேன். அது குடும்பப் பெரியவர்கள், பெற்றோர்கள் மற்றும் சொந்தங்களின் மனதை

புண்படுத்தாமல், விவாகரத்தால் சமூகத்தில் ஏற்படும் அவமானத்தை தவிர்ப்பதற்கு ஒரு சாமர்த்தியமான வழியாக இருக்கிறது. இந்து சமயத்தின் புதிய விவாகரத்து முறை, பின்வரும் வழியில் சாமர்த்தியமாக செயல்படுத்தப்படுகிறது. கணவன் மிகப்பெரிய மன அழுத்தத்திற்கு ஆளாகிறான். லௌகீக எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்காக, அவன் எதிர்கொள்ளும் மன அழுத்தம் மனித இயல்புகளை கடந்ததாக இருக்கிறது. அவன் சூட்சுமமாக புண்பட்ட மனதுடன் சோர்வாக, கவலையுடன் வீட்டிற்கு திரும்புகிறான். வீட்டில் சூழ்நிலை சரியாக இல்லை என்றால், அவன் தன் மனைவி மற்றும் குடும்பத்தை கடிந்து கொள்வான் அல்லது அவர்களை உடல்ரீதியாக துன்புறுத்தி, தனக்கு நடக்கும் ஒவ்வொரு தவறுக்கும் அவளை காரணம் கூற தொடங்குவான். இவை அனைத்தையும் தன்னால் சமாளிக்க முடியவில்லை என்பதை உணர்ந்து, தனது பலவீனத்தை எதிர்கொள்ளாமல் இருக்க இரகசியமாக விரும்புகிறான். ¶மனைவி மற்றும் குழந்தைகளிடம் இருந்து விலகி சென்றால், திருமணத்திற்கு ஒரு மிகப்பெரிய தீர்வு கிடைக்கும் என்று தனது சகாக்களிடம் இருந்து அவன் தெரிந்துகொள்கிறான். தொலை தூரத்தில் இருந்தால் தனது குடும்ப உறவு பலவீனமாக இருக்கும் என்பதையும், தனது மனசாட்சியாக மாறிவிட்ட மனைவியை தூரத்தில் இருந்தால் எதிர்கொள்ள வேண்டியதில்லை என்பதையும் அறிந்துகொண்டு, அவன் உலகின் வேறொரு மூளையில் வேலை செய்ய அறிவுறுத்தப்படுகிறான். அவளுடன் பேச முடியாது, அவளை எப்போதாவது அரிதாக சந்திக்க முடியும் மற்றும் தன்னால் தீர்வு காண முடியாத அல்லது தீர்வு காண விரும்பாத திருமண சவால்களை பெரும்பாலான சமயங்களில் தவிர்க்க முடியும் என்பதையும் அவன் அறிந்து இருக்கிறான். ஒரு முறையான விவாகரத்தால் ஏற்படும் சமுதாய அவமதிப்பு மற்றும் ஜீவனாம்சத்தின் பொருளாதார வேதனைகளை அனுபவிக்க வேண்டாம் என்பதையும் அவன் அறிந்து இருக்கிறான். ¶அவன் தனது தொழில் வாழ்க்கையை புதிதாக அமைத்துக் கொண்டு, தொலைவில் இருக்கும் ஒரு நாட்டில் கணவன் வேலை செய்ய தொடங்குகிறான். அவன் எப்போதாவது குறுகிய காலத்திற்கு வீடு திரும்புகிறான். இதனால் முறையான விவகாரத்தால் ஏற்படும் ஜீவனாம்ச செலவுகள் மற்றும் சமூக அவமதிப்பு இல்லாமல் ஒரு பிரிவை ஏற்படுத்திக் கொள்கிறான். அவன் அதிகமாக சம்பாதிப்பதால், இது சரியான வழி என்று மற்றவர்களுக்கும், பெரும்பாலும் தனக்கும் உறுதி அளித்துக் கொள்கிறான். பணம் அவன் வீட்டில் இல்லாத வருடங்களை ஈடு செய்வதில்லை, மற்றும் அதனால் குழந்தைகளுக்கு அவர்களின் குழந்தை பருவத்தை மீண்டும் தரவும் முடிவதில்லை. தந்தையின் வழிகாட்டல் இல்லாமல், குழந்தைகள் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ந்து ஒழுங்கற்ற வாழ்க்கையை வாழ்ந்து, பிற்காலத்தில் தங்கள் தந்தை தங்களுக்கு கற்றுத்தந்த அலட்சியத்தை தொடர்கிறார்கள். முடிவில் யாருக்கும் வெற்றி கிடைப்பது இல்லை. ¶கணவனும் மனைவியும் எப்போதும் சேர்ந்தே இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத

காரணத்தால் இருவரும் பிரிந்து இருக்கும் போது, அவன் அவளை தினமும் தொடர்புகொண்டு பேசி, குழந்தைகள் மற்றும் மற்ற விஷயங்களை பற்றி விசாரிக்க வேண்டும். அவர்களின் *பிராண சக்திகள்* இணக்கம் பெறுவதால், அவர்களின் குழந்தைகள் மூலம் ஒரு துணிச்சலான புதிய உலகம், ஒரு புதிய உலக ஒழுங்கு மற்றும் ஒரு புதிய யுகம் உருவாகும்.

வியாழக்கிழமை

பாடம் 172

யார் மீது

பழி சுமத்துவது?

இந்துயிசம் டுடே பத்திரிகை தனது பெண்கள் பக்கத்தில் விவகாரத்து பற்றி ஒரு வினாடி வினாவை நடத்தியது. அதன் தலைப்பு வாசகர் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியது. விவாகரத்து பற்றி ஒரு இளம் இந்து கேட்ட கேள்வியை இங்கே பார்ப்போம். ¶கேள்வி: என் தாய்க்கும் தந்தைக்கும் ஏற்பட்ட விவகாரத்தை நினைத்து நான் உண்மையில் ஆத்திரம் அடைகிறேன். அது எனது பதினாறாவது வயதில் ஏழு வருடங்கள் முன்பாக நடந்தது. ஆனால் ஒரு மகிழ்ச்சிகரமான வீட்டில் தாயும் தந்தையும் ஒன்று சேர்ந்து இல்லாத ஏக்கத்தை நான் தொடர்ந்து அனுபவித்து வருகிறேன். நான் இந்த ஆத்திரத்தை எப்படி சமாளிப்பது என்று சொல்லுங்கள் குருதேவா? ¶பதில்: குழந்தையின் வயது ஆறு அல்லது பதினாறு அல்லது முப்பத்தி ஒன்று என்று எதுவாக இருந்தாலும், தனது தாய் மற்றும் தந்தையின் பிரிவு மற்றும் விவாகரத்தை சமாளிப்பது எளிதாக இருப்பதில்லை. உள்ளத்தில் வெறுமை உணர்வு உருவாகி, மீண்டும் பெற முடியாத ஒன்றை இழந்தது போன்று தோன்றும். பழி சுமத்தும் உணர்வு மற்றும் எண்ணங்கள் வளர்ச்சி பெறுகின்றன. அவை வருடங்கள் செல்ல செல்ல, குறைவது இல்லை. ஆனால் அதை பின்வரும் முறையில் சிந்தித்து பாருங்கள். உங்கள் திருமணம் உட்பட எல்லா திருமணங்களிலும், பிரச்சனைகளை எதிர்கொள்ளாமல் பிரிந்து இருத்தல் மற்றும் இறுதியில் விவாகரத்து செய்வது என்பதை தவிர்ப்பதற்கு, இளம் தம்பதி அல்லது வயதில் முதிர்ந்த தம்பதி தங்கள் பிரச்சனைகளை சரி செய்வதற்கு, அன்புள்ளம் கொண்ட வலுவான ஆதரவுக் குழுக்கள் முன்வந்து விருப்பத்துடன் உதவி செய்ய வேண்டும். பொதுவாக ஒரு திருமணத்தின் மூலம் குழந்தைகள் பிறந்தவுடன், பிரிந்து வாழ்வது மட்டுமே நடக்கிறது, விவாகரத்து என்பது நடப்பதில்லை. முதல் குழந்தையின் தொப்புள் கொடி அறுக்கப்படும் போது, ஒவ்வொரு திருமணமும் *ஆகாச* பதிவுகளில் யாராலும் மாற்றமுடியாத முறையில் செதுக்கப்படுகிறது. அதன் பிறகு, அதிக அளவு வேதனை மற்றும் கண்ணுக்குத் தெரியாத *கர்மவினை* எதிர்விளைவுகள்

இல்லாமல் பிரிந்து வாழ்வதற்கு வாய்ப்பில்லை.¶குழந்தைகள் இந்த நிலைக்கு யார் மீது பழி சுமத்துவது? அது யாருக்கு உண்மையில் சொந்தமோ அவர்கள் மீது சுமத்துங்கள். தாய்மார்கள், பாட்டிகள், தாத்தாக்கள், அத்தைகள், மாமன்மார்கள், நெருங்கிய உறவினர்கள், அடுத்த வீட்டில் வசிப்பவர்கள், சக ஊழியர்கள் மற்றும் குடும்ப நண்பர்கள் என்று அவர்களுக்கு ஆதரவாக இருந்த எல்லோர் மீதும் சுமத்துங்கள். தீர்வு காண்பதற்கு உதவியாக இல்லாமல் திருமணம் முறிவதற்கு காரணமாக இருந்துள்ள கோயில் சமூகத்தின் உறுப்பினர்கள், திருமண ஆலோசகர், மனநல மருத்துவர், மனோதத்துவ நிபுணர், சிகை அலங்கார நிபுணர், உடற்பயிற்சி கூடத்தில் இருக்கும் பயிற்சியாளர் மற்றும் வழக்கறிஞர் என்று சமூகத்தில் இருக்கும் எல்லோரும் வீடு இரண்டாக பிரியும் வேதனையில் பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் மீது பழி சுமத்துங்கள். உங்கள் பெற்றோர் மீது பழி சுமத்த வேண்டாம். ¶ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி எல்லோரது நலனின் மீது அக்கறை செலுத்தும் ஒரு பெரிய குடும்பம், தங்களது சமூகம் அல்லது சங்கத்தில் இருக்கும் அங்கத்தினர் மத்தியில் விவாகரத்து எண்ணிக்கை குறைவு என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் அன்புள்ளம் கொண்ட ஆன்மாக்கள் நிறைந்த ஒரு சமயக் குழு மற்றும் அதைப்போன்ற மற்ற குழுக்கள், கணவன் மற்றும் மனைவிக்கு இடையே பதட்டம் அதிகரிப்பதை தொடக்க நிலையிலேயே காண வேண்டும் மற்றும் அவர்களால் காணவும் முடியும். உங்கள் தாய் மற்றும் தந்தை மீது பழி சுமத்த வேண்டாம். பழி சுமத்த வேண்டும் என்றால், உங்கள் பெற்றோர்கள் மத்தியில் இருந்த பதட்டத்தை குறைக்க, நல்ல ஆன்மாக்களாக இருந்தாலும், போதிய கவனம் இல்லாமல் உங்கள் குடும்பத்தை தவிக்க வைத்த உற்றார் உறவினர் மீது பழி சுமத்துங்கள். ¶உண்மையில் திருமணத்திற்கு ஆதரவாக இருந்த குழு தனது கடமையை செய்ய தவறிவிட்டது. நீங்கள் அந்த தவறை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அது உங்களை பிரச்சினையின் ஆழத்திற்கு அழைத்து சென்று விடும். தீர்வு காண்பதில் அங்கமாக இருங்கள். பிரச்சனை நீடிக்க முயற்சி செய்யவேண்டாம். அவர்களுக்கு குற்ற உணர்வை வழங்க வேண்டாம். உங்கள் மனம் அமைதி பெறுவதற்கு, அந்த பழி, புண்பட்ட உணர்வுகள், வேதனைகள் மற்றும் ஆத்திரத்தை சொந்தங்கள், சமுதாயம் மற்றும் நாடு முக்கியத்துவம் அளிக்கும் பண்புகள் மீது செலுத்துங்கள். நீங்கள் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு துணையாக இருங்கள். தந்தையைப் பற்றி தாயிடம் சொல்வதற்கும், தாயைப் பற்றி தந்தையிடம் சொல்வதற்கும் சில அன்பான வார்த்தைகளை சொல்வதற்கு தயாராக வைத்து இருங்கள். ஒருவர் பற்றி இன்னொருவரிடம் விமர்சனம் செய்து குடும்பத்தில் பிளவை மேலும் அதிகப்படுத்தும் தூண்டுதலை தவிர்த்திடுங்கள். அவர்கள் மீது பழி சுமத்த முடியாது, சமூகத்தில் மீது பழி சுமத்த வேண்டும். ¶நீங்கள் ஒரு தரப்பிற்கு சாதகமாக செயல்பட்டால், நீங்கள் பின்னர் எதிர்கொள்வதற்கு தீய *கர்மவினைகளை* உருவாக்கிக் கொள்கிறீர்கள். அதனால் இருவரையும் சமமாக

கருதுங்கள். சட்டவிரோதமான சக்திகளுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டாம், அவர்களை ஏமாற்ற வேண்டாம் அல்லது அவர்களிடம் இருந்து எதையும் மறைக்க வேண்டாம். ஆனால் நீங்கள் இவற்றில் ஈடுபட்டால் நீங்கள் உங்களை சூட்சுமமான முறையில் வீட்டை விட்டு வெளியேற்றி கொள்கிறீர்கள். நீங்கள் இந்த அறிவுரையை பின்பற்றினால், அவர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை புரிந்துக்கொண்டு சமரசம் அடைவதில் நீங்கள் உதவியாக இருக்க வாய்ப்புள்ளது. காலம் மற்றும் இயற்கையின் சக்திகள் உங்களுக்கு உதவியாக இருந்து, உங்கள் பெற்றோர்கள் மறுமணம் செய்துகொண்டு உங்கள் குடும்பம் மீண்டும் சேர வாய்ப்புள்ளது. பிரச்சனை நீடித்து இருக்க துணை புரியாமல், தீர்வு காண்பதில் துணையாக இருங்கள். பிரச்சனையை சரி செய்ய முயற்சி செய்யுங்கள். அவர்களின் குழந்தையாக இருக்கும் நீங்கள், இந்த முயற்சியால் அவர்களுக்கு ஒரு முக்கிய நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கக்கூடும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 173

முக்கியமான தருணங்களில்

ஆதரவு அளித்தல்

வாழ்க்கையின் சுமைகள் காரணமாக பதட்டங்கள் உருவாகத் தொடங்கும் போது நண்பர்கள், சொந்தங்கள் மற்றும் சமூகம் உதவ முன் வராமல் விலகிச் சென்றால், உங்கள் தாயும் தந்தையும் உண்மையில் நிராதரவாக இருப்பார்கள். ஒரு திருமண வாழ்க்கையில் குறிப்பிட்ட சில சிக்கல்களை எதிர்பார்க்க முடியும். முதல் குழந்தை பிறந்ததும், குடும்பத்தில் எல்லாம் மாறுகிறது. இது அவர்கள் வாழ்வின் முதல் சிக்கலாக விளங்குகிறது. அவள் தனது முதல் குழந்தையை பெற்றெடுத்து, ஒரு தாயானதும் அவன் தனது காதலியை இழக்கிறான். அவன் தந்தையானதும், அவளும் தன் காதலனை இழக்கிறாள். அவள் கருவுற்றிருக்கும் போது, அவர்களின் பொறுப்புக்கள் முதல் முறையாக மாறத் தொடங்குகின்றன. அவள் முன்பு அவனை மட்டுமே நினைத்துக்கொண்டு இருந்த காலம் மாறி, தற்போது அவள் அவனைப் பற்றி நினைக்காமல், தங்களுக்கு பிறக்கவிருக்கும் குழந்தையை பற்றிய சிந்தனையில் இருக்கும் போது, அவனுக்கு தான் புறக்கணிக்கப்படுவதாக தோன்றும் போது, மற்ற பெண்களைப் பற்றி தனக்கு தோன்றும் எண்ணங்களின் மீது அவன் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ¶ஒரு புதிய வீட்டிற்கு செல்லும் போது இன்னொரு இக்கட்டான காலம் தோன்றுகிறது. புதிய வேலை மற்றும் புதிய நண்பர்களுடன் இருப்பதால் தந்தைக்கு அந்த காலகட்டம் பழகிவிடுகிறது, ஆனால் தனது சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றத்துடன் தன்னை முழுமையாக பொருத்திக்

கொள்வது, அவளுக்கு கடினமாக இருக்கிறது. இந்த சமயத்தில் அவள் தீவிர வேதனையை அனுபவிக்கிறாளா? ஆமாம், அவள் நிச்சயமாக தீவிர வேதனையை அனுபவிக்கிறாள். ¶நடுத்தர வயதில் நாற்பது வயதிற்கு அருகில், தாய் மாதவிடாய் நிறுத்தத்தை அனுபவிப்பது இன்னொரு பெரிய சிக்கலை உருவாக்குகிறது. எந்த ஆணும் ஏற்றுக்கொள்வது இல்லை என்றாலும், தந்தையும் அந்த தருணத்தில் ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை அடைகிறார். அந்த சமயத்தில், இவரை திருமணம் செய்துகொள்ளாமல் இன்னொருவரை திருமணம் செய்து இருந்தால் நன்றாக இருக்கும் என்று இருவரும் சிந்திக்க துவங்குகின்றனர். அதிலும் குறிப்பாக, இறுதியாக கேளிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் தந்தைக்கு இருக்கக்கூடும். தங்கள் இளமை பருவத்திற்கு திரும்ப வேண்டும் என்ற ஆசை இருவருக்கும் மேலோங்கி இருக்கும். இது இன்னொரு இக்கட்டான சூழ்நிலையாக இருக்கும். தந்தை முதலில் நாற்பது வயதை அடைந்து, பிறகு தாய் நாற்பது வயதை அடைந்தால், அவர்கள் ஒரு இக்கட்டான சூழ்நிலையை அனுபவிப்பதற்கு பதிலாக அதை இரண்டு முறை அனுபவிப்பார்கள். அவர்களின் பெண் பருவ வயதை அடையும் போது, குடும்பம் இன்னொரு இக்கட்டான சூழ்நிலையை அனுபவிக்கிறது. அவள் அடுத்ததாக என்ன செய்ய இருக்கிறாள் என்பது அவர்களுக்கு தெரிவது இல்லை. அவர்கள் பெரும்பாலும் அவளுடைய விசித்திரமான மற்றும் அவதூறான நடவடிக்கைக்கு தங்கள் மீதே பழி சுமத்திக் கொள்கிறார்கள். இது அந்த குடும்பம் எதிர்கொள்ளும் இன்னொரு இக்கட்டான சூழ்நிலையாக இருக்கும். ¶இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாட்டி, தாத்தா, வயதில் மூத்த அத்தைகள் மற்றும் மாமன்மார்கள், அக்கம்பக்கத்து வீட்டில் இருப்பவர்கள், வீட்டிற்கு பொருட்களை விநியோகம் செய்பவரும் குடும்பத்திற்கு உதவியாக இருக்கலாம். இந்த சூழ்நிலையில் கோயில் சமுதாயம், தேவாலய சங்கம், புரோகிதர், சமயப்பணி செய்பவர்கள், நண்பர்கள், ரோட்டரி கிளப் அங்கத்தினர்கள், அலுவலகத்தில் இருக்கும் சகாக்கள் உதவி செய்யவில்லை என்றால், அவர்களுக்கு அந்த குடும்ப நலனில் அக்கறை இல்லை என்பதை தெரிந்துகொள்ளலாம். அதனால் உங்கள் பெற்றோர்களை குற்றம் சொல்லாமல், அந்த ஆதரவு குழுக்கள் மீது குற்றம் சுமத்துவது சரியாக இருக்கும். உங்கள் பெற்றோர்கள் நிராதரவாக இருக்கிறார்கள். நாம் நோயால் அவதிப்படுப்பவரைப் பார்த்து, அந்த நோய் ஏற்படுவதற்கு அவர் தான் காரணம் என்று பழிப்போமா? கண்டிப்பாக இல்லை. நாம் தீவிரமான கவலையில் இருப்பவரிடம், அந்த கவலைக்கு அவர் காரணம் என்று பழி சுமத்துவோமா? கண்டிப்பாக இல்லை. நாம் நிலைமையை புரிந்துக்கொண்டு உதவி செய்ய முயற்சி செய்வோம். உதவி வழங்கினாலும் வழங்காவிட்டாலும், நாம் உதவி செய்யாதவர்களை பழிப்போம். ¶அதனால் அன்புள்ளம் கொண்ட குழந்தையே, உன் மன அமைதிக்கு உன் தாய் மற்றும் தந்தை மீது அன்பு செலுத்த வேண்டும். அவர்கள் இருவரையும் உன் மனதில் ஒன்றாக கருத வேண்டும். அவர்களை

உன் மனதில் தனித்து பார்க்க வேண்டாம். நீ ஒரு சிறந்த திருமண ஆலோசகராக இருக்க வேண்டும். இந்த சமயத்தில் உன்னால் மட்டுமே குடும்பத்தில் இணைக்கும் சக்தியாக விளங்க முடியும். இன்று பிரச்சனைக்கு தீர்வு காண விவாகரத்தை அறிவுறுத்தும் கலாச்சாரமில்லாத மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளை கடந்து செல்லவேண்டும். பெற்றோரில் ஒருவருக்கு மட்டும் ஆதரவாக இருக்க வேண்டாம் என்று நான் வருத்தத்தில் இருக்கும் இளைஞர்களிடம் கூறுவேன்.

சனிக்கிழமை

பாடம் 174

அச்சுறுத்தும்

முதல் அடி

இந்து தர்மம் குடும்ப பிரச்சனைகளுக்கு விவகாரத்தை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், வீட்டில் நடக்கும் வன்முறை அந்த தெய்வீக சங்கமக்திற்கு ஒரு வேதனை தரும் விதிவிலக்காக விளங்குகிறது. நாங்கள் சமீபத்தில் மனைவியை அடித்தல், சாதாரண சந்திப்பில் தவறாக நடந்துகொள்ளுதல் மற்றும் குழந்தைகளுக்கு பாலியல் தொல்லைகள் தருவதைப் பற்றியும் *டைம், நியூஸ்வீக், இந்துயிசம் டுடே* மற்றும் தொலைக்காட்சியில் பல விவாதங்களை கவனித்தோம். வீட்டிற்குள் இரகசியமாக பேசப்பட்ட விஷயங்கள் இன்று வெட்டவெளியில் எல்லோர் முன்பாக பேசப்படுகிறது. அவை இன்று இரகசியமாக இருப்பதில்லை. ¶கணவன்மார்கள் மற்றும் மனைவிமார்கள், அவர்களின் நண்பர்கள், குழந்தைகள், நெருக்கமான சொந்தங்கள் மற்றும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் என்று எல்லோரும் அறிந்து இருந்ததால், வீட்டில் நடக்கும் வன்முறை பற்றி பலர் அறிந்து இருந்ததால், அது எப்போதும் ஒரு இரகசியமாக இருந்தது இல்லை. அவர்கள் அறிந்து இருந்தாலும், அதைப் பற்றி எதுவும்பேசியது இல்லை. அக்கம்பக்கத்து வீட்டில் ஒரு பெரிய விருந்து நடைப்பெற்று, அதன் மூலம் அதிக கூச்சல் ஏற்பட்டால், அப்போது புகார் சொல்வதற்கு யாரும் தயங்குவது இல்லை. ஆனால் அதே வீட்டில் இருக்கும் கணவன் தன் மனைவியை துன்புறுத்தி, அவள் அலறிக்கொண்டு அழத்தொடங்கினால், அப்போது யாரும் புகார் சொல்வதில்லை. யாரும் அந்த வீட்டு கதவை தட்டி விசாரிப்பதும் இல்லை. யாரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைப்பதும் இல்லை. ஒரு பொது இடத்தில் குத்துச் சண்டை நடைபெறுவதற்கு அனுமதிப்பது இல்லை, ஆனால் வீட்டில் அத்தகைய ஒரு கொடிய வன்முறை நடக்கும் போது அமைதியாக இருந்தால், அதற்கு நாம் மறைமுகமாக அனுமதி

வழங்குகிறோம். ¶நீங்கள் வன்முறைக்கு இடம் கொடுக்காமல் *அகிம்சைக்கு* துணை புரிபவராக இருந்தால், ஒரு ஆண் தன் மனைவியை அடிப்பதை பார்த்தால் அல்லது பெற்றோர் தங்கள் குழந்தையை அடிப்பதை பார்த்தால், உடனே காவல்துறையை அழையுங்கள்! தவறு செய்பவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டாம். அலட்சியமாக இருந்து தவறுக்கு துணைப்புரிய வேண்டாம். செயலற்று இருப்பதால் எந்த *கர்மவினையும்* சேராது என்று நினைக்க வேண்டாம். இன்று அடிவாங்கும் மனைவியின் அலறல் மற்றும் அழுகையை தவிர்க்க தொலைக்காட்சியை அலற வைப்பது முறையான நடவடிக்கையாக கருதப்படுவது இல்லை. ¶சமீபத்தில் கலிபோர்னியாவில் நடைப்பெற்ற ஓ.ஜே. சிம்ப்சன் வழக்கு, வன்முறைக்கு ஆளாகும் பெண்களுக்காக மக்கள் மத்தியில் மாபெரும் அனுதாபத்தை வெளிப்படுத்தியது. ஒரு உலகப்புகழ் பெற்ற கால்பந்து வீரரின் மூலமாக, உலகில் மிகவும் இழிவான நடவடிக்கை வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஒரு நாட்டின் மனசாட்சியை விழிக்க வைக்க, முன் வந்த ஒரு தணிக்கை செய்யப்படாத ஊடகத்தின் முயற்சியை உண்மையில் பாராட்டியாக வேண்டும். ஊடகத்தில் தோன்றும் செய்திகள் மற்றும் கதைகள், சோகமான சம்பவங்களை சித்தரித்து ஒழுக்கம் தொடர்பான படிப்பினைகளை கொண்டு வர முயலும் இந்திய புராணங்கள் அல்லது கிரேக்க நாட்டு மேடை நாடகங்கள், அல்லது மிகை உணர்ச்சி நாடகங்களில் படிப்பினைகளை மறைத்து வைத்திருக்கும் இத்தாலிய ஓபராக்களைப் போன்று இருப்பதாக கூறலாம். மொத்தத்தில், உலகம் அதிக அளவு மாற்றத்தை அடைந்துள்ளது. ¶மனைவி மீது நடைபெறும் வன்முறை மற்றும் அதன் காரணங்களைப் பற்றி பேசுவது கடினமாக இருந்தாலும், மக்கள் அதைப்பற்றி வெளிப்படையாக எந்த அவமானமும் இல்லாமல் பேசுகிறார்கள். நாம் இந்த வன்முறை பற்றி தத்ரூபமான கிராஃபிக் படங்களையும், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சியில் பாதிக்கப்பட்ட மனைவிகள் பேசுவதையும் பார்க்கிறோம். இதெல்லாம் என்றாவது முடிவுக்கு வருமா என்பதே ஒரு பெரிய கேள்வியாக இருக்கிறது. இவை முடிவுக்கு வர வாய்ப்பில்லை என்றாலும், தந்தையும் தாயும் பார்த்துக்கொண்டு இருக்கும்போது அவர்களின் மகன் தன் மனைவியை அடித்து அவள் முடியை பிடித்து அறைக்கு இழுத்து செல்லும் விளையாட்டை அனுமதிக்கும் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டு வரலாம். ¶தனது மனைவியை அச்சுறுத்த, அவளை கட்டுப்படுத்த விரும்பும் ஒரு கணவன் கர்மவினை அடிப்படையில் அதற்கு முரணான செயலை செய்கிறார். அவனுடைய முரட்டுகுணம் அவனுக்கு எதிராக செயல்பட்டு, அவனுக்கு பாதகமாக அமைகிறது. அவளுடைய அன்பு மற்றும் விசுவாசம் குறைகிறது, மற்றும் அவன் மீது அவளுக்கு இருக்கும் சூட்சுமமான தளைகள் பிரிகின்றன. முதல் முறையாக அடியை பெற்ற பிறகு, அவனுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல் அவள் சுதந்திரமாக இருப்பதால், ஆன்மீக ரீதியாக அவளுடைய கை ஓங்குகிறது. ஆமாம், இவை அனைத்தும் அந்த முதல் அடியில் இருந்து

தொடங்குகிறது. ¶அவதூறான அடைமொழிகளை பயன்படுத்துதல், தவறான எண்ணத்துடன் சமிக்கை செய்தல், நிந்தித்தல் மற்றும் வாதாடுதல் போன்ற சொற்போரினால் எந்த பிரச்சனையும் இல்லை. அது திருமண வாழ்வில் அங்கம் வகிக்கின்றன மற்றும் அது அவர்களின் ஜோதிட பொருத்தம் சிறப்பாக இல்லாத போது தீவிரம் அடையக்கூடும். ஆனால் முதல் அடி சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றிவிடுகிறது! அந்த முதல் அடி மிகவும் கொடிய *குக்கர்மவினையை* கொண்டு வந்து, தரம் தாழ்த்தி இழிவை ஏற்படுத்துகிறது, மற்றும் அவளை அவனது எதிரியாக மாற்றி விடுகிறது. இதை யாரும் ஏற்றுக்கொள்வது இல்லை. அதை குழந்தைகள் ஏற்றுக்கொள்வது இல்லை. அதை மனைவிமார்கள் எப்போதும் மன்னிப்பது இல்லை. தங்களுக்கு பிரியமான மகன்களை காப்பாற்றும் நோக்கத்துடன், அந்த செயலை குடும்பங்கள் பொறுத்துக் கொள்ளக்கூடாது. இது வீட்டிற்குள் நடந்ததால், அவர்கள் நமக்கு நன்றாக தெரியும் என்பதால் அந்த செயலின் தீவிரம் குறைந்து விடுவதில்லை. இதைப் பற்றி அறிந்தவர்கள், *தர்மம்* மற்றும் *அகிம்சைக்கு* ஆதரவாக இல்லாத அனைவரும் இந்த குற்றத்திற்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஒரு திருடன் அல்லது பெண்களை கற்பழிப்பவன் போல, அவர்கள் அனைவரும் ஒரு ஸ்திரமான சமூகத்திற்கு எதிரிகளாக விளங்குகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 175

இதை நிறுத்த

என்ன செய்வது?

“வீட்டில் வன்முறையை தடுப்பதற்கு நான் என்ன செய்வது?" என்று நீங்கள் கேட்கலாம். எனது சமுதாயத்தில் மனைவியை சித்ரவதை செய்யும் மூன்று குடும்பங்களுக்கு நான் கண்டனம் தெரிவித்ததைப் போல நீங்களும் அமைதியாக இருக்காமல் கண்டனம் தெரிவிக்கலாம். *சாதனா* செய்யும் அன்பர்கள் தங்கள் நிதானத்தை இழந்தால், மற்றவர்களின் நிலைமையை கற்பனை செய்து பாருங்கள். சமூக நிர்பந்தம், குடும்பத்தில் இருக்கும் பெரியவர்கள், காவல்துறை, ஆலோசகர்கள் மற்றும் மறுவாழ்வு மையங்கள் என்று இதற்கு உதவி செய்ய பல வழிகள் உள்ளன. இது பழங்காலத்தில் மக்கள் அடிமைத்தனத்திற்கு எதிராக முதன்முதலில் குரல் கொடுத்ததற்கு சமம் ஆகும். இது தவறு என்பதை எல்லோரும் மனப்பூர்வமாக அறிந்து இருந்தார்கள், ஆனால் யாரும் அது "தேவை" என்ற பொதுவான நம்பிக்கைக்கு புறம்பாக இருக்க விரும்பவில்லை. இறுதியாக மனித இனம் அதைப்பற்றிய சரியான விழிப்புணர்வை பெற்று, அதை முடிவுக்கு கொண்டு வந்தது. அது அதன் பின்னர்

ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதைப்போலவே, நாம் இப்போது வாழ்க்கைத்துணையின் சித்ரவதை மற்றும் குழந்தைகள் சித்ரவதை பற்றி சரியான விழிப்புணர்வை பெற்று வருகிறோம். ¶ஒரு பெண்ணை அடிப்பதற்கும் அவளை கற்பழிப்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? உண்மையில் இரண்டிலும் தீவிரமான தீய செயல் நடைபெறுகிறது. அவள் விருப்பத்திற்கு எதிராக அவன் தனது உடலை இயக்குவதால், அவளுடைய உடல் துன்புறுத்தப்படுகிறது. உளவியல் ரீதியான குற்றமும் அதற்கு சமமான பாவமும் நடைபெறுகிறது. முதல் முறையாக மனைவியை அடித்ததன் தீய விளைவாக கணவனுக்கு *குக்கர்மாக்கள்* உருவாகின்றன. அவனது செயலால் ஏற்பட்ட பின்னடைவை தணிக்க *பிராயச்சித்தம்* செய்ய வேண்டும். இல்லையென்றால் அது அடுத்த பிறவியில் தீவிர பாதிப்பை ஏற்படுத்தும். ¶முதல் முறையாக அவளை தள்ளியது, மணிக்கட்டில் ஏற்படுத்திய புண், தயவு இல்லாமல் கிள்ளியது, அடித்தது அல்லது உதட்டில் இருந்து இரத்தம் வழிந்தது ஆகிய அனைத்தும் "இது நீ இருக்கவேண்டிய இடமில்லை" என்பதை அவளுடைய நரம்பியல் அமைப்பிற்கு என்பதை கூறின. அவள் மீது அச்சம் ஆதிக்கம் செலுத்துகிறது, மற்றும் ஒரு கூடாக இருக்கும் குடும்பம் பிரிய ஆரம்பிக்கிறது. அவளுடைய எதிர்காலம் ஆபத்துக்கு உள்ளாகிறது மற்றும் அவள் தனது *சக்தியை* அவனிடமிருந்து உடனடியாக விலக்கிக்கொள்கிறாள். அவன் அவளுக்கு முதலாளியாக இருந்தால், அவள் தன்னை கட்டுப்படுத்த முடியாது என்ற எண்ணத்துடன் அவன் அவளை அடித்து இருக்கலாம். ஆனால் அவன் உண்மையில், வாழ்நாள் முழுவதும் தனது மனசாட்சிக்கு வேதனை அளித்து, இந்த பிறவி அல்லது தனது அடுத்த பிறவியில் அவள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு சமமான துன்பங்களை தனக்கு வழங்கிக்கொள்வதற்கு, அவளை இன்னொரு முதலாளியாக நியமித்து விடுகிறான். ¶சமூகத்தை உறுதியுடன் நிர்வாகம் செய்வது, தங்கள் சமூகத்தில் இருக்கும் இளைஞர்கள் தங்கள் மனைவியை முதல் முறையாக அடித்து தங்களை மாசுப்படுத்திக்கொள்ளாமல் இருப்பதற்கு கோரிக்கை விடுப்பது, இந்து சமயத்தில் இருக்கும் பெரியோர்களின் பிறவி *தர்மம்* என்பதில் சந்தேகம் இல்லை. வன்முறையை மையமாகக் கொண்ட ஒரு குடும்ப சூழல் எனது கவனத்திற்கு வரும் போது, அந்த மனைவி உடனடியாக ஒரு பாதுகாப்பான இடத்திற்கு விரைய வேண்டும் என்பதே எனது அறிவுரையாக இருக்கும். ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனால் குற்றவாளியின் மனம் உண்மையில் மாற்றம் பெற்று, சொந்தங்கள் மற்றும் சமூகங்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் மனப்பூர்வமான மன்னிப்பு, கழிவிரக்கம் மற்றும் சூழ்நிலைகளை சரிசெய்து மாற்றத்தை கொண்டுவருவதற்கு உண்மையான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்றால், அங்கே குறுக்கிட்டு அவர்கள் பிரிந்து வாழ அறிவுறுத்துவது எனது பொறுப்பாகிறது என்பதை நான் அறிவேன். குற்றவாளியிடம் ஒரு வலுவான மற்றும் நேர்மையான மாற்றம் ஏற்பட்டு, அந்த

தம்பதி ஒரு புதிய திருமண ஒப்பந்தத்தை எழுதிக்கொள்ளவில்லை என்றால், அந்த திருமணம் விவகாரத்தில் தான் முடியும். இன்றைய இந்து கலாச்சாரத்தில் விவாகரத்திற்கு ஒற்றை காரணமாக விளங்கும் உடல்ரீதியான தொடர் துன்புறுத்தல்கள், திருமணத்தில் செய்துகொள்ளும் வாழ்நாள் ஒப்பந்தத்திற்கு ஒரு வருந்தத்தக்க விதிவிலக்காக விளங்குகிறது. இதை தாயின் உயிரை காப்பாற்ற செய்யும் கருக்கலைப்புடன் ஒப்பிடலாம். ஒரு குழந்தை தனது தாயை கொலை செய்வதால் *குக்கர்மாக்கள்* உருவாகி நிலைமை மேலும் மோசமாவதை தவிர்ப்பதற்கு, இதை *தார்மீக* அடிப்படையில் அனுமதிக்கலாம். இந்த இரண்டு சூழலிலும் ஒரு தாயின் உயிர் காப்பாற்றப்படுகிறது, மற்றும் இந்த விதிவிலக்குகளில் இருக்கும் விவேகத்தை சம்பந்தப்பட்ட எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

பால போஷணம்

बालपोषणम्



குழந்தைகள் வளர்ப்பு

எந்த பிரம்மத்தால் தேவர்கள் தனித்தனியாக பரஸ்பர வெறுப்பு இல்லாமல் இருக்கிறார்களோ, அந்த பிரம்மத்தை உங்கள் குடும்பத்திற்கு நாங்கள் வழங்குகிறோம். ஒரு சித்தம் மற்றும் ஒருங்கிணைந்த முயற்சியுடன் சேர்ந்த உழைப்பபோடு, நீங்கள் பிரியாமல் இருங்கள். நீங்கள் உங்களுக்குள் அன்பாக பேசிக்கொண்டு இங்கே வாருங்கள். நாங்கள் உங்களை ஒன்று சேர்த்து ஒரு மனம் உள்ளவர்களாய் ஆக்குகிறோம்.

அதர்வண வேதம் 3.30.4-5. வேஎ



தொலைக்காட்சி மற்றும் கணினிகள் இருக்கும் இக்காலத்து இந்து வீட்டில் மூன்று தலைமுறைகளும் ஒன்றாக வாழ்கின்றன. அவர்கள் தங்கள் வாழ்க்கையை நெருக்கமாக பகிர்ந்து வாழ்வதற்கு, அவர்களால் நேரத்தை ஒதுக்க முடிகிறது. தாய் தன் மகளின் தலைமுடியை பின்னி, அதை பூக்களால் அலங்கரித்துக்கொண்டு இருக்கிறாள். தாத்தா தன் பேரனின் வீட்டுப்பாடத்தில் உதவி செய்கிறார். பாட்டி குழந்தையுடன் விளையாடிக்கொண்டு இருக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 176

பொறுமையாக இருந்து

அக்கறை செலுத்துதல்

"உங்களால் அவர்களை வெற்றிகொள்ள முடியவில்லை என்றால், நீங்கள் அவர்களுடன் ஒன்று சேருங்கள்," என்று ஆங்கிலத்தில் பொருள்படும் ஒரு பழமொழி உள்ளது. அது குறிப்பிட்ட சில முறைகளில் பார்க்கும் போது, பொருத்தமானதாகவும் தோன்றுகிறது. இன்றைய இளம் வாலிபர்களால், ஆச்சாரமாக வளர்க்கப்பட்ட இந்து பெற்றோர்களின் பாரம்பரிய குடும்ப முறைகளை பின்பற்ற முடியாது என்று நாம் நினைக்கிறோம். அவர்கள் சில காலத்திற்கு தங்கள் பெற்றோர்களுக்கு பயந்து அவர்களுக்கு கீழ்படிந்து நடக்கக்கூடும். இந்த அணுகுமுறையில் என்ன பிரச்சனை என்றால், அந்த குழந்தைகள் இறுதியில் தங்கள் பெற்றோர்களை அவமதிக்கத் தொடங்குகிறார்கள் மற்றும் அவர்கள் தங்களுக்கு சாதகமாக சூழ்நிலை வரும் போது வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். ஒரு நல்ல நேர்மறையான ஒழுக்கத்தை வழங்குவதற்கு காலம் காலமாக பலன் அளித்துக்கொண்டிருக்கும் மாற்று வழிகள் உள்ளன என்பதை பெரும்பாலான பெற்றோர்கள் உணராது கண்டிப்புடன் நடந்துக் கொள்கிறார்கள். குழந்தைகள் வளர்ந்து பக்குவம் அடையும் போது, அவர்களுக்கு மெதுவாக ஒத்துழைப்பு வழங்கத் தொடங்குவது நடைமுறையில் அதிக பயனுள்ள பயிற்சியாக இருக்கும். குழந்தைகளின் கலப்பு கலாச்சார வாழ்முறை மற்றும் அவர்கள் தங்கள் நண்பர்களுடன் நட்புறவை பராமரிப்பது போன்ற இயல்பான ஈடுபாடுகளில் பெற்றோர்கள் அதிக ஆர்வம் காட்டினால், அந்த குழந்தைகளிடம் எளிதில் சம்மதம் பெற முடியும் மற்றும் அவர்கள் மிகவும் வெளிப்படையாக இருப்பார்கள். இன்றைய இளம் வாலிபரின் நடத்தையைப் பற்றி புலம்புவது அல்லது அதைப் பற்றி விமர்சிப்பதால் எந்த பயனும் இல்லை. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மிகவும் கூச்ச சுபாவம் அல்லது எளிதில் உணர்ச்சிவசப்படும் குழந்தையிடம் சரிசெய்ய முடியாத காயத்தை ஏற்படுத்திவிடும். ¶இன்றைய உலகில் தங்கள் குழந்தைகளிடம் நெருக்கமாக இருந்துக்கொண்டு, அவர்கள் வளர்ச்சி அடைவதற்கும் பக்குவமடைவதற்கும் போதிய சுதந்திரம் அளிக்கவேண்டும் என்று நான் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தி வருகிறேன். இன்றைய உலகம் மிகவும்

மோசமானது என்று சொல்லி விடமுடியாது. ஆனால் குழந்தைகள் உலகில் எவ்வாறு வாழவேண்டும், எதில் கவனமாக இருக்கவேண்டும், யாரை நம்பவேண்டும், யாரை நண்பராக்கிக் கொள்ளவேண்டும் மற்றும் யாரை திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் மற்றும் எவ்வாறு வியாபாரம், சமூக வாழ்க்கை, கல்வி, வேலையில் உயர்நிலை மற்றும் சமூக வாழ்க்கையை தொடர்ந்து செயல்படுத்தி தங்களது குடும்பத்தின் வளர்ச்சி மீது கவனம் செலுத்த வேண்டும் என்று குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும். அதனால் தொடர்புகொள்ளும் முறைகளை செயல்பாட்டில் வைத்து இருங்கள். ¶இன்றைய உலகம் தன்னுடன் சில சவால்கள், சபலங்கள் மற்றும் சில உறுதியான குறைகளை கொண்டுள்ளது என்பது உண்மை தான், ஆனால் அது இன்றைய உலகம் மற்றும் நாளைய உலகமாக இருப்பதால், நம்மால் அந்த உண்மையை அலட்சியம் செய்ய முடியாது. நம்மால் நேற்றைய உலகை மீண்டும் உருவாக்க முடியாது அல்லது கடந்த காலம் திரும்ப வேண்டும் என்று விரும்புவதும் பொருத்தமாக இருக்காது. நாளை வரவிருக்கும் உலகம் சிறப்பானதாக அமைய, நாம் தேவையான தகுதிகளை பெற்று, நமது குழந்தைகளுக்கு வெளியுலக சக்திகளை இயக்க கற்றுத்தர வேண்டும். அதனால் உங்கள் குழந்தைகள் முறையான தீர்மானங்களை எடுப்பதற்கு, நீங்கள் விவேகத்துடன் செயல்பட்டு மிகவும் ஆழமாக இருக்கும் உங்கள் இந்து கலாச்சாரம் மற்றும் விவேகம் பற்றி நீங்கள் தெரிந்துகொண்டதை உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள். அவர்கள் தானாக முடிவு எடுத்துக்கொள்வார்கள் என்பதால், அதை அவர்கள் எவ்வாறு சரியாக செய்யவேண்டும் என்று தொடக்கத்திலேயே கற்றுத் தருவது சிறந்ததாக இருக்கும். இதை அவர்களின் பெற்றோர்கள் இல்லாமல் வேறு யாரால் சிறப்பாக கற்றுத் தரமுடியும்? காலங்கள் மாறிவிட்டன மற்றும் சூழ்நிலைகள் முன்பு போல் இல்லை என்பது உண்மை தான், ஆனால் முந்தைய தலைமுறையை பின்பற்றி இன்றும் உறுதியாக இருக்கும் சமயம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த பழக்கங்களை, சான்றோர்கள் வழங்கும் ஆணைகளை கண்மூடித்தனமாக பின்பற்றாமல் தங்களுக்கென்று தனியாக சிந்திக்க உதவும் கல்வி அறிவைப் பெற்ற இன்றைய குழந்தைகளுக்கு, மெதுவாகவும் உறுதியாகவும் வழங்கவேண்டும். அவர்களுடன் தொடர்பு கொள்வதை நிறுத்த வேண்டாம். அது சமூகம் அல்லது குடும்பத்திற்கும் உதவிகரமாக இருக்காது. அல்லது அது பெற்றோர் *தர்மத்தையும்* பூர்த்தி செய்யாது. ¶எல்லா வயதைச் சார்ந்த பெரியவர்களும் தங்கள் பதின்ம வயது குழந்தைகளைப் பற்றிய கவலையுடன் இருக்கிறார்கள். அதனால் உற்சாகத்துடன் இருந்து முயற்சியை கைவிடாமல் இருங்கள். அவர்கள் தான் உலகின் எதிர்காலமாக விளங்குகிறார்கள். சிலர் தாங்கள் செய்த தவறில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயத்தில் அதிக கூச்ச சுபாவம், மனதில் சிந்தனை கலந்த அன்பு மற்றும் மற்றவர்கள் சொல்வதை கேட்பதற்கு தேவையான பணிவுடன் இருப்பவர்கள், தங்கள் பெற்றோர்களின் தவறுகள் மற்றும் வெற்றிகளில்

இருந்து கற்றுக் கொள்ளலாம். அதனால் உங்கள் விவேகத்தை அவர்களுக்கு தெரிவியுங்கள். அவர்கள் கேட்பது அல்லது கேட்காமல் இருப்பது தற்போதைக்கு முக்கியமில்லை. நீங்கள் கோபம் அல்லது ஆத்திரம் இல்லாமல் மன உறுதியுடன் வழங்கும் தகவல், அவர்களின் அடிமனதில் ஆழமாக பதிந்து ஒரு நேர்மறை *சம்ஸ்காரத்தை* உருவாக்குகிறது. இதன் மூலம் சிறந்த பலன்களை பெறுவதற்கு, இரவு உறங்குவதற்கு முன்பாக சொல்வது சிறப்பாக இருக்கும். அந்த நேரத்தில் திறந்த மனதுடன் இருக்கும் அவர்களிடம் எதிர்க்கும் பண்பு குறைவாக இருக்கும். அதுவே உறங்குவதற்கு முன்பு இறுதியான சிந்தனையாக இருக்கும். காலை நேரத்தில் அதிக கோபத்துடன் உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டாம். அது நீடித்து இருக்கும் பகை உணர்வுக்கு விதைகளை விதைத்து, குடும்பத்தில் ஒரு பிரிவை ஏற்படுத்துகிறது. இரவு உறங்குவதற்கு முன்பு உங்கள் தகவலை வழங்குவதற்கு சரியான தருணமாக இருக்கும். மேலும் உறங்குவதற்கு முன்பு முரண்பாடுகளை எல்லாம் தீர்வு காணவேண்டும். இல்லையென்றால் அவை இந்த பிறவி அல்லது அடுத்த பிறவியில் அனுபவிக்க தேவையற்ற *வாசனாக்களாக* மாறிவிடும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 177

சக்தியை பயன்படுத்துவதில்

பயிற்சி

தாய் தன் குழந்தைகளுக்கு உணவு பரிமாறும் போது அறிவுரைகளை வழங்குவது இன்னொரு சிறந்த முறையாக இருக்கும். தங்களுக்கு பிடித்தமான நபர் மூலம் பரிமாறப்பட்டு, தங்களுக்கு பிடித்தமான உணவை சாப்பிடும் போது, அவர்கள் பழக்கங்களில் செய்யவேண்டிய பெரிய அல்லது சிரிய மாற்றங்களை இடது காதுக்கு அருகில் இல்லாமல் வலது காதுக்கு அருகில் சென்று, மெதுவாகவும் அன்பாகவும் அறிவுரை வழங்குகிறாள். மனதிற்கு பிடித்தமான சூழ்நிலைகளை உருவாக்கியதால் அந்த பரிந்துரைகள் மனதில் நன்றாக பதிந்து, உணவு செரிக்கும் போது அடிமனதின் மூலம் கிரகிக்கப்படுகின்றன. நான் சுமார் ஐம்பது ஆண்டுகள் முன்பாக, இந்துக்களின் இந்த புத்திசாலித்தனம் பற்றி தெரிந்துகொண்டேன். இந்த யுத்தியை பயன்படுத்தி, கணவன் தனக்கு பிடித்தமான உணவை சாப்பிடும் போது, அவன் யாருக்கு வாக்கு அளிக்கவேண்டும் என்பதை அவனிடம் காதோடு காதாக மனைவி பேசி, தேர்தலின் போக்கை மாற்றி இருப்பதை எல்லோரும் அறிவார்கள். தனது கணவனுக்கும் குழந்தைகளுக்கும் உணவு பரிமாறி, அவர்கள் பசியாற சாப்பிட்ட பிறகு அந்த மனைவி சாப்பிடவேண்டும் என்று உணவு அருந்தும் பழக்கம் பற்றி

குறிப்பிடும் எண்:99 நந்திநாத சூத்திரத்திற்கு, பெண்கள் பயன்படுத்தும் அந்த உத்தி பின்னணியாக அமைந்துள்ளது. ஆமாம், இது தேர்தல் பிரச்சாரம் போல தோன்றலாம். அந்த புத்திசாலி மனைவி தனது அரண்மனையின் இராணியாக விளங்குகிறாள். தனது கணவன் தர்மத்தின் பாதையில் நிலைத்து இருக்க அல்லது அவனை அந்த பாதையில் இருந்து விலக்கி வைக்க, ஒரு பெண்ணிடம் எண்பத்தி நான்கு வழிமுறைகள் இருக்கிறது என்று *ரிஷிகள்* நமக்கு உபதேசிக்கிறார்கள். சிலர் இது வஞ்சகம் என்கிறார்கள், மற்றும் சிலர் இதை பெண்மையின் *சித்திகள்* என்று குறிப்பிடுகிறார்கள். ¶உயிர் விசைகளாக இருக்கும் பாலியல் ஆற்றல்களை சரியாக மற்றும் தவறாக பயன்படுத்துவது பற்றி ஒரு வலுவான கல்வியை வழங்கி, குழந்தைகள் தங்கள் வாலிப வயதை அடையும் போது அவற்றை இவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்று கற்றுத் தருவது பெற்றோர்களின் கடமை ஆகும். இந்த வழியாகத் தான் அவர்களால் தங்களது உள்ளுணர்வு/அறிவுணர்வு இயல்பு வழங்கும் சவால்களை எதிர்கொள்ள தேவையான அறிவை பெறமுடியும். ¶பெற்றோர்கள் சிறு வயதில் இருந்தே தங்கள் குழந்தைகளுக்கு இரண்டு முக்கிய விஷயங்களாக இருக்கும் *பிராண சக்திகள்* மற்றும் *சக்கரங்களைப்* பற்றி சுதந்திரமாக கற்றுத் தரலாம். உங்கள் குழந்தைகளுக்கு *பிராண சக்திகள்* மற்றும் *சக்கரங்கள்* என்றால் என்ன என்று தெளிவாக தெரிந்ததும், அவர்கள் பருவ வயதை அடைந்ததும் அந்த பாலியல் சக்திகளை உயர்நிலை *சக்கரங்களுக்கு* உயர்த்துவது எளிதாக இருக்கும். ¶நாற்பது வயது வரை உங்கள் அன்னமய கோசம் என்கிற தூல உடலில் *பிராணன்* வளர்ச்சி பெறுகிறது என்பதை பெற்றோர்களாகிய உங்களுக்கு தெரியும். அதன் பிறகு எழுபது வயது வரை, *பிராணன்* தனது ஆற்றலை உங்கள் *விஞ்ஞானமய கோசத்தில்* வளர்க்கிறது. அதன் பிறகு பிராணன் தொடர்ந்து ஆன்மாவின் ஆன்மீக உடலில் வளர்ச்சி பெறுகிறது. ஒருவரது உயிர் சக்தி மற்றும் அவரது உடலில் இருக்கும் சக்தியின் முழுமையாக இருக்கும் *பிராணனை* கட்டுப்படுத்த வேண்டும் என்று உங்கள் குழந்தைகளுக்கு அவ்வப்போது விளக்கிக் கொண்டிருங்கள். இந்த சக்தி நாற்பது வயது வரையிலான காலத்திற்கு கல்வி, உடற்பயிற்சி மற்றும் கடுமையான உழைப்பு மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. நாற்பது முதல் எழுபது வரை, இந்த கட்டுப்பாட்டை படிப்பது, தங்களை காட்டிலும் வயதில் இளையவர்கள் மீது அக்கறை செலுத்துவது, சமூக சேவை மற்றும் கூடுதல் கல்வி அறிவு மூலம் பெறமுடிகிறது. எழுபது வயதிற்கு பிறகு இது *சாதனா, தபஸ்* மற்றும் ஆழ்ந்த தியானம் மூலம் பெறப்படுகிறது. ¶உங்கள் குழந்தைகளுக்கு *சக்கரங்களை* பற்றி விளக்கும் போது, இந்த சக்தி மையங்கள் அவர்களுக்குள் இருக்கும் அழகான மலர்கள் போன்றவை என்றும், அவற்றிற்கு அவர்களின் *பிராண* சக்திகளை வழங்கவேண்டும் என்றும் குறிப்பிடுங்கள். நன்றாக ஆழமாக சுவாசித்து பாலியல் சக்திகளை கீழ்நிலை *சக்கரங்களில்* இருந்து உயர்நிலை *சக்கரங்களுக்கு* உயர்த்தி, மலர்களுக்கு நீர் ஊற்றுவது போல, அவற்றிற்கு

உணவு அளிக்கும் முறைப் பற்றி அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள். இந்த *சக்கரங்கள்* உணர்வுகளின் அறைகளாகவும் இருக்கின்றன என்றும், இந்த *சக்கரங்களில்* நாம் செலுத்தும் சக்திகள் மூலம் நாம் மிகவும் எச்சரிக்கையாகவும் புத்திசாலியாகவும் செயல்படும் திறமையை பெறுகிறோம் என்றும் அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள். ¶உங்கள் குழந்தைகள் புரிந்துகொள்ள ஆரம்பித்ததும், நீங்கள் அவர்களது சக்திகளை பற்றி கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கலாம். அவர்கள் பருவமடைந்ததும், அவர்களின் சக்திகள் மனம் போன போக்கில் இயங்காமல், பாலியல் இயல்பை கையாள்வதற்கு தேவையான கருவிகளை நீங்கள் அவர்களுக்கு வழங்குகிறீர்கள். இந்த முறையில் நீங்கள் சரியான தருணத்தில் அவர்களுடன் பாலுறவு பற்றி அவர்களிடம் பேசுவதற்கு தேவையான பாதைகளை உருவாக்கிக் கொள்கிறீர்கள். இதைப்பற்றி பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வழிகாட்டல் எதுவும் வழங்குவது இல்லை. இதனால் அவர்கள் தங்கள் உயிரின் இயல்பான செயல்பாடு பற்றி மற்ற குழந்தைகள், அல்லது இணையதளம் அல்லது ஒரு அறையில் தனியாக இருந்துக்கொண்டு கற்கவேண்டி இருக்கும். அதனால் ஒரு புத்திசாலி பெற்றோராக இருந்து குழந்தைகளுக்கு தொடக்கத்தில் இருந்தே கற்றுக் கொடுங்கள். *பிராணன்* மற்றும் *சக்கரங்கள்* என்று இரண்டு அடிப்படை விஷயங்களைப் பற்றி மட்டும் பேசவேண்டும். இதை நீங்கள் எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதை உங்கள் இயலுணர்வு வழிகாட்டும்.

புதன்கிழமை

பாடம் 178

உறுதியாக மற்றும்

அன்பாக இருங்கள்

சிறிய மாற்றம் மற்றும் ஒழுக்கம் பற்றி பேசி விளக்கம் அளிப்பதை மற்றும் தாங்கள் புத்திசாலி மனிதர்களாக மதிக்கப்படுவதை, குழந்தைகள் நல்ல முறையில் அங்கீகரிப்பார்கள். இன்று பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தவிர்க்கும் கண்ணோட்டத்துடன், அவர்களுடன் விவாதிக்க அஞ்சுகிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்கு பொம்மைகள் மற்றும் இனிப்புக்களை இலஞ்சமாக வழங்கி, அவர்களின் ஒவ்வொரு ஆசைக்கும் தலைவணங்கி, அவர்களை இயல்பாக வீட்டின் முதலாளியாக்கி விடுகிறார்கள். உண்மையில் இன்றைய குழந்தைகள் தகுந்த காரணங்களுடன் தாங்கள் எதை செய்யவேண்டும் என்று சொல்லப்படுவதை விரும்புகிறார்கள். ¶கிழக்கத்திய பாணியில் கல்வி அறிவைப்பெற்ற குழந்தைக்கு "நான் சொல்வதை செய்" அணுகுமுறை சரியாக இருக்காது. "நான் சொல்வதை கேள், ஏனென்றால் இதைத்தான் நீ

செய்யவேண்டும் என்று நமது குடும்பம் விரும்புகிறது, ஏனென்றால் நாங்கள் உன்னை விரும்புகிறோம் மற்றும் நீ இந்த குடும்பத்தில் என்றென்றும் இருக்கவேண்டும் என்று நினைக்கிறோம், மற்றும் அதற்கான காரணங்கள்..." என்று பேசுவது நல்ல பலனை வழங்கும். இத்தகைய அணுகுமுறையை ஒரு பள்ளிக்கு செல்ல விரும்பாத குழந்தையும் ஏற்றுக்கொள்ளும். ஏனென்றால் அந்த குழந்தைக்கு உணவு வேண்டும், இருக்க இடம் வேண்டும், ஆடைகள் வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் கல்வி அறிவை பெறுவதற்கு பண உதவி தேவைப்படுகிறது. பிடிவாதம் குறைவான குழந்தைகள் தங்கள் குடும்பத்தின் மீது அன்பு செலுத்துவதாலும், தங்களை வற்புறுத்தும் போது எவ்வாறு இயலுனுணர்வுடன் பொருந்திக் கொள்ளவேண்டும் என்பதை அறிந்து இருப்பதாலும், அவர்களுக்கு தெளிவான வழிகாட்டல்கள், விளக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் வழங்கப்பட்டு இருப்பதாலும், அவர்கள் கீழ்படிவார்கள். ஆமாம், வீட்டில் அதிக ஆத்திரத்தை வெளிப்படுத்தாமல், தங்கள் வீட்டு பெரியவர்களிடம் இனிமையாக நடந்துகொண்டு, பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளும் போது தொலைக்காட்சியை அணைத்துவிடுவது மற்றும் பெற்றோர்கள் தங்களுக்கு செய்த கடமைகளுக்காக அவர்களுக்கு நன்றி சொல்லும் குழந்தைகளும் மேற்கத்திய உலகில் இருக்கிறார்கள். ¶வீட்டில் ஆலோசகர்களாக இருப்பது குழந்தைகளா பெற்றோர்களா? பொம்மைகளை இலஞ்சமாக வாங்கி வளர்ந்தவர்கள் அல்லது பயத்த்துடன் வளர்ந்தவர்கள், எதிர்காலத்தில் மற்றவர்களுக்கு இலஞ்சம் வழங்கி, தங்களது கோபம் மற்றும் ஒழுங்கற்ற செய்முறைகள் மூலம் அச்சத்தை ஏற்படுத்தி மற்றவர்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவார்கள். நீங்கள் குழப்பமாக பதட்டத்துடன் இருந்தால், நீங்கள் சொல்வதை உங்கள் குழந்தைகள் கேட்கமாட்டார்கள். இது கேட்பதற்கு சங்கடமாக இருந்தாலும், இது நடைமுறை உண்மையாக இருக்கிறது. உங்கள் குழந்தைகளை மேற்கத்திய முறைகளுக்குள் முன்யோசனை இல்லாமல் அனுப்பவேண்டும் என்று அவசியம் இல்லை. தெருக்களில் இருக்கும் பரிச்சயமில்லாத நபர்கள், பணியிடத்தில் இருக்கும் சகாக்கள் அல்லது தங்களை காட்டிலும் அதிக குழப்பத்தில் இருக்கும் நபர்களிடம் இருந்து வாழ்க்கையில் தங்கள் சொந்த பண்புகளை தெரிந்துக்கொள்ள, அவர்களை தனியாக விடவேண்டிய அவசியம் இல்லை மற்றும் அது பயன் தருவதாகவும் இருக்காது. அவர்களுக்கு சனாதன தர்மத்தின் எல்லா கோட்பாடுகள், மனித நேயம் மற்றும் தெய்வீகத் தன்மையை பற்றி அது வழங்கியுள்ள நுணுக்கமான கருத்துக்களை பகிர்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உங்கள் குழந்தைகளுடன் உங்களால் அதிக நேரம் இருக்க முடிந்தால், அதை விட வாழ்க்கையில் முக்கியமானது வேறு என்ன இருக்க முடியும். இன்று பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் இருக்கும் நேரத்தை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் விரிவாக பேசுவதற்கும் நேரம் இருப்பதில்லை. "வணக்கம்" மற்றும் "நாளை பார்க்கலாம்"

மற்றும் "இந்த முறை கணிதத்தில் ஏன் மதிப்பெண் குறைவாக வந்துள்ளது?" போன்ற உடையாடல்கள் மட்டுமே நடக்கின்றன. நீங்கள் குழந்தைகளுடன் அதிகமான நேரத்தை ஒதுக்கி, அதிக வழிகாட்டல்கள் மற்றும் அதிக அறிவுரைகளை வழங்கவேண்டும். அவர்கள் உங்களிடம் ஒரு பகுதி நேரத்தை அல்லாமல், முழுமையான நேரத்தை எதிர்பார்க்கிறார்கள். அதை தருவதற்கு நீங்கள் தயங்க வேண்டாம். அவர்களுக்கு தொடக்கத்தில் இருந்தே வழக்கமான மதம் மற்றும் கலாச்சார பண்புகளை கற்றுக் கொடுங்கள். அவர்கள் மற்ற குழந்தைகளில் இருந்து மாறுபட்டு இருப்பார்கள் என்ற கவலை வேண்டாம். அவர்கள் முன்பே மாறுபட்டு தான் இருக்கிறார்கள். இந்துக்களாக இருக்கும் அவர்கள், இந்தியாவை மூலமாக கொண்ட மறைஞானம் மற்றும் உண்மைப்பொருளின் வாரிசுகளாக இருக்கிறார்கள். ¶எங்கும் பரவும் பண்புள்ள ஒரு உள நோய் பூமிக்கு வந்துள்ளது. அது மேற்கத்திய நாடுகளில் தொடங்கி தற்போது உலகெங்கும் பரவி வருகிறது. "நாம் எல்லோரும் இப்போது வாகனத்தில் அமரலாமா?" "நீ உன் சட்டையை அணிந்துக் கொள்கிறாயா?" "தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு உறங்க செல்கிறாயா?" என்று ஒரு கேள்வியை கேட்டுக்கொண்டு வழிகாட்டல் அல்லது அறிவுறுத்தலை வழங்குவது, இன்றைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் பயன்படுத்தும் நவீன முறையாக விளங்குகிறது. இத்தகைய சொற்றொடர்கள் இன்றைய உலகில் பரவலாக குடும்பங்கள் மற்றும் வீடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. என்ன செய்யவேண்டும் என்ற அறிவுறுத்தலுடன் "நீ இதை செய்கிறாயா?" என்று குழந்தைகளிடம் கேட்கும் போது, அவர்கள் பிரதிகூலமான சூழலை சந்திக்கிறார்கள். அந்த வேண்டுகோளுக்கு இணங்குவதற்கு முன்பாக, அவர்கள் சரி செய்கிறேன் அல்லது முடியாது என்ற ஒரு முடிவை எடுக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள். அதற்கு சிலசமயங்களில் பதில் "முடியாது" என்பதாக இருக்கும். எந்த முடிவையும் எடுக்காத போது, குழந்தைகள் விருப்பமில்லாமல் இணங்குகிறார்கள். குழந்தைகள் வளர்ப்பில் புதிய முறையாக இருக்கும் இத்தகைய விருப்பத் தேர்வுகள், இன்று ஐந்து வயதினர் அல்லது மேலும் சிரியவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவை பெற்றோர்களுக்கு பிரதிகூலமான சூழ்நிலைகளை ஏற்படுத்துகின்றன. அவர்கள் தங்கள் குழந்தையின் மனநிலை, சிந்தனை மற்றும் விருப்பத்திற்கு கடன்பட்டு இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.

வியாழக்கிழமை

பாடம் 179

"நீ இதை செய்கிறாயா" அணுகுமுறை

குடும்ப வாழ்க்கையில் நடக்கும் எல்லா நிகழ்வுகளிலும், அவர்கள் தங்கள் விருப்பங்களை தெரிவிக்க உண்மையில் வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதை "நீ இதை செய்கிறாயா" அணுகுமுறையில் வளர்க்கப்பட்ட மிகவும் சிறிய குழந்தையும் புரிந்துகொள்வதற்கு நீண்டகாலம் தேவைப்படுவது இல்லை. இதில் முரட்டுத்தனமாக இருக்கும் சில குழந்தைகள் வீட்டை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, பெற்றோர்களை இரக்கமின்றி இழிவான சொற்களால் ஆணையிட ஆரம்பித்து விடுகின்றன. அவர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படும் போது, அவர்கள் பெரும்பாலும் எதிர்மறையான பதிலை வழங்குகிறார்கள். "நீ தொலைக்காட்சியை நிறுத்துகிறாயா?" என்று ஒரு குழந்தையிடம் கேட்கும் போது, "நான் பார்த்துக்கொண்டு இருக்கும் நிகழ்ச்சி முடியவில்லை. அதனால் என்னால் தொலைகாட்சியை நிறுத்த முடியாது," என்று அந்த குழந்தை பதில் அளிக்கக்கூடும். நீங்கள் "நீ வாகனத்தில் அமர்கிறாயா?" என்று கேட்கும் போது, "இல்லை நான் வரவில்லை. நீங்கள் எல்லோரும் செல்லுங்கள். நான் வீட்டிலேயே இருக்கிறேன்," என்ற பதில் வரக்கூடும். நீங்கள் அவனுக்கு ஒரு வாய்ப்பை வழங்கி, அவன் எடுத்த முடிவை மாற்ற நிர்பந்திக்கும் போது, உங்கள் நடவடிக்கை நியாயமற்றதாக கருதப்படும். இது நடந்ததால் நீங்கள் இழக்கும் மரியாதையை, மீண்டும் பெறுவது கடினமாகிறது. ¶குழந்தை கீழ்படிந்து நடக்கவில்லையா? இதற்கு ஆம் மற்றும் இல்லை என்று இரண்டு பதில்களையும் தரலாம். எதிர்பார்த்த பதில்களுக்கு புறம்பான பதில் வந்ததால், ஆமாம் என்று சொல்லலாம், கேள்வியே அவர்கள் முடிவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கிறது மற்றும் அதில் மறுப்பது ஒரு பதிலாக இருப்பதால், இல்லை என்றும் சொல்லலாம். பெரியவர்கள் இத்தகைய கேள்விகளை குழந்தையிடம் கேட்கும் போது, குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் தனித்து செயல்படுகிறார் கள் மற்றும் அவர் தனது வழியில் தனித்து செல்ல சுதந்திரம் இருக்கிறது என்ற உணர்வை குழந்தை பெறுகிறது. இதை எப்படி செய்வது என்று பெற்றோர்கள் தாங்கள் வழங்கும் அறிவுறுத்தல்களுக்கு பயன்படுத்தும் சொற்றொடர்கள் மூலம், குழந்தைக்கு கற்றுக் கொடுக்கிறார்கள். தங்கள் குழந்தைகள் வீட்டிற்கு வெளியே சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று சில பெற்றோர்கள் விரும்புகிறார்கள். வேறு சிலர் அவ்வாறு விரும்புவது இல்லை. ¶சார்ந்து இருப்பதை கற்றுத் தருவது அல்லது சுதந்திரமாக இருப்பதைக் கற்றுத் தருவது என்று கற்றுத் தருவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒரு குழந்தை வாலிப வயதை அடைந்து, தனித்து இயங்கும் அளவிற்கு நல்ல கல்வி அறிவை பெற்றதும் சுதந்திரமாக இருக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு முன்பாக கற்றுக்கொடுக்க கூடாது. அந்த வயதில் அவன் *தர்மத்தைப்* பற்றி புரிந்துக் கொள்வதாலும், அவன் தனது பெற்றோர்களை சார்ந்து இருந்து அவர்கள் பல வருடங்களாக வழங்கிய அறிவுறுத்தல், அன்பு மற்றும் விவேகம் காரணமாக மேன்மை அடைந்து இருப்பதாலும், அவன் பொறுப்புடன் செயல்பட்டு தன்

பெற்றோர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை முறையாக செய்வான். அவர்கள் இளம் வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறி, தாங்கள் செய்யும் தவறுகள் மூலம் கற்றுக்கொள்ள அனுமதிக்காதீர்கள். இந்த வழியில் கற்பது சோகமாகவும், பெரும்பாலும் வேதனை அளிப்பதாகவும் இருக்கும். அவர்கள் இந்த நிலையை எதிர்கொள்ள அனுமதிக்க வேண்டாம். உங்களால் முடியும் வரை, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள். அவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டாம். "நாம் எல்லோரும் வாகனத்தில் உட்காரலாம். நீ வந்து உட்கார்." "இனி தொலைக்காட்சியை நிறுத்தி விடலாம். எல்லோரும் உறங்கும் நேரம் வந்துவிட்டது." இதைப்போன்று நீங்கள் உங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொள்ளுங்கள். அவர்கள் அந்த மாற்றத்தை கவனிக்கமாட்டார்கள் மற்றும் நீங்கள் வழங்கும் பாதுகாப்பை நேர்மறையான முறையில் முழுமையாக புரிந்துகொள்வார்கள். "நமது குடும்பம் ஒரு குழுவாக இருக்கிறது. நாம் ஒன்றாக இயங்குகிறோம். நாம் நமக்குள் விசுவாசமாக நடந்துகொண்டு, நமக்குள் எந்த இரகசியமும் இல்லாமல் நடப்பது அனைத்தையும் எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும். நாம் எல்லோரும் எப்போதும் ஒன்றாக இருந்து ஒருவரையொருவர் கவனித்துக் கொள்வோம்," என்று தொடர்ந்து உறுதி அளித்துக்கொண்டு இருங்கள். இதை வாரத்திற்கு குறைந்தபட்சம் மூன்று முறை என்று வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சொல்லவேண்டும். ¶இளைஞர்களை வீட்டுடன் எந்த சக்தி பிணைத்து வைக்கிறது? அன்பு தான் இளைஞர்களை வீட்டுடன் பிணைத்து வைக்கிறது. நீங்கள் உங்கள் குழந்தைகள் மீது முழுமையான அன்பு செலுத்தினால், அவர்கள் உங்களை விட்டு பிரியமாட்டார்கள். நீங்கள் முயற்சி செய்தாலும், உங்களால் அவர்களை வெளியேற்ற முடியாது. நீங்கள் அன்பினால் உருவாக்கப்பட்ட இரும்புப் பட்டைகளால் பிணைக்கப்பட்டு இருக்கிறீர்கள். பாசம் நிறைந்த இந்த உறவுக்குள், நீங்கள் அவர்களுக்கு வழிகாட்டி, அவர்களை கண்காணித்து, பிரச்சனையில் சிக்காமல் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்வதற்கு உதவி செய்யலாம். தினமும் மூன்று முறை கட்டி அணைத்தால் பிரச்சனைகள் விலகிச் சென்றுவிடும். நீங்கள் இறைவன், மகாதேவர்கள் மற்றும் *குரு* மீது செலுத்தும் அன்பாக இருக்கும் இந்து *பக்தியை* வெளிப்படையாக அனுட்டானம் செய்யும் போது, உங்கள் மகன் அல்லது மகளின் விருப்பத்துடன் நெருக்கத்தை பெறுவதற்கு, உங்கள் இதயத்தில் அவர்களுக்கு தேவையான அன்பு இல்லாமல் இருக்குமா? நீங்கள் உங்கள் குழந்தைகள் மீது அன்பு செலுத்தவில்லை என்றால், தங்கள் மீது அன்பு செலுத்த அவர்கள் வேறு ஒருவரை தேடிக்கொள்வார்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 180

நிதி

சுதந்திரம்

சுருக்கமாக சொன்னால், குழந்தைகள் போதுமான கல்வி அறிவு பெற்று நல்ல வேலையில் சேர்வதற்காக வீட்டை விட்டு வெளியேறும் வரை, இந்து பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்காக முடிவு எடுக்கவும் வேண்டும் அவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்குவதை தவிர்க்கவும் வேண்டும். நாம் முன்பு பார்த்த பிரச்சனையை போல, குழந்தைகளுக்கு கட்டுப்பாடு இல்லாமல் பணத்தை வழங்குவதாலும் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. இளம் வயதில் இருப்பவர்களுக்கு தொடக்கத்திலேயே நிதி சுதந்திரம் வழங்குவதன் மூலம், பெற்றோர்கள் வீட்டின் பாதுகாப்பு சூழலை உடைத்துவிடுவதால், அது உலகம் வழங்கும் தீய வழிகளை ஆய்வு செய்வதற்கு அனுமதி வழங்குகிறது. சிறியதாக தொடங்கும் இந்த சலுகை மூலம், அவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வீண் செலவு செய்யமுடிகிறது. தங்கள் பெற்றோர்களிடம் வலுவான கோரிக்கைகள் வைப்பதன் மூலமாக, தங்களுக்கு மேலும் கிடைக்கும் என்பதை அவர்கள் விரைவில் கற்றுக் கொள்கிறார்கள். அதன் பிறகு பெற்றோர்கள் நல்ல நடத்தைக்கு பரிசுகளை வழங்குகின்றனர். இத்தகைய பரிசுகளை நாங்கள் பரிந்துரைப்பது இல்லை. பணத்தை செலவு செய்வது பற்றி இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் போது, அவர்கள் கையாளும் பணத்தையும் திரும்பப் பெறும் பணத்தையும் பெற்றோர்கள் கவனமாக கணக்கு பார்க்க வேண்டும். நேர்மையாக மற்றும் துல்லியமாக கணக்கு பார்ப்பதால், பணத்தை வழங்கும் பெற்றோர்களுடன் இந்த செய்முறை ஒற்றுமையை வளர்கிறது. ¶ஒரு சிறிய சலுகை வழங்கும் போது, அது பல முறை ஒரு கோடைக்காலத்தில் வேலை செய்தல் அல்லது பள்ளி நேரத்திற்கு பிறகு வேலை செய்தல், அதிக சுதந்திரம் மற்றும் வீடு மற்றும் குடும்பத்துடன் அதிக நேரம் விலகி இருப்பதற்கு வழி வகுப்பதை நான் பார்த்து இருக்கிறேன். குழந்தைகள் விளையாடும், ஓய்வெடுக்கும், பள்ளி செல்லும் அல்லது பாடத்திட்டம் சாராத நல்ல புத்தகங்கள் படிக்க வேண்டிய நேரத்தில், கோடைக்காலத்தில் வேலைக்கு செல்வதால் குழந்தைகள் சோர்வடைகிறார்கள். அதிகாலையில் செய்தித்தாள்களை விநியோகம் செய்தல் அல்லது பள்ளிக்கு பிறகு வேலை செய்யும் போது, கல்வி கற்கும் நேரத்தை குறைக்கிறது. இளைஞர்களுக்கு உயர்நிலை கல்வி முடியும் வரை, அவர்கள் பணத்தை கையாளவோ அல்லது சம்பாதிக்கவோ அனுமதிக்கக் கூடாது. அதன் பிறகு அவர்கள் சம்பாதிக்கும் பணம் முழுவதையும் பெற்றோர்களிடம் தந்து விடவேண்டும் மற்றும் செலவுகள் அனைத்தையும் கணக்கிட்டு கண்காணிக்க வேண்டும். இதன் மூலம் அந்த இளைஞன் சிக்கனமாக செலவு செய்வதோடு, குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுபவனாகவும் இருப்பான். ¶இளைஞர்கள் தாங்கள் பிறந்த குடும்பத்தின் வேலையை செய்ய

முடியும் மற்றும் அதில் பங்குபெறவும் வேண்டும். இதற்கு ஒரு *ஜோதிஷ சாஸ்திரி*, உதவியாக இருப்பார். பெற்றோர் செய்யும் தொழிலை மகன் ஏற்றுக்கொள்வதே அவனுடைய *கர்மவினை* ஆகும். அவன் வேறொரு குடும்பத்தில் பிறக்க வாய்ப்பு இருந்தது. ஆனால் அவன் உங்களை தேர்வு செய்தான். அதனால் எந்த சமரசமும் செய்யாமல், தொழில் அல்லது வேலையைப் பற்றி முடிவு எடுக்கும் போது, குடும்பத்தில் இருக்கும் எல்லோரிடமும் சம்மதம் பெறவேண்டும் என்பதை மறக்க வேண்டாம். குழந்தைகள் தங்கள் குடும்பத் தொழிலில் பங்குபெற்று செல்வத்தை பெருக்கி, அதை குடும்பத்தில் இருக்கும் மற்றவர்கள் மற்றும் வரவிருக்கும் தலைமுறைகளுக்கு வழங்குவதே பொருத்தமாக இருக்கும். இந்த முறையை பயன்படுத்தி இந்து மதம் கடந்த 10,000 ஆண்டுகளாக சோதனை மற்றும் இன்னல்கள், முற்றுக்கை மற்றும் போர்கள், அடக்குமுறை மற்றும் அடிமைப்படுத்தும் ஆட்சிகளை உறுதியாக கடந்து வந்துள்ளது. இந்த முறையை நிறுத்துவதற்கு நாம் காரணமாக இருக்க வேண்டாம். உங்கள் எதிர்கால பாதையை எந்த திசையில் செலுத்துவது, உங்களது வளர்ச்சி முறை தொடரும் போது உங்கள் அன்பு மற்றும் பொறுமையை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பதைப் பற்றி நீங்களும், உங்கள் பெற்றோர்களும் முடிவெடுக்க வேண்டும். உங்கள் குழந்தைகளை சரியாக வளர்த்தால், நீங்கள் வாழ்க்கையின் மறு முனையில் *முக்தியை* அனுபவிக்கவிருக்கும் தருணத்தில், *கர்மவினையின்* நியாயமான விதியின் மூலம் பலன் பெறுவீர்கள். நீங்கள் குழந்தைகளை முறையாக வளர்க்கவில்லை என்றால், நீங்கள் அடுத்த பிறவியில் தர்ம நெறியை பின்பற்றாமல் ஒழுங்குமுறையின்றி இருக்கும் குடும்பத்தில் பிறந்து, உங்கள் அலட்சியத்தால் அவர்கள் அடைந்த வேதனையை அந்த பிறவியில் நீங்கள் அனுபவித்து கற்றுக் கொள்வீர்கள்.

சனிக்கிழமை

பாடம் 181

பொறுப்புடன்

கண்காணித்தல்

"சிவனை நேசிப்பவர்கள் தங்கள் குழந்தைகளின் தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையை வழிகாட்டும் முக்கிய பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். அந்த சிறுவர்கள் பாதுகாப்பாக மனத்துறவுடன் வளர்வதை உறுதி செய்ய, அவர்கள் அவர்களின் நட்புறவுகளை கண்காணிக்கிறார்கள்," என்று குழந்தைகள் கண்காணிப்பு பற்றி 149 ஆவது நந்திநாத சூத்திரத்தில் விளக்கியுள்ளேன். தனது மகளுக்கு திருமணமாகி, வாழ்க்கையில் நல்ல முறையில் குடித்தனம்

நடத்தத் தொடங்கும் வரையில், அவளை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டு இருப்பதே வாழ்நாளில் தனது முக்கியமான கடமை என்று ஒரு இந்திய பெண்மணி என்னிடம் கூறினார். "உங்களுக்கு அவள் மீது நம்பிக்கை இல்லையா?" என்று ஒருவர் கேட்டபோது, அந்த பெண்மணி "இல்லை" என்று கூறினார். ¶எங்களைப் போன்று பாரம்பரியம் தழுவிய சமூகங்களை தழுவிய சுவாமிகள் ஜோடிகளாக ஏன் வெளியே செல்கிறார்கள்? எங்களுக்கு அவர்கள் மீது நம்பிக்கை இல்லையா? நாங்கள் ஆன்மாவை நம்புகிறோம் மற்றும் நாங்கள் அவர்களை தனிப்பட்ட முறையில் நம்புகிறோம், ஆனால் அவர்களின் *தர்ம* நெறியில் தடைகளை ஏற்படுத்துவதில் ஆர்வத்துடன் இருக்கும் லௌகீக மக்களை நம்புவதில்லை. பிரச்சனைகள் ஏதும் வராமல் இருக்க நாங்கள் பழங்கால வழக்கங்களை பின்பற்றுகிறோம். ¶தங்கள் குழந்தைகளை கல்லூரிக்கு அனுப்பும் போது, அவர்களுக்கு பாதகமான சூழ்நிலைகளால் ஆபத்து வரலாம் என்று பல பெற்றோர்கள் குழப்பத்தில் தவிக்கின்றனர். உங்கள் மகன் அல்லது மகள் பல்கலைக்கழகத்தில் சேர்கிறார் என்றால், அவர்களுக்கு அருகில் இருந்து, அவர்கள் பிரச்சனைகளில் சிக்காமல் பாதுகாத்து, அவர்களுடன் சேர்ந்து உணவு அருந்தி, அவர்களின் நட்புறவுறவுகளை கண்காணிக்கும் நோக்குடன், முடிந்தவரை அந்த வளாகத்திற்கு அருகில் வீடு தேடி செல்வது சிறந்தது நான் என் சீடர்களிடம் சொல்வேன். அந்த பள்ளியில் சேர்ப்பதற்கு நீங்கள் அதிக பணத்தை செலவு செய்து இருப்பீர்கள். அதனால் நீங்கள் அங்கே இல்லை என்றால், நீங்கள் அதிக கவலையை வரவழைத்துக் கொள்வீர்கள். ¶அவனை தூரத்தில் இருக்கும் பள்ளிக்கு அனுப்புவதை தவிர்க்க முடியாது மற்றும் நீங்கள் அவனுக்கு அருகே சென்று வசிப்பது சாத்தியமில்லை என்றால், தினமும் ஒரு எளிய *பூஜை* செய்வதற்கும், உங்கள் புகைப்படத்தை ஒரு முறை பார்ப்பதற்கும், குலகுரு மற்றும் அருமையான நமது மதத்தின் மகாதேவர்களை ஒரு முறை தரிசிப்பதற்கும் நினைவுப்படுத்துங்கள். அவர்கள் கற்கவேண்டியதை கற்று முடித்து, வெளியுலகில் முன்னேற்றம் பெறுவது தான் அவர்கள் கல்லூரி செல்வதன் நோக்கம் என்பதை அவர்களுக்கு விளக்குங்கள். புதிய நண்பர்களை தேடிக்கொள்வதற்கு, மாணவி அல்லது மாணவர் சங்கங்களில் சேர்வதற்கு, இன்று உலகம் வழங்கும் சபலங்கள் மூலம் கவனத்தை சிதற விடுவதற்காக செல்லவில்லை என்பதை அவர்களுக்கு விளக்குங்கள். முகத்தில் புன்னகையுடன், யாருக்கும் சாதகமாக செயல்படாமல், யார் மீதும் அதிக அன்பு செலுத்தாமல் எல்லோரிடமும் சமமாக பழகுவதற்கு ஊக்கம் அளியுங்கள். ¶தமிழ் சமூகத்தை சேர்ந்த ஒரு புத்திசாலி பெண்மணி தனது இரு மகன்களையும் கலிபோர்னியா பல்கலைகழத்திற்கு அனுப்பி வைத்தாள். அதன் பின்னர் அவர்களுடன் நெருக்கமாக இருக்கவேண்டும் என்பதற்காக, தினமும் தான் செய்த சமையலை 400 மைல் தூரத்தில் இருந்த அவர்களின் குடியிருப்பிற்கு தனியார் விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தாள். இது ஒரு புறம் இருக்க, எங்கள் சங்கத்தில் இருந்த இன்னொரு

பழக்கத்தை பார்க்கலாம். இளம் ஜோடிகள் திருமணம் செய்துக்கொண்டு, தம்பதியாக பல்கலைகழகத்திற்கு சென்று வசிப்பார்கள். கணவன் அங்கிருந்து பல்கலைகழகம் செல்வான். அதன் பின்னர் அவர்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து முதிர்ச்சி பெறும் போது, மனைவி அவனை கண்காணிக்கும் பணியில் ஈடுபடுகிறாள். ¶பல குழந்தைகள் தங்கள் பெற்றோர் பின்பற்றிய மதத்தை புறக்கணிக்கிறார்கள், மற்றும் அவர்கள் பாதுகாப்பு அல்லது கட்டுப்பாடுகளை விரும்பாமல், பதின்ம வயதை அடைந்ததும் வீட்டை விட்டு வெளியேறி தனித்து இருக்க விரும்புகிறார்கள். மதம் சார்ந்த போதனைகள் உங்கள் வாழ்க்கையில் அங்கம் வகித்தால், அதில் இருக்கும் அருமையான உண்மைகளைப் பற்றி உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களிடம் உங்களால் எளிதில் சம்மதம் பெற முடியும். வயதில் பெரியவர் அல்லது ஒரு நம்பத்தகுந்த நண்பரின் கண்காணிப்புடன் வீட்டிற்கு வெளியே செல்வதில் இருக்கும் விவேகத்தை, உங்கள் வீட்டில் இருக்கும் இளைஞன் புரிந்துக்கொள்வான். நீங்கள் வழங்கும் போதனைகளின் மூலம் குடும்பத்தின் சம்மதத்தை பெற முடியவில்லை என்றால், அவை வெறும் அறிவுணர்வு சிந்தனைகளாக இருந்துள்ளதையும், அவை உங்களுக்கு முக்கியம் இல்லை என்பதையும் தெரிவிக்கின்றன. ¶எனது சர்வதேச சீடர்கள் சமூகத்தில், இந்த போதனைகளை மற்றவர்களுக்கு வழங்கி, வலுவான ஈடுபாடு, சுறுசுறுப்பு மற்றும் முழுமையான அர்ப்பணிப்புடன் இருந்து, தாங்கள் கடந்து வந்த பாதையில் மற்றவர்களை அழைத்து வரும் திறமை உடையவர்களை நான் கவனித்து வருகிறேன். ஈடுபாடு மற்றும் அக்கறை இல்லாமல், எதையும் ஆக்கப்பூர்வமாக செய்யமுடியாமல் அற்புதங்களை காண்பதற்காக அல்லது சமூக நன்மைகளை பெறுவதற்காக தங்கி இருப்பவர்களையும் நான் கவனித்து வருகிறேன்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 182

எங்கள் இளம்

சமயப்பணியாளர்கள்

இன்று இங்கே குழுமி இருக்கும் இளைஞர்கள் அனைவரும், சைவ தர்மத்தை பின்பற்றி வாழ்கிறோம் என்பதை நினைத்து அபிமானத்துடன் இருக்கவேண்டும். நீங்கள் சைவர்களாக இருப்பதிலும், இந்த தலைசிறந்த இறைவனை தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதிலும் அபிமானத்துடன் இருங்கள். இது அகந்தை கலக்காத அபிமானமாக இருப்பதால், அது உங்களை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்துகிறது. அது பணிவு கலந்த அபிமானமாக இருப்பதால், நீங்கள் எல்லோர் மீதும் அதிக இரக்க குணத்தை வெளிப்படுத்த

முடிகிறது. சைவ சமயம் தழைத்து ஓங்குவதற்கு ஒன்றாக இணைந்து நில்லுங்கள். எல்லோரும் சிவபெருமானை பற்றி, விநாயக பெருமானைப் பற்றி, முருகப்பெருமானை பற்றி தெரிந்துக்கொள்ள, உலகெங்கும் சைவ தர்மத்தை பரப்புவது உங்கள் கடமை ஆகும். அவற்றை ஏற்றுக்கொள்வதும் மறுப்பதும் அவர்கள் விருப்பம், ஆனால் அவர்கள் நீங்கள் வழங்கும் தகவலை கேட்க வேண்டும். நீங்கள் எல்லோரும் நமது மதத்தின், சைவ இந்து மதத்தின் இளம் சமயப்பணியாளர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் இந்த சமயத்தை அதிக அக்கறையுடன் தெரிந்துக்கொள்ள வேண்டும். மற்ற மனங்களை நற்குணங்களை நோக்கி, சுயநலமற்ற தன்மையை நோக்கி, தெய்வ பக்தியை நோக்கி திருப்புவதற்கு, சைவ சமயத்தைப் பற்றி அதிக ஆழமாக தெரிந்துகொள்ளுங்கள். உங்களிடம் உங்கள் சமயத்தைப் பற்றிய கேள்வி வரும் போது, நீங்கள் திருப்திகரமான பதிலை அளிப்பதற்கும், அந்த பதிலை நம்பிக்கையுடன் வழங்குவதற்கும், நீங்கள் உங்களை சைவ தர்மத்திற்கு அர்ப்பணித்துக்கொண்டு, அதிக அக்கறையுடன் அதைப்பற்றி மிக மிக ஆழமாக தெரிந்துக்கொள்ள வேண்டும். உங்களை உங்கள் பெற்றோர்கள் மற்றும் தாத்தா பாட்டி வளர்த்த காலத்தை காட்டிலும், இன்றைய உலகில் கவனச் சிதறல்கள் அதிகமாக இருப்பதால், நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். இன்றைய இளம் வயதினர், முன்பை காட்டிலும் அதிகமான கவனச் சிதறல்களை, குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் இருந்து எதிர்கொள்கின்றனர். ¶நீங்கள் தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் முன்னேறினால், உங்கள் தகவலை கேட்பதற்காக ஆவலுடன் காத்து இருப்பவர்களுக்கு, உங்கள் வாழ்க்கை பலம் தருவதாக இருக்கும். நமது சைவ சமயத்தை அபிமானத்துடன் நினைவில் கொண்டு வளர்ச்சி பெறவேண்டும் என்று, இன்று இங்கே திரண்டுள்ள இளம் வாலிபர்கள் மற்றும் குழந்தைகள் ஒவ்வொருவரிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன். இதை எவ்வாறு செய்வது? ஒழுக்கம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக செய்ய வேண்டும். இந்த பூமியில் இந்த இரண்டு பண்புகள் இல்லாமல் எதுவும் சாதிக்கப்பட்டது இல்லை. சுய ஒழுக்கம் மற்றும் சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் *குருமார்கள்* சொல்வதை கேளுங்கள். உங்கள் தாய் சொல்வதை கேளுங்கள். உங்கள் தந்தை சொல்வதை கேளுங்கள். உங்களுக்கு தெரிந்த பெரியவர்கள் சொல்வதை கேளுங்கள். சைவ சமய ஆசிரியர்கள் சொல்வதை கேளுங்கள். உங்கள் மீது மேற்கத்திய வழிமுறைகள் தாக்கம் ஏற்படுத்த அனுமதிக்காதீர்கள். மேற்கத்திய வழிமுறைகள் கிறித்துவ மத அமைப்பை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. இவை அனைத்தையும் செய்தால், நீங்கள் சைவ இந்து கோயில் பாரம்பரியத்திற்கு எதிர்கால தலைவர்களாக மாறலாம். ¶மதத்தைப் பற்றிய கல்வி மிகப்பெரிய கல்வியாகவும், கல்விகளில் ஒரே நிரந்தரமான கல்வியாகவும் விளங்குகிறது. மற்ற அனைத்தும் நிலையில்லாமல் மாறிக்கொண்டு இருக்கின்றன. மதம் என்பது ஆன்மா பற்றிய அறிவாக விளங்குகிறது. சிவபெருமான் உங்கள் ஆன்மாவை உருவாக்கினார்.

உங்கள் தாய் மற்றும் தந்தை உங்களுக்கு உடலை வழங்கி, இந்த உலகிற்கு உங்களை அழைத்து வந்தனர். ஆனால் உங்களுடைய முற்பிறவி அனுபவங்களின் முழுமையில் இருந்து, இந்த பிறவியில் உங்களது சொந்த அனுபவங்களை நீங்கள் உருவாக்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் உங்கள் மதத்தை கற்பதற்காக இந்த பூமியில் பிறவி எடுத்தீர்கள். உங்கள் ஆன்மா பக்குவமடைவதற்காக, நீங்கள் இந்த பூமியில் வாழ்கிறீர்கள். நீங்கள் பணத்தை சம்பாதிக்க இந்த பூமியில் பிறவி எடுக்கவில்லை. நீங்கள் அளவுக்கு அதிகமான புலன் இன்பங்களை பெறுவதற்காக இங்கே இல்லை. நீங்கள் மற்ற மனிதர்களுடன் சண்டையிடுவதற்காக இங்கே இல்லை. நீங்கள் இங்கே லௌகீக வசதிகளை பெருக்கிக்கொள்வதற்காக இல்லை. இங்கே உங்கள் மதத்தை கற்று அதை பூர்த்தி செய்யவே இருக்கிறீர்கள். உங்கள் வாழ்வில் மதத்தை பற்றி அறிவு மட்டுமே ஆன்மாவை பக்குவப்படுத்துகிறது. அதனால் உங்கள் மதத்தை முழுமையாக, முறையாக மற்றும் புத்திசாலித்தனமாக கற்றுக்கொள்ளுங்கள். அது உங்களுக்கு இந்த பிறவியில் வழிகாட்டியாக இருப்பதோடு, அடுத்த பிறவி சிறந்த பிறவியாக அமைவதற்கு அல்லது லௌகீக இருப்பில் இருந்து விடுதலை அளிக்கும் முக்தியை பெறுவதற்கும் வழிகாட்டியாக இருக்கும்.

சப்ரேம வ்வஹாரஹ

सप्रेमव्यवहारः



நேர்மறை கட்டுப்பாடு

சொற்பூசல்கள், லௌகீக தொடர்புகள் மற்றும் சச்சரவுகளை தவிர்க்க வேண்டும். நல்லது அல்லது தீயது பேசவேண்டி இருக்கும் என்பதால், சாத்திர குழுக்களிலும் சேராமல் இருக்க வேண்டும். பொறாமை, பழித்துரை, ஆடம்பரம், பேரார்வம், வெறுப்பு, ஆசை, கோபம் மற்றும் சோகம் ஆகியவற்றை மெதுவாக மற்றும் முழுமையாக நீக்க வேண்டும்.

தேவிகாலோத்தர ஆகமம், ஞானசார விசார படலம், 77-78. ரம, ப. 116



இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களை சேர்ந்த இரண்டு இந்துக்கள், உயரபறக்கும் இரயில்களுக்கு பிரபலமான சிகாகோவில் தங்கள் குழந்தையை வளர்க்கிறார்கள். குழந்தைக்கு பாதுகாப்பு மற்றும் ஆசிகளை வழங்கும் பொருட்டு, தாய் அதன் நெற்றியில் விபூதி பூசுகிறாள். அவர்கள் நேர்மறை கட்டுப்பாட்டின் கோட்பாடுகளை பயன்படுத்தி தங்கள் குழந்தையை வளர்க்க உறுதி பூண்டுள்ளனர்.

திங்கட்கிழமை

பாடம் 183

துன்புறுத்துவதால் ஏற்படும்

அழிவு

பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பலவீனமானவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை உலகம் முழுவதும் மறு ஆய்வு செய்துக்கொண்டு இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்பாக, நமது சக மனிதர்களிடம் நாம் நடந்துகொண்ட வழக்கத்தை தற்போது யாரும் ஏற்றுக்கொள்வது இல்லை. துன்புறுத்தப்பட்ட மனைவி அல்லது ஒரு சித்ரவதை செய்யப்பட்ட குழந்தையின் வேதனையை, நாம் இப்போது நன்றாக புரிந்துக்கொள்கிறோம். வாழ்க்கையின் இந்த பகுதிகளில், நாம் இந்து சமயம் போதிக்கும் நற்பண்பை கடைப்பிடிப்பது இல்லை என்பது ஒரு வெட்கப்படவேண்டிய விஷயம் ஆகும். ¶அந்த நற்பண்பு எதை குறிக்கிறது? அது பிற உயிர்களை துன்புறுத்தாமல் இருக்கும் அகிம்சையை குறிப்பிடுகிறது. இந்து குழந்தைகள் முற்பிறவியில் எதுவாக இருந்தார்கள் என்பது யாருக்கும் தெரியாததால், அவர்களுக்கு எப்போதும் மதிப்பும் மரியாதையும் வழங்கப்படுகிறது. அவர்கள் மனித இனத்திற்கு ஆன்மீக உதவி செய்ய, மறுபிறவி எடுத்துள்ள ஒரு பாட்டி, தாத்தா, அத்தை அல்லது மாமா, அன்புக்குரிய தாய், சகோதரி, சகோதரன், மதிப்புக்குரிய தந்தை, ஒரு *யோகி* அல்லது *ரிஷியாக* இருக்கலாம். "இந்த ஆன்மாக்கள் யார்? அவர்களுக்கு இந்த பிறவியில் விதிக்கப்பட்ட விதி என்ன? நான் அவர்களுக்கு என்ன உதவி செய்வது?" என்று நாம் சிந்திக்க வேண்டும். ¶பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீது அன்பு செலுத்துகிறார்கள். மற்றும் உடல், மனம் அல்லது மனவெழுச்சிரீதியாக துன்புறுத்தாமல் இருக்கும் *அகிம்சை* கோட்பாட்டை, பெற்றோர்-குழந்தை உறவு மற்றும் கணவன் மனைவி உறவிலும் பயன்படுத்தப்பட வேண்டும். கருவில் இருக்கும் போதே குழந்தையை துன்புறுத்தாமல் பேணி வளர்க்க வேண்டும். குழந்தைகளை துன்புறுத்தாமல், அவர்கள் உடல், மனம் மற்றும் மனவெழுச்சி தொடர்பான வளர்ச்சி பெறுவதற்கு அனுமதி அளிக்கவேண்டும். குழந்தைகள் சில சமயங்களில் குறும்புகள் செய்யும் போது நமக்கு எரிச்சல் வந்து விடும், ஆனால் அகிம்சையை கடைப்பிடிக்க சங்கல்பம் எடுத்துக்கொண்ட தெய்வ பக்தியுள்ள பெற்றோர்கள்

உண்மையில் தங்கள் குழந்தைகளை காட்டிலும் அதிக பக்குவத்துடன் செயல்பட்டு, இக்கட்டான சூழ்நிலைகள் தோன்றும் போது குழந்தைகளை கிள்ளுதல், அடித்தல் அல்லது கடிந்துகொள்ளுதல் போன்ற துன்புறுத்தல்கள் இல்லாமல் அவர்களால் சுமூகமாக எதிர்கொள்ள முடிகிறது. *அகிம்சையை* கடைப்பிடிக்கப்படும் வீட்டில் மட்டுமே, குழந்தைகளை உடல், மனம், மனவெழுச்சியின் ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு கொண்டு சென்று, அவர்களிடத்தில் ஆன்மீக பண்புகளையும் வளர்க்க முடியும். ¶ஒரு குழந்தையை துன்புறுத்தும் போது, அதன் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி, மிகவும் சிறிய வயதில் கோபம் மற்றும் ஆத்திரம் உருவாக வழிவகுக்கிறோம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வெறுப்பு, அவநம்பிக்கை, ஆத்திரம், தனிமை மற்றும் தன்னம்பிக்கை இழப்பு ஆகிய கீழ்நிலை இயல்பில் இயக்காமல் அன்பு, மன்னிப்பு, நட்புறவு மற்றும் தன்னம்பிக்கையின் உயர்நிலைக்கு உயர்த்துவது அவர்களுடைய கடமை ஆகும். அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட கீழ்ப்படியும் பண்பு பரிந்துரைக்கப்படுவது இல்லை. ¶பெற்றோர்கள் தாங்கள் செய்த தியாகத்தை எல்லாம் எடுத்து சொல்லி, "அதற்கு பதிலாக என்ன கிடைக்கிறது என்று பார். உன்னால் எந்த பயனும் இல்லை. நீ நன்றி கெட்டவன்," என்று கூறுவதால், அவர்கள் தங்கள் குழந்தைகள் மனதில் உளவியல் ரீதியாக குற்ற உணர்வை வளர்க்கிறார்கள். குற்ற உணர்வுள்ளவர்கள் ஆக்கப்பூர்வமாக இல்லாமலும், பெரும்பாலும் நியாயமாக செயல்படாமலும், உத்வேகத்தை இழந்து இருப்பதால், மன உறுதி இல்லாமலும் இருக்கிறார்கள். அவர்கள் சுய மரியாதை மிகவும் தாழ்ந்த நிலையில், ஆன்மா மீது துரு போன்று படிந்து இருக்கிறது. இந்த மனநிலையுடன் இருப்பவர்கள், பின்வரும் எண்ணங்களுடன் வாழ்கின்றனர். “என் பிறவியே பயனற்றது. அவள் சொல்வது சரி தான். என்னால் எதையும் முழுமையாக புரிந்துகொள்ள முடிவதில்லை. என்னால் யாருக்கும் எந்த பயனும் இல்லை.” கலியுகத்தில் தாய்மார்கள் குழந்தைகளை பெற்றெடுத்து, அவர்களை சிறு வயதிலேயே அழித்து விடுகிறார்கள் என்பது உண்மை தான். அவர்களை சிறு வயதில் அடித்தும், பின்னர் புண்படுத்தும் சொற்களினால் அந்த குழந்தைகளின் குணங்களை தாழ்த்தி பேசியும், அவர்களை "அவர்களுக்குரிய இடத்தில் வைத்து இருப்பதன்" மூலம் அவர்கள் அந்த அழிவை ஏற்படுத்திவிடுகிறார்கள். ¶அச்சுறுத்தல்கள் மூலம் உருவான இணக்கத்தின் அடிப்படையில், ஒரு பாசமான குடும்பம் அல்லது ஒரு வலுவான சமூகத்தை உருவாக்க முடியாது. குழந்தைகளுக்கு தேவையில்லாமல் இனிப்புகள் அல்லது வாக்குறுதிகளை தந்து அவர்களின் சம்மதத்தை பெறுவதால், அவர்கள் மனதில் பெற்றோர்கள் மீது அவநம்பிக்கையை உருவாக்கி, வாழ்க்கைப் பற்றிய சுயநல எதிர்பார்ப்புகளுடன் எதற்கும் அடிபணியாத பண்பு வளர்க்கப்படுகிறது. ஒரு குழந்தையை கோபமடைய செய்வதன் மூலம், அது பிற்காலத்தில் மற்றவர்களை பழிவாங்கும் பாதையில் இயக்குவதற்கு வழிவகுக்கிறோம். குழப்பமான

தருணத்தில் ஒரு குழந்தையை அடிப்பது அல்லது கிள்ளுவது பொருத்தமானதாக தோன்றலாம். அது தற்காலிக நிவாரணமும் அளிக்கலாம். ஆனால் இதன் மூலம் நீண்டகாலத்திற்கு அனுபவிக்க வேண்டிய *கர்மவினை* விளைவுகளை மறக்க வேண்டாம். "நான் உனது உரிமையாளன். நீ எனக்கு கடன்பட்டிருக்கிறாய்," என்ற அணுகுமுறையை இன்று யாரும் ஏற்றுக்கொள்வது இல்லை, அதற்கு பதிலாக துன்புறுத்தும் முறைகள் நல்ல பலன்களை தராது என்பதை உணர்ந்த நேர்மையான இந்து வீடுகளில் "நான் உன் மீது அன்பு செலுத்துகிறேன், நீ என் மீது அன்பு செலுத்து," என்ற அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 184

துன்புறுத்தும் பண்பு

ஏற்படுத்தும் அவலநிலை

"ஒரு குழந்தையை பெற்றோர்கள் எப்போதும் அடிக்கக்கூடாதா?" என்று என்னிடம் பலமுறை கேட்கப்பட்டுள்ளது. ஆமாம், குழந்தைகளை எப்போதும் அடிக்கக்கூடாது. அந்த அடியை பெற்றவர்கள் பிற்காலத்தில் தங்கள் குழந்தைகளை தண்டிக்க பயிற்சி அளிக்கப்படுவதால், இந்த சுழற்சி முடிவில்லாமல் தொடர்கிறது. ஒரு விலங்கு தனது இயல்பான சூழலில் தனது குட்டிகள் அல்லது கன்றுகளை துன்புறுத்தி பார்த்து இருக்கிறீர்களா? ஒரு சிங்கம் தனது குட்டியை இரத்தம் சிந்தும் வகையில் துன்புறுத்துமா, ஒரு பறவை தனது குஞ்சை கொடூரமாக கொத்துமா, ஒரு பசுமாடு தனது கன்றை மிதிக்குமா, ஒரு திமிங்கிலம் கீழ்ப்படியாத தனது குட்டியை கடற்கரையில் விட்டு விடுமா? ஒரு டால்பின், ஒரு நாய், ஒரு பட்டாம்பூச்சி, ஒரு பூனை தான் ஈன்ற குட்டியை துன்புறுத்துமா? கோபத்தினால் தங்கள் குழந்தைகளை முரட்டுத்தனமான துன்புறுத்துவது மற்றும் சிலசமயங்களில் உயிரை கொல்லும் அளவிற்கு வெறியுடன் மனிதர்கள் மட்டுமே நடந்துக்கொள்கிறார்கள். ¶இதற்கு தொடக்கமாக மனைவி-கணவன் விளங்குகிறது. தங்களை பின்பற்றும் சமூகத்தின் பழக்கத்திற்கு, *கர்மவினை* அடிப்படையில் அந்த தாய் மற்றும் தந்தை காரணமாக விளங்குகிறார்கள். *அகிம்சையை* கடைப்பிடிக்கும் தம்பதிகள், மனித இனத்தின் காவலர்களை உருவாக்குகிறார்கள். மற்றவர்களை துன்புறுத்தி இம்சையை கடைப்பிடிக்கும் தம்பதிகள், மனித இனத்தின் அழிவிற்கு காரணமானவர்களை உருவாக்குகிறார்கள். சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், அவர்கள் மனித இனத்தின் சாபமாக விளங்குகிறார்கள். இது மிகவும் முக்கியமானது என்பதால், இதை மீண்டும் ஒரு

முறை சொல்லவேண்டியுள்ளது. “*இம்சை* செய்யும் தம்பதிகள், மனித இனத்தின் அழிவிற்கு காரணமானவர்களை உருவாக்குகிறார்கள். அவர்கள் மனித இனத்திற்கு ஏற்பட்ட அவமானமாக விளங்குகிறார்கள்.” ¶ஐந்து அடி பத்து அங்குலம் உயரமுள்ள ஒரு வாலிபன் ஒரு சிறிய குழந்தையை அடிப்பது கோழைத்தனமாக இல்லையா? நல்ல உடல்வாகு இருக்கும் ஒரு ஆண் ஒரு பெண்ணை அடிப்பது கோழைத்தனமாக இல்லையா? தங்கள் சமூகத்தில் உடல்ரீதியாக துன்புறுத்தி காயம் ஏற்படுத்தும் சம்பவங்கள் நடக்கின்றன என்பதை அறிந்திருந்தும், ஓரமாக நின்று வேடிக்கை பார்ப்பது இன்னொரு வகை கோழைத்தனம் ஆகும். அத்தகைய குற்றங்களை சட்டம் தண்டிக்கவில்லை என்றாலும், அவர்கள் தவறு நடப்பதை பார்த்து அல்லது அறிந்து இருந்தாலும் பேசாமல் இருந்ததால், அவர்கள் செய்த குற்றத்திற்கு *கர்மவினை* தண்டனையாக ஒரு ஆயுள் தண்டனையை பெறுகிறார்கள். இந்த பாவம் அவர்களின் மனதில் வாழ்நாள் முழுவதற்கும் அனுபவிக்க வேண்டிய ஒரு ஆயுள் தண்டனையை வழங்குகிறது. ஒரு குழந்தையை அடிப்பதால் அதன் நம்பிக்கை அழிக்கப்படுகிறது. அந்த குழந்தை மனித நேயத்தின் மீது நம்பிக்கை இழப்பதால், மதம் மற்றும் இறைவனிடத்திலும் நம்பிக்கையை இழக்கிறது. அந்த குழந்தைகளை சொந்த தாய் மற்றும் தந்தை அடித்தால், அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் யார் மீது நம்பிக்கை வைப்பார்கள்? குழந்தையை அடிப்பது, அதிக அழிவை ஏற்படுத்தும். ¶தந்தை தாயை அடிப்பதை அல்லது தாய் தவறான சமிக்கைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் கூச்சலிடுவதன் மூலம் தந்தையின் ஆண்மையை உணர்வுப்பூர்வமாக அழித்த பிறகு தந்தையின் உடலை துன்புறுத்தும் நோக்குடன் கீறுவதை அப்பாவி குழந்தைகள் பார்க்கும் போதே, அவை அனைத்தையும் செய்வதற்கு அனுமதியும் பெறுகிறார்கள். பெற்றோர்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் கற்றுக்கொடுத்த *கர்மவினை* என்றும், தங்களை துன்புறுத்தும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளின் *கர்மவினை* என்றும், நாம் இவை அனைத்திற்கும் *கர்மவினையை* காரணம் சொல்லலாம். ஆனால் கர்மவினையின் தெய்வீக விதி, மற்றவர்களை துன்புறுத்துவதற்கு ஒரு அனுமதி அல்லது ஒரு வாய்ப்பாக பயன்படுத்தக்கூடாது. நீங்கள் துன்றுபுத்தப்பட்டால், நீங்கள் அதே செயலை இன்னொருவர் மீது இழைக்க, அது உங்களுக்கு அனுமதி வழங்கவில்லை. *தர்மம் கர்மவினையை* கட்டுப்படுத்துகிறது. அதற்கு முரணாக செயல்படுவது இல்லை. இந்து சமயத்தில் தங்கள் குழந்தைகளை மனம், மனவெழுச்சி மற்றும் உடல் ரீதியாக துன்புறுத்தாமல், அவர்களுக்கு பெற்றோர்கள் ஆன்மீக தலைவர்களாக இருக்க வேண்டும். ¶தாயும் தந்தையும் பக்குவத்துடன் விவாதம் செய்வது அல்லது பூஜை அறையில் வழிபாடு மற்றும் தியானம் மூலம் தங்கள் கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வு காண்பது ஆகியவற்றை கூர்மையான உணர்வுள்ள குழந்தைகள் பார்க்கும் போதே, எதிர்காலத்தில் தாங்களும் அவற்றை செய்வதற்கு அனுமதி பெறுகிறார்கள். அவர்கள் மன அழுத்தம் தரும்

இக்கட்டான காலங்களில் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை பெற்று, சமூகத்திற்கு பலம் பொருந்திய தூண்களாக மாறுகிறார்கள். எதிர்காலத்தில் தர்மத்தின் கோட்பாடுகளை உறுதியாக கடைப்பிடிக்கவிருக்கும் இந்த குழந்தைகள், கீழ்நிலை மனம் வழங்கும் சபலங்களுக்கு கீழ்ப்படியமாட்டார்கள்.

புதன்கிழமை

பாடம் 185

மனதில் அச்சத்தை

உருவாக்க வேண்டாம்

ஒரு குழந்தையை காட்டிலும் சிறப்பானது வேறு ஒன்றும் இருக்க முடியாது. குழந்தைகள் எதிர்காலத்தின் எதிர்காலமாக இருப்பதால், அவர்கள் மீது அன்பு செலுத்தப்பட்டு, அவர்கள் வழிகாட்டப்பட்டு பாதுகாக்கப்படுவதற்கு அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுகிறார்கள். ஆனால் குழந்தைகளை நல்ல குடிமகன்களாக வளர்ப்பது ஒரு சவாலாக இருக்கலாம். கட்டி அணைத்தல், பரோபகாரம் செய்தல், விளக்கம் அளிக்கவும் நல்ல வழிகாட்டவும் நேரம் ஒதுக்குதல், அவர்கள் மீது உங்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்புக்களுக்கு நீங்கள் முன் உதாரணமாக இருத்தலைப் போன்று, அவர்களை வழிகாட்ட பல நேர்மறையான வழிகள் உள்ளன. பல குழந்தைகள் பல வருடங்களுக்கு முன்பு, முற்பிறவிகளில் வாலிபர்களாக இருந்துள்ளன. அவர்களின் வெற்றிகள் மற்றும் தோல்விகளின் பலன்களைப் போல, அனுபவ அறிவின் மூலம் அவர்கள் வளர்த்த மனமும் அவர்களுடன் இருக்கிறது. அவர்கள் தொடர்ந்து அறிந்து மற்றும் புரிந்துக்கொண்டு, தங்களையும் தாங்கள் பிறந்த சமூகத்தையும் மேம்படுத்தவே மறுபிறவி எடுத்துள்ளார்கள். இந்த முதிர்ச்சிக்கு தாங்கள் துணையாக இருக்கவேண்டுமா அல்லது தடையாக இருக்கவேண்டுமா என்பதை, அந்த குழந்தைகளின் பெற்றோர்கள் முடிவு செய்யவேண்டும். ¶முதுகுத்தண்டின் அடியில், நினைவாற்றல் மையமாக இருக்கும் *மூலாதார சக்கரத்திற்கு* மேலே ஆறு *சக்கரங்கள்* அல்லது உணர்வு மையங்கள் உள்ளன. *மூலாதாரத்திற்கு* மேல் சிந்திக்கும் ஆற்றலுக்கு அடிப்படையாக விளங்கும் *சக்கரம்* இருக்கிறது. அதன் மேல் மனஉறுதிக்கு அடிப்படையாக விளங்கும் *சக்கரம்* இருக்கிறது. மூலாதாரத்திற்கு கீழே இருக்கும் ஏழு சக்கரங்களில், முதல் சக்கரம் அச்சம், அதன் கீழே கோபம் மற்றும் அதன் கீழே பொறாமைக்கு அடிப்படையாக விளங்கும் *சக்கரங்கள்* இருக்கின்றன. தனது குழந்தை சிந்திக்கும் திறன், மனஉறுதி, வலுவான புரிதல் மற்றும் தெய்வீக அன்புடன் உயர செல்ல வேண்டுமா அல்லது அச்சம், கோபம், சந்தேகம், பொறாமை மற்றும் மற்றவர் நலனில் அக்கறை இல்லாமல் தன்னை பாதுகாத்துக்கொள்ளும்

சுயநலத்துடன் கீழ்நோக்கி செல்லவேண்டுமா என்பதை அந்தந்த பெற்றோர்கள் முடிவு செய்யவேண்டும். ¶குழந்தைகளிடம் அதிகப்படியான ஆற்றல் இருப்பதால், சிலசமயம் அவர்களை கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும். ஒரு குழந்தை அதிக சர்க்கரை சாப்பிட்டால், அதன் நடவடிக்கை மேலும் தீவிரமாக இருக்கக்கூடும். இந்த சூழ்நிலையை பெற்றோர்கள் எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும்? குழந்தைகள் உற்சாகமாக ஓடிக்கொண்டு இருக்கும் போது, அவர்களுக்குள் இருக்கும் ஆற்றலை சிவனின் *பிராண* சக்தியாக கருதுங்கள். அவர்கள் அந்த ஆற்றலை கட்டுப்படுத்தும் போது அவர்களை பாராட்டுங்கள், ஆனால் அதை கட்டுப்படுத்தாத போது அவர்களை தண்டிக்காதீர்கள். அதற்கு பதிலாக, அவற்றை கட்டுப்படுத்த அவர்கள் கற்றுக்கொள்வது முக்கியம் என்பதையும், அவர்களின் ஆற்றல்களை நேர்மறையான முறைகளில் பயன்படுத்துவதால் ஏற்படும் பயன் பற்றியும் விளக்குங்கள். அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்து ஆழமாக சுவாசித்து, தங்கள் ஆற்றலை உணர அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள். பூஜை அறைக்கு சென்று அவர்களின் *பிராண சக்திகள்* அமைதி அடையும் வரை அவர்களுடன் உட்கார்ந்து இருங்கள், மற்றும் அதன் பிறகு அவர்களுக்குள் ஏற்பட்ட மாற்றத்தை உணர உதவி செய்யுங்கள். அவர்கள் முரட்டுத்தனமாக இருக்கும் போது, அவர்களை அடிப்பது அல்லது கத்துவதன் மூலம், உங்களிடம் இருந்து அவர்களை நோக்கி செல்லும் *பிராண சக்தி,* நிலைமையை மேலும் மோசமாக்கவே உதவி புரிகிறது. அவர்கள் அமைதி அடையும் வரை நீங்கள் இன்னொரு அறைக்கு செல்வதாக சொல்லி, அவர்களிடம் இருந்து உங்கள் *பிராண சக்தியை* திரும்பப்பெறுவது இன்னொரு உத்தியாக இருக்கும். ¶அடித்தல், கிள்ளுதல், கன்னத்தில் அறைதல் மற்றும் அவர்களின் சூட்சும உடல்கள் மீது கோபமான வார்த்தைகளின் அதிர்வை வழங்குவது ஆகிய அனைத்தும், அவர்களின் ஆன்மீக விரிவாக்கம் மற்றும் அவர்களின் எதிர்காலத்தின் மீது அழிவை ஏற்படுத்தும் பாவச் செயல்கள் ஆகும். இவ்வாறு குழந்தைகள் தங்களை கண்டு அஞ்சவும், தங்களை வெறுக்கவும் நிர்பந்திக்கும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் காதுகளை மூடிவிடுவதால், உரையாடல் மூலம் அவர்களை மேம்படுத்தும் வாய்ப்பை இழக்கிறார்கள். தங்கள் குழந்தைகளை அடிக்கும் அல்லது கிள்ளும் அல்லது கன்னத்தில் அறையும் அல்லது சாட்டையால் அடிப்பது போன்றவற்றில் ஈடுபடும் பெற்றோர்கள் அடுத்த தலைமுறையை கீழ்நிலை உணர்வுக்குள் தள்ளி விடுவதால், அவர்கள் மதத்திற்கு எதிரிகளாக விளங்குகிறார்கள். மதத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் இவ்வாறு நடந்துகொள்வார்களா? இல்லை, இத்தகைய நடத்தை விலங்குகள் இராச்சியத்திலும் நடைபெறுவது இல்லை. இது விலங்குகள் இராச்சியத்தையும் விட கீழ்த்தரமாக இருக்கிறது. ஆனால் நாம் இதைத்தான் இன்றைய உலகில் எதிர்கொள்கிறோம். இன்றைய நவீன உலகில் நாம் எதற்காக பல பிரச்சனைகளை சந்திக்கிறோம் என்பதற்கு அது தகுந்த விளக்கத்தை அளிக்கிறது. ¶இன்று பல குடும்பங்களில் துரதிஷ்டவசமாக,

குழந்தைகளை அடிப்பது வாழ்க்கையில் ஒரு அங்கமாக மாறிவிட்டது. பெரும்பாலும் எல்லோரும் தங்கள் குழந்தைப்பருவத்தில் அடிவாங்கி இருப்பதால், அவர்கள் தங்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள் மற்றும் அந்த குழந்தைகள் தங்களின் குழந்தைகளை அடிக்கிறார்கள். மூத்த சகோதரர்கள் இளைய சகோதரர்களை அடிக்கிறார்கள். சகோதரர்கள் சகோதரிகளை அடிக்கிறார்கள். இவ்வாறு குடும்பங்கள் முடிவில்லாத வன்முறை சுழற்சியின் மூலம் இளம் போராளிகள் உருவாவவதை நம்மால் காண முடிகிறது. எதிர்காலத்தில் ஒரு நாள் போர் வரும் போது, இவ்வாறு இரக்கமில்லாமல் அடி வாங்கிய ஒரு இளைஞர், கையில் ஒரு துப்பாக்கியை எடுத்து மனசாட்சி இல்லாமல் சாதரணமாக இன்னொருவரை கொலை செய்து, தான் செய்த செயலை நினைத்து மகிழ்ச்சியும் அடைகிறார். நாம் எத்தகைய ஒரு சமூகத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கிறோம்? இன்று அமெரிக்காவில், முப்பத்தி மூன்று நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு கொலை, ஐந்து வினாடிகளுக்கு ஒரு முறை ஒரு தாக்குதல், தொண்ணூறு வினாடிகளுக்கு ஒரு முறை ஒரு கற்பழிப்பு நடக்கிறது. ஐம்பத்தி ஓரு வினாடிகளுக்கு ஒரு முறை ஒரு ஆண் தன் மனைவியை அடிக்கிறான். ஐந்தரை நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பெண் தன் கணவனை அடிக்கிறாள். முப்பத்தி ஓரு வினாடிகளுக்கு ஒரு முறை 12 முதல் 15 வயதுடைய ஒரு குழந்தை தாக்கப்படுகிறது, மற்றும் அதே வயது வரம்பில் எட்டு நிமிடத்திற்கு ஒரு குழந்தை கற்பழிக்கப்படுகிறது. இந்த வன்முறை என்றாவது நிற்க வாய்ப்பு இருக்கிறதா? ஒரு மிகப்பெரிய மாற்றம் ஏற்படும் வரை, இது நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. எளிதில் புரியும்படி சொல்லவேண்டும் என்றால், நாம் முதலில் வீட்டில் நடக்கும் போரை நிறுத்த வேண்டும். ¶நான் சமீபத்தில் ஒரு விழாவில் கலந்துகொண்டேன். அதில் தங்கள் சமூகத் தலைவர்கள் முன்னிலையில் தாங்கள் மீண்டும் குற்றம் செய்யமாட்டோம் என்று வாக்குறுதி எடுத்த பிறகு, கவாய் சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தங்கள் குடும்பம் சிறு வயதில் தங்களை துன்புறுத்தி, வீட்டை விட்டு துரத்தியதால், போதை மற்றும் அதிகமான குடிப்பழக்கத்திற்கு ஆளாகி தற்போது சிறைச்சாலை வந்துள்ளதாக, அவர்கள் அனைவரும் அழுதுகொண்டு கூறினர். எல்லோரிடமும் சொல்வதற்கு ஒரே மாதிரியான சோகக்கதைத் தான் இருந்தது. ¶"குழந்தைகளிடம் பேசுங்கள். பெற்றோர்கள் அவர்களை துன்புறுத்துகிறார்களா என்று கேளுங்கள். பின்பு பெற்றோர்களிடம் பேசுங்கள். முதலில் அவர்கள் "ஒன்று அல்லது இரண்டு முறை," என்று கூறுவார்கள், ஆனால் நீங்கள் தொடர்ந்து விசாரிக்கும் போது, நிலைமை மேலும் மோசமானது என்பதை தெரிந்துகொள்வீர்கள்," என்று எனது சர்வதேச இந்து தேவாலயத்தை சேர்ந்த சமயப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினேன். ஒரு குழந்தையை மாதத்திற்கு ஒரு முறை அடித்தால், அது பதினைந்து வருடங்களுக்கு சுமார் இருநூறு அடிகளாகிறது. "உங்களுக்கு சமமான எடை, உயரத்துடன் இருப்பவரை அதே மனநிலையுடன் அடிப்பீர்களா?" என்று குழந்தையை

அடிக்கும் பெற்றோர்களிடம் கேட்டேன். அவ்வாறு செய்வது தாக்குதல் என்று அழைக்கப்பட்டு, அது சட்டத்திற்கு விரோதமாக இருப்பதால், அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவிப்பார்கள். ஆனால் ஒரு குழந்தையை அடிப்பதும் சட்டத்திற்கு விரோதமானது இல்லையா? அதுவும் சட்டத்திற்கு விரோதமானது தான்.

வியாழக்கிழமை

பாடம் 186

குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை

தடுக்கும் சட்டங்கள்

1996 ஆம் ஆண்டு இங்கிலாந்தில், பிரம்பால் தனது மாற்றாந் தந்தை மூலம் அடிக்கப்பட்ட பன்னிரண்டு வயது சிறுவன், பெற்றோர்களுக்கு அனுமதி வழங்கும் பிரிட்டிஷ் சட்டங்களுக்கு எதிராக, "உடல் ரீதியாக துன்புறுத்தும் தண்டனைகளை, நியாயமான தண்டனைகள் மற்றும் வசவுகளுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும், " என்று மனித உரிமைகள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தான். ஏப்ரல் 15, 2000 அன்று கைகளால் அடிப்பதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையுடன், நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மத்திய லண்டன் வழியாக அணிவகுத்து சென்றனர். அவர்கள் பிரதமரின் இல்லமிருக்கும் 10 டவுனிங் ஸ்ட்ரீட்டில் தங்களது கண்டனத்தை நிறுத்தி, குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து தண்டனைகளையும் நிறுத்த வேண்டும் என்று கோரி பிரதமரிடம் ஒரு கடிதத்தை வழங்கினர். ¶குழந்தைகளை எந்த சூழ்நிலையிலும் அடிப்பதற்கு நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஆஸ்திரியா, பின்லாந்து, குரோஷியா, லாட்வியா, இத்தாலி, இஸ்ரேல், சைப்ரஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியம், ஸ்விசர்லாந்து, போலந்து, ஸ்பெயின், ஸ்காட்லாந்து, கனடா, ஜமைக்கா, நியூசிலாந்து, மெக்சிகோ, நமீபியா, தென் ஆப்ரிக்கா, இலங்கை, அயர்லாந்து குடியரசு மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் சட்ட திருத்தங்கள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில் குழந்தைகளை அடிப்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அது எல்லா சாதி மற்றும் எல்லா தரப்பு மக்களின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. ஆனால் சமீபத்தில் டில்லியில் இருக்கும் உச்ச நீதிமன்றம், அந்த மாநிலத்தில் குழந்தைகள் மீது இழைக்கப்படும் உடல்ரீதியான தண்டனைகளுக்கு தடை விதித்துள்ளது. அமெரிக்காவில் மினிசொட்டா தவிர மற்ற எல்லா மாநிலங்களும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீது "நியாயமான" உடல்சார் தண்டனை வழங்குவதை அனுமதிக்கிறது, மற்றும் பள்ளிகள், கல்வி

நிறுவனங்கள், ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு தொடர்பான சட்டங்கள் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டு, சில மாநிலங்கள் பிரம்பால் அடிப்பதை தொடர்ந்து அனுமதித்து வருகிறது. ¶பள்ளிகள் உடல்சார் தண்டனையை கைவிடும் போக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது. உலகில் இருக்கும் பெரும்பாலான தொழில்வள நாடுகள் மற்றும் தொழில்துறை வளர்ச்சி பெறாத நாடுகளும், பள்ளிகளில் அதை தற்போது தடை செய்துள்ளன. புதுப்பிக்கப்பட்ட பட்டியலை www.endcorporalpunishment.org இணையதளத்தில் பார்க்கவும். அமெரிக்காவில் இருபத்தி ஏழு மாநிலங்கள் மற்றும் டிஸ்ட்ரிக்ட் ஆப் கொலம்பியாவில் தடைகள் உள்ளன, அதில்லாமல் மேலும் பல மாநிலங்களில் சட்டம் இயற்றப்பட்டு வருகிறது. "அமெரிக்கா முழுவதும் மில்லியன் கணக்கான குழந்தைகள் பள்ளிக்கு திரும்ப தயாராகிக்கொண்டு இருக்கையில், ஆசிரியர்கள் உடல்சார் தண்டனை வழங்க ஆயுதமாக பயன்படுத்திய துடுப்பை துறந்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு ஆசிரியருக்கு அறிவு மட்டுமே நல்ல ஆயுதமாக இருக்க முடியும். உடல்சார் தண்டனை ஒரு கொடுமையான மற்றும் வழக்கற்றுப்போன ஆயுதம் ஆகும்," என்று தேசிய நாளிதழ் யு.எஸ்.ஏ. டுடே 1990 ஆம் ஆண்டு செய்தி வெளியிட்டது. கனடா நாட்டில் இருக்கும் பிரிட்டிஷ் கொலம்பியா, நியூ பிரன்ஸ்விக் மாகாணங்கள் மற்றும் யுகன் பிரதேசத்தில் இயங்கும் பள்ளிகள் உடல்சார் தண்டனையை தடை செய்துள்ளது. ¶லண்டன் நகரத்தில், அடிப்பதை மீண்டும் அறிமுகப்படுத்த நடந்த இயக்கத்திற்கு கருத்து கேட்கப்பட்ட போது, நாடாளுமன்றத்தில் பழமைவாத உறுப்பினர்கள் ஆதிக்கம் செலுத்தி வெற்றி கண்டாலும் தாங்கள் குழந்தைகளை பிரம்பால் அடிக்கப்போவது இல்லை என்று அரசு பள்ளி ஆசிரியர்கள் கூறினார்கள், மற்றும் கிறித்துவ பாதிரியார்கள் மற்றும் மதகுருமார்கள் தங்கள் பள்ளிகளில் உடல்சார் தண்டனை வழங்குவதை மீண்டும் அறிமுகப்படுத்த தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்கள். ஆப்பிரிக்கா நாட்டு பள்ளிகளிலும் உடல்சார் தண்டனைகளை முடிவுக்கு கொண்டு வரும் பணி விரைவாக நடைப்பெற்று வருகிறது. பள்ளிகளில் உடல்சார் தண்டனை வழங்குவது சட்டவிரோதமானது என்று சாம்பியா நீதிமன்றத்தின் உயர்மட்ட குழு தீர்ப்பு அளித்தது, மற்றும் மார்ச் 2001, உடல்சார் தண்டனை வழங்கும் சட்டப்பிரிவுகளை கென்யா நாட்டின் கல்வித்துறை அமைச்சர் நீக்கினார். ஆனால் சட்டங்கள் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பது இல்லை. மொரிஷியஸ் நாட்டு சட்டங்கள் 1957 ஆம் ஆண்டில் இருந்து, குழந்தைகள் உடல்ரீதியாக துன்புறுத்துவதற்கு தடை விதித்துள்ளன, ஆனால் அது என்றுமே அமுல்படுத்தப்படவில்லை மற்றும் இன்று வரை குழந்தைகள் இரக்கமில்லாமல் சித்ரவதைக்கு ஆளாகி வருகிறார்கள். ¶"கன்னத்தில் அறைவதும் அல்லது பிரம்பால் அடிப்பதும் நமது கலாச்சாரத்தில் அங்கம் வகிக்கின்றன," என்று என்னிடம் இந்துக்கள் பேசுவார்கள். இந்து கலாச்சாரம் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்து கலாச்சாரம் உடல், மனம் மற்றும்

மனவெழுச்சி ரீதியாக அகிம்சையை போதிக்கிறது. அது இம்சை செய்யக்கூடாது என்று போதிக்கிறது. 150 வருடங்களாக இந்திய இந்துக்களுக்கு "பிரம்பை எடுக்காமல் இருந்தால் குழந்தை நற்பண்புகளை கற்றுக்கொள்ளாது" என்று ஆங்கிலத்தில் பொருள்படும் விவிலிய பழமொழியை கற்றுத்தந்த பிரிட்டிஷ் கிறித்துவ கலாச்சாரத்தில், அது அங்கம் வகிக்கலாம். ஆனால் குழந்தைகளை அடித்து அவர்கள் கண்களில் இருந்து ஒளியை விரட்டி அடித்து, அவர்களிடம் இருந்து விசுவாசத்தை விரட்டி அடித்து, அவர்களிடம் இருந்து அறிவை விரட்டி அடித்து, சிறிதும் சிந்திக்காமல் அனைத்தையும் பின்பற்ற நிர்பந்தித்து, வாழ்நாள் முழுவதும் ஒரு வழக்கமான, படைப்புத்திறன் தேவைப்படாத பணியில் சிக்க வைத்து, அதன் பிறகு அவர்கள் தங்களுக்குள் வளர்ச்சி பெற்ற கோபத்தை குழந்தைகள் மீது வெளிப்படுத்தி, அந்த தலைமுறையை அடித்து ஜடமாக்கி விடுவது, இந்து கலாச்சாரம் இல்லை. இது கண்டிப்பாக ஒரு விவேகமான எதிர்காலத்தை உருவாக்காது. ¶இந்த அணுகுமுறை அதிக சுதந்திரமும் அளிப்பது இல்லை. 654 உறுப்பினர்களை கொண்ட சுவாமி நாராயண் சங்கத்தின் *சாதுக்கள்* சமூகத்தை சேர்ந்த ஒரு மூத்த *சாது* சமீபத்தில் எங்களை சந்தித்து, குழந்தைகள் துன்புறுத்தலைப் பற்றிய எங்களது கருத்துக்களை ஆமோதித்து, உறுதியான மற்றும் வலுவான திருத்தம் மற்றும் நன்மை மற்றும் தீமை பற்றிய போதனையின் அவசியத்தை வலியுறுத்தினார். “இன்றைய பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நன்மை தீமை பற்றிய அறிவை புகட்ட தவறுகின்றனர். அதனால் ஒரு பக்குவமற்ற சமூகம் உருவாகிக்கொண்டு இருக்கிறது," என்று அவர் கூறினார். ¶நீங்கள் குழந்தையை அடித்த குற்ற உணர்வுடன் இருந்தால், அவர்களிடம் மன்னிப்பு கேட்டு, கழிவிரக்கத்தை வெளிப்படுத்தி, குழந்தையை அடித்ததற்கு பரிகாரமாக *பால தாடயதி பிராயச்சித்தம்* செய்ய வேண்டும். அவர்களிடம் மீண்டும் இணக்கத்தை பெற்று, அவர்களை வெளிப்படையாக பேசச் செய்து, மீண்டும் அவர்களை அடிக்காமல் இருங்கள். நீங்கள் உங்கள் குழந்தையை அடிக்கவில்லை என்றாலும், அந்த கொடுமையான செயலை உங்கள் சமூகத்தில் செய்பவர் மீது கவனமாக இருந்து, ஒரு குடும்பம் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்கு வன்முறை இல்லாமல் இருக்கவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 187

பிராயச்சித்தம் மற்றும்

முரண்பாடு நீக்கம்

உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டவர்களும் அவர்களை துன்புறுத்தியவர்களைப் போல, தாங்கள் பெற்ற அனுபவத்தின் தீவிரத்தை தணிக்க பிராயச்சித்தம் செய்ய வேண்டும். சித்ரவதைகளுக்கு செய்யும் பரிகாரம் மலர் பிராயச்சித்தம் அல்லது *புஷ்ப பிராயச்சித்தம்* என்று அழைக்கப்படுகிறது. அடித்தல், கிள்ளுதல், கன்னத்தில் அறைதல், பிரம்பால் அடித்தல் அல்லது மற்ற உடல்சார் துன்புறுத்தலை வழங்கிய பெற்றோர்கள், ஆசிரியர்கள் அல்லது பெரியவர்கள் மீது இருக்கும் தங்களுக்கு இருக்கும் பகை, அச்சம், ஆத்திரம் மற்றும் வெறுப்பை தணிப்பதற்கு, இந்த முறையை பல சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் வெற்றிகரமாக பயன்படுத்தி இருக்கிறார்கள். இந்த பரிகாரம் செய்வது மிகவும் சுலபம் என்றாலும், தொடர்ந்து செய்து முடிப்பது பெரும்பாலும் மிகவும் கடினமாக இருக்கும். பலநாட்கள் முன்பாக அடி வாங்கிய குழந்தை அல்லது பெரியவர், தங்களை அடித்த தந்தை, தாய் அல்லது ஆசிரியர் போன்ற ஒருவர் அல்லது பலரின் படங்களை பூஜை அறையில் வைக்க வேண்டும். அதன் பிறகு முப்பத்தி ஒரு நாட்களுக்கு தொடர்ந்து, ஒரு நாளும் தவறாமல், ஒவ்வொரு படத்தின் முன்பாகவும் ஒரு மலரை வைத்து, அந்த நபரை மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும். படம் ஏதும் இல்லை என்றால், அதற்கு பதிலாக ஒரு சின்னம் அல்லது ஒரு பொருளை வைக்கலாம், அல்லது அவருடைய பெயரை காகிதத்தில் எழுதி வைக்கலாம். ¶மலர் கொண்டு மன்னிக்க முற்படும் போது, அடிமனதில் இருந்து மனதை புண்படுத்திய எண்ணங்கள் தோன்றி, பரிகாரம் செய்வதில் தடை ஏற்படுத்தினால், பாதிக்கப்பட்ட நபர் துன்புறுத்தப்பட்ட நினைவுகளை ஒரு காகிதத்தில் எழுதி பாதுகாப்பாக ஒரு குப்பைத் தொட்டியில் எரிக்கும் *வாசன தாக தந்திரத்தை* செய்யவேண்டும். பெற்றோர்கள் அல்லது ஒரு சொந்தம், பள்ளி ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் மீது வெறுப்பு அல்லது வலுவான ஆத்திரத்துடன் இருக்கும் நபரின் ஆழமான மனவெழுச்சிகளை, இந்த *தந்திரம்* விடுவிக்கிறது. இந்த அனுபவங்கள் பற்றிய மனவெழுச்சிகளை பல பக்கங்களில் எழுத்து வடிவில் வெளிப்படுத்தியதும், அந்த காகிதங்கள் கண்ணுக்கு முன்பாக எரிந்து சாம்பலாவதை பார்க்கும் போது, ஒடுக்கப்பட்ட கோபம் மற்றும் ஆத்திரத்தை தக்க வைத்துள்ள அடிமனதின் பகுதி மெதுவாக மறைகிறது. ¶தங்களை துன்புறுத்தியவர் மீது இருக்கும் அச்சம் அல்லது வெறுப்பை அறிந்து ஏற்றுக்கொண்டதும், தினமும் இதயத்தில் அன்புடன் படம் முன்பாக மலரை வைத்து கன்னத்தில் விழுந்த அறை, அடி அல்லது மற்ற துன்புறுத்தல்களை சூட்சுமமாக *பிராண* சக்தியின் அழகான ஓட்டமாக மாற்றி அமைக்கும் போது தோன்றும் வலி தரும் வேதனைகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஒரு நபர் தினமும் மலர்கள் மூலம் மன்னிக்கும் *பிராயச்சித்தத்தை* செய்யும் போது தன்னை துன்புறுத்திய நபர் அல்லது நபர்களை உளரீதியாக தொடர்பு கொண்டு,"நான் உன்னை மன்னித்து விட்டேன். நான் உனக்கு முன்பு ஒரு முறை இதைப்போன்ற தவறுகளை செய்து, நான் இயக்கிய *கர்மவினையை* நீ எனக்கு திரும்பி தந்தாய் என்பதை நான் அறிந்து

இருப்பதால், உன் மீது எனக்கு எந்த கோபமும் இல்லை," என்று சொல்லுங்கள். அந்த நபர் உயிருடன் இருந்தால், பரிகாரம் செய்யும் அந்த முப்பத்தி ஒன்று நாட்களில், முடிந்தால் நேருக்கு நேராக சந்தித்து அல்லது தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு, நீங்கள் அவரை மன்னித்து விட்டதை தெரிவிக்க வேண்டும். ¶இதை ஒப்பிடும் போது, தாங்கள் பெற்ற துன்புறுத்தலை மற்றவர்களுக்கு வழங்குவது பெரும்பாலானவர்களுக்கு அதிக சுலபமாக இருக்கும். பெரும்பாலும் "தங்களது அமைப்பில் இருந்து வெளியேற்றும் பொருட்டு," பெற்றோர்கள் தங்கள் குழந்தையை அடிப்பதில் அல்லது துன்புறுத்துவதில் ஈடுபடுகிறார்கள். இன்னொரு இடத்திற்கு செல்ல வேண்டிய அந்த துன்புறுத்தல், ஒரு மலராக மாறுவது மிகவும் கடினம் ஆகும். அந்த மோசமான நினைவுகளை எல்லாம், இந்த *பிராயச்சித்தம்* வெளிக்கொண்டு வருகிறது. இந்த ஒழுக்கம் வலிகள் அனைத்தையும் வெளிக்கொண்டு வருகிறது. இது அனைத்து அநீதிகளையும் மனதின் மேல்மட்டத்திற்கு கொண்டு வருகிறது. இருந்தாலும், இந்த *தந்திரம்* அல்லது முறை, பலருக்கு நல்ல பலனை அளித்துள்ளது. பிறரை மன்னிக்கும் செய்முறை மிகவும் கடினமானது, மற்றும் தங்களது பெற்றோர் அல்லது ஆசிரியரின் படம் முன்பாக மனதில் அன்புடன் மலரை வைக்க, சிலர் தங்கள் மனதின் சம்மதத்தை பெறுவதற்கு கடுமையாக முயற்சி செய்ய வேண்டி இருக்கிறது. ஆழமாக பதிந்து இருக்கும் ஆத்திரம் வெளிவரும் போது பலர் தொடர்ந்து தோல்வியை தழுவி, இறுதியில் மனப்பூர்வமாக மன்னிப்பதில் வெற்றி பெறுகிறார்கள். அந்த மன்னிப்பின் விளைவாக அந்த துன்புறுத்தல் மறக்கப்படுகிறது. அந்த பரிகாரம் செய்த எல்லோரும் இன்று அதிக மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். இப்போது அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி, ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு அக மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். ஆமாம், மனிதர்களை அடிப்பது தவறு. குழந்தைகளும் மனிதர்கள் தான் என்பதை மறக்கக்கூடாது.

சனிக்கிழமை

பாடம் 188

துன்புறுத்தலுக்கு துணைபுரியும்

கருத்துக்கள்!

"அடியும் உதையும் உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்" என்ற தமிழ் பழமொழியை பெரும்பாலும் மக்கள், ஒரு குழந்தையை அடிப்பது அல்லது துன்புறுத்தும் போது சொல்வதை நாம் கேட்டு இருப்போம். இந்த பழமொழி, சில கல்வி புத்தகங்களில் அச்சிடப்பட்டு, குழந்தைகளுக்கு கற்றுத்தரப்படுவதாக தோன்றுகிறது. ¶இதனால் நான் உலகெங்கும் இருக்கும் இந்து சமூகத்திடம்

பின்வரும் கேள்விகளை கேட்க நிர்பந்திக்கப்படுகிறேன். இதைப்போன்ற ஒரு கொடுமையான மற்றும் முட்டாள்தனமான பழமொழியை தொடர்ந்து சொல்லி, முதுகில் அடி வாங்காமல் இருக்க நள்ளிரவு வரை படிக்க வேண்டும், ஆசிரியருக்கு கீழ்படிந்து நடக்கவில்லை என்றால் பள்ளியில் கசையடி அல்லது பிரம்படி வாங்கி வீட்டிற்கு வந்ததும் பள்ளியில் அடி வாங்கியதற்கு கன்னத்தில் அறை வாங்கவேண்டும் என்பதைப் போன்ற பயமுறுத்தும் எதிர்பார்ப்புக்களை இளம் உள்ளங்களில் வளர்க்கத் தான் வேண்டுமா? *இம்சையை* ஊக்கவிக்கும் வேறு சில *சுலோகங்கள்*, வீட்டில் உடல்சார் துன்புறுத்தலுக்கு தேவையான வேறு சில வழிகாட்டல்கள் இருக்கின்றதா? இந்த இழிவான அணுகுமுறையை வரவிருக்கும் தலைமுறைக்கு வழங்குவது தான் நமது நோக்கமா? துரதிஷ்டசமாக அப்படித்தான் தோன்றுகிறது. அந்த பழமொழி தொடர்பான தங்களது சிறுவயது நினைவுகளை, எனது ஆசிய மடவாசிகள் அவ்வப்போது நினைவுக் கூர்வார்கள். குழந்தைகளுக்கு உடல்சார் தண்டனையை நியாயப்படுத்த விரும்பும் பெற்றோர்கள், *மனு தர்ம சாஸ்திரம்* (7.198) குறிப்பிடும் *"சாம, தான, பேத, தண்டத்தை,"* மேற்கோள் காட்டி பேசுவார்கள். "(சமரசம் பெறுவதற்கு) அன்பான வார்த்தைகளை பேசுதல், பரிசுகளை வழங்குதல், கருத்து வேறுபாட்டை தூண்டிவிடுதல், மற்றும் (துன்புறுத்துதல் அல்லது) தண்டனை வழங்குதல்" என்பது அதன் பொருள் ஆகும். இவை இராச்சியத்தில் இருக்கும் ஒரு எதிரி மீது வெற்றி பெறுவதற்கு, அடுத்தடுத்து பிரயோகம் செய்யவேண்டிய நான்கு படிநிலைகள் ஆகும். இது அரசர்களுக்கான அறிவுரை ஆகும். ஆனால் இது கண்டிப்பாக பெற்றோர்களுக்கான அறிவுரை இல்லை. இந்த தனிக்குடித்தன யுகத்தில், குழந்தைகள் அடிவாங்க அதிக காரணங்கள் இருந்தாலும், அடிவாங்கிய குழந்தை ஆறுதல் மற்றும் அன்பை பெறுவதற்கு வீட்டில் பாட்டி, அத்தை மற்றும் மற்ற சொந்தங்கள் குறைவாக இருப்பதால், அந்த விதிகள் மாற்றம் பெறும் என்று நான் நம்புகிறேன். ¶தனது நரம்பியல் அமைப்பு முன்பே அழுத்தத்தில் இருக்கும் நிலையில், குழந்தைகள் மேலும் மன அழுத்தத்தை தரும் போது, வெளியுலகில் வேலை செய்யும் தாய் வீட்டில் தனது குழந்தைகளை அடிக்கிறாள். தந்தை தனக்கு இருக்கும் பணிச்சுமை அழுத்தத்தை, கை அல்லது சாட்டை அல்லது பிரம்பு மூலம் தனது மகனின் முதுகில் அடித்து அல்லது அவனது கன்னத்தில் கைகளால் அறைந்து வெளிப்படுத்திக் கொள்கிறார். அந்த கொடிய செயலை செய்து, குழந்தைகள் வலி மற்றும் அவமானத்தில் துடிப்பதை கேட்பதால் மகிழ்ச்சி ஏற்படுகிறதா? "நான் தான் இங்கே தலைவன், நீ இல்லை!" என்ற உணர்வை அது ஊக்குவிக்கிறதா? ¶கடந்த நூற்றாண்டில் நாம் இரண்டு உலகப்போர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான சிறிய போர்களை சந்தித்து இருக்கிறோம். சிறு வயதில் அடி வாங்கிய குழுவில் இருந்து கொலையாளிகள் தோன்றுகிறார்கள். கன்னத்தில் அறைதல் மற்றும் கிள்ளுதல், துடுப்பு மூலம் துன்புறுத்துதல், கசையடி மற்றும் பிரம்படி ஆகியவை மற்றவர்களுக்கு வழங்குபவர் மூலமாக

வெளிப்படுகிறது. அதனால் இதற்கான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. துன்புறுத்துபவர் ஒரு நாள் துன்புறுத்தலை அனுபவிக்கிறார். இந்த வாழ்க்கையின் விதி தினமும் வெளிப்படுகிறது. இது *கர்மவினை* என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு செயலின் நோக்கம் மற்றும் பின்னணியாக இருக்கும் மனவெழுச்சியை பொறுத்து, அது தனக்கு சமமான அல்லது அதிக வலுவான எதிர்வினையை வழங்குகிறது. தேவைப்படும் போது கிளர்ச்சியை ஏற்படுத்த தயாராக இருக்கும் குற்றவாளி குழுக்கள் மற்றும் அமைதியாக பணியிடத்தில் வேதனையை அனுபவிப்பவர்கள் மற்றும் கண்டனம், நிந்தனைக்கு பயந்து எப்போதும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தாமல், ஒரு சாதாரண பணியில் இருப்பவர்களுக்கு உடல்சார் தண்டனை ஒரு அறிமுகம் போன்று விளங்குகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 189

விலக்கி வைத்தல் மற்றும்

சேர்ந்து இருத்தல்

1996 ஆண்டு வரை, நாற்பத்தி எட்டு ஆண்டுகளுக்கு எனது சர்வதேச சங்கத்தை சேர்ந்த குழந்தைகள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதை நான் அறியாமல் இருந்ததற்கு இரகசிய காரணம் ஏதாவது இருக்குமா? இருக்க வாய்ப்புள்ளது. தவறு என்பதை இந்துக்கள் மனப்பூர்வமாக அறிந்து இருந்தாலும், இம்சையை போதிக்கும் இந்த பயனற்ற பழமொழியில் விளக்கப்பட்டுள்ள கலாச்சார அணுகுமுறையை கண்மூடித்தனமாக பின்பற்றி, தங்களது மன அழுத்தம் மற்றும் கோபத்திற்கு தேவையில்லாமல் அங்கீகாரம் வழங்கி வருகிறார்கள். வேறு ஒரு நல்ல வழியைப் பற்றி அவர்கள் சிந்திப்பது இல்லை. அதிஷ்டவசமாக, ஒரு நல்ல வழி உள்ளது. ¶எனது சமயப்பணி 1949 ஆம் ஆண்டு தொடங்கி, இன்று வரை ஐம்பது வருடங்களை கடந்துவிட்டது. அது தற்போது பக்குவம் அடைந்த நிலையில், சார்ந்து இருப்பதற்கு எண்ணற்ற சந்திப்புக்கள் உள்ளன, சங்கத்தை வழிநடத்த வலுவான அனுபவம் இருக்கிறது மற்றும் எதிர்காலத்தின் எதிர்காலத்திற்குள் முன்னேறி செல்ல அதிக ஆற்றலும் இருக்கிறது. "குழந்தைகளை வளர்க்க வேறு சிறந்த முறைகள் இருக்கிறதா? நாங்கள் உடல், மனம் மற்றும் மனவெழுச்சி ரீதியாக அகிம்சையின் உயர்ந்த குறிக்கோளிற்கு எங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம். நமக்கு பிரியமானவர்கள் மீது வெளிப்படுத்துவதன் மூலம் எளிதாக விடுவிக்கப்படும் மனவெழுச்சிகளினால் அவதியில் இருக்கும் போது, இந்த உயரிய கொள்கையை எப்படி பின்பற்றுவது? வீட்டில் நடந்த குற்றங்களில் இருந்து எவ்வாறு விடுதலை பெறுவது மற்றும் அவை தலைமுறை தலைமுறையாக தொடர்வதை தவிர்க்க எவ்வாறு

முன்னுதாரணங்களை அமைப்பது?" என்று தங்களது கவலைகளில் தற்போது மிகவும் முக்கியமானதாக உருவெடுத்துள்ள கவலையைப் பற்றி பெற்றோர்கள் கேட்கிறார்கள். ¶வன்முறை இல்லாத பயனுள்ள மாற்று வழிகளை நாடும் பெற்றோர்களுக்கு, இன்று சிறந்த புத்தகங்கள் எளிதில் கிடைக்கின்றன. குழந்தையின் ஒவ்வொரு வயதிற்கும் ஒரு நிமிடம் என்று விலக்கி வைக்கும் ("time out") வழக்கத்தை இன்று கல்வியாளர்கள் ஒரு உத்தியாக பரிந்துரை செய்கிறார்கள். அதாவது பத்து வயது குழந்தையை பத்து நிமிடங்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும். ஒரு குழந்தையின் நடத்தை முறையாக இல்லையென்றால், அது மற்றவர்களிடம் இருந்து ஒதுக்கி வைக்கப்படும் என்பதை குறிப்பிடுகிறது. ஒரு அறையில் தனியாக ஒதுங்கி இருப்பது, அதற்கு முரணாக இருக்கும் சேர்ந்து இருப்பதுடன் ("time in") இணைந்து சிறப்பாக செயல்படுகிறது. "டைம் இன்" என்பது ஒரு குழந்தை விரும்பி செய்யும் நடவடிக்கையில் முழு ஈடுபாட்டுடன் பங்கு பெறுவதை குறிக்கிறது. "டைம் இன்" என்பது குழந்தைகள் தங்களது நேர்மறையான மற்றும் எதிர்மறையான உணர்ச்சிகளை பகிர்ந்து கொள்வதும் அடங்கும். அந்த சமயத்தில் பெற்றோர்கள் குழந்தைகள் சொல்வதை முழு ஈடுபாட்டுடன் கேட்கவேண்டும். ¶"சிவனை நேசிப்பவர்கள் எப்போதும் இளைஞர்களை பயமுறுத்தி தங்கள் காரியத்தை சாதிப்பது இல்லை. அவர்கள் குழந்தைகளை துன்புறுத்துவது, கோபத்துடன் கடுமையான வார்த்தைகளை பேசுவது, புறக்கணிப்பது அல்லது சித்ரவதை செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவது இல்லை. ஒரு குழந்தைக்கு வேதனையை அளித்து, அதனிடம் இருந்து சிறப்பான செயல்பாட்டை எதிர்பார்க்க முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள்," என்று குறிப்பிடும் எண்: 138 நந்திநாத சூத்திரத்தை போன்று, புதிய வழிமுறைகள் மற்றும் புதிய கோட்பாடுகள் உள்ளன. இன்றைய உலகை சூழ்ந்துள்ள குழப்பத்தை கவனத்தில் கொண்டு மனோதத்துவ நிபுணர்கள், சமூகவியல் நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் மூலம் விரும்பப்படும் இந்த புதுமையான அணுகுமுறைக்கு பொருத்தமாக இருக்கிறது. வல்லுனர்களால் "தண்டனை சக்தி" என்று அழைக்கப்படும் திட்டுவது, சலுகைகளை திரும்பப் பெறுவது மற்றும் அடிப்பதை சார்ந்து இருக்கும் செய்முறைகள், சிறியவர்கள் அல்லது பெரியவர்களிடம் இருந்து அதிக அனுகூலமான நடத்தையை வெளிக்கொண்டு வருவதில்லை என்ற உண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு மாறாக அந்த "தண்டனை சக்தி," பகை, ஆத்திரம் மற்றும் பழிவாங்கும் விருப்பத்தை உருவாக்குகிறது. உலகெங்கும் இருக்கும் சமூகங்களில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை துன்புறுத்தாமல் வளர்க்கும் பொருட்டு, எங்களது குடும்ப சமயப்பணியாளர்கள், Dr. ஜேன் நெல்சனின் *பாசிட்டிவ் டிசிப்ளின்* பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறார்கள்.

யுவ க்லேஷ

युवक्लेश



இளவயது சோதனைகள்

தாயை கடவுளாக கருதுபவனாக இரு. தந்தையை கடவுளாக கருதுபவனாக இரு. ஆசிரியரை கடவுளாக கருதுபவனாக இரு. விருந்தாளியை கடவுளாக கருதுபவனாக இரு.

கிருஷ்ண யஜுர் வேதம், தைத்ரீய உபநிடதம் 1.11.2. உபரா, ப. 537-8


MASTER
AB000451

வாஷிங்டன் ஸ்டேட்டில் இருக்கும் சியாட்டில் ஸ்பேஸ் நீடிலுக்கு அருகில் கூடியிருக்கும் இளம் வயதினர், சிரித்து பேசிக்கொண்டு இருக்கின்றனர். கடினமான இளமை பருவத்தை பாதுகாப்பாக தீங்கு இழைக்கப்படாமல் கடந்து செல்வதற்கு, இளம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நல்ல தோழர்களின் நட்பு தேவைப்படுகிறது.

திங்கட்கிழமை

பாடம் 190

கற்பித்துக்கொண்டும்

அன்பு செலுத்திக்கொண்டும் இருங்கள்

மாற்றங்கள் நிகழ்ந்தாலும், பல விஷயங்கள் மாறாமல் இருப்பதாக தோன்றுகின்றன. இந்த பிறவியில் அனுபவிக்கக் கொண்டு வந்த முற்பிறவி செயல்களின் பலன்களாக இருக்கும் *பிராரப்த கர்மவினைகள்* வெளிப்படத் தொடங்கி வளர்ச்சி தீவிரமடைந்து, அதிகமான மாற்றங்கள் நடைபெறும் பருவ வயதை அடையும் வரை, குழந்தைகள் முழுமையான *தேவர்களாக* இருக்கிறார்கள். நமது இன்றைய சமூகத்தில் ஒரு இந்து குழந்தையை வளர்ப்பதற்கு ஒரு வழிமுறை அல்லது நடத்தை வழிமுறைகள் இருக்கிறதா? இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. ஆனால் இந்து சமயத்தின் அடிப்படை தத்துவங்கள் அழியவில்லை. சனாதன தர்மம் மற்றும் *சிவனோடு திருநடனம்*, இந்து சமயத்தின் தற்கால வினாடிவினா மற்றும் (இந்த புத்தகம்) *சிவனோடு வாழ்தல்*, இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரம் மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்*, இந்து சமயத்தின தற்கால மீமெய்யியல் ஆகியவற்றில் விளக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கை முடிவுகளை எடுப்பதற்கும், ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பாக அதன் எதிர்கால பலன்களை சிந்தித்துப் பார்ப்பதற்கும், இளம் வாலிபர்களுக்கு கற்றுக்கொடுங்கள். இளம் வாலிபர்கள் தங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள, இந்த *மாஸ்டர் கோர்ஸ் ட்ரைலாஜி* தேவைப்படுகிறது. இவை வழங்கும் நற்பண்புகள் எவை? அமைதி; வீட்டில் இணக்கம்; மற்றவர்களின் தவறுகளை சகித்துக் கொள்ளுதல்; நமது மூதாதையர் வழங்கிய ஞானத்தை அங்கீகரித்தல்; சிந்தனை, வாக்கு மற்றும் செயலில் சுத்தம்; திருமணம் வரை புலனடக்கம்; இறுதியில் திருமணம் என்பது இரண்டு குடும்பங்களின் சங்கமம் என்பதால், சரியான வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுப்பதில் ஒத்துழைப்பு மற்றும் பொறுமையை கடைப்பிடித்தல். ¶திருமணம் என்பது பாலியல் ரீதியாக ஈர்க்கப்பட்ட இருவர் எடுக்கும் தனிப்பட்ட முடிவு மட்டும் இல்லை. ஒரு திருமணம் வெற்றி பெறுவதற்கு, அந்த இளைஞன் மற்றும் இளம் பெண்ணின் குடும்பத்தாரிடம் இருந்தும் ஆதரவு தேவைப்படுகிறது. வரதட்சணை மூலம் ஒரு பெண் தன் கணவனை விலைக்கு

வாங்குவது அல்லது ஒரு மணமகன் தனது தாய்க்கு பணிவிடை செய்யும் பொருட்டு அவளை ஒரு வேலைக்காரியாக தன் வீட்டிற்கு அழைத்து செல்ல அவன் விலைப்பேசும் வழக்கம் தொடர்கிறது. ¶இவை அனைத்தையும், கலப்பு பண்புகளுடன் வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு அவ்வப்போது விளக்க வேண்டும். இன்றைய உலகில் குழந்தைகள் பெற்றோர்களுடன் இருக்கும் நேரத்தை காட்டிலும் தங்கள் தோழர்களுடன் அதிக நேரம் இருக்கிறார்கள்! இதனால் பெற்றோர்கள் நேரம் கிடைக்கும் போது அவர்களுக்கு நன்றாக கற்றுத் தர வேண்டும், மற்றும் மணமகன் மற்றும் மணமகளின் பெற்றோர்கள் சிறப்பான இணக்கத்தை பெறும் ஒரு உறுதியான மற்றும் மகிழ்ச்சிகரமான திருமணத்திற்கு தங்கள் குழந்தைகளை தீய வழிகளுக்கு இரையாக அனுமதிக்காமல், அவர்களை வீட்டிலேயே வைத்து இருக்க, நன்றாக நிரூபணமான விஷயங்களைப் பற்றி தொடர்ந்து அவர்களுடன் பேசிக்கொண்டு இருக்கவேண்டும். இருதரப்பு குடும்பங்களும் தங்கள் குழந்தைகளுடன் தாங்களும் திருமணம் செய்து கொள்ளும் போது, அது ஒரு அன்பு வட்டமாக மாறுகிறது. ¶இந்த தகவல்களை குழந்தைகள் பருமடைவதற்கு முன்பாக, அவர்களின் இளம் வயதில் பேசவேண்டும். உங்கள் வாழ்க்கை மற்றும் உங்களுக்குத் தெரிந்த மற்றவர்களின் வாழ்க்கையில் இருந்து பல முன் உதாரணங்களை எடுத்து சொல்லுங்கள். அவர்கள் பருவ வயதை அடைந்ததும், தாங்கள் கேட்டது அனைத்தையும் அவர்கள் புறக்கணிக்க வாய்ப்புள்ளது. ஆனால் நீங்கள் புகட்டிய அறிவு அவர்களின் அடிமனதில் ஆழமாக பதிந்து இருக்கிறது, மற்றும் அது சரியான நேரத்தில் வெளிவருவதற்கு காத்து இருக்கிறது. அதனால் அவர்கள் கேட்பது அல்லது விவாதிப்பதில் ஆர்வம் காட்டவில்லை என்றாலும், அவர்கள் கேட்கிறார்கள் என்பதில் உறுதியாக இருங்கள். உங்கள் குழந்தைகள் எதிர்கொள்வதைப் போன்ற பிரச்சனையை அனுபவிக்கும் இன்னொருவரை பற்றி நீங்கள் இரகசியமாக பேசுவதை, அவர்கள் கேட்டுக்கொண்டு இருப்பார்கள் என்பதில் உறுதியாக இருக்கலாம். அது மோசமான சூழ்நிலையில் இருக்கும் ஒரு உயர்நிலை பள்ளி சீனியர் மாணவர் பற்றி நீங்கள் படித்த கட்டுரையாக இருக்கலாம் அல்லது நீங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்தை ஆக்கப்பூர்வமாக சிந்தித்து உருவாக்கிய படிப்பினை வழங்கும் கதையாக இருக்கலாம். ஒரு நல்ல கதையை இந்த பூமியில் இருக்கும் எல்லோரும் கேட்க விரும்புவார்கள் என்பதால், அவர்கள் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள். நீங்கள் முன்பு பதிய வைத்த *வாசனாக்களை* உயர்த்துவதற்கு முறையாக வடிவைக்கப்பட்ட உவமை பலன் தருவதாக இருக்கும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 191

இளம் வயதில்

செய்யும் தவம்

நீங்கள் எடுக்க விரும்பிய முடிவை பருவ வயதில் இருக்கும் உங்கள் குழந்தை எடுத்தால், "நான் சொன்னேன் இல்லை" என்று சொல்லாமல், அவன் எடுத்த முடிவிற்கு தலை வணங்கி, "நீ நல்ல முடிவை எடுத்து இருக்கிறாய்," என்று சொல்லுங்கள். நம்புவது கடினமாக இருக்கலாம், ஆனால் நீங்கள் பேசுவதை அவர்கள் கேட்கிறார்கள். நீங்கள் பேசும் வார்த்தைகள், என்றுமே உறங்காமல் இருக்கும் அடிமனதின் ஆழத்தில் சென்று பதிகின்றன. அதனால் பேசும் வார்த்தைகளில் கவனமாக இருந்து, முகத்தில் புன்னகையுடன் ஆரோக்கியமான *ஆயுர்வேத* இனிப்புக்களை (வெள்ளை சர்க்கரையில் தயாரிக்கப்படாமல், வெல்லம் அல்லது தேனில் தயாரிக்கலாம் அல்லது நாட்டு சர்க்கரையில் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்) நிறைய வழங்குங்கள். அதிகமாக பதப்படுத்தப்பட்ட வெள்ளை சர்க்கரை மூலம் பல் சொத்தை மற்றும் நீரழிவு நோய்கள் ஏற்படுவதால் நாங்கள் அதை பரிந்துரைக்க விரும்பவில்லை. வீட்டில் உருவாக்கப்படும் இந்த நோய்களை குணப்படுத்த நேரமும் அதிக பணமும் விரயமாகிறது. சரி தானே? மனம் மற்றும் உடலின் ஆரோக்கியம் வீட்டில் தொடங்குகிறதா அல்லது முடிகிறதா. ¶பதின்ம வயதில் இருப்பவர்கள் பாலுறவு, ஆசை மற்றும் அவநம்பிக்கை, சுதந்திரம் மற்றும் மேலும் பல காரணங்களால் ஏற்படும் வலிகளால் வேதனையை அனுபவிக்கிறார்கள். அவர்கள் இந்த காலகட்டத்தில் ஒரு நோயாளி போன்று இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த இயக்குநீர் மூலம் மாசுப்படுத்தப்படுகிறார்கள், என்று 1990 ஆம் ஆண்டின் குளிர் காலத்தில், மாஸ்கோ நகரில் விண்வெளி ஆய்வாளர் கார்ல் சாகன் என்னிடம் தெரிவித்தார். அவர் கூறியதில் புதிதாக ஒன்றும் இல்லை. "உங்கள் வீட்டில் இருக்கும் இளைஞர்கள் என்ன செய்து வருகிறார்கள்? அவர்கள் தங்கள் வீட்டில் இருக்கும் பெரியவர்களை அவமதிக்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களை அவமதிக்கிறார்கள். அவர்கள் கட்டுப்படுத்த முடியாத ஆசையால் தூண்டப்பட்டு தெருக்களில் அமளியை ஏற்படுத்துகிறார்கள். அவர்களிடம் ஒழுக்கங்கள் அழிந்து வருகின்றன. அவர்களிடம் இருந்து நாம் எதை எதிர்பார்ப்பது?" என்று இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கிரேக்க தத்துவ ஞானி பிலாட்டோ தனது வருத்தத்தை தெரிவித்தார். அவர் அதை சொல்லி பல வருடங்கள் கழித்தும், இன்று மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா என்ன? அதனால் தாய், தந்தை, செவிலி மற்றும் மருத்துவராக இருங்கள். அதனால் ஒன்றாக அமர்ந்து பதிமூன்று முதல் பத்தொன்பது வயது வரையிலான ஏழு வருடங்களைப் பற்றி கலந்து ஆலோசித்து ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். இது நீண்ட காலத்திற்கு செய்யவேண்டிய கடுமையான முயற்சி போல தோன்றுகிறதா? அதை செய்து முடிப்பது ஒரு சாத்தியமில்லாத கனவு போன்று தோன்றுகிறதா? அது அவ்வாறு

தோன்றினாலும், இளம் வயது சோதனைகள் என்பது பெரிய குடும்பம், கூட்டுக் குடும்பம், தனக்குடித்தனம் மற்றும் குடும்பமாக இல்லாதவர்கள் வாழ்க்கையிலும் அங்கம் வகிக்கிறது. மிகவும் முக்கியமாக அன்பு மற்றும் மற்றவர்களின் உணர்வுகளுக்கு பரிவுடன் மதிப்பு அளிப்பதில் நீங்கள் கவனம் செலுத்தினால், உங்களால் வெற்றி பெற முடியும் என்பதை உணருங்கள். நீங்கள் அவர்களை வளர்த்ததைப் போல, அவர்கள் வருங்காலத்தில் தங்கள் குழந்தைகளை வளர்ப்பார்கள் மற்றும் நீங்கள் அவர்களை வளர்த்ததில் காட்டிய பொறுமை, மனஉறுதி, சகிப்புத்தன்மை மற்றும் முக்கியமாக அன்பிற்காக அவர்கள் என்றும் உங்கள் மீது பாசமாக இருப்பார்கள். அதனால் நம்பிக்கையுடன் முன்னேறி, ஒரு திட்டத்தை வகுத்திடுங்கள். நிலைமை மோசமாக இருந்தால், அதற்காக ஒரு போர்க்கால திட்டத்தை வகுத்திடுங்கள். தைரியமாக நிமிர்ந்து நின்று, நீங்கள் அவர்களை வளர்க்கும் போது இகழ்ச்சி, கீழ்ப்படியாமை மற்றும் அவமானத்தை எதிர்கொள்ள தயாராக இருங்கள். அதைப் போல மயக்கத்தில் இருக்கும் ஒரு நோயாளி கூச்சலிட்டு பிதற்றினாலும், அவர் மீது ஒரு செவிலி அதிக அக்கறை செலுத்துவது இல்லை. பதின்ம வயதினருக்கு பகுத்தறிவு உயர்ந்த பண்பாக இருப்பதில்லை. அவர்களிடம் அதைப் பற்றி சொல்வது அவர்களை தனிமைப்படுத்துவதாக இருக்கும், ஏனென்றால் உங்களைக் காட்டிலும், அவர்கள் தங்களை அதிக புத்திசாலிகளாக கருதுகிறார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம், ஏனென்றால் அவர்கள் வீட்டில் இருப்பதைக் காட்டிலும் தங்கள் தோழர்களுடன் அதிக நேரம் இருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. பெற்றோர்களாக இருக்கும் நீங்கள் இந்த குறையை நினைவில் வைத்து, அதற்கு நியாயமான முறையில் சமன் செய்யவேண்டும். ¶நீங்கள் இளம் வயது சோதனைகளை பொறுத்துக்கொண்டு ஏழு வருட தவத்தை வெற்றிகரமாக செய்து முடித்த பிறகு, உங்களால் அமைதியாக ஆனந்தமாக அமர்ந்து ஆத்ம திருப்தியை அனுபவிக்க முடியும். இது நீண்டநாட்கள் நிலைத்து இருக்காது என்பதில் கவனமாக இருங்கள். இந்த காலகட்டத்தில் அவர்கள் உண்மையில் குழம்பிய நிலையில் இருப்பதால், நீங்கள் இரக்கத்துடன் சிறிது கனிவாக நடந்துகொள்ளுங்கள். அவர்கள் தங்கள் தோழர்கள் மற்றும் பெற்றோர்களுடன் நல்ல உறவை பராமரித்து திருமணம், வேலை, தொழில் வாழ்க்கை மற்றும் சமூக எதிர்பார்ப்புக்களை சமாளித்து, நிச்சயமற்ற எதிர்காலத்துடன் இருக்கும் ஒரு உறுதி இல்லாத உலகில் அவர்கள் முதிர்ச்சி பெற்று வருகிறார்கள். அவர்கள் மனநிலையை புரிந்துகொள்ளாமல், முக்கியமான தருணங்களில் சில பெற்றோர்கள் உதவியாக இல்லாத காரணத்தால், பல குழந்தைகள் தற்கொலை செய்து கொள்வதில் எந்த அதிசயமும் இல்லை. இதனால் ஒரு குழந்தை செய்து கொள்ளும் தற்கொலைக்கு அதன் பெற்றோர்கள் காரணமாக விளங்குகிறார்கள். இத்தகைய சம்பவம் உங்கள் வீட்டில் நடக்காமல் இருப்பதில் கவனமாக இருங்கள். ஒரு தாயாக இருங்கள். ஒரு தந்தையாக இருங்கள். ஒரு

செவிலியாக இருங்கள். ஒரு மருத்துவராக இருங்கள். மிகவும் முக்கியமாக, இந்த குழப்பமான மற்றும் கொந்தளிப்பு மற்றும் பிரச்சனைகள் நிரம்பிய இந்த இளம் வயதில் அவர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பராக இருங்கள்.

புதன்கிழமை

பாடம் 192

மனவேதனை அனுபவித்த

ஒரு பெண்ணின் கதை

மலேசிய நாட்டை சேர்ந்த பதினெட்டு வயது இந்து இளம் பெண், ஊக்கமிழந்து தற்கொலை முயற்சி செய்வதற்கு முன்பாக தனது பெற்றோர்களுக்கு எழுதிய கடிதத்தை இங்கே காணலாம். அதில் தனது பெற்றோர்கள் தன் மீது ஏற்படுத்திய மன அழுத்தம் முக்கிய காரணங்களில் ஒன்றாக அவள் குறிப்பிட்டு இருந்தாள். அந்த கடிதம் இந்துயிசம் டுடே பத்திரிகையின் மலேசியா பதிப்பில் வெளியாகி இருந்தது. ¶"அன்புள்ள தாய் மற்றும் தந்தைக்கு: நான் இதை ஏன் செய்தேன் என்று உங்களால் என்றுமே புரிந்துகொள்ள முடியாது. எனக்கு நீங்கள் எப்போதும் சிறந்ததையே செய்ததாக கருதுகிறீர்கள். எனக்கு எது சிறப்பாக இருக்கும் என்பது உங்களுக்கு தெரியும். எப்போதும் உங்கள் உதவிக்கரங்கள் தேவைப்படும் ஒரு பொறுப்பற்ற அப்பாவியாக, நீங்கள் என்னை நினைத்தீர்கள். என்னை சரியான வழியில் இயக்க உங்களது கடுமையான சொற்கள் தேவைப்படும் என்று நீங்கள் நினைத்தீர்கள். ¶"ஆனால் அதுவே மிகப்பெரிய பிரச்சனையாக மாறியது. வாழ்க்கையில் எனக்கு என்றுமே கருத்து சுதந்திரம் வழங்காமல், எனக்காக நீங்களே அந்த பாதையை தேர்வு செய்தீர்கள். அந்த சரியான பாதை எனக்கு உளவியல் சிறையாக மாறிவிட்டது என்பதை நீங்கள் உணர்ந்தீர்களா? உங்களுடைய பொறுப்பான கரங்கள் எனக்கு சங்கிலிகளாக மாறிவிட்டது என்பதை உணர்ந்தீர்களா? அந்த கடுமையான சொற்கள் குத்துமுள் கம்பியாக மாறி என்னை துன்புறுத்திக்கொண்டு இருந்ததை நீங்கள் உணர்ந்தீர்களா? இல்லை, நீங்கள் இவற்றை என்றுமே உணர்ந்ததில்லை. ¶"நீங்கள் கோபமாக இருந்த போது என்னை பல முறை கடுமையான சொற்களால் திட்டி இருக்கிறீர்கள். அப்போதெல்லாம் நீங்கள் அவற்றை தெரியாமல் சொல்லி விட்டதாக காரணம் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் அந்த சொற்களால் நான் பெற்ற வேதனையை உங்களால் உணர முடியுமா? முடியாது. நீங்கள் அதைப் பற்றி என்றுமே சிந்தித்தது இல்லை. நான் கோபமாக உங்களை கடிந்துகொண்டால் சரியாக இருக்குமா? அதே காரணத்தை சொன்னால் நீங்கள் என்னை மன்னிப்பீர்களா? எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ¶"நான் வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறேன் என்பதைப்

பற்றி நீங்கள் எப்போதாவது சிந்தித்தது உண்டா? நான் எந்த கல்லூரிக்கு செல்ல வேண்டும் மற்றும் கல்வியில் எந்த துறையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்தீர்கள். உங்கள் நண்பர்களிடம் பெருமையாக சொல்லிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அந்த கல்லூரி மிகவும் சிறந்த உயர்தர கல்லூரியாக இருந்தது. எனக்கு பள்ளி மற்றும் புத்தகங்களைத் தவிர வேறு பல விஷயங்களும் தேவைப்பட்டன என்றாலும், உங்களுக்கு அது முக்கியமாக இல்லாததால், அவற்றைப் பற்றி நீங்கள் என்றுமே சிந்தித்ததில்லை. உங்கள் நண்பர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் கூடவேண்டும் என்பதற்காக, நான் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டீர்கள். அதன் காரணமாகவே, நான் மருத்துவர் பட்டம் பெறவேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டீர்கள். அதில் எனக்கு சிறிதும் விருப்பம் இல்லை. ¶“எனக்கு ஒரு சமூக வாழ்க்கையின் தேவை இருந்ததையும், வாழ்க்கையில் உண்மையான நிரந்தர நண்பர்களின் நட்பு கிடைக்க வேண்டும் என்ற ஆசையையும் நீங்கள் என்றுமே உணரவில்லை. நான் அதைப்பற்றி உங்களிடம் சொன்ன போது, இந்தியர்களாகிய நாம் அவர்களை காட்டிலும் கலாச்சாரத்தில் சிறந்தவர்கள் என்றும், அவர்களுக்கும் நமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று என்னை பரிகாசம் செய்தீர்கள். எனது சொந்த வாழ்க்கையில் எனது கட்டுப்பாட்டில் நீங்கள் எதையும் விட்டு வைக்கவில்லை. இறுதியில் எனது வாழ்க்கையில் முக்கியமான நபரை நான் சந்தித்தேன் என்று உங்களிடம் தெரிவித்த போது, நான் எனது வாழ்க்கையை சமாளிக்க கற்றுக்கொள்வேன் என்பதையும், உங்களது பிடியில் இருந்து என்னை விடுவித்துக் கொள்வேன் என்பதையும் உங்களால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. அதனால் நான் யாரை சந்திக்க வேண்டும் மற்றும் நான் யாரை சந்திக்க வேண்டாம் என்பதையும் நீங்கள் முடிவு செய்தீர்கள். நான் வாழ்க்கையில் பெற்ற முதல் உண்மையான உறவை துண்டிக்க நீங்கள் கட்டாயப்படுத்தினீர்கள். நீங்கள் அந்த நபரைப் பற்றி தொடர்ந்து நச்சரித்து வந்தீர்கள். நான் குடும்பத்திற்கு களங்கம் விளைவிப்பதாக கூறினீர்கள். ‘...எல்லோரும் என்ன பேசுவார்கள்?’ என்று கேட்டீர்கள். நீங்கள் என் வாழ்வை நாசம் செய்து விட்டீர்கள். நமக்குள் இருக்கும் 'உறவு' ஒரு கேலிக்கூத்து என்றே சொல்லவேண்டும். அதனால் அதை தொடர்வதில் எந்த பயனும் இல்லை. நான் உங்களிடம் இருந்து தப்பிக்க பல வழிகளை தேடினேன், ஆனால் 'வேண்டியது கிடைக்காமல்' திரும்பினேன். இப்போது எனக்கு வேறு வழி தெரியவில்லை. 'நான் வேண்டியது எனக்கு கிடைக்கவில்லை' என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒருவரை நீண்டகாலத்திற்கு கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியாது என்பதை நினைவில் வைத்து இருங்கள். இனி நீங்கள் வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்வுடன் வாழவேண்டும். நீங்கள் உங்களை மன்னிக்கமாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன்.” ¶மிகவும் சோகமாக இருக்கிறதா? ஆமாம், மிகவும் சோகமாகத் தான் இருக்கும். அதிஷ்டவசமாக அந்த இளம் பெண் தனது

சோதனையை வெற்றிகரமாக கடந்துவிட்டாள். தான் எழுதிய கடிதம் பல இளைஞர்கள் மனதில் இரக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்து, அவள் பதிப்பாளர்களை தொடர்பு கொண்டு, தற்கொலை பிரச்சனைக்கான முடிவு இல்லை என்பதை தான் தற்போது அறிந்துள்ளதை, மற்ற இளைஞர்களுக்கு எச்சரிக்கையாக வழங்க விரும்பினாள். சில பிரச்சனைகள் மிகவும் மோசமானதாக தோன்றினாலும், அவற்றை சமாளிக்க முடியும் என்று அவள் உறுதியாக நம்புகிறாள். பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் விரக்தி அடையாமல், தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நன்றாக சமாளிக்க, தான் நடத்திய தற்கொலை போராட்டம் மற்றவர்களுக்கு உதவியாக இருக்கட்டும் என்று அவள் தான் எழுதிய கடிதத்தை பத்திரிகையில் வெளியிட ஒப்புக்கொண்டாள்.

வியாழக்கிழமை

பாடம் 193

கதவுகளை திறந்து

வைத்து இருங்கள்

தங்கள் குழந்தைகளுக்கு இந்து சமயத்தை பற்றி கற்றுத்தந்தால், அவர்கள் பள்ளி நண்பர்கள் மத்தியில் வேறுபடுத்திக் காட்டும் என்று பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தங்கள் சமயத்தைப் பற்றி கற்றுத் தருவது இல்லை. ஆனால் அதற்கு "இந்து சமயத்தை விவரிக்கும் கதைப்புத்தகம்" போதுமானதாக இருக்காது. தற்போது இயக்கத்தில் இல்லாத சமூகம் இருந்த காலத்தில் உருவான கதைகள் நமக்கு தேவையில்லை. நமக்கு பரவெளி, காலம் மற்றும் புவியீர்ப்பு சக்தியை போன்று நிரந்தரமாக இருக்கும் தத்துவம், மீமெய்யியல் மற்றும் மனோதத்துவ மெய்ப்பொருள்கள் தேவைப்படும். இவற்றை அவர்கள் மனதில் நன்றாக பதிய வைக்கவேண்டும். என்றுமே வீழ்ச்சி அடையாத, நிரந்தர உண்மைப்பொருள்களை கற்பதற்கு வயது வரம்பு எதுவும் இல்லை. ஒரு சில உண்மைப்பொருள்களைக் கொண்டு உருவான உலக சிந்தனை சில பொய்யான கருத்துக்களை காட்டிலும் சிறந்து விளங்குகிறது. எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும், உங்கள் இளம் வாலிபர்களை புறக்கணிக்க வேண்டாம். பெற்றோர்களாகிய உங்களது துணையுடன் அவர்கள் சிறப்பாக செயல்படுவார்கள். ¶சூழ்நிலை சரியாக இல்லாத போது வீட்டில் வந்து ஆறுதல் சொல்கின்ற மற்றும் உங்கள் மீது நம்பிக்கை வைத்து அன்பு செலுத்தி, மனம் நிறைய பொறுமையுடன் புரிந்துகொள்ள முயற்சி செய்கின்ற நண்பர்களைப் போன்று, நீங்கள் இருவரும் அவர்களுக்கு நண்பர்களாக இருக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் கீழ்ப்படியாத போது, நீங்கள் உங்கள்

மனக்கதவுகளை மூடிக்கொண்டு அவர்களுடன் தொடர்புகளை துண்டித்துக்கொள்ள வாய்ப்புள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் உலகில் இருக்கும் மற்றவர்கள் உங்கள் குழந்தைகள் தன் பக்கம் இழுத்து, உங்களிடம் இருந்து மேலும் விலக்க வாய்ப்புள்ளது என்பதை நினைவில் வைத்து அவர்களுக்கு ஒரு நண்பனாக இருங்கள். அவர்களை உங்கள் மனம் மற்றும் இதயத்தில் இருந்து விரட்டி அடிக்க வேண்டாம். எப்போதும் இரக்கமுள்ள இதயம், அன்புக்கரங்கள் மற்றும் மற்றவர் உணர்வுகளை புரிந்துகொள்ளும் மனதின் கதவுகளை எப்போதும் திறந்து வையுங்கள். அவர்களின் போக்கை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது அங்கீகரிக்கவில்லை என்றாலும், அவர்கள் பிரச்சனைகளை கேட்டறிந்து, அவர்களின் தேவைகளுக்கு முன்வந்து உதவுங்கள். தினமும் மூன்று முறை கட்டி அணைத்தால் பிரச்சனைகளில் இருந்து விலகி இருக்கலாம். இது நவீன இந்து தர்மம். இது பழங்கால இந்து தர்மம். இது வாழ்ந்துகொண்டு இருக்கும் சிவபெருமானின் தற்கால கலாச்சாரம் ஆகும். ¶சனாதன தர்மம் வழங்கும் அடிப்படை தத்துவங்களை இளைஞர்கள் தமக்குத்தாமே நிரூபித்துக் கொள்ள வேண்டியிருக்கும். சிலர் அதை நேரடியாக செய்து முடிப்பார்கள் மற்றும் சிலர் சுற்றுவழியில் சென்று, தத்துவங்கள் அனைத்தையும் நிராகரிக்க முற்பட்டு அதன் மூலம் அதை நிரூபிப்பார்கள். நேரடியான வழி என்பது எதை குறிக்கிறது? அதை நேரடியாக ஏற்றுக்கொண்டு, உங்களது சொந்த வாழ்க்கை அனுபவம் மூலம் அதை நிரூபித்துக் கொள்வதை குறிக்கிறது. இளம் வயதினர் ஒரு குறிப்பிட்ட வயது அடைந்ததும் குடும்பத்தில் இருந்து சிறிது விலகி சென்றால், நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது. சில அனுபவங்களை அனுபவிப்பதன் மூலமாகவும், தாங்கள் அந்த அனுபவங்களை எவ்வாறு உருவாக்கினார்கள் என்பதையும் தெரிந்துகொள்வதன் மூலமாகவும், அவர்களால் *கர்ம* விதியை புரித்துக்கொள்ள முடிகிறது. அவர்களுக்கு ஒரு முந்தைய பிறவியில் கிடைக்காத, சில அடிப்படை உணர்தல்களை அவர்கள் பெறவேண்டி இருக்கிறது. அவர்களுக்கு இந்த அடிப்படை உணர்தல்கள் ஒரு முந்தைய பிறவியில் மிகவும் வலுவாக கிடைத்து இருந்தால், அவர்களுக்கு கற்பிப்பதில் நம்பிக்கை மிகவும் வலுவாக இருக்கும். இதைப் போன்ற விஷயங்கள் ஒரு வாழ்க்கையில் இருந்து இன்னொரு வாழ்க்கையிலும் தொடர்கிறது, மற்றும் முடிவில் ஆன்மா அவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. ¶இந்துக்களாக பிறந்தாலும் தங்களது சொந்த சமயத்தைப் பற்றி குறைவான புரிதலுடன் வளர்ந்த இளம் வாலிபர்களுடன், கடந்த முப்பது ஆண்டுகளாக சமயப்பணியில் ஈடுபட்டுள்ள புது யுக *சுவாமிகளால்* நன்றாக இணைய முடிகிறது. பிரச்சனைகள், ஆபத்துக்கள் மற்றும் சில தீர்வுகளையும் இந்த *சுவாமிகள்* அறிந்து இருக்கிறார்கள். அவர்களும் "நவீன யுகத்திற்கு ஏற்ப" வளர்க்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த நம்பிக்கை மூலம் அநாதி உண்மைப்பொருள்களை கற்றுக்கொண்டு, அவற்றை தற்போது ஈடு இணையற்ற வீர்யம் மற்றும் யதார்த்தமான தெளிவுடன் விளக்குகின்றனர்.

உங்கள் வீட்டில் இருக்கும் இளம் ஆண் அல்லது பெண்ணை அவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். அந்த அறிமுகத்தால், அந்த இளம் ஆண் அல்லது பெண்ணுக்கு நல்ல புரிந்துணர்வுள்ள ஒரு நண்பன் மற்றும் மத ஆலோசகரின் பரிச்சயம் கிடைக்கும். ¶நமது இளமை பருவத்தில் பழங்கால வழிமுறைகள் கடினமானதாக, பழமைவாதமாக அல்லது முட்டாள்தனமாக தோன்றலாம். காரணங்களை ஆய்வு செய்வதுடன் நமது கலாச்சாரம், தத்துவம் மற்றும் மதத்தின் பொருளை தெரிந்துக்கொள்ள உங்கள் இளம் வாலிபருக்கு உதவியாக இருங்கள். அதன் பிறகு சனாதன தர்மம் அழியாமல் பாதுகாப்பதற்கு மற்றும் புதிய சுழற்சி மீண்டும் தொடங்கும் போது அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அந்த தர்மத்தை பாதுகாப்பதற்கும், அந்த தர்மம் அவர்களுக்கும் சொந்தமாகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 194

கல்வி மற்றும்

தொழில் வாழ்க்கை

இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு பொருந்தவில்லை என்றாலும், அவர்கள் அதில் வேலை செய்தேயாக வேண்டும் என்று அவர்களின் குடும்பங்கள் நிர்பந்திக்கிறார்கள். அவர்கள் பட்டப்படிப்பை பெற்றதும், "நான் அடுத்து என்ன செய்வது? எனது குடும்பம் இருக்கும் ஊருக்கு அருகில் வேலையை தேடவெண்டுமா? நான் வெளிநாட்டிற்கு சென்று வேலை தேடவெண்டுமா?" என்று தங்களிடம் கேட்டுக்கொள்கிறார்கள். குடும்பம் வழங்கும் நிர்பந்தம் தொடர்கிறது, மற்றும் சில சமயங்களில் மனதை புண்படுத்தும் கருத்துக்கள் இளைஞனை ஊக்குவிக்கின்றன. ஆனால் இரக்கமற்ற இதயங்களை கொண்ட கோபக்கார பெற்றோர்களின் மூலம் தயவின்றி அடித்து சித்ரவதை செய்யப்பட்டு தங்கள் வீடுகளில் இருந்து துரத்தப்பட்ட இளைஞராக இருந்தால், அவர் இன்றைய உலகில் சொந்தமாக சிந்தித்து, தங்கள் வாழ்க்கையை சொந்த கைகளால் தாங்கிப் பிடித்து, தங்கள் எதிர்காலத்திற்கு சொந்த குறிக்கோள்களை உருவாக்க வேண்டியுள்ளது. ¶கல்வி மற்றும் தொழில் வாழ்க்கை பற்றிய நீண்டகால இலக்குகளை, பட்டப்படிப்பு முடிப்பதற்கு முன்பாக திட்டமிட வேண்டும். குடும்பத்துடன் சேர்ந்து திட்டமிடுவது பொருத்தமாக இருக்கும் என்றாலும், தங்கள் இளைஞர்கள் ஆக்கப்பூர்வமான எதிர்காலங்களுடன் திருப்திகரமான வாழ்க்கைகளை வாழவேண்டும் என்கிற எதிர்பார்ப்புடன் மனதில் அதிக அன்புடன் ஒத்துழைப்பு வழங்கும் யதார்த்தமான குடும்பமாக அந்த குடும்பம் இருக்கவேண்டும். குழந்தைகளை அதிக கண்டிப்புடன் வளர்த்தால், அவர்கள் தற்கொலை

செய்துகொள்ளவும் வாய்ப்புள்ளது என்பதை நாம் முன்பு பார்த்து இருக்கிறோம். ¶முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர்களுக்கு முன்பாக, அமெரிக்காவில் இருந்த மக்கள் தங்கள் குடும்பம், தங்கள் சமூகம், தங்கள் நாடு, மற்றும் தங்கள் நாடு மற்றும் தங்கள் தொழிலின் வளர்ச்சிக்கு தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதை அடையும் போது, எதிர்காலத்தில் தாங்கள் என்ன செய்யவிருக்கிறார்கள் என்பதை அறிந்து இருந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையை திட்டமிட்டபடி வாழ்ந்து முடித்தனர். எனக்கு பதினேழு வயதாக இருந்த போது, நான் தற்போது என்ன செய்துக்கொண்டு இருப்பேன் என்பதை அறிந்து இருந்தேன். தெளிவான மனதுடன் எதிர்காலத்தில் ஒரு நேரடி பாதையை பார்க்கும் திறமையை பெற்று, அந்த பாதை வெளிப்படுவதற்கு தேவையான பண்பு மற்றும் மன உறுதியுடன் வாழ்வது முழுமையான ஈடுபாடு ஆகும். சமூகம் அன்று நிலையாக, வலுவாக மற்றும் எளிமையான பிரச்சனைகளுடன் இருந்தது. ¶முதல் மற்றும் இரண்டாம் உலகப்போருக்கு பிறகு, குடும்பம் பிரியத் தொடங்கியது மற்றும் மக்களிடம் முழுமையான ஈடுபாடும் குறைந்து விட்டது. அந்த காலத்தில் "முழுமையான ஈடுபாடு" என்ற சொல்லுக்கு பதிலாக "விருப்பத்தேர்வு" பரவலாக பயன்படுத்தப்பட்டது. "நான் எனது விருப்பத்தை தேர்வு செய்து, அது எங்கே அழைத்து செல்கிறது என்பதை கவனிப்பேன். அதன் பிறகு நான் இன்னொரு விருப்பத்தை தேர்வு செய்து, அது எங்கே அழைத்து செல்கிறது என்பதை கவனிப்பேன்." இன்று மக்களில் யாரும் ஒரு வேலையில் தங்கி தங்களை முழுநிறைவாக்கிக் கொள்வது இல்லை. அவர்கள் பத்து வேலைகளில் முழுநிறைவு பெறாமல் அரை மனதுடன் மேலோட்டமாக வேலை செய்ததால், அந்த வேலையின் தரம் பாதிக்கப்பட்டது. விருப்பத்தேர்வுக்கு வழங்கப்படும் வாய்ப்புக்கள் மிகவும் முக்கியமானதாக விளங்கின. "நீ உன் வாழ்க்கையில் என்ன செய்யவேண்டும் என்பதை முடிவு செய்துகொள். நீ மகிழ்ச்சியாக இருந்தால் எங்களுக்கு போதும்," என்று பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஊக்குவிப்பார்கள். ஆனால் அதே குழந்தை தான் உண்ணும் உணவு மற்றும் அணியும் ஆடையை தேர்வு செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டதில்லை. ஆனால் "நீ உன் வாழ்க்கை முழுவதும் என்ன வேலை செய்யப்போகிறாய்?" மற்றும் "நீ யாரை திருமணம் செய்துக்கொள்ள போகிறாய்?" போன்ற மிகவும் முக்கிய முடிவுகளை எடுக்கும் பொறுப்பு, அந்த குழந்தையிடம் வழங்கப்பட்டது. அந்த குழந்தை ஒரு வாகனம் வாங்குவதற்கு, வாடிக்கையாளர் அறிக்கைகளை அலசி ஆராய்ந்த பிறகு வாங்குவதற்கு கற்றுத்தரப்பட்டது. ஆனால் அந்த குழந்தை தனக்கு விருப்பமான தொழில் மற்றும் தனக்கு விருப்பமான வாழ்க்கைத்துணையை தேடிக்கொள்ளும் பொறுப்பு அதனிடமே வழங்கப்பட்டது.

சனிக்கிழமை

பாடம் 195

அளவுக்கு அதிகமான

வாய்ப்புக்கள்

இரண்டு உலகப்போர்களுக்கு பிறகு சமூகத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டு, நாட்டில் குற்றங்கள் அதிகரித்தன. மனநல காப்பகங்கள் மற்றும் மருத்துவமனையில் மக்கள் கூட்டம் அதிகரித்தது. குடும்பம், நண்பர்கள் மற்றும் மதத்தின் மீது ஈடுபாடு இல்லாத மக்கள், வாழ்க்கையில் தவறான தேர்வுகளை தேர்ந்து எடுத்தனர். இன்றைய புதிய யுகத்தில் இருக்கும் புதிய குழுவினர் விசித்திரமாக, ஈடுபாடு இல்லாமல் இருப்பதில் முழுமையான ஈடுபாட்டுடன் இருக்கிறார்கள். ¶பலர் எந்த வித ஈடுபாடும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு விரதம் எடுக்கிறார்கள், ஒரு உறுதிமொழி எடுக்கிறார்கள், ஆனால் அவை அவர்களுக்கு முக்கியமானதாக இருப்பதில்லை. இன்றைய காலகட்டத்தில், ஒருவர் மேற்கொள்ளும் திருமண விரதம் அல்லது உறுதிமொழியும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை. ஆனால் அவ்வாறு செய்வது மதம் இல்லை. அது மதசார்பற்ற மனிதநேயமாக, இருத்தலியல்வாதமாக, ஒரு பெரிய இல்பொருள்வாதமாக இருக்கலாம், ஆனால் அது மதம் இல்லை. மதம் என்பது நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆன்மீக விதிகளை ஏற்றுக்கொள்வது ஆகும். நாம் முடிவுகளை எடுத்து முழுமையாக ஈடுபாடுகளை உருவாக்கி, காலையில் கண்ணாடியை பார்த்து, "நீ நேற்று நல்ல வேலை செய்தாய். இன்று என்ன செய்யவேண்டும்?" என்று அந்த ஈடுபாடுகளை நிறைவேற்ற முற்படவேண்டும். இந்த ஒழுக்கத்தை நாம் இளைஞர்கள் மனதில் பதியவைக்க முற்படவெண்டும். அப்போது ஆன்மாவின் வலிமை வெளிவருகிறது. ஆன்மாவின் வலிமை வெளிவரும் போது, அது அறிவுணர்வு மனதில் வியாபிக்கிறது. அதன் மூலம் ஆக்கத்திறன் வெளிப்படுகிறது. உங்களது வழக்கமான சிந்தனை சக்தியை கடந்த புதிய, ஊக்கமளிக்கும், நுண்ணறிவு சிந்தனைகள் உங்களது மெய்ஞ்ஞானத்தில் இருந்து மனதிற்கு வருவதால், உங்கள் வாழ்க்கையில் பல சிறப்பான நிகழ்வுகள் தோற்றம் அளிக்கத் தொடங்குகின்றன. ¶இன்றைய காலத்தில் இளைஞர்கள் மற்றும் பெரியவர்களின் மனம் ஒரே வகையில் குழம்பி இருப்பதாக தோன்றுகிறது. இன்றைய உலகில் தொலைகாட்சி பார்ப்பதற்கு, இணையத்தில் தேடுவதற்கு, அதிக உள்ளீடுகளை பெறுவதற்கு அதிக நேரம் விரயமாகிறது. ஆனால் இந்த வருடம், அடுத்த வருடம் மற்றும் அதற்கு அடுத்த வருடம் என்ன செய்யவேண்டும் என்று திட்டமிடுவதற்கு, கலந்து உரையாடுவதற்கு, தோழமையுணர்வுடன் உட்கார்ந்து பேசுவதற்கு அதிக நேரம் ஒதுக்கப்படுவது இல்லை. ஆனால் சைவ தர்மத்தை பின்பற்றி, குறுகிய கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களை திட்டமிடுவதன் மூலமாகத் தான்

உங்களால் உங்கள் *கர்மவினையை* கட்டுப்பாட்டில் வைத்து இருக்க முடியும்.
¶முதிர்ச்சி அடைந்து வரும் தங்கள் இளைஞர்களுக்கு எந்த துறையில் வேலையை தேடுவது, எந்த கல்லூரியில் படிப்பது போன்ற கேள்விகளை பெற்றோர்கள் என்னிடம் கேட்டு வருகிறார்கள். எதிர்காலத்தில் உங்கள் குழந்தை எதை செய்ய இருக்கிறானோ அதற்கு உயர்கல்வி துணையாக இருக்கவேண்டும். இது பெண்களுக்கும் பொருந்தும். நமது எதிர்காலத்திற்காக நம்மை தயார் செய்துக்கொள்ளவே நாம் கல்வி கற்கிறோம். நாம் வேறு எந்த காரணத்திற்காகவும் கல்வி கற்பது இல்லை. ஒரு இளம் பெண் எதிர்காலத்தில் இல்லத்தரசியாக இருக்க விரும்பினால், அவளுக்கு இல்லதரிசியாக இருப்பதைப் பற்றி கற்றுத்தருவது சரியாக இருக்கும். இன்று பல பெண்களுக்கு சிறுவயதில் ஒரு இல்லத்தரிசியாக இருப்பது எப்படி என்று கற்றுத்தரப்படவில்லை என்பதால், அவர்களுக்கு சமைக்க தெரிவதில்லை, எப்படி ஒரு பாண்ட்-எய்ட் போடவேண்டும் என்று தெரிவதில்லை, குழந்தைகள் பிறந்ததும் அவற்றை எப்படி கவனிக்க வேண்டும் என்று தெரிவதில்லை. வேறு வகை வாழ்க்கையை வாழவிரும்பும் பெண்கள், அந்த துறைக்கு தன்னை தயார் செய்யும் ஒரு கல்வியை தேர்ந்து எடுக்கவேண்டும். இந்த காலத்தில் ஒரு இல்லத்தரசியாக இருக்கும் ஒரு பெண்மணி, செவிலியர் போன்ற வேலைக்கு தேவைப்படும் கல்வியை கற்பது விவேகமாக இருக்கும். குடும்பத்தில் ஒரு வேளை மரணம் அல்லது விவாகரத்து போன்ற துக்கமான சம்பவங்கள் நடந்தால், அந்த பெண்மணி தனது குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய, அத்தகைய தொழில்கள் பொருத்தமாக இருக்கும். எதிர்காலத்தில் நீங்கள் இல்லதரிசியாக இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது வேலை செய்யலாம், ஆனால் நீங்கள் செய்வது எதுவாக இருந்தாலும், நீங்கள் கற்கும் கல்வி எதிர்காலத்திற்கு தேவையானதாக இருக்கவேண்டும். அதுவே கல்வியின் நோக்கம் ஆகும். இன்று பொதுவான கல்வியை மட்டும் வழங்கும் பட்டப்படிப்புக்களின் பட்டியல் நீளமாக இருக்கிறது. அதைப்பற்றி தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன் சென்று, குழப்பத்துடன் திரும்பி வருகிறீர்கள். இது தொடர்ந்து நடைபெறுவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இந்த வகை கல்வியை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும்.
¶பிரசவத்திற்கு முந்தைய காலகட்டத்தில் கிடைத்த அனுபவம் மற்றும் முதல் வயது முதல் ஐந்தாம் வயது வரை ஏற்பட்ட தாக்கத்தின் மூலம், ஒரு இளைஞன் தனது தந்தையின் உயிரணுக்கள், அவரது மனவெழுச்சிகள் மற்றும் அவரது மனதில் இருந்து அறிவை கிரகித்துக் கொள்கிறான். ஒரு குழந்தை பெண்ணாக இருந்தால், அவள் தன் தாயிடம் இருந்து பெரும்பாலும் கற்றுக் கொள்கிறாள். இந்த அதிர்வலைகள், அதே முறையில் அவளது உட்புற உடலுக்குள் நுழைகின்றன. இவ்வாறு குழந்தைகள் அமைத்துக்கொள்ளும் அடித்தளத்தை அடிப்படையாகக் கொண்டு, பின்னர் அவர்கள் தங்கள் முழுமையான முதிர்ச்சியை உருவாக்கிக்கொள்கின்றனர். அவர்கள் அவர்களின் தந்தை

மற்றும் தாயின் குழந்தைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தில் தற்செயலாக பிறக்கவில்லை. அவர்கள் பிறக்கும் முன்பு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பமும் அத்தகைய வாய்ப்புக்களின் வெளிப்பாடாக விளங்குகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 196

குடும்பத்

தொழில்

ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்ததை தற்செயல் என்றும், ஒரு இளைஞன் தனது பெற்றோர்களை காட்டிலும் ஒரு சிறந்ததாக கருதப்படும் வேலைக்கு தகுதியானவர் என்றும் இன்று பலர் கருதுகின்றனர். ஆனால் ஒருவர் தனது குடும்பத் தொழிலை செய்யவேண்டும் என்பதற்காகவும், அவர் முடிந்தவரை தனது குடும்பத்தொழிலில் ஈடுபட்டு இருக்கவேண்டும் என்பதற்காகவும் ஒருவர் அந்த குடும்பத்தில் பிறவி எடுத்துள்ளார் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கையாக விளங்குகிறது. குடும்பத்தொழிலில் ஈடுபட்டு இருப்பதால், அவர் சிறுவயதில் இருந்தே அதைப்பற்றி கற்றுக் கொள்கிறார், மற்றும் சில சமயங்களில் பிறப்பதற்கு முன்பே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார். அவர் இன்னொரு தொழிலுக்கு செல்லும் போது, அவர் *குடும்ப தர்மத்தை* மீறி *லௌகீக அதர்மத்தில்* நுழைகிறார். அதன் பிறகு அந்த தொழிலில், புதிய *குடும்பதர்மத்தை* உறுதிப்படுத்துவதற்கு இரண்டு அல்லது மூன்று தலைமுறை தேவைப்படுகிறது. ¶பிரசவத்திற்கு முந்தைய காலத்தில் இருந்து ஆறு வயது வரை, குழந்தையின் தந்தை மற்றும் தாய்க்கு ஒரு முறையான தொழில் அல்லது வியாபாரம் இல்லையென்றால், அவர்கள் செய்யும் செயல்களை எல்லாம் அந்த குழந்தை கிரகித்துக்கொள்கிறது, மற்றும் அதுவே அந்த குழந்தை வாழும் லௌகீக வாழ்க்கையின் பழக்கமாக மாறுகிறது. அத்தகைய சூழ்நிலைகளில், அந்த மகன் அல்லது மகள் பருவ வயதை அடைந்ததும், ஒரு முறையான வேலையில் தனது தந்தை அல்லது தாயின் பாதையில் செல்வதற்கான வாய்ப்புக்கள் குறைந்து விடுகின்றன, ஏனென்றால் அந்த குழந்தையின் பெற்றோர்கள் தற்காலிக ஊழியர்களாக அல்லது மாணவர்களாக, வேலை இல்லாமல் வேலையை தேடிக்கொண்டு இருந்ததைப் போல, அந்த குழந்தை தினமும் எந்த குறிக்கோளும் இல்லாமல், வலுவான லௌகீக பாதுகாப்பு இல்லாமல், ஒரு வேலை இல்லாமல் இருப்பதற்கு அந்த குழந்தைகள் தங்களது முதல் வயதில் இருந்து ஆறாம் வயது வரை நிரலாக்கம் செய்யப்பட்டு இருக்கின்றன. ¶ஒரு

இளைஞன் தனது குடும்பத்தொழில் அல்லது வியாபாரத்தில் ஈடுபாட்டுடன் நுழைந்தால், அதை விட சிறந்த வரம் அவனுக்கு ஏதும் இருக்க முடியாது. அவ்வப்போது ஒரு குடும்பத்தில் தனது குடும்பத்தொழிலை தொடராமல், இன்னொரு தொழிலில் உயர்பதவியை அடையும் குழந்தை பிறக்கிறது. அவன் சிறு வயதில் ஒரு மதத் தலைவர், ஒரு *சுவாமி*, ஒரு சமூகத் தலைவர், ஒரு அரசியல்வாதி, சமூக நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளர், சமூக அல்லது அரசியல் ஆர்வலர், ஒரு துப்பறியும் வல்லுநர், ஒரு விஞ்ஞானி அல்லது ஒரு மேதையின் பிரத்யேக பண்புகளை வெளிப்படுத்த வாய்ப்புள்ளது. அத்தகைய குழந்தை ஒரு குறிக்கோளுடன் பிறந்து இருப்பதால், அது தன்னை சிறு வயதிலேயே வெளிப்படுத்திக் கொள்ளும், மற்றும் அதை மிகவும் கவனமாக வளர்க்க வேண்டும். ¶அதைத் தவிர உறுதியான காரணம் ஏதும் இல்லாமல், தங்கள் குடும்பத்தொழிலில் இருந்து விலகி இருக்கும் குழந்தைகளும் இருக்கிறார்கள். ஒரு இளைஞன் தனது குடும்பத்தொழிலை நிராகரிக்க பல காரணங்கள் இருக்கலாம், ஆனால் அந்த தொழில் தங்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கை முழுவதும் நிலைத்தன்மையை கொடுக்கும் என்பதை அறிந்து, அதை அவர்களுக்கு கிடைக்கப்பெறுவது அந்த குடும்பத்தின் கடமை ஆகும். அதனால் நாம் எந்த சூழ்நிலையிலும், வயது வரம்பு பார்க்காமல், பாரம்பரிய குடும்ப தர்மத்தை ஊக்குவிக்க வேண்டும். குடும்பத்தொழிலை தொடர்வதன் மூலம், அந்த மகன் அல்லது மகளுக்கு மனம், மனவெழுச்சி மற்றும் உடல் அளவில் மிகப்பெரிய பாதுகாப்பு கிடைக்கிறது. அத்தகைய குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் செய்வதை கவனித்து, அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டு, மெதுவாக வாழ்க்கையில் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பிக்கிறார்கள். உங்கள் குழந்தைகளுக்கு விருப்பமான தொழிலை செய்ய அனுமதி அளித்து, அதன் மூலம் அவர்கள் சொந்த வீட்டை விட்டு வெளியேறி, இன்னொரு தொழிலில் இருக்கும் பரிச்சயம் இல்லாத நபர் உங்கள் குழந்தைக்கு உதவி செய்தார் என்பதற்காக, உங்கள் குழந்தை அவருக்காக வேலை செய்து, அந்த நபரின் செல்வதை அதிகரிக்க உதவுவது எந்த சூழ்நிலையிலும் விவேகமாக இருக்காது. நீங்கள் செய்வதை அவர்கள் செய்வதற்கு அன்புடன் ஊக்கத்தை வழங்கி, அவர்களை உங்களுடைய ஒரு விரிவாக்கமாக கருதுங்கள். "உங்கள் ஆர்வங்களுக்கு முன்னுரிமை அளியுங்கள்," "உங்கள் ஆசைகளை நிறைவேற்றுங்கள்," "ஒரு வேலையில் முன்னேறிக் கொண்டு இருங்கள்," மற்றும் "வாழ்க்கையின் மத்தியில் ஒரு வேலையில் இருந்து இன்னொரு வேலைக்கு மாறுங்கள்," போன்ற கருத்துக்கள் இன்றைய காலத்து *அதர்ம* கோட்பாடுகளாக விளங்குகின்றன. அது சில சமயங்களில் பலன் தரலாம், ஆனால் அதனால் தோல்வி ஏற்படவும், தீவிர கடனில் சிக்கவும் ஐம்பது சதவீதம் வாய்ப்புள்ளது. அந்த சூழ்நிலையிலும், குடும்பம் தனது மாபெரும் சொத்தாக இருக்கும் குழந்தைகளை இழந்து தவிக்கிறது. குழந்தைகளுக்கு தங்கள் பெற்றோர்கள் வேலையில் ஆர்வம்

இல்லாததாலும், அதைப்போல பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகள் செய்யும் வேலையில் ஆர்வம் இல்லாததாலும், குடும்ப தொடர்பு துண்டிக்கப்படுகிறது. இதன் காரணமாக, பரிச்சயமில்லாத நபர் பலன் பெறுகிறார். குழந்தைகள் பருவ வயதை அடைந்து, அவர்கள் மற்ற ஆர்வங்களில் கவனம் செலுத்த துவங்குவதால் ஒரு குடும்ப உறவு முறியக்கூடாது. அந்த குடும்ப உறவு தொடர்ந்து வலுப்பெற்று தாய் மற்றும் தந்தை மற்றும் மகன்கள் மற்றும் மகள்கள் இணைந்து இருக்கும் தந்தை-மகன் நிறுவனங்கள், தந்தை-மகள் நிறுவனங்களாக வளர்ச்சி பெற்று குடும்ப சொத்தை அதிகரிக்க இணைந்து வேலை செய்யவேண்டும். ¶செல்வம் மற்றும் அறிவை வளர்த்து, அதை குழந்தைகள் மற்றும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வழங்குவதே குடும்பத் தலைவரின் *தர்மம்* ஆகும். அவர்கள் நகை வியாபாரத்தில் இருந்தால், அந்த செல்வம் இசைக்கலைஞர்கள் அல்லது கணினி நிரலாளர்களுக்கு செல்லாமல், அடுத்த தலைமுறை நகை வியாபாரிகளுக்கு செல்ல வேண்டும். குடும்பத்தில் செல்வம் செழிப்பதால் சமூகத்தில் செல்வம் செழிக்கிறது. சமூகத்தில் செல்வம் செழிப்பதால் நாட்டில் செல்வம் செழிக்கிறது. நாட்டில் செல்வம் செழிப்பதால் உலகில் செல்வம் செழிக்கிறது. தாய் மற்றும் தந்தை செய்யும் தொழில் மூலம் ஈட்டும் வருமானம் சிறியதாக இருந்தாலும், அந்த தொழிலை தொடர்ந்தால் பசியும் பட்டினியும் இருக்காது என்று இந்து சமய சான்றோர்கள் சொல்வார்கள். நான் சிறு வயதில், இதைத்தான் இலங்கை யாழ்ப்பாணத்தில் கற்றுக்கொண்டேன். இந்த தொழிலால் ஒருவர் செல்வந்தர் ஆகவில்லை என்றாலும், குடும்பப் பாதுகாப்பு உறுதி பெறுகிறது. ¶அதனால் உங்கள் மகன்கள் மற்றும் மகள்களை திட்டமிட்டு குடும்ப தொழிலில் கொண்டு வருவதற்கு அஞ்ச வேண்டாம். அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்தி, உங்களுடன் சேர்ந்து பணிபுரிய ஊக்குவியுங்கள். உங்கள் வியாபாரம் அல்லது தொழில் அவர்களுக்கு உணவு அளித்து வருகிறது. அதனால் அவர்களுக்கு அதில் இயல்பாக ஆர்வம் இருக்கும். ஒரு குடும்ப நிறுவனத்தை அமைத்து, பெற்றோர் செய்யும் வேலையில் மகன்கள் மற்றும் மகள்களை சிறு வயதிலேயே கொண்டு வருவது, பாரம்பரிய *கிருஹஸ்த தர்மத்தை* பின்பற்றும் இன்றைய இந்து குடும்பங்களுக்கு எளிய தீர்வாக விளங்குகிறது. அவர்களுக்கு குடும்ப தொழிலில் ஆறு வயது முதல் பதிமூன்று வயது வரை பயிற்சி அளித்து, பின்பு அவர்களை வாழ்க்கை முழுவதும் உங்கள் தொழிலில் கூட்டாளியாக பயன்படுத்துங்கள். அவர்களை காட்டிலும் சிறந்த கூட்டாளிகள் வேறு யார் இருக்கமுடியும்? தங்கள் குழந்தைகளை காட்டிலும் அதிக நேர்மையான மற்றும் விசுவாசமான கூட்டாளிகள் வேறு யார் இருக்கமுடியும்? மேலும் விளக்கங்கள் அளிக்க வேண்டுமா? உங்களுக்கு புரிந்து இருக்கும் என்று நினைக்கிறோம்.

ஹிம்சாகரி பாஷா

हिम्साकरी भाषा



மனதை புண்படுத்தும் வார்த்தைகள்

நான் உங்களுக்கு பகையுணர்வு இல்லாத ஒரு இதயத்தை, ஒரு மனதை உருவாக்குகிறேன். பிறந்த கன்றின் மீது பசு பாசமாக இருப்பதைப் போல, பரஸ்பர பாசத்துடன் இருங்கள். மகன் தந்தைக்கு அனுசரித்து நடந்து, தாயோடு மனதளவில் ஒற்றுமை பெறுவானாக. மனைவி தங்க கணவனிடம் மென்மையான இனிமையான சொற்களை பேசுவாளாக. சகோதரன் தனது சகோதரனை வெறுக்க வேண்டாம். சகோதரி தன் சகோதரியை வெறுக்க வேண்டாம். ஒற்றுமையாக ஒரு நோக்கத்துடன் மங்களகரமான மொழியை நீங்கள் பேசுங்கள்.

அதர்வண வேதம் 3.30.1-3. வேஎ, ப. 857



மேலே படத்தில் இருக்கும் குழந்தையை, அன்பாக தெய்வபக்தியுடன் இருக்கும் தந்தை வளர்க்கிறார். அவரிடம் இருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் தாராளமான வசதிகள் அந்த குழந்தைக்கு அன்பையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. கீழே படத்தில் இருக்கும் தந்தையின் தவறான போக்கு, அந்த குழந்தை மீது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி, அந்த குழந்தைக்கு ஆதரவற்ற நிலையையும் வேதனையையும் வழங்குகிறது.

திங்கட்கிழமை

பாடம் 197

அவதூறு பேச்சு விளைவிக்கும்

சாபக்கேடு

தெய்வ நம்பிக்கை அதிகம் இருப்பதாக கருதுபவர்களும், தாங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு கடினமான சூழலிலும் தங்கள் பதட்டங்களை வெளிப்படுத்த அவதூறான சொற்களை பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு இந்த எதிர்மறை *மந்திரங்களின்* விளைவுகளைப் பற்றி தெரியுமா? தெரிய வாய்ப்பு இல்லை. தங்கள் மனதிற்குள் இரகசியமாக நிந்தனை செய்பவர்கள், தங்களையே கடிந்துக் கொள்கிறார்கள். அப்படி என்றால்? அவர்கள் தங்கள் வாழ்க்கையில், தாங்களே பின்னடைவை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களை இழிவுபடுத்தி, தங்களது வெற்றிக்கு தடையாக விளங்குகிறார்கள். அவர்களுக்கு வெற்றி கிடைக்காத போது வீட்டில் பதட்டங்கள் அதிகமாகி, அவதூறு பேச்சுக்களும் அதிகமாகும். நிந்தனை செய்வது பற்றி சிந்திப்பதும் ஒரு வகை *மந்திரம்* தான். ¶மக்கள் எதற்காக *மந்திரத்தை* மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள்? ஒரு வெற்றிகரமான வாழ்க்கைக்கு ஒரு நேர்மறை சக்தியை உருவாக்கவே அவ்வாறு செய்கிறார்கள். எதற்காக பெற்றோர் தங்கள் குழந்தைகளை அல்லது கணவன் தன் மனைவியை, அல்லது மனைவி தன் மனைவியை இரகசியமாக அல்லது வெளிப்படையாக நிந்தனை செய்கிறார்கள்? தங்கள் கோபம், பகை அல்லது பரிகாசத்தை அல்லது தனது இயல்பான பழக்கத்தை வெளிப்படுத்த பயன்படுத்துவார்கள். ஆனால் அவ்வாறு செய்யும் போது அவர்கள் வெளியிடும் ஒரு எதிர்மறை சக்தி, அவர்களது வாழ்க்கைகளை அழித்து, அவர்கள் வீடுகளிலும் பிரிவை ஏற்படுத்துகிறது. நீங்கள் நிந்திக்கும் ஒவ்வொரு முறையும், அந்த நிந்தனை உங்கள் அடியுணர்விற்கு சென்று, சிறுவனாக நீங்கள் கூறிய மற்ற நிந்தனை சொற்களுடன் சேர்ந்து கொள்கிறது. ¶பலர் பேசும் போது "நான் பாழாப் போனேன்," "நீ ஒழிந்து போ," அல்லது "வீணாப் போச்சு" போன்ற சொற்றொடர்களை பயன்படுத்துவார்கள். ஆனால் எல்லா சொற்களும் தங்களுக்குரிய தாக்கத்தை கொண்டிருக்கின்றன. அத்தகைய *மந்திரங்கள்* அவர்களின் எதிர்காலத்திற்கு தடையாக விளங்கி, மற்றவர்கள் பற்றிய

விருப்பங்களுடன் பிணைத்து வைக்கிறது அல்லது வெறித்தனமாக சிந்திக்காமல் பேசுவதற்கு காரணமாக விளங்குகிறது. இது தன்னைத்தானே கடிந்து கொள்வதற்கு நல்ல வழியாக விளங்கி, எதிர்மறை ஆற்றல் நிரம்பிய ஒரு பெரிய பலூன் உருவாக காரணமாக இருக்கிறது என்றும் உறுதியாக சொல்லலாம். அந்த எதிர்மறை ஆற்றல் ஆதிக்கம் செலுத்தும் போது, அவர்களால் அமைதியாக இருக்கவோ அல்லது ஒரு விடுமுறையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவோ முடியாது. தொடர்ந்து நிந்திக்கும் *மந்திரத்தை* சொல்லி வந்ததால், அவர்கள் தங்களுக்கு வேதனையை வழங்கி, தங்கள் தைரியத்தை இழந்து இருப்பதால், பலர் ஒரு குடும்பமாக சேர்ந்து வாழ்ந்தாலும், அவர்கள் இல்லமும் வாழ்க்கைகளும் பிரிந்தே இருக்கின்றன. அவதூறான வார்த்தைகளை பேசுவது வாழ்க்கையை சபிப்பதற்கு சமம் ஆகும். ¶நீங்கள் ஏன் மற்றவர்களை நிந்திக்கக்கூடாது, நீங்கள் ஏன் குழந்தைகளை துன்புறுத்தக்கூடாது, நீங்கள் ஏன் வாழ்க்கைத்துணையை சித்ரவதை செய்யக்கூடாது என்பதை அறிந்து இருந்தும், அதைப்பற்றிய கவலை இல்லாமல் செய்வது மேலும் மோசமானது ஆகும். ஒருவன் நிந்திக்கும் போது தனக்கும் அந்த நிந்தனையால் வேதனையை சந்திக்கும் மற்றவர்களின் மனங்களை அறிந்திருந்து, தான் ஏற்றுக்கொண்ட *கர்மவினை* விதியை புறக்கணித்தால், அதனால் விளையும் எதிர்மறை சக்தி அடிமனதின் மீது மும்மடங்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ¶இனி இதை கேட்ட பிறகு நீங்கள் தொடர்ந்து விதியை மீறி வந்தால், உங்களுக்கு மும்மடங்கு பழியை வரவழைத்துக் கொள்கிறீர்கள்! அது ஒருவர் தானாக இழைத்துக்கொள்ளும் *பிராயச்சித்தம்* அல்லது தண்டனையாக விளங்குகிறது. உங்களுக்கு தீங்கு ஏற்படும் என்பதை அறிந்து இருந்தாலும், தொடர்ந்து அந்த தவறை செய்து வந்தால், உங்களுக்கு அடுத்தது ஒரு கொடி பிறவியாக அமையும். அது உங்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. இல்லையென்றால், உங்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை இல்லை என்று அர்த்தம். ஆனால் மறுபிறவி எப்படியும் நடக்கத்தான் இருக்கிறது. ¶நான் யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்துக்கொண்டு இருந்தேன். அப்போது ஒரு விமான பணிப்பெண் கைத்தவறி ஒரு பொருள் சிந்திவிட்டது. அவள் தன்னை கடிந்து கொள்ளவில்லை. அவள் முகத்தில் புன்னகையுடன் தான் ஏற்படுத்திய குப்பையை சுத்தம் செய்தாள். அவள் ஏன் தன்னை கடிந்துகொள்ளவில்லை? ஏனென்றால் யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானத்தில் பணிபுரியும் பணிப்பெண் கடிந்துக்கொள்ளக்கூடாது. ஒரு வேளை கடிந்துகொண்டால், உங்களால் அந்த பணியை தொடர முடியாது! எல்லோரின் உள்ளும் ஒரு ஒழுங்கு ஒளிந்து இருக்கிறது என்பதையும், தங்களுக்கு சில பலன்கள் கிடைக்கும் என்றால் அதனை பயன்படுத்தி ஒரு பழக்கத்தை உடைக்க முடியும் என்பதும் தெரிகிறது. இந்த விஷயத்தில் அந்த பணிப்பெண் தனக்கு கிடைக்கும் சம்பளத்திற்காகவும், தனது வேலையை இழந்தால் ஏற்படும் அவமானத்தை தவிர்க்கவும் அவ்வாறு

நடந்துகொண்டாள். ¶உதாரணத்திற்கு ஒருவரையொருவர் கடிந்து கொள்ளும் கட்டுமானத் தொழிலாளிகளுடன் வேலை செய்யும் போது, அந்த பழக்க மாற்றத்திற்கான உத்வேகம் உறுதியாக இருப்பது இல்லை. ஆனால் நிந்தனை செய்வதை நிறுத்துவதற்கான உத்வேகம் உறுதியாக இருக்கவேண்டும், ஏனென்றால் அது ஒருவருக்கு தெரியாமல் அவருக்குள் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. நிந்தனை செய்வதால் உங்கள் ஆக்கத்திறன் குறைந்து, திறமை குறைந்து, மற்றவர்களின் வெறுப்புக்கு ஆளாவதால், அது உங்கள் பணி நீக்கத்தை தாமதிக்க மட்டும் உதவியாக இருக்கிறது. நீங்கள் வஞ்சனைக்கு ஆளாகிறீர்கள், பண விஷயங்களில் தவறான முடிவுகளை எடுக்கிறீர்கள், மற்றும் உங்கள் வருமானம் குறைகிறது. உங்கள் உத்வேகம் குறைகிறது. நீங்கள் *மந்திரங்களை* தொடர்ந்து சொல்வதால், உங்களிடம் இருக்கும் அனைத்தும் அழிந்து விடும் என்பதில் உறுதியாக இருக்கலாம். அன்றைய தினம் உங்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்காது. நீங்கள் உங்கள் மனதை காண்பதால், நீங்கள் அதிக குழப்பத்தில் இருப்பீர்கள். அவை அனைத்தையும் தவிர்ப்பதே உத்வேகமாக இருக்க வேண்டும், ஆனால் நிந்தனையின் விளைவு மெதுவாக தீங்கு விளைவிப்பதாக இருக்கிறது மற்றும் அது பெரும்பாலும் முழுமையாக புரிந்துகொள்ளப்படுவது இல்லை.

செவ்வாய்க்கிழமை

பாடம் 198

மாற்றம் பெறுவதற்கான

துணிச்சல்

ஒருவர் தனது சொந்த கால்களில் நின்று, தைரியமான முடிவுகளை எடுத்து, தனது *கர்மவினைகளை* கட்டுப்படுத்தி, அவற்றை உற்சாகமாக பொறுத்துக்கொண்டு அனுபவிப்பது அந்த நபரின் பொறுப்பு ஆகும். அதை உங்களுக்காக வேறு யாராலும் செய்ய முடியாது. *குருமார்கள்* மற்றும் *சுவாமிகள்* உங்களுக்கு வழியை காட்டி சில *சாதனாக்களை* அறிவுறுத்தலாம், ஆனால் அந்த வழியில் நீங்கள் தான் முன்னேற வேண்டும். உங்கள் சார்பாக அவர்களால் அனுபவிக்க முடியாது. அவர்கள் உங்களுக்காக செய்தால், அதனால் எந்த பயனும் கிடைப்பது இல்லை. ¶மற்றவர்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் தங்கள் கோபம் மற்றும் வெறுப்பை கேலிக்கூத்தாக வெளிப்படுத்துவார்கள். அவர்கள் நகைச்சுவை உணர்வுடன் பேசுவது போல் தோன்றினாலும், அவர்களின் கடுமையான உணர்வுகள் எப்படியும் வெளிவந்து கீழ்நிலை *சக்கரத்தை* தூண்டிவிடுவதால், அவர்களின் கேலிக்கூத்து ஒரு நாள் மிகப்பெரிய கோபமாக வெளிவருகிறது. அதன் பிறகு அவர்கள் உருவாக்கும்

புதிய *கர்மவினைகள்* கரையும் வரை, அவற்றுடன் அவர்கள் வாழ்கிறார்கள். ¶"நான் குருதேவாவுடன் நாற்பத்தி ஐந்து வருடங்கள் இருந்துள்ளேன்," "நான் குருதேவாவுடன் முப்பது வருடங்கள் இருந்துள்ளேன்," என்று சில அன்பர்கள் பெருமையுடன் சொல்கிறார்கள். ஆனால் உங்களுக்கு கோபம் வருகிறதா என்று அவர்களிடம் கேட்டால், ஆமாம் வருகிறது என்பார்கள். “நீங்கள் எதை நன்றாக புரிந்துக்கொண்டீர்கள்?” “நான் கோபமடையக் கூடாது என்று புரிந்து கொண்டேன்.” “உங்களுக்கு தற்போது கோபம் வருகிறதா?” “ஆமாம் சில சமயம் வருகிறது.” அவர்கள் குருதேவாவுடன் முழு ஈடுபாட்டுடன் இருந்ததே இல்லை! ஏனென்றால் நாங்கள் நடத்திய பாடங்கள் அவர்கள் மனதில் பதியவில்லை. அதன் பலன்கள் உங்கள் ஒவ்வொருவரது வாழ்விலும் வெளிப்பட வேண்டும். இல்லை என்றால் நான் உபதேசங்களை வழங்கும் போது, உங்கள் உடல்கள் மட்டுமே அந்த இடத்தில் இருக்கும், ஆனால் நீங்கள் உங்களது சொந்தமான இரட்டை வாழ்க்கையை வாழ்ந்துக்கொண்டு இருப்பீர்கள். உடல்கள் மட்டுமே அங்கே இருப்பதால், முழு கவனம் இல்லாமல் இருக்க வாய்ப்புள்ளது. எனது சீடர்கள் ஒரு வேலையை தொடங்கி, அதை சரியாக செய்வதையும், அடுத்த வேலையைப் பற்றி சிந்திப்பதையும் விரும்புவேன், அதற்கு பதிலாக அவர்கள் என்னிடம் நேர்மையில்லாமல் நடந்துகொண்டு என்னை குழப்புவதை விரும்புவது இல்லை. ¶ஒருவர் செய்த செயலை திருத்துவதில் நேரம் விரயம் செய்து பலனில்லை. ஒரு வேலையை செய்யவேண்டும் அல்லது அதை செய்யாமல் இருக்கவேண்டும். நூறு ஆடி உயரத்தில் இருக்கும் ஒரு செங்குத்தான பாறையில் இருந்து விழுவதை தவிர்க்க, யாரும் கடுமையாக முயற்சி செய்வது இல்லை. நீங்கள் அந்த பாறைக்கு அருகில் செல்லாமல் இருப்பீர்கள், அவ்வளவு தான்! பரமாத்துமா பற்றி உபதேசம் கேட்க வந்து, பரமாத்துமா மீது உங்களுக்கு ஆர்வம் கூடும் போது, நீங்கள் *சாதனா* மூலம் சில குறிப்பிட்ட *கர்மவினைகளின்* சுழற்சியை உடைக்கும் தருவாயில் இருக்கிறீர்கள். நீங்கள் அதை செயல்படுத்த தொடங்குவீர்கள் அல்லது, "குருதேவா வழங்கும் உபதேசத்தை கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் அந்த உபதேசங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, எனது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது முறையானதாக எனக்கு தோன்றவில்லை," என்ற சிந்திக்க தொடங்குவீர்கள். அத்தகைய ஒரு அணுகுமுறை, சோம்பேறித்தனமும் புதிய *கர்மவினைகளை* உருவாக்கும், ஏனென்றால் சிலர் உங்களை முன் உதாரணமாக கருதி வருகிறார்கள். இரட்டை வாழ்க்கை வாழ்வது பற்றித்தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். ஒருவர் தனது குணங்களில் சில குறிப்பிட்ட மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது, அந்த நபரின் ஆன்மாவில் இருக்கும் வலிமையை பொருத்து அமைகிறது.

புதன்கிழமை

பாடம் 199

குழந்தைகளை

திட்டி இழிவுப்படுத்துவது

உங்களை நீங்கள் கடிந்துகொள்வது ஒரு வகை துன்புறுத்தல் என்றால், இன்னொரு நபரை துன்புறுத்துவது இரட்டை துன்புறுத்தலுக்கு சமம் ஆகும். நாங்கள் சென்ற வருடம் இந்துயிசம் டுடே பத்திரிகையில், உலகெங்கும் பரவியிருக்கும் உடல்ரீதியான துன்புறுத்தல் மற்றும் குழந்தைகள் சித்ரவதை பற்றி விரிவாக கட்டுரை எழுதி இருந்தோம். கணவன்மார்களை அடித்துத் துன்புறுத்துவது உட்பட தங்கள் வாழ்க்கைத்துணைகளை மற்றும் தங்கள் குழந்தைகளை துன்புறுத்துபவர்கள் தங்களை ஒரு முறை அடித்துக் கொள்வதைக் காட்டிலும், தங்கள் குழந்தையை அடிக்கும் போது அவர்கள் தங்களையே ஐந்து முதல் பத்து மடங்கு வரை அதிகம் துன்புறுத்திக் கொள்கிறார்கள் என்று நாங்கள் அந்த கட்டுரையில் விளக்கி இருந்தோம். குழந்தைகள் துன்புறுத்தப்படுவதை நிறுத்தவேண்டும் என்று நாங்கள் கூறிய அறிவுரைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அது தற்போது சில வீடுகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. எனக்கு தெரிந்த வரை பல இந்து வீடுகளில் குழந்தைகளை அச்சுறுத்துவதும் நின்று விட்டது. ஆனால் குழந்தைகளை கடிந்துக்கொண்டு, ஒருவரை பலவந்தமாக கீழ்ப்படிய செய்வதற்கு இழிவாக பேசுவது மற்றும் அவர்களை தீவிரமாக நச்சரிப்பதன் மூலம் கோபத்தை வெளிப்படுத்தும் பழக்கம் அதிகரித்துவிட்டது. இந்த பட்டியல் “நீ ஒரு முட்டாள்!” “உன்னால் எந்த பயனும் இல்லை!” என்று நீளமாக இருக்கிறது, மற்றும் அது பெரும்பாலும் ஒவ்வொரு பெற்றோருக்கும் மனப்பாடம் ஆகிவிட்டது. ஒழுக்கம் என்ற பெயரில், ஐந்து அல்லது ஆறு வயதில் இருந்து இளைஞர்கள் தங்கள் சொந்த கால்களில் நிற்க வீட்டை விட்டு கிளம்பும் வரை, இந்த இழிவுப்படுத்தும் மற்றும் தாழ்த்திப் பேசும் செய்முறை தொடர்ந்து நடைபெறுகிறது. ¶திட்டி இழிவுபடுத்தப்பட்ட குழந்தையின் சுய மரியாதை பயமுறுத்துவதாக இருக்கிறது, ஆனால் வலியும் வேதனையும் அதன் அடியுணர்வில் புதைந்து இருக்கிறது. அது அதை மூடி மறைத்து விடுகிறது, ஆனால் அங்கே தொடர்ந்து அழுகிக்கொண்டு இருக்கும் அந்த வேதனையும் வலியும் ஒரு நாள் திடீரென்று வெடிக்கிறது. அது ஒரு அன்புள்ளம் கொண்ட குழந்தையாக இருந்தால், அது எதிர்காலத்தில் தனது சொந்த குழந்தைகளை திட்டி இழிவுப்படுத்தாமல் பாதுகாக்கிறது. அது மற்றவர்களை துன்புறுத்துவதில் ஆர்வமுள்ள குழந்தையாக இருந்தால், அந்த குழந்தை தனது பெற்றோர்கள் தன் மீதும் தனது மனதின் மீதும் புகுத்திய வெறுப்பு முழுவதையும், எதிர்காலத்தில் தனது குழந்தைகள் மீது வெளிப்படுத்தும். அதனால் திட்டி இழிவுப்படுத்தும் செய்முறை பல தலைமுறைகளுக்கு தொடர்கிறது. அது ஏற்படுத்தும் மனவேதனை மற்றும்

துன்புறுத்தல் ஒரு அறை அல்லது அடியை காட்டிலும் நெடுங்காலம் நீடித்து இருக்கிறது. ¶இந்து சமூகத்தின் சில பகுதிகளில் நாம் சாபங்களைப் பற்றி கேள்விப்படுகிறோம். மேற்கத்திய கல்வியை கற்று அதிக அறிவாற்றலுடன் இருக்கும் இந்துக்கள் சாபங்கள் மீது நம்பிக்கை வைப்பது இல்லை. சாபம் என்றால் என்ன? ஒன்று சேர்க்கப்பட்ட ஒரு எதிர்மறை சக்தியை நீங்கள் விரும்பாத ஒரு நபர் மீது செலுத்துவது சாபம் ஆகும். மந்திரித்து சாபமிடும் பூசாரிகள், தங்கள் சாபத்தால் தாங்கள் சபிக்கப்படாமல் இருப்பதற்கு, தங்களுக்கு தேவையான பாதுகாப்புக்களை வழங்கிக் கொள்கின்றனர். அந்த பூசாரிகளுக்கு சிலசமயம் பணம் வெகுமதியாக வழங்கப்படுகிறது. சில சமயம் அவர்கள் வழங்கிக்கொள்ளும் பாதுகாப்பு பலன் அளிக்காமல், அவர்களின் உடல்நலம் கெட்டு சிலசமயம் மரணமும் ஏற்படுகிறது, அல்லது அந்த சாபம் செயல்பாட்டில் இருக்கும் வரை அவர்கள் அதிகம் குழம்பிய நிலையில் இருக்கிறார்கள். ¶எதிர்த்து பேசினால் உடல்ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டும் என்று பேசாமல் இருக்கும் ஒரு குழந்தையை கட்டுப்பாடு இல்லாமல் உளரீதியாக சித்ரவதை செய்து சாபமிடுவது தன்னை சபிப்பதற்கு சமம் ஆகும். ஒடுக்கப்பட்ட எதிர்மறை கோபத்தின் பயங்கரமான சக்தி வெளிவந்து அந்த அறை மற்றும் வீடு முழுவதும் பரவுவதால், அது வீடு மற்றும் குடும்பம் முழுவதற்கும் சாபமாக விளங்குகிறது. குழந்தையை ஒரு முறை நிந்திக்கும் போது, நீங்கள் உங்களை பத்து முறை நிந்தித்துக் கொள்கிறீர்கள். அந்த நிந்தனையை நிந்திப்பவரும் கேட்பதால், அது அவரது அடிமனதில் சென்று பதிகிறது. ¶சிலர் குழந்தைகளை ஊக்குவிக்க, அவர்களுக்கு தைரியம் வழங்க, அவர்கள் தலைநிமிர்ந்து நிற்க, பள்ளியில் சிறந்து விளங்கும் நோக்குடன் தங்கள் குழந்தைகளை பலர் திட்டி இழிவுப்படுத்துகின்றனர். பள்ளியில் உங்கள் குழந்தை சிறந்து விளங்க அதை முட்டாள் என்று திட்டுவது சரியில்லை என்று உங்களுக்கு மனநல மருத்துவர் அல்லது மனோதத்துவ நிபுணர் அறிவுரை வழங்கக் கேட்கலாம்! அந்த குழந்தையை பன்றி என்றோ அல்லது நாய் என்றோ அல்லது வேறு சில அவதூறான வார்த்தைகள் கொண்டு திட்டுவது, எந்த விதத்திலும் ஊக்கம் அளிக்க உதவியாக இருக்காது. ஆனால் குழந்தைகளுக்கு வீடு, உடை மற்றும் உணவு தேவைப்படுவதால், அவற்றை அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. திட்டி இழிவுப்படுத்தும் செய்முறை அவர்களின் அடிமனதில் சென்று பதிகிறது. ஆனால் அந்த குழந்தையை திட்டிய தாய் மற்றும் அவள் திட்டுவதைக் கேட்ட தந்தையின் அடிமனதிற்குள் அது இரண்டு, மூன்று அல்லது நான்கு மடங்காக பெருகி பதிகிறது. இது தொடர்ந்து நடைபெறுவதால், அவர்கள் ஆயிரம் முறை பேசிக்கொண்ட இழிவான வார்த்தைகள் மூலம் தங்களுக்குள் வெறுப்பு மற்றும் இகழ்ச்சியை நிரப்பி, அந்த குடும்பம் தன்னையே சபித்துக் கொள்கிறது. ¶அந்த குடும்பம் வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறதா? நிச்சியமாக இல்லை. அது தனது விடுமுறை நாட்களை

மகிழ்ச்சியுடன் அனுபவிக்குமா? உறுதியாக இல்லை. அவர்கள் விரக்தியுடன் இருப்பார்களா? ஆமாம். அந்த குடும்பத்தை நோய் தாக்குமா? ஆமாம். அவர்கள் தங்கள் அடிமனதில் பதிய வைக்கும் நோய் மூலம் தங்களுக்கு நோயை உருவாக்கிக் கொள்கிறார்கள், மற்றும் அவர்கள் சூட்சும உடலுக்கு இழைத்துக் கொள்ளும் தீங்கு தூல உடலையும் தாக்குகிறது.

வியாழக்கிழமை

பாடம் 200

இழைத்த சித்ரவதைக்கு

பரிகாரம் செய்தல்

தங்கள் குழந்தைகளை சபிக்கும் பெற்றோர்களால், அவர்களை கட்டி அணைக்கவோ முன்பு போல அன்பு செலுத்தவோ முடியாது. அது பயனற்று போகும்! ஆனால் ஒரு குழந்தையை கட்டி அணைப்பது, அதன் மீது அன்பு செலுத்துவது அல்லது அதை பாராட்டுவதால், அதை பலவீனப்படுத்துவதாக பல குடும்பங்கள் நினைக்கின்றன. இதனால் சமூகங்கள் மற்றும் நாடுகள் தங்களை முழுமையாக ஒடுக்கி, பல தலைமுறைகள் முன்னேறாமல் இருக்கக் காரணமாகின்றன. மற்றும் அவர்கள் மற்ற சமூகங்களால் ஒடுக்கப்பட்டு இதே செயலை செய்து வரும் மற்ற சமூகங்கள் மூலம் ஒடுக்கப்படுகிறார்கள். ¶குழந்தைகளை துன்புறுத்தும் அவதூறான சொற்களுக்கு என்ன பிராயச்சித்தம் செய்வது? நீங்கள் ஒரு குழந்தையை முட்டாள் என்றோ அல்லது குட்டிப் பிசாசு என்றோ திட்டினால், அதற்கு எதிர்செயலாக அதை புத்திசாலி என்றும், வீட்டில் அதை எல்லோரும் விரும்புகிறார்கள் என்றும் சொல்லுங்கள். நீங்கள் அந்த குழந்தையை கடிந்துக்கொண்ட ஒவ்வொரு சொல்லுக்கும் ஐந்து நல்ல வார்த்தைகளை சொல்லுங்கள். இல்லையென்றால், அந்த பெற்றோர்களுக்கு அடுத்த பிறவி ஒரு கொடிய பிறவியாக இருக்கும். கொடிய பிறவி என்றால் என்ன? தீராத நோயுடன் பிறப்பது, அனாதையாக இருப்பது, குழந்தைகளுக்கு என்று ஒரு இடம் இல்லாத ஊரில் பிறப்பது ஒரு கொடிய பிறப்பை குறிக்கிறது. தனது முந்தைய பிறவியில் குழந்தைகள் மீது தயவின்றி தங்களது விரக்தியை வெளிப்படுத்தியதால், இன்று வேதனையை பல குழந்தைகள் அனுபவித்து வருகிறார்கள். குழந்தையை உடல்ரீதியாக துன்புறுத்துவது மோசமானதா அல்லது அதை திட்டி இழிவுபடுத்துவது மோசமானதா? அடித்ததால் ஏற்பட்ட வலி மற்றும் அதன் ஞாபகமும் மறைய வாய்ப்புள்ளது. ஆனால் கடுமையான சொற்கள் அந்த குழந்தையின் வாழ்நாள் முழுவதும் அதன் மனதில் ஒலித்துக்கொண்டு இருக்கும். ¶ஒரு குழந்தை சில *சாதனாக்களை* செய்து, குடும்பம் தனது செய்த நிந்தனையை மன்னித்து

விட்டால் என்ன நடக்கும்? அந்த குடும்பம் அந்த சாபத்தை கரைத்து விடுகிறது. அதன் பிறகு என்ன நடக்கிறது? சாபத்தின் சக்தி முழுவதும் தாய் மற்றும் தந்தைக்கு திரும்புகிறது. அந்த குழந்தை விமோசனம் பெற்று சுதந்திரமாக இயங்குகிறது மற்றும் அதன் பெற்றோர்கள் தாங்கள் செய்த தவறுக்கான வேதனையை அனுபவிக்கிறார்கள். அவர்கள் தாங்கள் பேசிய கடுஞ்சொற்களின் விளைவை எதிர்கொள்கிறார்கள். உங்கள் வாழ்க்கைக்கு முழு பொறுப்பேற்று, எதிர்காலத்தை திட்டமிடவேண்டும் என்று தங்கள் குடும்பங்கள் மூலம் சபிக்கப்பட்ட இளைஞர்களிடம் கூற விரும்புகிறேன். ஒரு குழந்தையை கட்டுப்படுத்த வேண்டும், அவனை பயன்படுத்தி பணம் சம்பாதித்து சமூகத்தில் பாதுகாப்பு பெற வேண்டும், அவனை அச்சுறுத்தி தங்களை எதிர்த்து பேசாமல் இருக்க செய்யவேண்டும் என்பதற்காகவே பெற்றோர்கள் குழந்தைகளை கடுஞ்சொற்களால் திட்டி விமர்சனம் செய்கிறார்கள். ¶பல வீடுகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அடிப்பது இல்லை, ஆனால் அவர்களை அச்சுறுத்த கைகளை உயர்த்துகிறார்கள். தனது நடவடிக்கையை தொடர்ந்தால், தனக்கு தலையில் அடி விழும் என்பதை அந்த குழந்தை அறிந்து இருக்கிறது. உடல்ரீதியான அச்சுறுத்தல்கள் மற்றும் கடுமையான சொற்கள் ஒரு குழந்தையை பலவீனமாக்கி, ஊக்கமிழக்க செய்கிறது. ஊக்கமிழந்த குழந்தையால் தனது தாய், தந்தை மற்றும் தன்னுடன் பேசுவது கடினமாக இருக்கிறது. ஒரு முயற்சியை மேற்கொள்வதற்கு, தனது சொந்த கால்களில் நிற்பதற்கு, ஒரு தலைவனாக வளர்ச்சி பெறுவதற்கு தேவையான ஊக்கத்துடன் பேச அந்த குழந்தையால் முடிவதில்லை. குழந்தைகளால் உங்களுடன் பேசி உரையாட முடியவில்லை என்றால், அந்த குழந்தைகள் உங்களுடன் பேச விரும்பாத அளவிற்கு, நீங்கள் அதை துன்புறுத்தி அச்சுறுத்தி இருக்க வாய்ப்புள்ளது. ¶அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் உலகெங்கிலும் இருந்து அழைத்து வரப்பட்ட அடிமைகள் எந்த பிரச்சனையும் செய்யாமல் இருக்க அவர்களை கைகளாலும் கசையாலும் அடித்து அடிமைகளாக்கிய அச்சுறுத்தும் கதைகள் பல உள்ளன. அவர்கள் சிறிய தவறு செய்தாலும் அல்லது தவறு ஏதும் செய்யாவிட்டாலும், அவர்கள் அடிமைகளாக "உரிய இடத்தில்" இருக்கவேண்டும் என்று இரக்கமின்றி அடித்து அவமதிக்கப்பட்டார்கள். அந்த வேலையைத் தான் நிந்திக்கும் கடுஞ்சொற்கள் செய்கின்றன. அது குழந்தைகளை "உரிய இடத்தில்" வைத்திருந்து, அவர்களை வீட்டின் அடிமைகளாக மாற்றி, தொடர்ந்து சபித்துக் கொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு அவர்கள் பணத்தை சம்பாதித்து வழங்கி, அந்த பெற்றோர்கள் மேலும் திட்டாமல் இருக்க போலியான அன்பை செலுத்தவும் துணை புரிகிறது. இவ்வாறு நடப்பதை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். தங்களது சொந்த வீடுகளில் உடல்ரீதியாகவும் கடுஞ்சொற்களாலும் சித்ரவதை செய்யப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் வாலிபர்கள் விரக்தியில் வழங்கிய தகவல்களை, நான் அவர்கள் சொல்ல

கேட்டும் மின்னஞ்சல் வழியாக படித்தும் வருகிறேன். நான் அறிந்த பல அனுபவங்களில் இருந்து, ஒரு மூங்கில் கட்டை அல்லது ஒரு பெல்ட் அல்லது கையால் கிடைக்கும் அடியை காட்டிலும் கடுஞ்சொற்கள் ஏற்படுத்தும் வேதனை அதிகம் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 201

சித்ரவதை அனுபவித்த

இளைஞர்களுக்கான அறிவுரை

நாம் வரவிருக்கும் அடுத்த தலைமுறையுடன் பேச விரும்புகிறோம். பதினான்கு வயதில் இருப்பவர்கள், பதினெட்டு வயதில் இருப்பவர்கள் மற்றும் இருபது வயதில் இருப்பவர்கள் எல்லோரும் உங்கள் சொந்த கால்களில் நில்லுங்கள்! *தர்மநெறிகளை* பின்பற்றி உங்கள் முடிவுகளை எடுங்கள். *தர்ம* நெறியை தெரிந்துக்கொள்ள எந்த புத்தகத்தை பின்பற்றுவது? அதற்கு திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் பொருத்தமாக இருக்கும். அது ஒரு நல்ல வாழ்க்கையை வாழ தேவையான கருவிகள் அனைத்தையும் வழங்குகிறது. பெற்றோர்கள் உங்களை கடுஞ்சொற்களால் திட்டினால், அந்த சொற்கள் உங்கள் மீது பாதிப்பை ஏற்படுத்த அனுமதிக்காதீர்கள். அவர்கள் உங்களை கடுமையான சொற்களால் திட்டுவதற்கான காரணத்தை முழுமையாக புரிந்துக்கொண்டு பரிவுடன் இருக்க முயற்சி செய்யுங்கள், ஆனால் அவர்கள் தங்களையே சபித்துக் கொள்ளும் செய்முறையில் இருப்பதால், திட்டுவதைத் தவிர அவர்களால் வேறு எதையும் செய்யமுடியாது என்பதை நினைவில் வைத்து இருங்கள். இந்நிலையில் வீட்டில் இருப்பதால் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் அடைய முடியாது என்பதை உணர்ந்த பிறகு "சொந்த கால்களில் நின்று, வாழ்க்கையில் தைரியமான முடிவுகளை எடுத்து, உங்கள் சுதந்திரத்தை வலியுறுத்துங்கள்," என்பதையே நாங்கள் தகவலாக தர விரும்புகிறோம். ¶ஆசிய நாடுகளில் இருக்கும் சில கடைகளில் இருந்து, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தண்டனை வழங்கும் நோக்கத்துடன் மூங்கில் பொருட்கள், பெல்ட் மற்றும் மற்ற கருவிகளை வாங்க முடிகிறது. தாங்கள் பேசும் கடுஞ்சொற்கள் மூலம் அதே வேதனை அல்லது அதற்கும் அதிகமான வேதனையை வழங்க முடியும் என்பதை சிலரே உணர்ந்து இருக்கிறார்கள். பெற்றோர்கள் தாழ்த்தி இழிவாகப் பேசுவதற்கு ஒரு நீண்ட பட்டியலை உருவாக்கி இருக்கிறார்கள். "என்னை இனிமேல் துன்புறுத்த வேண்டாம். என்னை கடுஞ்சொற்களால் திட்ட வேண்டாம். என்னிடம் நீண்டகாலம் பேசாமல் இருப்பது அல்லது என்னை பார்த்தால் முகத்தை திருப்பிக் கொள்வதன் மூலம் என் மனதை புண்படுத்த வேண்டாம்.

இனி அதைப்போன்று துன்புறுத்த வேண்டாம். நான் உங்களுக்காக எதையும் செய்வேன். நீங்கள் என்னை மேலும் துன்புறுத்தாமல் இருக்க உங்களுக்கு பணத்தை சம்பாதித்து தரும் நோக்குடன், ஏதாவது ஒரு சாதாரண வேலையில் சேர்ந்து தினமும் பதினான்கு மணி நேரம் வேலை செய்கிறேன்," என்று அந்த குழந்தை உட்புறமாக கெஞ்சுவதால், நீங்கள் சொல்வதை எல்லாம் செய்ய தயாராக இருக்கும் ஒரு முட்டாள் என்ற உணர்வுடன் உங்கள் குழந்தையை வளர்ப்பதற்கு, கடுஞ்சொற்களால் இழிவுப்படுத்துவது, ஒரு பேசப்படாத விதியாக மாறிவிட்டது. இது தான் உலகெங்கும் இருக்கும் இந்து சமூகத்தில் நடந்துகொண்டு இருக்கிறது. நாங்கள் உலகெங்கும் இருக்கும் இந்து சமூகத்தில், இது தான் நடக்கக் கூடாது என்று நினைக்கிறோம். ¶வீட்டில் அல்லது பள்ளியில் உடல்ரீதியாக அல்லது கடுஞ்சொற்களால் துன்புறுத்தப்படும் ஒரு எட்டு வயது, பத்து அல்லது பன்னிரண்டு வயது குழந்தையால் என்ன செய்ய முடியும்? அது எதையும் செய்ய முடியாத ஒரு மோசமான சூழ்நிலையில் இருக்கும். அந்த வயதில் இருக்கும் குழந்தைகளிடம் இருந்து, அவர்கள் எதிர்கொண்ட சித்ரவதை பட்டியல்களை அஞ்சல் மூலம் பெற்றேன். அதுவும் அவர்களின் பெற்றோர்கள் கூறியதும் பொருத்தமாக இருந்தன. அது அவர்கள் மனதில் மிகப்பெரிய வேதனையாக அமைந்துள்ளது. நாங்கள் அந்த இளைஞர்களுக்கு, தங்கள் பெற்றோர்கள் படங்களின் முன்பாக தொடர்ந்து முப்பத்தி ஒன்று நாட்களுக்கு மலர்களை வைக்கும் பரிகாரத்தை வழங்கி உள்ளோம். ஆனால் அதை பெரும்பாலான இளைஞர்களால் செய்ய முடிவது இல்லை. "எனது *கர்மவினையை* எனக்கு மீண்டும் செய்ததற்கு, நான் உங்களை மன்னித்து விடுகிறேன்," என்று தினமும் சொல்லுமாறு அவர்களை அறிவுறுத்துவோம். ஆனால் அதை சொல்வது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். மிகவும் அதிகமான வெறுப்பு, அவநம்பிக்கை, ஏமாற்றம், வருத்தம் காரணமாக அவர்கள் அதிகமாக இழிவுபடுத்தப்பட்டிருப்பதால், அவர்களால் அந்த பரிகாரத்தை செய்ய முடிவதில்லை. ¶நான் இந்து குடும்பங்களுக்கு வழங்கும் அறிவுரை இது தான். உடல்ரீதியான சித்ரவதை செய்வதை நிறுத்துங்கள். கடுஞ்சொற்கள் சொல்லி திட்டுவதை நிறுத்துங்கள். வீட்டில் சண்டையை நிறுத்துங்கள். நேர்மறை கட்டுப்பாட்டை பயன்படுத்துங்கள். உங்கள் குழந்தைகளை புகழ்ந்து பேசுங்கள். அவர்கள் செய்த நல்ல செயல்களை தெரிந்துகொண்டு, அவர்கள் அதை இவ்வாறு சிறப்பாக செய்தார்கள் என்று சொல்லுங்கள். அவர்களிடம் இருக்கும் தெய்வீக பண்பை கொண்டாடி மகிழுங்கள். அவர்களுடன் இருக்கும் தருணத்தை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள். "அவர்களுக்குள் இருக்கும் தீய சக்தியை விரட்டி அனுப்புங்கள்" என்கிற இறையியல் பகுத்தறிவு மற்றும் "தடியை எடுக்க மறக்க வேண்டாம்" என்று வலுவாக பரிந்துரைத்த பல விவிலிய செய்யுட்களுக்கு ஏற்ப பல பள்ளிகளில் மற்றும் வீடுகளில் உடல்ரீதியாக துன்புறுத்துவதை கட்டாயப்படுத்தி, தங்களது சிந்தனைக்கு ஏற்ப கல்விமுறையை மாற்றி, 150

வருடங்களாக இந்தியாவில் இங்கிலாந்தின் தேவாலயம் ஆட்சி நடத்தியதற்கு முன்பாக, இதுவே குடும்ப கலாச்சாரம் மற்றும் சனாதன தர்மத்தின் மேன்மையான பண்பாக, பழங்கால இந்து தர்மமாக விளங்குகிறது. இன்று உலகெங்கும் இருக்கும் இந்துக்கள் ஒன்றாக இணைந்து துன்புறுத்துவதை நிறுத்தி, அடுத்த தலைமுறைக்கு கற்றுக்கொடுத்து, பயிற்சி அளித்து பொறுமையாக வழிகாட்டும் ஒழுக்கத்தின் உண்மையான நோக்கத்தை நோக்கி மீண்டும் அழைத்து செல்லும் விதிகளை அவர்களுக்கு வழங்கி அமுல்படுத்த ஆரம்பித்துள்ளனர். சனாதன தர்மத்தின் அடிப்படையாக உடல், மனம் அல்லது மனவெழுச்சி ரீதியாக மற்றவர்களை இம்சை செய்யாமல் இருக்கும் *அகிம்சை* விளங்குகிறது. ¶அவர்கள் முட்டாள் என்றும், மிகவும் குட்டையாக இருக்கிறார்கள் என்றும், மிகவும் குண்டாக இருக்கிறார்கள் என்றும், சோம்பேறியாக அல்லது அசிங்கமாக அல்லது சுட்டியாக இருக்கிறார்கள் என்று அவர்களை இழிவுபடுத்துவதை நிறுத்த வேண்டும் என்று கடுஞ்சொற்களால் நிந்திக்கும் பெற்றோர்களுக்கு நான் அறிவுறுத்த விரும்புகிறேன். நீங்கள் ஒரு குழந்தையிடம் சுட்டியாக இருக்கிறாய் என்று தொடர்ந்து சொல்லி வந்தால், அவன் சுட்டித்தனம் மேலும் அதிகரிக்கும். நீங்கள் ஒரு குழந்தையிடம் இனிமையாக பேசுகிறாய் என்று கூறினால், அதன் பேச்சில் இனிமை மேலும் கூடும். அனைத்து மனநல மருத்துவர்களும் ஆமோதிக்கும் இந்த அணுகுமுறையை உறுதிப்படுத்தும் வகையில், தங்கள் குழந்தைகளின் மீது உண்மையில் அன்பு செலுத்தி, அவர்கள் வளர்ப்பில் அக்கறையுடன் இருக்கும் பெற்றோர்களும் பின்பற்றுகிறார்கள்.

சனிக்கிழமை

பாடம் 202

புறங்கூறுதல்

மற்றும் வீண்பேச்சு

மதம் சம்பந்தப்பட்ட இரண்டு முக்கிய விதிகள் உள்ளன. நான் அதைப்பற்றி பேசுவதை நீங்கள் கேட்டு இருப்பீர்கள். நீங்கள் அவற்றை பின்பற்றினால், உங்கள் இயலுணர்வு மனதிற்கு ஆன்மீக பாதுகாப்பை பெறுவீர்கள். உங்களது இயலுணர்வு மனம் உங்களுக்கு உதவி செய்ய எப்போதும் காத்து இருக்கும். ¶மதம் சார்ந்த நிறுவனங்களுக்கு வருமானத்தில் பத்து சதவீதம் வழங்கும் *தசமாம்சம்,* அந்த முக்கிய விதிகளில் ஒன்றாக விளங்குகிறது. இரண்டாவதாக *சௌச்ச க்ரியா* என்கிற நற்செயலை குறிக்கிறது. நற்செயல் என்றால் என்ன? நற்செயல் என்பது உண்மையில் மனக்கட்டுப்பாட்டை குறிக்கிறது, ஏனென்றால் உங்கள் மனம் கட்டுப்பாட்டில் இல்லாத போது அல்லது நீங்கள் அதன் மீது

கட்டுப்பாட்டை இழக்கும் போது, நீங்கள் மற்றவர்களின் உள்ளுணர்வு மனதின் கட்டுப்பாட்டில் இருக்கிறீர்கள். நீங்கள் மற்றவர்கள் கைகளில் சிக்கிய ஒரு பொம்மை போல இருக்கிறீர்கள். அதனால் தான் கற்றுக்கொடுக்கும் போது, "பேசுவதற்கு முன்பாக சிந்தியுங்கள், மற்றும் பேசும் போது உண்மையான, அன்பான, பயனுள்ள மற்றும் தேவையானதை மட்டுமே பேசுங்கள்," என்று குறிப்பிடுகிறோம். இதை செயல்படுத்து பெரும்பாலானோருக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. ஒவ்வொரு சிந்தனையும் உங்களுக்கு விரல் நுனியில் இருந்தால், அது பெரும்பாலும் உங்கள் சிந்தனையாகவே இருக்காது. அது உங்களை சுற்றியிருப்பவர்களின் உள்ளுணர்வு மனதின் கொந்தளிப்பாக இருக்கக்கூடும். அதுவே புறங்கூறுதல் மற்றும் வீண்பேச்சுக்கு காரணமாக விளங்குகின்றது. இழிவாக பேசுபவர்களைப் போல, வீண்பேச்சு பேசுபவர்கள் சிந்திப்பது இல்லை. அடியில் புகைந்துக்கொண்டு அல்லது எரிந்துக்கொண்டு அல்லது கொதிக்கும் நெருப்பை வெளியிடும் விறகு அடுப்புக்களை போல, வீண்பேச்சு பேசுபவர்கள் தங்களை சுற்றியிருக்கும் ஒவ்வொருவரின் உள்ளுணர்வு மனதில் கொந்தளிக்கும் கீழ்த்தரமான அதிர்வுகளை கிரகித்துக் கொள்கிறார்கள். அதிக முதிர்ச்சி பெறாத பலர், தங்கள் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்காமல், மற்றவர்கள் பேசிய கடைசி வார்த்தைக்கு முக்கியத்துவம் அளித்து அதையே மீண்டும் கூறுகின்றனர். அவர்கள் ஆர்வத்துடன் வீண்பேச்சில் ஈடுபட்டு, சுதந்திரமாக மற்றவர்களை துன்புறுத்தி, அந்த நபர்களின் அறியாமை மற்றும் பலவீனத்தை தங்களது சுயநலத்திற்காக பயன்படுத்தும் வலுவான மனம் படைத்த, நேர்மையற்ற மனிதர்கள் கைகளில் பகடைக்காய்களாக மாறிவிடுகிறார்கள். ¶வீண்பேச்சு எதைப்போன்று இருக்கிறது தெரியுமா? அது ஒரு சிரங்கை அரிப்பதைப் போன்றது ஆகும். உங்கள் மனதை ஒரு விஷயம் தூண்டிக்கொண்டு இருக்கிறது, அதனால் நீங்கள் வீண்பேச்சில் ஈடுபடுகிறீர்கள். இன்னொருவர் பேசும் விஷயத்தை மாற்றவில்லை என்றாலும், அல்லது வீணாக பேசுவதற்கு தூண்டுதலாக ஒருவர் ஏதாவது ஒரு வேலையை செய்யவில்லை என்றாலும், இந்த பேச்சு தொடர்கிறது. புறங்கூறுதல் மற்றும் துன்புறுத்தும் வீண்பேச்சை, ஆன்மீக மற்றும் ஆக்கப்பூர்வமான சக்தியின் இழப்பு என்று குறிப்பிடலாமா? அது உண்மையில், இறைவன் உங்களுக்காக வழங்கிய மாபெரும் உட்புற ஆன்மீக சக்தியின் இழப்பாகத் தான் விளங்குகிறது. உங்கள் சக்தியை இழப்பது சரியில்லை என்ற அறிவுரையை எல்லோரும் வழங்குவார்கள், ஆனால் வீணாக பேசும் போது நீங்கள் அதைத்தான் செய்கிறீர்கள். அதை செய்வதன் மூலம், நீங்கள் உள்ளுணர்வு மனதின் கொந்தளிப்பு, மற்றவர்களின் கீழ்த்தரமான மனநிலையின் அழுக்கு படிந்த புகைபோக்கியாகத் தான் விளங்குகிறீர்கள். மனம் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. வீண்பேச்சை நிறுத்தி உங்கள் மனதை சிறிதளவு கட்டுப்படுத்துவதற்கு, நான் அதன் தீய, அருவருப்பான மற்றும் வெறுப்பூட்டும் பண்புகளைப் பற்றிய தேவையான விளக்கத்தை அளித்து

இருப்பதாக நினைக்கிறேன். வீண்பேச்சில் ஈடுபடும் போது, கீழ்நிலை லோகத்தில் *அசுர* சக்திகள் வரவழைக்கப்பட்டு, வீண்பேச்சில் ஈடுபடுபவருக்கு புதிய *கர்மவினைகள்* உருவாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் *கர்மவினைகள்* திரும்பும் போது, மற்றவர்கள் அவரைப்பற்றி வீணாக பேசிக்கொண்டு இருப்பார்கள். ¶நாம் இன்னொரு சூழ்நிலை மீது கவனம் செலுத்துவோம். நீங்கள் கடுஞ்சொற்கள் மூலமாக ஒருவரைப் பற்றி இழிவாக பேசி, அவரது வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி புறங்கூறி வீண்பேச்சில் ஈடுபடுவதன் மூலம், நீங்கள் அவர்களை துன்புறுத்துகிறீர்கள். நீங்கள் அவர்கள் வெற்றிக்கும், நிலைத்திருக்கவும் தடையாக விளங்குகிறீர்கள். நீங்கள் அவர்களை நோக்கி வெளிப்படுத்தும் தீய பண்புகளை, அவர்களால் உணர முடிகிறது. பல பெண்கள் மற்ற பெண்களிடம், பணியில் இருக்கும் தங்கள் கணவன்மார்களைப் பற்றி எதையாவது பேசிக்கொண்டு இருக்கிறார்கள். கணவன் நம்பிக்கை வைத்து இருக்கும் மனைவியின் மனம் ஒரு குழப்பமான சூழலில் அவனுக்கு எதிராக திட்டம் தீட்டி செயல்பட்டால், அவனால் எப்படி வெற்றி அடைய முடியும்? கடிந்துக்கொள்வதைப் போல வீண்பேச்சு மற்றும் புறங்கூறுதல் மற்றவர்களை பாதிக்கிறது. நீங்கள் மற்றவர்களை துன்புறுத்தும் போது ஆன்மீக விதிக்கேற்ப என்ன நடக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன் மூலம் நீங்கள் எதிர்காலத்தில் உங்களையே துன்புறுத்திக் கொள்கிறீர்கள். நீங்கள் உங்களை உடனடியாக துன்புறுத்திக் கொள்வது இல்லை என்றாலும், நீங்கள் அதை ஒரு சில மாதங்களில் எதிர்கொள்வீர்கள். நீங்கள் ஒருவரை தற்போது துன்புறுத்துவதன் மூலம், நீங்கள் எதிர்காலத்தில் உங்களை துன்புறுத்திக் கொள்கிறீர்கள். ¶மனதை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த ஒழுக்கம் தேவைப்படும். அந்த ஒழுக்கத்திற்கு சக்தி நேர்மையில் இருந்து கிடைக்கிறது. நேர்மை என்கிற *ஆர்ஜவம்,* உங்களுக்கு ஒரு வரமாக அமைந்து, உங்களுக்கு நிலைத்தன்மை மற்றும் வலிமையை வழங்குகிறது. அது உங்கள் இருப்பில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் ஒரு உட்புற சக்தியுடன் அதிர்வதற்கு காரணமாக அமைகிறது. அது உங்களுக்கு நியாயத்தின் மீது கவனமாக இருக்கும் ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது. ஆனால் நீங்கள் முதலில் உங்களுக்கு நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். அடுத்த முறை நீங்கள் ஆனந்தமாக அமர்ந்து வீண்ப்பேச்சு பேசுவதற்கு தகுந்த சூழ்நிலை இன்னொரு நபரின் வாழ்க்கையில் நடக்கும் போது, உங்கள் மனதின் சிந்தனை ஓட்டங்களை நிறுத்தி, அந்த நபர் எதிர்கொள்ளும் கடினமான அனுபவம் மற்றும் உணர்வுகளை பற்றி சற்று சிந்தியுங்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 203

சிந்தனைகளுக்கு

சக்தி இருக்கிறது

ஒவ்வொரு சிந்தனை மற்றும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு ஆகாச வடிவம் இருக்கிறது. அதன் காரணமாகவே நீங்கள் ஒரு மகிழ்ச்சியான அறையில் நுழையும் போது, நீங்களும் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்கிறீர்கள். நீங்கள் சிந்திக்கும் ஒவ்வொரு சக்தியும் நீங்கள் பேசும் ஒவ்வொரு சொல்லும், ஆகாசத்தில் ஒரு உருவம் மற்றும் வடிவத்தை கொண்டிருப்பதால், நீங்கள் சோகமாக இருக்கும் அறையில் நுழையும் போது, உங்களால் வேதனையை உணர முடிகிறது. ¶*பிராணன்* என்பது மனதில் இருக்கும் சக்தி ஆகும். நீங்கள் மனதின் சக்தியை பயன்படுத்தி, மனதோடு தொடர்புடைய படைப்புக்களை உருவாக்குகிறீர்கள். நீங்கள் தூல சக்தியை பயன்படுத்தும் போது, நீங்கள் தூல படைப்புக்களை உருவாக்குகிறீர்கள். உங்கள் கைகளை பயன்படுத்தி, நீங்கள் ஒரு வீட்டை கட்டுவது, உணவு சமைப்பது என்று உங்கள் தூல சக்தியை மற்றும் தூல உடலை பயன்படுத்தி பல வேலைகளை செய்யலாம். மனதின் துணையுடன் *பிராண* சக்தியை பயன்படுத்தி, நீங்களும் உங்களுக்காக உருவாக்கிக் கொள்ளலாம். எத்தனை பேருக்கு *பிராணன்* மற்றும் மனதின் சக்தியைப் பற்றி தெரியும்? ஒரு தனிநபராக உங்கள் மனதில் இருக்கும் சக்தி, உங்களை வியக்க வைப்பதாக இருக்கும். ¶உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு நேர்மறை சிந்தனையும் சூட்சும உலகில் வெளிப்பட்டு, அதை உருவாக்க நீங்கள் எடுத்துக்கொண்ட கால அளவிற்கு, அது அந்த உலகில் நிலைத்து நிற்கிறது. நீங்கள் உங்கள் தூல சக்தியை பயன்படுத்தி தூல உலகில் உருவாக்கிய ஒவ்வொரு பொருளும், நீங்கள் அதை உருவாக்க எடுத்துக்கொண்ட காலம் மற்றும் முயற்சியை பொறுத்து, அது தூல உலகில் தூல வடிவில் நிலைத்து இருக்கிறது. நீங்கள் ஒரு அற்புதமான வேலையை செய்தால், அது நூறு வருடங்களுக்கும் மேலாக நிலைத்து இருக்கக்கூடும். நீங்கள் ஒன்றை உருவாக்க அதிக முயற்சி மேற்கொள்ளவில்லை என்றால், அது தூல உலகில் அதிக நாட்கள் நிலைத்து இருக்காது. ¶நாம் சிறிது நேரம் மனதின் லோகத்தை பற்றி சிந்திக்கலாம். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு நல்ல சம்பவம் நடக்கவேண்டும் என்று ஒரு சிந்தனையை உருவாக்கினால், ஒரு நேர்மறை சம்பவம் உங்களை தேடி வரும். நீங்கள் அந்த சிந்தனை மீது கவனத்தை ஒருமுகப்படுத்தி, அதை உண்டாக்குகிறீர்கள் மற்றும் நீங்கள் பார்க்க விரும்பும் காட்சியை உருவாக்குகிறீர்கள். அதன் பிறகு ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர்கள். அது அப்போதே நடந்து முடிந்த உணர்வை பெறுகிறீர்கள். இன்னோரு உதாரணமாக, நீங்கள் உணர்வின் கீழ்நிலைக்கு இறங்கி வீணாக பேசுவதாக நினைத்துக் கொள்வோம். நீங்கள் கீழ்த்தரமாக பேசி பூறங்கூறவும் செய்கிறீர்கள். நீங்கள் உங்கள் மனதின் மீது கட்டுப்பாட்டை இழக்கிறீர்கள்.

நீங்கள் உங்கள் இயலுணர்வு மனதை முதலில் பயன்படுத்தாமல் உங்கள் உள்ளுணர்வு மனதை முதலில் பயன்படுத்தி "அது நடக்க வாய்ப்பு இல்லை, ஏனென்றால்..." அல்லது "என்னால் அதை செய்ய முடியாது ஏனென்றால்..." என்று சிந்திக்க தொடங்குகிறீர்கள். நீங்கள் அச்சம் மற்றும் கவலை கொண்டு உருவாக்கும் ஒரு எதிர்மறை மாதிரி, அழகான காட்சியை மறைத்து அதை அழித்து விடுகிறது. அதன் பிறகு அது யதார்த்தமாக வெளிப்படாத போது "எனது பிரார்த்தனைகள் பலன் தரவில்லை. கடவுள் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மும்முரமாக இருந்திருக்க வேண்டும். அவரால் எனக்கு உதவி செய்ய முடியவில்லை," என்று கூறுகிறீர்கள். ஆனால் அதை உருவாக்கியது நீங்கள் தான். நீங்கள் அதை உங்கள் மனதின் லோகத்தில் முடிந்த வரை பாதுகாத்து வந்தீர்கள், ஆனால் அது தூல உலகில் வெளிப்படும் முன்பாக உங்களுக்கு தெரியாமல் அதை அழித்து விட்டீர்கள். இது வாழ்க்கை வழங்கும் கடினமான சூழ்நிலைகளை அனுபவிக்கும் ஒரு வழியாக விளங்குகிறது. தானாக உருவாக்கிய தோல்விகளுக்கு மற்றவர்களை காரணம் சொல்லும் பல இந்துக்கள் இதைத் தான் செய்கிறார்கள். ¶அவை அனைத்தும் எதை குறிக்கின்றன என்று தெரியுமா? மனதின் குழப்பத்தை! அதனால் நம்மிடம் இரண்டு வாய்ப்புக்கள் உள்ளன: குழப்பம் அல்லது கட்டுப்பாடு. மனதை கட்டுப்படுத்துவதற்கு, நாம் பின்பற்ற வேண்டிய ஆன்மீக விதிகள் பல உள்ளன. வெளிப்புற மனதை கட்டுப்படுத்தும் போது, ஆன்மா அல்லது உட்புற சக்தியாக இருக்கும் உங்கள் பரமாத்துமா பிரகாசமாக வெளிப்பட முடிகிறது. சூரியன் பிரகாசிக்க அனுமதிக்காத மேகத்தை, ஒரு குழப்பமான மனதுடன் ஒப்பிடலாமா? ஒரு கட்டுப்படுத்தப்பட்ட மனம் ஒரு தெளிவாக ஆகாசமாக விளங்குகிறது, மற்றும் அதன் வழியாக சூரியன் பிரகாசிக்க முடிகிறது.

உத்கோச்ச துஷ்கர்ம தனம்

उत्कोच दुष्कर्मधनम्



இலஞ்சம் மற்றும் தீய வழிகளில் ஈட்டிய பணம்

அக்னி தேவனே, ஒளிப்பொருளே! எங்கள் எல்லா செயல்களையும் அறிபவன் நீ. வினைப்பயனை அனுபவிப்பதற்காக எங்களை சன்மார்க்கத்தில் அழைத்து செல். எங்களை கொடிய தவறுகளில் இருந்து விலக்கு. உனக்கு மீண்டும் மீண்டும் எங்கள் வணக்கங்கள்.

சுக்ல யஜுர் வேதம், ஈசாவாஸ்ய உபநிடதம், 18. வேஎ, ப. 831


JUICE
SHOP

இந்த படங்களில் நாம் நல்ல மற்றும் தீய வழிகளில் ஈட்டும் பணத்திற்கான உதாரணத்தை காண்கிறோம். கீழிருக்கும் படத்தில், ஐரோப்பாவில் இருக்கும் ஒரு தந்தை மற்றும் அவருடைய மகன் ஒரு பழரச கடையை நடத்தி நேர்மையான வழியில் வாழ்ந்து வருகிறார்கள். மேலிருக்கும் படத்தில் இரண்டு சூதாட்டக்காரர்கள் கேசினோவில் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் சூதாட்ட இயந்திரத்தில் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த சூதாட்டம் பல நாடுகளில் சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை பெற்று இருக்கிறது.

திங்கட்கிழமை

பாடம் 204

நல்ல பணம்,

தீய பணம்

எனது சத்குருவான மதிப்பிற்குரிய யோகசுவாமி, நல்ல மற்றும் தீய பணத்தை பகுத்தறிந்து, எங்களுக்கு இந்த பாடத்தை கற்றுத் தந்தார். *தர்ம* நெறியை பின்பற்றி நேர்மையாக சம்பாதித்த பணத்திற்கு அவர் அதிக மதிப்பு அளித்தார், மற்றும் அவர் அதை தனது பரம்பரையின் முக்கிய பணியை ஊக்குவிக்க பரவலாக பயன்படுத்தினார். அவர் *அதர்ம* நடவடிக்கைகள் மூலம் சம்பாதித்த பணத்தை விரும்பவில்லை. அத்தகைய வழிகளில் பெற்ற வெகுமதிகளை செலவழிக்கும் போது, நமது பூஜை அறைகளில் இருக்கும் கருவறையில் நரகலோக அரக்கர்கள் வந்து, அன்பர்கள் மனதை குழப்பி விடுவார்கள் என்று அவர் எச்சரித்தார். அவ்வாறு தவறான முறையில் சம்பாதித்த பணத்தை வெகுமதியாக பெறுவதற்கு, கடந்த நூற்றாண்டில் பல *ஆசிரமங்கள்* மறுத்துள்ளன. ஒரு முறை ஒரு செல்வந்தர் ஒரு பெரிய வெள்ளித்தட்டு நிறைய தங்கக்காசுகள் மற்றும் மற்ற உயர்ந்த வெகுமதிகளுடன், யோகசுவாமியின் குடிசைக்கு வந்து இருந்தார். அது தவறான வழியில் சம்பாதித்த பணம் என்பதை உணர்ந்த யோகசுவாமி, அந்த தட்டை ஏற்காமல் தட்டி விட்டு செல்வந்தரை திருப்பி அனுப்பினார். ¶பணம் என்பது ஒரு சக்தியாக இருப்பதால், அதில் நல்ல மற்றும் தீய பணம் என்ற பாகுபாடு இருக்கிறது. ஏன் பணம் சக்தியாக இருக்கிறது? ஏனென்றால் பணம் ஆற்றல், சக்தியை வழங்குகிறது. *பிராண* சக்தியின் வடிவமாக இருக்கும் பணம், காகிதம் மற்றும் வெள்ளி மற்றும் மிகவும் முக்கியமாக தங்கத்தில் சேகரிக்கப்பட்டு வருகிறது. காகிதத்தில் இருக்கும் பணம், சில்லறை, காசோலைகள் மற்றும் கேட்புக் காசோலை ஆகியவற்றிற்கு உண்மையான அடிப்படையாக தங்கம் விளங்குகிறது. ஒரு முறை உலகில் இருக்கும் பணம் முழுவதும் தங்கத்தின் விலைக்கு ஏற்ப ஏற்ற இறக்கங்களை சந்தித்தன. மறைஞான அடிப்படையில், உங்கள் வீட்டில் அல்லது உங்கள் நிறுவனத்தில் உண்மையான தங்கம் இருந்தால், நீங்கள் வைத்திருக்கும் தங்கத்திற்கு ஏற்ப உங்களிடம் இருக்கும் செல்வமும் கூடுகிறது. ¶நல்ல பணம் என்பது நேர்மையான முறையில் ஈட்டிய பணம், மற்றவர்களை துன்புறுத்தாமல்

உதவி செய்து சம்பாதித்த பணம், மற்றவர்களை ஏமாற்றாமல் சேவை செய்து, மற்றவர்களை திருப்திப்படுத்தி, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்த பணத்தை குறிக்கிறது. இது நேர்மையான பணம் ஆகும். நேர்மையான பணம் நல்ல செயல்களுக்கு துணை புரிகிறது. அதை செலவழித்தால் அல்லது முதலீடு செய்தால், அது வழங்கும் முறையான பலன்கள் நீடித்து நின்று, மூலதன லாபங்களில் இருந்து கிடைக்கும் வட்டி மற்றும் பங்காதாயம் மூலமாக தொடர்ந்து பலன்களையும், வளர்வதற்கு விதைகளையும் வழங்கிக்கொண்டு இருக்கும். ஆனால் போதை மருந்துகள் அல்லது ஆயுதங்களை விற்பனை செய்தல், இலஞ்சம் வாங்குதல், விவாகரத்து பெறுவதற்கு வாதாடுதல், கருக்கலைப்பு செய்தல், வஞ்சனை செய்தல், திருடுதல் மற்றும் நூற்றுக்கணக்கான தவறான வழிகள் மூலம் சம்பாதித்த தீய பணம் அனைத்தும் தீய செயல்களுக்கு துணை புரிகின்றன. ஒரு தீய நோக்கத்தில் இருந்து தீய பணம் வெளிவருகிறது மற்றும் அது பேராசை அல்லது லாபத்திற்காக செய்யும் தவறான செயலுக்கு முன்பாக தோன்றுகிறது. அதுவே தீய பணம் ஆகும். அதை செலவு செய்தாலும் முதலீடு செய்தாலும், அது எதிர்பாராத எதிர்மறை விளைவுகளை விளைவிக்கக்கூடியது. கோயில்கள் நிர்மாணம் மற்றும் மக்களுக்கு நன்மைகளை செய்யும் மற்ற அமைப்புக்களுக்கு நல்ல பணம் பொருத்தமாக இருக்கும். ¶கோயில்கள் நிர்மாணம் மற்றும் மற்ற சமூக அமைப்புக்களுக்கு, சில சமயங்களில் தீய பணம் பரிசாக வழங்கப்படுகிறது. ஆனால் அது பெரும்பாலும் பாவங்களை செய்து சம்பாதித்த நபரின் குற்ற உணர்வை குறைக்கும் நோக்கத்துடன் வழங்கப்படுகிறது. அதனால் அந்த அமைப்பிற்கு எந்த பலனும் கிடைப்பதில்லை, மாறாக அந்த அமைப்பு வீழ்ச்சியை சந்திக்கிறது. அந்த கோயில் *தரிசனம்* ஏதும் வழங்காத ஒரு அருங்காட்சியகமாக இருக்கும். அந்த கோயிலில் தெய்வீக *சக்தி* இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அது அங்கே இருப்பதில்லை. தீய வழியில் ஈட்டிய பணம் நீடித்து இருக்கும் தீய செயல்களை தூண்டி விடுகிறது, மற்றும் அதை பெற்றவர்களின் வாழ்க்கைகளில் நல்ல செயல்கள் செய்யும் ஆர்வத்தை குறுகிய காலத்தில் நிறுத்தி விடுகிறது. இதைப்பற்றி எனது கருத்தை நாடியவர்களுக்கு, நான் 1991 ஆம் ஆண்டு பின்வரும் சூத்திரத்தை உருவாக்கினேன். "சிவனை நேசிப்பவர்கள், தீய வழியில் ஈட்டிய பணம் சபிக்கப்பட்டது என்பதையும், அதை நற்செயல்களுக்கு பயன்படுத்த முடியாது என்பதையும் அறிந்த இருப்பதால் அவர்கள் வஞ்சனை, இலஞ்சம், திருட்டு, ஆயுதங்கள் அல்லது போதை மருந்துகளை விற்பனை செய்தல், கருக்கலைப்பு அல்லது விவாகரத்து மூலம் சம்பாதித்தல், மற்றும் வேறு பல தீய வழிகள் மூலம் சம்பாதித்த பணத்தை மறுக்கின்றனர்." ¶தீய வழியில் ஈட்டிய பணத்தை நல்ல வழியில் செலவழிக்கும் போது, அந்த பணம் சுத்தம் அடைவதாக சிலர் கருதுகிறார்கள். அது அறியாமையை அடிப்படையாகக் கொண்ட முறையற்ற கோட்பாடு ஆகும், ஆனால் *பிராண* சக்தியாக இருக்கும் பணத்தை அவ்வளவு

எளிதாக மாற்றி விடமுடியாது. தவறாக வழிநடத்தப்பட்ட இந்த பிரிவினர் அல்லது வெகுளியாக இருக்கும் பலர், அந்த கறைபடிந்த செல்வதை பயன்படுத்தி தங்களது சொந்த அழிவை தாங்களே தேடிக்கொள்கின்றனர். மேலும் இந்த நடவடிக்கை மூலம், அவர்கள் பணம் சலவை செய்யும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். மத சார்புள்ள அமைப்புக்கள் மூலம் பணசலவை செய்ய முடியாது. வங்கிகள் சட்டப்பூர்வமாக பணசலவை செய்ய முடியாது. தனிநபர்கள் பணசலவை செய்ய முடியாது. மேலும் தீய வழியில் ஈட்டிய பணத்தை ஒரு மத சார்புள்ள அமைப்புக்கு வழங்கும் நபர்கள், அந்த அமைப்பின் நடவடிக்கைகளில் நுணுக்கமாக தீவிரமாக ஊடுருவ முயற்சி செய்து, அந்த அமைப்பில் இருக்கும் *சுவாமி*, மடவாசிகள், உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட அந்த முழு அமைப்பையும் பலகீனமாக்கி அதை கட்டுப்படுத்த முற்படுகின்றனர் என்பதையும் நாம் அறிவோம். தீய பணத்தை தொடர்ந்து அதிக அளவில் ஏற்றுக்கொண்டு அதை சார்ந்து இருந்தால், அது அதிக அளவு அதர்மத்தை உருவாக்கி, பேராசைக்கு இணங்கிய சமூகங்களின் அழிவிற்கு வழிவகுக்கிறது, மற்றும் அதன் பிறகு *தர்ம* நெறியின் அடிப்படை கோட்பாடுகளை மீண்டும் உருவாக்க, ஒரு புதிய சுழற்சி துவங்க வேண்டியிருக்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 205

மாசுபடிந்த நிதியுதவிகளை

மறுத்தல்

தங்கள் விரதங்களை முறையாக கடைப்பிடித்த சீடர்கள் வீட்டில் மட்டுமே இரவு நேரத்தில் தங்கி, நல்ல வழியில் ஈட்டிய பணத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு ஒரு எளிமையான வாழ்க்கைக்கு ஒரு முன் உதாரணமாக எனது *சத்குரு* திகழ்ந்தார். தீய வழியில் ஈட்டிய பணத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் *அசுரர்கள்* வரவழைக்கப்பட்டு, அதை பெறும் *ஆசிரமம்* அல்லது அமைப்பு வெளியுலக வலையில் சிக்கிக் கொள்கிறது. ஒருவர் தான் தீய வழியில் ஈட்டிய பணத்தை பெற்றுள்ளார் என்பதை எப்படி தெரிந்துகொள்வது? அது பெறுபவருக்கு உளரீதியாக கடன்பட்டிருக்கும் உணர்வை வழங்குகிறது. தெய்வீகப் பணிக்கு நல்ல வழியில் ஈட்டிய பணத்தை தாராளமாக பெறும் போது, இந்த உணர்வு தோன்றுவது இல்லை. தீய வழியில் ஈட்டிய பணம் சில கட்டுப்பாடுகள் மற்றும் குற்ற உணர்வுடன் வருகிறது. ¶நாங்கள் இதன் மூலம் மத சார்புள்ள அமைப்புக்கள், ஆசிரமங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு பின்வரும் தகவலை வழங்க விரும்புகிறோம். தீய வழியில் ஈட்டிய பணத்தை பெற வேண்டாம். நல்ல

வழியில் ஈட்டிய பணத்தை நாடுங்கள். அது *சுக்லதன* என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகிறது. தீய வழியில் ஈட்டிய கருப்பப் பணம் என்கிற *கிருஷ்ண தனத்தை* ஏற்க வேண்டாம். அந்த பணம் எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை என்றால், நீங்கள் ஏதாவது ஒரு வழியை பின்பற்றி சாமர்த்தியமாக தெரிந்துக்கொள்ளுங்கள். நன்கொடை வழங்குபவருக்கு வருமானம் எங்கிருந்து வருகிறது? கருக்கலைப்பு செய்தல், சூதாட்டத்தில் ஈடுபடுதல், இலஞ்சம் வாங்குதல், *அதர்மமான* மற்றும் சட்டவிரோதமான வேலைகள் அல்லது வேறு முறைகேடான வேலைகளில் இருந்து பணம் வந்ததா? அது குற்ற உணர்வை குறைக்க வழங்கப்படுகிறதா? ¶இன்று தேர்தல் களத்தில் இருக்கும் வேட்பாளர்கள், தங்களுக்கு வரும் நன்கொடையின் மதிப்பு US$10,000க்கும் அதிகமாக இருந்தால், அதை வழங்குபவரின் வாழ்முறை மற்றும் அவர் அந்த பணத்தை எவ்வாறு சம்பாதித்தார் என்பதை ஆய்வு செய்த பிறகு, அந்த பணத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார்கள் அல்லது மறுத்து விடுவார்கள். பணம் எங்கிருந்து வந்தது என்பது வெளிப்படையாக தெரிவிக்கப்படும் போது, அத்தகைய சந்தேகங்கள் நீங்குகின்றன. தவறு செய்பவர்கள் மற்றும் அவருக்கு துணைபுரிபவர்களுக்கு *பிராண* சக்தி பிணைப்புகள் வலுவாக இருப்பதால், செல்வத்திற்கு வழி வகுக்கும் லாபம் வந்த இடங்களை பற்றி தெரிந்துக்கொள்ள, தேவலோகத்தில் இருக்கும் *தேவர்கள்* இருபத்தி நான்கு மணி நேரமும் மிகவும் கவனமாக கண்காணிக்கிறார்கள். ¶வேட்டை துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள், இயந்திர துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மற்றும் ஏவுகணைகள், சித்ரவதை மற்றும் கொலை செய்ய துணைபுரியும் கருவிகள் ஆகியவற்றை மறைவாக வாங்கி அதை இரகசியமாக அல்லது ஒரு கடையில் விற்பனை செய்யும், ஒரு ஆயுத விநியோகிப்பாளரை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த நிறுவனம் சம்பாதிக்கும் பணத்தை, மத சார்புள்ள நிறுவனம் அல்லது கல்வி நிறுவனம் அல்லது மக்களுக்கு நன்மை செய்யும் நிறுவனத்தில் முதலீடு செய்தால், பாலில் வினிகர் சேர்த்தால் ஏற்படும் விளைவு போல, அது அந்த நிறுவனத்தின் இயக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ¶தீய வழிகளில் பொருள் ஈட்டிய பிரச்சனைக்குரிய நபர்கள் வழங்கும் தேர்தல் நன்கொடைகளை பெற்றால் எதிர்காலத்தில் தான் பதவிக்கு வந்ததும் தனது தொகுதி மக்களின் வெறுப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அறிந்த ஒரு நேர்மையான அரசியல்வாதி, அந்த நன்கொடையை திருப்பி அனுப்பி விடுவார். அதைப்போல தீய வழியில் ஈட்டிய பொருளை வழங்க வரும் நபரை திருப்பி அனுப்புவது ஆன்மீக தலைவரின் கடமை ஆகும். ஒரு அரசியல்வாதி தனது நற்பெயரை காப்பாற்ற வேண்டும். தீய வழியில் ஈட்டிய பொருளை ஆன்மீக தலைவர் இயல்பாக மறுத்து விடுகிறார். அவருக்கு பணத்தின் தேவை இருப்பதில்லை. பணம் வரும் போது, அவர் சில செலவுகளை செய்கிறார். அவருக்கு பணம் வரவில்லை என்றால், அவர் செலவுகளை தவிர்க்க அல்லது குறைவாக செலவு செய்வதில் கவனம் செலுத்துகிறார். ¶பல

வருடங்களுக்கு நேவடாவின் ரெனோ நகரில் இருக்கும் சூதாட்ட கேசினோக்கள் உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை அளித்து வந்தது. காலங்கள் மாறின மற்றும் சூதாட்டம் மூலம் ஈட்டிய பொருளை ஊக்கத்தொகையாக பயன்படுத்தி, குழந்தைகளை உயர்கல்விக்கு அனுப்புவதற்கு கல்வியாளர்களின் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. அவர்கள் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளின் மூலம், நாம் மதத்தின் எல்லைகளை கல்வி மற்றும் பூமியில் நல்ல நடத்தைக்கு துணை புரியும் மனித மனசாட்சிக்கு விரிவாக்கம் செய்ய பயன்படுத்துகிறோம். ¶மனிதர்களிடம் அதிக மாற்றம் ஏற்படவில்லை. 2,200 முன்பாக திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், இந்தியாவில் இருக்கும் தமிழ்நாட்டின் நீதிமன்றங்களில் இன்றும் சத்திய பிரமாணத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். (283)

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். (755)

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. (660)

புதன்கிழமை

பாடம் 206

மூன்று வகை

இலஞ்சம்

நான் உங்களுடன் ஒரு உண்மை சம்பவத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்து அதிகமாக இருக்கும் கோலாலம்பூரில் ஒரு இளைஞன் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தான். தனது வண்டியில் பின்புற விளக்கு பழுதாகி இருப்பதை அவன் அறிந்து இருந்தான். அவன் தனக்கு பின்புறத்தில் போக்குவரத்து காவல்துறையின் சைரன் சத்தம் கேட்டதும், தன் வாகனத்தின் வேகத்தை குறைத்தான். அப்போது வாகனத்தில் வந்த ஒரு காவலர் அவன் முன்பாக வந்து இடைமறித்து நின்றார். அந்த அலுவலர் மலாய் மொழியில் அவன் செய்த தவறை குறிப்பிட்டு தனது பதிவேட்டை வெளியே எடுத்து, இந்த தவறை சிறிய இலஞ்சம் தந்து சரிசெய்து விடலாம் என்று சைகைகள் மூலம் தெரிவிக்கிறார். அந்த இளைஞனின் இதயம் துடிதுடிக்க,

வியர்த்து விருவிருத்து தைரியத்தை வரவழைத்து, "ஆபீசர், நீங்கள் என்னிடம் இலஞ்சம் கேட்கிறீர்களா? நான் உங்களுக்கு இலஞ்சம் தரப்போவது இல்லை. உங்களுடைய பாட்ஜ் எண் என்ன? உங்களுடைய உயர் அதிகாரியிடம் அழைத்து செல்லுங்கள்!" என்று கூறினான். அதிர்ந்து போன அலுவலர், அந்த இளைஞனை ஏமாற்ற முடியாது என்பதை அறிந்து தனது இரு சக்கர வாகனத்தை விரைவாக திருப்பி மின்னல் வேகத்தில் மறைந்தார். இந்த உண்மை சம்பவத்தில் தவறு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தான் தவறு செய்வதை காவலர் அறிந்து இருந்தார். அந்த தவறுக்கு இளைஞன் உடந்தையாக இருக்க தூண்டப்பட்டாலும், அவன் அதற்கு மசியாமல், சமூகம் எதிர்கொள்ளும் ஒரு முக்கிய பிரச்சனையில் இருந்து விலகி நிற்க முடிவு செய்தான். ¶ஆமாம் இலஞ்சம் கொடுப்பவரும் வழங்குபவரும், தாங்கள் மேற்கொள்ளும் நேர்மையற்ற வஞ்சக செயலில் ஒன்றாக இணைந்து இருக்கிறார்கள். தொடர்ந்து சேர்ந்துவரும் *குக்கர்மா* மற்றும் குற்ற உணர்வில் இருந்து ஒருவர் விடுதலை பெறுவதற்கு தயக்கம், பொறுமை, செயல்திறன், வெறுப்பு ஆகிய உணர்வுகளில் எதுவும் உதவியாக இருக்காது. இலஞ்சத்தில் மூன்று வகை உள்ளது. ஒருவர் தான் பெறும் ஊதியத்திற்கு வழங்கவேண்டிய சேவையை, ஒரு கூடுதல் சலுகை இரகசியமாக கிடைக்கும் வரை நிறுத்தி வைப்பது முதல் வகை ஆகும். இது மக்களிடம் அதிக வழக்கத்தில் இருக்கிறது. இரண்டாவது வகை சிறிது நுணுக்கமானது. பணமாக அல்லது பொருளாக இலஞ்சம் வழங்குபவர்களுக்கு ஒப்பந்தங்கள் மற்றும் சலுகைகளில் முன்னுரிமை, சட்ட விலக்கு அளிப்பு போன்ற உதவிகள் இரண்டாவது வகை ஆகும். இலஞ்சம் வழங்குபவர், "நான் உனக்கு இந்த பணத்தை வழங்குகிறேன், பதிலுக்கு நீ எனக்கு இதைத்தான் செய்ய வேண்டும்," என்று சொல்கிறார். இலஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதை வாங்கியவர் அதைத்தான் செய்தாக வேண்டும். இது செல்வாக்கு, பதவி அல்லது அதிகார பயன்பாட்டை அங்கீகாரம் இல்லாமல் இரகசியமாக பணம் கொடுத்து வாங்குவதை குறிக்கிறது. இலஞ்சத்தில் மூன்றாவது வகை மேலும் நுணுக்கமானது. அது கட்டண சேவையை வழங்கிய பிறகு ஒரு கூடுதல் வெகுமதியையும் கேட்டு பெறுவதை குறிக்கிறது. இந்த வகை சேவையை எளிதில் தெரிந்து கொள்ளலாம், ஏனென்றால் மேலும் சேவையை கோரும் போது, அதில் தாமதம் ஏற்படும் அல்லது அது நிராகரிக்கப்படும். உதாரணத்திற்கு முதல் சேவைக்கு பிறகு எதிர்பார்த்த பரிசு வழங்கப்படுவது இல்லை அல்லது அது எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இருப்பது இல்லை. ¶இலஞ்சம் என்பதற்கான ஆங்கில சொல் பழங்கால ஃப்ரெஞ்ச் சொல்லில் இருந்து உருவானது. அது ஒரு பிச்சைக்காரனுக்கு வழங்கப்படும் ஒரு ரொட்டி துண்டை குறிக்கிறது. இதைப்பற்றி வெப்ஸ்டர்ஸ் அகராதி வழங்கும் விளக்கம். இலஞ்சம் என்பது “1) ஒருவர் சட்டவிரோதமாக அல்லது தவறாக செயல்படுவதற்கு தூண்டுதலாக வழங்கப்படும் அல்லது வழங்குவதாக உத்தரவாதம் அளிக்க பயன்படும் பொருள், குறிப்பாக அது

பணத்தை குறிப்பிடுகிறது; 2) ஒருவர் தனது விருப்பத்திற்கு எதிராக செயல்படுவதற்கு வழங்கப்படும் அல்லது வழங்குவதாக உத்தரவாதம் அளிக்க பயன்படும் பொருள்." உளரீதியான நிர்பந்தம், பேராசை தூண்டுதல் அல்லது வஞ்சகமாக வற்புறுத்துவதன் மூலம் தவறான வழியில் இலஞ்சமாக பணத்தை அல்லது பொருளை பெற்றதும், அது தீய பணம் ஆகிறது. ¶பல நாடுகளில் இலஞ்சம் வாழ்க்கையின் அங்கமாக மாறிவிட்டது. ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்குவது முதல் ஒரு இரயில் பயணச்சீட்டை வாங்குவது வரை, பெரும்பாலும் அனைத்து நடவடிக்கையிலும் இலஞ்சங்கள் கோரப்பட்டு பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. இலஞ்சம் வழங்காமல் எதையும் செய்ய முடிவதில்லை என்று இந்தியாவின் ஒரு முக்கிய அரசியல்வாதி என்னிடம் தெரிவித்தார். ஆனால் அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வது இல்லை. ஆனால் இன்று தொழில்துறையில் பல சாதனைகளை படைத்து வெற்றிகரமாக இருக்கும் நாற்பது வயது பெங்களூர் பெண்மணி, தனது வாழ்நாளில் இதுவரை யாருக்கும் இலஞ்சம் வழங்கியது இல்லை என்று கூறுகிறார்.

வியாழக்கிழமை

பாடம் 207

இலஞ்சம் என்பது

ஒரு வகை ஊழல்

ஆன்மீகத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மற்றும் அதன் அமைப்புக்களுக்கு மாற்று வழி அதிக வேதனை தருவதாக இருப்பதாலும், அவர்களின் சமயப்பணியின் நோக்கம் வலுவாக இருப்பதாலும், அதை எந்த சூழ்நிலையிலும் தொடர வேண்டும் என்று நினைப்பதாலும், அவர்கள் இலஞ்சம் பெறுவதற்கு அல்லது வழங்குவதற்கு நிர்பந்திக்கப்படுகிறார்கள். ஆனாலும் நீங்கள் செய்யும் பணி மட்டுமில்லாமல், அதை எப்படி செய்கிறீர்கள் என்பதும் முக்கியத்துவம் வகிக்கிறது என்பதை நினைவில் வைத்து இருக்கவேண்டும். தீய வழியில் ஈட்டிய பொருளை நல்ல பணிகளில் பயன்படுத்தி சுத்தம் செய்ய முடியாது. அதற்கு மாறாக, அவற்றை தீய வழியில் ஈட்டிய பணம் வலுவிழக்க செய்கிறது. ¶எங்களது ஆன்மீக சமூகத்தில், இலஞ்சத்தில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்ற ஒரு விதியை பின்பற்றுகிறோம். அதற்காக பெரிய இழப்பையும் சந்திக்க தயாராக இருக்கிறோம். ஹவாய் அனுப்புவதற்காக பெங்களூர் நகரில் ஒரு கருங்கல் கோயிலை நாங்கள் உருவாக்க மேற்கொண்ட முயற்சிகளின் போது, எங்களிடம் இலஞ்சம் கோரி பல அழைப்புக்கள் அவ்வப்போது வந்த வண்ணம் இருந்தன. அதில் வேலை செய்யும் நூறு தொழிலாளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக நாங்கள் ஒரு கிராமத்தை அமைத்து இருந்தோம். ஆமாம்,

ஒரு பெரிய பணியில் ஒரு சிறிய இலஞ்சம் தடையாக இருக்கக்கூடும். மின்சாரம் மற்றும் தொலைப்பேசி இயங்குவதற்காக, ஒரு சிறிய தொகையை இலஞ்சமாக வழங்க வேண்டுமா என்று நாங்கள் ஆலோசிக்க வேண்டி இருந்தது. கோரிக்கைகளுக்கு அடிபணியாமல் இருப்பது சிலசமயங்களில் கடினமாக இருந்தது, ஆனால் நாங்கள் இலஞ்சம் வழங்குவதில்லை என்பதை தற்போது எல்லோரும் அறிந்து விட்டார்கள். அதனால் யாரும் எங்களிடம் இலஞ்சம் கேட்பது இல்லை. எங்களிடம் முன்பு இலஞ்சம் கேட்ட ஒருவர் பிற்காலத்தில் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். ¶எனது சீடர்கள் இலஞ்சங்களை வாங்காமலும் பெறாமலும் இருப்பதன் மூலம், அது அனுமதிக்க முடியாதது மற்றும் தேவையற்றது என்பதை சமூகத்திற்கு தெரிவிக்கின்றனர். இதை மக்களில் பெரும்பாலானோர் பின்பற்றினால், சமூகத்தில் இருந்து இலஞ்சம் ஒழிந்து விடும். ஆனால் இதை பெரும்பாலானோர் பின்பற்றவில்லை என்றால், இலஞ்சம் என்பது வியாபாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வழியாகி விடும், இலஞ்சம் என்பது கூடுதல் வருமானமாகவும், செயல்கள் விரைவாகவும் சிறப்பாகவும் செய்து முடிக்கும் வழியாகவும் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இலஞ்சத்தை வாங்கிக்கொள்வது அந்த பழக்கத்தை உறுதிப்படுத்துகிறது. இலஞ்சத்தின் பழக்கத்தை ஒரு குடும்பம், ஒரு தனி நபர், ஒரு சமூகம், ஒரு நாடு மறுக்கும் ஒவ்வொரு முறையும், இலஞ்சத்தின் வலிமை குறைகிறது. இலஞ்சம் வழங்குவது அல்லது பெறுவதை நிராகரிப்பது இந்து தர்ம பொறுப்புக்களின் நிறைவேற்றத்தை குறிக்கிறது. ¶இலஞ்சம் எங்கிருந்து தொடங்குகிறது? இதுவும் மற்ற நடவடிக்கைகளைப் போல, பெரும்பாலும் இளம் வயதில் வீட்டில் இருந்து தொடங்குகிறது. நல்ல மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்று தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு இலஞ்சம் வழங்குகிறார்கள். தங்களது இனம் மற்றும் நிதி அந்தஸ்துக்கு ஏற்ற ஒரு பெண்ணை மணக்க வேண்டும் என்று தந்தைமார்கள் தங்கள் இளம்வயது மகன்களுக்கு இலஞ்சம் வழங்குகிறார்கள். இலஞ்சத்தின் இன்னொரு வகையாக வரதட்சணையை குறிப்பிடலாம். அது வழங்கப்படவில்லை என்றால், திருமணம் நடைபெறாது. அது உண்மையில் ஒரு பரிசாக இருந்தால், அந்த திருமணம் நன்றாக நடைபெறும் என்பதில் சந்தேகம் இல்லை. இலஞ்சம் பெறுபவர்கள் மற்றும் வழங்குபவர்கள், தங்கள் வீட்டில் ஒரு ஊழல் குடும்பத்தை வளர்க்கிறார்கள். ¶தனிப்பட்ட பரிகாரம் செய்வதால் தீய கர்மவினைகளின் தாக்கம் குறைகிறது என்றாலும், ஒருவர் அந்த பழக்கத்தை விடவில்லை என்றால் பரிகாரங்கள் பலன் தராது. தீர்மானத்தின் வலிமை அந்த குடும்பத்தில் இருக்கும் நபர்களின் குணத்தை பொருத்து அமைகிறது. அந்த வலிமையை முறையாக பயன்படுத்தினால், *குக்கர்மாக்கள்* கரைகின்றன. ஆனால் அவ்வாறு முறையாக பயன்படுத்தாத போது, இலஞ்சம் என்பது திருடுவது மற்றும் திருடப்படுவதற்கு சமம் என்பதால், குடும்பமும் அதன் உறுப்பினர்களும் தொடர்ந்து வீழ்ச்சியை சந்திக்கிறார்கள். அது நள்ளிரவில் ஒரு வீட்டை உடைத்து நுழைந்து, பணத்தை

திருடி செல்வதைப் போன்றது ஆகும். இலஞ்சமும் அதே உணர்வுப்பூர்வமான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலஞ்சம் வழங்குபவர், அதை கோரும் நபருக்கு உடந்தையாக இருக்கிறார். ஒருவருடைய உதவியை பெறுவதற்காக இலஞ்சம் ஏற்றுக்கொள்பவரும், தனக்கு தந்திரமாக இலஞ்சம் வழங்கியவருக்கு கட்டுப்பட்டு இருக்கிறார். ஒவ்வொரு முறை இலஞ்சம் வழங்கப்படும் போதும், அதை பெறுபவர் மற்றும் வழங்குபவர் என்று இரண்டு குற்றவாளிகள் இருக்கிறார்கள். அகத்திலும் கர்மவினைரீதியாகவும் சூட்சுமரீதியாகவும், அவர்கள் ஒன்றாக இணைந்து இருக்கிறார்கள். ஒரு வேலை முழுமையாக நடைபெறுவதற்கு இலஞ்சம் வழங்குபவர்கள் அல்லது நோக்கத்தை ஆய்வு செய்யாமல் பரிசை ஏற்றுக்கொள்பவர்கள் தங்களை அப்பாவிகளாக கருதினாலும், அவர்கள் அந்த குற்றத்திற்கு உடந்தையாகத் தான் இருக்கிறார்கள். *கர்மவினை* விதி யாரையும் விட்டு வைப்பது இல்லை.

வெள்ளிக்கிழமை

பாடம் 208

இலஞ்சத்தை ஒழிக்கும்

நடவடிக்கைகள்

இலஞ்சம் படித்த குற்றவாளிகளின் தலைமுறையை உருவாக்குகிறது. அது வியாபாரத்தின் சுதந்திர இயக்கத்திற்கு தடையாக விளங்குகிறது. இலஞ்சம் நேர்மறையான திட்டப்பணிகளுக்கு இடையூறு விளைவிக்கிறது. இலஞ்சம் வழங்கவில்லை என்றால் தங்கள் பணியின் முன்னேற்றம் பாதிக்கப்படும், தொலைப்பேசி இணைப்புக்கள் துண்டிக்கப்படும் அல்லது தொடர்ந்து ஏதாவது ஒரு வகையில் தாமதம் ஏற்படுத்தப்படும் என்ற கவலையில், அது ஆக்கப்பூர்வ சக்திகளை திசை திருப்புகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை இலஞ்சம் சீர்குலைக்கிறது. கருப்புப் பணம் சட்டவிரோதமாக இருப்பதால், யாருக்கும் அதன் மதிப்பு முழுமையாக தெரிவதில்லை மற்றும் பெறுபவர்கள் அதற்கு வரியும் செலுத்துவது இல்லை. இதற்காக இரண்டு கணக்குப் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இலஞ்சத்தில் ஈடுபடும் நேர்மையற்ற போட்டியாளர்கள் மூலம் நேர்மையான நிறுவனங்கள் திவால் நிலையை சந்திக்கின்றன. ¶இலஞ்சத்தை ஒழிக்க நம்மால் என்ன செய்ய முடியும்? சமீப காலத்தில் அரசு தரப்பில் இருந்து முன் உதாரணமாக சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் இருபது ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு போலி அரேபிய நிறுவனம் அமெரிக்காவில் தொழிலை தொடங்குவதற்கு உதவி பெறும் நோக்கத்துடன், இரகசிய எஃப்.பி.ஐ அதிகாரிகள் பல்வேறு அரசியல்வாதிகளை அணுகி இலஞ்சம் வழங்கினார்கள். இலஞ்சம் வாங்கிய

சில அரசியல்வாதிகள் விரைவில் சிறையில் அடைக்கப்பட்டனர். இது ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் ஒரு எச்சரிக்கையாக விளங்குகிறது. நியூ ஆர்லியன்ஸ் காவல் துறை பல வருடங்கள் முன்பாக, ஊழல் தலைவிரித்து ஆடியதால் மக்களின் அவமதிப்பை பெற்றிருந்த தனது காவல் துறையை சீர் செய்யும் பொருட்டு, ஒரு புதிய காவல் தலைவரை நியமித்தது. அவர் தனது முதல் நடவடிக்கையாக மேலதிகாரிகளிடம் பேசி தனது அலுவலர்களின் சம்பளத்தை இருமடங்கு உயர்த்தினார். அதன் பிறகு இலஞ்சம் வாங்கிய அறுபத்தி ஐந்து அதிகாரிகளை கைது செய்தார் அல்லது அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்தார் அல்லது பதவி நீக்கம் செய்தார். அதற்கு பிறகு அந்த காவல்துறையில் இருந்தவர்கள், நல்ல சம்பளமுள்ள தங்கள் வேலையை இழக்க விரும்பாததால், இலஞ்சத்தில் ஈடுபடுவதை நிறுத்தி விட்டதாக கூறப்படுகிறது. ¶சர்வதேச அளவில் பார்க்கும் போது, தங்கள் நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டு அலுவலர்களுக்கு இலஞ்சம் வழங்குவதை தடை செய்யும் சட்டம் அமெரிக்காவில் மட்டுமே உள்ளது. இதைப்போன்ற சட்டங்கள் தங்கள் நாட்டை சேர்ந்த தொழில் துறையினருக்கு பிரதிகூலமான சூழலை உருவாக்கும் என்று இதை நிறைவேற்றுவதற்கு ஐரோப்பா முதலான மற்ற நாடுகள் மறுத்து வருவதாக எங்களுக்கு தோன்றுகிறது. இவ்வாறு வழங்கப்படும் இலஞ்சங்களுக்கு வரி விலக்கும் வழங்கப்படுகிறது. ஆனால் அதே நிறுவனங்கள் தங்கள் சொந்த நாடுகளில் இலஞ்சம் வழங்கினால், அதன் மீது வழக்கு தொடர்வதற்கு வாய்ப்புள்ளது. இலஞ்சத்தை அடியோடு ஒழிக்க முற்படும் நாடுகளுக்கு அதிக வேதனையை தரும் இந்த முரணான சட்டங்கள் உலகெங்கும் பரவி இருப்பதால், அதை முடிவுக்கு கொண்டு வர பெர்லினில் இருக்கும் டிரான்ஸ்பாரன்சி இன்டர்நேஷனல் என்ற நிறுவனம் முயற்சி செய்து வருகிறது. ¶உளவியல் ரீதியாக பார்க்கும் போது, இலஞ்சம் என்பது மனிதனுக்குள் மறைவாக இருக்கும் வஞ்சனை, மோசடி கலந்த குற்ற உணர்வை வழங்குகிறது. இதில் தொடர்ந்து குற்ற உணர்வு நீடிப்பதோடு, இரகசிய நடவடிக்கை மற்றும் மிரட்டி பணம் பறிப்பதால் சிக்கிக்கொள்வோம் என்ற அச்சம் இருக்கிறது, இலஞ்சம் வழங்கப்படவில்லை என்றால் என்னவாகும் என்ற கவலை, இலஞ்சத்தை ஏற்றுக்கொள்வதால் செய்ய வேண்டிய கட்டாயங்கள் பற்றிய பயம் நிலவுகிறது. இத்தகைய இரகசிய நடவடிக்கைகள் காரணமாக சமூகத்தில் நம்பிக்கையின் வலிமை குறைகிறது. ¶இலஞ்சம் என்பது மிரட்டி திருடுவதற்கு சமம் ஆகும். நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும் பிச்சைக்காரன் தெருவில் பிச்சை எடுப்பதைப் போல, நல்ல பண பலத்துடன் இருக்கும் தொழிலதிபர் தான் வழங்கும் சேவையை நிறுத்திக் கொள்கிறார். பிச்சைக்காரன் தன்னால் செய்ய முடிந்த வேலையை தவிர்க்கிறார், மற்றும் தொழிலதிபர் தனது பண பலத்தை பயன்படுத்தி தனது சேவைக்கு அதிகமான கட்டணத்தை பெறுகிறார். இருவரும் அனுபவிக்கும் தீய *கர்மவினை*, எதிர்காலத்தில் ஒவ்வொரு தலைமுறை மீதும் கடந்தகாலத்தில் சில தலைமுறைகள் மீதும் பிரதிபலிக்கிறது.

சனிக்கிழமை

பாடம் 209

இலஞ்சம் மற்றும்

இனாம் அளித்தல்

ஒரு ஆரோக்கியமான சமூகம் நேர்மை, வெளிப்படையான அணுகுமுறை, அன்பு, விசுவாசம் மற்றும் நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. வீடு, பள்ளிகள், சந்தை, அலுவலகம் மற்றும் தொழிற்சாலை என்று அடிமட்டத்தில் இலஞ்சத்தை முதலில் நிறுத்த வேண்டும். இந்து தர்மம் சட்டத்தை அமல் செய்கிறது. இலஞ்சம் வழங்க வேண்டாம். இலஞ்சம் வழங்காமல் இருப்பதில் தவறு ஒன்றுமில்லை. இலஞ்சம் வழங்காமல் இருப்பது எல்லோராலும் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பழக்கத்தில் இருந்து பின்வாங்குவது கடினமாக இருக்கும் என்றாலும், எல்லோரும் இலஞ்சம் வழங்கும் ஊரில் உங்களால் ஒரு ரூபாய் இலஞ்சம் வழங்காமலும் இருக்க முடியும். ¶இனாம் அளிப்பது இலஞ்சம் வழங்கும் வகைகளில் ஒன்றாக விளங்குகிறதா என்று வியக்கலாம். ஒரு வெயிட்டர், உணவகத்தில் மேசையை சுத்தம் செய்பவர், ட்ரைவ்-இன் உணவக பணியாளர், வாகனத்தை முறையாக நிறுத்துபவர், வாகன ஓட்டி மற்றும் உணவக மேலாளருக்கு இனாம் அளிப்பது பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் சட்டப்பூர்வமாக இருக்கிறது. இதுவரை அந்த பணிக்கொடையை வழங்கியதற்காக யார் மீதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இனாம் எதிர்பார்க்கப்படுவது உண்மை தான், ஆனால் அதை வழங்கவில்லை என்றால் சேவைகளை இரத்து செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் அந்த பணியாளர் தனது வேலையை இழக்க வேண்டியிருக்கும். உணவகத்தில் வேலை செய்யும் பணியாளர்கள், ஓட்டல்களில் வேலை செய்யும் பெல் பாய்ஸ், வாகனத்தை நிறுத்தும் பணியாளர்களுக்கு இனாம் வழங்குவது ஒரு பழக்கமாக இருக்கும் போது, அது இலஞ்சம் ஆகாது. அவர்கள் இனாம் பெறுவதாலும், அவர்கள் பணிபுரியும் ஓட்டல் அல்லது உணவகத்திலிருந்து வரும் வருமானம் மிகவும் குறைவாக இருப்பதாலும், இனாம் எதிர்பார்க்கப்படுகிறது. பணிக்கொடைகள் வழங்குவது ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்கம் ஆகும். ஆனால் இனாம் வழங்கப்படவில்லை என்றாலும், அந்த பணியாளர்கள் குறையில்லாமல் சேவையை வழங்க அந்த ஓட்டல் அல்லது உணவகத்திற்கு கடன்பட்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த உணவக ஊழியர்களை காட்டிலும் அதிக சம்பளத்திற்கு பணிபுரியும் அரசு அலுவலக பணியாளர்களைப் போன்று, இந்த வழக்கம் இல்லாத இடத்தில் வழங்குவதை தவிர்க்க வேண்டும். ¶அதைப்போல பண்டிகை காலங்களில் சேவை செய்பவர்களுக்கு பரிசுகளை வழங்குவது நல்லிணக்கத்தை வளர்க்க

உதவியாக இருக்கும். ஆனால் இந்த பரிசுகள் எதிர்பார்க்கப்படுவது இல்லை மற்றும் இது முற்றிலும் அவரவர் விருப்பத்தை பொருத்தது. அந்த பரிசுகள் வழங்கப்படவில்லை என்றால் சேவையின் தரம் குறைந்து விடாது. இதைப் போன்று நாங்கள் பெங்களூரில் இருக்கும் எங்கள் கோயில் கட்டும் பணியிடத்தில் வேலை செய்யும் சிற்பிகளுக்கு வருடத்தில் பல முறை பரிசுகளை வழங்குவோம். நாங்கள் எங்கள் சிற்பிகளுக்கு பரிசு தந்து கௌரவிக்கவில்லை என்றாலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட தனிக்குறிப்பீடுகளை பின்பற்றி அவர்கள் வேலை செய்தாக வேண்டும். நமக்கு ஒரு சேவையை வழங்குபவர் அதை எதிர்காலத்தில் நிறுத்தி விடுவார் அல்லது நமக்கு தீங்கு விளைவிப்பார் என்ற அச்சத்தின் அதிர்வலையோடு அல்லாமல், சுத்தமான தர்மத்தின் அதிர்வலையை இறைவன் கோயிலில் சேர்க்க விரும்புகிறோம். ¶அன்பில்லாமல் காமத்திற்கு உடலுறவில் ஈடுபடும் விபச்சாரத்திற்கு பணம் கொடுப்பது போன்ற மற்ற தவறான நடவடிக்கைகள் குக்கர்மவினைகளை உருவாக்குவதோடு, அவை சட்ட விரோதமாகவும் விளங்குகின்றன. இலஞ்சம் மற்றும் விபச்சாரம் தேசிய கலாச்சாரமாக இருக்கும் சில நாடுகளில், இந்த பழக்கங்கள் ஏன் சட்டத்தின் ஒப்புதலை பெறவில்லை என்று கேட்கலாம். ¶இலஞ்சத்தின் மதிப்பு பெரிதாகவும் சிறிதாகவும் மாறுபட்டு இருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் இலஞ்சத்தின் மதிப்பு பல மில்லியன் டாலர்களுக்கு இருக்கிறது. சமீபத்தில் $10,000 இலஞ்சம் வாங்கி தனது குடும்பம், தனது கௌரவம் மற்றும் தனது வாழ்க்கையை ஆபத்தில் சிக்க வைத்து இறுதியில் தனது பதவி மற்றும் தனது மதிப்பை இழந்த ஒரு செனட் உறுப்பினரைப் போன்று நாம் பல செய்திகளை பார்த்து இருக்கிறோம். அந்த செனட் உறுப்பினர் வாங்கிய இலஞ்சத்தின் மதிப்பு அவருடைய ஆண்டு வருமானத்தில் சுமார் ஏழு சதவீதத்திற்கு நிகராக இருந்தது. இந்தியாவில், இலஞ்சத்தின் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கும். அது அன்றாடம் செய்யும் சிறிய பணிகளுக்கு வழங்கப்படும். ஒரு இரயில் பயணச்சீட்டு வாங்குவதை போன்று, இந்தியாவில் எந்த ஒரு செயலை செய்து முடிப்பதற்கும், எவ்வாறு இலஞ்சம் வழங்கவேண்டும் என்பதை பற்றி, அங்குள்ள பல்வேறு பகுதிகளில் இருக்கும் நடத்தை விதிமுறைகளை பற்றி மக்கள் சொல்லி நாங்கள் கேட்டிருக்கிறோம். ¶தங்களை கண்டுபிடித்துவிடுவார்களோ என்ற அச்சத்துடன் ஏன் மக்கள் வாழ விரும்புகிறார்கள்? எதற்காக பெரிய அளவில் இலஞ்சம் வாங்கிய அரசியல்வாதிகள், பெரும்பாலும் தங்கள் மீது குற்றம் சுமத்தியவர்களுக்கு இலஞ்சம் தந்து அந்த குற்றத்தில் இருந்து விடுதலை பெறுகிறார்கள்? அவர்கள் இலஞ்சம் வாங்கி அடைந்த செல்வத்தில் இருந்து சிறிய பகுதியை, சட்ட அமலாக்கத்துறை இலஞ்சமாக வாங்குவதற்காக பிடிபடுகிறார்களா? அந்த சிறிய தொகை சட்ட அமலாக்கத்துறைக்கு மிகவும் லாபகரமாக அமையக்கூடும். இலஞ்சம் வாங்கி சொத்து சேர்த்தவர்கள் அதற்கான தண்டனையை அனுபவித்த பிறகும், தாங்கள் இலஞ்சம் வாங்கும்

கலையில் நிபுணத்துவம் பெறுவதற்கு முன்பு வாழ்ந்த வாழ்க்கையை காட்டிலும் தரம் உயர்ந்த வாழ்க்கையைத் தான் வாழ்ந்து வருகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 210

வீட்டில் வழங்கப்படும்

இலஞ்சம்

"நீ நான் சொல்வதை செய்தால், உனக்கு சாக்லேட் தருவேன். நான் சொல்வதை செய்யவில்லை என்றால், அந்த சாக்லேட்டை தரமாட்டேன்," என்று குழந்தைகளுக்கு இலஞ்சம் தரும் பழக்கமும் இருக்கிறது. சிலர் இதை ஒழுக்கம் என்று அழைக்கின்றனர், ஆனால் உண்மையான ஒழுக்கம் என்பது ஒரு பரிச்சயமான விதியை கடைப்பிடிக்க பயிற்சியை வழங்கி, பாடம் கற்பித்து தெரிந்து கொள்வது ஆகும். பெரியவர் மற்றும் சிறியவர் இடையே கருத்து பரிமாற்றத்திற்கு தடையாக விளங்கும் மற்ற அனைத்தும் தண்டனையாகத் தான் இருக்கும். எந்தெந்த விதிகளுக்கு யார் யார் பொறுப்பு என்று குழந்தைகளுக்கு தெளிவாக கற்றுத் தரவேண்டும். ஒரு குழந்தை தான் செய்யும் தவறுகளுக்கு ஏற்ப எதை பெறும் மற்றும் எதை பெறாது என்பதை அறிந்து இருக்கவேண்டும். ஆனால் இந்த முறையில் கற்பிக்கப்படாத குழந்தைக்கு இலஞ்சம் வழங்குவது, ஒன்றை தருவதாக ஆசையை தூண்டிவிட்டு அதை தராமல் இருப்பதும் ஊழலில் ஒரு வகை ஆகும். அதை அந்த குழந்தை சமூக நடவடிக்கைகளில் பயன்படுத்தும். அவன் ஒரு நல்ல குடிமகனாக இருக்கமாட்டான், மற்றும் அவனது *குக்கர்மாக்கள்* பல முந்தைய தலைமுறைகள் மற்றும் பல எதிர்கால தலைமுறைகள் மீது பிரதிபலிக்கும். குழந்தைகள் பெற்றோர்களை பின்பற்றுவதால், இந்த குற்றத்தை பெற்றோர்கள் மீதே சுமத்த வேண்டும். இலஞ்சமும் குழந்தைகளை உடல்ரீதியாக துன்புறுத்துவதும் இணைந்து செயல்படுகின்றன. அது ஒரு வாழ்முறையாக மாறிய பிறகு, குழந்தைகள் நல்ல முறையில் நடந்துகொள்ள, நல்ல மதிப்பெண்களை பெற, சரியான நேரத்தில் படுக்கைக்கு செல்ல இலஞ்சம் வழங்க வேண்டியிருக்கிறது. ¶வீட்டில் நயவஞ்சகம் நிரம்பிய இன்னொரு வகை இலஞ்சம் நிகழ்கிறது. அந்த இலஞ்சம் மனவெழுச்சியை அடிப்படையாகக் கொண்டது. "நீ என்னை திருப்திப் படுத்தவில்லை என்றால், நான் சோகமாக இருப்பேன்," "நீ நான் சொல்வதை செய்தால், நான் உனக்கு உயிலை எழுதி வைப்பேன், இல்லையென்றால் உனக்கு உயிலை எழுதி வைக்க மாட்டேன்." இதுவும் இலஞ்சம் தான். இது ஒருவரின் சுதந்திரத்திற்கு தடை விதிக்கிறது. “நீ இந்த பெண்ணை திருமணம் செய்து கொண்டால், நீ குடும்பத்தினரை திருப்திப் படுத்துவாய். நாங்கள்

உனக்காக இதுவரை பல தியாகங்களை செய்து இருக்கிறோம். அதனால் நாங்கள் சொல்லும் பெண்ணை தான் நீ திருமணம் செய்து கொள்ளவேண்டும். நீ உண்மையில் காதலித்து கொண்டிருக்கும் பெண்ணை மறந்து விடவேண்டும்.” தங்கள் மகனுக்கு ஒரு பெண்ணுடன் காதல் தொடர்பு இருந்தாலும், அந்த தொடர்பால் அவள் கருவுற்று இருந்தாலும், அவனை குடும்பத்தில் இருந்து விலக்கி வைப்பதாகவும், சமூகத்தில் அவன் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தி விடுவோம் என்றும் அந்த குடும்பத்தினர் பயமுறுத்தி, அவன் இன்னொரு பெண்ணை மணப்பதற்கு இலஞ்சம் வழங்குவார்கள். இனி எல்லோருக்கும் விருப்பமான இலஞ்சத்தை பார்க்கலாம். "உன் பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தி, உனக்கு தவறான நடத்தை இருப்பதாக சமூகத்தில் பொய்யான கதைகளை பரப்பி விடுவேன். சமூகத்தில் மதிப்பை குறைத்து விடுவேன். நீ நாங்கள் சொல்வதை கேட்கவில்லை என்றால், தொடர்ந்து அதிகரித்து வரும் நமது சமூக மக்களின் மனதில் அவப்பெயர் உருவாகி விடும்.” இன்றைய உலகில் இத்தகைய அச்சுறுத்தல்கள் அல்லது மிரட்டல்கள் பெரும்பாலான தருணங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அச்சுறுத்தலை இலஞ்சத்திற்கு முரணான செய்முறை என்று சொல்லலாம். இலஞ்சம் வாங்குபவர் ஒரு வேலையை செய்ய பணம் கேட்பார், ஆனால் அச்சுறுத்துபவர் உங்களுக்கு எதிராக ஒரு வேலையை செய்யாமல் இருக்க பணம் கேட்பார். "நான் கேட்பதை கொடுத்து விடு அல்லது நான் உனது இரகசியங்களை எல்லோரிடமும் தெரிவித்துவிடுவேன்," என்று அச்சுறுத்துபவர் கூறுகிறார். இரகசியங்களை வெளியிடாமல் இருப்பதற்கு பணத்தை கோருவது இலஞ்சத்சிற்கு முரணாக செயல்பட்டாலும், அதுவும் ஒரு வகை இலஞ்சம் தான். ஒரு நாட்டை, ஒரு சமூகத்தை, ஒரு குடும்பத்தை சீரழித்தாலும், அதை நமது இளைய சமுதாயம் பின்பற்றாது என்று நம்பிக்கை வைத்திருக்கும், அந்த எதிர்மறை கலாச்சாரத்தின் அங்கமாக விளங்கும் இலஞ்சத்தின் எல்லா வகைகளிலும் வலுவான *கர்மவினை* அடங்கியுள்ளது.

சங்கநக யந்திர

संगणकयन्त्र



கணினி இயந்திரம் பற்றி தங்கள் கருத்து என்ன?

இயம நியமம் மூலம் புலன்களை அடக்கி, பிராணாயாமம் மூலம் சுவாசத்தை கட்டுப்படுத்தும் உத்தமன், துஷ்ட குதிரை போல அலையும் இந்த மனதை அலையவிடாமல் ஒரு நிலையில் வைத்து இருப்பானாக.

கிருஷ்ண யஜுர் வேதம், சுவேதாசுவதர உபநிடதம், 2.9. உபப, ப. 192



லண்டன் நகரில் வாழ்ந்துகொண்டு இருக்கும் ஒரு இளைஞன் தனது கணினி மூலம், வாரத்திற்கு ஒரு முறை நடைபெறும் கர்ம யோக வகுப்பில் பயிற்சி பெற்று வருகிறார். அவன் வீட்டு சன்னலுக்கு வெளியே, பிக் பென் கடிகார கோபுரத்திற்கு பின்னால் இருக்கும் பூங்காவில், இளைஞர்களுக்கு மதத்தை கற்பிக்கும் ஆசிரியராக இருக்கும் ஒரு ஆப்பிரிக்க சுவாமி, தியானம் செய்ய அமர்ந்திருக்கும் போது ஒரு பிரிட்டிஷ் தம்பதி தங்கள் வணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

திங்கட்கிழமை

பாடம் 211

கணினி

தலைமுறை

நீங்கள் எல்லோரும் கணினி துணையுடன் அமைதியாக கணக்கிடும் புதிய தலைமுறையை சந்தித்து இருப்பீர்கள். நான் அதைப் பற்றி என் கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களைப் பற்றி குறிப்புக்கள் அல்லது கருத்தை வழங்குவது, கலியுகத்தின் இந்த காலகட்டத்தில் பூமியில் வாழ்ந்துகொண்டு இருக்கும் ஒவ்வொரு ஆன்மாவின் மனித உரிமையாக விளங்குகிறது. மேலும் *தர்மத்தை* கடைபிடிப்பதற்கு, சம்பந்தப்பட்ட ஆண்களும் பெண்களும் தாங்கள் காண்பதைப் பற்றி பேசுவது அவர்களின் கடமையாகவும் விளங்குகிறது. கணினி மூலம் கல்வி கற்கும் முறையானது ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு, ஒரு இதயத்தில் இருந்து இன்னொரு இதயத்திற்கு, ஒரு மனதில் இருந்து இன்னொரு மனதிற்கு, ஆசிரியரிடம் இருந்து மாணவனுக்கு, சத்குருவிடம் இருந்து சீடனுக்கு விவேகத்தை வழங்கும் நமது *சம்பிரதாயத்திற்கு* முரணாக இளைஞர்களை அழைத்து செல்வதாக எனக்கு தோன்றுகிறது. ஆசிரியர் தனிப்பட்ட வழிகாட்டல் மற்றும் ஆரோக்கியமான உறவின் மூலம் பாடத்தை மட்டும் கற்பிக்காமல், அணுகுமுறை மற்றும் நடத்தையில் பக்குவமான தெளிவையும் வழங்குகிறார். ¶இளைஞர்கள் தங்கள் ஆசிரியர்கள் மீது அன்பு மற்றும் மரியாதையை செலுத்தி, அவர்களை கௌரவித்து பாராட்டவும் செய்கிறார்கள். அவர்கள் கடுமையாக முயற்சி செய்து சிறந்த கல்லூரிகளுக்கு தகுதி பெற்று ஐன்ஸ்டீன் அல்லது போஸ் போன்ற விஞ்ஞானிகளிடம் இருந்து பாடம் கற்கவேண்டும் என்று தங்களுக்குள் ஆர்வத்துடன் போட்டியிடுவார்கள். ஆனால் இன்றைய காலத்தில் அவர்கள் உயர்தர கல்வி கற்பிக்கும் CD-ஐ பணம் கொடுத்து வாங்கலாம் அல்லது இணையத்தில் அதனை இலவசமாக ஆர்டர் செய்து வாங்கலாம். அவர்கள் விரைவில் தங்கள் டிப்ளோமா சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து, தங்கள் கையொப்பமிட்டு வீட்டு சுவரில் தொங்க வைப்பார்கள் என்று தோன்றுகிறது! ¶தன்னிடம் இருக்கும் இரண்டு மில்லியன் இணைய பயனர்களில் 300,000 சிறுவர்கள் இருப்பதாக, 1993 ஆம் ஆண்டு உலகளவில் அதிகமான கல்விசார் தகவல்களை கணினியில் தயாரிக்கும் பிராடிஜி நிறுவனம் தெரிவித்தது. அந்த நிறுவன இணையதளத்தில்

அவர்களுக்கு தகவல் களஞ்சியங்கள், விளையாட்டுக்கள், அரட்டை மன்றங்கள் மற்றும் நோவா, நேஷனல் ஜியோகிராஃபிக் போன்ற பயன்பாட்டிற்கு எளிமையான புத்தகங்கள் மற்றும் நாளிதழ்கள் கிடைக்கும். "ஹோம்வோர்க் ஹெல்பெர்ஸ்" போன்ற இணையதளங்கள் மூலம் ஒருகணினி சுட்டியை கிளிக் செய்து எண்ணற்ற தகவலை பெறலாம். CD-ROM வடிவில் வரும் கல்விசார் மென்பொருளின் வியாபாரம் மிகவும் சிறப்பாக இருப்பதாக, வாஷிங்டன் டி.சி.யில் இருக்கும் ஒரு ஆராய்ச்சி குழுவான சாப்ட்வேர் பப்ளிஷேர்ஸ் அசோசியேஷன் தெரிவிக்கிறது. உதாரணத்திற்கு ஒரு குழந்தை கணினி முன்பாக அசையாமல் உட்கார்ந்து இருந்து, குறுக்குவெட்டு காட்சிகளாக இருக்கும் பதினெட்டாம் நூற்றாண்டு போர்க்கப்பலை நுணுக்கமாக பார்வையிடவும், பணியாளர்களை சந்திக்கவும், கலஇயக்க கருவிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும், கப்பலில் ஒளிந்து இருக்கும் இளம் கடத்தல்காரனை தேடிப்பிடிக்கவும் முடியும். ¶“இதில் என்ன தவறு இருக்கிறது?" என்று நீங்கள் கேட்கலாம். கணினியால் தனிப்பட்ட முறையில் எந்த தீங்கும் ஏற்படுவது இல்லை. நான் கணினி பயன்பாட்டிற்கு எதிரானவனும் இல்லை. எங்கள் மடத்திலும் பல கணினிகள் உள்ளன. பெரும்பாலும் கணினி மூலம் கற்கும் மாணவர்களுக்கு ஆசிரியர் நேரடியாக வழங்கும் ஊக்கம் அதிகமாக கிடைப்பதில்லை, மற்றும் அவர்கள் தங்கள் மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டிய தேவையும் இருப்பதில்லை. வாழ்க்கையின் ஆரம்ப காலகட்டத்தில் அன்பு மற்றும் பாராட்டு, மதிப்பு மற்றும் புகழ்ச்சி, நன்றியுணர்வு, உடன்பாடு மற்றும் பொறுப்பு தொடர்பான உணர்வுகளை கட்டப்படுத்தவும் முடியும் அல்லது அந்த உணர்வுகளை வாழ்நாளில் வளர்க்காமல் இருக்கவும் முடியும். ¶ஆப்பிள் மாகின்டோஷ் தனிநபர் கணினிகளை உருவாக்கி மைக்ரோசாப்ட் மார்கெட்டிங் சாப்ட்வேரை தொடங்கியவுடன், உலகில் கணினி மீது மோகம் அதிகரித்த போது, மக்களை காட்டிலும் அதிகமாக கணினி மூலம் கல்வி கற்ற இளைஞர்கள் மீது ஏற்பட்ட தாக்கத்தை நான் கண்காணித்து வந்தேன். கணினி மூலம் கல்வி கற்றதால், அவர்கள் தங்கள் கண்களில் வெற்றுப் பார்வையுடன் அமைதியாக கணக்கிடும் இயந்திர மனிதன் போலவே காட்சி அளித்தார்கள். அவன் நாள் முழுவதும் கணினி முன்பாக அமர்ந்து இருந்தாலும், வீட்டில் உள்ள எல்லோரும் அவனை ஒரு புத்திசாலி என்றே கருதுவார்கள். பெரும்பாலும் தான் விழித்து இருக்கும் நேரம் முழுவதும் கணினித் திரை முன்பாக அமர்ந்து, அந்த கணினி மூலம் கல்வி கற்கும் ஒரு இளைஞனின் வெளிப்புற மற்றும் உட்புற மனதில் என்ன பதிவாகிறது என்பதை அறிய யாராவது முயற்சி செய்தது உண்டா? அல்லது அதன் மீது யாராவது அக்கறை செலுத்துகிறார்களா?

செவ்வாய்க்கிழமை

பாடம் 212

இயந்திர மனிதன் மூலம்

கல்வி கற்றல்

ஒரு மனிதன் ஆசிரியராக கல்வி கற்பிக்கும் போது அவனுக்கு மாணவனின் மனநிலை மற்றும் அவனுக்கு ஊக்கமளிக்க வழங்க வேண்டிய பரிசுகள் பற்றியும் அறிந்து இருப்பார். அந்த மாணவனுக்கு சமூகமும் வழிகாட்டியாக இருக்கும். ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் அல்லது இந்தியாவில் இருக்கும் பதினான்கு முக்கிய மொழிகளில் ஏதாவது ஒன்றை கற்பிக்கும் போது, பல வருடமாக ஆசிரியர் பெற்ற அனுபவத்துடன், அந்த ஆசிரியரின் நல்ல பண்புகள் அனைத்தும் மாணவனுக்குள் சென்று, அவனது அறிவை மேம்படுத்தி அவனுக்கு ஆசிகளையும் வழங்குகிறது. இந்த அற்புதம் நடைபெறும் போது, மாணவனின் குணத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு மாற்றம் ஏற்பட்டு, அவன் வாழ்க்கையில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. இது தான் கல்வி கற்கும் உண்மையான முறை ஆகும். இவ்வாறு மனிதனோடு மனிதன், இதயத்தோடு இதயம், மனதோடு மனம், ஆன்மாவோடு ஆன்மா தொடர்பு கொள்வது *சம்பிரதாய* முறைப்படி வழங்கும் பயிற்சி ஆகும். இது இந்த முறையில் கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ளது மற்றும் அந்த முறை எதிர்காலத்திலும் நிகழ வாய்ப்புள்ளது. ¶மாணவன்-ஆசிரியருக்கு இடையில் இருக்கும் ஒரு உறவில், அந்த ஆசிரியரின் தனிப்பட்ட பண்புகள் மட்டுமல்லாமல், மாணவனின் பரிணாமம் அல்லது ஆன்மீக வளர்ச்சியின் அடிப்படையில், சூழ்நிலையை பொறுத்து ஒரு புதிய மாணவன் நேரடியாக ஒரு மனிதனை சந்திக்க வேண்டியிருக்கும், ஒரு மனிதனுடன் பேச வேண்டியிருக்கும், ஒரு மனிதனுடன் இருக்க வேண்டியிருக்கும், இந்த மனிதனை விரும்பவோ வெறுக்கவோ வேண்டியிருக்கும். ஆனால் சிறிய வகுப்புகள் முதல் பெரிய வகுப்புகள் வரை, பள்ளி வகுப்புகளில் மனித ஈடுபாட்டை தவிர்த்து இயந்திரங்களின் ஈடுபாடு அதிகரித்து வருகிறது. இவை கடிதங்களை எழுத, கட்டிடங்களை வடிவமைக்க அல்லது இந்த பிரசித்தமான தொழில்நுட்பம் சிறப்பாக செய்துவைக்கும் பல செயல்களை செய்யும் இயந்திரங்கள் மட்டும் இல்லை. இந்த கற்பிக்கும் இயந்திரங்களுக்கு இதயம் இருப்பதில்லை. இந்த இயந்திரங்கள் குழந்தையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்த இயந்திரங்களை பெற்றோர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தி, ஒரு குழந்தையை சிலசமயம் பல மணிநேரத்திற்கு அடக்கிவைத்து அல்லது கட்டுப்படுத்தி தங்களது சொந்த வேலைகளை எளிதாக்கிக் கொள்கிறார்கள். ¶தனியாக இருப்பது தான் மிகப்பெரிய பிரச்சனை. அவன் அதை இயக்குகிறான். அவன் அதை அணைத்து விடுகிறான். அவன் தனக்கு கற்பிக்கப்பட்ட பாடத்தை மறுக்கலாம் அல்லது முற்றிலும் தவறாக புரிந்துகொள்ளலாம். ஆனால் அதைப்பற்றி யாருக்கும்

தெரிவது இல்லை. சிறு வயது வாழ்க்கையில் முக்கியமான தருணங்களில், மதிப்பு மற்றும் அன்போடு வழங்கப்படும் அறிவு என்கிற ஒரு அரிய பரிசை இந்த குழந்தைகள் இழக்கிறார்கள். ஒரு இதயமுள்ள நபர், தர்மத்தை பூர்த்தி செய்து தான் பெற்ற அறிவை, குறிப்பாக தான் பெற்ற அனுபவ அறிவை மற்றும் ஒரு விஷயத்தின் மீது தனக்கு இருக்கும் ஆர்வத்தை இளம் உள்ளங்களுக்கு வழங்க ஏங்கிக்கொண்டு இருக்கும் ஒரு நபர் மூலம் கற்பதால் கிடைக்கும் திருப்தியை, இந்த குழந்தைகள் இழக்கிறார்கள். இதை இணையத்தில் ஒரு மென்பொருளில் நிரலாக்கம் செய்யவோ அல்லது ஒரு CD-ROM யில் எழுதவோ முடியாது. ¶இன்போர்மேஷன் ஹைவே என்று அழைக்கப்படும் இந்த தகவல்தொடர்பு பிணையத்தை தணிக்கை செய்ய, கண்காணிக்க யாரும் இருப்பதில்லை. குழந்தைகளுக்கு அறிவை புகட்டும் முந்தைய முறைகளில், ஒரு ஆசிரியர் அல்லது நூலகர் அல்லது பெற்றோர் என்று ஒரு பொறுப்புள்ள பெரியவரின் ஈடுபாடு இருந்தது. ஆனால் இணையத்தில் பரந்து விரிந்திருக்கும் தகவல், இணைய தொடர்பு இருக்கும் பல நூற்றுக்கணக்கான மில்லியன் மக்கள் ஒவ்வொருவருக்கும் சமமாக கிடைக்கிறது. துரதிஷ்டவசமாக நாம் அன்பில்லாமல், கட்டி அணைக்கும் பழக்கம் இல்லாமல், அமைதியாக கணினியில் கணக்கிடும் தலைமுறையை உருவாக்கி வருகிறோம். இந்த தலைமுறை இணையத்தில் பார்க்கும் லௌகீக கருத்துக்களை பத்து வருடங்களுக்கு முன்பு பெரும்பாலான பெரியவர்கள் எதிர்கொள்ளவில்லை. ஒரு தலைமுறை ஏற்கனவே உருவாகி விட்டதால், நாம் அதை இரண்டு தலைமுறை என்று குறிப்பிடலாம். இவை அனைத்தும் எதற்கு வழிநடத்தி செல்கின்றன? இந்த ஒரு கேள்வியை உலகெங்கும் இருக்கும் இந்து குடும்பங்கள் கேட்க தொடங்கி இருக்கிறார்கள்.

புதன்கிழமை

பாடம் 213

கொலை செய்ய

தூண்டுதலாக இருக்கும் விளையாட்டுக்கள்

நின்டன்டு என்பது ஒரு பொம்மை. இது ஒரு விளையாட்டு இல்லை. இளம் உள்ளங்கள் மற்றும் உணர்ச்சிகளை வடிவமைப்பதில், பொம்மைகள் முழுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை பெற்றோர்கள் உணர்வது இல்லை. குழந்தைகள் ஒரு திறந்த வெளியில் அல்லது காடுகளில் விளையாடும் போது, அவர்கள் இயற்கையை அனுபவித்து அதனுடன் தன்னை எப்படி தொடர்புபடுத்திக் கொள்வது என்பதை கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் மனதிற்குள் அதிக தகவல்கள் செல்கின்றன, மற்றும் அவர்களால்

அதிகமான தகவல்கள் கிரகிக்கப்படுகின்றன. நமது குழந்தைகள் தனியாக நின்டன்டு போன்ற பிரபல வீடியோ கேம்ஸ் விளையாடும் போது, நிலைமை முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. அது உட்புற மனதிற்குள் இருக்கும் அடிப்படை சக்திகளுடன் செயல்பட்டு, *சித்தத்தில்* இருக்கும் *வாசனாக்களை* கொலை செய்ய தொடர்ந்து தூண்டிக்கொண்டு இருக்கிறது. ¶நின்டன்டு விளையாடும் போது, அது அச்சுறுத்தி பயமுறுத்தி வெற்றி பெறும் ஆசையை தூண்டிவிடுகிறது. உலகம் முழுவதும் நிரம்பி இருக்கும் எதிரிகளை கொலை செய்ய வேண்டும், எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டும், தாக்குபவர்களை முதலில் தாக்க வேண்டும் என்று நின்டன்டு குழந்தைகளுக்கு கற்றுத் தருகிறது. இந்த *அசுரர்களின்* செய்முறைக்கு அடைக்கலம் தந்திருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் தீவிரவாத தேசம் உருவாவதற்கு நின்டன்டு ஒரு ஊக்குவிக்கும் திட்டத்தை வழங்குகிறது. நின்டன்டு பற்றி அறிமுகம் இல்லாதவர்களுக்கு சொல்ல வேண்டும் என்றால், அது ஜப்பானில் உருவான வீடியோ கணினி அமைப்பு . இந்த அமைப்பில் பல்வேறு வகை ஆர்கேட் வகை கேம்ஸ் விளையாடலாம். இதைப்போன்ற மேலும் பல கேம்ஸ் விளையாடுவதற்கு, நீங்கள் ஒரு CD-ROM வாங்கலாம் அல்லது இணையத்தில் மற்ற தோழர்களுடன் விளையாடலாம். ¶ஒரு தைரியமான புதிய உலகிற்கு *சாத்வீக* இளைஞனை உருவாக்கும் பொருட்டு, பொம்மை துப்பாக்கிகள் மற்றும் கத்திகளையும், நின்டன்டு மற்றும் கணினிமயமாக்கப்பட்ட கில்லர் கேம்ஸ் ஆகியவற்றை கைவிடுமாறு நாங்கள் சமீபத்தில் பெற்றோர்கள் மற்றும் அதை விளையாடும் இளைஞர்களிடமும் கேட்டுக்கொண்டோம். இந்த குறிக்கோளை, நாங்கள் எங்களது சமூகத்தில் அடைந்து விட்டோம். உடல், உள்ளம் அல்லது உணர்வுப்பூர்வமாக தங்கள் மனது அல்லது கனவிலும் மற்றவர்களை துன்புறுத்தாமல் இருக்கும் அகிம்சை என்கிற தார்மீக நெறியை பின்பற்றும் நோக்குடன், நிறைய ஏழு வயது குழந்தைகள் தங்கள் துப்பாக்கிகளை எரித்து விட்டனர் அல்லது நின்டன்டுவை விற்பனை செய்து விட்டனர். நின்டன்டு மற்றும் ஜெனேசிஸ் போன்ற பிரபலமான கேம்ஸ், மற்றும் அதைப்போன்ற கணினி மற்றும் வீடியோ கேம்ஸ் மற்றும் பொம்மை துப்பாக்கிகள் மற்றும் கத்திகள் மற்றும் பொம்மை பீரங்கிகளை, எங்கள் சீடர்கள் வீடுகளில் இருந்து நீக்கப்பட்டு குப்பையில் வீசப்பட்டன. ¶"எங்களுக்கும் அவர்களுக்கும் போட்டி" என்ற அணுகுமுறையை கற்பதற்கு பதிலாக, நமது குழந்தைகள் "நாங்கள் அவர்களுக்கு உதவியாக இருப்போம்" என்ற கண்ணியமான சமூகத்தின் அணுகுமுறையை கற்று வருகிறார்கள். இந்த கேம்ஸ் உலகில் மிகவும் பிரசித்தம் என்பதாலும், குழந்தைகள் அதிக பற்றுடன் இருந்து, அதற்கு அடிமை ஆகிவிட்டதாலும், இந்த நடவடிக்கைகளை எடுக்க தைரியம் தேவைப்பட்டது. ஆனால் தற்போது நமது சீடர்கள் வீடுகளில் இருந்து பொம்மை ஆயுதங்கள் நீக்கப்பட்டுவிட்டன, மற்றும் வேடிக்கையாக போலி சண்டைகளும் நடப்பது இல்லை. நீங்கள் உங்கள் வீடுகளில் என்ன செய்ய இருக்கிறீர்கள்? இந்த

பூமியில் இது தான் வாழும் மறை என்று இந்த வீடியோ மற்றும் கம்ப்யூட்டர் கேம்ஸ், பொம்மை துப்பாக்கிகள் மற்றும் கத்திகள் மற்றும் மரணம் மற்றும் அழிவை ஏற்படுத்தும் மற்ற ஆயுதங்கள் குழந்தைகளுக்கு கற்பிக்கின்றன. அவர்கள் பிரச்சனை முடிவுக்கு வரும் வரை தொடர்ந்து அடித்துக்கொண்டு இருப்பதற்கு கற்றுக் கொள்கிறார்கள். நீங்கள் காரணத்தை தெரிந்துகொள்வதற்கு, சமரசம் செய்வதற்கு, உடன்பாட்டை பெறுவதற்கு அல்லது புத்தியை பயன்படுத்துவதற்கு அவசியம் இருப்பது இல்லை. தொடர்ந்து அடித்துக்கொண்டு இருந்தால் பிரச்சினை முடிவுக்கு வந்து விடும். இதைத்தான் அவர்கள் கற்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமா? வாழ்க்கைக்கு மதிப்பில்லை மற்றும் அது அர்த்தமற்றது என்ற பாடத்தை இதைப்போன்ற விளையாட்டை பல மணிநேரங்களுக்கு தொடர்ந்து விளையாடும் குழந்தைகள் கற்கிறார்கள். சாகும் வரை தொடர்ந்து அடித்துக்கொண்டு இருக்கும் அடியுணர்வை கொண்டவர்கள், வாழ்க்கை விலை மதிப்பற்றது என்பதை எப்போதாவது கற்றுக் கொள்வார்களா? அசுரர்களோடு வாழ்வதும் சிவனோடு வாழ்வதும் ஒன்றல்ல என்பதை நாம் அவர்களுக்கு எவ்வாறு கற்றுத் தருவது?

வியாழக்கிழமை

பாடம் 214

போர் பொம்மைகள்

மற்றும் உண்மையான போர்

நமது நினைவில் இருக்கும் பழக்கங்கள் அடிமனதில் உள்ளன. அதிலும் குறிப்பாக உணர்ச்சிப்பூர்வமாக பிணைந்து இருக்கும் பழக்கங்கள் அதிக சக்தி வாய்ந்தவை. அதற்குள் எதை பதிய வைக்கிறோமோ, அதை அது தக்க வைத்துக் கொள்வதால், அது மிகவும் மந்தமான நிலையில் இருக்கிறது. இந்த நினைவு வங்கிகள் தொடக்கத்தில் பதிவு செய்யக்கூடிய CD அல்லது DVD போன்று இருக்கிறது, மற்றும் அந்த அடிமனதில் புதிதாக பிறந்த குழந்தைக்கு எதுவும் இருப்பதில்லை. ஆனால் அது முதலில் அழத்தொடங்கியதும், அடியுணர்வு செயல்படத் தொடங்கி அபிப்ராயங்கள் அனைத்தும் பதிய தொடங்குகின்றன. முதலில் பதியும் அபிப்ராயங்கள் பிற்கால வாழ்க்கை அனுபவங்களுக்கு காரணமாக விளங்குகின்றன. ¶சில கம்பியூட்டர் கேம்ஸ் நேர்மறையாக ஆக்கப்பூர்வமாக இருந்தாலும், அதைப்போன்று மேலும் பல கேம்ஸ் தேவைப்படுகின்றன. நமது வாசகர்களில் நிரலாளர்களாக இருப்பவர்கள், *தர்மத்தை* அடிப்படையாகக் கொண்ட வீடியோ கேம்ஸ் தொடரை உருவாக்க முன் வந்தால், மிகவும் சிறப்பாக இருக்கும். நின்டன்டு கேம் அல்லது ஒரு பொம்மை துப்பாக்கி மூலம் யாரும் உண்மையில் இறப்பது இல்லை என்பதால் அதனால்

எந்த தீங்கும் இல்லை என்று தோன்றலாம். ஆனால் கொலை செய்வதற்கு அனுமதி வழங்கி, கொல்வதற்கு உளரீதியான முன்னேற்பாடுகளை செய்கிறது. அது தான் மிகவும் ஆபத்தானது. இரக்கமில்லாமல் போட்டியாளர்களை வெற்றிகொண்டு வாழ்க்கையை தொடர்வது உள்ளத்தின் இலக்குகளாக மாறுகின்றன. அந்த சிறுவர்கள் நன்றாக பேச ஆரம்பித்ததும், துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான வார்த்தைகள் அனைத்தையும் பயன்படுத்தி படையெடுப்பு, கமாண்டோக்கள், தாக்குதல், சண்டை, போர், யுத்தம் போன்ற சொற்களை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தங்கள் சகோதரிகள் மற்றும் சகோதரர்களுடன் வாதாடி சண்டையிட்டால், அதைக்கண்டு வியக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. அதைத்தான் அவர்கள் தங்கள் விளையாட்டில் இருக்கும் கதாநாயகர்களிடம் இருந்து கற்று இருக்கிறார்கள். ¶பொம்மை போர்கள் மற்றும் வாழ்க்கையில் நடைபெறும் உண்மை போராட்டங்களுக்கும் இடையில் இருக்கும் தொடர்பை விளக்கும் வகையில் ஒரு இலங்கை குடிமகன் எனக்கு ஒரு கதையை கூறினார். பல தலைமுறைகளுக்கு இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் இந்து சமூகங்களில் போர் பொம்மைகள் இருந்தது இல்லை. ஆனால் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் தொடங்கிய போது, குழந்தைகளிடம் பொம்மை துப்பாக்கி பிரபலமானது. அவர்கள் பெரியவர்களைப் போல தெருக்களில் போர் வீரர்கள் வேடமிட்டு விளையாடினர், மற்றும் அவர்கள் பெரியவர்கள் ஆனதும் உண்மை துப்பாக்கிகளை பயன்படுத்த தொடங்கினர். குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய ஐரோப்பாவில் இருந்து பொம்மைகள் இறக்குமதி செய்யப்பட்டன. விரைவில் பல வீடுகளில் பொம்மை துப்பாக்கிகளுக்கு தனியாக ஒரு இடம் ஒதுக்க வேண்டியிருந்தது. ¶தமிழர்கள் வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ஆயுதங்களை தேட சென்ற சிங்கள இராணுவத்தினர், சில சமயங்களில் உண்மைப் போல தோன்றிய நெகிழி துப்பாக்கியை கண்டு ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதனால் குழப்பம் மேலும் அதிகரித்து, பொம்மை துப்பாக்கிகளை வீட்டில் வைத்திருந்த ஆண்கள் துன்புறுத்தப்பட்டார்கள். விரைவில் பொம்மைகளின் மீது இருந்த மோகம் குறைந்தது. பொம்மைகளின் உலகமும் உண்மையான போர் நடக்கும் உலகமும் தனித்தனியாக இருப்பதில்லை. ¶குறிப்பாக இன்றைய காலத்தில் இருக்கும் கணினி தொழில்நுட்பம் மற்றும் அதன் அங்கமாக இருக்கும் இணையத்தின் மூலம், நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் மேம்படுத்த முடியும். அது அந்தர்லோகத்தில் இருக்கும் *ஆகாச* நினைவு வங்கிகளை போன்றது. நீங்கள் இணையத்தை பயன்படுத்தி, ஒரு நொடியில் நீங்கள் வேண்டியதை பெற்றிடலாம். நாங்கள் மின்னணு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இமயமலை மற்றும் தென் அமெரிக்க காடுகளில் இருக்கும் *ஆசிரமங்களுடன்* உடனடியாக தொடர்பு கொள்கிறோம். ஒரு கடிதம் வந்து சேர்வதற்கு ஒரு மாதம் தேவைப்பட்டது, மற்றும் பதிலை எதிர்பார்க்க இரண்டு முதல் மூன்று மாதங்கள் தேவைப்பட்டன. அந்த பதில் பத்திரமாக வந்து சேருமா என்பதையும் உறுதியாக

சொல்ல முடியாது. இன்று நாங்கள் ரிஷிகேஷ் மற்றும் இமயமலை உச்சியில் இருப்பவர்களுடன் தொடர்பு கொள்கிறோம், மற்றும் அவர்களிடம் இருந்து ஒரே நாளில் அல்லது சில நிமிடங்களில் மின்னஞ்சல் பதிலை பெறுகிறோம். நாம் தொடர்பு கொள்ளும் முறையை மின் ஊடகம் வெகுவாக மேம்படுத்தியுள்ளது. ¶அது பாலுணர்வு படங்களை மேம்படுத்தியுள்ளது. அது தீவிரவாதத்தை மேம்படுத்தியுள்ளது. அது நீங்கள் விரும்பும் ஒவ்வொன்றையும் மேம்படுத்தும். நீங்கள் உங்கள் அடிமனதில் எதை புகுத்தி வாழ்நாள் முழுவதும் வாழ இருக்கிறீர்கள் என்பதை நீங்களும் உங்களின் முடிவெடுக்கும் சக்தியும் முடிவு செய்ய வேண்டும். நாம் தற்போது வேளாண்மை தழுவிய யுகத்தில் வாழவில்லை. நாம் தொழில்நுட்ப யுகத்தில் இருக்கிறோம். நாம் தகவல்தொடர்பு யுகத்தில் வாழ்ந்து வருகிறோம். இன்றைய யுகத்தில் மனம் தொழில்நுட்பத்தில் முக்கிய இடம் வகித்து, அந்த தொழில்நுட்பத்திற்கு துணை புரிகிறது. அதை நம்மால் மாற்ற முடியாது. ஒருவர் தனக்கு கிடைத்து இருக்கும் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அந்த நபர் தான் முடிவு செய்ய வேண்டும். ¶ஒரு கணினியும் மனம் போன்றது தான். அதற்கு நினைவாற்றல், ஒரு குறிப்பிட்ட அளவு பகுத்தறியும் திறன், ஒரு குறிப்பிட்ட அளவு உத்வேகம் உள்ளது. ஆனால் நமது மதக் கோட்பாடுகளில் மையமாக விளங்கும் மன உறுதி மற்றும் *விவேகமாக* பகுத்தறியும் சக்தியை போன்று, மனிதனாக உங்களுக்கு உங்கள் மீது இருக்கும் கட்டுப்பாடு அதனிடம் இல்லை. அதனால் ஆன்மீகம் என்றால் என்ன என்று உங்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்? உங்களுக்கு எது முக்கியம்? இந்த அல்லது அடுத்த பிறவியில் வெளிப்படுவதற்கு, நீங்கள் உங்கள் உட்புற மனதில் எதை பதிய வைக்க விரும்புகிறீர்கள்? நீங்கள் இந்த கருவிகளை பயன்படுத்தி உங்களுக்கு முக்கியமாக இருக்கும் விஷயத்தை மேம்படுத்தி, உங்கள் வாழ்க்கையை மட்டுமில்லாமல் மற்றவர் வாழ்க்கைக்கும் உதவி புரியலாம்.

வெள்ளிக்கிழமை

பாடம் 215

இணையத்தின்

மாபெரும் சக்தி

http://www.hinduismtoday.com/ இது தட்டச்சு பிழையும் இல்லை அயல்மொழியும் இல்லை. இது இந்துயிசம் டுடே பத்திரிகையின் இணையதள முகவரி ஆகும். உங்களிடம் ஒரு கணினி இருந்தால், நீங்கள் எங்களது இந்து குடும்ப பத்திரிகையை இலவசமாக, உலகில் பல மில்லியன் கணக்கில் இருக்கும் இணையதள தொடர்புகள் மூலம் படிக்கலாம். உங்களுக்கு அழகான படங்களும்

ஓவியங்களும் கிடைப்பது கடினமாக இருக்கலாம், ஆனால் இணையத்தில் *தர்மம்* என்ற சொல்லை தேடுவோருக்கு உரைகளும் நூல்களின் சில பகுதிகளும் எளிதில் கிடைத்து விடும். பல வருடங்கள் முன்பாக இணையம் பிரபலமாக இல்லாத காலத்தில், சனாதன தர்மம் என்றால் என்ன என்பதைப் பற்றி தியானம் செய்த போது, இந்துக்கள் எல்லோரும் இணையத்தின் மூலம் இணைந்து இருப்பதை என்னால் காண முடிந்தது. இதன் மூலம் பிஜி தீவில் இருக்கும் ஒரு *ஆசிரமம் சம்ஸ்காரங்கள்* பற்றிய விளக்கங்களை பதிவிறக்கம் செய்ய முடிந்தது. இதன் மூலம் ஒரிசாவில் ஒரு யோக சமூகம், பொது மக்களுக்கு *சக்கரங்கள்* பற்றி வழங்கவிருந்த ஒரு உரைக்கு தேவையான வரைபட தகவலை தேடிக்கொள்ள முடிகிறது. ஒரு யாத்திரி பாரதத்திற்கு செல்லும் போது, தனது குடும்பம் சென்று பார்ப்பதற்கு புண்ணிய தளங்கள், கோயில்கள், *தீர்த்தங்கள்* மற்றும் *ஆசிரமங்கள்* மற்றும் அதனோடு நிலப்படங்கள், இரயில் அட்டவணைகள் மற்றும் குளிர்சாதன வசதியுள்ள அறைகளின் விலைகளை பற்றி தகவலை வழங்கும் ஒரு இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் இருக்கும் தொலைப்பேசியை தொடர்புகொண்டு தெரிந்துகொள்ள முடிகிறது.
இதைத்தவிர நான் மேலும் பல தகவல்களை படித்து தெரிந்துகொண்டேன். நாம் எல்லோரும் சுபமுகூர்த்தம் மற்றும் பண்டிகை நாட்களை பார்ப்பதற்கு பயன்படுத்தும் புனிதமான *பஞ்சாங்கத்தை* காண முடிகிறது. எங்களது *இந்துசமயத்தின் தற்கால வினாடி வினாவில்* வழங்கியிருந்த இந்து சமய வரலாற்றின் கால சக்கரம், இணையத்தில் வெளியிடப்பட்டு இருப்பதை நான் கவனித்தேன். இது தொடர்பாக பல வரலாற்று ஆசிரியர்கள் எங்களை கடிதம் மூலம் தொடர்பு கொண்டு, இந்திய வரலாறு பற்றி புரிந்துகொள்ளும் புதிய அணுகுமுறை பற்றி விவாதித்தனர். நீங்கள் இப்போது இணையத்தில் அந்த பக்கத்திற்கு சென்று, ராமகிருஷ்ணர் எப்போது பிறந்தார், *வேதங்கள்* எப்போது எழுதப்பட்டன அல்லது சோழ அரசர்கள் எப்போது இந்தோனேசியா பயணம் செய்தார்கள் என்பதை படித்து தெரிந்துகொள்ளலாம். ¶பிற்காலத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இணைய வழியில் கற்பிப்பதை என்னால் கணிக்க முடிந்தது. ஒரு தென் ஆப்பிரிக்க ஆசிரியை தான் நடத்தும் பாடம் குழந்தைகளுக்கு ஆர்வமூட்டுவதாக இருக்க வேண்டும் என்பதற்காக புகைப்படங்கள், நிலப்படங்கள், *வேதங்கள்,* விளக்கங்கள் மற்றும் ஒலிகளை பதிவிறக்கம் செய்ய முடிகிறது. இணையத்தில் இந்து சமயம் பற்றிய தகவல் களஞ்சியம் இருந்தால் மக்களுக்கு பயன் தரும் அல்லவா? இணையத்தில் *தர்மம்* பற்றிய வரைபட நூலகம் இருந்து, அதை எல்லோரும் அணுகும் வசதியும் இருந்தால், ஒருவர் தனது மேசையை விட்டு விலகாமல், தனது சிறிய புத்தகத்தை விளக்கும் ஒரு அருமையான ஓவியத்தை எளிதில் பதிவிறக்கம் செய்து விடலாம் அல்லவா? இணையத்தின் மூலம் நமக்கு கிடைக்கும் வாய்ப்புக்களுக்கு பஞ்சம் இல்லை.¶உங்கள் மகளுக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது. அதுக்கு ஒரு விசேஷமான பெயரை எப்படி தேர்வு செய்வது? உங்களுக்கு பிடித்தமான பெயர், அந்த பெயரின் பொருள் மற்றும் அதன்

சரியான உச்சரிப்பு பற்றி தெரிந்துக்கொள்ள இணையத்தில் இந்து பெயர்கள் என்று தேடினால், எண்ணற்ற இணையதளங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பெயர்கள் கிடைக்கும். நீங்கள் ஒரு தொழில் தொடங்க வேண்டுமா, ஒரு முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமா அல்லது வெளிநாடு செல்ல வேண்டுமா? ஒரு சுபமுகூர்த்த நேரம் பற்றிய கணினி ஆய்வை தெரிந்துக்கொள்ள இணையத்தில் ஜோதிடத்தின் முகப்பு பக்கத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

சனிக்கிழமை

பாடம் 216

இணையத்தில்

இந்து சமயம்

வேர்ல்டு வைட் வெப் என்ற சொல்லை வேகமாக சொல்வது கடினமாக இருக்கிறது. அதை வல்லுனர்கள் வெப் என்று அழைக்கிறார்கள். ஆனால் அது எதை குறிக்கிறது? நான் அந்த வெப் என்ற இணையத்தை பற்றி சிறிது படித்து தெரிந்து கொண்டேன். எனது பவர் மாகின்டோஷ் கணினியில் இணைய தொடர்பு வேலை செய்வதற்காக, எனது மடவாசிகள் சில விசேஷ மென்பொருள்களை நிறுவ வேண்டி இருந்தது. ஆனால் நான் விரைவில் இன்போபானின் மிதவேக இணையத்தில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டேன். இணையத்தை முதல் முறையாக பயன்படுத்த தொடங்கிய போது அது பயன்படுத்துவதற்கு மிகவும் சுலபமாக, உலகெங்கும் பல பயனர்கள் கூட்டாக செயல்படுவதற்கு உதவும் தகவல் பரிமாற்ற பாதையாக விளங்குவதை நான் அறிந்து கொண்டேன். அது ஒருவரின் செயல்பாட்டு எல்லையை அதிகரித்து, தகவலை பகிர்வதில் இருந்து அதை தேடுவது வரை பயன் தருவதாக இருக்கிறது. மனித வாழ்வுவளம் பற்றிய சர்வதேச மாநாடு மற்றும் உலக சமய மன்றத்தில் பங்குபெறும் மதவாதிகள் அனைவரும் தங்கள் எண்ணங்கள், திட்டங்கள் மற்றும் அறிவை இணையத்தில் பகிர்வார்கள் என்று நம்புகிறோம். நான் மாஸ்கோ மற்றும் ரியோ டி ஜெனிரோவில், அரசியல் மற்றும் மதத் தலைவர்களின் சர்வதேச மாநாட்டு கூட்டம் நடைப்பெற்ற போது, முன்பு அரசு மற்றும் பல்கலைகழகங்களுக்கு மட்டுமே கிடைக்கப் பெற்ற இணையத்தை, ஒரு இண்பார்மேஷன் ஹைவேவில் விரிவாக்கம் செய்து உலகை ஒன்றாக இணைக்கும் தனது கனவை முன்னாள் அமெரிக்க துணை அதிபர் அல் கோர் வெளிப்படுத்தி இருந்தார். வாழ்த்துக்கள், திரு. கோர். டிஜிட்டல் சூப்பர்ஹைவேயின் உங்கள் கனவு வெறும் மூன்று வருடங்களில் நிமிடத்திற்கு மூன்று பயனர்களை சேர்க்கிறது, மற்றும் அதில் தற்போது நாங்களும் உறுப்பினர்களாக இருக்கிறோம். ¶இந்துயிசம் டுடேயின் முகப்பு பக்கத்தில்,

நீங்கள் ஒரு பட்டனை கிளிக் செய்ததும், உங்கள் முன்பாக ஒரு பக்கம் தோன்றுகிறது. நீங்கள் அந்த பக்கத்தை பயன்படுத்தி, ஆசிரியருக்கு அஞ்சல் செலவு இல்லாத ஒரு கடிதத்தை உடனடியாக எழுத முடியும். இன்னொரு முறை கிளிக் செய்ததும், நீங்கள் இணைய உலகின் பரந்த வெளியில் நுழைகிறீர்கள். ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள். இணையம் பல நடவடிக்கைகளை முழுமையாக மாற்றி விட்டது என்று மக்கள் கருதுகிறார்கள். இயற்பியல் வல்லுநர்களுக்கு பழைய வகை இணையம் பொருத்தமானதாக இருந்தது, ஆனால் அது பயனருக்கு வசதியாக இல்லை. அது தட்டச்சு மட்டுமே செய்ய முடிந்த, ஒரு கருப்பு வெள்ளை தொழில்நுட்ப உலகமாக இருந்தது. இணையத்தில் சேர்க்கப்பட்டு இருக்கும் படிமங்கள், நிறம், பல்வகை அச்சுமுகங்கள் (typefaces), படங்கள், வடிவமைப்புக்கள், அசைப்படம் (அனிமேஷன்) மற்றும் பட்டன்கள், அதை அடுத்த நிலைக்கு எடுத்து செல்கிறது. இன்று அது எல்லோரும் பயன்படுத்தும் கருவியாக மாறி விட்டது. ஒரு பட்டனை கிளிக் செய்தால் பெங்களூரில் இருக்கும் வேதபாடசாலையின முகப்பு பக்கத்திற்கு செல்ல முடியும். ஜோதிடம் பற்றிய ஒரு பட்டனை கிளிக் செய்தவுடன், நீங்கள் சான் பிரான்சிஸ்கோ செல்கிறீர்கள் அல்லது *ஆயுர்வேதம்* பற்றிய ஒரு லண்டன் தரவுத்தளத்தில் உலாவிக்கொண்டு இருக்கிறீர்கள். மீண்டும் கிளிக் செய்தால் நீங்கள் டர்பனில் இருக்கும் சமஸ்கிருத கல்வியின் பக்கத்தை படித்துக்கொண்டு இருக்கிறீர்கள். இது ஹைப்பர்லிங்கிங் என்று அழைக்கப்படுகிறது. நான் நேற்று புக்மார்க்ஸ் உருவாக்குவதை பற்றி தெரிந்து கொண்டேன். இது நீங்கள் முன்பு தொடர்பு கொண்ட இணைய முகவரியை ஒரு நிரலாக்கம் மூலம், நினைவில் வைத்து இருக்கும் லிங்க்ஸ் ஆகும். நீங்கள் அதை கிளிக் செய்தால், மீண்டும் அந்த இணையத்தளத்திற்கு எளிதில் சென்று விடலாம். இணையம் எல்லோருக்கும் சம உரிமை வழங்குகிறது. நீங்கள் பிர்லா பிரைவேட் லிமிடெட், ஐபிஎம் அல்லது புனேவை சேர்ந்த கவிஞர் திருமதி. பட் என்று யாராக இருந்தாலும், எல்லோரும் இணையத்தில் சமமாக கருதப்படுகின்றனர். ¶மின்னஞ்சல் என்பது உங்கள் வீட்டில் இயங்கும் அஞ்சல் நிலையம் போன்றது. தகவல்கள் தொலைப்பேசி இணைப்புக்கள் வழியாக வருவதும் போவதுமாக இருக்கும் மற்றும் அதை உலகின் எந்த மூலையில் இருந்தாலும் உடனடியாக படித்து விடலாம். நாங்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளும் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு, எங்கள் அமைப்புக்கள் இணையத்தை பயன்படுத்துகின்றன. நாங்கள் முகப்பு பக்கத்தில் ஒரு புதிய தகவலை வெளியிட்டதும் மொரிஷியஸ், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை அல்லது ஜெர்மனியில் இருக்கும் எங்கள் அங்கத்தினர்கள் அதை உடனடியாக படிக்க முடிகிறது. அது மட்டுமில்லை, அது இலவசமாகவும் கிடைக்கிறது. பெரிய ஃபாக்ஸ் இயந்திரங்கள் மற்றும் தொலைப்பேசி கட்டண ரசீதுகள் மறைந்து விட்டன. இணைய உலகை இயக்கும் சக்தியாக விளங்கும் புத்திசாலி இந்து பொறியாளர்களால் தூண்டப்பட்டு, இணையத்தில் தங்களை

மேம்படுத்திக் கொள்ள இந்து அமைப்புக்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த இணைய உலகில் இருக்கும் பிணையங்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருந்தாலும், இந்து சமயம் போன்று, வெவ்வேறு இடங்களில் கலைந்து பரவி இருப்பதால், எல்லோரும் சொந்த வீடுகளில் இருக்கும் அமைதியான உணர்வை பெறுகிறார்கள்! நாம் இந்த "இணையத்தில்" சந்தித்து நமது அனுபவம், கனவு மற்றும் கருவிகளை பகிர்ந்துக் கொள்ளலாம். ¶"குருதேவா, மதத்தை பரப்புவதற்கு இந்த நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று லண்டனில் இருக்கும் சமண மத பத்திரிகையின் ஆசிரியர் என்னிடம் வினவினார். கையால் எழுதப்பட்ட பழங்கால சாத்திரங்களை கண்டு நாம் வியக்கிறோம். ஒரு காலத்தில் ஓலைச்சுவடி மற்றும் எழுத்தாணி நவீன தொழில்நுட்பமாக இருந்தது, பிறகு பேனாவும் காகிதமும் அந்த இடத்தை பிடித்தது, மற்றும் அதன் பிறகு பழைய தட்டச்சுப் பொறி நவீன தொழில்நுட்பமானது. இன்று தொழில்நுட்பமாக இருக்கும் கணினிகள் மற்றும் இணையம், ஆன்மீக சக்திகள் மற்றும் மத சார்புள்ள மக்கள் உலகில் எங்கிருந்தாலும், அவர்களை ஒன்று சேர்க்கும் வல்லமையுடன் விளங்குகிறது. இந்த செயலை தட்டச்சு பொறி, பேனா மற்றும் காகிதம், ஓலைச்சுவடி மற்றும் எழுத்தாணியால் செய்ய முடியவில்லை என்று நான் கூறினேன்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 217

தொழில்நுட்பத்தை

முறையாக பயன்படுத்துதல்

வீட்டில் ஆன்மீக அதிர்வலையை உருவாக்குவதற்கு கணினிகளின் பயன்பாட்டில் கட்டுப்பாடு இருக்க வேண்டும். இங்கே ஹவாய் தீவில் இருக்கும் எங்கள் சைவ இந்து மடத்தில், எல்லா மடவாசிகளுக்கும் ஒரு கணினி இருக்கிறது. அவர்கள் விரதங்களை மேற்கொண்டதும், அவர்களுக்கும் ஆடைகள், ருத்ராட்ச மாலைகள், *தபஸ்* செய்யும் தண்டங்களுடன் ஒரு மேக்கிண்டோஷ் வழங்கப்படுகிறது! இதன் மூலம் எங்களால் இந்த சிறிய தீவில் இருந்து சிறப்பான சேவையை வழங்க முடிகிறது. இந்த *ஆசிரமத்தில்* எங்களது இந்த தொழில்நுட்பத்தை, எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் கருவிகளாக பார்க்கிறோம். அவை நம்மை கட்டுப்படுத்துவது இல்லை. நாங்கள் மதம் தொடர்பான எங்கள் வேலையை மேம்படுத்தவும், சனாதன தர்மத்தை விஸ்தரித்து, அதை எழுத்துப்பிரதிகள் மற்றும் இணையம் மூலம் மேற்கத்திய நாடுகள் மற்றும் உலகம் முழுவதற்கும் கொண்டு வருவதற்கு, இந்த கருவிகளை

பயன்படுத்துகிறோம். நாங்கள் பயன்படுத்தும் கருவிகள் எங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது இல்லை. நாங்கள் அவற்றை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பயன்படுத்த தொடங்கி, குறிப்பிட்ட நேரத்தில் அணைத்து விடுகிறோம். அவை மதியம் பன்னிரண்டு மணியில் இருந்து மதியம் 3:00 மணிவரை அணைக்கப்படுகின்றன. அவை மீண்டும் மாலை 6:30 மணிக்கு அணைக்கப்படுகின்றன. அதன் பிறகு அடுத்த நாள் காலை வழிபாடு மற்றும் வழிகாட்டலுடன் கூடிய தீவிர தியானம் நடந்து முடியும் வரை, அவை செயல்படுத்தப்படுவது இல்லை. வாரத்திற்கு இரண்டு நாட்கள் ஆன்மீக தனிமையில் இருக்கும் நாட்களில், நாங்கள் மிகவும் அபூர்வமாக அல்லது மிகவும் முக்கியமான விஷயங்களை தவிர, அவற்றை அதிகமாக பயன்படுத்துவது இல்லை. இதனால் என்ன பயன்? இது மற்றவர்களுடன் பேசுவதற்கு, தொடர்பு கொள்வதற்கு, பகிர்வதற்கு, ஒருவரையொருவர் பாராட்டுவதற்கு, உலக நன்மைக்காக இணைந்து செயல்படுவதற்கு அனுமதி அளிக்கிறது. இந்த தொழில்நுட்ப யுகத்திலும் கார்டன் ஐலந்து கவாய் தீவில் இருக்கும் எங்களது 459 ஏக்கர் மடத்தில், ஒரு பறவை பாடும் பாட்டை கேட்டு, தியானம் செய்து, மடத்தில் இருக்கும் மற்றவர்களின் நட்புறவை விரும்பி அனுபவித்து ஒரு சமநிலையான மனித வாழ்வை வாழ்வதற்கு எங்களுக்கு நேரம் கிடைக்கிறது. ¶மக்களால் பரவலாக பயன்படுத்தப்படும் மின்னணு ஊடகமாக தொலைகாட்சி விளங்குகிறது. ஒன்றாக ஒரு குடும்பம் உட்கார்ந்து பார்க்கும் தொலைகாட்சி ஒற்றுமையை வளர்க்கிறது. ஆனால் அதற்கு அந்த நிகழ்ச்சி எல்லோருக்கும் பிடித்தமான ஒரு பயனுள்ள விருப்பமாக இருக்க வேண்டும். நீங்கள் அதை பார்க்கும் போது, உங்களுக்குள் சிரித்து பேசிக்கொள்ளலாம் மற்றும் அதைப்பார்த்த பிறகு அதைப் பற்றி விவாதிக்கலாம். ஆனால் அதற்கு முன்னரும் பின்னரும் சில முறைகளை பின்பற்ற வேண்டும். அது தொலைகாட்சியின் மயக்கும் சக்தியை சமன் செய்கிறது. தொலைகாட்சி குடும்பத்தின் நேரத்தை முழுவதுமாக ஆக்கிரமிக்கக்கூடாது. மாலைப்பொழுதில் தொலைக்காட்சியை பார்க்க ஆரம்பிக்கும் முன்பாக, குடும்பத்தினர் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து, அன்று நடந்த நிகழ்வுகளைப் பற்றி பேசி, ஒருவரையொருவர் பாராட்டி எந்த நிகழ்ச்சியை பார்க்க வேண்டும் என்பதை பரஸ்பரம் பேசி முடிவு செய்யவேண்டும். அதன் பிறகு, பார்த்த நிகழ்ச்சியைப் பற்றி பேசுவதற்கு சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். அந்த குடும்பத்தில் குழந்தைகள் மிகவும் சிறியவர்களாக இருந்தால், பெற்றோர்கள் தங்கள் விவேகத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள நேரம் ஒதுக்க வேண்டும். குறிப்பாக உங்களுக்கு விருப்பம் இல்லாத ஒரு நிகழ்ச்சியை அவர்கள் பார்த்தார்கள் என்றால், அந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு அவர்களுடன் அமர்ந்து அதைப்பற்றி பேசி, நமது சைவ சமயம் குறிப்பிடும் நற்பண்புகள் பற்றி விவாதியுங்கள். மற்ற கருத்துக்களைப் பற்றி அவர்கள் தெரிந்துக்கொள்ளட்டும். இது உங்கள் கடமை ஆகும். ¶தொலைகாட்சி

நிகழ்ச்சியை ஒரு திரைப்படம் பார்ப்பதைப் போல கருதுங்கள். ஒரு பெரிய நிகழ்ச்சிக்கு செல்வதைப் போன்று குடும்பம் முழுவதும் வாகனத்தில் ஏறிக்கொள்கிறது. அவர்கள் திரையரங்கம் சென்று, நுழைவுச்சீட்டுக்களை வாங்கி, நொறுக்குத்தீனி மற்றும் சோடா போன்றவற்றை வாங்கி, மகிழ்ச்சியுடன் படத்தை பார்த்து வீடு திரும்புகின்றனர். அவர்கள் ஒன்றாக இருந்த தருணத்தை ஆனந்தமாக கழிக்கின்றனர். ¶குழந்தைகள் தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதை அனுமதிக்கக் கூடாது. அதற்கு பதிலாக உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் மற்றும் வெளிப்புற நடவடிக்கைகள் அடங்கிய ஒரு சமநிலையான வாழ்க்கையை வாழ துணை புரிய வேண்டும். சில சிறுவர்கள் நாள் முழுவதும் தொலைகாட்சியை பார்த்து, மனதில் பல விதமான சிந்தனைகளை நிரப்பி தங்கள் கல்வியில் கவனம் செலுத்த தவறுகிறார்கள். தங்கள் குழந்தையின் மனதின் நலனை கருத்தில் கொண்டு, தொலைகாட்சி பார்ப்பதற்கு விவேகமான விதிகளை அமைத்து, அவற்றை அமல்படுத்துவது பெற்றோர்கள் கடமை ஆகும். அதில் ஒரு விதியாக, தினமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்க்கும் நேரத்தை ஒன்று அல்லது இரண்டு மணிநேரங்களுடன் நிறுத்திக் கொள்ளலாம். ¶தேவையென்றால் தொலைகாட்சியை பயன்படுத்துங்கள், ஆனால் அதை விவேகமாக பயன்படுத்தி முன்பு குறிப்பிட பிரச்சனைகளை தவிர்த்திடுங்கள். தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தை கட்டுப்படுத்த கற்றுக்கொள்ளுங்கள். அது ஒரு சிறந்த பொழுதுபோக்கு சாதனம் என்றாலும், அது உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, உங்கள் அடிமனதில் நிரம்பி, உங்கள் வீட்டில் தீய சிந்தனைகளை வரவழைத்து, உங்கள் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு அபாயகரமான கருவியாகவும் இருக்கக்கூடும் என்பதை நீங்கள் உணர வேண்டும். ¶தொலைகாட்சிக்கு ஏராளமான எதிர்மறை பண்புகள் இருப்பதைப் போல இசைக்கும் இருக்கிறது. வீட்டில் இசைக்கப்படும் இசையின் வகை மற்றும் அது வழங்கும் கருத்து மிகவும் முக்கியமானது. அது வழக்கமாக சைவ ஆன்மாக்கள் மூலம் பாரம்பரிய இசைக்கருவிகளில் இசைக்கப்படும் அழகான இந்து இசையாக இருக்க வேண்டும். கீழ்நிலை உணர்வுகளுக்கு தூண்டுதலாக இருக்கும் நயநாகரிகமற்ற இசை மற்றும் பாடல் வரிகளை தவிர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் காதால் கேட்கும் ஒவ்வொன்றும், உங்களை உணர்வின் ஏதாவது ஒரு நிலைக்கு அழைத்து செல்கிறது.

வியாபிசார, லம்படத்வ

व्यभिचार लम्पटत्व



விபச்சாரம் மற்றும் பாலியல் விஷயங்கள்

மனதில் இருக்கும் மாசே! நீ வெகுதூரம் சென்று விடு!
சொல்லத்தகாதவைகளை ஏன் சொல்கிறாய்? நீ சென்று விடு. நான் உன்னை விரும்பவில்லை. மரங்களிலும் வனங்களிலும் நீ சஞ்சரி. எனது மாசமற்ற மனம் எனது வீடுகள் மற்றும் எனது பசுக்களுடன் நிலைத்து இருக்கட்டும்.

அதர்வண வேதம் 6.45.1. வேஎ, ப. 489



சிங்கப்பூர் மெர்லையன் சிலைக்கு அருகில் வசிக்கும் ஒரு மனைவி, தனது வீட்டு தோட்டத்தில் பறித்த காய்கறிகளுடன் சற்று விரைவாக வீட்டு வாசலுக்கு திரும்பிய போது, தனக்கு பரிச்சயம் இல்லாத ஒரு பெண்மணி தனது வீட்டை விட்டு வெளியேறுவதையும், தன் கணவன் அவனுடைய தோழிக்கு வழி அனுப்புவதையும் பார்த்து, அந்த மனைவி அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறாள்.

திங்கட்கிழமை

பாடம் 218

சக்திகளை

கட்டுப்படுத்துதல்

மூன்று வகை விபரசாரங்கள் உள்ளன. உடல் ரீதியானது (மிகவும் மோசமானது); உணர்ச்சி ரீதியானது (அதிக வேதனை தருவது); மனம் ரீதியானது (இரகசியமானது). உடல் ரீதியான விபச்சாரம் திருமணங்களை பிரித்து, வீடுகளை அழித்து அதிகம் குழம்பிய குழந்தைகளை உருவாக்குகிறது. அந்த நடத்தை மன்னிக்கப்பட்டு அவர்கள் ஒன்று சேர்ந்தாலும், அது நினைவை விட்டு மறைவது இல்லை. "அது மீண்டும் நடக்குமா? அது நேற்று இரவு நடந்ததா?" என்ற எண்ணம் இருந்துக்கொண்டு இருக்கிறது. உணர்ச்சி ரீதியான விபச்சாரம் வழக்கமான ஒன்றாகும். கணவன்மார்கள் தினசரி வாழ்க்கையில், தங்கள் மனைவிமார்களை காட்டிலும் தங்கள் பெண் ஊழியர்கள் மற்றும் சகாக்கள் மீது அதிக பற்றுடன் இருப்பார்கள். வேலை செய்யும் மனைவிமார்கள், தங்கள் கணவன்மார்களை காட்டிலும் தங்கள் முதலாளி மற்றும் சகஊழியர்கள் மீது அதிக உணர்ச்சிப்பூர்வமான பற்றுடன் இருப்பார்கள். அவள் தான் விழித்து இருக்கும் நேரத்தில், தனது கணவனுடன் இருக்கும் நேரத்தை காட்டிலும் பணியில் இருக்கும் ஆண்களுடன் அதிகம் இருப்பதால், இந்த நிலைமையை புரிந்துகொள்ள முடிகிறது. ¶"ஒரு இந்து ஆண் தனது மதத்தையும் முறையாக பின்பற்றி, பணியிடத்தில் இருக்கும் பெண்களிடம் முறையாக நடந்துகொள்வது எப்படி?" என்று சிலர் என்னிடம் கேள்வி கேட்டார்கள். மிகவும் கவனமாக பழகவேண்டும். நீங்கள் ஒரு மதத்தை பின்பற்ற வேண்டும் என்பதையும், நீங்கள் ஒரு வேலையை செய்வதற்காகவே பணியிடத்தில் இருக்கிறீர்கள் என்பதையும் மறக்காமல் நினைவில் வைத்து இருந்து, எல்லோரிடமும் சமமான நட்புறவை பராமரித்து, யார் மீதும் அதிகமான விருப்பு அல்லது வெறுப்பு இல்லாமல் இருக்கவேண்டும். நடத்தை முற்றிலும் தொழில்முறையை சார்ந்து இருக்க வேண்டும். தொழில் ரீதியான நடத்தை பற்றின்றி இருந்தாலும், அதில் நட்புறவு இருக்கிறது.

“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு” (148)

என்று திருக்குறள் நமக்கு நினைவூட்டுகிறது. ¶மன ரீதியான விபச்சாரம் என்பது இரகசிய குற்றவாளியாக இருக்கிறது. ஒருவர் என்ன நினைக்கிறார் என்பது யாருக்கு தெரியும்? ஆனால் கற்பனை உலகில் நுழைந்து, தனது வாழ்க்கைத்துணை இல்லாத ஒருவருடன் உணர்வுப்பூர்வமாக அல்லது உடல் ரீதியாக ஈடுபடுவது அல்லது ஈடுபடாமல் இருப்பதை முடிவு செய்யும் உணர்வைத் தான் நாம் குறிப்பிடுகிறோம். ¶ஆனால் பாலியல் விஷயங்கள் மூலம் மனம் ரீதியான விபரசாரத்தில் ஈடுபடுவது அதிகமான அழிவை படிப்படியாக ஏற்படுத்துகிறது. ஜோடிகள் ஒரே பாலியல் நிகழ்ச்சியை பார்த்து ரசிக்கவில்லை என்றால் அந்த காட்சிகள், கற்பனைகள், அது ஏற்படுத்தும் பாலியல் பழக்க மாற்றங்கள் மற்றும் அதை மறைக்கும் பண்பும் ஒன்றாக சேர்ந்து, அவர்களுக்கு மத்தியில் ஒரு இடைவெளியை உருவாக்குகிறது. இதைப்பற்றி பின்வரும் *அதர்வண வேத* சுலோகம் மன்றாடுகிறது. “மனதில் இருக்கும் மாசே! நீ வெகுதூரம் சென்று விடு! சொல்லத்தகாதவைகளை ஏன் சொல்கிறாய்? நீ சென்று விடு. நான் உன்னை விரும்பவில்லை. மரங்களிலும் வனங்களிலும் நீ சஞ்சரி. எனது மாசமற்ற மனம் எனது வீடுகள் மற்றும் எனது பசுக்களுடன் நிலைத்து இருக்கட்டும்” (6.45.1. வேஎ, ப. 489). பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக இயற்றப்பட்டுள்ள இத்தகைய சுலோகங்களை படிக்கும் போது வியப்பை அளிக்கிறது. மனிதர்களிடம் அதிக மாற்றம் ஏற்படவில்லை என்று தோன்றுகிறது அல்லவா? ¶சனாதன தர்மம் உலகில் இருக்கும் மிகவும் பழமையான மதம் ஆகும். அதனால் அதனை பின்பற்றும் மக்கள் பாலியல் கலைகளை (மிகவும் பழமையான *காம சூத்திரம்)* ஆய்வு செய்து அதனை கட்டுப்படுத்த கற்றுக்கொண்டு, புனிதமான திருமண அமைப்பை அமைத்து, மனிதர்களுக்கு இடையேயான உறவுகளை தடையில்லாமல் செயல்படுத்தும் அறிவுடன் இருக்கும் அவர்கள், உலகில் மிகவும் பழமையான இனத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இந்திய கலாச்சாரம் ஆசியா முழுவதும் பரவி இருப்பதால், அங்கே பொது இடங்களில் முத்தமிடுதல், கட்டி அணைத்தல், கைப்பிடித்தல், தொடுதல் அல்லது உணர்தல் போன்று அன்பை வெளிப்படுத்தும் முறைகளை அதிகமாக பார்க்க முடிவதில்லை. இவ்வாறு ஒரு பெரிய மக்கள்தொகை பற்றி பொதுப்படையாக குறிப்பிடுவது சரியா என்று சிலர் வியக்கலாம்! ¶பாலியல் சக்தி என்பது கட்டுப்பாட்டில் இருக்கும் போது, அது அமைதி, நல்லிணக்கம் மற்றும் ஆரோக்கியத்தை உருவாக்கி மனம், உணர்ச்சி மற்றும் உடல் ரீதியான சமநிலையை வழங்குகிறது. அதற்கு மாறாக, அந்த சக்தி கட்டுப்பாட்டில் இல்லாத போது குழப்பம், இரகசியம், அழுத்தம், கண்டுபிடித்துவிடுவார்களோ என்ற அச்சம் மற்றும் குற்ற உணர்வு தோன்றுவதோடு, அது கருத்து வேறுபாடுகள் மற்றும் கடினமான சூழ்நிலைகள் உருவாகவும் காரணமாகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 219

நெருக்கத்தில் இருக்கும்

சூட்சும உறவுகள்

இன்றைய செய்திகளில் விபச்சாரம் என்பது தேசிய அளவில் மட்டும் அல்லாமல் சர்வதேச ஊழல்களிலும் இடம் பிடிக்கிறது. தொலைக்காட்சி தொடர்கள் "இரகசியமாக செயல்படும்" கதையமைப்பிற்கு அனுமதி அளிக்கிறது. மாதந்தோறும் மனைவி ஒதுங்கி இருக்கும் நாட்கள் அல்லது பல மாதங்கள் கருவுற்று இருக்கும் போது மற்றும் தொழில் தொடர்பான பயணங்களின் போது, கணவன்மார்கள் "கேளிக்கை விடுதிகளுக்கு" சென்று அவர்கள் சேவைக்கு பணம் வழங்கிவிட்டு வருவது வழக்கமாகி விட்டதால், யாரும் அதன் மீது அக்கறை செலுத்துவது இல்லை. ¶இது தொடர்பாக திருக்குறள் வழங்கும் அறிவுரையை பார்க்கலாம்.

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல். (142)

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். (146)

¶விபரசாரத்தில் ஈடுபடும் பெண் தான் உடலுறவு கொள்ளும் ஒவ்வொரு ஆணுடனும் நுணுக்கமான தொடர்பில் இருப்பதால், அவள் கரைக்க வேண்டிய *கர்மவினை* பல தலைமுறைகள் சேர்ந்த, அவளது சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவர்களின் சூட்சும உடல்களை இணைக்கும் மூடுபனி போன்ற மனநல குழாய் ஒரு மறைஞானியின் கண்களுக்கு தென்படுகிறது. அது பல வருடங்களுக்கு பிரியாமல் இருக்கிறது. விபரசாரத்தில் இருக்கும் பெண், குறிப்பாக அவள் வாடகைக்கு சேவை செய்யும் பெண்ணாக இருந்தால், அவளுக்கு இதைப்போன்ற பல நாடிகள் இருக்கும். அதைப் போல ஒரு ஆணும் தான் தொடர்பில் இருந்த பெண்களுடன் நுணுக்கமான இணைப்பில் இருக்கிறார். ஒரு கைக்குழந்தையை அதன் தாயுடன் சேர்க்கும் தொப்புள் கொடியைப் போன்று இருக்கும் இந்த சூட்சுமமான நாடிகள் மூலம் சக்திகளும், நல்ல மற்றும் தீய மற்றும் இரண்டும் கலந்த *கர்மவினைகளும்* பாய்ந்து செல்கின்றன. ¶திருமணத்தின் போது குமரனும் குமரியுமாக இருந்த ஒரு கணவன் மற்றும் மனைவிக்கும் இடையில் ஒரு மனநல குழாய் மட்டுமே இருக்கும். அதன் வழியாக அவர்கள் மத்தியில் சக்திகள் பாய்ந்து செல்கின்றன. அவர்கள் உறவு சுத்தமாக இருந்து, அவர்களுக்குள் அறிவு மற்றும் உணர்ச்சி ரீதியான பொருத்தம் இருந்தால், அவர்கள் தானாக தங்கள் *தர்மம், அர்த்தம், காமம்*

மற்றும் *மோக்ஷத்தின் கர்மவினைகளை* கட்டுப்படுத்துகிறார்கள். அவர்களின் குழந்தைகள் எப்போதும் குடும்ப சண்டையில சிக்காமல் அன்போடு வளர்க்கப்படுகிறார்கள். இரண்டு வாழ்க்கைத்துணையுடன் எந்த ஒரு அந்நியனும் சூட்சுமமான புதிய தொப்புள் கொடியை உருவாக்கவில்லை என்பதால், அவர்களுக்குள் பிரிவை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு பேரழிவை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கும் சண்டை வருவது இல்லை. ¶ஒரு ஆண் மற்றும் பெண்ணுக்கும் இடையில் நடைபெறும் உடலுறவுகள் மூலம், அவர்களுக்குள் அந்தர்லோகத்தின் சூட்சுமமான நாடி உருவானதும் அது சிந்தனைகள், உணர்ச்சிகள் மற்றும் மனவெழுச்சிகளை தெரியப்படுத்தும் ஒரு சூட்சுமமான குழாயாக மாறுகிறது. இது திருமணமான தம்பதிகள் மத்தியில் ஒரு முக்கிய தொடர்பாக அமைந்து, அவர்களை ஒன்றாக இணைத்து வைக்கிறது. திருமணம் செய்துக்கொண்டு தங்கள் வாழ்க்கைத்துணைக்கு விசுவாசமாக இருப்பவர்கள், தனது வாழ்க்கைத்துணையின் மனநிலைகள் மற்றும் மனவெழுச்சிகளை உணரவும் முடியும், அவன் அல்லது அவளது சிந்தனைகளை தெரிந்துக்கொள்ளவும் முடியும் என்பதை அறிந்து இருக்கிறார்கள். இந்த தகவல்கள் அனைத்தும் இந்த சூட்சுமமான லேசர் கதிர் அல்லது நுணுக்கமான சூட்சும லோக *பிராண சக்தி* பாதை வழியாக அனுப்பப்படுகின்றன. பல்வேறு எதிர்ப்பாலினத்தாருடன் உடலுறவு கொண்டவர்களுக்கு, சூட்சும தொடர்புகள் குழப்பம் தருவதாக இருக்கும். அவர்கள் அனுபவிக்கும் மன அழுத்தத்திற்கான காரணத்தை கண்டறிவது, சிறந்த மனநல மருத்துவருக்கும் சவாலாக இருப்பதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. அது குறிப்பாக இரவு நேரத்தில் நான்கு, ஐந்து அல்லது அதற்கும் அதிகமான தொலைகாட்சி நிகழ்ச்சிகளை ஒரே சமயத்தில் பார்ப்பதைப் போன்று இருக்கும்.

புதன்கிழமை

பாடம் 220

விபரசாரத்தின்

விளைவுகள்

ஒரு மருத்துவமனையில் அல்லது பொறியியல் நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு திருமணமான பெண் அல்லது பெண்களுடன் சேர்ந்து ஒரு கணினி நிரலாளராக பணிபுரியும் கணவனை கற்பனை செய்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் தனது முற்பிறவி *கர்மவினைகள்* காரணமாக, பணியிடத்தில் இருக்கும் ஒரு எதிர்பாலினத்தார் மீது ஈர்க்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. அவர்களுக்குள் இருக்கும் உணர்ச்சிப்பூர்வமான *பிராண சக்திகள்* உடல்களை விட்டு வெளிவந்து, அவர்களின் சகாக்களுடன் தொடர்பு கொண்டு,

இணக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒன்றாக சிரித்து பேசுவது எளிதாகிறது. அதைப்போன்ற தொடர்புகளில் வழக்கமாக நடப்பதைப் போல, "பெரிய நிகழ்வு" நடக்கும் போது, உடல்-மனம்-மனவெழுச்சி சார்ந்த *பிராண* சக்திகளின் பரிமாற்றம் ஒரு மனநல குழாயை உருவாக்கி, அவர்கள் இருவரையும் குறைந்தபட்சம் பன்னிரண்டு வருடங்களுக்கு இணைத்து வைக்கிறது. ¶அவளுக்கு தும்மல் வரும் போது அவனுக்கு இருமல் வருவது, அவனுக்கு கோபம் வரும் போது அவள் காரணம் ஏதும் இல்லாமல் சோகமாக வருந்துவது என்று இந்த *நாடி* வழியாக நுணுக்கமான முறையில் தகவல் பரிமாற்றம் நடைபெறுகிறது. *பிராண சக்திகள்* ஒரு தொடர்பை உருவாக்கும் போது நடைப்பெற்ற முறையான தொலைதூர தகவல் தொடர்பு, இந்நிலையில் நிச்சயமாக நடைபெறுவது இல்லை. தற்போது அவர்கள் சூட்சுமமான *நாடி* மூலம் இணைந்து இருந்து, தங்களது இரகசிய தொடர்பை தக்க வைத்து இருப்பதால், அவர்கள் விரோதிகளாக மாறுகிறார்கள். இதன் காரணமாகவே திருமணத்திற்கு முன்பாக ஏற்படும் உடலுறவுகள் ஒரு உறவை அழித்துவிடும் என்று கூறுகின்றனர். அவர்கள் ஒரே அலுவலகத்தில் வேலை செய்து ஒரே சந்திப்புக் கூட்டங்களில் பங்குபெற்றாலும், நிலைமை முன்பு அவர்கள் முதன்முதலில் பேச ஆரம்பித்ததைப் போல இருப்பதில்லை. அதன் பிறகு ஒருவர் அல்லது இருவரும் தனது கவனத்தை இன்னொருவர் மீது திருப்பும் பொழுது, பொறாமை உணர்வு தலைத்தூக்கி இருவரும் விலகிக் கொள்கின்றனர். இது தொலைகாட்சி தொடருக்கு ஒரு நல்ல கதையாக இருக்கலாம், ஆனால் அது நிஜ வாழ்க்கையில் ஒரு பெருந்துயரமாக இருக்கக்கூடும். ¶விபசாரத்தில் ஈடுபடும் ஒரு ஆணின் வீட்டில் தினசரி வேலைகளை செய்யும் அவன் மனைவியின் நிலைமையை நினைத்து பாருங்கள். அவளது மனநிலை என்னவாக இருக்கும்? அவன் அவளது சக்திகளை எல்லாம் இழுத்து விபச்சாரிக்கு வழங்கி விடுவதால், அவள் தனது உற்சாகம் மற்றும் ஊக்கத்தை இழந்து சோர்வாக தென்படுகிறாள். அந்த வீடு ஒரு காலி இடமாக மாறுகிறது. அவளும் குழந்தைகளும் தனியாக இருக்கும் ஒரு எளிமையான வீட்டின் நான்கு சுவர்களுக்கு மத்தியில் அன்பு, பரிவு மற்றும் பாசம் இருப்பதில்லை. ¶மனித உறவுகளில் விபச்சாரம் மிகப்பெரும் அழிவை ஏற்படுத்துகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆன்மீக பாதையில், முக்தியை நோக்கி செல்லும் பாதையில் அல்லது அடுத்த பிறவி ஒரு சிறப்பாக அமைவதற்கு உறவுகள் வேண்டாம் என்று அதை ஒதுக்கி விடமுடியாது. விபச்சாரத்தில் ஈடுப்பட்ட பிறகு அதில் இருந்து எவ்வாறு விமோசனம் பெறுவது? பொது மக்களிடம் மிகவும் பிரபலமாக இருக்கும் பரிகாரங்களான நெருப்பில் நடந்து செல்வது அல்லது மூன்று நாட்களுக்கு முள் பதிந்த மெத்தையில் உறங்குவது, சதையில் பதினைந்து வேல்களை குத்திக்கொண்டு *காவடி* எடுப்பது போன்றவற்றால் மனநல குழாய்களை துண்டிக்க வேண்டும். இதற்கு நன்றாக தேர்ச்சி பெற்றவர்களின் வழிகாட்டலுடன், இன்றைய நவீன யுகத்தில் பதினைந்து முதல் முப்பத்தி ஒரு

நாட்கள் வரை தீவிர உபவாசம் இருக்க வேண்டும் என்று இந்து சமயத்தின் மிகவும் பழமையான *மனு தர்ம சாத்திரம்* பரிந்துரைக்கிறது. உறுதியான முரண்பாடு நீக்கம் இல்லாத போது, தனது வாழ்க்கைத்துணையிடம் மனத்துறவுடன் சகோதரன் சகோதரி போல வாழ்வது சிறந்த தீர்வாக இருக்கும். *குக்கர்மாக்களை* கரைக்க பரிகாரம் செய்யாமல் விபசாரத்தில் ஈடுபடுவார்கள், தாங்கள் இரகசியமாக அமைத்த பழக்கங்களை பின்பற்றும் குழந்தைகளின் வாழ்க்கைகள் மூலமாக வேதனையை அனுபவிக்கிறார்கள். ¶விபச்சாரத்தை மனதில் நிறுத்தலாம். அங்கே நிறுத்தவில்லை என்றால், அதை மனவெழுச்சி லோகத்தில் நிறுத்தலாம். கணவன்மார்களே, உங்கள் மனைவியை காட்டிலும் அழகாக இருக்கும் செக்ரேடரிகள் மீது கவனமாக இருங்கள். மனைவிமார்களே, உங்கள் கணவனை காட்டிலும் அதிக உற்சாகப்படுத்தும் முதலாளிகள் மீது கவனமாக இருங்கள். பாலியல் விஷயங்களை பார்ப்பவர்கள், உங்கள் கணினியை அணைத்து, பாலியல் விஷயத்தை உங்கள் மனதோடு நிறுத்திக் கொள்ளலாம். ¶இறுதியாக, மனைவிக்கு உடல்நலம் சரியாக இல்லாத போது அல்லது கணவன் தன் வேலை தொடர்பாக வெளியூர் சென்று இருக்கும் போது, விவரமறிந்து மயக்குவதில் தேர்ச்சி பெற்றவர்கள் மீது கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் பல வடிவங்களில் தோன்றுவார்கள். இதற்கான விளைவையும் சந்திக்க வேண்டியிருக்கும். அதனால் திருமணத்தில் முறிவு ஏற்படலாம். குழந்தைகள் தங்கள் தாய் அல்லது தந்தையை இழக்க நேரிடலாம். குற்ற உணர்வு தற்காலிக இன்பங்களை பின்னுக்குதள்ளி, அதன் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. திருமண உறவில் விசுவமாக இருப்பது மற்றும் வாழ்க்கைத்துணைக்கு துரோகம் இழைப்பது ஆகியவை மனித அனுபவத்தின் அங்கம் ஆகும். நீங்கள் எந்த அனுபவத்தை பெற விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் தான் முடிவு செய்தாக வேண்டும்.

வியாழக்கிழமை

பாடம் 221

பாலியல் விஷயங்கள்

என்கிற நரகம்

வாழ்க்கையை வாழ்ந்து கற்றுக்கொள்ளுங்கள், வாழ்க்கையை வாழ்ந்து கற்றுக்கொள்ளுங்கள். நாம் தினமும் ஏதாவது ஒன்றை கற்றுக்கொண்டு இருக்கிறோம், மற்றும் அது பெரும்பாலும் நாம் கற்க விரும்பும் ஒன்றாக இருப்பதில்லை. சிலசமயம் நாம் அறிந்த பாடத்தால் நமக்கு நல்ல பலன் கிடைக்கும், மற்ற சமயங்களில் நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் இருக்கலாம். சில விஷயங்களை பற்றி பேசுவது நமக்கு கடினமாக இருக்கலாம்.

அவை அதிக நுண்மையாக, சமூக விலக்காக, மென்மையாக மற்றும் தனிப்பட்டதாக இருப்பதால், நாம் அவற்றை தவிர்க்கிறோம். ஆனால் இந்த விஷயங்களைப் பற்றி புரிந்துக்கொண்டு அவற்றை எதிர்கொள்வது முக்கியம் ஆகும். அவற்றைப் பற்றி தந்தை மற்றும் பாட்டி பேசவில்லை என்றால், மற்றவர்கள் பேச வேண்டும். இவற்றில் ஒன்றாக பாலியல் விஷயங்கள் விளங்குகின்றன. அது பாவம் மற்றும் தவறானது என்று சொல்ல முடியாது. இந்து சமயம் பாலியல் உறவு பற்றி அத்தகைய அறிக்கைகளை விடுக்காமல் அதிக பொறுமையுடன் இருக்கிறது. நல்லது அல்லது தீயது என்று அதை வரையறுக்க முடியாது என்றாலும், அது வாக்குவாதங்களுக்கு வழிவகுக்கும் விளக்க முடியாத கருத்து வேறுபாடுகள் உட்பட, உறவுகளில் பெரிய தடைகளை உருவாக்குகிறது. அதனால் தீவிரமான ஆன்மீக முயற்சி மற்றும் முன்னேற்றத்தில் குறுக்கிட முடியும் மற்றும் அது குறுக்கிடவும் செய்கிறது. *சாதனா* பாதையில் இருப்பவர்கள் வரைகலை மற்றும் வெளிப்படையான பாலியல் உருவப்படங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்றும், அவ்வாறு ஈடுபட்டு இருந்தால் அதை உடனடியாக விட்டு விடவேண்டும் என்றும் கண்டிக்கப்படுகிறார்கள். கீழ்நோக்கி அழைத்து செல்லும் பாலியல் விஷயங்களின் ஈடுபாட்டை தவிர்க்க வேண்டும். அது தொடர்ந்து மயக்கத்தை அளித்தாலும், எப்போதும் நிறைவை வழங்குவது இல்லை. பாலியல் விஷயங்கள் மக்களை அடிமையாக்குவதாக நான் சமீபத்தில் தெரிந்துகொண்டேன். மதுபானம், புகையிலை மற்றும் சில வகை மருந்துகள் மக்களை அடிமைப்படுத்துகிறது என்பதை நான் அறிவேன், ஆனால் பாலியல் விஷயங்கள் மக்களை அடிமைப்படுத்துகிறது என்பது எனக்கு புதிதாக இருந்தது. ¶பாலியல் படங்களை பல வருடமாக பார்த்த அனுபவம் இருப்பவர்கள், அது அடுத்த அறையில் காத்து இருக்கும் மனைவியை காட்டிலும் அதிக மகிழ்ச்சி, அதிக தூண்டுதல், அதிக உற்சாகம் மற்றும் அதிக திருப்தி அளிப்பதாக கருதுகிறார்கள். குறைவான சுய மரியாதையுடன் தனிமையாக இருக்கும் பாலியல் படங்களின் ஈடுபாடு மெதுவாக பழக்கமாகி, வெற்றிகொள்ள முடியாத அடிமைத்தனமாக மாறுகிறது. பாலியல் படங்களில் ஈடுபட்டுள்ள அடிமையின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள விளைவுகளை பார்க்கும் போது, இணையத்தில் இருக்கும் பாலியல் விஷயங்கள் மனதை முழுமையாக கவர்வதோடு அதை முழுமையாக பயன்படுத்தியும் கொள்கிறது. அவர்கள் தனியாக யாரிடமும் பேசாமல் இருந்து, இரகசியமாக செயல்பட்டு, மனித நேயத்திடம் இருந்து விலகி செல்கிறார்கள். இணையத்தில் ஒரு சைபர்செக்ஸ் அமர்வை முடித்து தனது சக்திகளை செலவழித்த பார்வையாளர், தனது மனைவி மற்றும் குழந்தைகளிடம் கடுமையாக நடந்துகொண்டு அதிக கோரிக்கைகளையும் விடுக்கிறார். குற்ற உணர்வு பலவழிகளில் வெளிப்படுகிறது. இந்த பழக்கத்திற்கு அடிமையானவர்கள் வாழ்நாள் முழுவதும் நீடித்து இருக்கும் கீழ் முதுகு வலிக்கு ஆளாகிறார்கள் என்பதையும், அந்த

பிரச்சினையை தண்டெலும்பு நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவர் மூலம் குணப்படுத்தவோ அல்லது சரியாக வியாதியை கண்டுபிடிக்கவோ முடிவதில்லை என்பதையும் நான் கண்டறிந்து கொண்டேன். அன்பு இல்லாத உடலுறவாக இருக்கும் காமம் ஆதிக்கம் செலுத்தும் போது, ஒரு காலத்தில் நம்மை வாட்டிய பிளேக் நோயைப் போல, கீழ்நிலை இயல்பு இயற்கைக்கு மாறாக தூண்டப்படுகிறது. பாலியல் படங்களை பார்ப்பதற்காக, தொலைப்பேசி மூலம் பாலுறவு மற்றும் காமவெறி பிடித்த அரட்டை அறைகளை சென்று பார்ப்பதற்காக மூன்றில் ஒன்று பயனர்கள் இணையத்தை பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. “உலகம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது?” என்று பெரியோர்கள் கதறுகிறார்கள். *சைபர்செக்ஸ்* மோகம் வாலிபர்கள், இளம் வாலிபர்கள், குழந்தைகள், மற்றும் ஆமாம் சில முதியவர்களுக்கும் தாக்கியுள்ளது. ¶இதைப் போன்று மறைமுக தூண்டுதலுக்கு அடிமையாகி இருக்கும் மகன்கள் மற்றும் மகள்களிடம் மேலும் தீவிரமான பிரச்சினை நிலவுகிறது. இன்றைய உலகில் பெரும்பாலான இந்து பெற்றோர்கள் இருவரும் வேலை செய்கின்றனர். தங்கள் குழந்தைகள் மீது கவனம் செலுத்த அவர்களிடம் நேரம் இருப்பதில்லை. குழந்தைகளை காக்கும் பொறுப்பு பெரும்பாலும் ஒரு குழந்தை காப்பாளருக்கு வழங்கப்படுகிறது, மற்றும் வீட்டில் இருக்கும் பெரிய குழந்தைக்கு வழங்கப்படுகிறது. மூடியிருக்கும் கதவுகள் மற்றும் சன்னல்களுக்கு பின்னால் என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரிவது இல்லை. யாரும் அதைப்பற்றி சொல்வதும் இல்லை. “எதையும் கேட்கவேண்டாம், எதையும் சொல்ல வேண்டாம்” என்று பல வீடுகளின் கொள்கையாக தோன்றுகிறது. பாலியல் படங்கள் இரகசியமான விஷயமாக இருந்தாலும், அவை அனைத்தும் தெளிவான பிம்பங்களாக மனதில் பதிகின்றன மற்றும் அதன் பிறகு கணினியை அணைத்த நீண்ட நேரத்திற்கு பிறகும் கனவுகள் மற்றும் காலைநேர கற்பனைகளில் மீண்டும் உருவாக்கப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை

பாடம் 222

மயக்கும்

கற்பனைகள்

எனது சர்வதேச சமூக உறுப்பினர்களில் நீல படங்கள், பாலியல் இணைய தளங்கள் மற்றும் செயற்கையான நவீனமுறை தூண்டுதல்களுக்கு அடிமையானவர்களின் வாழ்க்கைகளை, நான் கடந்த ஒரு வருடமாக ஆராய்ந்து வருகிறேன். சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், அதன் மூலம் சில விசித்திரமான தகவல்கள் வெளிவந்தன. அவற்றில் பாலியல் ரீதியான

அனுபவம் மற்றும் பாலியல் படங்களை பார்த்த பக்குவமான ஒரு ஆண், திருமணம் செய்து கொள்ளும் ஒரு அப்பாவி கன்னிப் பெண், அவனது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாத போது, அவள் இழிவுபடுத்தப்பட்டு, உடல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு அல்லது உடலில் தீக்காயங்கள் ஏற்படுத்தப்பட்டு, விவாகரத்து செய்யப்பட்டு இன்னொருவருக்கு விற்கப்படுகிறார்கள் என்பதை கேட்பதற்கு அதிக வேதனை தருவதாக இருந்தது. இந்த நெருக்கடிக்கு பெரும்பாலும் வரதட்சணையை காரணம் சொல்வதுண்டு. அல்லது அவள் கன்னியாக இல்லை என்று சொல்லி, அவளை அவளுடைய தாய் வீட்டிற்கு அனுப்பிடுவதும் உண்டு. அந்த இளைஞன் வெட்கப்படாமல் வழங்கும் முற்றிலும் நேர்மையான ஒப்புதல் மூலமாக மட்டுமே, அவனது நடத்தைக்கான உண்மை காரணம் வெளிவரும். ஒரு சிறுவன் பாலியல் கற்பனை உலகம் மற்றும் அதன் தூண்டுதலில் சிக்குவதற்கு முன்பாக, திருமணத்தில் பாணிக்ரஹணத்திற்கு பிறகு அக்னி சாட்சியாக அவளது கால்விரலை பிடித்து ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கும் சப்த பதி மூலம் உடைக்க முடியாத பழக்கங்களை அவன் உருவாக்கிக்கொள்வதற்கு முன்பாக, இளம் வயதில் திருமணம் செய்து கொள்வதில் பல நன்மைகள் உள்ளன. பெற்றோர்கள் ஒரு திருமணத்தை நிச்சயிப்பதற்கு முன்பாக தங்கள் குழந்தைகளின் சொந்த வாழ்க்கைப் பற்றி கேட்டு தெரிந்துக்கொள்ள வேண்டும். ¶உளவியல் ரீதியாக, பாலியல் படங்கள் பார்ப்பது விபசாரத்துடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறது. அவனுக்கு முன்பு தொடர்பு இருந்த ஒரு பெண் தற்போது உடல் உருவாக அருகில் இல்லாமல் இருக்கலாம், ஆனால் அவளது நினைவுகளை மறக்க முடிவதில்லை, அவளது உருவம் தொடர்ந்து தோன்றிக்கொண்டு, அவன் மனதில் நிரம்பி இருக்கிறது. அவனது கனவுகளில் அவள் அதிக துடிப்புணர்வுடன் காட்சி அளிக்கிறாள், மற்றும் அவள் அவனது சொந்த மனைவியை காட்டிலும் அதிக அழகாக, அதிக நிறைவாக, மனதை அதிகம் கவர்பவளாக, அதிகம் மகிழ்விப்பவளாக, அதிக மயக்குபவளாக இருக்கிறாள். ¶தந்தை அல்லது தாய் தாங்கள் படிக்கும் பாலியல் புத்தகங்கள், பத்திரிகைகள் அல்லது இணையதள முகவரிகளை தனது இளம் வயது குழந்தையுடன் பகிர்ந்து கொள்வது இல்லை. ஆனால் குழந்தைகள் கவனிப்பார் இல்லாமல் சுதந்திரமாக கணினி முன்பாக அமர்ந்து இருப்பதன் மூலம், அவர்கள் சுயமாக அடிமையாவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? நிச்சயமாக என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

சனிக்கிழமை

பாடம் 223

அடிமைத்தனத்தை

ஒழித்தல்

நான் கேட்க விரும்பவில்லை என்றாலும், பாலியல் படங்கள் இணையத்தில் எங்கும் பரவி இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன். சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் சிறு வயதில் தங்களது பாலியல் அடையாளங்களை தெரிந்துகொள்வதற்கு அது உதவியாக இருக்கும் என்று அதன் ஆதரவாளர்கள் காரணம் தெரிவிக்கிறார்கள். அது விவாதிக்கப்படவேண்டிய விஷயம் என்றே சொல்ல வேண்டும். அது அவர்களின் அப்பாவித்தனம், அவர்களின் குழந்தை பருவத்தை அபகரித்துக் கொள்கிறது. ஆண்கள் மற்றும் பெண்கள், ஆண்கள் மற்றும் ஆண்கள், பெண்கள் மற்றும் பெண்கள், *த்ருவா, கத்ற, சைங்க்,* எப்படி முத்தமிடுவது மற்றும் மற்ற செயல்களை எப்படி செய்வது என்று எல்லாம் இணையத்தில் இருக்கின்றன. கேள்வி: நீங்கள் இருவரும் வேலையில் இருக்கும் போது அல்லது உங்கள் குடும்ப உறவுகளுக்கு சிறிதும் தொடர்பு இல்லாத ஒரு சமூக சேவைக்காக பரிசு பெறும் போது, வீட்டில் உங்கள் குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? அவர்கள் இணையத்தில் பாலியல் படங்களை பார்த்துக்கொண்டு இருக்கிறார்களா? இது சிலசமயம் எங்களது சர்வதேச சமூகத்தின் அதிக ஆச்சாரமான குடும்பங்களிலும் நடைபெறுகிறது. ¶பழங்காலத்தில், இணையத்தில் பாலியல் படங்களை பார்க்கும் வசதி ஒரு சில நகரங்களில் மட்டுமே இருந்தது. பாலியல் கடைகள் மற்றும் விபச்சாரிகளுக்கு என்று சிகப்பு விளக்கு பகுதிகள் இருந்தன. அந்த பகுதிகளில் கண்ணியமானவர்களை என்றுமே பார்க்க முடியாது. இதனால் மட்டுமே முறையற்ற பாலியல் ஈடுபாடுகள் கட்டுப்பாட்டில் இருந்தன. முதலாவது உலகப்போரின் போது, கவர்ச்சிகரமான பெண்களின் சுவரொட்டிகள் மூலம் போர் வீரர்களுக்கு அவர்களின் சொந்த வீட்டில் இருக்கும் நிம்மதியான உணர்வு வழங்கப்பட்டது. குளியல் உடைகளில் இருந்த அந்த பெண்கள், இன்றைய காலக்கட்டத்தை ஒப்பிடும் போது தன்னை நன்றாக மறைத்து இருந்தார்கள் என்றாலும், அவர்கள் கண்ணை கவரும் வகையில் இருந்தார்கள். இந்த நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்பாக, அமெரிக்காவில் குட்டை பாவாடைகள் கணுக்கால்களை மறைத்து இருந்தன. அதன் பிறகு அவை மாற்றம் பெற்றன. பெண்கள் கணுக்கால்களை காண்பிப்பதால், ஆண்களின் பாலியல் ஈர்ப்பை பெற்றதாக அன்றைய ஒழுக்கமுறை கற்பிப்பபவர்கள் கூறினார்கள். அதன் பிறகு குட்டை பாவாடைகளின் நீளம் குறைந்து கொண்டு சென்று, முழங்கால்களுக்கு மேலே சென்றன. நீங்கள் முழங்கால்களை பார்த்து இருக்கிறீர்களா? அது மனித உடலின் அவலட்சணமான பகுதி என்று சிலர் கூறுகின்றனர். ¶நான் இதைப் பற்றி மேலும் சொல்லிக்கொண்டே போகலாம். பல நாடுகளில் எனது சீடர்களாக இருக்கும் எண்ணற்ற ஆன்மாக்களுக்கு இருக்கும் அடிமைத்தனத்தை உடைப்பதே *சத்குருவாக* இருக்கும் எனது கடமை ஆகும். இது மற்றவர்கள் வெறுக்கும் அருவருப்பான வேலை என்றாலும், யாராவது ஒருவர் முன் வந்து

இதை செய்துத்தான் ஆகவேண்டும். பாலியல் படங்களுக்கு மக்கள் அடிமையாகும் நிகழ்வு எனக்கு புதுமையாக இருந்தது, மற்றும் அதற்காக நமக்கு ஒரு *பிராயச்சித்தம்* தேவைப்பட்டது. அதனால் நாங்கள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பிரமுக்சுவாமியின் மூத்த *சாதுக்களிடம்* இதற்கான பரிகாரத்தை கேட்டோம். அவருடைய சுவாமிநாராயண் சமூகம் உலகில் மிகவும் ஆச்சாரமான ஒன்று அல்லது மிகவும் ஆச்சாரமானது என்று குறிப்பிடலாம். ஒரு பெண்ணை நோட்டமிட்டு நடக்கும் போது அவளை ஐந்து விநாடிகள் பார்த்தால், இருபத்தி நான்கு மணி நேரங்கள் விரதம் இருக்கவேண்டும் என்று அவர்கள் கூறினர். 654 சாதுக்கள் இருக்கும் குழுவில் அவர்கள் சுயமாக விதித்துக்கொண்ட பரிகாரத்தை பாலியல் படங்களை பார்ப்பதற்கும் உபயோகிக்கலாம். கற்பனை, அதிகமாக புகழ்தல், உல்லாசமாக பேசுதல், காமம் கலந்த பார்வைகள், இரகசியமான காதல் பேச்சு, காதல் ஏக்கம், சந்திப்பு மற்றும் உடலுறவு என்று பாலுறவு வரிசைக்கிரமப்படி எட்டு நிலைகளில் வெளிப்படுகிறது என்று நமது சாத்திரங்கள் குறிப்பிடுவதை அவர்கள் அறிவார்கள். அதனால் ஒருவர் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு மூன்று வேளையும் உபவாசம் இருப்பதை எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் கவனித்தால், அந்த நபர் தனது பாலியல் சக்திகள் மீது கட்டுப்பாட்டை பெற்று அதை ஆக்கத்திறனாக மாற்ற கடுமையாக முயற்சி செய்து வருகிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 224

நடந்த தவறை உணர்ந்து

அதனை சரி செய்தல்

உங்கள் கணவர் வீட்டில் இருந்தாலும் அவரது மனம் வீட்டில் இல்லாமல், அவர் தனியாக ஏதோ ஒரு சிந்தனையுடன் பூஜை அறையில் சோகமாக அமர்ந்து, பல நாட்களுக்கு இரவு உணவு, காலை சிற்றுண்டி அல்லது மதிய உணவு சாப்பிடாமல் இருந்தாலும் பழங்கள் மற்றும் தயிர் என்று ஒரு *சாத்வீக* உணவை சாப்பிட்டால், ஒரு *சாதுவாக* போகிறார் என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டாம். அவர் பாலியல் படங்களை பார்த்து, அதைப் பற்றி சிந்திப்பது அல்லது கனவு காண்பது போன்ற தீய பழக்கங்களில் இருந்து அவர் விடுபட முயற்சி செய்துக்கொண்டு இருக்கக்கூடும். அவர் தற்போதும் உங்களை விரும்புகிறார் என்பதை நினைவில் வைத்து இருந்து, அவர் சுயமாக விதித்துக்கொண்ட *சாதனாவைப்* பற்றி எந்த கேள்வியும் கேட்கவேண்டாம். அதற்கு பதிலாக அவருக்கு நல்ல பழங்களை வழங்குங்கள். நீங்கள் குப்பை தொட்டியில் மோசமான படங்ககள், சில காணொளிகள் மற்றும் CD க்களை

பார்த்து, நீங்கள் அவர் மீது கோபமாக இருந்தாலும், அந்த கோபத்தை அவரிடம் வெளிப்படுத்த வேண்டாம். உங்களை அவரது வாழ்க்கையில் இருந்து உதறிவிட்டு, அந்த தீய பழக்கம் மற்றும் விபரீத இன்பங்களை தொடர்வதற்கு, அது ஒரு காரணமாக மாறக்கூடும். ¶பாலியல் தொடர்பான படங்கள் இணையத்தில் மட்டும் இல்லை. நான்கு நட்சத்திர மற்றும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் இருக்கும் கேபிள் டிவி மூலம், விருந்தாளிகள் தீவிரமான மற்றும் மென்மையான பாலியல் படங்களை கட்டணம் செலுத்தி பார்க்கலாம் என்று எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இது குடும்பம் முழுவதற்கும் மகிழ்ச்சி அளிக்குமா? கண்டிப்பாக இல்லை. நமது வீட்டில் இருக்கும் சாதாரண தொலைக்காட்சியும் இந்த நிகழ்ச்சிகளை கேபிள் சேனல்கள் மூலமாக வழங்குகின்றன. அது உங்கள் தொலைப்பேசியிலும் பார்க்கலாம். உங்களுக்கு மாதந்தோறும் வரும் ரசீதுகளை பாருங்கள். அவை உங்களுக்கு கற்பனையில் தோன்றிய பாலியல் அனுபவங்கள் பற்றி ஒரு குட்டி கதையை சொல்லும். ¶இந்துக்களின் சில பழங்கால கோயில் சிற்பங்கள் நமக்கு சங்கடமான சூழ்நிலையை ஏற்படுத்துவதால், இந்துக்கள் பாலியல் தொடர்பான வெளிப்பாடுகளை உருவாக்கினார்கள் என்று சிலர் வாதாடலாம். ஆனால் இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆறு வயது மற்றும் பத்து வயது குழந்தை மற்றும் பெற்றோர் என்று எல்லோரும் அதற்கு முன்பாக நின்று பார்க்கலாம். ஐக்கிய இராச்சியத்தில் பாலியல் செய்முறைகளை தைரியமாக வெளிப்படுத்துவதற்கு புகழ்பெற்ற குழுவாக விளங்கும் ஸ்பைஸ் கேர்ள்ஸ், பாலுறவு சிற்பங்களுக்கு புகழ்பெற்ற கஜுராஹோ கோயிலுக்கு முன்பாக ஒரு நிகழ்ச்சியை நடத்த திட்டமிட்டார்கள். "ஆன்மீகம் இல்லாத பாலியல் இணையம் அல்லது தொலைக்காட்சியில் காணும் பாலுறவு படங்களை போன்றது" என்பதால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்து ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ¶பாலியல் படங்கள் என்பது நோய் பயம் இல்லாத கவனத் திருப்பம் என்று கருத்து வெளிப்பாட்டு உரிமை ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். இதனால் பால்வினை நோய் வராது என்பதை நாங்களும் ஏற்கிறோம். ஆனால் அது உருவாக்கும் "அசௌகரிய நிலையை" எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாது, அதற்கு விரைவான நிவாரணங்கள் மற்றும் மருந்துகளும் இருப்பதில்லை என்பதால் அது மனதின் மீது அதிக அழிவை ஏற்படுத்துகிறது என்பதை நாம் சொல்லியாக வேண்டும். போதுமான விளக்கங்கள் வழங்கியாகி விட்டது. விவேகிகளுக்கு ஒரு வார்த்தை போதும், ஆனால் முட்டாளுக்கு ஆயிரம் வார்த்தைகளும் போதுமானதாக இருக்காது.

ஜென்ம புருன்ஹத்யா ஆத்மஹத்யா

जन्म भ्रूणहत्या आत्महत्या



பிறப்பு, கருக்கலைப்பு மற்றும் தற்கொலை

ஒரு கருவை கொள்பவர் ஒரு புரோகிதரை கொள்பவருக்கு சமம் ஆவார்.

கிருஷ்ண யஜுர் வேதம் 6.5.10



இரண்டு செவிலியர்கள் அருகில் நின்று இருக்க, ஒரு தாய் சற்று முன் பிறந்த தனது கைக்குழந்தையை நெஞ்சுக்கு அருகில் கவனமாக பிடித்துக் கொண்டு இருக்கிறாள். இந்து சமய நெறிமுறைகள் உயிர்கள் அனைத்தையும் புனிதமாக கருதுவதால், இந்து சாத்திரங்கள் கருக்கலைப்பை ஆட்சேபிக்கின்றன.

திங்கட்கிழமை

பாடம் 225

கருத்தரிப்பு மற்றும்

பிறப்பு

"ஒரு புதிய தூல உடலில் ஒரு ஆன்மா எப்போது நுழைகிறது?" என்று என்னிடம் அன்பர்கள் அவ்வப்போது கேட்பார்கள். அதிக பக்குவமடைந்த ஆன்மாக்கள், தங்கள் பெற்றோர்களை கருத்தரிப்பிற்கு முன்பாக தேர்ந்து எடுத்து, குறிப்பாக அந்த பெற்றோர்கள் தெய்வ பக்தர்களாக இருந்தால், அந்த ஆன்மாக்கள் அவர்கள் வீட்டில் வசிக்க முடிவு செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக அவர்கள் முற்பிறவியில் சொந்தங்களாக இருந்தால், தங்கள் *கர்மவினைகளை* அனுபவிப்பதற்கு மீண்டும் அதே குடும்பத்தில் பிறக்க விரும்புவார்கள். அதனால் ஒரு ஆன்மா தனது வருங்கால தாயுடன் கருத்தரிப்பதற்கு முன்பாகவே தொடர்பில் இருக்கக்கூடும். கருத்தரிக்கும் போது அல்லது அதற்கு சற்று முன்பு ஆன்மீக சக்திகளை நாடாமலும் தெய்வ பக்தி இல்லாமலும் இருக்கும் தம்பதி ஒரு மருத்துவமனையில் இருந்தாலும் அல்லது ஒரு ஓட்டலில் இருந்தாலும், அவர்களை நோக்கி ஏதாவது ஒரு ஆன்மா ஈர்க்கப்பட்டு அது மனித உருவெடுக்கும் செய்முறையில் நுழையக்கூடும் என்பதால், அந்த ஆன்மா எந்த வகை சூட்சும லோகத்தில் இருந்து வருகிறது என்பது அவரவர் அதிஷ்டத்தை பொறுத்து அமையும் என்று நான் கூற விரும்புகிறேன். ஒரு மருத்துவமனையில் இறக்கும் ஒருவர், உடனடியாக மூன்று குடியிருப்புகள் கடந்து ஒரு விடுதியில் கருவுறுக்கூடும். கணவனும் மனைவியும் சண்டையிட்டு வாதாடும் போது கருத்தரித்த குழந்தையால் குடும்பத்தில் பிளவு ஏற்படும். இந்த இரண்டு மாறுபட்ட சூழ்நிலைகளில் ஒன்றில், ஒரு குடும்பம் கருத்தரிப்பின் போது தெய்வீக சிந்தனையுடன் இருக்கிறது மற்றும் இன்னொரு குடும்பம் உட்புறமாக இருக்கும் ஆன்மீக சக்திகளுடன் தொடர்பில் இல்லாமல் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து வருகிறது. ¶இரண்டு சூழ்நிலையிலும், கருப்பையில் கரு அசையத் தொடங்கியதும், ஆன்மா உடனடியாக நுழைந்து தூல உயிரை பெற்று, முழுமையாக உருவெடுக்கிறது அல்லது சதையில் நுழைகிறது. அந்த சமயத்தில் அந்த ஆன்மா, மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு தாயுடன் முழு தொடர்பை பெறாமல், அவளுக்கு முன்பாக சுற்றிக்கொண்டு இருக்கிறது. கருத்தரித்த தருணத்தில் இருந்து, ஒரு ஆன்மா ஒரு சிசுவின் வளர்ந்து வரும்

தூல உருவுடன் இணைந்து இருக்கிறது என்று 2,200 வருடங்களுக்கு முன்பாக திருமூலர் தான் இயற்றிய *திருமந்திர* 453-455 பாடல்களில், இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். கருத்தரிக்கும் தருணத்தில் பெற்றோர்களிடம் இருந்து முக்கிய திரவங்கள் வெளிவரும் போது கரு உருவாகி, இருபத்தி ஐந்து *தத்துவங்கள்* விரைந்து வந்து அதன் *ஆக்ஞா சக்கரத்திற்கு* அடியில் மறைந்து கொள்ளும் போது, அந்த கரு உயிர் பெறுகிறது. அது முதலில் கருவாகவும் பிறகு கர்ப்பத்திலுள்ள சிசுவாகவும், ஒன்பது மாத காலத்திற்கு தூல வளர்ச்சியை பெறுகிறது மற்றும் தூல உருவில் குடியிருக்கும் ஆன்மா மெதுவாக பூலோக உணர்விற்கு விழிப்புணர்வை பெற்று, பிறக்கும் போது தனது புதிய தூல உருவின் மீது கிட்டத்தட்ட முழு உணர்வையும் பெறுகிறது. ¶ஆன்மா அண்டத்திலும் பிண்டத்திலும் இருக்கிறது என்பதை புரிந்துகொள்வது முக்கியம் ஆகும். அது ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடம் பயணம் செய்யவேண்டிய அவசியம் இல்லாமல், அதன் சாட்சி இருக்கும் இடத்தில் இருக்கிறது. நீங்கள் உறங்கினாலும் உங்கள் உயிர் பிரியாமல் இருப்பதை போல, தூல உடல்கள் உட்பட வெளிப்புற வடிவங்கள் எதுவும், நித்தியமாக இருக்கின்ற ஆன்மாவின் சாட்சியை சார்ந்து இருப்பதில்லை. பகல் கனவு காணும் போது "என்னைப் பற்றிய நினைவு இல்லை," என்று நீங்கள் சொல்வதைப் போல, ஒரு கர்ப்பத்திலுள்ள சிசு கருவில் வளரும் காலம் முழுவதும் ஆன்மா அந்த கர்ப்பத்திலுள்ள சிசுவின் உடலில் இருப்பது இல்லை. ¶உடலில் இருக்கும் உயிர் காந்த சக்தியை கொண்டு தானாக இயங்குகிறது. உடல், உணர்ச்சி மற்றும் மனதின் பகுதிகள் மீது ஆன்மீக சக்திகள் மற்றும் ஆன்மாவின் இருப்பு ஆதிக்கம் செலுத்துவதால் நாம் மனிதர்களாக இருக்கிறோம். உயிர் உடலை விட்டு பிரியும் போது, உங்களுக்கு பிரியமான நண்பனும் ஒரு கெட்ட வாசனையாக இருக்கிறான் என்று திருமூலர் கூறி இருக்கிறார். "ஒன்பது வாசல் கொண்ட பிண்டமாக" இருக்கும் உடலுடன் இணைந்து இருக்கும் ஆன்மா உயிர் என்று அழைக்கப்படுகிறது. அது கருத்தரிக்கும் போது தொடங்கி மரணம் நிகழும் வரை தொடர்கிறது. கருப்பைக்கு வெளியே இருக்கும் போது ஆன்மா மரணம் வரை தூல உடலுடன் இணைந்து இருப்பதைப் போல, கருப்பையில் இருக்கும் போது அது தனது தூல உடலுடன் தொடர்பில் இருந்து அதன் மீது படிப்படியாக அதிகரிக்கும் உணர்வை பெறுகிறது. ¶பிறக்கும் போது முந்தைய பிறவியின் சூட்சும உடலும் நிலைத்து இருக்கிறது. ஆனால் புதிய சூட்சும உடல் அந்த குழந்தைக்குள் வளர்ச்சி பெற்று, இறுதியில் பழைய சூட்சும உடலை நீக்கி விடுகிறது. அது உடனடியாக நடப்பது இல்லை. ஒரு புதிய வீட்டு சூழலுடன் பொருந்திக் கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதைப் போல, அந்த மாற்றமும் உடனடியாக நடப்பது இல்லை. ஒரு பச்சிளம் குழந்தை முற்பிறவியின் சூட்சும உடலுடன் இருப்பதால், அது சிலசமயம் தொடக்கத்தில் இருந்து ஒரு முதியவர் போல காட்சி அளிக்கும். தாயின் *இடா* மற்றும் தந்தையின் *பிங்கலா* மூலம் உருவாகும் புதிய சூட்சும

உடலின் மூலம் அந்த குழந்தை தனது புதிய அடையாளத்தை பெறுகிறது, மற்றும் அந்த வளர்ச்சி பெற்றோர்களின் இணக்கத்தால் ஊக்குவிக்கப்படுகிறது. அது ஒரு மெதுவான மாற்றமாக விளங்குகிறது. ¶மெதுவாக முற்பிறவியின் தூல உடல் சிதைவதைப் போல, பழைய சூட்சும உடலும் சிதைகிறது. இவை அனைத்தும் நடைபெறுவதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. இது முதிர்ந்த ஆன்மாக்களுக்கு குறுகிய காலமாக இருந்தாலும், அங்கும் மாற்றம் மெதுவாகவே நடைபெறுகிறது. ஒரு சூட்சும உடல் வளர்ச்சி பெற்றதும், முந்தைய சூட்சும உடல் விலகுகிறது. நான் ஒரு முறை விர்ஜினியா சிட்டியில் இருந்த போது, வயதில் பெரியவர்களைப் போல பழைய மேற்கத்திய உடையில் ஒரு சிறுமி அங்கும் இங்குமாக ஓடுவதை எனது அகக்கண்ணில் பார்த்த போது, அவளுக்குள் அவளது பழைய சூட்சும உடல் இருப்பதை நான் தெரிந்துக் கொண்டேன். ஒரு குழந்தை தனது பழைய சூட்சும உடலை கரைக்கும் வரை, தான் முற்பிறவியில் யாராக இருந்தோம் என்பதை நினைவில் வைத்து இருக்கிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 226

உயிர் எப்போது

தொடங்குகிறது?

இன்றைய காலத்தில் முக்கிய சர்ச்சையாக விளங்கும் கருக்கலைப்பை மனதில் வைத்துக்கொண்டு, மனித உயிர் எப்போது தொடங்குகிறது என்ற கேள்வி பெரும்பாலும் கேட்கப்படுகிறது. இந்த சிக்கலான விஷயத்தை பற்றி எனது அன்பர்களிடம் பேசும் போது, கருத்தரிப்பு என்பது நிலத்தில் ஒரு விதையை புதைப்பதற்கு சமம் ஆகும். நிலத்திற்கு வெளியே சில காலத்திற்கு மாற்றம் எதுவும் தென்படாது என்றாலும், உள்ளுக்குள் வளர்ந்து வரும் உயிர் சக்திகள் ஒரு நாள் தூல கண்களுக்கு தென்படும்படியாக நுண்ணுலகத்தில் இருந்து அண்டம் என்கிற பூலோகத்தில் வெளிப்படுகிறது. நீங்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக அந்த செய்முறையை தடை செய்தால் அல்லது நிறுத்தி விட்டால், நமது சைவ சமயத்தின் *கர்மவினை* விதிகளின் படி நீங்கள் அதன் விளைவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று விளக்கம் அளித்தேன். ¶கருக்கலைப்பு என்பது மனைவிமார்கள் மற்றும் மகள்களுக்கு மட்டுமின்றி கணவன்மார்களுக்கும் ஒரு கவலையாக விளங்குகிறது. கருக்கலைப்பு செய்யப்பட்ட குழந்தை ஒரு வேளை உயிருடன் இருந்தால், அது எதிர்காலத்தில் அந்த கணவனின் வாரிசாக இருந்து, சமூகத்தில் ஒரு நல்ல அந்தஸ்தை பெற்று, தனது பெற்றோர்களின் முதுமையில் அவர்களுக்கு ஆதரவாக இருந்திருக்கும்.

ஆனால் அவர்களுக்கு அதைப்பற்றி முழுமையாக தெரியாததால், அவர்கள் காலம் முழுவதும் அந்த சிந்தனையில் மூழ்கி இருக்கின்றனர். ¶கருக்கலைப்பு சட்டப்பூர்வமாக இருக்கும் இந்தியாவில், இது ஒரு பிரச்சனையாகவே இருக்கிறது. அந்த நாட்டிலும் மற்ற நாடுகளிலும் இருக்கும் மருத்துவர்கள், விலை மலிவான பிரெஞ்சு "கருக்கலைப்பு மாத்திரையை" உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மாதமும் பல பெண்கள் இறப்பதற்கு அல்லது தொற்றுகளால் அவதிப்படுவதற்கு காரணமாக விளங்கும் ஆயிரக்கணக்கான அறுவை சிகிச்சை கருக்கலைப்புக்கள் மற்றும் இந்தியாவின் மக்கள் தொகை பெருக்கத்துடன் ஒப்பிடும் போது, இந்த மாத்திரை பாதுகாப்பானது என்று பலர் கருதுகிறார்கள். அதே சமயத்தில் இந்த பிரச்சனையால் விளையும் *கர்மவினைகள்* மற்றும் *அதர்ம* செயல்களை பற்றி சிந்திப்பது சரியாக இருக்கும். ¶ஒரு குழந்தையின் பாலினத்துக்கு ஆணின் விந்து காரணமாக இருந்தாலும், தன்னை பழிப்பார்கள் என்று பெரும்பாலான மனைவிமார்கள் பயந்து, தங்கள் கணவன்மார்களை திருப்திப்படுத்துவதற்கு தங்களுக்கு விருப்பமில்லாத ஒரு பெண் குழந்தையை கருக்கலைப்பு செய்கிறார்கள். அவ்வாறு செய்தாலும் அவர்கள் மனதில், "அவள் யாராக இருப்பாள்? அவள் முற்பிறவியில் யாராக இருந்தாள்? நாம் கருக்கலைப்பு செய்தாலும், அவள் மறுபிறவி எடுக்க வேறொரு தாயின் கருப்பை கிடைக்குமா? அவள் பிற்காலத்தில் புளோரன்ஸ் நைட்டிங்கேல், மேடம் கியூரி அல்லது ஆனந்தமயி மா, அல்லது ஔவையார் அல்லது மீராபாய் போன்ற பெண் துறவிகள் போன்று புகழ்பெற்று இருப்பாளா?" என்று யோசித்துக் கொண்டிருப்பாள். கருக்கலைப்பு மூலம் ஏற்படும் இனம்புரியாத சோகம் மற்றும் அந்த குழந்தை "ஒரு வேளை பிறந்திருந்தால்" அதன் எதிர்காலம் எப்படி இருந்திருக்கும் போன்ற பதில் கிடைக்காத கேள்விகளால், கருக்கலைப்பு செய்வது தவறு என்று ஆன்மா வழங்கும் அறிகுறியாக விளங்குவதோடு, அது தேவையில்லாமல் ஒரு புதிய தீய *கர்மவினையை* உருவாக்குகிறது. சிலசமயங்களில் தவறு செய்யும் போது ஆன்மாவின் மெல்லிய குரல் வலுவாக கேட்கிறது, மற்றும் அந்த தவறுக்கு ஈடான புண்ணிய காரியம் செய்து மன அமைதி கிடைக்கும் வரை, அந்த ஆன்மா தான் பேசுவதை நிறுத்துவது இல்லை.

புதன்கிழமை

பாடம் 227

கருக்கலைப்புக்கு

செய்யவேண்டிய பரிகாரம்

தலைசிறந்த இந்து மதத்தில் பரிகாரங்கள் உள்ளடங்கியுள்ளன. கருக்கலைப்பிற்கு பரிகாரமாக என்ன *பிராயச்சித்தம்* செய்வது? ஒரு குழந்தையை தத்து எடுத்து, அதை தங்கள் குடும்பத்தில் பிறக்க விரும்பிய கருக்கலைப்பு செய்யப்பட்ட ஆன்மாவாக நினைத்து, அதன் மீது அன்பையும் பாசத்தையும் பொழிந்து வளர்ப்பது இன்றைய உலகில் சிறந்த பலன்களை தந்து, பிற்காலத்தில் அதுவே பரிகாரமாகவும் அமையும். இசுலாமியர்கள் மூலம் தனது மகன் கொலை செய்யப்பட்டான் என்பதற்காக தான் ஒரு இசுலாமியரை கொலை செய்ததாகவும், அந்த தவறை எண்ணி தற்போது வேதனையில் இருப்பதாகவும் கூறிய ஒரு இந்துவுக்கு, மகாத்மா காந்தி இந்த பரிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அறிவுரை வழங்கினார். அந்த நபர் செய்த தவறுக்கு பரிகாரமாக ஒரு இசுலாமிய சிறுவனை வளர்க்குமாறு அறிவுரை வழங்கினார். ¶ஒரு நபர் தான் செய்த தவறை சரி செய்ய வேண்டும் என்று உளவியலை பயன்படுத்தும் போது, அவர் தனக்கு மனநல மருத்துவராக மாறுகிறார். அதை எதற்காக சரி செய்ய வேண்டும்? ஏனென்றால் அந்த செயல் அல்லது அதன் *கர்மவினையை* நினைத்து சம்பத்தப்பட்ட நபர்கள் வருந்திக்கொண்டு இருப்பார்கள். தீர்வு காண்பது என்பது பரிகாரங்கள் மூலம் தவறை சரி செய்து மனதிற்கு நிம்மதி வழங்குவது மட்டும் அல்லாமல், அந்த சம்பவம் மனதில் இருந்து நீங்குவதற்கும் காரணமாகிறது. அந்த சம்பவம் முழுமையாக மறக்கப்படுவது இல்லை என்றாலும், அந்த நினைவு தொடர்பாக தோன்றும் மனவெழுச்சிகளை நீக்குகிறது. இதை பல்வேறு வழிகளில் செய்யலாம். கருக்கலைப்பு செய்யப்பட்ட குழந்தையைப் பற்றி ஒரு குறிப்பு எழுதி அதை ஒரு நெருப்பில் எரிப்பது அதில் ஒரு வழியாகும். அதில் உங்களது வேதனை மற்றும் உணர்ச்சிகளை எழுதி, நீங்கள் அந்த செயலை மீண்டும் செய்யமாட்டீர்கள் என்றும் உறுதி அளியுங்கள். இது குற்ற உணர்வு நிரம்பி இருக்கும் அடிமனதின் பாரத்தை குறைப்பதற்கு ஒரு சிறந்த வழியாக விளங்கும். ¶*புணர்ஜென்மம்* இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் போது, நுணுக்கமாக சூட்சும உடல்களுடன் இருக்கும் ஆன்மாக்கள் ஒரு கருவில் பிறவி எடுக்க காத்து இருப்பதையும் ஏற்றுக்கொள்கிறோம். கருவிற்கு இடைஞ்சல் ஏற்படும் போது, கர்ப்பத்தில் பிரக்ஞையுடன் இருக்கும் சிசுவிற்கு இது வெளியேற்றப்படும் உணர்வாக பதிவாகிறது. இது அதைப்போன்ற உணர்வுகளை, சம்பந்தப்பட்ட தாய் மற்றும் குடும்பத்தில் இருக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுத்துகிறது. எல்லோரையும் பாதிக்கும் இந்த *குக்கர்மாவை*, எல்லோரும் உணர்வதோடு அதன் விளைவுகளையும் எதிர்கொள்கின்றனர். ¶இதன் மூலம் நம்மால் விளைவுகளை காண முடிகிறது. இதனால் ஒருவர் சபிக்கப்படுகிறார் அல்லது "கொடும் பாவம்" ஏற்படுகிறது என்று பொருளில்லை. தடையில்லாமல் இயல்பாக இயங்கும் இந்து மதம் நிரந்தர நரகம் என்று அச்சுறுத்துவது இல்லை. நமக்கு கிடைத்த இந்த ஒரேயொரு பிறவியில், ஒரு கொடும் பாவத்திற்கு பரிகாரம் செய்யவில்லை என்றால், அது தெய்வ ஆணை மீறலாக கருதப்பட்டு,

அந்த ஆன்மாவால் என்றுமே இறைவனை நெருங்க விடாது என்று இந்து மதம் அச்சுறுத்துவது இல்லை. இந்து மதம் வாழ்க்கையில் இருக்கும் குறைகள் மற்றும் பலவீனங்களுடன் அதை ஏற்றுக்கொள்கிறது. அது நமக்கு சரியான பாதையை கற்றுத் தருகிறது. ஆனால் நாம் எப்போதும் அந்த பாதையை பின்பற்ற மாட்டோம் என்பதை இந்து மதம் அறிந்து இருப்பதால், மறுபிறவியில் இருந்து விடுபடும் முக்தியை அடையும் பாதையில் ஒவ்வொரு நிலையிலும் நமக்கு கவலையாக இருக்கும் விஷயங்களுக்கு, அது நிவாரணங்களை வழங்குகிறது. ¶கருக்கலைப்பு தன்னுடன் அழிவு ஏற்படுத்தும் ஒரு *கர்மவினை* சக்தியை கொண்டு வந்து, அதை இயக்கிய பெற்றோர்கள் மீதே திரும்புகிறது. அவர்களுக்கு குடியிருக்க வீடு இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு நற்பண்புள்ள குழந்தை இல்லாமல் இருக்கலாம். பிறக்கும் குழந்தை வாழ்நாள் முழுவதும் அவர்களை துன்புறுத்தி கொண்டு இருக்கலாம். அடுத்த பிறவி எடுப்பதில் பெற்றோர்கள், கருக்கலைப்பு செய்த மருத்துவர் மற்றும் செவிலியர்கள் தடைகளை சந்திக்கலாம். அவர்கள் பூமியில் இருந்த போது செய்த கருக்கலைப்புக்களுக்கு சமமான கருக்கலைப்புக்களை அடுத்த பிறவிக்கு முன்பாக சந்திக்கலாம். ஒரு குழந்தையை பெற்றெடுத்து, அதை நன்றாக வளர்த்து நல்ல படிப்பை வழங்கி, அதற்கு சமூகத்தில் ஒரு நிலையான வாழ்க்கை அமைய மேற்கொள்ளும் முயற்சிகளை காட்டிலும், கருக்கலைப்பு விளைவிக்கும் தீய விளைவுகள் மிகவும் வலுவாக இருக்கின்றன.¶வாழ்க்கை என்பது தொடர்ந்து இயங்கிக்கொண்டு இருக்க வேண்டும். குழந்தைகள் பெற்றோர்களுக்கு அதிஷ்டத்தை கொண்டு வருவதாக கருதப்படுகிறது. ஆனால் அந்த அதிஷ்டம் வருவதற்கு ஒரு குறிப்பிட்ட வரைமுறை எதுவும் இருப்பதில்லை. ஆனால் கருக்கலைப்பு நடந்துள்ளது, நடந்துகொண்டு இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் நடக்க இருக்கிறது. கருக்கலைப்பை முடிவு செய்த பெற்றோர்கள் மற்றும் அதை செய்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் *குக்கர்மா* விளைவுகளை சந்திக்க வேண்டியுள்ளது. மன அமைதி நிலைத்து இருப்பதற்கு, வினை எதிர்வினையாக இருக்கும் *கர்மவினையை* ஏதாவது ஒரு வழியில் தீர்வு காணவேண்டும். தனிமனித *தர்மம்*, சமூக *தர்மம்* மற்றும் உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருக்கும் *அகிம்சையின்* விதிகளின் அடிப்படையில், இந்து மதம் கருக்கலைப்பை தடை செய்கிறது.

வியாழக்கிழமை

பாடம் 228

கடினமான

பிரச்சனைகள்

ஒரு குழந்தை பிறப்பதால் அதன் தாயின் உயிருக்கு ஆபத்து என்றால் மட்டுமே கருக்கலைப்பு செய்வதற்கு சனாதன தர்மம் அனுமதி அளிக்கிறது. பிறக்கவிருக்கும் குழந்தையின் சூட்சும உடல் அந்தர்லோகத்தில் தாய் மற்றும் தந்தையின் உடல்களை சுற்றிக்கொண்டு இருக்கும் போது, கருத்தரிப்பில் உயிர் தொடங்குகிறது என்று கூறும் இந்து சாத்திரம், திட்டமிட்டு ஒரு கருவை கொலை செய்யக்கூடாது என்று கண்டிக்கிறது. கருவை கலைப்பது தனது சொந்த பெற்றோர்களை கொலை செய்வதைப் போன்ற கொடிய பாவங்களில் ஒன்று என்று *கௌரசிதகி உபநிடதனம்* (3.1) குறிப்பிடுகிறது. அதர்வண வேதம் (6.113.2) கருக்கலைப்பு செய்யும் *ப்ருணாக்னியை,* மிகப்பெரிய பாவியாக பட்டியலிடுகிறது. ¶கருத்தடை முறைகள் அல்லது பேற்று காட்டுப்பாடு முறைகளுக்கு எதிராக இந்து மதம் எதையும் குறிப்பிடவில்லை என்றாலும், மனைவி கருத்தரித்ததும், அந்த கணவனும் மனைவியும் அதற்கான *கர்மவினைகளுக்கு* பொறுப்பேற்கிறார்கள் என்று அறிஞர்கள் மற்றும் *சுவாமிகளுடன்* நாங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இருந்து தெரிய வந்தது. மனித உருவெடுக்கும் அந்த ஆன்மாவை மனப்பூர்வமாக வரவேற்பது *தர்ம* நெறி ஆகும். கருச்சிதைவு என்பது இயற்கை நிகழ்த்திய அசம்பாவிதம் என்று சொல்லலாம். அப்போது மீண்டும் முயற்சி செய்தால், மீண்டும் அதே ஆன்மா வருவதற்கு வாய்ப்புள்ளது. ¶கற்பழிப்பு, கூடா பாலுறவு, விபச்சாரம் மற்றும் திருமணம் முன்பாக கருத்தரித்தால் என்ன செய்வது? தாய்மார்கள் இந்த பூமியில் உயிர் வழங்குபவர்களாக இருக்கிறார்கள். மிகவும் மோசமான சூழ்நிலையிலும், சாத்திரங்கள் துன்புறுத்துவதற்கு அனுமதி வழங்குவது இல்லை. அது கொலை செய்வதற்கு கண்டிப்பாக அனுமதி வழங்குவது இல்லை. ஆனால் ஒரு குழந்தை பிறந்து தனது தாயை கொலை செய்வது, அந்த குழந்தைக்கு பாவம் சேர்ப்பதாக இருக்கும். இதன் காரணமாகவே, தாயின் உயிரை காக்கும் நோக்குடன் நடைபெறும் கருக்கலைப்பிற்கு மட்டும் நமது பாரம்பரியம் அனுமதி அளிக்கிறது. இவ்வாறு சாத்திரம் அனுமதி வழங்கினாலும் "அவள் உயிருக்கு ஆபத்து" என்று சாமர்த்தியமாக சொல்லும் ஒரு மருத்துவர் அல்லது "எனது மனைவியின் உயிர் ஊசலாடிக்கொண்டு இருக்கிறது" என்று பொய் சொல்லும் கணவர் அல்லது "நான் இந்த கருவை கலைக்கவில்லை என்றால் நான் இறந்து விடுவேன்," என்று தவறான வழிகளை பின்பற்றும் மனைவியின் கோரிக்கைகளுக்கு, இந்த விதிவிலக்கை சிறிதும் சிந்திக்காமல் பயன்படுத்தக் கூடாது. அது பணத்திற்காக, சமூகத்தில் தனக்கு ஏற்படும் பழியை தவிர்ப்பதற்காக, பெண் சிசு வேண்டாம் என்பதற்காக இல்லாமல், அது ஒரு நேர்மையான மற்றும் தேர்ச்சி பெற்ற கருத்தாக இருக்க வேண்டும். அது இரக்க குணமுள்ள ஒரு *தார்மீக* மருத்துவரின் நேர்மையான கருத்தாக இருக்க வேண்டும்.¶இந்த சூழ்நிலையில் *அகிம்சை* என்ற கொல்லாமை, இறைவன் எங்கும் இருக்கிறார், *கர்மவினை* விதிகள், நமது புனிதமான சாத்திரங்கள் வகுத்துள்ள கடுமையான *தார்மீக* விதிகள், மற்றும்

மறுபிறவி மீது நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படைகள் செயல்புரிகின்றன. இந்த ஐந்தும் ஒரு இந்துவை ஒரு இந்துவாக மாற்றி, அவர்கள் கருக்கலைப்பு செய்யமாட்டோம் என்று தெளிவாக முடிவு எடுப்பதற்கு துணை புரிகின்றன.

வெள்ளிக்கிழமை

பாடம் 229

தற்கொலை பற்றிய

கேள்விகள்

ஒவ்வொரு சமூகமும் எதிர்கொள்ளும் இன்னொரு மிகமுக்கிய பிரச்சனையாக தற்கொலை விளங்குகிறது. பல இந்து சமூகங்களில் இருக்கும் இந்த பிரச்சனையின் சதவீதம் மிகவும் அதிகமாக இருப்பதால், அதை புறக்கணிக்க முடியாது. பல பெரியவர்கள் செய்வதைப் போல "தற்கொலை செய்து கொள்ளாதீர்கள்" என்று அறிவுறுத்தலாம். அவர்கள் இளவயதில் அத்தகைய முடிவு எடுக்காததால், இன்று முதியவர்களாகி இருக்கிறார்கள். ஆனால் அத்தகைய அறிவுரையை, உணர்ச்சிப்பூர்வமான குழப்பத்துடன் வருந்திக்கொண்டு இருப்பவர்கள் கேட்பார்களா? அவர்கள் அத்தகைய அறிவுரையை கேட்காமல், தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதில் அவர்கள் சுயநலம் அடங்கி இருப்பதோடு, மற்றவர்களுக்கு சோகத்தையும் ஏற்படுத்துகிறது. ஆனால் இது தினமும் நடந்துகொண்டு தான் இருக்கிறது. தற்கொலை என்றுமே பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குவது இல்லை. அது நாம் பிறவி எடுப்பதற்கு முன்பாக வாழும் நுணுக்கமான மற்றும் சூட்சுமமான லோகமாக இருக்கும் அந்தர்லோகம் மற்றும் அடுத்த பிறவியில் எதிர்கால பிரச்சனைகளை அதிகரிக்கிறது. தற்கொலை தன்னுடன் எண்ணற்ற குறை பிரசவங்களை கொண்டு வருகிறது மற்றும் அந்த ஆன்மா தற்கொலை செய்த போது இருந்த பரிணாமத்தை மீண்டும் பல பிறவிகள் கழித்து பெறும் போது, மரணத்திற்கு காரணமாக இருந்த *கர்மவினை* சிக்கலை மீண்டும் எதிர்கொண்டு கரைக்க வேண்டி இருப்பதால், தற்கொலை *கர்மவினையின்* தீவிரத்தை துரிதப்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுகிறது. இவ்வாறு *சம்சார* சக்கரம் மெதுவாக சுழல்கிறது. அடுத்த பிறவி நல்ல பிறவியாக இருப்பதற்கு, *தர்மத்தின்* இயற்கை விதிகளை பின்பற்றி வாழ்ந்து, இந்த பிறவி *கர்மவினைகளை* நேர்மறையாகவும் முழுமையாகவும் அனுபவிக்க வேண்டும். ¶தற்கொலை *பிராணதியாக* என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகிறது. இது விஷம் குடித்தல், தண்ணீரில் மூழ்குதல், எரித்துக்கொள்ளுதல், குத்திக் கொள்ளுதல், உயரத்தில் இருந்து குதித்தல், சுட்டுக் கொள்ளுதல் போன்ற செயல்களால் திட்டமிட்டு உயிர் துறப்பதை குறிக்கிறது. தற்கொலை என்பது

நாகரீகம் இல்லாமல் வாழ்க்கையில் இருந்து திடீரென்று தப்பிக்கும் வழியாக இருப்பதாலும், அது எதிர்காலத்தில் எதிர்கொள்வதற்கு முறையற்ற கர்மவினைகளை உருவாக்குவதாலும், அது இந்து சாத்திரத்தின் மூலம் தொடர்ந்து தடை செய்யப்பட்டு வந்துள்ளது. ¶ஆனால் தீராத நோய்கள் அல்லது தீவிரமான உடல் ஊனம் இருக்கும் சந்தர்ப்பங்களில், பக்தியுடன் உபவாசம் இருந்து சுயமாக உயிரை துறக்கும் *பிரயோபவேசம்* சிலசமயங்களில் அனுமதிக்கப்படுகிறது. இந்து சமயம் இதை சரி அல்லது தவறு என்று வெளிப்படையாக எதையும் குறிப்பிடவில்லை என்றாலும், அது இந்த விஷயத்தில் பரந்த கண்ணோட்டத்தை கொண்டுள்ளது. இது ஆன்மாவை எவ்வாறு பாதிக்கிறது? இது மனித நேயத்தை எவ்வாறு பாதிக்கிறது? இந்த முக்கிய விஷயத்தில் விவேகமாக இரக்கத்துடன் சரியாக முடிவை எடுப்பதற்கு, இவை அனைத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ¶சுயமாக உயிர் துறக்கும் செய்முறை, வெகுசில விசேஷமான சூழ்நிலைகளில் அனுமதிக்கப்படுகிறது. அதற்கு நமக்கு பிரியமானவர்களின் மரணம், உடலில் ஏற்படும் காயங்கள், தொழிலில் ஏற்படும் நஷ்டம் அல்லது பரீட்சையில் தோல்வி மற்றும் அது பெற்றோர்களுக்கு தெரிந்தால் அவர்கள் கோபமாக வழங்கும் சித்ரவதை போன்றவற்றால் நமக்கு ஏற்படும் வருத்தம், ஏமாற்றம் மற்றும் தற்காலிக வேதனை மட்டும் போதாது. ஏனென்றால் அது தான் வாழ்க்கையின் இயல்பு. அதற்கு மனதில் வேதனை நிரம்பி இருந்தாலும் போதாது. இந்த காரணங்களில் எதுவும் தற்கொலையை நியாயப்படுத்த முடியாது என்பதால், அத்தகைய சூழலில் அது ஒரு இழிவான செயலாகிறது. இந்த பூமியில் ஆயிரத்தில் ஒருவருக்கு வரக்கூடிய ஒரு தீராத நோய் நமக்கு வந்தாலும், தற்கொலைக்கு ஒரு தகுந்த காரணமாக முடியாது.

சனிக்கிழமை

பாடம் 230

விரதம் இருந்து

உயிர் துறத்தல்

ரிஷிகளுக்கு மனித நேயத்தின் மீது இருந்த அன்பு மற்றும் வாழ்க்கையின் குறிக்கோள் மற்றும் அதன் அர்த்தம் பற்றி அவர்களுக்கு இருந்த ஞானத்தின் அடிப்படையில், அவர்கள் மனிதன் எதிர்கொள்ளும் விசேஷமான வேதனைகளுக்கு ஒரு மாற்று ஏற்பாட்டை வகுத்தனர். ஆன்மீக முன்னேற்றத்திற்கு முடிவு தெரியாமல் தொடர்ந்து வேதனையை அனுபவிப்பது உகந்ததாக இருக்காது என்பதையும், மகிழ்ச்சியாக பக்தியுடன் தியானம் செய்து அல்லது சாத்திரம் படிக்க கேட்டு அல்லது பக்தி பாடல்களை கேட்டுக்கொண்டு

முழு உணர்வுடன் இருப்பது சிறந்தது என்பதையும் அவர்கள் அறிந்து இருந்தார்கள். அதனால் வேத காலத்து *ரிஷிகள்*, திட்டமிட்ட உன்னதமான முறையில் தங்களது மற்றும் தங்களுக்கு பிரியமானவர்களின் சம்மதத்துடன், மனித உருவில் வேதனையில் இருக்கும் ஆன்மா, உபவாசம் இருந்து தூல உருவில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் வழியை வழங்கினர். உயிர் என்பது உடலை மட்டும் சார்ந்து இல்லை, ஆன்மா அழிவற்றது மற்றும் முறையான மரணம் மேன்மை பொருந்தியதாக இருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்து இருந்தார்கள். ஒரு உயரிய மற்றும் முக்கிய பயணமாக இருக்கும் மரணம், *மஹாபிரஸ்தானம்* என்று அழைக்கப்பட்டு, இந்துக்களுக்கு மிகவும் உயர்வான மனித அனுபவமாக விளங்குகிறது. ¶அத்தகைய முடிவை எடுக்கும் நபர் அதனை வெளிப்படையாக அறிவித்து விடுவதால், அது சமூக கட்டுப்பாடுகளுக்கு அனுமதி வழங்குகிறது மற்றும் கடுந்துயரம் மற்றும் வேதனையால் அனுபவித்த அதிர்ச்சிகரமான மனவெழுச்சி நிலைகளில் தனிமையில் செய்துகொள்ளும் தற்கொலையில் இருந்து அதனை வேறுபடுத்துகிறது. சுயமாக உடல் சுத்திகரிப்புக்களை செய்துகொள்ள முடியாத நிலை, விரைவில் உயிர் பிரிவது நிச்சயமான நிலை அல்லது வாழ்க்கை வழங்கும் இன்பங்கள் எதையும் அனுபவிக்க முடியாத அளவிற்கு மிகவும் மோசமான நிலை போன்ற நிபந்தனைகளுடன், அத்தகைய அசாதாரண முடிவுகள் சமூக கட்டுப்பாட்டுடன் நடைபெற வேண்டும் என்று பழங்கால *ரிஷிகள்* பல்வேறு வரையறைகளை வகுத்து இருக்கிறார்கள். ¶மற்றவர்களுடன் கருத்து வேறுபாடுகளை சரி செய்வது, வாழ்க்கையை பற்றி ஆழ்ந்து யோசித்து இறைவனுக்கு அருகே செல்ல முயற்சி செய்வது, மனதை மாற்றிக்கொண்டு சாப்பிட ஆரம்பிப்பது உட்பட தூல உலகில் இருந்து அவர்கள் மெதுவாக கிளம்புவதை அவர்களுக்கு பிரியமானவர்கள் பார்ப்பதற்கு, அவகாசம் அளிக்கும் *பிரயோபவேசத்தின்* மெதுவாக இயங்கும் பண்பு திடீரென்று உயிர் துறக்கும் *ஸ்வதேஹகாத* தற்கொலையில் இருந்து மாறுபடுத்தும் முக்கிய காரணியாக விளங்குகிறது. ஒருவர் இந்த மிகவும் ஆச்சாரமான பயிற்சியை, மற்றவர்களிடம் இருந்து மன்னிப்பை பெற்று, மற்றவர்களுக்கு மன்னிப்பை வழங்கிவிட்டு தொடங்குகிறார். அதன் பிறகு அந்த நபர் தான் செய்த தவறுகளை வெளிப்படையாகவும் முழுமையாகவும் தனது குருவிடம் ஒப்புக்கொண்டு, இந்த பிறவி கர்மவினைகளை பற்றி முழுமையாக விவாதித்த பிறகு, *மஹாவிரத மரண* எனப்படும் "மரணத்திற்கு முந்தைய மிகப்பெரிய விரதத்தை" மேற்கொள்கிறார். அதன் பிறகு கவனம் முழுவதும் சாத்திரம் மற்றும் *குரு* வழங்கும் உன்னதமான உபதேசங்கள் மீது செலுத்தப்படுகிறது. ஒருவர் உணவு உண்பதில் இருந்து தன்னை படிப்படியாக விலக்கிக்கொள்ளும் போது, உட்புறமாக நித்தியமாக இருக்கும் பரமாத்துமா மீது முழு கவனமும் செலுத்தப்படுகிறது. அதன் பிறகு முடிவில், ஆன்மா தன்னை உடலில் இருந்து விடுவித்துக் கொள்ளும் போது, குலகுரு வழங்கிய புனிதமான *மந்திரம்* தொடர்ந்து ஜபிக்கப்படுகிறது. ¶ஆன்மீக முன்னேற்றத்திற்கு உடலை விட்டு

சரியான மனநிலை, சரியான உணர்வு மற்றும் முடிந்தவரை மிகவும் உயர்வான சக்கரத்தில் இருந்து வெளியேறுவது முக்கியம் ஆகும். படிப்படியாக பலவீனமடையும் உடல், சிறிதும் குறையாத வலியுடன் வேதனையை அனுபவிக்கும் ஆன்மாவிற்கு தணியாத வலி மற்றும் நம்பிக்கையின்மை மட்டுமே வாழ்க்கையாக இருப்பதை *ரிஷிகள்* விரும்பவில்லை. அதனால் அவர்கள் குறிப்பாக வலியால் அவதியில் இருக்கும் பலவீனமான முதியவர்கள் மற்றும் நீடித்த வியாதியுடன் இருப்பவர்கள் நல்ல முறையில் உயிர் துறக்க வேண்டும் என்பதற்காக ஒரு கனிவான மற்றும் யதார்த்தமான வழியை பரிந்துரைத்தனர். அவர்கள் பரிந்துரைத்த அந்த அருமையான விவேகத்தில் வலியை போக்கும் மருந்துகள் இல்லை. வன்முறை இல்லை. இன்னொரு மனிதனின் ஈடுபாடும், அதனால் விளையும் தவிர்க்க முடியாத *கர்மவினை* சிக்கல்களும் இல்லை. உயிர் காப்பு அமைப்புக்கள் இல்லை. நீண்டகாலத்திற்கு சுகாதார பாதுகாப்பு அல்லது மனசாட்சி இல்லாத மருத்துவர்களின் பிடியில் சிக்கி பணம் விரயமாக வேண்டிய அவசியமில்லை. சுயநினைவு இல்லாத கோமாவிற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. மதிப்பு மற்றும் மரியாதை குறைவது இல்லை. பொறுக்க முடியாத வேதனை இருப்பதில்லை. இதில் திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு எடுக்கும் முடிவு இல்லை. அதற்கு பதிலாக ஆன்மீக பயிற்சி, *மந்திரங்கள்* மற்றும் *தந்திரங்கள்*, சாத்திரம் படித்தல், ஆழ்ந்த தியானம், பிடித்தமான பக்தி பாடல்களை கவனமாக கேட்டல், மகிழ்ச்சிகரமாக உயிர் துறத்தல், கடமைகளை நிறைவேற்றுதல், முழுமையான சுய நினைவு மற்றும் சொந்தங்கள் மற்றும் பந்தங்களின் அன்பு மற்றும் ஆதரவுடன் அமைதியாக, மெதுவாக மற்றும் இயல்பான முறையில் உயிர் துறப்பதை குறிக்கிறது. ஆனால் இதற்கு தேவையான தகுதிகள் இல்லாமலும், மிகவும் முக்கியமாக சமூகத்தின் ஆதரவு இல்லாமலும் முயற்சி செய்ய வேண்டாம்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 231

முப்பத்தி ஓரு

நாட்கள் தீட்டு

குடும்பத்தில் ஒரு இறப்பு அல்லது ஒரு பிறப்பு சம்பவிக்கும் போது, குடும்பத்தினர் அனுசரிக்கும் முப்பத்தி ஓரு நாட்கள் தீட்டு பற்றி எங்களது இணையதள சமூகத்திடம் இருந்து கேள்வி வந்திருந்தது. வழக்கமாக அந்த காலகட்டத்தில் கோயில் செல்லாமல், *சுவாமிகள்* மற்றும் *குருமார்களை* சென்று பார்க்காமல், பூஜை அறையில் தெய்வங்களுக்கு வெள்ளை துணியால் மூடி இருப்பார்கள். அவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்கு, அந்த

வழக்கங்களுக்கு காரணமாக இருக்கும் மறைஞானத்தை புரிந்துகொள்வது மிகவும் முக்கியம் ஆகும். ஒருவர் பிறக்கும் அல்லது இறக்கும் போது, அந்த ஆன்மா எங்கிருந்து வந்துள்ளது அல்லது சென்றுள்ளது என்பதை பொறுத்து, அதனோடு ஒரு சூட்சுமமான உறவை பகிர்ந்துகொள்ளும் எல்லோருக்கும், உயர்நிலை அல்லது கீழ்நிலை அந்தர்லோகத்தின் கதவு திறந்து கொள்கிறது. முப்பத்தி ஓரு நாட்களுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய பாதை நிலைத்து இருக்கிறது, மற்றும் அது குறிப்பாக மரணத்தின் போது அதிக காந்தத் தன்மையுடன் இருக்கிறது. "இருந்தாலும், ஒரு பிறப்பு என்பது குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான மற்றும் மங்களகரமான நிகழ்வு இல்லையா? அப்படி இருக்கும் போது, நாம் ஏன் பூஜை அறை செல்லக்கூடாது? நாம் ஏன் கோயில் செல்லக்கூடாது?" என்று என்னிடம் ஒரு அன்பர் கேட்டார். ¶ஆமாம், பிறப்பு என்பது மிகவும் புனிதமான மற்றும் மகிழ்ச்சிகரமான சம்பவம் தான், அதை நல்ல முறையில் கொண்டாடத்தான் வேண்டும். ஆனால் அதுவும் குடும்பம் தனிமையில் இருக்கவேண்டிய தருணம் ஆகும். இந்த காலத்தில் அக வழிபாடு, தியானம், பக்தி பாடல்களை பாடுதல், ஜபம் செய்தல் ஆகியவற்றிற்கு எந்த தடையும் இல்லை. புதிதாக பிறந்த குழந்தையின் உடல் ஆரோக்கியம் மற்றும் உடல் நலனை பாதுகாப்பதே, இந்த வழக்கத்தின் முக்கிய காரணம் ஆகும். இரண்டாவதாக ஒரு தூல உடலுக்குள் நுழைவது ஆன்மாவிற்கு ஒரு மிகப்பெரிய அனுபவமாக இருப்பதால், இதன் மூலம் குழந்தை பிறப்பு என்கிற பெரிய அனுபவத்துடன் தன்னை பொருந்திக் கொள்வதற்கும் அவகாசம் வழங்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. முதல் மாதத்தின் போது, குழந்தையின் சூட்சும உடல் தனது சிறிய தூல உடலுடன் இருக்க பழகிக்கொண்டு, அந்த உடலை விட்டு வெளியேறுவதையும் அந்த உடலுக்குள் நுழைவதையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நடைபெறும் சூட்சும-தூல பொருத்தம், பிறந்த கைக்குழந்தைக்கு ஒரு முக்கிய தருணமாக விளங்குகிறது. சிலசமயம் ஒரு குழந்தை கட்டுப்படுத்த முடியாமல் அழுதுகொண்டு இருக்கும் போது, தூல உடலில் இருந்து சூட்சும உடல் வெளியேறி, மீண்டும் உள்ளே நுழைய முயற்சி செய்கிறது என்பதை நாம் புரிந்துக் கொள்ளலாம். மேலும் பிறந்து ஒரு மாதமாகி இருக்கும் கைக்குழந்தையை பொது இடங்களுக்கு அழைத்து சென்றால், சொந்தங்கள் மற்றும் பந்தங்கள் மற்றும் பரிச்சயம் இல்லாதவர்கள் என்று பலர் அதை சூழ்ந்து கொண்டு, தங்கள் மூச்சுக்காற்று அதன் முகத்தில் படும்படியாக கொஞ்சும் போது, அதற்கு நோய் தொற்றிக்கொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதால், அந்த காலத்தில் அதை கோயிலுக்கு அழைத்து செல்வது விவேகமாக இருக்காது. குழந்தையை நோயில் இருந்து காப்பாற்றி, அது தனது தூல உடலில் முழுமையாக நுழைவதற்காக முப்பத்தி ஓரு நாட்கள் தீட்டு கடைப்பிடிக்கப்படுகிறது. ¶முப்பத்தி ஓரு நாட்களுக்கு பூஜை அறையை மூடி வைப்பது, தெய்வங்களின் படங்களை வெள்ளை துணிக்கொண்டு மூடுவது

மற்றும் கோயில்கள், *சுவாமிகள்* மற்றும் மகான்களை சென்று பார்க்காமல் இருப்பது என்று பிறப்பிற்கு கடைப்பிடித்த வழக்கம் மரணத்திற்கும் கடைப்பிடிக்கப்படுகிறது. பிறப்பு மற்றும் இறப்பின் போது அந்தர்லோகத்தின் கதவு திறந்து கொள்வதால், ஆன்மீக அடிப்படையில் இரண்டும் ஒன்றாக இருக்கின்றன. அந்த கதவு நாம் பூஜை அறை மற்றும் கோயில் செல்வதால், அது தொடர்ந்து திறந்தே இருப்பதை விரும்பாமல், அது மூடிக்கொள்வதற்கு உதவி செய்ய விரும்புகிறோம். கவனக்குறைவால் கீழ்நிலை லோகங்களில் இருப்பவர்களிடம் இருந்து சக்திகள் கிரகிக்கப்பட்டால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு, ஆன்மீக பழக்கங்கள் குறைக்கப்படுகின்றன. ¶இந்த காலகட்டத்தில் குடும்பத்தினர் பூஜை அறையில் நுழையும் போது, அவர்கள் கட்டுக்கு அடங்காமல் அழுவதற்கும் இது காரணமாக விளங்குகிறது. அந்த காலகட்டத்தில் உயிர் பிரிந்த ஆன்மா மகிழ்ச்சிகரமான அனுபவங்களுடன் தனக்கு பிடித்தமானவர்களுடன் தொடர்பில் இருப்பதால், இதைப் போன்ற அழுகைகள் அந்த சூட்சும உடலுக்கு வேதனையை அளிக்கிறது. அதனால் பிறப்பு அல்லது இறப்பிற்கு பின்வரும் முப்பத்தி ஓரு நாட்களில், கீழ்நிலை லோகம் மற்றும் உயர்நிலை லோகத்தின் உட்புற கதவுகள் மெதுவாக மூடிக்கொள்ள அனுமதி கிடைக்கிறது. ¶இந்த காலகட்டத்தில் துக்கத்தில் இருக்கும் குடும்பத்திற்கு அவர்களின் சொந்தங்கள் மற்றும் பந்தங்கள் உணவு கொண்டு வந்து தருவதில் எந்த தடையும் இல்லை. அந்த குடும்பத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருப்பதால், இந்த உதவி அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். குடும்பத்தில் ஒரு நபர் இறந்த பிறகு ஈமச்சடங்கு வேலைகள், அவரது உடைகள் மற்றும் உடைமைகளை அப்புறப்படுத்துதல், உயில் தயார் செய்தல் போன்று எண்ணற்ற வேலைகள் இருப்பதால், குடும்பம் தனது வழக்கமான மற்றும் ஆன்மீக சார்ந்த வேலைகளில் இருந்து விடுபட்டு இருந்தால், அந்த குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். தனிப்பட்ட தியானம் மற்றும் ஜபம், அக வழிபாடு ஆகியவற்றை அடக்கிய இந்த தீட்டிற்கு பிறகு இயல்பு வாழ்க்கையை தொடங்கலாம்.

வ்ருத்த

वृद्ध



வயோதிகம்

ஜீவராசிகளே! நீங்கள் முதுமையை போற்றி தீர்க ஆயுசுடன் உயிர் வாழுங்கள். நீங்கள் எல்லோரும் ஒன்றாக இயங்கி ஒருவரை ஒருவர் பின்பற்றுங்கள். நல்ல பிரஜைகளை கற்பிக்கும் பரமாத்துமா உங்களோடு ஐக்கியமாகி, இந்த யக்ஞத்தில் உங்களுக்கு நீண்ட ஆயுளை அளிப்பானாக!

நல்ல மனம், ஆரோக்கியமான கண்கள், நல்ல குழந்தைகள் மற்றும் , நோயற்ற வாழ்க்கை, நல்ல கண்கள் உள்ளவர்களும், நல்ல குழந்தைகள் உள்ளவர்களும், நோயற்றவர்களும், பாபமற்றவர்களுமான நாங்கள் உன்னை தினந்தோறும் போற்றுவோமாக. சூரியனே, உன்னுடைய நண்பர்களுக்கு அருள் செய்து, தினந்தோறும் எழுபவனாகிய உன்னை, நாங்கள், நீ நீடுழி வாழ்வதை காண்போமாக!

ரிக் வேதம் 10.18.6 &10.37.7. வேஎ, ப. 609; 319


Sunset Haven

வரைபடத்தின் முன்புறத்தில், தனது வயதான தந்தையின் சட்டையில் பொத்தான் தைத்துக்கொண்டு இருக்கும் மகள், வயதான குடும்பத்தினர் மீது அக்கறை செலுத்தும் தார்மீக வழிக்கு சான்றாக இருக்கிறாள். சன்னலுக்கு வெளியே இருக்கும் தெருவில், ஒரு மகள் தனது பலவீனமான தந்தையை சக்கர நாற்காலியில் அமர்த்தி முதியோர் இல்லத்திற்கு அழைத்து செல்கிறாள். அங்கே அவளது தந்தையை பரிச்சயம் இல்லாத நபர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

திங்கட்கிழமை

பாடம் 232

வயோதிகம் பற்றிய சில

உண்மைகள்

நாம் இன்று வயோதிகம் பற்றி தெரிந்துக்கொள்ள இருக்கிறோம். *வேதங்களில்* விளக்கப்பட்டுள்ள நிறைவான தீர்காயுசுடன் வாழ்வதற்கு ஒரு தவறான கோட்பாடு தடையாக இருக்கிறது. வயோதிகம் என்பது உடலைப் போன்று ஒரு மனநிலையை குறிக்கிறது. முதுமை வந்ததும் நீங்கள் மற்றவர்களுக்கு தடையாக இருப்பீர்கள் என்று இன்றைய இளைஞர்களுக்கு கற்றுத் தரப்படுகிறது. இது முறையான கருத்து இல்லை என்றே சொல்ல வேண்டும். முதியவர்கள், விவேகமானவர்கள், அனுபவமிக்க பெரியவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து இருப்பதால், தொலைநோக்கு பார்வையுடன் இருக்கும் அவர்களின் கருத்துக்களுக்கு இளைஞர்கள் மதிப்பு அளிக்க வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் பேச்சாளர்களாகிவிட்டார்கள் மற்றும் அவர்கள் தங்கள் சொந்த தவறுகள் மூலம் கற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். கற்றுக்கொள்வதற்கு இது ஒரு தவறான வழியாக தோன்றுகிறது! அவர்கள் கற்றுக்கொள்ள தயாராக இருந்து, முதியவர்களும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்க சம்மதிக்கும் போது, அவர்கள் அந்த முதியவர்களின் தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அறியாமைக்கு காரணம் ஏதும் சொல்ல முடியாது. ஆனால் இந்து சமய கடவுளைப் போல, அந்த அறியாமை உலகெங்கும் சமமாக வியாபித்து இருக்கிறது. ¶தூல உடலில் மாற்றம் ஏற்படுவது உண்மை தான் என்றாலும் நமக்கு முதுமை வருவது இல்லை. பிறப்பில் இருந்து உடலில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்றாலும், அதற்கும் ஒரு எதிர்காலம் இருக்கிறது. நாம் நமது காலணிகள் அணிவதைப் போல அந்த தூல உடலில் வாழ்கிறோம். "உங்கள் காலணிகளை அணிவது போல, உங்கள் உடலில் பற்றின்றி வாழுங்கள்," என்று என் *சத்குரு* கூறினார். நாம் இறுதி தீர்ப்பு நாளை நோக்கி சென்றுகொண்டு இருக்கிறோம், அதன் பிறகு உலகம் முடிந்துவிடும், தூல உடல் இருக்காது, சுற்றிலும் உணர்வற்ற நிலை மட்டுமே இருக்கும் என்று வரவிருக்கும் தீமை பற்றி முன்னறிவிப்புகளை ஏற்றுக்கொள்வது விவேகம் ஆகாது. அதைப்பற்றி சிந்திக்க வேண்டிய

அவசியமும் இல்லை. ¶முதுமை என்பது ஒரு சுவாரஸ்யமான செய்முறையாக இருக்கிறது. மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை, உடலில் இருக்கும் உயிரணுக்கள் அனைத்தும் மாற்றம் பெற்று தங்களை புதுப்பித்துக் கொள்கின்றன என்பதை நாம் அறிந்து இருந்தாலும், முதுமை அச்சுறுத்துவதாக இருக்கும், அதிலும் குறிப்பாக தன்னை உடலாக கருதுபவர்களுக்கு இது மிகவும் அச்சுறுத்துவதாக இருக்கும். ஆனால் நாம் உடல் இல்லை, நாம் அதில் வாழத் தான் பிறப்பு எடுத்து இருக்கிறோம் என்று கருதுபவர்களுக்கு அவ்வாறு அச்சுறுத்தலாக இருப்பது இல்லை. அந்த பூலோக உடையை பயன்படுத்தி, நாம் இந்த கிரகத்தில் செயல்பட வந்து இருக்கிறோம். நாம் தினமும் இருபத்தி நான்கு மணி நேரமும் அந்த உடலில் வாழ்வது இல்லை. நாம் குறைந்த பட்சம் எட்டு மணிநேரம் உறங்கும் போது, நாம் சூட்சுமலோக உடையில் தேவலோகத்தில் அங்கும் இங்குமாக இயங்கிக்கொண்டு இருக்கிறோம். ¶நாம் முதியவர்களை கவனமாக பார்க்கும் போது, நாம் பல வருடங்களாக முதிர்ச்சி அடைந்துள்ள மனதை காண்கிறோம். இந்த பூமியில் சில காலம் தங்கி வாழ்ந்ததால், பக்குவமடைந்த ஆன்மாக்களை காண்கிறோம். அவர்கள் இந்த பிறவியில் அனுபவிக்கக் கொண்டு வந்த *பிராரப்த கர்மவினைகளை* வெற்றிகரமாக அனுபவித்து வருவதை காண்கிறோம். நமது கண்களுக்கு அவர்களின் நிலைமை அருமையாக ஞானோதயம் தருவதாக இருக்கிறது, அவர்களின் விவேகம் நமது வாழ்க்கைகளில் பயன்படுத்திக் கொள்ள தகுதி வாய்ந்ததாக இருக்கிறது. அவர்கள் சொல்வதை கேட்டால், அவர்களிடம் இருந்து அறிவை பெறுவது நமது *பிராரப்த கர்மாவாக* இருக்கிறது. இதற்கு வழக்கமாக அறியாமையில் இருப்பவர்கள் மட்டுமே எதிர்ப்பு தெரிவிப்பார்கள். ¶மனிதனின் மூளைக்கு முதுமை வரலாம், ஆனால் மனதிற்கு எப்போதும் முதுமை வருவது இல்லை. மனம் எப்போதும் சீர்கெடுவது இல்லை. உணர்வு எப்போதும் பிறப்பதும் இல்லை இறப்பதும் இல்லை. முதுமையை பலவீனமாக, இயலாமையாக கருதும் இன்றைய மக்கள் சிந்திப்பதைப் போல அல்லாமல் சூட்சும உடல் மற்றும் பூலோக உடை மூலமாக செயல்படும் மனோமய கோசத்திற்கு முதுமை வருவதும் இல்லை, அது பலவீனம் அடைவதும் இல்லை. மனவெழுச்சிகளை ஒவ்வொரு நிலையிலும் புரிந்துக்கொண்டு கட்டுப்படுத்தினால், அது தொடர்ந்து வலுவடைந்து பரவலாக பக்குவமடைவதைப் போல, அந்த மனோமய கோசமும் அதிக வலிமையும் பக்குவமும் பெறுகிறது. வயது ஒரு தடையாக இருப்பது இல்லை, அது ஒரு மரபுரிமையாக விளங்குகிறது. நம்முடன் இருக்கும் முதியவர்கள் எதிர்காலம் மீது நம்பிக்கை வைத்து இருந்து, ஐம்பது அல்லது அறுபது வயதாவதை ஒரு ஆரோக்கியமற்ற மாற்றம் என்று கருதக்கூடாது. தைரியமாக இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தின் ஆன்மீக அரசனாக இருந்த எனது சத்குரு யோகசுவாமியை நான் சந்தித்த போது அவருக்கு எழுத்து ஏழ வயது. அவர் அந்த வயதிலும் தினமும் இருபது மைல்கள் நடந்து சென்றார், தினமும் பல மணி நேரம் தியானம்

செய்தார், மற்றும் மேலும் பதினைந்து வருடங்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார். ஆனால் சிலர் இளம் வயதில் இறக்கவும் செய்கிறார்கள். ஆதி சங்கரருக்கு வெறும் முப்பத்தி இரண்டு வயது, விவேகானந்தருக்கு முப்பத்தி ஒன்பது வயது. வேறு சிலர் முதுமையில் இருக்கின்றனர். ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் தனது நூறாவது வயதில் மகாசமாதி அடைந்தார். சமீபத்தில் ஒரு யோகி தனது 116 ஆவது வயதில் காலமானார். 1900 முதல் 2000 ஆம் ஆண்டு வரை, அமெரிக்காவில் 85 வயதிற்கு மேற்பட்டவர்களின் மக்கள் தொகை பத்து மடங்கு அதிகரித்து நான்கு மில்லியனாக இருந்தது என்றும், அதே சமயத்தில் மொத்த மக்கள் தொகை நான்கு மடங்கிற்கும் குறைவாக அதிகரித்தது என்றும் அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு செயலகம் தகவல் தெரிவித்தது. 2040 ஆண்டு வாக்கில் 85 வயதை கடந்தவர்களின் எண்ணிக்கை 13 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என்று அந்த செயலகம் தெரிவித்தது. 1900 ஆம் ஆண்டில் வெறும் 63,000 ஆக இருந்த நூறு வயதை கடந்தவர்களின் எண்ணிக்கை, 834,000 க்கும் அதிகமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக பலர் நூறு வயதிற்கு பிறகும், உடல் ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாக தங்கள் வேலையிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 233

தீர்காயுசுடன் வாழ்வதற்கான

இரகசியங்கள்

நீங்கள் இரண்டு மணி நேரத்தில் இறந்து விடுவீர்கள் என்று உங்கள் மருத்துவர் கூறினாலும் அல்லது உங்கள் ஜோதிடர் கணித்தாலும், நீங்கள் விரைவில் இறக்கவேண்டும் என்று உங்கள் எதிரிகள் சதித்திட்டம் தீட்டினாலும், நீங்கள் ஒரு வரையறுக்கப்பட்ட நேரத்தில் இறக்கவேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. ஆப்பிரிக்காவில் ஒரு பிரபல மருத்துவர் ஒரு நோயாளியை பரிசோதித்து அவர் இறந்து விடுவார் என்று கூறினால், அந்த நபருக்கு ஏற்படும் தீவிர அச்சம் மற்றும் அந்த மருத்துவர் மீதிருக்கும் நம்பிக்கை காரணமாக, அந்த நோயாளி சில மணிநேரங்களில் இறந்து விடுவதாக நான் தெரிந்துகொண்டேன். உடல்ரீதியான பிரச்சனைகளை மனஉறுதி மூலம் வெற்றி கொள்ளலாம் அல்லவா? இதைப்போன்று சுற்றி இருக்கும் மனைவி, குழந்தைகள், நண்பர்கள், முதலாளி என்று எல்லோரும், “உங்களுக்கு வயசாகிட்டு இருக்கு, ஞாபகம் வச்சுக்கோங்க," என்கிற முதுமை மந்திரத்தை சொல்லிக்கொண்டு இருந்தாலும் நம்பிக்கை இழப்பு ஏற்படுகிறது. ¶வயதில்

முதிர்ச்சி ஏற்படும் போது அமுல்படுத்துவதற்கு, பிராண சக்திகளை நிலை நிறுத்துவதற்கு, உள்ளிருக்கும் உயிர்சக்தியை வலுப்படுத்துவதற்கு உன்னத விதிகள் உள்ளன. விவேகமான வழிகளை அறிந்தவர்கள் "எனக்கு வயதாகிறது" என்ற மந்திரத்தை வெற்றிக்கொள்வார்கள். யாரும் அந்த எண்ணத்துடன் இருக்கக்கூடாது. அவர்களுக்கு மனம் எப்படி செயல்படுகிறது என்பது தெரியும், மற்றும் அவர்கள் அந்த விதிகளை பயன்படுத்தி நீண்டகாலம் பயனுள்ள, மகிழ்ச்சிகரமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். குறிப்பாக மனிதனின் மூளையில் ஒரு பகுதி செயலிழந்ததும் இன்னொரு பகுதி செயல்படுவதை உறுதி செய்யும் உடலின் தற்காப்பு அமைப்புப் பற்றி வயதில் முதிர்ச்சி பெறும் நபர்கள் நன்றாக புரிந்துக்கொண்டு, வேதனையில் இருந்து மீள்வதற்கு வாய்ப்புள்ளது என்பதை தெரிந்துக்கொள்ள வேண்டும். ஞாபக மறதி ஏற்பட்டால், அவற்றை மீண்டும் மனப்பாடம் செய்து மூளையின் இன்னொரு பகுதிக்கு நகர்த்திவிடலாம். இந்த எளிமையான உத்திகள் மனம் தொடர்ந்து பக்குவம் அடைந்து வருகிறது என்கிற உண்மையை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளன. அதைப் போல உணர்ச்சிகள், அறிவாற்றல் மற்றும் அனுபவ அறிவும் பக்குவமடைந்து வருகின்றன. மிகவும் முக்கியமாக, அறிவை பயன்படுத்தும் முறை மற்றும் அந்த அறிவின் பயனை தீர்மானிக்கும் விவேகமும் பல வருடங்களாக மற்றும் பல பிறவிகளாக பக்குவமடைந்து வருகிறது. ¶மனித நேயத்திற்கு சேவை செய்யவேண்டும் என்று பல இலக்குகளை வைத்து இருப்பது உளவியல் ரீதியான பலனை வழங்குகிறது. மக்கள் மக்களுக்கு உதவி செய்வது, மக்கள் மக்களுக்கு சேவை செய்வது தான் இந்து தர்மம் மற்றும் அது அதைத்தான் சுமார் 8,000 ஆண்டுகளாக உபதேசித்து வந்துள்ளது. நல்ல இலக்குகள் மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழும் விருப்பமும் அவற்றில் அடங்கும். *புருஷார்த்தம்* அல்லது மனித இருப்பின் இலட்சியமாக விளங்கும் *தர்மத்தை* பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் மனித உதவி தினசரி *சாதனா* மூலம் வலுப்படுத்தபட்டால், அது மேலும் துடிப்புணர்வு வழங்குவதாக இருக்கும். அதிகாலை நேரத்தில் செய்யும் *பூஜைகள்*, சாத்திரம் ஓதுதல், *குருவை* போற்றும் துதிப்பாடல்கள் மற்றும் தியானம் போன்றவற்றை தவறாமல் செய்து வரும் போது, நமக்குள் இருக்கும் ஆழமான பகுதி பேணி வளர்க்கப்பட்டு, நமது *கர்மவினைகளை* கரைத்து நீடித்த வாழ்வை வழங்குகிறது. ¶சூட்சும லோகங்களில் இருக்கும் ஆன்மாவின் புனிதமான உடல்களில் வாழ்க்கை முடிவில்லாமல் இயங்குகிறது. ஆனால் இன்று ஒரு தூல உடலை பெறுவது மிகவும் அரிதாக இருக்கிறது. நாம் மீண்டும் சங்கடமான பிறப்பு எடுத்து, மற்றவர்களால் துன்புறுத்தப்பட்டு, மழலை மொழியில் உரையாடி, நடக்க மற்றும் படிக்க மற்றும் எழுத கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. முந்தைய பிறவியில் நாம் பெற்ற விவேகத்தை, புதிய பிறவியில் முயற்சி செய்து பெறுவதற்கு பல வருடங்கள் ஆகிறது. ¶அதனால் உங்கள் தூல உடல் மீது அக்கறை செலுத்துங்கள். அது தனது தேவைகளை

அறிந்து இருப்பதால், அதைப் பற்றி அதிகம் தெரிந்து இருக்கவேண்டிய அவசியம் எல்லை. அது வழங்கும் தகவல்கள் மீது கவனம் செலுத்தி, உடனடியாக செயல்பட்டு, உங்கள் உடல் இயல்பாக அனுபவிக்கும் எண்ணற்ற மாற்றங்களை பற்றி தெரிந்துக்கொள்ள ஒரு ஆயுர்வேத மருத்துவரின் தொடர்பை பெற்று, ஒவ்வொரு மாற்றத்தையும் நேர்மறையாக எதிர்கொள்ளுங்கள். இந்த உடல் நிலையற்றது என்பது உண்மை தான், ஆனால் உங்களிடம் ஒரு உடல் தான் இருக்கிறது என்பதால் அதை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். நீங்கள் அனுபவம் மூலம் பெற்ற அறிவை அடுத்த தலைமுறைக்கு வழங்குவது, இந்த பிறவியில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு முக்கிய பணியாக விளங்குகிறது. ¶நீங்கள் வயதில் முதிர்ச்சியை பெற்று வெளிப்புற வாழ்க்கையை படிப்படியாக துறக்கும் போது, நீங்கள் வாழ்க்கையில் அதிக கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து, அதிக *சாதனாவை* செய்யவேண்டும். உங்கள் குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான துறைகளை தேடிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினால், நீங்கள் கற்றுத்தருவதை ஆர்வத்துடன் கேட்கும் புதிய குழந்தைகளை தேடிக்கொள்ளுங்கள் மற்றும் சேவை செய்வதற்கு புதிய முறைகளை தேர்ந்தெடுங்கள். மற்றவர்களுக்கு உதவிகரமாக இருங்கள். தர்மத்தின் விதைகளை விதைத்துக்கொண்டு இருங்கள். அவை தொடர்ந்து பலன் தராமல், வருடத்திற்கு ஒரு முறை பலன் தரலாம், ஆனால் எதிர்காலத்திற்கு தொடர்ந்து விதைத்துக்கொண்டு இருங்கள். "முதியவர்கள் மற்றவர்களுக்கு தடையாக இருக்கிறார்கள்," என்று மற்றவர்கள் கூறினாலும், "முதியவர்கள் இங்கே எல்லோருடனும் சேர்ந்து வாழத்தான் இருக்கிறார்கள்," என்று நாம் சொல்வோம்.

புதன்கிழமை

பாடம் 234

வாழ்க்கையின் திட்டங்களை

புதுப்பித்தல்

உடல் நடுத்தர வயதை அடையும் போது, வேகத்தில் மாற்றம் ஏற்படுகிறது. அந்த வயதில் நடப்பதை விட அதிகம் உட்கார்ந்து இருப்பது போலவும், அதிகம் உறங்குவது போலவும் உணர்வு ஏற்படுவதால், பத்து முதல் முப்பது ஆண்டுகளுக்கு நீண்டகால திட்டம் தீட்டுவது மிகவும் கடினமாக இருக்கிறது. நடுத்தர வயதில், "நான் எனது வாழ்வில் என்ன செய்ய இருக்கிறேன்?" என்று கேள்வி எழுகிறது. இந்த கேள்விக்கு பலமுறை பதில் அளிக்கப்பட்டு இருந்தாலும், சுமார் நாற்பது வயது அளவில், வாழ்வதற்கு மேலும் அதிகமான காலம் இருப்பதால், இந்த கேள்வியை கேட்கத்தான் வேண்டி இருக்கிறது. அதை

வாழ்ந்த நாட்களில் இருந்து பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கவனமாக திட்டமிட வேண்டும். மக்களில் சிலர் பதினெட்டு அல்லது இருபது வயதில் தங்கள் வாழ்க்கையை திட்டமிட்டுக் கொள்கின்றனர். ஆனால் ஆண்களும் பெண்களும் நடுத்தர வயதிற்கு வந்து வாழ்க்கையில் மாற்றத்தை எதிர்கொள்ளும் போது, அவர்கள் தனது சிந்தனைகளை மீண்டும் ஒருங்கிணைத்துக்கொண்டு ஆசைகள், உத்வேகங்கள் மற்றும் கல்வித் தகுதிகளுடன் உடல், மனம் மற்றும் உணர்ச்சித்திறன்களை ஆய்வு செய்வது விவேகமாக இருக்கும். அதன் பிறகு முடிந்தவரை அதிக உற்சாகம் மற்றும் வலிமையுடன் அடுத்த நாற்பது வருடங்களை திட்டமிட வேண்டும். வாழ்க்கை நாற்பது வயதில் தான் தொடங்குவதாக சிலர் கூறுகின்றனர். ஆனால் பலர் வாழ்க்கையில் ஏற்படும் விரக்தியால் ஐம்பது வயதிற்கு அருகில் இறந்து விடுகிறார்கள். ஏனென்றால் தங்களை சுற்றி நடக்கும் சம்பவங்களை அவர்களால் சரியாக புரிந்துகொள்ள முடிவதில்லை. மரணம் தன்னை நெருங்குவதாக அவர்கள் நினைக்கிறார்கள், ஆனால் நாற்பது வயதில் தொடங்கிய வாழ்க்கை மாற்றம், அனுபவம் மாற்றம் தான் நிகழ்ந்து இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்வது இல்லை. அவர்கள் அதை வாழ்க்கையின் புதிய பாதையாக கருதி முன்னேறினால், அவர்களின் வாழ்க்கை எண்பது வயது வரை இயல்பாக இயங்கிக்கொண்டு இருக்கும். ¶வாழ்க்கையில் நாற்பதாவது வயதில் மாற்றம் ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரியும். எழுபதாவது வயது வாழ்க்கையின் முக்கியமான தருணமாக விளங்குகிறது. எண்பதாவது வயது அந்த முக்கியமான தருணத்தின் நிறைவாக விளங்குகிறது. வாழ்க்கையில் முக்கியமான தருணத்தை நிறைவு செய்து, தனது எண்பதாவது வயதில் மடியில் ஒரு பேரன் அல்லது பேத்தியுடன் மகிழ்ச்சியாக இருக்கும் ஒருவர், வாழ்க்கை சக்கரத்தை பூர்த்தி செய்கிறார். ஒருவர் எண்பது வயதை நெருங்கும் போது, அடுத்த நாற்பது வருடங்களுக்கு தனது வாழ்க்கை, உத்வேகங்கள், ஆசைகளை புதுப்பித்துக் கொள்வதற்கு சரியான தருணமாகவும், இயல்பான ஆயுட்காலமாக இருக்கும் 120 வருடங்களை அங்கீகரிப்பதாகவும் இருக்கும். தூல உடலின் தசையமைப்பு விநோதமாக எழுபத்தி இரண்டு வயது வரை அழியத் தொடங்குவது இல்லை. ஆனால் சரியான உடற்பயிற்சி இல்லை என்றால், அதன் பிறகு சிறிதளவு அழிவு ஏற்படுகிறது. எண்பதாவது வயது நிச்சயமாக வயோதிகமாக இருப்பதால், அந்த காலத்தை கடப்பது உளவியல், உடல் மற்றும் உணர்ச்சி ரீதியாக கடினமாக இருக்கும் என்று ஆன்மீகவாதிகள் கருதுகின்றனர். அதனால் குறைந்த பட்சம் எழுபத்தி இரண்டாவது வயதில் எதிர்காலத்திற்கு ஊக்கமளிக்கும் ஒரு புதிய திட்டத்தை முன்பே தயார் செய்து விடவேண்டும். இதன் மூலம் எண்பதாவது வயதை நெருங்கும் போது, மெதுவாக செயல்படுவதற்கும் தூல உடலின் அடுத்த கட்டத்திற்கு ஒருவர் தன்னை முன்னேற்பாடு செய்து கொள்வதற்கும், அடிமனதின் பதிவுகள் தயாராக இருக்கின்றன. ¶இந்நிலையில் ஒருவர் இளைய தலைமுறைக்கு தனது அறிவை

வழங்கி, குழந்தைகள் மற்றும் அவர்கள் நலனில் தன்னை ஆர்வத்துடன் அர்ப்பணித்துக் கொண்டு, அனாதை ஆசிரமங்கள் நிர்வாகம் செய்வது, குழந்தைகளுக்கு நன்கொடை நிறுவல்கள் மற்றும் உதவித் தொகைகளை அமைப்பது, நல்ல திறமையுள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒருவர் தனது விவேகத்தை பயன்படுத்த வேண்டும். இது *சாதனா* மற்றும் தீவிர *தபஸ்* செய்வதற்கும் சிறந்த தருணம் ஆகும். வாழ்நாளில் ஒரு முறை வரும் இந்த தருணத்தில், *யோக மார்கம்* இயல்பாக தோன்றுகிறது. தூல சக்திகள் மறைந்து, தசையமைப்பு வலுவிழந்து வருகிறது. சிறந்த முறையில் நடைபெறும் ஆன்மீக முன்னேற்றம் இறுதியாக இருக்கும் *பிராரப்த கர்மவினைகளை* கரைப்பதோடு, இந்த வாழ்க்கையில் வெளிப்படாத *கர்மவினைகளையும்* இந்த தருணத்தில் கரைக்க முடிகிறது. பணி ஓய்வு பெற விரும்பினால், அதற்கு எண்பத்தி ஒன்றில் இருந்து எண்பத்தி நான்காவது வயது சரியாக இருக்கும். இது வேகத்தை குறைக்க வேண்டிய தருணம் என்றாலும் மனம், உணர்ச்சி, சமூகவியல், அரசியல், சூழலியல் தொடர்பான துறைகளில் நடவடிக்கைகளை தொடரலாம். இந்த காலகட்டத்தில் *ஹட யோகத்தை* பயிற்சி செய்து, *ஆயுர்வேத* முறைகள் மீது கவனம் செலுத்த வேண்டும். ¶இயல்பான ஆயுட்காலமாக இருக்கும் 120 வயதை அடைவதற்கு மேலும் நாற்பது வருடங்கள் உள்ள நிலையில், சனாதன தர்மத்தை பூர்த்தி செய்வதற்கும், கடந்த எண்பது வருடங்களாக பெற்ற அனுபவ அறிவை மற்றவர்களுக்கு வழங்குவதற்கும் நிறைய நேரம் கிடைக்கிறது. இது சிறப்பாக வாழ்ந்த வாழ்க்கைக்கு உண்மையான நிறைவேற்றமாக இருக்கிறது. அல்லது உங்கள் வாழ்க்கை சிறப்பாக அமையவில்லை என்றால், நீங்கள் மற்றவர்களுக்கு உங்கள் அனுபவம் மூலம் எதை செய்யக்கூடாது என்பதை கற்றுத்தந்து, அவர்கள் அதை பின்பற்றவில்லை என்றால் சரியான பலன்கள் கிடைக்காது என்பதையும் விளக்குங்கள். நீங்கள் செய்யவேண்டியதை செய்து இருந்தால், நீங்கள் செய்ததையும் அது எவ்வாறு நல்ல பலன்களை வழங்கியது என்பதையும் மற்றவர்களுக்கு கற்றுத் தரமுடியும். ஒன்பது கூட்டல் ஒன்பது எண்பத்தி ஒன்று, எட்டும் ஒன்றும் சேர்ந்தால் ஒன்பது. ஆகவே உங்கள் அனுபவத்தை அடுத்த தலைமுறையிடம் பகிருங்கள். இது சனாதன தர்மத்தின் நிறைவேற்றமாக இருக்கும் முக்தியை நோக்கி செல்லும் இறுதி சுழற்சியின் தொடக்கம் ஆகும்.

வியாழக்கிழமை

பாடம் 235

வயது முதிரும் போது

தோன்றும் மனநிலைகள்

மேற்கத்திய உலகில் சமூகம் முதியவர்களை பொறுக்காமல், இளைஞர்களை மட்டுமே பொறுத்துக் கொள்கிறது. அதனால் முதியவர்கள் மற்றும் விரைவில் முதுமை அடைய இருப்பவர்களும் தங்கள் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து, சமூகத்தில் மூத்த குடிமக்களாக இருக்கும் அவர்களுக்கு சமூகத்தின் மீது இருக்கும் மதிப்புக்கு ஏற்ப சமூகத்தை ஒரு புதிய மற்றும் பக்குவமான கண்ணோட்டத்தை நோக்கி வழிநடத்த வேண்டும். மேற்கத்திய நாடுகளில், முதியவர்களுக்கு உரிய மரியாதை கிடைப்பது இல்லை. அவர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் இளைஞர்களுக்கு அறிவுரை மற்றும் வழிகாட்டலை வழங்கும் பொது, அது அந்த இளைஞர்களின் வாழ்க்கை மற்றும் சுதந்திர நாட்டத்தில் தடையாக இருப்பதால், அந்த முதியவர்கள் விலக்கி வைக்கப்பட்டு பயனற்றவர்களாக கருதப்படுகிறார்கள். மேற்கத்திய மக்கள் முதியவர்களை தெளிவற்ற நிலைக்கு தாழ்த்தி விட்டதால், அவர்கள் தங்கள் சொந்த அனுபவங்கள் மூலம் வாழ்க்கையை தெரிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அது அந்த கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. ஆனால் ஆசியாவில் அவ்வாறு இல்லை. ஆசிய கலாச்சாரங்களில் வழக்கமாக முதியவர்களின் அறிவு, வழிகாட்டல், விவேகம், இரக்கம், இருப்பிற்கு ஒவ்வொரு வருடமும் அதிகமான மதிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. சமூகத்தில் அங்கம் வகிக்கும் குடும்பம் குழப்பம் அல்லது வாக்குவாதம், போர்கள் மற்றும் பஞ்சம் காரணமாக அவர்களின் முன்னேற்றம் தடைபடாமல் இருப்பதற்கு, முதியவர்கள் தங்கள் பூலோக உடையை துறந்தாலும், அந்தர்லோகத்தில் அவர்கள் பெறும் விவேகம் மற்றும் புதிய சக்திகள் காரணமாக, அவர்களுக்கு தொடர்ந்து மதிப்பு அளிக்கப்பட்டு, அவர்களின் வழிகாட்டலை நாடி ஆவாகனம் செய்யும் அளவிற்கு, அவர்கள் வாழ்க்கையில் மிகவும் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். அந்தர்லோகத்தில் இருந்து குடும்பத்திற்கு வழிகாட்டியாக இருந்து சீர் செய்யும் பித்ருக்கள், அதே குடும்பத்தில் அறிவுப்பூர்வமான ஒரு புதிய தாக்கமாக பிறவி எடுப்பார்கள் என்றும் மக்கள் நம்புகிறார்கள். இவ்வாறு ஆசிய குடும்பங்கள் பித்ரு வழிபாடு மூலம் ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு சமூகங்களாக முன்னேறுகிறார்கள். ¶இது கேட்பதற்கு விநோதமாக இருக்கலாம், ஆனால் எல்லோருக்கும் வயதாகிக்கொண்டு தான் இருக்கிறது. ஒரு மூன்று வயது சிறுவனுக்கு விரைவில் ஆறு வயதாகப் போகிறது. பன்னிரண்டு வயது சிறுவனுக்கு விரைவில் பதினெட்டு வயதாகப் போகிறது. ஒரு பதினெட்டு வயது மகனுக்கும் ஆறு வயது மகனுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது, மற்றும் இவை அனைத்தும் பன்னிரண்டு வருடங்களில் நடந்துள்ளன. சமூகமும் பெற்றோர்களும் ஆறு வயது சிறுவன் மற்றும் பதினெட்டு வயது சிறுவனுக்கு இடையில் இருக்கும் வித்தியாசத்திற்கு பழகிக் கொள்கிறது. ஆனால் நாற்பது வயதினருக்கும் எண்பது வயதினருக்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்கள், அவர்களின் தேவைகள், அவர்களின் விருப்பங்கள் மற்றும் அவர்களின் ஆசைகளை புரிந்துகொண்டு தங்களை

மாற்றி அமைத்துக்கொள்ளும் பக்குவம் மேற்கத்திய சமூகத்திடமும் இன்றைய ஆசிய சமூகத்திடமும் இருப்பதில்லை. ¶நீங்கள் முதுமையை அடையும் போது, எதிர்கால திட்டங்களை குறைத்துக்கொண்டு, குறுகிய கால திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று மேற்கத்திய உளவியல் தெரிவிக்கிறது. ஒருவர் தனது எதிர்காலத்திற்கு நீண்டகால திட்டங்களை உருவாக்கி இருந்தாலும், மரணம் சிறியவர் பெரியவர் என்ற வயது வித்தியாசம் பார்ப்பது இல்லை என்பதை இந்த தத்துவம் கவனத்தில் கொள்ளவில்லை. “முதுமை” என்பது மன அமைதியை பெற்று, ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கு மேலான காலகட்டத்திற்கு எதையும் வைத்துக்கொள்ளாமல் மற்றவர்களுக்கு வழங்கும் உணர்வை குறிக்கிறது. எழுபத்தி ஐந்து வயதில், நான் எனக்கு என்று ஒரு பத்து வருட திட்டத்தை உருவாக்கியுள்ளேன். அதன் பிறகு இன்னொரு பத்து வருடம் மற்றும் அதன் பிறகு இன்னொரு பத்து வருடம் என்று தொடர இருக்கிறேன். வாழ்க்கை என்பது மன உறுதியை குறிக்கிறது. வாழ்க்கை என்பதை தூல பண்பை மட்டும் சார்ந்து இருப்பது இல்லை. மரணம் என்பது ஜோதிடத்தால் கணிக்கப்பட்ட பேரதிர்ச்சி தோன்றும் தருணமாக நினைத்து அதற்கு அடிபணிந்தால், நீங்கள் உங்கள் பூலோக உடையை துறக்க வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை! ஆனால் இதையும் வாழ்க்கை சுழற்சியில் இருக்கும் மற்ற இறக்கங்களையும் எதிர்பார்ப்புடன் அறிந்தும் இருந்தால், என்றுமே வயதாகாமல் என்றுமே வலுவிழக்காமல் ஒவ்வொரு நாளும், மாதமும், வருடமும் சக்தி மற்றும் ஆற்றலை சேகரித்துக்கொண்டு இருக்கும் வலுவான மனம் மற்றும் வெல்ல முடியாத விருப்பத்தின் மூலம் வெற்றிகொள்ள முடியும். ¶முதுமைக்கு இணங்கி செல்பவர் அதன் செய்முறையை முழுமையாக புரிந்துகொள்வது இல்லை. அவர் தனது தூல உடலை காணும் போது, அது சுருக்கங்களுடன் மாறுபட்டு காட்சி அளிக்கிறது. ஆனால் இருபது வயது இளைஞன் தான் பத்து வயதில் இருந்ததைப் போல இருப்பது இல்லை. அது வெறும் பத்து வருடங்களுக்கு முன்பாக இருந்தாலும், தனது தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றத்தை நினைத்து அவன் மகிழ்ச்சி அடைகிறான். இருபது வயது இளைஞன் தனித்து இருந்து, அற்பமான விஷயங்களில் மகிழ்ச்சியை நாடி, லௌகீக உலகம் வழங்கும் யதார்த்த பொறுப்புக்களில் இருந்து விலகி சென்றால், அவன் மன்னிக்கப்பட்டு உதவிக்கரம் வழங்கி பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால் அதே சமயம் எழுபது வயது முதியவர் உலக விஷயங்களில் இருந்து விலகி இருந்து அற்பமாக நடந்துகொண்டால், அவருக்கு வயதாகிவிட்டது என்று ஒதுக்கப்படுகிறார். அதுவே அவரது முடிவாகவும் அமைகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 236

அச்சங்கள் மற்றும்

முன்னேற்பாடுகள்

ஒருவர் வாழ்க்கையில் அனுபவிக்கும் மாற்றங்களை சமூகம் போதிய அளவு விளக்குவது இல்லை. குழந்தைகள் நான்கு வயதில் இருந்து பத்து வயது வரை புத்திசாலிகளாக இருப்பதால், அவர்களின் வாழ்க்கை முழுவதும் என்ன நடக்க உள்ளது என்பதை ஒரு சித்திர புத்தகம் போல சொல்ல வேண்டும். அவர்கள் பருவ வயதில் பெறும் அனுபவம் மற்றும் அவர்கள் அனுபவிக்கும் மாற்றங்களை பற்றி அவர்களுக்கு விளக்க வேண்டும். நாற்பது வயதாகும் போது, மனதின் ஆர்வம் மற்றும் குறுகிய கால தூல இலக்குகள் மீது அவர்களின் தூல சக்திகளின் ஆற்றல் ஒடுங்குவதைப் பற்றியும் விளக்க வேண்டும். ஐம்பது வயதை அடையும் போது, உங்கள் இலக்குகள் தெளிவாக இல்லாத எதிர்காலத்தை பற்றியதாக இருக்கின்றன. ஐம்பது வயதிற்கு அருகில் உடலின் சக்திகள் பின்வாங்கும் போது, நீங்களும் ஒடுங்குகிறீர்கள். உடல் முன்பை போல நச்சுக்களை வெளியேற்றுவது இல்லை. உடலில் ஏற்பட்ட காயங்களும் முன்பு போல் குணமடைவது இல்லை. அது முன்பை போல தன்னை மீண்டும் உருவாக்கிக் கொள்வது இல்லை. அதன் பிறகு அறுபதாவது வயதில் ஆற்றல்கள் சமநிலையை பெறுகின்றன. இளம் வயதில் தோன்றும் "என்னை யார் கவனித்துக் கொள்ளப்போகிறார்கள்?" மற்றும் வயோதிக காலத்தில் தோன்றும் "என்னை யார் கவனித்துக் கொள்ளப் போகிறார்கள்?" என்ற அச்சமும் ஒன்று போல இருக்கின்றன. பெரும்பாலும் மக்கள் கவலையுடன் இருக்கும் இந்த இரண்டு விஷயங்களை சமாளிக்க அவர்கள் தங்கள் மனதை திடப்படுத்திக் கொள்ள வேண்டும். ¶நீங்கள் *தர்மத்தை* நிறைவேற்றும் தூண்டுதலை பெறவில்லை என்றால், உங்களுக்கு முதுமை வந்து விடும். நீங்கள் பழைய மனப்போக்குகளை பெறுவீர்கள். குருட்டு பிடிவாதம், கொள்கை பிடிவாதம், வகுப்புவாதம் மற்றும் பிரிவினைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வழிகளை அமைத்து கொள்வீர்கள். நீங்கள் மாறும் காலத்திற்கு ஏற்ப உங்களை மாற்றிக்கொள்ளாமல் உங்கள் பழைய கருத்துக்களை சார்ந்து இருப்பதன் காரணமாக உங்களுக்கு ஒருங்கிணைப்பில் விருப்பம் இல்லாமல் பிரிவினையில் விருப்பம் ஏற்பட்டு, நீங்கள் ஒரு இனவெறியர் மற்றும் தன்னலம் கருதுபவராக மாறுகிறீர்கள். நீங்கள் சுயநலத்தின் எல்லா நிலைகளிலும் தேர்ச்சி பெற்று இருப்பதால், அறியாமல் ஆதிக்கம் செலுத்தும் முதியவராக மாறி, பயணம் மற்றும் வசதிகள் மற்றும் வேறு பல காரணங்களுக்கு உங்கள் மகன்கள், மகள்கள் மற்றும் சொந்தங்களை சாமர்த்தியமாக கட்டுப்படுத்த ஆரம்பிக்கிறீர்கள். இது சனாதன தர்மம் இல்லை. இது கீழ்நிலை பண்பின் "*அசனாதன தர்மம்*" ஆகும். அதனால் முதியவர்களே கவனமாக இருங்கள்! நீங்கள் உங்கள் முதுமைக்கு பின்னால் மறைந்து இருக்க முடியாது. மனதிற்கு வயதாவது இல்லை. உணர்ச்சிகளுக்கு வயதாவது இல்லை. சூட்சும உடல்

அழிவது இல்லை. ஆன்மாவின் உடல் அழிவது இல்லை. தூல உடல் மட்டும் தான் தோன்றிய சாரங்களில் மெதுவாக கரைந்து வருகிறது. ¶இந்த பூமியில் தோன்றிய சில மேம்பட்ட ஆன்மாக்கள் இளம் வயதில் சிறப்பாக செயல்பட்டாலும், முழுமை பெறாத பரிணாமத்தை நுழையும் போது, முதுமை காரணமாக அவர்களின் உடல் தான் தோன்றிய சாரங்களில் மூழ்கும் போது, அவர்களின் ஆன்மா, மனம், உணர்ச்சிகள் படிப்படியாக சீர்குலையும் போக்கை பெறுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை ஆகும். இது தற்போது ஆதிக்கம் செலுத்தும் புத்தி மற்றும் ஆன்மாவின் சக்திகளுடன் அதிக உற்சாகம், சக்தி மற்றும் மகிழ்ச்சியை சேர்க்க முயற்சி செய்து, உடலில் தோன்றும் பலவீனங்களை அனுபவித்து இருந்த ஆன்மீகவாதிகளாக, பக்திமான்களாக, மகிழ்ச்சிகரமாக மதத்தில் ஈடுபாட்டுடன் இருந்த ஆண்கள் மற்றும் பெண்கள் மூலம் பின்பற்றப்பட்ட சனாதன தர்மம் இல்லை. முதுமையை ஏற்றுக்கொண்டால், ஞானோதய பாதையில் தோல்வியுற்றதை ஏற்றுக்கொள்வதற்கு சமம் ஆகும். முதுமையை ஏற்றுக்கொள்வது, இன்னொரு பிறவியை வரவழைப்பது ஆகும். முதுமையை ஏற்றுக்கொள்வது என்பது சொந்த பழக்கங்களை மாற்றிக்கொள்ளாமல், இளைஞர்களின் தலையீட்டை விரும்பாமல், அதிகமாக அல்லது புதிதாக எதையும் கற்க முடியாமல், எதிர்த்து கேள்வி கேட்கமுடியாத பிடிவாத குணத்தை கொண்டு இருத்தல் ஆகியவற்றை குறிக்கின்றன. ¶மேற்கத்திய நாடுகளில் மக்கள் முதுமைக்கு முக்கியத்துவம் தருவது இல்லை, மற்றும் அவர்கள் அதை எதிர்பார்த்து திட்டமிடுவதும் இல்லை என்றாலும், அவர்கள் அதை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. அவர்கள் அதை எதிர்பாராமல் எதிர்கொள்ள வேண்டி இருப்பதால், தங்களுக்கு கிடைப்பதை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள். கிழக்கத்திய நாட்டினர் வேறு முறையில் அணுகி, முதுமை என்பது அதிக நிறைவு, அதிக பக்குவம் மற்றும் திருப்தியை பெறும் நிலையாக கருதுகிறார்கள். ¶ஆனால் மேற்கத்திய நாடுகளில் மிகசிலரே திருப்தியை பெறுகின்றனர். அவர்கள் அதிகம் தன்னலம் கருதுபவர்களாக இருக்கிறார்கள். கணவன் மற்றும் மனைவிக்கு இடையேயான சமத்துவம் தலைகீழாக இருக்கிறது. பெண் என்பவள் ஆணின் பங்கை நிறைவேற்ற முயற்சி செய்கிறாள், மற்றும் ஆணுக்கு பாவம் வாய்ப்பு எதுவும் கிடைப்பது இல்லை. அதனால் முதுமை விரைவில் வந்து விடுகிறது மற்றும் உள்ளுணர்வுடன் புலம்புவதை தவிர, அவர்களிடம் செய்வதற்கு ஒன்றும் இருப்பதில்லை. அவர்களுக்கு வயதாக தொடங்கியதும், "அவள் எனக்கு சரியான நேரத்தில் உணவு வழங்கவில்லை" "அருகில் இருக்கும் குடியிருப்பில் இருந்து சத்தம் வருகிறது. அதனால் என்னால் தூங்க முடிவதில்லை" போன்று தங்களுக்கு தோன்றும் வேறு பல கவலைகளை புலம்புகிறார்கள். எல்லோருக்குள்ளும் அறிவாற்றல் ஒளிந்து இருந்தாலும், முதியவர்களுக்கு அதை பயன்படுத்த வாய்ப்பு கிடைக்காததால், அது பயனற்று போகிறது.

சனிக்கிழமை

பாடம் 237

நேர்த்தியாக

முதுமை அடைதல்

சில காலத்திற்கு முன்பு வயதான பெண்கள் வசித்த ஒரு முதியோர் இல்லம் செல்லும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மக்களை பார்த்து அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை உணரும் அனுபவம் எனக்கு இருந்ததால், பெண்கள் அமர்ந்து புலம்பிக்கொண்டு இருப்பதை பார்த்ததும், அவர்கள் வாழ்ந்த திருமண வாழ்க்கைகளை என்னால் தெரிந்துக்கொள்ள முடிந்தது. அந்த குழுவில் இரண்டு பெண்களை தவிர, மற்ற எல்லோரும் வாழ்நாள் முழுவதும் விவாகரத்து பற்றி பேசி தங்கள் கணவனை நச்சரித்து வந்தார்கள் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. "நான் விரும்புவதை நீ வழங்கவில்லை என்றால், நான் உன்னை விவாகரத்து செய்து விடுவேன்!" என்று சொல்லி அவர்கள் தங்கள் கணவன்மார்கள் மீது ஆதிக்கம் செலுத்தி இருந்தார்கள். ஆனால் அங்கே அமர்ந்து இருந்த இரண்டு ஆன்மாக்கள் வேதனையில் இருந்தாலும், மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். அவர்கள் அக மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். முதியோர் இல்லத்தில் சூழ்நிலைகள் மிகவும் நன்றாக இருப்பதில்லை என்றாலும், இந்த இரண்டு ஆன்மாக்களுக்கும் அமைதியாக உட்கார்ந்து கவனித்துக்கொண்டு இருந்தனர். அந்த பெண்கள் தாங்கள் கவனித்ததை புரிந்துகொள்வதையும் என்னால் உணர முடிந்தது. கண்ணால் காண்பதை புரிந்துகொள்ளும் திறமையை பெறுவதே முதுமையின் இரகசியம் ஆகும். ¶இயல்பாக முதுமையின் மூலம் உடல் மற்றும் உணர்ச்சிப்பூர்வமாக உற்சாகத்தை முழுமையாக இழக்கும் பழக்கத்தில் இருந்து விடுதலை பெற்று நேர்த்தியாக முதுமையை பெறுவதற்கு முன்பே திட்டமிட வேண்டும். நமது வாழ்க்கை எங்கே சென்றுகொண்டு இருக்கிறது என்பதை நாம் அறியவேண்டும். வாழ்ந்துகொண்டு இருக்கும் எல்லோருக்கும் ஒரு நாள் முதுமை வரத்தான் போகிறது. நீங்கள் சரியான சமத்துவத்தை பெற்றால், அந்த காலகட்டத்தில் மகிழ்ச்சியுடன் கடந்து விடலாம். நல்ல அறிவுரைகளை பின்பற்றி, முன்பு செய்த தவறுகளை புரிந்துக்கொண்டு சரி செய்வதன் மூலம், உங்களால் அந்த சரியான சமத்துவத்தை பெற முடியும். ¶நாம் சுயநலமாக இருந்து, தன்னலத்திற்கு முக்கியத்துவம் அளித்து, கோபத்தால் கட்டுப்பாட்டை இழந்தால், நாம் விலங்குகளை போன்று செயல்படுகிறோம். நமது உணரும் திறனைப் பற்றி ஆழமாக சிந்தித்து, நம்மீது கட்டுப்பாட்டை பெற்று, நமது கீழ்நிலை குணத்தை வெற்றிகொள்ள நமது முயற்சியை பயன்படுத்தினால், நாம் நமது மனதின் தெய்வீக பாகத்தை பயன்படுத்துகிறோம். இதன் காரணமாகவே,

மக்கள் தான் விரும்புவதை தான் செய்கிறார்கள் என்று நான் கூறுகிறேன். அவர்களுக்குள் இருக்கும் ஆன்மீக சக்தி வலுவாக இருக்கிறது, அல்லது அவர்களுக்குள் இருக்கும் விலங்கு குணம் வலுவாக இருக்கிறது. அவர்கள் தங்கள் விலங்கு குணத்தை கட்டுப்படுத்தினால், ஆன்மீக சக்தி தானாக ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கிறது. ¶அவர்கள் விலங்குகளின் பண்பை பின்பற்றி வாழ்ந்தால் என்னவாகும்? அவர்கள் ஆன்மாவின் இயக்கத்தை, உயிரின் இயக்கத்தை திடீரென்று நிறுத்தி விடுவதால், அவை அழிகின்றன. அந்த அழியும் செய்முறை உடனடியாக தொடங்கி விடுகிறது. அதைப்பற்றி சிந்தித்துப் பார்ப்பது கடினமாக இருந்தாலும், அது தான் விதி. அது தான் நடக்கவும் செய்கிறது. இதன் காரணமாகத் தான், நமக்கு அடிப்படை விதிகள் மற்றும் அடிப்படை கொள்கைகள் உள்ளன. நாம் அவற்றை பின்பற்றி வாழ்ந்தால், நல்ல பலன்கள் தானாக கிடைக்கும். நீங்கள் வேண்டிக்கொள்ளவோ நம்பிக்கை வைத்திருக்கவோ வேண்டியதில்லை. நல்ல பலன்கள் தானாக வந்து சேரும். ஆனால் நீங்கள் அந்த விதிகளை பின்பற்றி வாழவில்லை என்றால், உங்களுக்கு கிடைக்கும் பலன்களும் இனிமையாக இருப்பதில்லை, மற்றும் நீங்கள் அவற்றில் உடனடியாக சிக்கிக் கொள்கிறீர்கள். ¶அதனால் நாம் வரவிருக்கும் வருடங்களை பற்றி சிந்தித்து பார்க்கலாம். நாம் நமது வாழ்க்கையில் முழுமையாக வளர்ச்சி பெற்ற வருடங்கள் அழுகி செல்வதற்கு அடித்தளம் அமைக்கிறோமா அல்லது நமது வாழ்க்கையை அழகாக அமைத்து திருப்திகரமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் இருக்கிறோமா என்பதை ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம். உங்கள் வீட்டை பாருங்கள். உங்கள் வாழ்க்கையை பாருங்கள். நீங்கள் தற்போது என்ன செய்துக்கொண்டு இருக்கிறீர்கள்? நீங்கள் இது வரை என்ன செய்து இருக்கிறீர்கள்? நீங்கள் எதிர்காலத்தில் என்ன செய்ய இருக்கிறீர்கள்? நீங்கள் எதிர்காலத்திற்கு அமைத்துள்ள அடித்தளம் உண்மையாக, நிரந்தரமாக, மகிழ்ச்சிகரமாக சந்தோஷம் தருவதாக இருக்கிறதா? அல்லது உங்கள் வாழ்க்கை ஒரு குழந்தை விளையாடும் மணல்வீடு போன்று இருக்கிறதா? நாம் முதுமையை நோக்கி செல்லும் போது, நாம் இந்த விஷயங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ¶"இன்று நீங்கள் வழங்கிய உபதேசம் நன்றாக இருந்தது *குருதேவா*. நான் அதிலிருந்து பல தகவல்களை தெரிந்து கொண்டேன்," என்று என்னிடம் வந்து சொல்ல வேண்டாம். அதற்கு பதிலாக, நீங்கள் பத்து வருடம் கழித்து என்னை தேடி வரும் போது, இந்த *உபதேசம்* மூலம் நீங்கள் அடைந்த பயனை உங்கள் முக பிரகாசத்தின் மூலம் நான் தெரிந்துகொள்வேன். அது எனக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்ட நிலையில், வருங்காலத்தில் நீங்கள் செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் சவால்களாக தோன்றும் போது, நீங்கள் அவற்றை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள், எவ்வளவு அடக்கமாக இருக்கிறீர்கள், எவ்வளவு அன்பு மற்றும் புரிந்துணர்வுடன் இருக்கிறீர்கள் என்பதை நான் பார்க்க விரும்புகிறேன்.

அது தனி நபராக உங்களது ஒழுக்கம், உங்களது யதார்த்த சொரூபம் மற்றும் உங்களது குணங்களை வெளிப்படுத்தும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 238

உண்மையான பாதுகாப்பு

அகத்தில் இருக்கிறது

இது விரைவாக இயங்கும் யுகமாக இருப்பதால், பலர் தங்கள் வீட்டின் பலவீனமான அடித்தளம் காரணமாக தங்களுக்கு ஏற்படும் மனவெழுச்சிகளை நிலைப்படுத்துவதற்கும், தங்களால் எதிர்கொள்ள முடியாத பல்வேறு சூழ்நிலைகளை ஓரளவு சமாளிப்பதற்கும் அமைதி ஊக்கிகள் (tranquilizers), மதுபானம், உளநோய் போக்கிகள், நிகோடின், வினையூக்கிகள் அல்லது அதிக ஆற்றல்மிக்க ஊட்டச்சத்தை இன்று பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் அகத்தில் கவனம் செலுத்தி, போதிய அமைதியை பெற்று, தங்களுக்கு சிறிதளவு பாதுகாப்பை கொடுக்கும் பதிலை தங்களுக்குள் தேடிக்கொள்வதே, அவர்களின் உண்மையான தேவை ஆகும். ஆனால் உங்களது அகத்தின் ஆழத்திற்கு அழைத்து செல்ல போதைமருந்து, வினையூக்கிகள், அமைதி ஊக்கிகள், அதிக ஆற்றல்மிக்க ஊட்டச்சத்துகள் தேவையில்லை. ஒருவரை எப்படி சாமர்த்தியமாக வெற்றி கொள்வது, கணவன் பணத்தின் மீது எப்படி முழு கட்டுப்பாட்டை பெறுவது அல்லது அதைப்போன்ற மற்ற விஷயங்களில் உங்கள் கவனத்தை செலுத்துவதால் எந்த பயனும் இல்லை. அது நிச்சயமாக வேதனையை தருவதோடு, பூமியில் நரக வாழ்க்கையையும் கொண்டு வந்துவிடும். அதற்கு பதிலாக ஓரிடத்தில் அமர்ந்து அமைதியாக இருப்பது மட்டுமே, நமக்கு இருக்கும் ஒரே வழி ஆகும். அதனால் உங்களுக்குள் இருக்கும் தெய்வீக ஆன்மாவுடன் தொடர்பை பெறுவதே உண்மையான பாதுகாப்பு ஆகும். ¶அது உங்களுக்குள் வியாபிப்பதை உணருங்கள். உயிர் என்றால் என்ன என்பதை தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உங்கள் தூல உடலை ஒரு நாள் கைவிட இருக்கிறீர்கள். நீங்கள் இறந்தவுடன் என்ன நடக்கும் என்று தெரிந்து கொள்ளுங்கள். அது உங்களால் நிச்சயம் முடியும். நீங்கள் மரணத்தை கடந்தவரா என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். நீங்கள் அகத்தின் ஆழத்திற்கு சென்று போதிய அமைதியை பெற்றால், நீங்கள் அதை தேடிக் கொள்வீர்கள். அதன் பிறகு உங்களுக்கு மரணத்தின் மீது பயணம் இருக்காது. அதன் பிறகு நீங்கள் உங்களுக்குள் இன்னொருவராக இருப்பீர்கள். உங்களுக்குள் ஒரு புதிய மற்றும் தலைசிறந்த சக்தி வியாபிக்கும். முதலில் அது எங்கிருந்து வருகிறது எங்கே செல்கிறது என்பது தெரியாது, ஆனால் அது இருந்த இடத்திலேயே

இருக்கும் மற்றும் அதன் பிறகு நீங்கள் நேர்மறையாக சிந்திக்க அல்லது உறுதிமொழிகள் எடுக்க அவசியம் இருப்பதில்லை. நீங்கள் திரு. அல்லது திருமதி. நேர்மறையாக மாறுகிறீர்கள். அது தான் ஆன்மீக வாழ்க்கை. ¶நாம் எல்லோரும் அதிகரிக்கும் வயதின் விளைவுகளை எதிர்கொண்டு இருப்பதால், நாம் ஒரு காலகட்டத்தில் நமது வேகத்தை குறைத்து முறையான செயலை செய்ய வேண்டி இருக்கிறது. முதுமை என்பது அழிவாக இருக்கலாம் அல்லது மகிழ்ச்சி நிரம்பிய அழகான வாழ்க்கையாக இருக்கலாம். அதைப்பற்றி சிந்தியுங்கள். நீங்கள் எந்த திசையில் சென்றுகொண்டு இருக்கிறீர்கள்? நீங்கள் விலங்கின் மனதில் பின்வாங்கி, முதுமையில் ஐம்புலன்கள் பற்றி புகார் கூறுவதற்கு, அழிவு மற்றும் வேதனையை அனுபவிக்கும் பாதையை நோக்கி சென்றுக்கொண்டு இருக்கிறீர்களா? ஆழமாக ஆய்வு செய்து புரிந்துகொள்ள விருப்பம் இல்லாவிட்டாலும், வாழ்ந்து அனுபவிப்பதற்காக அடிமனதில் இருந்து தோன்றும் பழைய நினைவுகள் பற்றி புகார்கள், வேதனைகளை அனுபவிக்கும் பாதையை நோக்கி சென்றுகொண்டு இருக்கிறீர்களா? வாழ்க்கையின் முடிவு வரை துடிப்புணர்வு மற்றும் விழிப்புடன் இருக்கும் மனதுடன் இருப்பதற்கு, உங்களது வாழ்க்கையை தற்போது மாற்றிக்கொண்டு, நிறைவான மற்றும் அழகான வாழ்க்கையை வாழ இருக்கிறீர்களா? இதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இப்போதே தொடங்க வேண்டும். ¶முதுமை அடைவதை தவிர்க்க முடியாது. வருடங்கள் மிகவும் விரைவாக உருண்டோடுவதால், நாம் அவற்றை சரியாக கவனிப்பது இல்லை. நாம் நமது பழைய பழக்கங்களை கடைப்பிடித்து, எதிர்மறை பழக்கங்களில் தொடர்ந்து வலுவடையலாம், மற்றும் இதனால் நேர்மறை பழக்கங்களும் எதிர்மறையாக மாறி விடலாம். உறுதியாக நடக்க இருக்கும் அந்த விரிவாக்கத்தை யாரும் எதிர்பார்த்து இருப்பதில்லை. ஆனால் அதற்கு வேறு வழி இருக்கிறது. ஒரு ஆன்மீக சக்தியாக மாறுங்கள். அது உங்களது இலக்காக உங்களது முக்தியாக விளங்குகிறது, ஏனென்றால் நீங்கள் பல வருடங்களுக்கு சொர்க்கத்தில் வாழும் அனுபவத்தை பெறலாம் அல்லது சுயமாக உருவாக்கிய நரகத்தில் வாழலாம். அந்த நரக வாழ்க்கையை நீங்கள் அனுபவிக்க விரும்புவதில்லை. அதனால் அதைப்பற்றி சிந்தித்து, சிவனோடு வாழ்வதன் மூலம் இன்றில் இருந்தே சொர்க்க வாழ்வை அனுபவியுங்கள்.

அதிம்ருத்ய, சூக்ஷமதேஹஜீவனம்

अतिमृत्यु सूक्ष्मदेहजीवनम्



மரணத்திற்கு பிந்தைய சூட்சும லோக வாழ்க்கை

ஒரு கம்பளிப்புழு ஒரு புல்லின் நுனி வரை சென்றதும், இன்னொரு நுனியை பற்றிக்கொண்டு தன்னை ஒடுக்கிக் கொள்வதைப் போல, இந்த *ஆத்மனும்*, தனது தூல உடலை கைவிட்டு அறியாமையை வெற்றி கொண்டதும், இன்னொரு தூல உடலை பற்றிக்கொண்டு தன்னை ஒடுக்கிக் கொள்கிறது. அவனது சூட்சும மனம் எங்கே உறுதியான பற்றுடன் இருக்கிறதோ, அங்கே அவன் கர்மவினைகளில் பற்றுடன் ஈடுபடுகிறான். அவன் அந்த கர்மவினைகளின் பலன்களை அனுபவித்து இந்த லோகத்தில் எந்த வினைகளை செய்கிறானோ, அந்த கர்மவினையை அனுபவிக்க மீண்டும் இந்த உலகிற்கு திரும்புகிறான்.

சுக்ல யஜூர் வேதம், பிரகதாரண்யக உபநிடதம், 4.4.3&6 வேஎ, ப. 759



ஒரு கணவன் தன் மனைவியின் இறுதி மகாபயணத்தின் போது, அவளது நெற்றியில் விபூதியை பூசுகிறான். ஒரு ஒளிக்கதிர் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள ஒரு உயர் சக்கரம் வழியாக, தனது தூல உடலில் இருந்து விழிப்புடன் கிளம்பிய அவளது சூட்சும உடலை, அவளது காவல் தேவைதைகள் உயர்நிலை சூட்சும லோகத்தில் வரவேற்கிறார்கள்.

திங்கட்கிழமை

பாடம் 239

மரணம் என்று அழைக்கப்படும்

வாசல்

மரணம் மற்றும் மறுபிறவி பற்றி சொல்வதற்கு நிறைய உள்ளது. மரணத்தின் போது தூல உடலில் *பிராண* சக்தியின் ஓட்டம் நிறுத்தப்படும் நிகழ்வு, மக்களின் வாழ்நாளில் நடைபெறும் வலுவான திடீர் அனுபவமாக இருப்பதால், பலர் அதை நினைத்து பயப்படுகின்றனர். கூடு விட்டு கூடு பாயும் போது, இந்த *பிராண* சக்தி உடனடியாக விதையாக மாறவேண்டும். மரணம் என்றால் என்ன? ஒரு புறம் யாரும் இறப்பது இல்லை என்ற விழிப்புணர்வு இருந்தாலும், ஒருவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தனது தூல உடலில் வாழாமல் தனது சூட்சும உடலில் வாழவேண்டும் என்பதற்காக அவர் இறக்கவேண்டும் என்று சொல்ல முடியாது. நாம் நமது சூட்சும உடலில் தினமும் இருபத்தி நான்கு மணி நேரமும் வாழ்கிறோம், ஆனால் நமது தூல உடலில் தினமும் பதினாறு நேரம் மட்டுமே வாழ்கிறோம். இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, நாம் தினமும் எட்டு மணிநேரம் "இறந்து" தான் இருக்கிறோம். உயிர் துறந்ததும் தூல உடலில் இருந்து ஆன்மா வெளியேறும் போது, வாழ்க்கையில் ஒரு அத்தியாயம் நிறைவடைந்து இன்னொரு அத்தியாயம் தொடங்குகிறது. தொடர்ந்து விழித்திருக்கும் தூல உடலில் இருந்து வெளியேறி அடுத்ததாக நுழையும் சூட்சும லோகத்தில் உறங்க வேண்டியதில்லை என்பதால், அது ஒரு தொடர்ந்து விழித்து இருக்கும் நிலையாக இருக்கிறது. ¶தங்கள் தூல உடலை விட்டு வெளியேறியவர்கள் புதிய சூழ்நிலைக்கு பொருந்திக்கொள்வதில் உதவி செய்யவும், மீண்டும் தூல உருவில் பிறவி எடுக்க முன்னேற்பாடுகள் செய்வதற்கும், அந்தர்லோகத்தில் தூதர்கள் இருக்கிறார்கள். இந்த தூதர்கள் அன்பாகவும், அடக்கமாகவும் இருப்பதோடு தங்கள் பணியில் நல்ல பயிற்சி பெற்று திறமையாகவும் செயல்படுகிறார்கள். அவர்கள் இந்த தூல உலகில் ஒரே மாதிரியான சேவைகளை செய்யும் மருத்துவர்கள், செவிலியர்கள், மனோதத்துவ நிபுணர்கள் மற்றும் சமயப் பணியாளர்களை போல பூலோகத்தில் நுழையும் அல்லது வெளியேறும் ஆன்மாக்களுக்கு உதவி செய்கிறார்கள். தூல உலகில் நீங்கள் இறப்பதற்கும் மருத்துவமனைகள் துணை புரிகின்றன. அல்லது விபத்துக்கள் நடக்கலாம் அல்லது முதுமை தொடர்பான

பிரச்சனைகள் வந்துவிடும். சூழ்நிலை எதுவாக இருந்தாலும் மரணப்படுக்கையில் இருப்பவர்களை கவனித்துக் கொள்ள மற்றும் இறுதி சடங்குகளில் உதவி செய்ய மருத்துவத்துறை, சவக்கிடங்கு போன்ற சேவைகள் உள்ளன. இந்த தூதர்கள் தங்கள் பணியில் நன்கு பயிற்சி பெற்று, கருணை உள்ளத்துடன் இருக்கின்றனர். ஒரு ஆன்மா பிறவி எடுக்கும் போது, மருத்துவமனையில் மற்றும் வீட்டில் தூல உடலில் நுழையும் போது அந்த தூதர்களை மீண்டும் சந்திக்கிறது. ஒரு குழந்தை முழுமையாக வளர்ச்சி அடையும் வரை, பல வருடங்களுக்கு அதன் தாய்க்கு இத்தகைய தூதர்களின் அக்கறையே துணையாக விளங்குகிறது. ¶ஒரு மருத்துவர் அல்லது செவிலி தனது உயிரை துறந்தாலும், தனது முந்தைய பிறவியில் செய்த அதே தொழிலை செய்வார்கள். மறுபிறவி எடுக்கும் செய்முறை ஒரு சக்கரம் போன்று சுழன்றுக் கொண்டிருக்கிறது. சூட்சும உடலில் நிரந்தரமாக வாசம் செய்பவர்கள் தனியாக இருப்பதில்லை. அவர்களுடன் சேர்ந்து வசிக்கும் மற்றவர்கள் நிரந்தரமாக சூட்சும லோகத்தில் வாசம் செய்கிறார்கள், மற்றும் சிலர் அவ்வப்போது வந்து செல்கின்றனர். அது குறைவில்லாத முழுமையான வாழ்க்கையாக இருக்கிறது. சூட்சும லோகத்தில் இருப்பவர்களும் இறக்கிறார்கள். அவர்கள் ஒரு பிறவி எடுக்கும் போது, அவர்களின் பழைய சூட்சும உடலையும் துறக்க வேண்டியிருக்கிறது. சூட்சும லோகத்தில் இருப்பவர்கள் அங்கே "இறந்து" பூலோகம் வரவேண்டி இருக்கிறது, மற்றும் அதன் பின்னர் பூலோகத்தில் "இறந்து" அங்கே செல்லவேண்டி இருக்கிறது. ¶மனம், உணர்ச்சிகள் மற்றும் ஆன்மா முறையாக செயல்படுவதற்கு ஒரு தூல உடல் தேவைப்படுவது இல்லை. உடல் இல்லாத நபர் முழுமையாக செயல்பட முடியும். உதாரணத்திற்கு பூலோகத்தில் இறந்த தையல் தொழில் செய்யும் பெண்மணி, சூட்சும லோகத்திற்கு சென்றதும் அவள் தொடர்ந்து தைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் வித்தியாசம் என்னவென்றால், அந்த லோகத்தில் அவளுக்கு தேவையான துணிகள் எல்லாம் தயாராக இருக்கும். ஆனால் அவள் தனது தூல உடலில் செய்த நடவடிக்கையை தொடர வேண்டி இருக்கலாம். அவள் ஒரு தச்சர் வேலையை செய்யமுடியாது. ஆனால் இந்த தூல உலகின் கர்மவினைகளை அந்தர்லோகங்களில் அனுபவிக்க முடியாது. அதற்கு ஒரு தூல உடல் தேவைப்படும். ஒரு தூல உடலில் நுழைவதற்கான தருணம் வரும் போது, சரியான பெற்றோர்கள், சரியான சூழ்நிலை மற்றும் நாட்டை தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு நீண்டகாலம் தேவைப்படலாம் மற்றும் சிலசமயங்களில் கருச்சிதைவு அல்லது கருக்கலைப்பு நிகழும் போது ஏமாற்றம் தருவதாக இருக்கலாம். இதில் எதிர்மறைகள் ஒரு புறம் இருக்க, குழந்தையின் முதல் அழுகையும் தாயின் மென்மையான முதல் அரவணைப்பும் நிகழும் போது, மறுபிறவி தொடங்குகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 240

வருந்துதல் மற்றும்

மரணத்தை நினைத்து பயம்

மக்கள் தங்கள் முற்பிறவியை பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் முற்பிறவியில் யாராக இருந்தார்கள் என்பது முக்கியமில்லை. நீங்கள் முற்பிறவிகளில் செய்த வினைகளின் கூட்டுப் படைப்பாக இருக்கும் இந்த பிறவியின் மீது மட்டும் கவனம் செலுத்த வேண்டும். இந்த வினைகள் வருங்காலத்தில் எவ்வாறு வெளிப்பட இருக்கிறது என்பதை அறிவது ஒரு முன்னறிவிப்பாக விளங்கி, அது பிறவி சிறப்பாக அமைய துணை புரியலாம். இதனை அறிவது சாத்தியம் என்றாலும், முற்பிறவியில் வாழ்ந்த நாடு, இடம் அல்லது அப்போது செய்த தொழிலை தெரிந்துகொள்வது தேவையற்றது. குறிப்பாக இந்த பிறவியில் வெளிப்பட இருக்கும் முற்பிறவி கர்மவினைகளை தெரிந்துகொள்வது பொருத்தமாக இருக்கும். ¶மறுபிறவியை முழுமையாக புரிந்துகொள்ளாதவர்கள் மரணத்தை கண்டு அஞ்சுவார்கள். தெரியாததை கண்டு அஞ்சுவது மனித மனதின் அங்கம் ஆகும். மறுபிறவியை புரிந்துகொள்வதற்கு, நீங்கள் சூட்சும உடல் இருப்பதை புரிந்து ஏற்றுக்கொள்வதோடு, ஆன்மாவின் ஒரு இயல்பான அறிவையும் கொண்டிருக்க வேண்டும். அதன் பிறகு மறுபிறவி என்பது ஒரு குழந்தை இளம் வயதை அடைவதையும், ஒரு இளைஞன் வாலிப வயதையும் அடைவது போன்றது என்பதை நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள். மறுபிறவி பற்றிய பதிவுகள் ஒவ்வொரு நபரின் *சஹஸ்ரஹார சக்கரத்தில்* வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றை அந்தர்லோக தூதர்கள் மற்றும் பயிற்சி பெற்ற தீர்க்கதரிசிகள் மூலம் படிக்க முடிகிறது. அந்த *சஹஸ்ரஹார சக்கரம் ஆகாசத்தில்* இருக்கிறது. ஒவ்வொரு ஆன்மாவும் தன்னுடன் தனது கோப்புக்களை சுமந்து செல்கிறது. ¶"ஒருவர் இறக்கும் போது, அவருக்கு பிரியமானவர்களின் அணுகுமுறை என்னவாக இருக்க வேண்டும்?" என்று அன்பர்கள் கேட்கிறார்கள். இன்றைய சமூக உணர்வில் மரணம் பற்றிய அச்சம் வலுவாக அங்கம் வகிப்பதாலும், இந்த விஷயங்களில் அறியாமை நிலவுவதாலும், மரணத்தின் போது பெரும்பாலும் மகிழ்ச்சியை காட்டிலும் வேதனையே அனுபவிக்கப்படுகிறது. வாழ்க்கையை முழுமையாக புரிந்துகொள்ள முடியாததால், பலர் மரணத்தை தவறாக புரிந்துகொள்கிறார்கள். கர்மவினை மற்றும் சம்சாரம் பற்றிய அறிவில் இருந்து தோன்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் மகிழ்ச்சியான மனநிலை மட்டும் இருக்கவேண்டும். வாழ்க்கையின் செய்முறைகள் பற்றிய சுத்தமான புரிதலின் மூலம் மகிழ்ச்சி அனுபவம் மற்றும் பிரியமானவரிடம் இருந்து முழு விடுதலையும் கிடைக்கும். ¶*மரணம்* என்ற சொல்லுக்கு பதிலாக உயிரின் புதிய வடிவத்திற்கு செல்வதை குறிக்கும் *கூடு விட்டு கூடு பாய்தல்* என்ற சொல்லை

பயன்படுத்தலாம். மரணம் என்பது நன்றாக செய்த செயல்கள், பயனுள்ள *கர்மவினைகள்* பற்றி சிந்திக்காமல் இருப்பதை குறிக்கிறது. அறியாமையில் செய்த *கர்மவினைகள்* சிறிது காலம் கழித்து எதிர்கொள்ளப்படும். மரணம் என்பது நல்ல மற்றும் தீய, மகிழ்ச்சியான மற்றும் சோகமான அனுபவங்களை மறந்த இடத்திற்கு ஒரு புதிய கதவை திறப்பதையும் குறிக்கிறது. நமக்கு பிரியமானவர்கள் தங்களது பாதையில் இன்னொரு நிலையை பூர்த்தி செய்து, ஒரு புதிய தொடக்கத்தை பெற்று இருக்கிறார்கள் என்பதை நினைத்து நாம் உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைய வேண்டாமா? ¶அளவுக்கு அதிகமான வருத்தம், வேதனை மற்றும் இழப்பு ஆகியவை சனாதன தர்மத்தை புரிந்துகொள்ளாதவர்களால் அனுபவிக்கப்படுகிறது. அவர்கள் அறியாமை என்கிற இருள் சூழ்ந்துள்ள உலகில் வாழ்ந்து வருகிறார்கள். ஞானோதயம் வழங்கும் பிரகாசம் நிரம்பிய உலகங்களில் வாழ்பவர்கள் அதை உடனடியாக புரிந்து கொள்கிறார்கள். அந்த நபரின் *கர்மவினை* சுழற்சி முடிந்து விட்டது என்று அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இறக்கவிருக்கும் நபர் தான் ஒரு ஆனந்தமான பயணத்தில் செல்ல இருக்கிறோம் என்று அறிந்து இருப்பதை நீங்களும் உணரவேண்டும். அந்த நபர் தனக்கு பிரியமானவர்கள் இரவு உறங்கும் போது, அவர்களின் தூல உடல்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறார். அதனால் அவர் இறக்கும் போது, அவருக்கு அருகில் நெருக்கமான ஒன்று அல்லது இருவர் இருப்பது போதுமானதாக இருக்கும். அவருக்கு அருகில் யாரும் இல்லாவிட்டாலும், அவர் ஏங்குவது இல்லை. அவர் ஒரு பயணத்தில் இருக்கிறார். அவரிடம் பூரணமான முழுமை இருக்கிறது. ஒருவர் தனது மரணத்தின் போது வாழ்க்கையின் மிகவும் உயர்வான அனுபவத்தை பெறும் போது, நீங்கள் எதற்காக வருந்த வேண்டும்? ¶மரணத்திற்காக வருந்துவது சீன கலாச்சாரத்தில் இல்லை. அவர்கள் நெருப்பை கொண்டு நடத்தும் ஒரு சடங்கில் இறந்தவருக்கு பணம், காகிதத்தில் செய்த வீடுகள் மற்றும் கடிதங்களை எழுதி அனுப்புகிறார்கள். ஆரோக்கியமற்ற வருத்தம் எல்லா கலாச்சாரங்களிலும் அங்கம் வகிப்பது இல்லை. ஆனால் அவை கிறித்துவ நம்பிக்கைகள் தாக்கம் ஏற்படுத்தியுள்ள கலாச்சாரங்களில் அங்கம் வகிக்கின்றன. இந்துக்கள் அத்தகைய தாக்கத்திற்கு அவ்வப்போது ஆளாகி உள்ளனர் என்பதை நாம் நினைவில் வைத்து இருக்கவேண்டும். இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வேலை செய்வதாலும், குடும்பங்கள் நெருக்கமாக இல்லை என்பதாலும், மக்கள் உலகமெங்கும் பயணம் செய்வதாலும், மரணம் என்பது அதிக அதிர்ச்சிகரமான சம்பவமாக இருப்பது இல்லை. உயிர் துறந்த நபருக்கு தூல உடல் இல்லாமல் சூட்சும உடல் மற்றும் ஆன்மா இருப்பதால், அவர் எங்கும் செல்லாமல் அங்கேயே இருக்கிறார். அவர் தனது சூட்சும உடலில் வாழ்ந்தாலும், தனது ஆன்மாவில் அல்லது சான்பிரான்சிஸ்கோ அல்லது பாரிசில் வாழ்ந்தாலும், அவர் அங்கேயே இருந்துக்கொண்டு இருக்கிறார்.

புதன்கிழமை

பாடம் 241

பித்ருக்கள்

வழிபாடு

பித்ருக்களுக்கு பரந்த கண்ணோட்டம், மெய்ஞ்ஞான பார்வை இருப்பதால் அவர்களின் வழிகாட்டலை நாடி மேற்கொள்ளும் பித்ரு வழிபாடு உயிர் துறந்த பித்ருக்களுடன் தொடர்புகொள்ளும் முறை ஆகும். அவர்களுக்கு சாப்பிடுவது, உறங்குவது மற்றும் குடும்பத்தில் நிலவும் சூழ்ச்சிகள் பற்றிய கவலை இருப்பதில்லை. கூட்டு குடும்பத்தை வளர்ச்சியின் அடுத்த நிலைக்கு எப்படி அழைத்து செல்வது என்பது அவர்களுக்கு தெரியும். அவர்கள் தங்கள் *பிராரப்த கர்மவினைகளை* அனுபவிக்க மீண்டும் அதே குடும்பத்தில் பிறக்க விரும்புவார்கள். உயிர் துறந்த ஆன்மா மீண்டும் அதே குடும்பத்தில் பிறக்க இந்து *ஸ்ரார்த்த கர்மாக்கள்* துணை புரிகின்றன. அதைப் போலவே, எங்கள் மடத்தை சேர்ந்த துறவிகள் எங்கள் மடத்திற்கு திரும்ப வேண்டும் என்றும் அவர்களின் உயர்ந்த குறிக்கோள்கள் நிறைவேறும் வரை தொடர்ந்து வந்துகொண்டு இருக்கவேண்டும் என்பதையும் எங்களது விருப்பமாக இருக்கிறது. *கர்மவினைகளை* தொடர்ந்து ஒவ்வொரு பிறவியிலும் அனுபவிப்பதற்கு, ஒரே குடும்பம் மற்றும் ஒரே வீட்டில் பிறப்பதை ஒவ்வொரு இந்துவும் விரும்புகிறார் மற்றும் குடும்பங்கள் தங்கள் சொந்தங்களை மீண்டும் தங்களுடன் சேர்க்க விரும்புகின்றனர். இந்த ஒரு காரணத்திற்காக உயிர் துறந்த நபர் மீண்டும் தங்கள் குடும்பத்திற்கு திருப்பி அழைக்கும் நோக்குடன், அவர் இறந்த நட்சத்திரத்தில் சில சடங்குகள் நடத்தப்படுகின்றன. ¶பல இந்து பாரம்பரியங்களில், தங்களுக்கு பிரியமானவர் உயிர் துறந்த பிறகு பன்னிரண்டு வருடங்களுக்கு *ஸ்ரார்த்த கர்மாக்கள்* நடத்தப்படுகின்றன. அதனால் பித்ருக்கள் வழிபாடு அல்லது பித்ருக்கள் தொடர்பை பகிர்ந்துகொள்ளும் ஒவ்வொரு குடும்பமும், மதப்பிரிவில் இருக்கும் ஒரு குலத்தை சேர்ந்தவர்கள் என்று சொல்லலாம். ஒரு குடும்பத்திற்கு சிறப்பான தீர்வை, அதில் வாழ்ந்தவர் அல்லாமல் வேறு யாரால் வழங்கமுடியும்? ஒரு மூதாதையர் மரணத்திற்குப்பின் மறுபிறவி எடுத்து இருந்தால், அது அந்த குடும்பத்திற்கு தானாக தெரிந்துவிடும். அவர்கள் ஒரு சூட்சும சக்திகளுடன் தொடர்புகொள்ள துணைபுரியும் வழிகாட்டியின் வாயிலாக, இன்னொரு மூதாதையரது கருத்தை தெரிந்துகொள்வார்கள். ஒரு மூதாதையர் வேறொரு குடும்பத்தில் பிறந்து இருந்தால், அதுவும் அந்த குடும்பத்திற்கு தெரிவிக்கப்படுகிறது. பித்ரு வழிபாடு செய்யும் பழக்கம் உடையவர்கள், தங்கள் சமூகம் சாராதவராகவும், தங்கள் குடும்பத்தைப் பற்றி அறியாதவராகவும்

இருக்கும் ஒரு வழிகாட்டியின் உதவியை நாடுவார்கள். ¶எங்கள் சைவ தேவாலயத்தின் ஐம்பது வருட அனுபவத்தில், எங்கள் அன்பர்கள் மற்றும் தீட்சை பெற்ற நெருக்கமானவர்களின் வாழ்வில் நடைப்பெற்ற, பிறப்பு முதல் இறப்பு மற்றும் மீண்டும் மறுபிறப்பு வரை பதிவு செய்துள்ளோம். பிறப்பில் இருந்து இறப்பு மற்றும் இறப்பில் இருந்து பிறப்பு மற்றும் பிறகு இறப்பின் தொடர்ச்சி, பிளவுபடாத *கர்மவினைகளின்* தொடர்ச்சி ஆகியவை ஒரு ஆன்மீக, துடிப்புணர்வுள்ள மத அமைப்பை உருவாக்குகின்றன. ¶உங்கள் ஆன்மாவின் முதிர்ச்சி சிறப்பாக இருக்கும் போது, நீங்கள் அந்தர்லோகங்களில் நீண்டகாலம் வாசம் செய்வீர்கள். அறியாமை உலகை சேர்ந்த சிலர் உடனடியாக திரும்பி விடுகின்றனர். அவர்கள் மருத்துவமனையின் ஒரு புறம் இறந்து மறுபுறம் பிறக்கிறார்கள். ஒரு சராசரி நபர் வழக்கமாக பன்னிரண்டு வருட சுழற்சிக்குள் மறுபிறவி எடுக்கிறார். ஒரு நபர் தங்கள் குடும்பத்திற்கு மீண்டும் திரும்புகிறார் என்பதை குடும்பத்தினர் உணர்ந்து அவர்கள் அதற்காக பிரார்த்தனை செய்கிறார்கள் மற்றும் அந்த நபர் பன்னிரண்டு வருடங்களுக்குள் திரும்புகிறார். அந்த நபர் திரும்பி விட்டார் என்பதை அவர்கள் உணர்ந்ததும், அவர்கள் அது தொடர்பான சடங்குகள் செய்வதை நிறுத்தி விட்டு மற்ற வேலைகளில் ஈடுபடுகின்றனர். ¶இன்றைய கலியுகத்தில், வெவ்வேறு இனங்கள் மற்றும் வெவ்வேறு பகுதிகளை சேர்ந்த மக்கள் கலப்பு திருமணங்கள் மூலம் மரபியலை மேம்படுத்தவும் சிறந்த மரபணு குடும்பங்களை மீண்டும் உருவாக்கவும் இனங்கள் இடம்பெயர்கின்றன. இது குலங்கள் பிரிந்து அழியும் காலமாக விளங்குகிறது. ஆனால் இதன் மூலம் புதிய மரபணு உடலுடன் உருவாகும் புதிய இனம், சிறந்த உலகை உருவாக்க கடினமாக உழைக்கும் ஆன்மீகத் தலைவர்களை கொண்டிருக்கும். அந்த உலகம் அவர்களை சுற்றி மீண்டும் உருவெடுக்கும்.

வியாழக்கிழமை

பாடம் 242

அந்தர்லோக

வாழ்க்கை

உயர்ந்த பக்குவத்தை அடைந்த ஒருவரின் கண்ணோட்டத்தில் உலகம் அதிக ஆனந்தம் நிறைந்ததாக இருக்கிறது, மற்றும் அவர்களின் அந்தர்லோக வாழ்க்கை மேலும் ஆனந்தம் தருவதாக இருக்கக்கூடும். இந்நிலையில் கீழ்நிலை *சக்கரங்கள்*, உள்ளுணர்வு மற்றும் கீழ்நிலை இயல்புகள் முற்றிலும் செயல்படாமல் இருப்பது இந்த ஆனந்தநிலைக்கு ஒரு முக்கிய காரணம் ஆகும். அதனால் அது தடையில்லாத அருமையான காலமாக, அமைதி மற்றும் நிம்மதி

வழங்கும் காலமாக, பூமியில் தங்களைப் போன்ற ஆனந்தத்தை அனுபவித்த தங்களுக்கு பரிச்சயமான நபர்களை சந்திக்கும் காலமாக விளங்குகிறது. அது சிலருக்கு பூமியில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ளும் காலமாக, அவர்களுக்கு தகவல்கள் அனுப்பும் முறை பற்றி கற்றுக்கொள்ளும் காலமாக விளங்குகிறது. இரண்டு பிறவிகளுக்கு மத்தியில் நடைபெறும் இந்த இடைநிறுத்தம் கனவை போன்று இருக்கிறது, மற்றும் அது தூல உடலுக்கு முக்கியமாக தேவைப்படும் ஓய்வாக விளங்குகிறது. மரணத்திற்கு பிறகு எல்லா உட்புற உடல்களுக்கும் ஒரு பிரபஞ்ச உறக்கமாக விளங்குகிறது. ¶மிகவும் கொடிய பாவங்களை செய்து, சிவபெருமானின் திருநடனத்தில் அழிவு ஏற்படுத்தும் பிரிவை சேர்ந்த ஒருவர் இறந்தாலும், அவர்கள் மீண்டும் தூல உடலில் நுழைந்து தனது தவறுகளை மீண்டும் செய்து அல்லது *சாதனாக்கள்* செய்து உயர்நிலை அடைந்து தேவலோகம் செல்லும் வரை, ஒரு குறுகிய காலத்திற்கு நரகலோகத்தில் வேதனையை அனுபவிக்கிறார். ஆனால் எந்த காரணம் கொண்டும், மரணத்தை மறுபிறவியில் இருந்து பெறும் விடுதலையாக கருதக்கூடாது. அது பெரும்பாலானோருக்கு அடுத்த பிறவிக்கு தன்னை தயார் செய்துகொள்ளும் காலகட்டமாக, முற்பிறவிகளில் செய்த நல்ல, தீய மற்றும் இரண்டும் கலந்த *கர்மவினைகள்* வளர்ச்சிப்பெற்று வழங்கும் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு தேவையான நம்பிக்கை மற்றும் வலிமையை பெறும் காலகட்டமாக விளங்குகிறது. ¶அந்தர்லோகங்களுக்குள் சூட்சும லோகத்தை காட்டிலும் அதிக நுணுக்கமான லோகங்கள் உள்ளன. அந்த உயர்ந்த லோகங்கள் செல்வதற்கு, சூட்சும லோகத்தில் இருக்கும் உயர்ந்த ஆன்மாக்களுக்கு எளிதில் அனுமதி கிடைக்கிறது, மற்றும் அவர்கள் அங்கே வாசம் செய்யும் *ரிஷிகள்* மற்றும் மகாதேவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டு ஆசிகளையும் பெறுகிறார்கள். இதை செய்யும் பொருட்டு, பெரும்பாலானோரின் சூட்சும உடல் "இறப்பது" இல்லை, ஆனால் அது தற்காலிகமாக அங்கேயே விட்டு செல்லப்படுகிறது. அதைப் போல இந்த தூல லோகத்தில், நீங்கள் தியானம் செய்து உங்கள் *புருஷ* உடலின் ஆழத்தில் இருக்கும் உயர்ந்த லோகத்திற்கு "இடம் பெயரவும்" முடியும். உங்கள் தூல உடல் மற்றும் சூட்சும உடல் தற்காலிகமாக, அதே இடத்தில் விட்டு செல்லப்படுகின்றன. ஆனால் அந்த அந்தர்லோகத்தில், நீண்டகாலத்திற்கு முன்பு தங்கள் கீழ்நிலை சூட்சும உடலை நீக்கிவிட்ட உயிர்சக்திகள், நிரந்தரமாக இந்த உயர்ந்த லோகங்களில் தங்களது விஞ்ஞானமய கோசத்தில் வாசம் செய்கிறார்கள். ஆனால் தூல பிறவியில் மட்டுமே இருப்பத்தி ஒன்று *சக்கரங்கள்* இருப்பதால், நீங்கள் தூல பிறவியில் அடைந்த நிலையைக் காட்டிலும் உயர்ந்த நிலையை, மரணத்திற்கு பிறகு அந்தர்லோகங்களில் அடைய முடியாது என்பது விதியாக இருக்கிறது. தூல பிறவியில் அதிக கீழ்நிலையில் இருக்கும் *சக்கரத்தையும்*, அதிக உயர்நிலையில் இருக்கும் *சக்கரத்தையும்* அடைவது சாத்தியமாகிறது. உங்களுக்கு பூலோகத்தில் கிடைக்கும் சித்திகளை, உங்களுடன் சூட்சும

லோகங்களுக்கு எந்த மாற்றமும் இல்லாமல் எடுத்து செல்கிறீர்கள். தூல உலகில் கீழ்நிலை அல்லது உயர்நிலை சக்கரங்களில் வாழ்வதால் உங்களுக்கு கிடைத்த சித்திகளை விட தாழ்ந்த அல்லது உயர்ந்த நிலைக்கு செல்வதற்கு சூட்சும உலகில் வாய்ப்பில்லை. இதன் காரணமாகவே உங்களுக்கு ஒரு தூல பிறவி தேவைப்படுகிறது. ¶மரணத்தின் போது உலக வாழ்வை துறக்கும் *ஆதுர சந்நியாசம்* பற்றி என்னிடம் ஒரு முறை கேள்வி கேட்கப்பட்டது. அதனால் எந்த பயனும் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. அதை ஒருவர் செய்ய விரும்பினால் அது அவரது மனதிற்கு அமைதி அளிப்பதற்கு உதவியாக இருக்கிறது என்றாலும், அது மிகவும் முக்கியமானதாக எனக்கு தோன்றவில்லை. அவர் அடுத்த பிறவியில் ஒரு *சந்நியாசியாக* இருக்க வாய்ப்புள்ளது அல்லது சாதாரண வாழ்க்கையை வாழ்வதற்கும் வாய்ப்புள்ளது. நீங்கள் ஒரு *சந்நியாசியாக* இருக்க விரும்பினால், நீங்கள் அந்த வாழ்வை வாழ முற்படவேண்டும். ¶ஒரு சிறந்த ஆன்மா தனது இறுதி மகாபயணத்திற்கு முன்பாக, தான் மீண்டும் பிறவி எடுக்கப்போவது இல்லை என்பதை சிலசமயங்களில் அறிந்து கொள்கிறார். இந்நிலையில் அவர் தனது தூல உடலில் உயிருடன் இருக்கும் போது, சூட்சும உடல் காரண சரீரத்திற்குள் முழுமையாக ஒடுங்கிக் கொள்ளப்பட்டு, கீழ்நிலை *சக்கரங்கள்* அனைத்தும் மூடிக்கொள்ளப்படும். இது நடைபெறும் போது, காரண சரீரம் தூல உடல் மீது ஆதிக்கம் செலுத்துகிறது, மற்றும் சூட்சும உடலின் ஓடு மட்டுமே மீதம் இருக்கிறது. ஒரு தூல பிறவியில் செய்யும் *யோகம்* மற்றும் *தபஸ்* மூலம், அந்த பிறவியுடன் பொருந்தியுள்ள சூட்சும உடல் மற்றும் சக்கரங்கள் நீக்குவதை சாத்தியமாக்குகிறது. இந்த செய்முறை பூலோகத்தில் நடைபெறுகிறது. *சக்கரங்கள்* மற்றும் ஆன்மாவின் விரிவாக்கம் தொடர்பான இந்த பல்வேறு விதிகளை பூர்த்தி செய்ய, ஒரு சூரியனில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் இருக்கும் ஒரு தூல கிரகம், அதில் உடலுக்கு உகந்த காய்கறிகள், செழிப்பான பூமி, சுவாசிக்க உகந்த சூழ்நிலை, ஒரு தீங்கு விளைவிக்காத பருவநிலை மற்றும் புவியீர்ப்பு சக்தி என்று மனித வாழ்க்கைக்கு தேவையானது அனைத்தும் இருக்க வேண்டும். *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் அறியாமை உலகில் ஏழு *சக்கரங்கள்* உள்ளன. *தர்மத்தை* செய்வது மற்றும் சைவ சமய கோட்பாடுகளை பின்பற்றுவதன் மூலம், அவற்றை மெதுவாக மூடி படிப்படியாக அவற்றை செயலிழக்க செய்ய வேண்டும். ஒரு நபருக்கும் இன்னொரு நபருக்கும் இடையில் இருக்கும் அதிர்வலை வித்தியாசங்கள் இல்லாமல், சக்கரங்களின் இயல்பு அவர்களுக்குள் வேறுபடுகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 243

சூட்சும லோகத்தில்

உருவாக்கும் செய்முறை

சூட்சும லோகம் என்பது இந்த உலகில் இருக்கும், அதன் ஆகாச நகலாக விளங்குகிறது. நீங்கள் உங்கள் தூல உடலை துறந்ததும், அந்த லோகத்தில் நுழைகிறீர்கள். நீங்கள் தற்போது அதனுள் இருப்பதை அறியாமல் இருக்கிறீர்கள். அதுவும் இந்த உலகை போன்றே இருக்கிறது. நீங்கள் சூட்சும லோகத்தில் ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு பயணம் செய்யலாம். நான் இலங்கையில் 1948 ஆம் ஆண்டு படித்துக்கொண்டு இருந்த போது, அமெரிக்காவில் வசித்த எனது ஆசிரியர் என்னை அவ்வப்போது சூட்சும உடலில் வந்து சந்திப்பார். நான் அமெரிக்கா திரும்பிய பிறகு, இலங்கையில் இருந்து மக்கள் சூட்சும லோகத்தில் வந்து என்னை அமெரிக்காவில் சந்திப்பார்கள், மற்றும் நான் அவர்களை அவர்களின் சூட்சும உடல்களில் பார்ப்பேன். நான் இலங்கையில் இருந்த போது, எனது ஆசிரியருக்கு இமயமலையில் இருந்து வந்திருந்த ஒரு *யோகியை* அறிமுகம் செய்து வைத்தேன். அவர்கள் சூட்சும லோகத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அடுத்த நாள் அந்த *யோகி* என்னிடம் வந்து, எனது ஆசிரியரின் உருவத்தை பற்றி துல்லியமான விளக்கத்தை அளித்து, அவர்களுக்குள் நடந்த உரையாடலை பற்றியும் என்னிடம் தெரிவித்தார். நான் அமெரிக்கா திரும்பிய போது, என் ஆசிரியர் அந்த யோகியை பற்றி விசாரித்து விட்டு, அந்த யோகியின் உருவத்தை துல்லியமாக விளக்கி, அவரும் அதே உரையாடலை என்னிடம் தெரிவித்தார். ¶நாம் தினமும் சூட்சும உடலை பயன்படுத்தவில்லை என்றால், நம்மால் தூல உடலை இயக்க முடியாது. தூல உடல் இயங்குவது இல்லை, ஆனால் அதற்குள் இருக்கும் சூட்சும உடல் தான் இயங்குகிறது. நாம் சூட்சும உடலில் இருந்துகொண்டு தூல உடலை விட்டு வெளியேறினால், நாம் மீண்டும் அந்த தூல உடலில் நுழையும் வரை அதை இயக்க முடிவதில்லை. சூட்சும உடலில் உணர்வுடன் இருக்கும் போது, நாம் தூல உலகை காட்டிலும் சூட்சும உலகில் அதிகம் வாசம் செய்கிறோம். சூட்சும உடல் மற்றும் தூல உடல் தொடர்பில் இருந்தால் மட்டும், நாம் தூல உலகில் இருப்பதாக தோன்றுகிறது. ¶சூட்சும லோகம் உயர்ந்த அதிர்வலை அல்லது அதிக தீவிரமான அதிர்வு விகிதத்துடன் இருப்பதால், அதில் *பிராண சக்தி* அதிக சுதந்திரத்துடன் அதிக வேகமாக பாய்ந்து செல்கிறது. அங்கே தூல உலகில் இருக்கும் அனைத்தும் இருக்கின்றன. ஆனால் அந்த லோகத்தில் மனதின் மூலம் வஸ்துக்கள் விரைவாக வெளிப்படுத்தப்படுகின்றன, ஆனால் அவை தூல உலகில் அதிக மெதுவாக உருவாக்கப்படுகின்றன. தூல உடல் செயல்படுவதற்கு *மூலாதார சக்கரம்* தேவைப்படுவதால், அது நம்மை இன்னொரு கால அளவீட்டிற்குள் அழைத்து செல்கிறது. சூட்சும லோகத்தில் முதல் சக்கரம் அதிக ஆதிக்கம்

செலுத்துவது இல்லை என்பதால், நாம் பகுத்தறிவு மற்றும் மன விருப்பத்துடன் இருக்கிறோம். நாம் அந்த லோகத்தில் இருக்கும் போது ஒரு வீடு கட்ட விரும்பினால், நாம் அதைப் பற்றி சிந்தித்ததும் சில நிமிடங்களில் ஒரு வீடு கட்டப்படுகிறது, ஆனால் தூல உலகில் வீடு கட்டுவதற்கு பல மாதங்களாகிறது. ¶நாம் சூட்சும லோகத்தில் இறந்தவர்களையும் பார்க்கிறோம், பூலோகத்தில் தூல உடலில் இருந்தாலும் சிறிது காலத்திற்கு அதை விட்டு வெளியே வந்தவர்களையும் காண்கிறோம். அவர்கள் உறங்கும் போது தங்கள் தூல உடலை விட்டு வெளிவந்து, சூட்சும லோகத்தில் பயணம் செய்து வருகிறார்கள். அதனால் அங்கே பூலோகத்தை விட மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது, ஆனால் அது ஒரு லேசாக இருப்பதால், அதில் இடமும் அதிகமாக இருக்கிறது. அதன் பிறகு பூமியில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் இடங்கள் மற்றும் கடல்களும் சூட்சும லோகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. ¶நாம் எதற்காக உறங்குகிறோம்? நாம் கனவு காண பயன்படுத்தும் விஞ்ஞானமய கோசம் சூட்சும உடலில் இருக்கிறது, மற்றும் அது அந்த உடலின் சூட்சும மூளையை பயன்படுத்தி செயல்படுகிறது. சூட்சும உடல் காலையில் விழித்திருக்கும் போது சில மணி நேரங்களுக்கு தூல உடலை பயன்படுத்துகிறது, மற்றும் விஞ்ஞானமய கோசம் சூட்சும உடலின் மூளை மற்றும் தூல உடலின் மூளையை பயன்படுத்தி செயல்படுகிறது. காரண சரீரம் என்கிற ஆனந்தமய கோசத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த உடலை உறங்கும் போது குறைந்தபட்சம் இரண்டு முறை தொடர்பு கொள்கிறோம், மற்றும் அது பெரும்பாலும் நிறைவுபெற்ற *கர்மவினைகளில்* இருந்து விடுதலையை மட்டும் வழங்காமல் சூட்சும உடல், விஞ்ஞானமய கோசம், தூல உடல் ஆகியவற்றிற்கு ஒரு புதிய சக்தியை தாராளமாக வழங்குகிறது. அதனால் நாம் உறங்கும் போது தெய்வீக பண்புடனும் தொடர்புகொள்கிறோம். சூட்சும உடலுக்கு உறங்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், தூல உடலுக்கு தெய்வீக தொடர்பு நிரந்தரமாக இருந்தால் அல்லது சக்தி பெருந்திரளாக பாய்ந்து வந்தால் அதற்கும் அதிக உறக்கம் தேவையில்லை என்பதை நாம் நினைவில் வைத்து இருக்க வேண்டும். ¶உணர்வின் சுழற்சி இருபத்தி நான்கு மணி நேர கால அளவை கொண்டுள்ளது. நமது சாட்சி தூல உடவில் இருந்து மனம், மனவெழுச்சி அல்லது சூட்சும உடலின் உணர்வு, அல்லது ஆழ்ந்து உறங்கும் போது ஆன்மாவின் உணர்வுக்கு நகர்கிறது. ஆழ்ந்த உறக்கத்தின் போது எதுவும் நினைவில் இருப்பதில்லை. கனவுகளை ஏன் நினைவில் வைத்திருக்க முடிவதில்லை என்று மக்கள் வியக்கிறார்கள். நேற்று இரவு கண்ட கனவை நினைவுக்கூர்வது கடினமாக இருப்பதை போல, மூன்று நாட்களுக்கு முன்பு மதியம் பன்னிரண்டு மணி முதல் மாலை நான்கு மணி வரை எந்த சிந்தனையில் இருந்தீர்கள் என்பதை நினைவுக்கூர்வதும் கடினமாக இருக்கிறது. ஆனால் அந்த கனவு உங்களது வழக்கத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தால், அதை உங்களால் நினைவுக்கூர முடியும். மூன்று

நாட்களுக்கு முன்னர், மதியம் பன்னிரண்டு மணி முதல் மாலை நான்கு மணி வரை, உங்களது சிந்தனைகள் வழக்கத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தால், உங்களால் அதை நிச்சயமாக நினைவுக்கூரமுடியும். உறங்கும் நிலை மற்றும் விழித்து இருக்கும் நிலையின் தொடர்பு தூண்டப்படுவது இல்லை, ஆனால் நினைவுக்கூரும் செய்முறை தூண்டப்படுகிறது. ¶சூட்சும மூளை மற்றும் தூல மூளை வெவ்வேறு அதிர்வு விகிதத்தில் இருப்பதால், நாம் நமது சூட்சும அனுபவங்களை வழக்கமாக நினைவில் வைத்து இருப்பதில்லை. அதனால் நாம் உறங்கும் போது சூட்சும உலகில் இருந்துவிட்டுப் பின்னர் தூல உடலுக்கு திரும்பியதும், சூட்சும லோகத்தில் நாம் பெற்ற அறிவு, நான்கு நாட்களுக்கு பிறகு தூல உலகில் கசியத் தொடங்குகிறது. இந்த அறிவு சேகரிக்கப்படுகிறது, மற்றும் நாம் அதை ஒரு உட்புற அறிதல் என்று அழைக்கிறோம். உள்ளிருந்து வருவதாக தோன்றும் யோசனைகளை, நாம் அதற்கு முன்பு சூட்சும லோகத்தில் கற்றுக்கொண்டு விவாதித்தும் இருக்கிறோம்.

சனிக்கிழமை

பாடம் 244

பயணம் செய்யும்

சாட்சி

உட்புறம் மனம் நிலையாக இருந்து, அதன் வழியாக ஒரு பாதரசம் போன்று பல்வேறு நிலைகளில் விழிப்புடன் இருக்கும் சாட்சி பயணம் செய்வதை குறிப்பிடும் *ஷுமிப்* கண்ணோட்டத்தில் இருத்து கனவுகளை புரிந்துக்கொண்டு ஆய்வு செய்வதன் மூலம், ஒரு சாதகன் தினமும் இங்கும் அங்குமாக பயணம் செய்யும் போது விழிப்புணர்வை பெறும் உணர்வு மற்றும் மனதின் பகுதிகள் மீது உணர்ச்சிப்பூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் பற்றின்றி இருக்க செய்கிறது. அதனால் நமது கனவில் நடக்கும் நிகழ்வுகள் மீது நாம் உணர்வுப்பூர்வமாக அல்லது மனப்பூர்வமாக ஈடுபாட்டுடன் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இதைப்போன்று நாம் விழிப்புடன் இருக்கும் போது, தொலைகாட்சியில் அல்லது நாம் தெருவில் நடந்து செல்லும் போது பார்த்து அனுபவிக்கும் நிகழ்ச்சிகளுடன், நாம் மூன்றில் இரண்டு பங்கு கூட மனப்பூர்வமாக மற்றும் உணர்ச்சிப்பூர்வமாக பொருந்தி இருப்பது இல்லை. அதனால் *ஷுமிப்* கண்ணோட்டம் அடிமனதில் நன்றாக அமைந்ததும், கனவு உணர்வு மற்றும் விழித்திருக்கும் உணர்வை ஒப்பிட்டு பார்த்து, இரண்டும் ஒன்று தான் என்று உணர முடிகிறது. சுத்த சைதன்யம் அல்லது சாட்சியாக இருக்கும் *நிப்*, எப்போதும் உறங்குவது இல்லை. பாதரசம்

போன்றும், கண்ணாடி போன்றும் இருக்கும் இந்த வஸ்து, அங்கே இங்கே என்று உணர்பவரின் விருப்பத்தின் மூலம் வழிகாட்டப்பட்டு பயணம் செய்கிறது. இது வணங்கத்தக்க *புருஷா* எனப்படும் ஆன்மாவின் கண் ஆகும். இது ஆன்மா உருவான தருணத்தில் இருந்து தொடர்ந்து விழிப்புடன் இருக்கிறது, மற்றும் ஆன்மா இறுதியாக சிவபெருமானுடன் ஐக்கியமாகும் போது, அது மிகவும் உயர்வான மெய்ஞ்ஞான முழுமையை அனுபவிக்கிறது. தியானம் செய்பவர்களில் பெரும்பாலானோர் உறங்கும் போது, சூட்சும லோகத்தில் நுழைவது இல்லை. அவர்கள் இரவு உறங்கும் போது, சூட்சும லோகத்தில் ஆழமாக சென்று, மெய்ஞ்ஞான நிலையில் நுழைந்து, அழகான ஆனந்தமய கோசத்தில் நுழைகிறார்கள். அங்கே அவர்கள் ஆனந்தமய கோசத்தில் இருக்கும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்கிறார்கள். ¶சூட்சும லோகத்தில், சிந்தனைகள் மூலம் கருத்து பரிமாற்றம் நடைபெறுகிறது. அது சிந்தனை உலகமாக இருக்கிறது. ஆன்மாவின் உட்புற லோகத்தில், நுண்ணறிவு ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு லேசான அதிர்வுகள் மூலம் அனுப்பப்படுகிறது. இது அழகான தகவல் தொடர்பாக இருக்கிறது. ஆனந்தமய கோசம் மிகவும் சுத்தமான உடலாக இருந்தாலும், அது சூட்சும லோகத்தில் தோற்றம் அளித்து சூட்சும உடல்களில் செயல்படுபவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியும். சூட்சும லோகத்தில் இந்த இரண்டு உடல்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தூல உடலைப் போல, மனோமய கோசத்தில் அங்கம் வகிக்கும் பகுத்தறியும் உடலும் நாள் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. மனிதன் தனது அறிவை சூட்சும லோகத்திற்கும் எடுத்து செல்கிறான். ¶இன்றைய மனிதன் தனது மூதாதையர் போல தனது தூல உடலை அதிகம் பயன்படுத்துவது இல்லை. அவன் உட்காருவதற்கு, நடப்பதற்கு மற்றும் அவ்வப்போது உடற்பயிற்சி செய்வதற்கு மட்டுமே தனது உடலை பயன்படுத்துகிறான். இதன் காரணமாகவே, அவனது பெரும்பாலான சக்தி அறிவு அல்லது புத்தியாக மாற்றம் பெறுகிறது. நமது சூட்சும உடல், ஆனந்தமய கோசம் மற்றும் பகுத்தறியும் உடல் ஆகியவை உட்புற ஆகாசத்தில் குறிப்பிட்ட வடிவங்களை கொண்டுள்ளன. அவற்றை இன்றைய காலத்தில் நல்ல கல்வி அறிவுடன் நல்ல வளர்ச்சி பெற்ற மனிதனால் சிறப்பாக பயன்படுத்தப்படுகிறது. இந்த உடல்களை புரிந்துகொள்வதற்கு, நாம் வழக்கமாக சிந்திக்கும் முறையை மறந்து மாறுபட்ட முறையில் ஒரு புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்க வேண்டும். இதனால் நமக்கு நுண்ணறிவுகள் கிடைக்கும். ¶மக்களில் சிலர் சிலசமயம் பேய்களை நினைத்து பயப்படுகின்றனர். அவை ஒரு தூல உடல் இல்லாத சூட்சும சக்திகளாக இருக்கின்றன. அவை மிகவும் அபூர்வமாக, நமது பூலோகத்தின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றன மற்றும் அவை பொதுவாக தீங்கற்ற சக்திகளாக இருக்கின்றன. பேய் ஒரு தனிநபராக, நம்மைப் போன்று ஆன்மாவாக இருந்து தூல உடலில் வாழ்க்கையை வாழ்ந்து பிறகு இறந்து, தற்போது பிரேதலோகம் என்கிற சூட்சும லோகத்தில் வாசம் செய்கின்றன.

¶பெரும்பாலான மக்களுக்கு பேய் பற்றி முழுமையாக தெரியாது என்பதால், பேய் என்பது பயமுறுத்துவது, அச்சுறுத்துவது என்று வழக்கமாக பிரதிகூலமான சூழ்நிலைகளுடன் பொருந்தி இருக்கிறது. ஆனால் பேயாக இருக்கும் அந்த நபர், வெளிப்புற உலகின் நிழலாக விளங்கும் அந்தர்லோகத்தில், தான் உயிருடன் வாழ்ந்துகொண்டு இருப்பதாக கருதுகிறார். பேய்கள் பெரும்பாலான சமயங்களில் நம்மை பார்க்கின்றன, ஆனால் நாம் அவற்றை மிகவும் அபூர்வமாக பார்க்கிறோம். குடும்பத்தில் எல்லோரும் ஒன்றாக கூடும் போது, அவைகளை அழைக்கவில்லை என்றால் அல்லது அவைகளை நினைத்து துக்கம் அனுசரித்தால், அவை வேதனைப்படுகின்றன. அந்த பேய்களுக்கு தங்களது "மரணம்" பற்றிய உணர்வு மெதுவாக தோன்றுகிறது. அந்த பேய்கள் கதவுகள் வழியாகவும் சுவர்கள் வழியாகவும் நடந்து செல்வதை அவை உணர்ந்ததும், தங்களது இயல்பு நிலை அந்த பேய்களுக்கு புரிய வருகிறது. ¶ஹாலோவீன் போன்று சில ஜோதிட முக்கியத்துவம் வாய்ந்த தருணங்களில், பேய்கள் எளிதில் தென்படுகின்றன. அத்தகைய ஒரு சமயத்தில் நான் சிங்கப்பூரில் இருந்தேன். அப்போது தெருவில் கூடியிருந்த சீன நாட்டு மக்கள், உட்புற லோகத்திற்கு நெருப்பு மூலமாக பிரார்த்தனைகளை அனுப்பிக்கொண்டு இருந்தனர். அந்த பிரார்த்தனைகள் காகிதங்களில் அச்சிடப்பட்டு, கடைகளில் இருந்து விலைக்கு வாங்கப்பட்டு, பெரும்பாலும் ஒவ்வொரு தெருவிலும் காகித குவியலாக எரிக்கப்பட்டன. அந்த பிரார்த்தனைகளின் சூட்சும நகல்களை பயிற்சி பெற்ற சூட்சும உதவியாளர்கள் சேகரித்து, உயிர் துறந்த சொந்தங்களுக்கு வழங்குவார்கள். அவர்கள் அதைப்படித்து பிரார்த்தனைகளை தெரிந்துகொள்வார்கள். இந்த நிகழ்வை பற்றி நாங்கள் விசாரித்த போது, வருடத்தில் அந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் பேய்கள் வருகை தருவதாக தெரிந்துகொண்டோம். மேலும் இதை உறுதிப்படுத்தும் வகையில், எங்கள் ஓட்டலில் காலையில் விழிக்கும் போது, நானும் எனது மடவாசிகளும் பேய்களை பார்த்தோம். அந்த பேய்கள் எங்கள் படுக்கைகளை பார்த்துக்கொண்டு, சுவர்கள் வழியாக நடந்து இன்னொரு அறைக்கு சென்று, மற்ற விருந்தாளிகளை நோட்டமிட்டு கொண்டு இருந்தன. நாங்கள் எல்லோரும் ஒரே பேய்களை பார்த்ததால், இது எல்லோருக்கும் ஒரு பொதுவான அனுபவமாக விளங்கியது. இந்த சூட்சும சக்திகளின் சூட்சும உடலை, அவர்களின் *பிராணமய கோசம்* வெள்ளை நிறத்தில் போர்த்தி இருந்ததால், சிலர் அந்த உருவத்தை கண்டு பயந்தனர். அந்த பேய்கள் எக்டோபிளாஸ்மிக் பொருளால் உருவான காந்த உடலை தொடர்ந்து தக்கவைத்து இருந்ததால், அவை வெள்ளை நிறத்தில் காணப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 245

பேய் பிடித்தல் மற்றும்

சூட்சும சக்திகளுடன் தொடர்புகொள்ளும் திறன்

பேய்கள் மர்மமாக, புதிராக மற்றும் பலரால் சரியாக அறியாத ஒன்றாக இருப்பதால், அதைக்கண்டு பலர் அஞ்சுகிறார்கள். அந்த பேய்கள் தூல உலகில் தங்களுக்கு பரிச்சயமான இடத்திற்கு அருகில் வசிக்கின்றன மற்றும் அந்த பேய்களுக்கு பரிச்சயமான மக்களுக்கு அவை அவ்வப்போது தென்படுகின்றன அல்லது அவர்களால் உணரப்படுகின்றன. இந்த அனுபவம் குறிப்பாக, சமீபத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு ஏற்படுகிறது. உயிர் துறக்கும் போது, அவர்களின் சூட்சும உடல் அவர்களின் தூல உடலுக்கு மேலாக சுற்றிக்கொண்டு இருக்கிறது. இறந்துவிட்ட உணர்வு அவர்களுக்கு ஏற்படும் வரை, அவர்கள் அங்கே சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இறுதியில் அவர்கள் இறந்த விவரத்தை அந்தர்லோக தூதர்கள் விளக்கி, அடுத்த பிறவிக்கு முன்னேற்பாடுகளை மேற்கொள்ள தேவலோகத்திற்குள் அழைத்து செல்கின்றனர். சிலசமயங்களில் விநோதமாக, சூட்சும நபர் தனக்கு பிடித்தமான இடத்தில் நீண்டகாலம் வாசம் செய்வதால், அவரது இருப்பை பூலோக மக்களால் உணரவும் முடிகிறது. இதையே நாம் பேய் நடமாட்டம் என்கிறோம். ¶சில சமயங்களில் அபூர்வமாக, நமக்கு அருகில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பேய்கள் இருப்பதை உணர்வோம். இவ்வாறு நடைபெறும் போது, நாம் இளஞ்சிவப்பு மற்றும் வெளிர் நீல நிறத்தை கற்பனை செய்து அன்பை வெளிப்படுத்த வேண்டும். இது அந்த பேய்களுக்கு ஆறுதல் தருவதாக இருக்கும், மற்றும் அவை விட்டு சென்ற வாழ்க்கை சிறப்பாக இருக்கிறது என்பதை உணர்ந்துக்கொண்டு, அவை அனுபவித்த மந்தமான நிலையில் இருந்து விடுபட்டு, அவற்றின் பரிணாமத்தை தொடர்வதற்கு வழிவகுக்கும். இது அன்பை வெளிப்படுத்தும் மிகப்பெரிய சித்தி ஆகும். எல்லோரிடமும் இந்த சக்தி இருந்தாலும், வெகு சிலரே இதை பயன்படுத்துகிறார்கள். ¶ஒரு வகையில், தூல உடல் இல்லாமல் இருக்கும் தேவலோக *தேவர்களையும்* பேய்கள் என்றே குறிப்பிடலாம். ஒரே வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் தாங்கள் யார் என்பதை முழுமையாக புரிந்துக்கொண்டு, நமது மதத்தின் மகாதேவர்களுக்கு உதவி செய்து, தூல பிறவிகளுக்கு மத்தியில் இருக்கும் கடமைகளில் முழுமையாக ஈடுபட்டு வருகிறார்கள். மகாதேவர்களின் இல்லங்களாக விளங்கும், நமது மதத்தின் பல்லாயிரக்கணக்கான மாபெரும் கோயில்களில், அவர்கள் பெரும்பாலும் வசிக்கிறார்கள். ¶பூலோகத்தில் கட்டுண்டு இருக்கும் ஆன்மா ஒரு தூல நபரின் உடல் மீது கட்டுப்பாடு பெறுவதை, பேய் பிடித்தல் என்று குறிப்பிடுகிறோம். அந்த ஆன்மாவிற்கு நிறைவேறாத ஆசைகள் இருந்து, தனக்கு ஒரு தூல உடல் கிடைக்காததால், அது பெரும்பாலும் அதிக வருத்தத்தில் இருக்கும். அத்தகைய ஒரு ஆன்மா, போதை மருந்துக்கு அடிமையான உடல் அல்லது தனது உடலை விட்டு ஒரு குறிக்கோளுடன்

தற்காலிகமாக வெளியேறியவரின் உடல் என்று பொருத்தமான ஒரு உடலை தேடிப்பிடித்து, அந்த உடலை பயன்படுத்தி தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்கிறது. தேவையற்ற சூட்சும சக்தியை வெளியேற்றுவதற்கு ஆசியாவில் நடனங்கள், பாடல்கள் மற்றும் கோயில் விழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன, மற்றும் அமெரிக்காவில் இதற்கென்று மின் அதிர்ச்சி சிகிச்சை வழங்கப்படுகிறது. இதுவும் அடிப்படையில் பேய் ஓட்டுவதைப் போன்றது தான். ¶அடுத்ததாக சூட்சும சக்திகளுடன் தொடர்பு கொள்ளும் திறமையை பார்ப்போம். அவற்றுடன் பல்வேறு வழிகளில் தொடர்பு கொள்ள முடிகிறது. அதில் ஒன்றாக, புலனாகாதவற்றை காணும் ஆற்றலுடன், அந்த சூட்சும சக்தியிடம் இருந்து படங்கள் மற்றும் கருத்துக்களை பெற முடிகிறது. அடுத்ததாக புலனாகாதவற்றை கேட்கும் ஆற்றலுடன், அவை உண்மையில் பேசுவதை கேட்க முடிகிறது. அடுத்ததாக, அந்த சூட்சும சக்தி தொடர்பு கொள்ளும் அமைப்பை பயன்படுத்தி தனது தகவலை வழங்குகிறது. தொடர்பு கொள்ளும் அமைப்பு ஒரு தற்காலிக அமைப்பாக இருக்கிறது மற்றும் பாதுகாப்பாக இருப்பதற்கு, அது ஒரு உறுதியான ஏற்பாடாக இருக்கவேண்டும். சூட்சுமமாக பூலோகத்தில் கட்டுண்டு இருக்கும் சக்திகள், தொடர்புகொள்ள உதவி புரியும் நபருக்கு அல்லது அவர் வழியாக மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தாமல், அந்த செய்முறை பாதுகாப்பு வழங்குவதாக இருக்கவேண்டும். அந்த செய்முறை சில அகக் குறியீடுகளுடன் அமைந்தாலும், தொடர்பு நமது விருப்பத்திற்கு ஏற்ப எப்போதும் நடைபெறுவது இல்லை. சூட்சும சக்திகளுடன் தொடர்புகொள்ள ஆர்வத்துடன் இருப்பவர்கள், தங்கள் மெய்ஞ்ஞானத்தை ஒருமுகப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையே நான் அறிவுறுத்த விரும்புகிறேன். உங்கள் ஆசிரியர் வழங்கும் குறியீடு மற்றும் அங்கீகாரம் இல்லாமல், இதைப்போன்ற செயல்களில் ஈடுபட்டால், அது நிச்சயமாக மனநோயாளிகள் காப்பகத்திற்கு தான் அழைத்து செல்லும். அத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாமல், உங்களது வாழ்க்கையில் அதிர்ச்சி தரும் சம்பவங்கள், உணர்ச்சிப்பூர்வமான குழப்பம் ஏற்பட்டால், நீங்கள் கீழ்நிலை லோகத்தில் இருக்கும் நபர்களுடன் நாள் முழுவதும் பேசவேண்டி இருக்கும். அவர்கள் தொடர்பை துண்டிக்கவும் முடியாமல் அவதிப்படுவீர்கள். முதலில் ஒரு நபர் வந்து பேசுவார், அடுத்து இன்னொருவர் வருவார். இவ்வாறு மக்கள் தொடர்ந்து வந்து உங்களை முழுமையாக மாற்ற முயற்சி செய்வார்கள். அத்தகைய தலையீடுகளில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள, சூட்சுமமாக பயிற்சி பெற்ற மறைஞானிகள் எப்போதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

வேத சாத்திரச் செய்யுள்கள்

உனது குடும்பத்தில் உனது குழந்தைகள் மூலம் அன்பு பெருகட்டும்! நீ இந்த வீட்டிலே உன் குடும்பத்தை காக்க விழிப்புடன் இருக்கவேண்டும். நீ உன்

கணவனுடன் உன்னை முழுமையாக ஐக்கியம் செய்துகொள்வாயாக. இவ்வாறு நீங்கள் இருவரும் முதுமையோடு வளர்ந்து குடும்பத்தை நிர்வாகம் செய்யுங்கள்.

ரிக் வேதம் 10.85.27. வேஎ, ப. 255

அக்னி தேவனே, ஒளிப்பொருளே! எங்கள் எல்லா செயல்களையும் அறிபவன் நீ. வினைப்பயனை அனுபவிப்பதற்காக எங்களை சன்மார்க்கத்தில் அழைத்து செல். எங்களை கொடிய தவறுகளில் இருந்து விலக்கு. உனக்கு மீண்டும் மீண்டும் எங்கள் வணக்கங்கள்.

சுக்ல யஜூர் வேதம், ஈசாவாஸ்ய உபநிடதம், 18. வேஎ, ப 831

இகலோகம் பரலோகம் என்று மனிதனின் ஆன்மாவிற்கு இரண்டு இருப்பிடங்கள் உள்ளன. மூன்றாவது இடமாக உறக்கம் மற்றும் கனவுகளின் உலகம், அந்த இரண்டிற்கும் இடையில் இருக்கிறது. அவன் இந்த இருப்பிடங்களின் எல்லையில் நின்றுகொண்டு, இகலோகத்தில் கிடைத்த உடையின் துணையுடன் வேதனைகள் மற்றும் மகிழ்ச்சிகளை காண்கிறான். அவன் கனவு காணும் போது, தான் விழித்து இருக்கும் உலகின் கருத்துக்களை விலக்கிவிட்டு, தனது தூல உடலை கைவிட்டு, சுயமாக பிரகாசித்து கனவு காண்கிறான். இந்த நிலையில் அவன் சுயம் ஜோதியாக விளங்குகிறார்.

சுக்ல யஜூர் வேதம், பிருஹதாரண்யக உபநிடதம், 4.3.9. ப, 134

யாருக்கு கபடம், பொய்மை அல்லது வஞ்சகம் இல்லையோ, அவருக்கு பரிசுத்தமான பிரம்மலோகம் சித்தியாகும்.

அதர்வண வேத, பிரஷ்ன உபநிடதம் 1.16. உபரா, ப. 380

அக்கினியே! இந்த பெண் கணவனை அடைவாளாக. இனி சோமன் என்கிற அரசன் இவளுக்கு சௌபாக்கியத்தை வழங்குவான். அவள் தனது கணவனுடன் சேர்ந்து நல்ல அழகை பெற்று, தனது மகன்களுடன் வீட்டில் இராணி போல இருக்கட்டும். குகைகள் நிறைந்த காடு விலங்குகளுக்கு பிரியமாவதைப் போல, அவள் தனது கணவனை விரோதிக்காமல், எல்லா இன்பங்களையும் அனுபவித்து, அவனது பிரியத்தை பெறுவாளாக.

அதர்வண வேதம் 2.36.-4 ஹிவே, ப. 125

எல்லா உயிர்களுக்கும் தர்மம் தேன் போல இனிக்கிறது, மற்றும் தர்மத்திற்கு எல்லா உயிர்களும் தேன் போல இருக்கின்றன. தர்மத்தில் இருக்கும் பிரகாசமான, அழிவில்லாத சக்தியும், உடலில் தர்மத்துடன் அடையாளம் காணப்படும் பிரகாசமான, அழிவில்லாத சக்தியும் ஒன்றே. அதுவே ஆத்மா, அதுவே அழிவில்லாதது, அதுவே பிரம்மம் மற்றும் அனைத்தும் அதுவே.

சுக்ல யஜூர் வேதம், பிருஹதாரண்யக உபநிடதம், 2.5.11. வேஎ, ப. 716

ஒருவன் துன்புறுத்துவதன் மூலம், மருந்துகளின் மூலம், தொல்லைகள் மூலம் கருக்கலைப்பு செய்யும் குற்றங்களுக்கு முறையே அதிகமான, மிதமான மற்றும் குறைவான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

கௌடில்யரின் அர்த்தசாத்திரம் 229. கௌஅ, ப. 277

நாங்கள் மங்களகரமான நல்ல விஷயங்களை எங்கள் காதால் கேட்க வேண்டும். எங்கள் கண்களால் மங்களகரமான நிகழ்வுகளை பார்க்க வேண்டும். நாங்கள் ஆரோக்கியமான உடல்களுடன் உனது துதி பாடி, பிரம்மதேவன் எங்களுக்கு அருளிய ஆயுசை முழுமையாக பெறவேண்டும்.

ரிக் வேதம் 1.89.8. வப, ப. 287

ஒற்றுமையுடன் இருக்கும் அவர்களுக்கு, சரியான உணவுகள் கிடைக்கட்டும். அவர்களுக்கு வெதுமதிகள் குறையாமல் இருக்கட்டும். அவர்கள் இறைவனுக்கு அளித்த வாக்குறுதிகளில் இருந்து தவறாமல் இருக்கிறார்கள். அவர்கள் உங்களை துதி பாடவும் மறப்பது இல்லை. இவ்வாறு அவர்கள் சிறந்த புகழை அடைகிறார்கள். தம்பதிகள் புதல்வர்களோடு சேர்ந்து தீர்காயுசுடன் வாழ்கிறார்கள். அவர்கள் பொன் ஆபரணங்களை அணிந்து இருக்கிறார்கள். தேவர்களுக்கு விருப்பமான யக்ஞங்களை செய்து, நல்ல செல்வதை அடைந்து, தேவர்களுக்கு இன்பம் தரும் ஹவிஸ்களை வழங்கி, தம்பதிகள் தேக ஐக்கியத்தை அனுபவித்து, தேவர்களை போற்றுகிறார்கள்.

ரிக் வேதம் 8.31.6-9. வேஎ, ப. 265

சோம பானத்தால் ஆனந்த பரவச நிலையில் இருக்கும் இந்திர தேவன், தேவர்களுக்கு விரதங்களை எல்லாம் புலப்படுத்துகிறார்.

ரிக் வேதம் 8.32.28. ரிவேப, தொகுப்பு 9, ப. 3,025

தனிமையான இடத்தில், சுத்தமாக தனக்கு உகந்த ஆசனத்தில் அமர்ந்தவன், கழுத்து, தலை மற்றும் உடலை சமமாக வைத்தவன், மேலான சந்நியாச ஆசிரமத்தில் இருந்தவனாக, இந்திரியங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தி, பக்தியுடன் தன் குருவை வணங்கி, பிரம்மத்தை தியானம் செய்ய வேண்டும்.

அதர்வண வேதம், கைவல்ய உபநிடதம் 5. வேஎ, ப. 442

நூறு சரத்காலங்கள் நாங்கள் பார்க்கவேண்டும். நூறு சரத்காலங்கள் நாங்கள் ஜீவிக்க வேண்டும். நூறு சரத்காலங்கள் நாங்கள் விழிக்க வேண்டும். நூறு சரத்காலங்கள் நாங்கள் ஞானத்தை பெறவேண்டும். நூறு சரத்காலங்கள் நாங்கள் செழிப்பாக வேண்டும். நூறு சரத்காலங்கள் நாங்கள் வாழ வேண்டும். நூறு சரத்காலங்கள் நாங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். நாங்கள் மேலும் நூறு சரத்காலங்கள் நாங்கள் வாழ வேண்டும்!

அதர்வண வேதம், 19.67. வேஎ, ப. 303

"நான் மறுபிறவி எடுக்க வேண்டும்," என்று ஒருவன் ஆசையுடன் ஒரு பிராமண குடும்பம் அல்லது அரச குடும்பத்தின் மீது கவனம் செலுத்தினால், அவன் அந்த குடும்பத்தில் பிறக்கிறான்.

சாம வேதம், ஜைமினிய உபநிடதம் பிராமண, 3.28.3-4. வேஆ, ப. 115

ஒருவன் தனது வாழ்வுநிலைக்கு ஏற்ற ஆசிரம தர்மங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்பது விதி ஆகும். மற்ற அனைத்தும் ஒரு தண்டில் இருந்து

தோன்றும் கிளைகள் போன்றவை. இவற்றின் துணையுடன் ஒருவன் மேல்நோக்கி செல்கிறான், இல்லையென்றால் கீழ்நோக்கி செல்கிறான்.

கிருஷ்ண யஜுர் வேதம், மைத்ரி உபநிடதம் 4.3. மொஅடி உபரா, ப. 810

தைரியபூர்வகம் விலயனம்

धैर्यपूर्वकं विलयनम्



பாகம் மூன்று

தைரியமாக ஐக்கியமாதல்

இந்து தர்ம சுகானி

हिन्दुधर्मसुखानि



இந்து சமயம் அளிக்கும் இன்பங்கள்

இந்த பரமாத்துமாவை தேவர்கள் எல்லோரும் வழிபடுகிறார்கள். இதன் காரணமாகவே, அவர்களுக்கு எல்லா லோகங்களும் எல்லா ஆசைகளும் நிறைவேறுகின்றன. இந்த பரமாத்துமாவை அறிந்து ஆத்ம ஞானத்தை யார் பெறுகிறானோ, அவனது ஆசைகள் மற்றும் அவன் அடைய விரும்பும் லோகங்கள் அவனுக்கு கிடைக்கப்படுகின்றன.

சாம வேதம், சாந்தோக்ய உபநிடதம் 8.12.6. உபமா, ப. 126



தான் ஒரு செழிப்பான மற்றும் திருப்திகரமான வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான ஒவ்வொரு தேவை மற்றும் ஒவ்வொரு வளத்தையும் தனது மதம் வழங்கும் என்பதை அறிந்துள்ள ஒரு இளம் இந்து தனது கைகளை மகிழ்ச்சியுடன் விரிக்கிறான். சிவபெருமானின் சடாமுடியில் இருந்து கங்கை பாய்ந்து செல்ல, அவர் தனது கைகளில் வழக்கம் போல் காப்பு அணிந்து இருக்க, அவர் அந்த அன்பரை கோர்த்த கைகளுக்கு மத்தியில் பாதுகாப்பாக தாங்கி பிடித்து இருக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 246

மறுபிறவி பற்றிய

அறிவு

இன்று இரவு நாம் நமது பழமை வாய்ந்த இந்து சமயம் வழங்கும் மகிழ்ச்சிகள் மற்றும் இன்பங்களை பற்றி பேச இருக்கிறோம். அது பிரபஞ்சத்தில் இருக்கும் மறுபிறவி செய்முறைகள் மீது நம்பிக்கையையும், *கர்மவினை* விதிகள் பற்றிய அறிவு மற்றும் எல்லோருக்கும் வாழ்க்கையில் முறையான குறிக்கோள் மற்றும் அந்தஸ்த்தை வழங்கும் தர்மம் பற்றிய விவேகத்தையும் வழங்கி, அருமையான உணர்வுகளை வெளிக்கொண்டு வருகிறது. அது மற்ற மதங்கள் அனைத்தும் ஒரே இறைவன் படைத்த பல்வேறு வெளிப்பாடுகள் என்று தாராள மனதுடன் ஏற்றுக்கொள்ளும் பண்பு, சக்திவாய்ந்த கோயில்களை சுற்றி வரும் ஒரு முழுமையான தெய்வீக பாதையின் ஆசிகள் மற்றும் முனிவர்கள் மற்றும் மகான்கள் மற்றும் *குருமார்கள்* மூலம் உபதேசிக்கப்பட்ட யோக பாதையை அடிப்படையாக கொண்ட ஆழமான ஆன்மீக போதனைகளின் நிறைவேற்றத்தை கொண்டு வருகிறது. நமது மதம் மிகவும் வலுவாக, மிகவும் செழிப்பாக பல்வேறு வடிவங்களில் இருப்பதால், ஒருவர் அதை முழுமையாக அறிந்து கொள்வது கடினமாகிறது. அது மிகவும் பெரிய மதமாக இருப்பதால், அதைப்பற்றி எளிமையான தத்துவங்களை கொண்டவர்களுக்கு விளக்குவது கடினமாகிறது. அதிலும் குறிப்பாக அவர்கள், எண்ணற்ற வேற்று மத சமயப்பணியாளர்கள் மற்றும் படையெடுத்தவர்கள் மூலம் நமது மதம் பற்றி வழங்கிய தவறான பிரச்சாரங்களை கேட்டு இருந்தால், அவர்களிடம் நமது மதத்தின் மேன்மையை பற்றி விளக்குவது நமக்கு மேலும் கடினமாகிறது. இது இந்து மதத்தின் இயல்பான மேன்மையை உலகம் அறிந்து கொள்வதற்கு உகந்த சமயமாக விளங்குகிறது. ஆனால் அதைப் பற்றி ஒரு மாலைப் பொழுதில் விளக்குவது கடினமாக இருக்கும். "காலம் சிறிதாக இருக்கிறது. ஆனால் விடயம் பெரிதாக இருக்கிறது," என்று கொழும்புத்துறையை சேர்ந்த எனது *சத்குரு* சிவ யோகசுவாமி கூறுவார். ஆனால் நாம் உலகெங்கும் பரவியிருக்கும் எண்ணற்ற அன்பர்களுக்கு இன்பம் மற்றும் மகிழ்ச்சியை வழங்கும் சில இந்து மத அம்சங்களைப் பற்றி இன்று தெரிந்துகொள்ளலாம். ¶ஒவ்வொரு

இந்துவிற்கும் மறுபிறவியில் வலுவான நம்பிக்கை இருப்பதால், அது மரணம் பற்றிய அச்சம் மற்றும் பயத்தை முற்றிலும் நீக்குகிறது. எந்த ஒரு உண்மையான இந்துவும் மரணத்தை கண்டு அஞ்சுவதும் இல்லை, அதை எதிர்பார்த்து இருப்பதும் இல்லை. இந்துவிற்கு *மரணம்* என்ற சொல் ஒரு மாறுபட்ட பொருளை கொண்டுள்ளது. அவன் மரணம் என்பது தனது இருப்பின் முடிவாக கருதுவதும் இல்லை, சிறப்பாக செயல்படும் ஆன்மாக்களுக்கு மரணத்திற்கு பிறகு நிரந்தர சொர்க்கம் அல்லது அவ்வாறு செயல்படாதவர்களுக்கு நிரந்தர நரகம் என்று வாய்ப்புக்கள் இல்லாததாக வாழ்க்கையை கருதுவதும் இல்லை. இந்து ஒரு மரணத்தை வெறும் கூடு விட்டு கூடு பாயும் செய்முறையாகவும், ஒரே நேரத்தில் நடைபெறும் முடிவு மற்றும் புதிய தொடக்கமாகவும் கருதுகிறான். இதைப்பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக திருவள்ளுவர், "உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (*திருக்குறள்* 339)" என்று குறிப்பிட்டு இருந்தார். நமது மதத்தை சேர்ந்த ஒரு பழமையான மொழியில், தூல உடலை குறிக்க "எப்போதும் அழிந்துக்கொண்டு இருப்பது" என்று பொருள்படும் சொல் பயன்படுத்தப்படுகிறது. ¶மறுபிறவி பற்றி இந்து பெறும் அறிவு, எதிர்காலத்தில் தனக்கு ஒரு பிறவி கிடைக்கும், அந்த பிறவியில் இயலுணர்வுடன் தனது ஆன்மா என்று அறிந்துள்ள தனது முழுமையை நோக்கி மேலும் முன்னேறலாம் என்ற நம்பிக்கையை அவனுக்கு வழங்குகிறது. அவன் அடுத்த பிறவியில் தான் பிறக்கவிருக்கும் குடும்பத்திற்கு வேதனை அளிக்காமல், அவர்களின் அன்பு மற்றும் இணக்கம் மற்றும் ஆக்கத்திறனை அதிகரிக்கும் வகையில், ஒரு நல்ல ஆன்மாவாக தெய்வ பக்தி அதிகமுள்ள ஒரு குடும்பத்தில் பிறப்பதற்கு தகுதி பெறும் நோக்கத்துடன் நிறைய புண்ணியங்களை சம்பாதிக்க, இந்த பிறவியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். பூலோகத்தில் தனக்கு கிடைத்த இந்த பிறவியை சிறப்பாக வாழ்வதன் மூலம், மறுபிறவியை மேலும் சிறப்பாக வாழவேண்டும் என்பது தெய்வ பக்தியுள்ள இந்துவின் மனதில் எப்போதும் ஒரு குறிக்கோளாக இருந்துக்கொண்டு இருக்கிறது. அதுவே நமது குறிக்கோள். நமது மற்ற நம்பிக்கைகள், நமது அனுபவ அறிவு மற்றும் நமது மதத்தின் பல்வேறு அம்சங்கள், ஒரு தொலைநோக்கு பார்வையுடன் நமது அன்றாட கவலைகளை கடந்து, நமது இறுதி குறிக்கோளாக விளங்கும் முக்தி மீது கவனம் செலுத்துவதற்கு வலிமை மற்றும் விவேகத்தை தருகிறது. ¶லௌகீக இருப்பின் சுழற்சியாக விளங்கும் மறுபிறவி வெறும் ஒரு நம்பிக்கையாக மட்டும் இருப்பது இல்லை. தங்களது பிறப்புக்களை பற்றி சிறிதளவு அறிந்தவர்களுக்கு, இன்னொரு பிறவி இருப்பதை நினைவுக்கூர்வதற்கு அல்லது ஒருவர் பிறவி எடுப்பதற்கு சிறிது முன்பாக ஆன்மா தனது இருப்பை பெறவில்லை என்பதை புரிந்துகொள்வதற்கு ஒரு தெளிவான அறிவாக விளங்குகிறது. பூலோகத்தில் ஆன்மா பல முறை பிறவி எடுப்பதாக இந்து நம்புகிறார். பிறப்பு, இறப்பு மற்றும் மறுபிறப்பு சுழற்சியில் இருக்கும் விவேகத்தை நம்மால் காண முடிகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 247

கர்மவினை எப்போதும்

நியாயமாக இருக்கும்

நாம் வாழ்க்கையில் வெளிப்படையாக காணும் வேறுபாடுகளுக்கு ஒரு விளக்கமாக மறுபிறவியை காண்கிறோம். இதன் மூலம் உடல் ஊனமாக பிறக்கும் குழந்தை அல்லது குழந்தைப் பருவத்தில் இறக்கும் குழந்தை போன்ற கொடிய பிறவிகளில் இருக்கும் நியாயத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்துவிற்கு இது ஒரு விபத்தாக இருப்பதில்லை, ஆனால் அந்த ஆன்மா முற்பிறவியில் செய்த முறையற்ற செயல்கள் மற்றும் ஆசைகள் மூலம் உருவான இயற்கை சம்பவமாக தோன்றுகிறது. பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லா விஷயங்களுக்கும் நற்பண்பை தருவதற்கு ஒரு சக்தி இருக்கிறது என்றும், ஆன்மாவை அழிப்பதற்கு முயற்சி செய்யும் ஒரு எதிர்ப்பு சக்தி இருக்கிறது என்றும் ஒரு இந்து கருதுவது இல்லை. எல்லாம் இறைவனின் செயல். *கர்மவினைகள்* அனைத்தும் இயல்பாக இருக்கின்றன மற்றும் அவை நியாயமாக போய் சேரவேண்டிய ஆன்மாவை போய் சேர்கின்றன. ¶இளம் ஆன்மாக்களால் சரியாக புரிந்துகொள்ள முடியாது, அவர்களால் மற்றவர்களுடன் இணைந்து வாழ முடியாது மற்றும் அவர்கள் மேன்மையான கலாச்சாரம் மற்றும் நம்பிக்கைகளை தவிர்க்கிறார்கள் என்பதை இந்து அறிந்து இருக்கிறார். இந்துக்கள் தாங்கள் செய்த தவறுக்கு நிரந்தர வேதனையை சம்பாதிக்காமல், அனுபவம் மூலம் கற்றுக்கொண்டு வளர்ச்சியை பெறுவதற்கு இன்னொரு வாய்ப்பை பெறுகிறார்கள். ஆபிரகாமிய மதங்களுடன் ஒப்பிடும் போது, இந்து மதத்தில் பாவம் மற்றும் தீய செயல்களின் கோட்பாடு மாறுபட்டு இருக்கிறது. இந்து மதத்தில் பாவம் என்பது இயற்கை விதிகளை மீறுவது, *கர்மவினை* மற்றும் *தர்மத்தின்* பழக்கங்களில் குறைபாடு ஆகியவற்றை குறிக்கிறது. அந்த மீறல்கள் மூலம் உருவாகும் கூடுதல் கரம்வினைகள் தண்டனை ரூபத்தில் வருகின்றன மற்றும் அவற்றை பின்னர் அனுபவிக்க வேண்டி இருக்கின்றன. அதனால் இந்து பாவம் செய்த அச்சத்துடன் அல்லது பிறவிக்குற்றத்தின் எண்ணத்துடன் இருப்பது இல்லை. மனித நேயம் என்பது இயல்பாக பாவப்பட்டதாக கருதாமல், அது இயல்பாக நிறைவாக இருந்துக்கொண்டு, அந்த நிறைவை அகத்தில் இருந்து விரிவாக்கம் செய்யும் முயற்சியாக கருதுகிறோம். நமது இயல்பை தூய்மைப்படுத்திக் கொண்டு பக்குவம் அடைவதற்கு, தேவைப்பட்டால் ஆயிரம் அல்லது அதற்கும் அதிகமான பிறவிகள் தனக்கு வாய்ப்பாக கிடைக்கும் என்பதை இந்து அறிந்து இருக்கிறார். நமக்கு ஒரு வாய்ப்பு, ஒரு வாழ்க்கை மட்டுமே இருப்பதால், அதை முழுமையாக

பயன்படுத்தி எல்லா ஆசைகள் மற்றும் சாதனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று நாம் நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் நாம் அவசரத்தில் இருப்பதில்லை. நாம் பொறுமையாக இருக்கிறோம். ஒரு வாழ்க்கை தான் இருக்கிறது என்ற கருத்துடன் இருப்பவர்களை காட்டிலும், நாம் சூழ்நிலைகளை அதிக பொறுமையாக எதிர்கொண்டு, நமது இலக்குகளை அடையாத போது நாம் நமக்கு அதிக சலுகைகளை வழங்குகிறோம். மரணத்தை கண்டு அஞ்சாமல் இருக்கும் வரமும், தூல உடலின் மரணத்திற்கு பிறகு உணர்வு தொடர்ச்சியாக இருக்கும் என்ற உத்தரவாதமும், சிலருக்கு அதிஷ்டம் குறைவாக இருப்பதாகவும் விதி சிலருக்கு அநியாயமாக அனைத்து சலுகைகளையும் வழங்கி இருப்பதாக தோன்றினாலும், ஒவ்வொரு ஆன்மாவும் தானாக உருவாக்கும் கர்மவினை நியாயமாக சரியாக செயல்படுகிறது என்ற இன்னொரு உத்தரவாதமும், இந்து சமயத்தை பின்பற்றுபவர்களுக்கு மாபெரும் மகிழ்ச்சியை வழங்குகிறது. இந்துக்கள் மறுபிறவியின் கோட்பாட்டை அறிந்து இருப்பதால், இவை அனைத்தும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ¶இந்து மதம் நம்பிக்கை மற்றும் ஆறுதல் அளிக்கும் மதம். நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் நிரந்தரமாக நீடித்து இருப்பதும் இல்லை, அவை நம் மீது தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துவதும் இல்லை என்பதை இந்து அறிந்துகொண்டு தற்போதுள்ள சிக்கல்களை எதிர்கொண்டு வாழ முடியும் என்பதால், மறுபிறவியில் இருக்கும் நம்பிக்கை இந்த பிறவியை பயனுள்ளதாக, மகிழ்ச்சி மற்றும் திருப்தி தருவதாக மாற்றுகிறது. அவை பிரச்சனைகள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இந்த பிரச்சனைகளை ஒரு எதிர்மறையான மனநிலை, அதிக உற்சாகம் மற்றும் நமது மகாதேவர்களின் உதவியுடன் எதிர்கொள்ள வேண்டும்.

புதன்கிழமை

பாடம் 248

நமது ஆசிரியராக இருக்கும்

இந்த உலகம்

இந்துவும் தூல உலகின் சூழ்நிலைகளை மேம்படுத்த விரும்புகிறான். நாம் நம்மை சுற்றி நடப்பது அனைத்தையும் பொய்யாக கருதுவது இல்லை. அது ஒரு தவறான கருத்து. வாழ்க்கை என்பது யதார்த்தம் ஆகும். அந்த வாழ்க்கையின் மூலமாகத் தான் முன்னேறுகிறோம். வாழ்க்கை என்பது பரம்பொருளை தேடுவதற்கு ஆதிபகவன் வழங்கிய பாதை ஆகும். அது *மாயை* என்பது உண்மை தான். ஆனால் அந்த *மாயை* மனதின் வடிவமாக, வடிவத்தின் வடிவமாக இருக்கிறது. மாயை அல்லது வடிவம் அல்லது மனம் மனிதனை

பக்குவப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அது அவனை மருட்சியில் கட்டி வைப்பதற்காக உருவாக்கப்படவில்லை. இதை இந்து புரிந்துகொள்கிறான். நாம் மனித நேயத்தை உதவி செய்ய விரும்புகிறோம், மற்றும் அதே சமயத்தில் நாம் மீண்டும் இன்னொரு தூல உடலை பெறுவதற்கு வாய்ப்புள்ளது என்பதையும் அறிகிறோம். அதனால் நாம் நமக்காக மட்டும் செயல் புரியாமல், நமக்கு பிரியமானவர்களுக்கும் சேர்த்து செய்யும் செயல், நிகழ்காலத்திற்கு மட்டும் அல்லாமல், எதிர்காலத்திற்கும் சேர்த்து செய்கிறோம். எதிர்கால சந்ததியர்களை கருத்தில் கொண்டு, நாம் அங்கம் வகிக்கும் உலகை மேம்படுத்த முயற்சி செய்கிறோம். ¶ஒவ்வொரு மனித பிறவியும், பல முற்பிறவிகளில் நமது தாய்மார்களாக, தந்தைமார்களாக, நமது மகன்களாக, நமது தாத்தாக்கள் மற்றும் பாட்டிக்களாக, நமது வாழ்க்கைத்துணைகளாக இருந்துள்ளார்கள் அல்லது ஒரு எதிர்கால பிறவியில் இருக்கவிருக்கிறார்கள் என்பதால், நமக்கு மறுபிறவி பற்றி இருக்கும் அறிவின் காரணமாக, நாம் மனிதர்கள் மீது அளவுக்கு அதிகமான பாசம் மற்றும் புரிதலை கொண்டு இருக்கிறோம். மனித நேயத்திற்குள் இருக்கும் பரஸ்பர தொடர்புநிலை பற்றிய இந்த விரிவான அறிவு மற்றும் ஆழமான புரிதலும் சேர்ந்து, சில பரிச்சயம் இல்லாத நபர்களை காணும் போது ஏற்படும் நெருக்கமான உணர்வையும், சிலருடன் பல வருடங்களாக நெருங்கி பழகி இருந்தாலும் அவர்கள் காணும் போது பரிச்சயம் இல்லாதவர்களாக அல்லது எதிரிகளாக தோன்றும் உணர்வையும் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றன. ஒரு இந்துவிற்கு தன்னை விட வயதில் சிறியவர்கள் தனது இளைய சகோதரன் அல்லது சகோதரியாக இருக்கிறார்கள். அவனுக்கு தன்னை விட வயதில் பெரியவர்கள் எல்லோரும் தாய் அல்லது தந்தை போல இருக்கின்றனர், மற்றும் அவன் பொதுவாக எல்லோர் மீதும் நல்ல மரியாதை செலுத்துகிறான். நாம் இந்த அறிவுடன் இந்த பூமியில் பல நூறு பிறவிகள் வாழ்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களுடன் தொடர்பு கொண்டு இருக்கிறோம். முற்பிறவியில் நம்முடன் இருந்தவர்களை பெரும்பாலும் நாம் இந்த பிறவி வழக்கத்திற்குள் ஈர்க்கிறோம் என்பதையும் நாம் அறிந்து இருக்கிறோம். அதனால் அவர்களை மீண்டும் சந்திப்பதிலும், முற்பிறவியில் நமக்கு அவர்களுடன் இருந்த சூட்சுமமான உறவுகள் பற்றி வலுவாக அறிவதிலும் பெருமகிழ்ச்சி மற்றும் ஆனந்தத்தை அடைகிறோம். ¶கர்மவிதியின் மூலம் ஒருவன் தனக்கு வெகுமதிகள் மற்றும் தண்டனைகளையும் சம்பாதிக்க முடியும் என்பதை இந்து நம்புகிறான். நாம் இவை அனைத்தையும் நமது மகாதேவர்கள் துணையுடனும், நமக்கு பிடித்தமான கடவுள் அல்லது இந்த பிறவியில் நம் மீது அன்பு செலுத்தி, வழிகாட்டி பாதுகாப்பு அளிக்கும் கடவுளிடம் நமக்கு இருக்கும் தனிப்பட்ட உறவின் துணையுடனும் செய்யலாம். ¶இந்து மதத்தில் பக்தன் மற்றும் இறைவனுக்கு மத்தியில் யாரும் இருப்பதில்லை. புரோகிதராக இருப்பவரும் இறைவனின் சேவகனாக, மற்ற பக்தர்களை போல இருக்கிறார். ஆன்மீக குருவாக இருக்கும் *சத்குருவும்* பக்தன் மற்றும் இறைவனுக்கு மத்தியில்

இருக்காமல், பக்தன் தெய்வீக பண்புடன் நேரடி அனுபவத்தை பெறுவதற்கு, அவனை வலுப்படுத்துகிறார். இவ்வாறு ஒரு இந்து இறைவன் மற்றும் மகாதேவர்களுடன் தனக்கு இருக்கும் உறவில் அதிக மகிழ்ச்சி அடைகிறான். அது அந்த இந்துவின் உறவாக இருக்கிறது, மற்றும் அதை அவனால் மட்டுமே நிலைநிறுத்த முடிகிறது. இந்த வேலையை அவனுக்காக அல்லது அவனின் சார்பாக வேறு யாராலும் செய்ய முடியாது. இறைவனோடு தொடர்புகொள்ளும் இடமாக வீட்டின் புனிதமான பூஜை அறை இருப்பதை போல, இந்து கோயிலில் வாசம் செய்யும் இறைவனுக்கும் பக்தனுக்கும் மத்தியில் மாபெரும் மகிழ்ச்சி நிலவுகிறது.

வியாழக்கிழமை

பாடம் 249

தீர்த்த யாத்திரை செல்வதில்

ஏற்படும் மகிழ்ச்சி

மதம் சார்ந்த நமது வாழ்க்கையில், அதிக நிறைவை தரும் அம்சங்களில் ஒன்றாக தீர்த்த யாத்திரை விளங்குகிறது. நாம் ஒரு ஆன்மீக பயணம் மேற்கொள்வதில் மகிழ்ச்சி அடைந்து, நமது யாத்திரையின் போது திருப்தியை அனுபவித்து, *பூஜைகளுக்கு* பிந்தைய பிரகாசமான சூழலில் மகிழ்ச்சியுடன் பொருந்திக் கொள்கிறோம். பக்தன் *இஷ்ட தேவதையை* காண செல்வது, நமக்கு நெருக்கமான ஒரு நண்பனை காண செல்வது போன்று இருக்கிறது. நாம் இந்த நெருக்கமான நண்பன் சிறப்பாக வாசம் செய்யும் தொலை தூர கோயிலுக்கு பயணம் செல்கிறோம். அந்த ஒரு கோயிலில், இந்த *இஷ்ட தேவதை* ஒரு விசேஷ சடங்கை நடத்தி, தனது இருப்பிடத்திற்கு யாத்திரை மேற்கொண்ட யாத்திரிகளுக்கு விசேஷமான முறையில் ஆசிகளை வழங்குகிறார். இந்த முறையில் நிதி உதவி வேண்டுதல்கள், நல்ல வரன் அமைய மேற்கொள்ளும் பிரார்த்தனைகள், குழந்தைகளை உயர்ந்த ஆன்மாக்களாக வளர்ப்பதற்கு அல்லது *யோகம்* தொடர்பான விஷயங்களுக்கு அல்லது பக்தி மற்றும் அன்பை ஊக்குவிக்க வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனைகளைப் போன்று பல்வேறு வகை பிரார்த்தனைகள் பலன் தருவதற்கு வெவ்வேறு கோயில்கள் பிரசித்தமாக உள்ளன. ¶"நான் எனது பணிச்சுமைகள் மற்றும் பிரச்சனைகளில் இருந்து விலகி" அமைதியாக இருக்கும் இடத்திற்கு விடுமுறை செல்ல வேண்டும் என்று ஒரு இந்து நினைப்பது இல்லை. இன்றைய அவசர வாழ்க்கையின் விளைவாக இருக்கும் மனக் குழப்பங்கள், மத வேறுபாடுகள் மற்றும் பதட்டங்கள் நிறைந்த வாழ்வை நாம் வாழ்வது இல்லை. நாம் தெய்வ பக்தியுடன் சராசரி வாழ்க்கையை வாழ்கிறோம். நாம் ஒரு சராசரி வாழ்க்கையை

வாழ்வதோடு, நாம் நமது தீர்த்த யாத்திரையை ஒரு விசேஷமான தருணமாக, சாதாரண கவலைகளை ஒதுக்கிவிட்டு மதம் சார்ந்த நமது ஏக்கங்கள் மீது முழு கவனமும் செலுத்தும் நினைவில் பேணி பாதுகாக்க வேண்டிய தருணமாக கருதுகிறோம். இது உங்கள் இஷ்ட தேவதையின் பாதங்களில் உங்கள் பிரச்சனைகள் மற்றும் பிரார்த்தனைகளை சமர்ப்பிக்க வேண்டிய தருணம் ஆகும். ¶வாழ்க்கையில் எந்த மதத்தையும் பின்பற்றாமல் விடுவிக்கப்பட்டவர்களாக தங்களை கருதும் கர்வமுள்ள "சுதந்திர சிந்தனையாளர்கள்" போல அல்லாமல், நாம் மகாதேவர்களின் *தரிசனம்* பெறுவதையும், அதனால் கிடைக்கும் உதவி நமது உயிர்சக்திக்கு புத்துணர்ச்சி அளித்து, நமது ஆன்மீக வாழ்க்கையில் மேலும் சிரத்தையுடன் இருப்பதற்கு தூண்டுதலையும் வழங்குவதாக உணர்கிறோம். தங்கள் தேவைகள் எல்லாம் எதிர்கொள்வதற்கு தேவையான சாதனங்கள் அனைத்தும் தங்களுக்குள் புதைந்து இருப்பதாக நம்பிக்கையுடன் இருந்து, மகாதேவர்களிடம் உதவியை நாடுவது பயனற்ற பரிதாபகரமான செயல் என்று கருதும் பகுத்தறிவாளர்களைப் போல அல்லாமல், இந்து விவேகமாக தன்னை தெய்வீகத் தன்மையிடம் தன்னை சமர்ப்பித்துக் கொள்வதால், அவர் அவநம்பிக்கை என்கிற நரகத்தை தவிர்க்கிறார். ¶வாழ்க்கை முழுவதும் ஒருவர் தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பும் "சுமைகள் மற்றும் பிரச்சனைகளை" ஒரு இந்து யாத்திரை செல்லும் கோயிலுக்கு சுமந்து சென்று, அங்கே அவர் தனது இஷ்ட தேவதை, அந்தர் லோக சக்தி அல்லது மகாதேவர் அல்லது இறைவனின் பாதங்களில் சமர்ப்பிக்கிறார். மக்களுடன் தொடர்புகொள்ள மகாதேவருக்கு தூல உடலின் அவசியம் இருப்பது இல்லை. இறைவனின் நரம்பியல் அமைப்பு அதிக நுண்ணுணர்வுடன் செழிப்பாக கோயில் விக்ரகத்தை சுற்றிக்கொண்டு இருக்கிறது. அது அந்தர்லோகங்களில் இருப்பதைப் போன்றே காட்சி அளிக்கிறது. இந்த பிரகாசமான சக்தி கோயிலுக்கு வரும் யாத்திரிகளுடன் தொடர்பு கொள்கிறது. இந்த பிரகாசமான சக்தி மற்றும் இந்த மகாதேவர், பக்தர்கள் வழங்கும் கசடுகளை எல்லாம் கிரகித்துக் கொண்டு வழங்கும் ஆசிகள், அந்த பக்தர்களுக்கு மகிழ்ச்சி மற்றும் நிம்மதியை வழங்குகிறது. அதனால் யாத்திரை என்பது ஒரு சாதாரண பயணமாக இல்லாமல், தனக்கு மிகவும் நெருக்கமான மற்றும் விருப்பமான நண்பனை, ஆனால் ஒரு தூல உடலில் வாழாத நண்பனை சென்று பார்ப்பதை குறிக்கிறது. ¶முக்தி பெறுவது நிச்சயம் என்பதால், ஒரு இந்துவிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சி கிடைக்கிறது. இது வரை எந்த ஆன்மாவும் முக்தி பெறாமல் இருந்தும் இல்லை, இனியும் எந்த ஆன்மாவும் முக்தி பெறாமல் இருக்கப்போவதும் இல்லை என்று நம் மதம் வழங்கும் அறிவின் அடிப்படையில், நாம் கடினமான சூழ்நிலைகளிலும் மன நிம்மதியை தேடிக்கொள்கிறோம். எல்லா ஆன்மாக்களும் ஒரு நாள் இறைவனுடன் ஐக்கியமாக இருக்கிறார்கள் என்பதை இந்து அறிந்து இருக்கிறார். மேலும் எல்லா ஆன்மாக்களையும் படைத்த இறைவன், அவருடைய

சாரூபத்தை நாம் அடைவதற்கு மெதுவாக வழிகாட்டி, நம்மில் இருந்து தனித்து இல்லாத தன்னிடம் அவர் நம்மை திருப்பி அழைத்துக் கொள்கிறார். பூலோகத்தில் இந்த பிறவியில் தான் மேற்கொள்ளும் முயற்சி மற்றும் தான் பெறும் தனிப்பட்ட வளர்ச்சியின் மூலம், இறைவனுடன் ஐக்கியமாகும் முக்தி தனது இறுதி குறிக்கோள் என்பதை இந்து அறிகிறார். இந்த அறிதல் மற்றும் இந்த நம்பிக்கை, நம்மிடம் மிச்சம் இருக்கும் ஆணவம் மற்றும் இறைவனின் அருள் பெறுவதற்கு தமக்கு தான் தகுதி அதிகமாக இருக்கிறது என்று ஒரு நபர் சிந்திப்பதற்கு காரணமாக விளங்கும் முதன்மை எண்ணம் ஏதேனும் இருந்தால், அவற்றில் இருந்து விடுதலை அளிக்கிறது. ஆனால் இந்த அறிதலும் நம்பிக்கையும் இல்லாதவர்கள் தங்களை இழந்து விடுகிறார்கள். எல்லா ஆன்மாக்களும் இறுதியில் முக்தி பெறுவார்கள் என்பதையும், அது நமக்கும் நமது நண்பர்கள் மற்றும் குடும்பத்திற்கும் பொருந்தும் என்பதையும், நாம் வேறு விதமாக அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் இந்து உறுதியாக அறிந்து இருக்கிறார்.

வெள்ளிக்கிழமை

பாடம் 250

மறைஞானம் வழங்கும்

மகிழ்ச்சி

இதன் பிறகு இந்து மதத்தின் மறைஞானம் வழங்கும் மகிழ்ச்சியை பற்றி சொல்லியாக வேண்டும். இதன் மூலம் உலகின் மிகவும் அற்புதமான மதம், நுணுக்கமான உலகங்களின் மறைஞான கண்டுபிடிப்பு மற்றும் புலனுணர்வை வழங்குகிறது. இந்த பூமியில் சிறந்த செழிப்பும் மற்றும் கருத்து சுதந்திரம் இருக்கும் இடமாக அந்தர்லோகங்கள் விளங்குகின்றன என்று இந்து மறைஞானிகள் குறிப்பிடுகின்றனர். உலகில் இருக்கும் மற்ற மதங்களை காட்டிலும் இந்து மதத்தில் மறைஞானம் அதிக வெளிப்படையாக இருக்கிறது. இதன் காரணமாக, அது நமது மதத்தின் பெரும்பாலான மக்களின் வரவேற்பை பெற்றுள்ளது. மறைஞானத்தை பற்றி சில உயர்ந்த ஆன்மாக்கள் மற்றும் வெகுசில *பண்டிதர்கள்* மட்டும் பேசாமல் பரவலாக பேசப்படுகிறது. இந்து சமயத்தின் மறைஞானம் எல்லோருக்கும் பொதுவாக இருந்தாலும், அதன் இரகசிய அம்சத்தில் அது முழுமையாக பாதுகாக்கப்பட்டு, அது இரகசியமாக இருப்பதால் அதன் புனிதத்தன்மை காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்து மறைஞான பாரம்பரியம் தனது *சாதனாக்கள்* மற்றும் *யோக* அம்சங்கள், ஆகாச உடல்கள், *நாடிகள்* மற்றும் *சக்கரங்கள்*, ஒளி உடல் மற்றும் *பிராண* சக்திகள், உணர்வின் பல்வேறு நிலைகள் மற்றும் இருப்பின் பல்வேறு நிலைகளைப்

போன்று மேலும் பல விஷயங்களைப் பற்றி அதற்கு இருக்கும் வளமான புரிதல் மிகவும் சிறப்பாக இருக்கிறது. இந்து சமயத்தின் மறைஞான உபதேசங்களுக்கு பூமியில் இருக்கும் எந்த சமயமும் சமமாக முடியாது. அவை அனைத்தும் ஒவ்வொரு இந்துவின் முறையான சொத்து ஆகும். ¶உருமாற்றம் பெற்று இருக்கும் புனிதமான கலை வடிவமாக, வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஒரு இந்து அனுபவிக்கிறான். மகாதேவர்கள், தேவர்கள் மற்றும் நமது மதத்தை சேர்ந்த முனிவர்களின் உருவப்படங்கள், ஓவியங்கள் மற்றும் சிலைகளை கொண்ட இந்து மதத்தின் கலை ஒரு புனிதமான கலையாக விளங்குகிறது. இசை தெய்வீகமாக விளங்கி, உயர்நிலை *சக்கரங்களின்* தொனிகளை விரித்துரைத்து, மகாதேவர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கிறது மற்றும் நடனம் மகாதேவர்களின் அசைவுகளை பின்பற்றுகிறது. நாம் எப்போதும் நமது மதம் சம்பந்தப்பட்ட காட்சிகள், ஒலிகள் மற்றும் சின்னங்களில் இருந்து வெகு தொலைவில் இருப்பதில்லை. ஒரு மலை உச்சி சிவபெருமானை பிரதிபலிக்கிறது. ஒரு குன்று முருகன் அல்லது கார்த்திகேயனை பிரதிபலிக்கிறது. கரும்புத்தோட்டம் விநாயகரை பிரதிபலிக்கிறது. நாம் பூமியில் காணும் ஒவ்வொரு பொருளும் மதம் தொடர்பான அம்சத்தை கொண்டுள்ளது. ஓவியம் என்பது தன்முனைப்பு மற்றும் இருத்தலியல் சார்ந்த சுய வெளிப்பாடாக இல்லாமல், தெய்வீக சேவையாக முழுமனதுடன் செய்யும் ஆன்மீக வெளிப்பாடாக விளங்குகிறது. இதன் காரணமாகவே, தலைசிறந்த இந்து ஓவியங்களை படைத்த ஒவியரை யாரும் காண்பதும் இல்லை அல்லது அவரை பார்ப்பதும் இல்லை. தான் பிரபலமாக வேண்டும் அல்லது செல்வந்தராக வேண்டும் என்ற நோக்குடன் ஓவியர் தனது படைப்பை உருவாக்குவது இல்லை. அவர் மகாதேவர்களுக்கு மற்றும் தனது மதத்திற்கு தனது ஓவியம் மூலம் சேவை செய்ய தனது திறமைகளை சமர்ப்பணம் செய்கிறார். அதனால் அவரது ஓவியம் உறுதியான புனிதத்தன்மையை பெறுகிறது. ¶மற்ற மதங்களுக்கு இந்து மதம் அங்கீகாரம் வழங்கும் பண்பு, ஒரு இந்துவிற்கு அதிக மகிழ்ச்சி தருவதாக விளங்குகிறது. இந்து மதம் என்பது இறைவனை மையமாக கொண்டு அமைந்துள்ளது. ஆனால் மற்ற மதங்கள் தீர்க்கதரிசியை மையமாக கொண்டு அமைந்து, வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரின் ஆளுமையை அல்லது தனது காலத்து கலாச்சாரத்தை மதம் என்று புரிந்துக்கொண்டு நீண்டகாலத்திற்கு முன்பு வாழ்ந்த ஒருவரின் ஆளுமையை சார்ந்து பெரும்பாலான மற்ற மதங்கள் அமைந்துள்ளன. இந்து மதத்தின் நிறுவனர் என்று யாரும் இல்லை. அது எப்போதும் தோற்றுவிக்கப்படவும் இல்லை. அதற்கு தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. அது மனிதனுடன் இணைந்து இருக்கிறது. இதன் காரணமாக அது சனாதன தர்மம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது நிலையான தத்துவஞானம் அல்லது நம்பிக்கை என்பது அதன் பொருள். அது ஒருவர் வழங்கிய உபதேசம் அல்லது விளக்கம் இல்லை. அது மதம் என்கிற ஒரு அம்சத்தை மற்றும் சார்ந்து இருக்காமல், ஒரு

படிகம் வழியாக பார்க்கும் போது பல்வேறு நிறங்களில் ஒளியின் நிறமாலை தெரிவதைப் போல, அதன் விரிவான தோற்றம் பல்வேறு அங்கங்களுடன் அமைந்துள்ளது. அது ஒரு குறிப்பிட்ட மதம் சரியானது மற்றும் ஒரு குறிப்பிட்ட மதம் தவறானது என்று சொல்வதில்லை. எங்கும் இறைவன் இருந்துக்கொண்டு, சிறந்த மதங்களை எல்லாம் வெளிப்படுத்திக்கொண்டு இருப்பதாக இந்து மதம் கருதுகிறது. ஒரு இந்து பௌத்த சமயத்தை சாராமல் புத்தரை பாராட்டுகிறார். அவர் ஒரு கிறித்துவராக மாறாமல் இயேசு கிறித்துவை புரிந்துகொள்ள முடிகிறது. அதனால் உலகில் இருக்கும் எல்லா மதங்களின் மகிழ்ச்சிகளும் இந்து மதத்தின மகிழ்ச்சிகளாக மாறுகிறது. ¶ஆனால் இந்துக்களாக நாம் முதலில் நமது மதத்தில் இருக்கும் மகிழ்ச்சிகள் மற்றும் இன்பங்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். எங்களது நல்லாசிகளை கவனத்தில் கொண்டு, நமது மதத்தின் மகாதேவர்களை அணுகி நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். இன்று மேற்கத்திய உலகில் இருக்கும் பல மகாதேவர்கள் பிரகாசமான ஒளிக்கதிர்களைக் கொண்ட தங்கள் *சக்தி* மூலம் பூமியை சூழ்ந்துள்ளனர். அந்த *சக்தி* ஆன்மீக ஆற்றலுடன் ஊடுருவி, இணக்கம் மற்றும் கலாச்சாரத்தை கொண்டு வந்து, பூமியில் *தர்மத்தை* சமன் செய்கிறது. ¶ஒரு தலைசிறந்த மதமாக இருக்கும் இந்து மதத்தை பின்பற்றும் இந்துக்கள் எல்லோரும் தங்கள் மதத்தை நினைத்து பெருமிதம் கொள்கின்றனர். துரதிஷ்டவசமாக இன்றைய காலகட்டத்தில் பிறந்த பலர் இந்துக்களாக இருப்பதில் பெருமிதம் கொள்வது இல்லை. ஆனால் இந்த போக்கு தற்போது மெதுவாக மாறி வருகிறது. சுய விருப்பத்துடன் சனாதன தர்மத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு மாற்றம் பெறுபவர்களை, இன்றைய இந்துக்கள் தங்களது மதத்தில் அரவணைத்துக் கொள்கின்றனர். அவர்களுக்கு தங்கள் மதத்தின் மீது அதிகமான அபிமானம் இருப்பதால், அதன் விவேகம், அதன் மறைஞானம், அதன் சாத்திரங்கள், அதன் பரந்த மனப்பான்மை, அதன் கம்பீரமான கோயில்கள் மற்றும் மனித நேயத்திற்கு அது வழங்கிய சித்தாந்தங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறார்கள். இன்று பூமியில் இருக்கும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள இந்துக்கள் எல்லோரும் எப்போதும் தைரியமாக இருக்க வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்து மதம் உலகின் தலைசிறந்த மதம் என்பதில் உறுதியாக இருக்கும் அளவிற்கு தைரியமாக இருங்கள். நாம் இதை நினைத்து பெருமிதம் கொள்ள வேண்டும்.

சனிக்கிழமை

பாடம் 251

இந்து மதத்தை

அழிக்க முடியாது

ஒரு இந்துவாக இருப்பதற்கு ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து இருக்க வேண்டும் என்பது ஒரு தவறான கருத்து ஆகும். அந்த கோட்பாடு சாதியை அடிப்படையாகக் கொண்ட இந்து பரம்பரைகள் மூலம் பரிந்துரைக்கப்பட்டது. கிறித்துவர்கள் கும்பலாக இந்துக்களை தங்கள் மதத்திற்கு மாற்றம் செய்ய முற்பட்டபோது நமது மதத்தின் வளர்ச்சியை தடை செய்து, அது புத்துணர்வு பெறுவதை தடுத்து, அதை ஒடுக்க மேற்கொண்ட முயற்சிகள் அந்த கோட்பாட்டை மேலும் வலுபடுத்தின. ஒரு இந்து துறவியாகவும் சமயப்பணியாளராகவும் இருந்து இந்து தர்மத்தைப் பற்றி விரிவாக எழுதிய சுவாமி விவேகானந்தர் மேற்கத்திய நாடுகளில் இந்த பிரச்சனையை எதிர்கொண்ட போது, பலவந்தமாக மதமாற்றம் செய்யப்பட்ட இந்துக்கள் தங்களது மூதாதையர் மதத்திற்கு மீண்டும் திரும்ப விரும்பினால், அதற்கு தடை விதிக்கக்கூடாது என்று விளக்கம் அளித்தார். இந்து மதத்தில் பிறக்காதவர்கள் அதில் சேர விருப்பம் தெரிவித்தால் என்ன செய்வது என்று அவரிடம் விசாரித்த போது, "வேற்று மதத்தில் பிறந்தவர்கள் பெரும்பான்மை இன மக்களால் மதம் மாற்றப்பட்டுள்ளனர். இந்த வழக்கம் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது," என்று கூறினார். ஒரு பிரபல இந்து தத்துவாதியாகவும், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத்தலைவராகவும் இருந்த Dr. ச. ராதாகிருஷ்ணன் (1888–1975), விவேகானந்தர் கூறிய கருத்தை உறுதி செய்யும் வகையில், "உலகில் சமயப்பணியில் முன்னோடியாக இந்து மதத்தை குறிப்பிடலாம் என்று தோன்றுகிறது. அது மேற்கொண்ட சமயப்பணியின் அடிப்படை கூறு மட்டும், மதமாற்றம் செய்ய முயற்சிக்கும் சமூக நம்பிக்கைகளில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. ஒரு கருத்திற்கு மனித இனத்தை மாற்றவேண்டும் என்பதை அது தனது குறிக்கோளாக கொண்டிருக்கவில்லை. அதற்கு நம்பிக்கையை காட்டிலும் நடத்தை முக்கியமாக விளங்குகிறது. *தாண்ட்ய பிராமணத்தில்* முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள *விராத்யஸ்தோம* என்கிற பழங்கால வழக்கம், தனிநபர்கள் மட்டுமல்லாமல் இனங்கள் முழுவதுமாக இந்து மதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை குறிப்பிடுகிறது.”

¶இந்தியாவில் மற்ற மதங்கள் ஆதிக்கம் செலுத்தி, இந்து மதத்தை அழிக்க திட்டமிடப்பட்ட காலத்தில் மூன்று வழிகளில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டது. வீட்டையும் அதன் சுத்தத்தையும் வழிபாட்டு முறைகளையும் பராமரிக்கும் பெண்களின் புராதன *ஸ்த்ரீ* தர்மத்தை புறக்கணிக்க அந்த பெண்களிடம் சம்மதம் பெற்று, அவர்கள் "உயர்கல்வி" கற்கவேண்டும் அல்லது வேற்று மத பள்ளிகளில் கல்வி கற்பிக்கவேண்டும் என்ற போர்வையில் குடும்பத்தில் இருந்து அவர்களை வெளியேற்றி, எதிர்கால தலைமுறைகளுக்கு தாய் வழங்கும் இந்து மத ஆலோசனை மற்றும் *தர்மத்தில்* பிடிப்பு ஏற்படுவதை தடுப்பது முதல் நடவடிக்கையாக விளங்கியது. கோயிலில் பூசாரிகளாக இருந்த பல்வேறு சாதி சேர்ந்த மக்களை அதிக வருமானம் கிடைக்கும் வேறு

வேலைகளுக்கு கவர்ந்து இழுத்து, அதனால் அந்த சாதிகளை வெளிப்படையாக அழித்து, கோயில்களை நிர்கதியாக விடுவது இரண்டாவது நடவடிக்கையாக விளங்கியது. ¶இந்து மதம் தற்காலத்திற்கு பயன்படாத தெளிவற்ற மதம் என்று இந்துக்களிடம் இருந்து சம்மதம் பெறுவது மூன்றாவது நடவடிக்கையாக விளங்கியது. மதத்தில் பரிகாசம் செய்யக்கூடிய அனைத்து அம்சங்களையும் ஏளனம் செய்வதன் மூலம் மூன்றாவது தாக்குதல் நிறைவேற்றப்பட்டது. உதாரணத்திற்கு இந்து மதத்தைப் பற்றி அவதூறாக பேசியவர்கள், அதில் சடங்குகள் ஏதும் இல்லை என்று வாதாடினார்கள். உலகில் இருக்கும் மற்ற மதங்களை காட்டிலும், இந்துக்களுக்கு அவர்களின் மதம் அதிக சடங்குகள் மற்றும் பண்டிகைகளை வழங்குகிறது. இந்த சடங்குகளில் *நாமகரணம்* என்ற குழந்தைக்கு பெயர் சூட்டும் சடங்கு, *அன்னபிராசனம்* என்ற குழந்தைக்கு முதல் முறையாக உணவு வழங்கும் சடங்கு, *கர்ணவேதா* என்ற காது குத்தும் சடங்கு, *வித்யாரம்பம்* என்று கல்வி கற்க தொடங்குவதற்கான சடங்கு, *விவாகம்* என்கிற திருமண சடங்கைப் போன்று பல்வேறு சடங்குகள் உள்ளன. ¶இந்தியாவை பல தலைமுறைகளுக்கு வேற்று மதத்தை சேர்ந்த அரசாங்கங்கள் ஆட்சி செய்து, இந்திய நாட்டிற்கு சொந்தமான மதத்தை ஒடுக்க, பலவீனப்படுத்த மற்றும் அழிக்க முழு முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும், கவனமாக திட்டமிட்ட தாக்குதலால் இந்து மதத்தை அழிக்க முடியவில்லை. இந்து மதத்தை அழிக்க முடியாது. இந்த சனாதன தர்மம், வணங்கத்தக்க நிரந்தர சமயமாக விளங்குகிறது. ஆனால் அந்த ஒரு வலுவான பிரச்சாரம் ஆழ்மனதில் விட்டு சென்றுள்ள கருத்துப்பதிவுகள், இன்றும் இந்திய மக்களின் மனதில் நிலைத்து நிற்கின்றன. இந்த பழக்கங்களை முழுவதுமாக நீக்குவது கடினமாக இருக்கும் என்றாலும், உலகெங்கும் பரவி இருக்கும் எண்ணற்ற இந்து மக்கள், இந்து மதத்தை பின்பற்றி மற்றும் அது வழங்கும் பயன்கள் மற்றும் கொண்டாட்டங்கள் மற்றும் அது மனித நேயத்திற்கு வழங்கும் வெகுமதிகளைப் போற்றி பேசுவதன் மூலம், இந்த தலைமுறையிலேயே அந்த பழக்கங்களை முழுவதும் நீக்க வாய்ப்புள்ளது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 252

சிரத்தையுள்ள சாதகர்களை

வரவேற்றல்

கர்மவினை விதிகள் மற்றும் மறுபிறவி மற்றும் எங்கும் வியாபித்து இருக்கும் இறைவனின் இருப்பு மீது நம்பிக்கை வைத்து நாட்டத்துடன் இருக்கும் சிரத்தையுள்ள பக்தர்களை, இந்துக்கள் தங்கள் மதத்திற்குள் முழு மனதுடன்

வரவேற்க வேண்டும். ஆனால் வேறொரு மதத்தில் உறுதியாகவும் நிறைவாகவும் இருக்கும் ஒருவரை இந்துக்கள் தங்கள் மதத்திற்குள் அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. மகாதேவர்கள் மற்றும் நாம் முன்னர் குறிப்பிட்ட மற்ற விஷயங்கள் மீது நம்பிக்கையை பெற்று, மற்ற மதங்கள் வழங்கும் பாதைகள் காலியாக பயனற்றதாக தோன்றும் சாதகர்களை இந்துக்கள் முழுமனதுடன் அரவணைக்க வேண்டும். சில பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு சனாதன தர்மம் மட்டுமே உண்மையான மதமாக இருக்கக்கூடும். அவர்கள் எந்த மதத்தையும் பின்பற்றாமல், அந்த உண்மையான மதத்தின் வலுவான உண்மைகள் கிடைக்கும் வரை தொடர்ந்து நாடிக்கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு அவை ஒரு பழங்கால வேதத்தில் கிடைக்கலாம் அல்லது ஒரு கோயில் *பூஜை* மூலம் தெரிய வரலாம் அல்லது விழித்து இருக்கும் *சித்த யோகியின்* கண்கள் மூலம் தெரிய வரலாம். இந்த ஆன்மாக்களுக்கு நாம் உதவி செய்யவேண்டும். நாம் அவர்களுக்கு நமது மதத்தைப் பற்றி கற்றுத் தரவேண்டும் மற்றும் அதை அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அனுமதி வழங்கவேண்டும். அவர்கள் அதை அறிந்து இருப்பதால் அதை ஏற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டும். அவர்கள் அதை அறிந்து இருந்தாலும், மகாகணபதியை சந்தித்து, அந்த சந்நிதியில் அமைதியாக உட்கார தயாராக இல்லாதவர்கள், அதை நிராகரிக்கவும் அனுமதிக்க வேண்டும்.

¶இன்று பூமியில் வழி தவறி இருக்கும் எண்ணற்ற ஆன்மாக்கள், தூல உலகில் இறந்து தங்களது தூல உடலை விட்டு வெளியேறியதும், குறுகிய காலத்திற்கு சூட்சும லோகத்தில் சுற்றி, உடனடியாக இன்னொரு கருவில் சிக்கிக்கொள்கின்றனர். அவர்களுக்கு இருப்பின் மற்ற நிலைகள் அல்லது மறுபிறவியின் செயல்பாடுகள் பற்றி தெரியது இல்லை. சூட்சும நிலைகளுக்கு மத்தியில் இருக்கும் ஆனந்தம் பற்றி அறிவதற்கு, அவர்களிடம் நேரம் இருப்பது இல்லை. அவர்களிடம் தங்கள் முற்பிறவியை ஆய்வு செய்வதற்கும், புதிய அறிவுடன் அடுத்த பிறவியை பெறுவதற்கும், இறப்பு மற்றும் பிறப்புக்கு மத்தியில் அந்தர்லோகங்களில் மகாதேவர்களுடன் உட்புற ஆன்மீக இணக்கத்தை பெறுவதற்கு நேரம் இருப்பதில்லை. ஆனால் அவர்களின் ஆன்மா தூல உடலின் அறியாமை மற்றும் இருளில் மூழ்கி, தூல உடல்களை உருவாக்கி தூல உடலில் வாழ்ந்து, தூல உடலின் சுழற்சியில் தொடர்ந்து சிக்கி இருக்கிறது. பிறப்பு மற்றும் இறப்புக்கு மத்தியில் மற்றும் மீண்டும் பிறவி எடுக்கும் போதுள்ள நிலைகள் பற்றி இந்து மதம் அறிவை வழங்கி, அந்த சுழற்சியை நீக்குகிறது. இது அந்த மனிதர்களின் மனதில் உருவாக்கும் ஆழமான கருத்துப்பதிவுகள், அவர்களை இந்த பிரச்சனையில் இருந்து வெளிகொண்டு வருவதால், பிறவிகளுக்கு மத்தியில் இருக்கும் அந்தர்லோக உணர்வில் பல மாதங்கள் அல்லது வருடங்களுக்கு மகிழ்ச்சியுடன் அவர்கள் கல்வி மற்றும் அறிவை பெற முடிகிறது, மற்றும் அதனால் அவர்கள் மீண்டும் ஒரு தூல உடலுக்கு திரும்பும் போது, முன்பு தூல உடலில் இருந்து வெளியேறிய

போது இருந்ததை காட்டிலும் அதிக விழிப்புணர்வு பெற்ற ஆன்மாவாக திரும்ப முடிகிறது. ¶நாம் இந்த சிரத்தையுள்ள ஆன்மாக்களை வரவேற்ப்பதற்கும், வேறு இடங்களில் தேடியும் அவர்களுக்கு கிடைக்காத பதில்களை தேடி தருவதற்கு உதவி செய்வதற்கும் நாம் தயங்கக் கூடாது. அவர்களுக்கு உதவி செய்வது நமது *தர்மம்* ஆகிறது. இந்து மதம் எப்போதும் நம் மதத்தை ஏற்றுக்கொண்டவர்களை மற்றும் நமது மதத்திற்கு மாற்றம் பெற்றவர்களை வரவேற்று உள்ளது. அவர்களை நமது மதத்திற்குள் அழைத்து வந்து, அவர்களுக்கு தேவையானவற்றை கற்றுத் தந்து உதவி செய்யுங்கள். ஆலோசனை வழங்குங்கள். நம்பிக்கையுடன் முன்னேறுங்கள். எப்போதும் தைரியத்தை தக்க வைத்து இருங்கள்.

தர்ம நியதிஷ்ச

धर्म नियतिश्च



தர்மம் மற்றும் விதி

உண்மை பேசுவதில் இருந்து விலகி விடாதே. தர்ம அனுட்டானத்தில் இருந்து விலகி விடாதே. தன்னை காத்துக் கொள்வதில் கவனக்குறைவாக இருந்துவிடாதே. சுய முன்னேற்றத்தில் கவனக்குறைவாக இருந்துவிடாதே. சாத்திரத்தை படிப்பதில் இருந்தும் அதை பிறருக்கு கற்றுத் தருவதில் இருந்தும் விலகி விடாதே. தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் செய்யும் கர்மாக்களில் இருந்து விலகி விடாதே.

கிருஷ்ண யஜுர் வேதம், தைத்ரீய உபநிடதம், 1.11.1. மொஅடி உபரா, ப. 537

`



`

நேபாளில் இருக்கும் ஒருவர் கோயில் படிகளில் இருக்கும் ஆலமர இலைகளை சுத்தம் செய்துக்கொண்டு இருக்கிறார். அவரது இந்த எளிமையான பணி அவருக்கு வலுவான ஆத்ம திருப்தியை வழங்குகிறது. இந்து மதத்தில் சுயநலமற்ற சேவை எல்லோரது கடமையாக விளங்குகிறது. அதில் திருவிழாவிற்கு உதவி செய்வது மற்றும் கோயில் வேலைகளில் துணை புரிவது, ஆசிரமம் அல்லது மற்ற புனிதமான அமைப்புக்களுக்கு தன்னார்வத் தொண்டு செய்வது அடங்கும்.

திங்கட்கிழமை

பாடம் 253

தர்மம் என்றால்

என்ன?

இந்து மதம் வழங்கும் மாபெரும் மகிழ்ச்சிகளில் ஒன்றாக *தர்மம்* விளங்குகிறது. *தர்மம்* என்றால் என்ன? ஒரு விதைக்கு இயல்பான வளர்ச்சியை போல ஒருவருக்கு *தர்மம்* விளங்குகிறது. அது இயல்பான இயற்கை மற்றும் விதியின் முறையான நிறைவேற்றம் ஆகும். *தர்மம்* என்பது புண்ணியம், ஒழுக்கம், நல்ல நடத்தை, மதத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகள் மற்றும் விவேகமானவரின் வாழ்முறை ஆகியவற்றை குறிப்பிடுகிறது. மக்கள் தங்கள் *தர்மத்தை* நிறைவேற்றும் போது, அவர்கள் தங்கள் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளை நிறைவேற்றுகிறார்கள் மற்றும் அவர்கள் தங்கள் *தர்மத்திற்கு* எதிராக செயல்படும் போது, அவர்கள் புதிய *கர்மவினைகளை* உருவாக்குகிறார்கள். நாம் ஒரு தூல உடலில் தெளிவான வெளிப்புற தோற்றத்துடன் பிறப்பதைப் போல, நமது தர்மம் படிப்படியாக சேகரிக்கப்பட்ட ஒரு தெளிவான வழக்கத்தை கொண்டுள்ளது. இந்த பூமியில் இருக்கும் எல்லோரும் முறையான காலகட்டத்தில் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள முறையான தர்மத்தை செய்து கொண்டு தங்களுக்கு முறையாக கிடைக்கவேண்டிய இடத்தில் இருக்கமுடியும் என்ற புரிதலுடன், நாம் ஒரு வாழ்நாளில் இந்த *தர்மத்தை* அனுட்டானம் செய்வது நமது கடமை ஆகும். இந்து இதை புரிந்து இருக்கிறார். இது அவரது இயல்பாக இருக்கிறது. இந்த பிரம்மாண்ட பிரபஞ்சத்தில் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் ஒரு முறையான இடம் விதிக்கப்பட்டுள்ளது என்ற அறிதல் உறுதியான திருப்தியை அளிக்கிறது. ¶*தர்மம்* என்பது படிப்படியாக சேகரிக்கப்பட்ட கர்மவினை அமைப்பு முறைகள், அனைத்து முற்பிறவிகளிலும் ஏற்பட்ட *கர்மவினை* அனுபவங்களுக்கு வழங்கிய *சம்ஸ்கார* எதிர்வினைகள், அனுட்டானம் செய்யவேண்டிய முளைவிடாத விதைகளின் அங்கமாக இருக்கும் கருத்துப்பதிவுகளின் கூட்டுத்தொகை மூலம் தீர்மானிக்கப்படுகிறது. அந்த கருத்துப்பதிவுகள் பயனற்றவையாக இருந்தால், அவற்றை *பிரார்த்தனை, தியானம், சாதனா* அல்லது *தபஸ்* மூலம் அனுட்டானம் செய்ய வேண்டும், ஆனால் அவை பயனுள்ளவையாக இருந்தால், அவை முளைக்க அனுமதிக்க வேண்டும். இந்த

`

விதைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, ஒவ்வொருவரின் *தர்மமாக* மாறுகிறது. சிலருக்கு குறிப்பிட்ட *தர்மம்* என்று எதுவும் இருக்காது. அவர்கள் தங்களுக்கு போதிய புண்ணியம் அல்லது பாவத்தை சேர்க்கவில்லை. அவர்களுக்கான வாய்ப்புக்கள் சிறப்பாக இருக்கின்றன. அவர்கள் தங்கள் மனங்களுக்குள் கருத்துப்பதிவுகளை சேகரிப்பதற்கு, ஒரு *தர்மத்தை* உருவாக்க தங்கள் மனதை உறுதிப்படுத்துவதற்கு, ஒரு உறுதியான அமைப்பு முறை அமைவதற்கு தங்கள் செயல்களின் மூலம் அந்த கருத்துப்பதிவுகளை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். ¶*தர்மம்* என்பது அனைத்து இந்துக்களின் சொத்தாக விளங்குகிறது. இது இரண்டாவது உலகில் இருக்கும் தெய்வீக சக்திகள் மற்றும் மூன்றாவது லோகத்தில் இருக்கும் மகாதேவர்களுக்கு செய்யும் செயல்கள் ஆகும். நமது சொந்த விருப்பங்கள் மற்றும் தேவைகளுக்கு செயல்புரிவதைப் போல, இந்து தர்மம் என்பது மகாதேவர்களுக்கு செயல்புரிவதை குறிக்கிறது. ஒருவர் தனது *தர்மத்தை* முறையாக கடைப்பிடிப்பது என்பது, மகாதேவர்களால் வகுக்கப்பட்ட பிரபஞ்சத்தின் தெய்வீக திட்டத்துடன் இணங்கி செயல்படுவதை குறிப்பிடுகிறது. ¶பண்ணை தொழிலாளி, வியாபாரி, போர்வீரர் அல்லது அரசர், விவசாயி, *சாது* அல்லது *ரிஷி* என்று ஒரு இந்துவின் தொழில் எதுவாக இருந்தாலும், தங்களது சொந்த நலனுக்கு வேலை செய்யாமல், மகாதேவர்களின் சேவகனாக இருப்பதால், ஒரு இந்து அந்த மகாதேவர்களுக்கு வேலை செய்ய வேண்டும். முறையான உணர்வுடன் முறையாக செய்யும் தர்மம் அனைத்தும், மகாதேவர்களுக்கு செய்யும் சேவையாகவும் மகாதேவர்களின் சேவகர்கள் மூலம் மகாதேவர்கள் செய்யும் செயல்களாகவும் விளங்குகின்றன. தினமும் இருபத்தி நான்கு மணி நேரமும், தூல உலகில் விழித்து இருக்கும் நேரத்திலும், இரவு நேரத்தில் சூட்சும லோகம் மற்றும் உயர்நிலை மனதின் லோகங்களில் இருக்கும் போதும், நமது மதத்திற்கும் தெய்வங்களுக்கும் செயல்படுவது நமது தொழிலாக இருக்க வேண்டும். நாம் இந்த வேலையை தொடர்ந்து செய்ய வேண்டும். ¶*தர்மம்* என்ற விரிவான கோட்பாட்டை சிறப்பாக புரிந்துகொள்ள, அதை ஆன்மாவின் இயல்பான முழுமையை விரிவாக்கம் செய்து உணரும் இயற்கை செய்முறையாக பாருங்கள். ஒரு பெரிய கருவாலி மரமாக வளர்வது ஒரு கருவாலிகொட்டையின் வழக்கம் அல்லது அமைப்புமுறை ஆகும். ஆனால் ஒரு ரோசாப்பூவின் வழக்கம் மாறுபட்டு இருக்கிறது. ஒரு கருவாலிக்கொட்டை எப்போதும் ஒரு ரோசாப்பூ செடியாகாது."*தர்மம்* என்பது மனித இருப்பின் உட்புற விதி, அவனது சூட்சும பரிணாமம், அவனது ஆன்மீக வளர்ச்சி மற்றும் அவனுக்கும் அவன் வாழும் சமூகத்திற்கும் அவன் தானாக உருவாக்கும் ஒரு வெளிப்புற வாழ்வு என்று ஒரு பல பரிணாம இயக்கமாக என்னால் உணர முடிகிறது," என்று எங்களுக்கு நண்பனாக இருக்கும் சீதா ராம் கோயல் குறிப்பிட்டார். இதற்கு மாறாக, முறையற்ற அல்லது *அதர்ம* வழியில் வாழும் போது, ஆன்மா அதிக *கர்மவினைகளை* சேகரிக்கிறது மற்றும் இதனால் அது ஒரு வாழ்நாள் முழுவதும் பின்னடைவை சந்திக்க நேர்கிறது. ஒரு

`

குறிப்பிட்ட வாழ்நாளின் தர்மத்தை முறையாக செய்யும் போது, நாம் அதை நேர்மை மற்றும் நற்பண்பு மற்றும் நற்குணம் என்று அழைக்கிறோம்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 254

ஒரு தெளிவான வழக்கத்தை

விரிவாக்கம் செய்தல்

ஒருவரது முற்பிறவிகளில் படிப்படியாக சேகரிக்கப்பட்ட பதிவுகளின் அடிப்படையில், அவர் பிறப்பதற்கு முன்பாக அவரது வாழ்க்கையின் *தர்மம்* நிர்ணயிக்கப்படுகிறது. அது இந்த பிறவியில் ஆன்மீக முழுமையை நோக்கி செல்வதற்கான மிகவும் சரியான பாதையாக அமைக்கப்படுகிறது. ஒரு பிறவிக்கு விதிக்கப்பட்ட *தர்மத்தை* நிறைவேற்றாமல், ஒரு புதிய *கர்மவினையை* உருவாக்குவதில் கழித்தால், அது ஆன்மாவின் முதிர்ச்சியில் தற்காலிக பின்னடைவை ஏற்படுத்துகிறது. இந்த பின்னடைவு உடனடியாக தோன்றாமல், எதிர்கால பிறவிகளில் தோன்றுகிறது. அதனை நாம் கடந்து விட்டதாக தோன்றினாலும், நாம் உண்மையில் அதனை கடப்பது இல்லை. ¶*கர்மவினை* எதிர்காலத்தில் பேரழிவுகளை ஏற்படுத்தாமல் இருக்க, ஒவ்வொரு இந்துவும் தனது *தர்மத்தை* அனுட்டானம் செய்து, இறைவனை நோக்கி செல்லும் இயல்பான பாதைக்கு இணங்கி வாழவேண்டும். இந்த முக்கியமான ஆன்மீக விரிவாக்க வழக்கத்தை பின்பற்றும் போது, அன்பர் தானும் பயனடைந்து, மற்றவர்களுக்கும் பயன்களை வழங்குகிறான். அதிலும் குறிப்பாக, அவன் மகாதேவர்களுக்கு சேவை செய்து, புண்ணியத்தை சம்பாதித்து, அவர்களின் அருள் மற்றும் வரங்களுக்கு தகுதி பெறுகிறான். இந்து ஆன்மீக விழிப்புணர்வை பெற்றதும், அவன் தனது ஒவ்வொரு சிந்தனை, வாக்கு மற்றும் செயலில் ஒரு தெய்வீக உணர்வை சேர்க்கிறான். வேலைகள் அனைத்தும் அந்த உயர்ந்த குறிக்கோளுக்காக நடைபெறுகின்றன. ¶ஒருவர் தனது *தர்மத்தை* தெரிந்துகொள்வது, தெளிவான பாதை ஆகும். அந்த தெளிவில்லாமல் இருப்பது ஒரு குழப்பமான பாதை ஆகும். மனிதநேயத்தின் அமைப்பு முறைகளை முழுமையாக அறிந்து மிகவும் நுணுக்கமாக, பல யுகங்களுக்கு பரவியும் அவற்றை உள்ளடக்கியும் இருக்கும் அந்த ஒரு இறைவனின் மெய்ஞ்ஞான மனதிற்கு தெரிந்து இருக்கும் ஒவ்வோரு நபரின் பாதையும், மனப்பாடமாக அவரது மனதின் உட்புற *ஆகாச* வெளியில் அழிக்க முடியாதவாறு பதிவாகி இருக்கிறது. இந்து மதத்தில் பிரதான கடவுளாக இருக்கும் விநாயகரை ஒருவர் வழிபடுவதன் மூலம், அவர் இப்பிறவியில் கடைப்பிடிக்க வேண்டிய *தார்மீக* வழக்கத்தை தனது அகத்தில் இருந்து தெரிந்து கொள்கிறார்.

`

அது தெளிவாக அறியப்படுகிறது. இருபத்தி ஓராம் நூற்றாண்டை சேர்ந்த இன்றைய இந்து தனக்கு சரியான *தர்மத்தைப்* பற்றி மனப்பூர்வமாக தெரிந்து கொள்வது கடினமாக இருந்தாலும், விநாயகர் வழிபாட்டின் மூலம் அவர் அதை தெரிந்து கொள்ளலாம். ¶சனாதன தர்மத்தை நிலைநிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளும் குடும்பத்தில் பிறக்கும் பாக்கியம் ஒருவருக்கு கிடைக்கவில்லை என்றால், இந்துக்கள் ஒரு பணியை தொடங்கும் முன்பாக முதலாவதாக ஆவாகனம் செய்யும் விநாயகரை தொடர்ந்து பிரார்த்தனைகள் செய்து *சாதனாவும்* செய்ய வேண்டும். விநாயகரின் அறிவு மிகவும் உயர்வாக விளங்கி, பக்தரின் மனதில் இருக்கும் ஒவ்வொரு பாதை வழியாக மிகவும் ஆழமாக ஊடுருவுகிறது. *தர்மத்தை* தெளிவாக அறிந்த பிறகு, அதை வாழ்நாள் முழுவதும் சிரத்தையுடன் பின்பற்றி, ஒரு புதிய *கர்மவினையை* உருவாக்காமல் *கர்மவினை* அமைப்புமுறையை அனுபவிப்பதன் மூலமாகவும், நல்ல சேவை செய்வதன் மூலமாகவும், நமது பல்வேறு பிறவி அமைப்பு முறைகளின் முழுமைகளை நிறைவேற்றி புண்ணியங்களை சம்பாதிப்பதன் மூலமாகவும் *கர்மவினை* விதைகளை அழிக்க வேண்டும். இதன் மூலம் அடுத்த பிறவி மற்றும் அதற்கு அடுத்த பிறவி மகிழ்ச்சி தருவதாக விளங்கி, ஒவ்வொரு நபரின் முதுகுத்தண்டில் நான்கு இதழ்களுடன் உள்ள *மூலாதார சக்கரத்தில்* அமர்ந்து இருக்கும் மகாகணபதி என்கிற விநாயகரின் அருள் ஆசிகளின் மூலமாக, உங்களுக்கு நியாயமாக வரவேண்டிய நல்ல தரமான பிறவிகள் கிடைக்கின்றன. ¶அகத்தில் தெய்வீக உயிர்சக்தி எழுச்சி பெற்று உணர்வு விரிவாக்கம் பெறும் போது, ஒரு *குண்டலினி* சுருள் விடுவிக்கப்படுகிறது மற்றும் அகத்தின் ஆழத்தில் ஒரு உறுதியான ஆற்றல் விழிப்படைகிறது. அதே சமயத்தில் மனசாட்சி விழிப்படைக்கிறது, மற்றும் மனம் *மூலாதார சக்கரத்தில்* நுழைந்ததும் சந்திக்கும் மகாகணபதி என்கிற விநாயகரின் கண்கள் மற்றும் மனம் மூலமாக பக்தர் பெறுகின்ற இந்து மத மகிழ்ச்சிகள் மற்றும் ஆனந்தங்கள் மனிதர்களின் பிறப்பு உரிமையாக விளங்குகின்றன. இந்த முறையில் பல தலைமுறைகளாக மற்றும் பல யுகங்களாக சனாதன தர்மம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு முன்னேறியும் வருகிறது. விநாயகரின் ஆசியுடன் நாம் *தர்மத்தில்* நன்றாக பொருந்திய பிறகு, நாம் மற்ற மகாதேவர்களை சந்திப்போம். அவர்கள் நமது கலாச்சாரங்களை பராமரித்து ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கு உதவி செய்வதோடு, அந்த கலாச்சாரத்தை புரிந்துக் கொள்ளவும் உதவி செய்கிறார்கள். ஒருவன் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட வழக்கத்தை தேடி அதை நன்றாக பற்றிக்கொள்ளும் போது, எதிர்காலத்தில் நல்ல பிறவிகள் கிடைப்பது உறுதி ஆகின்றன.

புதன்கிழமை

பாடம் 255

`

மகாதேவர்கள் வழங்கும்

உதவி

மோசமான பிறவி என்றால் என்ன என்று நீங்கள் யோசிக்கலாம். அது *மூலாதார சக்கரத்திற்கு* கீழிருக்கும் ஒரு மனதின் பகுதியில் பிறப்பதை குறிக்கிறது. அங்கே உள்ளுணர்வு இயல்பு ஆதிக்கம் செலுத்தி, முன்னேற்றத்திற்கு துணை புரியாத சிந்தனை மற்றும் ஆசையின் தொடர்ச்சிகளின் மீதான நாட்டத்தால் அறிவுணர்வு இயல்பு கட்டுப்படுத்த முடியாமல் இயங்கும் இடமாக விளங்குகிறது. இது ஒரு மோசமான பிறவியாக கருதப்படுகிறது. இங்கே இறைவனின் உணர்வு அல்லது மகாதேவர்களின் இருப்பு இருப்பதில்லை, அங்கே வாழ்க்கைக்கு ஒரு அமைப்பு முறை இருப்பதில்லை, *தர்மம்* இருப்பதில்லை, மற்றும் அங்கே *கர்மவினை* மற்றும் மறுபிறவி விதிகள் பற்றிய அறிவு நீடித்து இருப்பதில்லை. நமது உயிர்சக்தியின் *சக்கரங்களுக்குள்*, வெளிப்புறமாக இருக்கும் இருப்பின் சிந்தனை மற்றும் மனவெழுச்சி மற்றும் பண்புகள் ஆதிக்கம் செலுத்துவது மற்றும் வேதனை, கடுமையான துயரம், குழப்பம், அழுகை மற்றும் துக்கத்தின் எண்ணற்ற பின்னடைவுகள் இருக்கும் போது அது ஒரு மோசமான பிறவி ஆகும். கீழ்நிலை *சக்கரங்களில்* இருக்கும் இந்த உணர்வின் பகுதிகளை ஒவ்வொரு பிறவியிலும் அனுபவிக்கலாம் மற்றும் இத்தகைய பிறவிகளை தவிர்க்க வேண்டும் என்று இந்துக்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு பிறவியிலும் ஒருவர் தனது தர்மத்தை தெரிந்துக்கொண்டு, அதை மனம் தளராமல் பின்பற்றுவதன் மூலம் அத்தகைய பிறவிகளை தவிர்க்க முடியும். ¶இந்து *தர்மம்* என்பது மனதில் இருக்கும் தெளிவான அமைப்பு முறையாக விளங்கி, முற்பிறவி *கர்மவினைகள்* மற்றும் கருத்துப்பதிவுகளின் குழுமத்தை ஒரு அமைப்பு முறையாக மாற்றி அமைத்து பார்க்கும் உரிமையை வழங்குகிறது. அனைத்து அமைப்பு முறைகளும் பயன் பெறுவதற்கு, இந்த பிறவியில் அந்த மாற்றம் பெற்ற அமைப்பு முறையை அனுபவிக்க வேண்டி இருக்கிறது. அத்தகைய ஒரு வாழ்க்கை முந்தைய முயற்சிகளின் நிறைவேற்றமாக விளங்கி, பயனற்ற செயல்களை நீக்கி பயனுள்ள செயல்களை சேர்க்கிறது. அதனால் அடுத்த பிறவி மனித இனம் முழுவதற்கும் ஒரு பயனுள்ள சிறந்த பிறவியாக இருக்க வாய்ப்புள்ளது. இது ஆன்மாவின் முதிர்ச்சியாக விளங்குகிறது. மேலும் இது ஆன்மாவிற்கு பாதுகாப்பு அளிக்கும் விநாயகர் மற்றும் மற்ற மகாதேவர்கள் மற்றும் ஆன்மாவிற்கு காவலாக இருந்து வழிநடத்தும் *தேவர்கள்* மற்றும் இந்த பூலோகத்தில் மனித நேயத்தின் காவலர்களாக விளங்கும் *ரிஷிகள்* மற்றும் மகான்கள், சாதுக்கள் மற்றும் *சத்குருமார்களின்* கடமையாக விளங்குகிறது. ¶நல்ல *தர்மம்* செய்வதன் மூலமாகவும், புண்ணியத்தை சம்பாதிப்பதன் மூலமாகவும், அவர்கள் இந்த அமைப்புமுறை மெதுவாக விரிவாக்கம் பெறுவதை உறுதி செய்கிறார்கள். வாழ்க்கையின் பல்வேறு அமைப்பு முறைகளில் ஒருவருக்கு பொருத்தமான

`

அமைப்புமுறையை தேடுவதற்கு, வலுவான புரிதல் அல்லது சிறந்த புத்தியின் தேவை இருப்பது இல்லை. அதற்காக இந்து ஆன்மாக்கள் இந்து மதத்தில் பிறந்து அல்லது முறையான சடங்குகள் மூலம் அந்த மதத்தில் நுழைந்து, மகாதேவர்களிடம் முறையான அறிமுகத்தை பெற்று, தனது சட்டப்பூர்வமான பெயர்களில் ஒன்றாக ஒரு மகாதேவரின் பெயரை கொண்டிருக்க வேண்டும். அதன் பிறகு இந்த பிறவிக்கு தெளிவான அமைப்பு முறையை உருவாக்குவதற்கு, மனித இன பரிணாமத்தின் பாதுகாவலராக விளங்கும் அன்புள்ளம் கொண்ட விநாயகரின் ஆசிகள் மற்றும் பாதுகாப்பை பெறுவதற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதன் பிறகு நம்மால் மகாதேவர்களுக்கு நன்றாக சேவை செய்ய முடிகிறது மற்றும் மகாதேவர்களுக்கு சேவை செய்வதன் மூலமாக ஒரு சிறந்த *தர்மத்தை* நோக்கி நமது *கர்மவினையை* அனுபவிக்க முடிகிறது என்பதால், இது இந்துக்கள் அனைவருக்கும் அடிப்படை பயன்களில் ஒன்றாக விளங்குகிறது. ¶நமது மதத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு பரப்புவது நமது முக்கிய கடமை ஆகும். நாம் இதை எவ்வாறு செய்வது? இந்த கடமை எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது? குழந்தைகளை நமது சாத்திரங்களில் இருக்கும் நல்லொழுக்க உபதேசங்களை மனப்பாடம் செய்ய வைப்பதன் மூலம் செய்யலாம். நமது சைவ சாத்திரங்கள் குழந்தைகளின் பாரம்பரியமாக விளங்குகிறது. அவர்கள் அந்த சாத்திரங்களின் உரிமையாளர்களாக விளங்குகிறார்கள். அவர்களுக்கு அந்த சாத்திரங்களை வழங்குவது நமது கடமை ஆகிறது. அத்தகைய சாத்திரங்களில் *திருக்குறள்* மற்றும் மற்றும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பான "வீவர்ஸ் விஸ்டம்" அடங்கும். அதில் இருக்கும் ஒவ்வொரு குறளையும் *சிவபெருமானின் திருநடனம், இந்து மதத்தின் தற்கால வினாடி வினாவில்* இருக்கும் நூற்றுக்கணக்கான வேத மந்திரங்களையும் குழந்தைகள் மனப்பாடம் செய்ய வேண்டும். குழந்தைகள் நமது மற்ற சாத்திரங்கள் வழங்கும் போதனைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். அது அவர்களை அவர்களின் *தர்மத்தில்* நிலைக்க செய்கிறது. நமது சாத்திரங்களை இளம் உள்ளங்களில் விரைவாக புகுத்துவதன் மூலம், நாம் நமது குழந்தைகளை நல்ல குடிமகன்களாக உருவாக்குகிறோம். குற்றம் நடைபெறுவதால் ஒவ்வொரு நாடும் மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கிறது. மேலும் இதன் காரணமாக குடும்பமும் சம்பந்தப்பட்ட நபரும் வருந்துவதால், அவர்களும் மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கிறது. குற்றத்தின் மூலம் பலன் ஏதும் கிடைப்பது இல்லை. நல்ல மத போதனைகள் நல்ல குடிமக்களை உருவாக்குகின்றன. மதம் தொடர்பான ஒரு நல்ல கல்வி நினைவாற்றலுடன் தொடங்குகிறது, மற்றும் அந்த குழந்தை பெரியவர்களுடன் தனது மதத்தை பற்றி விவாதிக்கும் திறமையை பெறும் போது, அந்த கல்வி பகுத்தறிவு லோகங்களில் நிறைவேற்றம் பெறுகிறது. நாம் இளைஞர்களுக்கு கற்பிக்க வேண்டும். நாம் இளைஞர்களுக்கு சைவ இந்து சமயம் பற்றி நன்றாக கற்பிக்க வேண்டும். திருக்குறளுடன் முதலில் தொடங்குங்கள்.

`

முருகப்பெருமான் உங்களுக்கு துணை புரிவார். விநாயக பெருமான் வெற்றி வாய்ப்புக்களை வழங்கி, இலக்கை நோக்கி முன்னேறுவது பற்றி விவேகத்தை வழங்குவார். உங்களுக்கு மன விருப்பத்தின் கடவுளாக இருக்கும் முருகன், *தர்மமாகவும்* இருக்கும் இந்த ஒரு உயரிய கடமையை செய்வதற்கு, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நமது சைவ சமயத்தை பரப்புவதற்கு மன உறுதியை வழங்குவார்.

வியாழக்கிழமை

பாடம் 256

அதர்ம

சக்திகள்

நாம் எல்லோரும் நமது தர்மத்தை செய்தாக வேண்டும். ஒரு குழந்தை குழந்தையாக தனது தர்மத்தை செய்தாக வேண்டும். குழந்தைக்கு சிறு வயதில் மதம் தொடர்பாக பயிற்சி வழங்கப்படவில்லை என்றால், அந்த குழந்தையின் மத வழக்கங்கள் உறுதியாக அமைவது இல்லை. அது தனது *தார்மீக* தாய் மற்றும் தந்தையை முதல் *குருமார்களாக* மதிக்க கற்றுத் தரவேண்டும். பெற்றோர்கள் முன் உதாரணமாக இருந்து கற்றுத் தரவேண்டும். ஆனால் அவர்களிடம் இருந்து மதத்தைப் பற்றி கற்றுக்கொள்ள பெரும்பாலும் அவர்கள் முன் உதாரணமாக விளங்குவது இல்லை. அதற்கு பதிலாக அவர்கள் எதை செய்யக்கூடாது என்பதை மட்டும் கற்றுத் தருகிறார்கள். முன் உதாரணமாக இருப்பது மிகவும் வலுவானது என்பதையும், அது ஒரு குழந்தையின் மனதில் ஆழமாக பதியும் என்பதையும் அந்த பெற்றோர்கள் புரிந்துகொள்வது இல்லை. அதன் பின்னர் பள்ளி ஆசிரியர் *குருவாக* இருக்கிறார், மற்றும் அதன் பின்னர் *சத்குரு* உண்மையில் *குருவாக* இருக்கிறார். பெரும்பாலும் கோபம் மற்றும் வன்முறையை வெளிப்படுத்தும் பெற்றோர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு தவறான முன் உதாரணமாக திகழ்வதால், அந்த குழந்தைகள் துன்புறுத்துதல் மற்றும் மதத்திற்கு எதிராக செயல்படுதல் மற்றும் ஒழுக்கமற்ற செயல்களை கற்றுக் கொள்கிறார்கள். இதனால் சத்குரு பெரும்பாலான நேரங்களில் அவர்களின் தவறுகளை திருத்த வேண்டி இருக்கிறது. குழந்தைகள் பெரியவர்களாகி உடல் ரீதியான துன்புறுத்தலை தடுக்கும் வலிமையை பெறும் வரை, பெற்றோர்கள் தங்களுக்கு வழங்கிய உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான துன்புறுத்தலின் காரணமாக, அவர்களுக்கு பெற்றோர் மீது இயல்பாக இருக்கும் அச்சம் மற்றும் ஒடுக்கப்பட்ட கோபத்தை அவர்களின் மனதில் இருந்து நீக்குவதற்கு உதவி செய்வதைப் பற்றி *சத்குரு* முடிவு எடுக்க வேண்டி இருக்கிறது. ¶*தர்மத்தை* புறக்கணித்து, மகாதேவர்களை புறக்கணித்து,

`

கோயில்களை புறக்கணிக்கும் உலகம் வழங்கும் தாக்கங்கள் அதிகமாக உள்ளன. இந்த லௌகீக சக்திகள் இப்போதும் எப்போதும் உங்கள் குடும்பத்தின் மீது தாக்கம் ஏற்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது. உங்களிடம் இருந்து உங்கள் மதத்தை பறிமுதல் செய்ய யாருக்கும் அனுமதி வழங்காதீர்கள். நாம் நமது மனதில் மதத்தை வளர்த்துக்கொண்டு இருக்க வேண்டும். நாம் நமது ஆன்மா பேசும் மொழியை தொடர்ந்து கற்றுக்கொண்டு இருக்கவேண்டும் என்று மதம் விளக்குகிறது. மதம் நமது மனதை விட்டு வெளியேறினால், அந்த இடத்தை வேறொன்று வந்து நிரப்புகிறது. நமது மதம் மனதை விட்டு வெளியேறியதும் அங்கே தோன்றுவது என்ன? பேராசை, பொறாமை, வெறுப்பு, கோபம், கடந்தகால வருத்தங்கள், விரக்தி, அவமானம். நமது சுய கௌரவம் அழிந்து விடுகிறது. நாம் எப்போதும் அதிருப்தி மற்றும் அமைதி இல்லாமல் இருக்கிறோம். நாம் எப்போதும் துக்கம், பொறாமை, கோபம் மற்றும் அச்சத்துடன் இருக்கிறோம். மதம் நமது மனதை விட்டு வெளியேறினால், இதைப் போன்ற கீழ்நிலை மனவெழுச்சிகள் அந்த இடத்தை நிரப்பிக் கொள்ளும். ¶உங்கள் மதத்தை உங்களிடம் இருந்து பறிப்பதற்கு இன்று உலகில் பலர் முயற்சி செய்து வருகிறார்கள். சைவர்களிடம் உலகின் தலைசிறந்த மற்றும் தத்துவ ரீதியாக மிகவும் விரிவான மற்றும் அனுபவத்தை வலுவான அடிப்படையாக கொண்ட சமயம் இருக்கிறது. சைவர்கள் தங்கள் சமயத்தை, ஐந்து முதல் பத்து ஆயிரம் வருடங்களுக்காக முன்னேற்றி வந்துள்ளார்கள். இந்த பூமியில் சைவ சமயம் இல்லாத காலகட்டம் இருந்ததில்லை. தமிழ் மக்கள் *பக்தியின்* மூலம் சைவ சமயத்தை பல வருடங்களாக முன்னேற்றி வந்துள்ளார்கள். அது உங்கள் சமயம். அது உங்கள் டி.என்.. மற்றும் யாரும் உங்களிடம் இருந்து உங்கள் சமயத்தை பறிமுதல் செய்ய முடியாது. ஆனால் அதற்கு நீங்கள் உங்கள் மனதை, மதம் தொடர்பான கல்வி அறிவின் மூலம் இரும்பைப் போல வலுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 257

ஒரு பாதையை

உருவாக்குதல்

நாம் நமக்கு என்று ஒரு தொழிலை தேர்வு செய்து நமது தர்மமாக அமைத்துக் கொள்ளும் போது, நாம் அதை வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். அது *ஸ்த்ரீ தர்மம்* மற்றும் *புருஷ தர்மத்திற்கு* பொருந்தி இருக்க வேண்டும். மேலும் அதற்கு நமது குடும்பம் மற்றும் சொந்தங்கள் தங்கள் ஒப்புதலையும் வழங்க வேண்டும். இந்த சூழலில் நாம்

`

தர்மத்தை பின்பற்றும் போது நாமும் திருப்தியாக இருக்கிறோம். சமூகமும் திருப்தியாக இருக்கிறது. ¶இந்த தொழில்நுட்ப யுகத்தில், நமது தொழில் *தர்மத்தை* தேர்ந்தெடுக்க பல வாய்ப்புக்கள் உள்ளன. அவை என்ன? அந்த *தர்மங்களில்* மருத்துவர் தொழிலும் ஒன்று. அது மனிதர்களுக்கு உதவி செய்வது மற்றும் அவர்களை மனம், உணர்ச்சி மற்றும் உடல்ரீதியாக குணப்படுத்துவதை குறிப்பிடுகிறது. தினமும் எட்டு மணி நேரம் என்ற வரையறை இல்லாமல், மருத்துவரின் தொழில் தர்மத்தை நாள் முழுவதும் இருபத்தி நான்கு மணி நேரமும் செய்ய வேண்டி இருப்பதால், அந்த தொழிலை செய்ய நாம் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அதன் பிறகு நாம் ஒரு மருத்துவர், *ஆயுர்வேத* மருத்துவர், ஊட்டச்சத்து நிபுணர், அறுவை மருத்துவர், மனநல மருத்துவர், நரம்பியல் நிபுணர் அல்லது அந்த துறையில் நாம் எந்த தொழில் தர்மத்தை தேர்ந்து எடுத்தாலும், நமது மதத்தின் தலைசிறந்த மகாதேவர்களிடம் இருந்து ஆற்றல்மிக்க குணப்படுத்தும் சக்தி நமக்குள் பாய்ந்து செல்கிறது. அது இந்த பிறவியில் நாம் அனுட்டானம் செய்ய வேண்டிய முழு அமைப்புமுறையாக மாறி விடுகிறது. ¶எதனால் *தர்மம்* தடைப்பட்டு *கர்மவினை* உருவாக்கப்படுகிறது? நாம் *கர்மவினையை* செய்யும் போது, நமக்கு சுமையாக விளங்கும் எதிர்மறை *கர்மவினைகளை* செய்கிறோம், அல்லது நமக்கு புண்ணியம் சேர்க்கும் நல்ல பயனுள்ள *கர்மவினைகளை* உருவாக்குகிறோம். ஒரு இளைஞன் முதலில் மருத்துவராக முடிவு செய்து, வாழ்க்கையின் மத்தியில் அந்த தொழிலில் விருப்பம் குறைந்து, ஒரு வியாபாரி அல்லது ஒரு மருந்துக் கடை வைத்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்று வேறொரு துறைக்கு செல்லும் போது, அவன் தனது *தர்மத்தை* உதறிவிட்டு *கர்மவினையை* செய்கிறான். அந்த *கர்மவினையை* இன்னொரு பிறவியில் அனுபவிக்க வேண்டி இருக்கும். ஒரு மருத்துவர் மருந்துக்கடை வைக்க முடிவு செய்யும் போது, அவர் ஒரு புதிய *தர்மத்தை* அல்லது புதிய *கர்மவினையை* தொடங்குகிறார். அவர் இந்த துறையில் இளம் வயதில் பயிற்சி பெறவில்லை. அதன் காரணமாகவும், அவர் *தர்மத்தின்* பாதையில் இருந்து விலகி செல்வதாலும், அவர் பல தவறுகளை செய்ய வாய்ப்புள்ளது. ¶உலகில் ஏன் இவ்வளவு குழப்பம் இருக்கிறது? மக்கள் *தர்மத்தை* பின்பற்றாமல் *அதர்மம்* செய்வதே இதற்கு காரணம். அவர்கள் நல்ல மற்றும் தீய *கர்மவினை* கலந்த பாதையை பின்பற்றுகிறார்கள். அதனால் நமது சைவ இந்து சமயத்தில், நம்மால் முடிந்த வரை *தர்மத்தின்* பாதையை பின்பற்ற வேண்டும். அதற்கு முரணாக செயல்படுவது விவேகமாக இருக்காது என்பது நமக்கு தெரியும். *தர்மத்தின்* பாதையை பின்பற்ற வேண்டும் என்கிற விவேகத்தை யார் வழங்குவது? வளர்ச்சி பொருந்திய ஒரு ஆரோக்கியமான சமூகத்திற்கு *தர்மத்தை* எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதை தாத்தா, பாட்டி, மூத்த மாமன், சமூகத்தில் இருக்கும் சான்றோர்கள், குலகுரு, கோயில் பூசாரி ஆகியோர் அறிந்து இருக்கின்றனர். நாம் வாழ்க்கையில் நமது விருப்பத் தேர்வுகளை

`

எடுக்கும் போது, அவை நமது குடும்பம் மற்றும் சமூகத்தின் ஆதரவை பெற்று இருக்க வேண்டும். அப்போது நாம் முறையான *தர்மத்தின்* பாதையில் இருக்கிறோம், மற்றும் அதற்கு எல்லோரும் ஆதரவு தெரிவிப்பதால் நாம் அதில் எளிதில் வெற்றி பெறுகிறோம். நாம் வாழும் உலகம் சவால்கள் நிறைந்ததாக இருக்கிறது. ஆனால் *சுவதர்மத்தின்* பாதையை பின்பற்றுவதன் மூலம், அதை எளிதில் எதிர்கொள்ளலாம். அது ஒருவரது வாழ்க்கையின் முழுமையான தனிப்பட்ட அமைப்புமுறையாக விளங்குகிறது. ¶*தர்மத்தை* பற்றி இந்து மதம், பௌத்த மதம், சமண மதம், சீக்கிய மதம் மற்றும் மற்ற கிழக்கத்திய மதங்கள் மட்டுமே அறிந்துள்ளன. அவர்கள் *தர்மத்தின்* பாதையை அறிந்து இருக்கிறார்கள். மற்ற மதங்களுக்கு அந்த பாதையைப் பற்றி தெரிவது இல்லை. ஆனால் இந்த பிறவியில் நமது குடும்பம், நண்பர்கள், சொந்தங்கள், உயிர் துறந்த சொந்தங்கள், சமூகம், *குரு* மற்றும் கோயிலுக்கு நாம் செய்யவேண்டிய கடமையாக விளங்கும் *தர்மத்தின்* பாதையை நாம் அறிந்து இருக்கிறோம். இன்று எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உபதேசம் கேட்டுக்கொண்டு இருக்கும் இந்த கோயிலுக்கு நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறது. நாம் இந்த கோயில் மீது அக்கறை செலுத்தி, ஆதரவு வழங்கி சுத்தமாக வைத்து இருக்க வேண்டும். இது நமது *தர்மத்தில்* ஒரு கடமையாக விளங்குகிறது. சமூகத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது. நாம் நமது தாய்க்கு செய்யவேண்டிய கடமை, தந்தைக்கு செய்ய வேண்டிய கடமை, *குருவிற்கு* செய்ய வேண்டிய கடமை மற்றும் உலகிற்கும் செய்யவேண்டிய கடமை இருக்கிறது. மத ஈடுபாடுள்ள நல்ல மக்கள் உலகிற்கு நல்ல குடிமகன்களாக உருவாகிறார்கள். ¶நாம் இன்றைய காலகட்டத்தில் மனித உரிமைகள் பற்றி பல செய்திகளை கேட்கிறோம். 1949 ஆம் ஆண்டு நான் இலங்கையில் இருந்த போது மனித உரிமைகள் பற்றிய கிழக்கத்திய நாடுகளின் கண்ணோட்டத்தை தெரிந்துகொண்டேன். நான் சலுகைகளை விட கடமை முக்கியம் என்பதையும், பாதுகாப்பை விட சேவை முதன்மையானது என்பதையும் தெரிந்து கொண்டேன். இந்து தர்மம் என்பது மதம், கடமை மற்றும் நீதி ஒன்றாக கலந்து இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொண்டேன். நான் அவற்றை இந்த பிறவி மற்றும் முற்பிறவியின் வினைகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய எதிர்வினைகளை கொண்டுள்ள ஒரு எளிமையான இயந்திர விசைப்பெட்டி என்று அதை சிலசமயங்களில் குறிப்பிடுவேன். மனித உரிமைகள் பற்றி இந்துவின் கருத்து என்ன? அது மனதில் ஆத்திரம் அல்லது கோபத்தை தக்க வைத்து இருக்காமல், கடுமையான சொற்களை பேசாமல், குற்றச்செயல்கள், பாவங்கள் மற்றும் மற்ற தவறான செயல்கள் மற்றும் முன்னர் செய்த செயல்களுக்கு எதிர்வினைகளில் ஈடுபடாமல், மனிதர்கள் தங்களுக்கு தோன்றும் அனுபவங்களை அனுபவிப்பதற்கும் சமாளிக்கும் திறமை மூலம் கற்றுக்கொள்வதற்கும் போதிய சுதந்திரம் வழங்கும் உரிமை ஆகும். ஒரு மறைஞான கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, நமக்கு என்ன நடக்கிறது

`

என்பது முக்கியம் என்றாலும், அவை நமக்கு நடக்கும் நல்ல மற்றும் தீய நிகழ்வுகளுக்கு நாம் எவ்வாறு எதிர்செயலாற்றுகிறோம் என்பதைப் போல மிகவும் முக்கியமாக இருப்பதில்லை. மகாத்மா காந்தி, ஸ்ரீ அரவிந்தர், மார்டின் லூதர் கிங் மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோரின் மனித உரிமைகள் மீறப்பட்டன, இருந்தாலும் அவர்கள் சோர்வடையவில்லை. நாம் மனித உரிமைகளில் அதிக மனிதாபமானமுள்ள பண்புகளுக்கு போராடுவதோடு, அவை நமக்கு கிடைக்கவில்லை என்றால் நாம் அழிந்து விடமாட்டோம் என்பதையும் கற்றுத்தருவதற்கு முயற்சிகள் செய்வோம். நமக்கு எது கிடைக்கிறதோ அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதில் தான் மேன்மை அடங்கி இருக்கிறது. பலரது ஆசிகள் இருந்தும் நீடிக்கும் இந்த சித்திரவதைகளை, ஒரு சுத்தமான ஆன்மா மூலம் ஏற்றுக்கொள்ளும் போது, அது ஒரு வரமாக மாறக்கூடும். நம் ஒருவருக்குள்ளும் ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் இருக்கிறது, மற்றும் அந்த ஆற்றலை நம்மிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாது.

சனிக்கிழமை

பாடம் 258

சாதி

அமைப்பு

வர்ண தர்மம் என்ற பெயரில் சமூக அமைப்பில் இருக்கும் நான்கு பிரிவுகள் மற்றும் நூற்றுக்கணக்கான உப பிரிவுகளைப் பற்றி என்னிடம் அன்பர்கள் அவ்வப்போது கேள்வி கேட்கிறார்கள். சாதி அமைப்பு இன்றும் உறுதியாக இருக்கிறதா? சாதி அல்லது சாதி அடிப்படையிலான பாகுபாடு, இந்திய கலாச்சாரத்தில் இருந்து நீங்கி விட்டாலும், மக்கள் அதை ஒரு அகங்கார அமைப்பாக பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். உயர்சாதி மக்கள் கீழ்சாதி மக்களை துன்புறுத்துவதில், அவர்களை புறக்கணிப்பதில், அவர்களிடம் கடுமையாக நடந்துக்கொள்வதில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இது தவறான வழிமுறை ஆகும். உலகின் பல பகுதிகளில் சாதி அமைப்பு சீர் குலைந்தும் இருக்கிறது மிகவும் வலுவாகவும் இருக்கிறது. நீங்கள் உங்கள் சமூகத்தில் தாழ்ந்த குலத்தை சேர்ந்த மக்களுடன் பேச மறுக்கும் உயர்குடி மக்களைக் கண்டால், அவர்களுடன் பழகுவதை தவிர்த்திடுங்கள். ஆன்மீக மக்கள் மற்றும் சாதாரண இரக்க குணம் கொண்ட மக்களும், அந்த ஒரு நடத்தையை பற்றி நினைப்பதுவும் இல்லை. ¶இன்று வெளிப்படையான சாதி அமைப்பு பயன்பாட்டில் இல்லாத பல நாடுகளைப் போன்று, முதன்முதலில் சாதி அமைப்பு நடத்தையை அடிப்படையாக கொண்டு இருந்தது. குழந்தையை அடிப்பவர்கள்,

`

கோபம் மற்றும் பொறாமை குணத்தை வெளிப்படுத்துபவர்கள், அச்சத்தில் வாழ்பவர்கள் மற்றும் போலித்தனமான அடக்கத்துடன் வாழ்பவர்கள் எல்லோரும் மிகவும் கீழ்த்தரமான சாதியை சேர்ந்தவர்கள். தங்களை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, வீட்டை ஒழுங்குமுறையுடன் நிர்வாகம் செய்து, கோயில்களுக்கு உதவிகளை செய்து, கீழ்சாதி மக்களால் மதிக்கப்பட்டு, நினைவாற்றல் மற்றும் பகுத்தறிவிற்கு மதிப்பு அளித்து, மன உறுதியை மற்றவர்கள் நலனுக்கு பயன்படுத்துபவர்கள் வணிக சாதியை சேர்ந்தவர்கள். *தர்மம்* மற்றும் சாத்திரங்களை பேணிக்காத்து, கோயில்கள் மற்றும் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கி, மற்ற சாதியினரால் மதிக்கப்படுபவர் அரசர் சாதியை சேர்ந்தவர்கள். மகாதேவர்களுடன் தொடர்பு கொண்டு கோயிலில் பூசாரிகளாக இருந்து, மிகவும் உயர்வான அறிவை பரப்பி மற்ற சாதியினரால் மதிக்கப்படுபவர் புரோகிதர் சாதியை சேர்ந்தவர்கள். உலகின் எந்த மூலையிலும், எந்த ஒரு காலகட்டத்திலும் இந்த நான்கு குழுக்களும் ஒன்று சேர்ந்து ஒரு முழுமையான சமூகத்தை உருவாக்குகின்றன. ¶சாதி அமைப்பு முதன்முதலில் நான்கு பிரிவுகளைக் கொண்டு இருந்தது. அந்த பிரிவுகள் ஒருவர் தனது உடல், மனம் மற்றும் மனவெழுச்சிகளை முறையாக நிர்வாகம் செய்யும் திறமையின் அடிப்படையில் அமைந்து இருந்தன. ஒருவர் தனது சாதியின் *தர்மத்தை* நிறைவேற்ற தவறிவிட்டால், அவன் ஒரு சாதியில் இருந்து இன்னொரு சாதிக்கு சென்று விட்டார் என்று சமூகம் கருதும். சாதி அமைப்பு முதன்முதலில், கல்வி மற்றும் தனிப்பட்ட *சாதனா* மூலம் தோன்றும் சுய ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. சாதி அமைப்பு முதன்முதலில், பதினான்கு *சக்கரங்கள்* மூலமாக ஒவ்வொரு நபருக்குள் விரிவாக்கம் பெறும் உணர்வை அடிப்படையாகக் கொண்டது. ¶உலகெங்கும் இருக்கும் மக்கள் தங்களை சாதிகளாக பிரித்துக் கொள்கிறார்கள். வேலை அல்லது தொழில் செய்யும் மக்கள் இருக்கின்றனர். வேலைக்கு சென்று, இன்னொருவரின் கீழ் வேலை செய்பவர்கள், *சூத்திர* சாதியை சேர்ந்தவர்கள். இது உலகெங்கும் நடைபெறுகிறது. அடுத்ததாக சுய உந்துதலுடன் செயல்படும் வணிகர்கள், *வைசிய* சாதியை சேர்ந்தவர்கள். அதன் பிறகு அரசியல்வாதிகள் மற்றும் சட்டம் இயற்றுபவர்கள் மற்றும் சட்டம் அமுல்படுத்துபவர்கள் *சத்திரிய* சாதியை சேர்ந்தவர்கள். அதன் பிறகு புரோகிதர்கள், மதகுருமார்கள் மற்றும் சமய பரப்பாளர்கள் *பிராமண* சாதியை சேர்ந்தவர்கள். ஒவ்வொரு சமூகத்திலும் இந்த நான்கு சாதிகளும் ஏதாவது ஒரு வழியில் வேலை செய்கின்றனர். இன்றைய உலகில், ஒருவர் தான் பிறந்த சாதியின் *தர்மத்தை* நிறைவேற்றவில்லை என்றால், அவர் தனது சாதியை மாற்றிக் கொள்கிறார். உதாரணத்திற்கு, ஒரு பிராமண கணவன் மற்றும் மனைவி ஒரு மருத்துவமனையில் மற்றவர்களின் கண்காணிப்பில் தினமும் எட்டு முதல் பதினைந்து நேரம் வரை வேலை செய்து, அவர்கள் அந்த சாதியின் *தர்மத்தை* கடைப்பிடிக்கவில்லை என்றால், அவர்கள் அதன் பிறகு *பிராமண* சாதியை சேர்ந்தவர்கள் இல்லை. அவர்கள் *சூத்திர*

`

சாதியை சேர்ந்த தொழிலாளர்கள். ¶இன்று அந்த சாதி அமைப்பு உருகுலைந்து இருப்பதை நம்மால் காண முடிகிறது. இன்று *பிராமண* சாதியை சேர்ந்தவர்கள் தங்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள், மனைவிமார்களை துன்புறுத்துகிறார்கள். *சத்திரிய* சாதியை சேர்ந்தவர்கள் சொந்த நாட்டு விதிகளை மீறுகிறார்கள். வியாபார சாதியை சேர்ந்தவர்கள் வஞ்சகமாக நேர்மையின்றி நடந்துக் கொள்கிறார்கள். எல்லோரும் குழம்பிய நிலையில், கோபம் மற்றும் பொறாமையுடன் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்கள் பிரிவதிலும், அவர்கள் வியாபாரங்கள் தோல்வி அடைவதிலும் எந்த அதிசயமும் இல்லை. இன்று இருக்கும் சாதி அமைப்பை பின்பற்றுபவர்களில் பெரும்பாலானோர் கீழ்நிலை உணர்வில் வாழ்ந்துகொண்டு இருப்பதால், அவர்கள் கீழ்சாதியை சேர்ந்தவர்களாக மகாதேவர்களின் கண்களுக்கு தெரிகிறார்கள். அவர்கள் *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் *சக்கரங்கள்* வழியாக உலகை காண்கிறார்கள். கீழ்நிலை *சக்கரங்களில்* போராடிக்கொண்டு இருக்கும் இந்த வளர்ச்சி அடையாத மனிதர்கள், தங்கள் மனதின் இருண்ட லோகங்களில் இருந்து வெளியேற முயற்சி செய்துக்கொண்டு இருக்கிறார்கள். மொத்தம் இருக்கும் பதினான்கு *சக்கரங்களில்*, ஒன்று அல்லது மேற்பட்ட *சக்கரங்களில்* ஆன்மா விரிவாக்கம் பெறுவதை அடிப்படையாகக் கொண்டு, மனிதர்களுக்குள் சாதிகளை உருவாக்கிய *சப்த ரிஷிகளின்* சிந்தனையை நாம் தவறாக நினைக்கக்கூடாது. இன்று இந்திய மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கும் இந்து சாதி அமைப்பைப் போல அல்லாமல், நவீன சமூகத்திற்கு ஒரு சிறந்த மற்றும் அதிக ஆரோக்கியமான பாதையை நாம் காண்பிக்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 259

தர்மம் வழங்கும்

வெகுமதிகள்

நாம் *தர்மத்தை* பின்பற்றினால் என்ன பலன்? நமது சிவபெருமானை போல, முருகப்பெருமான் மற்றும் விநாயகர் மற்றும் மற்ற மகாதேவர்களும், நமக்கு அடுத்து ஒரு நல்ல பிறவியை ஒரு வெகுமதியாக வழங்குவார்கள். ஒரு நல்ல பிறவி என்பது *தர்மத்தை* பின்பற்றி, அன்பை வெளிப்படுத்தி பாதுகாப்புடன் இருக்கும் குடும்பத்தில் பிறப்பதை குறிக்கிறது. பிறவிகளுக்கு மத்தியில் நீண்டகாலத்திற்கு பேரானந்தம் நிரம்பிய தேவலோகத்தில் தங்குவதையும் வெகுமதியாக பெறுகிறோம். நாம் பூமியில் அடுத்த பிறவிக்கு நம்மை தயார் செய்துக்கொள்ளும் நடவடிக்கைகளின் அங்கமாக, நாம் மகிழ்ச்சியுடன்

`

கற்றுக்கொண்டு அறிவை பெற்று நமது ஆன்மாவை மேம்படுத்தும் போது, நாம் அந்த சோர்கலோகத்தில் நமது *ஆகாச* உடலில் இருக்கிறோம். ¶அதனால் *தர்மத்தின்* பாதையை பின்பற்றி செல்வதன் மூலம் நமக்கு சிறந்த வெகுமதிகள் கிடைக்கின்றன. ஆனால் நாம் *அதர்மத்தின்* பாதையில் செல்லும் போது, *குக்கர்மாக்களை* உருவாக்கி, *தர்மத்தால்* கிடைக்கும் வெகுமதிகளுக்கு சமமான வேதனைகளை அனுபவிக்கிறோம். நாம் *தர்மத்தை* கைவிடும் போது, நாம் நம்மை குழப்பிக்கொண்டு நிந்தித்துக்கொள்கிறோம். நாம் கீழ்நிலை மனதின் உணர்ச்சிகள், பொறாமைகள் மற்றும் பகை உணர்ச்சிகள் மற்றும் கட்டுப்படுத்த முடியாத மனவெழுச்சிகளுக்கு நம்மை தயார்ப்படுத்திக்கொள்கிறோம். நமது மனவெழுச்சிகள் மற்றும் நம் மனதின் மீது கட்டுப்பாட்டை பெறுவதற்கு *தர்மம்* துணை புரிகிறது. நீங்கள் வெறுப்பு, பொறாமை, பேராசை மற்றும் மனதின் மற்ற எதிர்மறை நிலைகளை தூண்டிக்கொண்டு, பாதுகாப்பற்ற உணர்வுடன் இந்த கீழ்நிலை மனவெழுச்சிகளில் வாழ விரும்புகிறீர்களா? நிச்சயமாக விரும்பமாட்டீர்கள். நாம் இந்த பழங்கால *தர்மத்தின்* பாதையை பின்பற்றுவதன் மூலம், இந்த வேதனை மற்றும் மன வருத்தத்தை தவிர்த்து, நம்மை நேர்மறையான, ஆக்கப்பூர்வமான மற்றும் செழிப்பான உணர்வின் நிலைகளுக்குள் கொண்டு வந்து, சிவபெருமானின் திருவடிகளை நோக்கி தொடர்ந்து நெருங்கிக் கொண்டு இருக்கிறோம். ¶நாம் தற்போது விரைவாக இயங்கும் தொழில்நுட்ப யுகத்தில் இருக்கிறோம். இதில் தொலைகாட்சி, இணையம் போன்ற பல கவனச் சிதறல்கள் உள்ளன. நாம் தற்போது பயன்படுத்தும் இணையம் வருங்காலத்தில் மேலும் மேம்படவும் வாய்ப்புள்ளது. குழந்தைகள் சிறு வயதில் சில நிகழ்ச்சிகளை பார்க்காமல் இருப்பது நல்லது. அவர்கள் ஐந்து முதல் ஏழு வயது வரை இருக்கும் போது, அவர்கள் மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, *திருக்குறள்* செய்யுட்கள் மற்றும் *சிவபெருமானுடன் திருநடனம்* புத்தகத்தில் இருக்கும் சுலோகங்கள் மற்றும் வேத மந்திரங்களை மனப்பாடம் செய்ய வைக்க வேண்டும். இதனால் பிற்காலத்தில் அவர்கள் பெற்றோர்கள் மற்றும் முதியவர்களானதும், உங்களுக்கு நன்றி தெரிவிப்பார்கள். அதற்கும் பின்னர், இந்த குழந்தைகள் உங்களுக்கு தெரிவிக்கும் வாழ்த்துக்கள், உங்கள் முதுமையில் ஆறுதல் தருவதாக இருக்கும். ¶ஆன்மா அழிவு இல்லாதது, அதை சிவபெருமான் உருவாக்கினார் மற்றும் அது முழுமையான நிறைவை பெற்று சிவபெருமானுடன் ஐக்கியமாக உள்ளது என்பதை நமது குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும். நாம் வாழ்ந்துகொண்டு இருக்கும் உலகம் பற்றியும், இன்றைய தொழில்நுட்ப யுகத்திலும் வருங்காலத்திலும் அவர்களின் மதத்தை எவ்வாறு துடிப்புணர்வுடன் வலுவாக வைத்து இருக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். இது குறிப்பாக இந்தியா மற்றும் இலங்கையில் இல்லாமல், வேறு நாடுகளில் வாழும் சைவ குடும்பங்களுக்கு மிகவும் முக்கியமானது ஆகும். இன்றைய காலை பொழுதில், இங்கே குழுமி

`

இருக்கும் அன்பர்கள் அனைவரும் ஒரு செழிப்பான மற்றும் நிலையான சமய கலாச்சாரத்தின் வாரிசுகளாக இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் மதத்தில் நிலைத்து இருந்தால், உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குழப்பம் இல்லாமல் இருக்கும். அவர்கள் உலகின் மற்ற பகுதிகளில் இருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல வாய்ப்புள்ளது. அவர்கள் மற்ற மதங்களின் தாக்கங்களை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. சைவ இந்து சமய தத்துவங்களை மற்றவர்களுக்கு விளக்கி, அவர்கள் அந்த தத்துவங்களை ஏற்றுக்கொள்ள அல்லது மறுக்க அனுமதி அளிக்கும் அளவிற்கு, உங்கள் குழந்தைகள் தங்கள் மதத்தில் உறுதியாக இருந்து, அதன் தத்துவங்களில் நல்ல புலமையை பெற்று இருக்க வேண்டும். அவர்களுக்கு சைய சமயம், சிவபெருமான், முருகப்பெருமான் மற்றும் விநாயகரை பற்றி முழு தகவலையும் வழங்கி, அவர்களை சமயப் பணியாளர்களாக பணிபுரிவதற்கு உலகெங்கும் அனுப்புங்கள். ¶உலகெங்கும் பரவி இருக்கும் சைவர்கள், உலகில் ஒன்றாக இணைந்து இருக்கும் சைவர்கள் சிவசம்பந்தத்தின் மூலம் தொடர்பில் இருக்கின்றனர். சிவபெருமான் உள்ளார்ந்து இருக்கும் அன்பாகவும் யாவும் கடந்த பரம்பொருளாகவும் இருக்கிறார். பக்குவமடைந்த ஆன்மா இளம் ஆன்மாவை மேம்படுத்தி அதன் மீது அக்கறை செலுத்த வேண்டும் என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. நாம் வாழ்க்கையின் இயல்பான அனுபவங்களை அனுபவித்து, நமது செயல்களுக்கு பொறுப்பு ஏற்க வேண்டும் என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. கொடுமையான பாவம் என்று ஒன்றும் இல்லை, அனுபவம் மட்டுமே இருக்கிறது என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. நமக்கு கெட்ட அனுபவங்கள் ஏற்பட்டால், அது நமது முற்பிறவி பயன் என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. நாம் செய்யும் செயல் இன்னொருவரை துன்புறுத்தினால், வேதனையில் இருக்கும் நமது மனதை பிராயச்சித்தம் செய்து பரிகாரம் தேடலாம் என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. நாம் நமது மனம், உடல் மற்றும் உணர்ச்சிகளை நமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, நாம் ஒளி நிரம்பிய பிரகாசமான ஆன்மா என்பதை உணரும் வரை நாம் தொடர்ந்து மறுபிறவி எடுக்கிறோம் நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. சிவபெருமான் எல்லோர் மீதும் அன்பு செலுத்துவதால், நாம் சிவபெருமான் மீது அன்பு செலுத்துகிறோம், நாம் மற்றவர்கள் மீது அன்பு செலுத்துகிறோம் என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. சிவபெருமான் ஒரு தந்தை மற்றும் ஒரு தாய் போல இருக்கிறார் என்றும், அவர் பழிவாங்கும் கடவுளாக இல்லாமல், நமக்கு உதவி செய்யும் இரக்க குணமுள்ள கடவுள் என்று நமது மதம் நமக்கு உபதேசிக்கிறது. எப்போதும் அவரை நெருங்கிக்கொண்டு இருங்கள். இன்று மலேசியா, இந்தியா மற்றும் இலங்கையில் இருக்கும் இளம் இந்துக்கள் சிவபெருமான் மீது அளவுகடந்த அன்பு செலுத்தி ஒரு பெரிய ஆன்மீக மறுமலர்ச்சியை உருவாக்கி வருகிறார்கள். தங்கள் வாழ்க்கைக்கு எப்போதும் தங்கள் மதத்தின் துணை தேவை என்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள்.

`

கர்ம சக்கர

कर्मचक्र



கர்மவினை சக்கரம்

ஒருவனின் செயல்கள் மற்றும் நடத்தைக்கு ஏற்ப அவனது குணம் அமைகிறது. நல்ல செயலை செய்பவன் நல்லவனாகிறான். பாவச் செயல்களை செய்பவன் பாவியாகிறான். புண்ணிய செயல்களை செய்து ஒருவன் புண்ணியவான் ஆகிறான் மற்றும் தீய செயல்களை செய்து ஒருவன் தீயவன் ஆகிறான்.

சுக்ல யஜூர் வேதம், பிரகதாரண்யக உபநிடதம், 4.4.5. வேஎ, ப. 759



ஒரு பெண்மணி தனக்கு ஏற்பட்ட விபத்தில் கால் எலும்பை முறித்துக்கொண்டு இருந்தாலும், அவள் இறைவன் மீது குற்றம் சுமத்தவில்லை. காலில் கட்டுடன் இருசக்கர நாற்காலியில் அடைப்பட்டு இருந்தாலும், இது தான் உருவாக்கிய கர்மவினை என்பதையும், இந்த அனுபவத்தின் மூலம் சிவபெருமான் தன்னை அதிக பக்குவம் மற்றும் புரிதலை நோக்கி வழிநடத்தி செல்வார் என்பதிலும் அவள் நம்பிக்கை கொண்டு இருக்கிறாள்.

திங்கட்கிழமை

பாடம் 260

நாம் நமது எதிர்காலத்தை

உருவாக்குகிறோம்

நாம் வாழ்க்கையில் செய்யும் ஒவ்வொரு செயலும், சிந்திக்கும் ஒரு சிந்தனையும் ஒரு எதிர்வினையை கொண்டுள்ளது. நமது செயல்கள் மற்றும் சிந்தனைகளால் தோன்றும் விளைவுகளை நாம் உணர்ந்துக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் குறைவு என்றே சொல்ல வேண்டும். பலர் தான் முன்பு செய்த திருப்தி அளிக்காத செயல்களின் எதிர்வினைகளை மறைக்கும் பொருட்டு அதிக நேரத்தை விரயம் செய்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் குழப்பத்துடன் அல்லது வருத்தத்துடன், "இது ஏன் எனக்கு நடக்க வேண்டும்? அந்த சம்பவம் எனக்கு நடப்பதற்கு நான் என்ன தவறு செய்தேன்? அந்த சம்பவம் உருவாவதற்கு நான் என்ன தவறு செய்தேன்? இது எனக்கு தேவை தானா? இதில் நியாயமே இல்லை!" ¶அவர்களுக்கு ஞானோதயம் கிடைத்து, தங்களது இயலுணர்வு மெய்ஞ்ஞான மனதில் வாழும் திறமை கிடைத்துவிட்டால், அவர்கள் அந்த விரிவாக்கம் பெற்ற உணர்வு நிலையில், தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு, மறக்கப்பட்ட கடந்தகால நினைவுகள் அனைத்தும் ஒன்றாக தோன்றுவதை காண முடியும். ஒரு செயலும் ஒரு விதை விதைப்பதைப் போன்றது என்று அவர்கள் தெரிந்து கொள்வார்கள். அந்த விதையில் இருந்து பல வருடங்கள் கழித்து தோன்றும் பழம் எதிர்வினையை குறிக்கிறது. செயல்களும் விதையை போன்று, நிறைவேறும் வரை மனதில் அதிர்ந்துக்கொண்டு இருக்கின்றன. உறுதி இல்லாத ஊகங்களை உருவாக்கும் ஆய்வு அல்லது பகுத்தறிவின் சாதாரண செய்முறைகள் மூலம், கடந்தகால காரணங்களில் இருந்து நிகழ்கால காரியங்களை தொடர்புப்படுத்த முடியாது. காரண காரிய உறவுகளின் சங்கிலியை, உள்ளது உள்ளபடியும் துல்லியமாகவும் சித்தரிக்க, மெய்ஞ்ஞான நுண்ணுணர்வால் மட்டுமே முடியும். ¶இவ்வாறு உருவாக்குதல், மீண்டும் உருவாக்குதல் என்று *கர்மவினை* சக்கரம் தொடர்ந்து சுழன்றுக்கொண்டு இருக்கிறது. *கர்மவினை* சக்கரம் என்பது உங்கள் மனம், எல்லோரது மனதின் இயக்கத்தை மட்டும் குறிப்பிடுகிறது. ஒரு தியான ஆய்வு போல இருக்கும் *கர்மவினை* சக்கர ஆய்வின் மூலம், உங்களுக்கு தற்போது உருவாகும் அல்லது

முன்பு உருவாகிய நிகழ்வுகள் அனைத்தும் நீங்கள் உருவாக்கியது என்பதையும், எதிர்காலத்தில் உங்களுக்கு தோன்றவிருக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் நீங்கள் உருவாக்கி இருப்பீர்கள் என்பதையும் உணர்கிறீர்கள். நீங்கள் எதிர்காலத்தில் அடைய இருக்கும் அனைத்து பொருள்களுக்கும் உங்கள் விருப்பங்கள் காரணமாக இருக்கும். நீங்கள் தற்போது எண்ணற்ற சிந்தனைகள், உணர்ச்சிகள், ஆசைகள் மற்றும் செயல்களின் விளைவாக விளங்குகிறீர்கள். அவை அனைத்தும் உங்களுடையது தான். நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ உங்கள் சூழ்நிலைகளை உருவாக்கி இருப்பதால், அந்த சூழ்நிலை உங்கள் நிலைமைக்கு காரணம் இல்லை. உங்கள் மீது வெளிப்புற சக்திகள் எதுவும் அத்துமீறி தங்களை திணித்துக் கொள்வதில்லை. நீங்கள் உங்களை நோக்கி இந்த உலகில் எதை ஈர்க்கிறீர்களோ, அவை வெளியில் இருப்பதாக தோன்றினாலும், அவை உங்களது அக இயல்பின் வெளிப்பாடே ஆகும். நீங்கள் உங்கள் படைப்புக்களின் படைப்பாளியாக இருக்கிறீர்கள் என்றாலும், நீங்கள் அதே சமயத்தில் உங்கள் உயிர்சக்தியின் உட்புற இடைவெளிகளில் நிறைவடைந்த பொருளாக இருக்கிறீர்கள். இதை முழுமையாக புரிந்துகொள்வதற்கு, உங்களுக்கு *யோகம்* பற்றிய அறிவு தேவைப்படும். ¶ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் போது அனுபவங்கள் மற்றும் ஆசைகளை வெகு சிலரால் மட்டுமே வெற்றிகொள்ள முடியும் என்பதால், தங்கள் உயிர்சக்தியின் ஆழங்களை நாடும் தைரியம் இருக்கும் சிலருக்கு மட்டுமே *யோகம்* பற்றிய ஆய்வு ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் தியானப்பயிற்சி செய்ய ஆரம்பித்ததும் உங்களது அடியுணர்வில், உங்களுக்கு தெரியாமல் புதைந்து இருக்கும் பல்வேறு லௌகீக ஆசைகள் உங்களுக்கு வெளிப்படத் தொடங்கும். உங்கள் தியானம் வெற்றி பெற்றால், உங்கள் மனதை ஆட்கொள்ளும் தேவையற்ற அனுபவங்கள் அல்லது ஆசைகளை உங்களால் விட்டொழிக்க முடியும். நீங்கள் இதை செய்து ஆசையின் உலகை கடந்து செல்லும் போது, ஒவ்வொரு செயலையும் தொடர வேண்டிய குறிப்பிட்ட எதிர்வினையுடன் உங்களை பிணைத்து வைத்து இருக்கும் *கர்மவினை* சக்கரத்தில் இருந்து நீங்கள் விடுபடுகிறீர்கள். இந்த *கர்மவினை* சக்கரத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு, உங்களுக்கு வலுவான ஒருமுகப்பட்ட மனம் தேவைப்படும். இந்த ஒருமுகப்பட்ட மனம், இந்த உறுதியை பெறுவதற்கு உங்களது தெய்வ பக்தி, உண்மைப்பொருளை உணர்வதில் உங்களுக்கு இருக்கும் சிரத்தை மட்டுமே துணையாக இருக்கும். தங்கள் வாழ்க்கைகளில் ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருக்கும் பல்வேறு காரண காரியங்களை உணர்வதற்கு, வெகு சிலரால் மட்டுமே வாழ்க்கை வழங்கும் சோதனைகளிலும் எல்லா சூழ்நிலைகளிலும் உறுதியுடன் இருக்க முடிகிறது. கர்மவினை விதியை படித்து அதை தத்துவ ரீதியாக பாராட்டுவது எளிதாக இருக்கும். ஆனால் அதை உங்களுக்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்விற்கும் பயன்படுத்துவதற்கும், ஒவ்வொரு நாளும் அதன் செயல்பாடுகளை புரிந்துகொள்வதற்கும், உங்களுக்குள் ஒரு திறமையை

விழிப்படைய செய்ய வேண்டி இருக்கும். ¶பற்று, ஆசை, ஏக்கம், இழப்பு ஏற்படும் என்ற அச்சம் ஆகிய சுயமாக உருவாக்கப்பட்ட தளைகள், ஒரு மனிதனை கீழ்நிலை மனதின் நிலைகளில் கட்டுண்டு இருக்க செய்கிறது. மனிதன் நிறைவடையாத ஏக்கம் மற்றும் திருப்தி அடையாத ஆசையின் அறியாமையில் வாழ விரும்புவதால், அவன் வேதனைக்கு ஆளாகிறான். நடக்க இருக்கிறது என்று வேதனையுடன் எதிர்பார்த்து இருந்த சம்பவம், உண்மையில் நடக்காமல் இருந்து விடுவதை பலர் அனுபவித்து இருப்பீர்கள் அல்லவா? நீங்கள் அதன் பிறகு உங்கள் கற்பனை வேதனையில் இருந்து விழித்து எழும் போது, எல்லாம் சரியாக இருக்கிறது என்பதையும், நீங்கள் இந்த அனுபவத்தை பெறும் போது உங்களுக்குள் ஒன்று மட்டும் மாறாமல் இருந்தது என்பதையும் நீங்கள் நினைவில் வைத்து இருப்பீர்கள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 261

மகிழ்ச்சி மற்றும் வேதனையின்

காரணம்

மனிதன் எப்போதும் மகிழ்ச்சியான மற்றும் ஆனந்தமான நிலைகளில் வாழவேண்டும் என்ற கருத்து எப்படி தோன்றியது என்று தெரியவில்லை. ஆனால் தொடக்கத்தில் மகிழ்ச்சி மற்றும் இன்பம் சார்ந்து இருப்பதற்கும், அவற்றை உணர்வதற்கும் முழுமையாக புரிந்து கொள்வதற்கும் துக்கம் மற்றும் வேதனையின் உதவி தேவைப்படுகிறது. அதை மனிதன் உணர்ந்து கொண்டால், அவனுக்குள் தோன்றும் ஒவ்வொரு மனவெழுச்சியும் அதன் எதிர்மறை பண்பைப் பற்றி எச்சரிக்கை வழங்குகிறது. இரண்டாவதாக வேதனையின் அதிர்வு மகிழ்ச்சியை காட்டிலும் அதிக வலுவாக இருக்கிறது. உங்களால் மகிழ்ச்சியான நிலையில் இருந்து அதிகம் கற்க முடிவதில்லை. ஆனால் உங்கள் ஆன்மாவின் உயர்நிலை உணர்வுகளை விழிக்க வைக்கும் வேதனை நிலைகளில் இருந்து உங்களால் கற்க முடிகிறது. ஆனால் வேதனையில் ஆர்வமூட்டும் பண்பு எதுவும் இல்லை. மனம் ஏதாவது ஒன்றை நினைத்து வேதனையில் இருக்கும் போது தியானம் செய்து காரணங்களை கண்டுகொண்டு, வாழ்க்கையின் செயல்பாடுகள் மற்றும் அதன் *கர்மவினை* விதிகளை கிரகித்துக்கொள்ள உங்கள் உணர்வை சிறிதளவு விரிவாக்கம் செய்து கொள்வதற்கும் சரியான நேரமாக விளங்குகிறது. அப்போது மகிழ்ச்சி அல்லது வேதனை வழங்கும் அதிர்வை காட்டிலும், நீங்கள் அதிக வலிமையை பெற்று இருப்பீர்கள். நீங்கள் வாழ்க்கை சக்கரம், காரண காரியம் மீது நடுநிலையுடன் கவனம் செலுத்துவீர்கள். கீழ்நிலை உணர்ச்சிகள் அல்லது

உங்கள் மனம் படைத்த பொருள்களுடன், உங்களை தொடர்புப்படுத்திக் கொள்ள மாட்டீர்கள். ¶மீனவன் அமைத்த தூண்டிலில் சிக்கி, தனது துடுப்பை தண்ணீரில் அடித்துக்கொண்டு, இங்கும் அங்குமாக நீந்தி மேல்மட்டத்திற்கு வராமல் இருக்கும் மீனை போல, சிலர் ஆன்மீக பாதையில் அடியெடுத்து வைத்து, அந்த பாதையில் முன்னேற்றம் பெறாமல், ஓரமாக நின்றுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? அவர்கள் தன்முனைப்புடன் இருப்பதே அதற்கு காரணம். அவர்களின் உணர்வு வரையறுக்கப்பட்டதாக இருக்கிறது. அந்த தன்முனைப்பு முட்டாள்தனமாக செயல்பட செய்கிறது. தன்முனைப்புள்ள ஒரு நபரை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா? அவர் தனக்குள் அடுக்கு அதுக்காக இருக்கும் விவேகத்தைப் பற்றி தெரிந்து கொள்ளாமல், முட்டாள்தனமாக நடந்துக்கொள்வார். ¶ஆனால் விவேகமானவர் தனது மனதின் சக்திகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை அறிந்து இருக்கிறார். அவருக்கு வாழ்க்கை என்பது தனது தத்துவத்தை யதார்த்தமாக மாற்றுவதற்கு, தன்னை *கர்மவினை* சக்கரத்தில் கட்டுண்டு வைத்திருக்கும் அனுபவ சுழற்சிகள் மீது கட்டுப்பாட்டை பெறுவதற்கு மேற்கொள்ளும் தீவிர முயற்சிகளாக விளங்குகிறது. நீங்கள் கண்களை மூடிக்கொண்டு விழிப்புடன் தியானம் செய்ய முயற்சிப்பதன் மூலமாக, நீங்கள் காரண காரிய சங்கிலியில் இருந்து விடுதலை பெறுவதில்லை. தினமும் புதுப்பது சவால்களை எதிர்கொண்டு, தினமும் புதிய உணர்தல்களை பெற்று, உங்கள் மனதை அலைபாய அனுமதிக்காமல் அதை கட்டுப்பாட்டில் வைத்து இருப்பது உண்மையான *யோகப்பயிற்சி* ஆகும். இதைப்போன்ற தீவிரமான ஒருமுகச்சிந்தனை உங்களை முழுமையாக மாற்றி விடும். உங்களது வாழ்க்கை மற்றும் அதில் இருக்கும் ஒவ்வொரு அம்சத்தையும் படைப்பவர் நீங்கள் தான் என்பதை அதிகமாக உணரத் தொடங்குவீர்கள். ¶ஆனால் நீங்கள் *கர்மவினை* சக்கரத்தின் மீது கட்டுப்பாட்டை பெற்று அதன் இயக்கத்தை நிறுத்தும் வரை, இந்த பூமியில் நீங்கள் மறுபிறவி எடுப்பது நிறைவு பெறப்போவது இல்லை. *கர்மவினை* மற்றும் காரண காரியத்தின் சக்கரம் மற்றும் உருவங்களை கொண்ட லோகத்தை, நீங்கள் பார்க்கும் போது மட்டும் வெளிப்படையாக தெரிகிறது. நீங்கள் *கர்மவினை* சக்கரத்தில் இருந்து வெளியேறியதும், பிரகாசமாக இருக்கும் உட்புற சக்தியின் சகஜ நிலையை நீங்களே அடைகிறீர்கள். மனதின் கீழ்நிலைகளில் கட்டுண்டு, தனக்குள் வாசம் செய்யும் மகாதேவர்களைப் பற்றி அறியாமல் வாழ்வது மனிதனின் இயல்பு இல்லை. ஆனால் இந்த உண்மையைப் பற்றிய உபதேசத்தை கேட்டு, அதை புரிந்துகொள்வது என்பது அதிகாலை விடியல் அல்லது விழிப்புணர்ச்சியின் தொடக்கமாக விளங்குகிறது. அதன் பிறகு முடிவான புரிதலை பெறுவது உங்கள் முயற்சியை பொருத்து அமைகிறது. அறியாமையின் திரை வழியாக ஊடுருவி, மனதின் அனுபவங்கள் மற்றும் ஆசையை கடந்து, முழுமுதற்பொருளாக இருக்கும் பரமாத்துமாவை உணர்வதற்கு உங்களால்

மட்டுமே முயற்சி செய்ய முடியும். ஆத்ம ஞானம் பெறுவதற்கு நீங்கள் தான் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

புதன்கிழமை

பாடம் 262

உங்கள் கர்மவினையை

எவ்வாறு எதிர்கொள்வது

நீங்கள் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்வதன் காரணமாக உங்கள் மனம் குழம்பிய நிலையில் இருந்தால், உங்களது *கர்மவினையை* ஏற்றுக்கொள்ள முடியாமல் நீங்கள் மனப்போராட்டதில் இருந்தால், உங்கள் மனதிற்குள் இருக்கும் சிவபெருமானின் திருவடியை அடைந்து, உங்கள் தூல உடலுடன் கோயிலில் இருக்கும் சிவபெருமானின் திருவடிகளை அடைந்து, சனாதன தர்மத்தின் பாதையில் நீங்கள் நிலைகொள்வதற்கு தேவையான அறிவை வேண்டிக்கொள்ளுங்கள். ¶நாம் முன்பு செய்த வினைகளின் அனைத்து அம்சங்கள் மற்றும் நிலைகளை, நாம் அனுபவித்தாக வேண்டும் என்பது உண்மை தான் என்றாலும், கடந்தகாலத்தில் செய்த வன்மையான வினைகள் எதிர்காலத்தின் மீது விளைவிக்கும் தண்டனைகளில் இருந்து மன்னிப்பை பெறுவதற்கு வழிகள் உள்ளன. இறை அருளை நாடுதல், *சாதனா, தபஸ்* மற்றும் பிராயச்சித்தம் செய்து பரிகாரம் செய்தல் மற்றும் நல்ல செயல்களை செய்தல் ஆகிய வழிகளின் மூலம் புண்ணியம் சம்பாதிப்பதால், அது ஒரு புதிய நேர்மறை கர்மவினையாக பதிவாகி, நமது சில கடந்தகால கர்மவினை பாரத்தை தணிக்க உதவுகிறது. இறை அருளை நாடுவது, அதை *சாதனா* மற்றும் *தபஸ்* மற்றும் பரிகாரம் செய்து அந்த அருளை பெறுவதன் மூலம், *கர்மவினைகளின்* வேகம் அதிகரிக்கிறது. வெகுமதிகள் மற்றும் வேதனைகள் ரூபமாக இருக்கும் கடந்தகால *கர்மவினைகளை* நிகழ்காலத்தில் நிறைவேற்றி, எதிர்கொண்டு மற்றும் பயன் பெறுவது ஆகியவை சுயமாக வருத்திக் கொள்ளும் வினைகள் மூலம் வேகம் பெறுகின்றன. இதன் காரணமாகவே முனிவர்கள், "உங்கள் *கர்மவினையை* உற்சாகத்துடன் பொறுத்துக் கொள்ளுங்கள்," என்று கூறியுள்ளார்கள். பரமாத்துமாவை நாடும் பணி தொடங்கியதும், இந்த தூல மற்றும் சூட்சும நரம்பியல் அமைப்பில் எதிர்வினை ஏதும் இல்லாமல் ஒற்றை கண் முன்பாக காட்சி அளிக்கும் பொருட்டு, *கர்மவினை* தனது கோரமான பண்பு மற்றும் புகழுடன் விரிவாக்கம் பெறுகிறது. இதற்கு *யோகப்* பயிற்சி வலுவாக இருக்க வேண்டும். உங்களுக்கு நடந்த ஒரு நிகழ்விற்கு மற்றவர் மீது பழி சுமத்து அல்லது குறை கூறும் ஒவ்வொரு முறையும், "இது என்னுடைய *கர்மவினை*. இதை அனுபவிக்க நான்

பிறவி எடுத்து இருக்கிறேன். எனக்கு நடக்கும் நிகழ்வுகளுக்கு மற்றவர் மீது பழி சுமத்துவதற்காக நான் பிறக்கவில்லை. எனது *கர்மவினையை* எதிர்கொள்ள இயலாமையின் மூலம் உருவாக்கப்பட்ட அறியாமை நிலையில், நான் வாழ்ந்துகொண்டு இருக்க பிறவி எடுக்கவில்லை. நான் ஆன்மீக விரிவாக்கம் பெறுவதற்கு, இந்த மற்றும் முந்தைய பிறவிகளின் கர்மவினைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை முறையாக மற்றும் சிறப்பான முறையில் எதிர்கொண்டு கையாள்வதற்கு நாம் பிறவி எடுத்துள்ளேன்," என்று உங்களிடம் சொல்லிக் கொள்ளுங்கள். ¶பணிவு என்பது அறிவை குறிக்கிறது. அகந்தை அறியாமையை குறிக்கிறது. ஒருவர் தனது கர்மவினையை ஏற்றுக்கொண்டு, தனது செயல்களுக்கு பொறுப்பேற்பது வலிமையை குறிக்கிறது. மற்றவர்கள் மீது பழி சுமத்துவது பலவீனம் மற்றும் அறியாமையை குறிக்கிறது. நாம் முதலில் நமது அறியாமையை வெளிப்படுத்தாமல் இருப்போம். உங்களுக்கு நடக்கும் ஒரு சம்பவத்தை உங்கள் நண்பன், உங்களுக்கு அருகில் வசிப்பவர், உங்கள் நாடு, உங்கள் சமூகம் அல்லது உலகத்தின் மீது சுமத்த விரும்பினால், அதைப் பற்றி பேசாமல் இருந்து, உங்கள் அறியாமையை வெளிப்படுத்தாமல், அதை உங்கள் சிந்தனை லோகத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். சைவ சமயத்தின் இந்த அடிப்படை முகவுரையை உண்மையில் ஏற்றுக்கொள்வதற்கு உங்கள் வாக்கை ஆக்கப்பூர்வமாக கட்டப்படுத்தும் போது, உங்கள் சிந்தனைக்கு புதிய அமைப்பை வழங்கி உங்கள் அடியுணர்விற்கு மீண்டும் பயிற்சி வழங்க முயற்சி செய்யுங்கள்.

வியாழக்கிழமை

பாடம் 263

முழு பொறுப்பு

ஏற்றுக்கொள்ளுங்கள்

உங்களுக்கு நடக்கும் நிகழ்வுகளுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்றால், சிவபெருமானின் அனுகிரகம் மூலம் உங்கள் *கர்மவினையை* சமாளிக்கும் சக்தி உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் அவரை சிவபெருமான் கோயிலில் வழிபடும் போது, உங்கள் அகத்தில் உயிரின் உயிராக இருக்கும் அவரை தொடர்பு கொண்டு, தியானத்தில் அவரை நாடுவதன் மூலம், அவர் உங்களுக்கு அந்த *கர்மவினையை* சமாளிக்கும் புத்தியை வழங்குவார். நாம் இது தொடர்பாக ஒரு உதாரணத்தை பார்க்கலாம். என் கையில் இருக்கும் தட்டில் சாதத்துடன் காய்கறியும் இருக்கிறது. நான் அதை உங்களுக்குத் தருகிறேன். அந்த தட்டை தரும் போது, அது கைத்தவறி இருவருக்கும் மத்தியில் கீழே விழுந்து விடுகிறது. நான் உங்கள் மீது பழி சுமத்த, நீங்கள் என் மீது பழி சுமத்துகிறீர்கள். நானும்

தட்டு கீழே விழுந்ததற்கு பொறுப்பேற்க விரும்பவில்லை. அதைப்போல நீங்களும் அதற்கு பொறுப்பேற்க விரும்பவில்லை. அதனால் நாம் இருவரும் ஒருவரையொருவர் பழித்துக் கொள்கிறோம். உணவுப்பொருட்கள் தரையில் சிதறி கிடைக்கின்றன. இருவரில் ஒருவர், "என்னை மன்னித்து விடுங்கள். இந்த தட்டு கீழே விழுந்ததற்கு நான் தான் காரணம்," என்று சொல்லி உடைந்த தட்டு மற்றும் உணவுப் பொருட்களை சுத்தம் செய்யும் வரை, அந்த இடத்தை வேறு யாரும் சுத்தம் செய்யப்போவது இல்லை. அதைப் போல, நடந்த நிகழ்வுக்கு பொறுப்பு ஏற்று, அந்த நிகழ்வை உருவாக்கியது நாம் தான் என்று உணர்வை பெறுவதால் மட்டுமே, நமது வினைகளின் விளைவுகளை நம்மால் சுத்தம் செய்ய தொடங்க முடியும். தங்கள் கர்மவினைகளுக்கு பொறுப்பு ஏற்ப்பவர்களுக்கு உலகமே உதவி செய்யும். ¶தற்பெருமை, அகந்தை மற்றும் கஞ்சத்தனம் ஆகியவை கர்மவினை விதிகள் மீது நம்பிக்கை இல்லாதவர்களின் குணங்களாக இருக்கும். இது தங்கள் செயல்களுக்கு பொறுப்பு ஏற்காதவர்களின் குணங்களாக இருக்கும். அவர்கள் தங்களை தவிர்த்து மற்ற மனிதர்கள் அல்லது மற்ற விஷயங்கள் மீது பழி சுமத்துவார்கள். இதில் அவர்கள் செய்த தவறுகள் மற்றும் அவர்களுக்கு கடந்தகாலத்தில் நடைப்பெற்ற மற்றும் தற்போது அவர்களுக்கு நடைபெறுகிற மற்றும் எதிர்காலத்தில் அவர்களுக்கு நடக்க இருக்கிற வெறுப்பை உண்டாக்கும் ஒவ்வொரு விஷயமும் அடங்கும். அவர்களது அறியாமையில் இருந்து உருவாகிய அச்சங்கள் மற்றும் ஆத்திரங்களில் அவர்கள் வாழ்கிறார்கள். ¶தூல உடலில் பிறவி எடுப்பதன் மூலம் உங்களால் அனுபவிக்க முடிகிற சில வகை *கர்மவினைகளை*, உங்களது ஆகாச அல்லது சூட்சும உடலில் நிறைவேற்றவோ அல்லது அனுபவிக்கவோ முடியாது. அதனால் பிறவிகளுக்கு மத்தியில் அந்த தூல உடல் கர்மவினைகள் விதை வடிவில் வாழ்கின்றன. ஒரு தூல உடலில் மட்டுமே *சக்கரங்கள்* எல்லாம் செயல்பட்டு, அந்த *கர்மவினைகள்* வெளிப்படுவதற்கும் எதிர்கொள்வதற்கும் அனுமதி வழங்கும். இவ்வாறு ஒவ்வொரு பிறவியும் ஒரு அரிய வாய்ப்பாக விளங்குகிறது. அதனால் தயவு செய்து உங்கள் கர்மவினைக்கு மற்றவர்கள் மீது பழி சுமத்தி, நீங்கள் பிறவி எடுத்த காரணத்தில் இருந்த தப்பிக்க முயற்சி செய்யாதீர்கள். அது அறியாமையின் முத்திய நிலையாக இருக்கும். மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தி விமர்சனம் செய்வதை நிறுத்தி விட்டு, தன் உளஆய்வு செய்துகொள்ளுங்கள். உங்களுக்கு மன்னிப்பு வழங்குவதை நிறுத்தி விட்டு, மற்றவர்களின் நன்மதிப்பை பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அப்போது உங்களுக்கு வலிமையும், ஒரு சுதந்திர உணர்வும் அமைதியும் கிடைக்கும். மனபோரட்டங்கள் நின்று விடும். அகந்தை அழிந்து விடும். தற்பெருமை இருக்காது. நீங்கள் ஒரு முழுமையான நபராக இருப்பீர்கள். உங்கள் *சக்கரங்கள்* அனைத்தும் முறையாக செயல்படும். உங்கள் நரம்பியல் அமைப்பு அமைதி பெறும், மற்றும் நீங்கள் இயல்பாக உங்கள் கர்மவினைகளை உற்சாகமாகவும் நேர்மறையாகவும்

எதிர்கொள்வீர்கள். இந்த பிறவியில் ஏழையாக இருப்பது உங்கள் *கர்மவினையாக* இருந்தால், உங்களுக்கு வரும் வருமானத்திற்குள் குடும்பத்தை நிர்வாகம் செய்வதன் மூலம் நீங்கள் செல்வந்தராக இருப்பீர்கள். உங்கள் வசதிக்கு ஏற்ற ஆடைகளுடன் நீங்கள் திருப்தியாக இருப்பீர்கள். நாம் அறியாமை நிலையில் வாழ நம்மை அனுமதித்து கொண்டு, இந்த பூமியில் பயனற்ற உயிரினங்களாக வாழ்ந்து, நாம் அதிருப்தி மற்றும் சோகத்தை அடைகிறோம்.

வெள்ளிக்கிழமை

பாடம் 264

நன்மை மற்றும் தீமை;

இனம் இனத்தோடு சேரும்

நன்மை அல்லது தீமை என்று ஒன்றும் இல்லை, அனுபவம் மட்டுமே இருக்கிறது என்றால் என்ன? உயரிய கண்ணோட்டத்தில் பார்க்கும் போது நல்ல மற்றும் தீய *கர்மவினை* என்று ஒன்றும் இல்லை. சுயமாக உருவாக்கிய அனுபவம் இருக்கிறது மற்றும் அது ஆன்மீக முன்னேற்றத்திற்கு வாய்ப்புக்களை வழங்குகிறது. *கர்மவினை* வழங்கும் பாடங்களை நம்மால் புரிந்துக் கொள்ளமுடியவில்லை என்றால், நாம் அதை தடுத்து அல்லது வெறுத்து மனம், உணர்ச்சி மற்றும் உடலின் சக்தி மூலம் தாக்குகிறோம். அந்த கர்மவினைக்கு முதலில் இருந்த சாரம் கரைந்து மறைந்து விடுகிறது, ஆனால் நாம் தற்போது செய்த எதிர்வினை எதிர்காலத்தில் எதிர்கொள்வதற்கு ஒரு புதிய கடுமையான *கர்மவினையை* உருவாக்குகிறது. நாம் கர்மவினைக்கு எதிர்செயலாற்றும் வரை, நாம் அதை தொடர வேண்டும் என்பது தான் விதி. ¶நன்மை அல்லது தீமை என்பது வருவதற்கு அல்லது போவதற்கு பயன்படும் ஒரு கதவு போன்றது ஆகும். "நன்மை மற்றும் தீமை என்று ஒன்றும் இல்லை. இருபுறமும் திறக்கும் கதவு மட்டுமே உள்ளது," என்று கூற விரும்புகிறேன். நல்ல செயல்கள் கடந்த கால நல்ல செயல்களின் விளைவுகளை இழுக்கிறது. கதவு வேறு பக்கமாக திறக்கும் போது, தவறுகள் கடந்த கால தவறுகளின் விளைவுகளை இழுத்துக் கொள்கிறது. அதைப் போல வெறுப்புக்கள் கடந்த கால வெறுப்புக்களின் விளைவுகளை இழுத்துக் கொள்கிறது. இவ்வாறு நல்ல நடத்தையின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்வதன் பிரதான நோக்கம் விதை *கர்மவினைகளை* விடுவிப்பது தொடர்பாக இருக்கிறது. முறையான சிந்தனை, வாக்கு மற்றும் செயல் மூலம் செய்யும் *தர்மம்,* முன்பு அமைப்புமுறையாக இருந்த நடத்தையின் விளைவுகளை இழுத்துக் கொண்டு, இந்த பிறவியில் அந்த விதைகள் முளைப்பதற்கு அனுமதி அளிக்கிறது. இனம் இனத்தோடு

சேரும். அதன் பிறகு இந்த பழக்கங்கள் அந்த நபருக்கு தெளிவான மனதையும், யோகப்பயிற்சி செய்வதற்கும் உண்மைப்பொருளை நாடுவதற்கும் உகந்த வாழ்வை வழங்குகிறது. யோகப்பயிற்சி செய்யும் போது, அனுபவிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் எதிர்மறை *கர்மவினைகளை* விதைகள் எரிந்து விடுகின்றன. ¶அதற்கு மாறாக தவறான சிந்தனை, வாக்கு மற்றும் செயல் மூலம் *அதர்மம்* செய்யும் போது, இனம் இனத்தோடு சேர்வதைப் போல, அந்த *அதர்மம்* கடந்தகால தவறுகளின் விளைவுகளை இழுத்துக் கொள்கிறது. இந்த விதை *கர்மவினைகள்* கசப்பான பலனை வழங்கத் தொடங்கி, இழிவான வாழ்க்கை மற்றும் மனநிலையை வழங்குகிறது. அந்த நபர் குழப்பம் மற்றும் சிந்தனையின் தவறான பழக்கங்களில் மூழ்கி இருக்கிறார், மற்றும் அவர் யோகப்பயிற்சி செய்ய அல்லது *தர்மத்தை* பின்பற்ற அல்லது உண்மைப்பொருளை உணரும் நிலையில் இருப்பது இல்லை. அவர் *சம்சாரத்தில்* மூழ்கி இருக்கிறார். ¶சிவபெருமான் தனது சொந்த பாணியில் உங்களுக்கு உணர்தலை வழங்கி, உங்களைப் பற்றிய மற்றும் அவரைப் பற்றிய அறிவையும் வழங்குகிறார். அவர் உங்களுக்கு அதிக அனுபவத்தை வழங்கி உள்ளார். உங்கள் அனுபவத்தை ஆய்வு செய்து, அதில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். அது வேதனை தருவதாகவும் இருக்கிறது, நன்மை செய்வதாகவும் இருக்கிறது. துக்கம் தருவதாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருக்கும் அனுபவத் தூண்டுதல்கள் மூலம் நீங்கள் சுத்தம் அடைகிறீர்கள். உங்களை உங்களது முழுமையை நோக்கி முன்னேற்றி செல்வது சிவபெருமானின் கடமை ஆகும். நீங்கள் அவ்வாறு முன்னேற்றம் பெறும் போது அதிக வேதனை மற்றும் அதிக மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டி இருக்கும். அவை இரண்டும் ஒரே உணர்ச்சி விகிதத்துடன் பதிவாகின்றன. இது தோன்றுவதற்கு எது காரணமாக இருந்ததோ, அது அதிக உற்சாகம் பண்புடன் இரண்டையும் சிறப்புற செய்கிறது. அனுபவத்தை நினைத்து பயம் வேண்டாம், மற்றும் உங்கள் கர்மவினையை அனுபவிக்க அஞ்ச வேண்டாம். அதை தைரியமாக அனுபவியுங்கள். ¶நல்ல *கர்மவினையை* உருவாக்கும் சுயநலமற்ற சேவையை செய்வதன் மூலம், துக்கம் தரும் அனுபவங்களுக்கு எதிர்செயலாற்றுவதை குறைக்க முடியும். இதைத் தான் உங்கள் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றம் பெறுவதற்கு செய்ய வேண்டும். எல்லா ஆன்மாக்களுக்கும் முடிவான குறிக்கோளாக ஞானோதயம் மற்றும் தூல பிறவியில் இருந்து விடுதலை பெறும் *மோக்ஷம்* விளங்குகிறது. அந்த நிலையில் வெளியேற்றம் *சஹஸ்ரஹார சக்கரம்* வழியாக நிகழ்கிறது. அச்சம் இல்லாமல் முன்னேறுங்கள்.

சனிக்கிழமை

பாடம் 265

மூன்று வகை

கர்மவினைகள்

சஞ்சித, பிராரப்த மற்றும் கிரியமான என்று *கர்மவினை* மூன்று வகைக்கப்படும். *சஞ்சித கர்மவினை* என்பது "படிப்படியாக சேகரிக்கப்பட்ட வினைகள்." அது இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளின் *கர்மவினைகளின்* கூட்டுத்தொகை ஆகும். *பிராரப்த கர்மவினை* என்பது "தொடங்கப்பட்டு இயக்கத்தில் இருக்கும் வினைகள்." இது *சஞ்சித கர்மவினையின்* அங்கமாக விளங்குகிறது. இது நமது உடல்களின் இயல்பு, தனிப்பட்ட போக்குகள் மற்றும் தோழமைகள் உட்பட இந்த பிறவியில் சூழ்நிலைகள் மற்றும் நிகழ்வுகளை உருவாக்கி பலன்களை தந்துக்கொண்டு இருக்கிறது. *கிரியமான கர்மவினை* என்பது "தற்போது செய்துக்கொண்டு இருக்கும் வினைகள்." இது இந்த பிறவியில் அல்லது பிறவிகளுக்கு மத்தியில் அந்தர்லோகங்களில் நமது சிந்தனைகள், வாக்குகள் மற்றும் செயல்கள் மூலம் நாம் உருவாக்கி *சஞ்சித கர்மவினையுடன்* சேர்க்கும் *கர்மவினையை* குறிக்கிறது. சில *கிரியமான கர்மவினைகள்* இந்த பிறவியில் பலன் தரும், மற்றும் சில மறுபிறவிகளில் பலன் தருவதற்கு சேகரிக்கப்படுகின்றன. இந்த மூன்று பிரிவுகளையும் *ஆரப்த* மற்றும் *அனாராப்த* என்று இரண்டு உட்பிரிவுகளாக பிரிக்கலாம். *ஆரப்த* ("தொடங்கிவிட்ட, மேற்கொள்ளப்பட்ட") அல்லது "முளைக்கும் *கர்மவினை*" மற்றும் *அனாராப்த* ("தொடங்காத, மந்தமான") அல்லது "விதை *கர்மவினை*".

¶பெரும்பாலும் *கர்மவினையை* நெற்பயிரின் பல்வேறு நிலைகளுடன் ஒப்பிடப்படுகிறது. ஒருவர் சேகரித்த வினைகளின் எஞ்சிய பகுதியாக விளங்கும் *சஞ்சித கர்மவினை*, சாகுபடி செய்யப்பட்டு சேமிப்பு கிடங்கில் இருக்கும் நெற்பயிர் போன்றதாகும். சேமிக்கப்பட்ட நெற்பயிரில் இருந்து சிறிய பகுதி பிரிக்கப்பட்டு, அதில் இருந்து உமி நீக்கப்பட்டு சமைத்து உண்பதற்கு தயார் செய்யப்படுகிறது. இது *பிராரப்த கர்மவினை* என்று அழைக்கப்படும். இது தற்போதைய நிகழ்வுகளை உருவாக்கும் கடந்தகால வினைகளை குறிக்கிறது. சமீபத்தில் சாகுபடி செய்யப்பட்ட புதிய நெல்லை மீண்டும் பயிரிடுவதன் மூலம் விளையும் நெல்பயிரின் நெல்லை சேமிக்கப்புக் கிடங்கில் சேர்ப்பது *கிரியமான கர்மவினை* போன்றது ஆகும். இது தற்போதைய செயல்களின் விளைவுகளை குறிக்கிறது. ¶*பிராரப்த கர்மவினை* பிறக்கும் நேரத்தை தீர்மானிக்கிறது. ஒருவரது ஜாதகத்தை பிறக்கும் நேரம் நிர்ணயிக்கிறது மற்றும் அந்த ஜாதகம் இந்த *கர்மவினைகளின்* விடுதலை மீது ஏற்படுத்தும் தாக்கத்தின் மூலம் தனிப்பட்ட வாழ்க்கையின் அமைப்புமுறையை வரையறுக்கிறது. ஒருவரது பிறப்பின் இயல்பு, ஆயுட்காலம் அன்றும் அனுபவ அமைப்புமுறைகளின் இயல்பு என்ற மூன்று அடிப்படைக் காரணிகள் உள்ளன. செயலற்று இருக்கும் *சஞ்சித கர்மவினையை* நேரடியாக செயல்படுத்தாத போது, அது வலுவான தாக்கம் ஏற்படுத்தும் ஒரு நிலை ஆற்றலாக விளங்குகிறது. அந்த ஆற்றல் சாதகமாக

அல்லது சாதகமற்றதாக, நல்ல அல்லது தீய, மந்தமாக அல்லது ஊக்கம் அளிப்பதாக இருக்கக்கூடும். ஒரே சமயத்தில் பிறந்து ஒரே ஜாதகத்துடன் இருக்கும் இருவர், மாறுபட்ட திறமைகள் மற்றும் மனநிலைகளுடன் இருப்பதற்கான காரணத்தை இந்த மந்தமான *கர்மவினை* விளக்கம் அளிக்கிறது. *சஞ்சித கர்மவினையில்* இருக்கும் இந்த ஒடுக்கப்பட்ட சக்தியை ஒரு *யோகியானவர்* தனது *குண்டலினி* சக்தி மூலம் எரிக்கவும், *ஆனந்தமய கோசத்தின் கர்மவினை* கிடங்கில் அதை பலவீனப்படுத்தவும் முயற்சி செய்கிறார். ¶ஒருவர் தனக்கு சொந்தமாக இருக்கும் மந்தமான *சஞ்சித கர்மவினை* மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று *கர்மவினை* பற்றி அறிந்த ஜோதிடர்கள் வலியுறுத்துகிறார்கள். அதைத்தவிர, உருவாகிக்கொண்டு இருக்கும் *கிரியமான கர்மவினைகள்* மீதும் ஒருவரால் ஆதிக்கம் செலுத்த முடிகிறது. ஆனால் இயக்கத்தில் இருக்கும் *பிராரப்த கர்மவினைகள்* கடமையாக விளங்குகின்றன. வாழ்க்கையின் கட்டமைப்பாக விளங்கும் அவற்றை, அனுபவித்து ஆகவேண்டும். அவற்றை கரைக்க சங்கல்பம் எடுப்பதற்கு, நேர்மறை மனநிலை அவசியம் தேவைப்படுகிறது. ஆத்திரம் மற்றும் மற்ற எதிர்மறை உணர்ச்சிகளை வெளிப்படுத்தி அவற்றுடன் போராடுவதன் மூலம், எதிர்காலத்திற்கு முற்றிலும் தேவையில்லாத அதிக சஞ்சித கர்மவினைகள் உருவாகின்றன. நமது *கர்மவினையை* ஏற்றுக்கொண்டு சகித்துக் கொள்ளவேண்டும் என்பது தான் விதி.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 266

விதியில் இருக்கும்

நுணுக்கங்கள்

"கர்மபலன்களில் பற்றில்லாமல் இருப்பதன் மூலம் *கிரியமான* சேகரிப்பு தடுக்கப்படுகிறது. *பிராரப்த* அனுபவிக்கப்பட்டு இந்த பிறவியுடன் நின்றுவிடுகிறது மற்றும் *சஞ்சித குருவின்* தீட்சை மூலம் எரிந்து விடுகிறது," என்று நமது நண்பர் திரு. ம. அருணாச்சலம் *கர்மவினைக்கு* தீர்வு காண்பது பற்றி குறிப்பிட்டுள்ளார். ஒருவரின் *கர்மவினையை* தணித்து அதன் பாதையை மாற்றும் சக்தி ஒரு *சத்குருவிடம்* இருக்கிறது. *குரு* எப்போதும் ஒருவரிடத்தில் நற்பண்பை கவனித்து, அந்த நற்பண்பை ஊக்குவிக்கிறார். இந்த ஊக்குவிப்பு மற்றும் அவரது அதிகாரமும் சேர்ந்து, அந்த சீடன் சிக்க வாய்ப்புள்ள அபாயகரமான பகுதிகளின் தீவிரத்தை தானாக தணிக்கிறது. ¶இயல்பாகவே மரணத்திற்கு பிறகு ஒருவரது அந்தர்லோக வாழ்க்கையின் சூழலையும் *கர்மவினை* தீர்மானிக்கிறது. பல *கர்மவினைகளை* தூல பிறவியில் மட்டுமே

கரைக்கமுடியும் என்றாலும், பிறவிகளுக்கு மத்தியில் தூல உடல் இல்லாத ஆன்மாக்களுக்கும் தவறாது செயல்படும் *கர்மவினையின்* விதி தொடர்கிறது. இவ்வாறு பூமி "கர்ம க்ஷேத்திரமாக" விளங்குகிறது. *கர்மவினை* என்பது முக்தி அடைந்து தேவலோகத்தில் வாழ்பவர்களுக்கும், பரமேஸ்வரனுடன் *விஷ்வகிராசா* என்கிற முடிவான ஐக்கியம் நடைபெறும் வரை சிவலோகத்தில் வாசம் செய்பவர்களுக்கும் வெவ்வேறு வகை கட்டுப்பாடுகளை கொண்டுள்ளது. ¶ஒரு வாழ்நாளின் மத்தியில் அனுபவிக்கப்படும் பக்குவமடைந்த *கர்மவினையின்* பாதுகாப்புடன், அந்த ஒரு குறிப்பிட்ட வாழ்நாளில் *பிராரப்த கர்மவினைகள்* பலன் தருகின்றன. அடுத்த பிறவியில் *பிராரப்த கர்மவினைகள்* வெளிப்படும் போது அவற்றை சிறப்பாக சமாளிக்க, அந்தர்லோகத்தில் கற்ற சில கல்வியும் பயன்படுகிறது. அங்கே கற்ற சில கல்வி எதிர்கால பிறவிகளில் மட்டுமே பயன் தருவதாக இருக்கும். அந்தர்லோகத்தில் செய்த நல்ல மற்றும் தீய *கர்மவினைகளும்* பெரிய *சஞ்சித கர்மவினைகளின்* கூடையில் சேர்க்கப்படுகின்றன. அதில் சில பலன்களையும் தருகின்றன. ¶அனைத்து கர்மவினைகளும் பக்குவம் அடைந்து அல்லது பக்குவம் அடையாமல், தயார் நிலையில் அல்லது தயாராக இல்லாத நிலையில் இருக்கின்றன. ஒருவர் எடுக்கும் பிறவியுடன் தோன்றும் *பிராரப்த கர்மவினைகளில்* சில உடனடியாக விடுவிக்கப்படுகின்றன மற்றும் சில வெளிவருவதற்கான தயார் நிலையை வாழ்க்கையின் பிற்பகுதியில் தான் பெறுகின்றன. இதன் காரணமாகவே ஒருவர் தற்கொலை செய்து கொள்ளும் போது, இந்த பிறவியில் கரைப்பதற்காக அவர் திட்டமிட்ட *பிராரப்த கர்மவினைகளின்* நிறைவேற்றத்தில் தடை ஏற்படுவதால், அதன் விளைவுகள் மிகவும் கடுமையாக இருக்கின்றன. அதன் பிறகு அவர் எதிர்பாராத விதமாக அந்தர்லோகத்தில் நுழைவதால் ஏற்படும் சிக்கலை சரி செய்ய வேண்டியிருக்கிறது. ¶பக்குவம் அடைகிற *பிராரப்த கர்மவினைகள்*, நீங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கும் சமயத்தில் கரைகின்றன. அதைப் போல உருவாக்கப்படும் *கிரியமான கர்மவினைகளில்* சில பக்குமடைந்து இருக்கின்றன மற்றும் சில பக்குவம் அடையாத நிலையில் இருக்கின்றன. சில உடனே பலன் தந்து இந்த பிறவியில் கரைந்து விடுகின்றன. மற்றவை விதைக்கு சென்று, எதிர்கால பிறவிகளில் *பிராரப்த கர்மவினையாக* அனுபவிப்பதற்காக,பெரிய *சஞ்சித கர்மவினை* வங்கியில் சேர்ந்து கொள்கிறது. இந்த பிறவியில் அனுபவிக்கப்படாமலும் கரைக்கப்படாமலும் இருக்கும் கர்மவினைகளை, நீங்கள் ஒரு கூடை நிறைய விதைகளாக எடுத்து செல்கிறீர்கள். தான் மறுபிறவி எடுக்கப் போவதை அறிந்துள்ள ஒரு மறைஞானி, இந்த விதைகளை கரைப்பதற்கு உணர்வுடன் செயல்படலாம்.

ஹிம்ச ந கர்தவ்யா

हिंस न कर्तव्या



இம்சை செய்ய வேண்டாம்

புவி மற்றும் வானம் சாந்தமாக இருக்கட்டும். சோதி சாந்தமாக இருக்கட்டும். சலங்கள் சாந்தமாக இருக்கட்டும். மூலிகை செடிகள் சாந்தமாக இருக்கட்டும். மரங்கள் மற்றும் காடுகள் சாந்தமாக இருக்கட்டும். தேவர்கள் எல்லோரும் எங்களுக்கு சாந்தியை வழங்கட்டும். எங்களுக்கு எல்லையற்ற சாந்தி கிடைக்கட்டும். இந்த சாந்தமான செயல்களின் மூலம் எங்களுக்கு கோரமான கர்மவினை, கொடூரமான கர்மபலன், பாவத்தில் இருந்து விடுதலை கிடைத்து எங்களுக்கு அமைதி உண்டாகட்டும். எங்களுக்கு அனைத்தும் மங்களகரமாக அமையட்டும்.

அதர்வண வேதம் 19.9.14. வேஎ, ப. 306



ஒரு வேட்டைக்காரன் காட்டில் சில மான்களை பின்தொடர்ந்து வந்து, விளையாட்டாக அவற்றை கொல்ல முயற்சி செய்கிறான். அவனது நண்பன் துப்பாக்கியை பற்றிக்கொண்டு, அந்த அழகான விலங்குகளின் உயிர்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டும் என்றும், வேட்டையாடுவதை தவிர்த்து அந்த மான்கள் அமைதியாக வாழ அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறான்.

திங்கட்கிழமை

பாடம் 267

இந்து தர்மத்தின் வழி:

இம்சை செய்ய வேண்டாம்

மனிதர்கள் இரக்கம் மற்றும் மற்ற உயிரினங்களை துன்புறுத்தாமல் வாழ்வதற்கு ஊக்கமளிக்கும் இந்து தர்ம விவேகத்தை அகிம்சை என்ற ஒரு சொல்லில் குறிப்பிடலாம். இம்சை என்றால் துன்புறுத்துதல் அல்லது காயப்படுத்துதல் என்பதை குறிக்கிறது. அந்த சொல்லுக்கு முன்பாக "□ " சேரும் போது, அது அதன் எதிர்பதமாக மாறுகிறது. சுருக்கமாக சொன்னால், அகிம்சை என்பது தீங்கு செய்யாமல் அல்லது துன்புறுத்தாமல் இருப்பது ஆகும். இது இரக்கம் மற்றும் உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருப்பதை குறிக்கிறது. அகிம்சை என்பது வன்முறையை மட்டும் குறிப்பிடாமல், அதிக ஆழமாக சென்று நுணுக்கமான சித்ரவதை மற்றும் எளிமையான துன்புறுத்தலையும் தடை செய்கிறது. ¶*யோக சூத்திரங்களைப்* பற்றி வியாச முனிவர் விளக்கம் அளிக்கும் போது, அகிம்சை என்பது "எப்பொழுதும் எந்த வடிவிலும் எல்லா உயிரினங்களையும் துன்புறுத்தாமல் இருப்பது" என்று குறிப்பிடுகிறார். அகிம்சாவாதியை ஒருவர் நெருங்கும் போது, அவர் தனது பகை உணர்வில் இருந்து முழுமையான விடுதலை பெறுகிறார். அதைப்போல பதஞ்சலி முனிவர்(கிமு 200), அகிம்சை என்பது மெய்ப்பொருளை நாடுவோர் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய ஆன்மீக பயிற்சியாக இருக்கும் *யோகியின் மகாவிரதமாக* குறிப்பிடுகிறார். இது கொலையை மட்டும் நிந்திக்காமல், இயற்கை சூழலுக்கு ஏற்படுத்தும் தீங்கு உட்பட, தீங்கு விளைவிக்கும் அனைத்து வகையான சிந்தனைகள், வாக்குகள் மற்றும் செயல்களையும் கண்டிக்கிறது. காயப்படுத்தும் நோக்கம் மற்றும் கனவில் ஈடுபடும் வன்முறையும், அகிம்சை கோட்பாட்டை மீறவது ஆகும். ¶ஒவ்வொரு நம்பிக்கையும் சில மனநிலைகளை உருவாக்குகின்றன. அந்த மனநிலைகள் நமது எல்லா செயல்களையும் நிர்வகிக்கின்றன. இதனால் மனிதனின் செயல்களை, அவனைப் பற்றியும் அவனை சுற்றி இருக்கும் உலகைப் பற்றியும், அவனது அகத்தில் இருக்கும் நம்பிக்கைகளுடன் தொடர்புப்படுத்தலாம். அந்த நம்பிக்கைகள் தவறாக இருந்தால், அவனது செயல்கள் பிரபஞ்ச *தர்மத்துடன்*

இணங்கி இருக்காது. உதாரணத்திற்கு பிரபஞ்சத்தில் எங்கும் எதிலும் வியாபிக்கும் தெய்வீக பண்பின் இருப்பு மீது நம்பிக்கை இருக்கும் போது, மனதில் உயிருள்ள மற்றும் உயிரற்ற வஸ்த்துக்கள் மீது மரியாதை, நல்லெண்ணம் மற்றும் இரக்கம் தோன்றுகிறது. இது அகிம்சை மீதுள்ள நம்பிக்கையின் இயல்பான விளைவாக விளங்குகிறது. சொர்க்கம் மற்றும் நரகம், பிரகாசமான சக்திகள் மற்றும் இருண்ட சக்திகள் என்று இருமையில் இருக்கும் நம்பிக்கையின் மூலம் நாம் எப்போதும் தயார் நிலையில் இருந்துகொண்டு, நமக்கு தீயவராக அல்லது வேற்று மதத்தவராக அல்லது மற்ற காரணத்தினால் தகுதியற்றவராக தோன்றுபவர்களை உடல் மற்றும் உணர்ச்சி ரீதியாக துன்புறுத்துவது நியாயமானது என்கிற மனநிலையை நமக்கு உருவாக்குகிறது. அத்தகைய சிந்தனை நேர்மையானது என்கிற போர்வையில் நடைபெறும் போர்கள் மற்றும் சச்சரவுகளை நியாயப்படுத்துவதற்கு வழிவகுக்கிறது. இந்து மதம், பௌத்த மதம் மற்றும் சமண மதத்தில் அகிம்சை என்பது உயர்நிலை உணர்வையும், இம்சை என்பது கீழ்நிலை உணர்வையும் குறிக்கிறது என்று சுருக்கமாக சொல்லலாம். ¶பக்தி சிரத்தையுடன் இருக்கும் இந்துக்கள் கொலை செய்வதை பல காரணங்களுக்கு எதிர்க்கிறார்கள். இந்து மனதில் செயல்படும் வலுவான சக்திகளாக *கர்மவினை* மற்றும் மறுபிறவியில் இருக்கும் நம்பிக்கை விளங்குகிறது. தங்களிடம் இருந்து மற்றவர்களை நோக்கி வெளிப்படுத்தப்படும் ஒரு சிந்தனை, உணர்வு அல்லது செயல் தங்களை நோக்கி, அதே அளவில் அல்லது அதிக தீவிரமாக திரும்பும் என்பதை அவர்கள் நன்றாக அறிந்து இருக்கிறார்கள். நாம் மற்றவர்களுக்கு எதை செய்தோமோ, அதை மற்றவர்கள் நமக்கு இந்த பிறவி அல்லது இன்னொரு பிறவியில் செய்வார்கள். என்றுமே தவறாமல் இயங்கும் ஒரு பிரபஞ்ச செய்முறை மூலம், தான் செய்த வன்முறை தன்னை நோக்கி திரும்பும் என்பதை இந்து முழுமையாக நம்புகிறார். இது தொடர்பாக திருவள்ளுவர் எழுதிய ஒரு திருக்குறளை பார்ப்போம்,

"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (திருக்குறள் 320)."

இதைப் போன்ற கருத்தை சமண மதத்தின் *ஆசரங்க சூத்திரத்தில்* காணலாம். "மற்றவர்களை துன்புறுத்துவது நம்மை நாமே துன்புறுத்துவதற்கு சமம் ஆகும். நீங்கள் யாரை கொலை செய்ய நினைக்கிறீர்களோ, நீங்கள் அவராகவே இருக்கிறீர்கள். நீங்கள் யார் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறீர்களோ, நீங்கள் அவராகவே இருக்கிறீர்கள். நாம் மற்றவர்களை நேர்மையற்ற வழியில் செயல்பட தூண்டும் போது, நாமும் நேர்மை தவறுகிறோம். நாம் மற்றவர்களை கொலை செய்ய நினைக்கும் போது, நாம் நம்மையே கொலை செய்து கொள்கிறோம்..''

செவ்வாய்க்கிழமை

பாடம் 268

இம்சையில் இருந்து

அகிம்சை வரை

நாம் வன்முறையில் இருந்து அகிம்சை பாதைக்கு எப்படி மாற்றம் பெறுவது என்றும், கொலை செய்வதற்கு ஒப்புதல் வழங்கிய மனித நேயம் எவ்வாறு அதை எதிர்த்து நிற்கும் என்றும் இன்று பலர் சந்தேகிக்கின்றனர். தங்கள் பெற்றோர்கள் மற்றும் மூதாதையர்கள் இந்து தர்மத்தை பின்பற்றி வந்ததால் பல மில்லியன் கணக்கான மக்கள் இந்துக்களாக பிறந்து இருந்தாலும், முறையான மனநிலைகளை உருவாக்கும் மத நம்பிக்கைகளைப் பற்றி அவர்களுக்கு கற்பிக்கப்படவில்லை. அவர்கள் இந்துக்களாக இருப்பதால், அவர்களின் வாழ்க்கையின் பிற்பகுதியில் தங்களது மதத்தின் மீது சிரத்தை மற்றும் பக்தி தீவிரம் அடைகிறது. அதிகமான மன வேதனையுடன் ஆழ்ந்த சிந்தனை, தன் உளஆய்வு மற்றும் உளவியல் சோதனை மூலம் பழைய நம்பிக்கைகள் மறைந்து, அங்கே புதிய நம்பிக்கைகள் இடம் பிடிக்கின்றன. அடிமனதில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. *மூலாதார சக்கரத்தில்* பதிந்து இருக்கும் பல வருடத்து நிரலாக்கம் புதுப்பிக்கப்படுகிறது. இந்த செய்முறையின் மூலம் அசைவ உணவு உண்பவன் சைவ உணவிற்கு மாறுகிறான், மற்றும் இம்சாவாதி அகிம்சாவாதியாக மாறுகிறான். ¶பூமியில் இந்த காலகட்டத்தில் கீழ்நிலை குணத்துடன் பக்குவம் அடையாமல் இருக்கும் மக்கள் சமூகத்தின் எதிரிகள் என்பதை இந்து அறிந்து இருக்கிறார். பக்குவம் அடையாமல் இருப்பதால், அவர்கள் கீழ்நிலை உள்ளுணர்வு, திமிர், குழப்பம் மற்றும் தங்களை சுற்றி இருப்பவர்கள் மீது அதிக கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு விதிப்பதில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பொறாமை, கோபம் மற்றும் அச்சத்துடன் இருக்கிறார்கள். பக்குவப்பட்ட நபர்கள் அவர்களுக்கு எதிரிகளாக இருக்கிறார்கள். பலர் விளையாட்டாக கொலை மற்றும் கொள்ளையில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு அதன் தேவையும் இருப்பதில்லை, அந்த பொருட்களை அவர்கள் பயன்படுத்துவதும் இல்லை. இந்த கீழ்நிலை இயல்பு உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு நாடு, ஒவ்வொரு சமூகம் மற்றும் ஒவ்வொரு பகுதியிலும் சமமாக பரவி இருக்கிறது. மக்கள் தொகையில் பத்து முதல் இருபது சதவீதம் அங்கம் வகித்து உயர்ந்த குணங்களுடன் இருப்பவர்கள் பாதுகாப்பான சூழலில் வாழ்கின்றனர். அவர்கள் பகுத்தறிவை பயன்படுத்தும் ஆராய்ச்சி, நினைவாற்றலை பயன்படுத்தும் கல்வித்துறை மற்றும் மன உறுதியை பயன்படுத்தி லௌகீக பொருட்களை இங்கும் அங்குமாக இயக்கும்

துறையில் வேலை செய்கிறார்கள். மேலும் உயர்ந்த பண்புகளுடன் இருப்பவர்கள் பிரபஞ்ச இரகசியங்களை ஆராய்கிறார்கள் மற்றும் மற்றவர்கள் குழுக்களாக அல்லது தனிநபர்களாக பிரபஞ்சத்தில் அமைதி மற்றும் பூமியில் அன்பு நிலைத்து இருக்க முயற்சி செய்கிறார்கள். கீழ்நிலையில் இருப்பவர்கள் காலப்போக்கில் உயர்நிலைக்கு வருவார்கள் என்பதையும், கடினமாக உழைத்து உயர்நிலைக்கு வந்தவர்கள் மீண்டும் கீழ்நிலைக்கு சென்று சிக்கிக் கொள்வதை தவிர்ப்பார்கள் என்பதையும் இந்து அறிந்து இருக்கிறார். பழைய யுகத்தில் இருந்து புதிய யுகத்தை நோக்கி, அறியாமை இருளில் இருந்து தெய்வீக ஒளியின் உணர்வை நோக்கி மனிதநேயம் பெறும் முன்னேற்றத்தை இந்துக்கள் நம்புகிறார்கள். ¶மனிதர்கள் அடிப்படையில் உள்ளுணர்வு, அறிவுணர்வு மற்றும் மெய்ஞ்ஞானம் அல்லது ஆன்மாவின் பண்புடன் இருக்கிறார்கள். உள்ளுணர்வு இயல்பு என்பது நன்மை மற்றும் தீமை, உனது மற்றும் எனது, மேலே மற்றும் கீழே என்கிற இருமைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மாவின் இயல்பு ஒருமையை சார்ந்து, பணிவு, அமைதி, அன்பு மற்றும் உதவி செய்யும் பண்பை அடிப்படையாகக் கொண்டது. இந்த இரண்டையும் அறிவுணர்வு இயல்பு ஆராய்ந்து தெரிந்து கொள்கிறது. அது அறிவை கீழ்நிலை பண்பில் இருந்து உயர்நிலை பண்பிற்கு மற்றும் உயர்நிலை பண்பில் இருந்து கீழ்நிலை பண்பிற்கும் இயக்குகிறது. அது சூத்திரங்களை கண்டுபிடித்து, தீர்வுகளை கண்டுகொண்டு தகவலை செயல்படுத்துகிறது. இதற்கு ஆன்மாவின் சக்திகளை தூல உடலின் (உள்ளுணர்வு இயல்பு) சக்திகளுடனும், ஆன்மாவின் சக்திகளை மனதின் சக்திகளுடனும் (அறிவுணர்வு இயல்பு) இணைக்கும் *யோகப்பயிற்சி* பெரும் துணையாக விளங்குகிறது. அதன் பிறகு ஒருவர் ஆன்மா மீது விழிப்புடன் உணர்வையும் பெறுகிறார். இந்த அனுபவிக்க வேண்டிய அனுபவம், இறைவனுடன் இந்துவிற்கு ஏற்படும் தனிப்பட்ட அனுபவமாக விளங்கி, முக்தி பெறுவதற்கும் அத்தியாவசியமாக விளங்குகிறது. இந்து தனது ஆன்மா மீது விழிப்புடன் உணர்வையும் பெற முயற்சி செய்கிறார். இந்த ஆன்மா பண்புகள் விரிவாக்கம் பெறும் போது, அவனுக்குள் ஒரு தெய்வீக அன்பு நிரம்புகிறது மற்றும் அதனால் அவன் ஒரு சிறு பூச்சியையும் துன்புறுத்த மாட்டான். இது தொடர்பாக ஒரு *யஜுர் வேத* மந்திரத்தை பார்க்கலாம். ‘‘என்னை எல்லா உயிரினங்களும் நட்புணர்வுடன் பார்க்கட்டும்! நான் எல்லா உயிரினங்களையும் நட்புணர்வுடன் பார்க்க வேண்டும்! நாங்கள் ஒருவரையொருவர் நட்புணர்வுடன் பார்க்க அருள் புரிவாயாக!” (36.18. வேஎ, ப. 342)

புதன்கிழமை

பாடம் 269

அமைதி வீட்டில் இருந்து

தொடங்குகிறது

உலகிற்கு அமைதியை பற்றி உபதேசிப்பது எப்படி? அறிவை பயன்படுத்தி அமைதியை பராமரிக்க முடியும் என்பதை குழந்தைகள் புரிந்துக்கொள்ளும் நோக்குடன், இரவு உறங்குவதற்கு முன்பாக தர்க்கங்கள் மற்றும் வாக்குவாதங்களை, தேவைப்பட்டால் மூன்று நாட்களுக்கு விழித்து இருந்து தீர்வு கண்டு, தங்கள் வீட்டில் அமைதியான சூழ்நிலையை காக்க வேண்டும் என்று குடும்பங்களுக்கு முதலில் கற்றுத் தருவது மிகவும் சிறந்த வழியாக இருக்கும். மனிதர்களுக்கு கொம்புகள் அல்லது வளை நகங்கள் அல்லது கூர்மையான பற்கள் இருப்பதில்லை. அவர்களின் அறிவே அவர்களுக்கு ஆயுதமாக இருக்கிறது. எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் சக்தி இந்த பிரபஞ்சத்தை கட்டிக் காக்கிறது என்றும், நாம் அந்த சக்தியை ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு நாளும் உருவாக்குகிறோம் என்றும், இது ஒரு காலச்சக்கரம் என்பதால் நாம் உருவாக்குவது நம்மை நோக்கி மீண்டும் திரும்புகிறது என்கிற அடிப்படை நம்பிக்கைகளாக இருக்கும் வாழ்க்கையில் மறுக்கமுடியாத உண்மைகளை கற்பதன் மூலமாகவும் பெற்றோர்கள் முன் உதாரணமாக இருப்பதன் மூலமாகவும் குழந்தைகளை கற்பிக்க வேண்டும். அதனால் நாம் ஒரு தூல உடலில் இருக்கும் போது ஒரு தூல பிரபஞ்சத்தில் படைக்கிறோம் என்பதால் நன்மை, தீமை மற்றும் இரண்டும் கலந்த நமது படைப்புக்களை எதிர்கொள்வதற்காக, மரணத்திற்கு பிறகு ஒரு புதிய பிறவியில் ஒரு தூல உடலுடன் திரும்ப வேண்டும். அவர்கள் இதைக் கற்றுக் கொண்டதும், வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். தங்கள் குழந்தைகளை எதிர்கால அமைதிப்புறாக்களை உருவாக்குவதைப் பற்றி பெற்றோர்கள் சிந்திக்க வேண்டும். இதைப்பற்றி எப்போதும் பெற்றோர்கள் முடிவு எடுத்தாக வேண்டும். நாம் முன் உதாரணமாக இருப்பதன் மூலமாக மட்டுமே, குழந்தைகளுக்கு கற்றுத்தர முடியும் என்பதை நினைவில் வைத்து இருங்கள். ¶மாறுபட்டு இருப்பவர்களையும் மாறுபட்ட நம்பிக்கைகள் உடையவர்களையும் பாராட்டுவதைப் பற்றி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தருவதோடு, மற்றவர்கள் தங்களுக்கென்று தனி வழிமுறைகள் மற்றும் வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தை கொண்டிருக்கும் ஒரு பன்முக உலகில் வாழ்வதற்கு தேவையான தாராளமனப்பான்மையை அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும்; மனித வேறுபாட்டின் மதிப்பு மற்றும் ஒரு பகுதியை சார்த்த கருத்துக்களில் இருக்கும் குறுகிய மனப்பான்மையை பற்றி கற்றுத் தரவேண்டும்; மனதில் அச்சம் இல்லாமலும், தங்கள் வழிமுறைகள் மற்றும் தங்கள் விருப்பங்களை மற்றவர்கள் மீது திணிக்காமல் பல வேறுபாடுகள் இருக்கும் இந்த உலகில் வாழ்வதற்கான கருவிகளை

அவர்களுக்கு கொடுத்து; நமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை துன்புறுத்துவதால் எந்த பயனும் இல்லை என்பதை அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். இதைப் பற்றி குறிப்பிடும் அதர்வண வேதம் சுலோகத்தை பார்க்கலாம். "புவி மற்றும் வானம் சாந்தமாக இருக்கட்டும். சோதி சாந்தமாக இருக்கட்டும். சலங்கள் சாந்தமாக இருக்கட்டும். மூலிகை செடிகள் சாந்தமாக இருக்கட்டும். மரங்கள் மற்றும் காடுகள் சாந்தமாக இருக்கட்டும். தேவர்கள் எல்லோரும் எங்களுக்கு சாந்தியை வழங்கட்டும். எங்களுக்கு எல்லையற்ற சாந்தி கிடைக்கட்டும்." (19.9.14. வேஎ, ப. 306). ¶கொலை செய்யும் அநீதி நின்றால் தான், அடுத்த யுகம் அல்லது மனித சகாப்தம் முழு வீச்சில் தொடங்கும். தீர்க்கதரிசிகளாக இருந்த நமது மதத்தின் *ரிஷிகள்* நாம் வாழும் காலக்கட்டத்தை கணித்து இருந்ததால், இன்று நாம் கவலைகள் ஏதும் இல்லாமல் இருக்கிறோம். ஆனால் கடந்தகாலத்தில் செய்த தவறுகளை சுட்டிக்காட்டி எதிர்காலத்திற்கு சிறந்த பாதையை வரையறுத்து, முன்னேற்றம் தரும் செய்முறையை அடுத்த தலைமுறைக்கு வழங்க, இந்து தனது புத்திக்கு கட்டுப்பட்டு இருக்கிறான். இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொருவரையும் எழுச்சி பெற செய்து, ஒரு புறம் வீட்டில் பெற்றோர்களுக்கு மத்தியில் நடைபெறும் போரையும், இன்னொரு புறம் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு மத்தியில் நடைபெறும் போரையும் நிறுத்துவது, உலகை பாதுகாப்பதற்கு இந்து பயன்படுத்தும் செய்முறை ஆகும். சமூகங்களை சுற்றி நடைபெறும் மோதல் மற்றும் நாடுகளுக்கு மத்தியில் நடைபெறும் போர்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு வீட்டில் நடைபெறும் போரை நிறுத்துவது நல்ல தீர்வாகும். அகிம்சை வாசம் செய்யும் வீடு, ஒரு உண்மையான இல்லமாக விளங்குகிறது.

வியாழக்கிழமை

பாடம் 270

அகத்தின் அமைதியை

நாடுதல்

ஒருவர் தனக்குள் முழு அமைதியை போதை மருந்துகள் மூலமாக இல்லாமல், உளவியல் அல்லது மனநோய் மருத்துவம் மூலமாக இல்லாமல், தியானத்தின் துணையோடு மட்டும் இல்லாமல் கட்டுப்பாடு மூலம் பெறவேண்டும். ஒருவர் தியானத்திற்கு பிறகு அமைதியான செயல்களை தொடர வேண்டும். அமைதி என்பது மனதின் இயல்பு நிலை ஆகும். அகத்தில் இருக்கும் அந்த அமைதியை தியானத்தின் மூலம் கண்டுகொண்டு மற்றவர்களுக்கு பரப்ப வேண்டும். இந்த

நிலைக்கு மக்களை அழைத்து வருவது எப்படி? அவர்கள் தங்கள் சிந்தனையில் ஒரு வருடத்திற்கு குழப்பம் இல்லாமல், மற்றவர் பொருட்களுக்கு ஆசைப்படாமல், ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண துன்புறுத்தும் தூண்டுதல் இல்லாமலும் அச்சம், கோபம் அல்லது பொறாமையை அனுபவிக்காமலும் இருக்க வேண்டும். அப்படி செய்தால் அவர்கள் ஒரு வருடத்திற்கு பிறகு, அதிக அமைதியுடன் இருப்பார்கள். இந்த இழிவான உள்ளுணர்வு சக்திகளை வெற்றிக்கொள்வதற்கு அவர்கள் அடையும் ஆன்மாவின் அறிவு காரணமாக விளங்கும். அந்த அறிவு அவர்களின் உணர்வை உயர்நிலை மனதின் இயல்பான அமைதிக்குள் விடுவிக்கிறது. ¶இந்த அறிவை கல்வித்துறை ஒவ்வொரு சமூகத்திலும் ஊக்குவித்தால், எதிர்காலத்திற்கு அமைதியை வழங்கும் மாபெரும் சக்தியை அடைந்து விடலாம். கல்வித்துறை பெரியவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதால் அவர்கள் உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருக்கக் கற்றுக்கொள்வதோடு எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் சக்தி, காரண காரியம், மற்றும் கர்மவினைகளை முழுமையாக கரைக்கும் வரை மறுபிறவி எடுக்க வேண்டும் என்கிற அடிப்படை சனாதன தர்ம கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை பெரியவர்கள் சாதித்து விட்டால், இந்த அடிப்படை வாழ்க்கை கோட்பாடுகள் இயல்பாக அடுத்த தலைமுறைக்கு சென்று விடும். ¶பக்குவமடைந்த ஆன்மாக்கள் அமைதியை அடைந்து இருந்தாலும், மற்றவர்கள் உள்ளுணர்வு இயல்பை கடந்து வந்துகொண்டு இருக்கிறார்கள். மனித நேயத்தை முழுமையாக பார்க்கும் போது, அதில் எப்போதும் உயர்நிலை உணர்வுடனும் கீழ்நிலை உணர்வுடனும் மக்கள் இருப்பார்கள். இன்று பூமியில் வாழும் உயர்ந்த உணர்வுள்ள மக்கள் தங்கள் வீட்டில் அமைதியை நிலைநாட்டி, எல்லா உயிரினங்கள் மீதும் அன்பு கலந்த மரியாதையை செலுத்தி, அதிக தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு, தங்கள் கருத்துக்களை மற்றவர்களுக்கு தெரிவித்து, சிறப்பாக பிரச்சாரம் மேற்கொண்டு, குழுக்களை உருவாக்கி அரசாங்கத்தில் நுழைவது, அவர்களின் அத்தியாவசிய கடமை ஆகும். பூமியின் அதிர்வு மாறும் போது, மக்களின் மனநிலை மாற்றம் பெறும். ¶*அகிம்சை* என்பது படுக்கை அறை, சமையல் அறை, தோட்டம், வரவேற்பறை என்றும் வீட்டில் இருந்து தொடங்க வேண்டும். வீட்டில் *இம்சை* என்கிற தீங்கு விளைவிக்கும் சூழ்நிலை தோன்றினால், அதை உறங்குவதற்கு முன்பாக சரி செய்ய வேண்டும். இல்லையென்றால் அசௌகரியமான சூழ்நிலை உருவானதால் தடுமாற்றம் அடைந்த *விருத்திகள்* என்கிற மனதின் சிந்தனை அலைகள், வாழ்க்கையின் பிற்பகுதியில் வெளிவருவதற்கு விதைக்குள் சென்று விடுகின்றன. பெற்றோர்கள் தங்களை கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை என்றால், குழந்தைகள் தங்களை கட்டுப்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது சரியில்லை. தங்களது உள்ளுணர்வு இயல்பை கட்டுப்படுத்தி மனதில் அமைதியை பெறுபவர்கள்,

மனித சமூகத்தின் ஆன்மீக தலைவர்களாகிறார்கள். பிற்காலத்தில் உண்மையில் ஆன்மீக தலைவர்களாகும் நபர்கள் தங்கள் மனதின் சக்தி, தங்கள் புத்திசாலித்தனம், தங்களது வஞ்சனைகள், தங்கள் அரசியல் செல்வாக்கு, தங்கள் பணம் அல்லது தொடர்புகள் மூலமாக அல்லாமல் தங்கள் ஆன்மாவின் சக்தி மூலம் பெருந்திரளான மக்களின் கடந்தகால கர்மவினை தாக்கங்கள் மீது கட்டுப்பாட்டை பெறுகிறார்கள். பெற்றோர்கள் வழக்கமாக தங்கள் குழந்தைகளை முன்னேறுவதைப் போல, உயர்ந்த உணர்வு நிலையில் இருக்கும் அவர்கள் கீழ்நிலை உணர்வில் இருப்பவர்களை முன்னேற்றுகிறார்கள். ¶உலகில் உள்ள மக்களை அகிம்சை கோட்பாட்டை பின்பற்ற வைப்பது என்பது, மக்கள் தீய செயல்களில் ஈடுபடுவதற்கு காரணமாக இருக்கும் கருத்து வேறுபாடுகளால் தோன்றும் அழுத்தம் அவர்களின் மனம், உடல் மற்றும் உணர்ச்சிகளின் மீது ஆதிக்கம் செலுத்தாத அளவிற்கு, அவர்கள் தங்களுக்கு மத்தியில் இருக்கும் கருத்து வேறுபாடுகளை நீக்கி சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்பதை குறிப்பிடுகிறது. இதுவும் வீட்டில் இருந்து தொடங்க வேண்டும். அமைதியான வீடுகள் மென்மையான மனிதர்களை உருவாக்குகின்றன. மென்மையான மனிதர்கள் *அகிம்சையை* பின்பற்றுகிறார்கள். இதைத் தவிர ஒரு முற்பிறவியில் வெளியிடப்பட்ட கர்மவினை சக்திகளை கிரகித்துக்கொள்வதற்கு மீண்டும் பிறவி எடுப்பது, எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் இருப்பின் மீது நம்பிக்கை வைப்பதைக் குறிக்கும் நிரந்தர உண்மைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு நபரின் நம்பிக்கை அமைப்பும் அனுமதிக்க வேண்டும். நமது நம்பிக்கைகள் இருமை பண்புகளுடன் இருக்கும் வரை, நாம் தொடர்ந்து உருவாக்கும் பகை உணர்வால், ஆங்காங்கே வன்முறை தோன்றிக்கொண்டு தான் இருக்கும். ¶சர்வதேச மற்றும் தேசிய அளவில் நாம் அதிக பொறுமையுடன் இருக்க வேண்டும். மதத் தலைவர்கள் மற்றும் அவர்களின் சங்கங்கள் பொறுமையாக இருப்பதை கற்றுக்கொண்டு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குழுவிற்கும் மற்ற மதங்களுக்கும் அதைக் கற்றுத் தரவேண்டும். முதலில் இது மதத் தலைவர்களுக்கும், பாதிரியார்கள், யூத குருமார்கள், *இமாம்கள், ரிஷிகள், சுவாமிகள், ஆச்சாரியார்கள்*, பௌத்த *பிக்குகள்*, சீக்கிய *சந்த்கள்* மற்றும் பூசாரிகளுக்கு கற்றுத் தரவேண்டும். இவற்றை எல்லோரும் கற்றுக்கொள்ளலாம். குற்ற செயல்களை அடையாளம் கண்டு, அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் சட்டங்களை பல்வேறு நாடுகள், ஐநா. மற்றும் மற்ற உலக அமைப்புக்களில் பரிந்துரைக்கலாம். அத்தகைய குற்றங்களை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற உலகம் கூட்டாக முடிவுக்கு வரவேண்டும். வன்முறையை வெறுப்பது ஒரு உயர்ந்த உணர்வு நிலை ஆகும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 271

மாற்றி அமைக்கும்

பாதைகள்

வன்முறையில் ஈடுபட்ட ஒருவர் அகிம்சாவாதியாக மாறுவது ஏன்? இது வாழ்க்கையின் காரணம் என்ன என்பதையும், மற்றவர்களை துன்புறுத்துவதால் நமது ஆன்மீக உயிர்சக்திக்கு தீங்கு விளைவிக்கிறோம் என்பதையும் உணர்வதை குறிக்கிறது. புண்படுத்தும் செயல் ஒன்றை செய்யும் போது, அது தீங்கு இழைப்பவரின் மனதில் ஒரு ஆழமான தழும்பை விட்டு செல்கிறது. செய்த தவறுக்கு மனம் வருந்துபவர்கள் தங்களுக்குள் உயர்ந்த சக்திகளை கொண்டு வந்து, மெதுவாக அந்த தழும்பை குணப்படுத்துகிறார்கள். இந்த செய்முறை இதோடு நின்று விடுவதில்லை. அந்த காயம் முழுமையாக குணமடைய வேண்டும் என்றால், செய்த தவறுக்கு மன வருத்தத்துடன் சிலவகை ஆன்மீக சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும். அது ஒரு பாபவிமோசனம் போன்று விளங்கும். இந்த சிகிச்சை வன்முறையால் சமூகத்திற்கு செய்த தீங்கை ஈடு செய்வதாக இருக்கும். இது மற்றவர்களின் வன்முறை செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களை குணப்படுத்த ஒரு செவிலி செலுத்தும் அக்கறை அல்லது தனிச்சையாக செய்யும் ஒரு உதவி போல செயல்படக்கூடும். சமூக சேவை பற்றிய நவீன விதிகள் சிறப்பாக இருந்தாலும், முழுமையாக குணம் அடைவதற்கும் மனம் மாறுவதற்கும், சமூகத்திற்கு செய்யும் சேவை அந்த நபர் செய்த குற்றத்துடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். நீண்டகாலம் கழித்து அந்த குற்றம் செய்த நபர் மற்றும் அவருக்கு பரிச்சயமானவர்கள் மனதில் ஏற்பட்ட தழும்பு முழுமையாக மறைந்து விட்டால், அந்த நபர் முன்பு வன்முறையில் ஈடுபட்ட அதே தீவிரத்துடன் சிரத்தையாக அகிம்சையை கடைப்பிடிப்பார். ¶தனிப்பட்ட மறை வெளியீடுகள் அல்லது உணர்தல்களும் ஒரு மாற்றத்தை கொண்டு வரக்கூடும். பூமியை சுற்றி வந்த விண்வெளி வீரர்களின் அனுபவத்தைப் பற்றி நம்மில் பெரும்பாலோருக்கு தெரியும். அவர்கள் விண்வெளியில் இருந்து பார்த்த போது, அவர்களுக்கு நாடுகளுக்கு மத்தியில் இருக்கும் எல்லைகள், பிரிவுகள் எதுவும் தெரியாமல் ஒரு சிறிய கிரகம் மட்டுமே தெரிந்ததால், அந்த அனுபவம் அவர்கள் அமைதிப்புறாக்களாக மாறுவதற்கு காரணமாகியது. விண்வெளியில் அவர்கள் மேற்கொண்ட பயணம் "தி ஓவர்வியூ எபெக்ட்" (அறிவால் கருத்தை மாற்றிக் கொள்ளுதல்) என்று அழைக்கப்படுகிறது மற்றும் அது உயர்நிலை உணர்வின் வெளிப்பாடாக இருக்கக்கூடும். உணர்வின் ஆழமான நிலைகளில் அத்தகைய காட்சிகள் தோன்றி, மக்களின் வாழ்முறையை மாற்றுகின்றன. ஆனால் ஆழ்நிலை அனுபவங்கள் பெரும்பாலும் ஆழ்நிலை பயிற்சிகள்

செய்பவர்களுக்கு தோன்றுகிறது. இது தியானம் மற்றும் யோகப்பயிற்சிகள் சார்ந்து இருந்தால், அவற்றை கோபம், பொறாமை மற்றும் குழப்பத்தில் இருப்பவர்கள் செய்யக்கூடாது. ஒருவேளை இதை அவர்கள் செய்தால் உயர்நிலையில் இருக்கும் சக்திகள் வீழ்ச்சி அடையவும், கோபம் மற்றும் கீழ்நிலை இயல்பின் மற்ற அம்சங்கள் தீவிரமடைவதற்கும் வழிவகுக்கும். மனதில் கோபத்துடன் வன்முறையில் ஈடுபடும் இந்த இழிவான பண்பை உடையவர்கள் கழிவிரக்கம், பச்சாதாபம், முரண்பாடு நீக்கம் மற்றும் இறுதியில் பாபவிமோசனம் மூலம் ஆறுதல் பெறுவதற்கு, அவர்கள் மதத்தில் தங்கள் ஈடுபாட்டை அதிகரித்து தொடர்ந்து சிறிய பூஜைகளை செய்து வருவது நல்ல பலன்களை தரும். அவர்கள் *மூலாதாரத்திற்கு* கீழே, பாதம் வரை பரவியிருக்கும் உடலின் கீழ்பகுதியில் இடஞ்சுழியாக சுற்றும் *சக்கரங்களில்* வாழும் ஆழமான பகுதிகளில், மகாதேவர்களை ஆவாகனம் செய்யவில்லை என்றால், அவர்கள் அந்த ஆழங்களுக்குள் ஊடுருவி தலையீடு செய்வதில்லை. ¶போர்களத்தில் இருக்கும் ஒரு போராளி அல்லது மரணத்தின் விளிம்பு வரை சென்று உயிர் பிழைப்பவரைப் போன்று பலர் தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் அனுபவங்களை பெறுகின்றனர். இந்த அனுபவங்கள் பிரபஞ்சம் பற்றி நமக்கு இருக்கும் கருத்தையும் மாற்றி அமைக்கக்கூடும். ஆனால் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் அனுபவங்கள் அன்பு மற்றும் விசுவாசம் நிரம்பிய மிகவும் நல்ல மனிதர்களுக்கு மட்டுமே கிடைக்கும். அவர்களுக்கு புத்திசாலித்தனம் குறைவாக இருக்கலாம் மற்றும் அவர்கள் விரைவில் கோபத்திற்கு ஆளாகலாம். ஆனால் அவர்கள் உடனடியாக செய்த தவறுக்கு வருந்துவார்கள். தான் செய்த தவறுக்கு வருந்துவது ஒரு உயர்ந்த உணர்வுநிலையில் இருப்பவரின் அடையாளம் ஆகும். அந்த நபர் செய்த கர்மவினையின் பாரம் வலுவாக இருக்கலாம், ஆனால் அந்த ஆன்மா சூழ்நிலையை சரி செய்ய விரைந்து செயல்படுகிறது மற்றும் அவரது மனதில் குணப்படுத்தும் செய்முறை தொடங்குகிறது. மனிதனால் கட்டுப்படுத்த முடியாததாக இருக்கும் ஒரு பேராபத்தின் தீவிரமே ஒரு வலுவான கழிவிரக்கத்தை உருவாக்கி உயர்நிலை உணர்வில் ஒரு பெரிய விழிப்புணர்வை உருவாக்குகிறது. ¶இந்துக்களாக இருக்கும் நாம் அதை *குருவின்* அருளாக அல்லது மகாதேவர்கள் வழங்கிய ஒரு வரமாக காண்கிறோம். அது தடையில்லாமல் ஒரு உட்புற வெளிப்பாடாக வந்து, அந்தர்லோக சக்திகளுடன் ஒரு நிரந்தர தொடர்பை உருவாக்குகிறது. அந்த அந்தர்லோக சக்திகளுடன் ஏற்படும் தொடர்பு, மற்றும் அவர்கள் வழங்கும் வெளிப்பாடுகள், செயல் மற்றும் பாபவிமோசனத்தின் கால அளவை குறைத்து விடுகிறது. ஆனால் அந்த கால அளவு சில சமயங்களில், ஒருவர் மனம் வருந்தி பரிகாரம் செய்து பாப விமோசனம் பெறுவதற்கு பல வருடங்கள் ஆகலாம்.

சனிக்கிழமை

பாடம் 272

மனிதத்தன்மையின்

முதிர்ச்சி

அகிம்சை என்பது *தர்மத்தின்* சாரமாக விளங்குகிறது. *மூலாதார சக்கரம் தர்மத்தின்* பாதையை அமைக்கிறது. *மூலாதார சக்கரம்* என்பது சக்தி மற்றும் உணர்வின் அடிப்படை மையமாகவும், அந்த உணர்வு தொடர்ந்து படைத்து, காத்து மற்றும் ஒடுக்கும் சக்தியாக விளங்குவதால், அது ஒரு மிகவும் விநோதமான *சக்கரமாக* இருக்கிறது. *கர்மவினை* என்பது காரண காரியத்தின் வரம்பில்லாத கோட்பாடாக விளங்கி, நாம் நமது சக்திகளை மனம், வாக்கு அல்லது உடல் ரீதியாக எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்து நமது அனுபவங்களை உருவாக்குகின்றன. அதனால் நாம் கீழ்நிலை இயல்பாக இருக்கும் பொறுப்பற்ற சுதந்திரத்தில் இருந்து சாட்சியை, உயர்ந்த நிலையாக இருக்கும் பொறுப்புள்ள சுதந்திரத்தில் உணர்வை ஒடுக்கிய பிறகு, அந்த சாட்சி அல்லது உணர்வு, *மூலாதார சக்கரத்தின்* வாசல்கள் வழியாக சென்று அதன் நான்கு இதழ்களின் சக்திகளில் நிம்மதியாக ஓய்வு எடுக்க வேண்டும். நான்கு இதழ்கள் ஒரு சதுரம் போல காட்சி அளிக்கும். முப்பரிமாணத்தில் பார்க்கும் போது, இடைவெளியுடன் இருக்கும் இரண்டு சதுரங்கள் ஒன்றாக சேர்ந்து ஒரு பெட்டியை போன்று இருக்கும். இந்த பெட்டி *தர்மம்* என்று வரையறுக்கப்படுகிறது. ¶ ஞானோதய பாதையின் இந்த இடத்தில் குறுகிய காலத்திற்கு நாம் படிப்படியாக சேர்த்த நமது *கர்மவினைகளை தர்மம்* என்ற ஒரு பெட்டியில் சேர்த்து வைக்கிறோம். *தர்மத்தில்* அடைப்பட்டதும், எண்ணற்ற *கர்மவினைகள்* தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும். ஒருவர் தனது பாதையில் முன்னேறும் போது, அந்த பெட்டியின் பாரம் குறைந்து அது மேலே செல்கிறது. இந்த கட்டடத்தில் *தர்மத்தின்* பெட்டியை அடித்தளமாக கொண்டு, சாதகன் வாழ்க்கை நடத்த வேண்டும். வலுவாக ஒடுக்கப்பட்ட நிலையில் இருக்கும் அவன், பெட்டியின் மேல் இருக்கும் துவாரம் வழியாக வெளியேறி உணர்வை பெறக்கூடும் அல்லது பெட்டியின் கீழே ஒரு சிறிய துவாரத்தை உருவாக்கி, அறியாமையின் உலகில் பொறுப்பற்று இருக்கும் சுதந்திரத்தை நாடக்கூடும். மேலிருக்கும் *சக்கரங்களில்* விடுதலையை நாடுவது சன் மார்கம் ஆகும். அவனது *சாதனா,* கழிவிரக்கம், *தபஸ், ஜபம், பக்தி* மற்றும் சிவத்தொண்டு ஆகியவை பெட்டியின் கீழிருக்கும் துவாரத்தை மூடுவதற்கு உதவுகின்றன. இவை அனைத்தும் சிவபெருமானுடன் ஐக்கியமாதல் புத்தகத்தில் நன்றாக விளக்கப்பட்டுள்ளன. ¶பெட்டியின் மீது இருக்கும் மூடியை தாங்கிப் பிடித்து இருப்பது யார்? மதம் மற்றும் மத சார்பில்லாத சமூக தாக்கங்கள். சில செயல்களை நீங்கள் செய்யலாம் மற்றும் சில செயல்களை

நீங்கள் செய்ய முடியாது. குடும்பத்தில் அகிம்சை வலுவடையும் போது, அது பின்பற்றும் பண்பு அதிக நுணுக்கமாகி, வன்முறையும் தனது அளவில் நுணுக்கமாகி விடுகிறது. வாய்த் தவறி வந்த ஒரு சொல் உங்களுக்கு பிரியமானவரின் இதயத்தை புண்படுத்தக்கூடும், ஆனால் பிரியமில்லாதவரின் இதயத்தை புண்படுத்த ஒரு கத்தி போன்ற கூர்மையான வார்த்தைகள் தேவைப்படும். ¶"நான் மூலாதாரத்திற்கு கீழிருக்கும் சக்கரங்களை மூடுவதற்கு முயற்சி செய்கிறேன். ஆனால் நான் முயற்சி செய்யும் போது, ஏதாவது ஒரு காரணத்தினால் எனக்குள் ஆத்திரம் மற்றும் பழிவாங்கும் உணர்வுகள் முக்கியத்துவம் பெற்று விடுகின்றன. நான் இதற்கு என்ன செய்வது?" என்று என்னிடம் ஒருவர் கேட்டார். ஆத்திரத்தை அதிகமாக்கி, பகுத்தறிவை அடக்கி நினைவாற்றலை செயலிழக்க செய்யும் உணர்வுகள தோன்றும் போது, இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில் படிப்படியாக சேர்க்கப்பட்ட *சுக்கர்மாக்கள்* மற்றும் *குக்கர்மாக்கள்* (*கிரியமான மற்றும் பிராரப்த கர்மவினைகள்*) இல்லாமல் தர்மத்தின் பெட்டி காலியாக இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட நபர் தர்மத்திற்கு கட்டுப்பட்டு இல்லை என்றும் நாம் கருத வேண்டும். அல்லது அவன் பின்பற்றும் தர்மம் வழங்கும் வழிகாட்டல், அவனது எதிர்கால கர்மவினைகளுக்கு சரியான தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்கலாம். இந்த பாதையில் மன்னிப்புக்கள் வழங்கப்படுவது இல்லை. இது அவன் விநாயகரின் திருவடிகளில் சரண் அடையவில்லை என்பதையே குறிப்பிடுகிறது. அதனால் ஒரு *விரதம்* இருந்து அதை கடைப்பிடிக்க வேண்டும். ¶*அகிம்சை* என்பது ஒரு *விரதம்* ஆகும். பதஞ்சலி முனிவர் அதை *மகாவிரதம்* என்று குறிப்பிட்டார். அதை கடைப்பிடிக்காத போது, அதற்கான விளைவுகள் எதிர்கொள்ள வேண்டி இருக்கும். மனம் வருந்தி, மன்னிப்பு கேட்டு, தவம் இருந்து முரண்பாடுகளை நீக்க வேண்டும். ஆணவம் அவமானத்தை அனுபவிக்கிறது. இந்த மாற்றங்களுடன் மேலும் பல மாற்றங்கள் அந்த நபரின் நேர்மை, மன உறுதி மற்றும் மீண்டும் கீழ்நிலை குணமாக இருக்கும் அகிம்சையில் நுழையக்கூடாது என்கிற தீர்மானத்தை பொறுத்து நடைபெறும். ¶*அகிம்சை* என்கிற *மகாவிரதத்தை* கடைப்பிடிக்க வேண்டிய தேவையை உணர்ந்து, அதை சரியாக பின்பற்றவில்லை என்றால் தேவையான பரிகாரம் செய்ய தயாராக இருப்பவர்கள், *மூலாதாரத்தில்* இருந்து *சுவாதிஷ்டானா* உணர்வுக்குள் நுழைய சீராக முன்னேறி வருகிறார்கள். மனம் வருந்துவது என்பது பகுத்தறிவை பயன்படுத்தும் அளவிற்கு முன்னேறி, *தர்மத்தை* நினைவில் வைத்து இருப்பதை குறிக்கிறது. பகை உணர்வுடன் இருப்பது என்பது குணத்தில் கீழிறங்கி சுயநலத்துடன் செயல்பட்டு, ஒருவர் தனது விருப்பங்களை கோபம் மற்றும் குழப்பம் மூலமாக அடைவதை குறிப்பிடுகிறது. அவன் மேலும் முன்னேறுவதற்கு *ஞானிகள், சுவாமிகள்* உபதேசங்களை கேட்டு, சாத்திரங்களை படித்து, தெய்வ *பக்தியுடன்* இருந்து சுயநலமற்ற சிவத்தொண்டு

செய்ய வேண்டும். தொடர்ந்து கோப உணர்ச்சியின் பிடியில் சிக்கி இருக்கும் நபர்கள் *இராச யோகம்* அல்லது தீவிரமான *மந்திரங்கள், ஜபம்* அல்லது *பிராணாயாமத்தின்* மூலம் உயர்ந்த *சக்கரங்களில்* சக்திகளை விரிவாக்கம் செய்வது போன்றவற்றில் ஈடுபடக்கூடாது. இல்லையென்றால் அந்த சக்தியின் திரள் அதனோடு தொடர்புடைய கீழ்நிலை சக்கரங்களுக்கு சரிந்து அச்சம், கோபம் மற்றும் பொறாமை மூலம் வெளிப்படும். ¶ஒருவர் ஏறவேண்டிய கம்பமாக பதினான்கு *சக்கரங்கள்* குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த கம்பத்தில் நெய் தடவியதைப் போல, அது வழுவழுப்பாக இருக்கிறது. அதனால் சாதகனை மேம்படுத்துவதற்கு *மூலாதாரத்தில்* இருந்து கீழிறங்கி வரும் அன்புள்ளம் கொண்ட விநாயகரின் உதவி தேவைப்படுகிறது. *அனாஹத சக்கரத்தில்* இருந்து கீழிறங்கி வரும் முருகப்பெருமானின் உதவிக்கரம் பக்தனின் கரம் பிடித்து அவனை உயர்த்துகிறது. *ஆக்ஞா சக்கரத்தில்* இருந்து கீழிறங்கி வரும் சிவபெருமானின் உதவிக்கரம் பக்தனை உயர்த்துகிறது. இதை தெய்வ உதவியின்றி யாராலும் தனியாக செய்ய முடியாது. மகாதேவர்களிடம் முழுமையாக சரண் அடைவதே இதற்கு ஒரே வழி ஆகும். *கர்ம யோகம், பக்தி யோகம், ஜப யோகம்* பின்பற்றி அவர்களின் கவனத்தை பெற வேண்டும். உங்கள் பாதையை *குரு* கண்காணிக்கிறார், ஆனால் அவர் உங்களுக்காக அந்த பாதையில் நடப்பது இல்லை.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 273

சைவ உணவுமுறையின்

அவசர தேவை

அகிம்சை என்பது கொல்லாமையை மட்டும் குறிப்பிடாமல், மிகவும் நுணுக்கமான முறைகளில் உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருப்பதையும் தெளிவாக விளக்க வேண்டும். நாம் நம்மை துன்புறுத்தி, நமது சுற்றுப்புறத்தை துன்புறுத்தி, நாம் மற்ற உயிரினங்களை துன்புறுத்துவதன் மூலம் ஏற்படும் வலி மற்றும் வேதனைக்கு காரணமாக இருக்கக்கூடும். அல்லது நாம் தீங்கற்ற வாழ்க்கையை வாழ்ந்து, ஆறுதல் மற்றும் மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். "எல்லோருக்கும் நன்மை செய்யுங்கள். உங்களுக்குள் இறைவன் இருக்கிறார். கொலை செய்யாதீர்கள். கோபத்திற்கு தஞ்சம் கொடுக்காதீர்கள்," என்று என் *சத்குரு* அறிவுறுத்தினார். ¶சைவ உணவுமுறை என்பது மற்ற உயிரினங்களை அதிகமாக துன்புறுத்தாமல் வாழும் ஒரு இயல்பான மற்றும் தெளிவான வழிமுறை ஆகும். சைவ

உணவுமுறை பற்றி இந்து சாத்திரம் தெளிவாகவும் வலுவாகவும் எடுத்துரைக்கிறது. பூமி, காற்று மற்றும் நீரில் இருக்கும் உயிரினங்கள் மீது அன்புடன் இருக்கவேண்டும் என்று *யஜுர் வேதம்* (36.18. வேஎ, ப. 342) பரிந்துரைக்கிறது.

இது தொடர்பாக 2,200 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட திருக்குறள் "புலான்மறுத்தல்" அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளது.
"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின்." (திருக்குறள்: 257)

இதைப் பற்றி *மனு சம்ஹிதை* வழங்கும் அறிவுரை: “மாமிச உணவின் உற்பத்தி மற்றும் உயிரினங்களை சிறைப்பிடித்து கொலை செய்யப்படுவதை கருத்தில் கொண்டு, மாமிசம் உண்பதை தவிர்க்க வேண்டும்” மற்றும் “உணவு சுத்தமாக இருக்கும் போது, மனம் மற்றும் இதயம் சுத்தமாக இருக்கிறது.”
மாமிச உணவு உண்பதால் மரணத்திற்கு பிறகு எதிர்கொள்ள வேண்டிய நரக வேதனையைப் பற்றி *திருமந்திரம்* எச்சரிக்கிறது:
“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி முறித்துவைப் பாரே.” (199). ¶சைவ உணவுமுறை மிகவும் முக்கியம் ஆகும். ஐம்பது வருடங்களாக நான் மேற்கொண்ட சமயப்பணியின் மூலம், அசைவ உணவை உண்ணும் குடும்பங்களை காட்டிலும் சைவ உணவு உண்ணும் குடும்பங்களில் பிரச்சனைகள் மிகவும் குறைவாக இருக்கிறது என்பது தெளிவாகியது. உயிர்களை கொலை செய்வதில் ஏற்படும் வெறுப்பு சைவ உணவு உண்பதற்கு இயல்பாக வழி வகுக்கிறது. நீங்கள் அதைப் பற்றி சிந்தித்துப் பார்த்தால், அசைவ உணவு உண்பவர் மறைமுகமாக விலங்குகள் சாம்ராச்சியத்திற்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவது தெரியவரும். மனிதனுக்கு மாமிசத்தின் மீது இருக்கும் ஆசை, மாமிசம் வழங்கும் நோக்குடன் கொலை செய்ய இன்னொரு மனிதனை தூண்டுகிறது.
இறைச்சிக்கடைகாரரின் செயல், அசைவம் உண்பவரின் ஆசையுடன் தொடங்குகிறது. அவனது உணர்வு மேம்பட்டு விரிவாக்கம் பெறும் போது, அவன் வன்முறையை வெறுக்கிறான் மற்றும் அவன் முன்பு சாப்பிட்டு வந்த மாமிசம், மீன் மற்றும் முட்டைகளை அவனால் செரிக்க முடிவதில்லை. ஒருவர் மாமிசம் சாப்பிட்டுக்கொண்டு அமைதியான இணக்கமான வாழ்வை வாழமுடியாது என்று இந்தியாவின் தலைசிறந்த மகான்கள் உறுதி அளித்துள்ளனர். மனிதனுக்கு மாமிசத்தின் மீது இருக்கும் ஆசையின் காரணத்தால், விலங்குகளை வளர்க்கும் நோக்குடன் அந்த விலங்குகளுக்கு மேய்ச்சல் நிலங்களை வழங்குவதற்கு காடுகள் அழிக்கப்பட்டு, அதன் மூலம்

பூமியின் மீது பேரழிவு ஏற்படுத்தப்படுகிறது. எல்லா உயிரினங்கள் மீது இரக்கம் மற்றும் அன்புடன் இருப்பது என்பது துன்புறுத்துவதற்கு எதிர்பதம் ஆகும். "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்." என்று *திருக்குறள்* (251) கண்ணியமாக கேள்வி கேட்டுள்ளது. ¶குழந்தைகள் சைவ உணவுமுறையில் வளர்க்கப்பட்டால், அவர்கள் தினமும் அமைதி மற்றும் இரக்கத்தின் கோட்பாடு மூலம் அகிம்சையை பின்பற்றுகிறார்கள். அவர்கள் வயதில் முதிர்ச்சி அடையும் போது, தினமும் கொலை செய்யக்கூடாது என்ற எண்ணத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பசிக்கு இன்னொரு உயிரினத்தை என்றும் கொல்லமாட்டார்கள். உங்கள் பசிக்கு இன்னொரு உயிரினத்தை நீங்கள் கொல்லாமல் இருந்தால், நீங்கள் வயதில் முதிர்ந்ததும் மற்றவர்களை துன்புறுத்தும் வாய்ப்புக்கள் மிகவும் குறைந்து விடுகிறது. ¶தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அகிம்சையின் முக்கியத்துவத்தை பொறுப்புடன் பரப்புவதற்கு வேறு பல வழிகள் உள்ளன. நீங்கள் கடந்த ஆறு மாத காலமாக வாங்கிய பொருட்களில் மனிதர்கள், விலங்குகள், மீன், கோழி மற்றும் மற்ற உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கூடிய பொருட்களை பட்டியலிடுங்கள். பசைப்பொருள் அல்லது சோப்பு போல சாதாரண பொருட்கள் மீதிருக்கும் முகப்புச் சீட்டுக்களை வாசித்து, வன்முறை செயல்கள் அல்லது பூமியின் அழிவிற்கு துணை நிற்கும் அனைத்தையும் உங்கள் பட்டியலில் இருந்து நீக்கி விடுங்கள். அதன் பிறகு நீங்கள் நலமாக இருக்க, அந்த பொருட்களை மீண்டும் வாங்காமல் இருக்க உங்களுக்குள் மன உறுதியை தேடிக்கொள்ளுங்கள். இதை நீங்கள் அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் செய்து முடிக்கலாம்.

युत्तहहा ष्हान्तिष्ह

युद्धः शान्तिश्च



போர் மற்றும் அமைதி

உற்றார்களுடனும் மற்றவர்களுடனும் எங்களுக்கு உடன்பாடு இருக்கட்டும். அசுவினிகளே, நீங்கள் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு மனதை உருவாக்குங்கள். நாங்கள் அறிவுடனும் மனதுடனும் ஐக்கியமாக வேண்டும். நாங்கள் எங்களுக்குள் இருக்கும் தெய்வீக உணர்வுடன் சண்டையிடாமல் இருக்க வேண்டும். யுத்த கோஷங்கள் முழங்காமல் இருக்கட்டும். எதிர்காலத்தில் இந்திரனின் வஜ்ரம் எங்கள் மீது விழாமல் இருக்கட்டும்.

அதர்வண வேதம் 7.52.1-2. ஹிவே, ப. 205



இந்த படத்தில் மகாத்மா காந்தியின் உப்பு சத்தியாகிரகம் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதில் அவர் ஆங்கிலேயர்கள் விதித்த உப்பு வரியை அறவழியில் எதிர்க்க திட்டமிட்டு தனது தொண்டர்களுடன் தூரத்தில் இருக்கும் தண்டி கடற்கரைக்கு நடந்து செல்கிறார். அவரையும் அவரது தொண்டர்களையும் ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்திய காவல்துறை இடைமறித்து, கைது செய்ய தயாராக இருக்கிறது.

திங்கட்கிழமை

பாடம் 274

உயிரின் புனிதத்தன்மை

கற்பிக்கும் பாடம்

இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட இந்து மதம், பௌத்த மதம் மற்றும் சமண மதத்தின் மையமாக அகிம்சை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. இந்தியாவை அடிப்படையாகக் கொண்ட மதங்கள் தொடர்ந்து மனித உயிர் அல்லது விலங்கின் உயிரை புனிதமாக கருதி வந்துள்ளன. உயிரினங்களுக்கு மதிப்பு அளித்து அகிம்சையை கடைப்பிடிப்பது, சமண மத்தின் அடிப்படையாக இருக்கிறது. இந்தியாவின் ஆரம்ப காலத்தில் பல்வேறு உயிரினங்களுக்கு மத்தியில் ஒரு ஒற்றுமை தோன்றவெண்டும் என்று விநோதமான பொறுப்புணர்வு உருவாகி, கொல்லாமை மற்றும் இயற்கை வளங்களை குறைவாக பயன்படுத்துவது அல்லது இரக்கம் மற்றும் எளிமையை அடிப்படையாகக் கொண்ட பொதுவான நெறிமுறைகளுக்கு வழி வகுத்தது. *ஹோமோ சாபியன்ஸ்* தனது தற்போதைய இக்கட்டான நிலையில் பிழைக்க வேண்டும் என்றால், அவன் இந்த இரண்டு அடிப்படை ஒழுங்குநெறிகளை மீண்டும் பின்பற்றவேண்டும். ¶இந்து மதத்தில் பரவியிருக்கும் அகிம்சை வழக்கத்தை புரிந்து கொள்வதற்கு, உயிர் என்பதன் பொருளை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். உயிர் என்பது புனிதமாக கருதப்படுவது ஏன்? இந்தியாவின் பழங்கால சிந்தனையாளர்களுக்கு, உயிர் என்பது தெய்வீக பண்பாகவும், ஆதிமூலத்தின் வெளிப்பாடாகவும், ஒரு பிரபஞ்ச தொடர்ச்சியின் அங்கமாகவும் காட்சி அளிக்கிறது. இந்துக்கள் சிந்தனையில் இந்த தொடர்ச்சியின் இயல்பு மாறுபடுகிறது. ஒரு ஆன்மா பல்வேறு உயிர் வடிவங்களின் மூலம் பக்குவம் அடைவதாகவும், இந்த பக்குவத்தின் நிறைவாக மனித பிறவி விளங்குவதாகவும் சிலர் கருதுகின்றனர். ஒரு ஆன்மாவின் *கர்மவினை* மற்றும் *சம்ஸ்காரங்களுக்கு* ஏற்ப பிறவி அமைகிறது என்று கருதும் சிலர் அந்த செய்முறையை மாற்றி அமைத்து, "தாழ்ந்த" பிறவியையும் பெற முடியும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். மறுபிறவியில் நம்பிக்கை இல்லாத இந்தியர்கள், அனைத்தும் தெய்வீக பண்பில் அடங்கி இருக்கிறது என்பதை நம்புகின்றனர். நீர் மற்றும் மரங்கள் உட்பட ஒவ்வொரு உயிர் வடிவமும் உணர்வு மற்றும் சக்தியை கொண்டுள்ளன என்பதை அவர்கள் நம்புகின்றனர். விலங்குகளின்

உயிர்சக்திகள் மனிதனாக பக்குவம் அடையும் அல்லது அதற்கு மாறாகவும் நடைபெறலாம், அல்லது பொருள்கள் அனைத்தும் தங்களது சொந்த உணர்வை கொண்டுள்ளன என்ற நம்பிக்கை எதுவாக இருந்தாலும், அது உயிருக்கு அளிக்கப்படும் மதிப்பை வெளிப்படுத்துகிறது. ¶மனிதனின் மனம் ஒரு கணினி போன்றே இயங்குகிறது. அதனுள் செல்லும் நம்பிக்கைகள் மனதை நிரலாக்கம் செய்கின்றன. அவற்றின் செயல்பாடு மனப்பான்மையை சார்ந்து இருக்கிறது, மற்றும் வெளியீடு அல்லது செயலை அவற்றின் வழியாக செல்லும் அறிவு மற்றும் தூண்டுதல் தீர்மானிக்கிறது. குழந்தைகள் பிறப்பதற்கு முன்பாக பெற்றோர்கள் தங்களது அடிமனதில் வைத்த நம்பிக்கைகளை கிரகித்துக் கொண்டு, தங்கள் பெற்றோர்களிடம் இருந்து அடிப்படை மனப்பான்மைகளை கற்கின்றனர். இவ்வாறு குழந்தைகள் கற்பது ஒரு நிரலாளர் ஒரு புதிய செயலியை உருவாக்க குறியீட்டு முறையை கற்பதைப் போல, அவர்கள் அந்த முறையை முதல்முறையாக கற்கிறார்கள். அதன் பிறகு தங்கள் பெற்றோர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பூஜை அறையில் பயபக்தியுடன் தீர்வு காண்பதை அல்லது வாக்குவாதங்கள், சண்டைகள் மூலம் துன்புறுத்துவதை அல்லது புறம் கூறுதல் மற்றும் உணர்ச்சிப்பூர்வமாக அச்சுறுத்தி தனது காரியத்தை சாதித்துக் கொள்வதை குழந்தைகள் கூர்ந்து கவனிப்பதன் மூலமாக கற்கிறார்கள். ஆறு வயதின் போது, நிரலாக்கம் முடிந்து செயலி நிறைவு பெற்று சோதனை தொடங்குகிறது. இன்று இவ்வளவு சிறிய வயதில் குழந்தைகள் உலகை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. அதனால் உங்கள் குடும்ப சூழ்நிலையை கவனியுங்கள். ¶நீங்கள் பேசும் வார்த்தைகளும் மற்றவர்கள் மனதை காயப்படுத்துவது அல்லது துன்புறுத்துவதை ஊக்குவிக்காமல் இருந்து, பிரச்சனைகளை சரி செய்ய அமைதியான முறைகளைப் பற்றி பேசுங்கள். நீங்கள் பேசும் வார்த்தைகள் மற்றவர்கள் வாழ்க்கைகள் மற்றும் இதயங்களில் அமைதியை கொண்டு வரட்டும். உங்களது சொந்த உணர்வை சீர் செய்ய முயற்சி மேற்கொள்ளுங்கள். நீங்கள் கோபத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு, நீங்கள் வெறுப்பில் இருந்து விடுதலை பெறுவதற்கு, உங்களை நீங்களே அல்லது வேறு முறைகளில் துன்புறுத்த விரும்பாமல் இருக்க உங்களை சுத்தம் செய்து கொள்ளுங்கள். அழிந்து வரும் தாவரங்கள், விலங்குகள் அல்லது விலங்குகளின் மென்மயிர்கள், தந்தம், ஊர்ந்து செல்லும் உயிரினங்களின் தோல் மற்றும் ஆமைகளின் ஓடுகளை போன்று மனிதனின் சுயநலத்திற்காக அதிகமாக பயன்படுத்தப்படும் உயிரினங்களில் இருந்து தயாராகும் பொருட்களை வாங்க வேண்டாம். ஒரு அமைதியான உலகை அடைய நேர்மையாக முயற்சி செய்யும் உதவிக் குழுக்களுக்கு தனிச்சையாக உங்கள் நேரத்தை ஒதுக்குங்கள். நீங்கள் மற்ற கலாச்சாரங்கள் மற்றும் தத்துவங்களை நியாயமாகவும் வலுவாகவும் பாராட்டும் அளவிற்கு, அவற்றைப் பற்றி அதிகமாக கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் சமூகம் மற்றும் உங்களை சுற்றி இருக்கும் மக்களை வலுப்படுத்த முயற்சி மேற்கொள்ளுங்கள். உங்கள் வாழ்கையில் இருக்கும் அழுத்தத்தை குறைத்துக்

கொள்ளுங்கள். மகிழ்ச்சியுடன் இருங்கள். நீங்கள் இவை அனைத்தையும் செய்தால், உங்களை சுற்றி இருக்கும் உலகில் அமைதி மற்றும் நிம்மதியை கொண்டு வருவதற்கு போதுமானதாக இருக்கும். இதைத் தான் மகாத்மா காந்தி செய்தார் மற்றும் அதனால் ஏற்பட்ட மாற்றத்தை நம்மால் காண முடிகிறது. ¶அகிம்சையை பின்பற்றி வாழும் ஒருவர், பலர் மனங்களில் அமைதியை ஏற்படுத்தும் கருவியாக இருக்கக்கூடும். மற்றவர்கள் உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தப் போவது இல்லை என்று விரதம் இருக்க உறுதி மேற்கொள்வதன் மூலம், நீங்களும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அமைதி மற்றும் அகிம்சையை பின்பற்றி வாழவேண்டும் என்று முடிவு எடுப்பது உங்கள் கைகளில் இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ¶இனி கிராமத்து சமூகம் ஒரு தேசத்தின் சமூகம் என்று இருக்கப்போவது இல்லை. இனி ஒரு சர்வதேச சமூகம் மட்டுமே இருக்கும். இந்த மாற்றம் நமது பூமியில் வேரூன்றி பத்து வருடங்களாகிவிட்டது. இருபதாம் நூற்றாண்டில் இறுதியாக நடைப்பெற்ற வியட்நாம் போரின் முடிவு, ஒரு புதிய யுகத்தின் தொடக்கமாக அமைந்தது. மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண மனங்களை பயன்படுத்தினார்கள் மற்றும் தங்களிடம் இருந்த ஆயுதங்களை தற்காப்பு காரணங்களுக்காக மட்டுமே பயன்படுத்தத் தொடங்கினர்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 275

அமைதி மற்றும்

நியாயமான போர்

காந்திய கொள்கையில் அகிம்சை என்பது உங்கள் கருத்தை வலுவாக தெரிவிப்பதற்கு அமைதியான எதிர்ப்புக்கு வழிவகுக்கும் வன்முறையற்ற செயலை குறிக்கிறது. எதிரியை துன்புறுத்த வேண்டாம் என்று அவர் தனது தொண்டர்களிடம் கேட்டுக்கொண்டார். எதிரி உங்களிடம் ஒரு வேலையை செய்ய சொன்னால், அவன் சொன்னதற்கு கீழ்படியாமல் இருந்து அவனுக்குள் பதட்டத்தை ஏற்படுத்தி இணங்க செய்யுங்கள். ஆனால் ஒரு பழங்குடியினர் கும்பல் ஒரு கிராமத்தில் ஊடுருவி ஒரு பெண்ணை கற்பழித்த போது, அந்த கிராமத்தில் இருக்கும் ஆண்கள் யாரும் உயிருடன் இருக்க தகுதியற்றவர்கள் என்று கூறினார். அவர்கள் தங்கள் உயிர்களை துச்சமாக மதித்து தங்கள் கிராமத்தை காப்பாற்ற துணிந்து நின்று இருக்கவேண்டும் என்று அவர் கூறினார். ¶அதனால் ஒருவர் அத்துமீறி உங்கள் வீட்டில் நுழைந்து உங்கள் வீட்டில் இருக்கும் பெண்ணை கற்பழிக்க அல்லது வீட்டு பொருட்களை திருட முயற்சி செய்தால், உங்கள் உடைமைகளை காப்பாற்றுவது உங்கள் கடமை

ஆகும், ஆனால் அவனை சித்ரவதை செய்வதற்கு உங்களுக்கு உரிமை இல்லை என்பது இதன் மூலம் புரிகிறது. அகிம்சையை அதன் வரம்புகளுடன் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். சமண மதத்தில் அகிம்சை என்பது மிகவும் தீவிரமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அகிம்சையை பற்றி விளக்கும் போது, உங்களை காப்பாற்றி கொள்ளும் சூழ்நிலையை தவிர்த்து, இம்சை என்றால் என்ன என்பதை விளக்க வேண்டும். அத்துமீறி வீட்டில் நுழைந்த திருடனின் கழுத்தை நெறிக்கும் நாயை வளர்ப்பது வன்முறை ஆகுமா? எனக்கு அது வன்முறை என்று தோன்றவில்லை. அகிம்சையை உலகம் மதிக்க வேண்டும் என்றால், நாம் அதை தெளிவாக விளக்கி முக்கியமானதாக மாற்ற வேண்டும். ¶பூமியில் இருக்கும் ஒரு பில்லியன் இந்துக்கள் எப்போதும் அகிம்சையை முறையாக கடைபிடிப்பது இல்லை. சில அரிய சந்தர்ப்பங்களில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் காரணமாக நாம் வன்முறையில் ஈடுபட அல்லது கொலை செய்ய தூண்டப்படலாம். மற்ற மனிதர்களைப் போல இந்துக்களும் எதிர்பாராதவிதமாக மக்களை கொலை செய்கின்றனர். ஒரு இந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள அல்லது தனது குடும்பம் அல்லது தனது கிராமத்தை காப்பற்ற, அவர் ஒரு கொலையாளி அல்லது திருடனை துன்புறுத்த வேண்டி இருக்கலாம். அந்த சூழ்நிலையிலும் அவர் தனது மனதில் வெறுப்பு தோன்றுவதற்கு இடமளிக்க மாட்டார். இந்துக்கள் எப்போதும் ஒரு கொலை அல்லது கொள்ளை போன்ற தீய நடவடிக்கைகளை தூண்டுவதும் இல்லை, தாங்கள் பெற்ற சித்ரவதைக்கு பழி தீர்த்துக்கொள்வதும் இல்லை. அவர்களுக்கு என்று தனி நீதிமன்றங்கள், குற்றங்களுக்கு தண்டனை மற்றும் கொலை, கொள்ளை போன்ற தீய செயல்களில் ஈடுபடுவர்களுக்கு எதிராக பாதுகாக்க உதவியாளர்களும் இருக்கிறார்கள். இந்துக்கள் தங்கள் புத்தியை சிறந்த ஆயுதமாக கருதுவதால், ஆட்பலத்தை பயன்படுத்தும் முன்னர் அறிவுப்பூர்வமாக சம்மதம் பெறுவதற்கு மற்ற வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனர். "ஓரு புளியை காட்டில் கொல்வது பாவம். ஆனால் அது கிராமத்தில் நுழைந்தால், அதை கொலை செய்வது உனது கடமை ஆகும்," என்று என் *சத்குரு* சிவ யோகசுவாமி குறிப்பிட்டார். அகிம்சையை அக்கறையுடன் பின்பற்றும் இந்து, புலியை பயமுறுத்த எச்சரிக்கைகளை வழங்குவார் அல்லது அந்த புலியை துன்புறுத்தாமல் சிறைபிடிக்க முயற்சி செய்வார். அந்த கிராமத்தில் புலியை கொலை செய்ய ஒருவர் முன் வந்தால், அவருக்கு மதத்தில் ஈடுபாடு சிறிதும் இல்லை என்றே சொல்ல வேண்டும். ¶இன்று பூமியில் பல குழுக்கள் தாங்கள் நியாயமான காரணத்திற்காக கொலை, வன்முறை மற்றும் போரில் ஈடுபடுவதாக கூறிக்கொண்டு இருக்கிறார்கள். வன்முறை என்கிற இம்சிக்கும் செயல் கீழ்நிலை குணம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் ஒரு நேர்மையான காரணம் என்பது ஒரு அபிப்ராயம் தான், ஆனால் போரின் விளைவுகள் பல அப்பாவி மக்களின் வாழ்க்கைகளில் தீவிர பாதிப்பை ஏற்படுத்தும். அது ஒரு பெரிய *கர்மவினை* பொறுப்பு ஆகும். போர் நியாயமாக

இருந்தாலும் இல்லாவிட்டாலும், அது கீழ்நிலை உணர்வை சார்ந்தது. போர் முடிவடைந்த பிறகு மீண்டும் தொடர்வதற்கு, அல்லது அடுத்த பிறவி அல்லது அதற்கு அடுத்த பிறவியில் தொடர்வதற்கு மதம் போதிக்கும் நற்பண்புகள் புறக்கணிக்கப்படுகின்றன. பழங்கால இந்தியாவில் போர் தொடர்பாக திட்டமிடும் போதும், குறிப்பாக போருக்கு முன்பாகவும், போராளிகள் மதம் தங்களுக்கு போதித்த நற்பண்புகளை மறந்து கீழ்நிலை உணர்வினுள் நுழைவதற்கு, அவர்களுக்கு மாமிச உணவு வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. தங்களது வாழ்க்கைகள் போரை சார்ந்து இருந்தாலும், உயர்நிலை உணர்வில் இருக்கும் பலர் போரில் ஈடுபடுவது இல்லை. அவர்கள் மனசாட்சிக்கு பயந்து போரை எதிர்ப்பார்கள் மற்றும் அவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளுக்கு எதிராக ஆயுதங்களை பயன்படுத்த விரும்புவதில்லை என்பதால், ஒவ்வொரு நாட்டிலும் பலர் சிறையில் அடைக்கப்படுகின்றனர் அல்லது கொலை செய்யப்படுகின்றனர். இது இந்து சமயம் போதிக்கும் அகிம்சையின் சரியான வெளிப்பாடு ஆகும்.

புதன்கிழமை

பாடம் 276

சச்சரவை

நியாயப்படுத்துதல்

இந்து மதத்தின் புகழ்பெற்ற இதிகாசங்களில் ஒன்றாக விளங்கும் *பகவத் கீதை,* வன்முறைக்கு தெய்வம் வழங்கும் ஒப்புதலாக பெரும்பாலும் கருதப்படுகிறது. சத்திரியனுக்கு போர் *தர்மமாக* விளங்குவதாக அது கூறுகிறது. அர்ச்சுனனுக்கு தான் செய்ய இருந்த செயல் பற்றிய சந்தேகங்கள் மற்றும் அச்சங்கள் இருந்தும், அவன் தனது சொந்தங்களை கொலை செய்ய அஞ்சினாலும், அவன் சண்டையிட்டு தனது சத்திரிய தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று பகவான் கிருஷ்ணர் அவனுக்கு ஆணையிடுகிறார். அதற்கு அர்ச்சுனன், "அதிகாரம் மீது இருக்கும் பேராசையால் வழிதவறி செல்லும் இவர்கள் குலநாசத்தால் ஏற்படும் குற்றம் மற்றும் நண்பர்களுக்கு துரோகம் இழைப்பதால் ஏற்படும் பாவம் ஆகியவற்றை பற்றி நினைக்காமல் இருப்பது அவர்கள் குறை தான் என்ற போதிலும், குலநாசத்தினால் ஏற்படும் குற்றங்களை அறிந்த நாமும் இந்த பாவத்திலிருந்து விடுபடுவதற்கு ஏன் சிந்திக்கக்கூடாது? ஒரு குலத்தை அழிப்பதால், குல தர்மம் மற்றும் குல வழக்கம் அழிந்து விடும். தர்மம் அழிந்த ஒட்டுமொத்த குலத்திற்கும் களங்கத்தை ஏற்படுத்தி, அதை அழித்து விடும். ... ஆனால் நான்! நாம் அறிவாளிகளாக இருந்தாலும் மாபெரும் பாவத்தை செய்ய தயாராகிவிட்டோம்! இராச்சியம் மற்றும் சுகம் மீதுள்ள பேராசையால் சொந்த

குலத்தையே அழிக்க தயாராகி விட்டோம்! ஒரு வேளை, நிராயுதபாணியாக எதிர்கொண்டு போரிடாமல் நின்றுக்கொண்டு இருக்கும் என்னை ஆயுதங்களுடன் இருக்கும் திருதராட்டிர புத்திரர்கள் யுத்த களத்தில் என்னை கொன்றாலும் பரவாயில்லை. அவர்களால் அவ்வாறு கொல்லப்படுவதே மேலானது என்று எனக்கு தோன்றுகிறது," என்று கூறினான். ¶பகவான் கிருஷ்ணர் பின்வரும் வாதத்துடன் தொடங்கி, போர் புரிவதற்கு மெதுவாக அர்ச்சுனனின் சம்மதத்தை பெறுகிறார். “பிறப்பவர்கள் அனைவரும் இறப்பதும், இறப்பவர்கள் அனைவரும் மீண்டும் பிறவி எடுப்பதும் உறுதி. அதனால் நம்மால் தவிர்க்க முடியாத சூழ்நிலையை நினைத்து நாம் வருத்தப்பட வேண்டியது இல்லை. ...இந்த தூல உடலுக்குள் வாசம் செய்யும் ஆன்மாவை என்றுமே அழிக்க முடியாது. அதனால் நீ மற்ற உயிரினங்களுக்காக மனம் வருந்த வேண்டிய அவசியம் இல்லை. ...பகைவர்களின் கூட்டம் உனது பராக்கிரமத்தை நிந்தனை செய்தபடியே சொல்ல தகாத வார்த்தைகளால் உன்னை திட்டுவார்கள். இதை விட பெரிய துக்கம் வேறு என்னவாக இருக்க முடியும்? இந்த யுத்தத்தில் நீ இறந்தாலும் சொர்க்கத்தை பெறுவாய். ஒரு வேளை நீ வெற்றி பெற்றால் உலகம் உனக்கு தலை வணங்கும். அதனால் குந்தியின் மைந்தனே, யுத்தம் செய்வதற்கு உறுதியாக எழுந்து நில். சுகம், துக்கம், லாபம், நஷ்டம், வெற்றி மற்றும் தோல்வியை சமமாக கருதி யுத்தம் செய்ய தயாராகிக் கொள். யுத்தம் செய்வதால் நீ பாவத்தை அடைய மட்டாய்” (முதல் அத்தியாயம், W. Q. ஜட்ஜ், தியோசாபிகல் யுனிவர்சிட்டி பிரஸ்). ¶நீண்டகாலமாக இந்துக்கள் போர் மற்றும் சச்சரவுகள், சாதாரண சண்டைகள் மற்றும் அக்கிரமங்களை நியாயப்படுத்துவதற்கு, இந்த நூலை பயன்படுத்தி வந்துள்ளனர். நான்கு வேதங்களை காட்டிலும், இந்த நூல் இந்து மதத்தை அதிகம் பிரதிநிதித்துவம் செய்வதாக கருதப்படுவது மிகவும் துர்பாக்கியமானது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் *பகவத் கீதை* பிரபலமாக இல்லை. ஆனால் அப்போது *உபநிடதங்கள்* மற்றும் *வேதங்கள்* அங்கே பிரபலமாக இருந்தன. எனது பதினைந்தாம் வயதில் நான் இந்து மதத்தை பின்பற்றி வந்த போது, அமெரிக்காவில் கீதை மெதுவாக அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் அது நாடு முழுவதும் மீமெய்யியல் வட்டங்களில் ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியது. "அகிம்சை மற்றும் அதைப் போன்ற உயர்ந்த பண்புகளை அடிப்படையாக கொண்ட ஒரு மதம், இவ்வாறு பரஸ்பர அழிவை ஏற்படுத்தும் போர் மற்றும் வன்முறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதையை எப்படி உயர்வாக கருதுகிறது?" என்பது போன்ற கேள்விகள் எழுந்தன. இதனால் வரலாற்றில் மனசாட்சியுடன் எதிர்ப்பு தெரிவிக்கும் முதல் நபராக அர்ச்சுனனை கருதுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது. ¶அந்த காலத்தில் கீதையை ஒரு சாத்திரமாக நியாயப்படுத்த மறைஞானிகள், இந்துக்கள் மற்றும் மேற்கத்திய ஆசிரியர்கள் மேற்கொண்ட முயற்சியில், பகவான் கிருஷ்ணர் அர்ச்சுனனின் உயர்நிலை ஆன்மாவாகவும்,

அர்ச்சுனன் தனது கீழ்நிலை ஆன்மாவாக அல்லது வெளிப்புற தன்முனைப்பாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது என்று விளக்கம் அளித்தனர். அர்ச்சுனன் ஒரு யோகியாகி பரபிரம்மனை உணரும் பொருட்டு, அவன் தனது சொந்தங்கள், நண்பர்கள் மற்றும் எதிரிகளுடன் இருக்கும் பற்றுக்களை அழித்துக்கொள்ள கிருஷ்ணர் ஊக்குவித்தார். மனிதன் உயர்வான உணர்தல்களை நோக்கி செல்லும் போது அவனுக்குள் ஏற்படும் உளப்போரட்டத்தை *பகவத் கீதை* உருவகப்படுத்துவதாக கூறி, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் மனங்களை திருப்திப்படுத்த முயற்சி செய்தனர். கிருஷ்ணர் தனது சீடனிடம் ஆன்மாவிற்கு அழிவு இல்லை என்றும், எல்லாம் நன்மையில் முடியும் என்றும் கூறி, அந்த சீடன் தனது நண்பர்கள், சொந்தங்கள் மற்றும் தனது குருவை கொலை செய்ய தூண்டுதலாக இருந்ததை நியாயப்படுத்தும் இன்றைய *சுவாமிகள்* மற்றும் உரையாசிரியர்கள் முயற்சி செய்தனர். இந்த விளக்கங்களின் மூலம் எனக்கு அந்த இதிகாசத்தில் திருப்தி ஏற்படவில்லை மற்றும் இந்த நூலில் பல சிறந்த அத்தியாயங்கள் இருந்தாலும், நான் அதை முழுமையாக நிராகரித்து விட்டேன். வன்முறைக்கு தெய்வீக ஒப்புதல் வழங்கும் அந்த நூலை, சில *சுவாமிகள்* "கொலை பற்றிய நூல்" என்று குறிப்பிடுவதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். ¶அன்று பகவத் கீதை வரலாற்று சிறப்புமிக்க ஒரு கவிதையாக கருதப்பட்டது. மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த இதிகாசம், மகாபாரத புராணத்தில் அங்கம் வகிக்கும் *ஸ்ம்ருதி* ஆகும். ஆனால் அதை எப்படி புரிந்து கொண்டாலும், அதை எண்ணற்ற இந்துக்கள் மதித்தாலும் மதிக்காவிட்டாலும், *பகவத் கீதை* வன்முறைக்கு துணை நிற்கிறது என்பதை மறக்க வேண்டாம். "*அகிம்சை* உயர்ந்த *தர்மம்* ஆகும். இது சிறந்த மாசு நீக்கும் செய்முறையாக விளங்குகிறது. இந்த உயரிய உண்மையில் இருந்து *தர்மங்கள்* அனைத்தும் முன்னேற்றம் பெறுகின்றன," (18.1125.25) என்று *மகாபாரதம்* குறிப்பிடுகிறது. பழிக்குப்பழி என்பது உண்மையான இந்து கோட்பாடு இல்லை.

வியாழக்கிழமை

பாடம் 277

தீவிரவாதத்திற்கு

அனுமதி வழங்கப்படவில்லை

ஒவ்வொரு நாட்டையும் ஒரு நாடாக வைத்து இருக்க, உலகில் இருக்கும் ஒவ்வொரு நாடும் தனது இராணுவம், கடற்படை, விமானப்படை, காவல்துறை, நாட்டின் காவலர்கள், குடிமக்களின் கூட்டுக் குழுவை கொண்டுள்ளது. இது *தர்மம்* ஆகும். குடும்பம் மற்றும் நாட்டை பாதுகாப்பதில், இராணுவங்கள் மற்றும்

காவல்துறைகளில் பாதுகாப்பு வழங்குவதில், தேவைப்பட்டால் மரணத்தை விளைவிக்கக்கூடிய பலத்தை பயன்படுத்துவது சத்திரியர்களின் *தார்மீக* மற்றும் சட்டப்பூர்வமான கடமை ஆகும். நீதிமன்றங்கள், இராணுவங்கள், கடற்படைகள், விமான படைகளை நிர்வகிக்கும் முக்கிய நிர்வாக அதிகாரிகள் உட்பட அமைதி மற்றும் சட்டம் ஒழுங்கை காக்கும் இந்த குழுக்கள் இல்லை என்றால் பூசாரிகள் தங்கள் வேலையை செய்ய முடியுமா? வியபாரிகள் பொருட்களை வாங்கி விற்பனை செய்ய முடியுமா? விவசாயிகள் பயிரிட்டு மகசூல் பெற முடியுமா? தெருக்களிலும் கிராமங்களிலும் பயமின்றி சிறுவர்களால் விளையாட முடியுமா? நிச்சயமாக சாத்தியம் இல்லை. ¶*மகாபாரதத்தை* காரணம் காட்டி, *தர்மம்* என்ற பெயரில் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளும் நபர்கள் சட்டத்தை மீறுபவர்களாகவும், குழப்பம் உருவாக்குபவர்களாகவும், தீ வைத்து கொளுத்துபவர்களாகவும், பயங்கரவாதிகளாகவும் இருக்கிறார்கள். *மகாபாரதம்* குழப்பத்தை உருவாக்க அனுமதி அளிக்கவில்லை. *மகாபாரதம்* பயங்கரவாதத்தை உருவாக்க அனுமதி அளிக்கவில்லை. விபச்சாரம், போதை மருந்து வியாபாரம், சட்டவிரோதமாக ஆயுதங்களை வாங்கி விற்பதன் மூலம் சமூக நெறிமுறைகளை அழிப்பதற்கும் சூறையாடுவதற்கும் *மகாபாரதம்* அனுமதி அளிக்கவில்லை. இந்த பழங்கால இதிகாசத்தின் கதாநாயகர்களாக விளங்கும் பாண்டவர்கள், அரசியல் காரணங்களுக்காக மக்கள் மனங்களில் மனவெழுச்சிகளை தூண்டுவது இல்லை. அவர்கள் கலவரங்களை உருவாக்கவில்லை. அவர்கள் போருக்காக மிரட்டி பணம் பறிக்கவும் இல்லை. அவர்கள் போருக்கு தேவையான பணத்தை போதை மருந்துகள் விற்பனை மூலம் சம்பாதிக்கவில்லை. அவர்கள் போரில் வெற்றி பெறுவதற்கு விபசாரத்திலும் ஈடுபடவில்லை. அவர்கள் பெண்களை போரில் சண்டையிடுவதற்கு தங்கள் படைகளில் சேர்க்கவில்லை. அவர்கள் எதிரிகளை வஞ்சனை செய்து சிக்க வைக்கும் தந்திரத்தை, தங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தந்ததும் இல்லை. ¶சொந்த நாட்டை பாதுகாப்பதும் *தர்மம்* தான். ஆனால் இன்னொரு நாட்டை அல்லது நிலத்தை அபகரிப்பது தர்மம் ஆகுமா? இதைத்தான் பாண்டவர்கள் செய்ய முயற்சி செய்தார்களா? நிச்சயமாக இல்லை. அவர்கள் தங்கள் இராச்சியத்தை அரசாலும் உரிமையை தக்கவைக்கவே போரில் ஈடுபட்டனர். ஒருவர் தனது விருப்பம் போல செயல்படுவதற்கு *இராமாயணம்* மற்றும் *மகாபாரதம்* அனுமதி அளிப்பதாக நாம் நினைக்க வேண்டாம். பகவான் கிருஷ்ணர் பொய் கூறினார், வெண்ணெய் திருடினார் மற்றும் கோபியர்களுடன் விளையாடினார் என்று சில இந்து நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால், சாதாரண மக்கள் பொய் சொல்வதற்கும், திருடுவதற்கும் அல்லது முறைதவறி நடப்பதற்கும் அல்லது இவை அனைத்தையும் தனது வாழ்முறையாக மாற்றிக்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்படுவதாக கருதக்கூடாது. இது நிச்சயமாக *தர்மம்* இல்லை. இது வெளிப்படையாக சட்டம் ஒழுங்கு சீர்கெட்ட நிலை ஆகும். இன்றைய நவீன

யுகத்தில் ஒருவரது மரணத்திற்கு பிறகு பறிமுதல் செய்த, திருடிய, சட்டவிரோதமாக கையகப்படுத்திய அல்லது இன்னொருவரின் இராச்சியத்தில் இருந்து அபகரித்த நிலங்களின் மீது நிறுவனங்கள் அல்லது நாடுகளை உருவாக்குவது *இந்து தர்மமும்* இல்லை. அவ்வாறு செய்ய சொல்லி *மகாபாரதமும்* குறிப்பிடவில்லை.

வெள்ளிக்கிழமை

பாடம் 278

மக்களில்

இருவகை

மக்களில் சிலர் அமைதிக்காக முயற்சி செய்வதும், சிலர் எப்போதும் சண்டையிடுவதாகவும் நமக்கு தோன்றுகிறது. இது எப்படி சாத்தியமாகிறது என்று என்னிடம் மக்கள் கேள்வி கேட்கிறார்கள். இந்த பூமியில் பிறவி எடுக்கும் குழந்தைகள் அல்லது ஆன்மாக்கள் இரு வகைகளை சேர்ந்தவர்கள். இந்த இரு வகைகளைப் பற்றி நமது *வேதங்களும்* மற்ற சாத்திரங்களும் எடுத்துரைக்கின்றன. சிலர் பூமிக்கு மேலிருந்து கீழே வருகிறார்கள், மற்றவர்கள் கீழிருந்து மேலே வருகிறார்கள். பூமிக்கு மேலிருந்து கீழே வரும் குழந்தைகள் என்பது உயர்ந்த உணர்வுநிலையின் அந்தர்லோகத்தில் ஒரு பகுதியில் இருந்து வருபவர்களை குறிக்கிறது, மற்றும் பூமிக்கு கீழிருந்து மேலே வரும் குழந்தைகள் என்பது தாழ்ந்த உணர்வுநிலையின் அந்தர்லோகத்தில் ஒரு பகுதியில் இருந்து வருபவர்களை குறிக்கிறது. நாம் உயர்ந்த உணர்வுநிலையை தேவலோகம் என்றும், தாழ்ந்த உணர்வுநிலையை நரகலோகம் என்றும் அழைக்கிறோம். தேவலோகம் சொர்க்கமாகவும், நரகலோகம் என்பது நரகமாகவும் விளங்குகிறது. ¶அகத்திலும் புறத்திலும் நரகலோகம் என்பது வன்முறை மற்றும் துன்புறுத்தல் நடைபெறும் இடங்களில் எல்லாம் இருக்கிறது. நாம் அத்தகைய நிகழ்வுகளை தொலைக்காட்சியில் காண்கிறோம். அந்தர்லோகத்தில் இருக்கும் நரகலோக மக்கள் செய்யும் கொடிய செயல்கள் தூல லோகத்தை காட்டிலும் மோசமாக இருக்கின்றன. நரகலோகத்தில் இருந்து லௌகீக உணர்வில் பிறவி எடுத்த குழந்தைகளுக்கு தியானம், யோகம் அல்லது மனதை அமைதிப்படுத்தும் எந்த செய்முறைகளிலும் ஈடுபாடு இருக்காது. அவர்களிடம் சுய கட்டுப்பாடு இருக்காது மற்றும் அவர்கள் தங்கள் பெற்றோர்களின் எதிரிகளாக இருப்பார்கள். இந்த குழந்தைகளின் பெற்றோர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவாலை சமாளித்து, அந்த இளம் ஆன்மாக்களை சீர்திருத்தம் செய்து மேம்படுத்தி அவர்களின் கல்வியை உயர்த்த முடியாமல் *கர்மவினை* விளைவால் கட்டுண்டு இருக்கிறார்கள். அந்த இளம் ஆன்மாக்களுக்கு தங்கள் பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் மீது

இருக்கும் பொறுப்புக்களை காட்டிலும் அவர்களின் வஞ்சனை, கோபம் மற்றும் ஆத்திரத்தின் சக்திகள் வலுவாக இருக்கின்றன. அதைப்போன்ற சூழ்நிலையை சந்திக்கும் பல பெற்றோர்கள் விவேகமாக தங்கள் குழந்தையை விவசாயம், பண்ணைத் தொழில் மற்றும் இயற்கை பராமரிப்பு போன்ற தொழிலில்களுக்கு அனுப்பி விடுவதால், அந்த குழந்தை இயற்கை சக்திகளுடன் இணைந்து, இயற்கையின் மெதுவான செய்முறைகளை கற்றுக்கொள்ளும் போது உயர்நிலை உணர்வுக்கு உயர்கிறது. நல்ல நோக்கங்களுடன் இருக்கும் சில குடும்பங்கள் தவறாக முடிவெடுத்து, அந்த குழந்தைகள் உயர்கல்வி படிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பு வைத்து, தாங்கள் வளர்த்த முறையை நினைத்து வாழ்நாள் முழுவதும் அவதிப்படுகிறார்கள். ¶ஆனால் அதற்கு மாறாக தேவலோகத்தில் இருந்து லௌகீக உணர்வில் பிறக்கும் குழந்தைகளுக்கு தியானம், யோகப்பயிற்சி மற்றும் மற்ற சுயக்கட்டுப்பாட்டு முறைகளில் ஈடுபாடு உருவாகிறது. இந்த இரு வகை மக்களைப் பற்றி சொல்வதற்கு சில வழிமுறைகள் உள்ளன. மனம் வருந்துபவரைப் பார்த்தால் அவர் உண்மையில் தேவலோகத்தை சேர்ந்தவர் என்று சொல்லிவிடலாம். ஏனென்றால் நரகலோகத்தை சேர்ந்தவர்களால் மனம் வருந்த முடியாது. அந்த நபரின் கண்களை பார்த்து, அவர் எந்த லோகத்தை சேர்ந்தவர் என்று சொல்லிவிடலாம். நரகலோக மக்களுக்கு பொதுவாக மந்தமான அல்லது சிடுசிடுப்பான கண்கள் இருக்கும் மற்றும் அவர்கள் அறியாமை உலகில் இருந்து வருகிறார்கள். ஆனால் தேவலோகத்தை சேர்ந்தவர்களுக்கு பிரகாசமான, தெளிவான மற்றும் அகன்று விரிந்த கண்கள் இருக்கும் மற்றும் அவர்கள் ஞான ஒளியின் உலகில் இருந்து வருகிறார்கள். நரகலோகத்தை சேர்ந்தவர்கள் அதிக வஞ்சகமாக செயல்படுவதால், அவர்கள் உங்கள் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதைப் போல காட்சி அளிக்க முயற்சி செய்வார்கள். அவர்களை சோதித்து பார்க்க வேண்டும். ¶நரகலோக மக்களை உணர்வில் உயர்த்தி, அவர்களை உலகின் புதிய தரநிலைகளுக்கு கட்டுப்படுத்தினால் மட்டுமே அமைதி பிறக்கும். அந்த தரநிலைகளை தேவலோக மக்களால் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். தேவலோக மக்கள் பொறுப்பில் இருந்தால் மட்டுமே உண்மையான அமைதி தோன்றும். அது வேறு வழியில் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. அதனால் பூமியில் அமைதி பிறக்கவேண்டும் என்றால், அவர்கள் பொறுப்பு ஏற்க மறுக்கக்கூடாது.

சனிக்கிழமை

பாடம் 279

கீழ்நிலை பண்புடையவர்களை

கட்டுப்படுத்துதல்

இந்த கீழ்நிலை மக்களின் மனங்களில் முரண்பாட்டை உருவாக்கும் பிரச்சனைகள் வாசம் செய்கின்றன. அவர்களுக்கு பழிவாங்குவது ஒரு வாழ்முறையாக இருக்கிறது. அவர்களுக்கு மற்றவர்களை பகைத்துக்கொள்வது ஒரு விளையாட்டாக இருக்கிறது. அவர்களை பிரித்து வைத்து, அவர்களின் குணத்தை கருத்தில் கொண்டு நாம் செயல்படவேண்டும். அவர்கள் சுயமாக மேற்கொள்ளும் முயற்சி மூலம் முன்னேற்றம் பெற வேண்டும். ஆனால் அவர்கள் பல தவறான செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் எப்போதும் அதிக தூண்டுதலை பெற்று இருப்பதால், சுய முன்னேற்றத்தை பற்றி அவர்கள் எப்போதும் சிந்திப்பது இல்லை. இருந்தாலும் அவர்கள் தங்கள் ஆன்மாவின் முதிர்ச்சி மூலம் கற்கவேண்டும். அவர்கள் அடைந்துள்ள முதிர்ச்சி நிலைக்கு ஏற்ப, அவர்கள் தாங்கள் செய்யும் தவறுகள் மூலமாக மட்டுமே கற்றுக்கொள்ள முடியும் என்பதால், அவை அவர்களுக்கு ஆசானாக விளங்குகின்றன. ¶கீழ்நிலை இயல்புடன் இருக்கும் மக்களை அமைதிப்படுத்த முடியாது. அவர்களை இணங்க வைப்பதும் கடினமாக இருக்கும். அவர்கள் தங்கள் இராச்சியத்தின் அரசர்களாக விளங்குகிறார்கள். கீழ்நிலை உணர்வுக்குள் செல்வதற்கு பல கதவுகள் உள்ளன என்பதால், தேவலோக மக்கள் கீழ்நிலை இயல்புடைய மக்களுடன் அதிக தொடர்பை வைத்துக் கொண்டால், அவர்கள் தங்களுக்குள் வன்முறையை விழிக்க வாய்க்க வைப்புள்ளது. கீழ்நிலை உணர்வில் வாழ்பவர்கள் தங்களது லோகத்திற்கு புதிய வரவுகளை சேர்க்க எப்போதும் ஆவலுடன் இருக்கிறார்கள். இதைக் கேட்பதற்கு சோகமாக இருந்தாலும், இது உண்மை என்பதில் சந்தேகமில்லை. இது தினந்தோறும் நம்மை சுற்றி நடப்பதை உங்களால் காண முடியும். ¶இந்த உலகில் இருக்கும் மக்களை ஆழமாக பார்க்கும் போது, எல்லோரும் ஒரே நிலையில் இருக்கிறார்கள் என்று சிந்திப்பது வியப்பை தருவதாக இருக்கும். ஆனால் நாம் இந்த பிறவியில் எல்லோரிடமும் ஒரே எதிர்பார்ப்பை வைத்திருக்க முடியாது என்று நமது முனிவர்கள் மற்றும் *ரிஷிகள்*, மற்றும் நமது விவேகமும் உபதேசிக்கின்றன. ஒவ்வொரு ஆன்மாவின் பக்குவத்தை உணர்வதன் மூலம், நாம் மறுபிறவியின் செய்முறையை உணர்ந்துக் கொள்கிறோம். அதன் மூலம் நாம் இளம் ஆன்மாக்கள் மற்றும் பழமையான ஆன்மாக்களைப் பற்றி புரிந்து கொள்கிறோம். ¶இந்து அணுகுமுறையுடன் கீழ்நிலை இயல்புடன் இருப்பவர்களை பிரித்து வைப்பது எப்படி என்று மக்கள் என்னிடம் அவ்வப்போது அன்பர்கள் கேட்கிறார்கள். என்னை பொறுத்தவரையில், மக்களை அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் மனப்போக்குகளின் மூலம் பிரிக்க முடியும். கீழ்நிலை இயல்புடன் இருக்கும் ஒருவரை இந்த பிறவியில் திருத்த முடியாது என்ற ஒரு உறுதியான நம்பிக்கை மூலம் அவரை பகைத்துக் கொள்ளாமல், அவரது சகவாசத்தை தவிர்க்க உருவாகும் மனப்போக்கு, சிறந்த பாதுகாப்பாக விளங்குகிறது. அறியாமை இருள் சூழ்ந்த உலகில் இருந்து வந்த இவர்களை கட்டுப்படுத்த உலகெங்கும் இருக்கும் சமூகங்கள் முயற்சி

மேற்கொண்டு வருகின்றன. இது அனைத்து அரசாங்கங்களுக்கும் பெரிய கவலைகளில் ஒன்றாக விளங்குகிறது. ¶ஆனால் பிரச்சனை என்பது கீழ்நிலை உணர்வில் இருப்பவர்களிடம் மட்டும் இல்லை, அது உயர்நிலை உணர்வில் இருப்பவர்களிடமும் இருக்கிறது. அவர்கள் மந்தமாக இருக்கிறார்கள். ஒருவர் அதிக விழிப்புடன் இருக்கும் பொது, அவர் அதிக பொறுப்புடனும் இருப்பார். அதனால் உயர்நிலை குணத்துடன் இருப்பவர்கள் சமூகத்தின் பொறுப்புக்களை மற்றவர்களுக்கு விட்டு வைக்காமல், அவற்றில் பெரும்பாலான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். உயர்ந்த கொள்கைகளுடன் இருப்பவர்கள் உண்மையில் அமைதியை விரும்பினால், அவர்கள் எல்லோரும் தங்களை ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, அன்பு மற்றும் விசுவாசத்துடன் கைகோர்த்து இணைந்து செயல்படவேண்டும். பூமியில் இருக்கும் ஒவ்வொரு மத சார்புள்ள அமைப்பிலும், மக்களுக்கு உதவுவது ஒரு கடமை மற்றும் ஒரு நிறைவேற்றமாக பரிந்துரைக்கப்படுகிறது. பல குழுக்கள் தங்களுக்கு அங்கத்தினர்கள் சேரவேண்டும் என்று நரகலோக மக்களையும் தங்களுடன் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒரு காலத்தில் நேர்மையாக மற்றும் மகிழ்ச்சிகரமாக இருந்த பக்தி சமூகத்தை அரக்கர்களின் இடமாக, இந்த கீழ்நிலை இயல்புடைய மக்கள் மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் எப்போதும் அந்த குழுவினர் மத்தியில் முதலில் குழப்பத்தை ஏற்படுத்துவார்கள். அதில் அவர்களுக்கு வெற்றி கிடைத்தால், அவர்கள் தங்கள் பக்தி சமூகத்திற்கும் இன்னொரு பக்தி சமூகத்திற்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். அதனால் தேவலோக மக்கள் தங்களுக்குள் இருக்கும் தடைகளை உடைத்து எரிந்து, தங்களுக்குள் அன்பு மற்றும் விசுவாசத்துடன் இருந்து, ஒன்றாக இணைந்து செயல்பட்டு, இதைப் போன்ற ஊடுருவல்களில் இருந்து தங்கள் குழுக்களை காப்பாற்ற வேண்டிய அவசியத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். முதல் நடவடிக்கை முக்கியமானதாக இருக்கும். அதன் பிறகு, மற்ற நடவடிக்கைகள் தானாக அமைந்துக் கொள்ளும். ¶உலகில் மக்களுக்கு நல்ல முடிவுகளை எடுக்கும் அரசாங்கங்கள் மக்களின் தேவை என்ன என்பதை தெரிந்துக்கொள்ள தேசிய மற்றும் சர்வதேச அமைதி இயக்கங்கள் துணை புரிகின்றன. உயர்நிலை உணர்வில் இருப்பவர்களுக்குள் பரிச்சயம் ஏற்பட்டு, ஒரு உலகளாவிய *தர்மத்திற்கு* புதிய கோட்பாடுகளை உருவாக்க அந்த அமைப்புக்கள் உதவி செய்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 280

வணிகத்தில்

அகிம்சை

வணிக உலகில் *அகிம்சையின்* பயன்பாடு பற்றி என்னிடம் ஒருமுறை கேள்வி கேட்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன்பு ஒளிபரப்பப்பட்ட டைட்டன்ஸ், தி வெஸ்ட் விங்க், டைநாஸ்டி, பால்கன் கிரேஸ்ட், டல்லாஸ், எல்.ஏ. லா போன்ற பிரபல அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் *அகிம்சைக்கு* முரணாக வணிகத்தில் *இம்சையை* கற்றுத் தருகின்றன. அந்த நிகழ்ச்சிகளின் கதை ஆசிரியர்கள், "பால்கன் கிரேஸ்ட் பார்மை கடுமுயற்சி செய்து காப்பாற்றுங்கள், சவுத் பார்மை காப்பாற்றுங்கள், கார்பரேஷனை காப்பாற்றுங்கள்," போன்ற வசனங்களை எழுதி *இம்சையை* ஊக்குவித்தனர். இன்று தேசிய பத்திரிகைகள் வெளியிடும் அறிக்கைகள் மைக்ரோசாப்ட், புகையிலை தொழில், கைத்துப்பாக்கி தயாரிப்பாளர்களைக் காப்பாற்ற முயற்சி செய்து வருகின்றன. பல வருடங்களுக்கு முன்பு ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நகைச்சுவை நிகழ்ச்சிகள் விட்டுச்சென்ற இடத்தை, இன்று நிஜ வாழ்க்கையில் நடைபெறும் நீதிமன்ற வழக்குகள் நிரப்பியுள்ளன. தொலைகாட்சி மற்றும் நிஜ வாழ்க்கை முரண்பாடுகளில், நீங்கள் உங்கள் போட்டியாளருக்கு எதிராக எதை செய்தாலும் அது வியாபாரத்தின் அங்கமாக கருதப்படுவதால், அது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதன் கதையமைப்பு முழுவதும் மனம் மற்றும் உணர்ச்சிபூர்வமான கொடுமைகள் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. ¶இந்து மதத்தில் வணிகம் தொடர்பான ஒழுங்குமுறை மிகவும் தெளிவாக இருக்கிறது. இதைப் பற்றி திருவள்ளுவர் தனது திருக்குறளில்

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்." (திருக்குறள் 120).

நாம் சிறந்த பொருட்களை தருவதற்கும், அந்த பொருளை மேம்படுத்தி விற்பனை செய்யவும் போட்டியிட வேண்டும். ஆனால் அது போட்டியாளரின் பொருள் மற்றும் மதிப்பை அழிப்பதாக இருக்கக்கூடாது. குணத்தை அழிப்பது *அகிம்சையின்* அங்கம் இல்லை. அது குற்றம் சுமத்துபவர்களுக்கு பாவங்களை சேர்க்கின்றன. இதை முறையை இன்று பல இந்துக்களும் பின்பற்றுகிறார்கள். அவர்கள் அகிம்சையை சரியாக புரிந்துகொள்ளவில்லை என்பதையே அவர்களின் அந்த செயல் குறிப்பிடுகிறது. அமெரிக்க தொலைகாட்சியை பின்பற்றி வியாபாரம் செய்யக்கூடாது என்பதை உலகெங்கும் இருக்கும் இந்துக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். சிலர் நமக்கு எதை செய்யவேண்டும் என்று கற்றுத் தருவதைப் போலவும், வேறு சிலர் நாம் எதை செய்யக்கூடாது என்று கற்றுத் தருவதைப் போலவும், பிரபலமான இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நாம் எதை செய்யக்கூடாது என்பதை தெளிவாக நமக்கு கற்றுத் தருகின்றன. இதை காட்டிலும் *அகிம்சை* கொள்கைகள் மற்றும் இந்து மதத்தில் இருக்கும் மற்ற அறநெறி உபதேசங்கள் நமக்கு சிறந்த வழிகளை காட்டுகின்றன. ¶இன்று அளவில் பெரிதாக இருக்கும் பல நிறுவனங்கள், சிறிய நாடுகளை காட்டிலும் பெரிதாக விளங்குகின்றன. அவர்களின் நிர்வாக பொறுப்பில் இருக்கும் மக்கள் கீழ்நிலை உணர்வில் இருக்கிறார்களா அல்லது

உயர்நிலை உணர்வில் இருக்கிறார்களா என்பதை பொருத்து அவர்கள் வஞ்சகமாக ஏமாற்றும் பண்புடன், கர்வத்துடன் ஆதிக்கம் செலுத்தும் அரசன் போல அல்லது இரக்க குணமும் தெய்வ பக்தியும் நிரம்பிய சக்கரவர்த்தி போல இருக்கிறார்கள். ஒழுங்குமுறையுடன் வியாபாரம் செய்வதற்கு நகரங்கள், மாவட்டங்கள், மாகாணங்கள், நாடுகள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசுகளில் பல சட்டங்கள் உள்ளன. அந்த சட்டங்கள் எதுவும் நேர்மையற்ற வியாபாரம் செய்வது, பொருட்களை சந்தையில் இருந்து அழித்து விடுவது அல்லது வியாபாரத்தில் நடைபெறும் பரஸ்பர போட்டியின் காரணமாக ஒருவர் திவால் நிலையை அடைவதற்கு அனுமதி அளிப்பது இல்லை. ஒவ்வொரு வியாபாரமும் கழுகு போல இரக்கமின்றி பேராசையுடன் சமூகத்திடம் இருந்து சுரண்டாமல், அதற்கு *தார்மீக* முறையில் சேவை செய்ய கட்டுப்பட்டு இருக்கிறது. பெரிய நிறுவனங்களின் தலைவர்கள் அந்த நாட்டின் சட்டங்கள் மற்றும் *அகிம்சை* கொள்கைகளை பின்பற்றும் போது, அவர்கள் சிறந்த பொருட்களை உருவாக்கி சிறந்த சமூக சேவை செய்வதற்கு தங்கள் சக்திகளை பயன்படுத்துகிறார்கள். ஒரு நிறுவனம் நிர்வாகிகளுக்கு இன்னொரு நிறுவனத்தின் நடவடிக்கைகளை இரகசியமாக கண்காணிக்கும் எண்ணமிருக்கும் போது, அவர்களின் சக்திகள் திசை மாறுவதால், அவர்கள் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் வேதனைக்கு ஆளாகிறார்கள். அதனால் உடனடியாக குறுகிய காலத்திற்கு லாபங்கள் கிடைத்தாலும், இந்த தவறான செய்கைகளால் கிடைக்கும் லாபங்கள் தவறான செயல்களுக்கு செலவழிந்து விடுகின்றன. ¶அதைப் போன்று விளைவுகளை *அகிம்சையும்* கொண்டுள்ளது. இதனால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்பது நமக்கு தெரியும். அதைப் போன்ற விளைவுகளை *இம்சையும்* எப்போதும் கொண்டுள்ளது. அது உருவாக்கும் எதிரிகள் மற்றும் தவறான *கர்மவினைகள்,* எதிர்காலத்தில் அந்த நிறுவனத்தின் மீதே திரும்பி அதன் எதிர்காலத்தை பாதிக்கின்றன. தவறான செய்கைகளின் உட்புற எதிர்வினைகள் மூலம் வெற்றிக்கு தேவையான மங்களகரமான நேரத்தின் பலன் அழிந்து விடுகிறது. துன்புறுத்துவதை மையமாக கொண்டு இயங்கும் நிறுவனங்கள் தங்களுக்கு பொருத்தமான நபரை நேர்காணல் காணும் போது, உயர்நிலை உணர்வில் இருக்கும் மக்களை தங்கள் நிறுவனத்தில் வேலைக்கு சேர்க்க முடியாது. ஒருவேளை அவர்களை பணியில் அமர்த்தினால், அவர்கள் இந்த திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள். அதனால் அவர்கள் தங்களைப் போன்ற தகுதிகளை உடையவர்களை ஈர்க்கிறார்கள், மற்றும் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து *இம்சையை* பின்பற்றுகிறார்கள். கீழ்நிலை இயல்பாக விளங்கும் தந்திரம், ஏமாற்றுதல் மற்றும் வஞ்சனை ஆகியவை மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக *இம்சை* செய்யும் செய்முறையின் விளைவுகள் ஆகும். *இம்சை* கொள்கைகளில் இருந்து கிடைக்கும் லாபங்கள் குறுகிய காலத்திற்கு கிடைத்து பயனற்ற வழிகளில்

செலவழிகின்றன. *அகிம்சை* கொள்கைகளில் இருந்து கிடைக்கும் லாபங்கள் நீண்டகாலத்திற்கு கிடைத்து பயனுள்ள வகையில் செலவழிக்கப்படுகின்றன.

க்ஷாந்தி சக்தி

क्षान्तिशक्ति



மன்னிக்கும் மனநிலையின் ஆற்றல்

நாங்கள் வானத்தையும், பூமியையும், சோதியையும், தாயையும், தந்தையையும் இம்சை செய்து இருந்தால், குடும்பத் தலைவர்களுக்கு துணை புரியும் அக்னி பகவான், அந்த குற்றத்தில் இருந்து எங்களுக்கு பாதுகாப்பு அளித்து, புண்ணிய லோகத்திற்கு எங்களை வழிநடத்தி செல்லட்டும்.

அதர்வண வேதம் 6.120.1 வேஎ, ப. 636



ஒரு நவீன மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கின் விளக்கு வெளிச்சத்தில் ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒரு நோயாளிக்கு சிகிச்சை வழங்குகிறார். அவர் தனது கட்டுப்பாட்டை இழந்து, அங்கிருந்த செவிலியை கடிந்து கொள்கிறார். அது இன்று தான் அனுபவிக்க வேண்டிய கர்மவினை என்பதை அறிந்த அந்த செவிலி, மன்னிக்கும் பாவனையுடன் சாந்தமாக இருக்கிறாள். அந்த மருத்துவர் அன்று பல்வேறு சிகிச்சைகளை தொடர்ந்து பல மணி நேரங்களுக்கு செய்ததால் மன அழுத்தத்துடன் இருக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 281

மன்னிக்கும்

மனப்பான்மை

மனிதனுக்குள் இருக்கும் தெய்வீக பண்பை பற்றி எடுத்துரைக்கும் மந்திரங்கள் *வேதங்களில்* நிரம்பி உள்ளன. அதனால் விரோதங்கள், ஆத்திரம் மற்றும் குறிப்பாக சுய நிந்தனையை விட்டொழிக்க வேண்டும் என்று இந்து தர்மம் நம்மிடம் மன்றாடுகிறது. இன்று பலர் தங்கள் தவறுகளை திருத்திக் கொள்ளாமல், மற்றவர்கள் தவறுகளை திருத்துவதில் அதிக முயற்சி மேற்கொள்கிறார்கள். அந்த வேலைக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படுவது இல்லை. பெரும்பாலானோர் முழுமையான யதார்த்தமாக இருக்கும் உலகில் ஒப்பீட்டளவில் உண்மை உலகை மீண்டும் உருவாக்க முயற்சி செய்கிறார்கள். இந்த வேலைக்கும் அங்கீகாரம் கிடைப்பது இல்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் மகிழ்ச்சி மற்றும் திருப்தியாக இருப்பதற்கு, கிடைப்பதை வைத்து மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று ஞானிகள் நம்மிடம் மன்றாடுகிறார்கள். அவர்கள் நமக்கு பின்வரும் அறிவுரைகளை வழங்குகிறார்கள். மற்றவர்களுக்கு ஏற்படும் தோல்விகளை நினைத்து நம்பிக்கை இழக்க வேண்டாம். அதற்கு மாறாக அந்த அனுபவம், அவர்கள் எந்த உணர்வு நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அனுபவிக்கும் வேதனையை பற்றியும் நீங்கள் புரிந்துகொள்ள தூண்டுதலாக இருக்கட்டும். மற்றவர்கள் உங்களுக்கு சிந்தனை, சொல் அல்லது செயல் மூலம் தீங்கு விளைவித்தால், அதைப் போல நீங்கள் அவர்களுக்கு தீங்கு விளைவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு பதிலாக, அது உங்களுக்குள் இரக்கம், அன்பு மற்றும் மன்னிக்கும் பண்பை விழிக்க வைக்கட்டும். அது உங்கள் பலவீனங்களை தெரிந்துக்கொள்ள ஒரு கண்ணாடியை போன்று பயன்படுத்துங்கள். அதன் பிறகு உங்கள் சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்களை இந்து தர்மத்துடன் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கடுமையாக முயற்சி செய்யுங்கள். ¶நாம் அனைத்து விஷயங்களையும் நமக்குள் சரி செய்து கொள்ள வேண்டும். நாம் நமது செயல்களின் எதிர்வினைகளாக இருக்கும் *கர்மவினைகளை* உற்சாகத்துடன் பொறுத்துக்கொள்ள வேண்டும். இந்த பிறவி

அல்லது ஒரு முற்பிறவியில் நாம் செய்த செயல்கள் மூலம் சுயமாக உருவாக்கிய எதிர்வினைகள் காரணமாக வாழ்க்கை வெளிப்படையாக வழங்கும் அநீதிகள் எதை குறிக்கின்றன? வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் ஒரு காரணத்திற்காகவும் நன்மை செய்வதற்காகவும் நடைபெறுகின்றன என்பதை முழுமையான புரிந்துணர்வுள்ள நபர் ஏற்றுக்கொள்கிறார். நாம் செய்த தவறுகளை தெரிந்துகொண்டு, மற்றவர்களுக்கு ஏற்படுத்திய மன வருத்தங்களை நாமும் உணர வேண்டும் என்பதற்காக, நாம் செய்த செயல்களை நமக்கு மீண்டும் செய்கிற மற்றவர்களுக்கு நான் நன்றி செலுத்த வேண்டும். இந்த முறையில் நாம் சுத்தம் அடைந்து, மீண்டும் அதே *அதர்ம* செயல்களை செய்யாமல் இருக்க பயிற்சி பெறுகிறோம். ¶சான்றோர்கள் எல்லோரும் மன்னிக்கும் மனப்பான்மையை பற்றி உபதேசம் வழங்கி இருக்கிறார்கள். முதலில் நாம் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்ள கற்றுக்கொண்டு நம்பிக்கையுடன் முன்னேற வேண்டும். பலர் குற்ற உணர்வுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வருகிறார்கள். அது பல தலைமுறைகளாக பின்பற்றி வரும் ஒரு வாழ்முறையாக இருக்கிறது. அது அச்சுறுத்தும் பயம் போன்று அல்லாமல் ஒரு மந்தமான பயமாக இருக்கிறது. சில மதங்கள் மக்களை அச்சம் மற்றும் குற்ற உணர்வுடன் இருக்க நிர்பந்திக்கின்றன. அதனால் அவர்கள் குற்ற உணர்வை உணரவில்லை என்றால், அவர்களுக்கு தங்கள் மதத்தில் ஈடுபாடு இல்லாத உணர்வு ஏற்படும். தனக்கு இளம் வயதில் பரிச்சயமான கிறித்துவ சமூகம், இறைவன் கோபமாகவும் அச்சத்தை வரவழைப்பவராகவும் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை வைத்து இருந்ததாக மேரி பேக்கர் எட்டி கூறினார். அவர்கள் அன்புள்ளம் கொண்ட இறைவனை, அந்த குணத்திற்காக வலுவாக தாக்குவதாகவும் அவர் மேலும் கூறினார். குற்ற உணர்வுடன் வாழும் குடும்பங்கள், அந்த குற்ற உணர்வை தங்கள் குழந்தைகளுக்கு வழங்குகிறார்கள். குற்ற உணர்வுடன் இருக்கும் மக்கள் அதிகமாக வழங்குவதும் இல்லை, உருவாக்குவதும் இல்லை, மற்றும் அவர்கள் ஆன்மீக பாதையில் அதிகம் முன்னேறுவதும் இல்லை. ¶நாம் நம்மை மன்னிக்கும் போது, ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு புதிய சக்திகள் வெளியிடுகிறோம். மன்னிக்கும் மனப்பான்மை ஒரு வலுவான சக்தி என்பதில் சந்தேகம் இல்லை. மற்றவர்கள் நமது நிழலாக இருப்பதால், நாம் நம்மை நிந்திக்கும் வரை நம்மால் மற்றவர்களை மன்னிக்க முடியாத காரணத்தால், நாம் நம்முடன் தொடங்கவேண்டும். நமக்குள் எதிர்கொள்ள தயாராக இல்லாத ஒன்றை நாம் மற்றவர்களிடம் காணும் போது, நாம் அதற்கு எதிர்செயலாற்றுகிறோம். ¶நமக்கு அதீதமாக கவனம் செலுத்தி மற்றவர்களின் யதார்த்த சொரூபத்தை பார்த்து, அவர்கள் யதார்த்தமாக எப்படி சிந்திக்கிறார்கள் மற்றும் உணர்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்வது ஒரு மாபெரும் சக்தி ஆகும். நாம் நமது தன்முனைப்பில் மறைந்து இருக்கும் போது, அதை செய்வது கடினமாக இருக்கும். நாம் அறிந்தவர்கள் நம்மை போன்றே

இருப்பதாக நாம் ஊகம் செய்கிறோம், மற்றும் அவர்கள் அவ்வாறு இல்லாத போது நாம் அவர்களிடம் குற்றம் காண்கிறோம். ஆனால் இறுதியில் நாம் தன்முனைப்பின் ஓடு பகுதியை உடைத்துக் கொண்டு வெளிவருகிறோம். இதை கோயிலில் உடைக்கும் சிதறு தேங்காயின் உட்பொருளாக விளங்குகிறது. தேங்காய் உடைந்து வெளிப்படும் வெண்மையான பருப்பு ஆன்மாவின் சாத்வீக குணத்தை பிரதிபலிக்கிறது. நமது தன்முனைப்பு தணிவதற்கு ஒரு மிகப்பெரிய வேதனை தரும் அனுபவம் தேவைப்படுகிறது. ஆனால் நாம் இந்து தர்மத்திற்கு முழுமையாக சரண் அடைவதன் மூலமாகவும், நமது ஆன்மாவிற்கு மற்றும் நமக்குள் இருக்கும் இறைவனிடம் முழுமையாக சரண் அடைவதன் மூலமாகவும், நாம் தன்முனைப்பின் கடினமான ஓடு பகுதியை சுலபமாக நீக்கலாம். அக வழிபாடு மற்றும் புற வழிபாடு, அகத்தே சரண் அடைவது மற்றும் புறத்தே சரண் அடைவது ஆகியவை தன்முனைப்பை மென்மையாக்கி ஆன்மாவை வெளிப்படுத்தும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 282

நெரிசலான

சக்திகள்

ஆத்திரம் என்றால் என்ன? ஆத்திரம் என்பது *பிராண* சக்தியாகவும், நுணுக்கமான ஆற்றலாகவும் நெரிசலாகவும் இருக்கிறது. அன்பு என்றால் என்ன? அன்பு என்கிற *பிராண* சக்தி நெரிசல் இல்லாமல் பாய்ந்து செல்கிறது. ஒருவர் நமக்கு அநீதி இழைக்கும் போது, அவர் நமக்கு நெரிசலான *பிராண* சக்தியின் கலவையை நமக்கு வழங்குகிறார். நம்மால் அதை சூட்சும லோகத்தில் பார்க்க முடிந்தால், அது இணக்கமில்லாத நிறங்கள் மற்றும் உருவங்களின் குவியல் போல நமக்கு காட்சி அளிக்கும். நம்மால் பற்றின்றி இருக்க முடியவில்லை என்றால், நாம் வேதனையுடன் ஆத்திரம் அடைகிறோம். இந்த *பிராண* சக்தியை நாம் உள்ளுணர்வுடன் தக்க வைத்துக் கொள்கிறோம் மற்றும் சம்பத்தப்பட்ட நபரை மன்னித்து விடவேண்டும் என்று நாம் முடிவு செய்த பின்னரே அது விடுவிக்கப்படுகிறது. மனப்பூர்வமாக மன்னிப்பை வழங்கியதும், அந்த நெரிசலான *பிராண* சக்தி நம்மை துன்புறுத்திய அல்லது அவமதித்த நபருக்கே மீண்டும் திரும்பிவிடுகிறது. ¶நாம் ஒருவர் மீது ஆத்திரம் அல்லது வெறுப்புடன் இருக்கும் போது, நாம் அவருடன் சூட்சும ரீதியாக தொடர்பில் இருப்பதோடு, அவர் செய்த தீய செயல் மூலம் அவருக்கு தானாக வந்து சேரவேண்டிய *கர்மவினையை* நாம் தக்க வைத்து இருக்கிறோம் என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம். நாம் தவறு செய்தவரை மன்னித்து விட்டால்,

அந்த நெரிசலான சக்தியை நாம் விடுவித்து விடுகிறோம். அதன் பிறகு *கர்மவினையின்* விதி தவறாமல் செயல்படுகிறது. அதாவது அவரது செயல்கள் அவருக்கு ஒரு எதிர்வினையை உருவாக்குகின்றன, மற்றும் இந்த செய்முறையில் நமது ஈடுபாடு சிறிதும் இருக்காது. இதைத் தொடர்பாக 2,200 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட திருக்குறளை பார்ப்போம்.

"திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. (157)
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். (158)"

¶ஆனால் தவறு செய்தவர் உண்மையாக கழிவிரக்கத்தை வெளிப்படுத்தி, மன்னிப்பு கோருதல் மற்றும் முரண்பாடு நீக்கம் மூலமாக அவர் தனது ஆத்திரத்தை கரைக்கும் வரை, தவறு செய்தவரை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வது விவேகமாக இருக்காது. அவர் அவ்வாறு கரைக்கவில்லை என்றால், அவர் மீண்டும் அதே தவறுகளை செய்வார் என்று அனுபவ அறிவு தெரிவிக்கிறது. மடவாசிகள் தங்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களை அகத்தில் விரைவாக மன்னித்து விட்டாலும், குற்றம் செய்தவர் வெளிப்படையாக முரண்பாட்டை நீக்கும் வரை, அவர்கள் வெளிப்புறமாக மன்னிப்பது கிடையாது என்று எங்களது 270 ஆவது *சூத்திரம்* குறிப்பிடுகிறது. இதற்கு என்ன பொருள் என்று என்னிடம் சமீபத்தில் கேட்கப்பட்டது. அந்த கேள்வியை கேட்ட அன்பர் தான் தனது குடும்பத்தின் மூலம் உடல் மற்றும் உணர்ச்சி ரீதியாகவும் கடுஞ்சொற்களாலும் துன்புறுத்ததப்பட்டதாகக் கூறினார். அவர் குடும்பத்தினரை தனது உள்ளத்தில் மன்னித்து இருந்தார். ஆனால் அவர் தற்போது நடுத்தர வயதை அடைந்து இருந்ததால், குடும்பத்துடன் தனது உறவுமுறை எவ்வாறு இருக்கவேண்டும் என்று தெரிந்துக்கொள்ள விரும்பினார். நாம் கடந்தகாலத்தில் இயக்கிய நமது *கர்மவினையின்* விளைவாக அனுபவம் இருக்கிறது என்பதை நாம் அறிவதால், நாம் உள்ளத்தில் மன்னித்து விடுகிறோம். மன்னிப்புக் கோருதல் மற்றும் குற்றம் மறுபடியும் நடக்காமல் இருப்பதற்கு உறுதி அளிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் *குக்கர்மா* முரண்பாட்டையும் நீக்க வேண்டும் என்பதை நாம் அறிந்து இருப்பதால், நாம் நமக்கும் குற்றம் செய்தவர்களுக்கும் மத்தியில் அனுகூலமான மற்றும் உறுதியான இடைவெளியை பராமரிக்கிறோம். ¶பிரியமான பற்றின்றி இருப்பது ஒரு ஆற்றல் ஆகும். அது ஒரு விவேகம் ஆகும். ஆனால் பற்றின்றி இருப்பது என்பது வாழ்க்கையை துறப்பது அல்லது உங்களது அல்லது உங்களுக்கு பிரியமானவர்கள் மீது இழைக்கப்படும் தீங்கை உணர்ச்சி இல்லாமல் அல்லது மந்தமாக ஏற்றுக்கொள்வதை குறிப்பிடவில்லை. மன்னிக்கும் மனப்பான்மை மூலம் மறக்கும் திறமையை பெறும் போது, நாம் அதிக அன்பாக, அதிக ஆரோக்கியமாக, அதிக மனிதத்தன்மையுடன் நமது குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு அதிக நெருக்கமாக இருக்கிறோம். ¶இதற்கு நேர்மாறாக நாம்

கடந்தகாலத்தில் நடந்ததை நினைத்து ஆத்திரத்துடன் இருப்பதன் காரணமாக மனதில் பற்றுடன் இருந்தால், விளைவும் நேர்மாறாக இருக்கும். எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என்று கனவு காணும் இளைஞனை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அவன் சிறிது காலம் கழிந்து, சில கசப்பான அனுபவங்கள் உட்பட பல அனுபவங்களை எதிர்கொள்கிறான். இந்த அனுபவங்களுக்கு தீர்வு காண முயற்சி மேற்கொள்ளவில்லை என்றால், அவனது அடிமனதில் எதிர்மறை *பிராண* சக்திகள் படிப்படியாக சேகரிக்கப்பட்டு *வாசனாக்கள்* உருவாக்கப்பட்டு, அவனுக்கு எதிர்கால கண்ணோட்டம் மங்கி விடுகிறது. பல வருடங்கள் கழிந்து, அவனுக்கு வயது அதிகமாகும் போது, கடந்தகாலம் பெரிதாகிக் கொண்டு செல்கிறது மற்றும் எதிர்காலம் சிறிதாகிக் கொண்டு செல்கிறது. இறுதியில் ஆத்திரம் மிகவும் அதிமாகி விடுவதால், ஒரு காலத்தில் மகிழ்ச்சிகரமாக இருந்த இளைஞன், மனச்சோர்வு மற்றும் வெறுப்பு நிறைந்த வாலிபனாக மாறிவிடுகிறான். இறுதியில் அவனுக்கு புற்றுநோய் ஏற்பட்டு தனிமையில் கொடிய மரணத்தை அடைகிறான். ¶உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை பெறுவதற்கு, உங்களுக்குள் தோன்றும் இக்கட்டான சூழ்நிலைகளை புறக்கணிக்க வேண்டாம். அவர்களுடன் சேர்ந்து அமர்ந்து பிரச்சனைகளுக்கு தீர்வு காணுங்கள். நேராக தலை நிமிர்ந்து நின்று அந்த பிரச்சனைகளை வெளிப்படுத்துங்கள். அவர்கள் பேசிய வார்த்தைகள் மற்றும் செய்த செயல்களைப் பற்றி உங்களது கருத்துகளை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். குறிப்பாக ஆசியாவில் பல விஷயங்கள் பேசப்படாமல் மூடி மறைக்கப்படுவதால் அது உட்புறமாக எரிந்து வலுவாக படிந்து விடுகிறது. ஆனால் இன்றைய உலகில் ஒரு மகிழ்ச்சிகரமான எதிர்காலத்தில் நுழைவதற்கு நாம் குழப்பத்தை சரி செய்ய வேண்டும். உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருக்கும் *அகிம்சை* என்பது சனாதன தர்மத்தின் அடிப்படை கொள்கை ஆகும். நாம் இதை எப்போதும் நினைவில் வைத்து இருக்கவேண்டும்.

புதன்கிழமை

பாடம் 283

மன்னிக்கும் பண்பு

ஆரோக்கிய வாழ்வை வழங்குகிறது

உலகில் அதிக வயதானவரான மூதாட்டிக்கு 118 வயது. இவர் கனடாவில் வாழ்ந்து வருகிறார். இவர் சைவ உணவை உண்ணும் பழக்கம் உடையவர் என்று நாம் தெரிந்துகொண்டோம். அவர் செய்திகளிலும் கின்னஸ் புக் ஆஃப் ரெகார்ட்சிலும் இடம்பெற்று இருக்கிறார். அந்த பெண்மணி மற்றும் அவரைப்

போன்று 100 வயதை கடந்த மற்றவர்களைப் பற்றி மேற்கொண்ட ஆய்வின் போது, "அவர்களின் நீண்ட ஆயுளின் காரணம் என்ன? அவர்கள் தொடர்ந்து வாழ்ந்துகொண்டு இருப்பது எப்படி? அவர்களுக்கு கிடைத்த தீர்க்க ஆயுளின் இரகசியம் என்ன?" போன்ற கேள்விகள் எழுந்தன. இந்த முதியவர்கள் நம்பிக்கையுடன் இருப்பதே அதற்கு முக்கிய காரணம் ஆகும். அவர்களுக்கு காட்சி அளிக்கும் எதிர்காலம், அவர்களை வாழ வைக்கிறது. அவர்கள் நிம்மதியாக நகைச்சுவை உணர்வுடன் திருப்தியாக இருந்துக்கொண்டு தங்களுக்கு மற்றவர்கள் செய்த தீய செயலை மன்னிக்கும் கொள்கையை கொண்டுள்ளனர். வாழ்க்கை வழங்கும் நிகழ்வுகளுடன் இயல்பாக இயங்கிக்கொண்டு இருக்கும் அவர்கள் அதிகமான ஆத்திரம் அல்லது நெரிசலான *பிராண* சக்திகளை தக்க வைத்துக் கொள்வதில்லை. வெறுப்பும் ஆத்திரமும் வாழ்முறையாக மாறியதும், நாம் வாழ்க்கை பற்றி கவலை கொள்ளவும் வியக்கவும் தொடங்கி விடுகிறோம். மற்றவர்களை மன்னிப்பது உங்களுக்கு உடல் ஆரோக்கியத்தை வழங்குகிறது. ¶கடந்தகாலத்தில் ஆத்திரத்தை ஏற்படுத்திய அனுபவங்களை மறப்பதால் தோன்றும் மன்னிக்கும் அனுபவம் மற்றும் மிகுதியான தெய்வீக சக்தியை பெறுவதற்கு செய்யவேண்டிய ஒரு பரிகாரம் அல்லது ஒரு *பிராயச்சித்தத்தை* விவேகமானவர் வழங்கி உள்ளனர். உங்கள் உள்ளத்தில் தக்க வைத்திருக்கும் ஆத்திரங்கள், கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள் மற்றும் குழப்பங்களை விரிவாக எழுதிக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு பக்கத்தை எழுதி முடித்ததும், அதை கசக்கி நெருப்பில் எரித்து விடுங்கள். நெருப்பில் அந்த காகிதம் எரிவதை உள்ளம் பார்க்கும் போது, அது தனது சுமை நீங்கி விட்டதாக கருதுகிறது. இதன் மூலம் உண்மையில் உள்ளத்தில் புதைந்து இருக்கும் அனுபவத்தோடு தொடர்புடைய மனவெழுச்சி மறைந்து விடுகிறது. ¶முதலில் சூட்சும உடல் மற்றும் அதன் பிறகு தூல உடலை பாதிக்கும் ஆத்திரம், அதிக தீங்கை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும் போது, மன்னிப்பதும் எளிதாக இருப்பதில்லை. நாம் மற்றவர்கள் மீது ஆத்திரத்துடன் இருக்கும் போது, நாம் அவர்களை நமது மனதை விட்டு அகற்ற முடியாமல் உறுதியாக பற்றி இருப்பதால், ஆத்திரம் என்பது சூட்சும உடல் மற்றும் மனவெழுச்சிகளுக்கு பலவீனமாக்கிவிடுகிறது. ஆத்திரம் என்பது உலகெங்கும் சமமாக பரவி உள்ளது. தொழிலாளர்கள் தங்கள் அதிகாரிகள் மீது ஆத்திரத்துடன் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் தங்கள் தொழில் உரிமையாளர்கள் மீது ஆத்திரத்துடன் இருக்கிறார்கள். அந்த தொழில் உரிமையாளர்கள் அரசாங்கத்தின் மீது ஆத்திரத்துடன் இருக்கிறார்கள். இன்றைய நவீன சமூகத்தில் ஆத்திரம் எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் அறியாமையாக விளங்கி, அறியாமையுடன் அறியாமை இணையும் போது அறியாமை வலுபடுத்தப்படுகிறது. அடிமனதில் இருக்கும் ஆத்திரம் மேலும் ஆத்திரம் சேர்வதற்கு துணை புரிகிறது. ¶நாம் நம்மை முதலில் மன்னித்துக் கொண்டு,

நமது ஆன்மீக பாரம்பரியத்தை வலியுறுத்துவதன் மூலம், நாம் ஒரு சுயம் ஜோதியாக பிரகாசிக்கும் ஆன்மாவாக ஒரு புதிய அடையாளத்தை பெற்று நாம் நம்மை சீர் செய்துக்கொள்ள தொடங்கவேண்டும். அப்போது நம்மால் இந்த உலகை இந்து தர்மத்தின் கண்ணோட்டத்துடன் பார்க்க முடிகிறது. "எவன் ஒருவன் ஒளியில் வாசம் செய்து, ஒளிக்கு அந்நியமாக இருந்து, ஒளிக்கு பரிச்சயம் இல்லாமல் இருந்து, பிரகாசமான ஒளியை உடலாக கொண்டு இருந்து, அகத்தில் இருந்து ஒளியை கட்டுப்படுத்துகிறானோ அவனே உங்கள் அகத்தில் இருக்கும் ஆன்மா" (*பிரகதாரண்யக உபநிடதம்* 3.7.14, வேஎ 708). ¶அக்னி மூலம் அடியுணர்வை சுத்தம் செய்யும் *வாசன தாக தந்திரத்தை* நிறைவு செய்ததும், உங்கள் மனநிலை மாறிவிடும். இந்த ஆன்மீக அனுபவத்திற்கு பிறகு, இந்து தர்மம் உங்கள் வாழ்க்கையில் பிரதானமாக இருக்கும். உங்களுடைய தொழில், சமூகம் மற்றும் குடும்ப வாழ்க்கை என்று அனைத்தும் நீங்கள் புதிதாக கண்டுகொண்ட நற்பண்புகளை சுற்றி அமைந்து இருக்கும். நமது பூமியில் இருக்கும் பல செல்வந்தர்கள் தங்கள் மதத்திற்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கி, குடும்பத்தை இரண்டாவது நிலையிலும், மற்ற நடவடிக்கைகளை மூன்றாவது நிலையிலும் வைத்துள்ளனர். அவர்களின் நடவடிக்கைகள் அனைத்தும் நேரத்துடன் பொருந்தி இருந்தன. அவர்கள் காந்தத்தன்மையுடன் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர் அருகில் இருந்தவர்கள் ஆனந்தத்தை உணர்ந்தார்கள்.

வியாழக்கிழமை

பாடம் 284

நன்றாக இயக்கப்பட்ட

மன உறுதி

எல்லோரிடமும் மன உறுதி இருக்கிறது. அது தூல-சூட்சும-மனம்-மனவெழுச்சி உடல் அமைவதற்கு அடிப்படையாக விளங்குகிறது. மன உறுதியின் மையம் சூரிய பின்னலில் இருக்கும் *மணிப்பூரக சக்கரத்தில்* அமைந்து இருக்கிறது. மற்ற சக்திகளை போல அல்லாமல், மன உறுதியை நாம் அதிகமாக பயன்படுத்தும் போது, நாம் மேலும் அதிகமான மன உறுதியை பயன்படுத்த வேண்டியிருக்கும். நாம் நமது மன உறுதியை பயன்படுத்தும் போது, நாம் *மணிப்பூரக சக்கரத்தில்* புதிய சக்தியை சேமிக்கிறோம். இது நம்மால் முடியும் என்று நினைப்பதை காட்டிலும் சிறிது அதிகமாக வேலை செய்யும் போது, நம்மால் முடியும் என்று நினைப்பதை காட்டிலும் சிறிது அதிகமாக சிந்திக்கும் போது நடைபெறுகிறது. நாம் கூடுதல் முயற்சி மேற்கொள்ளும் போது, நாம் உருவாக்கும் ஒரு சிறப்பான மனஉறுதி நமது அடுத்தடுத்த பிறவிகளிலும்

நம்முடன் இருந்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் மனஉறுதியை சுதந்திரமாக பயன்படுத்தலாம். ¶நாம் மனஉறுதியுடன் செயல்களை தொடர்புப்படுத்தி, *தர்மமான* அல்லது *அதர்மமான* செயல்களை ஒப்பிடும் போது, *அதர்ம* வழியில் செய்த செயல்கள் கட்டுப்படுத்த முடியாத விளைவுகளை உருவாக்குகின்றன என்பதையும், *தர்ம* வழியில் செய்த செயல்கள் கட்டுப்படுத்தக்கூடிய விளைவுகளை உருவாக்குகின்றன என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம். நாம் மற்றவர்களிடம் தவறாக நடந்துக் கொண்டால், அவர்கள் நம்மிடம் தவறாக நடந்து கொள்வார்கள். அதன் பிறகு நாம் கீழ்நிலை குணத்துடன் இருந்தால், நாம் அதை நினைத்து ஆத்திரம் அடைந்து பழிவாங்குகிறோம். "நீ என்னை ஒரு முறை அடித்தால், நான் உன்னை இரண்டு முறை அடிப்பேன். நீ எனக்கு விருப்பம் இல்லாத ஒரு கருத்தை கூறினால், நீ இல்லாத போது உன்னைப் பற்றி குறை கூறுவேன். நான் உன்னைப் பற்றி கட்டுக்கதைகளை உருவாக்கி, மக்கள் மனதில் உன்னைப் பற்றி வெறுப்பை ஏற்படுத்தி விடுவேன்," என்று கூறுவது உள்ளுணர்வு மனதின் பண்பு ஆகும். இந்த பழிவாங்கும் மனப்பான்மை ஒரு கொடுமையான எதிர்மறை சக்தி ஆகும். நாம் மற்றவர்களை பழிவாங்க மன உறுதியை பயன்படுத்தும் போது, நாம் கூடுதல் முயற்சி மேற்கொள்ள வேண்டி இருப்பதால், நாம் மன உறுதியின் சேமிப்பை உருவாக்குகிறோம் என்றே சொல்ல வேண்டும். அத்துடன் நாம் எதிர்மறை *கர்மவினையின்* சேமிப்பையும் உருவாக்குவதால், நாம் சிறிதும் எதிர்பாராத சமயத்தில் அது நம்மை நோக்கி முழு வீரியத்துடன் திரும்புகிறது. அது அவ்வாறு திரும்பும் போது, நாம் அறியாமையில் கட்டுண்டு இருந்தால், நாம் அதன் மீது ஆத்திரம் அடைந்து, நமது *கர்மவினையை* நம்மீது பிரயோகம் செய்பவரை பழி வாங்குகிறோம் மற்றும் இந்த சுழற்சி மீண்டும் மீண்டும் தொடர்கிறது. ¶இதைப்பற்றி உயர்ந்த பண்புகளுடன் வாழ்பவர்களுக்கு நன்றாக தெரியும். ஒரு இந்துவிற்கு *கர்மவினை* மற்றும் மறுபிறவி மீது இருக்கும் நம்பிக்கை வலுவான சக்திகளாக விளங்குகின்றன. இதைப்பற்றிய திருக்குறளை பார்ப்போம்:

"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. (திருக்குறள் 155)
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (திருக்குறள் 151)"

¶ஆனால் பழிவாங்கும் குணத்தால் சமூகத்தில் பிளவு ஏற்படுவதை நாம் காண்கிறோம். மக்களின் மதிப்பை பெற்ற நிறுவனங்கள் தங்கள் தலைவருக்கு எதிராகவும், மற்ற நிறுவனங்களையும் பழிவாங்குகின்றன. நாடுகள் தங்களுக்குள் பிரிவுகளை ஏற்படுத்தி பழிவாங்குகின்றன. அரசியல் கட்சிகள் பழிவாங்குகின்றன. பழிவெறி பற்றிய வழக்குகள் பழிவாங்குவதை திறமையாக கையாளுகின்றன. பழிவாங்குவது என்பது ஒரு தீய செயலுக்கு ஈடாக இன்னொரு தீய செயல் செய்து, புண்படுத்தியவரை புண்படுத்தி பழிவாங்குவதை குறிக்கிறது. அது மனித நேயத்தின் எதிர்மறை அங்கமாக

விளங்குகிறது. அது வெற்றி பெறவேண்டிய அவசியம் இல்லை. அது ஆன்மீகம் சார்ந்தது இல்லை. அது *அசுர* குணம் ஆகும். அது தேவையற்ற நடத்தை, ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை, மன உறுதியின் தவறான பயன்பாடு என்றே சொல்ல விரும்புகிறோம். அதிகமான மன உறுதி இருப்பவர்களுக்கு விருப்பம் இருந்தால், மிகவும் சிறப்பாக பழி வாங்கி, இன்னொரு நபரை அழித்து விடுடலாம். ஆனால் அவர்களின் மன உறுதி அந்த அழிவை தீவிரத்துடன் மீண்டும் ஈர்ப்பதால், அவர்கள் வழங்கிய வேகத்தை காட்டிலும் மூன்று மடங்கு வலுவாக அந்த சக்தி திரும்புகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 285

ஒரு சிறந்த வழியை

முடிவு செய்தல்

விவேகமான மனிதர் *தர்மத்திற்கு* ஏற்ப தனது செயலை தேர்வு செய்கிறார். அந்த *தர்மம்* அவனது நடத்தை விதியை மிகவும் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறது. ஒரு கருத்து வேறுபாடு தோன்றிய பிறகு அதற்கு இரகசியமாக பழிவாங்க நினைப்பவர்கள் தங்களுக்கு என்று கழிவிரக்கம், சுய நிந்தனை மற்றும் மன அழுத்தத்தின் குழியை தோண்டுவதன் மூலம், தங்களுக்கென்று ஒரு துக்ககரமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் நீண்டகாலம் கழிந்து தானே அந்த குழியில் சிக்கிக் கொள்வார்கள். ¶"பழிவாங்குதல் கூடாது என்றால் ஒருவர் தன்னை, தனது குடும்பத்தை, தனது சமூகத்தை பாதுகாத்துக் கொள்ளக்கூடாது என்று அர்த்தமா?" என்று சிலர் கேட்கலாம். நாம் பழிவாங்குவதைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம், தற்காப்பு பற்றி பேசவில்லை. அத்துமீறி நமது வீடு அல்லது சமூகத்தில் ஊடுருவுபவரை தொடக்கத்திலேயே எதிர்ப்பதும், அவர் நமது வீட்டை சூறையாடிய பிறகு அவரை பழிவாங்குவதும் ஒன்று இல்லை. நாம் ஒருவருக்கு தீங்கு விளைவித்தால், அந்த தீங்கு நம்மை எதிர்காலத்தில் ஏதாவது ஒரு ரூபத்தில் வந்து தாக்கும். பொதுவாக நமக்கு தீங்கு விளைவிக்கும் நபருக்கும், நாம் தீங்கு விளைவித்த நபருக்கும் தொடர்பு இருப்பதில்லை. நம்மை அவமதிப்பவர்கள் அல்லது நமக்கு எதிராக குற்றம் செய்பவர்கள், *கர்மவினை* விதியின் வாயிலாக தவறாமல் தண்டனை பெறுவார்கள் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். குற்றங்கள் தீவிரமாக இருந்தால், நாம் அந்த நாட்டின் சட்டங்களின் துணையுடன் முரண்பாட்டை நீக்கலாம். குற்றவியல் வழக்குகள் என்றால் நீதிமன்றங்கள் மூலம் நீதி பெறலாம். ஆனால் சட்டத்தை கைகளில்

எடுத்து குற்றங்களை செய்தால், ஒரு குற்றவாளியைப் போன்று எதிர்மறை *கர்மவினைகளை* அனுபவிப்போம் என்பதால், அவ்வாறு தவறு செய்து தண்டனைக்கு ஆளாகாமல் இருப்பது விவேகம் ஆகும். கும்பலாக வன்முறை செய்வது, பயங்கரவாதம் மற்றும் கொரில்லா யுத்தம் ஆகியவற்றில் பழிவாங்கும் நடவடிக்கைகள் பெருமளவில் நடைபெறுகின்றன. ¶அதனால் இரக்கம், நேர்மையான எதிர்ச்செயல், மன்னிப்பு, செய்த தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பண்பின் துணையுடன் நாம் சமூகத்தின் முன்பாக மதிப்பை இழக்காமல் தன்னம்பிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதற்காக நல்லவன் போல காட்சி அளித்து, மற்றவர்களை இழிவாக பேசுவதற்கு பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் வலுவான சக்தியை உருவாக்கிக் கொள்வது விவேகம் ஆகும். நீங்கள் பொய் சொல்லி மக்களிடம் மதிப்பை பெறவேண்டிய அவசியம் இல்லை. அந்த மதிப்பை பாதுகாக்க வேண்டிய அவசியமும் இல்லை. ¶பழிவாங்குவது சரியான வாழ்முறை இல்லை என்பதை அறிந்து கொண்டு, தங்களை சீர் செய்ய தவறாமல் முயற்சி செய்பவர்கள், அதிலும் குறிப்பாக தங்களது தூண்டுதல்கள் மற்றும் செயல்களை நினைத்து வருந்துபவர்கள், தங்களை திருத்திக்கொள்ளும் பாதையில் முன்னேறிக் கொண்டு இருக்கிறார்கள். லௌகீக ஈடுபாடுகளுக்கு காரணமாக இருக்கும் கீழ்நிலை குணங்களுடன் செய்த முறையற்ற செயல்கள், ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிறது என்பதை ஆன்மா தெய்வீக பார்வையுடன் தெரிந்துகொள்கிறது. ஒரு *குரு* அல்லது *சுவாமியிடம்* இருந்து பெறப்பட்ட பரிகாரத்தை அன்பர் சிறப்பாக செய்வதன் மூலம், அவர் ஆன்மாவை பேரானந்தம் நிரம்பிய சகஜ நிலைக்கு அழைத்து செல்கிறார். சிரத்தையுடன் பரிகாரம் செய்பவர்களுக்கு *தேவர்கள்* எல்லா உதவிகளையும் வழங்குகின்றனர். ஒவ்வொரு பரம்பரையை சேர்ந்த *குருமார்களும்* தங்கள் சீடர்களிடம் இருந்து அவர்கள் செய்த குற்றங்கள் பற்றிய வாய்மொழி ஒப்புதலை பெற்ற பிறகு, அந்த சீடர்களுக்கு பொருத்தமான பரிகாரத்தை வழங்குகின்றனர். உட்புற ஒளி உடல் பச்சிளம் குழந்தை போல பிரகாசமாக இருந்து, முகத்தில் புன்னகை மற்றும் பிராயச்சித்த பலன்கள் பற்றிய சான்றுகள் உண்மையான பரிகாரத்தை வெளிப்படுத்தும் போது, அவர்கள் பிராயச்சித்தம் நிறைவு பெற்றது என்பதை அறிந்து, பாவ விமோசனத்தை உணர்கிறார்கள்.

சனிக்கிழமை

பாடம் 286

முன் உதாரணமாக இருக்கும்

தலாய் லாமா

பழிவாங்காமல் இருப்பதைப் பற்றி குறிப்பிடும் போது, நாடு கடத்தப்பட்ட திபெத்திய பௌத்த மதத்தின் தலைவராகவும், அமைதியை விரும்புபவராகவும் இருக்கும் தலாய் லாமா, எதிரிகளை திருப்பி தாக்காமல் இருப்பதற்கு சிறந்த முன் உதாரணமாக விளங்குகிறார். அவர் 1959 ஆம் ஆண்டு முதல் தனது மக்களின் நலனுக்காக அரசியல் உதவியை நாடி தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார். அவர் தனது பதினைந்தாம் வயதில் இமயமலையை கடந்து வந்து இந்தியாவிடம் உதவியை நாடினார். இன்றும் அவர் மதிப்பு மற்றும் மரியாதையுடன் சீன நாட்டை அணுகினாலும், 1957 ஆம் ஆண்டு தங்கள் நாட்டை சீன ஆயுத படைகள் கைப்பற்றியதையும், 1972 ஆம் ஆண்டு 1.2 மில்லியன் திபெத்திய மக்கள் படுகொலை செய்யப்பட்டதையும் மறக்கவில்லை. "இத்தகைய அன்பை நீங்கள் உங்களுக்கு தீங்கு செய்தவர் மீதும் செலுத்தலாம்," என்று உபதேசம் வழங்கும் இந்த எளிமையான மனிதர் தொடர்ந்து இரக்க உணர்விற்கு முன் உதாரணமாக விளங்குகிறார். "என் எதிரி எனக்கு சிறந்த நண்பனாகவும் சிறந்த ஆசானாகவும் இருக்கிறார், ஏனென்றால் அந்த எதிரி துன்பத்தில் இருந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பை எனக்கு வழங்குகிறார்," என்று அவர் கூறினார். ¶நியாயமாக பழிவாங்கும் உரிமை தலாய் லாமாவிற்கு இருந்தது என்றாலும் அவர் ஒரு உயரிய பாதையை தேர்வு செய்தார். நாம் ஆக்ஸ்போர்டு, மாஸ்கோ, ரியோ டி ஜெனிரோ மற்றும் சிகாகோவில் நடந்த சர்வதேச கருத்தரங்குகளில், அவர் திபெத்திய தன்னாட்சி உரிமையை வலியுறுத்தி பேசியதை பல வருடங்கள் கேட்டு இருக்கிறோம். அந்த நிகழ்ச்சிகளின் போது அவர் அன்பு, நம்பிக்கை மற்றும் இரக்கம் உணர்வில் இருந்து விலகாமல், ஒரு நேர்மையான விளைவு மற்றும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வுடன் இறுதியில் தெய்வீக விதி வெளிப்படும் என்று உறுதியான நம்பிக்கை வைத்து இருந்தார். தனது நாட்டு மக்கள் தற்போது எதிர்கொள்ளும் அடக்குமுறைக்கு அவர்கள் முன்பு இயக்கிய ஒரு *கர்மவினை* தான் காரணம் என்பதை அவர் அங்கீகரிக்கவும் செய்தார். அவர் ஆன்மீக மக்கள் ஒன்றாக இணைந்து, ஒரு உலகளாவிய *தர்மத்திற்கு* புதிய கொள்கைகளை உருவாக்கும் பொருட்டு ஒரு உன்னதமான அமைப்புமுறையை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்.¶“பூமியில் பிறவி எடுத்தவர்களுக்கு ஆசைகள் மட்டுமே காரணமாக இருப்பதாக சில கருத்துக்கள் உள்ளன. அவனது ஆசைக்கு ஏற்ப அவனது சங்கல்பம் அமைகிறது. அவனது சங்கல்பத்திற்கு ஏற்ப கர்மம் செய்கிறான். அவன் செய்யும் கர்மத்திற்கு ஏற்ப பலன்களை அனுபவிக்கிறான்," *(சுக்ல யஜுர் வேதம், பிரகதாரண்யக உபநிடதம்* 4.4.5. UPR, P. 272) என்ற வேத மந்திரத்தை எல்லோரும் கருத்தில் கொண்டு தனிப்பட்ட முறையில் தங்களை சீர் செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நம்பிக்கையும் சில மனநிலைகளை உருவாக்குகிறது. நமது மனநிலைகள் நமது செயல்களை நிர்வகிக்கின்றன. *கர்மவினை*, மறுபிறவி மற்றும் பிரபஞ்சம் எங்கும் வியாபித்து இருக்கும் தெய்வீக தன்மை மீது இருக்கும் நம்பிக்கை, அனைத்து உயிரினங்கள்

மீதும் மதிப்பு, பரோபகாரம் மற்றும் இரக்கத்தை உருவாக்குகிறது. அறியாமையில் இருந்து விடுபடும் பொருட்டு, ஒரு சிறந்த புரிதலுக்குள் தனது விருப்பு வெறுப்புகளை சமன் செய்வதற்கு, தான் மிகவும் வெறுத்த சமூகத்தில் தூல பிறவியை எடுத்து காலச்சக்கரத்தில் பயணம் செய்யும் பயணியே நான் என்பதை, இந்து அல்லது பௌத்த சமயத்தை சேர்ந்தவர் தனது ஆன்மாவில் முழுமையாக உணர்ந்து இருக்கிறார். இந்த நம்பிக்கைகளைப் பற்றி விவரமறிந்த இந்து நன்றாக அறிந்து இருக்கிறார். ¶தலாய் லாமா மனதில் அச்சம் இல்லாமல் *அகிம்சைக்கு* முன் உதாரணமாக விளங்குகிறார். அது கோழைத்தனம் இல்லை. அது ஞானம் ஆகும். மேலும் அந்த ஞானம் என்பது மறுபிறவி, *கர்மவினை, தர்மம்* பற்றிய தற்போதைய தெய்வீக விதிகள் மற்றும் இந்துவின் ஆன்மாவில் பிணைந்து எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் பண்பு மற்றும் பொருட்களின் புனிதத்தன்மை பற்றி படிப்படியாக சேகரிக்கப்பட்ட அறிவு ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 287

அன்பே இறைவன்

என்பதை உணர்தல்

அன்பே சிவம் மற்றும் சிவமே அன்பு. "நான் இறைவனை கண்கூடாக காணாமல் வழிபடுவது எப்படி?" என்று மக்கள் கேள்வி கேட்கிறார்கள். ஒரு தந்தை தனது மகனை சிறு வயதில் அதிக கட்டுப்பாடுகளுடன் வளர்த்ததால், அவனுக்கு தன் தந்தை மீது தீவிர வெறுப்பு உருவாகி இருந்தது. அந்த இளைஞன் தன் தந்தையை நினைப்பதற்கு ஆத்திரம் மற்றும் குழப்பம் தூண்டுதலாக இருந்தன. தனது தந்தை அருகில் இருக்கும் போது மகன் அவருடன் பேசுவதை தவிர்த்தான் மற்றும் பேசும் போது பெரும்பாலும் கடுமையான சொற்கள் பேசப்பட்டன. ஆனால் தந்தை அவனை கல்லூரிக்கு அனுப்பி வைத்து, வேண்டிய செலவுகளை செய்தார். அந்த இளைஞனுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் இருந்த போது, தந்தை அவ்வப்போது அங்கே சென்று மருத்துவ செலவுகளை செய்து அவன் மீது அக்கறை செலுத்தினார். ஆனால் பல வருடங்கள் முன்பு நடந்ததை நினைத்து இளைஞன் தன் தந்தை மீது ஆத்திரத்துடன் இருந்தான். தந்தை தன் மீது உண்மையில் அன்பு செலுத்தினார் என்பதை அவனால் உணர முடியவில்லை. கடந்த காலத்தில் நடந்த கசப்பான அனுபவம் அவனது அகக்கண், உணர்ச்சி மற்றும் மனவெழுச்சியை மூடி இருந்தது. நம் மனதில் ஏற்படுத்திக் கொள்ளும் தடுப்புக்கள், மக்களின் உண்மையான பண்புகளை தெரிந்துகொள்வதற்கு தடையாக விளங்குகின்றன

என்பதை இந்த கதை விளக்குகிறது. நம்மை சுற்றி இருக்கும் மக்களை நம்மால் சரியாக கணிக்க முடியவில்லை என்றால், நம்மால் இறைவனை எப்படி உணர முடியும்? நம்மிடம் இருக்கும் தலைசிறந்த புறக்கணிக்கும் பண்பினால், நாம் நமது அறியாமை இருளில் குருடனாக இருக்கிறோம். ¶தங்களுக்கு இறைவன் தரிசனம் தராத காரணத்தால் அந்த இறைவனின் இருப்பை சந்தேகிப்பவர்கள், உண்மையில் இறைவன் தரிசனம் பெற்றவர்கள் சொல்வதை நம்ப வேண்டும். அவர்களால் இதையும் செய்ய முடியாத போது, அவர்கள் தங்கள் தவறான கருத்துக்கள் மற்றும் குழப்பங்களில் மூழ்கி, தங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்களின் அன்பை காண்பதற்கு அல்லது அவர்களின் அன்பை ஏற்றுக்கொள்வதற்கும் முடிவதில்லை. பல வருடங்களாக உருவான ஆத்திரங்கள் மூலம் மறைக்கப்பட்டு வரையறுக்கப்பட்டு இருக்கும் பார்வையின் மூலம் பார்ப்பது அனைத்தையையும், அவர்கள் தவறாக புரிந்து கொள்கிறார்கள். ¶நாம் மக்களை இரண்டு கண்களுடன் ஆழமாக உற்று நோக்குகிறோம். இதயத்தில் ஆத்திரம் இல்லாமல் சுத்தமாக இருக்கும் போது, நாம் நமது மூன்றாவது கண்ணுடன் பார்க்கிறோம். இறைவனை காண முடியாதவன் முதலில் தங்கள் பெற்றோரை தெய்வமாக மதித்து வழிபட தொடங்கவேண்டும். அவன் அவ்வாறு செய்வதன் மூலம், தனது பெற்றோர்களை தனது கண்களாலும் மனதாலும் காண முடிகிறது. இந்த *சாதனா* அந்த நபரின் இதயத்தை சுத்தம் செய்து அவனது சிந்தனைகள், வாக்கு மற்றும் செயல்களை தர்மத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறது. அதன் பிறகு ஒரு நாள் நம் எல்லோருக்கும் பிரபஞ்சத்திற்கும் சிவபெருமான் உயிரின் உயிராக விளங்குகிறார் என்பது அவனுக்கு தெரிய வரும். ¶மக்களுக்கு மத்தியில், மக்கள் மற்றும் மற்ற வஸ்த்துக்களுக்கு மத்தியில், மக்கள் மற்றும் இறைவன் மற்றும் மகாதேவர்களுக்கு மத்தியில் சுதந்திரமாக நடைபெறும் ஆன்மீக சக்தியின் பரிமாற்றத்தை *அன்பு* என்கிற சொல் விவரிக்கிறது. "அன்பே சிவம், சிவம் அன்பு" என்று சாத்திரங்கள் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றன. அதனால் சுதந்திரமாக பாய்ந்து செல்லும் அன்பு என்கிற *பக்தியே*, நமது சிவத்தன்மையின் வெளிப்பாடு ஆகும். இந்த அன்பின் வெளிப்பாடு அதிக மங்களகரமாகவும், அடிப்படையில் நிறைவுபெற்று இருக்கும் சிவனோடு வாழ்வதன் தொடக்கமாகவும் விளங்குகிறது.

க்ருதக்ஞதாம் பாலய சமபாவோ பவ

कृतज्ञतां पालय समभावो भव



நன்றியுணர்வை வளர்த்து பரிவுடன் இருங்கள்

பூக்கள் நிறைந்த ஒரு மரத்தில் இருந்து தோன்றும் பூவாசம் தொலை தூரத்திற்கு பரவுவதைப் போல, நற்செயல்களின் நறுமணம் கடல்கடந்து செல்கிறது. ஒரு ஆழமான குழிக்கு குறுக்காக இருக்கும் ஒரு கூரிய வாள்முனை மீது நடக்க இருக்கும் ஒரு வித்தைகாரன், அந்த கத்தி மீது காலை அழுத்தி வைக்கவும் முடியாமல், லேசாகவும் வைக்க முடியாமல் தவித்துக் கொண்டு இருப்பான். இதைப் போன்ற சலனம் இல்லாமல் உண்மைப் பொருளை நாடுபவன், இழிவான செயல்களில் இருந்து விலகி இருக்கவேண்டும்.

கிருஷ்ண யஜுர் வேதம், மகாநாராயண உபநிடதம். உபபே, ப. 253



இறைவன் நமக்கு வழங்கிய பரிசுகளுக்காக நன்றியுணர்வுடன் இருப்பது ஆன்மீகத்தின் அறிகுறி ஆகும். ஆலமரத்தில் எத்தனை இலைகள் இருக்கிறதோ அத்தனை பிறவிகள் நீங்கள் எடுக்க வேண்டும் என்று ஒரு முனிவர் இரண்டு சீடர்களிடம் கூறுகிறார். அதில் ஒருவன் அதிர்ச்சி அடைந்து அங்கிருந்து உடனே கிளம்பி விடுகிறான், மற்றும் இன்னொருவன் தனக்கு முக்தி உறுதி என்பதை அறிந்து ஆனந்த நடனம் ஆடுகிறான். அந்த தருணத்தில் அவன் சம்சாரத்தில் இருந்து விடுதலை பெறுகிறான்.

திங்கட்கிழமை

பாடம் 288

பாதி நிறைந்து இருக்கிறதா அல்லது

பாதி காலியாக இருக்கிறதா?

இன்று நமது வாழ்க்கையின் பெரும்பகுதி மக்கள் தலைவர்கள், குழுக்கள், அரசுகள், மதங்கள், நிறுவனங்களோடு குடும்பத்தினரையும் அவமதிப்பது மற்றும் இழிவுப்படுத்துவதில் கழிகிறது. தொடர்ந்து தெளிவாக குறைகளை சுட்டிக்காட்டி நற்பண்புகளை புறக்கணிப்பது எதிர்மறை வாழ்க்கை ஆகும். மக்கள் கொடூரமாக புகார் கூறுவதாக ஒரு ஹவாய் தீவின் நகரத் தலைவர் நம்மிடம் புலம்பினார். "விமர்சனம் செய்வதில் தவறில்லை, ஆனால் மக்கள் விமர்சிக்கும் போது பரிவோடு இருக்க வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். ¶இது தொடர்பாக நான் பல வருடங்கள் முன்பாக நான் கேட்ட ஒரு கதையை இங்கே உங்களுடன் பகிர்கிறேன். இந்தியாவில் ஒரு பெரிய ஆலமர நிழலில் ஒரு *குரு* தனது இரண்டு சீடர்களுடன் அமர்ந்து இருந்தார். அப்போது மூத்த மாணவன், "குருவே, நான் இறைவனை உணர்வதற்கு எதுவரை காத்து இருக்க வேண்டும்?" என்று விசாரித்தான். "நீ ஞானோதயம் பெறுவது எப்போது என்று கணிக்க முடியாது என்றாலும், நீ கேள்வி கேட்டதால்," என்று கூரிய ஆசிரியர் அவன் பக்கமாக சாய்ந்து, அவனது வலது காதில், "நீ இருபது பிறவிகள் காத்து இருக்கவேண்டும்," என்று பதில் அளித்தார். உடனே அந்த மாணவன்,"இருபது பிறவிகளா? நான் அத்தனை காலம் எப்படி காத்து இருக்க முடியும்?" என்று கூச்சலிட்டான். இதைக் கேட்ட இன்னொரு சீடனுக்கு ஆர்வம் ஏற்பட்டு, அவனும் தனது எதிர்காலத்தை பற்றி கேள்வி கேட்டான். குரு அந்த சீடனின் காதில், "இந்த ஆலமரத்தில் எத்தனை இலைகள் இருக்கிறதோ அத்தனை பிறவிகளுக்கு பிறகு உனக்கு முக்தி கிடைக்கும்," என்று முணுமுணுத்தார். இதைக் கேட்ட அந்த சீடன் மகிழ்ச்சியில் நடனமாட தொடங்கினான். ஏன் தெரியுமா? அவனுக்கு என்றாவது ஒரு நாள் முக்தி கிடைக்கும் என்று குரு உறுதி அளித்ததும், அவனுக்குள் திடீரென்று மகிழ்ச்சி பிறக்கிறது. அவன் முக்தியை பற்றி முழுமையாக புரிந்துகொண்டதன் காரணமாக பரவசம் அடைந்து, தனது மனதில் இருந்து விடுதலை பெற்று உடனே முக்தியும் பெறுகிறான். ¶முதல்

மாணவன் மதிப்பிறக்கம் செய்யும் பாதையில் ஈடுபட்டு இருந்தான். அவனை பொறுத்தவரை பானை பாதி காலியாக இருந்தது. இரண்டாவது மாணவன் மதிப்பேற்றம் செய்யும் பாதையில் ஈடுபட்டு நன்றியுணர்வுடன் இருந்தான். அவனை பொறுத்தவரையில் பானை பாதி நிறைந்து இருந்தது. “இறைவன் ரோசாப்பூவில் முட்களை வைத்ததாக புகார் கூறுவார்கள். வேறு சிலர் முட்களுக்கு மத்தியில் ரோசாப்பூவை வைத்துள்ளார் என்று அவருக்கு நன்றி தெரிவிப்பார்கள்.” ¶மதிப்பேற்றம் அல்லது உணர்ந்து பாராட்டும் தன்மை ஆன்மாவின் அழகான குணமாக எல்லோரிடமும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் இருக்கிறது. அது வாழ்க்கை வழங்கும் சிறிய பொக்கிஷங்களுக்கு நன்றியுடன் இருந்து, நீங்கள் ஒரு நாளை தொடங்குவதற்கு வழங்கப்பட்ட வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, உங்கள் *கர்மவினை* மற்றும் இறை அருள் மூலம் உங்களுக்கு கிடைத்துள்ள நிறைவான இடத்தை முழுமையாக புரிந்து கொள்வதை குறிக்கிறது. மதிப்பேற்றம் என்பது உயிரூட்டம் தருவதாக இருக்கிறது. மதிப்பேற்றம் இல்லாத மதிப்பிறக்கம் என்பது இரக்கமில்லாமல் அழிவு ஏற்படுத்துவது ஆகும். ஆனால் அது இன்று அதிக வழக்கத்தில் இருக்கிறது. ஒரு நல்ல பயனுள்ள செயலை அன்புடன் செய்யும் போது, அது பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு, எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக கருதப்படுகிறது. எந்த அங்கீகாரமும் வழங்கப்படுவதும் இல்லை, எந்த நன்றியுணர்வும் வெளிப்படுத்தப்படுவதும் இல்லை. ஒரு தவறு நடந்தால், அதை சுட்டிக்காட்டுவதற்கு எல்லோரும் தயாராக இருப்பார்கள்! ¶*வேதங்கள், திருக்குறள்* மற்றும் நமது மதத்தின் மற்ற புனித நூல்கள் ஒரு சிறந்த வழியை குறிப்பிடுகின்றன. எல்லா மக்களிடமும் தேர்வு செய்யும் சுதந்திரமும் அதை பயன்படுத்தும் மன உறுதியும் இருக்கிறது என்பதை விவேகமானவர்கள் அறிந்து இருந்தார்கள். இன்று அந்த சுதந்திரம் மற்றவர்களையும் தன்னையும் மதிப்பிறக்கம் செய்வதற்கு விவேகம் இல்லாமல் பயன்படுத்தப்படுகிறது. அறியாமை பெரும்பாலும் இறைவனை போல எங்கும் வியாபித்து இருக்கிறது. அது ஒவ்வொரு சூழ்நிலையிலும் எங்கும் இருப்பதை நம்மால் காண முடிகிறது. இது இவ்வாறு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ¶நன்றியுணர்வு ஆன்மாவின் பண்பு ஆகும். அது நமது உடைமைகளின் எண்ணிக்கையை பொறுத்து அமைவது இல்லை. அதற்கு முரணாக இருக்கும் நன்றியின்மை வெளிப்புற ஆணவத்தின் பண்பு ஆகும். நாம் ஆன்மாவின் உணர்வுடன் இருக்கும் போது, நம்மிடம் இருக்கும் உடைமையின் அளவு சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும், அதற்கு நன்றி செலுத்துகிறோம். நாம் ஆணவ உணர்வுடன் இருக்கும் போது, உடைமையின் அளவு எதுவாக இருந்தாலும், நாம் எப்போதும் நன்றியுணர்வுடன் அல்லது திருப்தியுடன் இருப்பதில்லை.

செவ்வாய்க்கிழமை

பாடம் 289

உணர்ந்து பாராட்டும்

சக்தி

எனக்கு மனித ஒற்றுமை மற்றும் கவனமாக கேட்பவருக்கு கேட்கும் மாசற்ற "ஆன்மாவின் அமைதியான மெல்லிய குரல்" மீது நம்பிக்கை இருக்கிறது. நாம் எல்லோரும் அடிப்படையில், ஒரு தூல உடலில் தற்காலிகமாக தங்கி இருக்கும் சுத்தமான ஆன்மாக்கள். இன்றைய உலகில் ஒரு சிறிய அல்லது பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, நமக்கு இறைவன் அன்போடு பரிசாக வழங்கிய தனிச்சையை பயன்படுத்தவும் முடியும், பயன்படுத்தவும் வேண்டும். ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து ஒரே மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறோம். சீடர்கள் தங்கள் குருமார்கள் மீதும், கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்கள் மீதும், மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்கள் மீதும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீதும், குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் மீதும், மாணவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மீதும் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்கள் மீதும் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும். நம்மிடம் இல்லாததை நினைத்து புகார் கூறுவதை தவிர்த்து, நம்மிடம் இருப்பதற்கு பாராட்டு தெரிவித்து மற்றவர்களை புகழ்வது அதிக பயன் தருவதாக இருக்கும்! ¶*நன்றியுணர்வு* மற்றும் *உணர்ந்து பாராட்டுவது* ஒரு சிறந்த வாழ்க்கைக்கு தேவையான முக்கிய பண்புகள் ஆகும். அவை வெறுப்பு, தீங்கு மற்றும் சோகத்தை கரைக்கும் தந்திரமாகவும், ஒருவரின் தனிப்பட்ட மனநிலைகளை சீர் செய்யும் மருந்தாகவும் விளங்கி சுய மரியாதை, நம்பிக்கை மற்றும் பாதுகாப்பை மீட்கிறது. நாம் அவற்றை தனித்தனியாக ஆய்வு செய்து, ஒரு *சாதனா* மேற்கொள்ள முயற்சி செய்யலாமா? ¶முதலில் நன்றியுணர்வை பார்ப்போம். அது நமது வாழ்க்கைகளில் இதுவரை நடந்த எண்ணற்ற நல்ல நினைவுகள் நம்மை ஆட்கொள்ளும் போது, நமது இதயத்தில் நம்மால் நீண்டநேரம் ஒடுக்க முடியாத உணர்ச்சியை குறிப்பிடுகிறது. கெட்ட நினைவுகள் அடிமனதில் அதிக ஆழமான பதிவுகளை ஏற்படுத்துவதாலும், அவை எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதாலும், அவற்றை பெரும்பாலும் மக்கள் நினைவில் வைத்து இருக்கிறார்கள். நல்ல நிகழ்வுகளுக்கு எதிர்பார்ப்பு இருப்பதால் அவை புறக்கணிக்கப்படுகின்றன. ¶கடந்த ஐந்து வருடங்களில் தோன்றிய நல்ல நிகழ்வுகளை ஒரு காகிதத்தில் எழுதுவதே இதற்கான*சாதனா* ஆகும். நினைவாற்றல் தூண்டப்படுவதால் இதன் பட்டியல் நீண்டுக்கொண்டு இருக்கும். ஒரு நல்ல நிகழ்வையும் நினைவுக்கு வரவில்லை என்றால், "பிரகாசமான ஆன்மீக சக்தியாக இருக்கும் நான் அனுபவக் கடலில் பக்குவம் அடைந்து வருகிறேன்," என்ற உறுதிமொழியை பல முறை எழுதுங்கள். உடனே உங்களுக்குள் ஒரு நல்ல நினைவு தோன்றி, அது மேலும் பல நல்ல நினைவுகள்

தோன்ற வழிவகுக்கும். அந்த நல்ல நிகழ்வுகளில் உங்களுடன் பங்குபெற்றவர்களை நோக்கி, உங்களிடம் இருந்து அன்பு கலந்த பாராட்டு உணர்ச்சிகள் பாய்ந்து செல்ல தொடங்கும். அதன் பிறகு கெட்ட நினைவுகளுக்கு மன்னிப்பு பொங்கி வரும். நான் நன்றியுணர்வைப் பற்றி இந்த கருத்துக்களை எழுதிக்கொண்டு இருந்த போது வியக்கும் வகையில், கத்தோலிக்க மறைஞானி மீஸ்டர் எக்கார்ட் வழங்கிய கருத்தை கவாய் தீவை சேர்ந்த ஒருவர் ஒரு காகிதத்தில் எழுதி என்னிடம் கொண்டு வந்தார். அந்த கருத்து பின்வருமாறு: “வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்வதையே பிரார்த்தனையாக கொண்டிருப்பது போதுமானதாக இருக்கும்.” ¶இனி நாம் உணர்ந்து பாராட்டும் பண்பை பார்க்கலாம். இது நமது வாழ்க்கைகளில் முக்கிய அங்கம் வகித்தவர்களுக்கு நன்றி செலுத்துவது ஆகும். உணர்ந்து பாராட்டும் *சாதனா* செய்வதற்கு, நீங்கள் நன்றி செலுத்த விரும்புபவர்களை அணுகி, அவர்களை நேருக்கு நேராக பார்த்து, அவர்களுக்கு நீங்கள் அளிக்கும் மரியாதை மற்றும் மதிப்பை பற்றி அவர்களிடம் சொல்ல வேண்டும். நீங்கள் தெளிவாக விளக்க வேண்டும். இது மேலோட்டமான பாராட்டு இல்லை என்று அவர்கள் தெரிந்துக்கொள்ள, அவர்களுடன் பகிர்வதற்கு சில தகவல்களை சேகரித்து கொள்ளுங்கள். அதில் ஒவ்வொருவரும் இந்த பாசம் கலந்த உரையாடலை ஊக்குவிக்க என்ன செய்தார்கள் என்பதை விளக்கி, நீங்கள் நேர்மையாக இருப்பதை ஒவ்வொருவருக்கும் தெரியப்படுத்துங்கள். முகத்தில் நிறைந்து இருக்கும் புன்னகை, பிரகாசமான கண்கள் மற்றும் இதயம் நிறைய அன்பு கலந்த பார்வையுடன் கட்டி அணைத்துக்கொள்வது போதுமானதாக இருக்கும். பெரும்பாலும் மக்கள் பாராட்டும் வார்த்தைகளை கேட்பதில்லை. இன்றைய உலகில் நண்பர்கள் மற்றும் சொந்தங்கள் மத்தியில் இந்த பாசம் கலந்த மோதல்கள் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. ¶வாழ்க்கையை மாற்றி அமைக்கும் சக்தியாக விளங்கும் பாசம் நிறைந்த பாராட்டு பயன்படுத்துவதற்காக காத்து இருக்கிறது. சமூகத் தலைவர், வியாபாரத்தில் இருக்கும் சக ஊழியர்கள், ஆன்மீக ஆலோசகர்கள், குடும்பத்தினர்கள் மற்றும் நண்பர்களுக்கு முடிந்த வரை அவ்வப்போது பாராட்டை தெரிவியுங்கள். பாசம் கலந்த பாராட்டு விநோதமாக இருவழியிலும் செயல்படுகிறது. நாம் இன்னொருவரை பாராட்டும் போது, நாம் தானாக உயர்வை அடைகிறோம்.

புதன்கிழமை

பாடம் 290

நீங்கள் மாற்றத்தை

ஏற்படுத்தலாம்

மனப்பூர்வமாக உணர்ந்து வழங்கும் பாராட்டு காலத்தோடு பொருந்தி எவ்வாறு பயன் தருகிறது என்பதை, இந்த உண்மை சம்பவத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். இந்த யுத்தியை ஒரு இளைஞன் கடுகடுப்பாக இருக்கும் தனது முதலாளி மீது பயன்படுத்தினான். "உங்களுடைய நற்பண்புகளில் புதுமையாக செய்ய துடிக்கும் புத்திசாலித்தனம் எனக்கு அதிகம் பிடித்து இருக்கிறது. நான் அதை பாராட்டியே ஆகவேண்டும். உங்களிடம் என்னால் பல விஷயங்களை கற்றுக்கொள்ள முடிகிறது," என்று அந்த இளைஞன் பாராட்டிய போது அந்த முதலாளியின் நெஞ்சம் உருகியது. அந்த இளைஞன் மேலும் பல பாராட்டுதல்களை வழங்கிய பிறகு, தான் பெற்ற பாராட்டை இன்னொருவருக்கு வழங்குமாறு வியப்பில் இருந்த முதலாளியிடம் கேட்டுக்கொண்டான். அன்றைய தினம் முதலாளி தனது ஒரே மகனுடன் அமர்ந்து இருந்தார். அவர் எழுந்து நின்று தனது மகனிடம் இருந்த பல அருமையான பண்புகளைப் பற்றி தடுமாற்றத்துடன் பாராட்ட ஆரம்பித்தார். "நான் இதைப்போன்ற உணர்ச்சிப்பூர்வமான விஷயங்களுக்கு நேரம் ஒதுக்காமல் அவற்றை என் மனதோடு வைத்துக்கொண்டு, பணிச்சுமை காரணமாக உன்னிடம் கடுமையாக நடந்துக்கொள்வேன். ஆனால் நான் உன்னை நேசிக்கிறேன் என்பதை மறக்க வேண்டாம்," என்று அவர் கூறினார். இதைக்கேட்ட மகன் கண்களில் கண்ணீருடன், "அப்பா, நீங்கள் பாசத்தோடு பேசிய வார்த்தைகளுக்கு நன்றி. அதை கேட்டதும் எனக்குள் ஏற்பட்ட நிம்மதி மற்றும் மகிழ்ச்சியை, உங்களால் புரிந்துகொள்ள முடியுமா என்று தெரியவில்லை. நீங்கள் என் மீது அக்கறை செலுத்தாததாலும், உங்களுக்கு என்னை பிடிக்கவில்லை என்பதாலும், நான் நாளை தற்கொலை செய்ய இருந்தேன். ஆனால் உங்கள் பாராட்டை கேட்ட பிறகு என் மனம் மாறிவிட்டது," என்று கூறினான். நீங்கள் வழங்கும் பாராட்டு ஏற்படுத்தும் மாற்றத்தை, உங்களால் உறுதியாக கணிக்க முடியாது. ¶நீங்கள் இந்த *சாதனாவை* செய்வதற்கு, ஒரு கண்ணாடி முன்பாக நின்று, உங்கள் கண்களை பார்த்து, இன்னொரு நபரிடம் பேசுவதைப் போல சத்தமாக, "நான் உனக்கு நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் நீ எனது வாழ்வில் இருப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உனக்கு பாராட்டு தெரிவிக்கிறேன்," என்று உங்களிடம் சொல்லிக்கொள்ளுங்கள். அதன் பிறகு கடந்த ஐந்து வருடங்களில் நீங்கள் செய்த நல்ல செயல்களை பற்றி உங்களிடம் சொல்லிக்கொள்ளுங்கள். நீங்கள் முன்பு செய்த நல்ல செயல்களின் பட்டியலை வாசிப்பதன் மூலம் உங்கள் புத்தியை தீட்டிக் கொள்ளலாம். கண்ணாடியில் இருக்கும் உங்கள் நிழல் உருவம், உங்கள் பாராட்டில் இருக்கும் மகிழ்ச்சிகரமான உணர்வை கிரகிக்கும் போது, அது மனம் உருகி புன்னகைப்பதை உங்களால் காண முடியும். உங்களுக்கு மற்றும் உங்களுக்கும் இடையில் நடைபெறும் இந்த உரையாடயில் நீங்கள் முழு நிறைவு பெற்றதும், அதைப் போல மற்றவர்களையும் உங்களால் பாராட்ட முடியும். இதை நினைத்து வெட்கப்படவேண்டாம். கோபமாக இருக்கும் போது யாரும் வெட்கப்படுவது

இல்லை. நாம் மகிழ்ச்சியுடனும் நன்றியுணர்வுடனும் இருக்கும் நாம் எதற்காக வெட்கப்படவேண்டும்? ¶*தர்மத்தை* பின்பற்றுபவர்களுக்கு ஒரு தைரியமான புதிய உலகம் காத்து இருக்கிறது. அந்த உலகில் நாம் ஒருவர் மீது ஒருவர் பாசத்துடன் இருந்து, பரஸ்பர விசுவாசத்துடன் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, மற்றவர்களுக்கு நாம் கடன்பட்டு இருப்பதை அங்கீகரித்து, நமது அமைதியான இதயத்தில் இருந்தும் பிறகு வெளிப்புறமாகவும் நமது நன்றியை செலுத்துகிறோம். நன்றியுணர்வு ஒருவரது வாழ்க்கையின் செழிப்பான வளங்களில் ஒன்றாக விளங்கி, மக்களின் வாழ்க்கைகளை மாற்றி அமைக்கும் வல்லமை படைத்து இருக்கிறது. மன நிறைவை முழுவதுமாக அழித்து, வாழ்க்கையில் வெறுமை மற்றும் வேதனையை நிரப்பும் வியாதிக்கு அது முரணாக செயல்படுகிறது. தைரியமாக இருங்கள். நன்றியுணர்வு மற்றும் பாராட்டுவது பற்றிய இந்த *சாதனாக்கள்*, பலருக்கு அற்புதங்களை நிகழ்த்தி உள்ளன. ஆமாம், நம் எல்லோராலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். உலகம் மாறிக்கொண்டு இருக்கிறது, மற்றும் நாம் அதை மாற்றத்தின் மூலம் மேம்படுத்தலாம் அல்லது சூழ்நிலையை "மோசமாக்கும்" நபர்களின் பொறுப்பில் அதை விட்டு விடலாம். இதில் எது வேண்டும் என்பதை நாம் தான் முடிவு எடுக்க வேண்டும். ¶*சிவனோடு வாழ்தல்* புத்தகத்தின் வாசகராகிய உங்களையும், சனாதன தர்மத்தை பின்பற்றிக்கொண்டு, மற்றவர்களின் வாழ்க்கைப் பாதையில் கலங்கரைவிளக்கமாக விளங்கி, வெவ்வேறு தேசங்களில் வசித்து இந்து மதத்தை வலுப்படுத்தி வரும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களையும் நான் பாராட்டுகிறேன். இன்றைய இந்து மதத்திற்கு தேவையான புத்தகங்களை உருவாக்குவதற்கு, எங்களுக்கு பல கருத்துக்களை வழங்கி உற்சாகப்படுத்தி தூண்டுதலாக விளங்குவது நீங்கள் தான். தர்மத்தை பின்பற்றி வாழ்ந்து, *சாதனா* செய்ய விருப்பத்துடன் முயற்சி செய்து, நமக்கும் நமது எதிர்கால சந்ததியருக்கும் மிகவும் முக்கியமாக விளங்கும் இந்த உயர்ந்த கொள்கைகளை பற்றி பேசுவதன் மூலம் நீங்கள் ஒரு சிறந்த மாற்றத்தை உருவாக்கி வருகிறீர்கள். ¶முகத்தில் சிறிய புன்னகையுடன் அன்பை வெளிப்படுத்துவது மிகவும் எளிது. இந்த எளிமையான அன்பு மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது. இன்றைய யுகத்தில், பலர் பதட்டம் மற்றும் குழப்பத்துடன் இருந்து உதவியை நாடி வரும் வேளையில், உங்களுடைய அன்பு, பாராட்டு மற்றும் ஊக்கம் உதவிகரமாக இருக்கும். அவர்களைப் பற்றி நீங்கள் வழங்கும் விமர்சனம், வதந்திகள் அவர்களை புண்படுத்துவதோடு உங்களையும் புண்படுத்துகிறது. ஆனால் நீங்கள் அவர்களுக்கு வெளிப்படுத்தும் அன்பு அவர்களுக்கும் உங்களுக்கும் ஆறுதல் அளிக்கிறது. அதனால் உங்களை எப்போதும் அன்பை வெளிப்படுத்தும் சக்தியாக கருதுங்கள். நீங்கள் எதைப்பற்றி சிந்திக்கிறீர்களோ, அதுவாக மாறுகிறீர்கள்.

வியாழக்கிழமை

பாடம் 291

மகிழ்ச்சியாக இருப்பது

எப்படி

கண்ணாடி முன் நின்று உங்கள் முகத்தை பாருங்கள். இந்த வாழ்நாள் முழுவதும் சேகரித்த சிந்தனைகள் மூலம் நீங்கள் உங்கள் தோற்றத்தை உருவாக்கி இருக்கிறீர்கள். "நான் மகிழ்ச்சியாக இருக்கிறேனா, அல்லது என்னை மகிழ்விக்க மற்றவர்களை எதிர்பார்த்து இருக்கிறேனா?" என்று உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் அன்பாக இருக்கவும், உங்கள் ஆன்மாவின் அழகான குணங்களை வெளிப்படுத்தவும் அனுமதி வழங்கிக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சி அகத்தில் இருந்து தோன்றும். அத்துடன் ஆழ்ந்த மன நிறைவு, உட்புற அமைதி மற்றும் ஆனந்தமும் வெளிப்படுகிறது. ஒருவரை பற்றி சிறிது நேரம் பாசத்துடன் சிந்தித்து, அவருக்கு சிறிய உதவி செய்ய ஒரு திட்டத்தை உருவாக்குவதால், உங்கள் ஆன்மாவின் ஆழமான உட்புற திருப்தி மற்றும் நீங்கள் உண்மையில் எதிர்பார்க்கும் வலுவான பாதுகாப்பை விழிப்படைய செய்கிறீர்கள். அதற்கு மாறாக மற்றவர்களுக்கு உதவி செய்யாமல், உங்கள் சிந்தனையை குற்றம் கண்டுபிடிப்பதில், வதந்திகள் பரப்பும் லோகங்களில் சஞ்சரிக்க அனுமதி வழங்கினால், நீங்கள் பாதுகாப்பின்றி துயரத்துடன் இருப்பீர்கள். எதன் வாயிலாகவும் உங்கள் உள்ளத்திற்கு திருப்தி கிடைக்காமல் அவதிப்படுவீர்கள். ஒரு பொருளை பெறவேண்டும் என்று ஆசையுடன் இருப்பீர்கள், அந்த பொருளை பெற்ற பிறகும் உங்களுக்கு திருப்தி ஏற்படாது. ஏன்? ஏனென்றால் உங்கள் இதயத்தில் அன்பு இருக்காது. நீங்கள் அந்த நிலையில் இருந்தால் அன்பாக, தாராள மனதுடன், உதவிகளை செய்து, சக்திகளை திசை திருப்பி உங்களுக்குள் இருக்கும் அமைதியை தேடிக்கொள்ளுங்கள். இவ்வாறு செய்வதால் அதற்கான பலன்கள் கிடைக்கின்றன. மற்றவர்கள் அனுபவிக்கும் அனுபவங்களை புரிந்துகொள்ளும் அளவிற்கு புரிதலும், உங்களுக்கு பிரச்சனையாக தோன்றி பழிவாங்க தூண்டுதலாக இருக்கும் பலப்பல சூழ்நிலைகளை புறக்கணிக்கும் அளவிற்கு மேன்மையையும் கிடைத்து, உங்கள் ஆன்மாவில் இருந்து தோன்றும் அந்த ஆழத்தை பெறும் போது தான், உங்களுக்கு உண்மையான அக மகிழ்ச்சி மற்றும் அமைதி கிடைக்கிறது. ¶இந்த வாரம் நீங்கள் வெளியுலகிற்கு செல்லும் போது அன்பு கலந்த உங்கள் சிந்தனைகள் வாயிலாக உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும். அத்துடன் உங்களது ஒவ்வொரு சிந்தனையும் இன்னொருவருக்கு செய்யும் ஒரு தூல செயல் மூலமாக வெளிப்படட்டும். அவர்களின் சுமைகளை சிறிதளவு குறையுங்கள், இதன் மூலம் உங்களுக்கு தெரியாமல் உங்கள் மனதின் சுமையும் குறைய வாய்ப்புள்ளது. நீங்கள் மற்றவருக்கு உதவி செய்வதன் மூலம், நீங்கள் உங்கள் மனக் கண்ணாடியை துடைத்து சுத்தம் செய்யுங்கள். பலப்பல

பிறவிகளாக உருவாக்கப்பட்டு ஆன்மாவை அறியாமையில் வைத்து இருந்த கீழ்நிலை குணத்தின் தன்னலம் கருதும், தன்முனைப்புள்ள *வாசனாக்களில்* இருந்து, சுயநலமற்ற சேவை மூலம் விடுதலை பெறும் வலுவான அனுட்டானத்தை நாம் *கர்ம யோகம்* என்று அழைக்கிறோம். சேவை மற்றும் அன்பின் மூலம், நாம் அடிமனதின் சிக்கல்களை அவிழ்த்து வாழ்க்கையின் விதிகள் மீது தெளிவான புரிதலை பெறலாம். உங்கள் ஆன்மா முழு நிறைவை பெறும். நீங்கள் அந்த அமைதியாக மாறுவீர்கள். சிந்தனை, சொல் மற்றும் செயலில் அன்புடன் இருப்பதால் மட்டுமே, நீங்கள் அக மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டு உண்மையில் பாதுகாப்பாக இருப்பீர்கள். ¶மற்றவர்களின் உணர்ச்சிகள் மற்றும் மற்றவர்களின் மனநிலைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது ஆன்மாவின் இயற்கையான குணத்தின் வெளிப்பாடு என்பதை உறுதியாக குறிப்பிடுகிறது. இது மற்றவர்களின் நற்பண்புகளை பாராட்டி, மேம்படுத்த வேண்டிய பண்புகள் புறக்கணிக்கப்படுவதை குறிக்கிறது. பரிவுடன் இருப்பவர் புரிந்துணர்வை கொண்டிருப்பார். பரிவுடன் இல்லாதவர்கள் புரிந்து கொள்வதில்லை மற்றும் தங்களுக்கு புரியவில்லை என்பது அவர்களுக்கு தெரிவதில்லை. அவர்கள் தங்கள் தன்முனைப்பில் கட்டுண்டு இருப்பதால் அவர்கள் புரிந்துகொள்ளாமலும், பரிவு இல்லாமலும் மற்றவர்களை பாராட்டாமலும் இருக்கிறார்கள். ஆனால் தன் மீது எல்லோரும் பரிவுடன் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 292

மற்றவர்கள் மீது

அக்கறை செலுத்துதல்

அக்கறை செலுத்துவது என்பது அறியும் கோட்பாட்டை பயன்படுத்துகிறது. அக்கறை செலுத்துவதற்கு எதிர்மாறான பண்பு சிந்திக்கும் கோட்பாட்டை பயன்படுத்துகிறது. “அவன் சொல்வதை நான் அறிவேன், எனக்கு எது சரியானது என்பதை நான் அறிவேன். ஆனால் அது தற்போது எனக்கு சரியானது என்று நான் நினைக்கவில்லை.” இவ்வாறு சிந்திக்கும் கோட்பாட்டை அறியும் கோட்பாட்டுக்கு முரணாக நமக்குள் செயல்படுகிறது. இதனால் நடைபெறுவது என்ன? இது தன்முனைப்புள்ள ஆளுமையை உருவாக்குகிறது. ¶அக்கறை செலுத்துவது என்பது புரிந்துகொள்வதற்கு ஒரு சிறந்த கொள்கையாகவும், அதை உங்களுக்குள் விரிவாக்கம் செய்து கொள்ள மேலும் சிறந்த கொள்கையாகவும் விளங்குகிறது. நீங்கள் இன்னொருவரின் உணர்ச்சிகளின் மீது பரிவுடன் இல்லை என்றால், உங்கள் ஆன்மா ஒரு சிறிய

கூண்டில் இருக்கும் பறவை போல அடைப்பட்டு இருக்கிறது. அது தன்னை வெளிப்படுத்த அழுதுகொண்டு, சிந்திக்கும் மனதின் சுவரை அடித்துக்கொண்டு இருந்தாலும், அதனால் வெளிவர முடிவது இல்லை. ஏனென்றால் சிந்திக்கும் மனம் ஆன்மாவின் பண்புகளை பற்றி எதையும் அறிந்திருப்பது இல்லை. ¶அறிதல் என்பது உங்கள் ஆன்மீக சக்தியின் வெளிப்பாடு ஆகும். அக்கறை செலுத்துவதும் உங்கள் ஆன்மீக சக்தியின் வெளிப்பாடு ஆகும். உங்கள் ஆன்மீக சக்தி விழிப்புடன் இருக்கும் போது, நீங்கள் மற்றவர்களின் உணர்வுகளுக்கு அக்கறை செலுத்துகிறீர்கள். உங்கள் ஆன்மீக சக்தி விழிப்புடன் இருக்கும் போது, நீங்கள் சிறிய விஷயங்களில் விட்டுக்கொடுத்து, பழங்கால சனாதன தர்மத்தின் இருபது இயமம் மற்றும் நியமங்களை கடைப்பிடிப்பதைப் போன்று பெரிய விஷயங்களில் உறுதியாக இருக்கும் சக்தியை பெறுகிறீர்கள். நீங்கள் உங்களுக்குள் ஒரு உட்புற கலாச்சாரத்தை விழிக்க வைக்கிறீர்கள். ¶நீங்கள் ஒருவரிடம் ஒரு செயலை செய்யுமாறு கேட்டு, அவர் "முடியாது" என்று சொல்லி இருக்கிறாரா? அவர் அதைப்பற்றி முதலில் சிந்திக்காததாலும், அவர் ஒரு வேளை நீங்கள் சொன்ன செயலை செய்தால், நீங்கள் அவர் மீது ஆதிக்கம் செலுத்துவீர்கள் என்று கருதுவதாலும், அவர் நீங்கள் சொல்வதை செய்ய மறுக்கிறார். அவர் அவ்வாறு சிந்திப்பதற்கு காரணம் என்ன? அவருக்கு தன் மீது குறைவான கட்டுப்பாடு இருப்பதோடு, அவர் சிந்திக்கும் மனதில் சிக்கி இருப்பதே அதற்கு காரணம் ஆகும். ஆனால் இன்னொரு வகை நபரிடம் ஒரு வேலையை செய்ய சொன்னால், அவர் உங்களுடன் இணக்கத்துடன் இருப்பதால், அந்த வேலை ஒரு நிமிடத்தில் முடிந்து விடும். அவருக்கு உங்கள் உணர்ச்சிகள் மீது அக்கறை இருக்கிறது. அவர் ஒரு சூழ்நிலையை உருவாக்கி தன்னை சுற்றி அல்லது உங்களை சுற்றி இருக்கும் அதிர்வலையில் குழப்பம் ஏற்படுத்தாத அளவிற்கு அக்கறையுடன் இருக்கிறார். ¶ஒவ்வொரு சூழ்நிலையும் அடிமனதை சார்ந்து இருந்து பிற்காலத்தில் வெளிவர இருப்பதாலும், சிந்திக்கும் கோட்பாட்டின் சக்தியை மட்டும் பயன்படுத்துவதன் மூலம், நாம் பிற்காலத்தில் எதிர்கொள்வதற்கு சூழ்நிலைகளை உருவாக்குகிறோம். அக்கறை செலுத்தும் பண்பு அறியும் குணத்தில் இருந்து தோன்றுகிறது, அந்த அறியும் குணம் உங்கள் ஆன்மீக சக்தியின் வெளிப்பாடு ஆகும், மற்றும் உங்கள் ஆன்மா விரிவாக்கம் பெற தொடங்கும் போது உங்கள் மன விருப்பம் பிராசிக்கிறது. அதனால் பரிவுடன் இருப்பதற்கு, இந்த அறியும் கோட்பாட்டை உங்கள் வாழ்க்கையில் தினமும் ஒவ்வொரு நிமிடமும் வெளிப்படுவதற்கு அதை பயன்படுத்த வேண்டும். பின்வருமாறு அறியும் பண்பை வளர்க்க வேண்டும். ¶நாம் நமது அறியும் சக்தியை பயன்படுத்துவது எப்படி? "என் நண்பர்களை பற்றி எனக்கு என்ன தெரியும்? அவர்களின் ஆழத்தை பற்றி எனக்கு என்ன தெரியும்? அவர்கள் எவ்வளவு ஆழமானவர்கள்?" என்று நாம் நம்மை சுற்றி இருப்பவர்களை பார்த்து நம்மிடம் கேள்வி கேட்கவேண்டும். "நாம் படிப்பதை பற்றி நாம் என்ன

நினைக்கிறோம் என்பது மட்டும் இல்லாமல் நாம் படிப்பதை பற்றி எனக்கு என்ன தெரியும்? நான் கையில் பிடித்து இருக்கும் பொருளைப் பற்றி நான் அறிவது என்ன?" என்று கேள்வி கேட்கவேண்டும். அறியும் கொள்கை மிக மிக சிறந்தது. அடுத்து நாம் நமது மனதை ஆராயலாம்: “எனது இயலுணர்வு வேலை செய்கிறது என்றால், அது எனது இயலுணர்வு என்பதை நான் அறிவேனா? எனது அடிமனம் எனது செயல்கள் மீது தாக்கம் ஏற்படுத்துகிறது என்றால், நான் அந்த மனநிலையுடன் பொருந்தி இருப்பது எனக்கு தெரியுமா?" நான் எதை அறிவேன்? நான் எதை அறியவில்லை? இதை நாம் மிகவும் முக்கியமாக அறிந்துக்கொள்ள வேண்டும். ¶நமது அறிவிற்கு புறம்பாக செயல்படுவது ஒரு மாபெரும் ஆபத்து ஆகும். இது அக்கறையின்மையால், மற்றவர்களுடன் இணங்கியும் சூழ்நிலைகளுக்கு பொருந்தியும் வாழ இயலாமையால் தோன்றுகிறது. அக்கறையின்மையால் நாம் ஆன்மீக விரிவாக்கத்தின் அடிப்படை விதியை நிறைவேற்ற தவறுகிறோம்: "மற்றவர்களுக்கு சேவை செய்ய வரும் எந்த ஒரு வாய்ப்பையும் நழுவ விடவேண்டாம்.” நாம் அறிவுக்கு எதிராக திட்டமிட்டு செயல்படும் போது, நாம் நமது வாழ்க்கைக்கு தேவையில்லாத சுமையை உருவாக்கி அதனால் வேதனையும் அடைகிறோம். இதன் காரணமாக, "நான் எதனால் ஊக்கம் இழந்து இருக்கிறேன்? நான் நன்றாகத் தான் இருந்தேன். எனக்கு அதிக ஆன்மீக ஈடுபாடு இருந்தது. நான் அதிக உற்சாகத்துடன் இருந்தேன். அப்போது எனக்குள் பிராண சக்திகள் ஓடிக்கொண்டு இருந்த உணர்வு இருந்தது, ஆனால் இப்போது திடீரென்று எல்லாம் நின்று விட்டது. இதெல்லாம் எனக்கு ஏன் நடந்தது? நான் அப்போது மகிழ்ச்சியாக சிறப்பாக செயல்பட்டதாக தோன்றியது," என்று நாம் நம்மிடம் கேட்க தொடங்குகிறோம். இதைத் தான் நான் ஒரு எதிர்மறை சரிவு என்று அழைக்கிறேன்.

சனிக்கிழமை

பாடம் 293

உணர்ச்சிப்பூர்வமான

சரிவுகள்

வாழ்க்கை என்கிற கரும்பலகையில் ஒரு துடைப்பான் போல, ஆன்மா தன்னை வெளிப்படுத்த முயற்சிக்கும் சமயத்தில், ஒவ்வொருவரும் தங்கள் தன்முனைப்பு என்று தாங்களே கருதும் சிந்திக்கும் கொள்கையிடம் கட்டுப்பாட்டை வழங்கி அந்த ஆன்மாவின் முயற்சியை தடுக்க அனுமதி வழங்குவதன் மூலம், அவர்கள் தங்களுக்குள் இருக்கும் தெய்வீக கோட்பாட்டை நிராகரிக்கும் போதும், தங்களது அறியும் சக்தியை முழுமையாக திட்டமிட்டு நிராகரிக்கும் போதும்,

ஒவ்வொருவரும் அவ்வப்போது எதிர்மறை சரிவுகளுக்குள் சிக்குகின்றனர். ¶உதாரணமாக நீங்கள் சிறப்பாக செயல்பட்டு உற்சாகமாக இருக்கிறீர்கள், மற்றும் சேவை செய்வதற்கு உங்களுக்கு ஒரு சிறிய வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் நீங்கள் அதை நழுவ விடுகிறீர்கள். நீங்கள் அதை செய்ய வேண்டும் என்று அறிந்து இருந்தாலும், நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று அறிந்து இருப்பதை எல்லாம் மிகவும் சுலபமாக நிறைவேற்றலாம் என்றாலும், அது சரியான நேரம் என்று உங்களுக்கு *தோன்றுவது* இல்லை. "இது எனக்கு சரியான தருணமாக இருக்காது," என்று நீங்கள் சிந்திக்கிறீர்கள். சிந்திக்கும் மனது எப்போதும் சிறப்பான காரணங்களுடன் நிறைந்து இருப்பதால், வேண்டாம் என்று சொல்வதற்கு நிறைய சிறப்பான காரணங்களை நீங்கள் மனதில் வைத்து இருப்பீர்கள். அவை தற்போது சிறப்பாக தோன்றினாலும், காலப்போக்கில் அவை மங்கி விடுகின்றன. இதன் காரணமாகத் தான், நமது செயல்களுக்கு தூண்டுதலாக இருந்த காரணங்களை நம்மால் ஞாபகப்படுத்த முடிவதில்லை. ¶நான் முன்பு செய்த சில ஒழுங்கற்ற செயல்களுக்கான காரணத்தை கேட்டால், "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்கு புரிகிறது. அப்போது என்னிடம் ஒரு நல்ல காரணம் இருந்தது, ஆனால் இப்போது அது நினைவுக்கு வரவில்லை," என்று நீங்கள் சொல்வீர்கள். நீங்கள் அந்த காரணத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை, ஏனென்றால் அப்போதைக்கு ஏதாவது சொல்லி தப்பித்தால் போதும் என்று இருப்பீர்கள். ஆனால் அந்த செயல் தனது பலவீனமான காரணத்துடன் அடிமனதில் அதிர்ந்து கொண்டு இருக்கிறது. நீங்கள் இதைப்போன்ற இரண்டு அல்லது மூன்று நிகழ்வுகளை சேகரித்தால், நீங்கள் விரைவில் சிக்கிக்கொள்ளும் ஒரு எதிர்மறை சரிவில், நீங்கள் செய்வது அறியாது தவிப்பீர்கள் மற்றும் ஆன்மீக உலகில் அல்லது வேறு எந்த உலகிலும் எதையும் புரிந்துகொள்வது உங்களுக்கு கடினமாக இருக்கும். இவ்வாறு நீங்கள் சில காலம் போராடிவிட்டு, "எனது வாழ்க்கை சுமைகள் அதிக பாரமாகிவிட்டன," என்று புலம்ப தொடங்குவீர்கள். இறுதியில் அந்த சூழ்நிலையும் உங்களுக்கு சோர்வை ஏற்படுத்தியதும், நீங்கள் பின்வாங்கி உங்களுக்கு சிறிது தெளிவை வழங்கிக்கொள்ள விரும்புவீர்கள். இதன் காரணமாகவே சிலர் ஊக்கிகள், அதிகமான சாக்லேட், சர்க்கரை பூசிய யம்-யம் (இந்த சத்தில்லா உணவு வியாபாரம், எதிர்மறை சரிவில் இருப்பவர்கள் மூலம் மில்லியன் கணக்கில் சம்பாதிக்கிறது) மற்றும் தூல உடலுக்கு துடிப்புணர்வை வழங்க காபி மற்றும் மென்பானங்களை போன்ற நரம்பியல் அமைப்பிற்கு ஊட்டம் அளிக்கும் பானங்கள் மீது தங்கள் கவனத்தை திருப்புகிறார்கள். ஆனால் இந்த எதிர்மறை சரிவுகளை, தூல உடல் ஒரு அளவிற்கு மேல் ஏற்றுக்கொள்வதில்லை. அதன் விளைவாக அதன் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு, இறுதியில் நோய் தீவிரமடைகிறது. அடிமனம் பதட்டத்தில் இருப்பதால், அந்த உடலும் தனக்குள் பதட்டத்தை அனுபவிக்கிறது. ¶நீங்கள் உங்களுக்குள் இருக்கும் ஆன்மீக மூலத்தை மறுக்கும் செயலை

தவிர்த்து, நீங்கள் செய்ய வேண்டும் என்று அறிந்து இருப்பதை பூர்த்தி செய்யும் போது, நீங்கள் உற்சாகத்துடன் பிராண சக்தியால் நிரம்பி இருக்கிறீர்கள். உங்கள் ஆன்மா லௌகீக உலகில் பிரகாசிக்க தொடங்குகிறது. நீங்கள் எதிர்மறை சரிவுகளில் சிக்குவது இல்லை. நீங்கள் வழக்கம் போல் செயல்படாமல், உற்சாகத்துடன் இருந்து உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு எதுவாக இருந்தாலும், அதை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். ஆனால் உங்கள் அறியும் கொள்கையை நிராகரித்தால், நீங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் மற்றும் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நினைவில் வைத்து இருப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டி இருக்கும். ¶குடும்பங்கள், சொந்தங்கள் மற்றும் நண்பர்களுக்கு தாங்கள் உதவியாக சில வேலைகளை செய்யவேண்டும் என்று பலர் அறிந்து இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதற்கு உரிய முக்கியத்துவம் வழங்கவில்லை என்பதால், அவர்கள் சில வாரங்கள் கழிந்து தாங்கள் அறிந்து இருந்ததை மறந்து விடுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு நேரம் இருப்பதாகவோ, தங்களால் உதவி செய்ய முடியும் என்றோ, தங்களுக்கு போதிய வசதிகள் இருக்கிறது என்றோ நினைப்பது இல்லை. அவர்கள் எண்ணற்ற வரம்புகளுடன் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவப்பட்ட பழைய ஆன்மாவை ஒரு கூண்டுக்குள் அடைத்து விடுகிறார்கள். மன்னித்து விடுங்கள், நான் அந்த வாக்கியத்தை மாற்றி அமைக்கிறேன். அவர்கள் தங்கள் பாவப்பட்ட இளம் ஆன்மாவை ஒரு கூண்டுக்குள் அடைத்து விடுகிறார்கள். ஏனென்றால் பழமையான ஆன்மாக்கள் அக்கறையை வெளிப்படுத்துகின்றன. இளம் ஆன்மாக்கள் எப்படி செய்வது என்று கற்கின்றன. எதிர்மறை நடவடிக்கை, எதிர்மறை எண்ணங்கள் மற்றும் வாழ்க்கை பற்றிய ஒரு எதிர்மறை அணுகுமுறை நிரம்பி இருக்கும் அடிமனம், தன்னை சிக்கலில் இருந்து விடுவித்துக் கொள்ளும் வரை காத்து இருக்கும், ஒரு பச்சிளம் குழந்தை போல, இந்த சிறிய கூண்டில் இந்த பாவப்பட்ட இளம் ஆன்மா ஏறி உட்கார்ந்துக் கொள்கிறது. ஆனால் அகத்தில் இருக்கும் ஆன்மா தான் முதலில் சிக்கிக் கொள்வதை காண வேண்டும். அந்த ஆன்மா பல பிறவிகள் மூலமாக, அதன் எதிர்மறை படைப்புக்கள் மூலமாக, தனது சிந்தனைக்கு எதிரான அறிதல் போராட்டங்கள் மூலமாக மற்றும் ஒவ்வொரு முறை சிந்தனை வெற்றிபெறுவதன் மூலமாகவும் சிக்கிக் கொள்கிறது. அதன் பிறகு அது சிக்கலில் விடுபட வேண்டும். அது அவ்வாறு சிக்கலில் இருந்து விடுபடும் போது, விரைவில் சிந்தனையை காட்டிலும் அறியும் கொள்கை வலிமை பெறுகிறது. அதன் பிறகு நாம் ஆன்மீக விரிவாக்கத்தை கவனிக்கிறோம். அப்போது கவனிப்பு வலிமை பெறுகிறது என்பதை நாம் அறிகிறோம். ¶ஒருவர் ஆன்மீக விரிவாக்கம் பெறுகிறார் என்பதை நான் எவ்வாறு கணிப்பேன் என்று தெரியுமா? நான் ஒரு ஆலோசனை வழங்கும் போது, அவர் அதை ஏற்றுக்கொண்டு, நான் அடுத்தக்கட்டத்தை பற்றி சிந்திக்கும் முன்பாக, அவர் அதன் மீது கவனம் செலுத்தி சிந்திக்கும் போது, அவர் ஆன்மீக

விரிவாக்கம் பெறுகிறார் என்பதை நான் அறிகிறேன். ஏனென்றால் அவர் தனது கவனிப்பின் மூலம் அறிதலை உருவாக்குகிறார், மற்றும் தன் மீது ஒவ்வொருவரும் அக்கறையுடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதை போல, தனது அறிதலின் மூலம் அவர் தனது சகாக்கள் மீது அக்கறையுடன் இருக்கிறார்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 294

உங்கள் மனதை

கட்டுப்படுத்துதல்

மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தாத நபர்கள், தங்கள் மீது ஒருவர் அக்கறை செலுத்தவில்லை என்றால் வருந்துகின்றனர். ஏன் தெரியுமா? ஏனென்றால் அவர்கள் உணர்ச்சிகளும் ஆளுமைகளும் பிரதானமாக விளங்கி, தங்கள் மீது ஒருவர் அக்கறை அல்லது அன்பு செலுத்தவில்லை என்றால் தூண்டுப்படுவதற்கு தயாராக இருக்கின்றன. ஆனால் அவர்கள் தங்களுக்கு எதிர்பார்க்கும் அதே அக்கறையை மற்றவர்கள் மீது வெளிப்படுத்துவது இல்லை. ¶தனது உணர்ச்சிகளுக்கு மற்ற எல்லோரும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கும் போது எதிர்மறை கனவு உருவாகிறது. இதன் காரணமாகவே, மற்றவர்கள் உணர்ச்சிகள் மீது அக்கறை செலுத்துவது பற்றி கற்றுக்கொடுப்பதற்கு பல புத்தகங்கள் உள்ளன. இவை மற்றவர்கள் மீது உண்மையில் அக்கறை செலுத்த விரும்பாத நபர்கள் வெளியுலகில் வேலையை தேடி சம்பாதிப்பதற்கு கற்பிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டவை. மேலும் இந்த புத்தகங்கள், மற்றவர்கள் மீது அக்கறை செலுத்துவதில் அறிவுப்பூர்வமாக தாங்கள் தேர்ச்சி பெறும் வரை வெளியுலகில் வெற்றி பெற முடியாது என்ற எண்ணத்துடன் இருப்பவர்களுக்கும் பொருத்தமாக இருக்கும். ஆனால் இவை அனைத்தும் மேலோட்டமானவை. *நேர்மையற்ற* என்ற சொல்லானது, தான் எதை நிறைவேற்ற வேண்டும் என்பதை அறிந்து இருக்கும் ஒருவர், அதை நிறைவேற்றாமல் நிறைவேற்றியதைப் போல பாசாங்கு செய்வதை குறிப்பிடுகிறது. நாம் அவரை *நேர்மையற்றவர்* என்று குறிப்பிடுகிறோம். ¶அந்த நேர்மையற்ற பண்பு அவரைத் தவிர வேறு யாரையும் வருத்துவது இல்லை, ஏனென்றால் உங்களை நோக்கி திரும்பி வராத எதையும் உங்களால் வெளியுலகிற்கு அனுப்ப முடிவது இல்லை. அது எப்போது உங்களை நோக்கி திரும்பும்? அது வாழ்வின் பிற்பகுதியில் திரும்பி வரும். அவரது உடல் இளமையுடன் ஆரோக்கியமாக இருக்கும் வரை அவருடைய செயல்பாடு சீராக இருக்கும். அவர் தன்னால் இயன்றவரை

நேர்மையின்றி இருக்கலாம், ஆனால் *கர்மவினை* திரும்பி வரத்தொடங்கும் என்பதால், அவரது பிற்காலம் சீராக இருக்காது. அவரிடம் நேர்மையின்றி நடந்துகொள்ளும் மற்றவர்களிடம் இருந்து, அந்த *கர்மவினைகள்* அவருக்கு திரும்புகின்றன. அவர் தான் செய்த செயல்கள் சரியில்லை என்பதை உணரும் போது, அந்த *கர்மவினைகள்* அவரது மனசாட்சியில் இருந்தும் திரும்பி வரத்தொடங்குகின்றன. அவர் பிற்காலத்தில் யோகப்பயிற்சியை கற்றுக்கொண்டு அல்லது *வாசன தாக தந்திரத்தின்* மூலம் அவற்றை சுத்தம் செய்யும் அளவிற்கு பாக்கியசாலியாக இல்லை என்றால், அவர் அவற்றை மீண்டும் எதிர்கொண்டு அதிகமான வேதனையை அனுபவிப்பார். ¶மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தும் கலை உண்மையில் ஒரு கலையாக விளங்குகிறது. அதற்கு தொடர்ச்சியான ஆய்வு தேவைப்படுகிறது. அது ஒரு ஆக்கப்பூர்வமான ஆய்வாக விளங்குகிறது. அந்த கலை எப்படி சமாளிப்பது என்பதை கற்பிக்கவில்லை, ஆனால் அது உங்களுக்குள் இருக்கும் அறியும் கொள்கை மூலம் உங்கள் விதியை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை கற்றுக்கொடுக்கும் கலை ஆகும். ¶நீங்கள் ஆத்ம ஞானம் பெறுவதை குறிக்கோளாக கொண்டிருக்கும் போது, உணர்ச்சிகள் புண்படுத்துதல் மற்றும் வருத்தங்களின் சூழற்சிகளை நீங்கள் நிறுத்த வேண்டும். "நான் இதை செய்தால், எனக்கு இந்த பலன் கிடைக்கும். நான் அதை செய்யும் பொது, அது நான் எதை செய்யவேண்டும் என்பதை உணர்த்தும் அறிதலை எதிர்ப்பதால், அதனால் விளையும் பலனையும் நான் அறிந்துக்கொள்ள வேண்டும்," என்று உங்கள் அறியும் சக்தியை பயன்படுத்தி உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் தனது விளைவுகளை கொண்டுள்ளன. அத்தகைய விஷயங்களைப் பற்றி உட்கார்ந்து தியானம் செய்வதற்கு நீங்கள் தான் திட்டமிடவேண்டும். அது தான் தியானத்தின் பயன். உங்கள் கீழ்நிலை மனதை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, உங்கள் புத்தியை இரவல் அல்லது வாடகை தராமல் இருப்பதற்கு, தியானம் ஆரம்பக்கட்டங்களில் உங்கள் மனதின் கீழ்நிலைகள் மீது கட்டுப்பாட்டை பெறுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. ¶நீங்கள் செய்ய விரும்பாத செயலை நீங்கள் செய்ய ஒருவர் காரணமாக இருக்கும் போது, அல்லது அது சரியான நடத்தை இல்லை என்று உங்களுக்கு தோன்றும் போது, நீங்கள் உங்கள் புத்தியை அவருக்கு இரவல் தருகிறீர்கள். காலையில் ஒருவர் உங்களிடம் தவறாக நடந்துக்கொண்டதால் நீங்கள் அந்த நாள் முழுவதும் பகை உணர்வுடன் இருந்தால், அவர் அந்த உணர்வை இயக்கியதால் அவர் உங்கள் புத்தியை பயன்படுத்துகிறார். உங்களால் வெற்றிகொள்ள முடியாததை அவர் சாதித்துள்ளார். ஆனால் அந்த சம்பவம் நடந்த போது, உங்களுக்குள் பகை உணர்வை உருவாக்கிய நபரின் உணர்ச்சிகள் மீது அக்கறை செலுத்தி, அந்த நபருடன் உங்கள் அதிர்வை சீர் செய்யும் போது, நீங்கள் உங்கள் புத்தியை பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் அதைத்தான் செய்ய வேண்டும். அந்த நபர் ஒரு இளம் ஆன்மாவாக இருக்கக்கூடும் மற்றும்

நீண்டகாலத்திற்கு அக்கறை செலுத்துவதைப் பற்றி தெரிந்துகொள்ளாமல் இருக்கக்கூடும். அதனால் அந்த நபரிடம் முறையான நடத்தையை எதிர்ப்பார்க்க முடியாது. இதன் காரணமாகத் தான், ஒருவர் எந்த அளவிற்கு பக்குவம் அடைந்துள்ளார் என்பதை தெரிந்துக்கொள்ள நீங்கள் தியானம் செய்ய வேண்டும். ¶பின்வரும் மூன்று கொள்கைகளை நினைவில் வைத்து இருங்கள்: 1) நீங்கள் அறிந்த விஷயத்துடன் சிந்தனை தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கப்போகிறது. நீங்கள் சில செயல்களை செய்யவேண்டும் என்பதை அறிந்து இருந்தாலும், சில காரணங்களால் அதை செய்யாமல் இருப்பீர்கள். அந்த சில காரணங்கள் உண்மையில் நல்ல காரணங்களாக இருக்கலாம், ஆனால் அந்த சமயத்திற்கு நல்லதாக தோன்றுவதால், அவற்றை நீங்கள் விரைவில் மறந்து விடுவீர்கள்; 2) நீங்கள் உங்கள் அறியும் பண்பை ஆதிக்கம் செலுத்த அனுமதி வழங்கினால், நீங்கள் உங்கள் ஆன்மீக சக்தியை பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் துடிப்புணர்வுடன் வலுவாக இருப்பீர்கள். ஆன்மீக சக்திகள் உங்கள் வாயிலாக பாய்ந்து செல்லும்; 3) நீங்கள் உங்கள் ஆன்மீக சக்தியை பயன்படுத்தினால், உங்களுடைய கவனிக்கும் திறன் சிறப்பாக இருந்து, உங்கள் மனதின் மீதும் வலுவான கட்டுப்பாட்டை கொண்டு இருப்பீர்கள். உங்களுக்காக யாரும் சிந்தித்துக் கொண்டு இருக்கமாட்டார்கள். ¶நீங்கள் உங்களுக்குள் கவனிக்கும் சக்தியை விழிக்க வைத்ததும், உங்கள் ஆன்மா பிரகாசிக்கிறது, மற்றும் தியானத்திற்கு பிறகு நீங்கள் தாரணை நிலைக்கு செல்கிறீர்கள். நீங்கள் ஆன்மீக உணர்வின் உயர்நிலைகளை அடைவது போல தோன்றலாம், ஆனால் உண்மையான முன்னேற்றத்தை பெறுவதற்கு, நீங்கள் பூமியில் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் உங்கள் ஆன்மா வெளிப்படவேண்டும். அதனால் இந்த மூன்று கொள்கைகளை பின்பற்றுங்கள். உங்கள் அறிதலுடன் சிந்தனை சண்டையிடுவதற்கு அனுமதி வழங்காதீர்கள். உங்கள் மன உறுதி மீது சிந்தனை சண்டையிடுவதற்கு அனுமதி வழங்காதீர்கள். அப்போது நீங்கள் ஆன்மீக பண்புடன் இருப்பீர்கள்.

வைஷம்யம் பிரதி அஸஹிஷ்ணுத்வம்

वैषम्यं प्रति असहिष्णुत्वम्



வேற்றுமைக்கு அனுமதி அளிக்காமல் இருத்தல்

உங்கள் சங்கல்பம் பொதுவாக இருக்கட்டும். உங்கள் இதயங்கள் பொதுவாக இருக்கட்டும். அனைவரும் மகிழ்ச்சியுடன் ஐக்கியமாக, உங்கள் எண்ணங்கள் அனைத்தும் ஐக்கியம் ஆகட்டும்!

ரிக் வேதம் 10.191.4. வேஎ, ப. 863



ஒரு ஆன்மீக குடும்பம் வேற்றுமைகளை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிப்பது இல்லை. ஒரு தம்பதி, மீனாட்சியம்மன் கோயிலுக்கு முன்பாக வாதாடுகின்றனர். ஆனால் அவர்கள் உறங்குவதற்கு முன்பாக தங்கள் வேறுபாடுகளை சரி செய்து கொள்கின்றனர். அவர்களுக்குள் ஏற்பட்ட இணக்கத்தை, இணைந்த கைகள் மூலம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை

பாடம் 295

தத்துவ ஞானிகளின்

அதிசய படகு

பல நூறு வருடங்கள் முன்பாக சங்கம் வளர்த்த மதுரையில் பிரசித்தமாக இருக்கும் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் குளத்தில், ஒரு அதிசயமான படகு கட்டப்பட்ட சம்பவத்தை அன்பர்கள் நம்முடன் பகிர்ந்துகொண்டார்கள். அந்த படகு தத்துவ ஞானிகளின் அதிசய படகு என்று அழைக்கப்பட்டது. அதில் அமர்ந்து பிறவி, ஞானோதயம் மற்றும் முக்தியை பற்றி பேசுவதற்கு இமய மலையில் இருந்து *ரிஷிகள்,* இந்தியா முழுவதிலும் இருந்து *பண்டிதர்கள்* மற்றும் தென்னாட்டில் இருந்து எளிமையான *பக்த சித்தர்கள்* வந்ததாகவும் கூறப்படுகிறது. மனதில் மதிப்பு மற்றும் இணக்கத்துடன் பேசுபவர்களுக்கு இடமளிக்க, அந்த படகு தன்னை தானே தொடர்ந்து விரிவாக்கம் செய்து கொள்ளும் அற்புத சக்தியை பெற்று இருந்தது. ஆனால் விவாதத்தில் பகை உணர்வு அதிகமான போது, படகின் அளவு சிரியதாகியது. அதனால் பகையுணர்வை தூண்டியவர்கள் திடீரென்று தண்ணீரில் நீந்திக்கொண்டு அவமானத்துடன் கரையை வந்து அடைந்தார்கள். சிவபெருமானின் கோயிலில், பகையுணர்வு இல்லாத விவாதத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டதாக தோன்றுகிறது. ¶இன்று நம்மிடம் அதைப்போன்ற அதிசய படகுகள் இல்லை, ... அல்லது உலகின் ஏதாவது ஒரு மூலையில் இருக்கலாம். நான் சமீபத்தில் இந்தியாவிற்கு யாத்திரை சென்று இருந்த போது, சுவாமிநாராயண் சத்சங்கத்தை சேர்ந்த நூற்றுக்கணக்கான *சாதுக்கள்* உட்பட பக்தர்களின் பெரிய குழுவை சந்தித்து வேற்றுமையை தூண்டிவிடும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிக்காமல் இருப்பதைப் பற்றி விவாதித்தேன். அவ்வப்போது ஒவ்வொரு குழுவும் இணக்கத்துடன் வாழ்வதில் சவாலை எதிர்கொள்கிறது என்பதால், எல்லோருக்கும் அந்த தகவல் பொருத்தமானதாக தோன்றினாலும், அதை பயிற்சி செய்வது கடினமானதாக தோன்றியது. ஆனால் எங்கள் மடவாசிகள் மத்தியில், எந்த விதமான வேற்றுமைகளுக்கும் அனுமதி அளிப்பது இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். ¶எல்லா லோகங்களிலும் இணக்கத்துடன் வாழ்வது முதன்மையானது என்றாலும், ஆன்மீக பணியில் அது மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. இணக்கம் ஏற்படுத்துவதற்கான

முயற்சி வீட்டில் இருந்து தொடங்கி, வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் வெளிப்பட்டு, ஒவ்வொரு அன்பரும் எதிர்கொள்ளும் ஒவ்வொரு உறவையும் மேம்படுத்துவதோடு மகிழ்ச்சியையும் தந்து, அதை உயர்த்தவும் செய்கிறது. இவ்வாறு பிறருக்கு வழங்கும் ஆன்மாவின் அழகான பண்புகளை விரிவாக்கம் செய்வதற்கும் உண்மையாக, அன்பாக, பயனுள்ளதாக மற்றும் தேவையானதாக இருப்பதை மட்டும் சொல்வதற்கும், எல்லோரும் சிந்தனை, சொல் மற்றும் செயலில் பரிவு மற்றும் பாசத்துடன் இருக்க முயற்சி செய்கிறார்கள். இதைப்பற்றி திருவள்ளுவர் தனது திருக்குறளில் வழங்கிய அறிவுரையை காணலாம்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (திருக்குறள் 100)"

ஆமாம், இது தான் உயர்ந்த சிந்தனை. என்னிடம் குஜராத்தை சேர்ந்த *சுவாமிகள்* அவ்வப்போது, "ஆனால் முரண்பாடு மற்றும் சச்சரவு தோன்றினால் என்ன செய்வது?' என்று கேட்டனர். அதற்கு நான் இவ்வாறு பதில் அளித்தேன். எங்கள் சமூகத்தில் மற்ற வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு, பிரச்சனை மீது முழு கவனம் செலுத்தப்படுகிறது. எல்லோரும் இந்த விவேகத்தை பின்பற்ற வேண்டும். நாம் செய்யும் எந்த ஒரு செயலும் நீண்டகாலம் பலன் தருவதற்கு அவிழ்த்து விடப்பட்ட அசுர சக்திகளை நீக்க வேண்டும். அதனால் முரண்பாடுகள் இருக்கும் சூழலில், நமது வேலையை குறிப்பாக மதம் தொடர்பான வேலைகளை தொடர்வது, அதிக பிரதிகூலமாக அமையக்கூடும். வீடு, மடம் அல்லது பணியிடத்தில் தெய்வீக விசைப்பகுதியில் மீறல்கள் ஏதேனும் ஏற்பட்டால் அதை உடனடியாக சரி செய்யவேண்டும். ¶எங்கள் அணுகுமுறை எளிமையானது. உறங்குவதற்கு முன்பாக கடினமான உணர்ச்சிகள் அனைத்தையும் தீர்வு காணவேண்டும் என்ற பொதுவான *சாதனாவிற்கு,* நாங்கள் எல்லோரும் அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம். அவ்வாறு செய்யவில்லை என்றால், அதன் மூலம் வாக்குவாதங்கள் தோன்றி, விதைக்கு சென்று தேவையற்ற மற்றும் பிரச்சனைக்குரிய அடியுணர்வு பதிவுகள் அல்லது *வாசனாக்களாக* முளைவிடுகின்றன. அவற்றை முழுமையாக அழிக்க முடிவதில்லை, ஆனால் பரிகாரம் மூலம் அதன் தீவிரம் தணிக்கப்பட்டு நடுநிலைப்படுத்தப்படுகின்றன. வேற்றுமை என்பது இணக்கமான *பிராண* சக்தியின் ஓட்டத்தில் கோபம், வாக்குவாதம், புறம்கூறுதல், கூட்டங்களில் இருந்து வெளியேறுவது, புண்படுத்தும் சொற்கள் மற்றும் உணர்ச்சிகளை புண்படுத்துவது போன்றவற்றால் இடையூறுகள் ஏற்படுத்துவதை குறிக்கிறது. “எங்கள் பிரார்த்தனைகள் ஒன்றாக இருக்கட்டும். எங்கள் மனங்கள் ஒன்றாக இருக்கட்டும். எங்கள் விருப்பங்களும் ஒன்றாக இருக்கட்டும். நான் நம் எல்லோரது நன்மைக்கு சமமான மந்திரங்களை சொல்லி சமமான அவியை வழங்குகிறேன், ” என்று வேதங்கள் பிரார்த்திக்கின்றன*(ரிக் வேதம்* 10.191.3. வேஎ, ப. 854). ஒரு சிக்கல் அல்லது பிரச்சனையை காட்டிலும் இணக்கத்தன்மை மீதான

அர்ப்பணிப்பு வலுவாக இருக்கவேண்டும் என்பது இணக்கம் பற்றிய கொள்கைகளில் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. பிரச்சனைகள் மாறுகின்றன, ஆனால் இணக்கத்தின் வலிமை முதன்மையானதாக இருக்க வேண்டும். இது கருத்து வேறுபாடுகள் தோன்றும் போது பயன்படுத்துவதற்கு ஒரு கருத்தாக விளங்குகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 296

தீர்வு காணும்

சாதனா

ஒரு குழப்பத்தை உறங்குவதற்கு முன்பாக தீர்வு காணப்படவில்லை என்றால், தவறு செய்ததற்கு பலனாக *குக்கர்மபலன்* உருவாக்கப்படுகிறது. புண்பட்ட உணர்வுகள் மற்றும் வாக்குவாதங்களை வெளிப்படையாக தீர்வு காணும் வரை, அவை தொடர்ந்து தொல்லையாக இருந்துக்கொண்டு இருக்கும். ஒரு பிரச்சனைக்கு 72 மணி நேரத்திற்குள் தீர்வு காணப்படவில்லை என்றால், அது முளைவிடுகிறது மற்றும் அதனை சீர் செய்ய பெரியவர்கள் ஆன்மீக வழிகாட்டலுடன் செயல்படவேண்டும். எல்லோரும் துன்பங்களை எதிர்கொள்ள தவிர்க்க முடிவு செய்து இருப்பது, அதிக தீவிரமான பரிகாரங்களின் தேவையை தெரிவிக்கிறது. ¶எல்லா சூழ்நிலைகளிலும் *ஹ்ரீ பிராயச்சித்தம்* மூலம் தீர்வு காணமுடிகிறது. இந்த பரிகாரத்தில் மன்னிப்பு கோருதல், தவறுக்கு வருந்துதல், சிறிய குழுக்களாக பேசுதல் மற்றும் பரிசுகளை வழங்கி முரண்பாடுகளை நீக்க முயற்சி செய்தல் அடங்கும். இதற்கு அடக்கம் முக்கிய பண்பாக விளங்குகிறது. ஒருவர் தெரிந்து தவறு செய்யவில்லை என்றாலும், *கர்மவினை* காரணமாக அந்த சூழலில் ஈர்க்கப்பட்டு, வாக்குவாதம் அல்லது குழப்பத்தில் பங்குபெற்றதற்கு மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்கப்படுகிறது. தவறு செய்தவர்கள் கோரிய மன்னிப்புக்களை ஏற்றுக்கொள்வது மூலமாக, மன்னிப்பதன் மூலமாக மற்றும் அந்த சூழ்நிலை மீண்டும் தோன்றுவதற்கு அனுமதி அளிக்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருப்பதன் மூலமாகவும் இணக்கம் மீண்டும் உருவாக்கப்படுகிறது. அன்பு மற்றும் விசுவாசத்தின் உறுதியான அடித்தளத்தின் மீது இணைந்து செயல்படுவதால் எல்லோரும் மதத்தின் சேவை மற்றும் வழிபாட்டில் முன்னேறலாம் என்ற பொதுவான புரிதலை அடிப்படையாகக் கொண்டு, பொருத்துக்கொள்ளாமல் அல்லது அனுமதி அளிக்காமல் இருக்கும் பண்பு அமைந்துள்ளது. இந்த முயற்சிகளின் மூலம், முறையான செயலின் பலனாக இருக்கும் *சுக்கர்மபலன்* தெரிந்து உருவாக்கப்படுகிறது. ஒரு வேறுபாட்டை இரண்டு சீடர்கள் ஒன்றாக அமர்ந்து

தீர்வு காண முயற்சிக்கும் போது, அது அந்த இடத்தில் இல்லாத மூன்றாவது நபர் தனது சக்திகளை அமைதியாக சமன் செய்ய உதவியாக இருக்கிறது. ¶*சாதனா* என்கிற அதிசய தைலம் நரம்பியல் அமைப்பிற்கு ஆறுதல் அளித்து, மக்களிடம் தொடர்புகொள்ளும் போது சகிப்புத்தன்மையை பெறுவதற்கு மற்றும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போது அமைதியாக இருப்பதற்கு தேவையான வலிமையை ஒவ்வொரு சீடனுக்கும் வழங்குகிறது. *சாதனா* செய்வதை புறக்கணிக்கும் போது, பிரச்சனைகள் நம்மை நெருங்குகின்றன. குடும்பத்தினர் நேருக்கு நேராக பேசுவது கடினமாகிறது. தனிநபர்கள் அதிக புறநோக்கியாக இருக்கும் போது மிகவும் சாதாரணமான மற்றும் நல்ல நோக்குடைய சந்திப்புக்களிலும் கடினமான உணர்வுகள் தோன்றுகின்றன. ¶எங்கள் மடங்களில் இருக்கும் ஒரு இயல்பான இணக்கத்தை குடும்பத்தினர் பின்பற்ற முயற்சி செய்கின்றனர். பணி மூப்பு அடிப்படையில் அதிகார வரம்புகள் எப்போதும் தெளிவாக இருப்பதால், தினசரி நடவடிக்கைகளின் செயல்பாடு அதிகம் விவாதிக்கப்படுவது இல்லை. இது குழுவினர் மத்தியில் இணக்கத்தை பராமரிப்பதால் கிடைக்கும் முதல் வரமாக விளங்குகிறது. நமது குடும்பம் மற்றும் மடங்களில் கடைப்பிடிக்கப்படும் பாரம்பரிய படிநிலை நிர்வாக முறை, *வேதங்களுடன்* உருவாக்கப்பட்டவை. இந்த அமைப்பில் பெரியவர்கள் தங்களை காட்டிலும் வயதில் சிரியவர்களை அன்புடன் வழிநடத்துகிறார்கள். அதனால் அந்த அமைப்பில் எப்போதும் மரியாதை, அன்பு கலந்த இணக்கம் மற்றும் மனங்களின் ஒற்றுமை நிலவுகிறது. கடுஞ்சொற்களை கேட்பது அல்லது மனதை புண்படுத்துவது அல்லது வாக்குவாதங்கள் தூண்டப்படுவது அல்லது நேர்மையான கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் இருப்பது போன்றவை எப்போதும் நடப்பது இல்லை. இங்கே "அன்பு விதியின் சாரமாக" விளங்குகிறது, மற்றும் முதியவர்களிடம் இருந்து வெளிப்படும் ஆத்மார்த்தமான உணர்ச்சிகள் எதிர்கால முதியவர்களுக்கு பாதுகாப்பு மாற்றும் ஆதரவை வழங்குகிறது. நாங்கள் உருவாக்கும் பாதுகாப்பு மற்றும் பாசம் கலந்த சமூகத்தில், சர்ச்சை மீது புத்திசாலித்தனம் ஆதிக்கம் செலுத்துகிறது மற்றும் விவேகம் மட்டும் உறுதியான விதியாக விளங்குகிறது. இவ்வாறு குடும்பம் அல்லது மடத்தில் *பிராண* சக்தியை பயன்படுத்தும் காந்தத்தன்மை பராமரிக்கப்பட்டு, அது நிலையான வெற்றி மற்றும் ஆன்மீக உணர்வை பெறுவதற்கு தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டு வருகிறது. ¶நான் எனது சொந்த அனுபவத்தில் இருந்து வேற்றுமைக்கு அனுமதி கொடுக்காமல் இருப்பது ஒரு யதார்த்தமான கொள்கை என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். மேலும் இந்த *சாதனாவை* ஆன்மீக குழுக்கள் மற்றும் தனிநபர்கள் என்று எல்லோரும் பின்பற்ற வேண்டும். "எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு அதிக தைரியம் தேவைப்படும்," என்று வழக்கமாக என் *சத்குரு* சிவ யோகசுவாமி சொல்லிக்கொண்டு இருப்பார். ஆனால் பெரும்பாலான மக்கள் துக்ககரமாக இருப்பதாக தோன்றுகிறது. இதைப்பற்றி நீங்கள் சிந்தித்து பாருங்கள். அவர்கள் தீர்வு காணப்படாத

மனவெழுச்சியின் முடிவற்ற சுழற்சியில் சிக்கி, நாவன்மை நிறைந்து பதில் சொல்ல முடியாத கேள்விக்கணைகளை தொடுத்து தங்களை வருத்திக்கொண்டும், ஏதாவது ஒரு காரணத்திற்கு ஆத்திரம் அடைந்து மற்றவர்களை புண்படுத்தியும் வாழ்ந்து வருகின்றனர். இன்றைய சராசரி குடும்பத்தை பார்க்கும் போது, அது குழப்பமான நபர்களின் கலவையாக இருக்கிறது.

புதன்கிழமை

பாடம் 297

காந்தத்தன்மையை

பராமரித்தல்

இன்றைய பெற்றோர்கள் முன்பு எப்போதும் போல அல்லாமல், தங்கள் குடும்பத்தில் ஒற்றுமையை காப்பதற்கு அதிக கவனமாக இருக்கின்றனர். *பிராண* சக்திகள் இயக்கத்தில் இணக்கத்தை பராமரிப்பது முக்கியமானதாக எனக்கு தோன்றுகிறது. உண்மையான குடும்பம் என்பது தங்களுக்குள் அன்பு செலுத்துவதன் மூலம், நேர்மறை *பிராண* சக்தியை பயன்படுத்தும் காந்தத்தன்மையின் மூலம் இணைந்து இருக்கும் ஒரு குலத்து மக்களை குறிப்பிடுகிறது. குடும்பத்தில் மருமகன்கள் மற்றும் மருமகள்கள் சேரும் போது, அவர்களின் *பிராண* சக்தி காந்தத்தன்மையும் அதனுடன் கலக்கிறது மற்றும் அந்த மணமகள்-மணமகன் மற்றும் மணமகள்-மாமியார் மத்தியில் ஜோதிட பொருத்தம் நன்றாக இருந்தால், அந்த குடும்பம் சமநிலையுடன் விரிவாக்கம் பெறுகிறது. அவர்கள் வீடுகளில் *பிராண* சக்திகள் அன்போடு நேர்மறையான முறையில் இயங்குவதற்கு, இந்த காந்தத்தன்மை வேற்றுமையை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிக்காமல் இருக்கும் கொள்கையின் மூலம் பராமரிக்கப்படுகிறது. மனிதர்களுக்கு மத்தியில் நடைபெறும் வாக்குவாதம், கோபமான வார்த்தைகள் அல்லது மேலும் மோசமான சச்சரவுகள் மூலம் *பிராண* சக்தியின் ஓட்டத்தில் இடையூறு ஏற்பட்டால், இரவு உறங்குவதற்கு முன்பாக சம்பத்தப்பட்ட நபர்களுக்கு மத்தியில் அந்த விஷயத்தை தீர்வு காண வேண்டும் அல்லது விழித்து இருந்து அதற்கு தீர்வு காண வேண்டும். ¶*பிராண* சக்தி என்றால் என்ன*? பிராணன்* என்பது உயிர் சக்தியை குறிக்கிறது. உள்ளுணர்வு, அறிவுணர்வு மற்றும் மெய்ஞ்ஞானம் என்று மனதில் மூன்று நிலைகள் உள்ளன. அவை உள்ளுணர்வு *பிராணன்*, அறிவுணர்வு பிராணன் மற்றும் சுத்தமான மெய்ஞ்ஞான *பிராணன்* அல்லது ஆன்மீக சக்தி என்று ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மூன்று விதமான *பிராண* சக்திகளை உள்ளடக்கியுள்ளன. உள்ளுணர்வு *பிராண* சக்திகள் நமது உணவை செரிமானம் செய்து தூல உடலின் இயக்கங்களை பராமரிக்கின்றன. அவை

அச்சம், கோபம், பொறாமை மற்றும் மற்ற இழிவான தூண்டுதல்கள் போன்ற மனவெழுச்சிகளும் தோன்ற காரணமாக இருக்கின்றன. உள்ளுணர்வு சக்திகள் மனம், மனவெழுச்சிகள் மற்றும் நடத்தையை பாதிக்கின்றன. நன்றாக வளர்ச்சிப்பெற்ற *பிராண* சக்திகள் இல்லாத போது, மனதின் மீது கீழ்நிலை இயல்பு ஆதிக்கம் செலுத்துகிறது மற்றும் அதன் மீது மற்றவர்கள் எளிதில் பெரும்பாலும் எதிர்மறையாக தாக்கம் ஏற்படுத்த முடிகிறது. இதன் காரணமாகவே நல்ல நினைவாற்றல், அறிவுக்கூர்மை மற்றும் மன உறுதி வடிவில் குழந்தைகளின் அறிவுணர்வு *பிராண* சக்திகள் வளர்ச்சி பெறும் வரை, ஆரம்ப காலங்களில் அவர்களை கவனமாக கண்காணிக்க வேண்டும். மெய்ஞ்ஞான *பிராண* சக்திகள் ஆக்கத்திறன், உத்வேகம் மற்றும் இயலுணர்வை வெளிக்கொண்டு வருகின்றன. பல்வேறு விதமான தெய்வபக்திகள் மற்றும் *சாதனா* மூலம், இந்த சக்திகள் நாடப்பட்டு பேணி வளர்க்கப்படுகின்றன. ¶பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டிலும், மூன்று வகை *பிராண* சக்திகளும் செயல்படுகின்றன. சிறிய குழந்தைகள் பெரும்பாலும் உள்ளுணர்வு *பிராண* சக்திகளில் செயல்படுகின்றனர். மாணவர்கள் அறிவுணர்வு *பிராண* சக்திகளில் செயல்படுகின்றனர். பொதுவாக பெற்றோர்கள் தங்களுக்குள் மூன்று *பிராண* சக்திகளையும் சமன் செய்து, வீட்டிற்குள் ஆன்மாவின் பிரபஞ்ச மாற்றும் ஆன்மீக கதிர்களை ஈர்க்கும் சமயத்தில் மட்டும், ஆன்மீக *பிராண* சக்திகளுடன் செயல்படுகின்றனர். ¶வீட்டிற்குள் இயங்கும் *பிராண* சக்திகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, அவற்றை அன்றாடம் இணக்கத்துடன் இயக்குவது குடும்பத் தலைவர் மற்றும் அவர் மனைவியின் கடமை ஆகும். அவர்கள் அதை எவ்வாறு செயல்படுத்துகிறார்கள்? அவர்கள் பிரார்த்தனை மற்றும் தொடர்ந்து அதிகாலையில் செய்யும் தினசரி *சாதனா* மூலம் மெய்ஞ்ஞான மனதில் இருந்து விவேகம் மற்றும் மற்ற சுத்தமான ஆன்மீக *பிராண* சக்திகளை கொண்டு வருவதன் வாயிலாக செயல்படுத்துகிறார்கள். எல்லோரும் அன்பில் பிணைந்து இருக்கும் போது, குடும்பத்தில் எல்லாம் மிகவும் சுமூகமாக இயங்குகின்றன.

வியாழக்கிழமை

பாடம் 298

உங்களுக்குள் அமைதியை

தக்க வைத்து இருத்தல்

வீட்டில் *பிராண* சக்திகள் சீராக இயங்குவதையும், பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறுவர் சிறுமியர் பாதுகாப்பாக இருப்பதையும் கவனிப்பது, குடும்பத்தில் இருக்கும் மூத்த குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பொறுப்பாகவும்

விளங்குகிறது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இளைஞர்கள் உள்ளுணர்வு மனதில் இருந்து புதிதாக வெளிவந்து இருப்பதால், அவர்கள் தடைகளை உடைத்துக்கொண்டு அறிவுணர்வில் நுழைந்து, புதிய *பிராண* சக்திகளை அனுபவித்துக் கொண்டு, தங்களுக்காக சிந்திக்க ஆரம்பித்து இருப்பார்கள். இது வேற்றுமைக்கு தூண்டுதலாக விளங்கும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிக்காத தத்துவ கண்ணோட்டத்திற்குள், பெரியவர்கள் அந்த இளைஞர்களை வழிநடத்துவதற்கு சரியான தருணமாக இருக்கும். இந்த தத்துவத்தை ஏற்றுக்கொண்ட இளைஞர்கள், பாசம் நிறைந்த உறவுகளுக்கு அதிக மதிப்பு அளிக்கின்றனர். "ஆமாம், நாங்கள் உள்ளுணர்வு மனதின் மீது கட்டுப்பாட்டை பெற்று இருக்கிறோம்," மற்றும் "இல்லை, அந்த உள்ளுணர்வு மனம் எங்கள் வீட்டில், எங்கள் நண்பர்கள் மத்தியில் அல்லது சமூகத்துடன் எங்கள் தொடர்புகளில் கட்டுக்கு அடங்காமல் இயங்குவதை எங்களால் அனுமதிக்க முடியாது," என்று சொல்லும் அளவிற்கு அவர்கள் முயற்சி செய்து அறிந்து இருக்கிறார்கள். அவர்கள் *பிராண* சக்திகளை இணக்கத்துடன் இயக்குவதற்கு சரியான நபர்களாக இருப்பார்கள். ¶அடுத்த கட்டமாக வேற்றுமையை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிக்காமல் இருக்கும் பண்பு, நமது ஆன்மாவில் இருந்து மிகவும் இயல்பாக விரிவாக்கம் பெறுகிறது. துக்கத்துடன் இருப்பதையும், உங்களுக்குள் நடைபெறும் கொந்தளிப்பையும் வெற்றிகொள்ள உங்கள் வலிமையை பயன்படுத்துங்கள் என்று எனது குரு வழங்கிய ஞானம் நமக்கு நினைவுக்கு வருகிறது. இதை எப்படி சாதிப்பது? "நான் சிறு வயதில் அனுபவித்த உள்ளுணர்வு மனமானது, என்னை ஏதாவது ஒரு வகையில் கட்டுப்படுத்துவதை அனுமதிக்க மாட்டேன். கோபத்திற்கு நான் அனுமதி அளிக்க மாட்டேன். என் சிந்தனையில் பொறாமை தலைதூக்கி, அதன் மூலம் மற்றவர்களை காட்டிலும் நான் உயர்வாகவோ அல்லது தாழ்வாகவோ கருதுவதை நான் அனுமதிக்க மாட்டேன். எனது ஒளி உடலில் அச்சம் வியாபிப்பதற்கு நான் அனுமதி அளிக்கமாட்டேன்." என்று நாம் தைரியமாக உறுதிமொழி அளிக்கவேண்டும். ¶அதன் பிறகு தினமும் உறங்குவதற்கு முன்பாக, "நெருப்பின் துணையுடன் அடியுணர்வை சுத்தம் செய்யும்" *வாசன தாக தந்திரத்தை* செய்து தீர்வு காணப்படாத விஷயங்களை ஒழுங்குப்படுத்துங்கள். அடியுணர்வு பண்புகள், உணர்ச்சிப்பூர்வமான கருத்துக்கள் அல்லது மறைவான மனப்போக்குகளாக இருக்கும் *வாசனாக்கள்*, இயக்கும் விசைகளாக செயல்பட்டு ஒருவரது மனநிலைகள் மற்றும் செயல்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி ஊக்குவிக்கின்றன. அடியுணர்வு பதிவுகள் அல்லது *சம்ஸ்காரங்களின்* கூட்டமைப்பாக இருக்கும் *வாசனாக்கள்*, தொடர்ச்சியான அல்லது வலுவான அனுபவத்தின் மூலம் உருவாக்கப்படுகின்றன. *தாக* என்றால் நெருப்பால் எரிப்பதை குறிக்கிறது. *தந்திர* என்பது ஒரு யுத்தி அல்லது செய்முறையை குறிக்கிறது. இது அடியுணர்வு, உள்ளுணர்வு-அறிவுணர்வு மனதில் அதிர்ந்துக்கொண்டு

இருக்கும் பிரச்சனைகள் மற்றும் துன்பமான அல்லது இன்பமான மனவெழுச்சி நிகழ்வுகளை ஒரு காகிதத்தில் தெளிவாக எழுதுவதை குறிக்கிறது. அறிவுணர்வு மனம் அல்லது உணர்வுள்ள மனம் வழியாக கண்கள் எழுதப்பட்ட பிரச்சனைகளை பார்க்கும் போது, அந்த நினைவுடன் பொருந்தி இருக்கும் மனவெழுச்சி குறைய தொடங்குகிறது. அதன் பிறகு வாழ்க்கையின் சில அடியுணர்வு சுமைகளை முழுமையாக விடுவிப்பதற்கு, அந்த காகிதத்தை கசக்கி, புகைப்போக்கியை போன்ற ஒரு சாதாரண நெருப்பில் எரித்து, அந்த காகிதம் எரியும் போது ஒடுக்கப்பட்ட மனவெழுச்சிகளை அகற்றுங்கள். ¶இந்த எளிமையான *தந்திரம்* மனவெழுச்சி, ஆத்திரங்கள், புண்பட்ட உணர்வுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் உட்பட நினைவு மற்றும் மனவெழுச்சி இடைவெளிகளில் இருந்து *வாசனாக்களை* அகற்றுகிறது. விரைவில் மெய்ஞ்ஞான *பிராண* சக்திகள் இயங்க தொடங்கி, நமது இயல்பான மற்றும் அமைதியான ஆன்மா வெளிப்படும் போது, "நான் ஏன் இந்த சாதாரண நிகழ்ச்சியை நினைத்து எப்போதும் கவலையில் இருந்தேன்?" என்ற வியப்பில் இருப்போம். ¶நாம் உறங்குவதற்கு முன்பாக நமக்குள் இருக்கும் வேற்றுமையை உருவாக்கும் அல்லது சிக்கலான விஷயங்களை ஒழுங்குபடுத்தவில்லை என்றால் என்னவாகும்? அந்த ஒழுங்கற்ற நிலை விதைக்கு செல்கிறது, மற்றும் அனுபவப்பூர்வமாக அந்த சூழ்நிலையை உருவாக்கியதால் தடுமாற்றம் அடைந்த சிந்தனை அலைகள் அல்லது *விருத்திகள்*, இந்த பிறவியில் பல வருடங்கள் கழித்து அல்லது இன்னொரு பிறவியில் முளை விடுவதற்கு ஒரு *வாசனாவை* உருவாக்கும். தினமும் மனதை பராமரிப்பதற்கு நிச்சயமாக ஒழுக்கம் தேவைப்படும். இதைக் காட்டிலும் கோபம், பொறாமை, குற்ற உணர்வு, மனச்சோர்வு அல்லது தன்னிரக்கத்துடன் உறங்க செல்வது சுலபமாக இருக்கும். ¶வேற்றுமையை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிக்காமல் இருக்கும் கொள்கையை ஒருவர் தனக்கும், தனது குடும்பத்திற்கும் அல்லது ஒரு குழுவிலும் பயன்படுத்தலாம். இந்த வழக்கத்தை இரு வழிகளில் உருவாக்கலாம். முதலில் உங்களுடன் தொடங்கி பிறகு அதை மற்றவர்களிடம் அமுல்படுத்துங்கள். அல்லது மற்றவர்களுடன் உங்களுக்கு இருக்கும் தொடர்புகளுடன் தொடங்கி, *பிராண* சக்திகள் சிறிது சீர்குலையும் போது அதை ஒழுங்குப்படுத்துங்கள், மற்றும் இறுதியாக இது தான் வாழ்க்கையை வாழும் முறை என்று நீங்கள் புரிந்துகொண்டதும், நீங்கள் அதை உங்களுக்குள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். சனாதன தர்மத்தின் அடிப்படை கோட்பாடுகளாக இருக்கும் எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் சக்தி, காரண காரியம், கர்மவினை கணக்கு தீரும் வரை தூல பிறவி எடுக்கவேண்டிய அவசியம் ஆகியவற்றை ஒருவர் முழுமையாக ஏற்றுக்கொண்ட பிறகு, வேற்றுமையை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கு அனுமதி அளிக்காமல் இருப்பது மட்டுமே ஒரே வழியாக விளங்குகிறது. ¶பின்வரும் *அதர்வண வேதம்* மந்திரத்தின் உற்சாகம் தரும் சொற்களை நினைவில் வைத்து இருங்கள்.

“உற்றார்களுடனும் மற்றவர்களுடனும் எங்களுக்கு உடன்பாடு இருக்கட்டும். அசுவினிகளே, நீங்கள் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு மனதை உருவாக்குங்கள். நாங்கள் அறிவுடனும் மனதுடனும் ஐக்கியமாக வேண்டும். நாங்கள் எங்களுக்குள் இருக்கும் தெய்வீக உணர்வுடன் சண்டையிடாமல் இருக்க வேண்டும்.” (7.52.1-2. ஹிவே, ப 205).

வெள்ளிக்கிழமை

பாடம் 299

உறங்குவதற்கு முன்பாக

எல்லா வேதனைகளையும் ஒழுங்குபடுத்துங்கள்

ஒரு சாதகரின் வாழ்க்கையில் வேற்றுமையை உருவாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை தோன்றும் போது, அது அவரது மனதில் ஒரு ஆழமான கரிய திரையை உருவாக்கி, அவர் உட்புறமாக நாடும் முன்னேற்றம் பொருந்திய செய்முறையில் தடையை ஏற்படுத்துகிறது. அவர் அதை அப்படியே மனதில் தங்கச் செய்து, பிறகு அதை மறந்து வாழ்க்கையில் மற்ற வேலைகள் மீது கவனம் செலுத்த வேண்டுமா? அது தற்காலிகமான நிவாரணமாக இருக்கும். இன்னொரு முறை அதிக ஆழமான கரிய திரையாக எதிர் *கர்மவினை* தோன்றி அந்த சாதகரின் நாட்டத்தை முழுமையாக நிறுத்தும் வரை, அது ஒரு தற்காலிக நிவாரணமாக இருக்கும். சாதகன் இந்த இரண்டாவது சுற்றின் போது, கடந்தகால காரணங்களின் விளைவுகளை புரிந்துக்கொண்டு *ஜபம், பிராணாயாமம்* மற்றும் உடலை வருத்தும் தவம் மற்றும் *காவடி* போன்ற பக்திமுறைகளை செய்ய தொடங்கி, கரிய திரையை அகற்றுமாறு சிவபெருமானிடம் மன்றாடுகிறார். ¶பிரச்சனைகளை ஒதுக்கி வைத்தால், கரிய திரைகள் நிலைத்து இருப்பதை உணர்ந்த விவேகமான சாதகன் அவற்றை அகற்ற முயற்சி செய்கிறார். அதே சமயத்தில் முன்னேற்றம் பொருந்திய தனது வாழ்க்கைமுறையில் சில தடைகள் தோன்றுவதை அவர் உணர்கிறார். அதனால் அதிக விவேகத்துடன் இருக்கும் சாதகன் பிரச்சனைகள் தோன்றும் போது, அவற்றை ஒதுக்கி வைக்காமல் சாமர்த்தியமாக கையாண்டு, காயங்கள் தீவிரமடைவதற்கு முன்பாக அவற்றை விரைவில் குணப்படுத்துகிறார். ஒருவர் ஞானோதய பாதையில் அதிக விவேகத்துடன் இருப்பதற்கு, அடக்கமாக இருக்கும் *சித்தியை* பெற்று இருக்கவேண்டும். ¶வீட்டில் தாய் மற்றும் தந்தைக்கு மத்தியில் ஒரு வாக்குவாதம் தோன்றும் போது, அது குழந்தைகளை பாதிக்கிறது. அவர்களது தாய் மற்றும் தந்தையின் *இடா* மற்றும் *பிங்கலா* பிராணசக்திகளை சார்ந்து வாழ்கின்றனர். அதிக விவேகமாக இருக்கும் பெற்றோர்கள் இரவு உறங்குவதற்கு முன்பாக தங்கள் கருத்து வேறுபாடுகளை

நீக்கிக் கொள்கின்றனர். அதற்காக அவர்கள் இரவு முழுவதும் விழித்து இருந்து சமரசம் செய்து கொள்கின்றனர். உறங்குவதற்கு முன்பாக கருத்து வேறுபாடுகளை சரிசெய்யவில்லை என்றால், அதன் மூலம் முதல் பிரிவு நடைப்பெற்று இருக்கும். ¶வீட்டில் நடைபெறும் கொடுமைகள் ஒரு கடினமான பிரச்சனையாக இருந்தாலும், அதை வெளிப்படையாக எதிர்கொள்ள வேண்டும். ஒரு ஆண் தன் மனைவியை அல்லது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை துன்புறுத்தும் செயலில் ஈடுபடுவதை எதிர்க்க வேண்டும் என்று நான் உங்கள் எல்லோரிடமும் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஒரு முடிவு வரவேண்டும். ஒரு திருமணத்தில் அவ்வப்போது தோன்றும் கருத்து வேறுபாடுகளை சரி செய்வதற்கு, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் இசைந்து கொடுக்க வேண்டும். இதை செய்வதற்கு, மகாதேவர்களின் திருவடிகள் அல்லது பூஜை அறை சிறந்த இடமாக இருக்கும். இதற்கு வேறு எந்த தீர்வும் இல்லை. இது தான் ஒரே வழி. இசைந்து கொடுப்பதற்கு, அவர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். ஒருவர் மற்றொருவரின் கண்ணோட்டத்தில் மீது கவனம் செலுத்தி, தங்களுக்குள் ஏற்பட்ட வேறுபாட்டில் இருவரும் உடன்பட்டு இருக்கு கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும். *உடன்பாடு* என்பது முக்கியமான சொல். தாய் மற்றும் தந்தையாக அல்லது எதிர்காலத்தில் தாய் மற்றும் தந்தையாக இருக்கவிருக்கிற கணவன் மற்றும் மனைவியின் உறவு, அவர்களின் முரணான கருத்துக்களை காட்டிலும் அதிக நாள் நீடிக்கும் தாக்கத்தை கொண்டுள்ளது. சில உறவுகள் எளிதாக இருக்கும் மற்றும் சில கடினமாக இருக்கும். ஆனால் இரவு உறங்குவதற்கு முன்பாக முரண்பாடுகளை நீக்குவது தான் குறிக்கோள். சில தம்பதிகள் முரண்பாடுகளை நீக்குவதற்கு அதிக முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கும். ¶ஒரே மாதிரியான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவதால் பழக்கங்கள் உருவாகின்றன. நீங்கள் உங்கள் பெற்றோர்கள், சொந்தங்கள், அக்கம்பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள், நண்பர்கள் அல்லது சமூகத்தில் இருந்து எதை பார்த்து அல்லது கேட்டு இருந்தாலும், இரவு உறங்குவதற்கு முன்பாக, தேவைப்பட்டால் அதிக நேரம் விழித்து இருந்து உங்கள் முரண்பாடுகளை ஒழுங்குப்படுத்துங்கள். இதை தொடர்ந்து செய்வதன் மூலம், ஒரு புதிய பழக்கம் உருவாக்கப்படுகிறது. பதட்டம், கோபம், அச்சம் அல்லது தவறான எண்ணங்களுடன் உறங்க வேண்டாம். இந்த விவேகமான பரிகாரத்தில் இருக்கும் அசௌகரியம் நமது வாக்கு, சிந்தனை மற்றும் செயல்களில் நாம் ஒவ்வொருவரும் கவனமாக இருக்க காரணமாக விளங்கும்.

சனிக்கிழமை

பாடம் 300

அன்பில் இருக்கும்

பல்வேறு நிலைகள்

முரண்பாடுகள் மற்றும் வேறுபாடுகளுக்கு அனுமதி அளிக்காமல் வாழ்வது எப்படி என்று யோசிப்பவர்கள், மக்கள் தாங்கள் அன்பு செலுத்துபவர்கள் மீது எப்போதும் பொறுமையுடன் நடந்துகொள்கிறார்கள் என்பதை மட்டும் உணர வேண்டும். அன்புள்ளம் கொண்ட ஒரு நல்ல தாய், தனது பச்சிளம் குழந்தை தனக்கு தினமும் வழங்கும் சிறிய தொல்லைகளை பொறுத்துக் கொள்கிறாள். அதைப்போல அன்புள்ளம் கொண்ட மனைவி, தனது கணவன் செய்யும் தவறுகள் மற்றும் செயல்களை பொறுத்துக்கொள்கிறாள். ஒரு உண்மையான நண்பன் தனது இன்னொரு நண்பன் பேசும் கடும் சொற்கள் மற்றும் குறைபாடுகளை பொறுத்துக் கொள்கிறார். நாம் அன்பு செலுத்த கற்றுக் கொண்டால், நாம் அன்பு செலுத்துபவர் செய்யும் தவறுகளை பொறுத்துக் கொள்ளவும் தானாக கற்றுக் கொள்கிறோம். இதைப்பற்றி *திருக்குறள்* நமக்கு நினைவூட்டும் கருத்தை பார்க்கலாம்,
"பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்" (805). ¶அன்பு பல வடிவங்களில் வெளிவருகிறது. முதலாவதாக காந்த ஈர்ப்பை கொண்ட தூல அன்பு இருக்கிறது. இது இருமையை சார்ந்த அன்பாக இருக்கிறது, ஏனென்றால் நீங்கள் அன்பு செலுத்தும் நபரும் அன்பை வெளிப்படுத்தினால், நீங்கள் அதிக மகிழ்ச்சியை பெறுகிறீர்கள், ஆனால் அவர் அன்பை வெளிப்படுத்தவில்லை என்றால், நீங்கள் அவரை விரும்புவது இல்லை. அது எல்லாம் உள்ளடக்கிய முழுமையான அன்பு இல்லை. இந்த அன்பு மிகவும் குறுகிய நோக்குடன் இருக்கிறது. அது அன்பின் இரண்டாம் வகையாக இருக்கும் உணர்வுப்பூர்வமான அன்புடன் சிறிது விரிவாக்கம் பெறுகிறது. ஒருவர் உங்களை மகிழ்விக்கிறார் என்பதால் நீங்கள் அவர் மீது அன்பு செலுத்துகிறீர்கள், அல்லது மற்றவர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் அன்பை வெளிப்படுத்துகிறீர்கள். ஆனால் ஒருவர் உங்களை மகிழ்விக்கவில்லை என்றாலோ அல்லது நீங்கள் இன்னொருவரை மகிழ்விக்க முயற்சி செய்கிறீர்கள், ஆனால் அவர் மகிழவில்லை என்றாலோ, நீங்கள் அவரை விரும்புவது இல்லை. இந்த அன்பும் இருமையை சார்ந்து இருக்கிறது. அது எல்லாம் உள்ளடக்கிய முழுமையான அன்பு இல்லை. தூல அன்பும் உணர்வுப்பூர்வமான அன்பும் நண்பர்கள் போன்றவை. ¶இதன் பிறகு அறிவுணர்வு இருக்கிறது. அது தோன்றியதும் மற்ற இரண்டையும் அழித்து விடுகிறது. நீங்கள் அறிவுணர்வுடன் ஒருவர் மீது அன்பு செலுத்துகிறீர்கள். அவருக்கு உங்களுடன் உடன்பாடு ஏற்படவில்லை என்றால், நீங்கள் அவரை வெறுக்க ஆரம்பிக்கிறீர்கள். அத்துடன் தூல அன்பு மற்றும் உணர்வுப்பூர்வமான அன்பும் தடைப்படுகின்றன. வாக்குவாதங்கள் தொடங்கி, பரிகாசங்களும் ஆரம்பிக்கின்றன. இவை அனைத்தும் குறைபாடுள்ள அன்பின்

வடிவங்கள் ஆகும். இதனை மக்கள் தினமும் எதிர்கொள்கிறார்கள். ¶ஆன்மீக அன்பு நான்காவது வகை. வெளிவருவதற்கு கடினமாக இருக்கும் இந்த வகை அன்பு *ஆனந்தமய கோசத்தில்* இருந்து வெளிப்படுகிறது. தூல அன்பு, உணர்ச்சிப்பூர்வமான அன்பு மற்றும் மனம் சார்ந்த அன்பு ஆகியவற்றை கடந்ததாக ஆன்மீக அன்பு விளங்குகிறது. அது அனைத்து வகையான உணர்ச்சிகளுக்கு அதீதமாக விளங்குகிறது. அதற்கு சொந்தமாக இருக்கும் உணர்ச்சி பேரின்பம் என்று அழைக்கப்படுகிறது. அது சிவபெருமானிடம் இருந்து உங்கள் உடல் வழியாக, உங்கள் மனம் வழியாக, உங்கள் உணர்ச்சிகள் வழியாக நிரந்தரமாக பாய்ந்து செல்லும் சக்தியை குறிக்கிறது. நிரந்தரமாக பாய்ந்து செல்லும் அந்த சக்தியில் மூழ்கி இருக்கும் போது, "நான் உங்கள் மீது அன்பு செலுத்துகிறேன்" என்று நீங்கள் எல்லோரிடமும் மனப்பூர்வமாக சொல்லலாம். அதற்கு என்ன அர்த்தம்? *உங்கள்* என்பது சிவபெருமானை குறிக்கிறது, ஏனென்றால் நீங்கள் எல்லோருக்குள்ளும் சிவபெருமானை காண்கிறீர்கள். நீங்கள் அதை காணும் போது எதை காண்கிறீர்கள்? நீங்கள் உடலை கவனிக்கவில்லை. நீங்கள் அறிவை புகழவோ இகழவோ இல்லை. நீங்கள் விரும்பினாலும் விரும்பவில்லை என்றாலும், மனவெழுச்சிகள் மீதும் அக்கறை செலுத்துவது இல்லை. ஏனென்றால் நீங்கள் அவர்களின் கண்களில் இருந்து, ஒளி உடலில் இருந்து, சருமத்தில் இருந்து சிவபெருமான் வெளிவருவதை காண்கிறீர்கள். சிவபெருமான் அங்கே இருக்கிறார், மற்றும் நீங்கள் சிவனோடு வாழ்ந்து வருகிறீர்கள். ¶மகாதேவர்களில் சிறந்து விளங்கும் இந்த உன்னதமான பரமாத்துமாவிற்கு ஒரு வரையறை இருக்கிறது. அவர் உங்களிடம் இருந்து அல்லது வேறு ஒருவரிடம் இருந்து தன்னை விலகிக்கொள்ள முடிவதில்லை. ஆகவே நீங்கள் உங்களுக்குள், "நான் உன் மீது அன்பு செலுத்துகிறேன்," என்று கூறிக்கொண்டு, "*உன்* என்பதற்கு என்ன பொருள்?" என்று உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். *உன்* என்பது நீங்கள் மனித உடலை விரும்புகிறீர்கள் என்பதை குறிக்கிறதா? இல்லை. *உன்* என்பது நீங்கள் மனித உணர்ச்சிகளை விரும்புகிறீர்கள் என்பதை குறிக்கிறதா? இல்லை. *உன்* என்பது நீங்கள் மனித அறிவை விரும்புகிறீர்கள் என்பதை குறிக்கிறதா? இல்லை. உங்களுக்கு எப்போதும் திருப்தி அளித்து, எப்போதும் உங்களுடன் உடன்பாட்டுடன் இருந்து, உங்களை எப்போதும் வேதனை அளிக்காமல், உங்களை விட்டு எப்போதும் விலகாமல் இருக்கும் ஒருவரை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை *உன்* என்ற சொல் குறிக்கிறதா? இல்லை. அது நீங்கள் அவர்கள் ஆன்மா மீது அன்பு செலுத்துகிறீர்கள் என்பதை குறிக்கிறது. அவர்களுக்குள் இருக்கும் சிவபெருமான் மீது அன்பு செலுத்துகிறீர்கள் என்பதை குறிக்கிறது. அவர்கள் கண்களில் தென்படும் ஒளி சிவபெருமானின் ஒளி ஆகும். அவர்கள் சிந்தனைகளை பிரகாசிக்க செய்யும் ஒளி சிவபெருமானின் ஒளி ஆகும், மற்றும் அதன் மீது தான் நீங்கள் அன்பு செலுத்துகிறீர்கள். அந்த அன்பு எல்லாம் உள்ளடக்கி முழுமையாக இருக்கிறது.

அந்த அன்பு நிறைவற்று, அரைகுறையாக உங்களுக்கு திருப்தி அளிக்க வழங்கப்படும் சிறிய அளவு அன்பு இல்லை. அந்த அன்பில் காந்த்தன்மை இருப்பதில்லை. அது அறிவுணர்வு அன்பு இல்லை. நீங்கள் அன்பு செலுத்தும் நபர் மீது எந்த நிபந்தனைகளையும் விதிப்பது இல்லை. நீங்கள் பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்காமல், அன்பு செலுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்கிறீர்கள். ¶ஆங்கிலத்தில் ஆன்மீக அன்பை குறிப்பதற்கு ஒரு பிரத்யேகமான சொல் எதுவும் இல்லை. சமஸ்கிருதத்தில் தெய்வீக அன்பை குறிக்க *பிரேம* என்ற சொல் இருக்கிறது. அதனால் "நான் உன் மீது அன்பு செலுத்துகிறேன்," என்று கூறும் போது, எல்லாம் இணக்கத்துடனும் ஒழுங்குமுறையுடனும் இருக்கும் இந்த நிறைவான பிரபஞ்சம் முழுவதும் பரவி, எல்லாம் உள்ளடக்கிய இந்த முழுமையான அன்புடன், நாம் நமது சிந்தனையை பொருத்திக்கொள்ள வேண்டும். அது இணக்கம் இல்லாததாக தோன்றினாலும், அது உண்மையில் இணக்கத்துடன் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள், ஏனென்றால் நீங்கள் இருக்கும் உணர்வு நிலையில் இணக்கம் இருக்கிறது, அமைதி இருக்கிறது, பேரின்பம் இருக்கிறது. இதனால் உங்கள் சைவ சித்தாந்த சமயம், உங்கள் தினசரி வாழ்க்கையில் செயல்பட முடிகிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 301

உலகிற்கு நம்பிக்கை நட்சத்திரமாக

விளங்கும் அன்பு

உங்கள் சைவ சித்தாந்த சமயத்தை பின்பற்றி, காலையும் மாலையும் வாழ முடியும். நீங்கள் மற்றவர்களிடம் இருந்து பிரதிபலனாக எதையாவது எதிர்பார்த்து இருக்கிறீர்களா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். ஒரு நபரின் எந்த அம்சத்தின் மீது நீங்கள் அன்பு செலுத்துகிறீர்கள் என்பதை முடிவு செய்ய வேண்டும். நீங்கள் ஆன்மா மீது அன்பு செலுத்தினால், அந்த நபர் யாராக இருந்தாலும், எந்த தொழிலை செய்து வந்தாலும், எதை பேசினாலும், நீங்கள் அவரை அறிந்து இருந்தாலும் அறியாமல் இருந்தாலும், அவர் மனித உருவில் நடந்துகொண்டு இருக்கும் சிவபெருமானின் ஒளியாக, சிவபெருமானின் ஆற்றலாக, சிவபெருமானின் அன்பாக இருப்பதால், நீங்கள் அந்த முழுமையான மனிதர் மீது அன்பு செலுத்துகிறீர்கள். இந்த வகையான அன்பு உங்களை எல்லோருடனும் இணக்கத்தில் வைத்து இருக்கிறது. ¶அன்பு பல வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. அந்த ஒரு ஆற்றல், அந்த ஒரு அதிர்வை இயக்கத்தில் வைத்து இருப்பதற்கு, நீங்கள் அதனுடன் செயல்படவேண்டும். எல்லோரிடமும் மனித மனவெழுச்சிகள், உள்ளுணர்வு மனவெழுச்சிகள் உள்ளன. அன்பு அந்த

மனவெழுச்சிகளை கட்டுப்படுத்துகிறது. அன்பில்லாத சிந்தனைகள் அன்பில்லாத வார்த்தைகளை உருவாக்கி, அவை அன்பில்லாத செயல்களை உருவாக்குவதாலும், எல்லாம் சிந்தனையில் இருந்து தொடங்குவதாலும், அன்பு என்கிற அங்கீகாரத்தை நன்றியுணர்வு மற்றும் அன்பான வார்த்தைகள் மூலமாக, அதிலும் குறிப்பாக அன்பான சிந்தனைகள் மூலமாக வெளிப்படுத்த முடியும். அன்பு என்கிற அக மகிழ்ச்சியை நீங்கள் இன்னொருவரிடம் பேணி வளர்க்க விரும்புகிறீர்கள், மற்றும் நீங்கள் இன்னொருவரிடம் அக மகிழ்ச்சியை பேணி வளர்க்க முயற்சியை தொடங்கும் போது, அதை நீங்கள் உங்களுக்காகவும் பெறுகிறீர்கள். நீங்கள் உங்களுக்குள் அக மகிழ்ச்சியை பேணி வளர்க்க மேற்கொள்ளும் முயற்சி நல்ல பலனை தருவது இல்லை. அது ஒரு சுயநலம் கலந்த அணுகுமுறையாக விளங்குகிறது, மற்றும் இதன் மூலம் நீங்கள் உள்ளுணர்வு மனவெழுச்சிகள் மற்றும் கடந்தகாலத்தின் மோசமான நினைவுகளை வெளிக்கொண்டு வருவதற்கு வாய்ப்புள்ளது. அன்பை வெளிப்படுத்தும் போது, அது ஒரு நேர்மையான சூழ்நிலையை உருவாக்குகிறது என்பதை அறிந்துகொள்வதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும், மற்றும் அன்பில்லாத வார்த்தைகள், அன்பில்லாத சிந்தனைகள் மற்றும் பரிகாசத்தில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். பரிகாசம் உறவுகளில் முதல் விரிசலை ஏற்படுத்துகிறது. இன்னொருவரின் இயல்பை மாற்ற முற்படுவதும், ஒரு உறவில் அழிவு ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக்கூடும். நீங்கள் ஒவ்வொருவரையும் அவரது இயல்பான குணத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொதுவாக மக்கள் மற்றவர்கள் அமைத்து வைத்த உதாரணத்தின் அடிப்படையில் தங்களை மாற்றிக் கொள்வார்கள். குழந்தைகள் தங்களுக்காக மற்றவர்கள் அமைத்து வைத்த உதாரணத்தின் மூலம் முதலில் கற்கிறார்கள். அவர்கள் தொடக்கத்தில் அறிவுரைகள் மூலம் கற்காமல், அந்த உதாரணத்தை பின்பற்றி தங்கள் வாழ்நாள் முழுவதும் அதை நிறைவேற்றுகிறார்கள். எல்லோரும் சாதனையாளரை மதிக்கின்றனர். எல்லோருக்கும் இலட்சியமாக ஒரு முன் மாதிரி தேவைப்படுகிறது. அதனால் நீங்கள் ஒருவரை மாற்ற விரும்பினால், நீங்கள் அவருக்கு முன்மாதிரியாக இருங்கள். அதன் பிறகு அவர் உங்களைப் போன்று மாற்றம் பெறுவார், ஆனால் அதற்கு கால அவகாசம் தேவைப்படும். மன்னிக்கும் பண்பும் அன்பாக இருப்பதால், மன்னிக்கும் குணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். நன்றியுணர்வு மற்றும் பாராட்டை வெளிப்படுத்தும் போது, கருணையுடன் இருங்கள் ஏனென்றால் கருணையும் அன்பின் வடிவம் ஆகும். ¶"என்னை மன்னித்து விடு," என்று அன்பு கூறுகிறது. "நன்றி," என்று அன்பு கூறுகிறது. நீங்கள் அன்பு செலுத்துபவர்கள் மீது பெருந்தன்மையுடன் இருப்பதால், அன்பும் பெருந்தன்மையை குறிக்கிறது. உங்களிடம் பெருந்தன்மை இருப்பதால், நீங்கள் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு இருங்கள். கர்மவிதியின் படி, நீங்கள் தருவது எல்லாம் உங்களுக்கு திரும்பி வரும் என்பதால், உங்களால் எதையும் கொடுக்க

முடியாது. நீங்கள் அன்பை கொடுத்தால், அது இரட்டிப்பாகி உங்களுக்கு திரும்பி வரும். அதை வைத்து என்ன செய்வது என்று உங்களுக்கு தெரியாது, அதனால் அதை கொடுத்து விடுங்கள், மற்றும் அதுவும் இரட்டிப்பாகி உங்களுக்கு திரும்பும். மீண்டும் அதை வைத்து என்ன செய்வது என்று தெரியாததால், அதை கொடுத்து விடுங்கள். அது இரட்டிப்பாகி திரும்பி வரும், மற்றும் இதன் மூலம் உங்கள் குடும்பம் செழிக்கத் தொடங்கும். இதனால் சமூகமும் செழிக்கிறது. ¶உலகில் பல தத்துவங்கள், உளவியல் நடவடிக்கைகள் மற்றும் மனநோய் ஆய்வுகள் இருக்கின்றன, ஆனால் உலகம் அன்பின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளது. உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக அன்பு இருப்பதை நாம் எல்லோரும் உணரும் நாள் மிகவும் நமக்கு சிறந்த நாளாக அமையும். நீங்கள் உங்கள் அன்பை வெளிப்படுத்த வழிகளை தேடிக்கொள்வீர்கள். அன்பு என்பது வீட்டை அலங்கரிப்பது, வீட்டிற்கு பூக்களை கொண்டு வருவது, வீட்டில் பூக்களை அழகாக தொடுத்து வைப்பதை குறிக்கிறது. அது அறுசுவை உணவை சமைத்து அதை முறையாக பரிமாறுவதை குறிக்கிறது. அன்பு என்பது வீட்டிற்கு வருபவர்கள் அங்கே தங்கும் போது உற்சாகத்துடன் இருப்பதற்காக, வீட்டை சுத்தமாக மொழுகி வைத்து, வீட்டிற்குள் சுத்தமான காற்றோட்டம் உருவாக்குவதை குறிக்கிறது. அன்பு என்பது பூஜைக்கு தேவையான சுத்தமான தண்ணீர், புதிய மலர்கள் மற்றும் வாசனை பொருட்களை கொண்டு வந்து, தெய்வ விக்ரகங்களை பார்த்து தரிசனம் பெறுபவர்கள் புத்துணர்வு பெறுவதற்காக அவற்றை துடைத்து, பிரகாசமாக வைத்து, புத்தாடைகள் உடுத்துவது என்று பூஜை அறையின் தேவைகளை கவனிப்பதை குறிக்கிறது. நாம் தூல வடிவில் அன்பை பல வழிகளில் வெளிப்படுத்த முடியும். அன்பு என்பது குடும்பம் முழுவதையும் பண்டிகைகளின் போது, கோயிலுக்கு கொண்டு வருகிறது. அன்பு என்பது தினசரி குடும்ப சந்திப்பு, சிறிய பிரச்சனைகளை தீர்வு காண்பது, கருத்துக்களை பேசி பகிர்ந்துகொண்டு, மற்றவர்களின் மனங்களை புரிந்துக்கொண்டு, மற்றவர்கள் எந்த உணர்வு நிலையில் இருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்வதை குறிக்கிறது. அன்பு என்பது பிரச்சனைகள் இருக்கும் நபர்களிடம் பொறுமையாக இருந்து, அந்த பிரச்சனைகளில் இருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை, அவர்களுடன் கலந்துரையாடுவதை குறிக்கிறது. அன்பு என்பது முதியவர்களுக்கு மரியாதை செலுத்துவதை குறிக்கிறது. அன்பு என்பது உங்களுக்கு நீங்கள் மரியாதை செலுத்துவதையும் குறிக்கிறது. உங்களுக்கு சுயமரியாதை இல்லையென்றால் நீங்கள் மற்றவர்களை மதிப்பது கடினமாக இருக்கும். நீங்கள் மற்றவர்களின் மீது அன்பும் மரியாதையும் செலுத்தவில்லை என்றால், உங்களை சுற்றியிருக்கும் உலகுடன் ஒன்றுபட்டு வாழ்வது கடினமாக இருக்கும்.

ஸ்வதர்மாவஷ்யக்தா

सद्धर्मावश्यकता



மதத்தின் அவசியம் என்ன

சாதகன் ரிக் வேத மந்திரங்களின் மூலம் இந்த உலகை அடைகிறான், யாகம், பலி மற்றும் தானம் பற்றி குறிக்கும் யஜூர் வேதத்தின் மூலம் பரவெளியை அடைகிறான், சாம வேதத்தின் மூலம் வித்வான்கள் அறிந்த பிரம்மலோகத்தை அடைகிறான். வித்வான் ஓம்காரத்தினால் மட்டுமே அமைதியாக, வயதாகாத, மரணமற்ற, பயமற்றதாக இருக்கும் பரப்பிரம்மத்தின் லோகத்தை அடைகிறார்.

அதர்வண வேதம், பிரஷ்ன உபநிடதம், 5.7. வேஎ, ப. 775


PEACE

ஜெர்மனியில் ஒரு சகோதரி மற்றும் சகோதரன் வளர்ந்து வருகிறார்கள். சித்திரத்தில் அவர்களுக்கு பின்னணியில் பெர்லின் நகர சூழல் அமைந்துள்ளது. மதத்தில் ஈடுபாடு இல்லாத இளைஞன் சுயக்கட்டுப்பாடு இல்லாமல் பொதுமக்கள் சொத்துக்களை நாசம் செய்துக்கொண்டு இருக்கிறான். ஆனால் தங்களுக்கு நற்பண்புகள் மற்றும் உன்னதமான பாதையை வழங்கி, ஒரு அமைதியான வாழ்க்கை வழங்கும் நன்மைகளை கற்றுத்தந்த தங்களது இந்து மத வளர்ப்புமுறை மீது, அவர்கள் நன்றியுணர்வுடன் இருக்கின்றனர்.

திங்கட்கிழமை

பாடம் 302

மலை உச்சி போல உயர்ந்த உணர்வாக

இருக்கும் வேதாந்தம்

நாம் ஆன்மீக பாதையில் முன்னேறும் போது, இறுதி இலக்கை நோக்கி அழைத்து செல்லும் பாதையைப் பற்றியும், அந்த பயணத்தை நிறைவு செய்ய நம்மை தயார்ப்படுத்திக் கொண்டு, நம்முடன் எடுத்துச்செல்ல வேண்டியதை பற்றியும் நமக்கு ஒரு தெளிவான அறிவுணர்வு புரிதல் இருக்க வேண்டும். நாம் தொடக்கத்தில் வேதாந்தம் மற்றும் சித்தாந்தம், ஒருமைவாதம்-பன்மைவாதம், *அத்வைதம்-துவைதம்* மற்றும் இந்து தர்மத்தில் *யோகம்* வகிக்கும் பாரம்பரிய அங்கத்தை பற்றியும் தெரிந்துக் கொள்வோம். ¶வேதாந்தம் என்பது ஒரு தத்துவம் மற்றும் ஒரு உயர்ந்த குறிக்கோளாக விளங்குகிறது. அது தனது இலக்காக மலை உச்சிகளை நிர்ணயித்து, அந்த உச்சிகள் மனிதனின் உண்மையான இருப்பிடம் என்று கம்பீரமாக அறிவிக்கிறது. நாம் வழக்கமாக வாழும் வாழ்க்கை, நமது உண்மையான இயல்பை அறியாமல் வாழ்வதாக வேதாந்தம் குறிப்பிடுகிறது. தெய்வீக சக்திகளாக இருக்கும் நாம், நம்மை சாதாரண மனிதர்களாக நினைத்துக் கொண்டும், விலங்கு இனத்தை சேர்ந்தவர்களாக கருதியும், சேற்றில் பன்றியை போல புறள்கின்றோம். ஆனால் நாம் நமது உண்மையான இயல்பை உணர்ந்ததும், நாம் அந்த சேற்றில் இருந்தும், நாம் முன்பு பயணம் செய்த அறிவற்ற பாதைகளில் இருந்தும் நிரந்தரமாக விலகுகிறோம். வேதாந்தம் தனது இலக்கில் இருந்து விலகுவது இல்லை. அது தான் வகுத்த உயர்ந்த இலட்சியங்களை அடையாமல் இருப்பதற்கு எந்த காரணத்தையும் ஏற்பது இல்லை. அந்த இலக்கை அடைவதற்கு மனிதனின் எந்த பலவீனத்தையும் காரணமாக ஏற்பது இல்லை. அவை வெறும் சவால்களாக கருதப்படுகின்றன. ¶வேதாந்தம் மனிதர்களை ஒன்றாக கருதுகிறது. மனிதர்களிடம் இருக்கும் மாறுபட்ட திறமைகளை பொருட்படுத்தாமல், அது ஒரே உண்மையை அவர்கள் எல்லோருக்கும் அறிவிக்கிறது. எல்லா மனிதர்களும் நாடும் உண்மைப்பொருளாக அந்த மனிதனே விளங்குகிறான் என்றும், இந்த உலக அனுபவம் மற்றும் அவன் அதில்

வகிக்கும் பங்கு அவனது உண்மையான இயல்பை அறியாது இருப்பதாகவும், அவனே இறைவன் மற்றும் முழுமுதற்பொருளாக இருக்கிறான் என்றும் உள்ளுணர்வு மனிதன், அறிவுணர்வு மனிதன், ஆன்மீக மனிதன், தூக்குமேடையில் இருக்கும் மனிதன், பிரசங்க மேடையில் பேசும் மனிதன் என்று வேதாந்தம் எல்லோருக்கும் ஒரே தகவலை வழங்குகிறது. ¶வேதாந்தம் என்பது தனிப்பட்ட சீடர்களின தேவைகள் அல்லது சீடர்களை சென்று அடைவதற்கான யதார்த்தமான வழிமுறைகளை அடிப்படையாக கொண்டு இருக்காமல், முனிவர்கள் வழங்கிய சொந்த உணர்தல்களை குறிப்பிடுகிறது. வேதாந்தம் என்பது மனிதனால் அடையக்கூடிய முடிவான உண்மைகள் என்கிற இலக்கை குறிக்கிறது. உயரமாக இருக்கும் இமயமலை உச்சி, சுற்றி இருக்கும் நாட்டில் இருக்கும் உயர எழும்பி, மேகங்களை கடந்து, தனது கம்பீரத்தை தனியாக நின்று அமைதியாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. நாம் இந்த மலை உச்சியை தூரத்தில் இருக்கும் ஒரு பள்ளத்தாக்கில் இருந்தும் காண முடிகிறது. இந்த மலை உச்சியை நாமே சென்று அடைய ஆசைப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் அது வெகு தொலைவில் இருப்பதால், எந்த பாதை வழியாக சென்றால் அந்த உச்சியை அடைய முடியும் என்பது நமக்கு தெரிவது இல்லை. இது சுத்தமான அத்வைத வேதாந்தத்தை குறிப்பிடுகிறது. கம்பீரமாக உயர்ந்து நிற்கும் மலை உச்சி. ஆனால் அது நம்மால் சென்று அடைய முடியாத உச்சத்தில் இருப்பதால், அதை நினைத்து வியக்கவும் மதிக்கவும் மட்டுமே நம்மால் முடிகிறது. ¶ஒரு உயர்ந்த இலட்சியமாகவும் தத்துவமாகும் இருக்கும் வேதாந்தம், நம்மிடம் இருக்கும் திறமைகள் பற்றி ஒரு விசால பார்வையை வழங்குகிறது. ஆனால் அதை அடைவதற்கான வழிமுறைகளை வேதாந்தம் எதுவும் குறிப்பிடவில்லை. யதார்த்தமான வழிமுறை, கவனமாக சிந்திக்கப்பட்ட வழிகாட்டல் அணுகுமுறை, இன்னொரு அனுபவ பகுதியை சார்ந்து இருக்கிறது. நாம் அதை மதம் என்று அழைக்கிறோம். உயர்வான இலக்கை உணர்வது, யதார்த்தமான திறமைகளை உணர்வது, இலக்கை நாடுபவர்களின் திறமை மற்றும் தற்போதைய நிலையை உணர்வது மற்றும் அந்த இலக்கை நோக்கி செல்வதற்கு நேர்மையான மற்றும் பாதுகாப்பான பாதையை வழங்குவது மதத்தின் கடமை மற்றும் நோக்கம் ஆகும். மதம் வழங்கும் அந்த பாதை வலுவானவரை உச்சத்திற்கு அழைத்து செல்லவும் வேண்டும், பலவீனமானவரை அவதியில் விட்டு செல்லாமலும் இருக்க வேண்டும். மதம் என்பது ஒரே உண்மையான பாதையாக விளங்குகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 303

இதற்கு குறுக்குவழிகள்

இல்லை

மதத்திற்கு பொருந்தாமல் இருக்கும் குறுக்குவழி பாதை, ஒருவரை விரைவில் உச்சத்திற்கு அழைத்து வருகிறது என்பது ஒரு தவறான கருத்து ஆகும். தாங்கள் மேற்கொண்ட வலுவான தவம் அல்லது கடுமையான மனக்கட்டுப்பாட்டின் சக்தியால், பள்ளத்தாக்கில் இருந்து மலை உச்சிக்கு உயர்ந்ததைப் போல தோன்றும் பல முனிவர்களின் கதைகளை, நாம் கேட்டும் படித்தும் இருக்கிறோம். சமீபகாலத்தில் வாழ்ந்த ரமண மகரிஷி மற்றும் சுவாமி ராம தீர்த்தரை நம்மில் சிலர் அறிந்து இருக்க வாய்ப்புள்ளது. நாம் அறிந்த தகவல்களில் இருந்து, அவர்கள் இருவரும் பாரம்பரிய மதச் சடங்குகளை செய்யாமல் வேதாந்த உண்மைகளின் உச்சத்தை அடைந்தனர் என்பதை நாம் நினைவுக் கூரலாம். அதற்கு இருவரும் ஆன்மீக ஞானோதயம் பெற்ற போது, அவர்கள் வயதில் சிறியவர்கள் என்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு பாரம்பரிய மதத்தின் மீது இருந்த ஈடுபாட்டை பற்றி எந்த விளக்கமும் அளிக்க வேண்டியதில்லை. இரு மகான்களும் மதத்தை புறக்கணிக்காமல், அதை பொறுப்புடன் அனுட்டானம் செய்தார்கள். ¶எதிர்கால வேதாந்திகள் தாங்கள் ரமண மகரிஷி அல்லது ராம தீர்த்தரை பின்பற்றுகிறோம் என்று மதத்தை புறக்கணிப்பது என்பது, கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்திய ஒருவன் தான் பட்டப்படிப்பை பெற்றவனை பின்பற்றுவதாக கூறுவது போன்றுள்ளது. இருவரும் கல்லூரியை விட்டு வெளியேறியவர்கள் என்பதில் தான் ஒற்றுமை இருக்கிறது. படிப்பை பாதியில் நிறுத்தியவரால் கல்லூரிப் பாடத்தை முறையாக புரிந்துகொள்ள முடியவில்லை, மற்றும் உயர்கல்வியை படிப்பதற்கு அவரிடம் போதுமான திறமையும் இல்லை. ஆனால் பட்டப்படிப்பை பெற்றவர் கல்வியில் தேர்ச்சி பெற்றதோடு, அந்த கல்வியை பயன்படுத்தி வாழ்ந்துகொண்டும் இருக்கிறார். இந்து மதத்தில் ரமண மகரிஷி மற்றும் ராம தீர்த்தர் முதல்நிலை மாணவர்களாக விளங்கினார்கள் என்பது எங்கள் கருத்து. ரமண மகரிஷி பதினைந்து வயது சிறுவனாக தினமும் தனது கிராமத்தில் இருந்த கோயிலுக்கு நடந்து சென்று, கோயில் விக்ரகத்தை நமசுகாரம் செய்து, தனது மதம் தனக்கு போதித்துள்ளதைப் போல தான் ஒரு சுத்தமான ஆன்மீக வாழ்க்கையை வாழ்வதற்கு இறைவனின் அருளை வேண்டி அழுததைப் போன்று எத்தனை அன்பர்களால் முடியும்? தனது இளம் வயதில் தினமும் கோயில் சேவைகளில் பங்குபெற்று, தனது மதத்தின் புனிதமான மந்திரங்களை தடையில்லாமல் உச்சரித்து, சாத்திரங்களை சிரத்தையுடன் படித்து, அமைதியாக பிரார்த்தனைகள் செய்த போது இறைவன் மீதிருந்த அன்பினால் பரவச நிலையை அடைந்து, கண்களில் இருந்து சிந்திய கண்ணீரால் நனைந்த தலையணையுடன் தினமும் படுக்கையில் எழுந்த ராம தீர்த்தரைப் போல நம்மில் எத்தனை எத்தனை பேரால் இருக்க முடியும்? இந்த மனிதர்கள் தங்கள் மதத்தில் ஆழமாக ஈடுபட்டு இருந்ததால், அவர்கள் அந்த மதத்தின் நிறைவேற்றமாக, சான்றாக மற்றும் ஆற்றலாக மாறுகின்றனர். ¶மேலும் இது உலகில் இருக்கும்

எல்லா மதங்களுக்கும் அவை உருவாக்கிய மகான்களுக்கும் பொருந்தும். மதத்தில் இருந்து விலகி செல்லும் உண்மையான பாதை என்று ஒன்றுமில்லை. உலகின் தலைசிறந்த மகான்களின் வாழ்க்கைகளை ஆராய்ந்தால், அவற்றில் கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் பொறுமை இருப்பதை நம்மால் உணர முடியும். இந்து மதத்தில், மதம் மற்றும் அதன் இறையியல் மற்றும் அதன் அனுட்டானங்களை *சித்தாந்தம்* என்று அழைக்கிறோம். சித்தாந்த பாதையை ஒருவர் பின்பற்றும் போது, அது வேதாந்தத்தின் மறைஞான இலக்கிற்குள் அழைத்து செல்கிறது. நாம் படிக்கும் *பக்தி*, *கர்ம* மற்றும் *இராச யோகங்கள்*, ஒரு குருவிடம் சீடனாக இருந்தால், ஆன்மீக தர்மத்தின் நிறைவேற்றம் மற்றும் கோயில் வழிபாடு ஆகிய அனைத்தும் அந்த பாதையின் அங்கமாகவும், சித்தாந்தத்தின் அங்கமாகவும் விளங்குகின்றன.

புதன்கிழமை

பாடம் 304

வேதாந்தம் மற்றும்

மத ஒற்றுமை

மேற்கத்திய நாடுகளில் இருக்கும் நாம், இந்தியாவிடம் இருந்து முதன் முதலில் வேதாந்தத்தின் தத்துவ போதனைகளை பெற்ற போது, அது மதத்தில் இருந்து தனித்து இருப்பது போல தோன்றியது. வேதாந்த உணர்தல்களை அடைவதற்கு, வழிமுறைகளாக சில இந்துமத சடங்குகள் பரிந்துரைக்கப்பட்டாலும், அவை அனைத்தும் மேற்கத்திய மதங்களுக்கு சவால் விடுவதாக அல்லது அவமதிப்பதாக இல்லாமல், மிகவும் எளிமையான முறையில் அமைந்து இருந்தன. இதில் தவறு ஏதும் இல்லை என்றாலும், அது வேதாந்த உண்மைகளை உண்மையில் சிரத்தைடயுடன் அடைய விரும்பியவர்கள் மனங்களில் தவறாக எண்ணங்களை உருவாக்கியது. வேதாந்தம் என்கிற ஒரு மறைஞான பாதை மதத்தில் இருந்து தனித்து இருப்பது போன்ற கருத்து மேற்கத்திய நாட்டவர் மத்தியில் உருவாக்கப்பட்டது. இறைவனை அடைய உதவும் "மதத்திற்கு அதீதமான" இந்த ஆன்மீக பாதையை விளக்குவதற்கு *யோகம்* என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இந்த *யோகத்தை* எந்த மதத்தவரும் பின்பற்ற முடிந்தது. இதனால் மதம் என்பது தேவையில்லாதவும் அறிவு அல்லது புரிந்துணர்வு இல்லாததாகவும், *யோகம்* என்பது நமது பழங்கால மத பாரம்பரியத்தை சேர்ந்தது என்றும் பலர் மனங்களில் பதிந்த தவறான கருத்து முக்கிய பிரச்சனையாக விளங்கியது. அந்த *யோகத்தின்* தோற்றத்திற்கு காரணமாக விளங்கிய மதத்தில் இருந்து, அது என்றுமே விலகி இருந்தது இல்லை. வேதாந்த உண்மைகளின் உணர்தல்களை மனிதனின் இலக்காக

கருதும் இந்து மதத்தின் ஒரு மேம்பட்ட அங்கமாக *யோகம்* விளங்குகிறது. ¶*யோகம்* மற்றும் வேதாந்த தத்துவங்களை நோக்கி பல மேற்கத்திய நாட்டு மக்கள் ஈர்க்கப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. மதத்தில் இருந்து ஆன்மீக பாதை தனித்து இருப்பதாக கருதும் கருத்து, அன்றும் இன்றும் பலர் நாடும் ஒரு உயர்ந்த இலட்சித்திற்கு நெருக்கமான தொடர்புடையதாக இருக்கிறது. உலகில் இருக்கும் மதங்களை ஒன்றுபடுத்துவதே, அந்த இலட்சியம் ஆகும். எல்லா மதங்களுக்கும் மத்தியில் அதிக ஒற்றுமை இருப்பதாகவும், அவை அனைத்தும் சில அடிப்படை ஆன்மீக உண்மைகளை பொதுவாக கொண்டுள்ளன என்று அறிவிக்கும் பல *சுவாமிகள்* மூலம் இந்த இலட்சியம் ஆதரிக்கப்படுகிறது. அதனால் அதிக முக்கியத்துவம் இல்லாத வேறுபாடுகளை புறக்கணித்து, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளை ஒன்றாக பிரகடனம் செய்யலாம் என்று தோன்றும். அதற்கு பொதுப்பண்புடன் விளங்கும் *யோகம்* மற்றும் வேதாந்தம் பொருத்தமானதாக கருதப்படுகிறது. ¶ஆனால் இறுதியில் மதத்தில் இருந்து விலகி இருக்கும் ஆன்மீக பாதை, மத ஒற்றுமையின் இலட்சியத்தையும் பூர்த்தி செய்யாமல், உண்மையில் ஒரு ஆன்மீக பாதையாகவும் விளங்குவதில்லை. அது வெறும் ஒரு தத்துவமாக மனதில் ஒரு கோட்பாடாக நிலைத்து இருக்கிறது. ஏன் தெரியுமா? ஏனென்றால், முதலாவதாக ஒவ்வொரு மதமும் தங்கள் மதத்தில் முக்கியத்துவம் குறைவானதாக காட்சியளிக்கும் பல வழக்கங்கள் மற்றும் சடங்குகளின், உண்மையான முக்கியத்துவத்தை நன்றாக அறிந்து இருக்கின்றன. அந்த சடங்குகளை சிரத்தையுடன் செய்யும் பலரது ஆன்மீக வாழ்க்கைகள் நிலைத்தன்மையை பெறுகின்றன என்பதை அந்த மதங்கள் அறிந்து இருக்கின்றன. பலருக்கு மறைஞானம் கடினமாக இருந்தாலும், எளிமையான இறையியல் அல்லது தத்துவமும் அவர்களின் சிந்தனை லோகத்திற்கு அப்பாற்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்கள் எளிமையான மத சடங்குகளை செய்யவேண்டும். அதன் பலன்கள் அவர்களின் இந்த பிறவியின் பிற்பகுதியில் அல்லது மறுபிறவிகளில், அவர்கள் தங்கள் ஆன்மீக வாழ்க்கையின் ஆழமான நிலைகளுக்கு உயர்வதற்கு துணை புரியும். மதத்தின் இந்த அம்சத்தை புறக்கணிப்பது, லட்சக்கணக்கான மக்களின் மதசார்புள்ள வாழ்க்கையை அழிப்பதற்கு சமம் ஆகும். ¶இரண்டாவதாக வெளிப்புறமான மத ஈடுபாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்காமல், தங்களுக்கு மதசார்பற்ற ஆன்மீக பாதையில் நாட்டம் இருப்பதாக காட்சி அளிப்பவர்களும், பல காரணங்களால் இறுதியில் ஒரு உறுதியில்லாத நிலையை அடைகின்றனர். ஒவ்வொரு மதமும் மதகுருமார்கள், தலைமை தேவ தூதர்கள் மற்றும் தேவ தூதர்கள் என்று ஒரு படிநிலையை கொண்டுள்ளன. உட்புற லோகங்களில் இருக்கும் அவர்கள், அந்த மதத்தை பின்பற்றுபவர்கள் எல்லோருக்கும் துணையாக நின்று, இக்கட்டான சூழ்நிலைகளில் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களின் பிரார்த்தனைகள் மற்றும் வேண்டுதல்களுக்கு பலன் தருகின்றனர். நாம் மதத்தில் இருந்து

விலகும் போது, நன்மை செய்யும் இந்த உயர்வான சக்திகளின் தாக்கத்தில் இருந்து நம்மை நீக்கிகொண்டு, நமது வாழ்க்கைகளில் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய தீய சக்திகளின் பிடியில் நாம் சிக்குவதற்கு வாய்ப்பு அளிக்கிறோம். மறைஞான அனுபவத்தின் பல்வேறு நிலைகள் வழியாக முன்னேறும் போது, ஆன்மீக வாழ்க்கை மிகவும் நுணுக்கமான செய்முறையாக விளங்குகிறது. நமக்குள் விழிப்படையும் வலுவான சக்திகள் அனைத்தையும், நம்மால் எப்போதும் முழுமையாக கட்டுப்படுத்த முடிவதில்லை.

வியாழக்கிழமை

பாடம் 305

மிகவும் உயர்வான உணர்தல்

என்கிற மலை உச்சியில் ஒற்றுமை

நாம் மீண்டும் மலை உச்சி மற்றும் அதை நோக்கி செல்லும் பாதை பற்றிய உவமை மீது கவனம் செலுத்தினால், மதம் என்பது பலரால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்ட பாதை போன்று காட்சி அளிக்கிறது. அந்த பாதை முழுவதும், பலர் தேவைப்படும் போது உதவி செய்வதற்காக இருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும் அந்த பாதை முழுவதும் கடந்து சென்று, உச்சியை அடைந்து மற்றவர்களை வழிநடத்தும் திறமை படைத்தவர்களும் இருக்கிறார்கள். தினமும் மத சடங்குகளை பின்பற்றும் அடிப்படை இல்லாமல் *யோகம்,* தத்துவம் அல்லது மறைஞானத்தை நாடுபவர்கள் பரிச்சயம் இல்லாத பகுதி வழியாக, பரிச்சயம் இல்லாத சரிவுகளில் தனியாக ஏறுபவர்களை போன்று இருக்கின்றனர். கோட்பாட்டளவில் அவர்களாலும் உச்சத்தை அடைய முடிந்தாலும், அவர்கள் யதார்த்தத்தில் அதை அடைவது இல்லை. மலைகளில் தோன்றும் புயல்கள், கண்களுக்கு தென்படாத சரிவுகள், முட்டுச்சந்துகள் மற்றும் கணக்கில்லாத மற்ற ஆபத்துக்கள் மற்றும் மாற்றுப்பாதைகள் ஆகியவை இறுதியில் அத்தகைய எதிர்கால சாதகர்களுக்கு சவாலாக அமைகின்றன. பலர் அறிவுசார் இறுமாப்பு மற்றும் கர்வத்துடன் வாதம் செய்யும் பண்பின் சிறிய இடைவெளியில் சிக்கிக் கொள்கிறார்கள். ¶இந்தியாவில் மதத்தை குறிக்கும் *தர்மத்தின்* பாதை, உறுதியான நிரூபிக்கப்பட்ட பாதையாக விளங்குகிறது. அவர்கள் அதை சனாதன தர்மம் என்று அழைக்கின்றனர். அதற்கு நிலையான பாதை அல்லது தர்மம் என்று பொருள். உண்மையான மதம் மறைஞான அனுபவத்தை குறைந்து மதிப்பிடுவது இல்லை. உண்மையான மதம் ஒவ்வொன்றும் மறைஞானிகளை உருவாக்கியுள்ளது. இங்கு தான் மத ஒற்றுமை உணரப்படுகிறது. ஜென் நெறியை கற்பிக்கும் ஆசிரியர், கிறித்துவ மறைஞானி, மாஸ்டர் கபாலா, சூபி மறைஞானி, சின்டோ சமான், இந்து முனிவர்

மற்றும் தாவ் நெறியை பின்பற்றும் துறவி ஆகிய அனைவரும் ஒற்றுமையைப் பற்றி பேசலாம். அவர்கள் ஒருவரையொருவர் நேராக பார்க்கும் போது வேறுபாடுகள் எதுவும் இல்லாமல், ஆன்மாவின் ஒருமையை மட்டுமே காண முடியும். மேகங்களை கடந்து உயர்ந்து நிற்கும் மலை உச்சி ஒன்று மட்டுமே இருப்பதால், எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், உண்மையான சாதகர்கள் சிலசமயங்களில் தாங்கள் பிறந்த மதத்தையும் தங்களுக்குள் இருக்கும் உயர்ந்த நிலையை அடைய வழியை தேடிக்கொள்ள வேண்டும். மறைஞான அனுபவத்தில் மத ஒற்றுமை அடங்கி இருக்கிறது. ¶மறைஞானி பெறும் அனுபவங்களை விளக்கும் முயற்சியாக வேதாந்தம் விளங்குகிறது. ஆனால் இந்த உணர்தல்களின் இறுதி உச்சத்தை உண்மையில் எத்தனை பேர் அடைந்தார்கள்? பலர் அவற்றை பற்றி பேசுகிறார்கள், ஆனால் தங்கள் சுத்தம் செய்துகொள்ளும் கடுமையான முயற்சிகளை சிலரே மேற்கொள்ள விரும்புவதால், இறுதியில் வெகு சிலரே அவற்றை அடைகிறார்கள். தங்கள் இயல்பில் இருக்கும் ஒவ்வொரு குறை மற்றும் பலவீனத்தை சிலர் மட்டுமே எதிர்கொள்ள விரும்புகிறார்கள். தங்கள் சாத்திரங்கள், தங்கள் ஆன்மீக குருவின் உபதேசங்கள் மற்றும் தங்களது சொந்த இயல்பான அறிதல் மீது தீவிர கவனம் செலுத்தி, தங்கள் மதத்தை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு நிமிடமும் பயன்படுத்தி வழக்கமாக்கிக் கொள்வதை சிலர் மட்டுமே விரும்புகின்றனர். அதற்கு இதைப்போன்ற அர்ப்பணிப்பு, விடாமுயற்சி தேவைப்படுகிறது. ¶இறைவனை உணர்ந்த உச்சநிலையில் சாந்தமாக நாம் பார்த்த மறைஞானி, இன்று நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு அனுபவத்தையும் முன்பு எதிர்கொண்டுள்ளார். அவர் அந்த அனுபவங்களை தவிர்த்து வேறு பாதையில் செல்லவில்லை. அவரும் அதே சந்தேகங்கள், அதே அச்சங்கள் மற்றும் அதே குழப்பங்களை சமாளிக்க வேண்டி இருந்தது. எல்லோரும் உங்களை எதிர்த்து நிற்பது போலவும், நீங்கள் மட்டும் உங்களிடம் தனியாக, "எனக்கு மட்டும் ஏன் இந்த தீர்க்கமுடியாத பிரச்சனைகள், முற்றிலும் குழப்பமான சூழ்நிலைகள் தோன்றுகின்றன?" என்று கேட்கின்ற அதே அனுபவங்களை அவரும் பெற்றுள்ளார். அவர் சந்தேகம் என்கிற பாதாளத்திற்கு வளைந்து கொடுக்கவில்லை. வாழ்க்கையில் எதுவும் நம்பிக்கை தராத போது, அவர் தன்னை இறைவனது திருவடியில் சமர்ப்பித்தார். அதனால் நம்பிக்கை மீண்டும் தோன்றியது. குழப்பத்தின் திரைகள் ஒவ்வொன்றாக மறைந்து நிரந்தர தெளிவு கிடைக்கும் வரை அவர் தொடர்ந்து சிறப்பாக முயற்சி செய்து, குழப்பமாக இருந்த போதும் தனக்கு யதார்த்தமாக தோன்றிய முடிவை எடுத்து, தனது *சாதனா* மற்றும் ஆன்மீக அனுட்டானங்களை தொடர்ந்து செய்து வந்தார். அவர் வாழ்க்கையின் சிறிய விஷயங்கள் மற்றும் கடுமையான சவால்களிலும் மிகவும் தீவிர முயற்சியை மேற்கொண்டார். நீங்கள் அறிந்ததை நீங்கள் செய்ய வேண்டும் என்று அவர் சொல்லாமல் செய்து காட்டினார். நாம் நமது எதிர்காலத்தை உருவாக்கிக்கொண்டு இருக்கிறோம். இறை அருள் மற்றும்

இறைவனின் அன்பு, நமது முயற்சிகளுக்கு எப்போதும் துணையாக இருந்துக்கொண்டு இருக்கிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 306

அத்வைத

ஈசுவரவாதம்

இந்தியாவில் கடந்த பத்தாயிரம் வருடங்களாக ஆன்மீக பாரம்பரியத்தில் இரண்டு முக்கிய பிரிவுகள் இருந்து வருகின்றன. அதில் ஒன்று ஒருமைவாதம் என்கிற *அத்வைதம்* மற்றும் இன்னொன்று இருமைவாதம் என்கிற *துவைதம்.* நமது பாரம்பரியத்தில் அவற்றை ஏகதத்துவ இறைசார்பியம், அத்வைத சித்தாந்தம், அத்வைத சைவ சித்தாந்தம் அல்லது அத்வைத ஈசுவரவாதம் என்று பல பெயர்களில் குறிப்பிட்டாலும், அவை அவற்றை முழுமையாக தழுவி உள்ளன. அத்வைத மற்றும் துவைத பாதை வாழ்க்கையின் முழுமையாக விளங்குவதை நான் பின்னர் புரிந்துகொண்டேன். அது முழுமையான பாதையை குறிக்கிறது என்று என் *சத்குரு* விளக்கினார். இசைக்குழுவில் வாசிப்பதும், அந்த இசையை சபையில் ஒருவராக அமர்ந்து கேட்பதும் இரண்டு வெவ்வேறு அனுபவங்கள். இசைக் குழு இல்லாமல் சபையில் அமர்ந்து இருப்பவர்கள் எதையும் கேட்காமல் சும்மா அமர்ந்து இருப்பார்கள். சபையில் கேட்பதற்கு ஆளில்லாமல் அந்த குழு யாருக்கு வாசிக்கப் போகிறது? அதனால் அது இருமையின் உலகம் ஆகும். நாம் துவைதம் என்கிற இருமையை விவேகமாக பயன்படுத்த வேண்டும். பரமாத்துமா, பரசிவ பற்றிய முழுமையான *அத்வைத* உணர்தலை சத்குரு யோகசுவாமி பெற்று இருந்தார் என்றாலும், அவர் இறைவன், மகாதேவர்கள் மற்றும் தனது *குரு* மீது நிறைவான துவைத பக்தியுடன் இருந்தார். ¶இலங்கையின் யாழ்ப்பாணத்தில் ஒரு வேதாந்தி வாழ்ந்து வந்தார். அதிக மமதையுடன் இருந்த அவர் இருமைவாதம் மற்றும் கோயில் வழிபாட்டை வெறுத்தார். சிவ யோகசுவாமிக்கும் அவருக்கும் இடையேயான உறவு சுமுகமாக இருக்கவில்லை, மற்றும் சத்குரு அந்த வேதாந்தியை அவ்வப்போது ஏதாவது ஒரு வழியில் பரிகாசம் செய்து வந்தார். ஒரு நாள் யோகசுவாமி அந்த நபர் சந்தையில் இருப்பதை கவனித்தார். அவர் பின்புறமாக வந்து, அந்த நபரின் முதுகில் தட்டினார். அந்த நபர் திரும்பிப் பார்த்து, "யார் என்னை தட்டியது?" என்று கேட்டார். "யார் தட்டியது என்றா கேட்கிறீர்கள்? நீங்கள் அத்வைதத்தை தீவிரமாக ஆதரிப்பவர் அல்லவா?" என்று வியப்புடன் யோகசுவாமி கேட்டார். அந்த வேதாந்தி மலை உச்சியாக விளங்கும் உண்மைப்பொருளின் அதிக உயர்வான உணர்தல்களையும், மலை

அடிவாரமாக விளங்கும் அன்றாட வாழ்க்கையையும் பிரித்து பார்க்க முடியவில்லை என்பதை யோகசுவாமி உணர்த்தினார். அவர் வேத உண்மைகளை பகுப்பாய்வு செய்து, வெறும் அறிவுப்பூர்வமாக உச்சத்தை அடைந்து இருந்தார். அதனால் அவர் தனது கருத்துக்களை தக்கவைத்துக் கொள்ள, அவர் முன்பு பயன்படுத்திய பகுப்பாய்வு செய்முறை மூலம், மலை அடிவாரத்தை நிராகரிக்க வேண்டி இருந்தது. அந்த வேதாந்தி பயன்படுத்திய *வாக் மார்கம்*, எளிமையான வேதாந்த தத்துவமாக விளங்கியது. இந்த பாதையில் இருக்கும் மக்கள் சிறப்பாக வேதாந்தத்தை விளக்குவார்கள், ஆனால் அவர்கள் ஆன்மீக அனுபவத்தை பெற்று இருக்கமாட்டார்கள். அவர் தத்துவரீதியாக நிறைவான *ஆணவ மார்க* நிபுணர்களாக, ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்வதற்கு சக்தியை பெற்று இருப்பார்கள். ¶ஒரு தீர்க்கதரிசி மலை உச்சிக்கு சென்று உணர்தலில் உயர்வான உண்மைப்பொருளை அடைந்து இருந்தாலும், அவர் தனக்கு அடிவாரத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், தனக்கு மத்தியில் ஏற்பட்ட அனுபவங்கள் அற்றும் உச்சத்தில் ஏற்பட்ட அனுபவங்களை நினைவில் வைத்து இருப்பதால், அவரால் மலையின் எந்த பகுதியையும் நிராகரிக்க முடியாது, என்பதை *சத்குரு* யோகசுவாமி தான் வாழ்ந்த வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்தினார். நமக்கு ஏற்பட்ட நேரடி அனுபவத்தை நம்மால் நிராகரிக்க முடியாது என்று யோகசுவாமி கற்றுத்தந்தார். அதை நம்மிடம் இருந்து யாராலும் அபகரிக்க முடியாது. அது *ஆகாசத்தில்* நிரந்தரமாக பதிவாகி உள்ளது. அதனால் *உணர்தலும் புரிதலும்* ஒரே பொருளுடையவை அல்ல. ¶ஒரு இசைக்குழுவில் ஒரு கலைஞர் ஒரு இசைக்கருவியை இசைக்கும் போது, அவர் தனது விரல்கள், கைகள் மற்றும் கால்களை அசைக்கும் அனுபவத்தை பெற்று இருக்கிறார். அந்த கலைஞர் தான் இசைப்பதையும் தன் குழுவில் மற்றவர்கள் இசைப்பதையும் கேட்கிறார். ஒவ்வொரு கலைஞரும் அந்த ஒட்டுமொத்த இசைக்குழுவின் ஒற்றுமையை உணர்கிறார்கள். இது ஒருமை வழங்கும் அற்புத அனுபவம் ஆகும். சபையில் அமர்ந்து இருக்கும் ஒருவர் இசைக்குழுவில் இருக்கும் ஒரு கருவியை மட்டும் கேட்காமல், எல்லோரும் ஒன்றாக இசைப்பதை கேட்கிறார். ஆனால் அவர் தனது காதுகள் மூலமாக மட்டுமே அனுபவத்தை பெறுகிறார். இது இருமை பண்பின் அற்புத அனுபவம் ஆகும். ¶சபையில் கேட்பவர் இல்லாமல் இசைக்குழு இயங்க முடியும், ஆனால் இசைக்குழு இல்லாமல் சபையில் யாரும் அமர்ந்து இருப்பதில்லை. இதன் காரணமாகத் தான், வழிபடுவதற்கு அருகில் கோயில் எதுவும் இல்லை என்றாலும், ஒருமைவாதி தனது அனுட்டானங்களை தொடர்ந்து செய்துக்கொண்டு இருக்கிறார். அவர் தனக்கு முன்பாக ஒரு இறைவனின் விக்ரகம் இல்லாமலும் தனது அனுட்டானங்களை தொடர்ந்து செய்ய முடியும். ஆனால் இருமைவாதியால் இவ்வாறு செய்ய முடியாது. ஒரு இறைவனின் விக்ரகம் அல்லது கோயில் இல்லாமல் அவரால் வழிபட முடியாது. ¶அத்வைத ஈசுவரவாதத்தை பின்பற்றுபவர்கள் யதார்த்தமான தத்துவ

அறிஞர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் இசைக்குழுவையும் சபையில் அமர்ந்து கேட்பவர்களையும் ஒன்று சேர்கிறார்கள். அவர்களுக்கு முழுமையான வாழ்க்கையின் மாபெரும் அனுபவம் கிடைக்கிறது. அவர்கள் மலை உச்சி மற்றும் மலை அடிவாரத்தையும் ரசிக்கிறார்கள். அவர்கள் இருமையில் ஒருமையை நுழைத்து, ஒருமையில் இருமையின் பண்பை வெளிக்கொண்டு வருகின்றனர். அவர்கள் இந்த பூமியில் முழு நிறைவான மனிதர்களாக இருக்கிறார்கள். புற வழிபாட்டிற்கு கோயில் கோயிலாக சென்ற தலைசிறந்த *யோகிகள்* மற்றும் முனிவர்கள், அக வழிபாட்டின் மூலம் இறைவன் மற்றும் மகாதேவர்களை தங்களுக்குள் உணர்ந்து கொண்டார்கள்.

சனிக்கிழமை

பாடம் 307

இருமை அல்லாத

ஒருமை?

ஒவ்வொரு ஒருமைவாதியும் அவ்வப்போது தனது உள்ளத்தின் ஆழத்தில் அல்லது மேலோட்டமான உரையாடலில் கங்கை ஒரு புனிதமான நதி மற்றும் கைலாச பர்வதம் ஒரு புனிதமான மலை என்பதை ஏற்றுக்கொள்வார். அவர் அதை ஏற்றுக்கொள்ளும் சமயத்தில், அவரும் இருமைவாதி போல தென்படுகிறார். கங்கை மற்றும் கைலாசம் மிகவும் புனிதமானவை என்பதை இந்துக்கள் நம்புகிறார்கள். பெரும்பாலான ஒருமைவாதிகள் தாங்கள் உயிர் துறந்த பிறகு, தங்கள் அஸ்தியை கங்கையில் கரைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகமங்களை பின்பற்றும் ஒவ்வொரு புரோகிதரும், தலையின் உச்சி மற்றும் உலகின் உச்சியாக கைலாச பர்வதம் விளங்குவதாக கூறுவார். *சஹஸ்ரஹார சக்கரத்திற்கு* மேலே இறைவன் இருப்பதாக அவர் நமக்கு விளக்கம் அளிப்பார். இந்த அறிவு அவர் பூஜையின் போது ஓதும் மந்திரங்களில் அடங்கி உள்ளன. அதனால் தான் ஒரு சிலசமயங்களில் இருமைவாதியாக நடந்துகொள்வதை மறைக்கும் ஒருமைவாதியை சந்திக்கும் போது, அவரது ஒருமைவாத கண்ணோட்டம் அவரது அறிவுணர்வு திறமைகள், தேய்வழக்குகள் மற்றும் தெளிவான வாக்குவாதங்கள் மூலமாக மட்டுமே வலிமையை பெறுகிறதா என்பதை சோதித்துப் பார்க்கவேண்டும். ¶ஆமாம், இருமை இல்லாமல் ஒருமையை பின்பற்றினால், வாழ்க்கை வழங்கும் அனுபவங்களுடன் ஒத்துப்போவது மிகவும் கடினமாக இருக்கும். ஆனால் பூமியில் சில உண்மையான ஒருமைவாதிகள் இருக்கிறார்கள். பெரும்பாலான ஒருமைவாதிகள் வீட்டில் யாரும் இல்லை என்று வாதாடினாலும், கோயிலை கடந்து செல்லும் போது எப்போதும் அமைதியாக நின்று பிரார்த்தனை

செய்யாமல் இருக்கமாட்டார்கள். மதத்தில் ஈடுபாடு இல்லாத அபூர்வமான ஒருமைவாதிகள், ஒருமைவாதத்தில் தீவிரமாக மூழ்கி அதை அனுபவிக்கும் போது, அகத்தில் இருந்து இருமைவாதம் ஒரு வெகுமதியாக தோன்றுகிறது. இது சுவாமி விவேகானந்தர் வாழ்வில் நடந்தது. அவர் தனது வாழ்நாள் முழுவதும் ஆண் தெய்வங்கள் மற்றும் பெண் தெய்வங்கள் உண்மையில் இல்லை என்று கூறி வந்தார். அவருக்கு சக்தி தேவியின் தரிசனம் கிடைத்ததும், அவர் தனது பிற்காலத்தில் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டார். ¶இருமைவாதம் மற்றும் ஒருமைவாதத்தை முழுமையாக புரிந்துகொள்ள, அவற்றை தனித்தனியாக ஒரே ஆசிரியர் மூலம் கற்கவேண்டும். இரண்டிற்கும் நடுவே தனது விருப்பத்தை தேர்வு செய்வதற்கு, மாணவனுக்கு எப்போதும் அனுமதி வழங்கப்படுவது இல்லை. இரண்டையும் எந்த சந்தேகமும் இல்லாமல் தெளிவாக புரிந்துகொண்ட பிறகு, புற வழிபாடு மற்றும் அக வழிபாட்டின் தேவையை வலியுறுத்துவதன் மூலம், அந்த இரண்டையும் ஆசிரியர் ஒன்றாக இணைத்து மாணவனின் மனதில் பதிய வைப்பார். இருமைவாதம் புற வழிபாட்டை சார்ந்தும், ஒருமைவாதம் அக வழிபாட்டை சார்ந்தும் இருக்கின்றன. ¶புறவழிபாட்டை அகமாக்கிக் கொள்வதில் நாம் தேர்ச்சி பெறும் போது, நாம் *யோகத்தின்* பாதுகாப்பான பாதையில் முன்னேறிக்கொண்டு இருக்கிறோம். அன்பர்கள் இதில் தேர்ச்சி பெறவில்லை என்றால், அவர்கள் பெரும்பாலும் அறிவுணர்வுடன் மனதில் செய்யும் வித்தைகளால் எந்த பலனும் கிடைப்பதில்லை. அவர்களின் பண்பு கனிவு அடையாமல் கடுமை அடைகிறது. தத்துவம் தொடர்பான அவர்களின் விவாதங்கள் வளைந்து கொடுக்காமல் பிடிவாதமாக இருக்கின்றன. இருமைவாதத்தை ஒருமைவாதத்திலும், ஒருமைவாதத்தை இருமைவாதத்திலும் கலப்பதன் மூலம், ஆன்மீக விரிவாக்கம் தொடங்குவதால் அன்பர்களின் குணம் அன்பின் பெருக்கால் கனிவடைகிறது. அவர்களின் ஆன்மா பக்குவம் அடையத் தொடங்குவதால், அவர்கள் விவேகமாக செயல்பட்டு மற்றவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அத்தகைய நபர்கள் மற்றவர்களின் கண்ணோட்டத்திற்கு மதிப்பு அளிக்கிறார்கள், மற்றும் மற்றவர்கள் பார்த்து ரசிப்பதற்கு ஆன்மாவின் அனைத்து நற்பண்புகளும் வெளிப்படுகின்றன. ¶மிகவும் விரிவான உணர்வுநிலை வரைபடத்துடன் இருக்கும் அத்வைத ஈசுவரவாதம், விசாலமாக இருந்து தத்துவரீதியாக அனைத்து உணர்வு நிலைகளையும் ஏற்றுக்கொள்கிறது. அத்வைத ஈசுவரவாதி வெளியுலகை புறக்கணிப்பது இல்லை. சிவபெருமானின் முழு நிறைவான பண்பு, அந்த வெளியுலகில் எங்கும் வியாபித்து இருக்குறது என்பதை அவர் அறிந்து இருக்கிறார். அவர் தனது உணர்வை மூன்று லோகங்களில் இருக்கும் முழுமைக்குள் விரிவாக்கம் செய்ய முயற்சி செய்கிறார். அவர் இயற்கை முழுவதும் இருக்கும் இணக்கத்தை அனுபவிக்க முயற்சி செய்கிறார். அவர் சிவபெருமானின் முழு நிறைவான பிரபஞ்சத்துடன் இணங்கி இருக்க, சிவனோடு வாழ முயற்சி செய்கிறார். அத்வைத ஈசுவரவாதி அனைத்து

அம்சங்களிலும் முழுமையான இந்துவாக இருக்கிறார். ¶தாங்கள் வசிக்கும் நாடு அல்லது உணர்வின் பகுதியை பற்றி பெரும்பாலான வேதாந்திகளால் முழுமையாக விவரிக்க முடிகிறது. ஆனால் அவர்கள் போதிய அளவு யோகப்பயிற்சி மேற்கொள்ளாத காரணத்தினால், பூமியில் இருக்கும் மற்ற நாடுகள் அல்லது மற்ற மனதின் பகுதிகளை புரிந்துகொள்வதற்கு, அவர்கள் போதிய அளவு சர்வ-வியாபியாக இருப்பதில்லை. இந்த காரணத்தினால் அவர்கள் மனதின் வரைபடங்கள் ஒப்பீட்டளவில் முடிவு பெறாமல் இருக்கின்றன. பெரும்பாலானோர் சதுரங்களுக்குள் கோடுகளை வரைந்து, தங்களுக்கு புரியாத இடத்தில் நின்று விடுகின்றனர். அதுவைத ஈசுவரவாதிகள் வட்டங்களுக்குள் கோடுகளை வரைந்து, அனைத்து பொருட்களிலும் இருக்கும் அனைத்தும் உட்பட, பிரபஞ்சம் முழுவதையும் கிரகித்துக் கொள்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 308

சுதந்திரம் மற்றும்

பொறுப்பு

ஒரு மனிதன் ஒரு ஒருமை மற்றும் இருமை அம்சத்தை கொண்டிருக்கிறார். அவரிடம் கோட்பாடு இருக்கிறது. அவரிடம் நம்பிக்கை இருக்கிறது. அவரிடம் அன்பு இருக்கிறது. ஆனால் ஊக்கமின்மை மூலம் இந்த நற்பண்புகள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. அவரது நம்பிக்கை கண்ணுக்கு தெரியாத விஷயங்கள் மீது நம்பிக்கை வைத்து இருக்கிறது. அவரது கோட்பாடு எல்லா நேரங்களிலும், அறிவுக்கு யதார்த்தமாக தென்படுவதில்லை. அவரது அன்பு என்பது மென்மையாக மற்றும் அழகாக அனைத்து பொருட்கள் மீதான அன்பு ஆகும். இந்த அற்புதமான பண்புகளும், மேலும் பல பண்புகளும் ஒன்றாக சேர்ந்து காலம், காரணம் மற்றும் பரவெளியை கடந்த பரம்பொருளை நோக்கி உணர்வை உயர்த்துவதற்கு செயல் புரிகின்றன. இந்த பூமியில் அத்வைத ஈசுவரவாதத்தை இறுதியில் புரிந்துகொள்ளாமல் யாரும் இருக்க முடியாது, ஏனென்றால் அது மனித ஆன்மாவின் இயல்பான அங்கமாக விளங்குகிறது. எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் ஒரு அத்வைத ஈசுவரவாதியாக இருக்கிறார்கள். ¶வரலாற்றில் தொன்றுதொட்டு ஒருமைவாதிகள் ஒருபுறமும் இருமைவாதிகள் இன்னொரு புறமும் இருந்து வந்துள்ளனர். இரு சாராரையும் உள்ளடக்கிய பாதையாக அத்வைத ஈசுவரவாதம் விளங்குகிறது. ஆமாம், அது இன்று மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளுக்கு தீர்வாக விளங்குகிறது. உண்மையான வேதாந்த விதிகளை உள்ளடக்கிய சைவ சித்தாந்தம் திறமையானவர்களுக்கான சித்தாந்தமாக விளங்குகிறது. ஒரு சித்தாந்தம்

மட்டுமே இருக்க முடியும். அது தான் அத்வைத ஈஸ்வர வாதம். ¶இன்று கற்றுத்தரப்படும் வேதாந்தத்தில் பிரச்சனை என்னவென்றால், அது ஒழுக்கங்களை கற்றுத்தராமல் சலுகைகளை வழங்கி, உணர்தல் பெறாத அறிவுள்ள *ஞானிகளை* உருவாக்குகிறது. சிறிதளவு ஆன்மீக விரிவாக்கம் பெற்றவர்களுக்கு, இந்த சலுகை ஒரு வரமாக விளங்குகிறது. இதையும் ஒழுக்கம் இல்லாதவர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். உயர்ந்த தத்துவங்களை ஆய்வு செய்து, தீவிரமாக அனுட்டானம் செய்வதற்கு முன்பாக, ஒழுக்கம் மற்றும் பொறுப்பைக் கற்றுத்தந்து அதில் தேர்ச்சி பெற செய்யவேண்டும். தொடக்க நிலையில் இருக்கும் ஒருவர் தான் மனப்பாடம் செய்ததில் இருந்து, மனிதன் மற்றும் பிரபஞ்சத்தின் இயல்பு பற்றி பகுத்தறிவதற்கு கற்றுத் தரக்கூடாது. அவரை இந்து மதத்தின் கலாச்சாரம் மற்றும் சமூகத்திற்குள் அழைத்து வந்து, மேலும் முன்னேறுவதற்கு முன்பாக அவருக்கு சமய ஈடுபாட்டுடன், முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட கட்டுப்பாடான வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டும். வேதாந்தத்தை அறிவதற்கு வழங்கப்படும் இந்த நியோ இந்திய அணுகுமுறை மிகவும் புதுமையானது என்பதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். முடிவான உணர்தல்களை அடைந்த உண்மையான வேதாந்திகள் அத்வைத ஈசுவரவாதத்தை பின்பற்றி அடைந்து இருக்கிறார்கள். நவீன வேதாந்தம் ஒழுக்கத்தை கற்றுக்கொடுக்காமல் சலுகைகளை வழங்குகிறது. மேலும் நவீன புதுயுக இயக்கம் பொறுப்பு இல்லாமல் சுதந்திரத்தை வழங்குகிறது. ஏதேனும் வேறுபாடு இருக்கிறதா? ¶அத்வைத ஈசுவரவாதம் சலுகைகளை வழங்குவது இல்லை. அது வாழ்க்கைக்கு அதிக யதார்த்தமான நடைமுறையை போதிக்கிறது. அந்த நபருக்குள் சைவ சித்தாந்தம் ஆன்மீகம், சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம், கரம்வினை மற்றும் தர்மம் சார்ந்த பண்பை வளர்க்கிறது. சாதகர்கள் தினமும், மாதந்தோறும், வருடந்தோறும் *நித்திய கர்மாக்களை* செய்யவேண்டி இருக்கிறது. அத்வைத ஈசுவரவாதம் *முக்தியை* நோக்கி செல்லும் பாதை என்பதில் சந்தேகம் இல்லை. ¶அத்வைத சைவ சித்தாந்த *பக்தரால்* ஒவ்வொருவரின் கருத்தையும் முழுமையாக புரிந்துக்கொண்டு அதை அங்கீகரிக்க முடிகிறது, ஏனென்றால் எல்லோரிடமும் இருக்கும் சிவத்தன்மை மீது அவருக்கு இருக்கும் அன்பு அவரது தொடர்புகொள்ளும் புலன்களை விரிவடைய செய்கிறது. அவரால் ஒரு வேதாந்தியுடன் அவருக்கு ஈடு கொடுத்து பேச முடிகிறது. இது நடைபெறும் போது, பகிரும் மற்றும் வழங்கும் உணர்ச்சி நிலைத்து இருக்கிறது. இன்னொரு நபர் தனது கருத்தை புரிந்துகொள்ளமாட்டார் என்று அறியும் அளவிற்கு *பக்தர்* விவேகத்துடன் இருக்கிறார். ஒரு பக்தர் மனப்பூர்வமாக இரக்கம், அன்பு மற்றும் விசுவாசத்துடன் செல்வந்தர், ஏழை, பிச்சைக்காரன், திருடன், மருத்துவர், வழக்கறிஞர், கோயில் பூசாரியுடன் இணக்கமாக இருக்க முடிந்தாலும் முடியாவிட்டாலும், அது அவரது இதயத்தில் மாற்றம் ஏற்படுத்தாமல் இருப்பது,

அவர் பெற்ற சித்தியை அளவிடுவதற்கு ஒரு சிறந்த கருவியாக விளங்குகிறது. அவர் உண்மையான சிவ *பக்தர்*, உண்மையான அத்வைத ஈசுவரவாதி, உண்மையான சைவ சித்தாந்தியாக விளங்கி, "சிவபெருமான் நம் எல்லோருக்குள்ளும் உயிரின் உயிராக விளங்குகிறார்" என்ற உருவகத்திற்கு உண்மை சான்றாக வாழ்ந்து காட்டுகிறார்.

தேவாலயஹ

देवालयाः



மகாதேவர்களின் ஆலயங்கள்

உண்மையை விரும்புபவர்களே, ரிஷிகள் எந்த யாகங்களை மந்திரங்களுக்குள் பார்த்தார்களோ, அவை மூன்று வேதங்களிலும் பரவலாக பிரிந்து அமைந்துள்ளன. கர்மபலத்தில் விருப்பம் உள்ளவர்களே, அந்த கர்மங்களை முறையாக அனுபவிப்பீர்களாக. உங்களால் செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அனுபவிப்பதற்கு, இதுவே உங்களுக்கு சரியான மார்க்கம் ஆகும்.

அதர்வண வேதம், முண்டக உபநிடதம், 1.2.1. வேஎ, ப. 414



இந்து கோயில்கள் மகாதேவர்களின் ஆலயங்களாகவும் கலாச்சாரத்தின் மூலமாகவும் விளங்குகின்றன. இந்த கோயில் இமயமலையில் இருக்கும் காட்டில் அமைந்து இருக்கிறது. இதிலும் அருகில் இருக்கும் வன சரணாலயங்களிலும் இருக்கும், மூலவர் சந்நிதியில் சிவலிங்கம் அமைந்துள்ளது. அதற்கு கீழே நடராசர், விநாயகர், காளி, விஷ்ணு மற்றும் பிரம்மனின் சிலைகள் அமைந்துள்ளன.

திங்கட்கிழமை

பாடம் 309

துணையாக இருக்கும்

தேவதூதர்கள்

மாலை வணக்கம்! மொரிஷியஸ் நாட்டு அழகையும், இங்கே வலுவாக இருக்கும் சைவ சமயத்தையும் காண்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இலங்கை மற்றும் மலேசியா போல அல்லாமல், இந்த அழகான தீவில் இந்துக்கள் பெரும்பான்மையாக அமைந்து இருப்பது, உங்களுக்கு சாதகமான சூழ்நிலை ஆகும். இதனால் உங்கள் கோயில் சமூகம் மற்றும் மற்ற நல்ல நோக்குடைய சமூகங்கள் மூலமாக சைவ சமயத்தை தைரியமாக மற்றும் வலுவாக கற்றுத்தருவதற்கும் போதிப்பதற்கும் எளிதாகிறது. நீங்கள் இதை செய்வீர்கள் என்பதில் நான் நம்பிக்கை வைத்து இருக்கிறேன், மற்றும் நீங்கள் அவ்வாறு செய்வதன் மூலம், இந்த தொழில்நுட்ப யுகத்தில் சைவ சமயத்தை நேர்மறையாக வழிநடத்தி செல்வீர்கள். ¶இன்று இரவு நான் நமது பழமையான மதத்தின் மகாதேவர்கள் மற்றும் அந்த ஆன்மீக சக்திகளுடன் தொடர்புகொண்டு, நமது வேண்டுதல்களை சமர்ப்பிக்கும் புனிதமான கோயில்களை பற்றி பேச விரும்புகிறேன். இதைப்போன்ற ஒரு இந்து கோயிலில் லட்சக்கணக்கான தேவர்கள் நிரம்பி இருக்கிறார்கள். ஒருவர் இந்து மதத்தில் பிறந்ததும் அல்லது பிற்காலத்தில் முறையாக இந்து மதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், இந்த பூலோகத்தில் அவருக்கு பாதுகாப்பு அளித்து வழிநடத்த, கண்ணுக்கு தெரியாத லோகங்களில் இருக்கும் காவல் *தேவர்கள்* உடனடியாக நியமிக்கப்படுகிறார்கள். சொர்க்க லோகத்தில் இருக்கும் இந்த காவல் *தேவர்கள்* நமது தூல கண்களுக்கு தெரியாவிட்டாலும், தங்களது மூன்றாவது கண்ணின் சூட்சும பார்வை மூலம் பார்க்கத் தெரிந்தவர்களுக்கு தென்படுகிறார்கள். ஆனால் அவர்களின் இருப்பை உங்களால் உங்கள் வீடுகளில் உணர முடியும். உங்களை சுற்றி இருக்கும் அவர்கள், உங்கள் வாழ்வில் வழிகாட்டுவதற்கு நமது மதத்தின் மகாதேவர்களுடன் தொடர்புகொண்டு உங்களுக்கு உதவி செய்கிறார்கள். ¶மூன்று லோகங்கள் உள்ளன. பொன்னிறத்தில் பிரகாசமான உடல்களில் விநாயகர், முருகப்பெருமான் மற்றும் சிவபெருமானை போன்ற உன்னத சக்திகள் மூன்றாம் லோகத்தில் இருக்கிறார்கள். இந்த மூன்றாவது லோகம் சிவலோகம்

என்று அழைக்கப்படுகிறது. இருப்பின் இரண்டாவது லோகம் அல்லது சூட்சும லோகம் அல்லது தேவலோகம் என்று அழைக்கப்படுகிறது. மகாதேவர்களுக்கு தேவலோகத்தில் இருக்கும் பல லட்சக்கணக்கான உதவியாளர்கள், நம் ஒவ்வொருவருக்கும் உதவிகளை செய்து வருகிறார்கள். அவர்கள் ஒன்று அல்லது பலர், இந்த முதல் உலகில் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் உதவி செய்ய நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது தூல உலகம் அல்லது பூலோகம் என்று அழைக்கப்படுகிறது. நாம் இரவில் உடலை விட்டு வெளியேறும் போது, இரண்டாம் லோகமாக இருக்கும் தேவலோகத்திற்கு சென்று அங்கிருக்கும் தேவர்களுடனும், மூன்றாவது லோகமாக இருக்கும் சிவலோகத்தில் நமது மதத்தின் மகாதேவர்களையும் தொடர்புகொள்கிறோம். ¶சைவ சமயத்தில் மிகவும் புனிதமான சின்னமாக விளங்கும் திருநீறை, நாம் நமது நெற்றியில் பூசிக்கொள்கிறோம். இரண்டாம் லோகமாக இருக்கும் தேவலோகத்தில் இருக்கும் *தேவர்கள்,* நமது நெற்றியில் இருக்கும் திருநீறை நன்றாக பார்க்க முடிகிறது. நீங்கள் புனிதமான தேவார பாடல்கள் பாடுவதை, அவர்களால் நன்றாக கேட்க முடிகிறது. நீங்கள் தெய்வ உருவங்களுக்கு காண்பிக்கும் ஆரத்தியை அவர்களால் காண முடிகிறது. நாம் இந்த மதத்தை சேர்ந்தவர்கள் என்பதை தெரிவிக்கவே, நாம் நெற்றியில் இந்த விபூதியை பூசிக்கொள்கிறோம். "நாங்கள் உங்கள் உதவி மற்றும் நல்லாசிகளை நாடுகிறோம்," என்று சொல்லும் விதமாக நாம் நெற்றியில் *விபூதியை* பூசிக்கொள்கிறோம். அவர்கள் திருநீறை பார்த்து, உங்களைப் பற்றி தெரிந்து கொள்கிறார்கள். அவர்கள் இந்த உலகை ஒரு திரை வழியாக பார்க்கிறார்கள். அவர்கள் நம்மை அதிக தெளிவாக காண முடிவதில்லை என்பதால், அவர்களின் கவனத்தை பெறுவதற்கும், அவர்களின் அருள் மற்றும் ஆசிகளை பெறுவதற்கும் நாம் சின்னங்கள் மற்றும் அடையாளங்களை பயன்படுத்துகிறோம். அந்தர்லோகங்களில் இருக்கும் உன்னத சக்திகள் நம்மை பார்க்க வேண்டும் என்று நாம் அவர்களின் கவனத்தை பெறவேண்டும் என்பதற்காக, நீங்கள் கோயிலுக்கு செல்லும் போது திருநீறை பூசிக்கொள்ள வேண்டும். அவர்கள் உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவார்கள். அவர்கள் மனவேதனைக்கு ஆறுதல் அளிப்பார்கள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 310

இந்து நெற்றியில் வைக்கும்

பொட்டு

நாம் நமது கண்களுக்கு மத்தியில் எதற்காக சிவப்பு நிற *பொட்டு* வைத்துக் கொள்கிறோம்? நெற்றியில் வைக்கும் பொட்டு ஒரு இந்து என்பதற்கு

அடையாளமாக விளங்குகிறது. அது *பிந்தி* என்று இந்தி மொழியிலும், *பிந்து* என்று சமஸ்கிருத மொழியிலும், *பொட்டு* என்று தமிழிலும் அழைக்கப்படுகிறது. பழங்காலத்தில் அனைத்து இந்து ஆண்களும் பெண்களும் இந்த அடையாளங்களை நெற்றியில் வைத்துக்கொண்டதோடு, இருவரும் காதணிகளையும் அணிந்து கொண்டார்கள். இன்று பெண்கள் அதிக சிரத்தையுடன் *பிந்தியை* வைத்துக் கொள்கிறார்கள். அந்த பொட்டுக்கு ஒரு மறைஞான பொருள் இருக்கிறது. அது தூல கண்களுக்கு தென்படாத விஷயங்களை பார்க்கும் ஆன்மீக பார்வையின் மூன்றாவது கண்ணை குறிக்கிறது. இந்துக்கள் *யோகம்* மூலம் தங்களது அகப்பார்வையை விழிக்க வைக்க முயற்சி செய்கிறார்கள். தூல கண்களால் மட்டும் பார்க்காமல், "மனதின் கண்" மூலமாகவும் பார்த்து வாழ்க்கையின் உட்புற வேலைப்பாடுகளை உணர்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் இந்த ஆன்மீக பார்வையை பயன்படுத்த நெற்றியில் வைக்கும் பொட்டு நினைவூட்டுகிறது. நமது மூன்றாவது கண்ணின் மூலம், நம்மால் எதிர்காலத்தை பார்க்க முடிகிறது. நமது மூன்றாவது கண்ணின் மூலம், நம்மால் தேவலோகத்தை காண முடிகிறது. மூன்றாவது கண்ணின் மூலம், நாம் மூன்றாவது லோகமாக இருக்கும் சிவலோகத்தை பார்க்க முடிகிறது. நமது மூன்றாவது கண்ணின் மூலம், நம்மால் கடந்த காலத்தை பார்க்க முடிகிறது. நிரந்தரமாக விழித்து இருக்கும் அந்த கண்ணுடன் நாம் பிறந்து இருந்தாலும், அதன் பல செயல்பாடுகள் பற்றி அறிவது இல்லை. அது பெரும்பாலான மக்களிடத்தில் அறிவுப்பூர்வமான அறியாமை மற்றும் பயன்படுத்தாமை காரணமாக மறைக்கப்பட்டு இருக்கிறது. நாம் தியான நிலையில் இருந்து, நமது மனம் முழுவதையும் புருவ மத்தியில் இருக்கும் மூன்றாவது கண்ணின் பகுதி மீது ஒருமுகப்படுத்தும் போது, ஒரு சிவப்பு ஒளி தோன்றுவதை நாம் காண்கிறோம். நமக்கு கோயில் மற்றும் வீட்டில் கற்றுத்தருவதைப் போல, நாம் நமது புருவங்களுக்கு மத்தியில் சிவப்பு நிற *பொட்டு* அல்லது *பிந்துவை* வைத்துக் கொள்ளும் போது, மூக்குக் கண்ணாடியின் பயன்பாடு இரு கண்களுக்கு வலிமை சேர்ப்பதை போல, அந்த பொட்டு மூன்றாவது கண்ணின் பயன்பாட்டை மேம்படுத்துகிறது. ¶ஒரு எளிமையான பொட்டு மட்டும் இல்லாமல், *திலகத்தை* போன்று நெற்றியில் வேறு பல சின்னங்களும் வைப்படுகின்றன. ஒவ்வொரு அடையாளமும் நமது மாபெரும் இந்து மதத்தில் ஒரு குறிப்பிட்ட சம்பிரதாயத்தை குறிப்பிடுகிறது. நமது மதத்தில் சைவம், வைணவம், சாக்தம் மற்றும் சுமார்த்தம் என்று நான்கு முக்கிய பிரிவுகள் உள்ளன. உதாரணத்திற்கு வைணவர்கள், தங்கள் நெற்றியில் அடையாளமாக *திலகம்* அல்லது திருநாமம் வைத்துக் கொள்கிறார்கள். இந்துக்கள் முக்கிய பண்டிகைகளின் போது பெரிய *திலகங்களை* நெற்றியில் வைத்துக் கொண்டாலும், தாங்கள் இந்து என்பதற்கு அடையாளமாக அவர்கள் பொது வாழ்க்கையிலும் எளிமையான *பிந்தியை* அணிந்து கொள்கின்றனர். இதன் மூலம் நமக்கு அந்த நபர் பின்பற்றும்

சம்பிரதாயம் தெரிவதால், நாம் அவருடன் உரையாடலை தொடங்கும் முறையை தெரிந்துகொள்கிறோம். ¶முன்பு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளை சேர்ந்த பெண்கள் தங்கள் கன்னங்களில் கருப்பு அழகுக் குறி வைத்துக் கொண்டதை போல, இந்து பெண்கள் தங்கள் நெற்றியில் பொட்டை ஒரு அழகுக் குறியாக வைத்துக் கொள்கிறார்கள். சிகப்பு நிற *பிந்தி* பொதுவாக திருமணமான பெண்களின் அடையாளமாக விளங்குகிறது. திருமணத்திற்கு முன்பாக திருஷ்டி கழிப்பதற்கு பெரும்பாலும் ஒரு கருப்பு *பிந்தியை* வைத்துக் கொள்கிறார்கள். *பிந்தி* சிலசமயங்களில் அயல்நாட்டு பாணியாக விளங்குவதோடு, அதன் நிறம் அணிந்து இருக்கும் புடவைக்கு பொருத்தமாக தேர்ந்தெடுக்கப்படுகிறது. சிலசமயங்களில் பிரபல அமெரிக்க தொலைகாட்சி நிகழ்ச்சிகள் வரும் நடிகைகள் அலங்கார *பிந்திகளுடன்* தோன்றுகின்றனர். ¶மக்கள் தங்கள் இறை நம்பிக்கையை தனிப்பட்ட மதச்சின்னங்கள் மூலம் வெளிப்படுத்துவது வழக்கமாகி விட்டது. அந்த மதச்சின்னங்கள் பெரும்பாலும் அவர்களின் இந்து கோயில்கள், கிறித்துவ தேவாலயங்கள் அல்லது யூதர்கள் கோயில்களில் புனிதமாக வழங்கப்படுகின்றன. யூத மதத்தை சேர்ந்த ஆண்கள் தலையில் யார்முல்க குல்லாக்களை அணிந்து கொள்கிறார்கள். கிறித்துவர்கள் கழுத்தில் அணியும் ஆபரணங்கள் அல்லது மேல்சட்டை மடிப்பில் ஒரு சிலுவை அல்லது பதக்கங்களை அணிந்து கொள்கின்றனர். இன்றும் சில நாடுகளில், இசுலாமிய பெண்கள் தங்கள் முகத்தை பர்தா மூலம் மூடிக்கொள்கின்றனர். ¶அதனால் நீங்கள் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா அல்லது உலகில் எந்த நாட்டில் இருந்தாலும், உங்கள் நெற்றியில் *பிந்தி* வைத்துக்கொள்ள தயங்க வேண்டாம். அது நிரந்தரமான உண்மைகளை அறிந்த ஒரு இந்துவாக, மிகவும் விசேஷமான மனிதராக உங்களை மற்றவர்களிடம் இருந்து பிரித்து காட்டும். இதனால் நீங்கள் வேற்று மதத்தை சேர்ந்தவராக அல்லது எந்த மதத்தையும் சாராதவராக தவறாக கருதப்படுவதற்கு வாய்ப்பு அளிக்காது. அந்த சிறிய அடையாளம் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அவர்களின் சூழ்நிலையை பொறுத்து சிறியதாக அல்லது பெரியதாக இருக்கலாம். சமீபத்தில் ஒரு கனடா நாட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஆவணப்படம், அந்த *பிந்தியை* "ஒரு பாங்கான அடையாளம்" என்று அழைத்தது. காலங்கள் மாறிக்கொண்டு இருக்கின்றன, மற்றும் உங்களை தெளிவாக வேறுபடுத்திக் காட்டும் அடையாளங்களை பெருமையாக அணிவது முற்றிலும் பாங்காக இருக்கும்!

புதன்கிழமை

பாடம் 311

சிவபெருமானின்

இயல்பு

சிவபெருமான் மூன்று முழு நிறைவான அம்சங்களுடன் இருக்கிறார் என்பது நாம் அவரைப்பற்றி தெரிந்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான போதனை ஆகும். அவர் காலம், உருவம் மற்றும் பரவெளிக்கு மட்டும் அதீதமாக இல்லை. சிவபெருமானின் முழு நிறைவான அம்சங்களில் ஒன்றாக அந்த முழுமுதல்பொருள், பரசிவ விளங்குகிறது. அவர் எல்லா சக்திகள் வழியாக பாய்ந்து சென்று, எங்கும் எதிலும் வியாபித்து இருக்கும் சச்சிதானந்தம் வடிவமாக இருக்கிறார். அவர் எல்லா வடிவங்களிலும் வியாபித்து இருக்கிறார். சிவபெருமான் இல்லாத இடமே இல்லை. இதைத்தவிர அவருக்கு இன்னொரு முழு நிறைவான அம்சம் இருக்கிறது. அந்த அம்சத்தில் அவர் மூன்றாவது லோகத்தில், ஒரு பிராகாசமான பொன்னிற உடலாக இருக்கிறார். அவர் அந்த ஒரு நிறைவான உடலில் நமது படைக்கும் கடவுளாக இருந்து, நமது கற்பனை சக்திக்கு எட்டாத அற்புதமான அன்பான நிறைவான தெய்வீக சக்தியாக விளங்குகிறார். நாம் கோயிலில் சிவபெருமானை ஆவாகனம் செய்யும் போது, அவர் இந்த பிரகாசமான பொன்னிற உடலுடன் வருகை தந்து, பக்தர்களுக்கு ஆசிகளை வழங்குகிறார். அவரால் உங்களை பார்க்க முடிகிறது. அவரால் உங்கள் பிரார்த்தனைகளை கேட்க முடிகிறது. அவர் இந்த பூமியில் இருக்கும் ஆன்மாக்கள் அனைத்தையும், நமது பிரபஞ்சத்தில இருக்கும் மற்ற கிரகங்கள் அனைத்தையும் உருவாக்கினார் என்று நமது புனிதமான சாத்திரங்கள் நமக்கு தெரிவிக்கின்றன. ¶சிவபெருமான் ஒவ்வொரு நொடிப்பொழுதும் எல்லா வஸ்துக்களிலும் எங்கும் எதிலும் தொடர்ந்து இருந்துக்கொண்டு இருக்கிறார். மகேசுவரனாகவும், நடனத்தின் அரசனாகவும் நடராசராகவும் இருக்கும் சிவபெருமானுக்கு நம்மை போன்றுள்ள இரு கைகள் மற்றும் இரு கால்கள் கொண்ட உடல் மூலம், அவரால் பேச முடியும், அவரால் சிந்திக்க முடியும், அவரால் உங்களை பார்க்க முடியும் மற்றும் நீங்களும் அவரை பார்க்க முடியும். அவர் இந்த உடலுடன் தொடர்ந்து திருநடனம் ஆடிக்கொண்டு இருக்கிறார். எனக்கு ஒருமுறை நடராசர் ஆடிக்கொண்டிருக்கும் தரிசனம் கிடைத்தது. அவரது கால் சலங்கை ஒலிகளை என்னால் கேட்க முடிந்தது. அவரது பாதம் மற்றும் கால்களை என்னால் காண முடிந்தது. அற்புதமாக நடனமாடும் அவர், அந்த நடனத்தை மூன்றாவது லோகத்தில் ஆடிக்கொண்டு இருக்கிறார். ¶சிவபெருமான் நமக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறார். அவர் நமது சுவாசம், நமது கைகள் மற்றும் கால்களை காட்டிலும் மிகவும் நெருக்கமாக இருக்கிறார். அவர் நமது ஆன்மாவின் சாரமாக இருக்கிறார் என்றாலும் அவர் நம்மைப் போன்ற ஒரு உடலுடன் மூன்றாவது லோகத்தில் வாசம் செய்கிறார். அவர் இந்த பிரகாசமான உடலுடன் கோயிலின் கற்பகிரகத்தில் வருகை தந்து நம்மை பார்க்க முடிகிறது, மற்றும் நம்மால் அவரது *சக்தி*, அவரது ஆற்றல் மற்றும் இருப்பை உணர முடிகிறது. நமது பரமேசுவரனாக இருக்கும் அவர், இந்த பிரபஞ்சத்தை ஆட்சி செய்கிறார். ¶சிவபெருமானை வழிப்பட்டால், அவர்

நம்மிடம் இருப்பது அனைத்தையும் பறித்துக் கொள்வார் என்ற ஒரு தவறான கருத்தை நாம் சிலசமயங்களில் கேட்கிறோம். அது உண்மை இல்லை. அது சைவ சமயத்திற்கு எதிரான பிரச்சாரம் ஆகும். அதில் சிறிதும் உண்மை இல்லை. பரமேசுவரனாக இருக்கும் சிவபெருமானை உங்களது உயிரின் உயிராக இருப்பதாக *வேதங்கள்* குறிப்பிடுவதால், சிவபெருமான் உங்களுக்கு அனைத்தையும் வழங்குகிறார். இந்த எதிர்ப்புப் பிரச்சாரம், பிரதானமாக இந்தியாவின் வடக்கு பகுதியில் இருப்பதோடு, மற்ற பகுதிகளிலும் பரவி உள்ளது. அது ருத்திரன் வடிவமாக இருக்கும் சிவபெருமான், அழிக்கும் கடவுளாக இருப்பதாக பிரச்சாரம் செய்கிறது. இதனால் மக்கள் சிவபெருமானை கண்டு அஞ்சுகிறார்கள். சிவபெருமானை கண்டு அஞ்ச வேண்டிய அவசியமில்லை. அவர் எல்லா பொருட்களையும் உருவாக்கி இருப்பதால், அவர் பாசம் நிறைந்த கடவுளாக இருந்து எல்லோர் மீதும் இரக்கத்துடன் இருக்கிறார். ¶சிவபெருமான் மூலம் எதுவும் அழிக்கப்படுவது இல்லை, ஆனால் படைக்கும் கடவுளாக இருக்கும் அவர், தனது படைப்புக்களை தொடர்ந்து உருமாற்றி தனக்குள் ஒடுக்கிக்கொள்கிறார். விஷ்வகிராசாவாக இருக்கும் முடிவான ஒடுக்கம் என்பது, பல யுகங்கள் முன்பு உருவாக்கப்பட்ட படைப்புக்களின் முடிவான அழிவை அல்லவா குறிக்கிறது? நமது சிவபெருமானுடன் எல்லா வஸ்துக்களும் ஐக்கியமாவது தானே குறிக்கோள்? நாம் இதன் மூலம் அழிக்கப்படுவது இல்லை. நாம் நிறைவை பெறுகிறோம்! தீங்கு விளைவிக்கும் அம்சங்களை தவிர, அவர் நம்மிடம் இருந்து வேறு எதையும் எடுத்துக் கொள்வது இல்லை. சிவபெருமான் நம்மிடம் இருந்து பேராசையை நீக்கி, நமக்கு செல்வ வளத்தை வழங்குகிறார். சிவபெருமான் நம்மிடம் இருந்து கழிகாமம் நீக்கி, நமக்கு திருப்தியை வழங்குகிறார். சிவபெருமான் நம்மிடம் இருந்து கோபத்தை நீக்கி அன்பை வழங்குகிறார். சிவபெருமான் நம்மிடம் இருந்து பொறுமையை நீக்கி தன்னம்பிக்கை மற்றும் பாதுகாப்பை வழங்குகிறார். சிவபெருமான் நிறைவை தரும் கடவுளாக இருக்கிறார்.

வியாழக்கிழமை

பாடம் 312

கோயிலின்

மீமெய்யியல்

பரமேசுவரனாக இருக்கும் சிவபெருமான் நமக்கு உதவி செய்ய, பாதுகாப்பு அளிக்க மற்றும் ஊக்குவிக்க முருகப்பெருமான், விநாயகரை போன்று மேலும் பல மகாதேவர்களை உருவாக்கி இருக்கிறார். நாம் எந்த ஒரு செயலை தொடங்கும் முன்பாகவும், குறிப்பாக நமது வாழ்க்கைகளில் புதிய

வழக்கங்களை பின்பற்ற தொடங்குவதால் மாற்றங்கள் நடைபெறும் போதும், மிகவும் முக்கியமாக சிறந்த மகாதேவராக விளங்கும், விநாயகரை ஆவாகனம் செய்ய வேண்டும். விநாயகர் நமது மனங்களை தொடர்ந்து நிலைப்படுத்தி, நாம் பக்குவமடைந்து முன்னேறும் போது, முறையாக பாதைகளை திறந்து வைக்கிறார். அவர் எப்போதும் தனது கடமையில் இருந்து தவறுவது இல்லை. நமக்கு அவரது தேவை ஏற்படும் போதெல்லாம், அவர் தயாராக வந்து நிற்கிறார். சிவபெருமானின் சக்தி மூலம் படைக்கப்பட்ட முருகப்பெருமானுக்கு ஆன்மீக விவேகம் மற்றும் தெய்வீக அறிவுடன் கூடிய *வேல்* ஆயுதமாக வழங்கப்பட்டது. பிரபஞ்சத்தின் மாபெரும் அற்புதங்களை வெளிப்படுத்தி அருள் புரிய வேண்டும் என்று முருகப்பெருமானை பிரார்த்தனை செய்யுங்கள். உங்களை ஆன்மீகவாதியாக மாற்றவேண்டும் என்று முருகப்பெருமானிடம் பிரார்த்தனை செய்யுங்கள். உங்களது சைவ சமயத்தை பற்றி அதிகமாக கற்றுத்தந்து சிவபெருமானின் திருக்கரங்களில், உங்களை விடுவிக்குமாறு முருகப்பெருமானிடம் பிரார்த்தனை செய்யுங்கள். ¶இறைவன் மற்றும் மகாதேவர்களின் யதார்த்தம் பற்றிய புரிதல், பிரார்த்தனை மற்றும் வழிபாடு பற்றிய முக்கியத்துவத்தை முழுமையாக புரிந்துகொள்வதற்கு துணையாக இருக்கக்கூடும். உதாரணத்திற்கு சிவபெருமானை புகழ்ந்து பாடி, அவர் மீது அன்பை வெளிப்படுத்தும் *தேவாரங்கள்*, *பஜனைகள்* மற்றும் *ஜபங்கள்* மற்றும் வேறு பல வழிகள் மூலம், நாம் நமது இதயங்களில் இருக்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறோம். இந்த கீர்த்தனைகளை சூட்சும சக்திகள் கேட்கிறார்கள். நாமிருக்கும் இடத்திற்கு இரண்டாவது லோகத்தில் இருந்து *தேவர்கள்* வந்து, நமக்கு அருகில் வட்டமிட்டுக்கொண்டு நமது பாடலுக்கு ஆடுகிறார்கள். நாம் அதிக சிரத்தை மற்றும் உத்வேகத்துடன் இருந்தால், மூன்றாவது லோகத்தில் இருந்து வரும் மகாதேவர்களும் தங்கள் பிரகாசமான உடல்களுடன் *தேவர்களுக்கு* மேலே வட்டமிட்டுக்கொண்டு, மனதில் பக்தியுடன் பாடுபவர்களுக்கு ஆசிகளை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ¶உங்களால் அந்த சூட்சும சக்திகளை பார்க்க முடியாது என்றாலும், உங்களால் அவர்களின் இருப்பையும், உங்களை சுற்றி ஒரு புனிதமான சூழலையும் உணர முடியும். இதை ஓம் நம சிவாய என்று ஜபிக்கும் போது, உங்களில் பலர் உணர்ந்திருக்கக் கூடும் என்று நான் நம்புகிறேன். "ஓம் நம சிவாய" என்று ஒருவர் சொல்லும் வரை, இந்த பூமியில் சைவ சமயம் முழு ஆற்றலுடன் நிலைத்து இருக்கிறது. "ஓம் நம சிவாய, ஓம் நம சிவாய" என்று ஜபித்துக்கொண்டு, காலையில் விழித்து எழுங்கள். "ஓம் நம சிவாய, ஓம் நம சிவாய" என்று சொல்லிக்கொண்டு இரவு உறங்கச்செல்லும் போது, நீங்கள் இரவு முழுவதும் உங்கள் தூல உடலை விட்டு வெளியேறி, நாம் எல்லோரும் ஒன்றாக கற்றுக்கொண்டு, தியானம் செய்து ஆன்மீகத்தில் நம்மை மேம்படுத்திக் கொள்ளும் விண்ணுலகத்தில் பயணம் செய்கிறீர்கள். ¶இந்த பூமியில் மகாதேவர்களின் விசேஷ வீடாக புனிதமான கோயில் விளங்குகிறது. தொடர்ந்து முறையாக சுத்தமான முறையில் பூஜை

நடைபெறும் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயிலில், மகாதேவர்கள் எளிதில் எழுந்தருள்கிறார்கள். நீங்கள் ஒரு இந்து கோயிலில் மனம் முழுவதும் கவலைகளுடனும், பொறாமை மற்றும் கோபத்துடனும் நுழைந்து, மனச்சுமைகளில் இருந்து முழுவதும் விடுபட்டு பாதுகாப்பான உணர்வுடன், எதை நினைத்து நாம் குழம்பினோம் என்ற வியப்புடன் வெளியேறும் அளவிற்கு நமது மதத்தின் மகாதேவர்கள் தெய்வீக மனநல மருத்துவர்களாக விளங்குகிறார்கள். மூன்றாவது லோகத்தில் வாழும் அவர்களின் இருப்பை, நமது கோயில் *பூசாரிகள்* கற்சிலைகளில் ஆவாகனம் செய்யும் போது, அவர்கள் மூன்றாவது லோகத்தில் இருந்து பூலோகத்திற்கு வருகிறார்கள். ¶இந்துக்கள் கற்சிலைகளை வழிபடுவதும் இல்லை. இதை யார் கூறினாலும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவும் வேண்டாம். இது முற்றிலும் தவறு. அவ்வாறு பேசுபவர்களுக்கு கோயிலின் சூட்சுமமான செயல்பாடுகள் பற்றி தெரிவது இல்லை அல்லது தங்களின் மதத்தில் தங்களுக்கு பாதுகாப்பு உணர்வு கிடைக்காததால், அவர்கள் நமது மதத்தை பரிகாசம் செய்கிறார்கள். கோயிலின் கற்பகிரகத்தில் மகாதேவர்கள் சில நிமிடங்கள் எழுந்தருள்வதற்காக, அவர்களை இந்து பூசாரிகள் ஆவாகனம் செய்கிறார்கள். அந்த தெய்வங்கள் சூட்சுமமாக இருக்கும் தங்களது பிரகாசமான உடல்களுடன் வருகிறார்கள். அவர்கள் கற்சிலைக்கு மேலே வட்டமிட்டுக்கொண்டு பக்தர்களுக்கு ஆசிகளை வழங்குகிறார்கள். நீங்கள் சூட்சுமமான விழிப்புணர்வை பெற்று, அதன் மூலம் உங்கள் மூன்றாவது கண் திறந்து இருந்தால், உங்களால் அங்கிருக்கும் மகாதேவரை பார்த்து, அவரது திருஉருவத்தை *தரிசனம்* செய்யவும் முடியும். பழங்காலத்தில் பல சைவ முனிவர்களும் இக்காலத்தில் சில பக்தர்களும், அந்த மகாதேவர்களின் அத்தகைய தரிசனங்களை பெற்று இருக்கிறார்கள். ¶நாம் கோயிலுக்கு சென்று வெளியேறும் போது, மனம் முழுவதும் அந்த தெய்வத்தின் *சக்தியுடன்* வருகிறோம். நமது உடலின் ஒவ்வொரு நரம்பு ஓட்டத்திலும் கோயிலின் *சக்தி* நிரம்பி இருக்கிறது. நாம் வீடு திரும்பி ஒரு எண்ணெய் விளக்கை ஏற்றும் போது, அந்த கோயிலின் சக்தியை நமது வீட்டிற்குள் கொண்டு வருகிறோம். இந்த எளிய செயல் அந்த இரண்டாம் லோக *தேவர்களை* உங்கள் வீட்டிற்குள் கொண்டு வருவதால், அது கோயிலுக்கு செல்லாமல் வீட்டில் இருந்த குடும்பத்தினருக்கு அந்த *தேவர்கள்* ஆசிகள் வழங்க துணை புரிகிறது. சைவ சமயத்தின் மறைஞானத்தை சிறிதளவு தெரிந்துகொள்வதன் மூலம், நமக்குள் கண்ணுக்கு தென்படாத லோகங்கள் எவ்வாறு செயல் புரிகிறது என்பதை நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 313

பூஜையின் போது

இறைவனுடன் பேசுதல்

விண்ணுலக சக்திகளாக விளங்கும் தேவர்களின் மொழியான சமஸ்கிருதத்தில் புரோகிதர் என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறார் என்றும், அவர் கற்பகிரகத்தில் நீர், பூக்கள் மற்றும் நைவேத்திய பொருட்களுடன் மந்திரங்களை சொல்லி பூஜை செய்யும் போது, புரிந்துகொள்வதற்கு கடினமாக இருக்கும் அந்த சடங்குகளின் பொருள் என்ன என்றும் நீங்கள் வியந்து இருக்கக்கூடும். நமது வாழ்க்கைகளில் கோயிலின் முறையான செயல்பாட்டிற்கு புரோகிதரின் பணி மிகவும் முக்கியம் ஆகும். மகாதேவர்களை கற்பகிரகத்தில் ஈர்ப்பதற்கு, அவர் ஒழுங்குமுறைகளை உறுதியாக கடைப்பிடித்து சுத்தமாகவும் இருக்க வேண்டும். அவர் தனது மந்திரங்களின் மூலம் இறைவன் மற்றும் மகாதேவர்களிடம், "இறைவனே, நான் உங்கள் உருவ உலகில், இந்த குறிப்பிட்ட இடத்தில் அமைந்துள்ள இந்த குறிப்பிட்ட கோயிலில், இந்த நோக்கத்திற்காக உங்களுக்கு இந்த *பூஜையை* செய்ய இருக்கிறேன். இந்த வழிபாட்டை நல்ல முறையில் ஏற்றுக்கொண்டு, எங்களுக்கு அருள் செய்து, நீங்கள் எங்களது தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்து, இந்த சமூகத்தில் இருக்கும் எல்லோரது வாழ்க்கைகளிலும் நன்மையை வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன். நாங்கள் எங்கள் வழிபாட்டில் எந்த தவறுகளையும் செய்யாமல், செய்யவேண்டியது எதையும் மறக்காமல் முறையாக செய்து உங்களை திருப்திப்படுத்த வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். ஆனால் பகவானே, நாங்கள் ஏதேனும் தவறு செய்தால், எங்களை மன்னித்து, இந்த *பூஜை* தவறு இல்லாமல் நிறைவாக செய்தால் கிடைக்கும் வலுவான ஆசிகளை, குறை இல்லாமல் வழங்கி விடுங்கள். நீங்கள் இந்த கோயிலுக்கு வருகை தந்து, இந்த கற்சிலை மீது உங்கள் பிரகாசமான உடலுடன் வட்டமிட்டு பக்தர்களுக்கு ஆசிகளை வழங்கவேண்டும் என்று நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். இவ்வாறு நான் உங்களுக்கு அன்னம், பழங்கள் மற்றும் பூக்களை வழங்குகிறேன். நீங்கள் எங்களுடன் வந்து சிறிது காலம் தங்க வேண்டும் என்பதற்காக, எங்களிடம் உள்ள சிறந்த பொருட்களை உங்களுக்கு நைவேத்தியம் செய்கிறேன்," என்று கூறுகிறார். ¶புரோகிதர் தொடக்கத்தில் சொல்லும் மந்திரங்கள், வழிபாடு நடக்கும் இடம், காலம் மற்றும் நோக்கத்தை இறைவனிடம் தெரிவிக்கும் விதமாக அமைந்து இருக்கிறது. "இந்த கோயிலில் நீங்கள் எங்கள் மதிப்பிற்குரிய விருந்தாளியாக தங்கி இருப்பதற்கு, இங்கிருக்கும் சூழலை சுத்திகரிக்கும் பூஜையை தேவையான சுத்தத்துடன் செய்து முடிப்போம் என்பதில் நாங்கள் நம்பிக்கை வைத்து இருக்கிறோம்," என்று மந்திரம் ஓதுகிறார். அதன் பிறகு அவர் தெய்வத்தின் சிலைக்கு அபிஷேகம் செய்து, வஸ்திரங்களை அணிவித்து, அந்த தெய்வம் மூன்றாவது லோகத்தில் இருந்து பூலோகத்தில் இருக்கும் கற்சிலைக்குள் வந்து

அருளவேண்டும் என்று அவர் அந்த தெய்வத்தை வழிபடுகிறார். நமது உடல்கள் எலும்புகளால் ஆனது, ஆனால் நாம் நமது எலும்புகளாக இருப்பதில்லை. கோயிலில் இருக்கும் இறைவனின் உடல் கல்லில் செதுக்கப்பட்டது என்றாலும், அவர் அந்த கற்சிலை இல்லை. அவர் மூன்றாவது லோகத்தில் பிரகாசமான உடலுடன் இருக்கிறார். நாம் எல்லோரும் ஆன்மாக்களாக இருப்பதைப் போல, அவர் ஆதி ஆன்மாவாக இருக்கிறார். ¶இறைவன் தனது விண்ணுலக உதவியாளர்களாக இருக்கும் *தேவர்களுடன்* உச்சிகால பூஜையின் போது வருகை தருகிறார். அவர்கள் உங்கள் மனதில் இருந்து பிரச்சனைகள் அல்லது கவலைகளை நீக்கி, உங்கள் உடலின் ஓட்டங்களில் இணக்கத்தை ஏற்படுத்தி, உங்கள் பிரச்சனைகள் அனைத்தையும் கரைத்து விடுகிறார். அந்த நிகழ்வு நடைப்பெற்றதும், கோயிலுக்குள் நுழைந்த போது உங்களுக்கு இருந்த கவலைகளை மறந்து, கோயிலில் தெய்வீக அருளை பெற்ற திருப்தியுடன் நீங்கள் வெளியேறுகிறீர்கள். ¶தினசரி முக்கிய *பூஜைகளுக்கு* மத்தியில், நாம் விரும்பினால் செய்து வைக்கப்படும் *அர்ச்சனை* என்கிற தனிப்பட்ட *பூஜையை,* நீங்கள் ஏற்பாடு செய்து இருந்தால், புரோகிதர் உங்கள் பெயரை உச்சரிக்கிறார். அவர் நீங்கள் பிறந்த நட்சத்திரத்தை சொல்லி, உங்களை இறைவனிடத்தில் முறையாக அறிமுகப்படுத்தி வைக்கிறார். "பகவானே, இந்த எளிமையான பக்தன், ஒரு குறிப்பிட்ட பிரச்சனை அல்லது ஒரு மங்களகரமான நிகழ்வுக்கு உங்கள் அருளாசியை வேண்டுகிறார். நல்ல பலன் கிடைப்பதற்கு, நீங்கள் நல்ல முறையில் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கையில், அவர் உங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கும் பிரார்த்தனைகளுக்கு நீங்கள் செவிசாய்க்க வேண்டும்," என்று அவர் கேட்டுக்கொள்கிறார். “இந்த மந்திரத்தை புரோகிதர் ஆங்கிலத்தில் கூறினால் பலன் தருமா?" என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயமாக பலன் தரும்! நீங்கள் உங்கள் மனதில் இறைவனுடன் ஆங்கிலம் அல்லது வேறு எந்த மொழியில் பேசினாலும், அவர் புரிந்துக்கொள்வார். ஆனால் சமஸ்கிருத மொழிக்கு ஒரு தனிப்பட்ட சக்தி, ஒரு ஆன்மீக அதிர்வு இருக்கிறது. அது மிகவும் பழமையான மொழி, மற்றும் அது ஆன்மீக கருத்துக்கள் மற்றும் அர்த்தங்களை மிகவும் நுணுக்கமாக தெரியப்படுத்தும் திறன் படைத்து இருக்கிறது. இதன் காரணமாகவே இந்த பழமையான மந்திரங்கள் நமக்கு புரியவில்லை என்றாலும், அதை கேட்பதற்கு ஆனந்தம் தருவதாக இருக்கிறது.

சனிக்கிழமை

பாடம் 314

கோயில் செல்லும்

அணுகுமுறை

"நாம் கோயில் பிரகாரத்தை சுற்றி வருவதன் காரணம் என்ன?" என்று பக்தர்கள் என்னிடம் கேட்கிறார்கள். நாம் கோயிலுக்கு நகரத்தில் இருக்கும் தெருக்களில் இருந்து நுழையும் போது, நாம் பெரும்பாலும் எதிர்மறை அதிர்வலைகள் மூலம் மறைக்கப்பட்ட நிலையில் வருகிறோம். இது நமது ஒளிஉடலில் நன்றாக தென்படுகிறது. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் நாம் அழுத்தம் மற்றும் நலிசோர்வு மூலம் வேதனையையும், விரைவான வாழ்க்கைமுறை மற்றும் எண்ணற்ற மாற்றங்கள் மூலம் தன்னம்பிக்கை இழந்தும் இருப்பதால், நமது நரம்பியல் அமைப்பு பதட்டத்தில் இருக்கக்கூடும். கோயிலின் கற்பகிரகத்தில் நாம் நுழையும் தகுதியை பெறுவதற்கு, நாம் கோயிலை மெதுவாக வலம் வருகிறோம். இதன் மூலம் நாம் நமது மனதை தயார் செய்து கொள்கிறோம். நாம் நமது லௌகீக எண்ணத்தை மனப்பூர்வமாக விட்டொழித்து, முடிந்தவரை வேதனைகள் மற்றும் மனதில் இருக்கும் குழப்பங்களை விடுவித்து, நமது அகத்தின் ஆழத்தில் அமைதி நிலையாக குடிக்கொண்டு இருக்கும் இடத்தை அடைகிறோம். கோயிலுக்குள் இருக்கும் விண்ணுலக சக்திகளுடன் தொடர்பு கொள்வதற்காக, நாம் கோயிலை சுற்றி நடந்து செல்லும் போது நாம் விண்ணுலக அம்சத்தை பெறுகிறோம். ¶சிவபெருமான் மற்றும் பூலோக மக்களுக்கு இடையேயான உடன்பாட்டை குறிக்கும் சின்னமாக விளங்கும் சிவன் கோயில், மூன்று லோகங்கள் விழிப்புடன் தொடர்பு கொள்ள சந்திக்கும் இடமாக விளங்குகிறது. இது சிவபெருமான் மற்றும் மேலும் பல மகாதேவர்களின் இல்லமாக விளங்குகிறது. பிரத்யேகமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த கோயில், சிவலோகத்துடன் பூலோகத்தை தொடர்புப்படுத்தும் ஒரு ஆன்மீக ஆற்றலின் கிரணத்தை கொண்டுள்ளது. இலங்கையை சேர்ந்த என் *சத்குருவான* சிவ யோகசுவாமி, "பக்தர்களுக்கு ஆசிகளை வழங்கும் பகவானே, மூலப்பொருளே, அன்புருவாக இருப்பவனே, பரமனே, அதீதமாக இருந்து கோயிலில் வாசம் செய்பவனே, நான் இங்கே ஒரு இறைவனை போல வாழ்வதற்கு அருள் புரிவாயாக. இந்த உலகில் நாம் எண்ணற்ற *சித்திகளை* பெற்றாலும், பக்தியின் பாதையில் இருந்து விலகாமல், பக்தர்கள் வார்த்தைகளை மதியாமல் இருக்க வேண்டாம்," என்று பிரார்த்தனை செய்தார். கோயிலில் இறைவன் வாசம் செய்வதால், ஒரு புனிதமான சிவன் கோயிலை அதிக மதிப்பு மற்றும் பணிவுடன் அணுக வேண்டும். நீங்கள் ஒரு பேரரசர், ஒரு ஆளுநர், ஒரு பெரிய சாம்ராச்சியத்தின் தலைவரை சந்திக்கப் போவதைப் போல, அவரை சந்திக்கப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பு மற்றும் மனதில் மதிப்பு மரியாதையுடன் செல்லுங்கள். ¶கோயிலில் மேற்கொள்ளப்படும் வழிபாடு பூமியில் கலாச்சாரத்தை உருவாக்குகிறது. கோயிலில் மேற்கொள்ளப்படும் வழிபாடு பூமியில் செல்வத்தை உருவாக்குகிறது. கோயிலில் மேற்கொள்ளப்படும் வழிபாட்டின் மூலம் சிவபெருமானின் தெய்வீக விதியாக இருக்கும் சைவ தர்மத்திற்கு பணிந்து நடக்கும் பண்பை உருவாக்குகிறது. இதைப்பற்றி *திருமந்திரம்* எச்சரிப்பதை நாம் பார்க்கலாம்,

“முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்கு உள வாரி வளம் குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினி
என் அரு நந்தி எடுத்து உரைத்தானே.” (518).
சிவபெருமானின் இல்லங்களாக உலகின் மாபெரும் கோயில்கள் விளங்குகின்றன, மற்றும் அவற்றில் விநாயகர், முருகப்பெருமான் மற்றும் மற்ற முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தனித்தனி அறைகளாக கற்பகிரகங்கள் உள்ளன. சிவபெருமானை பிரார்த்தனை செய்யுங்கள். சிவனின் கோயில்களுக்கு கூட்டம் கூட்டமாக சென்று நீங்கள் அவரை வழிபடும் போது, அவர் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் ஒவ்வொருவருக்கும் தாராளமாக வெகுமதிகளை வழங்குகிறார். ¶நாங்கள் சமீபத்தில் சிவபெருமான் நடனமாடும் சிதம்பரம் தில்லை நடராசர் கோயிலுக்கு சென்று வந்தோம். கோயிலில் பணிபுரியும் புரோகிதர்கள் அந்த கோயிலின் கற்பகிரகத்தை அறிவியல் ரீதியாக சோதனை செய்து இருந்தனர். அந்த சோதனையை செய்ய மேற்கத்திய நாடுகளில் இருந்து வந்த விஞ்ஞானிகள், கோயிலில் சில அளவுகளை எடுத்த போது, கற்பகிரகத்தில் கதிரியக்க சக்தி இருந்ததோடு, அந்த இடம் பூமியில் மிகவும் அதிகமான புவியீர்ப்பு சக்தியை கொண்டு இருந்ததாகவும் கண்டறிந்தனர். கோயிலில் இருக்கும் மற்ற இடங்கள் அல்லது சுற்றுப்புற இடங்களை காட்டிலும் கற்பகிரகத்தில் புவியீர்ப்பும் அதிகமாக இருக்கிறது, அங்கே கதிரியக்க சக்தியும் இருக்கிறது. அங்கே பல்லாயிரம் வருடங்களாக நடைப்பெற்ற வழிபாட்டு காரணமாக, இந்த மாபெரும் சக்தி உருவாகியுள்ளது. ¶எதற்காக அமெரிக்கர்கள் சைவ சமயத்திற்கு மாறுகிறார்கள்? ஏனென்றால் அவர்கள் மேற்கத்திய நாடுகளில் கட்டப்பட்டு வரும் புதிய கோயில்கள் மூலமாக அல்லது தாங்கள் மேற்கொண்ட தியானங்கள் மூலமாகவும், இந்த மறைஞான நிகழ்வுகளை உண்மையில் உணர்ந்து இருக்கின்றனர். இறைவன் வருகை தந்து, தனது பூலோக கற்சிலை மீது வட்டமிடுவதை அவர்கள் பார்த்து இருக்கின்றனர். இந்த கற்பகிரகத்தில் இருந்து வரும் *சக்தி* கிரணங்கள் தங்கள் உடல் வழியாக ஊடுருவி, தங்கள் ஒளிஉடல் வழியாக ஊடுருவி, தங்கள் மனதை சுத்தம் செய்வதோடு, தங்கள் வாழ்க்கை மற்றும் தங்கள் உடலில் இருக்கும் அணுக்கள் ஒவ்வொன்றும் உட்புறமாக மாற்றம் பெறுவதை, அவர்கள் உண்மையில் உணர்ந்து இருக்கின்றனர். அதனால் அனைத்து பொருட்களையும் விரும்பும் அமெரிக்கர்கள், மிகவும் சிறப்பானதாக விளங்கும் சிவபெருமானின் அருளையும் விரும்புகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 315

சிவபெருமானின்

தூதர்கள்

நீங்கள் சிவபெருமானை வழிபட்டால், உங்களுக்குள் அன்பு நிரம்பி இருக்கும். சர்வதேச ஐக்கிய சைவர்களின் குழுவில் உறுப்பினர் ஆகுங்கள். அவர்கள் இங்கிலாந்து, தென் ஆப்ரிக்கா, நேபால், வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மொரிஷியஸ், மலேசியா, ஜாவா, ஃபிஜி, டிரினிடாட் மற்றும் டொபாகோ, கையானா, சுறினாம், இலங்கை மற்றும் இந்தியாவில் இருக்கும் தங்கள் குழுவினர் மீது அன்பும் அக்கறையும் செலுத்துகின்றனர். உலகெங்கும் சைவ சமயத்திற்கு உட்புறமாக பரவியிருக்கும் இந்த சிவசம்பந்தம், சைவர்கள் உலகில் எங்கு இருந்தாலும், அவர்களுக்கு வலிமையை வழங்குகிறது. இந்த தொழில்நுட்ப யுகத்தில், இந்த சிவ சம்பந்தம் வெளிப்புறமாகவும் இருக்க வேண்டும். ¶சிவபெருமானை அன்பின் இறைவனாக வழிபட்டு, அதன் மூலம் அன்பு செலுத்தும் சக்திகளாக மாறவேண்டும் என்று சைவர்கள் அனைவரிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன். நமது சமயத்தை சேர்ந்த மகான்கள் சிவ *பக்தர்களாக* இருந்தார்கள். அவர்கள் தங்கள் இறை அன்பு மூலம் உலகை மாற்றி அமைத்தார்கள். அவர்கள் தங்கள் தகவலை பரப்புவதற்கு மிகப்பெரிய அமைப்புக்களின் தேவை இருந்தது இல்லை. அவர்கள் தங்கள் தகவலை பரப்புவதற்கு, செல்வங்கள் அல்லது எண்ணற்ற புத்தகங்களின் தேவை இருந்தது இல்லை. அவர்களுக்கு வானொலி, தொலைக்காட்சி அல்லது இணையத்தின் தேவை இருந்தது இல்லை. சிவபெருமான் வழங்கிய நேரடி அறிவு, நேரடி அனுபவம் மூலம் அவர்களின் சிந்தனைகள் நிரம்பி இருந்ததால், அவர்களின் தகவல் பரவியது. அவர்கள் தங்கள் சொந்த கிராமத்தை விட்டு வெளியேறாமல் இருந்தாலும், அவர்களின் தகவல் பரவலாக பரவியது. அவர்கள் அந்த கிராமத்தில் பக்குவம் அடைந்தார்கள். நீங்களும் சிவபெருமானின் தூதர்களாக இருக்கிறீர்கள், மற்றும் நீங்கள் அவர் மீது செலுத்தும் அன்பு நீங்கள் வழங்கும் மாபெரும் தகவலாக விளங்குகிறது. நீங்கள் சிவபெருமான் மீது அன்பை மட்டும் செலுத்துங்கள் மற்றும் அந்த அன்பு உலகில் பரவட்டும். ¶சிவபெருமான் தான்தோன்றி இறைவனாக இருக்கிறார் என்பதை நாம் மறக்கமுடியாது. அவர் உங்களுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறார். அவர் உங்களது சுவாசத்தை காட்டிலும் நெருக்கமாக இருக்கிறார். அவர் உங்களது இதயத்துடிப்பை காட்டிலும் நெருக்கமாக இருக்கிறார். அவர் உங்களுடைய, மற்ற எல்லோருடைய பரமாத்துமாவாகவே இருப்பதால், சைவர்கள் சிவபெருமான் மீது அன்பு செலுத்துகிறார்கள். அவர் எல்லா வஸ்த்துக்களிலும் ஒரே நேரத்தில் இருப்பதால், அவர் உங்கள் விரல்கள், உங்கள் கண்கள், உங்கள் இதயம் மற்றும் உங்கள் மனதில் ஒவ்வொரு கணத்திலும் இருக்கிறார். "சிவபெருமானால் ஒன்றை மட்டும் செய்ய முடியாது. அவரால் எல்லாம் முடியும். ஆனால் அவரால் ஒன்றை மட்டும் செய்ய முடியாது. அவரால் என்னிடம் இருந்து தன்னை பிரித்துக் கொள்ள முடியாது, " என்று எனது சத்குரு

சிவ யோகசுவாமி கூறினார். அந்த ஒரு செயலை சிவபெருமான் மூலம் செய்ய முடியாது. அவரால் உங்களை விட்டு பிரிய முடியாது. ¶தினமும் வீட்டில் பூஜை செய்தல் அல்லது அதில் பங்குபெறுதல், வாரம் ஒரு முறை கோயில் செல்லுதல், வருடம் ஒரு முறை யாத்திரை செல்லுதல் என்ற இந்த மூன்று செயல்களை நாம் செய்ய வேண்டும். இந்த மூன்றும் நமது சைவ சித்தாந்தத்தின் அடிப்படை ஆகும். இதைத் தவிர, இந்த வழிபாட்டின் அங்கமாக, உடலில் வலிமை இருப்பவர்கள் செய்யும் தியானம் மற்றும் சில *சாதனாக்கள்* விளங்குகின்றன. பிரபஞ்சத்தில் வியாபித்து இருக்கும் சர்வ-வியாபகமான சக்தியாக நீங்கள் எப்போதும் இருக்கிறீர்கள் என்பதை உணரும் வரை, புற வழிபாடு நமக்குள் உருவாக்கும் ஒரு அதிர்வு, உட்புறமாக ஆழ்ந்த தியானத்திற்குள் எடுத்து செல்லப்பட்டு, உங்கள் அகத்தில் இருக்கும் இறைவன் மற்றும் மகாதேவர்களை வழிபடுவது மற்றும் உயர்நிலை *சக்கரங்களுக்குள்* அவர்களை தொடர்புகொள்வதின் மூலம் அக வழிபாட்டை உருவாக்குகிறது.

தைவ பிரார்த்தனா பிரேஷனம்

दैवप्रार्थनाप्रेषणम्



மகாதேவர்களுக்கு பிரார்த்தனைகளை அனுப்புதல்

அக்னி பகவானே, நாங்கள் உனது வலுவான அருளை நாடி உனக்கு ஆராதனை செய்கிறோம், உன்னை ஆவாகனம் செய்கிறோம். ஹோமத்தில் ஆகுதிகளை வழங்கி உன்னை பிரகாசிக்க செய்கிறோம். தெய்வீக செல்வதை அடையவேண்டும் என்ற விருப்பத்துடன், நாம் இன்று வானுயர பரவியிருக்கும் அக்னி பகவானின் பயனுள்ள துதிப்பாடலை பாடுகிறோம்!

ரிக் வேதம் 5.13.1-2. வேஎ, ப. 853



பிரார்த்தனைகள் மற்றும் வேண்டுதல்களுடன் பாரம்பரிய முறையில் உடை அணிந்த பக்தர்கள் நால்வர், இந்துக்களால் ஆராதனை செய்யப்படும், அன்புள்ளம் கொண்ட தொந்தி கணபதிக்கு அருகில் சென்று அவரை வழிபடுகின்றனர். அவர்களில் ஒவ்வொருவரும் சனாதன தர்மத்தின் நான்கு முக்கிய பிரிவுகளை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இடமிருந்து வளமாக சைவர், வைணவர், சுமார்த்தர், சாக்தர்.

திங்கட்கிழமை

பாடம் 316

ஒரு வரமாக இருக்கும்

எழுத்து வடிவ பிரார்த்தனை

கார்டன் ஐலந்து கவாய் தீவில் உள்ள நமது மடம்-கோயில் வளாகமாக இருக்கும் கவாய் ஆதீனத்திற்கு இந்தியாவில் இருந்து கடவுள் நடராசர் விக்ரகம் வந்து சேர்ந்ததும், எழுத்து வடிவ பிரார்த்தனைகள் மூலம் அந்தர்லோகங்களுடன் தொடர்பு கொள்ளும் அற்புதமான வரமும் எங்களுக்கு கிடைத்தது. அந்த ஆறு அடி உயர வெண்கல நடராசர் சிலையுடன் பல்லாயிரக்கணக்கான *தேவர்களும்* வந்தார்கள். நமது தூல கண்களுக்கு தென்படாமல் இருக்கும் இந்த தேவதூதர்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொண்டோம். நடராசரின் திருவடிகளில் தொடர்ந்து எரிந்துக்கொண்டு அக்னி வாயிலாக, அவர்களின் கைகளில் எழுத்து வடிவ பிரார்த்தனைகளை வழங்க முடியும் என்பது எங்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருந்தது. அமெரிக்காவில் முதல் சிவன் கோயில் தொடங்கிய அந்த காலத்தில், எங்களுக்கு கிடைத்த அந்த அற்புதமான வரத்தை நினைத்து நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். கோயில் யாகங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து வடிவ பிரார்த்தனைகளுக்கு விரைவில் பலன்கள் கிடைத்தன. இதைப்பற்றி பக்தர்கள் மத்தியில் நம்பிக்கை பிறந்தது. அப்போது கோயில் *யங்திரமும்* முழு செயல்பாட்டில் இருந்தது. ¶ஆனால் ஒரு பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. சிலசமயங்களில் பக்தர்களின் தீவிர உணர்ச்சிகள் காரணமாகவும் பிரார்த்தனைகள் அவசரமாக எழுதப்பட்டதாலும், அவற்றை படிப்பது கடினமாக இருந்தன. தங்களுக்கு உதவி தேவைப்படும் வேண்டுகோள்கள் மற்றும் வேண்டுதல்களை தனிப்பட்ட முறையில் மகாதேவர்கள் மற்றும் தேவர்கள் அறிந்து இருந்ததாக கருதிய சாதகர்கள், தங்கள் பிரார்த்தனைகளை எழுதுவதில் அக்கறை செலுத்தாமல், சிலசமயங்களில் தங்கள் பெயர் அல்லது தேதியை குறிப்பிடவும் மறந்து விட்டனர். பிரார்த்தனைகளுக்கு பலன் கிடைக்கவில்லை என்றால், அவை தெளிவில்லாமல் அல்லது நிறைவு பெறாமல் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்பதை நாங்கள் விரைவில் தெரிந்துகொண்டோம். அந்தர்லோக உதவியாளர்கள் போதிய உதவியை வழங்குவதற்கு, தேவையான விளக்கத்தை வழங்க வேண்டும்

என்பதையும் நாங்கள் தெரிந்து கொண்டோம். ¶இதன் காரணமாக எழுத்து வடிவ பிரார்த்தனை ஒவ்வொன்றும் முற்றிலும் தெளிவாக இருப்பது முக்கியம் ஆகும். சூட்சும லோகத்திற்கு வரும் ஒவ்வொரு பிரார்த்தனையின் சூட்சும வடிவமும் தனது தூல-லோக பிரார்த்தனையின் போன்றே இருந்தாலும், அது ஒரு கார்பன் நகல் போல அதிக தெளிவில்லாமல் இருக்கிறது. அதனால் தூல-லோக பிரார்த்தனை தெளிவாக இல்லை என்றால், அதன் சூட்சும நகல் அதிக தெளிவின்றி இருக்கும். ஒருவர் தனது மூக்குக்கண்ணடி இல்லாமல் படிப்பதைப் போல, அது தெளிவின்றி மங்கலாக இருக்கும். அந்தர்லோகங்களில் சிறிய எழுத்துக்களில் தட்டச்சு செய்த சூட்சும நகல்களையும் படிப்பது கடினமாக இருப்பதாக நாங்கள் தெரிந்துகொண்டோம். ¶தெளிவில்லாத எழுத்துக்களின் பிரச்சினையை தீர்க்க *தேவர்கள்*, '70 களின் தொடக்கத்தில் பாரிஸ் நகரத்தின் சூட்சும *ஆகாசத்தில்* இருந்து ஒரு புதிய எழுத்து வடிவத்தை வழங்கினர். *தேவர்கள்* இந்த எழுத்து வடிவத்தை *தையீப்* என்று அழைத்தனர். அதில் இருந்த மொத்தம் 135 எழுத்துக்கள் அல்லது "உருவங்களை" உருவாக்க, அவை நுணுக்கமான முறையில் மூங்கில் இலைகள் போன்று வடிவமைக்கப்பட்டு இருந்தன. அதன் முதல் இருபத்தி ஆறு எழுத்துக்கள் ஆங்கில எழுத்துக்களுடன் தொடர்புடையதாக இருந்தன. தேவர்கள் *தையீப்* என்ற சொல்லை தங்களது எழுத்து வடிவில் "tyeif" என்று எழுதினர். ¶ஹோமம் வளர்த்து அக்னி மூலம் தேவலோகத்திற்கு பிரார்த்தனைகளை எழுதி அனுப்புவது நாத சம்பிரதாயத்தின் பழங்கால பழக்கமாக விளங்குகிறது. இன்று இந்த தொடர்புகொள்ளும் முறை ஜப்பான், சீனா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் மற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சிந்தோ மற்றும் தாவ் மதத்தின் கோயில்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிரார்த்தனைகள் எழுதப்பட்டு கோயிலில் இருக்கும் நெருப்பில் வைக்கப்படுகின்றன. அந்த காகிதம் எரியும் போது, அதன் சூட்சும நகல் தேவலோகத்தில் தோன்றுகிறது. அதன் பிறகு அந்த பிரார்த்தனை, பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்ற செயல்புரியும் *தேவர்கள்* மூலம் வாசிக்கப்படுகின்றன. கோயிலுக்குள் தங்களது உணர்ச்சி, மனம் மற்றும் உடல் சார்ந்த பிரச்சனைகளுடன் வருபவர்களுக்கு உதவி செய்யும் பணியில், இந்த கோயில் *தேவர்கள்* தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். ¶ஆனால் பிரார்த்தனைகளை, *தேவர்களுடன்* விசேஷமான ஏற்பாடுகளை செய்த ஒரு புனிதமான *ஹவன குண்டத்தின்* வாயிலாக மட்டுமே தேவலோகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று எனக்கு மிகவும் தெளிவாக அறிவுறுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 317

தொடர்புகொள்ளும்

யுத்திகள்

அதைப் போன்று நமது கைலாச பரம்பரையில், அந்தர்லோகங்களுக்கும் வெளியுலகத்திற்கும் இடையில் நடைபெற்ற நேரடி தொடர்பு பற்றிய ஒரு முற்றிலும் மாறுபட்ட உதாரணத்தை பார்க்கலாம். எனது குரு யோகசுவாமியின் குருவான செல்லப்பசுவாமியின் குருவான கடையிற்சுவாமியின் குருவானவர், இமய மலையில் இருந்து வந்த *ரிஷி* என்று அழைக்கப்பட்டார். அவர் தென்னிந்தியாவின் பெங்களூரில் ஒரு டீக்கடையில் ஏழு வருடங்களுக்கு பேசாமலும் அசையாமலும் தியானம் செய்து வந்தார். இந்த அசாதாரண முனிவரை பார்க்க பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அவர்களுடன் வழக்கமான பிரச்சனைகள், சந்தேகங்கள், பிரார்த்தனைகள் மற்றும் தேவைகளும் வந்தன. அவர்கள் தங்கள் தேவைகளைப் பற்றி தங்களுக்குள் சிந்தித்த போது, அவர்களே வியக்கும் வகையில் அந்த *ரிஷியின்* தலையில் கண்ணுக்கு தென்படாத ஒரு இடத்தில் இருந்து தோன்றிய காகித சுருள்கள் மூலமாக அவர்களுக்கு வேண்டிய பதில்களை வந்தன. பக்தர்கள் அந்த காகித்தை பிரித்து படித்த போது, அது அவர்கள் தங்களுக்குள் நினைத்த சந்தேகத்திற்கு பொருத்தமான பதிலாக இருந்தது. புனிதமான அக்னியில் எரிக்கப்படும் நமது பிரார்த்தனைகள் எதிர்திசையில் சென்று, மனதில் திருப்தி ஏற்படும் போது, அவை அதிக நுணுக்கமான, மறைமுகமான பலன்களாக நமக்கு புரிகின்றன. ¶இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் மறுபிறவி பற்றிய அறிவு, சூட்சும பயணம், உயிர் நீத்தவர்களிடம் இருந்து தகவலை பெறும் சேனலிங், ஒளிஉடல்கள் மற்றும் ஆன்மா பற்றிய மற்ற சூட்சுமமான புதிர்கள் மேற்கத்திய உலகில் அங்கம் வகிப்பதை போல, இந்த நிகழ்வுகள் கிழக்கு நாடுகளில் மனித இனம் தோன்றியதில் இருந்து வாழ்க்கையில் அங்கீகரிக்கப்பட்ட அங்கமாக இருந்து வருகிறது. மகாதேவர்கள் மற்றும் அவர்களின் *தேவர்களை* தொடர்புகொண்டு ஆவாகனம் செய்து, தேவதூதர்கள் மற்றும் *தேவர்கள்* மீது அக்கறையுடன் இருந்து, அவர்களை வீட்டு பூஜை அறையில் மகிழ்ச்சியுடன் வைத்து இருப்பது, மதம் தோன்றிய காலத்தில் இருந்து உலகில் இருக்கும் பெரும்பாலான மதங்களின் மையமாக இருந்து வருகிறது. ¶குறி சொல்லும் எழுத்துப் பலகை, சூட்சுமமான திறமை மூலம் தானாக சிந்திக்காமல் எழுதுதல், இறந்தவர்களை சந்திக்கும் உத்தியை உருவாக்குதல், ஊசலாடும் ஊசல் (பெண்டுலம்), படிகங்கள் மூலம் குறி சொல்லுதல், புனிதமான கோயில் வேள்விகள் மூலம் கடிதங்கள் மற்றும் பரிசுகளை அனுப்புதல், புலனாகாதவற்றை காணும் ஆற்றல், புலனாகாதவற்றை பார்க்கும் ஆற்றல், அதிகாலை கனவுகள், மனதை ஒடுக்கிய முறைகளில் இருந்து தகவல்கள் மற்றும் கணிப்புக்களை பெறுதல், சூட்சும அறிகுறிகள் தரும் விளக்கங்கள், பல்லிகள் மற்றும் காகங்களின் சத்தங்கள் வழங்கும் தகவல்கள், சூட்சும சக்திகளை கொண்ட ஆலோசகர்கள், குறி சொல்பவர்கள், கைரேகை

ஜோதிடர்கள், ஜோதிடர்கள், புரோகிதர்கள், மாயவித்தை செய்யும் சைபீரிய சமான்களை சந்தித்தல், பேய் ஓட்டுதல், ஆழ்ந்த தியானத்தில் வெளிப்படும் அறிவு மற்றும் மேலும் பல வழிகள் மூலம் மக்கள் தாங்கள் விசுவாசத்துடன் சேவை செய்யும் காவல் *தெய்வங்கள்*, தங்கள் நண்பர்கள் மற்றும் மற்றும் சகாக்கள் மற்றும் மகாதேவர்களுடன் தொடர்புகொள்ள முடிகிறது. இவை அனைத்தும் தொடர்புகொள்ளும் *தந்திரங்களாக* விளங்குகின்றன. *தந்திரம்* என்கிற செய்முறைக்கு முன்பாக அதைப்பற்றி கற்கவேண்டி இருக்கிறது. இதற்கு சிலசமயங்களில் தீட்சை தேவைப்படுகிறது. ¶இந்த புத்தகத்தை படிக்கும் நீங்களும் நானும், ஒன்றாக இத்தனை பக்கங்களை கடந்து வந்தது ஒரு தற்செயலான சம்பவம் இல்லை. நீங்கள் உங்கள் கையில் பிடித்து இருக்கும் இந்த புத்தகத்துடன், ஒரு சிறந்த சிந்தனை வடிவம் மற்றும் பல்வேறு *தேவர்கள்* துணையாக இருக்கிறார்கள். இந்த புத்தகத்தை படிப்பதற்கு உங்களை வழிநடத்தி வந்த அவர்கள் தற்போது உங்களுடன் இருந்து கொண்டு, நீங்கள் படிக்கும் போது அவர்களின் உட்புற மனமும் உங்களது உட்புற மனமும் தொடர்பில் இருக்கின்றன. அதிகமான ஆற்றலை கொண்ட இந்த புத்தகம், அந்தர்லோகங்களுக்கு செல்லும் வாசலாக விளங்குகிறது. நீங்கள் உறங்கும் போது, இதை உங்கள் தலையணைக்கு அடியில் வைத்துக் கொள்ளுங்கள். இதை நாள் முழுவதும் படித்து ஆன்மீக அறிவை கிரகித்துக் கொள்ளுங்கள்.

புதன்கிழமை

பாடம் 318

பிரார்த்தனைகள் எவ்வாறு

பலன் தருகின்றன

மகாதேவர்கள் மற்றும் அவர்களுக்கு துணையாக இருக்கும் *தேவர்கள்* மற்றும் உங்களுக்கு உதவி புரியும் காவல் *தெய்வங்கள்* எப்போதும் ஆதரவு அளித்து வழிகாட்டும் நோக்குடன், உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்ற தயாராக இருக்கிறார்கள். “பிரார்த்தனைகள் எவ்வாறு பலன்களை தருகின்றன?" என்று நீங்கள் கேட்கலாம். மதத்தில் ஈடுபாடு இருப்பவர்களின் லௌகீக அனுபவத்தில் துணையாக காவல் *தேவர்கள்* அல்லது தேவதூதர்கள் இருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. பல தலைமுறைகளாக ஒன்றாக இணைந்து இருக்கும் குடும்பங்கள் தங்கள் வீட்டு பூஜை அறைகளில் பல நூற்றாண்டுகளுக்கு ஒரே *தெய்வீக* சக்திகள் மீது அதிக கவனம் செலுத்தி அவர்களின் ஆதரவை நாடுகிறார்கள். இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் பழைய ஒற்றுமையை தக்கவைப்பது அல்லது பூஜை அறையில் சடங்குகளில் பங்குபெறுவது கடினம் ஆகும். இதன் காரணமாக, காவல் *தேவர்களுடன்*

தொடர்பு கொள்வதற்கு மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டும். ¶சிவன் கோயில்களில் வழிபடுபவர்கள், மெதுவாக மகாதேவர்களின் தெய்வீக லோகங்களின் அங்கீகாரத்தை பெறுகிறார்கள். மேலும் கணக்கில் அடங்காத தெய்வீக கண்காணிப்பாளர்களில் ஒருவர் அல்லது இருவர் அந்த பக்தருடன் அவர் வீட்டிற்கு திரும்புகின்றனர். இது நடைபெறும் போது, அந்த வீடு உடனடியாக பூரண உணர்வை பெறுகிறது. பக்தர்கள் எழுதிய பிரார்த்தனைகளை புனிதமான வேள்விகள் மூலம் தேவலோகத்திற்கு அனுப்பும் போது, அதை இந்த காவல் *தேவர்கள்* தான் முதலில் பெறுகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பிரார்த்தனையும் கவனமாக படிக்கிறார்கள். அந்த காவல் *தேவர்கள்* உடனடியாக பலன் அளிக்க முடியாத பிரச்சனைகளை, அவற்றுடன் சம்பந்தப்பட்ட நபர் அல்லது குடும்பம் பற்றிய ஒரு சிறிய அறிவுரையுடன், தகவலை அனுப்ப காத்திருக்கும் தெய்வத்திடம் வழங்குகின்றனர். தகவலை அனுப்பும் தெய்வம் அந்த பிரார்த்தனை மற்றும் காவல் *தெய்வம்* வழங்கிய அறிவுரையுடன், வேண்டுதலை சிறப்பாக நிறைவேற்றும் வல்லமை பெற்ற *தேவதூதர்களை* நோக்கி செல்கின்றனர். ¶அங்கே பல *தேவர்களின் சங்கங்கள்* வட்டவடிவில் அமர்ந்து, சிந்தனை பரிமாற்றத்தின் மூலம் தொடர்பில் இருக்கின்றனர். அவர்கள் ஒரு பிரார்த்தனையை பெற்றதும், அதை வாசித்து புரிந்துக்கொண்டு, அவர்கள் குழுவின் மனம் உடன்பாட்டு சக்தியின் மூலம் நிறைவேற்ற செய்முறையை தொடங்குகிறது. அந்த பிரார்த்தனை வாசிக்கப்பட்டு, அங்கே கூடியிருக்கும் ஒவ்வொருவராலும் புரிந்துகொள்ளப்பட்ட பிறகு, அது அவர்களின் உட்புற மனங்களுள் நுழைகிறது. இது நடைபெறும் போது, *கர்மவினை* ரீதியாக முறையான தீர்வு எல்லோருக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. அந்த வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு அந்த குழுவில் இருந்து ஒன்று அல்லது இரண்டு *தேவர்கள்* சூட்சும ஆகாசம் வழியாக கிளம்புகிறார்கள். பூமியின் நேரத்திற்கும் சூட்சும லோகத்தின் நேரத்திற்கும் வித்தியாசம் இருப்பதால், பிரார்த்தனை சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு பலன் கிடைப்பதற்கு பூமியில் சுமார் மூன்று நாட்கள் தேவைப்படுகின்றன. ¶இந்த *தேவர்கள் சங்கத்தில்* உறுப்பினர்கள் எண்ணிக்கை ஆறு, பன்னிரண்டு, இருபத்தி நான்கு அல்லது முப்பத்தி ஆறாக இருக்கிறது. அவர்கள் வியாபாரம், உடல்நலம், தனிப்பட்ட விஷயங்கள், ஆக்கப்பூர்வமான விஷயங்கள், திருமணம், மனநலம் மற்றும் உணர்ச்சி சார்ந்த மற்ற விஷயங்கள் என்று பல வகையான வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர். வாழ்க்கையின் ஒவ்வொரு துறைக்கும் ஒரு தேவர்களின் *சங்கம்* உள்ளது. இந்த சங்கங்கள் சீனா, ஜப்பான், தென்கிழக்கு ஆசியா, ஹவாய், இந்தியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பூமியின் மற்ற பகுதிகளில் இருக்கும் பல கோயில்கள் மற்றும் புனித தலங்களுக்கு வருகின்ற பக்தர்களின் தேவைகளுக்கு சேவை செய்கின்றன. ¶மகாதேவர்கள் மற்றும் தேவர்கள் உங்கள் வேண்டுதலுக்கு செயல்படும் முன்னர், அவர்கள் கடந்த காலத்தில் தொண்ணூறு நாட்களுக்கும்

எதிர்காலத்தில் தொண்ணூறு நாட்களுக்கும் பரவியிருக்கும் ஒரு காலவரையறையை ஆய்வு செய்ய வேண்டும். உங்கள் *கர்மவினை* அமைப்புமுறைக்கு பொருத்தமான உதவிகளை தாங்கள் வழங்கும் பொருட்டு, அவர்கள் சாத்தியமுள்ள முடிவுகளை ஒன்பது குழுக்களாக பிரிக்கிறார்கள். காலம் அல்லது அனுபவம் அல்லது *கர்மவினைகளை* மாற்றி அமைப்பது அவர்கள் கடமை இல்லை. ஆனால் உங்களது இயல்பான *கர்மவினைகளை* அனுபவிப்பதற்கு துணையாக இருந்து, உங்களோடு தற்போது தொடர்பில் இருக்கும் நல்ல, தீய மற்றும் இரண்டும் சேர்ந்த *கர்மவினைகளின்* விளைவுகளை தணித்து, அழித்து மற்றும் மென்மையாக்குவது அவர்கள் கடமை ஆகும். அதனால் நீங்கள் உங்கள் பிரார்த்தனையை எழுதும் போது, உங்கள் மனநிலையை தெளிவாக விளக்குவது முக்கியம் ஆகும். ¶நாத சம்பிரதாயத்தை சேர்ந்த கோயில்கள் மற்றும் புண்ணிய தலங்களை சுற்றி இருக்கும் தேவர்கள் எழுத்து வடிவத்தில் வேண்டுதல்களுக்கு சிறப்பாக செயல்படுகிறார்கள். மகாதேவர்கள் மற்றும் *தேவர்கள்* வழக்கமாக உங்கள் சிந்தனைகளை கண்காணிக்காமல், அவர்களை நோக்கி இயக்கப்படும் சிந்தனைகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறார்கள் மற்றும் அவர்கள் இந்த வழிபாட்டு தலங்களுக்கு வருபவர்களின் இயல்பான *கர்மவினைகளுடன்* குறுக்கிடுவது இல்லை. "இறைவனுக்கு எனது தேவை தெரியும். அவர் அதை நிறைவேற்றி வைப்பார்," என்று இந்துக்கள் பெரும்பாலும் கூறுவார்கள். இது போதுமான மன வலிமை மற்றும் தீவிர சிந்தனை மற்றும் *மணிப்பூரக சக்கரம், அனாஹத சக்கரம்* மற்றும் உச்சந்தலையில் உட்புற அக்னி எரிந்துக்கொண்டு இருப்பவர்களுக்கு பொருந்தும். ஆனால் நமது அன்றாட உணர்வுநிலைகளில் நமது சிந்தனைகளை தெளிவான எழுத்து வடிவங்களில் தெரியப்படுத்துவதால், நமக்கு சிறந்த பலன்கள் கிடைக்கும். இந்த லோகம் மற்றும் உயர்ந்த ஆன்மீக லோகத்திற்கும் இடையில் நாத சம்பிரதாய கோயில்கள் வழங்கும் நேரடியான, நுணுக்கமான மற்றும் சுருக்கமான இருவழி தொடர்பு, நமக்கு கிடைத்த சிறந்த வரம் ஆகும்.

வியாழக்கிழமை

பாடம் 319

பிரியமானவர்களுக்கு

தகவல் அனுப்புதல்

அந்தர்லோகத்திற்கு சென்ற உங்களுக்கு பிரியமானவர்களுக்கு தையீப் மூலம் எழுத்து வடிவில் பிரார்த்தனைகளை அனுப்ப முடியுமா என்று நீங்கள் யோசிக்கலாம். நிச்சயமாக முடியும். இந்த எழுத்து வடிவத்தை பயன்படுத்தி, உங்களால் அவர்களுக்கும் அனுப்ப முடியும். உங்களுக்கு பிரியமானவர்கள், சொந்தங்கள் அல்லது நெருங்கிய நண்பர்களிடம் பிரார்த்தனை வழங்குவதற்கு

உங்களுடைய காவல் *தேவதை* துணைபுரிவார். இதன் மூலம் உயிர் நீத்த பிரியமானவர்களுடனும் தொடர்பு கொள்ள முடியும். தங்கள் சொந்தங்கள் இந்த பூமியில் உயிரோடு இருந்த போது அவர்களுக்கு தாங்கள் செய்த தீய செயல்களை நினைத்து வருந்தும் பல அன்பர்கள் இத்தகைய பிரார்த்தனைகளின் மூலம், அந்த உயிர் நீத்த சொந்தங்களிடம் மன்னிப்பை கோருகின்றனர். அவர்கள் இந்த மறை புதிரான தையீப் எழுத்து வடிவத்தில், அந்த சொந்தங்களுக்கு மன்னிப்பு கடிதத்தை எழுதுகின்றனர். அதை ஒரு காவல் *தேவதை* பெற்று, உடனடியாக விநியோகம் செய்து விடுகிறார். அந்தர்லோகத்தில் எல்லாம் மிகவும் சிறப்பான முறையில் விரைவாக நடைபெறுகிறது. உயிர் நீத்தவர்களுக்கு ஜப்பான் மற்றும் ஆசியாவில் இருக்கும் மற்ற நாட்டவர்கள் கடிதங்களை மட்டும் அனுப்பாமல், புனிதமான அக்னியில் அட்டைகளில் செய்த வாகனங்கள், பணம், உணவு மற்றும் மேலும் பல பொருட்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அட்டைகளில் செய்த வாகனம் மற்றும் மற்ற பொருட்களை எரித்த பிறகு, அவை சூட்சும லோகத்தில் மீண்டும் தோன்றுகின்றன. ¶சமீபத்தில் உயிர் நீத்தவர்கள் லௌகீக உணர்வுடன் இருப்பதாலும், அவர்கள் எழுத்து வடிவில் தங்களுக்கு பிரியமானவர்களிடம் இருந்து பிரார்த்தனைகளை பெறுவதில் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதாலும், அவர்களை மிகவும் எளிதில் தொடர்புகொள்ள முடிகிறது. அந்தர்லோகத்தில் நிம்மதியாக வாழ்ந்து மறுபிறவி எடுக்க தயாராக இருக்கும் ஆன்மாக்களை, இந்த முறையில் எளிதில் தொடர்புகொள்ள முடிகிறது. சில ஆன்மாக்கள் *முக்தியை* பெற்று இருந்தாலும், தங்கள் சீடர்கள் இந்த பிறவியில் அவர்களது உயர்ந்த ஆற்றலை பெறுவதற்கு தான் செய்யவேண்டிய உதவியை முழுமையாக வழங்கவில்லை என்பதால், உயர்வான லோகங்களுக்கு சென்றால் லௌகீகத்தில் ஈடுபட முடியாது அல்லது அந்த லௌகீக உணர்வுடன் இருப்பவர்களை தொடர்புகொள்ள முடியாது என்று அந்த உயர்ந்த லோகத்தில் நுழைய தயாராக இல்லாமல் இருப்பவர்களும், பூமியில் வாழும் தங்களுக்கு பிரியமானவர்களிடம் இருந்து தகவல்களை பெறுகிறார்கள். இந்த முறையில் பல *சேலாக்கள்* அல்லது சீடர்கள் உயிர் துறந்த தங்கள் *குருமார்களை* தொடர்புகொள்கிறார்கள். ¶அந்தர்லோகத்தில் இயங்கும் தேவதூதர்களின் இந்த மாபெரும் அமைப்பு உறக்கம் இல்லாமல் தொடர்ந்து வேலை செய்கிறது. சிவ உணர்வின் மிகவும் புனிதமான சிறிய பகுதிகளின் பிராண சக்திகள் மூலம் அவர்கள் தங்களுக்கு தேவையான ஊட்டச்சத்தை பெறுகின்றனர். அவர்கள் உணவு அருந்துவதற்காக நேரம் ஒதுக்குவது இல்லை. தேவலோகத்தில் இருக்கும் தொடர்ச்சியான உணர்வை, நாம் நமது லௌகீக உடல்களில் அனுபவிப்பது இல்லை. மகாதேவர்கள் மற்றும் அவர்களுக்கு துணையாக இருக்கும் *தேவர்களின்* லோகங்களில், தொடர்ந்து ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படும் படைத்தல், காத்தல், அழித்தல் என்கிற முத்தொழிலாக இருக்கும் *மாயா சக்தி* அடையும் பக்குவம் மூலம் பொது உணர்வு வழிநடத்தப்படுகிறது.

அந்தர்லோகத்தில் இருக்கும் இந்த வலுவான சிப்பாய்கள், *தர்மத்தை* போதிக்கும் சத்குருமார்கள், *கர்மவினையின்* தெய்வங்கள் என்று எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கி, சாதகர்களுக்கு சேவை செய்ய எப்போதும் தயாராக இருக்கிறார்கள். ¶புனிதமான வேள்விகள் மூலம் அந்தர் லோகத்திற்கு பிரார்த்தனைகளை அனுப்புவது என்பது, ஒரு தூல உடல் இல்லாத அந்த வலுவான சக்திகளுடன் தொடர்புகொள்ளும் ஒரு முறையை குறிக்கிறது. ஒரு கடிதத்தை எழுதி அஞ்சலில் அனுப்புவது, ஒரு மின்னஞ்சல் அனுப்புவது அல்லது ஃபாக்ஸ் அனுப்புவதைப் போன்று தையீப் எழுத்து வடிவத்தை பயன்படுத்துவது எளிமையானது. இந்த முறையை பயன்படுத்தி, தொலைவில் இருக்கும் நாட்டில் தூல உடலுடன் இருப்பவருடனும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். அவர்கள் இரவு உறங்கும் போது தங்கள் தூல உடலை விட்டு வெளியேறி சூட்சும லோகத்தில் உணர்வுடன் இருக்கும் போது, அவருக்கு ஒரு தகவல் வழங்கும் தேவதை நீங்கள் வழங்கிய தகவலை வழங்கி விடுகிறார். அந்தர்லோகத்தில் நுழைந்து தொலை தூரத்தில் இருக்கும் நண்பர்கள் மற்றும் சொந்தங்கள் உறங்கும் போது, அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு, இது ஒரு அற்புதமான வழியாக விளங்குகிறது. ¶ஒரு அந்தர்லோக ஆன்மாவாக இருக்கும் உங்களையும், அவர்கள் அந்தர்லோகத்தில் காண்கிறார்கள். அவர்கள் உங்களை உங்களுடைய ஆனந்தமயகோசத்தில் காண்கிறார்கள். சூட்சும சக்திகளுடன் தூல உடல்களில் வாழ்பவர்களும் *தேவர்களை* காண முடிகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 320

பிரார்த்தனையில் கடைப்பிடிக்க வேண்டிய

தர்மம்

தேவர்கள் நமக்கு நன்மையை தான் செய்வார்களா, அவர்கள் நம்மை சோதிப்பார்களா அல்லது நமக்கு தண்டனை வழங்குவார்களா என்று நீங்கள் யோசிக்கலாம். *தேவர்கள்* அனைவரும் ஒரு மகாதேவரின் கீழ் இயங்குகின்றனர். நீங்கள் விநாயகருக்கு பிரார்த்தனைகளை எழுதும் போது, அவரது தேவர்களில் சிலர் உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண செயல்படுகின்றனர். இதைப்போன்று முருகப்பெருமானின் *தேவர்களும்* செயல்படுகின்றனர். சிவபெருமான் எல்லா இருப்புக்களையும் படைக்கிறார், காக்கிறார் மற்றும் அழிக்கிறார். அவரது பக்தர்களுக்கு சேவை செய்ய அவரிடம் பல்லாயிரக்கணக்கான *தேவர்களும்* இருக்கிறார்கள். அனைத்து சிவன் கோயில்களும் தீங்கற்ற *அகிம்சையை* அடிப்படையாக கொண்டுள்ளன. பிரார்த்தனைகளை நிறைவேற்ற செயல்படும் கோயில் *தேவர்கள்*,

சிவபெருமானின் படைக்கும் மற்றும் காக்கும் சக்திகளுக்கு மட்டுமே பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு தீங்கு இழைக்க வேண்டும் என்கிற எண்ணம் இல்லாத நேர்மையான வேண்டுகோள்கள், தீங்கற்றதாக கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளபடுகின்றன. பகைவனின் மரணம், தான் வெற்றி பெறுவதற்கு இன்னொருவரை தோற்கடிப்பது, பக்கத்து வீட்டில் இருப்பவரை இடமாற்றுவது, வியாபாரத்தில் போட்டியாளர்களை வீழ்த்துவது, நம்மை துன்புறுத்தியவரை துன்புறுத்துவது, ஒரு நாத்திகனின் மரணம், பழிக்கு பழி வாங்குவது போன்று தீய நிகழ்வுகள் தொடர்பான கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறு பழிக்குப்பழி மற்றும் *இம்சையை* அடிப்படையாகக் கொண்ட கோரிக்கைகளை படிக்கும் முதல் *தேவர்*, அவற்றை உடனடியாக இன்னொரு புனிதமான *ஹோமகுண்டத்தில்* வைத்து விடுகிறார். அதனால் தீய நோக்கத்துடன் வழங்கிய அந்த கோரிக்கை, அதை அனுப்பியவரின் இதயத்தில் *தபஸ்* செய்யும் ஆசையை தூண்டிவிடுவதற்கு, அவரது இதயத்தை கனிய செய்து, இந்த இளம் ஆன்மாவை உயர்ந்த உணர்விற்குள் கொண்டு வந்து, அவர் வாழும் *அசுர* லோகத்தில் இருந்து வெளிகொண்டு வருவதற்கு, அதை அனுப்பியவருக்கே ஹோமகுண்டத்தின் அக்னிச் சுடர் வழியாக திரும்புகிறது. மாந்தரீகம், பில்லி சூனியம் அல்லது சொந்த ஆதாயத்திற்கு மற்றவர்களின் வாழ்க்கைகளுடன் விளையாடுவது போன்றவற்றிற்கு சிவன் கோயில்களின் புனிதமான வேள்விகள் நிச்சயமாக பயன்படுத்த முடியாது. *இம்சை* செய்வதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு தவிர்க்கவில்லை என்றால், அது *இம்சை* செய்பவருக்குள் *தபஸ்* செய்யும் எண்ணத்தை தூண்டி, சுத்திகரிக்க தொடங்கி வைக்கும் செய்முறையை எதிர்கொள்வது அவருக்கு கடினமாக இருக்கக்கூடும். ¶இன்னொருவருக்கு நாம் செய்ய விரும்பிய வஞ்சகம் நமக்கு திரும்பும் போது, அது நமக்கு வருத்துவதாக இருந்தாலும், *தபஸ்* பற்றி அஞ்சவெண்டிய அவசியம் இல்லை. இது சிவபெருமானின் ஒடுக்கும் முறை ஆகும். இந்த முறையில் அவரது அருள் நமக்குள் இருக்கும் தீய எண்ணத்தை எரித்து இதயத்தை கனிய செய்கிறது. இதில் ஒருவர் தனது தீய எண்ணத்தை எதிர்கொண்டு, அதன் மீது வெற்றி பெற்று அழிக்க வேண்டும். *தபஸ்* தொடங்கும் போது, அது பல முற்பிறவிகளில் செய்த தவறுகள் மூலம் படிப்படியாக சேகரிக்கப்பட்ட கழிவுகளை எரித்து, இறுதியில் ஆன்மாவை உயர்ந்த உணர்விற்கு உயர்த்துகிறது. இதன் காரணமாகவே, நாம் உயர்ந்த உணர்வை "சிவ உணர்வு" என்று அழைக்கிறோம். ஆனால் *தபஸ்* என்பது ஒரு கடினமான செய்முறை, புனித வேள்விகள் வாயிலாக மற்றவர்களுக்கு தீமை செய்ய எண்ணாமல், இந்த கடினமான செய்முறையை தவிர்க்க வேண்டும். ¶*தபஸ்* செய்யும் தூண்டுதலை தவிர்த்து, சைவ சமய வாழ்க்கை அறிவுறுத்தும் ஒழுக்கங்கள் மற்றும் *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்*, *பஞ்ச நித்திய கர்மா*, சாத்திரம் ஓதுதல் மற்றும் கைலாச பரம்பரை *சத்குருமார்கள்* வழங்கிய மற்ற தனிப்பட்ட ஒழுக்கங்களை பின்பற்றி, நீங்கள்

உங்களை மெதுவாக சுத்தம் செய்து கொள்ளலாம். இதன் மூலம் *தபஸ்* மீதான தூண்டுதல் தீவிரமாக இல்லாமல் மிதமாக இருந்து, அதே குறிக்கோளை காலம் தாழ்த்தி அடைய துணை புரிகிறது.

சனிக்கிழமை

பாடம் 321

மூங்கில் இலைகள் போன்ற

தையீப் எழுத்து வடிவம்

பல வருடங்களுக்கு முன்பு தையீப் எழுத்துச் வடிவில் பிரார்த்தனைகளை தெளிவாக கணினி மூலம் எழுதுவதற்கு, நாங்கள் ஒரு தையீப் எழுத்து வடிவத்தை உருவாக்கினோம். இதை நீங்கள் எங்கள் இணையத்தில் www.HimalayanAcademy.com/fonts/ பதிவிறக்கம் செய்து, பிரார்த்தனைகள் எழுதுவதைத் பற்றி மேலும் பல தகவல்களை தெரிந்து கொள்ளலாம். நீங்கள் தையீப் எழுத்து வடிவத்தை படிக்க கற்றுக்கொள்வதன் மூலம் உங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தும் சக்தி வலிமை பெறுகிறது, மற்றும் பலர் செய்வதைப் போல நீங்கள் கையால் தையீப் மூலம் எழுத விரும்பவில்லை என்றால், கணினி மூலம் எளிதில் தையீப் வடிவில் எழுதி விடலாம். இதை மிகவும் எளிமையாக செய்வது எப்படி என்று பார்க்கலாம். உதாரணத்திற்கு நீங்கள் குருதேவா என்று தட்டச்சு செய்ய விரும்பினால், அதை ஆங்கில எழுத்தில் தட்டச்சு செய்து, பிறகு "டெக்ஸ்ட்" தேர்வு செய்து, அதை தையீப் எழுத்து வடிவத்திற்கு மாற்றி விடவும். இயல்பாகவே தையீப் வடிவில் எழுதிய பிரார்த்தனைகளின் இரகசியம் காக்கப்படுகின்றன. நீங்கள் தேவர்களுக்கு அனுப்பவேண்டிய பிரார்த்தனையை உங்கள் மேசையில் வைத்து சென்று விடலாம். வெகுசிலரால் மட்டுமே தையீப் எழுத்தை படிக்க முடியும் என்பதால், அதன் இரகசியம் பாதுகாக்கப்படும். ¶நீங்கள் பயணம் செய்துக்கொண்டு இருக்கும் போது உங்களிடம் கணினி இல்லையென்றால், நீங்கள் பழைய பாணியில் உங்கள் பிரார்த்தனைகளை தையீப் வடிவில் கைகளால் எழுதலாம். மென்மையாக இயங்கும் பேனாவை பயன்படுத்துவது நல்ல கலைநயமாக இருக்கும், அதே சமயம் ஒரு ஜப்பான் மை தூரிகையை பயன்படுத்தினால் அதிக கலைநயத்துடன் இருக்கும். உங்கள் எழுத்து அதிக புதுமையாக இருக்க வேண்டும் என்றால், ஒரு கூர்மையான கருப்பு பேனாவை பயன்படுத்துங்கள். நீங்கள் எந்த இறகை தேர்ந்து எடுத்தாலும், தையீப் எழுத்து அழகாக காட்சி அளிக்கும். பல அன்பர்கள் தையீப் வடிவில் கைகளால் எழுதும் போது, மேலிருந்து கீழாக எழுத விரும்புவார்கள். இந்த முறையை கைகளால் எழுதும் போது ஏற்றுக்கொள்ளலாம். எப்போதும் கருப்பு நிற மையை மட்டும்

பயன்படுத்துங்கள். நாம் அனுப்பும் பிரார்த்தனைகள் நேர்மாறாக காட்சி அளிக்கும் அந்தர்லோகத்தில், கருப்பு நிறம் வெள்ளை அல்லது சாம்பல் நிறமாக காட்சி அளிக்கும். வெள்ளை நிற காகிதம் கருப்பு நிறமாக மாறுகிறது, கருப்பு நிற எழுத்துக்கள் வெள்ளை நிறமாக மாறுகிறது. அதை இரண்டு மூன்று *தேவர்கள்* தங்கள் கைகளில் பிடித்து, தங்கள் *பிராண* சக்திகளை அதன் மீது செலுத்திய பிறகே, அது நாம் அனுப்பியதை போன்று வெள்ளை நிறத்தில் கருப்பு எழுத்துக்களாக காட்சி அளிக்கின்றன. அவர்கள் இந்த செய்முறையை, ஒரு ஆவணத்தை சில காலம் ஆய்வு செய்ய தக்க வைக்க நினைக்கும் போது மட்டுமே பயன்படுத்துகிறார்கள். சில பிரார்த்தனைகள் மிகவும் எளிதாக இருப்பதால், அவை கருப்பு பின்னணியில் வெள்ளை எழுத்துக்களாக காட்சி அளித்தாலும், அவற்றை நினைவில் வைத்திருப்பது எளிதாக இருப்பதால், அவற்றிற்கு சக்தியை வழங்கி உறுதியான வடிவம் தரவேண்டிய அவசியம் இருப்பது இல்லை. ¶நீங்கள் மற்ற நிறங்களில் இருக்கும் காகிதத்தில் மற்ற நிறமுடைய மையில் எழுதினால், அவற்றை தையீப் எழுத்து வடிவிலும் படிப்பது கடினமாக இருக்கக்கூடும். மற்ற நிறங்களில் இருக்கும் காகிதம் அந்தர்லோகத்தில் கரிய ஊதா மற்றும் நீல நிறம் கலந்து காணப்பட்டு, எரிந்த காகிதத்தின் சாம்பல் போல காட்சி அளிக்கும். அவை படிப்பதற்கு தெளிவாக இல்லாமல், முழுமையாக தென்பட்டாலும், ஒரு முறை தொட்டால் நொறுங்கி விடுவதற்கு தயாராக இருக்கும். அதனால் நீங்கள் ஒரு வெள்ளை காகிதத்தில் கருப்பு பேனா மூலம் எழுதுவது சரியாக இருக்கும். ¶ஒரு பக்கத்தில் மட்டும் தட்டச்சு செய்து, எழுத்துக்கள் சிறிதாக இல்லை என்றால், அவற்றை அந்தர்லோகத்தில் எளிதில் படிக்க முடிகிறது. சொந்த கைகளால் நேர்த்தியாக எழுதப்பட்ட பிரார்த்தனைகளை போல, ஆங்கிலம் அல்லது வேறு மொழியில் ஒரு பக்கத்தில் தட்டச்சு செய்த பிரார்த்தனைகளையும் *தேவர்களால்* படிக்க முடிகிறது. உங்கள் பிரார்த்தனையில் கையொப்பமிட்டு தேதியை குறிக்க மறக்க வேண்டாம். ¶பிரார்த்தனைகளை பல வழிகளில் எழுதலாம். ஒவ்வொரு அன்பரும் தனது சந்தேகங்கள், தேவைகள் அல்லது பிரச்சனைகள் பற்றிய பிரார்த்தனையை எழுதலாம். ஒருவர் இன்னொரு நபருக்காக, ஒரு குழுவிற்காக, அல்லது ஒரு குழு அல்லது ஒரு சமூகத்தில் ஒரு சிக்கலை தீர்ப்பதற்காக, அல்லது உள்நாட்டு அல்லது சர்வதேச பிரச்சனைகளை தீர்வு காண்பதற்கும் பிரார்த்தனை செய்யலாம். ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் நேரடியாக அல்லது மறைமுகமான வழியில் பலன் கிடைக்கிறது. யாருடைய பிரார்த்தனையும் எப்போதும் புறக்கணிக்கப்படுவது இல்லை. ¶மகாதேவர்களும் *தேவர்களும்* செயல்படுவதற்கு முன்பாக, அந்த அன்பரின் *கர்மவினை* மீது கவனம் செலுத்துகிறார்கள். இதனால் நீங்கள் பிரார்த்தனை மூலம் திருப்தி அடைவதற்கு, தொடக்கத்தில் இரண்டு அல்லது மாற்றுவழிகளை கூறுவது சரியான அணுகுமுறையாக இருக்கும். ஏனென்றால் உங்களுடைய முதல் விருப்பம் உங்கள் *கர்மவினைக்கு* பொருந்தாததாக இருக்கலாம் அல்லது அந்த

விருப்பம் உங்களுக்கு தெரியாமல் மோசமான விளைவுகளை தரக்கூடியதாக இருக்கலாம். இத்தகைய சூழலில், உங்கள் பிரார்த்தனைக்கு பலன் கிடைக்காமல் இருப்பதே பலனாக இருக்கலாம். அதனால் ஒரு வேண்டுகோளை விடுக்கும் போது, இரண்டு அல்லது மாற்ற வழிகளை பரிந்துரைப்பது விவேகமாக இருக்கும். உதாரணத்திற்கு நீங்கள் வேலை தேடுகிறீர்கள் என்றால், உங்களுக்கு பணிபுரிய விருப்பம் இருக்கும் முதல் மூன்று இடங்களை ஒன்று, இரண்டு மற்றும் மூன்று என்று வரிசைப்படுத்தி பரிந்துரைக்கலாம்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 322

பிரார்த்தனை செய்வதற்கான

வழிகாட்டல்கள்

"*தேவர்களே*, எனக்கு உதவி செய்யுங்கள். எனக்கு நல்லாசிகளை வழங்குங்கள்," என்று *தேவர்கள்* வழக்கமாக செய்யும் சேவைகளை கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை நினைவில் வைத்து இருங்கள். இதைப்போன்ற சேவைகளை சிரத்தையுள்ள பக்தர் கேட்காமல், காவல் *தேவதைகள்* தானாக செய்து வைப்பார்கள். வேண்டுகோள்களுக்கு பதில் கிடைக்காத போது, தெய்வீக *சங்கங்கள்* பக்தரின் காவல் தேவதை வாயிலாக, உதவி மற்றும் ஆறுதல் பற்றிய சிந்தனைகளுடன் தங்கள் *பிராண* சக்திகளை அனுப்புகிறார்கள். காவல் *தேவதைகளின்* கண்காணிப்பில் இருக்கும் அன்பர்களின் வீடுகளை மேம்படுத்தி, அவர்களின் தினசரி லௌகீக வாழ்வில் பாதுகாப்பை வழங்கும் *தேவதைகளுக்கு*, தெய்வீக *சங்கங்கள்* பிராணசக்தியால் நிரப்புகிறார்கள். இந்த சேவை கேட்காமல் வழங்கப்படுகிறது. இது அனுமதி பெறுவதை குறிக்காமல், அன்பரை நோக்கி பிராண சக்தி பாய்ந்து செல்வதை குறிக்கிறது. உங்களுக்காக ஆசிகளை பெறுவதையும் ஒரு திட்டபணியை தொடங்குவதற்கு ஆசிகளை பெறுவதையும் ஒன்றாக கருத வேண்டாம். ¶ஒரு அன்பருக்கு என்ன தேவை என்பதை தேவதூதர்கள் அறிந்து இருந்தாலும், நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கும் முன்பாக சம்பந்தப்பட்ட அன்பர் தனது தேவையை கேட்கவேண்டும் என்கிற *தார்மீக* விதியால், அவர்கள் எச்சரிக்கப்பட்டு இருக்கிறார்கள். பிரார்த்தனை செய்யாதவர்கள் வாழ்க்கைகளில் தலையீடு செய்யக்கூடாது என்ற போற்றத்தக்க விதியால் அவர்கள் கட்டுண்டு இருக்கிறார்கள். பிரார்த்தனை என்பது கண்ணியமாக கேட்பதை குறிக்கிறது. "முதலில் சீடன் *குருவை* நோக்கி ஒரு அடி எடுத்து வைக்க வேண்டும். அப்போது *குரு* அவனை நோக்கி ஒன்பது அடிகள் எடுத்து வைப்பார்," என்று பழங்கால விதி குறிப்பிடுகிறது. *தேவர்கள் சங்கத்துடன்* தொடர்புடைய பல காவல்

தேவைதைகள், கர்மவினையின் அந்தர்லோக *குருமார்களாக* இருப்பதால், அவர்கள் விருப்பத்துடன் ஒன்பது அடிகள் முன் வந்து தாராளமாக வழங்குவார்கள். ¶ *தேவர்கள்* அன்பர்களுக்கு திருப்திகரமான பலன்களை வழங்குவதற்கு, அந்த கோரிக்கைகளில் அவர்களுக்கு தெளிவு முக்கியமாக தேவைப்படுகிறது. சிக்கலான பிரச்சனைகளுக்கு விரிவான விளக்கங்கள் தேவைப்படலாம். அவற்றுடன் சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்களை குறிப்பிடவேண்டும். நீங்கள் உங்கள் பிரார்த்தனைகளை தெளிவுபடுத்த, அத்துடன் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்கள், ஒப்பந்த நகல்கள் போன்றவற்றையும் சேர்த்து அனுப்பலாம். இந்த முறையில் மகாதேவர்கள் மற்றும் அவர்களுக்கு துணையாக இருக்கும் *தேவர்கள்*, உங்கள் பிரார்த்தனை பற்றிய விளக்கங்களை தெரிந்துகொண்டு, உங்களுடைய தேவையை அவர்கள் முழுமையாக புரிந்துக்கொள்வதை, நீங்கள் உறுதி செய்து கொள்கிறீர்கள். ¶தாங்கள் மேற்கொள்ளும் புனிதமான வேள்விகள் மூலம், பிரார்த்தனைகளை கையாளத் தெரிந்த ஒரு கோயிலுக்கு உங்கள் பிரார்த்தனைகளை அஞ்சல் அல்லது ஃபாக்ஸ மூலம் அனுப்பலாம். இந்துக்களுக்கு உதவி செய்ய இந்து மதத்தின் காவல் *தேவர்கள்* தயாராக இருப்பதால், எங்கள் கோயில்களில் நடைபெறும் புனிதமான வேள்விகளில் சமர்ப்பிக்க இந்துக்களிடம் இருந்து வரும் பிரார்த்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்து மதத்தை சாராதவர்களுக்கு மற்ற பாரம்பரியங்களின் காவல் *தேவதைகள்* இருப்பதால், அவர்கள் இந்து *தேவர்களுக்கு பிரார்த்தனைகள்* எழுத அனுமதிக்கப்படுவது இல்லை. கடவுள் இந்து கோயில், 107 கஹோலலேலே ரோடு, காபா, ஹவாய் 96746-9304 யு.எஸ்.ஏ. என்ற முகவரிக்கு புனிதமான வேள்வியில் சமர்ப்பிக்க விரும்பும் பிரார்த்தனைகளை அனுப்பலாம். கடிதத்தின் வெளிப்புறத்தில் "பிரார்த்தனை" என்று குறிப்பிடவும். பூசாரிகள் யாரும் பிரார்த்தனைகளை படிப்பதில்லை என்பதால், அவற்றின் இரகசியம் காக்கப்படுகிறது. ஒரு பிரார்த்தனைக்கு கிடைக்கும் பலன் திருப்திகரமாக இருந்தால், நன்றியுணர்வுடன் ஒரு பரிசு வழங்குவது பாரம்பரியம் ஆகும். ஆனால் அதற்கு முன்பாக வழங்கப்படுவது இல்லை. உங்களது முந்தைய பிரார்த்தனைகள் பலன் அளித்ததால், அதற்கான அன்புக்காணிக்கையை தற்போதைய பிரார்த்தனைகளுடன் சேர்த்து அனுப்ப வேண்டாம். அவ்வாறு அனுப்பும் போது அவை திறக்கப்படாமல் புனிதமான வேள்வியில் சமர்ப்பிக்கப்படும் என்பதால், அதை உங்கள் பிரார்த்தனை கடிதத்துடன் இல்லாமல் வேறொரு கடிதத்தில் அனுப்புங்கள். கடவுள் இந்து கோயில் புனிதமான வேள்வியில் சமர்ப்பிக்கப்படும் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்ள தனிப்பட்ட விதிகளை கொண்டுள்ளது. நீங்கள் ஒரு பிரார்த்தனையை அனுப்ப விரும்பினால், மேலும் தகவலுக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும். ¶இத்துடன் ஒரு எச்சரிக்கையையும் வழங்க விரும்புகிறோம். நீங்கள் உங்களது அனைத்து நடவடிக்கைகளுக்கும் அந்தர்லோக *தேவர்களை* சார்ந்து இருந்தால், அது

உங்களை பலவீனப்படுத்திவிடும். நீங்கள் எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலைகளை வெற்றிகொண்டு, உங்களுக்கு என்று ஒரு நேர்மறையான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள, நீங்கள் உங்களை எண்ணற்ற வழிகளில் ஊக்குவிக்க முடியும். "விருப்பாற்றல் தலைதூக்கி ஆதிக்கம் செலுத்தும் போது, இறைவனும் கீழ்படிவதற்கு தயாராக இருப்பார்," என்று பொருள்படும் ஒரு ஆங்கில பழமொழி உள்ளது. நீங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு, முதலில் உங்கள் மனஉறுதியை பயன்படுத்தி, மிகவும் சிறப்பான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்போது உங்களுக்கு தெய்வீக உதவிகள் அனைத்தும் கைக்கூடும். "அந்தர்லோக சக்திகளே, நீங்கள் எனக்காக வாழ வேண்டும். நான் எதையும் செய்யப்போவது இல்லை. நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து இருப்பேன். நீங்கள் எனக்காக எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும்," என்பதைப் போன்ற பிரார்த்தனைகளை அனுப்ப வேண்டாம். பிரார்த்தனைகள் அவ்வாறு செயல்படுவது இல்லை.

குரு சக்தி

गुरुशक्ति



குருவின் சக்தி

மூன்று லோகங்களிலும் குருவை மிஞ்சியவர் எவரும் இல்லை.
தெய்வீக ஞானம் வழங்கும் அவரை பக்தியுடன் உபாசனை செய்வதன்
மூலம், சீடன் ஞானத்தை பெறுகிறான்.

அதர்வண வேதம், யோக சிகா உபநிடதம், குரு பூஜை விதி, அத்தியாயம் ஐந்து. யோதே, ப. 26



ஒரு சிறுவனின் முதல் குருவாக அவனது பெற்றோர்கள் விளங்குகிறார்கள். கீழிருக்கும் படத்தில் ஒரு சிறுவன் தனது பெற்றோர்களின் பாதத்தை மரியாதையுடன் தொட்டு வணங்குகிறான். அதன் பின்னர் அவன் ஒரு சத்குரு, சனாதன தர்மத்தின் ஆசிரியரை தேடிக்கொள்கிறான். அவர் அந்த சீடனுக்கு ஆன்மீக வழிகாட்டலை வழங்குகிறார். ஒரு இமயமலை ஆலமரத்தின் அடியில் அமர்ந்துள்ள தக்ஷிணாமூர்த்தி வடிவில் இருக்கும் சிவபெருமானிடம் இருந்து பெறும் ஒளியின் வாயிலாக, தலைசிறந்த குருமார்கள் *அகத் தூண்டுதலை பெறுகின்றனர்.*

திங்கட்கிழமை

பாடம் 323

குரு பாரம்பரியம்

ஒரு பாரம்பரிய சைவ குடும்பத்தில், குழந்தைகள் பெரியவர்களாகி கலைத்துறை, அறிவியல், மருத்துவம் மற்றும் பொதுக்கல்வி போன்ற துறைகளில் அவர்கள் தங்களது அடுத்த *குருவிடம்* அனுப்பப்படும் வரை, அவர்களுக்கு பெற்றோர்கள் முன் உதாரணமாக விளங்கி, தேவையான விளக்கம் அளித்து, அறிவுரை வழங்கி எதிர்கால பாதையை காண்பிக்கும் முதல் ஆசிரியர்கள் அல்லது *குருமார்களாக* விளங்குகிறார்கள். ஒரு *சத்குருவின்* துணையுடன் இயங்கும் குடும்பங்கள், பெரும்பாலும் தங்கள் குடும்பத்தில் ஒரு குழந்தை எதிர்கொள்ளும் எதிர்கால சூழ்நிலைகளை பொறுத்து, அவன் *சந்நியாசம்* மேற்கொள்வதற்கு அல்லது ஒரு குடும்பத்தின் *பண்டிதராக* விளங்குவதற்கு, அவன் தங்கள் மதம் பற்றி முழுமையாக கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன், அந்த பெற்றோர்கள் தங்களது குடும்பத்தில் சமய ஈடுபாட்டுடன் அதிக திறமைசாலியாக இருக்கும் இளைய மகனை தேர்வு செய்து, அவனை அவனது *ஆசிரம தர்மத்தை கடைப்பிடிக்க* அனுப்பி வைக்கிறார்கள். இந்த சூழலில், முதல் *குருமார்களாக* இருக்கும் பெற்றோர்கள், தங்கள் மகனின் கவனம் முழுவதையும் இரண்டாவது *குருவான சத்குரு* மீது திருப்புகிறார்கள். அதன் பிறகு அந்த *குரு*, அந்த மகனுக்கும் அவனது பெற்றோர்களுக்கும் தாய்-தந்தையாகி விடுகிறார். ¶பெற்றோர்களை மதிக்கவேண்டும் என்பது இந்து குழந்தைகளுக்கு வழக்கமாக சிறு வயதில் இருந்தே கற்றுத்தரப்படுகிறது. அவர்கள் தங்கள் வீடுகளில் கலாச்சாரம் மற்றும் ஒழுக்கம் பற்றிய சில நெறிமுறைகளை பின்பற்றுகிறார்கள். அதனால் ஆசிய நாடுகளை சேர்ந்த ஒருவர் ஒரு ஆசிரமத்தில் வாழ்ந்து, துறவற வாழ்க்கைக்கு தேவையான நெறிமுறைகளை மதிப்பு அளித்து பின்பற்றுவது கடினமாக இருப்பது இல்லை. முதலில் உங்கள் தாய் மற்றும் தந்தை மீது உண்மையான *பக்தியை* செலுத்த வேண்டும். நீங்கள் இறைவன் மற்றும் மகாதேவர்களுடன் ஒரு நல்லுறவை வேண்டினால், நீங்கள் முதலில் உங்கள் பெற்றோர்களிடம் இருந்து தொடங்க வேண்டும். தாய் மற்றும் தந்தையிடம் இருந்து பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்ட பிறகு, பெற்றோர் மீதான அன்பு இறைவன், மகாதேவர்கள் மற்றும் *குருவின்* மீது விரிவாக்கம் பெறுகிறது. இந்த

விரிவாக்கத்தால் தாய் மற்றும் தந்தை மீதான அன்பு குறையாமல், எல்லோர் மீதும் அதிக ஆழமான அன்பு ஏற்படுத்துகிறது. நீங்கள் உங்கள் குடும்பத்தின் மீது செலுத்திய அன்பை உங்கள் *குருவின்* மீது செலுத்த தொடங்குவதால், குடும்பத்தின் மீது உங்களுடைய அன்பு குறைவது இல்லை, அதற்கு மாறாக உங்கள் *குருவும்* உங்கள் குடும்பத்தில் இடம் பிடிக்கிறார் என்பதையே குறிக்கிறது. ஆன்மீக பாதையில் அன்பு என்பது பிரத்யேகமாக இல்லாமல் எல்லாம் உள்ளடக்கியுள்ளது. ¶பாரம்பரிய சைவருக்கு *குரு* என்பவர் எல்லாமாக இருக்கிறார். "தாய் மற்றும் தந்தையாக சிவபெருமான் இருக்கிறார். சகோதரிகள் மற்றும் சகோதரர்களாக சிவபெருமான் இருக்கிறார்," என்று சத்குரு சிவ யோகசுவாமி பாடினார். அதனால் எல்லாமாக இருக்கும் சிவபெருமான் வடிவில் *குரு* இருப்பதால், அவர் எல்லாமாக இருக்கிறார். ஆனால் *சத்குரு* என்பவர் மேற்கத்திய மக்கள் கருதுவதைப் போல அவர் உங்கள் வியாபார கூட்டாளி இல்லை, உங்கள் மனநல மருத்துவர் இல்லை, உங்கள் மனோதத்துவ நிபுணர் இல்லை, உங்கள் பெரிய சகோதரரும் இல்லை. தங்கள் வீடுகளில் இணக்கமான வாழ்க்கைக்கு உகந்த நெறிமுறைகளை பின்பற்றாத மேற்கத்திய நாட்டு மக்கள், தங்கள் பெற்றோர்களுக்கு கீழ்படியாமல் இருந்தது மற்றும் அவர்கள் மீது இருந்த பகை உணர்வை *குரு* மீது வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும். பல மேற்கத்திய வீடுகள் எதை செய்யவேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக இல்லாமல், எதை செய்யக்கூடாது என்பதற்கு முன் உதாரணமாக விளங்குகின்றன. இம்முறையில் வளர்க்கப்பட்டவர்கள், ஒரு பாரம்பரிய *குருவுடன்* இணங்கி செயல்படுவது கடினமாக இருக்கும். இந்த முறையில் பெரியவர்கள் மீது அக்கறையும் மதிப்பும் அளிக்கப்படுவது இல்லை. ¶நான் குறிப்பாக என் மடத்தில் இருக்கும் அன்பர்களிடம் இருந்து தீவிர கவனத்தை எதிர்பார்க்கிறேன். நான் ஊகித்து பதில் அளிப்பதை விரும்புகிறேன். அது *குருவின்* மனதில் இருப்பதை சீடன் அறிந்துகொண்டு, ஒரு கேள்வி கேட்கப்பட்டதும் உடனடியாக பதில் சொல்வதை குறிக்கிறது. அவன் கூர்உணர்வுடன் முன்னோடியாக இருக்க வேண்டும். அது ஐந்து மணி நேரம் படிப்பு மற்றும் அதன் பிறகு வீட்டுப்பாடம் என்று பள்ளிகும் சிறுவனுக்கும் இடையேயான ஒரு உறவாக இல்லாமல், இருபத்தி நான்கு மணிநேர உறவாக இருக்கிறது. நான் எனது மடவாசிகளை என் கனவிலும் காணவேண்டும் என்று விரும்புகிறேன். *கிரகஸ்த* அன்பர்களிடம் எனது உறவு மாறுபட்டு இருக்கிறது. அவர்கள் தொடர்பில் இருக்கும் சமூகம் புரிந்துக்கொண்டுள்ள சைவ தர்மத்தை, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே நான் எதிர்பார்க்கிறேன். அவர்களின் ஆண் குழந்தைகள் ஒவ்வொருவரும் கவாய் ஆதீனத்தில் ஆறு மாதங்கள் முதல் இரண்டு வருடங்கள் வரை இருந்து, தங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் நான் எதிர்பார்க்கிறேன். எங்கள் உறுப்பினர்கள் அனைவரும், வாழ்நாள் முழுவதும் வாரத்திற்கு நான்கு மணி நேரம் *கர்ம யோகம்* செய்யவேண்டும் என்று

எதிர்பார்க்கிறேன். ¶மகரிஷி நந்திநாதரின் ஆசிகளுடன், நமது பரம்பரையை சேர்ந்த *குருமார்களின்* கூட்டு முயற்சியாக விளங்கும் *நந்திநாத சூத்திரங்களில்* நாம் எல்லோரும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறோம். கைலாச பாதையில் இருப்பவர்களுக்கு, இந்த சூத்திரங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் சார்ந்த நம்பிக்கை மற்றும் நடத்தையின் வழக்கங்களை பிரதிபலிக்கிறது. நந்திநாதரின் சிறந்த சீடராக விளங்கிய ரிஷி திருமூலர், தனக்கு தனது குரு கற்றுத்தந்ததைப் பற்றியும், அவர் தனது குருவின் ஆணைப்படி தென் இந்தியாவிற்கு பயணம் செய்து, அங்கே எவ்வாறு சைவ சித்தாந்த அத்வைத ஈசுவரவாதத்தின் மறுமலர்ச்சியை கொண்டு வந்தார் என்பதையும் *திருமந்திரத்தில்* விளக்கி உள்ளார். ஆகமங்கள் மற்றும் வேதங்களை கிரகித்து, அவற்றை விவேகமான முறையில் ஒன்றாக சேர்த்து இருக்கும் *திருமந்திரத்தின்* பரந்து விரிந்த அறிவானது ஆழ்ந்த தியானம், பயிற்சி மற்றும் *யோகாபியாசம்* பற்றி நிறைய தகவல்களை வழங்குகிறது. அவர் தனக்கு வழங்கப்பட்ட பணியை மிகவும் சிறப்பாக செய்து முடித்ததன் காரணமாக, நமக்கு 2,200 வருடங்களுக்கு கழித்து ஒரு சிறந்த கிரந்தம் இருப்பதால், அது ஒரு மாபெரும் சக்தியையும் குறிப்பிடுகிறது. அது நமக்கு காண்பிக்கும் இடைவிடாத தொடர்ச்சி, அறிவை பற்றியதா? இல்லை. அது சக்தி, *குருவின்* சக்தியை பற்றி குறிப்பிடுகிறது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 324

சக்தியின்

தொடர்ச்சி

புத்தகங்கள் வருவதற்கு முன்பாக, தகவல் சொற்கள் மூலம் வழங்கப்பட்டது. இது *சம்பிரதாயம்* என்று அழைக்கபடுகிறது. *சம்பிரதாயம்* என்கிற உபதேசம் வழங்கும் முறையை *சத்குருமார்கள்* அனைவரும் பயன்படுத்தினார்கள். ஒரு சீடனின் கிரகிக்கும் சக்தியை பொருத்து, அவனுக்கு *குரு* உபதேசம் வழங்குகிறார். ஒரு சீடன் காலி மனதுடன் வந்தால், *குரு* அந்த மனதை நிரப்பி விடுகிறார். ஆனால் வரும் போது சீடனின் மனம் நிரம்பி இருந்தால், அந்த மனதில் *குரு* வழங்கும் உபதேசம் எதுவும் பதிவது இல்லை. ¶பல சத்குருமார்கள், தங்கள் சீடர்களுடன் தூல கண்களுக்கு புலப்படாத வகைகளில் செயல்புரிகின்றனர். அவர்களின் சீடன் இந்த பூமியில் தூல உடலுடன் எங்கு இருந்தாலும், அவர்கள் அவனது அதிர்வலையுடன் இணக்கத்தை ஏற்படுத்தி, அவனது எண்ணத்தை உணர்ந்து, அவனுக்கு பாதுகாப்பு மற்றும் வழிகாட்டலை வழங்கும் திறமையை பெற்று இருக்கிறார்கள். குரு-சீடன் அமைப்பு

நேரடியாகவும் தனிப்பட்ட முறையிலும் அமைந்து இருக்கிறது. அதிக பேச்சுவார்த்தையின் தேவை இல்லாத அளவிற்கு, அவர்களுக்குள் மனதளவில் இணக்கம் வலுவாக இருக்கிறது. பாரம்பரிய முறையில் *பிரம்மச்சரியத்தை* கடைப்பிடிப்பதன் மூலம், இந்த உறவு நிலைப்படுத்தப்படுகிறது. ¶தனது சத்குருவுடன் முழுமையான இணக்கத்துடன் இருப்பவன் ஒரு மேம்பட்ட சீடனாக விளங்குகிறான். இந்த இணக்கம் தொடக்கத்தில் ஏற்படுவது இல்லை. ஆனால் அவன் தனது சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள, அவன் *குரு* வழங்கும் உபதேசங்களை அலசி ஆராயும் போது, இந்த இணக்கம் ஏற்படுகிறது. அவன் தனது சிந்திக்கும் மனதில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை வெற்றிக்கொண்ட பிறகு, *குரு* மற்றும் சீடனுக்கு மத்தியில் இணக்கத்தின் உட்புற ஓட்டம் வெளிப்படத் தொடங்குகிறது. சீடன் தனது உட்புற வாழ்க்கை மற்றும் வெளிப்புற வாழ்க்கையை பேணி வளர்க்க வேண்டும். அவன் தனது ஆன்மீக பணி மற்றும் தனது ஆன்மீக நண்பர்களாக இருக்கும் இறைவன், மகாதேவர்கள் மற்றும் *குருவிடம்* அதிக நேர்மையாகவும் உறுதியாகவும் இருக்கும் போது, அவன் அதிக பாதுகாப்பையும் அருளையும் பெறுகிறான். நீங்கள் உங்களை நன்றாக அறிந்துகொண்டு, இந்த தினசரி பாடங்களை படித்து முன்னேறும் போது, உங்கள் *குருவுடன்* உங்களுடைய உறவு வலுவடைந்து வருகிறது. ¶இந்து மதத்தை உலகெங்கும் இந்து கோயில்கள் வலுப்படுத்தி வருகின்றன. நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் பாதையையும், நாம் இருக்கவேண்டிய பாதையையும் எப்போதும் நமது சாத்திரம் நினைவூட்டிக்கொண்டு இருக்கின்றன என்றாலும், அவை அனைத்தும் உங்களுக்குள் உயிர் பெறுவதற்கும், கோயிலின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கும், உங்களது மூன்றாவது கண்ணின் பார்வை மூலம் சாத்திரத்தை நிறைவாக படித்து முடிப்பதற்கும் தேவையான வலுப்படுத்தும் *சக்தியை*, நீங்கள் *சத்குருவிடம்* இருந்து மட்டுமே பெறமுடியும். அவர் இல்லை என்றால், அவை வெறும் வார்த்தைகளாக இருக்கும். ¶நாதர்கள் அதிகம் பேசுவதில் வல்லவர்கள் இல்லை. ஒரு ரிஷி இமயமலையில் இருந்து பெங்களூர் வரை நடந்து வந்தார். அவர் என்ன பேசினார்? யாருக்கும் தெரியாது. அவர் யாரிடம் பேசினார்? யாருக்கும் தெரியாது. அவர் மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தினாரா? ஏற்படுத்தி இருக்கலாம் என்றாலும், வெளியுலகில் தனது கருத்துக்களை தெரிவிப்பதற்கு கடையிற்சுவாமி என்கிற ஒரு நபர் மீது மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது. கடையிற்சுவாமி அந்த ரிஷியின் சக்தியை பெற்றார், மற்றும் அந்த ரிஷி தனக்கு முந்தைய ரிஷிகளிடம் இருந்து அந்த சக்தியை பெற்றார். பாரம்பரிய உபதேசங்களை விளங்க செய்து, அந்த உபதேசங்களில் உண்மையானது எது மற்றும் மிகையானது எது மற்றும் பயனற்று இருப்பது எது என்று பகுப்பாய்வு செய்யும் திறமையை உங்களுக்கு வழங்கி, சித்தாந்தத்துடன் வேதாந்தம், *வேதங்களுடன் ஆகமங்களை* ஒருங்கிணைக்கும் ஆற்றலை, அந்த *சம்பிரதாய* சக்தி வழங்குகிறது. ¶*குருவின்*

உறுதியான சக்தி அனைத்து சீடர்களுக்கும் வழங்கப்படுகிறது. நீடித்து நிலைக்கும் இந்த சக்தியை மட்டுமே ஒரு *குரு* பரிசாக வழங்க முடிகிறது. போதிக்கும் ஞானம் முன்பே எழுதப்பட்டது என்பதால், அவர் அதை வழங்க வில்லை. எல்லோரும் சென்று வழிபடுவதற்கு எண்ணற்ற கோயில்கள் இருப்பதால், அவர் கோயில் கட்டவேண்டிய அவசியம் இல்லை. அவர் தனது மதத்தில் இருக்கும் பாரம்பரிய ஆன்மீக சக்தியை மட்டுமே அரிய பரிசாக வழங்க முடிகிறது. அது இந்த உலகிற்கு அவர் வழங்கும் தனித்தன்மை வாய்ந்த பரிசாக விளங்குகிறது. ¶நாதர்கள் திறமையாக பேசும் பாணியை பின்பற்றியது இல்லை. மக்களிடம் கடையிற்சுவாமி நிறைய பேசினார். அவர் என்ன பேசினார் என்று யாருக்கு தெரியும்? அந்த காலத்தில் டேப் ரெக்கார்டர்கள் இருந்தது இல்லை. அவர் எதையும் எழுதியும் வைக்கவில்லை. ஆனால் அவரை அதிகம் பேசாத செல்லப்பகுருவிடம், அந்த சக்தி அழைத்து சென்றது. அவரும் திறமையாக பேசும் பாணியை பின்பற்றவில்லை. அவர் தத்துவத்தின் தெய்வீக சாரங்களை மட்டுமே பேசினார். அவர் திருமூலரைப் போல 3,000 பாடல்களை இயற்றவில்லை. அவர் கடையிற்சுவாமியை போல் மக்கள் கூட்டங்களில் பேசவும் இல்லை. அவர் தனக்கு கிடைத்த சக்தியை சத்குரு சிவ யோகசுவாமிக்கு வழங்கினார். சிவ யோகசுவாமி தனக்கு கிடைத்த சக்தியை பல அன்பர்களுக்கு வழங்கினார். ¶ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த காலத்தில், எல்லா *குருமார்களும்* தங்களை பொது வாழ்வில் அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்பதையும், இலங்கையில் இருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறிய பிறகே மக்கள் மத்தியில் யோகசுவாமியின் சமயப்பணி செழிக்க தொடங்கியது என்பதையும் நாம் நினைவில் வைத்து இருக்க வேண்டும். அவர் தனது சக்தியை எனக்கும் பல்வேறு அன்பர்களுக்கும் வழங்கினார். நான் இலங்கையின் வடக்கு பகுதியில் இருக்கும் சிவன் கோயில்களுக்கு சென்று, அங்கே வழிபாடுகளை மேற்கொண்டு யோகசுவாமியிடம் இருந்து தீட்சையை பெறவில்லை என்றால், நான் அமெரிக்கா திரும்பி ஒரு சிவன் கோயிலை நிர்மாணித்து இருக்கவோ, உலகெங்கும் மேலும் ஐம்பது இந்து கோயில்களை நிர்மாணம் செய்வதற்கு உதவி செய்து இருக்கவோ முடியுமா? நிச்சயமாக முடியாது. நாம் ஒரு மடத்தை அமைத்து இருப்போமா? நிச்சயமாக முடியாது. நாம் சர்வதேச அளவில் சைவ சித்தாந்த தேவாலயத்தை அமைத்து இருப்போமா? முடியாது. நாம் ஒரு இமலாயன் அகாடமியை அமைத்து இருப்போமா? முடியாது. நாம் ஒரு இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவலை அமைத்து இருக்க முடியுமா? முடியாது. நமக்கு இந்துயிசம் டுடே பத்திரிகை கிடைத்து இருக்குமா? முடியாது. நாம் உலகெங்கும் குடும்ப வாழ்வை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு இருப்போமா? வாய்ப்பில்லை. தற்போது நாம் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து இருக்க வாய்ப்பு உள்ளதா? வாய்ப்பில்லை. போற்றத்தக்க இந்த குருமார்களின் வரிசையில் ஒரு *சத்குரு* இருந்ததால், எனக்கு *குருவின்* சக்தி கிடைத்தது. இந்த சக்தி வழியாக உபதேசங்கள் மற்றும் நடவடிக்கைகள் வெளிப்படுகின்றன.

அதன் மூலம் அன்பர்கள் அந்த நேரான பாதையை பின்பற்றி ஒழுக்கத்துடன் இருப்பதால் பலன் கிடைத்து, அகப்பார்வை தோன்றி நிலைத்து நிற்கிறது. *சத்குருமார்கள்* இல்லை என்றால், நம்மிடம் வெறும் கோயில்கள் மற்றும் சாத்திரங்கள் மட்டுமே இருக்கும். *சத்குருமார்கள்* இல்லை என்றால், நமக்கு *குருவின்* சக்தி கிடைத்து இருக்காது, மற்றும் அன்பர்கள் கோயில்களுக்கு செல்வதையும் சாத்திரங்கள் படிப்பதையும் நிறுத்தி இருப்பார்கள்.

புதன்கிழமை

பாடம் 325

தொடர்பை

நிலைநிறுத்துதல்

ஒரு *சத்குரு* தன்னிடம் இருக்கும் சக்தியை இன்னொருவருக்கு வழங்குவதற்கு, அதிகம் பேசவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் சீடர்கள் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும் மற்றும் அவர்களை அந்த நிலையில் தொடர்ந்து வைத்து இருக்கவும் வேண்டும். சக்தியின் சிறிய பகுதி ஒரு மெல்லிய நூல் இழை போன்று, *சத்குருவிடம்* இருந்து சீடனுக்கு நீட்டிக்கொண்டு, எளிதில் பிரியக்கூடியதாக இருக்கிறது. அந்த தொடர்பு சிறிது வலுப்படும் போது, மேலும் இரண்டு முதல் நான்கு இழைகள் வரை சேர்கின்றன. அவை சேவை செய்வதன் மூலம் மெதுவாக ஒன்றாக பிணைந்துக் கொண்டு, *குரு* மற்றும் சீடனுக்கு மத்தியில் ஒரு வலுவான கயிறு உருவாகிறது. மேலும் பல கயிறுகள் உருவாக்கப்பட்டு, இறுதியில் அவை ஒன்றாக பின்னிப்பிணைந்து ஒரு வண்டியை இழுக்கும் அளவிற்கு வலுவான கயிறு உருவாகிறது. நீங்கள் இந்தியாவில் கோயில் தேர்களை இழுக்க பயன்படும் தேர் வடங்களை (கயிறு) பார்த்து இருப்பீர்கள். அது தான் *குரு-சிஷ்ய* உறவின் இறுதி இலக்கு ஆகும். ¶குரு மற்றும் சீடனுக்கு மத்தியில் தொடர்பு ஏற்பட்ட பிறகு, *பாரம்பரியத்தின்* சக்தி, *சம்பிரதாயத்தின்* சக்தி பயணம் செய்கிறது. அது மனதில் ஆழமாக பதியும் உபதேசங்களை உருவாக்குகிறது. அது புத்தியில் இருந்து வெளியேறாமல், அந்த நபரின் மனதின் ஆழத்திற்கு அந்த தகவல் செல்கிறது. ஆன்மீக சக்தி தானாக தோன்றுவது இல்லை. மனித இனத்தின் வளர்ச்சி தானாக நடைபெறாததைப் போல, அந்த சக்தியும் ஒருவர் இன்னொருவருக்கு வாழையடி வாழையாக வழங்கும் செய்முறை ஆகும். நாம் வாழையடி வாழையாக பல தந்தைமார்கள் பல தாய்மார்கள் மற்றும் பல பிறவிகளுக்கு பிறகு, நாம் இங்கே வந்துள்ளோம். *பாரம்பரியம்* என்கிற ஒரு ஆன்மீக சக்தி ஒரு நபரிடம் இருந்து இன்னொரு நபருக்கு இயக்கம் பெறுகிறது. இன்றைய நவீன யுகத்தில் ஆசிரியர் ஒருவருக்கு *சக்தியை* வழங்கியதும், அவர் சிறிய

நடுக்கத்தை பெறுகிறார், மற்றும் அவர் ஒரு சிறிய தொகையை ஆசிரியருக்கு செலுத்துகிறார் மற்றும் அத்துடன் அந்த ஆசிரியர்-சீடன் உறவு முறிந்து விடுகிறது. நான் இந்த நவீன செய்முறையை குறிப்பிடவில்லை. *பாரம்பரியம்* என்பது பட்டு நூலின் ஒரு சிறிய இழையை ஒரு சீடனுக்கு தருவது ஆகும். ஆனால் அந்த இழையை சீடன் தவறவிட்டால், அனுபவங்கள் நின்று வெறும் வார்த்தைகள் மட்டுமே மீதம் இருக்கும். அந்த அன்பர் தனக்கு இயல்பாக இருக்கும் அறியாமையின் ஆழத்திற்கு ஏற்ப, தத்துவத்தின் ஆழத்தை புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அந்த அன்பர் தான் புரிந்துகொண்ட தத்துவத்தின் ஆழத்தை அளவிடுவதற்கு வேறு ஏதாவது வழி இருக்கிறதா? *குருவுடனான* உறவு என்பது, எங்கள் சமூகத்தில் நாங்கள் அணியும் இந்த நெய்த *காதி காவியை* போல, ஒரு நூலின் இழையுடன் இன்னொரு இழையை நெய்வது என்று இது தொடர்ச்சியான நடவடிக்கையாக இருக்கிறது. ஒவ்வொரு இழையும் இன்னொரு இழையுடன் தொடர்ந்து சேர்க்கப்பட்டு, இறுதியாக அது ஒரு நூல் வடிவத்தை பெறுகிறது. *குரு* மற்றும் சீடனுக்கு மத்தியில் பல நூல்கள் ஒன்றாக நெய்யப்பட்டு, இறுதியில் நமக்கு ஒரு உறுதியான கயிறு கிடைக்கிறது. அதை இருவர் சேர்ந்து வெவ்வேறு திசைகளில் இழுத்தாலும் அறுக்க முடிவதில்லை. இது தான் *சம்பிரதாயம்*. இது தான் *பாரம்பரியம்*. இது தான் நாதர்களின் அற்புத சக்தி ஆகும். ¶சிவபெருமானிடம் இருந்து தோன்றி நந்திநாதர் வழியாகவும் அவருக்கு முன்பாக எண்ணற்ற *சத்குருமார்கள்* வழியாகவும், திருமூலர் மற்றும் அவரைத் தொடர்ந்து எண்ணற்ற *சத்குருமார்கள்* வழியாகவும், அதன் பிறகு பெங்களூரில் இருந்த ரிஷி, கடையிற்சுவாமி, செல்லப்பகுரு மற்றும் யோகசுவாமியைக் கொண்ட இந்த *சத்குருமார்களின்* மாபெரும் பரம்பரையை பார்க்கும் போது, அதில் ஒரே ஆன்மீக சக்தி பாய்ந்து செல்வதை காண்கிறோம். நாம் அவ்வாறு காணும் போது, அச்சமில்லாமல் துன்பங்களை மகாதேவர்கள் தந்த வரமாக கருதும் அபூர்வமான மனிதர்களின் வரிசையை காண்கிறோம். அந்த துன்பத்தின் வடிவில் பல பிறவிகளாக சேகரிக்கப்பட்ட *கர்மவினைகள்* அனைத்தையும், ஒரே சமயத்தில் கரைப்பதற்கு ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்தன. நாதர்கள் துன்பத்தை கண்டு அஞ்சவில்லை. அவர்கள் அதை நினைத்து ஆத்திரம் அடையவும் இல்லை. அவர்கள் அதை தங்கள் தியானத்துடன் எடுத்துக்கொண்டு, தங்களுக்குள் இருக்கும் தூய வெள்ளை ஒளியில் அதை சுவடு இல்லாமல் கரைத்து விடுகின்றனர். அந்த *கர்மவினைகள்* பல வருடங்களுக்கு பரவி இருக்காமல், எல்லாம் ஒன்றாக ஒரே சமயத்தில் வந்ததை, இறைவன் தங்களுக்கு தந்த வரமாக கருதினார்கள். மறைஞானிகளாக இருந்த நாதர்கள் பெரும்பாலான நடவடிக்கைகளை தங்களது சொந்த பாணியில் கையாண்டனர், மற்றும் அதில் பெரும்பாலான பகுதி *நந்திநாத சூத்திரங்களில்* வெளியிடப்பட்டுள்ளது. மத நம்பிக்கை பற்றிய எங்களது வினாடி வினா புத்தகத்தில் இருக்கும் தகவல் மற்றும் பொதுவான சமூக நம்பிக்கைக்கு

துணையாக இருக்கும் அறிவு அனைத்தும், எங்களது மடத்தின் புனிதமான ஆணைகளில் இருக்கும் தகவல் அனைத்தும், நமது சைவ கலாச்சாரம் மற்றும் பிரம்மச்சரியம் பற்றிய நமது பாடத்திட்டத்தில் இருக்கும் தகவல் அனைத்தும், மற்றும் இத்தனை வருடங்களாக நாங்கள் வெளியிட்டு விநியோகம் செய்த புத்தகங்களில் இருக்கும் தகவல் அனைத்தும், இந்த *சூத்திரங்களில்* இருக்கும் சுருக்கமான சிறிய பத்திகளில் உள்ளடங்கி உள்ளன. அவை நடத்தை விதிகள், வாழும் வழிகள், இயங்கும் முறைகள், சிந்திக்கும் முறைகள் மற்றும் பல யுகங்களாக நமது சைவ சித்தாந்தத்தின் மூலம் கற்றுத்தரப்படும் அத்வைத ஈசுவரவாதத்தின் மைய கருத்தையும் வழங்குகின்றன.

வியாழக்கிழமை

பாடம் 326

குரு எதற்காக

தேவைப்படுகிறார்

உங்களில் பலர் என்னுடன் பத்து முதல் முப்பது வருடங்களாக நமது மதத்தைப் பற்றி படித்து வருகிறீர்கள். நீங்கள் இன்றைய தினம் முழுவதும் *சத்குருவின்* சக்தியை பற்றி தொடர்ந்து சிந்திக்க வேண்டும் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு வழிகாட்ட ஒரு *சத்குரு* இல்லை என்றால், நீங்கள் உங்கள் அறிவு, உங்கள் உள்ளுணர்வு அல்லது குழப்பும் சக்திகள் மூலமாக வழிநடத்தப்படுவீர்கள். தனது சீடர்களை நல்வழியில் நிலைத்து இருக்க துணை புரிவது *சத்குருவின்* ஒரே கடமையாக விளங்குகிறது. சாத்திரங்களில் இருக்கும் செய்யுட்கள் மற்றும் பத்திகளின் பொருளை மனதளவில் புரிந்துக்கொண்டு, அவற்றை தொடர்ந்து ஞாபகப்படுத்தி வார்த்தைகளுடன் விளையாடுவதை நாங்கள் விரும்புவது இல்லை. நாங்கள் *சாதனா* மற்றும் *தபஸ்* செய்யும் பாதையை பின்பற்றுகிறோம். *சீடர்கள்* உயர்ந்த நிலையில் இருக்கும் *சக்கரங்களின்* பல்வேறு இதழ்கள் வழியாக முன்னேற்றம் பெற்று, ஒன்றன் பின் ஒன்றாக ஒன்று அல்லது பல ஆன்மீக விழிப்புணர்வுகளை பெறும் போது, ஆன்மீக முன்னேற்றத்தின் ஒரு நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு வளர்ச்சி பெறுகின்றனர். அவர்கள் ஒன்று அல்லது பல்வேறு *சக்கரங்களில்* குடிபுகுந்து "இந்த வாழ்க்கை நன்றாக இருக்கிறது. எனக்கு ஆன்மீக விரிவாக்கதின் இந்த நிலை பிடித்து இருக்கிறது. அதனால் நான் இனி முயற்சி செய்யப்போவது இல்லை," என்று யோசிப்பவர்கள் இல்லை. *குருவின்* சக்தி தொடர்ந்து அவர்களை இயக்கிக்கொண்டு இருப்பதால், அவர்களால் இவ்வாறு யோசிக்க முடிவதில்லை. அவர் தொடர்ந்து யோசித்துக் கொண்டு, "இது போதாது. நான் மேலும் மேன்மை பெறவேண்டும்," என்று

கூறிக் கொள்கிறார். ¶"நாம் போதிய முன்னேற்றம் அடைந்து விட்டோம். இனி நாம் சிறிது ஓய்வு எடுக்கலாமா?" என்று செல்லப்பகுரு யோகசுவாமியிடம் எப்போதும் கூறியது இல்லை. ஆனால் அவர் யோகசுவாமியை தொடர்ந்து நன்றாக நடக்க வைத்து உணவு அளித்தார். இது நீண்டகாலம் தொடர்ந்தது. இறுதியில் சத்குரு யோகசுவாமி பல இடங்களுக்கு நடந்து சென்று மக்களுக்கு உணவு அளிப்பதை தொடர்ந்தார். இதன் மூலம் எல்லோரும் இதையே செய்யத் தொடங்கினார்கள். அந்த ஆன்மீக பண்பை பரப்புவதில் எங்களுக்கு எந்த சிக்கலும் இருந்தது இல்லை. நாங்கள் திறமையாக பேசி பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டிய அவசியம் இருந்தது இல்லை. நீங்கள் பேச்சுவார்த்தைகளின் பாதையை பின்பற்றினால், நீங்கள் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டும். இது மிகவும் நீளமான செய்முறையாக இருக்கலாம். ஆனால் ஆன்மீக விழிப்புணர்வுகள் இருக்கும் போது, உணர்வை உயர்த்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடிகிறது. பிரச்சனை தானாக மறைந்து விடுகிறது. நீங்கள் தானாக செய்துகொள்ளும் இந்த மறைஞான உத்தியை புறக்கணிக்க வேண்டாம். ¶ஒவ்வொரு இந்துவிற்கும் ஒரு *சத்குருவின்* தேவை இருக்கிறது. கோயில்கள், *வேதங்கள்* மற்றும் நமது சாத்திரங்களுக்கு, இந்து மதத்தில் வழங்கப்படும் முக்கியத்துவத்தை *சத்குருவும்* பெறுகிறார். ஏனென்றால் பலரால் சுயமாக விசாரம் செய்து முடிவு எடுக்க முடிவதில்லை. அவர்களுக்காக ஒருவர் எதிர்காலத்தை ஆய்வு செய்து, அவர்களை சரியான வழியில் அழைத்து சென்று, சரியான மனநிலையிலும் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. மக்கள் அவ்வப்போது அலைந்து திரிந்துக்கொண்டு இருப்பதால், அவர்களுக்கு ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறார். "உங்களுக்கு ஒரு ஆன்மீக வழிகாட்டி தேவைப்படுகிறது. உங்களுக்கு நான் தேவையில்லை என்றால், உங்களை வாழ்நாள் முழுவதும் வழிகாட்டுவதற்கு ஒருவரை தேடிக்கொள்ளுங்கள்," என்று பிரபலமான சுவாமிகள் குறிப்பிடுவதை நான் பல வருடங்களாக கேட்டு வருகிறேன். அது உங்கள் பாட்டி அல்லது தாத்தா, உங்கள் ஜோதிடர், ஒரு கோயில் பூசாரி, உங்கள் சமூகத்திற்கு விருந்தாளியாக வரும் ஒரு *யோகி* அல்லது அதில் வாசம் செய்யும் ஒரு *சுவாமி*, ஒரு *சாது*, ஒரு *பண்டிதர்* அல்லது ஒரு அபூர்வமான *சத்குரு* என்று ஒருவர் சொல்லும் அறிவுரையை கேட்டு அதற்கு நீங்கள் கீழ்படிந்து நடப்பவராக இருக்கவேண்டும். இதை பற்றிய முடிவை நன்றாக சிந்தித்து, பெற்றோர்களுடன் பேசி, முதியவர்களின் ஆலோசனையை பெற்று இருந்து, மனப்பூர்வமாக எடுக்க வேண்டும். முடிவை எடுத்த பிறகு, அதை மாற்றக் கூடாது. நீங்கள் அவர் மீது விசுவாசத்துடன் இருந்து, அவருக்கு உரிய அன்பையும் மரியாதையையும் வழங்குங்கள். அவர் வழங்கும் அறிவுரை மற்றும் கண்டிப்பை பொன் போல மதித்து நம்பிக்கையுடன் முன்னேறுங்கள். *தர்மத்தை* பின்பற்றி பலன்கள் நிறைந்த திருப்திகரமான வாழ்க்கையை வாழ்வதற்கு, அவர்கள் வழங்கும் அறிவுரை பல நன்மைகளை வழங்குவதாக இருக்கும்.

¶அந்த ஆன்மீக வழிகாட்டியும் ஒரு பெரிய சுமையை சுமக்க வேண்டியிருக்கிறது. அவர் தொடர்ந்து நல்ல பலன்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. அந்த ஆன்மீக வழிகாட்டிகள், தங்களுக்கு கிடைக்கும் பாராட்டுக்களுக்கு தலை வணங்கி திருப்தி அடையும் பொழுதுபோக்கு கலைஞர்கள் இல்லை. அதற்கு மாறாக அவர்கள் தங்கள் சீடர்களின் *கர்மவினை* சுமைகளை குறைப்பது, குடும்பத்தை வலுப்படுத்துவது, திருமணங்களை தக்க வைப்பது போன்று அவர்களின் வாழ்க்கைகளுக்கு நன்மை தரும் செயல்களை செய்வதோடு, எதிர்கால மதத் தலைவர்களை தேடிப்பிடித்து அவர்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரின் *கர்மவினைகளை* பின்பற்றி, தேவைப்படும் போது தங்கள் சீடர்களுக்கு அருகில் இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் சாந்தமான குணத்தை வெளிப்படுத்தி, சித்தியின் பேரானந்தத்தில் ஒடுங்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து வாழ்ந்துகொண்டு இருக்கும் சக்தியாக இருக்கவேண்டும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 327

வழிகாட்டுதல் மற்றும்

வளர்ச்சி

மக்களுக்கு ஒரு வழிகாட்டி இல்லாத போது, அவர்கள் சுற்றித் திரிந்து ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொள்கிறார்கள். அவர்களுக்கு தங்கள் செயல்களின் விளைவுகள் தெரிவது இல்லை. அவர்கள் நல்ல, தீய மற்றும் இரண்டும் கலந்த செயல்களை செய்து, தங்களை சரியான பாதையில் செலுத்தாமல், ஒரே செயலை தொடர்ந்து செய்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்கள் சொல்வதை கேட்பதில்லை. அவர்கள் தங்கள் ஆன்மீக வழிகாட்டிகள் சொல்வதை கேட்பதில்லை. அவர்கள் தங்கள் மத ஆலோசகர்கள் சொல்வதை கேட்பதில்லை. ஆனால் பிரபல பாடகர்கள், போதை மருந்து விற்பனையாளர்கள் மற்றும் தங்கள் குற்றவாளி கும்பலின் தலைவர் சொல்வதை அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் உள்ளூர் நீதிபதி மற்றும் அதன் பிறகு பரோலில் விடுதலை செய்யும் அதிகாரி பேசுவதை கேட்பதற்கு முன்பாக, காவல்துறை அதிகாரி வழங்கும் எச்சரிக்கையை கேட்க வேண்டி இருக்கிறது. சிலர் தங்களது உதவியாளர்கள் அல்லது புற்றுநோய் ஆலோசகர்கள் சொல்வதை கேட்டு, விரைவாக உயிர் துறப்பதைப் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களால் கேட்க முடிகிறது. ஆமாம் அவர்களின் கேட்கும் திறன் செயல்பாட்டில் இருக்கிறது. நான் பேசிக்கொண்டு இருக்கிறேனா? நாம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டு இருக்கிறோமா?

¶ஆனால் இன்று பல குழந்தைகளின் பெற்றோர்கள் பயன்படுத்தும் வளர்ப்புமுறை, யாருக்கும் அடிபணியாமல் இருப்பதற்கு துணை புரிவது நமது துர்பாக்கியம் ஆகும். “என்னிடம் கேட்க வேண்டாம். நீயே முடிவு எடுத்துக்கொள். நீ மகிழ்ச்சியாக இருக்கவேண்டும்," என்று குழந்தைகளிடம் பெற்றோர்கள் கூறுகிறார்கள். குழந்தைகளின் வளர்ப்புமுறை அவர்கள் குழப்பத்துடன் இருக்க துணை புரிகிறது. அவர்களது வளர்ப்புமுறை, ஒரு சிக்கலான உலகில் அவர்கள் தனியாக இருந்து போராட துணை புரிகிறது. அவர்கள் கீழ்நிலை உணர்வில் இருப்பவர்களாக வளர்க்கப்படுகிறார்கள். குழந்தைகளை கல்வி கற்ற குற்றவாளிகளாக பல பள்ளிகள் வளர்க்கின்றன. குழந்தைகளை முறையாக வளர்த்து, அவர்களுக்கு முறையான வழிகாட்டலை வழங்கும் அடிப்படைகள் மீது கவனம் செலுத்துவோம். பெற்றோர்கள் குழந்தைகளை சரியாக வளர்க்கிறார்களா என்று கண்காணிப்பது ஒரு *சத்குருவின்* கடமையாக இருப்பதை போல, அதை முறையாக செய்வது பெற்றோர்கள் *தர்மம்* ஆகும். ¶*குரு* வழங்கும் உபதேசங்களுக்கு தடைகளாக இருக்காமல், முறையாக பதில் சொல்வது சீடனின் கடமை ஆகும். நாங்கள் சமீபத்தில் இந்தியாவில் ஒரு *ஆசிரமத்திற்கு* சென்று இருந்த போது, அங்கே எல்லோரும் தங்கள் *குருவிற்கு* கண்ணியமாக கீழ்படிந்த முறை எங்களை வெகுவாக கவர்ந்தது. குரு பார்க்கும் பார்வையின் மூலம், "உங்களுக்கு என்ன சேவை செய்யவேண்டும்?" என்று அவரிடம் அன்பர்கள் கேட்டார்கள். *குரு* ஒன்றை கூறியதும், அதை உடனே எல்லோரும் செயல்படுத்துகிறார்கள். "எனக்கு வேறு வேலை இருக்கிறது. நீங்கள் எனக்கு முன்பே பத்து வேலைகளை வழங்கிவிட்டீர்கள். இப்போது நான் அந்த வேலைகளை நிறுத்திவிட்டு இதை எப்படி செய்வது? இதை வேறு யாராவது செய்ய முடியாதா?" என்று யாரும் மறுப்பு தெரிவிப்பது இல்லை. இதைப்போன்ற நடவடிக்கைகளை நான் அங்கே பார்க்கவில்லை. நாங்கள் அங்கே விருந்தாளிகளாக இருந்தோம் என்பதற்காக எல்லோரும் நல்லமுறையில் நடந்துக்கொண்டார்கள் என்றாலும், அந்த கீழ்ப்படியும் பண்பை பெறுவதற்கு அவர்கள் நன்கு பயிற்சி பெற்று இருக்கவேண்டும். நாங்கள் வருவதற்கு ஐந்து வருடங்கள் முன்பே, அவர்கள் அந்த பயிற்சியை தொடங்கி இருக்கவேண்டும். அருமையான நடத்தைமுறை. அத்தகைய நடத்தை முறையால், சீடன் மற்றும் *குருவின்* இடையேயான உறவு ஒரு திட்டமிட்ட வளர்ச்சியை கொண்டிருக்கிறது. மேலும் அந்த நபருக்குள் தோன்றும் ஆன்மீக வாழ்க்கை, வழக்கங்களை எல்லாம் உடைத்து வழக்கங்களுடன் செயல் புரிகிறது, அது புத்தி மற்றும் பகுத்தறிவு திறமைகள் அனைத்தையும் கடந்து இருந்தாலும் அது புத்தி மற்றும் பகுத்தறிவு மூலம் செயல்படுகிறது, அதை கணிப்பது கடினமாக இருந்தாலும் அது தொடர்ந்து கணிக்க முடியாத பண்புடன் இருக்கிறது என்பதை கணிக்க முடிகிறது. ¶ஆனால் கண்மூடித்தனமாக நம்பிக்கை வைப்பது ஆன்மீக வழி இல்லை என்பதை நாம் நினைவில் வைத்து இருக்கவேண்டும். நன்றாக இயங்கி வரும் *ஆசிரமத்தில்* பிணைக்கும்

சக்தியாக, அங்கே நிலவும் அறிவுப்பூர்வமான ஒத்துழைப்பு விளங்குகிறது. அறிவுப்பூர்வமான ஒத்துழைப்பு என்பது தொடங்குவதற்கு முன்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோள் பற்றிய மிகவும் தெளிவான அறியும் சக்தி சித்திப்பதை குறிக்கிறது. இதற்கு இன்றைய நிறுவனங்களில் உடன்பாடு ஏற்பட்ட பிறகு, தலைவரின் முடிவு உங்களது முடிவாக இருப்பதைப் போல, பெரும்பாலும் கேள்வி கேட்பது, திட்டப்பணி அல்லது அதன் நிர்வாகம் பற்றிய விவாதம் தேவைப்படும். இந்த அறிவுப்பூர்வமான உடன்பாடு, கண்மூடித்தனமாக கீழ்படிவது இல்லை. நான் இங்கே கவாய் ஆதீனத்தில் இருக்கும் எல்லோரிடமும் அந்த ஆன்மீக பண்புகளை காண்கிறேன் மற்றும் அவை உலகெங்கும் இருக்கும் எனது சீடர்களிடம் வெளிப்பட்டு கொண்டிருக்கின்றன.

சனிக்கிழமை

பாடம் 328

நாதர்களின்

சமயப்பணி

நான் எனது சீடர்களிடம் முக்கிய ஆன்மீக பண்பாக அக்கறையுடன் இருப்பதை காண விரும்புகிறேன். அந்த பண்பு இல்லாமல், எதுவும் சரியாக செயல்படுவது இல்லை. மக்கள் ஒரே மாதிரியான நடவடிக்கைகளின் தொடர்ச்சியைக் கொண்ட ஒரு சாதாரணமான பணியில் அமர்ந்து கொண்டு, தனது முதலாளி மற்றும் தனக்கு நெருக்கமான சகாக்களிடம் வெறுப்பு, பொறாமை மற்றும் பழிவாங்குவது, அதன் பிறகு மீண்டும் வெறுப்பு, பொறாமை மற்றும் பழிவாங்கும் செய்முறையை தொடங்குகின்றனர். இன்றைய காலகட்டத்தில் இந்த போட்டி மனப்பான்மை சொந்த தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து நிலவி வருகிறது. இத்தகைய எதிர்மறை போட்டி மனப்பான்மையுடன் இருப்பவர்கள், நவீன நிறுவனங்கள் அல்லது தங்கள் சொந்த வாழ்வில் ஒரு பெரிய நிலைக்கு வரமுடிவது இல்லை. ¶போட்டியுணர்வை தூண்டும் விளையாட்டுக்கள் மற்றும் வேறு பல நடவடிக்கைகளை பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் மத்தியில் ஊக்குவிக்க கூடாது என்று நான் *நந்திநாத சூத்திரங்களில்* தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறேன். அதனால் உருவாகும் வெற்றி-தோல்வி உணர்வு கீழ்த்தரமான குணங்கள் செயல்பாட்டில் இருக்க காரணமாக அமைகின்றன. எல்லோருக்கும் உதவிகரமாக இருங்கள், யாருடனும் போட்டியிடாதீர்கள். நீங்கள் சிறப்பாக செயல்படுங்கள் மற்றும் மற்றவர்கள் சிறப்பாக செயல்படும் போது அவர்களை பாராட்டுங்கள். நீங்கள் *நந்திநாத சூத்திரங்களை* படிக்கும் போது நிறைய சிந்திக்க வேண்டியிருக்கும். மேலும் 2,200 ஆண்டுகளுக்கு முன்பாக

"தென்னிந்தியாவிற்கு சென்று அங்கிருக்கும் மக்களுக்கு சிவபெருமானின் பெருமைகளைப் பற்றி கற்றுக்கொடு. அவர் அவர்களுக்குள் இருந்துக்கொண்டு, அவர்களின் உயிரின் உயிராக இருக்கிறார் என்றும், அவர்களின் ஆன்மா அவரிடம் இருந்து வெளிப்பட்டது என்றும் கற்றுக்கொடு. அங்கே நமது அத்வைத கோட்பாடுகள் சீராக இயங்க முயற்சிகள் செய். அங்கிருக்கும் மக்கள் சிறிது குழப்பத்தில் இருப்பதாக தோன்றுகிறது," என்று மகரிஷி நந்திநாதர் தனது சீடரான திருமூலரிடம் கூரிய காலத்தில், அந்த *சூத்திரங்களில்* இருக்கும் விவேகத்தின் அடிப்படை அகத்தின் ஆழத்தில் இருந்து தோன்றியது என்று கவனத்தில் கொள்ள வேண்டும். அவர் தென்னிந்தியா செல்ல விமானத்தில் பயணம் செய்யவில்லை. அவர் கரடுமுரடான நீளமான பாதையை பெரும்பாலும் கால்நடையாகவும், மாட்டுவண்டியிலும் கடந்து சென்றார். அவர் செல்லும் பாதையில் பல நிகழ்வுகள் நடந்து இருக்கக்கூடும். அவர்கள் பல மனதில் பல சபலங்கள் ஏற்பட்டு இருக்கக்கூடும். அவர் செல்லும் பாதையில் சில அழகான பெண்கள் குளத்தில் நீராடிக்கொண்டு இருக்கலாம். அந்த பெண்கள் மூலம் அவருக்கு சபலம் ஏற்பட்டு இருக்கலாம். அவர்களிடம் இருக்கும் பொருட்களை கொள்ளையர்கள் திருடி இருக்கலாம். அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கலாம். அவர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம், ஆனால் அவரது தவவலிமை, அவர் தனது *குருவிடம்* பணிவாக இருந்து அவருக்கு கீழ்படிந்து நடந்ததால் சேகரித்த நல்ல *கர்மவினைகள்*, ஆன்மீக சக்தி, தனது *குருவிடம்* அவருக்கு இருந்த உறவு ஆகியவை மந்திர கம்பளம் போன்று விளங்கி, அவரை இன்றைய சிதம்பரம் இருக்கும் இடத்திற்கு சுமந்து செல்ல காரணமாக விளங்கின. அவர் தனது சமயப்பணியை தொடங்கி அதை பூர்த்தியும் செய்தார். அவரது சமயப்பணி இன்றும் இந்த அறையில் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இது இன்று முதல் மேலும் 2,200 ஆண்டுகளுக்கு தொடர உள்ளது.

¶ஆன்மீக சக்திக்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. அதை மரணத்தால் தடுக்க முடியாது. அதை புத்தியால் தடுக்க முடியாது. அது ஒருமுறை தொடங்கியதும் தொடர்ந்துக்கொண்டு இருக்கிறது. அதை உள்ளுணர்வால் தடுக்க முடியாது. துன்பங்களால் அதை தடுக்க முடியாது. எதிர்காலத்தில் இந்த அறை முழுவதும், நமது நந்திநாத பரம்பரை *சத்குருமார்களின்* படங்கள் நிறைந்து இருப்பதை, நம்மால் காணமுடிகிறது. மேலும் 2,200 ஆண்டுகள் கடந்து பார்க்கும் போது, *நாதர்கள்* வழியாக அதே ஆன்மீக *சக்தி*, சிவனின் *சக்தி* பாய்ந்து செல்வதை நம்மால் காண முடிகிறது. நாதர்கள் தாங்கள் மேற்கொள்ளும் சமயப்பணியில் தங்களை சுற்றியுள்ள சூழ்நிலைகளில் முன்னேற்றம் காண்பதற்கு, அவர்களுக்கு உதவியாக மேலும் பல நாதர்கள் பிறவி எடுப்பார்கள். மேலும் சிக்கலான சூழ்நிலை நிலவும் போது, இந்துயிசம் டுடே போன்ற பத்திரிகை மூலம் உலகிற்கு ஒரு ஆன்மீக சக்தியை வழங்க மேலும் நாதர்கள் தோன்றுவார்கள். எங்கள் நாதர் சமூகம் செய்யும் இந்த சமூக சேவை உலகில் இருக்கும் இந்துக்களை ஒன்றாக இணைத்து, உலக

இந்துக்களுக்கு சமயம் தொடர்பான கல்வியை வழங்குவதால், அவர்களால் ஒருமித்த கருத்தை ஒரு பொது அரங்கில் பேச முடிகிறது, மற்றும் *கர்மவினை, தர்மம்*, மறுபிறவி, *வேதங்கள்* மற்றும் *ஆகமங்கள்* மற்றும் நமது சர்வதேச பத்திரிகையில் நாம் வெளியிடும் அற்புதமான தகவல்களை ஒரே கண்ணோட்டத்துடன் காண முடிகிறது. இனி இந்துக்கள் தங்கள் மதம் மற்றும் அதில் இருக்கும் நான்கு முக்கிய பிரிவுகளை பற்றி நன்றாக அறிந்துகொண்டு சுதந்திரமாக பேச முடியும், மற்றும் ஆசியா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் இருக்கும் மற்ற இந்துக்களை புரிந்துக்கொண்டு, இந்துயிசம் டுடே பத்திரிகையில் ஒரு எளிமையான மற்றும் யதார்த்தமான முறையில் காட்சி அளிக்கும் அவர்களின் தலைசிறந்த மதத்தின் மீது அபிமானத்துடன் இருக்க முடிகிறது. இவை அனைத்தும் மறைஞான நந்திநாத பரம்பரையின் சமயப்பணி ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 329

இரும்பு போன்ற வலுவான

ஆன்மீகக் கட்டுகள்

நீங்கள் ஊக்கமிழந்து இருக்கும் நேரத்திலும், நீங்கள் சென்றுகொண்டு இருக்கும் பாதையை பற்றி சந்தேகத்துடன் இருக்கும் போதும் உங்களை பாதையில் நிலைநிறுத்த *சத்குரு*, கோயில் மற்றும் சாத்திரங்கள் என்று இந்து மதத்தின் மூன்று தூண்கள் இருக்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கோயிலுக்கு செல்லுங்கள், உங்கள் *குருவுடன்* உங்கள் உறவை வலுப்படுத்திக் கொள்ளுங்கள் மற்றும் சாத்திரங்களை படிக்கத் தொடங்குங்கள். இதன் மூலம் உங்களுக்குள் இருக்கும் ஊக்கமின்மை மறைந்து, புதிதாக ஊக்கம் பிறக்கும். இருண்ட காலங்கள் மறைந்து பிரகாசமான காலங்கள் காட்சி அளிக்கும். ஆன்மீக சக்தியில் இருந்து வெளிவரும் அறிவுணர்வுக்கு பிரச்சனைகள் தலை வணங்குகின்றன. இது அழகாக பேசுவதை தங்கள் வழக்கமாக கொள்ளாத மறைஞான நாதர்களின் பாதை ஆகும். ¶நாதர்களிடம் மிகைப்படுத்தும் பழக்கம் இல்லை. நாங்கள் எங்களைப் பற்றி தாரை தம்பட்டம் அடித்துக்கொள்ளவில்லை அல்லது ஒரு *மந்திரத்தை* விலைக்கு விற்பதில்லை அல்லது பணத்திற்காக ஒரு கருத்தரங்கு அல்லது ஒரு வாக்குறுதியை விற்பதில்லை. நாங்கள் நாங்களாக இருந்து, நாங்கள் செய்யவேண்டியதை செய்துக்கொண்டு இருக்கிறோம், மற்றும் ஒருவர் எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தால், அது அந்த சமயத்தில் நாங்கள் எதிர்கொள்ள வேண்டிய

கர்மவினையாக கருதுகிறோம். நாங்கள் எங்களிடம் இருக்கும் வசதிகளை வைத்து சிறப்பாக செயல்படுகிறோம். நாங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும் செய்முறைகளை விற்பனை செய்வது இல்லை. நாங்கள் வாக்குறுதிகளை விற்பனை செய்வது இல்லை. நாதர்கள் தங்கள் பணியை விரிவாக செய்யும் வேளையில், நுணுக்கமான தகவல் மீதும் கவனம் செலுத்துகின்றனர். ஆன்மீக சக்தியின் அந்த செய்முறை சிவ யோகசுவாமி, செல்லப்பகுரு, கடையிற்சுவாமி, மறைஞான ரிஷி மற்றும் அவருக்கு முன்பாக இருந்தவர்கள், திருமூலர் மற்றும் மகரிஷி நந்திநாதர் மற்றும் அவருக்கு முன்பாக இந்த பூமியில் மக்கள் நடக்க ஆரம்பித்த காலத்தில் முனிவர்களிடம் இருந்து வந்தது. ¶ஆம் *சத்குருமார்கள்*, சிவன் மற்றும் முருகன் மற்றும் விநாயகரின் கோயில்கள் மற்றும் உலகின் மிகவும் சாத்திரங்கள் என்று நமது பழம்பெரும் மதத்திற்கு மூன்று தூண்கள் உள்ளன. ஆனால் ஒருவரிடத்தில் மதம் புத்துயிர் பெறுவதற்கு, *சத்குருவின்* ஆன்மீக சக்தி மட்டுமே காரணமாக விளங்குகிறது. நான் யாழ்ப்பாணம் தீபகற்பத்திற்கு சென்று இருந்த போது, எனது குருவை காண முடியாமல், சில கோயில்களுக்கு சென்றுவிட்டு அமெரிக்கா திரும்பி இருந்தால், நாம் எல்லோரும் இங்கே அமர்ந்து இருப்போமா? முடியாது. நாம் எல்லோரும் இங்கே அமர்ந்து இருக்க வாய்ப்பில்லை. அவ்வகை ஆன்மீக சக்தியை கோயில்களால் வழங்க முடியாது. அவ்வகை ஆன்மீக சக்தியை சாத்திரங்களால் வழங்க முடியாது. உங்களுக்கு *சத்குருவால்* மட்டுமே வழங்க முடிந்த வலுவான ஆன்மீக சக்தின் மூலம், இந்த பூமியில் உங்கள் வாழ்க்கை பயன் பெற்று, வாழ்க்கை வழங்கும் சவால்களை எல்லாம் வெற்றிக்கொள்ளும் திறமை கிடைத்து, அதன் மூலம் உங்கள் வாழ்வில் மட்டும் இல்லாமல் மற்றவர்கள் வாழ்விலும் ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்த முடிகிறது. ¶தற்போது நாம் எல்லோரும் இந்து மதம் மற்றும் அதிலும் குறிப்பாக சைவ சமயத்தை இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டிற்குள் அழைத்து செல்வதற்கு இணைந்து செயல்பட்டு வருகிறோம். வருங்காலத்தில் நிறைய மாற்றங்கள் நிகழ இருப்பதால், நாம் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு, எல்லோரும் ஒன்றாக கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டிற்குள் பாரம்பரியத்தின் சிறப்பை தெளிவான சிந்தனை மற்றும் மிகவும் முக்கியமாக அதனோடு இயங்கும் மறைஞான சக்தியையும் கொண்டு வருவது நமது கடமை ஆகும். ¶"நான் *ஹட யோகா* செய்ய விரும்புகிறேன்! நான் காலையில் எழுந்து தியானம் செய்ய விரும்புகிறேன்!" என்று சொல்வது உற்சாக சக்தியை வெளிப்படுத்தும் ஒரு எளிய உதாரணம் ஆகும். "நான் *ஹட யோகா* செய்ய வேண்டும்! நான் இன்று செய்ய வேண்டுமா? இன்று மட்டும் காலையில் எழுந்து தியானம் செய்ய முடியாது," என்று சொல்வது உற்சாகமின்மையை குறிக்கிறது. அதை உள்ளுணர்வு மனம் பேசுகிறது. அவ்வாறு மெய்ஞ்ஞான மனம் பேசுவது இல்லை. "நான் அதை செய்ய விரும்புகிறேன்" என்று கூறுவது ஆன்மீக சக்தி ஆகும். "நான் அதை செய்ய வேண்டுமா?" அல்லது "நான் அதை செய்ய

வேண்டும்" என்று கூறுவது உள்ளுணர்வு-அறிவுணர்வு சக்தி ஆகும். ¶இங்கே இன்றைய கூட்டத்தில் அமர்ந்துகொண்டு நமது குருமார்களின் தனிச்சிறப்பு வாய்ந்த பரம்பரையை பற்றியும், அவர்கள் என்ன சொன்னார்கள் மற்றும் அவர்கள் எதை சொல்லவில்லை என்பதைப் பற்றியும் சிந்திக்கும் போது, அந்த பரம்பரையில் சிலர் கூறியது மற்றும் கூறாததைப் பற்றி நமக்கு முழுமையாக தெரியாது என்பதை தெரிந்துக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது தான் முக்கியம் ஆகும். அவர்கள் அதை எவ்வாறு செய்தார்கள்? ஆன்மீக சக்தியின் தொடர்ச்சி மூலம் ஒரு நூலுடன் இன்னொரு நூல், ஒரு இழையுடன் இன்னொரு இழையாக சேர்ந்து, மனிதர்களால் பிரிக்க முடியாத வலிமையுடன் இறுதியில் உருவாகும் கயிறு வாயிலாக, அதை செய்து முடித்தார்கள். பல தலைமுறைகளாக சேர்ந்த இரும்பு போன்ற வலுவான கட்டுகளால் தோன்றிய ஆன்மீக சக்தியின் பிரிக்க முடியாத கட்டுகள், நந்திநாதரின் வழியாக விளங்குகிறது. ¶பழங்காலத்திலும் இன்றும், ஒரு தீட்சை பெற்ற ஆன்மீக ஆலோசகர், ஒரு *குரு* அல்லது *பண்டிதரை* ஒரு குடும்பம் சேர்த்துக்கொள்ளும் போதே, அது நிறைவு பெறுகிறது என்பதை இந்து மதத்திற்கு புதிதாக வருபவர்கள், அதிலும் குறிப்பாக இளைஞர்கள் புரிந்துகொள்வது முக்கியம் ஆகும். குடும்பம் மகிழ்ச்சிகரமான நேரங்களில் அவரிடம் தான் செல்கிறது. *கர்மவினை* சுமை அதிகமாக இருந்து, அன்றாட வாழ்வில் இன்னல்கள் மற்றும் குழப்பங்களை சந்தித்து, தெளிவில்லாத சூழ்நிலை நிலவும் போதும், குடும்பம் அவரிடம் தான் செல்கிறது. ஒரு குடும்பம் ஒவ்வொரு வருடமும் பல மாற்றங்களை சந்திக்கும் போது, ஆலோசகரின் உறுதி மற்றும் தெளிவு ஒரு நிலைத்தன்மையை வழங்குகிறது. பெரும்பாலான இந்துக்களுக்கு ஒரு குடும்ப கோயில் முக்கியமாக தேவைப்படுகிறது. அதைப்போல புனிதமான நூல்கள் அல்லது சாத்திரங்களின் தொகுப்பு அவசியம் இருக்க வேண்டும். அதில் பெரும்பாலும் இன்றைய ஆசிரியர்கள் வழங்கிய போதனைகளுடன் இருப்பது அவசியம் ஆகும். ¶இந்து மதத் தலைவர்கள் உங்கள் சமூகத்திற்கு வரும் பொழுது, உங்களை சந்திக்க சாட்சாத்து இறைவனே வந்துள்ளதாக கருதி, உற்சாகமாக வரவேற்க வேண்டும் என்று எல்லோரிடமும் கேட்டுக்கொள்கிறோம். அவர்களை நோக்கி கைகளில் மாலையுடன் விரைந்து சென்று, அவர்கள் பாதங்களில் பணிவு மற்றும் மரியாதையுடன் பரிசுகளை வழங்குவது என்று ஒரு முறையான நெறிமுறையை பின்பற்றுங்கள். அவர்கள் நமக்கு பிடித்தமான சனாதன தர்மம் மற்றும் அதை பின்பற்றுபவர்களின் மையமாகவும், மாபெரும் சக்தி மற்றும் அனைத்து வெளிப்பாடுகளின் மூலமாக விளங்குகிறார்கள்.



சைவ மடவாசிகள்

ஆண் பிள்ளைகளின் மீதான ஆசை, செல்வத்தின் மீதான ஆசை, உலக சுகங்கள் மீதான ஆசைகளை துறந்த அவர்கள் பல ஆண்டுகளாக சுற்றித்திரிகிறார்கள். ஆண் பிள்ளைகளின் மீதான ஆசை செல்வத்தின் மீது ஆசையையும், செல்வத்தின் மீதான ஆசை உலக சுகங்களின் மீதான ஆசையையும் தூண்டுகிறது. இவை அனைத்தும் ஆசைகளே. இது அந்த பரமாத்துமா அல்ல, இது அந்த பரமாத்துமா அல்ல.

சுக்ல யஜுர் வேதம், பிரகதாரண்யக உபநிடதம், 4.4.22. வேஎ, ப. 717



ஐந்து சிறிய வரைபடங்கள் ஹவாய் தீவில் உள்ள கவாய் ஆதீனத்தில் சைவ மடவாசிகளின் வாழ்க்கையை சித்தரிக்கின்றன. குருதேவா *செய்யும் ஓமம் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள தியானம் மற்றும் வழிபாடு கலந்த வாழ்க்கை, கணினி வாயிலாக கலைவேலைகள் மற்றும் இணையதளத்தில் வேலை, தத்துவ கருத்தரங்குகள், புத்தக பிரசுரம் மற்றும் தோட்டவேலை மூலம் சமன் பெறுகின்றன.*

திங்கட்கிழமை

பாடம் 330

மடவாசிகளின்

சமூகம்

ஒவ்வொரு இந்து சமூகத்தின் துறவிகளும், கண்ணுக்கு தென்படாத சக்திகள் மூலம் வழிநடத்தப்பட்டு பாதுக்கக்கப்படுகிறார்கள். அந்த சக்திகள் அந்த துறவிகளை தங்கள் உயிரைப் போல நினைத்து அக்கறை செலுத்துகிறார்கள். *கிரகஸ்த* வாழ்க்கையால் என்றுமே வழங்க முடியாத, ஒரு மாபெரும் *தர்மத்தை* தங்களுக்கு பிறந்த மகன்கள் அனுட்டானம் செய்வதற்கு சம்மதம் தெரிவித்து ஆதரவு அளிக்கும் குடும்பங்கள் அருளாசியை பெறுகிறார்கள். உலகெங்கும் இருக்கும் மதங்களின் மடவாசிகள், இந்த பூமியின் புனிதத்தை நிலைநிறுத்துகிறார்கள். தாங்கள் மேற்கொண்ட விரதங்களை சிரத்தையுடன் கடைப்பிடிக்கும் துறவிகள், உலக சமூகங்கள் மற்றும் நாடுகளில் சட்டம் மற்றும் ஒழுங்கின் அதிர்வை வலுப்படுத்துகிறார்கள். இந்த கண்ணோட்டத்துடன் *தெய்வீக* உலகம், ஒவ்வொரு மடவாசி சமூகத்தையும் காண்கிறது. இது இந்த முறையில் இயங்கிக்கொண்டு இருக்கிறது மற்றும் எதிர்காலத்தில் எப்போதும் இந்த முறையில் இயங்க வேண்டும். இந்த முறையில் மனிதநேயம் தனது அனுபவப்பூர்வமான *கர்மவினைகளை* கரைத்து, தன்னை அழித்துக் கொள்ளாமல் அறியாமை இருள் சூழ்ந்த கலியுகம் வழியாக பயணம் செய்கிறது. இந்த பூமி எங்கும் பரவி தங்கள் *தர்மத்தை* நிறைவேற்றி வரும் மடவாசி சமூகங்கள், எங்கும் பரவியிருக்கும் *அதர்மத்திற்கு* ஈடு செய்து, இன்னல்கள் நிறைந்த இந்த காலகட்டத்தில் மனிதநேயம் தன்னை அழித்துக்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்கிறது. மடவாசி சமூகங்கள் என்பது ஆண்கள் மட்டும் அல்லது பெண்கள் மட்டும் வாழும் சமூகமாக இருக்கவேண்டும் என்று நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம். இருபாலினத்தாரும் கலந்த *ஆசிரமங்கள்* மடவாசி சமூகங்களாக இருப்பதில்லை, அவை வழக்கமாக மக்கள் கூடிவாழும் "கம்யுன்ஸ்" என்று வகைப்படுத்தப்படுகின்றன. ¶எங்களது *ஹோலி ஆர்டர்ஸ் ஆஃப் சந்நியாசா* புத்தகம் பின்வரும் பத்திகள் மூலம் மடவாசி வாழ்க்கையை அறிமுகப்படுத்துகிறது: “தனிநபரின் ஆன்மீக முன்னேற்றத்தை ஊக்குவித்து, அவருக்குள் இருக்கும் தெய்வீக பண்பின் மீது அவருக்கு விழிப்புணர்வை

ஏற்படுத்தி, மதத்தை பாதுகாத்து நிலைநிறுத்துவது ஆகிய இரண்டும் *சந்நியாசத்தின்* இரண்டு அடிப்படை குறிக்கோள்கள் ஆகும். தொடக்கத்தில் இருந்து சந்நியாசம் மற்றும் துறவறம் இந்து கலாச்சாரத்தின ஒரு முக்கிய அங்கமாக விளங்கி, சனாதன தர்மத்தில் அதிகம் போற்றப்பட்ட பாதையாக விளங்குகிறது. *சந்நியாச* வாழ்க்கைக்கு தனிநபர் அளவில் ஒரு குறிக்கோளும், பிரபஞ்ச அளவில் ஒரு குறிக்கோளும் உள்ளது. *சந்நியாசி* தனிப்பட்ட அளவில், தனது உணர்வு மற்றும் சக்திகளை முழுமையாக சிவபெருமானை நோக்கி இயக்கும் பொருட்டு, தனிப்பட்ட ஆசை மற்றும் லௌகீக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை முற்றிலும் துறந்து சுயநலமற்ற வாழ்க்கையை வாழ்கிறார். அவர் *சாதனா மார்கத்தில் சத்குரு* மூலம் வழிநடத்தப்பட்டு, ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து விரிவாக்கம் பெற்று அதிக ஆழமான உணர்தல்களை அடைகிறார். அவர் அதில் நிலைத்து இருந்தால், இறுதியில் யாவும் கடந்த பரம்பொருளாக இருக்கும் பரசிவத்தை நேரடியாக அறிகிறார். *சந்நியாசிகள்* பிரபஞ்ச அளவில், சனாதன தர்மத்தின் உண்மைகளை பாதுகாப்பதன் மூலம் இந்து மதம் முழுவதையும் வலுப்படுத்துகிறார்கள். நல்ல தகுதியுடன் இருக்கும் *சுவாமிகள்* தங்கள் வாழ்வில் ஆசிரியர்கள், இறையியல் வல்லுநர்கள், தங்கள் இறைநம்பிக்கைக்கு முன் உதாரணங்கள், எல்லோருக்கும் பாதையை தெளிவுபடுத்தும் வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள். "வஞ்சகம் ஏதும் அறியாத *சந்நியாசியாகிய* நீங்கள் பல்லாண்டு வாழ்க! நீங்கள் மாசற்ற *பஞ்சாட்சர மந்திரத்தின்* மைய கருத்தை தியானம் செய்து வழிபடவேண்டும். மற்றவர்களையும் தானாக கருதும் உங்களுக்கு நிகர் யாரேனும் உளரோ?" என்று பரமகுரு யோகசுவாமி பாடினார்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 331

சமயப்பணியின்

நோக்கம்

எங்கள் மடவாசி சமூகத்திற்கு துணையாக இருக்கும் *தேவர்கள் பரம்பரையின்* நற்பேறு, பெரியவர் மற்றும் சிறியவர் வரை, கண்ணுக்கு தெரியாமல் அமைதியாக வழிகாட்டல் மற்றும் பாதுகாப்பை வழங்கி வருகிறது. மடவாசிகள் சமூகத்தில் குறைந்தபட்சம் ஒருவர் தினமும் பரசிவ அனுபவத்தை பெறும் போது, இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து வளர்ச்சி பெற்று வரும் *தெய்வீக* சக்திகளின் பாரம்பரிய பரிவாரத்திற்கு மூன்றாவது லோகத்தின் கதவுகள் எப்போதும் திறந்து இருக்கின்றன. ஏனென்றால் மடவாசி சமூகத்தில் குறைந்தபட்சம் ஒருவர் தினமும் பரசிவ அனுபவத்தை பெறும் போது,

உச்சந்தலையில் இருக்கும் *பிரம்மரந்திர* திறந்தே இருக்கிறது. அந்த அனுபவம் வயதில் முதிய துறவிக்கு அல்லது வயதில் இளைய துறவிக்கு ஏற்படலாம். இந்த மாபெரும் உணர்தல் மடத்தில் இருக்கும் ஒருவருக்குள் தினமும் நடைபெறும் போது, மடவாசிகளின் *பிராண சக்ரவால* (பிராண மண்டலம்) முழுவதற்கும் *பிரம்மரந்திரத்தை* திறந்து வைத்து இருந்து, நமது *பரம்பரையின் குருமார்கள்* அனைவருடனும், அதே சித்திகளை பெற்ற மற்ற சாதுக்கள், *ரிஷிகள்* மற்றும் மகான்கள், மற்றும் அந்தர்லோகங்களின் ஆழத்தில் இருந்து நமது சமூகத்தை வழிநடத்தும் *சப்த ரிஷிகளுடன்* ஆன்மீக உறவை துடிப்புணர்வுடன் வலுவாக வைத்து இருக்கிறது. ¶எனது சைவ *சுவாமிகள்* அல்லது நாத *சுவாமிகள்*, காவி உடை அணிந்து, தங்கத்தில் செய்த நாத காதணிகள் மற்றும் மூன்று *ருத்ராட்ச* மணிமாலைகளை அணிந்து இருப்பார்கள். சைவ சித்தாந்த யோக சமூகத்தை சேர்ந்த அவர்கள், நமது சமயகுருமார்களின் கூட்டத்தில் ஒன்று சேரும் போது சைவ சுவாமி *சங்கம்* என்று அழைக்கப்படுகிறார்கள். அந்த *சங்கம்* ஒருமித்த கருத்துடன் முடிவு எடுக்க வேண்டும் என்ற நெறிமுறையை பின்பற்றுவது இல்லை. அதற்கு பதிலாக எங்கள் ஆன்மீக தலைமையின் இருப்பிடமாக விளங்கும் கைலாச பீடத்தில் இருந்து வரும் அறிவுறுத்தல்களை செயல்படுத்துவதற்கு, சைவ சமயப்பணி மற்றும் அதன் வெற்றிக்கு தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களை மேம்படுத்துவதற்கு, அந்த *சங்கம்* இயலுணர்வு கலந்த ஒருமனதுடன் செயல்படுகிறது. ¶இந்த *சந்நியாசிகள்* தனிநபர்களாக கருதப்படாமல், ஒன்று சேர்ந்து செயல்படும் ஒரு ஒருங்கிணைந்த மன்றமாகவும் சிவனடியார்களாகவும் கருதப்படுகிறார்கள். சைவ சுவாமி சங்கம் *சத்குருவின்* வழிகாட்டலுடன் நமது இந்து தேவாலய சமயகுருமார்களின் சங்கத்தை உருவாக்கி, ஆக்கப்பூர்வமான பதிப்புக்கள் மற்றும் ஊக்கமளிக்கும் மற்ற முறைகள் மூலம், அனைத்து பிரிவுகளை சேர்ந்த இந்துக்களுக்கு இருக்கும் இறைநம்பிக்கையின் புனிதத்தை பாதுகாக்க எளிமையான முறையில் செயல்படுகிறது. குறிப்பாக தமிழ் கலாச்சாரம், பாரம்பரியங்கள் மற்றும் தென்னிந்தியா மற்றும் இலங்கையின் சாத்திரங்களில் இருக்கும் சைவ இந்து சமயத்தை பேணிப் பாதுகாத்து ஊக்குவிப்பது, நமது சமூகத்தின் சமயப்பணி ஆகும். ¶நமது மடவாசி சமூகம் பின்பற்றும் அமைப்புமுறையில், மடவாசிகள் சமூகமாக வாழ்ந்து பொதுவான குறிக்கோள்களை நோக்கி இணைந்து செயல்படுகின்றனர். இந்த சமூகத்தை சேர்ந்த *சந்நியாசிகள்* அலைந்து திரியும் சாதுக்கள் அல்லது அமைதியாகவும் தனியாகவும் தாரணையில் இருக்கும் துறவிகளாக இல்லாமல், தங்களது *சத்குரு* மற்றும் மற்ற சக மடவாசிகளுடன் இணைந்து பெருமுயற்சிகளை மேற்கொள்ளும் ஒரு சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கின்றனர். *சந்நியாச* தீட்சையை பெறும் போது ஒவ்வொருவரும், சைவ சமயத்தை பாதுகாத்து நிலைநிறுத்துவது, உலகெங்கும் இருக்கும் இந்துக்களுக்கு சேவை செய்வது, சாத்திரம் மற்றும் மதம் தொடர்பான இலக்கியம் மற்றும் யதார்த்தமான

அறிவுறுத்தலை வழங்கி, அதை கற்பித்து மக்களிடம் பரப்புவது, கோயில் நிர்மாணத்திற்கு ஊக்கம் அளிப்பது மற்றும் நமது நந்திநாத சம்பிரதாயத்தின் மதிப்பு மற்றும் ஞான உபதேசத்திற்கு முன்மாதிரியாக திகழ்வது என்று கைலாச பரம்பரையின் நோக்கத்தை தனது நோக்கமாக ஏற்றுக்கொள்கிறார்கள். வாழ்நாள் முழுவதும் துறவறம், பணிவு, உடல் மற்றும் மனதின் தூய்மை, தன்னம்பிக்கை மற்றும் கீழ்ப்படிந்து நடக்க விரதம் மேற்கொண்டுள்ள இந்த *சந்நியாசிகள்*, சைவ கலாச்சார பக்திக்கு முன்மாதிரியாக இருந்து, இறைநம்பிக்கைக்கு வலுவாக ஆதரவு அளிக்கும் தங்களது பிரத்யேகமான பொறுப்பை பூர்த்தி செய்ய கடன்பட்டு இருக்கிறார்கள். ஒரு செழிப்பான, நிறைவான மற்றும் பயனுள்ள வாழ்க்கைக்கு வெளிப்புறமான சேவையாக இருக்கும் சிவத்தொண்டு மற்றும் உட்புற தாரணை-உணர்தலை குறிக்கும் சிவஞானத்தை சமன் செய்வது அவர்கள் இலட்சியம் ஆகும். ¶மஞ்சள் நிற ஆடை அணிந்த *தபஸ்விகள்* மற்றும் தாங்கள் மேற்கொண்டுள்ள பணிவு, உடல் மற்றும் மனதின் தூய்மை, தன்னம்பிக்கை மற்றும் கீழ்ப்படிந்து நடக்கும் விரதத்தை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்துக்கொண்டு வெள்ளை ஆடையை அணியும் *சாதகர்கள்* என்று எங்கள் மடங்களில் மேலும் இரண்டு துறவிக்குழுக்கள் இருக்கிறார்கள்.

புதன்கிழமை

பாடம் 332

துறவிகள்

சமூகம்

சந்நியாசம் என்பது தனிப்பட்ட சொத்து, செல்வம், ஆசைகள், சமூக அந்தஸ்து மற்றும் குடும்ப உறவுகள் உட்பட கிரகஸ்த தர்மத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிரந்தரமாக துறந்து, தெய்வீக விழிப்புணர்வு மற்றும் ஆத்ம ஞானம் மற்றும் மனிதநேயம் ஆன்மீக முன்னேற்றம் பெறுவதற்காக தனது கவனத்தை முழுநேரமும் துறவற வாழ்க்கைக்கு அர்ப்பணித்தவர்களின் வாழ்க்கை, வழிமுறை மற்றும் பாரம்பரியங்களை குறிக்கிறது. எங்கள் சமூகத்தில் இந்த *தர்மம்* வழக்கமாக, சில கடுமையான விதிமுறைகளை பூர்த்தி செய்கிற இருபத்தி ஐந்து வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கு வழங்கப்படுகிறது. அதிக சலுகைகளை வழங்கும் சில சமூகங்கள், இருபத்தி ஐந்து வயதிற்கு பிறகும் சில ஆண்களை ஏற்றுக்கொள்கின்றன. தனக்கென்று ஒரு வீடு இல்லாமல் தனியாக வாழும் துறவிகளுக்கு, அதிக சலுகை வழங்கப்படுகிறது. மனைவியை இழந்தவர்கள், தீட்சை பெற்ற சில பெண்களை சில *சந்நியாச* சமூகங்கள் ஏற்றுக்கொள்கிறது என்றாலும், லௌகீக வாழ்க்கையை துறந்து தனியாக வாழ விரும்பும் பெண்கள் *சந்நியாசம்* மேற்கொள்ளாமல்,

எளிமையான *பிரம்மச்சரிய* விரதங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று இந்து மதம் பரிந்துரைக்கிறது. ¶மரபு சாரா இந்து சமூகங்களில் துறவறம் மேற்கொள்ளும் பெண்கள் வெள்ளை நிற புடவையை அணிகிறார்கள். பெண்கள் காவி நிற ஆடைகளை அணிவது புத்தம் புதிய பாணியாக விளங்குகிறது. இந்த புதிய பாணி நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்காது என்று எனது பல வருட அனுபவ அறிவு தெரிவிக்கிறது. லௌகீக வாழ்க்கையை விட்டு விலகி சிறந்த ஆன்மாக்களாகவும் குருமார்களாகவும் வாழ்ந்து, மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற பெண்கள் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து வந்தனர். இந்த வழக்கம் பல மறைஞான காரணங்களுக்காக அன்றும் இன்றும் என்றும் ஒரு பொதுவான வழக்கமாக விளங்கவிருக்கிறது. ¶மாணவப் பருவம் (*பிரம்மச்சரியம்*), குடும்ப உறுப்பினர் அல்லது தலைவர் (*கிரகஸ்த*) மற்றும் மூத்த ஆலோசகர் (*வானபிரஸ்தம்*) என்ற வாழ்க்கையின் முதல் மூன்று நிலைகளை கடந்து, எழுபத்தி இரண்டு வயதை கடந்த குடும்பஸ்தர் இயல்பாக *சந்நியாச ஆசிரமத்திற்குள்* நுழைகிறார். இந்த நான்காவது நிலையானது ஒருவர் தனது அகத்தில் கவனம் செலுத்துவதோடு வழிபாடு, தன்உளஆய்வு, சாத்திரம் கேட்டல் மற்றும் தியானத்தின் மீது தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதை குறிக்கிறது. குடும்பத்தில் இருக்கும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வீட்டில் ஒரு புண்ணியாகவாசனம் செய்து, இந்த நான்காவது நிலையை சம்பிரதாய முறைப்படி அங்கீகாரம் வழங்கலாம் என்றாலும், அது ஒரு *சந்நியாச தீட்சையாக* அல்லது ஒரு துறவற தீட்சையாக கருதப்படுவது இல்லை. வாழ்க்கையில் நான்காவது நிலை தொடங்கியதும் பாரம்பரியங்கள் மாறுபட்டு இருந்தாலும், அந்த நிலையில் சகோதரன் சகோதரியாக இருக்கும் வயதான கணவன் மற்றும் மனைவி, தங்களது தியானம் மற்றும் வழிபாட்டிற்கு தனிப்பட்ட குடியிருப்புக்களை விரும்பினாலும், அவர்கள் குடும்ப உறவுகளை தொடர்ந்து தக்க வைத்து, இறை வழிபாட்டில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ¶தனது மனைவியை இழந்து, தனது குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி, தானும் எழுபத்தி இரண்டு வயதை கடந்திருக்கும் ஆண், தனது சொந்தங்கள் மத்தியில் வாழாமல், முழுமையாக யாசக வாழ்க்கையை வாழ்ந்து, உண்மையான துறவற வாழ்க்கையில் தனது ஆன்மீக *சாதனாவில்* சிரத்தையுடன் கவனம் செலுத்துகிறார். "சிவனை நேசிக்கும் திருமணமாகாத ஆண்கள் மற்றும் மனைவியை இழந்தவர்கள், எழுபத்தி இரண்டு வயதிற்கு பிறகு, தங்கள் சமூகத்துடன் உறவுகளை எல்லாம் துண்டித்துக்கொண்டு, தீட்சையை பெறாமல் இந்தியாவின் புனிதமான துறவிகளுடன் சுயமாக *சந்நியாசி* என்று அறிவித்து உலக வாழ்க்கையை துறந்து வாழலாம்," என்று சந்நியாசத்தை பற்றி *சூத்திரம்* 210 குறிப்பிடுகிறது. கிரஹஸ்த தர்மத்திற்குள் நுழையாமல் *சந்நியாசம்* பெற்றவருக்கு கிடைக்கும் அங்கீகாரம், முன்பு திருமணம் செய்து கொண்ட *சந்நியாசிகளுக்கு* வழங்கப்படுவது இல்லை. ¶இவ்வாறு சிலர் சந்நியாசம்

மேற்கொண்டாலும், உலகை துறக்கும் நோக்குடன் ஒரு குடும்பஸ்தர் தன் மனைவி மற்றும் குழந்தைகளை புறக்கணிப்பது *தர்மம்* ஆகாது. விவாகரத்து பெற்ற அல்லது தனது முன்னாள் வாழ்க்கைத்துணை வாழ்ந்துகொண்டு இருக்க, எழுத்து இரண்டு வயதை கடந்த ஒரு நபர், தன்னை *சந்நியாசி* என்று அறிவித்துக் கொள்வதும் பாரம்பரியம் இல்லை. ஒரு வாழ்நாள் பொறுப்பாக விளங்கும் திருமணத்தை செய்துகொண்ட பிறகு, அதை ரத்து செய்யக்கூடாது.

வியாழக்கிழமை

பாடம் 333

கட்டுப்பாட்டுடன் இருக்கும்

தலைமை

துறவிகள் இந்து மதத் தலைவர்களாக இருக்கிறார்கள். இறைநம்பிக்கை நிலைத்து நிற்பதற்கு, இந்த உன்னதமான துறவற பாரம்பரியம் தொடர்வது முக்கியம் ஆகும். அதனால் ஒரு சிறுவன் துறவியாக விருப்பம் தெரிவிக்கும் போது, அந்த ஈடுபாட்டை பெற்றோர்கள் நிராகரிக்காமல், அவனை வலுவாக ஊக்குவிக்க கிடைக்கும் எந்த வாய்ப்பையும் நழுவ விடக்கூடாது. மகன் *சந்நியாசம்* மேற்கொள்ளும் போது, அந்த குடும்பம் அருளாசியை பெறுகிறது. துறவற வாழ்க்கையில் தங்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை தெரிவிக்கும் மகன்களுக்கு ஒவ்வொரு தந்தையும் சிறந்த *யோகிகள்* மற்றும் *சுவாமிகளின்* வாழ்க்கைகளைப் பற்றி கற்றுத்தந்து, அதன் மூலம் *சந்நியாசத்தை* பற்றி அவர்கள் மேலும் பல தகவல்களை தெரிந்துகொள்வதற்கு வழிகாட்டியாக விளங்குவதோடு *தியானம், ஹட யோகம்* மற்றும் உடல் மற்றும் மனதின் தூய்மை பற்றிய கலைகளில் அவர்களுக்கு ஊக்கம் அளித்து, அவர்கள் *வேதங்கள்* படிக்கவும் ஆய்வு செய்யவும் துணையாக இருந்து, வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்களை *சத்குரு* மற்றும் *சுவாமிகளின் தரிசனம்* மற்றும் உபதேசங்களை பெறுவதற்கு அழைத்தும் வரவேண்டும். அவர்கள் துறவறத்திற்கு என்று விதிக்கப்பட்ட தங்கள் சொந்த குழந்தையை தனது மகனாக கருதாமல், தங்களது பாதுகாப்பில் இருக்கும் *சத்குருவின்* ஆன்மீக சந்ததியாக கருதுகின்றனர். அவனது எதிர்கால துறவற வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு தேவையான திறமைகள் மற்றும் பண்புகளை அவனிடம் வளர்ப்பதற்கு, பெற்றோர்கள் அவனுக்கு வழங்கவேண்டிய பயிற்சிகளைப் பற்றி *சத்குருவுடன்* ஆலோசித்து வருகின்றனர். பக்தி மற்றும் சிரத்தை அதிகமாக இருக்கும் குடும்பங்கள், மடத்திற்கு வழங்கவேண்டும் என்று ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுக்கிறார்கள். அவர்கள் கருத்தரிப்பதற்கு முன்பாக சுவாமிகளுடன் ஆலோசித்து, தங்களுக்கு புனிதமான பரம்பரையை

நிலைநிறுத்தும் திறமையுள்ள ஆன்மாவை வழங்கவேண்டும் என்று மகாதேவர்களிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். ¶ஒரு *பிரம்மச்சாரி* துறவற வாழ்க்கைக்குள் செல்வதற்கான விரதங்களை எடுத்துக் கொண்டதும், அவர் மிகவும் விசேஷமான வாழ்க்கையை வாழும் ஒரு மிகவும் விசேஷமான நபராக மாறிவிடுகிறார். அவனுடைய குடும்பம் உட்பட எல்லோரும் அவனை ஒரு மகானாக கருத வேண்டும். அவன் தனது குடும்பம் மற்றும் முன்னாள் நண்பர்களிடம் இருந்து விலகி இருக்கிறான். பெற்றோர்கள் தங்கள் மகனை சந்திக்கும் போது, அவன் தேர்ந்தெடுத்த பாதைக்கு மதிப்பு அளித்து, அவன் கவனத்திற்கு குடும்ப பிரச்சனைகளை கொண்டு வருவது இல்லை. அவனை திருமணங்கள், விவாகரத்து, வியாதி, மரணம் மற்றும் அதைப்போன்ற மற்ற குடும்ப நிகழ்வுகளில் இருந்து விலக்கி வைக்கிறார்கள். அவர்கள் தங்கள் மகன் கற்கும் விஷயங்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவதோடு, உயர்ந்த தத்துவ விஷயங்களை பற்றி அவனிடம் பேச வேண்டும். ¶ஒழுக்கம் நிரம்பிய வாழ்க்கை சுலபமாக இருக்காது என்றாலும், அது மகிழ்ச்சி நிரம்பியதாகவும், ஆன்மாவிற்கு திருப்தி அளிக்கும் பல வெகுமதிகளுடனும் அமைந்து இருக்கும். துறவிகள் தங்கள் இருபத்தி நான்கு மணி நேர நெறிமுறையை தங்கள் கனவுகளிலும் பின்பற்றுகிறார்கள். இந்த சேவையை செய்வதற்காக பிறவி எடுத்தவர்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் மற்றும் அவர்களின் கவனத்தை குடும்ப ஈடுபாடுகள் மற்றும் முன்னாள் நண்பர்களின் ஆசைகள் மூலம் திசை திருப்பக்கூடாது. அவர்களின் அர்ப்பணிப்பு உறுதியாக இருக்கிறது என்பதையும், அவர்களின் சக்திகள் பாதுகாப்பாக இருக்கிறது என்பதையும், அவர்களின் விசுவாசம் நன்றாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதி செய்ய, அவர்களை ஆரம்ப காலத்தில் சோதிக்க வேண்டும். இந்த காலகட்டத்தில வழக்கமாக அவர்களுக்குள் ஆசைகளை தூண்டிவிட்டு, அவர்கள் துறவறம் மேற்கொள்ள முடிவு செய்ததற்கான சரியான காரணத்தை கொண்டு வருவதற்கு, குடும்பம் மற்றும் சொந்தங்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஆனால் அவர்கள் மஞ்சள் அல்லது வெள்ளை நிற ஆடைகளுடன் கழுத்தில் ருத்ராட்ச மாலைகளை அணிந்து கொண்டதும், அவர்களின் பாதை தெளிவாகிறது மற்றும் புதிய நெறிமுறையை இரு தரப்பும் உறுதியாக கடைப்பிடிக்க வேண்டும். உறவுகள் அனைத்தும் மாறிவிடுகின்றன. ¶*பிரம்மச்சரியத்தின்* சக்தி துறவிகளுக்கு அதிக காந்தத்தன்மையை வழங்கி, அவர்கள் சேவை செய்யும் கோயில்களுக்கும் ஆற்றலை வழங்குகிறது. அதனால் கோயில்களுக்கு வரும் பக்தர்களுடன் தன்னை அதிகம் ஈடுபடுத்திக் கொள்ளாமல், அவர்களிடம் இருந்து விலகி இருப்பதில் துறவிகள் கவனம் செலுத்த வேண்டும். அதனால் நற்பண்புகள் உள்ள பக்தர்கள் துறவிகளுடன் உடல், உணர்ச்சி மற்றும் சூட்சும ரீதியாகவும் இடைவெளியை பராமரித்து, தங்கள் கனவுகளிலும் அந்த துறவிகளின் நட்புறவை தவிர்த்து, மரியாதையுடன் விலகி இருப்பார்கள். ஒரு துறவி தேர்ந்தெடுத்த பாதையில் இருந்து, அவரது கவனத்தை சிதற வைக்கும் சம்பவம்

எதுவும் அவர் கவனத்தை பெறக்கூடாது. அந்த துறவியின் வாழ்க்கையில் அவரது பெற்றோர்களின் தலையீடு சிறிதும் இருக்கக்கூடாது. சனாதன தர்மத்திற்கு சுயநலமற்ற சேவை செய்யும் அந்த துறவியின் வாழ்க்கைக்கு, அவர் துறந்த உலக வாழ்க்கையை அவரது பெற்றோர்களும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 334

சந்நியாசத்தின்

உன்னத இலட்சியங்கள்

"என்னிடம் தற்போது இருக்கும் அனைத்தையும், தற்போது நானாக இருக்கும் என்னையும் இறைவன், மகாதேவர்கள் மற்றும் எனது *குருவிற்கு* வழங்குகிறேன். கைலாசத்தில் வாசம் செய்யும் எனது தெய்வீக தந்தையான சிவபெருமான் மற்றும் தெய்வீக அன்னையான சக்திதேவி மற்றும் பூலோகத்தில் இருக்கும் சைவ பக்தர்களைத் தவிர எனக்கு குடும்பம் என்று யாரும் இல்லை," என்று சைவ *சந்நியாசி* தனது *தீட்சையின்* போது தெரிவிக்கிறார். இது *சுவாமிக்கு* மட்டும் அல்லாமல், மடவாசிகள் அனைவருக்கும் உன்னத இலட்சியமாக விளங்குகிறது. அதனால் ஒவ்வொரு மடவாசியும் தனது இரத்த சம்பந்தங்களில் இருந்து தனித்து இருக்கவேண்டி உள்ளது. இந்த அணுகுமுறை துறவி தன் சொந்தங்களை "என் தந்தை," "என் சகோதரன்," "என் தாய்" என்று குறிப்பிடாமல் திரு. சிவநேசன் என்று அவர்களின் தனிப்பட்ட பெயர்களை வைத்து அழைக்கும் நெறிமுறையில் பிரதிபலிக்கிறது. இந்த பிரியமான பற்றின்மை, கிரகஸ்த சமூகத்தில் இருந்து பற்றில்லாமல் அன்புடன் இருக்கும் அணுகுமுறையை குறிக்கிறது. இது முன்னாள் நண்பர்கள் உட்பட கூட்டு அல்லது பெரிய குடும்பத்திடம் பற்றின்றி இருந்து, தனது *குருவை* தாய்-தந்தையாகவும் சக மடவாசிகளை குடும்பமாகவும், *ஆதீன தெய்வங்களை* நெருங்கிய சொந்தங்களாகவும், மகாதேவர்களை சற்று தூரத்து சொந்தங்களாகவும் கருதுவதை குறிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் இந்த துறவற அணுகுமுறையை மதிப்பு அளிக்க கற்றுக் கொள்கிறது. எங்கள் சமூகத்தில் இருக்கும் மடவாசிகள் அனைவரும் துறவற பாதையில் இருப்பதால், இது *சந்நியாசிகள்* மற்றும் சமயப்பணியில் சேர விருப்பம் உள்ளவருக்கு துறவற வாழ்க்கையின் சாரமாக விளங்குகிறது. சிலர் *சந்நியாச தீட்சையை* பெற்று இருக்கிறார்கள் மற்றும் மற்றவர்கள் அந்த *தீட்சையை* பெறும் நோக்குடன், சுயநலமற்ற சேவை மற்றும் தனக்குள் இருக்கும் தெய்வீக பண்பை உணரவேண்டும் என்ற ஒற்றை நோக்குடன் உலக வாழ்க்கையை துறந்து இருக்கிறார்கள். இளமையாகவும் வளைந்துக்கொடுக்கும் பண்புடன் இருக்கும்

போது பயிற்சி வழங்கப்படவேண்டும் என்பதால், இருபத்தி ஐந்து வயதை கடந்த அன்பர்களை மடவாசி வாழ்க்கைக்கு நான் ஏற்றுக்கொள்வது இல்லை. ¶ஒரு மகன் *சந்நியாச* வாழ்க்கையை மேற்கொள்வது, அந்த குடும்பத்திற்கு மாபெரும் புண்ணியத்தை தேடித் தருகிறது என்று எல்லோரும் நினைவில் வைத்து இருக்கவேண்டும். ஆனால் இத்துடன் ஒரு விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும். எதிர்காலத்தில் துறவற வாழ்க்கையை மேற்கொள்ள இருக்கும் ஒரு இளைஞனுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டாலும், அவனுக்குள் பரசிவத்தின் முடிவான மற்றும் யாவும் கடந்த உணர்தலை பெறவேண்டும் என்ற தீவிர ஆசை இருக்கவேண்டும். சுயநலமற்ற சேவை செய்யவேண்டும் என்றும் துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்ற *வைராக்கியமும்*, அவன் மனதில் நிறைந்து இருக்கவேண்டும். அவன் தனது பெற்றோர்கள் விரும்பும் உன்னதமான *சந்நியாசத்தை* பெறுவதற்கு, அவனுக்கு *பிராரப்த கர்மவினைகள்* அனுமதி அளிக்க வேண்டும். *சந்நியாசம்* மேற்கொள்வது என்பது ஒருவர் தனது குடும்ப வீட்டில் இருந்து ஒரு மடத்திற்கு செல்வது போன்று ஒரு சாதாரண விஷயம் இல்லை. இதற்கு பல்வேறு சோதனைகளை எதிர்கொண்டு அதில் வெற்றி பெறவேண்டும். அந்த மடவாசி சமூகத்தினர் அனைவருக்கும் அந்த இளைஞனின் நேர்மை மீது நம்பிக்கை பிறக்கவேண்டும் மற்றும் அவனது இருப்பு அவர்களுக்கு பலம் சேர்ப்பதாக இருக்கவேண்டும். அத்தகைய எதிர்கால *சந்நியாசிகள்* தீவிரமாக கண்காணிக்கப்படுகிறார்கள் மற்றும் "எனது சொத்து, எனது இடம், என் வேலை, என் வளர்ச்சி மற்றும் என்னுடைய தனிப்பட்ட கடமைகள்" என்று உரிமைகோரும் *கிரகஸ்த* தூண்டுதல்களில் இருந்து அவர்கள் தங்களை விலக்கிக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களிடம் உண்மையான *சந்நியாச* பண்புகள் சோதிக்கப்படுகின்றன மற்றும் அவர்களின் வளைந்து கொடுக்கும் பண்பு, மனதில் ஆத்திரங்கள் ஏதும் இல்லாமல் அந்தஸ்து மற்றும் வேலை பாதுகாப்பு மீது இருக்கும் பற்றை உடனடியாக துறக்கும் திறமை, தேவைக்கு ஏற்ப சாட்சியை வெளிப்படையாக மனதின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு எளிதில் விடுவிக்கும் பண்பு ஆகியவை அவ்வப்போது சோதிக்கப்படுகின்றன. ¶அன்றாட வாழ்வில் ஒரு மடவாசி தனது *குருவிற்கு* எவ்வாறு சேவை செய்கிறார்? அவர் எப்போதும் திறந்த மனதுடன் இருக்கவேண்டும். இதில் முதல் கட்டமாக, இளம் சாதகனின் பெற்றோர்கள், "இனி உனக்கு தாய் மற்றும் தந்தையாக உனது குரு விளங்குவார். இனி நீ அவருடன் வசிக்க வேண்டும்," என்று அவனிடம் கூறி, அவனை அனுப்பி வைப்பார்கள். அதன் பிறகு அந்த இளைஞன் தனது குருவை தாய் தந்தையாக கருதி, தனது பெற்றோர்களை பற்றி நினைக்காமல் இருக்க வேண்டும். இதைத்தான் அந்த பெற்றோர்களும் எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் பெற்றெடுத்த மகன் எதிர்காலத்தில் ஒரு ஆன்மீகவாதியாக விளங்கி, மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவான் என்பதை நினைத்து அவர்கள் உற்சாகம் அடைகிறார்கள். இதில் அடுத்த கட்டம், மகனின் பொறுப்பாக விளங்குகிறது.

மகன் *ஆசிரமத்தில்* வாழும் போது, தன் மனதில் *குருவை* மட்டும் நினைத்துக்கொண்டு இருக்கிறான். அவனுக்கு வேறு யாரும் தென்படுவது இல்லை. அவன் மற்றவர்களை பார்க்க ஆரம்பித்து, அவர்களிடம் குற்றங்களை கண்டுபிடிப்பது மற்றும் ஒருவர் மீது அதிகம் அன்பு செலுத்துவது என்று தொடங்கும் போது அதனுடன் பிரச்சனையும் தோன்றுகிறது. அதற்கு பதிலாக, அவன் மற்றவர்களுடன் சேர்ந்து வேலை செய்தாலும், அவன் தன் மனதில் *குரு* தனக்கு வழங்கிய பணியை மட்டுமே நினைத்துக் கொண்டு இருக்கிறான். எல்லோரையும் சமமாக மதிக்கும் அவன், அன்பாக பிரியமான பற்றின்மையுடன் இருக்கிறான். அவன் எந்த பணிக்கும் சலுகை வழங்காமல், ஒவ்வொரு கடமையையும் முழுமனதுடன் நிறைவேற்றுகிறான். ஒரு வேளை மடவாசி வாழ்க்கை சீராக இயங்கவில்லை என்றால், அவன் தனது திறமைகளை மேம்படுத்திக் கொள்ள, தனக்கு கிடைத்த வசதியை ஒரு வர்த்தக பள்ளி போல பயன்படுத்துவது இல்லை. இறுதியில் *குருவின்* பார்வை அவன் மீது விழும் போது, அவனது மூன்றாவது நிலை தொடங்குகிறது. *சத்குரு* அவன் செய்வதற்கு பிரத்யேகமான சிறிய வேலைகளை தருகிறார், மற்றும் அவன் அவற்றை வெற்றிகரமாக செய்து முடித்ததும், அவர் அவனுக்கு வழிகாட்டியாக விளங்கி அவனது மனஉறுதியை வலுப்படுத்ததி, அவனுக்கு அதிக கடினமான பெரிய பணிகளை வழங்குகிறார். அவன் ஒவ்வொரு நிலையிலும் தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ளும் பொது, அவன் வாழ்க்கை விரிவாக்கம் பெற்று, அவனது சேவை மற்றும் முயற்சியில் அவனுடைய தெய்வீகத் தன்மை வெளிப்படுகிறது.

சனிக்கிழமை

பாடம் 335

பழமையான ஆன்மாக்களின்

பாதை

இந்த பூமியில் இருக்கும் மக்களில் மூன்றில் இரண்டு பங்கு ஆன்மீக ஞானஒளிகளாக விளங்கி, அவர்களது மனதில் முறையான சிந்தனை, முறையான வாக்கு மற்றும் முறையான செயல் பற்றிய *தர்மத்தை* பரப்பவேண்டும் என்ற சிந்தனை மட்டுமே இருந்தால், நாம் சிவனோடு வாழும் உலகம் அற்புதமான இருக்கும் அல்லவா? அப்போது அது உண்மையில் ஒரு சர்வதேச கிராமமாக, ஒரு பாதுகாப்பான மற்றும் அற்புதமான இடமாக விளங்கும். ஆனால் இளம் ஆன்மாக்கள் அதிகம் வாசம் செய்யும் இந்த *யுகத்தில்* இதற்கு வாய்ப்பில்லை. குத்துச்சண்டை, சிறிய கோடாரி, கசையடி மற்றும் மனதை புண்படுத்தும் கடுமையான வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தி,

அவர்கள் தங்களுக்குள் ஒழுங்குமுறையை பராமரிக்கிறார்கள். இந்த முறையால், அவர்கள் இன்னொரு பிறவியில் அனுபவிப்பதற்கு அதிக *கர்மவினைகளை* சேர்த்துக் கொள்கிறார்கள். அந்த இளம் ஆன்மாக்கள் புதிய *கர்மவினையை* உருவாக்கவில்லை என்றால், அவர்களுக்கு மறுபிறவி இருக்காது மற்றும் அவர்களால் பழமையான ஆன்மாக்களாக முதிர்ச்சி பெறமுடியாது என்பதால் இந்த *கர்மவினை* சேகரிப்பு பொருத்தமானதாக தோன்றுகிறது. இளம் ஆன்மாக்கள் முன்னேறி செல்வதற்கு தீர்வு காணப்படாமல் இருக்கும் சோக நிகழ்வுகள், துன்புறுத்தல்கள், அச்சங்கள், வாக்குவாதங்கள் காரணமாக விளங்குகின்றன. அவர்கள் தான் செய்த தவறுகளில் இருந்தும், தங்கள் அனுபவங்களில் இருந்தும் மெதுவாக கற்கிறார்கள், மற்றும் அவர்கள் எப்போதும் தங்களுக்கு நடந்த அனுபவங்களுக்கு மற்றவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள். இதுவும் மேற்கூறிய பெரும்பாலான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, நாம் நடுத்தர நிலையில் இருக்கும் ஆன்மா மற்றும் நிரூபணம் செய்யப்படாத ஆன்மாவை ஒரு பழமையான ஆன்மாவில் இருந்து பிரித்து பார்க்க முடிகிறது. ¶நடுத்தர நிலையில் இருக்கும் ஆன்மாக்கள் தங்கள் மனவெழுச்சிகளுடன் போராடி, தங்களையும் மற்றவர்களையும் துன்புறுத்துகின்றனர். அவர்களுக்கு தவறான கருத்து எதிரியாக இல்லாமல், புதிய கண்டுபிடிப்புக்களின் ஆசிரியர் எதிரியாக இருக்கிறார். அவர்களின் தேடல் என்றுமே முடிவுப்பெறுவது இல்லை. என்றுமே முடிவு பெறாத அவர்களின் தேடல், என்றுமே முடிவை அடைய முடியாத தேடலாக இருக்கிறது. இளம் ஆன்மாக்களைப் போல அல்லாமல், அவர்களின் ஆசைகள் நன்றாக வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. இளம் ஆன்மாக்களைப் போல அல்லாமல், சிறிது வளர்ச்சி பெற்று இருக்கும் அவர்களின் பகுத்தறியும் முறை, முனைப்புடன் இல்லை என்றாலும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அவர்களுக்கு மதம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாக இருக்கிறது. அவர்கள் இளம் ஆன்மாக்களைப் போல தங்களுக்கு புறியாததை, கண்மூடித்தனமாக நம்புவது இல்லை. ஏன், எப்படி மற்றும் எதிர்காலத்தில் என்ன நடக்கவிருக்கிறது என்பதைப் பற்றி போதுமான காரணங்களுடன் அவர்களை திருப்திப்படுத்த வேண்டும். ஆத்திரம், மன்னிக்காத பண்பு மற்றும் மறக்காத பண்புடன், வாழ்க்கை முழுவதும் கடந்த காலத்தை சுமந்து செல்லக்கூடாது என்பதை நடுத்தர நிலையில் இருக்கும் ஆன்மாக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஒரு பாடம் மட்டுமே அவர்களை பழமையான ஆன்மாக்களில் இருந்து வேற்படுத்தி காட்டுகிறது. ஆனால் அவர்கள் உதவி மற்றும் ஆறுதலை வேண்டி, உதவிக்கரங்களை நாடி, தோளில் சாய்ந்து தாங்கள் அனுபவித்த சுமைகளை சொல்வதற்கு பழமையான ஆன்மாக்களை நாடுகிறார்கள். ¶இளம் வயதில் சந்நியாசம் மேற்கொண்டு, துறவற வாழ்க்கையின் ஒழுக்கங்கள் மற்றும் இலக்குகளை பூர்த்தி செய்வது பழமையான ஆன்மாக்களுக்கு பொருத்தமாக இருக்கும். மன்னிக்கும் பண்புடைய இந்த புத்திசாலி சக்திகள்,

இளம் ஆன்மாக்களாக இருந்த போது தங்களுக்கு ஏற்பட்ட கடந்தகால நினைவுகளை சார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் நடுத்தர நிலையில் இருக்கும் ஆன்மாக்களாக இருக்கும் போது தங்கள் கடந்த கால நினைவுகளை சார்ந்து இருக்கிறார்கள். ஒவ்வொரு கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால நிகழ்வு மற்றும் சம்பவத்தை முழுமையாக ஆய்வு செய்வதற்கு, அவர்கள் தங்கள் மெய்ஞ்ஞான திறமைகளை சார்ந்து இருக்கிறார்கள். அவர்களின் அக வாழ்க்கை மற்றும் புற வாழ்க்கையை சமன் செய்வது, அவர்கள் எதிர்கொள்ளும் மிகமுக்கிய சோதனையாக விளங்குகிறது. அதனால் அவர்கள் உலகை துறக்கிறார்கள், மற்றும் அவர்கள் உலகை துறக்கும் போது, அவர்கள் துறந்த உலகம் அவரை துறக்கிறது. அவர்களிடம் மனித பண்பு, முயற்சி செய்யும் பண்பு, தெளிவான விளக்கத்தை நாடும் பண்பு நிலைத்து இருக்கிறது. ஆனால் அவர்களிடம் அவர்களது சிறிய சுயத்தின் உணர்வு, நான் என்ற எண்ணம் இருப்பது இல்லை. "நான் மற்றும் எனது" என்ற எண்ணம் மறைந்து "எங்களுடையது மற்றும் நம்முடையது" என்ற எண்ணம் குடிக்கொள்கிறது. ¶சந்நியாசம் மேற்கொள்ள பழமையான ஆன்மாக்கள் அனைவரும் தயாராக இருப்பதில்லை என்றாலும், அவ்வாறு தயாராக இருக்கும் வெகு சிலர் விசேஷமான பண்புகளை கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பரம்பரை மீது விசுவாசமாக இருப்பது மற்றும் தங்கள் விருப்புறுதி மீது அன்பை செலுத்துவது ஆகியவை மிகவும் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். அதாவது அவர்கள் வெளியுலகில் மாற்றங்களை ஏற்படுத்துகிறார்கள், ஆனால் அவர்கள் அதற்காக வெகுமதி அல்லது அங்கீகாரத்தை கோருவது இல்லை. பாராட்டு வரவில்லை என்றால், அவர்கள் வருந்துவது இல்லை. அவர்கள் தீங்கை விளைவிக்காமல் நன்மையை செய்து தொடர்ந்து இயங்கும் ஊக்கமளிக்கும் சக்தி, வெளிப்புற ஆணவத்தை அழித்து மற்றவர்களுக்கு நன்மதிப்பை வழங்கி தொடர்ந்து இயங்கும் ஆன்மீக சக்தியாக விளங்கும் அவர்களின் ஆன்மீக பண்பின் தொடர் தூண்டுதல் மூலம் இயங்குகிறார்கள். எதிர்காலம் மீது கவனம் செலுத்தி, அதற்கு முன்னேற்பாடுகளை செய்து, மற்றவர்களை அதற்குள் வழிநடத்தி செல்லும் ஆக்கப்பூர்வமான திறமையை வளர்க்க, அவர்கள் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். ¶இளம் ஆன்மாக்கள் தங்களுக்குள் இரண்டற கலக்கிறார்கள். நடுத்தர நிலையில் இருக்கும் ஆன்மாக்கள் தங்கள் பணிகளுடன் இரண்டற கலந்து, புதிய தகவல்களை கற்றுக்கொண்டு, மனம் மற்றும் புத்தியுடன் இரண்டற கலக்கிறார்கள். பழமையான ஆன்மாக்கள் மனதை கடந்து இருக்கும் பரம்பொருளை நாடி, பரமாத்துமா மற்றும் மற்ற ஆன்மீக விஷயங்களுடன் இரண்டற கலக்கிறார்கள். அவர்களை ஒரு சுத்தமான மற்றும் கிட்டத்தட்ட ஒரு நிறைவான வாழ்க்கை வரவேற்கிறது. சிவபெருமானிடம் *ஜீவனின்* வலுவான ஐக்கியம் என்பது வார இறுதியில் நடைபெறும் ஒரு கருத்தரங்கு அல்லது *யோகம்* கற்பிக்கும் வகுப்பின் மூலம் எளிதில் அடையப்படுவது இல்லை என்பதை அவர்கள் இயலுணர்வுடன் அறிந்து

இருக்கிறார்கள். அதனால் அவர்கள் மேலும் முன்னேறி துறவறம் மேற்கொண்டு, நான்கு *வேதங்களை* மனப்பாடம் செய்து ஒப்பிக்காமல், பழங்கால *ரிஷிகளைப்* போல அவற்றை பின்பற்றி வாழ, அந்த நான்கு வேதங்கள் வழங்கும் உன்னத குறிக்கோள்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இது இந்திய பாரம்பரியத்தின் துறவி அல்லது *சந்நியாச* பாதைக்கு அழைத்து செல்கிறது. ¶முறையாக உலகை துறப்பது உங்கள் *தர்மம்* இல்லை என்றாலும், மகான்கள் எதை நாடி வாழ்ந்தார்கள் மற்றும் வாழ்க்கையை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதை தெரிந்துகொள்வதன் மூலம் நீங்கள் உங்கள் தேடலுக்கு நல்ல பலனை வழங்கிக்கொள்வீர்கள். அவர்கள் வழங்கிய எடுத்துக்காட்டை பின்பற்றுவதற்கு, நீங்கள் உங்கள் நடுத்தர வயதில் வழிகளை தேடிக்கொள்ள முடியும். ¶இந்து மதத்தின் பாரம்பரிய சமூகங்களை சேர்ந்த சந்நியாசிகள், சாதுக்கள் மற்றும் பெயர் தெரியாத எண்ணற்ற யாசகர்கள் தங்களுக்குள் உருவாக்கிய ஆன்மீக, சமூக, கலாச்சார அமைப்பானது அவர்கள் சேவை செய்த நாட்டில் முற்றுகை மற்றும் உயிர்க்கொல்லி நோய் போன்றவற்றை தாக்கு பிடித்துள்ளது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஆனால் அகத்தில் இருக்கும் மூன்று மில்லியன் போராளிகள் தங்கள் கீழ்நிலை ஆன்மாவின் முற்றுகை, தங்கள் சொந்த மனம் ஏற்படுத்திய கொடிய நோய்களை கடந்து உயர்ந்துள்ளார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த *சிவனோடு வாழ்தல்* புத்தகம் கொண்டுள்ள விவேகத்தை படித்து புரிந்துக்கொண்டதும், அது மிகப்பெரிய வெற்றிகளை பெறுவதற்கும், உள்ளுணர்வு-அறிவுணர்வு மனம் மற்றும் அதில் உள்ளடங்கி இருக்கும் அம்சங்களின் மீது வெற்றிபெறுவதற்கும் தேவையான அறிவாக விளங்குகிறது. மேலும் பல தகவல்களுடன் ஞாயிற்றுக்கிழமை பாடம் "சந்நியாசி கீதம்" என்ற பாடலின் மூலம் மிகவும் சிறப்பாக விசாரம் செய்யப்பட்டுள்ளது. உணர்ச்சியை தூண்டும் இந்த கவிதையை ஸ்ரீலஸ்ரீ சுவாமி விவேகானந்த மகாராஜ் (1863-1902), ஜூலை 1885, நியூயார்கில் இருக்கும் தவ்சண்டு ஐலந்து பார்க்கில் இயற்றினார். இந்த கவிதையை பின்பற்றி வாழ்ந்து, உங்கள் வாழ்கையில் இந்த உன்னத குறிக்கோள்களை அடைய முயற்சி செய்யவேண்டும் என்று நான் எனது மடவாசி சீடர்களுக்கு அறிவுறுத்துகிறேன். சாதனா மார்கத்தில் நம்பிக்கையுடன் முன்னேறுவதன் மூலம் சிவபெருமானுடன் திருநடனம் ஆடுவது, வாழ்வது மற்றும் ஐக்கியமாவது உறுதி பெறுகிறது என்று இந்த புத்தகத்தை படிக்கும் வாசகர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது தான் சரியான வழி ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 336

சந்நியாசி கீதம்

எழுக வலிமிகு வீரத் துறவி
இனிய சுரத்தில் அமிழ்ந்த்திடு!
பனித்த மலைக்குகை கறுத்த வனத்திடை
யாவும் அதனில் பிறப்பது.
காசும் காமமும் பேரும் புகழும்
அந்த அமைதியைக் குலைக்குமோ?
உலகின் வெகு தொலை புவனத் தளைகள்
யாவும் அதனை எட்டுமோ?
அறிவு மெய்யெனும் இரண்டும் சேர்ந்தொரு
ஆனந்த நதி பாய்ந்திடும்
உயர்ந்த சுரத்தினை உருதிரத்துடன்
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

நிலைத்த உறுதிகொள் வீரத் துறவி
கீழ்மைத் தளைகளைத் தகர்த்திடு!
மின்னும் பொன்னோ கரிய இரும்போ
தளைகள் தளைகளே என்றறி!
நன்மை-தீமை, அன்பு-வெறுப்பு
இருமை யாவும் கட்டுக்கள்!
அன்பு புரிகினும் அடித்து நொறுக்கினும்
அடிமை அடிமையே வேறில்லை
தங்கத் தளையது வாயினும் அது
பிணைக்கும் வலிவில் குறைவில்லை
உடைத்து ஏறியதை உருதிரத்துடன்
வீர சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

கொள்ளி வாய்ப்பேய் சிமிட்டி ஒளிர்ந்து
அடர்ந்த காரிருள் சேர்த்திடும்
அடைய இயலா இலக்கது அந்த
அடரும் இருளை விலக்கிடு!
பிறந்து இரத்தத்தாலும் இறந்து பிறத்தலும்
ஆசையாலே விளைவது
நிறைவு அற்ற இதனை ஒழிப்பின்
கொடிய இருள் மாய்ந் தோடிடும்
தன்னை வெற்றி கொள்பவனே
அனைத்தும் வெற்றி கொள்கிறான்
இதனை அறிந்துஇணங்கிடாது

முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

வினை விதைத்தவன் அதையறுப்பான்
நன்மை விதைத்தவன் நன்மையும்
தீது விதைத்தவன் தீதறுப்பான்
யாரும் விதி விலக்கில்லையே!
எங்கு காரணம் என்று உளதோ
அங்கு காரியம் உள்ளது
உருவெடுப்பவன் தளை புனைவான்
விதியின் லீலை நிச்சயம்
பொன்னும் பெயரும் கடந்து நிற்பது
என்றும் சுதந்திர ஆன்மமே
அதுவே நீயென உணர்ந்தறிந்து
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

தந்தை தாயென மழலை மனைவி
நண்பன் என்றென நினைப்பவர்
வெற்றுக் கனவுகள் காண்பவர் அவர்
அறுதி உண்மையை அறிகிலர்
பாலெனும் ஒரு பகுப்பு இல்லா
ஆத்மன் யாருக்குத் தந்தை தாய்
நண்பன் யாரோ? பகைவன் யாரோ?
யாரின் குழந்தை யாவது?
நீக்கமறவே நிறைந்த ஆன்மா
அன்றி வேறொன் றிங்கில்லை
தத்வமசி என உணர்ந்தறிந்து
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

யாவும் அறிந்த ஆத்மன் என்பது
ஏகமாய் எங்கும் நிறைந்தது
பெயரில்லாதது உருவில்லாதது
களங்கமற்றது ஒன்றதே!
ஆத்மனுள் திகழ் மாயையே இந்த
மாறும் கனவுகள் காண்பது
ஆட்சியாய் இந்த சீவனாய் ஒரு

சாட்சியாய்அது நிற்பது
அந்தத் தூய பொருளே நீயெனும்
அனுபவத்தை அடைந்திடு
அதுவே நீயென உணர்ந்தறிந்தபின்
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

எங்கு எங்கோ தேடுகிறாய்
உற்ற சுதந்திரம் தன்னையே
இந்த உலகம் ஈந்திடாது
நண்பனே இதைக் கேட்டறி
கற்ற நூலிலும் இறைவன் மனையிலும்
தேடுதல் அது வீண்செயல்
உன்னை மாய்க்கும் பாசக் கயிற்றைப்
பற்றி உள்ளது உன் கரம்.
பிடியை உதறித் தள்ளிடு நீ
புலம்பும் துயரை ஒழித்திடு
பற்றை நீக்கி உருத்திரத்துடன்
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

மங்களம் இனி எங்கும் என்று
யாண்டும் நீ பறைசாற்றிடு
தீமை என்னால் உயிருக்கில்லை
என்று உலகிற்க் குணர்த்திடு
உயர்ந்தவிடத்தும் தாழ்ந்தவிடத்தும்
மேவியுள்ள ஆத்மன் நான்
இம்மை, மறுமை, சொர்கம், நரகம்,
ஆர்வம், அச்சம் அனைத்தையும்
உழலும் உலகம் விடுத்து யாவும்
துறந்து பாரில் நின்றிடு
பந்த பாசத்தை வெட்டி எறிந்து
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

வீழினும் உடல் வாழினும் அதை
மதித்திடாதிரு துறவியே!
தேகப் பணியும் முடிந்தது அதைக்

கர்ம வெள்ளம் இயக்கட்டும்
ஒருவர் மாலை சூட்டட்டும் இன்
னொருவர் உடலை உதைக்கட்டும்
புகழ்பவர் புகழப்படுபவர்
இகழ்பவர் இகழப்படுபவர்
அனைத்தும் ஒன்றே உன்னை அவை
தீண்டிடாது என்றறி
மனதில் பூரண அமைதி கொண்டு
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

எங்கு காமமும் பெயரும் புகழும்
ஆசை நினைவுகள் உள்ளதோ
உண்மை ஞான ஒளியின் கிரணம்
அங்கு விழுவது இல்லையே!
பெண்ணை மனைவி என்னும் எண்ணம்
பூரணத்தைக் குலைத்திடும்
சொற்பப் பொருளும் அற்பக் கோபமும்
மாயக் கதவை மூடிடும்
மாயக் கதவை உடைத்திடு நீ
நேய ஆத்மனை அடைந்திடு
தூய மனதுடன் உருத்திரத்துடன்
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

வீடு உனக்கு இல்லை நண்பா
எந்த வீடுன்னைத் தாங்கிடும்?
வானமே உன் கூரையாகும்
கோரைப் புல்லே மெத்தையாம்
நன்று தீதென ருசித்திடாமல்
கிடைத்த உணவை உண்டிடு
தன்னைத் தானே அறியும் ஆத்மனை
அன்ன பானம் என்செயும்?
உருண்டு ஓடும் தூய நதிபோல்
திரண்டு விடுதலை பெற்றிடு
வெற்றி நமதே என்று எங்கும்
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

உண்மைப் பொருளை சிலரே அறிவர்
மற்றவர்கள் தூற்றுவர்
எள்ளி நகைப்பர் ஆயினும் அதை
செவிமடுக்கா திருந்திடு
என்றும் சுதந்திரனாயிரு பலர்
மாயைத் திரையை அறுத்திடு
துன்பம் கண்டு அஞ்சிடாமலும்
இன்பம் தன்னைத் தேடிடாமலும்
இருமை இவைகளை விடுத்து நீயும்
கடந்து மேலே சென்றிடு
உருத்திரத்துடன் ஆன்ம பலத்தை
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

கருமத் தளைகள் முழுமையாக
நீங்கும் வரையில் உழைத்திடு
முயற்சி மூலம் ஆத்மனுக்கு
சுதந்திரத்தை அளித்திடு
பிறவி இல்லை மனிதம் இல்லை
தெய்வம் என்றொன்றில்லையே
நீயும் இல்லை நானும் இல்லை
ஆத்மன் ஒன்றே நிலைப்பது
எங்கும் நானே நானே எங்கும்
என்ற உண்மையை உணர்ந்திடு
அந்த ஆனந்த நிலையை அடைந்து
முழங்கு சந்நியாசி!

“ஓம் தத் ஸத் ஓம்!”

இன்சுபைர்ட் டாக்ஸ், மை மாஸ்டர் அண்டு அதர் ரைட்டிங்ஸ் கட்டுரைகளில் இருந்து, சுவாமி விவேகானந்தர் அவர்களால் எழுதப்பட்ட “சாங் ஆஃப் சந்நியாசின்" கவிதைக்கு எழுத்துச் வடிவ ஒப்புதலுடன் இங்கே மேற்கோள் செய்யப்பட்டுள்ளது; சுவாமி விவேகானந்தரின் சொத்துக்களின் அறங்காவலராக இருக்கும் சுவாமி நிகிலானந்தா மூலம் பதிப்புரிமை 1958 செய்யப்பட்டுள்ளது; நியூ யார்க்கின் ராமகிருஷ்ணா-விவேகானந்தா மையத்தால் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

சைவ சம்பிரதாய சிக்ஷனம்

शैव संप्रदाय शिक्षणम्



நமது சைவ சம்பிரதாயத்தை கற்றுத் தருதல்

ஊடுநூல் மற்றும் பாவு நூலை பயன்படுத்தும் நெசவுத் தொழில் பற்றி எங்களுக்குத் தெரியாது. தொடர்ந்து அசராது முயற்சி செய்து தயாரிக்கப்படும் ஆடைகளைப் பற்றியும் எங்களுத் தெரியாது. இக லோகத்தில் வாழும் தந்தை வழங்கும் உபதேசத்தை கேட்டு வளர்ந்த மகன், மற்ற லோகத்து விஷயங்களை எவ்வாறு சிறப்பான முறையில் விளக்க முடியும்?

ரிக் வேதம் 6.9.2. வேஎ, ப. 331-332


YAMAS
1. Noninjury
2. Truthfulness
3. Nonstealing
4. Divine conduct
5. Patience
6. Steadfastness
7. Compassion
8. Honesty
9. Moderate appetite
10. Purity
NIYAMAS
1. Remorse
2. Contentment
3. Giving
4. Faith
5. Worship
6. Scriptural Listening
7. Cognition
8. Sacred vows
9. Recitation
10. Austerity
Sri Ganesha

அடுத்த தலைமுறைக்கு நமது பாரம்பரியத்தைப் பற்றி கற்றுத்தருவது, நமது கடமை ஆகும். இங்கே படத்தில் ஒரு ஆரம்பப் பள்ளியில் பாடம் நடத்தும் ஆசிரியை, பழங்கால தத்துவத்தை பற்றி விளக்கிக்கொண்டு இருக்கிறாள். நாம் நல்ல மனிதர்களாகவும் உயர்ந்த சிந்தனையுடைய இந்துக்களாகவும் இருப்பதற்கு, நாம் கடைப்பிடிக்க வேண்டிய இந்துமதத்தின இயமம் மற்றும் நியமங்களை, அந்த ஆசிரியை ஒரு கரும்பலகையில் எழுதி இருக்கிறாள். இதன் பின்னணியில், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றும் வன்முறை காட்சிகளை பார்க்கக்கூடாது என்று ஒரு சகோதரி தனது சகோதரனிடம் வற்புறுத்துகிறாள்.

திங்கட்கிழமை

பாடம் 337

கல்வி கற்பிக்கும்

கருவிகள்

நமது இந்து சமூகங்கள் உட்பட, மத ஈடுபாடு இருக்கும் சமூகங்களில் கல்வி ஒரு முக்கிய பிரச்சனையாக விளங்குகிறது. உலகெங்கும் தங்கள் பாரம்பரியங்களுக்கு மதிப்பு அளிப்பவர்கள், இதைப்பற்றிய கவலையில் இருக்கின்றனர். தங்கள் குழந்தைகள் பல்வேறு பாரம்பரியங்களில் இருக்கும் அபூர்வமான விஷயங்களை கிரகிக்காமல், இன்னொரு கலாச்சாரம் அல்லது கலாச்சாரம் இல்லாத ஒன்றை கற்பதை, அந்த பெற்றோர்களால் தெளிவாக காண முடிகிறது. "நாம் நமது பாரம்பரிய பண்புகளை அவர்களுக்கு எவ்வாறு கற்றுக்கொடுத்து? அந்த பாரம்பரியத்தை நாம் எப்படி தக்க வைப்பது?" என்று பாரம்பரிய பண்புகளைப் பற்றி கவலையுடன் பெரியோர்கள், தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆன்மீக தலைவர்கள் இருக்கிறார்கள். ¶இதற்கு எல்லா நிலைகளிலும் இளைஞர்களை ஈடுபடுத்துவது ஒரு நல்ல தீர்வாக இருக்கும் என்று சுவாமிநாராயண் சம்பிரதாயம் கண்டறிந்துள்ளனர். அவர்கள் கலாச்சார வரையறைக்குள் தங்கள் மதத்தை பின்பற்றி வாழ்வதை அறிந்து இருந்தார்கள். குழந்தைகளை அரசு பள்ளிகளுக்கு அனுப்புவதை தவிர்த்து, வீட்டில் பள்ளி பாடங்களை நடத்தும் அமைப்புக்களை சில குடும்பங்கள் தேடுகிறார்கள். இதற்கு இந்தியாவும் தீர்வு காணும் நோக்கத்துடன், மேற்கத்திய அறிவு மற்றும் கிழக்கத்திய விவேகத்தை உள்ளடக்கிய ஒரு சமநிலையை பெறுவதற்கு முயற்சி செய்து வருகிறது. இந்த கடினமான இலக்கு, இந்தியாவில் மேலும் 250 மில்லியன் பள்ளி சிறுவர்களை சென்று அடையவேண்டி உள்ளது. சிறுவர்களுக்கான பல புத்தகங்கள் மற்றும் கல்வி வழங்கும் மற்ற கருவிகள் வன்முறையை சார்ந்து இருப்பதால், அவர்களுக்கு அதிக பயனுள்ள இந்து இலக்கியத்தை வழங்குவது மேலும் கடினமாக விளங்குகிறது. ஒரு இறைவன் ஒரு அரக்கனை கொள்ளும் போதும், கோபமுற்ற முனிவர் ஒரு தீய சக்தியை சபித்து அழிப்பதை பலர் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அத்தகைய கதைகள் இளம் உள்ளங்களுக்கு

பொருந்தாது என்று நான் கருதுகிறேன். இன்று மற்றவர் மனதிற்கு வேதனை அளிக்கும் பண்பு பல பிரச்சனைகளுக்கு எளிய மற்றும் யதார்த்தமான தீர்வாக கருதப்படுவதால், வன்முறையை ஒரு நல்ல செயலாக அல்லது ஒரு புனிதமான செயலாக வெளிப்படுத்துவது, இன்றைய சமூகத்தில் பிரச்சனைகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய இளைஞர்கள் படிக்கும் கல்வி தொடர்பான பல பிரச்சனைகளை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் பல பெற்றோர்கள் குழம்பி இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு தீர்வாக தங்கள் குழந்தைகளை உணவகத்துடன் கூடிய போர்டிங் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். இது எந்த வகையிலும் நல்ல தீர்வு இல்லை. ¶இன்று உலகில் இருக்கும் சைவர்கள் அனைவரும், அடுத்த தலைமுறைக்கு சைவ சமயத்தை கற்றுக்கொடுக்கும் நோக்குடன் இணைந்துள்ளனர். அவர்கள் சிவபெருமான் பற்றிய தகவல், விநாயகர் பற்றிய தகவல், முருகப்பெருமான் மற்றும் *தேவ* லோகங்கள் பற்றிய தகவல், சிவபெருமான் தனது *ஆகாச* வடிவில் வருகை தந்து பக்தர்களுக்கு ஆசிகளை வழங்கும் ஆற்றல்மிக்க பழமையான கோயில்கள் பற்றிய தகவலை தங்கள் குழந்தைகளுக்கு வழங்கி, அவர்களின் மனங்களை பாதுகாத்து, அவர்களின் மனங்களை நிரப்பி, அவர்களின் மனங்களில் ஊடுருவி கல்வியை கற்பிக்கிறார்கள். ¶மதம் எங்கே பாதுகாக்கப்படுகிறது? அது எதிர்கால பயன்பாட்டிற்கு குழந்தைகளின் மனங்களில் பாதுகாக்கப்பட்டு, நமது இளைஞர்களின் மூளை அணுக்களில் பதிவாகின்றன. நாம் நமது குழந்தைகளுக்கு சைவ தர்மத்தை கற்றுத் தரவேண்டும். இதற்காக நாம் பல சைவ வகுப்புக்கள் மற்றும் சைவ பள்ளிகளை நடத்த வேண்டும் மற்றும் அதிகமான சைவ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தங்கள் சமயத்தைப் பற்றி கற்றுத்தருவதற்கு முன்வரவேண்டும். நாம் இதை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு செய்ய கடன்பட்டு இருக்கிறோம். உங்களை அறிவை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்கள் சைவ இந்து சமயத்தை பின்பற்றுவதற்கு, அவர்கள் மனதில் ஒரு உறுதியான மற்றும் யதார்த்தமான அணுகுமுறை பதிவதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள். அதன் பிறகு அவர்கள் நினைவுகளை பயன்படுத்தி தங்கள் *கர்மவினை* மற்றும் *தர்மத்தை* கட்டுப்படுத்தும் போது, அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் விவேகமான முறையில் பதிகின்றன. ¶பழங்காலத்தில் சைவ சமய அரசர்களாக விளங்கிய *மகராஜாக்கள்*, தங்கள் சமயத்திற்கு பொறுப்பாளிகளாக விளங்கினார்கள். புரோகிதர்கள் தங்கள் கடமைகளை முறையாக செய்வதை, புதிய பண்டிதர்கள் சேர்க்கப்படுவதை, கோயில்களை நிர்மாணித்து அவற்றை பராமரிப்பதை, தங்கள் நாடு முழுவதும் செழிப்பாக இருந்து மக்கள் மனங்களில் நிறைந்து இருப்பதை, அந்த அரசர்கள் கவனித்துக் கொண்டார்கள். தங்கள் மந்திரிகள் மற்றும் மற்ற தலைவர்களுடன் தனது இராச்சியத்திற்கு தலைவராக விளங்கிய அரசர்களுக்கு, இந்த பொறுப்புக்கள் அவர்களின் சத்திரிய குல தர்மமாக விளங்கின. சைவ அரசர்களின் ஆட்சி கவிழ்ந்ததும், அந்த சாதி அமைப்பு

முழுவதும் போரில் ஈடுபட வேண்டியிருந்தது. அதன் பிறகு பல நூற்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில், இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் கணினிகளும் இயந்திரங்களும் அதிக பளுவான வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன, சாதி என்பது பிறப்பு அடிப்படையில் இல்லாமல் சொந்த விருப்பத்தை அடிப்படையாக கொண்டுள்ளது, சைவ சமய காவலர்களாக விளங்கிய அரசர்களின் பொறுப்பை தற்போது சாதாரண ஆண்களும் பெண்களும் கவனித்துக் கொள்கிறார்கள்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 338

முதல்

24 வருடங்கள்

இன்று மக்களுக்காக சைவ தர்மத்தை காப்பாற்றும் *மகாராஜாக்கள்* இல்லை, அதனால் மக்கள் தாங்களே அந்த அரசர்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு உள்ளனர். அவர்கள் ஒன்றாக இணைந்து சாத்திரங்களை பாதுகாத்து அவற்றை பிரசுரம் செய்யும் வேலைகளில் ஈடுபடவேண்டும். அவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து, மூதாதையர்கள் பெற்ற அறிவை பாதுகாத்து பரப்புவதற்கு, சைவ பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை நிறுவ வேண்டும். இன்று பிறக்கும் சைவ ஆன்மாக்கள் முழுமையான சைவ சமயத்தை பின்பற்றி வளர்வதற்கு, சைவ வீட்டில் பிறப்பதோடு நின்றுவிடாமல், இன்றைய காலகட்டத்தில் அவர்களுக்கு தங்கள் சமயம் பற்றிய கல்வி மற்றும் பயிற்சியின் தேவை மிகவும் முக்கியமாக தேவைப்படுகிறது. ¶சைவ சமயத்தை பாதுகாக்க நாம் மேற்கொள்ளும் முயற்சிகளின் அங்கமாக, அந்த சைவ சமயத்தை அடுத்த தலைமுறைக்கு கற்றுத் தருவது ஒரு முக்கிய கடமையாக விளங்குகிறது. இதை நாம் எவ்வாறு செய்வது? இந்த நோக்கத்தை பாரம்பரிய *குருகுலங்களைப்* போல, இருபத்தி நான்கு வயது வரை நமது இளைஞர்களின் மனங்களை, நமக்கு நெருக்கமாக கட்டுபாட்டில் வைத்து இருந்து, விரிவான மற்றும் ஒரு குறிப்பிட்ட அறிவின் மீதும் நமது தலைசிறந்த மதத்தின் மிகவும் அற்புதமான கருத்துக்களின் மீதும் அவர்களின் கவனத்தை பெறுவதன் மூலம் அடையமுடிகிறது. குழந்தைகள் பெற்றோர்களிடம் பயிற்சி பெற்று, பள்ளியில் கல்வி கற்று சமூகத்திற்கு நல்ல பொறுப்புள்ள குடிமகன்களாகும் *பிரம்மச்சரிய ஆசிரமத்தில்* இருக்கும் போது, *குடும்ப மார்கத்தில்* இருக்கிறார்கள் என்று சொல்லலாம். இருபத்தி நான்கு வயதிற்கு பிறகு அவர்கள் சவால்கள் நிறைந்த உலகத்தை நன்றாக சமாளிப்பார்கள் என்ற நம்பிக்கையுடனும், *கர்மவினைகளின்* தாக்கம் வலுவாக இருக்கும் போது அல்லது அந்நிய சக்திகள்

தடைகளை ஏற்படுத்தும் போது, அவர்களின் மதம் அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கி வலுப்படுத்தும் என்று நம்பிக்கையுடனும், அவர்களை விடுவிக்கலாம். ¶முந்தைய தலைமுறையை சேர்ந்த நாம் நமது பாதைகளில் முன்னேறிக் கொண்டு இருக்கிறோம். பல வருடங்களுக்கு முன்பு, ஆரம்பகால கருத்துக்கள் நமது மனங்களில் பதிந்து தாக்கத்தை ஏற்படுத்திய போது, நமது வழக்கங்கள் அமைந்து விட்டன. நம்மால் தொடர்ந்து படிக்கவும் கல்வி கற்கவும் முடிந்தாலும், நமது வளர்ச்சிக்குரிய பருவம் பெரும்பாலும் கடந்தகாலமாகவே இருக்கிறது. நாம் உலகை விட்டு சென்ற பிறகு குழந்தைகள் மட்டுமே இங்கே உயிர் வாழப்போவதால், நாம் இனி அவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாம் பெற்ற நல்ல அற்றும் தீய அனுபவங்கள் மூலம் அவர்கள் பயன்பெறுவதற்கு, நாம் சில பாதைகளை உருவாக்கலாம். இதை நாம் செய்வதற்கு, அவர்கள் வேற்று மதம் அல்லது நம்பிக்கையை எதிர்கொள்வதற்கு முன்பாக, அவர்கள் தங்களது இயல்பான பன்னிரண்டு வருட சுழற்சிகளை இரண்டு முறை அனுபவிக்கும் போது, நாம் அவர்கள் மனங்களில் சைவ சமயத்தின் நுணுக்கங்களை பதிய வைக்க வேண்டும். நாம் அதை செய்த பிறகு நமது கடமை நிறைவு பெறுகிறது மற்றும் நமது குழந்தைகள் மற்றும் நமது குழந்தைகளின் குழந்தைகள் மூலம் நிலைநிறுத்தப்படும் சைவ சமயம், எதிர்காலத்திலும் அடுத்து வரக்கூடிய புதிய யுகத்திலும் செழிப்பாக இருக்கும் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். ¶ஆனால் இந்த முக்கிய கடமையை சைவர்கள் அனைவரும் செய்வதில்லை என்பதை தைரியமாக சொல்ல வேண்டியுள்ளது. வழக்கம் போல் பெற்றோர்கள் முதல் குருமார்களாக இருக்காமல், அவர்கள் தங்கள் குழந்தைகளை வீட்டில் இருந்து தொலைவில் இருக்கும் பள்ளிக்கு எந்தவித கண்காணிப்பும் இல்லாமல் அனுப்பி, அவர்களுக்கு உலகை *குருவாக* நியமிக்கிறார்கள். அதன் பிறகு அந்த குழந்தை இயல்பாக தனது சொந்த ஆளுமையின் பாதையாக விளங்கும், *ஆணவ மார்கத்தை* பின்பற்ற தொடங்கி, "முதல் நிலையில்" இருக்க முயற்சி செய்துக்கொண்டு இருக்கிறது. ¶நாம் இதன் மீது கவனம் செலுத்தாமல் ஒரு தலைமுறையை தவறவிட்டால், நமது மதம் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நமது மதத்தை ஒரு தலைமுறை புறக்கணித்தால், அதுவே அதன் அழிவுக்கு காரணமாகி விடும். நான் இந்த தகவலை, 1981 ஆம் ஆண்டு நான் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்ட போது 300,000 க்கும் அதிகமான அன்பர்களுக்கு வழங்கினேன். அன்று மக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த முக்கியமான தகவல், இன்றும் பயனுள்ளதாக விளங்குகிறது. இந்துக்கள் தங்கள் குழந்தைகளை பல வருடங்களாக கத்தோலிக்க பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள் என்பதை நான் தெளிவாக குறிப்பிட்டேன். இந்திய மற்றும் இலங்கை மற்றும் மற்ற நாடெங்கும், கத்தோலிக்க அமைப்புகள் சிறப்பான முறையில் கல்வி நிறுவனங்களை நடத்துவதாலும், தங்கள் குழந்தைகள் சிறந்த கல்வியை பெறவேண்டும் என்று

விரும்புவதாலும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அந்த பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். அந்த பள்ளிகளில் குழந்தைகளுக்கு நல்ல ஒழுக்கமும் கல்வியும் கிடைக்கிறது என்றாலும், அந்த கல்வி இளம் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை தங்கள் மதத்தில் கொண்டு வருவதற்காகவும் கிறித்துவ வாழ்முறை, கிறித்துவ இறைவன் மற்றும் இரட்சிப்பு பற்றிய கண்ணோட்டம், கிறித்துவ நம்பிக்கைகளுக்கு அவர்களை இணங்க செய்யுமாறும் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு கத்தோலிக்க கல்விமுறை ஆகும். ¶இந்து பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கிறித்துவ மிஷனரி பள்ளிகள் அல்லது தங்கள் மதத்தின் அடையாள சின்னங்கள் மூலம் மிகவும் நுணுக்கமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் மற்ற மதங்களை சார்ந்த பள்ளிகள் அல்லது இந்து கலாச்சாரம், நம்பிக்கைகள், உடை அல்லது சின்னங்களைப் பற்றி இந்து குழந்தைகளை கடுமையாக இகழ்ந்து பேசும் சமயப்பணியாளர்களிடமும் அனுப்பக்கூடாது. இந்த பள்ளிகள் குழந்தைகளின் அடிமனங்களில் தீய விளைவுகளை ஏற்படுத்தி, அவர்களின் கவனத்தை தொடர்ந்து இந்து மத நம்பிக்கைகளில் இருந்து விலக்கிக்கொண்டு இருக்கின்றன. அவர்கள் இன்னொரு மதத்தின் சிந்தனை முறைகளை மெதுவாக கிரகிக்கும் போது, அவர்களின் நம்பிக்கை அமைப்பில் மெதுவாக ஏற்படும் மாற்றம், அவர்களின் வீட்டு நடவடிக்கைகளில் பிரதிபலிக்கிறது.

புதன்கிழமை

பாடம் 339

நேர்மாறான

கல்விமுறைகள்

ஆரம்பகாலத்தில் ஏற்படும் கருத்துப் பதிவுகளின் முக்கியத்துவத்தை, நாம் நவீன உளவியல் மூலம் தெரிந்துகொள்கிறோம். ஆரம்ப காலத்தில் இளைஞர்களின் மனங்களுக்குள் செல்லும் முதல் கருத்துப் பதிவுகள், அவர்களின் பண்புகளை வடிவமைத்து வாழ்நாள் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு குழந்தை கத்தோலிக்க பள்ளியில் வரலாறு, வடிவியல், கணிதம் பற்றி படிக்கும் போது, அந்த குழந்தைக்கு கத்தோலிக்க தேவாலயத்தின் கோட்பாடுகளும் கற்றுத்தரப்படுகின்றன. கத்தோலிக்க தேவாலயம் வழங்கும் கோட்பாடுகள் சைவ தர்ம போதனைகள் இல்லை. சைவ தர்மத்தில் இருந்து நன்றாக மாறுபட்டு இருக்கும் அந்த கோட்பாடுகள், சில இடங்களில் முரணாகவும் இருக்கிறது. இதன் விளைவு என்ன? தங்கள் குழந்தைகள் கல்வி கற்று, வேலையில் அவர்கள் தங்கள் மேற்கத்திய சகாக்களுடன் போட்டியிட்டு நிறைய சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக,

பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் ஆன்மாவை தியாகம் செய்து, அடுத்த பிறவியில் அந்த குழந்தைக்கு ஒரு இழிவான பிறவி கிடைக்க ஏற்பாடு செய்கிறார்கள். ¶இனி அந்த குழந்தையின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளை பார்க்கலாம். தினமும் பள்ளிக்குச் செல்லும் அந்த குழந்தையின் காதில், கத்தோலிக்க மத கோட்பாடுகள் மற்றும் இறைவன் மற்றும் இயேசு மற்றும் மேரியை பற்றிய தகவல்கள் விழுகின்றன. அவன் கத்தோலிக்க வினா-விடை ஏட்டை படிக்கும் போது, இந்த பூமியில் ஒரு பிறவிக்கு பிறகு ஆன்மா சொர்க்கம் அல்லது நரகத்திற்கு செல்கிறது என்றும், இயேசுவை தனது கடவுளாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் நிரந்தரமாக நரகத்தில் வேதனையை அனுபவிப்பார்கள் என்றும், அந்த நரகத்தில் தூல உடல் அழியாமல் தொடர்ந்து எரிந்துக்கொண்டு இருக்கும் என்றும், சிலைகளை வழிபடக்கூடாது என்றும், மற்ற மதங்கள் இறைவனை சென்று அடைவதற்கான உண்மையான பாதையை வழங்கவில்லை என்றும் கற்றுக் கொள்கிறான். ¶அதன் பிறகு அந்த குழந்தை வீடு திரும்பியதும் அவன் பள்ளியில் பெற்ற கருத்துப்பதிவுகளை நீக்குவதற்காக நிரந்தர நரகம் என்று ஏதும் இல்லை என்றும், பிறவிப் பாவம் என்று ஏதும் இல்லை என்றும், கிறித்துவ மதத்தை சாராதவர்கள் நரகத்தில் வேதனையை அனுபவிப்பது இல்லை என்றும், சிவபெருமான் அன்பே உருவாக இருக்கிறார் என்றும், *கர்மவினை* என்பது இருக்கிறது என்றும், அதை முழுமையாக கரைக்கும் வரை ஆன்மாக்கள் பலமுறை பூமியில் பிறவி எடுக்கிறார்கள் என்றும் அந்த குழந்தைக்கு அதன் பெற்றோர்கள் கற்றுத் தர முயற்சி செய்கிறார்கள். இந்த இளம் மனதிற்கு போதிய பகுத்தறிவு இல்லாததால், அது குழப்பத்தில் சிக்குகிறது. அந்த குழந்தையின் பெற்றோர்கள் சரியாக புரிந்துகொள்ளாததால், மதம் தொடர்பான விஷயங்களில் அவர்கள் சொல்வதை கேட்கக்கூடாது என்று பள்ளியில் கற்றுத் தரப்படுகிறது. புனித பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் சொல்லும் சில விஷயங்களை நம்பக்கூடாது என்றும், நமது மதம் சைவ சமயம் என்றும், இந்த அற்புத மதத்தின் அடையாளமான விபூதியை பூசிக்கொள்வதில் தவறு ஏதும் இல்லை என்றும் வீடு திரும்பியதும் அவனிடம் பெற்றோர்கள் கூறுகிறார்கள். கத்தோலிக்க சமய நம்பிக்கைகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று தினமும் பள்ளியில் ஆறு முதல் எட்டு மணி நேரத்திற்கு பாடம் கற்பிக்கப்படும் ஒரு குழந்தையின் நிலையை சற்று கற்பனை செய்து பாருங்கள். மறுபிறவி இல்லை என்றும், *கர்மவினை* என்பது இல்லை என்றும், இந்து மதம் ஒரு பாகால் மதம் என்றும், உலகின் ஒரே உண்மையான மதமாக கத்தோலிக்க மதம் விளங்குகிறது என்றும், அந்த குழந்தையின் பெற்றோர்கள் சொல்வது தவறு என்றும், அவர்களின் மூதாதையர்கள் சொல்வது தவறு என்றும், *ரிஷிகள்* மற்றும் *சத்குருமார்கள்* கூறியதும் தவறு என்றும் அந்த பள்ளியில் கற்றுத் தரப்படுகிறது. அதன் பிறகு அந்த குழந்தைக்கு அதிஷ்டம் இருந்தால், கத்தோலிக்க தேவாலயம் கற்பிப்பது தவறு என்றும், அவன் அங்கே மதசார்பற்ற பாடத்தை படிப்பதற்காக மட்டுமே செல்ல வேண்டும் என்றும், அவன் மற்ற

தகவல்கள் மீது கவனம் செலுத்தக் கூடாது என்றும், புனித பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் தங்கள் மதத்தைப் பற்றி பேசும் போது அதன் மீது கவனம் செலுத்த கூடாது என்றும் இரவு நேரத்தில் தங்களுக்கு கிடைக்கும் சுமார் ஒரு மணி நேரத்தில் அந்த குழந்தையின் பெற்றோர்கள் கற்றுத் தர வாய்ப்புள்ளது. ¶இதைப்பற்றி எனது *சத்குருவின்* ஒரு முக்கிய சீடனாகவும் ஜோதிட சாஸ்திரியாகவும் இருந்த பண்டிதர் கே. என். நவரத்தினம் என்னிடம் ஒரு உண்மை சம்பவத்தை விளக்கினார். “நான் சிறுவனாக யாழ்ப்பாணத்தில் வளர்ந்த போது, ஒரு கிறித்துவ பள்ளியில் எனது ஆரம்ப கல்வியை பெற்றேன். மதம் சம்பந்தப்பட்ட வகுப்புக்களை ஆசிரியர்கள் நடத்தும் போது, இந்து தெய்வங்கள் எல்லாம் தீய சக்திகள் என்று எனக்கு பாடம் புகட்டினார்கள். நாங்கள் இந்து கோயில்களை கடந்து செல்லும் போது, இந்த தீய சக்திகளின் சிலைகளை அவமானப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டோம். நான் என் ஆசிரியர் அறிவுறுத்தலுக்கு இணங்க, இந்த தவறான செயல்களை பல முறை செய்து வந்தேன். அப்போது ஒரு நாள் நான் விநாயகர் சிலை மீது எச்சில் துப்பிய போது, நான் உடனடியாக தரையில் விழுந்ததால், என் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. என் மாமன் மகன் படித்த ஒரு கத்தோலிக்க கான்வென்ட்டில், அவனுடன் பல இந்து மாணவர்கள் படித்து வந்தார்கள். அவர்கள் தினமும் காலையில் கிறித்துவ தேவாலய பிரார்த்தனை கூட்டத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்கள். அந்த மாணவர்கள் இந்து கோயில்களை கடந்து செல்லும் போது, அந்த கோயிலை பார்த்து எச்சில் துப்பி அவமானப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இது மக்களை மதம் மாற்றுவதற்கு ஒரு கொடிய மற்றும் நேர்மையற்ற முயற்சியாக விளங்கியது.”

வியாழக்கிழமை

பாடம் 340

முதன்மையான கடமையை

புறக்கணித்தல்

இம்முறையில் நேர்மாறான கல்வியை பெறும் ஒரு குழந்தையின் கதி என்னவாக இருக்கும்? அந்த குழந்தைக்கு எதை அல்லது யாரை நம்புவது என்று தெரியாது. அவன் தான் பள்ளியில் கற்ற கிறித்துவ மதத்தில் இருந்து விலகி செல்கிறான். அவன் தன் வீட்டில் கற்ற சைவ சமயத்தில் இருந்து விலகி செல்கிறான். அவன் எந்த மதமும் சாராமல் வளர்கிறான். அவனுக்கு ஆன்மீக அறிவுரை தேவைப்படும் போது, அவனால் கத்தோலிக்க பாதிரியார்களிடம் செல்ல முடிவதில்லை. மேலும் சைவ சமயம் அவன் மனதில் அவமதிப்பை பெற்று இருப்பதால், அவனால் தனது பெற்றோர்கள் மதத்தின் உதவியையும்

நாட முடிவதில்லை. "எங்கள் பள்ளியில் படிக்கும் இந்து குழந்தைகளால் என்றுமே கத்தோலிக்க மதத்தை முறையாக பின்பற்ற முடியாது. அவர்கள் நல்ல இந்துக்களாகவும் இருக்க முடியாது," என்று ஒரு கத்தோலிக்க பாதிரியார் உண்மையை வெளிப்படுத்தினார். ஒரு காலத்தில் வீட்டு *பூஜையில்* மகிழ்ச்சியுடன் பங்குபெற்று *சுவாமிகளை* மரியாதையுடன் தரிசித்த சிறுவன் அவருக்கு வணக்கங்கள் தெரிவிக்காமல், *பூஜை* நேரத்தை தவிர்க்கிறான், பெற்றோர்கள் முடிவை எதிர்க்க தொடங்கி மெதுவாக வீட்டை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, அந்த வீட்டில் தனது பெற்றோர்களை கீழ்த்தரமாக நடத்துகிறான். அத்தகைய குழந்தைகள் வீட்டை விட்டு சென்று விடுவேன், தற்கொலை செய்து கொள்வேன் மற்றும் கண்காணிப்பாளர் இல்லாமல் எதிர்ப்பாலின நண்பரை சந்திக்க செல்வேன் என்று மிரட்டுவதை தவிர்க்க, அவர்களின் மாறுபட்ட உணர்ச்சிகளை குடும்பத்தினர் கண்டும் காணாமல் இருக்கின்றனர். இதன் காரணமாக இந்த ஆன்மீக அனாதைகள் எந்த ஒரு மதத்தையும் பின்பற்றாமல் வளர்ந்து, போதை மருந்துக்கு அடிமையாகி, குற்றங்கள் செய்து, இருத்தலியல்வாதம் மற்றும் மேற்கத்திய பகுத்தறிவுவாதத்தில் ஈடுபட்டு, சிலசமயம் பாதுகாப்பு என்ற போர்வையில் பயங்கரவாதத்தின் மீது கவனத்தை திருப்பி, வாழ்க்கையின் போக்கு கடினமாக இருக்கும் போது அவர்களில் விவாகரத்து மற்றும் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதரிகரித்து வருகிறது. மத ஈடுபாடு இல்லாத அவர்களின் வாழ்க்கை ஒரு தீவிர *கர்மவினையை* உருவாக்கி, அவர்களை கீழ்நிலையில் இருக்கும் ஏழு லோகங்களின் உணர்வுக்குள் அழைத்து செல்கிறது. இந்த *கர்மவினைக்கு* நமது சைவ சமூகம் மற்றும் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாகிறோம். நாம் எல்லோரும் கவனக்குறைவால் உருவான *கர்மவினையை* அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ¶கிறித்துவ பள்ளிகளில் பயின்றவர்கள் சைவ சமய *சுவாமிகள், பண்டிதர்கள்* மற்றும் *குருமார்களுக்கு* மதிப்பு அளிப்பது இல்லை. அவர்கள் நமது கோயில்களின் புனிதத்தன்மையை மதிப்பது இல்லை. கோயிலில் இருக்கும் சிலைகள் வெறும் கற்கள் தான் என்றும், *புஜைகள்* என்பது பழங்காலத்து சடங்குகள் என்றும் அவர்கள் பள்ளிகளில் கற்று இருப்பதால், அவர்கள் கோயில்களுக்கு சென்று சமூக வழக்கங்களை பூர்த்தி செய்தாலும், கோயிலில் மகாதேவர்கள் இருப்பதாக அவர்கள் மனதில் நினைப்பது இல்லை. நீங்கள் உங்கள் குழந்தைகள் மீது அன்பு செலுத்துகிறீர்கள் என்ற காரணத்தால், உங்களுக்கு இருக்கும் பணத்தாசையில் அவர்களின் மனங்களை நீங்கள் தியாகம் செய்யக்கூடாது. கிறித்துவ கல்விக்கு குழந்தைகளின் மனங்களை தியாகம் செய்ததால், அது தவறான வழியில் வந்த பணமாகவே கருதப்படும்.
கிறித்துவர்கள் நமது மத நம்பிக்கைகளை நம்புகிறார்களா? இல்லை. யூதர்கள்? இல்லை. இசுலாமியர்கள்? இல்லை. அவர்கள் *கர்மவினை*, மறுபிறவி, நீக்கமற நிறைந்து இருக்கும் இறைவன், நிரந்தர நரகம் இல்லாமை, விதிவிலக்கு ஏதும்

இல்லாமல் ஒவ்வொரு ஆன்மாவும் முக்தியை பெறுகிறது என்கிற நமது முக்கிய நம்பிக்கைகள் மீது நம்பிக்கை வைப்பது இல்லை. ¶மதங்கள் அனைத்தும் ஒன்றல்ல. அவை சமமும் அல்ல. அவற்றின் ஆன்மீக இலக்குகள் வெவ்வேறாக இருப்பதால், அவற்றை பின்பற்றுபவர்களுக்கும் கிடைக்கும் பலன்களும் மாறுபட்டு இருக்கின்றன. நாம் இதை மறக்கக்கூடாது, ஏனென்றால் வேறுபாடுகளை மறந்து அனைத்து மதங்களும் ஒன்று என்று கருதுவது இன்றைய புதிய பாணியாக இருக்கிறது. இவ்வாறு சொல்பவர்களின் கருத்துக்களை நாம் உண்மை என்று நம்பிவிடக்கூடாது. உலகில் இருக்கும் மதங்கள் அனைத்தும் சிறந்தது தான் என்றாலும், அவை அனைத்தும் ஒன்றல்ல. அந்த மதங்களின் நம்பிக்கைகள் மாறுபட்டு இருக்கின்றன, மற்றும் நம்பிக்கைகள் கண்ணோட்டங்களை உருவாக்குவதால், அவர்களுக்கு பிறப்பு மற்றும் இறப்பு பற்றிய கண்ணோட்டம், ஆன்மா மற்றும் இறைவன் பற்றிய கண்ணோட்டமும் மாறுபட்டு இருக்கின்றன. நமக்கு பொதுவான நம்பிக்கைகள் நமக்கு பொதுவான கண்ணோட்டங்களை உருவாக்கி, கலாச்சாரத்தை நிலைநிறுத்துகின்றன. ¶ஆமாம், நமது மதத்தை பற்றி அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கற்றுத் தருவது, நாம் செய்யவேண்டிய ஒரு முக்கிய கடமை ஆகும். இதை செய்வது எப்படி? இதை அதிக சேவைப் பள்ளிகளை அமைத்து, சைவ கல்விகளை வழங்குவதன் மூலம் செய்யவேண்டும். நாம் நமது இளைஞர்களுக்கு சிறப்பாக கற்பிக்க வேண்டும். ஆனால் இவ்வாறு செய்யவில்லை என்றால் நாத்திகம், கிறித்துவம், இசுலாம், இருத்தலியல்வாதம் மற்றும் மேற்கத்திய பகுத்தறிவுவாதம், பொருளியல்வாதம் மற்றும் மதசார்பற்ற மனிதநேயம், மற்றும் மரபு சாரா சிந்தனையுடன் பாரம்பரியத்தை வேரோடு அழிக்க முயலும் புதிய இந்திய அனுமானங்கள் நமது சைவ சமயத்தை ஒடுக்கி விடும். கற்பதற்கு ஆர்வத்துடன் இருந்தாலும், அவர்களின் சொந்த பாரம்பரியத்தை விட்டு வேறு திசையில் கவர்ந்து இழுக்கப்படும் இளம் ஆன்மாக்களை கற்பிப்பதில் மட்டுமே நாம் நம்பி இருக்கிறோம். அவர்களை நெருக்கமாக வைத்து இருந்து, அவர்களுக்கு அன்பையும் பாதுகாப்பையும் வழங்கி, சைவ சமயத்தின் பொக்கிஷங்களை வழங்குங்கள். அது அவர்களுக்கு நீங்கள் வழங்கும் மிகச்சிறந்த பரிசாக இருக்கும். மற்ற பொருட்கள் அனைத்தும் அழிந்து சிதைந்து விடும். ¶அடுத்த முறை உங்கள் வீட்டுக் கதவை ஒரு கிறித்துவ சமயப் பணியாளர் தட்டும் போது, அவருக்கு முதலில் வணக்கம் செலுத்துக்கள். பிறகு அவரிடம்,"நாங்கள் இந்துக்கள். எங்களுக்கு எங்கள் சமயம் பற்றிய விடை வினா ஏடு உள்ளது. எங்களுக்கும் பொதுவான சமய நம்பிக்கை மற்றும் எங்கள் சமயம் தொடர்பான உறுதிமொழிகள் உள்ளன. எங்கள் சைவ சமயத்திற்கு புனித நூலாக எங்கள் சாத்திரங்கள் விளங்குகின்றன. எங்களுக்கு சமய தலைவர்கள் மற்றும் அமைப்புக்கள் உள்ளன. எங்களது பாரம்பரியம் உலகில் மிகவும் பழமையானதாக விளங்குகிறது. எங்களது புனிதமான கோயில்கள் மற்றும் மகாதேவர்கள் இருக்கிறார்கள். நாம் சைவர்களாக இருப்பதில்

பெருமிதம் கொள்கிறோம். நாங்கள் சிவபெருமான் மற்றும் மகாதேவர்களை வழிபடுவதில் பெருமிதம் கொள்கிறோம். இத்துடன் எங்கள் சைவ சமயத்தில் மேலும் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன. மிக்க நன்றி," என்று சொல்லி கதவை மூடி விடுங்கள்!

வெள்ளிக்கிழமை

பாடம் 341

இளைஞர்களுக்கு எதை

கற்றுத் தரவேண்டும்

கடந்தகாலத்தில் நடைப்பெற்ற பல போர்களுக்கு பின்னணியாகவும், இன்று நமக்கு முன்பாகவும், மனசாட்சி இல்லாமல் நடைபெறும் மத மாற்ற முயற்சிகள் தனிநபரை மட்டுமல்லாது, குழுக்கள் மற்றும் நாடுகளின் உரிமைகளையும் மீறுவதாக அமைந்துள்ளன. மதங்கள் மற்ற மதங்களை அழிக்கும் நோக்குடன் போர்களில் ஈடுபடும் போது, அது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளுக்கும் ஒரு முக்கிய கவலையாக மாறுகிறது. எதை செய்யவேண்டும் எதை செய்யக்கூடாது என்பதை கூறும் தங்கள் மதத்தின் சட்ட புத்தகங்கள் மற்றும் பிரார்த்தனை, தியானம் மற்றும் நடத்தை விதிமுறைகளை கூறும் தங்கள் புனித நூல்கள் மீது அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவிப்பது உலக மதங்களின் உரிமை இல்லையா? ஒருவர் தனது மதத்தை தேர்வு செய்வதும், அவர் விரும்பினால் அதை விட்டு வெளியேறுவதும் ஒரு அடிப்படை மனித உரிமை ஆகும், மற்றும் அதை மறுப்பது அல்லது அதை கட்டுப்படுத்துவதும் மனிதன் செய்யும் தவறு ஆகும். இதை புரிந்துகொள்வது எளிதாக இருந்தாலும், இந்த சுதந்திரத்தை உலகில் பலர் முழுமையாக அனுபவிப்பது எல்லை. ¶பக்தியுடன் இருக்கும் சைவர்கள் தங்கள் குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதால், அவர்கள் தங்கள் குழந்தைகளை கிறித்துவ பள்ளிகளுக்கு அனுப்பாமல், அவர்கள் மனங்களில் புராண சைவக் கதைகள், சைவ வரலாறு, சைவ கலை, *வேதங்கள்* மற்றும் சைவ *ஆகமங்கள்* பற்றிய அறிவை நிரப்பும் சைவ கல்வியை வழங்குகிறார்கள். அத்தகைய குழந்தைகள் பிறந்ததில் இருந்தே அவர்களின் மதத்தை பின்பற்றி வளர்க்கப்பட்டு, அவர்களுக்கு சிறு வயதில் புனிதமான சாத்திரங்கள் மற்றும் பாடல்கள் கற்றுத்தரப்படுவதால், அவர்கள் வருங்காலத்தில் சைவ இந்து சமயத்தின் தூதர்களாக விளங்கி, தங்கள் பணியை உலகெங்கும் சிறப்பாக செயலாற்றுகிறார்கள். இதுவே இன்றைய காலகட்டத்திலும் வருங்காலத்திலும் சிவ பக்தர்களின் திட்டம் மற்றும் விசுவாசமாக விளங்குகிறது. நாம் செல்ல விரும்பும் இடம் எதுவாக இருந்தாலும், அங்கே சிவபெருமான் நமக்கு முன்பாக

வந்து நிற்பார் என்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள். இந்த பிரபஞ்சத்தில் எந்த வஸ்துவும் சிவபெருமானால் உருவாக்கப்படாமல் இல்லை என்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள். இந்த பூமியில் சைவ தர்மத்தை பாதுகாத்து, பேணி வளர்த்து மேன்மைப்படுத்த இந்த சிவத்தொண்டர்கள் உறுதி எடுத்துள்ளார்கள்.¶நான் இங்கே வழங்கிய எல்லா தகவல்களும் *சிவபெருமானுடன் திருநடனம்*, இந்து மதத்தின் தற்கால வினா விடை ஏட்டில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. குழந்தைகளும் பெரியவர்களும் தங்கள் மதத்தை பற்றி வெளிநாடுகளில் புத்திசாலித்தனமாக பேசி, தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன் அளிக்கும் நோக்குடன், அவர்களுக்கு ஒன்றாக கற்பிக்கும் வகையில், நினைவில் பதியுமாறு மிகவும் எளிய நடையில் வடிவைக்கப்பட்டு உள்ளன. ¶ஒரு குழந்தையின் மனது ஒரு குறுந்தகடு அல்லது ஒலிநாடாவை போன்றது. அந்த காலி நாடாவில் குழப்பம் தரும் ஒலிகளை அல்லது காதுக்கு இனிய பாடல்களை பதிவு செய்யலாம். அந்த நாடாவில் நீடித்து இருக்கும் முதல் பதிவுகளை உருவாக்குவது உங்கள் பொறுப்பு ஆகும். அந்த தகடை பின்பு மாற்றி அமைப்பது மிகவும் கடினமாக இருக்கும். நாம் நமது சிறுவர் சிறுமியர்களுக்கு எதை கற்றுத் தருவது? அவர்கள் மனதில் இருக்கும் கணினியில் நாம் எதை பதிய வைப்பது? குழந்தைகள் கண்கள் மூலமாகவும் கற்கிறார்கள் என்பதால் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ள *சிவபெருமானுடன் திருநடனம்* புத்தகம், ஆறு முதல் பதினாறு வயது வரையிலான சிறுவர் சிறுமியர்கள் மனப்பாடம் செய்வதற்கு, தங்கள் குடும்பத்துடன் கலந்து பேசுவதற்கு, தந்தை மூலம் விவரிக்க மற்றும் தாய் மூலம் விளக்கம் அளிப்பதற்கு, நமது சமயம் பற்றிய அடிப்படைகளை கொண்டு அமைந்துள்ளது. ¶"எனது குழந்தைகளுக்கு நான் சைவ சமயம் பற்றி எதை கற்றுத் தருவது?" என்று கேள்விகளுக்கு இந்த புத்தகம் பதில் அளிக்கிறது. நாம் பூமியில் பிறந்த குறிக்கோள், இறைவனுடன் நமது உறவு, முடிவில் நமது விதி ஆகியவற்றை பற்றி *திருமந்திரம், திருக்குறள்* மற்றும் *அத்வைத சைவ சித்தாந்தத்தின் வைதீக* மற்றும் *ஆகம* சாத்திரங்களில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று கற்றுத் தரவேண்டும். சிவபெருமான் மூலம் உருவாக்கப்பட்ட ஆன்மா அழிவு இல்லாதது என்றும், நாம் முடிவில் அவருடன் ஐக்கியமாகி விடுவோம் என்றும் 2,200 ஆண்டுகளுக்கு முன்பாக *மகாசித்தர்* திருமூலர் கூறியுள்ளதைப் போன்று நமது குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும். நாம் வாழ்ந்துகொண்டு இருக்கும் பூலோகம் பற்றியும், வாழ்நாள் முழுவதும் நாம் எதிர்கொள்ளும் மற்ற நம்பிக்கை அமைப்புமுறைகள் பற்றியும் நமது குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும். தொழில்நுட்ப யுகத்தில் தங்கள் மதத்தை வலுவாக துடிப்புணர்வுடன் வைத்திருப்பதைப் பற்றி நமது குழந்தைகளுக்கு கற்றுத் தரவேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் அனைத்து சைவ குடும்பங்களுக்கும் மிகவும் முக்கியம் ஆகும். ¶இங்கே ஆசியாவில் இருப்பவர்களுக்கு ஒரு செழிப்பான மற்றும் நிலையான மதக் கலாச்சாரம் இருக்கிறது. அதனால் உங்கள் குழந்தைகளின் எதிர்காலம்

சற்று தெளிவாக இருக்கிறது. ஆனால் உலகில் மற்ற பகுதிகளில் இருக்கும் சைவ குழந்தைகளுக்கு கிராமத்து கோயில், பாட்டி அல்லது தாத்தா வழங்கும் விளக்கங்கள் பற்றி தெரிவது இல்லை. இந்த அனுகூலமான சூழ்நிலைகள் குழந்தைகளுக்கு இருந்தாலும், எளிதில் கட்டுப்படுத்த முடியாத மேற்கத்திய வழிமுறைகள் மற்றும் கிறித்துவ கண்ணோட்டங்களை பின்பற்றுவதற்கு தூண்டுதல்கள் தொடர்ந்து இருக்கின்றன. இவ்வாறு கவர்ந்து இழுக்கும் சக்திகளிடம் வெற்றிபெறுவதற்கு, இலங்கை மற்றும் இந்தியாவில் வாழும் குழந்தைகள் மற்றும் உலகின் மற்ற பகுதிகளில் குடியேறியுள்ள குழந்தைகளுக்கு தேவையான கல்வியை கற்றுத் தரவேண்டும். அவர்கள் வளர்ந்து தங்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தருவார்கள் மற்றும் அதன் மூலம் சைவ இந்து சமயம் இந்த பூமியில் பல தலைமுறைகளுக்கு நீடித்து இருக்கும். ¶ஆமாம், உலகில் இருக்கும் சைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, அடுத்த தலைமுறைக்கு *தர்மம்* மற்றும் நன்னடத்தையின் முக்கியத்துவத்தையும், மிகவும் முக்கியமாக *அகிம்சை* மற்றும் இந்து தர்மத்தின் அடிப்படை கொள்கைகளையும் கற்றுத் தரவேண்டும். அகிம்சை என்பது உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியாக துன்புறுத்தாமல் இருப்பதை குறிக்கிறது. நாம் அவர்களுக்கு புனிதமான சிவன் கோயிலில் இருக்கும் இரகசிய அற்புதங்களை பற்றி விளக்க வேண்டும். அவர்கள் தங்கள் பக்தியில் நன்றாக வேரூன்றி இருப்பதற்கு, நாம் அவர்களை *கோயில்கள், மந்திர்கள்*, சிறிய கோயில்கள், *ஆசிரமங்கள், ஆதீனங்கள், மடங்கள்*, புண்ணிய தலங்கள் மற்றும் புண்ணிய நதிகளுக்கு அவ்வப்போது அழைத்து செல்ல வேண்டும். அவர்கள் சார்பாக சிவன் கோயில்களில் செய்யும் *அர்ச்சனைகள், அபிஷேகங்கள்* மற்றும் *ஹோமங்கள்* மற்றும் வீட்டு பூஜைகளில் குறிக்கோள் மற்றும் பலன்களை பற்றி, நாம் அவர்களுக்கு கவனமாக விளக்க வேண்டும். இறைவன் மற்றும் மகாதேவர்களை எப்படி வழிபடவேண்டும் என்று நாம் அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். நாம் அவர்களின் மனதில் நமது சாத்திரங்கள் மற்றும் நமது மகான்கள் மற்றும் முனிவர்களின் மீது வலுவான மரியாதையை வளர்க்க வேண்டும்.

சனிக்கிழமை

பாடம் 342

முதிர்ந்த வாழ்க்கைக்கு

தயாராகுதல்

நாம் மிக முக்கியமாக, நமது இளைஞர்கள் மனதில் குடும்ப வாழ்க்கை மீது மரியாதையையும், கணவன் மனைவியின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக

நடைபெறும் புனிதமான சங்கமமாக விளங்கும் திருமணத்தின் மீது மரியாதையையும் பதிய வைக்க வேண்டும். குறிப்பாக இளைஞர்கள் நமது புண்ணிய பூமியின் எல்லைகளை கடந்து தூரத்து தேசத்தில் வாழும் போது, அவர்கள் திருமண வாழ்க்கையை எவ்வாறு சமாளிக்க வேண்டும், பாலுறவை எந்த கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும், திருமணத்தை எவ்வாறு மகிழ்ச்சிகரமாகவும் வலுவாகவும் வைத்து இருக்கவேண்டும், இந்த நவீன உலகில் நாம் எதிர்கொள்ளும் அழுத்தங்களுடன் எவ்வாறு போராடவேண்டும் என்று அவர்களுக்கு தொடர்ந்து ஆலோசனை வழங்கிக்கொண்டு இருக்கவேண்டும். அவர்கள் சைவ சமயத்தின் *சத்குருமார்கள்* மற்றும் *சுவாமிகளின்* முக்கியத்துவத்தை புரிந்து அவர்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக, நாம் அவர்கள் மனதில் துறவற வாழ்க்கை பற்றிய அறிவையும் பதிய வைக்கவேண்டும். மகாராஜாக்கள் துறவிகளுக்கு ஆதரவு அளித்த காலத்தில் சைவ துறவறம் ஒரு வலுவான ஆன்மீக சக்தியாக விளங்கியது, மற்றும் அது குடும்பங்கள் மற்றும் அதன் குழந்தைகள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் ஆதரவுடன் தொடர்ந்து வருங்காலத்திலும் வலுவாக இருக்கும். இவை அனைத்தும் மதம் தொடர்பான கல்வியின் மூலம் சாத்தியமாகிறது. இந்தியா, இலங்கை, மலேசியா மற்றும் சைவர்கள் வாழும் மற்ற நாட்டை சேர்ந்த இளைஞர்கள் இந்த இரண்டு பாதைகளை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். சைவ துறவற தர்மத்தை ஏற்றுக்கொண்டு, ஒரு சுயநலமற்ற சேவை மூலம் தங்கள் இறைவன் மற்றும் மதத்திற்கு சேவை செய்து, உலகெங்கும் போதனைகளை வழங்க வேண்டும் என்று நாங்கள் அந்த வெகுசிலரிடம் கேட்டுக் கொள்கிறோம். இதற்கு தேவை அதிகமாக இருக்கிறது. கத்தோலிக்க பாதிரியார்கள் மற்றும் பிராடஸ்டன்டு மதகுருமார்கள் போன்ற சமயப்பணிகளுக்கு தங்கள் குழந்தைகளை அனுப்புவதற்கு எண்ணற்ற ஆசிய குடும்பங்கள் தயாராக இருந்தாலும் இந்து *சாதகர்கள், யோகிகள்* மற்றும் *சுவாமிகள்* போன்ற சமயப்பணிகளுக்கு அனுப்ப போதிய பெற்றோர்கள் முன்வருவது இல்லை. ¶சைவ சமயம் உலகின் மிகவும் பழமையான சமயமாக மட்டும் இல்லாமல், இந்த தொழில்நுட்ப யுகத்தில் துடிப்புணர்வுள்ள ஒரு வலுவான சமயமாகவும் விளங்குகிறது என்பதை இளைஞர்களுக்கு கற்றுத் தரவேண்டும். அது வழங்கும் ஞானம் விவசாயி மற்றும் கணினி நிரலாளருக்கும், நமது மூதாதையர்கள் மற்றும் நமக்கு அடுத்து வரும் சந்ததியருக்கும் பொருந்தும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். சைவ சமயம் என்பது சனாதன தர்மம் ஆகும். அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி, மின்னணுவியல், வியாபாரத்தில் வேலை செய்யும் இளைஞர்கள், பல மதத்தை சேர்ந்தவர்களுடன் இணைந்து பணியாற்றுவதால், அவர்கள் பல சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும். சைவ சமயம் பற்றி முழுமையாக அறியாதவர்களின் பரிகாசங்களை ஏற்றுக்கொள்ளாமல், மற்றவர்கள் எதிர்ப்புக்கு மனம் மாறாமல் தங்கள் மதம் மற்றும் அதன் நம்பிக்கைகளுக்கு கட்டுப்பட்டு இருக்க, அவர்களுக்கு கவனமாக

கற்றுத் தரவேண்டும். நாம் உலகெங்கும் வளர்ந்து வரும் சைவ இந்துக்களுக்கு இந்து திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகளை பற்றி கற்றுத் தந்து, அவர்கள் நினைவுகளில் அந்த மங்களகரமான நாட்கள் துடிப்புணர்வுடன் இருக்க துணை புரிய வேண்டும். அவர்கள் ஒவ்வொரு சடங்கையும் கண்மூடித்தனமாக பின்பற்றாமல் இருக்க, அதன் பின்னணியை நாம் அவர்களுக்கு விளக்க வேண்டும். ¶இளைஞர்களின் இதயங்களில் சைவ சமயம் இடம் பிடிப்பதற்கு சமய அடையாளச்சின்னங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த அடையாளச் சின்னங்கள் தனிச்சிறப்புக்களை கொண்டுள்ளன, மற்றும் இளைஞர்களுக்கு சின்னங்களை மகிழ்ச்சியுடன் புரிந்துக் கொள்வார்கள். நாம் நம்மை சுற்றியும், நமது பூஜை அறையிலும் நமது வீடு முழுவதும் பல இடங்களில் சைவ சமய சின்னங்களை கொண்டிருக்க வேண்டும். *பிரணவ மந்திரம், ஸ்வஸ்திக், சிவலிங்கம், திருபுண்டரம்* மற்றும் *பொட்டு, அங்குசம், திருவடி, நாகம், வேல், கலசம், வட, ருத்ராட்சம், சேவல், திருசூலம், கமண்டலம், திருகோணம், வில்வம், சட்கோணம், கொன்றை, ஹோமம், குத்துவிளக்கு* மற்றும் *மண்கோலம்.* ¶நமது பூஜை அறையில் ஒரு *குத்துவிளக்கு* இருக்க வேண்டும். நமது வீட்டில் தெய்வங்கள் மற்றும் நந்தி, மயில் மற்றும் மூஞ்சூறு போன்ற அவர்களின் வாகனங்களும், நமது தோட்டத்தில் புனிதமான மலர்கள் மற்றும் மரங்களும் இருக்கவேண்டும். நாம் கண்டிப்பாக நெற்றியில் விபூதி மற்றும் பொட்டு, புனிதமான அணிகலன்கள் மற்றும் பிரார்த்தனை மணி மாலைகளை அணிந்து இருந்து, நமது இளைஞர்களும் அவ்வாறு செய்ய அறிவுறுத்த வேண்டும். சைவர்கள் அனைவரும் பஞ்சாட்சர மந்திரத்தில் தீட்சை பெற்று, அதை தினமும் ருத்ராட்ச மாலை கொண்டு ஜபிக்க வேண்டும். அடுத்த தலைமுறை தரிசனங்கள், நறுமணங்கள், சப்தங்கள், ருசிகள் மற்றும் சமய சின்னங்கள் மூலம் நமது சமயத்தை அறிந்து கொள்கிறது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 343

அடிப்படை மனித பண்புகளை

வலியுறுத்துதல்

நான் மாஸ்கோவில் ஜனவரி 1990 நடைபெற்ற மனித வாழ்வுவளம், வளர்ச்சி மற்றும் சுற்றுப்புறச்சூழல் பற்றிய சர்வதேச கருத்தரங்கில் சர்வதேச கல்வியை பற்றி பேசினேன். வரவிருக்கும் நூற்றாண்டில் குழந்தைகள் எல்லோரும் பல்வேறு வாழ்முறைகள், பல்வேறு நம்பிக்கைகள், பல்வேறு உடைகள் மற்றும் மொழிகளை திறந்த மனதுடன் பொறுத்துக்கொள்ள வேண்டிய தேவையை பற்றி கற்பிக்கப்பட வேண்டும் என்று நான் அங்கே கூடியிருந்த 700 அரசியல்

மற்றும் மதத் தலைவர்களிடம் கேட்டுக்கொண்டேன். வேறுபட்டு இருப்பவர்களை கண்டு அஞ்சுவதை தவிர்ப்பது, மற்ற நிறங்கள் அல்லது மற்ற மதங்களை சேர்ந்த மக்கள் மீது வெறுப்பை தவிர்ப்பது மற்றும் உலகை முரண்பாடுகளின் இருப்பிடமாக கருதுவதை நிறுத்தி, நமக்குள் இருக்கும் தலைசிறந்த வேற்றுமையை புரிந்துக்கொண்டு பாராட்டுவதோடு, அதை மகிழ்ச்சியுடன் மதிப்பு அளிக்கும் பண்பையும் அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். இன்றைய கல்வி தனது அணுகுமுறையை மாற்றினால், இதை சாத்தியமாக்க முடியும். ¶மனிதனுக்கு தேவைப்படுகிற அடிப்படை வைதீக பண்புகளை, ஒவ்வொரு குழந்தை மற்றும் ஒவ்வொரு மாணவனுக்கும் கற்றுத் தரவேண்டும். காலத்தால் அழியாத இந்த பண்புகளுக்கு இனம், பொதுவான சமூக நம்பிக்கை, சாதி, அரசியல் அல்லது இனக்கலாச்சாரத்துடன் எந்த தொடர்பும் இல்லை. எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வது முடிவான குறிக்கோள் இல்லை. எதை படிப்பது மற்றும் எதை எழுதுவது என்பதை அறிவதும், இயற்கையுடன் இணங்கி வாழ்வது எப்படி, பிரபஞ்சத்துடன் இணங்கி வாழ்ந்து தன்னுடனும் தனது சக மனிதர்களுடனும் அமைதியாக பொருந்தி வாழ்வது எப்படி என்று அறிவதும் கல்வியின் முடிவான குறிக்கோளாக விளங்குகிறது.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்." என்று திருக்குறள் (140) ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் குறிப்பிடுகிறது. ¶மனித நேயம் நீடித்து இருப்பதை உறுதி செய்ய, இந்த பூமியில் வாழும் மக்கள் இணக்கத்துடன் இருப்பது எப்படி, மற்றும் ஓயாமல் நிலைத்து இருக்கும் கடந்த கால தவறுகள் மற்றும் ஆத்திரங்களை சரி செய்வது எப்படி ஆகியவை இன்றைய ஆன்மீக மட்டும் அரசியல் தலைவர்கள் எதிர்கொள்ளும் ஒரு முக்கிய கேள்வியாக விளங்குகின்றன. அதற்கு கல்வியின் பங்கு முக்கியமாக இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள் என்றாலும், அதற்கு கல்வியாளர்கள் தாங்கள் வடிவமைக்கும் கல்வியில், தொழில்நுட்ப அறிவுக்கு தரும் முக்கியத்துவத்தை காட்டிலும், உலகிற்கு நல்ல மக்களை தரும் நற்பண்புகள் மீது அதிக முக்கியத்துவம் வழங்கவேண்டும். ¶நாம் இங்கே குறிப்பிடும் நற்பண்புகள் நமக்குள் இருக்கும் அறிவில் உட்புறமாக அங்கம் வகிப்பதைப் போல, அவற்றை பழங்குடி மக்கள் எல்லோரும் அறிந்து இருக்கிறார்கள். ஆனால் இந்த கொள்கைகள் சமூகம், சமுதாயம், கிராமம் அல்லது குடும்பத்தில் வெளிப்படுவதற்கு, அவற்றை பேணி வளர்க்க வேண்டும். தொழில்நுட்பத்தால் சுருங்கியுள்ள நமது சர்வதேச கிராமத்தில் சர்வதேச கல்வியானது பழங்குடியினர் உட்பட மக்கள் அனைவரையும் சென்று அடையவேண்டும். ஆனால் அத்தகைய கல்வி தேர்ச்சி பெற்றவர்கள் மற்றவர்களுக்கு வழங்கும் ஒரு தரப்பு தொடர்பாக இருக்கக்கூடாது. ஆனால் அதன் மூலம் பழங்குடியினர் மற்றும் தொழிலதிபரின் குரல் கேட்க வேண்டும். ஆனால் அந்த குரல்கள் கேட்க வாய்ப்பு இருக்கிறதா? இருப்பதாகத் தான் தோன்றுகிறது! எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் திறமை தங்களிடம்

இல்லை என்பதையும், சில விஷயங்களைப் பற்றி பாரம்பரிய பழங்குடி மக்களால் தங்களுக்கு கற்றுத்தர முடியும் என்பதையும், தொழில்துறையில் ஈடுபட்டுள்ள சமூகங்களின் புத்தி உணர ஆரம்பித்துள்ளது. நாம் இந்த பூமியில் உயிர் வாழ உணவு, நீர், காற்று, தங்கும் இடம் மற்றும் உடல் ஆரோக்கியம் போன்ற எளிய தேவைகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. இவற்றில் ஒவ்வொன்றையும் நன்றாக அறிந்துள்ள பழங்குடியினர், அவை தங்களுக்கு பிரச்சனைகளாக மாறுவதற்கு முன்பாக, அவர்கள் அவற்றை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுகின்றனர். நவீன மருந்தியல் நிபுணர் உலக மக்களின் ஆரோக்கியத்திற்காக பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்பட்ட மருந்துகளை தேடி அமேசான் காடுகளில் பயணம் செல்கிறான். அதனால் நாம் நமது அறிவை திறமையாக பயன்படுத்தி பழைய முறைகளை தேடிப்பிடித்து, அவற்றை வெளிக்கொண்டு வரவேண்டும். ¶"உலக அமைதி மற்றும் சர்வதேச கல்விக்கு இந்து மதம் எந்த வகையில் செயல்புரிய முடியும்?' என்று ரஷ்யாவில் சில புத்திசாலி மாணவர்கள் என்னிடம் கேள்வி கேட்டார்கள். அதற்கு வழங்கிய விளக்கம் பின்வருமாறு. மனிதன் மற்றும் இயற்கை கலந்ததாக இந்து மதம் வழங்கும் ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தில், அக்கறையின்மை அல்லது ஆதிக்கம் இல்லாமல் மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. வாழ்வாதாரத்தை தக்க வைக்கும் பூதேவி, வேதத்தில் ஒரு முக்கிய கருத்தாக விளங்குகிறது. பல வகையான உயிரினங்களை கொண்டுள்ள பூதேவிக்கு வழங்கும் மரியாதை, அமெரிக்க இந்திய நாடுகள், ஹவாய் பகுதி, ஆப்பிரிக்க பழங்குடியினர் மற்றும் வேறு பல பழங்குடி மக்களிடம் காணப்படுகிறது. அது கடந்த சில நூற்றாண்டுகளாக மறக்கப்பட்டு இருந்தாலும், இன்று அதன் வலிமை மீண்டும் அறியப்பட்டு வருகிறது. ¶உலகின் பல்வேறு பகுதிகளில் குடும்ப அமைப்பு வேதனையில் இருந்தாலும், அது இந்து சமூகத்தில் இன்றும் மிகவும் வலுவாக இருக்கிறது. நாம் அந்த அமைப்பை தக்க வைத்து, தனி நபரை பேணி வளர்க்கும் குடும்பம் மதத்தையும் அதன் மூலம் நாட்டையும் நிலைப்படுத்துகிறது என்பதற்கு நாம் உதாரணமாக விளங்கி உலகிற்கு கற்பிக்க வேண்டும். குடும்பத்தை வலுவாக வைத்து இருப்பதன் மூலமாக மட்டுமே, மனித இனம் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை எதிர்நோக்கி இருக்க முடியும்.

சைவ சம்ஸ்கிருதி

शैव संस्कृति



சைவ கலாச்சாரம்

மற்ற கலாச்சார அமைப்புகளோடு சேர்ந்து கலாச்சார தேவியும், தேவர்கள் மற்றும் மனிதர்களுடன் இளை தேவியும், அக்னி பகவான் மற்றும் சரஸ்வதி தேவி சாரஸ்வதர்களோடு வருகை தந்து, இந்த புனிதமான தருப்பை புல்லின் மீது அமரட்டும்.

ரிக் வேதம் 7.2.8. ரிவேப, ப. 2,355



இங்கே கருங்கல் தூண்களுடன் இருக்கும் ஒரு கோயிலின் வெளி பிரகாரத்தில் அமர்ந்து இருக்கும் பெண்மணி, தனக்கு பிடித்தமான தெய்வத்தை நினைத்து வீணை வாசிக்கிறாள். தெய்வீக கலை வடிவமாக இருக்கும் அவள் வீணை இசை, சிவபெருமானுக்கு அருகில் அவளை அழைத்து செல்கிறது, மற்றும் சூட்சும லோகத்தில் இருக்கும் அவரது திருவடிகள் அவள் மீது பாதம் பதித்து அருளாசியை வழங்குகிறது.

திங்கட்கிழமை

பாடம் 344

அனைத்து அம்சமும் உள்ள

சைவ சமயம்

எல்லோருக்கும் மாலை வணக்கம்! அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம். இலங்கையின் இந்த அழகான கோயிலுக்கு இன்று வந்திருக்கும் அமெரிக்க சிவ பக்தர்கள் நன்றாக பராமரிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, பொறுப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு சைவ ஆன்மாக்கள் நிறைந்து இருக்கும் இந்த கோயிலைப் பார்த்து பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர். திறந்த மனதுடன் இருக்கும் அழகான முகங்களை பார்த்ததும், எனக்கு தேவலோக சக்திகளின் நினைவு வருகிறது. எங்களுக்கு இங்கே தெய்வீக அருள் கிடைக்கிறது. ¶சைவ சமயம் உலகின் தலைசிறந்த சமயமாக விளங்குகிறது, மற்றும் சைவர்களாக இருப்பதை எங்கள் பாக்கியமாக கருதுகிறோம். இது உலகின் தலைசிறந்த சமயங்களில் முதன்மையாக விளங்குவதற்கு காரணம் என்ன? இது நமது பூமியில் மிகவும் பழமையான கலாச்சாரத்தை கொண்டுள்ளது. அதன் சாத்திரங்கள் மிகவும் ஆழமான கருத்துக்களை கொண்டுள்ளன. அதன் புனிதமான பாடல்கள் மனதிற்கு உற்சாகத்தை தருவதாக அமைத்துள்ளன. அது ஈடு இணையற்ற *யோகம்* மற்றும் தியானப்பயிற்சிகளை கொண்டுள்ளது. அதன் மாபெரும் கோயில்கள் முற்றிலும் புனிதமாக விளங்குகின்றன. அது நம்மை முதலில் விநாயகர் மற்றும் பிறகு முருகப்பெருமான் மற்றும் இறுதியில் சிவபெருமானை நோக்கி அழைத்து செல்வதற்கு, தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த முனிவர்கள் மற்றும் தெய்வீக பண்புடைய ஆண்கள் மற்றும் பெண்களை கொண்டிருக்கிறது. சைவ சமயத்தில் இறைவன் மற்றும் மகாதேவர்கள் இருக்கிறார்கள். அது *சரியை, கிரியை, யோகம்* மற்றும் ஞானம் என்று நான்கு பாதைகளை கொண்டுள்ளது. அது *கர்மவினை* மற்றும் மறுபிறவி உட்பட உன்னத அறிவை வழங்கும் எண்ணற்ற நம்பிக்கைகளை கொண்டுள்ளது. இதன் காரணமாகத் தான், நான் நமது சமயத்தை உலகில் தலை சிறந்தது என்று அழைக்கிறேன். ¶மிகவும் பழமை வாய்ந்த இந்த சமயம், வெகு தொலைவில் இருக்கும் வருங்காலத்திற்கு பொருத்தமாக இருந்து, தொழில்நுட்ப யுகத்திற்கு மிகவும் பொருத்தமாக விளங்குகிறது. ஒரு துடிப்புணர்வுள்ள மதமாக இன்று இந்து மதம் இருப்பதைப் போல, நாம் அதை

பொதுமக்களிடம் வெளிப்படுத்த வேண்டும். அப்போது அது போற்றத்தக்க எதிர்காலங்களில் வலுவாக நிலைத்து நிற்கும். சைவ சமயத்திற்கு ஒரு வலுவான மற்றும் ஒரு நேர்மறையான மனதை கொண்ட உற்சாகமுள்ள இளைஞர்கள் நமக்கு தேவைப்படுகிறார்கள். இந்த முயற்சியில், நாம் வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கி வைக்கும் போது, நம்மால் ஒன்று சேர்ந்து வலுவான திட்டங்களில் பணிபுரிய முடிகிறது மற்றும் அதன் மூலம் முன்னேற்றம் பிறக்கிறது. அந்த முன்னேற்றம் மற்றவர்களை ஊக்குவித்து, அவர்களை உற்சாகப்படுத்தி, அடுத்தடுத்து வரும் தலைமுறைகளுக்கு பயன் தரும் வகையில், தொழில்நுட்ப யுகத்தில் சைவ சமயத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரமுடியும் என்பதை அவர்களுக்கு தெரிவிக்க முடிகிறது. ¶கடந்தகாலத்தில் தொலைந்துவிட்ட ஒரு மதத்தை நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் பின்பற்றுபவர்களுக்கு, வழிகாட்டும் வகையில் முறையாக வழங்கப்படவில்லை என்றால் என்னவாகும்? பல பிரச்சனைகள் தோன்றும். அந்த மதத்தை சேர்ந்த இளைஞர்கள் அதை வழக்கொழிந்ததாக கருதி, அதை புறக்கணித்து லௌகீகத்தில் ஈடுபட்டு, பெரும்பாலும் *அதர்ம* நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்கள் சைவ நெறியை விட்டு விலகுகின்றனர். குடும்பங்கள் பிரிகின்றன, நண்பர்கள் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர், மற்றும் மக்கள் தங்கள் குழுக்களுடனும் மற்றவர்களுடனும் சண்டையிடுகின்றனர். நன்னெறி இல்லாத இடங்களில் மோசமான குடிமகன்கள் உருவாகிறார்கள். குழப்பம் மற்றும் அதிருப்தி ஆதிக்கம் செலுத்தி, நாடு முழுவதும் அவதிப்படுகிறது. மத நெறிகள் மறக்கப்பட்டு, முறையான நடத்தைகள் மக்களுக்கு தெரியாமல் இருக்கும் போது பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. அவர்கள் மகிழ்ச்சி இல்லாமல், பதட்டத்துடன், உறுதி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் சார்ந்து இருப்பதற்கு எதுவும் இருப்பதில்லை, மற்றும் இக்கட்டான சூழ்நிலையில் ஆதரவை தேடி செல்வதற்கு யாரும் இருப்பதில்லை. இதனால் சித்ரவதை, விவாகரத்து, தற்கொலை, வியாதி மற்றும் சோகமான அனுபவங்கள் மற்றும் நரக வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ¶ஒரு மதத்தை சாராமல் இருப்பவர்களின் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. சமீபத்தில் அமெரிக்க வாழ் மக்களின் வாழ்க்கையில் மதம் ஏற்படுத்திய தாக்கத்தை கண்டறிய, பெரிய பொருள் செலவில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சமூகத்தில் பல்வேறு நிலைகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான மக்களிடம் அவர்களின் மதம், அவர்கள் செய்யும் பணி மற்றும் அவர்களின் குடும்ப வாழ்க்கை பற்றி நேர்காணல் நடத்தப்பட்டது. ஆன்மீக வாழ்க்கை இல்லாதவர்களுடன் ஒப்பிடும் போது, ஒரு மதத்தை உண்மையில் பின்பற்றியவர்களின் வாழ்க்கை அதிக மகிழ்ச்சிகரமாகவும், அதிக செல்வம் மற்றும் அதிக ஆரோக்கியத்துடனும் இருப்பதாகவும், அந்த ஆய்வின் மூலம் தெரிய வந்தது. எந்த மதத்தையும் சாராது இருப்பவர்களின் குடும்பத்தில் மகிழ்ச்சி குறைவாக இருப்பதாகவும், அவர்களின் வணிகம்

மற்றும் தனிப்பட்ட உறவுகளில் வெற்றி குறைவாக இருப்பதாகவும், அவர்கள் பதட்டம், அழுத்தம் மற்றும் நலிசோர்வால் அதிக வேதனையை அனுபவிக்கிறார்கள் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்தனர். நாம் அந்த தகவலின் மீது தீவிர கவனம் செலுத்தி, நாம் நமது ஆன்மீக வாழ்க்கையை அனைத்து வகைகளிலும் முழுமையாக வாழ முடிவு செய்ய வேண்டும். அரைகுறை மனதுடன் முரணான இரட்டை வாழ்க்கையை வாழ்வதன் மூலம், நாம் தீவிர பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை உணர வேண்டும். அதனால் நாம் சைவ தர்மத்தை பாதுகாத்து, அதை தொழில்நுட்ப யுகத்தில் வழிநடத்தி செல்வது, தனிநபருக்கும் நாட்டுக்கும் முக்கியம் ஆகும்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 345

எதிர்கால

சமயம்

பல வருடங்களுக்கு முன்பு எனக்கு சைவ சமயம் பற்றி ஒரு அழகான விளக்கம் அளிக்கப்பட்டது. சைவ சமயம் என்பது நெய் போன்றது என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது. பசுமாடு நாள் முழுவதும் புல்வெளியில் மேய்ந்து, பல லிட்டர் கணக்கில் பாலை தருகிறது. அந்த பால் பண்ணையில் பதப்படுத்தப்பட்டு, அதிலிருந்து பாலாடை பிரிக்கப்படுகிறது. அதை கடைந்து வெண்ணெய் தயாராகிறது. இறுதியில் அந்த வெண்ணெயை உருக்கி சிறிய அளவில் தயாராகும் நெய், பாலின் சாரமாக விளங்குகிறது. அந்த நெய் போன்று, சைவ சமயம் மதத்தின் சாரமாக விளங்குகிறது. ¶கடந்த சில வருடங்களாக மக்கள் இந்த நெய்யை பாதுகாப்பாக வைத்து இருந்து அதை ருசிக்காமல், அதை ஒரு பித்தளை பானையில் ஊற்றி, அதனை மேற்கத்திய பகுத்தறிவுவாதம் மற்றும் மரபு சாரா இந்து மதம், ஆச்சாரமற்ற வழக்கங்கள் மற்றும் அனைத்து வகை நம்பிக்கைகள் மூலம் பலவீனமாக்கி வருவதை நான் கவனித்து வருகிறேன். அந்த அபூர்வமான நெய், கொழுப்பு நிறைந்த நீராக மாற்றப்பட்டுள்ளதால், அது பயனற்று போகிறது. அதனால் இந்த முறையில் நமது மதம் பலவீனம் அடைவதை நிறுத்தி, சைவ சமயத்தை பாதுகாத்து மேலும் மேம்படுத்த வேண்டும் என்று உலகில் இருக்கும் சைவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். மேற்கத்திய தாக்கங்கள் மூலமாகவும், நமது மதத்தவர்களை வேற்று மதத்திற்கு மாற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மூலமாகவும், கோயில் வழிபாடு மற்றும் மதப்பிரிவு சார்ந்த வழக்கங்களை அழிக்க முயலும் மரபு சாரா இந்து மதத்தின் மூலமாகவும், இறுதியில் மிகவும் முக்கியமாக நமது அலட்சியப்போக்கு காரணமாகவும், இந்த பலவீனம் உருவாக்கப்படுகிறது. ¶உலகில் இருக்கும்

சைவர்கள் ஒன்று சேர்வதால் மட்டுமே, இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும். இந்த பிரச்சனைகளைப் புரிந்துகொள்வது அல்லது அதைப் பற்றி புகார் கூறுவது மட்டுமே போதாது. அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது மட்டும் போதாது. நாம் ஒரு திட்டம், குறிக்கோள், விடாமுயற்சி மற்றும் உந்துதலை கொண்டு இருக்கவேண்டும். சைவ சமயத்தை எதிர்கால சமயமாக மாற்றி, அதை விவசாய யுகத்தில் இருந்து தொழில்நுட்ப யுகத்திற்கு கொண்டு வருவதற்கு, நாம் ஒரு நேர்மறையான மனம், ஒரு யதார்த்தமான அணுகுமுறை மற்றும் வலுவான மன விருப்பத்துடன் அந்த திட்டத்தை முன்மொழிய வேண்டும். ¶நாம் இந்த தொழில்நுட்ப யுகத்தில் முன்னேற்றம் பெறுவதற்கு, நாம் நமது சமயம் மற்றும் கலாச்சாரத்தை கைவிடவேண்டும் என்ற தவறான கருத்து இன்று இலங்கையில் நிலவி வருகிறது. இது ஒரு தவறான சிந்தனை ஆகும். மதம் என்பது தொழில்நுட்பத்திற்கு முரணாக இல்லாமல், அதை மேம்படுத்தி, அதற்கு சமநிலை மற்றும் குறிக்கோளை வழங்குகிறது. ஒரு இளம் ஆண் அல்லது இளம் பெண் மேற்கத்திய கல்வியை பெற்றதும், தனக்கு பழைய பாரம்பரியங்கள் பொருந்தாது என்று நினைக்கும் அவர்கள், இறைவன் மற்றும் மகாதேவர்கள் வழிபாட்டை அவமானமாக கருதுகிறார்கள். இது முறையற்றது என்று எடுத்து கூறும் ஆன்மீக தலைவர்கள் எங்கே சென்றார்கள்? இந்த தலைசிறந்த யுகத்திற்கு மிகவும் பொருத்தமான சமயமாக, இன்றைய அறிவியலின் அதிநவீன கோட்பாடுகளுடன் அதிக இணக்கத்துடன் இருந்து, அதை காட்டிலும் மேம்பட்டு இருக்கிறது என்று சைவ சமயத்தை பற்றி நமது சமயத் தலைவர்கள் உபதேசம் வழங்காமல் இருப்பது அதிக வருத்தம் தருவதாக இருக்கிறது. ¶பாலி நாட்டில், தொழில்நுட்ப யுகம் மதத்தின் மீது ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆனால் தங்கள் மாறுபட்ட வாழ்முறைக்கு தொழில்நுட்பம் சேவை செய்யும் வகையில், அதை சைவ சமய தலைவர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துகிறார்கள். அந்த நாட்டில் சைவ பாரம்பரியங்களுக்கு மதிப்பு அளிக்கப்பட்டு பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பு ஒரு அமெரிக்க தேசிய தொலைக்காட்சியில், ஏகாதச ருத்ரா என்கிற பாலி நாட்டு சிவன் பண்டிகை சிறப்பாக ஒளிபரப்பப்பட்டது. மிகப்பெரிய அளவில் நடைபெற்ற அந்த கொண்டாட்டம், நூறு வருடங்களுக்கு ஒரு முறை பத்து நாட்களுக்கு நடைபெறுகிறது. பாலி நாட்டு பூசாரியிடம் நடந்த நேர்காணலின் போது, "நாங்கள் பாலியில் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறோம். அது எங்கள் மீது ஆதிக்கம் செலுத்தவில்லை," என்று அவர் கூறினார். இங்கே இலங்கையில் பலர் மீது தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு அபாயகரமான போக்காக விளங்குகிறது. இதை முறையான கல்வி மூலம் மாற்றி அமைக்கவில்லை என்றால், அது தூண்டுதலை பெறுகிறது மற்றும் மாற்றங்கள் மிகவும் விரைவாக நடைபெறுகின்றன. அந்த மாற்றங்கள் நேர்மறை மாற்றங்களாக

இல்லாமல், மக்கள் மற்றும் நாட்டின் சமய பண்பை அழிக்கும் எதிர்மறை மாற்றங்களாக விளங்குகின்றன.

புதன்கிழமை

பாடம் 346

முரணான இரட்டை

வாழ்முறை

தாங்கள் வாழும் வாழ்க்கையை புனிதமாக மற்றும் புனிதமற்றதாக பிரிப்பது, தெய்வ பக்தியுடன் இருக்கும் இந்துக்களுக்கு கடினமாக இருக்கிறது. அவர்கள் வாழும் வாழ்க்கை தெய்வீக வெளிப்பாடுகள் நிரம்பி இருக்கிறது. இவ்வாறு இந்து தர்ம கலை புனிதமான கலையாக விளங்குகிறது, இந்து தர்ம இசை தெய்வீக இசையாக விளங்குகிறது. பக்தியுள்ள இந்துவிற்கு அவன் செய்யும் தொழிலும், வெறும் வாழ்வாதாரமாக விளங்காமல், இறைவன், சமூகத்திற்கு செய்யும் சேவையாகவும் மனித நேயத்திற்கு செய்யும் உதவியாகவும் விளங்குகிறது. ¶ஆனால் இந்துக்கள் அனைவரும் தாங்கள் விரும்பிய வாழ்க்கையை முழுமையாக வாழ முடிவதில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்றைய உலகில் முரணான இரட்டை வாழ்க்கை வளர்ச்சி பெற்றுள்ளது. ஆனால் அதே சமயத்தில் கோயில் மற்றும் வீட்டில் ஒரே மாதிரியாக இருந்து, வீட்டு வாழ்க்கையும் கோயிலில் நடந்துகொள்ளும் முறையும் இணக்கத்துடன் இருந்து, ஐரோப்பாவில் வாழ்ந்தாலும் அல்லது ஒரு இந்திய கிராமத்தில் வாழ்ந்தாலும், ஒரே மாதிரியாக வாழ்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சிலர் சூழ்நிலை அனுகூலமாக இருக்கும் இந்துக்களாகவும், அவ்வாறு இல்லாத போது வேறு மாதிரியாக இருப்பவர்களும் இருக்கிறார்கள். பல இந்துக்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை அனுப்பும் காலகட்டத்திலும் அவ்வப்போதும், ஒருவர் தன்னை கவனமாக ஆய்வு செய்வது பயன் தருவதாக இருக்கும். அவர்கள் இசுலாம் அல்லது யூத மதத்தின் புனிதமான நாட்களை அங்கீகரிக்கும் வகையில், அந்த வாழ்த்து அட்டைகளை அனுப்புகிறார்களா? இல்லை. ஆனால் அவர்கள் கிறித்துவ பள்ளிகளில் படித்து இருப்பதால், கிறித்துவ அட்டைகளை அனுப்புவது முறையென்று அவர்களுக்கு தோன்றுகிறது. அகத்தில் கிறித்துவராகவும் புறத்தில் இந்துவாகவும் வாழ்க்கையை நாம் முரணான இரட்டை வாழ்க்கை என்று அழைக்கிறோம். கோயிலில் பொங்கலும் சுண்டலும் சாப்பிட்டு, வீட்டிற்கு வரும் வழியில் பிக் மாக் பீஃப் பர்கர் சாப்பிடுவது. மற்ற மதத்தை சார்ந்த பள்ளி நண்பர்கள், அருகில் வசிப்பவர்கள், சகாக்கள், தொழில்முறை நண்பர்கள் அல்லது வாடிக்கையாளர்களுடன் அன்பாகவும்

கண்ணியமாகவும் நடந்துக்கொள்வதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்றாலும், அதற்காக நாம் நமது இந்து மத அடையாளத்தை எப்போதும் விட்டுக்கொடுக்க முடியாது. அதற்கு பதிலாக மதம் சாராமல் நடுநிலையுடன் இருக்கும் வாழ்த்து அட்டைகளை அனுப்பலாம். ¶அதிஷ்டவசமாக, இந்த முரணான வாழ்முறை மாறிக்கொண்டு இருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் இருக்கும் இந்துக்களும் தங்கள் கலாச்சாரத்தை அதிக நம்பிக்கையுடன் வாழத் தொடங்கியுள்ளனர். நான் சமீபத்தில் கனடா மற்றும் கலிஃபோர்னியா பகுதிகளில் உரையாட சென்று இருந்த போது தங்கள் வீடு, பணியிடம், கோயில் மற்றும் கனவுகளிலும் நூறு சதவீதம் முழுமையான இந்துவாக வாழவேண்டும் என்ற விழிப்புணர்வு முதியவர்கள் தலைமுறையில் தோன்றியுள்ளதை கவனித்தேன். இந்த அணுகுமுறையை அவர்கள் தங்கள் குழந்தைகளின் நலனுக்காக பின்பற்றுவதாக கூறினார்கள். நான் டொரன்டோவில் சென்ற கோயில் நிர்வாகிகள், தங்கள் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பின்வரும் ஆடை கட்டுப்பாட்டை விதித்து இருந்தது. ஷார்ட்ஸ், ஸ்லாக்ஸ், ஸ்கர்ட் போன்றவை இல்லாமல் பெண்களுக்கு நேர்த்தியான உடைகள் மட்டும். ஆண்களுக்கு பாரம்பரிய ஆடைகள் மட்டும். இதை பின்பற்றாதவர்களுக்கு கோயிலில் அனுமதி இல்லை. முதலில் சில எதிர்ப்புக்களை சந்திக்க வேண்டி இருந்தது என்று நிர்வாகம் என்னிடம் கூறியது. இன்று கோயிலில் இறைவனை வழிபடுவதற்கு டி-ஷர்ட் மற்றும் இறுக்கமான ஜீன்ஸ் அணிய அனுமதி இல்லை என்றால், சிலர் கோயிலுக்கு வருவதே இல்லை. ஆனால் முரணான வாழ்க்கை விரும்பாதவர்கள், கோயிலில் கண்ணியமில்லாமல் உடை அணிந்து வருபவர்களை தவிர்க்க விரும்பியவர்கள், இன்று கோயிலுக்கு வராதவர்கள் இடத்தை நிரப்பி இருக்கிறார்கள். இந்த ஆடை காட்டுப்பாடு தன்னுடன் மற்ற நன்மைகளை வழங்கியுள்ளது. உதாரணத்திற்கு தினமும் மாலைநேர பூஜைக்கு முன்பாக, கோயிலில் கூடியிருக்கும் இருநூறு அல்லது முன்னூறு பக்தர்கள், ஒரு மணிநேரம் அமைதியாக அமர்ந்து தியானம் செய்கிறார்கள். தாங்கள் நிர்வகிக்கும் கோயிலின் சுத்தம், ஒழுங்கு மற்றும் கட்டுப்பாட்டின் மீது நிர்வாகிகள் அபிமானத்துடன் இருக்கின்றனர். எனது குழுவினர் வேறொரு இடத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கிவிட்டு அந்த கோயிலுக்கு வந்தனர். அந்த கோயிலின் சமையல் அறை மற்றும் உணவு அருந்தும் அறைகள் மிகவும் சுத்தமாக இருந்தன. இம்முறையில் நமது பாரம்பரியம் முழுவதையும் மேம்படுத்துவதற்கு மற்ற சமூகங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ¶"அணியும் ஆடையின் மூலம் ஒரு ஆண் மதிப்பிடப்படுகிறான்," என்று பொருள்படும் இலத்தீன் பழமொழி ஒன்றுள்ளது. இதைப்போன்று பெண் அவள் அணியும் ஆடை மூலம் மதிப்பிடப்படுகிறாள் என்றும் கூறலாம். உலகெங்கும் இருக்கும் பல கோயில்கள், *ஆசிரமங்கள்* மற்றும் *மடங்களிலும்* ஆடைக் கட்டுப்பாடு ஒரு முக்கிய பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது. இந்த பிரச்சனை இந்து

மதத்தில் மட்டுமல்லாமல், மற்ற மதங்களிலும் பேசப்பட்டு வருகிறது. ¶சர்வதேச விமான நிலையங்களுக்கு வரும் மக்கள் பல்வேறு ஆடைகளை அணிந்து வருகிறார்கள். ஓபரா நாடக அரங்கின் பின்புறம் போல காட்சி அளிக்கும், இன்றைய விமான நிலையங்களுக்கு போலி வேடத்தில் இருக்கும் நடிகர்கள் அணிவகுத்து வராமல், வரிசையாக அணிவகுத்து வரும் மக்கள் அணியும் ஆடையின் மூலம் அவர்களை கணிக்க முடிகிறது. லௌகீகத்தில் ஈடுபாடுள்ளவர் ஒரு சட்டை மற்றும் கழுத்துப்பட்டை அணிந்து இருக்கிறார். இசுலாமியர்கள் நேர்த்தியாக உடை அணிந்து வருகிறார்கள். ஆப்பிரிக்க பழங்குடியினர் பல வண்ணங்களிலும், ஜப்பான் நாட்டு தொல்மரபு சமயத்தை சார்ந்தவர்கள் கம்பீரமாகவும், அடக்கமான பௌத்த சமயத்தவர்கள் தங்கள் பாரம்பரிய உடையிலும் வருகிறார்கள். கத்தோலிக்கர்கள் அடக்கமான முறையிலும், பிராடஸ்டண்டு இயல்பான முறையிலும் தென்படுகின்றனர். ஒரு இருத்தலியல்வாதியை உடனடியாக அடையாளம் காணமுடியும். பங்க்ராக் அல்லது ஹிப்பி கலாச்சாரம் சேர்ந்தவர்களையும் எளிதில் அடையாளம் காணமுடியும். ஒரு *குர்தா* சட்டை, தோளில் ஒரு சால்வை மற்றும் தளர்வாக கால்சட்டை அணிந்து இருந்தால், அவர் கண்டிப்பாக இந்துவாக தான் இருப்பார். இவருக்கு பொருத்தமாக அவர் மனைவி ஒரு புடவை அல்லது பஞ்சாபி உடை அணிந்து இருப்பார்.

வியாழக்கிழமை

பாடம் 347

உங்கள் மதநம்பிக்கையை

பின்பற்றுதல்

நாம் அணியும் ஆடைகள் நமது சிந்தனைமுறைகள், கலாச்சார நடத்தை மற்றும் நட்புறவை வடிவமைக்கின்றன. ஆடைகள் நமது மனநிலைகள் மற்றும் மனவெழுச்சிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, நம்மை பற்றி அறிவிக்கின்றன. நீங்கள் உங்கள் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் ஆடையை அணிந்து இருங்கள். உங்கள் பணியிடம் அனுமதி வழங்கினால், அங்கும் உங்கள் பாரம்பரிய ஆடையை அணிந்து கொள்ளுங்கள். அதைப்பற்றி உலகம் தெரிந்துகொள்ளட்டும். அதில் நெற்றியில் பூசும் விபூதி, இந்து சம்பிரதாய நகைகள், தாலி சரடு, மெட்டி, தோடுகள் மற்றும் மணிமாலையும் அடங்கும். இந்து பாரம்பரிய ஆடை அணிவது உட்பட, ஒரு இந்துவாக இருப்பதற்கு அஞ்ச வேண்டாம் என்பதையே நான் கூற விரும்புகிறேன். ¶உங்கள் மதநம்பிக்கையை உலகிற்கு தைரியமாக தெரியப்படுத்துங்கள். மற்றவர்கள் தங்கள் மதநம்பிக்கைக்கு ஆதரவு அளிக்கிறார்கள். ஜனவரி 1991 மாஸ்கோவில்

நடைபெற்ற மனித வாழ்வுவளம் பற்றிய சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட பல ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களை என்னால் என்றுமே மறக்க முடியாது. அந்த தலைவர்களில் பலர் மேற்கத்திய ஆடைகள் மற்றும் கழுத்துப்பட்டைகளுடன் இருந்ததால், அவர்களில் யார் மேற்கத்திய நாட்டை சேர்ந்தவர், யார் ஆப்பிரிக்கா நாட்டை அல்லது இந்தியாவை சேர்ந்தவர் என்று கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. அதில் யார் மதத்தலைவர் மற்றும் யார் அரசியல் தலைவர் என்று கண்டுபிடிப்பதும் கடினமாக இருந்தது. ஆனால் 2000 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபையில் மதத்தலைவர்கள் பங்குபெற்ற மில்லினியம் அமைதி மாநாட்டில் பெரும்பாலானோர் தங்கள் பாரம்பரிய ஆடையில் வந்து இருந்தனர். அவர்கள் யார், எங்கிருந்து வருகிறார்கள் மற்றும் அவர்கள் எதற்கு பிரதிநிதித்துவம் செய்கிறார்கள் என்பதை என்னால் உடனடியாக அறிய முடிந்தது. அவர்கள் தங்கள் பாரம்பரியத்தின் மீது அபிமானத்துடன் இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் அதை காப்பாற்றும் எண்ணத்துடன் இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அணிந்து இருந்த ஆடைகள் வெளிப்படுத்தி வலுவான தகவலை வழங்கிக்கொண்டு இருந்தன. மந்தமான ஒற்றுமையை பாதுகாப்பு என்று தவறாக கருதும் இந்த உலகில், அத்தகைய வலிமையை பார்ப்பதற்கு அருமையாக இருந்தது. ¶"எனது ஆசிரமம் ஹிப்பிக்கள் கூடி வாழும் இடமாக இருக்க வேண்டுமா அல்லது சிரத்தையுடன் *யோகாப்பியாசம்* செய்யும் இடமாக இருக்க வேண்டுமா? நமது கோயில்கள் ஜீன்ஸ் கால் சட்டைகளின் விளம்பர பலகைகள் போன்று இருக்க வேண்டுமா?" என்று கோயில் சங்கங்கள் மற்றும் சான்றோர்கள் மற்றும் *சுவாமிகள்* மற்றும் *குருமார்கள்* தீவிரமாக சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். "கோயிலில் இருக்கும் இறைவன், நான் எந்த ஆடையில் வருகிறேன் என்பதை கவனிப்பது இல்லை. அகத்தில் நான் சுத்தமாக இருப்பது தான் முக்கியம்," என்று பலர் கூறுகிறார்கள். அது ஒரு பலவீனமான காரணமாக இருக்கிறது. ஒருவர் புறத்தில் ஒன்றாகவும் அகத்தில் வேறு ஒன்றாகவும் இருக்க வாய்ப்பில்லை. அகமும் புறமும் நாமாகத் தான் இருக்கிறோம். நேர்த்தியான உணவகங்களுக்கு செல்ல, மேலங்கி மற்றும் கழுத்துப் பட்டைகளை அணிந்து செல்லவேண்டி உள்ளது. அவர்கள் அவற்றை நுழையும் போது வாடகைக்கு தருகிறார்கள். இன்று பாலி நாட்டு கோயில்களில் நடைபெறுவதை போல, கோயில்களுக்கு டி-சட்டை மற்றும் ஷார்ட்ஸ் அணிந்து வருபவர்களுக்கு, நாம் இடுப்பில் சுற்றிக்கொள்ள துண்டும் தோளில் போர்த்திக்கொள்ள சால்வையும் வாடகைக்கு வழங்க வேண்டும். இன்றைய நடைமுறையை பார்க்கும் போது, ஒரு நாள் கோயிலில் இருக்கும் தெய்வங்களும், பின்னால் திருப்பி விடப்பட்ட பேஸ்பால் தொப்பி, டீ-சட்டை மற்றும் பாக்கி கால்சட்டை அணிந்து இருப்பார்கள் என்று தோன்றுகிறது. இது இந்த சர்ச்சைக்கு சரியான முடிவாக தோன்றுகிறது அல்லவா? ¶மேற்கத்திய கேசுவல் வேர் ஆடைகளை அணியாமல், இந்திய புடைவையை அணியும் போது, தங்கள் சிந்தனை மற்றும் செயல்பாடு மாறுபட்டு

இருப்பதாக பெண்கள் கருதுகிறார்கள். இன்னொரு புறம், மேற்கத்திய மேல் அங்கிகள், சட்டைகள் மற்றும் கால் சட்டைகளை காட்டிலும் இந்திய பாரம்பரிய ஆடையில் ஆண்கள் அருமையாக காட்சி அளிக்கிறார்கள். ஆனால் இந்து பாரம்பரிய ஆடைகளை அணிவதற்கு, குறிப்பாக ஆண்கள் கூச்சப்படுகிறார்கள். அதற்கு அவசியம் இல்லை. ஒரு இளம் பெண் சென்ற கோடைகாலத்தில், தனது பாரம்பரிய பஞ்சாபி உடைகளில் கல்லூரிக்கு செல்வதைப் பற்றி யோசித்துக்கொண்டு இருந்தாள். ஆனால் அவள் இறுதியில் அந்த ஆடையை அணிந்து கல்லூரிக்கு சென்றாள். நான்கு நாட்களுக்குள் அவளுடன் சேர்ந்து படிக்கும் மாணவர்கள், "இந்த ஆடையின் பெயர் என்ன? எங்களுக்கும் இதைப் போன்று ஒன்று வேண்டும். இது மிகவும் அழகாக இருக்கிறது," என்று கேட்க ஆரம்பித்தனர். நாம் தேவையில்லாமல் நம்மை அதிகம் குழப்பிக் கொள்கிறோம்! ¶"ஆடைகளில் நமது பெண்களின் புடவைக்கும், ஆண்களின் *சோகா* மற்றும் தலைப்பாகைக்கு ஈடு இணை வேறு எதுவும் இல்லை. இயல்பான மடிப்புக்களுடன் இருக்கும் தளர்வான ஆடைகளில் தென்படும் அழகு இறுக்கமான ஆடைகளில் இருப்பதில்லை," என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார். தங்கள் பாரம்பரிய ஆடைகளில் இருக்கும் இந்துக்கள், இந்துக்களை போன்று நடந்துக்கொள்கிறார்கள். நமது ஆடைகள் நமது மனநிலைகள், உணர்ச்சிகள் மற்றும் நமது தோழர்களின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை தவறாக மதிப்பிடவேண்டாம். இதைப்பற்றி பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

வெள்ளிக்கிழமை

பாடம் 348

களங்கம் விளைவிப்பவர்கள் மீது

கவனம்

ஒவ்வொரு நாடு, கிராமம், நிறுவனம், சமூகம் மற்றும் ஒவ்வொரு சிறிய குழுவும் சாதிப்பதற்கு சில இலக்குகள், பின்பற்றி வாழ்வதற்கு உன்னத பண்புகள் மற்றும் பூர்த்தி செய்வதற்கு ஒரு பணியை கொண்டு அமைந்துள்ளது. ஆனால் சிறியதாக அல்லது பெரியதாக இருக்கும் ஒவ்வொரு நிறுவனமும் மற்றும் குழுவும், அதற்கு களங்கம் விளைவிப்பவர்களையும் கொண்டு அமைந்துள்ளது. அவர்கள் வழக்கமாக நல்ல நட்புணர்வுடன், அன்பாகவும் சகஜமாகவும் வேடிக்கையாகவும் பேசுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் நல்ல புத்திகூர்மையுடனும், குழுவில் இருக்கும் பெரும்பாலானோரைக் காட்டிலும் அதிக லௌகீக அனுபவத்தை பெற்று இருப்பார்கள். அவர்கள் ஒரு கூட்டத்தை தொடங்கி, அதில் உற்சாக சூழலை உருவாக்கி, *பிரசாதத்தை*

வழங்கிக்கொண்டு விரைவாக பேசும் திறமையை பெற்று இருப்பார்கள். ஒரு கோயில் நிர்மாணமாக இருக்கட்டும், ஒரு பத்திரிகையை விளம்பரப்படுத்துவதாக இருக்கட்டும், மழைக்காடுகளை பாதுகாப்பது அல்லது இந்து சமூகத்தை பாரம்பரிய வாழ்முறை, கலாச்சாரம் மற்றும் கலைகளுடன் மாற்றி அமைப்பது என்று எதுவாக இருந்தாலும், அவர்களின் ஆற்றலும் உத்வேகமும் நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு உதவியாக இருக்கும் என்று மக்கள் நம்புவதால், அவர்கள் மிகவும் பிரபலமாக இருக்கிறார்கள், மற்றும் அவர்கள் ஒவ்வொரு செயற்குழு மற்றும் அறங்காவலர் குழுவிலும் நல்ல வரவேற்பை பெறுகிறார்கள். ¶அவர்கள் சகஜமாக பழகும் திறமையால் விரைவாக தனது சமூகத்தின் படிநிலைகளில் உயர்வை பெறுகிறார்கள். அவர்கள் ஒரு நல்ல நிலைக்கு வந்த பிறகு, அவர்கள் தங்கள் அமைப்புக்கு தொடர்பு இல்லாத விஷயங்கள் மீது விவேகமாக பேச ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கினால், அவர்கள் செல்வம் அதிகம் இல்லாத *ஆசிரமத்தை* ஒரு நல்ல வருங்கால வியாபாரமாக மாற்றி, அதன் மூலம் சுயநலமற்ற பணிவான சேவையின் முதன்மையான மற்றும் புனிதமான தூண்டுதலை பலவீனப்படுத்தி விடுகிறார்கள். அவர்கள் இறை வழிபாட்டில் ஈடுபட்டாலும், அது பெரும்பாலும் யதார்த்தமாக இல்லாமல், ஒரு மதசார்ப்புள்ள குழுவில் நிலைத்து இருக்க தேவையான குறைந்தபட்ச தகுதிகளுடன் இருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு திட்டப்பணி வழங்கப்பட்டால், ஒரு மின்னஞ்சலை தாமதமாக அனுப்பி அதனை பயனற்றதாக செய்வது அல்லது அதை அனுப்பாமல் விட்டு விடுவதைப் போன்று அவர்கள் தடைகளை ஏற்படுத்துவார்கள் அல்லது காலம் கடத்துவார்கள். அவர்கள் எல்லோர் மதிப்பையும் பெற்ற "புக் ஆஃப் எக்ஸ்கியுசஸ்" புத்தகத்தை படித்து இருப்பதால், அவர்கள் தங்கள் செயல்களுக்கு எப்போதும் ஒரு நல்ல காரணத்தை கொண்டு இருக்கிறார்கள். எல்லோரும் விரும்பும் ஒரு திட்டப்பணி சாத்தியமற்றது என்று ஒரு கூட்டத்தில் இருப்பவர்களின் கவனத்தை கவரும் வகையில் பேசுவதில், அவர்கள் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். ஒரு நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் பணி மற்றும் அதில் தங்களது பங்கு பற்றி எல்லோரையும் கேள்வி கேட்க தூண்டிவிடுவதிலும் அவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் குழுவின் அங்கீகாரம் பெற்ற குறிக்கோளை தங்களது சொந்த கருத்துக்களுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் அளவிற்கு சாமர்த்தியமாக செயல்படுகிறார்கள். காரணம் சொல்வதில் அரசர்களாக விளங்கும் இவர்கள், மற்றவர்கள் குழுவில் பொருந்திக் கொள்வதில் தடைகளை ஏற்படுத்த பல சூழ்ச்சிகளை செய்து, குழுவின் சிந்தனையில் குழப்பத்தை ஏற்படுத்தி அதன் பொறுப்பை பலவீனப்படுத்துவதற்கு தேவையற்ற மாற்று வழிகள் மற்றும் வாய்ப்புக்களை கொண்டு வருவதற்கு அதிக முயற்சிகளை மேற்கொள்வார்கள். இவை அனைத்தும் மிகைப்படுத்தப்பட்டு, அதிகம் பொதுமைபடுத்தப்பட்டதாக தோன்றினாலும், அவை அனைத்தும் உண்மை என்று எனது அனுபவ அறிவுடன் என்னால் உறுதி அளிக்க முடியும். ¶நண்பர்களே, இவர்கள் தான் களங்கம்

விளைவிப்பவர்கள். அவர்கள் நண்பர்கள் போல தோன்றினாலும், அவர்கள் நண்பர்கள் இல்லை. அவர்களில் மிகவும் மோசமானவர்கள், முதலில் பலவீனப்படுத்தி பிறகு படிப்படியாக அழிவை ஏற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தும் *அசுர* சக்திகளால் வழிநடத்தப்படுகிறார்கள் என்று நான் கூற விரும்புகிறேன். அவர்கள் யாரை சந்திக்க வேண்டும் மற்றும் யாரை சந்திக்ககூடாது மற்றும் அவர்கள் எதை சொல்லவேண்டும் மற்றும் எதை சொல்லக் கூடாது என்று அட்டவணைகள் அமைத்து அதன் மூலம் *சுவாமிகள், பண்டிதர்கள், புரோகிதர்கள்* மற்றும் *குரு* போன்ற மதத் தலைவர்களை களங்கம் விளைவிப்பவர்கள் முதலில் கட்டுப்படுத்தி பிறகு அவர்கள் செயல்பாட்டை ஒடுக்குகிறார்கள். அவர்கள் சில சமயங்களில், ஒரு மத சார்புள்ள அமைப்பு எழுதிய நூலை மக்கள் மனங்களில் இருந்து நீக்கி, அதன் நிறுவன தலைவரை பலவீனமாக்கி, அவரை சுவரில் தொங்கும் படமாக மாற்றி விடுவார்கள். ¶களங்கம் விளைவிப்பவர்கள் மீது தீவிர கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் ஒரு நாள் மனம் மாறி மதத்தை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டாம். அதற்கு வாய்ப்பு இல்லை. மத சார்புள்ள நோக்கத்தை பெரும்பாலும் சமூகம் சார்ந்த நோக்கமாக மாற்ற முயற்சி செய்யும் இவர்களுடன், தங்கள் குழுவின் குறிக்கோள்களுக்கு அர்ப்பணித்துக் கொண்ட பக்தர்கள், தெய்வீக மற்றும் *தார்மீக* முறைப்படி தொடர்பு கொள்வது தவறு ஆகும். அதற்கு மாறாக அவர்களை பிரித்து வைத்து, அவர்களை தர்மத்தின் எதிரிகளாகவும், நிறுவனரின் இலக்குகளின் மீது மற்றவர்கள் நம்பிக்கையை தக்க வைத்துக்கொள்ள அனுமதிக்காமல் தடைகளை ஏற்படுத்தும் பகைவர்களாகவும் கருத வேண்டும். குழுவினர்களில் யார் நிறுவனத்தின் இலக்குகளை பூர்த்தி செய்ய உறுதிமொழி எடுத்துள்ளார்கள் என்பதையும், நிறுவனத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் தடையை ஏற்படுத்தி, அந்த நிறுவனத்துடன் பொருந்தாமல் இருந்து, மற்றவர்களை தனது பாதையில் கொண்டு வர யார் சூழ்ச்சியுடன் செயல்படுகிறார்கள் என்பதையும், ஒவ்வொரு குழுவும் தீவிரமாக சோதனை மேற்கொள்ள வேண்டும். இன்று ஐந்து நிமிடங்கள், நாளை எட்டு நிமிடங்கள் என்று தொடர்ந்து நேரத்தை விரயம் செய்வது அவர்களுக்கு பிடித்தமான செய்முறை ஆகும். அவர்கள் செய்யும் தேவையற்ற செயல்கள் மற்றும் பொறுத்துக்கொள்ள முடியாத நுணுக்கமான பிடிவாதம் மூலம் அவர்கள் பணியில் பின்னடைவு, தாமதம் மற்றும் தடைகளை ஏற்படுத்துவதால், அவர்களின் இருப்பு எப்போதும் ஒரு சுமையாகவே இருக்கிறது. தாங்கள் முன்னேற்றம் பெறுவதற்கு கோபம், வெறுப்பு, புறங்கூறல் மற்றும் மனவெழுச்சிகளை சார்ந்து இருக்கும் இவர்களைப் போன்ற களங்கம் விளைவிப்பவர்கள் மூலம் *அசுர* சக்திகளின் முற்றுகை வெளிப்படுகிறது. அவர்களுக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டதும், பணிவாக தர்மத்தை பின்பற்றுவது மற்றும் நிறுவனத்தின் குறிக்கோளை பூர்த்தி செய்து வரும் பக்தர்களுக்கு தீவிர வேதனையை ஏற்படுத்தும் வகையில், அவர்கள் இந்த

நடத்தை முறையை மேலும் தீவிரமாக பயன்படுத்துகிறார்கள். இவர்களை நான் தீயவர்கள் என்று சொல்ல வரவில்லை, ஆனால் குழுவில் ஊடுருவி, அதை பலவீனப்படுத்தி அழிக்கும் நோக்குடன் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் மனங்களில் முற்றிலும் நல்ல எண்ணங்களை கொண்டு இருந்து குழுவின் மீது தாங்கள் ஏற்படுத்தும் எதிர்மறை தாக்கத்தை அறியாமல் இருக்கலாம். ஆனால் அதற்காக அவர்களை மன்னிக்க முடியாது. மதத்திற்கு செய்யும் சேவை பயனுள்ளதாக விளங்க, குழுவில் முழுமையாக இணக்கத்தை வலியுறுத்துவது முக்கியம் ஆகும். உபதேசங்கள் மனதின் ஆழத்திற்கு சென்று, வாழ்க்கையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, எல்லோருடைய *பிராண சக்திகளும்* சமமான அலை நீளத்தை கொண்டு இருக்கவேண்டும். எல்லோரும் தங்கள் உறுதிமொழிகள் மீது ஒரே மாதிரியான ஈடுபாட்டை கொண்டு இருந்து *ஆசிரமம்*, சமூகம், கோயில் அல்லது பணியின் குறிக்கோள்களை பூர்த்தி செய்ய ஒருமித்த மனஉறுதியுடன் இருக்க வேண்டும். ¶களங்கம் ஏற்படுத்துபவர்களை கண்டு அறிந்ததும், அவர்களை குழுவில் இருந்து எப்படி நீக்குவது என்பது ஒரு கேள்வி குறியாக விளங்குகிறது. அவர்களுக்கு நிறைய நண்பர்கள் இருக்கலாம், அவர்கள் முக்கிய பணிகளில் ஈடுபட்டு இருக்கலாம், அவர்கள் நிறைய செல்வத்தை வழங்கி குழுவில் நல்ல செல்வாக்கை பெற்று இருக்கலாம். களங்கம் விளைவிப்பவர்களை கண்டு கொண்டால், அவர்களை எதிர்க்க வேண்டாம். அவர்கள் மீது குற்றம் சுமத்த வேண்டாம். அவர்கள் மனதை மாற்ற முயற்சி செய்ய வேண்டாம். அவர்கள் மனம் மாறுவார்கள் என்று நம்பிக்கை வைக்கவும் வேண்டாம். நிறுவனத்தின் முதன்மையான குறிக்கோள்கள் மீது நிலைத்து இருங்கள். *தர்மத்தை* கடைப்பிடித்து விசுவாசமாக இருப்பவர்களுடன் இணைந்து இருங்கள். களங்கம் விளைவிப்பவர்கள் அமைதியாக வெளியேறட்டும் அல்லது தங்களுக்கு பொருத்தமான இன்னொரு குழுவில் சேரட்டும். அவர்கள் இல்லாமல், முக்கிய குறிக்கோள் பணி சீரான முன்னேற்றத்தை பெறும். மதசார்புள்ள அமைப்புக்கள் தங்கள் பொதுவான குறிக்கோள்களுக்கு ஆதரவு தெரிவிக்காத செல்வந்தர்கள் அல்லது செல்வாக்குள்ள ஆதரவாளர்கள் அல்லது உறுப்பினர்கள் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கக் கூடாது. ஒரு ஏழை விதவை உண்டியலில் செலுத்தும் ஒரு ரூபாயும், ஒரு செல்வந்தர் வழங்கும் லட்சக்கணக்கான பணத்தையும் அறங்காவலர்கள் சமமாக கருத வேண்டும்.

சனிக்கிழமை

பாடம் 349

கோயில் பூசாரிகளுக்கு

மரியாதை செலுத்துதல்

நாங்கள் சில மாதங்களுக்கு முன்பாக பெண்கள், குழந்தைகள், விலங்குகள் மற்றும் சுற்றுப்புறம் துன்புறுத்தப்படுவதைப் பற்றி பல குழுக்களுடன் பேசினோம். நாம் அக்கறை செலுத்தாமல், நமது தலையீடு இல்லாமல் மற்றும் பெரும்பாலும் நமக்கு தெரியாமல் இன்னொரு வகை துன்புறுத்தலை சிலர் அமைதியாக அனுபவித்து வருகின்றனர். நான் கோயிலில் பணிபுரியும் பூசாரியைப் பற்றி குறிப்பிடுகிறேன். அவர்கள் உலகம் முழுவதும் துன்புறுத்தலுக்கு ஆளாகி மோசமாக நடத்தப்படுகிறார்கள். பெரும்பாலும் ஒவ்வொரு வாரமும் என் கவனத்தை பெறுகின்ற இந்த வேதனைக்குரிய பிரச்சனைக்கு தீர்வு காண நான் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறேன். ¶நாம் இந்த அக்கிரமத்திற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. கோயில் நிர்வாகிகள், அறங்காவலர்கள் மற்றும் சில சமயம் பக்தர்களும், பூசாரிகள் என்று அழைக்கப்படும் இந்து புரோகிதர்களை, மனவெழுச்சி மற்றும் மனம் மற்றும் உடல் ரீதியாகவும் மோசமாக நடத்தி, அவர்களை அவமானப்படுத்தி கடுமையாக அடிக்கின்றனர். இது சரியில்லை என்று நம் எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் இதற்கு பூசாரிகளைத் தவிர, பெரும்பாலும் யாரும் எதிர்ப்பு தெரிவிப்பது இல்லை. படிப்பு அறிவு இல்லாத அவர்களால் மனப்பாடம் செய்த சடங்குகளை மட்டுமே செய்ய முடியும் என்று நிர்வாகம் கருதுவதால், அவர்களின் எதிர்ப்புக்களும் அவர்கள் தங்களது பாதுகாப்புக்கு மேற்கொள்ளும் முயற்சிகளும், யார் காதிலும் விழுவதில்லை. ஆனால் உண்மையில், இந்து சமய ஆன்மீக தலைமையின் இதயமாக விளங்கும் அவர்கள், உன்னத போராளிகளாக விளங்குகிறார்கள். ¶இந்தியாவிற்கு வெளியே பூசாரியை துன்புறுத்துவது மக்களின் பிரபல பொழுதுபோக்காக விளங்குகிறது. இந்தியாவில் பூசாரிகளுக்கு என்று ஒரு சங்கம் இருக்கிறது, மற்றும் சான்றோர்கள் அவர்களுக்கு குரல் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். இந்தியாவிற்கு வெளியே மக்கள் ஒரு பூசாரியை வெறுக்க ஆரம்பித்தால், அவர் சிறிய தவறை செய்தாலும், அவர் மீது கடுமையான குற்றங்கள் சுமத்தப்பட்டு, அவரை துன்புறுத்தி வெளியேற்றி விடுகிறார்கள். பணத்தை திருடினார் என்று குற்றம் சுமத்துவது பிரபலமாகவும் வழக்கமாக முதலில் பயன்படுத்தப்படும் தந்திரமாகவும் விளங்குகிறது. இந்த பட்டியல் மிகவும் நீளமாக இருக்கிறது. இதன் மூலம் நிர்வாகத்திற்கு அந்த பூசாரியை திட்டுவதற்கு, கீழே தள்ளுவதற்கு, அவரது தேவைகளை புறக்கணிப்பதற்கு, அவரை அவரது சகாக்கள் மத்தியில் அவமானப்படுத்துவதற்கும், பொதுமக்கள் முன்பாக இழிவுப்படுத்துவதற்கும் அனுமதி கிடைக்கிறது. ஆஸ்திரேலியாவில் பொதுமக்கள் முன்பாக, ஒரு பூசாரிக்கு இழைக்கப்பட்ட அதிர்ச்சிகரமான அவமானத்திற்கு பிறகு அவர் இரண்டு வாரங்கள் மருத்தவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். வெளிநாடுகளில் பூசாரிகள் இம்சிக்கப்படும் சம்பவங்கள் அதிகமாக இருப்பதால், அதை நாம் சாதரணமாக கருதக் கூடாது. இரக்க குணம் கொண்ட

ஒரு வழக்கறிஞரின் உதவியுடன், கலிபோர்னியாவை சேர்ந்த பூசாரிகள் தங்களுக்கு என்று ஒரு அமைப்பை உருவாக்கிக்கொண்டனர். ஆனால் இதைப்போன்று எல்லா இடங்களிலும் நடப்பது இல்லை. ¶இது இந்தியாவில் மோசமாக இருந்தாலும், அதற்கு வெளியே மிகவும் மோசமாக இருக்கிறது. இந்தியாவில் இருக்கும் பூசாரி தனது சொந்த நாட்டில் இருக்கிறார், மற்றும் அவருக்கு தனது நாட்டில் இருக்கும் சட்டம் தெரிந்து இருக்கும், மற்றும் அவருக்கு நண்பர்களின் ஆதரவும், சட்டரீதியான உதவியும் கிடைக்க வாய்ப்புள்ளது. இதைத் தவிர, அவருக்கு அவரது சொந்தங்களும் பந்தங்களும் உதவுவதற்கு தயாராக இருப்பார்கள். ஆனால் இந்தியாவிற்கு வெளியே, பல பூசாரிகளுக்கு இந்த அன்பும் ஆதரவும் கிடைப்பது இல்லை. தனியாக வாழும் பல பூசாரிகள் ஒரு தற்காலிக விசாவில் மிகவும் மோசமான நிலைகள் வாழ்கிறார்கள். பலருக்கு தாங்கள் பணிபுரியும் நாட்டு சட்டங்களும் வழக்கங்களும் தெரிவது இல்லை, மற்றும் அவர்களுக்கு அந்நாட்டு மொழியும் சரியாக தெரியாமல் இருப்பதால், அவர்கள் பெரும்பாலும் தனது தேவைகளுக்கு கோயில் நிர்வாகிகளின் தயவில் இருக்கிறார்கள். அந்த பூசாரி தனது சொந்த கிராமத்திற்கு திரும்பினால், அவர் இன்னோரு அவமானத்தை சந்திக்க வேண்டி இருக்கிறது. அவர் தன்னைப் பற்றிய வதந்திகள், குற்றச்சாட்டுக்களுக்கு ஊர் தலைவர் முன்பாக பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ¶ஆமாம், இந்து கோயில் பூசாரிகளை துன்புறுத்துவது உலகெங்கும் ஒரு அவல நிகழ்வாக நடந்து வருகிறது, மற்றும் இதற்கு காரணமாக இருப்பவர்கள் தங்கள் செயல்களால் சனாதன தர்மத்தையும் சேர்த்து துன்புறுத்துகிறார்கள். ஆனால் பூசாரிகளை துன்புறுத்தும் செயல் ஒரு சாதாரண பிரச்சனை இல்லை. மகாதேவர்களின் அருளை ஆவாகனம் செய்யும் திறமை படித்தவர்களை கோபப்படுத்தி, அவமானப்படுத்தி கடுமையாக துன்புறுத்தும் போது, அவர்கள் தங்களை பாதுகாக்கும் பொருட்டு, இந்த பூமியில் *அசுர* சக்திகளின் சாபங்களையும் வரவழைக்க முடியும். தங்களது புனிதமான பணியின் வலிமை காரணமாகவும், தங்களது அலுவலின் மதிப்பு மற்றும் தங்கள் பணியின் முக்கியத்துவம் காரணமாகவும், இந்து கோயில் பூசாரிகள் மரியாதைக்கு உரியவர்களாக விளங்குகிறார்கள். அவர்களை மோசமாக நடத்துவதோ அல்லது அவர்கள் பணியில் தடைகளை ஏற்படுத்துவதோ கூடாது. "உண்மையான உலகில்" மற்ற பணிகளில் இருப்பவர்களுக்கு கிடைக்கும் மரியாதை, இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். பல வருடங்களுக்கு முன்பாக *சுவாமிகளை* துன்புறுத்துவது வழக்கத்தில் இருந்த போது, *சுவாமிகள்* அதை முறையாக கையாண்டார்கள். அவர்கள் தங்களை நன்றாக புரிந்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் துணையாக நின்று அந்த வழக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர். ¶தங்களை மனசாட்சி இல்லாமல் தொடர்ந்து துன்புறுத்துவதில் மகிழ்ச்சியை பெறும் தங்கள் கணவர்களுக்கு எதிராக இன்று பெண்கள் போர்கொடி தூக்க ஆரம்பித்து விட்டனர். இந்த அத்துமீறல்கள் வெளிச்சத்திற்கு வரும் போது,

மாற்றங்கள் நடக்க தொடங்கி, அபிப்ராயங்கள் மாறுகின்றன. இதனால் சித்ரவதை பற்றிய ஊடகம் வழங்கும் அறிக்கைகளின் வழிமுறையும் மாற்றம் பெறும். சட்டங்களும் மாற்றம் பெறும். இவ்வாறு நடப்பதை நாம் குழந்தைகள் சித்ரவதை, இனம் தொடர்பான சித்ரவதை மற்றும் பாலியல் ரீதியான சித்திரவதையில் பார்த்து இருக்கிறோம். கோயில் பூசாரிகள் பற்றிய நமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வதற்கான காலம் வந்து விட்டது. இதற்கு கோயில் நிர்வாகிகள் தங்கள் சிந்தனைகளை மாற்றிக் கொள்ளவேண்டும். தினமும் தங்களை துன்புறுத்தும் நபர்களுக்கு அடிபணிந்து அல்லது அவமானப்பட்டு அல்லது துப்புரவு பணி அல்லது காலணிகளை சுத்தம் செய்வது போன்ற கீழ்த்தரமான வேலைகளுக்கு பூசாரிகள் மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்றால், சனாதன தர்மத்தின் சர்வதேச பூசாரிகள் சங்கமும் அந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சில பூசாரிகள் தினமும் குறைந்தபட்ச பதினான்கு மணிநேரம் வேலை செய்கிறார்கள். அவர்கள் மகாதேவர்களின் சேவகர்களாக இல்லாமல், கோயில் நிர்வாகிகளின் சேவகர்களாக நடத்தப்படுகிறார்கள். அவமானத்திற்கு உரிய இந்த மோசமான நடவடிக்கையையும், அது உருவாக்கும் தீய *கர்மவினையும்* நாம் முடிவுக்கு கொண்டு வரலாம். நாம் நமது பூசாரிகளுக்கு மதிப்பு அளித்து, அவர்கள் மீது அன்பையும் மரியாதையையும் செலுத்தலாம். நாம் நமது பூசாரிகளை மகிழ்விக்கலாம். மகிழ்ச்சிகரமான பூசாரிகள் மூலம் மகிழ்ச்சிகரமான கோயில், மகிழ்ச்சிகரமான மகாதேவர்கள் மற்றும் மகிழ்ச்சிகரமான பக்தர்கள். இதுவே முறையான செயல்முறை ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 350

அர்ப்பணித்துக் கொள்ளும்

பாதை

இன்றைய காலகட்டத்தில், மக்களில் பலருக்கு *அர்ப்பணிப்பு* என்ற முக்கியமான சொல் அதிகம் பயமுறுத்துவதாக விளங்குகிறது. *அர்ப்பணிப்பு* என்பது பொறுப்பை குறிக்கிறது. *அர்ப்பணிப்பு* என்ற சொல் நமது மன உறுதியை வெளிக்கொண்டு வருகிறது. *அர்ப்பணிப்பு* என்ற சொல் கட்டுப்பாடுகளை விதிப்பதாக பலர் நினைக்கிறார்கள். நாம் அர்ப்பணிப்பு என்ற சொல்லை *தர்மம்* என்ற ஒரு சொல்லால் சுருக்கமாக குறிப்பிடலாம். *தர்மத்தின்* பாதை என்பது ஒரு அர்ப்பணிப்புக்கு பிறகு இன்னொரு அர்ப்பணிப்புப் பாதையை குறிக்கிறது. அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் இருக்கும் அர்ப்பணிப்பின் நிறைவேற்றம் என்பது கடமையை குறிக்கிறது. நாம் இங்கே நமக்குள் இருக்கும்

சிவபெருமானை உணர்வதற்காக இந்த பிறவி எடுத்துள்ளோம். நாம் கடந்த பிறவிகளில் இயக்கிய *கர்மவினைகள்* அனைத்திற்கும் தீர்வு காண்பதற்காக இந்த பிறவி எடுத்துள்ளோம். முடிவில் நாம் மீண்டும் தூல பிறவி எடுக்காமல் இருக்கும் நோக்குடன், நமது நடவடிக்கைகளை முறையாக நிர்வாகம் செய்ய இந்த பிறவி எடுத்துள்ளோம். இதற்கு அதிக அளவில் அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது, மற்றும் அர்ப்பணிப்புடன் இருப்பது எப்படி என்பதைப் பற்றிய அறிவை நமது இந்து மதம் வழங்குகிறது. ¶உங்கள் தினாரி வாழ்வில் உங்கள் மதம் வெளிப்படவில்லை என்றால், அடிப்படையில் உங்களுக்கு ஒரு மதம் இல்லை என்பது பொருள். அது உங்களுக்கு முக்கியம் இல்லை என்பதால், உங்களிடம் இருக்கும் ஏதோ வகை இந்திய கலாச்சாரம் என்றாவது ஒரு நாள் உங்களை விட்டு விலகி விடும் மற்றும் அந்த இடத்தில் இன்னொரு கலாச்சாரம் வந்து குடிப்புகும். "எதன் மீது நான் அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும் என்பதைப் பற்றி நான் எப்படி தெரிந்துகொள்வது?" என்று என்னிடம் ஒருவர் கேட்டார். "நீங்கள் எதில் நம்பிக்கை வைத்து இருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன். நம்பிக்கை என்பது ஒரு அற்புதமான விஷயம். அது ஒரு ஊட்டச்சத்து போல விளங்கி, உங்கள் அமைப்பு முழுவதிலும் வியாபிக்கிறது. ஒரு நம்பிக்கையை நீக்கி அந்த இடத்தில் இன்னொரு நம்பிக்கையை பொருத்தலாம், அல்லது அந்த நம்பிக்கையை அர்ப்பணிப்பின் மூலம் வலுப்படுத்தலாம். உங்கள் நம்பிக்கைகள் மீது அர்ப்பணிப்புடன் இருங்கள், அல்லது நீங்கள் உங்களை அர்ப்பணித்துக் கொள்ளக்கூடிய நம்பிக்கைகளை தேடிக்கொண்டு, அவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுங்கள். அப்போது நீங்கள் காலத்தின் சன் மார்க பாதையில், உங்கள் தடயத்தை விட்டு செல்கிறீர்கள். இல்லையென்றால் நீங்கள் முன்னேறாமல் ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் எதுவும் சரியாக இருக்காது. *கர்மவினைகள்* சரியாக செயல்படாது, மற்றும் உங்களால் உங்கள் வாழ்க்கையை சமாளிக்க முடியாது. ¶நீங்கள் சரியான இடத்தில் இருந்து சரியான நேரத்தில் சரியான வேலையை தினமும் செய்வதாக உங்களுக்கு தோன்றினால், நீங்கள் உங்களை ஆன்மீக பாதைக்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்றே பொருள். நீங்கள் வாழ்க்கை என்கிற பெருங்கடலில் சிறிய படகு போல அங்கும் இங்குமாக அலை கழிக்கப்பட்டு, சரியான இடத்தில் இருக்கிறோமா என்ற சந்தேகம் இருந்து, நிகழ்வுகள் "உங்கள் மீது தொடர்ந்து தாக்கம் " ஏற்படுத்துவதாக தோன்றினால், நீங்கள் உங்கள் அகத்தில் கவனம் செலுத்தி, வாழ்க்கையில் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் அடிப்படை நம்பிக்கைகள் என்ன? உங்கள் அடிப்படை அர்ப்பணிப்புக்கள் என்ன? இந்த கேள்விகளை உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். ¶ஒருவர் தன்னை அர்ப்பணித்துக்கொள்ள பல நடவடிக்கைகள் உள்ளன. இளைஞர்கள் தங்கள் எதிர்கால திட்டத்திற்கு ஏற்ப தயார் செய்யும் கல்வி மீது அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும். எதிர்காலத்தில்

தங்கள் குழந்தைகள் நல்ல குடிமகன்களாக இருக்கவேண்டும் என்று நோக்குடன் தாய்மார்கள் அவர்களை வளர்க்க வேண்டும் என்பதில் அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும். ஆனால் சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் நல்ல குடிமகன்களாக இருக்கிறார்களா என்பதைப் பற்றி கவலைப்படுவது இல்லை. அவர்கள் அந்த விஷயத்தை பொருட்படுத்துவது இல்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதிலும் தங்களை அர்ப்பணித்துக் கொள்வது இல்லை. அவர்கள் அந்த பொறுப்பை இன்னொருவரிடம் வழங்கி விடுகிறார்கள். நாடு முழுவதும் பகல் நேரத்தில் குழந்தைகளை கவனிக்க மையங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த மையங்களுக்கு சென்ற குழந்தைகள் பள்ளிகளுக்கு சென்றதும், அங்கே ஊக்கமிழந்து, ஒழுக்கமின்றி யாராலும் அடக்க முடியாதவர்களாக இருப்பதாக ஒரு கருத்து கணிப்பு தெரிவிக்கிறது. கணவன்மார்கள் தங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் மீது கவனம் செலுத்தி, தங்கள் குடும்பத்தை பேணி வளர்ப்பதற்கு தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். அந்த அர்ப்பணிப்பை அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்கள் அதை பூர்த்தி செய்யவில்லை என்றால், அவர்கள் அவமானத்திற்குரிய *கர்மவினையை* உருவாக்குகிறார்கள். ஆனால் அதற்கும் பல கணவன்மார்கள் தன்னை அர்ப்பணித்துக் கொள்வது இல்லை.

¶அர்ப்பணிப்பு மற்றும் *தர்மம்* ஒரு பொருட்சொற்கள் ஆகும். *தர்மம்* என்பது வாழ்கையில் சட்டம் மற்றும் ஒழுங்கை கொண்டு வந்து, பின்பற்றுவதற்கு விதிகளை வழங்கி நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. அர்ப்பணிப்பு எங்கிருந்து தோன்றுகிறது? அர்ப்பணிப்பு ஆன்மாவில் இருந்து தோன்றுகிறது. அறிவுணர்வு மனம் எப்போதும் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டு இருக்கிறது, மற்றும் பெரும்பாலான சமயங்களில், மற்றவர்களின் கருத்துக்கள் மற்றும் சமூகம் எதை நினைக்கிறது போன்றவற்றால் கட்டுப்படுத்தப்படுகிறது அல்லது அவற்றால் எரிச்சலூட்டப்படுகிறது. அர்ப்பணிப்பு ஆன்மாவில் இருந்து தோன்றுகிறது. இந்த ஆன்மாவின் பண்பை நீங்கள் அடுத்த தலைமுறைக்கு கற்றுத் தரலாம். கூர்ந்து கவனிக்கும் திறன் ஆன்மாவின் இன்னொரு பண்பாக விளங்குகிறது. ஆன்மாவின் இன்னொரு இயல்பான பண்பாக படைப்பாற்றல் விளங்குகிறது, மற்றும் அதை ஒவ்வொரு குழந்தையிடமும் ஊக்குவிக்கலாம். அர்ப்பணிப்பின் மூலம் ஆன்மா அறிவுணர்வு மீது ஆதிக்கம் செலுத்துகிறது, மற்றும் அறிவுணர்வு உள்ளுணர்வு மனம் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இது மதம் செயல்படும் முறை ஆகும். இது சிவனோடு வாழ்தல் ஆகும்.

இந்து ஏக்தா

हिन्दु एकता



இந்து மத ஒருமைப்பாடு

நீங்கள் ஒன்றாக சேர்ந்து இருங்கள். நீங்கள் பேசுவது ஒன்றாக இருக்கட்டும். பழங்கால தேவர்கள் யக்ஞத்தில் தங்கள் பங்கை பகிர்ந்துகொண்டதைப் போல, உங்கள் மனங்கள் இணக்கத்துடன் இருக்கட்டும்! மந்திரம் சமமாக இருக்கட்டும். சபை சமமாக இருக்கட்டும். மனம் சமமாக இருக்கட்டும். விருப்பமும் ஒன்றாக இருக்கட்டும். நான் உங்களுக்கு சமமான மந்திரத்தை கூறுகிறேன். நான் உங்களுக்கு சமமான அவிசை வழங்குகிறேன்!

ரிக் வேதம் 10.191.2-3. வேஎ, ப. 854



சிவன், விஷ்ணு மற்றும் துர்கை என்று பல்வேறு தெய்வீக உருவங்களுக்கு செலுத்தும் மரியாதையின் மூலம் இந்து மத ஒருமைப்பாடு சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒரு பரம்பரையை சேர்ந்த பக்தர்கள், மற்ற சமயப்பிரிவை சேர்ந்தவர்களையும் மதிக்கிறார்கள். கீழிருக்கும் படத்தில் ஒரு பக்தர் ஒரு சிவலிங்கத்திற்கு ஒரு பூமாலையை சூட்டிக்கொண்டு இருக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 351

அமெரிக்காவில்

இந்து மதம்

கலிபோர்னியா கலாச்சார மையத்திற்கு வந்துள்ள எல்லோருக்கும், நான் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய மாலை பொழுதில் நம் எல்லோரையும் ஒன்றாக வழிநடத்தி செல்ல, நாம் விநாயகரின் ஆசிகளை பிரார்த்தனை செய்வோம். நீங்கள் எல்லோரும் பாரம்பரிய முறையில் இந்த அழகான தரை விரிப்பில் அமர்ந்து இருப்பதை பார்ப்பதற்கு மகிழ்ச்சிகரமாக இருக்கிறது. நீங்கள் அமெரிக்காவிற்கு தலைசிறந்த இந்திய கலாச்சாரத்தை தொடர்ந்து அபிமானத்துடன் கொண்டு வருகிறீர்கள் என்பது தெளிவாக தெரிகிறது. ¶இன்று நாம் அமெரிக்காவில் மற்றும் உலகில் இந்து மதத்தின் எதிர்காலம் பற்றிய முக்கியமான ஒரு பிரச்சனையை பற்றி விவாதிக்க உள்ளோம். இது ஒரு சிக்கலான விஷயம் என்றாலும் அதை இந்துக்களுக்கு மத்தியில், வைணவர்கள் மற்றும் சைவர்கள் மத்தியில், வடநாட்டு மற்றும் தென்னாட்டு சம்பிரதாயங்களுக்கு மத்தியில் இருக்கும் உறவு என்று சுருக்கமாக குறிப்பிடலாம். நான் அதை இந்து மத ஒருமைப்பாடு என்று அழைக்க விரும்புகிறேன், மற்றும் உலகில் மிகவும் பழமையான மதத்தை சேர்ந்த நாம் கற்றுக்கொள்வதற்கு, இதைக் காட்டிலும் அதிக சவால் நிறைந்த அல்லது முக்கியமான பாடம் எதுவும் இல்லை என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதை நம்மால் சாதிக்க முடிந்தால், நமது பல பிரச்சனைகள் தீர்வு காணப்பட்டு, இந்து மதம் வட அமெரிக்காவில் அபிமானத்திற்குரிய புதிய இடத்தை பிடிக்கும். ¶இந்து மத ஒருமைப்பாடு ஒரு புதிய கருத்து இல்லை. மகாத்மா காந்தி மத ஒற்றுமைக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவரது முக்கிய முயற்சிகள், இந்து-முஸ்லீம் மத்தியில் நிலவிய அதிக தீவிரமான மோதல்கள் மீது கவனம் செலுத்தின என்றாலும், மற்ற மதத்தை சேர்ந்தவர்களுடன் இணக்கத்துடன் வாழ்வதற்கு, அவர் இந்துக்களின் சீரான பண்பை இல்லாமல், ஒற்றுமையை அடித்தளமாக பயன்படுத்தினார். நாட்டின் விடுதலை மற்றும் செழிப்புக்கு, இந்த இலக்கு ஒரு அடிப்படை தேவையாக விளங்கியது. அவர் மத இணக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்ததால், அது அவருக்கு நிறைவேற்றமாகவும், "உண்மைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகவும்"

விளங்கியது. உலகெங்கும் முக்கிய நகரங்களில் 1982 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திரைப்படத்தின் மூலம், பல ஏமாற்றங்கள் மற்றும் பின்னடைவுகளை மகாத்மா காந்தி சந்தித்தார் என்பதை நீங்கள் அறிந்து இருப்பீர்கள். ஆனால் அவர் எப்போதும் நம்பிக்கை இழக்கவில்லை. நாமும் நமது முயற்சியில் தடைகளை சந்திக்கும் போது, நம்பிக்கை இழக்காமல் தைரியமாகவும் மன உறுதியுடனும் முன்னேற வேண்டும். ¶காந்தி எப்போதும் தனது விருப்பத்தை மற்றவர்கள் மீது திணிக்க வில்லை, ஆனால் அவர் தனது உன்னத இலட்சியங்களை மற்றவர்களுக்கு தெரிவிக்க, அவர்களிடம் அதே அன்பு, அதே பொறுமை மற்றும் இறைவனை சார்ந்து இருக்கும் அன்பை விழிப்பூட்ட அடக்கம், தவம், பிரார்த்தனை, சிந்தனை மற்றும் செயலில் தூய்மையை பயன்படுத்தினார். சுவாமி விவேகானந்தர் அமெரிக்க மக்களின் மனதை கவர்வதற்கு பயன்படுத்திய சகிப்புத்தன்மை, அக்கறை, பொறுமை மற்றும் அகிம்சை ஆகிய இந்து நற்பண்புகளை மகாத்மா காந்தி பின்பற்றினார். இங்கிருக்கும் பகுதியில் சுவாமி விவேகானந்தரை வெகு சிலரே அறிந்து இருந்தாலும், மகாத்மா காந்தி அமெரிக்கா மட்டுமல்லாமல் உலக மக்களின் மனங்களை கவர்ந்து, அவர்களின் இதயங்களில் இடம் பிடித்தார். அவர் நமது நாட்டில் போற்றத்தக்க தலைவராக விளங்கி, மார்டின் லூதர் கிங் போன்ற நமது விடுதலை போராட்ட வீரர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். மகாத்மா காந்தி தோல்வியை சந்தித்த போது, "சர்வ வல்லமை படைத்த இறைவனிடம் உதவியை நாடி, அவர் படைத்த உயிரினங்களாக நாம், நமது கடமைகளை செய்ய தவறி விட்டோம் என்று அவரிடம் கூறலாம். நாம் மற்றவர்களை வெறுக்கிறோம். நாம் மற்றவர்கள் மீது நம்பிக்கை வைப்பது இல்லை. நாம் மற்றவர்களுடன் கோபத்துடன் வாதாடுகிறோம், மற்றும் நாம் சில சமயங்களில் கொலைகளையும் செய்கிறோம். நமது இதயங்களில் இருக்கும் வெறுப்பை எல்லாம் சுத்தம் செய்யுமாறு நாம் அவரிடம் வேண்டிக் கொள்வோம். நமக்கு நல்ல உணர்வு மற்றும் விவேகத்தை தருமாறு, நாம் இறைவனிடம் அடக்கத்துடன் வேண்டிக்கொள்வோம்," என்று கூறுவார். ¶அமெரிக்காவில் வாழும் மக்கள், இங்கே இந்து மதம் வளர வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகின்றனர். இவர்களுடன் அமெரிக்காவில் குடியேறி, தற்போது பல லட்சக்கணக்கில் இருக்கும் ஆசிய இந்துக்களும், இங்கே இந்து மதம் வளர்ச்சி பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் இந்து மதத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் இல்லை, இந்து மதத்தின் ஆழமான தத்துவங்களை புரிந்துகொள்ளவும் இல்லை. ஆனால் அவர்கள் மத்தியில்,"எங்கள் நாட்டில் இந்துமதம் வளர்ச்சி பெறவேண்டும்," என்ற கருத்து நிலவுகிறது. சமீபத்தில் ஒரு பத்திரிகை வெளியிட்ட புள்ளி விவரத்தில், *யு.எஸ். நியூஸ் அண்டு வர்ல்டு ரிபோர்ட்* பத்திரிகை என்று நினைக்கிறேன், இன்று அமெரிக்காவில் இருக்கும் இருபத்தி ஐந்து நபர்களில் ஒருவர் இந்து மதம், *யோகம்* அல்லது தியானத்தில் ஈடுபட்டு இருப்பதாக குறிப்பிடுகிறது. இதைத்தவிர எந்த மதத்தையும் சாராத

நாத்திகர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். யூதர்கள், இசுலாமியர்கள் மற்றும் பௌத்தர்கள் பல லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அமெரிக்காவில் பௌத்த மதம் மிகவும் பிரபலமாக விளங்குகிறது, மற்றும் இசுலாமிய மதமும் விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. மொத்தத்தில் அமெரிக்கா ஒரு கிறித்துவ நாடாக இல்லை என்பது தெளிவாகிறது. நாம் எல்லா இனங்கள், எல்லா மதங்களின் மொசைக் போன்ற கலவையாக விளங்குகிறோம். அடிப்படை அறிவு மற்றும் புரிதல் இல்லாத ஐரோப்பிய அரசர்களிடம் இருந்து விடுதலை பெற்று ஒரு புதிய உலகை உருவாக்க வேண்டும் என்ற ஒரு புதிய நம்பிக்கையுடன் அமெரிக்காவை நிர்மாணம் செய்த தலைவர்கள் இங்கே வந்து இறங்கினார்கள். அவர்களுக்கு ஒரு கிறித்துவ நாட்டை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது இல்லை. உலகில் இருக்கும் எந்த மதத்தையும் சுதந்திரமாக பின்பற்றலாம் என்பது அவர்களின் மதக்கொள்கையாக விளங்கியது. அவர்கள் பயன்படுத்திய சின்னங்கள் மற்றும் சிந்தனைகள் பெரும்பாலும் அந்த காலத்தின் மேசானிக் லாட்ஜ் மற்றும் தீஸ்ட் இயக்கத்தில் இருந்து உருவாக்கப்பட்டவை. ¶சுதந்திரம் இந்துக்கள், இசுலாமியர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் பொதுவானது என்று தாமஸ் ஜெபர்சன் குறிப்பிட்டு இருந்தார். "மத சுதந்திரம் வழங்கும் [விர்ஜினியா] சட்டத்தை... இறுதியில் நிறைவேற்றிய போது, அதன் கருத்து சுதந்திரம் எல்லோருக்கும் பொதுவானது என்பதற்கு ஒரு தனிப்பட்ட கூற்று சான்றாக விளங்குகிறது. எங்கள் மதத்தின் தெய்வீக படைப்பாளரின் திட்டத்தில் நிர்பந்திக்கும் வழக்கம் இருந்தது இல்லை என்று முகவுரை கூறினாலும், 'அது எங்கள் மதத்தின் தெய்வீக படைப்பாளராக விளங்கும் இயேசு கிறிஸ்துவின் திட்டத்தில் இருந்ததில்லை,' என்று தெளிவாக தெரிய வேண்டும் என்பதற்காக, இயேசு கிறிஸ்து என்ற சொற்களை சேர்க்க ஒரு சட்ட திருத்தம் பரிந்துரைக்கப்பட்டது.' அந்த சொற்கள் வழங்கும் பாதுகாப்பு யூதர் மற்றும் ஜெண்டில், கிறித்துவர் மற்றும் இசுலாமியர், இந்து மற்றும் ஒவ்வொரு சமயப்பிரிவிலும் இருக்கும் நாத்திகனையும் உள்ளடக்கியதாக கருதி, அந்த திருத்தம் பெரும்பான்மையினரால் நிராகரிக்கப்பட்டது," என்று அவர் சுயசரிதையில் குறிப்பிட்டு இருந்தார்.

செவ்வாய்க்கிழமை

பாடம் 352

மத உட்பிரிவுவாதம்

ஆரோக்கியமானதே

அமெரிக்க அரசியலமைப்பு ஒப்புதல் பெற்ற பிறகு வந்தவர்கள் பல்வேறு மொழி, மதம் மற்றும் கலாச்சாரத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள்

பல்வேறு மொழிகளை பேசி, பல்வேறு கலாச்சாரங்களை பின்பற்றி, பல்வேறு மத நம்பிக்கைகளை பின்பற்றினார்கள். அவர்கள் இந்த சூழலிலும் ஒன்றாக இணைந்து பல பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டார்கள். அவர்கள் அரசு மற்றும் மதத்தை தனித்தனியாக கருதி அரசு மற்றும் மதம், வியாபாராம் மற்றும் அரசியல் சார்ந்த விவாதங்களில் ஈடுபடாமல் நட்புறவுகளை உருவாக்கிக் கொண்டார்கள். அவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, மதத்தை பற்றி பேசவேண்டாம் என்று முடிவு செய்து, இன்று உலகம் முழுவதும் பின்பற்ற நினைக்கும் ஒரு புதிய உலகம், ஒரு புதிய நாடு மற்றும் ஒரு புதிய குடியரசை உருவாக்க இணைந்து செயல்பட முடிவு செய்தனர். அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு இணைந்து இருக்கவேண்டும் என்பதையும், புதிய உலகில் உயிர் வாழ்வதற்கு இணைந்து செயல்படுவது முக்கியம் என்பதையும், அவர்கள் முடிவு செய்து இருந்தார்கள். இன்று இந்த முறையை பயன்படுத்தி அமெரிக்கர்கள் இணைந்து செயல்படுகிறார்கள். அவர்கள் நிறுவனங்கள் அல்லது வியாபாரத்தில் மதம் அல்லது அரசியலோடு பேசுவது இல்லை. ¶இந்த நாட்டை அமைத்த தலைவர்கள் தங்கள் பாரம்பரியத்தை அழிக்கவில்லை. எனவே இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வுகளில் இருந்து இந்துக்கள் நல்ல பாடங்களை கற்றுக் கொள்ளலாம். ஜெர்மனி மற்றும் நெதர்லாந்தில் இருந்து வந்த லூத்தரன் சமயத்தை சேர்ந்தவர்கள் தங்கள் மத பாரம்பரியங்களை புறக்கணிக்காமல், அவற்றை அவர்கள் வலுப்படுத்தினார்கள். பாப்டிஸ்ட்கள் தங்கள் சமயத்தை வலுப்படுத்தினார்கள். மெதொடிஸ்ட் தங்களை வலுப்படுத்திக் கொண்டனர். இங்கே அயர்லாந்து மற்றும் இத்தாலியை சேர்ந்த கத்தோலிக்கர்களை தங்களை வலுப்படுத்திக் கொண்டனர். அவர்கள் அதை மட்டும் தான் செய்தார்கள். அவர்கள் செய்யாத தவறுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒற்றுமை பிறக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் மற்ற பொதுவான சமூக நம்பிக்கைகளுடன் கலக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் ஒரு மரபுசாரா கிறித்துவ மதத்தை உருவாக்கவில்லை. அவர்கள் தங்கள் மதத்தை அழிக்கவோ அல்லது பலவீனப்படுத்தவோ இல்லை. சமூகத்துடன் தன்னை பொருத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக, அவர்கள் தங்கள் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களையும் சமரசம் செய்து கொள்ளவில்லை. அவ்வாறு பௌத்தர்கள், தாவ் நெறியை பின்பற்றியவர்கள், ஜப்பானிய தொல்மரபு சமயத்தவர்கள், கன்பூசியஸ் நெறியை பின்பற்றுபவர்களும் செய்யவில்லை. அவர்கள் அந்த மரத்திற்கு கோடாரியை எடுத்து சென்று, அதை வேரோடு அழிக்க முயற்சி செய்யவில்லை. அவர்கள் தனிப்பட்ட வழிபாட்டு முறைகள் முக்கியம் என்பதையும், தனிப்பட்ட வழக்கங்கள் முக்கியம் என்பதையும், அவற்றை பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அறிந்து இருந்தார்கள். ¶கிறித்துவர்கள் அனைவரும் ஒரு கிறித்துவ மதத்தை பின்பற்றுவதாக பல இந்துக்களிடம் ஒரு தவறான கருத்து நிலவுகிறது. அது உண்மை இல்லை. மக்களின் நன்மதிப்பை பெற்ற Dr. டேவிட் பார்லட் வழங்கிய

தகவலின் படி, இந்த நாட்டு கிறித்துவ மதத்தில் மட்டும் சுமார் 33,500 சமய உட்பிரிவுகள் உள்ளன. அதை சற்று கற்பனை செய்து பாருங்கள்! அந்த 33,500 க்கும் மேலான உட்பிரிவுகள், தங்களுக்கு என்று தனிப்பட்ட அடையாளம், தனிப்பட்ட நம்பிக்கைகள், பொதுவான சமூக நம்பிக்கைகள், கோட்பாடுகள் மற்றும் வழிபாட்டு முறைகளை கொண்டுள்ளன. இதை முக்கியமாக நினைவில் வைத்து இருக்கவேண்டும். அவர்களின் ஒன்பதாம் மற்றும் பத்தாவது தலைமுறை தற்போது வாழ்ந்துகொண்டு இருக்கிறது மற்றும் அவர்கள் எல்லோரும் ஆங்கிலம் பேசுகிறார்கள். ¶சமீபத்தில் பிளின்ட் நகரில் காசி ஸ்ரீ விசுவநாத கோயிலை மிச்சிகன் மாநிலத்தை சேர்ந்த காங்கிரஸ் தலைவர் ரிலே மற்றும் நானும் கலந்துக்கொண்ட பொதுக்கூட்டத்தில், "பெரும்பாலும் அமெரிக்கா பல்வேறு கலாச்சாரங்களை சேர்ந்த மக்கள் வாழும் கலவையாக கருதப்படுகிறது. ஆனால் அது உண்மை இல்லை. ஆனால் அது எல்லோரும் ஒன்றாக பொருந்தி, தங்களது சொந்த தனித்தன்மையை வளர்க்கும் பல வண்ண மொசைக் கல்லை போன்றதாக இருக்கிறது," என்று கூறினார். இங்கே பல நாடுகளின் சிறந்த கலாச்சாரங்கள் உள்ளன, மற்றும் நாம் ஒவ்வொரு நாட்டை சேர்ந்த கலாச்சாரங்கள் அனைத்தையும் அங்கீகரிப்பதோடு, ஒவ்வொரு நாட்டில் இருந்தும் சிறந்த கலாச்சாரம், இங்கே வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ¶இனி நாம் இந்து மத ஒருமைப்பாட்டை பார்க்கலாம். நான் அதை "வேற்றுமையில் ஒருமைப்பாடு" என்று குறிப்பிட விரும்புகிறேன். கலவை என்ற சொல்ல காட்டிலும் பல வண்ண மொசைக் கல் என்பது நன்றாக பொருந்துவது போல, வேற்றுமையில் ஒற்றுமை என்பதை காட்டிலும் வேற்றுமையில் ஒருமைப்பாடு என்ற சொல் சிறப்பாக பொருந்துகிறது. அமெரிக்காவில் சைவ இந்துக்கள், வைணவ இந்துக்கள், சாக்த இந்துக்கள், சுமார்த்த இந்துக்கள், மரபுசாரா இந்துக்கள், உலோகாயத வாதி இந்துக்கள் மற்றும் இந்துக்களுக்கு எதிரான இந்துக்கள் என்று எல்லோரும் இந்து மத ஒருமைப்பாட்டுக்கு இணைந்து செயல்பட்டு, இன்றைய இந்து மதத்தை பற்றி நன்றாக தெரிந்துக்கொண்டு அதை சீர்திருத்தம் செய்யும் திறமையுள்ள ஒரு வலுவான இந்து முண்ணனியாக விளங்குகிறார்கள். ¶இந்து மதத்தில் இருக்கும் ஒவ்வொரு உட்பிரிவுக்கும் பல்வேறு இறையியல்கள், தத்துவங்கள் மற்றும் சாத்திரங்கள் உள்ளன. நாம் கிறித்துவ மதத்தை போல 33,500 பிரிவுகளை எதிர்கொள்ள வேண்டியதில்லை என்றாலும், நமக்கு சில முக்கிய சமயங்கள் இருக்கின்றன. சில மரபு சாரா இந்துக்கள் இதை ஒழிக்க நினைக்கிறார்கள், ஆனால் அமெரிக்கா மற்றும் உலகில் இருக்கும் மற்ற நாடுகளில் இந்து மதத்தின் முக்கிய உட்பிரிவுகள் இணக்கத்துடன் வாழ முடியாது என்பதற்கு காரணம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. என்னுடைய இந்த கருத்து பல *சுவாமிகள்* மற்றும் மற்ற இந்து தலைவர்களுடன் இணங்கி இருக்கிறது. ஒருமை என்பது ஒருமைப்பாடு இல்லை என்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள். மதத்தில் ஒருமை என்பது ஆரோக்கியமானதும்

இல்லை, அதன் இயல்பும் இல்லை. ஒருமை என்பது ஒரு பொதுவான அம்சத்தை அடையும் பொருட்டு, வேறுபாடுகளில் இருக்கும் துடிப்புணர்வு மற்றும் தத்துவ விளக்கம் மற்றும் சூழ்நிலையின் செழுமையை குறைத்து விடுவதால், அது அதிக வழக்கத்தில் இருக்கும் மந்தமான, தூண்டுதல் இல்லாத, உயர்ந்த அறிவை வழங்காத தீர்வாக விளங்குகிறது. அத்தகைய ஒரு தீர்வு உலகில் தற்போதுள்ள இந்து மதத்திற்கு அதிக தீங்கை விளைவிக்கும், மற்றும் நாங்கள் அந்த கருத்தை வலுவாக எதிர்க்கிறோம். எப்போதும் இந்து மதம் தனது விசாலமான பண்பில் அபிமானத்துடன் இருந்துள்ளது. இதை உண்மை என்று வரலாறு கூறிக்கொண்டு இருக்கையில், அதிக வளர்ச்சி பெற்ற நாகரீகத்தில் வாழும் நாம், இந்த உன்னத கண்ணோட்டத்தை புறக்கணிக்க முடியுமா? பல வகையான காய்கறிகள் மற்றும் சட்னிகள் மற்றும் பருப்புக்களை கொண்டிருக்கும் ஒரு பெரிய விருந்தை ஒன்றாக கலந்து, ஒரு குறிப்பிட்ட ருசி ஏதும் இல்லாத உணவை நீங்கள் சாப்பிடுவீர்களா? அத்தகைய முறையில் உண்பதை யாரும் விரும்புவதில்லை.

புதன்கிழமை

பாடம் 353

ஒருமைப்பாடு

என்பது ஒருமை இல்லை

இந்து மத ஒருமைப்பாடு என்பது ஒரு புதிய சிந்தனை இல்லை. இது இந்தியாவிலும் மிகவும் பிரபலமாக உள்ளது. நமது பூர்வீகம் எதுவாக இருந்தாலும், நாம் கிறித்துவர்களை போன்று, நமது சமய உட்பிரிவின் வேர்கள் மற்றும் பாரம்பரியத்தை பராமரித்து, நமது வேறுபாடுகளை பேணி வளர்த்து அதனுள் வலுவடைய வேண்டும். இந்துக்களுக்கு மத்தியில் ஒரு பொதுவான பிணைப்பு இருக்கிறது. அந்த பிணைப்பு எதை குறிக்கிறது? அதில் முதலாவதாக, *கர்மவினை* மற்றும் *தர்மத்தில்* இருக்கும் நம்பிக்கையை குறிக்கிறது. சைவர்கள் மற்றும் வைணவர்கள், சாக்தர்கள் மற்றும் சுமார்த்தர்கள் என்று அனைவரும் *கர்மவினை* மற்றும் *தர்மத்தில்* நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். இரண்டாவதாக இருப்பது மறுபிறப்பு. மூன்றாவதாக இருப்பது நீக்கமற நிறைந்து இருக்கும் இறைவன் மற்றும் வேதங்களின் புனிதத்தன்மை. இந்த மூன்று அடிப்படை நம்பிக்கைகளுடன், உலகில் இருக்கும் மற்ற மதங்களை நிராகரிக்காமல், உலகில் இருக்கும் மற்ற மதத்தவர்கள் எந்த ஆன்மீக பாதையில் இருந்தாலும், எதிர்காலத்தில் இறைவன் பற்றிய அறிவை பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடனும் இருக்கும் போது, "ஆம், நாங்கள் இந்துக்கள்" என்று நாம் சொல்ல முடியும். ¶இந்து மதத்தின் கிளைகள் பல

பெயர்களுடன் வேறுபட்டு இருந்தாலும், நமக்கு வேர்கள் பொதுவாக இருக்கின்றன. நமக்கு பொதுவாக பல அம்சங்கள் இருப்பதை நம்மால் என்றுமே மறக்க முடியாது. நாம் எல்லோரும் ஒரு பொதுவான பாரம்பரியத்தை பகிர்ந்த பிறகு, நாம் நம்பிக்கையுடன் நமது பாதையை பின்பற்ற முடியும். அந்த பாதை மரபுசாரா இந்து, சைவ இந்து, வைணவ இந்து அல்லது சாக்த இந்து என்று எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எல்லோரும் தங்கள் பாதையை பின்பற்றட்டும். எல்லோரும் தங்களது சொந்த பாதைக்குள், தங்களை பூரணமாக்கிக் கொண்டு தங்களை சுத்தம் செய்து கொள்ளட்டும். நாம் நமது வேர்களின் பாரம்பரியத்தை அறிந்து, அதில் இருந்து வலிமை பெறவேண்டும். அது தான் உண்மையான வலிமை, அதன் தான் உண்மையான இந்து ஒருமைப்பாடு. எல்லோரும் நம்மை போல இருக்கவேண்டும் என்று விரும்புவது நமக்கு வலிமை சேர்க்காது. ஒரு மரத்திற்கு ஒரு அடிமரம், ஒரு வேர்த்தொகுதி இருக்கிறது, ஆனால் நல்ல வளர்ச்சி பெறுவதற்கு அதன் கிளைகள் பல்வேறு திசைகளில் செல்ல வேண்டும். அது பல்வேறு திசைகளில் செல்வதால், அது அந்த மரத்தின் பலவீனம் இல்லை. அதன் உயிர் அதன் வேற்றுமையை சார்ந்து இருக்கிறது. அதை போல இந்து மதத்தின் உயிரும் அதன் வேற்றுமையை சார்ந்து இருக்கிறது. அதனால் நாம் எல்லோரும் ஒன்றாக ஒருமையை வேண்டுவது இல்லை. நமது வேற்றுமைகளை மறுக்காமல் அல்லது தடுக்க முயற்சி செய்யாமல் அல்லது ஒட்டு மொத்தமாக அழிக்க முயற்சி செய்யாமல், அவற்றுக்கு அங்கீகாரம் வழங்கி அவற்றை பேணி வளர்ப்பதன் மூலம் தோன்றும் வலிமையே ஒருமைப்பாடு ஆகும். ¶இன்று விசித்திரமாக சிவன், விஷ்ணு மற்றும் சக்தி என்று மூன்று முக்கிய தெய்வங்கள் இருக்கும் கோயில்கள் உருவாகி வருகின்றன. இதைப் போன்று முன்பு நடந்தது இல்லை. ஏனென்றால் அன்று மக்கள் நம்பிக்கைகளில் உறுதியாக இருந்தார்கள். ஒரு கோயிலில் மூன்று முக்கிய தெய்வங்கள் இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். இது ஒரு புதுமையாக விளங்குகிறது. இது *ஆகம* சாத்திரங்களை சார்ந்து இல்லை. இது பாரம்பரியம் இல்லை. இது ஒரு அரங்கில் மூன்று முக்கிய பாடகர்கள் இருப்பதற்கு சமம் ஆகும், மற்றும் இதன் மூலம் குழப்பம், சண்டை மற்றும் மகிழ்ச்சி இல்லாத சூழ்நிலை மட்டுமே நிலவும். இதைப் பற்றி குழந்தைகள் என்ன நினைப்பார்கள்? "அப்பா அம்மா, இவர்களில் யார் முக்கிய கடவுள் என்று முடிவு செய்யுங்கள். அது வரை, நாங்கள் மகிழ்ச்சிகரமாக வாழ்க்கையை வாழ்ந்து அமெரிக்கர்களாக இருக்கப் போகிறோம். நீங்கள் முடிவு செய்ததும் எங்களுக்கும் சொல்லுங்கள்," என்று வளர்ந்து வரும் குழந்தைகள் உங்களிடம் கூறுவார்கள். ¶பரம்பொருள் யார் என்பதை நாம் நமக்குள் அறிந்து கொள்ள வேண்டும். அது சிவபெருமானா? அது விஷ்ணுவா? அல்லது அது துர்கை அம்மனா? அதை முடிவு செய்த பிறகு, ஒரே எண்ணத்தை உடையவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து நமது பரம்பொருளுக்கு ஒரு கோயிலை வடிவமைத்து நிர்மாணம் செய்யலாம். ஒன்றிற்கு மேற்பட்ட பரம்பொருள்

இருக்கும் கோயிலில் சக்தி இருப்பது இல்லை. அதைப் போன்ற ஒரு கோயிலை நிர்மாணம் செய்யாமல் இருப்பது நல்லது. அது ஒரு சமூக கூடமாகத் தான் இருக்கும். அது மதம் இல்லை. அது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்காக சமரசம் செய்து கொள்வது ஆகும். அது மதத்தை இயக்க முற்படும் அரசியல் ஆகும். அதற்கு பதிலாக அங்கே ஒரு சிவன் கோயிலை நிர்மாணம் செய்து மனப்பூர்வமாக வழிபடுங்கள். அங்கே ஒரு விஷ்ணுவிற்கு கோயிலை நிர்மாணம் செய்து மனப்பூர்வமாக வழிபடுங்கள். அங்கே சக்திக்கு ஒரு கோயிலை நிர்மாணம் செய்து மனப்பூர்வமாக வழிபடுங்கள். ஆனால் ஒவ்வொரு கோயிலில் இருக்கும் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்தும் எண்ணத்துடன் நீங்கள் சமரசம் செய்து கொள்ள வேண்டாம், உங்களையும் உங்கள் குழந்தைகளையும் குழப்பிக்கொள்ள வேண்டாம். சிவ பெருமானுக்கு என்று நல்ல சக்தி வாய்ந்த கோயில்கள் இருக்கட்டும், கிருஷ்ணருக்கு மற்றும் விஷ்ணுவிற்கு மற்றும் சக்திக்கு என்று நல்ல சக்தி வாய்ந்த கோயில்கள் இருக்கட்டும். அப்போது ஒவ்வொரு பக்தனும் ஆண் தெய்வம் அல்லது பெண் தெய்வத்தை முழு ஈடுபாடு மற்றும் பக்தியுடன் முறையாக வழிபட முடியும்.

வியாழக்கிழமை

பாடம் 354

பாகால் மதங்களின்

அழிவு

கிறித்துவ மற்றும் கம்யூனிச பிரச்சாரம் காரணமாக தங்கள் மதத்தை நினைத்து அவமானப்பட்டு அதை புறக்கணித்த நாகரீகங்கள் இருந்துள்ளன. இன்று கிரேக்க மதம் எங்கே இருக்கிறது? அந்த மதத்தின் கோயில்கள் இன்று நினைவு சின்னங்களாக இருக்கின்றன. இன்று அமெரிக்க பழங்குடியினரின் மதம் மற்றும் அதன் மறைஞானம் எங்கே? இன்று ஹவாய் பழங்குடியினரின் மதம் எங்கே? அவர்கள் பின்பற்றிய மதம் ஆழமான கருத்துக்களை கொண்டு இருந்தது மற்றும் பல அம்சங்களில் இந்து மதம் போன்று இருந்தது. அவர்கள் விநாயகரை வழிபட்டனர், மற்றும் அவரை லோனோ கடவுள் என்று அழைத்தனர். அவர்கள் முருகப்பெருமானை வழிபட்டனர். நாம் அவரை குமரன் என்று அழைப்பதை போல, அவர்கள் அவரை கு கடவுள் என்று அழைத்தனர். நமது தெய்வமான பார்வதி தேவியை பெலே என்று அழைத்தனர். அந்த அம்மன் அவர்களுக்கு அச்சுறுத்தும் தெய்வமாக இருந்தது. நமது பரம்பொருளான சிவபெருமானைப் போல அவர்களுக்கு கேன் கடவுள் விளங்குகிறார். நாம் சிவனை *லிங்க* வடிவில் வழிபடுவதை போல, அவர்கள் தங்கள் கடவுளை செங்குத்தாக இருக்கும் ஒரு புனிதமான கல்லை வைத்து வழிபடுகின்றனர்.

¶சுமார் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பாக, கிறித்துவர்கள் ஹவாய் தீவிற்கு ஆட்பலத்துடன் வந்தனர். அவர்கள் "பாகால்" ஹவாய் மக்களை மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் அச்சகங்கள் மற்றும் பள்ளிகளை நிறுவினர். அந்த தீவில் இருக்கும் கோயில்களை மூடுவதற்கு, அவர்கள் அங்கிருந்த அரச குலத்தின் சம்மதத்தை பெற்றனர். அதன் பிறகு நடந்த சோக நிகழ்வுகளின் மூலம் ஹவாய் தீவின் அழிவு தொடங்கியது. 1,500 வருடங்கள் பழமையான பொலினீசியா கலாச்சாரம் பலவீனமடைந்து அழிந்தது. கலப்பு திருமணங்கள் நடக்கத் தொடங்கின. இன்று 200 வருடங்கள் பிறகு, அதன் மொழி, கலாச்சாரம், மதம், வழிபாடு மற்றும் இனம் எல்லாம் பெரும்பாலும் அழிந்து விட்டன. 1772 ஆம் ஆண்டு கேப்டன் குக் சந்தித்த 500,000 ஹவாய் மக்கள் இருந்த இடத்தில், இன்று வெறும் 500 மக்கள் மீதம் உள்ளனர். கோயில் கதவுகள் மூடப்பட்டு விட்டதால், ஹவாய் பழங்குடி இனத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்றே சொல்லவேண்டும். ஹவாய் மக்கள் மீது கிறித்துவர்கள் தங்கள் வாணிபம், குடியேற்றம், ஐக்கிய இராச்சியத்தின் விரிவாக்கம் நிலைத்து இருக்கும் அளவிற்கு, அவர்கள் கழுகைப் போன்ற பேராசையுடன் இருந்தார்கள். நாங்கள் ஹவாய் தீவில் வசிப்பதால், இவற்றை நாங்கள் நன்றாக அறிந்து இருக்கிறோம். ¶இந்த வேதனையை அமெரிக்காவின் பெருநிலப்பகுதியில் இருக்கும் இந்து மதம் அனுபவிக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புவதால், நமது இந்து கோயில்களின் மதிப்பை குறைத்து, அவற்றை அழிக்க முயற்சிக்கும் சக்திகளிடம் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று உங்களிடம் வேண்டிக் கொள்கிறோம். நாம் கோயில்களை பாதுகாப்பதன் மூலம், நமது மதத்தை பாதுகாக்கிறோம். நம்பிக்கையுடன் முன்னேறுங்கள். ஒருமித்த விருப்பம், ஒருமைப்பாட்டின் துணையுடன் இந்து மதத்தின் முன் அணியாக இருக்கும் போது, நாம் நம்மீது அன்பை செலுத்தும் கோட்டையாக விளங்குகிறோம். ¶இந்த சமூகத்தில் கோயில்களை திறக்க முயற்சிகளை மேற்கொண்டதற்கு, உங்கள் எல்லோருக்கும் பாராட்டை தெரிவித்தாக வேண்டும். நீங்கள் உங்கள் பாரம்பரியம் பற்றி அறிந்தது அனைத்தையும் அமெரிக்காவிற்கு கொண்டு வரவேண்டும் என்று நான் உங்களில் ஒவ்வொருவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். இங்கே ஒரு புதிய இந்திய மதத்தை உருவாக்க முயற்சி செய்யவேண்டாம். உங்களிடம் தற்போது இருக்கும் மதம் முழு நிறைவாகவும், உலகில் சிறந்ததாகவும் விளங்குகிறது. உங்களில் கிறித்துவ பள்ளிகளில் கல்வி கற்றவர்களின் மனங்கள் சிறிய வயதிலேயே சாமர்த்தியமான ஆசிரியர்கள் மூலம் இந்து மதத்திற்கு எதிராக தூண்டப்பட்டு இருப்பதால், இங்கே கோயில்களை நிர்மாணம் செய்வதும் கலாச்சாரத்தை இங்கே கொண்டு வருவதும் முறையற்றது என்று உங்கள் அடிமனதில் புகுந்துள்ள சிந்தனைகள் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றன. அடிமனதில் இருந்து அந்த எண்ணங்களை விடுதலை செய்து, நம் எல்லோரும் குடியுரிமை பெற்றுள்ள இந்த நாடு, தனது அரசியலமைப்பின் மூலம் நமக்கு மத சுதந்திரம்

வழங்கியுள்ளது என்பதை உணர வேண்டும். அந்த மத சுதந்திரத்தை கோருவது, அந்த மத சுதந்திரத்தை அமல்படுத்தி செயல்படுத்துவது மற்றும் நமது இறைநம்பிக்கையை பற்றி கூச்சப்படாமல் இருப்பது ஆகியவை நமது உரிமை மற்றும் கடமை ஆகும். இந்த நாட்டில் நாம் கூச்சப்படவேண்டிய அவசியம் இல்லை. ¶நான் சில நாட்களுக்கு முன்பு பிளின்ட், மிச்சிகனில் இருக்கும் இந்து கோயிலுக்கு சென்று இருந்தேன். கோயிலுக்கு முன்பாக இருந்த மணலில் யாரோ ஒருவர் "இயேசு கிறிஸ்து" என்று எழுதி இருந்தார். "இது எத்தனை நாட்களாக இருக்கிறது?" என்று நான் விசாரித்தேன். சில நாட்களாக இருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். "நீங்கள் ஏன் அதை கால்களால் அழிக்கவில்லை? இந்த வளாகத்திற்குள் நுழைந்து, ஒரு இந்து கோயிலுக்கு முன்பாக இவ்வாறு எழுதுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை." என்று நான் கூறினேன். எல்லோரும் அதிக தயக்கத்துடன் தென்பட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் நடைபெறும் போது, நம்மிடம் தயக்கம் தேவையில்லை, நம்மிடம் வலிமை தேவைப்படுகிறது. அதன் பிறகு நாங்கள் அதை அழித்து விட்டோம். ¶நாம் அந்த வலிமையை எப்படி வெளிப்படுத்துவது? நாம் அந்த சமூகத்தை சேர்ந்த கிறித்துவ மதகுருமார்களிடம் சென்று, அவர்களின் குழந்தைகள் நமது கோயிலின் புனிதத்தன்மையை கெடுப்பதாகவும், அதை அவர்கள் நிறுத்த வேண்டும் என்றும் பணிவாக மற்றும் உறுதியாக கூற வேண்டும். அவர்கள் தங்கள் சங்கங்களை அழைத்து இந்து சமயத்தை பற்றி விளக்கி, இதைப்போன்ற அர்த்தமற்ற செயல்கள் மற்றும் தொல்லைகளை தவிர்க்க வேண்டும் என்று அவர்கள் தங்கள் சங்கங்களிடம் அறிவுறுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்வோம். இந்து சமூகத்தை சேர்ந்த ஒரு குழந்தை, பாப்டிஸ்ட் தேவாலயத்திற்கு முன்பாக "ஹரே கிருஷ்ணா" அல்லது "சிவா சிவா" என்று மணலில் எழுதினால், பாப்டிஸ்ட்கள் அதைப் பற்றி புகார் கூற ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் நேராக இந்த இடத்திற்கு வந்து, "நான் இந்த நிறுவனத்தின் ஆன்மீக தலைவரிடம் ஒரு முக்கியமான விஷயத்தை பற்றி பேச விரும்புகிறேன்," என்று வந்து விடுவார்கள். அதன் பிறகு நீங்கள் உங்கள் குழந்தைகளிடம் சென்று கிறித்துவர்களை பகைத்துக் கொள்ளக்கூடாது என்றும் அவர்கள் கோயிலின் புனிதத்தன்மையை கெடுக்கக்கூடாது என்றும் கூறவேண்டும். ¶நாம் நமது குழந்தைகளிடம் அவர்களின் பள்ளிகளில் கிறித்துவர்கள் யாரேனும் தொல்லை தருகிறார்களா என்பதையும் கேட்க வேண்டும். அரசு பள்ளிகளில் நடைபெறும் இந்த இகழ்ச்சி, நமது அரசியமைப்பில் மத சுதந்திரத்திற்கு உரிமை வழங்கும் முதல் சட்ட திருத்தத்தை மீறுவதாக இருக்கிறது. அத்தகைய துன்புறுத்தல்களை பள்ளியின் விளையாட்டு திடல்கள், வகுப்புக்கள், வகுப்புக்களுக்கு முன்பாக அல்லது அதற்கு பிறகு, சிற்றுண்டி சாலை அல்லது கழிவறைகளில் அனுமதிக்கக்கூடாது. உனது ஆன்மா அழிந்து விடும் அல்லது நிரந்தரமாக நரகத்தில் எரிந்துக்கொண்டு இருக்கும் என்று ஒரு குழந்தை இன்னொரு குழந்தையை அச்சுறுத்துவது மிகவும் கடுமையான குற்றம் இல்லையா? ஆன்மா உடலை

காட்டிலும் முக்கியமாக இருப்பதாலும், இன்னொருவரின் உடலை துன்புறுத்துவது அச்சுறுத்துவது குற்றம் என்பதாலும், இன்னொருவரின் ஆன்மாவை அச்சுறுத்துவது குற்றமாக கருதவேண்டும் அல்லவா? இந்த குற்றம் பாதிரியார் அல்லது மதகுரு, தனது பிரசங்க மேடையில் வழங்கும் வெறுப்பு மற்றும் மதவெறி கலந்த பேச்சில் இருந்து தொடங்குகிறது. ¶இவை வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட குற்றங்கள், மற்றும் இவற்றை தடுக்க அதிகப்படியான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த சட்டங்கள் தெளிவாகும் வரை, புகார் கூறுவதில் அதிக சக்தி உள்ளது என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தங்கள் குழந்தைகள் தினமும் மதம் தொடர்பான இகழ்ச்சி மற்றும் தொல்லைகளை பொறுத்துக் கொள்ள வேண்டி இருந்தப்பதாகவும், அவர்களுக்கு அதில் இருந்து விடுதலை அளிக்கவேண்டும் என்று பெற்றோர்கள், திருச்சபை பாதிரியார்கள், மதகுருமார்கள், பள்ளி ஆசியர்கள், பள்ளி தலைமை ஆசியர்கள் மற்றும் கல்வித்துறைகளிடம் இந்துக்கள், யூதர்கள், இசுலாமியர்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்கள் ஒன்றாக சேர்ந்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகிறார்கள். இவ்வாறு ஆரோக்கியம் இல்லாமல் பகையுணர்வை தூண்டும் சூழ்நிலைகளில், எவ்வாறு குழந்தைகள் நல்ல முறையில் பாடம் படிக்க முடியும்? அச்சம் நமது செயல்பாடுகளை முடக்க அனுமதி வழங்க முடியாது. கிறித்துவர்களிடம் சென்று உங்கள் குறைகளை சொல்லுங்கள். நம்பிக்கையுடன் முன்னேறுங்கள். அப்போது தான் உங்களால் நிலைத்து இருக்க முடியும்.

வெள்ளிக்கிழமை

பாடம் 355

அர்ப்பணிப்பின்

வலிமை

நமக்கு வலிமை தருவது எது? ஒரு பரம்பொருள் மற்றும் பல மகாதேவர்கள். முதலில் யார் பரம்பொருள் என்பதை நாம் முடிவு செய்யவேண்டும். நீங்கள் சைவ இந்து சமயத்தை சேர்ந்தவரா? வைணவ இந்து சமயத்தை சேர்ந்தவரா? சாக்த இந்து சமயத்தை சேர்ந்தவரா? சுமார்த்த இந்து சமயத்தை சேர்ந்தவரா? அதை முடிவு செய்த பிறகு, உங்கள் மனதில் நம்பிக்கை மற்றும் அமைதி பிறக்கும். உங்களுக்கு தேவைப்படும் போது ஆறுதல் கிடைக்கும், மற்றும் அதை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு வழங்கலாம். அறிவு வலிமையை தருகிறது. அர்ப்பணிப்பு வலிமையை தருகிறது. நீங்கள் எந்த நிலையில் என்னவாக இருக்கிறீர்கள் என்கிற அறிவு வலிமையை தருகிறது. பல தெய்வங்களை வழிபடுவது நமது வழிபாட்டு முறை ஆகும், ஆனால் அவர்கள் அனைவரும்

பரம்பொருள் இல்லை. அவரது படைப்புக்களாக விளங்கும் அவர்கள், அவருக்கு உதவியாளர்களாக விளங்குகின்றனர். நாம் பல நாமங்களை கொண்டு அழைத்தாலும், ஒரே ஒரு பரம்பொருள் மட்டுமே இருக்கிறார். பல மகாதேவர்கள் நமக்கு உதவி செய்வார்கள். அவர்கள் இறைவன் உருவாக்கிய வல்லுனர்கள். ¶இந்து மதம் என்பது இன்றைய மற்றும் நாளைய மதம் ஆகும். அது பல வரலாற்று புத்தகங்கள் நிறைந்த கடந்த கால மதமாக மட்டும் இல்லை. இன்று நமது மதம் நமக்கு வலிமையை தருகிறது. அது வழிபாட்டு முறை மற்றும் ஒரு பரம்பொருள் பற்றிய அறிவை நமக்கு வழங்கி, நமது மனங்களை ஒளிர்விக்கும் விரிவான சாத்திரங்களின் துணையுடன் ஒரு பரம்பொருளை வழிபடும் மதம் ஆகும். இதை மறக்க வேண்டாம். நீங்கள் உங்கள் வைதீக இந்து தர்மத்தை புறக்கணிக்காமல் நிறைவேற்றினால், பல தலைமுறைகளுக்கு நீங்கள் பலன்களை பெறுவீர்கள். ¶நமது இந்து மதத்திற்கு மற்றும் அதன் உட்பிரிவுகளுக்கு இன்னொரு அச்சுறுத்தலாக, நமது மதத்தில் இருந்தே ஒரு ஒரு இயக்கம் தோன்றியுள்ளது. நான் இதை "மரபுசாரா இந்துமதம்" என்று அழைக்கிறேன். மரபுசாரா இந்து மதம் என்பது "செல்லப்பகடையின் கஞ்சி" போல, ஒரு பாத்திரத்தில் பல பொருட்களுடன் இருக்கும் ஒரு குழப்பமான கலவை போன்றது. இந்த இயக்கத்தை நமது மூதாதையர்கள் தொடங்கி வைத்தார்கள், மற்றும் நாம் இந்த பிறவியில் நல்ல சைவர்களாக இருந்து திருத்தி அமைக்க வேண்டும். ¶மரபுசாரா இந்து மதம் எதை போதிக்கிறது? கோயிலுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை, *யோகாப்பியசம்* செய்ய வேண்டிய அவசியம் இல்லை, எல்லா மதங்களும் ஒன்றே, நாம் *சுவாமிகள்* சொல்வதை கேட்கவேண்டிய அவசியம் இல்லை, மத உட்பிரிவுகள் தவறானது என்று அது நமக்கு போதிக்கிறது. கோயில்கள், மத உட்பிரிவுகள் மற்றும் *சுவாமிகள்* இல்லை என்றால், அவர்கள் இந்து மதத்தையே அழித்து விடுவார்கள் என்பதை அந்த மரபுசாரா இந்து மதத்தை பின்பற்றுபவர்கள் உணர்வதாக தோன்றவில்லை. ¶மரபுசாரா இந்துக்கள் எல்லா மதங்களும் ஒன்று என்ற கருத்தை கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு மதங்களை ஆய்வு செய்யவில்லை என்பது இதன் மூலம் தெரிகிறது. இல்லையென்றால் நாங்கள் அமெரிக்காவில் பல வருடங்கள் ஒப்பீட்டு ஆய்வு செய்து, எல்லா மதங்களும் ஒன்றல்ல என்ற முடிவுக்கு வந்ததைப் போல, அவர்களும் முடிவுக்கு வரவேண்டும். எல்லா மதங்களும் அடிப்படையில் ஒன்று என்று எனக்கு சிறு வயதில் கற்றுத் தரப்பட்டது. அது பொய் என்று பல வருடங்கள் கழித்து நான் புரிந்துக் கொள்ளும் வரை, அதை உண்மை என்று நான் நம்பி வந்தேன். பக்தி மற்றும் நன்னடத்தையை கற்றுத் தருவதில் எல்லா மதங்களும் சிறந்து விளங்குகிறார்கள், ஆனால் அவை அனைத்தும் ஒன்றல்ல. தங்கள் மதத்தில் இருந்து இந்து மதம் முற்றிலும் மாறுபட்டது என்பதை கிறித்துவர்கள் அறிவார்கள். சைவ சமயத்தின் முக்கிய அடிப்படைகளாக விளங்கும் *கர்மவினை*, மறுபிறவி, யோகம், எங்கும் எதிலும் வியாபித்து

இருக்கும் இறைவனின் இருப்பு மற்றும் ஆன்மா இறுதியில் இறைவனுடன் ஐக்கியமாகும் முக்தி போன்ற நம்பிக்கைகள், அவர்களின் நம்பிக்கைகளாக இல்லாததால், அவர்கள் தங்களுக்கு புரியாத கருத்துக்களுடன் வாழ்வது இல்லை. ஒரு கிறித்துவர் முன்பு குறிப்பிட்ட சைவ சமய அடிப்படைகளில் ஏதாவது ஒன்றின் மீது நம்பிக்கை வைத்தால், அது அவரது மத கோட்பாடுகளை முற்றிலும் மறுப்பதற்கு சமம் என்று தெரியுமா? அவர்களுக்கு ஒரு பரம ஈசுவரன் மீது நம்பிக்கை மற்றும் சில நல்ல ஒழுக்க விதிகளை தவிர பெரிதாக எதுவும் இல்லை, ஆனால் இரு மதத்திற்கும் இடையே எண்ணற்ற வேறுபாடுகள் உள்ளன. ¶சைவர்களாகிய நாம் எல்லோர் மீதும் அன்பு செலுத்துகிறோம். நாம் எல்லா மதத்தின் பாதைகளுக்கும் அங்கீகாரமும் ஆதரவும் வழங்குகிறோம். அது நமது வழக்கம் ஆகும். ஆனால் அதற்காக நாம் நமது நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்களை புறக்கணித்து இசுலாம் அல்லது பௌத்த மதத்தை பின்பற்ற வேண்டும் என்று பொருளில்லை. இதற்காக நாம் நமது பூஜை அறையில் இயேசு கிறித்துவின் படத்தை வைக்க வேண்டும் என்று பொருளில்லை. இதைத்தான் மரபுசாரா இந்துக்கள் செய்கிறார்கள். ஒரு சைவ சங்கத்திற்கு நான் ஒரு முறை சென்று இருந்த போது, அவர்களின் பிரார்த்தனை அறையில் இயேசு கிறித்து, கிரிஷ்ணர் மற்றும் புத்தரின் படங்களை ஒன்றாக பார்த்ததும் நான் அதிர்ச்சி அடைந்தேன். அங்கே விநாயகர் அல்லது முருகன் அல்லது சிவபெருமானின் படங்கள் இல்லை, இருந்தாலும் அவர்கள் தங்களை சைவர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள். நான் அவர்களிடம் இதற்கான காரணத்தை கேட்டேன். "நாங்கள் எல்லா மதங்கள் மீதும் நம்பிக்கை வைத்து இருக்கிறோம், சுவாமி" என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் தங்கள் இறைவனை தவிர மற்ற தெய்வங்களை எல்லாம் வழிபட்டார்கள்! மரபுசாரா இந்து மதத்தின் தவறான சிந்தனையே, அவர்களுக்கு நிறைவை தந்த அந்த சமயக்கலப்புக்கு காரணம் ஆகும்.¶ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின் போது, கிறித்துவர்கள் விநாயகரை வரவழைப்பது இல்லை. அப்படி நடப்பதற்கு சிறிதும் வாய்ப்பில்லை. சைவர்கள் தங்கள் வீட்டு பூஜை அறையில் இயேசு அல்லது மேரியின் படத்தை வைப்பதால், அவர்கள் தங்கள் வீட்டில் கிறித்துவ சமயப்பணியாளர் நுழைந்து தங்கள் குழந்தைகளின் மனங்களில் நுழைவதற்கு அனுமதி வழங்குவது ஆகும். இது உங்கள் மத நம்பிக்கையில் முறிவு ஏற்படுவதற்கான முதல் அறிகுறி ஆகும். இப்படித் தான் கிறித்துவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் உங்களை ஒரு முக்கிய இலக்காக கருதுகிறார்கள், மற்றும் "இனி அதிக நாட்கள் இல்லை" என்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

சனிக்கிழமை

பாடம் 356

மரபுசாரா

இந்து மதம்

சைவம், வைணவம், சாக்தம் மற்றும் ஆச்சாரமான சுமார்த்த சம்பிரதாயம் என்ற சமய உட்பிரிவுகளுக்கு எதிராக மரபுசாரா இந்துக்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். சமய உட்பிரிவு என்பது ஒரு பழங்கால தீங்கு, அறிவூட்டம் இல்லாத வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம், ஒரு கடந்தகால விஷயம் என்று அவர்கள் சமய உட்பிரிவைப் பற்றி கற்றுத் தருகிறார்கள். அது முற்றிலும் தவறு. சமய உட்பிரிவுகள் அந்த மதத்திற்கு வலிமையை தருகிறது. நீங்கள் ஒரு மரபுசாரா இந்துவிடம், அவர் எந்த மதத்தை பின்பற்றுகிறார் என்று கேட்டால், "நான் ஒரு கிறித்துவனாக, நான் ஒரு யூதனாக, நான் ஒரு பௌத்த சமயத்தை சார்ந்தவனாக, எல்லா மதத்தையும் பின்பற்றி வருகிறேன்," என்பார். அவர் ஒரு கிறித்துவன் இல்லை என்பதை கிறித்துவர்கள் நன்றாக அறிந்து இருக்கிறார்கள். அவர் யூதர் இல்லை என்பதை யூதர்கள் அறிந்து இருக்கிறார்கள், மற்றும் அவர் பௌத்த மதப் பாதையை பின்பற்றவில்லை என்று பௌத்தர்கள் கூறுவார்கள். அவர் பேசுவது அபத்தமாக இருப்பதாக மேற்கத்திய நாட்டவர் கருதுகின்றனர். ¶மரபுசாரா இந்துக்கள் நவீன யுகம் அல்லது அரசியல் ஆதாயத்திற்கு மக்கள் எல்லோரையும் ஒன்று சேர்க்கிறோம் என்ற பெயரில் சைவம், வைணவம் மற்றும் சாக்தம் என்று எல்லா சமயங்களையும் அழிக்க முடிவு செய்துள்ளனர். இதைப் போன்ற நிகழ்வு அமெரிக்காவிலும் நடந்து வருகிறது. வாஷிங்டனில் தங்களுக்கு அதிக அரசியல் செல்வாக்கு கிடைக்கவேண்டும் என்று, மரபுசாரா இந்துக்கள் பல்வேறு சமய உட்பிரிவு சார்ந்தவர்களை ஒரு குழுவாக மாற்ற, அவர்களிடம் சம்மதம் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் எந்த ஒரு காரணமும் இல்லாமல், ஆயிரம் ஆண்டு காலமாக தாங்கள் பின்பற்றிய அழகான பாரம்பரியத்தை துறந்து, இந்த சிந்தனை முறையை தயக்கம் இல்லாமல் ஏற்றுக்கொள்வது வருத்தம் தருவதாக இருக்கிறது. இந்த செயல் படிப்படியாக தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கிறது. அதனால் இந்து மதத்திற்கு எதிராக கிறித்துவர்கள், இசுலாமியர்கள் மற்றும் நாத்தீக கும்பல் திட்டம் தீட்டிக்கொண்டு இருக்க, தற்போது அவர்களுடன் மரபுசாரா இந்துக்களும் ஒன்று சேர்ந்துள்ளனர். அவர்கள் தங்கள் மதத்தில் இருந்துக்கொண்டு எதிராக செயல்படுவதால், இது இந்து மதத்தின் துர்பாக்கியம் ஆகும். ¶இதற்கு என்ன தீர்வு? உலகில் இருக்கும் மதங்களில் மிகவும் பழமையான மதத்திற்கு பாதுகாப்பு வழங்கி, அதை காப்பாற்ற நாம் ஒவ்வொரு சமயப்பிரிவுக்கும் எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும். மரபுசாரா இந்துக்கள் ஒரு புதிய சமயப்பிரிவை தான் உருவாக்கி வருகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும், மற்றும் நாம் இந்த நவீன சமயப்பிரிவில் சேரமுடியாது என்று சொல்லவேண்டும்.

சமயப் பிரிவுகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று கூறுபவர்களுடன் நமக்கு எந்த தொடர்பும் இல்லை. இன்று மரபுசாரா இந்து மதத்தை பின்பற்ற சைவ சமயத்தை துறந்தவர்கள், நாளை தாங்கள் எதையும் பின்பற்றவில்லை என்றும், தாங்கள் எல்லா மதத்தையும் பின்பற்றுவதாக கூறி, இந்து மதத்தை முழுமையாக துறந்து விடுவார்கள். ¶மரபுசாரா இந்து மதம் எவ்வாறு பொருந்துகிறது என்பதை புரிந்துக்கொள்ள *ஆர்த்தோடாக்ஸ், ரீஃபார்ம்* மற்றும் *லிபரல்* என்ற ஆங்கில சொற்களை பயன்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால் இந்த பிரச்சனையை முக்கிய மதங்கள் அனைத்தும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. சைவ சமயம் என்பது சனாதன தர்மத்தின் ஆச்சாரமான மற்றும் முதன்மையான வடிவம் ஆகும். பின்னர் தோன்றிய வைணவம் மற்றும் சாக்தம் சில சீர்த்திருத்தங்களை பெற்ற சமயப்பிரிவு ஆகும், ஆனால் அவை பெரும்பாலான பழங்கால பழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை தக்க வைத்துக் கொண்டன. மரபுசாரா இந்து மதம் பரிந்துரைக்கும் இந்து மதப் பாதை முற்றிலும் வைதீக முறையை பின்பற்றாமல், நமது மகாதேவர்கள் மற்றும் நமது சாத்திரங்கள் மற்றும் நமது ரிஷிகள் மற்றும் மற்ற மகான்கள் அமைத்து வைத்த பாதையில் இருந்து முழுவதுமாக விலகி இருக்கிறது. ¶யூத மதத்தில் இருந்து தமிழர்கள் ஒரு பாடத்தை கற்றுக் கொள்ளவேண்டும். மரபுசாரா யூத மதம் இனம் மற்றும் மதத்தின் அழிவுக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறது. இது நவீன கோட்பாடுகள் மூலமாகவும், யூதர்கள் பின்பற்றுவதற்காக அமைக்கப்பட்ட கடமைகள் மற்றும் ஒழுக்கங்களில் முழுமையாக சமரசங்கள் செய்வதன் மூலமாகவும், யூத மதத்தின் நெறிமுறைகள், நற்பண்புகள் மற்றும் வழக்கங்களை புறக்கணிப்பதன் மூலமாகவும் அழிவுக்கு வழி வகுக்கிறார்கள். நாம் இதன் மீது கவனம் செலுத்த வேண்டும். இது இந்தியா மற்றும் இலங்கையிலும் நடந்துக்கொண்டு இருக்கிறது. ¶பாரம்பரிய முறையில் தங்கள் சமய உட்பிரிவுகளை பின்பற்றி தங்கள் நம்பிக்கைகளில் உறுதியாக இருந்து, மற்றவர்களை துன்புறுத்தாமல் மத ஈடுபாட்டுடன் வாழும் மக்களும் குழுக்களும் அமெரிக்காவில் நல்ல மரியாதையை பெறுவார்கள் என்பது பலருக்கு தெரியவில்லை. வலிமை மற்றும் நம்பிக்கைக்கு மரியாதை செலுத்துவது மனித இயல்பு ஆகும். தங்கள் சமயத்தில் உறுதியாகவும் அபிமானத்துடனும் இருக்கும் சைவர்களுக்கு உலகமெங்கும் மரியாதை கிடைக்கும். ஆனால் தங்களுக்கு எதில் நம்பிக்கை இருக்கிறது என்று தெரியாதவர்கள் அல்லது தங்களது நம்பிக்கை முழுவதும் முற்றிலும் மாறுபட்ட ஒன்றின் மீது இருக்க, இன்னொன்றை பெற வேண்டும் என்பதற்காக அல்லது இன்னொன்றில் பொருந்த வேண்டும் என்பதற்காக வேறொன்றின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று கூறுபவர்களை மக்கள் மதிக்கமாட்டார்கள். மரபு சாரா குழுக்களுக்கு மக்களிடம் இருந்து அதே மரியாதை கிடைப்பது இல்லை. அவர்களுக்கு மரியாதை வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு, மீண்டும் சமூகத்தில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். ¶சில அதிருப்தி இந்துக்கள் மேற்கத்திய அறிஞர்களுடன் நல்லுறவை பராமரிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கிய

பலவீனமான அறிவுசார் கலவையை அமெரிக்க சைவர்கள் நாடவில்லை. அவர்கள் உண்மையான சைவ சமயத்தை நாடுகிறார்கள். அதிக கல்வி அறிவையும், அதிக தெளிவையும் பெற்று வரும் மக்கள் ஆச்சாரமான சைவ சமயம் அதிக ஆழமாகவும், தங்கள் ஆன்மாவிற்கு நல்ல பலன் தருவதாகவும் உணர்ந்துள்ளனர். அவர்கள் சிவபெருமானை அன்போடு வழிபட விரும்புகின்றனர். அவர்கள் விநாயகர் மீது அன்பு செலுத்தி, முருகப்பெருமானிடம் உதவியை நாடி செல்கின்றனர். இதற்கு என்ன தீர்வு? நாம் நமது சாத்திரம் மற்றும் கோயில் வழிபாட்டை பாதுகாக்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 357

வழிபாடு பற்றிய

யதார்த்தங்கள்

நாம் கோயிலுக்கு அதிகம் மாறுபட்ட மற்றும் எளிமையான முறையில் செல்கிறோம். கோயிலில் தெய்வம் வாசம் செய்வதாகவும், அவரை புரோகிதர் ஆவாகனம் செய்யும் போது, அவர் தனது பொன்னிற ஒளி உடலில் அந்தர்லோகத்தில் இருந்து வந்து, தனது கற்சிலையின் மீது வட்டமிட்டுக் கொண்டு, கோயிலுக்கு வந்திருக்கும் பக்தர்களுக்கு ஆசிகளை வழங்குவதாகவும் நம்புகிறோம். எல்லோரும் உற்சாகம் அடைகிறார்கள். எல்லோரும் அவரது புனிதமான இருப்பை உணர்கிறார்கள், மற்றும் நன்றாக பக்குவப்பட்ட ஆன்மாவால் அந்த தெய்வத்தை அந்த கோயிலில் காணவும் முடிகிறது. அதனால் நாம் தெய்வத்தை காண சுத்தமான மனதுடன் செல்கிறோம். நாம் பயபக்தியுடன் அந்த தெய்வத்திற்கு அருகில் செல்கிறோம். அவர் கர்பக்கிரத்தில் இருக்கும் கற்சிலையில் இருந்து தனது ஆசிகளை வழங்கும் போது, நாம் அவர் கண்களில் அவமதிக்கும் வகையில் இல்லாமல் சிறப்பாக தென்பட விரும்புகிறோம். அதனால் நாம் நமது உடல் மற்றும் மனதை தயார் செய்து கோயிலுக்கு செல்கிறோம். நாம் நமது ஒளி உடலை முறைப்படுத்திக் கொள்கிறோம். ஒளி உடல் என்பது உடலை சுற்றி வெளிவரும் அதிர்வுகளின் சாரம் ஆகும். நமது சிந்தனைகள் மற்றும் மனவெழுச்சிகளின் இயல்பை பொருத்து, ஒளி உடலின் நிறங்கள் இருள் படர்ந்து அல்லது பிரகாசமாக இருக்கின்றன. நாம் *மந்திரங்கள்*, பாடல்கள் மற்றும் பிரார்த்தனைகளை சொல்லி நமது ஒளி உடலை தயார் செய்துகொள்கிறோம். நாம் நன்றாக குளித்து உடலை சுத்தம் செய்துக்கொண்டு, இன்றைய இளம் பெண்களைப் போல பகட்டாக ஆடை அணியாமல், மிகவும் எளிமையாக மற்றும் கண்ணியமான முறையில் ஆடைகளை அணிகிறோம். இம்முறையில் நாம்

நம்மை தயார் செய்துக்கொண்டு கோயிலுக்கு செல்கிறோம், மற்றும் அந்தர்லோகத்தில் இருந்து வரும் தெய்வம் நமக்கு ஆசிகளை வழங்கி, நமது பிரார்த்தனைகளை கேட்டு, நமது மனங்களை சுத்தம் செய்து நமது மனவெழுச்சிகளை குறைக்கிறது. ¶நாம் அந்த புனிதமான அதிர்வை நமது வீடு மற்றும் நமக்கு விவேகமாக வழிகாட்டும் நமது சமூகத்து சான்றோர்களிடமும் எடுத்து செல்கிறோம். இதனால் கலாச்சாரம் செழிக்கிறது, ஏனென்றால் கலாச்சாரம் கோயிலில் இருந்து தொடங்குகிறது. கலாச்சாரம் கோயிலில் இருந்து வெளிவரும் போது, நமது செயல்கள் நல்ல பலன்களை தந்து நமது மனங்கள் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு, நமது பேச்சு சுத்தமாக இருந்து, நமது இதயங்கள் உற்சாகமாக இருந்து நாம் நல்ல குடிமகன்களாக இருக்கிறோம். ஒரு மதத்தை பின்பற்றுவதன் மூலம் நாம் அக அமைதியுடன் இருந்து நமது பூமியிலும் அமைதியை நாடுவதால், அது நம்மை நல்ல குடிமகன்களாக்குகிறது, முதலில் அந்த நபரின் அகத்தில் அமைதி பிறக்கிறது. வீட்டில் முறையாக வாழ்ந்து, முறையாக வழிபட்டு, முறையான மத கலாச்சாரத்தை பின்பற்றி நாம் அமைதியாக இருக்கும் வரை, நமது அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடம் இருந்து அமைதியை நாடுவதில் அர்த்தம் இல்லை. ¶நாம் இவற்றை எல்லாம் எவ்வாறு அழிப்பது? அது மிகவும் எளிது. கோயில் செல்வதை நிறுத்துங்கள். கலாச்சாரம் அழிய தொடங்கும். தூய்மை மற்றும் அன்பு வெளியேற தொடங்கும். வீட்டில் வாக்குவாதங்கள் நடைபெறும் சத்தம் கேட்கும். நீதிமன்றங்களில் விவாகரத்துக்கள் அதிகமாகும். கோயில் வழிபாடு என்கிற சிறப்பான மறைஞான வழக்கத்தை நாம் நிறுத்தியதால் மன அழுத்தம் மற்றும் மன நோய் வழக்கமான அனுபவமாகிவிடும். ¶கோயில் என்பது இந்து மதத்தின் சிறந்த மனநல மருத்துவராக விளங்குகிறது. நாம் அதை மறக்கும் போது, நமது புறக்கணிப்பு தனிப்பட்ட முறையிலும் நாட்டிற்கும் வேதனைகளை வழங்குகிறது. இந்த பூமியில் இருக்கும் தலைசிறந்த மனநல மருத்துவர்களின் திறமையை காட்டிலும் கோயிலின் சூட்சும சக்திகள் வலுவாக இருக்கின்றன. இந்த சக்தியை ஆவாகனம் செய்து அதனை நிலைத்து இருக்கச் செய்யும் கருவிகளை நமது பூசாரிகள் அறிந்து இருக்கிறார்கள். கோயில் என்பது உங்கள் பிரச்சனையை மட்டும் ஆய்வு செய்யாமல், பாவ விமோசனத்தையும் தருகிறது. கோயிலில் இருக்கும் தெய்வத்திடம் எந்த காரணத்துக்காக உதவியை நாடி வந்தோம் என்று நினைத்துக்கொண்டு வெளியேறும் அளவிற்கு, கோயிலின் சக்தி மிகவும் வலுவாக இருக்கிறது. ¶நாங்கள் இறைவன் மற்றும் மகாதேவர்களை வழிபடுகிறோம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். நமது மகாதேவர்களின் இருப்பை மறுத்து, அந்த இடத்தில் தனது வரையறுக்கப்பட்ட அறிவை அறிமுகப்படுத்தும் மரபுசாரா இந்து பிரச்சாரத்தை நாங்கள் எதிர்க்கிறோம். எல்லா மதங்களும் ஒன்று என்ற கருத்தை நாங்கள் எதிர்க்கிறோம், மற்றும் இந்த பூமியில் தலைசிறந்து விளங்கும் சைவ சமயத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை என்று நாங்கள் நம்புகிறோம். சைவ சமய தலைவர்கள் மரபுசாரா இந்து

மதத்தை எதிர்த்து நின்று, அதை குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் மனங்களில் இருந்து நீக்க வேண்டும். அந்த ஒரு புற்று நோயை நீக்க வியக்கத்தக்க நிவாரணங்கள் எதுவும் இல்லை, அதனால் சைவ சமயத்தை காக்க அதை சிகிச்சை செய்து நீக்க வேண்டும். அது தான் ஒரே தீர்வு. ¶நமது மதம் பல தீவிர பிரச்சனைகளை சந்தித்து வருகிறது என்பது உங்களுக்கு தெரியும். அதே சமயத்தில் உலகில் இருக்கும் சைவர்களாகிய நாம் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட்டு சிறிய சுயநலமற்ற சேவையை வழங்கினால், நம்மால் நல்ல யதார்த்தமான தீர்வுகளை வழங்க முடியும். சிவபெருமானின் பக்தர்களிடம் உற்சாக சக்தி நிரம்பி வருவதை என்னால் உணர முடிகிறது. ஆனால் அது மட்டும் போதாது. மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சைவ தர்மத்திற்கு சேவை செய்வது மற்றும் கற்றுத் தருவது என்று ஏதாவது ஒரு வகையில் தொண்டு செய்வதற்கு, *கிருகஸ்த ஆசிரமத்தில்* இருந்து பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் மதத்தலைவர்களாக செயல்பட முன்வரவேண்டும். சிரத்தையுள்ள சைவர்கள் நல்ல தரம் வாய்ந்த சைவ பள்ளிகளை நிர்மாணம் செய்து, அவற்றை நிர்வகிக்க வேண்டும். மதம் தொடர்பாக முறையான பயிற்சி ஏதும் பெறாத அடுத்த தலைமுறைக்கு, நீங்கள் எல்லோரும் முன்வந்து நமது மதத்தைப் பற்றி போதிய பயிற்சி தந்து நமது மதத்தை பரப்ப வேண்டும். சிவபெருமானின் பணியில் சேவை செய்வதற்கு, நமக்கு மக்களிடம் சென்று பணிபுரியும் சேவகர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமயப்பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இது தொழில்நுட்ப யுகத்தில், சைவ மதம் கடந்தகால மதமாக இல்லாமல் எதிர்கால மதமாக இருப்பதற்கு தேவைப்படுகிறது.

இந்து தர்மார்தம் சக்தோ பவ

हिन्दुधर्मार्थम् शक्तो भव



இந்து மதத்தில் வலுவாக நிலைத்து இருங்கள்

வானம் எங்களுக்கு அச்சமின்மையை வழங்கட்டும். சொர்க்கமும் பூமியும் எங்களுக்கு அச்சமின்மையை வழங்கட்டும். பின்புறமும் முன்புறமும் எங்களுக்கு அச்சமின்மையை வழங்கட்டும். வடக்கும் தெற்கும் எங்களுக்கு அச்சமின்மையை வழங்கட்டும். நண்பர்கள், எதிரிகள், கண்களுக்கு தெரிகிற மற்றும் கண்களுக்கு தெரியாத எதிர்காலம் எங்களுக்கு அச்சமின்மையை வழங்கட்டும். இரவு மற்றும் பகல் அச்சமின்மையை வழங்கட்டும். எல்லா திசைகளும் எங்களுக்கு நண்பர்களாக இருக்கட்டும்.

அதர்வண வேதம் 19.15.5–*6.* ஹிவே, ப. 105



பாரம்பரிய முறையில் கோயிலில் பாடும் ஓதுவார் மரபை சேர்ந்த ஒருவர், இலங்கை அளவெட்டியில் இருக்கும் குருதேவாவின் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்திற்கு அருகிலுள்ள கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில், மரத்தால் செய்த ஒரு தாளக் கருவியை தனது கைகளில் பிடித்துக்கொண்டு சம்பந்தர் எழுதிய ஒரு தேவார பாடலை பாடிக்கொண்டு இருக்கிறார்.

திங்கட்கிழமை

பாடம் 358

நீங்கள் ஒரு

இந்துவா?

இன்று மதியம் இலங்கையில் இருக்கும், எனது ஆசிரமத்தில் ஒரு அருமையான இளைஞருடன் ஒரு சுவாரஸ்யமான சந்திப்பு நடைபெற்றது. இந்து மதத்தில் வலுவாக நிலைத்து இருக்கவேண்டும் என்று நான் அந்த உரையாடலின் போது அவரிடம் கேட்டுக்கொண்டேன். “உங்கள் மதத்தில் வலுவாக நிலைத்து இருக்கும் போது, நீங்கள் வலுவாக இருக்கிறீர்கள்," என்று அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருந்தது. இன்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் இந்துக்களில் பலரிடம், "நீங்கள் ஒரு இந்துவா?" என்று கேள்வி கேட்டதும், "நான் ஒரு இந்து இல்லை. நான் குறிப்பிட்டு எந்த மதத்தின் பிரிவையும் சாராமல், எல்லா மதங்களையும் பின்பற்றுகிறேன். எனக்குள் எல்லா மதத்தை சேர்ந்தவர்களின் அம்சமும் அடங்கியுள்ளது. என்னை ஒரு குறிப்பிட்ட மதத்தை சேர்ந்தவர் என்று பிரிக்க வேண்டாம்," என்ற பதில் அவர்களிடம் இருந்து வரும். இவை மனதில் உறுதியுடன் இருக்கும் நபர் பேசும் வார்த்தைகளா? கண்டிப்பாக இல்லை. இதைப்போன்ற சிந்தனைகள் அதிகமாகும் போது, அந்த நபரின் மனம் பலவீனம் அடைகிறது. மதம் என்பது மிகவும் முக்கியமாக, ஒரு நபருக்கு தனிப்பட்ட வலிமை மற்றும் அர்ப்பணிப்பை வழங்குகிறது. ஒரு இந்து சிறிதும் அர்ப்பணிப்பு இல்லாமல் இருந்து, வாழ்க்கை முழுவதும் தனது விசுவாசங்களை விடுவித்துக் கொண்டு, மற்றவர்களுடன் ஒற்றுமையாக இருக்கவேண்டும் அல்லது வியாபார அல்லது சமூக காரணங்களுக்காக தனது மதத்தை பின்பற்ற மறுக்கும் போது, அவரை எளிதில் ஏமாற்றி வேற்று மதத்திற்கு மாற்றி விடமுடியும். மற்றவர்களுடன் பழக வேண்டும் என்ற நோக்குடன் ஒருவர் தனது பாதையில் உறுதியின்றி இருக்கும் போது, அவர் தன்னை சகலவிதமான தாக்கங்களுக்கு வெளிப்படுத்திக் கொள்கிறார். ¶செல்வம் கொழிக்கும் அழகான நாடாக விளங்கும் அமெரிக்காவில், எது நடக்கும் என்று உறுதியாக சொல்ல முடியாது. பணம் சம்பாதிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் அதற்காக சமூகக்திற்கு ஒருவர் தனது மதத்தை புறக்கணிப்பது மிகப்பெரிய தியாகம் ஆகும். "நான் ஒரு கிறித்துவன்.

நான் ஒரு முஸ்லிம். நான் பௌத்த மதத்தை சேர்ந்தவன். நான் எல்லா மதங்களையும் பின்பற்றுகிறேன். எல்லா மதங்களும் ஒன்று," என்று தங்கள் பெற்றோர்கள் தங்கள் மதத்தை புறக்கணித்துப் பேசுவதை இளைஞர்கள் கேட்கிறார்கள். எல்லா மதங்களும் ஒன்றல்ல. அவை முற்றிலும் மாறுபட்டு இருக்கின்றன. அவை இறை வழிபாட்டு முறை பற்றிய போதனைகளை வழங்குவது உண்மை தான் என்றாலும், அவை தனது தொண்டர்களை ஒரே இலக்கை நோக்கி அழைத்து செல்வது இல்லை. தனக்குள் இறைவனை கிறித்துவர்கள் நாடுவது இல்லை. இறைவன் நீக்கமற நிறைந்து இருப்பதாக அவர்கள் கருதுவது இல்லை. இறைவன் எல்லா வஸ்துக்களிலும் இருப்பதாகவும் அவர்கள் கருதுவது இல்லை. அகத்தில் இருக்கும் தெய்வீக பண்பை இந்துக்களுக்கு உணர்த்த உதவும் *யோகப்பாதையை,* அவர்களின் மதம் மதிப்பது இல்லை. கோயிலில் இருக்கும் இறைவன் மற்றும் மகாதேவர்களை வழிபடுவதில் இருக்கும் மறைஞானம், அவர்கள் மதத்தில் இல்லை. இன்னொரு பிறவி இருக்கிறது என்றோ *கர்மவினை* இருக்கிறது என்றோ யூதர்கள், கிறித்துவர்கள் மற்றும் இசுலாமியர்கள் நம்புவது இல்லை. அவர்கள் இந்த நம்பிக்கைகளை சிறிதும் ஏற்றுக்கொள்வது இல்லை. அவை அவர்களுக்கு தெய்வ நிந்தனையாக விளங்குகின்றன. இதைப் போன்ற சில அடிப்படை மற்றும் முக்கிய நம்பிக்கைகள், அவர்களின் மதங்களில் இருந்து நமது மதம் முற்றிலும் மாறுபட்டு இருப்பதை விளக்குகின்றன. ¶வியாபார நோக்குடன் அமெரிக்கா, ஐரோப்பா அல்லது ஆப்பிரிக்கா பயணம் செய்யும் பல ஆசிய இந்துக்கள் தங்கள் தொழிலில் மற்றவர்களுடன் பொருத்திக் கொள்ள, மற்றவர்கள் தன்னை ஏற்றுக்கொள்ள தங்கள் மதத்தை துறக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். வெளிநாடுகளில் இருக்கும் யூதர்கள், கிறித்துவர்கள் மற்றும் இசுலாமியர்கள் தங்கள் மத நம்பிக்கையை துறக்கவில்லை, இருந்தாலும் அவர்களின் தொழில்கள் வெற்றி பெற்றன. "நான் ஒரு முஸ்லிம். நான் ஒரு கிறித்துவன். நான் ஒரு இந்து. நான் ஒரு யூனிவெர்சலிஸ்ட்," என்று பல இந்துக்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இது சிறிதும் விவேகம் இல்லாத அறிக்கைகள். இசுலாமியர்கள் இந்த இந்துக்களை இசுலாமியர் என்று நினைப்பது இல்லை. அவர்களை தங்கள் மதத்தை சேர்ந்தவர்கள் என்று யூதர்கள் கருதுவது இல்லை. அவர்கள் தங்கள் மதத்தை சேர்ந்தவர்கள் என்று கிறித்துவர்கள் நினைப்பது இல்லை. தாங்கள் இந்துக்களாக பிறந்து இந்துக்களாக இறப்பது உறுதி என்பதையும், பணம் மற்றும் சமூகம் அல்லது அறிவுசார் அங்கீகாரத்தை விரும்பி தங்களது புனிதமான பாரம்பரியத்தை புறக்கணிக்கிறோம் என்பதையும் இந்துக்கள் அறிந்து இருக்கிறார்கள். என்ன ஒரு தவறான மற்றும் மேலோட்டமான அணுகுமுறை! இந்து மதத்தில் வலுவாக நிலைத்து நிற்கவேண்டும் என்று தகவல் யாரையும் குழப்பாமல் சத்தமாக கேட்கவேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யும் போது, நீங்களும் வலிமை பெறுகிறீர்கள். ஆமாம், இந்து மதத்தில் வலுவாக நிலைத்து நில்லுங்கள். இந்து

மதத்தில் வலுவாக நிலைத்து நில்லுங்கள். மதம் என்பது உங்கள் இதயம் மற்றும் மனத்தில் அடங்கியுள்ளது. ¶இந்த பூமியில் சிந்திக்கும் மனங்களுடன் மனிதர்கள் யாரும் இல்லையென்றால், இங்கே மதம் என்பது இருந்திருக்காது. மதம் என்பது மனிதனின் மனம் மற்றும் ஆன்மாவிற்கு வெளியே இருப்பது இல்லை. மதம் என்பது மனிதனின் மனதில் வசிக்கிறது. மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து சனாதன தர்மம் இருந்து வருகிறது. உலகின் இந்த மிகவும் பழமையான மதத்தை நாம் பாதுகாக்க வேண்டும் என்றால், நாம் அதை மனங்கள் மற்றும் இதயங்களில் பாதுகாக்க வேண்டும் மற்றும் அதன் பிறகு இந்த தலைசிறந்த விவேகத்தை மற்றவர்கள் மனங்களில் மெதுவாக மற்றும் உறுதியாக பரப்ப வேண்டும். இந்து மக்களின் மரியாதையை காக்க வேண்டும். அதை பொருளாதார லாபத்திற்காக துறக்கக் கூடாது.

செவ்வாய்க்கிழமை

பாடம் 359

ஒரு முக்கிய

கடமை

ஒவ்வொரு இந்துவிற்கும் ஒரு முக்கிய கடமை இருக்கிறது. இந்துக்களின் அடுத்த தலைமுறைக்கு தனது மதத்தைப் பற்றி கற்றுத்தருவதே அந்த கடமை ஆகும். அவன் தனது மதத்தை அடுத்த தலைமுறைக்கு கற்றுத் தந்தால் போதும். அதன் பிறகு அந்த தலைமுறை தனக்கு அடுத்து வரும் தலைமுறைகளுக்கு கற்றுத் தரும். நாம் இடையில் ஒரு தலைமுறையை தவறவிட்டால், இந்த உலகில் இருக்கும் இடம் தெரியாமல் மதம் முழுமையாக மறைந்து விடும். இந்த பூமியில் ஆயிரக்கணக்கில் மதங்கள் இருந்தன. இன்று பார்சி சமயத்தின் நிலை என்ன? அது இன்று இருக்கும் இடம் தெரியவில்லை. பழங்கால கிரேக்கர்களின் மதம் எங்கே? அது பல தலைமுறைகளுக்கு முன்பாகவே மறைந்து இருக்கவேண்டும். மக்களால் மறக்கப்பட்ட பழங்கால மாயன், ஹவாய், டிருயிட் மற்றும் எகிப்து நாட்டை சேர்ந்த மதங்களை இன்று வரலாற்று புத்தகங்களில் மட்டுமே காண முடிகிறது. ¶இந்து மதத்தை அழிப்பதற்காக வேற்று மதத்தவர்கள் மேற்கொண்ட முற்றுகையில் இருந்து அதை காப்பாற்ற, நமது வரலாற்றில் தலைசிறந்த ஆண்களும் பெண்களும் மிகவும் தீவிரமான சவால்களை சந்திக்க தங்கள் உயிர்கள் மற்றும் ஆற்றல்களை தியாகம் செய்துள்ளனர். எதிரி தாக்குதல் நடத்தும் போது, மனதில் அச்சம் தோன்றுவதற்கு வாய்ப்பு அதிகம் இருப்பதால், தைரியத்தை எளிதில் வரவழைத்துக் கொள்ள முடிகிறது. இன்று அச்சம் நுணுக்கமாக இருந்தாலும், அதன் தீவிரம் குறையவில்லை. உண்மையை சொல்ல வேண்டும் என்றால், இன்று இந்து மதம் இதுவரை எதிர்கொள்ளாத

மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகிறது, ஏனென்றால் அந்த மதத்தை அழிக்க ஒரு எதிரி முயற்சி செய்யவில்லை. இதை இந்துக்கள் தங்கள் புறக்கணிப்பு மூலம், அச்சம் மூலம், நிலம் மற்றும் பொன்னின் மீது இருக்கும் ஆசை மூலம், இறுதியில் மிகவும் முக்கியமாக தங்கள் மதத்தை பற்றிய அறியாமை காரணமாகவும், அவர்கள் தாங்களே தங்கள் மதத்தை தியாகம் செய்துக்கொண்டு இருக்கிறார்கள். தங்கள் மதம் தங்கள் ஆன்மாவிற்குள் ஆழமாக ஊடுருவுகிறது என்பதையும், தங்கள் மதம் பூமியில் இன்று இருக்கும் மற்ற ஆன்மீக பாதைகளை காட்டிலும் மேன்மையானது என்பதையும் இந்துக்கள் உண்மையில் அறிந்து இருந்தால், அவர்கள் அதை எளிதில் புறக்கணிக்காமல், அது தனது சிறந்த சக்தியை அடைவதற்கு அதை பேணி பாதுகாத்து வளர்ப்பார்கள். அவர்களிடம் மதத்தைப் பற்றி விசாரிக்கும் போது, அவர்கள் மௌனமாக இல்லாமல் தைரியமாக தங்கள் மதம் பற்றிய தலைசிறந்த உண்மைகளை கூறுவார்கள். அவர்கள் இந்து மதத்தில் வலுவாக நிலைத்து நிற்பதற்கு தயங்க மாட்டார்கள். ¶பணியில் இருக்கும் தங்கள் சகாக்கள் மற்றும் மற்ற இடங்களில் விசாரிக்கும் மக்களிடமும், தங்கள் இந்து மதத்தைப் பற்றி வெளிப்படையாக மனதில் பெருமிதத்துடன் சொல்ல தயங்கும் இந்துக்கள், இந்த நவீனமான மற்றும் இயந்திரமயமான உலகில் அடுத்த தலைமுறைக்கு அதை எப்படி கற்பிக்க முடியும்? ஒரு முஸ்லிம் வேலையை தேடும் போது, "நான் அல்லாவை வழிபடுகிறேன்," என்று பெருமிதத்துடன் கூறுகிறார். "நான் இயேசு கிறித்துவை வழிபடுகிறேன்," என்று கிறித்துவர் கூறுகிறார். ஆனால் பெரும்பாலும் ஒரு இந்து, "நான் விநாயகரை வழிபடுகிறேன்," என்று பெருமிதத்துடன் சொல்வது இல்லை. தலைசிறந்த நமது மதத்தில் ஒரு பரமேசுவரன் மற்றும் பல மகாதேவர்கள் இருக்கிறார்கள். ஒரு சராசரி இந்து இதை நினைத்து பெருமிதம் அடைவது இல்லை. மற்றவர்கள் தன்னை நிராகரிப்பார்கள், தனக்கு வேலை தரமாட்டார்கள், தன்னை விரும்பமாட்டார்கள் என்று அவர் நினைக்கிறார். அது முற்றிலும் உண்மையாக இருக்கலாம். அப்போது அவர் இந்து மதத்தை மதிப்பவர்களை நாடி செல்ல வேண்டும். அவர் அத்தகைய மனிதர்களோடு மட்டுமே சேரவேண்டும்.

புதன்கிழமை

பாடம் 360

வேதாந்தம் மற்றும்

கிறித்துவ மதம்

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், இந்து மதத்தின் அடிப்படை தத்துவங்களை நம்ப

ஆரம்பித்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான முதியவர்கள் மறுபிறவி மற்றும் கர்மவினை விதிகள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களை இந்த இரண்டு நம்பிக்கைகளும் ஆபிரகாமிய மதங்களில் இருந்து விலக்கி வைக்கிறது. ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் மறுபிறவி மற்றும் *கர்மவினையை* போதிக்கும் இந்து அமைப்புக்கள் ஒரு படி மேலே சென்று, நற்பண்பு மற்றும் பக்தியுடன் இருக்கும் இந்த பாதி-இந்துக்களை முழுமையாக இந்து மதத்திற்கு மாற்றவில்லை என்றால், அந்த புறக்கணிப்பின் மூலம் ஒரு தீய செயல் நடைபெறுகிறது. ¶ஆமாம் அமெர்க்காவை பூர்வீகமாக கொண்டவர்கள், *கர்மவினை* மற்றும் மறுபிறவி மற்றும் இறைவனின் நீக்கமற எங்கும் நிறைந்து இருக்கும் பண்பைப் பற்றி அறிய விரும்புகிறார்கள். அவர்களுக்கு ஆபிரகாமிய மதங்கள் வழங்கிய போதனைகள் திருப்தி அளிக்க வில்லை. அவர்கள் கடுங்கோபத்துடன் இருக்கும் கடவுள் ஆன்மாக்களுக்கு நரகத்தில் நிரந்தர தண்டனை வழங்குகிறார் என்று நினைக்கவில்லை. தங்களின் "தவறான நம்பிக்கைகள்" காரணமாக, கிறித்துவ மதத்தை சாராதவர்கள் நிரந்தரமாக வேதனையை அனுபவிப்பார்கள் என்றும் அவர்கள் நம்பவில்லை. பல அமெரிக்கர்கள் தங்கள் வாழ்க்கையில் இந்து மதத்தின் அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். பிரபஞ்சத்தின் இயல்பை பற்றி ஆழமான புரிதலை பெறுவதற்கு விஞ்ஞானிகளும் இந்து மதத்தை நாடுகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்து மதத்தின் அற்புதங்களை மேற்கத்திய நாட்டை சார்ந்தவர்கள் அங்கீகரிப்பதைப் போல, இந்துக்களும் மேற்கத்திய நாட்டவர்களைப் போல இருக்க முயற்சி செய்கின்றனர். அமெரிக்கா, ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் மற்ற இடங்களில் வாழும் ஆயிரக்கணக்கான உண்மையான சாதகர்கள், தாங்கள் முன்பு பின்பற்றிய மதங்களை புறக்கணித்து இந்து மதத்தின் மீது தங்கள் கவனத்தை திருப்பி இருக்கிறார்கள். அவர்கள் தற்போது இருக்கும் நரகம் போன்ற ஒரு இடைப்பட்ட நிலையில், அவர்களுக்கு இந்திய *சுவாமிகளிடம்* இருந்து கூடுதல் வழிகாட்டல் அல்லது இந்து குழுக்களிடம் இருந்து சமூக அங்கீகாரம் கிடைக்கவில்லை. ¶ஒரு கிறித்துவரை நல்ல கிறித்துவராக வேதாந்தம் மாற்றுகிறது என்று சிலர் பரிந்துரைக்கிறார்கள். அந்த பரிந்துரையின் காரணமாக, வேதாந்தம் உலகெங்கும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "வேதாந்தம் படியுங்கள். அதன் மூலம் நீங்கள் அதிக அறிவூட்டம் பெற்ற கிறித்துவராக விளங்குவீர்கள்," என்று சாதகர்களிடம் கூறப்படுகிறது. இதில் சிறிதும் உண்மை இல்லை. நீங்கள் வேதாந்தம் படிக்கும் போது, நீங்கள் *கர்மவினை* மற்றும் மறுபிறவி பற்றி கற்று, இறைவன் என்பவர் உங்களுக்குள்ளும் எல்லா வஸ்த்துக்களிலும் இருக்கிறார் என்பதையும், அழிவில்லாத மனிதனின் ஆன்மா முழுமுதல் கடவுளுடன் ஒன்றி இருக்கிறது என்பதையும் அறிய தொடங்குகிறீர்கள். இவை கிறித்துவ மத நம்பிக்கைகள் இல்லை. இந்த நம்பிக்கைகள் கத்தோலிக்க மற்றும்

பிராட்டஸ்டண்ட் கிறித்துவ கோட்பாடுகளுக்கு அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன. 1870 ஆம் ஆண்டு நடந்த முதல் வாடிகன் மன்றம், அன்றைய கத்தோலிக்க மதத்திற்கு ஐந்து நம்பிக்கைகள் மிக முக்கிய அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன என்று நிந்திப்பதற்கு மற்றும் சமீபத்தில் அவற்றின் ஊடுருவல் ஒரு கடுமையான நெருக்கடி என்று வாடிகன் விளக்கும் அளவிற்கு அவை மிகவும் வலுவான அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன. இந்த நிந்திக்கப்பட்ட நம்பிக்கைகளில், இறைவன் எல்லா வஸ்த்துக்களிலும் இருக்கிறார் என்ற நம்பிக்கையும் அடங்கும். கத்தோலிக்க மற்றும் பெரும்பாலான கிறித்துவ தேவாலயங்கள் ஆணைகளின் படி, இறைவன் எங்கும் இருக்கிறார் மற்றும் எல்லா வஸ்த்துக்களும் அவரது புனிதமான தெய்வீக சக்தியாக இருக்கின்றன என்பதில் ஒருவருக்கு இருக்கும் நம்பிக்கையின் மூலம் அவர் அவரது மதத்தின் துரோகியாக கருதப்படுகிறார். ¶வினோதமாக இருக்கிறது அல்லவா? வேதாந்தம் படிப்பதன் மூலம் ஒருவர் சிறந்த கிறித்துவராக மாறுகிறார் என்று கத்தோலிக்கர்கள் நிச்சயமாக கருதுவது இல்லை. வேதாந்தம் படிப்பதால் ஒருவர் சிறந்த கிறித்துவராகிறார் என்பது நிச்சயமாக மேதாடிஸ்ட், பாப்டிஸ்ட், லூதேரன் மற்றும் இவான்சிலிகள் கருத்து இல்லை. ஆனால் அதற்கு மாறாக, வேதாந்தம் படிப்பதன் மூலம் ஒரு கிறித்துவன் தனது மதத்திற்கு எதிராக செயல்படுபவனாக கருதப்படுகிறான். வேதாந்தத்தை எல்லா மதத்தை சேர்ந்தவர்களும் படிக்கலாம் என்ற கருத்தை பரப்புவதில் வேதாந்த சுவாமிகள் நல்ல வெற்றியை கண்டுள்ளதால், அவர்கள் கத்தோலிக்க மற்றும் பிராட்டஸ்டண்ட் தேவாலயங்களுக்கு ஒரு அச்சுறுதலாகி உள்ளனர். இந்த முறையில் கிறித்துவ மதம் பாரம்பரிய இந்து மதத்தில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. ¶வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வேதாந்த *சுவாமிகள்*, சிவானந்த *சுவாமிகள்* மற்றும் பலர் செய்த தொடர் முயற்சிகளின் பலனாக, அங்கே இந்து மதம் நல்ல முன்னேற்றத்தை பெற்றுள்ளது. உலக மக்களின் மனங்களில் இந்து மத கோட்பாடுகளை பற்றி தெரியப்படுத்துவதில் அவர்கள் கண்ட வெற்றி, மற்றும் அவர்களின் முயற்சிகள் மற்றும் விழிப்புணர்விற்காக, அவர்களை பாராட்டி ஆகவேண்டும். ஆனால் இதைத் தவிர, அடுத்த கட்ட நடவடிக்கையும் எடுக்கவேண்டி உள்ளது.

வியாழக்கிழமை

பாடம் 361

புதியவர்களுக்கு

வரவேற்பு அளித்தல்

நாமகரண சம்ஸ்க்காரத்தின் மூலமாக சாதகர்களை இந்து மதத்தில் கொண்டு வருவதன் மூலமாக மட்டுமே, அவர்களால் காலத்தால் அழியாத இந்த பாரம்பரியத்தில் உண்மையான அங்கத்தினர் ஆகவும், அதன் மூலம் தங்கள் குழந்தைகளை இந்துக்களாக வளர்க்கவும் முடிகிறது. அதை நாம் அவர்களுக்கு செய்யவில்லை என்றால், அவர்களின் குழந்தைகள் வளர்ந்ததும், அவர்கள் படிப்படியாக வீழ்ச்சியை சந்திக்க ஒரு காலியான மற்றும் எதிர்மறையான பாதாளத்தை தான் நம்மால் அவர்களுக்கு வழங்க முடியும். மேற்கத்திய உடல்களில் இருக்கும் இந்த நேர்மையான இந்து ஆன்மாக்களை நமது மதத்தில் முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்கள் தங்களை ஏதாவது ஒரு சமயப்பிரிவில் நிலைநிறுத்திக் கொள்ள உதவி அளிப்பதற்கு, நாம் அடுத்தடுத்து வரக்கூடிய தலைமுறைகளுக்கு கடன்பட்டு இருக்கிறோம். அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒரு மதத்தை பின்பற்றி வளர்க்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும், இல்லையென்றால் அது அந்த நபருக்கும் இந்து சமூகம் முழுவதற்கும் தீங்கு விளைவிப்பதாக இருக்கும். ¶மதத்தை பேணி வளர்க்காத சமூகங்கள், இயல்பாக குற்றத்தை பேணி வளர்க்கின்றன. அந்த குற்றத்தால் அந்த நபரும், அந்த சமூகமும் அந்த நாடும் அதிக வேதனையை அனுபவிக்கிறது. நாம் மதம் சார்ந்த பயிற்சியை புறக்கணித்தால், இளைஞர்கள் மனங்களில் குற்றம் செய்யும் தூண்டுதல் புகுவதற்கு அனுமதி வழங்குகிறோம், மற்றும் அந்த அலட்சியத்தால் தீவிர வேதனையும் அனுபவிக்கிறோம். இதனால் இந்த அடுத்த கட்ட நடவடிக்கையை அமெரிக்கா, கனடா, ஐரோப்பா மற்றும் உலகெங்கும் இருக்கும் நாடுகளில் இருக்கும் சுவாமிகள் முழுமையாக செயல்படுத்த வேண்டும். ¶இந்த நல்ல ஆன்மாக்களுக்கு, தங்கள் இதயக்கதவுகளை திறக்க வேண்டும் என்று அனைத்து இந்து அமைப்புக்களிடமும் வேண்டிக்கொள்கிறோம். இது தீவிர கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஆகும். தங்களுக்கு மறுபிறவி, கர்மவினை மற்றும் இறைவனின் சர்வ வியாபகத்தன்மை மீது இருக்கும் நம்பிக்கை காரணமாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் பெற்றோர்கள் பின்பற்றிய மதத்தை துறந்து இருந்தாலும், அவர்கள் இந்து மதத்திலும் அல்லது பக்தர்கள் சமூகத்திலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதற்கு காரணம் என்ன? அவர்களின் நிறமா? ஆமாம், இதில் சிறிதளவு உண்மை இருக்கலாம். "இந்துவாக இருக்கவேண்டும் என்றால், நீங்கள் இந்துவாக பிறந்து இருக்கவேண்டும். வேற்று மதத்தில் இருந்து மதமாற்றம் மூலம் இந்துவாக முடியாது. இந்துவாக இருக்கவேண்டும் என்றால், நீங்கள் இந்துவாக பிறந்து இருக்கவேண்டும்," என்று பல இந்தியர்கள் கூறுகின்றனர். "இந்துவாக இருப்பதற்கு, நீங்கள் இந்தியாவில் பிறந்து இருக்க வேண்டும்," என்று மற்ற இந்திய இந்துக்கள் கூறுகின்றனர். இதுவும் உண்மை இல்லை. இலங்கையில் பிறந்து வாழ்ந்துக்கொண்டு இருக்கும் நீங்கள் எல்லோரும் இந்துக்கள் இல்லையா? இதைத்தவிர பாலி, மலேசியா, டிரினிடாட், நேபாளம், ஐரோப்பா,

கையானா, சுரினாம் மற்றும் மற்ற இடங்களில் பிறந்த இந்துக்கள் எந்த மதத்தை சார்ந்தவர்கள்? அவர்களும் இந்துக்கள் தானே? ¶"வேற்று மதத்தில் இருந்து மதமாற்றம் மூலம் இந்துவாக முடியாது," என்ற தவறான கருத்தை நாங்கள் ஆய்வு செய்தோம். நாங்கள் பல புத்தகங்களை ஆய்வு செய்தோம். அந்த புத்தகங்களில் "இந்துவாக இருக்கவேண்டும் என்றால், இந்துவாக பிறந்து இருக்கவேண்டும்" அல்லது "இந்துவாக இருக்கவேண்டும் என்றால் இந்தியாவில் பிறந்து இருக்கவேண்டும்" என்ற மேற்கோள்கள் மீது கவனம் செலுத்திய போது, அவை இரண்டும் கிறித்துவர்கள் எழுதிய புத்தகங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்பது தெரியவந்தது. இந்த இரண்டு கூற்றுகளும், இந்து மதத்திற்கு எதிராக கிறித்துவர்கள் மேற்கொண்ட பிரச்சார யுத்தி என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம். மதமாற்றம் மூலம் இந்து மதம் முன்னேற்றம் பெறும் வேகத்தை குறைக்க அல்லது அதை முழுமையாக தடுக்க தங்களால் முடிந்தால், அதன் மூலம் தாங்கள் மேற்கொள்ளும் மதமாற்ற முயற்சியில் வெற்றி பெற முடியும் என்றும், அதன் மூலம் இந்து மதம் அடுத்த சில தலைமுறைகளில் அழிந்து விடும் என்றும் கிறித்துவர்கள் நினைத்து இருக்கவேண்டும். ஒரு இந்து ஆசிரியர் எழுதிய எந்த ஒரு புத்தகத்திலும், இந்த இரண்டு கூற்றுகளும் தென்படவில்லை. ¶வேற்று மதத்தை சேர்ந்தவர்கள் இந்து மதத்திற்கு மதமாற்றம் பெறலாம் என்று பிரபல இந்து ஆசிரியர்கள் கூறியுள்ளனர். "கடந்த காலத்தில் வேற்று மதத்தை சார்ந்தவர்கள், பெரும்பான்மை வகிக்கும் மக்களால் மதமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தற்போதும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது," என்று சுவாமி விவேகானந்தர் அறிவித்தார். நீங்கள் இந்து சமய வழக்கங்களை ஏற்றுக்கொண்டு, மறுபிறவி மற்றும் *கர்மவினை* மீது நம்பிக்கை வைத்து, தினமும் ஒரு வேளை *பூஜை* செய்தால், இந்து சமூகம் உங்களை ஒரு இந்து என்று ஏற்றுக்கொள்ளும். துரதிஷ்டவசமாக இந்த தவறான கருத்தை, இந்தியாவில் பிறந்து கிறித்துவ பள்ளிகளில் படித்த சிறுபான்மையினர் மற்றும் மேற்கத்திய கருத்துக்களை உடைய *சுவாமிகள்* மற்றும் பண்டிதர்கள் மற்றும் ஒன்று அல்லது இரண்டு சங்கராச்சாரியார்கள் உறுதியாக மீண்டும் வலியுறுத்துகிறார்கள். கிறித்துவ மதம் பிரச்சாரம், உலகெங்கும் இந்து மத வளர்ச்சியின் மீது ஏற்படுத்திய எதிர்மறை விளைவை, நம்மால் தற்போது காண முடிகிறது. அந்த பிரச்சாரம் இந்து மனங்களில் ஊடுருவி, அவருக்கு தனது மதத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை பலவீனப்படுத்தி அழித்து வருகிறது.

வெள்ளிக்கிழமை

பாடம் 362

தனிப்பட்ட அடையாள

குழப்பம்

இந்து மதம் என்பது எதை குறிப்பிடுகிறது மற்றும் எதை குறிப்பிடவில்லை, இந்து என்பவர் யார் மற்றும் யார் இந்து இல்லை என்ற குழப்பம் சான் பிரான்சிஸ்கோ, நியூ யார்க், சென்னை, மும்பை, புது டில்லி மற்றும் லண்டன் நகரங்களில் நிலவி வருகிறது. இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இருக்கும் முக்கிய நகரங்களில் இருக்கும் மக்கள், ஒரு பொதுவான தத்துவத்தை பின்பற்றுவதற்கு, அவர்கள் தங்கள் வாழ்க்கையின் மிகவும் அரிய அம்சமாக விளங்கும் சனாதன தர்மத்தை பின்பற்றாமல் அதை புறக்கணிக்கின்றனர். இந்த நிகழ்வை யாரும் எதிர்க்காமல் இருப்பது வேதனை தருவதாக இருக்கிறது. ஆமாம், இதை யாரும் எதிர்க்கவில்லை. இது யாருக்கும் வேதனை தருவதாக தெரியவில்லை. ஒரு இந்து தனது பணியிடத்தில் இணக்கமாக பணிபுரிய வேண்டும் அல்லது தனது சகாக்களுடன் ஒன்றாக செயல்படவேண்டும் என்ற நோக்குடன் தனது சமய பாரம்பரியத்தை துறந்தால், அதை யாரும் கண்டுகொள்வது இல்லை. அதே இந்து தனது வீட்டிற்கு திரும்பியதும், காலணிகள் வைக்கப்பட்டு இருக்கும் ஒரு ஒதுக்குபுறமான சிரிய பூஜை அறையில் இறைவனை வழிபடும் போது, அதையும் யாரும் கண்டுகொள்வது இல்லை. இந்து அல்லாத மற்றவர்கள் வரும் போது, ஒதுக்குபுறமான பூஜை அறையின் கதவை எளிதில் மூடிவிட முடிகிறது. இது வேதனை தருவதாக இருக்கிறது அல்லவா? ¶ஆனால் அதே இந்துக்கள் பொது வாழ்வில் தாங்கள் துறந்த மதத்தின் மீது, தங்கள் மகன்களும் மகள்களும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் தங்கள் வீட்டில் மறைவாக இருக்கும் அறையில், தங்கள் மகன்களும் மகள்களும் வழிபட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். இன்றைய குழந்தைகள் இந்த வஞ்சனையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தங்களுக்காக சிந்திப்பது எப்படி என்று நவீன கல்வி மக்களுக்கு கற்பித்து வருகிறது. அவர்களும் அவர்களின் பெற்றோர்களும் இந்து மதத்தை விரைவில் துறந்து விடுவார்கள். ஆமாம் மற்றும் பெரியவர்கள் வஞ்சனை கலந்த அணுகுமுறையை பின்பற்றும் வரை, மதத்தை புறக்கணிக்கும் இந்துக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. இந்து மதத்தை துறந்த இளைஞர்கள் வேறு எந்த மதத்தையும் பின்பற்றாமல், எந்த மதத்தையும் சாராத வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். ¶இயந்திரமயமான தொழில் துறை சமூகம் அவர்களுக்கு அதிக அழுத்தங்களை தரும் போதும், அவர்களுக்கு இறைவனின் தேவையும் தங்கள் குழந்தைப்பருவ நம்பிக்கையின் வலிமையும் தேவைப்படும் போதும், அவர்களுக்கு துணையாக அவர்களின் பெற்றோர்கள் உட்பட யாரும் இருப்பது இல்லை. இந்த சூழ்நிலையில் அவர்கள் தங்களை தூக்கிலிட்டு கொள்வதற்கு அல்லது விஷம் அருந்தி தற்கொலை செய்வதற்கும் வாய்ப்புள்ளது. இந்த நிகழ்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன, மற்றும் நாளடைவில்

அதிகரிக்க வாய்ப்புள்ளது. இன்று இந்துக்களும் பரவலாக விவாகரத்து செய்து வருகின்றனர். "விவாகரத்து செய்வது தவறு. அதனால் அதை செய்யக்கூடாது. நீங்கள் விவாகரத்து செய்யும் போது, திருமணத்தின் போது செய்த சங்கல்பங்களை மீறுகிறீர்கள்," என்று பெரியோர்கள் தீர்ப்பு வழங்குகிறார்கள். தங்கள் மதத்தில் வலுவாக நிலைத்து இல்லாத பெற்றோர்கள் விதிகளை மீறிவிட்டதால், அவர்கள் சொல்வதை யாரும் கேட்பதும் இல்லை. நமது இந்து சகாக்கள் கடினமான சூழ்நிலைகளில் இருக்கும் போது, நமது மனதில் அவர்களைப் பற்றிய கடுமையான கருத்துக்களை அமைத்துக் கொண்டு, அவர்களை விலக்கி வைக்கக்கூடாது. அவர்கள் செய்த தவறை திருத்திக் கொள்வதற்கு, பெரியோர்கள் அன்பான அறிவுரைகளை வழங்கி, பல வழிகளில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். தோல்விகளால் வேதனையில் இருக்கும் இளைய தலைமுறை மீண்டும் வெற்றிப்பாதையில் முன்னேறி செல்வதற்கு, பெரியவர்கள் சனாதன தர்மத்தின் விவேகத்தை பயன்படுத்தி, தங்கள் வலிமையை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். ¶இந்து மதத்தில் வலுவாக நிலைத்து நிற்பதற்கு, வயது வரம்பு எதுவும் இல்லை. இந்து சமூகங்களில் திருமண ஆலோசகர்கள் இருக்க வேண்டும். தம்பதிகள் விவாகரத்து செய்ய முடிவு எடுக்கும் முன்பாக, அந்த ஆலோசகர்கள் வீட்டிற்கு சென்று அவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். கருத்து வேறுபாட்டில் இருக்கும் தம்பதிகள் ஒரு வழக்கறிஞரிடம் செல்வதற்கு முன்பாக, நாம் அவர்களுக்கு தொழில்ரீதியாக தேர்ச்சி பெற்ற ஆண்களையும் பெண்களின் உதவியை வழங்க வேண்டும். இதைத்தவிர ஆலோசனை வழங்க தகுதி பெற்றவர்களின் உதவியை இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் நமது இளைஞர்கள், நமது முதியவர்கள் மற்றும் நமது ஏழைகளுக்கு வழங்க வேண்டும். நமது மதத்தில் உதவியை நாடுபவர்கள், அதை நமது மதத்தில் எங்காவது தேடிக்கொள்ளும் வசதி இருக்க வேண்டும். அந்த உதவியை யாரால் வழங்க முடியும்? முதியவர்களால் உதவி செய்ய முடியும் மற்றும் அவர்கள் தான் அதை செய்ய வேண்டும்.

சனிக்கிழமை

பாடம் 363

மதத்தலைவர்களின்

தேவை

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த போது வழக்கறிஞர்கள் பணி, பொறியாளர்கள் பணி, நவீன வியாபாரிகள் பணி, விஞ்ஞானிகளின் பணி என்று பல்வேறு பணிகள் மக்களுக்கு அறிமுகமாகின. ஆனால் மிகவும்

முக்கியமான மதத் தலைவர்களின் பணி வளர்ச்சி பெறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆங்கிலேயர்கள் ஆட்சியில் மதத்தலைவர்களின் பணி வளர்ச்சி பெறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஏன்? அன்று மதத்தலைவர்கள் உருவாகி இருந்தால், இந்து மதம் மேலும் வலுவடைந்து இருக்கும் மற்றும் இந்துக்கள் தன்னிறைவுடன் இருந்து இருப்பார்கள். அதனால் மதத்தின் சுய மரியாதை அதிகரித்து இருக்கும். ஆனால் ஆங்கிலேய கிறித்துவ அரசு, கோயில்கள் மற்றும் தத்துவவாதிகளிடம் இருந்து பக்தர்களை பிரித்து, மதத்தில் இருந்து மத போதகர்களையும் வெளியேற்றி, அவர்களை ஒரு மதசார்பற்ற உலகிற்கு அழைத்து சென்றது. அந்த அரசு பெண்களை வீடுகளில் இருந்து மெதுவாக வெளியேற்றி வெளியுலக பணியில் அமர்த்தியது, மற்றும் நல்ல சம்பாத்தியம் உள்ள வேலைகளுக்கு கோயில் பூசாரிகளை ஈர்த்தது. ¶சட்டம் படிக்கும் மாணவனுக்கு நீதிமன்றங்களில் எந்த அதிகாரமும் இருப்பது இல்லை. அவர் நீதிபதியை சந்தித்து பேச முடியாது. அவர் வழக்காடு மன்றத்தில் அமைதியாக அமர்ந்து இருக்கத்தான் முடியும். ஆனால் அவர் தனது சட்டக்கல்வியில் வெற்றி பெற்றதும், அவருக்கு அதிகாரம் கிடைக்கிறது. அவருக்கு நீதமன்றங்களில் வாதாடும் அதிகாரம் கிடைக்கிறது. இதைப் போன்ற அம்சம் மதத்திலும் இருக்கிறது. ஒரு மதத்தை பின்பற்றும் சராசரி நபருக்கு அந்த மதத்தில் அதிகாரம் எதுவும் இருப்பது இல்லை, ஆனால் நியமனம் பெற்ற மதத் தலைவருக்கு எல்லா உறுப்பினர்கள் மற்ற மதத் தலைவர்கள் மூலம் அதிகாரம் கிடைக்கிறது. இசுலாமிய தலைவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது, பௌத்த மத பூசாரிகளுக்கு அதிகமான அதிகாரம் இருக்கிறது. அதைப்போன்று கிறித்துவ மதத் தலைவர்களுக்கு நல்ல அதிகாரம் இருக்கிறது. அவர்களுக்கு தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் வழிபாட்டு இடங்கள் உள்ளன, மற்றும் அங்கே மதத் தலைவர்கள் மற்றும் பூசாரிகள் தங்கள் பணியை செய்கின்றனர். நவீன தேவாலய அமைப்பு ஒரு சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் மதம் சார்ந்த கட்டமைப்பாக விளங்குகிறது. ஒரு தேவாலயம் அல்லது ஒரு இசுலாமிய மசூதி, பௌத்த மதக் கோயில் அல்லது யூதர்கள் வழிபாட்டுத்தலத்தில் இருக்கும் ஒரு மதத்தலைவருக்கு நன்றாக வரையறுக்கப்பட்ட சில அதிகாரம் இருக்கிறது, ஒரு சராசரி உறுப்பினரைக் காட்டிலும் அவரால் தனது சங்கத்திற்கு பயனுள்ள முறையில் உதவ முடிகிறது. ¶இன்றைய தேவாலய அமைப்பு தங்கள் மதப் பணியை செயல்படுத்தும் அதிகாரத்தை, நல்ல படிப்பறிவுள்ள மக்களுக்கும் அதிக சிரத்தை மற்றும் பொறுப்புள்ள மக்களுக்கும் வழங்குகிறது. இந்த வகை அதிகாரம் இந்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கிடைத்ததும், அவர்கள் தங்கள் மதத்தின் பிரதிநிதிகளாக ஒரு நாட்டின் அதிபர், ரோம் நகரில் இருக்கும் போப் அல்லது அரசாங்கத்தில் இருக்கும் ஒரு முக்கிய நபரை சென்று பார்க்க முடிகிறது. அவர்கள் இசுலாமிய இமாம், ஒரு கிறித்துவ மதத்தலைவர், ஒரு பௌத்த பூசாரியுடன் ஒரு சமதளத்தில் அமர்ந்து சுதந்திரமாக உரையாட முடிகிறது. அவர்களால் உலகெங்கும் உரையாற்ற முடிகிறது மற்றும் பொறுப்பு

வழங்கப்பட்டதும் அவர்களால் மேலும் பல பணிகளை செய்யும் அதிகாரம் கிடைக்கிறது. ஏனென்றால் அவர்களின் அமைப்பு மற்றும் மற்ற மதத் தலைவர்கள், அவர்களுக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. தங்கள் சமூகத்திற்கு சேவை செய்ய, உள்நாட்டு மற்றும் சர்வதேச அரங்குகளில் தங்கள் மதத்திற்கு பிரதிநிதித்துவம் செய்து உபதேசங்கள் வழங்குவதற்கு, உலகில் இருக்கும் அனைத்து முக்கிய மதங்களுடன் சமமாக இந்து மதத்தில் உறுதியாக நிலைத்து இருப்பதற்கு, இந்து மதத்தில் இருக்கும் அனைத்து உட்பிரிவுகளுக்கும் மதத் தலைவரின் தேவை இருக்கிறது. இந்து சமூகம் வலுவாக நிலைத்து இருக்க வேண்டும் என்பதற்காக தங்கள் சமய சடங்குகளை செய்வதற்கு, கோயில்களை நிர்வாகம் செய்வதற்கு, ஆலோசனை மற்றும் ஆறுதல் வழங்குவதற்கு, குடும்ப தர்மத்தை கடைப்பிடிப்பதற்கு, விவாகரத்து மற்றும் கொலை மற்றும் மனைவி மற்றும் குழந்தை சித்ரவதையை நிறுத்துவதற்கு, தற்போது இந்துக்களுக்கு தங்கள் மதத்தலைவர்களின் தேவை உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை

பாடம் 364

சந்நியாசிகளின்

தேவை

வட இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான *சந்நியாசிகள்* இருக்கிறார்கள். ஆனால் வடக்கு இலங்கையில், முன்பு இந்து சமூகம் உருவாக்கிய *சந்நியாசிகளின்* எண்ணிக்கை இன்று இல்லை. இதற்கு காரணம் என்ன? அந்த சமூகம் இன்று வழக்கறிஞர்களை உருவாக்குகிறது. அந்த சமூகம் இன்று வியாபாரிகளை உருவாக்குகிறது. அந்த சமூகம் சுதந்திர போராட்ட வீரர்களை உருவாக்குகிறது. ஆனால் ஒரு *சுவாமியையும்* உருவாக்க ஏன் முயற்சி மேற்கொள்ளப்படுவது இல்லை? தங்கள் சமய சமூகங்களுக்கு ஒரு மகனை அனுப்பி வைப்பது இந்து கலாச்சாரத்தின் அங்கம் ஆகும். ஆனால் அதே சமூகம், கத்தோலிக்க தேவாலயத்தில் பாதிரியார்களாக சமயப்பணி செய்வதற்கு எண்ணற்ற இளைஞர்களை வழங்கியுள்ளது. இதை புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது. ¶ஒரு இளைஞன் இருபத்தி ஐந்து வயதை அடைவதற்கு முன்பாக, *சந்நியாசம்* அல்லது *கிருகஸ்த ஆசிரமத்தில்* ஒன்றை தேர்வு செய்ய அனுமதி வழங்கப்படவேண்டும். அவன் தனது சகோதரிகளை திருமணம் செய்து வைக்க வரதட்சணையாக பெருந்தொகையை திரட்ட வேண்டும் என்பதற்காக, அவனை எப்போதும் வேலையில் சேர நிர்பந்திக்கக் கூடாது. இந்து மதம் மூலம் இறைவனை நாடி மக்களுக்கு சேவை செய்வது,

அவனது வலுவான தூண்டுதலாக இருந்தால், அவனை வெளியுலகில் வேலை செய்ய நிர்பந்திப்பது ஒரு பாவம் ஆகும். ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்ற வலுவான தூண்டுதலுடன் இருக்கும் ஒருவனை திருமணம் செய்துகொள்ள நிர்பந்திப்பது ஒரு பாவம் ஆகும். அந்த அரிய ஆன்மாக்கள் இறைவனை நாடி புனிதமான சன்னியாச விரதங்களை மேற்கொள்வதால் பெறும் விழிப்புணர்வு மூலம் வேதனை நிரம்பிய உலகில் பிரகாசம் மற்றும் அன்பை கொண்டு வருவதற்கு வழங்கும் அனுமதி குடும்பம், சமூகம் மற்றும் மனித நேயம் செய்யும் சிறந்த செயலாக இருக்கும். ¶இலங்கையில் இருக்கும் இந்து சமூகம் தங்கள் சமூகத்தை சேர்ந்த இளைஞர்களில் இருந்து ஆன்மீக தலைவர்களை உருவாக்க வேண்டும். அதில் மற்ற தொழில்களில் இருக்கும் அம்சங்கள் நிறைய நிரம்பியுள்ளன. அது மீண்டும் தலைசிறந்த *சுவாமிகள்*, *கிருகஸ்த* பணியாளர்கள் மற்றும் மதத்தலைவர்களை உருவாக்க வேண்டும். ஒரு மணி நேரம் முன்னர் இங்கே அமர்ந்து இருந்த ஒரு இளைஞரிடம், "உங்கள் வயதில் இருக்கும் எத்தனை இளைஞர்கள், மதம் தொடர்பான கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றனர்?" என்று விசாரித்தோம். "வெகு சிலரே பங்கு பெறுகிறோம், சுவாமி," என்று அவர் கூறினார். கோயிலுக்கு வருகை தரும் *சுவாமிகள்* வழங்கும் உபதேசங்களை கேட்பதற்கு மற்றும் மற்ற நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதற்கு, பெற்றோர்கள் தங்கள் வீட்டில் இருக்கும் இளைய தலைமுறையினரை நூற்றுக்கணக்கில் அழைத்து வரவேண்டும். உலகெங்கும் இருக்கும் இந்துக்கள் தங்கள் இந்து மதத்திற்கு துணையாக இருந்து, தங்கள் முயற்சிகள், தங்கள் ஈடுபாடு மற்றும் தங்களது நேரம், செல்வம் மற்றும் திறமை மூலம் அதற்கு ஆதரவு வழங்க வேண்டும். ¶சென்ற வாரம் நான் சென்னை சென்று இருந்த போது, சுமார் இருபது ஆண்டு காலமாக எனது நண்பராக இருக்கும் சுவாமி சின்மயாநந்த சுவாமியும் நானும் பேசிக்கொண்டு இருந்தோம். நாங்கள் பேசிக்கொண்டு இருந்த போது, ஒரு இளைஞன் வந்தான். அவன் தனது பள்ளிக்கு செல்லும் முன்பாக, சுவாமியின் ஆசிகளை பெற வந்து இருந்தான். அவன் தனது படிப்பை முடித்ததும், அடுத்ததாக அவன் திட்டம் என்ன என்று சுவாமி விசாரித்தார். "பிறகு நான் திருமணம் செய்து கொள்வேன்," என்று அவன் கூறினான். "அதன் பிறகு?" என்று சுவாமி கேள்வி கேட்டார். "பிறகு நான் எனது குழந்தைகளை வளர்ப்பேன்?" என்றான். "அதன் பிறகு?" என்று சுவாமி மீண்டும் கேட்டார். "நான் எனது தொழிலில் நிலைத்து இருந்து உயர்பதவியை அடைவேன்," என்று அவன் கூறினான். "அதன் பிறகு?" என்று சுவாமி மீண்டும் கேட்டார். தொடர்ந்து பதில் அளித்து வந்த இளைஞன் இறுதியாக, "அதன் பிறகு நான் இறந்து விடுவேன்," என்றான். "நீ திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாக எனது பணியில் உதவியாக இருந்து, சில பயனுள்ள சேவையை செய்ய வேண்டும். இன்று இந்தியாவில் பல குழந்தைகள் தினமும் பிறந்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் சிறிது தாமதம் ஏற்படலாம். உன் படிப்பை முடித்ததும் என்னிடம் திரும்பி வா. நாம் இருவரும் ஒன்றாக

சேர்ந்து இறைவனுக்கும் நமது மக்களுக்கும் சில பயனுள்ள பணிகளை செய்யலாம்," என்று சுவாமி அவனிடம் கேட்டுக்கொண்டார். ¶வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் மதத்தை சுற்றி அமைவது முக்கியம் ஆகும். வாழ்க்கையில் ஆன்மீக அம்சங்கள் மட்டுமே நிலைத்து இருக்கும். வாழ்க்கையில் இருக்கும் மற்ற அனைத்தும் அழிந்து விடும். இந்த உடல் அழிந்து விடும். இந்த ஆளுமை அழிந்து விடும். ஆனால் நாம் அடுத்தடுத்து பிறவியை எடுத்து பக்குவம் அடையும் போது, நமது மதம் நமக்குள் நிலைத்து இருந்து வளர்ச்சி பெற்று வருகிறது. அடுத்து வரக்கூடிய தலைமுறைகளில் தங்கள் மதத்தின் முன்னேற்றத்திற்கு துணையாக இருப்பது, வயது வரம்பின்றி ஒவ்வொரு இந்துவின் கடமை ஆகும். நாம் மற்றவர்களுக்கு சேவை செய்து வழிகாட்டுவதன் மூலமாக இந்து மதம் நிலைத்து இருப்பதற்கு துணை புரிகிறோம். உண்மையான மற்றும் நிலையான மகிழ்ச்சியை பெறுவதற்கு, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் மதத்தை அடிப்படையாக கொண்டிருந்து, மற்ற விருப்பங்கள் மற்றும் ஆசைகள் அதனை சுற்றி அமைந்து இருக்க வேண்டும். இன்று பலர் மதத்தில் ஆர்வம் இல்லாமல் அதற்கு புறம்பாக செயல்படுகிறார்கள். அதை மீண்டும் மக்களிடம் பிரபலப்படுத்துவது மதத்தில் ஈடுபாடு இருப்பவர்களின் கடமை ஆகும். ¶இந்தியாவும் இலங்கையும் விவசாயத்தை சார்ந்து இருக்கும் நாடுகள் மற்றும் தொழில்நுட்பத்தை சார்ந்து இருக்கும் நாடுகளின் மத்தியில் உள்ளன. நாம் இந்து மதத்தை தொழில்நுட்ப யுகத்திற்குள் அழைத்துச் செல்லவேண்டும். அதை மீண்டும் வலியுறுத்தி, மீண்டும் மாற்றி அமைத்து மீண்டும் விளக்க வேண்டும். விநாயகர் வழிபாட்டின் மூலம் மக்களின் கணினி வேலையில், தட்டச்சு வேலையை சிறப்பாக செய்வதில், போக்குவரத்து மற்றும் பல வகை மக்களை எதிர்கொள்வதால் ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் நலிசோர்வுகளை சமாளிப்பதில் அவர் எவ்வாறு துணை புரிகிறார் என்பதை நாம் கற்றுத் தரவேண்டும். தொழிற்சாலை மற்றும் தொழில்நுட்ப வேலைகள் நிரம்பிய இந்த உலகில், இந்து மதத்திற்கு புதிய வடிவத்தை வழங்கி அதை புதுபிக்க வேண்டும். இதை யாரால் செய்ய முடியும்? உங்களைப் போன்ற முதிர்ச்சிபெற்ற புத்திசாலிகளால் மட்டுமே செய்ய முடியும். இந்த பொறுப்பை முதிர்ச்சிபெற்ற புத்திசாலிகளால் ஏற்றுக்கொண்டு, இந்த சீர்த்திருத்த பணியில் எனக்கு உதவியாக இருக்க முடியும். அதன் பிறகு நாம் அதை ஒன்றாக சேர்ந்து வரக்கூடிய தலைமுறைகளுக்கு கற்றுத் தரலாம். அதன் பிறகு அனைத்து பிரிவுகளையும் சார்ந்த இந்துக்கள் தங்கள் மதத்தில் பெருமிதத்துடன் நிலைத்து இருப்பார்கள். ¶நாம் பின்வரும் உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம். “சிவபெருமான் தனது அனைத்து பக்தர்கள் மீது அன்பு மற்றும் அக்கறையுடன் இருக்கிறார். அவர் அதை அன்றும் செய்து வந்தார் மற்றும் அதை எதிர்காலத்திலும் தொடர இருக்கிறார்.” “சிவபெருமான் தனது அனைத்து பக்தர்கள் மீது அன்பு மற்றும் அக்கறையுடன் இருக்கிறார். அவர் அதை அன்றும் செய்து வந்தார் மற்றும் அதை எதிர்காலத்திலும் தொடர

இருக்கிறார்.” நாம் எல்லோரும் இப்போதே இணைந்து செயல்பட தொடங்குவோம்.

திங்கட்கிழமை

பாடம் 365

உங்களால் மாற்றத்தை

ஏற்படுத்த முடியும்

இன்று இரவு இங்கே கூடியிருக்கும் எல்லோரும் ஒன்றாக இணைந்து மாற்றத்தை ஏற்படுத்த முயல்வது முக்கியம் ஆகும். ஆங்கிலேய கிறித்துவர்கள் உங்களுக்கு அல்லது உங்கள் பெற்றோர்களுக்கு கற்றுத் தந்த வழக்கங்களை பின்பற்றாமல், அவற்றை உடனடியாக புறக்கணிப்பது முக்கியம் ஆகும். சமூகத்தில் ஒருவன் உயர்ந்து வந்தால், அவன் மற்றவர்களுடன் சமநிலையை பெறும் வரை, அந்த சமூகம் அவனை பலவீனப்படுத்தி, அவனை இழிவாக விமர்சனம் செய்வது, அத்தகைய ஒரு வழக்கம் ஆகும். இன்றைய வியாபார உலகில் எல்லோரும் மற்ற எல்லோரையும் உயர்த்த முயற்சி செய்து வருகின்றனர். தங்கள் சமூகத்தில் ஒருவர் முன்னேறி வருவதை நினைத்து மக்கள் பெருமிதம் அடைந்து, அதற்கு அடுத்து வருபவரும் வெற்றி பெறுவதற்கு உதவி செய்கின்றனர். அவர்கள் தங்கள் சமூக தலைவர்கள் மீதும் அபிமானத்துடன் இருக்கின்றனர். ஆனால் இங்கே அப்படி இல்லை. ஏனென்றால் ஆன்மீக உதவியை வழங்க விரும்பும் ஒருவர் அவதூறாக பேசப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால், அவர் அமைதியாக மறைந்து இருக்கவேண்டி இருக்கிறது. யாரும் தங்கள் மதத்திற்கு ஆதரவு தருவது இல்லை. அவ்வாறு ஆதரவு அளிப்பதற்கு யாருக்கும் அனுமதி வழங்குவதும் இல்லை. இந்த நிலை மாறவேண்டும் மற்றும் இது விரைவில் மாற இருக்கிறது. ¶ஆமாம், இந்த போக்கு மாறியாக வேண்டும். மக்களை விமர்சிப்பதை காட்டிலும் அவர்களை புகழ்வது, அவர்களுக்கு ஆதரவு மற்றும் பாதுகாப்பு அளிப்பது கடினமாக இருந்தாலும், இந்த நிலை மாறியாக வேண்டும். இந்த போக்கு மாறியாக வேண்டும். நாம் பல தெய்வங்கள் மற்றும் ஒரு பரமேசுவரனை வழிபாட்டாலும், இது மாறியாக வேண்டும். பூமியில் தற்போதுள்ள மிகவும் பழமையான மதமான தங்கள் மதத்தை நினைத்து இந்துக்கள் பெருமையுடன் இருக்கும் காலம் வந்து விட்டது. இந்துக்கள் தங்கள் நம்பிக்கைகளை அறிவித்து, அதை காப்பாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. விளைவு எதுவாக இருந்தாலும், இந்து மதத்திற்கு ஆதரவாக நிற்கவேண்டிய காலம் வந்து விட்டது. இதன் விளைவாக இளைய தலைமுறை வயதில் பெரியவர்களை மீண்டும் மதிக்கத் தொடங்கும். இதன் விளைவாக இளைய தலைமுறை தங்களை இந்து

என்று பெருமிதத்துடன் சொல்லிக்கொள்வார்கள். இதன் விளைவாக இளைய தலைமுறை தனக்கு அடுத்து வரும் தலைமுறைக்கு, இந்து மதத்தின் தத்துவங்களை மனதில் பெருமையுடனும் வலுவாகவும் அற்புதமாகவும் ஆர்வத்துடனும் கற்றுக் கொடுப்பார்கள். இதைத் தொடங்குவதற்கு இப்போது நேரம் சரியாக இருக்கிறது. ¶மேற்கத்திய நாடுகள் பன்மைவாத அமைப்பை கொண்டுள்ளன. இது உண்மை மதிக்கப்படும் காலம் ஆகும். இவை தவறுகளை திருத்தும், ஆத்ம ஞானம் பெறும் நாட்கள் ஆகும். இதனை வஞ்சனையின் போர்வையில் மறைக்க முடியாது. வேதம்-ஆகமத்தின் இலக்காக விளங்கும் ஆத்மஞானத்தை இந்துக்கள் அணுகுவதை போல, எந்த ஒரு கிறித்துவரும் அல்லது முஸ்லிமும் அணுகுவது இல்லை என்று நான் உறுதியாக சொல்ல விரும்புகிறேன். *ஆசிரமத்தில்* கிறிஸ்துமஸ் கொண்டாடுவது மற்றும் *சத்சங்கத்தில்* இந்து மதம் சாராத பாடல்களை பாடுவது அவசியமாக இருந்த காலங்கள் கரை கடந்து விட்டன. வேதம் குறிப்பிடும் உண்மைப்பொருளை ஒரு கூடையில் மறைத்து வைப்பது மற்றும் ஒரு சிலுவைக்கு பின்னால் வைக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை. இனி உங்கள் வீட்டு மாடியில் இருந்து தைரியமாக ஆத்ம ஞானம் பற்றி சத்தமாக பேசலாம். ஆத்ம ஞான அனுபவத்தை பெறுவதற்காக பூமியில் எல்லோரும் பிறவி எடுத்துள்ளார்கள். ¶எல்லா வஸ்த்துக்களுக்கும் பற்றுக்கோடாக விளங்கும் பரமாத்துமாவிற்கு பற்றுக்கோட்டின் அவசியம் இல்லை. பற்றுக்கோடாக விளங்குவது அந்த பரமாத்துமாவின் செயலாக இல்லாமல், அதன் இயல்பாக இருக்கிறது. அது நமது சிந்தனைகள், மனவெழுச்சிகள், நமது தூல பிரபஞ்சத்திற்கு பற்றுக்கோடாக விளங்குகிறது என்றாலும், அது மர்மமான முறையில் அவற்றை எல்லாம் கடந்து இருக்கிறது. அது ஆத்ம ஞானம் பெற்றவருக்கு தெளிவாக விளங்கி, பெரும்பாலானோருக்கு முற்றிலும் தெரியாமல் இருக்கிறது. அதனால் அது இல்லாமல் இருக்கிறது. இந்துக்கள் தங்களது பாதுகாப்பை இந்த பரமாத்துமாவிடம் மட்டுமே வேண்டிக்கொள்ள முடியும். நாம் நம்மை ஒரு இந்துவாக அடையாளம் காட்டிக்கொள்ள வேண்டுமே தவிர, ஒரு கிறித்துவன் அல்லது ஒரு முஸ்லிமாக அடையாளம் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதனால் இந்த வருடம் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பவது அல்லது ஆசிரமத்தில் ஒரு கிறிஸ்துமஸ் அலங்கார மரத்தையும் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் சொல்வது புரிந்ததா? ¶இந்த அழகான இலங்கை தீவில், இன்று இரவு பேசப்பட்ட இந்து மதத்தின் அற்புதமான அம்சங்களை கவனிக்கும் போது, இந்த பூமியில் எதிர்கால தலைமுறையினருக்கு உகந்த மதமாக இந்து மதம் விளங்குகிறது என்பது தெளிவாகிறது. இது புதிய யுகத்திற்கு மற்றும் சத்யுகத்தின் விடியலுக்கு சரியான தீர்வாக விளங்குகிறது. நமது மதமாக விளங்கும் மேன்மை பொருந்திய சனாதன தர்மம், அனைத்து தீர்வுகளையும் கொண்டுள்ளது. அது இருந்திராத யுகம் இல்லை என்பதால், அது எல்லா யுகத்திற்கும் தேவையான

பதிலை கொண்டுள்ளது. இந்துக்கள் தங்கள் பாரம்பரியத்தை புறக்கணிப்பதற்கும், தங்களுக்கு இந்து மதத்தில் இருக்கும் நம்பிக்கை அல்லது தான் ஒரு இந்து என்று தைரியமாக சொல்வதற்கும் பயந்த காலம் இப்போது இல்லை. எல்லா இனங்கள், எல்லா நாடுகள், எல்லா கலாச்சாரங்கள், எல்லா உட்பிரிவுகளை சேர்ந்த இந்துக்கள் ஒன்றாக இணைந்து நின்று, தாங்கள் சிரத்தையுடன் பின்பற்றும் தங்களது தலைசிறந்த மதத்தைப் பற்றி உலக மக்களுக்கு தெரியப்படுத்தும் காலம் வந்து விட்டது. மனதில் தைரியத்தை வரவழைத்து நம்பிக்கையுடன் முன்னேறுங்கள். இந்து மதத்தில் வலுவாக நிலைத்து இருங்கள்.

வேத மற்றும் திருமுறைப் பாடல்கள்

உண்ணுதல் பருகுதல் போன்றவற்றால் தூல உடல் வளர்ச்சி அடைவதைப் போல, ஆன்மா சுகதுக்க வடிவில் போகங்களை அனுபவிக்கும் போது நான், எனது என்ற அபிமானத்தினால் ஆகாமி விளைய, அது பிராரப்தமாக பலன் தருவதற்கு பொருத்தமான உடல்களை எடுக்க பூமியில் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கிறது. ஆன்மா தனது *கர்மவினைக்கு* ஏற்ப, தூலமும் சூட்சுமமாக பல சரீரங்களை எடுக்கிறது. அது கர்மவினை மற்றும் உடல்களின் காரணமாக அந்த உடல்களோடு பொருந்தி இருந்தாலும், அது சடமாக இல்லாமல் சித்தாக இருக்கிறது.

கிருஷ்ண யஜுர் வேதம், சுவேதாசுவதர உபநிடதம், 5.11-12. ப, ப. 94

தர்மத்தை காட்டிலும் உயர்வானது எதுவும் இல்லை. *தர்மம்* என்பது நிச்சயமாக சத்தியத்தை குறிக்கிறது.

சுக்ல யஜுர் வேதம், பிரகதாரண்யக உபநிடதம் 1.4.14. மொஅடி உபஹி, ப. 84

தூய்மையான மனதை உடையவன் எந்தெந்த லோகத்தை மனதால் ஆசைப்படுகிறானோ, எந்தெந்தப் பொருளை ஆசைப்படுகிறானோ, அந்தந்த லோகத்தையும் பொருட்களையும் அடைகிறான். ஆகவே இன்பத்தில் ஆசை இருப்பவன் ஞானியை வழிபட வேண்டும்.

அதர்வண வேதம், முண்டக உபநிடதம் 3.1.10. ஏஇ, ப. 178

உண்மையில் மூன்று உலகங்கள் உள்ளன. அவை மனிதர்களின் உலகம், பித்ருக்களின் லோகம் மற்றும் தேவலோகம். தேவலோகம் என்பது நிச்சயமாக உலகங்களில் சிறந்த உலகமாக விளங்குகிறது.

சுக்ல யஜுர் வேதம், பிரகதாரண்யக உபநிடதம் 1.5.16. உபஹி, ப. 89

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.

உன்னதமான ஞானம் எல்லா திசைகளில் இருந்தும் வஞ்சிக்கப்படாமலும் தடைகளை ஏதும் சந்திக்காமலும் எங்களை நோக்கி பொங்கி வரட்டும். எங்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பு அளித்து வரும் தேவர்கள், எங்களுடன் எப்போதும் இருந்து எங்கள் முன்னேற்றத்திற்கு துணை புரியட்டும். சன்மார்கத்திற்கு தூண்டுதலாக விளங்கும் *தேவர்களின்* பேரானந்தம் தரும் அன்பும் அனுக்கிரகமும் எங்களுக்கு கிடைத்துக் கொண்டு இருக்கட்டும். எங்களுக்கு *தேவர்களின்* நட்புறவு கிடைக்கட்டும். எங்களுக்கு *தேவர்கள்* தீர்க்கமான ஆயுளை கொடுக்கட்டும்.

ரிக் வேதம் 1.89.1-2. ஹிவே, ப. 109

மனப்பூர்வமாக உணர்ந்து ஞானத்தை பெற்ற பிறகு, மறுபிறவியின் பாதையில் செல்லவேண்டிய அவசியம் இருக்காது. அதனால் அவர்கள் மிகப்பெரிய உற்சாகமாக துறவறத்தை குறிப்பிடுகிறார்கள்.

கிருஷ்ண யஜுர் வேதம், மகாநாராயண உபநிடதம் 537–8. வேஎ, ப. 439

ஈசுவரர்களுக்கு மகேசுவரனாகவும், தேவர்களுக்கு தேவராகவும், பிராஜபதிகளுக்கு அரசனாகவும் விளங்கி, எல்லோராலும் போற்றப்பட்டு யாவும் கடந்து இருக்கும் புவனேசுவரனை நாம் அறிந்து வழிபடுவோமாக.

கிருஷ்ண யஜுர் வேதம், சுவேதாசுவதர உபநிடதம் 6.7. வேஎ ப. 156

எந்த உபாசகர்கள், கட்டுப்பாட்டை அடைந்தவர்களாகவும் யாசித்தலை மேற்கொண்டவர்களாகவும் வனத்தில் தவத்தையும் தியானத்தையும் அனுட்டானம் செய்கிறார்களோ, அவர்கள் தூய்மையானவர்களாக, சூரிய மார்கத்தில் என்றும் அழியாமல் இருக்கும் அந்த இரண்யகர்பர் இருக்கும் இடத்திற்கு செல்கிறார்கள்.

அதர்வண வேதம், முண்டக உபநிடதம் 1.2.11. வேஎ, ப. 415

மனம் என்பது பந்தம் மற்றும் முக்தியின் காரணமாக விளங்குகிறது. லௌகீக விஷயங்களில் ஈடுபடுவது பந்தம் ஆகும். அவற்றில் இருந்து விடுபடுவது முக்தி ஆகும்.

கிருஷ்ண யஜுர் வேதம், மைத்ரி உபநிடதம் 6.34. உபமா, ப. 104

உங்களுக்கு ஒரு வேளை கடமை அல்லது நடத்தை பற்றிய சந்தேகம் தோன்றினால், அதைப் பற்றிய அறிவு மற்றும் அனுபவத்துடன் நடுநிலையில் உள்ள, மென்மையான மனதை உடைய, தர்மத்தில் நிலைபெற்ற எந்த சான்றோர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் எவ்விதம் அந்த சூழ்நிலையில் நடந்துக்கொண்டார்களோ அவ்விதம் நீங்கள் அந்த சூழ்நிலையில் நடந்துக்கொள்ள வேண்டும்.

கிருஷ்ண யஜுர் வேதம், தைத்ரீய உபநிடதம் 1.11.4. மொஅடி உபரா, ப. 539

உண்மையை விரும்புபவர்களே, ரிஷிகள் எந்த யாகங்களை மந்திரங்களுக்குள் பார்த்தார்களோ, அவை மூன்று வேதங்களிலும் பரவலாக பிரிந்து

அமைந்துள்ளன. கர்மபலத்தில் விருப்பம் உள்ளவர்களே, அந்த கர்மங்களை முறையாக அனுட்டானம் செய்வீர்களாக. உங்களால் செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அனுபவிப்பதற்கு, இதுவே உங்களுக்கு சரியான மார்க்கம் ஆகும்.

அதர்வண வேதம், முண்டக உபநிடதம், 1.2.1. வேஎ, ப. 414

சத்வ குணத்தை அடைந்த சாதகன், கர்மத்தாலும் உபாசனையாலும் அடையப்பட்ட உலகங்களை ஆராய்ச்சி செய்து வைராக்கியத்தை பெறுகிறான். செயலினால் உருவாக்கபாடாத பிரம்மனை, செயலினால் அடைய முடியாது. ஆகவே அவன் சமித்தை கையில் ஏந்தி, அறிவை அடைவதற்கு மரபு வழியில் வந்த பிரம்மனில் நிலைபெற்ற குருவை அடைந்து தான் ஆகவேண்டும். அந்த ஞானியானவர், முறையாக அணுகிய, இந்திரிய ஒழுக்கத்தை உடைய, மனத்தூய்மை உடைய அவனுக்கு, எந்த அறிவால் அழியாத, உண்மையான பிரம்மனை குருவானவர் அறிவாரோ, அந்த பிரம்மனைப் பற்றிய அறிவை குருவானவர் உபதேசிக்க வேண்டும்.

அதர்வண வேதம், முண்டக உபநிடதம் 1.2.12–13. ஏஇ, ப. 157

அக்னி பகவானே! எந்த சாதகன் உன்னை தினமும் ஹவிஸ் மற்றும் மந்திரங்கள் மூலம் திருப்திப்படுத்துகிறானோ, அவன் செல்வ வளத்தை பெற்று பல தானங்கள் செய்யட்டும். அவனுக்கு ஒவ்வொரு நாளும் சுகம் தருவதாக இருக்கட்டும். அவன் செய்யும் யக்ஞும் பலன் தருவதாக இருக்கட்டும்.

ரிக் வேதம் 4.4.7. வேஎ. ப.845

பக்குவம் அடைந்த தானியங்களில் இருந்து பறவைகளை விலக்க சத்தமிட்டு இறைக்கும் உழவர்களை போல, கர்ச்சிக்கும் இடி மேகத்தின் முழக்கத்தை போல, மேகங்களின் இருந்து விழும் மழையின் சத்தத்தை போல, துதிப்பவர்கள் பிரகசுபதியை போற்றுகிறார்கள்.

ரிக் வேதம் 10.68.1. வேஎ, ப. 812

தங்களைப் பற்றிய அக்கறை இல்லாமல், தூண்டுதல்கள் மற்றும் முயற்சிகள் இல்லாமல், தாரணையில் மூழ்கி ஆத்ம பரமாத்துமா நிட்டையில் நிலைத்து இருந்து, தீய செயல்களை நீக்க முயற்சி செய்து, இவ்வாறு தங்கள் தேகத்தை தியாகம் செய்யும் சந்நியாசிகள் பரமஹம்ச என்று அழைக்கப்படுகின்றனர்.

சுக்ல யஜுர் வேதம், ஜாபால உபநிடதம், 6. வேஎ, ப. 441

ஆதார கிரந்தஹ

आधार ग्रन्थाः



மேற்கோள்கள்

ஹட யோகம்

हठयोग



முதலாவது மேற்கோள்

ஹட யோகம்

கீழ்நிலை லோகத்தின் கங்கையாக *இடா* விளங்குகிறது. யமுனை நதியாக *பிங்கலா* விளங்குகிறது. சூட்சுமமான சரஸ்வதி நதியாக *இடா* மற்றும் *பிங்கலாவிற்கு* இடையே *சுஷும்னா* அமைந்து இருக்கிறது. இந்த திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினால் தலைசிறந்த பலன் சித்தியாகும் என்று கூறப்படுகிறது.

சுக்ல யஜுர் வேதம், த்ரிசிக்கி பிராமண உபநிடதம், 316-317



காலை பொழுதின் அமைதியில், ஒரு செங்குத்தான பாறையின் விளிம்பில் நின்றுக்கொண்டு, எளிதில் வளையக்கூடிய தனது மெல்லிய உடலுடன் ஒரு யோகி, தனியாக ஹட யோகப்பயிற்சி *செய்துக்கொண்டு இருக்கிறார். அவருக்கு பின்புறமாக அமைந்துள்ள கனடா மற்றும் அமெரிக்க நாட்டின் எல்லைப்பகுதியில், உலகப்புகழ் பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சி பேரருவியாக பாறைகள் மீது கொட்டுகிறது. கீழே ஒரு குறிப்பிட்ட இடைவெளி விட்டு செல்லும் படகு, அதன் பிரம்மாண்டத்திற்கு முன்பாக மிகவும் சிறியதாக காட்சி அளிக்கிறது.*



தினமும் பல மணிநேரங்கள் *யோகாப்பியாசம், ஜபம்* மற்றும் தியானம் செய்யும் ஒரு *யோகி* வியாதி அல்லது உடல் பலவீனத்தால் தனது நடவடிக்கைகளை நிறுத்தாமல் தொடர்வதற்கு, அவர் தனது உடலை உடற்பயிற்சி செய்து ஆரோக்கியமாக வைத்து இருக்க, பல *ஆசனங்களை* கொண்ட ஒரு செய்முறையாக *ஹட யோகம்* உருவாக்கப்பட்டது என்று பல வருடங்களுக்கு முன்பாக எனக்கு விளக்கப்பட்டது. முழுநிறைவாக ஞானோதயம் பெற்று சிறந்து விளங்கிய பழங்கால *ரிஷிகள்*, இன்றைய தலைசிறந்த இந்திய *ரிஷிகளைப்* போன்று, மனித நேயத்திற்கு சேவை செய்யும் நோக்குடன், வெளியுலகில் தொடர்ந்து நன்மை நடக்க வேண்டும் என்று அதற்கு உத்வேகத்தை அகத்தில் இருந்து முழுமையாக வழங்கி வந்தனர். அவர்கள் மனித நேயம் எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிழைகளை புரிந்துக்கொண்டு, அதன் மூலம் மக்களின் *கர்மவினைகளைப்* பற்றி சிந்தித்து கிரகித்துக் கொள்ள அவர்கள் குகைகள், காடுகள் மற்றும் நதிக்கரைகளில் அமர்ந்துக் கொண்டனர். காரண காரிய செயல்களின் விளைவு அவர்களின் தூல உடலின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தியானம் செய்வதைத் தவிர மற்ற நேரங்களில், தாங்கள் தனிச்சையாக பொறுப்பேற்றுக்கொண்ட இந்த *கர்மவினைகளில்* இருந்து விடுதலை பெறுவதற்கு, தங்கள் *ஆசனங்களை* வழக்கம் போல் செய்வார்கள். இதன் மூலம் அவர்கள் சிந்தனையில் இருந்த கிராமங்கள், நாடுகளுடன் மனிதர்களும் முன்னேற்றம் பெற்றனர். இந்த *யோகிகள்* உண்மையில் மகாதேவர்களைப் போன்று விளங்கினர். அன்னமய கோசம், மனோமய கோசம், பிராணமய கோசம் மற்றும் விஞ்ஞானமய கோசத்தை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியுடனும் இணக்கத்தில் வைத்து இருந்து, அதன் மூலம் அகத்தில் தெய்வீக உணர்தலின் உயர்ந்த நிலைகளுக்கு சாட்சியை அழைத்து செல்வதே நோக்கமாக அன்றும் இன்றும் இருந்து வருகிறது.

அத்வைத யோகத்துடன் இணைந்து வந்துள்ள *ஹட யோகத்தை ரிஷிகள்* சமஸ்கிருத மொழியில் வழங்கியுள்ளனர். இது இந்த பூமியில் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஒவ்வொரு *ஹட யோக* ஆசிரியரும், தனது உணர்வுநிலையை பொருத்து போதனைகளை வழங்குகிறார். உதாரணத்திற்கு ஒரு *அத்வைதவாதி, ஹட யோக* யுத்திகளை பயன்படுத்தி தனது மாணவர்களுக்குள் *அத்வைத* தத்துவத்தை ஊக்குவிக்கிறார். ஆனால் ஒரு

துவைதி தனது சீடனுக்கு ஆரோக்கியமான உடல், சீறுநீரக பிரச்சனைகளுக்கு தீர்வு மற்றும் எளிதில் வளையும் மெல்லிய உடலை வழங்குவதற்கு *ஹட யோக* யுத்திகளை பயன்படுத்துகிறார்.

நாங்கள் 1969 ஆம் ஆண்டு, இந்தியாவிற்கு அருகில் இருக்கும் திபெத் மற்றும் நேபாள எல்லையில், இமய மலையின் 13,000 அடி உயரத்தில் இருக்கும் டார்ஜிலிங்கில் *ஹட யோகப்பயிற்சி* செய்தோம். *ஹட யோகத்தின்* முக்கிய உத்திகள் மற்றும் பயிற்சிகளை, எங்களது தியான மொழியான ஷூம் மொழிக்குள் இணைத்து, அந்த இடத்தில் ஒரு மிகப்பெரிய வெளியீட்டை வழங்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அது பல்வேறு நாடுகளை சேர்ந்த எழுபத்தி ஐந்து சீடர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அது அந்நாளில் இந்தியா பயணம் மேற்கொண்ட மிகப்பெரிய யாத்திரிகள் குழு என்று பேசப்பட்டது.

இன்று பொதுவாக அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பாவில் கற்றுத் தரப்படும் *ஹட யோகம்* பழங்கால வடிவத்தில் இருந்து அதிகம் மாறுபட்டு இருக்கிறது. ஷூம் மொழியில் வழங்கப்படும் *ஹட யோகம்*, அதன் பழங்கால எளிமையை தக்கவைத்து இருக்கிறது. ஷூம் மொழியின் அணுகுமுறை, நந்திநாத சம்பிரதாயத்தின் அணுகுமுறை ஆகும். அது இன்று வழக்கமாக இருப்பதைப் போன்று இல்லாமல், அதிக சூட்சுமமான அணுகுமுறையை கொண்டுள்ளது. எங்களது *ஹட யோகத்தில்* ஒரு *ஆசனத்தில்* இருந்து அடுத்த *ஆசனத்திற்கு* மாறும் போது நாங்கள் நிறம், ஒலி மற்றும் உடலின் நுணுக்கமான மனவெழுச்சி மற்றும் உணர்ச்சிகளின் துணை கொண்டு செயல்படுகிறோம். அது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும். ஒவ்வொரு ஆசனத்தையும் முறையான மூச்சுப்பயிற்சி, நிறம் பற்றிய கற்பனை மற்றும் உட்புற ஒலியை கேட்டுக்கொண்டு செய்யும் போது, அது அடிமனதில் இருக்கும் சிக்கலான *வாசனாக்களை* மெதுவாக விடுவித்து, அங்கிருந்து சாட்சியை உணர்வின் உச்சத்திற்கு விடுதலை செய்கிறது. ஒவ்வொரு ஆசனத்திலும் சக்தியின் உச்சத்தை அடைந்து அடுத்த ஆசனத்திற்கு நாம் மாறும் போது, தூல மற்றும் சூட்சும நரம்பு மண்டலத்தில் ஒரு சிறிய அல்லது பெரிய சீரமைவு நடைபெறுவதால், *ஹட யோகம்* உணர்வை திறந்து வைக்கிறது.

அதை சிலர் உடல் ஆரோக்கியம், தீர்க்க ஆயுள், உடலுறுதி, திண்மை அல்லது வியாதியால் ஏற்படும் வலியை குறைக்கும் வழியாக கருதுகிறார்கள் என்பது உண்மை தான். நாங்கள் *ஹட யோகத்தை* ஷூம் மொழியில் *பானசானா* என்று அழைக்கிறோம். இந்த உடற்பயிற்சி உடலுக்கு தீங்கு ஏதும் விளைவிப்பது இல்லை மற்றும் அது இதற்கு முன்பு குறிப்பிட்ட பலன்கள் அனைத்தையும் வழங்குகிறது. இந்த பலன்கள் அடிமனதில் வேதாந்த அடிப்படை மற்றும் சித்தாந்த அடிப்படை நெறிமுறைகளில் ஒன்றாக இருக்கும் கோயில் வழிபாட்டு பின்னணியை கொண்டவர்களுக்கு மிகவும் எளிதில் கிடைக்கின்றன. ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து, தெய்வ பக்தியுள்ள வீட்டில் வளர்ந்து, பூஜை அறையில் தொடர்ந்து வழிபாடு நடத்தி, கோயில்களுக்கு பெற்றோர்களுடன் செல்வதன் மூலம் சித்தாந்த நெறிமுறையை பின்பற்றி, பாக்கியம் இருந்தால் வேதாந்தத்தை கற்பவர்களை நான் இங்கே குறிப்பிடுகிறேன். *ஹட யோகமானது ஜபத்தை* போல, வேதாந்தம் மற்றும் சித்தாந்தத்தை பக்தனின் ஆன்மாவில் கலந்து, சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தில் ஆழமாக தியானம்

செய்ய அடித்தளம் அமைக்கிறது. இந்த சலுகைகளை பெறாத ஐரோப்பிய மற்றும் அமெரிக்க சீடர்கள், *ஹட யோகப்பயிற்சி* செய்வதால், ஆரோக்கியத்தை பெற்று சிறிதளவு மன அமைதியையும் பெறுகின்றனர். இவை அனைத்தும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எனது கண்காணிப்பின் மூலம் தோன்றிய கருத்துக்கள் ஆகும். *ஹட யோகம்* மற்றும் *பிராணாயாமத்தின்* அடிப்படை யுத்திகளை அளவோடு பயன்படுத்துவது முற்றிலும் பாதுகாப்பானது. இத்துடன் உலகெங்கும் மக்கள் *ஜபிக்கும் ஓம் மந்திரம்*, எல்லா மதங்கள் மற்றும் இறைநம்பிக்கைகள் மற்றும் எந்த மதத்தையும் சாராதவர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக விளங்குகிறது.

பதஞ்சலி முனிவர் தனது *யோக சூத்திரங்களில்* வடிவமைத்த அட்டாங்க யோக அமைப்பில், மூன்றாவது அங்கமாக *ஹட யோகம்* அல்லது *ஆசனா* விளங்குகிறது. அதற்கு முன்பாக *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* இருக்கின்றன. ஆனால் இன்று பலர் தங்களை *இயமங்கள்* மற்றும் *நியமங்களில்* தங்களை நிலைநிறுத்திக் கொள்ளாமல், *ஹட யோகப்பயிற்சியில்* ஈடுபடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு மெதுவாக கிடைக்கும் பலன்கள், இந்து மதத்தில் *யோகத்தின்* அடிப்படையாக விளங்கும் *இயமங்கள்* மற்றும் *நியமங்களுக்குள்* அவர்களை அழைத்து வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியாவில் இருந்து வந்த சிறந்த *குருமார்கள், ரிஷிகள்* மற்றும் *சுவாமிகள் ஹட யோகத்தை* கற்றுத் தந்து, விசாரம் செய்யும் ஆன்மாக்களுக்கு பாரம்பரிய முறையில் வழிகாட்டினார்கள். ஆனால் 1960 களின் தொடக்கத்தில் இந்தியாவில் இருந்து வந்து *மந்திரங்கள்* மற்றும் அதிக ஆற்றல்கொண்ட *பிராணாயாமங்களை* கற்றுத் தந்தவர்கள், அந்த ஆன்மாக்களை தவறாக வழிநடத்தினார்கள். *மந்திர யோகத்திற்கு* முன்பாக *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* மற்றும் *ஹட யோகம்* கற்றுத் தரப்படவேண்டும். *மந்திர யோகம்* செய்வதற்கு முன்பாக, நீங்கள் "சூரியன்-சந்திரன்" என்று பொருள்படும் *ஹட யோகத்தை* அவசியம் கற்றுக் கொள்ளவேண்டும். அத்துடன் நீங்கள் *ஜபம்* செய்வதற்கு முன்பாக, *இயமங்கள்* மற்றும் *நியமங்களில்* தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* மற்றும் *ஹ* மற்றும் *ட* முறையாக செயல்படத் தொடங்கியதும், *ஜபம்* செய்ய தொடங்குவது சரியாக இருக்கும்.

எங்களது இமாலயன் அகாடமியில் இருபத்தி நான்கு *ஆசனங்கள்* கற்றுத் தரப்படுகின்றன. *ஹட யோக ஆசனங்களின்* தொகுப்பில் மேலும் பல இருந்தாலும், தொடர்ச்சியாக செய்து நரம்பு மண்டலத்தின் வெளிப்புறத்தில் இருந்து நரம்பு மண்டலத்தின் உட்புறத்திற்கு சாட்சியை இயக்கி, அவற்றை தினமும் செய்வதன் மூலம் தூல உடல் முழுவதற்கும் பொதுவான ஒரு உடற்பயிற்சியை வழங்குவதற்கு, போதிய அளவில் நான் பின்வரும் *ஆசனங்களை* தேர்வு செய்துள்ளேன். ஒவ்வொரு நிலையும் சாட்சியை மனதின் ஏதாவது ஒரு பகுதியில் நிறுத்துகிறது. இந்த நிலைகளுக்கு ஷூம் மொழியில் வழங்கப்பட்டு இருக்கும் பெயர்கள், தூல உடலை மட்டும் குறிப்பிடாமல் சாட்சி நிலைக்கொண்டு இருக்கும் மனதின் பகுதியையும் குறிப்பிடுகிறது.

ஹட யோகப்பயிற்சி செய்வதில் இரண்டு கட்டங்கள் உள்ளன. தூல உடலை சார்ந்து இருக்கும் முதல் கட்டத்தில், உடலை தளர்த்திக் கொள்வதற்கும் முறையான நிலையை அடைவதற்கும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. உடல்

பல்வேறு நிலைகளுக்கு தன்னை பொருத்திக் கொண்டதும், *ஆசனத்தில்* சக்தியின் ஓட்டம் உச்சத்தில் இருக்கும் போது ஒரு *ஆசனத்தில்* இருந்து இன்னொரு *ஆசனத்திற்கு* சீராக மாற்றம் பெறும் போது இரண்டாவது கட்டத்தில் தேர்ச்சி பெற முடிகிறது. இவ்வாறு தூல உடலில் உருவாகும் சக்தியானது சூட்சும உடலுக்கு ஊட்டமளித்து மனம், மனவெழுச்சி மற்றும் உடல் ஆரோக்கியத்தை வழங்குகிறது. தினமும் இருபத்தி நான்கு *ஆசனங்களை* தொடர்ந்து நன்றாக செய்வதற்கு அரை மணிநேரம் அல்லது குறைந்தபட்சம் பத்து நிமிடங்கள் வரை தேவைப்படும். குழுவாக *ஹட யோகம்* செய்வதும் நல்ல பலனை தரும்.

பலருக்கு நாசிக்குடாக்களின் சளிசவ்வுகள் மற்றும் செரிமானப் பாதையை சுத்தம் செய்யும் *கிரியைகள், ஹட யோகத்தின்* அங்கமாக விளங்குகிறது. இது *ஆயூர்வேதத்தை* போன்று தூல உடலின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் தீர்க்க ஆயுளுக்கு துணை புரிகிறது. இந்த வகை *யோகத்தின்* அங்கமாக *ஆயுர்வேதம்* விளங்குகிறது. நாதர்களிடம் இருந்து *ஹட யோகம்* தோன்றியது. அதில் இருந்து தோன்றிய பல்வேறு செய்முறைகள் மூலம் *பிராணாயாம* மூச்சுப் பயிற்சிகள், பிறகு ஒருமுகச்சிந்தனை மற்றும் தியானம் ஆகியவற்றை செய்ய முடிகிறது. ஆனால் நீங்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் வாழ்கிறீர்கள் என்பதை, முதலில் உங்கள் *குருவிற்கு* நிரூபிக்க வேண்டும். அனைத்து வகையான *யோகங்களுக்கும் ஹட யோகம்* தொடக்கமாக விளங்குகிறது என்பதில் சந்தேகம் இல்லை. இது மனிதர்களுக்கு உன்னத பயிற்சியாக விளங்குகிறது.

தியானம் செய்வதற்கு *ஹட யோகம்* ஒரு சிறந்த முன்னேற்பாடாக விளங்குகிறது. *ஹட யோக ஆசனங்களை* செய்யாமல் தியானம் செய்யலாம் என்றாலும், குறிப்பாக ஆரம்பநிலையில் இருக்கும் மாணவருக்கு அது ஒரு உதவிக்கரமாக விளங்கும். இதை செய்யும் சீடனுக்கு பல சிறந்த பலன்கள் கிடைக்கின்றன. அதில் முதலாவதாக அவனுக்கு தனது நரம்பு மண்டலம் மீது விழிப்புணர்வு ஏற்படுகிறது. இரண்டாவதாக அதில் மூன்று அல்லது நான்கு பகுதிகள் இருக்கின்றன என்றும், மூன்றாவதாக கால்களில், கைகளில், தலையில் மற்றும் மற்ற பகுதிகளில் இருக்கும் நரம்பியல் உணர்வுகள் முற்றிலும் மாறுபட்டவை என்பதும் அவனுக்கு தெரிய வருகிறது. அவன் தன்னைப் பற்றி ஆய்வு செய்யும் போது நரம்பு மண்டலம், சாட்சி மற்றும் சக்தி ஆகிய மூன்றும் ஒன்றை மட்டுமே குறிக்கின்றன என்பதையும் அவன் கற்றுக் கொள்கிறான். அவன் தான் விழிப்புடன் இருக்கிறார் என்பதிலும், தன்னால் சாட்சியை ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு இயக்க முடியும் என்பதிலும் விழிப்புணர்வை பெறுகிறான். அதனால் ஒரு மனிதன் தனது நரம்பு மண்டலம் மற்றும் சக்தி மற்றும் சாட்சி ஒரு பொருளையே குறிப்பிடுகின்றன என்று புரிந்துக்கொண்டதும், அவனுக்கு மன உறுதி கிடைக்கிறது மற்றும் அதன் மூலம் அவன் எதன் மீது விழிப்புடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறானோ அதன் மீது அவனால் விழிப்புடன் இருக்க முடிகிறது மற்றும் அதன் பிறகு அவன் தனது தினசரி வாழ்க்கையில் மனதை சோகமான சூழ்நிலைகளில் இருந்து மகிழ்ச்சியான சூழ்நிலைகளுக்கு இயக்குவதை மட்டுமே செய்ய தொடங்குகிறான்.

ஆசையின் விதை மீது கவனம் செலுத்துதல்

"நாம் நமது ஆசைகளை கட்டுப்படுத்தி, சமநிலையாக இருப்பது எப்படி?" என்று ஒரு அருமையான கேள்விக்கு, நான் பல வருடங்கள் முன்பு 1950 ஆம் ஆண்டில் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* என்ற புத்தகத்தில், *அறிவால் அறியும் திறன்* என்ற பகுதியில், ஒரு சூத்திரம் மூலம் சுருக்கமாக பதில் அளித்து இருந்தேன். அந்த சூத்திரம் பின்வருமாறு. "ஆசையின் விதையை அதனுடன் தொடர்புடைய பொருட்களுடன் பார்க்கும் போது, அது ஒரு தவறான கோட்பாடாக விளங்குகிறது. ஒரு தவறான கோட்பாட்டின் அடிப்படையில், உணர்வுள்ள மனம் தனது அடியுணர்வில் பல தவறான எண்ணங்களை அனுப்புகிறது. இதனால் ஒரு ஆழமான ஆசை அல்லது சிக்கலான கருத்துக்கள் உருவாகின்றன. ஆசையின் விதையுடன் தொடர்பில் இருக்கும் மற்ற தவறான சிந்தனைகளை புறக்கணித்து, அந்த ஆசையின் விதையின் மீது மட்டும் கவனம் செலுத்துங்கள். அதன் பிறகு அதனுடனும் அதனுடன் தொடர்பில் இருக்கும் மற்ற சிந்தனைகளையும் புரிந்துக்கொண்டு, அந்த விதையை அழித்து விடுங்கள். அதன் பிறகு ஆழமான ஆசை அல்லது சிக்கலான கருத்து மறைந்து விடும்.

வாழ்க்கையின் சில காலகட்டங்களில் ஒவ்வொருவருக்கும் போராட்டமாக விளங்கும் நமது ஆழமான ஆசைகள் அல்லது சிக்கலான கருத்துக்களை முதலில் முடக்கி விடவேண்டும். ஆனால் அவற்றை முடக்குவதற்கு, அவற்றை முதலில் அடையாளம் காண வேண்டும். நமது மனம் எங்கே அதிக அமைதியாகவும் நிம்மதியாகவும் இருந்து, நம்மால் எளிதில் கவனத்தை ஒருமுகப்படுத்த முடிக்கிறதோ, அந்த நிலைக்கு நாம் நமது மனதை கொண்டு வரவேண்டும். அதாவது அடிமனமும் ஒருமுகப்பட்டு இருந்து, அதனால் எல்லா புரிதலையும் கடந்த ஒரு உட்புற அமைதிக்கு வழிவகுக்கும் நிலைக்கு நாம் நமது மனதை கொண்டு வரவேண்டும். இதை செய்வதற்காக, பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பாக பல தலைச்சிறந்த ஆசிரியர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட *ஹட யோக* செய்முறை, பல ஆசிரியர்களுக்கு தொடர்ந்து கற்பிக்கப்பட்டு வந்தது மற்றும் எனது ஆசிரியர்களில் ஒருவர் அதை எனக்கு கற்பித்தார்.

ஹட யோகம் என்பது அடிமனதின் துணையுடன் தூல உடலை அமைதிப்படுத்தும் செய்முறை ஆகும். *ஹட யோகம்* என்பது உடலை குறிப்பிட்ட நிலைகளில் பாரம்பரிய முறையில் வைத்து, நரம்பியல் ஓட்டங்களை மிகவும் சீராக வைக்கும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அது *வீணையின்* தந்தி கம்பிகளை முறுக்கேற்றி சரியான சுருதியில் வைப்பது போன்றது ஆகும். நீங்கள் வீணையை சரி செய்தால், ஒவ்வொரு தந்தியில் இருந்தும் சீரான நாதம் வெளிப்பட்டு, ஒன்றுக்கொன்று ஒத்த ஒலியில் ஒலிக்கும். இயற்கை முழுவதும் *ஹட யோகத்தின்* ஒரு நிலையுடன் இணக்கத்தை பெறும் வரை, நாம் *ஹட யோகத்தின்* அந்த நிலையில் அல்லது அந்த *ஆசனத்தில்* நிலைத்து இருக்கிறோம். நீங்கள் இன்னொரு நிலைக்கு மாறும் போது, இயற்கை முழுவதும் அந்த நிலையுடன் இணக்கத்தை பெறுவதால், உடல் இணக்கத்தை பெற்று அமைதிக்கு வழிவகுக்கிறது.

உதாரணத்திற்கு நான் எனது வலது கையை பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு, சிறிது நேரம் நின்று இருக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். முப்பது

வினாடிகளுக்கு எனக்கு எந்த சிரமமும் தெரிவதில்லை. அந்த நிலையில் நரம்பியல் ஓட்டங்கள் தங்களுக்குள் இணக்கம் பெறுவதை என்னால் உணர முடியும். முப்பது அல்லது நாற்பது வினாடிகளுக்கு பிறகு, அந்த கை பாரமாக தோன்றும் மற்றும் உடலை கட்டுப்படுத்தும் அடிமனதின் பகுதி, "இந்த நிலையில் நரம்பியல் ஓட்டங்கள் அனைத்தும் இணக்கத்தை பெற்று விட்டன. அடுத்த நிலைக்கு மாறவேண்டிய நேரம் வந்துவிட்டது," என்று உங்களுக்கு அறிவுறுத்தும். இந்த கட்டத்தில், நான் அடுத்த நிலைக்கான நிறத்தை கற்பனை செய்துக்கொண்டு, அந்த நிலைக்கு மாறுகிறேன். நரம்பியல் ஓட்டங்கள் தங்களை மாற்றி அமைத்துக்கொண்டு, அந்த நிலையுடன் இணக்கம் பெறுவதை என்னால் மீண்டும் உணர முடிகிறது. அந்த கை நீண்டநேரமாக அந்த நிலையில் இருக்கிறது என்றும், நான் அடுத்த நிலைக்கு மாற வேண்டும் என்றும், அந்த நிலையுடன் தொடர்பில் இருக்கும் அடிமனதின் பகுதி எனக்கு மீண்டும் தெரிவிக்கும். இவ்வாறு மூன்று நிலைகளை கடந்த பிறகு, வலது கை இடது கையில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருப்பதை உங்களால் உணர முடியும். அது நன்றாக சுருதி சேர்க்கப்பட்ட *வீணையை* போன்று, வலது கை துடிப்புணர்வுடன் இருப்பதை உணர்கிறது. ஆனால் பயன்பாட்டில் இல்லாத *வீணையை* போன்று, இடது கை எப்போதும் போன்று சாதாரணமாக இருக்கிறது.

உடலை நீட்டுவது, வருத்துவது, இழுப்பது, உடலுக்கு அழுத்தம் தருவது போன்றவை இல்லாமல் உடல் முழுவதற்கும் மிகவும் சீரான இணக்கத்தை வழங்குவதே *ஹட யோகத்தின்* செய்முறை ஆகும். இதை நீங்கள் பின்வரும் *ஆசனங்களை* தொடர்ந்து செய்து வந்தால் தெரிந்து கொள்வீர்கள் மற்றும் இதனால் முயற்சி இல்லாமல் உங்களால் கவனத்தை ஒருமுகப்படுத்த முடியும். சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், நீங்கள் இயல்பாகவே கவனத்தை ஒருமுகப்படுத்திய நிலையில் இருப்பீர்கள். நீங்கள் *ஹட யோகத்தின்* இந்த வடிவத்தை தொடர்ந்து பயிற்சி செய்து, *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* கடைப்பிடித்து ஒரு நிலையான *தார்மீக* வாழ்க்கையை வாழும் போது, உணர்வுள்ள மனதில் துடிப்புணர்வுடன் இருப்பதோடு, முன்பை விட அடிமனதிலும் அதிக துடிப்புணர்வுடன் இருப்பீர்கள்.

சரியான *ஹட யோக* பயிற்சியை நீண்டகாலத்திற்கு செய்து உடல் இணக்கத்தை பெறும் போது, மனம் அதிக சாமர்த்தியமாக செயல்படுவதால், மாணவன் எளிதில் ஆசையின் விதை மீது கவனம் செலுத்தி, அதனோடு தொடர்புடைய மற்ற தவறான கருத்துக்களை புறக்கணிக்க முடிகிறது. அதாவது அவன் இதை மட்டும் பயிற்சி செய்யும் போது, அவன் தனக்குள் இருக்கும் ஆசையின் விதைகளை எரிக்க தொடங்குகிறான். ஆரம்ப நிலைகளை கடந்து *ஹட யோகத்தை* பயிற்சி செய்யும் மாணவனை கண்காணிக்கும் *குரு*, அவனது அதிர்வுகள் மற்றும் அவன் சருமத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தி, அவன் முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறார். மாணவன் தனது தூல உடலை சீர் செய்யும் போது, அவன் வழக்கமாக அதிக ஆன்மீக ஈடுபாட்டை பெறுகிறான். இந்த பயிற்சி செய்வதால், தூல உடல் அதிக வளையும் பண்பை பெற்று, ஆரோக்கியமாகவும் நல்ல பொலிவுடனும் இருக்கிறது. பயிற்சி செய்பவர் பருமனாக இருந்தால், அதற்கு ஏற்ப வளர்சிதை மாற்றம் தன்னை பொருத்திக் கொள்கிறது. பயிற்சி செய்பவர் மெல்லிய உடல் வாகுடன்

இருந்தால், அது அதற்கேற்ப பொருந்திக் கொள்கிறது. இந்த பயிற்சியை செய்வதன் மூலம், இந்த உடல் ஆன்மா வாழ்வதற்கு உகந்த வாகனமாக மாறுகிறது. இத்தனை வருடங்களாக சேகரிக்கப்பட்டு வந்த பதட்டங்கள் விரைவில் மறைந்து, மனம் துடிப்புணர்வை பெறுகிறது மற்றும் அவருக்கு கிடைக்கும் புரிதலின் மூலம் அவரால் ஆசையின் விதை மீது கவனம் செலுத்தி அழிக்க முடிகிறது. அதனால் என்ன பலன் கிடைக்கிறது? அது அடிமனம் வாயிலாக இந்த பிறவிக்கு ஒரு மிகப்பெரிய விவேகத்தை தருகிறது. அதாவது நீங்கள் அறிவதற்கு சிந்திக்க வேண்டியது இல்லை. நீங்கள் அறிந்து இருப்பீர்கள் மற்றும் சிந்திப்பது ஒரு விளைவாக இருக்கும். அதன் பிறகு நீங்கள் உங்கள் சொந்தங்கள் மீது பிரியமான பற்றின்மையுடன் இருக்க முடிகிறது மற்றும் புரிதலின் மூலம் ஒரு மிகப்பெரிய அன்பையும் தேடிக்கொள்ள முடிகிறது.

ஆரோக்கியம் மற்றும் தீர்க்கமான ஆயுள்

ஆயுர்வேதத்துடன் ஹட யோகம் இணையும் போது, அது உடலின் வெப்பத்தை ஒழுங்குப்படுத்துகிறது, மற்றும் நோய் தீங்கு இழைக்காமல் தடுப்பதற்கும் எல்லா உடல் ஆரோக்கிய பிரச்சனைகளுக்கும், உடலின் வெப்பம் காரணமாக விளங்குகிறது. வாழ்நாள் முழுவதும் நல்ல ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை பெறுவதற்கு, உடல் முழுவதும் சக்திகளை சமன் செய்யும் *ஹட யோகம்* மற்றும் *ஆயுர்வேத* முறைகளை பயன்படுத்த வேண்டும். இவை அனைத்தையும் அறிந்த சத்குரு சிவ யோகசுவாமி, காய்ச்சல் நமக்கு கிடைத்த வரம் என்று கூறுவார். *ஹட யோக* கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, அந்த வெப்பம் கிருமிகளை பொசுக்கி அழித்து விடுகிறது. அது ஒரு நல்ல சூடான குளியலை போன்று தசை திசுக்களை தளர்த்தி, மத்திய மற்றும் பரிவு நரம்பு மண்டலத்தில் இணக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஹட யோகம் மற்றும் *ஆயுர்வேதமும்* உடலில் வெப்பத்தை ஏற்படுத்துகிறது. அவை இணைந்து செயல்படுகின்றன. குளிர்காலத்தில் உடல் வெப்பத்தை அதிகரிப்பதற்கும், வெய்யில் காலத்தில் உடல் வெப்பத்தை குறைப்பதற்கும் ஒரு வழிமுறை இருக்கிறது. மக்கள் ஊக்கமிழந்து மனச்சோர்வுடன் இருக்கும் போது, அவர்களின் உடல் வெப்பம் குறைகிறது. அவர்கள் கோபமாகவும் உற்சாகமாகவும் இருக்கும் போது, அவர்களின் உடல் வெப்பம் அதிகரிக்கிறது. கட்டுப்படுத்தப்படாத இந்த வெப்பம், மனவெழுச்சி மூலம் வழிநடத்தப்படுகிறது. நாம் சில உணவுகளை உண்ணும் போது, உடலின் வெப்பம் அதிகரிக்கிறது. வேறு சில உணவுகளை உண்ணும் போது, உடலின் வெப்பம் குறைகிறது. இந்த ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப மனநிலைகளும் மனவெழுச்சிகளும் மாறுகின்றன. இந்த வெப்பத்தை கட்டுப்படுத்தி சமநிலைப்படுத்தி, அதன் மூலம் ஆரோக்கியமான மற்றும் ஆக்கப்பூர்வமான வாழ்வை வழங்கவே *ஹட யோகமும் ஆயூர்வேதமும்* முயற்சி செய்கின்றன. *இடா* மற்றும் *பிங்கலாவை* சமநிலைப்படுத்தி குணப்படுத்தும் நோய்களை *ஹட யோகம்* மூலமாக குணப்படுத்தலாம். இத்துடன் *ஆயுர்வேத* அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப உணவுமுறை மாற்றம், நல்ல ஆரோக்கியமான உணவுகளை உண்ணும் பழக்கமும் தேவைப்படும்.

துளையிட்டு மருத்துவமுறை மற்றும் மசாஜ் செய்முறையும் *ஹட யோகத்தின்* அங்கமாகவும், *ஹ* மற்றும் *ட* என்கிற "சூரிய-சந்திரனில்" இருக்கும் அதே விஞ்ஞானத்தின் அங்கமாகவும் விளங்குகின்றன. அதன் பண்படுத்தப்பட்ட செய்முறையாக விளங்கும் துளையிட்டு மருத்துவமுறையும், *தை சி சுயன்* மூலம் உடலின் *பிராண* சக்திகளை இயக்குவது போல, நேரடியாக நரம்பியல் அமைப்பின் மீது செயல்படுகிறது. *ஹட யோகம்* என்பது *ஹட யோக ஆசனங்கள்* மட்டும் இல்லை. சூடான நீர் மற்றும் குளிர்ந்த நீர் மற்றும் கனிம நீரில் குளியல், ஹாட் சாண்ட் மற்றும் முறையான உணவுகளைப் போன்று, மற்ற அனைத்தும் இதன் அங்கமாக விளங்குகின்றன. *ஹட யோகம் ஆயூர்வேதத்தையும், ஆயுர்வேதம் ஹட யோகத்தையும்* உள்ளடக்கியுள்ளது. அவை நடனத்தைப் போல, ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருக்கும் அமைப்புமுறை ஆகும். நடனம் என்பது உடலின் அசைவாக மட்டும் இல்லாமல், அது ஒரு உடற்பயிற்சி, லயம், நாடகம், இசை பற்றிய அறிவு, நேரப்பொருத்தம் பற்றிய அறிவு மற்றும் மேலும் பல தகவல்களை உள்ளடக்கியுள்ளது. அது எல்லாம் உள்ளடக்கிய கலையாக விளங்குகிறது. அதைப்போல ஆயூர்வேதமும் தனித்து இல்லாமல், *ஹட யோகத்தின்* அங்கமாக விளங்குகிறது. அது வாழ்க்கையில் இருக்கும் விஞ்ஞானம் ஆகும். *ஹட யோகப்* பயிற்சியின் அங்கமாக சிரோபிராக்டிக் சிகிச்சை முறையும் இருக்கவேண்டும் என்று நான் பரிந்துரைக்க விரும்புகிறேன். தசை நாண்கள் தசை இயக்கத்திற்கு தடையாக விளங்குகின்றன. *ஹட யோகம், ஆயூர்வேதம்*, துளையிட்டு மருத்துவம் மற்றும் சிரோபிராக்டிக் போன்று வேறு எதுவும் உடலை சிறந்த முறையில் குணப்படுத்துவது இல்லை.

இடா மற்றும் *பிங்கலா* சமநிலையில் இருக்கும் போது, *சுஷும்னா* செயல்படத் தொடங்குகிறது. *இடா* மற்றும் *பிங்கலா* இயங்கும் உடல் முழுவதையும் *ஹட யோகம்* சமன் செய்வதால், அது *இடா* மற்றும் *பிங்கலாவையும்* சமன் செய்கிறது. *இடா* மற்றும் *பிங்கலா* சமநிலையில் இருக்கும் போது, அன்பர் நிகழ்காலத்தில் முழுமையாக இருக்கிறார். அவருக்கு கடந்தகாலம் மற்றும் எதிர்காலத்தை பற்றிய உணர்வு இருப்பதில்லை. *சுஷும்னா* செயல்படும் போது, *குண்டலினி* சக்தி பேணி வளர்க்கப்படுவதாக பலர் கருதுகிறார்கள். *சுஷும்னா* என்பது ஆன்மீக சக்தியை குறிக்கிறது. இது தூல உடலுக்கு மட்டும் அல்லாமல், சூட்சும மற்றும் விஞ்ஞானமய கோசத்திற்கும் ஆரோக்கியம் அளிக்கும் முக்கிய சக்தியாக விளங்குகிறது. *சுஷும்னா* நாடி ஓட்டம் மூலமாக தானாக ஆரோக்கியம் அளிக்கும் செய்முறைகள் நடைபெறுகின்றன. அது சூடாகவோ குளிர்ச்சியாகவோ இருப்பது இல்லை. அது இயல்பாகவும் சுதந்திரமாகவும் எப்போதும் நிகழ்காலத்தில் இருக்கிறது. அது எங்கும் எதிலும் வியாபிக்கும் நிகழ்கால உணர்வை வழங்குகிறது. *இராச யோகம்* பயிற்சி *குண்டலினி* சக்திக்கு விழிப்புணர்வை வழங்கி, *சக்கரங்கள்* வழியாக பயணம் செய்வதற்கு வழிகாட்டுகிறது. *குண்டலினி சக்தி* உணர்வை மெய்ஞ்ஞான லோகங்களில் மெதுவாக விரிவாக்கம் செய்து, அதை நிரந்தரமாக மாற்றி விடுகிறது. சூடாக இருக்கும் அந்த அக்னி குளிர்ச்சியாக எரிந்து, *சுஷும்னா* ஓட்டம் ஒன்றாக பிடித்து வைத்து சக்தியூட்டிய விசை மையங்கள் வழியாக விரைந்து செல்கிறது.

விரைவான *இராச யோக* பயிற்சிகள் மூலம் அந்த அக்னியை கட்டாயப்படுத்தினால், அது *இடா* மற்றும் *பிங்கலா* மூலமாக சூடாக எரிகிறது. ஆனால் அந்த அன்பர் பல வருடங்களுக்கு முறையாக பயிற்சி செய்து இருந்தால், அந்த அக்னி *சுஷும்னா* மூலமாக குளிர்ச்சியாக எரிந்து, உணர்வை முழுவதுமாக மாற்றி விடுகிறது. இதற்கு முன்னேற்பாடாக *கர்ம யோகமாக* விளங்கும் *சரியை, பக்தி யோகமாக* இருக்கும் *கிரியை* என்கிற முழுமையான சரணாகதி, தொடர்ந்து *மந்திரங்களை* சொல்லும் *ஜப யோகம்* விளங்குகிறது. இத்துடன் அடிமனதில் உறுதியான சைவ இந்து சமயத்தின் கலாச்சார பின்னணி உறுதியாக பதிந்து, அது ஒரு வாழ்முறையாக பின்பற்றப்பட வேண்டும். இதன் காரணமாகவே *சுவாமிகள்* அனைவரும் கற்றுத்தரும் *யோகத்தின்* அடிப்படையாக *ஹட* விளங்குகிறது. அதன் பிறகு நீங்கள் *கர்ம யோகம், பக்தி யோகம், ஜப யோகம், இராச யோகம்* என்று முன்னேறி இறுதியில் *ஞானத்தை* பெறுகிறீர்கள்.

ஹ மற்றும் *ட* வை குறிப்பிடும் *இடா* மற்றும் *பிங்கலா* சமநிலையை பெறும் போது ஆன்மீக ஆற்றலாக, சுத்தமான உயிர்சக்தியாக இருக்கும் *சுஷும்னா* உண்மையில் முதுகுத்தண்டில் ஏறுவது போல தோன்றுகிறது. ஏனென்றால் முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருந்து கழுத்தின் பின்புறம் வரை, *இடா* மற்றும் *பிங்கலா* ஓட்டம் சமநிலையை வழங்குகிறது. சாதகருக்குள் மிகப்பெரிய அமைதி, திருப்தி, மகிழ்ச்சி மற்றும் நிகழ்கால எண்ணம் வியாபிக்கிறது. ஆனால் உணர்வில் எந்த மாற்றமும் இருப்பது இல்லை.

உச்சந்தலையில் இருந்து முதுகுத்தண்டின் அடிப்பகுதி வரை, *சுஷும்னா* ஓட்டம் மூலம் சக்தி தொடர்ந்து பாய்ந்து செல்கிறது. அது தன்னுடன் சுமந்து செல்லும் இந்த பிறவியின் *கர்மவினை*, அந்த நபரின் குணம், உடலின் அமைப்பு மற்றும் வடிவத்தை தீர்மானிக்கிறது. அந்த உயிர் சக்தி பிரபஞ்சம் முழுவதுடன் இணைக்கத்தில் இருந்து, *இடா* மற்றும் *பிங்கலாவிற்கு* மட்டுமில்லாமல் சூட்சும உடல் மற்றும் விஞ்ஞானமய கோசத்தின் உறுப்புக்கள் அனைத்திற்கும் ஊட்டத்தை வழங்குகிறது. இந்த ஓட்டம் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளே நுழைந்து உற்சாகத்துடன் விழிக்கிறது.

இதற்கும் *குண்டலினி* சக்திக்கும் எந்த தொடர்பும் இல்லை. *சுஷும்னா* உணர்வை மாற்றி அமைக்கும் சக்தி இல்லை. இது உணர்வை நிலைநிறுத்தும் சக்தி ஆகும். இது தெளிந்த நிலையின் சக்தி ஆகும். அதனால் நாம் இன்றைய நவீன யுகத்தில், உணர்ச்சி கொந்தளிப்புக்கள் மற்றும் மனதோடு தொடர்புடைய வெளிப்படையான செயல்கள் மூலம் நாம் அதிக புறநோக்கியாக இருப்பதால், *ஹட யோகம்* ஒருவரை அகநோக்கியாக மாற்றுகிறது. நாம் *சுஷும்னாவை புருஷ சக்தி* அல்லது ஆன்மாவின் சக்தி என்று அழைக்கலாம். இங்கே தூல உடலில் *ஜீவன்* வாசம் செய்கிறது.

கர்மவினை கட்டுக்களை அவிழ்த்தல்

சிவபெருமான் முழு நிறைவான ஆன்மாவை உருவாக்கினார், ஆனால் *ஜீவன்கள்* செய்த தீய செயல்கள் மூலம் பல்வேறு சிக்கல்கள், *கர்மவினைகள்*, வினைகள் மற்றும் எதிர்வினைகள் தோன்றுகின்றன. புதிய *கர்மவினைகள்* பரிவு நரம்பியல் மண்டலத்திலும், தீவிரமாக இருந்தால் மத்திய நரம்பியல் மண்டலத்திலும் பதிக்கின்றன. சிவனின் *ஜீவர்கள்* செய்த தீய செயல்களின்

விளைவுகளுக்கு முதலுதவி செய்து குணப்படுத்தும் கருவியாக *ஹட யோகம்* விளங்குகிறது.

ஜீவன் தனது ஆக்கத்திறனை வெளிப்படுத்தி, ஒவ்வொரு பிறவியிலும் பல்வேறு *கர்மவினைகளை* அனுபவிக்க உதவும் கருவியாக *இடா* மற்றும் *பிங்கலா* விளங்குகிறது. புலனுணர்வை அடிப்படையாகக் கொண்ட தூல பிரபஞ்சத்தில் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கும் போராட்டத்திற்கு காரணமாக விளங்கும் *கர்மவினையை* அனுபவிக்கும் வாகனமாக நரம்பு மண்டலம் விளங்குகிறது. அதனால் அது வலுவாக இருக்க வேண்டும். நரம்பு மண்டலத்திற்கு உடற்பயிற்சியாக விளங்கும் *ஹட யோகம்*, இந்த பலனை பெறுவதற்கான ஒரே விஞ்ஞானமாக விளங்குகிறது, மற்றும் இந்த அனுபவங்களை ஆன்மா அனுபவிப்பதற்கு ஒரு வலுவான கட்டமைப்பை உருவாக்குகிறது. *ஹட யோகம்* உருவாக்கும் சமநிலை *சுஷும்னாவிற்கு* முக்கியத்துவம் வழங்குகிறது, மற்றும் அது சமநிலையில் இருந்துக்கொண்டு *சுஷும்னாவில்* இருந்து பெறும் ஊட்டத்தின் மூலமாக அமைப்பை ஆரோக்கியமாக வைத்து இருக்கிறது. நரம்பு மண்டலம் வழியாக எழுச்சி பெறும் *குண்டலினி* சக்தி ஒரு புதிய நரம்பு மண்டலத்தை உருவாக்குகிறது.

ஹட யோகத்தின் மூலம் உளவியல் பலன்களும் கிடைக்கிறது. நீங்கள் சுயமாக பயன்படுத்தக்கூடிய இந்த உளவியல் கருவி உடல், மனம் மற்றும் மனவெழுச்சி நோய்களுக்கு ஒரு தீங்கற்ற மாற்று மருந்தாக விளங்குகிறது. இது மன உலைவுக்கு ஒரு தீங்கற்ற மருந்தாக விளங்குகிறது. *ஹட யோகம்* ஒரு முறையான கட்டுப்பாட்டுடன், தூல உடல் மற்றும் சூட்சும உடலுக்கு பயிற்சி அளிக்கிறது. இதன் பக்கவிளைவாக விஞ்ஞானமய கோசமும் ஒரு குறிப்பிட்ட அளவு பலனை பெறுகிறது. அதன் உணர்வு மற்றும் அடியுணர்வு மனநிலைகள் அடங்கி விடுகின்றன. தற்காலிகமாக மெய்ஞ்ஞான நிலை ஆதிக்கம் செலுத்துகிறது. அதனால் அது யோகங்களில் முதலாவதாகவும் இறுதியாகவும் விளங்குகிறது. *ஞானி ஹட யோக* பயிற்சி செய்கிறார். அதைப் போல *இராச யோகி, பக்தி யோகி* மற்றும் *கர்ம யோகி* என்று தூல உடலோடு இருக்கும் எல்லோரும் செய்கின்றனர். அது எல்லாம் உள்ளடக்கியுள்ளது மற்றும் அது இயக்கத்தில் இருக்கும் மற்ற *யோகங்களின்* பலனையும் அதிகரிக்கிறது. இந்து கோயிலில் இருக்கும் மகாதேவர்களை தரிசிக்க அது அழைத்து செல்கிறது. அவர்கள் இந்துக்களுக்கு சிறந்த மனோதத்துவ நிபுணர்கள் மற்றும் மனநல மருத்துவர்களாக விளங்குகிறார்கள். குண்டலினி சக்தியை *ஹட யோகம்* உண்மையில் தூண்டுவதாலும், *மூலாதார சக்கரத்தின்* அதிபதியாக விநாயகர் இருப்பதாலும், *ஹட யோகப்பயிற்சி* செய்யும் சாதகர் ஒரு விநாயகர் கோயில் அல்லது அவரது உருவப்படத்திற்கு அருகில் செல்ல அந்த பயிற்சி தூண்டுதலாக அமைகிறது.

நாம் கடந்து செல்லும் மனதின் பகுதியில் நரம்பு மண்டலத்தில் மனவெழுச்சிகளை அறியும் போதும், நாம் நம்முடன் மனப்போராட்டத்தில் இருக்கும் போதும் அமைதியாக அமர்ந்து *ஹட யோக ஆசனங்களை* செய்யும் போது, நாம் சக்தியின் இயல்பான நிலை மீது விழிப்புணர்வை பெறுகிறோம். நாம் வெளிப்புற நரம்பு மண்டலம் எதிர்கொள்ளும் போலியான அதிர்வுகள் மீது கவனம் செலுத்துவதை நிறுத்தி விடுகிறோம். நாம் சில *ஆசனங்களை* செய்த பிறகு புறநோக்கியாக இல்லாமல் அகநோக்கியாக மாறி விடுகிறோம். ஆனால்

அதற்காக நாம் நமது *ஹட யோகாப்பியாசத்தை* நிறைவு செய்த பிறகு, நாம் இன்னொரு அறைக்கு சென்று மீண்டும் மனபோராட்டத்தில் ஈடுபட முடியாது என்றோ அல்லது அச்சங்கள், குழப்பங்கள் அல்லது சந்தேகங்கள் நிறைந்த குழப்பமான மனதின் பகுதிக்கோ செல்ல முடியாது என்றோ அர்த்தமில்லை.

உங்களுக்கு ஒரு நபருடன் ஒரு எதிர்மறை அனுபவம் இருந்தால், நீங்கள் மீண்டும் சமநிலையை பெறுவதற்கு *ஹட யோகம்* உதவியாக இருக்கும். உங்களை ஒருவர் பகைத்துக் கொண்டால், அதை நீங்கள் சூரிய பின்னல் அல்லது நரம்பு மண்டலத்தில் உணர்வீர்கள். உங்கள் அகத்தில் சமநிலையை பெறுவதற்கு, நீச்சல் குளத்தில் பத்து லாப் நீந்தலாம் அல்லது ஒரு மைல் தூரம் ஓடலாம் அல்லது *ஹட யோகம்* செய்யலாம். அது தூல மற்றும் சூட்சும உடல்களின் சக்திகளுக்கு மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்துகிறது. அது மனதில் இருந்து அந்த சம்பவத்தை அழிப்பதும் இல்லை அதற்கு தீர்வு காண்பதும் இல்லை. அதற்கு அந்த நபருடன் கலந்து பேசி கருத்து வேறுபாட்டை நீக்கிக்கொள்ள வேண்டும் அல்லது *வாசன தாக தந்திரத்தை* செய்ய வேண்டும். உங்களுக்கு அந்த சம்பவம் நினைவில் தொடர்ந்து இருக்கும், மற்றும் நீங்கள் அதை நினைவுப்படுத்திப் பார்க்கும் போது, நீங்கள் சூரிய பின்னலில் இருக்கும் நினைவை தூண்டி விடுகிறீர்கள். நீங்கள் சமநிலையை பெறுவதற்கு, நீச்சல் குளத்தில் பத்து லாப் நீந்தலாம் அல்லது ஒரு மைல் தூரம் ஓடலாம் அல்லது *ஹட யோகம்* செய்யலாம். தூல, சூட்சும மற்றும் விஞ்ஞானமய கோசங்களை இணைக்கும் பணியை *ஹட யோகம்* செய்கிறது என்பது தெளிவாக தெரியும். பெயர் குறிப்பிடுவதைப் போல *ஹ* மற்றும் *ட*, சூரியன் மற்றும் சந்திரன், *பிங்கலா* மற்றும் *இடாவின் யோகம்* ஒருங்கிணைந்த உடலை உருவாக்குகிறது.

நல்ல, தீய அல்லது இரண்டும் கலந்த *கர்மவினைகள்* நரம்பியல் மண்டலத்தில் வெளிப்படுகின்றன. அது ஒருவனது சுய தூண்டுதலை பயன்படுத்த நிர்பந்திப்பதால், அது அவன் அதிகம் விரும்பக்கூடியதாக இருக்கிறது. உடலில் ஏற்படும் சிறிய மற்றும் பெரிய பதட்டங்களுக்கு, தீர்வு காணப்படாத இரண்டும் கலந்த *கர்மவினைகள்* மற்றும் தீய *கர்மவினைகள்* காரணமாக இருக்கின்றன. நேர்மறையாக இருக்கும் *கர்மவினைகள்* உடலில் எந்த பதட்டத்தையும் ஏற்படுத்துவது இல்லை. அவை நோயை நீக்கி, நரம்பு மண்டலத்தில் இணக்கத்தை ஏற்படுத்தி தசைகளை தளர்வாக வைத்து இருக்கின்றன. பழங்காலத்தில் ஒருவர் தானாக இயக்கிய *கர்மவினைகள்* நிறைவேற்றத்தை நோக்கி செல்லும் சக்திகளாக விளங்குகின்றன. *ஹ* மற்றும் *ட* வை சமநிலைப்படுத்தும் *ஹட யோகத்தை* செய்யும் போது, அது நரம்பு மண்டலத்தில் இருக்கும் சிக்கல்களை அவிழ்க்கிறது மற்றும் நிறைவேற்றத்தை நோக்கி செயல்படும் *கர்மவினைகள்* மீண்டும் நரம்பு மண்டலத்தில் சிக்கல்களை ஏற்படுத்தாமல் இருக்க, அந்த *கர்மவினைகள்* வெளிப்படும் நேரத்தை ஒழுங்குப்படுத்துகிறது.

நரம்பு மண்டலத்தில் நெரிசலான, தீர்வு காணப்படாத, கரைக்க முயற்சி மேற்கொள்ளப்படும் *கர்மவினை* முடிச்சுகளாக தென்படும். அது ஒளி உடலில் கரிய நிறம் அல்லது சிவப்பு நிறமாக தென்படும். நீங்கள் *ஹட யோகம்*, ஆயூர்வேதம், மசாஜ், சிரோபிராக்டிக் மற்றும் துளையிட்டு மருத்துவமுறை மூலமாக அந்த *கர்மவினைகளை* கவனமாக அனுபவிக்கலாம். இந்த அணுகுமுறைகள் ஒன்றாக சேரும் போது, பலன்கள் அதிகம் திருப்தி

அளிப்பதாக இருக்கும். *ஹட யோகத்தின்* மூலம் *கர்மவினைகளின்* தீவிரத்தை தளர்த்தி தீர்வு காணும் செய்முறையை தொடங்கலாம். அதன் பிறகு அவை மீண்டும் மனதில் அல்லது மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும் போது வெளிவந்தால், *வாசன தாக தந்திரம்* என்கிற பழைய அனுபவம் பற்றிய ஆன்மீக குறிப்பை பயன்படுத்தி, தெய்வங்களின் திருவடிகளில் பிரச்சனைகளை சமர்ப்பித்தல் மற்றும் *தேவர்களுக்கு* பிரார்த்தனைகளை அனுப்பும் *பக்தி யோக* யுத்தியை பயன்படுத்தி, சுயநலமற்ற சேவையான *கர்ம யோகம்* மற்றும் மந்திரங்கள் ஜபிக்கும் *ஜப யோகத்தை* அனுட்டானம் செய்து, நினைவில் இருக்கும் அமைப்புமுறைகளுடன் தொடர்பில் இருக்கும் மனவெழுச்சியை கரைத்து, இறுதியில் இந்த *கர்மவினைகளுக்கு* தீர்வு காணப்படுகிறது.

இருபத்தி ஐந்து வயதிற்கும் குறைவான *பிரம்மச்சரிய ஆசிரம* இளைஞர்கள், தங்களை விட வயதில் பெரியவர்களுடன் ஒப்பிடும் போது, *ஹட யோகத்தில்* அதிக முரண்பாடு இல்லாமல் செயல்படுகிறார்கள். இதற்கு அவர்கள் இளமையாக இருப்பது மட்டும் காரணம் இல்லை, அவர்களின் பெரும்பாலான *பிராரப்த கர்மவினைகள்* வெளிப்படாமல் இருப்பது இன்னொரு காரணமாக விளங்குகிறது. இருபத்தி ஐந்து முதல் ஐம்பது வரை, இந்த பிறவியின் *பிராரப்த கர்மவினைகள்* முழுமையாக வெளிப்பட்டு விடுகின்றன. இந்த காலத்தில் *ஹட யோகம்* அதிக பயனை தருகிறது. முற்பிறவியில் உருவாக்கப்பட்ட சில *கர்மவினைகள்* முதலில் சூட்சும உடலிலும், பின்பு தூல உடலிலும் வெளிப்படுகின்றன. *ஹட யோகம்* மற்றும் எளிமையான *பிராணாயாமத்தின்* துணையுடன் அவற்றை சூட்சும உடலிலேயே வெற்றிக்கொண்டு விடலாம். ஆனால் அந்த *கர்மாவினைகள்* நீண்டகாலமாக நிலைத்து இருந்து, தூல உடலில் பதட்டங்களாக வெளிப்பட்டால், வாழ்க்கையையும் சூழ்நிலையையும் முழுமையாக மாற்றும் செய்முறையாக *ஹட யோகம்* விளங்குகிறது.

பெரும்பாலும் மக்கள் மாற்றத்தை தவிர்க்க வேண்டும் என்பதற்காக *ஹட யோகத்தை* நிறுத்தி விடுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் உறுதியாக இருந்து, *கர்மவினைகளை* தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக திட்டமிட்டு கரைத்து வருகிறார்கள். மக்களில் பெரும்பாலானோர் ஆன்மீக பாதையில் தொடங்கி, அதில் இருந்து திடீரென்று வெளியேறி, தங்கள் மனநிலைகள் மற்றும் மனவெழுச்சிகளில் முழுமையாக மூழ்கி விடுவதை நாம் பார்த்து இருக்கிறோம். தொடர்ந்து *ஹட யோகம்* செய்து வருவது சுயக்கட்டுப்பாடாக விளங்குவதோடு, நற்பண்புகளை வளர்ப்பதற்கு ஒரு அடிப்படை உதவியாக விளங்குகிறது. ஒருவர் தன்னை ஆன்மீகத்தில் மேம்படுத்திக் கொள்வதற்கு நற்பண்பும் வலுவான மனஉறுதியும் முக்கியமாக தேவைப்படுகிறது. *ஹட யோகப்பயிற்சியை* வாழ்க்கை முழுவதும் தொடரலாம். ஒருவர் அதை நிறுத்திவிட்டால், அதற்கான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இது அதிக நிறைவான உடற்பயிற்சியாக விளங்குகிறது. ஆனால் இது நிச்சயமாக அனைத்து *யோகங்களின் யோகமாக* விளங்குவது இல்லை. இது ஒரு உடல், மனம், உணர்ச்சி மற்றும் அறிவு சார்ந்த இணக்கம் ஆகும். நீங்கள் பல பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு உங்கள் சாட்சியை பிரிக்கும் போது, *ஹட யோகத்திற்கு* முக்கியத்துவம் தராமல் அதை புறக்கணிக்க வாய்ப்புள்ளது. இதனால் நீங்கள் உங்கள் கடமையை செய்ய உங்கள் உடலை தியாகம் செய்து விடுகிறீர்கள். இந்த புறக்கணிப்பால் உங்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியம்

மற்றும் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்று சொல்லி விடமுடியாது. இதை ஈடு செய்ய நீங்கள் நிறைய நடக்க வேண்டியிருக்கும். உடற்பயிற்சிகளின் தலைவனாக நான் *ஹட யோகத்தை* கருதுகிறேன். ஒவ்வொரு *ஆசனமும்* ஒரு குறிப்பிட்ட உடல் உறுப்பு மற்றும் அந்த உடல் உறுப்புடன் தொடர்புடைய மனநிலையை பாதிக்கிறது.

ஹட யோகத்தின் துணையுடன் *கர்மவினையை* அகத்திலும் புறத்திலும் மென்மையான முறையில் அனுபவிக்கலாம். ஒரு அன்பர் *கர்மவினையின்* விதிக்கு ஏற்ப, ஏதாவது ஒரு வகை விடுதலையை அனுபவிக்கிறார். சிறிய *கர்மவினைகளை* அகத்தில் முழுமையாக கரைத்து விடலாம். பெரிய அளவில் இருக்கும் எதிர்மறை மற்றும் இரண்டும் கலந்த *கர்மவினைகள்* மீண்டும் திரும்புகின்றன மற்றும் அதன் மூலம் ஒரு பாடம் கற்கவேண்டி இருந்தால், அது வெளியுலகில் வெளிப்படும். ஆனால் *ஹட யோகம்* மற்றும் *வாசன தாக தந்திரம்* மூலம் அதன் தீவிரத்தை குறைக்கலாம். இதனை தொடர்ந்து பயிற்சி செய்து வரும் அன்பரின் புரிதல் செய்முறையில் மெய்ஞ்ஞான குறிப்பீடுகள் தோன்றுகின்றன.

மக்கள் சிலசமயம் மற்றவர்களின் *கர்மவினையையும்* சுமக்கிறார்கள். மக்களில் ஒட்டுண்ணி போல வாழும் சிலர், தங்கள் வாழ்க்கையை மற்றவர்கள் வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். இந்த வகை *கர்மவினைகள்* நரம்பியல் அமைப்பிற்கு அதிக பாரமாக இருக்கலாம். ஆனால் இவற்றை ஹட யோகம் மூலம் எளிதில் தீர்வு கண்டு உடனடியாக கழித்து விடலாம். நமக்கு பிரியமானவர்களின் *கர்மவினை* அனுபவங்களில், அவர்களுக்கு நம்மால் உதவி வழங்காமல் இருக்க முடியாது. அதனால் *ஹட யோகம்* மற்றும் *அடிப்படை பிராணாயாமம்* மற்றும் இங்கே இதுவரை விளக்கப்பட்ட வேறுபல யுத்திகள், இந்த உலகில் தாயையும் தந்தையும் போன்று இருக்கும் சான்றோர்கள் சுமை இல்லாமல் தொண்டு செய்வதற்கு துணையாக இருக்கின்றன.

மேற்கத்திய நாட்டு சாதகர்கள்

எளிதில் வளையத்தக்க அழகான உடலை பெறவேண்டும் என்ற ஆசையுடன் *ஹட யோகம்* பயிற்சி செய்யும் மில்லியன் கணக்கான மக்களும், எதிர்மறை மற்றும் நன்மை தீமை கலந்த *கர்மவினைகளை* குறைக்கும் பாதையில் இருக்கிறார்கள். *ஹட யோகம்* பயிற்சி செய்யும் நேரத்தில், அவர்கள் தவறு செய்வதில் இருந்து தடுக்கப்படுகிறார்கள். *ஹட யோகம்* பயிற்சி செய்பவரின் மதம் எதுவாக இருந்தாலும், அவர் இந்து மதத்தின் அடிப்படை தத்துவங்களுக்கு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார். அவர்களுக்கு இந்தியாவில் எழுதப்பட்ட *ஹட யோகம்* பற்றிய புத்தகங்கள் மீது ஆர்வம் ஏற்படுகிறது. அவற்றில் இந்து மதத்தின் தத்துவங்கள் நிரம்பி இருக்கின்றன. இன்றைய உலகில் *ஹட யோகம்* ஒரு அடிப்படை இல்லற *யோகமாக* மாறியுள்ளது. இது பாரம்பரியத்தில் இருந்து விலகி இருந்தாலும், இது நல்ல பலனை வழங்கியுள்ளது.

பல சாதகர்கள் விரிவான, அதிக ஆற்றல்மிக்க *பிராணாயாம* பயிற்சிகளில் ஆய்வு செய்து வருகின்றனர். *ஹட யோகம்* நல்ல பலனை பெறுவதற்கு விரிவான அல்லது அதிக ஆற்றல்மிக்க *பிராணாயாம* பயிற்சிகள் தேவையில்லை. மிகவும் எளிமையான பயிற்சிகள் சிறந்த பலன்களை தரும்.

பிராணாயாம பயிற்சிகளை செய்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன. சுவாசத்தை கட்டுப்படுத்தி ஒழுங்குப்படுவதன் மூலம், பிராண சக்திகளை ஒழுங்குபடுத்துவது ஒரு முறை. சுவாசத்தையும் பிராண சக்திகளையும் பயன்படுத்தி குண்டலினி சக்தியை விழிப்படைய செய்வது இரண்டாவது வகை. இதன் பெயர் *இராச யோகம்* ஆகும். இது *ஹட யோகம்* இல்லை. *ஹட யோகம்* என்பது உடலில் இயல்பாக இருக்கும் வெப்பம் மற்றும் குளிர்ச்சியை சமன் செய்வது ஆகும். *இராச யோகம்* என்பது அகத்தில் இருக்கும் அக்னியை விழிக்கச் செய்து, இந்த பிறவியில் இது வரை வெளிப்படாத நல்ல, தீய மற்றும் இரண்டும் கலந்த *கர்மவினைகள்* அல்லது அடுத்த பிறவி வரை வெளிவராத *கர்மவினைகளை* திட்டமிட்டு கரைப்பது ஆகும். இரண்டிற்கும் ஒரு மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. *இராச யோகத்தை* பயிற்சி செய்வதற்கு முன்பாக, வேறு பல *யோகங்களில்* தேர்ச்சி பெறவேண்டி உள்ளது. தங்களிடம் புதிதாக சேர்ந்த மாணவனுக்கு எந்த மருத்துவக் கல்லூரியும் அறுவை சிகிச்சை கத்தியை வழங்குவது இல்லை. *இராச யோகத்தில்*, சாதகன் தானே நோயாளியாக இருக்கிறான். அவனுக்கு நல்லமுறையில் பயிற்சி அளிக்க வேண்டும்.

சில சமயங்களில் சாதகர்கள் திடீரென்று கட்டுப்படுத்த முடியாமல் உடலில் ஏற்படுத்தும் அசைவுகளுக்கு காரணம் என்ன? இந்த "*கிரியைகள்*" சிரித்தல் மற்றும் அழுதல், தன்னம்பிக்கை இழப்பால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் உடல் உறுப்புக்களின் செயலிழப்பு போன்ற மற்ற உணர்ச்சி வெளியீடுகளின் வகையை சேர்ந்தது ஆகும். அவை திடீரென்று எந்த தடையும் இல்லாமல் வெளிவரும். இந்த அனுபவத்தை பெரும்பாலும் அடிமனதில் வலுவான சனாதன தர்மத்தின் அடிப்படை இல்லாதவர்கள் எதிர்கொள்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தேவையான அடையாளங்களாக தவறாக கருதப்படுகின்றன, ஆனால் அவர்கள் தங்கள் உடல்களை அசைப்பது சிறிதும் தேவையற்றது ஆகும். இது சைவ சித்தாந்ததில் ஆன்மீக வழக்கத்தின் அங்கம் இல்லை, ஆனால் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் உளறுவது, உள சிகிச்சை மூலம் கடந்தகால சோகங்களின் வெளிப்பாடு மற்றும் புரிந்துக்கொள்ள முடியாத சமாதி ஆகியவை சிறிதும் நாகரீகமற்ற உணர்ச்சி வெளிப்பாடுகள் என்று கருதப்படுகின்றன. இந்த சமாதி நிலைக்குள் செல்பவர்கள், முட்டாள்களாக நுழைந்து முட்டாள்களாக வெளிவருவதாக *ரிஷிகள்* கருதுகிறார்கள். இவை எதுவும் சைதன்யம் என்கிற உணர்வாக மாறாமல், மனவெழுச்சி வெளிப்பாடுகளாக இருக்கின்றன.

ஹட யோகத்தை தொடர்ந்து பயிற்சி செய்வதால், நம்மால் அதைப்போன்ற திடீர் எழுச்சிகளில் இணக்கத்தை ஏற்படுத்தி, அவற்றை நிலைப்படுத்த உதவியாக இருக்கும். இது வெப்பம் மற்றும் குளிர்ச்சியில் ஏற்படுத்தும் இணக்கம், மனவெழுச்சி ஏற்ற இறக்கங்களில் இணக்கத்தை ஏற்படுத்துகிறது. கட்டுப்பாடுகளை ஊக்குவிப்பதே ஒரு வளர்ந்து வரும் சமூகத்தின் முக்கிய நோக்கம் ஆகும். *ஹட யோகம்* ஒரு கட்டுப்பாடு ஆகும். அதைப் போன்று அடிப்படை *பிராணாயாமங்களும்* கட்டுப்பாடுகளை வழங்குகின்றன. அவை ஒரு வளர்ந்து வரும் சமூகத்திற்கு துணையாக இருக்கின்றன. நாகரீகம் இல்லாமல் கட்டுப்படுத்தப்படாத திடீர் எழுச்சிகளுக்கு மீண்டும் முக்கியத்துவம் தருவது மற்றும் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள ஒரு அமைப்பு ஏதும் இல்லாத நபர்கள் மூலம் வளர்க்கப்படும் சமூகப் பிறழ்வுகளுக்கு நாங்கள் ஆதரவு தருவது

இல்லை. இந்த விசித்திரமான மத நம்பிக்கைகள் தரும் தொல்லையை இன்றைய சமூகம் வலுவாக ஆட்சேபிக்கிறது.

நரம்பு மண்டலம்

ஹட யோகத்தில் நாம் நமது சாட்சியை வெளிப்புற நரம்பு மண்டலத்தில் இருந்து உட்புற நரம்பியல் அமைப்பிற்கு இயக்குகிறோம். நாம் இவ்வாறு செய்யும் போது, நாம் உடலில் இருக்கும் உயிரணுக்களையும் மாற்றி அமைக்கிறோம். தூல உடல் மாற்றம் பெறுவதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. அதனால் *ஹட யோகம்* மற்றும் தியானத்திற்கு உகந்த *ஆயூர்வேத* சத்துணவு நல்ல பலன்களை தருவதற்கு, அதை குறைந்தபட்சம் ஒன்று அல்லது ஒன்றரை வருடத்திற்கு தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

நாம் நமது சாட்சியை உட்புற நரம்பு மண்டலத்திற்குள் இயக்கும் போது, அதற்கு தூல உடல் அங்கீகரிக்கும் விதமாக, அதன் பாரம் குறையத் தொடங்குகிறது. தசைகள் தளர்வடைய தொடங்குகின்றன. முன்பு *பத்மாசனத்தில்* உட்கார முடியாத நபர்கள் பெற்ற மெய்ஞ்ஞான அனுபவங்கள் காரணமாக, அவர்களால் உடனடியாக *பத்மாசனத்தில்* உட்கார முடிகிறது. வெளிப்புற நரம்பு மண்டலம் மீது, உற்சாகமாக விரைந்து வந்த சக்தியின் மூலம் மெய்ஞ்ஞான அமைப்பு முழுமையாக ஆதிக்கம் செலுத்துகிறது மற்றும் தூல உடல் மீது தற்காலிகமாக அந்த உட்புற நரம்பு மண்டலம் ஆதிக்கம் செலுத்துகிறது.

நாம் இதைத் தான் சாதிக்க விரும்புகிறோம். செரிமான செயல்பாடுகள், இரத்த ஓட்டம் மற்றும் உடலின் மற்ற உள்ளுணர்வு செயல்பாடுகள் பராமரிப்பை பெரும்பாலும் கவனித்துக் கொள்ளும் வெளிப்புற நரம்பு மண்டலத்தில் நாம் வாழாமல், உட்புற நரம்பு அமைப்பில் வாழ்ந்துக்கொண்டு, அதன் மூலம் தூல உடலின் சக்திகளுக்கு தூண்டுதலாக இருக்க விரும்புகிறோம். ஏனென்றால் நாம் நரம்பு அமைப்பை தூல உடல் என்று உணர்ந்து, சருமம் மற்றும் எலும்புகளை தூல உடல் என்று கருதும் உணர்வை துறக்கிறோம். நாம் நடனம் கற்கும் போதும், அதைத் தான் செய்கிறோம். நரம்பு மண்டலம் தான் நடனம் ஆடுகிறது. தூல உடலின் அசைவு அந்த மண்டலத்தின் எதிர்வினை தான். அதனால் ஒருவர் இருந்த இடத்தை விட்டு அசையாமலும் நடனம் ஆடமுடியும்.

ஆன்மீக கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, மனிதனின் உடலில் மனதின் பகுதியாக இருக்கும் நரம்பு மண்டலம் வழியாக சக்தி உற்சாகமாக பாய்ந்து செல்கிறது. நாம் நரம்பு மண்டலம் வழியாகத் தான் மூன்று லோகங்களையும் பற்றி அறிந்து கொள்கிறோம். முதலாவதாக பொருட்கள், செயல்கள், நிகழ்வுகள் மற்றும் மக்கள் இருக்கும் வெளிப்புற உலகம். இரண்டாவதாக சிந்தனை, கோட்பாடுகள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஞான ஒளியின் உலகம். மூன்றாவதாக மனதின் உட்புற பகுதிகளில் இருக்கும் உட்புற பரவெளி மற்றும் மறைஞான பகுதிகளின் உலகம். நரம்பு மண்டலம் வழியாக வேகமாக பாய்ந்து செல்லும் சக்தி ஒரு சக்தியின் கோசத்தில் உள்ளடங்கியுள்ளது. அது அதிக ஆற்றலை கொண்ட ஆன்மீக சக்தியை இன்னொரு வகை சக்தியாக விளங்கும் ஆன்மீக காந்த சக்தியிலும், பிறகு காந்த சக்தியிலும் பரவச் செய்கிறது.

மின்சக்தி கண்களுக்கு புலப்படாமல் இருப்பதைப் போல, நுணுக்கமான அல்லது சூட்சுமமான நரம்பு மண்டலமும் கண்களுக்கு தெரிவது இல்லை. தூல

நரம்பு மண்டலத்தின் சக்தி காந்த சக்தியாக மாறுவதால், அதை கண்களால் பார்க்க முடிகிறது. இந்த நரம்பு மண்டலங்கள் வெளிப்புற செயல்களில் ஒன்றாக இணைந்து சிறப்பாக செயல்படும் போது, அவை மனித இருப்பிற்கு காரணமாக விளங்குகின்றன.

உட்புற நரம்பு ஓட்டங்களை சித்தரிப்பதற்கு வெங்காயம் சிறந்த உதாரணமாக இருக்கும். இதைத் தவிர வைரத்தையும் உதாரணமாக கூறலாம். இவற்றில் ஒரு அடுக்கின் மீது இன்னொரு அடுக்கு அதன் மீது இன்னொரு அடுக்கு என்று பல அடுக்குகள் உள்ளன. மறைபொருளாக பார்க்கும் போது, நரம்பு ஓட்டங்கள் சிறிய கம்பிகளின் கொத்தாக காட்சி அளிக்கின்றன. வெளியுலகில் இருந்து உட்புறமாக பார்க்கும் போது, அது அதைப்போன்று தோன்றுகிறது. ஆனால் உட்புற உலகில் இருந்து வெளியே பார்க்கும் போது, நீங்கள் அவற்றை கோசங்கள் அல்லது அடுக்குகளில் காண்கிறீர்கள். அவை மனித இருப்பை முழுவதுமாக மூடி இருப்பதையும், சாட்சி ஒரு அதிர்வலையில் இருந்து இன்னொரு அதிர்வலைக்கு பயணம் செய்வதையும் காண்கிறீர்கள். அது சிறிய பாதைகள் வழியாக வெளிவருவது இல்லை என்று சொல்லலாம். நரம்பு ஓட்டங்கள் ஒரு வீட்டில் இருக்கும் நடைபாதை போல அல்லாமல் பெரிய அறைகள் போல உள்ளன. நரம்பு ஓட்டங்களை நீங்கள் இந்த முறையில் உணர முயற்சி செய்யுங்கள். உங்களை ஒரு வெங்காயம் போல கற்பனை செய்து பாருங்கள்.

ஹட யோக ஆசனங்களை பயிற்சி செய்வதன் மூலம், நாம் நரம்பு மண்டலத்தின் உட்புற மற்றும் வெளிப்புற லோகங்கள் என்று முழுமையாக தெரிந்து கொள்கிறோம். அன்றாட வாழ்க்கையில் மனிதன் தனது வெளிப்புற நரம்பு மண்டலத்தை மட்டுமே அறிந்து இருக்கிறான். அவன் உட்புறத்தை அறிவது இல்லை, மற்றும் தான் நரம்பு மண்டலத்தின் உட்புற பகுதிகளை அறியவில்லை என்பதையே அவன் அறிவது இல்லை. அவன் வெளிப்புறத்தில் தனது கண்களுக்கு தெரிகிற மற்றும் தனது உணர்ச்சி, மனவெழுச்சி மற்றும் அறிவுக்கு எளிதில் எட்டக்கூடிய விஷயங்களை மட்டுமே அறிகிறான். அவன் பொதுவாக ஒரே வகையான விஷயங்களை உணர்வதற்கும் பார்ப்பதற்கும் நிரலாக்கம் செய்யப்பட்டு இருக்கிறான். அவன் வேறு விஷயங்களை பார்ப்பதற்கும் அல்லது உணர்வதற்கும், அல்லது நரம்பு மண்டலத்தின் மற்ற பகுதிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும், அவன் விடுமுறையில் செல்ல விரும்புகிறான். *ஹட யோக* பயிற்சி செய்வதால், அது எப்போதும் துடிப்புணர்வுடன் இருக்கும் நரம்பு மண்டலத்தின் மற்ற பகுதிகளுக்கு சாட்சியை அழைத்து வருவதால், அது உடல் ஆரோக்கியம் மற்றும் மனவெழுச்சி ஒடுக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கொண்டு வருகிறது. அவன் நரம்பு மண்டலத்தில் அமைதியான பகுதியை அறிந்து இருப்பதால், சாட்சி நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு இயக்கப்பட்டு மனதில் அமைதி உணரப்படுவதே, இந்த முன்னேற்றத்திற்கு காரணம் ஆகும்.

ஹட யோக ஆசனங்கள் எலும்புகளை சுற்றி இருக்கும் தசைகளை தளர்த்தி இரத்த ஓட்டத்தை அதிகரித்து, தூல உடல் வழியாக மட்டுமே நரம்பு மண்டலம் பாய்ந்து செல்லும் போது அதன் மீது மனிதனுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. நரம்பு மண்டலம் மனவெழுச்சிகள் மற்றும் புத்தி வழியாக செல்லும் போது, அதன் மீது மனிதன் விழிப்புணர்வை பெறுகிறான். அவன் ஒரு

புதிய சவாலை சந்திக்கும் போது, அவன் சிந்திக்கும் மனதின் பகுதிக்குள் நுழையத் தொடங்குகிறான். அவன் அந்த பகுதியில் குழப்பம் அடைந்தால், அது அவனிடம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறது. அவன் தினமும் பல மணி நேரங்களுக்கு தனது உடலையோ அல்லது அதன் வழியாக பாய்ந்து செல்லும் சக்திகளையோ அறிவது இல்லை. *ஹட யோகப்* பயிற்சியானது தூல உடல், மனவெழுச்சிகள் மற்றும் மனம் வழியாக பாய்ந்து செல்லும் சக்திக்கு மூலமாக விளங்கும் முதுகுத்தண்டிற்குள் சாட்சியை அழைத்து வருகிறது. அவன் இந்த சக்திகளை ஆய்வு செய்து சுத்தமான மனதின் பகுதியைப் பற்றி அறிந்து கொள்கிறான்.

மூன்று நோக்கங்கள்

இமாலயன் அகாடமியில் கற்றுத்தரப்படும் *ஹட யோகத்திற்கு* மூன்று நோக்கங்கள் இருக்கின்றன என்று சுருக்கமாக கூறலாம். 1) முதலாவதாக சுய ஒழுக்கம். இந்த ஆய்வை ஒரு தினசரி வழக்கமாக ஒழுங்குப்படுத்துவதற்கு, சாதகன் இந்த உடற்பயிற்சியை தினமும் செய்ய வேண்டும். இது அவன் நேரத்தை ஒழுங்குப்படுத்தி, தியானத்தை மேற்கொள்வதற்கு ஒரு நல்ல பழக்கத்தை உருவாக்குகிறது. 2) இரண்டாவதாக சாட்சியை கட்டுப்படுத்துதல். சாதகன் உடனடியாக சாட்சி எதன் மீது விழிப்புடன் இருக்கிறதோ அதில் அது பற்றற்று இருக்கும் திறமையை பெற்று, அடிப்படை தத்துவத்தின் முதல் நிலையை பூர்த்தி செய்கிறார். 3) மூன்றாவதாக நரம்பு மண்டலத்தில் பெறும் தேர்ச்சி மற்றும் தியானத்திற்கு முன்னேற்பாடு. *ஹட யோகப்* பயிற்சியானது வெளிப்புற நரம்பு மண்டலத்தின் மீது சாதகனுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தாமல் உட்புற நரம்பு மண்டலத்தின் மீது விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் நரம்பு மண்டலத்தின் முறையான பகுதியில் அவன் தியானம் செய்வதற்கான ஆயுத்த பணிகள் நிறைவு பெறுகின்றன. நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியை நமது தினசரி வாழ்க்கைக்கு பயன்படுத்துகிறோம். அதன் இன்னொரு பகுதியை தியானத்திற்கு பயன்படுத்துகிறோம். சாட்சி இரண்டிற்கும் இடையே பயணிக்கிறது. சிக்கலில் இருந்து விடுபட்டு பக்குவம் அடைந்த சூட்சும ஞானி, நரம்பு மண்டலத்தின் இரண்டு பகுதிகளிலும் முழு கவனத்துடன் இருப்பதால், அவர் தனது தினசரி கடமைகளின் போது தனக்குள் வாசம் செய்கிறார்.



ஒரு அன்பர் அதிகாலையில் தன்னை தியானத்திற்கு தயார்ப்படுத்திக் கொள்ள செய்யும் தொடர்ச்சியான ஆசனங்களின் அங்கமாக, ஒரு முதுநிலை ஹட யோக ஆசனத்தை செய்துக்கொண்டு இருக்கிறார். அவரது பூஜை அறையின் கல் சுவரில் விநாயகர் வீற்று இருக்க,

அவர் தினமும் யோகம், வழிபாடு மற்றும் தியானம் என்று ஒரு மணிநேர ஆன்மீக வழக்கத்தை கடைப்பிடிக்கிறார்.

இருபத்தி நான்கு ஹட யோக ஆசனங்கள்

உடலில் இணக்கத்தை ஏற்படுத்தி தியானத்திற்கு முன்னேற்பாடாக விளங்கும் ஒரு செய்முறை



இங்கே வழங்கப்பட்டுள்ள மூன்று ஆசனங்களில் இருக்கும் எட்டு பகுதிகளையும் தொடர்ச்சியாக செய்ய வேண்டும். இங்கே காண்பிக்கப்பட்டிருக்கும் *ஆசனங்கள்* எளிமையாக தினமும் பயிற்சி செய்யக்கூடியதாக நல்ல சீரான முறையில் அமைந்துள்ளன. இதில் ஒவ்வொரு ஆசனத்தையும் உடலை வருத்தாமல் 30 முதல் 120 வினாடிகள் வரை நிம்மதியான மனநிலையில் செய்யவேண்டும். முழுமையான நீட்டலும் தளர்வு நிலையும் ஏற்படும் போது, தூல மற்றும் சூட்சும நரம்பு மண்டலத்தில் நுணுக்கமான தூண்டுதல் நடைபெறுகிறது.

இந்த ஆசனங்களை தினமும் உங்கள் தனி அறையில் யார் கவனத்திலும் படாமல் செய்யுங்கள். உணவுக்கு பின்பு ஆசனங்களை செய்யக்கூடாது. சில ஆசனங்களை சரியாக செய்ய முடியவில்லை அல்லது உங்களுக்கு சில ஆசனங்கள் கடினமாக இருந்தால், நீங்கள் அதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்களால் முடிந்த வரை செய்யுங்கள். உங்கள் உடலுக்கு உகந்த வேகத்தில் முன்னேறி செல்லுங்கள். தொடர்ந்து பயிற்சி செய்யும் போது, உங்கள் உடல் நன்றாக வளைந்து கொடுப்பதை உணர்வீர்கள். அந்த வளைந்து கொடுக்கும் பண்பு உங்கள் மனதின் பாரம் குறைவதையும், அது விழிப்புடன் இருப்பதையும், அடியுணர்வின் ஒடுக்கங்களில் இருந்து அது விடுதலை பெற்று வருவதையும் பிரதிபலிக்கிறது. நாம் சுவாசத்தை கட்டுப்படுத்தும் போது நமது சிந்தனை மற்றும் *பிராணன்* என்கிற உயிர்சக்தியையும் கட்டுப்படுத்துகிறோம். இதை *யோகிகள் பிராணாயாமம்* என்று அழைக்கின்றனர். இங்குள்ள *ஆசனங்களுக்கு* மிக எளிமையான *பிராணாயாமம்* தரப்பட்டுள்ளது. மூச்சை ஒன்றில் இருந்து ஒன்பது எண்ணி முடிக்கும் வரை உள்ளே இழுத்து (இதயதுடிப்புடன் இணைந்து எண்ணுவது பொருத்தமாக இருக்கும்), ஒரு எண்ணிக்கைக்கு மூச்சை நிறுத்தி, ஒன்பது வரை எண்ணிக்கொண்டே மூச்சை வெளியே விட்டு, ஒரு எண்ணிக்கைக்கு மீண்டும் மூச்சை நிறுத்துவது என்று உங்களால் இயன்ற வரை தொடர வேண்டும்.

மனதை அமைதிப்படுத்தி குணப்படுத்தும் செய்முறையை தீவிரப்படுத்த, ஒவ்வொரு பகுதியிலும் தியானம் செய்வதற்கு ஒரு நிறம் தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பக்கத்திலும் மேலே விளக்கப்பட்டுள்ள நிறத்தை கற்பனை செய்துக்கொண்டு, அந்த பக்கத்தில் இருக்கும் *ஆசனங்களை* செய்ய வேண்டும். அந்த நிறம் உங்கள் தலையில் இருந்து கால்கள் வரை நிரம்பி இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள் அல்லது நீங்கள் பரவெளியில் தொங்குவதாகவும், உங்களை அந்த நிறம் சூழ்ந்து இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் உடல் அல்லது மனதில் பதட்டங்களை உணர்ந்தால், நீங்கள் மூச்சை வெளியேற்றும் போது அவற்றையும் சேர்த்து வெளியேற்றுவதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் உங்கள் *யோகாப்பியாசத்தை* முடித்த பிறகு, அமைதியாக அமர்ந்து தியானம் செய்ய தொடங்குங்கள். சம்பிரதாய முறைப்படி *ஹட யோகாப்பியாசம்* செய்ய சிறந்த நேரமாக விடியற்காலை, நண்பகல் மற்றும் மாலையில் சூரியன் மறையும் நேரம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மிகவும் குறைவாக பன்னிரண்டு நிமிடங்கள் மட்டுமே தேவைப்படுகிறது.

முக்கிய எச்சரிக்கைகள்: கழுத்து அல்லது முதுகுவலி பிரச்சனை உள்ள நபர்கள் தலைகீழாய் நிற்கும் *சிரசாசனம்*, தோளில் நிற்கும் *சர்வாங்காசனம்* போன்று முதுகுத்தண்டுக்கு அழுத்தம் தரும் *ஆசனங்கள்* செய்வதைத் தவிர்க்க வேண்டும். சிறந்த பலன்களுக்கு *ஹட யோகாசனங்கள்* ஒரு தேர்ச்சி பெற்ற ஆசிரியரால் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்கள் வெறும் அடிப்படைகளே.

பகுதி ஒன்று

உடல் வலிமையை பெறுவதற்கு ஆழமான மாணிக்க சிவப்பு நிறத்தை கற்பனை செய்துக்கொள்ளுங்கள்.



1. வலது காலை மடக்கி பின்பக்கமாக தொடைக்கு அருகே பிட்டத்தின் இடுக்கில் சொருகி வைக்கவும். இடது காலை மடக்கி அடி வயிற்றுக்கு முன்பாக கொண்டு வரவும். கைகளை முழங்கால் மீது வைத்து பெரு விரலும் சுண்டு விரலும் தொட்டுக்கொண்டு இருக்க, கைவிரல்கள் மேலே நோக்கியபடி *ஆகாச முத்திரையில்* இருக்க வேண்டும். உடலில் அதிக ஆற்றல்மிக்க முதுகுத்தண்டை

நேராக நிமிர்த்தி வைத்து, அதன் மீது தலை நேராக சமநிலையுடன் இருக்கும் படி உட்கார வேண்டும்.



2. முதலில் குறிப்பிட்ட *ஆசன* நிலையில் அமர்ந்து, கால்களை மாற்றி உட்காரவும். முதுகுத்தண்டை நேராக நிமிர்த்தி வைத்து, அதன் மீது தலையை நிலையாக வைத்து இருப்பதை மறக்க வேண்டாம். சுவாசத்தின் மீது கவனம் செலுத்தி, ஒன்றில் இருந்து ஒன்பது வரை எண்ணிக்கொண்டு மூச்சை உள்ளே இழுத்து, ஒரு எண்ணிக்கைக்கு மூச்சை நிறுத்தி, ஒன்பது வரை எண்ணிக்கொண்டே மூச்சை வெளியே விடவும். நீங்கள் இந்த நிலையில் இருக்கும் போது, உங்கள் மனம் மற்றும் உடல் முழுவதிலும் மாணிக்க சிவப்பு நிறம் பரவி இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். உடலை வருத்திக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு இருக்கும் பதட்டங்களை எல்லாம் மறந்து, இந்த ஆசனத்தில் அமைதியாக இருக்க முயற்சி செய்யுங்கள்.



3. வலது காலை மடக்கி அடிவயிற்றின் அருகே வைக்கவும். அதன் பிறகு அதற்கு முன்பாக இடது காலை வைக்கவும். இது மிகவும் நேர்த்தியான *சித்தாசனத்தின்* (सिद्धासन) இன்னொரு வகை ஆகும். இரண்டு கால்களையும் முடிந்த வரை முழுமையாக தரையில் வைத்து இருக்கவும். நீங்கள் ஒவ்வொரு நிலையிலும்

நிலைத்து இருக்கும் போது, உட்புற மற்றும் வெளிப்புற நரம்பு மண்டலத்தின் சக்தி அதிகரிப்பதை உணர முயற்சி செய்யுங்கள். அதன் உச்சத்தை உணர்த்து விட்டால், மூச்சை வெளிவிடும் போது அடுத்த *ஆசன* நிலைக்கு மெதுவாக மாறிக்கொள்ளவும்.

பகுதி இரண்டு

சுத்தமான சுயநலமற்ற சேவைக்காக மேரிகோல்ட் ஆரஞ்சு நிறத்தை கற்பனை செய்துகொள்ளுங்கள்.



4. முதல் பகுதியில் செய்த நிலையிலிருந்து இடது காலை நேராக நீட்டி முன்னே குனிந்து இரண்டு கைகளின் பெருவிரல் ஆட்காட்டி விரல்களால் இடதுகால் பாதத்தை கெட்டியாகப் பிடிக்கவும். இது *ஜானு சிரசாசனம்* (जानुशीर्षासन) என்று அழைக்கப்படுகிறது. உடலை மடக்கி தலையை முழங்காலுக்கு அருகில் கொண்டு வரும் *ஆசனம்* என்பதே அதன் பொருள். இந்த நிலையில் உங்களை தளர்த்திக் கொண்டு, தலையை தொடர்ந்து மெதுவாக இறக்குங்கள். முழுமையான தளர்வு நிலையை அடைந்ததும், உங்கள் தலை முழங்கால் மீதும், முழங்கைகள் தரை மீதும், உடம்பின் மேற்பகுதி கால்களின் மீதும் இருக்கும்.



5. இந்த *ஆசனத்தை* வலது புறத்தில் செய்யவும். உடலை வருத்திக் கொள்ளாமல், அந்த நிலையில் தளர்வாக இருந்துக்கொண்டு, பதட்டங்களை எல்லாம் வெளியேற்றவும். உங்கள் சுவாசத்தின் மீது தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு, உங்களை சுற்றி ஆரஞ்சு நிறம் இருப்பதாக கற்பனை செய்துக்கொள்ளுங்கள். மனதில் பதட்டம் ஏதும் இல்லாமல், சிவபெருமானின் முழுநிறைவான பிரபஞ்சத்துடன் ஒன்றி இருங்கள்.



6. அடுத்ததாக இரண்டு கால்களையும் நீட்டிக்கொண்டு முன் பக்கமாக வளையும் *பச்சிமோத்தாசனத்திற்கு* (पश्चिमोत्तानासन) மாறவும். கால் பெருவிரல்களை கைபெருவிரல்களாலும் சுட்டு விரல்களாலும் இறுக்கமாக பிடித்துக்கொண்டு, முழங்காலை தொடுமாறு மெதுவாக தலையை சாய்க்கவும். அதிக நேர்த்தியான நிலையில், கால்கள் நேராகவும் கணுமுட்டி தரையை தொட்டுக்கொண்டும் இருக்கும்.

பகுதி மூன்று

சுத்தமான புத்தியை பெறுவதற்கு சூரிய மஞ்சள் நிறத்தை கற்பனை செய்துகொள்ளுங்கள்.



7. தரையில் படுத்து மேலே பார்த்துக்கொண்டு கால்களை மேலே உயர்த்தி, கைகளால் இடுப்பின் மத்திய பகுதியை தாங்கிப் பிடித்துக் கொள்ளவும். உடல் முழுவதும் தோள்களுக்கு செங்குத்தாக இருக்கும் வரை உடலின் முண்டப்பகுதியை உயர்த்தவும். இதுவே *சர்வாங்காசனம்* (सर्वाङ्गासन) ஆகும். முதுகுத்தண்டை நேராகவும், கால்களை ஒன்றாகவும் உடம்பின் முண்டப்பகுதியை தரைக்கு செங்குத்தாகவும் வைக்கவும். மஞ்சள் நிறத்தை கற்பனை செய்துகொள்ளுங்கள். ¶நீங்கள் *ஹட யோகாசனங்களை* செய்யும் போது உங்கள் வேலை, குடும்பம், நண்பர்கள், சகாக்கள், பிரச்சனைகள் மற்றும் உங்களுக்கு வழக்கமாக தொல்லையாக இருக்கும் சவால்கள் பற்றிய சிந்தனைகளை உங்கள் மனதில் இருந்து விலக்கி விடுங்கள். தொடர்ந்து சாந்தகமாக இருங்கள். நீங்கள் பூரண அமைதியை பெற்று, இந்த தாரணை கலையை முழுமையாக ரசித்திடுங்கள்.



8. கால் பெருவிரல்கள் தரையை தொடும் வரை, கால்களை மெதுவாக தலைக்கு பின்னால் இறக்கவும். பிறகு கைகளை கீழே இறக்கி, உள்ளங்கைகளை கீழ்நோக்கி வைக்கவும். இது *ஹலாசனம்* (हलासन) ஆகும்.



9. இந்த பகுதியின் *ஆசனத்தை சவாசனத்துடன்* (शवासन) நிறைவு செய்யவும். இந்த *ஆசனத்தில்* கால்களை முன்னே திருப்பி கொண்டுவந்து, கைகளை தளர்வாக பக்கவாட்டிலும், உள்ளங்கைகள் கீழ்நோக்கியும் வைக்கவேண்டும். இதில் ஒவ்வொரு தசையும் தளர்வடைகிறது. உலக கவலை இல்லாமல் கடலில் மிதப்பது போல கற்பனை செய்து கொள்ளுங்கள்.

பகுதி நான்கு

உடல் மற்றும் மனவெழுச்சி ஆரோக்கியத்திற்கு மரகதப் பச்சையை கற்பனை செய்து கொள்ளுங்கள்.



10. முட்டி போட்டுக்கொண்டு கால்களை பக்கவாட்டில் பரப்பி, கணுக்கால்களுக்கு இடையே அமர்ந்து கைகளை முழங்கால்களில் வைத்து உள்ளங்கைகளை கீழ்நோக்கி வைக்கவும். இது *வீராசனம்* (वीरासन) ஆகும். மரகத பச்சையை கற்பனை செய்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நிலையிலும், ஆழமாக முழுமையாக மற்றும் திரைத்தசை மூலமாக சுவாசிக்க வேண்டும். உங்கள் மார்பை அசைக்காமல், திரைத்தசை இயல்பாக கீழே இறங்குவது மற்றும் விரிவதன் மூலம் நீங்கள் ஒரு குழந்தையை போல சுவாசிக்கும் வரை, சூரிய பின்னலில் இருந்து பதட்டங்களை விடுவித்துக் கொண்டிருங்கள். விரியும்

போது வெற்றிடத்தை உருவாக்கி, காற்றை உள்ளே அனுமதிக்கும் ஒரு துருத்தியின் செயல்பாட்டை கற்பனை செய்து பாருங்கள். செயற்கையாக சுவாசிக்காமல், உடலை தளர்த்தி மனதை அமைதிப்படுத்துங்கள்.



11. முட்டிபோட்டு அமர்ந்து கொண்டே, தலையினால் தரையை தொடும் வரை பின்னால் மெதுவாக வளையவும். இதுவே *பரியங்காசனம்* (पर्यंकासन) ஆகும். கைகளை நெஞ்சின்மேல் ஒன்றாக குவித்து *நமசுகார* முத்திரையில் வைத்து இருங்கள்.



12. உயிர்சக்தி சரிசமமாகப் பரவி நிற்கும்போது உடம்பை (முடிந்த வரை கைகளின் உதவியின்றி) மேலே கொண்டுவந்து, நெற்றி தரையில் தொடும்படி குனியவும். உள்ளங்கைகள் தலை பக்கமாகவும், முழங்கால்களுக்கிடையே பிட்டமும் தரையில் இருக்க வேண்டும்.

பகுதி ஐந்து

மன அமைதிக்கு வெளிர் நீல நிறத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள்.



13. உடம்பை மேலே எழுப்பி, மூச்சை உள்ளே இழுத்து, மெதுவாக உடம்பை பின்பக்கம் வளைத்து, கைகளை நேராக தாங்கி, பாம்பு நிற்பதுபோல *புஜங்காசனத்தில்* (भुजङ्गासन) இருக்கவும். இரண்டு அல்லது மூன்றுமுறை மூச்சுவிடும்வரை இந்த நிலையில் நிலைத்து இருந்து, பின்பு முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருந்து தொடங்கி, ஒரு சமயத்தில் ஒரு முதுகெலும்பு என்று உடம்பை கீழே நேர்த்தியாக இறக்கவும்.



14. கால்களை பின்னால் மடக்கி, கைகளை பின்னால் நீட்டி கணுக்கால்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். கால்களை மேலே இழுத்து, தலையையும் உடம்பையும் வில்லைப் போன்று வளைக்கும் போது, மூச்சை உள்வாங்கவும். இதுவே *தனுராசனம்* (धनुरासन) ஆகும். மேலே பின்புறமாக பார்க்கவும். இரண்டு அல்லது மூன்று சுற்று சுவாசிக்கும் வரை, அதே நிலையில் இருக்கவும். வெளிர் நீல நிறத்தை கற்பனை செய்துக்கொள்ளுங்கள். காலை விடும்போது மூச்சை வெளியே விட்டு உடம்பை முழுவதுமாக கீழே இறக்குங்கள்.



15. முட்டிபோட்டு அமர்ந்து, பிட்டங்களை கணுக்கால்களில் வைத்து, உடலின் மேற்பகுதியை தரையைத் தொடும்படியாக கீழே இறக்கி, "ஐந்து அங்க நமசுகாரமாக" விளங்கும் *பஞ்சாங்க பிராணாமாசனத்தை* (पञ्चाङ्गप्रणामासन), செய்யும்போது நெற்றியை தரையில் வைத்து, கைகளை முன்னே வைத்து, உள்ளங்கைகளை கீழ்நோக்கி வைக்க வேண்டும்.

பகுதி ஆறு

ஆன்மீக அறிவு பொங்கி வழிவதற்கு ஊதா நிறத்தை கற்பனை செய்துக் கொள்ளுங்கள்.



16. முன்பு செய்த *ஆசனத்திற்குப்* பிறகு, உடலை முன்பக்கமாக நகர்த்தி முன்னங்கைகள் மற்றும் தலையை ஒரு முக்கோணமாக அமைத்து, கைவிரல்களைப் தலைக்கு பின்னால் பின்னிக்கொள்ளவும். உச்சந்தலை தரையை தொட்டுக்கொண்டு இருக்கவேண்டும். முழங்கால்கள் மடங்கிய நிலையில், உடலை மெதுவாக உயர்த்தவும். சற்று பொறுத்து கால்களை மெல்ல

நேராக செங்குத்தாக நிறுத்தவும். இதுவே தலைகீழாக நிற்கும் *சாலம்ப சிரசாசனம்* (सालम्ब शीर्षासन) ஆகும். உடலின் பெரும்பாலான பாரத்தை தலைக்கு வழங்காமல், கைகள் மூலமாக தாங்கிக்கொள்ளவும்.



17. கால்களை கீழே இறக்க நினைக்கும் போது, முழங்கால்களை வளைத்து உள்ளே மடக்கி, இடுப்பு வளைந்து இருக்கும் ஆசனத்தில் கவனமாக இறக்கிக்கொள்ளவும். இரத்த ஓட்டம் சமநிலையை பெறுவதற்கு, இந்த நிலையில் எட்டு முறை மூச்சுவாங்கி விடும்வரை காத்து இருக்கவும். மனம் முழுவதிலும் ஊதா நிறத்தை நிரப்பிக் கொள்ளுங்கள்.



18. மெதுவாக எழுந்து இடுப்பளவு நேராக நிமிர்ந்து, கைகளை முழங்கால்களில் வைத்து, உள்ளங்கைகளை கீழ்நோக்கி வைக்கவும். தலையை சற்று கீழே சாய்த்து தொண்டைப் பகுதியை அடைத்து *பந்தம்* செய்தபின், கழுத்தை நேராக நிமிர்த்தவும்.

பகுதி ஏழு

தெய்வீக பார்வை மூலம் கர்மவினையை சுத்தம் செய்ய பச்சை நீல நிறத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள்.



19. இடது இடுப்பில் அமர்ந்து, வலதுகாலைத் தூக்கி இடது முழங்காலில் வைக்கவும். வளைந்திருக்கும் வலது முழங்காலின் இடைவெளிக்குள், இடது கையை நுழைக்கவும். வலது கையை முதுகுப் பின்னால் நீட்டி, இடது கையை பிடிக்கவும், அல்லது சுலபமாக இடது கையால் வலது முழங்காலை பிடிக்கவும். முதுகுத்தண்டை கூடுமானவரை நேராக வைக்கவும். இதுவே முதுகுத்தண்டை முறுக்கும் *மத்சுயேந்திராசனம்* (मत्स्येन्द्रासन) ஆகும். நீங்கள் மூச்சை உள்ளே இழுக்கும் ஒவ்வொரு முறையும் தலையை மெதுவாக இடதுபுறம் திருப்ப வேண்டும் மற்றும் மூச்சை வெளியிடும் போது தலையை மீண்டும் வலதுபுறம் திருப்ப வேண்டும்.



20. பச்சை நீல நிறத்தை கற்பனை செய்துக்கொண்டு, முதுகுத்தண்டை திருப்பும் *ஆசனத்தை* மறுபுறம் செய்யுங்கள். ஒவ்வொரு *ஆசனத்திலும்* பதட்டம் ஏதும் இல்லாமல் சாந்தமாக இருங்கள். சுவாசத்தை மூன்று நிலைகளில் (பூரகம்,

கும்பகம், ரேசகம்) கட்டுப்படுத்துவதன் மூலம், உடல் மற்றும் மனம் அமைதி பெறுவதற்கு துணை புரிகிறது.



21. இயல்பு நிலைக்கு வந்த பிறகு, இரண்டு கால் பாதங்களையும் ஒன்று சேர்த்து, இரண்டு கைகளாலும் பிடித்துக்கொள்ளவும். இது கழுகு போன்ற *பத்தகோணாசனம்* (बद्धकोणासन) ஆகும். முழங்கால்கள் தரையோடு ஒட்டி இருக்கவேண்டும். உங்கள் மனதில் இருந்து சிந்தனைகள் மற்றும் பதட்டங்களை நீக்கும் போது, நீங்கள் அதிக விழிப்பு, துடிப்புணர்வுடன் அமைதியாக இருப்பீர்கள்.

பகுதி எட்டு

சிந்தனை, சொல் மற்றும் செயலில் தூய்மையை பெறுவதற்கு வெள்ளை நிறத்தை கற்பனை செய்யுங்கள்.



22. வலது காலை நீட்டி, இடது கணுக்காலைத் தூக்கி, வலது தொடைமீது உயர்த்தி வைத்துக் கொள்ளவும். முன்பக்கமாக உடலை வளைத்து, வலது காலை கைப்பெருவிரலாலும் சுட்டு விரலாலும் பிடித்துக் கொள்ளவும்.

வெள்ளை நிறத்தை கற்பனை செய்து கொள்ளவும். இது தலை-முழங்கால் சம்பந்தப்பட்ட *ஜானு சிரச* ஆசனத்தின் (जानुशीर्षासन) இன்னொரு வகை ஆகும்.



23. இதைப்போன்று இடது புறம் தொடரவும். வலது காலை இடது தொடையின் மீது வைக்கவும். *ஆசனங்கள்* செய்வதால் தசை திசுக்கள் நீட்டிக்கப்பட்டு, பொலிவையும் உறுதியையும் பெறுகின்றன. அத்துடன் அவை உறுப்புக்களுக்கு மசாஜ் செய்து, நரம்புகளுக்கு தூண்டுதலை வழங்கி, *பிங்கலா* மற்றும் *இடா* நாடிகளை சமநிலையில் வைத்து இருக்கிறது.



24. இறுதியாக பத்மாசனத்தில் (पद्मासन) அமர வேண்டும். இடது தொடை மீது வலது கால் ஏற்கனவே இருக்கிறது. இந்த *ஆசனத்தை* பூர்த்தி செய்ய, மெதுவாக வலது தொடை மீது இடது காலை வைக்கவும். முதுகுத்தண்டை நேராக நிமிர்த்தி, கைகளை மடியில் வைத்து, உள்ளங்கைகளை விரித்து, வலது கையை மேலே வைத்து, பெருவிரல்கள் தொட்டுக்கொண்டு *தியான முத்திரையில்* அமர வேண்டும். *ஹட யோகம்* மூலம் உடலில் பதட்டங்களை விடுவித்த பிறகு, மனம் மற்றும் மனவெழுச்சி பதட்டங்களும் தானாக மறைந்து விடுகின்றன. இந்த மாபெரும் இரகசியம் மற்றும் அற்புத கருவியை, நீங்கள் உங்கள் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தலாம்.

தசமாம்சம்

दशमांश



இரண்டாவது மேற்கோள்

தசமாம்சம்

மனிதனாக இருப்பவன், பிறவி எடுக்கும் போதே தேவர்கள், ரிஷிகள் பித்ருக்கள் மற்றும் மனிதர்களுக்கு கடன்பட்டு இருக்கிறான்.

சுக்ல யஜுர் வேதம், சதபத பிராமண, 1.7.2.1 வேஎ, 393



வாழ்க்கையில் நமக்கு கிடைக்கும் செல்வமும் வளமும் இறைவனிடம் இருந்து வருவதை அறிந்த இந்துக்கள், தங்களுக்கு கிடைப்பதில் இருந்து தாராளமான பகுதியை அந்த இறைவனுக்கே திருப்பித் தருகின்றனர். இங்கே படத்தில் இருக்கும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பூமியில் சைவ சமயம் செழிக்க வேண்டும் என்று சிவபெருமானுக்கு நைவேத்தியம் செய்ய கூடைகளில் பழங்கள், துணிகள், ஆபரணங்கள், உணவுகள் மற்றும் பணத்தை கொண்டு வந்துள்ளனர்.



நாம் இனி இறைவனின் நடவடிக்கைகளுக்கு மாதம்தோறும் தசமாம்சமாக தரவேண்டிய பத்து சதவீத தொகையை பற்றி தெரிந்துக்கொள்ளலாம். இதை வழங்கும் மனிதர்கள் மற்றும் குடும்பங்களுக்கு காலப்போக்கில் உருவாகும் செல்வவளம், அவர்களுக்கு பண இழப்புக்களை ஏற்படுத்தாமல் பல தலைமுறைகளுக்கு நிலைத்து இருக்கும் வரத்தை வழங்குகிறது. இதைப்பற்றி மேலும் படித்து தெரிந்துக்கொள்ளுங்கள்! தசமாம்சம் என்பது வருமானத்தில் பத்து சதவீதம் தருவதாகும். அதை விட ஒரு டாலர் அல்லது ஒரு ரூபாய் அல்லது ஒரு பவுண்டு அல்லது ஒரு லிரா கூடுதலாகவோ குறைச்சலாகவோ இல்லை.

இறைவனின் பணம்

ஒரு கரித்துண்டு முதல் மினுமினுக்கும் வைரம் வரை, ஆக்ஸிஜன் மூலக்கூறு முதல் சூப்பர்நோவாவாக மறைந்த விண்மீன் வரை அனைத்தும் தெய்வீக இருப்பு ஆகும். நாம் வழக்கமாக நமது விருப்பங்களுக்கு ஏற்ப உலகில் இருக்கும் பொருட்களுக்கு அதிகமான அல்லது குறைவாக மதிப்பை வழங்குகிறோம். நாம் இயற்கை மூலக்கூறுகளில் இருந்து தயாரிப்பது உட்பட அனைத்தும் இறைவனுக்கு சொந்தமானது என்ற முடிவுக்கு நாம் வரவேண்டி இருக்கும். கணக்கில் அடங்காத அமெரிக்க, இந்திய, ஜப்பான், இங்கிலாந்து, ஜெர்மன், பிரான்சு நாட்டு செலாவணிகள், விலையுயர்ந்த உலோகங்கள் மற்றும் இரத்தினங்களை ஒன்றாக சேர்த்து ஒரு மாபெரும் கன சதுரமாக இறுக்கினால், மனிதன் பயன்படுத்தும் அந்த பணமும் பூமியில் இருக்கும் தாதுப்பொருட்களும் உண்மையில் இறைவனுக்கு சொந்தமானது என்பதை எந்த இந்துவும் ஏற்றுக்கொள்வார்.

அதனால் இறைவனின் பணம் என்பது உலகில் இருக்கும் அனைத்து செலாவணிகளின் கூட்டுத்தொகை ஆகும். இறைவன் நமது பூமிக்காக உருவாக்கிய ஆன்மீக நோக்கத்தை நிலைநிறுத்த, நாம் செல்வத்தை *தார்மீக* வழிகளில் பயன்படுத்தி, அவரது பணத்தை அவருக்கே அர்ப்பணித்து நாம் நமது மதத்திற்கு ஆற்றவேண்டிய கடமையை செய்யும் போது, நாம் அந்த உயரிய கண்ணோட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம். நமது செல்வத்தைப் போன்று நமது நேரத்தையும் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். நமது மதத்தின் முன்னேற்றத்திற்கு, நமது நேரத்தில் சுமார் பத்து சதவீத நேரத்தை பயன்படுத்தும் போது, நாம் இறைவனின் நேரத்தை அவருக்கு

அர்ப்பணிக்கிறோம். நாம் அன்றாடம் செய்யும் வீட்டு *பூஜை*, சாத்திரம் படித்தல், *ஜபம், சாதனா* மற்றும் தியானத்தைப் போன்ற நமது சொந்த ஆன்மீக பழக்கங்களை தவிர்த்து இறைவனுக்கு என்று பத்து சதவீத நேரத்தை ஒதுக்க வேண்டும்.

நமது சொந்த ஆன்மீக முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காகவும், சனாதன தர்மமாக விளங்கும் நமது இந்து மதத்திற்கு ஆதரவு வழங்கி அதை நிலைநிறுத்துவதற்காகவும், மாதந்தோறும் நமக்கு வரும் வருமானம் மற்றும் பரிசுகளில் பத்து சதவீதத்தை மகிழ்ச்சியுடன் திருப்பித் தருவதைப் பற்றி இந்த மேற்கோள் விளக்குகிறது. பக்குவம் அடையும் செய்முறையாக விளங்கும் இந்த ஆன்மீக வழக்கம் *தசமாம்சம்* என்று அழைக்கப்படுகிறது. இது மேற்கத்திய நாடுகளில் டித் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு "பத்தில் ஒரு பகுதி" என்று பொருள். இது உலக மதங்கள் மற்றும் இறை நம்பிக்கைகளுக்கு பொதுவான ஒரு பழங்கால அம்சம் ஆகும். இறையாட்சியை அடிப்படையாகக் கொண்ட பண்டைய கால எகிப்து, சுமேரியா (மெசபடோமியா) மற்றும் சிந்துவெளி நாகரீகங்களில், பொதுவாக நிலத்தில் கிடைக்கும் வருடாந்திர விளைச்சல் முழுவதும் அவர்கள் ஆலயங்களில் இருக்கும் தெய்வங்களுக்கு படைத்து விட்டு, பின்னர் மக்களுக்கு பிரித்து வழங்கப்படும்.

இன்று பழங்கால பழக்கமான *தசமாம்சம்* புத்துணர்ச்சியை பெற்றால், அதனால் விளையும் அற்புதமான பலன்களை கற்பனை செய்து பாருங்கள். உலகெங்கும் ஒரு பில்லியனுக்கும் மேலான இந்துக்கள் இருக்கிறார்கள். சுமார் 940 மில்லியன் மக்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள். அதில் ஏழைகளாக இருக்கும் சுமார் 600 மில்லியன் மக்களின் தனிநபர் வருமானம் சுமார் US$444 ஆக இருக்கிறது. இருப்பினும் அவர்கள் இறைவனுக்கு காணிக்கையாக ஒவ்வொரு வருடமும் ஒரு டாலர் மட்டுமே (அவர்கள் வருமானத்தில் மிகவும் குறைவான சதவீதம்) வழங்கினாலும், ஏழைகள் மட்டுமே இந்து அமைப்புக்களுக்கு வருடந்தோறும் $600 மில்லியன் பணத்தை வழங்கி இருப்பார்கள். பத்து சதவீதம் முழுமையாக வழங்கினால், வருடத்திற்கு $26.64 பில்லியன் தொகையை பெற முடியும். இந்தியாவில் மீதமுள்ள 330 மில்லியன் மக்களில் பெரும்பாலானோர் புதிய நடுத்தர வகுப்பை சேர்ந்தவர்கள். அவர்கள் சராசரியாக $400 தொகையை தசமாம்சமாக வழங்கினால், அது வருடத்திற்கு கூடுதல் நிதி சேமிப்பாக $132 பில்லியன் வழங்கும். இதில் இந்தியாவிற்கு வெளியே குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்துக்கொண்டு, மருத்துவர்கள் அல்லது பொறியாளர்களாக பணிபுரிந்து, டாட் காம் நிறுவனத்தை தோற்றுவித்து நூற்றுக்கணக்கான மில்லியன் கணக்கில் சம்பாதிக்கும் அறுபது மில்லியன் இந்துக்களை கணக்கில் சேர்க்கவில்லை. பழங்கால வரிவிதிப்பான இந்த *தசமாம்சம்,* இந்து மதத்திற்கு வருடந்தோறும் $150 பில்லியன் வழங்கும். *தசமாம்சம்* என்பது ஒருவர் தனக்கு விருப்பமான அமைப்பிற்கு வழங்குவது என்பதால், பண விநியோகம் சீராக பரவி இருக்கும்.

21 ஆம் நூற்றாண்டில் முழுமையாக அடியெடுத்து வைத்துள்ள இந்து மதத்திற்கு, அவசரமாக இந்த நிதி உதவி தேவைப்படுகிறது. மதம் தொடர்பான அறிவு, மறைஞான சடங்கு மற்றும் ஆன்மீக அனுபவத்தில் இந்துமதம் மிகவும் செழிப்பாக விளங்குகிறது. இந்து மதத்தின் இந்த ஆன்மீக புதையல் என்றுமே

அழியாது. ஆனால் ஒவ்வொரு இந்துவின் வாழ்க்கையுடன் தொடர்பில் இருக்கும் மாபெரும் சுற்றுச்சூழலை தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும். நேர்த்தியாக உருவாக்கப்பட்ட ஆபரணமாகவும், இறைவன் மற்றும் மகாதேவர்களுக்கு உகந்த பூலோக இருப்பிடங்களாகவும் நமது கோயில்கள் விளங்கி, பக்தர்களுக்கு ஆன்மீக முன்னேற்றத்தை வழங்க வேண்டும். நமது மடங்கள் மற்றும் சொற்பொழிவுக் கூடங்கள், பள்ளிகள் மற்றும் கலாச்சார மையங்கள் மக்களை கவர்ந்து இழுத்து, இந்து மனதால் வழங்கக்கூடிய சிறப்பான அம்சங்களை உலகிற்கு பரப்ப வேண்டும். இந்துக்கள் அனைவரும் தங்கள் மதத்தைப் பற்றி நன்றாக தெரிந்துக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்கள் தங்களை ஆன்மீகம், சமூகம், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரரீதியாக மேம்படுத்திக்கொள்ள தேவையான வசதிகளை எல்லாம் பெற்று இருக்கவேண்டும். அன்றும், இன்றும் என்றும் நமது பொருளீட்டும் *தர்மத்தின்* மூலம் இறைவனிடம் நெருக்கத்தை ஏற்படுத்துவதிலும், நமது மதத்திற்கு தொடர்ந்து தேவையானதை வழங்குவதிலும் *தசமாம்ச* பழக்கத்திற்கு ஈடு இணை ஏதும் இல்லை. காலம் காலமாக பயன் தந்த இந்த செய்முறை தற்போது தேவைப்படுகிறது.

இந்த சிறிய உரையில், இறைவனின் பணத்தை வழங்கும் தனிநபர் அல்லது ஒரு நிறுவனம் பெறும் பலன்களைப் பற்றியும் விளக்க இருக்கிறோம். சுமார் ஐம்பது ஆண்டுகளாக சைவ சித்தாந்த தேவாலயம் *தசமாம்ச* அடிப்படையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மக்களின் வாழ்க்கையானது அதிக ஆன்மீக ஈடுபாடு மற்றும் நிதி பாதுகாப்பை பெற்று பக்தி சங்கங்களில் மக்களின் ஈடுபாடும் அதிகரிக்கிறது. தினமும் கிடைக்கும் இந்த பலன்களை ஓரிரு வரிகளில் முழுமையாக விளக்கமுடியாது. ஆனால் உறுப்பினர்கள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதோடு தங்கள் உள்ளத்திலும் மற்றவர்களுடனும் இணக்கத்துடன் இருந்து, தங்கள் மதத்தை மேம்படுத்துவதில் உற்சாகத்துடன் இருப்பதற்கு அவர்களின் *தசமாம்சம்* வழங்கும் பழக்கம் மிகவும் முக்கிய காரணமாக விளங்குகிறது. அவர்கள் தங்களுக்குள் வளர்த்துள்ள வலுவான சுயநலமற்ற உணர்வு காரணமாக, அவர்களால் வாழ்க்கைகளின் அனைத்து பரிணாமங்களிலும் இறைவனை உணர முடிகிறது. மதத்திற்கு செய்ய வேண்டிய கடமையாக இறைவனின் பணத்தை வழங்கும் வழக்கம், உணரக்கூடிய ஆன்மீக அனுபவத்தின் பாதையாக மாறிவிட்டது.

செல்வம் மற்றும் அறிவை வழங்குவதால் கிடைக்கும் புண்ணியங்களை இந்து மதம் தொடர்ந்து போற்றி வந்துள்ளது. கிருகஸ்தன் தனது குழந்தைகள், ஏழைகள் மற்றும் *சாதுக்களுக்கு* வழங்குகிறான், பெற்றோர்களின் முதுமை காலத்தில் அவர்களின் குழந்தைகள் வழங்குகிறார்கள், சான்றோர்கள் சமூகத்திற்கு வழங்குகிறார்கள், *குருவிற்கு* மாணவன் மற்றும் *சாதுக்கள்* வழங்குகிறார்கள், மற்றும் *குரு* எல்லோருக்கும் வழங்குகிறார். வழங்குவது நமது ஆன்மாவின் இயல்பில் மிக முக்கிய அங்கமாக விளங்குகிறது. நாம் வழங்கும் ஒவ்வொரு முறையும், நமது ஆன்மாவின் இயல்பு அதிக அளவில் வெளிப்படுகிறது. இருப்பினும் இந்து மதத்தில் "*அர்த்த*" என்று நாம் அழைக்கும் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை தொடர்ந்து வழங்குவதும் கடினமாக இருக்கிறது, நமக்கு நிர்வாகத்தில் முக்கியத்துவம் இல்லாத சமூகம் அல்லது அமைப்பிற்கு வழங்குவதும் சிலசமயம் கடினமாக இருக்கிறது. இருப்பினும்

நமது *அர்த்தத்தை* வழங்குவது நமது *தர்மம்* ஆகும். நாம் தாராளமாக வழங்கும் நன்கொடைகள் மூலமாக மட்டுமே, இந்து மதம் தனிப்பட்ட முறையிலும் ஒரு குழுவாகவும், செழிப்படைந்து காலப்போக்கில் நன்றாக வலுவடையக்கூடும். இதைப்பற்றி சாத்திரங்கள் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

> நாடி வரும் ஏழையை ஒரு செல்வந்தன் திருப்திப்படுத்த வேண்டும். அவன் நீண்டகால கண்ணோட்டத்துடன் வாழ்க்கைப் பாதையை பார்க்கவேண்டும். ஏனென்றால் செல்வங்கள் உருண்டு செல்லும் ரதத்தின் சக்கரங்களைப் போல, ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு கைமாறுகின்றன.
>
> *ரிக் வேதம்,* 10.117.5. வேஎ, ப. 850-851

தாராளமாக வழங்காமலும் தொடர்ந்து வழங்காமலும் தேவையில்லாமல் தனக்கென்று பணத்தை சேர்த்து வைக்கும் ஆர்வத்துடன் இருக்கும் போது, அது நமது தெய்வீக இயல்பை மறைத்து நமக்கு குற்ற உணர்வையும் மன அழுத்தத்தையும் வழங்குகிறது. இதற்கு நேர்மாறாக *தசமாம்சம்* வழங்கும் வழக்கம் செயல்படுகிறது. அது செழிப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள், குடும்பத்தின் வளர்ச்சி மற்றும் சமூகத்துடன் சுமூகமான உறவு போன்ற நேர்மறை *கர்மவினைகளை* உருவாக்கி, ஆரோக்கியமான மனநிலையை வலுப்படுத்துகிறது. இத்துடன் கூட்டாக *தசமாம்சம்* வழங்கும் குழுவினர் எல்லோரும் ஒன்றாக திருப்தி, சாதனை மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவிக்கின்றனர்.

உதாரணங்கள்

400 வருடங்களுக்கு முன்பாக, தென் இந்தியாவின் தமிழ்நாட்டை சேர்ந்த உப்பு விற்கும் செட்டியார்கள் குழு, பழனிமலை முருகப்பெருமான் கோயிலுக்கு தேவையானதை செய்வதற்கு, தங்கள் வருமானத்தில் இருந்து பெரும் பங்காக பதினைந்து சதவீதம் காணிக்கையாக வழங்கியதை, *தசமாம்ச* வழக்கத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாக கூறலாம். தங்கள் மதத்திற்கு அவர்கள் செய்த கடமைகள் காரணமாக, அரசரின் அனுகூலமான கவனத்தை பெறும் அளவிற்கு அவர்கள் வணிகம் வளர்ச்சிப் பெற்றது என்று அந்த வணிகர்களின் வரலாற்று பதிவுகள் குறிப்பிடுகின்றன. தென் இந்தியாவின் இந்து பாரம்பரியங்களில், ஒருவர் தனது வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் நன்கொடையாக வழங்குவது மகிமை என்று அழைக்கப்படுகிறது.

இன்றைய காலத்தில் *தசமாம்சத்திற்கு* உதாரணமாக சுவாமிநாராயண் சமூகத்தை குறிப்பிடலாம். அதன் தலைவராக விளங்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பிரமுக் சுவாமி மகராஜ் அவர்களுக்கு, இந்துயிசம் டுடே பத்திரிகை ரினைசன்ஸ் அவார்ட் (மறுமலர்ச்சி செய்ததற்கான விருது) வழங்கி 1995 ஆம் ஆண்டிற்கான இந்து என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. அவர் சமூகத்தை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள், *தசமாம்சம்* மூலம் தங்கள் மதத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து வருகின்றனர். அந்த சமூகத்தை சேர்ந்த பக்தர்கள் பலர் தங்கள் *குருவிற்கு தசமாம்சம்* வழங்குவது மட்டுமில்லாமல், தங்கள் எடைக்கு ஈடாக தங்கத்தை வழங்குகிறார்கள் மற்றும் சுயநலமில்லாமல்

தங்கள் நேரத்தின் பெரும்பகுதியை அர்ப்பணிப்பதுடன் தங்கள் குழந்தைகளும் அதை தொடர வேண்டும் என்று ஊக்குவிப்பதால், அது உலகில் உண்மையில் மிகவும் வலுவான சக்தியாக விளங்குகிறது. அவர்களின் உறுப்பினர்கள் வழங்கும் தசமாம்சம் மூலமாக, அவர்கள் லண்டன் நகருக்கு மத்தியில் $4 மில்லியன் கோயிலை கட்டி, அதை ஆகஸ்ட் 1995 மக்களுக்கு திறந்தும் வைத்தார்கள். அவர்கள் சுமார் 650 *சாதுக்களின்* ஆச்சாரமான மடவாசி சமூகத்திற்கு ஆதரவு வழங்கி, பல்வேறு சமூக சேவைகளை செய்து, இந்தியாவின் அற்புதமான இந்து பாரம்பரியங்களின் கலாச்சார சிறப்புடன் உலகெங்கும் மில்லியன் கணக்கான மக்களுக்கு தனியாக கல்வி அறிவை வழங்கியும் வருகிறார்கள். அவர்கள் தசமாம்சம் வழங்கும் வழக்கத்தை அதிகமான இந்துக்கள் பின்பற்றினால், இந்து மதம் வருங்காலத்தில் மேலும் வலுவடையக் கூடும். வரவிருக்கும் ஆண்டுகளில் நாம் செழிப்பான எதிர்காலத்தை எதிர்நோக்கி இருக்கலாம்.

இந்து குழந்தைகள்

தசமாம்சத்தின் சாரத்தை வெளிப்படுத்தும் ஒரு கதையை இப்போது பார்க்கலாம். டெக்சாஸ் மாகாணத்தை சேர்ந்த ஒரு வியாபாரி, கோயில் மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கு பல்வேறு விலையுயர்ந்த பரிசுகளை வழங்குவதை தனது வழக்கமாக கொண்டிருந்தார். நன்கொடை பற்றி சிலமுறை பேசிய அழைப்புக்களுக்கு, அவரிடமிருந்து முடியாது என்ற பதில் என்றுமே வந்தது இல்லை. அவர் ஆதரவு அளிக்கும் அமைப்புக்களுடன் தொடர்புடைய பலர், அவர் சமூகத்திற்கு தாராளமாக வழங்குவதைப் பற்றி நன்றாக அறிந்து இருந்தனர். ஒரு நாள் மாலையில் நடந்த ஒரு பெருவிருந்தில், அவர் ஒரு முக்கிய பேச்சாளரிடம் அறிமுகப்படுத்தப்பட்டார். அந்த வியாபாரியின் தாராள குணத்தினால், தாங்கள் மேற்கொண்ட பல்வேறு நிதியுதவி பிரச்சாரங்கள் வெற்றி அடைந்ததைப் பற்றி அந்த கூட்டத்தின் தலைவர், அங்கே வந்திருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார். அந்த டெக்சாஸ் வியாபாரி பேச எழுந்த போது, அவர் முகத்தில் தெளிவாக அவமானம் தென்பட்டது. “நமது கோயில் அல்லது சமூக காரணத்திற்காக நான் வழங்கிய நன்கொடைகளுக்கு பாராட்டைப் பெறும் தகுதி எனக்கு இல்லை என்று தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னை பொறுத்தவரை, நான் எனது பணம் எதையும் வழங்கவில்லை. எல்லா பணமும் இறைவனுக்கு சொந்தமானது. நான் எனது சிறு வயதில் *தசம பாக விரதத்தை* தொடங்கி, அன்றில் இருந்து தொடர்ந்து நமது மதம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எனது கடமையாக நன்கொடை வழங்கி வருகிறேன்," என்று அவர் கூறினார். தசமாம்சம் வழங்கும் பழக்கமுடைய பலர், அந்த பழக்கத்தை சிறு வயதிலேயே தொடங்கி இருப்பதால், தங்கள் வருமானத்தில் தொடர்ந்து பத்து சதவீதம் ஒதுக்கி வைப்பதைப் பற்றி அவர்கள் அடக்கமாக இருக்கிறார்கள். தாங்கள் இறைவனின் பணத்திற்கு வெறும் பாதுகாவலர்களாக இருப்பதையும், தங்களிடம் இருக்கும் பெரிய அல்லது சிறிய செல்வ வளத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மனப்பூர்வமாக தங்கள் மதத்திற்கு செலுத்த வேண்டிய கடன்களை

செலுத்துகிறோம் என்பதையும் அவர்கள் உண்மையில் உணர ஆரம்பித்து இருப்பதே அதற்கு காரணம் ஆகும்.

கலிபோர்னியா மாகாணத்தில் நிதி நிர்வாகியாக பணிபுரிந்த ஒருவன், தான் தசமாம்சம் வழங்கும் பழக்கத்தை எவ்வாறு தொடங்கினான் என்பதைப் பற்றி விவரித்தான். அவனையும் சேர்த்து சுமார் பன்னிரண்டு வயது நிரம்பிய நான்கு சிறுவர்கள், ஒரு இந்து சமூகத்தில் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். கோயிலில் நடப்பதை கவனித்த பக்தர் ஒருவர் *பூஜை* முடிந்த பிறகு, கோயிலில் எல்லோராலும் மதிக்கப்படும் பெரியவர் ஒருவரிடம் சென்று, "இது ஒரு நல்ல சகுனமாக தோன்றுகிறதே?" என்று கூறினார். அதற்கு அந்த பெரியவர், "நீங்கள் எதை குறிப்பிடுகிறீர்கள்?" என்று தர்மகர்த்தா கேட்டார் “அந்த நான்கு சிறுவர்கள் தானாக முன் வந்து உறுப்பினர்களாகி, தங்களை நமது கோயில் தெய்வங்களிடம் சமர்ப்பித்துக்கொண்டதை குறிப்பிடுகிறேன்," என்று பக்தர் பதில் அளித்தார். "நீங்கள் சொல்வது சரி தான். ஆனால் அவர்கள் இறைவனுக்காக பூக்கள் அல்லது பழங்கள் கொண்டு வரவில்லை. உண்டியலில் காணிக்கையும் செலுத்தவில்லையே!?," என்று தர்மகர்த்தா கூறினார்.

அந்த சிறுவர்களில் ஒருவன் (நிதி நிர்வாகி) அவர்கள் பேசுவதை கேட்டுக்கொண்டு இருந்தான். அதன் பின்னர் அவன் அந்த தர்மகர்த்தாவை அணுகி *பூஜைக்கு* வரும் போதும், கோயிலுக்கு நிதியுதவி செய்ய விரும்பும் போதும் தான் வழக்கமாக என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். ஒரு *பூஜைக்கு* வரும் போது ஒவ்வொரு இந்துவும் பழம் மற்றும் பூக்களை கொண்டு வரவேண்டும் என்றும், இறைவன் வழங்கும் அருளுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவருக்கு வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு வழங்குவது ஒரு ஆன்மீக கடமை என்றும் அந்த தர்மகர்த்தா விளக்கினார். அவர் அந்த சிறுவனிடம் அவன் எவ்வளவு சம்பாதிக்கிறான் என்று கேட்டார். தனது பகுதி நேர வேலை மூலம் வாரத்திற்கு வெறும் $35.00 சம்பாதிப்பதாக அந்த சிறுவன் குறிப்பிட்டான். அந்த சிறுவன் கோயிலுக்கு நிதியுதவியாக வாரத்திற்கு $3.50 வழங்கலாம் என்றும், அவன் தனது *தசமாம்சம்* தொகையை பிரித்து வைப்பதற்கு முன்பாக, *தசம பாக விரதத்தை* தொடங்க வேண்டும் என்றும் அந்த தர்மகர்த்தா பரிந்துரைத்தார். சமஸ்கிருதத்தில் *தசம பாக* என்றால் பத்தில் ஒரு பங்கு என்று அவர் குறிப்பிட்டார். *தசமாம்சம்* என்றால் இறைவனுக்கு என்று பத்தில் ஒரு பங்கு ஒதுக்குவதை குறிக்கிறது. பணத்தை பெற்றதும் பத்தில் ஒரு பங்கை உடனடியாக ஒதுக்கி வைப்பதன் மூலம், மீதம் இருக்கும் பணம் புனிதமடைகிறது. பணத்திற்கு இறையருள் கிடைத்த பிறகு, அதை *அதர்மமான* வழிகளில் பயன்படுத்துவது கடினமாக இருக்கும்.

இந்த வழக்கம் இந்து மதத்தில் தொன்றுதொட்டு இருப்பதாகவும், அது மற்ற மதங்களிலும் வழக்கத்தில் இருப்பதாகவும் அந்த தர்மகர்த்தா விளக்கினார். அதனால் *தசம பாக விரதத்தை* தொடங்கி, *தசமாம்சம்* வழங்கத் தொடங்குவது, இன்றைய இந்து வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கம் ஆகும். *தசமாம்சம்* என்பது பூலோகத்தில் இறைவன் மற்றும் மகாதேவர்கள் தங்கள் படைப்பை நிலைநிறுத்துவதற்காக, ஒருவர் தனது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு அந்த இறைவனுக்கே திருப்பித் தரும் பழங்கால பழக்கம் என்பதை கேட்டு திருப்தி அடைந்தான். கோயிலில் நடந்த அடுத்த திருவிழாவில் இறைவன், மகாதேவர்கள் மற்றும் அவனது *குருவின்* படத்திற்கு நமசுகாரம் அந்த சிறுவன்

செய்து, தயக்கம் இல்லாமல் தனது *விரதத்தை* தொடங்கினான். இந்த நிகழ்வை பார்த்துக்கொண்டு இருந்த சில பெரியோர்கள், முகத்தில் புன்னகையுடன் அவனது சான்றிதழில் கையொப்பமிட்டனர். அவன் கோயிலை விட்டு செல்லும் முன்பாக, மலர்ந்த முகத்துடன் உண்டியலில் காணிக்கையாக $3.50 செலுத்திவிட்டு செல்வதை பார்த்து எல்லோரும் திருப்தி அடைந்தனர். அவன் அப்போது மனப்பூர்வமாக சங்கத்தில் உறுப்பினராகி, எல்லோர் உள்ளங்களிலும் இடம் பிடித்து இருந்தான்.

அந்த சிறுவன் மற்றவர்களுக்கு உதாரணமாக அமைந்த பிறகு, தெய்வீகப்பணிக்காக தனது வருமானத்தில் இருந்து பத்தில் ஒரு பங்கு ஒதுக்கி வைப்பதை தனது வாழ்நாள் வழக்கமாக அமைத்துக் கொண்டான். பல வருடங்கள் கழித்து வியாபாரத்தில் நல்ல அனுபவம் பெற்ற பிறகு, தான் *தசமாம்சம்* செய்வதை என்றுமே நிறுத்தியது இல்லை என்று அந்த சிறுவன் அறிவித்தான். வாழ்நாள் முழுவதும் தான் கடைப்பிடித்த மற்ற பழக்கங்களைக் காட்டிலும், தசமாம்சம் தனக்கு தனிப்பட்ட முறையில் பேருதவி செய்வதாக அவனுக்கு தோன்றியது. அந்த நிதி நிர்வாகி சிறு வயதில் இருந்தே வருமானத்தில் பத்து சதவீத்தை தெய்வீக பணிகளுக்கு ஒதுக்க ஆரம்பித்தான் என்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் ஆகும். இந்த தலைமுறையில் தசமாம்சம் வழங்கும் ஆண்கள் மற்றும் பெண்களில் பலர், தாங்களும் சிறு வயதில் இருந்தே இந்த வழக்கத்தை தொடர்வதாக கூறுகின்றனர்.

தசமாம்சம் வழங்கும் பழக்கம் சிறு வயதில் இருந்தே தொடங்கவேண்டும். பெற்றோர்கள் முன் உதர்ணமாக விளங்கி தங்கள் சிறுவர் சிறுமிகளுக்கு ஊக்கத்தை வழங்கினால், தசமாம்சம் வழங்க வேண்டும் என்று முடிவெடுப்பது கடினமாக இருக்காது. நமக்கு எல்லாம் தாராளமாக வழங்கி இருக்கும் இறைவனுக்கு, நமக்கு கிடைப்பதில் இருந்து ஒரு சிறிய பகுதியை ஒதுக்கி வைத்து, அதன் மூலம் கோயிலுக்கு காணிக்கையாக வழங்குவது நியாயமாக இருக்கும் என்று அன்புடன் வளர்க்கப்பட்ட தெய்வ பக்தியுள்ள குழந்தைக்கு கூறினால், அது அதை உடனடியாக கடைப்பிடிக்கத் தொடங்கும். இது நாம் இறைவன் மற்றும் மகாதேவர்களின் கருணை உள்ளத்திற்கு நன்றி செலுத்துவதற்கான ஒரு வழியாக விளங்குகிறது. இத்துடன் மீதம் இருக்கும் பத்தில் ஒன்பது பங்கு வருமானம், இறையருள் பெறுவதற்கும் ஒரே வழியாக விளங்குகிறது. ஒரு இளைஞன் சம்பாதிக்கும் அல்லது பெறுகின்ற முதல் பணத்தை தசமாம்சமாக வழங்கவேண்டும் என்று கவனமாக கற்றுத் தருவதன் மூலம் அவனது வாழ்நாளுக்கு ஒரு சிறந்த வழக்கத்தை அமைத்துத் தருகிறோம்.

மாதந்தோறும் மதத்திற்கு வழங்கவேண்டிய கடன்களை செலுத்துதல்

இந்துக்களில் பலர் தொடர்ந்து வழங்குவதை கற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் வழிபடும் கோயிலுக்கு, அவர்களின் குழுவிற்கு அல்லது அவர்கள் வாழும் சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை திட்டமிட்டு செயல்படுத்துவது இல்லை. இந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தசமாம்சம் ஒரு ஆன்மீக திட்டத்தை வழங்குகிறது. மாதந்தோறும் வருமானம் வந்ததும், குறிப்பிட்ட தொகையை ஒரு பிரத்யேகமான சேமிப்புக் கணக்கில் சேமித்து அல்லது பணப்பையில் ஒதுக்கி வைத்து, மீண்டும் மாதந்தோறும் அந்த பணத்தை

தனக்கு விருப்பமான மதசார்புள்ள நிறுவனத்திற்கு தொடர்ந்து வழங்கி வருவது மிகவும் முக்கியம் ஆகும்.

நன்கொடை வேண்டும் என்று பிரத்யேகமாக கேட்டு, அவர்கள் பெயர் அச்சிடபட்டால் மட்டுமே பெரும்பாலான இந்துக்கள் வழங்குகிறார்கள். ஆனால் கோயிலுக்கு நிதி பற்றாக்குறை இருக்கிறது என்று தெரிந்தால் உடனே தாராளமாக வழங்குபவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் பலர் கோயிலை ஒரு நிதிப் பிரச்சனையில் இருந்து தங்களால் விடுவிக்க முடிந்தால், அது தங்களுக்கு கிடைத்த வரமாக கருதுகிறார்கள். ஆனால் மாதத்தின் முதல் வாரத்தில் அவர்களும் மற்றவர்களும், தனிச்சையாக தொடர்ந்து பொருளுதவி செய்து வந்தால், இந்த பற்றாக்குறை வந்து இருக்காது என்பதை அவர்கள் புரிந்துக்கொள்வது இல்லை. சிலர் தங்களுக்கு பூசாரிகளை பிடித்து இருந்தால் மட்டுமே வழங்குகிறார்கள். மற்றும் சிலர் ஒரு திருவிழா முழுவதற்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு ஆதரவு அளிக்கும் போது மட்டுமே வழங்குகிறார்கள். வேறு சிலர் தங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறியதால், அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக வழங்குகிறார்கள்.

வாழ்க்கையில் எந்தவித பொறுப்பும் இல்லாமல் லண்டனில் வாழ்ந்துவந்த ஒரு இந்துவின் அறிமுகம் எங்களுக்கு கிடைத்தது. அவர் பல வருடங்களாக எந்த ஒரு *பூஜையிலும்* கலந்துக்கொள்ள வில்லை என்றாலும், தான் ஒரு கோயில் கட்டுவதற்கு செய்த உதவியைப் பற்றி மக்களிடம் செருக்குடன் பேசுவதற்கு, அவர் எந்த வாய்ப்பையும் நழுவவிட்டது இல்லை. அவர் அவ்வப்போது கோயில் கட்டுவதற்கு உதவி செய்ததாக செருக்குடன் பேசியதால், அவர் கோயில் நிர்மாணத்திற்கு ஒரு மிகப்பெரிய தொகையை வழங்கியிருக்கிறார் என்று நாங்கள் நினைக்க ஆரம்பித்தோம். அவர் அந்த எண்ணத்தை மக்களில் பலரது மனங்களிலும் உருவாக்கி இருந்தார். ஆனால் ஒரு முறை ஒருவர் அதிக அக்கறை எடுத்து கோயிலின் பழைய நிதி ஆவணங்களை புரட்டி பார்த்த போது, அதிக தற்பெருமையுடன் பேசிய அந்த நபர் "பெருந்தன்மையுடன்" மொத்தம் $101 கொடுத்தது தெரிய வந்தது! இனி அவரிடம் இருந்து நன்கொடை ஏதும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு, அவர் தவறான கருத்தை இத்தனை வருடங்களாக பரப்பி, மகாதேவர்கள் மற்றும் அவர்களின் கோயிலுக்கு தனது பொறுப்புக்களை புறக்கணித்து வந்திருந்தார்.

தசமாம்சத்தை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும்

இன்றைய இந்து இளைஞர்கள், இறை உணர்வில் ஒரு முழுமையான மற்றும் அதிக அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையின் தேவையை உணர்த்தும் விழிப்புணர்வுக்கு விழித்து வருகிறார்கள். நாம் ஆன்மீக விரிவாக்கம் பெற்று, நமக்காக இருக்கும் பேரின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றால், நாம் நமது இறைநம்பிக்கை மற்றும் அகத்தின் ஆழத்திற்குள் செல்ல வேண்டும் என்று, இந்த தொழில்நுட்ப யுகத்தின் இன்றைய நாகரீகத்தின் போக்கு நமக்கு தெரிவிக்கிறது. *கலியுகத்தின்* இன்றைய காலகட்டத்தில், முரணான சக்திகள் போரில் ஈடுபட்டு வருவதைப் பற்றி, ஆழ்ந்து சிந்திக்கும் இன்றைய இந்துக்கள் தினமும் எச்சரிக்கப்பட்டு வருகிறார்கள். இறைவன் மற்றும் நமது மகாதேவர்களின் விருப்பத்திற்கு பணம், நேரம் மற்றும் திறமைகளை

முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்று காலம் கதறுவதை அவர்கள் அறிந்து இருக்கிறார்கள். உலகில் இந்து மதத்தின் அறிவை மதசார்புள்ள அமைப்புக்கள் மட்டுமே பாதுகாத்து வருகின்றன என்பதையும், கோயில்கள் பக்தர்களை எப்போதும் வரவேற்றுக்கொண்டு இருக்கின்றன என்பதையும் அவர்கள் நன்றாக அறிந்து இருக்கிறார்கள். தங்கள் குழந்தைகளுக்கு கிடைக்கும் பரிசுகள் மற்றும் பின்னர் தங்கள் வருமானத்தில் இருந்தும் *தசமாம்சம்* வழங்குவதைப் பற்றி கற்றுத் தரவேண்டும் என்று பல இந்து பெற்றோர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள்.

இந்த நூற்றாண்டில் எல்லோரது வாழ்க்கையிலும் பணத்தின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. தாங்களே தங்களது அடிப்படை தேவைகளை உருவாக்கிக்கொண்டு வாழ்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் குறைந்து வருகிறது. உடலின் ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்வதற்கு பணம் வாங்கும் சக்தியாக மாறிவிட்டது. விவசாயியும் பணத்தை சார்ந்து இருக்கிறார். சில வருடங்களுக்கு முன்பு வரை, அவர் குடும்பத்தின் உணவுத் தேவையை, நிலம் உழும் ஏர் பூர்த்தி செய்து வந்தது. அவரது நிலத்தை உழுவதற்கு துணை புரிந்த விலங்குகளும் தனது வாழ்வாதாரத்திற்கு நிலத்தை சார்ந்து இருந்தன. ஆனால் இன்று நிலத்தை உழுவதற்கு அவருக்கு பணம் தேவைப்படுகிறது. இன்று அவர் தனக்கு தேவையான பெரும்பாலான உணவை வீட்டில் வளர்க்காமல் வெளியிருந்து வாங்குகிறார். அவரது இயந்திரங்களை இயக்கும் மின்சக்தி மற்றும் அவரது டிராக்டருக்கு தேவையான எரிபொருளை பணம் செலுத்தி வாங்குகிறார். அவரது ஆடைகளை கடையில் இருந்து வாங்குகிறார். அவர் விலைகொடுத்து வாங்கிய வானொலி அல்லது தொலைகாட்சியை அவர் பொழுதுபோக்கியாக பயன்படுத்துகிறார்.

சமீபகாலமாக உழவர்கள் சந்திக்கும் நிலையை, தொழிற்சாலை அல்லது அலுவலகத்தில் பணிபுரியும் மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் பல வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். பலருக்கு அதிகமாக பணம் வைத்து இருப்பது ஒரே குறிக்கோளாக விளங்குகிறது. பணத்திற்கு அதிகரித்து வரும் முக்கியத்துவம், உலக பொருட்கள் உற்பத்தியாகும் இடத்தில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பி உள்ளது. நிலத்தில் வேலை செய்து வாழ்வாதாரத்திற்கு தேவையானதை உருவாக்கிய மனிதன், தனது வாழ்வில் இறைவன் மற்றும் மகாதேவர்களின் படைக்கும் மற்றும் காக்கும் சக்தியை நேரடியாக அனுபவிக்க முடிந்தது. அவன் தனது நல வாழ்விற்கு மழை, சூரியன் மற்றும் செழிப்பான நிலத்தை சார்ந்து இருந்ததால், அவனால் கருணையுள்ளம் கொண்ட இறைவனை இயல்பாக உணர முடிந்தது. உடல் மற்றும் உளவியல் ரீதியான திருப்திக்கு பணம் மூலமாக இருக்கும் போது, அத்தகைய உணர்வை பெறுவது மேலும் கடினமாகிறது. ஒரு இயந்திரம் அல்லது ஒரு தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருளில் இறைவன் மற்றும் மகாதேவர்களின் செயலை காண்பது கடினமாக இருக்கும். அந்த நிலையில் ஒரு காசோலையை அவன் பணமாக மதிப்பதால், அவன் அதன் மீது பக்தியை செலுத்த தூண்டப்படுகிறான். அது அவனது தனிப்பட்ட வசதிகள் மற்றும் மகிழ்ச்சிகளுக்கு மூலமாக விளங்குகிறது.

ஒரு புதிய தரநிலை தேவைப்படுகிறது

இந்த தொழில்நுட்ப யுகத்தில், லௌகீக பொருட்களை உருவாக்க துணையாக இருக்கும் தங்கள் திறமைகள் மற்றும் புத்திசாலித்தனத்திற்கு தாங்கள் மட்டுமே காரணம் என்று நினைப்பதற்கு மக்கள் தூண்டப்படுகிறார்கள். அவர்கள் உலகில் தெய்வீக சக்தி இல்லை என்று நினைக்கிறார்கள் அல்லது அவர்கள் மனதில் இறைவன் மற்றும் மகாதேவர்கள் மிகவும் பின்னுக்கு தள்ளப்பட்டு இருப்பதால் அந்த தெய்வீக சக்திகளுடன் அல்லது தங்களது சொந்த தெய்வீக பண்புடன் அவர்களுக்கு முக்கிய தொடர்பு எதுவும் கிடைப்பது இல்லை. தெய்வீக உணர்விற்கு முக்கியத்துவம் அளிக்க ஒரு புதிய தரநிலை தேவைப்படுகிறது.

இந்து குழந்தைகள் தங்களுக்கு பரிசுகள் அல்லது வருமானம் வந்ததும் தங்களுக்கு அல்லது மற்றவர்களுக்காக பயன்படுத்தாமல், அதில் பத்தில் ஒரு பங்கு ஒதுக்கி வைப்பதன் மூலம் இறைவன் படைத்த பரிசுகளை உணரும் போது, தங்களிடம் இருக்கும் அனைத்தும் இறைவன் வழங்கியவை என்று அவர்கள் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள். சுரங்கம் அல்லது செழிப்பான பூமியில் இருந்து கிடைக்கும் பொருளை, இந்துக்கள் நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொள்ளும் இறைவன் மற்றும் மகாதேவர்கள் இருப்பின் நேரடி விளைவாக இருக்கும் நீளமான படைக்கும் செய்முறை மூலமாக மட்டுமே விளக்க முடியும் என்பதை ஒவ்வொரு இளைஞனும் தனது அகத்தில் ஒப்புக்கொள்கிறான். மனிதனால் உருவாக்கப்படாத அல்லது உருவாக்கமுடியாத அந்த மூல பொருட்களில் கணினி பொறியாளர், பேக்கரி தொழிலாளி அல்லது உற்பத்தியாளர் சம்பாதிக்கும் பணம் தனது முக்கியமான மூலத்தை கொண்டிருக்கிறது. மனித இனத்தின் முயற்சி தேவைப்படும் ஒவ்வொரு பணி அல்லது தொழிலும், மனித படைப்பாற்றலின் வரம்பை கடந்த காரணிகளை கொண்டிருக்கிறது.

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட லௌகீக உடைமைகளின் உரிமையாளராக இறைவன் தொடர்ந்து இருக்கிறார் என்பதை தசமாம்சம் வழங்கும் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். சொத்து அல்லது பணத்தின் மீது இறுதி உரிமை தனிநபரிடம் இல்லாமல், இறைவனிடம் இருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். லௌகீக உடைமைகளுக்கு மக்கள் காப்பாளர்களாக பல வருடங்கள் இருந்தாலும், தங்கள் பூலோக வாழ்க்கையின் முடிவில் அந்த பொறுப்பை துறக்க வேண்டும் என்பதை அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். அந்த பாதுகாக்கும் பொறுப்பு அவருக்கு பின்பு இன்னொரு நபருக்கு வழங்கப்படுகிறது. லௌகீக உலகின் உரிமையாளர்களாக மனிதர்கள் இல்லை என்பதையும், அவர்கள் வெறும் பாதுகாவலர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் மெதுவாக உணர தொடங்குகிறார்கள்.

பகிர்ந்து கொடுப்பதன் மூலம் இறைவனுக்கு மரியாதை செலுத்துதல்

அமெரிக்காவில் பிறந்த தொழிலதிபரான வில்லியம் கோல்கேட் தனது வெற்றிகரமான பல வருட தொழில் வாழ்க்கையில் தசமாம்சம் வழங்கி வந்தார். அவர் உலகெங்கும் இறைவனின் பணி நடைபெறுவதற்கு, தனது கோல்கேட் சோப்பு பொருட்களின் விற்பனையில் இருந்து வெறும் பத்தில் ஒரு பங்கு தராமல், முதலில் பத்தில் இரண்டு பங்கு, பிறகு பத்தில் மூன்று பங்கு மற்றும் இறுதியாக பத்தில் ஐந்து பங்கு வழங்கினார். அவர் தனது வாழ்க்கையின் பிற்காலத்தில், தனது ஈடுபாட்டிற்கு தசமாம்ச கோட்பாடு தான் காரணம் என்று

தெரிவித்தார். அவர் தனது பதினாறு வயதில், நியூ யார்க் நகரில் வேலை தேடுவதற்கு வீட்டை விட்டு வெளியேறினார். அவர் அதற்கு முன்பு ஒரு சோப்பு உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிந்து இருந்தார். அவர் தான் பயணம் செய்த கால்வாய் படகின் கேப்டனிடம் தான் நியூ யார்க் சென்று சோப்பு தயாரிக்கப் போவதாக குறிப்பிட்டார். அதற்கு அந்த கேப்டன், "நீ எதிர்காலத்தில் நியூ யார்க் நகரத்தில் ஒரு முன்னணி சோப்பு தயாரிப்பாளராக வளர்ச்சி பெறலாம். ஆனால் நீ தயாரிக்கும் சோப்பு இறைவன் உனக்கு வழங்கியது என்பதை என்றைக்கும் மறக்கக்கூடாது. உனக்கு கிடைக்கும் வருமானத்தை அவருடன் பகிர்வதன் மூலம் அவருக்கு மரியாதை செலுத்து. உனக்கு கிடைக்கும் பொருட்களில் பத்து சதவீதம் வழங்குவதை பழக்கமாக்கிக் கொள்," என்று அறிவுரை கூறினார். இறைவன் தனக்கு வாய்ப்பை மட்டும் வழங்காமல், தனது பொருட்களை தயாரிக்க பயன்படும் மூல பொருட்கள் உட்பட தனது உடைமைகள் அனைத்தும் இறைவனால் வழங்கப்பட்டது என்பதை உணர்ந்த வில்லியம் கோல்கேட் தசமாம்சம் வழங்க வேண்டும் என்ற தூண்டுதலை பெற்றார்.

தசமாம்சம் பற்றிய கேள்விகளும் பதில்களும்

தசமாம்சம் வழங்குவதால் கடனை எப்படி நீக்க முடியும்? எனது நிதி நிலை குழப்பத்தில் இருக்கிறது. தசமாம்சம் மனம் மற்றும் செயல்களில் ஒழுங்குமுறையை அமைக்க உதவுகிறது மற்றும் ஒழுங்குமுறை இருக்கும் போது கடன் நீங்கிவிடுகிறது. ஒழுங்குமுறையுடன் இல்லாத நிலைகள் அனைத்தும் நீக்கப்படுகின்றன. பணம் வருவதற்கான புதிய வழிகள் பிறக்ககின்றன. இயலுணர்வு வலுவடைகிறது. வழங்குவதால் பெறுவதும் எளிதாகிறது.

என் கடன்களை தீர்ப்பதற்கு முன்பாக நான் தசமாம்சம் வழங்கலாமா? வழங்கலாம். உங்களிடம் இருக்கும் நிதிகளை எல்லாம் இறைவனிடம் வழங்கி அவரது அருளை பெற்று அவற்றை தூய்மைப்படுத்துவதற்கு, தசமாம்சம் சிறந்த மற்றும் மிகவும் யதார்த்தமான முறையாக விளங்குகிறது. நீங்கள் பிரார்த்தனை செய்துக்கொண்டு, மனதில் அன்பு மற்றும் புரிதலுடன் தசமாம்சம் வழங்கினால், நீங்கள் அதை வழங்கிக்கொண்டு கடனில் இருந்து விடுபடலாம். அதை முறையாக பின்பற்றும் போது, அது கடனை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கு தீர்வு காண உதவிகரமாக இருக்கும். இதை பயன்படுத்தி ஆயிரக்கணக்கானோர் வெற்றிக்கண்டு இருப்பதால், அதை உங்களாலும் செய்ய முடியும். சூரியனால் நீராவியாக மாறி மேலே இழுக்கப்படும் நீர்த்துளிகள் மழை மேகங்களாக மாறி, பூமியில் புத்துணர்ச்சி பெற்று பொழியும் மழையுடன், இறைவனின் திருவடிகளில் அன்போடு படைக்கும் தசமாம்சங்களை ஒப்பிடலாம்.

கடன் சுமையை குறைக்க நான் இரவல் வாங்கிய பணத்தை தசமாம்சமாக வழங்கலாமா? கூடாது. பணம் எந்த நோக்கத்துடன் இரவலாக வாங்கப்பட்டதோ, அதைத் தவிர வேறு எதற்காகவும் பயன்படுத்தக் கூடாது.

நான் தசமாம்சம் வழங்கி வருகிறேன். எனது கடன் சுமையும் அதிகரித்துவிட்டது, நான் வழங்குவதை நிறுத்த வேண்டுமா? பல வருடங்களாக தசமாம்சம் வழங்கி வரும் சிலர், தங்கள் செலவுகள் அதிகரித்ததும், அதை ஈடு செய்ய வழங்குவதை நிறுத்தி விடுகின்றனர். தசமாம்சம் வழங்குவதை நிறுத்தியதும், அவர்களின் ஆசைகள் அதிகரித்து, வெளியேற வழி தெரியாத அளவிற்கு கடன் சுமையும் அதிகரித்து விடுகிறது. இதனால் தோன்றும் உலகப்பற்று, அவர்களுக்கும் அவர்கள் பின்பற்றும் மத அமைப்புக்களுக்கும் இடையே ஒரு இடைவெளி உருவாக்குக்கிறது.

தசமாம்சம் வழங்குவதற்கு முன்பாக காத்து இருக்கலாமா? தசமாம்சம் வழங்க வேண்டும் என்று உங்களுக்கு அகத்தில் தூண்டுதலை உணரும் போதே, அதை தொடங்குவது சரியாக இருக்கும். வழங்குவதற்கு பெருந்தொகை சேரட்டும் என்று காத்து இருப்பவர்கள், பொதுவாக என்றுமே தொடங்க மாட்டார்கள்.

தசமாம்சம் வழங்குவதன் மூலம் எனக்கு பழக்கமான வாழ்க்கைத்தரம் மாறி விடுமா? இந்து மதத்தில் ஒருவரது வாழ்க்கைத்தரம் நான்கு இலக்குகள் மூலம் அளவிடப்படுகிறது. அவை *தர்மம்* (அறம் அல்லது நீதி நெறி), *அர்த்தம்* (பொருள்), *காமம்* (இச்சை அல்லது ஆசை) மற்றும் *மோட்சம்* (முக்தி) ஆகும். *அர்த்தம்* மற்றும் *காமம்* அதிக தன்னலம் கருதாமல் இருப்பதற்கு, அதை நெறிமுறைகள் மூலம் *தர்மம்* நிர்வகிக்கிறது. *தசமாம்சம்* வழங்குவது ஒரு *தார்மீக* செயல் ஆகும். ஆன்மீக அடிப்படையில் உங்கள் தரநிலை உயர்கிறது, மற்றும் தசமாம்சம் வழங்குபவரின் தரநிலைகள் பெரும்பாலும் கலாச்சாரம் மற்றும் பொருளாதார ரீதியாகவும் உயர்கிறது.

இறைவனின் உதவியை முழுமையாக நாடி இருந்தால் எனது வருமானம் அதிகரிக்குமா? நீங்கள் விசுவாசத்துடன் தசமாம்சம் வழங்கி, உங்கள் செயல்பாடுகள் தெய்வீக ஆணையுடன் நிரந்தர இணக்கத்தை பெற்ற பிறகு, பணவரவு அதிகரிப்பதை உங்களால் உணர முடியும். உங்களால் கடன் வாங்குவதை தவிர்க்க முடியும் மற்றும் நீங்கள் இறைவனின் குழந்தைக்கு பொருத்தமான வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்வீர்கள். நீங்கள் வழங்கிய தசமாம்சம், அதை வழங்கிய உங்களையும் உங்களுக்கு பிரியமானவர்களையும் நோக்கி அதிக செழிப்பு மற்றும் பெருந்தொகையாக மீண்டும் திரும்பி வரும். இறைவனின் பணம் உட்பட உங்களால் எதையும் வழங்க முடியாது, அவ்வாறு வழங்கும் அனைத்தும் இறுதியில் உங்களை நோக்கி திரும்பி வரும்.

அப்படியென்றால் தசமாம்சம் என்பது இறைநம்பிக்கை கலந்த செயல் ஆகும். சரி தானே? ஆமாம், தசமாம்சம் என்பது இறைநம்பிக்கை கலந்த செயல் ஆகும். மதத்திற்கு செய்யவேண்டிய கடமைகளை அன்புடன் செய்யும் போது, நீங்கள் அன்பு கலந்த இறையருளை பெறுவதற்கு தயாராகிறீர்கள். தசமாம்சம் என்பது *கர்மவினை* விதியின் ஒரு நேர்மறையான பயன்பாடு ஆகும். நீங்கள் தாராள மனப்பான்மையுடன் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியுடனும் வழங்கும் போது, நீங்கள் உங்களை நோக்கி செழிப்பு மற்றும் எண்ணற்ற மகிழ்ச்சிகரமான அனுபவங்களை ஈர்க்கிறீர்கள். இந்த வழங்கும் உணர்வு அந்தர்லோகத்தில் இருந்து கண்களுக்கு தெரியாத *தேவர்களை* ஈர்க்கிறது, மற்றும் அவர்கள்

உங்களுக்கு பல வாய்ப்புக்களை திறந்து வைத்து உங்கள் வரவை அதிகரிக்கிறார்கள்.

தசமாம்சம் காரணமாக எனது வாழ்கையில் எதிர்மறை கர்மவினைகள் ஏற்படுத்தும் விளைவுகளை அனுபவிக்கும் போது எனக்குள் நம்பிக்கை பிறக்குமா? மக்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்மறை *கர்மவினைகளின்* விளைவுகள் மீது அதிக கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் நன்கொடைகளை தாராளமாக வழங்கும் போது, அவர்கள் பலனாக பல அனுபவங்களை பெறுகின்றனர். *கர்மவினையின்* தெய்வீக வீதிக்கு ஏற்ப, அவர்களின் வாழ்க்கைகளில் அற்புதங்கள் நடக்கின்றன. பெரும்பாலான இந்துக்கள் தங்களுக்கு தெரியாமல் *கர்மவினை* விளைவுகளை (நல்ல, தீய மற்றும் இரண்டும் கலந்த) உருவாக்குகிறார்கள் மற்றும் சிலர் தெரிந்து அந்த விளைவுகளை உருவாக்குகிறார்கள். இந்த விதியை உங்களுக்கு அனுகூலமாக பயன்படுத்துவதற்கு, உங்கள் பணத்தை செலவழிக்கும் போது தெய்வீக வழிகாட்டலை நாடுங்கள். அதன் மூலம் உங்களால் மேலும் பல செயல்களை செய்ய முடிவதையும், உங்களுக்கு கிடைக்கும் பலன்களையும் பார்த்து நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

சுய தொழில் செய்வோருக்கு தசமாம்சம்

சுய தொழில் செய்வோர் வெற்றிகரமாக தசமாம்சம் வழங்குவதற்கு ஏதாவது முக்கிய அம்சத்தின் மீது கவனம் செலுத்த வேண்டுமா? ஆமாம். நீங்கள் வியாபாரம் தொடர்பான பணத்தையும் உங்கள் குடும்பம் தொடர்பான பணத்தையும் பிரித்து வைக்க வேண்டும். இதற்கு நீங்கள் வியாபார செலவுகளுக்கு ஒன்றும் மற்றும் குடும்ப செலவுகளுக்கு ஒன்று என்று இரண்டு வெவ்வேறு வங்கிக் கணக்குகளை வைத்து இருக்க வேண்டும்.

சுய தொழில் செய்வோர் தாங்கள் வழங்க வேண்டிய தசமாம்சத்தை எவ்வாறு கணக்கிடுகிறார்கள்? ஒரு வியாபாரத்தின் முதலாளி அல்லது கூட்டாளி, அந்த வியாபாரத்தில் தான் செய்த பண மீட்பை மையமாக வைத்து, தான் வழங்க வேண்டிய தசமாம்சத்தை கணக்கிடுகிறார். முதலில் அவர் தனது தொழிலில் இருந்து மாதந்தோறும் செய்த பண மீட்பில் இருந்து பத்தில் ஒரு பங்கு வழங்குகிறார். இரண்டாவதாக தான் மாதந்தோறும் செய்த பண மீட்பை விட அதிகமாக, தனக்கு ஒரு வருட லாபத்தில் கிடைக்கும் பங்கின் அடிப்படையில் வழங்குகிறார்.

இந்த கருத்தை சுயமாக வியாபாரம் செய்யும் ஒருவரின் உதாரணத்துடன் விளக்கவும். உதாரணத்திற்கு ஒரு வியாபாரத்தில் தனி உரிமையாளராக இருக்கும் ஒருவர் மாதம் $2500 தொகையை வியாபாரத்தில் இருந்து மீட்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் தனது வியாபார வங்கிக்கணக்கில் இருந்து முதலில் பணத்தை தனது சொந்த வங்கிக்கணக்கிற்கு மாற்ற ஒரு காசோலையை எழுதுகிறார். அதன் பிறகு அவர் $250 தொகையை தசமாம்சமாக வழங்குவதற்கு இன்னொரு காசோலையை எழுதுகிறார். இரண்டாவதாக ஜனவரி மாதத்தில் அவர் வியாபாரத்தின் நிதி அறிக்கைகள் நிறைவுப்பெற்று, வரிகளுக்கு பின் லாபம் $45,000 என்று தெரியவருகிறது. அவர் அந்த வருடத்தில் முன்பே $30,000 மீட்டு விட்டதால், அவர் மாதந்தோறும் செய்த பண மீட்புத்

தொகையை விட நிகர லாபம் $15,000 கூடுதலாக இருக்கிறது. அதனால் அவர் இந்த தொகைக்கு $1,500 வழங்க வேண்டும். இதனால் அவர் தனது வியாபாரத்தில் இருந்து கூடுதலாக $1,500 எடுத்து, அதை தனது சொந்த வங்கிக்கணக்கிற்கு மாற்றி, $1,500 தொகையை தசமாம்சம் வழங்க ஒரு காசோலையை தயார் செய்கிறார்.

எனது வியாபாரத்தில் லாபம் வரவில்லை என்றாலும் நான் தசமாம்சம் வழங்க வேண்டுமா? வியாபாரம் மந்தமாக இருக்கிறது என்றால் ஒருவர் தனது குடும்ப வருமானத்தில் இருந்து *தசமாம்சம்* வழங்கும் பழக்கத்தை தொடர்வது முக்கியம் ஆகும்.

இந்த கேள்வி சிறிது நுணுக்கமாக இருக்கலாம். ஒரு வருடத்தில் வியாபாரத்தின் நிகர லாபத்தில் எனது பங்கை காட்டிலும் நான் வியாபாரத்தில் செய்த பண மீட்பு அதிகமாக இருந்தால், நான் வழங்க வேண்டிய தசமாம்சத்தை எப்படி கணக்கிடுவது? இதை அடுத்த வருடத்திற்கு முன்னெடுத்து சென்று அதனோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு 1995 ஆம் ஆண்டு நீங்கள் செய்த பண மீட்பு நிகர லாபத்தின் பங்கை காட்டிலும் $10,000 அதிகமாக இருந்தது என்று வைத்துக் கொள்வோம். 1996 ஆம் ஆண்டு லாபத்தில் உங்கள் பங்கு அந்த ஆண்டு நீங்கள் செய்த பண மீட்பை காட்டிலும் $8,000 கூடுதலாக இருந்தது, மற்றும் 1997 ஆம் ஆண்டு லாபத்தில் உங்கள் பங்கு, அந்த ஆண்டு நீங்கள் செய்த பண மீட்பை காட்டிலும் $15,000 கூடுதலாக இருந்தது என்றால், 1995 ஆம் ஆண்டு நீங்கள் கூடுதலாக தசமாம்சம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. 1996 ஆம் ஆண்டும் கூடுதலாக எதுவும் செலுத்தத் தேவையில்லை. 1997 ஆம் ஆண்டு $13,000 தொகையில் 10% அல்லது $1,300 செலுத்த வேண்டும்.

தசமாம்சம் மற்றும் இந்து சங்கம்

நான் நீண்டகாலமாக கோயிலுக்கு ஒரு டாலர் அல்லது ரூபாயை வழங்கவில்லை. இனிமேல் என்னால் தசமாம்சம் வழங்கமுடியும் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் வழங்குவதை நிறுத்திய போது, நீங்கள் ஒரு அகத்தின் கதவை மூடிவிட்டதை உணரவில்லையா? பல பக்தர்கள் தசமாம்சம் வழங்கவில்லை என்றாலும் தாராளமாக அன்பை செலுத்தி, வழங்கி வாழ்வதற்கு என்று தொடக்கத்தில் சிறிய அளவில் வழங்கி வருவார்கள்.

எனது மதத்திற்கு நான் வழங்க வேண்டிய கடனை யாருக்கு வழங்குவது என்று முடிவு செய்வது எப்படி? உங்கள் ஆன்மீக வாழ்க்கைக்கு நெருங்கிய தொடர்பில் இருந்து, உங்களுக்கு ஆறுதல் அளிக்கும் பாரம்பரியத்தின் இந்து தலைவர் அல்லது சங்கம், பெரும்பாலும் உங்களது விருப்பமாக இருக்கும். இந்த ஆதரவாளர் உங்கள் சமூகத்தில் இருக்கலாம் அல்லது 10,000 மைல் தூரத்தில் இருக்கலாம். அல்லது உங்கள் சமூகத்தில் நீங்களும் உங்கள் குடும்பமும் வழிபடும் கோயிலாக இருக்கலாம். அது உங்களது நிதியுதவி மூலம் வலிமையும் நம்பிக்கையும் பெறக்கூடும். உங்களுக்கு அதைப்போன்ற ஒரு சமூகம் இல்லையென்றால் அல்லது நீங்கள் வழங்கும் தசமாம்சத்தை சிறப்பாக பயன்படுத்தி சனாதன தர்மத்தின் வளர்ச்சிக்கு யார் வலுவாக ஆதரவு

தருவார்கள் என்று தெரியவில்லை என்றால், நீங்கள் உங்களுக்கு விருப்பமான ஒன்று அல்லது பல இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் நிதிகளுக்கு வழங்க ஆரம்பிக்கலாம், அல்லது உங்களுக்கு விருப்பமான ஒன்று அல்லது பல சங்கங்கள் பயன் அடைவதற்கு ஒரு புதிய நிதியை உருவாக்கலாம். இந்தியாவின் பல்வேறு ஆன்மீக பாதைகள் மற்றும் பாரம்பரியங்களுக்கு ஆதரவு தெரிவிக்க, இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் ஒரு மிகவும் பிரத்யேகமான அடித்தளமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. உங்கள் வருமானத்தில் பத்து சதவீதத்தை இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவலுக்கு செலுத்தி உங்கள் கடமையை உடனே தொடங்குங்கள். அதன் பிறகு சில மாதங்கள் கழித்து, நீங்கள் அதிக ஈடுபாட்டுடன் உங்கள் வலிமையை பயன்படுத்தி வலுப்படுத்த விரும்பும், விருப்பமான சங்கம் அல்லது திட்டப்பணியை தேர்வு செய்யுங்கள்.

இதை நினைவில் வைத்துக்கொண்டு நான் ஒவ்வொரு சங்கத்தை கவனமாக ஆய்வு செய்ய வேண்டுமா? ஆமாம்! நாம் பங்கு சந்தையில் செய்த முதலீட்டிற்கு நல்ல பாதுகாப்பான லாபம் கிடைக்கவேண்டும் என்று நினைப்பதைப் போல தசமாம்சத்தையும் கருத வேண்டும். பணத்தை விவேகமாக செலவழிப்பது நிறுவன தலைவர்களின் கடமையாக இருப்பதைப் போல மதத்தலைவர்களும் பணத்தை கவனமாக செலவழிக்க வேண்டும். எதிர்காலத்தில் நல்ல வளர்ச்சிபெற்று ஆன்மீக பலன்களை வழங்கும் ஒரு அமைப்பை தேர்ந்தெடுங்கள்.

பெறுபவர் மற்றும் வழங்குபவருக்கு என்று ஏதேனும் பொறுப்பு இருக்கிறதா? ஆமாம்! இருவரும் இறைவனின் பணத்திற்கு பாதுகாவலர்களாக இருக்கிறார்கள். நீங்கள் தசமாம்சத்தை வழங்க விரும்பும் ஒரு கோயில், இந்து தேவாலயம் அல்லது அமைப்பை கவனமாக தேர்ந்து எடுங்கள்.

வழங்கும் வழிமுறைகள்

நான் தொடக்கத்தில் வழங்கும் தசமாம்சம் பெரிய தொகையாக இருக்காது. தலைவர்கள் என்னைப் பற்றி தவறாக நினைப்பார்களா? பக்தர்கள் வழங்கும் காணிக்கைகளை வைத்து, அவர்களைப் பற்றி மதத்தலைவர்கள் தவறாக நினைக்க மாட்டார்கள் மற்றும் நினைக்கவும் கூடாது. இந்துக்கள் தங்கள் வருமானத்திற்கு ஏற்ப வழங்குகிறார்கள். செல்வந்தர்களுக்கு தசமாம்சம் வழங்குவது கடினமாக இருக்காது. ஆனால் ஒரு பக்தரின் சூழ்நிலை காரணமாக அவர் ஒரு சிறிய நன்கொடையை வழங்குகிறார் என்றால் அது இறைவனுக்கு பெருமதிப்புமிக்க தொகையாக இருக்கும். தங்களுக்கு கிடைக்கிற வருமானம் சிரியதோ பெரியாதோ, அதில் இருந்து ஒவ்வொருவரும் மதத்திற்கு என்று தனது கடமையாக பத்து சதவீதம் வழங்குவதால், தசமாம்சம் முற்றிலும் நியாயமாக இருக்கிறது. மாதத்திற்கு $300 சம்பாதிப்பவரும் $300,000 சம்பாதிப்பவரும், ஒரே சதவீதத்தில் தசமாம்சம் வழங்குகிறார்கள்.

தசமாம்சம் ஒரு பரிசாக கருதப்படுமா? உலகில் இருக்கும் மதங்கள் தசமாம்சத்தை ஒரு பரிசாக கருதாமல் ஒரு கட்டணமாக கருதுகின்றன.

பெரும்பாலும் தசமாம்சம் வழங்க வழி இல்லாதவர்கள், தங்களை நம்பி கடன் கொடுத்தவர்களுக்கும் பணம் செலுத்த முடிவதில்லை.

பத்து சதவீதத்திற்கு மேலே தருவது முறையாக இருக்குமா? கொடுக்கப்பட வேண்டிய தசமாம்ச தொகையை வழங்கிய பிறகு, கோயில் நிர்மாணம் மற்றும் மதத்தின் மற்ற நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்குவதைப் போன்று மததிற்கு மேலும் பல உதவிகளை செய்யலாம். கடமை அல்லது கட்டணமாக இருக்கும் *தசமாம்சம்* வழங்குவதற்கும் மற்றும் மீதம் இருக்கும் 90% இருந்து மதத்திற்கு வழங்குவதற்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. தசமாம்சம் வழங்குபவர்களில் பலர் கட்டிடம் கட்டுவது மற்றும் மற்ற ஆக்கபூர்வமான பணிகளுக்கு கூடுதலாக ஐந்து அல்லது பத்து சதவீதம் வழங்குகின்றனர். இதைப்போன்ற நன்கொடைகளை தனியாக வாழும் ஆண்கள் மற்றும் பெண்கள் வழங்குகின்றனர்.

வியாபார நோக்கத்தில் அல்லாமல் சொந்த வீட்டில் வளர்க்கும் பொருட்களையும் தசமாம்சமாக வழங்கலாமா? வழங்கலாம். பத்து தேங்காய்களுக்கு ஒன்று, பத்து வாழைப்பழங்களுக்கு ஒன்று என்று நீங்கள் வளர்க்கும் உணவுப்பொருட்களில் பத்தில் ஒரு பங்காக வழங்கும் ஒரு தேங்காயும், ஒரு வாழைப்பழமும் உங்களுக்கு சொந்தமாக இல்லாமல் இறைவன் மற்றும் மகாதேவர்களுக்கு சொந்தமாக இருப்பதால், அவ்வாறு செய்வதில் தவறில்லை.

ஒருவர் தனது நேரத்தில் பத்தில் ஒரு பங்கு வழங்கலாமா? தசமாம்சம் நேரம், கல்வி அறிவால் பெற்ற திறமைகள் மற்றும் இயல்பான திறமைகளுக்கும் பயன்படுத்தலாம். உதாரணத்திற்கு பக்தர் ஒருவர் தச்சர் அல்லது தையல்காரராக இருந்தால், அந்த திறமைகள் உள்ளூரில் இருக்கும் ஒரு இந்து அமைப்பிற்கு பயனுள்ளதாக இருக்கும். திறமைகள் எதுவாக இருந்தாலும், ஒவ்வொருவரும் தங்களின் மதத்தின் அமைப்புக்களுக்கு தங்கள் நேரத்தில் பத்து சதவீதத்தை ஒவ்வொரு வாரமும் வழங்க வேண்டும். நாற்பது மணி நேரம் கொண்ட ஒரு வாரத்தில், பத்து சதவீதமாக வாரத்திற்கு நான்கு மணி நேரம் என்று ஒரு வருடத்திற்கு 208 மணி நேரம் என்று நாங்கள் கணக்கிடுகிறோம். வாரத்திற்கு குறிப்பிட்ட நேரம் என்று ஒதுக்குவது மட்டும் அல்லாமல், முக்கிய பணிகளில் முழுநேரமும் ஈடுபடுத்திக் கொள்வதும் தசமாம்சமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உதாரணத்திற்கு லண்டன் நகரில் சுவாமிநாராயண் கோயிலை கட்டும் போது, பல பக்தர்கள் தங்கள் வேலைகளில் இருந்து விடுப்பைப் பெற்று, அந்த அற்புதமான கோயிலை நிர்மாணம் செய்ய தினமும் பன்னிரண்டு மணி நேரம் உழைத்தார்கள். திறந்த மனதுடன் நேர்மையாகவும் தனிச்சையாகவும் தசமாம்சம் வழங்குபவர்கள், சேவை செய்வதிலும் தங்கள் நேரத்தில் பத்து சதவீதத்தை வழங்குவார்கள் என்பதை நாங்கள் அனுபவப்பூர்வமாக உணர்ந்து இருக்கிறோம். வரவுக்கு மீறி செலவு செய்பவர்கள், ஏமாற்றி சம்பாதிப்பவர்கள் மற்றும் சூழ்ச்சியுடன் செயல்படுபவர்களால் தங்கள் மதத்திற்கு சேவை செய்ய 10 சதவீத நேரத்தை ஒதுக்க முடிவதில்லை. இதையும் நாங்கள் அனுபவத்தில் பார்த்து இருக்கிறோம்.

எனக்கு மாதந்தோறும் வரும் சமூகப்பாதுகாப்பு ஊதியத்தில் இருந்து தசமாம்சம் வழங்கலாமா? வழங்கலாம். நீங்கள் வேலை செய்த போது பெற்ற வருமானத்தில் இருந்த சமூகப்பாதுகாப்பு பிடிப்புக்களுக்கும் நீங்கள் தற்போது பெறும் சமூகப்பாதுகாப்பு ஊதியத்திற்கும் எந்த நேரடி தொடர்பும் இல்லை என்பதால், பணி ஓய்வு பெற்ற பிறகு சமூகப்பாதுகாப்பு சலுகை பெறுவதற்காக அரசுக்கு நீங்கள் செலுத்திய வரியாக அந்த பிடிப்புத் தொகையை கருதுவது நல்லது. உங்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை பொருத்து, உங்களை பணியில் அமர்த்திய நிறுவனமும் சமூகப்பாதுகாப்பு திட்டத்திற்கு தனது பங்கை அளித்து வருகிறது. சமூகப்பாதுகாப்பில் உங்களுக்கு பிடிக்கப்பட்ட கூட்டுத்தொகை, நீங்கள் சமூகப்பாதுகாப்பில் இருந்து மாதந்தோறும் பெறும் ஊதியத்தில் ஒரு சிறிய பகுதியாக இருக்க வாய்ப்புள்ளது.

மொத்த வருமானம் மற்றும் நிகர வருமானத்திற்கும் என்ன வித்தியாசம்? மொத்த வருமானம் என்பது பிடிப்புக்களுக்கு முன்பாக நீங்கள் சம்பாதித்த மொத்த தொகையை குறிக்கிறது. நிகர வருமானம் என்பது பிடிப்புக்கள் போக நீங்கள் பெறும் சம்பாத்தியத்தை குறிக்கிறது. கூட்டாட்சி மற்றும் மாகாண அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள், சமூகப்பாதுகாப்பு மற்றும் இதர அம்சங்கள் பிடிப்புக்களில் அடங்கும். தசமாம்சம் என்பது மொத்த வருமானத்தில் பத்து சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது.

தசமாம்சத்தின் முறையான நோக்கம்

மக்கள் தசமாம்சத்தை எவ்வாறு தவறாக பயன்படுத்துகிறார்கள்? வியாபாரம் செய்யும் பல புத்திசாலிகள் "தசமாம்ச புகலிடங்களை" உருவாக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் வியாபாரத்தில் இருந்து சிறிதளவு மட்டுமே செலவு செய்து, லாபத்தில் மீதமுள்ள பகுதியை வாடகை, உணவு மற்றும் இதர செலவுகள் என்று வியாபாரத்திற்கு செலவழிக்கின்றனர். அதாவது அதிக தசமாம்சம் வழங்குவதை தவிர்க்க, அவர்கள் ஒரு தசமாம்ச புகலிடத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். இறுதியில் அவர்களின் மனசாட்சி இடம் கொடுக்காத போது, அவர்கள் தங்கள் செய்முறையை மாற்றிக்கொள்கின்றனர். மற்றவர்கள் தங்களுக்கு வரிகளில் சலுகை கிடைக்கிறது என்பதற்காக மகிழ்ச்சியுடன் தசமாம்சம் வழங்குகிறார்கள். தாங்கள் தசமாம்சம் வழங்குவதன் மூலம் தங்களுக்கு வரியில் எவ்வளவு சலுகை கிடைக்கும் என்பதை அவர்கள் துல்லியமாக கணக்கிட்டுக் கொள்கின்றனர். இதுவும் தசமாம்சம் வழங்குவதன் முறையான நோக்கம் அல்ல. தசமாம்சம் வழங்குவதாக விரதம் இருக்கும் சிலர், இறைவனின் பணத்தை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு வட்டி பெறுவதற்கு அல்லது கடன் அடைப்பதற்கு என்று பயன்படுத்தி, இறுதியில் மிகவும் சிரமப்பட்டு பணத்தை ஒன்று திரட்டி தசமாம்சம் வழங்குகின்றனர். இந்த முறையில் தவறான முறையில் பணத்தை கட்டுப்படுத்தி வழங்குவதும் *தசமாம்சத்தின்* நோக்கம் இல்லை.

எங்கள் அமைப்பை சேர்ந்த பக்தர்கள் அத்தகைய சிந்தனை இல்லாமல், சுதந்திரமாகவும் முழு மனதுடனும் நன்கொடை வழங்குகிறார்கள். சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் தசமாம்சம் வழங்கும் தொகைக்கு வரிச்சலுகை கிடைப்பது இல்லை. அவர்கள் மனப்பூர்வமாக தசமாம்சம் வழங்குவதால், அவர்களுக்கு *புண்ணியம்* கிடைக்கிறது. அதனால் இது அறிவுசார் வழக்கமாக

இல்லாமல் ஒரு ஆன்மீக வழக்கமாக இருக்கிறது. தசமாம்சம் என்பது இறைவனின் பணத்தில் பத்தில் ஒரு பங்கை, இறைவனுக்கே முதல் செலவாக செய்யும் ஒரு எளிமையான பழக்கம் ஆகும். ஒருவர் உங்களுக்கு பத்து டாலர் கொடுத்தார் என்றால், ஒரு டாலரை இறைவனுக்கு செலுத்தி, மீதமுள்ள பணத்தை உங்கள் பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்ளலாம். உங்கள் மொத்த வருமானம் $1,000 மற்றும் நிகர வருமானம் $700 ஆக இருக்கும் போது, "என்னால் $1,000 மொத்த வருமானத்தில் $100 தரமுடியாது. ஏனென்றால் சமூகப்பாதுகாப்பு மற்றும் மற்ற பயன்களுக்காக பிடிப்புக்கள் போக எனக்கு $700 மட்டுமே கிடைக்கிறது," என்று புலம்பக்கூடாது. தசமாம்சம் மொத்த வருமானத்தில் கணக்கிடப்படுகிறது மற்றும் முழுமையாக $100 தரவேண்டும்.

இத்தகைய முறைகேடு நடக்காமல் இருக்க எந்த மனநிலையுடன் இருக்க வேண்டும்? ஒருவரது வருமானம், உடைமைகள் அல்லது நேரத்தில் பத்தில் ஒரு பங்கு வழங்கும் தசமாம்சம் என்பது மதத்தில் வலுவான ஈடுபாடு ஆகும். இது ஒரு வியாபார பரிந்துரை இல்லை. ஒருவரது சக்தியில் 100 சதவீதம் இறைவனிடம் இருந்து வருகிறது, ஒருவரது உடைமைகள் 100 சதவீதம் இறைவனிடம் இருந்து வருகின்றன, ஒருவரின் செயல்பாடு மற்றும் ஆக்கத்திறன் 100 சதவீதம் இறைவனிடம் இருந்து வருகிறது என்ற கொள்கையின் அடிப்படையில், இது ஒரு மதசார்புள்ள ஈடுபாடு ஆகும். இறைவன் மற்றும் மகாதேவர்கள் தங்கள் பணிக்காக 10 சதவீத்தை தக்க வைத்து, 90 சதவீதத்தை திரும்பித் தருகிறார்கள். அவர்கள் என்ன பணி செய்கிறார்கள்? அனைத்து வகையான மதசார்புள்ள அமைப்புக்கள் மூலம் மனித நேயத்தை மேம்படுத்துவதே அவர்கள் பணி ஆகும்.

இந்தியாவை சேர்ந்த ஒரு புகழ்பெற்ற *சுவாமி* தேங்காய்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே நம்பி தனது அமைப்பை தொடங்கினார். தென்னந்தோப்பு இருக்கும் பக்தர்கள் தங்கள் மரங்களில் இருந்து பறிக்கும் முப்பது தேங்காய்களில் மூன்றை அந்த சுவாமிக்கு வழங்கி விடுவார்கள். "நான் அந்த தேங்காய்களில் ஒன்றை சமூகப் பாதுகாப்பிற்கு சேமித்து வைப்பதால், *சுவாமிக்கு* முப்பது தேங்காய்களில் இரண்டு கொடுத்தால் போதும்," என்று அவர்கள் காரணங்கள் சொல்வது இல்லை. "என்னால் விற்கமுடியாத சிறிய தேங்காய்களை சுவாமிக்கு தருகிறேன்," என்று அவர்கள் நினைப்பது இல்லை. உண்மையான பக்தர்களாக இருக்கும் அவர்கள், சிறப்பாக இருக்கும் மூன்று தேங்காய்களை தேர்வு செய்து, அவற்றை *சுவாமிக்கு* வழங்குவார்கள். *சுவாமி* அந்த தேங்காய்களை விற்று தனது மதசார்புள்ள அமைப்புக்களின் தேவைகளுக்கு பயன்படுத்துவார். இந்த பழக்கத்தின் மூலம் அந்த சமூகம் முழுவதும் வளர்ச்சி பெற்றுள்ளது.

தென்னிந்தியாவில் இன்னொரு குரு மகாசன்னிதானம் இருக்கிறார். அவர் ஊரில் இருக்கும் சீடர்கள் தங்கள் விளைச்சலில் இருந்து பத்து சதவீத நெல்லை அவருக்கு வழங்கிவிடுவார்கள். அவர்கள் ஒவ்வொரு நெல்லாக எண்ணுவது இல்லை. அவர்கள் பத்து சதவீத விளைச்சலை எடுத்து *சுவாமிக்கு* வழங்கி விடுவார்கள். நாங்கள் அவரது ஆசிரமத்திற்கு சென்று இருந்த போது, ஒரு பெரிய அறையில் பன்னிரண்டு முதல் பதினைந்து அடி உயரத்திற்கு அரிசி மூட்டைகள் அடுக்கி வைத்து இருப்பதை பார்த்தோம்.

தசமாம்சம் வழங்குவதை ஆரம்பித்த பிறகு விரதம் இருக்கவும்
நீங்கள் ஒரு இளைஞராக இருந்து, இதுவரை தசமாம்ச விரதம் எடுக்கவில்லை என்றால், அதற்கு இதுவே உரிய தருணமாக இருக்கும். உங்களால் நீண்டகாலத்திற்கு இந்த ஈடுபாட்டை முழுமையாக நிறைவேற்றமுடியும் என்று உங்கள் மனதில் பதிய வைப்பதற்கு, முதலில் ஆறு அல்லது மேலும் கூடுதலான மாத காலத்திற்கு முதலில் தசமாம்சம் வழங்கத் தொடங்குங்கள். நீங்கள் உங்களை திருப்திப்படுத்திய பிறகு, விரதம் இருக்க ஒரு மங்களகரமான நாளை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த வழக்கத்தில் உங்கள் குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு *சனாதன தர்மத்தின்* தெய்வீக விதிகள் மீதும் *தசமாம்ச* கோட்பாட்டின் மீதும் நம்பிக்கை இருந்தால், அவர்கள் *தசமாம்சம்* வழங்க தயாராக இருக்கக்கூடும். அவர்களுக்கும் மதத்தின் இந்த பழங்கால வழக்கத்தில் திருப்தியும் அமைதியும் கிடைத்து, நீங்களும் தயாராக இருக்கும் போது, அவர்கள் தங்களின் *தசம பாக விரதத்தை* தொடங்கட்டும். விரதத்தை தொடங்கும் நபர்கள், பின்வரும் பத்தியை தங்கள் வீட்டு *பூஜை* அறை அல்லது கோயிலில் இறைவன் மற்றும் மகாதேவர்கள், குடும்பம், *குரு* அல்லது மதிப்பிற்குரிய சான்றோர் முன்பாக தொடர்ந்து சொல்ல வேண்டும். *தசம பாக விரதத்தை* மூன்று முறை சொல்லி, தசமாம்சம் வழங்க ஒரு உடன்படிக்கை தயார் செய்துக் கொள்ளுங்கள். விரதம் இருப்பதை ஆவணம் செய்யும் *விரத* சான்றிதழை நாங்கள் இங்கே இணைத்துள்ளோம். இதை நகல் எடுத்து பெரிதுபடுத்தி, அதில் கையொப்பமிட்டு படச்சட்டம் செய்துக்கொள்ளுங்கள் அல்லது மற்ற முக்கிய ஆவணங்களுடன் அதை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

> *மூன்று லோகத்தை சேர்ந்த தெய்வீக சக்திகளே, நாங்கள் ஏகதந்த விநாயகரின் தரிசனத்தில் எங்கள் மனங்களை ஒடுக்க வேண்டும். நாங்கள் யானை முகத்தை உடைய அந்த தொந்தி கணபதியை தியானம் செய்ய வேண்டும். அவர் எங்களை நல்ல பாதையில் வழிநடத்தி செல்லட்டும். நான், _____ [பக்தரின் பெயர்], உங்கள் மீதும், பரமேசுவரன் மீதும், சிவபெருமான் மீதும், சைவ தர்மத்தின் மகாதேவர்கள் மீதும், சைவ தர்மத்தின் மீதும் நம்பிக்கை வைத்து இருக்கிறேன். எனது ஒவ்வொரு பொருள் மற்றும் ஆன்மீக தேவையை வழங்கும் உங்கள் நற்குணத்தை நான் அன்பு மற்றும் விசுவாசத்துடன் உணர்கிறேன். நான் சிவபெருமானுக்கு நன்றி தெரிவிப்பதற்கும், பூமியில் நீங்கள் உங்கள் பணியை சிறப்பாக செய்து நிலைநிறுத்துவதற்கு உதவியாக நான் எனது பங்கை அளிப்பதற்கும், நான் இந்த தசமாம்ச கோட்பாட்டை ஒரு செய்முறையாக ஏற்றுக்கொள்கிறேன். எனது ஈடுபாட்டை தெரிவிக்கும் வண்ணம், நான் இன்றிலிருந்து தொடர்ந்து தசமாம்சம் வழங்க முடிவு செய்துள்ளேன்.*

தசமாம்சம் வழங்கும் உங்கள் நோக்கத்தை தெரிவியுங்கள்
நீங்கள் உங்கள் விரதத்தை தொடங்கியதும் கோயில், இந்து தேவாலயம் அல்லது சமூகத்தின் தர்மகர்த்தாவிடம், அவர்களின் அமைப்பிற்கு உங்கள்

தசமாம்சத்தை, ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில் வழங்க எடுத்துள்ள முடிவைப் பற்றி தெரிவியுங்கள். நீங்கள் நிதியுதவி வழங்க அவர்களின் அமைப்பை தேர்வு செய்ததை நினைத்து மகிழ்ச்சி அடைந்து, அவர்கள் தங்கள் வருடாந்திர வரவு செலவு திட்டத்தில் உங்கள் பங்கை இணைத்துக் கொள்வார்கள்.

வலுவான நிதி நிர்வாக பழக்கங்கள்

நீங்கள் தொடர்ந்து தசமாம்சம் வழங்க முடிவு செய்த பிறகு, உங்களுக்கு துணையாக சில நிதி நிர்வாக பழக்கங்கள் இருக்கின்றன. அவை பல வருடங்களாக தசமாம்சம் வழங்கும் அனுபவம் மூலமாக உருவாக்கப்பட்டவை.

1. வரவு செலவு திட்டத்தில் தசமாம்சம் வழங்குவதை முதல் செலவாக வைத்துக்கொள்ளுங்கள்

உங்கள் வீட்டின் வரவு செலவு பட்டியலில் தசமாம்சம் வழங்குவதை முதலில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு அருகில் இருக்கும் புத்தகக் கடையில் இருந்து வீட்டு வரவு செலவு கணக்கை திட்டமிடும் புத்தகத்தை வாங்கிக்கொள்ளவும், மற்றும் உங்கள் கணினியில் வீட்டு வரவு செலவை கணக்கிடும் செயலியை வாங்கிக் கொள்ளவும். நமது தசமாம்சத்திற்கு முதல் இடத்தை வழங்குவதால் நமது வீடு மற்றும் வாழ்க்கைகளில் ஒரு அற்புதமான உணர்வு மற்றும் இறைவனின் இருப்பு தோன்றுகிறது. நமது வருமானத்தில் பத்து சதவீதம் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு இருப்பதால் வீடு, உணவு, உடை, கல்வி, பொழுதுப்போக்கு மற்றும் கலாச்சாரத்திற்கு பயன்படுத்தபடும் பணம் இறையருளை பெற்று தூய்மையாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நாம் நமது வீடு, அதில் இருக்கும் தட்டுமுட்டு பொருட்கள் மற்றும் வாழ்முறை வழங்கும் வெகுமதிகளை நாம் ரசிக்கும் போது இறைவனின் பணி, இந்து மதத்தின் பொதுநலம் மற்றும் நமக்கு அருகில் இருக்கும் இந்து அமைப்பிற்கு தேவையான பொருளுதவி வழங்கப்பட்டு இருப்பதை நினைத்து மனநிறைவையும் பெறலாம்.

எல்லோரும் மாதத்தின் தொடக்கத்தில் கட்டணங்களை செலுத்த அமரும் போது மனதில் கவலையுடன் இருக்கின்றனர். இறைவனுக்கு செலுத்தும் பணத்தை மற்ற கட்டணங்களை செலுத்துவது போல கருத வேண்டாம். மாதத்தின் தொடக்கத்தில் இறைவனுக்கு வழங்கவேண்டிய பணத்தை கணக்கிட்டு காசோலையை நிரப்புவதற்கு என்று தனியாக ஒரு நேரத்தை ஒதுக்கலாம் அல்லவா? இது முறையான நோக்கம் மற்றும் மனநிலையை உருவாக்க துணையாக இருக்கும். நீங்கள் *தசமாம்சத்தை* கணக்கிடும் போது, அது தற்போதும் எதிர்காலத்திலும் உங்கள் மதத்திற்கு, உங்கள் இந்து சகாக்களுக்கு, உங்களுக்கு மற்றும் உங்கள் குடும்பத்திற்கு எவ்வாறு உதவியாக இருக்கும் என்பதை சிந்தியுங்கள். நீங்கள் இறைவனின் பணத்திற்கு பாதுகாவலனாக இருந்துக்கொண்டு குடும்பம், சமூகம், நாடு மற்றும் மதத்திற்கு சம்பாதித்து வழங்குவதன் மூலம் சிவபெருமான் மற்றும் மகாதேவர்களுக்கு ஒரு பங்காளியாக இருப்பதையும் உணர முயற்சி செய்யுங்கள்.

2. வருடந்தோறும் முறையான மற்றும் முரண்பாடு நீக்க நிதி அறிக்கையை எழுத்தி வடிவில் பூர்த்தி செய்யவும்

உங்களது மற்றும் உங்கள் அமைப்பின் பதிவுகளுக்கும் ஒரு "முரண்பாடு நீக்கிய *தசமாம்ச* அறிக்கையை" தயார் செய்வது முக்கியம் ஆகும். இதை செய்வதற்கு என்று தனி நபர் மற்றும் சுய தொழில் செய்வோர் அல்லது கூட்டுத் தொழிலுக்கு என்று இரண்டு மாதிரி படிவங்களை வழங்கியுள்ளோம் (நீங்கள் இதை நகல் எடுத்து பெரிதுபடுத்தி பயன்படுத்திக் கொள்ளலாம்). முரண்பாடு நீக்கிய இந்த நிதி அறிக்கைகள் தசமாம்சம் வழங்குபவர்களுக்கு ஒரு தெளிவான ஆவணத்தை வழங்குவதோடு, இதனால் பயனடையும் அமைப்புக்கள் தங்கள் உறுப்பினர்கள் வழங்கும் தசமாம்சத்தின் அடிப்படையில் யதார்த்தமான நிதி திட்டங்களை உருவாக்க உதவியாக இருக்கும்.

இறைவனின் பணம் பற்றி நந்திநாத சூத்திரங்கள்

சூத்திரம் 161: பத்தில் ஒரு பங்கு சிவபெருமானுக்கு சொந்தமானது

சிவபெருமானுக்கு நெருக்கமாக இருக்கும் பக்தர்கள் விரதம் இருந்து, தங்களது பரம்பரைக்கு மாதந்தோறும் வருமானத்தில் பத்து சதவீதத்தை மகிழ்ச்சியுடன் வழங்குகிறார்கள். இது இறைவனின் பணம் ஆகும். அதை வேறு வழியில் பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லை. மீறினால் உருவாகும் *கர்மவினை* மூலம் சேகரிக்கப்படும் இழப்புக்கள், எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் இலாபங்களை மிஞ்சுகின்றன. ஓம்.

சூத்திரம் 162: தசமாம்சம் வழங்குவது முதல் கடமை ஆகும்

எனக்கு நெருக்கமான சீடர்கள் தசமாம்சம் வழங்குவதை தங்கள் முதல் செலவாக கருதுவார்கள். அவர்கள் ஒவ்வொரு ஏப்ரல் மாதமும், எதிர்காலத்தில் செலுத்தவிருக்கும் காணிக்கை உட்பட முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கையை எழுத்து வடிவில் வழங்குகிறார்கள். தசமாம்ச விரதத்தை தொடங்கினாலும், அதில் பின்தங்கி இருப்பவர்கள் தங்கள் விரதத்தை பூர்த்தி செய்ய, அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. ஓம்.

சூத்திரம் 163: தசமாம்சம் வழங்கும் ஆசிகள்

சிவபெருமானுக்கு நெருக்கமாக இருக்கும் சீடர்கள் சுதந்திரமாகவும் மனப்பூர்வமாகவும், தாராள மனத்துடனும் வழங்கும் தசமாம்சம் மூலம் தங்களுக்கு இறையருள் கிடைக்கப்பெற்று, தங்களை நோக்கி செல்வ வளம் மற்றும் இன்ப அனுபவங்களை ஈர்த்துக்கொள்வதில் தடை ஏதும் இருக்காது என்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறார்கள். ஓம்.

பொருளீட்டல் மற்றும் செல்வத்தின் பயன்பாடு பற்றி திருவள்ளுவரின் *திருக்குறள்*

குறள் 81:

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு.

குறள் 85:

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்.

குறள் 87:

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன்.

தனிநபர் வழங்கும் தசமாம்சத்திற்கு முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கை

ஜனவரி முதல் டிசம்பர் வரை, வருடம்: _____

இந்த படிவத்தை பூர்த்தி செய்யும் நபரின் விபரம்:
பெயர்: _____
முகவரி: _____

பயன்பெறும் அமைப்பு:
பெயர்: _____
முகவரி: _____

1. வழக்கமான மொத்த வருமானம்

உங்கள் வருமானம் (வரிகள் தொடர்பான பிடிப்புக்களுக்கு முன்பு) மற்றும் வங்கி கணக்குகள் மற்றும் முதலீடுகளில் இருந்து பெறும் வட்டி மற்றும் லாபப்பங்கின் கூட்டுத்தொகை

1. _____

2. வியாபாரத்தில் இருந்து கிடைக்கும் வருமானம்

அ. இந்த காலகட்டதில் வியாபாரத்தில் இருந்து பெற்ற நிதி (உங்கள் வியாபார பண மீட்பில் இருந்து வழங்கும் தசமாம்சத்திற்கு முரண்பாடு நீக்கிய அறிக்கையில் இரண்டாவது வரி) ஏதேனும் இருந்தால்

2அ. _____

ஆ. பண மீட்புக்களை கழித்த பிறகு ஒட்டுமொத்த நிகர லாபம் (உங்கள் வியாபார பண மீட்பில் இருந்து வழங்கும் தசமாம்சத்திற்கு முரண்பாடு நீக்கிய அறிக்கையில் நான்காவது வரி) ஏதேனும் இருந்தால்

2ஆ. _____

3. பிரத்யேக வருமானம்

பரம்பரை சொத்து அல்லது பிறந்தநாள் அல்லது மற்ற சமயங்களில் பெற்ற பரிசுத்தொகை போன்றவை

3. _____

4. மூலதன லாபம்

முதலீடுகள், வீடு விற்பனை, வாகனம் அல்லது மற்ற உடைமைகளின் விற்பனை (உதாரணத்திற்கு ஒரு வீட்டு விற்பனையில் தசமாம்சம் என்பது, விற்பனை விலை மற்றும் வாங்கிய விலையில் இருக்கும் வித்தியாசத்தில் 10% ஆகும். அந்த வித்தியாசம் "மூலதன லாபம்" ஆகும்.)

4. _____

5. மொத்த வருமானம்

1, 2(அ), 2(ஆ), 3 மற்றும் 4 ஆவது வரிகளின் கூட்டுத்தொகையை இங்கே பதிவு செய்யவும்.

5. _____

6. வழங்கவேண்டிய தசமாம்சம்

ஐந்தாவது வரியில் இருக்கும் தொகையை 10 ஆவது வரியில் இருக்கும் தொகை மூலம் வகுத்து இங்கே பதிவு செய்யவும். இந்த காலகட்டத்தில் நீங்கள் பெற்ற வருமானத்திற்கு இந்த தொகையை தசமாம்சமாக வழங்க வேண்டும்.

6. _____

7. முன்பு கூடுதலாக வழங்கிய தசமாம்சம்

கடந்தவருடம் கூடுதலாக செலுத்திய தசமாம்சத்தை இங்கே பதிவு செய்யவும்.

7. _____

8. தசமாம்சமாக செலுத்திய தொகை

இந்த காலகட்டத்தில் நீங்கள் பெற்ற வருமானத்திற்கு தசமாம்சமாக வழங்கிய தொகை.

8. _____

9. குறைவாக செலுத்திய மொத்தத் தொகை (அல்லது கூடுதலாக செலுத்திய தொகை)

6 ஆவது வரியில் இருந்து 7 ஆவது மற்றும் 8 ஆவது வரிகளை கழித்ததும் மீதமிருக்கும் தொகையை இங்கே பதிவு செய்யவும். அது ஒரு எதிர்ம எண்ணாக இருந்தால் அல்லது நீங்கள் கூடுதலாக பணம் செலுத்தி இருந்தால் அந்த எண்ணை அடைப்புக்குறிகளில் வைக்கவும்.

கீழிருக்கும் பெட்டிகளில் ஒன்றை தேர்வு செய்யவும்.

☐ நான் செலுத்தவேண்டிய தொகை மற்றும் அமைப்புக்கு செலுத்திய தொகை சமமாக இருப்பதால் 9 ஆவது வரி சூனியம் என்று காண்பிக்கிறது.

☐ செலுத்த வேண்டிய தொகைக்கு அதிகமாக நான் செலுத்தி இருப்பதை 9 ஆவது வரி காண்பிக்கிறது. இதை தயவு செய்து அடுத்த நிதி அறிக்கைக்கு முன்னெடுத்துச் செல்லவும்.

☐ தசமாம்சம் குறைவாக செலுத்தப்பட்டுள்ளது என்பதை 9 ஆவது வரி காண்பிக்கிறது. நான் இதனுடன் செலுத்த வேண்டிய தொகையை இணைத்து அனுப்புகிறேன்.

கையொப்பம்:_____

தேதி:_____

நான் எனது *தசம பாக விரதத்தை* எடுத்துக் கொண்ட தேதி:

_____

குறிப்பு: பூர்த்தி செய்த படிவத்தின் ஒரு நகலை நீங்கள் பத்திரமாக வைத்துக்கொண்டு, மூலப் படிவத்தை பயன் பெறும் அமைப்பிற்கு அனுப்பவும்.

வியாபார பண மீட்பில் இருந்து வழங்கும் தசமாம்சத்திற்கு முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கை

ஜனவரி முதல் டிசம்பர் வரை, வருடம்: _____

இந்த படிவத்தை பூர்த்தி செய்பவரின் விபரம்:

பெயர்: _____

முகவரி: _____

பயன்பெறும் அமைப்பு:

பெயர்: _____

முகவரி: _____

1. நிகர லாபம்

தனி உரிமையாளராக இருந்தால், அந்த வருடத்தில் வியாபாரம் மூலம் சம்பாதித்த மொத்த நிகர லாபத்தை குறிப்பிடவும். ஒரு கூட்டு வியாபாரமாக இருந்தால், நிகர லாபத்தில் இந்த கூட்டாளி பெற்ற பங்கை குறிப்பிடவும்.

1. _____

2. வியாபாரத்தில் செய்த பண மீட்பு

அந்த வருடத்தில் தனது சொந்த பயன்பாட்டிற்கு இந்த உரிமையாளர்/கூட்டாளி செய்த பண மீட்பை குறிப்பிடவும். (இந்த தொகையை உங்கள் தனிநபர் தசமாம்சத்திற்கு முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கையின் 2அ வரியில் பதிவு செய்யவும்.)

2. _____

3. நிகர லாபங்களை மிஞ்சிய பண மீட்புக்கள்

இரண்டாவது வரியில் இருந்து முதல் வரியை கழிக்கவும். அது ஒரு எதிர்ம எண்ணாக இருந்தால், அந்த வருடத்திற்கு நிகர லாபங்களில் உங்கள் பங்கை உங்களது பண மீட்புக்கள் மிஞ்சி இருக்கின்றன.

3. _____

4. முந்தைய வருடத்தில் இருந்து முன்னெடுத்து வந்த தொகை

முந்தைய வருடத்தின் முடிவில், நீங்கள் செய்த பண மீட்புக்களின் கூட்டுத்தொகையானது உங்களது ஒட்டுமொத்த நிகர லாபத்தின் பங்கை மிஞ்சி இருந்தால், அந்த தொகையை இந்த வரியில் குறிப்பிடவும். (இந்த தொகை, ஏதேனும் இருந்தால், அதை முந்தைய வருடத்தின் போது வியாபாரத்தில் இருந்து வழங்கிய தசமாம்சத்தின் முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கையில் காணலாம் மற்றும் அது ஒரு எதிர்ம எண்ணாக இருந்தால் மட்டும் இங்கே பதிவு செய்யவேண்டும்.)

4. _____

5. ஒட்டுமொத்த வித்தியாசம்

வரி 3 மற்றும் வரி 4 களில் இருக்கும் எண்ணை கூட்டவும். இது நிகர லாபத்தில் உங்கள் பங்கு மற்றும் இந்த வருட முடிவில் நீங்கள் செய்த பண மீட்புக்கும் இருக்கும் வித்தியாசம் ஆகும். கீழிருக்கும் பெட்டிகளில் ஒன்றை தேர்வு செய்யவும்.

5. _____

☐ வரி 5 எதிர்ம எண்ணாக இருக்கிறது மற்றும் வியாபாரத்தில் இருந்து வழங்கிய தசமாம்சத்தின் முரண்பாடு நீக்கிய அடுத்த வருட நிதி அறிக்கையில் முன்னெடுத்து செல்ல ஒரு வரவு இருக்கிறது என்பதை குறிப்பிடுகிறது. (தனிநபர் வழங்கிய தசமாம்சத்தின் முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கையின் வரி 2ஆ-வில் சூனியத்தை பதிவு செய்யவும்.)

☐ வரி 5 நேர்ம எண்ணாக இருக்கிறது மற்றும் நான் மீட்காத பணத்திற்கு தசமாம்சம் வழங்கவேண்டும் என்பதை அது குறிப்பிடுகிறது. (இந்த தொகையை தனிநபர் வழங்கிய தசமாம்சத்தின் முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கையின் வரி 2ஆ-வில் பதிவு செய்யவும்.)

கையொப்பம்:_____

தேதி:_____

நான் எனது *தசம பாக விரதத்தை* எடுத்துக் கொண்ட தேதி:

_____

குறிப்புக்கள்:

1. தனிநபர் வருமானம் மற்றும் வியாபார பண மீட்பில் இருந்து வழங்கும் தசமாம்சத்திற்கு முரண்பாடு நீக்கிய நிதி அறிக்கைகளை சுய தொழில் செய்யும்

தனிநபர்கள் பூர்த்தி செய்து, அவர்கள் மூலம் பயன்பெறும் அமைப்பிடம் இரண்டும் ஒன்றாக சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

2. பூர்த்தி செய்த படிவத்தின் ஒரு நகலை நீங்கள் பத்திரமாக வைத்துக்கொண்டு, மூலப் படிவத்தை பயன் பெறும் அமைப்பிற்கு அனுப்பவும்.

முடிவுரை

निर्वहणम्

நிர்வாகணம்



சிவனோடு வாழ்தல் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள *தர்மத்தின்* பாரம்பரிய பாதையை இந்துக்கள் மட்டும் பின்பற்றாமல், அதில் இருக்கும் பெரும்பாலான பகுதிகளை ஆசிய மக்கள் அனைவரும் பின்பற்றுகின்றனர். அது விவேகம் பெறுவதற்கான வழியை காட்டுவதோடு, ஆன்மீக இயல்பானது புத்தியை ஒளிர்வித்து அறியாமையை நீக்கும் போதும், மனமானது இந்திரியங்களை கட்டுப்படுத்தி முரட்டுத்தனத்தை வெற்றிக்கொள்ளும் போதும், பூரணத்துவத்தை நோக்கி முயற்சி செய்யும் போது ஆத்ம ஞானம் கிடைக்கும் போதும் வாழ வேண்டிய ஒரு உன்னதமான மற்றும் பண்பட்ட வாழ்க்கையை காண்பிக்கிறது. உலகின் தலைசிறந்த சமயமாக சைவ இந்து சமயம் விளங்குகிறது. அது *வேதங்களை* கொண்டுள்ளது. அது *ஆகமங்களை* கொண்டுள்ளது. அது *தேவாரங்களை* கொண்டுள்ளது. அது பூமியில் இருக்கும் ஒவ்வொருவரும் தங்களுக்குள் இருக்கும் இறைவனை தேடிக்கொள்ள துணை புரியும் செய்முறைகள் மற்றும் யுத்திகளை உள்ளடக்கிய *யோகத்தின்* மறைஞானத்தை கொண்டுள்ளது. அது பழங்காலத்தில் இமயம் முதல் தென் இந்தியாவின் குமரிமுனை வரையில் வாழ்ந்த *சுவாமிகள், ஆச்சார்யர்கள்* மற்றும் *ரிஷிகளின்* ஞானத்தை கொண்டுள்ளது. அது நிற்குண பிரம்மம் மற்றும் சகுண பிரம்மம், யாவும் கடந்த இறைவன் மற்றும் உள்நின்று உறைகின்ற, தனிப்பட்ட இறைவனையும் கொண்டுள்ளது. அது உலகில் அதிக பழைமையான மிகப்பெரியதான மக்களிடம் பிரபலமான கோயில்கள், கற்பகக்கிரத்தில் மகாதேவர்களை வரவழைக்க ஆவாகனம் செய்யும் வழிபாட்டு முறை மற்றும் அறிவியல் மற்றும் கோயில்கள், பண்டிதர்கள், சாத்திரங்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஆதரவு அளிக்க சிறப்பான *ஆதீனம்* பாரம்பரியத்தின் மதிப்பிற்குரிய மடாதிபதிகளையும் கொண்டுள்ளது. அது மகிழ்ச்சியை அளிக்கும் திருவிழாக்கள் மற்றும் புனிதமான சடங்குகளை கொண்டுள்ளது. அது *மந்திர, தந்திர* மற்றும் *யந்திரத்தை* கொண்டுள்ளது. ஆன்மா பக்குவம் அடைந்து இறைவனை அடைவதற்கு *சரியை, கிரியை, யோகம்* மற்றும் *ஞானம்* என்று நாற்பாதங்களை கொண்டுள்ளது. அது *கர்மவினை* மற்றும் மறுபிறவியை கொண்டுள்ளது. அது இறைவனை நோக்கி செல்லும் வழியில்

மனிதன் பெறும் அனுபவங்களின் அங்கமாக மற்ற பாதைகள் விளங்குவதாக அடக்கத்துடன் ஏற்றுக்கொண்டு, அவற்றை கௌரவிக்கவும் செய்கிறது. இது மட்டும் அல்லாமல் மேலும் பல அம்சங்கள் சைவ சமயத்தை சிறப்புற செய்கின்றன. இந்த மாபெரும் ஆன்மீக பாரம்பரியத்தின் சிறிய அங்கமாக இருந்து, சிவனோடு வாழ்வதில் மகிழ்ச்சியும் பயனையும் அடைவதால் நாம் அடக்கத்தை பெறுகிறோம். நாங்கள் இதை எனது *சத்குரு* சிவ யோகசுவாமி வழங்கிய பொன்மொழிகளுடன் நிறைவு செய்கிறோம்:

> *உடல் மற்றும் மனம் ஆன்மீக விதிகளுடன் இணக்கத்தை பெறும் போது, உங்கள் ஆன்மா பேரானந்தம் நிரம்பிய பரமாத்துமா மீது தாரணத்தில் இருக்க தளைகளில் இருந்து விடுபடும். வேதாந்தம் மற்றும் சித்தாந்தம் தனித்தனி பாதைகளாக இல்லாமல், அந்த ஒளி பொருந்திய ஒன்றின் முக்கிய முகப்புகளாக விளங்குகின்றன.*

சொற்களஞ்சியம்

சப்தகோசஹ

शब्दकोश:

***ஆதீனக்கர்த்தார்*** **(*aadheenakarthar*):** ஆதீனத்தின் தலைவர், அல்லது முக்கிய மதகுரு, இவர் குரு *மகாசன்னிதானம்* என்றும் அழைக்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: ஆதீனம், மடம்.

ஆதீனம் **(*aadheenam*) :** "Ownership possession, dependence; endowment, foundation, institution," Śaiva monastery. தென்னிந்திய சைவ சித்தாந்த பாரம்பரியத்தில் ஒரு சைவ இந்து மடம் மற்றும் கோயில் வளாகம். *ஆதீனத்தின்* தலைவர் அல்லது முக்கிய மதகுருவாக இருப்பவர் குரு *மகாசன்னிதானம்* அல்லது *ஆதீனக்கர்த்தார்* என்று அழைக்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *மடம்.*

துறத்தல் (abjure): பெரும்பாலும் உறுதிமொழி எடுத்து துறத்தல்; விலகி இருத்தல்.

கருக்கலைப்பு (abortion): முளைக்கரு அல்லது முதிர்ந்த கரு வெளிவந்து உயிர் வாழ்வதற்கு முன்பாகவே, அதை திட்டமிட்டு நீக்கும் அல்லது அதன் வெளியேற்றத்தை தூண்டும் செய்முறை. தாயின் உயிரை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலைகளில் மட்டும், இதை இந்து மதம் அனுமதிக்கிறது.

ஆபிரகாமிய மதங்கள் (Abrahamic religions): ஆபிரகாம் வழித்தோன்றிய மதங்கள். இவர் விவிலியத்தில் குடி முதல்வனாக கருதப்படுகிறார். இவரது மகன் ஐசாக் மூலம் ஹீப்ரு மக்களின் தந்தை என்று யூதர்களும், அவரது மகன் இசுமாயில் மூலம் அராப் மக்களின் தந்தை என்று இசுலாமியர்களும் கருதுகிறார்கள். அதனால் யூதம், கிறித்துவம் மற்றும் இசுலாம் ஆபிரகாமிய மதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

முழுமை (Absolute): ஆங்கில சிற்றெழுத்து (absolute): உண்மையாக, எதையும் சாராத, இன்னொன்றுடன் ஒப்பீடாக இல்லாத நிலை. ஆங்கில பெரிய எழுத்து (Absolute): முடிவான பரம்பொருள், வெளிப்படாமல், மாறாமல் கடந்து இருக்கும், உணர்வின் மிகவும் நுணுக்கமான நிலையுடன் சிறிதும் தொடர்பில்லாத பரசிவம். அது மனித ஆன்மாவின் சாரமாக விளங்கும் பரமாத்துமா. மேலும் தகவலுக்கு: *பரசிவம்.*

மன்னித்தல் (absolution (to absolve)): மன்னிப்பு. ஒருவரை நிர்பந்தம் அல்லது தண்டனையில் இருந்து விடுவிக்க, அவருக்கு குற்ற உணர்வில் இருந்து விடுதலை அளிப்பதை குறிக்கிறது. —**பரிகாரம் செய்தல் (atone):** ஒரு

தவறுக்கு ஈடு செய்தல். தவறு செய்தவரே பரிகாரம் செய்ய வேண்டும். ஆனால் அந்த குற்றத்தை மன்னிக்கும் பொறுப்பு ஒரு குடும்பத் தலைவன், நீதிபதி அல்லது நடுவரிடம் இருக்கிறது. ஒருவர் செய்த குற்றங்கள் மற்றும் தனிப்பட்ட கர்மவினை சுமையில் இருந்து முழுமையாக விமோசனம் அளிக்கும் உரிமை சிவபெருமானுக்கு மட்டும் உள்ளது. சமூகம் இந்த அக மாற்றத்தை மன்னித்து மறப்பதன் மூலம், இயல்பாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும். மேலும் தகவலுக்கு: *பிராயச்சித்தம், பாவம்*.

விரதம் (abstinence): விரும்பத்தகாத அல்லது தீங்கு இழைப்பதாக கருதும் ஒன்றின் மீது மனமுவந்து விதிக்கும் கட்டுப்பாடு.

ācharya: आचार्य "Going toward;" "approaching." அதிக மதிப்பிற்குரிய ஆசிரியர். சீடர்களுக்கு தான் போதிப்பதை தனது வழக்கமாக கொண்டிருப்பவர். சிவாச்சார்யர்கள் வழக்கத்தைப் போல, இந்த பட்டம் பொதுவாக தீட்சை மற்றும் நியமனம் மூலம் வழங்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் இந்த சொல், 1949 ஆம் ஆண்டு சத்குரு சிவாயசுப்பிரமுனியசுவாமி மூலம் நிறுவப்பட்ட சைவ சித்தாந்த யோக சமூகத்தில் ஒரு மூத்த சுவாமியை குறிக்கிறது. *பிரம்மச்சரிய சாதனா* செய்துக்கொண்டு, குருதேவாவின் கீழ் குறைந்தபட்சம் 24 வருடங்கள் சேவையை செய்து, விசேஷமாக நியமக்கிக்கப்பட்ட இந்த *சுவாமிகள்*, இளம் துறவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட முன் உதாரணங்களாக திகழ்கிறார்கள். —***ஆதி ஆச்சார்யர்கள்*** ***(ādi āchāryas):*** எதிர்காலத்தில் சைவ சித்தாந்த தேவாலயத்தின் சந்நியாச சமூகம் மற்றும் சாதாரண உறுப்பினர்களை தீர்மானிக்கும் பொறுப்புடன் நியமிக்கப்பட்ட, நான்கு சைவ சித்தாந்த யோக சமூக *ஆச்சார்யர்களின்* குழு. இந்த குழுவினர் *ஆச்சார்யர்கள்* குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், மற்றும் அந்த குழு சுயமாக தனது நடவடிக்கைகளை தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்கிறது. சைவ சமய இலட்சியங்களுக்கு முன் உதாரணமாக விளங்கி, *பரம்பரை* மற்றும் *சம்பிரதாயத்தின்* போதனைகளுடன் முழுமையாக இணக்கத்தில் இருக்கும் பாடத்திட்டங்கள் மற்றும் பத்திரிகைகளை வெளியிடுவதே, இந்த குழுவின் முக்கிய கடமை ஆகும்.

ஆன்மீகம் சார்ந்தது (actinic): ஒளியை உருவாக்கக்கூடியது. புனிதமான, மாசற்ற நிலையில் இருக்கும் உணர்வை சார்ந்தது. ஆன்மீக சக்தி என்பது மெய்ஞ்ஞான மனதில் இருந்து வரும் ஒரு சக்தியாக இல்லாமல், மெய்ஞ்ஞான மனமாக இருக்கிறது. இது பொதுவாக உயிர், ஆன்மா என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இதை மனிதனின் கண்களில் காணலாம்; மனிதன் காந்தத்தன்மை கொண்ட தனது தூல உடலை விட்டு வெளியேறும் போது, இந்த சக்தி மனிதனை விட்டு செல்கிறது. ஒளி தண்ணீரில் இருந்து மாறுபட்டு, அதன் வழியாக பிரகாசிப்பதை போல, ஆன்மீக சக்தி காந்த சக்தியின் முரணாக இல்லாமல், அதிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. காந்த சக்தி வழியாக கதிரியக்க சக்தி சுதந்திரமாக பாய்ந்து செல்கிறது. மேலும் தகவலுக்கு: *கோசம், காந்த சக்தி*.

அலகுக்குத்தல் (acupuncture): இது பாரம்பரிய சீன மருத்துவத்தின் ஒரு முக்கிய அங்கம் ஆகும். இது நோயை குணப்படுத்துவதற்கு, சக்திகளை சமன் செய்வதற்கு அல்லது வலியை குறைப்பதற்கு மிகவும் மெல்லிய

ஊசிகளை உடலில் குத்துவது அல்லது மெரிடியன்ஸ் என்று அழைக்கப்படும் நுணுக்கமான சக்தியின் பாதைகளில் குறிப்பிட்ட இடங்களில் தொடர்ந்து மசாஜ் பிரஷர் (*அகுபிரஷர்*) வழங்கும் முறையை குறிக்கிறது. ஆயுர்வேத மருத்துவம் ஒரு தனிப்பட்ட அகுபிரஷர் செய்முறையை கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *மெரிடியன்*

adharma: अधर्म Negative, opposite of *dharma. அதர்மம், தர்மத்தின்* எதிர்ச்சொல். தெய்வீக விதியை மீறும் செயல்கள், சிந்தனைகள், சொற்கள். நேர்மையின்மை, மதநம்பிக்கை இல்லாமை, பாவம். மேலும் தகவலுக்கு: *தர்மம், பாவம்.*

கூடா ஒழுக்கம் (adultery): திருமணமான ஆண் அல்லது பெண் தங்களது வாழ்க்கைத்துணை அல்லாத இன்னொருவருடன் உடலுறவு கொள்வது. கூடா ஒழுக்கம் *தர்மத்தை* தீவிரமாக மீறுகிற செயல் என்று இந்து *சாத்திரங்கள்* எடுத்துரைக்கின்றன. மேலும் தகவலுக்கு: *பாலியல் உறவு.*

advaita: अद्वैत "Non dual; not twofold." அத்வைதம். இருமையற்ற தன்மை அல்லது ஒருமைவாதம். முடிவான பரம்பொருள் ஒரே ஒரு மூல பொருளை அல்லது கடவுளை தத்துவ கோட்பாடாக கொண்டுள்ளது. இது *துவைதம்,* இருமைவாதத்தின் எதிர்ச்சொல். மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம், வேதாந்தம்* .

Advaita Īśvaravāda: अद्वैत ईश्वरवाद "Nondual and Personal-God-as-Ruler doctrine." அத்வைத ஈசுவரவாதம். "இருமை அல்லது தனிப்பட்ட இறைவன் ஆட்சி செய்வதாக குறிப்பிடும் கோட்பாடு." இது சமஸ்கிருதத்தில் ஒருமைவாத கடவுள் நம்பிக்கைக்கு இணையான சொல்லாகும். எல்லா பொருட்களின் முடிவான ஒருமையையும், தனிப்பட்ட கடவுளின் உண்மைப்பொருளையும் ஒரே சமயத்தில் ஏற்றுக்கொண்டு, *வேதங்கள்* மற்றும் *சைவ ஆகமங்கள்* தத்துவங்களை விளக்கும் ஒரு பொதுவான சொல். மேலும் தகவலுக்கு: *அத்வைதம், அத்வைத சித்தாந்தம், ஒருமைவாத இறை நம்பிக்கை.*

Advaita Siddhānta: अद्वैत सिद्धान्त "Nondual ultimate conclusions." அத்வைத சித்தாந்தம். "இருமை அல்லாத முடிவான தீர்மானங்கள்." *ஆகமங்களில்* தொகுக்கப்பட்டுள்ள சைவ தத்துவங்கள், தங்களது மையத்தில் இறைவனின் அத்வைத அடையாளம், ஆன்மா மற்றும் உலகை கொண்டுள்ளது. இது ஆதி சங்கரர் அல்லது சுமார்த்த சம்பிரதாய கண்ணோட்டம் போன்றது இல்லை. இறைவனை உணர்வதற்கு மாயை (வெளிப்பாட்டின் அடிப்படை) ஒரு தடையாக இல்லை, ஆனால் அந்த மாயை இறைசக்தி மற்றும் அருளால், ஆன்மா பக்குவம் அடைந்து பூர்ணத்துவத்தை நோக்கி வழிநடத்தப்படுகிறது என்று அத்வைத ஈசுவரவாதம் வலியுறுத்துகிறது. *அத்வைத வேதாந்தம் உபநிடத தத்துவங்களை* வலியுறுத்துகிறது, மற்றும் *அத்வைத சித்தாந்தம்* இதனுடன் *யோக சாதனாக்கள்* மற்றும் *தபஸ்* என்கிற உட்புற மற்றும் வெளிப்புற வழிபாட்டின் மீது வலுவான முக்கியத்துவத்தை இணைத்துக்கொள்கிறது. திருமூலரின் சிந்தனையில் இருந்து மெய்கண்டர் மற்றும் அகோர சிவத்தின் பன்மைவாதத்தில் இருந்து வேறுபடுத்துவதற்காக தென்னிந்தியாவில் *அத்வைத சித்தாந்தம்* என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த

ஒருங்கிணைந்த *வேத-ஆகம கொள்கை, சுத்த சைவ சித்தாந்தம்* என்றும் அழைக்கப்படுகிறது. இந்த கொள்கையின் அடிப்படையில் இந்த நூல் அமைந்துள்ளது. மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம், ஒருமைவாத இறை நம்பிக்கை, சைவ சித்தாந்தம்*.

Advaita Vedānta: अद्वैत वेदान्त "Nondual end (or essence) of the *Vedas."* அத்வைத வேதாந்தம். உபநிடதங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நூல்களில் இருந்து தோன்றிய பல்வேறு இந்திய ஒருமைவாத சிந்தனைகளையும், அதில் குறிப்பாக ஆதி சங்கரரின் ஒருமைவாத சிந்தனைகளையும் பொதுவாக குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *வேதாந்தம்*.

பிரியமான பற்றின்மை (affectionate detachment): புரிந்துணர்வால் உருவான அன்பு மற்றும் விவேகத்தின் சக்தி. மற்றவர்களது பிரச்சனைகள் அல்லது எதிர்மறை பற்றுகள் மீது ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருத்தல். பிரியமான பற்றின்மை என்பது உலக வாழ்க்கையில் இருந்து "ஓடி மறைவது" அல்லது முழுமையாக தனித்து இருப்பதை குறிக்காமல், மக்கள் மற்றும் பொருட்களின் மீது அதிக உண்மையான மற்றும் முழுமையான உறவுகளுக்கு அனுமதிக்கிறது.

affirmation: *Dṛidhavāchana.* "Firm statement." உறுதிமொழி. ஒரு நேர்மறையான அறிவிப்பு அல்லது வலியுறுத்தல். ஒரு விரும்பிய பலனை அடைவதற்கு, ஒரு அறிக்கையின் பொருள் மற்றும் மனதில் வரவழைக்கப்படும் காட்சிகள் மீது கவனத்தை ஒருமுகப்படுத்திக்கொண்டு, அந்த அறிக்கையை தொடர்ந்து சொல்வது ஆகும்.

தனது மதம் மீதான நம்பிக்கையை உறுதி செய்தல் (affirmation of faith): ஒருவரது மதம் மற்றும் அதன் முக்கிய நம்பிக்கைகள் பற்றிய ஒரு சுருக்கமான வாசகம். மேலும் தகவலுக்கு: *அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம்*.

Āgama: आगम The tradition that has "come down." ***ஆகமம்***. ஒரு மிகப்பெரிய சமஸ்கிருத சாத்திரங்களின் தொகுப்பு மற்றும் *வேதங்கள்* ஒன்றாக சேர்த்து *சுருதி* (வெளிப்படுத்தப்பட்ட சாஸ்திரங்கள்) என்று போற்றப்படுகிறது. இது எந்த காலத்தை சேர்ந்தது என்று உறுதியாக தெரியவில்லை. *ஆகமங்கள்* சடங்கு, *யோகம்* மற்றும் கோயில் கட்டுமானத்திற்கு முக்கிய மூலமாக மற்றும் ஆணையாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சைவ ஆகமங்கள், சுருதி*.

agni: अग्नि "Fire." அக்னி: "நெருப்பு" 1) *பஞ்சபூதங்களில்* ஒன்றாக விளங்குகிறது. 2) அக்னி தெய்வம் *யக்ஞம், அக்னிக்காரக, ஹோம* மற்றும் *ஹவன* என்று அழைக்கப்படும் *வைதீக சம்பிரதாயங்கள்* மூலம் ஆவாகனம் செய்யப்ப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *ஹவன, ஹோமம்*.

ahiṁsā: अहिंसा "Noninjury," nonviolence or nonhurtfulness. *அகிம்சை* அல்லது துன்புறுத்தாமல் இருத்தல். மற்றவர்களுக்கு உடல், மனம் அல்லது உணர்ச்சி ரீதியாக தீங்கு விளைவிக்காமல் இருத்தல். இயமங்களில் (கட்டுப்பாடுகள்) முதலாவதாகவும் முக்கியமானதாகவும் *அகிம்சை* விளங்குகிறது. இந்த முதன்மையான பண்பை சார்ந்து மற்ற பண்புகள் அமைந்துள்ளன. மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்*.

ājñā chakra: आज्ञाचक्र “Command wheel.” *ஆக்ஞா சக்கரம்.* “ஆணை சக்கரம்". மூன்றாவது கண்ணின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

ākāśa: आकाश “Space.” ஆகாயம். வானம். “பரவெளி.” தங்கு தடையில்லாத, திறந்தவெளி. பூமி, காற்று, நெருப்பு, நீர் மற்றும் பரவெளி என்கிற பஞ்சபூதங்களில், ஐந்தாவதாக இருக்கும் பரவெளி மிகவும் நுணுக்கமானது. அனுபவப்பூர்வமாக, அது உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சங்களில் வியாபித்து, காற்றழுத்தம் குறைவாக இருக்கும் பரவெளி அல்லது மிகவும் நுணுக்கமான திரவ பிளாசுமாவாக இருக்கிறது. அருள்ஞான ரீதியாக, மனம் என்கிற மெய்ஞ்ஞான பகுதி இருக்கவேண்டிய அல்லது இருந்துக்கொண்டு இருக்கிற அனைத்தையும் தக்க வைத்திருக்கிறது, மற்றும் இங்கே கட்புலனுக்கு அப்பாற்பட்டதை காண்பவர் விசாரம் செய்வதற்காக, எல்லா பரிவர்த்தனைகளும் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த ஆன்மீக *ஆகாசத்திற்குள்* சூட்சுமமாக நுழைவதன் மூலம், அண்டத்தின் தகவலை பெற்று கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்கிற காலத்தின் முழு சுழற்சியையும் அறிய முடிகிறது.

எங்கும் வியாபித்து இருக்கின்ற (all-pervasive): எங்கும் வியாபித்து இருப்பது அல்லது பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இருப்பது. மேலும் தகவலுக்கு: *சச்சிதானந்தனம்.*

பரிகாரம் (amends): இன்னொருவருக்கு செய்த தீங்கு அல்லது இழப்புக்கு ஈடு செய்தல். இது நேர்மையாக மன்னிப்பு கேட்டல், வருத்தம் தெரிவித்தல், கழிவிரக்கம், *காவடி* போன்ற நேர்த்திக் கடன்கள் மற்றும் தாராளமாக பரிசுகள் வழங்குவதன் மூலம் பரிகாரம் செய்யப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பிராயசித்தம்.*

anabhidroha: अनभिद्रोह “Absence of injuriousness.” ***அனபித்ரோக:*** கெடுதி இல்லாத.

ānanda: आनन्द “Bliss.” ஆனந்த: “பேரின்பம்.” இறைவனது உணர்வு அல்லது ஆன்மீக அனுபவத்தில் இருந்து தோன்றும் பரவசநிலை அல்லது அனுபவமில்லாத நிலையில் இருந்து வரும் புனிதமான ஆனந்தம். மேலும் தகவலுக்கு: *இறைவனை உணர்தல், சச்சிதானந்தம்.*

ānandamaya kośa: आनन्दमयकोश “Bliss body.” *ஆனந்தமயமான கோசம்.* “பேரின்ப உடல்.” சிவபெருமானுடன் இறுதியாக இணையும் *ஆனந்தமயமான கோசம்.* மேலும் தகவலுக்கு: *ஆன்மா, கோசம்.*

Anandamayi Ma (Ānandamāyī Mā): आनन्दमायीमा. ஆனந்தமயி மா (1896-1982). வங்காளத்தை சேர்ந்த இந்த துறவி யோகினி மற்றும் சூட்சும ஞானியாகவும் இருந்தார். அவர் தனது சீடர்கள் வழங்கும் உணவை மட்டுமே சாப்பிட்டு வந்தார். அவர் தனது உடல், மனம் மற்றும் உணர்வு ரீதியாக சுத்தமாக இருந்து *சாதனாக்கள்* செய்ததன் மூலம் மக்களிடம் பிரபலமாக இருந்தார்.

āṇava: आणव “Fragment; atom; minuteness, individuality.” ஆணவம்: ஒவ்வொரு ஆன்மாவிற்கும், தன்முனைப்பு அல்லது தனித்த நிலையை வழங்கி, இறைவன் மற்றும் பிரபஞ்சத்தில் இருந்து அந்த ஆன்மாவை விலக்கி

அல்லது தனிமைப்படுத்தும் இறைவனின் மறைக்கும் சக்தி. மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம், ஆன்மாவின் முதிர்ச்சி*, அருள், *மலம், ஆன்மா*.

āṇava mala: आणवमल "Impurity of smallness; finitizing principle." *ஆணவ மலம்*: "சிறுமையின் மாசு; வரையறுக்கும் கோட்பாடு." அது இருமையின் தனிமைப்படுத்தும் திரை அல்லது தளைகள் மூலம் ஆன்மாவை முழுமையாக மறைக்கிறது. இது ஆன்மாவை கட்டுப்படுத்தும் மூன்று மலங்களில் (*ஆணவ, கர்மவினை, மாயை*) மிகவும் அடிப்படையாக விளங்கி, வரையறுக்கப்பட்ட தன்மை மற்றும் அறியாமையின் மூலமாக விளங்குகிறது. *ஆணவ மலம்* இருப்பதன் காரணமாக கடவுள், ஆன்மா மற்றும் உலகம் பற்றிய தவறான நம்பிக்கை, கடவுள் மற்றும் பிரபஞ்சத்தில் இருந்து தனித்து மற்றும் மாறுபட்டு இருப்பதாக எண்ணம் உருவாகிறது. மேலும் தகவலுக்கு: ஆணவ, ஆன்மாவின் வளர்ச்சி, அருள், *மலம், ஆன்மா*.

āṇava mārga: आणवमार्ग "Path of ignorance." ஆணவ மார்க்கம்: "அறியாமையின் பாதை". ஆணவத்தின் சாரம், தனித்த நிலை, சுய-ஈடுபாடு, சுய-சிந்தனை மற்றும் சுயநலத்தின் பாதை ஆகும். மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம்*.

Anbe Sivamayam Satyame Parasivam: அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம். சமய நம்பிக்கையின் இந்த உறுதிமொழி, அத்வைத சைவ சித்தாந்தத்தின் சமய கோட்பாடு முழுவதையும் சுருக்கமாக தெரிவிக்கிறது. இது சமஸ்கிருதத்தில் *பிரேமேய்வ சிவமய, சத்யம் ஏவ பரசிவா* என்று குறிப்பிடப்படுகிறது.

துறவி (anchorite): "Hermit." ஒரு மடம் அல்லது ஆதீனத்தில் ஒரு சமய சமூகத்தின் உறுப்பினராக ஒரு மடத்துறவியாக வாழாமல், சமூகத்தில் இருந்து தனித்து ஒரு துறவியாக அல்லது விழைபவராக வாழ்பவர். மேலும் தகவலுக்கு: *முனிவர்*.

சேதன பொருள்-ஜடப்பொருள் அல்லது உயிருள்ள-உயியரற்ற வஸ்துக்கள் (animate-inanimate): இந்த சொற்கள் உயிருடன் இயங்கும் (விலங்குகள் மற்றும் மற்ற "உயிர்" சக்திகள்) மற்றும் இயக்கம் இல்லாமல் இருக்கும் பொருட்கள் (கனிமப்பொருள், மற்றும் ஓரளவிற்கு செடிகளை குறிப்பிடலாம்) என்று வெளிப்பட்டு இருக்கும் இரு துருவங்களை குறிப்பிடுகிறது. ஆனால் ஆழமாக பார்க்கும் போது, எல்லா இருப்பும் இயக்கத்துடன் துடிப்புடன் இருந்து, பிரபஞ்சத்தின் வலுவான தெய்வீக சக்தியை கொண்டிருக்கிறது.

aṅkuśa: अंकुश அங்குசம். விநாயகரின் ஆயுதமாக விளங்கும் இந்த அங்குசம் மனம் என்கிற யானை அடக்கி, பக்தரின் பாதையில் இருந்து தடைகளை நீக்கி, மந்தமானவர்கள் முன்னேறி செல்ல துணை புரிகிறது.

anna dāna: अन्नदान "Giving food." அன்னதானம். இது விருந்தாளிகள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு பெரிய அளவில் வழங்கும் விருந்தை குறிக்கிறது. இது இந்து பாரம்பரியத்தில் *யக்ஞம்* என்றும் அழைக்கப்படுகிறது. இந்த அன்னதானத்தில் ஒரு சிறந்த மகான் உணவு அருந்தி, அவருக்கு பசி அடங்கியது என்றால் அது பல தலைமுறைகளுக்கு புண்ணியத்தை சேர்த்து வைக்கும். மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்*.

annaprāśana: अन्नप्राशन “Feeding.” அன்னபிராசனம். குழந்தைப்பருவத்தில் முதல் முறையாக குழந்தைக்கு திட உணவை வழங்கும் சடங்கு. மேலும் தகவலுக்கு: *குழந்தைப்பருவ சம்ஸ்காரங்கள்.*

Antarloka: अन्तर्लोक “Inner plane,” or “in-between world.” அந்தர்லோகம்: சூட்சும லோகம் அல்லது இரண்டாவது உலகம். மேலும் தகவலுக்கு: *சூட்சும லோகம்.*

அந்துவானேட் மேரி (Antoinette, Marie) (1755-1793): இவர் 1774 ஆம் ஆண்டு பிரான்சு நாட்டு அரசியாக இருந்தாள். இவள் லூயிஸ் XVI-யின் மனைவி ஆவாள். இவள் ஆஸ்ட்ரியா நாட்டின் மரியா தெரசா மற்றும் பிரான்சிஸ் I-க்கு மகளாக பிறந்தாள். பிரெஞ்சு புரட்சியின் போது அவளும் அவளது கணவரும் தேசத்துரோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டனர். தலைவெட்டும் இயந்திரம் மூலம் அக்டோபர் 16, 1793 அன்று, அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

anugraha śakti: अनुग्रहशक्ति “Graceful or favoring power.” Revealing grace. அனுக்கிரக சக்தி. சிவபெருமானின் ஒளிர்விக்கும் சக்தியால் *ஆணவ, கர்மவினை* மற்றும் *மாயை* என்கிற மலங்களில் இருந்து ஆன்மா விடுவிக்கப்பட்டு, இறுதியாக *மோக்ஷம்* என்கிற விடுதலையை பெறுகிறது. குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், ஒரு *சத்குருவிடம்* இருந்து அதிகப்படியான அனுக்கிரகம் ஆன்மாவிற்கு *சக்திபாத, தீஷாவாக* (தீட்சை) வந்து சேர்கிறது. சைவ சித்தாந்தத்தில் *அனுக்கிரகம்* ஒரு முக்கிய கோட்பாடாக விளங்குகிறது. இது ஆன்மாவை சுற்றி வரையறுக்கப்பட்ட கோசமாக இருக்கும் *ஆணவ மலமானது மலபரிபாகம்* என்கிற முதிர்ந்த நிலையை அடையும்போது தோன்றுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவம்,* அருள், நடராசர், *சக்திபாத.*

சூத்திரம் (aphorism): சுருக்கமாகவும் பொருத்தமாகவும் எளிதில் நினைவுக்கூறுமாறும் இருந்து, அடிமனதில் பதிய வைக்கப்படும் ஒரு உண்மையை விளம்பும் அறிக்கை.

āratī: आरती “Light.” ஆரத்தி. “ஒளி.” ஒரு தெய்வீக புருஷர் அல்லது கோயிலில் இருக்கும் தெய்வத்தை *பூஜை* செய்யும் போது ஒரு தட்டில் நெய், எண்ணெய் அல்லது கற்பூரத்தினால் ஏற்றிய விளக்கை வட்டவடிவில் காண்பிப்பது ஆரத்தி என்று அழைக்கப்படுகிறது. அது அதன் பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும் போது, அவர்கள் அதை கைகளால் தொட்டு தங்கள் கண்களில் மூன்று முறை வைத்துக் கொண்டு, இறை அருளை பெறுகிறார்கள். ஒரு மிகவும் சிறிய பூஜை வடிவிலும் *ஆரத்தி* காண்பிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *அர்ச்சனை, பூஜை.*

தீர்ப்பளித்தல் (arbitrate): ஒரு கருத்து வேறுபாட்டில் தீர்ப்பு அல்லது முடிவை வழங்குவது; தகராறை தீர்த்து வைத்தல்.

archana: अर्चन அர்ச்சனை. கோயில் பூசாரிகள் செய்யும் இந்த விசேஷமான, தனிப்பட்ட, சுருக்கமான பூஜையில், ஒரு பக்தர் தனிப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் அருளை பெறுவதற்கு அவரது பெயர், நட்சத்திரம் மற்றும் கோத்திரம் உச்சரிக்கப்படுகின்றன. *அர்ச்சனை* என்பது பல்வேறு பகவன்நாமாக்களை

சொல்வதையும் குறிப்பிடுகிறது. இது ஒவ்வொரு பூஜையிலும் முக்கிய அங்கமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை.*

***ardha-* Hindu:** अर्धहिन्दू "Half-Hindu." *அர்த்த இந்து:* "பாதி-இந்து." ஒரு பக்தன் இந்துகோட்பாடு மற்றும் கலாச்சாரத்தை அதிக அளவில் ஏற்றுக்கொண்டாலும், முறையான சடங்குடன் மதத்தில் சேர்ந்து, ஒரு இந்துசமய பெயர் ஏற்காமல் இருப்பதை இது குறிப்பிடுகிறது. இது இந்து மதத்தில் பிறந்து, தங்களுக்கு வேற்று மதத்து பெயரை சூட்டிக்கொள்பவர்களையும் குறிக்கிறது.

ārjava: आर्जव "Honesty." ஆர்ஜவம்: "நேர்மை." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

Arjuna: अर्जुन அர்ஜுனன்: மகாபாரத கதாநாயகன் மற்றும் *பகவத் கீதையில்* முக்கியமான பாத்திரம். மேலும் தகவலுக்கு: *பகவத் கீதை.*

artha: अर्थ "Goal" or "purpose;" அர்த்த: "இலக்கு" அல்லது "நோக்கம்" செல்வம், பொருள், சொத்து, பணம். மேலும் தகவலுக்கு: *நான்கு பாரம்பரிய இலக்குகள்.*

வாழ்க்கையை செயற்கை முறையில் நிலைநிறுத்துதல் (artificial perpetuation of life). மேலும் தகவலுக்கு: *உயிர் காக்கும் நடவடிக்கைகள்.*

arul: அருள் "Grace." இது *சக்தினிபாத* என்கிற இறைவனின் அருளுக்காக ஆன்மா ஏங்கும் போது, *சகல அவத்தையின்* மூன்று நிலைகளில் மூன்றாவதை குறிக்கிறது. இந்த நிலையில் ஆன்மா *பதி-ஞான* என்கிற இறைவனை பற்றிய புரிந்துணர்வை நாடுகிறது. மேலும் தகவலுக்கு: *பதி-ஞான, சகல அவத்தை, சக்தினிபாத.*

āsana: आसन "Seat; posture." ஆசனம்: "உட்காரும் இடம்; அங்கஸ்திதி." ஹட யோகத்தில், தியானம் செய்வதற்கு மனம் மற்றும் உடலின் நுணுக்கமான சக்திகளை சமநிலைப்படுத்தி சீரமைத்து, ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளை ஊக்குவிக்க பரிந்துரைக்கப்படும் ஏராளமான அங்கஸ்திதிகளில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *ஹட யோகம், இராசயோகம், யோகம்.*

சந்நியாசி (ascetic): ஒருவர் தான் மேற்கொண்ட மத குறிக்கோள்களை அடைவதற்காக, தனது சுகங்கள் மற்றும் சந்தோஷங்களை கைவிட்டு, தாரணை மற்றும் தீவிரமான சுய-கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கையை வாழ்பவர். மேலும் தகவலுக்கு: *முனிவர்.*

ashṭāṅga yoga: अष्टाङ्गयोग "Eight-limbed union." *அட்டாங்க யோகம்* : "எட்டு அங்கங்களை கொண்ட யோகம்." இது பல்வேறு உபநிடதங்கள், திருமூலர் எழுதிய திருமந்திரம் மற்றும் பதஞ்சலி முனிவர் எழுதிய *யோக சூத்திரங்கள்* உட்பட பல்வேறு இந்து சாத்திரங்களில் விளக்கியுள்ளதை போல, பாரம்பரிய *இராசயோக* அமைப்பின் தொடர்ச்சியான எட்டு நிலைகள் அல்லது படிகளை குறிக்கிறது. அந்த எட்டு அங்கங்கள் பின்வருமாறு: கட்டுப்பாடுகள் (*இயமங்கள்*), கடைபிடித்தல்கள் (*நியமங்கள்*), அங்கஸ்திதிகள் (*ஆசனம்*), மூச்சுப்பயிற்சி (*பிராணாயாமம்*), இந்திரிய நிக்கிரகம் அல்லது புலன் அடக்கம் (*பிரத்யஹார*), ஒருமுகச்சிந்தனை (*தாரணா*), தியானம் (*தியான*)

மற்றும் ஆழ்ந்த சிந்தனை-ஆத்ம ஞானம் (*சமாதி*). மேலும் தகவலுக்கு: *இராசயோகம், யோகம், இயம-நியமம், ஆசனம், பிராணாயாமம், சமாதி.*

சாதகன் (aspirant): பெரிய சாதனைகளை செய்வதற்காக கடுமையாக முயற்சிப்பவர்.

ஆசை (aspiration): பெரிய சாதனைகளை செய்யவேண்டும் என்ற ஆசை.

āśrama: आश्रम "Place of striving." ஆசிரமம்: "முயற்சி மேற்கொள்ளும் இடம்." துறவி வசிக்கும் இடம்; வாழ்க்கையில் ஒரு நிலை. புனிதமான புகலிடம்; ஒரு சாது, மகான், சுவாமி, துறவி அல்லது குருவின் இருப்பிடம் மற்றும் அவர் சீடர்களுக்கு கல்வி கற்பிக்கும் இடம்; இங்கே வழக்கமாக மாணவர்களுக்கு தங்கும் வசதியும் வழங்கப்படுகிறது. இது வாழ்க்கையின் நான்கு நிலைகளை குறிப்பிவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம், சாதனா.*

āśrama dharma: आश्रमधर्म "Laws of life development." ஆசிரம தர்மம்: "வாழ்க்கையில் வளர்ச்சிக்கான விதிகள்." இது உடல், உணர்ச்சிகள் மற்றும் மனம் வளர்ச்சி பெறவும், அவை தங்களது இயல்பான சுழற்சிகளை எதிர்கொள்ளவும் அனுமதித்து, இயற்கை மற்றும் வாழ்க்கையுடன் எது இணக்கத்துடன் வாழ்கிறது என்பதை கண்காணித்து, வாழ்க்கையின் நான்கு தொடர்ச்சியான நிலைகள் (ஆசிரமங்கள்) ஒவ்வொன்றுக்கும் பொருந்தும் சிறப்பான வாழ்க்கை முறை ஆகும். **1) *பிரம்மச்சரியம்*:** மாணவப் பருவம், 12 வயதில் இருந்து 24 வயது வரை. **–2) *கிரகஸ்த:*** குடும்பத்தலைவர், 24 வயது முதல் 48 வயது வரை. **–3) *வானப்ரஸ்தம்:*** முதன்மை ஆலோசகர், 48 வயது முதல் 72 வயது வரை. **–4) *சந்நியாசம்:*** சமய ஈடுபாடுள்ள துறவி, 72 வயதில் இருந்து. இவை அந்த நான்கு நிலைகள் ஆகும். மேலும் தகவலுக்கு: *தர்மம், கிரகஸ்த தர்மம், சந்நியாச தர்மம்.*

asteya: अस्तेय "Nonstealing." திருடாமை. மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

āstikya: आस्तिक्य "Faith." இறைநம்பிக்கை. மேலும் தகவலுக்கு: *இறைநம்பிக்கை, சிரத்தை, இயம-நியமம்.*

சூட்சும உடல் (astral body): *அந்தரலோகம்* என்று அழைக்கப்படும் சூட்சும உலகம், உட்புற உலகில் ஆன்மா செயல்படும் நுணுக்கமான, *சூட்சும சரீரத்தை* குறிப்பிடுகிறது. சூட்சும உடலில் *பிராணமய கோசம்*, உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசம் (*மனோமய கோசம்*) மற்றும் அறிவெழுச்சி கோசம் (*விஞ்ஞானமய கோசம்*) அடங்கியுள்ளது மற்றும் இதில் மரணத்தின் போது, தூல உடலில் இருந்து *பிராணமய கோசம்* விடுவிக்கப்படுகிறது.

சூட்சும சக்தி (astral entity): சூட்சும உலகில் வாழும் ஒரு உயிர்சக்தி. மேலும் தகவலுக்கு: *சூட்சும லோகம்.*

சூட்சும லோகம் (astral plane): இது நுணுக்கமான, தூல பண்பை சாராத பரிணாமத்துடன் தொடர்புடையது. இது அந்தர்லோகம் அல்லது இரண்டாவது உலகம் என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டாவது உலகில்

"சூட்சும சக்திகள்" வசிக்கின்றன என்றாலும், அவற்றை பூலோகத்தில் சூட்சுமமாக உணர முடியும். மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்*.

சூட்சும துருத்தம் (astral projection): ஒருவர் தனது தூல உடலை விட்டு வெளியேறி சூட்சும உடலில் செயல்படும் போது, அவர் விழிப்புடன் தனது நடவடிக்கைகளை இயக்கிக்கொண்டு, சூட்சும உடலில் இருக்கும் மற்றவர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களை சந்திப்பது அல்லது ஒரு தொலைதூர இடத்திற்கு சென்று அங்குள்ள நடவடிக்கைகளை அனுபவிப்பது மற்றும் தூல உணர்விற்கு விழித்த நிலையில் திரும்பியதும் அத்தகைய அனுபவங்களை நினைவில் வைத்து இருக்கும் பயிற்சியை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *சூட்சும லோகம்*.

சூட்சும கூடு (astral shell): ஒரு ஆன்மா ஒரு புதிய தூல பிறப்பை எடுக்கும் போது, காந்த சூட்சும உருவத்தை சூட்சும உலகில் விட்டு செல்கிறது. ஆக்கப்பூர்வமான சக்திகள் ஒரு புதிய தூல மற்றும் சூட்சும உடலை உருவாக்கும் போது, சூட்சும கூடு விரைவில் சிதைகிறது.

ஜோதிடம் (astrology): விண்ணுலக தாக்கங்கள் பற்றிய அறிவியல்.

aśubha: अशुभ "Inauspicious," "gloomy." அசுபம்: "அமங்கலம்," "இருண்ட." மேலும் தகவலுக்கு: *சுபம்*.

asura: असुर "Evil spirit; demon." (Opposite of *sura: "deva* ; God.") "தீய சக்தி; அசுரன்." (*சுரா*: "தெய்வம்; கடவுள்") கீழ்நிலை சூட்சும உலகமான நரகத்தில் இருக்கும் ஒரு உயிர்சக்தி. *அசுரர்கள்* தூல உலகில் இருப்பவர்களுடன் தொடர்பு கொண்டு, மக்களின் வாழ்க்கையில் சிறிய அல்லது பெரிய பிரச்சனைகளை உருவாக்குகிறார்கள். *அசுரர்கள்* இந்த நிலையில் நிரந்தரமாக நிலைத்து இருக்காமல் வளர்ச்சியை பெறுகிறார்கள். மேலும் தகவலுக்கு: *நரகம்*.

அசுரர்களின் குணத்தை சார்ந்த (asuric): "ஆன்மீகம் அல்லாத."

atala chakra: अतल चक्र "Bottomless region." அதள சக்கரம்: "அடித்தளம் இல்லாத பகுதி." இடுப்பின் உயரத்தில் *மூலாதாரத்திற்கு* கீழே முதல் சக்கரமாக விளங்குகிறது. இது பயம் மற்றும் கழிக்காமத்தின் பகுதி. மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகம்*.

நாத்திகம் (atheism): மதம் அல்லது மதத்தின் நம்பிக்கைகள் அனைத்தையும் நிராகரித்தல், அல்லது கடவுள் அல்லது தெய்வங்கள் எதுவும் இல்லை என்கிற தெளிவான நம்பிக்கையுடன் இருத்தல். மேலும் தகவலுக்கு: *பொருள்முதல்வாதம்*.

ātman: आत्मन् "The soul; the breath; the principle of life and sensation." ஆத்மன்: "ஆத்மா; சுவாசம்; உயிர் மற்றும் தூல உணர்ச்சியின் கோட்பாடு." ஆன்மா என்பது *ஆனந்தமய கோசம்* மற்றும் அதன் சாரத்தை (பராசக்தி மற்றும் பரசிவம்) குறிக்கிறது. நாம் தூல உடல், உணர்ச்சிகள், வெளிப்புற மனம் அல்லது ஆளுமையாக இல்லாமல் ஆத்மனாக இருக்கிறோம் என்பது இந்துசமயத்தின் மிகவும் அடிப்படை கொள்கைகளில் ஒன்றாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பரமாத்துமா, கோசம், ஆன்மா*.

ātmārtha pūjā: आत्मार्थपूजा "Personal worship rite." ஆத்மார்த்தமான பூஜை: "தனிப்பட்ட வழிபாடு. வீட்டில் இருக்கும் பூஜை அறையில், சமஸ்கிருத மொழியில் செய்யும் பூஜை. மேலும் தகவலுக்கு: *பூஜை.*

ātura sannyāsa: आतुरसंन्यास "Renunciation while suffering." ஆதுர சந்நியாச: "வேதனையில் இருக்கும் போது சந்நியாசம் மேற்கொள்ளுதல்." மேலும் தகவலுக்கு: *சந்நியாசம்.*

பற்றுக்கள் (attachments): இது ஒரு தனிமனிதனின் உட்புற மற்றும் வெளிப்புற தன்முனைப்பின் இயல்பாக விளங்கும், சொந்தம் கொண்டாடும் சக்தியுடன் ஒட்டிக்கொள்கிறது அல்லது அதை தக்க வைத்துக்கொள்கிறது. ஒருவர் *சக்கரங்கள்* வழியாக விரிவாக்கம் பெறும் போது *சாதனா, தபஸ்* மற்றும் *குருவின்* அருளின் மூலம் பற்றின் வலிமை இயல்பாக குறைகிறது.

Aum: ॐ or औम् Often spelled *Om.* ஓம். இந்துசமயத்தில் மிகவும் புனிதமான நூல்களின் தொடக்கத்தில் பயன்படுத்தப்படும் சூட்சும ஞான அட்சரம். அது ஒரு *மந்திரமாக,* (அம்மா என்ற சொல்லில் இருப்பதை போல) அ, (உடம்பு என்ற சொல்லில் இருப்பதை போல) உ, ம் என்று உச்சரிக்கப்படுகிறது. ஓம் என்பது தெய்வீகத்தன்மையை குறிப்பிடுகிறது, மற்றும் அதன் தொடக்கத்தில் இருக்கும் "அ" ஒலி, முதுகுதண்டின் அடிப்பகுதியில் விநாயகர் உட்கார்ந்து இருக்கும் *சக்கரமான, மூலாதாரத்தில்* அதிர்வதால், இது அவருடன் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த *மந்திரத்தில்* இருக்கும் இரண்டாவது ஒலியான "உ", முருகப்பெருமான் அல்லது குமரனின் உலகமான, தொண்டை மற்றும் நெஞ்சுப்பகுதிகளில் அதிர்கிறது. மூன்றாவது ஒலியாக இருக்கும் "ம்ம்", மண்டை ஓட்டில் இருக்கும் சக்கரங்களான *ஆக்ஞா* மற்றும் *சஹஸ்ரஹார சக்கரங்களில்* அதிர்கின்றன, மற்றும் இங்கே பரமனாக இருக்கும் சிவபெருமான் ஆட்சி செய்கிறார்.

ஒளி உடல் (aura): இது நுணுக்கமான சக்தியின் வண்ணமயமான ஒளிரும் பகுதியாக இருக்கிறது, மற்றும் இது தூல உடலுக்குள் மற்றும் அவரை சுற்றி மூன்று முதல் ஏழு அடிகள் நீண்டு இருக்கிறது. ஒருவரது உணர்வு, சிந்தனைகள், மனநிலைக்கு மற்றும் மனவெழுச்சிகளின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, ஒளி உடலில் இருக்கும் நிறங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கின்றன. உயர்ந்த இறக்க குணம் நிறைந்த உணர்வுகள் பிரகாசமான மென்னிறங்களை உருவாக்குகின்றன; கீழ்த்தரமான, எதிர்மறையான உணர்ச்சிகள் கருத்த நிறங்களில் இருக்கின்றன. *பிராண-ஒளி* உடல், புற ஒளிஉடல் மற்றும் அக ஒளி உடல் என்று ஒளி உடல் மூன்று அம்சங்களை கொண்டுள்ளது. பிராண-ஒளி உடல், தூல உடலில் இருக்கும் உயிர் சக்தியின் பிரதிபலிப்பாக இருக்கிறது. தூல உடலில் இருந்து நீண்டு இருக்கும் புற ஒளி உடல், ஒரு தனிமனிதனின் சிந்தனை மற்றும் உணர்ச்சியின் ஒவ்வொரு நொடிப்பொழுதின் நிலையை பிரதிபலிக்கும் வண்ணம், தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கிறது.

அரவிந்த கோஷ் (Aurobindo Ghosh): ஒரு சிறந்த பெங்காளி எழுத்தாளர் மற்றும் கவிஞர், இறைநிறைவாத சிந்தனையாளர் மற்றும் *யோகம்* அறிந்த மறைஞானி, மற்றும் இவர் ஸ்ரீ அரபிந்தோ (1872-1950) என்ற பெயருடன்

பிரபலமாக விளங்கினார். இன்றைய உலகம் பல இடர்பாடுகளை சந்தித்து இருண்ட யுகத்தில் இருந்து அதிக தெளிவான யுகத்திற்கு மாற்றம் பெறும் என்றும், அதில் இந்து மதம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் கருதினார். அவர் *பூரண* (முழுமையான) *யோகத்தை* அடிப்படையாகக் கொண்டு புதுச்சேரியில் ஆரோவில் சமூகத்தை தொடங்கி, இந்த நூற்றாண்டில் இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்கு சிறப்பாக தொண்டாற்றினார்.

மங்களகரமான (auspicious): *Maṅgala.* அனுகூலமான, நல்ல சகுணம், நல்ல விளைவுகளை முன்பே அறிவிக்கக்கூடியது. இந்து வாழ்க்கைமுறையில் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. மனிதன் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு, உகந்த சமயத்தை தீர்மானிக்க, ஜோதிடம் ஒரு செய்முறையை வரையறுக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஜோதிடம்.*

உடலை விரும்பி வருத்துதல் (austerity): இது சக்திகளை (*சித்திகள்*) பெறுவதற்கு, அருள் கிடைப்பதற்கு, உள்ளுணர்வு இயல்பை வெற்றிக்கொள்வதற்கு மற்றும் பழைய *கர்மவினைகளின்* விதைகளை எரிப்பதற்கு என்று பல்வேறு காரணங்களுக்காக கடைபிடிக்கப்படும், உடல் மற்றும் மனம் சார்ந்த சுய-கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்தை குறிப்பிடுகிறது. ஒரு வேளை உணவை கைவிடும் சாதாரண விரதங்களில் இருந்து, உறங்குவதற்குக் கூட படுக்காமல் அல்லது உட்காராமல், எப்போதும் நின்றுக்கொண்டு இருக்கும் *தபஸ்* போன்ற தீவிரமான கட்டுப்பாடுகள் வரை பல்வேறு வடிவங்களில் இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *பிராயசித்தம், தபஸ்.*

Auvaiyar: ஔவையார். வரலாற்றில் பல ஔவையார்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். சுந்தரர் காலத்தில் வாழ்ந்த ஒரு ஔவையார் (கி.பி. 800), விநாயகர், முருகன் மீது மிகுந்த பக்தி கொண்டவராக இருந்தார். அவர் பழங்கால இந்தியாவில் நன்னெறிகளை செய்யுளாகவும் பாடலாகவும் பாடியுள்ளார். அவரின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், உலக நீதி, மூதுரை மற்றும் நல்வழி போன்றவை இன்றும் பிரபலமாக இருக்கின்றன. ஒரு ஔவை (கி.மு. 200) தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவரின் திருக்குறளை அரங்கேற்றம் செய்ய துணை புரிந்ததாக கூறப்படுகிறது.

avasthā: अवस्था (Tamil: *avasthai*.) உணர்வு அல்லது அனுபவத்தின் "தன்மை அல்லது நிலை." 1) ஆன்மா உருவாக்கப்பட்டதில் இருந்து ஆதி ஆன்மாவுடன் நடைபெறும் இறுதி ஐக்கியம் வரை உள்ள மூன்று நிலைகளில் ஏதாவது ஒரு நிலை. 2) *ஜாக்ரத்* (அல்லது *வைஷ்வாநர*), "விழித்தநிலை;" *ஸ்வப்னா* (அல்லது *தைஜஸ*), "கனவு நிலை;" *சுஷுப்தி*, "ஆழ்ந்த நித்திரை;" மற்றும் துரிய, "நான்காவது நிலையாக" இருக்கும் மெய்ஞ்ஞான நிலை. "*துரிய* நிலையை கடந்து," *துரியதீத* ஒரு ஐந்தாவது நிலை என்று *மாண்டூக்ய உபநிடதம்* குறிப்பிடும் உணர்வின் நிலைகள். மேலும் தகவலுக்கு: *கேவல அவத்தை, சகல அவத்தை, சுத்த அவத்தை.*

avatāra: अवतार “Descent.” அவதாரம்: கடவுள் ஒரு மனித (அல்லது விலங்கு) உடலில் பிறவி எடுத்தல். இது சாக்த இந்துசமயம், சுமார்த்த இந்துசமயம் மற்றும் வைணவ இந்துசமயத்தின் மைய கோட்பாடாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: மனித பிறவி எடுத்தல், *இஷ்ட தேவதா.*

சாட்சி அல்லது விழிப்புணர்வு (awareness): *Sākshin,* or *chit.* தனிமனிதனின் உணர்வு, புலனுணர்வு, புரிதல்; புலனுணர்வின் சாட்சி, “ஆன்மாவின் அகக்கண்.” இது சம்ஸ்கிருதத்தில் *சாக்ஷின்* அல்லது *சித்* என்று குறிப்பிடப்படுகிறது. ஆன்மா உணர்ந்து, பார்த்து மற்றும் புரிந்துக்கொண்டு, இந்த புரிதலில் உணர்வுடன் இருக்கும் திறன். சாட்சி அகநோக்கியாக *(பிரத்யக் சேதனா)* இருக்கும் போது, *சமாதியின்* பல்வேறு நிலைகள் தோன்றக்கூடும். *ஆகமங்களில்* சாட்சி *சித்சக்தி*, “சாட்சியின் சக்தியின்”, உட்புற ஆன்மா மற்றும் நிரந்தரமான சாட்சி என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *உணர்வு.*

ayanāṁśa: अयनांश. அயனாம்சம். *அயனாம்சம்* என்பது பூமியின் அச்சுப்பிறழ்ச்சியை அளக்கும் ஒரு தொகை. *அயனம்* என்பது சூரியனின் நகர்வை குறிக்கிறது மற்றும் *அம்சம்* என்ற சொல் கோணத்தை குறிக்கிறது. *அயனாம்சம்* என்பது அயனங்களுக்கு (solstice) மத்தியில் இருக்கும் கோணம் என்று பொருள். *வெர்னல் இக்வினாக்ஸ்* (Vernal equinox) என்கிற இராசிச்சக்கரம் ஆரம்பமாகும் இடம், வேத ஜோதிடம் மற்றும் மேற்கத்திய ஜோதிடத்திற்கும் மாறுபடுகிறது. மேற்கத்திய ஜோதிடம் சாயன முறையையும், வேத ஜோதிடம் நிராயன முறையையும் பயன்படுத்துகின்றன. துல்லியமான அயனாம்சம் தெரியாததால், பல்வேறு வானியல் வல்லுனர்கள் மற்றும் பிரபல ஜோதிடகள் பல அயனாம்சங்களை பரிந்துரைத்துள்ளார்கள். லஹிரி உருவாக்கிய அயனாம்சத்தை இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. இது சித்ர பட்ச அயனாம்சத்தை பின்பற்றுகிறது. மிகவும் பழமையான *அயனாம்சங்கள்,* ரேவதி பாசத்தை பின்பற்றுகின்றன.

āyurveda: आयुर्वेद “Science of life,” “science of longevity.” ஆயுர்வேதம்: “உயிரில் இருக்கும் விஞ்ஞானம்,” “நீண்ட ஆயுளில் இருக்கும் விஞ்ஞானம்.” பண்டைய இந்தியாவிற்கு சொந்தமான மருத்துவம் மற்றும் ஆரோக்கியத்தின் ஒரு முழுமையான செய்முறையாக விளங்குகிறது. *ஆயுஷ்* என்கிற “நீண்ட ஆயுள்,” மற்றும் *ஆரோக்கிய* என்கிற, “ தேக ஆரோக்கியம்,” *ஆயுர்வேதத்தின்* குறிக்கோள்களாக இருக்கின்றன, மற்றும் இவை முடிவான ஆன்மீக இலக்குகளை நோக்கி முன்னேறுவதற்கு வழிவகுக்கின்றன. உயிர்சக்தியின் எல்லா நிலைகளிலும், சக்திகளை (குறிப்பாக *தோஷங்கள்*, மனநிலைகளை) சமன் செய்வதன் மூலம் ஆரோக்கியத்தை பெறமுடிகிறது.

**Being:** ஆங்கிலத்தில் பெரிய எழுத்துடன் ("B") தொடங்கும் போது: கடவுளின் முக்கியமான தெய்வீக இயல்பாக விளங்கும் தூய உணர்வு, முழுமுதற்பொருள் மற்றும் ஆதி ஆன்மா (தெய்வீக புருஷனாக இறைவனுக்கு இருக்கும் பண்பு). ஆங்கிலத்தில் சிறிய எழுத்துடன் ("b") தொடங்கும் போது: ஒரு மனிதனிடத்தில் என்றுமே மாறாமல் இருக்கும் முக்கியமான பண்பு; இருப்பு. மேலும் தகவலுக்கு: *சிவபெருமான்*.

பீட்டா சோதனை (beta testing): புதிய கணினி செயலி விற்பனைக்கு வெளியிடும் முன்பாக, மென்பொருள் உருவாக்குபவர் இல்லாமல் மற்றவர்கள் மூலம் இறுதியாக சோதனை செய்யும் முறை.

Bhagavad Gītā: भगवद् गीता "The Lord's Song." பகவத் கீதை: "பகவானின் கீதம்." குருக்ஷேத்திர மகாயுத்தத்தின் தொடக்கத்தில் பகவான் கிருஷ்ணருக்கும் அர்ஜுனருக்கும் இடையே நடந்த இந்த உரையாடல், இந்துசமய நூல்களில் மிகவும் பிரபலமான ஒன்றாக விளங்குகிறது. *மஹாபாரத* இதிகாசத்தில் மையமாக விளங்கும் இந்த அத்தியாயத்தில் (ஆறாவது புத்தகத்தின் அங்கமாக விளங்குகிறது), சிறந்த போர் வீரனாக மற்றும் இளவரசனாக இருந்த அர்ஜுனனிடம் யோகம், துறவறம், *தர்மம்* மற்றும் பலவகைப்பட்ட ஆன்மீக பாதைப் பற்றி பகவான் ஸ்ரீகிருஷ்ணர் விளக்கம் அளிக்கிறார். மேலும் தகவலுக்கு: *மஹாபாரதம்*.

bhajana: भजन Spiritual song. பஜனை: ஆன்மீக பாடல். தனியாக அல்லது குழுவாக பக்தி மற்றும் துதிப்பாடல்கள் மற்றும் வேறுவகை பாடல்கள் பாடுவதை குறிக்கிறது.

bhakta: भक्त (Tamil: *Bhaktar* .) "Devotee." பக்தன். வழிபடுபவர். தெய்வத்தின் முன்பாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மேலும் தகவலுக்கு: *பக்தி, பக்தி யோகம், பக்தன், குரு பக்தி*.

bhakti: भक्ति "Devotion." பக்தி. தெய்வம், தெய்வங்கள் அல்லது *குருவிடம்* சரணடைதல். *பக்தி* என்பது அர்ப்பணிப்பின் மிகவும் எளிமையான வெளிப்பாட்டில் இருந்து தொடங்கி, முழுமையான சரணாகதியாக விளங்கும் *பிரபத்தி* என்கிற ஆணவத்தை அழிக்கும் கோட்பாடு வரை பரவி இருக்கிறது. *பக்தி* என்பது இந்துசமயத்தில் இருக்கும் அனைத்து பிரிவுகளுக்கு மற்றும் உலகெங்கும் இருக்கும் யோக பள்ளிகளுக்கு அடிப்படையாகவும் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பக்தி யோகம், தரிசனம், பிரசாதம்*.

bhakti yoga: भक्तियोग "Union through devotion." *பக்தி யோகம்*: "பக்தியின் மூலம் ஏற்படும் சங்கமம்." பக்தி யோகம் என்பது இதயத்தில் அன்பை விழிப்படைய செய்து இறையருளுக்கு தன்னை தயார்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் *பக்தியில்* இருக்கும் கட்டுப்பாடுகள், வழிபாடு, பிரார்த்தனை, கீர்த்தனைகள் மற்றும் துதிப்பாடல்களில் ஒருவர் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது ஆகும். பக்தியை கடவுள், மகாதேவர்கள் அல்லது ஒருவரின் ஆன்மீக குருவின் மீது

செலுத்தலாம். பதஞ்சலியின் *யோக தர்சனத்தில்* இரண்டாவது அங்கமாக இருக்கும் *நியமங்களில்* (கடைப்பிடித்தல்கள்), பக்தியாக (*ஈஸ்வரப்ரணிதான*) பக்தி யோகம் உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

பிக்கு (bhikku): இது ஒரு பௌத்த மதத்துறவி அல்லது புத்தரின் முக்கிய சீடர்களில் ஒருவரை குறிப்பிடுகிறது.

Bhojana Mantra: भोजन मन्त्र "Food-blessing chant." *போஜன மந்திரம்*. உணவு வழங்கும் அன்னபூரணேசுவரிக்கு நன்றி தெரிவித்து ஞானம் மற்றும் வைராக்கியம் கிடைக்கவேண்டும் என்று, உணவு அருந்தும் ஒவ்வொரு முறையும், ஒரு குழுவாக அல்லது தனியாக அமர்ந்து உணவிற்கு மரியாதை செலுத்தும் மந்திரம். ஜகந்மாதா அன்னபூரணேசுவரி வழங்கிய உணவை அருந்துபவர், அதை சரியான மனநிலை மற்றும் உணர்ச்சியுடன் சாப்பிடவேண்டும் என்பதற்காக அந்த மந்திரம் உச்சரிக்கப்படுகிறது. *பிராணசக்தியின்* மூலமாக விளங்கும் உணவானது, பிரபஞ்சத்திற்கு தாய் போல இருந்து, உடலெடுத்த ஆன்மாக்களுக்கு உயிர்நாடியாக விளங்கி, இயற்கை உயிரினங்களுக்கு ஆகாரம் அளிக்கும் முறையாகவும் விளங்குகிறது. தெய்வத்திடம் உணவை பிக்ஷையாக கேட்பது போல இந்த மந்திரம் அமைந்து இருக்கிறது. சூட்சும மற்றும் தூல பிரபஞ்சங்களுக்கு மத்தியில் ஒரு *பிராண சக்தி* பாலமாக விளங்கும் நீரானது, உணவு அருந்துவதற்கு முன்பாக நான்கு வழிகளில் பயன்படுகிறது. முதலில் நீரைக்கொண்டு வாயை சுத்தம் செய்கிறோம். அதன் பிறகு நீரின் மூலம் தட்டு அல்லது வாழை இலையை சுத்தம் செய்கிறோம். உணவானது ஸ்பூன் போன்ற பொருட்களைக் கொண்டு சாப்பிடாமல் வலது கையால் சாப்பிடும் போது, ஒருவர் பயன்படுத்தும் குவளையில் இருந்து நீரை வலது கையில் ஊற்றி அதை கழுவுகிறோம். இறுதியில் அந்த நீரை வலது கையில் ஊற்றி, அதனால் உணவை சுற்றி ஒரு வட்டமிட்டு, அதை சுத்தம் செய்து மற்றும் பாதுகாப்பு விசைப்பகுதியை உருவாக்கி, உடலில் இருக்கும் ஐந்து *பிராணசக்திகளுக்குள்* இணக்கத்தை ஏற்படுத்துகிறோம். தென் இந்தியாவில் உண்பதற்கு முன்பாக விநாயகருக்கு வழங்கும் படையலாக, உணவுத் தட்டின் இடது பக்க மேற்புறத்தில் உணவு வகை ஒவ்வொன்றில் இருந்து சிறிது பிரித்து வைக்கப்படுகிறது.

bilva: बिल्व Wood-apple (or bael) tree, Aegle marmelos, sacred to Lord Śiva. வில்வம். பில்வம். இந்த மரத்தின் இலைகள் சிவலிங்க வழிபாட்டிலும், இலை மற்றும் பழம் மருந்தாகவும் பயன்படுகிறது.

bindu: बिन्दु "A drop, small particle, dot." பிந்து: "ஒரு துளி, சிறிய பொருள், புள்ளி." நெற்றியில் இரு புருவங்களுக்கு மத்தியில் அல்லது நெற்றியின் மத்தியில் குங்குமம், சந்தனம், களிமண், ஒப்பனைப் பொருள் அல்லது வேறு பொருட்கள் மூலம் வைக்கும் சிறிய புள்ளியை தமிழில் பொட்டு என்றும், இந்தியில் பிந்தி என்றும் அழைக்கப்படுகிறது. *பிந்து* என்பது *விந்துவை* குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *திலகம்*.

அச்சுறுத்தல் (blackmail): தகவலை வெளியுலகிற்கு தெரிவித்து அவமானம் ஏற்படுத்தி விடுவதாக பயமுறுத்தி பணம் பறித்தல்.

வரம் (boon): *Varadāna.* ஒருவர் விருப்பத்துடன் பெறும் ஆசிகள், மனதிற்கு திருப்தி அளிக்கும் பயன். ஒரு எதிர்பாராத பரிசு அல்லது வெகுமதி. மேலும் தகவலுக்கு: *அருள்.*

brahmachārī: ब्रह्मचारी பிரம்மச்சரியம் என்பது தன்னடக்கத்துடன் இருந்து சாதனா, பக்தி மற்றும் சேவை உட்பட சமய அறிவுறுத்தல்களை கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல், சில சமயங்களில் எளிமையான விரதங்களை மேற்கொள்ளும் ஆன்மீக நாட்டமுள்ள ஒரு திருமணமாகாத இளைஞரை குறிப்பிடுகிறது. இது மாணவ பருவத்தில் இருப்பவரை, 12 இருந்து 24 வயது வரை இருப்பவரை அல்லது அவருக்கு திருமணமாகும் வரை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம், முனிவர்.*

brahmacharya: ब्रह्मचर्य பிரம்மசரியம். மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

brahmacharya āśrama: ब्रह्मचर्य आश्रम *பிரம்மச்சரிய ஆசிரமம்.* மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம்.*

brahmacharya vrata: "Celibacy vow." *பிரம்மச்சரிய விரதம்.* திருமணம் வரை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது வாழ்நாள் முழுவதும் புலன் அடக்கத்துடன் இருக்க வேண்டும் என்று ஒருவர் தனது மத சமூகத்தின் முன்பாக வாய்மொழியாக எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி. இது கோபம், பொறாமை, பேராசை, சுயநலம் போன்ற அடிப்படை உள்ளுணர்வுகளில் இருந்து ஒருவர் தன்னை கட்டுப்படுத்திக் கொள்வதும் அடங்கும்.

brahmachāriṇī: ब्रह्मचारिणी பிரம்மச்சாரிணி. *பிரம்மச்சாரியின்* பண்புகளுடன் இருக்கும் பெண்.

Brahmadhvara: ब्रह्मध्वर *பிரம்மத்வர*: பிரம்மனின் வாசல். இது ஏழு *சக்கரங்கள்* மற்றும் *மூலாதாரத்திற்கு* கீழிருக்கும் *நரகலோகத்தின்* நுழைவாயிலை குறிக்கிறது. உயர்நிலையில் இருக்கும் சக்கரங்கள் சக்தி பெறுவதற்கு, இந்த கதவை மூடிவைத்து அச்சங்கள், வெறுப்புக்கள், கோபங்கள் மற்றும் பொறாமைகள் எழுச்சி பெறுவதை தவிர்க்க வேண்டும். இதை செய்துமுடிப்பதற்கு *சாதனா* மற்றும் சரியான சிந்தனை, சொல் மற்றும் செயல் போன்றவை துணை புரிகின்றன. மேலும் தகவலுக்கு: *நரகம்.*

Brahman: ब्रह्मन् "Supreme Being; Expansive Spirit." *பிரம்மன்*, பிரம்மம்: "பரமாத்துமா; விசாலமான ஆன்மா." இது "வளர்தல், அதிகரித்தல். விரிவாக்குதல்," என்று குறிக்கும் *ப்ரிஹ்* என்ற வேர்ச்சொல்லில் இருந்து உருவானது. இது வேதங்களில் இறைவனின் பெயர் அல்லது மகேசுவரரை குறிக்கிறது, மற்றும் அதில் அவர் 1) யாவும் கடந்த முழுமையாக, 2) எங்கும் வியாபித்து இருக்கும் சக்தியாக மற்றும் 3) பரமாத்துமாவாக அல்லது ஆதி ஆன்மாவாக விவரிக்கப்பட்டு இருக்கிறார். இந்த மூன்றும் சிவபெருமானின் மூன்று முழுமைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. அதனால் சைவர்கள் பிரம்மம் மற்றும் சிவனை ஒரே கடவுளாக அறிகிறார்கள்: – ***நிர்குண பிரம்மம்,*** "பண்புகள் (குணம்) இல்லாத கடவுள்" உதாரணத்திற்கு உருவமில்லாமல், முழுமையான பரம்பொருள், பரபிரம்மம் அல்லது பரசிவமாக–புலனாகும் பண்புகளை வெளிப்படுத்தும் குணம் (பண்பு), தெளிவாக தெரியும் உள்பொருள் மற்றும் பராசக்தியையும் முழுமையாக

கடந்து இருக்கும் நிலை; –***சகுண பிரம்மம்***, “பண்புகளுடன் இருக்கும்” கடவுள்; சிவபெருமான் தனது முழுமைகளாக இருக்கும் பராசக்தி மற்றும் பரமேசுவவரன்–கடவுள் மெய்ஞ்ஞானமாக, எங்கும் வியாபித்து, எல்லாம் அறிந்து, எல்லோர் மீதும் அன்பை செலுத்தி ஆற்றல் நிறைந்து இருக்கும் நிலை. பிரம்மம் என்கிற சொல்லை 1) *பிரம்மா*, படைக்கும் கடவுள்; 2) *வேத* நூல்களின் வர்ணனைகளைக் குறிப்பிடும் *பிராமண* அல்லது 3) இந்துசமயத்தின் *பிராமண* குலத்துடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. மேலும் தகவலுக்கு: *பராசக்தி*, *பரசிவம்*.

Brahmarandhra: ब्रह्मरन्ध्र *பிரம்மரந்த்ர:* மேலும் தகவலுக்கு: *பிரம்மனின்* வாசல்.

brāhmin (brāhmaṇa): ब्राह्मण “Mature or evolved soul.” பிராமணன்: “முதிர்ந்த அல்லது பக்குவம் அடைந்த ஆன்மா.” சிறந்த முறையில் கல்வி கற்று தெய்வ பக்தியுள்ள ஆன்மாக்களின் குலம். *பிராமணன்* என்றால், “வளர்ச்சி, விரிவாக்கம், பக்குவம், மேம்பாடு, ஆன்மாவின் எழுச்சி.” மேலும் தகவலுக்கு: *ஜாதி*.

bhāshya: भाष्य “Speech, discussion.” பாஷ்யம். ஒரு நூலுக்கு வழங்கப்படும் விளக்க உரை. இந்து சமயத்தின் தத்துவங்கள் பெரும்பாலும், முக்கிய சாத்திரங்களின் *பாஷ்யங்கள்* அல்லது விளக்கங்களை சார்ந்து உள்ளன. சூத்திரங்கள் மீது ஒரு சிறிய விளக்கமாக விளங்கும் *வ்ரித்தி*; *வ்ரித்தி* போலவே அமைந்து கடினமான சொற்கள் அல்லது சொற்றொடர்களை விளக்கும் *டிப்பணி*, ஒரு *பாஷ்யம்* மீது மேற்கொள்ளப்படும் தீவிர ஆய்வு மற்றும் விரிவுரைகளை குறிப்பிடும் *வார்த்திக*, ஒரு எளிய நடையில் *பாஷ்யம்* அல்லது *சாத்திரத்திற்கு* விளக்கமாக விளங்கும் *டீகா* அல்லது *வியாக்கியானம்* ஆகியவை விளக்கங்களில் மற்ற வகைகள் ஆகும்.

நட்சத்திரம் (birthstar). மேலும் தகவலுக்கு: *நட்சத்திரம்*.

Bṛihadāraṇyaka Upanishad: बृहदारण्यक उपनिषद् *பிருகதாரண்யக உபநிடதம்:* நான்கு முக்கிய உபநிடதங்களில் ஒன்றாகவும், *யஜுர் வேதத்தின் ஷதபாத பிராமணத்தின்* அங்கமாகவும் இருக்கிறது. இதை இயற்றியவர் பிரம்மஞானியான யாஞவல்கியர். இது வழிபாடு, தியானம் பற்றிய முறைகள் மற்றும் பரமாத்துமாவிற்கும் ஆன்மாவிற்கு இருக்கும் ஒற்றுமை பற்றி போதிக்கிறது. மேலும் தகவலுக்கு: *உபநிடதம்*.

Buddha: बुद्ध “The enlightened.” புத்தர்: “ஞானோதயம் பெற்றவர்.” வழக்கமாக இந்த பெயர், நேபாள எல்லையில் இருக்கும் கிழக்கு இந்தியாவின் சைவ இந்துபிரிவை சேர்ந்த சாக்கிய குலத்தில் பிறந்த இளவரசன், சித்தார்ந்த கௌதமரை (கி.மு. 624-544) குறிப்பிடுகிறது. அவர் உலக வாழ்க்கையை துறந்து, துறவறம் பூண்டார். அவர் ஞானோதயம் பெற்ற பிறகு, தத்துவங்களை போதித்தார் மற்றும் பின்னர் இதனை பயன்படுத்தி அவரது சீடர்கள் பௌத்த தர்மத்தை தொடங்கினார்கள். மேலும் தகவலுக்கு: *பௌத்த தர்மம்*.

பௌத்த மதம் (Buddhism): புத்தர் (கி.மு. 624–544) என்று அழைக்கப்பட்ட, சித்தார்த்த கௌதமரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட மதம். அவர் மனித ஆன்மா அழிவில்லாதது என்கிற கோட்பாட்டை நிராகரித்தார்

மற்றும் அவர் பரமாத்துமா பற்றி எதையும் போதிக்கவில்லை. ஆனால் மனிதன் பேராசை, வெறுப்பு மற்றும் மாயையை வெற்றிக்கொண்டு, நான்கு உயர்ந்த உண்மைகளை உணர்ந்து மற்றும் எண்வகை மார்க்கங்களை பின்பற்றி ஞானோதயத்தை பெறவேண்டும் என்று போதித்தார். மேலும் தகவலுக்கு: *புத்தர்.*



ஜாதி (caste): பழங்கால இந்தியாவில் உருவான *வர்ண தர்மம்* (அல்லது *ஜாதி தர்மம்*). இந்த அமைப்பு பல தொழில் குழுக்களில் சலுகைகள், அந்தஸ்து, உரிமைகள் மற்றும் கடமைகளை தீர்மானித்தன. இந்த அமைப்பில் ஒருவர் தான் பிறந்த பரம்பரை மூலம் அந்தஸ்த்துக்கு தகுதி பெற்றார். இது *பிராமண, சத்திரிய, வைஷ்ய* மற்றும் *சூத்திர* என்ற நான்கு முக்கிய பிரிவுகளுடன் (*வர்ணங்கள்*) எண்ணற்ற ஜாதிகளை கொண்டது. அதில் நான்கு *வர்ணங்கள்* பின்வருமாறு. —***பிராமணன்** (brāhmin (brāhmaṇa)):* “Mature, evolved soul.” “பக்குவமடைந்த ஆன்மா.” சிறந்த கல்வி அறிவுடன், தெய்வபக்தியுள்ள ஆன்மாக்கள். இந்து சாத்திரங்கள் வழக்கமாக பிராமணர்களுக்கு, மதம் தொடர்பான போதனைகள் மற்றும் புரோகித கடமைகளுடன், மதம் சார்ந்த நடவடிக்கைகளில் தலைமை பொறுப்பை வழங்கி வந்துள்ளது. —***சத்திரிய (kshatriya)*** : “Governing; endowed with sovereignty.” "நிர்வாகம்; அரசாளும் பொறுப்பு." சட்டமியற்றுபவர்கள் மற்றும் சட்டத்தை அமல்படுத்துபவர்கள் மற்றும் இராணுவம்; *ராஜன்ய* என்றும் அழைக்கப்படுகிறது. —***வைஷ்ய** (vaiśya)* : “Landowner, merchant.” "நில உரிமையாளர்கள், வியாபாரி." தொழிலதிபர்கள், நிதித்துறை வல்லுனர்கள்; எஜமானர்கள். வியாபாரம், வர்த்தகம் மற்றும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள். —***சூத்திரன்** (śūdra)* : “Worker, servant.” "தொழிலாளி, சேவகன்." கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள்.

கத்தோலிக்க மதம் (Catholicism): ஒரு முக்கிய கிறித்துவ பிரிவான, கத்தோலிக்க திருச்சபையின் இறை நம்பிக்கை, கோட்பாடு மற்றும் பயன்பாடு.

மனத்துறவு (celibacy): உடலுறவில் இருந்து முழுமையாக விலகி இருத்தல். மேலும் இது திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று உறுதி பூண்டுள்ளவரின் நிலையையும் குறிக்கிறது. மனத்துறவு என்பது: கற்பனை (*ஸ்மரண*), பொருத்தமற்ற புகழ்ச்சி (*கீர்த்தன*), பொழுதுபோக்கு (*கேலி*), பார்வை (*ப்ரெக்ஷன*), இரகசிய பேச்சு (*குஹ்ய பாஷன*), ஏக்கம் (*காம சங்கல்பம்*), சந்திப்பு (*அத்யவசாய்*) மற்றும் பாலுறவு (*க்ரியா நிவ்ரித்தி*) என்று பாலியல் நடவடிக்கைகளின் எட்டு நிலைகளில் இருந்து விலகி இருப்பதை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பிரம்மச்சாரி, ஓஜஸ், தேஜஸ்,* உருமாற்றம், *இயமம்-நியமம்.*

மடத்தில் இருக்கும் உறுப்பினர் (cenobite).

மட சமூகத்தை சேர்ந்தவர் (cenobitic).

விழா (ceremony): விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்றார் போல குலவழக்கம் அல்லது சம்பிரதாயத்தால் உருவாக்கப்பட்ட ஒரு முறையான சடங்கு.

chakra: चक्र "Wheel." *சக்கரம்.* இது மனிதனின் உட்புற கோசங்களில் அமைந்திருக்கும் நரம்புப் பின்னல்கள் அல்லது விசைப்பகுதிகள் மற்றும் உணர்வின் மையங்களில் ஏதேனும் ஒன்றை குறிப்பிடுகிறது. நரம்புப் பின்னல்கள், கொத்துகள் மற்றும் சுரப்பிகள் ஆகியவை, இந்த *சக்கரங்களுடன்* தூல உடலில் தொடர்பில் இருக்கின்றன. இதில் இருக்கும் ஏழு அடிப்படை *சக்கரங்களை* சூட்சுமமாக பார்க்கும் போது, பல இதழ்களை கொண்ட வண்ணமயமான *சக்கரங்களாக* அல்லது தாமரைகளாக தென்படுகிறது. அவை முதுகுதண்டு நெடுகிலும், அடிப்பகுதியில் இருந்து மண்டை ஓடு வரை அமைந்துள்ளன. மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்து மிகவும் உயர்ந்த நிலை வரை உள்ள ஏழு அடிப்படை *சக்கரங்களின்* பட்டியல் பின்வருமாறு, 1) ***மூலாதார சக்கரம்*** (முதுகுதண்டின் அடிப்பகுதி): நினைவாற்றல், காலம் மற்றும் பரவெளி; 2) ***ஸ்வாதிஷ்டானா*** (தொப்புளுக்கு கீழே): காரணம்; 3) ***மணிப்பூரகம்*** (சூரிய பின்னல்): மனோபலம்; 4) ***அனாஹத*** (இதயத்தின் மையம்): நேரடி அறிவெழுச்சி; 5) ***விசுத்த*** (தொண்டை): தெய்வீக அன்பு; 6) ***ஆக்ஞா*** (மூன்றாவது கண்): தெய்வீக பார்வை; 7) ***சஹஸ்ரஹார*** (உச்சந்தலை): ஞானோதயம், தெய்வீகப் பண்பு. ¶மேலும், பார்வைக்கு அரிதாக காட்சி அளிக்கும் ஏழு *சக்கரங்கள்*, முதுகுத்தண்டின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளன. அவை உள்ளுணர்வு மற்றும் பொறாமை, வெறுப்பு, வயிற்றெரிச்சல், குற்ற உணர்வு, வருத்தம் போன்றவற்றின் இருப்பிடங்களாக விளங்குகின்றன. அவை கீழ்நிலை உலகமான *நரக லோகம்* அல்லது *பாதளத்தை* உள்ளடக்கியுள்ளன. மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து மிகவும் தாழ்ந்த நிலை வரை இருக்கும் *சக்கரங்களின்* பட்டியல் பின்வருமாறு: 1) ***அதள*** (இடுப்பு): கோபம் மற்றும் சிற்றின்ப வேட்கை; 2) ***விதள*** (தொடை): பொங்கி எழும் கோபம்; 3) ***சுதள*** (முழங்கால்): பழிவாங்கும் பொறாமை; 4) ***தளாதள*** (காலின் பின்பகுதி): நீடித்த மனக்குழப்பம்; 5) ***ரசாதள*** (கணுக்கால்): சுயநலம்; 6) ***மகாதளம்*** (கால்கள்): மனசாட்சி இல்லாத இல்லை; 7) ***பாதாள*** (உள்ளங்கால்): கொலை மற்றும் தீய எண்ணம். ¶முதல் *தத்துவம்* மற்றும் ஒலியின் மிகவும் உயர்ந்த அடுக்காக இருக்கும் *பரநாதத்தின்* உயர்வான பரிணாமங்களின் ஏழு நிலைகளாக, *சஹஸ்ரஹாரத்திற்கு* மேல் மற்றும் அதனுள் ஏழு *சக்கரங்கள்* அல்லது நாடிகளின் கூட்டமைப்புக்கள் அமைந்து இருக்கின்றன. கீழ்நிலையில் இருந்து மேல்நிலை வரை, அந்த *சக்கரங்களின்* பட்டியல் பின்வருமாறு, 1) ***வியாபிணி:*** "எங்கும் எதிலும் வியாபித்து இருப்பது;" 2) ***வ்யோமாங்:*** "பரவெளியை அங்கமாக கொண்டு இருப்பது;" 3) ***அனந்தா:*** "முடிவுற்றது;" 4) ***அநாதா:*** "தலைவன்" இல்லாதது;" 5) ***அனாஸ்ரிதா:*** "தனித்து இயங்குவது;" 6) ***சமனா:*** "சீராக ஒரே சமயத்தில் இயங்குவது;" 7) ***உன்மனா:*** "பரவசநிலை, மனதை கடந்த நிலையில் இருப்பது." மேலும் தகவலுக்கு: *சஹஸ்ரஹாரத்திற்கு மேலிருக்கும் சக்கரங்கள், நரகலோகம்* (மற்றும் அதில் இருக்கும் தனிப்பட்ட *சக்கரங்கள்).*

chakravāla: चक्रवाल "Circle," "an assembly." *சக்ரவாள.* "வட்டம்," "ஒரு கூட்டம்." ஒரு சங்கத்தில் வயது அல்லது முதுநிலைக்கு ஏற்ப வலஞ்சுழியாக வட்டவடிவில்

பக்தர்கள் அமர்ந்து இருக்கும் கூட்டம். தனிநபர் பொறுப்பு, மரியாதை அல்லது முதியவர்கள் மற்றும் இளைஞர்கள் ஊக்குவிப்பும் தெளிவாக இருந்து, குழுவினர் எல்லோரும் படிநிலையை முழுமனதுடன் அங்கீகரிப்பதன் காரணமாக தொடர்புகளும் கருத்துப்பரிமாற்றங்களும் இணக்கத்துடன் இருக்கின்றன. ஒரு குழு அமர்ந்து இருக்கும் போது, எல்லோரையும் மேம்படுத்துவதற்கு அவர்கள் தங்கள் *பிராண* சக்திகளை வலஞ்சுழியாக வட்டவடிவில் அனுப்புகிறார்கள்.

Çhāndogya Upanishad: छान्दोग्य उपनिषद् *சாந்தோக்ய உபநிடதம்*: மிகவும் முக்கியமான *உபநிடதங்களில்* ஒன்று. அதில் *சாம வேதத்தில்* இருக்கும் *சாந்தோக்ய பிராமணத்தின்* எட்டு அத்தியாயங்கள் அடங்கும். அது ஓம்காரத்தின் தொடக்கம் மற்றும் முக்கியத்துவம், *சாம வேதத்தின்* சிறப்பு, பரமாத்துமா, தியானம் மற்றும் மரணத்திற்கு பிந்தைய வாழ்க்கையை போதிக்கிறது. மேலும் தகவலுக்கு: *உபநிடதம்*.

சூட்சும சக்தி மற்றும் உயிருடன் இருப்பவர்கள் தொடர்புகொள்ள பாதை அமைக்கும் செய்முறை (channeling).

charyā: चर्या "Conduct stage." சரியை: "நன்நடத்தையை உருவாக்கிக்கொள்ளும் நிலை." சேவை மற்றும் ஆளுமையை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளும் நிலை. மேலும் தகவலுக்கு: *பாதம், சைவ சித்தாந்தம், சைவ சமயம்*.

இணையத்தில் அரட்டை அறை (chat room): இணையத்தில் ஒரு தனி அறையில், இரண்டு கணினிகளுக்கு இடையே நடைபெறும் நிகழ்நேர உரையாடல்.

chelā: चेला "Disciple." (Hindi.) சீடன். இதற்கு சமஸ்கிருதத்தில் *சிஷ்ய* என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. *சேலினா* அல்லது *செலி* பெண் சிஷ்யையை குறிக்கும் சொல்.

Chellappaswami: "Wealthy father." (Also known as Chellapaguru.) செல்லப்பசுவாமி. தனித்து இருந்த *சித்தர்* மற்றும் நந்திநாத சம்பிரதாயத்தின் கைலாச பரம்பரையின் 160 ஆவது *சத்குரு* (1840—1915). அவர் இலங்கை யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்து வந்தார் மற்றும் இன்று அந்த இடத்தில் அவரது நினைவாக ஒரு சிறிய *சமாதி* உள்ளது. அவர்களின் சீடர்களில் ஒருவராக துறவி யோகசுவாமி இருந்தார், மற்றும் அவர் அந்த சீடருக்கு ஐந்து வருடங்களுக்கு தீவிரமாக பயிற்சி அளித்து தனது வாரிசாக நியமித்தார். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத சம்பிரதாயம்*.

Chettiar: செட்டியார்: தென்னிந்தியா மற்றும் இலங்கையில் வாழும் வணிகர் குலத்தின் பெயர்.

Chidambaram: சிதம்பரம் "Hall of Consciousness." தென்னிந்தியாவில் மிகவும் பிரசித்தமான தில்லை நடராசர் கோயில் இருக்கும் இடம். மேலும் தகவலுக்கு:*நடராசர்*.

சிரோபிராக்டிக் (chiropractic): நரம்பியல் அமைப்பு வழக்கமாக செயல்படாததன் காரணமாக நோய்கள் தோன்றுகின்றன என்று கருதும் ஒரு

நவீன மருத்துவ அமைப்பு. நோயை குணப்படுத்துவதற்கு முதுகுத்தண்டு போன்ற உடல் அமைப்புக்களை சீர் செய்து, எலும்பு ஒழுங்கமைப்பு சீராக இல்லாததால் தோன்றும் வலி, அசௌகரியம் மற்றும் வியாதியில் இருந்து நிவாரணம் அளிக்கிறது.

குளோரோப்ளூரோகார்பன்ஸ் (chlorofluorocarbons): இது குளிர்பதனம் மற்றும் காற்றுப் பதனம் செய்யும் சாதனங்கள் பயன்படுத்தும் ஒரு பொருள் ஆகும். இது பூமியின் வளிமண்டலத்தை சுற்றி இருக்கும் மெல்லிய ஓசோன் படலத்தில் சிதைவை ஏற்படுத்துகிறது. இதனால் இதன் பயன்பாடு பல நாடுகளில் தடை செய்யப்பட்டு, அதன் பயன்பாடு குறைக்கப்பட்டு வருகிறது.

சோகா (choga): (Bengali) குர்தா அல்லது காப்நி போல ஆண்கள் தளர்வாக அணியும் சட்டை.

கிறித்து (Christ): மேலும் தகவலுக்கு: *இயேசு கிறித்து.*

கிறித்துவம்-யூதம் சார்ந்த (Christian-Judaic). மேலும் தகவலுக்கு: *யூதம்-கிறித்துவம் சார்ந்த.*

சிர்காடியன் ரிதம் (circadian rhythm): 24 மணி நேரத்தில் உயிரியல் செயல்பாடு அல்லது நடவடிக்கையின் இயல்பான சுழற்சி மற்றும் சூரிய உதயம் மற்றும் அஸ்தமனத்தின் விளைவாக உடல் முழுவதிலும் நடைபெறும் நுணுக்கமான சக்தியின் இயக்கம். *சீ* என்று அழைக்கும் உயிர்சக்தி, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு முக்கிய மெரிடியனில் இருந்து இன்னொன்றுக்கு செல்வதாகவும், அது 24 மணி நேரத்திற்கு ஒரு முறை நிகழ்வதாகவும் பாரம்பரிய சீன மருத்துவம் குறிப்பிடுகிறது. அதன் அட்டவணை பின்வருமாறு: இரவு 11 மணி முதல் நள்ளிரவு 1 மணி வரை பித்தப்பை; நள்ளிரவு 1 மணி முதல் நள்ளிரவு 3 மணி வரை கல்லீரல் (ஆழ்ந்து உறங்கும் நேரம், இந்த நேரத்தில் கல்லீரல் இரத்தத்தை சுத்தம் செய்வதில் தீவிரமாக செயல்படுகிறது); நள்ளிரவு 3 மணி முதல் அதிகாலை 5 மணி வரை நுரையீரல் (பாரம்பரிய கலாச்சாரங்களில் மக்கள் இந்த நேரத்தில் எழுந்து முதல் முறை சுவாசிக்கிறார்கள்); அதிகாலை 5 மணி முதல் காலை 7 மணி வரை பெருங்குடல் (உட்கொண்ட உணவின் அளவை பொருத்து, இந்த நேரத்தில் முதல் மலங்கழிப்பு நடக்கிறது); காலை 7 முதல் 9 மணி வரை வயிறு (இது வழக்கமாக காலை சிற்றுண்டி உண்ணும் நேரம்); காலை 9 மணி முதல் 11 மணி வரை மண்ணீரல்; காலை 11 மணி முதல் மதியம் ஒரு மணி வரை இதயம்; மதியம் ஒன்று முதல் 3 மணி வரை சிறிய குடல் (இது வழக்கமாக மதிய உணவு உண்ணும் நேரம்); மதியம் 3 மணி முதல் மாலை 5 மணி வரை சிறுநீர்ப்பை; மாலை 5 மணி முதல் 7 மணி வரை சிறுநீரகம்; மாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இதய உறை; இரவு 9 மணி முதல் 11 மணி வரை சான் ஜியாவ் ("ட்ரிபில் பர்னர்ஸ்" அல்லது "மூன்று எரியும் பகுதிகள்"). மேலும் தகவலுக்கு: *அலகுக்குத்தல், மெரிடியன்.*

clairaudience: "Clear-hearing." "தெளிவாக கேட்டல்." *திவ்யஷ்ரவன*, சூட்சுமமாக அல்லது *திவ்யஷ்ரவன* என்கிற தெய்வீகத் தன்மையுடன் காதால் கேட்டல். நரம்பு அமைப்பில் இருக்கும் உட்புற ஓட்டங்கள், *ஓம்* மற்றும் மற்ற சூட்சுமமான தொனிகளை கேட்கும் திறமை. ஒருவர் தனது மனதில், தூல

கண்களுக்கு தென்படாத அந்தர்லோக அல்லது லௌகீக சக்திகளின் உரையாடல்களை கேட்டறிதல். இது நாள் முழுவதும் அல்லது தியானத்தின் போது *நாதநாடி சக்தியை* காதால் கேட்பத்தையும் குறிப்பிடுகிறது.

clairvoyance: "Clear-seeing." "தெளிவாக பார்த்தல்." சூட்சுமமாக அல்லது *திவ்யதிருஷ்டி* என்கிற தெய்வீகத் தன்மையுடன் பார்த்தல். அந்தர்லோகங்களில் கூர்ந்து கவனித்து ஒளி உடல்கள், *சக்கரங்கள், நாடிகள்*, சிந்தனை வடிவங்கள், தூல உடல் இல்லாத மக்கள் மற்றும் நுணுக்கமான சக்திகளை பார்த்தல். மேலும் தகவலுக்கு: *ஆகாசம், கட்புலனுக்கு அப்பாற்பட்டதை கேட்டல்.*

தூய வெள்ளை ஒளி (clear white light). மேலும் தகவலுக்கு: *ஒளி.*

கருணை (clemency): குறிப்பாக தவறு செய்தவர் அல்லது எதிரி மீது காண்பிக்கப்படும் இரக்கம் அல்லது தயவு.

தனித்து இருத்தல் (cloistered): ஒரு மடத்தில் இருப்பதை போல தனித்து இருத்தல்.

அறிவெழுச்சி (cognition): அறிதல்; புலனுணர்வு. அறிவுணர்வு மட்டுமல்லாமல் இயலுணர்வு, மெய்ஞ்ஞான புலன்களால் அடையப்படும் அறிவு.

அறிந்து இருத்தல் (cognizant): ஒரு விஷயத்தை பற்றி அறிந்து இருத்தல் அல்லது விழிப்புடன் இருத்தல்.

அறிதல் (cognize): ஒரு விஷயத்தை பற்றி அறிந்துக்கொள்ளுதல்.

கம்யூனிசம் (communism): இது இன்றைய ரஷ்யாவில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய சமூக மற்றும் பொருளாதார அமைப்பு ஆகும். இதைப்பற்றி வெப்ஸ்டெர்ஸ் அகராதி வழங்கும் விளக்கத்தை பார்க்கலாம். "இது சோசியலிசத்தின் அடிப்படையாக கருதப்படுகிறது. இது மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் மற்றும் பலரால் உருவாக்கப்பட்டது. அவர்கள் பிரிவினைவாதம் மற்றும் நாடு என்ற வரையறை இல்லாத சமூகத்தை, படிப்படியாக பெற விரும்பாமல் புரட்சிகரமாக மற்றும் சர்வாதிகாரத்துடன் அடைய விரும்பினார்கள். இறைநம்பிக்கை இல்லாத கம்யூனிசம், மனித நேயத்தை மூடநம்பிக்கை மற்றும் "ஆன்மீக பற்றில்" இருந்து விடுவிக்க முயற்சிக்கிறது.

மன நிறைவு (complacent): ஆத்ம திருப்தி மற்றும் கவலையற்ற நிலை.

கருத்தரிப்பு அல்லது கருத்தாக்கம் (conception): கற்பனை செய்யும், கருவுறும் அல்லது உருவாக்கும் சக்தி. கருத்தரித்தவுடன் பூலோகத்திற்கு என்று ஒரு புதிய உடல் உருவாகிறது.

குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் (confession): ஒரு குற்றம் அல்லது தவறான செய்கையை ஒப்புக்கொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்.

கன்பூசியல் (Confucius): சீன தத்துவவாதி மற்றும் ஆசிரியர் (கி.மு. 552-479). கன்பூசிய நெறியை தொடங்கி வைத்தவர். அவரது *அனாலேக்ட்ஸ்* அவருடைய கருத்துக்கள் மற்றும் உரைகளை கொண்டுள்ளன. சமூக

ஒழுக்கம் பற்றி அவர் வழங்கிய அறிவுரைகள் சீன கல்வி மற்றும் மதத்தின் அடிப்படையாக விளங்குகின்றன.

மனசாட்சி (conscience): இது சரி மற்றும் தவறின் நுண்ணறிவாக விளங்குகிறது, மற்றும் சிலசமயம் "ஆன்மாவின் பரிந்துரை," என்று அழைக்கப்படுகிறது. ஆனால், ஒருவரது பயிற்சி மற்றும் நம்பிக்கை மாதிரிகளின் மூலம் மனசாட்சி பாதிக்கப்படுகிறது, அதனால் அது *தர்மத்தின்* ஒரு முழுமையான பிரதிபலிப்பாக இருக்கவேண்டிய அவசியமில்லை. இது கடந்தகால எண்ணங்கள் மற்றும் பயிற்சியின் சாரமாக இருக்கும் மனிதனின் அடியுணர்வாக விளங்குகிறது, மற்றும் அது சமய அறிக்கையின் அமைப்பு மற்றும் மனசாட்சியின் நிறங்களை விளக்குகிறது மற்றும் மெய்ஞ்ஞான விவேகத்தை தெளிவாக பிரதிபலிக்கிறது அல்லது சீர்குலைக்கிறது. மேலும் தகவலுக்கு: மதம், *தர்மம்*, (தனிப்பட்ட) மனம்.

உணர்வுள்ள மனம் (conscious mind): அகநோக்கியாக இருக்கும் உணர்வின் தினசரி நிலை. மேலும் தகவலுக்கு: *மனம்*.

உணர்வு (consciousness): *சித்த* அல்லது *சைதன்ய*. 1) *சித்த* மற்றும் மனதின் சாரத்தை குறிப்பிடும் சொல்; அல்லது 2) புலனுணர்வு, விழிப்புணர்வு, அச்ச உணர்வின் நிலை அல்லது சக்தி. ஜடப்பொருளின் எளிமையான உணர்வில் தொடங்கி, அடிப்படை உயிர் அமைப்புக்களின் உணர்வு, மனித உடலின் உயர்ந்த உணர்வு, மற்றும் பராசக்தி என்கிற ஒரு பொதுவான உணர்வில் முழ்குவதை நோக்கி வழிநடத்தி செல்லும் மெய்ஞ்ஞானத்தின் எல்லாம் அறிந்த நிலை வரை, உணர்வில் எண்ணற்ற படிநிலைகள் உள்ளன. மேலும் தகவலுக்கு: *சாட்சி*, *மனம்*.

கன்சென்சுயலோக்ரசி (consensualocracy): பொதுவான நோக்கம் மற்றும் தர்ம நெறியின் அடிப்படையில் சாமர்த்தியமாக ஒத்துழைப்பு வழங்கும் அரசாங்கம் அல்லது நிர்வாகம். இந்த பழங்குடி/குடும்ப ஆட்சி அமைப்பில் ஆன்மீகம், உடல், உணர்வு மற்றும் உளரீதியாக துன்புறுத்தாமல் இருக்கும் *அகிம்சை* முக்கிய பண்பாக விளங்குகிறது.

நிறைவானது (consummate): முழுமை; பூரணமாக இருப்பது.

தாரணை அல்லது ஆழ்ந்த சிந்தனை (contemplation): தியான நிலையை கடந்து மதம் அல்லது சூட்சும ஞானத்தை கிரகித்தல். மேலும் தகவலுக்கு: *இராசயோகம், சமாதி.*

வாக்குவாதம் (contention): சச்சரவு, விவாதம், பூசல்.

சர்ச்சைக்குரிய (contentious): தீவிர விவாதம், பூசலை ஏற்படுத்தக்கூடிய

கூக் கேப்டன் ஜேம்ஸ் (Cook, Captain James): இந்த ஆங்கிலேய மாலுமி புதிய கடல்வழியை கண்டுபிடிப்பதில் (1728-1779) ஈடுபட்டு இருந்தார். அவர் இங்கிலாந்து மேற்கொண்ட கிறித்துவ குடியேற்ற பிரச்சாரத்திற்காக, பசிபிக் பெருங்கடலில் முக்கிய கடற்பயணங்களுக்கு படைத்தலைவராக இருந்து, பல்வேறு தீவுகளை தேடிச் சென்று அவற்றை கண்டறியவும் செய்தார்.

அண்டத்திற்குரிய (cosmic): பிரபஞ்சம்; மிகப்பெரியது. அண்டம் அல்லது முழு பிரபஞ்சத்தையும் சார்ந்த.

ஆதி ஆன்மா (Cosmic Soul): புருஷா அல்லது பரமேசுவரன். பிரபஞ்ச சக்தி; தனிப்பட்ட கடவுள். மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன், ஆதி ஆன்மா, புருஷா, சிவபெருமான்.*

அண்டம் (cosmos): பிரபஞ்சம் அல்லது படைப்புக்கள் முழுவதையும் குறிப்பிடுவதோடு அதில் இருக்கும் ஒழுங்கு, இணக்கம் மற்றும் முழுமையையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம், மூன்று லோகங்கள்.*

படைத்தல் (creation): குறிப்பாக உலகை ஒரு முறையான இருப்பாக கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்படும் படைக்கும் செயல்பாடு. மேலும் இது இருப்பின் எல்லா படைப்புக்கள், அண்டத்தையும் குறிப்பிடுகிறது. படைத்தல் என்பது படைப்பவராக இருக்கும் கடவுளின் வெளிப்பாடு அல்லது விரிவாக்கமாக விளங்குகிறது என்று அத்வைத ஈசுவரவாதம் கூறுகிறது. அதில் கடவுளே இன்னொரு உருவமாக இருக்கிறார், மற்றும் அது அவரது இயல்பில் இருந்து மாறுபட்ட உருவமாக இருப்பதில்லை. மேலும் தகவலுக்கு: *உடுக்கை.*

சிருஷ்டிகர்த்தா (Creator): சிருஷ்டிக்கும் கடவுள். இதை சிவபெருமான் தனது ஐந்து சக்திகளில் ஒன்றாக கொண்டுள்ளார். மேலும் தகவலுக்கு: படைத்தல், *நடராசர், பரமேசுவரன்.*

பொதுவான சமூக நம்பிக்கை (creed): *ஸ்ரத்தாதாரனா.* இது சமயம் சார்ந்த நம்பிக்கைகளின் ஒரு அதிகாரப்பூர்வ வடிவமைப்பாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *மனசாட்சி.*

cremation: *Dahana.* தகனம். இறந்தவரின் உடலை தீயிட்டு எரித்தல். லௌகீக பற்று ஏதுமில்லாமல் மிகவும் விரைவாக ஆன்மாவிற்கு விடுதலை அளிக்கும் நேர்மறை தாக்கத்துடன், பிரேதத்தை பாரம்பரிய முறையில் இறுதி சடங்குகளுக்கு தயார் செய்வது தகனம் ஆகும். சிலசமயம் ஞானோதயம் பெற்ற ஆன்மாக்களின் பிரேத உடலை ஒரு விசேஷமான *சமாதியில்* புதைக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவும். அத்தகைய ஆன்மா விசேஷமான *சித்தி* பெற்றதை அங்கீகரிக்கும் விதமாக இந்த *சமாதி* அமைக்கப்படுகிறது, மற்றும் அந்த ஆன்மாவின் உடல் புனிதம் அடைந்து இருப்பதால், அதற்கு *சான்னித்யம்* எனும் புனிதமான இருப்பாக மரியாதை செலுத்தப்படுகிறது மற்றும் இந்த இடம் பெரும்பாலும் ஒரு கோயிலின் ஆன்மீக *பீஜமாக* அல்லது புண்ணிய தளமாக மாறுகிறது. மேலும் தகவலுக்கு: *மறுபிறவி.*

சகஸ்ரஹார சக்கரம் (crown *chakra*): *Sahasrāra chakra.* உச்சந்தலையில் ஆயிரம் இதழ்களுடன் தெய்வீக உணர்வுடன் மண்டை ஓட்டின் மையமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

முக்கியமான கருத்து (crux): அத்தியாவசியமான, தீர்மானிக்கிற அல்லது புரிந்துக்கொள்ள கடினமான கருத்து. முன்பு புத்தகங்களில் உரைப்பகுதி

சார்ந்த ஒரு கடினமான சிக்கலை குறியீடு செய்ய லத்தீன “கிராஸ்" பயன்படுத்தினார்கள்.

படிகம் (crystal): ஒரு படிக அமைப்புடன் இருக்கும் ஒரு கனிமம். இது குறிப்பாக ஒளிபுகும் பண்புடைய படிகக்கல்.

பளிங்குக் கோளத்தை பார்த்து குறி சொல்லுதல் (crystal-gazing).

உச்சத்தை அடைதல் (culminate): உச்ச நிலைக்கு, மிகப்பெரிய வலிய நிலைக்கு வந்தடைதல், அல்லது முழுநிறைவு பெறுதல்.

மேடம் கியூரி (மேரி ஸ்க்லோடோவ்ஸ்கா கியூரி, 1867-1934) **(Curie, Madame** (Marie Sklodowska Curie, 1867-1934)): போலந்து நாட்டின் வார்சாவில் பிறந்த வேதியல் மற்றும் இயற்பியல் வல்லுனர். இவரும் இவர் கணவரான பியரி கியூரியும் சேர்ந்து, பிரான்ஸ் நாட்டில் போலோனியம் மற்றும் ரேடியம் என்ற கதிர்வீச்சுப் பொருளை கண்டுபிடித்ததற்காக, 1903 ஆம் ஆண்டு இயற்பியல் துறையில் நோபல் பரிசு பெற்றனர். அவர் 1911 ஆம் ஆண்டு, வேதியல் துறையில் நோபல் பரிசு பெற்றார். இதன் மூலம் இரண்டாவது நோபல் பரிசு பெறும் முதல் நபர் என்ற பெருமை அவருக்கு கிடைத்தது.

மின்வெளி (cyberspace): ஒன்றோடு ஒன்று பின்னிய கணினி அமைப்புகள் இணையம் மூலம் தொடர்புக்கொள்ளும் மின்னணு ஊடகம்; இணையம் அல்லது வெப்.

குறை காணல் (cynical): நோக்கங்கள் அல்லது நேர்மையை இழிவு செய்தல்; மற்றவர்களது நேர்மையை சந்தேகித்தல்.

***dakshiṇā:*** दक्षिण தட்சிணை. ஒரு சடங்கு முடிந்த பிறகு ஒரு பூசாரிக்கு வழங்கப்படும் கட்டணம் அல்லது வெகுமானம்; ஒரு *குரு* வழங்கும் ஆன்மீக நல்லாசிகளை அங்கீகரிக்கும் சின்னமாகவும் விளங்குகிறது.

Dakshiṇāmūrti: दक्षिणामूर्ति “South-facing form.” தட்சிணாமூர்த்தி. தனது திருவடிகளுக்கு முன்பாக அமர்ந்து உள்ள நான்கு *ரிஷிகளுக்கு* மௌனகுருவாக வடவிருக்ஷத்தின் கீழ் அமர்ந்து போதிக்கும் சிவபெருமான்.

தலாய் லாமா (Dalai Lama): திபெத்திய புத்த மதத்தின் தலைமை லாமாவின் பதவியை குறிக்கும் பெயர். இவர்கள் ஆன்மீகம் மற்றும் அரசியல் செல்வாக்குடன் இருந்தார்கள். இது கடல் என்பதை குறிக்கும் *தலாய்* என்கிற மங்கோலிய சொல்லும், குரு அல்லது ஆசான் என்பதை குறிக்கும் *பிலாமா* என்கிற திபெத்திய சொல்லின் கூட்டு ஆகும். இந்த சொல்லுக்கு "கடலைப் போன்ற விசாலமான அறிவை உடைய குரு" என்று பொருள். 1578 ஆம் ஆண்டு மங்கோலிய இளவரசனான அல்டான் கான், கேளுப்கா மதப்பிரிவின் மூன்றாவது தலைவருக்கு ஒரு மதிப்பிரிக்குரிய பட்டத்தை வழங்கினார்.

dāna: दान தானம். தாராளமாக வழங்குதல், நன்கொடை. மேலும் தகவலுக்கு : *இயம-நியமம்*.

சிவபெருமானுடன் ஒரு திருநடனம் (Dancing with Śiva): குருதேவாவின் *மாஸ்டர் கோர்ஸ் டிரைலாஜி* (முத்தொகுப்பின் பிராதன பயிற்சி வகுப்பு) தொகுப்பின் முதல் புத்தகம். *இந்து சமயத்தின் தற்கால வினாடிவினா* என்ற துணை தலைப்புடன் ஒரு குறிப்பிடத்தக்க ஆதார நூலாக இருக்கும் இந்த புத்தகம், கேள்வி பதில் வடிவில் வாழ்க்கை மீதான சைவ இந்து கண்ணோட்டத்தை விவரிக்கிறது. இது ஆழமான தத்துவங்கள் உட்பட சைவ சமயத்தின் ஒவ்வொரு அம்சத்தையையும் உள்ளடக்கி, இறைவன் மற்றும் மகாதேவர்கள், ஆன்மா மற்றும் *தர்மம்*, வாழ்க்கையின் முடிவான குறிக்கோள், இந்து சமய உட்பிரிவுகள், இறையியல், சத்குரு, கோயில் வழிபாடு, கர்மவினை, ஆன்மீக விரிவாக்கம், அந்தர்லோகங்கள், நன்மை மற்றும் தீமை, குடும்ப வாழ்க்கை மற்றும் துறவற வாழ்க்கையின் கடமைகள் மற்றும் மேலும் பல விஷயங்களில் சாதகனுக்கு தோன்றும் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறது. *வேதங்கள், ஆகமங்கள்* மற்ற புனித நூல்களில் இருந்து 600 மந்திரங்கள், 165 தென்னிந்திய ஓவியங்கள், 40 அசல் வரைகலைகள், இந்திய வரலாறு பற்றிய 40 பக்க காலவரிசை மற்றும் ஆங்கிலம், சமஸ்கிருதம் மற்றும் தமிழ் கலந்த 190 பக்க சொற்களஞ்சியத்துடன் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு, பேரழகுடன் எடுத்துரைத்து தெளிவாக எழுதப்பட்டது ஆகும். 1997 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

darśana: दर्शन "Vision, sight." தரிசனம்: "பார்வை, காட்சி." தெய்வத்தை காணுதல். பூசிக்கக்கூடிய சக்தி அல்லது சக்திகளின் அருள் மற்றும் ஆசிகளை பெற்று உள்ளத்தில் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்துடன், ஒரு கோயில் அல்லது தெய்வம், சாது அல்லது புண்ணிய தலத்தின் காட்சியை உட்புற அல்லது வெளிப்புறமாக பார்த்து ரசித்தல். ஒரு புனிதமான ஆன்மாவின் புகைப்படக்காட்சியை பார்ப்பதும் ஒரு *தரிசனமாகவே* கருதப்படுகிறது. ஒரு நெரிசலான கோயிலில், சன்னதியில் இருக்கும் தெய்வத்தை ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரைவாக கடந்து செல்லும் போது, அந்த புனிதமான தெய்வத்தின் விழிப்படைந்த பார்வைக்கு முன்பாக ஒரு நொடியாவது தான் பணிவுடன் நின்று, தானும் அந்த தெய்வத்தை பார்க்கவேண்டும் மற்றும் அந்த தெய்வமும் தன்னை பார்க்கவேண்டும் என்று ஒரு சிரத்தையுள்ள பக்தர் விரும்புகிறார். தெய்வங்கள் மற்றும் *குருமார்கள் தரிசனத்தை* "வழங்குவதாகவும்," பக்தர்கள் *தரிசனத்தை* "பெறுவதாகவும்," மற்றும் சக்தியின் பரிமாற்றம் நடைபெறும் சூட்சும இடமாக கண்கள் விளங்குகின்றன. இந்த நேரடியான, தனிப்பட்ட இருதரப்பு புரிதல், இந்துதர்மத்தின் மையமாகவும் அதிகம் நாடப்படும் அனுபவமாகவும் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: "கண்ணோட்டம்," கோட்பாடு அல்லது தத்துவம்.

daśama bhāga vrata: दशमभागव्रत "One-tenth-part vow." தசம பாக விரதம். தசமாம்சம் வழங்க உறுதிமொழி எடுப்பவர்கள் இறைவன், மகாதேவர்கள் மற்றும் அவர்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள் முன்னிலையில், ஒரு குறிப்பிட்ட

காலத்திற்கு அல்லது வாழ்நாள் முழுவதும் தசமாம்சம் வழங்குவதாக எடுக்கும் உறுதிமொழி. மேலும் தகவலுக்கு: *தசமாம்சம்*.

daśamāṁśa: दशमांश "One-tenth sharing." *தசமாம்சம்*. இது இந்து பாரம்பரிய முறைப்படி, ஒருவர் தனது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை ஒரு சமய அமைப்பிற்கு வழங்குவதை குறிக்கிறது. இது பழங்கால இந்தியாவில் பரவலாக பின்பற்றப்பட்டு வந்தது. இது பழங்கால தமிழ்நாட்டில் மகிமை என்று அழைக்கபட்டது. மேலும் தகவலுக்கு: *தசம பாக விரதம்*.

Daśanāmī: दशनामी "Ten names." தசனாமி. "பத்து பெயர்களைக் கொண்ட சம்பிரதாயம்." இவை ஆதி சங்கரர் (கி.மு. 800) அமைத்த நான்கு முக்கிய பீடங்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. ஆரண்ய, வான, கிரி, பார்வத, சாகர, தீர்த்த, ஆசிரம, பாரதி, பூரி மற்றும் சரஸ்வதி என்பதே அந்த பத்து பெயர்கள். இது அந்த சமூகத்தை சேர்ந்த *சந்நியாசிகளை* குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் தங்கள் சமயப் பெயருடன் பெரும்பாலும் *ஆனந்தா* என்ற சொல்லும், தங்கள் சம்பிரதாய பெயரும் சேர்த்துக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு ராமானந்த தீர்த்தா. மேலும் தகவலுக்கு: *ஆதி சங்கரர், சுமார்த்த சமயம்*.

dayā: दया "Compassion." தயை: "இறக்கம்". மேலும் தகவலுக்கு: இயம-நியமம்.

மரணம் (death): ஆன்மா தன்னை தூல உடலில் இருந்து விலக்கிக்கொண்டு, தான் ஒரு தூல உடலில் வாழ்ந்த போது இருந்த அதே ஆசைகள், விருப்பங்கள் மற்றும் செயல்பாடுகளுடன் சூட்சும *ஷரீரத்தில்* தொடர்ந்து வாழ்தல். மேலும் தகவலுக்கு: *மறுபிறவி*.

சீர்கேடு (decadence): அழிவு. ஒழுக்கங்கள் குறைந்து வரும் நிலை, செய்முறை அல்லது காலகட்டம்.

வஞ்சகம் (deceit (deception)): பொய் என்று தெரிந்து அதை உண்மை என்று வெளிப்படுத்தும் செயல். ஒரு நேர்மையற்ற செயல்.

மீண்டும் மீண்டும் பயன்படுத்திய எண்ணெய்கள் (degraded oils): மேலும் தகவலுக்கு: *எண்ணெய்கள், தரம் குறைந்த*.

தீயிசம் (Deism): இது "இறைவனை" குறிக்கும் *தீயுஸ்* என்ற லத்தீன சொல்லில் இருந்து தோன்றியது. இந்த பகுத்தறிவுவாத பாரம்பரியம், லார்ட் ஹெர்பெர்ட் ஆப் சேர்புரி (கி.பி. 1583-1648) என்ற ஆங்கிலேயர் காலத்தை சேர்ந்தது. ஒரே ஒரு இறைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை; இறைவனை மதிப்பது மனித நேயத்தின் கடமை; யதார்த்தமான ஒழுக்கத்துடன் வழிபாட்டின் இணைப்பு; நாம் மனம் வருந்தினால் இறைவன் நம்மை மன்னித்து பாவத்தில் இருந்து விடுதலை அளிப்பார்; இந்த பிறவியிலும் மரணத்திற்கு பிறகும் நல்ல செயல்களுக்கு நல்ல பலன்கள் (தீய செயல்களுக்கு தண்டனை) கிடைக்கும் என்று அவர் ஆங்கிலேய தீயிசத்தின் ஐந்து நம்பிக்கைகளை வரையறுத்தார். இறைவனால் வெளியிடப்பட்ட மதம், மதம் தொடர்பான ஆணையுரிமைகள் மற்றும் பைபிள் மற்றும் குரான் போன்ற பிழையாத நூல்கள் மீது சார்ந்து இருப்பதை தீயிசம் நிராகரிக்கிறது. தீயிசம் தனக்கு என்று ஒரு விசேஷமான வழிபாட்டு இடம், பூசாரிகள் மற்றும்

அதிகார வர்க்கத்தை கொண்டிருக்கவில்லை. தீயிசம் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 18 ஆம் நூற்றாண்டிற்கு மத்தியில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் அமெரிக்காவின் அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள் மற்றும் தத்துவவாதிகள் மத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. அமெரிக்காவை ஸ்தாபனம் செய்த ஜான் குயின்சி ஆடம்ஸ், பெஞ்சமின் பிராங்க்ளின், தாமஸ் ஜெபர்சன், ஜேம்ஸ் மேடிசன் மற்றும் ஜார்ஜ் வாஷிங்டன் ஆகியவர்களில் பலர் தீயிசத்தை பின்பற்றினார்கள். கிறித்துவ தேவாலயம் மற்றும் அரசு பிரிந்து செயல்படுவதிலும், சமய சுதந்திரம் வழங்கும் முதல் திருத்த மசோதாவிலும் தீயிச ஆதரவாளர்கள் முக்கிய பங்கு வகித்தனர். ஆதாரம்: www.religioustolerance.org/deism.

Deity: “God.” “இறைவன்.” இது கோயிலில் ஸ்தாபனம் செய்யப்பட்ட சிலையை அல்லது மகாதேவரை உருவகப்படுத்தும் *மூர்த்தியை* குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பூஜை.*

கடமை தவறுதல் (delinquent): சட்டத்திற்கு கீழ்படியாமல் அல்லது கடமையை நிறைவேற்றாமல் இருத்தல்.

அரக்கன் (demon): மேலும் தகவலுக்கு: *அசுரன்.*

தடுப்பு (deterrent): இடையூறாய் இருப்பது அல்லது நம்பிக்கை இழக்க காரணமாக இருப்பது; அச்சுறுத்துவது.

கலங்கம் விளைவிப்பவர் (detractor): ஒரு குழுவில் இருக்கும் நேர்மறை பண்புகளை அழிப்பவர்.

deva: देव “Shining one.” *தேவ.* “பிரகாசமான ஒன்று.” உயர்ந்த சூட்சும உலகில், ஒரு நுணுக்கமான, புலனாகாத உடலில் வாழும் ஒரு தேவதை. சாத்திரங்களில் *தேவ* என்கிற சொல் “கடவுள்" அல்லது “தெய்வத்தை" குறிப்பிடவும் பயன்படுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாதேவா.*

Devaloka: देवलोक “Plane of radiant beings.” தேவலோகம். “பிரகாசமான சக்திகளின் உலகம்.” மகரலோகம், உயர்ந்த சூட்சும உலகம், அனாஹத சக்கரத்தின் உலகத்தை குறிப்பிட பயன்படும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *லோகம்.*

Devaram: இது சிவபெருமான் மீது பாடப்பட்டுள்ள பன்னிரண்டு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளை குறிப்பிடுகிறது. இவற்றை திருஞான சம்பந்தர் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு), திருநாவுக்கரசர் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு) மற்றும் சுந்தரமூர்த்தி (கி.பி. எட்டாம் நூற்றாண்டு) இயற்றியுள்ளார்கள். மேலும் தகவலுக்கு: *திருமுறை.*

தெய்வீக (devonic): தேவ தூதர்கள், சொர்க்க லோகம், ஆன்மீகம் சார்ந்தது. உயர்நிலை உலகங்களின் இயல்புடன், உயர்ந்த சக்கரங்கள் அல்லது உணர்வு மையங்களின் புனிதமான சக்திகளுடன் இணக்கத்துடன் இருத்தல். *தேவர்களுடன்* தொடர்புடையது. ஒரு உள்பொருள் தெய்வீக வழிகாட்டலின் துணையுடன் இருப்பதை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *தெய்வம்.*

பக்தன் (devotee): இறைவன் அல்லது ஒரு *குருவிற்கு* தன்னை வலுவாக அர்ப்பணித்துக் கொண்டவர். சீடன் என்ற சொல் மேலும் வலுவான ஈடுபாட்டை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பக்தன், பக்தி, குரு பக்தி.*

சிரத்தையுள்ள (devout): மதம் அல்லது மதம் தொடர்பான கடமைகளுக்கு வலுவாக பொருந்தி இருப்பது. மேலும் தகவலுக்கு: *பக்தி.*

dharma: धर्म "Righteousness." தர்மம். இது "நிலை நிறுத்துதல்; தக்க வைத்துக் கொள்ளுதல்," என்பதை குறிப்பிடும் *த்ரி* என்கிற சொல்லில் இருந்து உருவானது. அதனால் "பிரபஞ்சத்தை உள்ளடக்கியது அல்லது அதை தக்க வைத்திருப்பது," தர்மம் ஆகும். தெய்வீக விதி, ஒழுங்குநெறி, உயிர்சக்தியின் விதி, நேர்மையின் பாதை, சமயம், கடமை, நல்லொழுக்கம், நீதி, நன்மை மற்றும் உண்மை என்று *தர்மம்* என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. அடிப்படையில் தர்மம் என்பது, இயல்பான பண்பு அல்லது விதியின் முறையான நிறைவேற்றம் ஆகும். இது ஆன்மாவை பொறுத்தவரையில், ஆன்மீக மேம்பாட்டிற்கு சரியான மற்றும் நேர்மையான பாதையில் அழைத்து செல்ல அதிக பயனுள்ள நடத்தை ஆகும். தர்மத்தில் நான்கு அடிப்படை வகைகள் உள்ளன, அவை கூட்டாக *சதுர்தர்ம* (நான்கு தர்மங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. 1) *ரித தர்ம*: "எல்லோருக்கும் பொதுவான விதி." பிரபஞ்சத்தில் இயல்பாக இருக்கும் ஒழுங்குமுறை. 2) *வர்ண தர்மம்*: "ஒருவர் தனது சமூக பிரிவுகளுக்கு ஏற்ப தர்மத்தை கடைப்பிடிப்பது." சமூக கடமை. 3) ஆசிரம தர்மம்: "வாழ்க்கையின் பல்வேறு படிநிலைகளில் இருக்கும் கடமைகள்." பிரம்மசரியம் (மாணவன்), கிரிஹஸ்தன் (சம்சாரி), *வானப்பிரஸ்தம்* (மூத்த ஆலோசகர்) மற்றும் சந்நியாசி (ஆன்மீக நாட்டத்துடன் தனியாக இருப்பவர்) என்று மனித வாழ்க்கையின் நான்கு கட்டங்களில் பூர்த்தி செய்யவேண்டிய கடமைகள். 4) *ஸ்வதர்மம்:* "ஒருவரது தனிப்பட்ட கடமைகள் அல்லது பொறுப்புக்கள்." ஒருவரின் தனிப்பட்ட உடல், மனம் மற்றும் உணர்ச்சியின் இயல்பை பொறுத்து, அவர் தன் வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட அமைப்புமுறை. மேலும் தகவலுக்கு: *நான்கு பாரம்பரிய இலக்குகள்.*

dharmaśāla: धर्मशाल "Abode of righteousness." தர்மசாலை. துறவிகள் மற்றும் சில நேரங்களில் யாத்திரை செல்லும் அல்லது தனியாக ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டு இருக்கும் சாதாரண மக்களுக்கு மதம் தொடர்பான பயிற்சிகளை அளிக்கும் மடம் அல்லது *ஆசிரமம்*. இது சிவனோடு வாழ்தல் புத்தகத்தில், கவாய் ஆதீனத்தின் கிளை மடாலயங்களை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது.

dhotī: धोती (Hindi) வேட்டி (தமிழ்). உடலில் இடுப்புக்கு கீழே உடுத்திக்கொள்ளப்படும் தைக்கப்படாத நீளமான துணி. இது ஆண்கள் உடுத்தும் ஒரு இந்து பாரம்பரிய உடை ஆகும்.

dhṛiti: धृति "Steadfastness." உறுதிப்பாடு. மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

திரைத்தசை (diaphragm): இது அடிவயிறு மற்றும் நெஞ்சறைக்கு இடையே ஒரு தசைத் தடுப்பாக விளங்கி, சுவாசிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

திரைத்தசை மூலம் சுவாசித்தல் (diaphragmatic breathing): மார்பின் மேற்பகுதியை பயன்படுத்தாமல், சூரிய பின்னல் பகுதியில் இருக்கும், திரைத்தசையில் இருந்து ஆழமாக மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட சுவாசிக்கும் செயல்முறை.

புலம்பெயர்ந்தோர் (diaspora): யூதர்கள் இசுரேல் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டதை போல, இந்துக்கள் இலங்கை, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைப் போல, இது மதம் அல்லது இனத்தை சேர்ந்த குழு(க்கள்) வெளிநாடுகளில் குடியேறுவதை குறிக்கிறது.

டீபீ (dīpī): (ஷூம்) மனதில் இருக்கும் *ஆகாச* அம்சம். *ஆகாச* பயணம், *தேவர்கள்* மற்றும் மகாதேவர்கள் பற்றிய கண்ணோட்டம்; உட்புற தொடர்பு. மேலும் தகவலுக்கு: *ஷூம்* , *ஷூம் கண்ணோட்டங்கள்*.

dīkshā: दीक्षा "Initiation." *தீட்சை*. ஒரு ஆசான் அல்லது குரு தனது ஆசிகளின் மூலம், ஒரு சாதகரை ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் பயிற்சியின் புதிய உலகில் அழைத்து வரும் புனிதமான அறிமுகம் ஆகும். இது ஆசான் மற்றும் அவரது பரம்பரையுடன் இருக்கும் தொடக்கநிலை அல்லது ஆழமான தொடர்பை குறிப்பிடுகிறது மற்றும் இது பொதுவாக ஒரு சமயச்சடங்குடன் நடைபெறுகிறது. விழிப்புணர்வு பெறும் தருணமாக விளங்கும் தீட்சையை ஒரு தொட்டு உணர்வு, ஒரு சொல், ஒரு பார்வை அல்லது ஒரு சிந்தனையால் வழங்கப்படலாம். மேலும் தகவலுக்கு: அருள், *சக்திபாத*.

Dīpāvalī: दीपावली "Row of Lights." தீபாவளி. வருடந்தோறும் அக்டோபர்/நவம்பர் மாதங்களில் உலகெங்கும் இருக்கும் இந்துக்களின் எல்லா பிரிவினரும் தங்கள் வீட்டிலும் வெளியிலும், தீய சக்திகள் மீது நேர்மறை சக்திகள் வெற்றி பெறுவதால், வாழ்க்கையில் இருக்கும் இருள் அகன்று வெளிச்சம் அடைவதை கொண்டாடும் விதமாக, அவர்கள் விளக்குகளை ஏற்றி பட்டாசுகள் மற்றும் மத்தாப்புக்களை வெடித்து மகிழ்ச்சியாக கொண்டாடும் ஒரு மிகவும் பிரபலமான பண்டிகை ஆகும். இது ஒரு இந்து ஒருமைப்பாடு தினமாக கருதுப்படுகிறது. இது இந்தியாவில் தேசிய அளவில் ஒரு முக்கிய பண்டிகையாக விளங்குகிறது. இது நேபாளம், மலேசியா, இலங்கை, திரினிடாட் மற்றும் டொபாகோ உட்பட பல்வேறு நாடுகளில், பல மதத்தினர் ஒன்றாக கலந்துகொள்ளும் விழாவாகவும் ஒரு தேசிய விடுமுறையாகவும் விளங்குகிறது. இது அக்டோபர்-நவம்பர் மதத்தில் கொண்டாடப்படுகிறது.

உடல் அல்லது உருவம் இல்லாத (disincarnate): தூல உடல் இல்லாத; சூட்சும லோகம் சார்ந்த; சூட்சும சக்திகள். மேலும் தகவலுக்கு: *சூட்சும உடல், சூட்சும லோகம்*.

விரயம் செய்தல் (dissipate): ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறுவதற்காக பயன்படுத்த வேண்டிய முக்கிய பாலியல் சக்திகளை அதிகமாக விரயம் செய்வதை குறிப்பிடுகிறது. விரயம் என்பது அதிகமாக பேசுவதால், மற்றும் சுய இன்பம் மற்றும் ஒரு குழந்தை பெறும் நோக்கம் இல்லாமல், சந்தோஷத்திற்காக அதிக பாலுறவில் ஈடுபடுவது போன்றவற்றால் ஏற்படும் முக்கிய திரவங்களின் இழப்பின் மூலம் நடைபெறுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மீக சக்தி சார்ந்த, காந்த சக்தி சார்ந்த, உருமாற்றம்*.

கலைப்பு (dissolution): கரைத்தல் அல்லது தனித்தனி பாகங்களாக பிரித்தல். இது அழித்தல் என்பதை குறிக்கும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *நடராசர்.*

தெய்வீகமான (Divine): இறைவனை போன்றது; மிகவும் சிறந்த முறையில் நன்மை செய்வது அல்லது அழகானது.

தெய்வீகத்தன்மை (Divinity): ஒரு கடவுள் அல்லது தெய்வம். மேலும் இது பிரபஞ்சத்தில் பரவி இருக்கும் ஆன்மீகத்தன்மை அல்லது புனித்தன்மையைக் குறிப்பிடுகிறது மற்றும் இதனை தெய்வீக புருஷன் அல்லது ஒரு கோயிலுக்கு அருகில் இருக்கும் போது எளிதாக உணரமுடிகிறது.

உறுதிக்கோட்பாடு (dogma): முற்றிலும் உண்மை என்று கருதப்படும் ஒரு அதிகாரப்பூர்வமான கொள்கை, நம்பிக்கை, அல்லது கருத்துகளின் அறிக்கை.

பிரம்மரந்திரம் (door of *Brahman):* இது *பிரம்மரந்த்ர*, மற்றும் *நிர்வாண சக்கரம்* என்றும் அழைக்கப்படுகிறது. இது உச்சந்தலையில் ஒரு நுணுக்கமான அல்லது மறைஞான வழியாக, *சுஷும்னா நாடியின்* துவாரமாக விளங்குகிறது மற்றும் *குண்டலினி* இதன் வழியாக முடிவான ஆத்ம ஞானத்திற்குள் நுழைகிறது மற்றும் மரணத்தின் போது ஆன்மா உடலை விட்டு வெளியேறுகிறது. மிகவும் புனிதமான ஆன்மாக்களின் ஆவிகள் மட்டுமே இவ்வாறு பிரிகின்றன. சம்சாரிகள் கீழ்வழி பாதையை மேற்கொள்கின்றனர். மேலும் தகவலுக்கு: *ஞான, குண்டலினி.*

dosai: தோசை. சற்று புளித்த அரிசி மாவு மற்றும் உளுந்து, தண்ணீர் மற்றும் மசாலாக்களை சேர்த்து மொருமொருவென்று மெல்லிய வட்டவடிவில் தயாரிக்கப்படும் ஒரு இந்திய உணவு வகை.

வடதட்சணை (dowry): திருமணத்தின் போது கணவன் வீட்டிற்கு மணமகள் கொண்டு வரும் பணம் அல்லது சொத்து. இந்த வழக்கம் பெரும்பாலான கலாச்சாரங்களில் ஏதாவது ஒரு வடிவில் இருந்தாலும், தங்கள் மகளுக்கு நல்ல மாப்பிள்ளையை விலைக்கொடுத்து வாங்குவதற்கு, மாப்பிள்ளை வீட்டாருக்கு பெண் வீட்டார் மிகவும் பெரியத் தொகையை வரதட்சணையாக தர வேண்டியிருக்கிறது. வடதட்சணை இந்தியாவில் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது.

கசடு (dross): குப்பை, கழிவு பொருள்; ஒரு பயனற்ற விளைபொருள்.

கடினமான வேலை (drudgery): சோர்வூட்டும், இழிவான, கடினமான அல்லது அருவருப்பான வேலை.

ட்ருய்ட் (Druid): பிரிட்டன், ஐர்லாந்து, கவுல் (இன்றைய பிரான்சு மற்றும் பெல்சியம்) பகுதியை சேர்ந்த பழங்கால கெல்டிக் இனத்தை சேர்ந்த பாதிரியார், மந்திரவாதி அல்லது குறி சொல்பவர்.

இருமை (dual): இரண்டு பாகங்கள் அல்லது வகைகள் கலந்த.

இருமைவாதம் (dualism): மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம்.*

இருமை பண்பு (duality): இருமையாக இருக்கும் நிலை.

dvaita-advaita: द्वैत अद्वैत "Dual-nondual; twoness-not twoness." துவைதம்-அத்வைதம்: துவைத்தம்-அதுவைத்தம். இது இந்துசமய கோட்பாடுகளில் இருக்கும் வகைப்பாடுகளில் மிகவும் முக்கிய வகைகளில் ஒன்றாக விளங்குகிறது. *துவைத்தம்* மற்றும் *அதுவைத்தம்* ஒரு மிகப்பெரிய வகைப்பாட்டின் இரு முனைகளாக விளங்குகின்றன. –***துவைத்தம்:*** இது இருமை வாதத்தின் கோட்பாடாக விளங்குகிறது. இந்த கோட்பாடு உண்மைப்பொருள் என்பது மேலும் குறைக்கமுடியாத இரண்டு கோட்பாடுகள், பிரிவுகள், உண்மைகள் போன்றவற்றை கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறது. உதாரணத்திற்கு, கடவுள் மற்றும் ஆன்மா நிரந்தரமாக பிரிந்து இருப்பதாக உணரப்படுகிறது. –**இருமைவாதம் சார்ந்த:** இருமையை (நன்மை-மற்றும்-தீமை, உயர்ந்த-மற்றும்-தாழ்ந்த, அவர்கள்-மற்றும் நாங்கள்) வரம்பு மீறியதாக கருதாமல், நிரந்தரமானவை என்று கருதும் கோட்பாடுகள், கட்டுரைகள், தத்துவங்கள் சார்ந்தது. –**பன்மைவாதம்:** இது ஒருமைவாதம் சாராமல் இருக்கிறது, மற்றும் இது மூன்று அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும், நிரந்தரமான தனித்த உண்மைப்பொருள்களை வலியுறுத்துகிறது, உதாரணத்திற்கு கடவுள், ஆன்மா மற்றும் உலகம். –***அத்வைத்தம்:*** இது இருமைவாதம் அல்லாத ஒருமைவாதம் பற்றிய கோட்பாடு, மற்றும் உண்மைப்பொருள் என்பது தனித்த பாகங்கள் எதுவும் இல்லாமல், சாரம் அல்லது கடவுளாக, ஒரு முழுமையான அடிப்படையை கொண்டுள்ளது. சுருக்கமாக சொன்னால், எங்கும் கடவுள் இருக்கிறார் என்பதை குறிப்பிடுகிறது. –**ஒருமைவாத மதநம்பிக்கை:** இது ஒருமைவாத மற்றும் இருமை வாதத்தை உள்ளடக்கிய ஒரு இருத்துருவ கண்ணோட்டம் ஆகும். மேலும் தகவலுக்கு: *ஒருமைவாத சமய நம்பிக்கை.*

செயல் பிறழ்ச்சி (dysfunctional): அசாதாரணமான, செயல் இழந்த, முறையாக செயல்படாத.



தன்முனைப்பு (ego): வெளிப்புற ஆளுமை அல்லது "நான்" மற்றும் "எனது" என்கிற உணர்வு. பொதுவாக சொல்ல வேண்டும் என்றால், தனிப்பட்ட அடையாளம். சைவ சித்தாந்தம் மற்றும் மற்ற சிந்தனைகளில், தன்முனைப்பு என்பது நான் என்கிற பண்பின் உணர்வு, தனித்தன்மை மற்றும் இறைவனிடம் இருந்து பிரிந்து இருக்கும் தன்மையை வழங்கி, "நான் என்பதை உருவாக்கும்," *அகங்கார தத்துவத்திற்கு* சமமாக கருதப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம்.*

தன்முனைப்புள்ள (egocentric): ஒருவர் தனது கொள்கைகள் மற்றும் அனுபவங்களுக்கு மத்தியில் தனது சொந்த தன்முனைப்பிற்கு முக்கியத்துவம் தருவது.

தன்னலவாதம் (egoism): தன்னலம், தன்னுயிர் பாதுகாப்பு மற்றும் சுய-ஈடுபாட்டிற்கு அதிக முக்கியத்துவம்.

தன்முனைப்பின் சாரம் (egoity): சுயநலம், தன்னலம். மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம்.*

சுயநலவாதி (egotist): சுயநலம், அகந்தை அல்லது தற்புகழுச்சியுடைவர்.

எக்கார்ட், மீஸ்டர் ஜோஹன்னஸ் (Eckhart, Meister Johannes): ஜெர்மன் நாட்டு இறையியல் வல்லுனர் (1260-1327). இவர் ஜெர்மனியில் கத்தோலிக்க மறைஞானம் தோன்ற காரணமாக இருந்தவர். இவரது சிறந்த படைப்புக்கள் ஆன்மா மற்றும் இறைவனின் ஐக்கியம் தொடர்புடையதாக இருக்கின்றன.

மீள் இயல்புடைய (elastic): நெகிழ்வான, சுருங்கி மீண்டும் உடனடியாக பழைய நீளம் அல்லது வடிவத்திற்கு விரியும் பண்புடைய.

பஞ்சபூதத் தலங்கள் (elemental temples): சிவபெருமான் பஞ்ச பூதங்களாக தென்னிந்தியாவில் ஐந்து கோயில்களில் அருள் புரிகிறார். நிலம் (*பிரித்வி*), நீர் (அப்பு), நெருப்பு (தேஜஸ்), காற்று (வாயு) மற்றும் ஆகாசம் (ஆகாச) ஆகியவை பஞ்ச பூதங்கள் ஆகும். அந்த தலங்களின் பெயர்கள் பின்வருமாறு. 1) காஞ்சிபுரம் ஏகம்பரவேசுவரர் கோயிலில் இருப்பது நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரத்வி லிங்கம். 2) திருச்சி ஜம்புகேசுவரர் கோயிலில் இருப்பது நீரை அடிப்படையாகக் கொண்ட அப்பு லிங்கம். 3) திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் இருப்பது அக்னி லிங்கம். 4) திருப்பதியின் வடக்கே இருக்கும் ஸ்ரீ காளஹஸ்தி கோயிலில் இருப்பது வாயு லிங்கம். 5) சிதம்பரம் தில்லை நடராசர் கோயிலில் இருப்பது ஆகாச லிங்கம் ஆகும்.

வெளிப்பாடு (emanation): “வெளியே பாய்ந்து செல்லுதல்.” *அபாசா.* ஒரு மூலத்தில் இருந்து பிரகாசித்தல், வெளியீடு அல்லது வெளிவருதல். இது படைப்பு பற்றிய ஒருமைவாத கோட்பாடு ஆகும், மற்றும் இதில் சூரிய கதிர்கள் அல்லது நெருப்புச்சுடரை போல, இறைவன் வெளிப்பாட்டை வெளிப்படுத்துகிறார்.

கருமுளை (embryo): இரண்டாவது மாதம் வரை கருவில் நடைபெறும் மனிதன்/விலங்கின் வளர்ச்சி. ஒரு விதையில் வளர்ச்சி அடையாமல் இருக்கும் ஒரு செடி.

எமர்சன், ரால்ப் வால்டோ (Emerson, Ralph Waldo): அமெரிக்க கவிஞர், கட்டுரையாளர் மற்றும் தத்துவவாதி, அமெரிக்க டிரான்சென்டென்டலிசம் இயக்கத்தில் ஒரு முக்கிய புள்ளியாக திகழ்ந்தார். இந்திய கருத்துக்கள் மீது அவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக, அவர் அமெரிக்காவில் *பகவத் கீதை* மற்றும் *உபநிடதங்கள்* பிரபலமடைவதில் முக்கிய பங்கு வகித்தார்.

மேம்பட்ட (eminent): உயர்ந்த; மற்றவர்களை காட்டிலும் அந்தஸ்து, படிநிலை அல்லது சாதனையில் உயர்ந்து இருத்தல். பிரபலமான அல்லது மதிப்புமிக்க; முக்கியமான, பகட்டான. இதை: 1) நடக்கப்போகிற (*imminent)*; 2) வெளிப்படுதல் (*emanate*); 3) உள்ளார்ந்த (*immanent)* என்ற சொற்களுடன் குழப்பிக்கொள்ளக் கூடாது.

எம்காயீப் (emkaef): (ஷூம்) சாட்சியை கடந்து இருக்கும் நிலை. வார்த்தைகளால் விளக்க முடியாத ஆத்ம ஞானத்தின் அனுபவமற்ற நிலையில் நுழைவதை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஷூம்.*

மனவெழுச்சி உடல் (emotional body): மேலும் தகவலுக்கு: *கோசம்.*

ஞானோதயம் பெற்ற (enlightened): ஞானோதயம், ஆத்ம ஞானத்தை அடைந்துள்ள. ஒரு ஞானி அல்லது ஜீவன்முக்தா. மேலும் தகவலுக்கு: *ஞானம், ஆத்ம ஞானம்.*

ஞானோதயம் (enlightenment): இது சைவ சமய அத்வைதிகளுக்கு ஆத்ம ஞானம், விதை இல்லாத *சமாதி (நிர்விகல்ப சமாதி*); மற்றும் முடிவான சித்தியாக, சிலசமயம் *பரமாத்துமா தர்ஷன்*, அல்லது *ஆத்ம தர்ஷன்* எனப்படும், "ஆத்மாவின் தரிசனம்" (இந்த சொற்றொடர் பதஞ்சலி யோக சூத்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது) என்று குறிப்பிடப்படுகிறது. ஞானோதயம் என்பது காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து, ஒருவரிடம் எல்லாம் கடந்து இருக்கும் பரமாத்துமா, பரசிவத்தை உணர்வதன் மூலம் விளையும் அனுபவம்-அனுபவமற்ற நிலையை குறிப்பிடுகிறது. ஞானோதயம் பற்றி ஒவ்வொரு பாரம்பரியமும் ஒரு தனிப்பட்ட புரிதலை கொண்டுள்ளது, மற்றும் அது அதனை பெரும்பாலும் பிரத்யேக பெயர்களால் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *இறைவனை உணர்தல், குண்டலினி, ஆத்ம ஞானம்.*

விரோதம் (enmity): துடிப்புணர்வுடன் அல்லது தீவிரமாக ஆழ்மனதில் பதிந்து இருக்கும் வெறுப்பு அல்லது கெட்ட எண்ணம். இது பெரும்பாலும் இரு குழுக்களுக்கு இடையே ஒரு பரஸ்பர உணர்வாக விளங்குகிறது.

இரு பொருளுடைய (equivocal): தெளிவில்லாத; முடிவு செய்யப்படாத; சந்தேகத்திற்குரிய.

மறைஞானம் சார்ந்த (esoteric): புரிவதற்கு கடினமாக இருக்கிற அல்லது இரகசியமான. தீட்சை பெற்றவர்களின் ஒரு சிறிய குழுவை போன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே கற்றுத்தரக்கூடிய. தெளிவற்ற அல்லது தனிப்பட்ட.

சாரம் (முக்கியமான) (essence (essential)): மிகவும் முக்கியமான, முடிவான, ஒரு பொருள் அல்லது உயிர்சக்தியின் உண்மையான மற்றும் மாற்றம் பெறாத இயல்பு. –**ஆன்மாவின் சாரம்:** மேலும் தகவலுக்கு: *ஆத்மன், ஆன்மா.*

நிலைபேறுடைய (eternity): தொடக்கம் அல்லது முடிவு இல்லாத காலம்.

ஆகாசம் (ether): *ஆகாசம்.* பஞ்ச பூதங்களில் மிகவும் நுணுக்கமானதாக பரவெளி விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *ஆகாசம்*

புனிதமான (ethereal): மிகவும் தூய்மையான, லேசான, கண்களுக்கு புலப்படாத.

ஆகாசம் சார்ந்த (etheric): பரவெளி அல்லது ஆகாசம் சார்ந்தது.

நெறிமுறைகள் (ethics): ஒரு நாடு, மக்கள், தத்துவம் மற்றும் சமயத்தில் இருக்கும் குறியீடு அல்லது ஒழுங்கு முறைகள். மேலும் தகவலுக்கு: *தர்மம், இயமம்-நியமம்.*

இனம் சார்ந்த (ethnic): ஒரு கலாச்சாரம், இனம், சமயம் அல்லது தேசிய பாரம்பரியத்துடன் இருக்கும் ஒரு பெரிய குழு அல்லது குழுக்களை சார்ந்த அல்லது அதை குறிப்பிடுகிற.

தீவினை (evil): தார்மீக அடிப்படையில் தீங்கு, வலி, துன்பத்தை உருவாக்கும் ஒரு தவறான செயல். மேற்கத்திய மதங்களில், தீவினை என்பது இறைவனுக்கு எதிரான நடவடிக்கையாக கருதப்படுகிறது. இந்துக்கள் தீவினையை *பாப, பாபமான்* அல்லது *துஷ்ட* என்று சமஸ்கிருதத்தில் அழைக்கின்றனர். இது உள்ளுணர்வு-அறிவுணர்வு மனம் ஆதிக்கம் செலுத்தி, தெளிவில்லாமல் இருக்கும் வலுவான, ஆன்மீக அறிவின் காரணமாக தோன்றும் தவறான செயல்களின் (*பாபம்* அல்லது *அதர்மம்*) விளைவு என்று இந்துக்கள் கருதுகிறார்கள். சரியான சிந்தனை, சொல் மற்றும் செயலைப் பற்றிய அறியாமையுடன், பூலோக *மாயையில்* சிக்கிக் கொள்ளாமல் வாழத் தெரியாத இளம் ஆன்மாவாக தவறு செய்பவர் கருதப்படுகிறார். —**இயல்பாக அமைந்த தீவினை (intrinsic evil):** இயற்கையான, உடன் பிறந்த தீங்கு. இயல்பான தீவினை என்று எதுவும் இல்லை என்றும், மனிதனின் உண்மையான இயல்பு தெய்வீகத்தன்மை கொண்ட ஆன்மாவாக நற்பண்புடன் இருப்பதாகவும் இந்து மதம் கருதுகிறது. மேலும் தகவலுக்கு: *நரகம், கர்மவினை, பாவம்.*

evolution of the soul: *Adhyātma prasāra.* ஆன்மாவின் முதிர்ச்சி. *அத்யாத்ம பிரசார.* சைவ சித்தாந்தத்தில், ஆன்மாவின் முதிர்ச்சி என்பது சிவபெருமானுடன் முழுமையான ஐக்கியமாக விளங்கும், ஆன்மாவின் முன்னேற்றம் பொருந்திய விரிவாக்கம், வளர்ச்சி மற்றும் தனது உள்ளார்ந்த, தெய்வீக விதியை நோக்கி பக்குவமடைவதை குறிப்பிடுகிறது. தூல உடலின் கருத்தரிப்பின் போது ஆன்மா உருவாக்கப்படுவது இல்லை. ஆனால், அது சிவலோகத்தில் உருவாக்கப்படுகிறது. அது இறுதியாக பூலோகத்தில் ஒரு தூல உடலில் பிறவி எடுக்கும் வரை *விஞ்ஞானமய கோசம்*, *மனோமய கோசம்* மற்றும் *பிராணமய கோசம்* என்று மிகவும் அடர்த்தியான கோசங்களை பெற்று வளர்ச்சி பெறுகிறது. அதன் பிறகு அது பல பிறவிகளை அனுபவித்து, மறுபிறவி செயல்முறையின் மூலம் பக்குவம் அடைகிறது. முதிர்ச்சியின் தொடக்கத்தில் இருக்கும் இளம் ஆன்மாக்களும் இருக்கிறார்கள், மற்றும் தனது பூலோக வாசத்தின் இறுதியை நெருங்கும் முதிர்ந்த ஆன்மாக்களும் இருக்கிறார்கள். மேலும் தகவலுக்கு: மலம், *மோக்ஷம், மறுபிறவி, சம்சாரம், விஷ்வகிராசா.*

அதிக வேதனையை உருவாக்குவது (excruciating): தீவிர வலியை ஏற்படுத்துவது, சித்ரவதை செய்வது.

உள்பொருள் (existence): "வருவது அல்லது எழுந்தருளி இருப்பது." முழுமுதற்பொருள், யதார்த்தம்; இருப்பு.

இருத்தலியல் வாதம் (existentialism): பகையுணர்வும் அலட்சியமும் நிறைந்த பிரபஞ்சத்தில், தனிநபர் அனுபவத்தின் தனித்துவம் மற்றும் தனிமையை வலியுறுத்தும் இந்த கொள்கை, மனித வாழ்முறையை விளக்க முடியாததாக கருதி, ஒருவர் செய்யும் செயல்களின் தேர்வு மற்றும் பொறுப்பில் அவருக்கு சுதந்திரம் வழங்கவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

***இருத்தலியல் வாதத்தை* பின்பற்றுபவர் அல்லது அதில் நம்பிக்கை வைத்திருப்பவர் (existentialist):** மேலும் தகவலுக்கு: *இருத்தலியல் வாதம்.*

ஆர்வமிக்க (exuberant): கட்டுக்கடங்காத உற்சாகம் அல்லது சந்தோசம் நிரம்பிய.



இறைநம்பிக்கை (faith): விசுவாசம் அல்லது நம்பிக்கை. வலுவான நம்பிக்கை. இந்த நம்பிக்கையை விரிவான கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொது, அது "மதம், தர்மத்தை" குறிப்பிடுகிறது. அது குறிப்பாக ஐம்புலன்களின் வரம்பை கடந்து, பகுத்தறிவியலில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நிகழ்வுகள் மீது இருக்கும் நம்பிக்கையாக, மதத்தின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இறைநம்பிக்கை என்பது ஒரு நபரின் இயலுணர்வு அல்லது ஆதீதமான அனுபவம், சாத்திரம் படித்தல் மற்றும் ஆயிரம் வருடங்களாக மாறாமல் இருக்கும் உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் பல விவேகமான *ரிஷிகளின்* பிரமாணங்களை கேட்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது. *ஆக்ஞா சக்கரத்தின்* தெய்வீக பார்வையின் அடிப்படையில் உட்புற நம்பிக்கை அமைந்து இருக்கிறது. சரியாக அமையப்பெற்றதும், நம்பிக்கை பகுத்தறிவை கடந்து இருந்தாலும், அதற்கு முரணாக இருப்பது இல்லை. மற்றவர்கள் வழங்கும் வாக்குமூலம் மற்றும் கீர்த்தியில் இருக்கும் பற்றுறுதியை குறிப்பிடவும் நம்பிக்கை என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு சமஸ்கிருதத்தில் *சிரத்தை* இணையான சொல்லாக இருக்கும். *இதே பொருளை ஆஸ்திக்யம், விசுவாசம், தர்மம் மற்றும் மதி ஆகிய சொற்கள் வழங்குகின்றன.*

குடும்ப வாழ்க்கை (family life): மேலும் தகவலுக்கு: *கிருகஸ்த ஆசிரமம், பெரிய குடும்பம், கூட்டு குடும்பம்.*

குடும்ப வழக்கங்கள் (family practices): மேலும் தகவலுக்கு: *ஐந்து குடும்ப வழக்கங்கள்.*

உண்ணாவிரதம் அல்லது உபவாசம் (fast): ஒரு விரதம் அல்லது பண்டிகையின் போது இருப்பதைப் போன்று, குறிப்பிட்ட உணவை சாப்பிடுவது அல்லது உணவு ஏதும் சாப்பிடாமல் இருப்பதை குறிக்கிறது. இந்துக்கள் கடைப்பிடிக்கும் உண்ணாவிரதத்தில் பலவகைகள் உள்ளன. ஒருசில நாட்களுக்கு குறிப்பிட்ட உணவு வகைகளை தவிர்ப்பது ஒரு

எளிமையான உண்ணாவிரதம் ஆகும். உதாரணத்திற்கு சைவ உணவு உண்பவர்கள் *தாமச* அல்லது *இராஜச* உணவுகளை தவிர்ப்பார்கள் மற்றும் அசைவ உணவு உண்பவர்கள் மீன், கோழி மற்றும் இறைச்சிகளை தவிர்ப்பார்கள். மிதமாக உண்ணாவிரதம் இருப்பவர்கள் கெட்டியான உணவுகளை தவிர்த்து பழச்சாறுகள், தேநீர் மற்றும் மற்ற நீர் ஆகாரங்களை மட்டுமே எடுத்துக்கொள்கின்றனர். சிலசமயங்களில் அத்தகைய உண்ணாவிரதங்கள் காலையில் அனுட்டானம் செய்யப்படுகின்றன, மற்றும் சூரியன் மறைந்த பிறகு வழக்கம் போல உணவு அனுமதிக்கப்படுகிறது. தீவிரமான உண்ணாவிரதத்திற்கு கண்காணிப்பு தேவைப்படுகிறது, மற்றும் அந்த விரதத்தில் இருக்கும் போது பல நாட்களுக்கு தண்ணீர் மட்டுமே குடித்து, பெரும்பாலான வெளியுலக நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருக்கிறது.

கர்ப்பத்திலுள்ள சிசு (fetus): இது கருத்தரித்து எட்டு மாதங்கள் முதல் பிறவி எடுக்கும் வரையிலான காலகட்டதில் இருக்கும், ஒரு மனித/விலங்கின் கருவை குறிக்கிறது.

முதல் உலகம் (First World): ஐம்புலன்களுக்கு புலனாகும் பருமனான அல்லது லௌகீக பொருட்களின் பூலோகம் அல்லது தூல பிரபஞ்சம். மேலும் தகவலுக்கு: *லோகம்.*

பஞ்ச குடும்ப சாதனா (five family practices): *பஞ்ச குடும்ப சாதனா,* அல்லது குழந்தை வளர்ப்புப் பற்றிய ஐந்து அறிவுறுத்தல்கள். 1) **நன்னடத்தை—தர்மசார (Good Conduct—Dharmachāra):** தங்கள் குழந்தையின் வாழ்க்கையில் தங்கள் வாழ்முறை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அறிந்து இருக்கும் அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் பெரியவர்களானதும் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவ்வாறே தாங்களும் நடந்துக் கொள்கிறார்கள். அவர்கள் எப்போதும் சிறுவர்கள் முன்பாக கோபப்படுவது அல்லது வாக்குவாதத்தில் ஈடுபடுவது கிடையாது. வீட்டில் வேட்டி அணிந்து இருக்கும் தந்தையும் புடவையில் இருக்கும் தாயும் ஒன்றாக இறைவன், மகாதேவர்கள் மற்றும் குருவை போற்றிப் பாடுகிறார்கள். 2) **வீட்டில் வழிபாடு—தர்ம ஸ்வகிரிகா (Home Worship—Dharma Svagṛiha):** அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள் தங்கள் வீட்டில் இறைவன், மகாதேவர்கள் மற்றும் காவல் *தேவர்களுக்கு* ஒரு தனியான பூஜை அறை அமைத்து இருப்பார்கள். இது எல்லா குழந்தைகளும் ஒன்றாக சேர்ந்து வழிபடும் அளவிற்கு பெரிதாக இருப்பது பொருத்தமாக இருக்கும். இது சாத்திரம் படிப்பதற்கு ஒரு புனிதமான இடமாக, வாழ்க்கை வழங்கும் கர்மவினை போராட்டங்களில் இருந்து ஒதுங்கி இருக்கும் இடமாக இருக்கும். 3) **மதத்தைப் பற்றி பேசுவது—தர்ம சம்பாஷனா (Talking About Religion—Dharma Sambhāshana):** அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள் தாங்கள் வாகனம் ஓட்டும் போது, சாப்பிடும் போது மற்றும் விளையாடும் போது வேத மந்திரங்கள் சொல்லும் விதிகளைப் பற்றி பேசுகிறார்கள். இதனால் குழந்தைகள் தங்கள் அனுபவங்களை சரியான கண்ணோட்டத்துடன் புரிந்துக்கொள்ள முடிகிறது. லௌகீக குரல்களின் ஒலி அதிகமாக இருப்பதால், தங்களது *தார்மீக* குரல் மேலும் வலுவாக இருக்கவேண்டும்

என்பதை பெற்றோர்கள் அறிந்து இருக்கிறார்கள். 4) **சுய விசாரத்தை தொடர்தல்—தர்ம ஸ்வாத்யாய (Continuing Self-Study—Dharma Svādhyāya):** *வேதங்கள், ஆகமங்கள்* மற்றும் புனிதமான இலக்கியங்களை படிப்பது மற்றும் *சுவாமிகள்* மற்றும் *பண்டிதர்கள்* வழங்கும் உபதேசங்களை கேட்பதன் மூலம், அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள் தங்கள் தர்மத்தைப் பற்றி அவ்வப்போது தகவல்களை பெற்று வருகிறார்கள். இளைஞர்கள் எதிர்காலத்தில் தங்கள் உலகை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால், அவர்கள் எதிர்கால சந்ததிகளை வழிநடத்த, தங்களுக்கு பிரியமான குழந்தைகளை தயார் செய்கிறார்கள். 5) **ஒரு சத்குருவை பின்பற்றுதல்—தர்ம சங்கம் (Following a Spiritual Preceptor—Dharma Saṅga):** அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள் ஒரு பாரம்பரிய சத்குரு, ஒரு பரம்பரையை பின்பற்றுகிறார்கள். அவர்கள் தங்கள் பரம்பரைக்கு ஆதரவு தெரிவிக்க தங்கள் இதயம், ஆற்றல் மற்றும் சேவையை முழுமையாக வழங்குகிறார்கள். அவர்கள் லௌகீகம் மற்றும் மதம் தொடர்பான வாழ்க்கையில் வெற்றிகளை பெறுவதற்கு, அந்த குருவும் தெளிவான வழிகாட்டலை வழங்குகிறார்.

ஐந்து மனநிலைகள் (five states of mind): உணர்வுள்ள மனம், அடிமனம், மறைந்துள்ள பண்புகளின் மனம், துணை மெய்ஞ்ஞான மனம் மற்றும் மெய்ஞ்ஞான மனம். மேலும் தகவலுக்கு: *மனம் (ஐந்து நிலைகள்).*

சகிப்புத்தன்மை (forbearance): சுயக்கட்டுப்பாடு; குறிப்பாக தூண்டப்படும் போது பொறுமை மற்றும் பரிவுடன் இருத்தல். தாங்கும் சக்தி, பொறுமை. மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*

நெற்றியில் வைக்கும் குறியீடுகள் (forehead marks): மேலும் தகவலுக்கு: *திலகம்.*

விசைப்பகுதி (force field): ஒரு சக்தி செயல்படும் பரவெளியின் பகுதி, உதாரணத்திற்கு மின்சாரம் செயல்படும் இடம். இந்த சொல் உணர்ச்சிகள், மனம், மேல்நிலை அல்லது கீழ்நிலை சக்கரங்களால் உருவாக்கப்பட்டு அல்லது உட்புறத்தில் இருக்கும் உயர்ந்த அல்லது தாழ்ந்த உலகங்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்டு, நேர்மறையாகவும் அல்லது எதிர்மறையாகவும் இருக்கும் சூட்சும சக்திகளை குறிப்பிடுகிறது. ஒரு கோயில், ஒரு ஆசிரமம் அல்லது இணக்கமான வீடு போன்ற இடங்களில் வழிபாடு, தெய்வங்களை ஆவாகனம் செய்தல், *சாதனா, தபஸ்* மற்றும் ஆச்சாரமான வாழ்க்கையை வாழ்ந்து தெய்வீக சக்திகள் அல்லது தேவர்களின் கவனத்தை பெறுவதன் மூலம், அந்த பகுதிகளை சுற்றி அவற்றை பாதுகாக்கும் நேர்மறை சூட்சும விசைப்பகுதிகள் உருவாக்கப்படுகின்றன. ஒரு நகரத்தின் மோசமான பகுதிகளில் அல்லது ஒரு இணைக்கமில்லாத வீடு போன்ற இடங்களில் காணப்படும் எதிர்மறை விசைப்பகுதிகள், தீய சக்திகள் அல்லது *அசுரர்களை* ஈர்க்கும் கோபம், வன்முறை, கழிகாமம் மற்றும் அதைப்போன்ற கீழ்நிலை உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளால் உருவாக்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *காந்த சக்தி, ஆன்மீக சக்தி, பிராண சக்தி.*

அருவம் (formless): தத்துவரீதியாக இது *அதத்துவ* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இது உருவம் அல்லது வஸ்துவின் உலகை கடந்து இருப்பதை

குறிப்பிடுகிறது. அற்புதமாக, விளக்க முடியாமல், “காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து,” இருக்கும் முடிவான பரம்பொருளை விளக்குவதற்காக மேற்கொள்ளும் முயற்சியில் பயன்படுத்தப்படுகிறது. சிவபெருமான் உருவத்துடனும் உருவமில்லாமலும் இருக்கிறார். அவர் உள்நின்று உறையும் தூய உணர்வாக அல்லது புனிதமான உருவமாக இருக்கிறார். அவர் உருவமுடைய கடவுளாக எண்ணற்ற உருவங்களில் காட்சி அளிக்கிறார்; மற்றும் அவர் உருவமில்லாமல், எல்லா உருவங்களையும் கடந்து முடிவான பரம்பொருளாக இருக்கிறார். இவ்வாறு நாம் சிவபெருமானை இரண்டில் உருவத்துடனும் ஒன்றில் உருவமில்லாமலும் என்று மூன்று முழு நிறைவான நிலைகளில் இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *பரசிவம், சச்சிதானந்தம்.*

four traditional goals: *Chaturvarga,* “four-fold good,” or *purushārtha,* “human goals or purposes.” நான்கு பாரம்பரிய இலக்குகள் அல்லது சதுர்வித புருஷார்த்தங்கள். மனிதர்கள் முறைப்படி ஈடுபடக்கூடிய நான்கு நாட்டங்கள், இந்து ஒழுங்குமுறையின் ஒரு அடிப்படை கொள்கை. 1) ***தர்மம்* ("நேர்மையான வாழ்க்கை")** (***dharma* (“Righteous living”)):** ஒருவர் சமூகத்திற்கு சேவை செய்வது மற்றும் மேம்படுத்துவதன் அங்கமாக ஒழுக்கம், நல்ல செயல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், இயமங்கள் மற்றும் நியமங்களை நிறைவேற்றுதல். ஒரு குறிப்பிட்ட பரம்பரை மற்றும் சம்பிரதாயத்தை சேர்ந்த குருவின் கீழ் உண்மையை நாடுவதையும் குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *தர்மம்.* 2) ***அர்த்த* ("செல்வம்")** (***artha* (“Wealth”)):** லௌகீக சுகம் மற்றும் செல்வம், பணம், சொத்து மற்றும் உடைமைகள். அர்த்த என்பது தர்ம நெறியை பின்பற்றி செல்வம் தேடுவது ஆகும். இது உணவு, பணம், உடை மற்றும் தங்கும் இடம் உட்பட ஒரு வசதியான வீடு, குடும்ப பராமரிப்பு, ஒரு வெற்றிகரமான தொழில் வாழ்க்கை மற்றும் மதம் தொடர்பான கடமைகளை செய்வதற்கு தேவையான பணத்தையும் குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *யக்ஞம்.* 3) ***காமம்* ("இன்பம், அன்பு; மகிழ்ச்சி") (*kāma* (“Pleasure, love; enjoyment”)):** லௌகீக அன்பு, அழகியல் மற்றும் கலாச்சார நிறைவேற்றம், உலக சுகங்கள் (பாலியல் சுகங்கள் உட்பட), குடும்பத்தால் கிடைக்கும் மகிழ்ச்சி, அறிவுசார் திருப்தி. இன்பம், பாதுகாப்பு, ஆக்கத்திறன், பயனுடைமை மற்றும் உத்வேகத்தை ரசித்தல். 4) ***மோக்ஷம்* (முக்தி)** ***moksha* (“Liberation”):** பரசிவம் என்கிற முடிவான சித்தியாக விளங்கும் ஆத்ம ஞானத்தை உணர்வதன் மூலம் மறுபிறவியில் இருந்து விடுதலை பெறுதல். ஆன்மீக சித்திகள் மற்றும் மெய்ஞ்ஞான மகிழ்ச்சிகள், ஆத்ம ஞானத்தை நோக்கி வழிநடத்தி செல்லும் துறவறம் மற்றும் யோகத்தில் ஈடுபடுதல். ஒருவருக்கு லௌகீக சுகம் மற்றும் துக்கங்களில் பற்று இல்லாத அளவிற்கு, அவர் இப்பிறவி அல்லது முற்பிறவிகளில் தர்மம், அர்த்தம் மற்றும் காமத்தை நிறைவேற்றிய பிறகு அவருக்கு முக்தி கிடைக்கிறது.

அடிப்படைவாதம் (fundamentalism): தீவிர பிடிவாதம் மற்றும் சகியாமை பண்புகளுடன் இருக்கும் ஒரு பொதுவான சமூக நம்பிக்கை அல்லது தத்துவ வற்புறுத்தல். பல மதங்களில் இருக்கும் அடிப்படைவாத உட்பிரிவுகள் தங்கள் சாத்திரம் அளிக்கும் விளக்கம் மட்டுமே உண்மை என்றும், அனைத்து ஆன்மாக்களும் முக்தியை நோக்கி செல்வதற்கு இதைத் தவிர வேறு

வழியில்லை என்றும் நம்புகின்றனர். அடிப்படைவாதம் வலுவான பேரார்வத்துடன் சேரும் போது, அதை நம்பாதவர்கள் மீது ஆக்கிரமிப்பு மற்றும் சில சமயம் வன்முறைக்கும் வழி வகுத்துள்ளது என்பதை நாம் வரலாற்று குறிப்புக்களில் காணலாம்.

**Gaṇapati:** गणपति “Leader of the *gaṇas* .” கணபதி: "கணங்களின் தலைவர். விநாயகாரின் இன்னொரு பெயர்.

Gandhi: गान्धी காந்தி: மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி (1869-1948). இவர் அகிம்சையை ஆயுதமாக பயன்படுத்தி, ஆங்கிலேய ஆட்சியில் இருந்து இந்தியாவிற்கு விடுதலை வாங்கித் தந்தார். இவர் பெரும்பாலும் மகாத்மா என்றும் அழைக்கப்படுகிறார்.

Gaṇeśa: गणेश “Lord of Categories.” *கணேஷா* : “கணங்களின் தலைவன்.” அல்லது: “கணநாதர்,” இவை அனைத்தும் கணபதி அல்லது விநாயகரை குறிக்கின்றன. கணபதி ஒரு மகாதேவராக, இந்துக்களின் ஒவ்வொரு பிரிவாலும் வணங்கப்படும் ஆனைமுகனாக இருக்கிறார். அவர் விக்கினங்களின் அழிக்கும் கடவுளாக (விக்னேசுவரன்) இருந்து, அவருக்கு இருக்கும் சிறந்த ஞானத்திற்காக மரியாதை செலுத்தப்படுகிறார், மற்றும் ஒவ்வொரு ஆன்மாவின் *கர்மவினையிலும்* இருக்கும் நுணுக்கங்கள் மற்றும் ஒரு செயலை வெற்றி அடைய செய்யும் முறையான *தார்மீகப்* பாதையை அவர் அறிந்து இருப்பதால், எந்த ஒரு செயலையும் தொடங்கும் முன் அவர் பூசிக்கப்படுகிறார். அவர் *மூலாதார சக்கரத்தில்* வீற்று இருக்கிறார் மற்றும் எளிதில் அணுகும் படியாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *கணம், கணபதி, மகாதேவர்.*

Gaṇeśa Chaturthī: गणेश चतुर्थी விநாயகர் சதுர்த்தி. விநாயகர் ஒரு ஆவணி மாத சதுர்த்தி அன்று யானை முகத்தோடும், மனித உடலோடும் கஜமுகாசுரனை அழித்து தேவர்களை மீட்டார். அதனால் அன்று முதல் இந்த தினம் விநாயகர் சதுர்த்தியாக பல்வேறு நாடுகளில் பத்து நாட்கள் வரை கொண்டாடப்பட்டு, இறுதி நாளன்று கடலில் சென்று விநாயகரை கரைக்கும் விநாயகர் விசர்ஜனம் ஒரு பெரிய அணிவகுப்பாக நடைபெறுகிறது. இந்த சந்தோஷமான தருணத்தில் இந்துக்கள் அனைவரும் ஒன்றாக வழிபடுகின்றனர்.

Gaṅgā sādhana: गंगासाधन கங்கா சாதனா. தேவையில்லாத சிந்தனைகளில் இருந்து விடுதலை பெறுவதன் மூலம், மனதின் சுமையை குறைக்கும் பயிற்சி. ஒரு நதிக்கரையில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு, பாறைகள் மீது நீர் மோதி பாய்ந்து செல்லும் போது எழும் ஓம்காரத்தை கேட்டுக்கொண்டு, அகத்தை சுத்தம் செய்யும் *சாதனா.* ஒரு எண்ணம் தோன்றும் போது, அதை மானசீகமாக வலது கையில் இருக்கும் இலையில் வைத்து, ஓடும் நீரில் அது மெதுவாக வீசப்படுகிறது. அதன் பிறகு அந்த

சிந்தனையை தூக்கி செல்ல உதவியாக இருந்த, நீருக்கு நன்றி செலுத்தும் வண்ணம் அதற்கு ஒரு பூ வழங்கப்படுகிறது. இது அடியுணர்வை சுத்தம் செய்யும் செயல்முறை ஆகும், மற்றும் இதில் மனக்கசப்புகள், கோபம், பிரச்சனைகள் அல்லது தியானத்தை குலைக்க மனதில் தோன்றும் அனைத்தையும் கைவிடுவதை குறிப்பிடுகிறது.

Ganges *(Gaṅgā):* गंगा கங்கை நதி. இந்தியாவின் மிகவும் புனிதமான நதி, 1,557 மைல்கள் நீளமுடையது, பாகீரதி என்ற பெயரில் ஹரித்வாருக்கு மேலிருக்கும் இமய மலையில் தோன்றி, அலக்நந்தா நதியுடன் (இங்கே இந்த நதிகளுடன் நிலத்தடியில் சரஸ்வதி நதியும் சேர்வதாக கூறப்படுகிறது) சேரும் போது கங்கை என்கிற பெயரை பெறுகிறது. இது தென்கிழக்கு திசையில் மக்கள் தொகை அதிகமாக உள்ள கங்கை சமவெளி வழியாக பாய்ந்து சென்று, பிரயாகையில் (அலகாபாத்) தனது கிளை யமுனை நதியுடன் (ஜமுனா) சேர்ந்து, முடிவில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

கங்கை நதிக்கரையில் அல்லது அதற்கு அருகில் (Gangetic).

கங்கை நதிக்கரையில் அமைந்திருக்கும் சிவபெருமானின் திருத்தலங்கள் (Gangetic abodes of Śiva): காலங்காலமாக புண்ணிய தலங்களாக விளங்கி வரும் வாரணாசி (வருணா மற்றும் அசி நதிகளுக்கு மத்தியில் கங்கை நதிக்கரையில் இருக்கும்) விசுவநாதர் கோயில், கங்கை பிறப்பிடத்தில் அமைந்துள்ள கங்கோத்ரி கோயில் (கேதார்நாத் நகருக்கு அருகில்), ஹரித்வார் மற்றும் ரிஷிகேஷ் நகரில் அமைந்துள்ள புனிதமான கோயில்களை பக்தர்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது சென்று வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

garbhagṛiha: गर्भगृह The "innermost chamber," கர்ப்பக்கிரகம். இங்கே இந்து கோயிலின் மூல மூர்த்தி அமைந்து இருக்கும். இந்த சிறிய அறை குகை வடிவில் இருக்கும். இது வழக்கமாக கருங்கல்லால் உருவாக்கப்பட்டு இருக்கும். இங்கே பூசாரிகள் மட்டும் அனுமதிக்கப்படுகிறார்கள். இது மறைஞானரீதியாக மனிதனின் தலைக்கு ஒப்பிடப்படுகிறது. மிலும் தகவலுக்கு: *கோயில்.*

அருவருக்கத்தக்க (gauche): நேர்த்தி இல்லாத அல்லது சமூகத்தை எதிர்கொள்ளும் சாமர்த்தியம் இல்லாத ஒருவர்; அலங்கோலமாக, திறமையற்ற.

ghee: घी நெய். சம்ஸ்கிருதத்தில் *கிருத.* இது உருக்கி திட பொருட்களை நீக்கிய வெண்ணெய் ஆகும். கோயில் விளக்குகள் மற்றும் யாகத்தில் பயன்படுத்தபடும் ஒரு புனிதமான பொருள். இது பல ஆயூர்வேத பண்புகளைக் கொண்ட ஒரு உணவாகவும் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *யக்ஞம்.*

கிப்ரான், காஹ்லில் (Gibran, Kahlil): லெபனான் நாட்டைச் சேர்ந்த சூட்சும ஞானி, கவிஞர், நாடக ஆசிரியர் மற்றும் ஓவியர் (1888-1931). இவர் எழுதிய *தி ப்ராஃபெட்* புத்தகத்திற்காக புகழ் பெற்றவர்.

Gītā: गीता “Song.” கீதை: "பாடல்" பகவத் கீதையின் சுருக்கமான தலைப்பு. மேலும் தகவலுக்கு: *பகவத் கீதை.*

அதிகமாக உண்ணும் அல்லது குடிக்கும் பழக்கம் (gluttony).

கடவுளை அல்லது இறைவனை உணர்தல் (God Realization): தனக்குள் இருக்கும் தெய்வத்தை நேரடியாக மற்றும் தனிப்பட்ட முறையில் எதிர்கொள்ளுதல். அந்த உணர்தல் 1) உட்புற ஒளியை அனுபவிப்பதில் தொடங்கி, சச்சிதானந்தத்தை உணர்தல், எல்லா உருவங்கள் வழியாக பாய்ந்து செல்லும் புனிதமான உணர்வு அல்லது அடிப்படை சாரம் வரை பல்வேறு நிலைகளில் இருக்கும் *சவிகல்ப சமாதி* (“உருவம் அல்லது பீஜத்துடன் கூடிய சமாதி"), அல்லது 2) யாவும் கடந்த முடிவான பரம்பொருள், பரசிவம், காலம் மற்றும் உருவம் மற்றும் பரவெளியை கடந்த பரமாத்துமாவுடன் நடைபெறும் சங்கமத்தை குறிப்பிடும் *நிர்விகல்ப சமாதியை* (“உருவம் அல்லது பீஜம் இல்லாத சமாதி”) குறிப்பிடலாம். *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத்திட்டத்தில், *கடவுளை உணர்தல்* என்பது மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் *சமாதிகளில்* ஏதேனும் ஒன்றை குறிப்பிடலாம், ஆனால் ஆத்ம ஞானம் என்பது *நிர்விகல்ப சமாதியை* மட்டுமே குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *இராசயோகம், சமாதி,* ஆத்ம ஞானம்.

இறைவன் (God): வானுலக சக்தி. இது பரமாத்துமாவான சிவபெருமானை, அல்லது அவரது படைப்புகளில் ஒருவராக இருக்கும் மகாதேவர்கள் என்கிற தலைசிறந்த ஆன்மாக்களையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாதேவர்கள், மகாதேவர், சிவபெருமான்.*

Gods: Mahādevas, “great beings of light.” மகாதேவர்கள்: “சுயமாக பிரகாசிக்கும் உயர்வான சக்திகள்.” சிவபெருமானுடன் ஐக்கியமாதல் புத்தகத்தில், மகாதேவர்கள் என்கிற சொல் சிவலோகத்தில் சுயமாக பிரகாசித்து தங்களது *ஆனந்தமய கோசத்தில்* வாசம் செய்யும் மிகவும் மேம்பட்ட சக்திகளை குறிப்பிடுகிறது. மகாதேவர்கள் என்கிற சொல், சிவபெருமானின் படைப்புக்களை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாதேவர்.*

அருள் (grace): இது இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் சக்தியான *அனுக்கிரக சக்தியை* (“இரக்கம், ஆதரவு வழங்குதல்") குறிப்பிடுகிறது, மற்றும் இதன் மூலம் ஆன்மாக்கள் தங்களது உண்மையான தெய்வீக தன்மையின் மீது விழிப்புணர்வை பெறுகிறார்கள். ஒரு பக்தன் தனது ஆன்மீக பயணத்தில் பக்குவமடையாத நிலைகளில் இருக்கும் போது, எந்த தடையும் இல்லாமல் பெரும்பாலும் பரிசுகள் அல்லது வரங்களாக, தனக்கு இறைவனிடமிருந்து அருள் கிடைப்பதை உணர்கிறான். பக்குவமடைந்த ஆன்மா தன்னை சுற்றி அருள் நிறைந்து இருப்பதை காண்கிறார். அவர் இறைவனின் செயல்களை, அவை நன்மை செய்து பயனுள்ளதாக தோன்றினாலும் தோன்றாவிட்டாலும், அதை அவரது அருளாகவே பார்க்கிறார். மேலும் தகவலுக்கு: *பிரபத்தி, சக்திபாத.*

மனமகிழ்ச்சி (gratification): தனக்கு விருப்பமான செயல்களில் ஈடுபடுவது.

மகாவிரதம் (Great Oath): சைவ சந்நியாசிகள் துறவறம் மேற்கொள்ளும் விரதம். சைவ சமயத்தை தங்கள் பாதையாக தேடிக்கொண்டவர்கள் மேற்கொள்ளும் மகாவிரதம். இது உலகம், ஆசை மற்றும் ஆணவத்தை

துறப்பதை குறிக்கிறது. இது காந்த இயல்புடன் இருக்கும் உடல், மனம் மற்றும் உணர்ச்சி பற்றிய அறிவின் மீது பற்றின்மை மற்றும் வெளிப்புற வடிவங்கள் மீது ஆன்மா ஈடுபடாமல் இருப்பதற்கு துணை புரிந்து, நாளடைவில் பரசிவ என்கிற முழுமுதற்பொருளை உணர்வதற்கு அழைப்பு விடுக்கும் அறிவை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாசம்.*

gṛihastha: गृहस्थ "Householder."கிருகஸ்தன்: குடும்ப வாழ்க்கையை வாழும் ஆண் அல்லது பெண். திருமணமான தம்பதிகளும் அவர்களின் சொந்தங்களும். குடும்ப வாழ்க்கையை சார்ந்தது. சாம்சாரிகளாக இருக்கும் ஆண்களை மட்டும் குறிப்பிடுவதற்கு *கிருகஸ்தின்* என்றும் பெண்களை குறிப்பிடுவதற்கு *கிருகஸ்தி* என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகின்றன. *கிருகஸ்தி* வீட்டை குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம்.*

gṛihastha dharma: गृहस्थधर्म "Householder law." கிருகஸ்த தர்மம். குடும்ப வாழ்க்கையின் நற்பண்புகளும் இலட்சியங்களும். மேலும் தகவலுக்கு: *ஆசிரம தர்மம்.*

பருமனான (gross): அடர்த்தியான, கரடுமுரடான, புனிதமற்ற, ஒழுங்கற்ற; சரீரம் தொடர்பான, புலனுணர்வு மட்டுமே சார்ந்த; கூர் உணர்வு இல்லாத.

உத்தரவாதம் அளிப்பவர் (guarantor): உத்தரவாதம் அல்லது பொறுப்புறுதி வழங்கும் நபர் அல்லது நிறுவனம்.

guṇa: गुण "Strand; quality." குணம். பிரக்ரிதி அல்லது மூல இயற்கையின் மூன்று முக்கிய அடிப்படைகள். அவை பின்வருமாறு: —***சத்வ (sattva):*** "தூய்மையான," அமைதியான, அரிதான, ஒளி புகவல்ல, வியாபிக்கும் பண்புடன், தூய உணர்வின் ஒளியை பிரதிபலிக்கிறது. —***ரஜோ (rajas):*** "பேரார்வம்," ஆற்றல், இயக்கம், செயல், மனவெழுச்சி, வாழ்க்கையில் இயல்பாக இருப்பது. —***தமோ (tamas):*** "இருள்," செயலற்ற தன்மை, அடர்த்தியான, ஒடுக்கும் சக்தி, தடை மற்றும் கலைப்பு. *ஆயுர்வேதம்*, கலை, சுற்றுப்புறம் மற்றும் ஆளுமைகள் உட்பட இந்த இயற்கையின் பண்புகள் அனைத்து வஸ்த்துக்களிலும் அடங்கி இருப்பதால், இந்த *குணங்கள்* இந்து சிந்தனையில் அடிப்படை அங்கமாக விளங்குகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆயூர்வேதம்.*

guru: गुरु "Weighty one," indicating an authority of great knowledge or skill. *குரு*: தலைசிறந்த புலமை அல்லது திறமையின் மீது இருக்கும் நிபுணத்துவத்தை குறிப்பிடுகிறது. இசை, நடனம், சிற்பக்கலை போன்ற துறைகளில் ஏதேனும் ஒன்று, அதிலும் குறிப்பாக சமயம் சார்ந்த துறையில் இருக்கும் ஒரு ஆசிரியர் அல்லது வழிகாட்டியின் உத்தியோகப் பெயர். *அத்வய தாரக* உபநிடதம் (14-18), குரு என்பதற்கு "அறியாமையை (ரு) நீக்குபவர் (கு)" என்று விளக்கம் அளிக்கிறது. மேலும் தகவலுக்கு: *குரு-சிஷ்ய* அமைப்புமுறை, *சத்குரு.*

guru bhakti: गुरुभक्ति Devotion to the teacher. குருபக்தி. ஒரு மாணவன் ஏதேனும் ஒரு பாடப்பிரிவின் ஆசிரியர் அல்லது குரு மீது வைத்திருக்கும் பணிவு, அன்பு மற்றும் கருத்து உருவாக்க மனப்பான்மையை குறிப்பிடுகிறது.

ஆன்மீக உலகில், ஒரு சீடன் குருவை தனது உயர்வான பரமாத்துமாவாக காண முயற்சி செய்கிறார். தனது *குரு* பெற்ற அதே அமைதி மற்றும் ஞானோதயத்தை இறுதியில் பெறுவதற்காக, சீடன் *சத்குருவின்* உட்புற இயல்பு மற்றும் ஞானத்துடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, அவர் தனது இயல்பை மெதுவாக உருமாற்றிக்கொள்கிறார். *குரு பக்தி* என்பது *குருவிற்கு* சேவை செய்து, அவரது உருவத்தை தியானம் செய்து, அவரது மனதுடன் நெருக்கமாக செயல்பட்டு, அவரது அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *குரு, சத்குரு, குரு-சிஷ்ய சம்பிரதாயம், குலார்நவ தந்திரா.*

Gurudeva: गुरुदेव "Divine" or "radiant preceptor." *குருதேவா: சத்குருவை* அன்பாகவும் மரியாதையாகவும் அழைக்கும் முறை. மேலும் தகவலுக்கு: *குரு, சத்குரு, தேவ.*

Guru Mahāsannidhānam: गुरु महासन्निधानम्. குரு மகாசன்னிதானம். ஒரு பாரம்பரிய ஆதீனத்தின் ஆன்மீகத் தலைவர். மேலும் தகவலுக்கு: *ஆதீனக்கர்த்தார்.*

guru paramparā: गुरुपरंपरा "Preceptorial succession" (literally, "from one teacher to another"). குரு பரம்பரை: (ஒரு ஆசிரியரை தொடர்ந்து இன்னொரு ஆசிரியர் பதவிக்கு வருவதை குறிப்பிடுகிறது). அதிகாரப்பூர்வமாக அடுத்தடுத்து தீட்சை பெறும் ஆன்மீக *குருமார்களின்* வரிசை; ஒரு *குருவிடம்* இருந்து இன்னொரு *குருவிற்கு* வழங்கப்படும், சூட்சும ஞான சக்தியின் தொடர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முற்போக்கான தொடர்ச்சி. மேலும் தகவலுக்கு: *சம்பிரதாயம்.*

Guru Pūrṇimā: गुरु पूर्णिमा குரு பூர்ணிமா. ஜூலை மாதத்தில் வரும் பௌர்ணமி திதி, குரு பூர்ணிமா என்று கொண்டாடப்படுகிறது. குரு பிரதிநிதியாக இருக்கும் அனைத்திற்கும், சீடர்கள் மீண்டும் நன்றி செலுத்தும் நாளாக விளங்குகிறது. இந்த தருணத்தில் குருவின் புனித பாதங்களை பிரதிநிதித்துவம் செய்யும் பாதுகைகளுக்கு, பாதபூஜையின் மூலம் சம்பிரதாய முறைப்படி வழிபாடு நடத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *குரு-சிஷ்ய சம்பிரதாயம்.*

***guru-śishya* system:** गुरुशिष्य "Master-disciple" system. *குரு-சிஷ்ய சம்பிரதாயம்*: இது இந்துதர்மத்தில் ஒரு முக்கிய கல்விமுறையாக விளங்குகிறது. இதில் ஆசிரியர் ஒரு மாணவனுக்கு தனக்கு தெரிந்த தகவல் மற்றும் பாரம்பரியத்தை எடுத்துரைக்கிறார். வேத-ஆகம கலை, கட்டிடக்கலை அல்லது ஆன்மீகம் பற்றிய அத்தகைய தகவல், *குரு* மற்றும் சீடனுக்கு இடையே ஒரு வலுவான உறவை ஏற்படுத்திக் கொண்டு போதிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *குரு, குரு பக்தி, சத்குரு.*

guruthondu: குருத்தொண்டு "Service to the *guru* ." *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில், குருத்தொண்டு என்பது குருதேவாவின் சைவ தேவாலயத்தில் இருக்கும் இளைஞர்கள் எல்லோரும் தங்கள் திருமணத்திற்கு முன்பாக, ஒரு மடத்தில் ஆறு மாதங்கள் முதல் இரண்டு வருடங்கள் வரை சேவை செய்யவேண்டிய காலகட்டத்தை குறிக்கிறது. இது குருவின் அறிவுறுத்தல்களுக்கு அடிபணிந்து, பிரத்யேகமான பணிகளில் மடவாசிகள்

தங்களை மூன்று-நான்கு மணி நேரங்களுக்கு ஈடுபடுத்திக் கொண்டு தனிமையில் சாதனா செய்வதையும் குறிக்கிறது. இதை தொடங்குவதற்கு முன்பும் பின்பும் கோயிலில் சிறிய சடங்கு நடைப்பெறுகிறது.



இணக்கத்தை ஏற்படுத்துவது (harmonize): உடன்பாட்டை உருவாக்குவது.

haṭha yoga: हठयोग "Forceful yoga." ஹட யோகம்: "ஆற்றல்மிக்க யோகம்." இது பழங்காலத்தில் உடலுக்கு புத்துணர்ச்சி வழங்குவதற்காக, நீண்ட நேரங்கள் தியானம் செய்த *ரிஷிகள்* மற்றும் *தபஸ்விகளால்* உருவாக்கப்பட்ட, உடல் மற்றும் மனம் சார்ந்த பயிற்சிகளின் செய்முறை ஆகும் மற்றும் இது தற்போது தியானத்திற்காக உடல் மற்றும் மனதை தயார்படுத்த பயன்படுத்தப்படுகிறது. மேற்கத்திய நாடுகளில் *ஹட யோகம்* உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த, உடலை எளிதில் வளைக்க மற்றும் மன அழுத்தத்தை குறைக்கும் பயிற்சியாக மேலோட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏரோபிக் (aerobic) உடற்பயிற்சிகளில் பெரும்பாலும் சேர்க்கப்பட்டுள்ளன. மறைஞான ரீதியாக, *ஹ* என்பது நுணுக்கமான பிரபஞ்சத்தின் சூரியன் மற்றும் ட என்பது அதன் சந்திரனையும் குறிப்பிடுகிறது, மற்றும் அவை முறையே மனித உடலில் இருக்கும், ஆண்மை பண்புள்ள *பிங்கலா நாடி* மற்றும் பெண்மை பண்புள்ள *இடா நாடியை* குறிப்பிடுகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆசனம், குண்டலினி, நாடி, யோகம், இராசயோகம்.*

Haṭha Yoga Pradīpikā: हठयोगप्रदीपिका "Light on *haṭha yoga.* " ஹட யோகப் பிரதீபிகா. "ஹட யோகம் பற்றிய விளக்கம்." 14ஆம் நூற்றாண்டில் சுவாத்மாராம யோகி வழங்கிய 389 சுலோகங்களை கொண்டது. இது ஹட யோக தத்துவம் மற்றும் அப்பியாசங்களை விளக்குகிறது. இது இன்று பல பள்ளிகளில் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

havana: हवन "Making oblations through fire." *ஹவன*: அக்னி பகவானின் துணையுடன் நடைபெறும் ஒரு வைதீக சடங்கு. இது *ஹோமம்* என்றும் அழைக்கப்படுகிறது. ஆகுதிகளை வழங்கும் ஹோம குண்டம். ஆகுதிகள் *ஹவிஸ்* மற்றும் *ஹவ்ய* என்று அழைக்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *ஹோமம்.*

havana kuṇḍa: हवन कुण्ड "Offering pit." ஹவன குண்டம். *ஹவன* அல்லது *ஹோமத்தில்* ஆகுதிகளை வழங்க செங்கற்கள் மூலம் உருவாக்கப்பட்டு இருக்கும் அக்னி குண்டத்தின் பெயர்.

heart *chakra:* *Anāhata chakra. அனாஹத சக்கரம்.* நேரடி அறிவெழுச்சியின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

சொர்க்கம் (heaven): ஆன்மாக்கள் இரு பிறவிகளுக்கு இடையே ஓய்வெடுத்துக்கொண்டு கற்றுக்கொள்ளும், மற்றும் முதிர்ந்த ஆன்மாக்கள்

மோக்ஷத்திற்கு பிறகு பக்குவம் அடையும் இடமான, சிவலோகம் மற்றும் நுணுக்கமான உலகின் உயர்நிலை பிரபஞ்சங்களை உள்ளடக்கிய விண்ணுலகங்களை குறிப்பிடுகிறது. சொர்க்கம் என்கிற சொல் சமஸ்கிருத சொல்லான *ஸ்வர்கத்திற்கு* சமமாக பொருளுடைய சொல்லாக மொழிபெயர்ப்பாளர்களால் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்*.

இன்ப விரும்பி (hedonist): புலன் இன்பங்களில் அதிக நாட்டத்துடன் இருப்பவர்.

மிகவும் கொடிய (heinous): அவக்கேடான அல்லது கண்டிக்கத்தக்க; வெறுக்கத்தக்க.

hell: *Naraka.* நரகம். உணர்வில் சோகமாக, மனம் மற்றும் மனவெழுச்சி ரீதியாக நெரிசலான, துன்பகரமான பகுதியாக இருக்கும். நரகம் என்கிற மனநிலையை, தூல உலகம் அல்லது துணை-சூட்சும உலகில் (நரகம்) தூல உடலின் மரணத்திற்கு பிறகு அனுபவிக்க முடிகிறது. அதனுடன் வெறுப்பு, கழிவிரக்கம், ஆத்திரம், அச்சம், பொறாமை மற்றும் சுய-கண்டனத்தின் வேதனை நிறைந்த உணர்ச்சிகள் சேர்ந்து வருகின்றன. ஆனால் இந்துதர்மத்தின் கண்ணோட்டத்தில், நரக வேதனை என்பது நிரந்தரமாக இருப்பதில்லை, ஆனால் அது சுயமாக உருவாக்கிக்கொண்ட ஒரு தற்காலிக நிலையாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *அசுரன், நரகம்*.

மதக்கோட்பாடுகளை வலுவாக மறுப்பது (heresy): காலங்காலமாக நிலைத்து இருக்கும் ஒரு மதத்தின் நம்பிக்கைகள், வழக்கங்களுக்கு வலுவாக எதிராக இருக்கும் ஒரு கருத்து அல்லது நம்பிக்கை.

உயிர் காக்கும் நடவடிக்கைகள் (heroic measures): இது சுவாசிப்பது அல்லது இதய செயல்பாடு இயல்பாக இல்லாத ஒருவருக்கு, அவற்றை செயற்கையாக வழங்கும் மருத்துவ குறுக்கீட்டை குறிக்கிறது. இன்று மருத்துவத்தில் நடைபெறும் அத்தகைய நடவடிக்கைகளில், இதய சுவாசமூட்டல் (cardiopulmonary resuscitation) மற்றும் மனிதன் அல்லது இயந்திரம் மூலம் செயற்கையாக சுவாசிப்பதை குறிக்கிறது. உயிர் காக்கும் நடவடிக்கைகள் என்பது வாகன விபத்து அல்லது தண்ணீரில் மூழ்கி மூச்சுத்திணறல் ஏற்பட்டு பின்பு உயிர் பிழைப்பது முதல் உறுப்பு செயழிலப்பு மூலம் உயிர் பிரியும் நிலையில் இருக்கும் முதியவரின் உடலுக்கு இயந்திர சாதனங்கள் மூலம் உதவி அளிப்பது வரை, அவசரக்காலத்தில் வழங்கப்படும் மருத்துவ குறுக்கீடுகள் அனைத்தையும் குறிப்பிடுகின்றன. விபத்து அல்லது நோயில் இருந்து குணமடைவதற்கு வாய்ப்பு இருக்கும் போது, அத்தகைய உயிர்காக்கும் நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்றாலும், வியாதி முற்றிய நிலையில் இருந்து குணமடைவதற்கு வாய்ப்பு இல்லாமல் மரணம் நிச்சயம் என்று இருக்கும் போது, அத்தகைய நடவடிக்கைகள் உயிர் காப்பு அமைப்பாக நீண்டகாலத்திற்கு அறிவுறுத்தப்படுவது இல்லை. உடல் தொடர்ந்து தனது நடவடிக்கைகளை செய்ய அல்லது வியாதியில் இருந்து குணமடைய உடலில் போதிய வலிமை இல்லாத போது, செயற்கை முறையில் உயிரை நீட்டிக்கும்

செயலில் ஈடுபடக்கூடாது என்று *சிவனோடு வாழ்தல்* புத்தகம் அறிவுறுத்துகிறது.

உயர்ந்த பண்புகள், தாழ்ந்த பண்புகள் (higher nature, lower nature): ஒரு புறத்தில் மனிதனின் புனிதமான, ஆத்மார்த்தமான பண்புகள் மற்றும் மறு புறத்தில் அந்த மனிதனின் கீழ்நிலை, உள்ளுணர்வு பண்புகளை குறிப்பிடும் வெளிப்பாடுகள். மேலும் தகவலுக்கு: *கோசம், மனம் (ஐந்து நிலைகள்), ஆன்மா.*

இமய மலையில் சிவபெருமானின் புண்ணிய தலங்கள் (Himalayan abodes of Śiva): கைலாய மலை (திபெத்) மற்றும் அதன் அடிவாரத்தில் இருக்கும் மானசரோவர் ஏரி; (கார்வால், உத்தர்பிரதேசத்தில் இருக்கும்) கேதார்நாத் மற்றும் அமர்நாத், காஷ்மீரில் இருக்கும் பனிக்கட்டி லிங்கத்தின் குகை ஆகியவை புகழ்பெற்ற புண்ணிய தலங்களில் அடங்கும்.

இமாலயன் அகாடமி (Himalayan Academy): இது 1957 ஆவது வருடத்தில் சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியால் நிறுவப்பட்ட சைவ சித்தாந்த தேவாலயத்தில் இருக்கும் ஒரு கல்வி மற்றும் வெளியீட்டு நிறுவனம் ஆகும். உலகெங்கும் இருக்கும் இந்துக்களுக்கு செய்யும் பொதுத்தொண்டாக, சனாதன தர்மத்தின் போதனைகளை இந்துயிசம் டுடே மாதாந்திர பத்திரிக்கை, இன்னர்சர்ச் டிராவல்-ஸ்டடி புரோகிராம் மூலம் பயிலும் திட்டங்கள், *தி மாஸ்டர் கோர்ஸ் பாடதிட்டத்தில்* (*Master Course*) சிவபெருமானுடன் ஒரு திருநடனம், சிவனோடு வாழ்தல் மற்றும் சிவபெருமானுடன் ஐக்கியமாதல் என்கிற புத்தகங்களின் முத்தொகுப்பு மற்றும் ஏனைய பதிப்புக்கள் மற்றும் இணைய வளங்கள் மூலம் பகிர்வதே இந்த அகாடமியின் நோக்கமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *இந்துயிசம் டுடே, சுப்பிரமுனியசுவாமி.*

Himālayas: हिमालय "Abode of snow." இமயம். "பனி சூழ்ந்த ஆலயம்." இந்த மலைத்தொடர் இந்திய-திபெத்திய எல்லையில் மட்டுமல்லாமல் பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பூட்டானிலும் பரவி இருக்கிறது.

hiṁsā: हिंसा "Injury;" "harm;" "hurt." இம்சை. "தீங்கு;" "கெடுதி;" "துன்புறுத்தல்." மனம் அல்லது வாக்கு அல்லது உடல் ரீதியான தீங்கு அல்லது பகையுணர்வு. மேலும் தகவலுக்கு: *அகிம்சை.*

Hindu: हिन्दू. இந்து தர்மத்தை பின்பற்றுபவர் அல்லது இந்து தர்மம் தொடர்பான ஒன்றைக் குறிக்கும் சொல். பொதுவாக ஒரு இந்து குடும்பத்தில் பிறந்ததால் இந்து சமயக்கொள்கைகளை பின்பற்றுபவர் அல்லது ஒருவர் தன்னை வெளிப்படையாக இந்து என்று கூறிக்கொள்பவர் இந்து சமயத்தை சார்ந்தவர் என்று கருதப்படுகிறார். இந்துவாக பிறந்தவர்களுக்கு இந்த உலகில் பிறவி எடுத்த சில நாட்களிலும், தங்களது விசுவாசத்தை நிரூபித்து இந்து சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தன்னை இந்து என்று சுயமாக அறிவித்தவர்களுக்கும், *நாமகரண சம்ஸ்கார* என்று அழைக்கப்படும் ஒரு பெயர் சூட்டு விழா மற்றும் கோயிலில் ஒரு விழா மூலமாகவும், இந்துசமயத்தில் சேர்க்கப்பட்டதற்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. முந்தைய சமய ஈடுபாடுகள் மற்றும் சட்டபூர்வமான பெயர் மாற்றத்தின் மூலம் மதமாற்றம் நிறைவு பெறுகிறது. பாரம்பரியங்கள் வெகுவாக மாறினாலும்,

எல்லா இந்துக்களும் முக்கிய நூலாக வேதங்களை சார்ந்து இருந்து, பொதுவாக பின்வரும் ஒன்பது கோட்பாடுகளை ஏற்றுக்கொள்கிறார்கள்: 1) உள்ளார்ந்து மற்றும் யாவும் கடந்த நிலையில், ஸ்ருஷ்டிகர்த்தாவாக மற்றும் வெளிப்படாத பரம்பொருளாக, ஒரு பரமாத்துமா எங்கும் வியாபித்து இருக்கிறார். 2) பிரபஞ்சம் ஆக்கல், காத்தல் மற்றும் அழித்தலின் எண்ணற்ற சுழற்சிகளுக்கு ஆளாகிறது. 3) எல்லா ஆன்மாக்களும் இறைவனை நோக்கி செல்லும் பாதையில் பக்குவம் அடைந்து, இறுதியாக ஆன்மீக அறிவு மற்றும் மறுபிறவியில் இருந்து விடுதலையை குறிக்கும் *மோக்ஷத்தை* பெறுகிறார்கள். எந்த ஒரு ஆன்மாவும் இந்த விதியில் இருந்து தப்பமுடியாது. 4) *கர்மவினை* என்பது விதியின் காரண காரியம் ஆகும் மற்றும் இதன் மூலம் ஒருவர் தனது சிந்தனை, சொல் மற்றும் செயல்களினால் தனது சொந்த விதியை உருவாக்கிக்கொள்கிறார். 5) எல்லா *கர்மவினைகளும்* கரையும் வரை, ஆன்மா மறுபிறவியை எடுத்துக்கொண்டு, பல பிறவிகளின் மூலம் பக்குவமடைந்து வருகிறது. 6) இந்த தெய்வங்கள் மற்றும் மகாதேவர்களுடன் கண்ணுக்கு புலப்படாத உலகங்கள், மற்றும் கோயில் வழிபாடு, சடங்குகள், மற்றும் தனிப்பட்ட பக்தியில் இருக்கும் தெய்வீக சக்திகள், ஒரு உறவை உருவாக்குகின்றன. 7) தனிப்பட்ட ஒழுக்கம், நன்னடத்தை, அகம் மற்றும் புற சுத்திகரிப்பு, தன்உள ஆய்வு மற்றும் தியானத்தை போன்று, யாவும் கடந்து இருக்கும் முடிவான பரம்பொருளை அறிவதற்கு, ஆன்மீக விழிப்புணர்வு பெற்ற ஆசான் அல்லது *சத்குரு* கண்டிப்பாக தேவைப்படுகிறார். 8) எல்லா உயிர்கள் மீதும் அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டும் என்பதால், ஒருவர் *அகிம்சையை* பின்பற்ற வேண்டும். 9) எந்த ஒரு சமயமும் முக்தி பெறுவதற்கு ஒரே ஒரு முக்கிய வழியை மட்டும் போதிப்பது இல்லை. அதற்கு மாறாக, உண்மையான சமய பாதைகள் அனைத்தும், கடவுளின் புனிதமான அன்பு மற்றும் ஒளியின் முகப்புகளாக விளங்கி, சகிப்புத்தன்மை மற்றும் புரிந்துணர்வை கோருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *இந்துசமயம்*.

இந்து பாரம்பரிய நிதி நிறுவல் (Hindu Heritage Endowment): ஒரு சமூக சேவையாக சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி, பொது மக்கள் உதவியுடன் 1993 ஆம் ஆண்டு ஒரு தொண்டு நிறுவனத்தை அமைத்தார். சனாதன தர்மத்தில் இருக்கும் அனைத்து பரம்பரைகளையும் சார்ந்த தனிநபர்கள், மதத்தலைவர் மற்றும் மதசார்புள்ள அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு என்று பாதுகாப்பாகவும் திறமையான முறையிலும் நிர்வகிக்கப்படும் நிதி நிறுவலை அமைத்து பராமரிப்பதே, அதன் பரோபகார நோக்கம் ஆகும். www.HHEonline.org

இந்து ஒருமைப்படு (Hindu solidarity): இந்து மதத்தில் இருக்கும் வேற்றுமையில் ஒற்றுமை. இன்று நிலவி வரும் இந்த ஒரு முக்கிய கருத்தின் அடிப்படையில், இந்து மதத்தில் இருக்கும் உட்பிரிவுகள் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்கி ஒன்றாக இணைந்து வேலை செய்வதுடன் தங்கள் வேறுபாடுகள் அல்லது விஷேசமான பண்புகள் அழியாமல் அல்லது வலிமை குறையாமல் இருப்பதில் கவனமாக இருக்கின்றன. இந்து மதத்தில் இருக்கும் ஒவ்வொரு உட்பிரிவிலும் வலுவாக இருந்து, அதன் பரம்பரைகளும் வலுவாக இருந்தது என்றால், இந்து மதம் வலுவாக

இருக்கும் என்பதே இதன் அடிப்படை நம்பிக்கை. மேலும் தகவலுக்கு: *இந்து மதம்*.

Hinduism (Hindu Dharma): हिन्दूधर्म. இந்துசமயம் (இந்துதர்மம்): இது இந்தியாவில் தோன்றிய சமய மற்றும் கலாச்சார அமைப்பு ஆகும், மற்றும் இது தற்போது சுமார் ஒரு பில்லியன் மக்களால் பின்பற்றப்படுகிறது, அதில் பெரும்பாலானோர் இந்தியாவில் இருந்தாலும், மற்ற நாடுகளிலும் இந்திய வம்சாவளியினர் பெருமளவில் இருக்கிறார்கள். இது சனாதன தர்மம் (காலந்தால் அழியாத சமயம்) என்றும் வைதீக தர்மம் (வேதங்களின் சமயம்) என்றும் அழைக்கப்படுகிறது. இந்துசமயம் உலகில் மிகவும் பழமையான சமயமாக இருக்கிறது, மற்றும் இது பன்மைவாத மத நம்பிக்கையில் இருந்து தொடங்கி முழுமையான ஒருமைவாதம் வரை தத்துவங்களின் ஒரு விரிவான தொடராக விளங்குகிறது. அது எண்ணற்ற நம்பிக்கைகளை கொண்ட ஒரு குடும்பமாக இருக்கிறது மற்றும் அதன் நான்கு முக்கிய பிரிவுகளாக சைவ சமயம், வைஷ்ணவ சமயம், சாக்த சமயம் மற்றும் சுமார்த்த சமயம் விளங்குகின்றன. இந்த நான்கும் முற்றிலும் மாறுபட்ட நம்பிக்கைகளை கொண்டு இருப்பதால், ஒவ்வொன்றும் ஒரு முழுமையான மற்றும் தனிப்பட்ட சமயமாக விளங்குகிறது. எனினும் அவை *கர்மவினை*, *தர்மம்*, மறுபிறவி, எங்கும் வியாபித்து இருக்கும் தெய்வீகத் தன்மை, கோயில் வழிபாடு, சடங்குகள், பலவிதமான தெய்வங்கள், *குரு-சிஷ்ய* பரம்பரை மற்றும் புனிதமான நூலாக *வேதங்களை* சார்ந்து இருந்து கலாச்சாரம் மற்றும் நம்பிக்கையின் மிகப்பெரிய பாரம்பரியத்தை பகிர்கின்றன. இந்துதர்மம் பிறந்த செழிப்பான மண்ணில் இருந்து சமண மதம், பௌத்த மதம் மற்றும் சீக்கிய மதம் என்று வேறுபல பாரம்பரியங்கள் தோன்றின. அவை வேதங்களை முழுமையாக நிராகரித்து முற்றிலும் மாறுபட்ட மதங்களாக தோன்றி, இந்துதர்மத்திடம் தன்னை துண்டித்துக் கொண்டாலும், அவை தங்களுக்கு மூலமாக இருந்த நம்பிக்கையில் இருந்து பல தத்துவ ஞான நுண்ணறிவுகள் மற்றும் கலாச்சார கோட்பாடுகளை பகிர்ந்து கொண்டுள்ளன. மேலும் தகவலுக்கு: *இந்து*.

இந்துயிசம் டுடே (HINDUISM TODAY): இந்த இந்துகுடும்ப பத்திரிக்கையை *சத்குரு* சிவாய சுப்பிரமுனியசுவாமி 1979 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார். அது சனாதன தர்மத்தை உறுதிப்படுத்தவும், சுமார் பில்லியன் மக்கள் தொகையுடன் மறுமலர்ச்சி பெற்று வரும் ஒரு வலுவான சமயத்தின் நவீன வரலாற்றை பதிவு செய்யவும், இமாலயன் அகாடமியால் மாதம் இருமுறை வெளிடப்பட்டு வருகிறது. இது உலகெங்கும் உள்ள 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருக்கும் 150,000 வாசகர்களை சென்றடைகிறது. மேலும் தகவலுக்கு: *இமாலயன் அகாடமி*.

லத்தீன அமெரிக்க நாடுகளை சேர்ந்தவர் அல்லது அவர்களின் கலாச்சாரத்துடன் தொடர்புடைய (Hispanic).

விபூதி (holy ash). மேலும் தகவலுக்கு: *விபூதி*.

புனிதமான பாதம் (holy feet): இறைவன், மகாதேவர்களில் ஒருவர், *சத்குரு* அல்லது ஒரு புண்ணிய ஆத்மாவின் பாதங்களை பூசிக்கத்தக்க பாதுகைகள் பெரும்பாலும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இவை *ஸ்ரீ பாதுகா* என்று

சமஸ்கிருதத்திலும், தமிழில் திருவடி என்றும் அழைக்கப்படுகின்றன. தெய்வீகத் தன்மை மற்றும் தூல உடலுக்கு இடையேயான தொடர்பு மையத்தை தெய்வீக பாதங்கள் பிரதிநிதித்துவம் செய்வதால் அவை விசேஷமாக கருதப்படுகின்றன, அதனால் அவை தெய்வீக அருளின் மூலமாக பூசிக்கப்படுகின்றன. *குருவின் ஜெயந்தி* (பிறந்தநாள்), *குரு பூர்ணிமா* மற்றும் ஏனைய விசேஷங்களின் போது, பாதுகைகள் அல்லது *குருவின்* பாதங்கள் வைத்து வழிபாடு நடத்தப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *சத்குரு.*

திருக்குறள் (Holy Kural). *மேலும் தகவலுக்கு: திருக்குறள்.*

புனிதமான ஆணைகள் (holy orders): சமயப்பணியில் முக்கிய பொறுப்பை வழங்கும் ஒரு தெய்வீக பதவி அல்லது உடன்படிக்கை. ஒரு மடத்தில் இருக்கும் குழு அல்லது சமூகத்தின் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சங்கல்பங்கள், உதாரணத்திற்கு *சந்நியாச தீட்சையின்* போது ஒரு *சந்நியாசி* எடுக்கும் *சங்கல்பங்கள்* (துறவறம் தொடர்பான புனித ஆணைகள்), *சந்நியாசம்* தொடர்பான பழங்காலத்து புனித ஆணையுடன் ஒரு உடன்படிக்கையை உருவாக்குகிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாச தீட்சை.*

homa: होम "Fire-offering." ஹோமம். இது வழக்கமாக செங்கற்களால் உருவாக்கப்பட்ட *ஹோம குண்டத்தில்*, அக்னியை கருவியாக கொண்டு தெய்வத்திற்கு நைவேத்தியங்கள் வழங்கும் ஒரு புனிதமான சடங்காக விளங்குகிறது. *ஹோமத்தில்* இருக்கும் சடங்குகள் பற்றி *வேதங்கள், ஆகமங்கள்* மற்றும் *தர்ம* மற்றும் *க்ரிஹ்ய சாஸ்திரங்களில்* அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும் தகவலுக்கு: *அக்னி.*

மனித இனம் (Homo sapiens): மனிதர்கள், மனிதன்; மனித இனத்தில் இருக்கும் அனைத்து உயிரினங்கள்.

விருந்தோம்பல் (hosting guests): இந்து வீடுகளில் விருந்தோம்பலுக்கு விசேஷமான கவனம் செலுத்தப்படுகிறது. இது ஒரு விருந்தாளி இறைவன் வடிவமாக இருக்கிறான் என்கிற உபநிடத மந்திரத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது. அதனால் ஒரு விருந்தாளிக்கு வரவேற்பும் விருந்தோம்பலும் இறைவனுக்கு சமமாக வழங்கப்படுகிறது. ¶ஒரு விருந்தாளி நெருக்கமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், மனதில் அன்போடு தாராளமாக உபசரிக்கப்படுகின்றனர். தென்னிந்திய/இலங்கை இந்து பாரம்பரியத்தில் முக்கிய விருந்தாளிகளை உபசரிக்கும் விஷேச நிகழ்வுகளின் போது ஒரு நெறிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. வீடு தொம்பைகள் மூலம் அலங்கரிக்கப்பட்டு, வீட்டின் நுழைவாயிலில் மாவிலை தோரணம் கட்டப்படுகிறது. வீட்டின் முகப்பில் முன் கதவிற்கு வெளியே ஒரு குத்துவிளக்கு மற்றும் விநாயகரை பிரதிநிதித்துவம் செய்யும் விதமாக ஒரு தண்ணீர் கலசத்தில் மஞ்சள் குங்குமம் வைத்து அலங்கரித்த தேங்காய் மற்றும் ஐந்து மாவிலைகளுடன் *கும்பம்* வைக்கப்படுகிறது. வீட்டு வாசல் அரிசி மாவு *கோலங்கள்* மூலம் அலங்கரிக்கப்படுகிறது. ¶வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு விபூதி, மஞ்சள், குங்குமம் மற்றும் சந்தனத்துடன் வரவேற்று, அவர்கள் மீது பன்னீர் தூவி இனிப்புக்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் வீட்டிற்குள் முதலாவதாக அழைத்து செல்லப்படும் பூஜை

அறையில், வீட்டில் இருக்கும் பெரியவர் விநாயகர், முருகன் மற்றும் சிவபெருமானின் படங்களுக்கு ஆரத்தி எடுக்கிறார். அதன் பிறகு எல்லோரும் ஒரு பெரிய அறைக்கு சென்று, முதலில் ஆண்கள் பின்பு பெண்கள் என்று ஒரு வட்ட வடிவில் அமர்ந்து கொள்கின்றனர். இதில் சிரியவர்கள் பெரியவர்களின் வலது புறத்தில் அமர்கின்றனர். இவ்வாறு அமரும் முறைக்கு *சக்கரவாள* என்று பெயர். ஆண்களில் மூத்தவராக இருப்பவர் அமைதியாக சுலோகம் சொல்ல ஆரம்பிக்கிறார், மற்றும் பிறகு எல்லோரும் ஒன்றாக *பஜனை* பாடல்களை பாடுகிறார்கள். அதைத் தொடர்ந்து மற்ற நடவடிக்கைகள் நடைப்பெறுகின்றன. ¶விருந்தாளிகளுக்கு உணவு பரிமாற, ஆண்களுக்கு ஒரு வரிசையும் பெண்களுக்கு ஒரு வரிசையும் என்று இரண்டு வரிசையாக பாய்கள் விரிக்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் முன்பாக ஒரு வாழை இலை வைக்கப்படுகிறது, சில சமயங்களில் அதனுடன் தட்டும் வைக்கப்படுகிறது. அந்த வீட்டைச் சேர்ந்த இளைய பெண்கள் எல்லோருக்கும் உணவு பரிமாறுகிறார்கள். இலையின் வலது புறத்தின் மேற்பகுதியில் முதலில் வைக்கப்பட்டு, பிறகு காய்கறிகள் மற்றும் சாதம் மற்றும் சாம்பார் பரிமாறப்படுகிறது. எல்லோரும் திருப்தி அடையும் வரை, இரண்டாவது முறையும் வழங்கப்படுகிறது. முதலில் சாதம் மற்றும் சாம்பார் பரிமாறிய பிறகு, சாதம் மற்றும் ரசம் மற்றும் பிறகு சாதம் மற்றும் தயிர் அல்லது மோருடன் உப்பும் பரிமாறப்படுகிறது. தேவையென்றால் ஊறுகாயும் பரிமாறப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் குவளைகளில் தண்ணீர் மற்றும் ரசம் வைக்கப்படுகிறது (ஆனால் இன்று பெரும்பாலும் தண்ணீர் மட்டுமே வழங்கப்படுகிறது). விருந்தின் போது *கேசரி, பாயாசம்* அல்லது மற்ற இனிப்புக்கள் மற்றும் தேநீர் வழங்கப்படுகிறது. விருந்து நிறைவடைந்த பிறகு, மிகவும் முக்கிய விருந்தாளிகள் அமர்ந்த இடத்திலேயே கையை கழுவிக்கொள்ள ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வழங்கப்படுகிறது. சமயலறையில் கை கழுவ அனுமதிக்கப்படுவது இல்லை. ஆனால் குளியல் அறையில் கை கழுவினால் பரவாயில்லை. ஆசியாவில் விருந்து நடைபெறும் இடத்தில் கை கழுவுவதற்கு என்று ஒரு பிரத்யேகமாக இடம் ஒதுக்கப்பட்டு இருக்கும். கிழக்கு நோக்கி நிற்கும் உபசரிக்கும் பெண் சுமங்கலி பெண்கள் ஒவ்வொருவருக்கும் மஞ்சள் குங்குமம் தருகிறாள் மற்றும் விருந்தினர் அனைவரும் கிளம்பும் போது ஏதாவது ஒரு பரிசு வழங்கப்படுகிறது. அது பெரும்பாலும் மிகவும் எளிமையாக வெற்றிலை, பழம் மற்றும் சில இனிப்புக்களாக இருக்கும். நண்பர்கள், சொந்தங்கள் மற்றும் சாதாரண விருந்தாளிக்கு எளிமையான முறையில் உபசரிக்கப்படுகிறார்கள்.

hrī: ह्री “Remorse; modesty.” *ஹ்ரீ*: "கழிவிரக்கம்; அடக்கம்." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்*.

அடக்கம் (humility): நடத்தை, அணுகுமுறை அல்லது உணர்வில் அடக்கம்; ஆணவம் அல்லது கர்வத்துடன் இல்லாமல் இருப்பது.

huṇḍi: हुण्डि “Offering box,” from hun, “to sacrifice.” உண்டியல். இந்து கோயில்களில் பக்தர்கள் தங்கள் காணிக்கையை செலுத்துவதற்காக வைக்கப்பட்டு இருக்கும் ஒரு கனமான பெட்டி.

இறைவன், மகாதேவர்கள் அல்லது குருவை போற்றிப்பாடும் துதிப்பாடல்கள் (hymns).

பாசாங்குத்தனம் (hypocrisy): ஒருவர் தன்னிடம் இல்லாத நம்பிக்கைகள், உணர்வுகள் அல்லது நற்பண்புகளை இருப்பதாக வெளிப்படுத்துதல்; வெளிவேஷம்.



icçhā śakti: इच्छाशक्ति “Desire; will.”இச்சைசக்தி. "ஆசை, விருப்பம்."

ஐஸ் (ice): மேலும் தகவலுக்கு: *மெதாம்பிடாமின்.*

iḍā nāḍī: इडानाडी “Soothing channel.” ஈடா நாடி: “அமைதியான பாதை.”

பெண்மையின் பண்புடன், முதுகுத்தண்டு வழியாக பாய்ந்து செல்லும் சூட்சுமமான நாடி ஓட்டம். மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, காந்த சக்தி, பிங்கலா சக்தி.*

கொள்கை (ideology): குறுகிய மனப்பான்மை அல்லது அதைப்போன்ற அமைப்பை பின்பற்றுவதை குறிப்பிடும், ஒரு சிந்தனை அமைப்பின் அடிப்படையாக விளங்கும் கோட்பாடுகள் அல்லது நம்பிக்கைகளின் தொகுப்பு.

உள்ளார்ந்த (immanent): உள்ளே வாசம் செய்கின்ற; இயற்கையாக உள்ளிருந்து செயல்படுகின்ற. கடவுளை பற்றி குறிப்பிடும் போது, *உள்ளார்ந்த* என்பது தனியாக அல்லது தூரத்தில் இல்லாமல், எல்லா பொருட்கள் மற்றும் பிரபஞ்சம் முழுவதிலும் பரவி இருப்பதை குறிப்பிடுகிறது. வரவிருப்பதை குறிப்பிடும் *imminent*; வெளிப்படுவதை குறிப்பிடும் *emanate;* உயர்ந்த தரத்தை குறிப்பிடும் *eminent* ஆகிய சொற்களுடன் குழப்பிக்கொள்ள கூடாது.

மிகவும் பழமையான (immemorial) (from time immemorial): தொன்றுதொட்டு இருக்கும் மிகவும் பழமையான ஒன்று.

மிகவும் பழமையான (immemorial) (from time immemorial): நினைவுக்கு எட்டாத மிகவும் பழமையான ஒன்று.

உந்தம் (impetus): செயல்பாட்டை ஊக்குவிக்கும் தூண்டுதல். இயக்கும் சக்தி; நோக்கம், தூண்டுவிசை.

உணர்ச்சி வேகம் (impulse): திட்டமிடாத செயல் அல்லது உணர்வை தூண்டிவிடும் ஒரு திடீர் ஆசை அல்லது உத்வேகம்.

அசுத்தம் (impurity): ஒழுக்கமற்ற, மாசு படிந்த நிலை.

உயிரற்ற (inanimate): மேலும் தகவலுக்கு: *உயிருள்ள-உயிரற்ற.*

அபசகுனமான (inauspicious): அனுகூலமற்ற. சில செயல்கள் அல்லது பணிகளை மேற்கொள்ள பொருந்தாத நேரம்.

மந்திரங்களின் உச்சரிப்பு (incantation): *ஜபம்* அல்லது *மந்திரபிரயோகம்*. மந்திரவித்தை அல்லது சூட்சும ஞான காரணங்களுக்காக சொல்லும் பிரார்த்தனைகள், பாடல்கள், சூத்திரங்கள் மற்றும் *மந்திரங்கள்*. மேலும் தகவலுக்கு: *மந்திரம்*.

மனித பிறவி எடுத்தல் (incarnation): ஆன்மா ஒரு மனித உடலைப் பெறுவதை குறிப்பிடுகிறது. –**தெய்வீக உருவத்தை பெறுதல் (divine incarnation):** *அவதார* கோட்பாட்டை குறிப்பிடுகிறது. *தர்மத்தை* மீண்டும் நிலைநாட்ட பரமாத்துமா (அல்லது மற்ற மகாதேவர்கள்) மனித பிறவி எடுப்பதை குறிப்பிடுகிறது. இந்த கோட்பாடு பல இந்துபிரிவுகளுக்கு குறிப்பாக வைணவ சமயத்திற்கு முக்கியமாக இருந்தாலும், பெரும்பாலான சைவர்கள் இதற்கு முக்கியத்துவம் தருவது இல்லை. மேலும் தகவலுக்கு: *அவதாரம், வைணவம்*.

ஏழை (indigent): நலிவுற்றோர்; எளிய; வறுமையான; ஆதரவற்ற.

வெல்ல முடியாத (indomitable): எளிதில் அதைரியப்படுத்த முடியாத, தோற்கடிக்க முடியாத அல்லது அடக்க முடியாத. அடிமைப்படுத்த முடியாத.

Indra: इन्द्र "Ruler." இந்திரன். மழை இடிமின்னலுக்கு தலைவன். தேவலோக அரசன். அந்தர்லோகத்தில் உயர்ந்த சக்தியாக விளங்குகிறார். வேத மந்திரங்களில் நூற்றுக்கணக்கான முறை ஆவாகனம் செய்யப்படுகிறார்.

அகந்தை (I-ness): இது மனதில் "நான்," என்கிற எண்ணத்தை, அல்லது தன்முனைப்பை உருவாக்கிக்கொள்வதை குறிக்கிறது, மற்றும் இந்த நிலையை கடந்து செல்ல வேண்டும் என்று இந்து தர்மம் கருதுகிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவ மலம், மனம்* (தனிப்பட்ட).

நாத்திகர் (infidel): சமய நம்பிக்கை இல்லாதவர், அல்லது தனது சொந்த சமயத்தை சாராது இன்னொன்றை சார்ந்து இருப்பவர்.

மெதுவாக உட்புகுதல் (infiltrate): ஒரு குழுவை எதிர்க்க மெதுவாக ஊடுருவுதல் அல்லது உள்ளிருந்து கட்டுப்பாட்டை பெறுதல்.

மிகவும் சிறிய (infinitesimal): நுண்ணிய; அற்பமான.

தடுத்தல் (inhibit): தடுத்து நிறுத்துதல், அடக்கி வைத்தல், தடை செய்தல் அல்லது தவிர்த்தல். அடக்குதல்.

தீட்சை வழங்குதல் (initiation (to initiate)): உள்ளே நுழைதல்; ஒரு உறுப்பினராக பிரவேசம் செய்தல். இந்துதர்மத்தில், ஒரு தகுதி வாய்ந்த குருவிடம் இருந்து தீட்சை பெறுவது ஆன்மீக வளர்ச்சியில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *தீட்சை, சக்திபாத, சந்நியாச தீட்சை*.

உள்ளார்ந்த (innate): முயன்று பெறாமல் இயல்பாக அமைந்த. ஒரு சக்தி ஒரு வஸ்துவாக இருப்பதன் இயல்பு அல்லது அமைப்பை சார்ந்த.

உட்புற ஒளி (inner light): *வ்ரித்திகள்* என்கிற மனநிலை மாற்றங்கள் போதுமான அளவு அமைதி பெற்ற பிறகு, தலையின் உட்புறமாக அல்லது உடல் முழுவதும் தோன்றும் ஒரு நிலவை போன்ற வெளிச்சம். அந்த உட்புற ஒளியை பார்த்துக்கொண்டு சந்தோஷமாக ஒடுங்குவது, இந்த பாதையில் ஒரு மைல்கல்லாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *வ்ரித்தி*.

உட்புற உலகங்கள் (inner planes): அந்தர்லோகங்கள் அல்லது இருப்பின் பகுதிகள்.

இன்னர்வர்சிடி (innerversity): அகத்தில் இருந்து கற்றல். இந்த சொல் சிவாய சுப்பிரமுனியசுவாமியால் உருவாக்கப்பட்டது. இது மனதின் விரிவான மெய்ஞ்ஞான நிலையில் இருந்து அறிவை பரப்புவதற்கு, *யோகத்தின்* மூலம் அந்த பகுதிகளுக்கு கவனத்தை ஒருமுகப்படுத்தி தியானம் செய்து அகநோக்கியாக இருப்பதை குறிப்பிடுகிறது.

சின்னங்கள் (insignia): அடையாள அட்டைகள், பணியாளர் குழு அல்லது தனிக்குறிகளை போன்ற அறிகுறிகள் அல்லது அடையாள சின்னங்கள், அடையாளங்கள், படிநிலை அல்லது அலுவலகம்.

உள்ளுணர்வு சார்ந்த (instinctive): “உள்ளார்ந்த" அல்லது “இயல்பான.” விலங்குகள் உலகம் மற்றும் மனிதர்களின் தூல மற்றும் கீழ்நிலை சூட்சும உலகங்களை ஆணையிடும் இயக்கங்கள் மற்றும் உத்வேகங்கள், உதாரணத்திற்கு சுய-பாதுகாப்பு, இனப்பெருக்கம், பசி மற்றும் தாகம், மற்றும் பேராசை, வெறுப்பு, கோபம், அச்சம், கழிகாமம் மற்றும் பொறாமை போன்ற உணர்ச்சிகள். மேலும் தகவலுக்கு: *மனம், இயமம்-நியமம்*.

உள்ளுணர்வு மனம் (instinctive mind): *மனஸ் சித்த*. புலனுணர்வு, உடலின் இயக்கம், மற்றும் சாதாரண சிந்தனை மற்றும் உணர்ச்சியை கட்டுப்படுத்தும் கீழ்நிலை மனம். *மனஸ் சித்த மனோமய கோசத்தை* கொண்டு அமைந்துள்ளது. மேலும் தகவலுக்கு: *கோசம், இயமம்-நியமம், மனம்*.

உள்ளுணர்வு-அறிவுணர்வு மனம் (instinctive-intellectual mind): நடவடிக்கைகள் உள்ளுணர்வின் உணர்வுப்பூர்வமான ஆசைகள் மற்றும் அச்சங்கள் அல்லது அறிவுணர்வு கோட்பாடுகள் மற்றும் பகுத்தறிவை சார்ந்து இருக்கும் போது, மனம் சாதாரண உணர்வில் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சூட்சும உடல், உள்ளுணர்வு மனம், கோசம், காந்த சக்தி, ஆன்மா, நுணுக்கமான உடல், வாசனா*.

அறிவாற்றல் (intellect): பகுத்தறியும் அல்லது புரிந்துக்கொள்ளும் திறன்; சிந்தனையின் சக்தி; புத்திக்கூர்மை. மேலும் தகவலுக்கு: *அறிவுணர்வு மனம், மனம்*.

அறிவுணர்வு மனம் (intellectual mind): *புத்தி சித்த*. பகுத்தறிவது மற்றும் தர்க்க ரீதியாக சிந்திக்கும் புலன். அது *மனஸ் சித்த* என்று அழைக்கப்படும் சாதாரண, உணர்ச்சிவசப்பட்ட சிந்தனை செயல்முறைகளாக இல்லாமல், வேறுபடுத்தி பார்க்கும் சிந்தனையின் மூலமாக விளங்குகிறது. *புத்தி சித்த மனோமய கோசத்தை* கொண்டு அமைந்துள்ளது. மேலும் தகவலுக்கு: *மனம்*.

உட்புறமாக்குதல் (internalize): ஒரு விஷயத்திற்கு அகத்திற்குள் அனுமதி அளித்தல்.

அக வழிபாடு (internalized worship): *யோகம்.* வெளிப்புற சடங்குடன் அல்லாமல், தியானம் அல்லது தாரணை வழியாக இறைவன் அல்லது மகாதேவர்களை வழிபடுதல் அல்லது தொடர்பு கொள்ளுதல். இது ஒரு *யோகியின்* பாதையாக விளங்குகிறது, இதற்கு முன்னோடிகளாக *சரியை* மற்றும் *கிரியை பாதைகள்* விளங்குகின்றன. மேலும் தகவலுக்கு: *தியானம், யோகம்.*

நெருங்கிய உறவு (intimacy): நெருக்கமான பழக்கம்; உடலுறவில் ஈடுபடுதல்.

ஒரு குறிப்பிட்ட தொனியில் அல்லது குரலில் பாடுதல் அல்லது உச்சரித்தல் (intone).

உள்ளார்ந்த (intrinsic): உட்புறமான; அத்தியாவசியமான; உடன் பிறந்த. ஒரு சக்தி அல்லது வஸ்துவின் உண்மையான இயல்பை சார்ந்த.

இயலுணர்வு (intuit): பகுத்தறியும் செயல்முறைகளை மேற்கொள்ளாமல் நேரடியாக அறிதல் அல்லது உணர்தல்.

இயலுணர்வுடன் அறிதல் (intuition (to intuit)): பகுத்தறியும் செயல்முறையை தவிர்த்திடும், நேரடி புரிதல் அல்லது அறிவெழுச்சி. காரண ஆய்வை காட்டிலும் இயலுணர்வு மிகவும் மேம்பட்டதாக இருந்தாலும், அது பகுத்தறிவிற்கு முரணாக இருப்பதில்லை. மேலும் தகவலுக்கு: அறிவெழுச்சி, மனம் (ஐந்து நிலைகள்).

Iraivan: இறைவன் “Worshipful one; divine one.” கடவுளை அழைக்கப் பயன்படும் மிகவும் பழமையான தமிழ் சொற்களில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *இறைவன் கோயில்.*

இறைவன் கோயில் (Iraivan Temple): சோழர்கால கட்டமைப்பின் பாணியில் இந்தியாவின் பெங்களூரு நகரில் கையால் செதுக்கப்பட்ட இறைவன் கோயில், ஹவாய் தீவுகள் குழுவை சேர்ந்த கவாய் தீவின் கார்டன் ஐலான்ட்டில் நிறுவப்பட்டது. இதன் கருவறையில் எதிர்காலத்தில், பரமேசுவரான சிவலிங்கம் (பரமேசுவரன்-பராசக்தி-பரசிவ) பிரதிஷ்டை செய்யப்படும். அந்த எர்த்கீப்பர் பளிங்குப் படிகம் கூர் முனையுடன் 700 பவுண்ட் எடையை கொண்டு இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சன் மார்க சரணாலயம்.*

irul: இருள் “Darkness.” இது *சகல அவத்தையின்* மூன்று நிலைகளில் முதலாவதாக விலங்குகிறது. இந்த நிலையில் உலக அறிவு மற்றும் அனுபவத்தை குறிக்கும் *பாச ஞானத்தை* பெறவேண்டும் என்பது ஆன்மாவின் தூண்டுதலாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பாச ஞானம், சகல அவத்தை.*

iruvinaioppu: இருவினையொப்பு “Balance.” ஆன்மா தனது கவனத்தை நல்ல மற்றும் புனிதமான விஷயங்கள் மீது திருப்பி, தனக்குள் மையமாக இருந்து, வாழ்க்கையில் இருக்கும் ஏற்ற இறக்கங்களால் துவண்டு விடாது இருக்கும்

சகல அவத்தையில் இரண்டாவது நிலையான, *பசு-ஞான* என்கிற *மருள்* நிலையில், ஒரு ஆன்மாவின் வாழ்க்கையில் சமநிலை தோன்றுகிறது. மேலும் தகவலுக்கு: *மருள், பசு-ஞான, சகல அவத்தை.*

Iṣṭa Devatā: इष्टदेवता "Cherished" or "chosen Deity." இஷ்ட (விருப்பமான) தெய்வம். ஒரு பக்தனின் விசேஷ பக்திக்கு பாத்திரமாகும் தெய்வம். இந்து தர்மத்தின் எல்லா பிரிவுகளிலும் *இஷ்ட தெய்வம்* ஒரு பொதுவான கோட்பாடாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சக்தி, சிவபெருமான்.*

இசுலாம் (Islam): இந்த மதம் கி.பி. 625 வருடத்தில், முகம்மது நபிகளால் தோற்றுவிக்கப்பட்டது. இசுலாம் என்பது இந்த மதத்தின் கடவுளான அல்லாஹ் முன்பாக அர்ப்பணித்துக் கொள்வதை குறிப்பிடுகிறது. இதை பின்பற்றுபவர்கள், இசுலாமியர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், மற்றும் இவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை, தினமும் மெக்கா இருக்கும் திசையில் ஐந்து முறை தொழுதல், நன்கொடை வழங்குதல், ரமலான் மாதத்தில் நோன்பு இருத்தல் மற்றும் யாத்திரை மேற்கொள்ளுதல் என்று தங்களது புனித நூலான *குரானில்* குறிப்பிட்டுள்ள "ஐந்து தூண்களை" பின்பற்றுகிறார்கள். மிகவும் வேகமாக வளர்ந்து வரும் மதங்களில் ஒன்றாக விளங்கும் இசுலாம், ஒரு பில்லியனுக்கும் அதிகமான இசுலாமியர்களை கொண்டுள்ளது. அதில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகள், பாகிஸ்தான், ஆப்ரிக்கா, இந்தோனேசியா, சீனா, ரஷ்யா மற்றும் அண்டை நாடுகளில் இருக்கிறார்கள்.

தீவில் அமைந்து இருக்கும் சிவபெருமான் திருத்தலம் (island abode of Śiva): வாழ்நாளில் ஒரு முறை சென்று பார்க்கவேண்டும் என்று பக்தர்கள் விரும்பும் ஒரு பிரபல புண்ணிய தலம். ஹவாய் தீவுகள் குழுவில் கார்டன் ஐலான்ட் என்று அழைக்கப்படும் கவாய் தீவில், வரலாற்று சிறப்புமிக்க வாய்லுவா நதிக்கரையில் இறைவன் கோயில் அமைந்து இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *இறைவன் கோயில், சன் மார்க சரணாலயம்.*

Īśvara: ईश्वर "Highest Lord." ஈசுவரன். பரமேசுவரன் அல்லது உருவமுள்ள இறைவன். மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன்.*

Īśvarapūjana: ईश्वरपूजन "Worship." ஈஸ்வரபூஜன. "வழிபாடு." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

Itihāsa: इतिहास "So it was." இதிகாசம். வரலாறு. இது குறிப்பாக இராமாயணம் மற்றும் மகாபாரதம் (இதன் அங்கமாக பகவத் கீதை விளங்குகிறது) என்கிற வரலாற்று சிறப்புமிக்க காவியங்களை குறிப்பிடுகிறது. இதிகாசம் என்பது குறிப்பாக *ஸ்கந்த புராணம்* மற்றும் *பாகவத புராணத்தையும்* (அல்லது *ஸ்ரீமத் பாக்வதம்*) சிலசமயங்களில் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாபாரதம், இராமாயணம், ஸ்ம்ருதி..*


jagadāchārya: जगदाचार्य “World teacher.”ஜகதாச்சார்யா: ஊகிற் கு ஆ் ரி யர் .

பனை வெல்லம் (jaggery): பனை மரச்சாற்றில் இருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டி.

Jainism: ***(Jaina)*** जैन. சமண மதம். கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு அருகில், மகாவீரரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு, வேதத்தை சாராமல் அமைந்த ஒரு பழமையான மதம். உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காமை, சைவ உணவுக் கோட்பாடு மற்றும் துறவிகளுக்கு தீவிரமான துறவறத்தை சமண மதத்தின் *ஆகமங்கள்* போதிக்கின்றன. எல்லா ஆன்மாக்களும், தனது சொந்த முயற்சியால் முக்தியை பெறமுடியும் என்பதை சமணம் வலுவாக வலியுறுத்துகிறது. அந்த மதத்தின் வரலாற்று சிறப்புமிக்க துறவிகள் *தீர்த்தங்கரர்கள்* (பிறவியின் பெருங்கடலை கடந்தவர் என்பது இதன் பொருள்) என்று அழைக்கப்பட்டு, அவர்களது சிலைகள் வணங்கப்படுகின்றன. இவர்களின் வரிசையில் மகாவீரர் 24 ஆவதாகவும் இறுதியாகவும் இடம்பெறுகிறார். இன்று சமண மதத்தை சுமார் ஆறு மில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள், மற்றும் அவர்கள் பெரும்பாலும் இந்தியாவில் வாழ்கிறார்கள்.

japa: जप “Recitation” or “incantation.” ஜபம். ஒரு மணி மாலையை பயன்படுத்தி ஜபிக்கும் போது, கவனத்தை ஒருமுகப்படுத்தி தொடர்ந்து ஒரு *மந்திரத்தை* சொல்லும் பயிற்சி. அதை மௌனமாக அல்லது உரக்க உச்சரித்துக்கொண்டு செய்யலாம். இது சிலசமயம் *மந்திர யோகம்* என்று அழைக்கப்படுகிறது. இந்துதர்மத்தின் ஆன்மீக பயிற்சியில் ஜபம் முக்கிய *சாதனாவாக* விளங்குகிறது. இது சில தெய்வங்களின் பெயர்களை சாதாரணமாக உச்சரிப்பதில் தொடங்கி, புனிதமான எழுத்துக்களை இடைவிடாது தொடர்ந்து நீண்டகாலத்திற்கு பல லட்சக்கணக்கான முறை சொல்லும் மிகப்பெரிய சாதனையையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மந்திரம், இயமம்-நியமம், யோகம்.*

இயேசு கிறித்து (Jesus Christ): இந்த சகாப்தத்தின் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு யூத மத போதகர் மற்றும் தீர்க்கதரிசி. இவரது போதனைகள் கிறித்துவ மதத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

யூதர் (Jew): யூத மதத்தை பின்பற்றுபவர், அல்லது அதை பின்பற்றுபவர்களின் வம்சாவளியினர். மேலும் தகவலும்: *யூத மதம்.*

jīva: जीव “Living, existing.” From *jīv,* “to live.” ஜீவன். “வாழ்ந்துக்கொண்டு இருக்கிற.” மூன்று மலங்களால் (*ஆணவ, கர்மவினை* மற்றும் *மாயை*) கட்டுப்படுத்தப்படும் ஆன்மா, *ஆத்மன்.* யாவும் கடந்த பரமாத்துமாவில் (*பரம-ஆத்மன்*) இருந்து மாறுபட்ட தனிப்பண்புள்ள ஆன்மா (*ஜீவா-ஆத்மன்*). *ஜீவன்*

முக்தா என்பவர் “வாழும் போதே முக்தியை பெற்றவர்.” மேலும் தகவலுக்கு: *ஆத்மன், ஆன்மாவின் முதிர்ச்சி, புருஷா, ஆன்மா.*

jñāna: ज्ञान “Knowledge; wisdom.” (Tamil: *ñāṉam*) ஞானம். இது ஆன்மாவின் முதிர்ந்த நிலையை குறிப்பிடுகிறது. இது *குண்டலினி* சக் தி *பிரம்மரந்திரத்தை* உடைத்துக்கொண்டு பரசிவ என்கிற முழுமையான பரம்பொருளை உணரும் போது தோன்றும் மெய்யறிவை குறிப்பிடுகிறது. பரசிவத்தின் *சமாதிகளை* தொடர்ந்து அடைவதன் மூலம், இந்த தெய்வீக புரிதலின் ஓட்டத்தை வலுப்படுத்தி, அதை புரிந்துக் கொண்டவருக்கு, இந்த ஞானோதயத்தை பெறாதவர்களிடம் இருந்து முற்றிலும் மாறுபட்ட, ஒரு விசேஷமான தரநிலையை அமைத்து தருகிறது. *ஞானம்* என்பது சிலசமயம் ஒரு புத்தக அறிவை, ஒரு சிக்கலான தத்துவ அமைப்பு அல்லது அமைப்புக்களை வெறும் புரிந்துகொள்வதால் கிடைக்கும் ஒரு பக்குவம் அல்லது விழிப்புணர்வு என்று தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஞானத்தை விளக்குபவர்கள், இந்த பாதை *சரியை-கிரியை-யோகம்-ஞானம்* அல்லது *கர்மவினை-பக்தி-இராஜ-ஞானத்தின்* ஒரு தொடர்ச்சி என்பதை மறுத்து, ஒவ்வொருவரும் தனது சொந்த பாதையை தேர்ந்தெடுக்கலாம் என்றும், அதில் ஒவ்வொன்றும் முடிவான குறிக்கோளை நோக்கி வழிநடத்தி செல்லும் என்றும் கூறுகின்றனர். மேலும் தகவலுக்கு: *கடவுளை உணர்தல், பிரம்மரந்திரம், ஆத்ம ஞானம், சமாதி.*

jñāna dāna: ज्ञानदान “Gifts of wisdom.” ஞான தானம். மற்றவர்களுக்கு ஆன்மீக உதவியை செய்யும் நோக்குடன் இந்து மத தொடர்பான இலக்கியம், துண்டு பிரசுரங்கள் மற்றும் புத்தகங்களை இலவசமாக அச்சிடுவது, நிதி உதவியை வழங்குவது மற்றும் விநியோகம் செய்யும் *கர்ம யோகத்தை* குறிப்பிடுகிறது.

jñāna mārga: ज्ञानमार्ग ஞான மார்கம். மேலும் தகவலுக்கு: *ஞான பாதம்.*

jñāna pāda: ज्ञानपाद “Stage of wisdom.” ஞான பாதம். “மெய்யறிவின் நிலை.” ஆன்மீக விரிவாக்கத்தின் நான்கு தொடர்ச்சியான *பாதங்களில்* (நிலைகள்) இறுதியாக ஞானம் விளங்குகிறது என்று சைவ சித்தாந்த *ரிஷிகள்* கூறுகிறார்கள். *யோக பாதம்*, மூன்றாவது நிலையின் உச்சகட்டமாக விளங்குகிறது. இது மேலும் ஒவ்வொரு *ஆகமத்தில்* இருக்கும் தகவல் பிரிவையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஞானம், பாதம்.*

jñānī: ज्ञानी “Sage.” ஞானி. ஞானம் பெற்றவர். மேலும் தகவலுக்கு: *ஞானம்.*

யூதம்-கிறித்துவம் சார்ந்த (Judaic-Christian): ஆபிரகாமிய மதங்களில் இருந்து தோன்றிய இரண்டு அல்லது மூன்று மதங்கள் தொடர்பான. அதிலும் குறிப்பாக, யூத மற்றும் கிறித்துவ மதங்களுக்கு இடையே பகிரப்பட்ட நம்பிக்கைகள் தொடர்பான என்று பொருள்கொள்ள வேண்டும்.

யூத மதம் (Judaism): இந்த மதத்தை உலகெங்கும் 12 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் (இதில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் அமெரிக்காவில் உள்ளனர்) பின்பற்றுகிறார்கள். ஆபிரகாமிய மதங்களில் யூத மதம் முதன்மையாக விளங்குகிறது. இந்த மதம் 3,700 வருடங்களுக்கு முன்பாக, இந்த பரம்பரையை ஆரம்பித்த ஆபிரகாம் மூலம் கனான் (தற்போது இசுரேல்) நாட்டிலும், அடிமைகளாக இருந்த யூத இனமக்களை

விடுவித்த மோசஸ் மூலம் எகிப்து நாட்டிலும் தோற்றுவிக்கப்பட்டது. இந்த மதத்தின் முக்கிய புனித நூலாக *தோரா* விளங்குகிறது.

jyotisha: ज्योतिष ஜோதிடம். இது "ஒளியை," குறிப்பிடும் சோதியில் இருந்து உருவானது. "ஒளிகளில் (நட்சத்திரங்களில்) இருக்கும் அறிவியல்." கிரகங்களின் இயக்கங்கள் மற்றும் நிலைகளை பொறுத்து, குணங்களை வரையறுத்து மங்களகரமான தருணங்களை தீர்மானித்து, நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை ஆய்வு செய்யும் புலமை மற்றும் பயிற்சியாக இந்துசமய ஜோதிடம் (*ஜ்யோதிஷம்*) விளங்குகிறது. ஜாதகங்களை கணிக்கும் போது, *ஜ்யோதிஷம்* "நிராயன முறையையும்," மேற்கத்திய ஜோதிடம் "சாயன முறையையும்," பயன்படுத்துகின்றன.



கபால (Kabala): யூத விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக போதனைகளின் முக்கிய பகுதி. இதில் சில பகுதிகள் ஹீப்ரு சாத்திரங்களின் மறைஞான விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

Kadaitswami: கடையிற்சுவாமி Marketplace *swāmī*." நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த கைலாச பரம்பரையின் 159 ஆவது சத்குரு. இவர் 1810 ஆம் ஆண்டு பிறந்து, அக்டோபர் 13, 1891 அன்று மகாசமாதி அடைந்தார். கடையிற்சுவாமி தென் இந்தியாவின் பெங்களூரில் தான் வேலை செய்த நீதிபதி பணியை துறந்து ஒரு *சந்நியாசியாக* மாறி, இமய மலையில் இருந்து வந்த ரிஷியிடம் பயிற்சி பெற்றார். அந்த ரிஷி கடையிற்சுவாமியை இலங்கையில் சமயப்பணியை செய்ய அனுப்பி வைத்தார். அவர் யாழ்பாணம் கரையோரத்தில் தீவிர *தபஸ்* செய்து பல *சித்திகளை* பெற்றார். அவர் பல வருடங்கள் சிறப்பான உரைகளை வழங்கியும் சித்திகளை வெளிப்படுத்தியும், இலங்கை சைவர்களை உயர்ந்த ஆன்மீக நிலைக்கு கொண்டு வந்தார். அவர் தனது *பரம்பரையையில்* அடுத்த சத்குருவாக செல்லப்பசுவாமியை நியமித்தார். கடையிற்சுவாமிக்கு தீட்சையின் போது முக்தியானந்தசுவாமி என்ற பெயர் வழங்கப்பட்டது. மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத சம்பிரதாயம்.*

kadhi kavi: காதி காவி "Hand made saffron color." காவி நிறத்தில் கைகளால் நூற்க்கப்பட்ட, கைத்தறித் துணியை இந்து சந்நியாசிகள் அணிகிறார்கள். கங்கை நதிக்கரையில் அமர்ந்து தியானம் செய்யும் அல்லது வாழும் *சாதுக்கள்* அணியும் உடையின் பெயர். இதற்கு சமஸ்கிருதத்தில் *கஷாய* என்று பெயர்.

கஹூனா (kahuna): "Deep one." "ஆழமானது. ஹவாய் பழங்குடி மதத்தின் பூசாரி: 1) *கஹூனா புலே* என்பவர் கோயில்களை *(ஹேஓ)* நிர்வாகம் செய்து, வீடுகளை திறந்து வைக்கும் சடங்குகளை செய்தார். 2) மக்களை குணப்படுத்தும் ஹீலர்களாக இருந்த கஹூனாக்கள் தங்களது நிபுணத்துவத்தை பொருத்து மகப்பேறு மருத்துவர், குழந்தைகள் நல

மருத்துவராக செயல்பட்டனர் மற்றும் மந்திர வித்தைகளை பயன்படுத்துவது, கைரேகைகளை ஆய்வு செய்வது, மனோஉணர்வு ஆய்வுகளை செய்து தீய சக்திகளை தொடர்புகொள்வதில் ஈடுபட்டு இருந்தார்கள். 3) துறவிகளாக இருந்த *கௌல கஹூனாக்கள்* சமூகத்தில் இருந்து ஒதுங்கி தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள். சில *கஹூனா* பரம்பரைகள் இன்றும் உயிருடன் இருக்கின்றன.

கைஃப் kaīf: (Shūm) சாட்சி தன் மீதே கவனம் செலுத்தும் நிலை. மேலும் தகவலுக்கு: *ஷூம்.*

Kailas (Kailāsa): कैलास "Crystalline," or "abode of bliss." கைலாயம். "படிகம்" அல்லது "பேரின்பத்தின் இருப்பிடம்." இது மேற்கு திபெத்தில் இருக்கும் நான்கு முகப்புகளை கொண்ட இமாலய சிகரமாகவும், சிவபெருமான் பூலோகத்தில் வாசம் செய்யும் இடமாகவும் விளங்குகிறது. இந்துக்கள் மற்றும் திபெத்திய பௌத்தர்களின் புண்ணிய தலமாகவும், அண்டத்தின் மையமாகவும் விளங்கும் மேரு பர்வதத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. ஸ்ரீ சக்ர யந்திரத்தின் (கைலாய சக்கரம் என்றும் அழைக்கப்படுகிறது) ஒரு குறிப்பிட்ட முப்பரிமாண வடிவத்தின் மூலம், சாக்த சமயத்தில் கைலாயம் உருவகப்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஸ்ரீ சக்கரம்.*

Kailāsa Paramparā: कैलासपरंपरा கைலாய பரம்பரை. இது 162 சித்தர்களின் ஒரு ஆன்மீக பரம்பரையாக, நந்திநாத சம்பிரதாயத்தின் ஒரு முக்கிய பிரிவாக, ஒருமைவாத சைவ சித்தாந்தத்தின் பழங்கால தத்துவத்தின் ஆதரவாக விளங்குகிறது. வரலாற்று குறிப்பின் படி, 2,250 வருடங்களுக்கு முன்பாக, இந்த குருமார்களில் முதன்மையானவராக மகரிஷி நந்திநாதா (அல்லது நந்திகேஸ்வர) விளங்குகிறார். இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த திருமூலர் மற்றும் ஏழு மற்ற சீடர்களின் (திருமந்திர குறிப்பின் படி) *சத்குருவாக* விளங்கினார். இந்த பரம்பரை பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நிலைபெற்றுள்ளது மற்றும் அது இன்றும் நிலைத்து இருக்கிறது. இவர்களில் சமீபகாலத்தில் வாழ்ந்த மூத்த சித்தர் "இமய மலைகளில் இருந்து வந்த ரிஷி," என்று அழைக்கப்படுகிறார். அவர் அந்த புனிதமான மலைகளில் இருந்து வந்ததால் அவ்வாறு அழைக்கப்படுகிறார். இவர் தென்னிந்தியாவில், கடையிற்சுவாமிக்கு (கி.பி. 1810-1875) தீட்சை வழங்கினார், மற்றும் அவர் செல்லப்பசுவாமிக்கு (1840-1915) தீட்சை வழங்கினார். செல்லப்பன் பொறுப்பை யோகசுவாமி முனிவருக்கு (1872-1964) வழங்கினார், மற்றும் அவர் 1949 வருடத்தில் சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு (1927-2001) தீட்சை வழங்கினார், மற்றும் அவர் தற்போதைய சத்குருவான போதிநாத வேலன்சுவாமிக்கு தீட்சை வழங்கினார். மேலும் தகவலுக்கு: *நாத சம்பிரதாயம், பதஞ்சலி, திருமூலர், யோகசுவாமி.*

kalaśa: कलश "Water pot; pitcher; jar." கலசம். கோயில்கள் மற்றும் வீடுகளில் நடைபெறும் விஷேச *பூஜைகளின்* போது தெய்வத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், மத்தியில் மாவிலையும் தேங்காயும் வைக்கப்பட்டு இருக்கும் நீர் நிரம்பிய பானை கலசம் என்று அழைக்கப்படுகிறது.

கோயிலில் கோபுரத்தில் கூம்பு வடிவில் இருப்பதும் *கலசம்* என்று அழைக்கப்படுகிறது.

Kali Yuga: कलियुग "Dark Age." கலியுகம். நமது சூரிய மண்டலம் கடந்து செல்லும் நான்கு கட்டங்களின் தொடர் சுழற்சியில், கலியுகம் கடைசி யுகமாக விளங்குகிறது. அறியாமை சக்தி முழு வீச்சில் செயல்படுகிறது மற்றும் ஆன்மாவில் இருக்கும் பல நுணுக்கமான புலன்கள் தெளிவற்று இருப்பதால், அதை இரவின் இருண்ட பகுதியுடன் ஒப்பிடலாம். மேலும் தகவலுக்கு: *மகாபிரளயம், யுகம்.*

kamaṇḍalu: कमण्डलु "Vessel, water jar." கமண்டலம். வழக்கமாக *சந்நியாசிகள்* சுமந்து செல்லும் இந்த கமண்டலம், மண் அல்லது மரத்தில் செய்யப்பட்டு இருக்கும். இது ஆத்ம திருப்தி நிறைந்த ஒரு எளிமையான வாழ்க்கையை சித்தரிப்பதாக இருக்கும். இது பெரும்பாலும் *கமண்டலதாரு* என்ற மரத்தில் இருந்து உருவாக்கப்படும். மேலும் தகவலுக்கு: *சந்நியாச தர்மம், சந்நியாசின்.*

கேன் (Kane): ஹவாய் மக்களின் முக்கிய கடவுள். இவர் சந்தான விருத்தி வழங்கும் கடவுள். இவர் விடியற்காலை, சூரியன் மற்றும் ஆகாயம், மூன்று லோகங்கள் உயர்நிலை விண்ணுலகம், கீழ்நிலை விண்ணுலகம் மற்றும் பூமி) மற்றும் அதில் இருக்கும் உயிரினங்களை படைப்பவராகவும் இருக்கிறார்.

கந்த் இம்மானுவல் (Kant, Immanuel): இவர் ஒரு ஜெர்மன் நாட்டு தத்துவ அறிஞர் (1724-1804). *கிரிடிக் ஆப் பியூர் ரீசன்* (1781) மற்றும் *கிரிடிக் ஆப் பிராக்டிகல் ரீசன்* (1788) ஆகியவை இவரது சிறந்த படைப்புக்கள் ஆகும்.

karma: कर्म "Action," "deed." கர்மா, கர்மவினை. கர்மவினை என்பது 1) ஒரு செயல் அல்லது நடவடிக்கை; 2) காரண காரியத்தின் அடிப்படை; 3) ஒரு விளைவு அல்லது "செயலின் விளைவு" (*கர்மபல*) அல்லது விரைவில் செய்தவரையே வந்து சேரும் "பின்விளைவு" (*உத்தரபல*) ஆகியவற்றை குறிப்பிடுகிறது. வினை விதைத்தவன் வினை அறுப்பான். நாம் இந்த பிறவியில் செய்த செயல்களுக்கு, இந்த பிறவி அல்லது வரும் பிறவிகளில் பலனை அனுபவிப்போம். சுயநலம், வெறுப்பு நிறைந்த செயல்கள் (*பாபகர்மா* அல்லது *குகர்மா*) வேதனையை விளைவிக்கும். நல்ல செயல்கள் (*புண்ணியகர்மா* அல்லது *சுகர்மா*) அன்பு கலந்த எதிர்வினைகளை கொண்டு வரும். கர்மவினை மூன்று வகைப்படும்: *சஞ்சித, பிராரப்த* மற்றும் *க்ரியாமன.* — ***சஞ்சித கர்மவினை (sañchita karma):*** "சேகரிக்கப்பட்ட செயல்கள்." இந்த பிறவி மற்றும் முற்பிறவிகளில் செய்த கர்மவினைகளின் கூட்டு. — ***பிராரப்த கர்மவினை (prārabdha karma):*** "தொடங்கப்பட்ட செயல்கள்; இயக்கத்தில் இருக்கும் செயல்கள்." பலன்களை வழங்கிக்கொண்டு ஒருவரின் உடற்பண்புகள், தனிப்பட்ட மனநிலைகள் மற்றும் நட்புறவுகள் உட்பட இந்த பிறவியில் நடைபெறும் சம்பவங்கள் மற்றும் சூழ்நிலைகளை உருவாக்கும் *சஞ்சித* கர்மவினையின் பகுதி. — ***க்ரியாமன கர்மவினை (kriyamāna karma):*** "தற்போது உருவாகிக்கொண்டு இருக்கும்." ஒருவர் தனது சிந்தனை, சொல் மற்றும் செயல்களின் மூலம்

இந்த பிறவியில் அல்லது இரு பிறவிகளுக்கு இடையே அந்தர்லோகத்தில் புதிதாக உருவாக்கும் அல்லது *சஞ்சித கர்மாவுடன்* சேர்க்கும் *கர்மவினைகள்*. *க்ரியாமான கர்மாவிற்கு* வேறு இரண்டு பெயர்கள் உள்ளன. அவை "வருவது, வந்து சேர்வதை," குறிக்கும் *ஆகாமி* மற்றும் "தற்போதைய, சுற்றிக்கொண்டு இருக்கிற, இயக்கத்தில் இருக்கின்ற," என்பதை குறிக்கும் *வர்த்தமான* நிகழ்கால கர்மவினைகள் ஆகும். சில *க்ரியாமான கர்மாக்கள்* இந்த ஜென்மத்தில் பலன் தருகின்றன, மற்றும் மீதம் இருப்பவை வரவிருக்கும் பிறவிகளுக்காக சேமிக்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆணவம், விதி, மலம், மாயை, மோக்ஷம், பாச, பாவம், ஆன்மா.*

karma yoga: कर्मयोग "Union through action." கர்ம யோகம்: சுயநலமற்ற சேவை மேலும் தகவலுக்கு: *யோகம்*.

karṇavedha: कर्णवेध "Ear-piercing." *கர்ண வேத*: "காது குத் துதல்." மேலும் தகவலுக்கு: *குழந்தைப் பருவ சம்ஸ்க்காரங்கள்.*

Kārttikeya: कार्त्तिकेय Child of the Pleiades, from *Kṛittikā*, "Pleiades." கார்த்திகேயன். ஆறு கார்த்திகை பெண்கள் மூலம் வளர்க்கப்பட்டதால், கந்தனுக்கு கார்த்திகேயன் என்ற பெயர் வந்தது. சிவபெருமானின் இரண்டாவது மகன், விநாயகரின் சகோதரன். இந்த மகாதேவரை இந்தியாவின் எல்லா பகுதிகளிலும், உலகெங்கிலும் இருக்கும் மக்கள் வழிபடுகின்றனர். இவர் முருகன், குமரன், ஸ்கந்தா, சண்முகநாதா, சுப்ரமணியா மற்றும் வேறு சில பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். ஆன்மா முதிர்ச்சி பெறும் அங்கமாக, யோக பயிற்சியின் மூலம் உள்ளுணர்வை ஒரு தெய்வீக ஞானமாக மாற்றும் மதத்தை வழிநடத்தும் கடவுளாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *முருகன், கிருத்திகை நட்சத்திரம், வேதம்*.

கவாய் (Kauai): ஹவாய் தீவுகளில் வடக்கு பகுதியில் உள்ளது. 553 சதுர மைல்கள். மக்கள் தொகை 50,000.

கவாய் ஆதீனம் (Kauai Aadheenam): 1970 வருடத்தில் சிவாய சுப்பிரமுனியசுவாமியால் தோற்றுவிக்கப்பட்ட மடம் மற்றும் கோயிலின் வளாகம்; சைவ சித்ததாந்த தேவாலயத்தின் சர்வதேச தலைமையகம்.

kavadi: காவடி. குறிப்பாக தை பூசத்திருவிழாவின் போது பக்தர்கள் முருகப்பெருமான் கோயிலுக்கு சென்று காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்வார்கள். இந்த காவடியில் முருகப்பெருமானுக்கு *அபிஷேகம்* செய்ய ஒரு நீளமான தடியின் இரு முனைகளிலும் பால், தேன், இளநீர் குடங்கள் தொங்க விடப்பட்டு, மேலே அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். திருவிழாவின் போது இந்த காவடிகளின் பெரிய அணிவகுப்பு நடைபெறும். வழக்கமாக தெய்வத்திடம் வேண்டிக்கொள்பவரின் நாக்கு அல்லது உடலின் மற்ற பகுதிகள் ஒரு சிறிய வெள்ளி வேல் அல்லது வளைந்த வெள்ளி ஊசிகளால் குத்தப்பட்டு இருக்கும். மேலும் தகவலுக்கு: *பிராயசித்தம்.*

kevala avasthā: केवल अवस्था "Stage of oneness, aloneness." *கேவல அவத்தை.* "தனிமை, தனித்தநிலை." சைவ சித்தாந்தத்தில், ஆன்மா பக்குவம் அடையும் மூன்று நிலைகளில் முதலாவது நிலையை குறிப்பிடுகிறது. இந்த நிலையில்

ஒரு தெய்வீக சுடர் *ஆணவம்* எனப்படும் அறியாமையில் மறைக்கப்பட்டு, தன்னை பற்றி அறியாத ஒரு ஆகாய வடிவமாக, சிவபெருமான் மூலம் ஆன்மாவின் வெளிப்பாடு அல்லது உற்பத்தியுடன் தொடங்குகிறது. ஆன்மாவின் இந்த நிலைக்கு, முளைவிட்டு தனது திறமையை வெளிப்படுத்தாது, தரையில் புதையுண்டு இருக்கும் விதை உவமையாக அமைகிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவம், அவத்தை, ஆன்மாவின் முதிர்ச்சி, சகல அவத்தை, ஆன்மா, சுத்த அவத்தை.*

konrai: கொண்றை. இது சிவபெருமானின் இருந்து பெருந்திரளாக அருவி போன்று வெளிவரும் பொன்னிற அருளை குறிப்பிடுகிறது. சிவபெருமானுக்கு உகந்ததாக கொன்றை மலர்கள் விளங்குகின்றன.

kośa: कोश “Sheath; vessel, container; layer.” கோசம். “உறை; கொள்கலம், பாத்திரம்; அடுக்கு.” ஆன்மா தத்துவரீதியாக, ஒரே சமயத்தில் ஐந்து கோசங்கள் வாயிலாக வெவ்வேறு உலகங்கள் அல்லது இருப்பின் வெவ்வேறு நிலைகளில் செயல்படுகிறது. அவை சிலசமயங்களில், ஒரு வெங்காயத்தில் இருக்கும் அடுக்குகளுடன் ஒப்பிடப்படுகிறது. கோசங்களில் நுணுக்கங்கள் அதிகரிக்கும் தன்மையை அடிப்படையாக கொண்டு, அவை பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன. –***அன்னமய கோசம்:*** “உணவால் உருவான கோசம்.” ஆன்மாவின் புலன்களை ஒப்பிடும் போது தூல அல்லது காந்த உடல் கோசங்கள் மிகவும் பருமனாக இருந்தாலும், பதினான்கு *சக்கரங்களுக்கும்* அதனுள் மட்டுமே முழுமையாக செயல்படமுடியும் என்பதால், அது அதன் முதிர்ச்சி மற்றும் ஆத்ம ஞானத்திற்கு அத்தியாவசியமாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.* –***பிராணமய கோசம்:*** “பிராண சக்தியை (முக்கிய சக்தி) உள்ளடக்கிய கோசம்.” இது பிராணன் அல்லது ஆரோக்கியமான உடல், அல்லது *ஆகாச* உடம்பு அல்லது *ஆகாச* நகல் என்றும் அழைக்கப்படுகிறது. இது உயிர், சுவாசம் மற்றும் உயிர் வீர்யத்தின் மூலமாக இருப்பதால் அது தூல உடலுடன் இணைந்து இருக்கிறது மற்றும் அது தூல உடல் மற்றும் சூட்சும உடலுக்கு இடையேயான தொடர்பாக விளங்குகிறது. *பிராணமய கோசத்தில் “*அத்தியாவசிய காற் றாகூ” இருக்கும் ஐந்து முக்கிய ஓட்டங்கள் அல்லது வாயுக்களாக *பிராணன்* இயங்குகிறது. மரணத்தின் போது தூல உடலுடன் *பிராணமய கோசமும்* பிரிகிறது. மேலும் தகவலுக்கு: *பிராணன்.* –***மனோமய கோசம்:*** “மனதால் உருவான கோசம்.” கீழ்நிலை சூட்சும உடலாக, “சிந்தனை, விருப்பம், ஆசை" என்பதை குறிக்கும் *மனஸில்* இருந்து உருவாகிறது. சாதாரண சிந்தனை, ஆசை மற்றும் உணர்ச்சியின் உள்ளுணர்வு-அறிவுணர்வு கோசமாக விளங்குகிறது. இது புலனுணர்வு உறுப்புகளாக இருக்கும் *ஞானேந்திரியங்கள்* மற்றும் செயற்கருவிகளாக இருக்கும் *கர்மேந்திரியங்களின்* இருப்பிடமாக விளங்குகிறது. தூல உடல் வளர்ச்சி அடையும் போது *மனோமய கோசம்* உருவத்தை பெறுகிறது, மற்றும் மறுபிறவிக்கு முன்பாக அந்தர்லோகத்தில் அந்த உருவத்தை கைவிடுகிறது. அது இரண்டு அடுக்குகளாக அறியப்படுகிறது: 1) காந்த-காரண கோசம் (புத்தி) மற்றும் 2) காந்த-சூட்சும கோசம் (மனஸ்). மேலும் தகவலுக்கு: மனஸ். –***விஞ்ஞானமய கோசம்:*** “அறிவெழுச்சியின் கோசம்.” இது மனம் அல்லது

அறிவாற்றலுடைய உள்ளுணர்வு கோசம், மற்றும் ஆன்மீக காந்த கோசம் என்றும் அழைக்கப்படுகிறது. இது புரிந்துணர்வு, அறிதல், நேரடி அறிவெழுச்சி, மெய்யறிவு, இயலுணர்வு மற்றும் ஆக்கத்திறனை உள்ளடக்கிய *விஞ்ஞானமாக* இருக்கும் உயர்ந்த சிந்தனையின் வாகனமாக விளங்குகிறது. –***ஆனந்தமய கோசம்:*** "பேரின்ப உடல்." இது இயலுணர்வு-மெய்ஞ்ஞான கோசம் அல்லது ஆன்மீக-காரண உடலை குறிக்கிறது. ஆன்மாவின் இந்த அதிக உட்புறமான வடிவம் (*ஸ்வரூப*) எல்லா உயிர், நுண்ணறிவு மற்றும் உயர்ந்த புலன்களின் முடிவான அடிப்படையாக விளங்குகிறது. இதன் சாரமாக பராசக்தி (தூய உணர்வு) மற்றும் பரசிவம் (முடிவான பரம்பொருள்) விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மீக சக்தி, ஆன்மீக காந்த, மனோமய கோசம், காந்த சக்தி, ஆன்மா, நுணுக்கமான உடல்.*

Kṛishṇa: कृष्ण "Black." கிருஷ்ண: "கருப்பு." இது "ஈர்க்கும், கவரும்," என்பதை குறிப்பிடும் *கிரிஷ்டியுடனும்* ஒப்பிடப்படுகிறது. இந்துக்கள் வழிபடும் பல கடவுள்களில் மிகவும் பிரபலமானவராக விளங்குகிறார். பகவான் ஸ்ரீ விஷ்ணுவின் எட்டாவது அவதாரமாக வைணவர்கள் கிருஷ்ணரை வழிபடுகிறார்கள். இவர் மகாபாரதத்தின் அங்கமாக விளங்கும், பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா என்று போற்றப்படுகிறார். கௌடியா வைணவ சமயத்தில், கிருஷ்ணர் தெய்வங்களின் தலைவனாக விளங்குகிறார்.

kṛishṇadāna: कृष्णदान "Black gifts." கிருஷ்ண தானம். அதர்ம வழிகளில் ஈட்டிய பணம். இதை மதசார்புள்ள அமைப்புக்கள், கோயில்கள் அல்லது *ஆசிரமங்கள்* நன்கொடையாக பெறக்கூடாது. தீய வழிகளில் ஈட்டிய பணத்துடன் சாபமும் சேர்ந்து இருப்பதால், அதனால் நன்மை நடக்க வாய்ப்பில்லை. மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

kriyā: क्रिया "Action." "செயல்." 1) பொதுவாக *கிரியை (காரியம்)* என்பது எந்த ஒரு செயலையும் குறிப்பிடலாம். குறிப்பாக அது சமயம் சார்ந்த செயலாக, அதிலும் குறிப்பாக சடங்குகள் அல்லது விழாக்களை குறிப்பிடலாம். 2) யோகத்தை பொறுத்தவரையில், *கிரியை* என்பது தியானத்தின் போது தோன்றும் பாசாங்கு அல்லது உணர்ச்சியின் மீது சுயக்கட்டுப்பாடு இல்லாததால் விளைகிற அல்லது *குண்டலினி சக்தியின்* பக்குவம் அடையாத அல்லது கட்டுப்படுத்தப்படாத எழுச்சியினால் ஏற்படும் தன்னிச்சையான உடல் இயக்கங்களை குறிப்பிடுகிறது. 3) சளி சவ்வை சுத்தம் செய்ய மேற்கொள்ளும் பல்வேறு பாரம்பரிய *ஹட யோக* யுத்திகள். 4) சைவ பாதையில், இரண்டாவது நிலையில் இருக்கும் சமயம் சார்ந்த செயல், அல்லது *கிரியை பாத (மார்க்கம்).* மேலும் தகவலுக்கு: *பாத.*

kriyā mārga: क्रियामार्ग *கிரியை மார்கம்.* மேலும் தகவலுக்கு:*கிரியை பாதம்.*

kriyā pāda: क्रियापाद "Stage of religious action; worship." *கிரியை பாத.* "சமய நடவடிக்கையின் நிலை; வழிபாடு." வழிபாடு மற்றும் பக்தியைக் கொண்டு அமைந்தநிலை, சைவ சித்தாந்தத்தில் சித்தி பெறும் பாதையில் இருக்கும் நான்கு தொடர்ச்சியான நிலைகளில் இரண்டாவதாக இருக்கும் நிலை. மேலும் தகவலுக்கு: *பாத.*

kriyā yoga: क्रियायोग “Action union.” கிரியை யோகம்: ஆன்மீக முன்னேற்றத்தை துரிதப்படுத்த *பிரணாயாமத்திற்கு* முக்கியத்துவம் அளித்து, அன்றாட உணர்வில் இருந்து சாட்சியை நன்றாக விடுதலை செய்து, விரிவாக்கம் பெற்ற உணர்வு மற்றும் சுய மாற்றத்தை இலக்காக கொண்டு குண்டலினி சக்தியை எழுச்சி பெற செய்வதற்கு துணை புரியும், பல்வேறு வகை தியான யோகப் பயிற்சியை குறிப்பிடும் சொல். இந்த *கிரியை யோகத்தை* கற்றுத்தந்த பரமஹம்ச யோகானந்தா (1893-1952), இதை இறைவனை அடைவதற்கான "விமானப் பயணம்" என்று அழைத்தார். இந்த பழங்கால தியான செய்முறையின் நவீன மறுமலர்ச்சி, 1861 ஆம் ஆண்டில் மரணத்தை வென்ற *அவதார* பாபாஜியுடன் தொடங்கியதாக கருதப்படுகிறது.

kriyamāna karma: क्रियमानकर्म “Actions being made.” ***க்ரியாமன கர்மவினை:*** "தற்போது உருவாகிக்கொண்டு இருக்கும் கர்மவினைகள்." மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

kshamā: क्षमा “Patience.” பொறுமை. மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

kshatriya: क्षत्रिय “Governing; sovereign.” சத்திரியன்: "நாடு ஆள்பவர்; அரசர்". மேலும் தகவலுக்கு: *ஜாதி.*

கு (Ku): செழிப்பு, லாபகரமான மீன்பிடிப்பு, நிறைவான விளைச்சல், நல்லெண்ணம், உன்னத குழந்தைகள், நேர்மையான தலைவர்கள் மற்றும் போரில் வெற்றியை வேண்டி ஹவாய் மக்கள் வழிபடும் தெய்வம். இந்து மதத்தின் தெய்வங்களில் ஹவாய் மக்களின் "கு" தெய்வம், குமரன் அல்லது முருகன் அல்லது ஸ்கந்தர் அல்லது கார்த்திகேயன் என்று அழைக்கப்படுகிறார்.

kukarma: कुकर्म “Unwholesome acts,” or the fruit therefrom. *குகர்மா*: “புனிதமற்ற செயல்கள்,” அல்லது அதனால் விளையும் பலன்கள். மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

kulaguru: कुलगुरु “Family preceptor” or “teacher.” *குல குரு. குல குரு* என்பவர் குடும்ப தலைவர்கள் மூலமாக, கூட்டு மற்றும் பெரிய குடும்பங்களுக்கு ஆன்மீக பாடங்களை வழங்குகிறார். அவர் ஒரு சத்குருவாக இருக்கவேண்டும் என்று அவசியமில்லை.

kumbhābhisheka: कुम्भाभिषेक “Water pot ablution.” *கும்பாபிஷேகம்.* ஒரு புதிய கோயிலில் நடைபெறும் முறையான பிரதிஷ்டை மற்றும் (பன்னிரண்டு வருட இடைவெளியில்) புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு பிறகு நடைபெறும் குடமுழுக்கு விழா. தலைகீழான குடம் அல்லது *கும்பம்* போல காட்சியளிக்கும் கோயில் கோபுர கலசங்கள் மீது புரோகிதர்கள் புனிதமான கலச நீரை ஊற்றி சடங்குகளை நிறைவு செய்கின்றனர். பிரதிஷ்டை செய்வதற்கு முன்பாக, கோயில் கட்டுமானத்தின் போது, பின்வரும் சடங்குகளை கோயில் பூசாரியின் துணையுடன் ஸ்தபதி என்று அழைக்கப்படும் கோயில் கட்டிடக்கலை கலைஞர் செய்து வைக்கிறார். 1) *பஞ்ச சிலன்யாச:* கருவறையின் வடகிழக்கு மூலையில், அடித்தளத்தில் ஐந்து கற்கள் வைத்தல்; 2) *பிரதம சிலன்யாச:* அடித்தளத்தில் முதல் செங்கல் வைத்தல்; 3) *நிலையஸ்தாபனம்:* கதவு நிலை வைத்தல்; 4) *கர்ப்பநியாசம்:*

ஒரு பெட்டியில் கியூபிகள் சில்வர் அல்லது ஒரு தங்கப்பெட்டியில் இரத்தினங்கள், வெள்ளி, தங்கம் மற்றும் மூலிகைகளை வைத்தல்; 5) *ஸ்தூபி ஸ்தாபனம்:* ஸ்தூபி கட்டமைப்பை தொடங்கி வைத்தல்; 6) *நெத்ரோ மீளனம்:* பால் மற்றும் தேனில் முக்கிய தங்க சிற்றுளி மூலம் கண்களை முழுமையாக செதுக்கி தெய்வத்திற்கு விழிப்புணர்ச்சியை வழங்குதல்; 7) *மூலலிங்க ஸ்தாபனம்:* மூலவரை ஸ்தாபனம் செய்தல்.

Kumbhalavalai: கும்பிழாவளை. வட இலங்கையில் அளவெட்டியில், குருதேவாவின் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்திற்கு அருகில் அமைந்துள்ள பிரசித்தமான மற்றும் பெரிய விநாயகர் கோயில்.

kuṇḍalinī: कुण्डलिनी "She who is coiled; serpent power." சுருண்டு இருப்பவள்; பாம்பின் சக்தி." இந்த பழங்கால பிரபஞ்ச சக்தி, நம் ஒருவருக்குள்ளும் முதுகுத்தண்டின் அடியில், ஒரு பாம்பை போல முதலில் சுருண்டு இருக்கிறது, மற்றும் யோகப்பயிற்சியின் மூலம், இறுதியில் *சுஷும்னா நாடியில்* எழுச்சி பெறுகிறது. *குண்டலினி சக்தி* எழுச்சி பெறும் போது, அது அடுத்தடுத்த *சக்கரங்களை* விழிப்படைய செய்கிறது. அந்த சக்தி *சஹஸ்ரஹாரத்தின்* மத்தியில், *பிரம்மரந்திரம்* வழியாக துளைத்துக்கொண்டு நுழையும் போது, *நிர்விகல்ப சமாதி* என்கிற ஞானதோயம் தோன்றுகிறது. அதன் பிறகு *குண்டலினி சக்தி*, ஏழு *சக்கரங்களில்* ஏதாவது ஒன்றிற்கு திரும்பி, அங்கே ஒடுங்குகிறது. *குண்டலினி சக்தி சஹஸ்ரஹாரத்திற்கு* திரும்பி வந்து, *இந்த கிரீட சக்கரத்தில்* சுருண்டு இருக்கும் போது, *சிவசாயுஜ்ய* என்கிற நிரந்தரமான சிவபெருமானின் உணர்வு முழுமை பெறுகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், பிரம்மரந்திர, நாடி, சமாதி, சாயுஜ்ய, தந்திர*.

kuṇḍalinī śakti: कुण्डलिनीशक्ति *குண்டலினி சக்தி: சுஷும்னா நாடி* வழியாக பாய்ந்து செல்லும் புனிதமான (பாலின வேறுபாடு இல்லாத சக்தி) சக் தி. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, சுஷும்னா நாடி.*

kuṇḍalinī yoga: कुण्डलिनीयोग "Uniting the serpent power." *குண்டலினியோக*: "பாம்பின் சக்தியை எழுச்சி பெற செய்தல்." *குண்டலினி சக்தியை* முதுகுத்தண்டில் இருந்து எழுச்சி பெற செய்து *கிரீட சக்கரமாக* இருக்கும் *சஹஸ்ரஹாரத்திற்கு* வழிநடத்தும் நோக்கத்துடன், இராசயோகத்தின் அங்கமாக விளங்கும் உயர்வான தியான பயிற்சிகள் மற்றும் *சாதனா* உத்திகளை நிறைவேற்றுதல். இது மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கும் போது, தனது தனிப்பட்ட ஆற்றலினால் முயற்சி செய்வதில் மற்றும் கற்பிப்பதில் ஒரு பிரத்யேக அமைப்பாக இல்லாமல், நன்றாக நிறைவேற்றிய *சாதனாக்கள்* மற்றும் *தவத்தின்* இயல்பான விளைவாக இருக்கிறது.

Kural: குறள் மேலும் தகவலுக்கு: *திருக்குறள்.*

***குர்த்தா (kurta* shirt):** இது இந்தியாவில் ஆண்கள் அணியும் பாரம்பரிய உடை. இது வழக்கமாக கழுத்துப்பட்டை இல்லாமல், தொடை நீளத்திற்கு இருக்கும்.

kuttuvilaku: குத்துவிளக்கு. ஒரு கோயில், பூஜையறை அல்லது வீட்டில் நிலைகுத்தாக இருக்கும் இந்த பஞ்சலோக விளக்கின் மேற்பகுதியில் நெய் அல்லது நல்லெண்ணெயை தாங்குவதற்கு ஒரு குழிவான பகுதி

அமைந்திருக்கும். இந்த வட்ட வடிவ விளிம்பில் சமமான இடைவெளியில் திரிகளை வைக்க நீட்சியான அமைப்புக்கள் இருக்கும். இது வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கும் *பூஜையிலும்* பயன்படுத்தப்படுகிறது. கோயில் மற்றும் பூஜை மாடங்களில் அங்கம் வகிக்கும் இந்த *குத்துவிளக்கு*, சிலசமயங்களில் பராசக்தி அல்லது பரஞ்சோதியாக வழிப்படப்படுகிறது. கோயிலில் இருந்து பக்தன் திரும்பியதும் *குத்துவிளக்கை* ஏற்றுவதால், அவனுடன் வரும் *தேவர்கள்* வீட்டில் தங்குவதற்கும், கோயில் கருவறையின் அதிர்வை வீட்டின் பூஜை அறைக்கு கொண்டு வருவதற்கும், இந்த விளக்கு துணை புரிகிறது. இது சமஸ்கிருதத்தில் *தீபஸ்தம்பம்* என்று அழைக்கப்படுகிறது.

**Lahiri Ayanāṁśa:** लाहिरी अयनांश. லஹிரி அயனாம்சம். மேலும் தகவலுக்கு*: அயனாம்சம்.*

லாவோ-சூ (Lao Tzu): சீன தத்துவ அறிஞர் (கி.மு. 6 ஆம் நூற்றாண்டு). *தாவ் தி சிங்* புத்தகத்தை எழுதியவர். தாவ் நெறியை தோற்றுவித்தவராக கருதப்படுகிறார். மேலும் தகவலுக்கு: தாவ் நெறி.

லெமூரியன் ஸ்க்ரோல்ஸ் (Lemurian Scrolls): பூமியில் ஒரு விஷேச படைப்பாக *லெமூரியன் ஸ்க்ரோல்ஸ்* விளங்குகிறது. மேற்கத்திய உலகில் தனது பல்வேறு சைவ மடவாசிகளுக்கு பழங்கால முறைப்படி எவ்வாறு வழிநடத்தத் தொடங்குவது என்று குருதேவா தனக்குள் செய்த வேண்டுதளுக்கு ஒரு பதிலாக, 1973-74 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக வந்த கண்களுக்கு புலப்படாத வெளிப்பாடுகளே *லெமூரியன் ஸ்க்ரோல்ஸ்* வடிவத்தை எடுத்துள்ளது. இதன் மூலம் குருதேவா பல பழங்கால கையெழுத்துப்படிகளை தனது அகக்கண் மூலம் உணர்ந்து அவற்றை படிக்கும் *சித்தியை*, மகாதேவர்களிடம் வரமாக இருந்து பெற்றார். இவற்றை சூட்சும லோகத்தில் இருந்து நூலகர் குருதேவாவிற்கு வழங்கினார். அதனை குருதேவா ஒவ்வொரு வார்த்தையாக படிக்க, ஒரு மடவாசி எழுதிக்கொண்டார். இரண்டு மில்லியன் வருடங்களுக்கு முன்பாக எழுதப்பட்ட இந்த கையெழுத்துப்படிகள், திரேதா மற்றும் துவாபர யுகத்தில் இருந்த சைவ மடவாசிகளின் வாழ்க்கையைப் பற்றி தெரியப்படுத்தியது. இந்த நூல் மற்றும் அதற்கு அடுத்து வந்த படைப்புக்களும், அவர் தனது மடங்களில் நிலைநாட்ட விரும்பிய கலாச்சாரம் மற்றும் நிர்வாக வழக்கத்தை வழங்கியது. இது மட்டும் இல்லாமல், ஆன்மாவை மேலும் வளர்க்கும் நோக்குடன் மனிதன் எவ்வாறு மில்லியன் வருடங்களுக்கு முன்பாக, பிளேயட்ஸ் மற்றும் மற்ற கிரகங்களில் வந்தான் என்பதைப் பற்றிய புதிய தகவலையும் வழங்குகிறது. சுமார் 25 வருடங்களுக்கு *லெமூரியன் ஸ்க்ரோல்ஸ்* புத்தகத்தை காக்கும் பொறுப்பு, குருதேவாவின் மடவாசிகளுக்கு மட்டுமே வழங்கபட்டது. அதன் பிறகு 1998 ஆம் ஆண்டு அது உலகிற்கு வெளியிடப்பட்டது. நேர்த்தியாக விளக்கப்பட்டுள்ள இந்த

தேவதூத தீர்க்கதரிசனங்கள், வாசகருக்கு அவனது தெய்வீக மூலம், நோக்கம் மற்றும் விதி பற்றிய உணர்வை நிறைவாக வழங்கி, ஒருவர் ஆன்மீக வேட்கைக்கு தன்னை மீண்டும் வலுவாக அர்ப்பணித்துக்கொள்ள தேவையான ஆற்றலை தருகிறது.

மரபு சாராத இந்து மதம் (liberal Hinduism): இது புதிய இந்திய மதத்துடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: புதிய இந்து மதம்.

முக்தி (liberation) : *பாசத்தின்* பிடியில் இருந்து விடுபடும் மோக்ஷத்தை குறிக் கிறது. இதன் பிறகு ஆன்மா சம்சாரத்தில் இருந்து முக்தி (பிறப்பு இறப்பின் சுழற்சி) பெறுகிறது. சைவ சித்தாந்தத்தில் *பாசம்* என்பது *ஆணவம்*, கர்மவினை மற்றும் மாயை என்ற மும்மலங்கள் ஆகும். இவை ஆன்மா பக்குவம் அடைவதற்காக, அதை மறுபிறவியின் சுழற்சியில் வரையறுத்து கட்டுப்படுத்துகின்றன. மோக்ஷம் என்பது இந்த மலங்களின் தடை செய்யும் சக்தியில் இருந்து ஆன்மா விடுதலை பெறுவதை குறிக் கிறது. அவை இந்த நிலையில் முற்றிலும் மறையாவிட்டாலும், ஆன்மாவிற்கு தடை விளைவிக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சக்தி இல்லாமல் இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *மலம், மோக்ஷம், பாசம், மறுபிறவி, ஆத்மா ஞானம், ஆன்மா.*

ஒளி (light): பொதுவாக ஒளி என்பது கண்களுக்கு தூல பொருட்கள் தெரிவதற்கு காரணமாக விளங்கும் ஒரு சக்தியின் வடிவம். மதம் சார்ந்த ஆன்மீக கண்ணோட்டத்தில், அது அகத்தில் இருக்கும் பொருட்களை (அதாவது மனதின் பிம்பங்கள்) ஒளிர்விக்கிறது. —**அக ஒளி (inner light):** தலை மற்றும் உடலுக்குள் உணரப்படும் ஒளி. இதில் பல்வேறு செறிவுகள் இருக்கின்றன. *கர்மவினைகள்* போதிய அளவு அமைதி அடைந்த பிறகு, தியானம் செய்பவர் மனதின் பிம்பங்கள் இல்லாமல், அக ஒளியை சுதந்திரமாக ரசிக்க முடிகிறது.

சக்கர காப்பாணி (linchpin): ஒரு மைய அல்லது முக்கிய பாகம்; சக்கரம் கழண்டு வராமல் இருக்க, ஒரு சூழலும் அச்சு அல்லது மற்ற சூழல்தண்டின் முடிவில் ஒரு துவாரத்தில் நுழைக்கப்படும் ஒரு கடையாணி.

பரம்பரை (lineage): மூதாதையர்கள் மற்றும் சந்ததியர்களின் தொடர்ச்சி.

முறையாக அல்லது பரிந்துரைக்கப்பட்ட சடங்கு முறைகள் (liturgy).

loka: लोक “World, habitat, realm, or plane of existence.” லோகம். “உலகம், வாழ்விடம், பிரபஞ்சம் அல்லது உள்பொருள் இருக்கும் பகுதி.” இந்த சொல், “பிரகாசிக்க, கண்ணுக்கு தென்படுகிற,” என்பதை குறிக்கும் *லொச்* என்ற சொல்லில் இருந்து உருவானது. மேலும் தகவலுக்கு: *மூன்று உலகங்கள்.*

லோனோ (Lono): மழை மற்றும் செழிப்பை வழங்க ஹவாய் மக்கள் வழிபடும் பருவநிலை தொடர்பான கடவுள். அந்த மக்களின் நான்கு முக்கிய தெய்வங்களுக்குள் ஒன்றாக விளங்குகிறார். கு, கேன், கனலோ மற்றும் லோனோ என்பவை அந்த தெய்வங்கள். லோனோ நல்ல விளைச்சலை பெறுவதற்கு வணங்கப்படும் கடவுளாகவும் விளங்குகிறார். இவர் இந்து பாரம்பரியத்தில் விநாயகர் என்று பூஜிக்கப்படுகிறார்.

தாமரை மலர் (lotus flower): பெரிய இதழ்கள், நறுமணம், இளஞ்சிவப்பு நிறத்தில் மலர்கள், விசாலமாக வட்டவடிவில் துளைக்கப்பட்ட விதை உறை மற்றும் கொழுத்த வேர்த்தண்டுகளுடன், தெற்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் காணப்படும் ஒரு நீர்த்தாவரம் (நெலம்போ நியூசிஃபெரா).

lotus pose: *Padmāsana.* பத்மாசனம். *ஹட யோகத்தில்* அங்கஸ்திதிகளில் மிகவும் பிரபலமானது மற்றும் தியானம் செய்வதற்கு உகந்த நிலை. இந்த நிலையில் கால்கள் குறுக்காக அமைந்து, கால்களின் அடிப்பகுதி மேற்புறமாக திரும்பி இருக்க, தாமரை இதழ்களை போன்று காட்சி அளிக்கும். மேலும் தகவலுக்கு: *ஆசனம், ஹட யோகம், பத்மாசனம்.*

விழிப்புடன் கனவு காணுதல் (lucid dreaming): ஒருவர் கனவு நிலையில் விழிப்புடன் இருந்து அதை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பயிற்சி.

சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டி (lunar calendar): சூரியனை அடிப்படையாகக் கொள்ளாமல், சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டி. உதாரணத்திற்கு ஒரு மாதம் என்பது ஒரு பௌர்ணமியில் இருந்து அடுத்த பௌர்ணமி வரை அல்லது அமாவாசையில் இருந்து அமாவாசை வரை. இந்தியாவில் சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டியும் சூரியனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டியும் உள்ளது என்றாலும், இன்று சூரியனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டி பரவலாக பயன்படுத்தப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *அயனாம்சம், பஞ்சாங்கம்.*



பேரண்டம் (macrocosm): ““பெரிய உலகம்” அல்லது “பிரபஞ்சம்.” மேலும் தகவலுக்கு: *நுண்ணுலகம்-பேரண்டம், மூன்று உலகங்கள்.*

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் (Madurai Meenakshi citadel): வைகை நதிக்கு அருகில் அமைந்து இருக்கும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில். இதை இந்தியாவின் ஏதன்ஸ் என்று குறிப்பிடலாம். இந்த கோயிலில் சிவனுக்கும் சக்திக்கும் இரண்டு வெவ்வேறு சந்நிதிகள் உள்ளன. ஏழு சுவர்களைக் கொண்ட இந்த கோயிலில் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக நடைபெற்ற வழிபாடு, இதன் உயரமான *கோபுரங்கள்*, ஆயிரம் கால் மண்டபம், பொற்றாமரை குளம் மற்றும் மற்ற சந்நிதிகளில் அதிர்ந்துக்கொண்டு இருக்கின்றன.

காந்த விசையை பெற்ற (magnetized): காந்தத்தன்மையை பெற்ற. ஒரு புனிதமான இடத்தில் உச்சரிக்கப்படும் *மந்திரங்கள்* மற்றும் வேறு சில வழிகள் மூலமாக தோன்றும் ஆன்மீக காந்த சக்தியின் மூலம் சில தூல பொருட்கள் காந்தத்தன்மையை பெறுவதைப் போல.

mahā: महा மகா. இந்த பெயரடை அல்லது முன்னடைக்கு "சிறந்த" என்று பொருள்.

Mahābhārata: महाभारत “Great Epic of India.” மகாபாரதம். உலகின் நீளமான இதிகாசம். இந்த கதை இரு அரச குடும்பங்களான, பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களுக்கு இடையே, கி.மு. 1424 வருடத்தில் டெல்லிக்கு அருகில் குருக்ஷேத்ரம் என்கிற இடத்தில் நடந்த போரை சுற்றி அமைந்துள்ளது. வைணவர்கள் மற்றும் சுமார்த்த சமயத்தை சார்ந்தவர்களால், மகாபாரதம் ஒரு புனித நூலாக மதிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பகவத் கீதை, இதிகாசம்.*

Mahādeva: महादेव “Great shining one;” “God.” மகாதேவர். சிவலோகத்தில் தங்களது இயல்பான, சுயமாக பிரகாசிக்கும் உடல்களில் வாழும் சிவபெருமான் அல்லது உயரிய பக்குவத்தை பெற்ற உயிர் சக்திகளை குறிப்பிடுகிறது. சிவபெருமான் தனது முழுநிறைவான நிலையில் ஆதி ஆன்மாவாக, அந்த மகாதேவர்களில் ஒருவராக இருக்கிறார். இருந்தாலும் அவர் மட்டுமே தான்தோன்றியாக விளங்கி, மற்ற மகாதேவர்களின் தாய்-தந்தை மற்றும் விதியாக இருப்பதால், அவர் தனித்தன்மையுடன் ஒப்பிடமுடியாமல் இருக்கிறார். அவர் “பரமேசுவரன்" என்று அழைக்கப்படுகிறார். அவர் ஆதி ஆன்மாவாக இருக்க, மற்ற தேவர்கள் தனிப்பட்ட ஆன்மாக்களாக இருக்கிறார்கள். முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன. மேலும் தகவலுக்கு: கடவுள்கள், *பரமேசுவரன்*, சிவபெருமான், *தேவ.*

mahāprasthāna: महाप्रस्थान “Great departure.” மகாபிரசுதானம். "இறுதி மகாபயணம்." மரணம். மேலும் தகவலுக்கு: *கூடு விட்டு கூடு பாய்தல்.*

mahārāja: महाराज “Great king.” பேரரசர். மகாராசா. அரசியல் (இன்றைய உலகில்) அல்லது ஆன்மீக தலைவர்களுக்கு மரியாதையுடன் வழங்கப்படும் பட்டம்.

Maharshi (or Maharishi): महर्षि “Great seer.” மகரிஷி. மிகவும் சிறந்த மற்றும் ஆற்றல்மிக்க *சித்தர்களுக்கு* வழங்கப்படும் பட்டம்.

mahāsamādhi: महासमाधि “Great enstasy.” மகாசமாதி. ஒரு மகான், தூல உடலை விட்டு வெளியேறுவதை அல்லது மரணத்தை குறிக்கிறது. இந்த நிகழ்வில் பங்குபெறுவது மிகப்பெரிய வரமாக கருதப்படுகிறது. மேலும் ஒரு மகானின் உடல் கல்லறையில் வைக்கப்படும் புனிதமான இடத்தையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *தகனம், மரணம்.*

Mahāśivarātri: महाशिवरात्रि “Śiva’s great night.” மகாசிவராத்திரி. சைவ சமயத்தை சேர்ந்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும் இந்த விரதம், பிப்ரவரி-மார்ச் மாதத்தில் பௌர்ணமிக்கு முந்தைய நாள் இரவு கொண்டாடப்படுகிறது. அன்று இரவு முழுவதும் விழித்து இருந்து விரதம் இருப்பது மட்டுமில்லாமல் சுலோகம் சொல்வது, பிரார்த்தனை மற்றும் தியானம் செய்வது மற்றும் சிவபெருமானை ஆதிமூலமாகவும் ஆதிஆன்மாவாகவும் வழிபடும் மற்ற வழக்கங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

mahātala: महातल Sixth netherworld. மகாதளம். மனசாட்சி இல்லாமல் இருக்கும் பகுதி. மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

mahā vāsanā daha tantra: महावासनादहतन्त्र “Great purification by fire.” மகா வாசன தாக தந்திரம். "அக்னி பகவான் துணையுடன் அடிமனதை சுத்தம் செய்தல்." மேலும் தகவலுக்கு: *வாசன தாக தந்திர.*

Maheśvara: महेश्वर “Great Lord.” மகேசுவரன். சைவ சித்தாந்தத்தில், பரமேசுவரனுக்கு (ஆதி ஆன்மா) ஐந்து அம்சங்கள் அல்லது உருவங்கள் இருக்கின்றன. அதன் ஒவ்வொரு அம்சமும் இறைவனின் ஐந்து சக்திகளுடன் தொடர்பில் இருக்கின்றன. சிவபெருமானின் மறைக்கும் சக்தியுடன் மகேசுவரனின் சக்தி தொடர்பில் இருக்கிறது. ஆதி ஆன்மா மற்றும் தனிப்பட்ட கடவுளாக இருக்கும் சிவபெருமானை குறிப்பிடுவதற்கு, மகேசுவரன் ஒரு பிரபல பெயராகவும் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *நடராசர், பரமேசுவரன்.*

makimai: மகிமை. ஒருவர் தனது வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை கோயில் அல்லது *ஆசிரமத்திற்கு* தொடர்ந்து வழங்கும் இந்து பழக்கம். பழனி கோயிலை சுற்றி வாழ்ந்த தென்னிந்தியாவின் செட்டியார் சமூகம் *மகிமை* என்று பதினைந்து சதவீதம் அல்லது சுமார் ஆறில் ஒரு பங்கு வழங்கி வந்தனர். இதை இன்று மலேசியாவின் மலக செட்டியார்கள் பின்பற்றி வருகிறார்கள். மேலும் தகவலுக்கு: *தசமாம்சம்.*

mala: मल “Impurity.” மலம். “அசுத்தம்,” பாசம் என்று அழைக்கப்படும் *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* மூன்று மலங்களை, சைவ சமயத்தில் குறிப்பிடப் பயன்படும் ஒரு முக்கியமான சொல். இந்த மலங்கள் ஆன்மாவை கட்டுப்படுத்தி, அது தனது உண்மையான, தெய்வீகத் தன்மையை அறிந்து கொள்வதில் இருந்து தடை செய்கிறது. மேலும் தகவலுக்கு: *ஆணவம், கர்மவினை, முக்தி, மாயை, பாசம்.*

mālā: माला “Garland.” ஜப மாலை. வழக்கமாக ருத்திராட்சம், துளசி, சந்தனம் அல்லது படிகத்தில் செய்த ஜப மாலையை குறிப்பிடுகிறது. மேலும் இது மலர் மாலையையும் குறிப்பிடுகிறது.

malaparipakam: மலபரிபாகம் “Ripening of bonds.” *சகல அவத்தையில்* இரண்டாவதாக இருக்கும் *மருள்* நிலையில், மூன்று மலங்களான *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* ஆகியவற்றை கட்டுப்படுத்திய பிறகு அடையும் நிலை. இந்த தருணத்தில், *திரோதான சக்தியாக* இருக்கும், இறைவனின் மறைக்கும் சக்தி தனது பணியை செய்து முடித்து, அவரது வெளிப்படுத்தும் சக்தியான அனுகிரகத்திற்கு வழிவிட்டு, அருள் பாய்வதை குறிப்பிடும் *சக்தினிபாதத்திற்கு* வழிவகுக்கிறது. மேலும் தகவலுக்கு*: ஆணவம், அனுக்கிரகம், கர்மவினை, மலம், மருள், மாயை, சகல அவத்தை, சக்தினிபாத, திரோதான சக்தி.*

பகிரங்கமான (manifest): காண்பித்தல் அல்லது வெளிப்படுத்துதல். உருவத்துடன் இருப்பதால் புலப்படுகிற அல்லது புரிந்துக்கொள்ளும் படியாக இருக்கிற. வெளிப்படாத அல்லது யாவும் கடந்த என்பதன் எதிர்ச்சொல். மேலும் தகவலுக்கு: *உருவமற்ற.*

maṇipūra chakra: मणिपूरचक्र “Wheel of the jewelled city.” மணிபூரக சக்கரம்: சூரியபின்னலில் இருக்கும் மனஉறுதியின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

mankolam: மாங்கோலம் “Mango design.” பைஸ்லி வடிவில், பகட்டான மாம்பழக்கோலம். இந்த மங்களகரமான கோலம் விநாயகருக்கு உகந்தது.

manomaya kośa: मनोमयकोश மனோமய கோசம். மேலும் தகவலுக்கு: *கோசம்.*

maṇḍapa: मण्डप From *maṇḍ,* “to deck, adorn.” மண்டபம். இது “அலங்கரி” என்பதை குறிக்கும் *மண்ட்* என்ற சொல்லில் இருந்து உருவானது. கோயில் சுற்றுச்சுவர்; கோயில் வளாகம், திறந்த கூடம் அல்லது அறை. ஒரு பெரிய கோயிலில் நுழையும் போது, தொடர்ச்சியான *மண்டபங்களை* கடந்து செல்கிறோம். அதில் ஒவ்வொன்றும் ஒரு பெயரை கொண்டு அமைந்துள்ளது. உதா *முகமண்டபம்*, “கோயிலுக்கு முன்னிருக்கும் மண்டபம்.” சில கோயில்களில், *மண்டபங்கள்* ஒரு பொதுவான மையத்தை சுற்றி அமைந்து இருக்கின்றன.

mānsāhāra: मांसाहार “Meat-eating.” அசைவ உணவு உண்ணுதல்.

mānsāhārī: मांसाहारी “Meat-eater.” அசைவ உணவு உண்பவர். மேலும் தகவலுக்கு: *சைவ உணவு உண்பவர்.*

mantra: मन्त्र “Mystic formula.” மந்திரம். இது பொதுவாக சாத்திரத்தில் இருந்து பெறப்பட்டு, விசேஷமான சக்திகளை கொண்ட ஒரு ஒளி, சொல் அல்லது சொற்றொடர். *பூஜை* செய்யும் போது தெய்வங்களை ஆவாகனம் செய்வதற்கும், ஒரு ஆன்மீக விசைப்பகுதியை உருவாக்குவதற்கும், ஹத் த குரலில் *மந்திரங்கள்* ஓதப்படுகின்றன. *ஜபம்* செய்யும் போது சில *மந்திரங்கள்* மெதுவாக அல்லது மனதில் ஜபிக்கப்படுகின்றன. அதன் நுணுக்கமான தொனிகள் மனதை அமைதிப்படுத்தி, உட்புற கோசங்களில் இணக்கத்தை ஏற்படுத்தி, மறைந்திருக்கும் ஆன்மீக பண்புகளை தூண்டிவிடுகின்றன. இந்துசமயத்தின் பொதுவான *மந்திரமாக ஓம்காரம்* விளங்குகிறது. மிகவும் பயனுள்ளதாக இருக்க, இத்தகைய *மந்திரங்கள்* ஒரு *சத்குரு* தீட்சையின் போது வழங்கவேண்டும். மேலும் தகவலுக்கு: *ஓம், மந்திரங்களின் உச்சரிப்பு, ஜபம், பூஜை, யாகம்.*

Manu Dharma Śāstra: मनुधर्मशास्त्र “Sage Manu’s law book.” மனு தர்ம சாத்திரம். இந்த சாத்திரம் இந்து தர்ம விதிகளை 2,685 சுலோகங்களாக விரிவான முறையில் வழங்குகிறது. இது கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ஒன்று சேர்க்கப்பட்டதாக கருதப்படுகிறது. *வர்ண தர்மம், ஆசிரம தர்மம், ஸ்த்ரீ தர்மத்திற்கு* ஊக்கம் அளித்து, எல்லா உயிர்களிலும் பரமாத்துமாவை காண்பது அதன் முக்கிய அம்சங்களில் அடங்கும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவரது வாழ்க்கையை தளராது நிர்ணயிக்கும் ஜாதி அடிப்படையிலான கட்டுப்பாடுகள் அதில் இருந்தாலும், அது இன்றைய இந்து கலாச்சாரம் மற்றும் விதிக்கு மூலமாக நிலைத்து இருக்கிறது. இந்த "மனுவின் விதிகள்" மிகவும் பழமையானதாகவும், எண்ணற்ற தர்ம சாத்திரங்களில் அதிகாரப்பூர்வமானதாகவும் கருதப்படுகிறது. இந்த உரை இன்று பல

மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மேலும் தகவலுக்கு: *ஜாதி, தர்மம்.*

Manu Saṁhitā: मनु संहिता "Verses of Manu." மனு சம்ஹிதை. *மனு தர்ம சாத்திரங்களை* குறிக்கும் இன்னொரு பெயர்.

mārga: मार्ग "Path; way." From *mārg,* "to seek." மார்க்கம். "நாடுதல்" மேலும் தகவலுக்கு: *பாதம்.*

தாலி (marriage (or wedding) pendant): திருமண விரதங்களை குறிப்பிடும் வண்ணம் இந்து மனைவி கழுத்தில் அணிந்துக்கொள்ளும் ஒரு ஆபரணம். இது சமஸ்கிருதத்தில் *மங்கள சூத்திர* என்று அழைக்கப்படுகிறது. மனைவி அந்த தாலியை தனது கணவனின் பிம்பமாக மதித்து, தான் காலையில் இறைவனை வழிபடும் போது, அதையும் சம்பிரதாய முறைப்படி வணங்குகிறாள்.

marul: மருள் "Confusion." இது *சகல அவத்தையின்* மூன்று நிலைகளில் இரண்டாவது நிலையாக விளங்குகிறது. இந்த நிலையில் உலகம் மற்றும் கடவுளுக்கு இடையே ஆன்மா "சிக்கிக்கொண்டு", தனக்கு சொந்தமான குணத்தின் (*பசு-ஞானம்*) புரிந்துணர்வை நாடுகிறது. மேலும் தகவலுக்கு: *பசு-ஞானம், சகல அவத்தை.*

மேசானிக் லாட்ஜ் (Masonic Lodge): ப்ரீமேசான்களின் குழு அல்லது சமூகம். இடைக்காலத்து கல்தொழிலாளிகளின் ஒழுங்குப்படுத்தப்பட்ட சங்கம். ஆண்கள் மட்டுமே இருந்த இந்த சமூகத்தில் எல்லோரும் சகோதரர்கள் போல வாழ்ந்தார்கள். அவர்கள் மற்ற பிரிவு மக்களைப் போல அல்லாமல், வெவ்வேறு நாடுகளுக்கு சுதந்திரமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். 1700 களில் கல் வேலைகள் குறைந்ததும், இந்த சகோதரத்துவ விடுதிகள், கல்தொழில் செய்யாத மதிப்புறு மேசான்களுக்கு திறந்து வைக்கப்பட்டன. ப்ரீமேசான் சமூகம் ஒழுங்கு நெறிகளை போதித்து, எல்லா மதத்தவர்களையும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்கிறது.

தி மாஸ்டர் கோர்ஸ் (Master Course, The): சிவபெருமானுடன் திருநடனம், இந்து சமயத்தின் தற்கால வினாடிவினா; சிவனோடு வாழ்தல், இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரம்; சிவபெருமானுடன் ஐக்கியமாதல், இந்து சமயத்தின் தற்கால மீமெய்யியல் என்ற தலைப்புக்களில் சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி எழுதிய முத்தொகுப்பை குறிக்கிறது. வருடத்தில் தினமும் படிப்பதற்கு என்று இந்த புத்தகங்கள் 365 பாடங்களை கொண்டுள்ளன. இவற்றை இமாலயன் அகாடமியில் இருந்து தனிப்பட்ட முறையில் அஞ்சல் வழியாக படிக்கலாம். மேலும் தகவலுக்கு: *சிவபெருமானுடன் திருநடனம், சிவபெருமானுடன் ஐக்கியமாதல்.*

சுய இன்பம் (masturbation): செயற்கை சிற்றின்பம். மேலும் தகவலுக்கு: See: *மனத்துறவு, விரயம் செய்தல், ஓஜஸ், தேஜஸ், உருமாற்றம்.*

பொருள்முதல்வாதம் (materialism (materialistic)): பருப்பொருள் மட்டுமே உண்மை என்றும், பருப்பொருள் இயக்கத்தின் விளைவாக சிந்தனை மற்றும் உணர்ச்சிகள் இருக்கின்றன என்றும், தூல உலகைத்தவிர வேறு எந்த

உலகமும் இல்லை என்ற கோட்பாடு. வழக்கமாக லௌகீக வாதிகள் பிரபஞ்சம், லௌகீகத்தை இயக்கும் முதன்மையான சக்தி இருப்பதை ஏற்றுக்கொண்டாலும், கடவுள் தனிப்பட்ட தன்மையுடன் இல்லை என்ற கொள்கையுடன் இருப்பவர்கள். *சார்வாக* என்ற ஒரு பழங்கால இந்திய தத்துவம் இயற்பொருள் வாதத்தை போதித்தது. மேலும் தகவலுக்கு: *நாத்திகம்*, *லௌகீகம்*. .

maṭha: मठ "Monastery." மடம். மேலும் தகவலுக்கு: *மடலாயம்*.

maṭhavāsi: मठवासि "Monastery dweller." மடவாசி. மேலும் தகவலுக்கு: *துறவி*.

mati: मति "Cognition, understanding; conviction." மதி. "அறிவெழுச்சி, புரிதல், நம்பிக்கை." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்*.

maya: मय "Consisting of; made of" மனதால் உருவான "மனோமய" என்பதைப் போல.

māyā: माया "Artfulness," "illusion," "phantom" or "mirific energy." மாயை. "மருட்சி," "கற்பனை தோற்றம்" அல்லது "அற்புதத்தை விளைவிக்கும் சக்தி." சிவபெருமானிடம் இருந்து வெளிப்பட்ட சாரத்தில் இருந்து, வெளிப்பட்ட உருவத்தின் உலகம். அதனால் எல்லா படைப்பும் மாயை என்றும் அழைக்கப்படுகின்றன. இது பிரபஞ்சத்தின் படைக்கும் சக்தியாக, வெளிப்பாட்டின் அடிப்படையாக விளங்கி, தொடர்ந்து ஆக்கல், காத்தல் மற்றும் அழித்தல் என்கிற செயல்முறையில் இருக்கிறது. இந்துசமயத்தில் *மாயை* ஒரு முக்கிய கோட்பாடாக விளங்குகிறது. "இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி; கடவுளின் அற்புதமான சக்தி," என்பதே இதன் முதன்மையான அர்த்தம் ஆகும். மேலும் தகவலுக்கு: *மலம்*, (பொதுவான) *மனம்*.

மாயன் நாகரீகம் (Mayan): தெற்கு மெக்சிகோ, குவாத்தமாலா மற்றும் வடக்கு பிரேசிலில் 3,000 வருடங்களுக்கு முன்பாக சிறந்து விளங்கிய ஒரு மேம்பட்ட நாகரீகம். மாயன் நாகரீகத்தை சேர்ந்தவர்கள் ஜோதிடம், கணிதம் மற்றும் விவசாயத்தில் தேர்ச்சி பெற்று இருந்தார்கள். அவர்கள் கற்களை பயன்படுத்தி மிகப்பெரிய நகரங்கள் மற்றும் கோயில்களை கட்டினார்கள் மற்றும் பல இயற்கை தெய்வங்கள் மீது நம்பிக்கை வைத்து இருந்தார்கள்.

mayil: மயில் "Peacock." மேலும் தகவலுக்கு: *மயூர*.

mayūra: मयूर "Peacock." *(Mayil* in Tamil.) மயில். இது கார்த்திகேயன் அல்லது முருகப்பெருமானின் வாகனமாக விளங்கி, நமது மதத்தின் பிரகாசமான அழகு மற்றும் புகழை சித்தரிப்பதாக இருக்கிறது. நாகப்பாம்பைப் போன்று கொடிய பாம்புகளை கட்டுப்படுத்தும் இதன் இயல்பு, உள்ளுணர்வு இயல்புகள் மீது ஆன்மா ஆதிக்கம் செலுத்துவதை அல்லது *யோகாப்பியாசத்தில் குண்டலினி* சக்தி கட்டுப்படுத்துவதை சித்தரிப்பதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்*.

meditation: *Dhyāna.* தியானம். நீடித்த ஒருமுகச்சிந்தனை. தியானம் என்பது ஒரு அமைதியான, கவனமான, ஆற்றல்நிறைந்த ஒருமுகச்சிந்தனையுடன் இருக்கும் நிலையை குறிப்பிடுகிறது. இந்த நிலையில் சாட்சி ஒரு பொருளின் மீது கவனம் செலுத்துவதால் அல்லது ஒரு குறிப்பிட்ட

சிந்தனையுடன் இருப்பதால், உள்ளத்தில் புதிய அறிவு மற்றும் நுண்ணறிவுகள் விழிப்படைகின்றன. மேலும் தகவலுக்கு: *அக வழிபாடு, இராசயோகம், சச்சிதானந்தம்.*

ஆண்டி (mendicant): ஒரு பிச்சைக்காரன்; சுற்றித்திரியும் துறவி, அல்லது *சாது,* பிறரிடம் யாசித்து வாழ்பவர். மேலும் தகவலுக்கு: *சாது.*

உயிர் துறந்தவர்கள் அல்லது வேற்று உலக அல்லது வேற்று பரிணாம பிரதிநிதியுடன் தொடர்புகொள்ள சாதனமாக விளங்குபவர் (medium). மேலும் தகவலுக்கு: *சூட்சும சக்திகளுடன் தொடர்புகொள்ளும் திறன்.*

சூட்சும சக்திகளுடன் தொடர்புகொள்ளும் திறன் (mediumship): இந்த நிகழ்வின் போது ஒருவர் தனது நினைவை இழக்கிறார் மற்றும் அவர் தனது உடலுக்குள் ஒரு சூட்சும சக்தி அல்லது ஆவி நுழைந்து கட்டுப்படுத்துவதற்கு அனுமதி வழங்குகிறார். இந்த நிகழ்வின் போது வழக்கமாக ஆவிகளுடன் தொடர்புகொள்வதைப் போல, கூட்டத்தில் அமர்ந்து இருப்பவர்களுக்கு வாய்மொழியாக தகவல் வழங்கப்படுகிறது.

மாதவிடாய் நிறுத்தம் (menopause): மாதவிடாய் நிரந்தரமாக நிறுத்தம், பெரும்பாலும் 40 வயதிலிருந்து 55 வயதிற்குள் நடைபெறுகிறது. இந்த காலத்தில் உடலில் உற்பத்தியாகும் பல்வேறு வகை இயக்குநீர்கள் வீழ்ச்சியை சந்திக்கின்றன. இந்த காலத்தில் உடலில் திடீரென்று எரிச்சல் தோன்றுவது, நடுவாழ்க்கையில் ஏற்படும் உளவியல் மாற்றங்களைப் போன்ற அருவருப்பான விளைவுகள் தோன்றி, பல்வேறு உடல்நல பிரச்சனைகள் ஏற்படலாம்.

ஆண்களுக்கு இனப்பெருக்க சுழற்சியில் ஏற்படும் நிறுத்தம் (menopause, male): பெண்களின் மாதவிடாய் போன்றே, ஆண்களும் வாழ்க்கையின் மத்தியில் இனப்பெருக்க சுழற்சியில் நிறுத்தம் ஏற்படுகிறது. இது விராபாஸ் மற்றும் ஆன்றோபாஸ் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த காலகட்டத்தில் உடலியல், வேதியல் மற்றும் இயக்குநீர்கள் தொடர்பான மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக உடலில் டெஸ்டோஸ்டிரோன் உற்பத்தியாகும் அளவு குறைகிறது. இது பெரும்பாலும் நாற்பதுகளின் இறுதியில் அல்லது ஐம்பதுகளின் தொடக்கத்தில் நடைபெறுகிறது. இது பொதுவாக பெண்களைப் போன்று, உயர்ந்த ஆன்மீக நோக்கங்களை நோக்கி ஒடுக்கிக்கொள்ளும் *வானப்ரஸ்த ஆசிரமத்தில்* நடைபெறுகிறது. உடலியல் ரீதியாக முறையான முன்னேற்பாடுகள் இல்லையென்றால், கடினமாக இருக்கும் இந்த காலக்கட்டத்தில் மனநிலை அலைவுகள், உடல் சோர்வு, உளச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை, வாழ்க்கையில் விரக்தி ஆகியவை தோன்றும். மேலும் தகவலுக்கு: *மாதவிடாய் நிறுத்தம்.*

விஞ்ஞானமய கோசம் (mental body (sheath)): "அறிவெழுச்சி கோசம்" இது சூட்சும உடலின் உயர்நிலை மனதின் பகுதியை குறிக்கிறது. இந்த மனதின் பகுதியில் ஆன்மா அந்தர்லோகத்தின் மகரலோகத்தில் செயல்படுகிறது. மேலும் தகவலுக்கு: *கோசம், சூட்சும உடல்.*

மனதின் உலகம் (mental plane): சூட்சும உலகில் இருக்கும் புனிதமான நிலைகளை குறிப்பிடுகிறது. இது அனாஹத *சக்கரத்தின்* லோகம் ஆகும்.

இந்த லோகத்தில் ஆன்மா, *விஞ்ஞானமய கோசம்* எனப்படும் அறிவெழுச்சி கோசத்தில் மூடி மறைக்கப்பட்டு இருக்கிறது.

***சிவபெருமானுடன் ஐக்கியமாதல்** (Merging with Śiva):* இது குருதேவாவின் மாஸ்டர் கோர்ஸ் முத்தொகுப்பில் மூன்றாவது புத்தகம் ஆகும். இந்த புத்தகத்திற்கு, இந்து சமயத்தின் தற்கால மீமெய்யியல் என்று பொருத்தமான துணை தலைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆன்மாவின் மீமெய்யியலை ஆய்வு செய்யும் இந்த புத்தகம், ஞானோதய பாதையில் இருக்கும் சாதகனுக்கு நேரடியாகவும் ஆத்மார்த்தமாகவும் எழுதப்பட்டுள்ளது. குருதேவா 1995 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை, *யோகம்* மற்றும் ஆன்மீகம் பற்றி வழங்கிய அறிவுறுத்தலின் எழுத்து வடிவம் மற்றும் சிறப்பான உரைகள் மற்றும் கட்டுரைகளைக் கொண்டு தினமும் படிப்பதற்கு என்று 365 பாடங்களை கொண்டு அமைந்துள்ளது. இது இறைவன், பதினான்கு *சக்கரங்களின்* மறைஞான உலகம், *யோகப்* பாதை, மனித ஒளி உடல், *கர்மவினை*, விசைப்பகுதிகள், சிந்தனை மற்றும் மனநிலைகள், இரண்டு பாதைகள், தூய வாழ்க்கையை வாழ்தல், அடியுணர்வை சுத்தம் செய்தல் மற்றும் ஆத்ம ஞானம் பற்றி விளக்குகிறது. 1999 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த புத்தகம், அதிலிருக்கும் பாடத்திற்கு ஏற்ப 71 அசல் தென்னிந்திய ஓவியங்களை கொண்டு அமைந்துள்ளது.

மெரிடியன் (meridian): அத்தியாவசிய சக்தி செல்லும் பாதைகள். இது சீன மொழியில் *சீ* என்றும், சமஸ்கிருதத்தில் *பிராண* என்றும், உடல் வழியாக செல்லும் இரத்த ஓட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இது பாரம்பரிய சீன மருத்துவத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. இந்த மெரிடியன் பாதைகள் உள்ளுருப்புக்களை உடலின் பல்வேறு முனைகளுடன் தொடர்புப்படுத்தி, *சீ* மற்றும் இரத்த ஓட்டத்தின் பாதையாக விளங்குகின்றன. அத்துடன் அவை உடலின் மேற்பகுதி/கீழ்ப்பகுதி மற்றும் உட்புறம்/வெளிப்புறம் இருக்கும் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளும் பாதையாகவும் விளங்குகின்றன. முக்கிய மெரிடியன் பாதைகளில் பெரும்பாலானவை ஒரு தூல உறுப்பு மூலம் நுணுக்கமாக நிர்வகிக்கப்படுகின்றன. மனித உடலில் இருக்கும் முக்கிய மெரிடின் பாதைகளின் பட்டியல் பின்வருமாறு: டு மாய் மெரிடியன் (governing vessel), பெருங்குடல், ரென் மாய் மெரிடியன்(conception vessel), இதய உறை, இதயம், வயிறு, சிறுநீரகம், மண்ணீரல், கல்லீரல், நுரையீரல், பித்தப்பை, சிறுநீர்ப்பை, சிறுகுடல் மற்றும் சான் ஜியாவ் ("டர்பில் பர்னர்ஸ்"அல்லது "மூன்று எரியும் பகுதிகள்"). மேலும் தகவலுக்கு: அலகுக்குத்தல், சிர்காடியன் ரிதம்).

மீமெய்யியல் (metaphysics): உண்மைப்பொருளின் இயல்பை ஆய்வு செய்யும் தத்துவம். குறிப்பாக சொல்லவேண்டும் என்றால், தூல புலனுணர்வு உலகை கடந்த அல்லது அறிவுணர்வு அறிவியல் ஆய்வின் மூலம் விசாரிப்பதற்கு சாத்தியம் இல்லாத, உண்மைப்பொருளின் அம்சங்கள்.

மெதாம்பிடாமின் (methamphetamine): இது பெரும்பாலும் சட்டவிரோதமாக ஒரு வினையூக்கியாக பயன்படுத்தப்படும் பொருள். இது அதிக

நக்சுத்தன்மை கொண்ட ஒரு செயற்கை இரசாயனம் ஆகும். இது கிரிஸ்டல் மெத், ஐஸ், மேதடிரின் மற்றும் ஸ்பீட் என்றும் அழைக்கப்படுகிறது. இது இன்று மக்களை போதை பழக்கத்திற்கு ஆளாக்கும் பிரபலமான மற்றும் கொடிய போதை மருந்தாக விளங்குகிறது. மற்ற போதை மருந்துகளை போல அல்லாமல், இதை சராசரி அளவு உட்கொள்வதால் தோன்றும் ஆற்றலின் வேகம் மற்றும் குதூகல உணர்வை, எளிதில் கண்காணிப்பவர்கள் கண்களில் இருந்து மறைத்து விடமுடிகிறது. இந்த போதை மருந்தை தொடர்ந்து தவறாக பயன்படுத்தி வருவதால் ஒருவர் தனது வேலையை தக்க வைத்துக்கொள்ள முடிவதில்லை, குடும்பம் மற்றும் நண்பர்களிடம் இருந்து பிரிகிறார்கள் மற்றும் அவர் தனது பழக்கத்திற்கு தேவைப்படும் பணத்திற்கு வன்முறை, வீட்டில் சண்டை, திருடுதல் மற்றும் மற்ற சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் மற்றும் இரண்டு நாட்களில் இருந்து ஒரு வாரம் வரை தொடர்ந்து தூக்கமின்மையால் ஏற்படும் அவதி, அவர் மூளையை நிரந்தரமாக பாதிக்கிறது. இரகசியமான "மெத்" ஆய்வகங்கள் மிகவும் ஆபத்தானவை. பெரும்பாலும் ஒரு வீட்டில் இரகசியமாக அமைந்து இருக்கும் மெதாம்பிடாமின் ஆய்வங்களில், போதை மருந்து தயாரிப்பிற்கு பயன்படும் இரசாயனங்களின் எளிதில் ஆவியாகும் தன்மை மற்றும் உயிர் பறிக்கும் பண்பு காரணமாக, சந்தேகத்திற்கு இடமான அந்த இடங்களில் காவல்துறையினர் மற்றும் போதைமருந்து தடுப்பு அதிகாரிகள் நுழையும் போது மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அத்தகைய இடங்களில், வழக்கமாக இரசாயனங்கள் வான் வழியே உயிரை அச்சுறுத்தும் அளவில் பரவுகின்றன. அவை குறிப்பாக காலணிகள் மற்றும் ஆடைகளை மாசுபடுத்துவதோடு பெரும்பாலும் திடீர் வெடிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

நுண்ணுலகம்-பேரண்டம் (microcosm-macrocosm): “பெரிய உலகத்தை” ஒப்பிடும் போது “சிறிய உலகம்" அல்லது “மிகச்சிறிய பிரபஞ்சம்.” நுண்ணுலகம் என்பது பெரிதாக அல்லது அதிக வெளிப்புறமாக (பேரண்டம்) இருக்கும் ஒன்றின் உட்புற மூலத்தை குறிப்பிடுகிறது. இந்துசமய அண்டவியலில், உட்புற உலகின் ஒரு பேரண்டமாக வெளிப்புற உலகம் விளங்குகிறது. அந்த உட்புற உலகம் வெளிப்புற உலகின் நுண்ணுலகமாக விளங்கி, தூல பிரபஞ்சத்தை காட்டிலும் சூட்சும ரீதியாக பெரிதாகவும் பல்வேறு பாகங்களுடன் இருந்து, ஒரு உயர்ந்த அதிர்வில் மட்டுமல்லாமல் ஒரு மாறுபட்ட அதிர்வுடனும் இயங்குகிறது. பேரண்டத்திற்கு முன்பாக நுண்ணுலகம் தோன்றுகிறது. இவ்வாறு பூலோகததிற்கு வழிகாட்டும் கோட்பாடு, அந்தர்லோகம் மற்றும் சிவலோகத்தில் இருந்து வருகிறது. தூல உருவத்திற்கு முன்பாக உணர்வு தோன்றுகிறது. *தாந்த்ரீகத்தில்*, தெய்வீக படைப்பு முழுவதற்கும், மனித உடல் நுண்ணுலகமாக கருதப்படுகிறது.

மனம் (ஐந்து நிலைகள்) (mind (five states)): ஐந்து பாகங்களாக இருக்கும் மனதை பற்றிய ஒரு கண்ணோட்டம். –**உணர்வுள்ள மனம்:** *ஜாக்ரத் சித்த* (“விழிப்புள்ள உணர்வு”). பெரும்பாலான நேரங்களில், பெரும்பாலான மனிதர்கள் சாதாரணமாக, விழித்திருந்து சிந்திக்கும் மனநிலை. –**அடிமனம்:** *ஸம்ஸ்கார சித்த* (“பதிவு செய்யும் மனம்”). இது உணர்வுள்ள மனதிற்கு “அடியில்” இருக்கிறது, மற்றும் கடந்தகால பதிவுகள்,

எதிர்வினைகள் மற்றும் ஆசைகள் என்று அனுபவங்கள் அனைத்தையும் (உணர்வுடன் நினைவக்கூர்ந்தாலும் அல்லது நினைவுக்ககூராவிட்டாலும்) பதிவு செய்யும் இடமாக அல்லது சேமிப்புக்கிடங்காக விளங்குகிறது. மேலும், இது தன்னிச்சையான உடலியக்க செய்முறைகளின் இருப்பிடமாகவும் விளங்குகிறது. –**மறைந்திருக்கும் பண்புகள் மனம்:** *வாசன சித்த.* ஒரே அதிர்வு விகிதத்துடன் இருக்கும் இரண்டு சிந்தனைகள் அல்லது அனுபவங்கள் வெவ்வேறு சமயங்களில் அடியுணர்வுக்குள் அனுப்பப்பட்டு, ஒன்றாக கலந்து, புதிய மற்றும் முற்றிலும் மாறுபட்ட அதிர்வுடன் உருவாகும், அடிமனதின் பகுதி ஆகும். அதன் பிறகு நேர்மறையாக, எதிர்மறையாக அல்லது கலவையாக இருக்கும் இந்த சேகரிக்கப்பட்ட அதிர்வுகளுக்கு ஏற்ப, இந்த அடியுணர்வு உருவாக்கம் வெளிப்புற மனதை சூழ்நிலைகளுக்கு எதிர்ச்செயலாற்ற செய்கிறது. –**மெய்ஞ்ஞான மனம்:** *காரண சித்த.* மனதின் ஒளி, ஆன்மாவின் எல்லாம் அறிந்த நுண்ணறிவு. இதை சமஸ்கிருதத்தில் *துரிய* என்ற சொல் குறிப்பிடுகிறது, அதாவது விழித்திருக்கும் நிலை (*ஜாக்ரத்*), "கனவு" (*ஸ்வப்ன*), மற்றும் "ஆழ்ந்த உறக்கம் (*சுஷுப்தி*) என்கிற நிலைகளை கடந்த "நான்காவது" நிலையை குறிப்பிடுகிறது. இந்த ஆழ்ந்த நிலையில் பராசக்தியாக, சிவபெருமானின் தெய்வீக மனமாக இருக்கும் சச்சிதானந்தமாக மெய்ஞ்ஞானம் இருக்கிறது. சமஸ்கிருதத்தில், மெய்ஞ்ஞான நிலையின் பல்வேறு நிலைகள் அல்லது ஸ்திதிகளை குறிப்பிட எண்ணற்ற சொற்கள் உள்ளன. *விஷ்வசைதன்ய* ("பிரபஞ்ச உணர்வு"), *அத்வைத சைதன்ய* ("இருமை இல்லாத உணர்வு"), *ஆத்யாத்ம சேதனா* ("ஆன்மீக உணர்வு") போன்றவை குறிப்பிட்ட சில மெய்ஞ்ஞான நிலைகள் ஆகும். –**துணை மெய்ஞ்ஞான மனம்:** *அணுகரண சித்த.* இந்த மெய்ஞ்ஞான மனம் உணர்வுள்ள மற்றும் அடியுணர்வு நிலைகள் வழியாக செயல்பட்டு இயலுணர்வு, தெளிவு மற்றும் நுண்ணறிவுகளை வெளிக்கொண்டு வருகிறது. மேலும் தகவலுக்கு: *சித்த, உணர்வு, ஸம்ஸ்காரம், சச்சிதானந்தம், வாசன.*

மனம் (மூன்று அம்சங்கள்) (mind (three phases)): மனம் உள்ளுணர்வு, அறிவுணர்வு மற்றும் மெய்ஞ்ஞானமாக இருக்கிறது என்கிற கண்ணோட்டம். —**உள்ளுணர்வு மனம் (instinctive mind)** (*மனஸ் சித்த*): ஆசையின் இருப்பிடமாக இருந்து ஞானேந்திரியங்கள் மற்றும் கர்மேந்திரியங்களை நிர்வகிக்கிறது. —**அறிவுணர்வு மனம் (intellectual mind)** (*புத்தி சித்த*): சிந்தனை மற்றும் நுண்ணறிவும் புலன். —**மெய்ஞ்ஞான மனம் (superconscious mind)** (*காரண சித்த*): இது இயலுணர்வு, இரக்க எண்ணம் மற்றும் ஆன்மீக ஆதாரத்தின் நிலை ஆகும். இதன் மிகவும் புனிதமான சாரமாக எல்லாம் அறிந்து, நீக்கமற இருக்கும் உணர்வாக, யாவும் கடந்து, சுயமாக பிரகாசித்து, எல்லா ஆன்மாக்களுக்கும் தெய்வீக மனமாக இருக்கும் பராசக்தி என்கிற சச்சிதானந்தம் விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: சாட்சி, உணர்வு (*சித்த* அல்லது *சைதன்ய).*

(பொதுவான) மனம் (mind (universal)): மனம் என்ற சொல்லை மிகவும் ஆழமாக ஆய்வு செய்தால், அது நுணுக்கமாக மற்றும் பருமனாக, புனிதமாக மற்றும் சாதாரணமாக இருக்கும் எல்லா பொருட்கள், ஆற்றல்கள் மற்றும்

வெளிப்பாடுகளின் கூட்டுத்தொகை என்பது தெரியவரும். அது உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சம் ஆகும். மனம் என்பது *மாயை* ஆகும். அது லௌகீக அமைப்பாக இருக்கிறது. அது காலம், காரணம், பரவெளியை கடந்து உட்புறமாக இருந்து, ஆத்ம ஞானம் பெற்ற பிறகே ஒருவரால் அறியமுடிகிற அந்த பரமாத்துமா என்கிற பரசிவத்தை தவிர்த்து, மற்ற அனைத்துமாக இருக்கிறது. பரமாத்துமா விளக்க முடியாததாக, பெயரிடமுடியாததாக, முடிவான பரம்பொருளாக இருக்கிறது. மனம் தனது நுணுக்கமான உருவில் வேறுபாடு எதுவும் இல்லாத தூய உணர்வாக, மூலப்பொருளாக (பராசக்தி அல்லது சச்சிதானந்தம்) விளங்குகிறது. அதில் இருந்து சூட்சுமம் மற்றும் லௌகீகம் சார்ந்த இருப்பின் எண்ணற்ற உருவங்கள் வெளிவருகின்றன. மேலும் தகவலுக்கு: *சித்தம், உணர்வு, மாயை.*

Mirabai (Mīrābāī): मीराबाई மீராபாய். ஒரு வைணவ துறவி (கி.பி. 1420), பெண் கவிஞர் மற்றும் ஆன்மீகவாதியாக இருந்தார். ராஜ்புத் இளவரசியாக இருந்த அவர், கிருஷ்ணரிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள துறவறம் பூண்டதாக கூறப்படுகிறது. இவர் இயற்றிய பக்திப் பாடல்கள், குறிப்பாக குஜராத்தில் மிகவும் பிரபலமாக உள்ளன.

காவல்துறை அதிகாரி செய்யும் விசாரணை (Miranda reading): அமெரிக்காவில் சிறைக் காவலில் வைக்கப்படும் நபர், அமைதியாக இருந்து சட்ட ஆலோசனையை பெற வேண்டும் என்று அவருக்கு காவல்துறை அத்தியாவசியமாக, முறையாக, சட்டப்பூர்வமாக வாய் மொழியாக வழங்கும் எச்சரிக்கை.

mitāhāra: मिताहार “Measured eating; moderate appetite.” மிதாகாரம். நல்ல ஆரோக்கியம் மற்றும் *யோகப்பயிற்சியில்* வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமான ஒன்று. உட்குவிந்த இரண்டு கைகளையும் அருகில் வைத்து, அதில் சிறிய கோபுரமாக நிரம்பும் அளவிற்கு மிகாமல் உணவை உண்பது உச்சிதமாக இருக்கும். இந்த அளவு *குடவ* என்று அழைக்கப்படுகிறது. அந்த உணவு அறுசுவையுடன் (துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, மற்றும் உவர்ப்பு), சைவ உணவாக, நன்றாக சமைத்த ஊட்டச்சத்து நிரம்பியதாக இருக்கவேண்டும். மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

moksha: मोक्ष “Liberation.” மோக்ஷம்: "முக்தி." *கர்மவினையை* அனுபவித்து கரைத்ததும் ஆத்ம ஞானம், பரசிவத்தை குறிக்கும் *நிர்விகல்ப சமாதியை* அடைந்த பிறகு *சம்சார* என்கிற பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சி, மறுபிறவியில் இருந்து பெறும் விடுதலையை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: நான்கு பாரம்பரிய இலக்குகள் அல்லது சதுர்வித புருஷார்த்தங்கள், *குண்டலினி, பரசிவம்.*

மடம் (monastery): “Place of solitariness.” இது லெமூரியா காலத்தில் இருந்து இந்தியாவின் இந்து சமய கலாச்சாரத்திற்கு கொண்டு வரப்பட்ட பழங்கால பாரம்பரியம் ஆகும். இந்த பாரம்பரியத்தில், ஒரு புனிதமான இடத்தில் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்கள், தீவிரமான விரதங்களுடன் இருந்து, ஆத்ம

ஞானம் பெறுவதற்காக ஒரு சமூகமாக தங்கள் பிறவி *கர்மவினைகளை* அனுபவிக்கிறார்கள். மடங்களில் பாலியல் சக்திகளின் உருமாற்றத்திற்கு முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு, மனத்துறவு உறுதியாக கடைப்பிடிக்கப்படுகிறது, மற்றும் எதிர்பாலினத்தவருடன் சேருவது அனுமதிக்கப்படுவதில்லை. எதிர்பாலினத்தவருடன் நெருக்கமாக பழகும் போது, கட்டுப்படுத்த முடியாத ஆன்மீக அல்லது *சுஷும்னா* சக் தியில் வாழவேண்டும் என்பதற்காக, ஒரு துறவி ஆண்மை மற்றும் பெண்மை பண்புடைய சக்திகளை (*பிங்களா* மற்றும் *ஈடா*) சமநிலைபடுத்தி ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே மடத்தின் குறிக்கோள் ஆகும். அந்த துறவி, ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், ஒரு புனிதமான ஆன்மாவாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *ஆசிரமம், நாடி.*

துறவி (monastic): ஒரு ஆண் சந்நியாசி அல்லது பெண் சந்நியாசி. லௌகீக வாழ்க்கையில் இருந்து விலகிய ஒரு ஆண் அல்லது பெண், தனியாக அல்லது ஒரு மடத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து ஆச்சாரமான, சமய ஈடுபாடுள்ள வாழ்க்கையை வாழ்வதை குறிக்கிறது. மடத்தில் குடியிருப்பவர் ஒரு *மடவாசி* என்று அழைக்கப்படுகிறார்; சாது என்கிற சொல் ஆண்டி என்கிற சொல்லிற்கு ஓரளவு சமமானதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *மடம், துறவி, சந்நியாசின்.*

அத்வைதம் (monism): “ஒருமை பற்றிய கோட்பாடு.” 1) ஒரே ஒரு பரம்பொருள் அல்லது தத்துவம் மட்டுமே இருக்கிறது என்கிற தத்துவ ஞானக் கண்ணோட்டம். 2) உண்மைப்பொருள் என்பது தனித்தனி பாகங்கள் இல்லாத ஒரு ஒருங்கிணைந்த முழுமை என்கிற கண்ணோட்டம். மேலும் தகவலுக்கு: *துவைதம்-அத்வைதம்.*

monistic theism: Advaita Īśvaravāda. ஒருமைவாத இறை நம்பிக்கை அல்லது அத்வைத ஈசுவரவாதம். ஒருமைவாத கோட்பாட்டில், உண்மைப்பொருள் என்பது தனித்தனி பாகங்கள் இல்லாத ஒரு முழுமையாக அல்லது உள்பொருளாக இருக்கிறது. கடவுள் ஒரு உண்மையான, உணர்வுள்ள, தனிப்பட்ட பரமாத்துமாவாக இருக்கிறார் என்பதே கடவுள் நம்பிக்கை ஆகும். ஒருமைவாத இறை நம்பிக்கை என்பது இருத்துருவ கோட்பாடு ஆகும். ஒருமைவாத கடவுள் நம்பிக்கை என்பது இரண்டு முரணான அல்லது ஒன்றையொன்று விலக்கும் பண்புடைய கண்ணோட்டங்களை தழுவியுள்ளது. அத்துடன் ஒருமைவாத கடவுள் நமபிக்கையானது கடவுள் ஒரு தனி உருவை கொண்டிருக்கிறார் என்றும் அவர் படைத்து, எங்கும் வியாபித்து, பிரபஞ்ச உள்பொருள் எல்லாமாக இருக்கிறார்–மற்றும் இறுதியில் அவர் எல்லா உள்பொருளையும் கடந்து இருக்கிறார் மற்றும் அடிப்படையில் ஆன்மா இறைவனுடன் ஒன்றாக இருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்கிறது. அத்வைத சித்தாந்தம் (ஒருமைவாத சைவ சித்தாந்தம், அல்லது அத்வைத ஈசுவரவாத சைவ சித்தாந்தம்) என்பது ஒருமைவாத கடவுள் நம்பிக்கையின் ஒரு குறிப்பிட்ட வடிவமாகும். மேலும் தகவலுக்கு: *அத்வைதம், அத்வைத ஈசுவரவாதம், துவைத்த-அத்வைத.*

துறவி (monk): ஒரு பிரம்மச்சாரி சமய ஈடுபாடுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பபணித்து, ஒரு மடத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து மடத்துறவியாக அல்லது தனியாக ஒரு துறவியாக அல்லது ஒரு ஆண்டியாக வாழ்கிறார். மேலும் தகவலுக்கு: *துறவி, சந்நியாசின்.*

மோர்ஸ் வாலண்டரியா ரிலீஜியசா (mors voluntaria religiosa): இது இந்து மதத்தின் *ப்ரயோபவேசத்தை* குறிக்கும் லத்தீன சொல். தங்களது தூல வாழ்க்கையின் முடிவு நெருங்கி வருவதை அறிந்த முதியவர்கள், தங்கள் சமூக மற்றும் மதத்தலைவர்களின் ஒப்புதலைப் பெற்று, சுய விருப்பத்துடன் விரதமிருந்து, அமைதியாக மற்றும் மெதுவாக உயிர் துறப்பதை குறிக்கிறது.

கொடும் பாவம் (mortal sin): நமக்கு கிடைத்த இந்த ஒரேயொரு பிறவியில், ஒரு வரம்பு மீறலுக்கு பரிகாரம் செய்யவில்லை என்றால், அது தெய்வ ஆணையை மீறியதாக கருதப்பட்டு, அது அந்த ஆன்மா இறைவனை நெருங்குவதற்கு ஒரு நிரந்தர தடையாக விளங்குகிறது. பெரும்பாலான கிறித்துவ மதப்பிரிவுகள் மற்றும் இசுலாம் மற்றும் மரபுசாரா யூத மதம், கொடும் பாவமானது அதை செய்தவனுக்கு நிரந்தர தண்டனையை தானாக வழங்குவதை தவிர்க்க முடியாது என்று கருதுகின்றன. மேலும் தகவலுக்கு: *பாவம்*.

கைலாய மலை (Mount Kailas): இமய மலைத்தொடரில் இருக்கும் மிகவும் பிரபலமான மலைகளில் ஒன்று. மேலும் தகவலுக்கு: *கைலாயம்*.

மவுண்ட் தமல்பைஸ் (Mount Tamalpais): சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியாவிற்கு அருகில் மரின் கவுண்டியில் இருக்கும் ஒரு அற்புதமான மலை. விஷேசமான சக்தியை கொண்ட இந்த இடம், கலிபோர்னியாவில் இருக்கும் மிகவும் சிறப்பான காட்சி கோணங்களுடன் அருமையான நீண்ட நடைப்பயணங்களை வழங்குகிறது.

mṛidaṅga: मृदङ्ग (Tamil: *mṛidaṅgam*) மிருதங்கம். தென்னிந்தியாவில் பயன்படுத்தப்படும் ஒரு வாத்தியம்.

mukti: मुक्ति “Release.” முக்தி. *மோக்ஷம்* என்பதை குறிக்கும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *மோக்ஷம்*.

mūlādhāra chakra: मूलाधारचक्र “Root-support wheel.” *மூலாதார சக்கரம்*. நான்கு இதழ்களுடன், முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் இருக்கும் சூட்சுமமான மையம்; இது நினைவாற்றலை நிர்வாகம் செய்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்*.

முமியா (mumia): கரிம பொருட்கள் மற்றும் உயிரினங்களிடம் இருந்து பிராண சக்தியின் ஒடுக்கம் அல்லது அவற்றை அழிக்கும் சக்தி. உதாரணத்திற்கு காய்கறிகளை பறித்ததும், அதில் *முமியா* என்கிற அழிக்கும் சக்தி செயல்படத் தொடங்குகிறது. அதனால் *முமியா* சக் தி வலுவடைவதற்கு முன்பாக, உணவை பறித்ததும் சமைத்து சாப்பிட்டு விடவேண்டும். உயிரணுக்கள் அழிவிற்கு காரணமாக விளங்கும் *முமியா*, ஒரு தூய்மையற்ற சக்தி ஆகும். அழிந்துக்கொண்டு இருக்கும் உணவை தொடர்ந்து சாப்பிடுவதால், உடலும் மனமும் சோர்வடைகிறது.

Muṇḍaka Upanishad: मुण्डक उपनिषद् முண்டக உபநிடதம்: இது அதர்வண வேதத்தின் அங்கமாக இருக்கிறது மற்றும் இது வேதங்களின் அறிவுபூர்வமான விசாரம் மற்றும் அதன் துணை உரைகள் மற்றும் இறைவனை அறியும் இயலுணர்வு அறிவுக்கு இடையேயான வேறுபாட்டை போதிக்கிறது.

சாதாரணமான (mundane): சொர்க்க லோகம் அல்லது ஆன்மீகம் சாராமல், லௌகீகம் சார்ந்த. வழக்கமான.

Murugan: முருகன் “Beautiful one.” தென்னிந்தியா, இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இடத்தில் பிரபலமாக இருக்கும் கார்திகேயனின் பெயர். மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்*.

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகள் (Murugan’s South Indian abodes): முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளின் வரிசைப் பட்டியல்: திருப்பரங்குன்றம், பரம்பொருள் குன்று வடிவாக இருக்கும் இடம்; திருச்செந்தூர், இந்த இடத்தில் முருகன் சூரபத்மனை வெற்றிக்கொண்டதால் இது திருசெயிந்திபுரம் என்றும் அதுவே பின்னர் தெருச்செந்தூர் என்றும் பெயர் பெற்றது; பழனி மலை, இது முன்பு பன்றி மலை என்று அழைக்கப்பட்டு தற்போது பழனி மலை என்று பெயர் பெற்றுள்ளது; சுவாமிமலை, குமர குருவின் இருப்பிடம்; திருத்தணி, முருகப்பெருமான் வள்ளியை மணக்க வேடர்களுடன் விளையாட்டாக போர் புரிந்து கோபம் தணிந்து அமைதியாக அமர்ந்த இடம்; பழமுதிர்ச்சோலை, சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று ஔவையாரின் அறிவுக்கு சுட்டிக்காட்டிய இடம்.

mūshika: मूषिक From *mūsh,* “to steal.” *மூஷிக*: மூஞ்சூறு. இந்த விநாயகரின் வாகனம் எப்போதும் செழிப்புடன் தொடர்புடையதாக இருக்கிறது. மனதில் இருக்கும் ஒவ்வொரு மூலைக்கும், மூஞ்சூறு விநாயகரின் அருளை சுமந்து செல்வதாக ஐதீகம். மேலும் தகவலுக்கு: *விநாயகர்*.

சூட்சும ஞானி, சூட்சும ஞானம் சார்ந்த (mystic): மதம் தொடர்பான மர்மங்கள் மற்றும் மறைஞான சடங்குகள் மற்றும் பயிற்சிகளை அறிந்து இருப்பவர். மர்மம் மற்றும் வியப்பின் உணர்வை தூண்டுகிற.

சூட்சும ஞானம் (mysticism): ஆன்மீகம்; நேரடியாக ஆன்மீகம் அல்லது சமயம் சார்ந்த அனுபவத்தை நாடுதல். ஆழ்ந்த தியானம் அல்லது நினைவை இழந்த தாரணையின் மூலம் முடிவான பரம்பொருள் அல்லது கடவுளுடன் ஒன்று சேர்வதை குறிக்கோளாகக் கொண்ட ஆன்மீகக் கட்டுப்பாடு. அறிவுணர்வு செய்முறைகளை முடிவான புரிதல் கடந்து இருக்கிறது மற்றும் அதை ஆழ்நிலை மூலம் அடையமுடியும் என்கிற நம்பிக்கையை, இது தனது பண்பாக கொண்டிருக்கிறது. மேலும் தகவலுக்கு: *கட்புலனுக்கு அப்பாற்பட்டதை பார்க்கும் மற்றும் கேட்கும் திறன், சூட்சுமமான, நினைவு இழந்த நிலை.*

***nāḍī:*** नाडी “Conduit;” “river.” *நாடி*. இது மனித உடலில் இருக்கும் ஒரு நரம்பு இழை அல்லது நுணுக்கமான (உட்புற) உடல்களில் இருக்கும் சக்தியின் பாதை ஆகும். 72,000 *நாடிகள்* இருப்பதாக கருதப்படுகிறது. இவை சக்கரங்களை

ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்துகின்றன. *இடா, பிங்களா* மற்றும் *சுஷும்னா* ஆகியவை மூன்று முக்கிய *நாடிகள்* ஆகும். —***(இடா) iḍā:*** இது *சந்திர நாடி* என்றும் அழைக்கப்படுகிறது. இது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கிறது. இது கீழ்நோக்கி பாய்ந்து சென்று, உடலின் இடது பகுதியில் நிறைவடைகிறது. இந்த ஓட்டம் பெண்மையின் பண்புடன் இருக்கிறது மற்றும் இது தூல உணர்ச்சி சக்தியின் பாதையாக இருக்கிறது. —***(பிங்கலா) piṅgaḷā:*** இது *சூரிய நாடி* என்றும் அழைக்கப்படுகிறது. இது நீல நிறத்தில் இருக்கிறது. இது மேல் நோக்கி சென்று, உடலின் வலது புறத்தில் நிறைவடைகிறது. இந்த ஓட்டம் ஆணின் இயல்புடன் அறிவுணர்வு மற்றும் மனதின் சக்தி செல்லும் பாதையாக இருக்கிறது. —***(சுஷும்னா) sushumṇā:*** இது வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கிறது. இது முக்கிய நரம்பு ஓட்டமாக விளங்கி, அடிப்பகுதியில் இருக்கும் *மூலாதார சக்கரத்தில்* தொடங்கி உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரம்* வரை முதுகுத்தண்டு வழியாக பாய்ந்து செல்கிறது. இது குண்டலினி சக்தியின் பாதையாக விளங்குகிறது. *மூலாதாரத்தில்* செயலற்று இருக்கும் *குண்டலினி சக்தி யோகத்தின்* மூலம் விழிப்படைந்து, அது இந்த பாதையில் *சஹஸ்ரஹார சக்கரம்* வரை ஒவ்வொரு *சக்கரம்* வழியாக எழுச்சி பெறுகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், குண்டலினி, இராச யோகம்.*

nāga: नाग "Snake" நாகம். பெரும்பாலும் நாகப்பாம்பை குறிப்பிடுகிறது; *மூலாதார சக்கரத்தின்* நான்கு இதழ்களில் சுருண்டு இருக்கும் குண்டலினியின் சின்னமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, மூலாதார சக்கரம்.*

nakshatra: नक्षत्र "Star cluster." நட்சத்திரம். ஜோதிட கணிப்புக்களுக்கு மையமாக இருக்கும் நட்சத்திரங்கள் 27 விண்மீன் குழுக்களாக, பெருவட்டம் அல்லது சூரிய பாதையில் அமைந்து இருக்கின்றன. ஒருவரின் ஜென்ம நட்சத்திரம், அவர் பிறந்த சமயத்தில் சந்திரனுடன் பொருந்தி இருந்த விண்மீன் குழுவை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *ஜோதிடம்.*

Namaḥ Śivāya: नमः शिवाय "Adoration (homage) to Śiva." நமச்சிவாய. சைவ சமயத்தின் முக்கிய மந்திரமாக விளங்குகிறது, இது *பஞ்சாட்சரம்* அல்லது "ஐந்து அட்சரங்கள்," என்று அழைக்கப்படுகிறது. *ந* என்பது இறைவனின் மறைக்கும் சக்தி; *ம* என்பது உலகம்; *சி* என்பது சிவன்; *வா* என்பது வெளிப்படுத்தும் சக்தி; *ய* என்பது ஆன்மாவை குறிப்பிடுகிறது. இந்த அட்சரங்கள் தூல உடலையும் குறிப்பிடுகிறது: *ந* என்பது கால்கள், *ம* என்பது வயிறு, *சி* என்பது தோள்கள், *வா* என்பது வாய் மற்றும் *ய* என்பது கண்களை குறிப்பிடுகிறது. இந்த மந்திரம் சைவ சித்தாந்தத்தின் சாரத்தை வெளிப்படுத்தி, மையத்தில் இருக்கும் வேதத்தின் (*யஜுர்*) மையத்தில் காணப்படுகிறது. ¶ந-ம-சி -வா-ய இரண்டாவது முறை தோன்றும் போது, அதனோடு தொடர்புடையதாக விளங்கும் சிவபெருமானின் ஐந்து தொழில்கள், நடராசரின் அங்கஸ்திதிகளில் பின்வருமாறு பிரதிபலிக்கின்றன. *ந* என்பது *சம்ஹாரம்*, அழிவை அல்லது கலைத்தலை குறிப்பிடுகிறது, மற்றும் அவர் கையில் இருக்கும் அக்னி அதனுடன் தொடர்புடையதாக இருக்கிறது. *ம* என்பது அவரது மறைக்கும் சக்தியான *திரோதான சக்தியை* குறிப்பிடுகிறது, மற்றும் அது நடராசரின் ஊன்றிய

திருவடி மூலம் சித்தரிக்கப்பட்டுள்ளது. *வா* என்பது வெளிப்படுத்தும் சக்தியான *அனுக்கிரக சக்தியை* குறிப்பிடுகிறது. இதன் மூலம் ஆன்மாக்கள் அவரிடம் திரும்புகின்றன. இது வெளிப்படுத்தும் சக்தியின் மூலமாக இருக்கும் அவரது இடது காலை *கஜஹஸ்த* என்கிற யானையின் துதிக்கை தோரணையில் சுட்டிக்காட்டும் இடதுபுற முன்பக்க கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. *சி* என்பது *சிருஷ்டி*, படைத்தலை குறிக்கிறது, மற்றும் இது சிவபெருமானின் பின்பக்க வலது கையில் இருக்கும் உடுக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. *ய* என்பது சிவபெருமானின் *ஸ்திதி* என்கிற பராமரித்து பாதுகாக்கும் சக்தியை குறிக் கிறது. இதை *அபய*, "பயம் வேண்டாம்" என்று சுட்டிக்காட்டும் அவரது கையின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. ¶ந-ம-சி -வா-ய பஞ்ச பூதங்களையும் குறிப்பிடுகிறது; *ந* என்பது பூமி, *ம* என்பது நீர்; *சி* என்பது நெருப்பு; *வா* என்பது காற்று; *ய* என்பது *ஆகாசத்தை* குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மந்திரம், ஜபம்.*

nāmakaraṇa: नामकरण "Name giving." நாமகரணம். மேலும் தகவலுக்கு: *குழந்தைப்பருவ சம்ஸ்க்காரங்கள்.*

namaskāra: नमस्कार "Reverent salutations." நமஸ்காரம். இது பாரம்பரிய முறைப்படி கைகளை ஒன்றாக குவிக்கும் *அஞ்சலி* முத்திரையுடன், வாழ்த்துக்களை தெரிவிப்பது ஆகும். அவ்வாறு வணக்கம் செலுத்தும் போது, கைகள் இதயத்தின் அருகே அல்லது நெற்றி உயரத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கும். இந்த தெய்வீக முத்திரை கோயிலில் இருக்கும் தெய்வம், தெய்வீக புருஷர், நண்பர் அல்லது தற்காலிக நண்பருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

namaste: नमस्ते "Reverent salutations to you." நமஸ்தே. இது ஒரு வழக்கமான வாய்மொழி வாழ்த்து ஆகும். இது ஒரு *நமஸ்* ஆகும். இதன் பொருள் "தலை வணங்குவது, மரியாதை செலுத்துவது." மேலும் தகவலுக்கு: *நமஸ்காரம்.*

Nandi: नन्दि "The joyful." நந்தி. "மகிழ்ச்சி." சிவபெருமானின் வாகனமாக விளங்கும் இந்த நந்தி, ஒரு கருப்பு வாலுடன் இருக்கும் வெள்ளை நிற காளை மாடு. இது சிவபெருமானால் கட்டுப்படுத்தப்பட்ட வலுவான உள்ளுணர்வு சக்தியின் சின்னம் ஆகும். நந்தி ஒரு முழுமையான பக்தனாக, மனிதனின் ஆன்மாவாக விளங்கி, சிவபெருமானின் முன்பாக மண்டியிட்டு, அவர் மீது தனது கவனத்தை நிரந்தரமாக ஒருங்கிணைத்துக் கொண்டுள்ளது. அனைத்திலும் சிவபெருமானை காண்பதே, ஒரு *சிவபக்தனின்* குறிக்கோள் மற்றும் இலக்காகும்.

Nandinatha, Maharishi: नन्दिनाथ महर्षि (ca 250 BCE) நந்திநாத மகரிஷி. நந்திகேஷ்வரரின் இன்னொரு பெயர். இவர் நந்திநாத சம்பிரதாயத்தின் முக்கிய பிரவாகமாக இருக்கும் *கைலாச பரம்பரையின்* முதல் *சித்த சத்குரு* ஆவார். இவர் பதஞ்சலி, வ்யாகிறபாதா மற்றும் வசிஷ்டரின் ஆசிரியர் என்று பாணினியின் இலக்கண புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பரம்பரையின் இன்றைய பிரதிநிதிகளாக *சத்குரு* சிவாய சுப்பிரமுனியசுவாமி (1927-2001) மற்றும் அவருக்கு பின் வந்த *சத்குரு* போதிநாத வேலன்சுவாமி (1942-) உள்ளனர். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத சம்பிரதாயம்.*

Nandinātha Sampradāya: नन्दिनाथसंप्रदाय நந்திநாத சம்பிரதாயம். மேலும் தகவலுக்கு: *நாத சம்பிரதாயம்*.

Naraka: नरक. நரகம். இருண்ட உலகம். “மனிதன் சம்பந்தப்பட்ட,” என்பது இதன் பொருள். நரக லோகங்கள். இது மேற்கத்திய நாடுகளின் *ஹெல்* என்ற சொல்லுக்கு சமமானதாக, அந்தர்லோகத்தில் பருமனான பகுதியாக விளங்குகிறது. அரக்கர்கள் மற்றும் இளைய ஆன்மாக்கள் தாங்கள் உருவாக்கிய இருண்ட *கர்மவினைகளுக்கு* தீர்வு காணும் வரை, அவர்கள் தற்காலிகமாக தங்கும் இடமாக விளங்கும் *நரகலோகம்*, ஒரு நெரிசலான மற்றும் வேதனைகள் நிறைந்த இடமாக இருக்கிறது. இங்கே தாங்கள் முற்பிறவியில் செய்த தவறுகளுக்கு, உயிர்சக்திகள் வேதனையை அனுபவிக்கிறார்கள். *தளம்* என்று அழைக்கப்படும் *நரகலோகம்*, ஏழு கீழ்நிலை *சக்கரங்களின்* உணர்வுடன் தொடர்புடைய ஏழு பகுதிகளை கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. அவை வேதனை, வலி, இருள், குழப்பம் மற்றும் வியாதியின் இடங்களாக விளக்கப்பட்டு இருந்தாலும், இவை பக்குவம் அடையும் ஆன்மாக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களாக விளங்குகின்றன. இந்து சமயத்தில் முடிவில்லாத *நரகம்* என்ற கோட்பாடு எதுவும் இல்லை. மேலும் தகவலுக்கு: *அசுரன்*, *நரகம்*.

Naṭarāja: नटराज “King of Dance,” or “King of Dancers.” நடராசர். “நடனத்தின் அரசன்". பிரபஞ்ச நடனம் ஆடும் கடவுள். இந்து சமயத்தின் மிகவும் செழிப்பான மற்றும் தெளிவான சின்னமாக இருக்கும் நடராசர், இருப்பு அனைத்திலும் ஆற்றல், சக்தி மற்றும் உயிராக இருக்கும் ஆதி ஆன்மா, பரமேசுவரனின் உருவிலுள்ள சிவபெருமானை பிரதிநிதித்துவம் செய்கிறார். இது சிவபெருமானிடம் இருந்து வெளிப்படும் மிகமுக்கிய தெய்வீக தன்மையின் நுணுக்கமான நிலையாக இருக்கிறது. நடனத்தின் தலைவனாக விளங்கும் நடேசன் உருவில் சிவபெருமான் ஆடும் நடனம், பிரபஞ்சம் முழுவதும் லயத்துடன் மேற்கொள்ளும் இயக்கமாக விளங்குகிறது. உயிருள்ளதாக மற்றும் உயிரற்றதாக இருக்கும் அனைத்தும், அவரது உடலில் துடிக்கிறது, மற்றும் அவர் அதனுள் வாசம் செய்கிறார். சிவன்-சக்தியின் பிரிக்க முடியாத இயல்பின் சின்னமாக, “பாதி-பெண் கடவுளாக,” இருக்கும் அர்த்தநாரீஸ்வரரில் இருப்பதை போல, இந்த உருவத்தில் ஆண் மற்றும் பெண்ணின் பண்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. மேலும் தகவலுக்கு: *நமச்சிவாய*, *பராசக்தி பரமேசுவரன்*, *பராசக்தி*, *பரசிவம்*.

Natchintanai: நற்சிந்தனை. சத்குருவின் சக்தி, சிவபெருமானின் வழிபாடு, தார்மீக பாதையை கடைப்பிடிப்பது மற்றும் ஆத்ம ஞானம் அடைவதை பற்றி இலங்கை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவயோக சுவாமி (1872-1964) இயற்றிய கீர்த்தனைகளின் தொகுப்பு. மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை*, *யோகசுவாமி*.

Nātha: नाथ “Master, lord; adept.” *நாத*. “இறைவன்; வல்லுநர்.” இது சைவ-யோக சூட்சும ஞானத்தின் பழங்கால இமாலய பரம்பரையை குறிக்கிறது. வரலாற்று குறிப்பின் படி, இந்த பரம்பரையின் முதல் பிரதிநிதியாக நந்திகேசவன் (கி.மு. 250) விளங்கினார். *நாத*–ஆத்மஞானம் பெற்ற வல்லுநர்–இந்த பிரிவுக்கு மிகச்சிறந்த சந்நியாசி ஆசிரியர்களை (அல்லது

பக்தர்களை) நியமித்தார், மற்றும் அவர்கள் *சித்த யோகத்தின்* மூலம் மிகப்பெரிய சக்திகள், சித்திகளை பெற்று, சிலசமயங்களில் *சித்த யோகிகள்* (நன்கு பயிற்சி பெற்ற அல்லது முழுமையாக ஞானோதயம் பெற்றவர்கள்) என்று அழைக்கப்படுகின்றனர். இத்தகைய உயிர்சக்திகளின் உரைகள், அவர்களது சீடர்களின் ஆன்மாவில் ஊடுருவி, சூட்சும ஞான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றன. எல்லா *தாந்த்ரீகர்களை* போல, நாதர்கள் தங்களது ஆன்மீக வேட்கையில் சாதி பாகுபாடுகளை அங்கீகரிக்க மறுத்துள்ளனர். அவர்களது சத்குருமார்கள், சமூகத்தின் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்து மிகவும் உயர்ந்த நிலை வரை இருக்கும் சீடர்களை, அவர்களது ஆன்மீக தகுதிக்கேற்ப தீட்சை வழங்குகிறார்கள். *நாத சம்பிரதாயத்திற்கு நாதர்* ஒரு தொண்டரையும் நியமிக்கிறார். *ஹட* மற்றும் *இராச யோக* தோற்றத்திற்கு நாதர்கள் மூலமாக கருதப்படுகிறார்கள். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத சம்பிரதாயம்.*

Nātha Sampradāya: नाथसंप्रदाय "Traditional doctrine of the masters." *நாத சம்பிரதாயம். சம்பிரதாயம்* என்பது பாரம்பரியம் அல்லது இறையியலின் ஒரு துடிப்புணர்வுள்ள பிரவாகத்தை குறிப்பிடுகிறது. சைவ சமயத்தின் ஒரு தத்துவ ஞான மற்றும் *யோக* பாரம்பரியமாக *நாத சம்பிரதாயம்* விளங்குகிறது, மற்றும் இதன் தொடக்கத்தைப் பற்றி தெளிவான தகவல் எதுவும் இல்லை. தற்போது இருக்கும் சைவ சம்பிரதாயங்களில் மிகவும் பழமையான இந்த சம்பிரதாயத்தில், நந்திநாத மற்றும் ஆதிநாத என்று இரண்டு முக்கிய பிரிவுகள் உள்ளன. நந்திநாத சம்பிரதாயத்தில் மஹரிஷி நந்திநாத மற்றும் அவரது சீடர்களான பதஞ்சலி (*யோக சூத்திரங்களை* எழுதியவர்) மற்றும் திருமூலர் (*திருமந்திரத்தை* எழுதியவர்) போன்ற பிரதிநிதிகள் இருந்துள்ளனர். கைலாச பரம்பரையின் வரிசையில் வந்த *சித்தர்கள்*, அதன் இன்றைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். ஆதீநாத வம்சத்தில், மிகவும் பிரபலமான பிரதிநிதிகளாக மகரிஷி ஆதிநாதா, மத்ஸ்யேன்திரநாதா மற்றும் கோரக்ஷநாதா விளங்குகின்றனர். அவர்கள் *யோகிகளின்* மிகவும் பிரபலமான சமூகத்தை உருவாக்கியுள்ளார்கள். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, நாத, சைவ சமயம், சம்பிரதாயம்.*

Nayanar: நாயனார் "One who shows the way." 63 சைவ அடியார்கள்/தமிழ் நாயனார்கள்/நாயன்மார்கள் இருந்ததாக சேக்கிழார் (கி.பி.1140) எழுதிய பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இவர்களில் சிலர் இல்லறத்தில் ஈடுபட்டு இருந்தார்கள், மற்றும் இவர்கள் சிவபெருமான் மீது இருந்த அதீத பக்தியின் காரணமாக கௌரவிக்கப்பட்டவர்கள், மற்றும் அவர்களது சுயசரிதை முழு நிறைவாக இல்லை. அவர்களில் சிலரது நடவடிக்கைகள் வன்முறை கலந்து, மிகவும் கொடூரமாகவும் இருந்துள்ளது. அவர்களில் பலர் சைவ சித்தாந்த நூல்களின் தொகுப்பான *திருமுறையில்* முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

எதிர்மறை பற்று (negative attachment): ஒரு தனிப்பட்ட ஆன்மீக ஜீவர் சக்தியாக புரிந்துணர்வு மூலம் ஒவ்வொரு அனுபவத்தையும் எதிர்கொண்டு, "வாழ்க்கை என்கிற நதியுடன் பாய்ந்து சென்று," தற்காலத்தில் முழுமையாக வாழ்வதை தடுப்பதற்கு காரணமாக விளங்கும்,

எதிர்காலம் பற்றிய ஒரு அச்சம், கவலை அல்லது சந்தேகம் அல்லது நிலைத்து இருக்கும் ஒரு கடந்தகால வருத்தம்.

ஜவஹர்லால் நேரு (Nehru, Jawaharlal): நேரு (1889-1964) அலகாபாத்தில் பிறந்து, ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார். அவர் மகாத்மா காந்தி மற்றும் வேறு பல தலைவர்களுடன் சேர்ந்து, இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார். ஆகஸ்ட் 1947, இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து தனி நாடான பிறகு, அவர் இந்தியாவின் முதல் பிரதமராக பதவி ஏற்றார்.

நியோ (neo): புதிய மற்றும் மாறுபட்ட என்று பொருள்படும் சொற்களுக்கு முன்னடையாக இருப்பது; மாற்றி அமைக்கப்பட்ட.

neo-Indian religion: *Navabhārata Dharma.புதிய இந்திய தர்மம்.* உடை, உணவு மற்றும் கலைகள் போன்று அடிப்படை இந்து கலாச்சார பண்புகளை பின்பற்றி, மதசார்புள்ள பண்புகள் மெதுவாக மறைவதற்கு துணை புரியும் மரபுசாரா இந்து மதத்தின் புதிய வடிவம். இது ஆங்கிலேய ஆட்சிக்கு பிறகு, இந்தியா தன்னை சுதந்திரமான மதசார்பற்ற நாடாக அறிவித்த போது தோன்றியது. இது ஆங்கிலேயர்கள் மூலம் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, இந்து சிந்தனை மற்றும் நம்பிக்கையை தீவிரமாக பலவீனப்படுத்திய மெக்காலே கல்வி அமைப்பு மூலம் பேணி வளர்க்கப்பட்டது. புதிய இந்திய சமயம் சமய உட்பிரிவு அல்லது குல கோத்திரத்தின் மீது கவனம் செலுத்தாமல், இந்துக்கள் ஏதேனும் ஒரு வகையில் இறையியல், சாத்திரம், சாதனா மற்றும் வழிபாட்டு முறைகளை பின்பற்ற அனுமதி வழங்குகிறது. இது இந்து சமயத்தின் ஒவ்வொரு முக்கிய உட்பிரிவிலும் இருக்கும் மகாதேவர்களை வழிபடும் சுமார்த்த சமயத்தின் விரிவாக்கமாக விளங்கி இயேசு, மேரிமாதா மற்றும் புத்தர் என்று எல்லா மதத்தின் தெய்வங்களையும் வழிபடுகிறது. நவபாரத தர்மத்தை பின்பற்றும் பலர், தங்களை இந்துக்கள் என்று கூறிக்கொள்ள விரும்பாமல், தாங்கள் உலகின் எல்லா மதங்களிலும் உறுப்பினர் என்று அறிவிக்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *சுமார்த்த சமயம்.*

நரம்புகள் (nerves): இவை நரம்பணுக்களால் உருவாக்கப்பட்டு, நூலைப்போன்று இருக்கும் இழைகளின் கற்றைகள். இந்த நரம்பணுக்கள் வழியாக மூளை, மத்திய நரம்பியல் அமைப்பு மற்றும் மற்ற உடல் பாகங்களுக்கு இடையே செய்திகள் பாய்ந்து செல்கின்றன. இவை தசை நிரம்பிய உட்புற உடல்களின் கட்டமைப்பையும் குறிப்பிடுகிறது.

நரம்பு மண்டலம் (nervous system): இந்த மண்டலம் மூளை, முதுகுத்தண்டு, நரம்புகள், நரம்பு கொத்து மற்றும் உட்புற மற்றும் வெளிப்புற தூண்டுதல்களுக்கு, உடலின் எதிர்வினைகளை ஒழுங்குபடுத்தும் புலன் அல்லது செயல் உறுப்புக்களை கொண்டுள்ளது.

புதிய யுகம் (New Age): இதைப்பற்றி *வெப்ஸ்டர்ஸ் நியூ வேர்ல்ட் டிக்சனரி* வழங்கும் குறிப்பு: “ஆன்மீக உணர்வின் மீது ஆர்வமாக இருந்து தியானம், சைவ உணவு மற்றும் முழுமையான மருத்துவத்தை போன்ற பழக்கங்களுடன் மறுபிறவி மற்றும் ஜோதிடத்தில் நம்பிக்கை கலந்த

பல்வேறு பண்புகளுடன் 1980 களில் இருந்து பிரபலமாக இருந்துள்ள ஒரு கலாச்சார அமைப்பு சார்ந்தது.

ப்ளோரன்ஸ் நைட்டிங்கேல்: இவர் ப்ளோரன்ஸ் இத்தாலியில் பிறந்து, இங்கிலாந்தில் மருத்துவமனை நிர்வாகியாக இருந்து, செவிலியர் பயிற்சியை நவீனமயமாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார். 1854 ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிமியன் போரில் அவர் ஒரு புதிய வகை மருத்துவ அமைப்பை அமைத்து, துப்புரவு சீரமைப்புக்களை அறிமுகப்படுத்தி, போராளிகளின் உடல்நலத்திற்கு தேவையான பொருட்களை சேமித்து வைத்தார். 1907 ஆம் ஆண்டு, அவர் பிரிட்டிஷ் ஆர்டர் ஆஃப் மெரிட் பெற்ற முதல் பெண்மணி ஆனார்.

Nirguṇa Brahman: निर्गुणब्रह्मन् "God without qualities." நிற்குண பிரம்மம். "குணங்கள் இல்லாத பிரம்மம்." மேலும் தகவலுக்கு: *பிரம்மம்.*

nirvāṇa sādhaka *:* निर्वाण साधक. நிர்வாண சாதகர். சைவ சித்தாந்த தேவாலயத்தில் மூத்த *சாதகருக்கு* வழங்கப்படும் பட்டம். அவர் தனது மடவாசி வாழ்க்கை முழுவதும் வெள்ளை நிற உடையை உடுத்தி, *நாட்டியம்* என்கிற கூடுதல் பயிற்சியில் ஈடுபடாமல் இருக்கிறார். *நிர்வாண சாதகர்கள் 72* வயதுக்குப் பிறகு *சன்னியாச விரதத்தை* மேற்கொள்ளலாம்.

nirvāṇī* and *upadeśī: निर्वाणि उपदेशी *Nirvāṇī* means "extinguished one," and *upadeśī* means "teacher." *நிர்வாணி* மற்றும் *உபதேசி. நிர்வாணி* என்றால் "தனது ஆசைகள் மற்றும் பாசங்களை அழித்தவர்," மற்றும் *உபதேசி* என்றால் "ஆசிரியர்" என்று பொருள். பொதுவாக, *நிர்வாணி* என்பது ஒரு முக்தி பெற்ற ஆன்மாவை, அல்லது துறவிகளின் ஒரு பிரிவை குறிக்கிறது. *உபதேசி* என்பது பொதுவாக ஆசிரியராக இருக்கும் ஒரு துறவியை குறிக்கிறது. உணர்தலை பெற்று, முக்தி பெற்ற ஆன்மாக்களின் லௌகீக அமைப்புக்களை, பௌத்த மதம் *அரஹத்* மற்றும் *போதிசாத்வா* என்று அழைப்பதை போல, *தி மாஸ்டர் கோர்சில்* இந்த சொற்கள் விசேஷ அர்த்தத்தை கொண்டுள்ளன. ஒரு *ஜீவன்முக்தா* நிறைவான ஞானோதயம் பெற்ற பிறகு, பூலோகத்திற்கு திரும்பி வந்து ஆன்மீக பாதையில் இருக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. இது *உபதேசியின்* (*போதிசாத்வா*) பாதையாக விளங்குகிறது, மற்றும் இறைவனை உணரும் குறிக்கோளை நோக்கி சாதகனை வழிநடத்தி செல்வதற்கு இரக்க குணமுள்ள சத்குரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அவர் எதிர்காலத்தில் சமய அமைப்புக்கள் மற்றும் துறவற பரம்பரைகளை தொடங்கி இயக்கவும் செய்யலாம். *நிர்வாணி* (*அரஹத்*) தனது லௌகீக ஈடுபாடுகள் அனைத்தையும் கைவிட்டு, உணர்வின் உச்சத்தில் வாசம் செய்கிறார். இவருக்கு அமைதியான துறவி, தனியாக இருக்கும் மகான் முன் உதாரணமாக இருக்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *சத்குரு, விஷ்வகிராசா.*

nirvikalpa samādhi: निर्विकल्पसमाधि "Undifferentiated trance, enstasy *(samādhi)* without form or seed." நிர்விகல்ப சமாதி. "வேறுபாடு இல்லாத சமாதி, உருவம் அல்லது விதை இல்லாத சமாதி." ஆத்ம ஞானம், பரசிவம், எல்லா மாற்றம் அல்லது வேறுபாட்டை கடந்து இருக்கும் ஒருமையின் நிலை; காலம், உருவம்

மற்றும் பரவெளியை கடந்து இருப்பது. சமஸ்கிருதத்தில் *வி* என்ற முன்னடை "மாற்றம், வேறுபாட்டை" குறிக் கிறது. *கல்பம்* என்ற சொல் "ஒழுங்கு, ஏற்பாடு; ஒரு காலகட்டம்" என்பதை குறிக்கிறது. இதனால் *விகல்பம்* என்பது "வேறுபாடு, சிந்தனை; கண்ணோட்டத்தில் இருக்கும் வித்தியாசம், வேறுபாட்டுப்பண்பு" என்பதை குறிக்கிறது. *நிர்* என்றால் "அது இல்லாத" என்று பொருள். மேலும் தகவலுக்கு: *இராச யோகம், சமாதி, ஆத்ம ஞானம்.*

niyama: नियम "Restraint." நியமம். "கட்டுபாடு." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

அத்வைதம் (nondualism): "Not two-ness." ஒருமை வாத தத்துவம். மேலும் தகவலுக்கு: அத்வைதம், *ஒருமைவாதம், அத்வைத ஈசுவரவாதம், வேதாந்தம்.*

எந்த பிரிவையும் சாராதவர் (nonsectarian): ஒரு குறிப்பிட்ட சமூக பிரிவில் மட்டும் அங்கம் வகிக்காமல், பல குழுக்களில் இருப்பவர்.



கண்காணிப்பு (observation): குறிப்பெடுக்கும் நடவடிக்கை, செய்முறை, அல்லது தகவல்கள் மற்றும் சம்பவங்கள் மீது கவனமாக இருத்தல். .

இரகசியமான (occult): மறைந்திருக்கிற, இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிற; தீட்சைக்கு பிறகே வெளியிடப்படுகிற. மேலும் தகவலுக்கு: *சூட்சும ஞானம்.*

மறைஞானம் (occultism): அமானுஷ்ய அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியை கட்டுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சி அல்லது ஆய்வு.

காந்த சக்தி (odic): இது தூல மற்றும் கீழ்நிலை சூட்சும லோகங்களின் *அசுத்த மாயாவின்* உணர்வு சார்ந்த ஆன்மீக காந்த சக்தி ஆகும். காந்த சக்தி தனது உயர்வான நிலையில் *சத்வ, ரஜஸ்* மற்றும் *தமஸ்* என்று மூன்று குணங்களாக வெளிப்பட்டு, இயற்கையின் முக்கிய பருமனான சக்தியாக இருக்கும் *பிரகிருதியாக* இருக்கிறது. பஞ்ச பூதங்கள் மற்றும் சிந்தனையும் காந்த சக்தியை கொண்டு அமைந்துள்ளன. இது மனிதர்களுக்கு இடையே மற்றும் மனிதர்கள் மற்றும் அவர்களுடைய பொருட்களுக்கும் இடையே ஈர்க்கும் சக்தி அல்லது வெறுத்து ஒதுக்கும் சக்தியாக இருந்து, *பிங்களா* மற்றும் *இடா* நாடி ஓட்டங்களில் ஆண்மை (தீவிரமான குணம்) மற்றும் பெண்மையின் (மந்தமான குணம்) பண்பாக வெளிப்படுகிறது. இந்த *நாடி* ஓட்டங்கள் இரண்டும், முதுகுத்தண்டின் சூட்சும உடலுக்குள் காணப்படுகின்றன. காந்த சக்தி என்பது காந்தத்தன்மையுடன், ஒட்டக்கூடியதாக, பிணைக்கும் பொருளாக இருக்கிறது மற்றும் கூட்டுத்தொழில்கள், திருமணங்கள், கு ரு -சீடன் உறவுகள் மற்றும் நட்புறவுகளில் மனிதர்கள் தங்களை பிணைத்துக்கொள்ள முற்படும் போது, இந்த சக்தியைத் தான் அவர்கள் மேம்படுத்த விரும்புகிறார்கள். இது இயல்பாக மந்தமாக செயலற்று இருக்கிறது. *பிராணமய* மற்றும் *அன்னமய*

கோசங்களின் கூட்டு வெளிப்பாடாக காந்த சக்தி விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மீகம் சார்ந்த, கோசம், நுணுக்கமான உடல்.*

உத்தியோகக் கடமையை செய்தல் (officiate): ஒரு அலுவலக அல்லது பூசாரி பணியில் இருக்கும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

தரங்குறைந்த எண்ணெய்கள் (oils, degraded): இது பொறித்த உணவுகள் அல்லது நிறை கொழுப்பு அல்லது இரத்தக் கொழுப்பு அதிகமாக இருக்கும் உணவுகள் அல்லது ஆரோக்கியமற்ற உணவுகளைப் போன்று சமையலில் பல முறை சூடுபடுத்தி பயன்படுத்தியதால் நச்சுத்தன்மை அடைந்த எண்ணெய்களை குறிக்கிறது. தேங்காய் எண்ணெய், பருத்திவிதை எண்ணெய், ரேப் விதை எண்ணெய், செம்பனை எண்ணெய், சோள எண்ணெய், பட்டாணி எண்ணெய் மற்றும் ஹைட்ரஜன் ஏற்றிய எண்ணெய்கள் அனைத்தும் மற்றும் அதைப் போன்ற வேறு பல எண்ணெய்களும் ஆரோக்கியமற்ற எண்ணெய்களில் அடங்கும். நெய், ஆலிவ் எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஆகியவை சமையலுக்கு உகந்த மிகவும் ஆரோக்கியமான எண்ணெய்கள் ஆகும். சாலட் மற்றும் மற்ற பச்சை உணவு வகைகளிலும் ஆலிவ் எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஊட்டச்சத்தை வழங்குகின்றன. ஆளிவிதை எண்ணெயும் பல உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தை தருகிறது. ஆனால் அதை சூடுபடுத்தக்கூடாது.

ojas: ओजस् "Vigor, force, strength, vitality." ஓஜஸ். "வீர்யம், ஆற்றல், சக்தி, துடிப்புணர்வு." இது *ஆயுர்வேதத்தில், தாதுக்கள்* என்று அழைக்கப்படும் உடலின் ஏழு திசு அமைப்புக்களான பிளாஸ்மா, இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, நரம்புகள் மற்றும் இனப்பெருக்க திசுக்களின் அடிப்படையாக இருக்கும் உயிர் சாறு அல்லது திரவ-சாரத்தை குறிப்பிடுகிறது. உடலின் ஒவ்வொரு பாகத்திலும் *ஓஜஸ்* பரவி, உடல் சார்ந்த எல்லா நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக விளங்குகிறது. அது ஒரு தூல பொருளாக இல்லாமல், ஒரு நுணுக்கமான நிலையில் இருக்கிறது. அதிகமான பாலுறவு, போதை மருந்துகள், அதிகமான பேச்சு, சத்தமான இசை, உணர்ச்சிரீதியாக சோர்வடைதல் மற்றும் மிகவும் குறைவான ஓய்வின் மூலம் *ஓஜஸ்* குறைகிறது. அச்சம், கவலை, புலன் உறுப்பில் வலி, மோசமான உடல் பொலிவு, உற்சாகமின்மை, கடுமை, உடல் மெலியுறுதல், நோய் எதிர்ப்பு அமைப்பில் ஏற்படும் கோளாறுகள் மற்றும் தோற்று நோயால் வாடுதல் (எல்லாம் தற்போது தோன்றிய எய்ட்ஸ் நோயின் அறிகுறிகள் ஆகும்) ஆகியவை *ஓஜஸ்* குறைவாக இருப்பதை குறிப்பிடுகின்றன. முக்கியமான பாலியல் திரவங்களை தக்கவைத்துக்கொள்வதால் *ஓஜஸின்* சேமிப்பு அதிகரித்து, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் நல்ல ஆரோக்கியம் மற்றும் ஒருவரது உணர்வின் பண்பு வலுவடைகிறது. மேலும் தகவலுக்கு: *ஆயுர்வேதம், தேஜஸ், உருமாற்றம்.*

olai: ஓலை "Leaf." ஓலைசுவடிகள். இது பழங்கால இந்தியாவில் புத்தகங்களாக பயன்படுதப்பட்டன. இதற்கு பனை மரம் மற்றும் தாளைப்பனை ஓலைகள் பயன்படுதப்பட்டன. வட இந்தியாவில் பிர்ச் மரப்பட்டைகள் பயன்படுத்தப்பட்டன. இந்த ஓலைகளில் சிறிய நூல் நுழையும் வண்ணம்

ஒன்று அல்லது இரண்டு துளைகள் உருவாக்கப்பட்டு, அவற்றை ஒன்றாக கோர்த்து, அந்த ஓலைகளை காட்டிலும் பெரிய அளவில் இருக்கும் மரப்பலகை மூலம் அவை மூடிவைத்து பாதுகாக்கப்பட்டன. அவற்றில் எழுத கரியினால் தயாரான மை பயன்படுத்தப்பட்டது. பொதுவாக தெற்குப் பகுதியில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டு, கரித்தூள் மூலம் தேய்க்கப்பட்டது. இந்த நூல்கள் பொதுவாக 2 அங்குல உயரம் மற்றும் 8 அங்குல அகலம் மற்றும் 11 அல்லது 12 அங்குல நீளத்துடன் இருந்தன. இது பொதுவாக கயிற்றில் சுற்றி, ஏதாவது ஒரு நிறத் துணியால் பாதுகாக்கப்பட்டன.

முதிர்ந்த ஆன்மா (old soul): பலமுறை மறுபிறவி எடுத்து, அதிகமான அனுபவத்தை பெற்று இருப்பதால், இளைய ஆன்மாவை காட்டிலும் பாதையில் அதிகமாக முன்னேறி இருப்பவர். முதிர்ந்த ஆன்மாக்களை அவர்களது இரக்கம், அடக்கம் மற்றும் மெய்யறிவின் பண்புகளின் மூலம் அடையாளம் காணலாம். மேலும் தகவலுக்கு: *ஆன்மாவின் முதிர்ச்சி, ஆன்மா.*

Om: ओम् "Yes, verily." ஓம். இந்து தர்மத்தின் மிகவும் புனிதமான மந்திரம்.

சர்வவல்லமைமிக்க (omnipotent): எல்லாம் வல்ல இறைவன், எதையும் செய்யத்தக்க.

நீக்கமற (omnipresent): எங்கும் எதிலும் நிறைந்து இருக்கிற.

எல்லாம் அறிந்த (omniscient): எல்லையற்ற அறிவை பெற்ற, சர்வ ஞானமும் பெற்ற.

ஒருமை (oneness): ஒன்றாக இருக்கும் பண்பு அல்லது நிலை. மாறுபட்ட தோற்றங்களை கொண்டு இருந்தாலும் ஒற்றுமை, ஒரே வகைமை–உ.தா ஆன்மா மற்றும் கடவுளின் ஒருமை. மேலும் தகவலுக்கு: அத்வைதம் அல்லது *ஒருமைவாதம்.*

பிடிவாதமுள்ள அறிவாண்மை (opinionated knowledge): அறிவாற்றல் மற்றும் ஆணவத்திற்கு ஒரு தளத்தை கல்வி, கேள்வி ஞானம் மூலம் பெற்ற அறிவு மற்றும் அடிமனதின் நினைவாற்றலில் பதிவாகி இருக்கும் மற்றவர்களின் கருத்துக்களை எடுத்துரைத்தல் வழங்குகிறது. உலகை மற்றவர்களின் கண்ணோட்டத்தில் இருந்து நோக்குதல்.

நியமித்தல் (ordain (ordination)): சமய சடங்குகள் அல்லது சூட்சும ஞான தீட்சையின் மூலம் புரோகிதர், மதகுரு அல்லது *சத்குருவை* போன்ற சமயம் சார்ந்த பணியின் அதிகாரம் மற்றும் ஆன்மீக ஆற்றல் தொடர்பான கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வழங்குதல். மேலும் தகவலுக்கு: *தீட்சை.*

ஆச்சாரமான (orthodox): "சரியான கருத்தை சார்ந்த." நிறுவப்பட்ட கோட்பாடுகள் அல்லது நம்பிக்கைகளுக்கு இணங்கி இருத்தல்.

***pāda:*** पाद “The foot” (of men and animals); *பாதம்*. “(மனிதர்கள் அல்லது விலங்குகளின்) பாதம்”. நான்கில் ஒரு பகுதி, பிரிவு; நிலை; பாதை. ஆகம நூல்களின் முக்கிய பிரிவுகள் மற்றும் *மோக்ஷத்தை* நோக்கிய பாதையில் அதனுடன் தொடர்புடைய பயிற்சி மற்றும் விரிவாக்கத்தின் நிலைகளை குறிப்பிடும் பெயர்கள். சைவ சித்தாந்தத்தில், நான்கு *பாதங்கள்* உள்ளன. அவை தொடர்ச்சியாக மற்றும் படிப்படியாக திரண்டு வளரும் தன்மையுடன் இருக்கின்றன; அதாவது ஆன்மா ஒன்றை நிறைவு செய்ததும் அடுத்த நிலைக்கு தன்னை தயார்படுத்திக் கொள்கின்றன. (தமிழ் மொழியில், சைவ சித்தாந்தம் நாலு-பாதம், “நான்கு நிலை,” என்றும் அழைக்கப்படுகிறது, *சைவம்*). —***சரியை பாதம் (***அல்லது ***மார்க்கம்)(charyā pāda (*** or ***mārga)):*** “நன்னடத்தையின் நிலை.” முதல் நிலையில் ஒருவர் நேர்மையுடன் வாழ்ந்து, சுயநலமின்றி சேவை செய்து, *கர்ம யோகம்* செய்ய கற்றுக்கொள்கிறார். இது *தாஸ மார்க்கம்*, “சேவகரின் பாதை" என்றும் அழைக்கப்படுகிறது. இந்த தருணத்தில் சாதகர், தனக்கும் கடவுளுக்கும் இடையேயான உறவை தலைவன்-தொண்டன் உறவைப் போல கருதுகிறார் . *சரியையின்* பாரம்பரிய நடவடிக்கைகளில் கோயிலை சுத்தம் செய்தல், விளக்கேற்றுதல் மற்றும் வழிபாட்டிற்கு பூக்களை பரித்தல் போன்றவை அடங்கும். இந்த நிலையில் வழிபாடு பெரும்பாலும் வெளிப்புறமாக இருக்கிறது. —***கிரியை பாதம் (***அல்லது ***மார்க்கம்)(kriyā pāda (*** or ***mārga)):*** “சமயப்பணி; வழிபாட்டு நிலை.” இது *பக்தி யோகத்தின்* நிலையாக விளங்குகிறது. இந்நிலையில் பூஜை மற்றும் தொடர்ந்து தினசரி *சாதனா* செய்வதன் மூலம் பக்தி வளர்க்கப்படுகிறது. இந்நிலையில் ஆன்மா தனக்கும் இறைவனுக்கும் இடையேயான உறவை தந்தை-மகனின் உறவைப் போல கருதுவதால், இது “விசுவாசமான மகனின் பாதை,” *சத்புத்ர மார்க்க* என்றும் அழைக்கப்படுகிறது. *கிரியை பாதத்தில்* தினசரி பூஜை மிகவும் முக்கிய அங்கம் வகிக்கிறது.—***யோக பாதம் (***அல்லது ***மார்க்கம்)(yoga pāda (*** or ***mārga)):*** *சரியை* மற்றும் *கிரியை மார்க்கத்தில்* பக்குவம் அடைந்த பிறகு, *சத்குருவின்* வழிகாட்டலின் கீழ், ஆன்மாவின் கவனம் உட்புற வழிபாடு மற்றும் *இராச யோகம்* நோக்கி திரும்புகிறது. ஆத்ம ஞானம் குறிக்கோளாக இருக்கும் இந்த தருணத்தில், *சாதனா* மற்றும் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்நிலையில் இறைவன் ஒரு நெருக்கமான நண்பனாக கருதப்படுவதால், இது “நண்பனின் பாதை,” *சகா மார்க்க* என்று அழைக்கப்படுகிறது. —***ஞான பாதம் (***அல்லது ***மார்க்கம்)(jñāna pāda (*** or ***mārga)):*** “மெய்யறிவு பெறும் நிலை.” ஆன்மா ஆத்ம ஞானம் பெற்றதும், அந்த ஞானி தனது மீதம் இருக்கும் வாழ்க்கையை மனித நேயத்திற்கு உபதேசங்களை வழங்கி நல்வழிப்படுத்துவதில் செலவிடுகிறார். இந்நிலை “நேர்மையான பாதை,” சன்மார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது, மற்றும் இதில் கடவுள் நமக்கு மிகவும் நெருக்கமானவராக இருக்கிறார். ஒவ்வொரு நிலையின் நிறைவேற்றத்தையும் *திருமந்திரம்* பின்வருமாறு விளக்குகிறது. ஆன்மா *சரியை பாதத்தில்* இருக்கும் போது, “கடவுளின் உலகில்” (சாலோக்ய) ஒரு பந்துக்களின் உறவை

ஏற்படுத்திக்கொள்கிறது. *கிரியை பாதத்தில்*, அது அவரை “நெருங்குகிறது” (*சாமீப்ய*). *யோக பாதத்தில்*, ஆன்மா இறைவனை “போன்ற நிலையை" (*சாரூப்ய*) அடைகிறது. *ஞான பாதத்தில்*, ஆன்மா சிவபெருமானுடன் அடையாளம் கண்டு (*சாயுஜ்ய*) முடிவான பேரின்ப நிலையை அனுபவிக்கிறது.

padmāsana: पद्मासन “Lotus posture.” பத்மாசனம். இது மிகவும் பிரபலமான *ஹட யோகாசனமாகவும்*, நீடித்த தியானத்திற்கு சிறந்த அங்கஸ்திதியாகவும் விளங்குகிறது. இந்த நிலையில் கால்கள் குறுக்காகவும், உள்ளங்கால்கள் மேல்நோக்கி அமைந்திருந்து, ஒரு தாமரை மலர் போல காட்சி அளிக்கும். இந்த நிலையில் அறிவுணர்வு-மனவெழுச்சி சக்திகள் சமநிலை பெற்று அமைதியாக இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *இராச யோகம், யோகம்.*

பாகால் மதம் (pagan): தொடர்ந்து தங்கள் மீது நடத்தப்பட்ட துன்புறுத்தல்களை தாங்கிக்கொண்டு இன்று வரை நிலைத்து இருக்கும் ஷாமனிசம் மற்றும் உலகின் மற்ற பழங்குடி இறைநம்பிக்கைகளைப் போன்று, ஐரோப்பாவில் கிறித்துவ மதத்திற்கு முன்பாக இருந்த மதம் ஆகும். பாகான் மதம் மீண்டும் மெதுவாக மறுமலர்ச்சி பெற்று வருகிறது, மற்றும் அது இந்து மதத்துடன் தனது தொடர்பை அங்கீகரித்துள்ளது. பாகால் மதம் என்ற சொல்லை செமிடிக் இனம் சார்ந்தவர்கள், இன்னொரு மதத்தை சேர்ந்தவர்கள் அல்லது எந்த மதத்தையும் சாராமல் இருப்பவர்களையே குறிப்பிட எதிர்மறையாக பயன்படுத்துகிறார்கள். மேலும் தகவலுக்கு: *சூட்சும ஞானம், ஷாமானிசம்.*

pañcha nitya karma(s): पञ्चनित्यकर्म “Five constant duties.” *பஞ்ச நித்திய கர்மா(க்கள்)*. 1) *தர்மம்*, நற்பண்புகளுடன் வாழ்தல், 2) *உபாசனை*, வழிபாடு, 3) *உற்சவம்*, புனிதமான நாட்கள், 4) *தீர்த்த யாத்திரை*, புனித பயணம் மற்றும் 5) *சம்ஸ்காரங்கள்*, புனிதமான சமயச்சடங்குகள் என்ற ஐந்தும் இந்துக்களுக்கு மதம் தொடர்பான அனுட்டாங்களின் ஒரு பாரம்பரிய விதிமுறையாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *தர்மம், தீர்த்த யாத்திரை, சம்ஸ்காரம்.*

Pañchākshara Mantra: पञ्चाक्षरमन्त्र “Five-lettered chant.” பஞ்சாட்சர மந்திரம். சைவ சமயத்தின் மிகவும் புனிதமான *மந்திரம்*. மேலும் தகவலுக்கு: *நமச்சிவாய.*

pañchāṅga: पञ्चांग “Five limbs, or parts.” (Tamil: *pañchāṅgam*) பஞ்சாங்கம். திதி, நட்சத்திரம், கரணம், யோகம் மற்றும் வாரம் என்று ஐந்து அடிப்படை அங்கங்களைக் கொண்ட பாரம்பரிய இந்து நாட்காட்டி. அது நுணுக்கமான சுற்றுப்புறத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தும் கண்ணுக்குத் தெரியாத ஜோதிட காரணிகளைப் பற்றி தகவல் வழங்குகிறது. எல்லா நடவடிக்கைகளையும் செய்வதற்கு மங்களகரமான நேரத்தை தீர்மானிக்க பஞ்சாங்கம் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஜோதிடம், சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டி.*

paṇḍara: पण्डर பண்டாரம். முறைசாராமல் தனிச்சையாக இயங்கும் இந்த பூசாரிகள் ஒரு சமூகத்தில் பிறந்து, ஒரு புனிதமான மரம் அல்லது சிறிய சன்னதி அல்லது பெரிய கோயிலில் பூஜை செய்வதற்கு பெரும்பாலும் சுயமாக கற்றுக்கொண்டு, சுயமாக தங்களை நியமித்துக்கொள்கிறார்கள்.

pandit (paṇḍita): पण्डित பண்டிதர். ஒரு அறிஞர் அல்லது இறையியல் வல்லுனர் மற்றும் தத்துவம், வழிபாட்டு முறை, தர்ம சாத்திரம் மற்றும் சேக்ரெட் சயின்ஸ் போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற நபர்.

ஒரு மதத்தின் அனைத்து தெய்வங்களும் ஒன்றாக (pantheon).

pāpa: पाप "Wickedness; sin, crime." பாவச்செயல். 1) தீய அல்லது கொடிய. 2) தவறான செயல். 3) தவறு செய்ததால் உருவான குறை. *பாவம்* என்பது சாதாரண சட்ட மீறலில் இருந்து திட்டமிட்ட கொலை போன்ற மிகவும் கொடிய குற்றங்கள் வரை, சகலவிதமான தவறுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு பாவமும் அதன் *கர்மவினையின்* விளைவு, *கர்மபலம்* என்கிற "செயலின் விளைவை," சுமந்து செல்கிறது, மற்றும் அந்த *பாவத்திற்கு* பரிகாரம் செய்ய *சாத்திரங்கள்* குறிப்பிட்ட பிராயசித்தங்களை விளக்கிக் கூறியுள்ளது. பாவம் என்பது புண்ணியத்தின் (சிறப்பு, நற்குணம்) எதிர்ச்சொல் ஆகும். மேலும் தகவலுக்கு: *ஒளி உடல், தீமை, கர்மவினை, பிராயசித்தம், புண்ணியம், பாவம்.*

Parabrahman: परब्रह्मन् "Supreme (or transcendent) God." பரபிரம்மம். நிற்குண பிரம்மம் மற்றும் காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்த முழுமுதற்பொருளைக் குறிக்கும் இன்னொரு சொல். பரசிவத்தை குறிக்கும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: பிரம்மம், பரசிவம்.

paramaguru: परमगुरु "Grand preceptor." பரமகுரு. ஒரு சீடனின் குருவிற்கு குருவாக இருப்பவர்.

Paramātman: परमात्मन् "Supreme Self," or "transcendent soul." பரமாத்துமன். பரசிவம், முழுமுதற்பொருள், ஒவ்வொரு ஆன்மாவின் பர ஆத்மனாக விளங்குகிறார். இது பரசிவம், பராசக்தி மற்றும் ஆனந்தமய கோசம் என்கிற ஆன்மாவின் மூன்று அம்சங்களை உள்ளடக்கிய ஆத்மனுக்கு நேர்மாறாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஆத்மன், கோசம், ஆன்மா.*

Parameśvara: परमेश्वर "Supreme Lord or Ruler." பரமேசுவரன். சிவபெருமானின் இந்த மூன்றாவது முழுமையில், மிகப்பெரிய மகாதேவராக, சிவ-சக் தியாக, பிரபஞ்சத்தின் அன்னையாக இருக்கிறார். அவர் இந்த முழுமையில் தனிநபராக, தாய் -தந்தை கடவுளாக, உடல், தலை, கை, கால்கள் போன்றவற்றுடன் செயல்படும், விருப்பம் தெரிவிக்கும், ஆசிர்வதிக்கும், *தரிசனம்* வழங்கும், வழிகாட்டும், படைக்கும், காக்கும், மீண்டும் ஒடுக்கிக்கொள்ளும், மறைக்கும் மற்றும் ஞானோதயம் வழங்கும் ஒரு மனிதனாக சிவபெருமான் இருக்கிறார். செய்வது அனைத்தும் சிவ-சக் தி என்பதே முடிவான உண்மையாக இருக்கிறது. பரமேசுவரனை முதன்மையான, தான்தோன்றி ஆன்மாவாக, மற்ற ஆன்மாக்களை உருவாக்கியவராக *ஆதி ஆன்மா, பரமபுருஷா* போன்ற சொற்கள் குறிப்பிடுகின்றன. பரமேசுவரனை குறிப்பிடும் மேலும் பல பெயர்கள் உள்ளன, அவற்றில் ஐந்து தெய்வீக தொழில்களை குறிப்பிடும் பெயர்களும் அடங்கும். அவை சதாசிவம் என்கிற வெளிப்படுத்துபவர்; மகேசுவரன் என்கிற மறைப்பவர்; பிரம்மா என்கிற படைப்பவர்; விஷ்ணு என்கிற காப்பாற்றுபவர்; ருத்திரன் என்கிற அழிப்பவர். மேலும் தகவலுக்கு: *நடராசர்.*

paramparā: परंपरा “Uninterrupted succession.” பரம்பரை. மேலும் தகவலுக்கு: *குரு பரம்பரை.*

parārtha pūjā: परार्थपूजा “Public liturgy and worship.” பரார்த்த பூஜை. "ஊக மக்களின் நலனை வேண்டி கோயில்களில் நடைபெறும் வழிபடும்." மேலும் தகவலுக்கு: *பூஜை.*

Parāśakti: पराशक्ति “Supreme power; primal energy.” பராசக்தி. “மிகப்பெரிய சக்தி; முதன்மையான சகதி.” இது சிவபெருமானின் இரண்டாவது முழுமையாக இருக்கிறது. இதில் அவர் தனிநபராக இல்லாமல் உள்ளார்ந்து, எங்கும் எதிலும் வியாபிக்கும் உருவத்துடன், தூய உணர்வாக மற்றும் இருப்பு அனைத்திற்கும் முதன்மை சாரமாக விளங்குகிறார். பராசக்தி–சச்சிதானந்தம் (“தூய இருப்பு-உணர்வு-பேரின்பம்”), ஒளி, அமைதி, தெய்வீக மனம், மெய்ஞ்ஞான நிலை மற்றும் வேறு பல விளக்கமான பெயர்களும் உள்ளன. கடுமையாக முயற்சிக்கும் *யோகி* அல்லது தியானம் செய்பவரால், அனைத்து உருவம் வழியாக பாய்ந்து செல்லும் ஒருமையுடன் நடைபெறும் ஐக்கியமாக, அல்லது அதனுடன் ஏற்படும் ஒற்றுமையாக, பராசக்தியை அனுபவிக்க முடிகிறது. இந்த அனுபவம் *சவிகல்ப* சமாதி என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *இராச யோகம், சக்தி, சச்சிதானந்தம்.*

Paraśiva: परशिव “Transcendent Śiva.” பரசிவம். யாவும் கடந்து இருக்கும் சிவபெருமான் பரமாத்துமாவாக, சிவபெருமானின் முதல் முழுமையாக, முழுமுதற்பொருளாக இருக்கிறார். பரசிவம் என்பது உணர்வின் கிரகிக்கும் தன்மை, காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து விளக்கமுடியாததாக இருக்கும் அந்த முடிவான பரம்பொருளை குறிக்கிறது. முடிவான பரம்பொருளுடன் ஆன்மீக சங்கமத்தை அடைவதே, பிறவி எடுத்த ஆன்மாக்களின் முடிவான குறிக்கோளாக, இந்த பூமியில் அவர்கள் வாழ்வதற்கான காரணமாக, அவர்களது அனுபவங்களின் அதிக ஆழமான அர்த்தமாக விளங்குகிறது. இந்த *சித்தியை* பெறுவதே ஆத்மஞானம் அல்லது *நிர்விகல்ப சமாதி* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *சமாதி, சிவபெருமான்.*

pāśa: पाश “Tether; noose.” (Tamil: *pāśam*) பாசம். இது வெளிப்பட்ட மற்றும் வெளிப்படாத இருப்பு அனைத்தையும் குறிப்பிடுகிறது. இது ஆன்மாவை பின்னிப்பினைத்து அல்லது கட்டுப்படுத்தி, அது தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்த முடியாதபடி தடுக்கிறது. பாசம் என்பது *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்கிற மும்மலங்களை கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *முக்தி, மலம், பதி-பசு-பாசம்.*

pāśa-jñānam: பாசஞானம் “Knowledge of the world.” “உலகைப்பற்றிய அறிவு.” இதைத்தான் ஆன்மா, *சகல அவத்தையின்* முதல் நிலையில் இருக்கும் போது நாடுகிறது. இது *இருள்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *இருள், சகல அவத்தை.*

paśu: पशु “Cow, cattle, kine; fettered individual.” *பசு.* “மாடு, கால்நடை, பசுக்கள்; பிணைப்பில் இருக்கும் மனிதன்.” இந்த சொல் மனிதன் உட்பட விலங்குகளை குறிப்பிடுகிறது. இது மெய்யியலில் ஆன்மாவாக

இருக்கிறது. சிவபெருமான் உயிரினங்களின் தலைவனாக *பசுபதி* என்று அழைக்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *பாசம், பதி-பசு-பாசம்.*

paśu-jñānam: பசுஞானம் “Soul-knowledge.” “ஆன்மாவை பற்றிய தகவல்.” இது *சகல அவத்தையின்* இரண்டாவது நிலையில் நாடப்படும் பொருளாக விளங்குகிறது. இது *மருள்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *மருள், சகல அவத்தை.*

pātāla chakra: पाताल चक्र “Fallen” or “sinful region.” *பாதாள சக்கரம்.* இது *மூலதாரத்திற்கு* கீழே ஏழாவது *சக்கரமாக*, உள்ளங்கால்களில் மையங்கொண்டு இருக்கிறது. இது *காகோலம்* (“கருப்பு விஷம்") அல்லது *பாதாளம்* என்று அழைக்கப்பட்டு, பூமிக்கு கீழே இருக்கும் ஏழாவது மற்றும் கீழ்நிலை சூட்சும நரகலோகத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தில் தவறாக வழிநடத்தப்பட்ட ஆன்மாக்கள் எந்த ஒரு காரணமும் இல்லாமல் அழிவு, சித்ரவதை மற்றும் கொலை செய்கிறார்கள். பாதாளம் என்பது பொதுவாக நரகலோகத்தை குறிப்பிட்டு, *நரகம்* என்பதற்கு சமபொருட்சொல்லாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்.*

Patanjali: पतञ्जलि பதஞ்சலி. இவர் ஒரு சைவ சமயத்தை சேர்ந்த நாத சித்தர் (கி.மு. 200). இவர் மனதின் சுத்திகரிப்பு, கட்டுப்பாடு மற்றும் ஆழ்ந்தநிலை மூலம் ஞானோதய பாதையை விவரித்து, பழங்கால *யோக* தத்துவத்தை ஒழுங்கப்படுத்தியுள்ளார். இது *யோக தரிசனம்* என்று அழைக்கப்பட்டு, இந்து தர்மத்தின் ஆறு பாரம்பரிய தத்துவ அமைப்புக்களில் (*தரிசனங்கள்*) ஒன்றாக திகழ்கிறது. அவர் எழுதிய நூல்களில் மிகவும் சிறந்ததாக விளங்கும், *யோக சூத்திரங்கள்* சுமார் 200 சூத்திரங்களை கொண்டுள்ளது, மற்றும் அது *அஷ்டாங்க* (எட்டு-அங்கங்கள்), *இராச* (அரசரை போன்ற) அல்லது *சித்த* (முழுமையான) *யோகத்தை* விளக்கிக் கூறுகிறது. இது தியான *யோகத்தில்* இன்றும் பழமையான மற்றும் முன்னோடியான நூலாக விளங்குகிறது. இன்னொரு பதஞ்சலி முனிவர், சமஸ்கிருத இலக்கணத்தின் விதிகளை அடிப்படையாகக் கொண்ட “*மகாபாஷ்யத்தை*” எழுதினார். மேலும் தகவலுக்கு: *இராச யோகம், யோகம்.*

Pati: पति “Master; lord; owner.” பதி. “தலைவன்; கடவுள்.” அக்கறை செலுத்தும் அரசனாக மற்றும் உதவி செய்யும் வழிகாட்டியாக, ஆன்மாக்களுடன் சிவபெருமானுக்கு இருக்கும் வலுவான உறவை, இந்த பெயர் குறிப்பிடுவதாக இருக்கிறது. இந்த பட்டம் சைவ சித்தாந்தத்தில் மாடு மேய்க்கும் இடையன் *(பதி)*, மாடுகள் (*பசு*, ஆன்மாக்கள்) மற்றும் மாடுகளை கட்டும் கயிறு (*ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயையை* குறிப்பிடும் *பாசம்*) என்கிற ஒப்புமையின் அங்கமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *பதி-பசு-பாசம்*, சிவபெருமான்.

Pati-jñānam: பதிஞானம் “Knowledge of God,” sought for by the soul in the third stage of the *sakala avasthai,* called *arul.* பதி-ஞானம். “கடவுளை பற்றிய அறிவு.” அருள் என்று அழைக்கப்படும் இந்த அறிவை, ஆன்மா *சகல அவத்தையின்*

மூன்றாவது நிலையில் நாடுகிறது. மேலும் தகவலுக்கு: *அருள், சகல அவத்தை, சக்தினிபாத.*

Pati-paśu-pāśa: पति पशु पाश Literally: “Master, cow and tether.” *பதி-பசு-பாசம்.* இதன் பொருள்: “தலைவன், மாடு மற்றும் கயிறு.” சைவ சித்தாந்த கோட்பாட்டில் மூன்று அடிப்படை பிரிவுகள் (*பத்தார்த்த*, அல்லது *தத்துவத்ராயி*) இருக்கின்றன. அவை: இறைவன், மனிதன் மற்றும் பிரபஞ்சமாக இருக்கும் தெய்வீகத்தன்மை, ஆன்மா மற்றும் உலகம் ஆகும். இவை சூட்சும ரீதியாகவும் நுணுக்கமாகவும் ஒன்றோடொன்று தொடர்புடைய ஒற்றுமையில் இருப்பதாக தென்படுகின்றன. *பதி* என்பது கடவுளை குறிக் கிறது, மற்றும் ஒரு மாட்டு இடையனாக கற்பனை செய்யப்பட்டுள்ளது. *பசு* என்பது ஆன்மாவை குறிக்கிறது, மற்றும் இது ஒரு பசுமாடாக கற்பனை செய்யப்பட்டுள்ளது. *பாசம்* என்பது மிகவும் முக்கியமான சக்தி அல்லது கயிறாக இருக்கிறது, மற்றும் இதன் மூலம் இறைவன் ஆன்மாக்களை மெய்ப்பொருளின் பாதையில் அழைத்து வருகிறார். இந்த மூன்றுக்கும் இடையேயான இணக்கத்தை, இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகள் மாறுபட்ட வழிகளில் விளக்குகின்றன. அவை பன்மைவாத சைவ சித்தாந்திகளுக்கு, மூன்று தொடக்கம் இல்லாத நம்பிக்கைகள், சுயமாக இயங்கும், அநாதி பிரிவுகளாக இருக்கின்றன. ஒருமைவாத சைவ சித்தாந்திகளுக்கு, பதியாக இருக்கும் சிவபெருமானிடம் இருந்து, வெளிப்படும் படைப்பாக பசு மற்றும் பாசம் விளங்குகின்றன, மற்றும் அவர் மட்டுமே அநாதி உண்மைப்பொருளாக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *பாசம், சைவ சித்தாந்தம், ஆன்மா..*

payasam: பாயாசம். இது விருந்துகளிலும் பண்டிகைகளிலும் பரிமாறும் ஒரு இனிப்பு ஆகும். இதில் பால் பாயாசம், பருப்புப் பாயாசம், அவல் பாயாசம் என்று பலவகைகள் உண்டு. பால், சவ்வரிசி, சேமியா கொண்டு பால் பாயாசம் தயாரிக்கப்படுகிறது.

penance: *Prāyaśchitta.* பிராயசித்தம். பரிகாரம், விமோசனம். கடந்தகாலத்தில் செய்த ஒரு செயலுக்கு எதிர்பார்க்கப்படும் எதிர்வினையை தணிக்க அல்லது பயனற்றதாக்க அர்ப்பணிப்பு *(பக்தி)*, தவம் *(தபஸ்)* அல்லது ஒழுக்கத்துடன் *(சுக்ருத்திய)* மேற்கொள்ளப்படும் ஒரு *கிரியை* (நடவடிக்கை). தவறான செயல்கள் (*குகர்மா*) மூலம் ஒருவருக்கு உருவான *கர்மவினையின்* சுமையை குறைக்க, ஒருவர் தனக்குத்தானே இழைத்துக்கொள்ளும் அசௌகரியமான *கர்மவினையே* தவம் ஆகும். இதில் 108 முறை நமஸ்காரம் செய்தல், உபவாசம், தன்னலமறுப்பு, அல்லது *காவடி எடுத்தல்* (மக்களோடு சேர்ந்து செய்யும் தவம்) மற்றும் சில தீவிரமான விரதங்கள், அல்லது *தபஸ்* போன்றவை அடங்கும். பெரும்பாலும் என்ன பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்று ஆன்மீக தலைவர்கள் மற்றும் சான்றோர்கள் பரிந்துரைப்பார்கள். பச்சாதாபம் அல்லது செய்த தவறுகளுக்கு வருந்துவது *அனுதாப* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் அதற்கு "வெப்பமேற்றுதல்" என்று பொருள். —***பால தாடயதி பிராயசித்த*** ***(bāla tāḍayati prāyaśchitta):*** “Child-beating penance.” ."குழந்தையை அடித்ததால் உருவான பாவத்தை தணிக்க பிராயசித்தம்." முதலில் அந்த ஆண் அல்லது பெண் கடந்தகாலத்தில்

குழந்தைகளை பிரம்பு, கு ச் சி , கை அல்லது முட்டியால் அடித்ததை கணக்கிடுகிறார். அதன் பிறகு அவர் தான் செய்த தீங்கின் தீவிரம் மற்றும் அதை ஏற்படுத்திய வழிகளைப் பற்றி தியானம் செய்கிறார். அவர் இந்த யதார்த்தத்தை தனது மனதில் ஒன்று அல்லது இரண்டு வாரத்திற்கு தக்க வைத்து இருக்கிறார். (அவர் முதலில் அதை மறுத்து, நியாயப்படுத்தி, தனக்கு விளக்கம் அளித்து, குழந்தையை அடிப்பதன் அவசியம், பயன், வழக்கம் இருப்பதால் அது சரி தான் என்று தனக்குத் தானே பல காரணங்களை சொல்லிக்கொள்ளலாம். ஆனால் எல்லாம் சிவனாக இருப்பதால், நமது குழந்தைகளை அடிப்பதற்கு வாய்ப்பு குறைவு என்றாலும், இன்னொரு மனிதனை துன்புறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது.) அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட பிறகு, அவர் ஒரு பெரிய கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டு, குழந்தையை அடித்த அதே பகுதியில் அவர் தன்னைக்குத்தானே கை, பிரம்பு, பெல்ட் போன்றவற்றால், அவர் குழந்தைக்கு வழங்கிய ஒவ்வொரு அடிக்கும் தன்னை ஐந்து முறை அடித்துக்கொள்ள வேண்டும். அவர் நீண்டநேரம் தன்னை அடித்துக்கொள்ள வேண்டியிருக்கும் மற்றும் அது வலி ஏற்படுத்துவதாகவும் இருக்கும். இவ்வாறு அவர் கண்ணாடியை பார்த்துக்கொண்டு, தான் குழந்தைக்கு வழங்கிய ஒவ்வொரு அடிக்கும் தன்னை ஐந்து முறை அடித்துக்கொள்கிறார், தான் கிள்ளிய ஒவ்வொரு முறைக்கும் தன்னை ஐந்து முறை கிள்ளிக்கொள்கிறார்.

¶*பிராயசித்தத்தின்* முதல் கட்டம் நிறைவடைந்த பிறகு, குழந்தையை துன்புறுத்தியவருக்கு வலுவான *கர்மவினையில்* இருந்து விடுதலை கிடைத்ததும், பின்வரும் இரண்டாம் கட்டத்தை தொடர வேண்டும். 1) அவர் தான் துன்புறுத்திய குழந்தைகள் அனைவரிடமும் மன்னிப்புக்கேட்டு, இனி தான் உடல்சார் துன்புறுத்தல்களை செய்யாமல், நேர்மறை கட்டுப்பாடுகளை பயன்படுத்துவேன் என்று அவர்களுக்கு உறுதியளிக்க வேண்டும். 2) அதன் பிறகு தனது கட்டுப்பாட்டில் இருக்கும் குழந்தைகளை, இத்தகைய சித்ரவதையில் இருந்து வீட்டிலும் பள்ளியிலும் காப்பாற்றுவதாக அவர்களுக்கு உறுதி அளிக்க வேண்டும். 3) அடுத்ததாக அவர் தனது *சத்குரு* அல்லது இன்னொரு ஆலோசகருக்கு தான் செய்த பிராயசித்தம் பற்றி கடிதம் எழுதுகிறார். மனதில் குற்ற உணர்வு நீங்கி அமைதி திரும்பியிருந்தால், அதையும் அந்த கடிதத்தில் குறிப்பிடுகிறார். அத்துடன் அவர் கையால் எழுதிய பின்வரும் விரதத்தையும் அனுப்புகிறார். அ) தான் மீண்டும் அத்தகைய சித்ரவதையை என்றும் செய்யமாட்டேன்; மற்றும் ஆ) பள்ளியில் குழந்தைகளை எந்த வகையிலும் துன்புறுத்தாமல் அன்பும் மரியாதையுடனும் நடத்தப்படவேண்டும் என்றும், வீட்டில் தனது கட்டுப்பாட்டில் இருக்கும் குழந்தைகளை முறையாக ஒழுங்குப்படுத்துவதற்கு அவர்கள் பள்ளியில் ஏதேனும் தவறு செய்தால், அதை ஆசிரியர்கள் தனக்கு தகவல் வழங்கவேண்டும் என்றும் தான் பள்ளிக்கு தெரிவிக்கப்போவதாகவும் அவர் அதில் குறிப்பிடுகிறார். 4) இதற்கு ஆலோசகர் பதில் அளித்ததும் பிராயச்சித்தம் பூர்த்தி அடைகிறது. —***புஷ்ப பிராயச்சித்தம்*** ***(pushpa prāyaśchitta):*** “Flower penance.” "பூக்களைக் கொண்டு பிராயச்சித்தம் செய்தல்." தங்களை துன்புறுத்திய நபர்களைப் போல, அனுபவத்தை மறக்க உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டவர்களுக்கும் பிராயச்சித்தம் செய்ய வேண்டியிருக்கிறது. பெரியவரோ சிரியவரோ

துன்புறுத்தப்பட்ட ஒவ்வொருவரும், துன்புறுத்தப்பட்டு எத்தனை வருடங்கள் ஆகியிருந்தாலும், தாங்கள் தந்தை அல்லது தாய் அல்லது ஆசிரியர் மூலம் துன்புறுத்தப்பட்டு இருந்தால், அந்த நபரின் படத்தை பூஜை அறையில் மாட்டி வைக்கவேண்டும். அவர் அதன் பிறகு அந்த படத்திற்கு முன்பாக, முப்பத்தி ஒரு நாட்களுக்கு ஒரு மலரை வைத்து, தன்னை துன்புறுத்தியவரை மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும். புகைப்படம் எதுவும் கிடைக்கவில்லை என்றால், அதற்கு பதிலாக ஒரு சின்னம் அல்லது ஒரு பொருளை வைக்கலாம், அல்லது ஒரு காகிதத்தில் பெயரை எழுதி வைக்கலாம். — ***குரோத பிராயச்சித்தம்*** ***(krodha prāyaśchitta):*** “Anger penance.” "கோபத்திற்கு பிராயச்சித்தம்." கோபம் என்பது *மூலாதாரத்திற்கு* கீழே இரண்டாவதாக இருக்கும் *விதள சக்கரத்தில்* இருந்து தோன்றுகிறது. அந்த விசை மையம் அதிரத் தொடங்கியதும், அது பல்வேறு வகைகளில் அதிர்ந்து, இடஞ் சுழியாக சுழன்று, வழக்கமாக நிலவும் அமைதியை சீர்குலைக்கிறது. *விதள சக்கரத்தில்* இருந்து தோன்றும் பலவகை கோபத்தில் சிலவற்றை இங்கே காணலாம். இன்னொருவர் மனதை புண்படுத்தும் இந்த முறையற்ற மன நிலையில் ஒருவர் ஈடுபடுவதற்கு, கோபம் தோன்றும் ஒவ்வொரு முறையும், அதை ஈடு செய்ய பிராயச்சித்தமாக ஒரு தொகையை செலுத்த வேண்டும். ஒடுக்கப்பட்ட கோப உணர்ச்சிகளுக்கு யுஎஸ்$.10. தனது கருத்தை வலியுறுத்த குரலை உயர்த்தி பேசுவதற்கு: $.25. உதட்டை பித்துக்கிக்கொண்டு முகத்தை திருப்புவதற்கு: $.50. கடுமையாக பேசுவதற்கு, தேவையில்லாமல் இழிவுப்படுத்துவதற்கு: $.75. கரகரப்பான குரலில் கடுமையான விமர்சனங்கள்: $1.00. மகிழ்ச்சியின்மையை வெளிப்படுத்தும் வகையில் நீண்ட நேரம் அமைதியாக இருப்பதற்கு (இந்த கோபத்தின் வெளிப்பாடு அமைதியாக தோன்றினாலும், ஒருவரை வாழ்க்கையில் இருந்து துண்டிக்கும் முறையாக விளங்குகிறது): $2.00. (அந்த அமைதியின் போது, பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கும் போது மனதில் வாக்குவாதங்கள் நடைபெறுகின்றன. அப்போது மனதில் இன்னொருவர் சொல்லும் கருத்திற்கு எதிர்ப்பு அல்லது மறுப்பு எப்படி தெரிவிப்பது என்று சிந்தனைகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன.) இன்னொரு வலுவாக துன்புறுத்தும் குறிப்பு அல்லது வேதனை தரும் குறிப்பு அல்லது தனிப்பட்ட விமர்சனம் செய்வதற்கு: $2.50. மற்றவர்கள் முற்றிலும் தவறாக இருக்கிறார்கள் என்றும் இவ்வாறு நீண்டகாலம் தொடர முடியாது என்றும் கோபத்துடன் குறைக்கூடும் ஒரு பெரிய ஆய்வுக்கட்டுரை எழுவதற்கு: $4.00. "நான் தான் தலைவன். நீங்கள் எனக்கு அடிமைகள். நீங்கள் என்னை நினைத்து பயப்படுகிறீர்கள். நான் சொல்வதை நீங்கள் கேட்கவேண்டும்." அல்லது "நீங்கள் சொல்வது தவறு. எனக்கு உங்களை பிடிக்கவில்லை. நீங்கள் செய்த முட்டாள்தனமான தவறை மன்னிக்க முடியாது...(மற்றும் இதைப்போன்ற வெறுக்கத்தக்க செயல்கள்)" என்று ஒளி உடல் கருஞ்சிவப்பாக மாறிக்கொண்டு அல்லது ஒரு பொறாமை எழுச்சி கலந்த சீற்றத்துடன் வலியுறுத்துவதற்கு; $5.00. இந்த தொகையை பணக்காரர்கள் இருமடங்கு செலுத்த வேண்டும். செல்வம் நிறைந்து இருப்பவர்கள் இந்த தொகையை நான்கு மடங்கு செலுத்த வேண்டும். இந்த கட்டணங்களை பெறுவதற்கு பூஜை அறையில் "குரோத பிராயசித்தம்" என்ற

பெயரில் தனியாக ஒரு ஜாடியை வைக்க வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகையை, ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும் தகவலுக்கு: *தீவினை, காவடி, பாவம், பிராயச்சித்தம், தபஸ்.*

முழுமைகள் (perfections): முழுமையாக இருக்கும் பண்புகள், அம்சங்கள், இயல்பு அல்லது பரிணாமங்கள். சிவபெருமானின் மூன்று முழுமைகளாக பரசிவம் (முழுமுதற்பொருள்), பராசக்தி (தூய உணர்வு) மற்றும் பரமேசுவரன் (ஆதி ஆன்மா) விளங்குகின்றன. புரிந்துக்கொள்வதற்காக மூன்று விதங்களாக விளக்கி இருந்தாலும், சிவபெருமான் எப்போதும் அதீதமாக-உள்ளார்ந்த தெய்வீக தன்மையுடன் இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன், பராசக்தி, பரசிவம், சிவபெருமான்.*

குழப்பம் (perplexity): புதிர்; குழம்பிய நிலை, தெளிவில்லாத நிலை.

pilgrimage: *Tīrthayātrā.* *தீர்த்த யாத்திரை*. இந்துக்கள் கடைப்பிடிக்க வேண்டிய *பஞ்ச நித்திய கர்மாக்களில்* ஒன்றாக *தீர்த்த யாத்திரை* விளங்குகிறது. இந்தியா அல்லது மற்ற நாடுகளில் இருக்கும் எண்ணற்ற *புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு* பயணம் மேற்கொள்வதை குறிப்பிடுகிறது. தீர்த்த யாத்திரைக்கு முன்பாக உபவாசம் மற்றும் சுயக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகிறது. *தீர்த்த யாத்திரை* செல்லும் போது விரதம் மேற்கொண்டு சுத்தமாக இருந்து, லௌகீக கவலைகள் அனைத்தையும் மறந்து, இறைவன் மீது முழுமையாக கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவின் பழங்கால புண்ணியத் தலங்களில் தினமும் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. திருவிழாக்களின் போது இங்கே பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். மேலும் தகவலுக்கு: *பஞ்ச நித்திய கர்மவினைகள்.*

piṅgalā nāḍī: पिंगला नाडी "Tawny channel." *பிங்கலா*. இது முதுகுதண்டின் வழியாக ஆணின் பண்புடன் பாய்ந்து செல்லும் சூட்சுமமான ஓட்டத்தை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, இராச யோகம்.*

பின்னல் (plexus): ஒன்றோடொன்று பிணைந்த பாகங்களை கொண்ட அமைப்பு; இரு வலைப்பின்னல். இது குறிப்பாக நரம்புகள், இரத்த நாளங்கள் அல்லது நிணநீர் சுரப்பியின் கணுக்கள்.

பிலோடினஸ் (Plotinus): (205-270 CE) எகிப்தில் பிறந்த கிரேக்க தத்துவவாதி. இவர் ரோம சாம்ரச்சியத்தில், புதிய-பிளடோனிசத்தை தொடங்கி வைத்தார். அவர் *அகிம்சை*, சைவ உணவு, கர்மவினை, மறுபிறவி மற்றும் அதீதமாகவும் உள்ளார்ந்தும் இருக்கும் பரமனைப் பற்றி கற்றுத் தந்தார்.

பன்மைவாதம் (pluralism (pluralistic)): கடவுள், ஆன்மாக்கள் மற்றும் உலகை போன்று, இருப்பு என்பது மூன்று அல்லது அதற்கும் அதிகமான எண்ணிக்கையில் வெவ்வேறு பண்புகளுடன், அளவில் குறைக்க முடியாத பாகங்களை கொண்டுள்ளது என்பதை குறிப்பிடும் கோட்பாடு. மேலும் தகவலுக்கு: துவைத்தம்-அத்வைதம்.

ஈர்க்கும் அல்லது விலக்கும் சக்திகள் மூலம் ஒரு குறிப்பிட்ட முறையில் செயல்படுதல் (polarize): *தி மாஸ்டர் கோர்ஸ்* முத்தொகுப்பில், இது

தனிப்பட்ட ஆன்மீக சக்திகளை உயரிய பிரபஞ்ச சக்திகளுடன் உணர்வுப்பூர்வமாக ஒருங்கிணைப்பது மட்டுமல்லாமல், தெய்வீக சக்திகளை ஈர்த்து நிலை நிறுத்துவதை குறிப்பிடுகிறது.

போலிநேசியா சார்ந்த (Polynesian): ஆஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு கிழக்கே, பசிபிக் பெருங்கடலில் இருக்கும் தீவுகள் குழு அல்லது அதன் மக்கள், மொழி அல்லது கலாச்சாரங்கள் சாரந்த.

புணர்மக்கலை (pornography): பாலியல் இன்பத்தை தூண்டும் உரைகள், படங்கள் போன்றவை.

நேர்மறை கட்டுப்பாடு (positive discipline): வழக்கமான தண்டனை முறைகளுக்கு பரிவுள்ள மாற்று அமைப்பாக அன்பு, மரியாதை மற்றும் கௌரவத்துடன் குழந்தைகளை வளர்க்கும் முறை. இது ஜேன் நெல்சன் ED.D. எழுதிய புத்தகங்களின் அடிப்படையில், குழந்தைகள் சுய-கௌரவம், உறுதியான மற்றும் பாசம் நிறைந்த வழிகாட்டல் மற்றும் பரஸ்பர மரியாதை மூலம் பொறுமையை வளர்த்துக்கொள்ள பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு யதார்த்தமான பரிந்துரைகளை வழங்குகிறது.

அதிஷ்டம் (potluck): நாம் தேர்வு செய்வதற்கு அதிக வாய்ப்பு இல்லாமல், கிடைப்பதை வைத்து திருப்தி அடைய வேண்டிய சூழலை குறிக்கிறது.

pradosha: प्रदोष பிரதோஷம். இது சூரிய அஸ்தமனத்திற்கு முன்னரும் பின்னரும் 1½ மணி நேரம் என்று 3 மணி நேர மங்களகரமான நேரத்தை குறிக்கிறது. குறிப்பாக பிரதோஷம் என்பது ஒவ்வொரு மாதத்தின் வளர்பிறை அல்லது தேய்பிறையின் திரயோதசி திதி தினத்தில் வருகிறது. பிரதோஷ காலம் தியானம் செய்வதற்கு உகந்த நேரம் ஆகும். அந்த நேரத்தில் பக்தர்கள் உபவாசம் இருப்பார்கள். மேலும் தகவலுக்கு: *உபவாசம், திதி*.

prāṇa: प्राण Vital energy or life principle. *பிராணன்*. முக்கிய சக்தி அல்லது உயிரின் அடிப்படை. இதற்கு "அத்தியாவசிய காற்று," என்று பொருள். இது "சுவாசித்தல்," என்பதை குறிப்பிடும் *பிராண* என்ற சொல்லில் இருந்து உருவானது. இது ஒன்றோடு ஒன்று தொடர்புடைய காந்த மற்றும் ஆன்மீக சக்திகளை குறிப்பிடுகிறது. இது அனைத்து சக்தி மற்றும் ஆற்றலின் கூட்டுத் தொகையாக விளங்குகிறது. மனித உடலில் இருக்கும் *பிராணன், பிராணாயாம கோசத்தில்* "அத்தியாவசிய காற்றுகள்," என்று அழைக்கப்படும் *வாயு* என்கிற ஐந்து அடிப்படை உயிர் ஓட்டங்களாக பாய்ந்து செல்கின்றன. அவை *பிராணன்* (வெளியே செல்லும் வாயு), *அபானன்* (உள்ளே வரும் வாயு), *வியானன்* (உடலில் நிலைத்து இருக்கும் வாயு), *உதனான்* (மேல்நோக்கி செல்லும் வாயு) மற்றும் *சமானன்* (சமநிலைப்படுத்தும் வாயு) ஆகும். ஒவ்வொன்றும் உடலின் முக்கியமான செயல்பாடுகளை நிர்வகிக்கின்றன, மற்றும் உடலின் எல்லா சக்திகளும் இதன் மாற்றங்களாக விளங்குகின்றன. *பிராணன்* பெரும்பாலும் உயிரின் அடிப்படையை குறிப்பிட்டாலும், அது சில சமயங்களில் பிரபஞ்சத்திற்கு உயிரூட்டம் அளிக்கும் விசை, சக்தி அல்லது ஆற்றல் மற்றும் எல்லா சக்தி மற்றும் விசைகளின் கூட்டுத்தொகை அல்லது ஆற்றலை குறிப்பிடுகிறது.

prāṇa chakravāla: प्राणचक्रवाल “Energized circle or assembly.” பிராண சக்கரவாள. "உயிரூட்டம் பெற்ற வட்டம் அல்லது கூட்டம்." மேலும் தகவலுக்கு: *சக்கரவாள.*

Praṇava: प्रणव “Humming.” பிரணவ. *ஓம்* என்கிற *மந்திரம்*, படைப்பின் மூல ஒலியாக இருக்கும் இறைவனை குறிப்பிடுகிறது. மின்மாற்றி அல்லது தேனீக்கள் எழுப்பும் ஒலியை போன்று இருக்கும் இதை, ஒருவர் தனது நரம்பு மண்டலத்தில் கேட்கலாம். சிந்தனைகளை ஒளிர்விக்கும் உட்புற ஒலியாக, இந்த ஒலியை அகத்தில் உருமாற்றம் செய்து, இந்த பேரின்பம் நிறைந்த உணர்வில் ஒடுங்குவதைப் பற்றி தியானம் செய்பவருக்கு கற்றுத் தரப்படுகிறது. *நாதநாடி* சக்தியாகவும் *பிரணவம்* அறியப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *ஓம்.*

prāṇāyāma: प्राणायाम “Breath control.” பிரணாயாமம். "சுவாசக் கட்டுபாடு." மேலும் தகவலுக்கு: *இராச யோகம்.*

பிராணமய கோசம் (prāṇic body): நுணுக்கமாக, உயிர்சக்தியை அளிக்கும் கோசம். மேலும் தகவலுக்கு: *கோசம்.*

prārabdha karma: प्रारब्धकर्म “Action that has been unleashed or aroused.” பிராரப்த கர்மவினை. “தொடங்கி வைக்கப்பட்டுள்ள செயல்.” மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

prasāda: प्रसाद “Clarity, brightness; grace.” *பிரசாத.* “தெளிவு, பிரகாசம்; அருள்.” 1) அமைதியாகவும் பணிவாகவும் இருக்கும் நற்குணம். 2) தெய்வம் அல்லது குருவிற்கு நெய்வெத்தியம் செய்யப்படும் உணவு, அல்லது அவ்வாறு நெய்வெத்தியம் செய்த உணவில் பக்தர்களுக்கு வழங்க மீதம் இருக்கும் உணவு. 3) ஒரு தோஷத்தை நீக்க வழங்கப்படும் படையல். மேலும் தகவலுக்கு: *புனிதமான மதச்சடங்கு.*

prāyaśchitta: प्रायश्चित्त “Predominant thought or aim.” பிராயசித்தம். பரிகாரம் செய்யும் செயல்கள். மேலும் தகவலுக்கு: *பிராயசித்தம்.*

prāyopaveśa: प्रायोपवेश “Resolving to die through fasting.” பிரயோபவேசம். சு ய விருப்பத்துடன் விரதம் இருந்து உயிர் நீத்தல். மேலும் தகவலுக்கு: *தற்கொலை.*

விதிமுறை (precept): ஒரு நடவடிக்கை அல்லது நடத்தையின் விதியாக விளங்கும் ஒரு கட்டளை.

சத்குரு (preceptor): ஒரு ஆன்மீக சமூகம் மற்றும் குலத்தில் அதிகம் மதிக்கப்படுகிற ஆசிரியர் மற்றும் தலைவர்.

Pretaloka: प्रेतलोक “World of the departed.” *ப்ரேதலோகம்.* பூமியுடன் பிணைந்து இருக்கும் ஆன்மாக்கள். புவர்லோகத்தில் கீழ்நிலை பகுதி. இது தூல உலகின் சூட்சும நகலாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *லோகம்.*

ஆதி ஆன்மா (Primal Soul): தான்தோன்றியாக இருந்து, முதன்மையான, முழுநிறைவான ஆன்மாவாக உள்ள சிவ பரமேசுவரனை குறிப்பிடுகிறது. இவர் தன்னிடம் இருந்து உட்புற மற்றும் வெளிப்புற பிரபஞ்சங்களையும், தனது சாரத்தை போன்ற சாரத்துடன் இருக்கும் பெருந்திரளான ஆன்மாக்களையும் வெளிப்படுத்துகிறார். தனது தனிப்பட்ட அம்சத்தில்

தலைவனாகவும் சிருஷ்டிகர்த்தாவாகவும் இருக்கும் இறைவன், சைவர்களால் நடராசராகவும், வைணவர்களால் பகவான் ஸ்ரீவிஷ்ணுவாகவும், சாக்த சமயத்தை சேர்ந்தவர்களால் தேவியாகவும் பல உருவங்களில் சித்தரிக்கப்பட்டு இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நடராசர், பரமேசுவரன்.*

மூலப்பொருள் (Primal Substance): எண்ணற்ற வேறுபாட்டுடன் இருக்கும் வெளிப்பட்ட உலகில் இருந்து உருவாகும் அடிப்படை சக்தி மற்றும் புனிதமான உருவம். மேலும் தகவலுக்கு: *பராசக்தி.* \

பதப்படுத்தப்பட்ட சர்க்கரை (processed sugar). மேலும் தகவலுக்கு: *சர்க்கரை, பதப்படுத்தப்பட்ட.*

ஒத்திவைப்பு (procrastination): தள்ளி வைப்பு அல்லது தேவையில்லாமல் காலம் தாழ்த்துவது.

முறையில்லாத பாலுறவு (promiscuity): ஒருவருடன் மட்டுமே பாலுறவில் ஈடுபடாமல் பலருடன் ஈடுபடுவது.

விலை மாது (prostitute): பணத்திற்காக பாலுறவு நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்.

நமஸ்காரம் செய்தல் (prostrate): சமர்ப்பணம் அல்லது வழிபடுவதைப் போல, முகம் தரையில் படும்படியாக வணங்குதல். மேலும் தகவலுக்கு: *தரையில் விழுந்து வணங்குதல்.*

prostration: *praṇāma:* प्रणाम “Obeisance; bowing down.” தரையில் விழுந்து வணங்குதல். தரையில் விழுந்து வணங்குதல். இந்த மதிப்புக்குரிய வணங்குமுறையில் தலை அல்லது உடல் குனிந்து வணங்கப்படுகிறது. – ***அட்டாங்க பிரணாமம்:*** “எட்டு அங்க வந்தனம்.” இது ஆண்கள் வணங்குமுறை ஆகும். இந்த முறையில் அவரது கைகள், மார்பு, நெற்றி, முழங்கால்கள் மற்றும் கால்கள் என்று உடல் முழுவதும் தரையில் படுகிறது (சாஷ்டாங்க பிரணாமத்தை போன்றது). –***பஞ்சாங்க பிரணாமம்:*** “ஐந்து-அங்க வந்தனம்.” இது பெண்ணின் வணங்குமுறையை குறிப்பிடுகிறது. இந்த முறையில் தலை, கைகள் மற்றும் கால்கள் தரையில் படுகின்றன. *பிரணிபாத* என்ற சொல், தரையில் விழுந்து வணங்குவதை குறிப்பிடும் சரியான சொல்லாகும். மேலும் தகவலுக்கு: *பக்தி, நமஸ்காரம்.*

கலாச்சாரம் சார்ந்த வரைமுறை (protocol (cultural)): ஒரு செயல்முறைக்கு சரியான நன்னடத்தை கோட்பாடு. ஒரு குறிப்பிட்ட இனம், மதம் அல்லது சமூகக் குழுவினர் மத்தியில் நிலவும் ஒரு ஒழுக்கக் கோட்பாடு. இது பெரும்பாலும் எழுத்து வடிவமாக இல்லாமல், ஒவ்வொரு தலைமுறைக்கும் வாய்மொழியாகக் கற்றுத் தரப்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு குரு, சுவாமி அல்லது மற்ற புண்ணியசீலர்களை முறையாக அடக்கத்துடன் அணுகுவதற்கு என்று ஒரு வரைமுறை இருக்கிறது. அதைப்போல ஒரு வெளிநாட்டு தூதரை மரியாதையுடன் வரவேற்பதற்கு என்று ஒரு வரைமுறை இருக்கிறது.

போலி (pseudo): பொய், மோசடி, பாசாங்கை குறிப்பிடும் ஒரு முன்னடை.

ஆன்மா (psyche).

மனநல மருத்துவர் (psychiatrist): மனிதனின் நடத்தை தொடர்பான பல்வேறு நவீன கோட்பாடுகளில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் மனம் மற்றும் உணர்வு கோளாறுகளை குணப்படுத்தும் ஒரு மருத்துவ வல்லுநர்.

சூட்சுமமான (psychic): “Of the psyche or soul.” "ஆன்மா சார்ந்த." ஆன்மீக செய்முறைகள் மற்றும் சக்திகளுக்கு கூர் உணர்வுடன் செயலாற்றுதல். தூல பண்பில்லாத உண்மைப்பொருள்கள் மீது உட்புறமாகவும் இயலனுணர்வுடனும் விழிப்புடன் இருத்தல்; கட்புலனுக்கு அப்பார்ப்பட்டதை காணும் அல்லது கேட்கும் திறன் மற்றும் முன்னறிவிப்பு போன்ற ஆற்றல்களை பயன்படுத்தக்கூடியவராக இருத்தல். தூல பண்பில்லாத, நுணுக்கமான; மனிதனின் அதிக ஆழமான அம்சங்கள் சார்ந்த. மேலும் தகவலுக்கு: *சூட்சும ஞானம், காந்த சக்தி.*

சூட்சுமமான சிக்கல்கள் (psychic entanglements). மேலும் தகவலுக்கு: சூட்சுமமான See: *psychic tubes.*

சூட்சுமமான பாதைகள் (psychic tubes): பாலுறவில் ஈடுபட்ட ஆணையும் பெண்ணையும் தொடர்புப்படுத்தும் சூட்சும பொருளின் பாதைகள். இத்தகைய தொடர்புகள் 12 வருட காலத்திற்கு நீடிக்கிறது என்றாலும், 6 வருடங்களுக்கு பிறகு அது தன் வலிமையை பெருமளவு இழந்து விடுகிறது. தாய் மற்றும் குழந்தைக்கு இடையேயும் இருக்கும் சூட்சும பாதைகள், அந்த குழந்தையின் இருபத்தி நான்காவது வயது வரை நீடிக்கிறது. அத்தகைய தொடர்புகள் அனைத்தும் *பிரம்மச்சரிய* செய்முறையில் மெதுவாக கரைந்து, *குருவுடன்* ஒரு புதிய தொடர்பை உருவாக்குகிறது. மேலும் தகவலுக்கு: *பிரம்மச்சரியம்.*

உள ஆய்வு (psychoanalyze): அனிச்சை தூண்டுதல்கள், ஒடுக்கப்பட்ட அனுபவங்கள் மற்றும் முரண்பாடுகள் போன்றவற்றின் விளைவுகளாக இருக்கும் மனம் மற்றும் உணர்ச்சி சார்ந்த செய்முறைகளை விளக்குதல்.

மனோதத்துவ நிபுணர் (psychologist): மனம் மற்றும் உணர்ச்சியின் செய்முறைகள் மற்றும் நடத்தையின் புரிதலில் பயிற்சி பெற்று, அத்தகைய இயல்புடைய சிறிய பிரச்சனைகளை, மனித நடத்தையின் பல்வேறு நவீன கோட்பாடுகளில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் குணப்படுத்துபவர்.

உளவியல் (psychology): மனதின் செய்முறைகள் மற்றும் நடத்தை பற்றிய ஒரு அறிவுப்பூர்வமான ஆய்வு. ஒரு தனிநபர் அல்லது ஒரு நடவடிக்கையில் இருக்கும் உணர்ச்சி மற்றும் நடத்தையின் பண்புகள்.

உள அளவையியல் (psychometry): பொருட்களின் அதிர்வுகளை ஒருவரது நரம்பு மண்டலம் அல்லது மனோஉணர்வு புலன் பதிவு செய்து விளக்கம் அளிக்கும் திறமை.

பருவமடைதல் (puberty): ஒருவர் வாலிப வயதில் உடல்ரீதியாக பாலியல் இனப்பெருக்கத்திற்கு தயாராகும் நிலை.

pūjā: पूजा “Worship, adoration.” பூஜை: “வழிபாடு, ஆராதனை." ஒரு தெய்வீக சிலை (*மூர்த்தி*), ஒரு குருவின் புனிதமான பாதுகைகள் (*ஸ்ரீ பாதுகா)* அல்லது

மற்ற புனிதமான பொருள், அல்லது *சத்குருவை* போன்ற ஒரு நபருக்கு வீட்டில், கோயிலில் அல்லது புனிதமான இடத்தில் நடைபெறும் வழிபாட்டில் இருக்கும் ஒரு ஆகம சடங்கு. வழிபடும் பொருளை சுற்றியிருக்கும் சூழ்நிலையை தூய்மை செய்து, அந்தரலோகங்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி கடவுள், தெய்வங்கள் அல்லது ஒரு *குருவை* ஆவாகனம் செய்வதே இதன் உள்ளார்ந்த குறிக்கோள் ஆகும்.

pujārī: पुजारी "Worshiper." பூசாரி. இந்து கோயிலில் அல்லது வீட்டில் பூஜை செய்பவரை குறிப்பிடும் ஒரு பொதுவான சொல். *பூஜக* என்கிற சமஸ்கிருத சொல்லின் ஹிந்தி வடிவமான பூஜாரி (சிலசமயங்களில் புஜாரி), மற்றும் தமிழில் பூசாரி. இவ்வாறு பூஜை செய்பவருக்கு தென்னகத்து பாரம்பரியத்தில் *அர்ச்சகர்* என்ற இன்னொரு பெயரும் உள்ளது. வீட்டில் நடைபெறும் சடங்கை நடத்தும் சுமார்த்த சமய அந்தணருக்கு புரோகிதர் என்று பெயர். மேலும் தகவலுக்கு: *பூஜை.*

புனர்ஜென்மம் (punarjanma): पुनर्जन्म "Reincarnation." சமஸ்கிருதத்தில் *புனஹ* என்றால் "மீண்டும் மீண்டும்" மற்றும் *ஜன்ம* என்றால் "பிறவி எடுத்தல்" என்று பொருள். மேலும் தகவலுக்கு: *மறுபிறவி.*

பஞ்சாபி (punjabi): இது வட இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த பெண்கள் அணியும் ஆடை. ஒரு எளிமையான பாண்ட் மற்றும் அமர்வதற்கு என்று விரிவான கீழ்பகுதியுடன் கூடிய *குர்த்தா,* இன்றைய பெண்கள் அணியும் பஞ்சாபி ஆடையாக விளங்குகிறது.

puṇya: पुण्य "Holy; virtuous; auspicious." புண்ணியம். "புனிதமான; நற்குணமுள்ள; மங்களகரமான." 1) நல்ல அல்லது நேர்மையான. 2) பாராட்டுதற்குரிய செயல். 3) முறையான சிந்தனை, சொல் மற்றும் செயல் மூலம் கிடைக்கும் நன்மதிப்பு. ஒரு சாதாரண உதவியில் இருந்து, வாழ்நாள் முழுவதும் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் செய்யும் நன்மை வரை, *புண்ணியம்* நற்செயலின் அனைத்து வடிவங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு *புண்ணிய* செயலும் தன்னுடன், *தர்மத்தை* கடைப்பிடிக்கும் செயல்கள் (*பாவத்தின்* எதிர்ச்சொல்) மற்றும் சொற்களின் நேர்மறை வெகுமதியாக இருக்கும் *கர்மவினையின்* விளைவு, *கர்மபல*, "செய்த செயலுக்கு கிடைத்த பலனை," கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *கர்மவினை, பாவம், பிராயசித்தம்.*

தூய உணர்வு (Pure Consciousness). மேலும் தகவலுக்கு: (பொதுவான) மனம், *பராசக்தி, சச்சிதானந்தம்.*

purity-impurity: *Śaucha-aśaucha.* சௌச்சம்-அசௌச்சம். சுத்தம்- அசுத்தம். சுத்தம் மற்றும் அதன் எதிர்மறையாக இருக்கும் மாசு, இந்து கலாச்சாரத்தின் அடிப்படை அங்கமாக விளங்குகிறது. அவை தூல பண்பின் தூய்மையை குறிப்பிட்டாலும் சமூக, சடங்கு, உணர்ச்சி, மனோஉணர்வு மற்றும் ஆன்மீக மாசு வரை அதன் மிக முக்கிய விளக்கம் பரவி இருக்கிறது. இந்து ஆன்மீகத்திற்கு அனைத்து வகையான மாசுகளில் இருந்து விடுதலை பெறுவது முக்கியம் ஆகும் மற்றும் அது *இயமங்களில்* ஒன்றாக விளங்குகிறது. உடல் சுத்தமாக இருப்பதற்கு ஒரு தூய்மையான மற்றும்

நல்ல ஒழுங்குடன் இருக்கும் சுற்றுப்புறம், உள்உறுப்புக்களை யோகம் மூலம் சுத்தம் செய்வது மற்றும் தொடர்ந்து நீரினால் சுத்தம் செய்வது ஆகியவை தேவைப்படுகிறது. தியானம், முறையான வாழ்க்கை மற்றும் முறையான சிந்தனையில் இருந்து உளத்தூய்மை தோன்றுகிறது. மனதின் கட்டுபாடு, அடியுணர்வை சுத்தம் செய்வது மற்றும் நல்ல நண்பர்களுடன் இருப்பதை சார்ந்து உணர்ச்சிப்பூர்வமான தூய்மை அமைந்து இருக்கிறது. *இயமங்கள்* மற்றும் *நியமங்களை* பின்பற்றுவது, வேத சாத்திரங்களை விசாரம் செய்வது, தீர்த்த யாத்திரை, தியானம், *ஜபம், தபஸ்* மற்றும் அகிம்சை மூலம் ஆன்மீக சுத்தத்தை அடைய முடிகிறது. மேலும் தகவலுக்கு: *தர்மம், பாவம், பிராயசித்தம், புண்ணியம், இயம-நியமம்.*

purusha: पुरुष "The spirit that dwells in the body/in the universe." *புருஷ.* "உடல்/பிரபஞ்சத்தில் வாசம் செய்யும் ஆன்மா." மனிதன்; ஆன்மா; ஆண். ஆன்மா என்பது மீமெய்யியல் ரீதியாக ஆண் அல்லது பெண்ணை குறிப்பது இல்லை. இது யோகம் மற்றும் சாங்கிய தத்துவத்தில், யாவும் கடந்த பரமாத்துமா குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. இது *ஆத்மனின்* சமபொருட் சொல்லாக விளங்குகிறது. *புருஷா* என்கிற சொல் உபநிடதங்களில் குறிப்பிடுவதை போல, *பரமன்* அல்லது பரமாத்துமா என்ற சொல்லையும் குறிப்பிடுகிறது.

purusha dharma: पुरुषधर्म "A man's code of duty and conduct." *புருஷ தர்மம்.* "ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கடமை மற்றும் நன்னடத்தையின் விதிமுறை. மேலும் தகவலுக்கு: *தர்மம்.*



Radhakrishnan, Dr. S. (Rādhākṛishṇan): राधाकृष्णन् (1888-1975) டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் (1888-1975). இவர் 1962 முதல் 1967 வரை இந்திய குடியரசுத்தலைவராக இருந்தார். இவர் ஒரு அறிஞர், தத்துவவாதி, ஆக்கபூர்வமான எழுத்தாளர், மக்களின் கவனத்தை ஈர்க்கும் பேச்சாளர் மற்றும் இந்து மதம் சார்பாக பேசுவதில் வல்லவராக இருந்தார். இவர் விவேகானந்தர், தாகூர், அரபிந்தோ மற்றும் மற்றவர்களுடன் சேர்ந்து, குறிப்பாக புத்திக்கூர்மையுள்ள மக்களின் மத்தியில் தற்போதுள்ள இந்து மத மறுமலர்ச்சியை தூண்டி விடுவதற்கு துணை புரிந்தார். அந்த மறுமலர்ச்சியின் மூலம் இந்து மதம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல பாராட்டு மற்றும் அங்கீகாரத்தையும் பெற்றது. அவரது தத்துவம் அத்வைத வேதாந்தத்தில் வலுவாக ஊன்றி இருந்தது.

rāja yoga: राजयोग "King of *yogas* ." *இராச யோகம்.* இது *அட்டாங்க யோகம்,*

"எட்டு அங்கங்களை பயன்படுத்தும் யோகம்," என்றும் அழைக்கப்படுகிறது. பல்வேறு *யோக உபநிடதங்கள், திருமந்திரம்,* மற்றும் குறிப்பாக பதஞ்சலியின் *யோக சூத்திரங்களில்* குறிப்பிட்டுள்ளதை போல, *இராச*

யோகம் என்பது ஞானோதயத்தை பெறுவதற்கு எட்டு தொடர்ச்சியான படிநிலைகளை கொண்ட பாரம்பரிய *யோக* அமைப்பு ஆகும். அந்த எட்டு அங்கங்கள் பின்வருமாறு: 1) —***இயமம்(yama):*** "கட்டுப்பாடு." நற்குணத்துடன் தார்மீக வாழ்க்கையை வாழ்தல். இது மனதை சுத்தப்படுத்தி, தியானத்தில் தடை ஏற்படுத்தும் கோபம், பொறாமை மற்றும் அடியுணர்வு குழப்பத்தில் இருந்து விடுவிக்கிறது. 2) —***நியமம் (niyama):*** "கடைப்பிடித்தல்." கவனத்தை ஒருமுகப்படுத்தி இறுதியாக *சமாதியில்* முழுமையாக ஈடுபடுவதற்கு தேவைப்படும் குணத்தின் சுத்திகரிப்பு மற்றும் மனதின் கட்டுப்பாட்டை தூண்டிவிடும் பக்தி, அறிவெழுச்சி, அடக்கம் மற்றும் திருப்தியை போன்ற உயர்ந்த குணங்களின் அம்சங்களை வளர்ச்சி அடைய செய்யும் சமயம் சார்ந்த நடவடிக்கைகள். 3) —***ஆசனம்*** (*āsana):* "உட்காரும் இடம்" அல்லது "அங்கஸ்திதி." தியானத்தில் வெற்றி பெறுவதற்கு ஒரு வலுவான உடல் தேவைப்படுகிறது. இது *ஹட* யோகத்தின் மூலம் *சித்தி* ஆகிறது. இதன் அங்கஸ்திதிகள் மனம் மற்றும் உடலின் சக்திகளை சமன் செய்து, ஆரோக்கியம் மற்றும் அமைதியை ஊக்குவிக்கிறது, உதா தியானத்திற்கு *பத்மாசனம்.* 4) —***பிராணாயாமம்*** ***(prāṇāyāma):*** "பிராண சக்தியை கட்டுப்படுத்துதல்." சுவாசத்தை கட்டுப்படுத்தும் போது, *சித்த* என்கிற மனதை அமைதிப்படுத்தி, *ஈடா* மற்றும் *பிங்களா* ஓட்டங்களை சமநிலைப்படுத்துகிறது. இது சுவாசிக்கும் உத்திகள் மூலம் *பிராண சக்தியை* கட்டுப்படுத்தும் பயிற்சியாக விளங்குகிறது. இதில் மூச்சிழுத்தல், மூச்சை நிறுத்தி வைத்தல் மற்றும் மூச்சை வெளியே விடும் நேரத்தை தேவைக்கு ஏற்ற மாற்றி அமைக்கப்படுகிறது. ஆழ்ந்த தியானம் செய்வதற்கு *பிராணாயாமம்* மனதை தயார் செய்கிறது. 5) —***பிரத்யாஹார*** ***(pratyāhāra):*** "ஒடுங்குதல்." தியானம் செய்யும் போது முதலில் ஒலியை கேட்காமல் இருந்து பின்பு உணர்ச்சிகள், அறிவு மற்றும் இறுதியில் பிரபஞ்ச உணர்வுக்குள் ஐக்கியமாவதற்கு தனிப்பட்ட உணர்வில் இருந்து படிப்படியாக விலகுவதை போன்று, முதலில் தூல புலன்களில் இருந்து உணர்வை விலக்கும் பயிற்சி ஆகும். 6) —***தாரணா*** ***(dhāraṇā):*** "கவனத்தை ஒருமுகப்படுத்துதல்." ஒரு பொருள் அல்லது ஒரு சிந்தனையின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்தி, அதை சிதறவிடாமல் கட்டுப்படுத்தி வைத்திருந்து, உணர்வின் ஓட்டத்தை வழிநடத்துதல். கவனத்தை நீண்ட நேரம் போதுமான வலிமையுடன் தக்க வைத்துக்கொண்டதும் தியானம் இயல்பாக பின்தொடர்கிறது. 7) —***தியானம்*** ***(dhyāna):*** தியானம்." இது அமைதியாகவும், எச்சரிக்கையுடனும், வலுவாக கவனத்தை ஒருமுகப்படுத்திய நிலையை குறிப்பிடுகிறது. இந்த நிலையில் புதிய அறிவு மற்றும் நுண்ணறிவு உணர்வின் பகுதிக்குள் பெருந்திரளாக வந்து சேர்கிறது. இந்த நிலையை அடைய அடிமனதை சுத்தம் அல்லது அமைதிப்படுத்த வேண்டும். 8) —***சமாதி*** ***(samādhi):*** (ஆழ்ந்த சிந்தனை/ இறைவனை உணர்தல்) இது ஒருவர் "தனது சுயத்துக்குள் நிலைத்து இருப்பதை குறிக்கிறது." "ஒற்றுமை, ஆழ்ந்த சிந்தனை." இது மெய்யான யோக நிலையை குறிப்பிடுகிறது, மற்றும் இதில் தியானம் மற்றும் தியானம் மேற்கொள்ளும் பொருள் ஒன்றாக இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஆசனம், ஞானோதயம், தனக்குள் இருத்தல், சமாதி, யோகம்.*

rajas: रजस् “Passion; activity.” ரஜஸ்: "பேரார்வம்; நடவடிக்கை." மேலும் தகவலுக்கு: *குணம்.*

Ramakrishna (Rāmakṛishṇa): रामकृष्ण (1836–1886). ராமகிருஷ்ணர்(1836–1886). இவர் இன்றைய இந்து தர்மத்தின் தலைசிறந்த துறவிகள் மற்றும் சூட்சும ஞானிகளில் ஒருவராக விளங்கினார். அத்வைத கடவுள் நம்பிக்கையை போதித்து, காளி தேவியின் தீவிர பக்தனாகவும் இருந்தார். அத்வைதத்தை உறுதியாக பின்பற்றுபவராகவும் இருந்து, ஒருமை மற்றும் முடிவான பரம்பொருளின் உணர்தலை குறிக்கும் *நிர்விகல்ப சமாதியின்* நாட்டத்தை கற்றுதருபவராகவும் இருந்தார். இவர் இந்து தர்மத்தின் சிந்தனை மற்றும் தத்துவத்தை உலகெங்கும் பரப்பிய சுவாமி விவேகானந்தரின் (1863–1902) *குரு* ஆவார்.

Ramana Maharshi: ரமண மகரிஷி (1879-1950) அத்வைதத்தை போதித்து மறுமலர்ச்சி ஏற்படுத்திய இந்து சமயத்துறவி. இவர் தென்னிந்தியாவின் திருவண்ணாமலையில் வாழ்ந்தார்.

Rama Tirtha (Rāma Tīrtha): रामतीर्थ. ராம தீர்த்தர் (1873-1906). மேற்கத்திய நாடுகளுக்கு *யோகம்* மற்றும் வேதாந்தத்தை கொண்டு வந்த முதல் இந்திய துறவிகளில் ஒருவராக விளங்கினார். இவர் ஜப்பான் மற்றும் அமெரிக்காவில் பல உரைகளை நிகழ்த்தி, "நடைமுறைக்கு ஏற்ற வேதாந்தத்தை" பரப்பினார்.

Rāmāyaṇa: रामायण “Life of Rāma.” இராமாயணம். "இராமரின் வாழ்க்கை." இதுவும் *மகாபராதமும்* இந்தியாவின் இரண்டு மாபெரும் இதிகாகசங்களாக விளங்குகின்றன. இது இராமரையும் சீதையையும் மையமாகக் கொண்டு வால்மீகி எழுதிய காவியம். இந்த இரண்டு கதாபாத்திரங்களும் வாழ்ந்த முன்மாதிரியான வாழ்க்கைகள், கண்ணியம் மற்றும் நேர்மைக்கு உயர்ந்த தரநிலைகளை அமைத்து, இந்து தர்மத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. இராமரின் ஆட்சிக்காலம் சுமார் கி.மு. 2015 இருக்கலாம் என்று கதையில் இருக்கும் வானியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

rasātala chakra: रसातल चक्र “Subterranean region.” ரசாதள. இது *மூலதாரத்திற்கு* கீழிருக்கும் ஐந்தாவது *சக்கரம்*, மற்றும் இது கணுக்கால்களின் மத்தியில் இருக்கிறது. *ரிஜிஷ* (வெளியேற்றப்பட்ட) அல்லது *ரசாதள* என்று அழைக்கப்பட்டு, பூமிக்கு கீழிருக்கும் ஐந்தாவது சூட்சும நரகலோகத்துடன் பொருந்துகிறது. சுயநலம், தன்னலம் கருதும் மற்றும் சொந்தம் கொண்டாடும் பகுதி. *ரசா* என்றால் “பூமி, நிலம்; ஈரப்பதம்.” மேலும் தகவலுக்கு: *சக்கரம், லோகம், நரகம்.*

உலகம் (realm): ஒரு சாம்ராச்சியம், பகுதி அல்லது கோளம். மேலும் தகவலுக்கு: *லோகம்.*

முரண்பாடு நீக்கம் (reconcile): ஒரு தகராறில் தீர்வு காணுதல். ஒரே மாதிரியாக மாற்றுதல் அல்லது இணக்கத்தை உருவாக்குதல் உ.தா இரண்டு மாறுபட்ட சிந்தனைகள்.

சமரசம் (reconciliation): வேறுபாடுகளை சீர் செய்தல்.

மறுபிறவி எடுத்தல் (reincarnate): ஒரு உடலில் வாழ்ந்து உயிர் துறந்த பிறகு இன்னொரு உடலில் பிறவி எடுத்தல்.

reincarnation: "Re-entering the flesh." *Punarjanma;* metempsychosis. மறுபிறவி. ஆன்மாக்கள் பிறப்பின் மூலம் ஒரு தூல உடலுக்குள் நுழையும் செய்முறை. *கர்மவினையை* கரைத்து, பரசிவத்தை உணர்ந்த பிறகு மறுபிறவியின் சுழற்சி முடிவுக்கு வருகிறது. இந்த விடுதலை *மோக்ஷம்* என்று அழைக்கப்படுகிறது. அதன் பிறகு ஆன்மா மீண்டும் தூல பிறவி எடுக்கவேண்டிய அவசியமில்லாமல், அது தொடர்ந்து வளர்ச்சியும் பக்குவமும் அடைகிறது. மேலும் தகவலுக்கு: *ஆன்மாவின் முதிர்ச்சி, கர்மவினை, மோக்ஷம், சம்சாரம், ஆன்மா.*

(ஒப்பீடு) relative: முழுமையாக இல்லாமல், இன்னொன்றுடன் ஒப்பிடும் போது மட்டுமே பயனுள்ளதாக இருக்கும் பண்பு அல்லது பொருள்.

மாயை (relative reality): தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கிற மற்றும் மாறக்கூடிய ஒன்று. அது பொய் தோற்றம் இல்லை, ஆனால் அது அநாதியாக, மாறாமல் இருக்கும் முழுமுதற்பொருளும் இல்லை என்று குறிப்பிட்டு, வெளிப்படையான உள்பொருளின் இயல்பை விளக்குகிறது. மேலும் தகவலுக்கு: *முடிவான பரம்பொருள், மாயை.*

மதம் (religion): மனிதனுக்கு அப்பாற்பட்ட உயிர்சக்திகள் அல்லது ஆற்றல்கள் மற்றும் ஒரு பரமாத்துமா அல்லது மாபெரும் ஆற்றலின் வழிபாடு மற்றும் அதன் மீது இருக்கும் நம்பிக்கை பற்றிய ஒரு அமைப்புமுறை. மதம் என்பது ஆன்மாவின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட ஒரு வாகனம் ஆகும், மற்றும் இதில் வழக்கமாக இறையியல், சாத்திரம், ஆன்மீக மற்றும் தார்மீக நெறிகள் மற்றும் வைதீகம் அடங்கியுள்ளன. மேலும் தகவலுக்கு: *இந்து சமயம்.*

கழிவிரக்கம் (remorse): தவறு செய்ததற்காக தீவிரமாக வருந்துதல் அல்லது குற்ற உணர்வு. மனவுறுத்தல். மேலும் தகவலுக்கு: *பிராயசித்தம்.*

துறவறம் (renunciation). மேலும் தகவலுக்கு: *சந்நியாசம்.*

அடக்குமுறைகள் (repressions): உணர்வுள்ள மனதில் இருந்து மறைந்து இருந்து, அடிமனதில் வாசம் செய்யும் அனுபவங்கள், ஆசைகள் அல்லது அகத்தில் இருக்கும் சச்சரவுகள். ஒடுக்கப்பட்ட ஆசைகள்.

ஆத்திரம் (resent (resentment)): தனக்கு தீங்கு இழைக்கப்பட்டது என்ற எண்ணத்தின் காரணமாக தோன்றும் கெட்ட எண்ணம், கோபம் அல்லது பகை உணர்வு.

பழிக்குபழி வாங்குதல் (retaliate): எதிர்த்து தாக்குதல்; பதிலடி.

நேர்மையான கோபம் (righteous indignation): *தர்மத்திற்கு* ஆதரவு தெரிவிக்கும் போது, தனிப்பட்ட ஒழுக்கம் அல்லது மதம்சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில், தேவையற்ற ஆதிக்க உணர்வின் மூலம் தூண்டப்படும் கீழ்நிலை கோபத்துடன் அதிருப்தியை வெளிப்படுத்துவது.

ṛishi: ऋषि "Seer." சூட்சுமமான புலனுணர்வு மற்றும் தொலைநோக்கு மெய்யறிவை வலியுறுத்தும், ஒரு ஞானோதயம் பெற்ற உயிர்சக்தியை

குறிப்பிடும்சொல். வேத காலத்தில், *ரிஷிகள்* காடு அல்லது மலையின் ஒதுக்குப்புறமான இடத்தில், தனியாக அல்லது சீடர்களுடன் வாழ்ந்து வந்தனர். பெரிய மகான்களாக இருந்த *ரிஷிகள்*, *வேதங்களை* மிகவும் சிறந்த முறையில் உபதேசம் செய்தார்கள். *ரிக் வேதத்தில்* குறிப்பிடப்பட்டு இருக்கும் சப்த ரிஷிகள், அந்தர்லோகத்தில் இருந்து மனிதநேயத்தை தொடர்ந்து வழிநடத்துவதாக கருதப்படுகிறது.

இமயமலையில் இருந்து வந்த ரிஷி (Rishi from the Himalayas): வரலாற்று குறிப்பின் படி, சமீப காலத்தில் கைலாச பரம்பரையில் வாழ்ந்த முதல் *சத்குரு* (கி.பி. 1770-1840). இவர் பெங்களூருக்கு அருகில் இருந்த கிராமத்து தேநீர் கடையில் நுழைந்து, சமாதி நிலைக்கு சென்று, ஏழு வருடங்களுக்கு யாரிடமும் அசையாமலும் பேசாமலும் இருந்தார். அவரை *தரிசனம்* செய்ய தொடர்ந்து பக்தர்கள் வந்தார்கள். அவர்கள் மனதில் நினைத்த பிரார்த்தனைகள் மற்றும் சந்தேகங்களுக்கு, கனவில் பதில் கிடைத்தது அல்லது மர்மமான முறையில் பதில்கள் காகிதத்தில் பறந்து வந்து விழுந்தது. ஒரு நாள் அவர் திடீரென்று அந்த கிராமத்தை விட்டு சென்றுவிட்டார். பின்னர் அவர் சித்தர் கடையிற்சுவாமிக்கு (1804-1891) தனது சித்திகளை வழங்கினார்.

சடங்கு (rite (or ritual)): மதம் தொடர்பான ஒரு விழா. மேலும் தகவலுக்கு: *புனிதமான மத சடங்கு, சம்ஸ்காரம்.*

வாழ்க்கையில் முக்கிய தருணங்களுக்கு முன்னேறுவதை குறிக்கும் சம்ஸ்காரங்கள் (rites of passage). மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரம்.*

சம்ஸ்காரங்களில் யார் பங்கு பெறக்கூடாது (rites of passage, not attending): *நந்திநாத சூத்திரங்கள்* குறிப்பிடுவதைப் போல, வாழ்க்கையில் விசேஷமான தருணங்களாக இருக்கும் *சம்ஸ்காரங்கள்* சமூகத்தில் இருக்கும் அனைவராலும் கவனமாக பாதுகாக்கப்படுகிறது. இதனால் அந்த *சம்ஸ்காரங்களில்* யார் பங்குபெற முடியும் என்பதை பாரம்பரியம் குறிப்பிடுகிறது. ஆனால் அவற்றில் பங்கு பெற முடியாதவர்கள் முன்னேற்பாடுகள் மற்றும் பின்னர் நடைபெறும் வரவேற்பு நிகழ்சிகளில் பங்குபெறுவதற்கு எந்த தடையும் இல்லை. விதவைகள், மனைவியை இழந்தவர்கள், *பிரம்மச்சாரிகள்* மற்றும் *பிரம்மச்சாரினிகள்* மற்றும் விவாகரத்து பெற்றவர்கள் அந்த சம்ஸ்க்காரங்களில் பங்கு பெறக்கூடாது. துறவறம், வாழ்க்கைத்துணையை இழந்த நிலை மற்றும் விவாகரத்து தொடர்பான கருத்துக்களில் இருந்து, சம்ஸ்காரங்கள் நடைபெறும் நபர்களின் அடிமனதை பாதுகாப்பதே, அந்த தடையின் நோக்கம் ஆகும். ஈமச்சடங்குகளில் பங்குபெறுவதற்கு எல்லோருக்கும் அனுமதி உண்டு என்றாலும், இதில் பங்குபெற சமீபத்தில் திருமணமான தம்பதிகளுக்கு ஒரு வருடத்திற்கு அனுமதி இல்லை. இதைத்தவிர மற்ற ஈமச்சடங்கு வழக்கங்கள் பின்வருமாறு: 1) தனது பெற்றோர்களின் பிரேதத்திற்கு வழக்கமாக மகன் தான் கொள்ளி வைக்க வேண்டும் என்றாலும், அவன் மனைவி கருவுற்று இருந்தால், அவனது மாமன் மகன் அல்லது அத்தை மகன் கொள்ளி வைக்கிறான்; 2) தன் கணவனின் ஈமச்சடங்கிற்கு வந்த விதவைக்கு, அந்த ஊரைச் சேர்ந்த மற்ற விதைவைகள் ஆதரவு அளிக்கிறார்கள். ஆனால்

அவளுக்கு அருகில் திருமணமான தம்பதிகள் வருவது இல்லை. தனது வாழ்க்கைத்துணையை இழந்தவர் மறுமணம் செய்துக்கொண்டால், அவர் தனது புதிய வாழ்க்கைத்துணையுடன் சம்ஸ்காரங்களில் பங்குபெறுவதற்கு எந்த தடையும் இல்லை. மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரங்கள்*.

ஒரு குறிப்பிட்ட முறைக்கு ஏற்ப நடத்தப்படும் ஒரு சமயச்சடங்கு (ritual).

Rudra: रुद्र "Controller of terrific powers;" or "red, shining one." ருத்திரன். அழிக்கும் கடவுளாக, மீண்டும் ஒடுக்கிக்கொள்ளும் சக்தியாக இருக்கும் சிவபெருமானின் பெயர். ருத்திரனாக இருக்கும் சிவபெருமான், மனிதர்களை புலம்பச் செய்யும் அச்சுறுத்தும் சக்திகளை கட்டுப்படுத்தி பிரயோகம் செய்வதால், அவர் "அச்சுறுத்துபவராகவும", "கண்ணீரின் கடவுளாகவும" இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *நடராசர், சிவபெருமான்*.



śabda kośa: शब्दकोश "Sheath of sounds, or words." ***சப்தகோஷ.***

சொல் அகராதி; ஒரு அகராதி அல்லது சொற்களஞ்சியம்.

புனிதமான மத சடங்கு (sacrament): 1)இது பயன் பெறுபவருக்கும் இறைவன், தெய்வங்கள் மற்றும் *குருவிற்கும்* இடையே ஒரு பிணைப்பு உருவாக காரணமாகிறது. இதில் வாழ்க்கையின் முக்கியமான தருணங்களை குறிக்கும் மத சடங்குகளும் (*சம்ஸ்காரம்*) அடங்கும். 2) *பிரசாதம்*. ஒரு புனிதமான விழாவில் அல்லது ஒரு புனிதமான நபரால் நெய்வேத்யம் செய்யப்பட்ட புனிதமான பொருட்கள், அருள் நிறைந்த பரிசுகள். மேலும் தகவலுக்கு: *பிரசாதம், சம்ஸ்காரம்*.

sacrifice: *Yajña.* யக்ஞம். (யாகம்) 1) வழிபாடு மற்றும் பக்தியின் வெளிப்பாடாக ஒரு தெய்வத்திற்கு வழங்கப்படும் படையல். 2) ஒரு உயரிய குறிக்கோளை அடைவதற்கு, தனது உடைமை, அனுகூலம் அல்லது விருப்பத்தை கைவிடுவது. *யாகம்* என்பதற்கு "புனிதமாக்குதல்" என்று பொருள், மற்றும் அது வழிபடுவதை குறிப்பிடுகிறது. இதன் வழக்கமான மொழியப்பெயர்ப்பாக விளங்கும் *யக்ஞய* என்கிற சொல், "வழிபடுதல்," என்பதை குறிக்கும் "*யுஜ்*" என்று சொல்லில் இருந்து உருவானது. இந்து சமயத்தில், வாழ்க்கை முழுவதும் *யாகம்* அல்லது தியாகமாக விளங்குகிறது மற்றும் இதன் மூலம் உண்மையான ஆன்மீக நிறைவேற்றம் நடைபெறுகிறது. இந்த *யாகம், ஜீவயக்ஞ* என்று அழைக்கப்படுகிறது, மற்றும் ஒருவர் தன்னையே *தியாகம்* செய்தல் என்பது இதன் பொருள். பற்றின்மையின் ஆற்றலாக இருக்கும் *தியாகம்*, உண்மையான *யாகத்தின்* ஒரு அத்தியாவசிய பண்பாக விளங்குகிறது.

sādhaka: साधक From *sadh,* "going straight to the goal." சாதகன். "இலக்கை நோக்கி நேராக செல்பவன்" என்பது இதன் பொருள். ஆன்மீக நாட்டம் உள்ளவர்; *சாதனா* செய்யும் ஒரு பக்தன். தீவிரமான நாட்டத்துடன் ஆன்மீக

பயிற்சிகளை மேற்கொள்பவர், மற்றும் இவர் பொதுவாக திருமணம் செய்துகொள்ளாமல், ஒரு குருவின் வழிகாட்டலின் கீழ் செயல்படுபவர். அவர் வெள்ளை உடை அணிந்து எளிய உறுதிமொழிகளுடன் இருப்பார், ஆனால் அவர் ஒரு *யோகியாகவோ* அல்லது *சந்நியாசியாகவோ* இருப்பதில்லை. கீழ்படிதல், அடக்கம், தூய்மை மற்றும் நம்பிக்கை என்று நான்கு விரதங்களை, குருதேவாவின் மடவாசி சமூகங்களில் இருக்கும் சாதகர்கள் பின்பற்றி, அதை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை புதுபித்துக் கொள்கிறார்கள். மேலும் தகவலுக்கு: *சாதனா.*

sādhana: साधन "Effective means of attainment." சாதனா. "பயனுள்ள முறையில் *சித்தி* பெறுதல்." சு யமுயற்சி, ஆன்மீகப் பயிற்சி; முன்னேறும் பாதை. *பூஜை, யோகம், தியானம், ஜபம், விரதம் மற்றும் பிராயச்சித்தம்* போன்று மதம் சார்ந்த அல்லது ஆன்மீக பயிற்சிகள். *சாதனா* என்பது தனக்குள் மற்றும் கடவுள், தெய்வங்கள் மற்றும் குருவின் மீது அர்ப்பணிப்பு, விசுவாசம் மற்றும் நம்பிக்கையை உருவாக்குகிறது. *சாதனா* உள்ளுணர்வு-அறிவுணர்வு இயல்பை கட்டுப்படுத்தி மற்றும் உருமாற்றி, மெய்ஞ்ஞான உணர்தல்கள் மற்றும் ஆன்மாவின் உள்ளார்ந்த திறமைகளில் முற்போக்கான ஆன்மீக விரிவாக்கத்தை அனுமதிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பாதம், இராச யோகம், சாதனா மார்க்கம், ஆன்மீக விரிவாக்கம்.*

sādhana mārga: साधनमार्ग "The way of *sādhana* ." *சாதனா மார்க்கம்.* இது முடிவான புரிதலை நாடுபவர்களுக்கு கோட்பாடு மற்றும் அறிவுணர்வு கல்வியாக இல்லாமல் தீவிரமான முயற்சி, ஆன்மீக பயிற்சி மற்றும் தொடர்ச்சியான உட்புற உருமாற்றத்தின் பாதைக்கு, அதை பரிந்துரைத்த சிவயோகசுவாமி வழங்கிய பெயர். மேலும் தகவலுக்கு: *பாதம், சாதனா, ஆன்மீக விரிவாக்கம்.*

sādhu: साधु "Virtuous one; straight, unerring." *சாது.* "நற்பண்புடன் இருப்பவர்; தவறு செய்யாது நேர்மையாக இருப்பவர்." இறைவனை தேடும் வேட்கையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு மகான். ஒரு சாது என்பவர் ஒரு *யோகி* அல்லது *சந்நியாசி*, ஒரு குருவின் கீழ் சீடனாகவோ அல்லது முறையான பரம்பரை சார்ந்தவராக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. சாதுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடம் என்று எதுவும் இருப்பதில்லை மற்றும் அவர்கள் ஒரு இடத்தில் இருந்து இன்னொன்றுக்கு பயணம் செய்துக்கொண்டு, யாசகம் செய்து வாழ்ந்துக்கொண்டு இருப்பார்கள். இவர்கள் ஆணாக இருந்தால் சாது என்றும் பெண்ணாக இருந்தால் *சாத்வி* என்றும் அழைக்கப்படுகின்றனர்.

காவி (saffron): இது இந்து துறவிகள் அணியும் ஆடையின் நிறத்தை குறிப்பிடுகிறது. அவர்களது வெள்ளை நிற ஆடை கங்கையின் சேற்றினால் நிறம் மாறியதாக கருதப்படுகிறது.

முனிவர் (sage): மெய்யறிவு, அனுபவம் மற்றும் தீர்மானத்திற்கு உயர்வாக போற்றப்பட்டு விவேகமாகவும், பொதுவாக வயதில் மூத்தவராகவும் இருப்பவர்.

Saguṇa Brahman: सगुणब्रह्मन् "God with qualities." சகுணபிரம்மன். "பண்புகளை உடைய கடவுள்." தனிப்பட்ட கடவுள். மேலும் தகவலுக்கு: *பிரம்மன், பரமேசுவரன்.*

sahasradala padma: सहस्रदलपद्म "Thousand-petaled lotus." சகஸ்ரதல பத்ம. "ஆயிரம் அரைக்கால்களைக்கொண்ட தாமரை." *சகஸ்ரஹார சக்கரத்தை* குறிக்கும் இன்னொரு பெயர். மேலும் தகவலுக்கு: *சகஸ்ரஹார சக்கரம், சக்கரம்.*

sahasrāra chakra: सहस्रारचक्र "Thousand-spoked wheel." சகஸ்ரஹார சக்கரம். "ஆயிரம் ஆரைக்கால்களைக்கொண்ட சக்கரம்." மண்டை ஓட்டில் இருக்கும் சூட்சுமமான விசை மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

தெய்வீக புருஷர் (saint). மேலும் தகவலுக்கு: *நாயனார்.*

Śaiva: शैव. சைவம். தற்போது உலகில் 400 மில்லியனாக இருக்கும் சைவர்கள் அல்லது சைவ சமயம் தொடர்பான ஒன்றை குறிப்பிடுவதற்கு பயன்படும் சொல். மேலும் தகவலுக்கு: சைவ சமயம்.

Śaiva Āgamas: शैव आगम. சைவ ஆகமங்கள். வெளிப்படுத்தப்பட்ட சைவ சமய சாத்திரங்கள். இவை தீவிரமான கடவுள் நம்பிக்கையை போதித்து, சிவபெருமானை பரமனாக, உள்ளார்ந்து எல்லாம் கடந்து இருப்பவராக அடையாளம் காண்கின்றன. இவை இரண்டு முக்கிய பிரிவுகளாக இருக்கின்றன. அவை: 64 *காஷ்மீர் சைவ ஆகமங்கள்* மற்றும் 28 *சைவ சித்தாந்த ஆகமங்கள்.* இவற்றில் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை சாத்திரங்களாக இரண்டாவது பிரிவு விளங்குகிறது. மிகவும் முக்கியமாக, சைவ சமய குழுக்களை தொடர்புப்படுத்தும் சாதனமாக சைவ ஆகம சாத்திரங்கள் விளங்குகின்றன. அவை *வேதங்கள்* வழங்கும் போதனைகளுடன் இணங்கி இருப்பதாகவும், வேதங்களின் சாரத்தை கொண்டு இருப்பதாகவும், அவற்றை அதிக சிரத்தையுடன் படிக்கவேண்டும் என்றும் *ஆகமங்கள்* தங்களைப் பற்றி தெரிவிக்கின்றன. மேலும் தகவலுக்கு: *ஆகமம், வேதங்கள்.*

Śaiva Dharma: शैव धर्म சைவ தர்மம். சைவ சமயத்தை குறிப்பிடும் இன்னொரு பெயர். மேலும் தகவலுக்கு: சைவம்.

Śaiva Dharma Śāstras: शैव धर्म शास्त्र சைவ தர்ம சாத்திரங்கள். கொள்கைகள், உறுப்பினர் விதிகள் மற்றும் சமயப்பணியின் பரிந்துரைகளை விளக்கும் சைவ சித்தாந்த தேவாலயத்தின் *புக் ஆப் டிசிப்ளின்.*

Śaiva Neri: சைவநெறி "Śaiva path." சைவ சமயத்தை குறிக்கும் இன்னொரு சொல். மேலும் தகவலுக்கு: *சைவம்.*

Śaiva Samayam: சைவசமயம் "Śaivite religion." மேலும் தகவலுக்கு: *சைவம்.*

Śaiva Siddhānta: "Final conclusions of Śaivism." சைவ சித்தாந்தம். இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக இலங்கை மற்றும் தென்னிந்திய மக்களிடம் முதன்மையானதாகவும், உலகெங்கும் பிரபலமானதாகவும் சைவ சமயத்தின் ஆற்றல்மிக்க பிரிவாகவும் விளங்குகிறது. இது தெய்வீக வெளிப்பாடுகளின் முறைப்படுத்தப்பட்ட வேத சாத்திரம் ஆகும் மற்றும் இது இருபத்தி எட்டு *சைவ ஆகமங்களில்* உள்ளடங்கியுள்ளன. மற்ற புனிதமான சாத்திரங்களில் *திருமந்திரம்* மற்றும் தெய்வீக பாடல்களின் மிகப்பெரிய தொகுப்பான

திருமுறை, மற்றும் உலகப்பொதுமறையான *திருக்குறள்* அடங்கும். சைவ சித்தாந்திகளுக்கு, எல்லா இருப்புக்களின் கூட்டுத்தொகையாக விளங்கும் சிவபெருமான் *பரமேசுவரன்* (தனிப்பெரும் உருவாய் இருக்கும் சிருஷ்டிகர்த்தா), *பராசக்தி* (உருவத்தின் ஆதாரத்தளமாக), *பரசிவ* (எல்லாம் கடந்து இருக்கும் முழுமுதற்பொருளாக) என்று மூன்று முழுமைகளாக அறியப்படுகிறார். சிவபெருமானுடன் ஆன்மாக்கள் மற்றும் உலகம் சாரத்தில் ஒன்றாக இருந்தாலும், அவை வேறுபட்டு இருப்பதால் முதிர்ச்சி பெறுகின்றன. அகோரசிவா மற்றும் மெய்கண்டாரின் போதனைகளில் இருந்து வரலாற்றின் இடைக்காலங்களில் ஒரு பன்மைவாத பிரிவு தோன்றியது. அகோரசிவாவின் பிரிவை (சுமார் 1150) பொறுத்தவரை, சிவபெருமான் பிரபஞ்சத்தின் லௌகீக காரணமாக இருப்பதில்லை, மற்றும் ஆன்மா முக்தி பெற்ற பிறகு சிவபெருமானுடன் முழுமையான "ஒற்றுமையை" பெறுகிறது. ஆன்மா சிவபெருமானுடன் முழுமையான ஒற்றுமை அடைவதை மெய்கண்டாரின் (சுமார் 1250) பன்மைவாத பிரிவு மறுக்கிறது. மேலும் தகவலுக்கு: சைவம்.

சைவ சித்தாந்த தேவாலயம் (Saiva Siddhanta Church): "Church of God Śiva's Revealed Truth." .இது சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியால் 1949 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

சைவ சித்தாந்த யோக சமூகம் (Saiva Siddhanta Yoga Order): சைவ சித்தாந்த தேவாலயத்தில் வாழ்நாள் துறவிகளின் சங்கம். இந்த சங்கத்தை சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி 1949 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

Śaivism *(Śaiva):* சைவம். சிவபெருமானை பரமாத்துமாவாக வழிபடுபவர்களின் சமயம். இந்து தர்மத்தின் நான்கு பிரிவுகளில் மிகவும் பழமையானது. சைவ சமயத்தின் முதல் சான்றாக, ஒரு யோகியின் தோரணையில் பசுபதியாக அமர்ந்திருக்கும் சிவபெருமானை கொண்ட முத்திரை, 8000 வருடங்களுக்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்டது. சைவம் ஆறு பிரிவுகளை கொண்டுள்ளது, மற்றும் அதில் சைவ சித்தாந்தம், பாசுபத சைவசமயம், காஷ்மீர் சைவ சமயம், வீர சைவம், சித்த சித்தாந்தம் மற்றும் சிவ அத்வைதம் அடங்கும். அவை *வேதங்கள்* மற்றும் *சைவ ஆகமங்களை* வலுவாக தங்களது அடிப்படையாக கொண்டுள்ளதால், அவை பொதுவான பல அம்சங்களை கொண்டுள்ளன, மற்றும் அவற்றில் பின்வரும் முக்கிய கோட்பாடுகள் அடங்கும்: 1) படைத்தல், காத் தல் , அழித்தல், வெளிப்படுத்தும் மற்றும் மறைக்கும் அருள் என்று சிவபெருமானின் ஐந்து சக்திகள்; 2) பதி, பசு மற்றும் பாசம் ("கடவுள், ஆன்மாக்கள் மற்றும் பற்றுகள்") என்ற மூன்று பிரிவுகள்; 3) *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்ற மூன்று மலங்கள்; 4) *இச்சாசக்தி, க்ரியா சக்தி* மற்றும் *ஞான சக்தி* என்று சிவபெருமானின் மூன்று சக்திகள்; 5) இருப்பின் முப்பத்தி ஆறு தத்துவங்கள் அல்லது பிரிவுகள்; 6) ஒரு *சத்குரு* மூலம் *தீட்சை* பெறவேண்டிய அவசியம்;7) *மந்திர* சக் தி; 8) நான்கு *பாதங்கள்* (நிலைகள்): *சரியை* (சுயநலமற்ற சேவை), *கிரியை* (பக்தி), *யோகம்* (தியானம்), மற்றும் *ஞானம்* (ஞானத்திருஷ்டி); 9) *பஞ்சாட்சர* மந்திரம் முதன்மையானது என்றும் மதத்தின் புனிதமான கருவிகளாக *ருத்ராட்சம்* மற்றும் *விபூதி* விளங்குகின்றன என்ற நம்பிக்கை;

10) *சத்குரு*, சிவலிங்கம் மற்றும் *சங்கமத்தின்* (மகான்களின் நட்புறவு) மீது நம்பிக்கை. மேலும் தகவலுக்கு: *சைவம்*.

Śaivite (Śaiva): शैव. சைவ சமயத்தை சார்ந்தவர் அல்லது சார்ந்தது. மேலும் தகவலுக்கு: *சைவம்*.

sakala avasthā: सकल अवस्था "Stage of embodied being." (Tamil: *avasthai.) சகல அவத்தை*. "உருவத்தை பெற்ற உயிர்சக்தியின் நிலை." இது சைவ சித்தாந்தத்தில், ஆன்மா பக்குவம் அடையும் மூன்று நிலைகளில் இரண்டாவதாக விளங்குகிறது. இந்த நிலையில் ஆன்மா முதலில் விஞ்ஞானமய கோசம், பின்பு மனோமாய கோசம், பிராணமய கோசம் மற்றும் இறுதியாக தூல உடலை உருவாக்கி, *கர்மவினை* மற்றும் *மாயையின்* மறைக்கும் சக்திகளால் கட்டுப்படுத்தப்பட்டு பிறப்பு, மரணம் மற்றும் மறுபிறவியின் சுழற்சியில் நுழைந்து, புலன்கள் மூலம் உலக வாழ்க்கையில் ஈடுபடுகிறது. *சகல அவத்தை* மூலமாக நடைபெறும் வளர்ச்சி மூன்று நிலைகளில் அளவிடப்படுகின்றன. அவை: 1) *இருள்*, இந்த நிலையில் பாசம், அறிவு மற்றும் உலக அனுபவம் மீது தூண்டுதல் இருக்கும் (*பாசஞானம்*); 2) *மருள்*, "குழப்பம்;" ஆன்மா உலகம் மற்றும் கடவுளுக்கு இடையே சிக்கிக்கொண்டு, தனது சொந்த இயல்பை தெரிந்துக்கொள்ள உட்புறமாக தனது கவனத்தை திருப்புகிறது (*பசுஞானம்*); மற்றும் 3) *அருள்*, இந்த நிலையில் ஆன்மா கடவுளை அறிய (*பதிஞானம்*) முயற்சி மேற்கொண்டு, அவரது அருளை பெறுகிறது. மேலும் தகவலுக்கு: *அவத்தை, ஆன்மாவின் முதிர்ச்சி, கேவல அவத்தை, சுத்த அவத்தை*.

Śākta: शाक्त Of or relating to Śāktism. சாக்த சமயம் சார்ந்த. மேலும் தகவலுக்கு: *சாக்த சமயம்*.

Śakti: शक्ति "Power, energy." சக் தி. "ஆ் றல்." சிவபெருமானின் இந்த வெளிப்படையான சக்தி, எல்லா இருப்பிலும் வியாபிக்கிறது. எல்லா உருவங்களின் முதன்மை ஆதாரத்தளமாகவும் புனிதமான உணர்வாகவும் விளங்கும் பராசக்தி என்கிற சச்சிதானந்தம், *சக்தியின்* மிகவும் புனிதமான அம்சமாக விளங்குகிறது. சைவ சித்தாந்தத்தில், சிவபெருமான் எல்லாமாக இருக்கிறார், மற்றும் அவரது தெய்வீக ஆற்றலாக இருக்கும் *சக்தி*, அவரிடம் இருந்து பிரிக்க முடியாததாக இருக்கிறது. *சக்தி* என்பது உயர்வானதாக, பேரின்பத்தை தூண்டிவிடும் ஆற்றலாக பக்தர்களால் மிகவும் எளிதாக அனுபவிக்கப்படுகிறது மற்றும் அது ஒரு மகான் அல்லது புனிதமான இந்து கோயிலில் இருந்து வெளிவருகிறது. மேலும் தகவலுக்கு: *குண்டலினி, பராசக்தி, சாக்த சமயம்*.

śaktinipāta: शक्तिनिपात "Descent of grace." *சக்தினிபாத*: "இறை அருள் பாய்ந்து செல்வது." இது சகல *அவத்தையின்* முடிவில், *அருள்* எனப்படும் ஆன்மாவின் மேம்பட்ட நிலையில் நடைபெறுகிறது. *சக்தினிபாத* இரண்டு வகையாக இருக்கிறது: அருள் உட்புறமாக பாய்ந்து செல்வதை சிவபெருமான் மீதான மிகப்பெரிய ஏக்கம் உணர்த்துகிறது; அருள் வெளிப்புறமாக பாய்ந்து செல்வதை ஒரு *சத்குருவின்* தோற்றம் உணர்த்துகிறது. பக்தன் இந்த நிலையில், ஆன்மீகம் மற்றும் புனிதமாக இருக்கும் விஷயங்களில் தன்னை

ஈடுபடுத்திக்கொள்கிறார். இதையே *சக்திபாத* என்ற சொல்லும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *அருள், சகல அவத்தை, சக்திபாத.*

Śāktism (Śākta): शाक्त "Doctrine of power." *சாக்த சமயம்.* மென்மையாகவும் ஆக்ரோஷமாகவும் பல உருவங்களில் சக்தி அல்லது தேவியாக இருக்கும் தெய்வீகத் தாயை கடவுளாக வழிபடுபவர்களின் சமயம். இந்து தர்மத்தில் இருக்கும் நான்கு முக்கிய பிரிவுகளில் ஒன்றாக சாக்த சமயம் விளங்குகிறது. சாக்த சமயத்தின் முதல் வரலாற்று சான்றாக, இந்தியாவின் மெஹர்கர் கிராமத்தில், கி.மு. 5500 காலத்தை சேர்ந்ததாக கருதப்படும், ஆயிரக்கணக்கான பெண் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. சாக்த சமயம் தத்துவம் மற்றும் அனுட்டானத்தை பொறுத்தவரையில், அது அதிகம் சைவ சமயத்தை போன்றதாக இருக்கிறது. உதாரணத்திற்கு இரண்டு சமயமும், சிவபெருமானுடன் ஏற்படும் *அத்வைத* ஐக்கியம் மற்றும் *மோக்ஷத்தை*, ஒரே முடிவான குறிக்கோளாக அறிவிக்கின்றன. ஆனால் சாக்த சமயத்தை சேர்ந்தவர்கள் *சக்தியை,* தெய்வீக தன்மையின் வலுவான அம்சத்தை மட்டும் பரமாத்துமாவாக வழிபடுகிறார்கள் மற்றும் சிவபெருமான் யாவும் கடந்தநிலையில் இருப்பதாக கருதப்படுகிறார் மற்றும் அவரை வழிபடுவதில்லை. ஆன்மீக உருமாற்றம் பெறுவதற்காக, தெய்வீக சக்தி அல்லது ஆற்றலை கைப்பற்றும் முயற்சியில், சாக்த சமயம் பல்வேறுவிதமான பயிற்சிகளுடன், பல உருவங்களையும் கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *சக்தி, தாந்திரீகம்.*

salutations to the sun: *Sūrya namaskāra.* சூரிய நமஸ்காரம். காலையில் சூரியன் இருக்கும் திசையில் ஒரு முறையான வரிசை க்ரமத்தில் செய்யும் எட்டு அல்லது அதற்கும் அதிகமான *யோகாசனங்கள்*. இது நல்ல உடல் ஆரோக்கியத்திற்கு ஒரு தினசரி வாழ்முறையாக மற்றும் தியானத்திற்கு முன்னேற்பாடாக, சுவாசக் கட்டுப்பாடு மற்றும் பயபக்தியுடன் கவனத்தை ஒருமுகப்படுத்தி உடலை நீட்டும் மற்றும் உடலை வளைய வைக்கும் உடற்பயிற்சிகளின் வரிசையை உள்ளடக்கியுள்ளது.

samādhi: समाधि. சமாதி. இது "முழுமையாக ஒருங்கிணைத்து வைத்திருத்தல்," என்பதை குறிப்பிடும் *சமாதா* என்ற சொல்லில் இருந்து உருவானது. "ஒற்றுமை; தாரணை; ஐக்கியம், முழுமை; நிறைவு, நிறைவேற்றம்." *சமாதி* என்கிற உண்மையான *யோக* நிலையில், தியானம் செய்பவரும் தியானம் மேற்கொள்ளப்படும் பொருளும் ஒன்றாக இருக்கின்றன. *சமாதி* இரண்டு நிலைகளை கொண்டது. இதில் முதலாவதாக இருக்கும் *சவிகல்ப சமாதி* (உருவம் அல்லது விதையில் நிலைத்து இருத்தல்), ஒரு பொருளின் சாரத்துடன் அடையாளம் அல்லது ஒருமையை காண்பது ஆகும். இதன் மிகவும் உயர்ந்த நிலையாக முதன்மை ஆதாரத்தளம் அல்லது தூய உணர்வு என்கிற சச்சிதானந்தம் விளங்குகிறது. இரண்டாவதாக பரமாதத்துமாவுடன் அடையாளம் காணும் *நிர்விகல்ப சமாதி* (உருவம் அல்லது விதை இல்லாமல் நிலைத்து இருத்தல்) விளங்குகிறது. இந்த நிலையில் உணர்வின் எல்லா வகைகளையும் கடந்து காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கும் முழுமுதற்பொருள், பரசிவம் அனுபவிக்கப்படுகிறது. இது தனது பின்விளைவாக உணர்வில் ஒரு முழுமையான மாற்றத்தை கொண்டு வருகிறது. *சம்யமத்தில்* இருந்து *சமாதி* மாறுபட்டது என்பதை நினைவில்

கொள்ளவும். மேலும் தகவலுக்கு: *இறைவனை உணர்தல், குண்டலினி, பரசிவம், இராச யோகம், சம்யம, சச்சிதானந்தம், ஆத்ம ஞானம், நினைவு இழந்த நிலை.*

samayam: சமயம் "Religion."

sampradāya: संप्रदाय "Tradition," "transmission;" a philosophical or religious doctrine or lineage. சம்பிரதாயம். இது ஒரு தத்துவம் சார்ந்து அல்லது சமய கோட்பாடு அல்லது பரம்பரையாக இருக்கலாம். இந்து சமயத்தில் இயக்கத்தில் இருக்கும் பாரம்பரியம் அல்லது சாத்திரமாக இருந்து, வாய்மொழி பயிற்சி மற்றும் தீட்சை மூலமாக பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இது உருவாகக் காரணமாக இருந்த *சம்பிரதா* என்ற வினைச்சொல் "வழங்குதல்," "கொடுத்தல்," அளித்தல் என்று பொருள் தருகிறது; பாரம்பரிய முறையில் அளித்தல் என்று பொருள்.

saṁsāra: संसार "Flow." *சம்சாரம்.* நிலையில்லாத தன்மை மற்றும் மாற்றங்கள் நிரம்பி, கூடுவிட்டு கூடு பாயும் இருப்பை கொண்ட ஒரு விந்தையான உலகம். பிறப்பு, மரணம் மற்றும் மறுபிறவியின் சுழற்சி; ஒரு ஆன்மா அனுபவிக்கும் தொடர்ச்சியான லௌகீக வாழ்க்கைகளின் முழுமையான மாதிரி. இது மறுபிறவியை போன்ற சொல்லாக இருந்தாலும், விரிவான கருத்தை கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *ஆன்மாவின் முதிர்ச்சி, கர்மவினை, மறுபிறவி.*

saṁskāra: संस्कार "Impression, activator; sanctification, preparation." சம்ஸ்காரம். "பதிவு, வினையூக்கி; புனிதமாக்கம், முன்னேற்பாடு." 1) (இந்த அல்லது இதற்கு முந்தைய பிறவிகளில்) அனுபவத்தின் மூலம் அடிமனதில் பதியும் பதிவுகள், ஒருவரின் வாழ்க்கை, குணம், எதிர்வினைகள், மனநிலைகள் போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2) நாமகரணம், அன்னபிரசன்னம், அட்சராபியாசம், பெண் வயதுக்கு வருதல் மற்றும் திருமணம் போன்று வாழ்க்கையில் நடைபெறும் குறிப்பிட்ட மாற்றத்தை குறிப்பிடும் சடங்கு. மேலும் தகவலுக்கு: மனம் (ஐந்து நிலைகள்), சடங்கு.

பிறப்பு வரையிலான *சம்ஸ்க்காரங்கள்* *(saṁskāras* of birth):
கர்ப்பாதானத்தில் தொடங்கி பிறந்த குழந்தைக்கு நல்லாசியை வழங்கும் வரை. —***garbhādhāna:*** "Womb-placing." கர்ப்பாதானம் என்பது ஒரு முதிர்ந்த ஆன்மாவிற்கு பிறவி வழங்கும் நோக்குடன், உடலின் சங்கமத்தை அர்ப்பணித்தல். —***punsavana:*** "Male rite; bringing forth a male." பும்சவன. கர்ப்பகாலத்தின் மூன்று மாதத்தில் ஆண் குழந்தையை வேண்டியும், தாய் மற்றும் சேயின் நலனை வேண்டியும் செய்யும் சடங்கு. சொந்த நாட்டை பாதுகாக்க வேண்டும், குடும்பத் தொழிலை நிர்வகிக்க வேண்டும் மற்றும் முதுமையில் பெற்றோர்களை பாதுகாக்க வேண்டும் என்ற மக்களின் நோக்கத்திற்கு ஏற்ப, இது எல்லா சமூகங்களிலும் ஒரு வழக்கமாக இருக்கிறது. பெண்கள் ஆண்களை விட நீண்டகாலம் வாழ்வதும், அவர்கள் தங்கள் சொந்த வீட்டில் இருந்து புகுந்த வீட்டிற்கு சென்று விடுவதே, அத்தகைய சமூகங்களில் ஆண்களின் தேவைக்கு காரணங்களாக விளங்குகின்றன. —***sīmantonnayana:*** "Hair-parting." சீமந்தோன்னயன. நான்காவது மற்றும் ஏழாவது மாதத்திற்கு இடையில் நடைபெறும் இந்த

சடங்கில், கணவன் தன் மனைவியின் தலைமுடியை வாரிவிட்டு தனது அன்பையும் ஆதரவையும் வெளிப்படுத்துகிறான். —***jātakarma:*** “Rite of birth.” ஜாதகர்மா. பிறந்த குழந்தையை தந்தை வரவேற்று, அதை ஆசீர்வதித்து சிறிது நெய் மற்றும் தேனை வாயில் ஊட்டுகிறான். மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரம்.*

குழந்தைப்பருவ *சம்ஸ்காரங்கள்* *(saṁskāras* of childhood): பெயர் சூட்டு விழாவில் இருந்து கல்வி வரை. —***nāmakaraṇa:*** “Name-giving”. நாமகரணம். இந்து மதத்தில் ஏதாவது ஒரு பிரிவில் முறையாக நுழையும் சடங்கு. இது பிறந்ததில் இருந்து 11 முதல் 41 நாட்களுக்குள் நடைபெறுகிறது. ஜோதிட அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்படும் பெயர் பெரும்பாலும் ஒரு தெய்வத்தின் பெயராக இருக்கும். இந்த காலகட்டத்தில், அந்த குழந்தையை அதன் வாழ்நாள் முழுவதும் கண்காணிக்க காவல்தெய்வங்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஒருவர் தனது வாழ்நாளின் பிற்பகுதியில் இந்து சமயத்திற்கு மாற விரும்பும் போது, அவருக்கும் இதே சடங்கு செய்து வைக்கப்படுகிறது. —***annaprāśana:*** “Feeding.” அன்னபிராசனம். குழந்தையின் ஆறாவது மாதத்தில் முதல் முறையாக திட உணவு வழங்கப்படுவதை குறிக்கும் சடங்கு. (பொதுவாக தாய்ப்பால் கொடுப்பதும் தொடர்கிறது). —***karṇavedha:*** “Ear-piercing.” கர்ணவேத. "காது குத் துதல் ." ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் இரண்டு காதுகளையும் குத்தி, தங்கத்தோடுகள் அணிவிக்கும் சடங்கு. இது குழந்தையின் முதல், மூன்று அல்லது ஐந்தாம் வயதில் நடைபெறுகிறது. —***chūḍākaraṇa:*** “Head-shaving.” சுடாகரண. "மொட்டை அடித்தல்." இந்த சடங்கு ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் நடைபெறுகிறது. இது குழந்தை பிறந்து 31 ஆவது நாள் முதல் நான்காவது வயது வரை நடத்தப்படுகிறது. —***vidyārambha:*** வித்யாரம்பம். இது முறையாக கல்வி கற்கத் தொடங்குவதை குறிக்கிறது. ஒரு தட்டில் பரப்பி விடப்பட்டு இருக்கும் அரிசியில், குழந்தை தனது பெயரின் முதல் எழுத்தை சம்பிரதாய முறைப்படி எழுதுகிறது. —***upanayana:*** உபநயனம். இது ஆண் குழந்தைகளுக்கு சுமார் பன்னிரண்டாவது வயதில் நடைபெறுகிறது. இது பிரம்மச்சரிய ஆசிரமத்தின் தொடக்கமாக விளங்குகிறது. இதன் பிறகு வழக்கமாக ஒரு *ஆச்சார்யர்* அல்லது *குருவின்* துணையுடன் சாத்திரம் மற்றும் மற்ற புனிதமான நூல்களை கற்பது தொடங்குகிறது. —***samāvartana:*** சமாவர்த்தன. இது வேதாப்பியாசம் மற்றும் மற்ற சாத்திர விசாரங்களின் நிறைவை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரம்.*

இளமை பருவத்தில் நடைபெறும் *சம்ஸ்க்காரங்கள்* *(saṁskāras* of adulthood): பருவமடைவது முதல் திருமணம் வரை. —***ṛitukāla:*** “Fit or proper season.” பருமடைதல். ஒரு பெண் பருவம் அடைவதை குறிக்கும் சடங்கு. —***keśānta:*** கேஷாந்த. சுமார் 16 வயது சிறுவனின் தாடியை முதல் முறையாக சவரம் செய்வதை குறிக்கும் சடங்கு. இந்த முதல் இரண்டு சடங்குகளும் வீட்டில் நடைபெறுகின்றன. இந்த சமயத்தில் குழந்தைகளுக்கு அவர்களின் பிரம்மசரியத்தைப் பற்றி நினைவூட்டப்பட்டு, புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வழங்கப்படுகிறது. அவர்கள் இளைஞர்களாக பெரியவர்கள் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். —***niśchitārtha*** “Settlement of aim.”

நிச்சயதார்த்தம். இது *வாக்தானம்* என்றும் அழைக்கப்படுகிறது. இந்த தினத்தன்று திருமண தேதி நிச்சயிக்கப்பட்டு, மோதிரம் மாற்றிக்கொள்ளப்பட்டு, இரு தரப்பினரும் பரிசுகளையும் பரஸ்பரம் வழங்கிக் கொள்கிறார்கள். —***vivāha:*** Marriage." விவாகம். திருமணம். அக்னி பகவானை சாட்சியாக வைத்து, இறைவன் மற்றும் மகாதேவர்கள் முன்னிலையில் நடைபெறும் ஒரு விரிவான மற்றும் மகிழ்ச்சிகரமான சடங்கு. இந்த சடங்கின் நிறைவாக மணமகன் மணமகளின் காலை தொட்டு, மெட்டி அணிவித்து ஏழு அடிகள் எடுத்து வைக்க உதவும் போது பின்வரும் மந்திரத்தை சொல்கிறான்: "முதல் அடி குலவிருத்தி மற்றும் தேவையான உணவுப்பொருட்கள். இரண்டாவது அடி தேக ஆரோக்கியம். மூன்றாவது அடி செழிப்பு. நான்காவது அடி மகிழ்ச்சி. ஐந்தாவது அடி வீடு, வாசல், பசுக்கள். ஆறாவது அடி எல்லா பருவங்களிலும் பாதுகாப்பு. ஏழாவது அடி நட்புறவு. நமக்கு இவை அனைத்தையும் இறைவன் அருளட்டும். (*ஹிரண்யகேசி கிரிஹ்ய சூத்திரங்கள்* 1.6.21.2. வேஎ)." மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரங்கள்.*

வாழ்க்கையின் பிற்பகுதியில் நடைபெறும் *சம்ஸ்காரங்கள்* (*saṁskāras* of later life): —***vānaprastha āśrama:*** *வானப்பிரஸ்த ஆசிரமம்.* ஒருவர் தனது 48 ஆவது வயதில் மூத்த ஆலோசகர் நிலையை அடைகிறார். இது பல சமூகங்களில் ஒரு விஷேசமான சடங்கு மூலம் கொண்டாடப்படுகிறது. —***sannyāsa āśrama vrata:*** சந்நியாச ஆசிரம விரதம். இது ஒருவர் தனது 72 ஆவது வயதில், சமூக கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் இருந்து தன்னை விலக்கிக்கொள்ள தொடங்குவதை குறிக்கிறது. இது சில சமயம் சடங்குகள் மூலம் அங்கீகரிக்கப்படுகிறது (இது *சந்நியாச தீட்சையில்* இருந்து மாறுபட்டு இருக்கிறது). மேலும் தகவலுக்கு: *சந்நியாச தர்மம்.* —***antyeshṭi:*** அந்த்யேஷ்டி. பிரேதத்தை தயார் செய்து தகனம், எலும்புகளை சேகரித்தல், அஸ்தியை கரைத்தல் மற்றும் வீட்டில் சுத்தி புண்ணியாகவாசனம் செய்தல் உட்பட ஆன்மா அந்தர்லோகங்களுக்கு செல்ல வழிகாட்டியாக விளங்கும் பல்வேறு சடங்குகள். மேலும் தகவலுக்கு: *தகனம், மரணம், சிரத்தை, சம்ஸ்க்காரம், கூடு விட்டு கூடு பாய்தல்.*

samyama: सम्यम "Constraint." சம்யம. "கட்டுப்பாடு." ஒரு குறிப்பிட்ட விஷயம் அல்லது உணர்வுப்பகுதி மீது தெளிவை பெறுவதற்கு தொடர்ந்து ஒரு கோட்பாட்டின் மீது தியானம் செய்வதை குறிக்கிறது. சம்யம என்பது *தாரணை, தியானம்* மற்றும் *சமாதி* கலந்தது என்று பதஞ்சலி முனிவர் விளக்கியுள்ளார். மேலும் தகவலுக்கு: *தாரணை, தியானம், இராச யோகம், சமாதி.*

Sanātana Dharma: सनातनधर्म "Eternal religion" or "Everlasting path." சனாதன தர்மம். இந்து தர்மத்தின் பாரம்பரிய பெயர். மேலும் தகவலுக்கு: *இந்து மதம்.*

sañchita karma: सञ्चितकर्म "Accumulated action." சஞ்சித கர்மவினை. இந்த பிறவி மற்றும் முற்பிறவியில் செய்த செயல்களின் சேகரிக்கப்பட்ட விளைவு. மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

sanctum sanctorum: "Holy of holies." *Garbhagṛiha.* கர்ப்பக்கிரகம். கருவறை. கல் லால் கட்டப்பட்டு வழக்கமாக குகை வடிவில் இருக்கும் இந்த அறை, கோயிலில்

மிகவும் புனிதமான இடமாக கருதப்படுகிறது. இங்கே மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *கோயில்*.

Śāṇḍilya Upanishad: शाण्डिल्य उपनिषद्. சாண்டில்ய உபநிடதம். இது அதர்வன வேதத்தை சார்ந்தது. இது யோகத்தின் எட்டு வடிவங்கள், இயமங்கள், நியமங்கள், பிராணாயாமம், தியானம் மற்றும் மெய்ப்பொருளின் இயல்பைப் பற்றி விவாதிக்கிறது.

saṅga: सङ्ग "Association; fellowship." (Tamil: *Saṅgam*) சங்கம். குறிப்பாக மதம் சார்ந்த நோக்கங்களுக்கு குழுவாக வருதல்.

Śaṅkara: शंकर "Conferring happiness; propitious." சங்கர். "மகிழ்ச்சியை வழங்குபவர்; அனுகூலமான." சிவனை குறிக்கும் இன்னொரு பெயர்.

Sankara (Śaṅkara), Adi: शंकर ஆதி சங்கரர். இந்து சமயத்தின் தலைசிறந்த மகான்களில் ஒருவராக விளங்கிய இவர் (கி.பி. 788-820), ஷண்மத உபாசனையை தொடங்கி வைத்தார். அவர் அத்வைத வேதாந்தம் மற்றும் பல சாத்திரங்களுக்கு எழுதிய விளக்க உரைகள் மூலம் புகழ்பெற்றார். மேலும் தகவலுக்கு: *அத்வைத சித்தாந்தம், வேதாந்தம்*.

San Mārga: सन्मार्ग "True path." சன்மார்க்கம். தேவையற்ற மனோஉணர்வு ஆய்வுகள் மற்றும் காரணம் இல்லாமல் *சித்திகளை* அடைய முயற்சி செய்யாமல், நேராக முடிவான குறிக்கோளாக விளங்கும் ஆத்ம ஞானத்தை நோக்கி செல்லும் பாதையை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பாதம், சாதானா மார்கம்*.

சன் மார்க சரணாலயம் (San Marga Sanctuary): ஹவாய் தீவுகளில் கார்டென் ஐலான்ட் என்று அழைக்கப்படும் கவாய் தீவில், வயலீலே என்ற செயல்பாட்டில் இல்லாத எரிமலையின் அடிவாரத்தில், சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தியான *தீர்த்தத்தின்* பெயர். இதன் பாதைகள் யாத்திரிகளை வைலுயா நதிக்கு அழைத்து செல்கிறது. அதன் பிறகு அந்த பாதை சோழர்கள் பாணியில் வெள்ளை கருங்கல்லில் கட்டப்பட்ட இறைவன் கோயிலுக்கு அழைத்து செல்கிறது. இது இந்தியாவின் பெங்களூரில் கைகளால் செதுக்கப்பட்டது. இதன் கருவறையில், எர்த்கீப்பர் பளிங்கு படிகத்தில் கூர் முனை மற்றும் 700 பவுண்ட் எடையுடன் கூடிய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. சன் மார்க சரணாலயம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது சைவ சித்தாந்த தேவாலயம் வழங்கும் பல சமூக சேவைகளில் ஒன்றாக விளங்குகிறது.

sānnidhya: सान्निध्य "(Divine) presence; nearness, proximity." *சான்னித்தியம்*. "தெய்வீக இருப்பு; அருகாமை, நிரந்தரமாக வாசம் செய்கிற." ஒரு கோயில் அல்லது தெய்வீக புருஷரை சுற்றி அல்லது அவற்றுள் இருக்கும் சக்தியின் பிரகாசமான மற்றும் புனிதமான இருப்பு.

sannyāsa: संन्यास "Renunciation." "Throwing down" or "abandoning." சந்நியாசம். "துறவறம்." *சந்நியாசம்* என்பது இல்லற பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை உள்ளடக்கிய *தர்மத்தை* நிராகரித்து, மேலும் அதிகமான நிபந்தனைகள் நிறைந்த *சந்நியாசியின் தர்மத்தை* ஏற்றுக்கொள்வதாகும். சந்நியாச

பாதையை தேர்ந்து எடுப்பதற்கு *வித்வத், விவிதிசா, மார்கட* மற்றும் *ஆதூர* என்று நான்கு நியாயமான தூண்டுதல்கள் இருப்பதாக பழங்கால சாத்திரங்கள் கருதுகின்றன. *வித்வத்* (“அறிதல்; விவேகம்”) *சந்நியாசம்* என்பது ஆத்ம ஞானம் மீதான நாட்டத்தினால் உடனடியாக லௌகீக வாழ்க்கையில் இருந்து விலகுவதை குறிக்கிறது. இது முற்பிறவியின் *கர்மவினை* மற்றும் ஈடுபாடுகளின் விளைவாக அமைகிறது. *விவிதிசா* (“பிரித்து உணர்கிற”) *சந்நியாசம்* என்பது சாத்திர விசாரம் மட்டும் அனுட்டானம் மூலம் பரமாத்துமா மீது தோன்றும் ஏக்கம். *மார்கட சந்நியாசம்* என்பது லௌகீக ஈடுபாடுகளில் தோன்றிய மிகப்பெரிய வருத்தம், ஏமாற்றம் அல்லது துரதிஷ்டம் காரணமாக *சந்நியாசம்* மேற்கொள்வதை குறிக்கிறது. (*மார்கட* என்றால் "குரங்கை போன்ற" என்று பொருள் தருகிறது. இது தனது தாயை பற்றிக்கொண்டு இருக்கும் குரங்குக்குட்டியை குறிப்பிடுவதாக இருக்கலாம்.) *ஆதூர* (“வேதனை அல்லது நோயுற்று இருத்தல்”) *சந்நியாசம்* என்பது நோயால் மரணப்படுக்கையில் வாடும் ஒருவர் வாழ்கையில் நம்பிக்கை இழந்து *சந்நியாசம்* மேற்கொள்வதை குறிக்கிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாச தர்மம், சந்நியாச தீட்சை.*

sannyāsa dharma: संन्यासधर्म “Renunciate virtue.” *சந்நியாச தர்மம்.* தெய்வீக விழிப்புணர்வு, ஆத்ம ஞானம் மற்றும் மனிதநேயத்தின் ஆன்மீக மேம்பாடு என்று முழுநேரமும் துறவற வேட்கையை மேற்கொள்ளவேண்டும் என்பதற்க்காக சொத்து, செல்வம், இலட்சியங்கள், சமூக அந்தஸ்து, குடும்ப உறவுகளை உள்ளடக்கிய இல்லற உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை நிரந்தரமாக துறந்தவர்களின் வாழ்க்கை, பாதை மற்றும் பாரம்பரியங்களாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாசம், சந்நியாச தீட்சை, சந்நியாசின்.*

sannyāsa dīkshā: संन्यासदीक्षा “Renunciate initiation.” *சந்நியாச தீட்சை.* இந்த தீட்சை ஒரு முறையான சடங்காக அல்லது சிலசமயங்களில் ஒரு இயல்பான ஆசீர்வதமாக இருக்கக்கூடும். இந்த தீட்சை சீடனுக்கு துறவற சந்நியாச வாழ்க்கையில் புதிய தொடக்கத்தை வழங்கி, அவரை கற்புடைமை, ஏழ்மை மற்றும் கீழ்ப்படிதலை உள்ளடக்கிய குறிப்பிட்ட சில உறுதிமொழிகளுக்கு வாழ்க்கை முழுவதும் கட்டுப்படுத்தி, அவரை ஆத்மஞானத்தின் பாதையில் இயக்குகிறது. மேலும் தகவலுக்கு: *சந்நியாச தர்மம், விதேகமுக்தி.*

sannyāsin: संन्यासिन् “Renouncer.” *சந்நியாசி. சந்நியாச தீட்சையை* பெற்றவர். ஒரு இந்து துறவி, *சுவாமி*, மற்றும் *சந்நியாசிகள்* சமூகத்தை சேர்ந்தவர். சில *சந்நியாசிகள்* நாடோடிகளாக இருப்பார்கள் மற்றும் சில மடத்தில் வாழ்ந்துக்கொண்டு இருப்பார்கள். மேலும் தகவலுக்கு: *சந்நியாசம், சந்நியாச தர்மம், சந்நியாச தீட்சை, சுவாமி.*

Sanskrit (Saṁskṛita): संस्कृत “Well-made;” “refined,” “perfected.” சமஸ்கிருதம். “நன்றாக உருவாக்கப்பட்ட,” “புனிதமான,” “பூரணமான.” இது பழங்கால இந்தியாவின் பாரம்பரிய சமயகுருமார்களின் மொழியாகவும், சொர்க்க லோகங்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு புனிதமான சாதனமாகவும் கருதப்படுகிறது. இது *வேதங்கள்* மற்றும் *ஆகமங்கள்* உட்பட, இந்து சாத்திரங்கள் எழுதப்பட்ட முதன்மையான மொழி ஆகும். இன்று பேச்சு

வழக்கில் இல்லாவிட்டாலும் வழிபாட்டு முறை, இலக்கியம் மற்றும் கல்வியில் தீவிரமாக ஆய்வு மேற்கொள்ளும் மொழியாக இருக்கிறது.

śānti: शान्ति “Peace.”சாந்தி. "அமைதி."

Śānti Mantra: शान्ति मन्त्र “Peace chant.” சாந்தி மந்திரம். தைத்திரீய உபநிடத்தில் வரும் சாந்தி மந்திரம் (2.1.1), குரு சீடர்களுக்கு உபதேசம் வழங்கும் போது அமைதி, தெளிவு மற்றும் தெய்வீக சக்திகளை வரவழைத்து, எதிர்காலத்தில் பகையுணர்வு அல்லது குழப்பத்தை நீக்க உச்சரிக்கப்படுகிறது. இது ஒரு சடங்கு மற்றும் உபதேசங்களின் தொடக்கத்திலும் முடிவிலும் அமைதியை ஏற்படுத்த உச்சரிக்கப்படுகிறது.

santosha: सन्तोष “Contentment.” சந்தோஷம். "திருப்தி." மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

sapta ṛishis: सप्तऋषि சப்த ரிஷிகள். அந்தர்லோகத்தில் இருக்கும் இந்த ரிஷிகள், மனித நேயத்தின் கர்மவினைகளில் வழிகாட்டி உதவி செய்கிறார்கள்.

sārī: सारी (Hindi:) இது ஒரு பெண்மணி அணியும் பாரம்பரிய ஆடை. இது வழக்கமாக பருத்தி நூல் அல்லது பட்டு நூலால் பல நிறங்களில் உருவாக்கப்பட்ட, நீண்ட மற்றும் தைக்கப்படாதத் துணியாக இருக்கிறது. இதை இந்தியா மற்றும் இலங்கையில் இருக்கும் பெண்கள் உடுத்திக்கொள்ள பல்வேறு முறைகளை பயன்படுத்துகின்றனர்.

sarvabhūta: सर्वभूत “All living beings.”*சர்வபூத.* "உயிரினங்கள் அனைத்தும்."

sarvada: सर्वद “For all times.” *சர்வத.* "எல்லா காலங்களுக்கும்."

śāstra: शास्त्र “Sacred script; teaching.” *சாத்திரம்.* "புனிதமான நூல்; போதனை." 1) சமயம் அல்லது தத்துவம் சார்ந்த கட்டுரை அல்லது நூல்கள். 2) அறிவின் பிரிவு, ஒரு விஞ்ஞானம்.

sat: सत् “True, existing, good; reality, existence, truth.” *சத்.* "உண்மை, இருப்பு, நல்லது; யதார்த்தம், உள்பொருள், சத்தியம்." மேலும் தகவலுக்கு: *சச்சிதானந்தம்.*

Satchidānanda (Sachchidānanda): सच्चिदानन्द “Existence-consciousness-bliss.” சச்சிதானந்தம். *பராசக்தியை* குறிக்கும் இன்னொரு பெயர். “தூய இருப்பு-தூய உணர்வு-பேரின்பம்.” இது சிவபெருமானின் தெய்வீக மனதையும், அதே சமயத்தில் ஒவ்வொரு ஆன்மாவின் தூய மெய்ஞ்ஞான மனதையும் குறிப்பிடுகிறது. இது முழுமையான அன்பாக, எல்லாம் அறிந்த சர்வவல்லமை படைத்த உணர்வாக, எல்லா உள்பொருளின் முதன்மையான மூலமாக இருந்தாலும், எல்லா உள்பொருளையும் உள்ளடக்கி ஊடுருவியும் உள்ளது. இது தூய உணர்வு, தூய உருவம், இருப்பின் ஆதாரத்தளம் மற்றும் வேறு பல பெயர்கள் மூலமாகவும் அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பராசக்தி.*

satguru (sadguru): सद्गुरु “True weighty one.” *சத்குரு. நிர்விகல்ப சமாதியின்* மூலம் பரசிவம் என்கிற முடிவான புரிதலை உணர்ந்து, மிகவும் உயர்ந்த சித்தி மற்றும் ஆற்றலை பெற்ற ஒரு ஆன்மீக குருவாகவும் ஒரு *ஜீவன்முக்தாவாகவும்* இருக்கும் இவர், மற்றவர்களை ஆன்மீக பாதையில்

வழிநடத்தி செல்கிறார். அவர் எப்போதும் ஒரு சந்நியாசியாக, திருமணமாகாத ஒரு துறவியாக இருக்கிறார். ஆத்ம ஞானம் பெறுவதற்கு வாழ்ந்துக்கொண்டு இருக்கும் *சத்குருவின்* அருள் மற்றும் வழிகாட்டல் அவசியம் என்று இந்து மதப்பிரிவுகள் அனைத்தும் போதிக்கின்றன. இவர் அருள் மற்றும் முக்தியின் மூலமாக இருக்கும் சதாசிவன், இறைவனின் ரூபமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வணங்கப்படுகிறார். மேலும் தகவலுக்கு: *குரு பக்தி, குரு, குரு-சிஷ்ய சம்பிரதாயம்.*

satsaṅga: सत्संग சத்சங்கம். நல்ல ஆன்மாக்களின் நட்புறவு.

சத்வ குணம் சார்ந்த (sattvic): நன்மை அல்லது தூய்மை பண்பை குறிக்கும் *சத்வ குணம்* சார்ந்த. மேலும் தகவலுக்கு: *குணம்.*

satya: सत्य "Truthfulness." சத்தியம். பொய்யாமை. மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்.*

Sat Yuga (Satya Yuga): सत् युग "Age of Truth," also called Kṛitā, "accomplished, good, cultivated, kind action; the winning die cast of four dots." சத்யுகம். கிருத யுகம் என்றும் அழைக்கப்படுகிறது. "இந்த யுகத்தில் மக்கள் எல்லோரும் அறநெறியுடன் வாழ்வார்கள்." இந்த யுகம் 1,728,000 வருடங்களுக்கு நீடித்து, நான்கு யுகங்களின் வழக்கமான சுழற்சியில் முதலாவதாக இருக்கிறது. மிகவும் பிரகாசமாக இருக்கும் இந்த யுகத்தில், மையத்தில் இருக்கும் சூரிய வெளிச்சம் முழுவதும் பூமியில் ஊடுருவுகிறது. மேலும் தகவலுக்கு: *யுகம்.*

savikalpa samādhi: सविकल्पसमाधि "Enstasy with form" or "seed." *சவிகல்ப சமாதி.* "உருவம்" அல்லது "பீஜத்துடன் ஒன்றி இருத்தல்." மேலும் தகவலுக்கு: *இராச யோகம், சமாதி.*

சாத்திரம் (scripture (scriptural)): "A writing." ஒரு குறிப்பிட்ட பிரிவு அல்லது மதத்திற்கு அதிகாரப்பூர்வ ஆவணமாக விளங்கும் புனிதமான உரை அல்லது புனிதமான புத்தகம்(கள்). மேலும் தகவலுக்கு: *சாஸ்திரம், ஸ்ம்ருதி, சுருதி.*

இரண்டாவது உலகம் (Second World): சூட்சும அல்லது நுணுக்கமான உலகம். உறக்கத்தின் போதும் தூல உடல் இறந்த பிறகும், இந்த உலகில் ஆன்மா தனது நடவடிக்கைகளை தொடர்கிறது. இது தேவலோகம் மற்றும் நரகலோகத்திற்கும் நடுவில் இருக்கும் உலகமாக விளங்குகிறது. முதல் உலகம் அல்லது தூல உலகிற்குள் இரண்டாம் உலகம் இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *மூன்று லோகங்கள்.*

தனிப்பிரிவு (sect): (பெரும்பாலும் சமயம் சார்ந்த) பெரிய சமூகங்களில் தனியாக பிரிந்து இருக்கும் ஒரு சிறிய குழு. ஒரு சமய உடப்பிரிவு.

ஒரு மதத்தில் தனிப்பிரிவை சார்ந்தவர்கள்(sectarian): மற்ற மதப்பிரிவுகள் முழுமையாக அல்லது நிறைவாக இல்லை என்று, ஒரு குறிப்பிட்ட மதப்பிரிவின் நம்பிக்கைகளை மட்டும் பின்பற்றுவது.

மத சார்பற்ற (secular): ஆன்மீகம் சாராது லௌகீகம் சார்ந்த; புனிதமாக அல்லது சமயப்பற்றுடன் இல்லாத.

விடையாக இருக்கும் கர்மவினை (seed *karma):* மந்தமாக இருக்கும் கர்மவினை அல்லது *அனாரப்த கர்மவினை.* இன்னும் "முளைவிடாமல்" இருக்கும் கடந்தகால வினைகள். மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

தீர்க்கதரிசி (seer): சாதாரண புலனுணர்வின் எல்லைகளை கடந்து பார்க்கும் திறமையுடைய ஒரு விவேகமான மனிதர்.

பரமாத்துமா (Self (Self God)): சிவபெருமானின் முதல் பூரணத்துவமான முழுமுதற்பொருளாக, ஒவ்வொரு ஆன்மாவின் மையத்தில் வாசம் செய்யும் பரசிவம். மேலும் தகவலுக்கு: *பரமாத்துமன், பரசிவம்.*

ஆத்ம ஞானம் (Self Realization): பரமாத்துமா, பரசிவத்தை நேரடியாக அறிதல். ஆத்ம ஞானம் சமஸ்கிருதத்தில் *நிர்விகல்ப சமாதி* என்று அறியப்படுகிறது; "உருவம் அல்லது விதை இல்லாத சமாதி;" முடிவான ஆன்மீக *சித்தி* (*அசம்பிரஞ்ஞாத சமாதி* என்றும் அழைக்கப்படுகிறது). உச்சந்தலையில் இருக்கும் *சஹஸ்ரஹார சக்கரத்தை* சூட்சுமமான *குண்டலினி சக்தி* துளைக்கும் போது, இந்நிலை மறைஞானரீதியாக சித்தியாகிறது. இது மனித உணர்தலின் அனைத்து மாதிரிகளையும் கடந்து இருக்கிறது. இது காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கும் அந்த மெய்ப்பொருளின் உணர்தல் அல்லது "அனுபவம் இல்லாத" நிலையை உருவாக்குகிறது. பரசிவம் அல்லது அதன் உணர்தலுக்கு பெயர் வைப்பதும் மிகவும் கடினமாக இருக்கிறது. உண்மையை சொல்லவேண்டும் என்றால், அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றமாக, ஒரு நிரந்தர உருமாற்றமாக, மற்றும் புரிந்துணர்வை கடந்த முடிவான புரிதலுடன் ஏற்படும் ஒரு இயலுணர்வு பரிச்சயமாக, அதன் "பின்விளைவு" மூலமாக அது அனுபவிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *இறைவனை உணர்தல், முக்தி, குண்டலினி, பரசிவம், இராச யோகம், சமாதி.*

அடக்கம் (self-effacement): பணிவு, எளிமையான நடத்தை; ஒருவர் தனது சாதனைகளுக்கு கிடைக்கும் புகழை தானே ஏற்காமல் கடவுள், சத் குரு மற்றும் மற்ற நபர்களுக்கு காணிக்கையாக்குதல்.

சுயமாக பிரகாசிக்கின்ற (self-effulgent): தன்னில் தான் ஒளிர்கின்ற.

செமிடிக் மதங்கள் (Semitic religions): இது ஆபிரகாமிய வழி தோன்றிய மதங்களான யூத மதம், இசுலாம் மற்றும் கிறித்துவ மதங்களை குறிப்பிடுகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆபிரகாமிய மதங்கள் சார்ந்த.*

sevā: सेवा "Service." *Karma yoga. சேவை.* கர்மயோகம். ஆன்மீக பாதையில் முக்கிய அங்கம் வகிக்கும் இந்த பகுதியில், சாதகன் விருப்பம் அல்லது வெகுமதி பற்றிய சிந்தனை அல்லது சொந்த லாபம் எதுவும் இல்லாது சேவை செய்ய முயற்சிக்கிறான். இது *சரியை பாதத்தின்* முக்கிய அனுட்டானமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *யோகம்.*

seval: சேவல். இது ஆண் கோழியை குறிக்கிறது. இதற்கு தலையில் சிகப்பு நிற கொண்டை ஒன்று இருக்கும். இது முருகப்பெருமானின் கோடியில் அங்கம் வகிக்கிறது. இது விவேகத்தின் விடியலை அறிவித்து அறியாமை சக்திகளை வெற்றிக்கொள்கிறது. மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்.*

பாலியல் உறவு (sexuality): மனித பாலுறவின் மீது இந்து சமயம் ஒரு ஆரோக்கியமான, ஒடுக்கப்படாத கண்ணோட்டத்தை கொண்டுள்ளது. வாழ்க்கையின் நான்கு புருஷார்த்தங்களில் ஒன்றாக விளங்கும் காமத்தின் அங்கமாக பாலியல் இன்பம் விளங்குகிறது. இந்து சாத்திரம் குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை, சுய இன்பம், ஓரினச்சேர்க்கை, இருபால் உறவு மற்றும் பலரை திருமணம் செய்துகொள்ளுதல் ஆகியவற்றை பாவமாகவும் கூறாமல், அந்த பயிற்சிக்கு ஊக்கமும் அளிக்காமல் மௌனம் சாதித் து, அவற்றை நிந்திக்கவும் இல்லை தண்டிக்கவும் இல்லை. பாலியல் அனுபவம் பற்றி புரிந்துக்கொள்ளும் அணுகுமுறையில் விபச்சாரம் மற்றும் கருக்கலைப்பும் இரண்டு முக்கிய விதிவிலக்காக விளங்குகின்றன. இவை இரண்டும் இந்த பிறவி மற்றும் வரக்கூடிய பிறவிகளில், வலுவான *கர்மவினை* விளைவுகளை ஏற்படுத்த வல்லதாக கருதப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *மனத்துறவு, விரயம் செய்தல், காந்த சக்தி, ஓஜஸ், தேஜஸ், உருமாற்றம்.*

ஷாமன் (shaman): சில பழங்குடி சமூகங்களில் ஒரு பூசாரியாக இருக்கும் இவர்கள், கண்ணுக்கு புலப்படும் உலகம் மற்றும் புலப்படாத ஆவி உலகங்களுக்கு மத்தியில் ஒரு கருவியாக செயல்படுபவர். See: *Shamanism* .

ஷாமன மதம் (shamanism (shamanic)): இந்த சைபீரிய பழங்குடியினர் சொல், "துறவி" என்பதை குறிக்கும் சமஸ்கிருத சொல்லான *"ஸ்ரமன"* என்ற சொல்லை போன்று உள்ளது. சமஸ்கிருதத்தில் *ஸ்ரம்* என்றால் "கடுமுயற்சி செய்பவர்" என்று பொருள். இது வடகிழக்கு ஆசியாவில் இருக்கும் சில பழங்குடி மக்களின் சமயத்தை குறிக்கிறது. மாற்றி அமைக்கப்பட்ட உணர்வு அல்லது நினைவு இழந்த நிலையில் இருக்கும் போது ஷாமன்கள் எனப்படும் பூசாரிகளால், நல்ல மற்றும் தீய சக்தியை தொடர்புக்கொண்டு, அவற்றின் மீது தாக்கம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை கொண்ட சமயம். மேலும் இழந்த உடல் ஆரோக்கியத்தை மீண்டும் பெறுவதற்காகவும், சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்காகவும் மனித மனதின் திறமைகள் மற்றும் சக்திகளை மேம்படுத்த, ஷாமன சமயத்தின் நம்பிக்கைகள் மற்றும் பயிற்சிகளை, இன்று பின்தொடரும் உலகின் பல்வேறு பழங்குடி மக்களின் நம்பிக்கைகள் மற்றும் பல்வேறு குழுக்களை விவரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

shaṭkoṇa: षट्कोण "Six-pointed star." *ஷட்கோணம்.* ஆறு முனைகளுடன் இருக்கும் வடிவம். இது ஒன்றோடு ஒன்று பிணைந்த இரண்டு முக்கோணங்கள் மூலம் உருவாக்கப்படுகிறது. இதில் மேல் முக்கோணம் சிவபெருமானின் யாவும் கடந்த தெய்வீக பண்பை குறிக்கிறது மற்றும் கீழிருக்கும் முக்கோணம் சிவபெருமானின் வெளிப்பட்ட ஆற்றலான சக்தியை குறிக்கிறது. முருகப்பெருமானது *யந்திரத்தின்* அங்கமாக *ஷட்கோணம்* விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *அர்த்தநாரீஸ்வரர், கார்த்திகேயன்.*

கோசம் (sheath): நெல்லுறையாக இருக்கும் உமியை போன்று ஒரு உறை அல்லது மேல் தோல். சம்ஸ்கிருதத்தில், இது *கோச* என்று அழைக்கப்படுகிறது. இது தத்துவரீதியாக, உடல் மூலமாக ஆன்மாவை

மூடியிருக்கும் உறைகளை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *கோசம், ஆன்மா,* சூட்சும உடல்.

ஜப்பான் நாட்டு தொல்மரபு சமயக்கோட்பாடு (Shintoism): இது *கமி* என்கிற புனிதமான தெய்வீக சக்தியை அடிப்படையாகக் கொண்டது. இந்த சக்தி குறிப்பாக இயற்கை சார்ந்த பல்வேறு வடிவங்களை கொண்டது.

ஷூம் தையீப் (Shūm-Tyēīf): இது நாத பரம்பரையில், தியானம் தொடர்பான சூட்சும ஞான மொழி (*ஷூம்* என்றும் அழைக்கப்படுகிறது) ஆகும். இதை சிவாய சுப்பிரமுனியசுவாமி 1968 வருடத்தில் சுவிட்சர்லாந்து நாட்டில் வெளியிட்டார். இதன் அடிப்படை எழுத்துக்கள், இவ்வாறு காட்சி அளிக்கின்றன:



ஷூம் கண்ணோட்டங்கள் (Shūm perspectives): மனதின் நான்கு கண்ணோட்டங்கள்: –***மூலீப் (moolīf):*** அறிவுணர்வு/தத்துவம் சார்ந்த; –***ஷூமீப் (shūmīf):*** சாட்சி; –***சிம்நீப் (simnīf):*** அறிவியல்/அறிவுணர்வு சார்ந்த; –***டீபி ((dīfī):*** விண்வெளி பயணம், தேவர்கள் மற்றும் மகாதேவர்கள், அகத்தொடர்பு. மேலும் தகவலுக்கு: *டெபீ, மூலெப், ஷூமேப், சிம்நெப்.*

ஷூமேப் (shūmef): (ஷூம்) மனதின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு திடமான சாட்சியாக பயணம் செய்யும் மனதின் கண்ணோட்டம். மேலும் தகவலுக்கு: *ஷூம், ஷூம் கண்ணோட்டங்கள்.*

புறக்கணித்தல் (shun): தொடர்ந்து தவிர்த்தல் அல்லது விலக்கி வைத்தல். தங்களுடன் தொடர்பு கொள்வது பயனுள்ளதாக அல்லது வரவேற்கத்தக்கதாக இருக்காது என்பதை தங்கள் நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தும் களங்கம் விளைவிப்பவர்கள் அல்லது எதிரிகளுடன் தொடர்புகொண்டு கர்மவினை சிக்கல்கள் உருவாக்குவதை தவிர்த்தல். புறக்கணித்தல் என்பது ஈடுபடாமல் இருப்பதன் மூலம் பாதுகாப்பை உருவாக்குவது ஆகும். அது சுமூகமான உறவை பராமரித்தாலும், "நட்புணர்வுடன் உறுதியான சுவரை" உருவாக்கிக்கொள்வதை குறிக்கிறது.

siddha: सिद्ध A “perfected one” or accomplished *yogī*, a person of great spiritual attainment or powers. சி த் தர் . “பூரணமானவர்" அல்லது சிறப்பாக தேர்ச்சி பெற்ற *யோகி*, மிகப்பெரிய ஆன்மீக *சித்தி* அல்லது சக்திகளை பெற்ற நபர். மேலும் தகவலுக்கு: *சித்தி.*

siddha yoga: सिद्धयोग “Yoga of perfected attainment, or of supernatural powers.” சித்தயோகம்: "முழுமையான சித்தி அல்லது தெய்வீக சக்திகளின் யோகம்." 1) பரசிவத்தை அடைந்த பிறகு திறமைசாலிகளின் வாழ்முறையை விளக்க *திருமந்திரம்* மற்றும் சைவ சாத்திரங்கள் பயன்படுத்தும் சொல். சி த் த யோகம் என்பது அட்டமா சித்திகளை போன்று மந்திர வித்தை அல்லது சூட்சும சக்திகள் அல்லது *சித்திகள்* வளர்த்துக்கொள்வதை குறிக்கிறது. குறையில்லாத இறை உணர்வில் வாழ வேண்டும் என்பதற்காக, இந்த மிகவும் உன்னதமான யோகமானது உடல், மனம் மற்றும் உணர்ச்சிகளின் வலுவான நிலைமாற்றத்தை நாடுகிறது. 2) சில இரசவாதிகள்

மேற்கொள்ளும் மிகவும் உயர்வான பயிற்சிகள். மேலும் தகவலுக்கு: *சித்த யோகி, சித்தி.*

siddha yogī: सिद्धयोगी "Yogī of perfection." *சித்த யோகி.* முழு நிறைவை பெற்று, நிபுணராக விளங்கி, உணர்தலை பெற்று மிகவும் வலுவான யோக நிலைகளின் உருவாக விளங்கி, மந்திர வித்தை அல்லது சூட்சும சக்திகளை பெற்றவர். மேலும் தகவலுக்கு: *சித்த யோகம், சித்தி.*

siddhānta: सिद्धान्त "Final attainments" or "conclusions." சித்தாந்தம். 1) இது ஒரு குறிப்பிட்ட தகவல் பிரிவில் பெறும் முடிவான புரிதலை குறிப்பிடுகிறது. 2) இது வேதாந்தம் என்ற சொல்லுடன் சேர்ந்திருக்கும் போது, அது ஒருமைவாத, தியானம் தொடர்பான அம்சங்களை குறிப்பிடாமல், மதத்தின் தினசரி ஆத்திக அனுட்டானங்களை குறிப்பிடுகிறது. ஆனால் சைவ சித்தாந்தமானது ஆத்திகம் மற்றும் அத்வைதம், வேதாந்தம் மற்றும் சித்தாந்தம், *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களை* உள்ளடக்கியுள்ளது.

siddhānta śravaṇa (or śrāvaṇa): सिद्धान्तश्रवण "Scriptural audition." *சித்தாந்த ஸ்ரவண.* சித்தாந்தத்தை காதால் கேட்டல். மேலும் தகவலுக்கு: *இயமம்-நியமம்.*

siddhi: सिद्धि "Power, accomplishment; perfection." சி த் தி. "ஆ் றல், சாதனை; பூரணத்துவம்." இது வழக்கமாக ஆன்மாவின் விசேஷமான சக்திகளை குறிப்பிடுகிறது. அதிலும் குறிப்பாக தொடர்ச்சியான தியானம் மற்றும் திட்டமிட்ட *யோக சாதனா* மூலம் வளர்க்கப்பட்ட சூட்சும சக்திகளை குறிப்பிடுகிறது. பழமையான எட்டு *சித்திகளின்* பட்டியல் பின்வருமாறு. 1) *அணிமா:* ஒரு அணுவைப் போல சிறிய உருவை அடைதல்; 2)*மகிமா:* மிகவும் பெரிய உருவை பெறுதல்; 3) *லகிமா:* காற்றை போல இலேசாய் இருத்தல்; 4) *பிராப்தி:* வியாபிக்கும் தன்மை, விருப்பத்திற்கு ஏற்ப எங்கும் இருக்கும் திறமை; 5)*பிரகாம்யம்:* தன் விருப்பத்தை நிறைவேற்றுதல்; 6) *வசித்துவம்:* இயற்கை சக்திகளை வசப்படுத்துதல்; 7) *ஈசத்துவம்:* இயற்கை மீது ஆதிக்கம் செலுத்தும் திறமை; 8) *காம-அவசயித்தவ:* முழுமையான மனத்திருப்தி.

சீக்கிய சமயம் (Sikhism): "Discipleship." சீக்கியர்கள் என்றால் குருவின் "மாணவர்கள் அல்லது சீடர்கள்" என்று பொருள். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய, இந்த சமயத்தை குரு நானக் தோற்றுவித்தார். இதை ஒன்பது மில்லியன் மக்கள் பின்பற்றுகிறார்கள். சீர்திருத்தங்கள் நிறைந்த இந்த சமயத்தில் உருவ வழிபாடு மற்றும் சாதிகள் இல்லை. இதன் புனித நூலாக ஆதி கிரந்த் விளங்குகிறது, மற்றும் சீக்கியர்களின் புண்ணிய தலமாக அம்ரித்சரஸ் பொற்கோயில் விளங்குகிறது.

śilpi: शिल्पि "Craftsman." சிற்பி. கல் வேலை செய்யும் தொழிலாளி அல்லது இந்து மதத்தின் மற்ற பாரம்பரிய தொழிலை செய்யும் கைவினைஞர்.

வெள்ளி நிறத்தில் இருக்கும் நூல் அல்லது தண்டு (silver cord): தூல உடலையும் சூட்சும உடலையும் தொடர்புப்படுத்தும் சூட்சும பொருள். இது தூல உடலில் இருந்து உயிர் பிரியும் போது, தன்னை துண்டித்துக்கொள்கிறது.

சிம்நெப் (simnef): (Shūm) மனதின் அறிவியல், அறிவுணர்வு நிலையின் கண்ணோட்டம். மேலும் தகவலுக்கு: *ஷும், ஷும் கண்ணோட்டங்கள்.*

பாவச்செயல் (sin): தெரிந்து தெய்வீக விதியை மீறுதல். இந்து தர்மம் பாவச்செயலை கடவுளுக்கு எதிராக செய்த குற்றமாக கருதாமல், *தர்மம்* மற்றும் ஒருவரது ஆன்மாவிற்கு எதிரான செயலாக கருதப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *கர்மவினை.*

śishya: शिष्य "A pupil" or "disciple," especially one who has proven himself and has formally been accepted by a *guru*. "சிஷ்யன்+ அல்லது "சீடன்." குறிப்பாக அந்த சீடன் தனது திறமைகளை நிரூபித்து, ஒரு *குருவால்* ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கவேண்டும்.

Śiva: शिव The "Auspicious," "Gracious," or "Kindly one." சிவபெருமான். "மங்களகரமானவர்," "கருணை நிறைந்தவர்," அல்லது "கனிவானவர்." சைவ சமயத்தின் பரமனாக விளங்குகிறார். சிவபெருமான் எல்லாமாக இருந்து, ஒரேசமயத்தில் படைப்பவராகவும் படைப்பாகவும், உள்ளார்ந்தும் எல்லாம் கடந்தும் இருக்கிறார். தனிப்பட்ட தெய்வமாக இருக்கும் இவர் படைப்பவராக, காப்பவராக மற்றும் அழிப்பவராக இருக்கிறார். ஒரு தெய்வீக சக்தியாக இருக்கும் அவர், மூன்று முழுமைகளாக அறியப்படுகிறார்: பரமேசுவரன் (ஆதி ஆன்மா), பராசக்தி (தூய உணர்வு) மற்றும் பரசிவம் (முழுமுதற்பொருள்). மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன், பராசக்தி, பரசிவம், நடராசர், சதாசிவம், சைவம், சச்சிதானந்தம்.*

சிவ உணர்வு (Śiva consciousness): Śivachaitanya. பல வழிகளில் சிவனையே நினைத்துக்கொண்டு இருக்கும் அனுபவம் அல்லது நிலையை குறிக்கும் ஒரு பொதுப்படையான சொல். மேலும் தகவலுக்கு: *ஞானம், மனம் (ஐந்து நிலைகள்).*

Śivāchārya: शिवाचार्य. சிவாச்சாரியார். சைவ சித்தாந்த பரம்பரையைச் சேர்ந்த பாரம்பரிய பூசாரிகள். ஆதிசைவ பிராமணர்களுக்கு வழங்கப்படும் பட்டம். ஆகமதத்தில் *நித்திய பரார்த்த பூஜை* என்று அழைக்கப்படும் பொதுமக்களின் சிவன் கோயில் சடங்குகளை செய்ய தேவையான பயிற்சி *தீட்சைகளை* பெற்ற ஒரு ஆதிசைவ பூசாரி. முழுமையாக தேர்ச்சி பெற்ற சிவாச்சாரியார், *அர்ச்சகர்* என்று அழைக்கப்படுகிறார். இந்த பூசாரி பாரம்பரியத்தின் குலமும் *சிவாச்சாரியார்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பிராமணன்.*

Śivaliṅga: शिवलिङ्ग "Mark," "Token" or "Sign of Śiva." சிவலிங்கம். இது பெரும்பாலும் எல்லா சிவன் கோயில்களிலும், சிவபெருமானின் மிகவும் பிரபலமான வடிவமாகவும் இருக்கிறது. சிவபெருமானின் மிகவும் பழமையான மற்றும் எளிமையான உருவமாக சிவலிங்கம் விளங்குகிறது. சிவலிங்கத்தை *பீடம்* மற்றும் *லிங்கம்* என்று இரு வகையாக பிரிக்கலாம். இதில் மேற்புறத்தில் இருக்கும் உருளை, லிங்கம் என்று அழைக்கப்பட்டு, எல்லா உருவங்கள் மற்றும் பண்புகளை கடந்து இருந்து பரசிவத்தை குறிப்பிடுகிறது. லிங்கத்தில் கீழிருந்து மேலே எழும்பி இருக்கும் பகுதி பீடம் என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இது இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தும் பராசக்தியை குறிப்பிடுகிறது. லிங்கம் வழக்கமாக கல்லில் (செதுக்கப்பட்டு

இருக்கும் அல்லது விரைந்து ஓடும் ஆற்றை போன்ற இயற்கையின் செயல்களால் தோன்றும் *சுயம்புலிங்கம்*) உருவாக்கப்பட்டாலும் உலோகம், ரத்தினம், படிகம், மரம், மண், உருகும் தன்மையுடைய பனிக்கட்டியாலும் உருவாக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: சைவம்.

Śivaloka: शिवलोक "Realm of Śiva." சிவலோகம். மேலும் தகவலுக்கு: *லோகம்*.

சிவத்தன்மை (Śivaness): இது சிவனாக இருக்கும் அல்லது சிவனை போன்ற பண்பை குறிக்கிறது. அதிலும் குறிப்பாக அவரது தெய்வீக மெய்யுணர்வில் பகிர்வதை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *சிவ உணர்வு*.

Śivarātri: शिवरात्रि "Night of Śiva." சிவ ராத்திரி. மேலும் தகவலுக்கு: மகாசிவராத்திரி.

Śiva-Śakti: शिवशक्ति சிவ-சக் தி. தந்தையாகவும் தாயாகவும் இருக்கும் கடவுள், அவர் உள்ளார்ந்தும் யாவும் கடந்த நிலையிலும் இருக்கிறார். தனது தெய்வீக சக்தியையும், வெளிப்பட்ட ஆற்றலையும் சிவபெருமான் உள்ளடக்கி இருப்பதை, இந்த பெயர் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *பரமேசுவரன், ஆதி ஆன்மா, சிவபெருமான்*.

Śivasambandha: शिवसंबन्ध "Bound together in love of Śiva." சிவ சம்பந்தம். சாதி மதம் பாராமல், சிவபெருமானின் பக்தர்களிடம் இருக்கும் ஒற்றுமை மற்றும் இணக்கத்தை குறிப்பிடுகிறது.

Sivathondar: சிவதொண்டர் "Servant of Śiva." இது சிவனடியாரைப் போன்ற ஆன்மீகப் பொருளை வழங்குகிறது. இந்த சொல், தொடர்ந்து சிவபெருமானை வழிபடுபவர்; மற்றவர்களுக்கு தன்னலமற்ற சேவையை செய்யும் ஒரு பக்தனையும் குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *கர்ம யோகம், சிவத்தொண்டு*.

Sivathondu: சிவதொண்டு "Service to Śiva." *கர்ம யோகத்தை* போன்றது. மேலும் தகவலுக்கு: *கர்ம யோகம்*.

Śivāya Namaḥ: शिवाय नमः "Adoration to Śiva." *சிவாய நமஹ*. சிவபெருமானை வணங்குகிறேன். நமச்சிவாய மந்திரத்தின் இன்னொரு வடிவம். மேலும் தகவலுக்கு: *நமச்சிவாய*.

Skanda: स्कन्द "Quicksilver; leaping one." ஸ்கந்தன். கந்தன். கார்த்திகேயனை குறிப்பிடும் மிகவும் பழமையான பெயர்களில் ஒன்று. இவர் ஒண்சிவப்பு சாயலுடன் தேவர்கள் படைத்தலைவராக இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்*.

Skanda Shashṭhī: स्कन्दषष्ठी. கந்தசஷ்டி. அசுர சக்திகள் மீது கந்தன் எனும் கார்த்திகேயன் வெற்றிபெற்றதை கொண்டாடுவதற்கு அக்டோபர்-நவம்பர் மாதத்தில் ஆறு நாட்கள் நடைபெறும் திருவிழா.

śloka: श्लोक சுலோகம். ஒரு செய்யுள், சொற்றொடர், பழமொழி அல்லது துதிப்பாடல். இது குறிப்பாக இரண்டு வரிகளில், ஒவ்வொரு வரியும் பதினாறு எழுத்துக்களை கொண்டு அமைந்து இருக்கிறது. இது *வேதங்கள்* மற்றும் *சம்ஸ்கிருத* இதிகாசங்களான *இராமாயணம்* மற்றும் *மகாபாரதத்தின்* அடிப்படை செய்யுள் வடிவமாக விளங்குகிறது.

சோம்பலான (slothful): செயல்படுவதற்கு அல்லது முயற்சி செய்வதற்கு ஆர்வம் இல்லாமல் மந்தமாக இருத்தல்.

Smārta: स्मार्त “Of or related to *smṛiti.”* சுமார்த்த. "ஸ்ம்ரிதி தொடர்பான." இந்து மத சாத்திரங்கள். மேலும் தகவலுக்கு: *சுமார்த்த சமயம், ஸ்ம்ருதி.*

Smārtism: “Sect based on the secondary scriptures *(smṛiti).”* சுமார்த்த சமயம். இவர்கள் ஸ்ம்ரிதியை தங்களது அடிப்படையாக கொண்டவர்கள். நான்கு இந்து பிரிவுகளில் சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்கள், ஆறு கடவுளையும் முழுமுதற் கடவுளாக கொண்டு, ஷண்மத உபாசகர்களாக இருக்கிறார்கள். இவர்கள் பழங்கால வைதீக பிராமண பாரம்பரியத்தை சேர்ந்தவர்கள் (சுமார் கி.மு. 700). 9 ஆம் நூற்றாண்டில் இருந்து இந்த சமயத்தின் மீது, ஆதி சங்கரரின் அத்வைத வேதாந்த போதனைகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தி வழிநடத்தி வந்துள்ளன. இதனை பின்பற்றுபவர்கள் குறிப்பாக பழங்கால இதிகாசங்களை சார்ந்து இருக்கிறார்கள். இந்த *இதிகாசங்களில்* இராமாயணம், மகாபாரதம் மற்றும் அதன் அங்கமான *பகவத் கீதை, புராணங்கள்* மற்றும் *தர்ம சாத்திரங்கள்* அடங்கும். இவை *வேதங்களை* புரிந்துக்கொள்வதற்கு துணை நூல்களாக கருதப்படுகின்றன. சகுண பிரம்மனின் பல்வேறு வடிவங்களாக எல்லா கடவுள்களும் விளங்குகின்றன என்ற ஆதி சங்கரரின் கருத்தை சுமார்த்த சமயத்தவர்கள் பின்பற்றுகின்றனர். இவ்வாறு சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்கள் உட்பிரிவுகளை மறந்து, எல்லா கடவுள்களையும் உறுதியுடன் வழிபடுகிறார்கள். *பஞ்சாயதன பூஜை* என்று சுமார்த்த சமயத்தின் வழிபாட்டு முறை அழைக்கப்படுகிறது. இது இந்த அணுகுமுறையை விநாயகர், சூரியன், விஷ்ணு, சிவன் மற்றும் சக்தி என்று பழங்கால இந்து பிரிவுகளின் முக்கிய தெய்வங்களை சேர்த்து ஒன்றாக வழிபடுவதன் மூலம் வலுப்படுத்துகிறது. ஆதி சங்கரர் ஆறாவது தெய்வமாக முருகப்பெருமானை பரிந்துரைத்தார். இதனால் இவர் ஆறு மதங்களை நிறுவிய ஷண்மத ஸ்தாபனாச்சார்யர் என்று அழைக்கப்படுகிறார். ஒரு பக்தன் அந்த ஆறு தெய்வங்களில் ஒருவரை இஷ்ட தெய்வமாக கருதி வழிபடுகிறார். சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்கள் தங்களுக்கு தேவைப்படும் ஆன்மீக வழிகாட்டலுக்கு, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆதி சங்கரர் அமைத்த மடங்கள் மற்றும் அதன் மடாதிபதிகளை அணுகுகிறார்கள். சுமார்த்த சமயத்தில் சடங்கு, பக்திமுறை மற்றும் தத்துவம் என்று மூன்று மாறுபட்ட அணுகுமுறைகள் இருக்கின்றன. மேலும் தகவலுக்கு: *ஆதிசங்கரர்.*

மிகச்சிறிய அளவு (smidgen).

smṛiti: स्मृति That which is “remembered;” the tradition. ஸ்ம்ருதி: “நினைவில் வைத்திருக்கும்,” பாரம்பரியம். மனிதனின் நுண்ணறிவு மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட, இந்து சமயத்தின் துணை நூல்களாக இருந்தாலும் மிகவும் வலுவாக மதிக்கப்படும் சாத்திரங்கள். அறிவியல், சட்டம், வரலாறு, விவசாயம் போன்ற மதசார்பற்ற விஷயங்களுடன், தினசரி விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து மெய்ஞ்ஞான வெளிப்பாடுகள் வரையிலான தலைப்புகளில், ஆன்மீக புலமைகளை எடுத்துரைக்கிறது. சாத்திரம் என்கிற புனிதமான

இலக்கியத்தின் மிகப்பெரிய பொக்கிஷத்தில் இருந்து ஒவ்வொரு பிரிவு மற்றும் குழுவும் தங்களுக்கு பிடித்தமான உரைகளை: உதா. வைணவ மற்றும் சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்கள் *இராமாயணத்தையும்*, அல்லது சைவ சித்தாந்தத்தை சேர்ந்தவர்கள் *திருமுறையையும்* துணை சாத்திரங்களாக அறிவிக்கின்றன. அதனால் ஸ்மிருதியின் தேர்வு ஒவ்வொரு பிரிவு மற்றும் பரம்பரைக்கும் மாறுபடுகிறது. மேலும் தகவலுக்கு: *மகாபாரதம்*, *திருமுறை*.

சோசியலிசம் (socialism): இது ஒரு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் உற்பத்தியின் மீது தனியாரைக் காட்டிலும் சமூகம் அல்லது அரசின் கட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது.

சாக்ரடிஸ் (Socrates): கிரேக்க தத்துவவாதி மற்றும் ஆசிரியர் (கி.மு. 470-399). அவருடைய கேள்வி பதில் முறையை உரையாடல்களாக அவரது பிரதான சீடரான பிளாட்டோ வடிவமைத்துள்ளார்.

சூரிய பின்னல் (solar plexus): மார்பெலும்பின் அடிப்பகுதியில் அமைந்து இருக்கிற, உடலின் மிகப்பெரிய தூல மற்றும் சூட்சுமமான நரம்பு மையம்.

ஆன்மா (soul): உடல், மனம் மற்றும் உணர்ச்சிகளாக இல்லாமல் மனிதனின் உண்மையான உயிர்சக்தி. *ஆத்மன்* அல்லது *புருஷனாக* அழைக்கப்படும் ஆத்மா, இரண்டு அம்சங்களின் கூட்டுத்தொகையாக விளங்குகிறது. அவை ஆன்மாவின் உருவம் அல்லது உடல் மற்றும் ஆன்மாவின் *சாரம்* (இருந்தாலும் சில உரைகளில், ஆன்மா *சாரத்தை* மட்டுமே குறிப்பிட பயன்படுகிறது). —**ஆன்மாவின் சாரம் அல்லது மையக்கரு (essence or nucleus of the soul):** மனிதனின் அகத்தின் ஆழத்தில் மாறாமல் இருக்கும் சக்தியான தூய உணர்வு (பராசக்தி அல்லது சச்சிதானந்தம்) மற்றும் முழுமுதற்பொருள் (பரசிவம்). இந்த சாரம் என்றுமே தான் தோன்றியாக, எந்த மாற்றமும் வளர்ச்சியும் அடையாமல், சிவபெருமானின் முழுமைகளான பராசக்தி மற்றும் பரசிவத்துடன் நிரந்தரமாக ஒப்புடைமையுடன் இருக்கிறது.

***ஆனந்தமய கோசம்* (soul body):** (“பேரின்பத்தின் உரை”), “காரண உடல்" என்றும் குறிப்பிடப்படுகிறது (*காரண ஷரீர*), “அகத்தின் ஆழத்தில் இருக்கும் உரை" மற்றும் “ஒளியின் உடல்.” *ஆனந்தமய கோசம்* என்பது ஒளியை (குவாண்டம்கள்) உள்ளடக்கி மனிதனை போன்ற உடலமைப்புடன், தன்னில் தான் ஒளிரும் ஒரு தனிப்பட்ட உயிர்சக்தியாக ஆன்மாவின் வெளிப்பட்ட இயல்பை குறிப்பிடுகிறது. ஆன்மா உருவம் உணர்வு வளர்ச்சி அடையும் போது அதுவும் வளர்ச்சி அடைந்து, ஆதி ஆன்மாவான பரமேசுவரனின் அதே வலிமை மற்றும் தூய்மையை இறுதியாக அடையும் வரை, தொடர்ந்து தூய்மையாகிக்கொண்டு இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *ஆத்மன்*, *ஆன்மாவின் முதிர்ச்சி*, *கோசம்*, *பராசக்தி*, *புருஷா (ஆத்மா)*, *சச்சிதானந்தம்*, *ஆன்மீக விரிவாக்கம்*.

ஆன்மாவின் விரிவாக்கம் (spiritual unfoldment): *Adhyātma vikāsa. ஆத்யாத்ம விகாச*. ஆன்மாவின் வளர்ச்சி. தூல உடல் சாராத நுண்ணுருவாக, உள்ளார்ந்து இருக்கும் மனிதனின் தெய்வீக ஆன்மாவின் விரிவாக்கம். *சுஷும்னா* வழியாக *குண்டலினி சக்தி* மெதுவாக எழுச்சி பெறும் போது,

உணர்வு மிகவும் மெதுவாக விரிவாக்கம் பெறுவதை குறிப்பிடுகிறது. ஒரு மொட்டில் இருந்து பிரகாசமான அழகான தாமரை மலர்வதை போன்று, ஆன்மீக விரிவாக்கம் என்பது இந்த மெதுவான, மிகவும் நுட்பமான செய்முறையை குறிப்பிடுகிறது. தத்துவ பயிற்சி மற்றும் *சாதனா* முழுமை பெற்றதும், குண்டலினி பாதுகாப்பாக மற்றும் புலப்படாமல், எந்தவித துடிப்பு, இழுப்பு, கீறல் அல்லது நெருப்பு சுடர்கள் இல்லாமல் எழுச்சி பெற்று, வலுவான மனஉறுதி, இரக்கம் மற்றும் புலனுணர்வு பண்புகளை உருவாக்குகிறது.

śrāddha: श्राद्ध. *சிரார்தம்.* திவசம். இறந்தவருக்கு வாரம் ஒரு முறை, மாதம் ஒரு முறை மற்றும் அதன் பிறகு வருடம் ஒரு முறை மற்றும் அதன் பிறகு தங்கள் சம்பிரதாயத்திற்கு ஏற்ப செய்யும் சடங்கு. மேலும் தகவலுக்கு: *வாழ்க்கையின் பிற்பகுதியில் நடைபெறும் சம்ஸ்காரங்கள்.*

śruti: श्रुति That which is “heard.” ***சுருதி.*** “காதால் கேட்கப்பட்டவை.” உயர்வான வேதசாத்திர வலிமை மற்றும் ஆன்மீக மதிப்புடன், மனிதனுக்கு வெளியிடப்பட்ட இந்து சமய சாத்திரங்கள். காலவரம்பற்ற இந்த போதனைகள், சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, கடவுள் மூலமாக *ரிஷிகள்* நேரடியாக உபதேசிக்கப்பட்டன. இதனால் சுருதி *அபௌருஷேய,* “மனிதனால் இயற்றப்படாத” அல்லது “அசாதாரண மனிதனின் சக்திகளை கடந்த" என்று அழைக்கப்படுகிறது. *சுருதி* என்பது *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களை* கொண்டுள்ளது, மற்றும் அது குரு சிஷ்ய பரம்பரை மூலமாக பாதுகாக்கப்பட்டு, இறுதியாக சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. இந்து தர்மத்தில் இருக்கும் பல புனிதமான நூல்களில், இந்த இரண்டு அறிவுப் பிரிவுகளும் மிகவும் உயர்வாக மதிக்கப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *ஆகமம், ஸ்ம்ரிதி, வேதம்.*

ஊக்கிகள் (stimulants): உடலியக்கம் அல்லது உறுப்பு சார்ந்த நடவடிக்கையை தற்காலிகமாக தூண்டிவிடும் போதை மருந்துகள். மனோஉணர்வு அனுபவங்களை சில போதை மருந்துகள் தூண்டிவிடுகின்றன, ஆனால் அவை பெரும்பாலும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

strī dharma: स्त्रीधर्म “Womanly conduct.” ஸ்த்ரீ தர்மம். "பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மம்." மேலும் தகவலுக்கு: *தர்மம்.*

subconscious mind: *Saṁskāra chitta.* அடிமனம். *சம்ஸ்கார சித்தம்.* மேலும் தகவலுக்கு: *மனசாட்சி, மனம் (ஐந்து நிலைகள்).*

śubha: शुभ “Auspicious,” “splendid,” “bright.” சுபம். "மங்களகரமான," "அற்புதமான," "பிரகாசமான."

śubha muhūrta: शुभमुहूर्त “Auspicious time.” சுபமுகூர்த்தம். "மங்களகரமான நேரம்." பெரும்பாலும் குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் செழிக்க மற்றும் வெற்றி அடைய வாய்ப்புள்ள ஒரு கால அளவு.

சுத்தப்படுத்துதல் (sublimate): ஒரு உள்ளுணர்வு தூண்டுதல் கீழ்நிலை வடிவமாக வெளிப்படாமல், உயர்நிலையில் தோன்றக் காரணமாக இருப்பது.

சில பொருட்கள் தங்களை நீர்ம நிலைக்கு அழைத்து செல்லாமல், திண்ம நிலையில் இருந்து நேரடியாக வனிம நிலைக்கு உருமாற்றும் பண்பில் இருந்து இந்த சொல் உருவாக்கப்பட்டது. மேலும் தகவலுக்கு: *உருமாற்றம்.*

கீழ்படிதல் (submission): இன்னொருவரின் அதிகாரத்திற்கு அடிபணிதல். உடன்பாடு, பணிவான குணம்.

Subramuniyaswami: சுப்பிரமுனியசுவாமி. நந்திநாத சம்பிரதாயத்தை சார்ந்த கைலாச பரம்பரையின் 162 ஆவது *சத்குரு* (1927–2001). மே 12, 1949 பௌர்ணமி தினத்தன்று, இலங்கையில் இருக்கும் யாழ்ப்பாணத்தில் மாலை 6:21 மணிக்கு யோகசுவாமி முனிவரால், சிவாய சுப்பிரமுனியசுவாமி என்று பெயர் சூட்டப்பட்டார். அவர் ஜலானி குகையில் *நிர்விகல்ப சமாதியை* அடைந்த சில நாட்களில் இந்த பெயர் வழங்கப்பட்டது. இந்த பெயர் *சுப்பிரமுன்ய* என்கிற சம்ஸ்கிருத சொல்லின் தமிழாக்கம் (இதை *சுப்ரமணிய* என்ற சொல்லுடன் குழப்பிக்கொள்ள வேண்டாம்) ஆகும். அவரது பெயரில் *சுப்பிர* என்பது "ஒளி; இயலுணர்வை," குறிப்பிடுகிறது மற்றும் *முனி* என்பது, "அமைதியான முனிவரை," குறிப்பிடுகிறது. *ய* என்பது "கட்டுப்பாடு; சமய ஈடுபட்டுள்ள தியானம்." அதனால் *சுப்பிரமுனிய* என்பது அமைதியாக இருக்கும், அல்லது பேசும் போது இயலுணர்வுடன் பேசும் ஒரு சுய கட்டுப்பாட்டுள்ள ஆன்மா என்று குறிப்பிடுகிறது.

அடிப்படை பிரிவு/ அடுக்கு (substratum): "Layer underneath." "கீழிருக்கும் அடுக்கு." தத்துவத்தில், ஒவ்வொரு வெளிப்பாட்டின் அடித்தளமாக இருக்கும் சாரம் அல்லது அடிப்படை ஆற்றல்: சச்சிதானந்தம். மேலும் தகவலுக்கு: *பரசக்தி, சச்சிதானந்தம்.*

மறைந்திருக்கும் பண்புகளின் மனம் (subsubconscious mind): *Vāsanā chitta* ("mind of subliminal traits"). *வாசன சித்த.* வெவ்வேறு சமயங்களில், ஒரே அதிர்வு விகிதத்துடன் அடியுணர்விற்குள் அனுப்பப்படும் இரண்டு சிந்தனைகள் அல்லது அனுபவங்கள் ஒன்றுசேர்ந்து, புதிய மற்றும் முற்றிலும் மாறுபட்ட அதிர்வுடன் உருவாகும் அடிமனதின் பகுதியை குறிப்பிடுகிறது. இந்த அதிர்வுகளின் திரள், நேர்மறையாக அல்லது எதிர்மறையாக அல்லது கலவையாக இருக்கலாம். பின்பு இந்த மறைந்திருக்கும் பண்புகளின் அமைப்பு, இந்த திரள்களின் பண்பிற்கு ஏற்ப, வெளிப்புற மனதை எதிர்ச்செயலாற்ற வைக்கிறது.

துணை மெய்ஞ்ஞான மனம் (subsuperconscious mind): *அனுக்கரண சித்த. மேலும் தகவலுக்கு: மனம்.*

நுணுக்கமான உடல்கள் அல்லது கோசங்கள் (subtle bodies): இது *பிராணமய,* மனோமய, விஞ்ஞானமய மற்றும் ஆனந்தமய கோசங்கள் என்று மனிதனின் பல்வேறு அம்சங்களை குறிப்பிடுகின்றன.

subtle body: *Sūkshma śarīra.* சூட்சும உடல் அல்லது சரீரம். ஆன்மா நுணுக்கமான உலகம் அல்லது அந்தர்லோகத்தில் செயல்படுவதற்கு, அது தன்னை உறையிட்டுக்கொள்ளும் தூல பண்பில்லாத உடல், சூட்சும உடல் அல்லது வாகனம். ஆன்மா தூல உருவத்துடன் இருந்தால், நுணுக்கமான உடலில் *பிராணமய, சூட்சும மற்றும் விஞ்ஞானமய கோசங்கள்* அடங்கும்.

மரணத்திற்கு பிறகு *பிராணமய கோசம்* சிதைந்ததும், ஆன்மா தன்னுடன் *சூட்சும சரீரம்* மற்றும் *விஞ்ஞானமய கோசத்தை* மட்டும் கொண்டிருக்கும். மறுபிறவிக்கு சற்று முன்பு அல்லது உயர்ந்த பரிணாம வளர்ச்சியுடன் இருக்கும் உலகில் நுழைகையில் *சூட்சும சரீரத்தை* விலக்கிக்கொள்ளும் போது, ஆன்மா *விஞ்ஞானமய கோசத்தை* மட்டும் கொண்டிருக்கும். மேலும் தகவலுக்கு: *ஜீவன், கோசம்.*

śūdra: शूद्र "Worker, servant." சூத்திரன். "தொழிலாளி, வேலைக்காரன்." மேலும் தகவலுக்கு: ஜாதி.

śuddha: शुद्ध "Pure.". சுத்தம்.

śuddha avasthā: शुद्ध अवस्था "Stage of purity." *சுத்த அவத்தை.* "தூய்மையான நிலை." சைவ சித்தாந்தத்தில், பரிணாம வளர்ச்சியின் மூன்று நிலைகளில், சிவபெருமானுக்குள் ஆன்மா மூழ்கி இருக்கும் இறுதி நிலை. ஆத்மஞானத்தை அடைந்ததும், விஞ்ஞானமய கோசம் சுத்திகரிக்கப்படுகிறது மற்றும் *கேவல* அல்லது *சகல* நிலையை காட்டிலும், இந்த மாற்றத்தை தெய்வீக ஆன்மாவின் பண்பு, சிவபெருமானின் பண்பு நன்றாக பிரதிபலிக்கிறது. இந்த நிலையில் ஆன்மா உணர்தலின் நிலைகள் வழியாக தொடர்ந்து விரிவாக்கம் பெற்று, இறுதியாக தனது மூலமாக இருக்கும் ஆதி ஆன்மாவுடன் முடிவாக ஐக்கியமாகிறது. மேலும் தகவலுக்கு: *அவத்தை, ஆன்மாவின் முதிர்ச்சி , கேவல அவத்தை, சகல அவத்தை, விஷ்வகிராசா.*

Śuddha Śaiva Siddhānta: शुद्धशैवसिद्धान्त "Pure Śaiva Siddhānta." சுத்த சைவ சித்தாந்தம். இது திருமூலர் தனது அத்வைத சைவ சித்தாந்தத்தை விளக்கி, அதனை பன்மைவாத சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் முடிவான அத்வைதத்தை உள்ளடக்காத சித்தாந்தத்தின் மற்ற வடிவங்களை வேறுபடுத்தி காட்டுவதற்காக, அவர் தனது திருமந்திரத்தில் முதன்முதலில் இந்த சொல்லை பயன்படுத்தினார்.

சூபி இயக்கம் (Sufism): தனிப்பட்ட நேரடி அனுபவம் மூலம் தெய்வீக அன்பு மற்றும் அறிவு பற்றிய உண்மையை அறிய முயலும் ஒரு இசுலாமிய மறைஞான பாரம்பரியம்.

பதப்படுத்தபட்ட சர்க்கரை (sugar, processed): சிவனோடு வாழும் இந்த பூலோக வாழ்க்கையில், கரும்பில் இருந்து சுக்ரோஸ் என்ற கரும்புச்சர்க்கரை பல வடிவங்களில் பதப்படுத்தப்படுகிறது. இவற்றில் "வெள்ளை சர்க்கரை" (அதிகமாக சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை), திண்பண்ட சர்க்கரை (சர்க்கரைத் தூள்) மற்றும் பழுப்புச் சர்க்கரை (வெள்ளைச் சர்க்கரையுடன் சர்க்கரைப் பாகு சேர்க்கப்பட்டு இருக்கும்) அடங்கும். அதிகமாக சுத்திகரிக்கப்பட்ட கரும்புச் சர்க்கரையில் இருந்து அந்த சர்க்கரையை செரிமானம் செய்ய உதவியாக இருக்கும் இயற்கை உயிர்ச்சத்து மற்றும் கனிமங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு இருக்கும். அதனால் உடல் அந்த சர்க்கரைகளை கிரகிக்க தனது கிடங்குகளில் இருந்து அதே உயிர்ச்சத்து மற்றும் கனிமங்களை பயன்படுத்தி விடுவதால், அது ஆரோக்கியமற்றதாக விளங்குகிறது. இதற்கு பதிலாக பச்சை சர்க்கரை, டர்பினாடோ மற்றும் சுகானட் (உலர்ந்த கரும்புச்சாறு மற்றும் சர்க்கரை பாகு) போன்ற குறைவாக பதப்பட்டுத்தப்பட்ட சர்க்கரைப் பொருட்கள்

ஆரோக்கியமானதாக இருக்கும். மேபில் பாகு, பேரீச்சம்பழ சர்க்கரை (உலர்ந்த பேரீச்சம்பழத் தூள்), தேன், பார்லி மாவு, அரிசி பாகு, வெல்லம் மற்றும் வெல்லப்பாகு ஆகியவை அதிக சத்தான இனிப்பூட்டிகள் ஆகும்.

sukarma: सुकर्म See: *karma* .

śukladāna: शुक्लदान "White, bright or pure gifts." சுக்ல தானம். அதர்ம நடவடிக்கைகளின் எதிர்மறை கர்மவினை சுவடு மூலம் கரை படியாமல், *தார்மீக* வழியில் பொருளை சம்பாதித்து, தாராளமாக வழங்கப்படும் நிதி உதவிகள். மேலும் தகவலுக்கு: *இயம-நியமம்*.

superconscious mind: *Kāraṇa chitta.* மெய்ஞ்ஞான மனம். காரண சித்தம். மேலும் தகவலுக்கு: *மனம்* (ஐந்து நிலைகள்), *மனம்* (மூன்று கட்டங்கள்), *சச்சிதானந்தம்*.

இயற்கையை கடந்த (supernatural): தூல பிரபஞ்சங்களின் இயற்கை விதிகளை கடந்து இருக்கிற. கண்ணுக்கு தென்படும் பிரபஞ்சத்தை கடந்து இருக்கும் ஒரு உள்பொருள் அமைப்பு தொடர்பான, இயற்கையின் விதிகளை இடம்பெயர்க்கும் அல்லது சூட்சும ஞான அடிப்படையில் விளக்கும் நிகழ்வுகள், நடவடிக்கைகள் அல்லது தகவல். மேலும் தகவலுக்கு: சூட்சும ஞானம், ஷாமன மதம்.

மூடநம்பிக்கை (superstition): அனுபவம் அல்லது காரணத்தின் ஆதரவு இல்லாத நம்பிக்கை அல்லது பழக்கம்.

மன்றாடுதல் (supplicate (supplication)): பணிந்து வேண்டுதல். கெஞ்சுதல். சிரத்தையுடன் பிரார்த்தனை செய்தல்.

ஒடுக்கப்பட்ட (suppressed): கீழ்ப்படுத்தப்பட்ட; வலுக்கட்டாயமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்ட. மறைத்து வைக்கப்பட்ட; தடுக்கப்பட்ட. முறையற்ற ஆசைகள் அல்லது சிந்தனைகளை போன்று, மனதில் இருந்து திட்டமிட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ள.

ஒடுக்குதல் (suppression): மனதில் இருந்து உணர்வுடன் தவிர்க்கப்பட்ட ஆசைகள், சிந்தனைகள் அல்லது நினைவுகள். இது ஒரே மாதிரியான ஆசைகள் போன்றவற்றை முழுமையாக அடியுணர்வு பாணியில் மறைக்கும் அடக்குமுறையுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

பரமன் (Supreme God): ஒப்புயர்வற்ற இறைவன், மற்ற மகாதேவர்கள், உயிர்சக்திகள் மற்றும் எல்லா வெளிப்பாடுகளின் மூலமாக மற்றும் சிருஷ்டி கர்த்தாவாக இருக்கும் இறைவன்.

sushumṇā nāḍī: सुषुम्णा नाडी "Most gracious channel." *சுஷும்னா நாடி*.

sushumṇā nāḍī: सुषुम्णानाडी "Most gracious channel." *சுஷும்னா நாடி*. "மிகவும் கண்ணியமான பாதை." முதுகுத்தண்டில் மையமாக இருக்கும் சூட்சுமமான நரம்பு ஓட்டம். மேலும் தகவலுக்கு: *குண்டலினி, நாடி, சமாதி*.

sutala chakra: सुतल चक्र "Great abyss." *சுதளம்*. "படுபாதாளம்". வெறித்தனமான பொறாமை மற்றும் பழிவாங்கும் பகுதி. மூலதாரத்திற்கு கீழே மூன்றாவது சக்கரமாக, முழங்கால்களின் மையத்தில் அமைந்திருக்கிறது. *சம்ஹார*

(“நிராகரிக்கப்பட்ட”) அல்லது *சுதள* என்று அழைக்கப்பட்டு, பூமிக்கு அடியில் இருக்கும் மூன்றாவது சூட்சும நரகலோகத்துடன் பொருந்துகிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகம்*.

sūtra: सूत्र “Thread.” சூத்திரம். ஒரு முதுமொழி போன்ற செய்யுள் அல்லது அத்தகைய முதுமொழிகளைக் கொண்ட இலக்கிய நடையை இது குறிப்பிடுகிறது. கி.பி. 500 ஆம் ஆண்டில் இருந்து இந்த நடையை இந்திய தத்துவ ஞான அமைப்புக்கள் பரவலாக ஏற்றுக்கொண்டு இறுதியில் சட்டம், இலக்கணம், மருத்துவம், கவிதை, கைவினைகள் தொடர்பான படைப்புக்களில் பயன்படுத்தவும் தொடங்கின. ஒவ்வொரு சூத்திரத்துடன் பெரும்பாலும் ஒரு *பாஷ்யம்* என்கிற விளக்கம் அல்லது *டிகா, வியாக்யான* அல்லது *டிப்பணி* போன்ற குறிப்புக்களும் அடங்கி இருக்கும். சி றிய, சுருக்கமான, எளிதில் மனப்பாடம் செய்யக்கூடிய சூத்திரங்களின் மூலம் விரிவான தகவல்கள் பாதுகாக்கப்பட்டு வந்தன. பொருத்தமான சூத்திரங்களை நினைவுக்கூர்ந்து உச்சரிப்பது, இந்து சமய கலைகள் மற்றும் அறிவியலில் ஒரு தினசரி *சாதனாவாக* விளங்குகிறது.

svādhishṭhāna: स्वाधिष्ठान “One’s own base.” ஸ்வாதிஷ்டானா. “ஒருவரின் சொந்த இடம்.” மேலும் தகவலுக்கு: *சக்கரம்*.

svarṇaśarīra: स्वर्णशरीर *ஸ்வர்ணஷரீர*. பொன்னிறத்தில் இருக்கும் ஆன்மீக உடல். இது ஆத்மஞான அனுபவத்தை பலமுறை பெற்ற பிறகு உருவாகிறது. மேலும் தகவலுக்கு: *விஷ்வகிராசா*.

swāmī (svāmī): स्वामी “Lord; owner; self-possessed.” சுவாமி. “கடவுள்; எசமான்; சு ய கட்டுப்பாட்டுடன் இருப்பவர்.” எல்லாம் அறிந்தவராக அல்லது தனக்கு ஆசிரியராக விளங்குகிறார். தனது வாழ்க்கையை முழுமையாக சமயப்பணியில் ஈடுபடுத்திக்கொண்ட ஒரு இந்து சமயத்துறவி, தீட்சை பெற்ற ஒருவர், காவி உடை அணிந்த துறவி மற்றும் வழக்கமாக ஒரு *சந்நியாசிக்கு* வழங்கப்படும் ஒரு மரியாதைக்குரிய பட்டம். *சுவாமி* என்கிற சொல் மரியாதையின் சின்னமாக விளங்கி, சிலசமயங்களில் துறவறம் சாராமல் ஆன்மீக பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டோருக்கும் பயன்படுப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *துறவி, சந்நியாச தர்மம், சந்நியாசி*.

swastika (svastika): स्वस्तिक “It is well.” *ஸ்வஸ்திக்*. இது சூரியனை பிரதிநிதித்துவம் செய்து, பழங்கால இந்து சமயத்தில் மங்களம் மற்றும் சௌபாக்கியத்தின் சின்னமாக விளங்குகிறது. அறிவுணர்வு மூலமாக அல்லாமல் இயலுணர்வு மூலம் தெய்வீகத் தன்மையை அடைவதற்கு, இந்த சின்னத்தின் செங்கோண கோடுகள் ஒரு மாற்று வழியை குறிப்பிடுகிறது. இது பல கலாச்சாரங்களில் ஒரு முக்கிய சின்னமாக விளங்கி வருகிறது.

பரிவு நரம்பு மண்டலம் (sympathetic nervous system): தன்னியக்க நரம்பு மண்டலத்தின் இந்த பகுதி, மார்பு மற்றும் முதுகுத்தண்டின் இடுப்புப் பகுதியில் இருந்து உருவாகிறது. இது பொதுவாக, செரிமான சுரப்புகளை குறைப்பது, இதயத்துடிப்பை அதிகரிப்பது மற்றும் இரத்த நாளங்களை

சுருக்குவதைப் போன்று, தன்னியல்பு நரம்பு அமைப்பின் உடலியல் விளைவுகளை குறைக்கிறது அல்லது எதிர்க்கிறது.

சமயக்கலப்பு (syncretism): பல்வேறு இறைநம்பிக்கைகள் அல்லது வழக்கங்களின் கலவை.

தொகுப்பு (synthesis): இங்கே: பொதுவான கோட்பாடுகளில் இருந்து ஒரு குறிப்பிட்ட முடிவை அடைவதற்கு காரணத்தை பயன்படுத்துவது; இது ஒரு புதிய கருத்தை உருவாக்க கருத்துக்களின் கலவையையும் குறிக்கிறது.



தை சி சுயன் (tai chi chuan): மெதுவாக, நேர்த்தியாக, தொடர்ச்சியான இயக்கங்களுடன் தியானம் செய்யும் ஒரு பழமையான சீன செய்முறை. இதில் பல இயக்கங்கள் தற்காப்புக் கலையில் இருந்து தோன்றியதால், சி ல செய்முறைகளில் சண்டையிடும் அம்சம் அதிக முக்கியத்துவம் பெற்று இருக்கும். அலகுக்குத்தலுடன் தை சி நெருக்கமான தொடர்புடன் இருக்கிறது மற்றும் தாவு நெறி தொடர்பாக உருவாக்கப்பட்ட இந்த செய்முறை, ஆரோக்கியம் மற்றும் உற்சாகம், உடல் வலிமை மற்றும் சமநிலையை அதிகரித்து, மனதில் அமைதியை ஏற்படுத்துவதற்கு, உடலுக்குள் *சி* என்கிற "உயிர் சக்தியை" கட்டுப்படுத்தி இயக்குகிறது.

tala: तल “Plane or world; level; base, bottom; abyss.” *தளம்*. “உலகம் அல்லது பகுதி; சமதளம்; அடிப்பகுதி; படுப்பாதாளம்.” மூலாதார சக்கரத்திற்கு கீழிருக்கும் ஏழு சக்கரங்களில் மையங்கொண்டு இருக்கும் கீழ்நிலை உணர்வின் ஏழு லோகங்களை குறிப்பிடும் வேர்ச்சொல். மேலும் தகவலுக்கு: *சக்கரம்*, *நரகம்*.

talātala chakra: तलातल चक्र “Lower region.” தளாதள. இது *மூலாதாரத்திற்கு* கீழே நான்காவது *சக்கரமாக*, காலின் பின்பகுதியில் மையம் கொண்டு இருக்கிறது. நீடித்த மனக்குழப்பம் மற்றும் தேவையற்ற பிடிவாதத்தின் பகுதி ஆகும். தளாதள அல்லது தாமிஸ்ரா (“இருள்") என்று அழைக்கப்பட்டு, பூமியின் கீழிருக்கும் நான்காவது சூட்சும நரகலோகத்துடன் பொருந்துகிறது. இந்த உணர்வு தன்னுயிர் காப்பை மட்டும் தூண்டுதலாக கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *சக்கரம்*, *நரகம்*.

tamas(ic): तमस् “Force of inertia.” *தமஸ்*. அடர்த்தி, செயலின்மை, சுருக்கம், எதிர்ப்பு மற்றும் அழிவு ஆகியவை தமோகுணத்தின் பண்புகள் ஆகும். மேலும் தகவலுக்கு: *குணம்*.

taṁbūrā: तंबूरा (Hindi) *தம்பூரா*. இந்த தந்தி வாத்தியம், நான்கு கம்பிகளை கொண்டு, குடம் போன்ற அடிப்பகுதியும் நீண்ட கழுத்தையும் கொண்டதாக இருக்கும். இது செங்குத்தாக நிறுத்தி விரல்களால் மீட்டப்படுகிறது. இது பாடகர் அல்லது இசைக்கருவி வாசிப்பவருக்கு பின்னிசையாக இசைக்கப்படுகிறது.

Tamil: தமிழ். தென்னிந்தியா மற்றும் வடக்கு இலங்கையில் இருக்கும் தமிழர்களின் மொழி. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேல் பழமையான மொழி. இது இந்தியாவில் இருக்கும் தமிழ்நாட்டில் ஆட்சிமொழியாக இருக்கிறது.

Tamil Nadu: தமிழ் நாடு. இந்த தென்னிந்திய மாநிலம் 55,000 சதுர மைல்கள் பரப்பளவு, 55 மில்லியன் மக்கள்தொகையை கொண்டுள்ளது. இந்த மாநிலம் எண்ணற்ற புனிதமான சாத்திரங்கள், மகான்கள், முனிவர்கள் வாழ்ந்த இடமாகவும் சிதம்பரம், மதுரை, பழநி மலை மற்றும் ராமேசுவரம் உட்பட 40,000 க்கும் மேற்பட்ட சிறந்த கோயில்களுக்கு இருப்பிடமாகவும் உள்ளது.

tāṇḍava: ताण्डव "Exuberant dance." *தாண்டவம்.* "பரவச நடனம்." ஆண்கள் ஆடும் விறுவிறுப்பான நடனம். *தாண்டவத்தில்* பல வகைகள் உள்ளன. இந்த *தாண்டவங்களில்,* சிவபெருமானின் *ஆனந்த தாண்டவம்* முதன்மையானதாக விளங்குகிறது. மிகவும் மென்மையாக பெண்மையின் பண்புடன் இருக்கும் நடனம் *லாஸ்யம்* என்று அழைக்கப்படுகிறது. இது "துடிப்புணர்வுடன் இருப்பதை" குறிக்கும் *லச* என்ற சொல்லில் இருந்து உருவானது. நடனம் பொதுவாக *நர்த்தனம்* என்று அழைக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *நடராசர்.*

tantra: तन्त्र "Loom, methodology." *தந்திர.* 1) பொதுவாக *சாத்திரம்* என்ற சொல்லுக்கு ஒத்த பொருள்தரும் சொல்லாக கருதப்படுகிறது. 2) சமயம், சூட்சும ஞானம் மற்றும் அறிவியல் தொடர்பான எல்லா அம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கத்தை வழங்கும் இந்து சாத்திரத்தின் ஒரு பிரிவான, சாக் த சமயத்தை மட்டுமே பெரும்பாலும் சார்ந்திருக்கும் ஆகம உரைகளை குறிப்பிடும் இன்னோரு சொல். 3) இது சைவ மற்றும் சாக்த பாரம்பரியங்களில் ஒரு குறிப்பிட்ட செய்முறை, யுத்தி அல்லது ஆன்மீக பயிற்சியை குறிப்பிடுகிறது. உதாரணத்திற்கு, *பிராணாயாம* ஒரு *தந்திரம்* ஆகும். 4) உருமாற்றம் மற்றும் தெய்வத்துடன் ஐக்கியம் என்று புனையப்பட்ட நோக்கத்துடன், பெரும்பாலும் உடலுறவுகளை உள்ளடக்கி, பெண் சக்தியின் வழிபாட்டை வலுவாக வலியுறுத்தும் கட்டுப்பாடுகள் மற்றும் உத்திகள். மேலும் தகவலுக்கு: *குண்டலினி, சுஷும்னா நாடி, தாந்த்ரீகம்.*

tantric (tāntrika): तान्त्रिक *தாந்த்ரீகம்* 1) தந்திர பாரம்பரியத்தில் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சிகளை அங்கீகரிக்கும் உரிச்சொல். 2) ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே பாய்ந்து செல்லும் நுணுக்கமான ஆணின் பண்பு/பெண்ணின் பண்பை கொண்ட சக்திகள், முரட்டுத்தனமான/மந்தமான சக்திகளை இயக்கும் செய்முறைகளை குறிப்பிடுகிறது. 3) தந்திர பாரம்பரியத்தில் தீவிரமாக ஈடுபட்டு இருப்பவரை குறிப்பிடவும் பயன்படுகிறது. 4) இன்றைய உலகில் *தந்திரம்* என்கிற சொல் இந்து சமயம் மற்றும் போன் சமயம், திபெத்திய பௌத்த மதம், தாவோயிசம், கிறிஸ்துவம், யூத மதம் மற்றும் *நியூ ஏஜ்* (புதிய யுகம்) என்கிற மற்ற சமயங்கள் வளர்த்த, உடலுறவை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக பயிற்சிகளை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *சக்தி சமயம், குண்டலினி, இராச யோகம், தந்திரம்.*

தாவு நெறி (Taoism): எளிமை, சுயநலமின்மை மற்றும் மற்ற குணங்களை ஊக்குவித்து, லாவ் ட்சு வழங்கிய போதனைகளின் அடிப்படையில் 2,500 வருடங்களுக்கு முன்பாக நிறுவப்பட ஒரு சீன மதம். ஒரு வலுவான ஆன்மீக பாரம்பரியமாக விளங்கும் தாவு நெறி, மனித ஆன்மாவின் பல்வேறு நிலைகள் பற்றி விளக்குகிறது. இந்த நெறியை பின்பற்றுவதாக மதிப்பிடப்பட்டுள்ள 50 மில்லியன் மக்கள் பெரும்பாலும் சீனா மற்றும் ஆசியாவின் மற்ற பகுதிகளில் வசிக்கின்றனர்.

tapas: तपस् Also *tapasya.* "Warmth, heat," hence psychic energy, spiritual fervor or ardor. *தபஸ்* அல்லது *தபஸ்யா.* உடலை விரும்பி வருத்துதல், துறவறம், தவம். விரைவுப்படுத்தப்பட்ட விரிவாக்க நிலை மற்றும் ஆன்மீக பயிற்சிகள் மூலமாக, சக்திகளுடன் இணைந்து செயல்படுதல். தெய்வீக சக்திகள் முன்பாக பணிவாக கீழ்ப்படியும் நிலை மற்றும் பெரும்பாலும் சில நிலைகளில் தானாக நடைபெறும் உட்புற சுத்திகரிப்பின் செய்முறைகளுக்கு சரணடைதல். ஒரு மடத்தில், *குருவின்* மூலம் *தபஸ்* நிர்வகிக்கப்பட்டு வழிநடத்தப்படுகிறது. இது ஆச்சாரமாக இருத்தல், தீவிர தியானம், தவம், விரதம், விசேஷ கடமைகளை குறிப்பிடுகிறது; மேலும் இது இறை உணர்வு பெறுவதை தடுக்கும் அசுத்தங்கள், தன்முனைப்பு, மாயைகள் மற்றும் முற்பிறவி கர்மவினைகளை "எரிக்கும்" ஒரு "பொறி பறக்கும் செய்முறையாக" ஆன்மீக சுத்திகரிப்பு மற்றும் உருமாற்றத்தை தெரியப்படுத்துகிறது.

tapasvin: तपस्विन्. *தபஸ்வின்.* *தபஸ்* செய்து கொண்டிருக்கும் ஒருவர் அல்லது *தபஸ்* நிலையில் இருப்பவர்.

tejas: तेजस् "Brilliance, fire, splendor." *தேஜஸ்.* "பிரகாசம், நெருப்பு, ஒளி." நிலம், நீர், நெருப்பு, காற் று, ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களில் ஒன்றாக நெருப்பு விளங்குகிறது. தேஜஸ் என்பது (தபஸ்வின்) தவம் செய்பவரின் ஒளி வீசும் தோற்றத்தில் பிரகாசிக்கும் *தபஸ்ஸை* குறிப்பிடுகிறது. உயர்நிலை *சக்கரங்களுக்கு* வெப்பத்தை உயர்த்துவதால் உடலுறவு சக்திகளை கட்டுப்படுத்தப்பட்டும் *பிரம்மச்சரியம்* மூலம் *தேஜஸ்* அதிகரிக்கிறது. மேலும் தகவலுக்கு: *பிரம்மச்சரியம், ஓஜஸ், தபஸ், உருமாற்றம்.*

temple: கோயில். கடவுள் அல்லது தெய்வங்களை வழிபாட்டிற்காக, பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தில் இருக்கும் ஒரு வளாகம். இந்துக்கள் புனிதமாகவும், விசேஷமானதாகவும் மதிக்கும் இந்த இடங்கள், மூன்று லோகங்கள் அதிக விழிப்புடன் தொடர்புகொள்ளும் இடமாக, அந்தர்லோகத்தில் இருக்கும் உயிர்சக்திகளின் நுணுக்கமான ஆன்மீக ஆற்றல்களை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட இடமாக விளங்குகின்றன. தொடர்ந்து பூஜை செய்து, தெய்வத்தை ஆவாகனம் செய்வதன் மூலம் கோயிலின் சூட்சுமமான சூழல் பராமரிக்கப்படுகிறது. அந்த தெய்வம் பிரதிஷ்டை செய்யப்பட்ட தனது *மூர்த்தியை* தற்காலிக உடலாக பயன்படுத்தி, உலகில் இருக்கும் உயிரினங்களுக்கு ஆசிர்வதிக்கிறார். இந்து சமயத்தில், சமூக மற்றும் சமய வாழ்க்கையின் பெரும்பாலான அம்சங்களின் மையமாக கோயில் விளங்குகிறது. இதை சமஸ்கிருதத்தில் *மந்திர, தேவாலய* (அல்லது

சிவாலய, சிவன் கோயில்) என்றும், தமிழில் *கோவில்* என்றும் அழைக்கப்படுகிறது.

தூண்டுதல் (temptation): கவர்ந்து இழுக்கும் அல்லது வசீகரிக்கும் ஒன்று.

கவர்ந்திழுக்கும் அல்லது அழகால் மயக்கும் பெண் (temptress).

அந்த முடிவான உண்மைப்பொருள் அல்லது மெய்ப்பொருள் (That): இது ஆங்கிலத்தில் பெரிய எழுத்துடன் தொடங்கும் போது முடிவான, விளக்க முடியாத அல்லது பெயர் இல்லாத பரம்பொருளை குறிப்பிடும் சொல்லின் உரிச்சொல்லாக விளங்குகிறது. பரமாத்துமா, பரசிவம். அது "நீ அந்த பரமாத்துமாவாக இருக்கிறாய்," என்பதை குறிப்பிடும், *தத் துவம் அஸியில்* உள்ள *தத்* என்ற சொல்லின் ஆங்கில நிகர் சொல்லாக விளங்குகிறது.

இறை நம்பிக்கை, ஆத்திகம் (theistic): இறைவன் ஒரு உண்மையான, உணர்வுள்ள, தனிப்பட்ட பரமனாக, பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தாவாக மற்றும் ஆட்சியாளராக இருக்கிறார் என்கிற நம்பிக்கை. இது தெய்வங்கள் மீது இருக்கும் நம்பிக்கையையும் குறிப்பிடலாம்.

Third World: Śivaloka,"Realm of Śiva." மூன்றாவது லோகம். சிவலோகம். மகாதேவர்கள் மற்றும் மிகவும் உயர்வான நிலையில் இருக்கும் ஆன்மாக்கள், சுயமாக பிரகாசிக்கும் தங்கள் உருவங்களுடன் வாழும் ஆன்மீக லோகம் அல்லது உள்பொருளின் காரண லோகம். மேலும் தகவலுக்கு: *சிவலோகம், லோகம், மூன்று லோகங்கள்.*

சிந்தனை வடிவம் (thought form): ஒரு மனித ஒளி உடலுக்குள் உருவாக்கப்பட்டு, சூட்சும பரவெளி அல்லது காந்த விசைப்பகுதிகள் வழியாக, ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு பயணம் செய்யும், சூட்சும பொருள் அல்லது காந்த சக்தியின் வெளிப்பாடுகள். அவை படைக்கும், பேணி காக்கும், பாதுகாக்கும் மற்றும் அழிக்கும் சக்தியை கொண்டுள்ளன. அவற்றையும் ஒளி உடல்களை போன்று, காண முடியும். மேலும் தகவலுக்கு: *சூட்சும உலகம், ஒளி உடல், காந்த சக்தி, அறிவாற்றல்.*

மூன்று லோகங்கள் (three worlds): உள்பொருளின் மூன்று உலகங்களை குறிப்பிடும் *திரிலோகா*, அண்டத்தின் அடிப்படை படிநிலை பிரிவுகளாக விளங்குகின்றன. 1) *பூலோக*: "பூலோகம்," தூல உலகம். 2) அந்தரலோக: "உட்புற" அல்லது "மத்தியில் இருக்கும் உலகம்," நுணுக்கமான அல்லது சூட்சும உலகம். 3) சிவலோகம்: "சிவபெருமானின் உலகம்," மற்றும் தெய்வங்கள் மற்றும் அதிக முதிர்ச்சியை பெற்ற ஆன்மாக்களின் உலகம்; காரண லோகம். மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகம்.*

tilaka: तिलक. திலகம். இந்து சமய உட்பிரிவை குறிப்பிடும் வண்ணம் நெற்றி அல்லது புருவத்தில் சாம்பல், களிமண் அல்லது சந்தனம் கொண்டு பூசும் சின்னங்கள்.

டைம்-அவுட் (time-out): ஒரு சச்சரவில் இருந்து மனம் அமைதி அடைய அவகாசம் அளிப்பதற்கு ஒருவர் தன்னை அல்லது இன்னொருவரை விலக்கி வைக்கும் காலம். குழந்தைகளை தண்டனையால் இல்லாமல் அன்போடு வளர்ப்பதற்கு நேர்மறை கட்டுப்பாட்டை பயன்படுத்தும் ஒரு உத்தி. மேலும் தகவலுக்கு: நேர்மறை கட்டுப்பாடு.

tirodhāna śakti: तिरोधानशक्ति "Concealing power." *திரோதான சக்தி.* ஆன்மாவின் தெய்வீக இயல்பை தெளிவற்றதாக்கும் இறை சக்தி அல்லது மறைக்கும் சக் தி. சிவபெருமானின் *திரோதான சக்தி ஆணவ, கர்மவினை, மாயை* என்கிற மூன்று மலங்களை, ஆன்மாவுடன் பிணைக்கிறது. லௌகீக அனுபவம் மூலம் ஆன்மா வளர்ச்சி பெற்று பக்குவமடையும் வாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன், உணர்வை கட்டுப்படுத்துவது ஆகும். மேலும் தகவலுக்கு: *ஆன்மாவின் முதிர்ச்சி, அருள்.*

tīrthayātrā: तीर्थयात्रा "Journey to a holy place." *தீர்த்தயாத்திரை.* புண்ணியத்தலத்திற்கு பயணம் மேற்கொள்ளுதல். மேலும் தகவலுக்கு: *தீர்த்தயாத்திரை.*

tiru: தி ரு "Sacred; holy." "புனிதமான. *ஸ்ரீ* என்கிற சம்ஸ்கிருத சொல்லுக்கு இணையான தமிழ் சொல். பெண்களை குறிப்பிட *திருமதி* பயன்படுத்தப்படுகிறது.

Tirukural: திருக்குறள் "Holy couplets." "புனிதமான ஈரடிச் செய்யுட்கள்." இது தமிழ்மொழியின் ஒரு மாபெரும் இலக்கிய படைப்பாகவும், இந்து சமய நன்னெறி பற்றிய நுண்ணறிவை வழங்கும் ஒரு போக்கிஷமாகவும் விளங்குகிறது. இது சென்னைக்கு அருகில் வாழ்ந்த, சைவத்துறவி திருவள்ளுவரால் (கி.மு. 200) இயற்றப்பட்டது. மேலும் தகவலுக்கு: திருவள்ளுவர்.

Tirumantiram: திருமந்திரம் "Holy incantation." "திருமொழிகள். சுமார் கி.பி.200 ஆம் ஆண்டு திருமூலர் ரிஷியால் அருளப்பட்ட, நந்திநாத சம்பிரதாயத்தின் மிகப்பழமையான தமிழ் சாத்திரம். இது மறைஞான யோக மற்றும் தாந்த்ரீக தகவலின் சேமிப்புக் கிடங்காக விளங்குகிறது. அது *இராச யோகம்* மற்றும் *சித்த யோகத்தின்* சூட்சும ஞான சாரம், மற்றும் தொல் பழங்கால சைவ சமய பாரம்பரியங்களின் சொத்தாக விளங்கும் 28 *சைவ சித்தாந்த ஆகமங்களை* கொண்டுள்ளது. மேலும் தகவலுக்கு: *திருமுறை, திருமூலர்.*

Tirumular: திருமூலர். நந்திநாத சம்பிரதாயத்தை சார்ந்த கைலாச பரம்பரையின் ஒரு புகழ்பெற்ற *சித்த யோகி* மற்றும் *ரிஷி*. இவர் இமயமலையில் இருந்து *திருமந்திரம்* இயற்றுவதற்காக தமிழ்நாடு (சுமார் கி.மு. 200) வந்தார். இந்த சாத்திரத்தில், அவர் தனது சொந்த உணர்தல் மற்றும் *சைவ ஆகமங்கள்* மற்றும் *வேதங்களில்* இருக்கும் அவரது புலமையின் அடிப்படையில், சைவ சமய கோட்பாடுகளை துல்லியமான மற்றும் நுணுக்கமான பாடல் வடிவில் பதிவு செய்துள்ளார். திருமூலர் மஹரிஷி நந்திநாதரின் சீடர்களில் ஒருவராக இருந்தார். மேலும் தகவலுக்கு: *திருமந்திரம், கைலாச பரம்பரை, வேதாந்தம்.*

Tirumurai: திருமுறை "Holy script." தென்னிந்திய நாயன்மார்கள் சிவபெருமானை போற்றிப் பாடிய பாடல்கள் மற்றும் இலக்கியங்களின் பன்னிரண்டு புத்தகத் தொகுப்பு. இதை சைவத்துறவி நம்பியாண்டார் நம்பி (சுமார் கி.பி. 1000) தொகுத்தார்.

tiruvadi: திருவடி. இது *சத்குருவின்* பாதங்களை குறிப்பிடுகிறது. இது சமஸ்கிருதத்தில் ஸ்ரீ *பாதுகை* என்று அழைக்கப்படுகிறது. இது அருளின்

மூலமாக வணங்கப்படுகிறது. *குருவின்* திருவடி குறிப்பாக தெய்வீக மற்றும் தூல லோகங்களுடன் தொடர்பில் இருப்பதால், அவை புனிதமாக விளங்குகின்றன. மேலும் தகவலுக்கு: *பாதுகை.*

Tiruvalluvar: திருவள்ளுவர் “Holy weaver.” இவர் தென்னிந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார். இவர் சைவசமயத்தை சார்ந்தவர். நெசவுத்தொழில் செய்து வந்தார். இவர் உலகப்பொதுமறை, பொய்யாமொழி மற்றும் பல பெயர்களுடன் அழைக்கப்படும் திருக்குறளை இயற்றினார். அவர் நற்பண்புகளுக்கும் விசுவாசத்திற்கும் புகழ்பெற்ற, தனது மனைவி வாசுகியுடன், சென்னையில் இருக்கும் திருமயிலையில் வாழ்ந்து வந்தார். அவரது நினைவாக வள்ளுவர் கோட்டம் என்ற பூங்கா ஒன்று சென்னையில் உள்ளது. அங்கே அவர் எழுதிய குறட்பாக்கள் பளிங்கு கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் தகவலுக்கு: *திருக்குறள்.*

தசமாம்சம் (tithe (tithing)): இது சமஸ்கிருதத்தில் *தசமாம்சா* என்றும் தமிழில் *பதின்மை* என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு ஆன்மீக பழக்கமாக, ஒரு *விரதமாக* விளங்குகிறது. இதன் மூலம் ஒருவர் தனக்கு விருப்பமான சமய அமைப்பிற்கு நன்கொடை வழங்குவதால், பூமியில் ஆன்மீக கல்வி மற்றும் முன்னேற்றம் நிலைநிறுத்தப்படுகிறது. தசமாம்சம் என்பது "இறைவனின் பணமாக" நினைத்து வழங்கப்படுகிறது.

tithi: तिथि. திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தை குறிக் கிறது. அமாவாசை தினத்தன்று சூரியனும் சந்திரனும் சேர்ந்து இருக்கும். சூரியனில் இருந்து சந்திரன் தனது தூரத்தை 12 டிகிரி அதிகரித்துக் கொள்ளும் கால அளவு திதி என்று அழைக்கப்படுகிறது. சூரியன் மற்றும் சந்திரன் இயங்கும் வேகம் மாறுவதால், திதியின் கால அளவு தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கிறது. பதினைந்து நாட்களுக்கு 15 திதிகள் வருகின்றன. பிரதமை, துவிதியை, திருதியை, சதுர் த் தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர் த் தசி , மற்றும் பௌர்ணமி அல்லது அமாவாசை ஆகியவை திதியின் பெயர்கள். தேய்பிறை காலத்தை கிருஷ்ண பட்சம் என்றும், வளர்பிறை காலத்தை சுக்ல பட்சம் என்று அழைக்கப்படுகிறது. இந்த திதிகளுடன் சில சமயங்களில் பட்சமும் சேர்த்து குறிப்பிடப்படுகிறது. உதா சு க் லநவமி. பெரும்பாலான இந்து பண்டிகைகள் *திதிகள்* அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

நினைவு இழந்த நிலையில் சூட்சும சக்திகளுடன் தொடர்பு கொள்ளுதல் (trance mediumship) : தூல உடலை விட்டு ஒரு சாதனம் வெளியே செல்ல, தூல உடல் இல்லாத ஒரு சக்தி அந்த உடலுக்குள் நுழைந்து, ஆவியுடன் தொடர்புகொள்ளும் கூட்டத்தை போல, தனக்கு முன் கூடி இருப்பவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தருவது என்று ஆன்மீகம் இந்த செய்முறையை விவரிக்கிறது. மேலும் தகவலுக்கு: *சமாதி.*

கடந்து செல்கிற (transcend): "ஒருவர் தனது தன்முனைப்பை கடந்து செல்வதைப் போல" ஒருவர் தனது வரையறைகளை கடந்து செல்வது. இதை

தத்துவரீதியாக பார்க்கும் போது, இந்த உலகின் வரையறைகளை கடந்து செல்வது அல்லது மிகவும் ஆழமாக காலம், உருவம் மற்றும் பரவெளியை கடந்து முழுமுதற்பொருள், பரமாத்தும தத்துவம் உணரும் செய்முறையை குறிக் கிறது.

யாவும் கடந்த (transcendent): அனுபவம் அல்லது வெளிப்பட்ட வடிவத்தின் எல்லைகளை கடந்து செல்கிற. சைவ சித்தாந்தத்தில் முழுமுதற்பொருளாக, பரசிவமாக, பரமாத்துமாவாக இருக்கும் சிவபெருமானின் ஒரு பண்பு. உள்ளார்ந்த என்று சொல்லில் இருந்து மாறுபட்ட. மேலும் தகவலுக்கு: பரசிவம்.

இடமாற்றம் (transference): ஒரு இடத்தில் இருந்து அல்லது ஒரு நிலையில் இருந்து இன்னொன்றுக்கு மாற்றம் பெறுவது.

வரம்பு கடந்து செயல்படுவது (transgress): ஒரு சட்டம் அல்லது கொள்கையை மீறுதல்.

நிலைமாற்றம் அல்லது கூடு விட்டு கூடு பாய்தல் (transition): ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு செல்லுதல். இது மரணத்தை குறிப்பிடும் இன்னொரு சொல்லாக விளங்குகிறது, மற்றும் தெளிவாக விளக்கவேண்டும் என்றால், அது தனிநபரின் அழிவை குறிக்காமல், அவரது தொடர்ச்சியை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மரணம்.*

மறுபிறவி (transmigration): ஆன்மா அடுத்தடுத்து மனித உடல்களை எடுத்துக்கொண்டு, தொடர்ந்து மறுபிறவி எடுக்கும் முறை.

உருமாற்றம் (transmutation): ஒரு வடிவத்தில் இருந்து இன்னொரு வடிவத்தை பெறுவது. இந்த புத்தகத்தில் உருமாற்றம் என்பது, பாலுணர்வு/உள்ளுணர்வு சக்திகளை அறிவுணர்வு மற்றும் ஆன்மீக சக்திகளை மாற்றுவதை குறிப்பிடுகிறது. உருமாற்றம் என்பது, *சஹஸ்ரஹாரத்தில்* இருந்து தொடர்ந்து கீழ்நோக்கி *மூலாதாரத்திற்குள்* செல்லும் சக்திகளின் திசைதிருப்பத்தை குறிப்பிடுகிறது. அது கற்பனையில் வெளிப்பட்டு, அன்பு மற்றும் புலன் மட்டுமே சார்ந்த உணர்ச்சிகள் மீது ஏக்கத்தை ஏற்படுத்தி, பெரும்பாலும் சுய இன்பம் மற்றும் புனிதமான திரவங்களின் இழப்பை ஏற்படுத்தும் பாலுணர்வு தூண்டுதல்களின் சக்தியை உயர்நிலைக்கு எடுத்து செல்கிறது. இதற்கு ஒரு விதி விலக்காக, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடைபெறும் சொப்பன ஸ்கலிதம் (wet dreams) விளங்குகிறது, ஏனென்றால் இந்நிலையில் காந்தத்தன்மை கொண்ட திரவங்கள் வெளியேறும் போது, ஆன்மீக சக்திகளில் ஆன்மீக காந்த பண்பின் சூட்சும, மனோஉணர்வு வலிமை உயர்கிறது. மாலை நேரத்தில் நீர் ஆகாரங்கள் அல்லது எளிதில் செரிக்கும் உணவுகளை மட்டும் எடுத்துக்கொண்டு இரவில் நடைபெறும் இந்த வெளியேற்றங்களை கட்டுப்படுத்த அல்லது குறைக்க வேண்டும். ¶துறவிகள் மதியத்திற்கு பிறகு உணவு அருந்தாமல், ஆபாச படங்களை பார்க்காமல், பாலுணர்வு தூண்டும் கற்பனைகளில் மிதக்காமல், மற்றும் பாலுறவு பற்றி வேடிக்கையாக அல்லது இயல்பாக பேசாமல், மற்றும் முக்கியமாக பெண்கள் அல்லது ஆண்களுடன் புலன் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயங்களை பேசாமல் உருமாற்றத்தை

மேம்படுத்துகிறார்கள். பாலுணர்வு சக்திகள் தூண்டப்பட்டால் அல்லது ஒருவர் தனது ஒழுக்கங்களில் தவறு செய்தால், அதைக்கேற்ற *விரதம்* அல்லது *தந்திரம்* (பிராணாயாமம் போன்று) மேற்கொண்டு, அதை சீர் செய்கின்றனர். “புனிதமான விதையை தக்க வைத்துக்கொண்டால், வாழ்க்கையில் வீழ்ச்சி இருக்காது; மிகப்பெரிய வலிமை, ஆ் றல் , அறிவு மற்றும் கவனம் ஆகியவை சித்தி ஆகும்,” என்று திருமந்திரம் (செய்யுள் 1948) குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு:ஆன்மீக சக்தி, மனத்துறவு, காந்த சக்தி, *ஓஜஸ், தேஜஸ்.*

trikoṇa: त्रिकोण. திரிகோணம். முழுமுதற்பொருளாக இருக்கும் சிவபெருமானை குறிக்கும் சின்னமாக முக்கோணம் விளங்குகிறது. இது பஞ்ச பூதங்களில் நெருப்பை குறிப்பிடவும் பயன்படுகிறது.

மும்மலம் (triple bondage). மேலும் தகவலுக்கு: *மலம், பாசம்.*

tripuṇḍra: त्रिपुण्ड्र “Three marks.” திரிபுண்டரம். சைவர்கள் நீரில் விபூதியை குழைத்து மூன்று கோடுகளாக நெற்றியில் தரிப்பதற்கு திரிபுண்டரம் என்று பெயர். பெரும்பாலும் மூன்றாவது கண்ணில் ஒரு போட்டு வைத்துக்கொள்ளும் வழக்கமும் உள்ளது. அந்த மூன்று கோடுகள் *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்ற மும்மலங்களை குறிப்பிடுகின்றன. மாட்டு சாணத்தை எரித்து தயாரிக்கப்படும் விபூதி, தூல உடலின் தற்காலிக இயல்பையும், விரைவாக ஆன்மீக சித்தியை பெற முயற்சி செய்து இறைவனிடம் நெருங்க வேண்டிய அவசியத்தை நினைவூட்டுகிறது. மேலும் தகவலுக்கு: *பிந்து, திலகம், விபூதி.*

triśūla: त्रिशूल. திரிசூலம். சிவபெருமான் மற்றும் சில சைவ துறவிகள் பயன்படுத்தும் முத்தலைச்சூலம். *இச்சாசக்தி* (ஆசை, விருப்பம், அன்பு), *கிரியாசக்தி* (செயல்பாடு) மற்றும் *ஞானசக்தி* (ஞானம்) என்கிற கடவுளின் மூன்று அடிப்படை சக்திகள் அல்லது ஆற்றல்களை குறிப்பிடுகிறது.

மாறாமல் இருக்கும் முடிவான புரிதல் (Truth): இது ஆங்கில பெரிய எழுத்துடன் தொடங்கும் போது, முடிவான புரிதலை குறிப்பிடுகிறது. ஆங்கில சிறிய எழுத்துடன் தொடங்கும் போது: நேர்மை, நாணயம்; நற்பண்பு.



முடிவான (ultimate): இறுதியான, கடைசியான. — **முடிவான பரம்பொருள் (Ultimate Reality):** இறுதியான, மிகவும் உயர்வான பரம்பொருள். சிவபெருமானின் முழுமுதற்பொருள், பரசிவம்.

விரிவாக்கம் (unfoldment): மெதுவாக மற்றும் குறிப்பாக பல்வேறு நிலைகளில் திறந்து கொள்ளுதல். மேலும் தகவலுக்கு: *முதிர்ச்சி, ஆன்மீக விரிவாக்கம்.*

ஐக்கிய நாடுகள் சபை (United Nations): இந்த பன்னாட்டு அமைப்பு 1945 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது உலக அமைதி மற்றும் பாதுகாப்பை வளர்த்து, உலக நாடுகளில் பொருளாதார மற்றும் சமூக நலன் மற்றும் கல்வியை ஊக்குவித்து, உறுப்பு நாடுகளிடையே கலாச்சார ஒத்துழைப்பை உருவாக்கும் நோக்குடன் செயல்படுகிறது.

வெளிப்படாத (unmanifest): தெளிவாக இல்லாத அல்லது புலனாகாத. தத்துவரீதியாக யாவும் கடந்த நிலை போன்ற பொருளை தருகிறது. பரசிவ என்ற தனது உருவமற்ற முழுமையில் சிவபெருமான் வெளிப்படாமல் இருக்கிறார். மேலும் தகவலுக்கு: *உருவமற்ற.*

சிக்கல் அவிழ்த்தல் (unravel): திரும்பப் பெறுதல், பிரித்தல், பின்னல் வேலையை பிரித்தல்.

upadeśa: उपदेश “Advice; religious instruction.” *உபதேசம்*. இது பெரும்பாலும் *குருவிடம்* இருந்து சிஷ்யனுக்கு கேள்வி-பதில் ரூபத்தில் வழங்கப்படும். *சத்குருவின்* ஆன்மீக பிரசங்கங்கள்.

upadeśī: उपदेशी. *உபதேசி*. மற்றவர்கள் முக்தி பெறுவதற்காக தீவிர உதவி செய்ய, பாடம் புகட்ட முடிவு செய்யும் ஒரு முக்தி பெற்ற ஆன்மா. இது நிர்வாணியின் நடவடிக்கையில் இருந்து மாறுபட்டு இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *நிர்வாணி* மற்றும் *உபதேசி, சத்குரு.*

Upanishad: उपनिषद् “Sitting near devotedly.” உபநிடதம். “அருகில் பக்தியுடன் அமர்தல்.” இது வேதங்களின் நான்காவது மற்றும் இறுதி பகுதியாக விளங்கி, வேத மந்திரங்களின் இரகசிய, தத்துவ பொருளை விளக்குகிறது. உபநிடதங்கள் என்பது வேதாந்தத்தின் மூலமாக விளங்கும் ஆழமான உரைகளின் தொகுப்பாகும் மற்றும் அவை பல்லாயிரம் வருடங்களாக இந்திய சிந்தனையின் மீது ஆதிக்கம் செலுத்தியுள்ளது. அவை கடவுள், ஆன்மா மற்றும் அண்டத்தின் இயல்பு மற்றும் மிகவும் ஆழமான இந்து சிந்தனையின் பிரத்யேக வெளிப்பாடுகளை விளக்கும் *ரிஷிகளின்* தத்துவ பதிவாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சுருதி, வேதம், வேதாந்தம்.*



vāhana: वाहन “Bearing, carrying or conveying.” "தாங்கி இருப்பது, சுமந்து இருப்பது அல்லது ஏற்றிச் செல்வது." வாகனம். ஒவ்வொரு இந்து கடவுளும் தனது பண்புகளுக்கு ஏற்ப ஒரு விலங்கு அல்லது பறவையை வாகனமாக கொண்டு அமர்ந்து இருப்பதாக சித்தரிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, சிவபெருமான் வலிமை மற்றும் வீரியத்தின் சின்னமாக ஒரு காளையை வாகனமாக கொண்டிருக்கிறார். முருகப்பெருமான் அழகு மற்றும் அமைதியின் சின்னமாக விளங்கும் மயில் மீது அரசர் போல அமர்ந்து, ஞானப்பழம் பெறுவதற்காக உலகை பவனி வந்தார். இது *மயூர* வாகனம் என்றும் அழைக்கப்படுகிறது.

vairāgya: वैराग्य “Dispassion; aversion.” *வைராக்கியம்*. அதிக விருப்பத்தில் இருந்து விடுதலை. ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் முக்தியின் பாதையில் இருக்கும் தடைகளை தொடர்ந்து கைவிடுவதன் காரணமாக, லௌகீகம் மீது வெறுப்பு அல்லது விருப்பமின்மை. மேலும் தகவலுக்கு: *சந்நியாசம்*.

Vaishṇavism (Vaishṇava): वैष्णव. வைணவம். இந்து தர்மத்தில் இருக்கும் நான்கு முக்கிய சமயங்கள் அல்லது பிரிவுகளில் ஒன்று. உலகில் இருக்கும் ஒரு பில்லியன் இந்துக்களில் ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் வைணவர்களாக இருக்கிறார்கள். வைணவ சமயம் பகவான் ஸ்ரீ விஷ்ணுவை தனது தனிப்பட்ட கடவுளாக, அவரது அவதாரங்கள் மற்றும் அவர்களது மனைவிமார்களை மையமாக கொண்டு அமைந்து இருக்கிறது. பூமியில் அதர்மம் ஆதிக்கம் செலுத்தும் போது, இறைவன் பூமியில் அவதரித்து தர்மத்தை நிலைநிறுத்துகிறார் என்று வைணவர்களுக்கு முக்கியமாக விளங்கும் *அவதாரக்* (பூமியில் மனித உருவில் தோன்றுதல்) கோட்பாடு கற்பிக்கிறது. ஸ்ரீ இராமர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணரின் *அவதாரங்கள்*, மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றன. வைணவம் கடவுளின் தனிப்பட்ட தன்மைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, முக்தி பெறுவதற்கு உறுதியான பாதையாக *பக்தியை* குறிப்பிடுகிறது. இறைவனுடன் ஏற்படும் பேரின்பம் நிறைந்த ஐக்கியம், அவரது அங்கமாக ஆன்மா விளங்குகிறது என்கிற பிரியமுள்ள அங்கீகாரம், மற்றும் நிரந்தரமாக வைகுண்டத்தில் அவருக்கு அருகே இருப்பதாக விளக்கும், *முக்தியை* அடைவதே வைணவத்தின் இலக்காக விளங்குகிறது.

vaiśya: वैश्य “Landowner; merchant.” வைசியர். "நில உரிமையாளர்; வணிகர்." மேலும் தகவலுக்கு: *ஜாதி*.

vanakkam: வணக்கம்.

Varāha Upanishad: वराह उपनिषद् வராக உபநிடதம். *கிருஷ்ண யஜுர் வேதத்தில்* ஒரு சிறிய உபநிடதம்.

vāsanā: वासना “Abode.” *வாசனா*. அடியுணர்வு விருப்பங்கள். இது “வசிக்கும், மிகுதி, மீதம்,” என்பதை குறிக்கும் *வாஸ்* என்ற சொல்லில் இருந்து உருவானது. இயக்கும் சக்திகளாக மறைந்திருக்கும் ஆசைகள் மற்றும் பழக்க மாதிரிகள் விளங்கி, ஒருவரின் அணுகுமுறைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி தூண்டி விடுகின்றன. அனுபவத்தின் மூலமாக உருவாக்கப்படும் அடியுணர்வு பதிவுகளின் (*சம்ஸ்காரங்கள்*) ஒருங்கிணைந்த விளைவாக *வாசனாக்கள்* விளங்குகின்றன. அனுபவ பதிவுகளாக இருக்கும் *சம்ஸ்காரங்கள்*, அடியுணர்வில் ஒன்று சேர்ந்து *வாசனாக்களாக* உருமாறியதும், *விரித்தி* என்கிற மனநிலை மாற்றங்களை ஏற்படுத்துவதில் பங்குபெறுகின்றன. *வாசன சித்த* என்று அழைக்கப்படும் மறைந்திருக்கும் பண்புகள் மனதில், மிகவும் சிக்கலான மற்றும் உணர்ச்சிகள் நிரம்பிய *வாசனாக்கள்* காணப்படுகின்றன. மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரம், மனம் (ஐந்து நிலைகள்), வாசன தாக தந்திரம், விரித்தி*.

vāsanā daha tantra: वासनादहतन्त्र “Purification of the subconscious by fire.” *வாசன தாக தந்திர. தாக* என்றால் எரிகிற, *தந்திரம்* என்றால் ஒரு செயல்முறை என்பதை குறிப்பிடுகின்றன. *வாசனாக்கள்* என்றால் ஒருவரது அணுகுமுறைகள் மற்றும் தூண்டுதல்களை உருவாக்கும், ஆழப்பதிந்த அடியுணர்வு பண்புகள் அல்லது மனநிலைகள் என்பதை குறிப்பிடுகின்றன. *வாசனாக்கள்* நேர்மறை அல்லது எதிர்மறையாக இருக்கலாம். இது வாழ்க்கையின் துன்பங்களுக்கு தீர்வு காண மட்டும் பிரச்சனைக்குரிய *வாசனாக்களை* அழிக்க ஒரு சிறந்த வழி ஆகும். *வாசன தாக தந்திரம்* என்பது குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் அறிக்கைகள், பிடித்தமானவர்கள் அல்லது நெருக்கமானவர்களுக்கு எழுதிய நீளமான கடிதங்கள் உட்பட, வேதனையின் விளக்கங்கள், குழப்பங்களின் வெளிப்பாடுகள் மற்றும் மனக்குறை மற்றும் நீண்டநாள் வருத்தங்களின் பதிவுகளை எரிக்கும் பயிற்சி ஆகும். பிரச்சனைகளை எழுதிக்கொண்டு, அதை ஒரு சாதாரண நெருப்பில் எரிப்பதன் மூலம், அவை அடியுணர்வில் இருந்து வெளிப்புற மனதிற்கு கொண்டு வரப்படுகிறது மற்றும் நெருப்பு காகிதத்தை எரிக்கும் போது, ஒடுக்கப்பட்ட உணர்ச்சிகள் வெளியிடப்படுகின்றன. இது ஒரு மனதை குணப்படுத்தும் விசேஷமான செய்முறை ஆகும். — ***மகா வாசன தாக தந்திர*** ***(mahā vāsanā daha tantra):*** படிப்படியாக சேர்க்கப்பட்ட அடியுணர்வு சுமைகளை சுத்தம் செய்ய, ஒருவர் தனது வாழ்நாளில் நடந்த நினைவுகளை நினைவுக்கூர்ந்து, அதன் பல்வேறு அம்சங்களை எழுதி, அவ்வப்போது அந்த காகிதங்களை எரித்து வருவது காலமுறை வாசன தாக தந்திரம் ஆகும். ஒவ்வொரு வருடத்திற்கும் பத்து பக்கங்கள் எழுத வேண்டும். தனக்கு பரிச்சயமான மக்கள், தனது பாலியல் அனுபவங்கள் பற்றி எழுதுவது, இந்த தந்திரத்தின் மற்ற அம்சங்கள் ஆகும். மேலும் தகவலுக்கு: *வாசனா.*

vaṭa: वट The banyan tree, *Ficus indicus,* sacred to Śiva. *வட.* ஆலமரம். தட்சிணாமூர்த்தி வடிவமாக இருக்கும் சிவபெருமான், வட விருக்ஷத்தின் அடியில் மௌனகுருவாக காட்சி அளிக்கிறார். *வட.* என்கிற "சூழ்ந்துக்கொள்வது, உள்ளடக்கியது" என்று சொல்லில் இருந்தும், "கீழ்நோக்கி வளரும்" என்பதை குறிக்கும் *ந்யகிறோத* என்ற சொல்லில் இருந்தும் தோன்றி இருக்கலாம். இது சனாதன தர்மத்தின் பழங்கால சின்னம். ஆலமரமும் *அஸ்வத்த* என்கிற அத்தி மரமும் ஒரே வகையை சேர்ந்தவை. "வேர்கள் மேலும் கிளைகள் கீழுமாக இருக்கும்" அத்தி மரம், *உபநிடதங்களில்* படைப்புக்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

Vāstu Śāstras: वास्तुशास्त्र *வாஸ்த்து சாத்திரங்கள். வாஸ்த்து* பற்றி பல புராண நூல்கள் "காலம் மற்றும் பரவெளி பற்றிய அறிவியலாக" விளங்குகிறது என்று இந்தியாவின் பிரபல கட்டிடக்கலை வல்லுனர் திரு. வி. கணபதி ஸ்தபதி கூறுகிறார். ஆட்சிக்கலை, ஆரோக்கியம் மற்றும் இசையைப் பற்றி விளக்கம் அளிக்கும் துணை வேத நூல்களான *உபவேதங்களுடன்* வகைப்படுத்தப்பட்டு, கட்டிடக்கலை அறிவியலாக விளங்கும் *ஸ்தாபத்யவேதத்தின்* அங்கமாக *வாஸ்த்து சாத்திரங்கள்* பிரிக்கப்பட்டுள்ளன. *வாஸ்த்து சாத்திரமானது* தூல உலகில் ஒரு இணக்கமான சக்தி ஓட்டத்தை வழங்குவதற்கு, ஆன்மீக கலை மற்றும் கட்டிடக்கலையின் அறிவியல் கோட்பாடுகள் மற்றும் மாதிரி அமைப்புக்களை

வெளிப்படுத்தி, அதன் மூலம் நல்ல உடல் ஆரோக்கியம், செல்வம், அறிவு மற்றும் மகிழ்ச்சியை வழங்குகிறது.

Veda: वेद "Wisdom." வேதம். "அறிவுக்கு ஆதாரமான இருப்பிடம்." இது ரிஷிகளால் அருளப்பட்டு, இந்து தர்மத்தின் அதிகாரப்பூர்வமான சாத்திரமாக விளங்குகிறது. *வேதங்களும் ஆகமங்களும்* சேர்ந்து, *சுருதி* என்று அழைக்கப்படுகிறது. *சுருதி* என்றால் "காதால் கேட்கப்பட்டவை" என்று பொருள். பல புனிதமான சாஸ்திரங்களின் தொகுப்பாக *வேதம்* விளங்குகிறது. *ரிக், யஜுர், சாம* மற்றும் *அதர்வண* என்று *வேதங்கள்* நான்கு வகைப்படும். இவை கூட்டாக 1,00,000 மந்திரங்கள் மற்றும் கூடுதலாக உரையையும் உள்ளடக்கியுள்ளது. *வேதங்கள்* வழங்கும் அறிவு, லௌகீக பக்தி முதல் உயர்ந்த தத்துவம் வரை பரவியுள்ளது. ஒவ்வொரு *வேதமும்* நான்கு பிரிவுகளை கொண்டுள்ளது: *சம்ஹிதைகள்* (மந்திரத் தொகுப்புக்கள்), *பிராமணம்* (சடங்கு வழிமுறைகள்), *ஆரண்யகம்* (காட்டில் வாழும் முனிவர்களின் போதனைகள்) மற்றும் *உபநிடதங்கள்* (ஞானோபதேசங்கள்).வேதங்களின் மிகவும் பழமையான பகுதிகள் கி.மு. 6,000 சார்ந்ததாக சிலர் கருதுகிறார்கள். வேதங்கள் சமஸ்கிருதத்தில் எழுத்துவடிவில் எழுதப்பட்டு, உலகின் மிகமிகப் பழமையான சாத்திரமாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *சுருதி, உபநிடதம்.*

Vedānta: वेदान्त "Ultimate wisdom" or "final conclusions of the *Vedas.* " வேதாந்தம். "வேதங்களின் அந்தம்." வேதாந்தம் என்பது உபநிடதங்களில் (கி.மு. 1500-600) உள்ளடக்கியுள்ள சிந்தனை முறை ஆகும், மற்றும் இது *வேதங்களின்* இறுதியான முடிவுரைகளை வழங்குகின்றன. சுத்த துவைதத்தில் தொடங்கி முழுமையான அத்வைதம் வரை, வரலாறு முழுவதும் பல வேதாந்த பிரிவுகள் உருவாகியுள்ளன. நந்திநாத சம்பிரதாயத்தை சேர்ந்த *ரிஷி திருமூலரால்* (சுமார் கி.மு. 250) அருளப்பட்டு, *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களின்* ஒரு முழுமையான சுருக்கமாக விளங்கும் *திருமந்திரத்தில்* உள்ள வேதாந்த-சித்தாந்தத்தில் இருக்கும் "ஒருமைவாத-கடவுள் நம்பிக்கை", *அத்வைத ஈசுவரவாதம், சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் வேதாந்த கண்ணோட்டமாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் தகவலுக்கு: துவைதம்-அத்வைதம், *அத்வைத ஈசுவரவாதம்.*

வேத-ஆகமம் சார்ந்த (Vedic-Āgamic): வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக இருந்து பின்னிப்பிணைந்த இரண்டு பிரிவுகளை பிரதிபலித்து, இந்து சமயத்தின் *சுருதியாக* விளங்கும் *வேதங்கள்* மற்றும் *ஆகமங்களில்* இருந்து, ஒரே நேரத்தில் தகவல்களை பெற்று அவற்றை பின்பற்றுதல். மனிதன் இறைவனை நினைத்து வேண்டுவதாக *வேதங்களும்,* இறைவன் மனிதனுக்கு உதவி செய்ய அவனை கவனித்துக்கொண்டு இருப்பதாக *ஆகமங்களும்* அமைந்து இருப்பதைப் போல, சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தில் இருக்கும் வேறுபாடு விளக்கப்படுகிறது. இது *ரிஷிகள்* மூலம் வாய்மொழியாக *வேதங்கள்* வெளிப்பட்டன மற்றும் *ஆகம* நூல்களில் இருக்கும் உண்மைகளை இந்து சமய ஆண் அல்லது பெண் தெய்வங்கள் வழங்கியவை என்ற யதார்த்தத்தில் பிரதிபலிக்கிறது. மேலும் தகவலுக்கு: *அருள், சுருதி.*

vegetarian: *Śakāhāra. ஷாகாஹார.* சைவ உணவு. இறைச்சி, மீன், கோழி மற்றும் முட்டைகள் இல்லாத ஒரு உணவு. உடல் ஆரோக்கியம் மற்றும் சுற்றுப்புற நெறிமுறைகளுக்கு ஒரு அடிப்படையாக சைவ உணவு விளங்குகிறது. சைவ உணவுகளில் தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் பால் பொருட்கள் அடங்கும். இயற்கையாக, பூச்சிக்கொல்லி மருந்துகள் அல்லது உரங்கள் இல்லாமல் வீட்டில் வளர்க்கப்பட்ட பச்சை உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. உறைந்த மற்றும் தகரப்பெட்டியில் வைக்கப்பட்ட உணவு, அதிகமாக பதப்படுத்தப்பட்ட வெள்ளை அரிசி, வெள்ளை சர்க்கரை மற்றும் வெள்ளை மாவு போன்ற உணவு வகைகள்; மற்றும் "சத்தில்லா" உணவு மற்றும் குளிர்பானங்கள் (செயற்கை இனிப்பூட்டிகள், நிறமூட்டிகள், நறுமணமூட்டிகள் மற்றும் பதப்பொருட்களைப் போன்று அதிகமான கூட்டுப்பொருட்களை சேர்த்த சுத்திகரிக்கப்பட்ட உணவுகள்) முடிந்தவரை தவிர்க்கப்படுகின்றன.

மறைக்கும் சக்தி (veiling grace): *Tirobhāva śakti. திரோபாவ சக்தி.* ஆன்மா ஒரு தனிப்பட்ட உயிர்சக்தியாக வளர்ந்து முதிர்ச்சி பெறுவதற்காக *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்று மூன்று மலங்களில் ஆன்மாவை பிணைத்து அல்லது பொருத்தி, அதன் புலனுணர்வை கட்டுப்படுத்தும் தெய்வீக சக்தி. மேலும் தகவலுக்கு: அருள்.

vel: வேல் "Spear, lance." வேல். *யோகத்தின்* தலைவனாகவும் தேவர்கள் படைத்தலைவனாகவும் இருக்கும் முருகப்பெருமானின் தெய்வீக அதிகாரத்தை தெரியப்படுத்தும் சின்னம். (இது சமஸ்கிருதத்தில் *சூல* என்று அழைக்கப்படுகிறது). மேலும் தகவலுக்கு: *கார்த்திகேயன்.*

மறைமுக தூண்டுதல் (vicarious): உணர்ச்சி அல்லது கற்பனை மூலம் இன்னொருவரின் அனுபவத்தை புரிந்துக்கொள்ளுதல் அல்லது பகிர்தல்.

vibhūti: विभूति Powerful," "pervading," "appearing." From *bhū* "existence," or "manifestation" and *vi,* "apart." விபூதிம் திருநீறு. "ஆற்றல்மிக்க," "வியாபித்து இருக்கிற," "காட்சி அளிக்கிற." இது "உள்பொருள்," அல்லது "வெளிப்பாட்டை" குறிப்பிடும் *பூ,* மற்றும் "பிரிந்து இருக்கும்" என்பதை குறிக்கும் *வி* என்ற சொல்லில் இருந்து தோன்றியது. பால், நெய், தேன் போன்ற விசேஷமான பொருட்களுடன் மாட்டு சாணத்தை எரித்து உருவாக்கப்படும் ஒரு வெள்ளை நிறப்பொடி. இது புனிதத்தன்மையை குறிப்பிடுகிறது மற்றும் எல்லா சிவாலயங்கள் மற்றும் மற்ற சிறிய கோயில்களில் பூஜைக்கு பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும் முக்கிய பிரசாதங்களில் ஒன்றாக விளங்குகிறது. சுமார்த்த சமயத்தை சேர்ந்தவர்களை போல சைவ சமயத்தை சேர்ந்தவர்கள், தங்கள் பிரிவின் சின்னமாக நெற்றியில் மூன்று விரல்களால் இடைவெளி விட்டு மூன்று கோடுகளாக விபூதியை தரித்துக்கொள்கிறார்கள்.

அதிர்வு (vibration): உள்ளுணர்வுடன் உணரக்கூடிய அல்லது அனுபவிக்கக்கூடிய, ஒரு தனித்துவமான மனவெழுச்சி ஒளி உடல் அல்லது சூழ்நிலை.

vidyārambha: विद्यारंभ "Commencement of learning." *வித்யாரம்பம்.* "கல்வி கற்கத் தொடங்கும் சடங்கு." மேலும் தகவலுக்கு: *குழந்தைப்பருவ சம்ஸ்காரங்கள்.*

சாதனா நேரம் (vigil): இது பொதுவாக சூரிய உதயத்திற்கு முன்பாக *பூஜை*, குரு மந்திரம் மற்றும் தனியாக *ஜபம்*, சாத்திரம் படித்தல், *ஹட யோகம்* மற்றும் தியானம் ஆகியவற்றை ஒழுங்குமுறையுடன் ஒரு மணி நேரத்திற்கு செய்வதை குறிக்கிறது.

vīṇā: वीणा. வீணை. தென்னிந்தியாவில் மிகவும் பிரபலமான மீட்டும் கருவி. இது ஏழு தந்திகளை கொண்டிருக்கும். பலா மரத்தினால் வீணை செய்யப்படுகிறது. இதில் ஒரு பக்கம் குடமும், இன்னொரு பக்கம் யாளியின் முகமும் பொருத்தப்பட்டு இருக்கும்.

Vishṇu: विष्णु "All-pervasive." விஷ்ணு. "எங்கும் வியாபித்து இருக்கிற." வைணவர்களின் பரமாத்துமா. தனிப்பட்ட தலைவனாக மற்றும் சிருஷ்டிகர்த்தாவாக, சர்வவல்லமையுடன் எல்லாம் அறிந்த உதார குணமுள்ள தெய்வமாக, *தர்மத்தை* நிலைநாட்ட வேண்டிய அவசியம் ஏற்படும் போது ஒரு முழுமையான மனித வாழ்க்கையை வாழ்வதற்காக, அவ்வப்போது அவதாரம் எடுக்கும் கடவுளாக இருக்கிறார். சைவ சமயத்தில், சிவபெருமானின் காக்கும் பண்புடன் விஷ்ணு இருக்கிறார். மேலும் தகவலுக்கு: வைணவம்.

viśuddha chakra: विशुद्धचक्र "Wheel of purity." The fifth *chakra. விஷுத்தசக்கரம்.* "தூய்மையான சக்கரம்." ஐந்தாவது *சக்கரம்*. தெய்வீக அன்பின் மையம். மேலும் தகவலுக்கு: *சக்கரம்.*

viśvagrāsa: विश्वग्रास "Total absorption." *விஷ்வகிராசா*. "முழுமையாக ஒடுக்கிக்கொள்ளுதல்." ஆன்மாவின் முதிர்ச்சி நிறைவேறியதும், சிவபெருமானின் அருளின் மூலம், அவருடன் ஆன்மாவின் முடிவான ஐக்கியம் அல்லது ஒடுக்கம். இது ஆன்மா முதலில் தோற்றம் அளித்த சிவலோகத்தில், சிவபெருமானின் உடலான பரமேசுவரனுடன் தனிப்பட்ட *ஆனந்தமய கோசத்தின்* முடிவான ஐக்கியத்தை குறிப்பிடுகிறது. இது ஆன்மா முழுமையாக முதிர்ச்சி அடைந்ததும் *அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம்* மற்றும் *விஞ்ஞானமய கோசம்* என்கிற நான்கு வெளிப்புற உறைகளை கைவிட்ட பிறகு நடைபெறுகிறது. இறுதியாக ஆதி ஆன்மாவுடன் *ஆனந்தமய கோசம்* ஐக்கியமாகிறது. மேலும் தகவலுக்கு: *ஆத்மன், ஆன்மாவின் முதிர்ச்சி, நிர்வாணி மற்றும் உபதேசி, சமாதி மற்றும் ஆன்மா.*

Viśvaguru: विश्वगुरु "World as teacher." விஷ்வகுரு. "உலகத்தின் குரு." கு ரு இல்லாமல் இருப்பவர்களுக்கு, உலகம் குருவாக விளங்குகிறது என்று குறிப்பிடும் ஒருவர் விளையாட்டுத்தனமான உருவகம். அவர் "வாழ்க்கையின் எதிர்மறை அனுபவங்கள் தரும் வேதனை நிறைந்த கல்வியை," வழங்கும் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருக்கிறார். இந்த பள்ளியில் மாணவர்கள் ஒரு பாரம்பரிய ஆசிரியரை பின்பற்றாமல், தங்களது சொந்த கருவிகள் மற்றும் தங்களது சொந்த தவறுகள் மூலம் கற்கிறார்கள்.

பிராணன் (vital forces): தூல உடலுக்கு உயிரை வழங்கும் சக்திகள்.

vitala chakra: वितल चक्र “Region of negation.” *விதள*. “எதிர்மறையான பகுதி.” சீற்றம் மற்றும் முரட்டுத்தனம். *மூலதாரத்திற்கு* கீழிருக்கும் இரண்டாவது சக்கரம். இது தொடைகளில் மையம் கொண்டு இருக்கிறது. அவிச்சி (“சந்தோஷம் இல்லாத") என்ற பெயரில், பூமிக்கு அடியில் இருக்கும் இரண்டாவது நரகலோகத்துடன் பொருந்தி இருக்கிறது. மேலும் தகவலுக்கு: *சக்கரம், நரகம்*.

vivāha: विवाह “Marriage.” விவாகம். "திருமணம்." மேலும் தகவலுக்கு: *சம்ஸ்காரங்கள்*.

Vivekananda, Swami: विवेकनन्द. சுவாமி விவேகானந்தர். இவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர். அவருக்கு இந்து சமயத்தின் மீது இருந்த ஒரு தீவிரமான அன்பும், சமய பிரச்சாரம் செய்யவேண்டும் என்ற உற்சாகமும், அவர் முன்னேற்றத்திற்கு காரணமாக விளங்கின. அவர் தனது 39 ஆவது வயதில் *மகாசமாதி* (1863-1902) அடைந்தார்.

vrata: व्रत “Vow, religious oath.” *விரதம்*. இது பிராயசித்தம், உபவாசம், குறிப்பிட்ட மந்திரங்களை ஜபம் செய்தல், வழிபாடு அல்லது தியானத்தை போன்று குறிப்பிட்ட காலத்திற்கு சில பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு விரதத்தை பெரும்பாலும் குறிப்பிடுகிறது. விரதங்கள் சாதாரண உறுதிமொழியில் இருந்து கடவுள், தெய்வங்கள், *குரு* மற்றும் சமூகம் முன்பாக மேற்கொள்ளப்படும் மாற்றமுடியாத சபதங்கள் வரை பல்வேறு வகைகளில் உள்ளன.

vrātyastoma: व्रात्यस्तोम “Vow pronouncement.” *விராத்யஸ்தோம*. மீண்டும் இந்து சமூகத்தில் வரவழைக்க, *தாண்டிய பிராமணவில்* விரிவக்கப்பட்டுள்ள, ஒரு பாரம்பரிய சுத்திகரிப்பு சடங்கு. இது இந்தியாவிற்கு திரும்பும் இந்துக்கள் மற்றும் மற்ற சமயங்களை தழுவியவர்களுக்கும் நடத்தப்படுகிறது.

vṛitti: वृत्ति “Whirlpool, vortex.” வ்ரித்தி:“சுழல்.” உணர்வில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், சிந்தனை மற்றும் புலனுணர்வு தொடர்பாக மனதின் செயல்பாடுகளில் *(சித்த விருத்தி)* இருக்கும் அலைகள் என்று யோக உளவியல் குறிப்பிடுகிறது. “*யோகம்* என்பது மனதின் செயல்பாடுகளை *(சித்த விருத்தி)* கட்டுப்படுத்துவது ஆகும்,” என்று பதஞ்சலியின் *யோக சூத்திரங்கள்* (1.2) தெரிவிக்கிறது. பொதுவாக விருத்தி என்பது 1) செயல்பாடு, வாழ்முறை; ஒழுக்கம், நடத்தை; ஒரு வேலையை செய்யும் முறை; 2) இருப்பு, இயல்பு, கருணை, பண்பு ஆகியவற்றின் முறையை குறிப்பிடுகிறது. மேலும் தகவலுக்கு: *மனம் (தனிப்பட்ட), இராச யோகம்*.



Weaver’s Widsom: *வீவர்ஸ் விஸ்டம்*. குருதேவா அமெரிக்க ஆங்கில மொழியில் மொழிபெயர்த்த *திருக்குறள்*. மேலும் தகவலுக்கு: *திருக்குறள்*.

இணையத்தில் உலாவுதல் (Web browsing): தனிநபர்கள் அல்லது குழு அல்லது நிறுவனங்கள் இடுகை செய்த தகவலை, ஒரு கணினி மூலம் வைய விரி வலையில் பல்வேறு இணையத்தளங்களில் பார்த்தல்.

தாலி அல்லது மாங்கல்யம் (wedding penant).

சொப்பன ஸ்கலிதம் (wet dream): இது வழக்கமாக ஒரு பாலியல் கனவின் விளைவாக உறக்கத்தின் போது தானாக வெளியேறுவதை குறிக்கிறது. இதைப் பற்றி சுவாமி சிவானந்தா தனது *யோகா லேஸ்சன்ஸ் பார் சில்ட்ரன், சாப்டர் 36 ஆன் பிரம்மச்சர்ய* (குழந்தைகளுக்கான யோகா பாடங்கள், பாடம் 36 பிரம்மச்சர்யம்) என்கிற பாடத்தை விளக்கியுள்ளார். " சொப்பன ஸ்கலிதம் காரணமாக பல சிறுவர்கள் மற்றும் ஆண்கள் அவதிப்படுகிறார்கள். இந்த நிகழ்வு வாரம் ஒரு முறை தோன்றுவதில் தவறு இல்லை என்று ஸ்ரீ அரபிந்தோ கூறுகிறார். ஆனால் அதிகமாக நிகழ்கிறது என்றால், அவர்களுக்கு பாலியல் எண்ணங்களில் அதிக ஈடுபாடு அது இருப்பதை குறிக் கிறது," என்று அவர் கூறுகிறார். *சாத்வீக* உணவு, அதிகாலையில் விழிப்பது (இந்த நிகழ்வுகள் பெரும்பாலும் இரவின் பிற்பகுதியில் நடைபெறுகிறது), குளிர்ந்த நீரில் குளியல், *ஹட யோகம்*, சுத்தமான பழங்கள் மற்றும் பச்சை காய்கறிகளை சாப்பிட்டு, வயிறு நிறைய சாப்பிடப் பிறகு உறங்க செல்வதை தவிர்க்கவேண்டும் என்று சுவாமி சிவானந்தா அவர்களுக்கு அறிவுறுத்துகிறார். "சொப்பன ஸ்கலிதத்தின் போது உண்மையான சாரம் வெளிவருவது இல்லை. சிறிதளவு விந்து மற்றும் நீர் நிறைந்த பிரோஸ்டேட் சாறு மட்டுமே வருகிறது. இரவு நேரத்தில் அந்த நீர் வெளிவரும் போது, உட்புற சூட்சும உடலில் செயல்பட்டு வந்த மனம், திடீரென்று அதிக குழம்பிய நிலையில் தூல உடலுக்குள் திடீரென்று நுழைகிறது. இதன் காரணமாகவே, திடீரென்று அந்த நீர் வெளிவருகிறது," என்று அவர் கூறுகிறார். "இதை நினைத்து பதட்டம் அல்லது வருந்த வேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய கனவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல், அதை மறந்துவிட்டால், அது மீண்டும் உங்களுக்கு தொந்தரவு அளிக்காது," என்று அவர் நிறைவு செய்தார். மேலும் தகவலுக்கு: *உருமாற்றம்*.

பிராண வாயுக்கள் (winds of the body): தூல உடலில் இருக்கும் ஐந்து முக்கிய *பிராண* சக்திகள். அவை சமநிலையில் இருக்கும் போது உற்சாகமான ஆரோக்கியம் அனுபவிக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு: *பிராண சக்திகள்*.

லௌகீகம் (worldly): பொருள்முதல்வாதம், ஆன்மீகம் சாராத. ஊக விவகாரங்கள் அல்லது இன்பங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட அல்லது அவற்றுடன் தொடர்புடைய. பொறாமை, பேராசை, சுயநலம், கோபம், வஞ்சனை போன்றவற்றின் இருப்பிடமாக விளங்கும், கீழ்நிலை *சக்கரங்களில்* இருந்து உருவான என்பதை குறிப்பிடும் சொல்.



Yama: यम “The restrainer.” யமன். மரணத்தை நிர்வகிக்கும் தெய்வம்; இவர் மரணத்தின் நிலைமாற்ற செயல்பாடுகளை கண்காணித்து, ஊிர் பிரிந்த உடலில் இருந்து ஆன்மா வெளியேறுவதற்கு வழிகாட்டுகிறார். மேலும் தகவலுக்கு: *மரணம்.*

yama: यम “Reining in, restraint.” இயமம். "கட்டுப்பாடு." மேலும் தகவலுக்கு: இயம-நியமம்.

yama-niyama: यम नियम இயம நியமம். *இயமம்-நியமம். இயமங்கள்* மற்றும் *நியமங்கள் இராச யோகத்தின்* எட்டு அங்கங்களில் முதல் இரண்டு அங்கமாக விளங்கி, இந்து சமயத்தின் அடிப்படை நெறிமுறைகளை உள்ளடக்கி, அனைத்து ஆன்மீக முன்னேற்றத்திற்கும் அத்தியாவசிய அடிப்படையாக விளங்குகிறது. *இயமங்கள்* என்பது நெறிமுறை கட்டுப்பாடுகள்; *நியமங்கள்* என்பது சமயம் தொடர்பான பயிற்சிகள் ஆகும். பத்து பாரம்பரிய *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. –***இயமங்கள் (yamas):*** 1) ***அகிம்சை:*** “கொல்லாமை.” 2) ***சத்யம்:*** “வாய்மை.” 3) ***அஸ்தேயம்:*** “கள்ளாமை.” 4) ***பிரம்மச்சரியம்:*** “புலன் அடக்கம்.” 5) ***க்ஷமை:*** “பொறுமையுடைமை.” 6) ***த்ருதி:*** “உறுதியான தன்மை.” 7) ***இரக்கம்:*** “கருணை.” 8) ***ஆர்ஜவம்:*** “நேர்மை, வெளிப்படையாக இருக்கும் தன்மை.” 9) ***மிதகாரம்:*** “அளவு உணவு.” 10) ***சௌச்சம்:*** “தூய்மை.” –***நியமங்கள் (niyamas):*** 1) ***ஹ்ரி:*** “தவறுக்கு வருந்துதல்.” 2) ***சந்தோஷம்:*** “ஆத்ம திருப்தி.” 3) ***தானம்:*** “நன்கொடை.” 4) ***ஆஸ்திக்ய:*** “கடவுள் நம்பிக்கை.” 5) ***ஈஸ்வரபூஜன:*** “இறைவனை வழிபடுதல்.” 6) ***சித்தாந்த ஸ்ரவண:*** “சாத்திரங்களை கேட்டறிதல்.” 7) ***மதி:*** “அறிவெழுச்சி.” 8) ***விரதம்:*** “புனிதமான விரதங்கள்.” 9) ***ஜபம்:*** “மந்திரங்களை ஜபித்தல்.” 10) ***தபஸ்:*** “உடலை விரும்பி வருத்துதல், விரதத்துவம்.” மேலும் தகவலுக்கு: *அன்னதானம், ஞான தானம், கிருஷ்ண தானம், இராச யோகம், சுக்ல தானம்.*

yantra: यन्त्र “Vessel; container.” யந்திரம். வடிவவியல் மற்றும் அகரவரிசை வடிவங்களை உள்ளடக்கிய ஒரு ஆன்மீக சித்திரம். இது வழக்கமாக தங்கம், வெள்ளி அல்லது செம்பின் தகடுகளில் செதுக்கப்படுகிறது. இது சிலசமயங்களில் கல் அல்லது உலோகத்தில், முப்பரிமாணங்களில் வழங்கப்படுகிறது. உடல் ஆரோக்கியம், செல்வம், குழந்தைப்பேறு என்று எதுவாக இருந்தாலும், கணினியைப் போன்ற ஒரு *யந்திர* மாதிரிக்கு ஏற்ப ஆன்மீக மற்றும் உள்ளத்தின் சக்திகளை ஒருங்கிணைப்பது ஒரு யந்திரத்தின் நோக்கம் ஆகும். இது வழக்கமாக கோயிலில் இருக்கும் தெய்வத்திற்கு அருகே அல்லது அதன் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும். சூட்சுமமாக பார்க்கும் போது, கோயில் யந்திரம் என்பது தேவர்கள் செயல்படும், ஒளி மற்றும் ஒலியின் ஒரு அற்புதமான முப்பரிணாம

கட்டமைப்பாக விளங்குகிறது. சூட்சும உலகில், இது அந்த கோயிலைக் காட்டிலும் பெரிதாக இருக்கிறது.

yoga: योग "Union." From *yuj,* "to yoke, harness, unite." "சங்கமம்." "கட்டுப்படுத்துதல், இணைதல்" என்பதை குறிப்பிடும் *யுஜ்* என்ற சொல்லில் இருந்து உருவானது. எல்லாம் கடந்த அல்லது தெய்வீக உணர்வுடன், தனிப்பட்ட உணர்வை கட்டுப்படுத்துவதே இதன் தத்துவம், செய்முறை, கட்டுப்பாடுகள் மற்றும் பயிற்சிகளின் நோக்கம் ஆகும். ஆச்சாரமான இந்து தத்துவத்தில் இருக்கும் ஆறு *தரிசனங்கள்* அல்லது அமைப்புக்களில் ஒன்றாக விளங்குகிறது. பதஞ்சலி தனது *யோக சூத்திரத்தில், யோகத்தை இராச யோகத்தின்* எட்டு அங்கங்களாக (*அட்டாங்க*) தொகுத்துள்ளார். இது அடிப்படையில் ஒரு செய்முறையாக இருந்தாலும், உண்மையில் *இராச யோகத்தின்* ஒவ்வொரு அங்கமும் *யோகங்களாக* வளர்க்கப்பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளன. யோகங்கள் பல வடிவங்களில் *ஹட யோகம்* (தியானத்திற்காக தயார் செய்துக்கொள்ளும் போது உடல்ரீதியான பூரணத்துவத்தை வலியுறுத்துகிறது), *கிரியை யோகம்* (சுவாசக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது), மற்றும் *கர்ம யோகம்* (சுயநலமற்ற சேவை) மற்றும் *பக்தி யோகம்* (பக்தியில் இருக்கும் பழக்கங்கள்) முக்கியமானதாக விளங்குகின்றன, மற்றும் இவற்றை *இராச யோகத்தின்* முதல் இரண்டு அங்கங்களின் (இயமங்கள் மற்றும் நியமங்கள்) வெளிப்பாடாக கருதலாம். மேலும் தகவலுக்கு: *பக்தி யோகம், கிரியை யோகம், ஹட யோகம், இராச யோகம்.*

yoga mārga: योगमार्ग. யோக மார்கம். மேலும் தகவலுக்கு: *பாதம்.*

yoga pāda: योगपाद. *யோக பாதம்.* சைவ சித்தாந்தத்தின் ஆன்மீக விரிவாக்கத்தில் இருக்கும் அடுத்தடுத்த நிலைகளில் மூன்றாவது நிலை ஆகும். இதன் இலக்கு ஆத்ம ஞானம் ஆகும். மேலும் தகவலுக்கு: *பாதம், யோகம்.*

Yoga Sūtras: योगसूत्र. *யோக சூத்திரங்கள்.* சைவ சமயம் மற்றும் நாத பரம்பரையை சார்ந்த சித்தரான பதஞ்சலி முனிவரின் (சுமார் கி.மு. 200) சிறந்த படைப்பு ஆகும். இதில் இருக்கும் சுமார் 200 சூத்திரங்கள் *அஷ்டாங்கம்* (எட்டு அங்கங்கள்), *இராச* (அரசரைச் சார்ந்த) மற்றும் *சித்த* (பூரணத்துவம்) *யோகத்தை* விளக்கிக் கூறுகிறது. இது இன்றும் தியான *யோகத்தில்,* முதன்மையான உரையாக விளங்குகிறது. மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை, இராச யோகம், யோகம்.*

Yogaswami: யோகசுவாமி "Master of *yoga* ." "யோகத்தின் குரு." இலங்கையின் மிகவும் பிரபலமான தற்கால ஆன்மீக குரு (1872-1964), மற்றும் இந்துக்கள் மற்றும் பௌத்தர்களால் மதிக்கப்படும் ஒரு சிவஞானி மற்றும் நாத *சித்தர்.* இவர் *சத்குரு* செல்லப்பசுவாமியிடம் இருந்து *குரு தீட்சை* பெற்றார். மேலும் அவரது வழிகாட்டலின் கீழ், *குண்டலினி சக்தியில்* பயிற்சி பெற்று, அதை பயன்படுத்தவும் தொடங்கினார். யோகசுவாமி முனிவர், சிவாய சுப்பிரமுனியசுவாமியின் *சத்குருவாக* இருந்தார். சாதகர்கள் *தர்மத்தை* பின்பற்றி, உள்ளத்தில் இறைவனின் உணர்தலை நாடவேண்டும் என்று, யோகசுவாமி அவர்கள் *நற்சிந்தனை* என்ற தலைப்பில் தனது

போதனைகளை நூற்றுக்கணக்கான பாடல்கள் மூலம் தெரிவித்துள்ளார். மேலும் தகவலுக்கு: *கைலாச பரம்பரை*.

yogī: योगी ***(yogin)*** *யோகி*. *யோக* பயிற்சி மேற்கொள்பவர், அதிலும் குறிப்பாக *குண்டலினி* அல்லது *இராச யோகத்தை* பயிற்சி செய்பவர். குருதேவாவின் மடவாசிகள் சமூகத்தில் *யோகிகள்* அல்லது *தபஸ்விக்கள்* மஞ்சள் நிற ஆடையை அணிந்து, *சாதனா* மற்றும் பணிவாக சேவை செய்வதில் சிரத்தையுடன் இருக்கிறார்கள். (இந்த சொல் இந்தி மற்றும் இந்திய வட்டார மொழிகளில் பயன்படுத்தப்படுகிறது. சமஸ்கிருதம்: *யோகின்*.)

yoginī: योगिनी யோகினி. குண்டலினி அல்லது இராச யோகத்தில் பயிற்சி மேற்கொள்ளும் பெண்ணை குறிப்பிடும் சொல்.

இணைத்தல் (yoke): நுகத்தடியைப் போல பாதுக்கப்பாக சேர்த்தல்; பிணைத்தல்: வாழ்நாள் முழுவதும் பின்னிப் பிணைந்து இருந்த தம்பதிகள். கடினமான வேலை, அடிமைத்தனத்தில் ஒருவரை நிர்பந்திப்பது.

பாதுகாப்பாக இணைத்தல் (yoking): நெருக்கமாக சேர்த்தல்.

இளம் ஆன்மா (young soul): ஒரு சில பிறவிகள் மட்டுமே எடுத்து, அனுபவமின்றி அல்லது பக்குவமடையாமல் இருக்கும் ஆன்மா. மேலும் தகவலுக்கு: ஆன்மா.

yuga: युग "Aeon," "age." *யுகம்*. இந்து சமயத்தின் கால கணிப்பு முறையில், காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று. அவை: சத் ய(அல்லது கிருத), திரேதா, துவாபர மற்றும் கலியுகம். முதல் யுகத்தில், *தர்மம்* தழைக்கிறது, ஆனால் யுகங்களின் சுழற்சியில், நற்பண்பு குறைந்து அறியாமை மற்றும் அநீதி ஆதிக்கம் செலுத்துகிறது. நாம் தற்போது கலியுகத்தில் இருக்கிறோம். இந்த யுகத்தின் முடிவில், புதிய சத்ய யுகத்தின் சுழற்சி தொடங்குகிறது.



பார்சி அல்லது ஜோராஸ்ட்ரியனிசம் சார்ந்த (Zoroastrian): இந்த மதம் பெர்சியாவின் ஸ்பெந்தா ஜரதுஸ்ட்ரா (கி.மு. 600) மூலம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மதத்தை இன்று சுமார் 150,000 மக்கள் பின்பற்றுகின்றனர். பார்சி என்று அழைக்கபடும் அவர்களில் பெரும்பாலானோர் மும்பையில் வாழ்கின்றனர். அவர்களின் இறைநம்பிக்கை ஒரு இறைவாதத்தை வலியுறுத்துகிறது மற்றும் நல்ல சக்தி (ஆஹூரா மாஜ்டா தலைமையில்) மற்றும் தீய சக்திக்கும் (அஹ்ரிமான் தலைமையில்) இடையே பிரபஞ்சம் முழுவதிலும் போராட்டம் இருப்பதை அங்கீகரிக்கிறது.

ஜென் (Zen)): மகாயான பௌத்த மதத்தின் ஒரு பிரிவு. இது இறைநம்பிக்கை மற்றும் பக்தியின் மூலமாக இல்லாமல் தியானம், தாரணை மற்றும் இயலுணர்வு மூலம் ஞானோதயத்தை அடைய முடியும் என்று வலியுறுத்துகிறது.

சமஸ்கிருத உச்சரிப்பு

Saṁskṛita Ucchāraṇam

संस्कृत उच्चारणम्

உயிர் எழுத்துக்கள் (VOWELS)

சமஸ்கிருத உயிர் எழுத்துக்கள், பெரும்பாலும் தமிழ் உயிர் எழுத்துக்களைப் போன்ற உச்சரிப்பை கொண்டவை.

அ அம்மாவில் இருக்கும் அ போல

ஆ ...ஆமை, ஆத்மா

இ ...இலை, இறக்கை

ஈ ...ஈட்டி, ஈகை

உ ...உறக்கம், உடுக்கை

ஊ ...ஊர், ஊடுருவல்

ऋ ... தமிழில் "ரு" என்ற சொல்லைப் போல

ॠ ...தமிழில் "ரூ" என்ற சொல்லைப் போல

ऌ ...ல்ரு என்று உச்சரிக்கப்படுகிறது

எ ஏ ...ஏணி, ஏற்றம்

ஐ... ஐந்து, ஐயம்

ஓ ஓடம், ஓநாய்

ஔ ...ஔள *மௌனம்*

மெல்லண்ணவொலி (GUTTURAL CONSONANTS)

இவை தொண்டையில் உச்சரிக்கப்படுகின்றன.

க் k ...க் ...வாக்கு, நாக்கு

ख् க்$_2$ ...துக்கம்

ग् க்$_3$ ...ராகம்

घ् க்$_4$ ...மேகம், துரோகம்

ङ् ṅ ... சிங்கம்

அண்ண நிலை ஒலி (PALATAL CONSONANTS)

மேல்வாயில் இருந்து தோன்றும் ஒலி.

च् ச் ...சக்கரம்

छ् ச்$_2$ ...இச்சாசக்தி

ज् ஜ் ...ஜவ்வாது, ஜபம்

ஜ்ஜ்2 ...ஜார்கண்ட் (இந்தியாவில் இருக்கும் ஒரு மாநிலம்)
ஞ் ஞ ...ஞாயிறு

வளை நாவொலி (CEREBRAL CONSONANTS)

நாக்கு மேல்நோக்கி மேல்வாய்க்கு எதிராக திருப்பப்பட்டு உச்சரிக்கப்படுகிறது.

ட் ட் ...உட்புறம், அட்டகாசம்
ட் ட்2 ...பாடம்
ட் ட்3 ...நாடி
ட் ட்4 ...திடகாத்திரம்
ண் ண் ...மண்

பல்லொலி (DENTAL CONSONANTS)

மேற்புறத்தில் இருக்கும் முன் பற்களின் பின்புறமாக, நுனி நாக்கின் மூலம் உச்சரிக்கப்படுகிறது.

த் த் ...தாத்தா
த் த்2 ...அர்த்தம்
த் த்3 ...தரிசனம்
த் த்4 ...தானம், வியாதி
ந் ன் ...பின்புறம்

இதழினவொலி (LABIAL CONSONANTS)

உதடுகளில் ஏற்படும் ஒலி.

ப் ப் ...காப்பு
ஃப் ப்2 ...ஃல சொல்லுக்கு நிகரான சொல் பழம் என்றாலும், இரண்டிற்கும் உச்சரிப்பு சற்று மாறுபடுகிறது
ப் ப்3 ...பந்தம்
ப் ப்4 ... பக்தி
ம் ம் ...அம்மா

முடிவில் வரும் மெய்யெழுத்துக்கள் (SEMIVOWELS)

ய் ய் ...காய் (அண்ணை நிலை ஒலி)
ர் ர் ...பார் (வளை நாவொலி)
ல் ல் ...பால் (பல்லொலி)
வ் வ் ...செவ்வாழை (இதழினவொலி)
ஹ் ஹ ...ஹரே ராம் (மெல்லண்ணவொலி)

***உஸ்மன்*- "ஷ்" சப்தத்தை உருவாக்கும் சொற்கள் (SIBILANTS)**

ஶ் ஶ் ...சாந்தி (அண்ணை நிலை ஒலி)
ஷ் ஷ் ...வருஷம் (வளை நாவொலி)
ஸ் ஸ் ...ஸித்தி, வஸ்திரம் (பல்லொலி)

***அணுஸ்வாசர* (ANUSVĀRA)**

தேவநாகிரி எழுத்துக்கள் மீது இருக்கும் புள்ளி, அதன் பின் வரும் எழுத்து மூக்கொலி சார்ந்த எழுத்து என்பதை குறிப்பிடுகிறது. உ.தா. अंग = *அங்க*. அது "ம்" அல்லது உண்மையான மூக்கொலியாக (ங், ஞ், ந், ன், ம்) ஒலிபெயர்க்கப்படுகிறது. அது சிலசமயங்களில், சொற்களின் இறுதியில் ◌ (ம்) என்று தோன்றுகிறது.

***விசர்க* VISĀRGA (:) ஹ**

விசர்க எழுத்து ஒரு உயிர் எழுத்துடன் சேர்ந்து வரும் போது "ஹ" என்ற ஒலியை தருகிறது. உ.தா. பா$_3$லக: - பாலகஹ (க்+:) என்று உச்சரிக்கப்படுகிறது. ஆனால் அது உயிர்மெய்யுடன் சேர்ந்து வரும் போது, ஹ என்ற எழுத்து உயிர் எழுத்தின் ஓசையை உயிர்மெய்யுடன் இணைக்கிறது.

உ.தா.

க^{1}வி: -கவிஹி என்றும்

க^{1}வே:- கவேஹே என்றும்

குரு:- குருஹு என்றும் உச்சரிக்கப்படுகின்றன.

***சோஷ்மதா* - மூச்சொலிகள் (ASPIRATES)**

நாத அல்லது *பக்தியில்*, ஒரு மெய் எழுத்தை தொடரும் "*ஹ*" மூச்சை உள்ளிழுப்பதை குறிக்கிறது.

விசேஷமான சொற்கள் (SPECIAL CHARACTERS)

ज्ञ ஞ ...ஞானத்தில் வருவதை போன்று ஒரு மூச்சொலி.

क्ष = क्+ष् க்ஷ.

மரபுகள் (CONVENTIONS)

1. வழக்கமாக சமஸ்கிருத சொற்களின் மூல வடிவங்கள் (வேற்றுமை உருபு இல்லாமல்) பயன்படுத்தப்படுகின்றன.
2. च्छ என்பது ச்ச$_2$, மற்றும் च्च ச்ச என்று ஒலிபெயர்க்கப்படுகிறது.
3. பூகோளம் மற்றும் தனிநபர்களின் பெயர்கள் (உ.தா. ஹரித்வார்) போன்றவை, முக்கிய அகராதி பதிவுகளில் மட்டுமே ஒலி வேறுபாடுகளால் குறிக்கப்படுகின்றன.
4. தமிழ் சொற்கள் எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை குறித்துக் காட்டுவது இல்லை.

சாத்திர நூற்பட்டியல்

Śāstrīya Sandarbhagranthasūchī

शास्त्रीय सन्दर्भग्रन्थसूची



“சாத்திரங்களில் இருக்கும் மந்திரங்கள்" மற்றும் சிவனோடு வாழ்தல் புத்தகத்தில் மற்ற இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள, புனிதமான பகுதிகளின் ஆதார புத்தங்கங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் அதன் சுருக்கக் குறியீடு, ஆசிரியர்/மொழிபெயர்ப்பாளர், தலைப்பு மற்றும் பதிப்பாளரும் சேர்க்கப்பட்டுள்ளன.

அவேக்ரீ: ரால்ப் டி.எஹ். க்ரீப்பித், *ஹிம்ன்ஸ் ஆப் அதர்வ வேத (Hymns of the Atharva Veda)* (புது டில்லி, முன்ஷிராம் மனோகர்லால் பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிடெட், 1985)

மொஅடி: “மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டது...” என்பதை குறிப்பிடுகிறது

சஞ: ராம கோஸ், *சந்திரஞானாகம (Candrajñānāgama)* (வாரனாசி, சைவ பாரதி சோத பிரதிஷ்டானம் 1995)

ஏஇ: கரண் சிங், *ஏஸ்சேஸ் ஆன் இந்துயிசம் (Essays on Hinduism)* (டில்லி, ரத்னா சாகர் லிமிடெட், 1990)

ஹிவே: அபினாஷ் சந்திர போஸ், *ஹிம்ன்ஸ் பிரம் தி வேதாஸ் (Hymns from the Vedas)* (பம்பாய், ஆசியா பப்ளிஷிங்க் ஹவுஸ், 1965)

கௌஅ: ஆர். ஷாமாசாஸ்த்ரி, *கௌதில்யாஸ் அர்த்தசாஸ்த்ர (Kauṭilya’s Arthaśāstra)* (மைசூர், வெஸ்லியன் மிஷன் பிரஸ், 1923)

நத: தி சிவத்தொண்டன் சொசைட்டி, *நட்சிந்தனை, சாங்க்ஸ் அண்ட் செயிங்க்ஸ் ஆப் யோகசுவாமி (Natchintanai, Songs and Sayings of Yogaswami)* (யாழ்ப்பாணம், தி சிவத்தொண்டன் சொசைட்டி, 1974)

செயோ: ரத்னா செல்லையா நவரத்தினம், *செயின்ட் யோகசுவாமி மற்றும் டெஸ்ட்மெண்ட் ஆப் ட்ருத் (Saint Yogaswami and the Testament of Truth)* (கொழும்புதுறை, திரு காசிபிள்ளை நவரத்தினம், 1972)

ரம: ஆர்தர் ஒஸ்போர்ன், பதிப்பு ஆசிரியர், *தி காலெக்ட்ட் ஒர்க்ஸ் ஆப் ரமண மஹரிஷி (The Collected Works of Ramana Maharshi)* (லண்டன், ரைடர், 1959)

ரிவேப: சுவாமி சத்ய பிரகாஷ் சரஸ்வதி மற்றும் சத்யகம் வித்யாலங்கார், *ரிக்வேத சம்ஹிதா (RgVeda Samhita)* (புது டில்லி, வேத பிரதிக்ஷன 1977)

சுச: பி. ரே, ஹெச். குப்தா மற்றும் எம். ராய், *சுஷ்ருத சம்ஹிதா, எ சயிண்டிஃபிக் சினாப்சிஸ் (Susruta Samhita, A Scientific Synopsis)* (புது டில்லி: இந்திய தேசிய அறிவியல் கழகம், 1980)

திம: Dr. பி. நடராஜன் மற்றும் பலர், *திருமந்திரம், ஹொலி அட்டரன்சஸ் ஆப் செயின்ட் திருமூலர் (Holy Utterances of Saint Tirumular)* (ஹவாய், சைவ சித்தாந்த தேவாலயம், 1982)

உபஐ: கே. நரயணஸ்வாமி ஐயர், யோக உபநிடதங்களையும் சேர்த்து, *தர்ட்டி மைனர் உபநிஷத்ஸ் (Thirty Minor Upanishads)* (ஓக்லஹோமா, சாந்தரச பப்லிகேஷன்ஸ், 1980)

உபபே: வி.எம். பேடேகர் மற்றும் ஜி.பி. பல்சுலே, *சிக்ஸ்டி உபநிஷத்ஸ் ஆப் தி வேதா (Sixty Upanishads of the Veda)* (டில்லி, மோதிலால் பனாராசிதாஸ், 1990)

உபஹி: ராபர்ட் இ. ஹியும், *தேர்டீன் ப்ரின்சிபல் உபநிஷத்ஸ் (Thirteen Principal Upanishads)* (மெட்ராஸ்: ஆக்ஸ்போர்ட் யூனிவேர்சிட்டி பிரஸ், இரண்டாவது பதிப்பு, 1958)

உபமா: ஜுவான் மஸ்காரோ, *தி உபநிஷத்ஸ் (The Upanishads)* (பால்டிமோர், பென்குயின் புக்ஸ் இன்க்., 1965)

உபப: சுவாமி பிரபாவானந்தா மற்றும் ஃபிரடெரிக் மான்செஸ்டர், *தி உபநிஷத்ஸ், பிரேத் ஆப் தி எட்டெர்னல் (The Upanishads, Breath of the Eternal)* (ஹாலிவுட்: வேதாந்தா பிரெஸ், 1971)

உபரா: எஸ். ராதாகிருஷ்ணன், *தி ப்ரின்சிபல் உபநிஷத்ஸ் (The Principal Upanishads)* (நியூ யார்க்: ஹார்ப்பர் அண்ட் பிரதர்ஸ், 1953)

வேஎ: பானிக்கர், ரைமோன், *தி வேதிக் எக்ஸ்பிரியன்ஸ் (The Vedic Experience)* (டில்லி: மோதிலால் பனாரசிதாஸ், 1989)

வேஆ: ஹெர்மன் டபுள்யு. டுள், *தி வேதிக் ஆரிஜின்ஸ் ஆப் கர்மா, காஸ்மோஸ் அஸ் மான் இன் ஏன்சியண்ட் இந்தியன் மித் அண்ட் ரிசுவல் (The Vedic Origins of Karma, Cosmos as Man In Ancient Indian Myth and Ritual)* (அல்பானி, ஸ்டேட் யுனிவர்சிட்டி ஆப் நியூயார்க் பிரஸ், 1989)

யோம: அலைன் டானிலோ, *யோகா: தி மேதட் ஆப் ரி-இண்டெக்ரேஷன் (Yoga: The Method of Re-Integration)* (நியூ யார்க், யூனிவெர்சிடி புக்ஸ், 1955)

யோதே: ஜார்ஜ் ஃபூர்ஸ்டீன், *யோகா, தி டெக்னாலஜி ஆப் எக்ஸ்டசி (Yoga, The Technology of Ecstasy)* (லாஸ் ஏஞ்சல்ஸ், ஜெர்மி பி. டார்ச்சர் இங்க்., 1989)

ஊக்கமூட்டும் உரைகளின் அட்டவணை

பிரேரக வார்த்தானுகிரமணி

प्रेरक वार्तानुक्रमणी



மனித நேயத்திற்கு குருதேவா உண்மையில் ஈடு இணையற்ற போதனைகளை பரிசாக வழங்கியுள்ளார். சுமார் ஐம்பது வருடங்களாக வழங்கப்பட்ட ஊக்கமூட்டும் உரைகளில் இருந்து *சிவனோடு வாழ்தல்* புத்தகம் உருவாக்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட ஒவ்வொரு உரையை, அதன் தேதி மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுடன் பதிவு செய்ய முயன்றுள்ளோம்.

1. எங்கும் இறைவனை காண்க

எங்கும் இறைவனை காண்க என்ற இந்த அத்தியாயத்தில் இருக்கும் திங்கள் மற்றும் வெள்ளி வரையிலான பாடங்கள், கடவுள் இந்து கோயிலில் பிப்ரவரி 28, 1984 மகாசிவராத்திரி அன்று குருதேவா ஒரு பக்தர்கள் குழுவிற்கு வழங்கிய ஒரு ஊக்கமூட்டும் உரையில் இருந்து தொகுப்பட்டது. இது 1993 ஆம் ஆண்டு *நோ தை செல்ஃப்* பத்திரிகையில் வெளியானது. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை பாடங்கள் பரமாத்துமா பற்றியது. முழுமுதற்பொருள் பற்றி குருதேவா வழங்கிய இந்த சிறப்பான போதனையை, அவர் தனது சேக்ரமெண்டோ ஸ்ட்ரீட் கோயிலில் *கர்ம யோக* தீட்சை பெற்ற ஒரு சிறிய குழுவினருக்கு, அக்டோபர் 3, 1959 அன்று ஹவாய் தீவிற்கு முதல் முறையாக பயணம் செய்வதற்கு முன்பாக வழங்கினார்.

2–9. அகிம்சை மற்றும் வாய்மை; கள்ளாமை மற்றும் மற்ற நற்பண்புகள்; கருணை, நேர்மை மற்றும் அளவுணவு; சுத்தம் மற்றும் தவறுக்கு வருந்துதல்; சந்தோசம் மற்றும் தானம்; இறைநம்பிக்கை மற்றும் வழிபாடு; சாத்திரம் கேட்டல் மற்றும் அறிவு எழுச்சி; விரதங்கள், ஜபம் மற்றும் தவம்: 1990 ஆம் ஆண்டு, கவாய் தீவின் பீச்பாய் ஹோட்டலில் பிப்ரவரி 14 முதல் மார்ச் 26 வரை, *இயமங்கள்* மற்றும் *நியமங்கள்* பற்றி குருதேவாவுடன் தொடர்ச்சியாக நடைபெற்ற கேள்வி பதில் அமர்வுகள், இந்த எட்டு பாடங்களில் உள்ளடங்கியுள்ளன.

10. பிரம்மச்சரியம் மற்றும் விசுவாசம்

இந்த அத்தியாயத்தில் வரும் பாடங்கள் 1989 ஆம் ஆண்டு வெளியான *இந்து இளைஞர்களுக்கு சைவ நற்பண்பாக விளங்கும் பிரம்மச்சரிய சக்தி (Śaivite Virtue, the Power of Celibacy for Hindu Youth)* மற்றும் 1974 ஆம் ஆண்டு குருதேவா அறிவுறுத்திய *சைவ சாத்திர துணை நூலான நற்பண்பு பற்றிய புத்தகம்* (*The Book of Virtue,* a companion to the *Śaivite Śāstras)* என்று இரண்டு புத்தகத்தில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளது.

11. உடல், மனம் மற்றும் மனவெழுச்சியின் உணவுமுறைகள்

முதல் ஆறு பாடங்கள், அதே பெயருடன் 1967 ஆம் ஆண்டு வெளிவந்த *மாஸ்டர் கோர்சில்* இருந்து பெறப்பட்டவை. அவை சான் பிரான்சிஸ்கோ நகரில் மார்ச் 1, 1958 வழங்கப்பட்ட ஒரு ஊக்கமூட்டும் உரையை அடிப்படையாக கொண்டவை. ஒரு சிலோன் பத்திரிகையில் ஜூன் 1949 வெளியான குருதேவாவின் முதல் கட்டுரை ஞாயிற்றுக்கிழமை பாடமாக அமைந்துள்ளது.

12. இரசாயன குழப்பம்

இந்த பாடம் சான் பிரான்சிஸ்கோ நகரில் 1964 ஆம் ஆண்டு, உளமாற்றி போதை மருந்துகள் பிரச்சனையை பற்றி வழங்கிய ஒரு ஊக்கமூட்டும் உரையுடன் தொடங்குகிறது. அந்த சமயத்தில் போதை மருந்து இயக்கம் துளிர்விட்டுக் கொண்டு இருந்தது மற்றும் இந்த வலுவான பொருட்கள் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால விளைவுகளை பற்றி அப்போது யாரும் அறிந்து இருக்கவில்லை. "போதை மருந்து இல்லாத கவாய், கொடிய போதை பழக்கம் பற்றிய பத்து கடினமான பாடங்கள்" என்ற தலைப்பில் மடத்தின் மூலம் பிப்ரவரி மற்றும் மார்ச் 1999 வெளியான ஒரு CD யின் ஒலிப்பதிவுகளில் இருந்து கூடுதல் தகவல் பெறப்பட்டன.

13. சாதனா

1982 ஆம் ஆண்டு கவாய் ஆதீனத்தில் நடைபெற்ற குரு பூர்ணிமா விழாவை ஒட்டி, கடவுள் இந்து கோயில் பக்தர்களுக்கு வழங்கப்பட்ட *உபதேசம்,* முதல் நான்கு பாடங்களாக அமைந்துள்ளன. கவாய் ஆதீனத்தின் அன்றாட இணையதளம் பற்றி, 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டு இணையம் மூலம் பயின்ற மாணவர்கள் சமர்ப்பித்த கேள்வி பதில்கள் மற்றும் *இந்து சாதனா, தி மாஸ்டர் கோர்ஸ் புக் டூ* என்ற தலைப்பில் 1982 ஆம் ஆண்டு வெளியான ஆய்வு புத்தகத்தில் இருந்து மீதமுள்ள பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

14–15. தியானம் செய்பவர்; தியானத்தில் ஏற்படும் தடைகள்

இந்த இரண்டு அத்தியாயங்கள், 1972 அக்டோபர் மாதத்தில் குருதேவா வழங்கிய ஒரு உபதேசத்தை தழுவி அமைந்துள்ளன. அவை பயனுள்ள முறையில் தியானம் தொடங்குவதற்கான உத்திகளை வரையறுத்து, வெற்றிகரமான ஆன்மீக வாழ்க்கையை பெறுவதற்கு தடைகளை சமாளித்து முன்னேறுவது

பற்றிய நுணுக்கங்களை வழங்குகின்றன. இது முதல் முறையாக 1973 ஆம் ஆண்டு "ஆன் தி பாத்" தொடரில் *தி மெடிடேட்டர்* என்ற தலைப்பில் வெளியானது.

16. மனஉறுதியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல்

இந்த அத்தியாயத்தில் இருக்கும் முதல் ஐந்து பாடங்கள், 1970 களின் தொடக்கத்தில் கோனா சர்ப் ஹோட்டலில் "மனஉறுதி மற்றும் அறியும் சக்தி" (“Willpower and Comprehension”) என்ற தலைப்பில் அறிவுறுத்தி இருந்தாலும் வெளியாகாத கையெழுத்துப் பிரதி, முதல் ஐந்து பாடங்களாக அமைந்துள்ளன. "அறியும் சக்தியின் உணர்வு" (“The Consciousness of Comprehension”) என்ற தலைப்பில், சான் பிரான்சிஸ்கோ கோயிலில் 1958 அல்லது 1959 ஆம் ஆண்டில் ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கப்பட ஊக்கமூட்டும் உரை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை பாடமாக அமைந்துள்ளது.

17. வாழ்க்கை ஆனந்தமாக வாழ்வதற்கே

இந்த அத்தியாயம் "தொழில்நுட்ப யுகத்தில் சைவ சமயத்திற்கு சவாலாக விளங்கும் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்" என்ற ஒரு ஊக்கமூட்டும் உரையில் "அழுத்தம்" பற்றிய ஒரு சிறிய பகுதியில் இருந்து தொடங்குகிறது. இது 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற இலங்கை தீர்த்தயாத்திரையின் போது வழங்கிய உபதேசங்களில் இருந்து தொகுக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதி, குருதேவா தனது சான் பிரான்சிஸ்கோ கோயிலில் பக்தர்களுக்கு, "உங்கள் கடந்தகாலத்தை எதிர்கொள்ளுதல்" ("Facing Your Past”) என்ற தலைப்பில் வழங்கிய உரையில் இருந்து ("ஆன்மீக விவகாரங்களை உங்கள் இதயம் மற்றும் உங்கள் உணர்ச்சியின் துணையுடன் புரிந்துக்கொள்ள வேண்டும்" என்று தொடங்கும்) முதல் மூன்று பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 1964 ஆம் ஆண்டு வெளிவந்த "அனாஹத யோகம்" என்ற பெயரில் வெளிவந்த ஒரு துண்டு பிரசுரத்தில் இருந்து ("நீங்கள் சுய ஒழுக்கத்தை அனுட்டானம் செய்ய..." என்று தொடங்கும்) வியாழன் மற்றும் வெள்ளி பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 1958 ஆம் ஆண்டு, குருதேவா வழங்கிய "ஒன்றின் மேல் ஒன்றாக குவியும் எதிர்வினைகள்" என்கிற ஞாயிற்றுக்கிழமை தகவல் இருந்து சனி மற்றும் ஞாயிறு பாடங்கள் உருவாகின.

18. பிராயசித்தத்தின் வலிமை

இந்த பிரத்யேகமான அத்தியாயம், அடியுணர்வு தடைகள் மற்றும் தீர்வு காண முடியாத பிரச்சனைகளை பக்தர்கள் மற்றும் மாணவர்கள் சமாளிக்கும் பொருட்டு வெளிவந்த துண்டு பிரசுரங்களுக்காக, 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், பிராயசித்தம் பற்றி குருதேவா வழங்கிய அறிவுறுத்தல்களில் இருந்து உருவாகியது.

19–20. தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகையும் ஆளும்; பெண்ணின் சக்தி, பெண்ணின் இராச்சியம்: இந்த அத்தியாயங்கள், 1980 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதி, குருதேவா தனது ஐம்பத்தி மூன்றாவது ஜெயந்தி அன்று வழங்கிய விசேஷமான உரையில் இருந்து தொகுக்கப்பட்டவை. அப்போது அவர் இன்றைய இந்து பெண்மணி தனது *தர்மத்தை* புறக்கணிக்காமல், எதிர்கால சந்ததியருக்கு தான் வழங்கும் அன்பு கலந்த பரிசாக வீட்டை பாதுகாத்து மற்றும் குடும்பத்தை பேணி வளர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

21. திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை

1990 ஆம் ஆண்டு, மே 17 ஆம் தேதி குருதேவா ஒரு திருமணத்தில் வழங்கிய *உபதேசம்*, இந்த அத்தியாயத்தில் முதல் ஐந்து பாடங்களாக உள்ளன. அவர் 1989 ஆம் ஆண்டு, அக்டோபர் 24-25 தேதிகளில் திருமண ஒற்றுமை பற்றி வழங்கிய உரைகள் சனிக்கிழமை பாடமாக உள்ளது. 1989 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் *அகிம்சை* பற்றி வழங்கிய உரைகள், ஞாயிற்றுக்கிழமை பாடமாக உள்ளது. இந்த உரைகளின் சில பகுதிகள், "வீட்டில் குழப்பம், திருமணத்தில் கருத்து வேறுபாடுகள்," என்ற தலைப்பில் மார்ச் 1991 மற்றும் "திருமணம் என்பது நிரந்தரம்" என்ற தலைப்பில் செப்டெம்பர் 1992 வெளிவந்த இந்துயிசம் டுடேயின் ஆசிரியர் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டன.

22. குடும்ப ஒற்றுமை

குருதேவா ஆசிரியர் பக்கத்தில் அக்டோபர் 1997 எழுதிய "இரகசியத்தை பாதுகாத்தல்: வீட்டை விட்டு வெளியேறியதும் செய்ய வேண்டிய முதல் நடவடிக்கை," மற்றும் அதன் பின்னர் நவம்பர் 1999, ஆசிரியர் பக்கத்தில் எழுதிய "உங்கள் வீடு ஒரு இல்லமா அல்லது ஒரு ஹோட்டல் அறையா?" என்ற இரண்டு கட்டுரைகளைக் கொண்டு, இந்த அத்தியாயத்தின் முதல் மூன்று பாடங்கள் அமைந்துள்ளன.

23. இளவயது திருமணத்தில் இருக்கும் விவேகம்

1963 ஆம் ஆண்டு, மார்ச் 14 ஆம் தேதி, சான் பிரான்சிஸ்கோ கோயிலில் "பால்ய விவாகம்" என்கிற தலைப்பில் வழங்கப்பட்ட ஊக்கமூட்டும் உரை, இங்கே முதல் ஐந்து பாடங்களாக அமைந்துள்ளன. அந்த காலகட்டத்தில் வழங்கப்பட்ட மற்ற ஞாயிறு உரைகளை போல, அவை கூட்டுப் பிரார்த்தனைகளில் பயன்படுத்த ஒரு மெமோகிராப் இயந்திரம் மூலம் பல பிரதிகள் நகல் எடுக்கப்பட்டன. ஜூலை 1993, ஆசிரியர் பக்கத்தில் குருதேவா எழுதிய "இளவயது திருமணங்கள்" என்கிற கட்டுரை, கடைசி இரண்டு பாடங்களாக அமைந்துள்ளன.

24. நவீன யுகத்தில் திருமண பொருத்தம் பார்க்கும் ஜோதிடர்கள்

சைவ தர்ம சாத்திரங்கள், சைவ சித்தாந்த தேவாலய ஒழுங்குமுறை பற்றிய புத்தகத்தில் (*Śaiva Dharma Śāstras, The Book of Discipline of Śaiva Siddhānta Church)*

இருந்து, இந்த அத்தியாயத்தின் முதல் நான்கு பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகஸ்ட் 1993, குருதேவாவின் ஆசிரியர் பக்கத்தில் வெளிவந்த "வெவ்வேறு நாட்டினர் இடையே நடைபெறும் திருமணங்கள்" என்ற கட்டுரையில் இருந்து வெள்ளி மற்றும் சனிக்கிழமை பாடங்கள் உருவாகின. நவம்பர் 26, 1960 சான் பிரான்சிஸ்கோ நகரில், "முதுமை" என்ற தலைப்பில் வழங்கப்பட்ட உரை மற்றும் "நான் ஒரு கிறித்துவ பெண்ணை காதலிக்கிறேன்..." என்று ஒரு இளைஞர் கேட்டிருந்த கேள்விக்கு இணையம் மூலம் மே 2000 வழங்கிய பதிலும் ஒன்றாக சேர்த்து, இளைஞர்களுக்கு ஞாயிறு அறிவுரையாக தொகுக்கப்பட்டுள்ளது.

25. விவாகரத்து மற்றும் சித்ரவதை

"திருமணம் என்பது நிரந்தரம்" (செப்டெம்பர் 1992), "விவாகரத்து, இந்திய பாணி" (அக்டோபர், 1992), "விவகாரத்தை சமாளித்தல்" (ஜனவரி, 1991) மற்றும் "முதல் அடியில் இருந்து பிரச்சனை தொடங்கியது" (செப்டெம்பர், 1994) என்ற நான்கு ஆசிரியர் பக்க கட்டுரைகளில் இருந்து இந்த அத்தியாயம் உருவாக்கப்பட்டுள்ளது.

26. குழந்தைகள் வளர்ப்பு

அக்டோபர் 1989, ஆசிரியர் பக்கத்தில் "பதின்ம வயதினர் வளர்ப்புமுறை" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, திங்கள் மற்றும் செவ்வாய் பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. "யார் ஆலோசகர்கள், குழந்தைகளா பெற்றோர்களா?" (அக்டோபர் 1991), மற்றும் "நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்கிற தத்துவம்" (ஜூன், 1991) என்ற தலைப்பில் வெளியான இரண்டு ஆசிரியர் பக்க உரைகளில் புதன் மற்றும் சனிக்கிழமை பாடங்கள் உருவாகியுள்ளன. 1996 ஆம் ஆண்டு குழந்தைகளை கண்காணிப்புடன் வெளியே அனுப்புவது பற்றி வழங்கிய *உபதேசங்கள்* ஞாயிறு பாடமாக அமைந்துள்ளது.

27. நேர்மறை கட்டுப்பாடு

"குழந்தைகள் மீது கோபத்தை வெளிப்படுத்துவதால் ஏற்படும் பிரச்சனை" என்ற தலைப்பில் ஜூலை 1999 ஆசிரியர் பக்கத்தில் வெளியான கட்டுரையில் இருந்து இந்த அத்தியாயத்தின் முதல் இரண்டு பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. “பிரம்பை தவிர்த்து குழந்தையை காப்பாற்றுங்கள்” என்ற தலைப்பில் பிப்ரவரி 1997 ஆசிரியர் பக்கத்தில் வெளியான கட்டுரையில் இருந்து புதன் மற்றும் வியாழக்கிழமை பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிராயச்சித்தம் பற்றி 1996 ஆம் ஆண்டு, குருதேவா நடத்திய விவாதங்களில் இருந்து வெள்ளிக்கிழமை பாடம் உருவாக்கப்பட்டுள்ளது. "விலக்கி வைத்தல் மற்றும் சேர்ந்து இருத்தல்" என்ற தலைப்பில் ஏப்ரல் 1997 வெளிவந்த ஆசிரியர் பக்க கட்டுரை, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை பாடங்களாக உள்ளன.

28. இளவயது சோதனைகள்

அக்டோபர் 1989 ஆசிரியர் பக்கத்தில் "பதின்ம வயதினரை வளர்க்கும் முறை" என்ற தலைப்பில் வந்த குருதேவாவின் கட்டுரை மற்றும் ஜூன் 1988 கலிபோர்னியா கன்கார்டு நகரில் இருக்கும் பழனிசுவாமி கோயிலில் அர்ப்பணிப்பு பற்றி வழங்கிய *உபதேசத்தில்* இருந்து, பதின்ம வயதினரை வளர்க்கும் முறை பற்றிய வெளிப்படையான அறிவுரை உருவாக்கப்பட்டுள்ளது. "தற்கொலை மற்றும் பெற்றோர்கள் எதிர்பார்ப்பு" என்ற தலைப்பில் டிசம்பர் 1996 வெளியான குருதேவாவின் ஆசிரியர் பக்க கட்டுரையில் இருந்து மனவேதனை பற்றிய புதன்கிழமை பாடம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அத்தியாயம் குறிப்பாக குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகள் மற்றும் ஒருவர் தனது எதிர்கால குறிக்கோள்களுக்கு தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளுதல் பற்றி 2000 ஆம் ஆண்டு இணையத்தில் வெளிவந்த *உபதேசங்களும்* அடங்கியுள்ளன. *சைவ தர்ம சாத்திரங்களின்* 1995 ஆம் ஆண்டு பதிப்பில் இருந்து, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் பற்றிய ஞாயிறு பாடம் அமைந்துள்ளது.

29. மனதை புண்படுத்தும் வார்த்தைகள்

"நிந்தனை, வீண் பேச்சு மற்றும் புறங்கூறுதல்" (ஆசிரியர் பக்கம், ஜனவரி/பிப்ரவரி 2001) மற்றும் "இழிவுப்படுத்துதல்" (ஆசிரியர் பக்கம், ஜூலை/ஆகஸ்ட் 2001) மற்றும் '60 களில் சான் பிரான்சிஸ்கோ கோயிலில் "வீண் பேச்சு மற்றும் புறங்கூறுதல்" என்ற தலைப்பில் வழங்கப்பட்ட ஞாயிறு உபதேசங்களில் இருந்து சில பகுதிகள், இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன. ”

30. இலஞ்சம் மற்றும் தீய வழியில் ஈட்டிய பணம்

நல்ல வழியில் ஈட்டிய செல்வத்தை பற்றி இந்த விவாதம், மே 1997 ஆசிரியர் பக்கத்தில் வெளிவந்த "நல்ல வழியில் ஈட்டிய பணம், தீய வழியில் ஈட்டிய பணம்," மற்றும் ஏப்ரல் 1999 ஆசிரியர் பக்கத்தில் வெளிவந்த "இலஞ்சம் ன்பது சமூகம் மற்றும் கலாச்சார இடையூறு" கட்டுரைகளின் கருத்துக்களை வழங்குகிறது.

31. கணினி இயந்திரம் பற்றி தங்கள் கருத்து என்ன?

"கணினி துணையுடன் அமைதியாக கணக்கிடும் தலைமுறை" (மே, 1996) மற்றும் "கொலை செய்ய தூண்டும் விளையாட்டுக்கள்" (மார்ச், 1992) என்ற இரண்டு ஆசிரியர் பக்க கட்டுரைகள் மற்றும் மே 14, 1990 குருதேவா தனது மடவாசிகளுக்கு கேள்வி-பதில் வடிவில் வழங்கிய அறிவுறுத்தல் ஆகியவை இந்த அத்தியாயத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றன.

32. விபசாரம் மற்றும் பாலியல் விஷயங்கள்

இந்த அத்தியாயம் குருதேவாவின் ஆசிரியர் பக்கத்தில் இருந்து “விபச்சாரம் பற்றிய ஒரு ஆன்மீக கண்ணோட்டம்," (ஜூன், 1999) மற்றும் "இணையத்தில் பாலியல் உணர்வை தூண்டும் தகவல்கள்" (ஜூன், 1998) கட்டுரைகளை வழங்குகிறது.

33. பிறப்பு, கருக்கலைவு மற்றும் தற்கொலை

ஆகஸ்ட்/செப்டெம்பர் 1989, குருதேவா ஒரு தொகுக்கும் அமர்வில் பிறப்பு மற்றும் மறுபிறப்பு பற்றி வழங்கிய ஒரு நீளமான *உபதேசத்தில்* இருந்து கருத்தரிப்பு நேரம் பற்றி திங்கட்கிழமை பாடம் விவாதிக்கிறது. செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமை பாடங்கள் "கருக்கலைப்பு பற்றி விவாதிக்கலாம்" (ஆசிரியர் பக்கம், ஜனவரி 1992) என்ற கட்டுரையை தழுவி அமைந்துள்ளன. வெள்ளி மற்றும் சனிக்கிழமை பாடங்கள் "தற்கொலை பற்றி விவாதிக்கலாம்" (ஆசிரியர் பக்கம், டிசம்பர் 1992) என்ற கட்டுரையை தழுவி அமைந்துள்ளன. இணைய வழி அன்பரின் கேள்விக்கு வழங்கப்பட்ட பதிலுடன், முப்பது ஓரு நாள் தீட்டு பற்றிய ஞாயிறு பாடம் *சைவ தர்ம சாத்திரங்களின்* 1995 ஆம் ஆண்டு பதிப்பில் இருந்து பெறப்பட்டுள்ளது.

34. வயோதிகம்

மே 8, 1990 குருதேவா தனது தொகுக்கும் குழுவிற்கு வழங்கிய ஓரு *உபதேசத்தில்* இருந்து பெறப்பட்டு, "முதியவர்கள் மற்றவர்களுக்கு தடையாக இருக்கிறார்கள்" என்ற பெயரில் குருதேவாவின் ஜூன் 1995 ஆசிரியர் பக்கத்தில் தோன்றிய கட்டுரை, இந்த அத்தியாயமாக உருவெடுத்துள்ளது. இது நவம்பர் 26, 1960 அன்று, சான் பிரான்சிஸ்கோ நகரில் "முதுமை தொடங்கும் போது..." ("மேற்கத்திய நாடுகளில், முதியவர்கள்..." என்று ஆரம்பிக்கும் வியாழன் பாடத்தில் இருந்து தொடங்கி) என்ற ஓரு ஞாயிறு உரையுடன் நிறைவடைகிறது.

35. மரணத்திற்கு பிந்தைய சூட்சும லோக வாழ்க்கை

இறப்பு, இறக்கும் தருவாய், மரணத்திற்கு பிந்தைய வாழ்க்கை மற்றும் மறுபிறவி பற்றி குருதேவா ஆகஸ்ட்/செப்டெம்பர் 1990 வழங்கிய உபதேசத்தில் இருந்து இந்த அத்தியாயம் உருவெடுத்துள்ளது.

36. இந்து சமயம் அளிக்கும் இன்பங்கள்

அக்டோபர் 19, 1978 கடவுள் இந்து கோயிலின் *ஹோம* குண்டம் முன்பாக கூடியிருந்த பக்தர்களுக்கு "எப்போதும் தைரியமாக இருங்கள்" என்ற தலைப்பில் வழங்கிய ஊக்கமூட்டும் உரையில் இருந்து இந்த அத்தியாயம் தொகுக்கப்பட்டுள்ளது.

37. தர்மம் மற்றும் விதி

தர்மம் பற்றிய இந்த அத்தியாயத்தின் முதல் நான்கு பாடங்கள் "தொடர்ந்து தைரியமாக இருங்கள்" என்ற உரையில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன. 1982 ஆம் ஆண்டு, பிப்ரவரி 28 முதல் மார்ச் 2 வரை, மொரீஷியஸ் நாட்டில் தொடர்ச்சியாக வழங்கிய உரைகள், வெள்ளி மற்றும் ஞாயிறு பாடங்களாக அமைந்துள்ளன. இந்த உரையின் மூலம் குருதேவா, அந்நாட்டில் பெருமளவில் இருந்த இந்துக்களின் இதயங்களில் ஒரு ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருந்தார். குருதேவாவின் "இணைய சமூகத்திற்கு" வழங்கிய பதில்களில் இருந்து ஜாதி அமைப்பு பற்றிய சனிக்கிழமை பாடம் அமைந்துள்ளது.

38. கர்மவினை சக்கரம்

சான் பிரான்சிஸ்கோ கோயில் பக்தர்களுக்கு "கர்மவினை சக்கரம்" பற்றி வழங்கப்பட்ட ஒரு உரையில் இருந்து திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது 1964 ஆம் ஆண்டு துண்டு பிரசுரம் வடிவிலும் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து "கர்மவினை மற்றும் பொறுப்பு" என்ற தலைப்பில் குருதேவா கவாய் தீவில் 1981 ஆம் ஆண்டு வழங்கிய ஒரு உரை இடம்பெற்றுள்ளது. 1988 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஒரு சிறிய உபதேசம் வெள்ளிக்கிழமை பாடமாக இடம் பெற்றுள்ளது. *சிவபெருமானுடன் திருநடனம், இந்து மதத்தின் தற்கால வினாடிவினா* என்ற புத்தகத்தை உருவாக்கும் போது எழுதிய கட்டுரைகள் இறுதி பாடங்களில் இடம்பெற்றுள்ளன.

39–40. இம்சை செய்யவேண்டாம்; போர் மற்றும் அமைதி

அகிம்சை பற்றிய இந்து கண்ணோட்டத்தை வழங்கும் இந்த பிரசங்கம், தொடர்ச்சியான உபதேசத்திற்காக, டிசம்பர் 1989 கவாய் தீவில் வரிசையாக நடைபெற்ற கேள்வி பதில் அமர்வுகளில் அறிவுறுத்தப்பட்டது. *கர்ம யோகம், இராச யோகம், ஜப யோகம், ஹட யோகம்*, திருமணம், இறப்பு மற்றும் இறக்கும் தருவாய் உட்பட எதிர்காலத்தில் நடக்கவிருந்த *சிவனோடு வாழ்தல்* மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகங்களின் பதிப்புக்களுக்கு, குருதேவா பல்வேறு தலைப்புக்களில் சுமார் நூறு பக்க தகவல்களை அறிவுறுத்தினார். இவை பீச்பாய் ஹோட்டலில் ஒரு சோனி போர்ட்டபிள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டன. 40 ஆவது அத்தியாயத்தின் புதன்கிழமை பாடம் செப்டெம்பர் 9, 1990 அறிவுறுத்தப்பட்டது.

41. மன்னிக்கும் மனநிலையின் ஆற்றல்

“மன்னிப்பு, ஆத்திரம், முரண்பாடு நீக்கம்" (நவம்பர் 1997) மற்றும் "பழிவாங்குதல் கூடாது" (பிப்ரவரி 1998) என்ற தலைப்புக்களில், இந்துயிசம் டுடே பத்திரிக்கைக்காக குருதேவா ஆசிரியர் பக்கத்தில் எழுதிய இரண்டு கட்டுரைகள் இந்த அத்தியாயத்தில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. 1982 ஆம்

ஆண்டு *இந்து சாதனா* என்ற பெயரில் வெளியான ஒரு ஆய்வு புத்தகத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை பாடம் உருவாக்கப்பட்டுள்ளது.

42. நன்றியுணர்வை வளர்த்து பரிவுடன் இருங்கள்

ஜூன் 1997 "நன்றியுணர்வு மற்றும் உணர்ந்து பாராட்டுதல்" என்ற தலைப்பில் ஆசிரியர் பக்கத்தில் வெளிவந்த குருதேவாவின் கட்டுரையில் இருந்து முதல் மூன்று பாடங்கள் உருவாகியுள்ளன. "சிறிதளவு அன்பு" என்ற பெயரில் பெரும்பாலும் '60 களில் உருவாக்கப்பட்டு, வெளியிடப்படாத கையெழுத்துப்பிரதியின் கருத்தை, புதன்கிழமை பாடத்தின் கடைசி பத்தி மற்றும் வியாழக்கிழமை பாடத்தின் முதல் இரண்டு பத்திகள் உள்ளடக்கியுள்ளன. செப்டெம்பர் 28, 1958 சான் பிரான்சிஸ்கோ கோயிலில் "எவ்வாறு பரிவுடன் இருப்பது" என்ற தலைப்பில் வழங்கப்பட்ட ஞாயிறு உரையில் இருந்து வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமை வரையிலான பாடங்கள் (வியாழன் பாடத்தின் கடைசி பத்தி உட்பட) உருவாக்கப்பட்டுள்ளன.

43. வேற்றுமைக்கு அனுமதி அளிக்காமல் இருத்தல்

ஜூன் 1996 வெளிவந்த குருதேவாவின் ஆசிரியர் பக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து வந்த பத்திரிகையில் "உங்களுக்குள் நடைபெறும் கொந்தளிப்பை வெற்றிக்கொள்ள உங்கள் வலிமையை பயன்படுத்துவது எப்படி" என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையின் கருத்து, இந்த அத்தியாயத்தின் முதல் ஐந்து பாடங்களில் இடம்பெற்றுள்ளன. நவம்பர் 1999 கடவுள் இந்து கோயிலில் ஆன்மீக அன்பு பற்றி வழங்கப்பட்ட உரை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை பாடங்களில் இடம்பெற்றுள்ளன.

44. மதத்தின் அவசியம் என்ன

1970 களில் "வேதாந்தா" என்ற தலைப்பில் வழங்கப்பட்ட ஒரு உரை, இந்த அத்தியாயத்தின் முதல் ஐந்து பாடங்களாக உள்ளன. இறுதி மூன்று பாடங்கள், அத்வைத ஈசுவரவாதம் பற்றி விளக்குகின்றன. ஒரு நாள் மதியம் தொகுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த *மடவாசிகள்* கேட்ட கேள்விகளின் விளைவாக, இந்த பாடங்கள் 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டன.

45. மகாதேவர்களின் ஆலயங்கள்

1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 முதல் மார்ச் 2 வரை மொரீஷியஸ் தீவில் குருதேவா வழங்கிய ஒரு ஆன்மீக சொற்பொழிவில் இருந்து இந்த அத்தியாயம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த பயணத்திற்கு பிறகு, இந்துயிசம் டுடே பத்திரிகையின் ஒரு நுண்ணறிவு பகுதியில் "தர்மம், மகாதேவர்கள் மற்றும் கோயில் வழிபாடு," என்ற தலைப்பில் அதிகாரப்பூர்வமான சொற்பொழிவு வெளியிடப்பட்டது.

46. மகாதேவர்களுக்கு பிரார்த்தனைகளை அனுப்புதல்

இறைவனை பிரார்த்தனை செய்தல், கோயில் ஹோம குண்டத்திற்காக பிரார்த்தனைகள் எழுதும் ஒரு நவீன தந்த்ரம் (Praying to the Gods, A Modern Tantra on Writing Prayers for the Sacred Temple Fire) (1990) என்ற புத்தக கருத்துக்கள், இந்த அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன.

47. குருவின் சக்தி

செப்டெம்பர் 30, 1989 குருதேவா தனது இரண்டு *ஆச்சார்யர்களுக்கு* வழங்கிய *உபதேசம்* திங்கட்கிழமை பாடமாக அமைந்துள்ளது. ஜூலை 1991 குரு பூர்ணிமா திருவிழாவின் போது, கடவுள் இந்து கோயிலில் வழங்கப்பட்ட "குருவின் சக்தி" என்ற உரை மீதமுள்ள பாடங்களாக அமைந்துள்ளன.

48. சைவ மடவாசிகள்

சைவ தர்ம சாத்திரங்கள், சைவ சித்தாந்த தேவாலய ஒழுங்குமுறை பற்றிய புத்தக (1995) அத்தியாயத்தை மையமாக கொண்டு, இந்த அத்தியாயத்தின் பெரும்பாலான பகுதி அமைந்துள்ளது. குருதேவா இந்த புத்தகத்தில் தனது மடவாசி சமூகத்தின் அமைப்பு, வாழ்முறை மற்றும் நன்னடத்தை கோட்பாட்டை பதிவு செய்துள்ளார். சுவாமி விவேகானந்தரின் "சந்நியாசி கீதம்" ஞாயிற்றுக்கிழமை பாடமாக அமைந்துள்ளது.

49. நமது சம்பிரதாயத்தை கற்றுத்தருதல்

அக்டோபர் 1995, ஆசிரியர் பக்கத்தில் வெளிவந்த "இளைஞர்களை கற்பிக்கும் கருவிகள்" என்ற கட்டுரையுடன் திங்கள் பாடம் தொடங்குகிறது. ஜனவரி 1981 இன்னர்சர்ச் ட்ராவல்-ஸ்டடி புரோகிராம் தொடர்பாக மலேசியா, இலங்கை மற்றும் தென்னிந்திய கோயில்கள் மற்றும் ஆசிரமங்களில் "சைவ தர்மத்தை பாதுகாத்து, பேணி வளர்த்து மேன்மைப்படுத்த வேண்டும்" என்ற தலைப்பில் வழங்கப்பட்ட ஒரு ஊக்கமூட்டும் உரையில் இருந்து அடுத்த ஐந்து பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜனவரி 14-19, 1990 மாஸ்கோவில் நடைபெற்ற மனித வாழ்வுவளம், வளர்ச்சி மற்றும் சுற்றுப்புறச்சூழல் பற்றிய ஒரு சர்வதேச கருத்தரங்கில் ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்கள் பங்குபெற்றார்கள். அதில் குருதேவா "சர்வதேச கல்வி" என்ற தலைப்பில் வழங்கிய உரை ஞாயிற்றுக்கிழமை பாடமாக அமைந்துள்ளது.

50. சைவ கலாச்சாரம்

புகழ்பெற்ற சைவ சமயத்தை கடந்தகாலத்தில் இருந்து எதிர்காலத்திற்கு வழிநடத்தி செல்ல மதமாற்றம், மரபுசாரா இந்து மதம் மற்றும் மேற்கத்திய தாக்கங்கள் அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன என்று ஸ்ரீ சிவாய சுப்பிரமுனியசுவாமி என்று அழைக்கப்படும் குருதேவா, ஜனவரி 1982 தான் மேற்கொண்ட இலங்கை யாத்திரையின் போது, பல இடங்களில் சமய உரைகளில் தைரியமாக கூறினார். அந்த உரைகளில் இருந்து "தொழில்நுட்ப

யுகத்தில் சைவ சமயம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்" என்ற பெயரில் தொகுக்கப்பட்ட ஒரு ஊக்கமூட்டும் உரை, திங்கள் மற்றும் செவ்வாய் பாடமாக இடம்பெற்றுள்ளன. "ஆடை கட்டுப்பாடுகள்" (பிப்ரவரி 1992) மற்றும் "மனம் நிறைந்த புரோகிதர்கள், மனம் நிறைந்த மக்கள்" (ஜூன் 1992) என்ற இரண்டு ஆசிரியர் பக்க கட்டுரைகள் புதன் மற்றும் வியாழன் பாடங்களாக அமைந்துள்ளன. "களங்கம் விளைவிப்பவர்களை பற்றி விவாதிக்கலாம்" (ஆசிரியர் பக்கம், நவம்பர் 1994) என்ற கட்டுரை வெள்ளிக்கிழமை பாடமாகவும், "நமது பூசாரிகள் மீது நடத்தப்படும் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வரலாம்" (ஆசிரியர் பக்கம், டிசம்பர் 1994) என்ற கட்டுரை சனிக்கிழமை பாடமாகவும் அமைந்துள்ளன. ஜூன் 1988 கன்கார்டு, கலிபோர்னியாவில் இருக்கும் பழனிசுவாமி கோயிலில் தேவாலய உறுப்பினர்களுக்கு அர்ப்பணிப்பு பற்றி வழங்கப்பட்ட ஒரு உரை ஞாயிற்றுக்கிழமை பாடமாக உள்ளது.

51. இந்து மத ஒருமைப்பாடு

ஜூன் 3, 1983 வால்நட் கிரீக், கலிபோர்னியாவில் "இந்து மதம், வேற்றுமையில் ஒருமைப்பாடு" மற்றும் ஜனவரி 1982 இலங்கையில் "தொழில்நுட்ப யுகத்தில் சைவ சமயம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்" என்ற தலைப்பில் வழங்கிய இரண்டு ஊக்கமூட்டும் உரைகள், இந்த அத்தியாயமாக அமைந்துள்ளது.

52. இந்து மதத்தில் வலுவாக நிலைத்து இருங்கள்

மே 25, 1980 இதே தலைப்பில் இலங்கையின் நுகேகொட பகுதியில் வழங்கிய ஒரு ஊக்கமூட்டும் உரையில் இருந்து இந்த அத்தியாயம் உருவாக்கப்பட்டுள்ளது. தங்கள் இந்து மதத்தின் புகழை உலகிற்கு பெருமையுடன் அறிவித்து, ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்து, தாங்களும் வலுவாக இருந்து தங்கள் மதத்தையும் வலுப்படுத்த வேண்டும் என்று அவர் இந்துக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேற்கோள் 1: ஹட யோகம்

1971-72 மற்றும் ஆகஸ்ட் 1990 காலகட்டங்களில், *ஹட யோகம்* பற்றி குருதேவா வழங்கிய ஊக்கமூட்டும் உரைகளில் இருந்து ஆழமான கருத்துக்களைக் கொண்ட இந்த அத்தியாயம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கோள் 2: தசமாம்ஸம்

1989 இமாலயன் அகாடமி வெளியிட்ட இறைவனின் பணம் என்ற கட்டுரையில் இருந்து, இந்து மதத்தின் தசமாம்சம் பற்றிய இந்த விஷேசமான விளக்கம் தொகுக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

அந்த்யவசனம்

अन्त्यवचनम्



இறைவன் கோயில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக இருப்பதைப் போல, *சிவனோடு வாழ்தல், இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரம்* என்ற புத்தகமும், ஒரே சமயத்தில் அந்த இறைவன் கோயிலின் அடிப்படை கொள்கை மற்றும் முதல் சில பயிற்சி வகுப்புக்களுடன் ஐக்கியமாகிறது. இது முத்தொகுப்பில் இரண்டாவதாக இருந்தாலும் இறுதி புத்தகமாக நிறைவு பெற்று, 1,000 பக்கங்களைக் கொண்ட *சிவபெருமானுடன் ஒரு திருநடனம்* மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* புத்தகங்களின் பெருமையை பெறுகிறது. கடற்கரைக்கு அருகில் அமைந்து இருந்த ஒரு துணை அலுவலகத்தில், பாரல்லன் டிம்புக்டுவை பயன்படுத்தி, ஏர்போர்ட் நெட்வொர்க்கில் (வயர்லெஸ் ஈதர்நெட்) இயங்கும் நான்கு ஆப்பிள் மாகிந்டோஷ் பவர்புக் ஜி4 டைடனியம் கணினிகளில், ஏப்ரல் 2000 முதல் ஜூன் 2001 வரை, தினமும் மதியம் தவறாமல், தனது *மடவாசிகளுடன்* அமர்ந்த குருதேவா மூலம், இரண்டாவது பதிப்பிற்கான உரை ஒன்று திரட்டி, அறிவுறுத்தி, எழுதி தொகுக்கப்பட்டது. ஹவாய் தீவின் கார்டன் ஐலான்ட் என்கிற கவாய் தீவில் இருக்கும் இந்து மடாலயம், கவாய் ஆதீனத்தில் சைவ சித்தாந்த யோக சமூகத்தின் *ஆச்சார்யாக்கள்* மற்றும் *சுவாமிகள்* மூலம் இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டு படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. இந்த பதிப்பு ஆப்பிள் மாகிந்டோஷ் பவர்புக் ஜி4 மற்றும் பவர்மாக் ஜி5 கணினிகள் மற்றும் ஒரு Xசெர்வ் ஜி5 இணைந்த ஒரு கிகாபிட் ஈதர்நெட் நெட்வொர்க்கில் அடோப் இன்டிசைன் CS2 வில் டைப்செட் செய்யப்பட்டது. எழுத்து வடிவம் அடோப்ஸ் மினியன் பேமிலி ஆப் பான்ட்சில் (Adobe’s Minion family of fonts) அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் இதன் மீது போண்டோகிராபர் (Fontographer) பயன்படுத்தி: புத்தகத்தின் முக்கிய அங்கத்திற்கு 15-பாயிண்ட் லைன்ஸ்பேசிங் மீது 12.5-பாயிண்ட் மீடியம் மற்றும் சொற்களஞ்சியம் மற்றும் அட்டவணைக்கு 9.75 மீது 8.25 என்ற வீதத்தில், எழுத்துக்களின் ஒலி வேறுபாட்டு குறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. சமஸ்கிருத மற்றும் தமிழ் எழுத்துருக்களில் எக்கோலாஜிக்கல் லிங்குஸ்டிக்ஸ், ப்ராஹ்மி டைப் மற்றும் ஸ்ரீகிருஷ்ண பாட்டில் உருவாக்கிய எழுத்துருக்களும் அடங்கும். இந்தியாவின் டில்லியில் இருக்கும் ஸ்ரீ ஜெய்நேந்திர பிரேஸ்ஸில் ஜெய்நேந்திர பிரகாஷ் ஜெய்ன் மூலம் தயாரிப்பு மேற்பார்வையிடப்பட்டது. §

இந்த புத்தகத்திற்கு ஓவியம் வரையும் பொறுப்பு தென் இந்தியாவின் சென்னையை சேர்ந்த ஸ்ரீ எஸ். ராஜம் (87) என்பவருக்கு 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அவர் ஒரு நீர்வண்ணத்தில் மேலுறையின் ஓவியத்தை வரைந்துள்ளார். அதே ஓவியரால் உள் தலைப்புப் பக்கத்தில் இருக்கும் ஓவியமும் வரையப்பட்டது. ஒரு தேசிய பொக்கிஷமாக விளங்கும் இந்த தென்னிந்திய கலைஞர், ஒரு இசையமைப்பாளர் மற்றும் பாரம்பரிய சைவ ஓவியராகவும் இருக்கிறார், மற்றும் இவரது ஓவியங்கள் லண்டனில் இருக்கும் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் நிரந்தரமான காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. தலைப்புப் பக்கங்களில் இருக்கும் ஹைலைட் பாக்சில் பயன்படுத்தப்பட்டு இருக்கும் கோட்டு ஓவியங்களையும் எஸ். ராஜம் வரைந்துள்ளார். அவை அவர் வரைந்த *பெரியபுராணம்* மற்றும் சிவபெருமான் பற்றிய வேடிக்கையான சித்திரங்களில் இருந்து பெறப்பட்டவை. இந்தியாவின் பிரபல ஓவியரும் தேசிய பொக்கிஷமாகவும் விளங்கும், ஸ்ரீ இந்திரா சர்மா கவாயில் 1997 வருட இறுதியில் குறுகிய காலம் தங்கியிருந்த போது, பின்பக்க அட்டையில் எண்ணெய் சாயத்தில் வரைந்த குருதேவாவின் தெளிவான உருவப்படம் மற்றும் பக்கம் (ii) யில் இருக்கும் விநாயகர் ஓவியத்தை பரிசாக வழங்கினார். அவருக்கு பக்கம் (iv) இருக்கும், ஞானகுரு யோகசுவாமியின் உருவப்படத்தை வரையும் பொறுப்பும் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பாடத்தின் தொடக்கத்திலும் உள்ள அழகான தத்துவ வளம் நிறைந்த நீர்வண்ண ஓவியங்களை, 2000-2001 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட திரு. அ. மணிவேலு (64) வரைந்தார். மணிவேலு வரைந்த ஓவியங்களின் அடிப்படையில், நமது *சந்நியாசின்* சமூகத்தை சேர்ந்த ஒரு திறமையான ஆன்மா, தலைப்புப் பக்கங்களை அலங்கரிக்கும் பின்னணி வடிவங்களை வரைந்துள்ளார். §

சோனார் புக்எண்ட்ஸை (Sonar Bookends) பயன்படுத்தி, கலிபோர்னியா சாண்டா ரோசாவில் இருக்கும் திருமதி சாமுண்டி சபநாதன் விரிவான அட்டவணையை தயார் செய்தார். அத்தியாய தலைப்புக்களின் சமஸ்கிருத மொழிபெயர்ப்பை, நியூ மெக்ஸிகோவின் சான்டா பே நகரைச் சேர்ந்த Dr. டேவிட் பிராளி (பண்டித் வாமதேவ சாஸ்திரி) வழங்கினார். அந்த மொழிபெயர்ப்பை கனடாவின் ஒன்டாரியோ நகரைச் சேர்ந்த Dr. மகேஷ் மேத்தா மற்றும் நியூ யார்க் நகரைச் சேர்ந்த Dr. பி. ஜெயராமன் சரிபார்த்தனர். இந்த புத்தகம் கலிபோர்னியாவின் வால்நட் கிரீக் நகரைச் சேர்ந்த குலபதி ஈசுவரன் பரம் மூலம் சரிபார்க்கப்பட்டு, பல மொழிகள் அறிந்து அநாமதேயமாக இருக்கும் ஒரு புத்திசாலி அறிஞர் மூலம் தொகுக்கப்பட்டது. §

(இந்த புத்தகத்தின் ஆங்கில வடிவத்தில்) சமஸ்கிருத சொற்களின் ஒலிபெயர்ப்பு அல்லது உச்சரிப்பிற்கு, மோனியர் வில்லியம்சின் (1819-1899) சமஸ்கிருத அகராதிகளை பயன்படுத்தியுள்ளோம். தற்போது பயிற்சி வகுப்புகள் பயன்படுத்தும் உத்திகளில் இருந்து, அது அதிக இயல்பாக இருப்பதாக தோன்றியது. ச (ch) ஒலி மற்றும் ஷ (sh) ஒலிகள் இரண்டு முக்கிய வேறுபாடுகளாக இருந்தன. பயிற்சி வகுப்புகளில், சக்கரத்தில் இருக்கும் ச (ch) ஒலிக்கு “*c*” பயன்படுத்தப்படுகிறது. ஆனால் “ch” பயன்படுத்தினோம், ஏனென்றால் ஆங்கிலத்தில் “c” என்பது கவுண்ட் (*count)*, அல்லது சின்டெர்(*cinder)* என்பதை போன்று உச்சரிக்கப்படுகிறது, என்றும் சார்ம் (*charm)* என்ற சொல்லை போன்று உச்சரிக்கப்படுவது இல்லை. ஒலி வேறுபாட்டு குறிப்புக்களை

பயன்படுத்தாத போது, உச்சரிப்புகள் மாறாத அமைப்பை நாடினோம். அதனால் தான் நாங்கள் ஈ என்பதை குறிப்பிடுவதற்கு "*s*"எழுத்தின் கீழ் புள்ளியை பயன்படுத்தாமல், "sh" பயன்படுத்தினோம் மற்றும் "rishi" சொல்லில் இருப்பதை போன்று "r" எழுத்திற்கு பிறகு "i" பயன்படுத்தினோம். உச்சரிக்கும் அட்டவணையை ப. 895 யில் காணலாம். §

தற்போது நடைப்பெற்று வரும் ஒரு மாபெரும் முயற்சிக்கு மூன்று லோகங்களும் நன்றி செலுத்திக்கொண்டு இருக்கின்றன. நமது முத்தொகுப்பில் இருக்கும் மூன்று புத்தகங்களை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்க உலகெங்கிலும் இருந்து மொழிபெயர்ப்பாளர்கள் முன் வந்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவின் புனே நகரைச் சேர்ந்த திருமதி சுதா குல்கர்னி, *தி மாஸ்டர் கோர்ஸ்* பாடத் திட்டத்தை மராத்தி மொழியில் மொழிபெயர்த்து வருகிறார். மாஸ்கோவைச் சேர்ந்த திரு. செர்ஜி லோபநோவ் *டான்சிங்* புத்தகத்தை ரஷ்ய மொழியிலும், உக்ரைனில் இருக்கும் செர்னிகோவ் நகரைச் சேர்ந்த அலெக்சாண்டர் இவண்ட்சோவ் *மேர்ஜிங்க்* புத்தகைத்தையும் மொழிபெயர்த்துள்ளனர். கலிபோர்னியாவின் ரெட்டிங்க் நகரைச் சேர்ந்த Dr. கிறிஸ்டினா பெரிஸ்ஸோ என்பவர் முத்தொகுப்பை ஸ்பானிஷ் மொழியில் மொழிபெயர்த்து வருகிறார். *டான்சிங்* புத்தகத்தை மலேஷியாவைச் சேர்ந்த திரு. சுகுமாரன் அப்பாறு மற்றும் குலமாதா அகிலா தேவி கணேசன் மலாய் மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். *மேர்ஜிங்* புத்தகத்தை போந்தோர்ப் ஊராட்சியை சேர்ந்த லக்ஷ்மி ஹார்ட்மன் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்து வருகிறார். நமது முத்தொகுப்பை, கலிபோர்னியாவின் லா மேசா நகரில் இருக்கும் S.H.I.V.A. பிரெய்லி நிறுவனத்தை தொடங்கிய திருமதி தாமர சண்முகம் பிரெய்லியில் மொழிபெயர்த்துள்ளார். இந்த முத்தொகுப்பை தமிழில் மொழிபெயர்க்கும் பொறுப்பு இங்கிலாந்தின் நியூ மால்டன் பகுதியை சேர்ந்த திரு எஸ். குமாரகுலசிங்கம் மற்றும் மேரிலாண்ட் மாகாணத்தின் க்ரீன்பெல்ட் நகரத்தை சேர்ந்த திரு ஆர். வி. சுப்ரமணியனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு துணையாக மலேசிய தலைநகர் கோலாலம்பூரைச் சேர்ந்த குலபதி அப்பாசாமி குப்புசாமி டைப்செட்டிங் மற்றும் மொழிபெயர்ப்பை சார்பார்க்கும் பணியில் ஈடுபட்டு இருப்பார். நான் இந்த முடிவுரையை எழுதிக்கொண்டு இருக்கும் போது, மூன்று தமிழ் சான்றோர்கள் *மாஸ்டர் கோர்ஸ்* முத்தொகுப்பின் மையமாக இருக்கும் 365 நந்திநாத சூத்திரங்களை மொழிபெயர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். §

இத்துடன் வரலாற்று சிறப்புமிக்க இந்த *மாஸ்டர் கோர்ஸ்* நிறைவடைகிறது. *டான்சிங், லிவிங்* மற்றும் *மேர்ஜிங் வித் சிவா* புத்தகங்களில் இருக்கும் போதனைகள், பெரிய மற்றும் சிறிய வழியில் தங்கள் வாழ்க்கைகளை சீர் செய்து கொள்வதற்கும் கோயில்களை நிர்மாணம் செய்வதற்கும், கடந்த ஐம்பது வருடங்களாக உலகெங்கும் இருக்கும் மில்லியன் கணக்கான பக்தர்களை ஊக்குவித்து வந்துள்ளது. இது சைவ சுவாமி சங்கத்தின் அயராத உழைப்பின் மூலம் சாத்தியமாகி உள்ளது. *தி மாஸ்டர் கோர்ஸ்* தயாரிப்பில் தங்கள் பங்களிப்பை வழங்கிய ஒவ்வொருடனும், நாங்கள் பொருத்தமான நல்ல *கர்மவினைகளின்* பகுதியை பகிர்ந்துக்கொள்கிறோம். இந்த தெய்வீக உண்மைகள் வெளிப்பட்டவர்கள் வாழ்க்கைகளில், அந்த *கர்மவினைகள்*

எதிர்காலத்தில் நிகழ இருக்கின்றன. மனதில் நல்ல சாதனையின் கீர்த்தியை நினைத்து மகிழ்ச்சியுடன் இருங்கள். §





ஆசிரியரைப் பற்றி



தனது பாரம்பரியத்தை நேர்மையாகவும் முழுமையாகவும் வாழ்ந்து, தனது பாதையை சீர் செய்துக்கொண்டு, உலகிற்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கும் ஒரு ஆன்மா, இந்த பூமியில் எப்போதாவது தோன்றுகிறார். விழிப்புணர்வு மற்றும் ஞானத்திற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, இந்து தர்மத்தின் முன்னணி மதகுருமார்களில் ஒருவராக விளங்கிய சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி (1927-2001), அத்தகைய ஒரு ஆன்மாவாக விளங்கினார். ¶1947 ஆம் ஆண்டில், 20 வயது இளைஞனாக இருந்த அவர் இந்தியா மற்றும் இலங்கை பயணம் சென்றார். அவர் இரண்டு வருடம் கழித்து, 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆன்மீகவாதியாக கருதப்பட்ட இலங்கையின் ஞானகுரு யோகசுவாமியிடம் இருந்து *சந்நியாச* தீட்சையை பெற்றார். யோகசுவாமி ஒரு பிரபல *சித்த யோகி* மற்றும் சிவபக்தானாகவும் இருந்தார். குருதேவா என்று அன்புடன் அழைக்கப்பட்ட சுப்பிரமுனியசுவாமி, சுமார் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இந்துக்கள் மற்றும் இந்து மதத்தைப் பற்றி அறிய விரும்பிய மற்ற மதத்தவர்களுக்கும், இந்து மதத்தைப் பற்றி கற்றுத் தந்தார். உலகில் மிகவும் கண்டிப்பான குருமார்களில் ஒருவராக கருதப்பட்ட அவர், நந்திநாத கைலாச பரம்பரையின் 162 ஆவது வாரிசாகவும், ஹவாய் தீவுகளில் கார்டன் ஐலான்ட் என்று அழைக்கப்படும் கவாய் தீவில் 458 ஏக்கர் நிலப்பரப்பில் மடம் மற்றும் கோயில் ஒன்றாக அமைந்துள்ள கவாய் ஆதீனத்தை ஸ்தாபனம் செய்த *சத்குருவாகவும்* விளங்கினார். ஒரு அணைந்த எரிமலை அடிவாரத்திற்கு அருகில் ஒரு நதிக்கரையில் அமைந்து இருக்கும் இந்த பாலிநேசிய *ஆசிரமத்தில்* இருந்து அவரது மடவாசிகள், அவருக்கு பின் பதவியேற்ற சத்குரு போதிநாத வேலன்சுவாமியின் தலைமையில், ஆழ்ந்த சிந்தனை மற்றும் மகிழ்ச்சியான வாழ்முறையை பின்பற்றிக்கொண்டும், வெள்ளை கருங்கல்லில் ஒரு ஆபரணத்தைப் போன்று பிரகாசிக்கும் சிவன் கோயிலை நிர்மாணம் செய்துக்கொண்டும், அதிகாலையில் ஒன்றாக தியானம் செய்துக்கொண்டும், பிறகு சைவ சித்தாந்த தேவாலயம், இமாலயன் அகாடமி மற்றும் இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் மூலமாக *தர்மத்தை* ஊக்குவிக்க ஒன்றாக செயல்பட்டுக்கொண்டும், தாங்கள் விரும்பிய கனவை தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். ¶அவருடைய தேவாலயம் ஐந்து கண்டங்களில் தனது உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பணிகளை பேணி வளர்த்து, நேரடியான முறையிலும் புத்தகம் மற்றும் பயிற்சி வகுப்பு மூலமாகவும் இந்து சமூகத்தின் அனைத்து உட்பிரிவுகளுக்கும் சேவை செய்கிறது. கோயில்கள், *சத்குருமார்கள்* மற்றும் சாத்திரம் என்று மூன்று தூண்கள் மூலம் தெரியப்படுத்தி இருப்பதைப் போல, சைவ இந்து சமயத்தை பாதுகாத்து, பராமரித்து மேம்படுத்துவதே அதன் நோக்கம் ஆகும். இந்த குழு பல்வேறு நாடுகளில் கட்டுப்பாட்டுடன் வாழும் தீட்சை பெற்ற குடும்பத்தினர்கள், மடவாசிகள் மற்றும் மாணவர்களை

அங்கத்தினர்களாக கொண்டுள்ளது. அவர்களுக்கு யோகாப்பியாசம் மற்றும் தனிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும் பாதையான *சாதனா மார்கத்தை* பின்பற்ற கற்றுத்தரப்படுகிறது. 2.5 மில்லியன் இலங்கை இந்துக்களின் பாரம்பரிய குருவாக அங்கீகரிக்கப்பட்ட குருதேவா தனது தேவாலயத்தை யாழ்பாணத்தை தலைமையகமாகக் கொண்ட ஒரு தமிழ் நிறுவனம் என்று அறிவித்தார். அது இந்த நூற்றாண்டில் வளர்ந்து வரும் இந்து வம்சாவளியினரின் தேவைகளை பூர்த்தி செய்ய, அளவெட்டியின் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்தில் இருந்து இடம்பெயர்ந்தது. அது உலகெங்கும் இருக்கும் சுமார் 40 கோயில்களை அன்போடு நிர்வகிக்கிறது. ¶மக்களின் செல்வாக்கையும் பல விருதுகளையும் பெற்ற இந்துயிசம் டுடே என்ற காலாண்டு பத்திரிகையை, குருதேவா 1979 ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். அவரது மடவாசி சமூகம் செய்யும் இந்த சமூக சேவை, உலகெங்கும் *தர்ம நெறியை* பின்பற்றுபவர்களை ஊக்குவித்து தேவையான தகவலை வழங்கி, இந்து பாரம்பரியங்கள் அனைத்தையும் வலுப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இந்து மீமெய்யியல், ஆன்மீகம், கலாச்சாரம், தத்துவம் மற்றும் யோகம் பற்றி குருதேவாவின் பிரத்யேக மற்றும் யதார்த்தமான கருத்துக்களை, அவர் எழுதிய எண்ணற்ற புத்தகங்கள் வெளிப்படுத்துகின்றன. அவர் எழுதிய *சைவைட் இந்து ரிலிஜன்* பல பள்ளிகளில் பாடமாக கற்பிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மனதில் உபதேசங்களை பராமரித்து வருகிறது. இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் என்ற சமூக சேவை அறக்கட்டளை, 1995 ஆம் ஆண்டு குருதேவா மூலம் தொடங்கப்பட்டது. அது உலகெங்கும் இருக்கும் இந்து அமைப்புக்களுக்கு நிரந்தர வருமானங்களை அமைத்துக் கொடுத்து, அவற்றை பராமரிக்க முயற்சி செய்கிறது. ¶அவர் 1986 ஆம் ஆண்டு மொரீஷியஸ் தீவில் ஒரு கிளை மடத்தை அமைத்தார். அதே வருடம் புது டில்லியில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில், அவர் இந்து சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் வண்ணம், அவருக்கு நவீன காலத்து ஐந்து ஜகதாச்சார்யாக்களில் ஒருவராக பட்டம் சூட்டப்பட்டது. அதன் பிறகு 1995 ஆம் ஆண்டு டில்லியில் நடந்த மாநாட்டில், அவர் பிரசுரித்த சிறந்த வெளியீடுகளுக்காக, அவருக்கு தர்மசக்ரா பட்டம் வழங்கப்பட்டது. ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களுக்கான சர்வதேச மன்றம், தான் நடத்திய விசேஷமான மாநாடுகளில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக சுப்பிரமுனியசுவாமியை தேர்ந்தெடுத்தது. செப்டம்பர் 1993, சிகாகோவில் நடைப்பெற்ற வரலாற்று சிறப்புமிக்க உலக சமயங்களின் நூற்றாண்டு மாநாட்டில், தலைவர்கள் குழுவில் இந்து சமயத்தை பிரதிநிதித்துவம் செய்த மூன்று தலைவர்களில் ஒருவராக சுப்பிரமுனியசுவாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். 25 ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்ட அந்த தனிக்குழு உலக மதங்களின் தேவைகளுக்கு ஆதராவாக குரல் கொடுத்தது. 1996 ஆம் ஆண்டு குருதேவா இந்துயிசம் டுடே நாளிதழை ஒரு பத்திரிகையாக மாற்றினார். இது பல்வேறு நாடுகளின் பத்திரிகை கடைகளில் இடம்பிடிக்க பேருதவியாக விளங்கியது. 1996 முதல் 2001 வரை, குருதேவா விஷன் கவாய் 2020 என்ற குழுவில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தார். மக்களுக்கு தூண்டுதலாக விளங்கிய அந்த குழுவில் மேயர், நகராட்சி உறுப்பினர், வணிகத்துறை மற்றும் கல்வித்துறை தலைவர்கள் அங்கம் வகித்தனர். அந்த குழு ஆன்மீக கொள்கைகளின்

அடிப்படையில், கவாய் தீவின் எதிர்காலத்தை வடிவமைக்கும் நோக்குடன் சந்தித்து வந்தது. நியூ யார்க் நகரில் ஆகஸ்ட் 25, 2000 பெருமைக்குரிய யு தாண்ட் அமைதிப் பரிசை குருதேவா பெற்றார். அந்த பரிசை அதற்கு முன்பு தலாய் லாமா, நெல்சன் மண்டேலா, மிகைல் கோர்பச்சேவ், போப் ஜான் பால் மற்றும் அன்னை தெரசா பெற்று இருந்தனர். அவர் ஐ.நா. மில்லினியம் அமைதி மாநாட்டில் 1,200 ஆன்மீகத் தலைவர்கள் முன்பாக உரையாற்றினார். ¶அக்டோபர் 9, 2001 தனது குடலில் புற்றுநோய் முற்றிய நிலையில் இருக்கிறது என்பதை அறிந்ததும், குருதேவா இந்திய யோகப்பயிற்சியை பின்பற்ற முடிவு செய்தார். பிரயோபவேச என்று சமஸ்கிருத சாத்திரத்தில் அழைக்கப்படும் அந்த பயிற்சி, ஒருவர் தனக்கு வியாதி முற்றிய நிலையை அடைந்ததுள்ளது என்பதை அறிந்ததும், அவர் உணவு எதையும் உட்கொள்ளாமல் நீரை மட்டுமே குடிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. அவர் உபவாசம் இருந்த முதல் சில வாரங்களில், தன்னிடம் 37 வருடங்கள் சீடனாக இருந்த, சத்குரு போதிநாத வேலன்சுவாமியிடம் (59) தனது பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை தங்கு தடையின்றி ஒப்படைத்தார். அவரை அவரது முப்பத்தி இரண்டு மடவாசிகள் சூழ்ந்து இருக்க நவம்பர் 12, 2001 இரவு 11:54 மணி அளவில், சுயமாக மேற்கொண்ட உபவாசத்தின் 32 ஆவது நாளில் தனது உயிரை அமைதியாக துறந்தார். ¶குருதேவாவைப் பற்றி மிகவும் விசேஷமானது என்ன என்று அன்பர்களிடம் கேட்டால், மற்றவர்களை இறைவனை நோக்கி வரவழைக்க ஊக்கத்தை தந்து, அவர்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்து, இறைவனை நோக்கி அவர்கள் செல்லும் பாதையில் ஒரு ஒளி விளக்காக விளங்கி, தன்னை நாடி வந்தவர்களுக்கு தாயும் தந்தையுமாக விளங்கும் அவரது வியக்கத்தக்க ஆற்றலே விசேஷமானது என்பார்கள்.

லௌகீக வாழ்க்கையில் மனநிறைவு அடைந்த சில அபூர்வமான மனிதர்கள், இந்து சந்நியாசிகளாக சிவபெருமானுடன் நடனமாட, வாழ மற்றும் ஐக்கியமாக விரும்புகிறார்கள்.



இந்த அபூர்வமான ஆன்மாக்கள் பாரம்பரிய இந்து சந்நியாச பாதையை பின்பற்றி, ஏழ்மை, பணிவு, கீழ்ப்படிதல், தூய்மை மற்றும் நம்பிக்கையுடன் இருக்க உறுதிமொழி எடுக்கிறார்கள். அவர்கள் ஆத்மஞானத்தை நோக்கி அழைத்து செல்லும் *சரியை, கிரியை, யோகம்* மற்றும் *ஞானத்தின்* கட்டுப்பாடுகளை பின்பற்றுகிறார்கள். இறைவனை அறிவது மட்டுமே அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளாக விளங்குகிறது, மற்றும் அந்த சக்தி அவர்களை அதிக ஆற்றலுடன் இயக்கி செல்கிறது. அவர்கள் வழிபடுவதற்கு, தியானம்

மற்றும் சேவை செய்வதற்கு மற்றும் *வேதங்கள்* மற்றும் *சைவ ஆகமங்களின்* உண்மைகளை உணர்வதற்கு, தங்களை போன்று மடத்தில் வாசம் செய்யும் மற்ற மடவாசிகளை போல, லௌகீக வாழ்க்கையில் இருந்து விலகி வாழ்கிறார்கள்.

சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு பிறகு, சத்குரு போதிநாத வேலன்சுவாமியின் வழிகாட்டலுடன், அமெரிக்காவின் ஹவாயில் கவாய் அதீனத்தை தலைமையகமாகக் கொண்டு, அழகான கார்டன் ஐலாண்டான கவாயில் அமைந்திருக்கும், சைவ சித்தாந்த யோக சமூகம் உலகில் பாரம்பரிய முறைப்படி செயல்படும் சைவ இந்து அத்வைத சமூகங்களில் முன்னோடியாக திகழ்ந்து, உலகில் இருக்கும் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் சாதகரை ஏற்றுக்கொள்கிறது. இது முதலில் இந்தியாவில் தோன்றி, சமீபத்திய நூற்றாண்டுகளில் இலங்கையை தலைமையகமாக கொண்டு, தற்போது இயங்கிக்கொண்டு இருக்கும் பழங்கால நந்திநாத சம்பிரதாயத்தை சார்ந்த, ஒரு *அத்வைத* சைவ சித்தாந்த சமூகம் ஆகும். இந்த பரம்பரையில் தங்களுக்கு வலுவான ஆன்மீகத் தூண்டுதல் இருப்பதை அறிந்து, துறவற பாதையை பற்றிய ஆழமாக சிந்தித்துக்கொண்டு இருக்கும் இளைஞர்கள், தன்னை பற்றிய சொந்த தகவல், ஆன்மீக எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் மற்றும் அனுபவங்களை பற்றிய சத்குரு போதிநாதாவிற்கு கடிதம் எழுதலாம். பத்து அல்லது பன்னிரண்டு வருட பயிற்சிக்கு பிறகு தகுதி பெறுவோருக்கு, *சந்நியாசத்தின்* புனிதமான ஆணைகள் வழங்கப்படக்கூடும். எழுதவேண்டிய முகவரி:

> சத்குரு போதிநாத வேலன்சுவாமி
> குரு மகாசன்னிதானம், கவாய் ஆதீனம்
> 107 கஹோலலேலே ரோடு, காப்பா, ஹவாய் 96746-9304 USA
> மின்னஞ்சல்: bodhi@hindu.org; இணையதள முகவரி: www.gurudeva.org
>
> *அன்பின் உருவமாக இருக்கும் சந்நியாசிக்கு வணக்கம்! அன்பை தவிர்த்து வேறேதும் சக்தி இருக்கிறதா? ஆனந்தம் நிரம்பிய உலகம் முழுவதிலும் உங்களை வியாபித்துக் கொள்ளுங்கள். வலிகளை தரும் மாயை நிறைவுபெற்று மீண்டும் திரும்பாமல் இருக்கட்டும். இரவும் பகலும் தொடர்ந்து இறைவனின் துதி பாடுங்கள். கல்லும் உருகுமாறு பாடல்கள் உள்ளத்தில் இருந்து வெளிவரட்டும். இரவு அல்லது பகல் அல்லாத இடத்தில் கவனத்தை பெறுங்கள். எங்கும் சிவபெருமானை கண்டு பேரின்பத்தில் அமைதி கொள்ளுங்கள். லௌகீக இன்பத்தில் பற்றின்றி வாழுங்கள். இங்கே எப்போதும் போல நிறைவாக நிலைத்து இருங்கள்.*
>
> —சத்குரு சிவயோகசுவாமி

இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல்



பெரும்பாலும் இந்த பூமியில் இருக்கும் ஒவ்வொரு நாகரிகத்திலும், இந்து சிந்தனை மற்றும் கலாச்சாரம் தனது தாக்கத்தை ஏற்படுத்தி, உயர்வான தத்துவம் மற்றும் யதார்த்தமான, நடைமுறைகேற்ற ஞானத்தை உள்ளடக்கிய ஒரு நுணுக்கமான ஓவியத்திரையை உருவாக்கியுள்ளது. இந்து சமயம் யாருடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை? இந்தியாவில் வளர்க்கப்பட்ட சிலர், பழங்கால *மந்திரங்கள்* எதிரொலிக்கும் அமைதியான கோயில்கள் மற்றும் பாசம் நிரம்பிய பெரிய குடும்பங்களின் சந்தோஷமான நினைவுகளை நினைத்து மகிழ்கிறார்கள். மற்றவர்கள் இந்து *யோக* பயிற்சிகளில் அமைதியை நாடுகிறார்கள். பலர் தங்களது சொந்த உட்புற கண்டுபிடிப்புகள் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் *கர்மவினை, தர்மம்* மற்றும் மறுபிறவியின் கோட்பாடுகளில் அமைதியை தேடிக்கொள்கிறார்கள். நீங்கள் இந்து தர்மத்தின் சிந்தனை மற்றும் கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு இருந்தால், உலகெங்கும் பல நாடுகளில் பரவியிருக்கும் சனாதன தர்மத்திற்கு நன்றிக்கடனை செலுத்தி, எதிர்கால சந்ததியர்களுக்கு அந்த தர்மத்தின் வளமான பாரம்பரியத்தை பாதுகாக்க உதவி செய்து, உங்கள் வாழ்வை மேலும் மேம்படுத்தலாம். ¶இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல் (HHE) அத்தகைய ஒரு வாய்ப்பை வழங்குகிறது. உலகெங்கும் நடைபெறும் இந்து சமய திட்டப்பணிகள் மற்றும் அதன் சங்கங்களுக்கு நிரந்தரமாக நன்கொடைகளை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட HHE, அமெரிக்க அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொதுமக்கள் நலன் காக்கும் தொண்டு நிறுவனம் ஆகும். இது வழங்கும் நன்கொடைகள் அனாதைகள், குழந்தைகள் காப்பகங்கள், *ஆசிரமங்கள்* மற்றும் கோயில்கள் பயன் அடைகின்றன. அவை பூசாரிகளுக்கு ஆதரவு வழங்கி புத்தகங்களை வெளியிடுகின்றன; மற்றும் அவை பல வருடங்களுக்கு, பல நூற்றாண்டுகளுக்கு தொடர்ந்து உதவி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. HHE யில் பணிபுரியும் ஊழியர்கள், அங்கீகரிக்கப்பட்ட நன்கொடைகள் சரியான நோக்கத்திற்கு முழுமையாக பயன்படுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். நன்கொடை வழங்கப்படுவதற்கு முன்பு, HHE யில் இருந்து பெறப்பட்ட வருவாய்க்கு, ஒரு விரிவான ஆண்டு அறிக்கை மற்றும் அடுத்த ஆண்டு நிதி எவ்வாறு செலவிடப்படும் என்று ஒரு அட்டவணையை ஒவ்வொரு பயனாளியும் வழங்கவேண்டும். நீங்கள் வழங்கும் பரிசுகள் அதன் குறிக்கோளை சென்று அடைவதை, நாங்கள் ஒரு *சாதனாவாக* மேற்கொள்கிறோம். பாரம்பரிய நன்கொடை நிறுவலை உங்களது உயிலில், வருடக்கடைசியில் வழங்கும் நன்கொடை மற்றும் உங்களது மாதாந்திர வரவு செலவு திட்டத்தில் தயவு செய்து சேர்த்திடுங்கள். அநாதை ஆசிரமங்களுக்கு சில டாலர்களை வழங்கும் ஆவல்

இருந்தால் அல்லது பல மில்லியன் டாலர்களை உயிலில் எழுத விரும்பினால், எங்களுக்கு கடிதம் எழுதவும் அல்லது அழைப்பு விடுக்கவும் அல்லது இணையதளம் மூலம் தொடர்பு கொள்ளவும். தற்போது வாழ்ந்துக்கொண்டு இருக்கும் மற்றும் வரவிருக்கும் சந்ததியர்களுக்கு, ஒரு மிகப்பெரிய பாரம்பரியத்தின் பொக்கிஷங்களை பாதுகாக்க உதவுவதன் மூலம், உங்கள் வாழ்கையை மேம்படுத்திக் கொள்ளும் முறையை தெரிந்துக்கொள்ளுங்கள்.



இந்து பாரம்பரிய நன்கொடை நிறுவல், கவாயின் இந்து மடாலயம்,
107 கஹோலலேலே ரோடு, காபா, ஹவாய், 96746-9304, USA.
தொலைபேசி: (800) 890-1008; அமெரிக்காவிற்கு வெளியே: (808) 822-3012,
நீட்டிப்பு எண் (ext.) 224; தொலைநகலி: (808) 822-3152;
மின்னஞ்சல்: hhe@hindu.org இணையதளம்: http://www.hheonline.org/



மினி மேளா புத்தகக்கடை

எங்களது புத்தகங்களைப் பற்றி அறிய

www.minimela.com



மேர்ஜிங் வித் சிவா (சிவபெருமானுடன் ஐக்கியமாதல்)

இந்து மதத்தின் தற்கால மீமெய்யியல்
தி மாஸ்டர் கோர்ஸ் டிரைலாஜியில் மூன்றாவது புத்தகம்
எழுதியவர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

இது தீவிரமாக இருக்கும் ஒரு சாதகனுக்குரிய புத்தகம் ஆகும். இது உலக மொழிகளில், தியானம் மற்றும் ஆத்ம ஞானம் பற்றி வாசகரை மிகவும் சிறப்பான முறையில் ஊக்குவிக்கும் விசேஷமான புத்தகமாக வரலாற்றில் இடம் பிடிக்க வாய்ப்புள்ளது. அதே சமயத்தில் இது பயன்படுத்துவதற்கு மற்றும் பின்பற்றுவதற்கு வசதியாக, யதார்த்தமாக மற்றும் கல்வி சாராததாக இருக்கிறது! தினசரி படிப்பதற்கு என்று 365 பாடங்களைக் கொண்ட *மேர்ஜிங் வித் சிவா* புத்தகம், உங்களது சொந்த இருப்பின் மையத்தைப் பற்றி விளக்குகிறது. அது இறைவன், பதினான்கு *சக்கரங்கள்* பற்றிய ஆன்மீக உலகம், மனித ஒளி உடல், *கர்மவினை*, விசைப் பகுதிகள், சிந்தனை மற்றும் மனநிலைகள், இரண்டு பாதைகள், *சமாதி* மற்றும் மேலும் பல தகவல்களை வழங்குகிறது. அது ஐம்பது தென்னிந்திய மூல ஓவியங்களுடன் விளக்குகிறது. இரண்டாவது பதிப்பு, 2002, 1,000 பக்கங்கள், 7" x 10", தடித்த அட்டை (ISBN 0-945497-99-7), US $59.95.



டான்சிங் வித் சிவா (சிவபெருமானுடன் ஒரு திருநடனம்)

இந்து சமயத்தின் தற்கால வினா-விடை புத்தகம்,
தி மாஸ்டர் கோர்ஸ் டிரைலாஜியில் முதல் புத்தகம்
எழுதியவர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

1,000 பக்கங்களை கொண்ட இந்த விசேஷமான மூலப் புத்தகம், ஒவ்வொரு விஷயத்தையும் அலசி, ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளித்து, இறைவன் மற்றும் பரமாத்துமா பற்றி ஒவ்வொரு ஆன்மாவிற்கு இருக்கும் அறிவுப்பசியை தணிக்கிறது. தெளிவாக எழுதப்பட்டு மற்றும் பகட்டாக விளக்கப்பட்ட இந்த புத்தகத்தில் *வேதங்கள், ஆகமங்கள்* மற்றும் புனித நூல்களில் இருந்து 600 மந்திரங்கள், 165 தென்னிந்திய ஓவியங்கள், 40 அசல் வரைகலைகள், இந்திய

வரலாறு பற்றிய ஒரு 25-பக்க காலவரிசை, மற்றும் 100 க்கும் அதிகமான பக்கங்களில் ஆங்கில, சம்ஸ்கிருத மற்றும் தமிழ் அகராதி ஆகியவை நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளன. நல்ல தரம் மற்றும் பொருத்தமான விலையுடன், இது ஒரு ஆன்மீக பொக்கிஷமாக விளங்குகிறது. “இயங்கிக்கொண்டு இருக்கும் இந்து சமயத்தின் ஆன்மீக பாரம்பரியத்திற்கு, மிகவும் விரிவான மற்றும் நுணுக்கமான அறிமுகம்...இதயம் மற்றும் மனதிற்கு ஒரு பெரிய விருந்தாக இருக்கிறது (ஜார்ஜ் ஃபியூயர்ஸ்டீன்).” ஆறாவது பதிப்பு, 2001, 7" x 10", தடித்த அட்டை (ISBN 0-945497-96-2), US $59.95.



வீவர்ஸ் விஸ்டம் (திருக்குறளின் ஆங்கில மொழிப்பெயர்ப்பு)

ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கு துணைபுரியும் பழங்கால கோட்பாடுகள்
சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

2,200 வருடங்களுக்கு முன்பாக திருவள்ளுவர் எழுதிய *திருக்குறளின்* நேர்த்தியான அமெரிக்க ஆங்கில வடிவம். அதன் கருத்துக்கள் வியாபாரம், குடும்பம், உறவுகள், பணம், எதிரிகள், தனிப்பட்ட அச்சங்கள், சூதாட்டம், அரசியல், உணவுமுறை மற்றும் உடல்நலம் என்று இன்றைய உலகிற்கு பொருத்தமானதாக இருக்கிறது. இது உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. சுருக்கமாக நகைச்சுவை உணர்வுடன் இருக்கும் இதன் குறட்பாக்கள், மனித இயல்பு பற்றி வெளிப்படையான ஆய்வை வழங்குகிறது. இது தென் இந்திய நீதிமன்றங்களில் உறுதிமொழி எடுக்க பயன்படுத்தப்படுகிறது. இதை தாராளமாக மேற்கோள் காட்டுவதற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் மனதை பழக்கப்படுத்தி அவர்களை *தர்ம* நெறியில் அழைத்து செல்வதற்கு, குறட்பாக்களை வாசித்துக் காட்டுங்கள். 100 விளக்கப்படங்கள், 1,080 குறட்பாக்கள். முதல் பதிப்பு, 1999, 408 பக்கங்கள், 5½" x 8½", மென்மையான அட்டை (ISBN 0-945497-76-9), US $19.95. தடித்த அட்டை பதிப்பு, US $29.85. ஆங்கில மற்றும் நவீன தமிழ்

மொழிபெயர்ப்புக்களுடன் தடித்த அட்டையில் முழு வண்ணப்பதிப்பு, 600 பக்கங்கள் (ISBN 81-7017-390-6), US $49.95.



ஒரு இந்துவாக மாறுவது எப்படி (How to Become a Better Hindu)

சாதகர்கள் மற்றும் இந்துவாக பிறந்தவர்களுக்கான கையேடு
எழுதியவர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

இந்து மதத்தில் பிறக்காத பல்லாயிரக்கணக்கான சாதகர்கள், தங்களுக்கு *யோகா* கற்பிக்கும் ஆசிரியர் அல்லது ஒரு *சுவாமி* மூலம், ஒரு மகாதேவர் அல்லது அம்மனின் பெயரை தனது பெயராக மாற்றிக்கொண்டு, முழுமையாக இந்து சமயத்தில் நுழைய ஆசைப்படுகின்றனர். இந்து சமயத்தின் முற்போக்கான கோட்பாடு காரணமாக, அந்த தனிநபர் “தானே மதமாற்றத்தை" செய்துக்கொள்ளலாம். மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய நாடுகளில் எவ்வாறு பலரது வாழ்க்கையை, ஆறு நிலைகளை கொண்ட ஒழுங்குமுறையான மதமாற்றம் மேம்படுத்தியுள்ளது என்பதை *ஒரு இந்துவாக மாறுவது எப்படி* என்ற புத்தகம் விளக்குகிறது. இந்த புத்தகத்தில் மேற்கத்திய கடவுள் நம்பிக்கையில் இருந்து இந்து சமயத்திற்கு பயணம் செய்த பாதையை பற்றி அமெரிக்கர்கள், கனடா நாட்டை சேர்ந்தவர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் தங்களது அனுபவத்தை பகிர்கிறார்கள். இந்த புத்தகம் இந்து சமயத்தை சாராதவர்கள், இந்துவாக மாறுவது பற்றிய சர்ச்சையை எழுப்பி, அதற்கு நல்ல முறையில் தீர்வும் காண்கிறது. “இந்து சமயத்தில் சேர விரும்புவோருக்கும், இந்தியாவிற்கு வெளியே வாழும் இளைய சமுதாயத்தினருக்கும், விரிவாக விளக்கும் இந்த புத்தகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்” (பூரி சங்கராச்சாரியா). முதல் பதிப்பு, 2000, 496 பக்கங்கள், 8½" x 5½", மென்மையான அட்டை (ISBN 0-945497-82-2), US $27.95.

சைவ இந்து சமயம் (Śaivite Hindu Religion)



குழந்தைகள் பாடப்புத்தகங்கள் ஒன்று, இரண்டு மற்றும் மூன்று
எழுதியவர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

இந்து பெற்றோர்களுக்கு தேவைப்படுவது என்ன? அவர்களின் குழந்தைகளுக்கு வன்முறை சாராமல் நல்ல புத்தியை வழங்கும் பாரம்பரிய நூல்கள் தேவைப்படுகின்றன. யதார்த்தமாக விளக்கப்படங்களுடன் இருக்கும் இந்த ஏழு புத்தகங்கள் தத்துவம், கலாச்சாரம் மற்றும் குடும்ப வாழ்க்கை பற்றி அறிவுறுத்துகின்றன. உலகில் மிகவும் பழமையான *வேதங்களின்* அடிப்படையில், இந்த பாடப்புத்தகங்களை சிவாய சுப்பிரமுனியசுவாமி குழந்தைகளுக்காக அன்புடன் வடிவமைத்துள்ளார். கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஒரு சிறந்த வளமாக விளங்கும் இந்த புத்தகம், ஒரு எளிய நடையுடன் மூன்று மொழிகளில் ஒவ்வொரு நம்பிக்கை மற்றும் பழக்கத்தின் "காரணத்தை" குறிப்பிடுகிறது. அனைத்து சமய உட்பிரிவுகளையும் சேர்ந்த முக்கிய தலைவர்கள் உற்சாகமான விமர்சனங்களை வழங்கி இருக்கிறார்கள். “திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட இந்த பாடப்புத்தகம் பாராட்டும் படியாக விளங்கி எல்லோருக்கும் பயன் தருவதாக இருக்கிறது. இது குறிப்பாக சரியான பாதையில் வழி நடத்தப்படும் பாக்கியசாலி குழந்தைகளுக்கு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது (ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மகாசுவாமிகள், பெங்களூர், இந்தியா).” முதல் புத்தகம் (5- முதல் 7-வயது வரை) இந்தி, தமிழ் மற்றும் ஆங்கில பதிப்பு, மென்மையான அட்டை, 8½" x 11, 170 பக்கங்கள், US $9.95. இரண்டாவது புத்தகம் (6- முதல் 8-வயது வரை), ஆங்கிலம் -தமிழ்-மலாய், 196 பக்கங்கள், US $9.95. மூன்றாவது புத்தகம் (7- முதல் 9-வயது வரை), ஆங்கிலம்-தமிழ்-மலாய்-பிரெஞ்சு, 96 பக்கங்கள், US $4.95.

இந்துயிசம் டுடே (Hinduism Today)



சர்வதேச பத்திரிகை

சனாதன தர்மம் பற்றி சத்குரு போதிநாத வேலன்சுவாமி மற்றும் சைவ சித்தாந்த யோக சமூகத்தின் *சுவாமிகளால்* வெளியிடப்பட்ட, முன்னோடி சர்வதேச பத்திரிக்கையுடன் ஆன்மீக அனுபவத்தை பெற்று பயன்பெறுங்கள். விரைவுச் செய்திகள், பழங்கால ஞானம், புதிய போக்குகள், சிறந்த புகைப்படங்கள், குடும்பத்திற்கு தேவையான வளங்கள் மற்றும் நகைச்சுவை உணர்வுடன் இருக்கும் ஒவ்வொரு இதழையும் நீங்கள் ஒரு பொக்கிஷமாக வைத்திருக்க விரும்புவீர்கள்! “ஊடகத்தை நேர்மறையாக பயன்படுத்த முடியும் என்பதற்கு இந்துயிசம் டுடே ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கி, அறியாமை நிறைந்த உலகில் ஒரு பிரகாசமான ஒளிகதிராக இருக்கிறது” (ஆன் ஷானன், போர்ட்லேண்ட்). அறிமுக சலுகை (அமெரிக்கா மட்டும்): ஒரு வருட சந்தா, கண்ணை கவரும் 4 இதழ்கள், விலை US$35! ஆமாம், இந்த புத்தக ஆசிரியர் இந்த சர்வதேச பத்திரிகையை தொடங்கி, 20 வருடங்களுக்கு அதன் வழிகாட்டியாக இருந்தார். ISSN 0896-0801; UPC: 0-74470-12134-3. இணையதளம்: www.hinduismtoday.com

லவிங் கணேஷா (Loving Gaṇeśa)



இந்து சமயத்தின் இனிமையான யானை முகத்தவன்
ஆசிரியர்: சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

அன்புள்ள விநாயகரை பற்றிய எந்த புத்தகமும், இதைப்போன்ற ஆன்மீக உணர்வை வழங்கவில்லை. மனதை ஊக்குவிக்கும் இந்த தலைசிறந்த புத்தகத்தில், உங்களுகளாக தர்மத்தின் அதிபதி உயிருடன் கண்முன்னே தோன்றுகிறார். இதனால் இந்த இரக்க குணமுள்ள கடவுளை அணுகுவது எளிதாகவும் ஊக்கம் அளிப்பதாகவும் இருக்கிறது. விநாயகரின் சக்திகள், வேடிக்கைகள், மந்திரங்கள், இயற்கை, அறிவியல், வடிவங்கள், புனிதமான சின்னங்கள், பால் குடிக்கும் அதிசயம் மற்றும் மேலும் பல விவரங்களைப் பற்றி தெரிந்துக்கொள்ளுங்கள். “அன்புள்ள விநாயகரின் புத்தகத்தை ஒவ்வொரு நூலகம் மற்றும் இந்து வீட்டிலும் வைத்திருக்க வேண்டும்”(ஸ்ரீ ஓம் பிரகாஷ் ஷர்மா, UK). இரண்டாம் பாதிப்பு, 1999, 576 பக்கங்கள், 5½" x 8½", மென் அட்டை (ISBN 0-945497-77-6), US$29.85.

லெமூரியன் ஸ்க்ரோல்ஸ் (Lemurian Scrolls)



மனிதநேயத்தின் மூலங்களை வெளிப்படுத்தும் தேவதூத தீர்க்கதரிசனங்கள்
எழுதியவர்: சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி

ஆன்மாவின் விரிவாக்கத்தை ஊக்குவிக்க, பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, ப்ளியடிஸ் மற்றும் மற்ற கிரகங்களில் இருந்து, பூமி நோக்கி மனிதநேயம் மேற்கொண்ட பயணம் பற்றிய இந்த தீர்க்கதரிசன வெளிப்பாட்டின் மூலம், உங்கள் ஆன்மீக ஈடுபாட்டை உற்சாகப்படுத்துங்கள். ஒளியால் உருவான ஆன்மீக உடல்களில் இருந்து மனித உருவாக பரிணாம வளர்ச்சி அடைவதில் இருந்த சவால்கள் மற்றும் அனுபவங்கள், மற்றும் பழங்கால லெமூரியாவில் பின்பற்றப்பட மிகச்சிறந்த பழக்கங்கள் மற்றும் அவர்கள் பெற்ற விழிப்புணர்வுகள் பற்றி கற்றுக்கொள்ளுங்கள். இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டு, *ஆகாச* பதிவுகளில் இருந்து சிவாய சுப்பிரமுனியசுவாமி மூலம் படிக்கப்பட்ட, இந்த தேவதூத தீர்க்கதரிசனங்களால், உங்களது தெய்வீக மூலம், குறிக்கோள் மற்றும் விதி பற்றிய ஒரு உணர்வு

உங்களை ஆட்கொண்டு, உங்களது ஆன்மீக வேட்கைக்கு தேவையான ஒரு தீவிரமான மறு அர்ப்பணிப்பிற்கு ஊக்கத்தை வழங்கும். இது ஒரு விசேஷமான மீமெய்யியல் புத்தகமாக விளங்கி, “நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் எங்கே சென்று கொண்டு இருக்கின்றேன்?” போன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கிறது. இரண்டாவது பதிவு, 2006, 7" x 10", 400 பக்கங்கள், அசல் வண்ண ஓவியங்களுடன் அழகாக விளக்கப்பட்டுள்ளது, தடித்த உறை (ISBN 0-945497-79-2), $39.95.

மினி மேளா புத்தகக்கடை ஆணை படிவம்

- எனக்கு இலவச வெளியீடுகளை அனுப்பவும்.
- எனக்கு அஞ்சல் வழியாக 'தி மாஸ்டர் கோர்ஸ்' சேரும் படிவத்தை அனுப்பவும்.
- நான் இந்துயிசம் டுடே பத்திரிக்கைக்கு சந்தா செலுத்த விரும்புகிறேன்.
- 1 வருடம், $35 - 2 வருடங்கள், $65 - 3 வருடங்கள், $95
- ஆயுள் சந்தா: $1001

(விலை அமெரிக்க டாலரில்)

(சர்வதேச விலைகளுக்கு subscribe@hindu.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்)

நான் பின்வரும் புத்தகம்(கள்) ஆணையிட விரும்புகிறேன்:

- *டான்சிங் வித் சிவா* $59.95 - *லிவிங் வித் சிவா* $59.95 - *மேர்ஜிங் வித் சிவா* $59.95
- *ஒரு இந்துவாக மாறுவது எப்படி* $27.95 - *வேதிக் எக்ஸ்பீரியன்ஸ்* $39.75
- *லெமூரியன் ஸ்க்ரோல்ஸ்* $39.95
- *சைவ இந்து சமயம் புத்தகம் 1, $9.95* - *புத்தகம் 2, $9.95* - *புத்தகம் 3, $4.95*
- *சிவபெருமானுடன் ஐக்கியமாதல் CD தொகைநூல்*, $19.95
- வீவர்ஸ் விஸ்டம் $19.95 - லவிங் கணேஷா $29.85

விலைகள் அமெரிக்க டாலரில் உள்ளன. அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளில் அஞ்சல் மற்றும் கையாளுகைக் கட்டணங்களுக்கு 20% கூடுதலாக செலுத்தவேண்டும். வெளிநாட்டு ஆணைகள் வழக்கமாக கடல் வழியாக அனுப்பப்படும். வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் அனுப்ப, அஞ்சல் கட்டணமாக விற்பனை பொருளின் மதிப்பில் 50% கூடுதலாக கட்டணத்துடன் செலுத்தவேண்டும்.

எனது கட்டணம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கார்டு விவரங்கள்: MasterCard Visa Amex

கார்டு எண்: _____

காலாவதியாகும், மாதம்:_____ வருடம்:_____

வாங்கிய பொருளின் மொத்த மதிப்பு: _____

கார்டில் இருக்கும் பெயர்: (தயவு செய்து அச்சிடவும்)_____

கையொப்பம்: _____

முகவர்: (தயவு செய்து அச்சிடவும்)_____

_____

_____

தொலைப்பேசி: _____ தொலைநகலி:_____

மின்னஞ்சல்: _____

இணையதளம் மூலம் ஆணை வழங்க: www.minimela.com

அல்லது அஞ்சல், தொலைபேசி, தொலைநகலி அல்லது மின்னஞ்சல் ஆணைகளுக்கு:

ஹிமாலயன் அகாடமி பப்லிகேஷன்ஸ், கவாய் இந்து மடாலயம்,
107 கஹோலலேலே ரோடு, காப்பா, ஹவாய் 96746-9304 USA.

தொலைப்பேசி (அமெரிக்கா மற்றும் கனடா மட்டும்): 1-800-890-1008;

தொலைப்பேசி (அமெரிக்காவிற்கு வெளியே): 1-808-822-7032; ext.238;

தொலைநகலி: 1-808-822-3152; மின்னஞ்சல்: books@hindu.org

மேலும் பின்வரும் பதிப்பகங்களிலும் கிடைக்கிறது (விலைகளுக்கு கடிதம் எழுதுங்கள் அல்லது தொலைப்பேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள்):

சனாதன தர்ம பப்லிகேஷன்ஸ், 15 லிண்டாங் பெசி, ஜலான் மெலவிஸ் (அருகில்), 41000 கிளாங்க், செலாங்கோர், மலேஷியா. தொலைப்பேசி 603-3371-9242; மின்னஞ்சல்: silvaraj@tm.net.my

சனாதன தர்ம பப்ளிகேஷன்ஸ், Blk 210 #06-326, பசிர் ரிஸ் ஸ்ட்ரீட் 21, சிங்கப்பூர் 510210. தொலைபேசி: 65-9664-9001. மின்னஞ்சல்: sanathana@mbox4.singnet.com.sg

சைவ சித்தாந்த சர்ச் ஆப் மொரீஷியஸ்: மினி மேலா, லா பாயிண்ட், ரிவிஏர் டு ரெம்பார்ட், மொரீஷியஸ், இந்தியன் ஓசன், தொலைப்பேசி: 230-412-7177.

இறைவன் டெம்பிள் கார்விங் சைட்: அ. பெ. எண். 4083, விஜயநகர் மெயின், பெங்களூர் - 560 040, இந்தியா. தொலைபேசி: 91-80-2839-7118; தொலைநகலி: 91-80-2839-7119; மின்னஞ்சல்: jiva@vsnl.com

மதிப்புரைகள்



சுவாமி சீதானந்தா சரஸ்வதி, தலைவர் டிவைன் லைப் சொசைட்டி, ரிஷிகேஷ், இந்தியா

இந்து மதம் பற்றிய சுருக்கமான தொகுப்பை மிகவும் கவனமாக திரட்டி, வகைப்படுத்தி, ஒழுங்குப்படுத்தி, தொகுத்து வெளியீடு செய்ததற்காக நமது இந்து சமூகத்தை சேர்ந்த அனைவரும் சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு மிகவும் கடன்பட்டு இருக்கிறார்கள். அவர் இன்று இந்து மதத்தில் ஒரு மேதை என்பதை தயக்கம் இல்லாமல் அறிவிக்கலாம். அவர் செய்த அபூர்வ இலக்கிய பணியின் மூலம் பல மில்லியன் கணக்கான மக்களின் மனதில் வலுவான நன்றியுணர்வை ஏற்படுத்தி இருக்கிறார். யதார்த்தமான வழிகாட்டியாக இருக்கும் இந்த அற்புத புத்தகம், மிகவும் விரிவாகவும் பெரும்பாலும் முழுமையான தொகுப்பாகவும் விளங்குகிறது. இதற்கு முன்பு பொதுமக்களுக்கு நமது மதத்தைப் பற்றிய அறிவை வழங்கும் புத்தகங்கள் வந்து இருந்தாலும், அவற்றில் பெரும்பாலான புத்தகங்கள் சில வரையறைகளை கொண்டு இருந்தன. ¶*சிவனோடு வாழ்தல்* புத்தகத்தின் இந்த இரண்டாவது பதிப்பு, உலக மக்களை வியப்பில் ஆழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை. “ஆங்கில சாம்ராஜியத்தில் சூரியன் என்றுமே மறைவது இல்லை" என்று முதுமொழியை நாம் அறிந்திருப்போம். அதைப்போன்று, சிறப்பான இந்த புத்தகம் புழக்கத்தில் இருக்கும் வரையில், இந்து சமயத்தின் ஒளி உலகெங்கும் தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும். வாசகர் தடையின்றி தொடர்ந்து படித்து ஆய்வு செய்வதற்கு, புத்தகத்தை நான்கு பாகங்களைக் கொண்ட 365 பாடங்களாக வினோதமான முறையில், கவாய் இந்து மடம் வடிவமைத்த முயற்சியை கண்டிப்பாக பாராட்டியாக வேண்டும். மலையேற்றத்தில் சார் எட்மண்ட் ஹில்லரி மற்றும் பிரபலமான டென்சிங் நார்கே புதிய உச்சத்தை தொட்டத்தைப் போன்று, மதம் மற்றும் சமூக-கலாச்சாரம் சார்ந்த இலக்கியத்தில் சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி புதிய சகாப்தத்தை உருவாக்கிய முன்னோடியாக விளங்குகிறார். அவர் இந்த மாபெரும் சாதனையை செய்து இருந்தாலும், 1963 ஆம் ஆண்டு *மகாசமாதி* அடையும் வரை, பூஜிக்கத்தக்க அவரது குருவாக வாழ்ந்து வந்த இலங்கை யாழ்ப்பாணத்தின் ஸ்ரீ சிவ யோகசுவாமியின் சீடனாக அதிக பணிவுடன் இருந்தது மனதிற்கு உற்சாகம் தருவதாக இருக்கிறது. ¶*சிவனோடு வாழ்தல்* புத்தக பக்கங்கள், ஒரு தலைப்பில் நன்றாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையை மட்டும் இல்லாமல், அவை நேரடியாக வாசகருக்கு உபதேசங்களையும் வழங்குகின்றன. அதாவது இந்து சமூகத்திலும் மனித சமூகத்திலும் முழுமனதுடன் வாழ்ந்து, ஒரு *பிரம்மச்சாரி* அல்லது *கிருகஸ்தன்* அல்லது பணி ஓய்வு பெற்ற *வானப்பிரஸ்தன்* அல்லது மடத்தில் வாழும் *சந்நியாசியாக*, இந்து மதம் மற்றும் சைவ சமயத்தை முழுமையாக

பின்பற்றி, தனது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும், சிரத்தை மற்றும் பக்தியுள்ள இந்து வாசகருக்கு நேரடியாக உபதேசிப்பது, இந்த புத்தகத்தின் மதிப்பை உயர்த்துவதாக இருக்கிறது. சற்று முன் குறிப்பிட்ட நான்கு *ஆசிரமங்கள்* அல்லது நிலைகளின் இலக்குகளை வாசகர் பின்பற்றி வாழ்வதற்கு ஒரு அறிவுரை சிறப்பான முறையில் வழங்கப்பட்டுள்ளது. ¶21 ஆம் நூற்றாண்டை சேர்ந்த மனித நேயத்திற்கு இந்த பரிசை வழங்கிய மதிப்பிற்குரிய சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமியை நான் மனமுவந்து பாராட்டி, பல சிறப்பு அம்சங்களுடன் இருக்கும் இந்த புத்தகம் மக்களிடம் நன்மதிப்பை பெறவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். உங்களுக்கு இறையருள் சித்தியாகட்டும். ஓம் நமச்சிவாய.



கரண் சிங், Ph.D, மாநிலங்கள் அவை உறுப்பினர்; அமெரிக்காவிற்கான முன்னாள் இந்திய தூதர்; பனாரஸ் இந்து பல்கலைக்கழக வேந்தர் மற்றும் காஷ்மீரின் இறுதி பேரரசரின் புதல்வன்; புது டில்லி, இந்தியா

சிவனோடு வாழ்தல், இந்து மதத்தின் தற்கால கலாச்சாரம் என்ற இந்த புத்தக வெளியீட்டுடன் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனியசுவாமி, *சிவபெருமானுடன் ஒரு திருநடனம்* மற்றும் *சிவபெருமானுடன் ஐக்கியமாதல்* என்ற இரண்டு புத்தகங்களை உள்ளடக்கிய ஒரு குறிப்பிடத்தக்க முத்தொகுப்பை நிறைவு செய்துள்ளார். உலகெங்கும் இருக்கும் இந்துக்களுக்கு இந்த மூன்று புத்தகங்களும் ஒன்றாக சேர்ந்து, ஒரு வளமான மற்றும் மதிப்பிடமுடியாத தூண்டுதலை வழங்குகிறது. வலுவான சித்தனை, தெளிவான விளக்கம் மற்றும் அவரது சொந்த அனுபவத்தை மையமாகக் கொண்ட இந்த மூன்று புத்தகங்களும், உலகெங்கும் இருக்கும் இந்துக்களின் வீடுகளில் மதிப்பிற்குரிய இடத்தை பெறவேண்டும். இது மட்டும் இல்லாமல், அவை இந்து சமயம் மற்றும் ஒப்பியல் சமயத்துறை பற்றிய ஆராய்ச்சிக்கு ஒரு முக்கிய மூல நூல்களாக விளங்குகின்றன மற்றும் அதனால் அவை உலகெங்கும் இருக்கும் பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது நூலகங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நான் இந்த புத்தகத்தை உலகெங்கும் இருக்கும் சாதகர்கள் மற்றும் மாணவர்களுக்கு முழு மனதுடன் பரிந்துரைக்கிறேன்.



இந்தியாவின் மேற்கு வங்கத்தில் இருக்கும் பேலூர் ராமகிருஷ்ண இயக்கம் மற்றும் மடத்தின் தலைவர், ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதனந்தாஜி சார்பாக சுவாமி அசிமாத்மானந்தா

இந்த புத்தகத்தில் சிவபெருமானை புகழ்ந்திருக்கும் முறை, மகாராஜ் அவர்களுக்கு மிகவும் பிடித்து இருந்தது. அவர் தனது சிறு வயதில் இருந்தே தீவிர சிவபக்தனாக இருந்து, தனது சொந்த கிராமத்தில் இருந்த அழகான குகைக் கோயிலுக்கு தொடர்ந்து சென்று பிரார்த்தனை செய்து வந்தார். சிவபெருமான் மீது பக்தி செலுத்துவதற்கு, இந்த *சிவனோடு வாழ்தல்* புத்தகம் பலருக்கு ஊக்கம் வழங்குவதாக இருக்கும் என்று மகராஜ் கருதுகிறார். சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி மற்றும் கவாய் இந்து மடாலயத்தில் இருக்கும் மடவாசிகளுக்கு, மகராஜ் தனது அன்பை தெரிவித்துக் கொள்கிறார். அவர் பல வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணம் சென்று இருந்த போது, அப்போதைய கொழும்பு ராமகிருஷ்ண இயக்கத்தின் தலைவராக இருந்த மறைந்த சுவாமி பிரேமாத்மானந்தாஜியுடன் சத்குரு யோகசுவாமியுடன் நடந்த சந்திப்பை நினைவுக்கூர்கிறார்.



ஸ்ரீ ல ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் பரமாச்சார்ய சுவாமிகள், இந்தியாவின் மதுரையில் இருக்கும் மதுரை ஆதீனத்தின் ஆதீனக்கர்த்தார் மற்றும் 292 ஆவது குரு மகாசன்னிதானம்.

வரலாற்று சிறப்புமிக்க இந்த *சிவனோடு வாழ்தல்* புத்தகம், தெய்வீக அறிவுறுத்தல்களை கொண்டுள்ளது. அது வேதனையில் நிம்மதி, குழப்பத்தில் வழிகாட்டல், நமது பிரச்சனைகளுக்கு அறிவுரை, நமது பாவங்களுக்கு கண்டிப்பு மற்றும் நமது அன்றாட தேவைகளுக்கு உத்வேகத்தை வழங்குகிறது. இது ஒரு சாதாரண புத்தகமாக இல்லாமல் வரலாறு, கவிதை, நடனம், சுயசரிதை, தீர்க்கதரிசனம், தத்துவம், அறிவியல் மற்றும் தூண்டுதலை வழங்கும் ஆய்வு என்று இலக்கியத்தின் எண்ணற்ற தலைப்புக்களை உள்ளடக்கிய ஒரு மாபெரும் நூலகமாக விளங்குகிறது. ¶"நான் எங்கிருந்து வந்தேன்?", "நான் எங்கே செல்கிறேன்?", "நான் எதற்காக செல்கிறேன்?","நான் இங்கே எதற்காக வந்தேன்?", "நான் உண்மைப் பொருளை எவ்வாறு அறிவது?" போன்ற எல்லா வயதினரும் கேட்கும் முக்கிய கேள்விகளுக்கு, யதார்த்தமான பதில்களை *சிவனோடு வாழ்தல்* புத்தகம் வழங்குகிறது. *சிவனோடு வாழ்தல்* புத்தகம் இறைவனைப் பற்றிய உண்மையை வெளிப்படுத்தி, மனிதனின் மூலத்தை விளக்கி, பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து முக்தி பெறுவதற்கான ஒரு வழியை சுட்டிக்காட்டி, தீய கர்மவினைகளால் விளையும் பாவங்கள் மூலம் எதிர்காலத்தில் உருவாகும் வேதனையைப் பற்றி விளக்குகிறது. *சிவனோடு வாழ்தல்* புத்தகம் நமது பாவங்களை அடையாளம் கண்டு அவற்றை நாம் எதிர்க்கோள்ள செய்து, அந்த பாவத்தில் நம்மை சுத்தப்படுத்தி, வலிமையை வழங்கி, பாவத்தை வெற்றிக்கொள்ள நமக்கு ஒரு கருவியை கொடுத்து, நமது

வாழ்க்கைகளை பயனுள்ளதாக்கி, இறைவன் மீது பக்தி செலுத்துவதற்கு நமக்கு ஆற்றலை வழங்குகிறது.



ஸ்ரீ ஸ்ரீ சுவாமி புவா ஜி மகாராஜ், வயது 112, நியூ யார்க் நகரில் இருக்கும் இந்திய-அமெரிக்க யோகா-வேந்தாந்த சமூகத்தின் ஸ்தாபகர் மற்றும் தலைவர், தென் அமெரிக்கா மற்றும் பிற இடங்களில் சனாதன தர்மத்தை கற்பிக்கும் ஆசிரியர்

கடிகார முட்கள் எந்த திசையில் இருந்தாலும், அவை மையத்தில் இருந்து இயக்கப்படுகின்றன. அதைப் போல சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள், உலகில் எந்த மூலையில் இருந்தாலும், எந்த திசையை பார்த்துக்கொண்டு இருந்தாலும், அவர்கள் பிரபஞ்ச மையத்தில் இருந்து சிவபெருமான் மூலம் இயக்கப்பட்டு சத்குரு மூலம் வழிநடத்தப்படுகிறார்கள். ஆனால் இன்று டிஜிட்டல் கடிகாரங்கள் வந்துள்ளதால் மையம் மற்றும் முட்கள் மறைந்து விட்டன. ஆனால் அதற்காக, அவை இல்லை என்று பொருளில்லை. மையம் மற்றும் முட்களை கற்பனை செய்து பார்ப்பது அதிக கடினமாகிவிட்டது. ¶இத்தகைய தருணத்தில், இறைவன் உங்களுக்குள் இருக்கிறார் மற்றும் நீங்கள் இறைவனுள் இருக்கிறீர்கள் என்று கூறும் புத்தக வடிவில் ஒரு அறிவிப்பு வெளிவந்துள்ளது. அந்த முட்கள் மையத்துடன் ஐக்கியமாகிவிட்டன. நம்மால் இயக்கங்களை மட்டுமே, எண்களில் ஏற்படும் மாற்றத்தினால் நடனத்தை மட்டுமே பார்க்க முடிகிறது. ¶சிவபெருமானை வணங்கினால், அவர் உங்களிடம் இருப்பதை எல்லாம் பறித்துக்கொள்வார் என்ற தவறான நம்பிக்கையை தகர்த்து எரியும் வண்ணம், இந்த பெருமுயற்சி அமைந்துள்ளது. இந்த தவறான நம்பிக்கையில் சிறிதும் உண்மை இல்ல. சிவபெருமான் எல்லாம் வழங்குகிறார். “*சிவனோடு வாழ்தல்* என்பது அன்புடன் வாழ்வது ஆகும்.” ¶திருமணம், கருக்கலைப்பு, தற்கொலை, தொலைக்காட்சி, கணினி என்று இன்றைய உலகம் சந்திக்கும் அனைத்து விஷயங்கள் தொடர்பான ஊக்கமூட்டும் உரைகளை, இந்த இரண்டாவது பதிப்பில் 800 பக்கங்களாக குருதேவா இணைக்க முடிவு செய்து இருப்பது, ஆங்கிலம் படிக்கத் தெரிந்த நம்மைப் போன்ற சாதகர்களுக்கு கிடைத்த ஒரு பெரும் பாக்கியம் ஆகும். ¶ஒவ்வொருவரும் தனக்குள் இருக்கும் இறைவனை தேடிக்கொள்வதற்கு துணை புரியும் செய்முறைகள் மற்றும் உத்திகள் பட்டியலிடப்பட்டுள்ள இந்த புத்தகத்தில், பாரம்பரிய தர்ம நெறி தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. வாழ்க்கையில் வரும் அடுத்தடுத்த நான்கு நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. மனிதனின் சராசரி வாழ்வுக்காலம் 120 வருடங்கள். அந்த காலகட்டத்தில் 40 மற்றும் 80 வயதில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. பிரம்மசரியம் 12 முதல் 24 வயது வரை, கிருகஸ்தன் 24 முதல் 48 வரை, வானப்பிரஸ்தன் 48 முதல் 72 வரை மற்றும் 72 வயதிற்கு பிறகு சந்நியாசம். இந்த நிலைகளை மனிதர்கள் புரிந்துக்கொண்டு, அதற்கு ஏற்ப அவர்கள் தங்கள் வாழ்க்கைகளை சரி செய்து கொண்டால், உலக வாழ்க்கை

எவ்வளவு சிறப்பாக இருக்கும்! இன்றைய உலகில் பலர் இருபது வயதுகளில் தங்கள் பிரம்மசரியத்தை இழந்து இல்லறத்திற்குள் நுழைந்து, அறுபத்தி ஐந்து வயதிற்கு அருகில் சமூகத்தில் மதிப்பை இழந்து நிற்கிறார்கள்! ¶365 நந்திநாத சூத்திரங்கள் வாழ்க்கையின் குறிக்கோளுடன் தொடங்கி, வியக்க வைக்கும் எளிமை மற்றும் பிரமிக்க வைக்கும் பிரகாசத்துடன் முத்துக்களைப் போல ஒன்றன் பின் ஒன்றாக தோற்றம் அளிக்கின்றன. அந்த சூத்திரங்கள் ஒழுக்கத்தை விளக்கி, இறையியலைப் பற்றி சிறிய குறிப்பு வழங்கி, உலக மக்களின் மீது அக்கறையுடன் நெறிமுறைகளை வரையறுத்து பிறப்பு மற்றும் இறப்பை ஆய்வு செய்கின்றன. அதில் ஆண்கள், பெண்கள், பெற்றோர்கள், கணவன்மார்கள், மனைவிமார்கள், வியாபாரிகள், அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள் என்று எல்லோருக்கும் எல்லா சூழ்நிலைகளுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் உள்ளன. ¶இந்த சூத்திரங்களை சிலர் நவீன திருக்குறள் என்று அழைக்கிறார்கள். சாரத்தை உள்ளடக்கிய சுருக்கமான மற்றும் துல்லியமான வரிகளில் அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு என்ற அதே அமைப்பில் அதே கருத்துக்களை வழங்கும் இதனை "திருக்குறளுக்கு இணையானதாக" நான் அழைக்க விரும்புகிறேன். ¶இது மிகவும் எளிமையான நடையில் நேரடியாக கருத்தை தெரிவிப்பதால், இதற்கு யாரும் விளக்கம் அளிக்கவேண்டிய அவசியமில்லை. சைவ சமயத்தவர்களுக்கு ஒவ்வொரு சூத்திரமும், சமய நறுமணத்தை வழங்குகிறது. நெறிமுறைகள், ஒழுங்குநெறி உத்தரவுகள், புனிதமான அறிவுறுத்தல்கள் மற்றும் தெய்வீக வழிகாட்டல்களின் ஒரு அற்புத தொகுப்பை கொண்டுள்ள இந்த புத்தகம் உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று பலரது வீடுகளில் இடம்பிடித்து, இந்த பூமியை வாழ்வதற்கு உரியதாக மாற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.



பண்டிதர் கே.என். நவரத்தினம், M.A.F.A., F.A.A., வயதில் மூத்த யாழ்ப்பாண தமிழ், ஜோதிட மார்த்தாண்ட மற்றும் ஆஸ்திரேலியாவின் தேசிய ஜோதிடர், சிவதொண்டன் நிலையம், ஹல்லம், ஆஸ்திரேலியா

நமக்கு பிரியமான குருதேவா சமீபத்தில் வழங்கிய ஒரு குறிப்பித்தக்க ஆன்மீக படைப்பாக *சிவனோடு வாழ்தல்* விளங்குகிறது. ஆன்மீக இருள் சூழ்ந்து இருக்கும் இந்த காலத்தில், அவரது போதனைகள் கோடைக்கால மதிய நேரத்தில் பெய்யும் குளிர்ந்து மழை போல இருக்கின்றன. நமக்கு விவேகம் நிறைந்த மூன்று ஆயிரம் பாடல்களை வழங்கிய திருமூலரின் பரம்பரை வழிவந்த குருதேவா, ஆயிரம் பக்கங்களுடன் நமக்கு வரமாக வழங்கியுள்ள இன்னொரு நுண்ணறிவு, ஆன்மீக உறக்கத்தில் இருக்கும் நாம் விழிப்பதற்கு தலையில் சுத்தியல் மூலம் அடிப்பது போல இருக்கிறது. இந்த உலகில் *மாயை* என்கிற இருள் சூழ்ந்து இருப்பதால் பலர் இறைவனை நெருங்க முடியாமல் தவிக்கும் இந்த காலத்தில், இந்த புத்தகம் ஒரு மருந்தாக வெளிவந்துள்ளது.

இறை உணர்வை வார்த்தைகளால் விவரிக்க என்பதால், அதை ஒருவர் தானாகவே அகத்தின் திரையை விலக்கி தெரிந்துக்கொள்ள வேண்டும். வெங்காயத் தோல்களை உரிப்பதைப் போல, உலக *மாயையை* விலக்கி மனதை பக்குவப்படுத்துவதைப் பற்றி குருதேவா விளக்கியுள்ளார். ¶குருதேவா தனது படைப்புக்கள் அனைத்திலும், நாம் நடந்து செல்ல வேண்டிய பாதையை காண்பிக்கிறார். அவர் சரியான திசையை காண்பித்துக் கொண்டும், அறிவுரை மற்றும் ஊக்கத்தை வழங்கிக்கொண்டும் தொடர்ந்து ஒரு தெய்வீக வழிகட்டியாக இருப்பார் என்பதில் நாம் உறுதியாக இருந்தாலும், அந்த பாதையை நாம் தனியாகத் தான் கடந்தாக வேண்டும். இந்த மாபெரும் பயணத்தில் சாதகர்கள் அனைவரும் எங்களுடன் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பாதை கடுமையாகவும் அபாயங்கள் மற்றும் படுகுழிகள் நிறைந்தும் இருக்கிறது, ஆனால் இதில் நடக்கத் தொடங்கியதும் அதை முடிவு வரை பின்பற்றி சென்று நிறைவு செய்யவேண்டும். தொழில்நுட்பத்தில் மேம்பட்டு தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கும் உலகில், அதிகம் தேவைப்படும் சமய நுண்ணறிவை வழங்குவதற்கு குருதேவா இருக்கிறார் என்பது மனதிற்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. அவர் உலகின் மூலை முடுக்கெல்லாம் தனது தெய்வீக ஞானத்தை ஒளி பொருந்திய வைரம் போல பரப்பிக்கொண்டு இருக்கிறார்.



ஸ்ரீ ஸ்ரீ சுவாமி பிரஞானந்த். இவர் சாய் பிரஞா தம், பிரஞா மிஷன் இன்டர்நேஷனல், பிரஞா மித்ர பரிவார் மற்றும் பிரஞா யோகா பௌண்டேஷன், புது டில்லி, இந்தியா மற்றும் விஷ்வ மாதா காயத்ரி டிரஸ்ட், டில்லி, இந்தியாவின் ஸ்தாபகர்/காப்பாளர்

இந்து கடவுளர்களான விநாயகர் மற்றும் சிவபெருமானைப் பற்றி சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு இருக்கும் ஆழமான அறிவு என்னை வியக்க வைக்கிறது. இந்த புத்தகங்களை எழுதிய அவர் ஒரு தனிநபராக இல்லாமல் ஒரு நிறுவனமாக இருக்கிறார். நான் *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தை படிக்கும் போது, சுவாமிஜி ஆழ்ந்த தியானம் மூலம் தன்னை சிவபெருமானிடம் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தான் புத்தகத்தில் எழுதி இருப்பதை அவர் உண்மையில் கண்கூடாக பார்த்து இருப்பதைப் போல தோன்றுகிறது. அவர் ஒரு துறவி சாதிக்க விரும்புவதை உண்மையில் அடைந்து இருக்கிறார். சுவாமிஜி தனது சிந்தனைகள் மற்றும் படைப்புக்கள் மூலம், இந்துக்களுக்கு மட்டும் இல்லாமல் உலக மக்களுக்கும் பயனுள்ள சேவையை வழங்கியுள்ளார். சுவாமிஜி உயிருடன் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் ஒரு பிரபல நிபுணராக விளங்குகிறார். அவர் உலகெங்கும் உள்ள துறவிகளின் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார். துறவிகள் சமூகம் அவரை நினைத்து பெருமிதம் கொள்கிறது. ¶இதற்கு முன்பு சுவாமிஜி எழுதிய *டான்சிங் வித் சிவா* புத்தகம் மற்றும் இந்த புத்தகத்தில் இருக்கும் ஆழமான சிந்தனை, பக்தி மற்றும்

கற்பனையை நான் வேறு எந்த புத்தகத்திலும் பார்த்தது இல்லை. ஒரு சிந்தனையாளரின் புத்திக்கூர்மை எந்த நிலையில் இருந்தாலும், இதைப் போன்ற மறை வெளியீட்டை அவரால் வழங்க முடியாது என்பதால், இந்த புத்தகம் சிவபெருமானுடன் ஏற்பட்ட நேரடி தொடர்புக்கு சான்றாக விளங்குகிறது. ¶*சிவனோடு வாழ்தல்* புத்தகம் பல்வேறு விஷயங்களை விரிவாக உள்ளடக்கி இருப்பதால், அது அன்றாட வாழ்க்கையின் எந்த அம்சத்தையும், சமூகத்தில் இருக்கும் எந்த ஒரு திரிபையும் விட்டு வைக்கவில்லை. மக்கள் தங்கள் சிந்தனை மற்றும் செயல்களை சுத்தம் செய்வதைப் பற்றி அறிய, இந்த புத்தகம் ஒரு யதார்த்தமான கையேடாக விளங்குகிறது. குறிப்பாக உண்மையை நாடி நேர்மையான வாழ்க்கையை வாழ விரும்பும் வாசகர்கள், 365 *நந்திநாத சூத்திரங்களை* படிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை ஒருவர் பின்பற்றினால், அவர் சுய முன்னேற்றத்துடன் மேம்படுத்தும் சமூகத்தில் தவறுகள், வன்முறை, சமூக பதட்டங்கள், வெறுப்பு, பனிப்போர்கள், அச்சம், பேராசை மற்றும் பதவி ஆசை இருக்காது. அது எந்த தீமையும் இல்லாத சமூகமாக இருக்கும். அந்த சமூகத்தில் பரஸ்பர சகிப்புத்தன்மை, அகிம்சை, சமத்துவம், அன்பு, சர்வதேச அமைதி மற்றும் சகோதரத்துவம் இருக்கும். ¶மனிதநேயம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் போக்குடன் இருக்கிறது. அது அழுதுக்கொண்டும் புலம்பிக்கொண்டும் இருக்கிறது. பூமி எங்கும் அறியாமை என்கிற இருள் சூழ்ந்து இருக்கிறது. சர்வதேச வன்முறை, பயங்கரவாதம் மற்றும் படுகொலை ஆகியவை பூமியை நரகமாக மாற்றியுள்ளது. *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் காண்பிக்கப்பட்டு இருக்கும் பாதை ஒரே நம்பிக்கையாக விளங்குகிறது. அது அறியாமை இருளில் ஒரு பிரகாசமான பாதையாக இருக்கிறது.



திரு. ஏ. கந்தையா, Ph.D மூத்த யாழ்பாணத் தமிழர், மலரும் மனமும் ஆசிரியர்; இலங்கையின் கெலனிய பல்கலைக்கழத்தில் முன்னாள் தமிழ்த்துறை தலைவர், லண்டன் பல்கலைகழகத்தில் முன்னாள் பேராசிரியர், தற்போது ஆஸ்திரேலியாவின் சிட்னியில் வாழ்ந்து வருகிறார்

ஒருவர் இந்த புத்தகத்தில் இருக்கும் பாடங்களை ஒரு வருடம் முழுவதும் படித்து வந்தால் ஒரு வலுவான *சாதனாவை,* தனது ஆன்மீக வாழ்க்கையில் மற்றும் இந்து மதத்தின் ஆழங்களுக்குள் ஒரு தனிப்பட்ட பயணத்தை நிறைவு செய்து இருப்பார். அவர்கள் வாழ்க்கையை அணுகும் முறையை மாற்றி தங்களது வாழ்க்கைகளை மாற்றி அமைத்து கொள்வதற்கு, இந்த பயிற்சி போதுமானதாக இருக்கும்.



தாதா J.P. வாஸ்வாணி, சாது வாஸ்வாணி இயக்கத்தின் தலைவர், சிந்தி சமயத்தின் முக்கிய தலைவர் மற்றும் சிறந்த பேச்சாளர், புனே, இந்தியா

இறைவன், குடும்ப வாழ்க்கை, பணம், உணவு, மதம் மற்றும் கலாச்சாரம் என்று நாம் இன்று சந்திக்கும் சில முக்கிய பிரச்சனைகளை *சிவனோடு வாழ்தல், இந்து மதத்தின் தற்கால கலாச்சாரம்* உள்ளடக்கியுள்ளது. மேற்கத்திய பொருள்முதல்வத்தின் இலக்காக தனிப்பட்ட நிறைவேற்றம் விளங்குகிறது. பெற்றோர்கள், குழந்தைகள், சமூகம், நாடு மற்றும் மதத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவது, கிழக்கத்திய மதங்களின் இலக்காக விளங்குகிறது. கிழக்கத்திய குடும்பங்களின் குழந்தைகள் மேற்கத்திய கொள்கைகளை எதிர்கொள்ளும் போது, பெரும்பாலும் தனிப்பட்ட நிறைவேற்றம் கடமைகளை வெற்றி கொண்டு, நமது கலாச்சார வேர்களை அறுக்க முனைகின்றன. இந்த அற்புதமான புத்தகம் இந்தியா மற்றும் மேற்கத்திய நாடுகளை ஒப்பிட்டு, கலாச்சார குழப்பத்தின் காரணம் மற்றும் அதன் ஒழுங்குமுறை, தத்துவ மற்றும் சமூக விளைவுகளை ஆய்வு செய்கிறது. ¶சிவாய சுப்பிரமுனியசுவாமி பல வருடங்களாக மேற்கொண்ட ஆய்வு மற்றும் அனுபவத்தின் பலனாக *சிவனோடு வாழ்தல்* உருவெடுத்துள்ளது. சூரியனைப் போன்று என்றும் பழமையாகவும் புதுமையாகவும் விளங்கி, புவியீர்ப்பு சக்தியால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் ஒரு பொம்மையைப் போல, ஒவ்வொரு குழப்பத்திற்கு பிறகும் மீண்டும் எழுச்சி பெறும் மதமான இந்து மதத்தின் அடிப்படைகளின் பிரதிபலிப்பாக இந்த புத்தகம் விளங்குகிறது. பாரம்பரிய குடும்ப வாழ்க்கை மற்றும் நவீன காலத்தில் அதன் பொருத்தம் தொடர்பான சிக்கல்களைப் பற்றி இந்து மதம் என்ன கருதுகிறது? இறைவன், குடும்ப வாழ்க்கை, பணம், உணவு மற்றும் கலாச்சாரம் பற்றிய இந்து மதக் கருத்துக்கள், மற்ற மதங்களில் இருந்து எவ்வளவு மாறுபட்டு இருக்கின்றன? இந்த தெளிவான, மனதில் நன்றாக பதியக்கூடிய மற்றும் நன்றாக புரியக்கூடிய புத்தகம் வழங்கும் பல அம்சங்களுடன், *தர்மம்* மற்றும் *கர்மவினை* கோட்பாட்டிற்கு இந்து மதம் அளிக்கும் முக்கியத்துவத்தின் மீது நமது கவனத்தை ஈர்க்கிறது. சுய நிறைவேற்றம் அல்லது சமூக-பொருளாதார இலக்குகள் இல்லாமல், ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் *தர்மம்* பொதுவான இலக்காக இருக்கும் போது, குழப்பமான சூழ்நிலையை கடந்து செல்வது எளிதாகிறது. நமது சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்களுக்கு ஏற்ற எதிர்வினைகள் அமையும் என்கிற *கர்மவினை* விதியின் மீது நம்பிக்கை குடும்பத்தை ஒன்றாக வைத்து இருக்கிறது. ¶உலக அளவில் பாரம்பரிய குடும்ப அமைப்பு புறக்கணிக்கப்பட்டு, அதனால் ஏற்படும் விளைவுகளை சமாளிக்க முடியாமல் தவிக்கும் இந்த காலகட்டத்தில், இந்த புத்தகம் ஒரு புதிய மாற்றமாக வெளிவந்து, நமது செழிப்பான கலாச்சார பாரம்பரியத்தை நமக்கு

நினைவூட்டுகிறது. இந்த புத்தகம் உண்மையான இந்துக்களாக மாறுவதற்கு காத்து இருக்கும், மில்லியன் கணக்கான இந்துக்களை வரவேற்க காத்து இருக்கிறது.



சிவ பசுபதி, மூத்த யாழ்பாணத் தமிழர், அதிபரின் ஆலோசகர் மற்றும் இலங்கையின் முன்னாள் தலைமைச் சட்ட அதிகாரி, ஆஸ்திரேலிய தமிழ் சங்கத்தின் தலைவர், சிட்னி, ஆஸ்திரேலியா

இன்றைய நவீன சமூகம் மற்றும் அதில் குறிப்பாக அதிக "வளர்ச்சி" பெற்ற நாடுகளில் இருக்கும் சமூகம் குடும்ப அமைப்பை மீண்டும் உருவாக்க வேண்டிய அவசியத்தை மிகப்பெரிய சவாலாக எதிர்கொண்டு வருகிறது. குற்ற நடவடிக்கைகளின் அதிகரிப்பு, போதை மருந்துகளை தவறாக பயன்படுத்துவது மற்றும் வேறு பல தீய நடவடிக்கைகளில், குடும்ப அமைப்பின் சீர்குலைவு பெரிய பங்கு வகிக்கின்றன. *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் குருதேவா அவர்கள், சுமார் 6000 ஆண்டுகால இந்து குடும்ப வரலாற்று அனுபவங்களில் இருந்து, இந்து சமயத்தின் தற்கால கலாச்சாரத்தை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய நவீன சமூகத்தின் பல நாசவேலைகளை தாங்கிக்கொண்டு உறுதியை வெளிப்படுத்தும் இந்து கலாச்சாரத்தை பாதுகாத்து பின்பற்றுவதற்கு தற்போது அவசர தேவை எழுந்துள்ளது. இந்த தலைசிறந்த படைப்பு, இந்துக்களுக்கு மட்டும் அல்லாமல் பல்வேறு நாடுகளில் விவேகம், உண்மை மற்றும் அறிவை நாடும் சாதகர்களுக்கும் ஊக்கம் அளித்து வழிகட்டியாகவும் விளங்கும்.



வி. கனகநாயகம், இலங்கையின் அளவெட்டியில் அமைந்த குருதேவாவின் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்தின் முன்னாள் மேலாளர்

ஒவ்வொரு இந்துவும் தனது வாழ்க்கையின் தொடக்கத்தில் இருந்து முடிவு வரை *தார்மீக* வழியில் வாழ வேண்டிய முறையை, *சிவனோடு வாழ்தல்* என்கிற அற்புதமான புத்தகம் வரையறுக்கிறது. இந்து இலக்கியம் பரந்து விரிந்து இருப்பதால், எல்லோரும் அதைப் படித்து அதன் சாரத்தை கிரகிப்பது எளிது இல்லை. அதில்லாமல் அந்த இலக்கியங்கள் எழுதப்பட்டு இருக்கும் மொழியும் பலருக்கு பரிச்சயம் இல்லை. இந்து சமயத்தின் ஆன்மீக பொக்கிஷங்கள் மூலம் பயன்பெற விரும்புவோருக்கு வழங்குவது மற்றும் அவற்றை ஆங்கிலம் போன்ற

ஒரு சர்வதேச மொழியில் வழங்கும் முயற்சியை நிச்சயம் பாராட்டியாக வேண்டும். இந்துக்களாகிய நாம் ஒரு முனிவர் அல்லது *சுவாமி* சொல்லும் வார்த்தைகளுக்கு அதிக மதிப்பு அளிப்போம். இந்த புத்தக வெளியீட்டில் குருதேவா மற்றும் *சுவாமிகளின்* இயலுணர்வு மற்றும் நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதால், இந்த புத்தகம் மேலும் புனிதமாகிறது. விரைவாக இயங்கும் உலகில் தனது மதத்தை அறிந்து பின்பற்றுவது உட்பட பல வேலைகளுக்கு நேரம் இருப்பது இல்லை. இந்த புத்தகம் யாழ்பாணத்தின் சிவ யோகசுவாமிக்கு அர்ப்பணித்து இருப்பதன் மூலம், யாழ்ப்பாண மக்கள் தங்களது ஆன்மீக மரபை நினைத்து பெருமிதம் கொள்ள காரணமாக விளங்குகிறது.



சுவாமி யோகானந்த கிரி, யூனியன் இண்டூஸ்டா இத்தாலியானா, சனாதன தர்ம சங்க, கிதானந்த ஆசிரமம், கார்கேர், இத்தாலி

நான் சத்குருதேவா எழுதிய *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தை அதிக விருப்பம் மற்றும் ஆர்வத்துடன் படித்தேன். இந்த புத்தகம் அவருடைய முழுநிறைவான அறிவின் அகன்ற மற்றும் ஆழமான பண்பினை வெளிப்படுத்துகிறது. ஒழுங்குநெறி முதல் ஆன்மீக வாழ்க்கை, *சம்ஸ்க்காரங்களை* உள்ளடக்கிய சமூக வாழ்க்கை, சுத்தமான உணர்ச்சி, *தபஸ்* என்று சத்குருதேவா எந்த ஒரு விஷயத்தையும் நல்ல திறமை மற்றும் விவேகத்துடன் எதிர்கொள்வது வியக்க வைக்கிறது. *தர்மம், சாதனா* மற்றும் இந்து தர்மத்தின் ஒவ்வொரு அம்சமும் தெளிவாக அறிவூட்டும் வகையில் விளக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகம் எல்லோரும் எல்லா விஷயங்களையும் பற்றி அறிய உதவுகிறது. சத்குருதேவா நம்மை ஒவ்வொரு பாடமாக அழைத்து சென்று, முழுமையான ஆன்மீக விடுதலையை நோக்கி நம்மை வழிநடத்தி செல்கிறார். இந்த புத்தகத்தை ஆன்மீக விடுதலை அடைய விரும்பும் நபர் படிப்பது மட்டும் அல்லாமல், அதன் கருத்துக்கள் மீது தியானமும் செய்யவேண்டும். பூமியில் இருக்கும் சிவபெருமானின் பிரதிநிதி தொடர்ந்து பாதையை ஒளியூட்டிக் கொண்டு இருக்க, சிவபெருமான் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்கட்டும்.



திரு சத்குணேந்திரன், மூத்த யாழ்ப்பாண தமிழர், சிவத்தொண்டன் நிலையத்தின் துணை செயலாளர், டொரோண்டோ, ஒன்டோரியோ, கனடா.

ஐரோப்பா, வட அமேரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் இருக்கும் தமிழர்கள் நல்லது மற்றும் தீயதை பிரித்து பார்க்க முடியாமல் திணறிக்கொண்டு இருக்க, குறிப்பாக மேற்கத்திய "கலாச்சார அதிர்ச்சியின்" மத்தியில் நமது இளைஞர்கள் சிக்கி இருக்கும் இந்த கலியுக சுழற்சியில், குருதேவாவின் இந்த புத்தக வெளியீடு பொருத்தமானதாக தோன்றுகிறது. பெற்றோர்கள், குரு, கோயில் மற்றும் பள்ளி ஆசிரியர்களை எப்படி மதிப்பது என்று அந்த இளைஞர்களுக்கு தெரிவதில்லை. மக்கள் பொருளாதார ஆசையில் மதம் மாறுகிறார்கள் மற்றும் திருமணங்கள், குடும்பம் பிரிகின்றன மற்றும் "பெற்றோர்களில் ஒருவர் மட்டுமே இருக்கும் வீடுகள்!" புதிய கலாச்சாரமாகிவிட்டது. பொருள்முதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்ட மேற்கத்திய இலக்கு தனிப்பட்ட நிறைவேற்றம் என்றும், மதம் சார்ந்த கிழக்கத்திய நாடுகளின் இலக்கு ஒருவர் தனது பெற்றோர்கள், சமூகம், பாரம்பரியம் மற்றும் நாட்டிற்கு செய்யும் கடமையின் நிறைவேற்றத்தை குறிக்கிறது என்றும் ஆசிரியர் அழகாக விளக்கி இருக்கிறார். ஆனால் கிழக்கத்திய குடும்பங்களின் குழந்தைகள் மேற்கத்திய கொள்கைகளுடன் வளர்க்கப்படும் போது, தனிப்பட்ட நிறைவேற்றம் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்த புத்தகம் வழங்கும் பொன்னான அறிவுரை சுலபமாக புரியும் ஆங்கிலத்தில் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருப்பதோடு ஒவ்வொரு தலைப்பும் சிறியதாக இருப்பதால், குருதேவா வழங்கும் கருத்தை இன்னொருவர் துணையின்றி வாசகர் எளிதில் புரிந்துக்கொள்ள முடிகிறது. உண்மையை தீவிரமாக நாடும் நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியரை கருத்தில் கொண்டு இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளதை, நம்மால் தெளிவாக காணமுடிகிறது. இளைஞர்களின் இந்த நாட்டத்தை பெற்றோர்களால் நவீன முறையில் புரிந்துக்கொள்ள முடிவதில்லை. இந்த புத்தகம் இளைஞனுக்கும் முதியவருக்கும் ஒன்று போல அறிவூட்டுகிறது. இது இளைஞர்களுக்கு பதில் கிடைக்காத கேள்விகளுக்கு யதார்த்தமான விளக்கங்களை கொண்டுள்ளது. இது முதியவர்களுக்கு பல விஷயங்களைப் பற்றி மனதில் புத்துணர்வை வழங்குகிறது. அத்துடன் இந்த அரிய புத்தகத்தில் இன்றைய நவீன யுகத்தின் கேள்விகளுக்கு பதில்களும் கிடைக்கின்றன. நமது விறுவிறுப்பான வாழ்க்கையை அறிந்து இருக்கும் குருதேவா, தினமும் ஒரு பாடம் படித்தால் போதும் என்று அன்பு மற்றும் தாராள மனத்தோடு கூறுகிறார். யோகாப்பியாசத்தில் தொடங்கி கணினி, போர் மற்றும் அமைதி, சுற்றுப்புறத்தில் செலுத்தவேண்டிய அக்கறை, புகையிலை மற்றும் போதை மருந்து, வியாபாரம் மற்றும் பணம் என்று இந்த புத்தகத்தில் பல விஷயங்களை காணலாம். குருவின் சன்னிதானத்தில் இருக்கும் போது எதை செய்யவேண்டும் மற்றும் எதை செய்யக்கூடாது என்று பல அன்பர்கள் அறிந்து இருப்பதில்லை என்பதால், குருவின் இடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை கண்டிப்பாக படிக்க வேண்டும். இந்த புத்தகத்தை முதலில் பார்க்கும் பொது, "இந்த பெரிய அகராதியை படிப்பதற்கு என்னிடம் நேரம் எங்கே இருக்கிறது?" என்று திகைத்து நிற்கலாம். ஆனால் நீங்கள் புத்தகத்தை படிக்கத் தொடங்கியதும், தினமும் ஒரு பாடத்திற்கு மேல் படிப்பதற்கு நீங்கள் உத்வேகத்தை பெறுவீர்கள்! குருதேவா, இந்த அற்புதமான பரிசை வழங்கியதற்கு நன்றி!



ஸ்ரீ ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா, சச்சிதானந்தா ஆசிரமம் மற்றும் அதன் "லைட் ஆப் ட்ருத் யூனிவேர்சல் ஸ்ரைன்" (LOTUS) அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் ஆன்மீகத் தலைவர், பிரபல யோகா ஆசிரியர் மற்றும் தீர்க்கதரிசி, யோகாவீல், விர்ஜினியா

குருதேவா ஸ்ரீ சிவாய சுப்பிரமுனியசுவாமி மீண்டும் சாதித்துள்ளார். அவர் இந்த புத்தகத்தில் சைவ சித்தாந்த பாரம்பரியத்தை பின்பற்ற விரும்பும் வாசகருக்கு தெளிவாக வழிகாட்டுகிறார். இந்த தலைசிறந்த புத்தகத்தின் மூலம் வாசகர்கள் எல்லோரும் பயன் பெறட்டும்.



H. சுத்தாநந்த பிரம்மச்சாரி, இந்தியாவில் இருக்கும் லோக்நாத் டிவைன் லைப் மிஷன் (Lokenath Divine Life Mission) மற்றும் அமெரிக்காவில் இருக்கும் லோக்நாத் டிவைன் லைப் பெல்லோஷிப் (Lokenath Divine Life Fellowship) ஸ்தாபகர்.

தினமும் பயிற்சி செய்யவேண்டிய இந்த பயனுள்ள கையேட்டில் சிவாய சுப்பிரமுனியசுவாமிஜி அவர்கள், ஒவ்வொரு இந்து மற்றும் சாதகர்களும் பின்பற்றுவதற்கு, சனாதன தர்மத்தின் காலவரையற்ற கோட்பாடுகளை வழங்கியுள்ளார். டான்சிங் வித் சிவா மற்றும் மெர்ஜிங் சிவா என்ற முந்தைய புத்தகங்களைப் போல, அவரது ஆக்கப்பூர்வமான முத்தொகுப்பின் இறுதி புத்தகமான சிவனோடு வாழ்தல் புத்தகமும், சிவபெருமானுடன் ஒருமையை உணரும் இறுதி இலக்கை நோக்கி செல்லும் உண்மைப்பொருளின் பாதையில் இருக்கும் பயணிகளுக்கு வழிகாட்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.



பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் அஸ்வினி ரகுனனன் ஜ்யோதிஷி, காசி கா பத்ர வெளியீட்டாளர், காஷிகா யோக் மற்றும் மெடிடேஷன் பௌந்டேஷனின் தலைவர், டிரினிடாட் மற்றும் டொபாகோ

சனாதன தர்மம் மறுமலர்ச்சி பெறுவதற்கு ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் முக்கிய காரணமாக விளங்கினார். இந்த தலைமுறை மற்றும் எதிர்கால தலைமுறையின் உள்ளங்களில் சனாதன தர்மத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி புனர்நிர்மாணம் செய்யும் முயற்சியால், கொள்கை மற்றும் விவேகத்தின் அடிப்படையில் ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரின் மறு அவதாரமாக குருதேவா சிவாய சுப்பிரமுனியசுவாமி விளங்குகிறார் என்பதை உறுதியாக சொல்லலாம். *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் வழங்கியிருப்பதைப் போன்று, அதிக தெளிவாகவும் விரிவாகவும் சனாதன தர்ம முழுமையை வழங்குவது கடினம். *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தை சுவாமிஜி தொகுக்கும் போது இளமை மற்றும் முதுமை, பழமை மற்றும் புதுமையின் ஆன்மா மற்றும் மனத்தோடு தொடர்புக்கொள்ள இந்து மதத்தின் இயக்கவாதத்தை கையகப்படுத்தி இருக்கிறார்.



விமலா கிருஷ்ணபிள்ளை, Ph.D இலங்கை தலைநகர் கொழும்புவில் இருக்கும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர், கொழும்புவில் அமைந்து இருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணா சாரதா சமிதியின் தலைவர், சிவ யோகர் சுவாமி திருவடி அறக்கட்டளையின் இணை அறங்காவலர்

சிவனோடு வாழ்தல் புத்தகம் ஒரு விலைமதிப்பற்ற, மிகவும் முக்கியமான நூல் ஆகும். இந்த புத்தகத்தை நான் படித்த போது, காலம் மற்றும் பரவெளியை கடந்து இருக்கும் சிவபெருமான் தனது பரிசு மற்றும் அருளை, சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி வாயிலாக மனிதநேயத்திற்கு வழங்கி உள்ளதாக தோன்றியது. உண்மைப் பற்றிய நேரடி கருத்து பரிவர்த்தனை, ஒவ்வொரு பக்கத்திலும் வார்த்தைகளால் சிறந்த முறையில் விளக்கப்பட்டுள்ளது. எளிமையான முறையில் விளக்கப்பட்டுள்ள இந்த புத்தகம், சிவநெறியில் செல்ல விரும்புவோருக்கு புரியும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. மதம் சாராத மற்றும் சார்ந்த அம்சங்கள், குடும்பம், சமூகம், உணவு, உடல்நலம், நிதி நிர்வாகம் மற்றும் மிகவும் முக்கியமாக இறைவன் என்று அன்றாட விஷயங்கள் அனைத்தும் ஆராயப்பட்டுள்ளன. ஒருவர் தனது ஆன்மீகம் உணர்வை மேம்படுத்தும் இலக்குடன், ஒரு சமநிலையான இணக்கமான வாழ்க்கையை வாழ்வதற்கு குருதேவா படிப்படியாக உதவி செய்கிறார். ஒருவரின் அக ஒளி தொடர்ந்து பிரகாசிப்பதற்கு, இந்த நூலில் இருக்கும் வலுவான உற்சாகமூட்டும் சக்தி, அவரை அவரது மயக்கத்தில் இருந்து விழிக்கவும் எழுச்சி பெறவும் செய்கிறது. ¶இந்த நூல் இந்து பாரம்பரியம், *வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்களின்* சாரம் மற்றும் காலங்காலமாக நிலைத்து இருந்துள்ள ரிஷிகள் மற்றும் முனிவர்களின் உபதேசங்களை கொண்டுள்ளது. இந்த புத்தகத்தில் பழங்காலத்து நிலையான பாதையாகவும், எப்போதும் புதுமையாகவும் துடிப்புணர்வுடனும் இருக்கும் சனாதன தர்மம், எதிர்காலத்தின் மதமாக

சர்வதேச எல்லைகளை கடந்து வலுவாக முன்னேறி செல்கிறது. ¶நாங்கள் எல்லோரும் எங்களது குடும்ப *குலகுருவாக* பக்தியுடன் வணங்கும், இலங்கை யாழ்ப்பாணத்தின் பரமகுரு சிவ யோகசுவாமியின் திருவடியில் இந்த புனிதமான நூலை சமர்ப்பித்த சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமிக்கு எங்களது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ¶



சுவாமி தேஜோமயானந்தா, சின்மயா இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர், சின்மயா இயக்கத்தின் முதன்மை அறக்கட்டளை, சந்தீபனி சாதனாலயா, மும்பை, இந்தியா.

இந்த புத்தகம் ஒருவரது வாழக்கையில் எதிர்கொள்ளும் உலகியல் மற்றும் ஆன்மீக விஷயங்கள் பெரும்பாலானவற்றை குறிப்பிடுவதால், இது ஆர்வத்தை தூண்டுவதாக இருக்கிறது. இத்தகைய தகவல் மக்களுக்கு கிடைக்காததால், அவர்களின் மதம் சார்ந்த கடமைகள் மற்றும் புரிதல் பற்றி அவர்கள் மனங்களில் குழப்பம் ஏற்பட காரணமாகின்றன. இந்த ஒரு சூழலில், இந்த புத்தகம் இந்துக்களுக்கு அறிவு புகட்டுவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இளம் வயதில் திருமணத்தில் இருக்கும் விவேகம் போன்ற சில விஷயங்கள், இன்றைய காலகட்டத்தில் அதிக சர்ச்சைக்குரியதாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் குருதேவா சிறப்பான முறையில் கையாண்டு இருக்கிறார், அந்த விஷயங்களில் பரவி இருக்கும் பக்குவமான சிந்தனை வாசகர்களின் நன்மதிப்பை பெறும் என்று நான் நம்புகிறேன்.



தில்லையம்பலம் விசுவலிங்கம், சைவ சித்தாந்த மன்றத்தின் தலைவர், அன்பு நெறியின் தலைமை இதழாசிரியர், மிசிசாகா, ஒன்டாரியோ, கனடா.

சிவ உணர்வு பற்றிய ஒரு தெய்வீக படைப்பாக *சிவனோடு வாழ்தல்* விளங்குகிறது. இந்த புத்தகத்தில் இருக்கும் பாடங்கள், இன்றைய காலகட்டத்தில் சனாதன தர்மத்தை பின்பற்ற விரும்புபவர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அனைத்தையும் அலசுகிறது. இறை உணர்தலை வழங்கும் உண்மையான பாதை சித்தி அடைவதற்கு, இளையவர் முதல் முதியவர் வரை சைவ இந்துக்கள் வீடுகளில், இந்த தெய்வீக படைப்பு இருக்கவேண்டும். ¶சிவ உணர்வுப் பற்றிய இந்த புத்தகத்தை சைவ இந்துக்கள் அனைவரும் பயன்படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக தன்னம்பிக்கை இல்லாமல்,

அறியாமை மற்றும் புறக்கணிப்பு மூலம் இறைநம்பிக்கை வலுவிழந்து இருப்பவர்களுக்கு இந்த புத்தகம் நிச்சயம் உதவிகரமாக இருக்கும். இன்றைய காலத்து ஆண்கள் மற்றும் பெண்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம், குருதேவா ஒரு புத்தகத்தை வடிவமைத்து இருப்பது நாம் செய்த பாக்கியம் ஆகும். அவர் தனது தெய்வீக பணியை தொடர்ந்து செய்வதற்கு, சிவபெருமான் அவருக்கு தைரியம் மற்றும் நீண்ட ஆயுளை வழங்கி அருள் புரியட்டும்.



பிரம்மச்சாரிணி மாயா திவாரி. காண்ட்லேர், வட கரோலினாவில் இருக்கும் வைஸ் எர்த் மோனாஸ்ட்ரி மற்றும் மதர் ஓம் மிஷனின் ஆன்மீக தலைவர், கையானா, தென் அமெரிக்கா.

விழிப்புணர்வு, நேர்மை மற்றும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காக, இந்த அற்புதமான புத்தகத்தில் எல்லோருக்கும் பொதுவான உண்மைப்பொருள் பற்றி குருதேவா வழங்கும் நலன் பயக்கும் உபதேசம், இந்து தர்மங்களை வெளிப்படுத்தி புத்துயிர் வழங்குகிறது. *சிவனோடு வாழ்தல்* புத்தகம் இந்து மத குறிக்கோள்கள் பற்றிய ஒரு வற்றாத ஊற்றாக மட்டும் இல்லாமல், அதில் இடம்பெறும் அன்றாட வாழ்க்கையின் வழிமுறைகள், எதிர்மறை பழக்கங்கள் மீது விழிப்புணர்வை பெறுவதற்கும், நமது வாழ்க்கைகளில் இருக்கும் கெட்ட எண்ணங்கள் மற்றும் தீய நடவடிக்கைகளை உணர்ந்து, புரிந்துக்கொண்டு அவற்றில் இருந்து விடுதலை பெறுவதற்கும் உதவுகிறது. இந்த புத்தகம் உடல், உணர்ச்சி மற்றும் ஆன்மீக ஆரோக்கியத்தை மீண்டும் பெறுவதற்கு அல்லது குருதேவா குறிப்பிடுவதை போல, நமது ஆன்மீக அனுபவத்தை ரிஷிகளின் அதிக ஆழமான ஞானத்துடன் தொடர்புப்படுத்தும் "அகிம்சை வீட்டின்" ஒரு நேர்த்தியான வரைபடமாக விளங்குகிறது. பதட்டமில்லாத விழிப்புணர்வு மற்றும் தர்ம நெறியை சிரத்தையுடன் பின்பற்றும் பண்பை வளர்க்கவேண்டும் என்பதைத் தான் *சிவனோடு வாழ்தல்* புத்தகம் குறிப்பிடுகிறது.



பண்டித் ராஜேந்திர சர்மா, இந்து ஒர்ஷிப் சொசைட்டியின் புரோகிதர், ஹூஸ்டன், டெக்சாஸ்.

சிவனோடு வாழ்தல் ஒரு புத்தகமாக மட்டும் இல்லாமல், மனித நேயத்திற்கு ஆன்மீக விடுதலை வழங்கும் ஒரு குறிப்பேடாகவும் விளங்குகிறது! சனாதன

தர்மத்தின் சாத்திரங்களில் இருந்து குருதேவா முக்கிய சாரத்தை எடுத்து, அதை இந்த புத்தகத்தில் எளிய நடையில் மக்கள் பயன்பெறுவதற்காக வழங்கியுள்ளார். இந்த புத்தகத்தை பகவத் கீதையுடன் ஒப்பிடுவது சரியாக இருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் *வேதங்கள்* மற்றும் *உபநிடதங்களின்* சுருக்கத்தை அர்ஜுனனுக்கு அருளினார். அதை போன்று இன்றைய மக்களுக்கு சனாதன தர்மத்தின் முக்கிய சாரத்தை, இந்த புத்தகம் மூலம் குருதேவா வழங்கியுள்ளார். பழங்காலத்தில் மதத்திலும் சமூகத்திலும் சீர்திருத்தம் செய்த மனு மகரிஷி இயற்றிய சிறந்த நூலான மனு ஸ்மிருதியைப் போன்று, இன்றைய நவீன யுகத்தில் சாதாரண மக்களுக்கு அதே அறிவை வழங்கியதன் மூலம், குருதேவா அதே பணியை செய்து முடித்துள்ளார். நல்லறிவை வழங்கும் இந்த சிறந்த புத்தகத்தை, பூமியில் இருக்கும் அனைத்து வீடுகள் மற்றும் நூலகங்களில் வைத்திருக்க நான் பரிந்துரைக்கிறேன்.



விஷ்வகுரு மகாமண்டலேசுவர் பரம்ஹன்ஸ் சுவாமி மகேசுவரானந்தா, "யோகா இன் டைலி லைப்" சமூகத்தின் ஆன்மீகத் தலைவர், வியன்னா, ஆஸ்ட்ரியா.

இந்த தெய்வீக படைப்பின் மூலம், குருதேவா மீண்டும் ஒரு முறை மனித நேயத்தில் குறிப்பாக பல்வேறு நாடுகளில் வசிக்கும் இந்துக்களின் உணர்வை ஊக்குவித்து மேம்படுத்தி இருக்கிறார். *டான்சிங் வித் சிவா* மற்றும் *மேர்ஜிங் வித் சிவா* புத்தகங்களுக்கு பிறகு, இந்த புதிய வெளியீடு சிவபெருமானை நமது தினசரி வாழ்க்கைகளில் நேரடியாக அழைத்து வருகிறது. *சிவனோடு வாழ்தல்* புத்தகம் நமது தினசரி வாழ்க்கையுடன் இணையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாசகர் வருடம் முழுவதும் படிக்கும் ஒரு தெய்வீக பாடம், அவருக்கு நாள் முழுவதும் ஊக்கத்தை வழங்கி உற்சாகப்படுத்தி வருகிறது. நமது நவீன நாகரிகத்திற்கு சனாதன தர்மத்தின் நிலையான பண்புகளை பாதுகாத்து மற்றும் எளிதில் புரியும் வகையில் கிடைக்கச் செய்த, இந்த அதிக ஆக்கப்பூர்வமான புத்தகத்தின் ஆசிரியருக்கு நான் எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புத்தகத்தை நான் குறிப்பாக இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியேயும் வாழும் இந்திய பெற்றோர்களுக்கு பரிந்துரைக்கிறேன். குழந்தைகள் இந்த பூமியின் எதிர்காலமாக விளங்குகிறார்கள், மற்றும் அந்த புதிய தலைமுறைக்கு வைதீக கலாச்சாரம் மற்றும் மதத்தின் அடிப்படை நெறிமுறைகளை வெளிப்படுத்தி நிலைநாட்டுவதற்கு, எந்த இந்திய குடும்பமும் இந்த புத்தகத்தை தவற விடக்கூடாது!



திரு பேரம்பலம் சரவணமுத்து, சிலாங்கூர் விலயா பெர்செகுடுவான் சிலோன் சைவர்கள் சமூகத்தின் தலைவர், மலேசியாவின் முதல் தேசிய சைவ சித்தாந்த கருத்தரங்கின் தலைவர், 1983, கோலாலம்பூர், மலேசியா.

சிவனோடு வாழ்தல் வீட்டு அலமாரி அல்லது நூலகத்தில் வைத்து இருக்கவேண்டிய புத்தகம் இல்லை. ஆனால் அதை வீட்டு பூஜை அறையில் மற்ற பூஜை பொருட்களுடன் ஒரு அத்தியாவசிய பொருளாக வைத்து இருக்கவேண்டும். இந்த புத்தகத்தில் இருக்கும் விஷயங்கள் சைவ இந்து பெரியவர்களுக்கு மட்டும் மிகவும் தேவையானதாக இல்லாமல், இன்றைய சமூகத்தில் எதிர்மறை தாக்கத்தால் பல்வேறு புதிய சவால்களை சைவர்கள் எதிர்கொள்வதால், சைவ குழந்தைகளுக்கும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அந்த குழந்தைகள் இந்த புத்தகம் படிப்பதை கட்டாயமாக்கப்பட வேண்டும். சனாதன தர்மத்தின் தத்துவங்கள் பற்றிய வலுவான அறிவின் மூலமாக மட்டுமே, அடிப்படை தூண்டுதல்கள் மற்றும் சேகரிக்கப்பட்ட தீய கர்மவினைகளுக்கு பரிகாரம் செய்ய பல பிறவிகளை வழங்கும் தேவையற்ற புதிய வழக்கங்களின் தாக்குதலில் இருந்து, சமூகம் தன்னை விலக்கிக்கொள்ள முடியும். தினசரி பூஜைகளில் பங்குபெறுவோர் சிவனோடு வாழ்தல் புத்தகத்தை பயன்படுத்த வேண்டும். அதிலிருந்து தினமும் ஒரு பாடத்தை படித்தால், தீய கர்மவினைகள் அணுகாது. ¶*சிவனோடு வாழ்தல்* புத்தகத்தில் இருக்கும் 365 பாடங்கள் முதலில் கவாய் ஆதீனத்தின் சீடர்களுக்கு வழங்கப்பட்டு, அதன் பிறகு அவை மற்றவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த பாடங்களில் இருக்கும் கருத்துக்கள் அனைத்தும் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டு, சைவ இந்து மதம் பற்றி அதிகம் கற்க விரும்புபவர்கள் அல்லது அறிவுறுத்துபவர்களுக்கு மிகவும் பொருத்தமானது என்று கண்டு அறியப்பட்டுள்ளது. இந்த பாடங்களில் இருக்கும் பல்வேறு விஷயங்களைப் பற்றி ஆசிரியர் வலுவாக மற்றும் முறையாக ஆய்வு செய்துள்ளார். உதாரணமாக, பத்து *இயமங்கள்* மற்றும் பத்து *நியமங்கள்* மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மனித சிந்தனை, அணுகுமுறை மற்றும் நடத்தையின் அனைத்து அம்சங்களுக்கு பழங்கால சாத்திரம் வழங்கும் ஆணைகள் பற்றி சாதாரண மக்களுக்கு சந்தேகம் ஏதும் வரக்கூடாது என்பதற்காக, அவற்றைப் பற்றி 100 பக்கங்களில் விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆன்மீக பாதையில் நிலைத்து இருப்பதற்கு, ஒரு குடும்பம் ஒன்றாக பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற அறிவுரை அடிக்கடி அறிவுறுத்தப்பட்டுள்ளது. ¶விவாதிக்கப்படும் தத்துவங்கள் பற்றிய சரியான பொருள் மற்றும் விளக்கத்தை வழங்க வேண்டும் என்பதற்காக பாடங்களில் ஆங்காங்கே சமஸ்கிருத மற்றும் தமிழ் சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்துடன் பெரும்பாலும் சமஸ்கிருத அல்லது தமிழ் சொல்லுடன் ஒரு ஆங்கில சொல் அல்லது சொற்றொடரும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சமஸ்கிருத மற்றும்

தமிழ் மொழி சொற்களை தொடர்ந்து பயன்படுத்தி, வாசகர் அந்த சொற்களின் பொருளை சுலபமாக கற்றுக்கொள்ளும் இந்த முறையால், அந்த சொற்களுக்கு வாசகர் பரிச்சயமாக வேண்டும் என்பதற்காக அவற்றை அறிமுகப்படுத்திய நோக்கம் நிறைவேறுகிறது. ¶இன்று பல சைவர்களின் வாழ்முறை, இந்து கலாச்சாரத்திற்கு புறம்பாக இயங்கும் மேற்கத்திய கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு அந்நிய வழக்கம் மற்றும் பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்ளும் போது தோன்றும் எதிர்மறை உணர்ச்சிகள், அந்த நபரை மட்டுமில்லாமல் குடும்பம் மற்றும் சமூகத்தையும் அழிக்கிறது. உங்கள் மூலத்திற்கு திரும்புங்கள் என்று இந்த புத்தகத்தில் இருக்கும் கட்டுரைகள் சைவ வாசகர்களிடம் மன்றாடுகிறது. சாத்திரங்களை படிக்க வேண்டும் என்றும் அன்பு, உபவாசங்கள் மற்றும் வேள்விகள் மற்றும் சிவபெருமானுடன் ஐக்கியம் அடைவதை நோக்கி பக்தனை வழிநடத்தி செல்லும் பல்லாண்டு கால அனுபவத்தின் மூலம் தூண்டப்பட்ட ஹோமங்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட சைவ வழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்களை அனுட்டானம் செய்ய வேண்டும் என்றும் *சிவனோடு வாழ்தல்* புத்தக வாசகர்களிடம் ஒரு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.



ஆர். ராஜதுரை பள்ளி ஆசிரியர், சிங்கப்பூர் செண்பக விநாயகர் கோயிலின் முன்னாள் தலைவர்.

இன்று சைவ சமூகம் பல சவால்களை எதிர்கொள்ளும் இந்த காலகட்டத்தில், இந்த புத்தக வெளியீடு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. சுமார் ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகம் பல்வேறு தலைப்புக்களில் ஒரு தகவல் வளத்தை கொண்டுள்ளது. இதன் 365 பாடங்களை தினசரி உபதேசமாக ஒருவர் வருடம் முழுவதும் படிக்கும் போது, இந்து சைவ சமூகம் மற்றும் குறிப்பாக இளைஞர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகள் மீது சத்குருவிற்கு இருக்கும் அக்கறையை அவரால் உணர முடிகிறது. குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட விரிவான முன்னேற்றம் காரணமாக, மனித சிந்தனை சிறிது உருக்குலைந்து இருக்கிறது. இன்று மனிதன் இயற்கை படைப்பின் தரத்தை உயர்த்துவதாக நினைத்துக்கொண்டு முறையின்றி மாற்றம் செய்வதன் மூலம் "இறைவனோடு வேடிக்கையாக விளையாட" நினைக்கிறான். இந்த மருட்சி காரணமாக மாட்டு பித்த நோய் போன்ற சில பயங்கர நோய்கள் தோன்றியுள்ளன. இத்தகைய புதிய சிந்தனைகள் நீண்டகாலமாக நிலைத்து இருக்கும் அமைப்புக்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, ஒரு புனிதமான இடத்தில் நடைபெறும் திருமணங்கள் தற்போது சிலசமயங்களில் வித்தியாசமான இடங்களில் பாராச்சூட் மற்றும் டீப் டைவிங் போன்ற அம்சங்களுடன் நடத்தப்பட்டு, அத்தகைய தருணங்களில் சாத்வீகம் அல்லாத உணவுகளை உண்பதும் பிரபல போக்காக மாறிவிட்டது. பெண்கள்

அதிகாரம் சட்டப்பூர்வமாக்கப்பட்டதும், படைப்பில் பெண்ணின் பங்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இறைவன் பெண்களுக்கு படைப்பாளிகள் என்று இயற்கையாக வழங்கிய அதிகாரம் தற்போது மாத்திரை மற்றும் கருக்கலைப்பு செய்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் பணி பசுமாட்டின் மடி, தெருவில் தின்பண்டங்கள் விற்பவர் மற்றும் பள்ளி கான்டீன் நிர்வாகியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கற்பிக்கும் பொறுப்பு முழுமையாக பள்ளியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பள்ளியால் வீட்டில் இருப்பவர்களுடன் நல்லொழுக்கத்துடன் பழக கற்றுக்கொடுக்க முடிவதில்லை. இதைத் தவிர பள்ளிகள் இளம் உள்ளங்களின் மீது தொலைக்காட்சி ஏற்படுத்தும் தக்கத்துடன் தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறது. "பக்கத்து வீட்டில் இருக்கும் ஜோன்சுடன் போட்டியிட்டு" அதிக ஆடம்பர பொருட்களை வாங்கவேண்டும் என்ற ஆசையில் தந்தையுடன் சேர்ந்து தாயும் வெளியுலகில் வேலை செய்ய சென்று விடுவதால், பெரும்பாலும் குழந்தை சிறு வயதில் இருந்தே யாரும் இல்லாத காலி வீட்டில் நுழைய பழகிக்கொள்கிறது. ¶அத்தகைய சூழலில் குறிபிடப்பட்ட தீமைகளுடன் போராடுவதற்கு *சிவனோடு வாழ்தல்* புத்தகம் சைவர்கள் கைகளில் வழங்கப்பட்ட வலுவான ஆயுதமாக விளங்குகிறது மற்றும் இந்த பாடங்கள் மற்றும் இந்த புத்தகத்தின் *நந்திநாத சூத்திரங்களில்* தெளிவாக விளக்கப்பட்ட அறிவுரைகளை ஒவ்வொரு சைவரும் பின்பற்றி, தீய சக்திகளை அழிக்கும் இந்த ஆயுதத்தை பயன்படுத்தி தன்னை மற்றும் காப்பாற்றிக்கொள்ளாமல், முடிந்த வரை மற்ற ஆன்மாக்கள் சுமந்து இருக்கும் *பிராரப்த கர்மவினைகளில்* இருந்து அவர்களுக்கு முக்தி வழங்குவதற்கும் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கே. எல். சேஷகிரி ராவ், Ph.D கௌரவத்துடன் ஓய்வுபெற்ற விர்ஜினியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர், *வர்ல்ட் பைத்ஸ் என்கவுன்ட்டர்* காலாண்டு இதழின் ஆசிரியர், வரவிருக்கும் *என்சைக்லோபிடியா ஆப் இந்துயிசத்தின்* தலைமை ஆசிரியர், கொலம்பியா, தெற்கு கரோலினா

21 ஆன் நூற்றாண்டின் தொடக்கத்தில் சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி *சிவனோடு வாழ்தல், இந்து மதத்தின் தற்கால கலாச்சாரம்* என்ற ஒரு விஷேசமான பரிசை நமக்கு வழங்கியுள்ளார். இது இந்த நவீன யுகத்தை உலகமெங்கும் பரவி இருக்கும் சைவர்கள் மற்றும் இந்துக்களுக்கு மிகவும் உகந்த பரிசாகும். ¶ஆசிரியர் தனது படைப்பில் சனாதன தர்மத்தின் அடிப்படை தத்துவங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி, அவற்றை நமது காலம் மற்றும் சமூகத்தை சேர்ந்த சிக்கல்கள் மற்றும் பிரச்சனைகளுடன் தொடர்புப்படுத்துகிறார். தர்மம் என்பது இறைவன், சக மனிதர்கள் மற்றும் பொதுவாக படைப்பிற்கு நிறைவேற்றவேண்டிய கடமைகள் என்று அனைத்து அம்சங்களும் உள்ள நடத்தை விதிகளை கொண்டுள்ளது. இறைவன் என்கிற

சிவபெருமானிடம் இருக்கும் வலுவான நம்பிக்கை, வாழ்க்கை வழங்கும் பிரச்சனைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு வலுவான அடிப்படையை வழங்குகிறது. அது சரியான தீர்வுகளை அறிய துணைபுரியும் விவேகம் மற்றும் சொந்த மற்றும் சமூக வாழ்வில் அவர்கள் செயல்படுவதற்கு தேவையான வலிமை பெறுவதற்கு வழிநடத்தி செல்கிறது. ¶இந்த புத்தகத்தில் இன்றைய தொழில்நுட்ப யுகத்தின் வாழ்க்கை மற்றும் வாழும்முறை மீது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, இன்றைய காலகட்டத்தில் தீவிர தாக்குதலுக்கு ஆளாகும் குடும்ப அமைப்பின் மீது விசேஷ கவனம் செலுத்தி, குடும்ப வாழ்க்கையின் புனித பண்புகளை இல்லற வாழ்வில் மீண்டும் நிலைநிறுத்தும் வழிகள் விவாதிக்கப்பட்டுள்ளன. அது லௌகீக கடமைகளை தவிர்க்கும் ஆன்மீக வாழ்க்கை இரக்கமற்றது என்றும், ஆன்மீக பண்புகளை தவிர்க்கும் லௌகீக வாழ்க்கை அறிவற்றது என்றும் தெரிவிக்கிறது. இதன் மூலம், இந்து மதம் தொடர்பான பல தவறான கருத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. ¶மனிதர்கள் அறியாமை சூழ்நிலைகள் காரணமாக பொருள்முதல்வாதத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். மக்கள் லௌகீக நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடுவதால், அவர்கள் முரட்டுத்தனம், ஆணவம், சுயநலம், வன்முறை மற்றும் சோகத்திற்கு ஆளாகிறார்கள். ஆன்மீக இயல்பு புத்தியை ஒளிர்வித்து அறியாமையை நீக்குகிறது என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். தெய்வீக உணர்வுடன் வாழும் போது அன்பு, இரக்கம், சேவை மற்றும் நிலையான மகிழ்ச்சி போன்ற ஆன்மீக பண்புகள் வெளிப்பட்டு, வாழ்க்கையை மேம்படுத்தி மக்களை ஒன்றாக இணைக்கிறது. ¶இது தகவலை மட்டுமே வழங்காமல், வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்ப்படுத்தக்கூடிய ஒரு புத்தகமாக விளங்குகிறது. இது பழங்கால திருக்குறள் கருத்துக்களின் அடிப்படையில் சிவசம்பந்தத்தை தொடர்ந்து வலுப்படுத்தினாலும், அது தற்காலத்தில் பயன் தரும் பொதுவான கருத்துக்களையும் கொண்டுள்ளது. தனது வாழ்க்கை தரத்தை உயர்த்த விரும்புவோருக்கு, அது தினசரி வாழ்க்கையில் ஒழுக்கம் மற்றும் ஆன்மீகம் தொடர்பான ஒரு அறிய வழிகாட்டியாக விளங்குகிறது. அது வழங்கும் சிறந்த கருத்துக்களுக்கு மக்களிடம் நல்ல ஆதரவை பெறும் என்று நான் நம்புகிறேன்.



வினா கந்தவனம், கனடா ஒண்டாரியோவின் இந்து சமய சமூகத்தின் தலைவர், ஆத்மஜோதி இதழ் ஆசிரியர், கனடா தமிழ் எழுத்தாளர்கள் சமூகத்தின் தலைவர் மற்றும் இவர் 25 இலக்கிய மற்றும் சமய புத்தகங்களை எழுதி இருக்கிறார்.

இந்த புனிதமான புத்தகத்தில் அனுபவம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. நன்றாக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ள 365 பாடங்களில், ஒவ்வொன்றும் ஒரு அனுபவமாக விளங்குகிறது. சனாதன தர்மத்தின் மீது ஈடுபாடுள்ள அனைத்து தரப்பு வாசகர்களுக்கும் பொருந்தும் நடையில் வாழ்க்கையும்

புத்தகமும் ஒன்றாக இணைத்து தித்திக்கும் வகையில் தேன் கலந்து வழங்கப்பட்டுள்ளது. குருதேவா முறையான அனுபவத்தை வழங்குவதன் மூலம், வாசகர் தங்கள் மனங்களை திறந்துக்கொண்டு, அவற்றை தங்களுக்குள் இருக்கும் சிவபெருமானை உணர்வதற்கு உயர்த்திக்கொள்வதற்கும் பின்னர் அந்த சிவபெருமானுடன் வாழ்வதற்கும் மெதுவாகவும் உறுதியாகவும் அவர் வழிவகுக்கிறார். பிரத்யேகமான இந்த சிவ உணர்வு நிலையை அடைந்ததும், வாழ்க்கை சீராகவும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் அர்த்தமுள்ளதாகவும் விளங்குகிறது. ¶வாசகர்களின் இதயங்கள் மற்றும் மனங்களை ஒளிர்வித்து, அவர்கள் செய்த பாவங்கள் மற்றும் மனங்களில் இருக்கும் தீய எண்ணங்கள் மற்றும் ஆசைகள் அனைத்தையும் சுத்தம் செய்து, அவர்களை சனாதன தர்மத்தின் பாதையில் இயக்கும் வலிமையை இந்த புத்தகம் பெற்று இருக்கிறது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவிக்க விரும்புகிறேன். குருதேவா ஒரு அற்புத பரிசாக வழங்கியுள்ள இந்த சைவக்கனியை சிவபெருமானின் பக்தர்கள் அனைவரும் ருசிக்க, அந்த இறைவனிடம் நான் பிரார்த்திக்கொள்கிறேன்.



சிவநேசன் சின்னையா, டொரோண்டோ ஸ்கூல் போர்டில் பள்ளி சமுக ஆலோசகர், கனடாவாழ் இலங்கை பட்டதாரிகள் சமூகத்தின் தலைவர், டொரோண்டோ சிவத்தொண்டன் மையத்தின் நிறுவனர் மற்றும் உறுப்பினர் மற்றும் முன்னாள் தலைவர்.

குறைந்தபட்சம் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையான இந்து வாழ்முறையை பற்றி கற்க அல்லது அறிய ஆவலுடன் இருக்கும் ஒவ்வொருவரின் கையிலும், குருதேவா வழங்கிய இந்த புதையல் கிடங்கு இருக்க வேண்டும். அறிவியல் முன்னேற்றம் காரணமாக பல மாற்றங்களை அடைந்துள்ள பாரம்பரிய இந்து வாழ்முறையை, குருதேவா வலுவாகவும் ஒரு சீரான முறையிலும் வெளிப்படுத்தியுள்ளார். "எல்லா வஸ்துக்களிலும் இறைவனை காணுங்கள்; நீங்கள் இறைவனுள் இருக்கிறீர்கள்; நீங்கள் ஒரு வலுவான உடல் மற்றும் சுத்தமான மனதுடன் இருக்கவேண்டும்" என்று அவர் தனது குரு சிவ யோகசுவாமியின் உபதேசத்துடன் தொடங்கும் வரிகள் பொருத்தமாகவும் சிந்திக்க வைப்பதாகவும் இருக்கின்றன. அறிவுச்செல்வமாக விளங்கி இந்துக்கள் அனைவருக்கும் அறிவுரையை வழங்கும் இந்த புத்தகம், சில இந்துக்கள் மேற்கத்திய கலாச்சாரம் மற்றும் லௌகீக சுகங்கள் மூலம் ஈர்க்கப்பட்டு தங்கள் அடிப்படைகள், தங்கள் கலாச்சாரத்தை மறந்து இருக்கும் முக்கிய தருணத்தில் மிகவும் பொருத்தமாக வெளியிடப்பட்டுள்ளது. இந்து கலாச்சாரம் பற்றி சீராகவும் சிறப்பாகவும் எழுத்தப்பட்டுள்ள இந்த புத்தகம் எனக்கு திருப்தி அளிப்பதாக இருக்கிறது. இந்து மதத்தத்துவம் எளிமையான ஒப்புமைகள் மற்றும் விரிவுகளுடன் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. ¶இந்த புத்தகம் இந்துக்கள் அனைவரும் பயன்பெறுவதற்கு பல அறிவுரை மற்றும் பரிந்துரைகளை கொண்டுள்ளது. புத்தகத்தில் இருக்கும் தினசரி பாடங்களை

படித்து, அது வழங்கும் கருத்துக்களை புரிந்துக்கொண்டு, அவற்றை சிரத்தையுடன் பின்பற்றினால், உங்கள் ஆளுமையில் மாற்றம் ஏற்படும். இந்த புத்தகம் வாசகர்களுக்கு வழங்கும் அறிவுச்செல்வம் வியக்க வைப்பதாக இருக்கிறது. நமது பாரம்பரியம் மற்றும் இந்து கலாச்சாரம் பற்றி நம்மில் பெரும்பாலானோர் அறியாமல் இருக்கிறோம். நாம் நமது அடிப்படைகளை உணர்ந்து, உண்மையான இந்துக்களாக வாழும் காலம் வந்துவிட்டது. ¶குருதேவா வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பற்றி எழுதி இருப்பதோடு வீட்டு நிர்வாகம் பற்றி பெற்றோர்களுக்கு யதார்த்தமான அறிவுரை, குழந்தைகள் வளர்ப்பு, நிதி நிர்வாகம், ஆரோக்கியமான உணவை உண்ணுதல், குடும்பம் ஒன்றாக பிரார்த்தனை செய்தல் மற்றும் கோயில் வழிபாடு என்று பாரம்பரிய மற்றும் நவீன கோணங்களில் அந்த அம்சங்களை அலசி ஆராய்ந்து இருக்கிறார். தனிநபர்கள், குழுக்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளுக்கு இந்து ஒழுக்கங்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் மையமாக விளங்கும் *இயமங்கள்* மற்றும் *நியமங்களைப்* பற்றி அவர் விளக்கி இருக்கிறார். நம்மை பிணைத்து வைக்கும் *ஆணவம், கர்மவினை* மற்றும் *மாயை* என்கிற *மலங்களில்* இருந்து விடுதலை பெறுவது, புத்தியை சுத்தம் செய்வது, மனஉறுதியை உருமாற்றுவது மற்றும் உறுதிமொழிகள் மற்றும் *விரதங்கள்*, திருமணம் மற்றும் தூய்மை பற்றி விளக்குகிறார். ¶அவர் தியானம் மற்றும் உணர்வு, அடியுணர்வு மற்றும் மெய்ஞ்ஞான உணர்வின் அதிசயங்கள் பற்றி மட்டுமல்லாமல் பெண் விடுதலை மற்றும் வீடு மற்றும் அலுவலகத்தில் இருக்கும் பணிச்சுமையால் தாய்மார்கள் மூலம் குழந்தைகள் புறக்கணிப்படுவதைப் போன்ற பல சமூக பிரச்சனைகள் பற்றியும் பேசுகிறார். இதன் காரணமாக குழந்தைகள் தாயின் அன்பு மற்றும் பாசத்தை இழக்கிறார்கள். ¶வேற்று மதத்தினர் இடையே நடைபெறும் கலப்பு திருமணங்கள், விவாகரத்துக்கள், வெவ்வேறு நாட்டு மக்களிடையே நடைபெறும் கலப்பு திருமணங்கள் மற்றும் கலாச்சார மோதல்கள் போன்று வேற்று நாடுகளில் குடிபெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளை, இந்த புத்தகம் மிகவும் கவனமாக கையாள்கிறது. அவர் அந்தர்லோக வாழ்க்கை, சூட்சும லோகங்கள், கூடுவிட்டு கூடு பாய்தல், மரணம் மற்றும் மறுபிறவி பற்றியும் குறிப்பிடுகிறார். இந்த புத்தகத்தில் பல சுவாரஸ்யமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் மனதில் உட்புற அமைதி மற்றும் ஆன்மீக பேரானந்தத்தில் ஆர்வம் இருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த புத்தகம் அத்தியாவசியம் என்று எனக்கு தோன்றுகிறது.



ராஜேஷ் கே. ஆர். பாலி, லாசெண்ட் டெக்னாலஜீஸ் இன்கார்போரேஷன் நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சேவைகள் பிரிவின் இயக்குனர், எட்மண்டன், அல்பெர்டா, கனடா.

நான் சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி எழுதிய *சிவனோடு வாழ்தல்* புத்தகத்தை படிக்கும் ஒவ்வொரு முறையும், நமது பரமாத்துமாவாக இருக்கும் சதாசிவன் மீது எனக்கு பற்று தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்துக்கள் அனைவரும் சனாதன தர்மத்தின் விரிவான பண்பை அறிந்து இருக்கிறார்கள் மற்றும் ஒரே பரமேசுவரனாக இருக்கும் சதாசிவனை அடைவதற்கு பல வழிகள் உள்ளன. குருதேவா எழுதிய பல புத்தகங்களில், அவர் இந்து மதத்தை விளக்கிய விதம் முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. அது தங்களது இஷ்ட தேவதையை தேடி தனிநபர்கள் ஆழமாக செல்வதற்கு அனுமதி அளிக்கிறது. சனாதன தர்மத்தை பின்பற்றும் சிலர் சத்குருவின் புத்தகங்களை வெறும் படிப்பதன் மூலம், முக்தியை நோக்கி செல்லும் பாதையில் வேகமாக முன்னேறுவார்கள் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். ¶அவர் எழுதிய சில புத்தகங்களை படித்த பிறகு, சதாசிவன் மீது பக்தியை செலுத்துவதே எனது பிறவியின் ஆன்மீக குறிக்கோள் என்பதை நான் உறுதி செய்துக்கொண்டேன். *சிவனோடு வாழ்தல்* என்கிற புனிதமான நூல் உண்மையில் மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. மிகவும் சிறப்பாக அமைந்து இருக்கும் இந்த புத்தக வடிவமைப்பு, இன்றைய இந்துக்களுக்கு ஒரு யதார்த்தமான கையேடாக விளங்குகிறது. *சாதனா, சித்தாந்தம்*, ஒழுக்கம் என்று பல்வேறு தலைப்புக்களை கொண்டிருக்கும் 365 பாடங்கள் வியக்க வைக்கும் வகையில் அமைந்துள்ளன. இது மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் வழங்குகிறது, மற்றும் அது நமது இல்லறத்திற்கு ஒரு வழிகட்டியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. பக்தர்கள் இடத்தில் இந்த புத்தகம் நல்ல வரவேற்பை பெறும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.



Dr. டேவிட் ப்ராளி, (பண்டித் வாமதேவ சாஸ்த்ரி), வேதாச்சார்யா, அமெரிக்கன் இன்ஸ்ட்டிட்யூட் ஆப் வேதிக் ஸ்டடிஸ் நிறுவனத்தின் இயக்குனர், ஹவ் ஐ பெகேம் எ இந்து புத்தகத்தின் ஆசிரியர், சான்டா பே, நியூ மெக்ஸிகோ.

மேற்கத்திய நாடுகளில் தற்போது வாழ்ந்துக்கொண்டு, இந்து தர்மத்தை பற்றி மிகவும் தெளிவாக நவீன ஆங்கில மரபு மொழிகளை பயன்படுத்தி உபதேசிக்கும் பேச்சாளராக சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி தோற்றம் அளித்துள்ளார். உலகில் மிகவும் பழமையான மற்றும் மிகவும் விரிவான சமய பாரம்பரியத்தைப் பற்றி அவர் எழுதிய அற்புதமான படைப்புக்களில் *சிவனோடு வாழ்தல்* புத்தகம் சமீபத்தில் வெளிவந்துள்ளது. இந்த புத்தகம் இந்து தர்மத்தின் அதிக ஆழமான, அழகான மற்றும் வலுவான கருத்துக்களை விரிவாகவும் துல்லியமாகவும் வழங்குகிறது. ¶இந்து தர்ம உட்பிரிவுகளில் ஏதாவது ஒன்றை சிரத்தையுடன் பின்பற்ற விரும்பும் எல்லோருக்கும், இந்த புத்தகம் தேவையான தகவல்களை தாராளமாக வழங்குகிறது. இந்த புத்தகம் அவர்களின் இந்து மதத்தைப் பற்றி புரிந்துக்கொள்ள விரும்புவோரின் அனுபவ எல்லையை

பன்மடங்கு விரிவுப்படுத்துகிறது. உயர்வான அறிவை பெறுவதற்கு ஆர்வத்துடன் இருக்கும் ஒருவருக்கு, தெளிவாக மற்றும் புரிந்துக்கொள்ளும் வகையில் அமைந்துள்ள இந்த விவேகத்தின் புதையல் வாழ்க்கை, பிரபஞ்சம் மற்றும் உணர்வு பற்றி அனைத்து அம்சங்களையும் ஒளிர்விக்கிறது. இது உங்கள் மனம் மற்றும் இதயத்தில் சிவபெருமானின் சக்தியை வழங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது.



ஜார்ஜ் ஃபியூயர்ஸ்டீன், Ph.D யோகா ஆராய்ச்சி மையத்தின் தலைவர்; *ஷம்பாலா என்சைக்கிலோபிடியா ஆப் யோகா* என்ற புத்தகத்தின் ஆசிரியர், லோயர் லேக், கலிபோர்னியா.

சைவ சமயத்தில் தற்போது துடிப்புணர்வுடன் இருக்கும் ஆன்மீக பாரம்பரியத்தில் இன்றைய முன்னணி பேச்சாளராக சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி விளங்குகிறார். அவர் இதற்கு முன்னர் எழுதிய *டான்சிங் வித் சிவா* புத்தகத்தைப் போல, தற்போது எழுதியுள்ள *சிவனோடு வாழ்தல்* புத்தகமும் உலக மக்களுக்கு இன்னொரு அரிய பரிசாக விளங்குகிறது. விரிவாகவும் எளிதியில் படித்து புரிந்துக்கொள்ளும் வகையிலும் அமைத்துள்ள இந்த புத்தகம் வாசகருக்கு சைவ சமயம் மட்டுமில்லாமல் இந்து மதத்தைப் பின்பற்றுவதற்கு நம்பகமான மற்றும் ஆழமான கருத்துக்களை வழங்குகிறது. விவேகம் மற்றும் தெளிவான அறிவுரையும் நிரம்பி இருக்கும் *சிவனோடு வாழ்தல்* புத்தகம், தற்கால வாழ்க்கையில் இருக்கும் சிக்கல்கள் மற்றும் குழப்பங்களில் இருந்து வெளிவருவதற்கு உறுதியான வழியை சுட்டிக்காட்டி, வாசகரை அமைதி மற்றும் உட்புற விடுதலையை நோக்கி அழைத்து செல்கிறது. இந்த வலுவான படைப்பு சைவ சமயத்தை சாராதவர்களுக்கும் பயன் தருவதாக இருக்கும்.



மகேஷ் மேத்தா, Ph.D, சமயங்கள் மற்றும் தத்துவத்தில் பேராசிரியர், மொழிகள், இலக்கியங்கள் மற்றும் கலாச்சாரங்களின் துறை, வின்ட்சர் பல்கலைக்கழகம், கனடா.

சிறப்பான முறையில் வெளிவந்து இருக்கும் *சிவனோடு வாழ்தல்* புத்தகம், தொடர்ந்து சிவ உணர்வில் வாழ்வது பற்றி அல்லது தெய்வீக வாழ்வை வாழ்வது பற்றி விளக்குகிறது. சுப்பிரமுனியசுவாமியின் வலுவான விவேகம் மற்றும் உணர்வின் பலனாக *சிவனோடு வாழ்தல்* அமைந்துள்ளது. தீவிர சாதகர்கள் தங்கள் ஆன்மீக விரிவாக்கத்தை முறையாகவும் சீராகவும் பெறுவதற்கு துணை புரிய வேண்டும் என்கிற ஒரு நல்ல நோக்கத்துடன் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. ஒரு *சாதகன்* இறுதி இலக்கான சிவபெருமானுடன் ஐக்கியமாவதற்கு மேற்கொள்ளும் உட்புற பயணத்திற்கு தேவையான ஆன்மீக அறிவுறுத்தல்களுடன் இந்த பாடங்கள் உலகியல் விவகாரங்கள் சார்ந்தும் இருக்கின்றன. சிறப்பாக அமைந்து இருக்கும் பாகம் ஒன்று, ஒருவர் மனம் மற்றும் நடத்தையை ஒழுங்குப்படுத்தி சிரத்தையுடன் தியானம் செய்து, தனது சொந்த அந்தராத்மா மற்றும் அனைத்து உயிரினங்கள் மற்றும் வஸ்த்துக்களில் சிவபெருமானின் நிரந்தர நடனத்தை காண்பதைப் பற்றி விளக்குகிறது.